சாகித்ய அகாடமி விருது பெற்ற நாவல்

விகடன்
பிரசுரம்



# காவல் கோட்டம்

சு.வெங்கடேசன்

# காவல் கோட்டம்

# காவல் கோட்டம்

**சு.வெங்கடேசன்**

விகடன்
பிரசுரம்

Title :
KAAVAL KOTTAM
© SU. VENKATESAN

ISBN: 978-81-8476-548-9

விகடன் பிரசுரம்: **782**

நூல் தலைப்பு:
**காவல் கோட்டம்**

நூல் ஆசிரியர்:
© **சு.வெங்கடேசன்**

அட்டை வடிவமைப்பு:
**த.வினோத்**

முதற்பதிப்பு : **டிசம்பர், 2013**

விலை : **₹ 520**

பதிப்பாளர்:
**பா.சீனிவாசன்**

முதன்மை உதவி ஆசிரியர்:
**அ.அன்பழகன்**

முதன்மை வடிவமைப்பு:
**மு.ராம்குமார்**

வடிவமைப்பு:
**ப.ஷங்கர்**

---

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

---

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com



# பதிப்புரை

**கா**வல் கோட்டம்.

இந்திய அரசு இலக்கியத்துக்கு வழங்கும் உயரிய விருதான சாகித்ய அகடாமி விருது பெற்ற நாவல். இது காகிதத்தில் பதிக்கப்பெற்ற வெறும் எழுத்துகள் கொண்ட தொடர் வரிசைகளின் அணிவகுப்பு அல்ல. ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உணர்வுகள் தாங்கிய வாழ்வியல் பெட்டகம்.

ஆதிகாலத்தில் கூடி வாழ்ந்துகொண்டிருந்த மனித இனம் மாபெரும் சமூகமாக உருவெடுத்த பிறகு பிரிவுகள் ஏற்பட்டன. தொழிலின் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டு வந்த காலத்தில் களவும் ஒரு தொழிலாகிப் போனதுதான் பரிதாபம். ஒடுக்கப்பட்ட சமுதாயமொன்று களவு செய்வதை தனது தொழிலாக்கிக்கொண்டது. அந்த சமுதாயத்தின் முன்னோர்கள் காட்டிய வழியில் அந்த இனத்தின் வகையறாக்கள் பிரிந்தன. அந்த வகையறாக்களைத்தான் சமூகம், குற்றப் பரம்பரைகள் என அடையாளம் காட்டியது.

வடஇந்தியாவில் சுமார் 300 ஆண்டு காலமாக ‘டக்கி’கள் எனப்படும் குற்றப் பரம்பரை மிகப் பெரிய வழிப்பறிக் கொள்ளைக் கூட்டமாக நடமாடி வந்தது. அவர்களது வாழ்வியல் என்பது பிறரை ஏமாற்றி அவர்களது சொத்துக்களை கொள்ளையிடுவது, அந்தப் பணத்தைக் கொண்டு சுகபோகங்களை அனுபவிப்பது என்பதே!

ஆனால், நூலாசிரியர் சு.வெங்கடேசன் ‘காவல் கோட்டம்’ என்ற இந்த நூலில் குறிப்பிடும் குற்றப் பரம்பரையினர் யாரையும் நம்பவைத்துக் கழுத்தறுத்தது கிடையாது. காவல் தொழில் பார்த்தவர்கள் ஆடுகளை கிடையில் இருந்து திருடும் கொள்ளைக் கூட்டமாக உருவானது பெரும் சோகம். இந்த குற்றப் பரம்பரையின் வரலாற்றில் எத்தனை வீரம்? எத்தனை சோகம்? எத்தனை நெகிழ்ச்சி? இதோ நம் தமிழகத்தில்... மண் மணக்கும் மதுரையில் நிலைகொண்டிருந்த ஒரு சமுதாயத்தின் வரலாறு இந்தக் காவல் கோட்டம். இதன் மூலம் மதுரையின் 600 ஆண்டு கால வரலாற்றைத் தரிசிக்கலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில் உழைக்கும் மக்கள் கூட்டம் ஒன்று ஏன் குற்றப் பரம்பரையாக உருவானது? அந்த மக்களின் வாழ்வியல் என்ன? இறுதியாக அந்த மக்கள் அடைந்த இழிப் பெயர் என்ன? கிறிஸ்துவ மிஷனரிகளின் வருகைகள் இந்த மக்களின் வாழ்வியலை எப்படி மாற்றின?

‘உரலு நகராம இருக்க அடிக் கல்லு; கை வலிக்காம இருக்க கத சொல்லு’ என இந்த மக்களின் வாழ்வியலை இவர்களது சொலவடைகள் கொண்டே சொல்லாட்சி புரிந்து சிலிர்க்க வைக்கிறார் சு.வெங்கடேசன். இதற்காக அவர் மேற்கொண்ட கள ஆய்வுகள், வாய்மொழிப் பதிவுகள் என ஒவ்வொன்றுக்கும் உயிர்ப்பு இருக்கிறது.

‘இரவெல்லாம் மழை பெய்ததால் எங்கும் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. பூமியால் நீரைக் குடித்து முடிக்க முடியவில்லை’ என ஆங்காங்கே அணிக்கு அணி சேர்க்கும் வார்த்தைக் குவியல்கள் காவல் கோட்டத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகின்றன.

வரலாறுகள் வழிவழியாக வாய்மொழியாக சொல்லப்பட்டு வருபவை மாத்திரமல்ல. எனினும் குற்றப் பரம்பரையின் எஞ்சிய கடைசிக் கட்ட வாரிசுகள் தங்கள் பரம்பரையைப்பற்றி தாங்களே சொல்லும் கதைகள் சுவாரசியம் நிறைந்தவை. வீரமும், தீரமும் இந்த பரம்பரையின் சொத்தாக இருந்துள்ளதை காவல் கோட்டம் பதிவு செய்கிறது.

நூல் ஆசிரியர் சு.வெங்கடேசனின் பத்தாண்டு கால உழைப்பு இந்த நூல். அவரது உழைப்பின் மேன்மை மகத்தானது. மறைக்கப்பட்ட வரலாற்றை மகத்தான முறையில் வெளிகொண்டு வந்தமைக்காக தமிழ்கூறும் நல்லுலகம் அவரது பெயரை என்றென்றும் உச்சரிக்கும் என்றால் அது மிகையாகாது.

ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களின் பண்பாடுகள், கலாச்சாரங்கள் இயற்கையை ஒட்டி அமைந்திருந்தன என்பதை காவல் கோட்டத்தைப் படிக்கப் படிக்கத் தெரிந்துகொள்வீர்கள். கொம்பூதி புளியமரமும், நல்ல தண்ணீர்க் கிணறும், வெள்ளாடுகளின் சத்தமும் உங்கள் மனதைவிட்டு அகலாது என்பது திண்ணம்.

வாருங்கள் வரலாற்றில் பயணிப்போம்!

# குல மரபின் ஓவியம்

**உ**லகின் புராதன நகரங்களில் ஒன்று மாமதுரை. இந்நகரின் எந்த வீதிக்குள் நுழைந்தாலும், அது இரண்டாயிரம் ஆண்டு நீளம் கொண்டதாகவே இருக்கும். சித்திரக்காரத் தெருவும், எழுத்தாணிக்காரத் தெருவும், நிலத்துக்கும் காலத்துக்கும் நடுவில் பட்டியக்கல் பதித்து வடிவமைக்கப்பட்ட தெருக்களே!

இம்மாநகர் பற்றி எழுதப்பட்ட பேரிலக்கியங்கள் எத்தனையோ. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன், எனது மூதாதையன் மாங்குடி மருதன் இந்நகரின் மேல் தழுவிப்போகும் பகலையும், அதனை விழுங்கி நகரும் இரவையும் பற்றிய மிக நீண்டதோர் ஓவியத்தை வரையத் துவங்கினான். அவனது வம்சாவளியில் அடுத்தடுத்து வந்த இளங்கோவும், நக்கீரனும், பரஞ்சோதியும், குமரகுருபரனும் முடிவற்ற அந்த ஓவியத்தை புதிய புதிய தூரிகைகொண்டு வரைந்து பார்த்தனர். பொய்யாக் குலக்கொடியான வைகையின் மேனிதொட்டு மேலெழும் தூரிகைகள், நித்தம் ஒரு வண்ணம் கொண்டு இக்கடம்பவனத்தின் அடர்சோலையை சதா வரைந்தன. ஆனால் ஓவியம் முடிந்தபாடில்லை. மருதனின் குல மரபில் வண்ணம் பயின்ற இளையவன் நான். எனது தூரிகைக் கொண்டு இக்குல மரபு ஓவியத்தை என் பங்குக்கு வரைந்துள்ளேன்.

ஓவியத்தின் திரைச்சீலை காற்றில் பறந்துவிடாமல் இருக்க, வைகைக் கரையில் உட்கார்ந்து இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறாள் வந்திக் கிழவி. காலம், நதியின் மீது ஞாபகத்தை நீந்தவிட்டபடி நழுவிக் கடக்கிறது. வந்திக் கிழவி இம்மாநகரை உருவாக்கிய குல மைந்தர்களின் ஆதித் தாய். அவளது விரல்களின் ஊடே இருந்து வெளிவரும் உயிர் திரவமே காற்றில் மேலெழும் திரைச்சீலை. ஒரு வகையில் வரையப்படும் ஓவியமும், திரைச்சீலையும், அதனைப் பிடித்திருக்கும் மனுஷியும், அவள் நிற்கும் வைகைக் கரையும் பல பொருள் தாங்கி நிற்கும் ஒரு சொல். ‘மதுரை’ இது எம் மொழி உருவாக்கிய ஆதிச் சொல். இச்சொல்லில் இருந்து முளைவிட்டெழுந்த விருட்சமே இந்நாவல்.

என் வாழ்வின் நான்கில் ஒரு பங்கு, காவல் கோட்டத்தோடும், அதன் கதாபாத்திரங்களோடும், அது பேசித் திரிந்த காலவெளியோடும்தான் கழிந்திருக்கிறது. ‘பெரு நூல் ஆராய்ச்சி இளமைபோம்’ என்பான் பாரதி. ஆராய்ச்சிக்கு மட்டுமே அவ்வளவு பெரிய விலை தரவேண்டியிருக்கும் என்றால், அதன் அடிப்படையில் படைப்பிலக்கியத்தை உருவாக்க எவ்வளவு விலை கொடுப்பது.

இந்நாவலை எழுதத் துவங்கும்போது பிறந்திருந்த என் மூத்த மகள், இந்நாவலை எழுதி முடித்து கதவைத் திறந்து பார்த்தபோது, என் தோள் அளவு வளர்ந்து நின்றாள். மனம் பித்தாகி, பிறழ்ந்து, நினைவு மங்கிய ஒரு காலவெளி போல நிகழ்காலத்தைக் கடந்துபோவது ஓர் எழுத்தாளனுக்கு இயற்கை விதித்த நியதி.

இந்நாவலின் பிரமாண்டம் என்பது, பக்க அளவல்ல, கால அளவுதான்.

அறுநூறு வருஷத்து நீள் பயணத்தை கதாபாத்திரங்களின் வழியே, அறிந்து, உணர்ந்து, சமூக வரலாற்றின் பெரும் பரப்பை பிளந்துகொண்டு கடைசி அத்தியாயத்தின் வழியே மேலெழும் வாசகன், காலத்தை தனது சக பயணியாக உணரும் பேரனுபவத்தை அடைவான்.

கல்வெட்டுகள், செப்பேடுகள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் முன்வைக்கப்படும் ஆள்வோர்களின் வரலாறும், வாய்மொழிக் கதைகள், குலப் பாடல்கள், சொலவடைகள் மூலம் முன்வைக்கப்படும் மக்களின் வரலாறும் ஒன்றை ஒன்று ஊடறுத்து, பரஸ்பரம் கேள்விகளை எழுப்பி, நிராகரித்து, துரோகம் இழைத்து, வஞ்சித்துக் கிடக்கின்றன. பொதுவான உண்மை என்று எதுவுமில்லை. ஆனால் பொதுத் தன்மையிலிருந்து மேலெழும் ஒன்றினை உண்மை என்று கண்டறிந்து சொல்வதில் முதன்மையானவனாக கலைஞனே இருக்கிறான். அதனால் தான் அவன் உருவாக்கும் இலக்கியங்கள் காலத்தைக் கடந்து பயணிக்கும் சக்தி கொண்டதாக விளங்குகிறது. மனித மனத்தை வென்றெடுக்கவும், வடிவமைக்கவும் ஆற்றல் கொண்டுள்ளது.

நாவலே வாழ்வின் முழுமையைச் சொல்ல ஏற்ற இலக்கிய வடிவம். அதன் நெடுங் கத்வு திறந்து உள் நுழையும் வாசகனுக்கு, சொல்ல ஒரு பாடு விஷயம் இருந்தாலும், மௌனத்தையே ஒரு மலரெனத் தந்து வரவேற்கிறேன்.

இந்நாவல் உருவாக்கத்துக்கு எனக்கு பெரிதும் உதவி செய்த தோழர்களை வணங்குகிறேன். இந்நாவல் வெளிவந்த காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து வாசக கவனிப்பைப் பெறவைக்கும் விமர்சகர்களுக்கு எனது நன்றிகள். வெளியிடும் விகடன் பிரசுரத்தினருக்கும்.

**- சு.வெங்கடேசன்**

15-12-2013

மின்னஞ்சல் முகவரி: suvetpk@gmail.com

**இந்த நூல்...**

அன்புத் தங்கை ஈஸ்வரியின்
மலர்ப் பாதங்களுக்கு...

பாகம் ஒன்று

# முடி அரசு

# கதை நிகழும் களம்


தேவகிரி
கடகநகர்
1. மதுரை
2. திருச்சி
3. காஞ்சிபுரம்
4. ஆர்க்காடு
5. ராய வேலூர்
6. சத்தியமங்கலம்
7. மைசூர்
8. நஞ்சன் கூடு
9. துவார சமுத்திரம்
10. மாங்களாபுரம்
11. விஜய நகர்
12. ஆனைகுந்தி
13. முதுகல்
14. பிஜப்பூர்
15. கோவா
16. சந்திரகிரி
17. வேங்கடம்
18. பெனுகொண்டா
19. குத்தி
20. ஸ்ரீசைலம்
21. கொண்டவீடு
22. ராஜமகேந்திரகிரி
23. கோல்கொண்டா
24. ஒருகல்
25. கண்டி
26. உதயகிரி
27. ராய்ச்சூர்
28. புத்தளம்

அ

# மதுரா விஜயம்

# 1

**கருப்பணன் நினைவு மீண்டபோது தலையைத் தூக்கிப் பார்க்க** முயன்றான். முடியவில்லை. தலையில் பட்ட வலுத்த அடியில் ரத்தம் கொட்டி உறைந்ததில் ஒரு கண்ணைத் திறக்க முடியவில்லை. உடம்பெல்லாம் ரத்த விளாறாக இருந்தது. காயங்கள் கடுமையாக எரிந்தன. கையை அசைக்க முயன்றபோதுதான் விளக்குத் தூணோடு சேர்த்துப் பின்னால் கட்டப்பட்டிருந்ததை உணர்ந்தான். உட்கார்ந்த நிலையில் கட்டிக் கிடந்தான். கிழிந்த துணிபோல் ரத்தம் தோய்ந்த அவன் உடல் தூணோடு கிடந்தது. பெண்களின் அலறல்கள் ஒலிக்க, வலிமையை எல்லாம் திரட்டி நிமிர்ந்து பார்த்தான்.

தெருவெங்கும் குதிரைகள் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து கொண்டிருந்தன. கூந்தல் பிடியில் குதிரையோடு இழுபடும் இளம் பெண்கள்... மரண ஓலம்... புரியாத மொழியில் குதிரைக்காரன்களின் கெக்கலிப்பு, அதட்டல்கள், அலங்கோல உடையில் பெண்ணொருத்தி குதிரை முதுகில் கவிழ்ந்து கிடந்து அலறித் திமிறிக்கொண்டிருக்க இரு குதிரைக்காரன்கள் நிதானமான நடையில் கருப்பணனைத் தாண்டிச் சென்றனர். ரத்தம் தரையில் சொட்டியபடி போனது. வங்கிழடுகள் இரண்டு பேர் இடதுபக்கம் சாவடித் திண்ணையில் நடுங்கியபடி குரல் எழாது அழுதுகொண்டிருந்தனர். தூரத்தில் கோயில் மந்தையில் மாடுகள் கூட்டமாகக் குதிரைகள் சூழ மிரண்டபடி நின்றிருந்தன. தொழுவங்களிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட ஆடுகளையும், மாடுகளையும் கோயிலுக்கு ஓட்டிச் சென்றனர். வடக்குத் தெருவெங்கும் ஏராளமான குதிரைகள் ஆளில்லாமல் வெறுமனே நின்றிருந்தன. வீடுகளுக்குள்ளிருந்து தானிய மூடைகளைச் சுமந்து வந்து தெருவில் போட்டனர்.

கருப்பணன் கைகளை விடுவிக்க முயன்று தோற்றான். அவன் ரத்தம் கொதித்ததில் காயங்கள் திறந்து கசிவோடு எரிந்தன. ஒரு காவல்காரனின் கண் முன்னே ஊரே கொள்ளை போயிக்கொண்டிருக்கும் கொடுமை. அவன்

வாழ்நாளில் இப்படி ஒரு கொள்ளையைப் பார்த்ததில்லை.

களவும், காவலும் கற்று பத்தொன்பது வயதில் அழகர்மலைக் கருப்புக்கு கிடா வெட்டி மொட்டையடித்து காவல் கம்பு தூக்கி, வேப்பங்குளம் ஊருக்கு காவல்காரனாக வந்து சேர்ந்தான். இந்த ஐந்து வருஷங்களில் அவன் காவலில் இருந்து ஒரு துரும்பும் களவு போனதில்லை. புழுதியிலும், சகதியிலும் இரவெல்லாம் அலைந்து திரியும் அவன் பாதங்கள் இந்த மண்ணின் சிலிர்ப்பை அறிந்தவை. தடங்களும், பாதைகளும் ஊர் மக்களுக்கானவை; காவல்காரன் தடமற்ற வெளிகளில் திரியப் பிறந்தவன். கூகைகளும், கோட்டான்களும் அவன் கருங்காலிக் கம்பின் வீச்சை அறிந்திருந்தன. எந்த மனிதனுக்கு எதிராகவும் அவன் கம்பு எடுக்கவேண்டிய தேவை இன்றுவரை எழவில்லை. சாவடிக்கூரையின் குளுமையில் பகலெல்லாம் படுத்திருக்கும்போது அவனைப் பற்றிய பெருமிதப் பேச்சுகள் அரைத் தூக்கத்தில் காதில் விழுவதுண்டு. தாய்மடியில் தூங்கும் குழந்தையைப்போல அவன் காவலில் இரவெல்லாம் ஊர்கிடந்தது. கைக்கஞ்சி காய்ச்சிக் குடிப்பது கசந்து போகவே, போன வருஷம்தான் தெக்குக் தெருமுனையில் புதிய குடிசையைக் கட்டி வைத்துவிட்டு, பிறமலைக்குப் போய் கூட்டி வந்த மாமன் மகள் சடச்சிக்கு அழகர்கோயில் போய் சரடு கட்டினான்.

ஆவுடையின் குரல்தான் அது. கத்திக், கதறி வறண்டு சொல்லற்ற ஊளையாக ஒலிக்கிறது. கையையும், காலையும் கட்டி அவள் திமிறத் திமிறத் தோளில் போட்டுக்கொண்டு போகிறான் அந்தத் தாடிக்காரன். சமைஞ்சகுமரி ஆளாகி இன்னும் வருஷம் கூடத் திகையவில்லை. அவள் அம்மாவை இரண்டு பயல்கள் எத்தியபடி தரையோடு இழுத்துக் கொண்டு போகிறார்கள். உடம்பில் பொட்டுத்துணியில்லை. கருப்பணனின் கண் நிலைகுத்தி நின்றது. ‘பாவிகளா! இதைக்கேக்க எந்த நாதியும் இல்லயா...’

தூரத்தில் மாடுகள் பூட்டிய வண்டிகளில் மூடைகளை ஏற்றிக்கொண்டிருந்தனர். சீழ்க்கைச் சத்தமும், சிரிப்பும் இரைச்சலுமாகக் கிடந்தது. இடையிடையே குதிரைகளின் கனைப்பு. மந்தையில் தாயின் குரல் கேட்டு மூன்று ஆட்டுக்குட்டிகள் அத்திசை நோக்கித் துள்ளியபடி ஓடின.

**சா**வடியில் கொஞ்ச நாளாகவே பேச்சாகக் கிடந்தது, வடக்கேயிருந்து படையோட்டம் வருது என்று. பிறகு கருவூரில் இறங்கிவிட்டதாகப் பேச்சு அடிபட்டது. வடிவுடையாபிள்ளைதான் சொன்னார். டில்லிப் பட்டாணிகளாம். புது ஆட்கள், வாயில் நுழையாத ஏதோ பேர் சொன்னார். ம்...மாலி கபூர். போனவாரம் திண்டுக்கல்லுக்குத் தெக்கே தண்டு இறக்கிவிட்டதாகச் சேதி வந்தது. விளாங்குளம் சந்தைக்குப்போன கருப்பணன் அப்படியே ராவோடுராவாக எட்டிப்பார்த்துவிட்டு வரலாம் என்று வடக்கே நடையைக் கட்டினான். கருப்பட்டி வட்டுபோல தூரத்தில் திண்டுக்கல் அமுங்கிக் கிடந்தது. கம்மாப்பட்டி கரைப்பனையில் ஏறிப்பார்த்தான். நிலா வெளிச்சத்தில் கடல்போல் அந்தப் படை கிடந்தது. சோளக்காடும், கம்மங்காடும் நசுங்கியிருக்க ஆள்களும், குதிரைகளுமாய் நிலமெங்கும் தெரிந்தது. வெகுதூரத்தில் யானைகள் எருமைக் கூட்டங்களைப்போல நின்றிருந்தன. மிரண்டு போனான். ஊர் அளவுக்குத் திட்டுத் திட்டாகப் பிரிந்து பிரிந்து கண்ணுக் கெட்டிய தூரம்வரை பந்த

வெளிச்சங்கள் வெள்ளிகள்போல் மின்ன அது நீண்டு கிடந்தது. இப்படியே போய் மதுரையை முட்டினால் ஆத்தங்கரையிலிருந்து ஆனமலை வரை நிற்கும்.

மூணாம் நாள் அது மதுரை நோக்கிப் போனபோது கிளம்பிய செம்புழுதி அடிவானத்துக்கு அப்பாலிருந்து புகைபோல் எழுந்து காற்றோடு வேப்பங்குளம் தாண்டிப் போனது. நேற்றுக் காலையிலேயே ஆறு கடந்து மதுரைக்குள் புகுந்துவிட்டதாகத் தாக்கல் வந்தது.

இன்று சாட்டைக்கம்பு வெள்ளி முளைத்து முதல் கோழி கூவியபிறகு கருப்பண்ன் வழக்கம்போல் வடக்கிலிருந்து கொடிபாதையில் பிரிந்து வந்து சொக்கப்பிள்ளை கிணற்றுக் கமலைக் காலில் உட்கார்ந்து, துவரையை உரித்து பயறை வாயில் போட்டுக்கொண்டிருந்தான். நாய்க்குரைப்பு கேட்டது. ஒன்றைத் தொட்டு ஒன்றாகக் கூடி ஊருக்குத் தெக்கே மந்தையிலிருந்து விடாமல் கேட்டது. கம்போடு கருப்பணன் ஓடினான். குதிரைகள் பாய்ந்து ஊருக்குள் நுழைவது கம்பந்தோகைகளுக்கு மேலே தெரிந்தது. நூறுக்கு மேலேயிருக்கலாம். ஊரை நெருங்கும்போது நாய்கள் மிரண்டு கருப்பணனுக்கு எதிரே நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்தன. கோயிலைச் சுற்றி வடக்குத் தெருவை நோக்கி ஓடினான். ஆட்கள் அலறியடித்துக்கொண்டு நாலா திசையிலும் சிதறினர். குதிரைகள் பெண்களைத் தொடர்ந்து விரட்டிப் பிடித்தன. தெருவுக்குள் அவன் நுழைந்ததும், காரவீட்டுக் கதவை ஐந்தாறு பேர் சேர்ந்து இடித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். படிகளைத் தாவிக் கடந்த வாக்கில் கருப்பணன் ஒருவன் தலையில் ஓங்கி அடிக்க, அவன் சுருண்டு கீழே விழுந்தான். மறுகணம் ஒரு ஈட்டி கருப்பணனின் காதோடு சேர்த்துப் பின்னந்தலையைக் கிழித்தது. சட்டென எல்லோரும் அவனைச் சுற்றிவிட்டார்கள். தலையில் இடிபோல் ஏதோ இறங்கியது. மயங்கிச் சரியும்போது தூக்கி எறியப்பட்டு தெருவில் விழுவதைக் கனவுபோல உணர்ந்தான்.

குதிரைகள் கும்பல் கும்பலாக அவனைக் கடந்து ஓடுவதை வெறித்த கண்களுடன் பார்த்தவாறிருந்தான் கருப்பணன். பல குதிரைகளில் பெண்கள் கைகால் கட்டுகளோடு கண்ணும், வாயும் அடைபட்டுக் குறுக்காகக் கவிழ்ந்து கிடந்தனர். ஏழெட்டு வண்டிகள் பார மூடைகளோடு கடந்தன. ஊரில் பிடிபட்ட கிழவர்கள் ஓட்டிச்சென்றனர். கடைசியாகச் சென்ற குதிரைகள் மந்தையில் இருந்த் ஆடு மாடுகளை வளைத்து வளைத்து ஒன்றாகத் திரட்டிக்கொண்டிருந்தன.

சடச்சி காலைக் கிந்தியபடி விளக்குத்தூணை நோக்கி வருவதைக் கண்டான். கிழிபட்டு சீலை ரத்தத் திட்டுக்களோடு இருந்தது. நிறைமாதக் கர்ப்பிணி என்பதால் அடித்ததோடு விட்டுவிட்டார்கள் போல. அவள் வலது கையில் வேல் கம்பும் இடது கையில் அரிவாளும். அவனைக்கண்டு அவள் அழவில்லை. நேராகப் பின்னால் போய் கட்டை அறுத்துக்கொண்டே சொன்னாள் ‘உசுரு இருக்குவரைக்கும் கருப்பு காவல்ல களவு போகக்கூடாது. இந்தா...’ என்று வேல்கம்பை நீட்டினாள். எழுந்தவேகத்தில் வாங்கிக்கொண்டு மந்தையை நோக்கி ஓடினான். கோயிலுக்குத் தென்புறமாக மாட்டு மந்தைக்குப் பின்னே ஏழெட்டுக் குதிரைகள் நடந்துக் கொண்டிருந்தன. முன்னால் சென்ற குதிரைகள் எழுப்பிய புழுதி தூரத்தே தெரிந்தது.

பின்னாளிலிருந்து குத்தக்கூடாது என்று குதிரைக்குப் பக்கவாட்டில் ஓடிய விசையோடு திரும்பி குதிரைக்காரன் விலாவில் ஓங்கிக் குத்தினான். ‘யா அல்லா...’ என்ற கத்தலோடு அவனை நோக்கி விரிந்த பூனைக் கண்களைக் கருப்பணன் பார்த்தான். வேல் கம்பை உருவ இழுத்தபோது தாடிக்காரன் முன்னால் கிடந்த பெண்ணோடு சேர்ந்து கீழே விழுந்தான். குதிரை கனைத்தபடி கலைந்து ஓடியது. அவனை மிதித்துக்கம்பை உருவி மீண்டும் நெஞ்சில் பாய்ச்சி இழுத்தான். பின்னால் சுற்றி வந்த குதிரையிலிருந்து மின்னல்போல் ஈட்டி பாய்ந்தது. விலகிக்கொண்டு வேல் கம்பால் ஈட்டியைக் குறுக்கே அடித்தான். அது தெறித்து விழ, வேலோடு அவன் மேல் பாய்ந்தான். குதிரை விலக குறி தவறவும், மீண்டும் பாய்ந்தான். இம்முறை குதிரைக்காரன் தொடையில் இறங்கியது. அதை உருவ முனைந்து குதிரையின் துள்ளலால் கருப்பணன் இழுபட்டுக்கொண்டிருந்தபோது, தன் நெஞ்சுக்குள்ளிலிருந்து வெளியே நீட்டிய ஈட்டியைக் கண்டான். அப்படியே முன்பக்கமாக உருவித் திரும்பி எய்தவனையே குத்தினான். குத்திய கையைத் தோளோடு ஒரு வாள் வெட்டவும், ஈட்டியோடு கை சேர்ந்து போனது. குதிரைக்கால்களுக்கு நடுவே சரிந்து விழுந்தான்.

கண்கள் இரண்டு காட்சிகள் மங்கின. ‘எய்யா ராசு... கருப்பா...’ என்று ஆத்தாவின் குரல் ஆழத்தில் கேட்கிறது. சடச்சி சிணுங்கிக் கொண்டு அவன் கையை எடுத்துத் தன் வயிற்றில் வைக்கிறாள். சின்னக் கருப்பு அவள் வயிற்றுக்குள் உதைப்பது தெரிகிறது.

**மூ**ன்றாம் நாள் அவனுக்குப் பாலூற்றிய பிறகு சடச்சி ஊரைவிட்டுத் தன் தாயாதிகளைத் தேடிக் கிளம்பினாள். வைகைக்குத் தெக்கே ஆங்காங்கே. அவர்களின் புது ஊர்கள் முளைத்துக் கொண்டிருந்தன. சட்டி பானைகளையும், தவசத்தையும் மிச்சமிருந்த மொச்சையையும் சாக்கில் கட்டித் தலையில் தூக்கிக்கொண்டு, கையில் கருப்பணனின் வேல் கம்பைப் பிடித்தபடி தெக்கு பார்த்து நடந்தாள். வேகாத வெயிலில், பொசுக்கும் மண்ணில், உறுதியான காலடியோடு, வயிற்றில் பிள்ளையைச் சுமந்தபடி நாகமலைப் பாதையில் நடந்தாள்.

அமணமலை அடி வாரத்திற்கு வந்ததும் இடுப்புவலி கண்டது. மரநிழலில் சற்று தூரத்தே தெரிந்த குகையை நோக்கி, வலி கூடக் கூட நடந்தாள்.

*

# 2

**வை**கையின் நீர் மெலிந்து வடகரையோரம் நூலாக ஓடியது. கழுத்தளவு நீரில் சிறுவர்கள் மூழ்கிப்பிடித்து விளையாட, கரையோரம் ஏழெட்டுப் பெண்கள் துவைத்துக் கொண்டிருந்தனர். முகைதீனும், விருமனும் முங்கிக்கொள்ள ஒச்சுமுகம்மது அவர்களைத் தேடிக் கைகளால் துழாவினான். அல்லா சோங்குவும் காதரும் தெற்கே மணல் குழிக்குள் நீரில் உயிருக்குப் போராடியபடியிருந்த கெண்டைகளைப் பிடித்தும் விட்டும் விளையாடியவாறிருந்தனர். கரையில் நின்று அழுது சிணுங்கிக்கொண்டிருந்த குழந்தை பாத்திமாவை அவள் ஆத்தா விருமாயி துணியைத் தப்பியபடி அதட்ட, கொட்டானிலிருந்த சோளப் பொறியைத் தின்று கொண்டிருந்த அவள் அண்ணன் கருப்பு என்ற செய்யது திடீரென்று 'நாயி...நாயி...' என்று கத்தினான். அவனை யாரும் பொருட்படுத்தாததால் மறுபடியும் கத்தித் துள்ளிக்கொண்டு மேற்கே கைநீட்டினான். துவைப்பதை நிறுத்திவிட்டு அவன் ஆத்தா மேற்கே பார்த்தாள்.

பத்திருபது நாய்கள் மணல்வெளியில் தென்கரையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்க ஐம்பதுக்கும் மேலே நீரில் நீத்திச் சென்றன. பார்த்துக்கொண்டிருக்கும்போதே வடகரையிலிருந்து நாய்கள் அலையலையாய்ப் பாய்ந்து வந்து நீந்திக் கடந்து மறுகரைக்குச் சென்றன. கூர்நாசி காற்றைக்கிழிக்க, சாட்டை போன்ற உடல் வளைந்து வளைந்து நீள, நீண்ட கால்கள் தரையில் பட்டும்படாமல் அவை பாய்ந்து சென்றன. இப்பகுதியிலேயே இல்லாத வேறுவகை நாய்கள், மேற்கே புழுதிப்படலம் எழுந்தது. சீழ்க்கைச் சத்தமும், ஆரவாரமும் சூழக் குதிரைகள் இப்போது நீர்தெறிக்க ஆற்றிலிறங்கி எதிர்க்கரை நோக்கி ஓடின. சில நொடிகளில் மணலும், நீரும் சிதறிப் பறக்கப் பறக்க ஆற்று வெளியெங்கும் குதிரைகளாகி அக்கரையில் ஏறி மறைய, தொடர்ந்து குதிரைகள் இறங்கியவாறிருந்தன.

பெண்கள் அலறியடித்து துணிகளை எடுத்துக்கொண்டு பிள்ளைகளைப் பிடித்துவாறு மேடேறி நின்று மேற்கே பார்த்துக்கொண்டிருந்தனர்.

மேற்திசையின் மரங்கள் புழுதி மண்டலத்தில் மங்கி நிழலுருக்களாகி நிற்க, பெரும் ஆரவாரத்தோடு அந்தப் படை வைகையில் இறங்கிக் கொண்டிருந்தது.

ஜூனாகான்புரம் மசூதியிலிருந்து நகராக்கள் இடைவிடாது முழங்கின. அபாய அறிவிப்பு, ஊருக்குள்ளிலிருந்த ஆண்கள் அவசரகோலத்தில் வைகைக்குள் விழுந்து மதுரைக்கோட்டையின் வடக்கு வாசலை நோக்கி ஓடினர். ஊரிலிருந்த குதிரை வீரர்கள் அவர்களை முந்தி கோட்டைக்குள் புகுந்துவிட முயன்றனர்.

கைக்குழந்தையோடு படித்துறைக்கு ஓடிவந்த இபுராகிம் குழந்தையை ஒச்சாயிடம் ஒப்படைத்து விட்டு ‘சீக்கிரமாக வீட்டுக்குப் போ’ என்று கத்தியவாறு வடக்க வாசலைக் குறிவைத்து ஓடினான்.

*

**கு**மார கம்பணனின் விஜயநகரப்படை துவார சமுத்திரத்திலிருந்து 1371 மாசி மாதம் 17ஆம் நாள் கிளம்பியது. செங்கழுநீர்ப் பற்று வட்டாரச் சம்புவராயர்களைக் கம்பணன் கீழடக்கி காஞ்சியின் நியமித்த ஆளுநருக்கு உட்படுத்துவிட்டு மதுரையை நோக்கி வந்தான். பங்குனி இறுதியில் கோட்டையை முற்றுகையிட்டுவிட்டு தாக்குதலுக்கான தயாரிப்பில் இறங்கினார்.

அரவ நாட்டின் பழம்பெரும் நகரமான மதுரை பற்றியும், வைகை பற்றியும் கதைகதையாய்க் கேட்டிருந்த வடுகத் தளபதிகள் அதை நேரில் கண்டபோது ஏமாற்றத்துக்குள்ளாயினர். வைகை கம்பிளி நாட்டுக் காட்டோடைகளை விடவும் ஒடுங்கி மணலாய்க் கிடந்தது. சின்னஞ்சிறு நகரான மதுரையை ஐந்தே நாழிகையில் குதிரையில் சுற்றிவிடலாம். அதன் குட்டையான கோட்டை மதில்கள் காலத்தில் முதுமை பூண்டு அரித்துக்கிடந்தன. சுட்ட செங்கல்கள் செதில் செதிலாய் வங்கு பற்றி நின்றன. பனையை வெட்டிக் கிடத்தினால் மதிலை எட்டிவிடும் அகலம்தான் அகழி கிடந்தது. அரவ நாட்டில் கல்கோட்டைகளே இல்லை என்ற தகவல் ஆச்சரியமளித்தது. உள்ளே மீனாட்சி கோயிலின் கிழக்கிலும், மேற்கிலுமாக இரண்டு கோபுரங்கள்தான் கம்பீரமாக நின்றன. ஆங்காங்கே தென்னைகள் கொண்டையைச் சிலுப்பிக்கொண்டு தென்பட்டன. எல்லாவற்றையும் கடப்பது வெகு சுலபம் என்று தோன்றியது. முகம்மதியரின் அக்னி எந்திரத்தைத் தவிர கோட்டை முனைகளில் நிற்கும் அவற்றின் எறிகுண்டுகள் எட்டாத தூரத்தில்தான் சுற்றிலும் தாவளம் அடித்து நின்றன படைகள்.

மேற்குப்புறத்தில் வைகையிலிருந்து பசுமலை வரை நீண்டிருந்தது செலகொல்ல லட்சுமய்யாவின் அணி எட்டாயிரம் குதிரைகள் நேதிவாரி ஓபுலுவின் கீழும் நூறு யானைகள் ஜடாதாரி கங்கையாவின் கீழும் காத்திருந்தன. பதினைந்தாயிரம் காலாள் வீரர்கள் கொமனால் நரஹரியின் தலைமையில் இருந்தனர். அதற்கும் பின்னே பொதி எருதுகளும், பண்ட வண்டிகளும் இறங்கியிருந்தன. இன்னும் சற்றே விலகித் தெற்கே கபாலி மலையடிவாரத்தில் முந்நூற்றுவர் குதிரை வீராங்கனைகள் பிரிவு நலகாவுல சிவக்கா தலைமையில் தனித்து கூடாரங்கள் அமைத்திருந்தது. பெரும் இடைவெளியோடு தனித்தனியே பிரிந்து அணிகள் தண்டு

இறக்கியிருந்தன. கோட்டையடுப்புகளில் தீ அணையாது எரிந்தவாறிருந்தது.

வைகையின் வடகரைத் தோப்புகளுக்குள்ளும் ஜுனாகான் புரத்துக்குப் பின்னுமாக சக்கிலியர்களின் கோசாங்கியர் அணிகள் பெதவீரலு வெங்கடாத்திரி தலைமையில் நின்றன. ஆறாயிரம் குதிரைகளுக்கு ரம்பாவுல கேசவன் தலைமையேற்றிருந்தான். இந்தப் பிரிவில் யானைகள் ஏதுமில்லை. மாதிக வல்லாளிகள் மூவாயிரம் பேர் அதனூரி ஓபண்ணாவின் கீழ் இருந்தனர். காலாள் வீரர்கள் பன்னீராயிரம் பேர் தகுசில்ல ரெக்கரபுலியின் தலைமையில் இருந்தனர்.

கிழக்கே வைகையின் தென்புறமெங்கும் தோப்புக்குள் சில்லவார்களின் பெரும்படை காத்திருந்தது. அவர்கள் வழக்கப்படி குறுங்குலப் பிரிவுகளின் கீழ் தனித்தனியே அணி அமைத்திருந்தனர். தொண்ணூற்றாறில் நாற்பத்திரண்டு குறுங்குலங்கள் இங்கே வந்திருந்தன. வைகைக்கரையில் ஆரம்பித்து அச்சுதவாரு, புல்லாவுலவாரு, பந்துமுலுவாரு என்று அடுக்கடுக்காய் நீண்டு தென்கோடியில் சூர்ணவாரு வகையறாக்களோடு அணிகள் நிறைவுற்றன. எண்பது வயதைத் தாண்டிய சில்ல நரசய்யா பிதாமகர் போல அங்கிருந்தார். இருநூறு யானைகளோடு கோவுதார சென்னய்யாவும் ஏழாயிரம் குதிரைகளோடு மேகல கனகண்ணாவும் காத்திருந்தனர். காலாள் வீரர்கள் இருபதாயிரம் பேருக்கும் நாற்பத்திரண்டு தலைவர்கள் இருந்தனர். அதில் மருல பின்னமனும், ராசூடி மல்லய்யாவும் அசகாய சூரர்கள் என்ற பேரெடுத்தவர்கள். கரிவரத பெத்தய்யா செஞ்சு வேடர்களிலிருந்து ஆயிரம் வில்லாளிகளைத் தன்னோடு அழைத்து வந்திருந்தார்.

கொல்லவாருகளில் வீரத்திற்குப் பேர் போன வல்லக்கவாரு குலம் தென்புற முற்றுகையில் நின்றது. ஐயாயிரம் குதிரைகளும், எண்ணாயிரம் காலாள் வீரர்கள் மட்டுமே அங்கிருந்தனர். அடிக்கடி அணித்தலைவர்களை மாற்றிக்கொண்டே இருப்பது அவர்கள் வழக்கம். சண்டைக்கு முன் சிவப்புக் கச்சை எடுக்கும்போதுதான் யார் யாரென்று தீர்மானமாகும். தரிகோடி பசவய்யா கிழவர்தான் அவர்களுக்குப் பெரியவர். அவர் சொல்லே வேதம்.

அனைத்துப் படைகளையும் வழி நடத்தும் தளபதி பெய்யாவுல மங்கன் ஒரு வல்லக்கன்தான். இவனுக்கு இணையான அதிகாரம் சில்லவார்களின் சங்கு கோபண்ணாவுக்கும் உண்டு என்றாலும் இவன் இளவரசன் கம்பணனின் சொல்லுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டியவன்.

**வை**கையைக் கடந்தவுடனே வல்லக்கவாரின் முன்னணிக் குதிரைகள் கோட்டையைச் சூழ்ந்துவிட்டதால் நான்கு வாசல்களிலும் அகழியின் கல்பாலத்தைத் தகர்க்க உள்ளேயிருப்பவர்களுக்கு நேரம் வாய்க்காமல் போய்விட்டது. அதுவே வடுகர்களுக்கு அனுகூலமாய் அமைந்தது. கோடையாதலால் அகழியில் பாதியளவு நீர் இருந்தது. நகரின் புழங்கு நீர் தென்புறத் தூம்புகளிலிருந்து அகழிக்குள் வழிந்துகொண்டிருந்தது. அகழி நிறை நீரோடு இருந்தால் வேலை சுலபம். பெரும் தடிகளைப் பிணைத்துக் கட்டி தெப்பம் போலாக்கிப் பெருவாரியாக மிதக்கவிட்டு மதில்வரை போய்விடலாம். ஏற்றத்தாழ தரைபோலவே அகழியைப் பாவித்துவிடமுடியும். பாதி ஆழத்தில் நீர் கிடப்பது பெருந்தொல்லை. ஏராளமாகப் பலி கொடுக்கவேண்டிவரும்.

கிணறு தோண்டுவதையும், கல் உடைப்பதையும் பாரம்பரியமாகச் செய்து வரும் உப்பலவாரு குலத்தினர் முதல் இரண்டு மூன்று நாட்களாக சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிணறு குளம் குட்டைகளை எல்லாம் நோட்டம் பார்த்து வந்தனர். முதல் வேலையாக வைகையின் தென்கரையிலிருந்து வடக்கு மதிலுக்குக் கீழே கோட்டைக்குள் போகும் ஊற்றுமடைகள் இரண்டை அடைத்தனர். அகழிக்கும் கீழே கல்லால் கட்டப்பட்டிருந்தன அவை.

மதுரைக்குக் கிழக்கே நாலு கல்தொலைவில் உள்ள அனுப்பானடி கண்மாயைக் கடைசியாகத் தேர்ந்தெடுத்தனர். மரங்களின் வாகுகளை வைத்தே கீழுள்ள பாறைகளின் ஆழத்தைக் கணித்துப் பாதையை வகுத்தனர். நாலாம் நாள் வேலை தொடங்கிவிட்டது. படையணியினர் மூன்றிலொரு பங்கினர் சுழற்சி முறையில் உழைக்க, கால் தோண்டும் வேலை கண்மாயிலிருந்து ஆரம்பித்தது. கண்மாயின் மேற்புறம் கரண்டைக்கால் ஆழத்தில் இருப்பது சாண் அகலத்தில் ஆரம்பித்த கால்வாய் மதுரையை நோக்கிப் பாம்பு போல ஊர்ந்து வந்தது. ஆழம் கூடிக்கொண்டே போனது. சரளைக் கற்களாகவே இருந்தன. ஐந்தாறு இடங்களில் மட்டுமே பாறைகளை உடைக்க வேண்டியிருந்தது. இருபத்திரண்டாவது நாள் மாலையில் அகழியை நெருங்கிவிட்டனர். கிழக்கே மரங்களடர்ந்திருந்ததால் கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு என்ன நடக்கிறதென்று தெரியவில்லை; மரங்களைத் தாண்டி வெட்டவெளிக்குள் கால்வாய் நீண்டபோதுதான் நிலைமையை உணர்ந்தனர். தென்கிழக்கு அலங்கத்திலிருந்து ஒற்றை அக்னி எந்திரம் குண்டெறியத் தொடங்கியது. கால்வாய் நாலு ஆள் மட்டத்திற்குக் கீழே இருந்தது. உள்ளே தோண்டியவர்களை குண்டுகள் எட்டவேயில்லை; கரையில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்தன. திருப்புவனத்திலிருந்து வந்த பட்டமார் தளபதி மங்களனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கிழக்குக் கோட்டைவாசலில்தான் போரில் தோற்ற ஹொய்சள அரசன் வீரவல்லாளனின் தோலை உயிரோடு உரித்து வைக்கோல் பிரியைச் சுற்றி கம்பத்தில் கட்டியிருந்தனர் என்று சொன்னார்கள். போர் முடிந்தபிறகு வந்து தன்னைச் சந்திக்குமாறு சொல்லி அவர்களை அனுப்பி வைத்தான் மங்கன். வந்து விழுந்த கல்குண்டுகளை வீரர்கள் விளையாட்டாக ஓடி ஓடி எடுத்து எறிந்து எறிந்து கொண்டாடினார்கள். அன்று இரவோடிரவாக வேலைநடந்து, மூன்றாம் சாமத்தில் அகழி உடைந்தது.

மறுநாள் புலர்ந்தபோது, சேறும், சகதியுமாய் நீர்த்திட்டுகளோடு அகழி மரித்துக்கிடந்தது. பருந்துகளும், காக்கைகளும் வேட்டையாடிக்கொண்டிருந்தன. நீர்க்கோலிகள் நெளிந்து நெளிந்து சகதியில் சிக்கிப்போராடின. ஆங்காங்கே தென்பட்ட முதலைகளை வேடர்கள் நஞ்சு அம்புகளை எய்து கொன்றனர். குறித்த நாளைவிட ஒரு வாரம் முன்னதாகவே வேலை முடிந்தது. சித்திரை அமாவாசைக்கு இன்னும் ஐந்து நாட்கள் இருந்தன. வளர்பிறையில் போர் தொடங்குவதாகத் திட்டம். ஏழாம் பிறைக்குள் மதுரை பிடிபடவேண்டும்.

*

**அ**மணமலையில் இருக்கும் தீர்த்தங்கரர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட

கங்காதேவி போருக்கு முன் அங்கு போய் வணங்கவேண்டும் என நினைத்து, கணவன் குமாரகம்பணனுக்குத் தகவல் அனுப்பினாள். அவனோ வைகை ஓரக்கூடாரத்தில் மறுநாள் காலை தொடங்கவிருக்கும் போர் பற்றி தளபதிகளுடன் கலந்தாலோசித்துக்கொண்டிருந்தான். போர் முடிந்தவுடன் அங்கு போகலாம் என்று அவளுக்குப் பதில் வந்தது. அவன் உடனே வந்தாக வேண்டும் என அவளிடமிருந்து ஆணைபிறந்தது.

அவள் சென்ற வாரமே கணவனுடன் போய் பரங்குன்றத்தின் வடக்குக் குடைவரையில் இருந்த சுப்பிரமணியரையும், தென்புறத்தில் இருந்த தீர்த்தங்கரர்களையும் வணங்கியிருந்தாள். அதைவிட அவளுக்கு மலைமேலே ஏறியதுதான் மகிழ்ச்சியாக இருந்தது. உச்சியில் நின்று வடகிழக்கே பார்த்தபோது மதுரை ஒரு தாம்பாளத் தட்டு போலிருந்தது. கவிழ்ந்த இரு தேங்காய் மூடுகளின் குடுமிகள் போல இரண்டு கோபுரங்கள்! வெகு நேரமாக அதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அமணமலை என்று ஒன்று தான் கூடாரத்திற்கு மேற்கே இரண்டு கல்தொலைவில் இருப்பதை அறிவாள். ஆனால், இன்று காலை தான் அங்கு அழகழகான சிலைகள் இருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டாள். மேற்குபோய் இன்று காலையில் சுற்றிவிட்டு வந்த குதிரை அணி தாவளத்துக்குத் திரும்பியுடன் இறங்கி கங்காவிடம் ஓடோடி வந்த அந்த சுட்டிப்பெண் விழிகள் விரியத் தான் கண்ட அழகுக் காட்சிகளை விவரித்தாள். அவளை கங்காவுக்கு மிகவும் பிடிக்கும். எப்போதும் உற்சாகமாய்த் துள்ளிக் கொண்டிருப்பவள். ஸ்ரீஜானகிவாரி கனகநூகா. ஆனைகுந்தியின் புகழ்பெற்ற பாலமவாருத் தளபதிகளின் வழிவந்தவள். கங்காவின் தூரத்து உறவுக்காரி. பருவமடைந்து ஓராண்டுதான் ஆகிறது. இன்னும் மணமாகவில்லை. அவள் திருமணத்தை துவாரசமுத்திரத்தில் அல்ல, ஆனைகுந்தி கங்கையம்மன் ஆலயத்தில் நடத்தித் தருவதாக கங்கா வாக்களித்திருக்கிறாள். பரங்குன்றத்தைவிட இந்தமலை குட்டியாக அழகாக இருப்பதாகக் கனகநூகா சொன்னாள். அங்குள்ள பெரிய பொய்கையைவிட இந்தக் குன்றின் அடியில் இருக்கும் ஆம்பல்குளமும், மேலே சுனைமேட்டில் நிற்கும் தீர்த்தங்காரர்களும் மேற்கே தவக்கோல வர்த்தமானரும் அழகோ அழகு என்று சொல்லிச்சொல்லி கங்காவின் மனத்தில் ஆவலைத் தூண்டிவிட்டாள். அதைவிட குன்றேறி மதுரையை மீண்டும் மேலேயிருந்து பார்க்கவேண்டும் என்பதிலே கங்காவின் நாட்டம் இருந்தது.

கங்கா தன் குதிரை ருத்ருடுவின் மேலேறி மெய்க்காப்பாளர்கள் சூழக் காத்திருந்தாள். கம்பணன் வந்தான். கபாலி மலையிலிருந்து மாடக்குளம் கண்மாய்க் கரையேறி எதிர்வெளியில் கண்கள் கூசமேற்கே விரைந்தனர்.

கனகநூகா அமணமலையின் மேற்கே போய் குதிரையை நிறுத்தினாள். இறங்கித் துள்ளிக்கொண்டு மரச்செறிவின் ஊடே சிதைந்த படிகளில் ஏறி ஓடினாள். கங்காவும், கம்பணனும் இறங்கி அவளைப் பின்தொடர்ந்தனர். சிந்தல ஜோகம்மாவோடு பத்துப் பெண்கள் குதிரைகளிலிருந்து இறங்காமல் கீழே காவலிருக்க, காலாரி செல்லியோடு சேர்ந்த ஏழெட்டுப்பேர் குதிரை மீதேறியே படிகளில் மெதுவாகச் சென்றனர். படிகளின் இருபுறமும் வேம்பும் கிளுவையும் செழித்து வளர்ந்திருந்தன. ஒரு மயில் கழுத்துச் சொடுக்கி இவர்களைப் பார்த்துத் திகைத்து பின்நிதானமாகத் தோகை தவழச்சரிவில் இறங்கிப்போனது.

இடப்புறச் சரிவில் மயிலைக் கண்களால் தொடர்ந்த கங்கா அங்கிருந்த மஞ்சணத்தியைச் சுட்டி கம்பணனிடம் சொன்னாள் ‘இவ்வளவு பெரிய மரமா இப்பதான் பார்க்கிறேன்.’ குன்றின் மேலிருந்து பிளந்து கீழே விழுந்து கிடந்த பெரும் பாறையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் ‘பம்பா நதிக்கரைக்கு வந்தது போல இருக்கில்ல!’

மேல்படியை எட்டியதும் தற்செயலாய் கிழக்கே திரும்பினாள். கண்முன்னே பிரம்மாண்டமாய் தவக்கோலத்தில் அமர்ந்த வர்த்தமானர்! பேச்சற்று அப்படியே நின்றாள். கனகநூகா அவள் ஆச்சரியம் நீடிக்கப்பொறுக்காமல் ஓடிவந்து கங்காவின் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு பாறையை ஒட்டி இருந்த குகைக்குள் போனாள். சுவர்களெல்லாம் தீர்த்தங்கரர்கள். மழைநீர் சிலைகளின் மேல் வழிந்துவிடாமல் மேலே பாறையிலே விளிம்பு வெட்டி சரித்து இறங்கியிருந்தனர்.

‘ஆயிரம் ஆண்டுகளாய் நீடிக்கும் தவம்‘ என்றொரு வரி கங்காவின் மனதிலோடியது. அதைக் கனகாவிடம் சொல்லத் திரும்பியவள், அப்போதுதான் கவனித்தாள் - ஒரு கிழவி பேரன், பேத்திகள் சூழ அந்தக் குகைக்குள் நின்று சிரித்தவாறு தங்களையே பார்த்துக்கொண்டிருப்பதை. கீழே மூலையில் அடுப்புக்கல்லும் மட்பாண்டங்களும் இருந்தன. இருப்பதில் சிறியவளான ஒரு பெண்குட்டியைத் தன்னிடம் வருமாறு கைநீட்டி அழைத்தாள் கங்கா. கிழவியின் பின்னே ஒளிந்துகொண்டு விரல் சூப்பியவாறு அந்தப் பிள்ளை முகத்தை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தது. ஏதாவது பேச வேண்டுமென நினைத்த கங்கா அரவ பாஷை தெரியாமல் திண்டாடினாள். ‘மீரு பேரு?’ கிழவிக்கும் புரியவில்லை. மீண்டும் கேட்டபோது ‘பேரு’ என்ற சொல் புரிந்ததால் ‘சடச்சி’ என்றாள். மேலே எப்படிப் பேசுவது என்று தெரியவில்லை. பூமாடி மாரம்மா உதவிக்கு வந்தாள். கடந்த இரண்டு மாதங்களில் பலதமிழ்ச் சொற்களைத் தெரிந்து வைத்திருந்தாள். அவளும் கிழவியும் திக்கித் திணறிப் பேசமுயன்றனர். கங்காவும், கனகநூகாவும் மீண்டும் வர்த்தமானர் முன்வந்து நின்று பார்த்தனர். கம்பணன் காத்திருந்தான்.

மாரம்மா வந்து சொன்னாள். இந்தக் கிழவி அறுபது வருஷமா இங்கதான் இருக்காம். மகன்கள், பேரன்கள்லாம் இங்க பக்கத்துல உள்ள குகைகள்லதான் குடியிருக்காங்களாம்.

கங்கா கைவளைகளைக் கழற்றினாள். குழந்தைகளை நெருங்கிப் போய் ஆளுக்கு ஒன்றைத் தந்தாள்.

இறங்கி நடந்து குன்றின் கிழக்கே வந்தனர். கனகநூகா பாறையின் வெட்டுத்தடங்களைச் சுட்டியவாறு குன்றின் உச்சியைக் காட்டினாள். சின்னதாக ஒரு கற்கோயில் தெரிந்தது. குளத்தில் செந்தாமரைகள் மலர்ந்திருந்தன. குளித்துவிட்டு மேலே ஏறலாம் என்று கங்கா உடைகளைக் களையத் தொடங்கினாள். அதுவரை அந்த நிழலில் காத்திருப்பதாகச் சொன்ன கம்பணன் இன்னும் விழுது இறக்காத அந்த இளம் ஆலமரத்தை நாடிப்போனான்.

சில்லென்ற நீர் அமிழ்ந்த கங்கா சற்றே நீந்தி முன்னே போனாள். கால்கள் பாவவில்லை. ஆழமிருக்கும். நீருக்கு மேலே தலை தூக்கியவள் கூந்தலை அவிழ்த்து விரித்தாள். உள்ளாடையையும் உருவி எதிரே

பாறையில் நின்ற கனகாவை நோக்கி எறிந்தாள். குன்றின் பின்னே சூரியன் இறங்கியிருந்தான். மாலை நெருங்குகிறது. இந்தக்குன்றைப் பார்த்ததிலிருந்து துங்கபத்ரையே நினைவில் ஓடிக்கொண்டிருக்கிறது.

மீண்டும் மூழ்கிக் கண்திறந்து ஆழத்தைப் பார்த்தாள். தரைதெரியவில்லை. மாலை வெயிலில் பசுமஞ்சளாய் நீர் கலங்கித்தெரிந்தது. இந்தக் குளத்தில் குளித்தெழுந்த சமணமுனிகள் எத்தனை எத்தனைபேர்? ஏன் எப்போதும் ஊர்களின் புறத்தே கற்குன்றுகளுக்குள் இன்னொரு கல்லாய் உறைந்திருந்தனர்? இன்னும் இன்னும் என்று இந்த உலகையே புலன்களால் துய்க்கத் துடிக்கும் மானுட இச்சையிலிருந்து விலகிய அவர்கள் தேட்டம்தான் என்ன? எவ்வழியே போனாலும் மனிதன் அழிந்துதான் போவான். அதுமட்டும் நிச்சயம். பின் எது மிஞ்சம்? இந்தச் சிலைகளா? கலைகளா? எழுத்தா? அவையும் அழியும். வைகையின் புனலோடு போய் அழிந்த ஏடுகள் எத்தனை? சிந்தையில் அரும்பி எழுதாமலே கழுவேற்றத்தில் கருகிப் போயுமிருக்கலாம். எண்ணாயிரம் பேர். எண்ணிக்கையில் மிகை இருக்கலாம். எண்பது பேரே ஆனாலும் அது கடவுளின் பேரால் நடந்தது. ஆட்சி அதிகாரத்தின் மமதையால் நடந்தது. அந்த வன்கொலைக்குச் சாட்சியாய் இருந்த வைகை கண்ணீர் பெருக்கி ஓடியிருக்கும். அந்த வலியின் துயர் சுமந்த காற்று இந்த மண்ணின் மார்பெல்லாம் அறைந்து அறைந்து புலம்பியிருக்கும்.

துங்கபத்ரையில் சிந்திய ரத்தம்... பல்லாயிரம் பெண்கள் குழந்தைகளின் ரத்தம் நதியோடு ஒழுகாது இன்னும் உறைந்திருக்கிறது. முகம்மதியர் மூட்டிய தீ... ஆனைகுந்தியில் மூன்று நாட்களாக நின்றெரிந்த தீ இன்னும் அணையாது கனல்கிறது. பெண் மனதில் வஞ்சினம் அணையாது. அதை முலைப்பாலோடு குழந்தைக்கும் புகட்டுவாள். தலைமுறைகளுக்கு அது ரத்தத்தில் எரிந்துகொண்டிருக்கும்.

கங்கா நீருக்கு மேலே தலை உயர்த்தினாள். மூச்சு வாங்கியது.

பாகீரதியை இடுப்பில் தூக்கிக்கொண்டு ஒரு தாதி தப்பித்து ஓடினாள். ஆனைகுந்தியின் மதில் தாண்டி ஆற்றைக்கடந்து தென்கரையில் மாதங்க மலைமேல் ஏறி ஒளிந்திருந்தாள். ஐந்தே வயதான அறியாச்சிறுமியான பாகீரதி பசியோடும், பயத்தோடும் மலைமேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். வடகரையில் பற்றி எரியும் ஆனைகுந்தியைப் பார்த்துக்கொண்டிருந்தாள், அழுதழுது பசியால் மயங்கி விழும்வரை.

மாதவவாரு இளவரசி பாகீரதி பின்னர் எதுவுமற்று எங்கோ ஒரு குடிசையில் வளர்ந்தாள். பின்னும் ஒன்பது ஆண்டுகள் கழித்து தென்கரையில் மாதங்கமலை அடிவாரத்தில் ஏமகூடப் பாறைகளின் மேல் விருபாஷர் கோயிலைச் சுற்றி விஜயநகரத்தின் கோட்டை மதில்கள் முளைத்தன.

பாகீரதி அவ்வா பேரப்பிள்ளைகளை மடியில் கிடத்தி இந்தக் கதையைத்தான் சொல்வாள். மொழியறிந்தபோது கங்காதேவி கேட்டமுதல் கதை இதுதான். வட்டமிட்டு உள் சுழித்து அ என்று அவள் எழுதக்கற்குமுன் குறுவாள் ஏந்தக் கற்பித்திருந்தாள் அவ்வா. பெருவாள் எடுத்துப் பயின்று வீராங்கனை ஆகும் வரையும் அதன் பின்னும் எத்தனையோ முறை மாதங்கமலை மேல்நின்று வடகரையில் தெரியும் ஆனைகுந்தியைப் பார்த்தவாறிருந்திருக்கிறாள் கங்கா. இன்று அது

மீண்டும் நகரமாகிவிட்டது. விஜயநகரத்தின் ஓர் அங்கம். ஆனால், அவள் கண்களுக்கு எரிந்துகொண்டிருக்கும் ஆனைகுந்திதான் தெரியும். துங்கபத்ரை அதன் செந்தழல் பிம்பத்தைச் சுமக்கமுடியாமல் துடிக்கும். அவள் மட்டுமல்ல, கம்பிளி மண்ணின் குழந்தைகள் அனைவரும் அந்தக்கதை கேட்டுத்தான் வளர்கிறார்கள்.

கிளிகள் மிழற்றும் ஒலி கேட்டு மேலே பார்த்தாள். வடக்கிருந்து ஒரு கிளிக்கூட்டம் தென்புறத் தோப்புகளுக்குப் பறந்து கொண்டிருந்தது. அமணமலையிலிருந்து பாய்ந்திறங்கிய அம்பு போன்ற ஒன்று கிளிக்கூட்டத்தில் தைத்து எகிறிச் சென்று ஆலமரத்தில் மறைந்தது. கிளிகள் அலறிச் சிதறிப்பறந்தன. மின்னல் வெட்டியது போலிருந்தது. ராஜாளி என்ற மின்னல். வல்லூறு வேட்டை. சாளுவப் பறவை! பக்ஷி ராஜா!

கரையில் நின்ற ஜோகம்மாவைப் பார்த்து கங்கா கத்தினாள் ‘இப்போதே போரைத் தொடங்கவேண்டும். உடனே. ராஜாவிடம் போய்ச்சொல். ஓடு.’ கரையில் கங்கா ஏறவும் நாற்புறமும் தோழிகள் நின்று சீலையால் அரணாகச் சுற்றினர்.

கம்பணன் கோபத்தோடு கங்காவை நோக்கி வந்தான். நெருங்கியபோது, நிறைநிர்வாணத்தில் அவள் தலை துவட்டியவாறு அவனைப்பார்த்தாள். அவன் கத்தினான். ‘கங்கா! இது விளையாட்டல்ல. போர். இன்னும் சற்று நேரத்தில் இருட்டிவிடும். முழு அமாவாசை...’

‘நான் தீர்மானித்து விட்டேன். இதில் இனி மாற்றம் இல்லை. உடனே சென்று தயாராகுங்கள்.’

‘உன் பிடிவாதத்திற்கு அளவில்லையா? என்னோடு விளையாடலாம். ஆயிரமாயிரம் உயிர்களோடு விளையாடுகிறாய்.’

“குமாரகம்பணா! விலகி நில். விஜயநகரப் போர் இதுவல்ல. இது என் யுத்தம். கம்பிளியின் யுத்தம். இதற்காகவே நான் பிறந்தேன். இந்த நாளுக்காவே காத்திருந்தேன். இதற்காகத்தான் வாளெடுத்தேன். ஆயிரமாயிரம் கொல்லவாருகளை இழந்தாலும் அந்த ரத்தத்தில் நடந்துபோய் இன்றிரவே பலி எடுப்பேன். ஆனைகுந்தியின் பகை முடிப்பேன். போ! அந்த ரேணுகையின் மேல் ஆணை.”

குமாரகம்பணன் நடுங்கினான். அவன் அறிந்த கங்கா அல்ல இவள். இந்தக் குரல் ஏதோ அமானுட வல்லமையின் அசரீரி போல ஒலிக்கிறது.

**சூ**ரியன் நெற்றி மட்டத்திற்கு இறங்கிவிட்டான். பசுமலை அடிவாரத்தில் வடக்கே கங்கையம்மன் பூஜைக்கான ஏற்பாடுகள் அவசர கதியில் நடந்தன. தளபதிகள், குலப்பெரியவர்கள், அணித்தலைவர்கள் எல்லோரும் வந்து வரிசைப்படி நின்றனர். அமணமலையிலிருந்து கங்காவும் கம்பணனும் நேரே பூஜைக்கு வந்தனர். பூஜை ஆரம்பமாயிற்று.

சக்கிலிய மாதங்கி ஒருத்தி கங்கையம்மன் செப்புச் சிலையைத் தலையில் தூக்கியவாறு வந்தாள். பின்னே ஒன்பது தேவதுந்துபிகள் வரிசையில் வந்தன. அந்த உறுமிகள் இழையும் ஒலி மட்டுமே வ்வூ...வ்வூ... என்று காற்றில் மிதந்துக்கொண்டிருந்தது.

மண்ணில் விரிக்கப்பட்ட கம்பளத்திற்கு எதிரே இருந்த பீடத்தில் கிழக்கு

நோக்கி கங்கையம்மனை வைத்தாள். தளிப்பெண்டிரான இருபசவிகள் நீராட்டி, சந்தன களபங்கள் பூசி அம்மனை அலங்கரித்து மாலை அணிவித்தார்கள்.

பன்னிருகைகள் விரியத் தேவி தன் மக்களை நோக்கி நின்றாள். ஒரு கையில் திரிசூலம். மறுகையில் உடுக்கை. ஒன்றில் அம்பு. பிறிதில் கம்பு. ஒரு கரம் பாம்பைப்பிடிக்க, மறு கரம் செடியை ஏந்தியது. தக்கையையும் தாடிமப் பழத்தையும் இரு கைகள் கொண்டிருந்தன. வில்லொரு கையிலும் சூலமொரு கையிலுமேந்தி ஆங்காரரூபிணியாய் நின்ற அன்னையே பின்னும் அன்னம் ஒரு கரத்திலும் விசிறி ஒரு கரத்திலும் தாங்கி அருள் பாலித்தாள்.

மீண்டும் உறுமிகள் விம்மத் தொடங்கின. கொல்லவாருகளின் காமதேனுவான பொலி ஆவு முதலில் வந்தது. முத்து முகபடாம் அணிந்து கொம்புகளில் தங்கப் பூண்கள் பூண்டு, சிமிலையும், உடலையும் வண்ணப்பட்டு அலங்கரிக்க, கால்களில் தங்கச் சலங்கைகள் ஒலிக்க கம்பீரமாக நடந்து வந்து கம்பளத்தின் மீது நின்றது.

இப்போது உறுமிகள் சுருதி குறைக்க, குல ஜென்டடுவாரு பொலி ஆவுக்கான வாழ்த்துப் பாடலைப் பாடினர். ஆவும் அம்மனும் எதிரெதிரே இருந்தனர். சூழ நின்றவரெல்லாம் கைகூப்பித் தொழுதனர். ஒரு பசவி நனைத்த தினையை உள்ளங்கைகளில் ஏந்தி நீட்டபொலி ஆவு அதைத்தின்றது. முடித்ததும் கோபாலன் கயிற்றைப்பற்றி அழைத்துக்கொண்டு போனான்.

அடுத்தாக, குல வரிசைப்படி மூத்த குடியினரான சக்கிலியரின் ஆவு வரவேண்டும். ஆனால், அவர்கள் ஆதியில் எப்போதோ ஆவையே கொன்று தின்றுவிட்டதால் குல விலக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் ஆவு வளர்ப்பதும் தடுக்கப் பட்டுவிட்டது. ஆனால், சடங்குகளில் முதல் மரியாதை எப்போதும் உண்டு. எனவே அவர்களுக்காக பசவண்ண ஆவு வந்தது. அதே அலங்காரங்களோடு வந்து கம்பளியில் நின்றது. ஜெண்டடுவாரு சக்கிலியக் குலப் பெருமைகளைப் பாடினான். எல்லோரும் தொழுதனர். தினையை ஏற்றுக்கொண்டு விலகிச்சென்றது.

அடுத்து சில்லவாரின் புல்லை ஆவு வந்து நின்றது. பின் வல்லக்கவாரின் மயிலை ஆவு. பாலமவாரு, குருவாரு, குஜ்ஜிபொம்மு, வெக்கிலியர், காவன்னகாரு, இர்ரிகாரு, குறிபாலமவாரு என்று ஒவ்வொரு ஆவும் வந்து கம்பளி ஏற அந்தக் குலப்பாடகர்கள் குலப்பெருமைகளைப் பாடினர்.

கங்கையம்மன் வழிபாடு முடிந்தது. சூரியன் மறைந்துவிட்டான். வெளிச்சம் மட்டும் மங்கலாய் இன்னும் மிச்சமிருந்தது.

அடுத்து எல்லம்மன் பூஜை. இரண்டு யானை உயரத்திற்கு சாரங்கள் கட்டி மேலே பீடத்தில் எல்லம்மனை வைப்பதுதான் வழக்கம். சாரத்தில் ஏறித்தான் சாமி மாலையை எடுக்கவேண்டும். இப்போது நேரம் இல்லையாதலால் பசுமலையை ஒட்டியிருந்த சின்ன மண்குன்றின் உச்சியில் எல்லம்மனை வைத்திருந்தனர். இந்த பூஜையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் எல்லாம் வந்து அணிகளுக்கு முன்னே நின்றிருந்தனர். சற்று தூரத்தில் வெட்டவெளிக்கு அப்பால் அந்தக் குன்று இருந்தது.

எருமைக்கிடாரி ஒன்றின் மூக்கணாங்கயிறைப் பிடித்தவாறு இருவர் குன்றின் அடிவாரத்திற்குச் சென்று எல்லம்மனை நோக்கி நிறுத்தினர். உறுமி முழங்கிக்கொண்டிருக்க, ரம்பாவுல கேசவனின் பட்டாக்கத்தி மின்னலாய் வெட்டியது. குருதி பீறிட்டுப் பாய, சக்கிலியரின் எக்காளம் அலையலையாய் உயர்ந்தது. அது உச்சத்தைத் தொடும்முன் மற்றவையும் சேர்ந்துகொண்டன. முரசுகள் திசையெங்கும் முழங்கின. பேரொலியால் காற்று நடுங்கியது. வரவிருந்த இருள் வெருண்டு ஓடியது.

போர் தொடங்கிவிட்டது. இனிதான் எல்லம்மனின் மாலையை எடுக்கும் சடங்கு. யார் வேண்டுமானாலும் எடுக்கலாம். கன்னி கழியாதவராக இருக்கவேண்டும். எப்போதும் அதை எடுப்பதில் போட்டி நிலவும். யார்முதல் எட்டை எடுத்து வைப்பது என்பதில்தான் தயக்கமும் தாமதமும். பிறகு ஆளாளுக்கு எல்லைம்மனை நோக்கிப் பாய்ந்து ஓடுவார்கள். வல்லக்கவாரும், சில்லவாரும் இதைப் பெரிய கௌவரப் பிரச்சினையாகவே கருதுவார்கள். யார் முந்துவது என்பதில் அவர்களுக்குள்தான் போட்டி.

முரசொலிகளும் பெரும் ஆர்ப்பரிப்புமாகப் போர்விளி மேலும் மேலும் கூடிக்கொண்டிருந்தது. அது நரம்புகளை முறுக்கேற்றி மனிதர்களை வேறு உலகத்துக்கு இழுத்துச் சென்றது. கூட்டத்தில் சலனம் தெரிந்தது. ஒன்றிரண்டு இளைஞர்கள் எல்லம்மனை நோக்கி ஓடத்தொடங்கினர். நான்கைந்து குதிரைகள் அணிக ளினூடே பாய்ந்து வெட்டவெளிக்கு வந்துவிட்டன. மேற்கே கடை சியாய் நின்ற முந்நூற்றுவர் குதிரை வீராங்கனைகளில் ஸ்ரீஜான கிவாரிப் பெண்கள் கூட்டத்திலிருந்து ஒரு குதிரை விலகி முன்னோடியது. சில நொடிகள் கழித்துதான் அவள் கனகநூகா என்று உணர்ந்தார்கள். பெண்களின் குலவைச் சத்தம் உயர்ந்தது. ஓடிச்சென்றவர்களையும் மற்ற குதிரைகளையும் மிஞ்சி கனகநூ காவின் குதிரை குன்றிலேறி முன்னே ஓடியது. பேரிரைச்சலையும் மீறி அணிகளினூடே ‘பாலமவாரு...’ ‘பாலமவாரு...’ என்ற சொல் மந்திரம் போல் ஒலித்துச்சென்றது. எல்லம்மாவை வணங்கிவிட்டு சாமி கழுத்தில் இருந்த வஞ்சி மாலையைத் தூக்கித் தான் அணிந்துகொண்டாள்.

ரேணுகாவின் காலடியில் சிவப்புக் கச்சையில் இருந்த குறுவாளை எடுத்து கனகநூகா தன் கழுத்தை அறுத்துத் தன்னைத்தானே பலியிட்டாள்.

**கோ**ட்டையின் கிழக்கு மேற்கு மதில்களிலிருந்து எட்டு அக்னி எந்திரங்கள் குண்டுகளைக் கக்கிக்கொண்டிருந்தன.

பனை உயரத்துக்கு கம்புகளால் கட்டப்பட்டு கீழே ஆறு வண்டிச்சக்கரங்கள் இணைக்கப்பட்ட நகரும் பரண்கள் கிழக்கில் பன்னிரண்டும் மேற்கில் பத்தும் அகழிக்கு வெளிப்புறம் நிறுத்தப்பட்டிருந்தன. கிழக்கே செஞ்சு வில்லாளிகளும் மேற்கே மாதிக வில்லாளிகளும் பரண்களிலிருந்து மதிலின் மேல் அரண் இடைவெளிகளைக் குறிபார்த்து அம்பு எய்து கொண்டிருந்தனர். நிறை இருளில் அனைத்தும் கரிய உருக்களாக மட்டுமே தெரிந்தன.

மதில் ஏறுவதில் விற்பன்னர்களான யெருக்கலர்கள் - வடுகக்குறவர்கள் - நூற்றுக்கணக்கான ஏணிகள், முடிவடங்களுடன் மதில்களின் உச்சியை அடைய முயன்றனர்.

கிழக்கு மேற்கு வாசல்களும் எரியூட்ட முயன்றபோதெல்லாம் மேலேயிருந்து தண்ணீரை ஊற்றி அணைத்தவாறியிருந்தனர்.

அக்னி எந்திரங்களால் பெரிய பாதிப்பை உண்டாக்க முடியவில்லை; இரண்டு பரண்களின் உச்சிப் பீடங்களை மட்டுமே சிதைத்துவிட்டிருந்தன. வீரர்கள் அதன் தொடு எல்லைக்கு அப்பால்தான் அணிவகுத்திருந்தனர்.

சற்று நேரத்திலேயே மதில்மேல் எவரிடமும் வில் இல்லை என்று உறுதிப்பட்டது. மேலே ஏற முயன்றவர்களை குத்தியும், வெட்டியும் அகழிக்குள் தள்ளிக்கொண்டிருந்தனர்.

கோட்டை வாசலில் குடம் குடமாய் எண்ணெயைக் கொட்டிக் கொளுத்திவிட்டாலும் தீ பரவுமுன்னே நீரைக்கொட்டி அணைத்தார்கள்.

யெருக்கலர்கள் மதில் உச்சியை எட்ட முடியாமல் நூற்றுக்கணக்கில் அடிபட்டு அகழியில் விழுந்தார்கள். கிழக்கே யானை மீதிருந்து பார்த்துக்கொண்டிருந்த தளபதி மங்கன் யெருக்கலர்களைப் பின்வாங்குமாறு உத்தரவிட்டான்.

அடுத்து முழுவேகத்தில் தாக்குதல் தொடங்கியது. குந்தம் ஏந்திய சில்லவார்கள் நிரை நிரையாக அகழியில் இறங்கி ஏணிகளில் ஏறினர். ஏணியில் ஒரேநேரத்தில் நாலுபேர் நின்றனர். மேலே உள்ளவன் விழுந்தால் அடுத்தவன் மறுகணமே அந்த இடத்தில் நின்றான். மதில் முனைகளில் சண்டை உக்கிரமடைந்தது.

கோட்டைவாசலை எப்பாடுபட்டேனும் எரியூட்ட முனைந்தனர். வாழைமட்டையால் வேடு கட்டப்பட்ட எண்ணெய்க் கலயங்களைத் தூக்கிச் சென்று கதவின் உயரே எரிந்து எரிந்து உடைத்தனர். இப்போது எரியம்புகள் தொடர்ந்து கதவுகளில் தைத்துப் பற்றின. நீரையும் மீறித் தீயின் ஆதிக்கம் படர்ந்தது. அதை அணையவிடாமல் மேலும் மேலும் கலயங்கள் எறிபட்டன. முழுக்கதவிலும் தீ பரவி எரிந்தது. கதவையும் தாண்டிப் பின்னே குறுக்குவாட்டில் தடுப்பு அரணாக அடுக்கப்பட்டிருந்த ஐந்தாறு மரவரிசைகளுக்கும் அது பரவியது. அலங்கத்தில் இருந்தவர்கள் வெக்கை தாங்கமுடியாமல் இருபுறமும் மதிலோரங்களில் பரவி, சில்லவார்களின் குந்தங்களுக்குப் பலியாயினர்.

கிழக்கு மதிலெங்கும் வடுகர்களின் ஆதிக்கம் பெருகிக் கொண்டிருந்தது. மூலை அலங்கங்களைக் கைப்பற்றுவதற்கான கடும் சண்டை நடந்தது. வடக்கு தெற்கு மதில்களுக்கு அவர்களைப் பரவவிடமால் தடுப்பதில் மதுரை முகம்மதியர்கள் முனைந்து நின்றனர். கோட்டையின் உட்புறம் இறங்கிவிட்ட சில்லவார்கள் கதவின் பின்புறமும் தீ வைத்தனர்.

மேற்கு மதில்களிலிருந்து பரவிய சக்கிலியர்கள் தெற்குமதிலில் நுழைந்துவிட்டனர். முகம்மதியர்களை நெருங்காமலே அம்புகளால் அறைந்து வீழ்த்திக்கொண்டே முன்னேறினார்கள். அம்புகள் படை குருவிகளைப் போல மதில்மேல் பறந்துகொண்டிருந்தன.

இப்போது முடிவடங்கள் நாற்புற மதில்களிலிருந்தும் கோட் டையின் உள்ளே தொங்கின. எங்கு நோக்கினும் சாரை சாரையாக உள்ளே இறங்கிக் குதித்தனர். மதில் வீதிகளில் முகம்மதியக் குதிரைவீரர்களோடு துவந்த யுத்தம் நடந்தது.

மற்ற மூன்று வாசல்களிலும் இப்போது தீ எரிந்தது. கிழக்குவாசலும் பின் தடுப்புகளும் முற்றாய் எரிந்து சரிந்து கீழே கால் பாகத்தில் மட்டும் தீ தெரிந்தது. அது முற்றாக எரிந்தடங்கப் பொறுக்காமல் யானைகள் களத்தில் இறங்கின. பத்துச் சக்கரங்களுக்கு மேல் கிடந்த பெருந்தடியை இரண்டு யானைகள் தள்ளிக்கொண்டு வந்தன. கரியான பின்னும் நின்றெரிந்த கட்டைகளை மரத்தடி உடைத்துடைத்து உள்ளே தள்ளியது. தீ இப்போது ஒரு ஆள் மட்டத்திற்கு மட்டுமே உயர்ந்தது. உடனே வெளியிலிருந்து கைமாறிகைமாறித் தண்ணீர் பானைகள் வந்தன. சில நொடிகளிலேயே தீயை அணைத்துவிட்ட வீரர்கள் கரிக்கட்டைகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டனர்.

தளபதி மங்கனுக்கு கங்காதேவியால் இடப்பட்டிருந்த உத்தரவு கறாராக இருந்தது - கோட்டைக்குள் நுழையும் முதல் குதிரை முந்நூற்றுவர் அணியினதாய் இருக்கவேண்டும். கிழக்கு வாசலிலிருந்து எக்காள ஒலி கேட்டதும் எதிரே தோப்புக்குள் காத்துநின்ற கங்காதேவியின் அணி கிளம்பியது. முன்னே வராகக் கொடியுடன் ஜோகம்மாவின் குதிரை பாய்ந்து சென்றது. இரு நிரையாக வீராங்கனைகள் ஈட்டியுடன் செல்ல நடுவில் குதிரைகள் தீப்பந்தம் ஏந்தி ஓடின. கோட்டைக்குள் நுழைந்ததுமே இருளில் திசையும் வழியும் தெரியாத குழப்பத்தில் வேகம் மட்டும்பட்டுக் குதிரைகள் தேங்கின. முதல் வீதியெங்கும் ஒலித்த வெறிக்குரல்களெல்லாம் வடுகிலேயே இருந்தன. எந்த எதிர்ப்பையும் காணோம். நகரின் உள் தெருக்களில் சண்டை நடப்பது தெரிந்தது. கங்கா மதிலை ஒட்டியே தென்புறமாகக் குதிரையைச் செலுத்தினாள். மதிலின் உள்ளே இறங்கி ஓடிக்கொண்டிருந்த சில்லவாருகள் குதிரை அணிக்கு வழிவிட்டு ஒதுங்கினர். முகம்மதிய வீரர்களை இழந்த குதிரைகள்தான் மதிலோரங்களில் தனித் தலைந்தன.

கங்காவின் அணி தெற்கே விலகவும் முரசொலிகளுடன் பெருவெள்ளம்போல மேகல கனகண்ணாவின் குதிரைகள் உள்ளே நுழைந்தன. கங்கா தென்மதில் ஓரமாகவே போனாள். தெற்குவாசல் எரிந்துகொண்டிருந்தது. மேற்கே கொஞ்சதூரம் போனதும் தனித்து ஒரு மாளிகை தெரிந்தது. அரண்மனையாக இருக்கவேண்டும். ஆனாலும், சிறியதாகத் தோன்றியது. நெருங்கியபோதுதான் தெரிந்தது, அரண்மனைக் குதிரைக் காவலர்களோடு வடுகர்கள் மோதிக்கொண்டிருப்பது.

அரண்மனையைச் சுற்றி வளைத்துத் தாக்குமாறு சொல்லிட்டு கங்கா முன்னே பாய்ந்து ஒருவன் வயிற்றில் ஈட்டியால் குத்த, அவன் குதிரையிலிருந்து சரிந்து அப்புறமாய் விழுந்தான். இருநூறு குதிரைகளே அங்கு காவலில் நின்றிருந்தன. சண்டையிட்டும் மீளமுடியாதென்பதை உணர்ந்த முகம்மதியர்கள் தப்பியோடவே முயன்றனர். அதற்கும் வழியில்லாததால் குதிரையை விட்டிறங்கி ஒளிய இடம் தேடினர் பலர். வடுகச்சிகளில் ஒருத்தி கூட வாளை எடுக்கவில்லை; ஈட்டியாலேயே குத்தித்தள்ளினர். குதிரைகள் கனைத்துத் தாறுமாறாக மறிந்தன. இறங்கி ஓட முயன்றவர்கள் குளம் படிகளில் மிதிபட்டனர். தீப்பந்த ஒளியில் தாடிகளை அடையாளம் வைத்துக்குத்தினர். சற்று நேரத்தில் மஞ்சள் தலைப்பாகை வடுக வீரர்களைத் தவிர அங்கு யாரும் மண்ணில் நிற்கவில்லை.

அரண்மனை நெடுங்கதவம் அடைத்துக் கிடப்பதைக் கண்டாள் கங்கா.

‘இப்போது யானை வந்துவிடும்‘ என்ற குரல் கேட்டுத் திரும்பியவள் குதிரையில் இருந்த மங்கனைக் கண்டாள். நிழலாக அவளைப் பின்தொடர்ந்திருக்கிறான். ‘இன்னும் சற்று நேரத்தில் மதுரை அடங்கிவிடும்‘ என்றான்.

கதவை உடைத்து உள்ளே நுழைந்ததும் பெண்களின் கூக் குரல்களே கேட்டன. உள்ளேயிருந்தவர்களை எல்லாம் திரட்டிக் கொண்டுவந்து முற்றத்தில் நிறுத்தினர். எல்லோரும் கூப்பிய கைகளோடு தரையில் விழுந்தனர். ‘எங்கே சுல்தான்?’ என்று கேட்டான் தளபதி. பதிலில்லை. எழுந்து நிற்கச் சொன்னான். ‘சுல்தான் எங்கே?’ ‘தெரியாது.’ முன்னே பாய்ந்து அங்கு நின்றிருந்த அலி ஒருவனின் தலையைச் சீவினான் மங்கன். அலறிய பெண்கள், வெகு நேரத்துக்கு முன்பே அரண்மனையை விட்டு அவர் போய்விட்டதாகச் சொன்னார்கள்.

கங்காவின் அணி கோட்டையை விட்டு வெளியேறி கிழக்கே யானைத் தாவளத்தின் அருகே வந்திறங்கியது. கவுலாவுல கமலாட்சி, கோவுதால கிருஷ்ணம்மா, காலமு ரேணுகா, தாமசானி ஆரம்மா, கோதண்ட அகுமஞ்சி, போடாவுல சுராதேவி ஆகியோரைக் காணவில்லை. நந்தியால மாவுரம்மாவும் முனரிமன்ன தேவயானியும் கடுமையான காயங்களுடனும் இன்னும் சிலர் லேசான காயங்களுடனும் இருந்தனர்.

**மூ**ன்றாம் ஜாமமும் கடந்தது. கோட்டையினுள்ளே கூச்சலும் ஆரவாரமும் குறைந்திருந்தது. கங்கா இன்னும் தோழிகளோடு பேசிக்கொண்டிருந்தாள்.

குதிரையை விரட்டிக்கொண்டு வந்த மங்கன் ‘சுல்தான் இருக்குமிடம் தெரிந்துவிட்டது’ என்றான்.

ஓடிப்போய் ருத்ருடுவின் மேலேறிய பிறகே கங்கா கேட்டாள் ‘எங்கே?’

‘தென்புற மலையின் மேல்.’

‘எப்படித் தெரியும்?’

‘அங்கே அடிவார மண்டபத்தில் படுத்துக்கிடந்த கள்ளன் ஒருவன் பத்திருபது தாடிக்காரர்கள் ஓடிவந்து மலைமேலே ஏறுவதைப் பார்த்தானாம். அவனோடு இருந்த சந்நியாசி இத்தகவலை உடனே நம்மிடம் சொல்லவேண்டும் என்று கள்ளனை விரட்டியிருக்கிறான். ஓடி வந்து சொன்னவனை என்னிடம் அழைத்து வந்தார்கள்.’

‘இந்த முற்றுகையை மீறி எப்படித் தப்பியிருப்பான்?’ என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கங்கா.

‘முதல் ஜாமத்திலேயே நழுவியிருக்க வேண்டும். என் ஊகம், வடக்கே திட்டி வாசல் வழியே வெளியேறி ஊர்ந்து போய் வைகை நாணல்களின் மறைவிலேயே மேற்கே போயிருப்பான். நம் வடக்கு அணிகள் ஆற்றுக்கு அப்பால் அல்லவா நின்றன. மேற்குப் படைகளுக்குப் பின்புறமாகத் தெற்கே ஓடி மலைக்குப் போயிருக்கவேண்டும். அமாவாசை என்பதுதான் அவனுக்குச் சாதகமாகி விட்டது.’

கங்காவின் அணியும் தெற்கே நின்ற வல்லக்கவாரின் குதிரை அணிகளும் மலையடிவாரத்தை அடையும்போது ஊர்களில் கோழிகள்

கூவிக்கொண்டிருந்தன. கோபல்ல பரசு குன்றைச் சுற்றி வளைத்தான். கங்கா ஏற்கனவே இம்மலை ஏறியவள் ஆதலால் நேரே படிகளின் கீழே போய்நின்றாள். பின்னே திரும்பிப் பார்த்தாள். ஆயிரக்கணக்கில் குதிரைகள் தொடர்ந்து வந்திருந்தன.

அவளை நெருங்கிய மங்கன் சொன்னான் ‘விடிய கொஞ்சம் நேரம் தான் இருக்கிறது. பிறகு மேலே போய் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இங்கேயே ஓய்வெடுங்கள்.’

மலை முகட்டையே பார்த்துக்கொண்டிருந்த கங்கா தளபதியின் பக்கம் திரும்பாமலே சொன்னாள் ‘என் பின்னே வா.’

குதிரையை விட்டுக் குதித்தவுடன் ஓடிப் படிகளில் ஏறினாள். அவளது அணியும் பின்னே தொடர்ந்தது.

மங்கனிடமிருந்து இரட்டைச் சீழ்க்கையொலி எழுந்தது. நாய்கள் முன்னோடுவதற்கான சமிக்ஞை அது. குதிரைகளுடன் வந்த நாய்களை வீரர்கள் படிகளை நோக்கி ஏவிவிட்டுப் பின்னே தொடர்ந்து ஓடினர். தீப்பந்த வீரர்கள் கங்காவை முந்தி அவளுக்கு அரணாக ஓட முயன்றனர். கங்கா ஐம்பது படிகளை ஏறுமுன் பெருவாரியான நாய்கள் அவளைத் தாண்டி மேலே பாய்ந்தோடின. படிகளை விட்டு விலகியும் பல நாய்கள் பாறைகளில் ஓடின.

பாதி மலை ஏறும்போதே, மேலே நாய்கள் விடாது குரைப்பது கேட்டது.

இன்னும் ஏறியதும் குறுமரங்கள் நிற்கும் ஒரு திடல் இருந்தது. மேற்கே திரும்பி மேலேறும் படிகளில் தான் நாய்கள் தேங்கி நின்று விடாது குரைத்துக்கொண்டிருந்தன. நாய்கள் ஏற முடியாத பாறைகளின் மேல் அவர்கள் நின்றிருந்தனர். முன்னே ஓடிச் சென்ற தீவட்டி வீரர்கள் நாய்களை அதட்டி அமரத்திவிட்டு பாறையில் ஏற வழி தேடிக்கொண்டிருந்தனர். அதற்குள் கங்காவும் மற்ற வீரர்களும் அந்த இடத்தில் குவிந்துவிட்டனர்.

வீரர்கள் ஒருவன் தோளில் மற்றவன் ஏறிப் பாறை உச்சியைப் பற்றித்தாவி அவர்களை நெருங்கவும், அவர்கள் பாறை மேலேயே மேற்குப் புறமாக ஓடினர். கங்காவின் அணி கீழே ஓடியது. அப்புறத்தில் உள்ளமொட்டைப் பாறைகளில் அவர்கள் குதித்து நின்றனர். அதற்குமப்பால் வானம்தான் இருந்தது. அதல பாதாளம்.

மொட்டைப் பாறையை வளைத்து அவர்களை நெருங்கினர் பெண்கள். முகம்மதியர்கள் ஒருவருக்கொருவர் ஒட்டி நின்று நீட்டியவாளுடன் கத்திக்கொண்டிருப்பது தீவட்டி ஒளியில் தெரிந்தது. கோலவாரி கிருஷ்ணை ஈட்டியோடு முதலில் முன்னே பாய்ந்தாள். அடுத்த சிலநொடிகளில் வெறிக்கூச்சலும் மரண ஓலமுமாக அந்தப் படுகளம் முடிவுற்றது.

தனது ஈட்டியை உருவிக் கொள்ளாமலேயே கங்கா விலகி வெளியே வந்தாள். படிகளில் ஓடி ஏறியதன் மூச்சிளைப்பை இப்போதுதான் உணர்ந்தாள். அவள் முன்னே தண்ணீர்க் குடுவையை நீட்டினான் மங்கன்.

அவள் தாகம் அடங்கியது.

காலில் காயம்பட்டிருந்த கஜ்ஜல பத்மாவையும் முலையில் காயமுற்றிருந்த சிந்தநிம்பு ஆரவல்லியையும் கீழே தூக்கிக்கொண்டு

ஓடினர்.

கிழக்கு வெளுக்கத் தொடங்கியது.

கங்கா வடகிழக்கே பார்த்தாள்.

ஊமை ஒளியில் மதுரையின் விளிம்புகள் வடிவுற்றுத் துலங்கின.

வானோடு நிலமும் தெளிந்தபோது, இருபுறமும் சுடர் எழுந்த அகல் போல் திகழ்ந்தது மதுரை.

**ம**றுநாள் காலை அமணமலைக் குளத்தில் தோழிகளோடு நீராடிக் கொண்டிருந்தாள் கங்கா. இப்போது அதன் அடி ஆழத்தைக் கண்டுவிட்டாள். கொஞ்சதூரம் வரை குன்றின் பாதம்தான் சரிந்து நீண்டிருந்தது. அப்பால் மண். மேலே உள்ள தீர்த்தங்கரரைப் போய் வணங்குவதற்காகத் தோழிகள் தாமரை மலர்களைப் பறித்துக் கரையில் சேர்த்துக்கொண்டிருந்தனர்.

குமரிப் பெண்ணான புல்லாவுல ஸ்ரீதேவி மேற்கே பாறையில் இருந்து ‘அக்கா... இங்கே வா’ என்று கத்திக்கொண்டிருந்தாள். கங்கா நீந்தி அவளிடம் போனதும், அரைத்தரைத்து இரு கைகளிலும் சேர்த்திருந்த மஞ்சளை இவள் முகத்தில் பூசினாள். சுற்றிலும் ஐந்தாறு பேர் நீரில் நின்றவாறே பாறையில் மஞ்சளை உரசிக்கொண்டிருந்தனர். கிண்டலும் கேலியும் கொச்சைப் பேச்சுமாகக் குளக்கரை களை கட்டியிருந்தது.

‘ஓய்ய் அக்க...’ என்று கொஞ்சினாள் ஸ்ரீதேவி.

‘ஏமி?’

‘நிவ்வு அதிரூப சுந்தரி.’

சிரித்தவாறே ஸ்ரீதேவியின் கைகளை உதறிவிட்டு நீரில் மூழ்கினாள் கங்கா.

மஞ்சளைக் கழுவிவிட்டு கிழக்கே பார்த்த கங்கா ஒரு கூட்டம் அமணமலைப் பாதையில் வருவதைக்கண்டாள். ஐம்பதுக்கு மேல் பெண்களும் ஏராளமான பிள்ளைகளுமாக அந்தக்கூட்டம் மூட்டை முடிச்சுகள் தட்டுமுட்டுச் சாமான்களைச் சுமந்தவாறு மேற்கு நோக்கிச்சென்றது. குளத்தில் நீந்திக்கொண்டிருந்த பூமாடி மாரம்மாவை அழைத்தாள் கங்கா. அந்தக் கூட்டத்தைச் சுட்டிக்காட்டி என்ன ஏது என்று விசாரித்து வரச்சொன்னாள்.

மாரம்மாவிடம் பேசிவிட்டு அந்தக் கூட்டம் ஒத்தையடித் தடம் வழியே மேற்கே சென்று மலைக்கப்பால் மறைந்தது.

நான்கு வயதுக் குழந்தையான வரலட்சுமி, கஸ்தூரியின் தோளில் ஏறியிருந்து அவள் கூந்தலைப் பற்றியவாறு குளத்திற்குள் சவாரி சுற்றிக்கொண்டிருந்தாள். கங்காவின் அருகே வந்ததும் ‘அம்மா... அம்மா’ என்று தாவினாள். அவளை வாரியெடுத்து கங்கா முத்தினாள்.

மாரம்மாவந்து சொன்னாள். அவர்கள் மதுரை வடகரையில் உள்ள ஊரில் இருந்தார்களாம். முகம்மதியர்கள் அந்தக் காலத்திலேயே பெண்களைத் தூக்கிக் கொண்டுபோய் கட்டாயக் கல்யாணம் செய்திருக்கிறார்கள். இப்போது இரண்டு தலைமுறைக்குப் பின் தங்கள் தாய்வீடான மேற்கு நாட்டுக்குத் திரும்பிப் போகிறார்கள்.

**ஸ்ரீ**தேவியின் தோளில் இருந்த வரலட்சுமி எல்லோரும் செய்வதைப் பார்த்துத் தானும் இரு கரங்களையும் சேர்த்துச் சேர்த்து வைத்து கும்பிட்டுக்கொண்டிருந்தாள். சிறு தளியின் கருவறையில் வர்த்தமானரின் காலடியில் ஏராளமாக மலர்கள் குவிந்திருந்தன.

கிழக்கே பார்த்தாள் கங்கா. மதுரையின் மேற்குக் கோபுரம் தாமரைமொக்கு போல் நின்றது. எதிர்வெயிலில் கண்கள் கூசக் கூச அதைப் பார்த்திருக்கும்போதே கற்பனையின் இதழ்கள் ஒவ்வொன்றாய் விரிந்தன. திரும்பி அருகில் நின்ற ஸ்ரீதேவியிடம் சொன்னாள் ‘நான் இதை எழுதப் போகிறன்’...வரலட்சுமியை வாங்கி அணைத்துக் கொண்டபோது பெயர் உதித்தது ‘மதுரா விஜயம்.’

**ம**துரையில் நடக்கவேண்டிய பணிகளை ஒழுங்குபடுத்திவிட்டு குமார கம்பண்ன் ஆவலோடு கங்காவின் கூடாரத்திற்குத் திரும்பியபோது இரண்டாம் ஜாமம் கடந்திருந்தது. காவல் வீரர்களைத் தவிர படைமுழுக்க ஆழ்ந்த தூக்கத்திலிருந்தது.

உள்ளே நுழைந்தபோது, விளக்கொளியில் கங்கா எழுத்தாணி பற்றி ஓலையில் எழுதிக்கொண்டிருக்கக் கண்டு. ‘இன்னும் தூங்கவில்லையா...’ என்றான்.

‘மதுரா விஜயம் என்ற வரலாற்றுக் காதையை எழுதுகிறேன். விஜயநகர இளவரசன் குமார கம்பணனின் போர் வெற்றிகளை விவரிக்கும் சமஸ்கிருதக் கவிதை.’

‘கிண்டல் பண்ணாதே’.

‘உண்மை.’

ஆச்சரியமும் உவகையும் பொங்கச் சொன்னான் ‘கங்கா ரௌத்ரம்‘ என்று பெயர் சூட்டு. ஆனைகுந்தி இளவரசியின் சாகசமல்லவா இந்த வெற்றி!’

சிரித்துக்கொண்டே கங்கா சொன்னாள் ‘என் நிகழ்காலம் உங்கள் நிழலிலேயே கழிந்துவிட்டது. இது போதும். ஆனைகுந்தி உக்ர நரசிம்மருக்கும், கங்கைக்கும் நேர்த்திக்கடன் தீர்க்கவேண்டும். என் மனம் அமைதி கொண்டுவிட்டது. இனி வெல்ல ஏதுமில்லை. வரலட்சுமி என் கனவுகளின் நீட்சியாக வளர்வாள்.’

‘விஜயநகரத்தின் மகாராணி ஆவதற்கா?’ என்ற கம்பணனின் குரலில் பெருமிதத்தோடு லேசான கிண்டலும் இருந்தது.

எழுந்து அருகில் வந்தவளை இழுத்தணைத்தான்.

‘ஏன் கூடாது? மகாராணி சாந்த ஸ்ரீ புத்தரின் நாமத்தால் கிருஷ்ணா தீரத்தைக் கட்டி ஆண்டாள். காகதியின் பெயரால் விசால ஆந்திரத்தை உருவாக்கிய சக்ரவர்த்தினி ருத்ராம்பா முதுமையிலும் யுத்தகளத்தில் போரிட்டு மடிந்தாள். காப்பு குலத்தில் ராணிகள் நாடாளக்கூடுமென்றால் கொல்லவாரில் ஏன் கூடாது? இடையர் குலப் பேரரசியாக விஜயநகர சிம்மாசனத்தில் வரலட்சுமி அமர்வாள். அவள் அண்ணன் எம்பணன் தென்மண்டல ஆளுநராக அவளுக்குக் கீழேதான் இருப்பான். கங்கை அனுக்கிரஹிப்பாள்.’

‘பார்க்கலாம். உனக்கு ஒரு பரிசு. இதே பார்’ என்று கையிலிருந்த வாளை நீட்டினான்.

‘பழைய பாணியில் இருக்கிறது. இது ஏது?’

‘அரண்மனை பூஜை அறையிலிருந்து எடுத்து வந்து கொடுத்தார்கள். இதன் பெயர் சந்திரஹாசம்.’

விளக்கொளிக்கு அருகே சென்று வாளைப் புரட்டிப் புரட்டிக் கூர்ந்து பார்த்தாள் கங்கா. அதன் கைக்காப்புக்கு அருகே மடலில் இரு மீன்கள் நின்றிருந்தன. மறுமடலில் வட்டெழுத்துக்களால் பெயர் பொறித்திருந்தது. தெலுங்கும், சமஸ்கிருதமும் அறிந்திருந்த அவளுக்கு அந்த எழுத்துரு புரியவில்லை. கூர் மழுங்கியிருந்த அது துருப்பிடிக்க விடாமல் பராமரிக்கப்பட்டிருந்தது. வளைத்துப் பார்த்து இரும்பின் தன்மையைச் சோதித்தாள். ‘வெகு காலத்திற்கு முன் இது செய்யப்பட்டிருக்க வேண்டும்‘ என்றாள் ஆச்சரியத்தோடு. ‘அரவ நாட்டில் பாண்டியர்கள்தான் மிகப்பழமையான அரச குலம். மீனாட்சியின் புத்திரர்கள். கோயிலை ஒழுங்குபடுத்துங்கள். நாளை போய் வணங்க வேண்டும்.’

‘ஐம்பதாண்டுகளாகப் பூட்டியே கிடக்கிறது. இன்று திறந்துபார்த்தேன். உள்ளே நுழைய முடியவில்லை. புதர் மண்டிக்கிடக்கிறது. கிளிகளின் பெருங்கூட்டம் உள்ளே பறந்து திரிகிறது. கருவறையில் மீனாட்சி இல்லையாம். முகம்மதியர்களுக்குப் பயந்து தூக்கிச்சென்று எங்கோ தென்பாண்டி நாட்டில் வைத்திருக்கிறார்கள். தேடிக்கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன்.’

‘அப்படியானால் வரும் பௌர்ணமியன்று மீனாட்சி மதுரைக்குள் நுழைந்து கோயிலில் கொலுவேறட்டும். அப்போது நான் மதுரா விஜயத்தை அரங்கேற்றுவேன்.’

‘பௌர்ணமிக்கு முதல் நாள் சிலையைக் குதிரை ரதத்தில் ஏற்றி இங்கே கொண்டுவந்து விடலாம்.’

‘இல்லை. வழிநெடுக மக்கள் வணங்கி நிற்க, ஒவ்வொரு ஊராக, கோயில் கோயிலாக எழுந்தருளி யானை ஏறி மீனாட்சி மதுரை வரவேண்டும். இது ஒரு உற்சவம். தென்பாண்டிய நாட்டில் பதினைந்து நாள் நிகழப்போகும் பெருவிழா. தெய்வங்கள்தான் அரசனுக்கு வாழ்வளிக்கின்றன. எங்கள் இளவரசர் எப்போது அரசனுக்குரிய தகுதியை அடைவாரோ அறியேன்! அருள் பாலிப்பாய் மீனாட்சித் தாயே!’

‘மனைவியே மதியூகி மந்திரியாய் வந்து வாய்த்துவிட்டால்?’ என்று திருப்பிக்கேட்டான்.

வாளைச் சுழற்றிப் பார்த்தாள். ‘போர்வாள் இருக்க வேண்டியது பூஜை அறையில் அல்ல; தளபதியின் கைகளில். அது ரத்தம் சுவைத்தால்தான் அரசு நிலைக்கும். மீனாட்சி சந்நிதியில் இந்த வாளை மங்கனுக்குப் பரிசாக வழங்குங்கள். இந்தப் போர் என்றென்றும் வீரர்களின் நினைவில் நிற்குமாறு அவர்கள் தலைவனுக்கு பட்டப்பெயரும் சூட்டவேண்டும். சாளுவ மங்கன்.’

‘நீதான் சாளுவப் பறவை. சாளுவ கங்கா...’ சிரித்தவாறே மீண்டும் குரலை உயர்த்தினான் ‘சாளுவ கங்கா...’

‘அது ஊருக்குத் தெரியவேண்டியதில்லை. உங்களுக்குத் தெரிந் தால் போதும்.’

‘அதுதான் உன்னைத் தொட்ட முதல் நாளே தெரிந்து கொண்டேனே...’ என்றவனின் நெஞ்சை சந்திரஹாசத்தின் முனையால் பின்னுக்குத் தள்ளிக்கொண்டே போய் மஞ்சத்தில் சாய்த்தாள்.

**கோ**யில் பூசகர்கள் உடன் வர, தளபதி பிரதாணிகளோடு குமாரகம்பணன் கோயிலுக்குள் நுழைந்தான்.

நல்லவேளையாக முகம்மதியர்கள் கோயிலைப் பூட்டியதோடு விட்டுவிட்டார்கள். சமணக் கோயிலுக்குள் சைவர்கள் செய்ததைப்போல உள்நுழைந்து எதையும் சிதைக்கவில்லை.

பாண்டியர்கள் கோயில் வளாகத்தை விசாலமாக அமைத்திருந்தனர். நாற்புறமும் ஆளுயுர செங்கல் சுவர்கள் விளிம்பு கட்டிநின்றன. கிழக்குக் கோபுரம் கட்டப்பட்டு 200 ஆண்டுகளுக்குப் பிறகுதான் மேற்குக் கோபுரம் எழுந்தது. அதன் கும்பாபிஷேகத்தை 1323ல் நடத்திய பராக்கிர பாண்டியன் ஜுனாகானிடம் மதுரையை இழந்து பரமக்குடியில் போய் ஒளிந்துகொண்டான். வடக்கு தெற்கு வாயில்கள் கோபுரங்கள் இன்றி முகப்பு மாடங்களுடன் இருந்தன. அம்மன் சந்நிதி ஒற்றைப் பிரகாரத்துடன் சிறு கோயிலாக நின்றது. வடக்கே நின்ற கடம்ப மரங்களுக்கு அப்பால் சுவாமி சந்நிதி இதைவிடப் பெரிதான ஒற்றைப் பிரகார மதிலுடன் தனித்திருந்தது. கிழக்குக் கோபுரத்திலிருந்து சுவாமி சந்நிதி வரை நடைபாதைக் கற்கள் பாவியிருந்தன. அது அம்மன் சன்னதி வாசல் வரை நீண்டிருந்தது. கிழக்குக் கோபுரத்திற்கு அருகில் நடைபாதைக்கு வடக்கே இரண்டு சிறிய கல் மண்டபங்கள் இருந்தன. வேறு தெய்வங்களோ! சிலைகளோ! தளிகளோ! இல்லை. அம்மன் சந்நிதிக்கு முன்னே கற்களால் கரை அமைத்த பொற்றாமரைக்குளம் வட்டமாக இருந்தது. மீதி இடமெல்லாம் முன்பு நந்தவனங்களும், கோமடமும், பூமரங்களும் தான் மிகுந்திருந்தன. செண்பகமும், மகிளமும் கடம்பும், அரசும், வேம்பும் மட்டும் உள்ளே வளர்க்கப்பட்டன.

கோயிலுக்குள்ளே இன்று நுழைந்த வீரர்கள் மரங்களை விட்டு விட்டுப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்துவதில் முனைந் திருந்தனர். கோபுரங்கள் கற்சுவர்களிலெல்லாம் முளைத்திருந்த ஆல், அரசுச் செடிகளை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தினர். பொற்றாமரைக்குளத்தின் கரைக்கல் இடுக்குகளிலெல்லாம் புல்மண்டிக் கோவைக் கொடிகள் படர்ந்திருக்க, குளம் தூர்ந்து உள்ளே மூன்று அரச மரங்கள் வளர்ந்திருந்தன.

**பெள**ர்ணமிக்கு முதல் நாள் இரவு கங்காவின் கூடாரத்தில் கிடந்தான் கம்பணன். துவாரசமுத்திர அந்தப்புரத்துக்கு அப்புறம் அவளை உணரக்கிடைத்தது இந்த மஞ்சத்தில்தான். ராஜாளியின் வேட்டையில் வதைபட்டுத் திளைத்துத் திளைத்து மயங்கிக் கிடந்தான்.

உறக்கம் வராமல் அவளிடம் பேச்சுக் கொடுத்தான். ‘கங்கா, இன்று ஒரு சுவாரஸ்யமான கதை கேட்டபோது எனக்குக் கோபம் வந்தது. கதையைப் பிறகு நினைக்க நினைக்க வேடிக்கையாகவும் இருக்கிறது. இன்று கோயில் பட்டர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள். மிகையான வாழ்த்துரைகள். சநாதன தர்மத்தைக் காக்க வித்யாரண்யர் ஸ்தாபித்ததாம் விஜயநகரம்.

அவர் சொற்படிதான் ஹரிஹர புக்கர்கள் அதை உருவாக்கினார்களாம்!'

சிரித்துக்கொண்டே கங்கா சொன்னாள் 'கெட்டிக்காரர்கள்தான் இந்த வைதீகர்கள், வித்யாரண்யரைப் போல அவர்கள் இன்று நிற்பதற்கு ஒரு தளம் இல்லை. விஜயநகரத்தைத் தவிர, அதனால்தான் அதை இறுகப்பற்றிக் கொள்கிறார்கள். நம்பிக்கைகளைக் கதைகளாகப் புனைந்து பரப்புவார்கள். இந்தக் கதையை இப்போதுதான் கேட்கிறேன். இதைவிடப் பொதுமக்கள் மத்தியில் உருவாகிவிட்ட கதை அர்த்தமுள்ளது. முயல் வேட்டை நாயை எதிர்த்த இடத்தில் உருவானதாம் விஜயநகரம். முந்திய கதையில் வைதீகர்களின் சாமர்த்தியம் தெரிகிறது. இந்தக் கதையில் கொல்லவாருகளின் எளிமை. ஆயர்குலமாக உயர்ந்த பின்னும் வேட்டை இயல்பை விடமால் இன்னும் நாய்களோடு திரிகிறார்கள்.'

'உண்மையில் விஜயநகர் உருவாகி பத்து ஆண்டுகள் கழித்துதான் நாங்கள் வித்யாரண்யரை தற்செயலாய் சந்தித்தோம். அன்று நான் சிறுவன். விஜயநகரம் ஹொய்சளரின் பெனுகொண்டா கோட்டையை முதலில் பிடித்து பிறகு ஒவ்வொன்றாய் ஆக்ரமித்து தெற்கே விரிந்தது. துவாரசமுத்திரத்தையும் வென்றது. கடைசியாகக் கைப்பற்றியது மேலைக்கடலின் மங்காளபுரத் துறைமுகம். அந்த வெற்றியைக் கொண்டாட அடுத்திருந்த சிருங்கேரியில் விஜய்யோத் ஸவம் நடந்தது. அங்குதான் என் தந்தை புக்கர் இணை அரசராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். மூன்று சித்தப்பாக்களும் ஆளுநர் களாக வேறு மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். அங்குள்ள மடத்தின் தலைவராக இருந்த வித்யாரண்யர் வந்து சந்தித்தார் பிறகு எங்களோடு ஒட்டிக்கொண்டு விஜயநகரத்திற்கு வந்துவிட்டார்.'

அவன் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பிய கங்கா கிண்டலாகச் சொன்னாள் 'தெரியும். இது முழுக்கதை அல்ல; ஆதிக்கதை இன்னும் மிச்சமிருக்கிறது. அதை மறக்கவும் மறைக்கவும் முயல்கிறீர்கள்.'

அவன் மௌனமாக இருந்தான். பேசுவான் எனக் காத்திருந்தாள். அமைதியே நிலவியது. ஏதோ சொல்ல வாயெடுத்தவள் வேண்டாம் எனத் தீர்மானித்து கண்மூடி எண்ணங்களில் ஆழ்ந்தாள்.

காகதியத் தலைநகர் ஒருகல்லில் ஹரிஹரர், புக்கர் கருவூலக் கணக்கர்களாக இருந்தனர். முன்னர் நான்குமுறை முகம்மதியப் படையெடுப்புகளை முறியடித்திருந்திருந்த காகதியர்கள் ஐந்தாம் முறை துக்ளக்கிடம் தோற்றனர். ஒருகல் கோட்டை மதில்களைத் தவிர உள்ளிருந்த அனைத்தும், கோயில்களும், மாளிகைகளும் நொறுக்கப்பட்டன. ஒருகல் சுல்தான்பூர் என்றானது. அரசன் பிரதாபருத்ரனின் குடும்பம் தற்கொலை செய்துகொண்டது. போரில் சிறைப்பிடிக்கப்பட்ட அரசனும் டெல்லிக்கு கொண்டு செல்லப் படும்போது நர்மதைக் கரையில் தற்கொலை செய்து கொண்டான்.

ஹரிஹர புக்கர் ஒருகல்லில் இருந்து தப்பி ஆனைகுந்தி வந்தனர். அவர்கள் கம்பிளி நாட்டுக் கொல்லவாருகள் ஆனதால் பிரதான பதவிகள் கிடைத்தன.

ஒருக்கல்லை அழித்த முகம்மதியர்கள் நான்காண்டுகளுக்குப் பின் கம்பிளி நாட்டின் தலைநகர் ஆனைகுந்தியை எரியூட்டியபோது அங்கு

சிறைப்பட்டவர்கள் ஆறே பேர்தான். அரச வம்சம் முற்றாகத் தற்கொலை செய்துகொண்டது. தலைநகரவாசிகள் அனைவரும் கொலைப்பட்டனர். சிறைப்பட்ட அறுவரில் இருவர் ஹரிஹரர், புக்கர். முன்னவர் மந்திரி, அடுத்தவர் பொக்கிஷதாரர்.

ஹரிஹர புக்கர் டெல்லிச் சிறையில் இருந்தபோது, முகம்மதியராக மதம் மாறச் சம்மதித்து, விடுதலையாகி, அரசவையில் சிறு அலுவலர்களாயினர்.

ஆனைகுந்தியில் ஆளுநராக இருந்த மாலிக் முகம்மது கொல்லவாரு குழுக்களின் தாக்குதல்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் டெல்லி சென்று நிலையை விளக்கினான். கம்பிளிச் சகோதரர்களை ஆனைகுந்திக்கு ஆளுநராக துக்ளக் நியமித்தார். இவர்களை இப்போது கொல்லவாருகள் ஏற்றுக்கொண்டனர். ஏழாண்டுகளாக கம்பிளியில் வரிகளை வசூலித்து டெல்லிக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர்.

ஆனால், காகதியப் பேரரசு வீழ்ந்த இரண்டே ஆண்டுகளில் காப்புகுலத் தளபதிகள் ஒன்று சேர்ந்து ஆந்திரத்திலிருந்து முகம்மதியரை விரட்டிவிட்டு கிடைத்த நாட்டை தங்களுக்குள் பகிர்ந்துகொண்டனர். கொண்டவீடு தென் ஆந்திரம் முழுவதையும் உள்ளடக்கிய வலிமையான நாடாகி விட்டது. சுல்தான்பூரும் அதற்கு வடக்கே உள்ள பகுதியும்தான் டெல்லியிடம் இருந்தது. 1936ல் முசுனூரி காப்பய நாயக்கன் சுல்தான் பூரை வென்று மீண்டும் அதை ஒருகல் நகராக்கினான். அப்போது காகதியப் பகுதிகள் அனைத்தையும் டெல்லி இழந்துவிட்டது. தெற்கே எஞ்சியிருந்த ஒரே முகம்மதியப் பகுதி கம்பிளி மட்டும்தான். முகம்மதியரை விரட்டுகிற சாக்கில் கொண்டவிட்டு புரோலய வேமா ரெட்டி கம்பிளியைக் கைப்பற்றும் அபாயம் அடுத்திருந்தது. அதே வேளையில் கம்பிளிக்கு வடக்கே தேவகிரி சுல்தான் டெல்லிக்கு எதிராகக் கலகம் செய்துகொண்டிருந்தான் வடக்கிலிருந்து ஆபத்து வர வாய்ப்பில்லை என்ற தைரியத்தில், கிழக்கிலிருந்து வரும் படையெடுப்பைத் தவிர்க்க வேண்டிய நிர்பந்தத்தில் கம்பிளியின் முகம்மதிய ஆளுநர்கள் மீண்டும் ஹரிஹர புக்கர்களாகி விட்டனர். ஆனைகுந்தியை விட்டுவிட்டு துங்கபத்ரையின் தென்கரையில் விருபாஷர் ஆலயத்தில் மீண்டும் வீரசைவராகி ஹரிஹரர் அரசராக முடிசூடிக்கொள்ள கம்பிளியின் பெயர் விஜயநகர் என்று மாற்றப்பட்டது. புதிய கோட்டை எழுந்தது.

‘என்ன யோசனை...’ என்று கேட்டான் கம்பணன் மெதுவாக.

அறிந்த சரித்திரமே விசித்திரமானது; அறியாத உண்மைகள் எவ்வளவு இருக்கும் என்று சொல்ல நினைத்தவள், நிதானித்து அரசுகள் எழுவதும் வீழ்வதும் எதனால்?’ என்று கேட்டாள்.

கம்பணன் பதில் தேடிக்கொண்டிருக்க, கங்காவே மீண்டும் சொன்னாள் ‘ஹரிஹரர் தாமதித்திருந்தால் கம்பிளியைக் கொண்ட வீடு விழுங்கியிருக்கும். காப்புகள் துங்கபத்ரையிலும் குடியேறி யிருப்பார்கள்.’

முந்தையை கேள்விக்கு விடை கண்டவன்போல் கம்பணன் சொன்னான் ‘வலிமையான எதிரிகளால்தான் ஒரு அரசு வீழ்ச்சியடைகிறது.’

‘அது அபூர்வம்’ என்ற கங்கா மேலும் சொன்னாள் ‘உள்ளுக்குள்

புரையோடும் பலவீனங்களால்தான் வீழ்கிறது. அரசனின் குணங்கள் தான் அரசைத் தீர்மானிக்கின்றன.'

ஒரு மாணவனைப் போல் கம்பணன் கேட்டான் 'அரசுகள் எப்படி உருவாகின்றன?'

'உறுதியும் கனவும் கொண்ட ஒருவன் பின்னால் அவன் குலம் திரளும்போது.'

கம்பணன் பெருமிதமாகச் சொன்னான் 'அதனால்தான் இந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் விஜயநகரம் ஒரு பேரரசாக வளர்ந்துவிட்டது. அது உருவானபோது கொல்லாவாருகளிடம் என்ன இருந்தது மாடுகளைத் தவிர?'

அவனைத் தொடரவிடமால் கங்கா இடைமறித்தாள் ஆனகுந்தி அழிந்தபோது அதன் செல்வமனைத்தும் அழியாமல் ஏமகூடப் பாறைகளின் கீழ் குகையில் இருந்தது' என்று சொல்லிவிட்டு மெதுவாகக் குரல் தாழ்த்தித் தொடர்ந்தாள் 'அதுதான் பின்னர் பெருநகரமாக அந்தப் பாறைகளின் மீது முளைத்து எழுந்...'

அவளைப் பேசவிடாமல் முத்தமிட்டு ஆக்ரமித்தான். சொற்களின்றியும் அவனை முறியடித்துக் கொண்டுதான் இருந்தாள்.

**மீ**னாட்சி மதுரையை நோக்கி வந்துகொண்டிருந்தாள். ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருங்கூட்டமும் விழாக் கொண்டாட்டமுமாக இருந்தது.

மாலையில் அங்கிருந்து கிளம்பியபோது வழியெல்லாம் கிராமமக்கள் வந்து வழிபட்டுவிட்டுத் திரும்பிப் போகாமல் கூட்வே மதுரைக்கு வந்தனர். திருமங்கலத்தைக் கடந்தபோது தென்காசிப் பெரும் பாதையில் மீனாட்சியின் முன்னும் பின்னும் ஆயிரக்கணக்கில் ஆணும் பெண்ணுமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

திருப்பரங்குன்றம் கோயில் பூஜையை ஏற்றுக்கொள்வதற்கு வடக்கே மலை அடிவாரத்தில் வந்து நிற்கும்போது நன்றாக விடிந்திருந்தது. கோயிலின் கீழே குன்றை ஒட்டியிருந்த தோப்பெல்லாம் பெருமரங்கள் வளர்ந்திருந்தன. தோப்புக்கும் வடக்கே சந்நிதித் தெருவில் ஆறு வைதிக வீடுகளும் சுற்றிலும் நூறு குடிசைகளும் இருந்தன. சுப்பிரமணியர் சந்நிதியின் கீழ் கம்பீரமாக நின்றிருந்த கஜகேசரி கோவிந்தன் மேல் மீனாட்சி எழுந்த ருளியிருந்தாள். துணை வந்திருந்த யானைகள் இருபதும் இருபுறமும் நின்றன. அர்ச்சகர்கள் குடைவரையிலிருந்து வெளிப்பட்டு சிறிய முகமண்டபத்தைத் தாண்டிப் படிகளில் இறங்கி வந்த மீனாட்சிக்கான பூஜைகளைச் செய்தனர். ஏற்றுக்கொண்டு மதுரையை நோக்கித் திரும்பினாள்.

இங்கிருந்து மதுரை வரை பாதையின் இருபுறமும் விஜயநகர வீரர்கள் அணிவகுத்து நின்றிருந்தனர். தொடர்ந்து எக்காளங்களும், முரசுகளும் முழங்கி வரவேற்க, அம்மன் தன் ஐம்பதாண்டுப் பெருஉலா முடித்துத் தன் குடி ஏகிக்கொண்டிருந்தாள். துவாரசமுத்திரப் பதாகைகள் அலங்கார அணிவகுப்புகளுடன் செல்ல, தளிப்பெண்டிர் மலர்த்தாலம் தூவவேத விற்பன்னர்கள் மந்திர உச்சாடனங்களோடு முன்சென்றனர். இப்போது

மக்கள் பாதையில் வரமுடியாமல் இருபுறம் வழிந்து வெள்ளம் போல் மதுரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர்.

மதுரையைச் சுற்றி நின்ற படைகள் அனைத்தும் மேற்கே பின்வாங்கி அமணமலையிலிருந்து நாகமலை வரை தாவளம் அடித்திருந்தன. மதுரைக்குள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாதென்பதால் கோட்டைக்குள் யாரையும் அனுமதிக்கவில்லை. மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களில் இருந்த மக்கள் அனைவரும் பிள்ளைகுட்டிகளுடன் தலைக்கோழி கூப்பிடக் கிளம்பி வந்து மதுரையை மொய்த்திருந்தனர். வைகையெல்லாம் ஜனத்திரளாய் இருந்தது. மக்களை விடப் படைவீரர்கள் மிகுந்து அணிவகுத்து நின்றிருந்ததால் கூட்டம் கட்டுக்குள் இருந்தது.

பசுமலை தாண்டி மதுரையை மீனாட்சி நெருங்கியதும் வழிபாட்டு வெடிகளால் பூமி அதிர்ந்தது. தென்புறக்கோட்டை மதிலை அணுகியபோது வெடிகளையும், வாத்திய முழக்கங்களையும் மீறி உணர்ச்சியால் வெடித்தன குரல்கள். தலைக்குமேல் கரங்களைக் கூப்பியவாறு பெண்கள் அரற்றினர் ‘மீனாட்சித் தாயே...’

கிழக்குக் கோட்டை வாசலின் எதிரே வந்து நின்றாள். மக்கள் திரள் வைகைப் புறமிருந்தும் கிழக்கிலிருந்தும் ‘அம்மா...தாயே...’ என்று கும்பிட்ட கரங்களோடு முண்டியடித்து முன்னேறி அவளை நெருங்க முயன்றது. அதை ஒழுங்குபடுத்த வீரர்கள் பெரும்பாடு பட்டனர்.

காத்திருந்தாள். சுபமுகூர்த்தத்திற்கு இன்னும் வெகுநேரம் இருந்ததால் வீரர்கள் தென்வடலாய் இரு வரிசைகளில் நின்று நடுவே மக்கள் சென்று வழிபட்டு விட்டுக் கடந்து போகுமாறு ஏற்பாடு செய்தனர். வெயில் மறைந்து, மேகங்கள் திரண்டு கருத்தன.

சுபவேளை நெருங்கியதும் கிழக்கு மதில் மேலிருந்து நூற்றுக்கணக்கான எக்காளங்களும், கொம்புகளும் ஒருசேர முழங்கின. தாலப்பொலி வழி விரிக்க. ஆரத்திச் சுடர்கள் நிரையில் நின்றெரிய அன்னை மதுரையில் நுழைந்தாள்.

நகர மக்கள் கோயிலுக்குச் செல்லும் தெருவின் இரு மருங்கிலும் நின்றிருந்தனர். மீனாட்சியைக் கண்டதும் அழுகையும், புலம்பலும் வாழ்த்தொலியும் சரணவிளியுமாக மக்கள் கூட்டம் சன்னதம் கொண்டது. காவல் வீரர்களைத் தள்ளித் தாண்டிவந்து பலர் நெடுஞ்சாண் கிடையாகக் கும்பிட்ட கைகளோடு தெருவில் விழுந்தனர். அதைக்கண்டு மேலும் மேலும் பலர் வந்து விழுந்து தெருவையே நிறைத்தனர். கஜகேசரியால் முன்னே நகர முடியவில்லை. வீரர்கள் சமாளிக்க முடியாமல் திணற, வெளியிலிருந்து ஓடிவந்த பெருவாரியான வீரர்கள் உள்ளிறங்கி மக்களைப் பலவந்தமாகத் தூக்கித் தூக்கி ஓரத்தில் நிற்கவைத்துக் கொண்டிருந்தனர். கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து மிதந்து வந்து கிழக்குக் கோபுரவாசலின் முன்னே நின்றாள்.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் நெடுங்கோபுரம் தலை தாழ்த்தி வணங்கியது போலிருந்தது. பூசகர்கள் பூரண கும்பங் களோடு வாயிலில் நின்றனர்.

விரி சாமரங்களெனக் காதுகள் வீச, ஒளிரும் வெண்ணிறப் பெருமருப்புகள் முன் நீள, கோவிந்தன் காலெடுத்து வைக்க - மீனாட்சி தன்

குடிக்குள் நுழைந்தாள்.

*

# 3

**மா**லிக்காபூர் படையெடுப்பின் போதே மதுரையில் வாரிசு உரிமைப்போர் தொடங்கிவிட்டது. அதற்கும் இருநூறு ஆண்டு களுக்கு முன் அரியணைப் போட்டியில் பெரும் உள்நாட்டுக் கலகமே நடந்தது. இலங்கைப் படைகளும் சோழர்களும் மதுரைக்குள் மாறி மாறிப் புகுந்து தம் கைப்பாவைகளை அரசர்களாக்கினர். பின்னர் ஹொய்சளர்களும், சோழர்களும் தங்கள் வெற்றி தோல்விகளுக்கேற்ப பாண்டிய அரசர்களை மாற்றினர்.

1251இல் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில்தான் பாண்டிய அரசு வலுவடைந்தது. வேணாட்டு உதய மார்த்தாண்டனை வென்றார். இலங்கையின் வடபகுதியை வென்றார். சோழர்களை முறியடித்து வடபெண்ணை வரை சென்றார். அங்கு நடந்த சண்டையில் காகதியர்களின் நெல்லூர் பாளையக்காரனைத் தோற்கடித்தார். ‘எம்மண்டலமும் கொண்டருளிய பாண்டியன்’ ஆனார். சிதம்பரம், ஸ்ரீரங்கம் கோயில்களுக்குப் பொற்கூரை வேய்ந்து ‘கோயில் பொன் வேய்ந்த பெருமான்’ ஆனார்.

1268இல் அரசரான அவர் மகன் மாறவர்மன் குலசேகரன் கொல்லத்தை வென்று ‘கொல்லம் கொண்டான்’ எனப் புகழப்பட்டார். இலங்கையை வென்று ‘ஆரியச் சக்கரவர்த்தி’ என்று பட்டம் சூடினார். வெற்றிப் பரிசாகக் கொண்டுவந்த புத்தபிரானின் பல்லை கண்டி அரசன் பராக்கிரமபாகு வேண்டிக் கொண்டதற்கிணங்கி திரும்ப ஒப்படைத்தார்.

இவரது பட்டத்தரசியின் மகன் சுந்தரபாண்டியன். மற்றொரு மனைவியின் மகன் வீரபாண்டியன். இவன்மேல் பிரியம் கொண்ட அரசர் வீரபாண்டியனை இளவரசராக்கி தனக்குப் பின் அரியணை ஏறவும் ஏற்பாடு செய்தார். கோபமுற்ற சுந்தரபாண்டியன் தன் தந்தையைக் கொன்று 1310ல் முடிசூடிக்கொண்டார். வீரபாண்டியன் தனது ஆதரவாளர்களைத் திரட்டி சுந்தரபாண்டியனை விரட்டிவிட்டு அரியணையைக் கைப்பற்றினார்.

சுந்தரபாண்டியன் துவாரசமுத்திரத்தில் அப்போது இருந்த மாலிக்காபூரின் உதவியை நாடினார். கொள்ளையிட்டுச் செல்வம் திரட்டும் நோக்கத்துடனே விந்தியமலை தாண்டி வந்தது மாலிக்காபூரின் பெரும் சைன்யம். எந்த எதிர்ப்பும் இல்லாமல் டெல்லிப் படைகள் நுழைந்தன. ஸ்ரீரங்கம், மதுரை, ராமேஸ்வரம் கோயில்களைச் சூறையாடிப் பெரும் செல்வத்தைத் திரட்டிக்கொண்டு மாலிக்காபூர் திரும்புகையில் வீரபாண்டியன் எதிர்த் தாக்குதல் தொடுக்க முயன்று தோற்றார்.

1328ல் மதுரையைக் கைப்பற்றிய துக்ளக் தனது 23 மாநிலங்களில் ஒன்றாக்கி ஜலாலுதீன் அஷன் ஷாவை ஆளுநராக நியமித்தார். 1371ல் அலாவுதீன் சிக்கந்தர் ஷா வரை தொடர்ந்து ஏழு சுல்தான்கள் மதுரையை ஆண்டனர்.

மதுரை வெற்றிக்குப் பின் துவாரசமுத்திரம் திரும்பிய குமாரகம் பணன் மூன்றாம் ஆண்டில் உடல் நலிவுற்றுக் காலமானான். மாபார் பகுதிக்கு - கர்நாடகம், அரவ நாடு - அவன் மகன் எம்பணன் ஆளுநராக நியமிக்கப்பட்டான். அவன் இளைஞனாக இருந்ததால் நிர்வாகப் பொறுப்பை உறவினர் பொற்காச உடையார் ஏற்றிருந்தார்.

ராஜ்ஜியம் விஜயநகர ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் பெயரளவிலும் பாண்டிய மன்னர் மதுரையில் இருந்தார். விழா க்களில் மரியாதை பெறுவதும், வரி வசூலை ஒழுங்குபடுத்துவதும் அவரது வழக்கமாயிற்று.

குமார கம்பணனின் தம்பி இரண்டாம் ஹரிஹரன் 1377ல் விஜயநகர அரசனானான். விஜயநகரத்துக்குப் பின் பதினோரு ஆண்டுகள் கழித்து வடக்கே முகம்மதியரின் பாமினி ராஜ்ஜியம் டெல்லியிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர நாடானது. அதனோடு தொடர்ந்து விஜயநகரம் வெற்றி தோல்விகளோடு போராடிக் கொண்டிருந்தது. ஹரிஹரனின் 27 ஆண்டுகால ஆட்சியில் கோவா விஜயநகர மண்டலமாயிற்று. கொண்டவீட்டு இளவரசனுக்குத் தன் மகளை மணம் செய்வித்ததால் காப்பு நாடுகளிலிருந்து வரவிருந்த ஆபத்தை ஹரிஹரன் தடுத்திருந்தார். இளவரசன் விருபாஷன் இலங்கை மீது படையெடுத்து வென்று திரை பெற்றுத்திரும்பினான்.

அவரது பேரன் இரண்டாம் தேவராயன் 1426ல் பட்டத்துக்கு வந்தபோது விஜயநகரம் கொண்டவீட்டை வென்று தன் ஆந்திரத் தைக் கைப்பற்றியிருந்தது. கொல்லத்தை அடக்கி மலையாள நாட்டைத் தன்னோடு இணைத்துக்கொண்டது. ராய்ச்சூர் சமவெ ளியை பாமினியும், விஜயநகரும் இழப்பதும் கைப்பற்றுவதுமாகப் போராடிக் கொண்டிருந்தன. இப்போது வலிமை பெற்றுவிட்ட கலிங்கம் வட ஆந்திரத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

தேவராயன் காலத்தில் மதுரை ஆளுநராக இருந்த லக்கணன் ஒரு சேனாதிபதி. அவன் காலத்தில் மதுரையில் மீண்டும் வாரிசுப் போட்டி ஆரம்பித்தது. ஆளாளுக்கு உரிமை கோரத் தொடங்கி னார்கள். சின்னமனூருக்குத் தெற்கே மலையில் மலையாளக் கரையில் பூனையாற்றில் மீன்கொடியோடு ஒரு பாண்டிய வாரிசு இருந்தார். காளையார் கோயில் சதிராட்டக்காரி அபிராமியின் மக்கள் உரிமை

கோரினர். வேறு மனைவிகளுக்குப் பிறந்தவர் களென்று கயத்தாறு, தென்காசியில் பாண்டியர்கள் போட்டிக்கு வந்தனர். லக்கண்ன் காளையர் கோயிலில் இருந்த நால்வரில் வாணாதிராயரை அழைத்து வந்து மதுரை அரசனாக்கினான்.

கப்பம் செலுத்தத் தவறிய கண்டிக்கு லக்கணன் பெரும் படையோடு சென்று வென்று, வாங்கி வந்தான். 'தட்சிண சமுத்ராதீ ஸ்வரன்' என்ற பட்டத்தை ராயர் வழங்கினார். இம்முறை வழக்கம்போல் படைகள் விஜயநகருக்குத் திரும்பவில்லை. விரும்பியவர்கள் இங்கேயே தங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி அளித்தான் லக்கணன். திண்டுக்கல், தாராபுரம், பழனிக் குன்றுகளிலிருந்து காவிரி வரை உள்ள காடுகளில் படையணித் தலைவர்கள் விரும்பிய இடங்களில் நிலைகொண்டு விட்டனர். பாதி அணிகளே விஜயநகருக்குத் திரும்பின. குடும்பம் குட்டிகளை இங்கு அழைத்து வந்தனர். கொல்லவாருகளின் மாட்டு மந்தைகள், நாய்கள் சூழப் பெருவாரியாக உடன்வந்தன. இரண்டே மந்தைகள்தான் வைகையைத் தாண்டித் தெற்கே சென்றன. சந்திரகிரியிலிருந்து வந்த குமாரமுத்து எட்டப்ப நாயக்கரின் மந்தைகள் மதுரைக்கு மேற்கே ஆனையூர் கள்ளநாட்டில் நிலைகொண்டன. மதுரையிலிருந்து கணவாய் வரையிலுமான திசை காவலை ஏற்று, ஆனையூரிலிருந்து புத்தூர் வரை உள்ள கிராமங்களுக்கு அதிபதியாய் மலையடிவாரத்தில் கருக்கொட்டாம்பட்டியில் 1300 வீரர்களுடன் அவர் மண்கோட்டை கட்டிக்கொண்டார்.

மற்றுமொரு சில்லவாரு தளபதியான ஜக்கு நாயக்கரின் அணி குத்திகோட்டையிலிருந்து தங்கள் உறவினர்களோடு வந்து மேற்கு மலைகளின் கீழ் சின்னமனூருக்கு கிழக்கே கோட்டைக் கட்டிக் கொண்டது.

காடுகளை வெட்டி ஊராக்கினர். அவர்களுக்கு தேவை மேய்ச்சல் நிலம்தான் என்பதால் தங்களது உணவுத் தேவைக்காக மட்டுமே சிறிய விளைநிலங்களை ஏற்படுத்திப் பயிரிட்டனர். பழனிக் குன்றுகளுக்கு வடக்கே ஏராளமான குக்கிராமங்கள் உருவாகிவிட்டன.

**பி**றகு ஆண்ட விஜயநகரின் இரண்டு ராயர்களும் மிகவும் பலவீனமானவர்களாக இருந்தனர். சகோதரக் கொலைகளுக்குப்பின் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் போகங்களில் மூழ்கிவிட்டனர். எந்த எதிர்ப்புமின்றி பாமினி விஜயநகரின் வடபகுதிகளை விழுங்கியது. கலிங்கம் தென் ஆந்திரத்தின் உதயகிரி வரை ஆக்கிரமித்துக்கொண்டது.

சந்திரகிரியின் ஆளுநராக இருந்த சாளுவ நரசிம்மன் வலிமையான தளபதி ஆதலால் உதயகிரி கோட்டையை வென்று கலிங்கர்களை விரட்டி விட்டான். பின்னும் ஏழாண்டுகளில் விஜயநகரம் இழந்திருந்த ஆந்திரப் பகுதியின் ஒவ்வொரு கோட்டையாக வென்று கலிங்கத்துப் போய் கடகநகரில் அரசன் ஹம்பாரை முறியடித்து வஞ்சிக்கப்பட்ட வாரிசான புருஷோத்தம கஜபதியை அரசனாக முடிசூட்டினான்.

பாமினியின் திறமை வாய்ந்த தளபதி முகமது காவனுக்குத் தவறாக மரணதண்டனை அளித்துவிட்டு, பிறகு தனது குற்றத்தை உணர்ந்து வருந்தி போர்களில் ஈடுபாடு காட்டாமல் இருந்தான் சுல்தான் மூன்றாம் முகம்மது. பிறகு அவனும் இறந்து போனான். இந்தக் குழப்பத்திலிருந்து

மீளமுடியாத பாமினி விஜயநகரை விட்டு வைத்திருந்தது. குடியிலும் மோகத்திலும் சீரழிந்த விருபாக்ஷ ராயரை அவரது மூத்தமகனே கொன்றுவிட்டான். எனினும் குற்ற உணர்வால் தனக்கு அரசுரிமை வேண்டாம் என்றான். அவன் தம்பி பிரவுடதேவராயன் அரசனாகி, தன் அண்ணனை நம்பாமல் கொன்றான். பிறகு தானும் தந்தை வழியில் இறங்கிவிட்டான்.

விஜயநகரை அழிவிலிருந்து காப்பாற்றும் பொருட்டு தனது தளபதி நரச நாயக்கரை சாளுவ நரசிம்மன் விஜயநகருக்கு அனுப்பினார். நரசநாயக்கரின் படை கேட்பாரற்றுக் கிடந்த விஜயநகருக்குள் நுழைந்தபோது அரசன் தப்பி ஓடினான்.

1486ல் சாளுவ வம்சத்தின் முதல் அரசனாக நரசிம்மன் விஜய நகர அரியணை ஏறினான். கர்நாடகத்திலும், மதுரையிலுமிருந்த ஆளுநர்கள் புதிய அரசனை ஏற்றுக்கொள்ள மறுத்துக்கலகம் செய்தனர். நரச நாயக்கர் அவர்களை அடக்க தெற்கே போனார். கோவா வரை விஜயநகரம் இழந்திருந்த பகுதிகளை மீட்டான் நரசிம்மன். ஆனால் கிழக்கே புருஷோத்தம கஜபதி படையெடுத்து வந்து உதயகிரியைப் பிடித்துக்கொண்டான். மேற்கே நிலைகளை வலுப்படுத்திவிட்டு உதயகிரிக்குப் போய்ப்போரிட்டான் நரசிம்மன். தான் முடிசூட்டியவனிடமே தோற்று அவன் சிறைப்பட நேர்ந்தது. வென்ற பகுதிகள் கலிங்கத்துக்கே உரிமை என்று ஒப்பந்தம் எழுதி வாங்கியபிறகு கஜபதி நரசிம்மனை விடுவித்து விஜயநகரம் அனுப்பி வைத்தான்.

நரச நாயக்கர் தனது தளபதி கொட்டியம் நாகம நாயக்கருடன் சென்று கர்நாடகத்தில் இருந்த ஆளுநர்களையெல்லாம் பலம் பிரயோகித்தும், நயந்து பேசியும் அடக்கிவிட்டு மைசூரிலிருந்து கெஜ்ஜலாட்டுக் கணவாய் வழியாக மதுரை வந்தார். மதுரை ஆளுநர் திம்மப்ப நாயக்கர் எதிர்ப்பில்லாமல் பணிந்தார். நரச நாயக்கர் மதுரையிலிருந்த பொம்மை அரசனை நீக்கிவிட்டு அரண்மனையில் திம்மப்ப நாயக்கரைக் குடியேற்றினார். அனைத்து ஆளுநர்களுமே கொல்லவாருகளாக இருந்ததால் சாளுவ அரசனை ஏற்றுக்கொண்டனர். நரச நாயக்கரின் பணி சுலபமாயிற்று. சாளுவ நரசிம்மன் நரச நாயக்கருக்குப் பரிசளித்த வாளில் மீன் சின்னங்கள் இருந்ததாலும் அது பாண்டியர்களின் பாரம்பரிய வாள் என்று கேள்விப்பட்டிருந்ததாலும், தளபதிகளுக்குரியது என்பதாலும் இப்போது திம்மப்ப நாயக்கருக்கே அதைக்கொடுத்துவிட்டார். நாகம நாயக்கரோடு ராமேஸ்வரம் சென்று வழிபட்டு விட்டு விஜயநகர் திரும்பினார்.

ஐந்தே ஆண்டுகளில் நரசிம்மன் தனது வாரிசுகளாக இரு சிறுவர்களை நரச நாயக்கர் பொறுப்பில் ஒப்படைத்து விட்டுக் காலமானார். நாட்டு நிர்வாகம் நரச நாயக்கரிடமே இருந்தது.

1503ல் நரச நாயக்கர் இறந்ததும் அவரது மூத்த மகன் வீரநரசிம்மன் முந்தைய இளவரசனை பெனுகொண்டாவில் சிறை வைத்துவிட்டுத் தானே முடிசூடிக்கொண்டான்.

துளுவ வம்சம் தோன்றியது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மைசூரில் கிளம்பிய எதிர்ப்பை அடக்குவதற்காகத் தனது தம்பி கிருஷ்ணதேவராயரிடம் தலைநகரை ஒப்படைத்துவிட்டுச் சென்ற

நரசிம்மன் நோய் வாய்ப்பட்டு இறந்தான்.

*

# 4

**மீனாட்சி மீண்டும் மதுரை வந்து குடியேறியபின் நூற்று ஐம்பத்தாறு** ஆண்டுகள் கழிந்து ஒரு ஐப்பசி மாதம் பெருமழை பெய்தது. மண்ணும் வானும் நீரால் நிறைந்தன. மேற்கு மலைகள் பொங்கி வழிந்தன. சின்னமனூர் தாழ்வரை தாங்காது வெள்ளத்தை வைகைக்குள் தள்ளியது. ஏற்கனவே வைகை கரை மேவிப் போய்க்கொண்டிருந்தது. பிரளயம் போல் பெருகிய வெள்ளத்தில் மதுரை உயிருக்குத் தத்தளித்தது.

கரும்புத் தோட்டங்களைக் காணவில்லை. கல்யானையும் நீரில் மூழ்கியது. நரிகள் ஆற்றோடு போயின. பரிகள் லாயத்தில் நீந்தின. வந்திக் கிழவிகள் குளிர் தாளாது மரித்தனர். கூடையை எடுத்த பெருமானால் கருவறையை விட்டு வெளிவர முடியவில்லை. வருணனின் திருவிளையாடல் கண்டு திகைத்து நின்றார். மீனாட்சியின் முலைகளைத் தழுவியவாறு சென்றது வெள்ளம்.

*

**ச**கரம் தம்மைய நாயக்கர் அதிகாலையில் குதிரையில் வைகை யைக் கடந்து மதுரைக் கோட்டை மேற்கு வாசல் வழியாக அரண்மனையை அடைந்தபோது கரியாவுல போத்தி நாயக்கர் வரவேற்று உள்ளே அழைத்துப் போனார்.

காசி விஸ்வநாதரின் மரகத லிங்கத்துப் பூஜை நடந்துகொண்டி ருந்தது. நாகம நாயக்கர் குளித்துவிட்டு, நின்று கண்மூடி வணங்கிக் கொண்டிருந்தார். சகரமும் போய் வணங்கினார். ஆராதனைச் சுடரைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்ட பிறகு தம்மையாவைப் பார்த்து நாகம நாயக்கர் ‘வாடா...’ என்று சொல்லி விட்டு திருநீறை எடுத்துப் பூசினார். ‘எங்க வந்த?’ என்று கடுத்த குரலில் கேட்டார்.

தம்மைய நாயக்கருக்கு உள்ளுக்குள் நடுக்கம் கொடுத்துவிட்டது. வா என்று சொல்லிவிட்டு முன்னே நடந்த நாகமருக்குப் பின்னாலே

ஆட்டுக்குட்டி போலப் போனார். என்ன நடக்குமோ என்ற பயம் அவரைப் பிடித்தாட்டியது.

**தி**ருவாடனையில் சிற்றரசன் போலிருந்த சந்திரசேகர பாண்டியனை வீரசோழன் விரட்டிவிட்டுத் திருவாடனையில் அமர்ந்து கொண்டான். பாண்டியன் விஜயநகருக்கு ஓடிப்போனான். இரண்டு மாதம் கழித்து கிருஷ்ண தேவராயரின் பேட்டி கிடைத்தது. தட்சிண மண்டேலேஸ்வரர் கொட்டியம் நாகம நாயக்கர் தனது தலைமைப் பீடமான சந்திரகிரியில் அப்போது இருந்தார். மாபாரின் குடிமை நிர்வாகம் பல ஆளுநர்களின் கையில் இருந்தாலும் ராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தென்திசைத் தண்ட நாயகன் அவரே. பாண்டியன் மதுரைக்குப் பொறுப்பாகத் தன்னை நியமிக்கும்படி வேண்டினான். ராயர் ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுமாறு நாகமருக்கு ஓலை அனுப்பினார். படைகளோடு கிளம்பித் தெற்கே வந்த நாகமர், வீரசோழனை விரட்டி விட்டு மதுரை வந்து அமர்ந்து கொண்டார். தனக்கு முடி சூட்டுமாறு கேட்ட பாண்டியனை மறுத்துவிட்டார். சந்திரசேகரன் மீண்டும் ராயரிடம் ஓடினான்.

அரச ஆணையை நிறைவேற்றுமாறு விஜயநகரத் தூதுவர்கள் வந்து வேண்டினர். அதை ஏற்காத நாகமர் தான் சந்திரிகிரி திரும்பப் போவதில்லை என்றும் தற்சமயம் மதுரையிலேயே இருக்க முடிவெடுத்துவிட்டதாகவும் சொல்லி அனுப்பினார்.

சாந்த சொரூபியான ராயரின் முன்கோபம் பிரசித்தி பெற்றது. இதைக்கேட்ட ராயர் நாகமரைச் சிறைப்பிடித்து வருமாறு அவையிலிருந்த தளபதிகளுக்கு உத்தரவிட்டார். யாருமே பதில் கூறாது தலை கவிழ்ந்திருந்தனர். எல்லோரும் எப்போதாவது நாகமரின் கீழ் பணியாற்றியிருந்தனர். வாள் எடுத்த நாளிலிருந்து சங்கம, சாளுவ, துளுவ மன்னர்கள் நடத்திய அனைத்துப் போர்களிலும் பங்கேற்ற அனுபவசாலி நாகமர். ராய்ச்சூர் பெரும் போருக்குப் பிறகு விஜயநகரம் இப்போது தான் நான்கு ஆண்டுகளாக அமைதியாக இருக்கிறது. முதிர் வயதிலும் தட்சிண மண்டலேஸ்வரராக நாகமர் இருக்கிறார்.

‘யாருமே இல்லையா?’ என்று ராயர் கத்தியபோது அவர் அரியாசனத்தருகே வலது புறம் நின்றிருந்த விஸ்வநாதன் ‘நான் போகிறேன்’ என்றான். அவை அதிர்ச்சியடைந்தது. தந்தையைச் சிறையெடுக்க மகனா? பால்ய காலத்திலிருந்து கடந்த பதினைந்து வருடங்களாக ராயரோடு வேட்டைக்கும் போர்களுக்கும் சென்றவன். பத்தாண்டுகளாக ராயருக்கு எப்போதும் தாம்பூலம் மடித்துக்கொடுக்கும் முதல் மரியாதையைப் பெற்றவன். அவரது தலைமை மெய்க்காப்பாளன். ஈடு இணையற்ற வாள்வீரன். விஜயநகரத்து வீர கதைகளின் நாயகன்.

**ப**டிகளில் ஏறி மேல்மாடத்துக்கு வந்த நாகமர் தம்மையாவிடம் கேட்டார். ‘அங்கு என்ன நடந்தது?’ ஆதியோடந்தமாக அவர் விளக்கிச் சொன்னார்.

‘தவமிருந்து ஒரு மகனைப் பெற்றது இதற்குந்தானா?’

தம்மையா மௌனமாக இருந்தார்.

‘அவன் அறியாப் பையன். நாட்டு நடப்பு அவனுக்குத் தெரியாது. ராயரைத் தவிர வெளி உலகத்தை அவன் அறியமாட்டான். அவருக்கு வலதுபுறம் நிற்கக் கிடைத்த மரியாதையைக் கண்டு நாடே போற்றியது. இவ்வளவு சின்னவயதில் அந்த இடத்தை அடைந்ததால் அவன் மீது சேனாதிபதிகளும் செல்வந்தர்களும் பொறாமை கொண்டனர். இப்போது என்ன ஆயிற்று? வலதுபக்கம் நின்று, நின்று ராயரின் வலதுகையாகவே மாறிப் போனான்!’

‘விசுவநாதன் பிறந்ததிலிருந்து தூக்கி வளர்த்திருக்கிறேன். அவரைக் குறை சொல்லாதீர்கள்.’

‘தம்பா, உன் குடும்பத்துக்கு எவ்வளவு மாடுகள்?’

‘தெரியாது. நிறைய மந்தைகள் இருக்கும். எனக்கு விவரந் தெரிந்த நாளிலிருந்து உங்களிடம்தான் போர்ச் சேவகம் செய்திருக்கிறேன்.’

‘நீ விரைவில் மாடு மேய்க்கப் போக வேண்டியதிருக்கும்.’

புரியாமல் தம்மையா அமைதி காத்தார்.

நாகமரே மீண்டும் கேட்டார் ‘வெக்கிலியர் குலத்தில் இன்று எவ்வளவு வீரர்கள் இருப்பார்கள்?’

‘சுமார் நாற்பதாயிரம் பேர்.’

‘அவ்வளவுதான். மீதிப்பேர் எல்லாம் போர்க்களத்தில் மடிந்து போயினர். ஐநூறு ஆண்டுகளாகப் பலியாகிக் கொண்டேயிருக்கிறார்கள். தேவகிரிக்காக இருநூறு வருஷம்! கம்பிளிக்காக நூறு வருஷம்! விஜய நகருக்காக இருநூறு வருஷம்! என் கண் முன்னே ஐம்பதாயிரம் பேர் பலியாகி இருப்பார்கள். தேவகிரி முதன்முதலில் பேரரசாக உருவானபோது ஏற்பட்ட சாபம்! மாட்டு மந்தைகளைத் தெலுங்கானாவில் விட்டு விட்டு வடக்கே கூட்டம் கூட்டமாகப் போனார்கள். குலப் பெருமையில் பங்கு கொள்ளவா அல்லது வேலை தேடியா? வேடர்கள் ஆயர்களாகி ஆயர்கள் வீரர்களாகிப் போயினர். முரட்டு முகம்மதியர்களோடு தொடர்ந்து சண்டை. கடைசியில் தேவகிரியை இழந்து தெற்கேயே ஓடிவர வேண்டியதாயிற்று. பாலமவாரின் கம்பிளி தேசம் வெக்கிலியருக்கும் தோக்களவாருக்கும் அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றியது. மீண்டும் பேரழிவு. ஆயர்குடி அரசு அற்றுச் சுவடற்றுப் போயிருக்கும். பிறகு விஜயநகரம் உருவானபோது தென்புலத்துச் சில்லவாரும் வல்லக்கவாரும் எல்லோருமாகச் சேர்ந்து விஜயநகரத்தைக் கட்டி எழுப்பினார்கள். பிறகு கொல்ல வாருகள் குதிரையிலிருந்து இறங்கவேயில்லை. எவ்வளவு போர்கள்! தம்பா, உனக்குத்தான் தெரியுமே, ஆந்திரத்திற்கு வராத கொடுமை விஜயநகரத்திற்கு விதித்துவிட்டது. இங்கே ஊர் ஊராகப் பொது ஜனங்கள் பலியாகும். உனக்குத் தெரியாது, நான் சிறுவனாக இருக்கும்போது, தேவராயன் காலத்தில், முதுகல் சீமையில் பாமினிப் படை மூன்றே நாளில் இருபதாயிரத்துக்கும் மேல் ஜனங்களை வெட்டித் தள்ளிவிட்டு மந்தைகளை ஓட்டிக்கொண்டு போனது. அதைக்கண்ட வெறியில்தான் நான் ஓடிக்கொண் டிருக்கிறேன். இன்னும் வாளைக் கீழே போடவில்லை. துங்கபத்ரையில் முந்நூறு வருடமாக ஓடுவது நீரல்ல, கொல்ல வாருகளின் ரத்தம்.’

தம்மையா பதிலின்றி அமைதியாக இருந்தார்.

‘ஒரு சொட்டு ரத்தமும் சிந்தாமல், கோதாவரிக் கரையிலிருந்து வந்த ஒரு காப்பு பலிஜன் இன்று விஜயநகர அரியணை ஏறிக் கோலோச்சுகிறான்!’

‘… … …’

‘இன்று விஜயநகரத்தின் சேனாதிபதிகள், ஆளுநர்கள், அதிபதிகள் அனைவரும் பலிஜர்கள். முன்களத்தில் போராடி மடியும் அணித்தலைவர்களும் வீரர்களும் மட்டும் கொல்லவாருகள். பொலி ஆவுகள் கம்பீரமாக நடந்து திரிய அவர்களுக்கென்று சொந்தமாய் இன்று நிலம் ஏதுமில்லை. கம்பளியை விரிக்கக்கூட ஒருபிடி மண் இல்லை.’

‘… … …’

‘வெக்கிலியரை விடவும் குறைந்த எண்ணிக்கையில்தான் காப்பு பலிஜர்கள் இருக்கிறார்கள். அதுவும் ஆயிரம் காத தூரத்துக்கப்பால் கோதாவரிக் கழிமுகத்தில். அவர்களால் விஜயநகரைக் கட்டி ஆளமுடியாது. புகழின் உச்சிக்கு ஒரு ராஜ்ஜியம் போனபின் உடனே விழத்தொடங்கும். இங்கு மீண்டும் கொல்லவாருகளுக்கான நாட்டை உருவாக்குவேன். விஸ்வநாதனிடம் போய்ச் சொல். எனக்குப் பிறகு அவன்தான் இங்கு இன்னொரு விஜயநகரை எழுப்பவேண்டும்.’

தம்மையா விடைபெற்று வைகையின் வடகரையில் கூடாரமிட் டிருந்த விசுவநாதனின் பாடிவீட்டை நோக்கிப் போனார். வைகையின் தென்கரையில் கோட்டைக்கு மேற்கே நாகமரின் படைகள் நிலைகொண்டிருந்தன. வெகுநாட்களாகத் தாவளம் அடித்திருப்பதால் ஊர்களைப் போலவே தெருக்கள், சந்தைகள் என்று ஒழுங்குமுறை உருவாகி ஓய்வாகப் பொங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பயிற்சி நேரம் போக மீதி நேரமெல்லாம் தேவராட்டமும், பாட்டுமாக இருந்தது. பக்கத்து ஊர்களிலிருந்து சேவல்களை வாங்கிவந்து கத்தி கட்டி சண்டைவிட்டனர். ஒரு பெருங்கூட்டம் குதிரைகளேறி நாய்களோடு திண்டுக்கல் நத்தம் வருசநாட்டு மலைகளில் வேட்டைக்காக அலைந்து கொண்டிருந்தது. படையில் அதிகமாக வெக்கிலியரும் பாலமவாரும்தான் இருந்தார்கள். சக்கிலியரும் சில்லவாரும் வல்லக்கவாரும் மீதிப்பேர். மிகக்குறைவாக காப்புகளின் அணிகளும் இருந்தன.

வைகை வடகரையில் தங்கள் படையின் இன்னொரு பிரிவு விஸ்வநாதனின் கீழ் வந்திறங்கியதைக் கண்டதும் அங்குபோய் ஆட்களைத் தேடித் தேடிக் குசலம் விசாரிக்கத் தொடங்கிவிட்டனர். பெரும்பாலும் உறவினர்கள், ஊர்க்காரர்கள், சீமைக்காரர்கள் என்று ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாகவே இருந்தனர். வீரர்களுக்கோ தாங்கள் எதற்காக வந்து இறங்கியிருக்கிறோம் என்ற விவரமே தெரியாது. மேலும் பிரிவுகள் வந்து இணைவது வழக்கம்தான் என்று கருதியிருந்தனர். யானைகள் எதுவும் வரவில்லை. குதிரை அணிகள் மட்டுமே இருந்தன. வண்டிகளில் கூடப் பொருட்கள் வரவில்லை; லம்பாடிகளின் பொதி எருதுகள்தான் ஏற்றி வந்திருந்தன. ஆற்றுக்கு மேற்கே தள்ளிக் குளிக்கப்போன லம்பாடிப் பெண்களைச் சுற்றி கிராம மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களது மின்னும் வண்ணப் பாவாடைகளும் ரவிக்கையும் கைகொள்ளாத சங்கு வளையல்களும் வேடிக்கையாக இருந்தன. அவர்கள் புரியாத மொழியில்

வைது கூட்டத்தை விரட்டினர்.

மதிய உணவுக்குப் பிறகு தம்மைய நாயக்கர் மீண்டும் வந்தார். ‘எதுவாக இருந்தாலும் விஜயநகருக்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம் என்று விஸ்வநாதன் உங்களைக் கூட்டிவரச் சொன்னார்.’

நாகமருக்கு எரிச்சல் ஏற்பட்டது. ‘ஏன் அவன் வந்து என்னைப் பார்க்க மாட்டானாமா?’ என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்தார் ‘அவன் அம்மாவுக்குத் தெரியாமலே கிளம்பி வந்துவிட்டான். அப்படித்தானே?’

‘ஆமாம். ஆனால் உங்கள் மருமகள் வீரநாகம்மா இதைக் கேள்விப்பட்டு லாயத்துக்குத் தேடி வந்து அழுது புலம்பினாள்.’

இதைக்கேட்ட நாகமர் யோசித்தவாறு வெகுநேரம் அமைதியாக இருந்தார்.

‘காசியில் போய் நான் தவம் இருந்ததற்கு வரமாகப் பிறந்தான் விஸ்வநாதன் என்றுதான் முன்பெல்லாம் நினைத்திருந்தேன். ஆனால் தம்பா, நிஜமாகவே வரமாக வந்து வாய்த்தவள் அவள்தான். நான் மதுரையில் இருக்க முடிவெடுத்த இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் என் மனம் கலங்குகிறது. என் புத்தி ஏன் இப்படிப்போயிற்று? என் பேரனைப் பார்த்துப் பல மாதங்களாகி விட்டன. விஜயதசமிக்குப் போனபோது பார்த்தது.’

‘இப்போது நடக்கிறான். அவன் அம்மாவின் சாடை.’

‘வெற்றிலை கொண்டுவரச் சொல்’ என்று சொல்லிவிட்டு சாளரத்தினூடே தெரிந்த வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வெளியே போன தம்மையா தூரத்தில் நின்ற காவலர்களை அழைத்துச் சொல்லிவிட்டு வந்து அமர்ந்தார்.

‘நீ என்னிடம் வந்து சேர்ந்து எத்தனை வருஷமாகிறது?’

‘முப்பத்தாறு.’

‘ராயரின் தாத்தாவின் கதையைச் சொல்கிறேன், கேள். சாளுவ குண்டப்ப நாயக்கர் சந்திரகிரியின் சேனாதிபதியாக நியமிக்கப் பட்டிருந்த காலம் அது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு. முதுகல் கோட்டை பறிபோனதால் எனது தந்தையார் கொட்டியம் வீரபத்ர நாயக்கர் வெக்கிலியர் கூட்டத்தோடு சந்திரகிரி வந்தார். எனக்குப் பத்து வயதிருக்கும். பாமினிப் படைகளுக்குப் பயந்து ஓடி ஒளிந்த மக்களெல்லாம் ஒன்று திரண்டு மலைகளில் மேய்ச்சலுக்கு விட்டிருந்த மாடுகளைத் திரட்டிக் கொண்டு, சுற்றுப்புற ஊர்களைக் காலி செய்துவிட்டு சந்திரிகிரி வந்தோம். ஐநூறு குதிரைகளுக்கும் குறைவாகத்தான் வந்தன. விஜயநகருக்குப் போகவில்லை. முதுகல்லில் அடிபட்ட மற்ற வெக்கிலியர் கூட்டங்கள் எல்லாம் விஜயநகருக்கும் பெனுகொண்டாவுக்கும் போய்விட்டனர்.

‘வேங்கடமலை அடிவாரத்தில் தங்கினோம். குளங்களைச் சுற்றி ஊர்களை உண்டாக்கினோம். பொம்மியம்மா செருவு என்று பெயராயிற்று. என் தந்தை ஐநூறு குதிரைகள், முந்நூறு காலாள் வீரர்களோடு

குண்டப்பரிடம் பணியில் அமர்ந்தார். குண்டபரின் முன்னோர் துவாரச முத்திரத்திலும் பிறகு துளுவ நாட்டிலும் தளபதிகளாய் இருந்தவர்கள். துளுவ நாட்டிலிருந்து இவர் கூடவே சாதாரண மெய்க்காப்பாளராக வந்து சேர்ந்தார் ஈஸ்வர நாயக்கர். பிறகு தான் தனது சொந்த நாடான பத்ராசலம் பக்கம் போய் கோதாவரிக் கரையிலிருந்து பலிஜர்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டிவந்து ஐநூறு பேர் கொண்ட காலாள் பிரிவை உருவாக்கி அணித்தலைவரானார். சந்திரிகிரிக் கோட்டைக்குத் தெற்கேதான் அவர்கள் குடியிருந்தனர்.

‘பிறகு ஐந்து வருடம் கழித்து வெக்கிலியரின் குதிரை அணிக்கு நான் பொறுப்பேற்றேன். அப்போதுதான் கலிங்க அரசன் ஹம்பார் பெரும்படையோடு தெற்கே வந்தான். ‘மசூலிப்பட்டினம், ராஜம கேந்திரகிரி, கொண்டவீடு என்று பிடித்துக்கொண்டு கடற்கரையோரமாகவே ஸ்ரீரங்கம் வரை தெற்கே போனான். அங்கே வலுவான கோட்டைகள் ஏதுமில்லாததால் திரும்பி வந்து நெல்லூரைக் கைப்பற்றி அங்கு இருந்தான். அப்போது விருபாஷ ராயரின் கீழ் விஜயநகரம் நசித்துக்கொண்டிருந்தது.’

வெற்றிலை வந்தவுடன் எடுத்து நரம்புகளைக் கிள்ளிச் சுண்ணாம் பைத் தடவிக்கொண்டே பேசினார்.

‘ஈஸ்வர நாயக்கர் தனது மகன் நரச நாயக்கரின் கீழ் ஒரு குதிரை அணியை உருவாக்கிவிட்டார். நெல்லூரில் கலிங்கர்களைத் தாக்கினோம். நாங்கள் தோற்றுப் பின்வாங்க வேண்டியதாயிற்று. மீண்டும் ஒரு மாதம் கழித்து மோதினோம். அப்போதும் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் நெல்லூர்கோட்டை பாதுகாப்பில்லை என்று உணர்ந்த ஹம்பார் வடக்கே உதயகிரிக்குப் போய் விஜய நகரப்படைகளை முறியடித்துத் தூரத்திவிட்டு அந்த வலுவான கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். அங்கிருந்த பத்மாவுல கதிரி நாயக்கர் பின்வாங்கி சந்திரகிரியில் வந்து சேர்ந்துகொண்டார்.

நான்காண்டுகளுக்குப் பிறகு குண்டப்பர் காலமானார். எங்கள் குதிரைப்படைத் தளபதியாக இருந்த அவர் மகன் சாளுவ நரசிம்மன் சந்திரிகிரியின் சேனாதிபதியானார். பின்னும் இரண்டு ஆண்டுகள் படைதிரட்டிக்கொண்டு காத்திருந்தார் நரசிம்மன். விஜயநகரிலிருந்து எந்த உதவியும் வரவில்லை. ஹம்பார் ஆந்திரத்தில் பிடித்த கோட்டைகளை எல்லாம் வலுப்படுத்தி படைகளை அங்கு நிறுத்திவிட்டு கலிங்கத்துக்குத் திரும்பியிருந்தான். முன்பே ஒருகல்லில் இருந்து பாமினிப் படைகளைத் துரத்திவிட்டிருந்தான்.

‘நரசிம்மன் தானாகவே முடிவெடுத்து கலிங்கத்தின்மீது யுத்தப் பிரகடனம் செய்தார். முதலில் உதயகிரியைத் தாக்கினோம். மூன்றே மாதங்களில் உதயகிரி விழுந்தது. பிறகு எட்டு ஆண்டுகளாக நாங்கள் சந்திரகிரிக்குத் திரும்பி வரவேயில்லை. ஆந்திரத்தில் வரிசையாக ஒவ்வொரு கோட்டையாகப் பிடித்துக்கொண்டே போனோம். ஈஸ்வர நாயக்கரும் அவர் மகனும் போர்களில் காட்டிய வீரத்தாலும் விசுவாசத்தாலும் நரசிம்மனின் நன்மதிப்பைப் பெற்றனர். கொண்டவீடும் ராஜமகேந்திர கிரியும் முன்பே விழுந்து போனதால் மையத் தலைமையின்றி கிருஷ்ணா, கோதாவரி எங்கும் ரெட்டி பாளையப்பட்டுகள்

செயலற்றுச் சிதறிக்கிடந்தன. ஈஸ்வர நாயக்கரும், நரச நாயக்கரும் உதிரியாகத் திரிந்த காப்புகளை ஒன்று திரட்டிப் படையில் சேர்த்துத் தங்கள் அணியை வலுப்படுத்திக் கொண்டே வந்தனர். மகாநதிக் கரையில் ஹம்பாரை நாங்கள் தோற்கடித்தபோது படையில் பாதிப்பேர், ஏறத்தாழ ஐம்பதாயிரத் துக்கும் மேல் காப்புகள் ஈஸ்வர நாயக்கரின் கீழ் இருந்தனர்.

'நாங்கள் கலிங்கத்தில் இருந்தபோது பாமினியின் அரசன் முகம்மதுவும் தளபதி காவனும் கொண்டவீட்டுக் கோவில்களைக் கொள்ளையிட்டு இடித்து வைதீகர்களையும், ஜனங்களையும் கொன்று குவித்துவிட்டு கிருஷ்ணாவுக்கு வடக்கே கொண்ட பள்ளியில் தாவளம் அடித்துத் தங்கியிருந்தனர். அவனுக்கு ஹாஜி பட்டம் பெற வேண்டுமென்று ஆசையாம். இதைக் கேள்விப்பட்டு நாங்கள் அவசரமாகத் தெற்கே திரும்பினோம். இதற்கிடையே அவன் காஞ்சிபுரம் சென்று கோவில்களைக் கொள்ளையிட்டுத் திரும்பி வந்தான். நாங்கள் வந்த வேகத்தில் கொண்டபள்ளியைத் தாக்கினோம். சேர்த்த செல்வத்தை இழந்துவிட்டுப் பெரும் சேதங் களோடு பீடாருக்குத் தப்பியோடின பாமினிப் படைகள். கிருஷ்ணாவில் வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. முன்பே நாங்கள் கடந்து போய்க் குண்டூர் மலைகளுக்குப் பின் காத்திருந்தோம். கிருஷ்ணாவை காவன் நெருங்கியதும் பின்னேயிருந்து தாக்கினோம். பெருவாரியான குதிரைகளையும் கொள்ளைப் பொருட்களையும் பறிகொடுத்துவிட்டு எஞ்சிய படைகளோடு மேற்கே ஓடித் தப்பினர் காவனும் முகம்மதுவும்.

பெரும்செல்வம் வந்தது. அதோடு முழு ஆந்திரமும் நரசிம்மனின் கட்டுப்பாட்டில் வந்தது. அதை நிலைநிறுத்த காப்புவான ஈஸ்வர நாயக்கரின் உதவி தேவைப்பட்டது. அவருக்கு வயதாகி விட்டதால் நரசநாயக்கர் சந்திரகிரியின் சேனாதிபதி ஆனார். நான் குதிரைப் படைத் தளபதி ஆனேன். அப்போதே ஏறத்தாழ விஜயநகர அரசராகி விட்டார் சாளுவ நரசிம்மர். மீதிக்கதை உனக்குத் தெரிந் ததுதான்' என்று சொல்லிவிட்டு மடித்துக் கையில் வைத்திருந்த வெற்றிலைகளை வாயில் திணித்தார் நாகமர். 'இப்போது ராயர் இடுப்பு வலியில் கிடக்கிறார். அவர் கொள்ளுத்தாத்தன் திம்ம நாயக்கரிடமிருந்தே வரும் பரம்பரை வியாதி அது. அவருக்குப் பிறகு விஜயநகரம் என்ன ஆகும் என்று யாரும் இப்போது கணிக்க முடியாது.'

என்ன சொல்வது என்று புரியாமல் மௌனமாக அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார் தம்மையா.

வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டு 'நீ போய் நாளை விஸ்வநாதனையும் அழைத்துக்கொண்டு வா' என்றார் நாகமர்.

**ம**றுநாள் அதிகாலையிலேயே தனியாகத் திரும்பி வந்து காத்தி ருந்தார் தம்மையா. பூஜைக்குப் போகும் வழியிலேயே இவரைப் பார்த்துவிட்ட நாகமர் 'அவனெ எங்கே' என்று உறுமினார்.

எதுவும் பேசாமல் நின்றார் தம்மையா.

'அவன் என்ன சொன்னான்?'

பயந்து கையெடுத்துக் கும்பிட்டார்.

‘என்ன சொன்னான்?’

‘... ... ...’

‘சொல்லு.’ குரல் ஓங்கி ஒலித்தது.

‘உடனே நீங்கள் விஜயநகருக்குக் கிளம்ப வேண்டுமாம். மறுத்தால்...’

‘ம்ம்?’

‘தலையை வெட்டி எடுத்துவரச் சொன்னார்.’

தம்மையாவை வேகமாக நெருங்கிய நாகமர் அனல் பறக்கும் விழிகளோடு கத்தினார் ‘வெட்டுடா... வெட்டு...’

தம்மையா கூப்பிய கையை இறக்கவில்லை.

‘டே, இவனை இழுத்துப் போய் சிறையில் அடை’ என்று அங்கு நின்றிருந்த காவலர்களிடம் சொல்லிவிட்டு பூஜைக்கு வேகமாகப் போனார்.

நெற்றியில் திருநீறோடு திரும்பிவந்த நாகமர் போத்தி நாயக்கரை அழைத்து ‘யோசிக்க அவகாசம் வேண்டும் என்று சொல்லிவிட்டு வா’ என்று விஸ்வநாதனிடம் அனுப்பினார்.

இருண்ட சிறைக்குள் நிலைகொள்ளாது நின்றிருந்தார் தம்மையா. பழைய நிகழ்வுகள் எல்லாம் மனதில் அலைமோதின.

பிள்ளை வரம் வேண்டி நாகமர் காசிக்குப் போனபோது இவரும் பாலமுகொண்ட முத்தய்யாவும் தான் ஆளுக்கு ஐம்பது குதிரைகளுடன் பாதுகாப்புச் சென்றனர். காவிக்கொடி ஏந்திப்போன இரு வார யாத்திரை. போர்களுக்கு இடையேயான ஓய்வுக்காலம் அது. நரச நாயக்கர் அப்போது விஜயநகர மேற் பார்வையில் இருந்தார். நாற்பத்தெட்டு நாள் காசி வாசம் கங்கையில் குளித்துக் கொண்டிருக்கையில் ஒரு நாள் தம்மையா கேட்டார் ‘சுவாமி, உங்களுக்குப் பிள்ளை பிறந்தால் அவரிடமும் நாங்கள் குமார வர்க்கமாய் நிற்கும்படி நீங்கள் ஏற்பாடு பண்ணவேண்டும்.’

‘ஏண்டா கிண்டல் பண்ணுகிறாயா?’

கதை இப்படித் திரும்பும் என்று எதிர்பாராத தம்மையா ‘இல்லை... பரம்பரையாய் உங்களிடமே இருக்கவேண்டும்...’ என்று இழுத்தார்.

ஒருநாள் கோவிலிருந்து திரும்புகிற வழியில் பண்டாரி ஒருவன் நனைந்த உடையுடன் நீர் சொட்டும் ஒரு மரகத லிங்கத்தைத் தூக்கி வந்து நாகமரிடம் கொடுத்தான். துவாரகா கட்டத்தில் நீருக்குள் இருக்கும் தன்னை எடுத்து தட்சிணத்திலிருந்து வந்திருக்கும் ராஜாவிடம் சேர்ப்பித்து விடுமாறு கனவில் விஸ்வநாதர் வந்து சொன்னார் என்றான். கூடவே மண்டபத்துக்கு வந்து பொற்காசுகளையும் வாங்கிப் போனான். அன்றிலிருந்து லிங்கத்தைப் பாதுகாத்துக் கொண்டுவந்து சேர்க்கிற பொறுப்பு இவருக்கும் மற்ற வேலைகள் முத்தய்யாவுக்கும் என்றாயின.

நாகம நாயக்கரைக் கண்டுவிட்டால் நரச நாயக்கர் எழுந்து வந்து வரவேற்றுதானே பேசுவார்! ராயர் இளவரசராக இருந்தபோது ‘கிருஷ்ணா... கிருஷ்ணா...’ என்று வாய்க்கு வாய் கூப்பிட்டுக்கொண்டு பிரியமாய் இருந்தவர்தானே இவர்! கலிங்கராஜா ஆந்திரத்திற்குள் நுழைந்தபோது இவர் தலைமையில்தானே இளவரசர் கிருஷ்ண தேவராயர் சண்டைக்குப்

போனார். கஞ்சம் மலை வரை விரட்டி விட்டு வந்தார்கள்.

நடைவண்டியை விட்டு ஓடித் திரிந்தபோது விசுவநாதன் தம்மையாவின் தலைப்பாகையை அவிழ்த்து விளையாடுவான். இவர்தான் நீச்சல் சொல்லித் தந்தவர். பயிற்சிக் களங்களிலேயே எப்போதும் விளையாடித் திரிவான். விஜயதசமியின் போது சிறுவர்கள் போட்டியில் எல்லோரையும் ஜெயித்தவன் ராயர் கண்ணில் பட்டுவிட்டான். அரண்மனையிலேயே கிடந்து, அவரோடு வேட்டைக்குப் போய், பதினாறு வயதிலேயே சண்டைக்குக் கிளம்பிவிட்டான். தனது படைப்பொறுப்பை அவனிடம் அப்போதே விட்டுவிட்டார் நாகமர். அவன் தானே முன்னுக்கு இறங்கி அடிக்கிறவன்! பிடித்த கோட்டைகளில் நாகமரைக் காவலுக்கு வைத்துவிட்டுப் போகிறார்கள். இந்த வயதிலும் மண்டலேஸ்வராக இருக்கிறார். இதைவிட என்ன வேண்டும்? அவனோ ராயருக்குச் செல்லப் பிள்ளை! மருமகளோ ராயருக்குச் சொந்தக்காரி! அவர் ஏன் புத்தி மோசம் போனார்?

*

**தீ**பங்கள்! ஆயிரமாயிரம் தீபங்கள்! சிற்றலைகளில் மிதந்து ஆடி ஆடிப் போகும் சுடர்கள். இருளில் தகதகக்கும் தங்க மணி ஆரங்கள். நதியோடு போகும் நட்சத்திரங்கள். அம்மாவின் இடுப்பிலிருந்து அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

அந்தக் காட்சியை எத்தனையோ நூறுமுறை நினைவில் மீட்டியிருக்கிறான். நினைவுகளில் பின்னோக்கிப் போகப்போக அதுவே ஆதிக்காட்சியாக எஞ்சுகிறது. எத்தனையோ கார்த் திகைகளில் துங்கபத்ரையைப் பார்த்திருக்கிறான். ஒருமுறை ராஜமகேந்திரகிரிக் கரையில் கோதாவரியிலும் பார்க்க வாய்ந்தது. ஏனோ ஆதிக்காட்சியின் இனிமையைப் பிறகு எட்ட முடியவில்லை.

மாதங்க மலைக்குப் பின்னே நிலவு மிதக்கும் கோலம்! மாளிகை மாடத்தில் அம்மாவின் மடியில் படுத்துப் பார்த்துக்கொண்டே எத்தனையோ நாள் கண்ணயர்ந்திருக்கிறான். அந்தக் குன்று மட்டும் அப்படியே நிற்க நிலாக்கள் வெவ்வேறு இடங்களில் வேறு வேறு வடிவங்களில் இருக்கும். இன்று அதே மாடத்தில் இவள் மடியில் படுத்தவாறு கிருஷ்ணன் தூங்கியிருப்பான். பாடிவீட்டில், தூங்காத கண்கள் மூடியிருக்க விஸ்வநாதன் காட்சிகளில் லயித்திருந்தான். பின்னர் வழக்கம் போல... இவள் முகம்!

கூர்ந்த கண்கள் இலக்கையே நோக்கியிருக்க, நெற்றியில் குழல்கற்றை புரள, நாசிமடல்கள் விரிய, ஓங்கிய கையில் நீண்டவாள் முகத்தின் குறுக்காக ஒளிர தாக்குதலைத் தடுப்பதற்காக பக்கவாட்டில் இவள் நகர்ந்துகொண்டிருந்தாள். பொன்மாலைக் கதிர்கள் ஒளியேற்ற, மலர்ந்திருக்கும் தங்கப்பதுமை! பருக்களோடு வியர்ப்பு மணிகளும் முகிழ்த்துக் குழம்பி நிற்க, உயிர்துடிக்கும் பதுமை! இவன் மதி மயங்கினான். அதே நிலையில் இவள் இடதுவசமாக நகர்ந்து கொண்டிருந்தாள். இவனது வாள் முன்னே பாயாமல் தயங்கவே கண்களை இவன் வாளிலிருந்து முகத்துக்கு நகர்த்தினாள். தன்னை ஆண் என உணர்ந்த முதற்கணத்தின் தவிப்பில் இருந்தான். உடலுக்கு முன்பே

உள்ளம் உணர்ந்துகொள்ளும் அந்த மாயமொழியை இவன் கண்களில் படித்துவிட்டாள். வாளோடு சேர்ந்து இமைகளும் தாழ, இவள் கண்களுக்குப் பதில் முகமே பேசியது. புன்னகை என விரிய முயன்ற இதழ்கள் நாணத்தில் தடுமாறின.

வேறு எதுவும் இவன் நினைவில் பதியவில்லை: பயிற்சிக்களம், சிறுமிகளின் ஆரவாரம், பெண்களின் குரலொலிகள் எதுவும்.

பின்னும் பலமுறை பயிற்சியளிக்கப் போயிருக்கிறான். பிறகு இவனுக்கு நேருக்கு நேர் அவள் வாளேந்தவில்லை. பூப்பெய் தியிருந்தாள். ஆனால் இரு கண்கள் எங்கிருந்தோ தன்னையே நோக்கியிருப்பதை உணர்வான். யுத்தத்திற்குச் சென்றபின் அந்தப்புரப் பயிற்சிக் களத்திற்குப் போகவில்லை. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவளையே மணந்தான்.

இந்த முகம்தான் எங்கெங்கோ கூடாரங்களில் காயமுற்றுக் கிடந்த வேளைகளில் வலியை ஆற்றியது. ஏதேதோ நிலங்களில் போர்முகத்தை நோக்கி இவன் குதிரை போனபோது கூடவே வரும் நிலவைப் போல இந்த முகம் வந்தது. உறங்கும் முன்னும் விழித்த பின்னும் இந்த முகமே உணர்வில் நின்றது.

மேற்கே தூரத்தில் குரல்கள் குழம்பி ஒலிக்க இடையிடையே ஒரு பெண்ணின் அழுகுரல் எழுவது சன்னமாகக் கேட்டது. விஸ்வநாதன் வெளியே வந்து குதிரையில் ஏறினான். தொடரவிருந்த மெய்க்காப்பாளர்களைத் தடுத்துவிட்டு மேற்கு நோக்கிப் போனான். தாவளத்தில் வீரர்கள் நித்திரையில் இருந்தனர். பின்னிரவு, குதிரைகள் கால்மாற்றி நிற்பதும் வாலைச் சுழற்றுவதும் தீப்பந்த ஒளியில் சலனங்களாகத் தெரிந்தன. தூரத்தில் காவல் குதிரைகள் சுற்றி வருவது நிழல் உருக்களாகத் தெரிந்தது.

படையணிகளுக்கு அப்பால் லம்பாடிகளின் முகாமிலிருந்துதான் சலசலப்பு கேட்டது. அதை நோக்கிப் போனான். நெருங்கியதும் தெரிந்தது, அப்போதுதான் குதிரையிலிருந்து இறங்கி அரியநாத முதலி விசாரித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், குதிரையை இழுத்து மெதுவாக நடையில் விட்டான். அவர்களைப் பார்த்தவாறே எதுவும் கேட்காமல் கடந்து தெற்கே வைகையை நோக்கிப் போனான்.

குதிரையைக் கரையில் விட்டுவிட்டு உடைகளைக் களைந்து, வைகையில் இறங்கினான். இடுப்பளவுக்கு வடக்கு ஓரம் நீரோடியது. ஒரு முறை முங்கி எழுந்தபின் தலையை வெளியே நீட்டியவாறு நீரோட்டத்துக்கு எதிரே கால்மடக்கி அமர்ந்தான். ஒலியின்றி ஆறு ஒழுகிக்கொண்டிருந்தது. மகாநதிதியிலிருந்து இந்த வைகை வர அவன் நீராடிய ஆறுகள் எத்தனை! ஆனால் துங்கபத்ரையைக் காணும்போது, நீரோடு இனிய நினைவுகளும் சேர்ந்தோடும்.

கரையேறி உடையை அணிந்துகொண்டு நடந்தே கூடாரத்துக்குத் திரும்பினான். குதிரை பின்னாலேயே போனது. அரியநாதன் இவனைக் கண்டதும் இறங்கிக் குதிரையின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டே கூடநடந்து வந்தான்.

‘வேறு ஒன்றுமில்லை. வழக்கம்போல லம்பாடிப் பெண்கள் திருடக் கிளம்பியிருக்கிறார்கள். கிழவர்கள் பார்த்துக் கண்டிக்கவும் கசமுசா

ஆகிவிட்டது.’

‘நீ என்ன சொன்னாய்?’

‘கொட்டியம் படையில் ஒழுங்கு கட்டாயம். இனி திருடப் போய்பிடிபட்டால் தண்டனை கிடைக்கும் என்று எச்சரித்தேன்.’

‘லம்பாடிகளைப் பாராட்டவேண்டும். உள்ளுக்குள் எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் சமாளிக்கிறார்கள். திருடன் நம் படைக்குள்தான் இருக்கிறான். காதல் திருடன்! அழுது கொண்டிருந்தவள் நடுத்தர வயதுப்பெண். அருகில் சாட்டைக்கம்போடு நின்றவன் அவள் கணவனாக இருக்கவேண்டும். நம் திருடனைக் கண்டுபிடிக்க வேண்டியது உன் பொறுப்பு. விஷயம் வெளியே தெரியாமல் லம்பாடிகளைப் போல் சமாளிக்க முடிந்தால் நல்லது. ஆளைக் கண்டுபிடித்துவிட்டால் குதிரையை வாங்கிக்கொண்டு அவனை விரட்டிவிடு. ஊருக்கு நடந்தே போய்ச் சேரட்டும். விஜயதசமிக்குப் பிறகு வந்து மீண்டும் சேரச்சொல்.’

**அ**ரியநாதன் தலையாட்டிவிட்டு குதிரையில் ஏறித் தன் இடத்திற்குத் திரும்பினான். அரியநாதனுக்கு 24 வயது. விஸ்வநாதனைவிட ஆறு ஆண்டுகள் இளையவன். காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள மெய்ப்பாடு பிறந்த ஊர். வறுமையால் சின்ன வயதிலேயே வேலை தேடி விஜயநகருக்குப் போனவன். நாகமரின் படையில் எடுபிடி வேலையில் சேர்ந்தான். தெலுங்கு படித்தான். வேலைகளில் காட்டிய சாதுர்யத்தால் நாகமரின் கவனத்தை ஈர்த்தான். கணக்கில் கெட்டிக்காரனாக இருந்ததால் உதவிக் கணக்கன் ஆனான். பிறகு விஸ்வநாதனின் நம்பிக்கைக்குரியவனாகி படை போருக்குப் போகும்போதெல்லாம் பண்டம் பராமரிப்பு மேற்பார்வைகளுக்காகக் கூடவே போவான். காலப்போக்கில் விஸ்வநாதனின் கொட்டியம் படைப்பிரிவின் பராமரிப்பும் போர் நடவடிக்கைகளும் அவனது தோழன் ஸ்ரீபாஸ்கரவாரி கேசவனின் பொறுப்பில் வந்ததுபோலவே மற்ற நிர்வாக வேலைகள் அனைத்தும் அரியநாதனின் கீழ் வந்துவிட்டன. அவனது உழைப்பும் அக்கறையும் மதியூகமும்தான் காரணம். பெரும்போர்களின் போது சந்திரிகிரியிலிருந்து நாகமரின் படைகளும் வந்து சேர்ந்துகொள்ளும். காயம்பட்டவர்களைப் பராமரிப்பதிலும் வீரர்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் விஸ்வநாதன் கண்டிப்பானவன். அதைச் சமாளிப்பதுதான் இவனுக்குப் பெரும்பாடு.

விஸ்வநாதனைக் கண்டு இவன் பிரமித்து நின்ற சம்பவங்கள் உண்டு. கடவுளுக்குச் சமமான ராயருக்குப் பக்கத்தில் நிற்கிறான் என்பதெல்லாம் அல்ல; அதெல்லாம் பார்த்துப் பழகிப் போய்விட்டது. விஸ்வனுக்குப் பதிமூன்று வயதானபோதே ராயர் அவனை வேட்டைக்குக் கூட்டிப் போய்விட்டார். பதினாறு வயதானபோது கொண்டவீட்டை ஆக்ரமித்திருந்த பிரதாபருத்ர கஜபதியை விரட்டியடிக்கும் போர் தொடங்கியது. படைகளுக்குத் தலைமை ஏற்றுப்போன திம்மரசு கோட்டையைக் கைப்பற்ற முயற்சித்தும் முடியாமல், முற்றுகையை நீட்டித்திருந்தார். உதயகிரியிலிருந்து குடும்பத்தோடு திருப்பதிக்கு யாத்திரை போயிருந்த ராயர் கொண்டவீடு வரும்போது விஸ்வனையும் அழைத்து வந்திருந்தார். ராயர் அங்கு வந்த பிறகுதான் கோட்டையை கலிங்கர்கள் மேலும்

வலுப்படுத்தியிருப்பது தெரிந்தது. கோட்டைமலை மேல் இருந்ததால் யானை, குதிரைப் படைகளால் பயனில்லை. மலை மேலேயே மரங்களால் ஆன உருளும் பிரமாண் டமான பரண்கள் கட்டும் வேலை இரண்டு மாதம் நடந்தது. சமையல் வேலைகளில் ஒத்துழைத்த அரியநாதன் அப்போது பரண் வேலைகளுக்குப் போய்விட்டான். அப்போது அவனுக்குப் பத்தே வயது.

ராயர் நாகமரிடம் பேசி அனுமதி வாங்கினார். கொட்டியம் படைகளோடு மேலும் இருபதாயிரம் காலாள் வீரர்களையும் இரண்டாயிரம் வேடர்களையும் இணைத்து விஸ்வநாதனை அதற்குத் தளபதியாக்கினார். அமைச்சர் திம்மரசுவுக்கு அதில் விருப்பமில்லை. திம்மரசு நரச நாயக்கர் காலத்திலிருந்தே வேளையில் இருப்பவர். ராயரை வளர்த்தவர். ஆனால் ராயர் பிடிவாதமாக நின்றார். அவர் கோபம் எல்லோருக்கும் தெரிந்ததால் விஷயம் அத்தோடு போயிற்று.

போர் தொடங்கி முதல் இரண்டு நாட்கள் தெற்கு மதிலுக்காகத்தான் உக்கிரமான சண்டை நடந்தது. கொட்டியம் வீரர்களின் தாக்குதல் அது. நிலாக் காலத்துக்காகக் காத்திருந்துதான் தொடங்கியிருந்தார்கள். இரவு பகலாக யுத்தம் நடந்தது. பாதிக்கு மேல் விஸ்வன் வேடர்களை இழந்திருந்தான். மூன்றாம் நாள் காலை தெற்கு மதிலைத்தான் முதலில் பரண்கள் அணைந்தன. விஸ்வநாதன் முதல் அணியுடனே மதிலில் குதித்துவிட்டான். இரண்டாயிரம் பேருக்கு மேல் அப்போது இழந்தாலும் சற்று நேரத்திலேயே தெற்கு மதிலைக் கைப்பற்றி விட்டான்.

அன்று மாலைக்கு முன்பே போர் முடிந்துவிட்டது. உயர் தளபதிகளும் கலிங்க இளவரசன் வீரபத்ராவும் சிறைப்பட்டனர். தொடர்ந்து கெந்துகூரு, வினுகொண்டா, பெல்லம் கொண்டா கோட்டைகள் விழுந்தன.

விஜயநகரம் திரும்பியதும் ராயர் செய்த காரியம் சபையோருக்கு மேலும் வியப்பளித்தது. அரசருக்கு வலதுபுறம் நிற்கும் தளபதி ஒருவன் இடத்தையும், அரசருக்குத் தாம்பூலம் தரும் மரியாதை பெற்ற பிரபுவையும், பின்னே நிற்கும் தலைமை மெய்க்காப்பாளன் பணியையும் ஒன்றாக்கி விஸ்வநாதனை நியமித்தார்.

ஓராண்டுக்குப் பின் பெஜவாடாவுக்கான போர் தொடங்கியது. பதினொரு மாதங்களில் அதோடு கம்மம், நலகொண்டா, தேவர கொண்டா கோட்டைகளையும் கலிங்கத்திலிருந்து விடுவித்து நிலைப்படைகளை நிறுத்திவிட்டுத் திரும்பி வந்தனர்.

மறு வருடம் கோதாவரி மண்டலத்துக்கான போர். ராஜமகேந் திரகிரி, விசாகைத் துறைமுகத்தை வென்று சிம்மாசலம் போய் வராக நரசிம்மரை வணங்கிவிட்டு பொட்டுலூரில் ஜெயதம்பத்தை நிறுவினர்.

விஸ்வநாதனுக்கு இருபது வயதானபோது, அவன் தனித்து நடத்திய போர் பிரசித்தி பெற்றுவிட்டது. ஹசன்அலிகான் என்ற பாமினித் தளபதி வேட்டைக்கு விஜயநகர ஊர்களின் வழியாகப் போயிருக்கிறான். கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த ஒரு கம்மாளப் பெண்ணை சிறையெடுத்துக்கொண்டு பாமினி எல்லைப்புறக் கோட்டையான ரத்னகிரிதுர்கத்திற்குப் போய்விட்டான். பாலமு கொண்ட முத்தைய நாயக்கரின் பாளையத்துக்குச் சொந்தமான கிராமங்கள் அவை. அவர்

அந்தப்பெண்ணை மீட்பதற்காக கண்டரக் கோட்டையிலிருந்து கம்மவாரு வீரர்களைக் கூட்டிக்கொண்டுபோய் மோதிப்பார்த்தார். முடியவில்லை. நாட்கள் கடந்து கொண்டிருந்தன.

வடமண்டலத்து ஐவகைக் கம்மாளர்களும் ஒன்றுகூடி விஜயநகரம் வந்து சிற்பிகளோடு சேர்ந்து போய் ராயரைக் கண்டு மனு கொடுத்தனர். அந்தப் பெண்ணைத் திருப்பிக் கொண்டுவரும் வரை வேலை செய்யமாட்டோம் என்று மனுவில் கண்டிருந்தது. அப்போது விஜயநகரில் விட்டலர் கோயில் வசந்தமண்டபப் பணியும், அரண்மனை ராமர் கோயில் மதில் சிற்ப வேலைகளும் நடந்துகொண்டிருந்தன. ராயர் வேலைகளை நிறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

கொட்டியம் படைகளோடு மட்டும் விஸ்வநாதன் வடக்கேபோனான். ரத்னகிரி துர்க்கத்தின் அதிபதி வல்லாகான் எதிர்வரும் படையின் அளவைக்கேட்டு தைரியமுற்று கோட்டையிலிருந்து அசன் அலியோடு இறங்கித் தெற்கே வந்தான். ரத்னகிரி குன்றுகளுக்கு 10கல் தள்ளி இரு படைகளும் மோதிவிட்டன. காலாள் எண்ணிக்கை சமமாகயிருந்தாலும் அவர்களிடம் குதிரைகள் இருமடங்கு இருந்தன. முப்பதாயிரத்துக்கும் மேலிருக்கும். கோல்கொண்டா நோக்கிப்போன ஹசன் அலியின் குதிரைகளும் ரத்னகிரியின் நிலைப்படையோடு சேர்ந்திருந்தான. அந்த வலிமையால்தான் பரந்தலையில் மோதத் துணிந்திருந்தனர்.

நண்பகலுக்குச் சற்றுமுன் ஆரம்பித்தது போர். வல்லாகான் பின்னே காத்திருக்க அசன் அலியின் குதிரை அணிகள்தான் முன்னுக்கு மோதின. விஜயநகர காலாள் அணிகள் சிறகுகளிலும், யானைப்படை பின்னிலும் இருந்தன.

யாரும் முன்னேறிவிட முடியாதபடி சமபலத்துடனே நேரம் கடந்துகொண்டிருந்தது. முத்தைய நாயக்கர் விஸ்வநாதன் அணிக்கு அருகிலிருந்தார். திடீரென அவன் குதிரை அச்சுதன் அவர் கண்ணில்பட்டது. அவன் இன்றிக் குதிரை மட்டும் தனித்துக் களத்தில் அலைமோதிக்கொண்டிருந்தது. முத்தைய நாயக்கர் பயந்துபோய் அவனைத் தேடினார். சற்று தூரத்தில் மண்ணில் மயங்கிக்கிடந்தான். காயங்களில் கடும் ரத்தப்போக்கு இருந்தது. அவனைத் தூக்கிக்கொண்டு பின்னிலிருந்து ஒரு அணியையும் பாதுகாப்புக்கு அழைத்துக்கொண்டு ஐந்து கல் பின்வாங்கி ஒரு குளக்கரையில் அவனை இறக்கினார். வைத்தியர்களின் கவனிப்பில் அவனை விட்டுவிட்டு திரும்பி களத்துக்குப் போனார்.

கையிலும், தொடையிலும் ஆழமான ஈட்டிக் காயங்கள் இருந்தன. அதனால்தான் பெரும் ரத்தப்போக்கு ஆகியிருந்தது. அதுதவிர குதிரைக் குளம்படிகளில் மிதிபட்ட காயங்கள் உடலெல்லாம் இருந்தன. வைத்தியர்கள் காயங்களைத் தைத்து மருந்து வைத்துக் கட்டினர். அரியநாதன் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டிருந்தான். மாலையில் அவனுக்கு நினைவு திரும்பியது.

கொட்டியம் படைகள் தாக்குப் பிடிக்கமுடியாமல் பின்வாங்கிப் பின்வாங்கிக் கடைசியில் முற்றாகக் களத்தைக் கைவிட்டுவிட்டு பேரிழப்புகளுடன் திரும்பி வந்தன. இரவு நெருங்கிவிட்டதால் முகம்மதியர்கள் துரத்தி வராமல் பின்னுக்குப்போய் தண்டு

இறக்கிவிட்டனர்.

நடக்கும் நிலையில் காயம் பட்டிருந்தவர்கள் மட்டுமே திரும்பி வந்திருந்தனர். பந்தங்களைக் கொளுத்திப்போய் இனிமேல்தான் மற்றவர்களைத் தூக்கி வரவேண்டும். குழி வெட்டிப் பிணங்களைப் புதைக்கும் வேலை அதிகாலையில் தொடங்கும்.

தோற்றுத் திரும்பியதைக் கேட்ட விஸ்வநாதன் கடுங்கோபம் கொண்டான். கடந்த நான்காண்டுகளில் அவன் கண்ட முதல் தோல்வி. அதை அவன் மனம் ஏற்க மறுத்தது. கேசவனையும், முத்தைய நாயக்கரையும் அழைத்து உணவுக்குப் பிறகு இன்றிரவே மீண்டும் தாக்குதலைத் தொடரவேண்டும் என்றும் யானைப் படையைத் தயார்படுத்துமாறும் உத்தரவிட்டான்.

முதல் ஜாமத்திலேயே படை கிளம்பிவிட்டது. எவ்வளவோ தடுத்தும் கேளாமல் விஸ்வநாதன் பிடிவாதமாக இருந்ததால் அவனை ஒரு யானையில் அம்பாரியில் தூக்கி உட்காரவைத்தனர். கிழக்கே சுற்றிவளைத்துப் போய் நூறு யானைகளும், மேற்கிலிருந்து நூறு யானைகளும் தாக்குவதாக ஏற்பாடு. நடுவே குதிரை அணிகள் முன்னேறும். பின்னணியில் காலாள் வீரர்கள்.

யானைகளின் முதுகில் இருபுறமும் இரண்டு அவுதாரிகள் இருந்தன. பக்கத்துக்கு நாலாக எட்டு ஈட்டி வீரர்கள்.

காலையில் தெற்கே விரட்டிப் போகலாம் என்று முகாமில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர் முகம்மதியர்கள். தோற்று ஓடியவர்கள் உடனே இரவிலேயே திரும்பி வருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க முடியாது; அதுவும் எதிரியின் இழப்பு கடுமையாக இருக்கும்போது.

கிளம்பும்போதே யானைகளுக்கு லேகிய உருண்டைகளை ஊட்டிவிட்டிருந்தனர். காலிலே கூர்முனை இரும்புக் காப்புகளை மாட்டி, காதிலே சாலுவைகளைச் சுருட்டி வைத்துப் பாகர்கள் துரட்டிகொண்டு இழுத்தனர். ஏற்கனவே உன்மத்தத்திலிருந்து யானைகள் இப்போது வெறிகொண்டு பாய்ந்தன. முகம்மதியர்கள் யானைப் பிளிறல் கேட்டு, சுதாரித்து அணியமாவதற்குள் யானைகள் முகாமுக்குள் புகுந்துவிட்டன. அதகளமாகிவிட்டது. உயிர் தப்பினால் போதுமென்று நாலாதிசையிலும் சிதறி ஓடத்தொடங்கினர். தெற்கே ஓடிய குதிரைகளையும், வீரர்களையும் கொட்டியம் வீரர்கள் மறித்தடித்தனர்.

அதே வேகத்தோடு ரத்னகிரியை நோக்கிப் போகுமாறு விஸ்வநாதன் உத்தரவிட்டான். தோற்று ஓடியவர்களை உள்ளே விடுவதற்காக ரத்னகிரியின் கோட்டைக் கதவுகள் திறந்தன. வடக்கே அவர்களை விரட்டிச் சென்ற விஜயநகரக் குதிரைகளும் தொடர்ந்து யானைகளும் கோட்டைக்குள் நுழைந்துவிட்டன. சண்டை தொடர்ந்து நடந்தது. கோட்டைக்குள் இருந்த வீரர்கள் இருளில் ஒளிந்திருந்து தாக்கினார்கள். சூரியன் எழுந்தவுடன் நிலைமை அவர்களுக்குப் பாதகமாயிற்று. சூரியன் உச்சிக்கு வந்தபோது முகம்மதிய வீரன் யார் கையிலும் ஆயுதம் இல்லை. மரித்தவர்கள் போக மற்றவர்கள் சிறைப்பட்டிருந்தனர். கோட்டைக்குள் இரண்டாயிரம் குதிரைகளும் வெளியே எட்டாயிரத்துக்கு மேல்

குதிரைகளும் விஜயநகரத்தின் கைகளில் சிக்கிவிட்டன; மேலும் யுத்த தளவாடங்கள்.

ராயருக்குத் தகவல் போயிற்று. ராசூடி திம்மப்ப நாயக்கன், பூமிஞ்சி ரணசூரன் தலைமையிலான அணிகள் மிக விரைந்து வந்து ரத்னகிரிக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு கொட்டியம் படைகளைத் தெற்கே விஜயநகருக்குத் திருப்பியனுப்பின.

சிறைமீண்ட பெண்ணைத் தீட்டுக் கழித்துக் கம்மாளர்கள் ஏற்றுக்கொண்டனர். விட்டலர் கோயில் சிற்பிகள் ராயரைக் கண்டனர். விஸ்வநாதன் விஜயநகருக்குள் நுழைந்ததும் நேரே விட்டலர் கோயிலுக்கு வரவேண்டும் என்றும் தாங்கள் வரவேற்பு கொடுக்கவிருப்பதாகவும் சொன்னார்கள். எப்போதுமே விஜயநகரில் படைகள் திரும்பி வந்த ஏழாம் நாளில்தான் விஜயயேர்ஸவங்கள் தொடங்கி தொடர்ந்து மூன்று நாள் பெரும் கொண்டாட்டமாக நிகழும். இப்போது இது உடனடி ஏற்பாடாக இருந்தது. அதுவும் விஸ்வநாதன் காயக்கட்டுகளோடு இந்த வெற்றியை அடைந்தான் என்ற செய்தி இதை ஒரு வீர கதையாக்கிற்று. நாகலாபுரம் கம்மாளர்கள் தங்களுக்குள் செல்வாக்கைக் காட்டுவதற்கும் விஜயநகர ராணுவத்திற்கு நன்றியறிதலைத் தெரிவிப்பதற்குமான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ரத்னகிரியில் நள்ளிரவில் விஸ்வநாதனையும், உடன் வைத்தியர்களையும் ஏற்றிக்கொண்டு கிளம்பிய ரதத்தில், சிச்ருஷை செய்பவன் என்பதால் அரியநாதனுக்கும் இடம் கிடைத்தது. வழியெல்லாம் குதிரைகளை மாற்றிக்கொண்டு நிற்காமல் ரதம் விஜயநகரை நோக்கி விரைந்தது. துங்கபத்ரையின் வடகிளையில் கல்தூண் பாலத்தில் அது ஏறியபோது பிற்பகலாகியிருந்தது.

விட்டலர் கோயிலுக்கு அவனை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் அங்கேயே தொடங்கிவிட்டன. அந்தத் தீவக்குறையின் கிழக்குச் சாலையில் அலங்கார ரதம் ஆனைகுந்தி நகரை நோக்கிப்போயிற்று. சாலையின் இருபுறமும் நகரத் தெருக்களிலும் அவனைக் காணக் காத்திருந்தது மக்கள் கூட்டம். உக்ர நரசிம்மர் ஆலயத்தை நெருங்கியபோது பூசகர்கள் பூரண கும்பத்துடன் நின்றிருந்தனர். வைத்தியர்கள் அவனை இறக்க, சாலையில் இருந்தே வணங்கினான். மீண்டும் ரதத்தில் ஏற்றினார்.

தெற்கே போய் படித்துறையில் படகில் ஏறியபோது எதிரே துங்கபத்ரையின் தென்கரையில் பெரும்கூட்டம் தெரிந்தது. படகு நதியில் போகும்போதே எரிவாணங்களும், வெடியொலியும் ஆர்ப்பரிப்பும் எழுந்தன. படகுதுறையணைந்ததும் சர்வாலங்கார பூஜிதனாய் நின்றிருந்த பட்டத்து யானை வேங்கடன் மணிகள் ஒலிக்க இறங்கி வந்து நதிக்கரையில் மண்டியிட்டான். விஸ்வநாதனைத் தூக்கி அம்பாரியில் அமரவைத்தார்கள்.

ஊர்வலம் தொடங்கியது. வராகக் கொடி ஏந்திய குதிரைவீரன் முன் சென்றான். வராகத்துக்கு மேல் சூரிய சந்திர முத்திரைகளுடன் கட்டாரி ஒளிவீசக் கொடி காற்றில் படபடத்தது. அவனுக்கு இருபுறமும் நாற்பத்திரண்டு பதாகைகள் ஏந்திக் குதிரைகள் சென்றன. 42 ஆளுநர்

மண்டலங்களைக் குறிப்பவை அவை. வருவது வேங்கடன் எனக் கண்ட கூட்டத்தின் உற்சாகம் வாழ்த் தொலிகளில் வெளிப்பட்டது. விட்டலர் ஆலயம் புறநகரில் வெளியே இருந்தது. படகுத்துறைச் சாலையின் இருபுறமும் மண்டபங்களின் மேற்தளத்திலும், மரங்களிலும், பாறைகளின் மேலும் மக்கள் தொற்றியிருந்தனர்.

தெற்கே ஒரு கல் தூரம் கடந்தபின் உள்கோட்டை மதிலின் கிழக்குத் தோரண வாயிலில் நுழைந்தான் வேங்கடன். கல் தளமிட்ட பெருவழிதொடங்கியது. இரு புறமும் கூட்டம். மேற்கே தொலைதூரத்தில் விட்டலரின் ராஜகோபுரம் தெரிந்தது. சந்நிதி வீதியில் நுழைந்தான். இருபது யானைகள் ஒன்றாய்ப் போகக்கூடிய அகல வீதி. இருபுறமும் கல் மண்டபங்களால் ஆன வணிக அங்காடிகள். திடீரென ஏற்பாடு செய்த வரவேற்பு என்பதால் யாரும் இவ்வளவு கூட்டத்தை எதிர்பார்க்கவில்லை. தன்னாலேயே அது திரண்டிருந்தது. விஜயோத்ஸவங்களை விட இப்போது எழும் ஆர்ப்பரிப்பு உணர்ச்சிகரமாக இருந்தது. கையைத் தூக்கி வணங்கக் கூட முடியாமல் இருந்தான் விஸ்வநாதன். வீதியின் இருமருங்கும், அங்காடிக் கூரைகளிலும் ஆட்கூட்டம் பூக்களைத் தூவிவீசினர். நிதானமாகக் காலெடுத்து நடந்துசென்றான் வேங்கடன்.

சந்நிதி வீதியின் முக்கால்வாசியைக் கடந்தபின்தான் தொலை தூரத்தில் கோபுரத்தின் கீழே ராயர் நின்றிருப்பது தெரிந்தது. நெருங்கியதும் வேங்கடனைக் கோயிலின் உள்ளே வரச்சொல்லி சைகை செய்துவிட்டு நடந்தார். கோபுரத்தின் கீழ் நுழைந்து நேரே சென்று அலங்காரக் கல்ரதத்தின் அருகே மண்டியிட்டான் வேங்கடன். விஸ்வநாதனை இறக்கினார்கள். அவனால் காலை ஊன்றவே முடியவில்லை. இருவீரர்கள் வந்து அவனை அப்படியே தூக்கிக் கொண்டனர். இன்னொருவன் கால்களை ஏந்திக் கொண்டான். அவனை நெருங்கிய ராயர் அவன்தோளில் தட்டியபடி உற்சாகமொழிகள் கூறினார். சிரித்துக்கொண்டிருந்தான். வலதுபுறமாக அணுகிய அவன் தாயார் லட்சுமியம்மாள் முந்தானையால் அவனின் வியர்த்த முகத்தைத் துடைத்தாள். நாகமர் விலகிநின்று பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். முகமண்டப வாசலில் சிற்பிகளும், அர்ச்சகர்களும் கும்பத்துடன் காத்திருந்தனர்.

அடுத்தது விருபாக்ஷர் கோயில் ஊர்வலம் தெற்கே திரும்பி அகக்கோட்டை மதிலின் இருநிலைக் காவல் மாடத்தை நோக்கிச் சென்றது. வேங்கடனின் பின்னே பிரதானிகளும், பிரபுக்களும், தளபதிகளும், சிற்பிகளும் நடந்துசென்றனர். இப்போது வேங்கடனுக்கு முன்னே கிருஷ்ணதேவராயர் தனது வெண்புரவி அனுமந்தனின் மீதேறிச் சென்றார். துங்கபத்ரையின் கரை ஓரமாகவே மாதங்கமலை அடிவாரத்தை நோக்கிச்சென்றது ஊர்வலம். நந்திக் குன்றின் மீது யானைத் தடத்தில் ஏறி இருபிரமாண்டமான பாறைகளைத் தாண்டி மேற்கே திரும்பியதும் ராஜவீதி தெரிந்தது. ஒரு பெரும் நதிபோல் நேர்கோடாய் வெகுதூரம் நீண்டு கிடந்தது. நாகலாபுர மக்கள் அனைவரும் வந்து நின்றாலும் இவ்வீதி கொள்ளும். ஒரு கல் தொலைவுக்கப்பால் விருபாக்ஷரின் கிழக்குக் கோபுரம் தெரிந்தது. வேங்கடன் குன்றிலிருந்து இறங்கினான். வலதுபுறம் கல்நந்தி விருபாக்ஷரை நோக்கிப்படுத்திருந்தது. நந்தியைத் தாண்டியபோது அதன் மடித்த கால் உயரம்தான் இருந்தான் வேங்கடன். சிற்பிகளின் உளிபட்டு ஒரு சிறு குன்றே நந்தியாய் உருமாறியிருந்தது. மதுரை வைகையின்

அகலத்தில் பாதி இருந்தது அவ்வீதி. இருபுறமும் கோயில்வரை தொடர்ச்சியாய் இரு மாடக்கல் அங்காடிகள். மேல் தளத்திற்கு ஏற வீதியிலிருந்து மரப்படிகள்.

விஜயநகரக் கோட்டைக்குள் இருந்த மக்கள் கூட்டம் இந்த வீதியின் இருபுறமும் கடைகளுக்குக் கீழ் நின்றது. நாகலாபுரம் கம்மாளர் மொத்தமும் குடும்பத்தோடு வந்து காத்திருந்தனர். எப்போதும் விஜயநகர விழாக்களை வேடிக்கை பார்ப்பதில் ஆர்வமுள்ள கூட்டம் வழக்கம் போல் பத்துக் கல் தொலைவிலிருந்த நாகலாபுரத்திலிருந்து நடந்தே வந்திருக்கிறது.

ராயர் முன்னே குதிரையில் செல்ல, பின்னால் பட்டத்து யானையில் ஒரு படையணித் தலைவன், அதுவும் இளைஞன் ஊர்வலம் வரும் விநோதத்தை விஜயநகரவாசிகள் முதல்முறையாகக் கண்டனர். எனினும் அவர்களின் உற்சாக வாழ்த்தொலிகள் எல்லாம் ராயர் மீதும், வராகக் கொடி மீதுமே இருந்தன.

விருபாக்ஷரை வணங்கிய பிறகு ஊர்வலம் தெற்கே திரும்பி ஏமகூடப்பாறைகளில் ஏறி பிரம்மாண்டமான இரட்டைத் தோரணவாயிலைக் கடந்து இறங்கி கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்றது. அங்கிருந்து கிளம்பியபோது இருட்டியிருந்தது.

கிருஷ்ணன் கோயிலுக்கு எதிரே இருப்பதுதான் விஜயநகரத்தின் புகழ்பெற்ற வணிகவீதி. பொன்னும், மணியும், பட்டும் நவரத்தினங்களும், அலங்காரப் பொருட்களும் குவிந்து கிடக்கும் வீதி. செல்வந்தர்களும், பிறநாட்டு வணிகர்களும் நடமாடித் திரியும் இவ்வீதிதான் இந்நாட்டின் வணிகத்தையும், வளத்தையும் தீர்மானிக்கிறது. இருபுறமும் சாலையில் யவனக் கண்ணாடி விளக்குகள் மஞ்சள் ஒளி சிந்தின. வடபுறம் இருந்த பொன் அங்காடிக்காரர்கள் தங்கள் கடைகளின் முன் நின்று ராயர் மீதும், வேங்கடன் மீதும் பூக்களை வாரியிறைத்துக் கொண்டிருந்தனர். இவ்வீதியில் காவல் கட்டுப்பாடுகள் அதிகம் என்பதால் கூட்டம் குறைவாகவே இருந்தது.

ஊர்வலம் அரண்மனை வளாகக் கோட்டை வாசலில் நுழைந்து நேரே ராமர் கோயிலில் சென்று நின்றது.

**அ**ரியநாதன் தன் கூடாரத்தை நெருங்கியிருந்தான். இறங்கி, குதிரையை முளையில் தளைத்துவிட்டு உள்ளே நுழைந்தான். கணக்கு எழுதிக்கொண்டிருந்த ஏடுகளை அடுக்கிக்கட்டி எழுத்தாணியை மடக்கி மரப்பெட்டிக்குள் போட்டுவிட்டு, விளக்கைக் குறைத்துவிட்டுப் பாயில் வந்து விழுந்தான்.

விஸ்வநாதன் போகிறபோக்கில் லம்பாடிகளைக் கண்டதிலிருந்து ஊகிக்க முடிந்தது தனக்குத் தோன்றாமல் போயிற்றே என்ற ஆற்றாமை எழுந்தது. உடனே, அவன் மணமானவன், அதனால்தான் இதை எல்லாம் உணரக்கூடிய அனுபவம் வாய்த்திருக்கிறது என்று தனக்குத்தானே பொய்யாக ஒரு சமாதானமும் கொண்டான்.

**ர**த்தினகிரியிலிருந்து திரும்பிய மறுநாளே வீரநாகம்மாவோடு மணம் நிச்சயமாயிற்று. ராயரின் தூரத்து உறவுக்காரர், அரண்மனை சாஸனகாரர்

ராமபத்ர நாயக்கரின் பேத்தி அவள். அவன் காயங்கள் குணமாகி எழுந்ததும் கலிங்கப் போருக்கான ஆயத்தங்கள் தொடங்கிவிட்டன. கலிங்கத்தை வென்று ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு வந்தான். நிச்சயித்த நான்கு ஆண்டுகள் கழித்துதான் அவன் திருமணம் நடந்தது. தொடர்ந்து ராய்ச்சூர், பிஜப்பூர், கோல்கொண்டா என்ற பெருயுத்தங்கள்.

ராயர் அரசரானபின் இந்தப் பத்தொன்பது ஆண்டுகளில் சிறிதும் பெரிதுமாய் 27 போர்கள் நடந்திருக்கின்றன. எதிலுமே விஜயநகர் தோற்றத்தில்லை. உதயகிரி, கொண்டவீடு, கடகநகர், ராய்ச்சூர் ஆகிய களங்களில் அது அதி சாகச வெற்றிகளை ஈட்டியிருக்கிறது. இதில் ராயர் நேரடியாகப் பங்கேற்ற போர்கள் 13, விஸ்வநாதன் 24ல் முன்களத்தில் நின்று போரிட்டிருக்கிறான். அவன் உடம்பெல்லாம் தழும்புகள்தான். ராயர் எப்போதும் அணிகளின் நடுவில்தான் இருப்பார். அதுவே சிறந்த யுக்தி என்று ஆமுக்த மால்யதாவில் சொல்லியுமிருக்கிறார். இனி இந்த மண்ணில் அவர் வெல்வதற்கு ஏதுமில்லை. எங்கும் வராகக் கொடி பறக்கிறது.

விஜயநகரத்தில் எத்தனையோ தளபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் இல்லாத பேரும், புகழும் விஸ்வநாதனுக்கு எப்படி வந்தது? ரத்னகிரிப் போருக்குப் பின் அவனைப் பற்றி ஏராளமான வீரகதைப் பாடல்கள் தோன்றிவிட்டன. எல்லா நாடோடி இரவலர்களும், குலப்பாடகர்களும் இந்த மண் எங்கும் அப்பாடல்களைப் பாடித்திரிகிறார்கள். கொண்டவீட்டுப் போர், விஜயதசமிப் போட்டிக்களத்தில் வாள் வீச்சில் இன்றும் அவனை யாரும் வெல்லமுடியாதது. ராய்ச்சூர் போரில் ராயருக்கு அருகில் நெருங்கிவிட்ட எதிரிகளை முறியடித்தது என்ற பாடல்கள் கூடிக்கொண்டேயிருக்கின்றன. ஒன்றிலிருந்து ஒன்று முளைத்துப் பரவுகின்றன. வயல்வெளிகளில்... தாலாட்டுகளில்... தேவராட்டங்களில்... கோலாட்டங்களில்... விஜயநகரப் புகழுக்கான சின்னம் ராயர் என்றால் வீரத்தின் சின்னமாக விஸ்வநாதன் ஆகிவிட்டான். இந்தப் பாடல்கள்தான் விஜயநகரத்தின் ஆன்மாவை உருவேற்றிக்கொண்டிருக்கின்றன.

விஸ்வநாதன் கூடவே அனைத்துப் போர்களுக்குப் போயிருக்கிறான் அரியநாதன். எங்கோ ஒரு கிராமத்தில் பிறந்து 25 வயதுக்குள் இவ்வளவு பார்க்கக் கிடைத்தது ஒரு கொடுப்பினைதான். இன்றும் எவ்வளவோ முக்கிய நிகழ்வுகளுக்கு அவன் சாட்சியாக இருக்கப்போகிறான் என்று அவன் உள்மனம் உணர்த்துகிறது. எல்லாவற்றுக்கும் அந்தக் கைலாசநாதனே துணை.

**வை**கையின் வடகரையில் தங்கிய மூன்றாம் நாள் மாலை விஸ்வநாதன் சுற்றிவரக் கிளம்பினான். தனித்துச்சென்றான். வடதிசைக்குன்று அவன் ஆவலை ஈர்த்ததால் அதை நோக்கிப்போனான். வண்டித்தடத்தில் அச்சுதன் தன்போக்கில் ஓடினான்.

மரங்கள் செறிந்த குன்றின் அடிவாரத்தில் ஒரு சிறிய கற்கோயில் தென்பட்டது. அங்கு போய் இறங்கினான். மண்டபத் தூணில் சாய்ந்து இரு வைணவர்கள் வாய் வளர்த்துக்கொண்டிருந்தனர். இவனைக் கண்டு எழுந்து அருகே வந்தனர். 'ஏமி குடி?' என்று தெலுங்கில் கேட்டான். மொழி புரியாவிட்டாலும் பாவனையை உணர்ந்து பதில் வந்தது.

திருமாலிருஞ்சோலை. திருமால்குன்றம்.

உள்ளே சென்ற சக்கரத்தாழ்வாரை வணங்கிவிட்டு, வெளியே வந்து வடக்கே மரங்கள் செறிந்து நின்ற மலையையே பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவர் அவனை அழைத்துச் சென்று மேலே போகும் வழித்தடத்தைக் காட்டினார்.

அடர்ந்த சோலை, மருதமும், ஒதியமும் செழித்திருந்தன. வெயில் மறைத்த தண்நிழல். சிள்வண்டுகளும், பறவைக்குரல்களும், இலைகளின் சலசலப்புமே ஒலிகளாயிருந்தன. அச்சுதனைக் கண்டு மிரண்ட மந்திகள் தாவி மேற்கிளைகளில் ஏறின. தாயின் நெஞ்சை இறுகத்தழுவிய குட்டிகள் சிறுகண்கள் விரிய விநோதமாகப் பார்த்தன. கிளிக்கூட்டத்தின் சிணுங்கல்கள்.

பாதை செங்குத்தாக ஏறியது. இறங்கி நடந்து மேலேறினான். அச்சுதன் நிதானமாகத் தொடர்ந்தான். பிறகு பாதை வடகிழக்கில் சமதரையில் மேலேறியது. மீண்டும் அச்சுதன் மீதேறி மரங்களைப் பார்த்தவாறே மெதுவாகச் சென்றான். குடகும், ஸ்ரீசைலமும் கஞ்சம், மலைகளும் நினைவில் எழுந்தன.

கலிங்கப் போரின் போதுதான் இவன் மிக நீண்ட நாட்கள் விஜயநகருக்கு வெளியே இருந்திருக்கிறான். ஏறத்தாழ இரண்டு வருடம். பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு தலைநகரிலிருந்து வரும் செய்தி ஓலைகளில் அவனுக்கு வந்தவைதான் அதிகம். எல்லாம் இவள் எழுதியவை. தினமும் இரவுகளில் மீண்டும் மீண்டும் அவற்றை எடுத்துப் படித்திருக்கிறான். நூற்றுக்கணக்கான அந்த ஓலைகளை வெண்பட்டில் சுற்றி வைத்திருந்தான். திரும்பி வந்த இவளிடமே கொடுத்தான். இரண்டு அணில்கள் பாதையைக் குறுக்கே கடந்து ஓடி வாகை மரத்தில் ஏறின. அருகே இன்னொரு மரத்தில் பற்றி ஏறியிருந்த கொடியெல்லாம் நீலமலர்கள். இங்குதான் பார்க்கிறான். பெயர் தெரியவில்லை. அரவநாட்டில் நாணல் களையே பார்க்கமுடியவில்லை. வைகைக் கரையோரம்கூட நாணல் புதர்கள் மிகக்குறைவே. கலிங்கம் நாணலின் நாடு. எங்கெங்கு நோக்கினும் அதன் வெண்கதிரப்பூக் கூட்டம் காற்றில் சாமரம் வீசிக்கொண்டிருக்கும். கலிங்கர்களின் வீரத்தை எண்ணி வியந்திருக்கிறான். உண்மையில் விஜயநகர் ஆட்பலத்தைக் கொண்டுதான் மகாநதி வரை சென்றது. வட ஆந்திரத்தின் ஒவ்வொரு கோட்டையாக இழந்து தோற்றுப் பின்வாங்கினாலும் கடைசிவரை அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் எதிர்த்து நின்றனர். கடக நகர் விழுந்தபோதுகூட பிரதாபருத்ரன் வடக்கே பின்வாங்கி மீண்டும் போரிடத் தயாராகத்தான் இருந்தார். ராயர்தான் சமயோசிதமாக ஒப்பந்தத்துக்கு முன்வந்தார். உடன்படிக்கையின்படி விஜயநகர் வென்ற கலிங்கப் பகுதிகளைத் திருப்பித் தந்தது. கலிங்க இளவரசி துக்காதேவி ராயரின் மூன்றாவது பட்டத்தரசி ஆனாள்.

விஜயநகருக்கு வந்து சேர்ந்த பிறகுதான் விஸ்வநாதன் துக்காதேவி முகத்தையே பார்த்தான். இருண்டிருந்தது. பின்னொரு நாள் அவனோடு தனித்து உலாப் போகையில் ராயர் சொன்னார், அவள் அவரைத் தொடக்கூட அனுமதிக்கவில்லையாம். அப்போது ராயருக்கு முப்பது வயதுதான். அவரைவிட வேறு நல்ல மணமகன் அவளுக்கு வர

வாய்ப்பேயில்லை. கலிங்கத்தைவிடப் பத்து மடங்கு பெரிய ஒரு சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியை அவன் விரும்பவில்லை என்பதே அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பின்னொரு நாள் அதிகாலையிலேயே ராயர் இவனைத் தனியே அழைத்துக்கொண்டு போனார். மௌனமாகவே இருந்தார். ஆற்றிலிறங்கிக் குளிக்கும்போதுதான் சொன்னார். முதல்நாள் இரவு மீண்டும் அவளது மாளிகைக்குச் சென்றாராம். இம்முறை மறுக்காமல் அமைதியாக இருந்திருக்கிறாள். இவர் வெற்றிப் புன்னகையோடு மஞ்சத்தில் அவளை நெருங்கியபோது தலையணையின் கீழ் ஒளித்துவைத்திருந்த குறுவாளை எடுத்துக் குத்தியிருக்கிறாள். அவர் விலகிக்கொண்டு அவளைத் தள்ளிவிட்டு ஓடி வந்தாராம்.

பிறகும் இரண்டு மாதங்கள் ராயர் காத்திருந்தார். ஏராளமான பரிசுப்பொருட்களை அள்ளி வழங்கினார். வேறு யாரையும்விட அவளுக்கு ராஜ உபசாரம். மற்ற பட்டமகிஷிகள் திருமலாதேவிக்கும், சொன்னாதேவிக்கும் அவள் மேல் எரிச்சல். ஆனால், துக்காதேவி மூன்று மாதமாகத் தன் மாளிகையை விட்டு வெளியேறவேயில்லை. கோயிலுக்குக் கூடவரவில்லை.

மூன்று மாதம் கழித்து ஒருநாள் ராயர் இவனிடம் மீண்டும் கேட்டார் என்ன செய்யலாம் என்று. முதல் நாள் இரவு மூன்றாம் முறையாக அவளிடம் ராயர் போனபோது, வாளை உருவிக்கொண்டு ஆங்காரமாகச் சொன்னாளாம். ஒன்றில் நீ சாகவேண்டும் அல்லது நான் சாகவேண்டும்.

ராயர் மனம் உடைந்து போனார். யாருக்கும், சேடிகளுக்கும் கூட இந்தக் கதைகள் தெரியாது என்பதுதான் அவரது அகந்தையை சற்றே ஆற்றியது.

பிறகெல்லாம் ராயர் தன்னையே தேற்றிக்கொண்டு, அவளது வன்மத்தைப் புகழ்வார். அந்த வன்மம் இருக்கும் வரைதான் அரசகுலங்கள் நிலைத்திருக்கும் என்பார்.

கலிங்கத்தின் வீழ்ச்சியை அவளால் தாங்கமுடியவில்லை என்பதை விட அவள் அண்ணன் வீரபத்ரா விஜயநகரச் சிறையில் தற்கொலை செய்துகொண்டதுதான் அவளில் அந்த வஞ்சத்தை வளர்த்திருக்கும் என்றான் விஸ்வநாதன். அண்ணன்மீது அவளுக்குப் பிரியம் இருந்திருக்கும். அவன் சாவுக்குக் காரணமான மன்னனை அவள் மன்னிக்கத் தயாரில்லை; பிறகெங்கே ராணியாக வாழ்வது!

விஸ்வநாதன் பிறகு அவளைத் தனியே சந்தித்துப் பேசினான். அவள் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்றான்.

‘இவ்வளவு இளைஞனாக இருக்கிறாய், உன்னால் என்ன செய்யமுடியும்?’

‘நான் ராயரின் நண்பன்’.

‘பெயர் என்ன?’

‘விஸ்வநாதன்.’

அவனையே சற்று நேரம் உற்றுப் பார்த்தாள்.

‘என் அண்ணனோடு வாட்போருக்குத் தயாரான அதே விஸ்வநாதனா?’

‘ஆம்.’

சடாரென எழுந்துபோய் சுவரிலிருந்த வாளை எடுத்தாள். விஜயதசமிப் போட்டியின்போது நடந்தவற்றைச் சேடிகளிடம் கேட்டுத் தெரிந்திருப்பாள்.

அவனை நெருங்கி வந்தாள். ‘உன் வாளை எடுத்துக்கொள். இப்போது நான் நிரூபிக்கிறேன். கலிங்கச் சிங்கம் வராகத்திற்கு அடிபணியாது. எடு உன் வாளை.’

‘பெண்ணுக்கு எதிரே நான் வாளெடுப்பதில்லை.’

‘பயப்படுகிறாய்.’

‘இல்லை. அன்றே என்னை வென்றுவிட்டால் விடுதலை என்றுதான் ராயர் அவனிடம் சொன்னார். விஜயதசமிப் பெருவிழாவில் லட்சம் மக்களுக்கு முன்னே என்னைத் தோற்கடித்துவிட்டு உங்கள் கலிங்கத்தின் புகழை நிலைநாட்டிவிட்டு அவன் வெற்றிவீரனாய், சுதந்திர புருஷனாய் கலிங்கம் திரும்பியிருக்கலாம். ஆனால், அவன் அரசகுலத்தினோடு மட்டும்தான் போரிடுவேன் என்றான். அந்தக் கணமே கர்ணனைப் போல என்னை அரசனாக்கி, வாட்போரைத் தொடரவே விரும்பினார் ராயர். அவன் கண்களில் தன்னம்பிக்கை இல்லாததைக் கண்டு மறுத்துவிட்டேன். மீண்டும் அவன் சிறைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.’

‘பொய்...’ என்று கத்தினாள்.

‘பிறகு ஏன் தற்கொலை செய்துகொண்டான்?’ என்றான் இவன்.

அவள் சோர்வோடு வாளைத் தணித்தபடி இருக்கைக்குத் திரும்பினாள். அவளைத் தேற்றுவதற்காக இவன் சொன்னான் ‘ஒருவேளை உங்கள் அண்ணன் ஜெயித்திருக்கலாம். யார் கண்டது!’

அவள் மௌனமாக இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சற்று நேரம் கழித்து மௌனத்தைக் கலைப்பதற்காக இவன் சொன்னான் ‘என்னை வாள் சண்டைக்கு அழைத்ததற்காக உங்கள்மீது என் மதிப்பு உயர்கிறது. ஆனால், ராயர் ஆயுதபாணியாய் இல்லாமல் இருக்கும்போது ஏன் கொல்ல முயன்றீர்கள்?’

அவள் அதிர்ச்சியுற்று அவனையே நோக்கினாள். ‘கவலைப்படாதீர்கள். நம் மூவரைத்தவிர இந்த உலகில் அது யாருக்கும் தெரியாது.’

‘பெண் மனதின் குமுறல்களை நீ அறியமாட்டாய். அந்தப்புரத்தின் சுவர்களுக்குள் தான் அவள் எதையும் செய்யமுடியும். உனக்கு என்ன வயது? இருபதா?’

‘இருபத்திரண்டு’.

‘மணமாகிவிட்டதா?

‘ஒருத்தி காத்திருக்கிறாள். விரைவில் நடக்கும்.’

‘வாழ்த்துகள். நீ வந்து என் தம்பியாகப் பிறந்திருந்தால் மகிழ்ந்திருப்பேன். சரி எனக்கு உதவி செய். என்னால் இங்கு இருக்கமுடியாது. கடகத்திற்குத் திரும்பிச் செல்லவும் மனமில்லை. என்னை எங்காவது காட்டில் விட்டுவிட ஏற்பாடு செய். அது போதும்.’

திருமாலிருஞ்சோலையில் இரண்டு கல் தொலைவு மேலேறி வந்த பிறகு, ஒரு மரத்தடியில் புத்தரின் சிலையைக் கண்டான். கைகளை மடியில் வைத்து தியானிக்கும் புத்தர். தலையை உடைத்திருந்தார்கள். சற்று அப்பால் ஒரு கல்லிடுக்கிலிருந்து நீர் பாய்ந்துகொண்டேயிருந்தது. வற்றாச் சுனையாக இருக்கவேண்டும். குதிரையிலிருந்து இறங்கி புத்தரின் அருகே போய் நின்றான்.

மன்னர்களுக்குத்தான் வாழ்க்கை நிச்சயமில்லை, சூழவும் எதிரிகள் என்றால் தெய்வங்களுக்குமா? உடைக்கப்பட்டதலை கிடக்கிறதா என்று சுற்றிலும் பார்த்தான். காணோம்.

உடைத்துத் தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டும். மனிதனின் குரூரங்களுக்கு எல்லையே இல்லை. எதையும் செய்யக்கூடியவன் அவன். கம்பீரமாக வெளியே தோற்றம் தரும் ராயர் உள்ளுக்குள் நொறுங்கிப் போனது புத்ர சோகத்தால்தான். அதையும்விட அந்த வஞ்சகம்தான் அவரால் தாங்கமுடியாததாக இருந்தது.

ராயரின் பதினெட்டு மாதமே ஆன மகன் திருமலைதேவன் சமீபத்தில் திடீரென மரித்துவிட்டான். வெகுகாலமாக ராயருக்கு ஆண்பிள்ளை இல்லாமலிருந்து கடைசியில் இளைய ராணி சென்னாதேவி வயிற்றில் வந்து பிறந்தான் அவன்.

ராயர் தனக்குப் பின்னால் அவன் அரசனாகத் தடை ஏதும் வரக்கூடாது என்பதற்காகவே ஒரு வயதானவுடன் அவனுக்கு முடிசூட்டிவிட்டு நிர்வாகப் பொறுப்பைத் தான் ஏற்றிருந்தார். இந்த அதிர்ச்சியை அவரால் தாங்க முடியவில்லை. நாற்பத்தொரு வயதிலேயே அவரது பரம்பரை வியாதியான இடுப்பு நோவு வலுத்துவிட்டது.

விஸ்வநாதன் தன் தோழனும் கொட்டியம் தளபதியுமான கேசவனிடம் உண்மையைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஒப்படைத்தான். விஜயநகரின் வழக்கமான மந்திராலோசகர்கள், ஒற்றர்கள் யாரும் அறியாமலே வேலை நடந்தது. சென்னாதேவியின் மாளிகைத் தாதிகளை கண்காணித்து வந்தபோது ஒருத்தி பிடிபட்டாள். அவள் நாட்டியக்காரி திலோத்தமையைக் கை காட்டினாள். திலோத்தமையைப் பிடித்து வைத்தபோது உண்மையை ஒப்புக்கொண்டாள். திம்மபாலனின் ஆசைநாயகி அவள். திம்மபாலன் வினுகொண்டாவின் ஆளுநராக அப்போது இருந்தான். திலோத்தமையோடு வினுகொண்டா போய்ச் சேர்ந்தார்கள். அன்று இரவு கோயிலில் தன்னைத் தனியாகச் சந்திக்குமாறு அவள் திம்மபாலனுக்கு ஓலை அனுப்பினாள். வந்தான். அவனைத் தூக்கிக்கொண்டு காட்டுக்குள் போனார்கள். விஜயநகருக்கு இருவரையும் கொண்டுவந்து மறைவிடத்தில் வைத்துவிட்டு விஸ்வனிடம் வந்துசேதி சொன்னான் கேசவன். நம்பமுடியாமல் இவன் சென்று கேட்டபோது, தனது தந்தை திம்மரசுதான் நஞ்சூட்டச் சொன்னார் என்று ஒப்புக்கொண்டான் திம்மபாலன்.

விஸ்வநாதனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. திம்மரசு ராயரின் பிதாமகர். விஜயநகரின் மதிமந்திரி. நரச நாயக்கர் காலத்திலிருந்தே ராயரின் நலனில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர். ராஜ்ஜியமே அவர் மேற்பார்வையில் தான் இருக்கிறது. ஓராண்டாக ராயருக்கு இடுப்புவலி என்ற செய்தி வெளியே கசிந்தவுடன் ஆளாளுக்குத் தன் வலையை விரிக்க முயற்சிக்கின்றனர். கடைசியில், கிருஷ்ண பரமாத்மாவே அபிமன்யுவிற்கு

நஞ்சூட்டிய கதையாயிற்று. ஆனால், கிருஷ்ணர் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமே!

வைகரையில் திம்மரசு சந்தியா வந்தனத்திற்குத் துங்கபத்ரைக்குத் தான் போவார். ஆற்றில் இறங்கி அவர் குளித்தபோது கேசவன் நெருங்கிப்போய் கத்தியால் அவரைத் தள்ளிக்கொண்டு பாறை மறைவுக்கு வந்தான். ஏற்கனவே நின்றிருந்த இருவர் அவரை இழுத்து ஒதுக்கினார்கள். கேசவன் எழுந்து வந்தவுடன் கத்தியால் கழுத்தில் லேசாகக் கீறினான். கதறி அழுதவாறு ஒப்புக்கொண்டார். அவர் வாயால் அதைக்கேட்காமல் ராயரிடம் சொல்லமுடியாது.

விஸ்வநாதன் சொன்னான். ராயரைத் தனியாக அரண்மனை மேல் மாடத்திற்கு அழைத்து வந்திருந்தான். இவனையே பார்த்துக் கொண்டிருந்தார். கண்கள் தளும்பின, கண்ணீர் கொட்டியது. அவமானமும், கோபமும் கொந்தளிப்புமாக மனம் உடைந்து போனார். பிறகு விஸ்வநாதனே தனது யோசனையைச் சொன்னான்.

‘இது வெளியே தெரியக்கூடாது. ராஜ்ஜியத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்துவிடும். உங்கள் புகழுக்குக் களங்கம். விஜயநகர வரலாற்றில் துரோகத்தின் மாபெரும் கறை இதுதான். நிதிமோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்துவிடலாம்.’

‘சரி, என் கண்ணில் இனிமேல் அவர்பட வேண்டாம். நீயே ஏதாவது செய்.’

ராஜசபையில் திம்மரசவும், திம்மபாலனும் நிறுத்தப்பட்டனர். பொக்கிஷதாரர் அவர்கள் மேல் நிதி மோசடிக் குற்றச்சாட்டை ஒப்புவித்தார். இருவரும் ஒப்புக்கொண்டனர். ராயர் அரியணையில் இல்லை. சற்று நேரத்தில் ராயரின் தீர்ப்பை அவையில் சாஸனகாரர் வாசித்தார். ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இருவரும் பெனுகொண்டா தனிமைச் சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

சென்னாதேவியின் மாளிகைத் தாதிகள் பணிமாற்றி சந்திரகிரி அரண்மனைக்கு அனுப்பப்பட்டனர். அதில் ஒருத்தி மட்டும் காணாமல் போனாள். அதேபோல் வினுகொண்டா கோயிலுக்குப் பசவியாகப் போவதாகச் சொல்லிச் சென்ற திலோத்தமையும் அங்கு போய்ச்சேரவில்லை.

மூன்றே மாதங்களில் காவலர்களுக்குப் பெரும் கையூட்டுத் தருவதாக வாக்களித்து, திம்மபாலன் சிறையிலிருந்து தப்பினான். விஷயம் வெளியே கசிந்துவிடக்கூடாது என்ற பயம் விஸ்வநாதனுக்கு. கேசவனின் ஆட்கள் நாடெல்லாம் தேடித்திரிந்து, மைசூரில் திம்மபாலனைக் கண்டுபிடித்து பெனுகொண்டாவிற்கு மறுபடி கொண்டுவந்தார்கள்.

சினம்கொண்ட ராயர் அவர்கள் தலையை எடுக்கச்சொன்னார். பிராமணனைக் கொல்ல சாஸ்திரம் அனுமதிக்கவில்லை. தந்தையும், தனயனும் கண்களை இழக்க வேண்டியதாயிற்று.

விஸ்வநாதன் மாலிருஞ்சோலையின் சுனையை நெருங்கி நீரைப்பிடித்துக் குடித்துப்பார்த்தான். சுவையான நீர்.

இன்றுவரை விஜயநகரின் 193ஆண்டுகால வரலாற்றில் வெவ்வேறு

காலங்களில் மூன்று அரசர்கள் விரட்டப்பட்டு ஆட்சி கைமாறியிருக்கிறது. மூன்று அரசர்கள் கொலைப்பட்டிருக்கின்றனர். ஒருவன் சிறைப்பட்டான். இதைவிடவும் பாமினியும், டெல்லியும் ஏராளமான துரோகங்களைக் கண்டிருக்கின்றன. துரோகத்தால் அரியணை ஏறியவன் கண்டதென்ன? இன்னொருவனால் கொலைப்படுகிறான். ரத்தத்தின் மேல் அமர்ந்து அரசாள்பவன் முடிவு என்ன? எவனோ ஒருவனால் வஞ்சிக்கப்படுகிறான். இவர்களின் பேராசைக்காகப் போர்கள்! தன்னைக் காத்துக் கொள்வதற்காகப் போர்கள்! இவர்களுக்காக வெட்டி மடியும் போர்வீரர்கள்... நீதியின் பேரால், தர்மத்தின் பேரால் ஒரு அரசு நடப்பது உண்மையிலேயே இயலுமா? அபூர்வம்தான். அதுவும் காலவெள்ளத்தில் இல்லாததாகும். ராயருக்குப் பின் வராகக்கொடி இப்படி கம்பீரமாகப் பறக்கப்போவதில்லை.

உடைகளைக் களைந்துவிட்டு விஸ்வநாதன் நீர்த்தாரையில் தலையைக் கொடுத்தான். சுனைநீர் என்பதால் மண்ணின் வெதுவெதுப்போடு இருந்தது. நாகணவாய்ப் புள்ளின் குரல். நீர் சலசலப்போடு ஓடி ஓடைக்குள் இறங்கிக்கொண்டிருந்தது. மாலைப் பொன் ஒளியில் மஞ்சள் மூக்கு மைனாக்கள் இரண்டும் வாய்க்கால் நீரைக் குடித்துத் தலையைச் சிலுப்பின. சிறகடிக்கையில் அதன் கபில நிற இறகுகளில் வெண்தீற்றல் விரிந்தடங்கியது. மூக்கின் மஞ்சள் ஏறிக் கண்ணை வளைத்திருக்கிறது. விஸ்வநாதன் குளித்தவாறு மலர்மொட்டு போன்ற அந்த மஞ்சள் கூரலகின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்.

**தூ**துபோன சகரம் தம்மைய நாயக்கர் தனது தந்தையோடு தங்கியிருக்கிறார் என்றும். அவர் பதில் சொல்லாமல் இழுத்துக்கொண்டிருக்கிறார் என்றும் கருதியிருந்தான் விஸ்வநாதன்.

நாகம நாயக்கர், அவருக்கு இருந்த மன அழுத்தத்தில் சகரத்தை சிறையில் அடைத்ததையே மறந்து போனார். தம்மையாவுக்கு வயது 76. நாகமரை விட ஒரு வயதுதான் குறைவு. எந்தத் தப்பும் செய்யாத தன்னை, அதுவும் தூது வந்த தன்னைச் சிறையில் போட்டதற்காக வீராப்பில் அன்னம் தண்ணீர் தொடாமல் கிடந்தார். நாலாம் நாள் மயங்கிவிட்டார். அப்புறம் தான் சிறைக்காவலர்கள் ஓடிவந்து சொன்னார்கள். தூக்கிக்கொண்டு வந்து வைத்தியரை அழைத்தார்கள். அவர் வந்து பார்த்ததும் நிதானம் பிடிபடவில்லை. அவர்தண்ணீர் குடிக்காததை ஏன் வந்து முதலிலேயே சொல்லவில்லை என்று நாகமர் சிறைக்காவலர்களுக்கு சவுக்கடி கொடுக்கச் சொன்னார்.

சகரம் போரிலேயே வாழ்ந்தவர். எப்படியோ தப்பி இவ்வளவு காலம் வந்துவிட்டார். இப்போது ஏதோ உள்காயம் வேலையைக் காட்டிவிட்டது. நினைவு திரும்பவேயில்லை. வேறு வைத்தியர்களும் வந்து பார்த்தார்கள். ஒன்றும் ஆகவில்லை. மேலும் இரண்டு நாள் கடந்துவிட்டது. நாகமர் பயந்து போனார். பாலமுகொண்ட முத்தைய நாயக்கரை அழைத்துவரச் சொன்னார். வந்ததும் நிலைமையை விளக்கிச் சொன்னார். நாடித்துடிப்பு குறைந்து கொண்டிருந்தது. போர்க்களத்தில் சாகவேண்டியவனை இப்படி மடத்தனமாகப் பலி கொடுத்துவிட்டோமே என்ற குற்ற உணர்வு நாகமருக்கு. ஆறாவது நாள் மாலை உயிர் பிரிந்தது.

விஷயத்தைக் கேள்விப்பட்ட விஸ்வநாதன் கடும் கோபமுற்றான். அவனை சமாதானப்படுத்துவது முத்தைய நாயக்கருக்குப் பெரும்பாடாக

இருந்தது. சகரம் படையணியிலேயே இருந்த தம்மைய நாயக்கர் மகன் தொப்பள நாயக்கர் சிதைக்குத் தீ மூட்டினார். விஸ்வநாதன் தன் தந்தையின் செயலுக்காக வருத்தம் தெரிவித்து அவருக்கு வெகுநேரம் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான். அவரது தந்தையின் சேவைக்காக கொட்டியம் ஜாகிர்களிலிருந்து பன்னிரெண்டு கிராமங்களை விட்டுத் தருவதாகவும் வாக்களித்தான்.

மறுநாள் அதிகாலையிலேயே கேசவன் தலைமையில் குதிரை அணிகள் பத்து மட்டும் கிளம்பின. கோட்டை திறந்தே கிடந்தது. உள்ளே கேட்பாரற்று நுழைந்தவர்கள் அரண்மனைக்குள் புகுமுன் காவலர்கள் வாசலை அடைத்துவிட்டனர். அதைத் திறக்க முயன்றபோது ஏற்பட்ட மோதலில் இருபக்கமும் பத்திருபது பேர் அடிபட்டு விழுந்தனர். பூஜையில் இருந்த நாமகர் சத்தம் கேட்டு ஓடிவந்தார். சண்டையை நிறுத்தினார். கேசவனிடம் சொன்னார் ‘முத்தைய நாயக்கரை அழைத்துவர ஆள்அனுப்பு. விஜயநகரம் கிளம்ப நான் தயாராக இருப்பதாக அவனிடம் போய்ச்சொல்லு. அவன் மேல் எனக்கு கோபம் எதுவும் இல்லை என்பதையும் சொல்லிவிடு.’

நாகமருக்கு விலங்கு போடக்கூடாதென்றும் தன்னுடைய பாதுகாப்பிலேயே அழைத்துவருவேன் என்றும் முத்தைய நாயக்கர் விஸ்வநாதனிடம் சொன்னார்.

‘அவரை நேருக்கு நேர் என்னால் பார்க்க முடியாது. என் கண்ணில் படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்’ என்றான்.

நாகமரின் அனைத்துப் படைப்பிரிவுகளும் இன்னும் இரண்டே நாளில் விஜயநகரம் திரும்ப வேண்டுமென்று உத்தரவிட்ட விஸ்வநாதன், நூறு குதிரை வீரர்களோடும் நாமகரோடும் முன்னால் விரைந்து சென்றான்.

*

# 5

**வீரநாகம்மாவின் குதிரை முதல் ஜாமத்தில் நாகலாபுரப் பெரு வழியில்** விஜயநகரை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அவள் எண்ணங்கள் குழம்பி சிந்தை கனத்துக் கிடந்ததால் சாலையை அவள் கவனிக்கவேயில்லை. குதிரை தானாகவே அந்த இரவிலும் பார வண்டிகளை விலக்கியும், மறிந்து கடந்தும், கடுவேகத்தில் ஓடியது. வெளிக்கோட்டையின் தெற்கு வாசலின் முன்னே நின்றது. முதல் ஜாமம் கடந்துவிட்டதால் கதவங்களை அடைத்து விட்டார்கள். பந்தத்தோடு நெருங்கி வந்து முகம்பார்த்த காவலனிடம் ‘கொட்டியம்‘ என்றாள். பெருங்கதவுகளின் கீழ் குதிரைவாசல் மட்டும் திறந்து வழிவிட்டது. வெகுதூரம் ஓடியபின் உள்கோட்டையின் தெற்கு வாசலும் திறந்து வழிவிட்டது. ஏமகூடத்தை நெருங்கியதும் கிருஷ்ணன் கோயிலுக்குப் போகாமல், பாறை முனையிலே ஒரு யானையளவு அமர்ந்து கிழக்கை வெறித்துக் கொண்டிருந்த கணபதியின் முன்னே, குறுக்கே ஓடிய தெருவில் புகுந்து அரண்மனை வளாகத்துக் கோட்டை மதிலின் மேற்கு வாசலின் முன்நின்றாள். நெருங்கிய காவல் வீரர்கள் அவள் வீரநாகம்மா எனக் கண்டதும் வாசலைத் திறந்தனர். நாணய சாலையையும், பொக்கிஷ வளாகங்களையும் கடந்து அரண்மனையை நோக்கிக் குதிரையை விரட்டினாள். ராமர் கோவிலை நெருங்கியதும் இறங்கி, சாலையில் நின்றே வணங்கினாள்.

அந்தப்புர மேற்கு வாசலின் முன்னே நின்றபோது காவலிலிருந்த திருநங்கைகளுக்கு அவளை அடையாளம் தெரியவில்லை, பெயரும் புரியவில்லை. புதியவர்களாக இருக்கவேண்டும். அனுமதி பெறுவதற்காக அதில் ஒருத்தி அலங்கத்தின் உச்சிக்கு ஏறி ஓடினாள். பனை உயரம் இருந்த அந்தக் கல் கோட்டையில் அவள் மேலே ஏறி இறங்கும்வரைகூட அவளுக்குப் பொறுமையில்லை. ‘கதவைத் திற’ என்று மீண்டும் கத்தினாள். மேலேயிருந்த திருநங்கைகள் எட்டிப்பார்த்து, அவளை அடையாளம் கண்டவுடன், திறந்துவிடுமாறு கீழே இருப்பவர்களிடம் உரத்துக்கூறினர்.

குதிரையை விரட்டினாள். ஏராளமான மாளிகைகளைக் கடந்து கிழக்கே சென்று கமலமஹாலின் அருகே திரும்பி லட்சுமியம்பிகையின் முற்றத்தில் நிறுத்தினாள். லட்சுமி இளவரசி. ராயரின் மூத்தமகள்.

காவல் பெண்டுகள் சுற்றிலும் நின்றும் அமர்ந்தும் பேசிக்கொண்டிருந்தனர். இவள் கீழே குதித்ததும் ஒருத்தி வந்து குதிரையை வாங்கிக்கொண்டாள். இவள் வந்த வேகத்தைப் பார்த்து செவிலிகள் தாமாகவே கதவைத் திறந்துவிட்டனர். மைய மண்டபத்தில் நுழைந்தாள். தலைமைத் தாதி ஓடோடி வந்தாள்.

‘லட்சுமி உறங்கி விட்டாளா?’

‘இல்லை. மாடத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள்.’

‘ராமராயர் வந்து விட்டாரா?’

‘இல்லை. அதவேனியிலிருந்து அப்படியே தர்மாவரம் போயிருப்பதாகத் தகவல் வந்தது.’

படிகளில் தாவி ஏறி மேலே சென்றாள். யவன விளக்கொளியில் லட்சுமி மஞ்சத் திண்டில் சாய்ந்திருப்பது தெரிந்தது. எதிரே ஆசனத்தில் கையில் ஏடுகளைப் புரட்டியவாறு யாரோ ஒரு பெண்.

திரும்பிப்பார்த்த லட்சுமி துள்ளி எழுந்து வந்து சிரித்துக்கொண்டே இவள் தோளைப்பற்றினாள். ‘செல்லி... வா,வா... என்ன இந்த ராத்திரியிலே?’ என்றவாறு அழைத்துப் போனாள்.

அந்தப் பெண் எழுந்து நின்று வணங்கினாள்.

‘இவர்கள் குமார சரஸ்வதி. தமிழ்ப்புலவர். நமது கலிங்க வெற்றிகளைப் பற்றி அரவத்தில் பிரபந்தம் பாடியிருக்கிறார். இப்போது திவ்யபிரபந்தத்தை இவரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இவள் யார் என்று சொல்லுங்கள், பார்ப்போம்.’

‘தெரியவில்லை...’ என்று தயங்கினாள் குமார சரஸ்வதி.

மஞ்சத்தில் செல்லியைச் சரித்து அமர வைத்தவாறே லட்சுமி சொன்னாள் ‘விஜயநகர ரணதீரன் விஸ்வநாதனைக் காதலித்துக் கண்ணி வைத்துக் காத்திருந்து பிடித்த வேட்டைக்காரி இவள்தான்...வீர நாகம்மா!’

சரஸ்வதி, ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்தாள் ‘போர் பற்றி எனக்கு அதிகம் தெரியாததால் துக்காதேவி விவாஹம், ராயரின் கொடைமடம் பற்றித்தான் அதிகம் பாடியிருக்கிறேன்.’

‘திவ்ய பிரபந்தத்தை நாளை தொடரலாமே...’ என்று செல்லி சொன்னதும், குமார சரஸ்வதி ஏடுகளைக் கட்டிக்கொண்டு விடைபெற்றுக் கீழே சென்றாள்.

‘என்னடி.... பதறிக்கொண்டிருக்கிறாய்?’

‘நான் உடனே பாவாவைப் பார்க்க வேண்டும்.’

‘இப்போது எப்படி? எவள் மஞ்சத்தில் கிடக்கிறாரோ! என்ன விஷயம் என்று தெளிவாகச் சொல்.’

‘இப்போது நாகலாபுரத்திலிருந்து வருகிறேன். மாமாவை

மதுரையிலிருந்து கணவர் அழைத்து வந்துவிட்டார். அங்கேதான் தங்கியிருக்கிறார்கள். நாளை இங்கு வருவார்கள்.'

'புரிகிறது. நாகமரைக் கண்டாயா? என்ன சொன்னார்?'

'சொல்ல என்ன இருக்கிறது? இந்த ஏழு ஆண்டுகளில் இன்றுதான் முதன்முதலாக என்னைத் தொட்டுப் பேசியிருக்கிறார். என் தலையை வருடிக்கொண்டே சொன்னார். என்னைப் பற்றிக் கவலைப்படாதே என்று. விடைபெறும் வரை திரும்பத் திரும்பச்சொல்லிக் கொண்டிருந்தார். அவன் மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று.'

'அப்பாவுக்கு உடல்நலமில்லை என்ற சேதியை ரகசியமாக வைக்க முடியாமல் போனதுதான் எல்லாக் குழப்பத்துக்கும் மூல காரணம்.'

சற்று நேரத்திற்குப் பின் செல்லி கேட்டாள் 'ராஜத் துரோகக் குற்றச்சாட்டுடன் நாளை அவையில் மாமா தலைகுனிந்து நிற்கவேண்டியதிருக்கும். அப்படித்தானே?'

'சரி, என்ன செய்யவேண்டும் என்று சொல்.'

'என் குடும்ப கௌரவம் அரசவையில் காட்சிப் பொருளாவதை நான் அனுமதிக்க மாட்டேன்.'

'சரி உன் யோசனை என்ன?'

'அரசரை அவர்கள் தனியாகச் சந்திக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவைக்குப் போவதைத் தவிர்க்க வேண்டும்.'

'காலையில் போய் அப்பாவைப் பார்ப்போம். உன் பேச்சைத் தட்டமாட்டார். இவ்வளவுதானே? இதற்காக ஏனடி ராக்கோட்டான் மாதிரி அலைகிறாய்?'

'இப்போதே அவருக்குத் தெரியும். அவரிடம் வந்த தூதுவன்தான் என்னிடமும் வந்து சொன்னான். நாளைகாலை இந்நகர் எங்கும் இதுதான் பாட்டாக இருக்கும். அதற்கும் முன்னே நாகமர் மன்னித்து விடுவிக்கப்பட்டார் என்ற சேதிதான் முந்திச்செல்ல வேண்டும்.'

'உத்தரவு மகாராணி! அடியே, நிதானமாக யோசி. ராஜாங்க விவகாரங்களில் பெண்கள் தலையிடுவதில்லை என்று உனக்கே தெரியும். அப்பாவின் கோபத்தையும் நீ அறிந்தவள்தான். சுலபமாக மனக்கோட்டை கட்டுகிறாய். பதறாதே. இப்போது தூங்கு. காலையில் பார்ப்போம்.'

'நீ தூங்கு, காலையில் வந்து உன்னை எழுப்பி நாகமர் விடுவிக்கப்பட்ட நற்செய்தியைச் சொல்கிறேன்.'

அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த லட்சுமி அப்படியே மஞ்சத்தில் மல்லாந்து படுத்தவாறு கண்ணை மூடி யோசித்தாள். சற்றுநேரம் கழித்துக் கண் திறந்தாள். செல்லி உப்பரிகைக்கு அப்பால் தெரிந்த வானத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'இப்போதே அர்த்த ராத்திரியாகிவிட்டது. இப்போது போய் எழுப்புவது உசிதமல்ல. ராய்ச்சூரே பறிபோனாலும் தாதிகள் அவரை எழுப்பத் துணியமாட்டார்கள். எங்கிருக்கிறார் என்று அவ்வாவை விட்டு அரண்மனையில் இப்போதே விசாரிக்கச் சொல்கிறேன். கனகதுர்காவின்

பக்கம்தான் இப்போது காற்று வீசுவதாகக் கேள்வி. புதிய ஆசைநாயகி. பன்னிரெண்டாவது ஆள். நீ அவளைப் பார்த்திருக்க மாட்டாய். அங்குதான் இருக்கிறார் என்றால் தலைக்கோழி கூவும்வரை காத்திரு. எழுந்துவிடுவார். அரண்மனையில் இருந்தால் நான் உன் உடன் வருவேன். அவளிடம் இருந்தால் நீ மட்டும்தான் போகவேண்டும். நான் வரமுடியாது. எனக்கு ஒன்றுமில்லை; ஆனால், அம்மாவுக்குத் தெரியும்போது பெரிய கௌரவப் பிரச்சினையாக்கி விடும். அதற்குப் பின்னால் விடிவதற்கு ஒரு ஜாமம் இருக்கிறது. உன் மனம் போல் காரியங்கள் நடக்கும். இப்போது தூங்கு' என்று சொல்லிவிட்டு எழுந்தாள்.

செல்லியை மஞ்சத்தில் தள்ளிப்படுக்க வைத்துப் போர்த்திவிட்டு கீழே இறங்கிப் போனாள். சற்று நேரம் கழித்து லட்சுமி மீண்டும் மேலே வந்து பார்த்தால் செல்லியைக் காணவில்லை. உப்பரிகையில் நின்று நட்சத்திரங்களைப் பார்த்தவாறிருந்தாள்.

படுத்துக் கண்மூடி 'பிடிவாதக்காரி...' என்று முணுமுணுத்தாள் லட்சுமி. இளமைக் கால நினைவு மலர்ச் சரமெனத் தொடுத்து வளர்ந்து சென்றது.

செல்லி பூப்படைந்தபோது லட்சுமிக்குப் பன்னிரெண்டு வயதுதான். செல்லி இரண்டு வயது மூத்தவள். இருவரும் தோழிகள் என்பதால் எந்நேரமும் இங்கேயே கிடப்பாள். உண்மையில் திருமலாதேவியிடம் இவளைவிட அவளுக்குச் செல்லம் அதிகம். ராயர் அவையிலிருந்தாலும், கோயிலுக்குப் போனாலும், அரண்மனையில் இருந்தாலும் எந்த சந்தர்ப்பத்தையும் நழுவ விடாமல், லட்சுமியை விளையாட விடாமல் துணைக்கு இழுத்துக்கொண்டு பார்க்கப் போய்விடுவாள். இவள் சலிப்புற்றுத் திரும்பிப்போக முயன்றாலும் ஏமாற்றி, கெஞ்சி, நடித்துத் தன்கூடவே வைத்திருப்பாள். லட்சுமிக்கு விவரம் தெரிகிற வயது வந்தபோதுதான் புரிந்தது-செல்லி பார்க்கத் துடித்தது வேடிக்கை அல்ல, விஸ்வநாதனை என்று. ராயரின் நிழலாக அவன் திரிவது செல்லிக்குத் தோதாக ஆகிவிட்டது. அப்புறமெல்லாம் அவளைக் கேலி செய்வதே லட்சுமியின் பொழுதுபோக்கு.

ரத்னகிரிப் போரிலிருந்து விஸ்வநாதன் திரும்பிய மறுநாள் காலை திருமலாதேவியைத் தூண்டிவிட்டு நச்சரித்து செல்லி நாகமர் வீட்டிற்குக்கூட்டிப் போனாள். அம்மாவுக்கும் ஏற்கெனவே அரசல்புரசலாய்த் தெரியும் என்பதுதான் லட்சுமியின் ஊகம். நடக்கமுடியாமல் மாடியில் படுக்கையில் கிடந்தான். திருமலாதேவி அவனிடம் பேசிக்கொண்டிருந்தபோது பாவம் போல் செல்லி அவள் பின்னே மறைந்து நின்றிருந்தாள். அவன் தாய் லட்சுமியம்மாளும், திருமலாதேவியும் பேசிக்கொண்டு படிகளில் இறங்கத் தொடங்கும்போது 'மேல் துகில் நழுவி விழுந்துவிட்டது; எடுத்து வருகிறேன்' என்று சொல்லிவிட்டு செல்லி அவன் அறைக்குள் நுழைந்தாள். இயல்பாகப் பின்தொடர முயன்ற லட்சுமி வாசலிலே நின்றுவிட்டாள். செல்லி கண்ணீருடன் அவன் முகமெல்லாம் ஆவேசமாக முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். சில நொடிகள்தான். கண்ணைத் துடைத்தவாறு வேகமாகத் திரும்பி வந்தாள்.

அந்தக் காட்சி லட்சுமியின் குழந்தைமையை விரட்டி விட்டது. வெகுகாலமாக நினைவில் நீங்காத சித்திரமாகத் தொடர்ந்து வந்தது; அவள்

உணர்வில் வெகு ஆழமாகத் தைத்திருந்தது. செல்லியின் மீது அவள் பிரியமும், ஈர்ப்பும் கூடிக்கொண்டிருந்தது. அறியாமலும், அறிந்தும் அந்தக் காதலுக்குத் துணை நின்ற சாட்சி அவளல்லவா?

அன்று செல்லி கண்ணீரை மறைக்க முயன்றும் முடியாததால் அது காட்டிக் கொடுத்துவிட்டது. அம்மா என்று உணவருந்த அப்பாவை அழைத்து, அவர் வந்திருந்தபோது சொல்லிவிட்டாள். உற்சாகமாகிப் போன அவர் செல்லியைக் கூப்பிட்டுக் கேட்டார். ஆம் என்று ஒப்புக்கொண்டவள் அவனைத்தான் கட்டுவேன் என்று அரசரிடமே தைரியமாகச் சொன்னாள்.

சாப்பிட்டு விட்டு தாம்பூலம் கூடத் தரிக்காமல் ராயர் செல்லியை அழைத்துக்கொண்டு அரண்மனைக் கோட்டைக்கு வெளியே இருக்கும் நாகமர் மாளிகைக்குப் போனார். செல்லியைக் கீழேயே இருக்கச் சொல்லிவிட்டு அவர் மட்டும் படிகளில் ஏறினார். லட்சுமியும் பின்னாலேயே ஓடினாள். அவன் கட்டிலில் அமர்ந்து சற்று நேரம் பொதுவாகப் பேசிக்கொண்டிருந்தவர் கடைசியாகக் கேட்டார். சிரித்தவாறே ஒப்புக்கொண்டான்.

‘எவ்வளவு காலமாக?’

‘நான்காண்டுகளாக.’

‘என் கூடவே இருக்கும் உன்னிடம் இதை எப்படி நான் இவ்வளவு நாளும் கவனிக்கத் தவறினேன்? உண்மையிலேயே நான் கவிஞன்தானா?’ என்று கேட்டுவிட்டு உரத்துச் சிரித்தார்.

‘சரி, இரண்டில் ஒன்று. உனக்கு சாளுவ கட்டாரி பரிசு வேண்டுமா? செல்லி வேண்டுமா?’

சிரிப்பு மாறாமலேயே அவன் சொன்னான் ‘இந்த உலகத்தையே பரிசாகக் கொடுத்தாலும் வேண்டாம். அவள்தான் வேண்டும்.’

அதை ரசித்தவாறு ‘நான் இன்னொரு காவியம் எழுதவேண்டும் போலிருக்கிறதே’ என்று சொல்லிக்கொண்டு கீழிறங்கினார்.

‘அவன் உன்னைக் கூப்பிடுகிறான். போ’ என்று சொன்னதும் செல்லி வேகமாகப் படியேறினாள். பின்தொடரப்போன லட்சுமியைப் பிடித்து இருத்தி வைத்துக்கொண்டார்.

நாகமரையும் செல்லி வீட்டுக்காரர்களையும் அங்கு வரவழைத்து திருமணத்தை நிச்சயித்த பிறகுதான் அங்கிருந்து கிளம்பினார்.

அப்புறம் செல்லியை லட்சுமி இரண்டு மாதங்களாகப் பார்க்கவே முடியவில்லை. இரவுபகலாக அவனோடே இருந்தாள். அவன் நடமாடிய பிறகுதான் அரண்மனைக்குள்ளேயே வந்தாள். தொடர்ந்து அவன் போர்க்களத்திலேயே இருந்ததால் நான்கு ஆண்டுகள் கழித்து அவளது 22 ஆவது வயதில்தான் திருமணம் ராமர் கோயிலில் நடந்தது.

அதற்கும் ஓராண்டு முன்பேயே லட்சுமியின் திருமணம் நடந்துவிட்டது. பிறகுதான் அவள் உணர்ந்தாள், தனக்கு வாய்க்காமல் போன வாழ்க்கை எதுவென. அந்த ஏமாற்றம் தாங்க முடியாததாக இருந்தது. வெளியே யாரிடமும் சொல்லமுடியாததால் மனம் புழுங்கித் தனக்குள்ளேயே சுருங்கிப் போனாள். பிறகுதான் இலக்கியத்தில் தஞ்சம் புகுந்தாள். 21ஆவது

வயதில் ‘மாரிச பரிணயமு’ பிரபந்தத்தை எழுத உத்வேகம் தந்ததே செல்லியைப் பற்றிய நினைவுகள்தான். அதை எழுதும்போது தான், இவ்வளவு பிரியத்துக்கும் அப்பால் செல்லியின் மீது தனக்குப் பொறாமை இருக்கிறது என்பதை விழுங்க இயலாத ஒரு கசப்பாக உணர்ந்தாள். தான் கன்னியாய் இருக்கும்போது அது இல்லை என்ற உண்மையும் மஞ்சு விலகிய மலைபோல் தெரிந்தது. அவளை விடச் சில வருடங்கள் மூத்தவளாகத் தான் இருந்திருக்கக்கூடாதா என்ற ஏக்கம் முளைவிடக் கிள்ளி எறிந்தாலும் அது மீண்டும் துளிர்க்கிறது. அவள் தன்னைச் செல்லியாகக் கற்பனை செய்துகொள்வதிலிருந்து பிறகெல்லாம் விடுபட முனைவதில்லை. அதுவேறு உலகம். அவளுக்கு மட்டுமான மாய உலகம்.

சட்டென்று எழுந்து உப்பரிகைக்குப் போனாள். அவளை இழுத்தணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். அவளை விடுவிக்க விரும்பாமல் தன் தோளில் சாய்த்துக்கொண்டாள். கன்னத்தில் தவழ்ந்த விரல்கள் கழுத்தில் இறங்கியபோது அவளது கருகமணி மாலை தட்டுப்பட்டது. அந்த மணிகளையே விரல்களால் நெருடிக் கொண்டிருந்தாள்.

ராமர் கோயிலில் திருமணம் நடந்ததால் காப்புகளின் முறைப்படி தான் நடந்தது. அவன் மரபுப்படி நடந்திருந்தால் ஆற்றங்கரையில் பந்தல்போடவேண்டும். மணமகனாக அவனுக்குப் பதில் அவன் வாள் வந்திருக்கும். போர்க்களத்திலேயே இருக்க நேர்ந்த குலம் என்பதால் எவனோ மணமகன் நிச்சயித்த பிறகு போருக்குப் போயிருந்திருப்பான். முகூர்த்த நேரத்தில் அவன் வரமுடியாததால் அவன் வாளை பதிலியாக வைத்து அவன் சகோதரி தாலி கட்டியிருக்கிறாள். பின் அதுவே குலச்சடங்காகி விட்டது. விஸ்வநாதனுக்கு உடன் பிறந்த சகோதரியும் இல்லை. ஆனால், செல்லி காப்பு பலிஜரின் பொன்தாலியைக் கட்டமாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டதால் அவன் கருகமணியைத் தான் தாலியாகக் கட்டினான்.

‘அரண்மனைப் பெண்கள் எவ்வளவு பேர் உன்னைக் ‘கொல்லவாரு பிட்ட’ என்று கேலி பேசியிருக்கிறார்கள் தெரியுமா...’ என்றாள் லட்சுமி. ‘பைத்தியக்காரிகள்!’ என்று அவளே சொல்லிவிட்டு செல்லியை உள்ளே அழைத்துக்கொண்டு போய் அமர வைத்தாள்.

‘இப்போதெல்லாம் வாரம் ஒருமுறை உன்னைப் பார்ப்பதே அரிதாய் இருக்கிறது. கௌரி நோன்புக்கு ராமர் கோயிலுக்குப் போகும்போது என்னை அழைத்துக்கொண்டு போவாய். இப்போது உனக்கு அதில் ஆர்வம் இல்லை.’

‘ராமனைக் காண கோயிலுக்குத்தான் போகவேண்டுமா?’ என்றாள் செல்லி.

அவள் குரல் ஓய்ந்து ஒரு நொடி இடைவெளிக்குப் பிறகுதான் அர்த்தம் லட்சுமிக்கு உறைத்தது. அதன் கனம் தாளாது அப்படியே செல்லியின் மடியில் சரிந்தாள். அவள் அழுவதை உணர்ந்த செல்லி அவளைத் தட்டினாள் ‘ஏய்...என்னடி இது? ஏன்?’

லட்சுமி அடக்க முடியாமல் குலுங்கி அழுதுகொண்டிருந்தாள். விசும்பி விசும்பி ஓய்ந்து அவள் மடியிலிருந்து முகம் தூக்காமலே சொன்னால்

‘செல்லி... இப்போது உண்மையைச் சொல்கிறேன். உன்மீது எனக்குப் பொறாமை.’

ஆறுதலுக்காக செல்லி சொற்களை நாடாமல் அவள் கூந்தலை விரல்களால் அளைந்தவாறிருந்தாள். அவள் தூங்கிவிடுவாள் என்று எதிர்பார்த்தாள்.

வெகுநேரமான பின்னும் கண்ணீர்த்தாரை உலரவில்லை என்பதைத் துகில் தாண்டித் தன் தொடையில் உணர்ந்தாள்.

அவளைத் தூக்கிக் கண்ணீரைத் துடைத்தாள். ‘உனக்கென்னடி ராஜகுமாரி...ஒருவேளை இனி விஜயநகர மகாராணி...’ என்றவளை லட்சுமியின் குரல் தடுத்தது. ‘எத்தனையோ கோபியரில் மேலும் ஒருத்தி...’ என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

‘இளம் வயதில் துக்காதேவி எனக்குப் புரியாத புதிராக இருந்தாள். பட்டத்தரசியாக வந்தவள் ஒரு சக்கரவர்த்தியையே விரும்பாமல் அதிகாரம், செல்வம் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டுப் போய் சந்நியாசினியைப் போல எப்படி வாழ்கிறாள் என்று எனக்கு அப்போது புரியவில்லை. இப்போது உணர்கிறேன், இந்தப் பகட்டுகளுக்கு எந்த அர்த்தமும் இல்லை. அவளைப் பற்றிய என் கற்பனைகள் விரிந்துகொண்டே போகின்றன. நேரில் போய்ப் பார்க்கவேண்டும் என்றிருக்கிறேன்.’

‘நான் அவளைப் பார்த்ததேயில்லை’ என்றாள் செல்லி.

‘இரண்டாண்டுகளுக்கு முன்புதான் ஒருநாள் அப்பாவுடன் தனித்திருந்தபோது தைரியமாகக் கேட்டேன். அவள் ஏன் போனாள் என்று. தன் சகோதரன் தற்கொலை செய்துகொண்ட நகரில் தன்னால் சந்தோஷமாக வாழமுடியாது என்று சொன்னாளாம்.’

‘அவன் ஏன் மடத்தனமாக அப்படி நடந்து கொண்டான்?’ என்றாள் செல்லி.

‘என் ஊகம் - சிறைக் காவலர்கள் முன்னர் சொன்ன கதைகளில் மிரண்டிருப்பான். இங்கு யவன, சீன வாள் பயிற்சியாளர்களும் உண்டு என்று கேட்டிருப்பான். பின் உனது காதலனைப் பற்றிய சாகசக் கதைகள்... அப்போது உனக்கு மணமாகவில்லை அல்லவா?’

‘ஆம். ரத்னகிரிப் போருக்கு முந்தைய ஆண்டு. உன் அருகில்தானே நானிருந்தேன். வீரபத்ரா பெரிய வாள் வீரன் என்று கேள்விப்பட்டுத் தானே விஜயதசமி அன்று பாவா அந்த யோசனையைச் சொன்னார். அவன் ஒப்புக்கொண்டுதானே சிறையிலிருந்து வந்தான். போட்டிக் களத்தில் ஏறியபின் அவன் அதைச் சொல்லியிருக்கக்கூடாது. அரச குலத்தினரோடு மட்டும்தான் சண்டையிடுவேன் என்று அவன் சொன்னது என் கணவருக்கு...அல்ல, காதலனுக்கு நேர்ந்த முதல் அவமானம். அதை எண்ணி எண்ணி அப்போது எத்தனை இரவுகள் வேதனைப்பட்டிருப்பேன் தெரியுமா? அவன் தாத்தா கபாலீஸ்வரன் மந்திரியாக இருந்தவன்தானே! அரசன் பானு தேவனை ஏமாற்றி பிறகு விரட்டிவிட்டு ராஜாவானான். கபாலீஸ்வர கஜபதி என்று முடிசூடிக்கொண்டான். இதில் எவன் சத்திரியன்?’

‘சிறைப்பட்ட ஒரு இளவரசனின் மனநிலையிலிருந்து தான் இதைப்பார்க்க வேண்டும். மனதாலும், உடலாலும் நைந்து போயிருந்திருப்பான். உண்மையிலேயே அப்பா கலிங்கர்களை மேலும் மானசீகமாகத் தோற்கடிக்க வேண்டுமென்றுதான் நினைத்திருப்பார். தைரியம் இருந்திருந்தால் இவரல்லவா அவனோடு சண்டையிட்டிருக்க வேண்டும். அதுதானே நியாயமான போட்டி.’

‘என்றாலும் வென்றிருப்பான் என்று சொல்லமுடியாது. உனக்குத்தான் தெரியுமே, வாள் வீச்சில் வித்தையைவிட கவனமும் அதைவிட மனஉறுதியும்தான் முக்கியம்.’

‘துக்காதேவியைப் பற்றி அவளிடம் தாதியாக இருந்த ஒரு அவ்வாவிடம் விசாரித்துப் பார்த்தேன். பேசவே மாட்டாளாம். அசோக வனத்துச் சீதை போலிருப்பாளாம். மொத்தமே அப்பா மூன்று முறைதான் சந்தித்திருக்கிறார்; அதுவும் உடனே திரும்பிப் போய்விட்டாராம். அந்த அவ்வாவுக்கு உண்மையிலேயே வேறெதுவும் தெரியவில்லை. என்றால், அவள் கன்னி கழியாமலே திரும்பிப் போய்விட்டாள். இன்றும் துறவியாக வாழ்கிறாள்.’

‘என் கணவருக்கும் அவள் மேல் மிகுந்த மரியாதை உண்டு’ என்றாள் செல்லி.

**‘ஸ்ரீ**சைலத்தில் தங்கும் உத்தேசத்துடன்தான் போனாளாம். கலிங்கத்திலிருந்து அவள் கொண்டுவந்த சீதனம் எதையும் எடுத்துப் போகவில்லையாம். அப்பா தக்க பாதுகாவலர்களோடுதான் அனுப்பியிருக்கிறார். கம்பம் என்ற இடத்தில் தங்கியபோது மேலும் போக விரும்பாமல் அங்கேயே நிரந்தரமாக இருந்துவிட்டாள். பத்தாண்டுகளுக்கு முன் கடப்பை வறண்ட மண்டலமாக இருப்பது கண்டு அங்கெல்லாம் ஏரிகள் தோண்டும் ஏற்பாட்டில் இறங்கிவிட்டாள். அதற்காக அப்பா அவளது சீதனச் செல்வத்தைக் கொடுத்ததோடு மேலும் மேலும் உதவிகள் செய்கிறார். அவள் ஆசிரமத்தில் இருக்க, அவளைச் சுற்றியுள்ள ஊர்களிலெல்லாம் வீரர்களை மக்களோடு கலந்து அவளுக்கான பெரும் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கியிருக்கிறார். அவளைப் பற்றி எழுதப்போகிறேன், அதற்காகப் பார்க்க வேண்டும் என்றேன். அப்பாவுக்கு அவள்மீது மதிப்புதான். பேச்சில் தெரிகிறது. நீ யார் என்று காட்டிக்கொள்ளாமல் புலவர் என்று மட்டும் சொல்லிப் போய்ப் பார் என்றிருக்கிறார் அப்பா. இதையெல்லாம் என் கணவருக்குப் புரியவைப்பது பெரியபாடு, சண்டை, அரண்மனை யுக்திகளைத் தவிர வேறு எதுவும் அவர் மண்டையில் ஏறாது. அவர் எங்காவது நீண்ட பயணம் போகும்போது தான் இதைச் செய்யவேண்டும். நீயும் என்னோடு வா.’

‘சரி. போவோம். அவள் நல்ல மனுஷி; குளங்கள் வெட்டி மக்களுக்குச் சேவை செய்துகொண்டிருக்கிறாள் என்றுதான் என் கணவரும் சொல்லியிருக்கிறார்’ என்று செல்லி சொல்லிவிட்டுத் தன் கதைக்கு வந்தாள், ‘லட்சுமி, பாவா தினமும் அதிகாலையில் ஆற்றில் குளிக்கும் இடத்தில் அவர்களை சந்திக்க வைக்கலாம் என்று நினைக்கிறேன். என்ன சொல்கிறாய்?’

‘இடுப்பு வலிக்குப் பிறகு வெந்நீர்க் குளியலாம். எப்போதாவது தான்

ஆற்றுக்குப் போவாராம். ஆனாலும், நீ சொன்னால் கேட்பார்.'

'அப்படியானால் இப்போதே நாகலாபுரத்திற்கு ஆள் அனுப்பினால்தான் அவர்கள் கிளம்பி அதிகாலையில் அங்கு வரமுடியும்.'

இருவரும் கீழே வந்தனர். காவல் பெண்டுகளின் தலைவியை அழைத்து, ஐந்து பெண்களைக் குதிரைகளோடு இந்த வேலைக்குப் பணித்தனர்.

'செல்லி, இனி நீயும் தூங்கப் போவதில்லை, என்னையும் தூங்கவிட மாட்டாய். வா, நீராழி மாளிகையில் போய் நீந்திக் கொண்டிருக்கலாம்.'

குதிரைகளில் ஏறி அகக்கோட்டையிலிருந்து வெளியேறி அரண்மனை யானைக் கொட்டிலையும் இருமாடக் குதிரை லாயங்களையும் கடந்து சென்றனர். செல்லியின் மாளிகையைத் தாண்டித்தான் போகவேண்டும். அங்கு போய் முற்றத்தில் குதிரையை நிறுத்தினாள். நான்கு காவல் வீரர்கள் நின்றிருந்தனர். அரவம் கேட்டு தாதி வந்து கதவைத் திறந்தாள்.

'அத்தை எங்கே?'

'பூஜை அறையில்.'

இவர்கள் பேச்சுக்குரல் கேட்டவுடன் அந்த அம்மா எழுந்து எதிரே வந்தார்கள்.

'ஒன்றுமில்லை அத்தை. காலை உணவுக்கு மாமா வந்துவிடுவார். நீங்கள் போய் நிம்மதியாகத் தூங்குங்கள்.'

'வாடி, அவனைப் பார்ப்போம்' என்று லட்சுமி செல்லியோடு உள் அறைக்குள் போனாள். கிருஷ்ணன் அலங்கார மரத்தொட்டியில் தூங்கிக்கொண்டிருந்தான். பாட்டி விலகியிருந்த துணியை நன்றாகப் போர்த்தியவாறு சொன்னாள் 'முழித்தவுடன் உன்னைத் தேடி அழுதான். பாலைக்கொடுத்துத் தூங்க வைத்திருக்கிறேன்.'

ஒருநூறு தடவை சொன்ன வார்த்தைகளை லட்சுமி மீண்டும் சொன்னாள் 'அசலாக அவரைப் போலவே இருக்கிறாண்டி!'

கிளம்பி நீராழி மாளிகைக்கு வந்தார்கள். திருமலா தேவிக்கு மட்டுமே உரிய நீராழி இது. வேறு யாரும் நுழைய முடியாது. சென்னா தேவிக்கென்று தனியே இருந்தது. பிற நாயகியருக்கெல்லாம் ஒரு குளம். லட்சுமியின் தங்கை திருமலையம்பிகை பகல் நேரத்தில் மட்டும்தான் தோழிகளுடன் இங்கு வருவாள். லட்சுமி இரவு-பகல் எந்நேரமும் இதிலே கிடக்கப் பிரியப்படுவதால் காவல் பெண்டிருக்குப் புறமே சில தாதிகளும் இரவில் காத்திருப்பர். வெளியில் இருந்து பார்த்தால் அது அலங்கார மாளிகை போலவே தோன்றும். கிழக்கு வாயிலில் லட்சுமி நுழைந்தவுடன் தாதிகள் விரைந்து அணுகினர். உதவி தேவையில்லை என்றவள் சுற்று மண்டபத்தைக் கடந்து சுதைத் தூண்களினூடே மேற்குப் படிகளில் இறங்கி உடைகளைக் களைந்தாள். நாற்புறமும் மண்டபம் சூழநீருக்கு மேலே வெற்றுவெளி. சிறுமியாய் நீச்சல் கற்றது இங்கேதான். லட்சுமி செல்லியோடு நிலா இரவுகளில் ஓராயிரம் முறையாவது இங்கி மிதந்து கிடந்திருப்பாள். இதைவிட அவளுக்குப் பெருவிருப்பம் துங்கபத்ரை நிறைந்தோடும் நிலாப் பொழுதுகளில் அதில் நீந்திக் களிப்பதுதான். விஜயநகருக்கு மேற்கேதான் பாறைகள் மிகுதி. அதுதான் இவர்களின்

ஆடுகளம். படகுகளிலும், கரையிலும் நூற்றுக்கணக்கில் காவல் பெண்டிர் துணை நிற்க, வெளியே வரவே மனமின்றித் தோழிகளுடன் பொழுது களியும்.

லட்சுமி குதித்து நீந்தி யாளியை நோக்கிப் போனாள். செல்லி தொடர்ந்தாள். யாளியின் தூம்பு வாயிலிருந்து ஆற்று நீர் கொட்டிக்கொண்டிருந்தது. வெளியேறும் நீர் சோலைகளின் வழியே சென்று மீண்டும் கால்வாயில் சேர்ந்துவிடும்.

நீர்த்தாரையிலிருந்து தலையை விலக்கிய லட்சுமி சொன்னாள் 'எனக்குப் பயமாக இருக்கிறதடி. அப்பா உடல் தேறி வரவேண்டுமென்று நான் வேண்டாத தெய்வமில்லை. மகனை இழந்தது தான் அவரை மிகவும் பாதித்துவிட்டது. சென்னா சுருண்டு கிடக்கிறாளாம். ஏன் அவ்வளவு கவனமில்லாமல் இருந்தாள்? தாதிகளின் பொறுப்பிலேயே பிள்ளையை விடுவது எவ்வளவு ஆபத்து பார்த்தாயா? எப்படி இறந்தான் என்று புரியவில்லை. ஏதோ மர்மம் இருக்கிறது. அதனால்தான் தாதிகளை மாற்றிவிட்டனர்.'

'இயற்கையான மரணமில்லை என்றுதான் எனக்கும் தோன்றுகிறது.'

'இனி பிற்காலத்தில் என்னை அரசியாக்கிவிட அப்பாவுக்கு உள்ளூர ஆசை. ஆனால், என் கணவரை அவருக்கு அறவே பிடிக் கவில்லை. காலசூரி இளவரசன் என்று கருதி முடிவெடுத்துவிட்டு, அப்பா இப்போது வருந்துகிறார். மணமாகாமலே இருந்திருக்கக்கூடாதா என்று ஏங்குகிறேன். இப்போதுள்ள தெளிவு பத்தொன்பது வயதில் இருந்திருந்தால் நான் சம்மதித்திருக்க மாட்டேன். உன்னைப் போலவே விரும்பியவனைத் தேர்ந்திருப்பேன்.'

'இனி என்ன செய்வது? அமைதியாக இரு. சஞ்சலம் ஏற்படும் போதெல்லாம் படித்துக்கொண்டேயிரு.'

'உன்னைத் தவிர யாரிடமும் பேசவே பயமாக இருக்கிறதடி. யாரை நம்புவது? எனக்கே இப்படி என்றால் அப்பாவுக்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கும்! இந்தத் திம்மரசுவைப் பார், ஐம்பது வருடங்களாக மந்திரியாக இருந்தவருக்கு இப்போது என்ன கேடு?'

'பணப் பிரச்சினையில்லை இது. வேறு ஏதோ சிக்கல் இருக்கிறது' என்றாள் செல்லி.

'கடைசிவரை அப்பாவின் பிரியத்துக்கு உரியவராகத்தான் இருந்தார். சிறைத்தண்டனை கொடுப்பதென்றால் அதிகபட்சக் குற்றமாக இருக்கும். சுல்தான்களோடு தொடர்பு இருந்திருக்கும். வேறென்ன? என் கணவருக்கே என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர் தன் தம்பியோடு பேசிக்கொண்டிருக்கும்போது கேட்டேன். புரியாமல் குழம்பிக்கிடக்கிறார்கள். சமீபத்தில் ஒருநாள் அவனிடம் பேசும்போது இவர் உற்சாகமாகக் கத்தினார். 'அவன் ஆடுன ஆட்டத்துக்கு குருட்டுப் பயலா இப்ப சுவரத் தடவிக்கிட்டு கிடக்கட்டும்' என்றார். பெனுகொண்டாவில் உள்ள இவர்கள் ஒற்றர்கள் மூலம் செய்தி வந்திருக்கிறது போல.'

'இப்படி விவகாரங்களில் அதிகம் தலையை நுழைக்காதே. நிம்மதிபோய்விடும். உன்னிடம் பொறுப்பு வந்தால் வேறு விஷயம்.'

‘சரி. அப்பாவிடம் பேசும்போது அடக்கமாகப் பேசு. அவரே நொந்து போயிருக்கிறார். வாய்த்துடுக்காகப் பேசாதே.’

செல்லி சிரித்துவிட்டாள். வெகுநேரம் பேச்சு வேறு வேறு விஷயங்களைத் தொட்டு ஓடிக்கொண்டிருந்தது.

தலைக்கோழிக் கூவல் கேட்டதும் அவசரமாக மேலே ஏறினர். மாற்று உடைகளுடன் வந்த தாதிகள் தலைகளைத் துவட்டிவிட்டனர்.

திரும்பி வந்தபோது, நாகலாபுரத்திற்கு செய்தி கொண்டுபோன பெண்கள் வந்திருந்தினர். குதிரையிலிருந்து இறங்காமலே நேரே ராயரிடம் போனார்கள். கனகதுர்காவின் முற்றத்தில் லட்சுமியைக் கண்ட திருநங்கைகள் ஆச்சரியமுற்று, ஒடுங்கி பவ்ய பாவனை காட்டினார்கள். தலைமைக் காவலாளி ஓடிவந்து அரசர் இன்னும் எழவில்லை என்றாள்.

கேள்விற்குறியோடு பார்த்த லட்சுமியிடம் ‘கதவைத் திறக்கச் சொல்’ என்றவாறு செல்லி குதிரையிலிருந்து குதித்தாள்.

‘கதவைத் திற’ என்று லட்சுமி உத்தரவிட கதவு திறந்தது. உள்ளே செல்லி மறைந்தவுடன் குதிரையைத் திருப்பிக்கொண்டு லட்சுமி போனாள்.

உள்ளே காவலிலிருந்த திருநங்கைகள் ‘இங்கேயே காத்திருங்கள். விடிந்தபிறகுதான் அரசர் எழுந்திருப்பார்’ என்றனர்.

‘அவர் இருக்கும் அறையைக் காட்டு’ என்றாள் செல்லி உறுதியான குரலில்.

அவர்கள் சற்று விலகித் தங்களுக்குள் மெதுவாய் பேசிக்கொண்டிருந்தபோது செல்லி கூடத்தைத் தாண்டி மாடிக்குச் செல்லும் படிகளை நோக்கிப் போனாள். அவர்கள் தடுக்க முயலாமல் அவளைத் தாண்டி மேலே சென்றனர்.

மேலே போனதும் அவளைக் கெஞ்சி அருகே உள்ள ஆசனத்தில் அமர வைத்துவிட்டனர். வயதான ஒருத்தி மட்டும் தயங்கியவாறு ஒரு கதவை ஓசைப்படாமல் திறந்து உள்ளே நுழைந்தாள்.

சற்று நேரத்தில் தூக்கம் கலையாத விழிகளோடு ஒருத்தி வந்தாள். கனகதுர்காவாக இருக்கும்.

‘லட்சுமியம்பிகையின் தோழி’ என்று ஒருத்தி அறிமுகப் படுத்தினாள்.

‘விஸ்வநாதனின் மனைவி. உடனே நான் பாவாவைப் பார்க்கவேண்டும்.’

அவள் புன்முறுவலோடு வணங்கினாள்.

‘எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்களே எழுப்புங்கள்’ என்றவாறு இவளை அழைத்துக்கொண்டு முன்னே நடந்தாள். உள்ளே போனதும் கனகதுர்கா விளக்கைத் தூண்டிவிட்டாள்.

ராயரின் மஞ்சத்தை நெருங்கிய செல்லி அவர் காலடியில் நின்று பாதத்தைப் பற்றி மெல்ல அசைத்தாள் ‘பாவா...’

அசைவில்லை.

கனகதுர்கா செல்லியின் தோளைத் தொட்டுப் பொறுக்கச் செல்லிவிட்டு

வீணையை எடுத்துக்கொண்டு அமர்ந்தாள். இசை எழுந்து, உடனே உச்சஸ்தாயியைத் தொட்டது. புரண்டு படுத்த ராயர் எரிச்சலுடன் ‘தூங்கும்போது என்ன வீணை...’ என்று கத்தினார்.

‘பாவா...’

திரும்பிப் பார்த்தார்.

உடனே எழுந்து அமர்ந்துகொண்டு ‘செல்லீ... வா வா! காலையில் வருவாய் என்றல்லவா எதிர்பார்த்தேன். இப்படித்தான் இருக்கவேண்டும். கெட்டிக்காரி! பொழுது என்ன?’ என்று கேட்டுச் சிரித்தார்.

‘விடியப் போகிறது.’

‘நீ அமர்ந்திரு. இதோ வருகிறேன்’ என்று சொல்லிவிட்டு எழுந்து உள் அறைக்குப் போனார்.

நகர்ப்புறத்தில் எல்லாத் திசைகளிலிருந்தும் விட்டுவிட்டு சேவல்கள் கூவின. பறவைகள் எழுந்து கலையும் உற்சாக ஒலிகள்...

கனகதுர்கா ஏதோ பானத்துடன் வந்து வெள்ளிக் கோப்பையை நீட்டினாள். இவள் மறுத்தாள். அவள் புன்னகையுடன் நீட்டியபடியே நகராமல் இருந்தாள்.

இவள் குடித்துக்கொண்டு அமர்ந்திருந்தபோது ராயர் வந்து இவள் முன்னே நின்றார். கனகதுர்கா விலகி அறையை விட்டு நீங்கினாள்.

‘மதுரை மகாராணியின் ஆணை என்னவோ!’ என்று சொல்லிவிட்டு கடகடவென்று சிரித்தார்.

‘மாமா என்ன குற்றம் செய்திருந்தாலும் சரி, நீங்கள் மன்னித்து விடுதலை செய்ய வேண்டும்.’

‘உத்தரவு!’

‘பாவா, எப்போதும் போல என்னிடம் வேடிக்கையாகவே பேசுகிறீர்கள். இது என் முதலும் கடைசியுமான வேண்டுகோள். மாமா பாடுபட்டதற்காக அவரை மன்னிக்கக் கூடாதா?’

‘செல்லியின் சொல்லை இந்த மண்ணில் மறுப்பவன் எவன்?’ குரல் உரத்தது.

‘பாவா! என்னை விடுங்கள். நீங்கள் மன்னிக்கக் கூடாதா?’

‘சரி. நாளை சபையில் விசாரிக்காமலே தீர்ப்பைச் சொல்லி விடுகிறேன். போதுமா?’

குடித்த கோப்பையைக் கீழே வைத்துவிட்டு செல்லி எழுந்து நின்றாள்.

‘ராஜத்துரோகம்... தளபதியைச் சிறைப்பிடித்து வந்த தனயன்...ராஜபக்தி... வியந்து நிற்கும் சபை... பாராளும் ராஜா... அவரே கவிஞராக இருக்கும்போது எழுதிக்கொண்டாட இதைவிட நல்ல கதை வேறு உண்டா? அல்லது தந்தையின் பெருமை துலங்க மகள் எழுதுவாள்...’

‘நீயே எழுதலாம் என்றல்லவா தோன்றுகிறது!’

‘பாவா! என் குடும்பத்தின் கௌரவம் சந்திக்கு வருவதை நான்

விரும்பவில்லை.'

'அடுத்து...' சிரிப்பு மாறாமலே ராயர் கேட்டார்.

'நீங்கள் அவரைத் தனியாகச் சந்திக்க வேண்டும்.'

'அடுத்து...'

'இப்போதே.'

'ராஜாங்கக் காரியங்களை ராத்திரியிலா கவனிப்பது என் சுட்டிப்பெண்ணே? இடுப்பொடிந்த கிழவனை என்ன பாடு படுத்துகிறாய்?'

'மக்களுக்கு நீங்கள் முக்கடல்களை ஆளும் சக்கரவர்த்தியாக இருக்கலாம். ஆனால், எனக்கு பாவா தானே!'

'பின்னே...! குழந்தையாய் நீ என் உடையை நனைத்திருக்கிறாய். இப்போது உன் மகனும் நனைக்கிறான். ஒரு தாத்தனுக்கு வேறு என்ன வேண்டும்?'

ராயர் கிளம்பி வெளியே இறங்கியபோது புலர்ந்து கொண்டி ருந்தது. அரண்மனை வளாக மாளிகை முற்றங்களில் எல்லாம் தாதிகள் நீர்தெளிப்பதும் கோலமிடுவதுமாக அந்நாள் துவங்கி விட்டிருந்தது. மாக்கோலத்தின் மீது மலர்களை வைத்துக் கொண்டிருந்த பெண்கள் வணங்கி வழிவிட்டு விலகினர். கோலத்தின் அழகைப் பார்த்துக் கொண்டே ராயர் அதைச் சுற்றி வந்து குதிரையில் ஏறினார். செல்லியும் அவரும் மதில் வாசலை எட்டும் முன்பே இன்னொரு குதிரை விரைந்து வந்து அவர்களோடு இணைந்துகொண்டது.

'அப்பா... வலி எப்படியிருக்கு?'

'லட்சுமி! வா வா... ஆஹா! இது தோழிகள் சதியல்லவா...'

அரண்மனைக் கோட்டையை விட்டு அவர்கள் வெளியேறியதும் மெய்க்காவலர் ஐம்பதின்மர் குதிரைகள் மரியாதையான தூர இடைவெளியோடு பின்தொடர்ந்தான். முன்பெல்லாம் அவர் ஆற்றிலிருக்கும் நேரம். இது முதல்கோழி கூவும்போதே எழுந்து உடற்பயிற்சிக்குப் பின் குதிரையேறி, தோன்றிய திசையில் ஏதாவது தெருக்களில் போய் கோட்டை வாசல்களைக் கடந்து ஆற்றில் எங்காவது போய் இறங்குவார். சமயத்தில் நாகலாபுரம் வரை போய்ச் சுற்றிவிட்டு வருவதுண்டு. அது அவர் கனவு நகரம். அம்மாவின் பெயரில் உருவாக்கியது. நாகலாதேவி. ஏரின் அதிதேவதை! விஜயநகரில் ராயர் இருந்தால் அதிகாலையில் ஆற்றுக்குளியல்தான். இடுப்புவலி வந்தபிறகு வாரம் ஒருமுறைதான் போகிறார். அவர் தந்தை நரச நாயக்கருக்கு ஐம்பது வயதுக்கு மேல்தான் வலி வந்தது. இப்போது ராயருக்கு வயது 41 தான்.

'பாவா, குறுக்கே போய்விடலாம். அலைய வேண்டாம்' என்று செல்லி மஹாகணபதி அருகே குதிரையை மேற்கே திருப்பி ஏமகூடப்பாறையில் ஏறினாள். ராயருக்கு இடதுபுறம் லட்சுமியின் குதிரை.

'மகிழ்ச்சியில் துள்ளுகிறது மனம். வெகுகாலத்துக்குப் பிறகு இன்றுதான் நிறைவான ஒரு புலரியைப் பார்க்கிறேன்.'

லட்சுமி ஓரக்கண்ணால் செல்லியைப் பார்த்துச் சிரித்தபடியே கேட்டாள்

‘நரி முகத்தில் முழித்தீர்களா அப்பா?’

‘என்னடி, அப்பாவும் மகளும் சேர்ந்து நரிவிருத்தம் பாடுகிறீர்கள்?’ என்று மடக்கினாள் செல்லி.

‘ஸ்ரீதேவி தரிசனம்! லட்சுமி, இன்று நமக்கு செல்லி வீட்டில் விருந்து. மதுரை மகாராணியின் கைகளால் சாப்பிட எப்போது இனிமேல் வாய்க்குமோ!’

செல்லி எதுவுமே பேசாமல் அமைதியாக வந்தாள். ராயர் சொற்களின் அர்த்தத்தை கிரகித்தவுடன் லட்சுமி சந்தோஷத்தால் துள்ளினாள் ‘அப்பா...!’ குதிரையை விலக்கி செல்லி அருகே போய் அவள் சடையைப் பற்றி இழுத்தாள். ‘ஏனடி, என்னை விட்டுப் போய்விடுவாயா? மறந்து விடுவாயா? பழைய தோழியை ஞாபகம் வைத்திருக்க மகாராணிக்கு நேரம் இருக்குமா? எனக்கு அழைப்பு உண்டா ராமர் பட்டாபிஷேகத்துக்கு?’ என்று அடுக்கிக்கொண்டே போனவளை ‘சும்மாஇருடி’ என்று அடக்கினாள் செல்லி.

தோரண வாயிலைக் கடந்து மேலேறிச் சென்ற குதிரைகள் விருபாஷர் கோட்டையில் இருநிலை மாடக் கல்வாயிலைக் கடந்து மேற்கே திரும்பி ஏம கூடப்பாறையின் உயரே நடந்தான். கோட்டைச் சுவர் அருகே குதிரையை நிறுத்திவிட்டு, ராயர் வடக்கே பார்த்தவாறிருந்தார்.

வைகரையில் உருவங்கள் துலங்கி நிறமேறிக் கொண்டிருந்தன. முழுநிலவை மிஞ்சிய மீயொளி வெளியெங்கும் பாறைகளில் படர்ந்திருந்தது. கீழே தூரத்தில் துங்கபத்ரை. நிலமெங்கும் கொத்துக் கொத்தாகக் கனிகளைப் போலக் கறகள் விளைந்திருந்தன. இயற்கையின் லீலை! அதற்கு இணையாக ஏமகூடச் சரிவெங்கும் ஏராளமான கற்கோயில்கள். மனிதன் அழகைப் பிரதியெடுக்கவே விழைகிறான்!

கீழே குன்றின் அடிவாரத்தில் விருபாஷர் ஆலயக் கோபுரத்திலிருந்து எழுந்த புறாக்கூட்டம் வட்டமடித்து ஆற்றை நோக்கிப் போயிற்று. விஜயநகரின் முதல் கோட்டையும், கோயில்களும் இவைதாம்.

கோட்டை வாயில்களையெல்லாம் கடந்து ஆற்றின் தென்கரை ஓரமாகவே மேற்கே சென்றனர். ஒரு கல் தொலைவு தாண்டிய பின் அவர்கள் நின்றிருப்பதைக் கண்டனர். ஐந்து பேர் மட்டும் நின்றிருந்தனர். குதிரைகள் கரையோரமாக இருந்தன. நாகமரும் முத்தைய நாயக்கரும் பேசிக்கொண்டிருந்தனர். சற்றுத் தள்ளி கேசவன், அரியநாதனுடன் நின்றிருந்தான் விஸ்வநாதன்.

அருகே சென்றதும் ராயர் குதிரையை நிறுத்தினார். செல்லியும், லட்சுமியும் குதிரையிலிருந்து இறங்கி நின்றனர்.

ராயர் குதிரையில் இருந்தபடியே கேட்டார் ‘நாகமரே, நலமா?’

‘ஏதோ இருக்கிறேன்.’

‘உங்கள் தலைமையில்தான் எனது பதினேழாவது வயதில் கலிங்கர்களை விரட்ட கோதாவரிக்குப் போருக்கு வந்தேன். நினைவிருக்கிறதா?’

‘எனது பத்து வயதில் உங்கள் தாத்தா ஈஸ்வர நாயக்கரைப் பார்த்ததும்

நினைவில் இருக்கிறது.’

‘அறுபதாண்டுகளாக விஜயநகருக்காகப் போரிட்டிருக்கிறீர்கள். அதைக் காப்பாற்றியதிலும் வளர்த்ததிலும் உங்களுக்குப் பெரும் பங்குண்டு. இப்போது ஏன் அதற்கு எதிராக நிற்கத் துணிந்தீர்கள்?’

‘போரிட்டுச் செத்து மடிந்துகொண்டிருக்கும் எம் மக்களின் பிள்ளைகள் நடமாடக் காணி நிலம் வேண்டுமென்று தான்.’

‘யாருக்காகப் பேசுகிறீர்கள் நாகமரே! மக்கள் சுபிட்சமாக இருக்கிறார்கள். விஜயநகரம் இன்று வளம் கொழிக்கும் பேரரசு.’

‘கொல்லவாருகளின் ரத்தத்தை உரமாக்கி விளைந்தது இந்த வளம். ராயரே, இது கொல்லவார் சீமை.’

‘வலிமையின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டுதான் வரலாறு ஊசலாடுகிறது நாகமரே. நரசிம்மரும், நரச நாயக்கரும் இல்லாதிருந்தால், விஜயநகருக்கும் தேவகிரியின் கதி வாய்த்திருக்கும். தேவகிரி அகமது நகர் ஆகிப்போனதுபோல் பெயரும் மிஞ்சியிருக்காது. நமக்குப் பதில் இதே இடத்தில் சுல்தான்கள் பேசிக் கொண்டிருந்திருப்பார்கள். ஆனால், இன்று கோவாவிலிருந்து கன்னியாகுமரி வரை இந்நாடு பரந்திருக்கிறது. இதில் கொல்லவாருக்கு மட்டும் தனி நியாயத்திற்கு என்ன செய்வது நாகமரே...உங்களைப் போல சேனாதிபதிகளும், ஆளுநர்களும் விருப்பம் போல நடந்து கொண்டால் பிறகு அரசு என்று ஒன்று நிலைக்குமா?’

‘உங்கள் தந்தை செய்ததையேதான் நானும் செய்தேன் ராயரே...’

‘அவர் இணைத்துக் கட்டினார். நீங்கள் உருவி எடுக்கிறீர்கள். இது ராஜத்துரோகம் அல்லவா?’

‘இல்லை. அந்தக் குற்றச்சாட்டுக்கு உரியவர் சாளுவரிடமிருந்து நாட்டை அபகரித்த உங்கள் அண்ணன்தான்.’

ராயரின் முகம் சிவக்கக் கண்ணில் கோபம் எரிந்தது.

‘நாகமரே, உங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் மன்னித்து விடுதலை அளிக்கிறேன்.’

‘நான் தவறு ஏதும் செய்யவில்லை.’

‘குற்றத்தைவிட, அதை ஒப்புக்கொள்ள மறுப்பது அதிக தண்டனைக் குரியது.’

‘தலை வணங்கித் தண்டனையை ஏற்கப் பிறந்தவனல்ல நாகமன். ரத்தம் சிந்தியே மடியப் போகிறவன்.’

‘விஜயநகரச் செங்கோலின் பேரில் ஆணையிடுகிறேன். இது துரோகத்துக்கான தண்டனை. கேசவா... அவர் தலையை எடு.’

கேசவன் பதறிப்போய், யார் முகத்தையும் பார்க்காமல் தலை குனிந்து நின்றான்.

‘கேசவா...’ என்று மீண்டும் ராயர் கத்தினார்.

ஒரு வாள் உருவப்படும் உலோக ஒலி கேட்டது. விஸ்வநாதன் நாகமரை நோக்கி வந்தான்.

முத்தைய நாயக்கர் பாய்ந்து அவன் காலில் விழுந்து அதை பற்றிக் கதறினார் ‘என்னை வெட்டு… என்னை வெட்டு…’

செல்லி ஓடிப்போய் அவன் கையிலிருந்த வாளைப் பிடுங்கினாள். திரும்பி ராயரைப் பார்த்து கடும் சினத்தோடு கத்தினாள் ‘பாவா…’

அக்கணத்திற்குப் பிறகு விஸ்வநாதனின் உடல் நடுங்குவதை உணர்ந்தாள். வலக்கையில் வாளோடு இடது கையால் அவனை இறுக்கியவாறு மார்பில் சாய்ந்தாள்.

குதிரையிலிருந்து இறங்கிய ராயர் நாகமரை நெருங்கினார். எல்லோருக்கும் கேட்குமாறு குரல் உரத்துச் சொன்னார் ‘தட்சிண மண்டேலேஸ்வரராக நாகமரே நீடிப்பார். காவிரிக்குத் தெற்கே உள்ள அரவநாட்டை விஸ்வநாதனுக்குத் தருகிறேன்.’

முத்தைய நாயக்கர் எழுந்து உடல் குறுகிக் கண்ணீரோடு ராயரையும், நாகமரையும் பார்த்துக் கும்பிட்டபடி நடுங்கினார்.

குதிரையின் கடிவாளத்தைப் பற்றியவாறு அரண்டு உறைந்து நின்றிருந்த லட்சுமி தன்னிலை மீண்டு செல்லியையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

விஸ்வநாதனை அழைத்துக்கொண்டு தன் குதிரை அருகே வந்த செல்லி அதில் ஏறி விஸ்வநாதனுக்காகக் கை நீட்டினாள். அவனும் ஏறியவுடன் குதிரையைத் திருப்பி கிழக்கே கோட்டையை நோக்கி விரட்டினாள்.

அந்தக் குதிரை தூரத்தில் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தவாறே ராயர் சொன்னார் ‘உங்கள் மகன் என்பதைவிட, விஸ்வநாதன் என் சீடன் என்று நிரூபித்துக் காட்டவே முயன்றேன். அகந்தை என் கண்ணை மறைத்தது. செல்லி என்னை முறைத்தபோது தான் புத்தி திரும்பி வந்தது. அவன் அவள் காதலன் என்பதே முதல் உண்மை. அதோ பாருங்கள்…’

லட்சுமி குதிரையில் ஏறி நாகலாபுரம் பாதையை நோக்கிப் போனாள்.

மற்றவர்கள் இலகுவாகி அந்த இடத்திலிருந்து விலகித் தங்கள் குதிரைகளின் அருகே சென்றனர். ஆட்கள் அகன்றதும் ராயர் சொன்னார் ‘வருந்துகிறேன் நாகமரே. இதை மறந்து விடுங்கள்.’

‘மன்னித்து விடு கிருஷ்ணா. அரசியல் சூதாட்டத்தில் எல்லோரும் செய்வதுபோல நானும் புத்திமோசம் போனேன். வெள்ளத்தில் இறங்கிவிட்டால் என்ன செய்வது? அப்புறம் இந்த கௌவரப் பிரச்சினை…’

‘ஆற்றில் குளித்து நாளாகிவிட்டது. வாருங்கள் போவோம்‘ என்று சொல்லிவிட்டு ராயர் நடந்தார். நாகமர் தொடர்ந்தார். ‘நாகமரே, ஆண்டாள் கோயிலைப் பார்த்திருக்கிறீர்களா?’

‘அது வடபத்ர சாயி கோயில்தான். தெற்கே நந்தவனத்தில் சின்னதாக ஆண்டாளுக்கு ஒரு சந்நிதி வைத்திருக்கிறார்கள்.’

‘விஸ்வநாதனிடம் பெரிய கோயிலாகக் கட்டச் சொல்லவேண்டும். கும்பாபிஷேகத்திற்கு வருவேன். அதுவரை வாழ அந்த வேங்கடன் எனக்கு கருணை காட்டவேண்டும்.

‘நீ இருப்பாய் கிருஷ்ணா! கவலைப்படாதே.’

‘விஸ்வநாதன் கூடவே போய் இப்போதே பார்க்க எனக்கும் ஆசைதான். இந்த வலியோடு அவ்வளவு தூரம் பயணம் செய்யமுடியாது.’

‘தேறியபின் போ. ஆமுக்த மால்யதாவில் விஜயநகரை மனதில் வைத்துக்கொண்டு மதுரை நகர்வர்ணனையை வரைந்து தள்ளிவிட்டாய்! மதுரை சின்ன ஊர், தர்மாபுரம் மாதிரி. அப்புறம் ஆண்டாள் கதைக்கு வரும்போது அவரசப்பட்டு சீக்கிரம் முடித்துவிட்டாய்.’

‘காரணம் அதுவல்ல நாகமரே. உண்மையில் ஆண்டாளின் மனதுக்குள்போய் என்னால் பார்க்கமுடியவில்லை.’

ஆற்றில் இறங்கி சின்னச் சின்னப் பாறைகளில் ஏறிக்கடந்து ஆழம் தொடங்குமிடத்தில் ஒரு பெரிய பாறையில் ஏறினர்.

‘கிருஷ்ணா, நீ குளி. நான் வெற்றிலை போடுகிறேன்’ என்று சொன்ன நாகமர் இடுப்பிலிருந்து வெற்றிலைப் பையை எடுத்தார். ‘கிருஷ்ணா, நான் கலங்கித் தெளிந்துவிட்டேன். இனி என்னால் வேலையில் தொடரமுடியாது. ஓய்வெடுக்கப் போகிறேன்.’

‘வேண்டாம். மலையாள நாட்டுக்கு ஆளுநராகச் செல்லுங்கள். நீங்கள் அருகிலிருப்பது விஸ்வநாதனுக்கும் நல்லது’ என்ற ராயர் அவரிடமிருந்து வெற்றிலையை வாங்கிப் போட்டுக்கொண்டார்.

தெற்கே தூரத்தில் கரையில் மெய்க்காவலர்களின் குதிரைகள் நடைபோட்டுக்கொண்டிருந்தன.

‘என் மீது கொள்ளும் நம்பிக்கைக்கு நன்றி கிருஷ்ணா. வயதாகிவிட்டது. இனி முடியாது.’

ராயர் உடைகளைக் களைந்துவிட்டு நீரில் பாய்ந்தார். சற்று தூரம் நீரோடு இழுபட்டுப் போய் பிறகு அதற்கு எதிராக நீந்திவந்தார். மூச்சிளைக்கப் பாறையைப் பற்றிக்கொண்டு நின்றார். கூந்தல் நீரின் இழுவையில் மிதந்து அலைந்தது, காதுக் குண்டலங்கள் மஞ்சள் வெயிலில் தகதகத்தன.

‘நாகமரே, விஸ்வநாதன் தனி அரசே நடத்தட்டும். விஜயநகருக்கு எந்த வரியும் செலுத்த வேண்டாம். தேவைப்படும்போது படை உதவிகளை மட்டும் பரிமாறிக் கொள்வோம். ஆனால், வராகக் கொடியே இருக்கட்டும். அவன் தனியே ஆட்சி செய்கிறான் என்று தெரிந்தால், இன்றிருக்கும் நிலையில் மற்றப் பிரதேச ஆளுநர்களைச் சமாளிக்க முடியாது.’

‘கிருஷ்ணா... அரவ நாட்டிலோ, கர்நாடகத்திலோ இங்கு போலப் பாளையப்பட்டு முறையை இன்றுவரை உருவாக்கவில்லை. உடனடியாக அதற்கு ஏற்பாடு செய். அந்த முறைகள் நம்மையும், ஆந்திரத்தையும் இவ்வளவு போர்களுக்குப் பின்னும் இருநூறு ஆண்டுகளாகக் கீழே சரிய விடாமல் காப்பாற்றியிருக்கிறது. இது உனக்கே நன்றாகத் தெரியும். நான் சொல்ல வேண்டுமென்பதில்லை.’

‘புதிய நிலத்தில் வேற்றுமொழி மக்களுக்கிடையே இதைச் செய்ய முடியவில்லை. சிறிய அளவிலேயே ஆனாலும் படைப்பிரிவையும், அதிகாரத்தையும் அப்படி விட்டுவைப்பதும் ஆபத்தானது. மேலும்,

மையத்தில் அரசன் விவேகியாக இருப்பதுவரைதான் பாளையங்கள் சாதகமானவை. இல்லையேல் கலகத்தையும், குழப்பத்தையும் கட்டுப்படுத்த முடியாது. இங்கே அது வெற்றி பெறக்காரணம் அந்த அமைப்புமுறை அல்ல, குலங்கள்தான். பெருவாரியான ஜனத்தொகை கொண்ட குலங்கள்தான் அதைச் சாதிக்கமுடியும். பொது எதிரியால் ஆபத்து நீடிக்கும் வரை குல ஒற்றுமையும் நீடிக்கும். இங்கே வீட்டுப் பெயர்களின் கீழ்வாழையடி வாழையாகத் தொடரும் போர்வீரர் மரபு பாளைய அமைப்புக்கு சாதகமாகி விட்டது. வேறு சமூகங்களில் அங்குள்ள நிலையை அனுசரித்ததுதான் செயல்படவேண்டும். முன்பு போலவே, இனிமேலும் தெற்கே பெரும் போர்கள் நடக்க வாய்ப்பில்லை. பார்க்கலாம். விஸ்வநாதனிடம் சொல்லுங்கள். காகதிய மகாராணி ருத்ராம்பாளின் மூளையில் உதித்ததல்லவா இந்த பாளையத் திட்டம்! பெண் மனத்தின் சக்தியே தனிதான்! கிழவியான பின்னும் போரிட்டாள். யுத்த களத்தில் மடிந்தாள். அந்த உறுதிதான் இந்தத் திட்டத்தையே உருவாக்கியிருக்கும்! தாய்மையும், ரௌத்ரமும் பெண்ணுக்கே உரியவை!'

காலை இளவெயில் பட்டு ராயரின் முகத்திலிருந்த அம்மைத் தழும்புகள் துலக்கமாகத் தெரிந்தன. பாறையைப் பற்றியபடியே மீண்டும் நீருக்குள் மூழ்கினார். ஒரு நாழிகைக்குப் பின் அவர் தலைதூக்கி நீரை உதறும்போது வாளை உருவும் ஒலி கேட்டது. கண்ணைத் திறந்தபோது நாகமர் கையில் வாளுடன் இருந்தார்.

ராயர் பாறையில் ஏறி அவர் அருகே அமர்ந்து மீண்டும் வெற்றிலை கேட்கும்போது 'கிருஷ்ணா, இதைப் பார்' என்று தன் கையிலிருந்த வாளை நாகமர் கொடுத்தார். வாங்கிப் புரட்டிப் பார்த்த ராயர் மீன் இலச்சினையைக் கண்டார்.

'பாண்டியர் வாள். பெயர் சந்திரஹாசம். மீனாட்சி கோயில் பட்டர்கள் சொன்னார்கள்' என்றார் நாகமர்.

சட்டென்று ராயர் முகம் பிரகாசமானது. 'நாகமரே, இது பற்றி கங்காதேவி எழுதியிருக்கிறாள். மதுரா விஜயத்தில். தளபதி சாளுவ மங்குவுக்குப் பரிசளிக்கப்பட்டது. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்! வரலாறு விநோதமானது. பரிசளித்த சங்கமர்கள் நாட்டை இழந்தனர். பரிசு பெற்ற சாளுவர்கள் சக்கரவர்த்தியாகிப் பின் இல்லாதாயினர். பரிசுக்குரிய பொருளோ வேறு ஏதோ மரபில் வந்தது. நாகமரே, வரலாற்றை மறக்கக்கூடாது என்றதற்காகத்தான் சாளுவர்களுக்கு நன்றியறியதலாக 'சாளுவ கட்டாரி' பரிசை உருவாக்கினேன்' என்று சொன்ன ராயர் கடகடவென்று சிரித்துவிட்டு 'உங்கள் மகன் அந்தப் பரிசும் வேண்டாம் என்று சொல்லிவிட்டான். அவனுக்கு செல்லிதான் வேண்டுமாம். நாகமரே, எனக்கு வாய்த்த மருமகன்களும் சரியில்லை, மகனையும் இழந்துவிட்டு நிற்கிறேன். நீங்கள் எவ்வளவு பாக்கியசாலி தெரியுமா! விஸ்வநாதனை மதுரைக்கு அனுப்பிவிட்டு என்ன செய்யப்போகிறனோ தெரியவில்லை. வாருங்கள் போகலாம். காலையில் உங்கள் வீட்டில்தான் எனக்கு உணவு. பேரனையும் பார்த்து நாளாயிற்று!

*

ஆ

# பாளையப்பட்டு

# 6

**வி**ஸ்வநாதன் தெற்கு வாசல் அலங்கத்திலிருந்து வைகையையே பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. அவன் ஒரு பேரரசின் நிர்வாக அமைப்புகளைக் கண்டு வளர்ந்தவன். நாளும் அரசவை நடவடிக்கைகளுக்குச் சாட்சியாக இருந்தவன். பெரும் யானை மந்தையோடு சேர்ந்து போவது போலத்தான். தன்போக்கில் இயக்கம் நிகழும். இப்போது வழிதவறித் தனித்து வந்த கன்று போலானான்.

மாறவர்மன் காலத்துக்குப் பிறகு மதுரை அரசின் நிர்வாக அமைப்பு சீர்குலைந்து போயிற்று. கடந்த இருநூறு ஆண்டுகளாகப் பொதுப்பணித்திட்டம் என்று எதுவுமே நிகழவில்லை. நிரந்தரமான மைய அரசு அமைப்பு என்று ஏதுமில்லாததால் விஜயநகர ஆளுநர்கள் கைக்குக் கிடைத்த வரிப்பணத்தில் தாம் சுருட்டியது போக மீதியைத் தலைநகருக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். லக்கணன் காலத்தில் இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த எடுத்த ஆரம்ப முயற்சிகளும் அரைகுறையாய் நின்றுபோயின. மதுரையில் மேற்கு மதிலருகே ஒரு சிறிய அரண்மனை இருந்தது. அதிலிருந்த கருவூலம் காலியாக இருந்தது. விஸ்வநாதன் வந்ததிலிருந்து இரு வார காலமாக நாடெல்லாம் சுற்றிப் பார்த்தான். ஆற்றுப்பாசனம் உள்ள விளைநிலங்கள் மிகக்குறைவாக இருந்தன.

கொட்டியம் படைப் பிரிவினர் அனைவரும் அவனோடு மதுரை வரச் சம்மதித்தனர். முப்பதாயிரம் காலாள் வீரர்களும், பதினெட்டாயிரம் குதிரைகளும், முந்நூறு யானைகளும் கொண்ட படை அது. தளபதிகளில் ஏழு பேர் மட்டுமே பாளையக்காரர் அந்தஸ்து உள்ளவர்கள். மூன்று பேருக்கு முதுகல் வட்டத்திலும், நால்வருக்கு சந்திரிகிரி, சித்தூர் பகுதிகளிலும் பாளையங்கள் இருந்தன. நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஆளுக்கு ஒன்றிரண்டு கிராமங்கள் மானியமாக விடப்பட்டிருந்தன. விஜயநகரில் எல்லோரும் அவற்றைத் திரும்ப ஒப்படைத்து வராகன்களாக மாற்றிக்கொண்டனர். குடும்பங்களோடு மாட்டு மந்தைகளையும்

கூட்டிக்கொண்டு அலையலையாகக் கிளம்பி வந்தனர். ஏற்கனவே திண்டுக்கல்லைச் சுற்றி சில்லவார், வல்லக்கவார் கிராமங்கள் உருவாகியிருந்ததால் அதற்கும் வடக்கே காவிரி வரை உள்ள நிலங்களில் ஆங்காங்கே தங்கினர். காடுகளைத் திருத்தி ஊர்கள் உருவாகி நிலைபெற்றபின் பாளைய எல்லைகளைப் பிரித்துக் கொள்ளலாம் என்றிருந்தான் விஸ்வநாதன். கொட்டியம் படைக்கு இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் படை மானியத்தை நிறுத்தக்கூடாது என்பது ராயர் உத்தரவு.

விஸ்வநாதனின் உடனடித் திட்டங்களாக இருந்தவை; முதலில் காவிரிக் கரையில் இருந்த காட்டை அழித்து கால்வாய் அமைத்து விளைநிலங்களாக்குவது. வைகை, தாமிரபரணியிலிருந்து கால் வெட்டுவது, திருச்சிராப்பள்ளி, மதுரை செங்கல் கோட்டைகளை இடித்துவிட்டு பெரிய கல் கோட்டைகள் கட்டுவது. அதுவும் மதுரையின் கோட்டையை ராய்ச்சூருக்கு இணையான இரட்டை மதில் கோட்டையாகக் கட்டவேண்டுமென்ற கனவு இருந்தது. அவன் கண்டிருந்த, போரிட்டு வென்றிருந்த நூற்றுக்கணக்கான கோட்டைகளில் அவனுக்கு மிகப் பிடித்தவை கொண்டவீடும், ராய்ச்சூரும்தான். கடைசி ராய்ச்சூர் போரில்தான் விஜயநகர் போர்ச்சுகீசியரிடமிருந்து விலைக்கு வாங்கிய பத்து பீரங்கிளை முதல்முறையாகப் பயன்படுத்தியது. தொடர்ந்து இரண்டுநாள் அடித்த பிறகுதான் கிழக்கு மதிலில் இறங்க முடிந்தது. அவ்வளவு வலிமையான கோட்டை அது.

இப்போதிருக்கும் நிலையில் இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற இருபது ஆண்டுகள் நிதிக்காகக் காத்திருக்க வேண்டியதிருக்கும் என்று பட்டது. அப்போது கேசவன்தான் அந்த யோசனையைச் சொன்னான். ‘உங்கள் அப்பாவிடம் கேளுங்கள். அவர் சொத்துகள் இனி உங்களுக்கு இல்லாமல் யாருக்கு?’ என்றான்.

‘நான் கேட்க சங்கடமாக இருக்கிறது. அவரைச் சிறைப்பிடித்துச் சென்று இரண்டு மாதம்தான் ஆகியிருக்கிறது.’

‘அவராகக் கொடுத்தால்...’

‘கொடுப்பார் என்றுதான் நினைக்கிறேன். நம் அவசரத்துக்கு ஆகுமா என்று தெரியவில்லை. கிளம்பி வரும்போது பாளையங்களை அமைக்கச் சொல்லிதான் மீண்டும் மீண்டும் சொன்னார்.’

‘நான் போய்க் கேட்கிறேன்.’

‘சரி. ஆனால், ராயரிடம் எதுவும் கேட்கவேண்டாம். நீ மட்டும் போனால் போதும். அரியநாதன் இங்கிருக்கட்டும். நான் தமிழைப் படிக்கும்வரை அவன் துணைதேவை.’

மறுநாள் காலையே கேசவன் கிளம்பிப் போனான்.

இரண்டு வாரங்கள் கழித்து கேசவனிடமிருந்து தூதன் வந்தான். ராயர் அவனுக்கு எழுதிய ஓலையும் லட்சுமி தன் தோழிக்கு எழுதியதும் அவன் கையில் இருந்தன. மேலும் அவன் சொன்ன தகவல்கள் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அளித்தன.

கேசவனைக் கண்டதும் நாகமர் சொன்னார். விஜயதசமி கழிந்ததும்

அவன் அம்மாவை மதுரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு சொத்துகளை ஒப்படைத்துவிட்டு வரவேண்டு மென்றுதான் கருதியிருந்தாராம். கேசவனோடு போய் ராயரைக் கண்டிருக்கிறார். நெல்லூர் பாசனத்தில் உள்ள கொட்டியம் ஜாகிர்களையும், சந்திரகிரி மண்டலத்தின் ஐம்பத்தேழு ஊர்களையும் விஜயநகரம் எடுத்துக்கொண்டு அதன் மதிப்புக்கு வராகன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்த ராயர், செல்லிக்கு தாய்வீட்டுச் சீதனம் என நாகமரை விட அதிகமான செல்வத்தைத் தந்திருக்கிறாராம். விஜயநகரிலிருந்து தனது மாளிகையை அரசிடமே கொடுத்துவிட்டு, விஸ்வநாதனின் தாயை மதுரைக்கு அனுப்பிவிட்டு, நாகமர் கட்டிய வேட்டியுடன் ஆனைகுத்தி உக்ரநரசிம்மர் ஆலயத்தில் போய் இருந்து விட்டாராம்.

‘மாமாவை நான் போய் அழைத்துக்கொண்டு வருவேன்’ என்று துடித்தாள் செல்லி.

‘அம்மா சொல்லியிருப்பாள். அப்படியும் கேட்காதவர் இனி வரமாட்டார். பிடிவாதமானவர். விட்டு விடு. நிம்மதியாக இருக்கட்டும். வருடந்தோறும் விஜயதசமிக்குப் போய் பேரனைக் காட்டிவிட்டு வருவோம்’ என்றான் விஸ்வநாதன்.

**ம**துரையில் கோட்டை எழுப்புவதற்கான திட்டங்கள் கேசவன் வந்து சேருமுன்னே தொடங்கிவிட்டன. கல்கோட்டை கட்டுவதில் பாரம்பரியத் தேர்ச்சி கொண்ட பெனுகொண்டா கம்மாளச் சிற்பிகளுக்கு அழைப்பு போயிற்று. அவனை நன்றாக அறிந்த மூத்த ஆசாரி வேங்கடசுப்புக்கு விஸ்வநாதன் கைப்பட ஓலை எழுதினான். அதவேனி உப்பரர்களையும், குண்டக்கல் ஒட்டர்களையும் மொத்தமாக வரவழைக்க ஏற்பாடாயிற்று.

சிற்பிகள் வந்து சேர்ந்த, பிறகு ஒரு வாரம் திருப்பரங்குன்றம், அமணமலை, நாகமலை, அழகர்கோயில், யானைமலை, திருப்புவனம், பெருங்குடிமேடு, வைகை நதிப்பக்கம் எல்லாம் அலைந்தனர். நில அமைப்பு, பாறைகள், நீர்வாட்டம், வைகை வெள்ள மட்டம் எல்லாவற்றையும் பார்த்து அறிந்து வந்தனர். விஸ்வநாதன் இப்போது உள்ளதை விட இரு மடங்கு விஸ்தீரணத்தில் பெரிதாக இருக்கவேண்டும் என்றும் மதில்களில் 72 கொத்தளங்கள் வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். தச்சுக் கோலால் நிலத்தை அளந்து குறித்து, ஆட்டுத் தோல்களில் தனித்தனியே வரைபடங்கள் தயாரித்தனர். நாகமலையில் கல் உடைக்கும் பணியை ஒட்டர்கள் தொடங்கிவிட்டனர்.

ஏக காலத்தில் மதுரையிலும், திருச்சியிலும் கோட்டை கட்டும் பணி தொடங்கியது. திருச்சியில் கோட்டைக்குள் தெப்பக்குளம் வெட்டுவது கூடுதல் பணி. அத்துடன் ஸ்ரீரங்கம் கோயிலின் மண்டபப் பணியும் தொடங்கியிருந்தது. வரும் கோடையில் காவிரி ஓரம் காடு அழிக்கும் வேலையும் தொடங்கவிருந்தது. விஸ்வநாதன் இரண்டு ஊர்களுக்கும் மாறிமாறி அலைந்தவாறிருந்தான்.

இப்போதுள்ள கோட்டையின் வடக்கு மதில் ஆற்றுக்கு அருகே இருந்ததால் புதிய வடக்கு கிழக்கு மதில்களைப் பழைய கோட்டைக்கு அருகிலேயே வெளிப்புறம் வருமாறு வரைந்தனர். தெற்கிலும், மேற்கிலும் மதில்களை விரிவுபடுத்தியிருந்தனர்.

பழைய கோட்டையின் வடக்கு மதில் இடைஞ்சலாக இருக்கும் என்பதால் முதலில் அதை இடித்து அகழியை மூடும் பணி தொடங் கியது. ஒட்டர்கள் வெடிகளை வைத்துச் செங்கல் மதிலைத் தகர்த்தவுடன், அப்படியே அகழியில் சரித்தனர். பெரும் துண்ட ங்களை சங்கிலியால் கட்டிவிட அகழிக்கு அப்புறமிருந்து யானை கள் இழுத்து அகழிக்குள் தள்ளின. ஐப்பசியில் தொடங்கிய வேலை மார்கழி பிறக்க முடிந்தது. அகழியும், கோட்டையும் இல்லாமலாகி விட்டன. அந்த இடத்திற்கு பாண்டியன் அகழித்தெரு என்று பெயராயிற்று.

1529 மார்கழி அமாவாசை அன்று நள்ளிரவில் புதிய கோட்டைக் கான பூஜை நடந்தது. அது முழுக்க வாலுவக் கொல்லவாரு மந்திரவாதிகளின் வேலை. அதைப் பார்க்க யாரையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. நான்கு வாசல்களிலும் இந்த பூஜைக்காகவே வாணக்கால் தோண்டப்பட்டிருந்தது.

வைகைக் கரையில் மந்திரவாதிகள் 22 பேர் காத்திருந்தனர். நான்கு இளைஞர்கள் வைகையில் குளித்துக்கொண்டிருந்தனர். சக்கிலியர், வெக்கிலியர், சில்லவார், வல்லக்கவார் குலங்கள் தங்களிலிருந்து மணமாகாத ஒருவனைத் தேர்ந்தெடுத்து மதுரைக் கோட்டைக்குத் தாரை வார்த்துவிட்டன.

இளைஞர்கள் கரையேறியதும் கருப்புக் கச்சையை வாங்கிக் கட்டிக்கொண்டனர். ஏதோ பானத்தைக் குடிக்கக் கொடுத்தனர். சக்கிலியர் இளைஞனை மாலையோடு ஆறு மந்திரவாதிகள் மேற்கு வாசலுக்கு அழைத்துச் சென்றனர். அதுதான் திருமஞ்சன வாசல். முதன்மையானதும், பிரதானமானதும் அதுவே. வெக்கிலியர் இளைஞன் வடக்கு வாசலுக்கும், மற்றவர்கள் வேறு இரண்டு வாசல்களுக்கும் சென்றனர்.

வடக்கு வாசல் வாணக் குழியில் இறங்கியவர்கள் அந்த வெக்கிலிய இளைஞனை நடுவே நிறுத்தினர். பதினேழே வயதான அவன் பெயர் எர்ரதிம்மன். வெக்கிலியர் குலத்தில் மூன்று பிரிவினர்தான் அதிகார வர்க்கத்தினர். மேட்டு நாயக்கர், கொட்டியம் நாயக்கர், கோடாங்கி நாயக்கர். முதல் இரண்டு பிரிவினரும் குலத்திற்குத் தலைமை வகிப்பவர்கள். கட்டுப்பாடு, நிர்வாகப் பொறுப்புகள் முறையே அவர்களைச் சார்ந்தவை. கோடாங்கி நாயக்கர்கள் வழிபாடு, சடங்குகளுக்குப் பொறுப்பு. சகரம் தொப்பள நாயக்கரின் மாம்பறை ஊரைச் சேர்ந்த கோடாங்கி தன்மகனை, குறுவாளைக்கையில் கொடுத்து அனுப் பியிருந்தார்.

வடக்கு வாசலில் வெகுநேரம் மந்திர உச்சாடனங்கள் தொடர்ந்தன. இன்னும் மேற்கு வாசலிலிருந்து உடுக்கையொலி கேட்கவில்லை. அதற்காகக் காத்திருந்தனர். சடங்குகளில் முதல் மரியாதை எப்போதும் சக்கிலியர்களுக்குத்தான். இப்போது உடுக்கையொலி மேற்கிலிருந்து எழுந்து சற்று நேரத்தில் அடங்கியது.

எர்ர திம்மனை வடக்கு நோக்கி மண்டியிட்டு அமரச் சொன்னார்கள். ஐந்து உடுக்கைகளும் அவனைச் சுற்றி ஒலியெழுப்ப, மந்திர உச்சாடனம் உச்ச கதியடைந்தது. இடுப்பிலிருந்து குறுவாளை சடாரென உருவிய திம்மன் தன் கழுத்தை அறுத்துவிட்டு முன்னே சரிந்தான்.

கிழக்கு வாசலிலும், பிறகு தெற்கு வாசலிலும் தொடர்ந்து உடுக்கைகள் ஒலித்தன.

*

**உ**ள்மதில் வளரத் தொடங்கியது. வரைபடத்தின்படி அகழியைத் தாண்டியதும் யானை உயரத்துக்கு மேல் வெளிச்சுற்றுக் கல்மதில். அடுத்து இரண்டு யானைகள் ஒன்றின்பின் ஒன்று நிற்கும் இடைவெளி. பிறகு உள்மதில், வெளி மதிலைவிட இரண்டு மடங்கு உயரம். நல்ல வளர்ந்த பனையின் அளவு, மதில் உச்சியில் இரண்டு வண்டிகள் விலகிச் செல்லும் இடைவெளி. கீழே மதில் இன்னும் அரை மடங்கும் அகலம். உள் மதிலில் ஓரச்சுவர்களுக்கு மட்டும் கற்கள். நடுவே அகழியை வெட்டி மண்ணை எடுத்து அதில் போட்டு உயர்த்திக்கொண்டே போகவேண்டும். கொத்தளங்களின் கீழ் நடுத்தளங்களில் வீரர்கள் தங்கும் அறைகள். உயரே சதுரக் கொத்தளத்தில் கல்லுக்கு மேல் சூதை மாடம். வண்டிகளும், குதிரைகளும் மேலே ஏற ஏற்றதாக எட்டு இடங்களில் உள்ளே சரிவான கல்பாதைகள். நாலு திசை வாசல்கள், மேலே கல்லால் ஆன அலங்கங்களுடன், கிழக்கு, வடக்கு வாசல்கள் மட்டும் உள்ளே நுழைந்ததும் மடங்கி, மடங்கிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டன.

விஸ்வநாதன் நாகமலை யானைத் தாவளத்தில் நின்றிருந்தான். மதுரையில் இவ்வளவு யானைகளுக்கான தீனிக்கு ஏற்பாடு பண்ணுவது தான் பெரும்பாடாக இருந்தது. ஐம்பது யானைகள் ஓய்வில் இருக்க, நூறு பகலெல்லாம் பாறைகளை இழுத்துப் போகும். மேற்கு மலைகளிலிருந்து தீவினத் தழைகள் வண்டிகளில் தொடர்ந்து வந்து இறங்கிக் கொண்டிருந்தன. ஒட்டர்களின் இருநூறு குடும்பங்கள் மலைக்குத் தெற்கே குடில் போட்டுத் தங்கியிருந்தனர். அந்தப் பெண்களுக்கு சமைக்கும் வேலையும் இல்லை. மலையில்தான் வேலை. நாகமலையில் வேலையில் இருந்த அனைவருக்கும் கஞ்சி பொதுவில் காய்ச்சப்பட்டது. கல்லெடுக்கும் வேலையில் ஏராளமான மக்கள் சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்து வந்து சேர்ந்திருந்தனர். ஆனையூர் கள்ளர்கள்தான் பெரும்பான் மையினர். எல்லோரும் அங்கேயே தங்கியிருந்தனர். அமணமலை அடிவாரத்திலிருந்த தாதனூர்க்காரர்கள் நாற்பது பேர் வேலையில் இருந்தனர். நடக்கும் தூரத்தில் ஊர் இருந்ததால் இரவில் திரும்பிவிடுவார்கள்.

ஆறு உருளைகள் பூட்டிய தாழ்வான மரவண்டிகளில் யானை பாறைகளை இழுத்துச் சென்றது. அவை தொடர்ந்து செல்லும் சில வேளைகளில் பிரம்மாண்டமான கட்டெறும்பு வரிசை போல் தெரிந்தது, தூரத்தில் இருந்து பார்க்கும்போது.

கோட்டை கட்டத் தொடங்கி ஆறு மாதமாகிவிட்டது. உள்மதில் ஒரு ஆள் மட்டத்துக்கு உயர்ந்திருந்தது. திட்டமிட்டபடி வேலை நடந்தால் மூன்று ஆண்டுகளில் கோட்டை முழு வடிவத்துக்கு வந்துவிடும். விஸ்வநாதனுக்கு ஓய்வான இந்தப் புதுவாழ்க்கை பழகிப்போய்விட்டது. பன்னிரண்டு ஆண்டுகள் இளமைக் காலத்தில் படையெடுப்புகளிலேயே கழித்தவன் கடந்த நான்காண்டுகளாகத்தான் ஓய்வில் இருக்கிறான். அரியநாதன் படையின் நிதி நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இருபத்தைந்து வயதிலேயே மதுரையின் பிரதானி ஆக்கப்பட்டான். நிர்வாக அமைப்பைப் புதிதாகக் கட்டும் முயற்சியில் இரவு-பகலாக அலைந்தான். எதையுமே உடனடியாகக் கற்றுக்கொண்டு அதற்கு மேலும்

சிந்திக்கத் தொடங்கிவிடுவான். அவன் மந்திரியாக வந்து வாய்த்தது பாண்டிய நாட்டில் விஸ்வநாதனுக்குப் பேருதவியாக இருந்தது.

மரநிழலில் அமர்ந்து யானைகள் இரை எடுப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த விஸ்வநாதனின் முன் விஜயநகரத் தூதுவன் ஒருவன் வந்து நின்றான்.

குதிரையை விரட்டிக்கொண்டு மதுரையை நோக்கிப் போனான் விஸ்வநாதன். அரண்மனையை அடைந்து மனைவியைத் தேடி ஓடினான். அவளைக் கண்டதுமே ‘விஜயநகருக்குப் போகவேண்டும். உடனே கிளம்பு’ என்றான். அவன் வந்த வேகத்தையும் முகம் இருண்டிருந்ததையும் கண்ட அவள் பதறிப்போய் ‘என்ன?’ என்றாள். பதில் சொல்லமுடியாமல் கையிலிருந்த ஓலையை நீட்டினான். ஆரம்ப சம்பிரதாயச் சொற்களை வேகத்தில் கடந்து கடைசி வரியை அடைந்தாள்... ‘கிருஷ்ணதேவ மகாராயலு வைகுந்தப்...’ மேலும் வாசிக்க முடியாமல் அப்படியே அவன் மேல் சரிந்தாள்.

இரண்டாண்டுகளில் மதுரையின் உள்மதில் கல் வேலைகள் முடிந்துவிட்டன. திருச்சிராப்பள்ளி கோட்டையும் முழுக்க முடிந்து இப்போது தெப்பக் குளத்திற்கு கல்படிகள் அமைக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது.

காவிரி ஓரக்காடுகள் அழிந்ததும் நாட்டில் திருடர்கள் தொல்லை வெகுவாகக் குறைந்துவிட்டது. மேலும் பெரும்பாதைகளில் இரவு- பகலாக மதுரையின் காவல் குதிரைகள் அலைந்துகொண்டிருந்தன. வேளாண்மைக்கும், வாணிகத்துக்கும் பாதுகாப்பான சூழல் நிலவியது.

அப்போது திருச்சியில் இருந்த விஸ்வநாதனை ஆயிர வைசியர் பிரமுகர்கள் வந்து சந்தித்தனர். கருவூர் நகரில் தாங்கள் குடியேற உத்தேசித்துள்ளதாகவும் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்து தருமாறும் வேண்டினர். அவர்களோடு அவன் பேசிக்கொண்டிருந்த போதுதான் அரியநாதனின் ஆள் வந்து சேர்ந்தான்.

தென்காசிக்கு அருகில் பஞ்சபாண்டியர் என்பார் தம் ஆட்களைத் திரட்டிக்கொண்டு கலகத்தில் ஈடுபடுகின்றனர் என்ற தகவல் சென்றவாரமே இங்கு வந்தது. மதுரையிலிருந்த கேசவனிடம் சில பாளையக்காரர்களை மட்டும் அழைத்துப்போய் அடக்கிவிட்டு வா என்று தகவல் அனுப்பியிருந்தான். இப்போது செய்தி வந்திருக்கிறது - முத்தைய நாயக்கர் கடும் காயங்களுடன் மயங்கிக் கிடக்கிறார்.

திருச்சியிலிருந்த ஐயாயிரம் குதிரை வீரர்களோடு உடனே கிளம்பிச் சென்றான். மறுநாள் மாலை விஸ்வநாதன் தென்காசியை அடைந்தபோது முந்தைய நாயக்கர் காலமாகியிருந்தார். அவருக்கு வயது 81. மேலும் 37 பேர் மரணமடைந்திருந்தனர்.

முத்தைய நாயக்கர் கடந்த இரண்டு ஆண்டுகளாக திண்டுக் கல்லுக்கு வடக்கே முத்துக்கோட்டை என்ற பேரில் மண்கோட்டை கட்டிக்கொண்டு அப்பகுதியில் பாளையக்காரராக இருந்தார். விஸ்வநாதன் வருவதற்காகத்தான் காத்திருந்தனர்.

அவன் குதிரையிலிருந்து இறங்கியதும் கேசவன் அழைத்துக் கொண்டு

போனான். வஞ்சிப்பூ மாலை சூடிப்படுத்திருந்தார். வயதேறி விட்டதால் பழைய கம்பீரம் இல்லை. உடல் ஒடுங்கிப் போய் இருந்தது. கொண்டையும் தாடியும் பூவாய் நரைத்திருந்தன. உடலெல்லாம் வெட்டுக்காயங்கள். அவ்வளவு காயத்தைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் வந்தது. 'அவரை முன்னுக்கு ஏன் விட்டீர்கள்?' என்று கேட்டான். அருகிலிருந்த அவர் மூத்தமகன் சொன்னார் 'கேட்க மாட்டார் அல்லவா? வழக்கம் போலப் போனார்.' உண்மைதான்; வயது ஒரு பொருட்டில்லை. கொட்டியம் படை களத்தில் இறங்கிவிட்டால் முன்னே பாய்கிறவர்கள் தளபதிகள்தான்.

பாலமவாரு குல வழக்கப்படி விரிவான போர்க்களச் சடங்குகள் தொடங்கின. கோடாங்கி நாயக்கர் முன்நின்று நடத்திக் கொண்டி ருந்தார். அவர் மகன்கள் ஐவரும் பேரன்கள் பதினேழு பேரும் கொள்ளுப்பேரரர்கள் மூன்று பேரும் அங்கிருந்தனர். அதில் நாலைந்து பேர் காயங்களுக்குக் கட்டுப்போட்டிருந்தனர். அருகிலிருந்த ஓடைக்கரையில் சிதை அடுக்கப்பட்டது. முத்துக்கோட்டை பாளை யப்பட்டின் வீரர்கள் இரண்டாயிரம் பேரும் அதுவரை வந்தனர்.

மூத்தமகன் பாலமுகொண்ட முத்தைய நாயக்கர் கொள்ளிக் குடத்துடன் சிதையைச் சுற்றி வந்தார். அவருக்கு வயது 62. அவர் மகன் முத்தையாவும் 15 வயதேயான பேரன் முத்துவும் கால்மாட்டில் நின்றிருந்தனர். மூத்த பட்டக்காரர்கள் எல்லோரது பெயரும் பாலமுகொண்ட முத்தையாதான். தொன்றுதொட்டு அப்படித்தான் வருகிறது.

சிதை எரிந்துகொண்டிருந்தது. விஸ்வநாதன் மனம் கலங்கினான். அவனைத் தூக்கி வளர்த்தவர். அவன் நடக்கத் தொடங்கியவுடனே தன் குதிரையில் ஏற்றிக்கொண்டு சவாரி போவார்; அவரைக் கண்டதுமே கைகளைத் தூக்கிவிடுவான்.

பாலமுகொண்ட வம்சம் பரம்பரையாக முதுகல் மண்டலத்தில் கோவுதானபுரம் பாளையக்காரர்கள். கொட்டியம் படையின் சேவகம் செய்கிறவர்கள். ஆனைகுந்தி ராஜ்ஜியம் இருந்த காலத்தி லிருந்தே அந்தப்பாளையம் இருந்தது. அந்த வம்சமும், பளைய வீரர்களும் அதையெல்லாம் கொடுத்துவிட்டு, விஸ்வநாதனுக்காக ஆயிரம் காத தூரம் தாண்டி இந்த மண்ணில் குடியேறியிருக்கிறார்கள்.

கொண்டவீட்டுப் போரில் விஸ்வநாதன் இறங்கிய காலத்திலிருந்து அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். எப்போதுமே அவனுக்குப் பக்கத்து அணியில் இருக்கவேண்டும் என்பதில் பிடிவாதமானவர். பேச்சே அவரிடம் குறைவு. மௌனமாகவே இருப்பார். உற்சாகமாகி விட்டால் நாகமரோடு காசிக்குப் போன கதையை அவனிடம் சொல்வார். அவனிடம் கூடுதல் உரிமையைக் காட்ட முயல்கிறார் என்று அவனும் கேட்டுக்கொள்வான். ரத்னகிரிப் போருக்குக் கிளம்புமுன் அவரைக்கடிந்து கொண்டான், முதல் முயற்சியில் அவர் தோற்றுத் திரும்பியதற்காக, நீங்கள் போருக்கு வரவேண்டாம் என்று சொல்லி அவரை விஜயநகரிலேயே விட்டுவிட்டுக் கிளம்பிப் போனான். அவர் நாகமரிடம் போய் அழுது புலம்பினார். 'அவன் சின்னப் பையன்; அவன் கோபித்ததற்கெல்லாம் வந்து அழலாமா? நீ தூக்கி வளர்த்த பையன்தானே. உடனே கிளம்பிப் போ' என்று விரட்டிவிட்டார். போர் தொடங்குமுன் வழக்கம் போலத் தன் பாளைய வீரர்களுடன் அவன்

அருகே போய் நின்றுகொண்டார். விஸ்வநாதன் ஒன்றும் சொல்லவில்லை. முதல் சண்டையிலேயே அன்று அவன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தவர் அவரல்லவா! நாகமர் ஏராளமான பரிசுகளை அவருக்குக் கொடுத்தார். ராயர் விஜயதசமியன்று 'பாலம கட்டாரி' விருதும், ஐந்து ஊர்களைத் தானமாகவும் கொடுத்தார்.

நான்காண்டுகளாகப் போர் இல்லாததால் தான் நோய்வாய்ப் பட்டு இறக்க நேரிடுமோ என்று வருந்திக் கொண்டிருந்தார். எல்லம்மன் அவரைக் கைவிடவில்லை. அவர் வம்சத்தில் முந்தைய பட்டக்காரர்கள் அனைவரும், பெரும்பாலான ஆண்களும் களத்தில்தான் மரித்திருக்கிறார்கள்.

அன்றிரவு பாடி வீட்டிற்குத் திரும்பியபின் தன் கூடாரத்திற்கு முத்தைய நாயக்கரை வரவழைத்தான். ஏற்கனவே முத்துக்கோட்டை பாளையத்திற்கு தாமரைப்பாடி, கோவிலூர், கன்னிப்பாடி, சித்துவார் பட்டி, பெரியோடு, பாகநத்தம், தென்னம்பட்டி, கொமுபனுப்பாடி, பெரும் பள்ளி, பாடியூர், குளத்தூர் ஆகிய ஊர்கள் உரிமையாயிருந்தன. அவர் வந்ததும் பழைய கதைகளை எல்லாம் நினைவுபடுத்திப் பேசிக்கொண்டிருந்தான். பிறகு அவர் பளையத்துக்கு அருகில் மதுரை அரசின் கீழ் இருக்கும் ஊர்கள் எவை என்று கேட்டான். அவர் கோம்பை, பிள்ளாறு, ராமநாதபுரம், சொக்கம்பட்டி என்று நான்கு ஊர்களைச் சொன்னார். அதில் சொக்கம்பட்டி பெரிய ஊர். அரியநாதனிடம் அந்த ஊர்களை யெல்லாம் அவரது பாளையத்தோடு சேர்த்துவிடச் சொன்னான். மாலைக்கல் எனப்படும் நடுகற்களை பாளையத்துக்காரர்கள் தங்கள் ஊரில், கோட்டைக்கு வெளியே நட்டு வழிபடுவதுதான் வழக்கம். ஆனால், விஸ்வநாதன் இனி மாலைக்கற்களை பாளையங்கள் மதுரைக்கோட்டையில் அவரவர் கொத்தளத்துக்குக் கீழ் உள்-வெளி மதில்களுக்கு நடுவே உள்ள இடத்தில் நடுமாறு கூறினான். முதல் மாலைக்கல் முத்தைய நாயக்கருடையதாக இருக்கும். திருச்சிக்குப் போகும்போது பாளையத்துக்கு நேரில் வருகிறேன் என்றான். அவர் விடைபெற்றுப் போனார்.

கேசவனிடம் என்ன நிலைமை என்று விசாரித்தான். பஞ்ச பாண்டியர்கள் கூட்டம் மொத்தமே மூவாயிரம் பேர்தான் இருக்கிறார்கள். நூறுபேரைச் சண்டையில் இழந்திருக்கலாம். ஆனால், பின்வாங்கிக் காட்டுக்குள் ஒளிந்திருக்கிறார்கள். அடர்ந்த காடு. தொடர்ந்து விரட்டிப் போகமுடியாது.

அரியநாதன் அவர்களைப்பற்றிய கதையை ஆதிகாலத்திலிருந்து ஆரம்பித்துச் சொன்னான்.

'காட்டோரம் அவர்கள் இருப்பதுதான் பெருந்தொல்லை. கலிங்கர்கள் காடுகளில் ஒளிந்துகொண்டுதான் தொடர்ந்து போர் தொடுத்தார்கள். இவர்களது பகையை நீடிக்கவிட்டால் நமது திருநெல்வேலித் திட்டங்களுக்கு இடையூறாகிவிடும்.'

'மலையடிவாரங்களில் தொடர்ச்சியாக மண்கோட்டைகளைக் கட்டிக் காவல்படைகளை நிறுத்திவிட்டால் என்ன?' என்றான் கேசவன்.

'அதைவிடச் சுலபமானதும், பயனுள்ளதும் என்ன தெரியுமா? ஐந்து பேருக்கும் இந்தப் பகுதியைப் பிரித்துக் கொடுத்து பாளையக்காரர்களாக்கி

விடுவதுதான்.’

‘அவர்கள் மேலும் வளர்ந்துவிட்டால்?’

‘இயலாது. அதற்குப் பிறகு முரண்பட்டால் அடக்கிவிடுவது எளிது. இதுவே அதிகபட்ச அங்கீகாரம்தான். திருப்தியடைந்து விடுவார்கள்.’

காலையில் அந்த மலையடிவாரத்தைத் தனது வீரர்களோடு போய்ச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான் விஸ்வநாதன் அரியநாதன் அப்போது ஒரு விநோதமான யோசனையைச் சொன்னான். ‘இவர்களில் இரண்டாமவருக்கு கற்பகவல்லி என்ற கன்னிகை இருக்கிறாள். அவளை அச்சுத ராயருக்கு ராணியாக்கிவிட்டால் என்ன?’

பெரிய ராயரின் சித்தி மகனான அச்சுத ராயர் தான் இப்போது விஜயநகர அரசர். அவர் அரியணை ஏறியதும் மதுரையை வரி கட்டுமாறு உத்தரவிட்டு விட்டார். கிருஷ்ணதேவராயருக்கு அவரைப் பிடிக்காது. எனவே, விஜயநகருக்குள் விடுவதில்லை. எந்தப் பொறுப்பும் அற்று சந்திரகிரி அரண்மனையில் சொகுசாக வாழ்ந்தவர். அவருக்கு விஸ்வநாதனிடம் நேரடியாகப் பழக்கமில்லை; கேள்விப்பட்டிருக்க வேண்டும். வரி கேட்டு வந்த ஓலையைத் தவிர வேறு அநாவசியத் தலையீடுகள் இல்லை.

இந்த யோசனையைக் கேட்டு விஸ்வநாதன் சிரித்துவிட்டான். அவர் ஒன்றரை வருடத்திற்குள்ளேயே இருபது பேருக்கும் மேலே ராணிகளாக்கி விட்டார் என்று கேள்வி’ என்றான்.

‘அதனால் என்ன? மொத்தத்தில் மங்களமான காரியம். யாருக்கு என்ன நட்டம்?’ என்றான் அரியநாதன்.

‘பேசிப்பார். பிறகு மதுரைக்கு வரச்சொல். பாளையம் தரும் திட்டத்தில் மாற்றம் ஏதும் தேவையில்லை’ என்று சொல்லிவிட்டு நண்பகலிலே கேசவனுடனும் தன்னுடன் வந்த வீரர்களோடும் கிளம்பி திருநெல்வேலி போனான்.

அங்கு ஊரை விரிவுபடுத்துவது, கோயிலை எடுத்துக் கட்டுவது, கால்வாய் என்று நிறையத் திட்டங்கள் ஆரம்ப கட்டத்தில் இருந்தன.

*

**மூ**ன்றாண்டுகளில் மதுரைக்கோட்டை முழுமை பெற்றுவிட்டது. தைப்பொங்கலன்று பெரும் கோலாகலத்துடன் திறந்து வைக்கப்பட்டது. மேற்கு வாசலுக்கு வெளியே இருந்த பெருந்திடலில் மூன்றாம் நாள் சல்லிக்கட்டு நடந்தது. திருப்புவனம் பேச்சியம்மாவின் காரிக்காளையிடம் குத்துப்பாட்டு தாதனூர்க்காரர்கள் இரண்டு பேர் பலியாகினர்.

37 பாளையர்கள்தான் இதுவரை முறைப்படுத்தப்பட்டிருந்தன. வருடந்தோறும் அந்த எண்ணிக்கை கூடிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு கொத்தளத்திற்கும் 30 வீரர்களை ஒவ்வொரு பாளையமும் மதுரையில் நிரந்தரமாக விட்டிருக்கவேண்டும். அவர்கள் விருப்பப்படி ஆட்களை மாற்றிக்கொள்ளலாம். பகல் காவலுக்குப் பதினைந்து பேரும் மீதி இரவுக்கும் என்று கணக்கு. நடுத்தளத்திலும், கீழ்தளத்திலும் அவர்கள் தங்கிக் கொள்ளலாம். கீழ்தளம் சமையல் செய்வதற்கான வசதிகளோடு

இருந்தது. 37 தவிர மீதிக் கொத்தளங்களில் மதுரை நிலைப்படை வீரர்களே தற்சமயம் இருந்தனர்.

வடுக நாட்டில் எப்போதுமே பாளையங்கள் எழுபதுக்கு மேல்தான். ஒருகல், கொண்டவீடு, ராஜமகேந்திரகிரி, ஆனைகுந்தி எல்லாவற்றிலும் பாளையங்கள் அப்படித்தான் இருந்தன. விஜயநகர் மண்டலங்களாகப் பிரிந்தபோதும் எழுபதுக்கும் மேல் பாளையங்கள் ஒவ்வொன்றிலும் இருந்தன. அது ஆந்திரத்தை வென்றபோதும் காப்பு பாளையப்பட்டுகள் எந்த மாற்றமுமின்றி வம்சாவளியாகத் தொடர்ந்தன. அந்த ஞாபகத்தில்தான் விஸ்வநாதன் 72 என்று தீர்மானித்திருந்தான்.

**வி**ஸ்வநாதன் ராமபத்திர நாயக்கரோடும், கேசவனோடும் சின்னமனூர் தாண்டி வடக்கே காலையில் சென்று சேர்ந்தபோது, கம்பம் கோட்டையைச் சுற்றிலும் திண்டுக்கல் பாளையக்காரர்கள் முற்றுகையிட்டு நின்றிருந்தனர். மிகவும் சிறிய செங்கல் கோட்டையாக இருந்தது. உள்ளே ஐம்பது அறுபது குடிசைகளே இருக்கும் என்றார்கள். மலையாள நாட்டிலிருந்து வந்த வீரர்கள் உள்ளே புகுந்து ஒரு வாரமாக ஆக்கிரமித்திருந்தனர். பாண்டியர் காலத்திய பழைமையான கோட்டை அது. கொல்லம் போகும் வழியில் உள்ள எல்லைக் காவல் கோட்டை. தெற்கே செங்குன்றத்தில் கண்ணகிக்குக் கோயில் எடுத்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கட்டிய கோட்டை இது. முன்னூறு வருடப் பழமையில் பராமரிப்பில்லாமல் செடிகள் முளைத்துச் சிதிலமடைந்து கிடந்தது.

உளுத்துப்போன கதவை ஒரே முட்டில் யானை உடைத்துத் திறந்தது. குதிரைகள் உள்ளே இறங்கின. கண்ணில் பட்டவீரர்களை வெட்டத் தொடங்கியதும் உள்ளே இருந்தவர்கள் தாறுமாறாகச் சிதறி ஓடினர். சில நாழிகைகளிலேயே கும்பிட்டு சரணடைந்து விட்டனர். எல்லோரும் மலையாள வீரர்கள். நிறுத்திவைத்து எண்ணியபோது நானூறு பேருக்கு மேல் இருந்தனர்.

அரியநாதன் போய் பேசினான். அவர்கள் தலைவர் தன்னைப் பூனையாற்று ராஜா என்றும் தானே உண்மையான பாண்டிய வாரிசு என்றும் சொன்னார்.

‘இன்றைய கணக்குப்படி மதுரை மண்ணில் பன்னிரெண்டு வாரிசுகள் இருக்கிறார்கள். உங்களுக்குள் பேசி ஒரு முடிவு எடுத்துவிட்டு வாருங்கள். பிறகு உரியதைச் செய்வோம்‘ என்றான் அரியநாதன்.

விஸ்வநாதனிடம் வந்து சொன்னபோது அவர்களை விடுவித்து அனுப்பிவிடச் சொன்னான். மதியக் கஞ்சிக்கு மேல் எல்லோரும் கிளம்பிமலையை நோக்கித் தெற்கே போனார்கள்.

அன்று மாலை தளபதிகள் அனைவரையும் அழைத்து கம்பத்திலிருந்து பழனிவரை உள்ள பகுதிகளுக்குப் பாளையக் காரர்களை நியமிக்கப் போவதாகத் தெரிவித்தான். அவன் பழனி, திண்டுக்கல் மலையடிவாரப் பகுதிகளில் ஏற்கனவே சுற்றித் திருந்திருந்ததால் அந்நிலப்பகுதி பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. சின்னமனூர் சமவெளிக் காடுகளுக்குள் நுழைந்ததில்லை. உத்தமர் கோயில், சின்னமனூர் ஆகிய ஊர்களைச் சுற்றிதான் கொஞ்சம் நன்செய் நிலங்கள் இருந்தன. அப்பால் மூன்று திசையிலும் மலையடிவாரம் வரை அடர்ந்த காடுகள்தான். மேற்கே

மலையின் கீழ் சில்லவார் குல ஜக்கு முத்து நாயக்கருக்கு மட்டும் ஒரு மண்கோட்டை இருந்தது. அவரது வீரர்களும் குடும்பங்களுமாக அங்கு உருவாக்கிய போடைய நாயக்கனூர் என்ற ஊர் இருந்தது. அவரோடு சேர்ந்து இரண்டு நாட்களாகக் காடுகள் எங்கும் குதிரையிலேறியும் நடந்தும் திரிந்தான்.

மூன்றாம் நாள் இரவு உணவுக்குப் பிறகு எல்லோரும் அவன் கூடாரத்திற்கு வெளியே முற்றத்தில் அமர்ந்தனர். விஸ்வநாதன் கம்பளி மேல் இருந்தான். அரியநாதன் ஓலையில் எழுதி வைத்திருந்ததை பந்தவெளிச்சத்தில் வாசித்தான்.

சின்னமனூர் சமவெளியில் வைகைக்கு கிழக்கே தென்பாதி எர்ரஜக்கு நாயக்கருக்கு. வடபகுதி கண்டம நாயக்கருக்கு. ஆற்றுக்கு மேற்கே முழுவதும் போடைய நாயக்கனூரைச் சேர்ந்த ஜக்கு முத்து நாயக்கருக்கு. கணவாய் தாண்டி மதுரைப் பாதைக்கு வடக்கே தொட்டப்ப நாயக்கருக்கு, அதற்கும் வடக்கே உத்தப்ப நாயக்கருக்கு. கணவாய்க்கு மேற்கே வராக நதிப் படுகை எல்லாம் ராமபத்ர நாயக்கருக்கு. அதற்கும் வடக்கே கன்னிவாடிப் பாளையம் வரை காளப்ப நாயக்கருக்கு. பழனிமலையைச் சுற்றிலும், ஆயக்குடி வட்டாரமும் செஞ்சு வேடர் குலத் தலைவர்கள் கடும்பில் சின்ன ஓப நாயக்கருக்கும், வெங்கடகிரி நாயக்கருக்கும் எல்லோரும் கேட்டுக்கொண்டு எதுவும் சொல்லாமல் கலைந்து போனார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே கேசவன் வந்து விஸ்வநாதனை எழுப்பினான். தளபதிகளின் ஆதங்களைச் சொன்னான். ராமபத்ர நாயக்கர் காப்பு பலிஜராக இருந்தும் அவருக்குப் பாளையம் கொடுத்தது பற்றி யாருக்கும் ஆட்சேபம் இல்லையாம். மேலும், அவர் செல்லியின் சித்தப்பா. நாகமர் காலத்திலிருந்தே படையில் இருப்பவர். ஆனால், சாதியில் தாழ்ந்த செஞ்சு வேடர்களுக்குப் பாளையம் தருவதை மக்கள் ஏற்கமாட்டார்கள்; தங்களுக்குச் சமதையாக அவர்களை நடத்துவது தங்களுக்குக் கௌரவக் குறைச்சல் என்றும் சொன்னார்கள். வடுக நாட்டில் இன்றுவரை கொல்லவாருகளையும், காப்புகளையும் தவிர வேறு யாரும் பாளையக்காரர்களாக இருந்ததில்லை என்றும் வழக்கத்தை மீறக்கூடாது என்றும் கருதுகிறார்கள்.

விஸ்வநாதன் கண்டிப்பாகச் சொன்னான் ‘நான் தீர யோசித்து எடுத்த முடிவு. இதில் இனி மாற்றமில்லை. அவரவர் பிரச்சினையை மட்டும் பேசச் சொல்.’

பிறகு எர்ரஜக்குவும், கண்டமனும் வந்தார்கள். ‘இந்தக் காட்டில் இருந்துகொண்டு நாங்கள் என்ன செய்வது? இதை அழித்து விளைநில மாக்கினாலும் யார் விவசாயம் செய்வது?’ என்று கேட்டனர்.

விஸ்வநாதன் மற்ற எல்லோரையும் அழைத்து வரச்சொன்னான்.

இந்தச் சிக்கலுக்கு சகரம் தொப்பள நாயக்கர் ஒரு ஆலோசனை சொன்னார். ‘சித்ரதுர்காவிலிருந்து வந்த காப்பு ஒக்கலிகர்கள் தங்கள் மந்தைகளோடு திண்டுக்கல் வட்டத்தில் நிறைய இறங்கியிருக் கிறார்கள். அவர்களைக் கிளப்பி இங்கு குடியேற்றிவிடலாம். அவர்கள் விவசாயிகள்தான்; இரண்டே தலைமுறையில் இந்தப் பகுதியை நஞ்செய்

ஆக்கிவிடுவார்கள்.'

'பாஷை புரியாத அந்த ஆட்களை எப்படிச் சமாளிப்பது?' என்று அப்போதும் எர்ரஜக்கு தயங்கினான்.

குலக்கதைப் பாடல்களை யெல்லாம் அறிந்த வெக்கிலியக் கோடாங்கி நாயக்கர் சொன்னார் 'ஒக்கலிகர் ஆதியில் வடுகர்கள்தான். முன்னொரு காலத்தில் காப்புகள் ஸ்ரீசைலத்தை இழந்து வடக்கே போனபோது அதில் ஒரு பிரிவினர் மேற்கே வந்து நம்மோடு கலந்துவிட்டனர். நமது சடங்குகள்தான் அவர்களுக்கும். புதிதாக வந்தவர்கள் ஆதலால் அவர்களது தேவர ஆவுக்கு கம்பளி அதிகாரம் மட்டும் தரவில்லை. பிறகு பெனுகொண்டாவிலிருந்து கன்னட தேசத்திற்குப் போய் வடுகை மறந்துவிட்டனர். ஆனால், முன்னொரு பஞ்சகாலத்தில் நம்மிலிருந்து பிரிந்து கிழக்கே நதியோரம் போன சக்கிலியர்களை காப்புகள் அடிமைப்படுத்தி விட்டனர்.

ஒக்கலிகர்கள் விவசாயத்தில் திறமையானவர்கள் என்பதால் இது நல்ல யோசனைதான்.'

தொட்டப்ப நாயக்கன் தனது பாளையத்தை இடம் மாற்றித் தரவேண்டும் என்றான். அது ஆனையூர் கள்ள நாட்டை ஒட்டி இருக்கிறதாம். முன்பு முதன் முதலில் கள்ளர்களுக்கு அருகே போட்ட கோட்டையை அவர்கள் தொல்லை தாளாமல்தான் காலி பண்ணிவிட்டு சில்லவார்கள் எட்டையபுரம் போய்விட்டார்களாம்.

விஸ்வநாதன் கோபப்பட்டான். 'இதைச் சமாளிக்க முடியாத உனக்கு பாளையம் எதற்கு? கணவாய் முகப்பிலேயே நீ கோட்டை போடவேண்டும். கணவாய்க் காவல் உன் பொறுப்புதான். இன்னும் மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பாளையங்களுக்கும் எல்லைகளைப் பிரித்துக்கொள்ளலாம். பத்தாண்டுகளுக்குப் பிறகு வரி செலுத்தவேண்டும். நிலத்திற்குத் தகுந்தாற்போல் அது நிச்சயிக்கப்படும்.'

அங்கிருந்து கிளம்பி சின்னமனூரில் இறங்கி கோயிலில் வழி பாட்டை முடித்துவிட்டு பாளையக்காரர்கள் தமது ஊர்களுக்குத் திரும்பினர்.

*

# 7

**விஸ்வநாத நாயக்கர் அறுபத்தைந்தாவது வயதில் 1564ல் நோய்** வாய்ப்பாட்டு காலமானார். மறுநாள் மாலை வடக்கு வாசலுக்கு நேர் எதிரே அகழிக்கு அப்பால் வைகைக் கரையில் சந்தனச் சிதை அடுக்கப்பட்டது. பாளையங்களிலிருந்து அநேகமாக எல்லா ஆண்களும் மதுரையில் வந்து குவிந்துவிட்டனர். மதுரைக்கு வெளியிலும் வைகைக் கரையெல்லாம் பெருங்கூட்டம். மதுரையே கண்ணீரில் தளும்பிக்கொண்டிருந்தது.

இளவரசன் கிருஷ்ணன் சிதையை வலம் வந்தான். அந்தக் காட்சியைப் பார்க்கச் சக்தி இல்லாமல் அரியநாத முதலியார் அந்த இடத்துக்கே வரவில்லை. கிருஷ்ணன் தீ மூட்டியபோது தளவாய் கேசவப்ப நாயக்கர் தரையில் விழுந்து கதறினார். அவரைத் தூக்கி நிறுத்தியபோதும் கட்டுப்படுத்த முடியவில்லை. கிருஷ்ணன் அங்கே நிற்காமல் அழுதுகொண்டே மதுரைக்குள் ஓடினான்.

அவள் மஞ்சள் ஆடையுடன் வைகையில் மூழ்கி எழுந்தாள். கரையேறியதும் கையில் எலுமிச்சம் பழத்தைக் கொடுத்தார்கள். வாங்கி உள்ளங்கைகளுக்குள் வைத்துக் கூப்பிய கரங்களுடன் அவனை நோக்கி நடந்தாள். விஜயதசமிக் கூட்டம் ஆரவாரிக்க அவன் நடுஅரங்கில் வாள்வீசிக் கொண்டிருந்தான்... கொண்டவீடு விஜயோத்ஸவத்தில் வராகக்கொடி ஏந்தி குதிரையில் ராஜவீதியில் முன்னில் வந்தான்... விட்டலர் கோபுரத்தின் கீழ் வேங்கடன் மீதேறி வெற்றி வீரனாய் நுழைந்தான்... ஆமுக்த மால்யதா அரங்கேறியபோது வசந்த மண்டபத்தில் யாரும் அறியாமல் ஒரு மாலையை அவளுக்கு அன்பளித்தான்... நாள்தோறும் அவள் கோலமிடும் வேளை தவறாமல் குதிரையில் கடந்து அவளைப் பார்த்துக்கொண்டே போனான்... அவள் கைபற்றி ஞாபகப் பரிசாகக் கைவளையை உருவிக்கொண்டான்.

சிதையை நெருங்கி மரப்படிகளில் ஏறினாள்.

மஞ்சள் சுடர்களாய் அவனைக் கண்டாள். மஞ்சள் வெயில்... வாள்

பயிற்சி... அவன் சுற்றி வந்தான்... பருக்கள் பூத்த முகம் பொன்னொளியில் திகழ்ந்து செப்புச்சிலையென... அவன் கண்களைக் கண்டாள்... அவள் தன்னைப் பெண் என உணர்ந்த அந்த முதற்கணத்தில்..

*

# 8

**ம**துரைத் தளவாய் கேசவப்ப நாயக்கர் இரண்டாயிரம் **குதிரைகளோடு** பரமக்குடி கோட்டையை முற்றுகை இட்டிருந்தார். ‘உடனடியாகச் சரணடைந்தால் அரசர் கிருஷ்ணப்பரைப் பார்க்க மரியாதையாக மதுரைக்கு அழைத்துச் செல்வேன். தாமதித்தால் கோட்டைக்குள் புகுந்து சிறைப்படுத்துவேன். உனது பாளையத்தையும் இழக்க வேண்டியதிருக்கும்‘ என்று தூது அனுப்பினார்.

பரமக்குடி பாளையக்காரர் தும்பிச்சி நாயக்கரிடமிருந்து பதில் இல்லை. தும்பிச்சிக்கு வயது எழுபதுக்கு மேல் இருக்கும். மதுரையின் அரசனாக விஸ்வநாதன் நியமிக்கப்படுவதற்கு முன்பே இங்கு இருக்கிறார். லக்கணன் காலத்திலேயே தங்கி விட்டவர்கள் இவர் மூதாதையர். துடிப்பானவர் என்பதால் இங்குள்ள சில்லவார் குழுக்களுக்குத் தலைவர் போலிருந்தார். விஸ்வநாதன் அவரையும் பாளைக்காரராக்கி பரமக்குடி வட்டாரத்தைத் தந்திருந்தார். தன் தகுதிக்கு அது போதுமானதல்ல என்பது அவர் நினைப்பு. விஸ்வநாதன் இருந்தவரை அவரை எதிர்ப்பது பற்றித் தும்பிச்சி கனவிலும் நினைத்ததில்லை. இப்போது அவர் மகன் அரசனாகி இருப்பதால் தைரியம் வந்தது. மேலும் அவரது நண்பரான இலங்கையின் கண்டி மன்னன் அவருக்குப் பணம் கொடுத்து, ஆள்திரட்டி மதுரைக்கு எதிரான கலகத்தை ஆரம்பிக்குமாறு தூண்டிவிட்டார். மதுரை பலவீனமடைந்துவிட்டால் கப்பம் செலுத்தும் சுமையிலிருந்து மீண்டு விடலாம் என்பது அவர் திட்டம். தக்க வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

மதுரையின் நிலைப்படைகளும், இருபது பாளையங்களின் வீரர்களும் விஜயநகருக்காகப் போரிட வடக்கே சென்று பத்து நாட்கள்தான் ஆகியிருந்தன. பிஜப்பூர், கோல்கொண்டா, பீரார், பீடார், அகமது நகர் சுல்தான்கள் ஐவரும் ஒன்றிணைந்து விஜயநகர் மீது போர் தொடுத்திருப்பதால் மதுரையின் உதவியைக் கேட்டு ராமராயர் ஓலை அனுப்பியிருந்தார். அரியநாதர் தலைமையில் அவசரமாகப் படை கிளம்பி

வடக்கே போய்விட்டது. எனவே இந்த வேளையில் மதுரை பலவீனமாயிருக்கும்; அதைக் கைப்பற்றுவது எளிது என்று கருதி மறவர் சீமையிலும் தெற்கிலுள்ள பாளையங்களிலும் தும்பிச்சி நாயக்கர் ஆள் திரட்டிக் கொண்டிருப்பதாக மதுரைக்கு தகவல் வந்தது.

கேசவப்பா காத்திருந்தார். தும்பிச்சியிடமிருந்து பதில் வராவிட்டால் காலையில் கோட்டையைத் தாக்கலாம் என்று திட்டமிட்டார். சின்ன மண்கோட்டைதான். நாளை மாலைக்குள் பிடிபட்டுவிடும்.

மூன்றாம் ஜாமம் முடியும் வேளையில் உள்ளிருந்து திடீர்த் தாக்குதலுக்காகக் குதிரைகள் வெளியிலிறங்கின. கோட்டைக்குள்ளே பறவைகள் கலையும் ஒலியை வைத்தே கேசவப்பா இதை ஊகித்திருந்தார். முன் உத்தரவின்படி, வரும் குதிரைகளைத் தாக்காமல் இவர்கள் விலகி விலகி ஒதுங்கினர். இருநூறு குதிரைகள் வெளியே வந்திருக்கும். எதிர்பாராத நேரத்தில் தாக்கி சேதம் விளைவித்துவிட்டு மீண்டும் கோட்டைக்குள் புகுந்து கொள்வதுதான் திட்டம். இப்போது அதற்கு வாய்ப்பில்லாததால் மீண்டும் கோட்டைக்குள் அவசரமாகத் திரும்பினர். திருப்பித் தாக்கும் உத்தரவாக மதுரையின் கொம்பொலி எழுந்தது.

வெளியே விரைந்தவர்களில் முப்பத்தேழு பேரை இழந்து, மீதியுள்ளவர்களை உள்வாங்கிய பின் கோட்டைக் கதவுகள் அடைத்துக்கொண்டன.

மறுநாள் அதிகாலையிலேயே கோட்டைக் கதவுக்குத் தீ வைக்கும் வேலை தொடங்கிவிட்டது. கோட்டைக்குள் வில்லாளிகள் எவரும் இருக்க வாய்ப்பில்லை என்பதால் குதிரைகள் கோட்டையை நெருங்கி நின்றிருந்தன. திடீரெனக் கோட்டை மதில் மேலிருந்து வெடியொலிகள் எழுந்தன. ஐந்தாறு பேர் குதிரையிலிருந்து விழுந்து மரித்தனர். ஏழெட்டுப்பேர் காயம்பட்டனர். கோட்டைக் கதவுக்கு முன்னே கேசவப்பர் குதிரை நின்றிருந்ததால் நெஞ்சில் குண்டுக்காயம் பட்டு, விழுந்தவுடன் பெரும் ரத்தப்பெருக்குக்குப் பின் மரித்துக் கிடந்தார். துப்பாக்கி குண்டுக்கு மதுரைப்படை இதுவரை பலியானதில்லை. இதுவே முதல்முறை.

அடுத்த தளபதியான கூளப்ப நாயக்கர் ஒருகல் தூரம் மேற்கே பின்வாங்கி குதிரைகளைத் தயார் நிலையில் நிறுத்திவிட்டு கேசவப்ப நாயக்கர் உடலை மதுரைக்கு அனுப்பி வைத்தார்.

தந்தையையும், தாயையும், தந்தையின் உயிர்த்தோழரான தளவாயையும் அடுத்தடுத்த ஆண்டுகளில் பறிகொடுக்க நேர்ந்த அதிர்ச்சியிலிருந்து அரசன் கிருஷ்ணப்பன் மீள இயலாமல் தவித்தான்.

தளவாயின் மகன் சின்ன கேசவன் ‘பரமக்குடியை நான் பார்த்துக்கொள்கிறேன்’ என்று முன்வந்தான். மதுரையின் காலாள் படைத் தளபதியாக அவன் இருந்ததால் அவனிடமே அரசன் பொறுப்பை ஒப்படைத்தான். திண்டுக்கல்லை அடுத்த பதிமூன்று பாளையங்களை உடனடியாக மதுரைக்கு வரச்சொல்லி ஓலை போயிற்று.

இரவில் தந்தையின் சிதைக்குத் தீ மூட்டி விட்டு மறுநாள் காலை கிளம்பிப் போனான் சின்ன கேசவன்.

முன்னிரவிலேயே மதுரை திரும்பிவிட்டான். தும்பிச்சி நாயக்கர் தலை துண்டிக்கப்பட்டது. அவரது மகன்கள் இருவரைச் சிறைப்பிடித்து

வந்திருந்தான். பரமக்குடியில் இறந்தது போக எஞ்சியிருந்த வெளிநாட்டவர்களைப் பிடித்து மதுரைக்குக் கொண்டுவந்திருந்தான். 67 சிங்கள வீரர்களும் 14 போர்ச்சுகீசியரும் இருந்தனர். பரங்கியரின் 30 துப்பாக்கிகள் பிடிபட்டன. கண்டி அரசனால் அனுப்பப்பட்டவர்கள்.

கலகத்தைத் தூண்டிவிட்ட கண்டி அரசனின் செயல் கிருஷ்ணனுக்கு சினமூட்டியது. முளையிலேயே இதைக் கிள்ளி எறியத் தீர்மானித்து, கண்டியின் மீது படையெடுப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு சின்ன கேசவனுக்கு உத்தரவிட்டான்.

தும்பிச்சியின் மக்கள் விடுதலை செய்யப்பட்டனர். மூத்தமகனையே பாளையக்காரனாக்கி பரமக்குடி கோட்டையை அவன் பொறுப்பிலேயே ஒப்படைத்தான் கிருஷ்ணன். மறவர் சீமையில் பாதி முன்பு பரமக்குடி பாளையமாக இருந்தது. இப்போது பரமக்குடியை சுற்றியுள்ள 26 கிராமங்களை மட்டும் அந்தப் பாளையத்துக்கு உரிமையாக்கிவிட்டு மீதியை மதுரை அரசின் நேரடி நிர்வாகப் பகுதியாக்கிவிட்டான்.

விஜயநகருக்குச் சென்றுவிட்ட இருபது பாளையங்கள் தவிர்த்து ஏனைய 52 பாளையங்களிலிருந்தும் குதிரைகளின்றி, அமரக்காரர்கள் மட்டும் தேவிபட்டினத்துக்கு வந்து சேர்ந்துகொண்டிருந்தனர். விஜயநகருக்கெனத் தனித்த கடற்படை இல்லை. கிழக்கு, மேலைக் கடல்களில் கடல்புறக் காவல் கப்பல்கள் சுற்றித்திரியும் மங்களாபுரத்தையும், காக்கி நாடாவையும் தளமாகக் கொண்டவை அவை. தகவல் அனுப்பி அவை வந்து சேர நாளாகும் என்பதால் அம்முயற்சி கைவிடப்பட்டது. தொண்டியில் போர்ச்சுக்கீசிய வணிகக் கப்பல்கள் இரண்டு நின்றிருந்தன. தூத்துக்குடியில் ஒன்று இருந்தது. தூத்துக்குடியிலும், காயல்பட்டினத்திலும் அரபிவணிகக் கப்பல்கள் ஆறு நின்றிருந்தன. மும்மடங்கு லாபத்தில் அவை வாடகைக்கு அமர்த்தப்பட்டவுடன் சரக்குகளை இறக்கிவிட்டு அவை தேவிபட்டினத்தை நோக்கி வந்தன. மேலைக் கடற்கரைக்கு சரக்குகளை ஏற்றிப் போகும் பரதவர் தோணிகள் பதினான்கு தூத்துக்குடியில் அப்போது நங்கூரமிட்டிருந்தன. வேம்பாரிலிருந்து கன்னியாகுமரி வரையிலுமான கடல்துறைகளிலிருந்த வல்லங்களும், கட்டுமரங்களும் தேவிபட்டினத்தை நோக்கி வந்தன. தூத்துக்குடி முத்துக்குளித்துறைப் பரதவர் தலைவரின் ஏற்பாடு அது. அதற்கும் கூலி உண்டு.

தேவிபட்டினத்தில் 60,000 வீரர்கள் சேர்ந்திருந்தனர். 1000 குதிரைகளே இருந்தன. இலங்கையில் குதிரைகள் மிகக்குறைவு என்பதாலும் கடலுக்கு அப்பால் கடத்துவது சிரமம் என்பதாலும் மதுரையிலிருந்து குறைவாக குதிரைகள் வந்தன. தளவாடங்களும் உணவுப்பொருட்களும் குதிரைகளும் கப்பல்களிலும் தோணிகளிலும் ஏற்றப்பட்டன. வல்லங்களிலும் கட்டுமரங்களிலும் வீரர்கள்.

பரமக்குடியில் பரங்கியர் பிடிபட்டதிலிருந்து பதினைந்தாம் நாள் இரவு மதுரைப் படை கடலில் இறங்கியது. கடலில் வீசிய காற்று பாய்மரங்களை விம்மிப் புடைக்கச் செய்தது. சிறகு உயர்த்திய பெரும் பறவைக் கூட்டங்களென அவை கடலெங்கும் மிதந்து சென்றன. இரண்டே நாளில் இருமுறை கடல் பயணங்கள் நிகழ்ந்தன. மன்னார்கரையில் இருப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இறங்கிவிட்டனர். பிறகு

தோணிகளும், கப்பல்களும் மன்னாரில் நங்கூரமிட, வல்லங்களும், மரங்களும் கரையேறி நின்றன. போர்க்களத்தின் நிலைமையை அனுசரித்து தேவிபட்டினத்தில் உள்ள வீரர்களை மேலும் அழைத்துக் கொள்வது என்று முடிவாயிற்று.

இலங்கையில் கரையிறங்கிய படையை விரட்டுவதற்காக கண்டி அரசன் நான்கு மந்திரிகள், எட்டு தேசநாதர்கள் தலைமையில் 40,000 காலாள் வீரர்கள் கொண்ட படையை அனுப்பினான். கண்டி நோக்கிச் சென்ற மதுரை வீரர்களை அவர்கள் புத்தளத்தில் எதிர்கொண்டனர்.

அதிகாலையில் போர் தொடங்குமுன் கிழவர் கூளப்ப நாயக்கர் மரத்தின் மீது ஏறி சிங்களப்படையை நோட்டமிட்டவர் மனதுக்குள் சிரித்துக்கொண்டார். அவர்களுக்கு யுத்த அனுபவம் அறவே இல்லை என்பது முதல் பார்வையிலே பிடிபட்டுவிட்டது. உற்சாகமாக இறங்கி சின்ன கேசவனிடம் போய்ப் பேசினார்.

உலகிலேயே வீரத்திற்குப் பேர் போனவர்களும், போர்க்கலையில் வல்லவர்களுமான துருக்கியர்களுடன் காலமெல்லாம் போரிட்டுப் பழகியிருந்த வடுகர்கள் களம் இறங்கியதும் அம்புபோல சிங்கள அணிகளை நடுவே துளைத்துச் சென்றனர். பெரும்பான்மையான மதுரை வீரர்கள் இரு பிரிவுகளாக விலகிக் காத்திருந்தனர்.

அணிவகுப்புப் பயிற்சிக்குப் போவதுபோல மொத்தமாகக் குவிந்திருந்த சிக்களர்கள் வெகு விரைவிலேயே இரு கூறாகப் பிளவுபட்டனர். விலகியிருந்த மதுரை அணிகள் சுற்றி வளைத்தன. பின்னர் போர்க்களம் பலிக்களமாயிற்று. நண்பகலிலேயே எஞ்சிய சிங்களர்கள் சரணடைந்தனர்.

மீதி நாளெல்லாம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட உடல்களைப் புதைக்கவும், காயம் பட்டவர்களைப் பராமரிக்கவுமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். உயிர் தப்பிய இரண்டு மந்திரிகளும் ஐந்து தேசநாதர்களும் கிருஷ்ணப்பனின் யோசனைப்படி, தமது அரசனுக்கு சமாதானமாகப் போகுமாறு ஓலை அனுப்பினர்.

மீதிப் படைகளையெல்லாம் திரட்டிக்கொண்டு சில பரங்கியர் களை அணித் தலைவர்களாக்கி, ஐந்தாம் நாள் சிங்கள அரசன் கண்டியிலிருந்து கிளம்பி விட்டதாகத் தகவல் வந்தது.

பரந்தலையில் அன்றி, காட்டுக்குள் அவர்களோடு மோதும் நோக்கத்துடன் மதுரைப் படை கண்டியை நோக்கி விரைந்தது. இப்போது ஐநூறு குதிரைகளிலும் மாதிக வில்லாளிகள் ஏறி முன்னணியில் இருந்தனர். அடுத்த அணியிலும் இரண்டா யிரத்துக்கும் மேல் வேடர், மாதிகவில்லாளிகளே இருந்தனர். கண்டி அரசனைக் கொல்லாமல் சிறைப்பிடிக்க வேண்டும் என்று கிஷ்ணப்பன் உத்தரவிட்டிருந்தான்.

சமவெளிக் காடுகளுக்குள் புகுந்தபின் மூன்று கல்தூரம் உள்ளே போய்க்காத்திருந்தது மதுரைப்படை, குறுமரங்களும், புதர்களும் அடர்ந்த காடு.

மறுநாள் மாலையில் சிங்களப் படையினர் இவர்களைக் கண்டனர். இந்தக் காட்டுக்குள் சண்டையிடுவது நமக்குப் பாதகமாகிவிடும்; அவர்களை இங்கு ஏறவிடாமல் வெட்ட வெளியிலேயே நாம் மோதியிருக்கவேண்டும்; பின்வாங்கிக் கண்டிகோட்டைக்கே

திரும்பிவிடுவோம்; கோட்டைக்குள் இருந்தால் சண்டை நீடிக்கலாம் என்று போர்ச்சுகீசியர்கள் ஆலோசனை வழங்கினர். முடிவு எடுக்கமுடியாமல் தாமதித்தான் அரசன்.

இரவுக்குள் அவர்களை நிர்மூலமாக்கிவிடும் வேகத்தில் இருந்த மதுரைப் படை ஏறிச்சென்று தாக்கியது. பரங்கியர் முன்னிலையில் நின்று துப்பாகிப் பிரயோகம் செய்தனர். அதனால் விளைந்த சேதம்தான் அதிகம். கவசங்கள், கேடயங்களின் மறைப்பிலும், மரங்களுக்குப் பின்னால் ஒளிந்தும் அவர்களை நெருங்கினர். இருதரப்பும் மோதிய வேளையில் வடபுறக் காட்டுக்குள்ளிருந்து மதுரை வில்லாளிகளின் குதிரைகள் வந்து தாக்கின. கூடவே வேடர்களின் அம்புகளும்...

சிங்களர்கள் கலைந்து தெற்கே காட்டுக்குள் ஓடினர். வடக்கிலும், மேற்கிலுமிருந்து வந்த மதுரை அணிகள் விரட்டிச் சென்றன. வதைப்படலம் ஆரம்பமாயிற்று. காடெல்லாம் மரண ஓலங்கள் எழுந்தன. மிகவும் பின்னணியில் இருந்த சிங்கள வீரர்கள் தப்பித்து ஓடினர். முன்நிரைகளில் இருந்தவர்கள் பலியாக, நடுவிலிருந்த வர்களை விரட்டி விரட்டி வெட்டினர். நிலைமையைப் புரிந்துகொண்ட போர்ச்சுகீசியர்கள் பலர் போரிடாமல் முதலிலேயே ஒதுங்கி மதுரை வீரர்களிடம் சரணடைந்து விட்டனர். அவர்களில் நால்வர் மட்டுமே பலியாகியிருக்க முப்பத்தாறு பேர் சிறைப்பட்டிருந்தனர்.

இரவு வருமுன்னே காட்டுக்குள் ஒளி மங்கிவிட்டிருந்தது. கண்டிராஜாவைக் காணவில்லை. பந்த ஒளிகொண்டு காடெல்லாம் தேடித்திரிந்தார்கள். கடைசியில் கண்டுபிடித்தார்கள். பாதைக்கருகிலேயே இறந்து கிடந்தான். மூன்று அம்புகள் தைத்திருந்தன. மாதிக அம்புகள். குதிரை அணியின் முதல் தாக்குதலின் போதே பலியாகியிருக்க வேண்டும். உடலை கிருஷ்ணப்பன் உரிய மரியாதைகளுடன் கண்டிக்கு அனுப்பி வைத்தான்.

அடுத்த நான்காவது நாள் மதுரை வீரர்கள் கண்டியைக் கைப்பற்றினர். அந்த அரசனின் இறுதிச் சடங்குகள் முடிந்திருந்தன. அரசகுடும்பத்தினர் அனைவரும் முந்தைய தலைநகரான அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டனர்.

கிருஷ்ணப்பன் இலங்கையில் வரியை வசூலித்து அனுப்பும் பொறுப்பைத் தனது உறவினனான மதனகோபால் நாயக்கனிடம் ஒப்படைத்தான். கண்டியின் கோட்டைப் பாதுகாப்புக்கு ஒரு நிலப்படையை நிறுத்திவிட்டு மூன்றாம் நாள் கிருஷ்ணப்பன் மதுரை திரும்பினான்.

*

இலங்கையின் மீது விஜயநகரத்தின் மூன்றாவது வெற்றி இது. மதுரைப்படை மட்டுமே சென்று இதைச் சாதித்தது என்பதாலும், அவனது முப்பத்தொன்பதாவது வயதில் பங்குபெற நேர்ந்த முதல் போர்க்களத்தில் வாகை சூடியதாலும் கிருஷ்ணன் பெருமிதத்தோடு கீழைக்கடற்கரையில் வந்து இறங்கினான்.

அவன் வருவதை அறிந்து அந்த இரவிலும் அரியநாத முதலியார் தூங்காமல் வந்து அவனுக்காகக் கரையில் காத்திருந்தார். வல்லத்திலிருந்து குதித்து அலைகளைத் தாண்டிக் கரையேறியவனை நெருங்கி அரியநாதர் தனியாக அழைத்துக்கொண்டு போனார். அவரது

முகவாட்டத்தைக் கண்ட கிருஷ்ணன், என்ன ஆயிற்று என்றுகேட்டான்.

அரியநாதர் பதில் சொல்லாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரம் அலைகள் மோதும் ஒலிமட்டும் கேட்டது. அவருக்குக் குரலே எழவில்லை. மீண்டும் கேட்கத் தயங்கியவாறு கிருஷ்ணன் அறியும் ஆவலோடு காத்திருந்தான்.

'தோற்றுவிட்டோம்.' குரல் கம்ம முனகினார் அரியநாதர்.

'அதனால் என்ன? போரில் வெற்றியும், தோல்வியும் சகஜம் தானே! மீண்டும் முயற்சிக்கலாம்.'

'இல்லை. விஜயநகர் எரிந்துகொண்டிருக்கிறது. வடக்கே களத்திலும் நகரத்திலும் பலியானவர்கள் லட்சப் பேருக்கு மேலிருப்பார்கள். ராமராயர் களத்திலேயே இறந்துவிட்டார். நான் படையுடன் நந்திமலைக்கு அருகே போய்க்கொண்டிருந்தபோதே தகவல் வந்துவிட்டது. நான் பெனுகொண்டாவில் போய்த் தாவளம் அடித்துக்காத்திருந்தேன். அரச குடும்பத்தினர் எஞ்சிய படைகளோடும் பொக்கிஷங்களோடும் பெனுகொண்டாவுக்கு ஓடிவந்துவிட்டனர். சுல்தான்கள் போர் முடிந்த மூன்றாம் நாளே விஜயநகரிலும் நாகலாபுரத்திலும் இறங்கிவிட்டனர்.

கிருஷ்ணன் சிறுவனாய் இருந்தபோதிருந்து பலமுறை விஜயநகருக்குப் போயிருக்கிறான். விஜயதசமிக்குத் தான் அம்மாவும், அவனும் லட்சுமியம்பிகையின் விருந்தினராகத் தங்கியிருப்பார்கள். அந்நகரைப் பார்த்த முதல் நினைவு இன்றும் அழியாச் சித்திரமாக அவன் மனதுக்குள் இருக்கிறது. ஏதோ கனவு உலகத்தில் இருப்பது போலிருக்கும்.

'லட்சுமியம்மா என்ன ஆனார்கள்?'

'தீக்குளிக்கவில்லை. ராமராயர் உடலே வரவில்லை. நகரத்தை விட்டுக் கிளம்பிய வேகத்தில் எதையும் யோசிக்கவே நேரம் இருந்திருக்காது. இப்போது மகன்களோடு பெனுகொண்டாவில்தான் இருக்கிறார்கள்.'

கிருஷ்ணன் கேட்டான் 'மீண்டும் விஜயநகரை மீட்டுப் புதுப்பிக்க முடியாதா?'

சிறுவனாக வேலை தேடி அந்நகருக்குள் நுழைந்த முதல் நாள் அவர் நினைவில் ஓடியது. அந்த பிரம்மாண்டத்தைக் கண்டு தயங்கித் தயங்கித் தெருக்களில் அலைந்தான். பிறகு அவனை ஓர் ஆளாக்கியது அந்நகரம். எத்தனை வெற்றிகள்! எவ்வளவு கொண்டாட்டங்கள்! அனைத்திலும் அவர் கூடவே இருந்திருக் கிறார்.

'சுடுகாடாகிப் போனது' என்று சொன்னவர் மேலும் பேச முடியாமல் கண்ணீர் வழிய அவனிடமிருந்து அகன்று இருளுக்குள் மறைந்தார்.

*

# 9

**இலங்கை வெற்றிக்கு ஐந்து ஆண்டுகள் கழித்து, திருநெல் வேலிக்குக்** கிழக்கே வேங்கடநாதருக்கு ஒரு கோயில் எழுப்பும் முயற்சியில் கிருஷ்ணன் இருந்தான். பணிகள் ஆரம்ப மாகிவிட்டிருந்தன. அதை மேற்பார்வையிடுவதற்காக கிருஷ்ணப்பனும், அரியநாதரும் அங்கே முகாமிட்டிருந்தனர். விஸ்வநாதன் காலத்தில் பெரிதாக்கப்பட்ட திருநெல்வேலியை மேலும் இவன் விரிவுபடுத்தினான். காந்திமதி அம்மன் ஆலயத்தில் மண்டபங்களும், தெப்பக்குளங்களும் கட்டப்பட்டன. புதிய பாசனப் பகுதிகள் பரந்தன.

கிருஷ்ணாபுரம் என்ற ஊர், கோயில் கட்டிக் கொண்டிருக்கும் போதே கிழக்கே உருவாகிவிட்டிருந்தது. மேட்டு நிலமாதலால் இடையர்குடி ஆக இருந்தது அது.

வசந்த மண்டபத்தின் முகப்புச் சிற்பங்கள் கோயிலுக்கு முன்னே மர நிழலில் உருப்பெற்றுக்கொண்டிருந்தன. வெயிலுக்கு மறைப்பாக நின்ற தென்னோலைத் தட்டிகளின் கீழ் சிற்பிகள் செதுக்கிக் கொண்டிருந்தனர். சிள்வண்டுகளின் இரைச்சல்போல் காற்றெல்லாம் உளிச்சத்தமே நிறைந்திருந்தது.

கிருஷ்ணப்பன், தனது தந்தையின் சிலை உருவாகிக் கொண்டிருப்பதை வெகுநேரம் நின்று பார்த்தவாறிருந்தான். ஒரு முதிய சிற்பி செதுக்கிக்கொண்டிருந்தார். ஸ்ரீரங்கம் மண்டபத்திலும் மதுரைக் கோயிலிலும் அவர் பணியாற்றிய காலத்திலிருந்து முன்னைய அரசரை நேரில் நன்றாக அறிந்தவர் என்பதால் அவர் இப்பணியை ஏற்றிருந்தார். மண்ணில் மல்லாந்து கிடந்த விசுவநாதரின் கைகள் வானை நோக்கிக் கூப்பியிருந்தன. இத்தூண் மண்டபத்தில் நிறுவப்பட்டால் அவர் கோயிலில் குடியேறி வேங்கடநாதரைக் கும்பிட்டுக் கொண்டிருப்பார்.

அப்பாவைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் கிருஷ்ணனுக்கு அம்மாவின் நினைவும் சேர்ந்தே வரும். அரசவையிலும் அலுவல்

நிமித்தமான பயணங்களிலும் அவர்கூடவே இருந்திருக்கிறான். தந்தையாகவும், அரசராகவும் அவரது முழுமையான ஆளுமையை அவன் உணர்ந்ததில்லை; அம்மாவின் அருகிலிருக்கும் போதுதான் அவர் தன் இயல்போடும் நிறைவோடும் இருப்பதாகத் தோன்றுவதுண்டு. கடைசி நொடிகளிலும் இவன் கையைப் பற்றிக்கொண்டு அம்மாவின் மடியில் தலை சாய்த்தவாறுதான் உயிர் நீத்தார். குழந்தையாக அவன் விளையாடித் திரிந்தபோது நினைவில் பதிந்த அந்தக்காட்சிகள்...!

அரியநாதர் அருகே வந்தார். சிலையைப் பார்த்துக்கொண்டே சிற்பியிடம் கேட்டார்.' ஏதாவது திருத்தங்கள் வேண்டுமானால் இவரைப் பார்த்து அதே சாயலில் சரிசெய்து கொள்ளலாமே!'

சிற்பி செதுக்குவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து சிரித்தவாறே சொன்னார் 'அரசர் உயரம்தான் அப்பாவைப் போல்; சாயல் அம்மாவுடையது.'

பெனுகொண்டாவிலிருந்து வந்த தூதுவன் அருகே வந்து வணங்கினான். அவனை மதுரையிலிருந்து அழைத்து வந்த அரண்மனைக் காவலர்கள் ஒதுங்கி நின்றனர். விஜயநகர அரசர் சதாசிவ ராயரிடமிருந்தும் லட்சுமியம்மாளிடம் இருந்துமாக இரு ஓலைகள் வந்திருந்தன. வாங்கி வாசித்துவிட்டு ராயரின் ஓலையை மட்டும் அரியநாதரிடம் கொடுத்தான்.

ஒதுக்குப்புறமாக ஒரு மரநிழலுக்கு வந்தபின் அரியநாதர் தூதுவனிடம் கேட்டார் 'என்ன நடந்தது?'

'கோல்கொண்டா சுல்தான் இப்ராகிம் ராயலசீமையில் பாதிவரை வந்துவிட்டான். ஆதோனி, குத்தி, தாடுபத்ரி, கடப்பை, நல்லபள்ளி கோட்டைகள் எல்லாம் பறிபோயின. கடைசியாக கண்டிக்கோட்டையும் விழுந்துவிட்டது. ரெட்டி பாளையக்காரர்கள் பெரும்பாலும் போரில் இறந்துவிட்டனர். மீதிப்பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஊர்கள் கொள்ளைபோகின்றன. பெண்கள் காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்து திரிந்தார்கள். எவ்வளவு நாள் திரிய முடியும்? சிறுமிகளையும் விடுவதில்லை. தூக்கிச்சென்று வளர்த்துக்கொள்ளலாம் என்று பிடிக்கிறார்கள். ஆதோனி மக்கள் கிழக்கே கோயில்கொண்டா, வினுகொண் டாவுக்குப் போய்விட்டனர். அதிக பாதிப்பு கண்டிக்கோட்டைக்கு தான். காப்புகள் ஊர்களைக் காலி செய்துவிட்டு தெற்கே கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். கண்டிக்கோட்டை ராமானுஜ ரெட்டி பிரசன்ன வேங்கடவரதர் கோயிலில் நடந்த சண்டையில் இறந்துபோனார். ராணி ரங்கநாயகி அப்போது கௌரி நோன்புக்காக காசியில் இருந்திருக்கிறார். தகவல் கேள்விப்பட்டு சத்ரு சம்ஹார பூஜை ஒன்று செய்துவிட்டு நேரே பெனுகொண்டா போய் லட்சுமி அம்மாளைக் கண்டு அழுதிருக்கிறார். செஞ்சிக்கும், ராயவேலூருக்கும் என்னைப் போலவே தூதர்கள் போயிருக்கிறார்கள். உணவும், உதவிகளும் தந்து காப்புகளைப் பராமரிக்கும்படி உத்தரவு.'

'சரி, இப்போது அந்தக் கூட்டமெல்லாம் எங்கு இருக்கிறது?' என்று கேட்டார் அரியநாதர்.

'ஒரு கூட்டம் பெனுகொண்டாவுக்குத் தெற்கே லேபாக்ஷியில் இருப்பதாகக் கேள்வி. பெருங்கூட்டம் ராயவேலூரை நோக்கி வண்டிகளிலும், நடந்தும் வந்துகொண்டிருக்கிறது. காப்புகளோடு

மாதிகர்களும், கொஞ்சம் வணிகர்களும் வருகிறார்கள். வழியெல்லாம் அவர்களைத் தாண்டித்தான் வந்தேன்.'

'சரி, மாலையில் வந்து பார்' என்றார் அரியநாதர். அவன்போன பிறகு கிருஷ்ணனைப் பார்த்து அரியநாதர் சொன்னார் 'லட்சுமியம்மாவின் அக்கறையை நான் குறை சொல்லவில்லை. ஆனால், அவர்களை மதுரை ராஜ்ஜியத்தில் குடியேற்றவேண்டும் என வலியுறுத்துவது ஏன்? வேலூரிலும், செஞ்சியிலும், தஞ்சாவூரிலும் குடியேற்றினால் என்ன? இந்த யுக்தி வடுகப் பார்ப்பான் நரசிம்மையாவின் வேலைதான்.'

'அதிகமாகக் கற்பனை பண்ணிக் கொள்கிறீர்கள்.'

'சிக்கல் வரும்போதுதான் உனக்கே புரியும். பொறுத்திருந்து பார். இங்கு அவர்கள் குடியேறிவிட்டால் நரசிம்மையா பாளையங்களைக் கொடுக்கச் சொல்வான். நான் உயிரோடு இல்லாவிட்டாலும் சரி, அப்போதும் நீ அதற்கு மட்டும் சம்மதிக்காதே.'

'உணர்ச்சி வசப்படுகிறீர்கள். ஒன்றும் ஆகிவிடாது. நிம்மதியாக இருங்கள்.'

'உனக்குத் தெரியாது. காப்புகள் திமிர் பிடித்தவன்கள். கொல்லவாருகளோடு ஒத்துப்போக மாட்டான்கள்.'

'பார்க்கலாம். ஏற்கனவே இருக்கும் பாளையங்களில் வேண்டாம்; மதுரை அரசின் காட்டுப் பகுதிகளில் குடியேற்றிவிடலாம். சத்தியமங்கலம் மலை ஓரங்களிலும், மதுரைக்குத் தெற்கேயும் அனுப்ப முடியுமா என்று பார்ப்போம். சக்கிலியர்களை பரமக்குடி பகுதியில் மதுரையின் நிலைப்படையாக வைத்துக்கொள்ளலாம்.'

'லட்சுமியம்பிகை என்ன எழுதியிருக்கிறார்கள்?'

'அது மதுரை அரசுக்கு வந்த ஓலை அல்ல. மகனுக்கு சித்தி எழுதியது.'

இந்தப் பதில் அரியநாதரைச் சுருங்கச் செய்தது.

கிருஷ்ணனே மேலும் தொடர்ந்தான் 'நீங்கள் மதுரையில் புதிய அரசை நிறுவுவதற்காக அயராது உழைத்தீர்கள். முப்பத்தைந்து ஆண்டுகளாக ஒரு விசுவாசமான மந்திரியாக விஸ்வநாதரிடம் இருந்தீர்கள். ஆனால், நான் அரசனான பிறகுதான் தொண்டை மண்டலத்திலுள்ள உங்கள் குலத்தினரை அழைத்து வந்து சகல வசதிகளும் உள்ள நான்கு ஊர்களை உருவாக்கிக் குடியேற்றினீர்கள். பாளையங்களை உங்கள் பிடியில் வைத்திருப்பதற்காக அங்கெல்லாம் முதலிகளை ராயசமாக நியமித்தீர்கள். இதை எல்லாம் நீங்கள் ஏன் என் தந்தை காலத்தில் செய்யவில்லை என்று நான் உங்களிடம் இதுவரை கேட்டதில்லை அல்லவா?'

*

# 10

**குதிரைகள் பூட்டிய அரியநாதரின் வண்டி கிழக்குக் கோபுரத்தின்** ஓரமாக நின்றது. அவரை இரண்டு பேர் கைத்தாங்கலாகத் தூக்கி இறக்கினார்கள். உடல் சுக்காக வற்றிப்போயிருந்தது. ஒருவன் அவிழ்ந்து விட்ட அவரது நரைக் குடுமியைச் சுற்றிக் கொண்டை யிட்டான். போன ஆனியோடு தொண்ணூற்றாறு வயது முடிந்துவிட்டது. இன்றுவரை, வீட்டில் போய் தூங்கும் நேரம் தவிர எப்போதும் அரண்மனையிலேயேதான் கிடை. இந்த வயதிலும் பிரதானி அவர்தான். எழுபத்தோரு ஆண்டுகளாக இந்த வேலையைச் செய்கிறார். சோழவந்தான் கால்வாய்கள் எந்தெந்த ஆண்டுகளில் எவ்வளவு செலவில் வெட்டப்பட்டன என்றும், ஒரு பாளையத்தின் இன்று வரையான வரவு செலவு என்ன என்றும் ஆதியோடு அந்தமாக நினைவிலிருந்தே சொல்வார்; ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு கணக்குச் சொல்லும் வழக்கமே இல்லை. பொதுவே சாதுவானவர். பாளையக்காரர்களுக்கு இவர் மீது மரியாதைஉண்டு; தனிப்பட்ட பரிசுகளும் உண்டு. கிருஷ்ணப்பனிடம் பிரதானியாக 8 ஆண்டுகள். பிறகு அவர் மகன் வீரப்பன் அரசனாயிருந்தபோது 23 ஆண்டுகள். அவர் மகன் வீரகிருஷ்ணனிடம் 6 வருஷம். வீரகிருஷ்ணனுக்கு வாரிசு இல்லாத தால் அவர் தம்பி மகன் முத்துக்கிருஷ்ணன் அரசன் ஆனான். அவனிடம் கடந்த ஓராண்டாகப் பிரதானியாய் இருக்கிறார்.

கூன் முதுகோடு கம்பை ஊன்றிக்கொண்டு நிதானமாய்ப் பத்து எட்டுகள் எடுத்துவைத்து கோபுர வாசலின் முன்னே நின்றார். அதிகம் நடக்க முடியாததால் இப்போதெல்லாம் கோவிலுக்குள் செல்வதில்லை. இருவர் அவரைத் தாங்கிப் பிடித்துக்கொள்ள ஒருவன் ஊன்றுகோலை வாங்கினான். நடுங்கும் கைகளைக் கூப்பியவாறு நிமிர்ந்து வணங்க முயன்றார். கழுத்தும் முகமும்தான் உயர்ந்தன. கண்கள் பழுத்திருந்தன. வாய் முணுமுணுத்தது 'தென்னாடுடைய சிவனே போற்றி... எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...'

மீண்டும் வண்டியில் அமரவைத்தனர்; போடிநாயக்கனூரை நோக்கிக் கிளம்பினார். 1601 மார்கழி கடைசி நாள் அது. நாளை தை பிறக்கிறது. புதிதாக இரண்டு பாளையங்களும் பிறக்கவிருக்கின்றன. பரமக்குடி பாளையம் இப்போது இல்லை; மதுரையின் நேரடி நிர்வாகத்தில் வந்துவிட்டது. பொம்மிக்கோட்டை பாளையம் எரியோடு பாளையத்தோடு இணைந்துவிட்டது. எனவேதான் புதிதாக இரண்டு உருவாகின்றன. வீரப்ப ராஜா காலத்தில் காளையர்கோவில் பாளையம் கலகம் செய்தது. அங்கிருந்த மாவலி வாணாதி ராயரிடமிருந்து அதையும் மானாமதுரையையும் பிடுங்கி மதுரை தன்னிடம் வைத்துக்கொண்டது. ராமேஸ்வரத்திற்கே போகமுடியாத அளவு திருடர் தொல்லை அதிகரித்ததால் ராமநாதபுரத்துக்கு சேதுபதியைப் பாளைக்காரராக்கி பாதைக் காவல் பொறுப்பும் ஒப்படைக் கப்பட்டது. இவ்வளவு ஆண்டு காலத்தில் மதுரையில் எந்தப் போருமே நடக்கவில்லை என்பது அரியநாதருக்கே ஆச்சரியமாயிருந்தது. விஜயநகரம் எப்போதும் போரிலேயே இருந்ததைக் கண்டவர் அவர். காயல்பட்டினம் மரைக்காயர்கள் பரதவர்களோடு கடலில் தொடர்ந்து மோதிக்கொண்டே இருந்ததால், அவர்கள் கடலில் பரங்கியர் மூலம் பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர். அதற்காக எல்லோரும் வேதத்தில் சேர்ந்துவிட்டனர். கடல் சண்டைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால் மதுரை அந்தப் பிரச்சனையைத் தன்போக்கில் விட்டுவிட்டது. ஆனால் முத்துக்குளி வருமானத்திற்குப் பங்கம் வரும்போல் தெரிகிறது. அடுத்த அந்தப் பிரச்சனையைக் கவனிக்க வேண்டும். பரங்கி அரசர்தான் தங்கள் அரசர் என்று வேதக்கார ஐயர்கள் பரதவர்களைச் சொல்லச் சொல்கிறார்களாம். அதெப்படி? அரியநாதருக்கு வேதக்காரத் தெய்வங்களைப் பற்றி ஒன்றும் புரியவில்லை. குறுக்குச் சட்டத்தில் ரத்தம் ஒழுக ஒரு ஆளை அடித்து வைத்திருக்கிறார்கள்! அவர்கள் சொல்வதைப் புரிந்துகொள்வதற்கான பொறுமை அரியநாதருக்கு இருந்ததில்லை. அவருடைய நாதன் என்றுமே ஒருவர்தான். அந்தக்காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்தபோது கைலாசநாதர். அப்புறம் விருபாஷர். பிறகெல்லாம் சொக்கநாதர்தான். மதுரைக் கோவிலின் வெற்றிடங்களை எல்லாம் நிறைத்து மண்டபங்கள் எழுப்பியாகிவிட்டது. இவர் சொல்லியும் கேட்காமல் மண்டபத்தில் இவருக்கும் ஒருசிலையை வீரப்பன் வைத்தான். சிவராத்திரி அன்று மண்டபத்தைத் திறந்தார்கள். அன்று உஷத்கால பூஜைக்குச் சென்றவர் கம்பத்தடி மண்டபத்தில் நந்திகேசுவரர் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார். எழுந்திருக்க இயல்வில்லை. கண்ணீர் பெருகியது. வீட்டுக்கு வந்தவர் மறுநாள்வரை வெளியே போகவில்லை. ராத்திரி மண்டபத்தில் நடந்த பூஜைக்கும் போகவில்லை.

குதிரைகள் மேற்குக் கோட்டை வாசலைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தன. நிறை அகழியில் தாமரை இலைகள் தெளிவின்றித் திட்டுத் திட்டான நீலமாக அவர் கண்ணில் பட்டன. இப்போது எல்லாம் பசுமைமங்கி நீலமாகத் தோற்றுகின்றன.

முத்துக்கிருஷ்ணன் அவரை வரவேண்டாம் என்று தடுத்துப் பார்த்தான். உங்களால் இந்த வயதில் அலைய முடியாது; நானே போய்ப் பார்த்துக்கொள்கிறேன் என்றான். அவர் பிடிவாதமாக இருந்து, அவனுக்கு முன்பே கிளம்பிவிட்டார். நாளை காலை அவன் வந்து சேர்வான். இதுவரை அரியநாதர் இல்லாமல் எந்தப் பாளையமும் பகிர்ந்து

கொடுக்கப்பட்டதில்லை. எப்போதும் அவர் கைப்படதான் சாஸனம் எழுதுவார். பாளையக்காரர்களைக் கண்டால் ‘உன் தாத்தனுக்கே ஓலை எழுதிக் கொடுத்தவன் நான்’ என்றுதான் ஆரம்பிப்பார் பாளையம் தொடங்கும் போதிருந்தே பிடியைத் தன் கையில் வைத்திருக்கவேண்டும். அப்போதுதான் பயப்படுவான்கள், இல்லாவிட்டால் வந்துகூடப் பார்க்க மாட்டான்கள். முன்பெல்லாம் வடுகர்களுக்குத் தெலுங்கிலும், மறவர் பாளையங்களுக்குத் தமிழிலும் எழுதுவார். இப்போது கன்னடர் பாளையம் உருவாகப் போகிறது. வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தார். முத்துக்கிருஷ்ணன் கேட்கவில்லை. கம்பம் சமவெளியையே ஒக்கலிகர்கள் விளைநிலங்களாக்கி விட்டதால் கண்டிப்பாக அவர்களுக்குத் தனியே தரவேண்டும் என்று சொல்லிவிட்டான். பிறகு சரி என்று ஏற்றுக்கொண்டார். எழுத் தாணி பிடித்து இப்போதெல்லாம் எழுத முடிவதில்லை. சொல்லச் சொல்ல முத்துலிங்க முதலி எழுதுவான். என்னமொழியில் எழுதுவது என்று யோசித்துக்கொண்டே போனார். வண்டிமெதுவாகப் போனாலும் ரொம்பவும் குலுங்குவதாகத் தோன்றியது.

**தை**ப்பொங்கலன்று போடிநாயக்கனூர் அரண்மனை கோலாகலமாயிருந்தது. அரியநாதரால் அமர முடியவில்லை. எனவே ஒரு கட்டிலைக் கொண்டுவந்து போட்டு சபா மண்டபத்தில் படுக்க வைத்திருந்தார்கள். காலையிலிருந்து ஒவ்வொரு பாளையக்காரராக வந்து இறங்கிக்கொண்டிருந்தார்கள். திண்டுக்கல் பதினெட்டுப் பாளையக்காரர்களும் மாலைக்குள் வந்துவிட்டார்கள். வந்தவர்களெல்லாம் மரியாதை நிமித்தமாக அரியநாதரிடம் வந்து பேசிவிட்டுப் போனார்கள். காலையிலிருந்து யாருடனாவது அவர் பேசிக்கொண்டிருந்தார்; இல்லை, கேட்டுக்கொண்டிருந்தார். மேல் மாடமெங்கும் விருந்தும் சிரிப்பொலியும் ஆர்ப்பரிப்புமாக இருந்தது.

மதுரையிலிருந்து அரசன் முத்துக்கிருஷ்ணன் பரிவாரங்களோடு முன்னிரவில் வந்து சேர்ந்தான். கட்டியம் கூறி வரவேற்றனர். விருந்து முடிந்தது. அரசன் சபா மண்டபத்தின் நடுவே விரிக்கப்பட்டிருந்த கம்பளியில் வந்து அமர்ந்தான். இருபுறமும் நான்கு வரிசைகளாகப் பாளையக்காரர்கள் உட்கார்ந்திருந்தனர்.

போடிநாயக்கனூர்காரர் தன் மருமகனுக்காகத் தென்மேற்கு மலையையும் அதன் அடிவார கிராமங்களையும் தானே ஒதுக்கித் தர முன்வந்ததால் பிரச்னை ஏதுமில்லை. தேவாரம் கோட்டையில் அவர் குடியிருந்ததால் அது தேவாரம் பாளையம் என்றானது. நந்தகோபால் கவுடருக்காக கோம்பை பாளையத்தைப் பிரித்தபோது மனவருத்தங்கள் குரல்பெற்றன. கடைசியாக முத்துக்கிருஷ்ணனே அதை முடித்து வைத்தான். கம்பம் எர்ரஜக்க நாயக்கனூருக்கு என்றும், சின்னமனூரும் உத்தமபாளையமும் கோம்பைக்கு என்றும், பண்ணைப்புரமே போடிக்கும் அதற்குமான எல்லை என்றும் முடிவானது.

வடகரை ராமபத்ர நாயக்கரை அரசன் எழுதச் சொன்னான். அரியநாதர் தன் கட்டிலுக்கு அருகில் அவரை அழைத்து தான் சொல்லச்சொல்ல எழுதுமாறு கூறினார்.

‘மீனாஷி சொக்கநாதர் துணை. விஜயநகர நரபதி மகாராஜ ஸ்ரீசக்ரவர்த்தி திருவேங்கடப்ப நாயக்கர் ராஜபரிபாலனத்தில் மதுரை கர்த்தாமான்யஸ்ரீ

ராஜாதி ராஜ பரமேஸ்வர கொட்டியம் விசுவநாத நாயக்கர் அவரது கொள்ளுப் பேரன் ராஜஸ்ரீ கொட்டியம் முத்துக்கிருஷ்ண நாயக்கர் ஆட்சியாண்டில் மனுசூர, மகாசூர விசுவநாத நாயக்கர் சர்வமான்ய பாத்யதையாய் எழுதிக் கொடுத்த...

*

# 11

**தொ**ட்டப்ப நாயக்கனூர் பாளையக்காரர் திம்மநாயக்கர் **அரியனூர்** வீரசின்னம்மா கோவிலில் நின்றிருந்தார். பூஜை முடிந்தவுடன் அவர்தான் இன்றைய ஜல்லிகட்டில் முதல் மாட்டைத் திட்டிவாசலில் இருந்து திறந்து விடவேண்டும். தைப்பொங்கலன்று இரவே போடியிலிருந்து ஊர் திரும்பியவர், தூங்கி எழுந்து நேரே குடும்ப சகிதம் இங்கே வந்திருந்தார்.

வேகமாக வந்து இறங்கிய போடி குதிரை வீரன் ஒருவன் அவரைத் தனியே அழைத்துப்போய் தகவலைச் சொன்னான். அரியநாத முதலியார் பரமபதம் அடைந்தார்.

‘கிழவனுக்கு நல்ல சாவுதாண்டா. நல்ல நாளாப் பாத்துப் போயிட்டாரு பாரு! குதிரைக்கும் நோகாம கொள்ளுக்கும் செலவில்லாம எவ்வளவு காலமா சவாரி போய்க்கிட்டேயிருந்தாரு...’ என்றவர் தன் மகன் பெத்தண்ண நாயக்கனை அழைத்து, பூஜையில் இருக்கச் சொல்லிவிட்டு, குதிரையிலேறி போடியை நோக்கி விரைந்தார்.

*

**அ**ரியனூர் ஜல்லிக்கட்டு. மேற்குநாட்டில் பிரசித்திபெற்ற ஜல்லிக்கட்டில் இதுவும் ஒன்று. கணவாயின் அடிவாரம் இருக்கிற தாய்கிராமம். செழிப்புமிக்க ஊர். ஊரைச் சுற்றியுள்ள நிலம் எங்கும் சுத்துப்பட்டு கிராமத்து மக்கள் குவிந்துகிடந்தனர். நடுத்தெருவில் மேற்கு முனையில் இருந்தது திட்டிவாசல். அங்கு திறந்துவிடப்படும் காளைகள் நடுத்தெரு முழுவதும் வந்து வயல்வெளியில் இறங்குவது போல் களம். வருடந்தோறும் வீரர்களின் ரத்தம் புழுதியில் சிந்தாவிட்டால் வீரசின்னம்மாவின் துடிப்பு அடங்காது. தேங்காய் பழம் வைத்து ‘இந்தத் தடவ குத்து நல்லா விழுகணும்மம்மா...’ என்று கும்பிட்டுவிட்டு ஊர்க்கோவில் மாட்டை கிளப்பிவிட்டார்கள். எள் விழ இடமின்றி

நின்றுகொண்டிருந்த ஆட்களுக்கு நடுவில் கழுத்திலும் கொம்பிலும் சூடியிருந்த மாலை கசங்காமல் அந்த இளங்காளை நடுத்தெருவைத் தாண்டி வெளியேறியது. அடுத்தடுத்து வந்தன காளைகள். ‘இன்னார் காளை இங்கிருந்து வருது. புடிச்சுக்கோ...’ என தமுக்குக் காரன் சாட்டினான். வீரர்களின் கூட்டம் காளையுடன் மல்லுக்கட்டி வசக்கிக் கொண்டிருந்தது. எங்கும் ஜனத்திரள். காளைகள் வீரர்களைத் தூக்கியெறிந்துவிட்டு ஓடிக்கொண்டிருந்தன. மாடுபிடி வீரர்களின் வித்தைகள் குத்துக்காளைகளைப் போகிற போக்கிலே பிடிபடவைத்தது. திட்டிவாசலிலிருந்து தவ்விக் குவித்து காளைகள் வெளியேறியபடியே இருந்தன. சூரியன் அடி சாயத் துவங்கினான். இனிதான் நல்ல காளைகள் எல்லாம் வரப்போகிறது என்று எல்லோருக்கும் தெரியும். இதுவரை கழட்டி விடப்பட்ட தெல்லாம் முன்னோட்டக்காளைகள்தான். அதுவெல்லாம் ‘வெத்து வெரட்டா ஓடிப்போச்சு.’ அதேபோல்தான் மச்சுவீட்டு தாவாரத்தில் உட்கார்ந்திருந்த நல்ல பிடிக்காரர்களும் இப்பொழுதுதான் இறங்கி நடுத்தெருவின் புழுதிமண்ணை எடுத்துக் கைகளிலே தேய்த்தனர்.

இருபுறம் வீச்சுக் கயிற்றைச் சுருட்டித் தோளில் போட்டிருந்தனர். உடையப்பாவின் காளையைக் கொண்டுவந்தனர். செந்தூரம் காதுகளை விடைத்தபடி திட்டிவாசலுக்குள் நுழைய அடம்பிடித்தது. சிவனாண்டி திட்டிவாசலுக்கு எதிரே எட்டி நின்று மாட்டை அழைத்தான். பின்திட்டியை முட்டி தாளமடித்துக் காளையைப் படாதபாடுபட்டு உள்ளே தள்ள முயற்சி செய்துகொண்டிருந்தனர். அதற்குள் தமுக்குக்காரன் வரப்போகும் அடுத்த காளையைப் பற்றி அறிவித்தான்.

பரணிலே நின்று தமுக்கடித்தவன் புது வேகத்தோடு ஓங்கி அடித்து நிறுத்திவிட்டு ‘யப்பா...அடுத்து வரப்போறது சிலுக்கானி உடையப்பாவோட காளையப்பா...’ என்றான். கூட்டத்திலிருந்து பெருஞ்சத்தம் மேலெழுந்து வந்தது. உடையப்பாவின் காளை வருகிறதென்றால் ஒரு பனைதள்ளி நிக்கணும். அவனுக்குத்தான் உயிர் சொந்தம். காளையின்னா அதுதான் காளை. ராஜ நடை போடும், ஓடாது. அப்படியே சுற்றி அங்கேயே நின்று இரண்டு பக்கமும் திரும்பிப்பார்த்து மெல்ல நடக்கும். ‘சிமிலுல ஒட்றவன சீமைக்கு தூக்கியெறியும், கொம்புல ஒட்டுறவன கொடிமரத்துக்கு தூக்கி எறியும்.’ ஆ...ஊ... என சத்தம்தான் சுத்தீலும் வருமே தவிர யாரும் கிட்ட நெருங்கமுடியாது.

மூணு வருசம் முன்ன உடையப்பாவோட காளையை புலிப்பட்டி ஜல்லிக்கட்டில் தாதனூர்க்காரன் அணைந்துவிட்டான். அணையாத காளையை அணைந்த வீரனை ஜல்லிக்கட்டுக்கு வந்த எல்லோரும் தூக்கிக்கொண்டாடினர். அன்றைய ஜல்லிக்கட்டின் பெரும் வீரமாக அதுவே இருந்தது. பொழுது மசங்க ஜல்லிக்கட்டு முடிந்தது. மாட்டுக்காரர்களும், மாடுபிடி வீரர்களும், பார்க்க வந்தவர்களுமாக கூட்டமெல்லாம் ஊரைவிட்டு வெளியேறியது. இரவெல்லாம் புழுதி ஊரையே போர்த்திக்கிடந்தது.

மறுநாள் அதிகாலை ஊர் விழித்தபோது தாதனூர்க்காரன் அடக்கி கொம்புத் துணியை உருவி எடுத்த இடத்தில் உடையப்பாவின் காளை செத்து கால் விறைத்துக்கிடந்தது. ஊரே துடித்து எழுந்தது. மூக்கில் ஈ மொய்க்கக் கிடக்கும் காளையைப் பார்த்து ‘அய்யய்யோ...’ வென கத்தியபடி பெண்கள் ஓடிவந்தனர். அடிபட்டுச் செத்துக்கிடக்கும் காளையைத்

தாங்கிப்பிடிக்க முடியாமல் புலிப்பட்டி நடுங்கியது. அது தங்கள் ஊருக்கு இழைக்கப்பட்ட அநீதி. குரோதத்தை காறி வீரத்தின் மீது உமிழ்ந்த கொடுஞ்செயல்.

இனி ஊர் இருக்கும் காலம் வரை சிலுக்காணி உடையப்பாவின் காளையோ, அவனது வாரிசுகளின் காளையோ புலிப்பட்டியின் திட்டி வாசலைத் தாண்டக்கூடாது என முடிவானது.

அதன் பிறகு உடையப்பா எந்த ஜல்லிக்கட்டுக்கும் காளைகொண்டு வரவில்லை. தாதனூருக்காகவே இரண்டு காளை களை இரவு பகலாக கவனித்து வளர்ந்து வந்தான். கண்களும் கொம்புகளும் தாதனூர்காரர்களை சந்திக்கத் தயாரானவுடன் இப்பொழுதும் அரியனூர் ஜல்லிக்கட்டுக்கு காளை கொண்டுவந்துள்ளான். ஒரு தலைமுறையாக மாடுபிடி வீரர்கள் எல்லோரின் மீதும் அவனது காளைகள் மச்சம் பதித்திருந்தன. இப்பொழுது புதுக் காளைகளோடு ஜல்லிக்கட்டுக்கு வந்திருக்கிறான். இந்தக்காளை எப்படியிருக்குமோ...என்ன பண்ணுமோ... என்ற அச்சமும் வியப்பும் எல்லோரிடமும் இருந்தது. மொய்த்துக்கிடந்த நடுத்தெருவின் கூட்டம் வகுந்து போட்டதுபோல் இரண்டாக விலகியது. தமுக்கடிப்பவன் தொடர்ந்து சொன்னான். ‘யப்பா... இந்தக் காளைய மத்த வீரங்கயாரும் அணையக்கூடாது. தாதனூர்க்காரங்கெ மட்டும்தான் அணையனும். அப்படி அணஞ்சுட்டா, அவெங்களுக்கு கட்டுப்பட்டு இனி உடையப்பா எந்த சல்லிக்கட்டுக்கும் காள கொண்டுவரமாட்டாரு. அணையாட்டி சிலுக்கானிக்கு தாதனூர் எல்லாம் அக்கா தங்கச்சிகள கட்டிக்கொடுக்கணும்போ...ய்’ என்று சாட்டினான்.

கூட்டம் பெருஞ்சத்தம் போட்டபடி வீறுகொண்டு முன்னுக்கு வரும் தாதனூரின் வீரர்களைப் பார்க்கத் தயாரானது. முண்டியடித்து ஜனக்காடு நெளிந்தது. பெரும் சத்தம் ஏறிப்பரவியது. அறிவிக் கப்பட்ட செய்தி காளைகளைவிட வேகமாகத் துள்ளிக்குதித்துப் போனது. நடுத்தெருக்கூட்டம் நன்றாக விலகி இடைவெளிவிட்டு தள்ளிநின்றது. திட்டி வாசலிலிருந்து பார்க்கும் காளைகளுக்கு ஆள் மறித்து நிற்காத பெரும்பாதை நீண்டு தெரிந்தது. எழுந்த கூச்சல் கொஞ்சம் அடங்கியது. கிளம்பும் புழுதியில் தெறிக்கும் ரத்தத்தைப் பார்க்க கண்கள் மொய்த்துக்கிடந்தன. நீண்ட பாதையில் ஒருவன் கூட உள் இறங்கவில்லை.

‘ஒருத்தனுமில்லப்பா...’ ‘யாரையும் காணமேடா...’ எனக் குரல்கள் அங்குமிங்குமாக எழுந்துவந்தன. எல்லோர் கண்களும் தாதனூர்க்காரர்களைத் தேடின. யாருமில்லை. தாதனூர்க்காரர்கள் ஜல்லிக்கட்டுக்கு வரவில்லையென்பதை கூட்டம் அப்போதுதான் கண்டுகொள்ள ஆரம்பித்தது.

‘அரியனூர் சல்லிக்கட்டுக்கு வராம ஊர அவமானப் படுத்ததுறாங்களா...’ என்று சீறிப்பாய்ந்தார் ஊர் முதன்மைக்காரர். உடையப்பாவின் சவாலும் அரியனூரின் கோபமும் ஒன்றுகலக்க ஆரம்பித்தது. அரியனூர்க்காரர்களின் சத்தம் வெளியெங்கும் ஓங்கி ஒலித்தது.

அமணமலையின் அடிவாரத்தில் இருந்தது தாதனூர். சடச்சியின் சந்ததியினர் உருவாக்கிய ஊர். அன்று அதிகாலை வழக்கம்போல்தான் தாதனூரிலிருந்து எல்லோரும் புறப்பட்டனர். ‘ஊர் பெரியாம்பிள

எங்கப்பா...' என்று தேடியபொழுதுதான் தெரிந்தது, மந்தைக்கல்லில் அவர் செத்து விறைத்துக் கிடக்கிறார் என்று. தாதனூர் ஆண்கள் ஊரில் சாவது அபூர்வம். வீடுதோறும் தலைமுறைக்கு ஒன்று அல்லது இரண்டு பேர் என்ன ஆனார்கள் என்று தெரியாமலே போய்விடுவார்கள். களவுக்கு போன இடத்தில் எங்கு போனார்கள், எப்படிச் செத்தார்கள் என்ற விபரம் தெரியாமலே ஊரும் வீடும் காலம் காலமாய் காத்துக்கிடக்கும். இது தவிர களவுக்கும் காவலுக்கும் போன இடத்தில் வெட்டுப்பட்டும், கலகமாகியும், பாம்பு கடித்தும் செத்தவர்கள்தான் ஊரில் பாதிக்கும் அதிகமானோர். வெளியில் செத்து தூக்கிவரும் உடல்கள் தான் ஊரிலே அதிகம். ஊருக்குள்ளே சாவது அபூர்வமாகவே நடக்கும். அப்படியொரு சம்பவம் அன்று நடந்துவிட்டது. ஜல்லிகட்டுக்கு புறப்பட்ட ஊரை ஊர் பெரியாம்பிளையின் சாவு மடக்கிவிட்டது. ஊரில் விழும் எழவுக்கும், ஊருக்குள் விழும் எழவுக்கும் இருக்கும் வித்தியாசத்தை அன்றைய நாள் முழுவதும் பார்க்கலாம். சம்பந்த வழி ஊரெல்லாம் செய்தி கேட்டு தாதனூருக்கு வந்தபடி இருந்தது.

உடையப்பாவின் சவால் எதிர்கொள்ள முடியாத பெருங்காளை என நடுத்தெரு முழுவதும் திமிறி நின்றது. 'அரியனூர் சல்லிக்கட்டுக்கு வராதவெ அரப்பொண்டுகன்டா...' என ஊர்க்காரர்கள் கோபத்தோடு கத்தினர். ஏச்சும் பேச்சும் எங்கும் ஒலித்தது.

அரியனூருக்கு அடுத்து இருக்கிற கோயிலாங்குடிக்கு ஆத்தா வோட ஊருக்கு வந்தவன் சின்னராசு. வந்து ஒரு வாரமாகிவிட்டது. இன்று ஜல்லிக்கட்டு. 'நம்ம ஊர்க் காரவெங்கெல்லாம் வருவாங்கெ' என்று காலையிலே கிளம்பி ஜல்லிக்கட்டுக்கு வந்துவிட்டான். அவன் மிக இளையவன். மாடு பிடிப்பதில் பெரிய அனுபவம் எதுவுமில்லை. வந்த இடத்தில் தமுக்கு அறிவிப்பைக் கேட்டுத் துடித்துப்போனான். ஊர்க்காரெங்க எங்கப்பா...' என்று தேட, யாரும் வரவில்லை என்பது தெரிந்தது. 'வந்த எடத்துல... இப்படியொரு வார்த்தைய கேட்டுட்டு ஊருக்கு திரும்பியப் போறதவிட குத்துப்பட்டு சாகலாம்டா...' என்று முடிவு செய்து தளர்ந்து போய் யாராவது வந்திருக்க மாட்டாங்களா எனத் தேடியபடி கூட்டத்தை விலக்கி நடுத்தெருவிலே ஏறிவந்தான்.

பெரியாம்பிள காக்குவீரனுக்கு வயசு எழுவதுக்கு மேலே இருக்கும். தூரந்தொலவுக்கு போயி ஒத்தையில கன்னம் போட்டு தூக்கிட்டுவர்ர மகாகெட்டிக்காரன். கம்பூண்டித்தான் நடப்பாரு. தெக்க ஸ்ரீவில்லிபுத்தூர் பக்கமா கன்னம் போட்டு வாரப்ப ஒரு ஊரில் அரியனூர் ஜல்லிக்கட்டு சாட்டுறதைக் கேட்டு அப்படியே குறுக்கவிழுந்து அரியனூருக்கு வந்துட்டார். வந்த இடத்தில் தண்டோராக்காரன் வசனத்த கேட்டு உடம்பெல்லாம் நடுங்கியது. 'மலையே...கருப்பா...இந்தச் சொல்லு கேக்கவா இங்க வந்தேன். இந்த எழுவது வயசுக்கு நான் எம்புட்டோ பாத்துருக்கேன். கடைசில இப்படியொரு சொல்லும் கேக்க வுட்டுடியே, இதுக்கு நான் செத்திருக்க கூடாதா... இது கேட்டுட்டு நான் ஒருத்தனா ஊருக்குப் போகணுமா... யாராவது ஒருத்தனாவது இருக்கமாட்டானா...' என புலம்பித் துடித்தபடி நடுத்தெருவிலே ஏறினார்.

தனக்கு முன்னால் தெற்குப் பக்கமிருந்து காக்குவீரன் பெரியாம் பிள வருவதைப் பார்த்த சின்னராசு ஓடிப்போய் 'கருப்பா...என்ன சாட்டுறாங்கேன்னு கேட்டயா...' எனக் கட்டிப்பிடித்தான். அவனது உடல்

அதிர்வது கிழவனுக்குத் தெரிந்தது. ‘கேட்டேன்டா கருப்பா... இதக்கேட்டு உயிரோட இருக்கணுமா நாம...’ என அவனை இறுகப்பிடித்த பெரியாம்பிளையின் கை இதுவரை இல்லாதபடி நடுங்கியது. இருவரின் கண்களிலிருந்து உணர்ச்சிப் பெருக்கால் லேசாக இமைகளில் நீர் துளிர்த்தது. வலிக்கும் வேதனைக்கும் கண்ணீரைக் கொண்டுவரும் பலம் என்றைக்கும் இருந்ததில்லை. ரோசத்திற்கு மட்டும்தான் கண்ணீர் இறங்கிவரும்.

‘டே கருப்பா, நீ சின்னப் பய. உனக்கு மாடு அணஞ்சு அனுபவம் பத்தாது. நீ வாழ வேண்டியவெ. நாமட்டும் மாடு பிடிக்கிறேன். நா ஒருத்தனா மாடு புடிச்சு தப்பமுடியாது. என்னய உறுதியா கொல்லும். அணையாம போயிட்டாங்கெ... அப்படிங்கிற பேச்சு வராம, மாடு அணைஞ்சு செத்துப்போனான்னு பேச்சு வந்தா போதும். அப்படி என்னய குத்தி நான் சாகப்போகும்போது, இந்த ஊர்க்காரன் எவனையும் என்னய தூக்கவிடக்கூடாது. காலப்புடுச்சு பரபரன்னு இழுத்துக்கே கூட போயி இந்த ஊர் எல்லைய கடந்து போட்டுரு. ஒன்னால மட்டும் என்னய தூக்கிட்டு போகமுடியாது. ஊருல போயி சொல்லி ஆள கூட்டிவந்து தூக்கிட்டுப் போ. இப்ப நீ நின்னு வேடிக்க மட்டும் பாரு’ என்று தளம்பிய வார்த்தைகளில் சொன்னார் காக்குவீரன் பெரியாம்பிள.

‘ஏம்ப்பா...நீ நல்லமுறையில் சாகணும், எனக்கென்ன... பெரியாம்பிளய அணையவிட்டு நா போயி ஊருக்குள்ள சொன்னேன்னா, நம்ம ஊரு என்னய மதிக்காது. இங்கிருக்கிறவனும் என்னய மதிக்கமாட்டான். எனக்கு பெரிசா மாடு புடிக்க தெரியாட்டினாலும் பரவாயில்ல. நா புடிக்கிறேன். குத்துப்பட்டு செத்தா நீ காலப்புடிச்சு இழுத்துக்கிட்டே போயி போட்டுட்டு, ஊருல இருந்து ஆள கூட்டிவந்து தூக்கிட்டு போ.’

கூட்டம் இருவரையும் வேடிக்கை பார்த்தபடி இருந்தது. கிழவனும் சிறுவனும் நெகிழ்ந்து உருகிக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சி கூட்டத்தை ஏதோ ஓர் உணர்வு நிலைக்கு கொண்டுபோனது. திட்டிவாசல் மாடு தாவாமல் நீண்ட நேரம் காத்திருந்தது. சத்தம் கூடுவதும் குறைவதுமாக இருந்தது. மாறி மாறிப் பேசி ஒன்றும் தெகையவில்லை.

‘ரெண்டு பேரும் செத்தா தூக்க நாதியில்ல...ஆனா நா சொன்னா நீ கேட்கமாட்ற, சரி... ஆனது ஆகட்டும். ரெண்டு பேரும் சேந்து அணைவோம்‘ எனச்சொல்லி ‘நீ மாடு புடிச்ச அனுபவம் இல்லாதவெ. அதனால நா கிட்டிகிட்ட இருக்கே. நீ தள்ளி நில்லு’ அப்பிடின்னு சொல்லிட்டு கருங்காலிக் கம்பை ஊன்றியபடி முன் நடந்துவந்தார் பெரியாம்பிள. நடுத்தெரு இன்னும் அதிகமாக விலகி வியப்போடு இருவரையும் பார்த்தது. கால் கூன் விழுந்த கிழவனின் சிறு நடையையும் மிரண்டு விழிக்கும் சிறுவனின் கண்களையும் உற்றுப்பார்த்தபடி இருந்த கூட்டம் என்ன சொல்ல முன்நகர்ந்து போகிறார்கள் என்று கேட்க எதிர்பார்ப்போடு இருந்தது.

‘யப்பா...நாங்க அணையுறோம்ப்பா!’

தமுக்குக்காரன் டமடமடமவென அடித்து பெருங்குரலில் அதை அறிவித்தான். கூட்டத்தை ஆச்சரியம் கவ்விப்பிடித்து. ‘இன்னைக்கு தாதனூர்க்காரெங்க பொணம் ரெண்டும் வருமாட்டோட காலல மிதிபட்டு சாணியாகப் போதுடோய்...’ என சிலர் கத்தினர். முன்னால் நின்றிருந்த

மாடுபிடி வீரர்கள் பாசம் மிகுந்த கவலையோடு இருவரையும் பார்த்தனர். ‘ஒருத்தெ பெரியாம்பிள, இந்த சின்னவன் இதுவரைக்கும் எந்த ஜல்லிக்கட்டுலயும் மாடு அணஞ்சு பார்த்ததே இல்லை. வரப்போறதோ இதுவரைக்கும் யாரும் அணையாத மாடுக. அதோட கொணம் என்னன்னு தெரியல, அதுவும் ஒண்ணு பாஞ்ச உடனே இன்னொன்ன வுடுவானே...’ என கவலையோடு சொல்லிப் பார்த்தனர். ஆனால் அதுவெல்லாம் யார் காதிலும் விழவில்லை. தமுக்குக்காரன் மீண்டும் டமடமடமவென அடித்து,

‘கரிச்சானை வெரட்டி பாயும் கண்ணாடி மயிலக்காளை

உள்ளானை ஓடிக்குத்தும் ஊசிக்கொம்பு வெள்ளக்காளை

ஒண்ணு போயீ ஒண்ணா ரெண்டும் வரப்போகுது

உசுரு வேணும்றவெ ஓடிக்கோ...

புடிச்சுப் பாக்கிறவெ நின்னுக்கோ...’ என்று அறிவித்தான்.

பெரியாம்புள தோளில் கிடந்த துண்டை எடுத்து உருமால் கட்டினார். கூட்டத்தில் கை நீட்டி ஒரு துண்டை வாங்கி ‘அடி வயித்துல கட்டிக்கோடா கருப்பா...’ என சின்னராசுவிடம் கொடுத்தார். அவன் வாங்கி இறுகக் கட்டினான். கருங்காலிக் கம்பைத் திட்டி வாசலோரம் சாத்திவைத்தார். ‘சங்க குத்தி அக்கவிட்றாத...அதுல கவனமா இரு’ எனசொல்லி ஒன்றிரண்டு யோசனைகளையும் கூறி அவனை தயார்படுத்தினார். வரிந்து கட்டிய வேட்டியைக் கிழவனின் விரல்கள் இன்னும் ஏற்றிச் சுருட்டிவிட்டன. திட்டி வாசலுக்குள் உடையப்பாவின் காளை நுழையாமல் சாமர்த்தியம் காட்டிக்கொண்டிருக்கிறது. கிழவன் திட்டிவாசலின் வலப்பக்க பனைத் தண்டை ஒட்டி நின்றான். சின்னராசு இடப்புறம் குறுக்குக் கட்டையில் காலை வைத்துப் பதற்றத்துடன் கிழவனைப் பார்த்தான். கிழவன் மாட்டைப் பார் என்று கண்களால் சைகை செய்தான்.

விடைத்த மூக்கின்வழி அனல் பறக்க காளை வலப்பக்கம் திரும்பிய சமயம் கிழவன் குறுக்குக் கட்டையை உடைத்துக் கொம்பை நோக்கிப்பாய்ந்தான். அதற்குள் சின்னராசுவின் இடத்தோளை கொம்பு செதுக்கிவிட்டது. ரத்தம் கசிவதை அவன் கவனிக்கவில்லை. திட்டிவாசலுக்கு எதிரில் ஒரு ஆள் இடை வெளியில் இருவரும் தயாராக நின்றுகொண்டிருந்தனர். உடையப்பாவின் காளை திட்டிவாசலுக்குள் இருந்து சீறிப்பாய்ந்து வெளியேறியது. சின்னராசு திட்டிவாசல் பக்கம் மலுச்செனக் குதித்தான். காளை திரும்ப உலுப்பியதில் களத்தில் விழுந்த கிழவனை கவிழ்ந்த தலையோடு நோக்கி வந்த வேகத்தில் குத்தியது. எத்தனையோ ஜல்லிக்கட்டில் எவ்வளவோ காளைகளை அணைந்த தழும்புகளைக் கொண்ட இரு கைகளும் காளையின் வேகத்தையும் குறிப்பையும் உணர்ந்தவை. வந்த வேகத்தில் சட்டென நகர்ந்து அதன் கழுத்தின் சாய்மானத்தை வைத்து ஒரு கொம்பை அடியிலும் மறுகொம்பை பாதிக்கு மேலேயும் சத்தெனப் பிடித்தபோது காளை உள்ளிழுத்தது. காளையின் பலமே கிழவன் எழுந்து நிற்கத் தோது செய்தது. சின்னராசு இந்த சந்தர்ப்பத்தைத் தவற விடவில்லை. வாலைப் பிடித்து வலப்புறமாகப் பலம்கொண்ட மட்டும் இழுத்தான். காளை கண்களைத் திரட்டி சின்னரசு பக்கம் திரும்பியது கிழவனுக்கு நல்ல தோதாகிவிட்டது.

மாடு, தான் ஏதோ வசமில்லாத பொறியில் மாட்டிக்கொண்டதாக உணர்வதை அதன் கண்கள் வெளிப்படுத்தின. காளையின் வேகம் அதன் கழுத்தைத் திருக்கியது. அப்படியே வயிற்றோடு அழுத்தி கிழவனைத் தூக்கி எறிய முயற்சித்தது. வாலைப் பிடித்து பக்கவாட்டின் எதிர்த்திசையில் வலுவெல்லாம் திரட்டி, சின்னராசு இழுத்தான். முட்டிய வேகத்தில் கிழவனைத் தூக்கி எறியமுடியாமல் இழுபடும் வாலின் திசையில் பின்கால் சரிந்தது. சக்கரம் சுற்றுவதைப்போல அதே நிலையில் இரண்டு பேரை காளையும், காளையை இரண்டு பேரும் சுற்றினர். புழுதி மண் உச்சிவரை தெறித்தது. ஓ வென சத்தம் திசைகளை உலுப்பியது. வெறியேறிய அதன் கண்கள் பிதுங்கியிருந்தன. கொம்போடு குத்தித் தூக்கி எறியப் படாதபாடு பட்டது. வாலின் அடிநரம்பும், திருகிய கழுத்தும் அதன் வேகத்தை இருபக்கமும் கிட்டி போட்டதைப்போல நெரித்தது. ஆனாலும் இருவரையும் கொண்டுபோய் கட்டையோடு சாய்த்தது. சாய்த்த வேகத்தில் திமிறிய கழுத்து கொஞ்சம் கூடுதலாக வளைந்தது. கிழவனுக்கு வசம் இன்னும் கூடியது. அதன் கொம்புகளை அமுக்கியபடி கால்களை சரியான வேகத்தில் பின்நகர்த்தி மாட்டின் கால்களுக்குள் மாட்டிக்கொள்ளாமல் மிதிபடாமல் உடனுக்குடனே இழுத்து, அது சுற்றும் வசத்திலே சுற்றியபடி பிடி தளராமல் அதன் கழுத்தைத் திருகினார். அதன் உள்வேகம் குறைய ஆரம்பித்ததை அழுந்தப் பிடித்த கிழவனின் விரல்கள் உணர ஆரம்பித்தன. ‘கருப்பா... வால மாத்தி இழுடா...’ எனக் கத்தினார். கிழவனின் பிடிக்கேற்ப சாய்ந்துகொண்டிருந்த கழுத்தின் எதிர்த்திசையில் வாலை இழுத்துக் கொண்டிருந்தவன், அதே இழுவை சிறிதும் குறையாமல் வில்லைப்போல அரைவட்டத்தில் வாளை இழுத்தபடி மறுதிசைக்கு வந்தான். கிழவன் எதிர்பார்த்தைப்போல அதன் பின்னங்கால்கள் அசைந்து தடுமாறின. பிடிபட்ட கொம்பை விடும் நேரத்தை கணிப்பதில்தான் வீரமும் உயிரும் இருக்கிறது. மாடு முழுவேகத்தில் இருக்கிறதா அல்லது வேகம் குறைந்திருக்கிறதா என்பது முக்கியமல்ல; அதன் நோக்கு எப்படியிருக்கிறது, விட்டால் அப்படியே முன் தாவி ஓடுமா அல்லது காலைப் பின்நகர்த்தி குத்தித் தூக்குமா என்பதைச் சரியாக கணித்தால்தான் எவ்வளவு பெரிய வீரனும் தப்புவான். கிழவன் இதை சரியான நேரம் என கணித்துத்தான் வாலை மாற்றி இழுக்கச் சொன்னான். கட்டைகளின் ஓரம் அரை வட்டத்தில் திரும்பி அமுக்கிக்கொண்டிருந்த அதன் கொம்பை இறுகப்பிடித்து ஒரு அழுத்து அழுத்தியபடி ‘கருப்பா...’ வெனக் கத்தி மண்ணிலே உருண்டு அதே வேகத்தில் சுருண்டான் கிழவன். முழுவேகத்தோடு எதிர்த்திசையில் தவ்விக் குதித்தது காளை. வேகத்துக்குத் தடையில்லாமல் சரியான நேரத்தில் இழுபட்ட வாலை விட்டு முன்புறமாகக் குப்புற விழுந்தான் சின்னராசு, காளை வெறிகொண்டு தவ்வி ஓடியது.

சுருண்டு கிடந்த கிழவனின் கையில் கொம்பிலே கட்டியிருந்த முடிச்சிட்ட துணி இருந்தது. கூட்டம் விண்ணைப் பிளப்பதுபோல் கத்தியது. இருவரும் காளையை அடக்கியவிதம் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது. கரவொலியும் சீட்டிச் சத்தமும் காதைப் பிளந்தன. சுருண்ட வேகத்தில் எழுந்தான் கிழவன். உடலெல்லாம் குத்திக்கிழித்திருந்தது. மேலெல்லாம் ரத்தம் கொட்டியபடி இருந்தது. ஓடும் காளையைப் பார்த்தபடி மண்ணை எடுத்து குத்துப்பட்ட இடமெல்லாம் பூசினான். ‘கருப்பா...’ என பதறியபடி வந்து பெரியாம்பிளையைத் தொட்டான்

சின்னராசு. காளையின் அதே வேகத்தில் தட்டிவிட்டு சிலிர்த்தான் பெரியாம்பிள.

ஆரவாரம் புழுதியை விட உயரத்துக்கு எழும்பியது. ‘வெரட்டு பெத்த’ காளை ஓடிய கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஊசிக்கொம்பு வெள்ளைக்காளை திட்டிவாசலிலிருந்து வெளியேறியது. கண்ணாடி மயிலக்காளை எடுத்துச்சென்ற பாதி வலுப்போக மீதி வலுவோடு இருந்த கிழவன் திட்டியைத் தாண்டும் வெள்ளக்காளையின் கண்களை உற்றுப்பார்த்தபடி நின்றான். அது தாவி வெளியேறாமல் கிட்டியை நடந்து கடந்து வந்தது. அஞ்சாமல் பதறாமல் வரும் மாட்டை ஒரு போதும் நம்பக்கூடாது என கிழவனுக்குத் தெரியும். ‘கருப்பா... இது விசயமான மாடுடா, பார்த்து சுதாரிப்பா நில்லு. குத்து விழுந்தா கொடல உள்ள தள்ளிக் கட்டி எந்திருச்சுரு’ என்றான். ‘சரி கருப்பா...’ என்றான் சின்னராசு. வாலைப் பிடித்த வாக்கில் முன்புறம் விழுந்ததில் மூஞ்சி மொகறை எல்லாம் சிராய்த்து ரத்தம் ஊறியபடி இருந்தது. வெளியேறிய காளை ஓடாமல் நின்று அரைவட்டத்தில் திரும்பிப் பார்த்தது. அதன் நோக்கறிந்த கிழவன் காலைக் கொஞ்சம் பின்னுக்கு இழுத்து நகர்ந்தான். சிறு வேகம் கொடுத்து அவனை நோக்கிப் பாய்ந்தது. அதே போல பின்னே வாலைப் பிடிக்கத் தாவிப்பாய்ந்தான் சின்னராசு. முன்நோக்கிப் பாய்ந்த காளை இருமடங்கு வேகத்தோடு சட்டெனப் பின்னால் திரும்பி சின்னராசுவைக் குத்தி கூட்டத்துக்குள் வீசியெறிந்தது. திரும்பாமல் இருந்திருந்தால் நெஞ்சில் பாய்ந்திருக்கும். மனிதனுள் புரளும் பயம் அவனைக் காப்பாற்றி விட்டது. காளையின் வேகம் அவனையும் அறியாமல் திரும்ப வைத்தது நல்லதாகவே போய்விட்டது. பின்செப்பையில் குத்தி எறிந்தது. ரத்தம் சொட்டச் சொட்ட திட்டி வாசல் கட்டையில் ஏறிவிட்டான்.

கிழவனைப் பதம் பார்க்க மாடு திரும்பியபோது திட்டி வாசல் பக்கம் ஓடினான். பாய்ந்த வந்த காளை வயிற்றில் முட்டி வீசியது. கூட்டத்தின் காலடியில் விழுந்தான். சாவின் வாசலுக்குள் திரும்பத் திரும்ப விழும் குணம் தலைதூக்க ஆரம்பித்தது. ‘கருப்பா...’ எனக் கத்தியபடி வாலைத் தவ்விப்பிடித்தான் கிழவன். அதே வேகத்தோடு மீண்டும் திறம்பியது. கிழவனின் வால்பிடி உறுதியாக இருந்ததால் அதனால் சுண்டித்தள்ள முடியவில்லை. விழுந்தவனை விட்டு கூட்டம் முழுவதும் விலகியது. குத்து வயிற்றில் கட்டியிருந்த துண்டோடு சேர்ந்து பக்கவாட்டில் ஏறியிருந்தது. ஆழமாக உள்ளே போகாமல் துண்டு வாங்கிக்கொண்டது.

வயிற்று மடிப்பில் கத்தி கொண்டு சீவியதைப்போல ரத்தம் வழிந்து ஓடியது. விழுந்தவன் கிழிபட்ட தோலுக்கு நேராகத் துண்டை மேலே ஏற்றிசரிசெய்தான். வாலைப் பிடித்த கிழவனை உதிர்க்க முடியாத அதே வேகத்தில் கீழே கிடந்தவனை நோக்கிச் சீறிப்பாய்ந்தது காளை. ‘கருப்பா... எடப்பக்கமா உருளுடா...’ எனச் சொல்லி வலப்பக்கமாக வாலை இழுத்தார் பெரியாம்பிள. சின்னராசு மிரண்டுபோய் சடசடவென உருண்டு எழுந்தான். அவர் நினைத்ததைப்போல காளை பெரும்கோபத்தோடு வலப்பக்கமாகத் திரும்பியது. விழுந்து கிடந்த சின்னராசுவால் கிடைத்த நேரத்திற்குள் கை ஊன்றி எழுந்து விலகமுடியவில்லை. கிழவனால் நீண்டநேரம் வாலை பிடித்து நிறுத்த முடியவில்லை. செருக்கடித்து காளை சுழன்றபோது அதன் விசை கிழவனை பலமிழக்கச் செய்தது. அலமலந்து அவன் கையிலிருந்து வாலை உருவவிட்டான். திரும்பிய வேகத்தில் இடுப்போடு சேர்த்து

கிழவனை முட்டித் தூக்கியது. அவன் அந்த வேகத்திற்கு ஈடுகொடுத்து கொம்புகளை இறுகப் பிடித்தான். நீண்டு அகன்ற அதன் கொம்புகள் எந்த வசத்திலும் பிடிக்குள் அடங்கவில்லை. திட்டிவாசலை ஒட்டிய கட்டையோடு சேர்த்து கிழவனை அமுக்கியது.

சாவின் விளிம்பில் இருக்கும் இருவரையும் பார்த்துப் பதறிய கூட்டம் மண்ணை அள்ளி மாட்டின் மேல் வீசியது. சத்தம் வெளியைக் கிழித்து எழுந்தது. கிழவனின் இடது விலாவை ஒட்டி வேல் கம்புபோல சொருகி வெளியேறியிருந்தது அதன் கொம்பு.

சின்னராசு சுதாரித்து எழுந்ததைப் பார்த்த கிழவன் சட்டென' அடிவாலப் புடுச்சு கிட்டி வாசலுக்குள்ள இழுடா கருப்பா...' என்றார். முறுக்கி நின்ற அடி வாலை இறுகப்பிடித்து திட்டிவாசலுக்குள் இருந்தபடி உயிரைக் கொடுத்து இழுத்தான் சின்னராசு. காளை கிழவனை வீசியெறிந்தது. இக்கட்டில் மாட்டிக்கொண்டது போலாகிவிட்டது சின்னராசுவுக்கு தப்பிக்கத் தோது இல்லாமல் திட்டி மறைப்பு முடக்கியது. வெள்ளை மூர்க்கமாகத் திரும்பியபோது திமிலுக்குப் பாயப்பார்த்தான். அப்படியே மரத்தோடு அவனை நொறுக்கி இழுத்து களத்தில் வீசிய காளை கூட்டத்திலிருந்து எதிர்வந்தவனை நோக்கிப் பாய்ந்தது. குறுக்கே தப்பியோடிய நடுக்கட்டு வயது உள்ளூர்காரனை வெள்ளை முட்டித் தூக்கிக்கொண்டு திட்டி வாசலுக்கு முன் குத்திக் கொண்டிருந்ததைப் பார்த்தக் கூட்டம் பதறியடித்து கத்தியது. குற்றுயிராய் கிடந்த கிழவன் இதை சாதகமாகப் பயன்படுத்தி வலியோடு பதுங்கினான்.

கிழவன் கொம்பையும் சின்னராசு அதன் வாலையும் நோக்கிப் பாய்ந்து ஓடினர். சின்னராசுக்கு தோது சரியாக அமைந்தவுடன் கிழவனுக்கு நம்பிக்கை கூடியது. அதே திசையில் கொம்பை வலுவோடு பிடித்து மாட்டைப் பின்னுக்குத் தள்ளினான் கிழவன். 'பொச்சாங்கொட்டய உள்ள கொண்டுபோ...' என்று கத்தினான் கிழவன். காளை பின்னக் கால்களை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக நக்ட்டி விலக்கியது. அடிவால் பிடியும் கொம்புப்பிடியும் சரியாக அமைந்து இருவரும் ஒரே திசையில் வலுவுள்ள மட்டும் சேர்த்துத் தள்ள கால் ஒரு எட்டு பின்னுக்கு நகர்ந்தது. கிழவன் எதிர்பார்த்ததைப்போல திட்டி வாசலுக்குள் குண்டிப்புறம் நுழைந்துவிட்டது. கிழவனுக்கு நம்பிக்கை இன்னும் அதிகரித்தது. 'வ்வூண்டி இழுடா கருப்பா...' என்றார். திட்டி வாசலுக்குள் இருந்த தனது இரண்டு கால்களையும் அடவு கொடுத்து பலமுள்ள மட்டும் சேர்த்து இழுத்தான் சின்னராசு. அடுத்த எட்டு பின்நகர்ந்து. தலையை பலங்கொண்டு ரெண்டு பக்கமும் உலுப்பியது. அதன் நீண்ட கொம்பின் முனை கிழவனின் இரண்டு தோள்களையும் கழுத்தையும் மாறி மாறிக் கீறித்தள்ளியது. ஆனாலும் கிழவன் இடக்கொம்பைப் பிடித்த பிடியை விடாமல் முன்னுக்குத் தள்ளினான். அவனுக்குக் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. மாடு பாதி திட்டிவாசலுக்குள் போய் விட்டதைப் பாரத்தவுடன் இனி அதனால் விலகிச் சுத்தமுடியாது என கணித்து 'கருப்பா...வாலவுட்டுட்டு வெளியில வாடா...' என்றார் சின்னராசு திட்டிவாசல் கட்டையில் ஏறித் தாண்டி வெளியில் குதித்தான். 'கருப்பா... ஏங் கைய ஒட்டி கொம்ப புடிடா' என்றார். சின்னராசு அதே போலக் கால்களை அகற்றிவைத்து நெஞ்சுக்கு நேராகத் தாங்கி கொம்பைப் பிடித்தான். அந்தப் பிடி பிடிக்கும்பொழுதுதான் அவனது இடது கழுத்து

ஓரமாக விழுந்த குத்து அவனுக்குத் தெரிய வந்தது. ரத்தம் பீறிடவலி தாங்க முடியாதபடி இருந்தது. கைப்பிடியிலிருக்கும் கொம்பை மாடு உலுக்கும்போதெல்லாம் ரத்தம் குபுகுபுவென ஊறிவந்தபடி இருந்தது.

ஆனாலும் நெஞ்சோடு தாங்கிக் கொம்பைப்பிடித்தான். திட்டி வாசலுக்குள் தள்ளியபின் காளை பாதி வலுவை இழந்தது. சின்ராசுவின் பிடி வசமாக இறுகியதும் தனது பிடியை விட்ட கிழவன், திட்டி வாசலோரம் சாத்தி வைத்திருந்த கருங்காலிக் கம்பை எட்டி எடுத்தான். மயக்கம் கண்ணை இறுக்கக் கட்டியது. ரத்தம் காயத்தில் வழிந்துகொண்டிருந்தது; வைராக்கியம் உடலை தனது வசத்திற்கு எடுத்து இயக்கிக்கொண்டிருந்தது. கருங்காலிக் கம்பையை எடுத்தவுடன் சின்னராசுவிடம் சொன்னார் ‘கருப்பா, அடிக்கப்போறேன். சரியா வெலகுனீன்னா மாடுசாகும். வெலகலைன்னா அடி வோந்தலையில் விழுந்து நீ சாவ. மாடு என்னய குத்தி போட்டுட்டுப் போயிரும்‘ என்றார். ‘சரியப்பா’ என்றான் சின்னராசு. வார்த்தை உயிரின் கடைசி மிச்சத்திலிருந்து வந்துகொண்டிருந்தது. வலுவெல்லாம் சேர்த்து ‘கருப்பா...’வெனக் கத்தியபடி கருங்காலிக் கட்டையால் ஓங்கி நடுநெற்றியில் அடித்தார். கருங்காலிக்கட்டை பாதியாகத் தெறித்து திட்டிவாசலுக்குள் போய் விழுந்தது. முன்னத்திக் கால்கள் இரண்டும் பிளந்தபடி கீழே விரிந்தன. அதன் இரண்டு கொம்புகளுக்கிடையில் நெஞ்சை சாய்த்தபடி அப்படியே மாட்டோடு கீழே உட்கார்ந்தான் சின்னராசு.

கூட்டம் பெருங்கத்தலோடு ஓடிவந்தது. வீடுகளுக்குள் போய் புளிச்ச தண்ணியும், கஞ்சித்தண்ணியும் சட்டி சட்டியாகத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தனர். கிழவன் மீதமிருந்த உயிரை வைத்து அதனைத் தட்டி மறுதலித்தான். ‘வம்புக்கு இழுத்து மாட்ட அணையவிட்டவன, நடுமைய்மா நின்னு நீங்க கேக்கல்டா... இனி தாதனூர்க்கார எவனும் அரியனூர் நடுத்தெருவ மிதிக்கமாட்டான்டா...’ எனச் சொல்லியபடி அங்கேயே சாய்ந்தார் காக்குவீரன் பெரியாம்பிள.

கூட்டத்தில் இருந்த கோயிலாங்குடிக்காரர்கள் இருவரையும் தூக்கிக்கொண்டு தாதனூரை நோக்கி ஓடிவந்தனர். செய்தி கேள்விப்பட்டு தாதனூர் திரண்டுபோய் பாதியிலே மறித்து இருவரையும் கட்டிலிலே போட்டு ஊருக்குத் தூக்கிவந்தது. ஊருக்காக கடைசிவரை போராடி உயிர்விட்ட இருவருக்கும் ஊர் பொதுமரியாதை செய்வதென முடிவு செய்தது.

அன்றிலிருந்து தாதனூரில் புதுசா யார் வாணந் தோண்டினாலும், செவரு வச்சாலும், விழுந்த செவரை எடுத்த வச்சாலும், ஒத்தப்பல்லன் வகையறா காக்குவீரன் கொடிவழிக்கும், காளை வகையறா சின்னராசு கொடிவழிக்கும் காணிக்கை வரி கொடுத்துவிட்டுத்தான் துவக்கவேண்டுமென முடிவானது.

*

# 12

**வைகையோடு கொட்டகுடி ஆறு கலக்குமிடத்தில்தான் ‘தொட்டி** குடுப்பு’ விழா வழக்கமாக நடைபெறும். மாசி அல்லது பங்குனி பௌர்ணமியில். திண்டுக்கல்லில் மாசியில் என்றால் இங்கு அடுத்த மாதம். நான்கு திசைகளிலிருந்தும் கொல்லவாருகளின் மொத்த மாட்டு மந்தைகளும் அன்று இரவில் அங்கு வந்து சேரும். கன்னிவாடிப் பாளையத்திற்குத் தெற்கில் இருப்பவர்கள்தான் இங்கு வருவார்கள். வடக்கில் உள்ளவர்களுக்குத் திண்டுக்கல். கொல்லவாருகளின் ஒவ்வொரு வீட்டிலும் ஐநூறுக்குக் குறையாத மாடுகள் இருந்தன. ஒவ்வொரு ‘வீடு’ம் நான்கைந்து தலைமுறையினர் நூறு பேரோடு பத்திருபது கூரைவீடுகளில் மாட்டுத் தொட்டி அருகே குடியிருந்தது. தமிழ்நாட்டிற்கு வந்தபிறகு இந்த இருநூற்றம்பது ஆண்டுகளில் கொல்லவாரு என்ற பெயர் வடுகர்களுக்குள் மட்டும் புழங்கியது. தமிழர்கள் அவர்களைத் தொட்டியர் என்றும் கம்பளி மரியாதைக் குரியவர்கள் என்பதால் கம்பளத்தார் என்றும் சொல்லிப் பழகிவிட்டனர்.

இந்த ஆண்டு பௌர்ணமியன்று முன் எப்போதையும்விட பெருங்கூட்டம் இருந்தது. இரு நதிகளின் கரைகளெங்கும் பெருந்திரளாக மாட்டு மந்தைகள் தனித்தனியே நின்றிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் மாடுகளாகவே தெரிந்தன. இடையிடையே மனிதர்கள். கல் அடுப்புகளில் பொங்கல் பானைகள் பொங்கிக் கொண்டிருந்தன. கன்னிவாடிக்குத் தெற்கிலுள்ள பதினோரு பாளையத்திலுள்ள மாடுகளும் வந்திருந்தன. பத்துக்கு மேற்பட்ட மந்தைகள் எல்லாப் பாளையத்திலும் உண்டு. நூற்றைம்பதுக்கு மேல் மந்தைகள் இங்கு நின்றன. கன்றுகள் அடங்காமல் வால்தூக்கித் துள்ளிக்கொண்டு குறுக்கு மறுக்காக ஓடின. சிறுவர் துரத்தித் துரத்தி மந்தைக்குள் மடக்கினர். வீட்டுத் தேவைக்கு மேல் இவர்கள் பால் பீய்ச்சுவதில்லை. தாய்ப்பால் முழுக்க கன்றுக்குத்தான். கோடையில் ஒடுங்கி ஓடுகிற ஆற்று நீரின் ஓரமெல்லாம் எப்போதும் மாடுகள் நிரை நிரையாய் நின்று குடித்துக்கொண்டிருந்தன. அந்த

வெளியெங்கும் அவற்றின் கழுத்து மணியோசையே நிறைந்திருந்தது. பொலி ஆவுகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர்.

பொங்கல் பானைகளுக்குப் புறமே கோட்டை அடுப்புகளின் மேல் சோறும் குழம்பும் கொதித்துக்கொண்டிருந்தன. கன்னிப் பெண்களைத் தவிர எல்லோரும் தங்கள் மந்தையோடு வந்து குழுமியிருந்தனர். பொங்கல் முடிந்த இடங்களில் பூஜை ஆரம்பமாயிற்று. விரித்த கம்பளியின் மேல் பொலி ஆவு சர்வலாங்காரங்களுடன் வந்து நின்றது. பொங்கலும் பழங்களும் அதற்குப் படைக்கப்பட்டன. உறுமிக்காரன் வீட்டின் சரித்திரத்தை உறுமியை இழுத்தவாறு பாடினான். பூஜை முடிந்ததும் பந்தி தொடங்கியது. தையல் இலைகளில் பரிமாறினர். யாரும் பந்தியில் போய் அமரலாம்.

சில்லவாரு, வல்லக்கவாரு குலங்கள் மட்டுமே கம்பளத்தாரில் அங்கு இருந்தனர். கோம்பை பாளையத்து ஒக்கலிகர் மந்தைகளும் வந்திருந்தன. அவர்களது தேவர ஆவுக்கு கம்பளி மரியாதை இல்லை. உறுமிப்பாடல் உட்பட மற்ற சடங்குகள் இதேதான். வடகரை பாளையத்தினர் மட்டும் பலிஜ காப்பு குலத்தினர் என்பதால் அவர்களது கோட்டையில் உள்ள பசுக்கள் மட்டும் வந்திருந்தன. அரவ நாட்டுக்கு வந்த பிறகு தான் அவர்கள் கம்பளத்தாரோடு சேர்ந்து இந்த விழாவில் கலந்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. அவர்களுக்குப் பொலி ஆவோ தேவர ஆவோ இல்லை. ஏதோ ஒரு பசுவைப் பிடித்து பூஜை வைத்தார்கள். உறுமிக்காரன் குல வரலாற்றைப் பாடிக்கொண்டிருந்தான்.

விடியுமுன்பே ஒவ்வொரு மந்தையாகத் தன் மேய்ச்சல் நிலத்துக்கும் மலைக்கும் திரும்பிக் கொண்டிருந்தது.

**நா**ய்கள் முன்னே ஓட ஒரு குதிரை பின்தொடர்ந்து சென்றது. அதன் மேல் ஒரு சிறுவன் இருந்தான். அமணமலை தாண்டி மாடக்குளம் நோக்கி அவை ஓடின.

சற்று நேரம் கழித்து மூன்று பசுக்களோடு அந்தக் குதிரை நாய்கள் சூழத் திரும்பி வந்தது. அமணமலை ஆலமரத்தடிக்கு வந்ததும் குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தி, மாடுகளுக்காக ஒரு குரல் கொடுத்தான். அவையும் நின்றன.

ஆலமரத்தடியில் இருந்த தானூர்க்காரர்கள் இந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தனர். அந்தப் பையனுக்கு பதிமூன்று வயதுதானிருக்கும்.

அவன் வாளை உருவிக்கொண்டு சொன்னான் ‘இப்ப இந்த மாட்டைப் பிடிச்சுப் பாரு...’

அதற்குள் கருப்பு கோவில் பக்கமிருந்து ஏழெட்டுப் பேர் ஓடிவந்தனர். அதில் செட்டிக்கழுவன் பெரியாம்பிளையின் காதில் மெதுவாகச் சொன்னான் ‘எங்க கொத்துதான் ராத்திரி திருவிழாவுல இருந்து பிடிச்சிட்டு வந்தது. மாடக்குளம் அருணாசலம் பிள்ளைகிட்ட ஆறுகோட்டை கேப்பைக்கு மாத்துனோம்.’

ஊர்ப்பெரியாம்பள குதிரைக்காரனிடம் சொன்னார் ‘எங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்ல.’

‘விலைக்கு வாங்குனவன இப்ப கூட்டிட்டு வரட்டுமா?’

ஆலமரத்தடியில் இருபது பேருக்கு மேலிருந்தனர். எவரும் எதுவும் பேசமுடியாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர். சட்டென்று செட்டிக்கழுவனை அறைந்த பெரியாம்பளை கேட்டார் ‘ஏன்டா ஊர்மானத்தை வாங்குற?’

‘நாங்க மச்சம் எதுவும் விட்டுட்டு வரலை. இந்த நாய்கதான் எப்படியோ கண்டுபிடிச்சு வந்துருச்சி...’

பெரியாம்பிள அந்தப் பையனைப்பார்த்துச் சொன்னார் ‘இனி இப்பிடி நடக்காது. இப்ப நீ போ.’

‘இனிதொட்டா கை இருக்காது’ என்றவன் குதிரையைச் சுண்டிக் கிளம்பினான்.

பெரியாம்பிளையின் குரல் அவனைத் தொடர்ந்தது ‘தம்பி...நீ யாரப்பா?’

நிற்காமலே திரும்பியவன் சொல்லிவிட்டுப் போனான் ‘வேங்கடகிருஷ்ணன். தேவதானப்பட்டி.’

**அ**ன்றிரவு தேவதானப்பட்டியை அடைந்து தொட்டியில் மாடு களை விட்டுவிட்டு வேங்கடகிருஷ்ணன் சாப்பிடப் போகும்போது தான் தகவல் அறிந்தான். அவன் பாளையத்துக் குதிரைகள் எல்லாம் சண்டைக்குக் கிளம்பிப் போய்விட்டன. இந்தப் பாளையத்தில் போருக்குப் போகும் தகுதியில் இருக்கும் குதிரைகள் நானூறுதான் தேறும்.

கன்னிவாடியில் பாளையங்கள் ஒன்றுகூடி நாளைதான் கிளம்புவார்கள்; நீ காலையில் போய் இந்தக் குதிரையை அங்கே கொடுத்துவிட்டு வந்து, பிறகு இந்த மாடுகளை மலைக்குப் பத்திக்கொண்டு போ என்று அவன் தாத்தா சொன்னார். கானத்தைத் தின்ன வைத்து குதிரையை ஓய்வில் விட்டான்.

அதிகாலையில் எழுந்து அவன் திண்டுக்கல் பெரும்பாதையில் வடக்கே கன்னிவாடியை நோக்கி குதிரையை விரட்டினான்.

பின்னிரவிலேயே அங்கிருந்து படை சத்தியமங்கலத்துக்கு கிளம்பிப் போயிருந்தது. சற்றுக் கண்ணயர்ந்து பிறகு ஊர் திரும்பலாம் என நினைத்து குதிரையைக் கட்டிவிட்டு மரநிழலில் படுத்தான்.

குதிரைகளின் குளம்பொலியும் கனைப்பும் கேட்டு விழித்துப் பார்த்தான். போடி குதிரைகள் வந்து நின்றன. ஆயிரத்துக்கும் மேலிருக்கும். பின்னாலேயே தேவாரம் குதிரைகளும் வந்தன. போடியில் பாதியளவு இருக்கும். அந்தப் பாளையம் ஆரம்பித்து இருபது வருஷம்தான் ஆயிற்று என்று கேள்விப்பட்டிருந்தான். அதற்குள் இவ்வளவு குதிரைகளை எப்படிச் சேர்த்தார்கள்!

தண்ணீர் குடித்து சிறிது நேரம் ஓய்வில் நின்றபின் அந்தக் குதிரைகள் மேற்கே கிளம்பின. அவனும் அவர்களோடு சேர்ந்துகொண்டான்.

மாலையில் அவர்கள் ஈரோடை கோட்டைக்குத் தெற்கே பத்துக் கல் தொலைவில் தாவளம் அடித்துத் தங்கியிருந்த தம் படையினரைக் கண்டனர்.

விஜயநகர அரசன் வேங்கடன் மாண்டபிறகு பெனுகொண்டாவில் வாரிசு உரிமைச் சண்டை நடந்தது. விஜயநகரத்தின் தலைநகரே அப்போது ராயவேலூருக்கு மாறியிருந்தது. பெனுகொண்டா உள்ளிட்ட வடபகுதி தொடர்ந்து முகம்மதியர் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்ததால் இந்த மாற்றம்.

அரசன் வேங்கடனுக்கு வெகுநாளாகக் குழந்தையில்லை. ராணி ஒரு தந்திரம் செய்தாள். கர்ப்பமுற்றிருந்த பெண் ஒருத்தியிடம் பேசி அவள் சம்மதத்தோடு தன் அந்தப்புரத்திலேயே தங்க வைத்தாள். தானும் பல மாதங்களாக வெளியே போகவில்லை. பிறகு ராணிக்கு ஆண்குழந்தை பிறந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அரண்மனை வளாகத்தில் யாவரும் அறிந்த ரகசியமாகத்தான் அது இருந்தது.

மரணத் தருவாயில் அரசன் தனது தம்பியை பட்டத்துக்கு உரியவனாக்கிவிட்டான். முடிசூடும் முன் பிரச்னை உருவாயிற்று. ராணியின் தமையன் ஜக்கராயன் தலைமையில் ஓர் அணியும் புதிய மன்னனுக்கு ஆதரவாக தளவாய் எச்சம நாயக்கனின் கீழ் எதிர் அணியும் மோதிக்கொண்டன. ஜக்கராயனுக்கு மதுரையும் செஞ்சியும் ஆதரவளித்தன. எச்சமனுக்கு தஞ்சாவூர். மதுரையின் ஆதரவு இருந்ததாலேயே ஜக்கராயன் அதிக நாள் தாக்குப்பிடிக்க முடிந்தது. ஆனால் நான்கு ஆண்டுகளுக்கு முன் 1616ல் வல்லத்தில் நடந்த போரில் எச்சம நாயக்கனோடு தஞ்சை அரசன் ரகுநாத நாயக்கன் சேர்ந்துகொண்டு மதுரையையும் செஞ்சியையும் முறியடித்தான். மதுரை அரசு உருவானபின் நேரிட்ட முதல் தோல்வி.

அரசன் முத்துவீரப்பன் மதுரையிலும் அவன் தம்பி திருமலை நாயக்கன் திருச்சியிலுமாக இருந்து பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்தத் தோல்விக்குப் பிறகு தலைநகர் வடஎல்லையில் இருப்பதே நல்லது எனக் கருதியதால் திருச்சி தலைநகரமாயிற்று. விஜயநகர அரசு இப்படியான சிக்கலில் இழுபட்டபோது, மைசூர் அரசன் ராஜ உடையார் விஜயநகரிலிருந்து விடுபட்ட சுதந்திர நாடாக மைசூரை அறிவித்துவிட்டான். மதுரை அரசின் மேற்குப்புறக் கோட்டைகளைக் கைப்பற்றுவதற்காக ஒரு படையை அனுப்பினான்.

மைசூர் தளபதி முகிலன் மலை தாண்டியதும் குறிப்பாக எந்தக் கோட்டையையும் முற்றுகையிடாமல் மதுரைப் பாதையில் வந்து கொண்டிருந்தான். முப்பதாயிரத்துக்கும் மேல் காலாள் படைகள் இருந்ததால் நிதானமாகவே அவர்கள் முன்னேறி வந்தனர். குதிரைகளும் பத்தாயிரத்துக்கும் மேலிருந்தன.

மைசூர் படைகள் மலையிறங்கும் முன்னே சத்தியமங்கலம் கோட்டையிலிருந்து திருச்சிக்கும் மதுரைக்கும் தகவல் பறந்தது. கன்னிவாடிப் பாளையக்காரர் ரங்கண்ண நாயக்கர்தான் திண்டுக்கல் பாளையங்களின் தலைவர் என்பதால் செய்தி கேட்டதும் அவர் உடனடியாக அருகிலுள்ள பாளையக் குதிரை வீரர்களை மட்டும் வரச்சொல்லிவிட்டார். அரசர் உத்தரவு பெறுவதற்கு மேலும் தாமதமாகும் என்பதால் அவரே முடிவெடுத்து மைசூர் படைகளை விரட்டக் கிளம்பிவிட்டார். அவருக்கு வயது 33. திண்டுக்கல் கோட்டை கன்னிவாடியின் பொறுப்பு என்பதால் எப்போதும் அங்குதான் இருப்பார்.

பதினைந்தே வயதான மகன் சென்ன கதிரியை கன்னிவாடிக் குதிரையணிகளுக்குத் தலைவனாக்கியிருந்தார். அம்மாவும் மகனும் சேர்ந்து கன்னிவாடிப் பாளையத்தை நிர்வகித்தனர்.

முகிலன் சத்தியமங்கலம் தாண்டி இருபது கல் வந்து அரசூருக்கு அருகே தாவளம் அடித்திருக்கும் தகவல் வந்தது. ரங்கண்ண நாயக்கரும் விருபாஷி திருமலை சின்னப்ப நாயக்கரும் நாளை இரவில் தாக்குதலைத் தொடங்கிவிடுவது என்று தீர்மானித்திருந்தனர். பௌர்ணமி முடிந்து இரண்டே நாளாகியிருந்தது சாதகமாயிற்று. முன்னிரவில் தாக்குதலைத் தொடங்கும்போது, தங்களோடு இணையாமல் அவரவர் திசையிலிருந்து அவர் மோதவேண்டும் என்று தாராபுரம் பாளையக்காரன் கொண்டம நாயக்கனுக்கும் மலையடிவாரக் கோட்டைகளிலிருக்கும் மதுரை நிலைப்படைகளுக்கும் தகவல் போயிற்று.

மறுநாள் இரவில் கவுண்டன்பாடிக்கும் ஈரோடைக் கோட்டைக்கும் இடையே தண்டு இறக்கியிருந்தான் முகிலன். திண்டுக்கல் பாளையங்களின் குதிரைகள் அன்று மதியத்திற்கு முன்பே ஈரோடை கோட்டைக்குள் நுழைந்து ஓய்வில் இருந்தன. கோட்டைக்குள் மதுரையின் அறுநூறு குதிரைகளும் இரண்டாயிரம் வீரர்களும் இருந்தனர்.

அந்தியானதும் முகிலனைச் சுற்றிலும் மதுரைப் படையணிகள் நெருங்கி வளைத்திருந்தன. தெற்கிலிருந்து தாராபுரமும் தென்மேற்கே பவானிக் கரையிலிருந்து தண்டநாயக்கன் கோட்டைப் படைகளும் வந்து சேர்ந்து முகிலனுக்கு ஆறு கல் அப்பால் நின்றிருந்தன. மதுரையின் நிலைப்படையினரான எர்ரகொல்லவாருகள் மேற்கில் சத்தியமங்கலம் கோட்டையிலிருந்தும் வடக்கே அந்தியூர் கோட்டையிலிருந்தும் வடகிழக்கே சங்ககிரி கோட்டையிலிருந்தும் வந்து முகிலனை வளைத்து, உத்தரவுக்காகக் காத்து நின்றனர். இரண்டாம் சாமம் தொடங்கும் வேளையில் நான்கு திசைகளிலிருந்தும் மோதுமாறு உத்தரவிடப்பட்டது. தெளிவான போர்த்திட்டங்களுடன் திண்டுக்கல் குதிரைகளிலிருந்து மூன்று அணிகள் பிரிந்து இரவானவுடன் ஈரோடையிலிருந்து வெளியேறி சுற்றிப்போய் மற்ற திசைகளில் காத்திருந்த மதுரை அணிகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டன.

முதலில் முகிலனுக்குப் பின்புறமாக மேற்கிலிருந்து மட்டும் தாக்குதல் தொடங்கியது. நடுவில் காலாள் வீரர்களை நிறுத்தி சுற்றிலும் குதிரை அணிகளைக் கவசமாக நிறுத்தியிருந்தான். மேற்கில் சண்டை உக்கிரமடையத் தொடங்கவும் கிழக்கிலிருந்து வந்த குதிரைகள் மைசூர் படையின் முன்வசத்தில் மோதத் தொடங்கின. மேற்கே சண்டையிட்ட மதுரை அணிகள் களத்திலிருந்து இரண்டு கல் தூரம் பின்வாங்கிக் காத்திருந்தன. அவ்வளவு தூரம் அவர்கள் விரட்டிப் போனால் மொத்தப்படையிலிருந்து துண்டிக்கப்படும் அபாயம் இருந்ததால் மைசூரின் மேற்கு அணிகள் வெறுமனே நின்றிருந்தன. பிறகு தெற்கிலிருந்து தாக்குதல் வந்தது. கிழக்கே மதுரை பின்வாங்கியது. பிறகு வடக்கிலிருந்து குதிரைகள் இறங்கியதும் தெற்கு அணி பின்வாங்கியது.

அறியாத நிலத்தில், அந்த இரவில் தான் வந்து சிக்கிக்கொண்டதை உணர்ந்த முகிலன், இழப்புகளைக் குறைக்க எண்ணி போரிட்டுக் கொண்டே வந்த வழியில் விரைந்து பின்வாங்குமாறு ஆணையிட்டான். இப்போது

காலாள் வீரர்களைப் பாதுகாப்பது அவனுக்கும் பெரும் சுமையாயிற்று. குதிரைகள் மட்டும் என்றால் சண்டையைக் கைவிட்டு விட்டு ஓடிப்போய் இரவோடிரவாக மலையேறியிருக்கலாம். பல களங்களில் அனுபவப்பட்டிருந்ததால் காலாள் வீரர்களை ஓடாமல் விரைந்து நடக்குமாறு சொன்னான்.

மதுரை அணிகள் இதே பாணியில் விட்டு விட்டுத் தாக்குதலைத் தொடர்ந்தனர். முடிந்த அளவு குதிரைகளைச் சேதமில்லாமல் கைப்பற்றுவதிலேயே கவனமாக இருக்கும்படி ரங்கண்ண நாயக்கர் சொல்லியிருந்தார்.

நடக்க முடியாமல் காயம்பட்டவர்களைக் கைவிட்டுவிட்டு மைசூர் படை தன்போக்கில் தப்பிப்போய்க்கொண்டிருந்தது. மேற்கிலிருந்த மதுரை வீரர்கள் இப்போது வடக்கிலிருந்த தமது அணியோடு சேர்ந்து கொண்டனர்.

மூன்றாம் சாமம் முடிவதற்குள் மூன்று புறமிருந்தும் மாற்றி மாற்றி ஐந்துமுறை தாக்குதல்கள் தொடர்ந்தன.

பிறகு வடக்கிலிருந்த மதுரைக் குதிரைகள் விரைந்து முன்னே சென்றன. சத்தியமங்கலம் ஆற்றின் மேற்குக் கரையில் காத்திருக்கும் பொருட்டு.

விடியத் தொடங்கியதும் முப்புறமிருந்தும் ஏககாலத்தில் மதுரைதாக்கியது. முன்புபோலப் பின்வாங்கிக் காத்திருக்காமல் தொடர்ந்து உக்கிரமாகத் தாக்கினர். மைசூர் வீரர்கள் அணிவரிசை குலைந்து சிதறினர். இப்போது திருப்பிச் சண்டையிட முயலாமல் வழி கிடைத்த திசையெல்லாம் தாறுமாறாக ஓடத் தொடங்கினர். ரங்கண்ண நாயக்கர் குதிரைகளைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருந்தார்.

ஓடித் தவித்த மைசூர் வீரர்கள் பரிதாபமாக வெட்டுப்பட்டு விழுந்தனர். அவர்களைக் காப்பாற்ற இயலாத மைசூர் குதிரைகள் சத்தியமங்கலத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடின. மதுரைக் குதிரைகள் விரட்டிச்சென்றன. பின்னே ஓடிக்கொண்டிருந்த மைசூர் காலாள் வீரர்களை, எண்ணிக்கையில் நாலில் ஒரு பங்கே இருந்த மதுரைக் காலாட்படையினர் விரட்டி விரட்டிக் கொன்றனர். தனித்துத் தப்பித்து ஓடியவர்களை விரட்டாமல், கும்பலாக ஓடியவர்களையே தொடர்ந்து தாக்கினர்.

சத்தியமங்கலம் ஆற்றில் பாதி மணலாகவும் பாதியில் முழங்கால் தண்ணீரும் ஓடியது. மைசூர் குதிரைகள் ஆற்றில் இறங்கிக் கரையேறுமுன் மேற்கே கரை மேலிருந்து மதுரைக் குதிரை வீரர்கள் ஏறவிடாமல் மறித்தடித்தனர். அப்போதும் மைசூர் குதிரைகள் சண்டையிட்டு அவர்களைத் தாண்டிச் செல்லவே முயன்றன. நீரில், பாறைகளில் குளம்படிகளுக்குப் பிடிமானம் இல்லாமலும் கூட்டத்தோடு மோதி நெரிந்து விழுந்தும், பெரும் குழப்பத்தைக் குதிரைகள் உண்டாக்கிவிட்டிருந்தன. விழுந்தவை வீரர்களை உதறி விட்டுத் தனித்து ஓடின.

பின்னே விரட்டி வந்த மதுரைக் குதிரைகள் அதற்குள் கிழக்கிலிருந்து தாக்கின. ஆற்றின் மணற் பரப்பு வழியே இரு திசைகளிலும் மைசூர் குதிரைகள் தப்பி ஓடின.

பவானியை நோக்கி ஆற்று ஒழுக்குக்கு எதிர்த்திசையில் தேவதாவனப்பட்டிக் குதிரைகள் பல அவர்களை விரட்டிச் சென்றன.

வீரர்களை வெட்டி எறிந்துவிட்டு குதிரைகளைக் கரைமீது பத்திவிட்டனர். வெகுதூரம் விரட்டிப்போனபின் இனிமேலும் தொடர வேண்டாம் என்று முடிவெடுத்து சென்ன கதிரி கொம்பை ஊதச் சொன்னான். நிற்கும் ஆணை ஒலியைக்கேட்டதும் மதுரைக் குதிரைகள் நின்றுவிட்டன. ஒரே ஒரு குதிரை மட்டும் மஞ்சள் தலைப்பாகை அணிந்த வீரனுடன் வேகம் குறையாமல் விரட்டிப் போய்க்கொண்டிருந்தது. அதைக் கண்ட தேவதா வனப்பட்டிக்காரர்கள் கத்தியபடி தொடர்ந்துபோய் அவனை மடக்கிக்கொண்டு வந்தார்கள். வரும்போதே அவனுக்கு இரண்டு அடிபோட்டார்கள். அருகே நெருங்கியதும்தான் கதிரி கவனித்தான். சின்னப் பையன். தானே இந்தப் படையிலேயே இளைஞனாக இருப்பேன் என்று கருதியிருந்த கதிரிக்கு தன்னைவிட இரண்டு மூன்று வயது இளையவனைக் கண்டதும் ஆச்சரியம். அவன் வாளெல்லாம், உடலெல்லாம், குதிரையின் மீதெல்லாம் ரத்தம். அவனுக்கும் காயமிருக்கலாம். சளைக்காமல் முன்னேறி அவன் அடித்திருக்கவேண்டும்!

‘சின்னப் பயலை எல்லாம் சண்டைக்குக் கூட்டி வந்தது யார்?’ என்று கதிரி கோபமாகக் கேட்டான்.

‘இவரை யாரும் கூட்டிட்டி வரலை; குதிரையைக் குடுக்கவந்தான். எதுக்கு கொம்பு ஊதுனாங்கன்னு அவனுக்குத் தெரியாது. இன்னும் பயிற்சிக்குப் போகலை’ என்று தேவதா வனப்பட்டிக்காரர்கள் சொன்னார்கள்.

‘உன் பெயர் என்ன?’ என்றான் கதிரி.

‘பூநேரி வேங்கட கிருஷ்ணன்.’

அவன் ஊர்க்காரர்களைப் பார்த்து கதிரி சொன்னான் ‘இவன் இனிமே என்னோடவே கன்னிவாடியில் இருக்கட்டும்.’

**மை**சூர்க்காரர்களில் பாதிக்கு மேற்பட்டோர் பலியாகியிருந்தனர். ஆறாயிரத்துக்கு மேல் குதிரைகள் சிக்கியிருந்தன.

ஊர் திரும்பிய மதுரை வீரர்களை திருச்சியிலிருந்து கரூவூரில் வந்து காத்திருந்த அரசர் முத்து வீரப்பனும் திருமலை நாயக்கனும் சந்தித்தார்கள். சுயமாகவே முயற்சித்து, வெற்றிபெற்று வந்த ரங்கண்ண நாயக்கரைப் பாராட்டி அன்று நடந்த வெற்றிவிழாவில் அரசர் அவருக்கு ‘சின்ன மைசூரான்’ என்ற பட்டத்தையும் விருபாக்ஷி பாளையக்காரர் திருமலை குப்பள சின்னப்ப நாயக்கருக்கு ‘பாதைக் காவலன்’ பட்டத்தையும் வழங்கினார்.

*

# 13

**ம**துரை கிழக்குக் கோபுரத்திற்கு எதிரே வசந்த மண்டபம் முற்றுப்பெற்றிருந்தது. பெரும் பொருட்செலவில் 19 ஆண்டுகளில் முடிவுற்றது. நவராத்திரியின் போது உற்சவ விக்ரஹங்களை வைத்து வழிபடுவதற்கான கொலுமண்டபமாகவும் கருதிக் கட்டப்பட்டது. திருமலைக்கு முந்தைய நாயக்க அரசர்கள் அனைவரும் சொக்கநாதரை வணங்கியவாறு அதன் தூண்களில் சிலைகளாக நிலைபெற்றிருந்தனர். மண்டபத்திற்கும் கிழக்கே பெரும் கோபுரம் எழுப்புவதற்கான கனவு திருமலை நாயக்கருக்கு இருந்தது.

விஜயதசமியின் முதல் நாள் இன்று. அதிகாலையிலேயே கம்பளத்தார்கள் கோபூஜையை ஆரம்பித்தனர். மண்டபத்துக்கு முன் வரிசையாய் விரிந்த கம்பளிகளில் எல்லாக் குலத்தினரின் பொலி ஆவுகளும் வந்து நின்றன. உறுமியும் பாட்டுமாகக் குலஜென்டடுவாருகள் வெகுநேரமாக வழிபாட்டை நீடித்தனர். கொம்புகளைக் குலுக்கிக்கொண்டு பொலி ஆவுகள் பொறுமையாய் நின்றிருந்தன. சாமி மாடுகள் விலகியதும் கம்பளத்தைச் சுருட்டிவிட்டு, கால்சலங்கையோடு தேவாரட்டக்காரர்கள் களத்தில் இறங்கிவிட்டனர். பாளையங்களுக்குள் கடும் போட்டி. உற்சாகத்தின் உச்சத்தில் இருந்த அரசர் எல்லோருக்கும் பரிசுகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தார். பாளையங்கள் அத்தனையும் ஆடி அடங்குவதற்குள் மதியம் தாண்டிவிட்டது. பின்னரே வைதீக பூஜைகள் தொடங்கின.

முத்து வீரப்பருக்குப் பிறகு திருமலை நாயக்கர் அரசராகி முப்பத்திரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. அவரது காலத்தில் நாடெங்கும் கோயில்களும், கோபுரங்களும், மண்டபங்களும் ஏராளமாய் எழுந்தன. பக்திமான், ஆடம்பரப் பிரியராய் இருந்ததால் நாடு எப்போதும் விழாக்கோலத்திலேயே இருந்தது. இத்தாலியப் பொறியாளர் ஒருவரின் திட்டப்படி பெரும் அரண்மனை ஒன்றைக் கோட்டையின் தென்கிழக்கு மதிலை ஒட்டிக் காட்டினார். தலைநகரைத் திருச்சியில் இருந்து மீண்டும்

மதுரைக்கு மாற்றினார். மதுரையைச் சுதந்திர நாடாக அறிவித்துவிட்டார். விஜயநகர வராகக் கொடிக்குப் பதில் இப்போது நந்திக்கொடி பறந்து கொண்டிருந்தது.

அன்று மாலை மதுரை கொள்ளாத அளவு ஜனத் திரள் இருந்தது. சுற்று வட்ட மக்களெல்லாம் வசந்த மண்டபத்தைப் பார்க்க வந்து குவிந்திருந்தனர். தலைமைச் சிற்பி சமந்திர ஆசாரியை யானை மீது ஏற்றி நகர்வலம் விட்டு, மன்னர் கௌரவித்தார். மண்டபத்தில் இரவு தொடங்கிய பூஜைகள் நள்ளிரவு தாண்டியும் தொடர்ந்தன.

திருமலை நாயக்கர் அரசரான இரண்டே ஆண்டுகளில் மைசூரின் புதிய மன்னர் சாமராஜ உடையார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் மதுரையிடம் அடைந்த தோல்விகளுக்குப் பழிவாங்க முயன்றார். 1625இல் தளபதி நந்திராஜன் மீண்டும் மதுரை மீது படையெடுத்தான். ரங்கண்ண நாயக்கரும், ராமப்பய்யனும் மைசூர் வரை விரட்டிச் சென்று முறியடித்தனர். பின்னர் சேவையைப் பாராட்டி திருமலை மன்னர் வசந்தமண்டபத்தில் வைத்து பாண்டியரின் சந்திரஹாச வாளை ரங்கண்ணாவுக்குப் பரிசாக வழங்கினார். இப்போது திருமலை விஜயநகரின் சிற்றரசர் அல்லர்; தனிப் பேரரசர் அல்லவா! எனவே தளபதிக்கான சந்திரஹாசத்தை மதுரையின் மாவீரர் என்று பேர் பெற்ற ரங்கண்ணாவுக்கு அளித்துவிட்டார்.

நகரின் கவனம் முழுக்க வசந்த மண்டபத்தில் குவிந்திருந்தபோது தாதனூரின் கழுவன் கொத்து அரண்மனையின் தெற்குச் சுவர் இருளில் பதுங்கியிருந்தது. உடும்பின் இடுப்பிலிருந்து தொங்கிய கயிறைப் பற்றி கழுவன் மேலேறிக் கொண்டிருந்தான்.

*

**அ**ரண்மனையை விட்டு இரவு வெளியேறியது. போகும்பொழுது அது சொல்லிவிட்டுப்போன செய்தி கேட்டுத் துடித்துப்போய் எழுந்தான் மன்னன். மனக்கோட்டை முழுவதும் இடிந்து அவனை அமுக்கிக் கிடந்தது. நம்பவே முடியாத பெரும் சாகசமாக அது இருந்தது. இவ்வளவு பெரிய அகழியும், அரணும் அரண்மனையும் காவலற்றவை என ராஜ முத்திரையை எடுத்துச்சென்றவன் இருளுக்குள் மௌனமாய் சொல்லி வைத்துவிட்டுப் போயிருந்தான். அந்தச் சொற்கள் அரண்மனை முழுவதும் எதிரொலித்தபடியே இருந்தன. அரண்மனைக் காவலர்களுக்கு கைகால்கள் எல்லாம் நடுக்கம் கொடுத்தன. மன்னனின் ஆவேசம் எதிர்கொள்ள முடியாதபடி இருந்தது. திகைப்பின் உச்சிக்கும், ஆச்சரியத்தின் விளிம்புக்கும் இடையில் கட்டப்பட்டிருந்த பெரும் கயிற்றின் மேல் கால்கள் நடுங்க மன்னன் நடந்துகொண்டிருந்தான். மற்றவர்கள் ஏது செய்வதென்று தெரியாமல் திகைத்துக்கிடந்தனர். அவசரமாகக் கூடிய அரசவை முரசறிவிப்பதென்று முடிவெடுத்தது. கோட்டை கொத்தளங்கள் பரபரப்பாயின. முரசுகள் அதிரும் ஓசை கிழக்கே தோண்டி துறைமுகம் வரையிலும் தெற்கே தாமிரபரணியைத் தாண்டியும், வடக்கே திரிசிரபுரம் வரையிலும் பரவி மேற்கே பெருமலையில் எதிரொலித்தது.

ராஜமுத்திரையோடு வருகிறவனுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பின் நம்பகத்தன்மை ஐயத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

களவில் வந்த பொருளை தாதனூர் இதுவரை இழந்ததில்லை. இழக்கக் கூடாதென்பது ஊரின் மரபு. முரசின் அதிர்வு தாதனூரின் செவிப்பறையில் விழுந்தபடியே இருந்தது. என்ன செய்யலாம் என மீண்டும் மீண்டும் யோசித்தபடி இருந்தனர். இனி பொருள் முக்கியமல்ல என முடிவெடுத்து கள்ளநாட்டு பெரிய ஊரான் பின்னத்தேவனைக் கண்டு பேசப் புறப்பட்டுப் போனார்கள். அவன் வந்தவர்களிடம் விசயத்தை முழுவதும் கேட்டான். கோட்டையின் அறிவிப்பை நம்பிப்போகலாம் எனமுடிவெடுத்து கழுவனை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். நிழல் சாயாத உச்சிப்பொழுதில் நகரை நோக்கி அவர்கள் நடந்தனர். பகலின் பிரம்மாண்டத்தில் கோட்டை கம்பீரமாக நின்றது. எங்கும் ஆயுதங்களுடனான காவலர்கள் திரிந்தனர். கோட்டைக் காவலர்கள் நான்கு பேர் யானைகளை எதிர்த்து நிற்கும் அந்த நெடுங்கதவின் ஓரம் நின்றிருந்தனர். கன்ன வாசலுக்குள் ஊர்ந்து நுழையும் வாகுகொண்ட கழுவன் உடல் நெடுங்கதவம் தாண்டி எட்டுவைத்து உள்ளே நுழைந்தது. அவனுக்கு பற்றி ஏறிய உடும்பின் ஞாபகம் வந்தது. பின்னால் திரும்பி கோட்டையைப் பார்த்தான். அரண்மனையின் காவல் அரண் முழுவதையும் கவர்ந்து எடுத்துச்சென்றவனை மிகச்சாதாரணமாக அழைத்து வந்து அரசனுக்கு முன்னால் நிறுத்தினான் பின்னத்தேவன்.

நிறைந்த சபையின் மையத்தில் அருவருப்பான புழு பூச்சி போல பார்வைக்கு நிறுத்தப்பட்டவன், தனது இடுப்பில் வைத்திருந்த களவின் மந்திரப் பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவ ஆரம்பித்தான். உன்னிப்பாகக் கேட்ட அவர்கள் இருள் மடிப்புகளின் உள்ளே இழுக்கப்பட்டனர். அந்த ராஜசபையைக் கம்பளி போல் சுருட்டி கன்னம் போட்ட ஓட்டையின் வழியே உருவி எடுத்துக்கொண்டான். களவின் அசாத்திய சாதுர்யத்தைக் கேட்டு வியந்த மன்னன் மீண்டுவர நாழிகை ஆனது.

வியப்பில் இருந்து மீண்ட மன்னனின் செங்கோலில் இருந்து கட்டளைகள் பிறந்தன. ‘காவலை மீறி ராஜமுத்திரையை எடுத்த கழுவனுக்கு இந்த நிறைந்த சபையின் முன் மூன்று சவுக்கடி கொடு. இவ்வளவு பெரிய காவலை மீறி ராஜமுத்திரையை எடுத்த கழுவனுக்கு மாநகர் மதுரையின் காவல் உரிமையைக் கொடு. அழைத்துவந்த பின்னத்தேவனுக்கு கள்ளநாட்டில் நீதி பரிபாலனம் செய்யும் உரிமையைக் கொடு.’

சவுக்கடியை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்ட கழுவன் பிறகு ராஜாவிடம் ஒரு விநோதக் கோரிக்கை வைத்தான். ‘நான் இறங்கிய கன்னவாசலை அடைக்காமல் அப்படியே விடவேண்டும்.’ சிரித்துவிட்ட ராஜா அதற்குச் சம்மதித்தான்.

*

# 14

**திருமலை நாயக்கர் மரணப்படுக்கையில் கிடந்தார்.** 1669ல் மூன்றாவது முறையாக மதுரை நாட்டுக்குள் மைசூர் பெரும்படையோடு புகுந்தது. மைசூர் அரசன் கந்தீரவ நரசனுக்கு பழைய பகைமை மட்டுமல்ல, புதிய கோபமும் இருந்தது. விஜயநகர அரசன் ஸ்ரீரங்கன் ராயவேலூரையும் இழந்து முதலில் தஞ்சாவூரிலும் பின்னர் மைசூரில் தஞ்சம் அடைந்திருந்தான். ராயவேலூரில் மீண்டும் ஸ்ரீரங்கனை அரசனாக்கும் முயற்சியில் மைசூர் ஈடுபட்டது. பிஜப்பூர் படைகள் அதை முறியடித்துவிட்டன. அதற்கு திருமலை நாயக்கர் உடந்தையாக இருந்தார் என்பதுதான் மைசூரின் இப்போதைய கோபம். 1620, 1625ல் பேரிழப்புகளோடு மதுரை நாட்டின் மீதான ஆக்கிரமிப்பைக் கைவிட்டு ஓடியிருந்தது மைசூர். முந்தைய இரு அரசர்களாலும் முடியாததைத்தான் சாதிக்க வேண்டுமென்ற வெறி இவனுக்கு. குரூரமானவன், முரடன் என்று பேர்பெற்ற ஹம்பையாவின் தலைமையில் தோற்க வாய்ப்பே இல்லாத பெரும்படையை மதுரையைப் பிடிக்கும் திட்டத்துடன் அனுப்பி வைத்தான். மன்னன் நோய்ப்படுக்கையில் கிடக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியும்கூட. மதுரைப் பிரதானி சோமசுந்தர ஐயருக்குக் கையூட்டாக வழங்கப்பட்ட பெருஞ்செல்வம் நஞ்சன்கூடில் ஒளிந்திருந்தது.

ஹம்பையா மலையைத் தாண்டியதும் ஒரே வாரத்தில் வைகைக் கரையில் வந்து நின்றான். அனைத்து விஷயங்களிலும் தாமதமாகச் செயல்பட்ட மதுரைப் பிரதானியிடமிருந்து ஓலை போய் பாளையங்கள் படைகளுடன் கிளம்பி வந்தன. மதுரைக் கோட்டை மதில்களிலிருந்து பீரங்கிகள் இடைவிடாது முழங்கின. கோட்டையின் உயரத்தையும், இரட்டை மதிலையும் கண்ட ஹம்பையா மதுரையை முற்றுகையிடத் தயங்கினான். கோட்டைக்குள்ளிருக்கும் படையைவிட பாளையங்களின் வலிமை பல மடங்கு அதிகம் என்பதை அறிவான். முற்றுகை நீடித்தால் தான் சுற்றி வளைக்கப்படும் அபாயமும் உண்டு என்பதால், திண்டுக்கல் கோட்டையைக் கைப்பற்றி உள்ளே பாதுகாப்பு தேடும் முயற்சியில்

மதுரையைக் கைவிட்டு திண்டுக்கல்லை நோக்கிப்போனான். மதுரையை உடனடியாகக் கைப்பற்ற முடியாத கோபத்தில் சுற்றுப்புற ஊர்களைச் சூறையாட உத்தரவிட்டான். அவனது இன்னொரு ஆணை கொடூரமானதாக இருந்தது. கையில் சிக்கிய மக்களின் மூக்குகளை மைசூர் படையினர் அறுத்து எறிந்தனர். பெண்களும் சிறாரும்கூட இந்தக் கொடுமைக்கு உள்ளாயினர். ஹம்பையா திண்டுக்கல்லை முற்றுகையிட்டான். அங்கும் அவன் நினைத்தது போல் சுலபமாக உள்ளே நுழையமுடியவில்லை. ரங்கண்ண நாயக்கர் உள்ளே இருந்தார். எண்பத்திரண்டு வயதிலும் மதில்மேல் நின்று வீரர்களை ஊக்குவித்துக் கொண்டிருந்தார். பீரங்கிகளும், அம்புகளும் மைசூர்காரர்களை நுழையவிடாமல் நான்கு நாட்களாகத் தடுத்துக் கொண்டிருந்தன.

மதுரையிலிருந்து தக்க சமயத்தில் வெளியேற முடியாமல்போன உடுப்பி நாராயணபட் பிடிபட்டு, அடிபட்டதில் உண்மை வெளியாயிற்று. சோமசுந்தர ஐயர் சிறையில் அடைபட்டார். திருமலை நாயக்கர் தான் இன்றைய ரகுநாத சேதுபதியை ராமநாதபுரம் பாளையக்காரராக நியமித்தார். வாரிசுப் போட்டியும், சண்டைகளும் நடந்து முடிந்து, அப்புறம்தான் ராமநாதபுரம் அமைதி கண்டது. அவர் தனது அமரக்காரர்களையும், மேலதிகமாக மறவர்களையும் திரட்டிக் கொண்டு 25,000 பேரோடு மதுரை வந்தார். காவிரிக்கரைப் பாளையங்களையும் திருச்சி நிலைப்படையையும் தவிர்த்து இப்போது மதுரையிடம் 60,000 காலாள் வீரர்களும், 35,000 குதிரைகளும் இருந்தன. விஸ்வநாதர் காலத்துக்குப் பிறகு யானைப் படைப்பிரிவு சுருங்கிவிட்டது. தேவையும் இல்லாதாகிவிட்டது. மதுரையிலும், திருச்சியிலுமாக மொத்தமே எண்பது யானைகள்தான் இருந்தன. மதுரையிலிருந்த நாற்பதும் வந்திருந்தன. மன்னரின் சார்பில் அவரது தம்பி குமாரமுத்து மதுரையிலிருந்து படை நடத்திக்கொண்டு திண்டுக்கல் போனார். மேற்கு, வடக்கிலிருந்து வந்திருந்த பாளையப்படைகள் சுற்றிலும் வளைத்து நின்றன.

மதுரைப் படைகளின் தளபதியாக சென்ன கதிரி நாயக்கர் பொறுப்பேற்றுக் கொண்டார். ஐந்தாம் நாள் அதிகாலை போர் தொடங்கியது. மதுரை அரசின் நூற்று அறுபது ஆண்டு ஆட்சியில் நடந்த உக்கிரமானபோர் இதுதான். கோட்டையைச் சுற்றிலும் சண்டை நடந்தாலும் மேற்கேதான் பெருவாரியான குதிரை அணிகளின் யுத்தம் நடந்தது. மைசூர் காலாள் படையின் மீது மதுரை யானை அணிகள் முதலில் இறங்கின. அவை இறங்கிய வழியிலேயே மறவர்கள் புகுந்தனர்.

கோட்டைக்குள்ளிருந்த ரங்கண்ணா தக்க சமயம் பார்த்துத் தன் வீரர்களுடன் வெளியே வந்தார். நண்பகலுக்கு முன்பே கோட்டையைச் சுற்றிலும் போர் முடிவுக்கு வந்து மைசூர் வீரர்கள் மொத்தமாக மேற்கே குவிந்துவிட்டனர். யானைப்படை அதிபன் வெள்ளைத் திம்ம நாயக்கன் அத்தனை யானைகளையும் இழந்தாலும் பரவாயில்லை என்று மீண்டும் மீண்டும் மூர்க்கமாக மோதச் செய்து கொண்டிருந்தான்.

காயம்பட்ட யானைகள் அதகளம் பண்ணின. அவை களத்தில் ஓடித்திரிவதே பீதியூட்டுவதாக இருந்தது.

மைசூர் குதிரை அணிகள் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்தன. ஆனால், நண்பகலுக்கு மேல் அதன் காலாள் வீரர்கள் தாக்குதலைக் கைவிட்டு

சீர்குலையும் தருணம் நெருங்குவதை உணர்ந்த ஹம்பையா நண்பகல் தாண்டி அறுபது நாழிகைக்கெல்லாம் போர் நிறுத்தத்தை அறிவித்து விட்டான். அதை ஏற்காமல் தொடர்ந்து தாக்கியிருக்கலாம்; நிலைமை முற்றிலும் தனக்குச் சாதகமாகிவிட்ட தன்னம்பிக்கையோடு சென்ன கதிரியும் போரை நிறுத்தினார். மேலும் இருபக்கமும் சேதம் கடுமையாக இருந்ததால் காயம்பட்டவர்களைக் காப்பாற்றும் முயற்சியே அப்போது முதன்மை பெற்றது.

இரண்டு கல் தூரம் பின்வாங்கி நிலைகொண்ட பின் மைசூர்காரர்கள் களத்தில் மடிந்த, காயம்பட்ட தங்கள் வீரர்களைத் தேடித்தேடி தோளிலும், வண்டிகளிலுமாகத் தூக்கிக்கொண்டு சென்றனர். மதுரை வீரர்களும் தம் ஆட்களைத் தேடித் தூக்கினர். 15000 பேருக்கு மேல் மைசூரும் 10000த்துக்கு மேல் மதுரையும் பலி கொடுத்திருந்தின. காயம்பட்டவர் எண்ணிக்கை இருதரப்பிலும் அதில் பாதி இருக்கலாம்.

சென்ன கதிரியின் கூடாரத்தில் குதிரைப்படைத் தளபதி வேங்கட கிருஷ்ணப்பனும், குமாரமுத்துவும், ரங்கண்ணரும் மட்டும் இருந்தனர். பாளையக்காரர்களும், மதுரைத் தளபதிகளும் தங்கள் அணிகளின் தேவைகளைக் கவனிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்பாவி ஜனங்களின் மூக்கை அறுத்த கதையைக் கேள்விப்பட்ட ரங்கண்ணாகரும் கோபத்திலிருந்தார்.

‘நாளைக் காலையில் திரும்பிப் போகிறோம். தாக்குதலைத் தொடரவேண்டாம்’ என்ற வேண்டுகோளுடன் ஹம்பையா விடமிருந்து தூதுவன் வந்தான்.

‘யுத்த தர்மத்தை மீறி மக்களின் மூக்கை அறுத்ததால் இதை ஏற்க முடியாது. அதிகாலையில் மீண்டும் தாக்குதல் தொடரும்‘ என்ற ரங்கண்ணாவின் அறிவிப்பைச் சொல்வதற்காக மைசூர்காரனுடன், மதுரைத் தூதுவனும் சென்றான்.

‘எந்த நிபந்தனைக்கும் கட்டுப்படுவேன். காயம்பட்டவர்கள் எண்ணிக்கை பெருவாரியாக இருப்பதால் வைத்திய உதவி தேவை. தயவுசெய்து விரைவில் ஏற்பாடு செய்யுங்கள்’ என்று பதில் வந்தது.

போரில் ஈடுபட்ட ஐம்பத்தெட்டுப் பாளையங்களும் மதுரை நிலைப்படையின் பதினேழு பிரிவுகளும் தங்கள் அணியினரின் உணவு, மருத்துவம், தளவாடங்கள் உட்பட அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்யும் எல்லா வசதிகளையும் தங்களுக்குள்ளேயே கொண்டிருந்தனர். ஏதேனும் குறைவுபட்டால் அடுத்திருந்த பாளையம் உதவிக்கு வந்தது. காயம்பட்டவர்களை உடனடியாகக் கவனித்து மரித்தவர்களையும் சீக்கிரமே அடக்கம் செய்துவிடமுடியும். தாம் போரிட்ட இடத்தில் போய் மயங்கிக் கிடக்கும் உறவினர்களை சுலபமாக அடையளம் கண்டு விடுவார்கள். தலையற்ற முண்டங்களைக்கூட பச்சை குத்திய பெயரும், கங்கணத்தில் உள்ள கருகமணிகளின் எண்ணிக்கையும் காட்டிக்கொடுக்கும்.

மைசூர் படை மொத்தமாக இயங்குவதால் இந்தப் பலத்த அடியின் இழப்புகளைச் சீர்படுத்துவதில் பெருங்குழப்பம் நிலவ, பரிதவித்துக் கொண்டிருந்தனர். தளபதிகளுக்குள்ளேயே அதிருப்தியும் தகராறும்

வலுத்துக் கொண்டிருந்தது. ஹம்பையா மீண்டும் தூதுவனை அனுப்பினான்.

‘சவ அடக்கத்திற்கு உதவி செய்கிறோம். வைத்தியர்கள் இப்போது வருவார்கள். திரும்பிச் செல்லும்போது மைசூர் ஐநூறு குதிரைகளை மட்டும் வைத்துக்கொண்டு மீதிக் குதிரைகள் அனைத்தையும் மதுரையிடம் ஒப்படைக்க வேண்டும்‘ என்று பதில் போனது.

மைசூர் ஏற்றுக்கொண்டது.

பெருவாரியான மதுரை வீரர்களின் உதவியோடு தீப்பந்த ஒளியில் விடியும் முன்னே மடிந்த மைசூரார் அடக்கம் செய்யப்பட்டனர். பிறகும் மருத்துவர்களுக்கு இரண்டுநாள் வேலை இருந்தது. மூன்றாவது நாள் கிளம்புமுன் காயம்பட்ட குதிரைகள் உட்பட 18000த்துக்கும் மேல் மைசூர், மதுரையிடம் ஒப்படைந்தது.

மைசூரார் கிளம்பத் தயார் நிலையில் இருந்தபோது ரங்கண்ண நாயக்கர் தனது குதிரையில் ஏறித் தனித்து மைசூர் அணிகளுக்குள் போனார்.

‘ஹம்பையா யார்?’

வீரர்கள் அவரை அழைத்துக் கொண்டுபோய் அவன் முன் நிறுத்தினர். யார் இந்த வங்கிழடு என்று தெரியாமல் அவன் முழித்துக்கொண்டிருந்தான்.

குதிரையிலிருந்தபடியே வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டு, கீழே நின்றிருந்த அவனைப் பார்த்து பொக்கை வாய் திறந்து வஞ்சினம் உரைத்தார். ‘வருகிற அமாவாசைக்குள் உன் நாட்டில் வைத்து உன் மூக்கை அறுப்பேன். கொல்லவாரில் புல்லுருவியாகப் பிறந்த உன் அரசனிடம் போய்ச்சொல். அவன் மூக்கையும் அறுப்பேன்.’

*

**ஹ**ம்பையா ஒரு வாரத்தில் சத்தியமங்கலம் போய்ச் சேர்ந்தான். அவனுக்குப் பின்னாலேயே ஒருநாள் இடைவெளி விட்டு மதுரை வண்டிகள் தளவாடங்களையும், தானியங்களையும் ஏற்றிக் கொண்டு போய் சத்தியமங்கலம் கோட்டைக்குள் காத்திருந்தன. பிறகும் மூன்று நாள் இடைவெளிவிட்டு மதுரையின் காலாள் வீரர்கள் இல்லாமல், முப்பதாயிரம் குதிரைகள் மட்டும் கிளம்ப ஆயத்தமாயின.

முதல் நாள் இரவு ரங்கண்ண நாயக்கர் குமாரமுத்துவிடம் சொன்னார் ‘மதுரைக்கு ஆளனுப்பி படைச் செலவுக்கு வராகனை வாங்கிட்டு வரச்சொல்லு.’

‘ராயசத்துக்கும், எனக்கும் ஒத்துவராது. நான் கேட்டா அவன் முழிப்பான். அண்ணன் தான் சொல்லணும். அவரு என்ன நெலமையில் இருக்காரோ...’ என்று இழுத்தார்.

ரங்கண்ண நாயக்கருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது ‘இந்த லட்சணத்துல நாட்ட ஆளுறீங்க! என்னடா...? உன் அண்ணன்... அந்த தொந்திக் கணபதி... கோயிலு கூத்தியான்னு காலம் பூராம் ஆடுனான். இப்ப பாரு, அறுபது வயசுல விழுந்துட்டான்! திருமல சவுரி மகாராசான்னு சொல்லிவிட்டப் போதும், பயலுக்கு மேனி குளுந்து போகும். என்ன

ஆட்டபாட்டம்! எவ்வளவு செலவு! ஊர் ஊராக் கோயிலுக்குப் போயி கும்பிட்டுகிட்டு அலையிறானே என்னடான்னு பாத்தா... ஊருக்கு ஒரு தேவிடியா... பெருமைக்கு தெங்கித் திரிஞ்சான். ஒரு நாளாவது கத்தியத் தொட்டுருப்பானாட? இவன் வச்ச தளவாயி... அந்த ராமப்பய்யன்... அவனும் கத்தியத் தொட்டதில்ல. படைக்குப் பின்னால நின்னுக்கிட்டு அதிகாரம் பண்ணுவான்! நாடு வெளங்குமாடா?...' என்று ஏறிக்கொண்டே போனவரை சென்ன கதிரி தடுத்து 'சீக்கிரம் ஒரு முடிவசொல்லுங்க. நேரம்போகுது' என்றார்.

ரங்கண்ணா 'தம்பு! நீ நம்ம வீட்டுல இருக்கிற வராகன் பூராவையும் கொடுத்துவிடச் சொல்லி ஆளனுப்பு' என்றார்.

கன்னிவாடியிலிருந்து 16,000 வராகன்கள் வந்தன.

**அ**திகாலையில் கிளம்பிய மதுரைக் குதிரைப்படை இரண்டாம் நாள் இரவில் திம்பம் மேட்டுக் காட்டுக்குள் தாவளம் அடித்துத் தங்கியது. அதற்குள் சத்தியமங்கலத்திலிருந்து வண்டிகள் வந்து சேர்ந்துவிட்டன. ஹம்பையா சாம்ராஜபுரத்தைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தான்.

அன்றிரவு ரங்கண்ண நாயக்கரின் கூடாரத்தில் அவரை கதிரியும் வேங்கட கிருஷ்ணனும் சந்தித்தார்கள்.

'அவனுகள மைசூர் வரைக்கும் போகவிடவேண்டாம். முன்னாடியே அடிச்சுக் கலைச்சி விட்டாதான் நாம கோட்டைக்குள்ள போறது சுலபம்' என்று கதிரி அபிப்ராயப்பட்டார்.

'சரி. நஞ்சன்கூடுல காவேரியத் தாண்ட முன்னாலேயே மடக்கு. அந்த பயல கொன்னுராம உயிரோட பிடிங்கடா. மூக்க மட்டும் அறுத்துட்டு விட்ருங்க' என்றார் ரங்கண்ணா தனது மகனிடம். பிறகு 'என்ன சொல்லிக்கிட்டிருந்தேன்?' என்ற குமாரமுத்துவிடம் கேட்டார்.

'அதுதான் அந்த பிஜப்பூர்காரனப் பத்தி...'

தன்னுடனேயே தங்கியிருந்த குமாரமுத்துவிடம் திருமலை நாய்க்கரைக் குறைகூறிப் பேசுவதை அதற்குள் ஒரு சீலமாகக் கொண்டுவிட்டார் ரங்கண்ணா.

'நீ தனியாப் போகணும்னு ஆசப்பட்ட. அதுக்காக ராயவேலூர எதித்து நின்ன. சரி, அதுல ஒண்ணும் தப்பில்ல. உன் கை தாழுதுன்னு தெரிஞ்ச உடனே பிஜப்பூர்காரனக் கூப்பிட்டு வேலூர் வந்து அடின்னு சொன்னயே... அது வஞ்சனையில்லயாடா? கடைசில என்ன ஆச்சு? அந்த சீரங்க ராசா நாடில்லாமத் தட்டழிஞ்சு தவிச்சி செத்தே போனான். பிறகு செஞ்சியில குழப்படி பண்ணுன! தஞ்சாவூரு பலிஜனை பகைச்சிக்கிட்ட! உன் நாட்டயாவது ஒழுங்கா வச்சிருந்தியா? அதுவும் இல்ல. எட்டப் பனோட தகராறு...மறவங்களோட சண்டை...எதையாவது உருப்படியா பண்ணியிருக்கயா? பொண்டாட்டிகளோட நீ கும்பிடுறாப்புல சிலை அடிச்சு கோயில் கோயிலா நிப்பாட்டுனது தவிர நீ என்ன செஞ்சிருக்க?'

சென்ன கதிரி 'அப்ப நான் கிளம்புறேன்' என்றார். வேங்கட கிருஷ்ணப்பருக்கு நின்று கேட்க ஆசைதான்.

**ம**றுநாள் ஹம்பையாவின் காலாள்படை நஞ்சன்கூடு ஊரை

நெருங்கும் நேரத்தைக் கணக்கிட்டு மலையிலிருந்து வேகமாகக் குதிரைகள் இறங்கின. பாதிக் குதிரைகள் பத்துக்கல் முன்னாடியே காவரியைக் கடந்து வடகரை எங்கும் பரவிக் காத்திருந்தன. மதுரைப்படை வருவதை அறிந்திருந்த ஹம்பையா நஞ்சன் கூடுக்கும் ஆற்றுக்குமிடையே படைகளை வியூகம் வகுத்து நிறுத்தி சண்டைக்குத் தயாரானான். எங்கும் நிற்காமல், போன வேகத்திலேயே மதுரைக் குதிரை வீரர்கள் அடிக்கத் தொடங்கினர். சற்று நேரத்துக்கெல்லாம் மைசூர் நிரைகளைக் கிழித்துக் கந்தல் கந்தலாக்கினர். அப்புறம் சிதறி ஓடியவர்களை விரட்டும் வேலை தொடங்கியது. தலையைத் தட்டாமல் மூக்கை மட்டும் வெட்டி விரட்டி விட்டனர். ஆற்றிலும் இரு கரைகளிலும் வெகுநேரம் இதே வேலையாய் குதிரைகள் திரிந்தன. ஹம்பையா பிடிபட்டு மூக்கறுபட்டான்.

மாலை மைசூர் கோட்டைக் கதவுகளை உடைக்கும் வேலைதொடங்கி இரவில் உள்ளே நுழைந்தனர். அரசன் முன்பே தப்பி ஓடிவிட்டதாகத் தெரிந்தது. கண்ணுக்குக் கீழே காயக்கட்டோடு ஹம்பையா சிறையில் அடைபட்டான். ராயசத்தையும் காணவில்லை. அவனது உதவிக் கணக்கர்களை ஊருக்குள் தேடிப்பிடித்து இழுத்து வந்து உதைத்தனர்.

மறுநாள் காலையில் மைசூர் கொலுமண்டபத்தில் வைத்து சென்ன கதிரி நாயக்கர் மைசூர் அரசுக்கு முறி எழுதிக்கொடுத்தார். ‘மதுரையின் படையெடுப்புக்கு மைசூர் அரசே காரணம் என்பதால் படைச் செலவுகளை மைசூரே ஏற்க வேண்டியது. அதற்காக ஒரு லட்சம் வராகனையும் மைசூருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை இரண்டு லட்சம் வராகனையும் பெற்றுக்கொண்டேன் - சேனாதிபதி சென்னகதிரி நாயக்கர். கன்னிவாடி.’

மைசூரில் வெயிலே இன்றி இதயமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. மதியக் கஞ்சிக்கு கேப்பைக் கூழைக் குடித்துவிட்டு அரண்மனை மாடத்தில் குமாரமுத்துவோடு உட்கார்ந்து உரலில் வெற்றிலையை இடித்துக் கொண்டிருந்தார் ரங்கண்ண நாயக்கர்.

வேங்கடரோடு வந்த சென்ன கதிரி சொன்னார் ‘கஜானாவை சுரண்டி எடுத்தும் மூணு லட்சம் வராகன்தான் தேறுனது.’

‘மதுரைக்கு சல்லி கூடப் போகக்கூடாது. பளையக்காரனுகளுக்கு தரத்துக்குத்தக்க பிரிச்சுக் கொடுத்துடு. டே வெங்கிடு, உன் மதுரைப்படைக்கு உரியதை வாங்கி ஒவ்வொருத்தனுக்கும் கொடுத்துருடா.’ என்று சொல்லிவிட்டு ரங்கண்ணா மேலும் தொடர்ந்தார். ‘கேட்டியாடா முத்து... போன தடவை, அது இருக்கும் அம்பது வருஷம், இங்க சண்டைக்கு வந்திருந்தபோது, எனக்குத் தெரியாம சாமராச உடையாங்கிட்ட பேரம் பேசிக்கிட்டிருந்தான் அந்த ராமப்பய்யன். அவனைப் பிடிச்சி விருபாச்சி சின்னப்பன் தான் இழுத்துட்டு வந்தான். இனி இங்க இருந்தா வெட்டிப்போடுவேன், ஓடிருன்னு விரட்டி விட்டேன். ரெண்டு வருஷம் அடங்கிக் கிடந்தான். அப்புறம் உங்க அண்ணன் அவனை தான் மறுபடி பிரதானி ஆக்கிட்டான். அப்படி நாணயமில்லாத பயலை நம்புனா நாடு வெளங்குமாடா? நானும் வெகு காலமா சொல்லிப் பாத்துட்டேன். வடக்க காவேரி ஓரமெல்லாம் புதுசா பத்துக் கோட்டைகளைப் போடுடான்னு. எவன் கேட்டான்? இப்பப் பாரு மைசூர்காரன் மாதிரி

வெத்துப் பயங்க எல்லாம் மதுரை வரை ஏறி வர்றான். கொல்லவாரா பிறந்திட்டு சண்டைக்கு வராம, சதிராட்டம் பாத்து சபாசு போட்டுக்கிட்டிருந்தான் உன் அண்ணன். கம்பளத்தான் குதிரைய விட்டு எறங்கக்கூடாதுன்னு பழமொழியே இருக்கேடா! விசுவநாத ராஜா காலத்திலேயிருந்து நாட்டைக் கட்டி வளத்து நல்லபடியா இவன்கிட்ட கொடுத்தா முப்பதே வருஷத்துல வாரி எறைச்சு வாணம் விட்டுட்டானேடா! ஏதோ பாளையக்காரனுக உசுரக் கொடுத்து நாட்டைக் காப்பாத்திக் கிட்டிருக்கானுக' என்றவர் வெற்றிலையைப் போட்டு அதக்கிக் கொண்டார்.

சென்ன கதிரி வெளியே போய்விட்டாலும், வேங்கடர் ரங்கண்ணரிடம் கதை கேட்கும் ஆசையில் அருகே உட்கார்ந்து வெற்றிலை நரம்பை உரித்தார்.

**மூ**ன்றாம் நாள் காலை குதிரைகள் மைசூரை விட்டுக் கிளம்பிவிட்டன. சத்தியமங்கலம் வந்ததும் சென்ன கதிரி ஒரு வாரம் அங்கே ஓய்வு என்று அறிவித்தார்.

குமாரமுத்து தான் கட்டிய கோயிலில் போய் கும்பிட்டுவிட்டு வருகிறேன் என்று பேலூர் கோயிலுக்குக் கிளம்பித் தெற்கே போனார். சென்ன கதிரி சத்தியமங்கலம் சேர்ந்த நாலாம்நாள் திருமலை நாயக்கர் காலமாகிவிட்டதாகத் தகவல் வந்தது. அவர் மகன் முத்துவீரப்பன் இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு தான் முடிசூட ஏற்பாடுகள் செய்தான். ஏறத்தாழ எல்லோரும் அவனுக்கு ஆதரவாகவே இருந்தனர். குமாரமுத்து தனது ஆசையைச் சொல்லிப் பார்த்தான். எடுபடவில்லை. கோபித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் போய் இருந்து கொண்டான். அவன் வாதம் - திருமலைநாயக்கர் தன் அண்ணனிடம் இருந்துதானே பட்டத்தைப் பெற்றார்; அதுபோல் அவரது தம்பியான எனக்குப் பட்டம் கட்டுங்கள்.

எல்லோரும் வந்து சமாதானம் பண்ணிப் பார்த்தார்கள். அவன் துள்ளிக்கொண்டிருந்தான். ரங்கண்ண நாயக்கர் முத்துவீரப்பனிடம் பேசிவிட்டு வந்தார். திருப்பரங்குன்றம் ஆயிர வைசிய மண்டபத்தில் நிலைகொள்ளாமல் உலவிக் கொண்டிருந்தான் குமாரமுத்து.

'ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி வட்டாரத்தை உனக்கு ஜாகிராக் கொடுக்கச் சொல்லியிருக்கேன். வாங்கிக்கிட்டு போயி நிம்மதியா ஆண்டாளம்மாளோட சேந்து பாட்டுப் பாடிக்கிட்டு இரு. அவ்வளவு தான். நான் சண்டை போட்டுதான் இதை வாங்கிக் கொடுத்திருக்கேன்' என்றார்.

'அதெப்படி.... நான் தான் வயசுல பெரியவன்' என்றான்.

'அப்ப விடு. நான் கிளம்புறேன். கடைசியில வழியத்துப்போயி கன்னிவாடில வந்து கஞ்சி குடிச்சிக்கிட்டு கெடக்கப்போற...'

குமாரமுத்து அடங்கினான்.

*

# 15

**வை**கையின் வடகரையில் இருந்த நடுவப்பாளையத்தில் கனகலிங்கம் பிள்ளை வீட்டிற்கு கன்னம் போட தாதனூர் ராக்கன் கொத்து புறப்பட்டுப் போனது. அந்தப் பிள்ளை படு தைரியசாலி, மிக விவரமானவன். ஆனாலும், அவனது வீட்டில் கன்னம் போடுவது என்று முடிவானது. துப்புக்காகக் காத்திருந்தனர். துப்பாளியிடம் இருந்து தகவல் வந்ததும் ராக்கன் கொத்து நான்கு பேருடன் கிளம்பியது. நடுவப்பாளையத்தின் தெற்கு கடைசித்தெருதான் ஊரிலே மிகப்பெரிய தெரு. அந்தத் தெருவில்தான் அண்ணன் தம்பி இருவருடைய வீடும் இருந்தது. கனகலிங்கத்தின் தம்பி முன்னிரவில் மந்தைக்கு ஒதுங்கியபோது இரண்டு நாய்கள் செத்துக் கிடப்பதைப் பார்த்ததாக அண்ணனிடம் அவசரமாக வந்து தகவல் சொல்லிவிட்டுப் போனான்.

இருள் போர்த்திக் கிடந்த கிராமத்தில் தடயமற்று நடந்து போனார்கள். துப்பாளி குறி போட்டிருந்த இடத்தின் வாசனையை முகர்ந்தபடி அதன் முன்னே போய் நின்றனர். வந்த வேகத்தில் மொண்டியும், நல்லுவும் சுண்ணாம்புக்காரையை நோண்ட ஆரம்பித்தனர். பக்கத்தில் நிலையாள் ராக்கன் தெருப்பக்கம் யாராவது வருகிறார்களா என இங்கும் அங்கும் பார்த்தபடி இருந்தான். ஒரு முக்கு தோது இல்லாமல் இருந்ததால் அங்கு ஒருவனை நிறுத்தினான். தெரு காய்ந்த ஓடையைப்போல் கிடந்தது. நாய்கள் எல்லாம் மந்தைப்பக்கம் திரிந்தன. வேகவேகமாக நோண்டி கல்லை உருவினர். நல்லு தான் நெஞ்சோடு வாங்கிக் கீழே வைத்தான். குனிந்து கன்னவாசலுக்குள் பார்த்த மொண்டி நிலையாளின் காதோரம் போய் ‘உள்ள ஆளு சத்தம் கேட்கிறமாதிரி இருக்கப்பா...’ என்றான். நிலையாள் வந்து ஓட்டையின் வழியே உற்றுப்பார்த்தான். எந்தச் சிறு ஓசையுமின்றி கன்ன ஓட்டைக்குள் இருள் செம்மிக்கிடந்தது. ‘ஒண்ணுமில்ல கருப்பா, போ...’ என மொண்டிக்கு சைகை காண்பித்தான். மொண்டி ஓட்டைக்குள் தலையை விட்டு தோள்பட்டையை நெளித்துக்கொடுத்து உள்ளே தள்ளினான். வயிறு வரை உள்ளே

போயிருந்தபோது 'நறுச்...' என்று ஒரு சத்தம் கேட்டது. 'கருப்பா...வந்துருடா' எனச் சொல்லி ராக்கனும் நல்லுவும் துவாரத்திற்குள் இருந்த மொண்டியின் உடலைப் பிடித்துச் சட்டென்று வெளியே இழுத்தனர். ரத்தம் பீய்ச்சியபடி தலையற்ற உடல் மட்டும் வெளியில் வந்து விழுந்தது. 'தூக்குடா கருப்பா...' என்றான் நிலையாள். இரண்டு கையையும் ஆளுக்கொருவர் தோளில் போட்டபடி கவந்தத்தைத் தூக்கிக்கொண்டு இருளைக் கிழித்தபடி ஓடினர். நடுவப்பாளையம் ஊர் எல்லைவரை ரத்தம் பொங்கியபடி வந்தது. அதன்பின் நின்றுவிட்டது.

பெரும் ஓட்டமென ஓடி அமணமலையின் பின்புற அடிவாரத்தில் ஆள் அளவு வளர்ந்திருந்த பனைமரத்தில் கொண்டுவந்து உடலைச் சாய்த்தனர். ஓடிவந்த இளைப்பில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. பதற்றத்தில் நெஞ்சுக்கூடு விரிந்து அமுங்கியபடி இருந்தது. பேசமுடியாமல் பேசினான் நல்லு. 'யப்பா...மொண்டி மூக்குப்பறி சண்டையில் மூக்கு அறுபட்ட வனப்பா. தடமிருக்கிற மூக்குகாரனப்பா... ஊர கண்டுபிடிச்சு வந்துரமாட்டங்களா...' என்றான். ராக்கன் அரண்டுபோனான். களவில் துப்புத் தெரிந்து ஊருக்கு ஆள் வந்தால் வந்தவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. ஆனால், களவில் தடத்தை விட்டுவிட்டு வந்தவர்களை ஊரே உண்டு இல்லையென்று ஆக்கும். அதன்பின் அவர்களை எவனும் மதிக்கமாட்டான். அந்த அவமானத்தை சரிசெய்ய பல காலம் ஆகும். என்ன செய்யலாம். என யோசித்த ராக்கன் 'சரி...போயி தலையத் தூக்கிட்டு வந்திருவோம்' எனச் சொன்னான்.

மீண்டும் மூவரும் புறப்பட்டனர். மொண்டியின் உடல் பனைமரத்தில் சாய்ந்தபடி இருந்தது. இருள் அதிர ஓடினர். நடுவப்பாளையம் இந்நேரம் எப்படியிருக்கும், என்ன செய்யலாம் என்று நிலையாள் மனதுக்குள் கணக்குப் போட்டபடி ஓடினான். இருளின் தூக்கத்தைக் கலைக்காமல் குத்துக்கால் பாதங்கள் ஆறும் பிடிங்கு அடித்துக்கொண்டு ஓடின. நிலவு முற்றிலும் இல்லாத காரிருள் அவர்களுக்கு மட்டும் பாதையை வகிர்ந்து கொடுத்தபடி இருந்தது. ஊர் எல்லையில் இருந்த வாகை மரத்தடியில் வந்து நின்று கொஞ்ச நேரம் இளைப்பாறினர். நல்லுவை மட்டும் ஊருக்குள் அனுப்பி நோட்டம் பார்த்துவரச் சொன்னான் நிலையாள்.

பொழுது இறங்கு முகத்தில் வேகமாக இருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் சாட்டைக்கம்பு வெள்ளி விழுந்துவிடும். அதன்பின் வெட்டுப்பட்ட தலையை மீட்டுக்கொண்டு ஓடுவது மிகவும் சிரமம். என்ன செய்யலாம் என யோசித்தபடி இருந்தான் ராக்கன்.

கொஞ்ச நேரம் கழித்து நல்லு வந்து சேர்ந்தான். தலையை ஊர் மந்தையில் கிடக்கும் பட்டியக்கல்லில் வைத்திருப்பதாகவும், சாவடிக்குள் இருபது முப்பது பேர் உட்கார்ந்திருப்பதாகவும் சாவடி தூணில் தீப்பந்தம் எரிவதாகவும் சொன்னான். இரண்டு எதிர் எதிர் தெருக்கள் மந்தையிலே போய்ச் சேருகின்றன. அதன் வழியாகப்போய் தலையைத் தூக்கிக்கொண்டு வரமுடியுமா என யோசித்தவர்கள் அதைவிட நல்ல முடிவொன்று எடுத்தார்கள்.

பெரிய உடகல்லை ஆளுக்கொன்றாகத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு நடந்தார்கள். மந்தைவெளி இருள் கலைந்து கிடந்தது. அங்குமிங்குமாக இரண்டு மூன்று மாட்டுவண்டிகள்

நின்றுகொண்டிருந்தன. சாவடிக்குள் பெரிசுகளின் கூட்டம் உட்கார்ந்திருந்தது. தலையை நாய் கவ்வி இழுத்துப்போகாமல் இருக்க ஒருவன் கம்போடு சுற்றி நடந்தபடியே இருந்தான். கன்னம் போட வந்தவனின் தலையை வெட்டி எடுத்தது இதுவரை நடக்காத ஒன்று. அந்த வீரத்தை எல்லோரும் மெச்சிப்பேசிக் கொண்டிருந்தனர். 'வெள்ளாளன் ஊருல இனி களவாணி எவனும் கால் வைக்க மாட்டானுவ' என்று பெருசுகள் பேசிக்கொண்டிருந்தன. திடீரென பெரும் கத்தலோடு இரண்டு எதிர் எதிர் தெருக்களில் இருந்து ஆட்கள் ஓடி வந்தனர். கூச்சல் இருளைக் கிழித்தது. நாய்கள் அரண்டு குரைத்தன. வந்த வேகத்தில் சாவடிக்குள் ஒரு பெருங்கல் விழுந்து உருண்டது. அய்யோ அம்மா... எனக் கத்தி சாவடியிலிருந்து தெறித்து ஓடினர். சட்டென எழுந்து நடக்க முடியாத பெருசுகள் உயிர் போகக் கத்தினர். அந்தக் களேபரத்தின் போது இரண்டு பெரிய உடகல்லுகள் வெட்டுப்பட்ட தலையின் மீது விழுந்து தேங்காய் மட்டையை நசுக்குவதைப்போல நசுக்கின. வந்தவர்கள் எத்தனை பேர், எங்கு போனார்கள் என்று தெரியாத பதற்றத்தில் இருந்து விடியும் வரை நடுப்பாளையம் மீளவில்லை. நிறையத் தீவட்டிகளோடு மீதித் தலைகளைக் காக்க நடுவப்பாளையம் இரவெல்லாம் நடுங்கியபடி விழித்துக்கிடந்தது.

**ம**றுநாள் காலை தாதனூர் கூடியது. அவனைச் சாய்த்துவைத்த பனைமரத்தின் தலையை வெட்டி மொண்டியின் உடலோடு சேர்த்து வைத்துப் புதைத்தனர். புதைக்கும்பொழுது அவன் இடுப்புத்துணியை மட்டும் உருவி எடுத்துக்கொண்டனர். எண்ணி மூன்றாம் நாள் இரவு மீண்டும் ராக்கன் கொத்து நடுவப்பாளையத்தின் பெரிய தெரு வீட்டிற்குப் போனது. நல்லுவும் வேம்பனும் கல்லை நோண்டி வெளியே எடுத்தனர். கைக்கம்பின் முனையில் மொண்டியின் இடுப்புத்துணியை தலைப்பாகை போலக் கட்டி கன்னவாசலுக்குள் விட்டனர். மொண்டி உள்ளே நுழைந்துபார்த்து ஆளில்லை என்று சொன்னான். அதன்பின் நல்லு உள்ளே போய் பொருளைத் தூக்கிவந்தான். தூக்கிவந்த பொருளை மொண்டியைப் புதைத்த இடத்தில் வைத்துக் கும்பிட்டனர்.

அதன்பின் கன்னம் போட முதன் முதலில் போகிறவன் மொண்டிக்கு காணிக்கை வரி செலுத்திவிட்டுப் போகவேண்டும் என்ற வழக்கம் உருவானது. அது மட்டுமல்ல, கன்னம் போடுகிறவர்கள் கல்லை நோண்டி எடுத்த உடன் கைக்கம்பில் துணியையோ சாக்கையோ தலைப்பாகை போலக் கட்டி உள்ளே விடவேண்டும். உள்ளுக்குள் ஆள் முழித்திருந்து வெட்டினால் வெட்டு மொண்டியோடு போய்விடும். மற்றவர்கள் தப்பி வந்துவிடலாம். எனவே கன்னம் போடும் கொத்தின் நிலையாள் எந்நேரமும் மொண்டிக் கம்பை கையில் வைத்திருக்கவேண்டும் என்ற வழக்கம் உருவானது. கொஞ்சகாலத்தில் மொண்டியின் உடன் பங்காளிகள் எல்லாம் மொண்டியின் நினைவாக பனைமரத்தைக் கும்பிடத் துவங்கியதும் கழுவன் கூட்டத்தில் பனைமரத்தான் வகையறா தனியாக உருவானது.

*

# 16

**திருமலை நாயக்கர் பேரன் சொக்கநாதன் பட்டத்துக்கு வந்தபோது** வயது பதினாறுதான். அவன் தந்தை முத்து வீரப்பன் பட்டத்துக்கு வந்த ஒரே வருடத்தில் காலமானார். புதிய அரசன் ஒன்றும் அறியாத பாலகன் என்று கருதி பிரதானியும், ராயசமும், தளவாயும் தங்கள் இஷ்டம்போல் நாட்டை ஆளத் தொடங்கினர். ஊழல் மலிந்தது. பாளையங்களுக்குக் கூடுதல் வரி விதிக்க, பாளைக்காரர்கள் மறுத்தனர். நாடெங்கும் குழப்பம் நிலவியது.

பிஜப்பூரின் அடில் ஷா படைகள் தளபதி சாகோஸியின் தலைமையில் செஞ்சியை முற்றுகையிட்டிருந்தன. விஜயநகர அரசன் நரசிங்க தேவராயலு மதுரையின் உதவியைக் கோரினான். படை அனுப்ப பிரதானிக்கு சம்மதமில்லை. சொக்கநாதனின் ஆணையை மீற முடியாமல் தளபதி லிங்கம நாயக்கர் மதுரை நிலைப்படையுடன் புறப்பட்டுச் சென்றார். படைக்கு முன்பே பிரதானியின் ஓலை சாகோஸிக்குப் போய்விட்டது. செஞ்சிக்குப் போன லிங்கமன் சாகோஸியிடம் பெரும்பணத்தை லஞ்சமாக வாங்கிகொண்டு சண்டையிடாமலேயே திரும்பினான்.

செஞ்சி வீழ்ந்தது. சொக்கநாதனுக்கும், பிரதானிக்கும் தகராறு வலுத்தது. சொக்கநாதனைச் சிறையிட்டுவிட்டு அவனது தம்பிக்கு முடி சூடும் சதித் திட்டத்தை மூவரணி செயல்படுத்த முனைந்தது. அதை அறிந்த அரண்மனைத் தாதி ஒருத்தி சொக்கனை வளர்த்த பாசத்தின் காரணமாக அவனிடம் சொல்லிவிட்டாள்.

படையெடுப்பு பற்றி ஆலோசிப்பதற்காக மூன்று நாட்களுக்குள் மதுரையில் இருக்க வேண்டுமென பாளையக்காரர்களுக்கு அரச ஓலைபோயிற்று. அன்றிரவு உத்தியான மண்டபத்திற்கு பிரதானியை அழைத்தான் சொக்கநாதன். நாளை சபா மண்டபத்தில் சந்திப்பதாகப் பதில் வந்தது. குதிரைப் படைத் தளபதியும் அரசனின் மெய்க்காப்பாளனுமான வேங்கட கிருஷ்ணப்பன் தனியொருவனாக பிரதானியின் மாளிகைக்

காவலை உடைத்து உள்ளே போய் அவரை வெட்டிக் கொன்றான். தளவாய் லிங்கமன் இரவோடிரவாகத் தனது விசுவாசிகளுடன் தப்பி செஞ்சியை நோக்கி ஓடினான். ராயசம் ஒரு நியோக பிராமணர். கொல்வது பாவம். கண்ணைப் பறித்துத் துரத்துவதுதான் தண்டனை. தீவிர வைணவனான வேங்கட கிருஷ்ணப்பன் அவ்வேலையைத் தான் செய்யாது கோட்டைக் காவலில் இருந்த விருமாண்டியிடம் ஒப்படைத்தான்.

பாளையக்காரர்களிடம் பேசி அவர்கள் ஆதரவை உறுதி செய்தபின் தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றிக்கொண்டான் சொக்கநாதன். விஸ்வநாத நாயக்கர் காலத்தில் வல்லம் கோட்டையைத் தஞ்சாவூருக்குக் கொடுத்துவிட்டு பதிலியாக திருச்சிராப்பள்ளிக் கோட்டையை மதுரை வாங்கியது. அப்போதிருந்து தலைநகரம் அரசர்களின் விருப்பத்தின்படி திருச்சிராப்பள்ளிக்கும், மதுரைக்குமாக மாறிக்கொண்டிருந்தது.

*

**சா**கோஸியின் படைகள் திருச்சிராப்பள்ளியைத் தாக்க வருகின்றன. என்றும் சொக்கநாதனே படைகளுக்குத் தலைமை ஏற்று நடத்தப் போவதாகவும் மதுரைத் தளவாய் வேங்கிட கிருஷ்ணப்பனுக்கும், பாளையப்பட்டுகளுக்கும் ஓலை போனது. பதினாறு வயதே ஆன அரசன் போருக்குப் போவது பற்றி நாடெங்கும் பேச்சாகக் கிடந்தது.

மதுரைக் கோட்டைக் காவலில் இருந்து நாற்பது பேருடன் விருமாண்டிப் பெரியாம்பளை போருக்குக் கிளம்ப இருந்தபோது வேங்கட கிருஷ்ணப்பன் தடுத்துவிட்டார். கோட்டையின் 72 கொந்தளப் பாளையக் காவலையும், புறக்காவலையும் கலைக்கப்போவதில்லை என்றார். மதுரையின் பாதுகாப்பை கன்னிவாடிப் படையிடம் ஒப்படைத்துவிட்டு தென்மண்டல நிலைப்படை மட்டும் பிற பாளையக்காரர்களோடு சேர்த்து போருக்குப் போவதாகத் திட்டம். விருமாண்டியைக் கள்ள நாட்டில் ஆள் திரட்டுமாறு சொன்னார்.

விருமாண்டி பின்னத் தேவரோடு கலந்து பேசினார். குண்டாறு வரையுள்ள அத்தனை ஊர்களுக்கும் சேதி போனது. ஏற்கெனவே பக்கத்திலுள்ள பாளையங்களிலெல்லாம் மீசை அரும்பாத ராஜா சண்டைக்குக் கிளம்பியதைக் கண்டு பெருவாரியான வாலிபர்கள் பாளையப்படைகளில் அமரக்காரர்களாகச் சேர்ந்தனர். இரண்டே நாட்களில் கள்ள நாட்டிலிருந்து நானூறு பேர் வளரி, வேல் கம்புகளோடு திரண்டு போய் வைகைக்கு வடகரையில் நின்றிருந்த நிலைப்படையோடு சேர்ந்து கொண்டனர்.

தளவாய் வேங்கட கிருஷ்ணப்பன் திருச்சிராப்பள்ளி கோட்டைக்குத் தெற்கே தண்டு இறக்கியபோது படையணியில் நாற்பதாயிரம் காலாட்படையும், பதினையாயிரம் குதிரை வீரர்களும் இருந்தனர். கோட்டைக்குள் பத்தாயிரம் வீரர்கள் ஏற்கெனவே இருந்தனர்.

ஒருவேளை விதி சதி செய்துவிட்டால் வேங்கடர் கூடவே உடன்கட்டை ஏறுவதற்காக படையோடு வந்திருந்த திம்மக்காவும், கிருஷ்ணையும் சொக்கநாதனின் தாயார் மகாராணி மங்கள விலாசினியின் அழைப்பை ஏற்று பொம்மதேவி, ஜக்கதேவி பூஜைக்காக அரண்மனைக்குச் சென்றிருந்தனர்.

**சா**கோஸியின் படைகள் மதுரையில் வலிமையில் முக்கால்வாசி தான் இருக்கும். ஆனால், அந்தக் குதிரைப் படையை நாடெல்லாம் அஞ்சின. ஏராளமான பீரங்கிகளும் இருந்தன. பிஜப்பூர் படைகள் பீரங்கி சுடுவதில் பேர் போனவை. செஞ்சியை நாற்பதே நாளில் பிடிக்கத் துணை செய்தவை பீரங்கிகள்தான். செஞ்சி அளவுக்கு திருச்சிராப்பள்ளி வலுவான கோட்டை அல்ல. கொள்ளிடம் மணலாய் இருந்தது. ஆனால், காவிரியில் இடுப்பளவு நீர் ஓடியது. எனவே, கொள்ளிட வடகரையில் கரம்பானூரின் இரு புறமும் அந்தப் படை நின்றுகொண்டிருந்தது. பீரங்கிகளை இறக்க முடியாமல் காத்திருந்தனர்.

அன்று காலையில்தான் தஞ்சாவூரிலிருந்து ஐம்பது யானைகளும், ஐநூறு குதிரைகளும், மூவாயிரம் வீரர்களும் சாகோஸியின் உதவிக்கு வந்து சேர்ந்திருந்தனர். ஏதோ ஒப்புக்கு வந்த மாதிரி இருந்தது. இன்னும் ஐந்து மடங்கு படையை எதிர்பார்த்திருந்த சாகோஸி ஏமாற்றத்தோடு, தஞ்சாவூர்க்காரனுக்கும் ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என மனதில் கறுவிக்கொண்டான்.

**அ**ன்றிரவு தளவாயிடம் விருமாண்டி பேசினார். குழப்பம் ஏதும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற உத்திரவாதத்தை வாங்கிக்கொண்டு தளவாய் அனுமதி அளித்தார். விருமாண்டிப் பெரியாம்பளையின் தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஆறு கொத்துகள் கிளம்பின. வழிகாட்ட இரண்டு வேவுகாரர்கள் உடன் வந்தனர். கொள்ளிடத்தின் வடகரை ஓரம் அடந்த காடுபோல் மரங்கள் செறித்திருந்தது. அப்பால் வயல் வெளியில் பிஜப்பூர் தண்டு இறங்கியிருந்தது. கரம்பனூரைச் சுற்றிலும் காலாள் படையை விட்டு இரு சிறகுகளிலும் குதிரைப் படைகள் இருந்தன.

திட்டப்படி கிழக்குப் புறமாக கொள்ளிடக் கரை ஊடேயே நடந்து முகாமை அணுகினர். மூன்றாம் சாமம் முடியும் நேரம். மை இருட்டு. ஆங்காங்கே நட்டிய கம்புகளின் மீது பந்தங்கள் எரிந்தன. குதிரை வரிசைகளுக்கு வெளியே மூன்று பேர் மட்டும் தரையில் குத்திய பந்தத்தைச் சுற்றி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

விருமாண்டியோடு நான்கு பேர் தரையோடு ஓணான் போல் வரப்புகளின் மறைவில் ஊர்ந்து போயினர். மற்றவர்கள் குதிரை அணிகளுக்கு நேரே மரங்களின் பின்னால் பரவிக் காத்திருந்தனர். விருமாண்டி இலக்கை நெருங்கி சைகை செய்ததும் சிறுத்தை இரைமேல் பாய்வது போலிருந்தது. கண்ணிமைக்கும் முன் மூன்று குரல்வளைகளும் அறுபட்டன. விருமாண்டி பந்தத்தை மண்ணில் குத்தி அணைத்தார். பந்தம் அணைந்ததும் தோப்பை ஒட்டியிருந்த குதிரைகளின் கட்டுக் கயிறுகள் அறுபட்டன. ஆளுக்கு இரண்டு மூன்று குதிரைகளை இழுத்துக்கொண்டு மரங்களுக்குள் மறைந்தனர். குதிரைகளின் கனைப்பொலியும், சரசரப்பும் கேட்டு தீப்பந்தகளோடு பிற வீரர்கள் ஓடி வருமுன் குதிரைகள் மரங்களைத் தாண்டி ஆற்று மணலுக்குள் இறங்கின. கரையோரமாகவே கிழக்கு நோக்கி விரட்டப்பட்டன. படையணியில் குழப்பம் தெளிந்து, விஷயம் விளங்கி, உத்தரவு பிறந்து, குதிரை வீரர்கள் தேடக் கிளம்பியபோது களவுபோன புரவிகள் ஸ்ரீரங்கம் தீவிலேறிவிட்டன.

எண்ணிப் பார்த்ததில் ஐம்பத்திரண்டு குதிரைகள் இருந்தன. எதிரியின் பன்னிரண்டாயிரம் குதிரைகளில் இந்த இழப்பு ஒன்றுமேயில்லை; இந்தக் களவு பற்றிய கதை எதிரணிக்குள் பரவுவது தான் முக்கியம். முன்பு வல்லம் கோட்டையை பிஜப்பூர் படை முற்றுகையிட்ட போது தஞ்சாவூர் கள்ளர்கள் படைமுகாமை தினமும் விடாது கொள்ளையடித்தே முற்றுகையைக் கலைத்துவிட்டர்கள். விஷக்காய்ச்சலாலும், வயிற்றுப் போக்காலும் பிஜப்பூர் பின்வாங்கியதாகவும் கதை உண்டு.

இரண்டாம் நாள் இரவு எல்லாக் கள்ள வீரர்களும் கிளம்பினர். கீழ் நாட்டுக் கள்ளர்களும் உடன் வந்தனர். இடுப்பைச் சுற்றிக் கட்டிய கற்கள் போதாதென்று தலைச் சுமையாகவும் கற்கள் வந்தன. பாடி வீட்டுக்கு அப்பால் நாலு கல் விலகிக் கரையேறி இருபுறமும் மரங்களினூடாகவே நெருங்கினர்.

இன்று பிஜப்பூர் குதிரை வீரர்கள் ஏராளமாக முகாமைச் சுற்றி வந்தனர். கண்காணிப்பு பலமாக இருந்தது.

விருமாண்டி கூகை குளறுவது போல் குரல் கொடுத்தார். மரங்களுக்கும், புதர்களுக்கும் பின்னே பரவி நின்றவர்கள் கல்லெறியத் தொடங்கினர். குதிரைகளின் கனைப்பும் ஆட்களின் அலறலும் இருளைக் கிழித்தது. மேற்கே தூரத்தில் அதே கூக்குரல்கள் எழுந்தன. எறிந்து கொண்டே இரு அணிகளும் ஆற்றங்கரையில் பரவி ஒன்றை ஒன்று நெருங்கிக்கொண்டிருந்தன. கற்கள் கோடைமழை இறங்கி அடிப்பது போல படையணிகள் மீது பாய்ந்து தைத்தன.

கள்ளர்களின் முதல் ஆயுதமே கல் தான். எறிந்தால் பனங்காய் விழும். மீசை அரும்பும்போது தொடங்கும் முதல் பயிற்சியே குறியை நோக்கி எறிவதுதான். சிறுவர்கள் தாயை விட்டு விலகி வெளியே விளையாட வரும்போது கல்லோடுதான் முதல் பழக்கமே.

கரைக்கு அருகே படுத்திருந்த காலாள்படை வீரர்கள் அலறியடித்து வடக்கே ஓடித் தப்பித்தனர். குதிரைகள்தான் கனைத்துத் துள்ளி கட்டுகளிலிருந்து விடுபட முடியாமல் எறிபட்டுக் கொண்டிருந்தன. கரையை ஒட்டியே தாவளம் அடிக்கும்படி ஆணையிட்ட சாகோஸியின் புத்தியில் அப்போது தோன்றிய யுக்தி, எதிரிகளைக் கரையேற விடாமல் கொள்ளிட மணலுக்குள்ளேயே மடக்கி மேலே இருந்து அடிக்க எதுவாக இருக்கும் என்பதுதான். இந்த இரவு நேரத் தொந்தரவுகள் எதிர்பாராதவை. இதைத் தோல்வியாகக் கொள்ள முடியாதென்றாலும் பெருந்தொல்லை. வீரர்களின் நம்பிக்கையைக் குலைத்துவிடும்.

காலாள் படைகள் கிடந்த இடம் சடுதியில் காலியாகிவிட, வீரர்கள் எல்லாம் கல்வராத தொலைவில் ஊருக்கு வடக்கே பின்வாங்கியிருந்தனர். குதிரைகளின் மேல் கல்லெறி நின்றவுடன் கள்ளர்கள் பாய்ந்து போய் அருகில் இருந்த குதிரைகளின் கயிறுகளைத் அறுத்து ஆற்றுக்குள் விரட்டி விட்டனர். அதற்குமுன்பே பிஜப்பூர் வீரர்கள் தரையோடு தவழ்ந்தே வந்து கயிறுகளைத் தறித்து அப்பால் நின்றிருந்த குதிரைகளை வடக்கு நோக்கி விரட்டி விட்டனர்.

பிஜப்பூர் குதிரைப்படை அணிகள் தயாராகி ஆற்றை நோக்கி வந்தன. இருட்டுக்குள் அடர்ந்த மரம் செடிகளுக்குள்ளிருக்கும் ஆள்களே

தெரியவில்லை. கற்கள் மட்டும் காற்றைக் கிழித்தபடி பாய்ந்து போயின. குதிரை வீரர்கள் முன்னேற முடியாமல் குழம்பிப் பின்வாங்கினர். சாகோஸியின் உடனிருந்த லிங்கமன், பக்கவாட்டில் தூரமாகப் போய் ஆற்றுக்குள் இறங்கிப் பின்பக்கமாகத் தாக்க உத்தரவிட்டான்.

சற்று நேரத்தில் மணல் பறக்க கிழக்கும் மேற்குமாகக் குளம்படிகள் வெள்ளப் பாய்ச்சல்போல் ஒலிக்கத் தொடங்கின. ஆனால், இருட்டில் கரைச் செடிகளுக்கிடையே அசைவுகள் மட்டுமே தெரிந்தன. துணிந்து மேலேறிய சில வீரர்களை இழந்து, குதிரைகள் மட்டும் கனைத்தபடி இறங்கி ஓடின. கள்ளர்கள் புதர் மறைவிலேயே கூட்டம் கூட்டமாக விலகிப் பின்வாங்கத் தொடங்கினர்.

குதிரை மந்தையொன்று ஸ்ரீரங்கம் தீவில் ஏறுவதைக் கண்ட ஒரு படையணி அதை மீட்க விரட்டிச் சென்றது. முன்னால் பாய்ந்து விரட்டிச் சென்று குதிரைகள் கரையை நெருங்குமுன்பே காற்றில் 'விய்ங்' 'விய்ங்' என்று விநோத ஒலி எழுந்தது. இரண்டு மூன்று வீரர்கள் குதிரையிலிருந்து தூக்கி வீசப்பட்டார்கள். கல்லெறியை விடப் பல மடங்கு வலுவாக இருந்தது வளரி. துருக்கியர்கள் இதுவரை சந்தித்திராத ஆயுதம். அணித்தலைவன், கலைந்து சிதறிக் கரையேறுமாறு கத்தினான்.

கரையில் இருட்டில் யாரும் தென்படவில்லை. காவிரியை நோக்கித் தெற்கே விரைந்தனர் குதிரை வீரர்கள். திருடுபோன குதிரைக் கூட்டம் நூற்றுக்கணக்கில் திருச்சிராப்பள்ளியை நோக்கி நடு ஆற்றில் நீரில் செல்வது இருளில் கரிய திரள்களாகத் தெரிந்தது. குதிரை வீரர்கள் கரையில் நின்று செய்வதறியாமல் தயங்கினர்.

நிலைத்து வாகாக நிற்கும் இலக்கை நோக்கி விருமாண்டி மருதமரத்தின் பின்னிருந்து வளரியைச் சுழற்றி எறிந்தார். 'சத்'தென்று சத்தம் எழுந்தவுடன் கத்தக் குரலின்றி ஒரு குதிரை வீரன் மண்ணில் விழுந்தான். அவர் அருகிலிருந்து பறந்த நான்கு வளரிகள் சக்கரம் போலக் காற்றில் சுழன்று போய் இருவரை வீழ்த்தின.

குதிரைகள் தங்களை நோக்கி வருவதைக் கண்ட விருமாண்டி ஓடித் தண்ணீரில் இறங்கினார். நீரில் நாலைந்து எட்டு பாய்ந்து ஓடியபோது அவர் தலை மட்டும் துண்டாகத் தெறித்துப் பறந்து போனது. ஊற்றுப் போல் பீறிடும் குருதியுடன் உடல் மட்டும் முன்னே சாடி நீரில் விழுந்தது.

அன்று பதினாலு பேர் முகாமுக்குத் திரும்பவில்லை. கீழ்நாட்டுக் கள்ளர்கள் ஐவர். ஆனையூர்க் கள்ளர்கள் ஒன்பது பேர். தாதனூரின் இழப்பு விருமாண்டி மட்டும். இரு முனைகளிலும் திரட்டிய சேதமில்லாத குதிரைகள் இருநூற்று முப்பது இருந்தன. கரைக்கு அப்பால் எதிரணிகளை நகர்த்தியதே இந்தத் தாக்குதலின் வெற்றி என்றார் தளவாய்.

பின்னர் விருமாண்டியின் வாரிசுகள் தாதனூரில் குருத வகையறா என்றாயினர்.

**ம**றுநாள் சனிக்கிழமை காலை மதுரைப் படை முதலில் தாக்குதலைத் தொடங்குவதாக சொக்கநாதனுக்குத் திட்டம் இருந்தது. தளவாய் அவனோடு ஆலோசிக்கவும், தாக்குதல் நேரத்தை மட்டும் முன்னதாக்கி வைகறை என்று தீர்மானித்தனர்.

கரம்பானூருக்கு வடக்கே பின்வாங்கி ஒருகல் தொலைவில் பாடி வீடு அமைத்திருந்தது பிஜப்பூர் படை. விடிவெள்ளி முளைத்தபோதே வேங்கட கிருஷ்ணப்பனின் காலாள் படை காவிரியில் இறங்கி நீரை நடந்தே கடந்து ஸ்ரீரங்கம் வடகரையில் பரவி நின்றது. கள்ளர்களும், வில்லாளிகளும் மட்டுமே கொள்ளிடம் தாண்டி மறுகரை ஏறினர்.

அதிகாலைப் பாங்கு ஓதும் ஒலி கரம்பனூரை எட்டியபோது ஒரு தீவனப் படப்பு எரிந்தது. எந்த ஜீவனுமற்று வெறிச்சோடிக் கிடந்த ஊரைச் சுற்றிலுமுள்ள படப்புகள் எரியத் தொடங்கின. கள்ளர்கள் ஊருக்குள் இருந்த பத்திருப்பது வண்டிகளை இழுத்துவந்து வைக்கோல் கட்டுகளை ஏற்றத் தொடங்கினர். தீ வீட்டுக் கூரைகளிலும் படர்ந்து வானில் ஏறியது. ஸ்ரீரங்கத்திலிருந்து பார்த்தபோது கொள்ளிடக் கரைத் தோப்புகள் கரும் பூதங்களாக விளிம்பு கட்டி நிற்க, அப்பால் பெரும் மஞ்சள் தீயொளி விரிந்திருக்க, கரும்புகை விண்ணோக்கி எழுந்தது. மதுரைப் படை கொள்ளிடத்தில் இறங்கியது. பெருங்கூட்டமாகவோ அணிகளாகவோ செல்லாமல் எறும்புகள் போல ஒற்றை வரிசையில் சென்றது. நூற்றுக்கணக்கான நிரைகள் வடகரை நோக்கிச் சென்றன. வீரர்களாலான மனித வெள்ளம் இரு கரையும் தொட்டது. கொள்ளிடத்தைக் குறுக்காகக் கடந்து வடகரை மரச்செறிவுகளில் தேங்கி நிலையெடுத்து நின்றது. படைக்கு முன்னே வாலுவக் கொல்லவாரின் பெத்த இண்டி மந்திரவாதிகள் ஒன்பது பேரும் சின்ன இண்டி மந்திரவாதிகள் ஒன்பது பேரும் வரிசையாக நின்றனர். பிஜப்பூர் படை நின்று வடக்கு நோக்கி மந்திரக்கோலை ஆட்டியவாறு போர்க்கான மந்திரங்களை சேர்ந்திசை போலத் தெலுங்கில் ஓதினர்.

கரம்பானூரில் தீ நின்று எரிந்தது. கிழக்கே மேகங்கள் செந்தீற்றல் கொண்டபோது வைக்கோல் வண்டிகள் தீயெரிய பிஜப்பூர் படைகளை நோக்கி ஓடின. வண்டிக்கு இரண்டு பேராகக் கள்ளர்கள் முன்னுக்குத் தள்ளிக்கொண்டு ஓடினர். மாதிக வில்லாளிகளுக்கும் வளரியேந்திய கள்ளர்களும் உடன் ஓடினர். தீக்கோளங்கள் வடக்கு நோக்கி வருவதைக் கண்ட பிஜப்பூரின் முன்னணி பீரங்கிகள் முழங்கின. இருட்டில் இலக்கற்று வெடித்துச் சீறிய குண்டுகள் திடும் திடும்மென மண்ணில் மோத புழுதி பறந்தது.

கொள்ளிடக் கரையில் முதல் எக்காளம் ஊதியவுடன் போர் முரசங்கள் அதிர்ந்தன. கிழக்கிலும், மேற்கிலும் வெகுதொலைவில் மதுரையின் குதிரைப் படைக் கொம்புகள் போர் விளியை எதிரொலித்தன.

வளரியின் எல்லைக்குள் பீரங்கிகள் தெரியவும் தீ வண்டிகள் குறுக்காக ஆங்காங்கே நின்றன. வில்லாளிகளின் தீயம்புகள் வானில் சரம்சரமாக எழுந்து எரி நட்சத்திரம் போல எதிரணியில் இறங்கின. சிறகுகளில் நின்ற குதிரைப்படை நோக்கியே தீயம்புகள் விடாது பறந்துகொண்டிருந்தன.

தீவண்டிகளை நோக்கி பிஜப்பூர் குதிரைகள் இறங்கின. மதுரை வீரர்கள் வண்டிகளைச் சுற்றி நின்றனர். குதிரைகள் தீயை நெருங்காமல் திமிறிக் கனைத்து விலகியோடின. குழம்பிச் சுற்றுகிற குதிரைகளையும், வீரர்களையும் கள்ளர்கள் வேல்கம்பால் குத்தி எறிந்தனர். அம்புகள் சரம் சரமாகக் குதிரைகளுக்கு மேலே பறந்து வீரர்களை வீழ்த்தின.

கொள்ளிடக்கரை உடைந்தது போல 'ஜெய ஜெய ஜக்கம்மா...' என்ற

பெருமுழக்கத்தோடு பாம்புகளைப் போல நீள்நிரைகள் சீறியபடி களத்தில் இறங்கின. பிஜப்பூர் பீரங்கிகள் தென்முகமாகச் சுட்டியபடியிருந்தன.

நிலம் வெளுக்கத் தொடங்கியது. மதுரை வீரர்கள் கரம்பானூரைத் தாண்டியதும் பிஜப்பூர் குதிரைப்படைகள் அணியணியாக முகாமின் இரு சிறகுகளிலிருந்தும் கிளம்பி அதை மறித்தடிக்கப் பாய்ந்தன.

மேற்கிலிருந்து சொக்கநாதன் தலைமையில் குதிரைப் படை பேரலை போல வந்தது. அலை வியூகத்தில் வந்தன குதிரைகள். ஒவ்வொரு அலையிலும் ஐநூறு ஐநூறாக இரண்டே வரிசைக் குதிரைகள் இருந்தன. பின்னே தொடர்ந்த இரண்டாவது அலை வடகிழக்காகச் சாய்ந்து பிஜப்பூரின் வாலை நோக்கிப் பாய்ந்தது. மூன்றாவது அலை நேர் வடக்கே களத்தை வளைக்கும் நோக்கத்தோடு சென்றது. நான்காவது அலை சொக்கநாதனுக்குப் பின் துணையாகத் தொடர்ந்தது. அதற்குப் பின்வந்த மூன்று அலைகள் அதே வியூகத்தில் நிலையாக நின்று களத்தை கவனித்தன.

கிழக்கிலிருந்த விருபாஷி பாளையக்காரர் திருமலை சின்னப்ப நாயக்கரின் தலைமையில் குதிரைப்படைகள் இதே வடிவில் அலை அலையாக எழும்பி வந்தன.

பிஜப்பூர் பீரங்கிகள் கிழக்கு மேற்கு முகமாகத் திரும்பி சுடத்தொடங்கின. ரேகை தெரியும் வெளிச்சம் வந்துவிட்டது. தாதனூர் இருளாண்டி பீரங்கிக்குப் பின்னால் நிற்பவனைக் குறிவைத்து வளரியை எறிந்தான். முதல் எறியே ஒருவனை அடித்து வீழ்த்தியது. அடுத்தடுத்து எல்லாப் பீரங்கிகளை நோக்கியும் கள்ளர் வளரிகள் பறந்தன. தனது இரண்டாவது வளரியையும் இருளாண்டி எறிந்தான். எல்லா வேலைகளிலும் அண்ணனை நிழல்போல் தொடரும் அவன் தம்பி ஒச்சு தனது இரண்டு வளரிகளையும் அண்ணனிடமே தந்தான். சற்று நேரம் பீரங்கிகளைச் சுற்றி யாரையும் எழுந்து நிற்க விடாமல் வளரிகள் தடுத்தன. வளரிகள் தீர்ந்தவுடன் மாதிக வில்லாளிகள் முன்னே வந்து முதல் வரிசையில் மண்டியிட்டும் இரண்டாம் வரிசையில் நின்றும் எய்து கொண்டிருந்தனர். பீரங்கிகள் மௌனமாயின.

பிஜப்பூர் இரண்டாம் வரிசை மேற்புறக் குதிரைகள் சொக்கநாதனின் அணியை எதிர்கொள்ள மேற்கு நோக்கிக் கிளம்பின. பத்துக்குப் பத்து என்ற கணக்கில் நூறு நூறு குதிரைகளாகச் சதுர வடிவில் பிஜப்பூரின் அணிவகுப்பு இருந்தது. சதுரங்களுக்கு இடையே பெரும் இடைவெளி. பிஜப்பூர் குதிரைகள் மேற்கே ஓடி வேகமெடுக்கு முன் கடுவிசையோடு வந்த மதுரையின் முதல் அலை அதைத் கிழித்து இடைவெளிகளில் ஊடுருவி அப்பால் வந்துவிட்டது. வந்த வேகத்தில் மீண்டும் பின்னால் திரும்பித் தாக்கும் ஆணையுடன் கொம்புகள் ஊதின. நான்காவது அலை பிஜப்பூரை நெருங்கியது. முதல் அலை பின்னிருந்து நெருங்கியது. பிஜப்பூரை குதிரைகள் மறிந்து ஒன்றோடொன்று மோதிக் குழம்பி கட்டுப்பாட்டை இழந்தன; பாக்குவெட்டியின் நடுவே போல் சிக்ககொண்டன; பிஜப்பூரின் புகழ் பெற்ற குதிரைத் தளபதிகள் இறுதிக் கணத்தை உணர்ந்தார்கள்.

கிழக்கே சின்னப்ப நாயக்கரின் அலை இன்னும் விரைவாக இறங்கி பிஜப்பூர் குதிரைகள் தண்டை விட்டுக் கிளம்புமுன்பே மூர்க்கமாகத்

தாக்கியது.

மதுரைக் காலாட்படையை நோக்கித் தெற்கே பாய்ந்து பிஜப்பூர் குதிரைகளை மனித நிரைகள் தங்களுக்கு இடையே ஊடுருவி விட்டன. எந்த அழிவிலும் எக்காரணம் கொண்டும் வரிசை மட்டும் குலையக்கூடாது என்று அணித்தலைவர்களுக்கு வேங்கடகிருஷ்ணப்பன் உத்தரவிட்டிருந்தான். முன்னே வந்த குதிரைகளைத் தாக்காமல் உள்ளே விட்டனர். வரிசைகள் தாக்கிக்கொண்டே முன்னே ஓடி நீண்டு மேலும் குதிரை அணிகளை உள்வாங்கின. ஓரங்களில் இருக்கும் குதிரை வீரர்கள் போராடிச் செத்துக்கொண்டிருக்க நடுவே சென்ற குதிரைகள் இலக்கற்று, பயனற்றுக் குழம்பிக்கொண்டிருந்தன. வேகம்தான் குதிரைப் படையின் திறம். தேங்கித் தவிக்கும் குதிரைகள் பலிகிடாக்களை விட பலவீனமானவை. கண்முன்னே குதிரை அணிகள் சடசடவெனச் சரிந்து சுருங்குவதை உணர்ந்த ஒரு பிஜப்பூர் தளகர்த்தன் பின்னே வரும் அணிகளைக் கலைந்து பரவித் தாக்குமாறு உத்தரவிட்டான். மதுரை நிரைகள், வீரர்கள் மடிந்து விழுந்ததும் மீண்டும் மீண்டும் இணைந்து நெடுஞ்சுவர்போல நின்றன. சிதறி ஓடிவரும் குதிரைகள், அணிகளைவிட மோசமாகப் பலியாகின.

திடீரென நகராக்கள் முழங்கின. பிஜப்பூரின் முன்நிலைக் காலாள் படை பீரங்கிகளைத் தாண்டி தெற்கு நோக்கி இறங்கி ஓடி வந்தது. ‘கருப்பா...’ என்று கத்திக்கொண்டு இருளாண்டி முன்னோக்கி ஓடினான். வில்லாளிகள் பின்வாங்கி ஓடி மீண்டும் நிலையெடுத்தனர். கள்ளர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினர். பின் திரும்ப எத்தனித்த ஒச்சு, அண்ணன் மட்டும் பின்வாங்காமல் படைக்கு எதிரே முன்னால் தனித்து ஓடுவதைக் கண்டு அவனுக்குப் பின்னே தானும் ஓடினான். உயர்த்தித் தூக்காமல் வேல்கம்பைக் கிடைமட்டத்தில் பிடித்தபடி இருளாண்டி ஓடினான். முதலில் கண்டவனின் வயிற்றோடு வேல்குத்தி வெளியேற இருளாண்டியின் கம்புக் கைப்பிடியின் மேலேயே அவன் குப்புறச் சரிந்தான். அடுத்த கணமே அண்ணனையும், தம்பியையும் மூழ்கடித்து ரத்தச் சிதறல்களாக்கி விட்டுக் கடந்து சென்றது பிஜப்பூர் காலாள் படை.

சொக்கநாதனின் ஐந்தாவது, ஆறாவது அலைவரிசைக் குதிரைகள் தென்முகமாகப் பாய்ந்து மதுரைக் காலாள்படைக்குத் துணை சேர்ந்தன. போர் தொடங்கிய சற்று நேரத்தில் மதுரையின் அனைத்துப் பிரிவுகளும் எதிரியை நெருக்கித் துவம்சம் செய்துகொண்டிருக்க பிஜப்பூரின் முக்கால்வாசிப் படைகள் யுத்தமுனையின்றி நடுவே பதற்றத்தில் தவித்துக்கொண்டிருந்தன.

யானை மேல் நின்று களத்தை கவனித்தவாறிருந்த சாகோஸி காலாள் படையைப் பின்வாங்குமாறு உத்தரவிட்டான். நகராக்கள் முழங்க பச்சைக் கொடிகள் கீழ்நோக்கி அசைந்தன. பிஜப்பூர் படைகள் வால்புறமாக வெளியேறி வடமுகமாகக் கிளம்பின.

வடதிசையில் காத்திருந்த மதுரையின் நாலாவது அலைவரிசைக் குதிரையணிகள் இரண்டும் தமக்குள் வெகுதூர இடைவெளிவிட்டு தெற்கே இறங்கின. துருக்கிய ராஜ குடும்பக் கிளையைச் சேர்ந்தவனும் மகா கர்வியும் பீரங்கி தளகர்த்தனுமான முஷாபிர் ஷா பின்வாங்கக் கிளம்பிய படைகளைத் தடுத்து நிறுத்திவிட்டு பின் அணி பீரங்கிகளை இயக்க

ஆணையிட்டான். எதிரே வரும் குதிரை அணியைக் கணிக்காது அவசரமாக அவன் எடுத்த முடிவு பெருந்தவறாகிப் போனது. கனரக பீரங்கிகள் வெகுநேரம் எடுத்துக்கொண்டு பெருவெடிப்புடன் நிதானமாகச் சுட்டன.

சாகோஸி நிலைமையை ஊகித்து கோபத்துடன் முஸாபிரை அணுகுவதற்குள் எவ்வித சேதமுமின்றி மதுரைக் குதிரை வீரர்கள் பிஜப்பூரின் வால்புறத்தில் மோதிவிட்டனர். நெரிசலில் சிக்கித் தவித்த காலாள் படையினர் அர்த்தமின்றி பலியாகினர். உயிராசையோடு பீறிட்டுப் பாய்ந்த மனித வெள்ளம் வடமுகமாக ஓடியது. மதுரையின் அடுத்த அலைவரிசைக் குதிரைகள் முன்னேறுவதை நிறுத்திவிட்டு நின்று அவர்களுக்காகக் காத்திருந்தன.

சூரியன் செந்நிறம் இழந்து, வட்ட விளிம்புகள் மழுங்கி கோள வடிவமுற்று வெயிலாக எரிக்கத் தொடங்கும்போது களத்தின் முடிவு தெள்ளத் தெளிவாகிவிட்டது. நகராக்கள் முழங்கின. பிஜப்பூரின் வெள்ளைக்கொடி மேலெழுந்தது. அதன் எல்லா முனைகளிலும் வெள்ளைக் கொடிகள் உயர்ந்தன. போர் முடிவுற்றது.

மறுநாள் இருபது சிறிய பீரங்கிகளையும், மூவாயிரம் குதிரைகளையும் இரண்டு லட்சம் வராகனையும் கொடுத்துவிட்டு சாகோஸி வடமுகமாகத் திரும்பிச் சென்றான்.

மதுரையின் களப்பலி எண்ணூறுக்கும் மேல். தாதனூரிலிருந்து மூவர். பலியான சின்னமுத்து இருளாண்டி சகோதரர்களுக்கு சின்னய்யா மகன் என்பதால் மூவர் வாரிசுகளும் பின்னர் காவேரி வகையறா ஆயினர்.

*

# 17

**த**ஞ்சாவூர் ராஜகோபாலசாமி கோவிலின் முன்னே தங்கப் பசு நின்றிருந்தது. ஹிரண்யகர்ப்ப யாகத்தில் எழுந்த புகை கோவிலுக்குள்ளிருந்து கிளம்பி வேதகோஷங்களோடு வானில் பரவியது. கோவிலின் முன்னே கூட்டம் நெரிபடாமல் இருக்க வீரர்கள் ஈட்டிகளைக் கிடையாகப் பிடித்து அரண் அமைத்து பொதுஜனங்களை விலக்கி எல்லோரையும் தெருவில் அமர வைத்திருந்தனர். பசுவை சுற்றிலும் பெருவட்டமாக வெற்றிடம் இருந்தது. திண்ணைகளிலும் வீட்டு மாடிகளிலும் மரங்களின் மேலும் ஜனக்கூட்டம் வழிந்தது. கோட்டை வடக்குவாசல் அலங்கத்திலும் சுவர்களிலும் வீரர்கள் நெருக்கியடித்து நின்றிருந்தனர். மந்திரி பிரதானிகளும் தளகர்த்தர்களும் அரசவைப் பிரமுகர்களும் பெருவணிகர்களும் மட்டும் கோவில் வாசலின் இருமருங்கும் நான்கு வரிசைகளில் நின்றிருந்தனர்.

தஞ்சாவூர் அரசர் விஜயராகவ நாயக்கர் மகா பக்த சிரேஷ்டர். ஸ்ரீவைஷ்ணவர். அவரது நாளின் பாதி வேளை பூஜைகளிலும் மீதிவேளை ஏடுகளைப் படிப்பதிலுமாகக் கழிந்தது. நீதிமான். தர்மராஜ்ய பரிபாலனம் செய்வதாக அவரது நம்பிக்கை. விஷ்ணுவுக்கு கோவில் இல்லாத சிறு நகரங்களிலெல்லாம் தன்னுடைய ஆட்சியில் அதை நிவர்த்தி செய்தார். அதில் பெரியது மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவில். வைகறையில் எழுந்து நீராடியவுடன் பூஜையில் அமர்ந்துவிடுவார். நாடெங்கும் அவர் நிறுவிய தர்மசாலைகளில் பன்னிரண்டாயிரம் பிராமணர்களுக்கு காலை பிரீதி போஜனம் முடிந்த பிறகு, அவர் விசேஷமாக அமைந்திருந்த வந்தனை மாடத்தில் ஏறி ஸ்ரீரங்கம் நோக்கி அரங்கனைத் தொழுத பின்னர்தான் அன்னம் ஏற்பார். கடந்த மூன்றாண்டுகளாக தஞ்சைப் பகுதிகளில் மழை இல்லை. குடிபடைகள் மீண்டும் செழிக்க வேண்டி ராஜராஜ சோழனைப் போல ஹிரண்ய கர்ப்ப யாகத்தைத் தொடங்கிவிட்டார்.

வணிகர்கள் அணியில் இருந்து மாறி பிரபுக்கள் வரிசையில்

நின்றிருந்தார்கள் இரு இளைய வணிகர்கள். இந்த நகரின் பெருஞ்செல்வந்தர் ஆனா மானா தீனா செட்டியாரின் மருமகன் ஒருவன். மற்றவன் அவன் நண்பன் மைசூர்காரன். இவன் நெடுநேரமாகக் காத்திருந்ததில் பொறுமையிழந்து கோவில் சுவரில் சாய்ந்து நின்றிருந்தான். கோபுர வாயிலின் தென்புற அதிஸ்தானத்தில் முதலில் இருந்து வேணுகோபாலனின் புடைப்புச் சிற்பத்தின் மீது உடல் படாமல் இருக்கச் சிரமப்பட்டான். தங்கப் பசுவைப் பார்க்கும்போதெல்லாம் எரிச்சல் மீதூற கண்களை மூடிய படியிருந்தான். இங்கு வந்திருக்கக் கூடாது என்று தோன்றியது. இந்த அபத்தமான யாகத்தை நேரில் பார்த்தால் என்ன என்ற விநோத விளையாட்டு மனதில் தோன்றிய கணத்தை சபித்தவாறிருந்தான். செட்டியாரின் மருமகன் துவாரசமுத்தி ரத்திலிருந்து இந்நிகழ்ச்சிக்காக தஞ்சாவூர் திரும்பும் வழியில் திருச்சிராப்பள்ளியில் இடைதங்கி மன்னர் சொக்கநாதனைச் சந்தித்தான். கன்னட ராஜ்ஜியங்களின் ஸ்திதி பற்றி அறிந்துகொள்வதில் சொக்கநாதனுக்கு உள்ள ஆர்வம் காரணமாக பலமுறை அவரைச் சந்தித்திருக்கிறான். இந்த யாகத்தைப் பற்றி சொக்கநாதன் கோபத்தோடு எள்ளலோடு அவனிடம் பேசினான். மரப்பசுவைப் போர்திய தங்கத் தகடுகளை உருக்கி ஸ்வர்ண புஷ்பங்களாக்கி அரங்கனுக்கு அர்ச்சிப்பதை விட அரிசியாக்கினால் பட்டினியால் தவிக்கும் தஞ்சாவூர் ராஜ்ய ஜனங்களுக்கு நாலு மாதம் கஞ்சித் தொட்டி திறக்கலாம் என்றான். தஞ்சாவூர் மக்களின் இன்றைய கதியை, ராஜ்ய பரிபாலனம் நடக்கும் லட்சணத்தை விஜயராகவரைவிட சொக்கநாதன் நன்கறிவான். வற்றி உலர்ந்து வயிறொடுங்கிய மக்கள் கற்றாழைகளையும் எறும்புப் புற்றுகளையும் தேடி அலைந்துகொண்டிருக்க, வைதீகக் கோவில்களில் வருண ஜபமும் யாகங்களும் பெரும் காணிக்கைகளுடன் நடத்த விஜயராகவர் ஏற்பாடு செய்துகொண்டிருப்பார். ஜனங்கள் பஞ்சம் பிழைக்க பாண்டி நாட்டுக்குள் வந்த வண்ணம் இருந்தனர். பெருவழிகளிலும் எல்லையோர ஊர்களிலும் சொக்கநாதன் உத்தரவின் பேரில் கூழும் கஞ்சியும் எப்போதும் காத்திருந்தன. காரைக்கால் பிரெஞ்சுக்காரர்களும் தரங்கம்பாடி டேனிஷ் மிஷனரிகளும் இந்தப் பஞ்சத்தைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நாகப்பட்டினம் போர்ச்சுக்கீசிய வியாபாரிகள் மக்களுக்கு உணவளித்து, வேலை தருவதாக ஏமாற்றி கப்பல்களில் ஏற்றிச் சென்று அடிமை வேலைக்கு விற்பது மிகவும் அதிகரித்துவிட்டது என மதுரை வேவுகாரர்கள் சொக்கநாதனிடம் கூறியிருந்தனர். விஜயராகவரை அவன் நேரில் கண்டதில்லை. அவரைப் பற்றிய கேலிச் சித்திரமும் அனுதாபமும்தான் அவன் மனத்திலிருந்து. சொக்கநாதன் இன்றுவரை கோயில்களுக்கு மான்யங்களோ புனருத்தாரணங்களோ செய்ததில்லை; வேதியர் மங்கலங்களை உருவாக்கவில்லை. அவனுக்கு வேறு செலவுகள் இருந்தன. அவன் முன்னோர்கள் கோயில் கோயில்களாகக் கட்டி குளங்கள் வெட்டி பல தலைமுறைக்குச் சேர்த்து புண்ணியம் கட்டிக்கொண்டவர்கள்.

விஜயராகவர் ஸ்ரீரங்கத்தில் அரையராகப் பிறந்திருக்க வேண்டியர்; ராஜ கிரீடத்தை சடாரி என்று கருதிவிட்டார் என்று அடுக்கிக்கொண்டே போனவனுக்கு சட்டென்று தோன்றியது. இந்தக் கேலிக்கூத்தை நேரில் கண்டால் என்ன என்று. வணிகனிடம் தன் ஆசையைச் சொன்னான். தயங்கிய அவனிடம், வந்திருப்பவன் மதுரை மன்னன் என்று வேஷம் கலைந்து தெரிந்துவிட்டால் கூட தனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை

என்றும், விஜயராகவர் பண்பாளர்தான் என்றும், விளக்கியபிறகு அவன் ஒப்புக்கொண்டான். சொக்கநாதன் மீசையை மட்டும் இழக்கவேண்டிய தாயிற்று. வணிக உடையும் தலைப்பாகையும் தரித்து நெற்றியில் பரக்க நீறு பூசி கழுத்தில் லிங்க மாலையைத் தொங்கவிட்டு இருள் பிரியுமுன் குதிரைகளில் ஏறி தஞ்சாவூர் எல்லைக்குள் அழைத்து வந்துவிட்டான் அந்த நண்பன். கோட்டைக்கு வெளியே குதிரைகளை நகரத்தார் சத்திரத்தில் விட்டு விட்டு, வடக்கு வாசலில் நுழைந்து வீட்டிற்கே போகாமல் நேரே கோவில் வாசலுக்கு வந்துவிட்டார்கள். அவனுக்கு முகமன் கூறியவர்களின் கேள்விக்கு சொக்கநாதன் துவாரசமுத்திர லிங்கங்கட்டி வைசியன் என்றும் வீரசைவன் என்று சுருக்கமாகப் பதிலளித்து விலகினான்.

மங்கள வாத்தியங்கள் முழங்க, கோவிலுக்குள் பரபரப்பு மிகுந்தது. கும்பிட்ட கரங்களுடன் விஜயராகவர் வெளியே வந்தார். கண்கள் பக்திப் பரவசத்தில் கனிந்திருக்க சந்தன மார்பில் வெண்தாடி புரள கோபுர வாயிலைக் கடந்து பசுவிடம் போனார். சொக்கநாதன் எதிர் பார்த்தைவிட முதிர்ந்த தோற்றத்தில் இருந்தார். பின்னால் பட்டமகிஷி தொடர்ந்தாள். அதற்கும் பின்னே... யாரிவள்? இளவரசியா? ஆம்... இவள்தான் மோகனாங்கி என்ற மங்கம்மாவா! இந்த மண்ணில்தான் இவள் நடக்கிறாளா... இல்லை, விண்ணிலிருந்து இறங்கி வருகிறாளா. மலர்களுக்கன்றி மானுடப் பெண்ணுக்கு இந்த எழில் வாய்க்குமா!

தாய் தந்தையரோடு பசுவின்முன் வணங்கி நின்றிருந்தாள். இன்னுமொரு சுவர்ண் விக்ரகம் போல. சொக்கநாதனின் பார்வை அகலவேயில்லை; கண்ணிலும் கருத்திலும் அவளே நின்றாள். சூழ்ந்திருந்த மனிதர்களும் செயல்களும் மொழியும் ஒலியும் மங்கி மறைய, உலகெலாம் அவளே என்றாகி அவள் வதன்மாக வடிவுற்றது.

வேறெதையுமே அவன் காணவில்லை. கோபூஜை நடந்தது; புஷ்பார்ச்சனை தீபாராதனை எல்லாம் முடிந்து அரசர் பசுவின் வயிற்றைத் திறந்து உள்ளே ஏறி அமரவயிறு மூடிக்கொண்டது. மங்கள வாழ்த்தொலிகளும் வாத்யங்களும் வேத கோஷங்களும் உச்சத்தில் எழ வெளியெங்கும் அதிர்ந்து. அரசர் பசுவிலிருந்து மீண்டும் புதிதாய்ப் பிறந்து மண்ணுக்கு வந்தார்.

சொக்கன் இதுயெதையுமே உணரவில்லை. வெயில் வாங்கிய முகத்தில் முத்துகள் பூத்தபோதும் அவள் பெண்ணாகவில்லை; பனிமலர் எனவே தோன்றினாள். கோவிலுக்குள் மீண்டும் அவள் வரும்போதுதான் கவனித்தான், வெண்பட்டு உடுத்தியிருப்பதையும் குறைவான அணிகள் பூண்டிருப்பதையும், மனம் மீண்டும் மலருக்குத் தாவியது.

கனவிலிருந்து மீளாமலேயே குதிரை ஏறினான். அது தானாகவே, கடந்து வந்த பாதையின் நினைவில் மேலைப் பெருவழியில் ஓடியது. திருச்சிராப்பள்ளி கோட்டை வாயிலை நோக்கிப் போன குதிரையைத் திருப்பி காவிரிக் கரைச்சோலைக்குச் செலுத்தினான். தருநிழலும் செறிந்த பசுமையும் மணக்கும் பூக்களும் அவளாகவே தோற்றின. நிழலில் படுத்தான். தாழ்மரக் கிளையில் ஏறி அமர்ந்தான். தடமற்ற புதர்களினூடே அலைந்தான். சின்னஞ்சிறு தேன்சிட்டுகள் செடிகளில் தாவித் தாவி அமர்ந்து விரட்டி விளையாடுவதைக் கண்டான். என்ன அற்புதமான பிறவி!

அன்றிரவு அரண்மனை மேல்மாடத்தில் உலவிக் கொண்டிருந்தான். உறங்க மறுத்த விழிகளால் நிலவைப் பார்த்தான். கோடி கோடி விண்மீன்கள் அவன் மனமே போன்று சுடர்ந்துகொண்டிருந்தான். திடீரென உத்வேகத்தோடு கீழிறங்கி, குதிரையேறி மதுரையை நோக்கி கடுவிசையாக விரட்டினான்.

மனவேகத்தை குதிரையால் தொடரமுடியவில்லை! ஆம், அவன் ரிஷ்யசிருங்கன்! அந்த மண்ணில் அவன் காலடி பட்டதும் மழை பொழியும். மன்னன் மகளைத் தாரை வார்ப்பான். பட்டமேற்று இரண்டு ஆண்டுகள் ஆனபின்னும் அவன் ரிஷ்யசிருங்கனாக இருந்தது பற்றி நினைக்கையில் அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சதிராட்டங்களை விழாக்களில் கண்டதோடு சரி, அதையும் முழுக்கக் காணும் பொறுமை இருந்ததில்லை. நாட்டியக்காரிகள் எவள் உருவமும் நினைவில் இல்லை. மதுரை அந்தப்புரங்கள் போகத்தின் களமாகத் திகழ்ந்த காலம் அவன் வந்ததும் முடிந்து போனது. அரண்மனையில் உறவுக்காரிகளைத் தவிர யாருமில்லை. ஆயர் குலத்தில் உதித்தவன் கோபியரோடு குலவாமால் காபாலிகனைப் போலச் சுற்றித் திரிந்ததென்ன! சொக்கநாதன் என்பதாலா? தாய் மடியில் தலை வைத்ததும் தூங்கிவிடும் பழக்கத்தை விடமுடியாமல் இருக்கக் காரணம், கடவுளே... எங்கோ இவள் பிறந்து எனக்காக இத்தனை நாள் காத்திருந்தாள் என்பதற்குத்தானா!

விராலிமலை காவல் மாடத்தில் குதிரை மாற்றிக் கொண்டபோது தான் உணர்ந்தான், இன்று உணவே அருந்தவில்லை என. காவலர்கள் பணிந்து அளித்த இளநீரைக் குடித்துவிட்டு தெற்கே விரைந்தான்.

நிர்மால்ய பூஜையின்போது கோவிலுக்குள் நுழைந்தான். அங்கயற் கண்ணி அரசனைக் கண்டு புன்னகைத்தாள். கிளிகள் கல் பிரகாரங்களெங்கும் பறந்து பறந்து மிழற்றின. வேங்கட கிருஷ்ணப்பரின் மாளிகைக்குப் போய் அவரைத் துயிலெழுப்பினான்.

**வே**ங்கட கிருஷ்ணப்பர் தனது பரிவாரங்களுடன் தஞ்சாவூர் வந்து இறங்கினார். உற்காசமாக இருந்தார். சொக்கன் இவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்து அவர் பார்த்ததில்லை. அவன் கல்யாணத்திற்கு முன்வந்ததே போதும் என்றிருந்தது. மங்கல காரியமாகத் தூது வந்த பெருமிதம் அவருக்கு. மதுரையும் தஞ்சாவூரும் இணைந்துவிட்டால் காவிரிக்குத் தெற்கே டெல்லி பாதுஷா கூட கால் வைக்க முடியாது. ராஜபுரோகிதர், பண்டித பிராமணர்கள், ஆடை ஆபரணப் பரிசுகள் சகிதம் வேங்கடர் அரசவைக்குச் சென்றார். காத்திருந்தார். பூஜையிலிருந்த மன்னர் வெகுநேரம் கழித்து வந்தார். வணங்கி, வந்த நோக்கத்தைக் கூறி மன்னர் தமது பரிசுகளை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். விஜயராகவர் வெறித்த பார்வையோடு வெகுநேரம் வாளாவிருந்தார். மாலையில் மீண்டும் வருமாறு கூறி விடை கொடுத்தனுப்பினார்.

விமலை சபையில் கேள்விப்பட்ட செய்தியோடு கன்னிமாடத் திற்கு ஓடினாள். லஷ்மியிடம் வணிகன் பெருமிதமாகப் பரப்பிய கூடுதல் தகவலும் இருந்தது. குலதெய்வம் கௌரியின் முன் அமர்ந்து மங்கம்மா ருத்ரவீணையை மீட்டிக்கொண்டிருந்தாள். மேச கல்யாணி ராகம் இழைந்து எழுகிறது. ஓடி வந்த விமலை அவள் முன் அமருமுன்னே ‘மதுரை மகாராணி...மதுரை மகாராணி...’ என்று உற்சாகத்தில் கூவினாள்.

மோகனாவின் பார்வையில் எழுந்த கேள்வி, வேங்கடர் தூது வந்த கதையை விமலை விரிக்கவும், விழிகளில் வியப்பாக மாறியது. பொறுமையின்றி விமலையை இடைமறித்த லக்ஷ்மி ‘மோகனா! உன்னைப் பார்க்கத்தான் அவர் மாறுவேஷத்தில் ஹிரண்ய கர்ப்ப யாகத்திற்கு வந்தாராம்‘ என்றதும், நாணத்தில் தலைகவிழ்ந்தாள்; விரல்கள் வெறுமனே வீணையில் தவழ்ந்துகொண்டிருந்தன. லக்ஷ்மி கவிதாயினி ஆகியிருக்க வேண்டியவள், தவறிப் போய் அணுக்கத் தோழியாக இருக்கிறாள். அவள் கற்பனை அற்புதமான ஒரு காதல் கதையைப் புனைந்துகொண்டே போனது. தலை கவிழ்ந்தே இருந்த மோகனாங்கியின் மேல் அந்தக் கதை கொடியாய்ப் பற்றிப் படர்ந்து ஏறி இதழ்களில் புன்னகையாய் மலர்ந்தது.

விஜயராகவர் மகாராணியைத் தனியே அழைத்துக் கேட்டார். அவள் சொன்னாள் ‘ஏற்கனவே பட்ட கதை மறந்துவிட்டதா? தஞ்சாவூரிலிருந்து அச்சுத ரகுநாதம்மகாரு திருமலை நாயக்கனின் ராணியாகப் போய் கொலையுண்ட பழி போய்விடுமா?’ தற்கொலை தான்’ என்றார் விஜயராகவர்.

அரசர் தனது பூஜையறைக்கு பிரதானி கோவிந்தய்யாவை வரவழைத்துக் கேட்டார். ‘சைவ மதாபிமானியான ராஜனோடு ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸ்திரீ எப்படி வாழ முடியும்?’ என்று அவர் எதிர்க்கேள்வி போட்டார்.

உணவருந்தும்போது தளவாயும் தனது மைத்துனனுமான ரங்கப்ப நாயக்கரை வரவழைத்தார். முகச்சுளிப்போடு அவர் தெலுங்கில் சொன்னார் ‘கொல்லவாரு சூத்திர வர்ணம். அதோடு சம்பந்தம் க்ஷத்திரிய பலிஜர்களுக்கு தருமமல்லை.’

மீண்டும் தனது பூஜையறைக்குள் போய் அடைந்துகொண்டார். தபோநிதி சோமசுந்தர சுவாமிகளை அழைத்து வரச்செய்தார். சுவாமிகள் மனம் கனிந்து கூறினார். ‘தெய்வானுக்கிரஹம். மங்கம்மாவின் பாக்யம்...’ தொடர்ந்து சொக்கனின் நற்பண்புகளையும் வீரப்பிரதாபங்களையும் புகழத் தொடங்கினார்.

வெகுநேரம் கழித்து விஜயராகவர் வெளியே வந்து கன்னிமாடம் நோக்கிச் சென்றார். தூரத்திலேயே அந்த இசை கேட்டது. அமிர்த வர்ஷிணி ராகம் மழையாய்ப் பொழிந்துகொண்டிருந்தது. மரப்படியில் ஏறிவரும் அவர் தலை தெரிந்ததுமே வீணையை விலக்கிவிட்டு சிரிப்போடு அவரிடம் துள்ளி ஓடிவந்தாள். அவள் தலையை வருடியவாறு கௌரி தேவியிடம் அவளை அழைத்துச் சென்றார். நெடுநேரம் தேவியின் முன்நின்று வணங்கியவாறு கௌரி மகாத்மியத்தின் தெலுங்கு சுலோகங்களை மெதுவாகப் பாடினார். பிறகு கையோடு கொண்டுவந்திருந்த இலைச்சுருள்கள் இரண்டை தேவியின் காலடியில் வைத்தார். மகளை அழைத்து ஒன்றை எடுக்குமாறு சொன்னார். அவள் தந்ததை வாங்கிக்கொண்டு ‘உணவருந்தி விட்டாயா?’ என்று அன்போடு கேட்டார். ‘இசையில் மூழ்கிப்போய் மறந்துவிட்டேன்’ என்றாள். ‘வேளை தவறலாகாது’ என்று கூறிவிட்டுச் செல்லும் தந்தையை வாடிய கண்களோடு பார்த்தாள். ‘கௌரியிடம் கேட்டவர் தன்னிடம் ஏன் கேட்கவில்லை’ என்ற விசனத்தில் அப்படியே அமர்ந்து கௌரியை

வெறித்துக் கொண்டிருந்தாள்.

வெளியில் வந்ததும் இலைச்சுருளைப் பிரித்த விஜயராகவர் செவ்வரளி மலரையே கண்டார்.

அன்று மாலை சபையில் விஜயராகவர் வந்து அமர்ந்தார். அவர் முடிவுக்காக ஆவலோடு காத்திருந்தனர். ‘தஞ்சாவூர், மதுரை ராஜ்யங்கள் உருவானபின் சென்ற நூற்றைம்பது வருஷங்களாக இருவருக்கும் நல்லுறவு இல்லை. தொடர்ந்து போர்தான். எனவே பகையரசனுக்குப் பெண் தர சம்மதியேன்’

வேங்கட கிருஷ்ணப்பர் இதை சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. நம்ப முடியாமல் எழுந்து கூறினார் ‘மண உறவின் மூலம் இந்தப் பகை நீங்கிவிடும். இரண்டும் ஒற்றுமையாக இருந்தால் சுல்தான்களின் தொல்லையை ஒழித்துவிடலாம்...’ என்று அரசியல் ஆதாயங்களைக் கணக்கிட்டபடியே பேசினார்.

கையமர்த்தி அவரை நிறுத்திவிட்டு வேங்கடரைப் பார்த்து ‘கோவிந்தய்யா தொடர்ந்து உங்களுடன் உரையாடுவார்’ என்று கூறி, அவையை வணங்கிவிட்டு பூஜைக்கு கிளம்பினார்.

வேங்கடர் ‘நான் எத்தனை நாள் வேண்டுமானாலும் இங்கு காத்திருப்பேன். உங்கள் சம்மதத்தோடுதான் போவேன்’ என்று அரசரிடம் பணிவாக, உறுதியாகக் கூறினார். கோவிந்தய்யாவும் தளவாய் ரங்கப்ப நாயக்கரும் ஒரு கூட்டு. பட்டத்து இளவரசன் ராஜமன்னார்சாமி இப்போது சிறையில் இருக்கிறான். இதில் இருவருக்கும் பெரும்பங்கு உண்டு என்றாலும் இருவருக்கும் வெவ்வேறு காரணங்கள் இருந்தன. தளவாயின் மகன் ரங்கநாதனுக்கு மங்கம்மாவை மணமுடிக்கும் திட்டத்தின் சூத்திரதாரிகள் இவர்கள் தான். தளவாயின் தங்கையான மகாராணியையும் சம்மதிக்க வைத்திருந்தனர். கல்யாணத்திற்குப் பிறகு ரங்கநாதனுக்கு முடி சூடுவது. விஜயநகர அச்சுத ராயர் பெண் சீதனமாகக் கொடுத்ததுதானே இந்த ராஜ்ஜியம், எனவே அவ்வழி நியாயமானதுதான் என்பது அவர்கள் எண்ணம். ஆனால் இளவரசன் மன்னாரை என்ன செய்வது என்று புரியவில்லை.

கோவிந்தய்யாவும் வேங்கடரும் தொடர்ந்து பல விஷயங்கள் பற்றி உரையாடி சுற்றிச் சுற்றி வந்தனர். சபை நாகரிகப் பேச்சுகளில் சலிப்புற்ற தளவாய் பொறுமையிழந்து எழுந்து உத்தரவிட்டார். ‘நீங்கள் எல்லோரும் இப்போதே தஞ்சாவூரை விட்டு வெளியேற வேண்டும்.’ வேங்கட கிருஷ்ணப்பர் நிதானமாகச் சொன்னார் ‘அரச ஆணைக்கு மட்டுமே அடிபணிவேன்.’

கோபத்தில் தளவாயின் சொற்கள் வரம்பு மீறின. ‘சொக்கநாதனின் முப்பாட்டன் விஸ்வநாதன் பெரிய ராயருக்கு அடைப்பக்காரனாக இருந்தவன். இவன்களுக்கு ராஜகுலத்தில் பெண் வேண்டுமா?’

வேங்கட கிருஷ்ணப்பர் சினத்தோடு வாளை உருவினார். ராஜகுருவும் பிராமணர்களும் முன்னே விழுந்து தடுத்தனர். தளவாய் எழுந்து பாய்ந்து வந்து வரிசைப் பொருட்கள் இருந்த தாம்பாளங்களைக் காலால் உதைத்துத் தள்ளி ‘மாடு மேய்க்கும் கம்பளத்தானுக்கு இவ்வளவு திமிரா!’ என்று கொக்கரித்தார்.

**சோ**ர்வோடு திருச்சிராப்பள்ளி திரும்பிய வேங்கடர் சொக்கனைச் சந்திக்காமலேயே ஓய்வெடுக்கப் போய்விட்டார். ராஜகுரு எதையும் மறைக்காமல் நடந்ததனைத்தையும் சொக்கனிடம் விளக்கமாகச் சொன்னார்.

மறுநாள் தஞ்சாவூருக்கு ஓலை போயிற்று. 'திருமண வேண்டு கோளை ஏற்பதும் மறுப்பதும் தஞ்சாவூர் அரசரின் விருப்பம். ஆனால் மதுரைத் தூதுவர்களை அவமதித்தது ராஜ தர்மமல்ல. தஞ்சாவூர் மீது மதுரைக்கு எந்தப் பகையுமில்லை. நல்லுறவு தொடர வேண்டுமானால் அரசர் தன் அவையில் நடந்த அவமதிப்புக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும்.'

விஜயராகவர் சீறினார் 'யார் யாரிடம் மன்னிப்புக் கேட்பது? அரங்கனுக்கு மட்டுமே தலை தாழ்த்துகிறவன் நான். என்னைப் பார்த்துக்கேட்பதற்கு தெய்வகடாட்சம் இல்லாத ஒருவனுக்கு என்ன தைரியம்! திருச்சிராப்பள்ளி கோட்டையைப் பிடித்து இந்தச் சொக்கனுக்குப் பாடம் புகட்டுவேன். படை கொண்டு வருவேன் என்று சொல். யுத்தகளத்தில் அவன் செருக்கை ஒடுக்குவேன்.'

இம்முறை வேங்கட கிருஷ்ணப்பர் சமாதான ஓலை எழுதி அனுப்பினார். ஒன்றும் ஆகவில்லை. பிறகு மதுரை திரும்பிவிட்டார்.

சொக்கநாதனால் மங்கம்மாவை மறக்க முடியவில்லை. வேவுகாரர்கள் மூலம் அணுக்கத் தோழிகளிடமிருந்து செய்தி வந்தது, மோகனாங்கிக்கு பரிபூரண விருப்பம் என்று. சொக்கனுக்கு உயிர் வந்தது. சொர்க்கமே பரிசாகக் கிடைத்துவிட்ட உற்சாகத்தோடு அவன் அவளுக்கு லிகதம் எழுதினான். அது வழி தவறி மகாராணியின் கையில் சிக்கியது என்ற தகவலும் வந்தது. இனியும் தாமதிக்கக்கூடாது என்று மதுரையிலிருந்த வேங்கட கிருஷ்ணப் பருக்கு ஆணையிட்டான். 'தஞ்சாவூரை வென்று மங்கம்மாவை ராஜமரியாதையோடு இங்கு அழைத்து வருக.'

**வே**ங்கட கிருஷ்ணப்பர் கன்னிவாடி ரங்கண்ண நாயக்கரை அழைத்து, மதுரை நிலைப்படையில் தனது தளபதியின் கீழ் இருக்கும் பத்தாயிரம் வீரர்கள் இருபது பீரங்கிகளுடன் சென்று வல்லம் கோட்டையைத் தாக்குமாறு கூறினார். மீதிப் படைகளோ பாளையப் படைகளோ தேவையில்லை என்றார்.

அவரது நம்பிக்கைக்குரிய மதுரைக் கோட்டைக்காவல் நாற்பது கள்ளர்மட்டும் வளரிகளை வண்டியில் ஏற்றிவிட்டு உடன் சென்றனர். இரண்டாம் நாள் விராலிமலையில் தண்டு இறங்கியபோது ஐயாயிரம் குதிரை வீரர்களுடன் வேங்கடர் மதுரையிலிருந்து வந்து சேர்ந்துகொண்டார். வல்லம் நோக்கிப் போகும் வழியில் கொடும்பாளூரில் ரங்கண்ண நாயக்கர் மகன் சென்ன கதிரி நாயக்கர் தனது குதிரை வீரர்களோடு வந்து இணைந்தார்.

வல்லத்திற்குத் தெற்கே தண்டு இறக்கினர். மணப்பாறைப் படைகள் பெத்தநல்லமநாயக்கன் தலைமையிலும் ராமகிரிப் பாளையக் காரன் சாமயநாயக்கன் படைகளும் தொட்டியங் கோட்டைப் படைகளும் வந்து சேர்ந்துகொண்டன.

மறுநாள் காலை சூரியன் ஏறியதும் மதுரையின் போர் முரசங்கள்

முழங்கின. குதிரைகள் எதற்கும் சேணமிடாமல் ஓய்வில் விடுமாறும் மாலையில் கிளம்பி இரவில் தஞ்சாவூரில் இறங்க வேண்டுமெனவும் உத்தரவு வந்தது. திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்த பேஷ்கார் சின்னத் தம்பி முதலியார் வேங்கடருக்காக தஞ்சாவூருக்கு ஓலை எழுதிக்கொண்டிருந்தார். விஜயராகவரின் புகழாரங்களோடு தொடங்கிய செய்தி சுருக்கமாகவே இருந்தது.

‘வல்லம் விழுந்துவிட்டது. சமாதானத்தையே நாடுகிறோம். நீங்கள் விரும்பினால் உடனே கோட்டையைத் திரும்பவும் ஒப்படைக்கத் தயார். உங்கள் தயவு வேண்டும். ஸ்ரீரங்கநாத தாஸன் வேங்கட கிருஷ்ணப்பன்.’

வேப்பமர நிழலில் அமர்ந்து வேங்கடரும் கன்னவாடிக்காரரும் தாம்பூலம் தரித்தபடி சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். ஓலையை வாங்கி வாசித்துவிட்டு வேங்கடர் காத்திருந்த தூதனிடம் கொடுத்தார். ‘சூரியன் கஞ்சிப் பொழுதுக்கு வரும்போது நீ தஞ்சாவூரில் இதைச் சேர்ப்பாய். அதற்குள் இந்தக் கோட்டை பிடிபட்டுவிடும். ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் பிரசாதத்தை மன்னரிடம் கொடுத்த பிறகுதான் ஓலையை நீட்ட வேண்டும்‘ என்பதை மீண்டும் நினைவுபடுத்தினார்.

ரங்கண்ண நாயக்கருக்கு குதிரை ஏற முடியாது. வயது 88 ஆகிவிட்டது. போனமுறை பிஜப்பூர் சண்டைக்குக் கூட்டிப்போகவில்லை என்று கோபித்துக் கொண்டார். அதனால் இப்போது அழைத்து வந்திருக்கிறார்கள். மரத்தடி நிழலில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். ரதத்தில் வந்து அலுப்பு. சென்ன கதிரி வேங்கடரிடம் சொன்னார் ‘எல்லாம் பேத்திகளாகப் போய்விட்டனர் என்ற கவலை அவருக்கு. கொள்ளுப் பேரன்கள் வளர்ந்து சண்டைக்குப் போவதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற வருத்தம். போரில்தான் சாவேன் என்று பிடிவாதம்! இன்றைக்கு அவர் யோகம் எப்படி அமையுமோ, பார்க்கலாம். இங்கு இறந்தால்தான் நிம்மதியாக மாலைக்கல்லில் அடங்குவார்.’

ரங்கண்ண நாயக்கர் மூன்று மூன்றாக பீரங்கிகளை நான்கு வாசல்களுக்கு நேரேயும், இரண்டிரண்டாக சிறகிலிருந்த அலங்கங்களை நோக்கியும் நிறுத்தினார். அகழி வறண்டு. குத்துச்செடிகள் முளைத்திருந்தன. கோட்டை பராமரிப்பின்றிக் கிடந்தது. முன்பு பிஜப்பூர் துருக்கியர்களிடம் வாங்கிய அடிகளில் பட்ட ஒச்சங்கள் புனரமைக்கப்பட்டாமலேயே கிடந்தன. அகழிப் பாலத்தை நேற்றிரவே வல்லம் உடைத்திருக்கலாம். அகழி நீரின்றிக் கிடப்பதால் அதனால் பெரிய பயன் இல்லை என்று அலட்சியமாக விட்டுவிட்டார்கள். பதினாறு சாண் உயரம் வரும்படியாக வைக்கோல் பிரிகளில் சுற்றப்பட்ட பெரிய கோளங்கள் மூன்றை உருட்டி வந்தார்கள். உள்ளே இரும்பு உருளைகளில் வெடிமருந்து இருந்தது. சுற்றியுள்ள வைக்கோல் பரவலாக எண்ணெயில் ஊறியிருந்தது. தென் திசை வாசலை நோக்கி அவற்றை உருட்டிச் சென்றார்கள். தெற்கு வாசல் நோக்கி மூன்று கோளங்கள் விரைவாக நெருங்கின. அதன் மறைப்பையே பாதுகாப்பாகக் கொண்டு இரும்புக் கவச வீரர்கள் மூவர் தள்ளிக் கொண்டு ஓடினர். மூடிய கதவை நெருங்கியதும் ஒன்றில் தீ வைத்து அதை நோக்கித் தள்ளிவிட்டுப் பின்வாங்கி ஓடத் தொடங்கவும் மேலே அலங்கத்தின் மறைவுகளிலிருந்து அம்புகள் கீழ் நோக்கிப் பாய்ந்தன. காலில் தைத்தால் மட்டுமே பாதிக்கும். இடுப்புக்கு மேலே தடுக்க கவசம் இருந்தது. தீப்பற்றியெரிந்த சற்று நேரத்தில்

பெருவெடிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டான். தெற்குவாசல் அலங்கோலமாகத் தொங்கியது. எஞ்சிய மரச்சட்டங்களில் வைக்கோலிலிருந்து பற்றி ஏறிய தீ நின்று எரிந்தது.

இப்போது பீரங்கிகள் அலங்கங்களின் உச்சியை நோக்கி வெடிக்கத் தொடங்கின. பல குண்டுகள் வானிலேறி கோட்டைக்கு உள்ளே விழுந்தன. மிகச் சிலவே உச்சியைத் தாக்கின. கோட்டையின் கன்னி மூலையில் இருந்த ஒற்றை பீரங்கி மட்டுமே எதிர்த் தாக்குதல் நடத்தியது. மற்றவற்றின் இலக்கு எல்லைக்குள் மதுரை அணி எதுவுமேயில்லை. ஒற்றை பீரங்கி வெறுமனே குண்டெறிந்து மண்ணைக் குத்திக் கிளறிக்கொண்டிருந்தது. வல்லம் கோட்டை மதில் மேலுள்ள தடுப்பான வளைவுகள் காரையால் ஆனவையல்ல; பெருங்கற்களாலானவை; உடைப்பது சுலப்பமல்ல. தென்புற இடது மதிலின் மேலே பற்கள் விழுந்ததுபோல் இரண்டு அரண்கள் ஒச்சமாகி வெறுமனே கிடந்தன. இரண்டுக்கும் இடையே நான்கு அரண்கள் மட்டுமே இருந்தன. ரங்கண்ண நாயக்கர் மற்றத் திசைகளிலிருந்த பீரங்கிகளை தென்புறம் இழுத்துவர உத்தரவிட்டார். பன்னிரண்டு வந்து சேர்ந்ததும். அந்த மதிலின் உச்சியை இடைவிடாது தாக்கத்தொடங்கின பீரங்கிகள். மேலும் மூன்று தடுப்பரண்கள் விழுந்ததும் மதிலில் அந்த இடம் மொட்டையாகிவிட்டது.

கவச வீரர்கள் பலர் ஈட்டி கேடயத்தோடு ஏணியைத் தூக்கியபடி அகழிக்குள் இறங்கி ஓடி மதில் மேல் சாத்தினர். சரசரவென ஏறத் தொடங்கினர். சில அம்புகள் அவர்களை நோக்கி வந்து பயனற்று விழுந்தன. மதிலின் மேல் மற்ற ஓரங்களிலிருந்து ஈட்டிக்காரர்கள் கவச வீரர்களைத் தாக்காமல் பாதுகாப்பதுதான் இப்போது அவசியம். ‘வளரி...வளரி...’ என்று சத்தமெழுந்தது. லம்பாடிப் பெரியாம்பிளையோடு எட்டுப் பேர் வளரிச் சாக்கைத் தூக்கிக்கொண்டு அகழிக்குள் இறங்கிப் புதர் மறைவுகளில் அமர்ந்தனர்.

முதல் ஏணிக்காரன் மதில்மேல் ஏறப்போகும் சமயம் இடது ஓரத்திலிருந்து ஒருவன் ஈட்டியோடு குனிந்து வருவது தெரிந்தது. அவன் ஏணியை நெருங்குமுன் மூன்று வளரிகள் அடுத்தடுத்துப் பறந்தன. அடிவாங்கி அங்கேயே மதில் மேல் சரித்தான். ஆனால் தவழ்ந்தபடியே வந்து எவனோ தள்ளிவிட இரண்டாவது ஏணி நாலு பேரோடு அப்படியே மதிலை ஒட்டி வலப்புறமாகச் சரிந்தது. முதல் ஏணியில் ஏறிவிட்டவர்கள் இருபுறமும் பரவி ஓரங்களில் நின்றவர்களைக் குத்தி வீசினர். இப்போது இரண்டாவது ஏணியை நிமிர்த்தி அதன் வழியாகவும் ஏறி மதிலை அடைந்தனர். வல்லம் வீரர்கள் மதில் சுவரின் ஓரங்களுக்குத் தள்ளப்பட்டனர். விடுபட்ட தடுப்பரண்களிலிருந்து கயிறு ஏணிகள் பல அகழியை நோக்கி இறங்கின. கவசமணியாத வீரர்களும் இப்போது சாரி சாரியாக ஏணிகளைப் பற்றி ஏறத் தொடங்கினர்.

சற்று நேரத்திற்குள் தென்புறத்தின் மேற்கு மதில் மதுரையின் கீழ் வந்துவிட்டது. இப்போது தெற்கு வாசலின் மேற்குப்புற அலங்கத்தின் உடைமைக்கான சண்டை மூண்டு இரு தரப்பிலும் வீரர்கள் அடிபட்டு அகழிக்குள்ளும் அப்புறத்திலுமாக விழுந்தனர். மதுரை வீரர்கள் அதிகரிக்கவே தற்காக்கும் வலுவற்று அங்கு நின்றிருந்த வீரர்களை எல்லாம் இழந்து வல்லம் மேற்குப் புறத்தைக் கைவிட்டது. எதிரே கிழக்கு மதில் வளைவிலிருந்து வல்லம் வீரர்கள் அம்புகளை

எய்துகொண்டிருந்தனர்.

கோட்டை வாசலின் உட்புறம் 'ப' வடிவ வழியைக் கொண்டது. குதிரைகள் வேகத்தோடு நுழையமுடியாது. வீரர்கள் நுழைந்தால் அதன்மேல், கீழ் எல்லாத் திசைகளிலிருந்தும் வரும் தாக்குதலைச் சமாளித்து வழியைக் கடப்பது கடினம். வழிக்கு வெளியேயும் வீரர்கள் எதிர்க்கக் காத்திருப்பர். வாசலின் மேற்புறமிருந்து 'வில்லு...வளரி...வில்லு...வளரி' என்று கூக்குரல் எழுந்தது.

தாதனூர்க்காரர்கள் வளரிச்சாக்குகளைத் தலையில் சுமந்துகொண்டு ஏணியில் ஏறினர். வில்லாளிகளும் தொடர்ந்தனர். மதிலில் நின்றவர்கள் ஒதுங்கி வழிவிட வில்லாளிகளும் வளரி வீசுபவர்களும் கோட்டை வாசலின் உட்புற மதிலுக்கு மேல் வந்துவிட்டனர். ப வடிவ வழியின் உட்புறமும் வெளியேயும் வல்லம் ஈட்டிக்காரர்கள் மதிலை ஒட்டி அணியணியாகக் காத்திருந்தனர். முதலில் மாதாரிகளின் அம்புகள் இறங்கின. தற்காப்புக்கு வழியற்ற வல்லம் வீரர்கள் கலைந்து உள்ளே ஓடினர். வளரி வீச்சு தொடங்கியது. புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவது போல் வல்லம் வீரர்கள் சிதறி கோட்டைக்குள்ளே ஓடத் தொடங்கினர். ஒரே நேரத்தில் இருபத்துக்கும் மேற்பட்டோர் மாறி மாறி வளரி வீசினர். பேரொலியோடு வளரிகள் பாய்ந்து ஆட்களை அறைந்து வீழ்த்திக் கொண்டிருந்தன. வழியில் காத்து நின்றவர்களில் பாதிப் பேர் தப்பிவிட மீதிப் பேர் குவியல்களாகக் கிடந்தனர். வழியின் ஆபத்து பெருமளவு குறைந்ததும் அலங்கத்தின் மேலிருந்து சீழ்க்கைச் சத்தம் எழுந்தது.

மதுரை வீரர்கள் காட்டாறு போலத் தெற்கு வாசலை நோக்கி வந்தனர். ரங்கண்ண நாயக்கர் 'ஜக்கம்மா...' என்று போர் விளியோடு ஓங்கிய சந்திரஹாச வாளுடன் நரைத்த கொண்டை அவிழ்ந்து பறக்க முன்னே ஓடி வந்தார். வீரர்கள் அவரைத் தாண்டி ஓடத் தயங்கியபோது 'ஓடு... ஓடு... முன்ன போ...' என்று ஊக்குவித்தவாறு பின்தங்கி ஓடிவந்து கொண்டிருந்தார். கருகிய வாசலைக் கடந்து மதுரை வீரர்கள் பெருவாரியாக உள்ளே புகுந்து பரவத் தொடங்கினர்.

எதிர்ப்பைக் கைவிடுவதாக வல்லம் முரசுகள் அறிவித்தன. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் பிஜப்பூர் படையின் இரண்டு மாத முற்றுகையைத் தாக்குப் பிடித்த வல்லம் கோட்டை இன்று சரியான தளபதி இல்லாததால் சூரியன் உச்சிக்கு வருமுன்னே வீழ்ந்து போனது.

மதுரை வீரர்களில் பதினேழு பேர் உயிரிழந்து இருபத்தாறு பேர் காயமுற்றிருந்தனர். தாதனூர் கொடுத்த பலி முத்துப்பாண்டி மட்டும் தான். நெஞ்சில் வாங்கிய ஈட்டியோடு அலங்கத்தின் மேலிருந்து கோட்டை மதிலின் உட்புறமாக விழுந்து மரித்திருந்தான்.

அவன் சந்ததியினர் பின்னாளில் வல்லம் வகையறா என்று அழைக்கப்பட்டனர்.

**அ**ன்றிரவு தனது பூஜை அறைக்கு வந்த சோமசுந்தர சுவாமிகளிடம் அன்று வந்த வேங்கட கிருஷ்ணப்பனின் இரண்டு சமாதான ஓலைகளையும் நீட்டினார் விஜயராகவர். தஞ்சாவூர் கோட்டையின் தெற்கு வாசலுக்கு எதிரே அந்தியில் வந்து தண்டு இறக்கியிருந்தது மதுரைப் படை. சமாதானத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் தானே முன் நின்று அதை முடித்து

வைப்பேன் என்றும் சுவாமிகள் வலியுறுத்தினார்.

‘போருக்குப் பின்வாங்குவது க்ஷத்திரிய தர்மமல்ல’ என்றார் விஜயராகவர்.

‘நிமித்தங்கள் சரியில்லை. உங்கள் அழிவு என் கண்களுக்குத் தெரிகிறது.’

‘எனக்கே தெரியும். ஸ்ரீரங்கனின் விருப்பம் அதுவானால் அப்படியே நடக்கட்டும்‘.

‘இல்லை. மனிதன் தன் விதியைத் தானே தீர்மானிக்கிறான்.’

‘உலகளந்த உத்தமனின் காலடியில் நான் ஒரு துகள். சரி, என்று குற்றமென்ன? எங்கே தவறிழைத்தேன்?’

‘அறியாமை.’

உடனே விஜயராகவர் கண்களை மூடிக் கரம் கூப்பியவாறு ‘ஸ்ரீரங்கநாதா... ராஜகோபால...’ என்றார்.

தளபதிகள் காத்திருப்பதாக அங்கே வந்த சேவகன் பணிந்து சொன்னான். கொலு மண்டபத்திற்கு அரசர் வந்தபோது தளவாய் ரங்கப்ப நாயக்கரும் குதிரைப்படைத் தளகர்த்தன ராமிவாரு அக்கராஜுவும் காத்திருந்தனர். தளவாய் பதற்றத்தை மறைத்தவாறிருக்க, இளைஞனான அக்கராஜு கோபத்தில் கொத்திக்கொண்டிருந்தான். ‘நாளை உங்களோடு நானும் களம் இறங்குவேன்’ என்றார் விஜயராகவர்.

‘இறங்க ஏது களம்?’ என்ற அக்கராஜு ‘வல்லத்திற்கே போய் அவர்களை மறித்திருக்க வேண்டும். என்னை விடவில்லை. கையைக் காட்டிக் கொண்டு கோட்டைக்குள் இருக்கிறேன். இனி கோட்டை மூன்று நாளுக்கு மேல் தாங்காது. எல்லாம் பிள்ளை விளையாட்டாய்ப் போய் விட்டது’ என்று குமுறினான். அவன் கோபம் நியாயமானதுதான். கோட்டைக்குள் அவன் குதிரை வீரர்கள் நாலாயிரம் பேர்தான் இருந்தனர். தஞ்சாவூரின் மீதி இரண்டாயிரம் குதிரை வீரர்கள் பிரகதீஸ்வரர் கோவில் சின்னக் கோட்டைக்குள் சிந்தபுலிவாரு சொக்க ரெளத் தலைமையில் இருந்தனர். காலாட்படைகள் இங்கு பன்னீராயிரமும் அங்கு இரண்டாயிரமும் இருந்தன. சென்ற வாரத்திலேயே திருப்பத்தூர், திருக்காட்டுப்பள்ளி, பண்டைநல்லூர், செங்கோட்டை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டையிலுள்ள ஆறாயிரம் குதிரைகளையும் பாதாதிப் படைகளையும் இங்குவர ஆணையிடுமாறு மன்றாடினான். ஏன், மதுரைப் படைகள் வருமுன்பே சின்னக் கோட்டையில் உள்ள குதிரைகளைப் பெரிய கோட்டைக்கு மாற்றிவிட வேண்டும் என்றும் வற்புறுத்தினான். இப்போது மதுரை இரண்டு கோட்டைகளையும் முற்றுகையிட்டுத் துண்டித்து விட்டது.

தளவாய் சொன்னார் ‘பெரிய கோட்டை ஒரு மாதம் தாங்கும் என்பது என் கணக்கு. அல்லது நாம் இரண்டு கோட்டைகளிலிருந்தும் ஏககாலத்தில் வெளியேறித் தாக்கலாம்.’

கடைசியாக விஜயராகவர் முடிவெடுத்தார் ‘முற்றுகையை நீடிக்கவிட்டு பொறுத்திருந்து பார்ப்போம். போர் நடக்கும்போது இளவரசன் மன்னார் சிறையிலிருப்பது நீதியல்ல. அவனை சின்னக் கோட்டை சிறையிலிருந்து விடுவித்து சின்னக் கோட்டையில் உள்ள சேனைக்கு

தளபதியாக்குமாறு ரங்கநாதனுக்கு ஓலை அனுப்புகிறேன். ரங்கன் வழக்கம்போல கோட்டைப் பொறுப்பாளனாக இருக்கட்டும்' என்று கூறிவிட்டு ஓலை எழுதுமாறு பணித்தார்.

இந்த திடீர் திருப்பத்தைக் கண்டு மிரண்ட தளவாய், தன் மகனுக்கும் மன்னாருக்கும் ஒவ்வாது என்பதால் சின்னக்கோட்டையின் கதை முடிந்தது என்று கருதி, தன் மகனின் கதியை நினைத்துக் கலங்கினார். மன்னாருக்கு மற்றொரு ஓலையை எழுதி நிலைமையைக் கூடுதல் சிக்கலாக்கினார் மன்னர்.

மன்னார்சாமி ஒன்றரை வருஷமாக சிறையில் இருக்கிறான். அவன் சிறைப்பட்ட கதைதான் நாடெங்கும் பாட்டாகக் கிடந்தது. பிரதானி கோவிந்தய்யா ஒருநாள் நள்ளிரவில் சிரம பரிகாரத்திற்காகத் தனது மாளிகையின் பின்புறம் போனபோது, உத்யான வனத்தில் தனது மகள் சுலக்ஷினி மன்னார்சாமியுடன் சல்லாபிப்பத்தைக் கண்டுவிட்டார். அரசரிடம் இந்த அநீதியை முறையிட்டார். அவரோ ஆதாரம் கேட்டார். கோவிந்தய்யா குமாரத்தியைக் கண்டித்தார். அவளோ தான் இளவரசனின் மிரட்டலுக்குப் பணிந்துபோன அபலை என்று அழுதாள். மகள் எந்தப் பாவமும் அறியாதவள் என்று தாய் துணைக்கு வந்தாள். மகள் அடிக்கடி பிறந்தகம் வரும் காரணம் இதுதான் என்று உறுதியாய் நம்பிய கோவிந்தய்யா கும்பகோணத்திலிருக்கும் அவளது பர்த்தா ராகவேந்திரய்யாவை அழைத்து மிரட்டினார். அவர் மன்னாரின் முத்திரை மோதிரத்தையும் சரச லிகிதங்களையும் எடுத்துக் கொண்டுவந்து காட்டினார். அவை அசேதன சாக்ஷிகளாயின. சேதன சாக்ஷியாக ராகவேந்திரய்யா மன்னர் முன் நின்றார்.

குற்றம் இழைத்தவன் தன் மகனே ஆயினும் நீதி வழுவாத அரசர் உரிய தண்டனையாக அவனைச் சிறையில் அடைத்துவிட்டார். அதற்குப் பிறகும் பிரச்சனை விட்டபாடில்லை. மனுநீதி இதுவல்ல என்று சதுர்வேதி மங்கலங்கள் ஆட்சேபம் எழுப்புவதாகக் கேள்விப்பட்ட மன்னர் கலங்கினார். புத்ர சோகம் தன்னை வாட்டும் நிலையும் வருமோ எனப்பயந்தார். பின்னர் பரிகாரங்களுக்கான பரிந்துரை வந்தது. பிராமண ஸ்திரீயைத் தீண்டிய தோஷம் தம் சந்ததியைப் பீடிக்காமல் இருக்க கோதானங்கள் செய்தார். யாகங்கள் பூஜை புனஸ்காரங்கள் தொடர்ந்தன. பின்னர் 24000 பூவராகனால் நாச்சியாருக்குப் பொன் பிரதிமை செய்வித்து ஸ்ரீரங்கம் கோவிலுக்கு அளித்தார்.

**ரா**ஜமன்னார்சாமி சின்னக்கோட்டை கிழக்கு வாசல் கோபுரத்தின் மேல் ஏறி நின்று களத்தை நோட்டமிட்டான். சுல்தான்களைப் போல முழுப் போர்க்கவச உடையில் இருந்தான். வெகுநாள் கழித்து சூரியனைக் கண்டதால் எதிர் வெயிலில் கண்கூசியது. வடகிழக்கே கூப்பிடுதூரத்தில் பெரியகோட்டை கம்பீரமாக நின்றிருந்தது. அதன் கிழக்கு வாசலுக்கு நேர் எதிரே மதுரையின் ஒரு குதிரைப்படை அணியும் இரண்டாயிரம் வீரர்களும் மட்டும் நின்றிருந்தனர். தெற்கு வாசலுக்கும் சின்னக் கோட்டைக்கும் முன்னே உள்ள பரந்தவெளி வெறுமனே இருந்தது. தெற்கே மிகவும் தள்ளி மதுரை அணிகள் நின்றிருந்தன. தந்தையிடம் தன்திறமையை நிரூபித்துக காட்டக் கிடைத்த சந்தர்ப்பம் இது என்பதிலேயே அவன் எண்ணம் குறியாய் இருந்தது. இதுவரை அவன்

போரையே பார்த்ததில்லை. பரபரப்புடன் இறங்கினான். ரங்கனையும் சொக்கரௌத்தையும் அழைத்து வரச் சொன்னான்.

‘உடனே நாம் வெளியேறித் தாக்க வேண்டும். நம்மோடு பெரிய கோட்டைப் படைகளும் இணைந்து கொள்ளும் அக்கராஜு இருக்கும் போது நமக்கு என்ன கவலை? படைகளை ஆயத்தமாக்குங்கள்’ என்று அவர்களுக்கு ஆணையிட்டான்.

‘அது தற்கொலைக்குச் சமம். நமது கோட்டைக்கு இந்த ஒரு வாசல்தான் உண்டு. இது போருக்கான கோட்டையல்ல. தற்காப்பதும் சுலப்பமல்ல. பெரிய கோட்டையிலிருந்து உத்தரவு வரும்வரை நாம் காத்திருப்பதே முறை’ என்றான் ரங்கநாதன்.

தனக்குரிய அரியணையில் அமர்ந்தவாறு இந்த ரங்கப் பயல் சதிராட்டத்தை ரசிப்பதான ஒரு சித்திரம் மன்னாரின் மனக்கண்ணில் எழவும் எரிச்சலுடன் ‘இது என் ஆணை’ என்று கத்தினான்.

‘கோட்டையின் பொறுப்பாளன் என்ற முறையில் நான் இதற்கு சம்மதிக்க முடியாது.’

‘இன்று நான் இந்தப் போரை நடத்தும் சேனாதிபதி. நாளை இந்த ராஜ்ஜியத்தின் மகாராஜா.’

‘உயிர் உள்ளவரை கோட்டைக் கதவைத் திறக்க மாட்டேன்.’

‘தளபதியின் உத்தரவை மீறிய குற்றத்திற்காக இவனைப் பிடித்துக் கட்டு’ என்று சொக்க ரௌத்தைப் பார்த்துக் கத்தினான். அவன் தயங்கினான். ‘ம்...’ என்று உறுமியவாறு மன்னார் வாளை உருவினான். அருகிலிருந்த வீரர்களை அழைத்த ரௌத் ரங்கனை அழைத்துச் செல்லுமாறு கூறினான்.

‘சிறைக்கூடத்திற்கு’ என்று திருத்தினான் மன்னார். தானே உடன் சென்று உள்ளே அடைத்து திறவுகோலையும் வாங்கிக்கொண்டு வெற்றிக்களிப்புடன் திரும்பினான்.

படைகள் அணிவகுத்தன. ரௌத்தை மன்னார் தனியே அழைத்தான். களத்தில் இறங்கியபின் இந்த யுத்தத்தை ரௌத்தே வியூகம் அமைத்து நடத்திக் கொடுக்க வேண்டுமென்றும், அவன் விரும்பும் பரிசு எதுவானாலும் தான் தரத் தயார் என்றும் உறுதியளித்தான்.

ரௌத் முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லாமல் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

‘நீயே படை நடத்து. நான் உன்னோடு வருகிறேன்’ என்றான் மன்னார்.

ரௌத் வீரன் மட்டுமல்ல, விவேகியும்கூட. விஜயராகவருக்காகவும் தன் வீரர்களுக்காகவும் உள்ளுக்குள் வருந்தினான்.

‘இது கூடாது என்று கருதுகிறேன். ஆனால் நீங்கள் ஆணையிட்டால் மீற மாட்டேன்.’

ஏதாவது செய்து உடனே தன்னை நிரூபித்தாகவேண்டும் என்று துடிக்கும் மன்னாருக்கு ரௌத்தின் மதிநுட்பம் புரியவில்லை.

‘நல்லது. உடனே இறங்குவோம்.’

ரௌத் ஓய்வில் விட்டிருந்த பல் தேய்த்த குதிரைகளையும் முதிய

வீரர்களையும் முப்பது கொண்ட அணியாக்கி மன்னாரைச் சுற்றிலும் அங்கசேவகர்களாக நிறுத்தினான்.

‘நீ குதிரைப் படையோடு முதலில் இறங்கு’ என்றான் மன்னார்.

‘தளபதி முன்னே செல்வதுதான் மரபு. காலாள் படையை வழிநடத்திச் செல்லுங்கள். நான் பாதுகாப்பாகப் பின்தொடர்கிறேன்.’

‘என் பின்னே வாருங்கள்’ என்று காலாள் படை வீரர்களிடம் கூறிவிட்டுத் தன் குதிரையிலேறி அங்கசேவகர்களுடன் கோட்டை வாசலுக்குச் சென்று திறக்குமாறு உத்தரவிட்டான். குழம்பிய காவல் வீரர்கள் தயக்கத்துடன் திறந்தனர். முரசறையும் உத்தரவுகூட வராததைக் கண்டு மதில் மேலிருந்த வீரர்கள் புரியாமல் முழித்தனர்.

காலாட்படை பின்தொடர வேண்டியதைக் கணக்கில் கொண்டு மன்னார் குதிரையைத் தன்நடையாக நடத்திக்கொண்டு போனான். வெளியே வந்தவுடன் தெற்கே தொலைவில் நிற்கும் மதுரைப் படையை நோக்கிச் சென்றான். கல்யாண ஊர்வலம் போல் வீரர்கள் வெளியேறி வருவதைக் கண்ட பெரிய கோட்டைக் காவல்மாட வீரர்கள் திகைத்து நின்றனர்.

பெரியகோட்டை ஈசான மூலைக்கு எதிரே தன் குதிரையில் அமர்ந்து வெற்றிலை நரம்பு கிள்ளிக்கொண்டிருந்த வேங்கடரைக் கூப்பிட்டு ஒரு வீரன் மேற்கே சுட்டிக் காட்டினான். திரும்பிப் பார்த்தவரின் கண்கள் வியப்பில் விரிந்தன. தூதுக் குழுவோ என்று குழம்பிய அவர் சிந்தை பின் தெளிவடைந்தது. அணி வரிசை உள்ளிருந்து நீண்டு வந்துகொண்டேயிருந்தது. வெளியே வரும் வீரர்களை விட்டுவிட்டு திறந்திருக்கும் கோட்டைக்குள் புகுமாறு தன் குதிரை அணிகளுக்கு உத்திரவிட்டார். முரசறைய வேண்டாம் என்றார். தஞ்சாவூர் வீரர்கள் பாதிப் பேர் வெளியே வந்த நிலையில் மதுரைக் குதிரையணிகள் மின்னல்போல் வீரர்களை மிதித்துத் துவைத்துக்கொண்டு பிரகதீஸ்வரர் கோவில் கோட்டைக்குள்ளிறங்கின. கீழ வாசல் குதிரைகள் செயலில் இறங்கியதைக் கண்டு வடக்கு வாசல் முற்றுகையில் இருந்த குதிரைகளும் தொடர்ந்து பாய்ந்து வந்தன. கோட்டைக்குள் ரௌத் வெள்ளைக் கொடியோடு வரவேற்றான். கிழக்கிலிருந்து பாய்ந்த இரண்டாம் அணிக்குதிரைகள் அந்த வேகத்தில் தாக்கின. வெளியில் துண்டிக்கப்பட்ட காலாள் படை வீரர்கள் சிதறித் தெறித்து உயிர்காக்க ஓடினர். மன்னாரும் அங்க சேவர்களும் ஆடுகள் போல வெட்டுப்பட்டு விழுந்தனர். தப்பிக்க முயன்ற சேவகர்களை விரட்டி விரட்டி வீழ்த்த, ஆளற்ற குதிரைகள் விலகியோடின.

**ரா**ஜமரியாதையோடு மன்னாரின் உடலை ஏற்றிய வண்டி மதுரைக் குதிரை வீரர்கள் இருவர் முன்செல்ல தெற்குவாசலின் முன் நின்றது. கதவு திறந்து தஞ்சாவூர் வீரர்கள் அரண்மனை நோக்கி வழி நடத்திச் சென்றனர். வண்டியின் பின்னே மதுரைச் சீருடையில் மரியாதை அணிவகுப்பில் வேலேந்திச் சென்றவர்களில் பதின்மர் தாதனூர்க்காரர்கள். அவர்கள் கண்கள் கோட்டையின் உட்புறமெங்கும் அலைபாய்ந்து நோட்டமிட்டன. வண்டி அரண்மனை முற்றத்தில் வெகுநேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. பூஜையிலிருக்கும் மன்னரை யாரும் நெருங்கலாகாது.

கோட்டைக்கு வடக்கே வெளியே மயானத்தில் விரிவான சடங்குகளுடன் மன்னர் சிதைக்குத் தீமூட்டினார். முகம் உணர்ச்சியற்று அமைதியாக இருந்தது. சவ சம்ஸ்காரம் முடிந்து மன்னர் அரண்மனை திரும்பும்போது உச்சிப்பொழுது கடந்துவிட்டது. அங்கு சமாதான ஓலை காத்திருந்தது. மன்னர் அதை ஏற்கவில்லை.

சற்று நேரத்தில் மீண்டும் ஓர் ஓலை வந்தது. ஸ்ரீரங்கநாதரையும் மன்னரையும் வெகுவாகப் புகழ்ந்துவிட்டு ஆரம்பித்த வேண்டுகோள் விநோதமாக இருந்தது. ‘பெரிய கோட்டையில் நாளை மாலை மதுரைக் கொடி பறக்கும். இந்தத் தோல்வியால் தஞ்சாவூர் ராஜ வமிசத்துக்குக் களங்கம் ஏற்படலாகாது; போர்முனையில் கடுமையாக எதிர்த்துப் போரிட்டது என்று வரலாற்றில் இடம் பெறவேண்டும். இப்போது அதற்கு வாய்ப்பில்லை. க்ஷத்திரிய தர்மத்திற்கு உகந்த ஒரு வழி இருக்கிறது. மாவீரன் அக்கராஜுவின் குதிரைப்படையை சமஅளவுள்ள குதிரைகளுடன் மதுரை சந்திக்கத் தயார். போரின் வரையறைகளை அக்கராஜுவே தீர்மானிக்கட்டும். அவர் வென்றால் முற்றுகை விலக்கப்படும். மதுரை வென்றால்... மன்னருக்கு மீண்டும் சமாதான ஓலை வரும்.’

அக்கராஜு துள்ளிக் குதித்தான். மன்னருக்கும் இதுவே சரி என்று தோன்றியது. மூவாயிரம் வீரர்களுடன் தெற்கு வாசலுக்கு அப்பாலுள்ள வெளியில் சந்திப்பதாக அக்கராஜு பதில் எழுதினான்.

**பி**ரகதீஸ்வரர் சந்நிதியில் கதிரி நாயக்கரிடமிருந்து முதல் தாம்பூலத்தைப் பெற்றான் சொக்க ரௌத். மதுரைச் சீருடையில் இரு வரிசையாக வந்த தஞ்சாவூர் குதிரை வீரர்கள் பெருவுடையாரை வணங்கிவிட்டு தாம்பூலத்தை வாங்கிக்கொண்டு திரும்பினர்.

பெரியகோட்டை அலங்கங்களிலெல்லாம் எக்காளம் முழங்க போர் முரசங்கள் அதிர்ந்தன. வீரர்களின் ஆர்ப்பரிப்பு காற்றைக் கிழித்தது. கோட்டைக்குள்ளிருந்து குதிரையில் புயல்போல் தெற்கே பாய்ந்தான் அக்கராஜு. வலக்கையில் ஏந்திய தஞ்சையின் வராகக் கொடியுடன் இடப்புறமாக வளைந்து கிழக்கு நோக்கிப் போனான். அதே வேகத்தோடு நூற்றுவர் அணி புழுதி பறக்க அவனைத் தொடர்ந்தது. நூற்றுவர் அணிகள் தொடர்ந்து வெளியேறி கிழக்கே சென்றன. இந்த வேகத்தைக் காட்ட கோட்டைக்கு உள்ளே தொலைவிலிருந்தே அவன் ஓட்டத்தை ஆரம்பித்திருக்க வேண்டும். சின்னக்கோட்டை முகப்பில் நின்றிருந்த வேங்கடர் புன்னகைத்தார். வெற்றிலையைக் குதப்பியவாறே அண்ணாந்து குழறினார் கதிரி நாயக்கர் ‘மாப்பிள்ளை, இன்னைக்கு நல்ல வேட்டைத்தான். ‘கிழக்கே தூரத்தில் ராஜு சின்னக் கோட்டைக்கு எதிர்முகமாக அணிவகுத்து நின்றான்.

கிழக்கிலிருந்து சீழ்க்கையொலி எழவும் மீண்டும் கோட்டை முரசுகள் முழங்கின. ராஜுவின் வெண்புரவி முன்னே ஓடி வந்தது. பத்து வீரர்கள் மட்டும் அவனைத் தொடர்ந்தனர். பாதி தூரம் கடந்தபின் ஓடுகிற குதிரையில் அப்படியே எழுந்து முதுகின் மீது நின்று பிரகதீஸ்வரர் கோபுரத்தை நோக்கிக் கும்பிட்டபடியே வந்தான். பின்னால் வந்த பத்துப் பேரும் அப்படியே எழுந்து வணங்கினர். வடமுகமாகத் திரும்பி கூப்பிய கைகளை இறக்காமலே தெற்கு வாசல் நோக்கிப் போனான். வரிசை தொடர தென் அலங்கத்தை நெருங்கிச் சென்று வணங்கியவாறே

வட்டமடித்துவிட்டு அமர்ந்து நடுக்களத்திற்குத் திரும்பினான். அலங்கத்தின் ஆர்ப்பரிப்பு விண்ணை எட்டியது. வணக்கத்தை ஏற்றுக்கொண்டவர் மன்னர்தான் என்று வேங்கடர் கணித்தார். நடுக்களத்தில் வட்டமடித்த குதிரைகளிலிருந்து அப்படியே பக்கவாட்டில் கீழ்நோக்கிச் சரிந்து மண்தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டு நிமிர்ந்து அனைவரும் தம் அணிக்குத் திரும்பினர். வலசைப் பறவைகளின் அழகு வரிசை போல, இசைக்கீற்று எழுவதைப் போல அது நிகழ்ந்து முடிந்ததை மதுரை வீரர்கள் ரசித்துப் பார்த்தனர்.

ரௌத் வலப்பக்கம் நின்ற வேங்கடரிடம் சொன்னான். ‘குதிரை ஏற்றத்தில் ராஜுவை மிஞ்ச ஆள் கிடையாது. வாள் வீச்சிலும் அசகாயசூரன். கோல்கொண்ட சுல்தானிடம் அங்கசேவனாக இருந்தவன். எட்டாண்டுகளுக்கு முன்பு ஜனானாவிலிருந்து ஒருத்தியைக் கடத்திவிட்டான். தப்பித்து தெற்கே ஓடிவந்து இங்கே தஞ்சம் புகுந்தான். பீவி அவனை விட மூத்தவள். அவள் சுல்தான் மனைவி என்றும் மகள் என்றும் உம்ரா என்றும் பல கதைகள். இங்கு வந்து ஸ்ரீவைஷ்ணவத்தில் சேர்ந்துவிட்டாள். மன்னர்தான் ரேணுகாதேவி என்று பெயர் சூட்டினார். அவன் வந்துதான் குதிரைப் படையை வலுவாக மாற்றிப் பராமரிக்கிறான். தஞ்சைக் கோட்டையின் அபிமான நாயகன் அவன்தான். எந்த ஆயுதம் கொண்டும் குதிரை மீதிருந்து சாகஸம் செய்வான்...’

அவனை இடைமறித்த வேங்கடர் அருகிலிருந்த கதிரி நாயக்கரைப் பார்த்தபடி சொன்னார். ‘மாமாவும் குதிரையை விட்டு இறங்குறதில்லை. எப்பவும் வேட்டைதான். காட்டுகளுள்ளேயே திரிவாரு. தூக்கம் அன்னந்தண்ணி எல்லாம் குதிரயிலதான். இந்த பங்காரு அவருக்கு வைப்பாட்டி மாதிரின்னு பேச்சு உண்டு’ என்று தெலுங்கில் சொல்லிவிட்டு அவரது கபில நிறக் குதிரையைப் பார்த்தார்.

கதிரி நாயக்கர் பேச முயன்று வெற்றிலைச் சாறைத் துப்பிவிட்டு உரக்கச் சிரித்தார். ‘மாப்பிள்ளை, அக்கராஜுவுக்கு தெரியாத அடவுகள் வேறெயும் நம்ம கிட்ட உண்டு. ஜம்புலிபுத்தூர் சதிர் சொர்ணவல்லிக்கு எம் மேல் உயிரு. அடிக்கடி அவள் பங்காரு மேல ஏத்திக்கிட்டு ராத்திரி சவாரி போவேன். எதிரே இருந்துக்கிட்டு தாம்பூலத்த மென்னு தருவா. மண்ணுல ஓடற குதிர அப்படியே ஆகாயத்துல பாஞ்சு ஏறுற மாதிரி இருக்கும். சொர்ணம் கனைக்கிறாளா பங்காரு கனைக்குதான்னு மயக்கத்தில் ஒண்ணும் தெரியாது. அப்புறமெல்லாம் உடம்பு பெருத்துப் போச்சுன்னு தாம்பூலம் மாத்த தங்கச்சிக்காரிய அனுப்பி வச்சா. இவ ஆரவல்லிக்கு சூரவல்லி. விடமாட்டா. வாயெல்லாம் புண்ணாப் போகும்‘ என்று ஏறிக்கொண்டே போனவரை வேங்கடரின் வியப்புக்குரல் நிறுத்தியது. ‘மாமா, உங்க படை வெட்டத்தான் பாத்திருக்கேன். இந்தக் கதை புதுசா இருக்கே!’

‘மாப்பிளை, நமக்குள்ள இருக்கட்டும், வெளிய விட்ராத. என் கட்டை வேகும்போது பாரியா நிம்மதியா தீப்பாயட்டும்!’

ஒப்பந்த முறி எழுத வருகிறோம் என்று தகவல் அனுப்பியதும் வரச்சொன்னான் அக்கராஜு. மூவாயிரம் குதிரைகளும் மொத்தமாகக் கிளம்பி சுவர் போல நடந்து சென்றன. முன் ஆயிரத்தில் ரவுத்தின் வீர்களே இருந்தனர். வேங்கடர், கதிரி நாயக்கர், ரவுத்தின் குதிரைகள் தான்

முன்னே சென்றன. நெருங்கியபோது ரவுத்தைக் கண்டு கடும் சினம் கொண்டான் ராஜூ. வேங்கடர் இரண்டு ஓலைகளை எடுத்து மிக மெதுவாக நேரம் கடத்தி எழுதிக்கொண்டிருந்தார். நேற்று வரை தம்மோடு நின்ற வீரர்கள் இன்று எதிரியின் சீருடை அணிந்து தம்மை எதிர்க்க எதிரே நிற்பதைக் கண்ட தஞ்சாவூர் படையில் சலசலப்பும் பேச்சுக் குரல்களும் வலுத்தன. வேங்கடர் ஓலையைக் கொடுத்ததும் வாங்கிப் படித்துப் பார்க்காமலேயே அருகில் உள்ளவனிடம் கொடுத்துவிட்டு ரௌத்தைப் பார்த்து ராஜு வஞ்சினம் உரைத்தான்.

‘துரோகி, இன்று உயிரோடு மீளப்போவது ஒன்றில் நீ அல்லது நான். இப்போது உன்னைத் தனிச் சமரில் சந்திப்பேன்.’

‘துரோகம் அல்ல நண்பா! புத்தி. ஒரு மடையனுக்காக எனது வீரர்களைப் பலியிட்டு நானும் சாக எனக்குச் சம்மதமில்லை. இனி உன்னோடு வாளால் பேசுவேன். வெலமனின் வீரம் வீணில் ரத்தம் சிந்தாது.’

மதுரைக் குதிரைகள் பின்னுக்கு வந்து சின்னக் கோட்டைக்கு முன்னே நின்றன. நடுவில் ரவுத்தின் அணி 250 பேர் கொண்ட நான்கு நீள்வரிசைகளில் இருந்தது. வலது புறம் 200 பேர் கொண்ட ஐந்து அகல வரிசைகளாக கதிரி நாயக்கர் அணி நின்றது. இடதுபுறம் அதேபோல் உள்ள அணிக்கு வேங்கடர் தலைமை தாங்கினார்.

ராஜூவின் வீரர்கள் 100 நீள் வரிசை கொண்ட 30 அணிகளாக எளிமையான வியூகத்தில் இருந்தனர். தஞ்சாவூரின் கொம்பொலி எழ முதலில் ராஜுதான் கிளம்பினான். இரண்டே வரிசைமட்டும் ஒன்றன் பின் ஒன்றாக அவனைத் தொடர்ந்தது. அதே நேரம் வலது இடது முனை வரிசைகளின் வீரர்கள் மட்டும் கிளம்பி சற்று தூரம் வந்தவுடன் எதிரியை நோக்கிச் செல்லாமல் பக்கவாட்டில் திரும்பிச் செல்ல முனைவதையும் கையில் வில் இருப்பதையும் கதிர் நாயக்கர் கண்டார். ஓரங்களில் நிலையெடுத்து நடுவில் முன்னேறும் எதிரிகளை அம்புகளால் தாக்குவார்கள்.

முன்னே வந்த ராஜு, குதிரைகள் விரட்டிப் பிடிக்க முடியாத எல்லை வரை வந்து ஈட்டி எறிந்துவிட்டுத் திரும்பினான். முப்பது குதிரை வீரர்கள் வரை வந்து ஈட்டி எறிந்துவிட்டு வளைந்து திரும்பிப்போகும் வரை மதுரை காத்திருந்தது. ஈட்டி எறிபட்டு சில குதிரைகளின் கணைப்புச் சத்தமும் வீரர்களின் கூக்குரலும் கேட்டது. கதிரி நாயக்கர் தனது முதல் வரிசையை மட்டும் விரட்டிச் சென்று தாக்குமாறு ஆணையிட்டுவிட்டு வில்லாளிகளின் பின்புறம் நோக்கி விரைந்தார். அவரைத் தொடர்ந்து இடதுபக்க முன் வரிசையும் முன்னேறியது. மாமாவைப் பார்த்து வேங்கடரும் வில்லாளிகளை நோக்கிப் போனார். அக்கராஜுவின் இரு வரிசைகளும் இப்போது வடகலை நாம வடிவத்திற்கு வந்தன. நாமத்தின் அடிப்பகுதி மதுரை வீரர்களிடம் சிக்கிக்கொண்டது. முன்னே சென்ற ராஜு திரும்பிப் பார்த்தான். குதிரைகள் கலந்து மோதி போர் விளிகளும் அலறலும் எழுந்தன. தனக்கு இணையாக எதிரே முன்னேறிக்கொண்டிருந்த வரிசையைப் பின்திரும்புமாறு சொன்னார். சுற்றி வளைத்து அடித்து நாமத்தின் கீழ் வரிசையை அழித்துவிட்டு மதுரை வீரர்கள் ராஜுவை விரட்டாமல் இரு ஓரங்களிலாகப் பிரிந்து தங்கள் தலைவர்களை நோக்கிச் சென்றனர்.

முன்னாலும் பின்னாலும் ஒற்றை வரிசையாய் வரும் குதிரைகளை எப்படி எய்வது என்று நிலையாக நின்றிருந்த தஞ்சாவூர் வில்லாளிகள் நாணேற்றியவாறு குழம்பி, குதிரைகள் நெருங்கியதும் தாறுமாறாக அம்புகளை விட்டனர். விற்கள் பயனில்லை என அவர்கள் வாளையோ வேலையோ எடுக்கும் அவகாசத்திற்குள் இருபுறமும் முன் பகுதியில் வந்து அடித்தனர் மதுரைவீரர்கள். ராஜூ மேலும் இரு அணிகளை வில்லாளிகள் உதவிக்கு அனுப்பி அவர்கள் வரும் முன், கால் பங்கு வில்லாளிகள் பின்வாங்கித் தங்கள் அணியை நோக்கிக் குதிரைகளை விரட்டினர். ஆளற்ற குதிரைகள் பல தொடர்ந்து ஓடின. அலறல்களும் கூக்குரல்களும் அடங்கி முதல் கட்ட மோதல் முடிவுக்கு வந்தது.

வேங்கடரும் கதிரியும் நேருக்கு நேரே போய் நடுக்களத்தில் சந்தித்து ஒற்றை வரிசையாயினர். இறங்கிய நானூறு பேரில் பாதிக்கு மேற்பட்டோரை ராஜூ இழந்துவிட்டான். மதுரைக்கு குறைவான சேதம். ஆணை கிடைத்ததும் பின்னே நின்ற மதுரை அணிகள் அதே வியூகத்தோடு நடுக்களத்தில் வந்து சேர்ந்துகொண்டன. வேங்கடர் ரௌத்திடம் சொன்னார். ‘200 பேருடன் முன்னே போய் அடிக்காமலேயே வட்டமடித்துவிட்டு திரும்பிவிடு.’ அவன் முன்னே பாய்ந்ததும் சுமார் 200 பேரை மட்டும் விட்டு விட்டு பின்னால் தொடர்ந்த அணியைத் தடுத்து நிறுத்திக்கொண்டார்.

ரௌத் தாக்குவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த ராஜூ ஏமாற்றத்தால் சினமடைந்தான். தஞ்சாவூர் அணிகளிலிருந்து ஊளையும் வசைகளும் எழுவது திரும்பிவரும் ரௌத்துக்குக் கேட்டது. ரௌத் திரும்பி வரும்போது ஓரத்தில் நின்ற இரு மதுரை அணிகள் பாய்ந்து சென்று தஞ்சாவூரின் சிறகு நுனிகளைக் கடித்துக் குதறிவிட்டு தொடர்ந்து மோதாமல் திரும்பித் தம் நிலைகளுக்கு வந்தன.

ராஜூ அனைத்து வரிசைகளிலுமிருந்த முதல் இருபது குதிரைகளை ஈட்டி ஏந்தித் தாக்குமாறு உத்தரவிட்டு தானும் முன்னே பாய்ந்தான். ராஜூவை மிக அருகே நெருங்கவிட்டதும் கதிரி நாயக்கரைப் பின்வாங்கச் சொல்லி வேங்கடரின் முரசு இரட்டைத் தாளத்தில் ஒலித்தது. பின்வாங்கிய மதுரைக் குதிரைகள் விலகி அரைவட்டம் சுற்றி மோதல் தொடங்கிவிட்ட நடுக்களத்தின் மீது பாய்ந்தன. ஆபத்தை உணர்ந்த ராஜூ சண்டையிட்டவாறே பின்வாங்கும் சமிக்ஞையோடு குழலை எடுத்து ஊதினான். சீக்கிரமே கால் பங்கு இழப்புகளோடு தஞ்சைக் குதிரைகள் பின்வாங்கி ஓடின. விரட்டிப் போன கதிரியை வேங்கடர்பின் தொடர்ந்தார்.

துவந்த யுத்தம் ஆரம்பாகி முன்னணிக் குதிரைகள் மோதிக் கலந்து வெட்டும் குத்தும் வெறிக்கூச்சலுமாக மாறியது.

அக்கராஜூ அந்தக் குழம்பிய மோதலிலும் சுற்றிலும் வாளால் வெட்டி வீழ்த்தி வழியமைத்துக்கொண்டு ரௌத்தை நெருங்கிவிட்டான். யுத்தமுனைப்பில் இருந்த ரௌத் தற்செயலாக அவனைப் பார்த்ததும் அவனை நோக்கிப் போனான். குதிரைகள் நெருங்கி வாட்கள் மோதிவிலகின. மிகுந்த தன்னம்பிக்கையோடும் நிதானத்தோடும், ஆவேசமாக வரும் வீச்சுகளைத் தடுத்தும் விலக்கியும் சமாளித்துக் கொண்டிருந்தான் ரௌத். தங்கள் அணிகளின் பின்னால் நின்று களத்தை கவனித்துக்கொண்டிருந்த வேங்கடர் மதுரைக் குதிரைகளைக் கூவி

விலக்கிக்கொண்டு அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். பின்னாலேயே கதிரியும் வந்தார். மதுரைக் குதிரைகள் தஞ்சையைப் பின்னுக்குத் தள்ளிச் சென்றிருந்தன. ராஜூவைத் தாண்டி மதுரை வீரர்களே சுற்றிலும் முன்னேறிக் கொண்டிருந்தனர். வேங்கடர் கதிரியிடம் சொன்னார் ‘மாமா, சீக்கிரம் முடிச்சி விடுங்க. வீணா உயிர்க போகுது.’

வேங்கடரும் கதிரியும் பிற குதிரைகளை வெகுவாக விலக்கிவிட்டு தனிச் சமரில் இருந்த வீரர்களுக்கு வாய்ப்பாக வட்டம் அமைத்துக்கொடுத்தனர். ரௌத் சற்றும் சளைக்காமல் மோதிக்கொண்டிருந்தான். ‘ரவுத்து...நீ விலகு’ என்ற குரல் வந்ததும் ரவுத் முன்னே ஓடித் திரும்பிப்பார்த்தான். பங்காருவுடன் கதிரி ராஜூவுக்கு எதிரே நின்றார். அவரைக் கண்டதும் ராஜூ உடைவாளைச் செருகிவிட்டு ஈட்டி வேண்டும் என்றான். அருகிலிருந்த ஒரு மதுரை வீரனின் ஈட்டியை வாங்கி அவனிடம் நீட்டினார் வேங்கடர். கதிரி இருபுறமும் கூரான நாலடி நீளப் பட்டயத்தை இரு கைகளிலுமாகப் பிடித்து ஏந்தியிருந்தார். களத்தில் இறங்கி விட்டால் அவருக்கு இதுதான் வசதி. யாரும் நெருங்கமுடியாது. வெட்டிவீசிப் போவார். கடிவாளமில்லாமல் அவர் கால் தட்டல்களில் குறிப்புணரப் பழகியிருந்தது பங்காரு.

ஈட்டி வீச்சுகள் நாலைந்து முறை வெறுமனே காற்றில் பாய்ந்தன. பங்காரு விலகி விலகி அவனுக்குப் பின்பக்கமாகவே சென்றது. அதை உணர்ந்ததும் ராஜூ தன் குதிரையைத் திருப்பாமலே பின்னுக்கு மட்டுமே இழுந்து எப்போதும் கதிரி முன்னால் நிற்குமாறு பார்த்துக்கொண்டான். கதிரி தாக்க முற்படவே இல்லை. உயர்த்திய பட்டயம் அசையவேயில்லை. அவர் வாய் வெற்றிலையைக் குதப்பியவாறிருக்க, கண்கள் விலகாமல் தன் கை மீதே இருப்பதை கவனித்தான் ராஜூ. பங்காருவைத் துரத்தி அவன் வட்டமடிக்க முயன்றபோது சட்டென்று அது அவனுக்கு முன்னே பாய்ந்தது. இம்முறை கதிரி வீசியிருக்கலாம். ஆனால் வீசாமல் ஏனோ காத்திருந்தார்.

குதிரைகள் மீண்டும் தட்டாமாலை ஆடின. ராஜூ தன்னை மீறிய வெறியிலிருந்தான். வேட்டையில் காட்டு மரங்களுக் கிடையிலேயே ஓடித் திருந்து பழகிய பங்காரு வெகு லாகவமாக போக்கு காட்டிக்கொண்டிருந்தது. போரின் கதியையும் தன் நிலையையும் உணர்ந்த ராஜூ ஆவேசமாகப் பக்கவாட்டில் சாடிக் குத்திவிடப் பாய்ந்தபோது மின்னல் பொழுதில் தன் கையைக் காணாமல் திகைத்தான். ரத்தம் பீய்ச்சியடித்த போது, பர்தாவுக்குள்ளிருந்து சிரிக்கும் பளிங்குக் கண்கள் நினைவில் மின்ன...தலை பறந்து விழுந்து மண்ணில் உருண்டது.

மதுரையின் போர் நிறுத்த முரசம் ஒலித்தது. வீரனொருவன் ஈட்டியில் குத்தித் தூக்கிய ராஜூவின் தலையோடு குதிரையில் தஞ்சை அணியை நோக்கி ஓடினான். அவர்களுக்கிடையே பெரும் சலசலப்பும் கூச்சலும் எழ, ஏதோ ஒரு குதிரை தெற்கு வாசலை நோக்கி ஓடவும் சில பின்தொடர்ந்தன. சில நொடிகளில் எல்லாக் குதிரைகளும் நெரிபட்டு வாசலுக்குள் புகுந்தன. வாசலை அடைக்கவோ அகழிப் பாலத்தை உடைக்கவோ தஞ்சாவூருக்கு சமயமில்லை. தஞ்சைக் குதிரைகளை விரட்டிப் பின்தொடர்ந்து மதுரைக் குதிரையணிகள் உள் நுழைந்தன; ஒரு பீரங்கிக் குண்டு கூட வெடிக்காமல் ஒரு தலைநகரக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டன. அந்தியாகிவிட்டது.

தஞ்சை தளவாய் ரங்கப்பர் துணிவோடு ராஜவீதியின் இரு புறங்களிலும் காலாள் வீரர்களை நிறுத்தியிருந்தார். எஞ்சியவர்களை சந்துகளில் ஒளிந்தும் வீடுகளின் மேல் ஏறி நின்றும் தாக்கும்படி உத்தரவிட்டார். உள்ளே வந்த தஞ்சைக் குதிரைகள் ஊரை அறிந்திருந்ததால் பரவி மறைந்துவிட்டன.

மடை திறந்ததுபோல உள்ளே வந்த மதுரைக் குதிரைகள் தெருவோரங்களில் நெரிபட்ட தஞ்சை வீரர்களை வெட்டிக் குத்தித் தாண்டிப்போயின. சென்ன கதிரி நாயக்கர் முதல் அணியுடனே உள்ளே வந்து விட்டார். வேங்கடர் அகழிக்கு இந்தப் பக்கமே நின்று நடப்பதைக் கவனித்தார். குதிரைகள் வாசலுக்குள் நுழைய முடியாமல் தேங்கின. அலங்கங்களின் மேலிருந்து அம்புகள் இறங்கி சில வீரர்கள் காயம் பட்டனர். வேங்கடர் உத்தரவின் பேரில் குதிரைகள் பின்வாங்கும் முரசுத்தாளம் எழுந்தது. குதிரைகள் பின்னே வந்தவுடன் காலாட்படையை உள்ளே அனுப்பினார். படிகளில் ஏறிப்போய் அலங்கத்தைக் கைப்பற்றுமாறு சொன்னார். மேலே இதை எதிர்பார்த்திருக்க வேண்டும். மன்னரின் தலை தெரிந்தது. தோளில் கட்டாரியைச் சாத்தியிருந்தார். வேளக்காரர்கள் அவரை அழைத்துக்கொண்டு மதில் மேலேயே மேற்கு நோக்கிச் செல்வதை வேங்கடர் கண்டார். சற்று நேரத்தில் அலங்கம் பிடிபட்டது. வழி கிடைத்ததும் மீண்டும் குதிரையணிகள் உள்ளே பாய்ந்தன.

வேங்கடர் முரசறிவிப்பாளர்களை அழைத்துவரச் சொல்லி மதுரைப் படைகளுக்கான உத்தரவுகளைத் தெளிவாகச் சொன்னார். மூன்று வாசல்களையும் திறந்து தப்பி ஓடுகிறவர்களும் வழிவிடவேண்டும். விரட்டிச் சண்டையிட வேண்டாம். ஆயுதம் தூக்காத யாரையும் தாக்கக்கூடாது. முரசுக்காரர்கள் உள்ளே ஓடினார்கள்.

தாதனூர்க்காரர்களை உடனே அழைத்து வரச் சொன்னார். வேல்கம்புகளோடு லம்பாடிப் பெரியாம்பிளையின் பின்னால் அவர்கள் ஓடி வந்தனர். ‘தஞ்சாவூர் ராஜா உயிருக்கு ஆபத்து வராமல் நீங்கள் பாதுகாக்கவேண்டும். இந்தக் குழப்படியில் ஆள் தெரியாமல் நம் ஆட்களே கொன்றுவிடக்கூடும். அவரைச் சுற்றி வேளக்காரர்கள் என்று எதற்கும் துணிந்த பாதுகாப்பாளர்கள் இருக்கிறார்கள். நம் ஆட்கள் சுலபத்தில் அவர்களை வீழ்த்தி விடுவார்கள். நீங்கள் வேளக்காரர்களையும் சமாளிக்கவேண்டும்; நம்மவர்களையும் தடுக்க வேண்டும். இப்போது தான் இந்த மதில் மேல் மேற்கே போகிறார். உடனே உள்ளே ஓடுங்கள்.’

ஓட முனைந்த லம்பாடிப் பெரியாம்பிளை நின்று கேட்டார் ‘மச்சம்?’

‘உங்க வயசு. நரைச்ச பெரிய தாடி. கையில கட்டாரி வச்சிருக்கார்.’

மதிலுக்குக் கீழேயே ஒரு கொத்தும் மதில் மேல் ஒரு கொத்துமாக தாதனூர் மதிலோடு மேற்கே போனது. மேலே போன கொத்தில் மங்குணி இருந்தான். மந்தமானவன். இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பனான பின்னும் விவரம் போதவில்லை. களவுக்கு லாயக்கில்லை என்று எந்தக் கொத்தும் அவனைச் சேர்ப்பதில்லை. தானும் கெட்டிக்காரன் என்று நிரூபிக்க பகலில் தனியே போய், மேய்கிற ஆட்டைத் தூக்கி வந்திருக்கிறான். கோனார் கெஞ்சிக்கொண்டே கருப்பு கோவில் வரை வந்துவிட்டார். அவன் பிழைப்பும் ஓட வேண்டுமே! பிள்ளைகள் தலையெடுக்கும் வரை மதுரைக் காவலில் அவனைச் சேர்த்தார்கள்.

அவனது ஒரே திறமை - அவன் ஓட்டத்தை யாரும் பிடிக்க முடியாது.

தஞ்சாவூர் கோட்டை மதுரையைப் போல இரட்டை மதில் கோட்டையல்ல; ஒற்றை மதில்தான். கல்கூட இல்லை. செங்கல் காரை. மதுரையின் உள் அரண் பிரமாண்டமான கற்களால் பனை உயரம் நிற்கும். இங்கு உயரமும் குறைவு. ஆனால் மதிலின் முதுகு இரண்டு வண்டிகள் விலகுமளவு அகலமாயிருந்தது. அகழியும் நிறை நீரோடு வைகையில் பாதி அகலம் இருந்தது. தாதனூர்க்காரர்கள் மேற்கு வாசல் வரை வந்து விட்டார்கள். ஏழெட்டு வில்லாளிகள் மட்டும் கீழே இறங்கப் பயந்து அலங்கத்திலேயே மறைந்திருந்தார்கள். தாக்கத்தான் வருகிறார்கள் என்ற எதிர்பார்ப்பில் தற்காப்புக்காக அம்புகளை எய்துவிட்டார்கள். பேயனின் கையில் தைத்தது ஒன்று. அவன் அம்பு வந்த திசையைப் பார்த்து ஓடி வேல்கம்பால் குத்தினான். அவர்கள் மதில் மேலேயே ஓடினார்கள். மங்குணி விரட்டிப் போய் வேல்கம்பால் ஒருவன் முதுகில் குத்திக் கீழே தள்ளினான். அப்படியே ஒவ்வொருவராக விரட்டி ஆறுபேரையும் முதுகிலேயே குத்தினான்.

கதிரி நாயக்கரிடம் இருந்து வேங்கடருக்குத் தகவல் வந்தது. 'தளவாய் ரங்கப்பர் கதை முடிந்தது. சண்டை பெருமளவு ஓய்ந்துவிட்டது. ஆங்காங்கே நடக்கும் மோதல்கள் இன்னும் சற்று நேரத்தில் முடிந்துவிடும். குதிரைகளைப் பிடுங்கிக்கொண்டு ஆட்களை மட்டும் ஓடவிடுமாறு வாசல்களுக்கு உத்தரவிட்டி ருக்கிறேன்.'

எல்லாத் திசைகளிலிருந்தும் மொத்தமாகத் தெற்கு வாசல் முன்னே வந்து கூடி மறித்து நின்ற மதுரைப் படைகளை ஒழுங்குபடுத்தி கட்டளைகளை இட்டுவிட்டு தன் வீரர்கள் தொடர அரண்மனையை நோக்கி குதிரையில் விரைந்தார் வேங்கடர்.

தீப்பந்த ஒளியில் வழியெங்கும் பிணங்கள் குவிந்து கிடப்பது தெரிந்தது. மதுரைக் குதிரைகள் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே விரட்டி ஓடிக்கொண்டிருந்தன. எங்கும் கூச்சலும் கூப்பாடுமாகக் கிடந்தது.

'**இ**ளவரசி எங்கே?'

நடுங்கியவாறு கன்னிமாடத்தைச் சுட்டினார்கள் தாதிகள். வேளக்காரப் படை அதைச் சுற்றிக் காத்து நின்றது. மதுரைக் குதிரைகள் அவர்களை மொய்த்தன. சிலர் தப்பி ஓடினர். உடைப்பட்ட கதவினூடே வீரர்களோடு உள்ளே நுழைந்து இளவரசியைத் தேடினார் வேங்கடர். இரண்டாவது தளத்திற்கு ஓடியபோது கௌரி சிலைக்கு முன்னே அமர்ந்து மகாராணி கும்பிட்டுக் கொண்டிருந்தாள். தோழிகளுடன் தூரத்தில் சாளரத்தின் அருகே நின்றிருந்தாள் இளவரசி. அவளைக் கண்டதும் வேங்கடர் மனம் சட்டென்று நிம்மதியடைந்தது. அவர் வாழ்வின் மிகச் சந்தோஷமான தருணம் இதுதான். சொக்கன் அவர் தோளில் ஏறி விளையாடிய பிள்ளையல்லவா!

மகாராணி அவரைக் கண்டதும் கௌரியின் காலடியில் இருந்து குறுவாளை எடுத்துத் தன் நெஞ்சுக்கு நேரே பிடித்தபடி கத்தினாள் 'நெருங்காதே.'

பதறி அவளருகே ஓடிய வேங்கடர் 'அம்மா... நான் பகைவனல்ல. உங்கள் சேவகன்' என்றார். 'மகாராஜா நன்றாக இருக்கிறார். போர்வெற்றி

தோல்வியின்றி முடிந்தது. தஞ்சாவூருக்கு எந்த அவமானமும் இல்லை. இளவரசியை மதுரை மகாராணி என்று இங்கேயே அறிவித்து விட்டு அழைத்துப் போகிறேன். நீங்கள் உத்தரவு தர வேண்டும்.'

'வென்றவன் ஒருபோதும் விஜயநகரப் பெண்கள் சிறைப்பிடிக்க முடிந்ததில்லை.'

'இல்லை. தஞ்சாவூர் தோற்கவில்லை. யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உத்தரவிட்டால் இப்போது போரை நிறுத்துகிறேன். இளவரசிக்கு மதுரை ராணியாகத்தான் விருப்பம். குழந்தைகளின் கனவுகளைத் தடுக்காதீர்கள்.'

வெறித்த விழிகளுடன் மகாராணி அப்படியே நின்றிருந்தாள்.

வேங்கடர் சடாரென அவள் காலில் விழுந்தார். 'மங்கைத் தாயாரா நினைத்துக் கும்புடுகிறேன்' என்றார். எழவில்லை.

'அவளை மட்டும் அழைத்துக்கொண்டு போ' என்ற குரல் கேட்டு எழுந்தார்.

கீழே வெறிக்கூச்சல்களும் போர்விளிகளும் கேட்டன. தஞ்சாவூரின் வேளக்கார வீரர்கள் புதிதாக வந்து மோதியிருக்க வேண்டும். அடுத்து 'ஜெய ஜெய ஜக்கம்மா! விஜயீபவ! என்ற விஜயகோஷங்கள் அலையலையாய் எழுந்துவந்தன.

'கௌரி தோற்றுவிட்டாள்' என்று மகாராணியின் உதடுகள் முணுமுணுத்த வேளையில் அவள் குறுவாள் நெஞ்சில் பாய அப்படியே கீழே சரிந்தாள்.

'அம்மா...' என்று அலறியவாறு இளவரசி ஓடிவந்தாள். குத்திய குறுவாளை உருவினாள். என்ன நடக்கிறது என்று வேங்கடர் நிதானிப்பதற்குள் இளவரசி அதைத் தன் நெஞ்சில் பாய்ச்சிவிட்டாள்.

**வே**ங்கடர் அரண்மனை முற்றத்தில் குதிரையில் தலை கவிழ்ந்தவாறு அமர்ந்திருந்தார். எண்ண ஓட்டங்களற்று மனம் வறண்டு வெளுத்திருந்தது.

விரைந்து வந்து அவரை அணுகிய குதிரை வீரர்கள், விஜயராகவராஜா அவரை அழைத்துவரச் சொன்னதாகக் கூட்டிச் சென்றனர். வேங்கடர் தன்னிலை மீண்டார்.

வடக்கு வாசலை நோக்கி வேங்கடர் போனபோது வீதியெங்கும் மதுரைக் காலாள் வீரர்களே நிறைந்திருந்தனர். தீப்பந்தங்களோடு குதிரை வீரர்கள் வழி விலக்கி அவரை அழைத்துச் சென்றனர். ராஜகோபாலசாமி கோவில் வாசலில் மதுரை வீரர்களால் ஆன பெரும் கூட்டம் அலையடித்தது. குதிரை கோவில் முற்றத்திற்கு வந்துபோதுதான் மன்னரை வேங்கடர் கண்டார். கோபுர வாசலுக்கு வெளியே நின்று அவர் தொழுதபடி இருந்தார். அவரைச் சுற்றி வேளக்காரர்களும், கூட்டம் நெருங்கிவிடாமல் தாதனூர்க்காரர்களும் வட்டம் அமைத்து வளைந்திருந்தனர். கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. வேங்கடர் இறங்கி மன்னர் முன் நின்றார்.

விஜயராகவர் கண்மூடிக் கைக்கூப்பித் தொழுதபடியே நின்றார். தோளில் கட்டாரியைச் சார்த்தியிருந்தார். வேங்கடர் அப்போது தான்

தீப்பந்த ஒளியில் அதைக் கவனித்தார். அது சாளுவ கட்டாரி. கூர்மடல் தங்கத்தில் ஒளிர, பூண்களிலெல்லாம் நவரத்தினங்கள் மின்னின. சாளுவ கட்டாரி! வேங்கடரின் மனம் நடுங்கி நடுக்கம் உடலுக்குப் பரவியது. பெரும் களங்களில் வாகை சூடிய தளபதிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் விஜயநகரத்தின் அதி உன்னதப் பரிசு. ‘ராயர்களின் குலச்சின்னமான கட்டாரியோடு நான் எப்படிச் சமரிடுவேன்?’

விஜயராகவர் கண் திறந்தார் ‘வந்துவிட்டாயா? வா! என் வேளை வந்துவிட்டது அப்பனே. ஸ்ரீரங்கன் கூப்பிடுகிறான். என்னை வைகுந்தத்திற்கு அனுப்பிவை. ஒரு வீரனோடுதான் போரிட்டுச் சாவான் விஜயராகவன். அறியாமையால் ஏதேதோ செய்துவிட்டேன். எல்லாம் எம்பிரான் சித்தம். என்னைக் கொன்றுவிட்டு மங்கம்மாவை அழைத்துக்கொண்டு போ! என்றவர் வேங்கடரை அருகே அழைத்தார். ‘தோற்றால் அந்தப்புரத்தை வெடி வைக்கச் சொல்லி நேற்றே வேளக்காரர்களிடம் உத்தர விட்டேன். உடனே போய் மங்கம்மாவைக் காப்பாற்றச் சொல்.’

வேங்கடர் கண்களிலிருந்து கண்ணீர் அருவியது. ‘என்ன பைத்தியக்காரார் இவர்! நானும் இவரைப் போல ஸ்ரீவைஷ்ண வன்தானே...’

தோற்கும்போது இஸ்லாமியர் கையில் பெண்கள் சிக்கிவிடாமல் அந்தப்புரத்தை அடியோடு அழிப்பது காப்பு பலிஜர்களின் குல வழக்கம்.

க்ஷத்திரியன் அழலாமா? வாடா...’ என்று கட்டாரியை ஓங்கிக்கொண்டு விஜயராகவர் பாய்ந்தார். வேங்கடர் விலகி விலகிப் போனார். கட்டாரி ஆவேசமாக நெருங்கியபோது உடைவாளை உருவித் தடுத்தார். கூட்டம் நெருக்கியடித்தது. வேளக்காரர்கள் ஆங்காங்கே வட்டமாக நின்றிருந்தனர். பின்னால் தாதனூர்க்காரர்கள். வீரர்கள் நெருக்கும் கூட்டத்தை விலக்கிப் பின்தள்ளியபடி இருந்தனர். சாளுவ கட்டாரியின் கருங்காலிக் கணையில் வாள் தாக்கி வடுவேற்படுத்துவதை உணர்ந்த வேங்கடர் வாளைப் புரட்டிப்பிடித்து அதன் முதுகால் தடுத்தவாறிருந்தார். மன்னர் ‘வா...வா...’ என்று கூவிக்கொண்டிருந்தார்.

அந்த உச்சக்கட்டத் தருணத்தை நெருங்கும் மனவலிமையைத் தருமாறு ஜக்கம்மாவை வேண்டியவாறே மனதைக் கல்லாக்க வேங்கடர் முயன்றார். இருவரும் சுற்றிச் சுற்றி வந்தனர். வாளை மன்னரின் இடது மார்பில் இறக்கவேண்டியதுதான் என்று வேங்கடர் நினைத்தபோது, தெற்கே அந்தப்புரப் பகுதியிலிருந்து பெருவெடிச் சத்தம் அடுக்கடுக்காக வந்தது.

மங்கம்மா உயிரோடு இல்லை என்ற உணர்வு தாக்கியபோது விஜயராகவரின் கண்கள் பெரிதாகி மிரண்டு விழித்தன. கட்டாரியை ஓங்கியிருந்த கை அப்படியே காற்றில் நின்றது. ‘ஸ்ரீரங்கா...ராஜகோபாலா...’ என்று கதறியவாறு புத்தி பேதலித்து வேங்கடரை விட்டுவிட்டு குறுக்கு மறுக்குமாக ஓடினார்.

கூட்டம் நெருக்கி உள்ளே வர முயன்றது. ஓங்கிய கட்டாரியுடன் அவர் பாய்ந்து கூட்டத்தின் பக்கம் நெருங்கியபோது அங்கே நின்றிருந்த மங்குணி தன்னைத் தாக்க வருவதாகக் கருதி வேல்கம்பைப் பாய்ச்சிவிட்டான். கட்டாரியைக் கீழே போட்டுவிட்டார். பாய்ந்து கட்டாரியை எடுத்த

வேளக்காரன் மங்குணியின் நெஞ்சில் அதை இறக்கினான். விஜயராகவர் இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் கும்பிட்டார் ‘ஸ்ரீரங்கா...’

*

# 18

**சொக்கநாதன் காலத்தில் வானில் தூமகேது தோன்றியது.** நிமித்தகர்கள் அதைச் சொல்லியே மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தனர். அதற்கேற்றாற்போல ஒரு மாதத்தில் நம்ப முடியாத பேரழிவு விவசாயத்தில் நேர்ந்தது. வடக்கிலிருந்து வெட்டுக்கிளிகள் படையெடுத்து வந்தன. ஒவ்வொன்றும் சோளக்கதிர் அளவு பெரிதாக இருந்தது. மேகக்கூட்டங்கள் போல வந்து அப்படியே செடிகொடிகள் பயிர்களின் மீது மொய்த்தன. நிலமெங்கும் பெருமழை அடிப்பதுபோல நெறுநெறுவென்று சப்தம். அவை எழுந்து பறந்தவுடன் இலைகளற்ற வெறுந்தண்டுகளே எஞ்சின. இரண்டு நாள் படை படையாகத் தெற்கு நோக்கிச் சென்றன. நாடே பசுமையற்று மொட்டையாகப் போய்விட்டது. மாசி மாதம் கதிரடிப்புக் களங்களில் புழுதி பறந்தது.

மீண்டும் தூமகேது தோன்றியது. அந்த வருடம் மழையே இல்லை. மறுவருடம் மேற்கு மலைகளில் மூங்கில் பூத்துவிட்டதாகப் பளியர்கள் சொன்ன சேதி கேட்டு மக்கள் மிரண்டனர். பிறக்கும் குழந்தைகள் பற்களோடு இருப்பதாகவும். கறவைகளின் மடு வற்றி விட்டதாகவும் நாய்கள் குரைக்காமல் ஊளையிடுவதாகவும் நாடெங்கும் கதைகள் பரவின. தொடர்ந்து மேலும் இரண்டு ஆண்டுகளாக மழை இல்லை. மக்கள் சாணாக் கிழங்குகளைத் தேடிக் காடெல்லாம் அலைந்தனர். தாதனூரில் பாதிப் பிள்ளைகள் வயிற்றுப் போக்கில் மடிந்தனர். சண்டாள பேதி பரவத் தொடங்கியது. உயிரைத் தக்க வைத்தவர்கள் இறந்தவர்களைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டுக்குப் போனார்கள். எல்லா ஊர்களிலும் நாளெல்லாம் சனங்கள் சுடுகாட்டில் கும்பல் கும்பலாக நின்றிருந்தனர். புதைக்க இடமில்லாமல் ஆனது. தீ எரிந்துகொண்டே இருந்தது. மூன்றாண்டுகள் கழித்து நிலைமை இயல்புக்கு மீண்டபோது மூன்றிலொரு பங்கு மக்கள் சுடுகாட்டிலும் மீதிப் பேர் உயிரைப் பிடித்துக்கொண்டு ஊர்களிலும் இருந்தனர்.

**நா**ட்டு நிர்வாகம் ஏற்கனவே பிரதானி கோவிந்தய்யாவின் கையில் இருந்தது. தஞ்சாவூரில் பிரதானியாக இருந்த அதே கோவிந்தய்யா தான். அவர் பிரதானி ஆனவுடன் மன்னரின் தம்பி முத்துலிங்கத்துடன் சேர்ந்துகொண்டு வேங்கட கிருஷ்ணப் பரிடமிருந்து தளவாய் பதவியைப் பறித்தார். மன்னரின் செயலின்மை கண்டு நொந்துபோன வேங்கடர் தனியொரு ஆளாக ராமநாதபுரம் நண்பர் சேதிபதியிடம் போய் இருந்தார்.

இச்சூழலில் வளமாக இருந்த மைசூரின் படைகள் மதுரையின் மேற்கு எல்லையான சத்தியமங்கலத்தையும் சுற்றியுள்ள கோட்டைகளையும் கைப்பற்றிவிட்டன. பிஜப்பூர் தளபதி எக்கோஜி தஞ்சாவூரை எந்த எதிர்ப்புமின்றி மதுரை ஆளுநர் அழகிரி நாயக்கரிடமிருந்து கைப்பற்றியதுடன் திருச்சிராப் பள்ளியைச் சுற்றிலும் பெருவாரியான பகுதிகளில் நிலைகொண்டுவிட்டார். பிஜப்பூர், மைசூர் படைகளை எதிர்க்கும் வலுவற்று சொக்கநாதன் திருச்சிராப்பள்ளி கோட்டைக்குள்ளேயே முடங்கிப் போனார். விரக்தியிலிருந்த அவர் பொழுதெல்லாம் படிப்பிலும், பக்தியிலும், இசையிலும் கழிந்தது. மன்னருக்கு சித்தப்பிரமை என்ற கதையைக் கிளப்பிவிட்டார் கோவிந்தய்யா. மன்னரை யாரும் சந்திக்க முடியாததால் கதை உண்மை என்றானது. மன்னர் அந்தப்புரத்திலேயே சிறை வைக்கப்பட்டார். முத்துலிங்கம் மன்னராக மூடிசூடிக் கொண்டார். புதிய மன்னர் தனது நம்பிக்கைக்கு உரிய குதிரைப்படைத் தளகர்த்தன் ருஸ்தம் கானிடம் திருச்சிராப்பள்ளி கோட்டைப் பாதுகாப்பையும் ஒப்படைத்தார். இப்போது மணப்பாறைக்குத் தெற்கிலுள்ள பாண்டி நாட்டுப் பாளையங்களும் திருச்சி கோட்டையும்தான் மதுரை அரசிடம் இருந்தன.

முத்துலிங்க நாயக்கர் தனது பாதுகாப்பு படையுடன் மதுரை நிர்வாகத்தைக் கவனிக்க தெற்கே கிளம்பிப் போனவுடன் ருஸ்தம் கான் திருச்சி கோட்டைக் கதவை நிரந்தரமாக அடைத்து விட்டான். சொக்கநாதரை விடுவித்து மீண்டும் மன்னராக்கினான். ஆனால், அரசு நிர்வாகம் அனைத்தையும் தன்னிடமே வைத்துக்கொண்டான். முத்துலிங்கம் தனித்து விடப்பட்டார். தெற்கத்தி பாளையக்காரர்கள் யாரும் அவரது ஆதரவுக்கு வரவில்லை. காவிரிகரை ஆக்கிரமித்த சிவாஜியின் மராட்டியப் படைகள் திருச்சி கோட்டையைத் தாக்க முயலாததால் இரண்டு ஆண்டுகள் கோட்டையில் எந்தச் சிக்கலுமின்றி ருஸ்தம் கான் இருக்க முடிந்தது. முதலாண்டில் ருஸ்தம் கான் முத்துலிங்கத்தின் அந்தப்புரத்தில் அத்துமீறி நுழைந்தபோது அவரது முதல் மனைவி தற்கொலை செய்துகொண்டாள். அடுத்த ஆண்டும் அதே காரணத்திற்காக அவரது இரண்டாம் மனைவியும் தற்கொலை செய்தாள். கோட்டைக்குள்ளிருந்த படைமுழுக்க ருஸ்தம் கானின் கட்டுப்பாட்டில் இருந்ததால் மன்னரால் எதுவும் செய்யமுடியவில்லை. கோட்டைக்குள் உணவுப் பொருட்களின் கையிருப்பு குறைந்து கொண்டிருந்ததால் ருஸ்தம் கான் தனது குதிரைப்படையுடன் வெளியேறி கருவூர் வட்டகையில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்தான்.

*

# 19

**வே**ங்கட கிருஷ்ணப்பர் மறவர்கள் ஐவரோடு ரகுநாத **சேதுபதியிடம்** விடைபெற்று ராமநாதபுரத்தை விட்டு வெளியேறி குதிரையை கடுவிரைவாக விரட்டியபோது சூரியன் மலை வாயில் விழுந்துகொண்டிருந்தான்.

மதுரைக் கோட்டையின் கிழக்கு வாசலில் போய் நின்றபோது நகரம் உறங்கியிருந்தது. இருபது நாழிகை கழித்து நெடுங்கதவங்கள் திறந்தன. மதுரைக் கோட்டைத் தளபதி உத்தப்ப நாயக்கன் ஓடோடி வந்து ‘பாவா, எங்களையெல்லாம் மறந்துட்டீகளே’ என்றபடி அவரை ஆரத்தழுவினான். எட்டு ஆண்டுகளுக்குப் பின் மதுரைக்குள் வேங்கடர் நுழைந்தார்.

மதுரை நிலவரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே புது மண்டபம் வந்தனர். மதுரை பொக்கிஷதாரர் சேஷய்யாவை உடனே அழைத்து வருமாறு வேங்கடர் சொல்லவும் உத்தப்பன் கிளம்பினான். புது மண்டபத்தின் கிழக்கு முகப்பில் தடாதகைப் பிராட்டியின் சிலைக்குக் கீழே கால்களைத் தொங்கவிட்டவாறு பட்டியக்கல்லில் அமர்ந்த வேங்கடர் வெற்றிலை நரம்பை உரித்தார். நிலா வெளிச்சம் கிழக்கிலிருந்து சாய்வாக மண்டபத்துக்குள் இறங்கியிருந்தது. இதற்குள் அவரது உதவியாளன் அறுபத்தியாறாவது கொத்தளத்திலிருந்து கன்னிவாடி காவல் வீரன் ஒருவனை அழைத்து வந்தான். ‘மாமாகிட்ட போய் நான் வந்துக்கிட்டு இருக்கேன்னு சொல்லு. அவசரம். உடனே கிளம்பு. நான் வந்து உன்னய முந்தக் கூடாது. ஓடு.’

திரும்பி வந்த உத்தப்பன் சேஷய்யா தாசி வீட்டில் இருப்பதாகச் சொல்லிவிட்டு அங்கு போக ஆயத்தமானான். ‘நில்லு! அதுவும் நல்லதுக்குத்தான். நீ போகாத. என் ஆள்களை அனுப்புறேன். வீட்ட மட்டும் காட்டச் சொல்லு. டேய் சின்னமுத்து, கதவ ஒடைச்சி உள்ள போ. வாளை உருவிக்கோ. தூக்கிட்டு வந்துருங்க.’

உத்தப்பன் அவர் அருகே போய் வெற்றிலைப் பையிலிருந்து

இலைகளை உருவிக் காம்புகளைக் கிள்ளினான்.

இங்க இப்போ குதிரைகள் எவ்வளவு இருக்கு?'

'ஆயிரத்து எண்ணூறு தோறும்.'

'அவ்வளவு பேரும் காலையில் கிளம்பணும். காலாள் படைநூறு போதும். அஞ்சு பீரங்கி வண்டிகள் மட்டும் இழுத்துக்கோ. நீ குதிரைகளோட மூணாம் நாள் ராத்திரி திருச்சி கிட்ட இருக்கணும். மத்த ஏற்பாடுகளை நீயா பாத்து செஞ்சுக்கோ. நான் திருச்சில எது கேட்டாலும் உடனே வரணும். இங்க கோட்ட காவல மேற்குப்பாளையங்கள் கிட்ட விட்டுருவோம். அதுக்கு ஏற்பாடு பண்ணுறேன். பத்து நாள்ல திரும்பிடலாம்.'

குறிப்பாகச் சில கேள்விகளைக் கேட்டு மதுரையின் நிர்வாகம், நிதி நிலைமைகளை ஊகித்துக்கொண்டார். அதுபற்றி அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது குதிரைகள் வந்து நின்றன.

சேஷய்யாவை மறவர்கள் இறக்கி விடவும் நரைக்குடுமி ஆட பஞ்ச கச்சம் தரையில் இழுபட வெற்று மார்புடன் கும்பிட்டபடி வேங்கடரை நோக்கி ஓடிவந்து சற்றுத்தள்ளி நின்று குறுகினார். வெற்றிலையைக் குதப்பியவாறே அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் வேங்கடர். சற்று நேரம் கழித்து வெற்றிலைக் குழம்பைத் துப்புவதற்காக கல்லில் இருந்து தாவி எழுந்தபோது, சேஷய்யா நெடுஞ்ஞாண்கிடையாகக் கும்பிட்டவாறு தரையில் விழுந்தார். துப்பிவிட்டு வந்த வேங்கடர் அமர்ந்தார். 'எழுந்திரியும். நான் கேள்விப்பட்டதெல்லாம் நிஜமா? உள்ளதைச் சொல்லணும்.' குரல் காட்டமாக இருந்தது.

சேஷய்யா பேசாமல் நின்றார். கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. 'நாளைக்கு படை கிளம்புது. உத்தண்டு கிட்ட எல்லா விவரமும் சொல்லியிருக்கேன். அவன் கேக்குற சக்கரத்தை குடு. அடுத்து என்னப் பாக்குற வரை அவன் சொல்லறத கேட்டு நடந்துக்கிடணும்.'

'பிரதானி ஓல இல்லாமக் கொடுத்தா...'

'பேய் எப்படிவே ஓல எழுதும்? அவன் எங்க இருக்கான்? நீர் பேயாகணுமா, இல்ல வைகுந்தம் போறீரா?'

சேஷய்யா பதிலில்லாமல் நின்றார்.

'மைசூர்க்காரன் பிடிச்ச பாளையங்கள்ல இருந்து வந்து உதவிகேட்டா நீரு ஒண்ணும் செய்யிறதில்லையாமே. அவங்க கொடுத்த சக்கரங்கதானய்யா இங்க இருக்கு. அவங்க கொத்தளத்துல இருக்கறவன் மண்ணயா தின்பான்? பாளையத்துள அவன் வாங்கமுடியாது. நீரும் தரமாட்டீரு. ம்ம்ம்? தாராபுரம் கொண்டம நாயக்கன் விரட்டுப்பட்டு பிள்ளகுட்டி ஆள் அம்போட இங்க ஓடிவந்தப்ப நீரு தலைய ஆட்டீட்டீராமே. உம்ம தாத்தன் சொத்தாவே மதுரை? இந்தக் கோட்ட கட்டுறதுக்கு நூறு வருஷத்துக்கு முந்தியே அவன் பாட்டன் அங்க பாளையம் போட்டவன் துலுக்கன் கூட படைவெட்டுல ஜெயிச்சு ராயர் கிட்ட பாலம கட்டாரி விருது வாங்குனவன். மதுரை வெரட்டுனா அவன் எங்க போவான்? போடிக்காரன் புண்ணியவான் பஞ்சத்தைத் தாக்குப் பிடிச்சு வந்தவங்களுக்கெல்லாம் தஞ்சம் கொடுத்துக்கிட்டுருக்கான்! உங்க ராசா எனக்கு என்னன்னு திருச்சில குந்தி சுவடி படிச்சிக்கிட்டிருக்கான். இவன் இருப்ப கண்டு

அவனவன் நாலு தெசையிலயும் ஏறியடிக்கான். பாளையக்காரன் என்ன பண்ணுவான்?'

காவக் கம்போடு மொட்டைக் கோபுரத்து வழியாக வந்த தாதனூர் கருமன் வேங்கடரைப் பார்த்தவுடன் ஓடிப்போய் ராமாயணச் சாவடியில் படுத்திருந்த லம்பாடிப் பெரியாம்பிளையை எழுப்பினான்.

உத்தப்பன் ஒவ்வொரு பிரச்சினையாகச் சொல்ல சேஷய்யாவிடம் உத்தரவு போட்டு விரட்டிக்கொண்டிருந்தார் வேங்கடர். அவர் கண்கள் தற்செயலாக வீதியில் குதிரைகளின் பக்கம் திரும்பியபோது அங்கே நின்றிருந்த லம்பாடிப் பெரியாம்பிளையின் மேல் படவும், அவர் வணங்கினார். இவர் கையசைத்து அழைத்தார். அருகே வந்ததும் மெல்லுவதற்காக மடித்து விரல்களில் பிடித்திருந்த வெற்றிலையை அவரிடம் கொடுத்தார். 'என்ன லம்பாடி ஐயா, கூன் விழுந்திருச்சு. இன்னும் ஏன் அலையறீக? வீட்டுல முடங்க வேண்டியதுதான்?'

'மருதயில படுத்தாதான் உறக்கம் வருது.'

'அது சரி. கள்ளநாட்டுதல பஞ்சத்த எப்படிக் கடந்தீங்க?'

'பெருவாரி சனம் போய்ச் சேந்துருச்சய்யா. பாதிப் பேரு மலைதாண்டி மலையாளக் கரையில் எறங்கிட்டாங்கெ. கெடச்சதை தூக்கிட்டு வந்து பொங்கித் தின்னுட்டு அங்கயே காடுகள்ல திரிஞ்சாங்கெ. பஞ்சம் போகவும்தான் எறங்கி வந்தாங்கெ. இப்படிக் கொடுமய நா வாநாளுல கண்டதில்லய்யா...'

இடையில் புகுந்து உத்தப்பன் சொன்னான் 'மூணு வருசமா இவங்களுக்கு அரண்மனைக் கூலி கொடுக்கல...'

அவசரமாக பெரியாம்பிளை பேச்சைத் தொடர்ந்தார் 'கூலி வரலையங்கறதால மருத காவலை நாங்க விட்டுக் கொடுக்க மாட்டமய்யா. பெரிய நாயக்கரு வாக்கு. என்னெக்கும் தாதனூரு மீறாதுய்யா.'

வேங்கடர் பெரியாம்பிளையைப் பார்த்துச் சொன்னார். 'நாளைக்கே அரமணையில போயி மொத்தக் கூலியவும் வாங்கிக்கோங்க. யோவ் சேசய்யா, யோசிக்கறதேயில்லயா? பூணூல் போட்டனுவக... நாலு எழுத்துப் படிச்சவங்கன்னு வேலயக் குடுத்தா ஒரு பயலுக்கும் புத்தியேயில்ல. இம்மாம் பெரிய கோட்டைக்குள்ள ஆயிரம் பேர் நிக்கிற கொத்தளங்களுக்குள்ள இவங்களுக்கு இந்தக் காவலைக் கொடுத்தவன் சும்பப் பயலா?' என்று கேட்டவாறே வேங்கடர் எழுந்து குதிரையை நோக்கி நடந்தார். அதற்குள் மாற்றுக் குதிரைகள் வந்திருந்தன. குதிரையில் ஏறப்போனவரிடம் நெருங்கி பெரியாம்பிள 'ஐயா, ஒரு சங்கதி' என்றார். கேள்விக்குறியோடு திரும்பினார் அவர்.

'அந்தக் கட்டாரி எங்ககிட்டதானய்யா இருக்கு.'

'எந்தக் கட்டாரி?'

'தஞ்சாவூர் ராசாவோடது. மங்குணியப் பொதச்சிட்டு கட்டாரிய மட்டும் எடுத்து வச்சிருக்கோம், உங்ககிட்ட கொடுக்கலாமுன்னு. எட்டு வருஷமா உங்களப் பாக்க முடியல.'

நிலைத்த பார்வையோடு வேங்கடர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பின்னர் மெதுவாக அவர் குரல் உயிர் பெற்றது. ‘எங் கண்ணுல காட்ட வேணாம். ஒளிச்சு வைச்சிருங்க. உங்க கோயில்ல வச்சிட்டா போதும்.’

‘அங்க தானய்யா இருக்கு.’

‘நாளை படை கௌம்புது. கூட வந்துருங்க. ஓரே உத்தண்டு, தாதனூர்வாருனு பிலிசி ரா.’

வேங்கடரோடு வடக்குக் கோட்டை வாசல் வரை வந்தான் உத்தப்பன். செல்லியம்மன் கோயிலுக்கு எதிரே வந்ததும் குதிரையிலிருந்து இறங்கி வெளியிலிருந்தே வணங்கிவிட்டு மீண்டும் ஏறிக்கொண்டார் வேங்கடர். அதற்குள் வேங்கடர் வந்திருக்கும் சேதி பரவி கொத்தளங்களிலும் மதிலரண்களிலும் வீரர்கள் கூடி நின்றிருந்தனர். அலங்க வீரர்களும் வாயிற் காப்போரும் வணங்கினர். இடது கொத்தளத்தில் நின்றிருந்தவர்கள் அங்கிருந்தே கும்பிட்டனர்.

‘பாவா, அப்படியே குதிரையோட மதில்மேல ஏறி ஒரு சுத்து வந்துருங்க. எல்லோரும் பாக்க பிரியப்படுவாங்க.’

‘நேரமில்லடா. கன்னிவாடி போயி ராவோட ராவா ஏற்பாடு பண்ணனும்.’

‘அப்ப உள் மதில ஒட்டியே ஒரு சுத்து போவோம். நாளைக்கு என் வேலை சுலபமாயிடும்.’

ஏழு குதிரைகளும் வலப்புறமாகத் திரும்பின. கிழக்கு வாசல் வரை அண்ணாந்து பார்த்து வணங்கிக்கொண்டு வந்தார். பாஞ்சாலங்குறிச்சி கொத்தளத்தை நெருங்குமுன்னே அங்கிருந்து முரசு அதிர்ந்தது. எக்காளம் அதை மிஞ்சி அலையாய் ஓங்கியது. எட்டையபுரம், நாகலாபுரம், காடல்குடி, குளத்தூர், ஏழாயிரம்பண்ணை பாளையங்கள் வரிசையாய் முழங்கின. வீரர்கள் வேல்களை உயர்த்திப் பிடித்தவாறு வாழ்த்தொலி எழுப்பினர். தீப்பிடித்தது போல சட்டென்று நாற்திசையில் எழுபத்திரண்டு கொத்தளங்களிலிருந்தும் பேரொலி எழுந்தது. வாழ்த்தொலியைப் போர் விளியாக மாற்றும் யுக்தி மின்னல் போல் வெட்டியவுடன் வேங்கடர் வாளை உருவி உயர்த்தியவாறு குதிரையை விரட்டினார். ஒலிக்கருவிகளை மீறி வீரர்களின் சன்னச் சத்தம் காற்றைக் கிழித்தது. அவர்களின் ஆரவாரத்தில் முரசொலி அமுங்கிப் போனது. பேரொலியோடு மதுரைக்கோட்டையே எழுந்து வானில் பறந்தது. தெற்கு வாசலைத் தாண்டும் போது வீரனொருவன் ஓடிவந்து மதுரையின் நந்திக் கொடியை உத்தப்பனிடம் கொடுத்தான். வாங்கிய வேகத்தில் உயர்த்திப் பிடித்தவாறு வேங்கடரை முந்தி முன்னால் விரைந்தான். வடக்கு வாசலைத் தாண்டி இரண்டாவது சுற்றுக்காக குதிரையை விரட்டினான். சிரித்துக்கொண்ட வேங்கடர் அவனைத் தொடர்ந்தார். தூக்கத்திலிருந்து துள்ளி விழுந்து எழுந்த நகரம் தெருக்களில் இறங்கியது. மேங்காட்டு லாய வரிசைகளில் நின்ற குதிரைகள் கனைத்துத் திமிறின. நிலைப்படை வீரர்களும் இளைஞர்களும் மதிலை நோக்கி ஓடிவந்தனர். ‘வேங்கிடு’ ‘வேங்கடரு’ என்ற பெயர் பல்லாயிரம் நாவுகளில் மாறி மாறி ஒலித்துத் துவண்டு கிடந்த மதுரையின் நாளங்களில் துடித்தாளமாய் மாறியது. கரை மீறிய உற்சாகத்தில் மேற்கு வாசல் பீரங்கிகள் பரங்கியர் பாணியில் விண்ணில் சுட்டு வாழ்த்தின. வடக்கு வாசலை நெருங்கியபோது அந்த பீரங்கிகளும்

முழங்கின. உத்தப்பன் விடுவதாயில்லை. இன்னும் அதிவிரைவாக மூன்றாவது சுற்றில் குதிரையை விரட்டினான். கிழக்கு வாசலும் சளைக்கவில்லை. கட்டுத்தறியை அறுத்த கிடாரி போல் துள்ளிய பாஞ்சாலங்குறிச்சி இப்போது எரி வாணங்களை ஏவி வானைப் பிரகாசமாக்கியது.

மேற்கு வாசலில் வந்து நின்ற வேங்கடர் உத்தப்பனிடம் ‘இந்த புத்திய சண்டையில காட்டணும்‘ என்று சொல்லிவிட்டு திறந்த கதவுகளின் கீழே வெளியேறி கன்னிவாடியை நோக்கி விரைந்தார்.

**வே**ங்கடரின் குதிரைகள் நெருங்கியதும் கன்னிவாடியின் கோட்டைக் கதவுகள் திறந்து வழிவிட்டன. அரண்மனை முற்றத்தில் அவர் இறங்கியதும் சேவகர்கள் வந்து குதிரைகளை வாங்கிக் கொண்டனர். கதிரி நாயக்கர் மூத்த சம்சாரம் எர்ரசின்னம்மாள் வாசலிலேயே காத்திருந்தாள். ‘ஏண்டா. இப்பதான் வழி தெரிஞ்சதா? இத்தன வருஷமா எங்கடா போய்த் தொலஞ்ச?’

‘அக்கா, நல்ல பசி. சோத்தப் போடு. ‘உடன் வந்த மறவர்களிடம் குளித்து சாப்பிட்டு ஓய்வெடுக்குமாறு சொல்லிவிட்டு வாசலில் நுழைந்தார்.

‘மாமாவ எழுப்புக்கா. அவசரம்.’

‘காலைலதான் அய்யம்பாளையம் மலைக்குப் போனாரு. கூப்பிட ஆள் அனுப்புறேன். ஏண்டா பறக்குற? பிள்ளகுட்டியெல்லாம் சௌக்கியமா?’

‘எளயவ மட்டும்தான் எங்கூட இருக்கா. மூத்தவ பேரப் பிள்ளைங்களோட இங்க தேவதானப்பட்டியிலதான் இருக்கா. பாத்து பல வருஷம் ஆயிருச்சி, சரிக்கா, பஞ்சத்த எப்படி சமாளிச்சீங்க?’

‘நம்ம பாளையத்தில் எந்த ஊர்லயும் பட்டினியால சனம் சாகல. ஒருவேளைக்காவது வழி பண்ணிட்டோம். உங்க மாமா எல்லா ஊர்லயிருந்தும் எளவட்டங்களைத் திரட்டிக்கிட்டு மலை ஏறிட்டாரு. மலைகளை சுரண்டி எடுத்துட்டாங்க. தினமும் இறைச்சி, பழம், கிழங்குன்னு சரக்கு எல்லா ஊருக்கும் போய்கிட்டேயிருந்தது. ஆனா பாதையில போற சனங்களைத்தான் கண்கொண்டு பாக்க முடியல. பாவம்! கிழக்கயும் மேற்கயுமா போனாங்க... எங்க எதுக்குன்னு தெரியாம. நான் மேலப் பெரும்பாதைக்கு கிட்ட செல்லியம்மன் கோயில்ல ஒரு கஞ்சித்தொட்டி வைச்சேன். பெருங்கூட்டம். நம்ம பாளயம் பெரும்பாதை மேல அமைச்சு போச்சு. மத்தியானம் ஒரு வேலைக் கஞ்சிதான். மலையில இருந்து என்னென்னமோ இலை தழையெல்லாம் கட்டுக் கட்டா எறங்கும். அதுகளை ஆட்டி ஒரு துவையல். மூணே மாசத்துல நம்ம பட்டறை எதுலயும் பொட்டு தவசம் இல்லை. கூட்டம் கூடிக்கிட்டே இருக்குது. ஆயிரக்கணக்குல சனம் சுத்துவட்டாரத்துல தங்கிப் போச்சி. நான் உங்க மாமாவக் கூப்பிட்டு சொல்லிவிட்டேன், பசின்னு நம்மகிட்ட வந்தவன் ஏமாந்து போகக் கூடாதுன்னு. பாவம்டா, படாத பாடு பட்டுட்டார். மைசூர் பக்கமிருந்து நம்ம வண்டிக் கேப்ப கம்பு சோளம்னு கொண்டுவந்து எறக்கிக்கட்டே இருந்துச்சு. நாப்பது வண்டிக்கு நூறுபேர். அறுபது குதிரைக காவல். அப்புறம் வண்டி ஊருக்குள்ள வரவேயில்லை. நடை அடிச்சிக்கிட்டே இருந்துச்சு. பாப்பா மூக்குத்தி வரை கொடுத்தாச்சு. அப்புறமென்ன, போடியில கடன் வாங்குனார். வாங்கிக் கிட்டேயிருந்தார்.

அதை அடைக்க இன்னும் அஞ்சு வருசம் ஆகும். இப்ப நம்மகிட்ட ஒண்ணும் இல்லை. மலை மேல பத்திவிட்ட மூவாயிரம் மாடுகதான் மிச்சம். நம்ம குதிரை, மத்தப் பாளையங்களோட குதிரைகளையெல்லாம் இவருதான் மலையில் வச்சு பாத்தாரு. கடைசிவரை செல்லியம்மா காப்பாத்துனா. சமாளிச்சிட்டோம். நம்ம பெரும்பாதை ஓரம் புதைமேடுகள் இருந்தா அது வியாதியில விழுந்ததா இருக்கும், பசியில் செத்ததா இருக்காது.

‘மூணு வருசம் கழிச்சி முதல் வெள்ளாமை வந்து எல்லாம் சரியானதுக்கப்புறம் செல்லியம்மனுக்கு ஒரு கொடை கொடுத்தாரு பாரு, திண்டுக்கல் வட்டாரமே வந்து குமிஞ்சிருச்சி. அழகர் எறங்குனதவிட கூட்டம். மூணு நாள் செலவையும் போடி மாப்பிள்ளை ஏத்துக்கிட்டாரு. வந்தவங்களுக்கெல்லாம் சோறு! உங்க மாமன் என்னைக்கு கோயில் கும்புட்டாரு? காட்டுல திரியிற மனுசன்! அவர் அக்னிச்சட்டி எடுப்பாருன்னு நான்தான் நேர்த்திக்கடன் போட்டேன். கொடையன்னிக்கு முதல்நாள் விடிகாலையிலேயே அக்னிச்சட்டியத் தூக்கிட்டாரு. நம்ம பாளையத்துல பதினாலு ஊரு நாப்பத்தியாறு கிராமத்தையும் சுத்துனாரு. அந்தந்த ஊர்ல அக்னிசட்டிகள் திடீர்னு கௌம்பி இவர் கூடவே வருது. இவர் வந்து சேர மூணாநாள் நடுச்சாமத்துக்கு மேல் ஆயிருச்சி. கம்மாக்கரை மேல் நின்னு பாக்குறேன். குருவார்பட்டி தெசையிலிருந்து வர்றாங்க. ஒரே ஜெகஜோதியா தெரியுது. மூவாயிரம் அக்னிச்சட்டி இருக்கும். பின்னாலயே ஆத்துவெள்ளம் போல கன்னிவாடி சனக்கூட்டம் வருது. இங்க ஏற்கனவே பெருங்கூட்டம் நிக்கிது. அவரு வந்தவுடனே ஒரே குலவைச்சத்தம். காட்டையே தூக்குது. ஒத்தக் கையில் சட்டிய ஏந்திக்கிட்டு செல்லியம்மனைப் பாத்து ஓடி வர்றாருடா! நான் தீப்பாய்ஞ்சு சாமியாக வேண்டாம்; அவர் சிதை எரியறத என் கண்ணால பாக்கக்கூடாது செல்லின்னு வேண்டிக்கிட்டேன்.

**வெ**ங்கலக் கும்பாவில் வரகஞ் சோற்றில் சேவல் கறியைப் பிசைந்து வேங்கடர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். விளக்கொளியில் ஓலைகளைப் படித்து முடித்த எர்ரசின்னம்மாள் கேட்டாள் ‘ஏண்டா, இவ்வளவு அழகா தெளிவா எழுதியிருக்கே, சொக்கன் சொல்லி எழுதியிருப்பாளா?’

‘மங்கம்மாதான் எழுதுயிருக்கா. வடுகு மட்டுமில்ல, அரவ பாஷையும் அவளுக்கு நல்லா எழுதப் படிக்கத் தெரியும். சொக்கனுக்குத் தெரியாமதான் எழுதியிருக்கா. அவங்கிட்ட சொன்னா பாப்போமின்னுட்டு போய்த் தூங்கியிருவான். திருச்சியிலயிருந்து குமாரபிள்ளை ஆள்தான் இன்னைக்கு மத்தியானம் ஓலை கொண்டுவந்தான். சேதுபதிகிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணிட்டு அப்படியே ஓடி வர்றேன்.’

மீண்டும் நாலாவது ஓலையின் கடைசித் தெலுங்கு வரிகளை வாய்விட்டு வாசித்தாள் “விஜயநகர வரலாற்றின் மகத்தான நாயகன் விஸ்வநாதன் கட்டிய கோட்டைக்குள் சிறையிருந்தபடி இதை எழுதுகிறேன். அவர் மேலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார். உங்கள் மருமகள் அலர்மேல் மங்கை.”

‘அக்கா, அவ மகா புத்திசாலி. நான் பெண் கேட்டுப் போனபோது என்னய தனியா சந்திச்சி ஆயிரம் கேள்வி கேட்டா. பிறகுதான் சம்மதிச்சா. சந்திரகிரியில் அவ சொல்லுக்கு மறு சொல் பேச ஆள் இல்ல. ராணின்னா

அவதான். மகாராணி. இங்க வந்து மாமியார் கிழவி மங்களத்துகிட்ட மாட்டிக்கிட்டு சீரழியிறா.'

'ஏண்டா, கிழவியோட விருப்பப்படி அவ தம்பி மக விலாசினியவே இவனுக்கு கட்டி வைச்சிருக்கலாமே!'

'இவன் மாட்டேன்னு பிடிவாதமா நின்னான். அப்புறந்தான் அவள சத்தியமங்கலத்துல கட்டிக் கொடுத்தது. கிழவி இவன் கல்யாணத்துக்குவரலை. சூத்திரச்சிய பிடிச்சி கட்டி வச்சிட்டேன்னு என்கிட்ட சண்டை.'

'நம்ம ஆள்கள்லயே வடக்கிருந்து யாரையாவது கட்டியிருக்கலாமில்ல. நீ ஏன் பலிஜவாரு பொண்ண கொண்டுவந்த?'

'அக்கா, உனக்கு நாட்டு நிலம தெரியலை. வடக்க நம்ம கொல்லவாருக்கு நாடு மட்டுமில்ல, ஒத்தக் கோட்ட கூட இல்லை. எட்டுத் தலமுறைக்கு முன்னால பெரிய ராயர் காலத்துலயே நம்ம கோட்டைகள் எல்லாம் பலிஜவாரு கைக்குப் போயிருச்சு. இப்ப நாடு அவங்கிட்டயும் இல்ல. காவேரிக்கு வடக்கயும், வடுக நாடு முழுக்கவும் துலுக்கன் அடக்கிட்டான். ராயலசீமைய பீஜப்பூர் வச்சிருக்கான். நம்ம ஆளுக்கல்லாம் வாள கீழே போட்டுட்டு மறுபடி மாட்டுக்குப் பின்னால போயிட்டானுக. திருப்பதிக்கு வடக்க ஒட்டநாடு வரைக்கும் கிருஷ்ண கோதாவரி ஆத்துப் பாசனமெல்லாம் ரெட்டிமாரும் சில வெலமவாரும் தான் நாடுக வச்சிருக்கானுக. அவனுகளே துலுக்கனுக்குக் கப்பம் கட்டிக்கிட்டிருக்கானுக; இந்த லச்சணத்துல கொல்லவாருன்னா மதிக்க மாட்டேங்கான். இதுல எங்க போய் பொண்ணு தேடச் சொல்லுற? நமக்கு இளவரசிகதான் வேணுமின்னா அவனுக பொண்ணு கொடுத்தான? நம்ம பாளையங்கள்ல பொண்ணு எடுத்தா கௌரவக் குறைச்சல்னு அந்தக் காலம் தொட்டு மதுரை ராசாக்கள் எடுக்கிறதில்ல. இந்த சாமிமாரு வேற இவனுக ராசாக்களான உடன சத்திரியன்னு சொல்லிப் போடுறானுக. மதுரைக்காரன் காசியப கோத்திரமாம். வடுகனுகளுக்கு வீட்டுப் பேர் தான் உண்டு. இந்தக் கோத்திரம் எங்கிருந்து வந்ததுன்னு தெரியல. இவன் செஞ்ச பாக்கியம்தான் மங்கம்மா சம்மதிச்சது. அவளோட இந்தக் கெழவி இன்னைக்கு வரைக்கும் பேசல. கெழவி இருக்கிற வரைக்கும் அரண்மனையில இவளுக்கு எந்த அதிகாரமும் தரவிட மாட்டா. என்னைய இந்தப் பயலுக விரட்டி விட்டதுல இவளுக்கு ரொம்ப வருத்தம். என்னயக் கூப்பிட்டு சொன்னா, கொஞ்ச காலம் பொறுங்க; கெழவி சாகட்டும்; அப்புறம் பாத்துக்கிறேன்னா. நான்தான் மனசு ஒவ்வாம கிளம்பிப் போயிட்டேன்.'

'ஏண்டா, இங்க வர வேண்டியதுதான்...'

'அங்க எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா இருந்தேன். இங்க அப்படி இருக்க முடியாது.'

'இந்தா கௌம்பிட்டா?' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

கையைக் கும்பாவிலேயே கழுவிவிட்டு எழுந்த வேங்கடர் 'இங்க எனக்குத் தூக்கம் வராது. துணைக்கு ஆள் அனுப்பு. மாமாவை இப்பவே மலையில் போய் பாக்குறேன். நீயா ஓலய எழுதி பாளையங்களுக்கு அனுப்பிரு. தலைக்கோழி கூப்பிட ஓலை அவங்களுக்கு கிடைக்கணும்.

அம்மைய நாயக்கனூர், நிலக்கோட்டை, உத்தப்ப நாயக்கனூர், சாப்டூர், தொட்டப்ப நாயக்கனூர் எல்லாம் நாளை மதுரைக் கோட்டைக் காவலுக்குப் போகணும். வடகரை, போடி, பழனி, தேவதானப்பட்டி, ஆய்க்குடி, விருபாச்சி, எரச்சநாயக்கனூர், கண்டமநாயக்கனூர், கோம்பை, தேவாரம், தொட்டியங் கோட்டை, மாம்பறை, சொக்கம்பட்டி, பள்ளியப்ப நாயக்கனூர் எல்லாம் நாளை ராத்திரிக்குள்ள திண்டுக்கல் வந்துசேரணும்.'

'பள்ளியப்ப நாயக்கனூரை விடுடா. பாவம் நொடிச்சிக் கெடக்கான். அவன் குதிரைகள்லாம் நம்ம கிட்ட நிக்கிது. அறுபது கோட்டை கேப்பைக்காக அல்லிபட்டிய விருப்பாச்சி பாளையத்துக்கு வித்துருக்கான். பஞ்சம் பண்ணுன கொடுமையப் பாரு. உங்க மாமா போயி விருப்பாச்சியில சத்தம் போட்டு, பாளையக்காரம் மானத்த வாங்காதீங்கடான்னு சொல்லி திருப்பி வாங்கிக் கொடுத்தாரு.'

'சரிக்கா கிளம்புறேன். வடகரைக்கும், பழனிக்கும் மட்டும் ஓலய எம் பேருல எழுது.'

'தெரியும்டா. போயிட்டு வா.'

இரண்டு குதிரைகள் தெற்கு நோக்கி விரைந்தன. முன்னால் நான்கு வேட்டை நாய்கள் ஓடிக்கொண்டிருந்தன; சற்று நேரத்தில் மலையேறிய வண்டித் தடத்தில் புகுந்தன.

அடர் வனத்தின் இருளில் தேமல் திட்டுகள் போல நிலவொளி இறங்கிப் படிந்திருந்தது. அருகில் எங்கோ ஓடையின் நீர்ச்சீற்றம் ஒலித்தவாறிருந்தது. சிள்வண்டுகள் இரைந்து காட்டின் உயிர்ப்பைக் காட்டின.

வெகு தூரம் ஏறியபின் இரண்டு நாய்கள் பாதையின் எதிரே வந்தன. குரைக்காமல் மெலிதாகச் சீறியபடி வாலை ஆட்டின. இடப்புறமாகப் பிரிந்து மேலேறிய ஒற்றையடிப் பாதையில் அழைத்துச் சென்றன. நாலைந்து தடிகளாய் நீண்டிருந்தது கடவுப் பாலம். கீழே ஓடையில் நீர் சீறித் தாவிப் பாறைகளில் சுழித்து வழிந்து ஓடியது. கடந்து கரையை ஒட்டிய பாதையில் சென்றனர்.

எதிரே மேலும் ஒரு நாய் ஓடி வந்தது. தூரத்தில் ஒரு குதிரை மட்டும் நிற்பது தெரிந்தது. நெருங்கியதும் அந்தத் தவிட்டு நிறக் குதிரை சுற்றி வந்து இடம் மாறி நின்றது. கட்டியிருக்கவில்லை. உயர்ந்திருந்த கோங்க மரத்தில் இணைத்திருந்த கம்பு ஏணி வழியே இரண்டு பேர் கீழிறங்கி வந்தனர். மேலே உச்சியில் பரண் தெரிந்தது. வேங்கடர் இறங்கியதும் குதிரையை ஒருவன் வாங்கிக்கொண்டான். மற்றவன் அவரைப் பாறைகளினூடே மேலே அழைத்துச் சென்றான்.

இரண்டு நாய்கள் எதிரே இறங்கி வந்தன. நீரின் ஒலி வலுத்துக்கேட்டது. ஓடையின் இடப்புறம் பெரும் பாறையொன்று எழுந்து நின்றது. பாறையில் ஏறினார்கள். சில நாய்கள் ஆங்காங்கே படுத்திருந்தன.

பாறை உச்சிக்கு வந்தபோது அவரைக் கண்டார்கள். சுற்றிலும் வளைத்து நின்றன மலைகள். வானில் நிலா தனித்து மிதந்தது. கம்பளியைப் போர்த்தியபடி அங்கே பாறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார் கன்னிவாடி பெனுகொல்ல சின்னவல்லக்க சென்ன கதிரி நாயக்கர்.

‘மாமா, எனக்குப் புரியவேயில்லை. பாத்தவங்க வந்து சொன்னாங்க. எனக்குன்னா வெறி தலைக்கேறிருச்சி. காவேரிக்கு வடக்கேயிருந்து சாம்பாஜி அவனோட பெரியப்பனை அடிச்சி நொறுக்கி விரட்டி விட்டானாம். இவன் எக்கோஜி சிதறிச் சின்னாபின்னமாகி ஆத்துத் தண்ணியில் விழுந்து அலங்கோலமா கரை ஏறுனானாம். தஞ்சாவூர்ப் பிடிக்க படை கொண்டுபோன நம்ம பய தென்கரையில் நின்னு சும்மா வேடிக்கை பாத்துக்கிட்டிருக்கானாம். ஒண்ணு அங்கயே கொன்னுகுமிச்சி ஆத்தோட மிதக்க விட்டிருக்கலாம். இல்ல முதல்லயே தஞ்சாவூர் கோட்டைக்குள் சாமி ஊர்வலம் போறமாதிரி அப்படியே சுலபமா நொழஞ்சிருக்கலாம். இவன் ஏன் நானுன்னு படைக்கு முன்னால் போகணும்? குமார பிள்ளைய அனுப்பியிருந்தா நாகப்பட்டினம் போயி நந்திக்கொடிய ஏத்தியிருப்பான். மூணு தடவை ஜக்கம்மா தங்கத் தட்டுல தஞ்சாவூரை வச்சுக் கொடுத்தா. வாங்க மாட்டேனுட்டான். அதுதான் தொலையுது. படுபாவி! இருக்கறதையும் காப்பாத்தத் தெரியலயே. மூணு பக்கமும் பிடிச்சு வந்து திருச்சிய அவனவன் நெருக்கிட்டான் மிராட்டிக்காரன்லாம் ஒரு ஆளா மாமா? என் நெஞ்சு உசரம்தான் இருக்கானுக. சித்து உருவம். செம்பு உருளி மாதிரி இருக்குறானுக. ரெண்டு கையாலயும் ரெண்டுபயகளப் பிடிச்சித் தூக்கி எறிஞ்சிரலாம். பெருவாரியான குதுரைகளை வச்சிக்கிட்டு வெளையாடுறானுக. படுக்காளிப் பயலுக மாமா! துலுக்கனை சாமியா கும்புடலாம், இவனுக பண்ணுற கொடுமைக்கு அளவில்ல. ஊர்கள்ல புகுந்து கோழியக் கூட விடுறதில்லை. எல்லாக் கோயிலையும் மிராட்டிக்காரன் கொள்ளையடிச்சிட்டான். திருவண்ணாமலையில மூணுமாசம் காத்திருந்து தீபத்தன்னைக்கு வளைச்சிருக்கான். சனம் எல்லாத்தையும் பறி கொடுத்துட்டு கட்டின துணியோட செதறி ஓடியிருக்கு. என்ன ஒண்ணு நல்ல விஷயம்னா பொம்பளைகள கை வைக்கிறதில்லை.’

கதிரி நாயக்கர் வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டு வந்து உட்கார்ந்தபிறகு கேட்டார். ‘தஞ்சாவூர்காரி தற்கொலை பண்ணுனதிலிருந்து இவனுக்கு மூளை கலங்கியிருச்சா மாப்ள? அப்டி ஆயிரும் பாத்துக்கோ. கல்யாணம் ஆகுறதுக்கு முந்தி இளவட்ட வயசுல ராயவேலூர் அரண்மனையில ஒருத்திய பார்த்தேன். கொஞ்ச நேரம்தான். புத்தி பேதலிச்சுப் போச்சு மாப்ள. நமக்கு கட்டித் தரமாட்டாங்க. தெரிஞ்சதுதான். ஆனாமுடி நரைச்சப் பிறகும் அவள் மறக்க முடியல பாத்துக்கோ. அவளும் பேரன் பேத்தி எடுத்துட்டு தீப்பாய்ஞ்சு போயிட்டானு கேள்விப்பட்டேன். பிறகுதான் பழைய ரூபத்தை மறந்துட்டு சாமின்னு நெனச்சிக்கிருவேன்.’

‘இல்ல மாமா. அந்த மங்கம்மாவை விட இவதான் நல்ல அழகி. நடந்து வந்தான்னா அந்த இடமே விளக்கு ஏத்துன மாதிரி பிரகாசமாயிரும். அது மட்டுமில்லை, வாள் வீசத் தெரியும். ஓடுற குதிரையிலிருந்து நொட்டாங்கையால குறி தவறாம சுடுவா. படை நடத்திப்போனா பிஜப்பூரையும் ஜெயிச்சி வருவா. அவ்வளவு விவரம். இவ கொள்ளுத் தாத்தா செஞ்சி ராஜா தூபக்கால் கிருஷ்ணப்ப நாயக்கர் பெரிய ராயருக்கு தாயாதி தெரியுமா? இந்தக் கூருகெட்ட ராணிக் கெழவி எந்நேரமும் அவள சூத்திரச்சின்னு கரிச்சுக் கொட்டுது!

‘என் உசரத்துக்கு நிக்கறதால கண்ணை நேருக்கு நேராப் பாத்துப்

பேசுவா. அவ சொல்லுறதெல்லாம் கேக்கணும்னு தோணும். அந்த கம்பீரமும் கர்வமும் நம்ம பொண்ணுகளுக்கு வராது மாமா.’

‘பிறகென்னடா இவனுக்கு நோக்காடு?’

‘அதுதான் புரியலை மாமா. தேன் குடிச்ச நரி மாதிரி அவ மடியிலேயேதான் எந்நேரமும் கெடந்தான். கெழவி இல்லைன்னா அவளை ராணியாக்கீரலாம். விடிவுகாலம் பொறந்திரும். இந்தச் சொக்கனை இருபது வருஷமா ராவும் பகலும் கூடவே நின்னு பாத்துருக்கேன் மாமா. அவன் அசைஞ்சாலே என்ன அர்த்தம்னு தெரியும். எனக்கே பிறகு நிதானம் பிடிபடல. ஒரு நாள் என்னய கூப்பிட்டு பிரமாதமா திட்டங்களை நுணுக்கமாகப் போடுவான். பழைய ஆளாயிட்டான்னு சந்தோஷப் பட்டா அப்புறம் ஒரு மாசம் ஆளயே பாக்க முடியாது. கேட்டா ஏடுகளைப் படிச்சிக்கிட்டிருக்கான்னு சொல்வாங்க. என்ன எழவு படிப்போ! மாமா, கோவிந்தய்யா கிளப்பிவிட்டதில தப்பில்லை. பாப்பான் எப்படியோ சரியா கணிச்சிட்டான். நம்ம வாயால வெளிய சொல்ல முடியாதுங்கறதால பேசாம இருக்கேன். இவம் புத்தியில் என்னமோ பெசகிப்போச்சு மாமா’ வேங்கடரின் கண்கள் கலங்கிச் சொட்டின.

‘விடு மாப்ள. உள்ளபடி நடக்கட்டும். முடிஞ்சதைச் செய்வோம். என் கதையக் கேளு. நீ போனப்புறம் என்னய திருச்சிக்குக் கூப்பிட்டாங்க. தர்பார்ல வச்சு இந்த வடுகப் பாப்பான் கோவிந்தன் என்கிட்ட சொல்றான். இனி வருஷம் பத்தாயிரம் கோபாலிச் சக்கரம் கன்னிவாடி கொடுக்கணுமாம். திரும்பி முத்துலிங்கத்தை முறைச்சிப் பாத்தேன். அவன் சிம்மாசனத்துல இருந்து பைய எந்திரிச்சி உள்ள ஓடிட்டான். நான் பேச வாயெடுக்கறதுக்குள்ள, இந்தாவர்றேன்னு பாப்பானும், அவன் பின்னால உள்ள போயிட்டான். நீ இருந்து, சொக்கன் கேட்டிருந்தா தலைய அடகு வச்சுக்கூட கொடுப்பேன்.

‘கன்னிவாடி வழக்கமா கொடுக்கறது நாலாயிரம் சக்கரத்துக்கு மேல போகாது. அதுகே ஆறு மடங்கு வெளஞ்சு வந்தாதான் உண்டு. சமுசாரிக்குப் பாதி போயிரும். பொதுவா இருபதாயிரம் கோபாலிக்கு விளையறதே இழுத்துப் பிடிச்சிதான் வரும். நான் எங்க போயி கொள்ளையடிக்க? அதுக்குள்ள பஞ்சமும் வந்து போச்சி. மாப்ள கிட்ட பெருவாரியா கடனை வாங்கி சனத்துக்கு கஞ்சி ஊத்திட்டேன். நாப்பதாயிரத்துக்கு மேல இருக்கும். அவனும், சரி மாமா நல்ல காரியந்தான், உங்களால திருப்பித் தரமுடியாது. பதினைஞ்சாயிரம் கோபாலின்னு வச்சிக்கிருவோம்னு சொல்லியிருக்கான்.’

*

**ம**ணப்பாறைக் கோட்டைக்கு வெளியே மரநிழல்களிலெல்லாம் குதிரைகள் நின்றிருந்தன. போடிக் குதிரைகள்தான் அதிகம்; அறுநூறு. கன்னிவாடி, பழனி, விருப்பாச்சியிலிருந்து முறையே நானூறு வந்திருந்தன. மற்றப் பாளையங்களிலிருந்து அதற்குக் குறைவான எண்ணிக்கைதான். எந்தப் பாளையமும் அன்று அடுப்பு மூட்டவில்லை; மணப்பாறையின் விருந்து தயாராகிறது. ஆங்காங்கே கல்லடுப்புகள் எரிய பெரிய மொடாக்களில் சோறு கொதித்துக்கொண்டிருந்தது. பெரியவர்கள் பந்த ஒளியில் ஆடுபுலி ஆட்டம், சொக்கட்டான், பதினெட்டாம் கல்

விளையாடினர். இளைஞர்கள் மற்றவர்களை குசலம் விசாரித்துக்கொண்டு அந்த வட்டாரமெங்கும் சுற்றித் திரிந்தனர். கையில் பிடித்திருந்த வேல்களின் கூர்முனைகள் வானில் வெள்ளிகளைப் பழித்தன. ஆட்களை விட ஆயுதங்களே அதிகம் இருப்பதான பிரமை தோன்றியது.

அரண்மனைக்குள் வலதுபுறம் இருந்த கூடத்தில் பாளையத் தலைவர்கள் அமர்ந்து தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தனர். கிண்டலும், கேலியும் வடுகப் பழமொழிகளுமாக சபை களை கட்டியிருந்தது. ஜமுக்காளத்தின் மேல் தாம்பாளத்தில் பழங்களும், தின்பண்டங்களும், தயாராக எச்சில் பணிக்கங்களும் இருந்தன. குதிரைகளுக்குப் புதிதாக வந்த செருமலுக்கு வைத்தியர்கோடு சேர்ந்து தான் கண்டுபிடித்த மருந்தைப் பற்றி கதிரி நாயக்கர் விலாவாரியாக விளக்கத் தொடங்கினார். தொட்டியங்கோட்டை பெத்தலு நாயக்கர் குறுக்கிட்டார். ‘மாமா, கொஞ்சம் பொறுங்க. தம்பிய வரச்சொல்றேன். அவன்தான் நம்ம குதிரைக்காரன்’ என்று சொல்லிவிட்டு அவனை அழைத்துவர ஆளனுப்பினார். ‘முந்தியே அவன் இங்க கூட்டி வந்திருக்க வேண்டியதுதானடா’ என்று கதிரி சத்தம்போட்டார்.

சாப்பிட வாருங்கள் என்று மூன்றாவது முறையாக எர்ரகாமு வந்து அழைத்தாள். பேச்சை விட்டு எழ யாருக்கும் மனமில்லை.

தொட்டியங்கோட்டை சிந்தம நாயக்கன் வந்து தன் அண்ணனை வணங்கினான். மீசை கருத்து விரிந்து, பருக்கள் அடங்கி மாநிறம் மினுமினுக்கும் பருவம். நீள் முடியை உச்சியில் முடிந்து அவன் போட்டிருந்த கொண்டை சிறு கலயம் தலையில் நிற்பது போலாகி அவன் உயரத்தை பத்து சாணுக்குக் காட்டியது. அண்ணன் அறிமுகம் செய்துவைக்க ஒவ்வொருவராக வணங்கினான்.

‘இலை போட்டாச்சு’ என்று எர்ரகாமு சொல்லிவிட்டுப் போனாள்.

உள்ளே சென்று பிரகாசமாக நிலவொளி இறங்கிக்கொண்டிருந்த நடுமுற்றத்தில் கை கழுவிவிட்டு இடப்புற வாசலில் நுழைந்து நாடக சாலைக்கு வந்தார்கள். பிரமாண்டமான வாசலுக்கு வெளியே தூரத்தில் தீப்பந்தங்களோடு கிழக்கு கோட்டை வாசல் தெரிந்தது. பாய் விரிக்கப்பட்டு முன்னால் தையல் ஆலிலைகள் இருந்தன. போடிநாயக்கனூர், ஜக்கு நாயக்கர், மாம்பரை குமார கதிரி நாயக்கரைத் தன் அருகே அழைத்து அமர்த்திப் பேச்சுக் கொடுத்தார். பெரிய ஏனங்களில் குதிரைவாலி, வரகு, நெல்லுச்சோறு தனித்தனியே இருந்தன. கறி வகைகளும், மரக்கறிகளும் மண்சட்டிகளில் வரிசையாக இருந்தன. மணப்பாறை நல்லம நாயக்கனின் மூன்றாவது சம்சாரம் எர்ரகாமு உறவினர்களான மூன்று குமரிகளையும், இரு சிறுமிகளையும் உதவிக்கு வைத்துக்கொண்டு பரிமாறினாள். மூத்த சம்சாரம் ராமுலம்மாள் சற்று தள்ளி நின்று மேற்பார்வை பார்த்தவாறிருந்தாள். சிறுமிகள் ஓடோடி வடகங்களை முதலில் பரிமாறினர்.

விருபாஷி திருமலை சின்னப்ப நாயக்கர் வேகவேகமாக உள்ளே நுழைந்தார். விருந்தோம்பும் நல்லம நாயக்கர் கேட்டார். ‘என்ன அண்ணா, படைகளை அனுப்பிட்டு இவ்வளவு பிந்தி வாறீக? நல்லவேளை, சரியான நேரத்துல வந்தீங்க.’

எல்லோருக்கும் முகமன் கூறிவிட்டு கடைசியாக அமர்ந்தார். ‘நேத்துக் காலையிலேயே ஒரு பஞ்சாயத்து வந்துருச்சி. வராகிரி கோட்டை வரை போயிட்டு வாரேன். காளாஞ்சிப்பட்டி, அன்னம நாயக்கனூர் சமுசாரிக கிட்டே எள்ளு எடுத்த ஏவாரி ரெண்டு வருசமா சக்கரம் கொடுக்கலயாம். மதுரையில போயி அவனை கேக்குற நிலமையிலா அங்க இப்ப ஆட்சி நடக்கு? வாணியனை தற்செயலா பழனியில் பாத்திருக்காங்க. அப்படியே தூக்கிட்டுப் போயி கோட்டைக்குள்ள் போட்டுட்டாங்க. தாக்கல் கிடைச்சு வடக்கு ஆவணி வீதி செட்டிமார் வந்தாங்க. பேசி முடிச்சி மொத்தச் சக்கரத்தையும் வாங்கிக் கொடுத்துட்டு, அபராதம் போட்டு ஆள விட்டேன்.’

நெல்லுச் சோறை ஒருவர் கூடச் சீண்டவில்லை. வரகும், குதிரை வாலியும் தான் இலைகளில் இருந்தன. போடி ஜக்கு நாயக்கர் பேசினார். ‘மணப்பாறை மண்ணுல வச்சு இன்னைக்கு ஒரு நல்ல காரியம் முடியப்போகுது. சிந்தம நாயக்கனுக்காக மாம்பரை குமார கதிரி நாயக்கரிட்ட நான் பெண்ணு கேக்கிறேன்.’

எதிர்பாராத வேண்டுகோளைக் கேட்டு தொட்டியங்கோட்டை சகோதரர்கள் திடுக்கிட்டனர். எல்லோரும் ஆரவாரமாக வாழ்த் தினர். மாம்பரைக்காரர் மெதுவாக வாய் திறந்தார். ‘அவசரப்படாதீக மாமா. எனக்கு சம்மதம்தான். ஆனா அவ்வாகிட்ட கேக்கணும்.’

கன்னிவாடிக்காரர் குரல் உயர்ந்தது. ‘ஏண்டா, உனக்கே நரைச்சிருச்சி. இனி அவ்வாகிட்ட என்னத்தைக் கேக்கப் போற? வீட்டுக்குள்ள இருந்துக்கிட்டு இந்தக் கிழவிக பண்ணுற அதிகாரம் தாங்க முடியலப்பா. கெழவிக பேச்சைக் கேட்டுக் கேட்டுத்தான் வடுகனுக வெளங்காமப் போறானுக.’

எர்ரகாமு வெடுக்கென்று கேட்டாள் ‘தீயில ஏத்தி குல தெய்வமுன்னு கும்புடப் போறீங்க. அப்ப உயிரோட இருக்கும்போது தெய்வங்க அதிகாரம் பண்ணத்தான் செய்யும்?’

ஜக்கு நாயக்கர் கடகடவென்று சிரித்தார். ‘பார்ரா எரியோட்டுக்காரி என்னபோடு போடுறான்னு!’ என்று சொல்லிவிட்டு மணப்பாறைக் காரரைப் பார்த்துச் சொன்னார் ‘மாப்பிளை, பாளையத்தை பாப்பாகிட்ட விட்டுட்டு நீ மாடு மேய்க்கப் போடா!’

மூத்த சம்சாரம் ராமுலம்மா சிரித்துக்கொண்டே பெருமையோடு சொன்னாள் ‘பின்னே... இவ நான் பாத்துக் கட்டிக்கொண்டு வந்தவளாக்கும்!’

மாம்பரைக்காரர் மீண்டும் ஆரம்பித்தார் ‘இல்ல மாமா, ராயர் காலத்துல கொட்டியம் நாகம நாயக்கரோட சேர்ந்து எங்க முப்பாட்டன் சக்ரம் தம்மைய நாயக்கர் வடக்க துலுக்கனோட சண்டைக்குப் போன காலத்துல இருந்து அவ்வா கதைய தொடங்கீரும். விசுவநாத நாயக்கர் பிறந்த போதிருந்து நாங்க கூட இருந்துருக்கோம். அவங்க தாயாதிகன்னு அவ்வா பெருமை பேசிக்கிட்டிருக்கும். தலமுறையில் முக்காவாசிப் பேரு படைவெட்டுல தான் பட்டுப் போயிருக்காங்க.’

சென்ன கதிரி குறுக்கிட்டார் ‘மதுரையில கோட்டை போட முந்தியே தொட்டியங்கோட்டை பாளையம் வந்திருச்சுடா. அப்ப காடு வெட்டிக் குடி போகும்போது பெத்த மாக்கள நாயக்கர் ஒத்த ஆளா சமுதாயத்தில

யானைக் குத்தக் கொன்னதாக் கேள்வி. இப்ப தஞ்சாவூர் கோட்டைக்குள்ள நானும் இவன் தந்தையாரு மாக்கள நாயக்கரும் தான் முதல்ல புகுந்தோம். அசகாய சூரன்ல! கொஞ்ச நேரத்துல நகரத்தையே அடக்கிட்டான்.'

பெத்தலு நாயக்கர் ரோஷத்தோடு சொன்னார். 'தாத்தா, நாங்களும் ராயர் காலத்துலயே வடக்க படை கொண்டு போனவங்க தான். கயத்தாறு சண்டையில நாங்க ஜெயிச்சுக் கொடுத்ததாலதான் விசுவநாத நாயக்கர் நாப்பத்தி மூணாவது கொத்தளத்தோடு மேற்கு வாசல்லயும் எங்கள நிக்கவச்சாரு. நாங்க பாக்காத சண்டயா! சும்மால்ல, நாங்க பெஞ்ச வல்லக்ககுலம்! தெரிஞ்சிக்கிடட்டும்.'

மாம்பரையார் தொடர்ந்தார் 'அதுதான் மாமா, நானும் சொல்றேன், வெக்கிலியர் வல்லக்கவாரு கூட சம்பந்தம் பண்ற பழக்கம் இல்லையே...'

'பழக்கம் நாம் உண்டாக்குறதுதான் மாப்பிள. உனக்கு சம்மதமா? அதைச் சொல்லு. அவ்வாகிட்ட நான் வந்து பேசிக்கிறேன். உறுதியாகச் சொல்லணும்.'

'சரி'.

சென்னகதிரி போடிக்காரைப் பார்த்து உற்சாகமாகத் தொடர்ந்தார். 'மாப்ள, இந்த வருசமே எல்லாரையும் கூப்பிடு. ஜக்கம்மா கோயில்ல வச்சு ஓல எழுதணும். கொல்லவாரு ஒன்பது பிரிவுல மூத்த குடி சக்கிலியாரையும் கீழே தாசரி வகையறாக்களையும் விட்டுட்டு ஏழு பேரும் ஒண்ணுமண்ணா சம்பந்தம் பண்ணணும்னு எழுதிக் கொடுக்கணும். கோயில்ல வச்சு எழுதினாதான் இவனுகளுக்குப் புரியும்.'

'சாப்பிட்டுட்டு கம்பளிய விரியப்பா. இங்கயே வெத்தில மாத்திருவோம்.'

எர்ரகாமு கேட்டாள் 'மாமா, பாப்பா பேரேன்ன?'

'மூத்தவ பொம்மி, எளயவ எர்ரசெல்லி.'

எர்ரகாமு விரைந்து போய் சிந்தமனின் நாடியைப் பற்றித் தலையை உயர்த்தினாள். அவன் வெட்கப்பட்டு தலை சரித்தான். 'மாமா, உங்க மாப்பிளைக்கு ரெட்டிப்பு சந்தோஷம். மூத்தவ எர்ர பொம்மியா, நலுப்பு பொம்மியான்னு யோசிக்கிறான்' என்று சொல்லிவிட்டு அவனிடம் மெல்லிய குரலில் சொன்னாள் 'பொண்டாட்டிகளோட கல்யாண விருந்துக்கு வருவயில்ல. அப்ப வச்சிக்கிறேன்.'

சாப்பிட்டபின், பூஜைகளுக்குப் பிறகு தாம்பூலம் போடலாம் என்று வடக்கு வாசலுக்கு அருகே இருந்த ஜக்கம்மா கோயிலுக்குக் கிளம்பினர். வேங்கடர் எர்ரகாமுவைக் கூப்பிட்டு போடி ஜக்கு நாயக்கருடன் வந்திருந்த முத்துலிங்கத்தைப் பார்த்தவாறு சொன்னார், 'செல்லி, இந்த மாமனுக்கு உடம்பு சேட்டமில்லன்னு எங்கிட்ட சொன்னார். கோழிச்சாறு வச்சுக்கொடு. இங்கேயே இருந்து தேறட்டும். திரும்பி வரும்போது கூட்டிட்டுப் போறோம்.'

இருண்டு போன முத்துலிங்கம் யார் முகத்தையும் ஏறிட்டுப் பாராமல் மெதுவாக உள்புறம் போனார். ஜக்கு நாயக்கர் வேங்கடரைப் பார்த்துப் புன்னகைத்தார்.

கோயிலில் உறுமிகள் விம்மி இழைய மூன்று தாசரிகள் போர்க்களப்

பாடல்களை வடுகில் பாடினர். பலி கொடுத்து பூஜை முடிந்தது. மணப்பாறைப் பாளையத்து அவ்வாவை ராமுலம்மாவும், எர்ரகாமுவும் கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்து வந்தார்கள். அவ்வா ஜக்கம்மாவை வணங்கியது. பலி பீடத்திலிருந்த வாளைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு எடுத்து பேரன் நல்லம நாயக்கனிடம் கொடுத்தது.

எல்லோரும் வரிசையாக வெற்றிலை வாங்கிக்கொண்டு பலி பீடத்திலிருக்கும் சிவப்புக் கச்சையையும், மஞ்சள் துண்டையும் எடுத்துக்கொண்டனர். பிறகு வேங்கடர் பேசினார்:

'நாளைக்கான பொறுப்புகள் -

கன்னிவாடிக் குதிரைகளுக்குத் தலைவன் தாராபுரம் கொண்டம நாயக்கன்.

மதுரைக் கோட்டை இரண்டாம் காலாள் படைத் தலைவன் பள்ளியப்ப நாயக்கனூர் சக்கள நாயக்கன்.

எல்லா காலாள் படைக்கும் தளபதி ராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர்.

அனைத்து ஆணைகளும் சென்ன கதிரி நாயக்கரிடமிருந்தே வரும். அவரே பிரதான தளபதி...'

'குதிரைப் படைத் தளபதி யாரு?'

'தொட்டியங்கோட்டை சிந்தம நாயக்கன்.'

சட்டென்று உற்சாக விளிகளும், ஆரவாரமும் எழும்பியது. மகிழ்ச்சியால் அவனது அண்ணன் பெத்தலு நாயக்கரின் கண்கள் பனித்தன.

ஜக்கு நாயக்கர் துள்ளிக் குதித்தார் 'இதுக்குத்தாண்டா நம்ம வெங்கிடு வேணும்கிறது. அப்படிப் போடு. புது மாப்பிள்ளைக்கு கீழே நாமெல்லாம் சண்டைக்குப் போவோம்.'

**கோ**ட்டைக்குள்ளிலிருந்து குமாரு பிள்ளை ஓலை அனுப்பியிருந்தார். புலருவதற்கு முன் தெற்கு வாசலை உடைத்து நுழையுமாறும் எதிர்ப்பு இருக்காது என்றும் ஓலை கூறியது. மைசூர்க்காரனால் கொல்லிமலைச் சாரலிலிருந்து விரட்டப்பட்டு திருச்சி கோட்டையில் இருநூறு வீரர்களுடன் தஞ்சம் புகுந்திருந்த தம்மம்பட்டி பாளையத்தின் சாமிமாதா நாயக்கன் தாக்குதல் தொடங்கியவுடன் உள்ளிருந்து தெற்கு அலங்கத்தின் மீது பாய்ந்து அதைக் கைப்பற்றி விடுவானாம். தெற்கு வாசலில் பீரங்கிகளைத் தவிர்க்கவும் என்று ஓலை கேட்டுக்கொண்டது. ராமநாதபுரம் பொன்னுத் தேவர் பின்னிரவுக்கு மேல் வந்து சேர்ந்தார். திருச்சிக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவில் தண்டு இறங்கியிருந்த மதுரை வீரர்களுடன் அவரது ஆயிரம் காலாள்களும் நூறு குதிரை வீரர்களும் இணைந்து கொண்டனர்.

விடிவெள்ளி தோன்றியதும் உத்தப்பன் மேற்கு வாசலை ஐந்து பீரங்கிகளாலும் தாக்கிக்கொண்டிருந்தான். முக்கால்வாசிப் படைகள் அவனுக்குப் பின்னேதான் நின்றிருந்தன. மேற்கே தாக்குவதாகப் போக்குக் காட்டிய படை தெற்கு வாசலை நோக்கிப் பாய்வதற்கு வசதியான அணிவகுப்பில் நின்றது.

நான்கு வெடிகள் தொடர்ந்து வெடிக்கவும் தெற்கு வாசலின் கீழ்ப்பகுதி சிதறி மேற்புறம் தீப்பற்றி எறிந்தது. உள்ளே தெற்கே அலங்கத்தில் மோதல் ஒலிகளும் வெறிக் குரல்களும் எழுந்தன.

தீ சற்றே அடங்கியதும் கதிரி நாயக்கர் வாயில் விரலை மடக்கி வைத்து சன்னச் சத்தம் கொடுத்தார். எக்காள ஒலி போல் அது அலையலையாய் மேலேறியது. தெற்கிலும் மேற்கிலும் முரசுகள் முழங்கின. போர் விளிகள் உயர்ந்தன.

இரும்புக் கவச உடையிலிருந்த சிந்தம நாயக்கன் ஓங்கிய வாளுடன் அம்பு போலக் குதிரையில் தெற்கு வாசலை நோக்கிப் பாய்ந்தான். பெத்தலு நாயக்கரும் கொண்டம நாயக்கரும் 'ஜெய ஜெய ஜக்கம்மா...' என்ற கூவலோடு அவனைத் தொடர்ந்தனர். மதுரை, கன்னிவாடியின் கவசமணிந்த குதிரை வீரர்கள் அறுநூறு பேர் இரண்டு வரிசையாக உள்ளிறங்கினர். ஜக்கு நாயக்கரின் குதிரைகள் மேற்கிலிருந்து விரைந்து வந்து தெற்கு அணிவகுப்பின் வாலில் இணைந்தன.

**வே**ங்கடரும் கதிரியும் ஜக்கு நாயக்கரும் திருச்சி கோட்டைக்குள்ளே தெப்பக்குளத்தின் படிகளில் அமர்ந்து வெற்றிலை மென்றவாறிருந்தனர்.

அருகே வந்து நின்ற பொன்னுத்தேவரிடம் வேங்கடர் சொன்னார் 'உள்ள நின்ன அவ்வளவு பேர்கிட்டயும் ஆயுதத்தைப் பிடுங்கிட்டு அவங்களை மலை மேல ஏத்து. துலுக்கனுகளை தனியாப் பிரிச்சிரு. காலையில பார்த்துக்கிடலாம். உன் ஆள்கள் மூணு வளையமா காவல் நிறுத்து. உத்தப்பனை உடனே இங்க வரச்சொல்லிட்டுப் போ.'

'பூன வேட்டைக்கு வந்துட்டோம் போல' என்ற ஜக்கு நாயக்கரிடம் 'இல்ல, வேலை இருக்கு' என்றார் வேங்கடர். ஜக்கு விடைபெற்று உறங்கப் போய்விட்டார்.

வேங்கடரின் யோசனைகளின் படி படைகளை ஒழுங்குபடுத்திவிட்டு, அரண்களில் வீரர்களை நிலைநிறுத்தி கோட்டையை முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிறகு உத்தப்பன் மீண்டும் தெப்பக் குளத்துக்கு வந்தபோது நிலம் தெளிந்துகொண்டிருந்தது.

'உத்தண்டு, விவரமான நம்பகமான பத்துப் பேர கோவிந்தய்யா வீட்டுக்கும் அவன் கூட்டாளி வெங்கய்யா வீட்டுக்கும் அனுப்பனும். தாதனூர்க்காரங்களை கூட்டிக்கோ. பெருவாரியா தங்கத்தையும், சக்கரங்களையும் ஒதுக்கி வைச்சிருப்பானுக. என்ன செய்வியோ தெரியாது, காலைச் சாப்பாட்டுக்குள்ள எங்கயிருக்குன்னு தகவல் எனக்குத் தெரியணும். சூரியன் மறையறதுக்குள்ள புதையல் மங்கம்மா கைக்குப் போகணும். வேறு யாருக்கும் தெரியக்கூடாது. சரி, நீ போ. மாமா, குளத்துல இறங்கி முகத்தைக் கழுவுங்க, போவோம்.'

இருவரும் முற்றத்தைக் கடந்து அரண்மனை வாசலை நெருங்கிய போது மங்கம்மா அதன் ஓரத்தில் காத்திருப்பது தெரிந்தது. அவளுக்கு முன்னே இடுப்பு உயரத்தில் அவள்மீது சாய்ந்து நின்றிருந்த பையனின் இரு கரங்களையும் குனிந்து பற்றிக் குவிந்து புன்னகையுடன் வணங்கினாள். தாவிப் போய் பையனை அப்படியே தூக்கிக்கொண்ட வேங்கடரின் கண்கள் நிறைந்தன. 'ரெண்டு வயசுல உன்னயப் பாத்தது!' என்று சொல்லிவிட்டு மங்கம்மாவிடம் 'எப்படி வளந்துட்டான்!' என்று ஆச்சரியப்பட்டார்.

பையனைப் பார்த்துப் பார்த்து வியந்துகொண்டிருந்த வேங்கடர் திடீரென்று ஞாபகம் வந்தவராக மங்கம்மாவிடம் ‘உனக்கு இவரத் தெரியாதுல்ல...’ என்று கேட்டு அறிமுகம் செய்ய முன்றபோது கதிரி நாயக்கர் சொன்னார் ‘நானே கல்யாணத்தன்னைக்கு மீனாட்சி கோயில்ல இவள அரைகுறையாதான் பாத்தேன். அப்புறம் இவளுக்கு எப்படித் தெரியும்?’

‘தெரியும். எர்ரசின்னு அவ்வாவ நான் பாக்கணும். அன்னலட்சுமி! இங்க கூட்டிட்டு வாரீங்களா? என்னால இப்ப அங்க வரமுடியாது.’

ஆச்சரியத்தில் விரிந்த கண்கள் மலர்ந்து கதிரி சொன்னார் ‘நீ தாம்மா மகாராணி!’

**பொ**ழுது உச்சிக்கு ஏறுமுன் வேங்கடர் உத்தப்பனுடன் சென்று அந்தப்புரத்தில் மங்கம்மாவைத் தனியாகச் சந்தித்தார். ‘உத்தண்டு, செப்புரா.’

‘அம்மா, வெங்கய்யாவை இழுத்துக்கிட்டுப் போய் ஸ்ரீரங்கத்துல ஒரு குடிசையில அவர் பொதச்சு வச்சிருந்த சக்கரங்களையெல்லாம் எடுத்துட்டோம். ஒரு லட்சம் கோபாலிக்கு மேல இருக்கும். இப்ப கோட்டைக்குள்ள வண்டியிலதான் இருக்கு. கோவிந்தய்யா கும்பகோணத்துக்கிட்ட ஒரு பாங்கிணத்துல போட்டு வச்சிருக்கிறாராம். ரெண்டு மூணு லட்சம் தேறம்னு தோணுது. தஞ்சாவூரில் இருந்த காலத்திலிருந்து போட்டு வச்சதாம்.’

வேங்கடர் சொன்னார் ‘கும்பகோணம் தஞ்சாவூர் ராஜ்ஜியத்துல இருக்கு. கவனமாதான் அதை எடுக்கணும். தாதனூர்காரங்களை முதல்ல விட்டு தோட்டம் பாக்கணும். எடுத்து வைச்சிட்டு ராவோட ராவா நூறு குதிரைகளை பாதுகாப்புக்கு இறக்கி தூக்கிட்டு வந்துரலாம்.’

மங்கம்மா உத்தப்பனிடம் சொன்னாள் ‘எதுவும் இங்க வரவேண்டாம். நேரா மதுரைக்கு கொண்டுபோயிருங்க. சேஷய்யாவைத் தூக்கிட்டு வேற நம்பகமான ஆள வச்சுக்கோ. இப்ப வெள்ளாமை எடுத்துட்டதால பாளையங்கள்ல இருந்து சக்கரம் வரத் தொடங்கிடும். இனி ரெண்டு வருஷத்துக்கு விரட்டி வாங்காத. முடிஞ்சதைக் கொடுக்கட்டும். தெற்கு பாளையங்க எல்லாத்துக்கும் நேரில் போயி என்ன ஏது பிரச்சினைனு பாரு.’

உத்தப்பன் சென்ற பிறகு வேங்கடர் கேட்டார் ‘இங்க வேலை முடிஞ்சது மாதிரிதான். கோட்டைக்குள்ள இப்ப ஏழாயிரம் குதிரைக நிக்கிது. அப்படியே மேற்க போயி மைசூர்காரனை அடிச்சி மலைக்கு அப்பால துரத்தி விட்டுரலாமா?’

‘முடியாது. மேற்க சங்ககிரி, சத்தியமங்கலம், தண்டநாயக்கன் கோட்டை எல்லாம் வலுவான கல் கோட்டைக. முற்றுகையைத் தாக்குப்பிடிக்கும். வீணா கால விரயம். மைசூர் தளபதி குமாரய்யன் கெட்டிக்காரன். அவ்வளவு சுலபமா அவனை விரட்ட முடியாது. அதைவிட நல்லது வடக்க பறிபோன நம்ம பாளையங்கள் மீட்கறது தான். மராட்டிக்காரனை விரட்டிடலாம். செஞ்சியை விட்டுட்டு இதைப் பாதுகாக்க கீழே இறங்க மாட்டான். வடக்க டெல்லி பாதுஷாவை சமாளிக்கவே அவனுக்கு நேரம் சரியா இருக்கும். ருஸ்தம் கான் கதைய முடிச்சப் பிறகு காவிரிய தாண்டி துறையூர் மேல போங்க. பிறகு உடையார் பாளையம், அப்புறம் அரியலூர். அந்தப் பாளையக்காரங்கள்லாம் காட்டுல ஆட்களோடு

ஒளிஞ்சு திரியறாங்க. அவங்களும் வந்து சேந்துக்கிருவாங்க. எல்லாம் மண்கோட்டைகள் தான். ஒவ்வொண்ணையும் ஒரு வாரத்துல பிடிச்சிடலாம். மராட்டியனை விரட்டுறத விட முக்கியம் அவன் இங்க கொள்ளையடிச்சு சேர்த்ததை எடுத்துட்டுப் போக விடாமப் பிடிக்கணும். செஞ்சிக்குத் தெரியாம அந்தந்த தளபதிக நிறைய ஒளிச்சி வைச்சிருப்பாங்க. தஞ்சாவூர் கூட இப்ப மோத வேண்டாம். அங்க ஒண்ணுமில்லை. நாட்ட பட்ட மரமா ஆக்கி வைச்சிருக்கானுக. நம்ம நிலைமை எவ்வளவோ பரவாயில்லை. சரி, உங்க சம்சாரங்களை, பேரப்பிள்ளைகளை எல்லாம் திருச்சிக்கு கூட்டி வந்துருங்க. அரசர் உங்களை மறுபடி தளவாயா நியமிப்பார்.'

'வேணாம்மா. இனி அரசரை நம்பி எதுவும் செய்யமுடியாது. பிழைச்சிக் கிடந்தா முத்துவீரப்பன் வளந்தவுடன் வந்து சேந்துக்கிடறேன். இப்போதைக்கு எந்தப் பதவியும் வேண்டாம். உத்தண்டுவை நம்பி மதுரைக்கோட்டைய விடலாம். நான் கிழக்கேயே போறேன். குமாருபிள்ளய அங்க கூட்டிட்டுப் போறேன். படிச்ச ஆளுக அங்க தேவைப்படுது. அப்புறம் ஒரு விஷயம், ராமநாதபுரம் பாளையம் இப்ப செஞ்ச உதவிக்காக அவருக்கு இங்க சபையில் வச்சு ஒரு விருது கொடுக்கலாமா?'

'ம். ஓலை அனுப்பி அவரை வரவழைப்போம். பர. ராஜகேசரின்னு பட்டம் கொடுப்போம்.'

'ஆடம்பரமா இருக்கு.'

'இருக்கட்டும். தஞ்சாவூரை இனிமே அவரு தனியா சமாளிக்க வேண்டியதிருக்கும்.'

**ஆ**யிரம் குதிரைகளுடன் ருஸ்தம் கான் கருவூர் தாண்டி தாராபுரம் பகுதியில் கொள்ளையடித்துக் கொண்டிருந்தபோது சத்தியமங்கலம் கோட்டையிலிருந்து இறங்கிய குமாரய்யன் அவனைத் தாக்கி விரட்டி அடித்தான். தானிய வண்டிகளையும், நானூறு குதிரைகளையும் இழந்து வீரர்களைப் பலி கொடுத்துவிட்டு உயிர் தப்பி திருச்சியை நோக்கி ஓடிவந்தான் ருஸ்தம் கான். வழக்கமாய் அவனைப் பாடாய்ப்படுத்தும் காதுவலி இப்போது உச்சத்திலிருந்தது.

மதுரைப்படைகள் திருச்சியில் நுழைந்தபின் மூன்றாம் நாள் மாலை ருஸ்தம் கான் கருவூர் அருகே வருவதாக ஒற்றர்கள் தெரிவித்தனர். மேற்கு வாசலின் உட்புறப் பாதையின் இருபுறமும் வீரர்கள் காத்து நின்றனர். வலப்புறம் மதிலை ஒட்டி பழனி, ஆயக்குடி வேடர்கள் விற்களுடன் காத்திருந்தனர். இடதுபுறம் மறவர்களும், தாதனூர் கள்ளர்களும் வளரிகளுடன் காத்திருந்தனர். தொடர்ந்து நீண்ட வரிசையில் வடக்கே பாளையக்காரர்களின் வேல்கம்புகளும் தெற்கே மறவர்களின் வல்லயங்களும் காத்திருந்தன. உருவம் தெரியதாவாறு பதுங்கியிருந்தனர். பந்தங்கள் அணைக்கப்பட்டிருந்தன. வருகிற குதிரைகளுக்குச் சேதம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு கதிரி உத்தரவிட்டிருந்தார்.

ஆபத்தை உணராத ருஸ்தம் கான் வழிவிட்ட மேற்கு வாசலுக்குள் விரைந்து புகுந்தான். ஐநூறுக்கும் மேலே குதிரைகள் நுழைந்தன. கடைசிக்

குதிரையும் வந்தவுடன் கதவுகள் மூடிக்கொண்டன. மலையின் பாதத்தைத் தொட்டிருந்தன முன்னணிக் குதிரைகள். அம்புகளும், வளரிகளும் குதிரைகளுக்கு மேலே பறந்தன. ஓரங்களில் மறைந்திருந்த வீரர்கள் குதிரைகளை நோக்கிப் பாய்ந்தனர். என்ன நடக்கிறது என்று ருஸ்தம் கான் கிரகிப்பதற்குள் அவன் நெஞ்சில் வேல் பாய்ந்தது.

முத்துவீரப்பன் அரண்மனையின் மேல்மாடத்தில் தன் அம்மாவுக்கு அருகில் நின்று, கீழே வடபுறத்தில் பிரதான வீதியில் வெறிக் கூச்சலுடன் கருநிழல்கள் மோதிக் கொன்று குவிந்த அந்தப் படுகளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டாம் நாள் விடிந்தபின் படைகள் கிளம்பித் தயாராகி அணிவகுத்து நின்றன. கதிரி நாயக்கரின் குதிரை ஓபுலு, நரசிம்மம் என்ற பேருக்கேற்றப்படி செருக்குடன் நடைபோட்டு மேற்கு வாசலை நோக்கிச் சென்றது. குதிரை மீது அவருக்கு முன்னே முத்துவீரப்பன் சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். வீரர்கள் ஆரவாரமிட்டனர். அவரைத் தொடர்ந்து சிந்தம நாயக்கனும் அப்புறம் பொன்னுத் தேவரும் பிறகு பாளையக்காரர்கள் அனைவரும் சென்றனர். அணிவகுப்பின் இடது சிறகில் நின்ற மதுரைக் குதிரைகள் அவர்களைத் தொடர்ந்து மேற்குவாசலை நோக்கிச்சென்றன. அனைவரும் சென்றபின் கடைசியாக வேங்கடர் வெளியேறினார்.

கொள்ளிடத்தைக் கடந்தபின் உத்தப்பனின் வீரர்கள் முத்துவீரப்பனை வணங்கிக்கொண்டு திருச்சி திரும்பினர். படைகள் துறையூரைக் குறிவைத்துச் சென்றன.

*

# 20

**ஒரு வாரமாக மழை விடாது கொட்டிக்கொண்டிருந்தது. நிலமே** தெரியாமல் எங்கும் வெள்ளக்காடாய் மாறியது. உயிரை உறைய வைத்தது குளிர். பறவைகள் சுருண்டு விழுந்தன. விலங்குகளும், கால்நடைகளும் செத்து நீரில் ஊறி மிதந்து சென்றன. மண்சுவர்கள் கரைய கூரைகள் நீரோடு போயின. மக்கள் மேடுகளில் ஒதுங்கினர். தாழ்நிலங்களில் மரங்களின் மேல் தொற்றிக்கொண்டு உயிருக்குப் போராடினர். மேற்குமலைகளிலும் பெருமழை அடித்தது. நதிகளின் கரை மேவி வெள்ளம் ஓடியது. மூன்றாம் நாள் நிலத்தின் நீரும் காவிரி நீரும் ஒரே மட்டத்தில் ஓடின. நீரின் கீழே காவிரி மறைந்து போனது.

ஆறாவது நாள் மழை வெறித்து தூறிக் கொண்டிருந்தபோது முத்து வீரப்பன் தன் அம்மாவுடன் திருச்சி மலையின் உச்சியில் நின்றிருந்தான். கோட்டை கடல் நடுவே நிற்கும் பெரும் பரிசல் போல் தெரிந்தது. நான்கு மாதங்களுக்கு முன் அவன் மதுரைப் படையுடன் கொள்ளிடக் கரைக்குச் சென்றபோது கண்ட காவிரியை இப்போது காணவில்லை. படைகள் ஒரு மாதம் கழித்து மதுரை திரும்பியபோது காவிரியில் காலளவு தண்ணீர் தான் ஓடியது.

‘அம்மா, நம்ம மக்கள் எல்லாம் என்ன செய்வாங்க?’

மங்கம்மா மௌனமாக இருந்தாள். பையனுக்கு தைரியம் அளிப்பதற்காகப் பிறகு சொன்னாள். ‘தாழ்வான பக்கமெல்லாம் மரங்கள் மேலே ஏறி இருப்பாங்க. தெக்கே எல்லாம் மேட்டு நிலம்தான். இவ்வளவு வெள்ளம் ஏறாது. இரண்டு நாளில் தண்ணீர் வடிஞ்சிடும். அப்புறம் என்ன செய்யலாம்னு பார்ப்போம்.’

தண்ணீர் வடிந்தது. சேதிகள் எட்டுத் திசையிலிருந்தும் வந்தன பெருந்துயரைச் சுமந்துகொண்டு. மண் பதைத்தது. காற்று புலம்பியது. இயற்கையின் கொடுவல்லமைக்கு முன் மனிதன் ஆதரவற்று நடுங்கினான். தஞ்சாவூர் ராஜ்ஜியத்தில் பாதி ஊர்கள் கரைந்து இல்லாமல்

போயினவாம். தாழ்நிலங்களில் தப்பிப் பிழைத்த பாதி மனிதர்களைத் தவிர வேறு ஜீவராசிகளே இல்லை. மதுரை நாட்டிற்கு அவ்வளவு பாதிப்பில்லை. மூன்று நதிகளிலும் கரையோர கிராமங்கள் மட்டுமே அழிந்திருந்தன.

**ஆ**றாவது அறிவும் கொண்டிருக்கும் மனிதன் எத்தகைய இடர்ப்பாடுகளையும் மீறி வாழ்ந்து விடுகிறான். ஒன்றிரண்டு வருடங்களில் புதிய கிராமங்கள் நிலைபெற்றுவிட்டன. உரல்களைச் சுற்றிக் கோழிகள் குஞ்சுகளோடு கொத்தித் திருந்தின. நாய்க்குட்டிகள் கிடைக்காவலுக்குப் போகுமளவு வளர்ந்துவிட்டன. கூரையும், பூசணியும் செழித்த கூரைகளிலிருந்து கசிவது பனியா புகையா என்று வியந்தவாறு சூரியன் எட்டிப்பார்த்தான்.

*

# 21

**வெள்ளம் போன நாலாவது வருடம் மைசூர் தளபதி குமாரய்யன்** பெரும்படையோடு வந்து திருச்சியை முற்றுகை யிட்டான். கோட்டை பிடிபடாமல் முற்றுகை ஆறு மாதத்துக்கும் மேல் நீடித்தது. குமாரய்யனை களத்திலிருந்து விரட்டுவதற்காக செஞ்சி, தஞ்சாவூர் மராட்டியர்களுக்கு சொக்கநாதன் அழைப்பு விடுத்தான். செஞ்சியின் தளபதி அரசுமலை படையோடு வந்து கொள்ளிட வட கரையில் காத்திருந்தான்.

குமாரய்யன் சொக்கநாதனுக்கு ஓலை எழுதினார். நாமிருவரும் இணைந்து மாராட்டியர்களைத் தாக்குவோம் என. சொக்கனி டமிருந்து ஒரு மாதமாக எந்தப் பதிலும் வரவில்லை. காத்திருந்து பலனில்லாமல் போகுமென்று உணர்ந்த குமாரய்யன் அரசுமலைக்குத் தூது விட்டான். பின்வாங்கி செஞ்சி திரும்பினால் தனிப்பட்ட முறையில் பெருஞ்செல்வத்தை கையூட்டாகத் தருவதாக ஆசை காட்டினான். அரசுமலை ஏற்கவில்லை.

மராட்டியர்களை விரட்டுவதற்காக மைசூரிலிருந்து கூடுதல் படை உதவி கேட்டு குமாரய்யன் ஓலை எழுதினான். உள்ளுக்குள் இருந்த அவன் எதிரிகள் ஓலை போகாமல் மடக்கிப் பறித்துவிட்டனர். சில நாட்களில் இது குமாரய்யனுக்குத் தெரிந்து, இனிமேலும் இங்கிருந்து வீண் என்று பின்வாங்க முடிவெடுத்தான்.

அரசுமலையின் கவனத்தைத் திரும்புவதற்காக குதிரைப் படையைக் கொள்ளிடம் தாண்டி மராட்டியர்களைத் தாக்கத் தயாராவது போல் நிறுத்தினான். காலாள் படையினர் வெகுவிரைவாக கருவூரை நோக்கித் திரும்பினர். இதை எதிர்பார்த்துக் காத்திருந்த அரசுமலை சற்றும் நேரத்தை வீணாக்காமல் குதிரைப் படையுடன் குமாரய்யன் மேல் பாய்ந்தான். சென்றுகொண்டிருந்த காலாள் படையின் ஊடே புகுந்து இரண்டாக வகிர்ந்தான். மீதிக் குதிரைகள் சுற்றி வளைத்தன. கட்டுப்பாடு குலைந்து மைசூர் படை சிதறத் தொடங்கியது. தப்பியோடிய சில நூறு பேர்களைத்

தவிர இருபதினாயிரம் பேர் அந்தக் கொலைக்களத்தில் சண்டையிடாமலேயே பலியாயினர். குமாரய்யன் சிறைப்பட்டான்.

அரசுமலை மைசூரின் வசம் இருந்த மதுரைக் கோட்டைகளிலெல்லாம் புகுந்து கைப்பற்றி அவர்களின் சேமிப்பை எல்லாம் திரட்டிக் கொண்டான். வெற்றிக் களிப்போடு திரும்பி வந்தவன் செஞ்சிக்குப் போகாமல் திருச்சி கோட்டையைத் தாக்கினான். திருச்சி விழவில்லை; தன்னைத் தற்காத்து நின்றது. ஆனால் உதவிக்கு வந்தவனே எதிரியாக மாறியது கண்டும், கடவுள் எப்போதுமே தன்னைக் கைவிடுவதை நினைத்தும் சொக்கநாதன் நோயில் விழுந்து விட்டான். வலுவான கோட்டையை முற்றுகையிட்டு காலம் கடத்துவதில் பலனில்லை என்று உணர்ந்த அரசுமலை செஞ்சிக்குச் சென்றான். வழியிலுள்ள ஊர்களைக் கொள்ளையடித்தவாறே. படுக்கையில் விழுந்த ஒரே வாரத்தில், முப்பத்தி ஆறாவது வயதில் நெஞ்சுவலியால் சொக்கநாதன் உயிர் பிரிந்தது.

**ர**ங்க கிருஷ்ண முத்துவீரப்பனுக்கு அப்போது வயது பதினைந்து. மன்னன் உடல் அரசவை மண்டபத்தில் கிடத்தப்பட்டிருந்தது. கால்மாட்டில் அம்மாவுக்கு அருகிலிருந்தபடியே முத்துவீரப்பன் அழுது கொண்டிருந்தான்.

ராணி மங்களத்தைச் சுற்றிக் கருகமணி அணிந்த கம்பளத்துக் கிழவிகள் அமர்ந்து வடுகில் ஒப்பாரிப் பாடல்களைப் பாடினர். தெய்வமாகப் போகும் மங்கம்மாவைக் குறித்த வாழ்த்துப் பாடல்களும் இருந்தன. பிணம் வெளியேறும் நேரம் நெருங்கியதும் ராணியின் சொற்படி தாதிகள் வந்து மங்கம்மாவை உடன்கட்டை ஏறுமுன் நீராட அழைத்தனர். மங்கம்மா எழ மறுத்துக் காலடியிலேயே அழுதுகொண்டிருந்தாள். மண்டபத்தின் ஓரங்களில் இருந்த பெண்கள் பக்கம் சலசலப்பு கிளம்பியது. மீண்டும் தயங்கித் தயங்கித் தாதிகள் வந்து மங்கம்மாவைத் தொட்டனர். நிமிர்ந்த மங்கம்மா உறுதியான குரலில் சொன்னாள் ‘முடியாது.’

மங்களம்மா எழுந்து வந்தாள். ‘சண்டாளி, சூத்திரச்சி வந்து எங் குலமழிச்சிட்டா. இனியாவது எம் மகன் நிம்மதியா வைகுந்தம் போகுட்டுமடி...’ என்று புலம்பிக்கொண்டே சத்திரிய தர்மத்தைக் காப்பாத்த இங்க யாரும் இல்லயா?’ என்று சபையைப் பார்த்துக் கத்தினாள்.

சடாரென்று எழுந்து முத்துவீரப்பன் வெறியோடு கத்தினான் ‘அவ்வா, வாய மூடு.’

மங்களம் அப்படியே உறைந்து நின்றாள்.

ஓடிப்போய் ஓரத்தில் காவல் நின்ற வீரன் ஒருவனின் வாளை உருவிக்கொண்டு நடு மண்டபத்தில் வந்து நின்று முத்துவீரப்பன் ஓங்கிய உறுதியான குரலில் சொன்னான் ‘இனி என் அம்மாவப் பத்தி ஒரு வார்த்தை யாராவது சொன்னா இந்த இடத்திலேயே வெட்டுவேன் ஆண்பெண் யாராயிருந்தாலும் சரி.’

*

# 22

**பதினைந்தாவது வயதில் 1682ல் அரசனான ரங்க கிருஷ்ண** முத்துவீரப்பன் இரண்டே ஆண்டுகளில் மதுரை இழந்திருந்த மேற்கு வடக்குப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றி நாட்டை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்தான். மைசூரில் வீரசைவ, வைணவ மதத் தலைவர்கள் தலைமை தாங்கி நடத்திய பெருங்கலங்கள் அந்நாட்டை உள்நாட்டுப் போரில் சிக்கவைத்தன. எனவே மைசூரை விரட்டியடிப்பது முத்து வீரப்பனுக்கு எளிதாகி விட்டது. செஞ்சி மராட்டியர்கள் டில்லியின் தென்மண்டல சேனாதிபதி ஜுல்பிகார் கானிடம் அடிபட்டுப் பின் வாங்கிக் கொண்டிருந்தனர். வெளியிலிருந்து ஆபத்துகள் இல்லாத நிலையில் நாட்டைச் சீரமைப்பதில் முழுக் கவனமும் செலுத்தினான்.

அவன் காலத்தில் பிரதானி, ராயசம், தளவாய் பதவிகளுக்குத் தனித்த அதிகாரம் இல்லாமல் ஆனது. நிர்வாக விவகாரங்களை அவனது அம்மா கவனித்துக் கொண்டாள். குதிரையிலேறித் தனியொருவனாக நாடெல்லாம் இரவுபகலாகச் சுற்றித் திரிந்தான். பாளையக்காரர்களின் முரண்களைத் தீர்ப்பதிலிருந்து குளம் வெட்டுவது வரை நேரிலேயே சென்று கவனித்தான். எந்த நேரமும் எந்த ஊரிலும் அரசன் இருக்கக்கூடும் என்ற நிலைமை உருவானது. அகாலத்தில் வந்து கிராமங்களின் சாவடிகளில் படுத்துத் தூங்கினான். காலை வேளைகளில் ஊரே கூடிநின்று வணங்க, அவனை எழுப்பி பாளைய அரண்மனைகளுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். மீசை அரும்பும் ராஜா அங்குள்ள பெண் களின் செல்லப்பிள்ளையாகிப் போனான். அவ்வாக்கள் தங்கள் பாலியத்தில் கேட்ட கதைகளைப் புதுப்பித்தார்கள். விசுவநாத நாயக்கன்தான் புனர்ஜென்மம் எடுத்து வந்து பிறந்துவிட்டான் என்று புளகாங்கிதமடைந்தார்கள்.

திருச்சி அரண்மனையில் அவனுக்கு ஐரோப்பியக் கல்வி கற்பித்த ஏசு சபை பிரெஞ்சுப் பாதிரி பெரும்பாலான நாட்களில் மன்னனைக் காணாமல் காத்திருந்தார். வரலாற்றிலும் சமூகவியலிலும்தான் ஆர்வத்தோடு

இருந்தான். தெலுங்குப் புலவர்கள் அவனைச் சந்திக்கவே முடியவில்லை. அனைத்து மதத்தினரையும் சமமாக நடத்தினான். கிறிஸ்தவத்திற்கு எதிராக வைதீகர்கள் மேற்கொண்ட எதிர்ப்புகளை முளையிலேயே கிள்ளி எறிந்தான். ஸ்ரீரங்கம் பொறுமிக்கொண்டிருந்தது. அக்கோவில் விழாக்களில் ராஜமரியாதை பெறக்கூட அவன் போகவில்லை, மங்கம்மாதான் சென்றாள். அந்நேரத்தில் அவன் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரருடன் தூத்துக்குடியில் நங்கூரமிட்டிருந்த ஐரோப்பியக் கப்பலில் புகுந்து கடல் வணிகம் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அவன் அரசனான மூன்றாமாண்டில் அவன் புகழை வடக்கே டெல்லிவரை பரப்பிய ஒரு சம்பவம் நடந்தது. ஔரங்கசீப் தனது ஒற்றைப் பாதுகையை தங்கத் தட்டில் வைத்து ஒரு குதிரைப் படை அணியுடன் நாடெங்கும் அனுப்பியிருந்தார். சிற்றரசர்கள் அனைவரும் தம் நாட்டு எல்லையில் அதை வரவேற்று ராஜ மரியாதையோடு அழைத்துச்சென்று அரண்மனை விழாவில் தமது அரியணையில் பாதுகையை ஏற்றி வைத்து உரிய கப்பத்தைச் செலுத்தவேண்டும். அசுவமேத யாகக் குதிரைபோல அந்தப் பாதுகை பரத கண்டமெங்கும் சுற்றி வெற்றிப் பெருமிதத்தோடு தெற்கே வந்தது. அரியலூரில் மதுரை நாட்டுக்குள் நுழைந்தது. வரவேற்க முத்துவீரப்பன் வரவில்லை. காத்திருந்தார்கள். மன்னருக்கு உடல் நலமில்லை என்று அரியலூர் பாளையக்காரர் சொன்னார். குதிரைப் படை கிளம்பி பாதுகையோடு திருச்சி நோக்கிச் சென்றது. காவிரியைத் தாண்டிய பின்னும் அரசன் வரவில்லை. கோட்டை வாசலுக்குப் போனபோது அது திறந்து வழி விட்டது. அரசவைக்குச் சென்றது பாதுகை. நோயுற்றதாகச் சொல்லப்பட்டவன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான். கோபமுற்ற முகம்மதிய தளபதி அரசனுக்கு அறிவுரை வழங்கினான். ஔரங்கசீபின் வலிமையையும் புகழையும் எடுத்துச்சொல்லி பாதுகைக்குத் தரவேண்டிய மரியாதைகளை விளக்கினான். அரசன் பாதுகையைத் தன்னருகே கொண்டுவரச் சொன்னான். வந்தவுடன் அதைக்காலில் மாட்டிக்கொண்டு கூறினான். ‘உன்னுடைய பாதுஷா மடையனாக இருக்கவேண்டும். எனக்கு ஒற்றைச் செருப்பை அனுப்பியிருக்கிறான். போய் இன்னொன்றையும் வாங்கி வா.’

உடைவாளை உருவிய முகம்மதியத் தளபதி கோபத்தில் கத்தினான் ‘இந்த அவமானத்துக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன். ஷாகேன்ஷாவின் குதிரைகள் இறங்கி மதுரையைச் சுடுகாடாக்கும்.’

‘நீ போருக்கு வரவில்லையாதலால் உன்னைக் கொல்வது தர்மமல்ல என்று விடுகிறேன். இனி நீ பேசினால் சவுக்கடி படுவாய். இந்தக் கணமே நீ என் நாட்டை விட்டு ஓடவேண்டும். தாமதித்தால் போருக்கு வந்ததாகக் கருதி உன் படையைக் கொன்று குவிப்பேன்.’

ஒரு மாதம் கழித்து காவிரிக்குக் கால் வெட்டிக்கொண்டிருந்தபோது ஒரு வேப்பமர நிழலில் முத்துவீரப்பனைக் கண்டு ஒரு முதிய சூ∴பி பக்கிர் வணங்கினார். கோல்கொண்டாவிலிருந்து வருவதாகவும் ஜுல்பிகார் கான் தன்னை அனுப்பியதாகவும் சொன்னார். ஷாகேன்ஷாவாக இருக்கவேண்டியவன் முத்துவீரப்பன்தான் என்று ஜுல்பிகார் புகழ்ந்தாராம். அவர் இருக்கும் வரை டெல்லியைப் பற்றிய கவலை வேண்டாம் என்று அதிகாரபூர்வமற்ற முறையில் சொல்வதற்காகவே தன்னைப் போன்ற ஒரு

சூஃபியைத் தூது அனுப்பியதாகச் சொன்னார். அவனது திருமணத்திற்கு ஜுல்பிகார் வர விரும்புவதாகவும் தவறாமல் அழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, உருதுவில் பாடல்களைப் பாடி ஆசி வழங்கிவிட்டு விடைபெற்றார்.

*

# 23

**நான்காவது ஆண்டில் ராமநாதபுரத்ததில் தளவாயாக இருக்கும் குமார** பிள்ளையிடமிருந்து ரகசிய ஓலை வந்தது. ‘தஞ்சாவூர் எக்கோஜியும் சேதுபதியும் உடன்படிக்கை செய்துள்ளனர். இருவரும் சேர்ந்து மதுரைப் பகுதிகளை ஆக்கிரமித்துப் பகிர்ந்து கொள்வது. பாம்பாற்றிற்கு வடக்கேயுள்ள பகுதியை ராமநாதபுரம் தஞ்சாவூருக்கு விட்டுத் தரும்.’

வேங்கடரை ராமநாதபுரத்திலிருந்து வரச் சொல்லி முத்துவீரப்பன் ஓலை அனுப்பினான். தொண்டி துறைமுகம் பற்றி அவனுக்குப் பல கனவுகள் இருந்ததால் ராமநாதபுரம் பாளையத்தை கவனமாகக் கையாள வேண்டும் என்று காத்திருந்தான்.

திருச்சிக்கு வரும் வழியில் சிவகங்கையில் அன்றிரவு வேங்கடர் தங்கினார். மறுநாள் பொழுது அமங்கலமாக விடிந்தது. திருச்சி அபிமானியும் ராமநாதபுரம் தளவாயுமான குமார பிள்ளை கை வேறு கால் வேறாக வெட்டப்பட்டு கழுவேற்றப்பட்டார். அவரது உடன் பிறந்தவர்களும் பெண்டுபிள்ளைகளும் கொலைப்பட்டனர். உறவினர்களும் அழிக்கப்பட அந்த வமிசமே ஒரே நாளில் பூண்டற்றுப் போனது. அதிர்ந்து போன வேங்கடர் அவசரமாக ராமநாதபுரம் திரும்பினார்.

சினங்கொண்ட முத்துவீரப்பன் மதுரை வந்து ராமநாதபுரத்தின் மேல் தானே படை நடத்திச்சென்றான். ஒவ்வொரு கோட்டையாக வசப்படுத்திக்கொண்டு மதுரைப் படை மறு வாரம் ராமநாதபுரம் முற்றத்தில் நின்றது.

**ம**துரைப் பாடி வீட்டிற்கு இரவில் வந்த வேங்கடரை உத்தப்பன் அழைத்துக்கொண்டு முத்துவீரப்பனிடம் வந்தான். கூடாரத்தில் விளக்கொளியில் முத்துவீரப்பன் ஏடு படித்துக்கொண்டிருந்தான். ‘தாத்தா...’ என்று கூடாரவாசலுக்கு ஓடிவந்து கையைப் பற்றி அழைத்துச் சென்றான்.

‘முடி சூட்டு விழாவுல பாத்தது. அம்மா பல தடவை கூப்பிட்டும் ஏன் தாத்தா வரலை?’

‘மதுரையில் எனக்கு ஒண்ணும் வேலையில்லப்பா. நீங்களே பாத்துக்கிருவீங்க. நான் நிம்மதியா பாசுரம் படிச்சிக்கிட்டிருக்கேன்.’

சிற்றுண்டிகளும் பானமும் கொண்டுவரச் சொன்னான். வெகுநேரம் மௌனமாக இருந்த வேங்கடர் மெதுவாகச் சொன்னார் ‘சண்டை வேண்டாம். மதுரைக்குத் திரும்பப் போயிரு.’

சற்று நேரம் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். ‘சரி’ என்ற முத்துவீரப்பன் ‘அது உங்களுக்காக மட்டுமே’ என்று கூறிவிட்டு ‘குமார பிள்ளையின் ரத்தத்திற்கு என்ன பதில்? மதுரையின் ஒழுங்கை நான் எப்படிக் காப்பது?’ என்று கேட்டான்.

‘நீ சுலபமா இவங்களை ஜெயிச்சிருவ. ஆனா மறவர்களோட பகை மதுரைக்கு தலைவலியா இருக்கும். தேவையில்லாம உனக்கு கால விரயமாகும்.’

‘தெரியும். வேற திட்டங்கள் வச்சிருந்தேன். தொண்டிக்கு இனி வேற ஏற்பாடுகள் பண்ணணும். என் கனவுகள் மிகப் பெரியவை தாத்தா. கள்ளழகர் போல புதுசா சாமிகள உருவாக்குறது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்ல தாத்தா. ஆனா பலன் இருக்கணும். தலை போற காரியமில்ல, ஒத்த விரல வெட்டி எறிஞ்சிட்டுக் கூட என்னால வாழ முடியும். ஆனா உங்க சொல்ல மதிக்கிறேன். அதுக்கு வேற அர்த்தங்களும் இருக்கலாம். நாளைக் காலையில் படை மதுரை திரும்பும்.’

‘எக்கோஜியோட தளவாய் வரபோஜி பண்டிதன் இங்க படையோட வந்துக்கிட்டிருக்கான். இதுக்காக சொல்லலை...’ என்றார் வேங்கடர்.

முத்துவீரப்பன் சிரித்துக்கொண்டேயிருந்தான். வேங்கடர் கேள்விக் குறியோடு பார்த்தார். அவன் சொன்னான் ‘பாதிரியார் ஒரு கதை சொல்வார். நான் ஆசையா கேட்டு சிரிச்சிக்கிட்டிருப்பேன். அதுல தொன்குயிக் சொன்னு ஒருத்தன்!... நான் இப்படியே வடக்க போனா அடுத்த மாதம் தஞ்சாவூரை மதுரையோட சேர்த்திருவேன். ஆனா இப்ப அது என் திட்டத்தில் இல்லை. தஞ்சாவூர் நகரம் எனக்குப் பொருட்டேயில்லை. தூத்துக்குடியவும் தொண்டியவும் ஒழுங்குபடுத்தின பிறகுதான் எனக்கு நாகப்பட்டினம் தேவை. அதுக்கு இன்னும் ஐஞ்சு வருஷம் இருக்கு. அதுவரை எக்கோஜி ராஜபோகங்கள அனுபவிக்கட்டும்.’

மதுரைத் தளபதி உத்தப்ப நாயக்கன் சேதுபதிக்கு சுருக்கமாக ஓலை எழுதினான். ‘வேங்கட கிருஷ்ணப்பரின் வேண்டு கோளுக்கிணங்கிப் போரிடாமல் மதுரைப் படை திரும்புகிறது. மதுரையின் பாம்பாற்றை தாரை வார்க்கத் தங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை நினைவில் கொள்க. குமார பிள்ளையின் ரத்தத்திற்கு நீங்கள் பதில் சொல்லவேண்டும்.’

வேங்கடரின் ஏற்பாட்டின்படி மதுரைத் தூதுவர்கள் ஓலையைச் சேதுபதியிடம் சேர்ப்பித்துவிட்டு அவர் மனைவி கிருஷ்ணம்மாவை அழைத்துக்கொண்டு திரும்பினர்.

அவ்வளவு நேரமும் முத்துவீரப்பன் வேங்கடரைத் தன்னுடன் வந்துவிடுமாறு வற்புறுத்தியவாறே இருந்தான். ஸ்ரீ வில்லிபுத்தூர்

கோவிலில் சமாஸ்னம் வாங்கி வீரவைஷ்ணவனாகி கோவிலிலேயே தங்கிவிடும் தன் முடிவில் அவர் உறுதியாக இருந்தார். எழுபது வயதுக் கிழவனால் இனி சண்டைக்குப் போக முடியாது என்று கேலி பேசினார். ‘உன் அறிவு உங்க அப்பனுக்கு வாய்ச்சிருந்தா மதுரை ஓகோன்னு இருந்திருக்கும்! ராம்பிரான் மாதிரி இப்பவாவது நீ வந்தியே. எங் காலம் முடிஞ்சுபோச்சுப்பா. அவன் காலடியில் போயிக் கிடக்குறேன். நீயோ அம்மாவோ கோயிலுக்கு வரும்போது பாத்து சந்தோஷப்படுறேன்.’

கிருஷ்ணம்மாவை உத்தப்பனிடம் ஒப்படைத்து தேவதானப் பட்டியில் அவளது அக்காவிடம் சேர்த்துவிடுமாறு சொன்னார். முத்துவீரப்பன் தன் ஆசனத்தில் அவளை அமரவைத்துவிட்டு அருகே நின்றிருந்தான். ஒரு சொல்லும் பேசாத அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

வேங்கடர் சந்திரஹாசத்தைக் கழற்றி உத்தண்டுவிடம் கொடுத்தபோது, கண்ணீருடன் கால் தொட்டு வணங்கினான். அவனுக்குப் பிறகு முத்துவீரப்பன் குனிய முயன்றபோது தடுத்துத் தோள் தழுவி அணைத்துக்கொண்டார்.

விடைபெற்று வெளியேறி ஓபுலுவின் மேலேறினார். சென்ன கதிரி நாயக்கர் மரணப்படுக்கையில் கைநடுங்க ஓபுலுவையும் சந்திரஹாசத்தையும் வேங்கடரிடம் ஒப்படைத்துவிட்டுக் கண்மூடினார். செல்லியம்மன் எர்ரசின்னம்மாவின் வேண்டு கோளை ஏற்கவில்லை; கணவனோடு சேர்ந்துதான் எரிந்தாள்.

ஸ்ரீவில்லிபுத்தூரை நோக்கி ஓபுலு தன்நடையில் சென்று கொண்டிருந்தது. உயரே பரந்து விரிந்த எல்லையில்லா வானில் கோடி கோடியாய் விண்மீன்கள் பூத்துச் சிரித்தன.

*

# 24

**தா**தனூரில் தனது குடிசையின் பின்னே விறகு தறித்துக் **கொண்டிருந்த** முத்துப்பேச்சி விடாத நாய்க் குரைப்பைக் கேட்டு எரிச்சலுடன் அரிவாளோடு எழுந்து முன்தெருவுக்கு வந்து பார்த்தாள். பக்கத்து வீட்டு முன் திண்ணையில் இளைஞன் ஒருவன் உட்கார்த்திருந்தான். அவன் குதிரையைக் கண்டு மிரண்ட நாய் கிட்டே வராமல் தூரத்திலிருந்தே குரைத்துக் கொண்டிருந்தது. மற்ற நாய்கள் இங்கு ஓடிவரும் குரைப்புச் சத்தம் கேட்டது. ‘யாரு? என்ன இங்க ஒக்காந்துக்கிருக்கவன்?’

‘தாகத்துக்கு தண்ணீ குடிச்சிட்டுப் போகலாமின்னு ஊருக்குள்ள வந்தேன்.’

‘ஆம்பள இல்லாத ஊருல ஒனக்கென்னடா வேலை? நேர ஆலமரத்துக்கில்ல போயிருக்கணும்?’ தோளில் சாய்ந்த அரிவாளுடன் கேட்டாள்.

‘தண்ணி குடிச்சிட்டுப் போறேன்.’

அவள் புதிதாக வாக்கப்பட்டு தாதனூர் வந்தவள். குழம்பியவளாக அடுத்த வீட்டில் எட்டிப் பார்த்துக் கத்தினாள் ‘எக்கா... இங்க பாரு ஒருத்தெ...’

‘எவன்டி அந்த எடுபட்ட பய?’ என்றவாறு வெளியே வந்தவளிடம் அவன் மீண்டும் தண்ணீர் கேட்டான். ஏறயிறங்க அவனைப் பார்த்து விட்டு உள்ளே போனவளைத் தொடர்ந்து முத்துப்பேச்சியும் போனாள்.

ஈயப் போகாணியிலிருந்த நீரை அவன் குடித்துக் கொண்டிருந்தபோது கேட்டாள் ‘எந்த வூரு?’

‘ஆனையூர் பக்கந்தான்.’

நம்ப முடியாமல் அவள் பேச்சுக் கொடுக்க முயன்றபோது மதுரைக் காவல்காரன் சின்னஒச்சு காலைக்கஞ்சி குடிக்க அந்தப் பக்கமாக வந்தான்.

**தா**தனூரே அந்தத் தெருவில் குவிந்திருந்தது. மதுரைக் காவல்காரர்கள் நிலை கொள்ளாமல் தவித்தனர். திண்ணையில் முத்துவீரப்பன் ஊர் பெரியாம்பிளையை அருகில் அமர்த்திப் பேசிக்கொண்டிருந்தான். அவரை வலுக்கட்டாயமாகத் தன்னருகே அமர வைத்திருந்தான். மூன்று நாட்கள் கள்ள நாட்டில் எல்லா ஊர்களுக்கும் செல்லவிருப்பதாகவும் மூன்றாம் நாள் திங்கள் இரவு பின்னத்தூரில் ஆனையூர்க் கள்ளர்களின் நாட்டுக் கூட்டத்தை கூட்டவிருப்பதாகவும் எல்லா ஊர் பெரியாம்பிளைகளையும் நேரில் அழைக்கும் பொருட்டே நான் ஊர்களுக்குப் போவதாகவும் சொன்னான்.

‘இன்னும் சாப்பிடலை. உங்க ஊர்ல கஞ்சி குடிச்சிட்டுதான் கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி போகணும்‘ என்றான்.

தாதனூர் பெண்கள் மிரண்டனர். பெரியாம்பிளை பதறினார். கண்களாலேயே அவரை அமைதிப்படுத்தினான். பிறகு பார்வை தீர்க்கமானது. அவர் பெண்கள் பக்கம் திரும்பி ‘ஒரு செம்பு கஞ்சி கரைங்காத்தா’ என்றார்.

‘ஏயப்பா ராசா... ஒரு மோர் தண்ணி கூட இல்லாம பொழக்கிறமே சாமி...’ என்று ஒரு கிழவியின் குரல் கேட்டது.

‘வேணாம்மா. புளிச்ச தண்ணி போதும்.’

முத்துவீரப்பன் வத்தலைக் கடித்துக் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தபோது கீழ்க்குயில் குடிக்குத் தகவல் சொல்ல ஒருவன் ஓடினான்.

‘இன்னொரு நாள் கருப்பு கோயில்ல கிடா வெட்டி இலை விரிச்சி சோறுபோடுறோம் ராசா’ என்று பெரியாம்பிளை மன்னிப்புக் கேட்கும் பாவனையில் சொன்னார். ‘இன்னொரு நாள் என்ன! செவ்வாய்க்கிழமை மதுரைக்கு தாதனூர் வழிதான் போவேன். அன்னைக்கி கருப்பு கோயில்ல சாப்புடுறேன்’ என்றான்.

எல்லோரையும் வணங்கி விடைபெற்று அவன் குதிரையில் ஏறியதும் கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தான். அவளைக் காணவில்லை. குதிரை நகரவும் தெருவின் இரு பக்கமும் கூட்டம் ஒதுங்கி வழிவிட்டது. சற்று தூரத்தில் அவள் ஓரமாய் நிற்பது தெரிந்தது. முத்துப்பேச்சியை நெருங்கியதும் அவளை அருகே அழைத்தான். சேணத்தில் தொங்கிய பையிலிருந்து அரிவாளை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு சிரித்துக்கொண்டே கேட்டான் ‘தாதனூர் கனவு எடுக்கும்; கொடுக்கலாமா?’

குதிரை கீழிக்குயில்குடியை நோக்கி விரைந்தது.

**பி**ன்னத்தூர் பெரியதேவர் வீட்டில் குருவாச்சியம்மன் பூஜை முடிந்து எல்லோரும் தீப்பந்த வெளிச்சத்தில் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்தனர். திருமலை நாயக்கர் தந்த கம்பிளியின் மேல் பெரியதேவரும் முத்துவீரப்பனும் வீற்றிருந்தனர். கள்ளநாட்டின் எட்டு நாடு நாற்பத்திரண்டு கிராமங்களிலிருந்தும் முப்பத்தியாறு உபகிராமங்களிலிருந்தும் வந்த பெரியாம்பிளைகள் மூன்று புறமும் அமர்ந்திருந்தனர். அரசனுக்கு பின்னால் உத்தப்பனும் சிந்தமனும் மதுரைக்கோட்டை நிலைப்படைத் தலைவன் பாஞ்சாலங்குறிச்சி எர்ரபொம்முவும் அணிவகுப்புப்

பயிற்சியாளன் ழான் பியர் வியர்ராவும் அமர்ந்திருந்தனர்.

கள்ளநாட்டு நடப்புகளைப் பற்றி சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தனர். சமீப காலங்களில் கள்ள நாட்டில் நடந்த முக்கியமான நிகழ்வுகள் எல்லாம் அரசனுக்குத் தெரிந்திருந்தது. ஊர்ப் பெயரைக்கூட குறிப்பிட்டுச் சொன்னான். பெரிய தேவரே கேள்விப்படாத பழைய கதைகளையும் சொன்னான். ‘விஜயநகர ஆளுநர் மானூத்துப் பகுதியை எட்டப்ப நாயக்கருக்குக் கொடுத்து கோட்டை கட்டிக் கொள்ளச் சொன்னார். அவர்கேட்ட பிரதி உபகாரம் - ஆனையூர் கள்ளர்களை அடக்கவேண்டும். சில்லவார்கள் சுலபமாக அடக்கிவிட்டார்கள். ஆனால் பிறகு அவர்கள் பெருமளவு விளைச்சலையும் மாடுகளையும் தொடர்ந்து இழக்க வேண்டியதாயிற்று. ஏழே ஆண்டுகளில் இங்கிருந்த கோட்டையைக் கைவிட்டு எட்டையபுரம் சென்று கோட்டை கட்டிக் கொண்டனர். அதன் பிறகு மதுரை இன்றுவரை ஆனையூர் கள்ளர்களை ஒடுக்க முயலவில்லை. விசுவநாதயக்கர் மேற்கிலும் வடக்கிலும் எல்லைகளை வகுத்து பாளையங்களைப் பிரித்துக் கொடுத்தபோதிலும் மதுரைக்கு வடக்கே மேலூரையும் மேற்கே ஆனையூர் கள்ளநாட்டையும் மதுரை அரசின் கீழேயே வைத்திருந்தார்.’

வழக்கமான பேச்சுகள், வெற்றிலை, சுக்கு வெந்நீர் எல்லாம் முடிந்தபிறகு கடைசியாக ஆனையூர்க் கள்ளர்களுக்கான தனது திட்டங்களை முத்துவீரப்பன் அறிவித்தான்.

‘முதலில் பெண்களுக்கான திட்டம். வீட்டுக்கு ஒரு ஆடு என்ற வீதத்தில் எல்லா கிராமங்களுக்கும் மதுரை அரசு ஆடோ குட்டியோ அன்பளிப்பு வழங்கும். முதல் ஐந்து ஆண்டுகள் அவை பொதுவில் மேய்க்கப்படவேண்டும். பிறகுபகிர்ந்து கொள்ளலாம். அப்போதுதான் குராலும் குட்டியுமாக வீட்டுக்கு ஐந்தாறு ஆடுகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.’

‘வைகையில் விக்கிரமங்கலத்திலிருந்து கால்வெட்டி கண்மாய்க்கு நீர் கொண்டு வருவோம். மறுகால் வழியாக தண்ணீர் வெளியேறி ஒவ்வொரு கண்மாயாக நிறைந்து திருமங்கலம் வரைபோகும். தேவைப்படும் இடங்களில் புதிய கண்மாய் வெட்டலாம். வெட்டும் வேலையைக் கள்ளர்களே செய்யவேண்டும். அதற்குக் கூலி கிடையாது. வேறு பகுதியிலிருந்து வந்து ஆட்கள் வேலை செய்ய நேர்ந்தால் அதற்கான கூலியையும், அணை, கரை, மடைகள் போன்ற அனைத்துக் கட்டுமானச் செலவுகளையும் மதுரை ஏற்கும். ஒரு கண்மாய்க்குள் நுழையும் காலுக்கு அந்த கிராமம் மட்டுமே பொறுப்பல்ல, கள்ளநாடு முழுவதும் பொறுப்பு. கிராம எல்லை, நிலப்பகுப்பு எதிலும் மதுரை தலையிடாது; கள்ளர்களின் நாட்டுக் கூட்டமும் ஊர்க்கூட்டமும் முடிவு செய்யும். விளைச்சலில் முதல் ஐந்தாண்டுகளுக்கு வரி கிடையாது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு கள்ளநாட்டு நிர்வாகத்துக்கு ஆறில் இரண்டு பங்கு தரவேண்டும். பத்தாண்டுகள் கழித்தே வழக்கமாகப் பாளையங்களுக்கு விதிக்கப்படும் ஆறில் ஒரு பங்கை மதுரை வாங்கும்.

‘ஆண்களுக்கான திட்டம் எந்த ஊருக்குமே காவல் தேவைப் படாத ஒழுங்குமுறை மதுரை நாட்டில் உருவாகப் போகிறது. அப்படித் தேவைப்படும் பட்சத்தில் அந்த கிராமத்தினர் அவர்களே அதைச்

சமாளித்துக் கொள்வார்கள். எனவே கள்ளநாட்டு ஆண்களுக்கு வேலை இல்லாமலாகும். நிலத்தின் அளவை வைத்துப் பார்த்தால் விவசாய வேலைகள் பாதி ஆண்களுக்குத்தான் இருக்கும். இன்றுவரை மதுரை நிலைப்படையில் மேலூர், ஆனையூர் கள்ளர்கள் யாரும் சேர்க்கப்படவில்லை. இனி நிலைப்படையில் மேலூர் கள்ளர்களுக்கும் ஆனையூர்க் கள்ளர்களுக்கும் தனித்தனியே படைப்பிரிவுகள் உருவாக்கப்படும். ஆட்கள் அவர்கள் விருப்பத்தின் பேரில் சேர்க்கப்படுவார்கள். நடப்பில் உள்ள வழக்கமான ஊதியம் வழங்கப்படும். படைத் தலைமையும் கள்ளர்களிடமே இருக்கும். மதுரைக்கு மிக அருகே இந்த இடங்கள் அமைந்துவிட்டதால் பயிற்சிக்கு மதுரை வரத்தேவையில்லை. கள்ள நாட்டிலேயே பல இடங்களில் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். வீரர்கள் தங்கள் வீடுகளிலிருந்து அதிக தூரம் போகத் தேவையிராது. பயிற்சி நேரம் போக பிற வேளைகளில் அவர்கள் விவசாய வேலைகளுக்குப் போகலாம். பயிற்சிக்கு மட்டுமே மதுரை பொறுப்பு; படை அணியின் கட்டுப் பாட்டுக்கு கள்ளநாடே உத்தரவாதம்.

‘விசுவநாத நாயக்கர் உருவாக்கிய எழுபத்திரண்டு பாளையங் களில் அறுபது பாளையங்களே இப்போது நடப்பில் உள்ளன. பன்னிரண்டும் அருகில் உள்ள பாளையங்களோடு இணைந்துவிட்டன. மீண்டும் எழுபத்திரண்டாக்கும் திட்டம் உள்ளது. வரும் ஆண்டுகளில் கள்ளநாட்டுக்கான இத்திட்டங்கள் பூர்த்தியாகும் வேளையில் மேலூர், ஆனையூர் தனிப்பாளையங்களாக ஆக்கப்படும்.’

கூட்டத்திலிருந்து சட்டென்று சன்னச்சத்தம் எழுந்தது. மகிழ்ச்சி ஆரவாரத்தோடு எல்லோரும் எழுந்து விட்டனர்.

**செ**வ்வாய்க்கிழமை உத்தப்ப நாயக்கனூர் போய்விட்டு மதியத்திற்கு முன்பே தன் நண்பர்கள் நால்வருடன் தாதனூர் வந்து சேர்ந்தான் முத்துவீரப்பன். தாதனூர் சுறுசுறுப்பாக கருப்பு கோவில் கொடையை ஏற்பாடு செய்திருந்தது. தாதனூரால் நல்லநாள் என்றழைக்கப்படும் கொடை இனி வியாழன் வரை நீளும்.

கருப்பு கோவிலைக் கும்பிட்டு விட்டு அவன் அமணமலை மேலிருக்கும் தீர்த்தங்கரரை வணங்கக் கிளம்பியபோது ஊர் பெரியாம்பிளை கோவிலுக்குள்ளிலிருந்து அந்தக் கட்டாரியை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தார். ஆச்சரியத்துடன் அதை வாங்கினான். அதன் தங்கக் கூர்மடலின் கீழ் பதிந்திருந்த தெலுங்கு எழுத்துகளை வாசித்தான்.

‘சுவஸ்தி, உத்தர தஷண பூர்வ பச்சிம சத்த சமுத்திராதிபதி, துலுக்க தள விபாடன், ராஜகுல திலக கிருஷ்ணதேவராயலு, பத்ராசலம் மண்டல சேனாதிபதி சேவப்ப நாயுடுகாருனு இச்சிந்த சாளுவ கட்டாரி, 1515’

‘சாளுவ கட்டாரி! விஜயநகரத்தில் மொத்தம் ஏழு சாளுவ கட்டாரி விருதுகள்தான் வழங்கப்பட்டிருந்தன. இது தஞ்சாவூர் வமிசத்தின் கட்டாரி. இங்கு எப்படி வந்தது?

தஞ்சாவூர் சண்டைக்குப் போனவர்களில் பாதிப்பேர் இன்னும் தாதனூரில் உயிரோடு இருந்தனர். அந்தக் கதையைச் சொன்னார்கள் ‘சரித்திரம் விசித்திரமானது’ என்றான் முத்துவீரப்பன்.

கையில் கட்டாரியுடன் மலையேறித் தீர்த்தங்கரரிடம் போனான்.

கட்டாரியை உத்தப்பனிடம் கொடுத்துவிட்டு வணங்கினான். கட்டாரியின் மீதான அவன் வியப்புக்கு முன்னே சமண தெய்வங்களும் கீழே விரிந்து கிடந்த நிலக்காட்சிகளும் மங்கிப் போயின. தனது தளபதிகளிடம் தெலுங்கு வீரகதைப் பாடல்கள் விதந்தோதும் விஸ்வநாதனின், ராயரின் பெரு வெற்றிகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தான்.

‘உங்கள் மானசீக நாயகன் பெரிய ராயர் தானே?’

‘இல்லை. விஸ்வநாத நாயக்கன். எனக்கு ராயர் போல் சாம்ராஜ்யக் கனவு இல்லை. மதுரை நாட்டின் வளம் மட்டுமே எனது குறிக்கோள். எனது கடற்படை அலைகளைத் தாவிக்கடந்து துறைமுகங்களைக் கைப்பற்றும். மதுரையின் கலங்கள் நிறைசுமையோடு தீரக்கடல்களைத் தாண்டிச் செல்லும். கிழக்கு மேற்குக் கரைத் துறைமுகங்களில் ஐரோப்பியக் கப்பல்கள் மதுரைக்குத் திறை செலுத்திவிட்டே நுழைய வேண்டும். இது தான் என் இலக்கு. என் அம்மாவுக்கு அவளது கனவு ஒன்று மிச்சமிருக்கிறது. அவள் சிறுமியாய் ஓடிவிளையாடிய சந்திரிகிரியிலிருந்து முகம்மதியர்களை விரட்டிவிட்டு வெற்றித் திருமகளாய் அங்கே முடி சூடவேண்டும். அதன் பின்பே திருவேங்கடரைத் தரிசிக்கப் போவேன் என்று சபதம் பூண்டிருக்கிறாள். என் நிலைப்படையை வலுப்படுத்திய பின்பே, பத்தாயிரம் அரபுக் குதிரைகளை வாங்கியபின்பே அது சாத்தியம். செஞ்சி, ராயவேலூரை வென்று சந்திரகிரியின் மேல் படை நடத்திச்செல்லப் போவது நானல்ல; என் அம்மாதான்.’

மலை மேலிருந்து தெற்கே பார்த்தான். தெற்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் தாதனூரை நோக்கி வரும் பாதையெல்லாம் படை வருவது போல் கூட்டம். கள்ள நாட்டிலிருந்து மக்கள் வந்த குவிந்துகொண்டிருந்தனர். இவ்வளவு கூட்டத்துக்கும் தாதனூர் உணவளிக்க முடியாது என்பதால், காலையில் வந்து பார்த்தவுடனேயே செலவை எல்லாம் மதுரை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருந்தான்.

பெரியாம்பிளை மலைச்சரிவில் மேற்கே இருந்த சமணக் குகைக்கு அவனை அழைத்துச்சென்றார். அவன் மீண்டும் கருப்பு கோயிலுக்கு வரமுயன்றபோது தென்கால் கண்மாய் நிறைந்து ததும்புவதுபோலக் கூட்டம் தாதனூரைச் சுற்றிலும் பரந்திருந்தது. கள்ளநாட்டில் குழந்தைகளையும் முதியோர்களையும் தவிர எல்லோரும் தாதனூரில் இருந்தனர். கூட்டத்தை விலக்கி அவனை கருப்பு கோவிலுக்கு அழைத்துவரவே வெகுநேரமாயிற்று. மலையடிவாரத் தாமரைக் குளத்தைச் சுற்றிலும் பரந்து விழுதூன்றி நின்ற ஆலமரங்களிலெல்லாம் கிளை கொள்ளாமல் இளைஞர்கள் ஏறி அமர்ந்திருந்தனர். வாழ்த்தொலிகள் விண்ணை நிறைத்தன. அவை மனிதக் குரல்கள் போலில்லை; அமானுஷ்யமான ஏதோ ஆற்றல் பீறிட்டுக் கிளம்பியது போலிருந்தது.

மீண்டும் கருப்புவை வணங்கினான். அவருக்கு கோவில் கட்டித்தருவதாக வாக்களித்தான். உணவருந்திவிட்டுக் கிளம்பும்போது பெரியாம்பிளையிடம் சொன்னான் ‘இந்தக் கட்டாரியை எடுத்துச் செல்கிறேன். போர்க்களத்தில் தாதனூர் ஆற்றும் வீர சாகசத்தால் இதே கட்டாரி மீண்டும் கருப்பு கோவிலுக்கு வரக்கூடும்.’

குதிரையை உடனே மதுரைப் பாதையில் விடாமல் மக்களினூடே புகுந்து தாதனூரைச் சுற்றி வந்தான். குறுக்குமறுக்குமாகப்

புகுந்துபோனான். கூப்பிய அவன் கரங்கள் இறங்கவில்லை. எவ்வளவு உணர்ச்சி கரமான, எவ்வளவு எளிமையான மக்கள் இவர்கள்! என்ற வியப்பு கணந்தோறும் அவன் மனதில் தோன்றியது. அவன் கற்பனையில் வீசிய காற்று கள்ள நாட்டு நிறை கண்மாய்களின் நீரலைகளைத் தழுவிச் சென்றது; கட்டுகளைத் தூக்கி வரப்புகளில் ஓடிவரும் பெண்களின் வியர்ப்பை ஆற்றியது; கதிரடிக் களங்களில் தூற்றிய தானிய மணிகளைத் தழுவியபடி ஊர் ஊராய்ச் சென்றது. அம்மாவைத் தேடியவாறு தெருவிலிறங்கிய நடைபயிலும் குழந்தையின் கைக்கிண்ணத்திலிருக்கும் நெய்ச் சோற்றின் வாசனையை முகர்ந்தபடி வானிலேறியது.

*

# 25

**தா**தனூரிலிருந்து சென்ற இரண்டு மாதங்களுக்குப் பிறகு முத்துவீரப்பன் கொங்கு மண்டலத்தில் சுற்றித் திரிந்தான். திடீரென்று அவனுக்குக் காய்ச்சல் கண்டது; முத்துகள் முளைத்தன. தம்மம்பட்டி பாளையக்காரன் அவனை வண்டியில் ஏற்றிக்கொண்டு அவசரமாகத் திருச்சிக்குச் சென்றான்.

அவன் அருகே நெருங்க யாரையும் வைத்தியர் அனுமதிக் கவில்லை. உடலெங்கும் பெரியம்மை பரவியிருக்க அவன் நினைவிழந்து படுக்கையில் கிடந்தான். அவன் மனைவி முத்தம்மாள் ஏழு மாதக் கர்ப்பிணியாய் இருந்தாள். அவனைப் பார்க்க அவளை விடவேயில்லை. மங்கம்மாவின் மடியிலேயே முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தாள்.

இரண்டாம் நாள் இரவு மங்கம்மாவின் அறையில் நுழைந்த வைத்தியர் மௌனமாக நின்றார். கண்ணீர் வழிந்தது. அதைக் கண்ட மங்கம்மா அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

**கு**ழந்தையின் அழுகுரல் கேட்டவுடன் விழித்துக்கொண்ட முத்தம்மா அனிச்சையாக அவனை அணைத்து மார்பிலே புதைத்தாள். காலடியில் அத்தை கட்டிலின் குறுக்காகச் சரிந்து கிடந்தாள். அமர்ந்திருந்தவள் அப்படியே உறங்கியிருக்க வேண்டும்.

இவனுக்காகத்தானா இத்தனை நாளும் காத்திருந்தேன்? அன்றே அவனோடு எரிந்திருக்க வேண்டும். நான் கெஞ்சிக் கதறியும் இவள் விடவில்லை. அணைத்து ஆறுதல் சொல்லி தன் மடியிலேயே பொத்திப் பொத்திக் காத்து இவ்வளவு நாள் கடத்திக்கொண்டு வந்துவிட்டாள். என்மகனுக்காகத்தானா? இப்போது நாட்டுக்கு ஒரு ராஜா கிடைத்துவிட்டான். எனக்கு? அவன் இல்லாத இந்த உலகத்துக்கு என்ன அர்த்தம்? இதில் இருந்து நான் என்ன செய்யப் போகிறேன்? ஏன் இப்போதும் என்னை விடமாட்டேன் என்கிறாள்? பெற்று இருபத்திரண்டு ஆண்டுகள்

தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாயின் துயரை விடவா இரண்டு ஆண்டுகள் அவனோடு வாழ்ந்த என் துயரம் பெரியது? ஆம். அது அனைத்துக்கும் அப்பாற்பட்டது. அவனை இவர்களுக்குத் தெரியாது. பெற்ற தாய்க்கே தெரியாது. நான் மட்டுமே அறிந்த அவன்! எல்லாமுமாகி என்னை ஆட்கொண்டவன்; எல்லாவற்றையும் விலக்கிவிட்டு என் மார்ப்பிலே முகம் சாய்த்து பனித்துளி போலப் படிந்திருந்தவன். என்னையன்றி யாரையும் தீண்டாதவன். ஏறிட்டும் பார்க்காதவன்! என் மடியில் தூங்கக் கிடைத்ததற்காக மட்டுமே இறைவனுக்கு நன்றி சொன்னவன். என்னை ஆராதிக்க மட்டுமே பிறப்பெடுத்தவன். என் விரல்களால் உண்பதற்காகவே உயிர் வாழ்ந்தவன். அவன் ராஜாவா? இல்லை, என் விரல்களில் வந்தமர்ந்த சிட்டு. தேன்சிட்டு. அருந்தி அருந்தித் திகட்டாமல் உடல் கிறங்கி உயிர் மயங்க வேற்றுலகில் நான் உயிர்த்திருக்க என்னுள் மறைந்து காணாமல் ஆனவன் இன்று எங்கு போனான்? நான் இல்லாமல் என்ன செய்வான்?

சட்டென்று எழுந்துபோய் சாளரத் திண்டில் இருந்த பன்னீர்க் குப்பியை எடுத்துக் கடகடவென்று குடித்துவிட்டு வந்து படுத்தாள். தூக்கமா மயக்கமா என்று தெரியாமல் நினைவு தேய்ந்தது. வட்டவட்டமாக உயர்ந்து நிற்கும் அந்த பிரமாண்டமான தூண்களை ஒட்டியே ஓடி வந்தாள். தூண் மறைவிலிருந்து வந்த அவன் அவளை அப்படியே தூக்கிக்கொண்டு நடந்தான். அவள் குலுங்கிச் சிரித்தவாறிருந்தாள். யாளிகள் நிற்கும் தூண்களைக் கடந்து நடந்து கொண்டிருந்தான். பசுமை பொங்கிய காட்டின் பெருமர வரிசையைத் தாண்டி நடந்தான். மேலிருந்து அருவி கொட்டியது. அப்படியே அதற்குள் நுழைந்தான். நீர்ச்சிதறல்கள் போல் அவள் பொங்கிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

**கு**ழந்தையின் அழுகுரல் கேட்டு எழுந்த மங்கம்மா, அவளை எழுப்பப் போனபோது திடுக்கிட்டாள். முத்தம்மாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

தாதிகள் ஓடிவந்தனர். பிறகு வைத்தியர் வந்தார். ‘ஜன்னி வந்துருச்சும்மா. பிரசவிச்சு நாலு நாள்தான் ஆகுது. இனி கஷ்டம்‘ என்றார். மங்கம்மா தரையில் விழுந்து கதறி அழுதாள்.

முத்தம்மாவின் உடல் உதற வாய் பிதற்றிக்கொண்டிருந்தது. ‘டேய்... ரங்கா... டேய்... கிருஷ்ணா...’

*

# 26

**மூன்று மாதக் குழந்தை விஜயரங்க சொக்கநாதனை அரசனாக்கி** விட்டு 1689ல் மங்கம்மா ஆட்சிப் பொறுப்பேற்றாள். ராஜா இல்லாத திருச்சியை முற்றுகையிடும் நோக்குடன் மைசூர் படைகள் சத்தியமங்கலத்தையும் பிற கோட்டைகளையும் கைப்பற்றி சங்ககிரி வரை வந்துவிட்டன. இதைக் கணக்கிட்டு மராத்தியர்கள் மைசூரை வளைத்தார்கள். தலைநகரைக் காக்க அவர்கள் திரும்ப வேண்டியதாயிற்று. மேற்குப் பாளையக்காரர்கள் திரும்பும் படையைத் தாக்கி பெரும் சேதம் விளைவித்து கொள்ளைப் பொருட்களைக் கைப்பற்றிக்கொண்டு விரட்டியடித்தனர்.

இரண்டு ஆண்டுகளாகத் திறை செலுத்த மறுத்த வேணாட்டின் மீது படையெடுத்து மதுரை தெற்கே போனது. கப்பத்தையும் படைச்செலவையும் சேர்த்துக் கொடுத்த அரசன், தன் உள்நாட்டு எதிரிகளை மதுரைப் படையின் உதவியோடு அழித்தான். பிறகு கோட்டைக்குள் ஓய்விலிருந்த மதுரை வீரர்களை எதிர்பாராத வேளையில் கொன்று ஒழித்தான். இந்தத் துயரக் கதையை மதுரைக்குச் சொல்ல சிலரே தப்பி வரமுடிந்தது. இதற்குப் பழிதீர்க்க பெரும்படையுடன் சென்ற பிரதானி நரசப்பய்யா வேணாட்டை வென்று அங்குள்ள செல்வங்களைச் சுரண்டிக் கொண்டு திரும்பினார்.

தனக்குக் கீழ் உள்ளவர்களை அடக்க முடிந்த மங்கம்மா ஔரங்கசீப்பிற்கு முறையாகத் திறை செலுத்தினாள். அவளிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக்கொண்ட தக்காண முகம்மதியத் தளபதிகள் மதுரையோடு நட்பு பாராட்டினர்.

மங்கம்மா ஆட்சிக்கு வந்தபின் பஞ்சமோ பெரும் யுத்தமோ இல்லாததால் நாடு அமைதியாக இருந்தது. நாடெங்கும் கல் சாலைகளும் வழியோரக் கிணறுகளும் சத்திரங்களும் அமைக்கும் பணிகள் துரிதமாக நடந்தன. உள்நாட்டு வணிகம் பெருகியது. நிழல் தர சாலையோரத்தில்

மரங்கள் வளர்ந்தன. விளைச்சலைப் பெருக்கப் புதிய குளங்கள் ஏராளமாக வெட்டப்பட்டன.

**தா**தனூரின் குஞ்சிவீரன் பெரியாம்பிளை விடிந்ததுமே காலைக் கஞ்சியைக் குடித்துவிட்டு திருப்பரங்குன்றத்தை நோக்கி நடந்தார். தென்கால் கண்மாயின் மேலக் கோடியில் விழுந்து வெள்ளரித் தோட்டங்களுக்குள் புகுந்து போனார். பிஞ்சுகளைப் பறித்துத் தின்றுகொண்டே நடந்தார். காய்களைப் பிடுங்கி மடியில் கட்டிக்கொண்டார். திருநெல்வேலிச் சாலையில் மேலேறித் திருப்பரங்குன்றத்துக்குப் பிரியும் சாலை முக்கில் வந்து நின்றார். கிழக்கே குன்று கண் எதிரே உயர்ந்து நின்றது. இரண்டு புளியங்கன்றுகளுக்கு அப்பால் தள்ளி நின்ற மற்ற ஊர் பெரியாம்பிளைகள் இவரைக் கண்டதும் பக்கத்தில் வந்தனர். வெள்ளரிகளை எடுத்துக்கொடுத்தார்.

பங்குனித் தேருக்கு வரும் வண்டிகள் தெற்கிலிருந்து சாரை சாரையாக திருப்பரங்குன்றத்தில் நுழைந்தன. பெண்களும் குழந்தைகளும் கூண்டுவண்டிக்குள் இருக்க இளவட்டங்கள் வண்டியைச் சுற்றி நடந்துவந்தனர். அவசரப்படும் வண்டிகள் விலகி முந்தின. சாலை அகலமாக இருந்ததால் மூன்று வண்டிகளுக்குப் போதுமான இடம் இருந்தது. கல் தளத்தின் மீது இரும்புப் பட்டைகள் உருளும் ஓசை கழுத்து மணிச்சத்தத்தை மீறிக் கடகடவென ஒலித்தது. தட்டு வண்டிகளில் ரெண்டு பல் பசலைக் காளைகளைப் பூட்டி வசக்கும் வாலிபர்கள் ஆர்ப்பரிப்போடு விரட்டி வந்தனர்.

வெயிலேறியதும்தான் பின்னத்தூர் பெரியதேவர் வண்டி வந்தது. கூட நாலைந்து பெரியாம்பிளைகள் நடந்து வந்தனர். வண்டியை மேற்கே மலையடிவாரத்தில் அவிழ்த்துப் போட்டுவிட்டு கோவிலை நோக்கி நடந்தனர். தேவரும் கணக்கெழுத்து முதலியாரும் பேசிக்கொண்டே நடக்க பெரியாம்பிளைகள் பதினோரு பேரும் பின்னால் சென்றனர். மேலரதவீதி களை கட்டியிருந்தது. எதிரும் புதிருமாகக் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. முறுக்கு அதிரசக் கடைகள் ஏராளமாய் புதிதாய் முளைத்திருந்தன. நெல்லுப் பொறியும் சோளப் பொறியும் கூடைகளில் குவிந்திருந்தன. வளையல், தண்டட்டிக் கடைகளில் மொய்க்கும் பெண்கள் கூட்டம். தோளில் குரங்கோடு வித்தைக்காரன் ஒருவன் வேகமாகக் கடந்தான். மஞ்சள் தலைப்பாகை அணிந்திருந்த மதுரையின் வேலேந்திய வீரன் ஒருவன் ‘ஊருக்கு வெளியே போய் இருடா’ என்று குரங்காட்டியை விரட்டினான். கிடைக்காத பண்டத்திற்காக எங்கிருந்தோ ஒரு சிறுமியின் அழுகையொலி எழுந்தது.

கோவிலை நெருங்கினர். கூட்டம் அதிகமாக இருந்தது. கோவிலைத் தேர் போல இழுத்துக்கொண்டு வடக்கு நோக்கிப் பாயப்போவது போல முகப்புத்தூண்களில் ஆறு பிரமாண்டமான குதிரைகள் கால்தூக்கி நின்றன. கோபுரம் வரை கோயிலை திருமலை நாயக்கர் கட்டியிருந்தார். அதற்கும் முன்னால் உள்ள இந்த முகமண்டபம் சொக்கநாதன் காலத்தில் ஆரம்பித்து மங்கம்மா ராணி கட்டியது. எதிரே பூரண அலங்காரத்துடன் தேர், பூணூல் அணிந்த பட்டர்கள் தேரெல்லாம் ஏறித் தொற்றியபடி ஏதேதோ செய்துகொண்டிருந்தனர்.

இடதுபுறம் சந்நிதித் தெருவுக்குள் நுழைந்து ஆயிர வைசிய

மண்டபத்தின் அருகே வந்தனர். அங்குதான் ராணி மங்கம்மா பங்குனித்தேருக்கு வரும்போது தங்கப் போவதாகத் தகவல் கிடைத்திருந்தது. மண்டபத்துக்கு முன்னே ஒரு வரிசையாகவும் தெரு நெடுவே ஒரு வரிசையாகவும் வீரர்கள் காவல் நின்றனர். தெருவின் மேற்கு ஓரம் மட்டும் கூட்டத்திற்கு வழிவிட்டிருந்தனர்.

முதலியார் ஓரமாய் நின்ற காவல் வீரனை அணுகி, ஆனையூர் கள்ளநாட்டிலிருந்து பெரிய தேவர் ராணியைப் பார்க்க வந்திருப்பதாக உள்ளே போய் தகவல் சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். ‘இப்ப பாக்கமுடியாது. அரமனயில வந்து பாருங்க’ என்றான் அவன். குஞ்சிவீரன் பெரியாம்பிள அவனிடம் போய் சொன்னார். ‘நாங்க மதுரைக் கோட்டக் காவலப்பா. நீ போய் சொன்னா வரச் சொல்வாங்க.’ அரை மனதுடன் உள்ளே போனான். போன வேகத்தில் திரும்ப வந்தான. ‘எர்ரபொம்மு ஐயாகிட்ட சொல்லப் போனேன். வழியிலேயே நரசப்பய்யா என்னன்னு கேட்டார். சொன்னதும் உங்களை அடுத்த செவ்வாக்கிழமை அரமனையில வந்து பாக்கச் சொன்னாரு’ என்று சொல்லிவிட்டு நின்று கொண்டான்.

பெரியதேவருக்கு முகம் வெளிறியது. இவ்வளவு பெரியாம் பிளைகளுக்கு முன் அவர் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்பட்டதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கடந்த மூன்றாண்டுகளாக ராணியைப் பார்க்க முயன்றும் முடியவில்லை. திருச்சியிலிருந்து ராணி மதுரை வந்த போதெல்லாம் நான்கு முறை முயன்றார். பிரதானி நரசப்பய்யாவைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. அவர் அனுமதியின்றி தர்பாரில் நுழையவே முடியாது. இரண்டு முறை வேண்டுகோளை ஓலையில் எழுதித்தரச் சொன்னார். ஒன்றும் ஆகவில்லை. எனவேதான் பங்குனி உத்தரத்திற்கு ராணி போகவிருப்பதாக தாதனூர் மூலம் கேள்விப்பட்டு இங்கு சந்திக்கலாம் என்று ஏற்பாடு செய்தது. எர்ரபொம்முவைத் தனக்குத் தெரியும் என்றும் அவன் வெளியே வந்தால் சொல்லிப் பார்க்கிறேன் என்றும் குஞ்சிவீரன் நம்பிகையளித்தார். வெகுநேரமாகத் தெருவோரம் காத்திருந்தனர்.

தொட்டப்ப நாயக்கனூர் பாளையக்காரி முத்துரங்கம்மா தனது பெண்கள் பேரப்பிள்ளைகளுடன் கோவிலிலிருந்து மண்டபத்தை நோக்கி வந்தது. நாலு எட்டு முன்னே போய் உசிலம்பட்டி பெரியாம்பிளை கும்புடு போட்டார். அந்த அம்மா ‘யாரு செட்டிக்கமுவனா? போன வாரமே உங்க ஊரு ஆள்களை வரச்சொன்னோம். எவனையும் காணோம். கோனாக்கமாரு பாளையத்த விட்டு தெக்க போறோம்னு நிக்கிறாங்க. அவங்க பொழக்கிறதா இல்லயா...’ என்று நீட்டிக்கொண்டே போனது. ‘வர்றோம்மா’ என்று சுருங்கச் சொல்லி அந்த அம்மாவை நிறுத்திய பெரியாம்பிளை ‘ராணிய பார்க்கணும்னு மூணு வருசமா காத்திருக்கோம். பிரதானி விடமாட்டேங்குறாரம்மா. இங்கே காலையில் இருந்து காத்திருக்கிறோம்’ என்றார்.

வலதுபக்கம் திரும்பி அவர்களைப் பார்த்துக்கொண்டே அந்தம்மா சொன்னது ‘ருக்கு, ஆனயூர் கள்ளநாட்டிவாரு அவ்வகாருன சூடானி ஒச்சிந்தினு செப்பு.’ இருந்ததில் பெரிய பெண் விளையாட்டாக நொண்டி அடித்துக்கொண்டே மண்டபத்துக்குள் ஓடியது. முத்துரங்கம்மா பேச்சை நிறுத்தாமல் தொடர்ந்தது. ‘இவன்லாம் படை கொண்டுபோனா வௌங்குமா! வாள எடுக்காதவன்லாம் எதுக்குப் படைவெட்டுக்குப்

போறான்? இங்க உள்ள பட்டமாரு, நாமக்காரன்லாம் ஒழுங்கா பூசை வச்சிக்கிட்டு இருக்கான். வடுகப் பாப்பானுக மட்டும் ராஜாங்கத்துல புகுந்து தொல்ல பண்ணுறானுக. கணக்க எழுதிக்கிட்டு அரமனயில் கெடக்க வேண்டியது தான. படை கொண்டு போறானாம்! வாலு நாய ஏவுன கதைதான்' என்று சொல்லிவிட்டு மீண்டும் கோனார் பிரச்சனையைத் தொடங்கியது. அதற்குள் மண்டப வாசலில் எட்டிப் பார்த்த சிறுமி 'ரம்மனு செப்பி' என்று கத்திவிட்டு உள்ளே ஓடினாள். பின்னாலேயே வந்த எர்ரபொம்மு மண்டபப் படியிறங்கி வந்து எல்லோரையும் வரவேற்று உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.

அந்தக் கல்மண்டபம் அழகியதூண்கள், சிலைகளோடு ஒரு கலைக் கோவிலாகவே இருந்தது. சந்தனமும் பூவாசமும் கமழ்ந்தன. மேற்கு மலையோரப் பாளையக்காரர்களின் குடும்பங்கள் எல்லாம் அங்கிருந்தன. பாளையப் பெண்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடிக் கும்மாளமிட்டனர். கல்யாண வீடு போல இருந்தது.

இவர்கள் உள்ளே வந்தவுடனே முதல் தூண் அருகே அமர்ந்து சிலருடன் பேசிக்கொண்டிருந்த நரசப்பய்யா உயிர்ப்பற்ற கண்களோடு வெறித்தார்.

எர்ரபொம்மு ராணியின் முன்னே அவர்களை அழைத்துச் சென்று நிறுத்தினான். எல்லோரும் வணங்கினர். முகமலர்ச்சியோடு கைகூப்பினாள். பெரியதேவரை மட்டும் அவள் முன்னால் அமரச் சொல்லிவிட்டு மற்றவர்களை இரண்டு தூண் தள்ளி வடக்கே அமர வைத்தான். மங்கம்மா தெற்குச் சுவரில் சாய்ந்து தரையில் விரிப்புகூட இல்லாமல் கல்தளத்திலேயே அமர்ந்திருந்தாள். எதிரே பெரிய தாம்பூலத் தட்டும் அருகே பணிக்கமும் இருந்தன. அவளைச் சுற்றிலும் பாளையக்காரர்களின் குமரிகளும் சிறுமிகளும் அமர்ந்திருந்தனர். இவர்களைக் கண்டதும் அவர்களின் ஆர்ப்பாட்டமும் சிரிப்பும் அடங்கி அமைதி நிலவியது.

'வந்தவங்களுக்கு வெத்தில கொடு' என்று ராணி சொன்னவுடன் மூன்று சிறுமிகள் தட்டை நோக்கிப் பாய்ந்தனர். அதில் இருந்த குட்டிப்பெண்ணை இழுத்து மடியில் வைத்துக்கொண்டு 'உன்னால தட்டத் தூக்கமுடியுமா!' என்று கேட்டாள். அது திமிறியது. அணைத்து முத்தமிட்டு மடியிலேயே வைத்துக்கொண்டாள்.

'சொல்லுங்க' என்றாள் ராணி. நரசப்பய்யா வந்து தூணருகில் நின்றார். பெரியதேவர் மெதுவாக ஆரம்பித்தார். 'மூணு வருசத்துக்கு முந்தி ராஜா கள்ளநாட்டுக்கு வந்தவரு எங்களுக்கு எவ்வளவோ செய்யிறேன்னு சொல்லியிருந்தாரு...' என்று சொல்லிவிட்டுத் தயங்கினார்.

'தெரியும். திரும்பி வந்த உடனே என்கிட்ட கதைகதையா சொன்னான். உங்க ஜனங்க மேல் அவனுக்குப் பிரியம். கடைசிநாள் கூடின கூட்டத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு போனான். பாசன வசதியும், படைப்பிரிவும்தான் அவன் முதல்ல வச்சிருந்த திட்டம். அங்க வந்த பிறகு அவனுக்கா தோணுனதுதான் ஆடு குடுக்கறது. எதையும் நான் மறக்கல. ஞாபகம் வச்சிருக்கிறேன்.'

'ஏதாவது செய்யுங்கம்மா...' என்று இழுத்தார்.

‘அவன் காலத்தவிட நாலுல ஒரு பங்குதான் இப்ப மதுரைக்கு சக்தி இருக்கு. டில்லிக்காரனுக்கு வேற கப்பம் கட்டணும். எல்லாத்தையும் சமாளிச்சுப் போய்க்கிட்டிருக்கேன். அவன் கனவுல நூத்துல ஒரு பங்க கூட என்னால் நிறைவேற்ற முடியாது. ஒவ்வொண்ணா உங்களுக்கு ஏற்பாடு பண்ணுறேன்.’

‘படையிலயாவது இப்ப சேத்துக்கிருங்க...’

நரசப்பய்யா இடையில் புகுந்தார். ‘மதுரை அமரக்கார்ங்களுக்கே சம்பளம் பாக்கி நிக்கிது. அதுவும் போக இப்ப உள்ள ஆளுகளே கூடுதல். பாளயங்கள்தான் அமரக்காரங்கள் அதிகமாக்கச் சொல்லியிருக்கோம். நீங்க பக்கத்து பாளையங்கள்ல கேட்டுப் பாருங்க...’

கோமுட்டிப் பெண்கள் ஐந்தாறு பேர் வந்து ராணியை வணங்கி வெள்ளித்தட்டை அவள் முன்னே வைத்தனர். பூவும் பழங்களும் ஏராளமான தங்கக் காசுகளும் அதிலிருந்தன. பட்டும் நகையுமாக அலங்காரத் தேர் போலிருந்தனர். பாளையப் பெண்களில் சிறுமிகளும் குமரிகளும்தான் பட்டு உடுத்தியிருந்தனர். மற்றப் பெண்கள் எல்லோரும் சுங்கடிச் சேலையும் சில நகைகளுமே அணிந்திருந்தனர்.

‘இம்மிடி செட்டியார் சௌக்கியமா?’ என்று கேட்டாள் ராணி.

‘வயசாயிருச்சிம்மா. வீட்லேயேதான் இருப்பு.’

‘வந்து என்னய பாக்கச் சொல்லுங்க.’

வந்தவர்கள் வணங்கி விடைபெற்று விலகினர்.

பெரியதேவரைப் பார்த்து ராணி சொன்னாள். ‘இந்தக் கோடையில திருமங்கலத்திலிருந்து கணவாய் வரைக்கும் மேற்குப் பாதை போடுறோம். உங்களுக்கே தெரியும். அதுவரைதான் மதுரையோட செலவு. போடி வரைக்கும் அந்தந்தப் பாளையங்களும் பழனி வரை அந்தப்பக்கப் பாளையங்களும் சாலைய இழுத்துக்கிருவாங்க. ராமேஸ்வரம் பாதையில கீழ்குறிச்சி வரை செம்பூர்க்காரங்களுக்கு பாதைக் காவல், சுங்க வரி உரிமைய கொடுத்திருக்கேன். அதுபோல கணவாய்வரை உங்களுக்கு காவலும் சுங்க உரிமையும் கொடுக்கிறேன். ஊர்களுக்குள்ள அதைப் பகுந்து எடுத்துக்கோங்க. இந்தக் கோடையில உங்களுக்கு பாதைபோடுற வேலை இருக்கும். வெளி ஆட்களை விடாம நீங்களே எடுத்துச் செய்யுங்க. சாலை முடிஞ்ச பிறகு அடுத்த வருஷம் இருந்து கொஞ்சங் கொஞ்சமா கம்மாய் வெட்டத் தொடங்கலாம். கவலப்படாதீங்க. கள்ள நாட்டுக்கு கஷ்டம் வராமப் பாத்துக்கிருவேன். ஆனா நீங்க விவசாயிகளுக்குப் பெரிய பிரச்சனை வராம அனுசரிச்சு நடக்கணும், பாத்துக்கோங்க.’ கடைசிச் சொற்கள் அழுத்தமாக வந்தன.

எர்ர ஜக்க நாயக்கனூர் குடும்பம் உள்ளே நுழைந்தது. அதன் மருமகள் சென்னகிருஷ்ணம்மா வணக்கம் கூடச் சொல்லாமல் நேரே போய் ராணியின் மடியில் தன் சிசுவை வைத்துவிட்டு மண்டியிட்ட நிலையிலேயே பெருமை பொங்கப் பார்த்தாள். நரசப்பய்யா முகம் கடுகடுத்தது. மகாராணி என்ற மட்டுமரியாதை இல்லை; பாளையக்காரிகளுக்கு எல்லாம் சொந்த அத்தை சித்தியிடம் பழகுவது போல்தான் நினைப்பு என்று மனதில் கறுவிக்கொண்டார். மதுரை அரண்மனை நாட்டிய சாலைக்குள் தன்னிஷ்டம்போல் நுழைந்த

எட்டையபுரம் கிழவி நரசப் பய்யாவைப் பார்த்து ‘வெளியே போ; நான் இவகிட்ட பேசணும்‘ என்று விரட்டியது. சில்லவாரு பெண்களின் திமிரே தனி ரகம்தான் என்று எரிச்சலடைந்தார் பிரதானி.

மங்கம்மா சென்னாவிடம் கேட்டாள் ‘ஏண்டி, போன மூணாம் வருசமே கல்யாண விருந்துக்கு திருச்சி வந்த. ஏன் இவ்வளவு நாள்?’

‘அவர எங்க வீட்ல இருக்க வீட்டீங்க? சண்டைக்குப் போன்னு மலையாள நாட்டுக்கு அனுப்பிட்டீங்க!’

சிரித்துக்கொண்ட ராணி ‘நல்லா வளர்ந்திட்டடி’ என்று அவள் தலையைத் தடவினாள்; கிழக்கே திரும்பிப் பார்த்தாள். ஒரு அம்மணி எழுந்து வந்து ஒரு தங்கச் சங்கிலியைக் கொடுத்தது. வாங்கிக் குழந்தையின் கழுத்திலே அணிவித்தாள். அம்மணியைக் காட்டி சென்னாவிடம் ‘இவங்கள தெரியுமா’ என்று ராணி கேட்டாள். ‘இவங்கதான் முத்துவோட அம்மா நாகலாதேவி. துலுக்கங்ககிட்ட இருந்து இவளப் பாதுகாக்கணும்னுதான் உதயகிரியிலிருந்து அந்த அவ்வா என்கிட்ட ஓடிவந்தது. மதுரையில் அவபிறந்ததாலதான் முத்துன்னு பேர்வச்சேன். அப்புறம் எர்ரமுத்துவாகி முத்தம்மாவானா. ம்... நாம ஒண்ணு நினைக்க தெய்வம் ஒண்ணு நினைக்குது...’

பேச்சை மாற்ற விரும்பிய சென்னா கேட்டாள். ‘இவ பேரு என்ன சொல்லுங்க. முத்து மாதிரி தமிழ் பேருதான்.’

‘ஆண்டாள்.’

‘இல்லை’ என்று சொல்லிவிட்டு சிரிப்பை அடக்கமுயன்றாள்.

ராணி சொன்னாள் அலர்மேல் மங்கை.’

சென்னாவோடு சேர்ந்து தூணருகே நின்ற அவள் கணவனும் சிரித்தான். பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு சிறுமி கேட்டாள் ‘அவ்வா, எப்படி கண்டுபிடிச்சீங்க?’

மங்கம்மா நரசப்பய்யாவிடம் சொன்னாள் ‘போய் தேர் கிளம்புற ஏற்பாடுகளைப் பண்ணுங்க. நான் இதோ வர்றேன்.’

அவர் மனமின்றிக் கிளம்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவர் சென்றவுடன் எர்ரபொம்முவிடம் சொன்னாள் ‘இவங்களுக்கு உன்னால என்ன செய்யமுடியும்னு யோச்சிட்டு வந்து என்கிட்ட சொல்லு.’

‘நீங்க எல்லாரும் உள்ள போய் சாப்பிடுங்க. இனிமே வேற ஏதாவது சொல்லணும்னா நேராப் போய் இவங்கிட்ட சொல்லுங்க. நான் தெரிஞ்சிக்கிருவேன்’ என்றாள் பெரியதேவரிடம்.

ஒரு கிழவி அவர்களை மண்டபத்தின் உட்புறம் அழைத்துச் சென்றது.

அவர்கள் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வந்தபோதும் அந்தக் குழந்தை ராணியின் மடியிலேயே இருந்தது. அவர்கள் ராணியின் எதிரே வந்து விடைபெற வணங்கியபோது சென்னகிருஷ்ணம்மா வெள்ளித் தட்டை எடுத்து அவர்கள் கையில் கொடுத்தாள். ராணி சொன்னாள் ‘தங்கக் காசுகளை எல்லா கிராமங்களுக்கும் பகுத்து கொடுங்க. சாமிக்கு அடுத்த கொடை கொடுக்கும்போது செலவுக்கு ஆகும்.’

*

# 27

**கொண்டலுவும் ரகுநாத நாயக்கனும் வைகைக்கு வடகரையில்** சத்திரத்திலேயே குதிரைகளைக் கட்டிவிட்டு வடக்கு வாசல் வழியாக மதுரைக்குள் நுழைந்தபோது மாட விளக்குகளில் சுடர் ஏறியிருந்தது. ஆவணி வீதி வழியாக புதுமண்டபத்தை நோக்கி நடந்தனர். தெரு விளக்குகளின் தீயொளியில் மனித நிழல்கள் பூதாகரமாக சுவர்களிலும் தரையிலும் அசைந்தன. மீனாட்சி கோவிலின் ஈசான மூலையில் சிறிய அரண்மனை புதியாய் எழுந்து நின்றது. மங்கம்மா அரசியான பின் பண்ணிரண்டாவது ஆண்டு நிறைவின் நினைவாக சமீபத்தில்தான் அது திறக்கப்பட்டிருந்தது. கீழ்ச்சித்திரை வீதியிலிருந்தே சொக்கரை வணங்கவிட்டு புதுமண்டபத்தில் நுழைந்து மீனாட்சி கல்யாணச் சிலையின் கீழ் காத்திருந்தனர். அதுதான் திண்டுக்கல்லில் அவர்களுக்கிடப்பட்ட உத்தரவு.

பத்து நாழிகைக்குப் பிறகு ஒரு கிழவி வந்து அவர்களை அழைத்துக்கொண்டு போனாள். அரண்மனையின் கிழக்கு முகப்பு வாசலுக்குப் போகாமல் ரங்கவிலாசத்தில் நுழைத்து வடக்கு வாசல் வழியே அரண்மனைக்குள் போய் நாட்டிய சாலைக்குள் சென்றனர். தீபங்களின் பிரகாசமான மஞ்சள் ஒளியில் அந்தக் கலையரங்கத்தின் அழகு வேற்றுலகில் இருப்பதான உணர்வைக் கொடுத்தது. கிழக்கே திரும்பி படியேறி கல்மேடையில் அரியாசனத்திலிருந்த ராணியை வணங்கினர். அவள் தலையசைத்துவிட்டுத் திரும்பியவுடன் தாதி பணிக்கத்தை நீட்டினாள். கிழவி அவர்கள் இருவரையும் தனியே விட்டுவிட்டு தாதிகளை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

ராணி எதுவுமே பேசாமல் சற்று நேரம் அந்த இளைஞர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்களும் நேருக்கே நேரே அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தவாறே காத்திருந்தனர்.

தெலுங்கில் கேட்டாள் ‘பேரென்ன?’

‘நான் கொண்டய்யா. திண்டுக்கல் கோட்டை புறக்காவல் குதிரைகளுக்குத் தலைவன். இவன் ரகுநாதன். துணைத் தலைவன்.’

‘பூர்வீகம்?’

‘நாங்கள் மாதிகவாரு. இப்போது இருப்பது வாடிப்பட்டி. ஆறு தலைமுறைக்கு முன் ராயலசீமையிலிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறிய ரெட்டிகளும் கம்மவாரும் எங்களையும் கூட்டிக்கொண்டு இங்கே வந்தனர். விசுவநாத நாயக்கருக்குப் பிறகு கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் பல பாளையங்களுக்கு எங்களைப் பிரித்து அனுப்பியதாகக் கதை கேட்டிருக்கிறேன்.’

‘ஆம். கண்டிக்கோட்டையை கோல்கொண்டா சுல்தான் கைப்பற்றிப் பேரழிவை நிகழ்த்தியபோது நடந்தது அது. பெண்களைக் காப்பதற்காகவே தெற்கே இறங்கிய பெரும் அகதிக் கூட்டங்கள் அவை’ என்று சொல்லிவிட்டு ரகுநாதனைப் பார்த்தாள்.

‘நாங்கள் பரம்பரைக் குதிரைவீரர்கள். முன்னோர்கள் ராஜகொண்டாவெலமர்கள். இங்கே வந்து தஞ்சாவூரில் சேவை செய்தவர்கள். என் தந்தை சொக்க ரௌத்தை கதிரி நாயக்கர் தஞ்சாவூரிலிருந்து அழைத்து வந்து திண்டுக்கல்லில் குடியேற்றினார்’ என்றான் ரகுநாதன்.

‘எவ்வளவு குதிரைகளோடு வந்தீர்கள்?’

‘புறக்காவல் பிரிவு முழுவதும். இருநூறு. நாகமலை அடிவாரத்தில் மறைவாய் நிறுத்தியிருக்கிறோம்.’

‘அதில் கம்பள வீரர்கள் எவ்வளவு பேர்?’

‘யாருமில்லை. நூற்றியிருபது சக்கிலியர்கள். ஐம்பத்துக்கு மேல் வெலமர்கள். மீதி ஆயக்குடி வேடர்கள்.’

‘சமீபத்தில் எந்தப் போருக்குப் போனாய்?’

‘வேணாட்டுக்கும் பிறகு தஞ்சாவூர் மீதான சண்டைக்கும் போனேன். அதன் பெயர் போரல்ல, வெறும் விளையாட்டு.’ சொன்ன பிறகே அது கூடுதல் அபிப்ராயம் என்று அவனுக்குத் தோன்றியது.

‘சென்ற வெள்ளியன்று கிளம்பிய நரசப்பய்யாவின் ராமநாதபுரம் படையெடுப்பைப் பற்றி என்ன நினைக்கிறாய்?’

‘அவரசப்படுகிறார். போதிய வலிமையில்லாமல் போயிருக்கிறார்.’

‘இதற்காக உன்னிடம் நான் ஆலோசனை கேட்டிருந்தால்?’

‘எர்ரபொம்மு நாயக்கன் தலைமையில் சென்றிருந்தால் இன்னும் குறைவான வீரர்களே போதும். அல்லது சிந்தம நாயக்கன் தலைமையில் குதிரைகள் மின்னல் வேகத்தில் தாக்கியிருக்கவேண்டும். பிறகு பிடிபட்ட கோட்டைகளில் நிலைப்படையால் தற்காப்பு அரணை வலுவாக அமைத்திருக்கலாம்.’

சிரித்துக்கொண்டே ராணி கேட்டாள் ‘உன் கணிப்பில் மதுரையின் குதிரைத் தளபதிகளில் கெட்டிக்காரன் யார்?’

‘பணிவோடு சொல்கிறேன்...’ என்று சொல்லிவிட்டுத் தயங்கினான்.

புன்னகை மாறாத ராணி காத்திருந்தாள். ‘நான்தான்’.

‘மதுரையின் ராஜாங்க நிலவரம் பற்றி என்ன கருதுகிறாய்?’

‘எனக்கு அதில் அவ்வளவாக ஆர்வம் இல்லை.’

‘நினைப்பதை தைரியமாகச் சொல்.’

‘நரசப்பய்யா அரண்மனையில் நல்ல நிர்வாகியாக இருக்கலாம். பாளையங்களில் அவர்மீது கடும் அதிருப்தி நிலவுகிறது. அதுவும் போர்க்களத்தில் பாளையக்காரர்களுக்கு ஒரு பார்ப்பனர் உத்தரவிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. அதுபோலத்தான் அரண்மனைகளில் கருகமணி அணிந்த கம்பளப் பெண்கள் இல்லாமலாகி பலிஜவாரு பெண்கள் நிறைந்து விட்டதையும் சங்கடத்தோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.’

அவன் பேச்சை ரசித்துக்கொண்டே சொன்னாள் ‘என்ன செய்வது! அவர்கள் ராஜா அப்படிக் கல்யாணம் செய்து கொண்டால்?’

‘ராணியாகலாம். மதுரைக்கே பட்டத்தரசி ஆகும்போது...’

‘என்ன செய்யலாம்? அவர்கள் அடங்கியிருக்கலாம். அல்லது வாய்ப்புக் கிடைக்கும்போது சிறைப்படுத்தலாம்; கொல்லலாம்‘ என்றாள் ராணி.

தான் பேச்சில் எல்லை தாண்டிவிட்டதை உணர்ந்து கொண்டலு மௌனமானான்.

சிரித்துக்கொண்டே ராணி சொன்னாள் ‘இன்றிரவு அது நடக்கும்.’ திடுக்கிட்டவன் கேள்விக்குறியோடு பார்த்தான்.

‘இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது. மதுரையின் நிலைப்படை கிழக்கே போய்விட்டது. இங்கிருப்பது கொத்தளங் களின் காவல் வீரர்கள்தான். தெளிவான உத்தரவு இல்லாதபோது அவர்கள் வெறும் பொம்மைகள். அரண்மனையைக் கைப்பற்றிக் கோட்டையை மூடிவிடலாம். புதிய அரசரைப் பாளையங்கள் ஏற்றுக்கொண்டால் பிறகு எல்லாம் சுலபம். இச்சதிக்கு இப்போது துணை போனது மூன்றே பாளையங்கள்தான். ஆனால் திட்டத்தின் சூத்திரதாரி கொல்லவாரு அல்ல, பலிஜவாருதான். இப்போது என்ன செய்வது?’

‘தர்ம சிந்தையுள்ள ஒரு மகாராணியின் நல்லாட்சியைக் குலைக்க முயலும் ராஜத் துரோகிகளுக்கு கொலைத் தண்ட னைதான்.’

‘இது எவ்வகை நியாயம்?’

‘வென்றவனுக்கே எல்லா நியாயமும். ஆனால் நான் செல்லியம்மன் நாமத்தால் முத்துவீரப்ப ராஜாவின் பெயரால் இதைச் செய்து முடிப்பேன்.’

ராணி ஒரு ஓலையை நீட்டினாள். கோட்டைக்குள் ஏழு வீடுகள், செல்லியம்மன் கோவில், மூன்று கொத்தளங்கள் எல்லாம் பெயர், விவரத்துடன் இருந்தன.

‘செயலில் இறங்கப் போகிறவர்கள் நூறு பேருக்கு உள்ளேதான் இருக்கக்கூடும். நிச்சயம் பின்னிரவாகத்தான் இருக்கும். அதற்குள் நீ முந்திக்கொள்ள வேண்டும். கோட்டைக்குள் நீ நுழைந்த முப்பது நாழிகைக்குள் எல்லாம் முடிந்துவிடவேண்டும். அறுபது பேரோடு

அரண்மனையின் கிழக்கு வாசலைக் கைப்பற்றுங்கள். பிறகு இங்கே என்ன செய்யவேண்டும் என்று உங்களை அழைத்துவந்த அவ்வா சொல்வாள். எல்லா இடங்களையும் ஒரே நேரத்தில் தாக்கவேண்டும். அவர்கள் மோதினால் மட்டுமே குடும்பத்தார் முன் கொல்லவேண்டும். இல்லையேல் ஆற்றங்கரைக்குக் கொண்டுசெல்லுங்கள்.'

'கோட்டைக் கதவை எப்படி உடைப்பது என்றே யோசிக்கிறேன்.'

'உனக்காக நானே யோசித்து யோசித்து பிறகு சட்டென ஒரு சுலபமான வழியைக் கண்டுபிடித்தேன். அந்த மேல்விதானத்தைப் பார்த்துவிட்டு வா' என்று சுட்டிக் காட்டினாள்.

பத்து எட்டுகள் தென்முகமாக நடந்து மேலே பார்த்தான். அழகிய குவிமாடத்தின் மேல் ஒரு பெரிய துவாரமும், அதற்கப்பால் வானமும் தெரிந்தது. திரும்பி வந்தான். 'இந்தக் கதையைக் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் பார்க்கிறேன்.'

'திருமலை நாயக்கர் அம்மக்களின் மீதான நல்லிணக்கத்தைக் காட்டுவதற்காக மதுரைக் காவலைக் கொடுத்தார். இங்கு அவர்களுக்கு எந்த வேலையுமில்லை. இரவு வந்து தெருக்களில் சுற்றிவிட்டு கோட்டை மதில் மேல் தூங்கிவிட்டு காலையில் போய்விடுவார்கள். அதற்கு மானியம்போல் அரசாங்கம் கூலி தருகிறது. முத்துவீரப்பன் இருந்திருந்தால் இவர்கள் நிலைமை மாறியிருக்கும். என்னால் முடியவில்லை. அந்த ஊர் பெயர்...மறந்து விட்டேன். அவ்வாவிடம் கேட்டுக் கொள்ளலாம். நீங்கள் கோட்டைக்குள் நுழைய மட்டுமல்ல, குறிப்பிட்ட இலக்குகளை அடையாளம் காட்டவும் அவர்கள் உதவி தேவைப்படும். மிகவும் நம்பகமானவர்கள்.'

'எங்களை எப்படி அவர்கள் நம்புவார்கள்?'

'அவர்கள் அறிந்த முக்கியமான பொருளை அடையாளச் சின்னமாகத் தருகிறேன்.'

**கு**ஞ்சிவீரன் பெரியாம்பிளை வழக்கமாக வரும் நேரத்திற்கு கோட்டையின் மேற்கு வாசலில் வந்து நின்றார். வழக்கம் போல் கதவுகள் திறந்தன. அவரோடு வந்த இருபது பேரும் இரு கதவுகளுக்கு அருகிலேயே நின்றிருந்தனர். மீதி இருபது பேர் சற்றுத் தாமதமாக தூரத்தில் வந்து கொண்டிருந்தனர்.

'அவங்க ஏன் பிந்தி வாராங்க' என்று ஒரு வீரன் கேட்டபோதே குதிரைகள் ஓடிவருவதைப் பார்த்துவிட்டான். 'கதவை மூடு' என்று கத்திக்கொண்டு கதவருகே போனவனைத் தடுத்து குஞ்சிவீரன் சொன்னார் 'ராணி உத்தரவு. திண்டுக்கல் வீரங்கதான் வாராங்க. 'குழம்பிய அவன் மேற்கு அலங்கத் தலைவனிடம் ஓடினான். அதற்குள் உள்ளே நுழைந்த ரகுநாத நாயக்கன் திட்டமிட்டபடி தன் வீரர்களுடன் மேங்காட்டு லாயத்தைத் தாண்டி கோட்டைச் சுவரோரமாகவே அரண்மனையை நோக்கி விரைந்தான்.

வாசலுக்கு ஓடிவந்த தொட்டியங்கோட்டை ரங்கய்ய நாயக்கரிடம் ஒரு ஓலையை நீட்டிய கொண்டலு சொன்னான் 'ராணியின் உத்தரவு. கொத்தளங்களில் எந்த ஒலியும் இப்போது எழுப்பக்கூடாது. உடனே

எல்லாப் பகுதிக்கும் தகவல் கொடுங்கள். வாசலை மூடுங்கள்.'

பதினோரு பிரிவாகக் குதிரைகள் பிரிந்து அடையாளம் காட்டும் தாதனூர்காரர்களை ஏற்றிக்கொண்டு இலக்குகளை நோக்கிப் பாய்ந்தன. எதிர்ப்பு அதிகம் இருக்கும் என்பதால் கொண்டலு கொத்தளத்தை நோக்கித் தானே போனான்.

படிகளில் ஓடி ஏறிய அவனை நோக்கி வேல்கம்பு நீண்டது. அதைத் தட்டி விட்ட கோடாரியால் அப்படியே அவன் கழுத்தைச் சீவினான். இன்னும் இரண்டு பேர் வேலோடு பாய்ந்தனர். கொண்டலுவின் பின்னால் வந்தவர்கள் அவர்களை வெட்டிச் சாய்த்தனர். நாலு பேர் தப்பி மதில்மேலேயே ஓடினார்கள். பக்கத்துத் கொத்தளங்களிலிருந்து வீரர்கள் இங்கே ஓடிவந்தனர். அவர்கள் நெருங்குமுன் கொண்டலு கத்தினான் 'ராணியின் உத்தரவு.' அவர்கள் அப்படியே நின்றுகொண்டனர். கொத்தளத்தின் கீழே தூங்கிக் கொண்டிருந்த பாளையப் பகல் காவல்காரர்கள் ஏழு பேரையும் பின்னால் கையைக் கட்டி கயிறால் ஒன்றாகப் பிணைத்தனர்.

கொண்டலு அவர்களை அப்படியே விட்டு விட்டுத் தன் வீரர்களுடன் செல்லியம்மன் கோவிலை நோக்கிப் பாய்ந்தான். போகும்போதே, வேலை முடிந்துவிட்ட இன்னொரு கொத்தளத்திலிருந்த அவனது வீரர்கள் சேர்ந்துகொண்டனர்.

தப்பியோடிய நாலு பேரும் மேற்கு வாசலுக்கு ஓடி கதவைத் திறக்க முயன்றனர். ஏற்கனவே குழம்பிப் போயிருந்த காவலர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்க, சிலர் அவர்களைத் தடுக்க, ஒருவன் ரங்கய்ய நாயக்கரிடம் ஓடினான். கதவைத் திறக்க அவர்கள் போராடிக் கொண்டிருக்க ஒரு குரல் கேட்டது. 'ஓடுறவன் ஓடட்டும். விடுங்கடா.' கதவைச் சற்றே திறக்கவும் இடைவெளியில் புகுந்து நால்வரும் வெளியேறி அகழிப்பாலம் தாண்டி வடமேற்கே ஓடினர். கோட்டைக்குள் போகமுடியாத தாதனூர்க்காரர்கள் இருபது பேரும் அங்கே அரச மரத்தடியில் அமர்ந்திருந்தனர். நான்கு பேர் மட்டும் ஓடிவருவதைக் கண்டு அவர்கள் எழுந்து மறித்தனர். மீறி ஓடியபோது துரத்தினர். அதிலொருவன் திரும்பி வேல்கம்பை நீட்டினான். அவனை விரட்டி நெருங்கிய தாதனூர் போத்தவிருமன் காவல்கம்பால் அவன் மண்டையில் அடிக்க, திரும்பிய அவன் வேல்கம்பால் விருமனின் நெஞ்சில் குத்தினான். எல்லோரும் ஓடியவர்களை விரட்டிச் சூழ்ந்தனர். விருமனின் முதுகில் வேல்வெளியே நீட்டியிருக்க அப்படியே தரையில் கிடந்தான். சற்று நேரத்தில் அவன் உயிர் ஐந்தாவதாக அங்கிருந்து பிரிந்தது.

கொண்டலு செல்லியம்மன் கோவில் அருகே போனபோது அங்கு எதுவும் நடந்திருக்கவில்லை. குதிரைகள் கோவில் மதிலை வெறுமனே சுற்றி வந்தன. 'நாங்க குதிரைய விட்டு இறங்கி நுழையும் முன்னே கோவில் கதவை உள்ள சாத்திட்டாங்க' என்றான் வேடர் தலைவன் லிங்கம நாயக்கன்.

வடக்கு அலங்கத்திலிருந்து பெரிய மரத்தடியைத் தூக்கி வந்தார்கள். இருபது பேர் சேர்ந்து தடியைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடிவந்த வேகத்தில் மோதிய முதல் அடியிலேயே அந்த சின்னக்கோவில் கதவுதெறித்து வழிவிட்டது. குதிரைகள் உள்ளே புகுந்தன. எதிரே இரண்டு

சிறிய கருவறைகள் மட்டுமே இருந்தன.

கண்ணகிக்கு ஒன்று. செல்லியம்மனுக்கு மற்றது. கோவில் மதிலுக்கு உள்ளே பரந்த வெட்டவெளியில் வேப்பமரங்களும் சில அரசமரங்களும் நின்றன. உள்ளிருந்தவர்கள் கலைந்து ஆயுதங் களுடன் குறுக்குமறுக்காக ஓடினர். நூற்றியிருபது பேர் இருக்கலாம். வீச்சின் எல்லைக்குள் வந்தவர்களையெல்லாம் குதிரை வீரர்கள் வெட்டித் தள்ளினர். உயிர்ப் பயத்தாலோ, என்னவோ மிகச் சிலரே எதிர்க்க முயன்றனர். சில நொடிகள் எங்கும் ரத்தக் களரியாயிருந்தது. அலறல் பாதியாய் நிற்க தலைகள் அறுந்து விழுந்தன. மீந்தவர்கள் ஆயுதத்தைப் போட்டுவிட்டு மதிலோரம் ஓடி மண்டியிட்டு தலை மண் தொட கைகூப்பிச் சரணடைந்தனர்.

கொண்டலு அரண்மனைக்கு வந்தபோது கிழக்கு வாசலின் அருகே ரத்தத்திட்டுகளின் மேலே ஐந்தாறு சடலங்கள் கிடந்தன. அவனைக் கண்டதும் கதவும் திறந்தது. ரகுநாதன் அரண்மனை உள் முற்றத்தில் குதிரைமீதிருந்தான். மற்றக் குதிரைகள் அணிவகுத்து நின்றிருந்தன. இவனை அழைத்துக்கொண்டு ரகுநாதன் நாட்டிய சாலைக்குள் சென்றான். அந்நேரத்திலும் ராணி வெற்றிலையை மென்றபடி சில பெண்களோடு பேசிக்கொண்டிருந்தாள். கொண்டலுவிடம் சொன்னாள் ‘அகப்பட்டவர்களில் யாரைத் தண்டிக்கவேண்டும், யாரை விட்டுவிடலாம் என்பது உன் முடிவு. இந்தச் சதியின் முழு விவரத்தையும் விசாரித்து எனக்குச் சொல்.’

பிடிபட்டவர்களைக் கபாலி மலைக்கு அன்றிரவே இழுத்துச் சென்றனர். உதவிக்கு தாதனூர்க்காரர்கள் இருந்தனர். கதறலும் அழுகுரல்களும் ஒலிக்க கபாலி மலை உடைமரங்களும் கள்ளிச் செடிகளும் நடுங்கின.

விடுதலையானவர்கள் மலை விட்டிறங்கி நாலா திசையிலும் ஓடினர். சதித்திட்டத்தை அறிந்திருந்தவர்களின் சடலங்கள் மலை அடிவாரத்தில் குவியலாய் எரிந்தன. மாடக்குளத்திலிருந்தும் பக்கத்து ஊர்களிலிருந்தும் விறகுக் கட்டுகள் வண்டிகளில் வந்து தீக்கிரையாகிக் கொண்டேயிருந்தன. கரும்புகை கபாலி மலைக்கு மேலே உயர்ந்து வானில் கரைந்தது. மறுநாள் காலையில் சூரியன் வந்து பார்த்தபோது இரவின் ரத்தத் தடயம் எதுவுமற்று மதுரை தன்னியல்பில் இயங்கிக்கொண்டிருந்தது.

**ம**றுநாள் நண்பகலில் மீண்டும் ராணியை நாட்டிய சாலையில் சந்தித்தனர். திண்டுக்கல் கோட்டைத் தலைவன் ரங்காரெட்டி ராணியின் அருகே நின்றிருந்தான். கொண்டய்யா அவளை வணங்கிவிட்டு கையில் இருந்த கட்டாரியை அவளிடம் கொடுக்க முன்னே சென்றான். ‘இனி அதை நீயே வைத்துக்கொள்’ என்று சொல்லிவிட்டு ‘அதிலுள்ள எழுத்துகளை வாசித்தாயா?’ என்று கேட்டாள்.

‘எல்லாம் முடிந்த பிறகு இன்றுதான் பகல் வெளிச்சத்தில் படித்தேன்.’

‘வாசிக்கப்படாமல் இருக்கும் எழுத்துகளுக்கு அர்த்தமேதும் இல்லை அல்லவா? பகல் எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கிறது. இரவு மர்மமானது.’

‘சாளுவ கட்டாரியை வைக்குமளவு எனது குடிசை தகுதியானதல்ல.’

‘வேறு வழியில்லை. அதில் படிந்த ரத்தக் கறைகள் அரண் மனையில்

வேண்டாத நினைவுகளைக் கிளறிக்கொண்டிருக்கும். வைத்துக்கொள். விறகு வெட்டப் பயன்படும். ஆனால் அதிலுள்ள நவரத்தினங்கள் விலைமதிப்பற்றவை. இன்றிலிருந்து மதுரை அரண்மனைக் காவலுக்கு உன் குதிரைப்படைப் பிரிவே பொறுப்பு.'

'ஒரு சக்கிலியனை அரண்மனைக் காவல் தலைவனாக யாரும் ஏற்கமாட்டார்கள். எங்கள் விதி போர்க்களத்தில் ரத்தம் சிந்துவது மட்டும்தான்.'

'இது என் அரண்மனை; என் நாடு. இங்கு விதியை நான் மாற்றுவேன். நீ போகலாம். நாளை வந்து பார்.'

கையில் கட்டாரியுடன் அவனும் நண்பனும் வணங்கி விடைபெற்றுச் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ரங்கா ரெட்டியிடம் கேட்டாள் 'உன் மனம் குளிர்ந்தா?'

எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அவன் மௌனமாக இருந்தான்.

'இவன் உன்னைவிட கெட்டிக்காரன். உன் மகன் சென்னகேசவனுக்கு இவன் மேலுள்ள எரிச்சல் நீ இவனுக்கு அளித்த பதவியின் காரணமாக ஏற்பட்டதல்ல என்பதை அறிந்தேன் - அதுவும் இன்று காலையில்.'

ராணியைப் பார்த்தவாறிருந்த அவன் சட்டென்று தலைகுனிந்தான்.

'உன் கோட்டையின் புறக்காவலுக்கு புதிய வீரர்களைச் சேர்த்துக்கொள். அதில் அதிகமாக கம்பளத்தாரே இருக்க வேண்டும். பாளையத்தலைவர்களோடு இணக்கமாக நடந்துகொள். விருந்து வை. அவர்கள் வீட்டு விழாக்களில் கலந்துகொள்...' ராணி தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

அப்போது கிழக்குச் சீமையிலிருந்து தகவல் கொண்டுவந்த குதிரை வீரன் அவசரமாக உள்ளே நுழைந்தான்.

நரசப்பய்யாவின் உடலோடு மதுரைப் படை பின்வாங்கி வந்துகொண்டிருக்கிறது.

**அ**ன்றிரவு மூன்றாம் ஜாமத்தில் கிழக்கிலிருந்து வந்த படைகள் மதுரைக் கோட்டைக்குள் நுழைந்தன. உத்தப்பன் நேரே அரண்மனைக்குள் வந்து ராணியின் முன்னே நின்றான். அந்நேரத்திலும் அவனுக்காக விழித்துக் காத்திருந்தாள்.

'என்ன நடந்தது?'

'தன்னைக்கூடத் தற்காத்துக் கொள்ள முடியாதவன் களமிறங்குவதால் வரும் விபரீதம்.'

'நீங்கள் என்ன செய்தீர்கள்?'

'வழக்கம் போல் மறவர்கள் இரவில் பாடி வீட்டைத் தாக்கினார்கள். சண்டையிட்டு அவர்களைத் துரத்திவிட்டுப் பார்க்கும்போது நரசப்பய்யாவின் தலை தனியே கிடந்தது. படையெடுப்பின் நோக்கம் எனக்குத் தெளிவாகத் தெரியாததால் அச்சூழ்நிலையில் பின்வாங்குவதே நல்லது என்று திரும்பிவிட்டேன். ஒரு பாளையத்தை அடக்கமுடியாமல் திரும்புவது மதுரைக்கு அவமானம்தான். நானே மீண்டும் முயன்று அந்த

அவமானத்தைக் களைவேன்.’

‘பார்க்கலாம். உடனே வேண்டாம். அவர் நேரில் போக வேண்டாம் என்று சொன்னேன். கேட்கவில்லை. வாளேந்தும் மறவர்கள் குறைவு. வேலும் வளரியும்தான் அவர்கள் ஆயுதம்...’

‘உங்கள் மனம் போகும் திசை தெரிகிறது. நானும் அதுபற்றி யோசித்துவிட்டேன். அப்படியே இருக்கலாம். ஆனால் தளபதிகள் யாரும் அதற்குப் பொறுப்பல்ல. அவர்களை நான் நன்கறிவேன். கம்பளத் தளபதிகள் பொதுவாக யுத்த தர்மத்தை மீறுவதில்லை. படைவீரர்கள் யாருக்குமே நரசப்பய்யாவைப் பிடிக்காது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எவனையாவது அவர் அவமானப்படுத்தியிருக்கலாம். அவருக்குப் போர்ப் பயிற்சி இல்லை. அவர் ரத்தத்தைக் கண்டதில்லை. வேணாடு, தஞ்சாவூர் படையெடுப்புகள் சுலபத்தில் வெற்றியளித்து விட்டதால் அவர் அனைத்தையும் எளிது என்று கணக்கிட்டுவிட்டார். எங்களிடம் எதைப் பற்றியும் அவர் பேசியதேயில்லை. பிரதானி வேலைக்கு மட்டுமே அவர் தகுதியானவர்.’

‘தெரியும். இதுவும் சுலபமாய் முடியக்கூடும் என்று கணித்து நான் அவர் போக்கிலே விட்டுவிட்டது என் தவறுதான்.’

‘உண்மையில் காவிரி திடீரெனப் பெருக்கெடுத்து தஞ்சாவூர் குதிரைகள் வெள்ளத்தில் சிக்கி இழுபட்டதால்தான் நமது வெற்றி அங்கே சாத்தியமாயிற்று. தஞ்சாவூர் ராஜ்ஜியத்தையே கைப்பற்றும் வாய்ப்பை சொக்கநாதருக்குப் பிறகு மதுரை மீண்டும் ஒருமுறை கைவிட்டது. வெள்ளத்தில் மாட்டியவர்களைத் தாக்குவது அநீதி என்று கருதி சொக்கநாதர் வெறுமனே காத்திருந்ததாக ஒரு கதை உண்டு. ஆனால் கரையோடு தங்கள் வீரர்களைக் காப்பாற்ற ஓடிய படையை விரட்டிக் கொல்லுமாறு நரசப்பய்யா உத்தரவிட்டார். பிறகு எதிர்க்கும் வலிமை அறவே அற்றுப் போன தஞ்சாவூரைக் கைப்பற்றாமல் சமரசம் பேசினார். ஏன் தெரியுமா? படைச்செலவுக்கு ஈடாக உங்களிடம் வந்த பெருந்தொகையைப் போல ஒரு தொகையை நரசப்பய்யாவின் தந்தை கையூட்டாகப் பெற்றார் என்று கேள்வி. மூன்றாண்டுகளுக்கு முன் வயல் வறண்டபோது கண்ணம்பாடி அணையை உடைப்பதற்காக மைசூரின்மீது மதுரையும் தஞ்சாவூரும் சேர்ந்து படை கொண்டு போனபோதும் அவர் தந்தை கூடவே வந்தார். அந்தக் கிழவருக்கு அங்கு என்ன வேலை? சிக்கதேவ உடையார் தோற்றிருந்தாலும் கிழவருக்கு எதுவும் கிடைத்திருக்காது. அவன் அப்படிப்பட்ட கஞ்சன். நாங்கள் கருவூரைத் தாண்டுமுன்னே மலைகளில் பெருமழை பெய்து அணை உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்தது கடவுள்செயல் என்றே சொல்லவேண்டும்.’

‘தஞ்சாவூரில் அவர் சுருட்டியதில் பெரும்பகுதியைக் கடனாக வாங்கிவிட்டேன். மகனுக்கே தெரியாமல் எனக்குக் கொடுத்தார். தனவணிகராகும் ஆசை! பாவம், மகனிடம்கூட விவரம் சொல்லமுடியாமல் போய்ச் சேர்ந்துவிட்டார். இருந்து அனுபவிக்க அவருக்குக் கொடுப்பினை இல்லை. வேங்கடமலைக்குப் போனவர்தான், ஆளைக்காணோம். எல்லாம் ஏழுமலையான் சித்தம். ‘நீ ஏன் என்னிடம் முன்பே இதைச் சொல்லவில்லை?’

‘உங்களுக்குத் தெரியாமல் போக வாய்ப்பில்லை என்பதால்.

இப்போதுகூட வடுக நியோக பிராமணர்களின் செல்வாக்கைக் கண்டு மனம் பொறுக்காமல்தான் சொன்னேன்.'

'இனி தளவாய் ஆகப் போகிறவன் நீ. இப்போதாவது என் தவறுகள் என்று உனக்குத் தோன்றுவதை ஒளிக்காமல் சொல்.'

'இரண்டுதான். ஒன்று, அச்சய்யா ராயசம் பதவிக்குத் தகுதியற்றவன். அடுத்தது, கன்னிவாடி பாளையத்தின் கௌவரச் சின்னமாக ஆரம்பத்திலிருந்து இருந்த திண்டுக்கல் கோட்டையின் பொறுப்பை காவிரிக்கு அப்பால் இருக்கும் துறையூர் பாளையத்துக்கு மாற்றியது.'

'அச்சய்யாவை அடக்கி வைப்பேன். மற்றவர்கள் அவர்களைப் போல முனைப்பாகக் கல்வி கற்பதில்லை. திண்டுக்கல்லின் பொறுப்பு தற்காலிகமானதே. எர்ரசின்னு அவ்வாவின் கொள்ளுப் பேரன் வளர்ந்து ஆளானவுடன் திண்டுக்கல்லை அவனிடமே கொடுப்பேன். அருகிலுள்ள வேறு கம்பளத்துப் பாளையத்திடம் கொடுத்தால் பிறகு அவனுக்காகத் திரும்ப வாங்க முடியாது.'

'இன்று கம்பளத்தாருக்கென்று நாடெதுவும் இல்லை. பெருங்கோட்டைகளும் இல்லை. மதுரை அரசின் கீழ் திருநெல்வேலியிலும் மதுரையிலும் அவர்கள் வெறும் காவல் தலைவர்கள்!'

'உண்மைதான். அரசரின் உற்றார் உறவினர்களே ஆளுநர்களாக நியமிக்கப்படுவது வடுக நாட்டின் ஐநூறாண்டு கால வழக்கம். அதற்கே உரிய சாதக பாதகங்கள் உண்டு. அப்படிப் பார்த்தால் மதுரையை கம்பளத்தாருக்குக் கொடுத்ததற்காக கிருஷ்ண தேவராயரைப் பெருந்தன்மையானவர் என்றே சொல்லவேண்டும். எல்லாப் பிரிவினருக்குப் பாளையங்களைப் பகிர்ந்து கொடுத்த விஸ்வநாத நாயக்கரையே ராயரைவிட அதிகம் பாராட்டுவேன். அதுபோலவே நான் நடக்க மாட்டேன் என்று நினைக்கிறாயா?'

'நீங்கள் கேட்டதால் சொன்னேன். கம்பளத்துப் பெண்கள் தங்கள் வீட்டைப்போல அரண்மனையில் உலவ முடிவது நீங்கள் வந்தபிறகுதான். என் மனைவிக்கு உங்கள் புகழ் பாடுவதே வேலை.'

'நீ வீடு திரும்பினால் நேற்றிரவு மதுரையில் நடந்த நாடகத்தை உனக்குச் சொல்வாள். பிறகு அது பற்றி உன் கருத்தை என்னிடம் சொல். ராமநாதபுரத்தால் நமக்கு லாபநட்டம் ஏதுமில்லை. மீண்டும் தொந்தரவு தராத வரை விட்டு வைக்கலாம். தலைநகரைத் தற்காலிகமாக மதுரைக்கு மாற்றப் போகிறேன்.'

*

# 28

**மங்கம்மாவின் பேரன் விஜயரங்க சொக்கநாதனுக்குப் பதினாறு** வயதானது. ராணி தலைநகர் மதுரையிலேயே இருந்தாள். விஜயரங்கன் மதுரையிலும் திருச்சியிலுமாக இருந்தான். திருச்சியில் ராணியின் கண்காணிப்பில் இல்லாதபோது அவனுக்கு கூடாநட்பு ஏற்பட்டது. பெண்சகவாசத்தில் இறங்கினான். ராணிக்குத் தெரியவந்தபோது அவனை அழைத்து வந்து மதுரையிலேயே நிரந்தரமாகத் தங்க வைத்தாள். அரண்மனைக்கு வெளியே அவன் ஆட்டங்கள் தொடங்கின. ராணி கண்டித்தும் அவனை வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. அவன் போக்கை உணர்ந்த அரண்மனைச் சதிகாரர்கள் அவனைத் தங்கள் பகடைக்காயாகப் பயன்படுத்தத் தொடங்கினர். அவன் வாயாலேயே அச்சய்யாவுக்கும் ராணிக்கும் தொடர்பு என்ற வதந்தியைப் பரப்பினர். மங்கம்மாவின் வயது அப்போது ஐம்பத்தி ஏழு என்றாலும் வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாயிற்று. அரச பதவியைத் தன்னிடம் தருமாறு பேரன் கேட்டான். அவன் திருமணத்திற்குப் பின் தருவதாகப் பாட்டி சொன்னாள். மணமகளாக நிச்சயித்திருந்த மீனாட்சி இன்னும் பூப்படையாமல் இருந்ததே திருமணம் தள்ளிப் போவதற்கான காரணம் என்றாள் ராணி. அவள் அழைத்தால் அவன் போவதில்லை என்ற நிலை வந்தது. சதிகாரர்களின் கைப்பாவையாகிப் போனான் விஜயரங்கன்.

**த**ளவாய் உத்தப்ப நாயக்கர் அலுவல் நிமித்தம் திருச்சிக்குக் கிளம்பிப்போன நாளில் செயலில் இறங்கினான் விஜயரங்கன். அன்றிரவே அரண்மனையின் பிரதான பதவிகளில் அவன் ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டனர். முக்கியமான படைத் தளபதிகளின் பொறுப்புகள் பறிக்கப்பட்டன. ஆட்சி கைமாறிப் போனதை அறியாத மதுரை என்றும் போல விழித்தெழுந்தது.

புது மண்டபத்திற்கு வடக்கிலிருந்த, தான் கட்டிய புதிய மாளிகையில் விழித்தெழுந்த மங்கம்மா அறைக்கதவைத் திறந்தாள். வெளியே

தாழிடப்பட்டிருந்தது. சாளரத்திற்கு ஓடினாள். இரவே வெளியிலிருந்து அடைக்கப்பட்டிருந்தது.

பெரும் பணத்தைக் கையூட்டாகப் பெற்றிருந்த வைத்தியர் ராணிக்கு அம்மை வார்த்திருப்பதாகவும் யாரும் சந்திக்கக்கூடாது என்றும் சொன்னார்.

நாட்கணக்கில் தண்ணீர்கூட இல்லாமல் அடைபட்ட அறையின் இருளுக்குள் ஓர் உயிர் கதறிப் புலம்பிக்கொண்டிருக்க, என்ன நடந்தது என்று தெரியாமல் புதிய ராஜாவைப் பற்றியும் ஆட்சி மாற்றத்தைப் பற்றியுமே மதுரை பேசிக்கொண்டிருந்தது. அம்மை வந்துவிட்டதால் மங்கம்மா ராணி செலவு கணக்கில் சேர்ந்துவிட்டாள். அதனால்தான் தான் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதாக விஜயரங்கன் சொல்லிக் கொண்டிருந்தான்.

**க**தவைத் தட்டிக் கதறுவதால் பலன் ஒன்றுமில்லை என்று உறைத்தபோது தன் நிலையை உணர்ந்தாள்.

பகலிரவு தெரியாத இருளுக்குள் பிறகு குரலின்றிக் கண்ணீர் மட்டும் வழிந்தது. மீனாட்சியை நினைத்துக் கை கூப்பினாள். ‘நான் செய்த பாவமென்ன பாவமென்ன’ என்று மனம் மீண்டும் மீண்டும் மௌனமாய்க் கதறியது. மதுரையின் நன்மைக்காக அன்றித் தனக்காக எதையும் செய்யவில்லை என்று உறுதியாய் நம்பினாள். மண்ணையும் விண்ணையும் ஆளும் தெய்வங்கள் எதனால் தன்னை நிந்தித்தன எனக் குழம்பினாள்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் கட்டிலில் ஏறிப்படுத்தாள். பசியையும் தாகத்தையும் வலிந்து மறந்து இனிய நினைவுகளுக்குள் போக முயன்றாள். பேரனும் அரண்மனை மனிதர்களும் நினைவிலிருந்து கழன்றனர்.

அன்ன சத்திரங்கள் வந்து மறைந்தன. நிறை குளங்கள் தோன்றி நீரலைகள் போலக் கலைந்து போயின. பொதிகை மலையையும் கீழக் கடலையும் தென் கடலையும் காவிரியையும் நீலமலையையும் தொடவிரியும் நிழல் படிந்த கல்சாலைகள் தோன்றித் தோன்றி மறைந்தன.

சந்திரிகிரிக் குன்றுகளும் நிலவொளியில் ததும்பும் மாடமுக டுகளும் தாமரைத் தடாகங்களும் நந்தவனங்களும் தோன்றின. காலைப் பனியில் உடல் நடுங்க சிறுமியாய் பன்னீர்ப் பூக்களைப் பொறுக்கினாள். அன்னையின் புன்னகை அரவணைத்தது.

வேங்கட மலைச் சாரலெங்கும் தன்னந்தனியாய் குதிரையில் காற்றாய்ப் பறந்து திரிந்தபோது கண்ணில் தோன்றிய நிலக்காட்சிகள் துல்லியமாய் எழுந்து வந்தன. வாள் வீசும் பயிற்சியின்போது எந்தக் காயமும் இன்றிக் காலில் வழிந்த ரத்தத்தைக் கண்டு குழம்பி நின்ற சித்திரம் மீண்டுவந்தது. பெண்களின் சிரிப்பொலிகள் கொலுசொலிகள் கேலிகள்.

அவளைத் தீண்டத் தயங்கி முதலில் வெட்கப்பட்ட சொக்கன். அவளே கதியென்று அவள் காலடியிலேயே தஞ்சமடைந்து கிடந்த சொக்கன். அனைத்திலிருந்தும் தனித்து வேற்றுலகை வெறித்தவாறிருந்த

சொக்கநாதன்.

மீனாட்சியே வடிவெடுத்து வந்துவிட்டாள் என்று அவள் போற்றிய முத்து. நீராட்டிச் சோறூட்டிச் சீராட்டிச் சிறகடியிலேயே காத்து... கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்.

உடல் மரத்து நினைவுகள் அறுபட்டன. நினைவில் அவனே மிஞ்சினான். அவளுக்காக அந்தத் துக்கநாளில் வாளோடு எழுந்து சூளுரைத்தான். அன்றுதான் அவன் வளர்ந்துவிட்டதை அறிந்தாள். அவள் நிழலில் வளர்ந்தவன். அவள் விரல்களால் எழுத்தறிந்தவன். அவள் கண்களால் காணப் பழகியவன். அவள் எண்ணங்களால் உலகை உணர்ந்தவன்.

பாலகிருஷ்ணனாய் அவளை நோக்கித் தவழ்ந்து வந்தான்.

உயிரின் கடைசித்துளியிலும் அவன் நினைவே ஒட்டியிருந்தது. ரங்ககிருஷ்ணன் அவள் மார்பில் பாலருந்திக் கொண்டிருந்தான்.

*

# 29

**ராணி மீனாட்சி திருப்பரங்குன்றத்தில் முருகனை வழிபட்டுவிட்டு** கோவிலை விட்டிறங்கி வந்து பல்லக்கில் ஏறப்போனாள். தாதனூரின் குமராண்டிப் பெரியாம்பிளை வந்து ராணியை வணங்கினார். 'அம்மா, இனிமே நாம கள்ள நாட்டு வழியாதான் போகப் போறோம். மருத காவல்காரங்க நாப்பது பேர் நாங்க மருதையிலிருந்து பின்னாடியேதான் வாரோம். இனி முன்னாடி போனா எங்க நாட்டுக்குள்ள எங்களுக்கு கவுரதையா இருக்கும்' என்றார். ராணி சரி என்றாள். பல்லக்கிற்குப் பின் சென்ற இரண்டு வண்டிகளில் அவளது சேடிகள் ஏறிக்கொள்ள முன்னும் பின்னுமாக நூறு குதிரைகளும் அதற்குப் பின்னே காலாள் வீரர்கள் ஐம்பது பேரும் போடிநாயக்கனூரை நோக்கிச் சென்றனர்.

விஜயரங்க சொக்கநாதன் அரசனான பின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை விமரிசையாகக் கொண்டாட ஸ்ரீரங்கம் கோவிலில் மண்டல பூஜைக்கு ஏற்பாடு செய்து அங்கேயே தங்கியிருந்தான். கோவில் கோவிலாகச் சுற்றித் திரிவதே அவன் வேலையாகிப் போனது. அவன் காலத்தில் போர்கள் எதுவும் நடக்காததால் ஆட்சி தன்போக்கில் போய்க்கொண்டிருந்தது. வருமானத்தில் கணிசமான பகுதியைக் கோவில்களுக்கு மானியமாக வழங்கி வந்தான். அவனைச் சுற்றிலும் எந்நேரமும் தெலுங்குப் புலவர் பட்டாளமே இருந்தது. அவனே ஒரு புலவன்தான். மீனாட்சி மதுரையில் இருந்ததால் போடி பாளையத் திருமண விழாவிற்கு அவளே செல்ல வேண்டியதாயிற்று. அங்கிருந்து திண்டுக்கல் வழியாகத் திருச்சி திரும்புவதாகத் திட்டம்.

திருமங்கலம் போய் வடமேற்கே சென்ற சாலையில் திரும்பினர். தானூர்க்காரர்கள் எல்லோரும் இரண்டு வரிசையாக கருங்காலிக் கம்பைப் பிடித்தபடி முன்னே நடந்தனர். ராணியுடன் செல்வதற்கு கோட்டைத் தலைவனிடம் அனுமதி வாங்குவதே இரண்டு நாளாகப் பெரும்பாடாக இருந்தது.

சற்று தூரம் போனவுடன் முதல் ஊரான புளியங்குளத்திற்கு அருகிலே சாலையின் இருபுறமும் மக்கள் காத்திருந்தனர். பல்லக்கு நெருங்கியதும் ஆரத்தித் தட்டோடு அருகில் வந்தனர். ராணி இறங்கி வரவேற்பை ஏற்றுக்கொண்டாள். சேடிப்பெண் வந்து தட்டில் சக்கரங்களை வைத்தாள். அந்த ஊரில் இரண்டு ஆடுகளை ராணிக்குப் பரிசாகக் கொடுத்தனர்.

அந்த ஊரைக் கடந்த போகும்போது பார்த்தாள் - இரு புறமும் சனங்கள் வணங்கியபடி நின்றிருந்தனர். சற்று தூரம் கடந்த உடனேயே பல்லக்கு நிற்க வேண்டியதாயிற்று. மீண்டும் ஆரத்தி. ஆடுகள் அவர்கள் சாலைக்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ள வேப்பம்பட்டிக்காரர்கள்.

தொடர்ச்சியாக சாலையின் இருபுறமும் புளியமர நிழல்களில் ஆணும் பெண்ணும் முதியோரும் சிறுவருமாக மக்கள் காத்திருந்தனர். அந்தச் சாலை கள்ள நாட்டை ஊடறுத்து மேலக்கணவாய்க்குப் போய்ச் சேருகிறது. கள்ளநாடு முழுக்க உள்ள சனங்கள் ராணியைப் பார்ப்பதற்காக சாலையில் வந்து குவிந்திருந்தனர். முத்துவீரப்ப ராஜாவைக் காணத் தாதனூரில் கூடிய கூட்டத்திலிருந்த இளவயதினர் இப்போது முதியவர்களாகித் தங்கள் பிள்ளைகள் பேரன் பேத்திகளுடன் வந்திருந்தனர்.

ராணி பிறகு பல்லக்கில் ஏறவில்லை. ஒரு குதிரையை வாங்கி அதில் ஏறிக்கொண்டு எல்லோருக்கும் முன்னே போனாள். புளிய மர நிழல்களில் காத்திருந்த மக்கள் அவள் நெருங்கியதும் சாலையோரத்திற்கு வந்து வணங்கி நின்றனர். கள்ள நாட்டின் எல்லா ஊர்களும் பரிசுகளோடு வந்து காத்திருந்தன. உணர்ச்சி ததும்பும் அவர்கள் முகங்களும் எளிய கோலமும் அவள் மென்னுணர்வுகளைத் தொட்டன. இவ்வளவு கூட்டத்தையும் பிரியத்தையும் இப்படியொரு வரவேற்பையும் அவள் இதற்கு முன் கண்டதில்லை. ஆரத்தித் தட்டில் தன் வளையலைக் கழற்றி வைத்தாள்.

இருபுறமும் பார்த்து புன்னகைத்த முகத்தோடு குதிரையில் போய்க்கொண்டிருந்தாள். ஒவ்வொரு ஊராக வழிமறித்து வரவேற்றது. இறங்கி இறங்கி ஏற்றுக்கொள்வதில் அவள் சளைக்கவேயில்லை. பெரும் பரவசத்திலிருந்தாள். இரு கை வளையல்களுக்குப் பின் ஒவ்வொரு ஆபரணமாகக் கழற்றிக் கொடுத்தாள். ஆடுகள் மந்தையாகச் சேர்ந்து பின்னால் வந்துகொண்டிருந்தன.

சாலை ஓரத்தில் மங்கம்மா கட்டி வைத்திருந்த கல்மண்டபத்தில் போய் அமர்ந்திருந்தாள். அருகிலிருந்த திலாக் கிணற்றில் நீரிறைக்கச் சொல்லி குடித்துப் பார்த்தாள். கால்நடைகளுக்கு இறைத்து ஊற்றுவதற்கான நீண்ட கல்தொட்டிகள் கிடந்தன.

அவள் ஆபரணங்கள் எல்லாம் தீர்ந்தபின் சேடிகள் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் கழற்றி வாங்கி வைத்துக்கொண்டாள். ஆரத்திச்சுடர்கள் அவள் முன்னே வந்துகொண்டேயிருந்தன. பிரியமும் நெகிழ்வுமாக பரவசமிக்க கண்களோடு அவளை வணங்கும் பெரும் மக்கள் கூட்டத்தை இன்றுதான் காண்கிறாள். ராணியான பின் இருபத்தியிரண்டு ஆண்டுகளில் தான் மனநிறைவோடு இருக்கும் நாள் இதுவென்றே அவளுக்குத் தோன்றியது.

நண்பகலுக்கு முன்பே அவர்கள் சென்று சேர்ந்திருக்க வேண்டிய இரண்டாவது மங்கம்மா சத்திரத்தை அவர்கள் மாலையில்தான்

சென்றடைந்தார்கள். முன்னேற்பாட்டின்படி ராணியுடன் செல்லும் வீரர்களுக்கான உணவு அங்கு தயாராகி ஆறிப் போயிருந்தது.

அன்றிரவு தொட்டப்ப நாயக்கனூர் அரண்மனையில் தங்கினாள். உணவருந்தும்போது பாளையக்காரரிடம் கள்ளநாட்டைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டு அறிந்துகொண்டாள். மதுரை அரண்மனையில் கன்னமிட்ட கதை மட்டும்தான் அவளுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. அவள் மாமனார் முத்துவீரப்பன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் கேள்விப்பட்டாள். அவர் இன்றுவரை உயிரோடு இருந்திருந்தால்... என்று நினைத்துப் பெருமூச்செறிந்தாள். தன் கணவனை அவள் நினைத்தபோது வெறுப்பே மிஞ்சியது.

பெரியதேவர் வந்து காத்திருப்பதாகச் சொன்னார்கள். இவர்களுக்குத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டுமென்று சொல்லி என்ன செய்வது என்று பாளையக்காரரிடம் ஆலோசனை கேட்டாள். அவர் புத்திக்கு எட்டிய விதத்தில் வழி சொன்னார்.

பெரியதேவரையும் பெரியாம்பிளைகள் பலரையும் அவர்கள் சாப்பிட்டபின் பாளையத்து சபா மண்டபத்தில் சந்தித்தாள். திருமலை நாயக்கர் காலத்திலிருந்து அவர் கதையை ஆரம்பித்தார். பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டாள். மங்கம்மா ராணி இந்தச் சாலையில் சுங்கவரி வசூலை மானியமாகக் கொடுத்தும் அதனால் பெரிய பலனில்லை என்று தெரியவந்தது. கம்பம் சமவெளியின் விளைபொருட்கள் பெரியகுளம் சந்தை அருகிலிருப்பதால் அங்கேயே சென்று விடுகின்றன; மதுரைக்குச் செல்வதில்லை. வண்டிகளோ பயணிகளோ மிகக் குறைவாகவே இருப்பதால் ஏறத்தாழ காவலே தேவையில்லை என்ற நிலைதான்.

மீனாட்சி தெளிவாகச் சொன்னாள். கள்ளநாட்டின் மொத்த நலனையும் கணக்கில் கொண்டு எதையும் செயல்படுத்த ராஜாவால் மட்டுமே முடியும். இன்றைய ராஜாவிடம் அதை எதிர்பார்க்க முடியாது. தன் சக்திக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டு ஏதாவது செய்கிறேன் என்றாள்.

பதினான்கு ஊர்களில் கால்நடைகளுக்கான குளங்களும் இருபத்தியேழு ஊர்களில் கிணறுகளும் வெட்டுவதற்கான பொருளுதவி செய்வதாக வாக்களித்தாள். பெரிய கோவில்கள் எதிலும் அவர்களுக்கு விழா உரிமை இல்லாததால் திருப்பரங்குன்றத்தில் அவர்கள் மண்டபம் கட்டிக்கொள்ள இடமும் கட்டிடத்திற்காக உதவியும் வழங்கப்படும். அதற்கான அவளது ஆணை ஓலையில் எழுதப்பட்டு, மதுரை ராயசத்திடமிருந்து சக்கரங்களைப் பெற்று ஒப்படைக்கும் பொறுப்பு பாளையக்காரரிடம் விடப்பட்டது. அவரிடம் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த முத்துமாலையைத் தாம்பூலத்தட்டில் வைத்து பெரிய தேவருக்கு அளித்து ‘மித்ர நேசபூபதி’ என்ற பட்டத்தையும் வழங்கினாள். தாதனூர் பெரியாம்பிளையை அழைத்து தங்கப் பூண்கள் இட்ட ஈட்டியைப் பரிசாக வழங்கினாள். ‘மதுரைக் காவலர்காரர்கள் அனைவருக்கும் வீரர்களைப் போல வேல் ஏந்தி மதுரைக்குள் போகும் உரிமை வேண்டும்‘ என்று அவர் கேட்டார். இந்த உரிமையை அறிவிக்கும் அடுத்த ஓலை கோட்டைத் தலைவனுக்குத் தயாரானது.

அனைவரிடமும் விடைபெற்று ராணி சந்தோஷமாக சயன

கிரஹத்திற்கு வந்தாள். அவளுக்கு உதவி செய்ய வந்த பாளையக்காரியிடம் கேட்டாள் ‘பரிசாக வந்த ஆடுகளை என்ன செய்வது?’

‘கோனார்களை அழைத்து பரிசாகக் கொடுத்தால் கணக்கு நேராகிவிடும். இதற்குப் பெயர்தான் அர்சாட்சி’ என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் அவள்.

**ம**றுநாள் காலையில் குளித்துவிட்டு கூந்தலை உலர்த்தியபடியே மேல்மாடத்திலிருந்து மீனாட்சி தொட்டப்ப நாயக்கனூர் கோட்டையின் அழகை ரசித்தவாறிருந்தாள். நாற்புறமும் குன்றுகள் சூழ்ந்திருக்க நடுவில் கல் கோட்டையினுள்ளே அந்த ஊரும் அரண்மனையும் மஞ்சள் வெயிலில் பேரழகோடு பிரகாசித்தன. விஜயரங்கனையும் திருச்சியையும் நினைக்கவே பிடிக்கவில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கேயே இருந்துவிடலாம் என்று தோன்றியது.

பாளையக்காரி வீரநாகம்மா வந்து அவளுக்குத் தலைவாரிக் கொண்டிருந்தாள். முற்றத்தில் செழித்து வளர்ந்திருந்த புங்க மரங்களையே பார்த்தவாறிருந்தாள் மீனாட்சி. தேவகிரியிலிருந்து விரட்டி வந்த துலுக்கர்களிடமிருந்து கொல்லவாருகள் தப்பிக்க ஆற்றின்மேல் பாலமாகி வழிகொடுத்த புங்கமரம்! எத்தனை கதைகள்... எத்தனை போர்கள்... எவ்வளவு அழிவு...எவ்வளவு அகதிகள்! எல்லாக் குலக்கதைகளும் பெண்ணில் தொடங்குகின்றன. பெண்ணைக் கைப்பற்றவே போர்கள். அவளைக் காப்பாற்றவே ஓட்டம். இவ்வளவு பேரழிவுக்குப் பின்னும் இவர்களைக் காப்பாற்றியது எது? எதிர்த்து நிற்க வைக்கும் சக்தி எது? பெண் மனதில் அணையாது கனன்றுகொண்டிருக்கும் வஞ்சம்தானா?

‘உங்க குல தெய்வம் எது?’ என்று கேட்டாள் ராணி.

‘மல்லம்மா. கன்னித் தெய்வம்.’

‘எப்படி தெய்வமானா?’

‘ஆதோனி கோட்டைக்குள்ள துலுக்கப்படை நுழைஞ்சபோது கத்தியில பாஞ்சு தெய்வமானதா அவ்வா சொல்லுவா.’

‘இப்ப இந்தக் கோட்டைக்குள்ள நுழைஞ்சிட்டா என்ன செய்வீங்க?’

‘என் பிள்ளைகளையும் என்னையும் உயிரோட அவன் தொடமுடியாது. ஆனா சும்மா சாக மாட்டேன். நாலு பேரைக் கொன்னுட்டுதான் போவேன்.’

*

# 30

**விஜயரங்க சொக்கநாதன் 1732ல் நோய்வாய்ப்பட்டு இறந்தான்.** ராணி மீனாட்சி அரசியானாள். மற்ற எழு மனைவியரும் உடன்கட்டை ஏறினர். நாட்டு நிர்வாகம் மீனாட்சியின் அண்ணன்களிடம் இருந்தது.

முகலாயர்களின் தென்மண்டல நிர்வாகியாக இருந்த ஜுல்பிகார்கானும் அவருக்கு அடுத்து வந்த தௌத்தகானும் தெற்கே உள்ள நாடுகளிலிருந்து கப்பம் மட்டுமே வாங்கிக்கொண்டிருந்தனர். ஆனால் டெல்லி வலிமை இழக்க, சதக் உல்லா கான் ஆர்க்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்தார். நேவயத்குல ஆட்சி தொடங்கியது. அவருக்குப் பின் நவாப் ஆன தோஸ்த் அலி தெற்கே படையெடுத்து மேலும் செல்வம் சேர்க்கும் முயற்சியில் இருந்தார். அவர் மகன் ச ஃ்பதர் அலி, மருமகன் சந்தா சாகிப் ஆகியோரின் தலைமையிலான படை தஞ்சாவூர் ராஜ்யத்தில் புகுந்து கொள்ளையிட்டுச் சென்றது.

திருச்சியில் ராயசமாக இருந்த நாரணப்பய்யா ஊழல் காரணமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் மதுரைக்குப் போய் மறைந்த அரசரின் உறவினரான பங்காரு திருமலையை அங்கு அரசராக்கி, தான் பிரதானியாகி போட்டி அரசாங்கம் நடத்தினார். வடுக நியோகிகளின் பிடியில் மதுரை மீண்டும் மீண்டும் சிக்கியது.

மைசூர் திருச்சியின் மீது இருமுறை படையெடுத்துத் தோற்றுத் திரும்பியது. ஆனால் திருச்சிக்கும் மதுரைக்கும் இடையே உரிமைப்போர் வலுவடைந்தது. பின்னர் சமாதான உடன்படிக்கைப்படி பங்காருவின் மகன் விஜயகுமாரன் தன் காலத்திற்குப் பிறகு அரசனாவதற்கு மீனாட்சி ஒப்புக்கொண்டாள். ஆனால் பங்காரு ஒப்புக் கொள்ளாமல் திருச்சியின்மீது படையெடுத்து வந்தார். சந்தா சாகிபின் உதவியை நாடிப் பணம் கொடுத்தார். அதைவிட அதிகப் பணத்தை மீனாட்சி தந்தபோது சந்தாசாகிப் மீனாட்சியையே அரசியாக ஏற்பதாகவும், படை உதவி செய்வதாகவும் குரானின் மீது சத்தியம் செய்து தந்தார். ஆனால் பட்டுத் துணியின் கீழ்

குரானுக்குப் பதில் செங்கலே இருந்தது.

பங்காரு தோற்கடிக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் மறவர்களோடு போரிட்டுக் கொண்டிருந்த தஞ்சாவூர் நாட்டுக்குள் சந்தா சாகிப் நுழைந்தார். மராத்தியர்களைத் தோற்கடித்து பெரும்செல்வத்தைத் திறையாகப் பெற்றுக்கொண்டு ஆர்க்காடு திரும்பினார்.

1736ல் சந்தா சாகிப் தனது படையை மேலும் வலிமைப் படுத்திக் கொண்டு மீண்டும் திருச்சி வந்தார். நேசசக்தி என்பதால் வழிவிட்ட கோட்டைக்குள் புகுந்தபின் அரசி மீனாட்சியைச் சிறைப்படுத்திவிட்டு நிர்வாகத்தைத் தானே ஏற்றார்.

*

**மீ**னாட்சி நஞ்சுக் குப்பியை எடுத்துத் திறந்து அப்படியே வாயில் கவிழ்த்துவிட்டாள். கடும் கசப்பாய் அது அவளுக்குள் இறங்கியது.

கசப்பு. எல்லாமே கசப்புதான். வாழ்க்கையே கசந்து போனது. அதையன்றி வேறு எதைக் கண்டேன். ராணியாம் ராணி. பைத்தியக்காரி. எல்லாம் அபத்தம். அவன் செத்த அன்றே போய்த் தொலைந்திருக்கலாம். இல்லை, அவனைக் கட்டி ராணியான அன்றே செத்து ஒழிந்திருக்க வேண்டும். அறியாச் சிறுமையக் கொண்டுவந்து இதில் சிக்க வைத்துவிட்டார்கள். அவன் சாகுமுன் பட்டத்தரசியாக எனக்கு முடிசூட்டியபோது ஏன் நான் மறுக்கவில்லை? ராணியாகி நாடாளும் ஆசையா? அண்ணன்கள் தான் ஆள ஆசைப்பட்டார்கள். உண்மையில் அன்று என்ன நினைத்தேன்? அந்த ஈமத்தீயை மனதில் கொண்டு அஞ்சினேன். ராணியாகாமல் இருந்திருந்தால்... எனக்குப் பின் மனைவிகளான ஏழு பேரோடு தீயில் எரிந்து அன்றே கருகிச் செத்திருப்பேன். புலவன் மேல் ஆசைப்பட்டவளும் அவன் சிதையேறிச் செத்தாள். தப்பி உயிர் வாழ்ந்த நான் இந்த நான்காண்டுகளில் கண்டதென்ன? வஞ்சகம் அவமானம் துரோகம் கசப்பு. உயிர் வரை படிந்துவிட்ட கசப்பு. கடைசியாய் அந்தத் துலுக்கன் எல்லாவற்றையும் பிடிங்கிக்கொண்டு இதோ அரண்மனைச் சிறையில் வைத்துவிட்டான். வஞ்சகத்தால் தோற்கடித்துவிட்டான். அவனை எதிர்த்துச் சண்டையிட்டுச் செத்திருக்கவேண்டும். ருத்ரம்மாவைப் போலப் போர்க்களத்தில் மரித்திருந்தால் நிம்மதியாய்ப் போயிருப்பேன். ரங்க கிருஷ்ணர் என்னை மன்னிப்பாரா... ஆம். நான் எந்தப் பாவமும் செய்யவில்லை. அவன்தான் பாவி. படுபாவி. அந்த மகாலட்சுமிக்கு தண்ணீர் கூடத்தராமல் தவிக்க விட்டுக் கொன்ற மகாபாவி. எல்லா வேதனையிலிருந்தும் விடுதலை. போதும். இனி உன்னிடம் வந்துவிடுவேன். தெய்வமே... மீனாட்சித் தாயே...

*

# 31

**மதுரைக் கோட்டை 1741 வரை சந்தா சாகிப்பின் கீழ் இருந்தது.** மராட்டியத்திலிருந்து வந்த மராத்தியப் படைகள் பின்னர் முகம்மதியர்களைத் தோற்கடித்து மதுரையைக் கைப்பற்றின.

1744இல் ஹைதராபாத் நிஜாமின் பெரும்படை தெற்கே வந்து மராத்தியர்களை விரட்டிவிட்டு ஆர்க்காட்டில் அன்வாருதீன் கானை நவாப் ஆக்கியது. வாலாஜா வம்ச ஆட்சி தொடங்கியது.

1750ல் சந்தா சாகிப் மீண்டும் மதுரையைக் கைப்பற்றினார். ஆலம்கான் மதுரைப் பகுதியின் நிர்வாகியானார்.

நேவயத்களை பிரெஞ்சுக்காரர்களும் வாலாஜாக்களை ஆங்கிலயர்களும் ஆதரித்தனர். திருச்சியைத் தனது தலைமையிடமாகக் கொண்டிருந்த வாலாஜா முகம்மது அலி மதுரையை மீண்டும் கைப்பற்ற பிரிட்டிஷ் உதவியை நாடினார்.

**ஆ**ங்கிலேயத் தளபதி கேப்டன் ஜேம்ஸ் கோப் 1751 பிப்ரவரியில் 150 ஐரோப்பியர், 400 சிப்பாய்கள், ஒரு பீரங்கியுடன் திருச்சியிலிருந்து கிளம்பினார். பீரங்கிகள் தேவையில்லை, கோட்டை பழுதடைந்து கிடக்கிறது. கள்ளர்கள் இரவில் மாடுகளைத் திருடிக்கொண்டு சுலபமாகக் கோட்டையை விட்டு வெளியேறுகிறார்கள் என்று நாவாப் சொல்லியிருந்தார். திருநெல்வேலியில் நிர்வாகியாக இருந்த அப்துல் ரஹீம் 2500 குதிரைகள், 3000 சிப்பாய்கள், 30 ஐரோப்பியர்கள், ஒரு பீரங்கியுடன் லெப்டினனட் ஜான் இன்னிஸ் தலைமையில் வந்து சேர்ந்தார். இன்னிஸ் வந்தவுடன் கோப்பை எச்சரித்தார். கோட்டைக்குள் உள்ளே இருப்பவர்கள் மட்டும் நமது எதிர்கள் அல்ல; நம் கூடவே கண்ணுக்குத் தெரியாமல் சுற்றிலும் இருக் கிறார்கள் என்று அப்துல் ரஹீமின் தளபதிகளே அவன் தலைக்கான விலைக்கு ஆலம் கானுடன் பேரம் பேசிக்கொண்டிருக்கிறார்களாம். ரஹீம் இரவில் படையுடன் தங்கப் பயந்து

திருப்புவனம் போய் ஒரு வீட்டில் தூங்கினான்.

கிழக்கு மதிலுக்கும் தெப்பக்குளத்திற்கும் இடையே இருந்த மண்டபங்கள் இரண்டில் தளவாடங்களை இறக்கிவிட்டு அருகேயே கூடாரம் அடித்திருந்திருந்தார் கோப்.

கோட்டையின் உள்ளே இருப்பவர்களின் உதவிக்கு எந்நேரமும் பிரெஞ்சுப் படை வந்து விடலாம் என்ற தகவல் வந்தது. அதற்குள் கோட்டைக்குள் நுழைந்துவிடும் அவசரத்தில் இருந்தார் கோப். கிழக்கு அலங்கத்திலிருந்து ஒற்றை பிரெஞ்சுப் பீரங்கி மட்டும் சுட்டுக் கொண்டிருந்தது.

கிழக்கு மதிலுக்கு அப்பால் 150 அடி தூரத்தில் பிரிட்டிஷ் தற்காப்பு அரண்கள் அமைக்கப்பட்டு அந்த 12 பவுண்டு பீரங்கி அங்கு நிறுவப்பட்டது. அரண் ஓரங்களில் குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் சிறிய பீரங்கிகள் நின்றன. அகழி வறண்டு கிடந்தது.

பிரிட்டிஷ் பீரங்கி இடைவிடாது சுட்டு வெளிமதிலின் ஓரிடத்தை உடைத்துக் கொண்டிருந்தது. மறுநாள் மதியத்திற்குள் ஆள் நுழையும் அளவு மதில் உடைந்து விட்டது. ஆனால் பீரங்கிக்கு இன்னும் மூன்று குண்டுகளே மிச்சமிருந்தன. மறுநாள் மழை பெய்ததால் தாக்குதல் தற்காலிகமாக நின்றது.

அடுத்த நாள் உள்மதிலில் ஏறுவதற்கான ஏணிகள் தயாரானவுடன், கோப் அறிவித்தார். ஆலம் கான் தலையைக் கொண்டுவருகிறவனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு. நேவயத்துகளுக்கு மதுரையைக் காட்டிக் கொடுத்த வாலாஜா தலைவன் தலையை எடுக்கிறவனுக்கு ஐநூறு ரூபாய் பரிசு. ஊக்கத் தொகையாக இப்போதே கொஞ்சம் முன்பணமும் ஒவ்வொரு வீரனுக்கும் பகிர்ந்தளித்தார்.

மறுநாள் காலை பார்த்தபோது உடைபட்ட மதில் மண்ணால் அடைபட்டிருந்தது. பனைத் தடிகளைக் குறுக்காக வைத்திருந்தார்கள். இரண்டு தடிகளுக்கும் இடையே வல்லயங்களை நீட்டிக் குத்துகிற அளவு மட்டும் இடைவெளி இருந்தது. பின்னால் வீரர்கள் அதைக் காத்து நின்றனர்.

சார்ஜண்ட் பிரவுன் தனது வீரர்களோடு முதல் தடையைத் தாண்டி விட்டார். ஆனால் உள் மதிலுக்குப் போக முடியாதவாறு முகம்மதிய வீரர்கள் சண்டையிட்டனர். பிரவுனும், டிரெஸ்லர் என்ற லெப்டினட்டும் காயம்பட்டனர். ஆங்கிலேயர்கள் முகம்மதியர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு உள் மதிலில் ஏற முயற்சித்தனர். மதிலில் அவர்களை ஏறவிடாமல் உள்ளேயிருந்த வீரர்கள் வெட்டி வீழ்த்தினர். அரைமணிநேரம் ஆளுக்கு ஆள் மோதல் தொடர்ந்தது. ஆங்கிலேயர்களுக்காகச் சண்டையிட்ட இந்தியச் சிப்பாய்கள் பின்வாங்கினர். துப்பாக்கிகள் இருந்தும் ஆங்கிலேயர்களும் தாக்குப் பிடிக்க இயலாது திணறினர். இனி மதிலில் ஏறுவது கடினம் எனத் தெரிந்ததும் கோப் பின்வாங்குமாறு உத்தரவிட்டார். ஆங்கிலேய அணியில் 90 பேர் மடிந்திருந்தனர்.

இனி கோட்டையைப் பிடிக்க இயலாது என்று கருதிய கோப் திருச்சி திரும்ப நினைத்தார். கள்ளர்களைத் தாண்டித்தான் நத்தம் கணவாயைக் கடக்க வேண்டும் என்பதால் தற்காப்பு ஏற்பாடுகளுடன் கிளம்பினார்.

முன்னர் நத்தத்தைக் கடக்கும்போது கள்ளர்கள் சந்தா சாகிப்புக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தி விரட்டி விட்டிருந்தனர். அப்துல் ரஹீம், தானே தாக்குவதாகவும், உதவிக்கு உடன் இருக்க வேண்டும் எனக் கேட்டும், கோப் தனது வீரர்களுடன் கிளம்பிவிட்டார்.

அவர் சென்றதும் ரஹீமின் படையிலிருந்த 500 குதிரை வீரர்களும் 1000 சிப்பாய்களும் கோட்டைக்குள்ளே போய் ஆலம்கானுடன் சேர்ந்துவிட்டனர். கள்ளர்களிடம் அடிபடாமல் கோப் 10.4.1751ல் திருச்சி போய்சேர்ந்தார்.

*

# 32

**அடுத்த இரண்டு ஆண்டுகளில் தென்னிந்திய மேலாதிக்கத்தில் மிக** முக்கியமான திருப்பங்கள் நிகழ்ந்தன. ஹைதராபாத்தின் வாரிசு உரிமைப் போர், நேவயத்துகளுக்கும் வாலாஜாக்களுக்கும் இடையே ஆன அதிகாரப் போட்டி, தஞ்சை மராத்தியர் - மறவர் சண்டை, மைசூரின் தமிழகப் படையெடுப்பு... இவையனைத்தும் திருச்சியைக் களமாகக்கொண்டு நிகழ்ந்தன. நேவயத்களை ஆதரித்த பிரெஞ்சுக்காரர்கள் ஆரம்ப வெற்றிகளைப் பெற்றனர். சந்தா சாகிப் திருச்சியை ஓராண்டாக முற்றுகை இட்டிருந்தார்.

பிரெஞ்சுக்காரர்கள் ஆதிகம் பெறுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக பிரிட்டிஷ் கும்பினி முனைப்பாகக் களத்தில் இறங்கியது. போரிடுவதில் பிரெஞ்ச் தளபதிகளுக்கு இருந்த ஆர்வமின்மையும், பிரிட்டிஷார் அடைந்த சாகச வெற்றிகளும் திருச்சி கோட்டைக்குள் இருந்த முகம்மது அலிக்கு சாதகமாயின. திருச்சி கோட்டை வலுவாக இருந்ததால் தாக்குப்பிடித்தது. சந்தா சாகிப் செங்கல் மேல் சத்தியம் செய்த அதே தளவாய் மண்டபத்தில் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். வெற்றிக்குப் பெரிதும் துணையாய் இருந்த மைசூரின் நஞ்சராஜா வாலாஜாக்களால் ஏமாற்றப்பட்டு எந்தப் பயனும் பெறாமல் இழப்புகளோடு திரும்பிச் செல்ல நேர்ந்தது.

பிரிட்டிஷ் கும்பினி தென்னிந்திய மண்ணில் வலுவாகக் காலூன்றி விட்டது. முகம்மது அலியை ஒப்புக்கு முன்னிறுத்திவிட்டு, போர்ச் செலவுகளுக்கான ஈட்டுத் தொகையாக வரிவசூலில் இறங்கியது.

**கே**ணல் ஹெரான் உறையூரிலிருந்து 1755 பிப்ரவரியில் மதுரையைப் பிடிப்பதற்காக சிறிய படையுடன் கிளம்பினார். போகும் வழியில் திறை செலுத்த மறுத்து வந்த மணப்பாறைப் பாளையத்தை பணிய வைக்க முயன்றார். மணப்பாறைக்கு ஆறு மைல் தாண்டி லக்க நாயக்கரின் கோட்டை இருந்தது. அதற்குப் போகும் பாதையில் தடுப்பரண் வைத்துத்

தடுத்திருந்தினர். அதைச் சுட்டு வீழ்த்தி வீரர்களை விரட்டி விட்டு, ஹெரான் தனது கீழிருந்த தளபதி யூசுப்கானை கோட்டையை அழிக்க ஐநூறு சிப்பாய்கள், ஒரு ஐரோப்பிய அணி ஒரு பீரங்கியுடன் அனுப்பினார். யூசுப்கான் என்ற மருதநாயகம் பிள்ளை சாதாரணமான ஒரு சிப்பாயாக இருந்து வளர்ந்தவர். பூர்வீகம் வைப்பாற்றுக் கரையில் பனையூர். அங்கிருந்த ஈழவர்கோட்டை அழிந்தபின் இல்லத்துப் பிள்ளைமார் மொத்தமாக இஸ்லாமியர்களாக மாறினர். அதில் இவர் குடும்பமும் ஒன்று. ஆங்கிலப் படையில் சேர்ந்தபின், அவரது துணிச்சல் மிக்க சில சாகசங்கள் ஆங்கிலேயர்களுக்குப் பேருதவியாக இருந்ததால் விரைவிலேயே அணித் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

இரண்டாவது தடுப்பரண் வலிமையாக இருந்தது. லக்க நாயக்கரின் வீரர்கள் பின்வாங்காது எதிர்த்துச் சண்டையிட்டனர். நூறு கும்பினிச் சிப்பாய்களும் பத்திருபது ஐரோப்பியர்களும் இறந்துவிட வெடிபொருள் தீர்ந்த நிலையில் யூசுப்கான் மேலும் உதவி கேட்டுத் தகவல் அனுப்பினார். உதவிக்குச் சென்ற கேப்டன் ஸ்மித் அந்த மண்கோட்டையைக் கைப்பற்றியபோது லக்க நாயக்கர் தனது வீரர்களுடன் காட்டுக்குள் ஓடியிருந்தார்.

மார்ச் 5ல் மதுரையை அடைந்த ஹெரான் எந்த எதிர்ப்புமின்றிக் கோட்டைக்குள் நுழைந்தார். மதுரையிலிருந்த பட்டாணியத் தளபதி மாயனா கள்ள நாட்டுக்குக்குள் தப்பி ஓடினார்.

**தொ**டர்ந்து கும்பினிப் படை மதுரைப் பாளையங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றது. மீறியவர்கள் சண்டையில் அடக்கப்பட்டார்கள். யூசுப்கான் தென்காசி மறவர் பாளையங்களைக் கடுமையான தாக்குதல்களால் அடக்கினார். நத்தம் பகுதியில் அவருக்குப் பெரும் இடையூறாக இருந்த கள்ளர்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொன்று அடக்கினார். நத்தத்தில் திருச்சிப் பாதையில் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தினார்.

மதுரை, திருநெல்வேலிப் பகுதியின் வரி வசூலைக் குத்தகைக்கு எடுத்திருந்ததால் கும்பினி ஏற்பாட்டின்படி முகம்மது அலியால் மதுரைக்கோட்டையில் ஆளுநராக யூசப் கான் நியமிக்கப்பட்டார். நவாப்புக்கும் அவருக்கும் உறவு சரியில்லாமல் போகவே குத்தகைப் பணத்தைக் கொடுப்பதில் சிக்கல்களை ஏற்படுத்தினார். ஆனால் மதுரை மக்களோடு அவருக்கு இணக்கமான உறவு இருந்தது. அவரது புதிய படையில் மறவர்களும் கள்ளர்களுமே அதிகம் இருந்தனர். இருபது ஆண்டுகளாகப் பரமக்குடியில் ஒளிந்திருந்த மீனாட்சி மீண்டும் மதுரைக்கோவிலுக்கு வந்து சேர்ந்தாள். யூசுப்கானின் மனைவி மாஸா பறையர் குல கத்தோலிக்கர் என்பதால் மெஜூரா மிஷனரி சில சலுகைகளைப் பெற்றது.

பிரெஞ்சுக்காரர்கள் யூசப்கானுக்கு உதவி செய்ததால், அவர் ஆங்கிலேயர்களை எதிர்க்கத் துணிந்தார். ஓராண்டுக்கும் மேலாக மதுரைக் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் கும்பினியார் ஈடுபட்டனர்.

கேணல் ஜார்ஜ் மோன்சன், மேஜர் அகிலஸ் பிரஸ்டன் தலைமையிலான கும்பினிப்படை 2.9.1763ல் மதுரைக்கு வெளியே

யூசுப்கானின் குதிரைப் படையுடன் மோதியது. கடும் மழையால் சண்டை நின்றுபோனது. கோட்டை மதில்கள் தற்காப்பு வீரர்களோடு வலுவாக இருந்ததாலும் மழை நீடித்ததாலும் தாக்குதல் தள்ளிப் போடப்பட்டது. இருபத்து இரண்டு நாட்க ளுக்குப் பிறகு வாலாஜா படைகளுடன் இணைந்து முற்றுகையைத் தொடங்கினர். ஆனால் மதிலை உடைக்க முடியாததால் முற்றுகையைக் கைவிட்டனர்.

பின்னர் மேஜர் பிரஸ்டன் படைகளுக்குத் தலைமையேற்றார். நத்தம் கள்ளர் நாட்டில் உள்ள பாதைக் காவல் அரண்களைக் கைப்பற்றினார். பம்பாயிலிருந்தும் தொண்டியில் இருந்தும் மேலதிக ஆங்கிலேயத் துருப்புகள் வந்து சேர்ந்தன.

யூசுப்கான் ஆண்டுக்கு ஏழு லட்சம் ரூபாய் குத்தகை தருவதாக வாக்களித்தும் பிரஸ்டன் அதை ஏற்காமல் சரணடையுமாறு கூறினார். என்றாலும் முற்றுகை கலைக்கப்பட்டது.

மேஜர் காம்ப்பெல் 1764 ஜூன் மாதம் கும்பினிப் படைகளுக்குப் பொறுப்பேற்ற உடன் கோட்டையின்மீது தாக்குதலைத் தொடங்கினார். வெளி மதிலைப் பல இடங்களில் பீரங்கித் தாக்குதலில் உடைத்து விட்டனர். மழை பெய்து கொண்டிருந்தபோதே உள் மதிலில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டனர். மதில் மேல் கடும் சண்டை நடந்தது. 160 பேர் காம்ப்பெல் தரப்பில் பலியாகியும் முயற்சி வெற்றி பெறவில்லை. சண்டையிட்டு உள்ளே நுழைவது கடினம் என்று தெரிந்ததும் மதுரையை முற்றுகை இட்டனர். கோட்டை மீது பிரெஞ்சுக் கொடி பறந்துகொண்டிருந்தது.

கோட்டைக்குள் உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டது. யூசுப்கானின் சர்தார்களிடையே அதிருப்தி நிலவியது. பிரெஞ்சு தளபதி மார்கண்ட் செப்டம்பரில் சரணடையும் முயற்சியில் ஈடுபட்டார். கான்சாகிப் குடும்பத்தோடு பாதுகாப்பாக வெளியேற அனுமதிகோரியும், அது மறுக்கப்பட்டது.

சரணடையாமல் தொடர்ந்து போரிட முடிவு செய்தார் யூசுப் கான். ஒரு வாக்குவாதத்தின் போது கோபமுற்ற யூசுப்கான் கையிலிருந்த பிரம்பால் மார்கண்டை அடித்துவிட்டார்.

சரணடையும் முயற்சியில் மார்கண்டோடு சேர்ந்திருந்த சர்தார்கள் அக்டோபர் 13 அன்று யூசுப்கானைப் பிடித்துக் கட்டிப்போட்டனர். 16ல் அவர் முகம்மது அலியிடம் ஒப்படைக்கப்பட்டார். வாலாஜா சிப்பாய்கள் வைகைக் கரையில் திண்டுக்கல் பாதை அருகே ஒரு மாமரத்தில் அவரைத் தூக்கிலிட்டனர். அவரது தலை கோட்டை வாசல்கள் நான்கிலும் காட்சிக்கு வைக்கப்பட்ட பிறகு திருச்சிக்கு அனுப்பப்பட்டது. கைகால்கள் தஞ்சாவூர், பாளையங்கோட்டை, திருவனந்தபுரத்திற்கு அனுப்பப்பட்டன. முண்டம் மட்டும் சம்மாட்டிபுரத்தில் புதைக்கப்பட்டது. சந்தா சாகிப்பின் உடலுக்கு நேர்ந்த கதியே இவருக்கும் நேர்ந்தது.

**ம**துரை சிக்கியதும் மேலூர் கள்ளர்களை அடக்குவதற்காக கேப்டன் ரும்ளேயின் தலைமையில் சென்ற படை 3000 பேரைக் கொன்று குவித்தது. பின்னர் கள்ள நாட்டு அம்பலகாரர்கள் வரி செலுத்து ஒப்புக்கொண்டனர்.

படை திரும்பிச் சென்றதும் கள்ளர்கள் நவாப்பின் பத்து வரி வசூல்

அதிகாரிகளைப் பிடித்துக் கொன்றதுடன் வரி செலுத்த மறுத்தனர்.

மீண்டும் ரும்ளேயின் படை சென்று மேலும் 2000 பேரைக் கொன்றது. மேலூர் அப்போதைக்கு அடங்கிவிட்டாலும், வெள்ளையர்கள் மீதான அவர்களின் வெறுப்பு நீடித்தது.

*

# 33

**கட்டபொம்மு 1799 அக்டோபர் 16 அன்று கயத்தாரில் அவரது** 36ஆவது வயதில் தூக்கிலிடப்பட்டார். அவரது உறவினர்கள் பெண்களும் ஆண்களுமாகப் பதினேழு பேர் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, நாகலாபுரம், குளத்தூர், கொல்லவாருபட்டி பாளையங்கள் பறிக்கப்பட்டன. பாஞ்சாலங்குறிச்சியின் பெரும்பாலான பகுதிகள் எட்டையபுரம், மேல்மாந்தை, மணியாச்சி பாளையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. பறிக்கப்பட்ட பாளையங்களிலிருந்த கோட்டைகள் எல்லாம் இடிக்கப்பட்டன. ஆயுதங்கள் பிடுங்கப்பட்டன. மக்களது சுய பாதுகாப்புக்கும் வழியில்லாமல் போகவே திருட்டுகள் அதிகரித்தன. அனைத்துப் பாளையங்களின் நிர்வாகத்தையும் கும்பினி ஏற்றெடுத்தது. கும்பினி ஊழியர்கள் வரி வசூல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். 'தேசக்காவல்' என்றொரு புதிய வரியை ஊர்களின் மீது விதித்தனர். விற்பனைப் பண்டங்களுக்கான வரியும் உயர்ந்தது. வரி கட்ட இயலாமல் போகும் போது சொத்துக்கள் எதுவாயினும் பறிமுதல் செய்யப்பட்டன. கும்பினி அதிகாரிகள் ஊழலில் கொழித்தனர். நவாப்பின் நிர்வாகமே இந்தப் போக்கைக் கண்டு மிரண்டு, நாடு பாழ்பட்டுப் போய்விட்டது என்று குற்றம் சாட்டியது.

**பா**ளையங்கோட்டை சிறை அதிகாரியின் மனைவி ஊமைத்துரையின் மேல் அனுதாபம் கொண்டிருந்தாள். அதைப் பயன்படுத்தி நீத்தார் கடன் செய்வதற்குப் பழங்களும் பண்டங்களும் வாங்க வேண்டுமென்று சொல்லவும் அதற்கு அனுமதி கிடைத்தது. சிறைக்கு விறகு கொண்டுவரும் பொட்டிப் பகடை என்ற சக்கிலியர்தான் சிறைக்கு உள்ளேயும் வெளியேயும் ரகசிய ஓலைப் பரிமாற்றத்திற்கு உதவியாக இருந்தார். சிறைக்குள் வந்த வாழையிலைக் கட்டு, விறகு, பழக்கூடைகளுக்குள் ஆயுதங்கள் இருந்தன.

2.2.1801 அன்று இரவானதும் திருச்செந்தூருக்குக் காவடி

எடுத்துப்போகும் பக்தர் கூட்டம் ஒன்று கோட்டையின் அருகே பாடிக்கொண்டு சென்றது. தெற்கு வாசலுக்கு அப்பால் இருளில் குதிரைகளோடு வீரர்கள் கூட்டம் ஒன்று காத்து நின்றது.

பாட்டுச் சத்தம் நெருங்கியதும் ஊமைத்துரையின் உறவினர்கள் ஆயுதங்களோடு காவல் வீரர்களோடு மோதி, கோட்டைக் கதவைத் திறந்து ஓடினர். மூன்று பேர் சண்டையில் இறந்துவிட, பதினான்கு பேர் தப்பி காத்திருந்த கூட்டத்தோடு வல்லநாட்டு மலைக்கு ஓடினர். பின்தொடர்ந்த சிறைக்காவலர்கள் அடிபட்டுத் திரும்பினர்.

பாஞ்சாலங்குறிச்சியில் காவலில் இருந்த கும்பினிச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஒரே வாரத்தில் மீண்டும் அங்கே ஒரு மண்கோட்டை எழும்பிக் கொண்டிருந்தது.

பிப்ரவரி இறுதிக்குள் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து ஆழ்வார்திரு நகரி வரை உள்ள கும்பினி ராணுவ நிலைகளை அழித்துவிட்டனர். கோட்டைகள் இடிக்கப்பட்ட ஐந்து பாளையங்களிலும் மீண்டும் அவை கட்டப்பட்டன.

பாஞ்சாலங்குறிச்சியைப் பிடிப்பதற்காகக் காலின் மெக்காலே சங்கரன்கோவில் கயத்தாறு வழியாக வந்து கடையநல்லூரில் முகாமிட்டிருந்தார். நள்ளிரவில் நாற்புறமிருந்தும் அவர் படை தாக்கப்பட்டது. சண்டையில் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் 40 பேர் மடிந்தனர்.

மறுநாள் ஒட்டப்பிடாரத்தைப் பிடிக்கும் மெக்காலேயின் முயற்சி முறியடிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ராணுவத்தின் பின்புறமாகவும் பக்கவாட்டிலும் துப்பாக்கிகளுக்குப் பயப்படாமல் வந்து தாக்கினர். மெக்காலே பின்வாங்கினார். ஊமைத்துரை அந்தச் சண்டையில் 110 பேரை இழந்தான். இரவெல்லாம் நடந்து பிப்ரவரி 10ல் மெக்காலே பாளையங்கோட்டை போய்ச் சேர்ந்தார்.

மார்ச்சில் ஊமைத்துரை தூத்துக்குடியைத் தாக்கினான். கோட்டையின் தளகர்த்தர் உட்வர்ட் ஓர்ம்ஸ்லே சரணடைந்தார். மற்றொரு அதிகாரியான பாக்காட் சிறையில் அடைபட்டார். அவர் மனைவி ஊமைத்துரையைச் சந்தித்து அவருக்கு உயிர்ப் பாதுகாப்பு வேண்டியபோது, இரு அதிகாரிகளும் குடும்பம் உடைமைகளோடு வெளியேற ஊமைத்துரை அனுமதித்தான்.

வல்லநாட்டு மலையிலிருந்து பாளையங்கோட்டையைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். கும்பினிக்கு எதிரான இந்த எழுச்சி ராமநாதபுரத்திற்கும் பரவியது.

மார்ச் 19ல் ஸ்ரீவைகுண்டத்தைத் தாக்கி மேஜர் செப்பர்டின் படையை அங்கிருந்து விரட்டிவிட்டனர்.

**மெ**க்காலே மேலதிகத் துருப்புகளைச் சேர்த்துக்கொண்டு மார்ச் 30ல் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப்போனார். ஊமைத்துரையின் ஆட்கள் பசுவந்தனையில் மறித்துத் தாக்கினர்; 96 பேரை இழந்து பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிவிட்டனர்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை மார்ச் 31ல் வளைத்த பிரிட்டிஷ் படை காலையிலிருந்தே பீரங்கிகளால் சுடத் தொடங்கியது. கோட்டையில் இரட்டை மண் சுவர்களுக்கு நடுவே பருத்திமாருகள்

அடுக்கப்பட்டிருந்ததால் குண்டுகள் அதில் செருகி நின்றுவிட்டன. உட்புறச்சுவர் பாதிக்கப்படவில்லை.

மாலை 3 மணிக்கு ஒரு பகுதிச்சுவர் இடிக்கப்பட்டது. அதன் வழியே நுழைய முயன்ற பிரிட்டிஷ் சிப்பாய்கள் சுடப்பட்டும் ஈட்டி, வல்லயங்களால் குத்தப்பட்டும் விழுந்தனர். எதிர்ப்பு கடுமையாக இருந்தது. குலவையிட்டுக்கொண்டே பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் தாக்கினர். சுவர்களில் ஏற முயன்ற பிரட்டிஷாரை வல்லயங்கள் குத்தித் தள்ளின. சுவர்மீது பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் தென்படும் போதெல்லாம் பிரிட்டிஷ் துப்பாக்கிகள் சுட்டு வீழ்த்தின என்றாலும் அதே இடத்தில் மீண்டும் ஒருவன் ஏறி நின்றான். மதில்மேல் பிரிட்டிஷாரால் ஏற முடியவேயில்லை. கோட்டையின் கிழக்குப் பக்கமிருந்து எட்டையபுரம் வீரர்கள் தாக்கினாலும் அவர்கள் சுலபமாக விரட்டப்பட்டனர்.

கோட்டையின் காவல் அரண்களிலிருந்து பிரிட்டிஷ் வீரர்களை நோக்கித் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடந்தபடியிருந்தது. கோட்டையைக் கைப்பற்றும் மெக்காலேயின் முயற்சி தோற்றுப்போனது. வலிமையான பிரிட்டிஷ் படை தோற்றுவிட்டது என்பதை விட மெக்காலேக்கு ஆச்சரியமாக இருந்தது அந்தச் சிறிய மண்கோட்டையை எப்படி ஊமைத்துரையால் தற்காத்துக் கொள்ள முடிந்தது என்பதுதான்.

**வீ**ரத்திற்கும் நேர்மைக்கும் பேர் போனவராகக் கருதப்பட்ட, இந்தியச் சூழலை நன்கறிந்த லெப். கேணல் அக்னியு வசம் மதராஸ் ராணுவப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மதராஸ் ஜார்ஜ் கோட்டை, பரங்கிமலை, ஆர்க்காடு, மலபாரிலிருந்தும் வீரர்கள் வந்து அவரோடு மே 23ல் கோவில்பட்டியில் இணைந்துகொண்டனர்.

24ந் தேதி பாஞ்சாலங்குறிச்சியை பீரங்கிகள் துளைத்துக் கொண்டிருந்தன. உடைபட்ட மதில்களினூடே நுழையப் பெருவாரியான ஆட்பலத்தோடு பிரிட்டிஷார் முயன்றனர். அவர்களுக்குப் பாதுகாப்பாக சின்ன பீரங்கிகளும் துப்பாக்கிகளும் சுட்டவாறு இருந்தன. நுழைய முயன்றவர்கள் மீது உள்ளிருந்து கடும் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் நிகழ்ந்தது. இரு பக்கமும் பெரும் எண்ணிக்கையில் வீரர்கள் பலியாயினர்.

சிதைந்த மதிலின் ஒரு ‘வழி’க்குப் பின்புறம் எதிர்த்து நின்ற வீரர்கள் அனைவரும் சுட்டு வீழ்த்தப்பட்டவுடன் பிரிட்டிஷ் வீரர்கள் அந்த வழியே மொத்தமாக உள் நுழைய முயன்றனர். அந்தத் தருணத்தில் கோட்டையில் இருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் 3000 பேர் கிழக்கு வாசல் வழியாக வெளியேறி, இரு பிரிவுகளாகக் கிழக்கிலும் வடக்கிலும் விரைந்து ஓடித் தப்பித்தனர். கோட்டைக்குள் 1050 பேர் இறந்துகிடந்தனர்.

பிடிபட்ட வீரர்களைக் கோட்டையின் வெளிப்புறத்தில் நிற்கவைத்து சுட்டுத் தள்ளுமாறு உத்தரவிட்டார் அக்னியு.

கேணல் ஜேம்ஸ் வெல்ஸ் வந்து அவரைச் சந்தித்தார். ‘சார், உங்களுக்குச் சிலவற்றை நினைவூட்ட விரும்புகிறேன். தூத்துக்குடியைக் கைப்பற்றியபோது பிரிட்டிஷ் அதிகாரிகளை குடும்பத்தோடு வெளியேற ஊமைத்துரை அனுமதித்தார். அதை விடவும் மெக்காலே தோற்று பாளையங்கோட்டைக்குத் திரும்ப முயன்றபோது அவரது படையை

ஊமைத்துரை நிர்மூலமாக்கியிருக்க முடியும். ஆனால் திரும்பிச் செல்ல அனுமதித்தார்!'

அக்னியு சுருட்டைப் புகைத்தவாறு மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

'காது கேளாத, வாய் பேச முடியாத ஒரு இளைஞனின் சாகஸங்கள் பிரமிப்பூட்டுகின்றன. அவர் சைகைகளை தேவ கட்டளைகளாக ஏற்று எல்லோரும் கீழ்ப்படிகின்றனர். எல்லாத் தாக்குதல்களிலும் அவர் முன்னால் நின்றிருக்கிறார். தன்னைவிட நூறுமடங்கு வலிமை வாய்ந்த எதிரியைக் கண்டு அவர் அஞ்சவில்லை. அவரது படையின் சக்தியைவிட சாதனைகள் பல மடங்கு பெரியவை.'

சுருட்டை வாயிலிருந்து எடுத்த அக்னியு சொன்னார் 'தெரியும். அவனைப் பற்றி அனைத்தையும் அறிந்த பிறகே இங்கே வந்தேன். நான் அறிந்த அபாரமான போர்வீரர்கள் வெகு சிலரில் இவன் ஒருவன். அவனை மிகவும் மதிக்கிறேன். என்ன செய்வது? அவனை எதிர்த்துப் போரிட அல்லவா வந்திருக்கிறோம்.'

அக்னியுவின் ஆணைப்படி பிடிபட்ட வீரர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வடக்கே தப்பியோடிய ஊமைத்துரையின் கூட்டத்தை பிரிட்டிஷ் வீரர்கள் துரத்திச் சென்றனர். கடும் சண்டை நடந்தது. மீண்டும் அவர்கள் சிதறி ஓட, பிரிட்டிஷ் வீரர்கள் கோட்டைக்கே திரும்பிவிட்டனர்.

அருகிலுள்ள கிராமத்திலிருந்த பெண்கள் காயம்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக அந்தக் களத்திற்கு வந்தனர். அதிலொருவன் உயிர்பிரியும் தருணத்திலும் அருகில் விழுந்து கிடந்த ஊமைத்துரையைக் காட்டி 'சாமிய எப்படியாவது காப்பாத்துங்க' என்று சொன்னான்.

குமாரசாமி நாயக்கன் கட்ட மொம்முவிற்கும் செவத்தையாவிற்கும் தம்பி; கும்பினியாருக்கு ஊமீ, டம்ப்பி; முகமதியர்களுக்கு மூங்கா; மக்களுக்கு ஊமைத்துரை, துரைசிங்கம்; வீரர்களுக்கு சாமி!

**தே**வகிரியிலிருந்து ஆனைகுந்திக்கு வந்தவர்கள் தோக்களவாருகள். வடக்கிலிருந்து வந்தவர்கள் என்ற பொருளில் அவர்கள் அழைக்கப்பட, பின்னர் அதுவே குலப்பெயராயிற்று.

அச்சுதராயருக்கு எதிராக மைசூர் கொல்லவாருகளோடு சேர்ந்து கலகம் செய்து நரமசிம்மனுக்கு திருவடி ராஜ்ஜியம் அடைக்கலம் தந்தது என்பதற்காக, அதைத் தண்டிப்பதற்கு விஜய நகரத் தளபதி ராமராய விட்டலர் வேணாட்டின் மீது படையெடுத்து வந்தார். எட்டு ஆண்டுகள் கன்னியாகுமரியிலேயே தங்கிவிட்டார். அவரோடு வந்த தோக்களவாருகளின் ஒரு பிரிவினர் புதிதாகக் கட்டப்பட்ட பாளையங்கோட்டையில் மதுரையின் நிலைப் படை யாகத் தங்கிவிட்டனர். பின்னர் அவர்கள் குடும்பங்களும் வந்து சேர்ந்தன. திருமலை நாயக்கர் காலத்தில்தான் தெற்கே புதிய பாளையங்கள் உருவாக்கப்பட்டன. தூத்துக்குடி ஐரோப் பியர்களையும், திருமலை நாயக்கரை எதிர்த்த எட்டையபுரம் சில்லவாரையும் கண்காணிக்கவே பாஞ்சாலங்குறிச்சி உருவானது.

கள்ளிக்காட்டை அழித்து கரிசல் நிலங்களாக்கிய காப்புகளின் ஊர்களை உள்ளடக்கி தோக்களவாருகளின் காடல்குடி, குளத்தூர், மேல்மாந்தை பாளையங்கள் ஏற்பட்டன. வெகுகாலமாக வேரூன்றியிருந்த, பெரும் நிலப்பரப்பைக் கொண்டிருந்த செருக்கில் எட்டையபுரம் புதிய பாளையங்களோடு காலமெல்லாம் முரண்பட்டுக் கொண்டிருந்தது. கும்பினிக்கு ஆதரவாக ஆரம்பத்திலிருந்தே இணங்கிப்போன பாளையம் அது ஒன்றுதான்.

எட்டையபுரத்தாரையும் பணிந்துவிட்ட மற்ற பாளையக் காரர்களையும் இகழ்ச்சியாகப் பார்த்துக்கொண்டே கட்டபொம்மு தூக்குக்கயிற்றை நோக்கி நடந்து போனான். கோட்டையை விட்டு ஓடாமல் அங்கேயே போரிட்டு நான் செத்திருக்க வேண்டும் என்றான். கடைசியாக அவன் கவலைப்பட்டது தம்பி குமாரசாமிக்காகத்தான்.

*

**வெ**ங்கடாசலபுரத்தில் ஒரு வீட்டுக்குள் படுத்திருந்தான் ஊமைத்துரை. ஏழு காயங்களில் நான்கில் கட்டுப்போட்டிருந்தது. தகவல் கிடைத்து, அவனைப் பார்த்துப்போக வீரர்கள் வந்திருந்தனர். அவனுக்கு சிச்ருஷை செய்யும் கிழவி சொன்னாள் 'சண்டைக்குப் பிறகு ராத்திரி தொப்பிக்காரங்க பக்கத்து ஊர்கள்ல எல்லாம் வீடு வீடா தேடி வந்தாங்க. நான் துரைசிங்கத்த துணியப் போட்டு மூடி 'எம் மகன் பெரியம்ம வந்து செத்துப் போயிட்டான்யா'ன்னு அழுதேன். தெறந்து பாக்காமலே ஓடிட்டாங்க.'

காயங்கள் ஆறிய பிறகு வந்து அழைத்துப் போவதாகச் சொல்லி அவர்கள் சென்றுவிட்டனர்.

அவன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலிலிருந்து ஒருக்களித்துத் திரும்பிப் பார்த்தால் அந்தக் கோழி தெரிந்தது. வீட்டின் மூலையில் குலுக்கைக்கும் சுவருக்கும் இடையே வரையோட்டில் அது அடைகாத்திருந்தது. அவன் அங்கு வந்து கிடந்த ஐந்தாம் நாளே பதினோரு குஞ்சுகளோடு இறங்கிவிட்டது. தாயின் காலடியில் முண்டியடித்துக் கொண்டு குஞ்சுகள் சுற்றிச் சுற்றி வந்தன. விலகியோடும் குஞ்சுகளைத் தாய் கொக்கரித்துக் கண்டித்து தன் நிழலிலேயே வைத்துக்கொண்டது. அவன் தலைமாட்டிலேயே கொட்டானில் கம்பம்புல்லை வைத்திருந்தான். அவ்வப்போது தூவிட்டு குஞ்சுகள் கொத்தித் தின்னும் அழகையே பார்த்தவாறிருப்பான். வெடித்த பருத்தி கால் கொண்டு நடந்தாற்போலிருந்தன. பருத்திக்காய் போலத் தலை. கொத்து மல்லியின் பூப்போல மஞ்சள் கால்கள். மஞ்சணத்தி மொட்டுப் போன்ற அலகைத் திறந்து கத்தின.

ஒலியும் மொழியும் பெயர்களும் அதன் பொருளும் அற்ற உலகம் அவனுடையது. இந்த உலகமே காட்சிகளாகத்தான் அவனுக்கு அர்த்தமாயிற்று. ஒன்றையொன்று தொடர்புபடுத்திப் புரிந்துகொண்டிருந்தான்.

கடலலைகள், சூரசம்ஹாரம், சிலைகள் இருள் மண்டிய பிரகாரங்கள். பரிவட்டத்தோடு கும்பிட்டவாறு நிற்கும் அண்ணன்...அலையடங்கிய கடல். மிதக்கும் தோணிகள். கல் பாவிய கரைத் தளமெங்கும் திலாக்கள் போல சாய்ந்து நிற்கும் தூக்கும் மரங்கள். அந்த தேவாலயம். குழந்தையைத்

தூக்கிக்கொண்டு நிற்கும் அம்மன். நின்று பார்க்கும் அண்ணன்... மடிந்து மடிந்து கொட்டும் அருவி. உயர்ந்த மலை. செழித்த மரங்கள், அறிந்திராத பழங்கள், அருவிக்கரைக் கோவில், மரத்தில் செதுக்கியது போல் துல்லியமான விளிம்புகளுடன் கல் தூண்கள். மார்பில் சந்தனத்திட்டுகளுடன் கண்மூடிக் கைகூப்பி நிற்கும் அண்ணன்...

நினைவில் ஓடும் எல்லாக் காட்சிகளுமே அடுத்து அண்ணனில் வந்து நிற்கின்றன. குழந்தையாய் அண்ணன் கைகளிலேயே இருந்திருக்கிறான். எட்டு எடுத்து வைத்த நாள் முதல் அண்ணனின் நிழலிலேயே நடந்திருக்கிறான். முதல் முதலாகக் குதிரையில் அவனை ஏற்றிக்கொண்டு அண்ணன் விரட்டியபோது மிரண்டு அலறியது இன்னும் நினைவில் இருக்கிறது.

கயத்தாறில் ஓடைக்கு அப்புறம் இருந்த கோவில் மண்டபத்தில்தான் கைகால்களில் விலங்குகளோடு அவர்கள் கிடந்தார்கள். திடீரென தூரத்தில் கிழக்கேயிருந்து ஓலமும் ஒப்பாரியும் கேட்டது. சங்கிலியிட்ட கைகளால் நெஞ்சில் அறைந்துகொண்டு எல்லோரும் புலம்பினார்கள். அவனுக்குப் புரிந்துவிட்டது. ஊளையிட்டவாறு மண்ணை அறைந்து அறைந்து கதறினான். இந்த மண்ணுக்கு மட்டுமே புரிந்த மொழி அது.

நடக்க முடிந்தவுடன் புறக்கடை வேப்பமர நிழலில் கல்லில் அமர்ந்து கோழிக்குஞ்சுகள் மேய்வதையே பார்த்திருப்பான். கோழியின் உடல் சிலிர்க்க இறகுகள் பொங்கி, தலையை வெட்டி வெட்டி அது திகைத்துப் பார்க்கும்போது அருகில் எங்கோ காக்கையின் குரல் ஒலித்திருக்க வேண்டும் என்று புரிந்துகொள்வான். உடனே கொக்கரிக்கும். மேய்ந்து திரிந்த குஞ்சுகள் அடைக்கலம் தேடி வர சிறகடியில் அமர்த்தி அப்படியே பம்மிக் கொள்ளும். அதற்குள் நாலு குஞ்சுகளைப் பறிகொடுத்து விட்டது. காக்கைகள் என்றாலே வடுகர்களுக்கு ஆகாது. கண்டாலே விரட்டுவார்கள். ஏனோ தெரியவில்லை; ஆதிலியிருந்து இப்படித்தான்.

ஒரு மாதம் கழிந்திருக்கும். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே படபடவென்று கரிய இறக்கைகள் இறங்கின. கருத்த கால்கள் கவ்வியிருக்க ஒரு குஞ்சு கியாகியா என்று கத்திக் கொண்டு வானத்திற்குப் போனது. கோழியின் புலம்பல் வெகுநேரமாய் அடங்கவில்லை.

ஆட்களை வரச்சொன்னான். காயங்கள் ஆறுமுன்னே அவர்களோடு கிளம்பி கமுதி போய்ச் சேர்ந்தான்.

**வெ**ள்ளை மருதுவும் அவர் தம்பி சின்னமருதுவும் சிவகங்கைப் பகுதிகளில் கும்பினிக்கு எதிராக வீரர்களைத் திரட்டினர். காளையார் கோவில்தான் மையத்தளமாக இருந்தது. அந்தக் கோவில்தான் நிலைக்களன். அது மேலதிக உத்வேகத்தை அளித்தது. தெற்கிலிருந்து விரட்டப்பட்டுப் போனவர்களுக்கு அதுவும், விருபாக்ஷி பாளையமும்தான் புகலிடங்களாக இருந்தன.

கமுதியிலிருந்து ஊமைத்துரையை சின்னமருது சிறுவயலுக்கு அழைத்துப் போனார். அவர் வீட்டுப் பெண்கள் அவன் உடல் தேறுவதற்காகப் பொங்கல் வைத்துப் படையலிட்டு சாமிகளை வேண்டினர்.

அங்குள்ள மறவர்கள் முத்துக் கருப்பத் தேவரையே தங்கள் அரசராக

ஏற்றுக்கொண்டிருந்தனர். முதலில் திருப்பத்தூர், நத்தத்திலிருந்து கும்பினி துருப்புகளை விரட்டிவிட்டனர். மேலூர், திருவெள்ளூர் கோட்டைகளை ஆயுத தளவாடங்களோடு கைப்பற்றினர். ஏற்கனவே மழை இல்லாததால் தானியங்களுக்கு பெரும் தட்டுப்பாடாய் இருந்தது. மக்கள் புரட்சியாளர்களுக்கு ஆதரவாய் செயல்பட்டனர். ஆண்கள் பெருவாரியாய் வந்து சேர்ந்தனர். கிழக்குக் கடற்கரைத் துறைகளைக் கைப்பற்றினர். பிறகு இலங்கையிலிருந்து தோணிகளில் தானியங்கள் வந்திறங்கின.

உடல் தேறியதும் ஊமைத்துரை தனது வீரர்களோடு போய் பாளையநாட்டைக் கைப்பற்றினான். மேலூர் கள்ளர்கள் நத்தத்திலிருந்து மதுரை வரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஓரிரவில் விருபாஷி குப்பள நாயக்கர் தலைமையில் திண்டுக்கல் பாளையக்காரர்கள் அனைவரும் ஊமைத்துரையோடு சேர்ந்து படையோடு மதுரைக் கோட்டையைச் சுற்றி வளைத்தனர். மூன்று நாட்களாக அலங்கங்களிலிருந்த பீரங்கிகள் நாலு திசையிலும் சுட்டுக் கொண்டேயிருந்தன. நெருங்கமுடியவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றனர்.

சின்னமருதுவின் மகன் செவத்தத் தம்பி கடலோரமாக வீரர்களுடன் தஞ்சைப் பகுதியில் நுழைந்தான். பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஆதியார்குடியைக் கைப்பற்றினர். மாங்குடிக்கான சண்டையில் கேப்டன் வில்லியமும் மருது வீரர்களும் வெற்றி தோல்விகளுடன் போராடிக்கொண்டிருந்தனர். கடைசியில் அதுவும் மறவர்களிடம் பிடிபட்டது. தஞ்சைப் பகுதியிலிருந்து கிடைத்த உணவு தானியங்கள் பேருதவியாய் இருந்தன.

**ம**துரையைச் சுற்றிலும் கலகம் பரவியதால் கும்பினி சமாளிக்க முடியாமல் திணறியது. கோட்டைகள் பறிபோயின; ராணுவ நிலைகளை இழக்க வேண்டியதாயிற்று. தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. புரட்சிக்காரர்கள் மக்கள் ஆதரவோடு பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். எதிர்பாராத நேரத்தில் தாக்கினர். கும்பினி தனது இந்தியச் சிப்பாய்களை முழுக்க நம்பவும் பயந்தது. ஆனாலும் கும்பினிக்குச் சாதகமாகவும் காலம் அமைந்தது. திப்பு சுல்தானை வென்றுவிட்டதாலும், நெல்லைப் பாளையங்களை அடக்கிவிட்டதாலும் அந்தப் போர்முனைகளிலிருந்து படைகள் உதவிக்கு மதுரை வந்து சேர்ந்தன. தஞ்சாவூரும் புதுக்கோட்டையும் எட்டையபுரமும் கும்பினிக்கு பலவிதங்களில் உதவிகரமாக இருந்தன. சிவங்கையின் முன்னாள் அரச வாரிசு படமாத்தூர் ஒய்யத்தேவர் கும்பினியை ஆதரித்தார். அது மறவர்களிடையே பிளவை ஏற்படுத்தியது.

அக்னியு ஜூன் 1ந் தேதி திருப்புவனத்தில் இறங்கினார். மேஜர் ஜேம்ஸ் கிரஹாம் கீழே ஒரு படை மதுரையை நோக்கிச் சென்றபோது மறவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியது. மேஜர் ஷெப்பர்ட் உடனே உதவிக்கு வந்ததால் மதுரை சென்று சேர முடிந்தது.

8ந் தேதி அக்னியு திருப்பாச்சேத்தி சென்றார். அங்கு நடந்த சண்டையில் இருபுறமும் கடும் சேதம் விளைந்தது. எழுபது பேர் பலியானதும் மறவர்கள் பின்வாங்கினர் 10ந் தேதி மானாமதுரையில்

பாலமநேரிக்கரையில் காத்திருந்த மறவர்களுக்கும் ஷெப்பர்டுக்கும் கடும் சண்டை நடந்தது. வல்லயங்களாலும் வேல்கம்புகளாலும் குத்துப்பட்டு சிப்பாய்கள் விழ பிரிட்டிஷாருக்கே அங்கு அதிக இழப்புகள் ஏற்பட்டன.

என்றாலும் பார்த்திபனூரைக் கடந்து அக்னியு 11 அன்று பரமக்குடி வந்துவிட்டர். தொடர்ந்து முன்னேறி 14ல் ராமநாதபுரம் சேர்ந்தார். கலகக்காரர்களின் வலிமையான தளமான திருப்பத்தூரை 24ல் கைப்பற்றிவிட்டு, மலபாரிலிருந்து வந்துகொண்டிருந்த கேணல் ஜேம்ஸ் இன்னிஸூக்காகக் காத்திருந்தார்.

திண்டுக்கல் பாளையக்காரர்களை அடக்கிவிட்ட இன்னிஸ், நத்தத்தில் புதுக்கோட்டை தொண்டைமானின் வீரர்களோடு சேர்ந்து கொண்டார். பிறமலையைத் தாண்ட முயன்றபோது தோற்று நத்தத்திற்கே திரும்பி வந்தார். மீண்டும் ஜூலை 4ல் மணப்பாசேரிக்குப் போனார். மருது சகோதரர்கள் தாக்குதலால் பின்வாங்கி மீண்டும் நத்தத்தை அடைந்தார். திருப்பத்தூர் சென்று சேர்வதற்கு மூன்றாம் முறையாக முயன்று அதை ஆறு மைல் தூரத்தில் நெருங்கிவிட்டார். சங்கரக்கோட்டை காடுகளுக் குள்ளிலிருந்து மருது மீண்டும் தாக்கினார். அக்னியு உதவிக்கு வந்து மீட்டுச்சென்றார். இருவரும் இணைந்து மருதுவின் சிறுவயல் ஊரை ஜூலை 30 தாக்கினர். ஊரை எரித்தழித்து விட்டு மருது வீரர்கள் காட்டுக்குள் தப்பிச்சென்றனர்.

**ஆ**ர்க்காடு நவாப் முகம்மது அலி 1795ல் இறக்கும் தறுவாயில் மகன் உமது உல் உமராவிடம் கண்டிப்பாகச் சொன்னார். ‘1792ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையிலிருந்து கும்பினி மீற ஒரு போதும் அனுமதிக்காதே.’ அவர் மரணத்துக்குப் பின் அந்த உடன்படிக்கையில் இல்லாத ஷரத்தான படைச்செலவுக்கான பழைய கடன் 11,62,770 வராகனை கும்பினி கேட்டது. கவர்னர் மார்னிங்டனின் நோக்கம் அதிகாரபூர்வமாக ஆட்சியைக் கும்பினி வசமாக்குவதுதான். கிளைவ் பேச்சுவர்த்தையைத் தொடங்கினார். கும்பினியின் விருப்பத்திற்கு ஒத்துழைக்காத நவாப் 1801 ஜூலை 15ல் காலமானார். அடுத்து நவாப் ஆன அவர் மகன் அலி ஹூசைனும் பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்கவில்லை. ஆனால் அவரது சித்தப்பா மகன் அஸிம் உல் தௌலா தன்னை நவாப் ஆக்கினால் கும்பினிக்கு அரசு அதிகாரத்தை மாற்றித்தர ஒப்புக் கொண்டார். நவாப் ஆன சில நாட்களிலேயே அலி ஹூசைன் மரணமடைந்தார். நஞ்சூட்டப்பட்டிருக்கலாம். என்றும் ஐயம் எழுந்தது. ஜூலை 31ல் அஸிம் நவாப் ஆனார். ஆட்சி கும்பினிக்குக் கைமாறியது.

**கா**ளையார்கோவிலை நோக்கி பிரிட்டிஷ் படை காட்டுக்குள் நிதானமாக முன்னேறிக் கொண்டிருந்தது. மருதுவின் வீரர்கள் தொடர்ந்து வந்து வந்து மோதிக்கொண்டேயிருந்தனர். காட்டுக்குள் எங்கும் ரத்தத் திட்டுகள் கிடந்தன. மேலும் அவர்கள் முன்னேற முடியாமல் ஆகி, பின்பக்கத் தொடர்புகளும் அறுந்து போயின. அக்னியு சிறுவயலுக்கே திரும்பிவிட்டார்.

தஞ்சை, புதுக்கோடை ராஜாக்களின் உதவியுடன் அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்த கலகக்காரர்களை கும்பினிப் படை முற்றாக விரட்டி விட்டது.

காரைக்குடி சென்று கொண்டிருந்த மக்லீனின் அணியை மூவாயிரம் பேருடன் ஊமைத்துரை தாக்கினான். அதை முறியடித்து, சிங்கம்புணரி காடுகளிலிருந்த வீரர்களையும் மக்லீன் விரட்டிவிட்டான். மார்ட்டிஸ் ராமநாதபுரத்திலும், எட்டையபுரம் வீரர்கள் உதவியுடன் மெக்காலே அபிராமத்திலும் நடந்த சண்டையில் வென்றனர்.

பல இடங்களிலும் தோற்றுத் திரும்பிய வீரர்கள் காளையார்கோவில் காட்டில் வந்து சேர்ந்தனர். காளையார் கோவிலைத் தாக்கும்முன் அக்னியு ஒரு தந்திரம் செய்தார். ஒய்யத் தேவருக்கு சிவகங்கை அரசராகப் பட்டம் கட்டினார். மருதுவின் மறவர்கள் இரு எதிரணிகளாகப் பிரிய நேர்ந்தது.

காளையார்கோவில் மீது இரண்டாம் முறை தாக்குதல் தொடங்கியது. ஒய்யத் தேவர் உதவியுடன் பிறமலை, மேலூர், நந்திக்கோட்டை தாண்டி ஒக்கூர் வந்தார் அக்னியு. காளையார் கோவிலுக்கு மேற்கிலுள்ள வாணியங்குடி, மூதூர் பிடிபட்டன. செப்டம்பர் 30ல் லெப். கேணல் ஸ்பிரே காளையார்கோவிலை நோக்கிப் போனார். கவனத்தை திசைதிருப்ப அக்னியு சிவகங்கைக்குச் சிறிய படையை அனுப்பிவிட்டு, ஸ்பிரேக்கு உதவ வேறு வழியில் ஷெப்பர்டின் அணியை அனுப்பினார்.

அக்டோபர் 1 ல் அக்னியுவும் இன்னிஸூம் மேற்கிலிருந்து தாக்கினர். மூன்று புறமிருந்தும் காளையார்கோவில் நெருக்கப்பட்டது. காட்டுக்குள்ளிருந்த வீரர்கள் கிடைத்த வழிகளில் தப்பியோடினர். மூன்றாள் உயர மதில்களுடன் கூடிய கம்பீரமான கண்ணாத்தாள் கோவிலினுள் கும்பினிப் படை புகுந்தது.

மருது சகோதரர்கள் சிங்கம்புணரி காடுகளுக்குப் போய்விட்டனர்.

**ஊ**மைத்துரையும், செவத்தையாவும் திண்டுக்கல்லுக்கு தப்பிச்சென்றனர். விருபாஷிக்கு ஊமைத்துரை சென்று சேர்ந்த நாலே நாளில் பொதுமக்களில் 5000 பேர் திரண்டு அவனோடு சேர்ந்தனர். விருபாஷி செல்லும் வழியெல்லாம் தடுப்பரண்களை ஏற்படுத்தினர். விருபாஷியை நோக்கிப்போன மேஜர் ஜோன்ஸ் தோற்றுத் திரும்பினார்.

உடனடியாக இந்த எழுச்சியைத் தடுக்க நினைத்தார் அக்னியு. அக்டோபர் 12ல் இன்னிஸ் தலைமையில் பெரும்படை சென்றது. அவர் அந்நிலப்பரப்பையும் சூழலையும் ஏற்கனவே நன்கறிந்தவர். தடையரண்களை மீறி பிரிட்டிஷார் விருபாஷி பாளையத்தில் நுழைந்தனர்.

முதலில் சந்திரப்பட்டியில் ஊமைத்துரை எதிர்கொண்டு தாக்கினான். தோற்று விருபாஷிக்குப் பின்வாங்கினான். பிரிட்டிஷ் சிறு பீரங்கிகளுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் முன்னே தாக்குப் பிடிக்க முடியாமல் விருபாஷி விழுந்தது.

**ஊ**மைத்துரையின் வீரர்கள் திண்டுக்கல் சமவெளிக்குத் தப்பியோடினர்.

கூளப்ப நாயக்கன் முதலான பாளையக்காரர்கள் அங்கிருந்து தமது ஊர்களுக்குத் திரும்பினர். ஊமைத்துரை அய்யம்பாளையம் மலைமேல் ஏறி ஒளிந்துகொள்ளும் நோக்குடன் தனது நண்பர்களோடு தெற்கே ஓடிக்கொண்டிருந்தான். மேஜர் பர்ரோஸ் ஓடுகிறவர்களைத் தம் குதிரைப்படையுடன் துரத்தினார். சோறுதண்ணீ இல்லாமல் வீரர்கள்

மூன்று நாட்களாக 51 மைல் தூரம் ஓடியிருந்தனர். இன்னும் சற்று தூரத்தில்தான் அந்த மலை இருந்தது. வத்தலக்குண்டை எட்டும் முன்னே பலர் களைத்துச் சுருண்டு விழுந்தனர்.

இவ்வளவு சண்டைகளிலும் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து தப்பிய ஊமைத்துரை இப்போது 65 வீரர்களுடன் சிக்கிவிட்டான்.

சிங்கம்புணரி காடுகளில் பிடிபட்ட மருது சகோதரர்கள் 24.10.1801ல் திருப்பத்தூர் கோட்டையில் கொல்லப்பட்டனர்.

ஊமைத்துரையும் செவத்தையாவும் மற்ற 65 பேரும் 16.11.1801ல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் தலை துண்டிக்கப்பட்டனர். இடிக்கப்பட்ட கோட்டை மேட்டில் ஆமணக்கு விதைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஆமணக்கு விளைச்சல் எவ்வளவு என்ற கணக்கு கும்பினிக்கு வந்து சேர்ந்தது. கணக்கு எழுதி அனுப்பியது எட்டையபுரம். ஆனால் பிரிட்டிஷ் கௌரவத்திற்குப் பங்கம் விளைவித்த பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே கும்பினி ஆவணங்களிலிருந்து அகற்றப்பட்டது.

*

# 34

**பா**ளையக்கார முறையை ஒழித்து ஜமீந்தாரி முறையை 1803 மே மாதம் கும்பினி அரசு அறிமுகப்படுத்தியது. ஆயுதத் தடை ஆணை அமலாக்கியது. யாரும் போர் ஆயுதங்களை, குறிப்பாகத் துப்பாக்கிகளை வைத்திருக்கூடாது என்று உத்தரவு வந்தது. ஒருசில உதவியாளர்களைத் தவிர பாளைய வீரர்கள் எல்லோரும் வேலை இழந்தனர். கம்பளத்துப் பாளையக்காரர்கள் யாரும் விவசாயிகள் இல்லையாததால் அவர்களிடம் நிலங்களும் இல்லை. கோட்டைகள் அனைத்தும் இடிக்கப்பட்டன. கோட்டைக்குள் இருந்த அவர்களது மாளிகையும் ஜக்கம்மா கோவிலும் மாடுகளும் மட்டுமே மிச்சமிருந்தன. பிரிட்டிஷாருக்கு ஆதரவாக இருந்த ஒருசில பாளையங்களுக்கே ஜமீந்தாரி முறை தரப்பட்டது. வரிவசூலுக்குப் பொறுப்பாக நாடெங்கும் ஏராளமானவர்க்கு ஜமீந்தார் பட்டம் கொடுக்கப்பட்டது. கும்பனியை எதிர்த்த பாளையக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

**நி**லக்கோட்டை பாளையத்தின் பதினேழாவது பட்டக்காரன் பெஞ்சவல்லக்க மாக்களவாரி கூளப்ப நாயக்கன் இளைஞன் மட்டு மல்ல, முரடனும் கூட. அவன் ஆயுதங்கள் எதையும் ஒப்படைக் கவில்லை. கலெக்டரிமிருந்து வந்த கேள்விகளுக்குப் பதிலும் தரவில்லை. தனது கோட்டையையும் இடிக்கவில்லை. இடிக்கக் கூடியதல்ல அது. வலுவான கல் கோட்டை. கூளப்ப நாயக்கன் காதல் பாட்டின் கதாநாயகரான அவனது கொள்ளுத் தாத்தா கட்டியது.

1801 ம் ஆண்டுக்கு அவன் வரியாகச் செலுத்த வேண்டிய 5900 வராகன் கட்டப்படாமல் நிலுவையில் இருந்தது. கட்டமுடியாமல் போனதற்குக் காரணம் கலெக்டர் விஞ்ச் 1800ஆம் ஆண்டில் அவனது ஊர்களான பிள்ளையார்நத்தம், பித்தாளைப்பட்டி இரண்டையும் ஜப்தி செய்திருந்தார். வரியைக் குறைக்க வேண்டும் அல்லது ஊர்களைத் திருப்பித் தரவேண்டும் என்று கேட்டிருந்தான். அந்தத் தாவா இன்னும் முடியவில்லை. இந்தச்

சூழ்நிலையில் அவன் பாளையத்தின் ஆயுதங்களை ஒப்படைக்காமல் அனைத்தையும் கட்டி மலை மேல் ஒளித்து வைத்தான். கலெக்டர் ஆர்டிஸ் அவனது கோட்டையை ஜப்தி செய்யுமாறு உத்தரவிட்டார்.

**நா**ளை ஜப்தியாகும் என்று அறிந்த முதல் நாள் இரவு கூளப்பன் தனது மனைவி முத்து வரதம்மாளையும் இரு குழந்தைகளையும் யாரும் அறியாமல் போடிநாயக்கனூருக்கு வண்டியில் அனுப்பி வைத்தான். கோட்டையிருந்த நெருங்கிய உறவுக்காரர்கள் அனை வரும் கன்னிவாடி பாளையத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந் தார்கள். அதற்குமுன் ஜக்கம்மாவுக்கு பூஜை நடந்தது. அவனது கொள்ளுப்பாட்டி வீர லக்கம்மாவுக்கு தொண்ணூறு வயசுக்கு மேல் இருக்கும். கல்கோட்டை கட்டிய கூளப்பரின் பாரியாள். அவ்வாவால் நடக்க முடியாது என்பதால் இவனே வாளை எடுத்துக் கொண்டுபோய் அவ்வாவிடம் ஆசி வாங்கினான். வாளைக் கண்டதும் தொட்டுக் கும்பிட்டுக் கொடுத்தது. ஏதோ சொல்ல முயன்றது. இவனுக்குப் புரியவில்லை. வாயருகே குனிந்து கேட்டான். மறுபடியும் சொன்னது 'துலுக்கவார சம்பேஸி ரா.'

கிழவியையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு கோட்டை ஜனங்கள் கன்னிவாடி நோக்கிப் போனார்கள். அவன் ஆணையூர் கள்ள நாட்டில் ஆள் திரட்டக் குதிரையில் கிளம்பிப் போனான். தாதனூர்க்காரர்கள் வெள்ளைக்காரன் மேல் கடும் கோபத்தில் இருந்தார்கள். ஊமைத்துரை, மருது அண்ணந்தம்பிகள் வெள்ளைக் காரனை எதிர்த்துச் சண்டை செய்து பிறகு பிடிபட்டு கொல்லப் பட்ட காலத்தில் மதுரையில் இருந்த தாதனூர் காவல்காரர்கள் நாற்பது பேரையும் ஆயுதம் வைத்திருந்த குற்றத்திற்காகப் பிடித்திருக்கிறார்கள். 'மதுரை ராணி எங்களுக்குத் தந்த உரிமை இது. அதனால வேல்கம்புகளைத் தரமாட்டோம்' என்று முரண்டு பிடித்திருக்கிறார்கள். வெள்ளைக்காரன் பிடித்து அடித்து எங்கோ கொண்டு போய்விட்டான். பிறகு அந்த ஆட்களையே கண்ணில் காண முடியவில்லை.

தாதனூர் மட்டுமில்லாமல் கிழக்குயில்குடி, மேலக்குயில்குடி, உரப்பனூர், ஆணையூர் ஆகிய ஊர்களிலிருந்தும் வெள்ளைக் காரனோடு சண்டை போட ஆட்கள் தயாராக இருந்தார்கள்.

மறுநாள் மாலையே கும்பினி சிப்பாய்கள் நூறு பேர் வரைக்கும் வந்து கோட்டைத் கதவின் பூட்டை உடைத்து உள்ளே போய். இருந்து பொங்கித் தின்று கொண்டிருப்பதாக மூன்றாம் நாள் மதியம் அமணமலையில் இருந்த கூளப்பனுக்குத் தகவல் வந்தது.

அதற்குப் பிறகு இரண்டாம் நாள் இரவில் முந்நூறு கள்ளர்களைத் திரட்டிக்கொண்டு வளரிகள் வேல்கம்புகளோடு நிலக்கோட்டை நோக்கிப் போனான். அவன் தனது கோட்டையை நெருங்கு முன்னரே உள்ளேயிருந்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு வந்தது. கிட்டே போகவே முடியவில்லை. காத்திருந்து பார்த்தார்கள். துப்பாக்கிகள் ஓயவேவில்லை. விடிவெள்ளி முளைத்தபோது கள்ளநாட்டுக்குத் திரும்பிவிட்டார்கள்.

கூளப்ப நாயக்கன் தலையைக் கொண்டுவருகிறவனுக்கு 1000 வராகன் பரிசு என்றும் அவன் மனைவி மக்களைப் பிடித்துக் கொடுக்கிறவனுக்கு 50 வராகன் பரிசு என்றும் கலெக்டர் ஆர்டிஸ் அறிவித்தார்.

அமண மலைக் குகையிலேயே கூளப்பன் ஒளிந்திருந்தான். தாதனூரிலிருந்து கஞ்சி வந்துகொண்டிருந்தது.

**ப**த்து நாட்களுக்குப் பிறகு கேப்டன் வில்பிரட் நூறு குதிரை வீரர்களோடு போடி போய்ச்சேர்ந்தான். எவனோ அந்த ஐம்பது வராகனுக்கும் ஆசைப்பட்டிருந்தான்!

திருமலை போடி ராஜு நாயக்கர் வெள்ளைக்காரக் கேப்டனைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. எதிர்பார்த்ததுதான். முடிந்தவரை சமாளிக்கலாம் என்று பேசிப் பார்த்தார். கேப்டன் மசியவில்லை. அரண்மனையைச் சோதனை இடவேண்டும் என்றான். எங்கும் அவளைக் காணோம். பூஜை அறை பூட்டிக்கிடந்தது. அந்நியர்கள் உள்ளே போகமுடியாது என்று சொல்லிப் பார்த்தார்கள். திறந்தே ஆக வேண்டும் என்று கேப்டன் சொல்லிவிட்டான்.

திறந்தார்கள். உருவியவாளுடன் நின்றிருந்தாள். ‘வெளியே வா’ என்று மறுபடி மறுபடி கேப்டன் கத்தினான்.

வேகமாக வெளியேறிவள் அவனை வெட்ட வாளை வீசினாள். விலகிக்கொண்டான். மறுபடி வீசினாள். ‘வேண்டாம் செல்லி...’ என்று ராஜுநாயக்கர் கத்தியவாறு வந்து அவளைப் பிடித்தார். ஒருகணம் யோசித்தவள் தன் வயிற்றில் பாய்ச்சுவதற்காக வாளைத் தன்னை நோக்கித் திருப்பினாள். கையை அப்படியே பிடித்துக் கொண்டார். கேப்டன் வந்து அவன் கையிலிருந்து வாளைப் பிடுங்கினான். ‘பிள்ளையைத் தொடாதே’ என்று ராஜுநாயக்கர் அவனைத் திட்டினார்.

உத்தப்ப நாயக்கனூர்க்காரி முத்துவரதம்மா சீதனமாகக் கொண்டு வந்த ‘சந்திர ஹாசத்தைத் தனக்குப்பாதுகாப்புக்காக கையோடு இங்கு எடுத்து வந்திருந்தாள். ஆயுதத் தடை ஆணையின் கீழ் அதைப் பறிமுதல் செய்வதாகச் சொன்னான் வில்பிரட்.

**ப**ஞ்சப்பட்டி சேர்வைக்காரன் அமணமலைக்கு ஓடிவந்தான். ‘உன் சமுசாரத்தைப் பிடிச்சிட்டுப் போயிட்டான். நாடெல்லாம் வெள்ளக்காரன் ராச்சியமாப் போயிருச்சி. இனி நீ நிக்கக் கூடாது. துரை காலில் விழுந்து, உன் சமுசாரத்தைக் கூட்டிட்டு வந்து மரியாதைக்கு பிழைக்கிற வழியப் பாரு.’

மறுநாள் காலை மங்கம்மா மாளிகையில் இருந்து தனது அலுவலகத்துக்கு கலெக்டர் ஆர்டிஸ் கோச்சில் வந்து இறங்கியபோது ஒரு குடு குடுப்பைக்காரன் அவரை நெருங்கி வந்து வணங்கினான்.

‘என்ன? யார் நீ?’

‘கூளப்ப நாயக்கன்.’

ஆச்சரியத்தில் உறைந்து அப்படியே சில கணங்கள் நின்றுவிட்டார் ஆர்டிஸ்.

‘தினமும் வந்து அந்த வேப்ப மரத்தடியில் நிற்கவேண்டும்‘ என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

கூளப்பன் அவனுக்கு வேண்டியவரான பூமாடி ரங்கப்ப செட்டியார்

வீட்டில் குளித்து சாப்பிட்டு உடை மாற்றிக்கொண்டு வந்தான். வேம்பின் நிழலில் நின்றிருந்தான். மாலை அலுவலகம் மூடும் நேரத்தில் வாயில் காவலன் போய்விட்டு காலையில் வருமாறு சொன்னான்.

மூன்று நாட்களாக நின்றுகொண்டே இருந்தான். ஆர்டிஸ் வரும்போதும் போகும்போதும் இவன் பக்கம் திரும்பவேயில்லை.

ஒரு கருடன் மங்கம்மா மாளிகையின் வடக்கு ஓர மேல்மாடக் கூம்பில் வந்து அமரும். கண்டவுடன் கும்பிட்டு விடுவான். வேறெங்கும் அமராது. வழக்கம் போல் அதே இடம்தான். வெகுநேரம் அங்கேயே இருக்கும். மைய மாடத்தின் மேல் வெள்ளைக்காரன் கொடி பறக்கிறது. சிகப்பில் ஊதாப் பட்டை போட்டது.

கூளப்ப நாயக்கன் வமிசத்துக்கு வந்த கதியை நினைத்து நினைத்து நொந்து போனான்.

விசுவாத ராஜா பாளையம் பார்க்க வந்தபோது, கொஞ்ச காலத்திற்குள்ளேயே மூன்று குளங்களை வெட்டி ஒன்பது ஊர்களை உண்டாக்கியிருந்ததைக் கண்டு, கெட்டிக்காரன் என்று மெச்சி பரிசுகள் கொடுத்தாராம். அதிலிருந்து ஒன்பதூர் கூளப்ப நாயக்கன் என்று பெயராயிற்றாம். ஏன், பாம்பனுக்கு கடல் தாண்டிப் போய் சேதுபதியை ஜெயித்து வந்ததற்காக ‘தண்டு கூளப்ப நாயக்கன்’ என்ற பட்டத்தை திருமலை நாயக்கர் கொடுக்கவில்லையா? அவர்கள் போகாத சண்டை எது? பாளையத்தைப் பற்றி யாராவது ஒரு குறை சொல்லியிருப்பார்களா? பிறகும் பதினோரு பாசனக் குளங்கள் வெட்டியிருக்கிறார்கள். வேறு எந்தப் பாளையக்காரன் இத்தனை கோயில்கள் கட்டினான்? நரசிங்கப்பெருமாள் உபய நாச்சியாருக்குக் கட்டியதுதான் ஆதிக் கோவிலாம். அப்புறம் ஐந்து கோயில்கள். மானியம் உண்டு. பூஜை வேளை தவறுவதில்லை. முப்பத்தெட்டு ஊர் சனங்களும் என்ன குறை கண்டார்கள்? இப்போது இரண்டு மூன்று தலைமுறையா கத்தான் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வந்த படைகளிடம் சிக்கி அல்லாடிப் போய்விட்டார்கள். தாத்தா சொல்வார் - குதிரைகள் போனவுடனேயே பாளையக்காரனுக்குப் பாதி உயிர் போய்விட்டது. முன்பு இருந்த குதிரைகளை ஆர்க்காட்டுக்காரனும் மைசூர்காரனும் வந்து பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்களாம். அப்புறம் புதிதாக வாங்கவும் இல்லை. வழியும் இல்லை. தேவையும் இல்லாமல் போய்விட்டது. ஊமத்துரைக்கு விருபாச்சியில் கூடிய கூட்டத்தைக் கண்டு இவன் துள்ளிக் குதித்தான். வெள்ளைக்காரன் ஒழிந்தான்! கடைசியில் இடி விழுந்தது.

நாலாம் நாள் ஒரு கல்லைத் தூக்கி வந்து மரத்தடியில் போட்டு உட்கார்ந்தான். ஒன்பதாம் நாள், மனைவி மக்களைப் பார்க்க வேண்டும் என்று காவலனிடம் சொன்னான். வெகுநேரம் கழித்து அவனது சின்ன மகனை மட்டும் எங்கிருந்தோ தூக்கிக் கொண்டுவந்து காட்டினார்கள். திரும்ப வாங்கியபோது இவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு போகமாட்டேன் என்று அழுது அடம் பிடித்தாள்.

‘சொல்வதை எல்லாம் கேக்கிறேன். பொண்டாட்டி பிள்ளைகளை என்னிடம் விட்டுவிடுங்கள்’ என்று அப்போதே சொல்லிவிட்டான்.

மறுநாள் கேப்டன் வில்பிரட்டின் வீரர்களுடன் போய் மலையில்

ஒளித்து வைத்திருந்த ஆயுதங்களைக் காட்டினான். மூன்று வண்டிகளில் ஏற்றிக்கொண்டு மதுரை திரும்பினார்கள். அந்த ஆயுதங்களுக்கு மதிப்பு 131 வராகன் என்று குறிக்கப்பட்டது.

மறுநாள் ஆர்டிஸ் அவனை அழைத்தார். புதிய சட்டப்படி நிலக்கோட்டை பாளையம் கும்பினிக்குச் சொந்தமாகி விட்டதென்றும், அவன் மேல் இரக்கப்பட்டு கோட்டையையும் அரண்மனையையும் அவனுக்கே கொடுத்து விடுவதாகவும் சொன்னார். இனி அவனுக்கு மாதந்தோறும் 50 வராகன் பென்சனும் உண்டு. மகளைத் தூக்கிக்கொண்டு மனைவி மகனோடு அவன் மங்கம்மா மாளிகையின் படியிறங்கி வெளியேறி நடந்து போனான்.

*

# 35

**கொல்லவாருகளைப் பற்றி பாம்பே பிரஸிடென்ஸியின் அகமது நகர்** கலெக்டர், பெல்லாரி, கர்நூல், அனந்தபூர் கலெக்டர்கள் திரட்டிய தகவல்கள், எழுதிய கருத்துகளின் அடிப்படையில் மதுரை கலெக்டர் தமது ஆய்வுகளையும் சேர்த்து 1810 நவம்பர் 17ல் மதராஸ் பிரஸிடன்ஸியின் கவர்னருக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். அதன் கடைசி அத்தியாயம் இப்படி முடிந்தது:

இவர்கள் அளவுக்குக் குலமரபுகளைப் பேணும் பழமைவாதிகள் தென்னிந்தியாவில் வேறு எவரும் இல்லை. குலக்கட்டுப்பாடுகளை யாருமே மீறுவதில்லை.

பெண்ணுக்கு குலத்துக்கு வெளியே எந்தத் தொடர்பும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் உறவுக்காரர்களுடன் ஒழுக்கவிதிகள் பொருட்டில்லை. குடும்ப அமைப்புக்குள் பெண்ணே அதிகாரம் செலுத்துகிறவளாக இருக்கிறாள். உடன்கட்டை ஏறும் பழக்கம் அருகி விட்டாலும் பல தார மணமுறை இயல்பாக இன்னும் உள்ளது.

தெற்கே முகம்மதியர் ஆதிக்கம் பரவுவதை நான்கு நூற்றாண்டுகளாக எதிர்த்துத் தடுத்து நிறுத்தியவர்கள் இவர்கள்தான். தொடர்ந்து போரில் ஈடுபட்டிருந்தமைதான் இவர்களது சமூக வழக்கங்களுக்கு மூலகாரணம். தென்னிந்திய வரலாற்றில் இவர்கள் அளவுக்குப் போர்களால் மடிந்த குலம் வேறில்லை. தக்காண பீடபூமி எங்கும் பிரதான குடியினராய்ப் பெருகி வாழ்ந்த இவர்கள் இதனாலேயே இன்று வெகுவாகச் சுருங்கிவிட்டனர்.

உலகின் பிரபலமான பிற போர்க்குடியினரான தார்த்தாரியர்கள், துருக்கியர்களைப் போல் அன்றி இவர்கள் பொதுவாக அமைதியான இயல்பினராகவும் தந்திரங்களில் நாட்டமில்லாலும் இருப்பது ஆச்சரியமூட்டுவது. ராயலசீமையில் 17ஆம் நூற்றாண்டில் முகம்மதியர் மேலாதிக்கம் பெற்றதுமே இவர்கள் போர்த் தொழிலை விட்டு மேய்ச்சலுக்குத் திரும்பிவிட்டார்கள்.

மதுரை நாயக்க அரசின் முதுகெலும்பாய் நின்ற பாளையக்காரர்களின் இன்றைய நிலை வருந்தத்தக்கது. பத்தே ஆண்டுகளில் சமூகத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து வெகுவாக விலகி ஒதுங்கிவிட்டனர். பெரும்பாலானவர்கள் உணவுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இனி இவர்களிடமிருந்து நமது ஆட்சிக்கு எவ்வித எதிர்ப்பும் கிளம்ப வாய்ப்பில்லை.

*

# 36

**1816 வருஷம் சூன் மீ 16.**

மகாறாச ஸ்ரீ கர்னல் காலின் மக்கிஞ்சி சாயபு, சர்வியர் ஜனறல் இண்டியா துரை அவர்கள் உசூறுக்கு.

கோயம்புத்தூர் ஜில்லாவை சேர்ந்த திண்டிக்கல் வகையறா விருபாஷி பாளையப்பட்டு ஜப்தி ஜமீன் திருமலை பொன்னப்ப நாயக்கன் மிகவும் வணக்கத்துடனே எழுதிக் கொடுத்த மகஜர் என்னவென்றால்.

இருபதாவது பட்டக்காரராகிய என் தந்தையார் திருமலைகுப்பள நாயக்கர் 30000 பொன் பெறுமான விருபாஷி சீமையை அனுபவிச்சுக் கொண்டு வாற நாளையில் அலெக்சாந்தற் குலோட்துரை அவர்கள் வந்த சமயத்திலே விருபாஷி வகையிருப்பு குடக்கூலி வருஷம் 1க்கு 3250 வராகன் நேமிச்சி சன்னது கொடுத்தார். மேஸ்தற் றங்கன்துரை, மேஸ்தற் உஞ்சி துரை நாளிலும் அப்படியே செலுத்திக்கொண்டு வந்தார்கள்.

என் தகப்பனார் கும்பினியார் உத்திரவுக்கு விரோதியாக நடந்தார் என்ங்குற ஆயாசத்துனாலே அவரையும் என் தமையன் முத்துவேல் நாயக்கரையும் துற்மதி வருஷம் கார்த்திகை மாதம் பிடிச்சார்கள்.

மகாராஜ ஸ்ரீ கும்பனியார் கட்டளையிட்டபடி விருபாஷியில் தூக்கில் போட்டு அவர்கள் தெய்வகதியானார்கள்.

என்னை திண்டுக்கல் மலை மேலே என் தாயார் முதலான 22 ஜனத்தோட பாராவில் வைத்தார்கள். அப்போல் எனக்கு 16 வயசு ஆகையினாலேயும் வலதுகால் காயம் ஆனதுனாலேயும் ஒரு சங்கதியும் அறியாதவனாயிருந்தேன். என்னோடு பாராவில் இருந்தவர்கள் என் தாயார் பாப்பாயி அம்மாள் முதலாக 10 பெண்கள். என் தமையன் மகள்கள் பொன்னம்மாள், வெள்ளையம்மாள் 2 பேர். வேலைக்காரிகள் 2 பேர். கைதில் அகப்பட்டு பாராவில் இருந்த வயசாளிகள் 2 பேர் பல வியாதிகளால் மரணமடைந்து போனார்கள்.

மேஸ்தற் ஆற்டிசு துரை அவர்கள் எங்களை திண்டுக்கல் மலைவிட்டு யெறக்கி பேட்டையில் கைதுலே வய்க்கும்படிக்கு உத்தரவாச்சுது. அந்நாளில் வெங்கலப் பாத்திரம் உருப்படி 11 மாத்ரம் என்னிடத்தில் சேர்த்து றசீது வாங்கிக் கொண்டார்கள். இதின் முன் போனது போக, அகப்பட்ட நகைகளையெல்லாம் இனிமேல் உனக்கு சேரப் பண்ணலாகுமென்று ஆற்டிசு துரை அவர்கள் கட்டளையிட்டார்கள்.

என் தமையன் பெண்களாகிய வெள்ளையம்மாள் பொன்னம்மாள் இருவருக்கும் கும்பினியார் கடாஷம் வைத்து பாராவிலிருந்து விட்டு கலியாணத்துக்கு 200 வராகன் குடுத்து உத்தரவு வர, நிறைவேறி அவர்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

என் பெரிய தாயார் ராமாஞ்சி அம்மாள் முதலாய மீத சனமெல்லாம் கைதுலேயிருந்து வரகெனம் பொறிந்திய கும்பினியார் கடாஷம் வரும்படி யிஷ்ட தெய்வத்தை பிறார்த்திச்சுக் கொண்டு இருந்தோம்.

1815 வருஷம் சபிடம்பற் மாதத்தில் மதுரை ஜில்லா ஜட்ஜி மகாறாச ஸ்ரீ உல்லிய மஹாலி ஹசெஷ்ஷ் துரை அவர்கள் என்னை வறவழைத்து உனக்கு பாரா விடுதலை ஆச்சியென்றும், இண்ணு முதல் கைது இல்லையென்றும், இந்த அக்டோபர் முதல் மாசம் 30 வராகன் சம்பளம் யென்றும், நீயிந்தச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு திண்டுக்கல் நகறத்திலேயே இருக்கக் கடவது யென்றும் கட்டளையாச்சிது.

எனக்கு சிறுப்பத்திலியே கலியாணமாகி என் பெண்சாதி 1805 வருஷம் டிசம்பற் மாதம் 13 தேதி ராத்திரி 4 மணிக்கு ஆண் பிள்ளை பெத்து, னாளது மாதம் 14 தேதி பகல் 7 மணிக்கி மரணடைந்து போனாள்.

என் தகப்பனாற், தமையனாற், தாயாற், மதினிமாற், பெண்சாதி முதலாகியெட்டுப் பேருக்கு கற்மாதிகள் நடக்கயில்லை. எங்கள் வமுச வழக்கம் அனுசறிச்சி நடக்க வேண்டியதுகளுக்கு நான் மிகவும் ஏழ்மையாயிருக்கிறேன்.

சம்பளம் 30 வராகன் செலவுகளுக்கே தட்டிக்கொண்டு இருக்கிறது. கற்மாதி காரியங்களுக்கு 100 வராகனும் என் கலியாணத்துக்கு 300 வராகனும் தேவைப்படுகிறதுக்கு சங்கதிகள் இல்லாமல் யிருக்குறது.

நான் பட்டக்காரனாகையலே என் ஜாதி வழக்கம் கல்யாணம் இல்லாமலிருக்கலாகாது. பெண்ணுள்ள வீட்டுக்கு நாங்கள் போறதேயில்லாமல் புள்ளையிடத்துக்கு பொண்ணை கூட்டிக்கொண்டு வந்து கலியாணம் பண்ணுகிற வழக்கமில்லை.

என் பிள்ளையாகிய ஒன்பதரை வயசு ஆண் பிள்ளைக்கு நாளது வரைக்கும் பேர் வைக்குகயும் தலை மயிர் வாங்குகையும் இல்லை.

மேஸ்தற் ஆற்டிசு துரை அவர்கள் முன்னாளில் கட்டளைப்படி எங்கள் நகை நட்டுகளைத் திரும்பித் தர உத்திரவு பண்ண வேணும்.

பிள்ளைக்கு நாமகரணம் சாத்துறதுக்கு எங்கள் சீமையான விருபாஷி பெரிய கோட்டையில் எங்கள் குலதெய்வம் லக்கம்மன் சன்னதிக்குப் போக வேண்டியதுக்கு, திண்டுக்கல் நகறத்தை விட்டுப் போவதற்கான சர்க்கார் உத்தரிவு ஏற்கக் காத்திருக்கிறேன்.

(ஒப்பம்) திருமலை பொன்னப்ப நாயக்கன்.

*

# இ
# யூனியன் ஜாக்

# 37

**மா**யாண்டிக்கு **இளவட்ட முறுக்கு உச்சத்தில் இருந்தது. நான்கு ஐந்து** பேர்தான் மாயாண்டியோட கொத்து. அந்தக் கொத்து களவுக்குப் போனால் அது ராஜகளவுதான். பெருங்கொண்ட மாளிகையின் கற்கள்தான் அவர்கள் கன்னம் போடும் தகுதியைப்பெறும். கண் கட்டாத பெரும் வித்தைக்காரனின் செயல் என அது நடக்கும். ஒரு களவு முடிந்தால்தான் ஊர் வந்து சேருவார்கள். ஆனால் அந்தக் களவு முடிய மூன்று நான்கு மாதம் கூட ஆகும். சுத்துப்பட்டியில் களவில் மிகத் தேர்ந்தவர்கள் எல்லாம் மாயாண்டி கொத்தோடு ஒரு முறையாவது களவுக்குப்போய் வர ஆசைப்படுவார்கள். கன்றைப் பிடித்துக் கட்டிவிட்டு பால் கறப்பதைப்போல ஊன்றி உள்ள கன்னக்கோலில் இரவைப் பிடித்துக் கட்டிவிட்டு கறந்து வரப்படும் களவு அது. ராஜகளவு என்றால் ராஜகளவுதான். அதற்குப் பெரும் காத்திருப்பு தேவை. நாகம் அடைகாப்பதைப் போல அடைகாத்துக் கிடக்க வேண்டும். துப்பு சொல்கிறவனிடமிருந்து சமிக்ஞை வந்தால் அந்தக் கணமே களவுக்கு முயலவேண்டும். சமிக்ஞை வந்த நேரத்திற்கும் பொருள் எடுக்கப்பட்ட நேரத்திற்கும் இடையில் இருக்கும் காலத்தை வைத்துத்தான் அந்தக் களவு மதிப்பிடப்படுகிறது. ‘இது ராஜகளவு’ என்று சொல்வது எடுக்கப்பட்ட பொருளை வைத்து அல்ல, எடுத்த முறையையும் காலத்தையும் வைத்துத்தான் சொல்லப்படுகிறது. மாயாண்டி கொத்தின் செய்கை முழுவதும் ராஜகளவுதான். சாதாரண களவு ஒன்றில் பெரும்பொருள் கிடைத்தால் மனம் ஒப்பாமல் அப்படியே விட்டுவிட்டு வருவது அந்தக் கொத்தின் வழக்கம். வடவேங்கடம் வரை இவர்கள் பூமியை அளந்து வைத்திருந்தனர். நகரத்தின் வெளிப்புறக் காடுகளில் மாதக்கணக்கில் காத்திருக்கிற இவர்கள் துப்புக் கிடைத்ததும் ஒரு பெருங்கயிறு ஒன்றைப் பிடித்து இறங்குவதைப்போல இறங்குகின்றனர். காட்டில் பதுங்கியிருந்த இடத்திற்கும் பூட்டப்பட்ட பெட்டியில் இருக்கும் பொருளுக்கும் முடிச்சிடப்பட்ட கயிறு ஒன்றைத் துப்பு சொல்கிறவன் தூக்கியெறிந்துவிட்டுப் போகிறான். கயிறு அதிகம் இழுபடாமலும் அறுந்து போகாமலும் அதன் வழியே போய்வரவேண்டும். பெட்டியைத் திறந்து

பொருளை எடுத்தபின் முடிச்சை அவிழ்த்து கயிற்றைச் சுருட்டியபடியே கயிற்றின் மேல் வரவேண்டும். துப்பு சொல்கிறவனிடம் கயிற்றை முறையாக ஒப்படைக்காவிட்டால் மறு கயிறு வராது.

களவு ஒரு விசித்திர செய்கை. பறவைக்கும் மீனுக்கும் மட்டுமே தெரிந்த தடமற்ற பயணத்தின் ரகசிய நெடுவழி.

ராஜகளவுக்குப் பெயர் பெற்ற மாயாண்டி கொத்துக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. வடக்கே தெலுங்கு பேசும் ஊர் ஒன்றில் மிக அபூர்வமான களவு ஒன்றை இரண்டு தினங்களுக்கு முன்பு வந்த தாதனூர்க்காரன் ஒருவன் நிகழ்த்திவிட்டுப் போனதாகத் துப்பாளி சொன்னான். தாதனூரிலிருந்து இவ்வளவு தொலைவில் வந்து தங்களுக்குத் தெரியாமல் கன்னம் போடுகிறவன் யார்? அதுவும் ஒருவனாக வந்து இவ்வளவு கெட்டிக்காரத்தனமாக செய்கை செய்திருக்கிறானே என்று ஆச்சரியப்பட்டவாறு அவர்கள் சென்றனர். ஆறு மாதம் கழித்து மீண்டும் இதே போன்றதொரு செய்தியை வேறு ஒரு ஊரிலும் துப்பாளி ஒருவன் சொன்னான். மாயாண்டி கொத்துக்கு இப்பொழுது பொருளைத் தேடுவதைவிட அவனைத் தேடுவதுதான் முக்கிய வேலையாக மாறியது. தாதனூர் முழுக்க ஆச்சரியத்தோடு இருந்தது. துப்பாளி சொல்லுகிற பொருளை எடுக்கும் முன் துப்பாளிமிடருந்து தாதனூரை எடுத்துச்செல்கிற அந்த ஒருவன் யார் என்பது புதிராகவே இருந்தது. களவுக்குப் போகிற எல்லோரும் அந்த ஒருவனைத் தேடியபடி இருந்தனர். அவனோ தாதனூர்க் காரர்களிடமிருந்து தாதனூரைத் திருடி முன்னால் போய்க்கொண்டேயிருந்தான். ஊர் உலகமெல்லாம் திருடச் செல்பவர்கள் தங்களது ஊரைத் திருடிச் செல்பவனைப் பிடிக்கமுடியாமல் அலைந்து திரிந்தனர். களவு ஒரு விசித்திர நிலையை அடைந்திருந்தது. தனக்குத்தானே அது களவாடி உள்ளுக்குள்ளேயே சுருண்டுகொண்டிருந்தது. அவனது செய்கை மிகுந்த முதிர்ச்சியைக் காட்டியது. மாயாண்டி கொத்தைப்போல அவனும் குறியிடப்பட்ட கல்லை உருவாமல் மேக்கல்லைத்தான் உருவினான். கல் உருவப்பட்ட பெரும்பொந்தில் கை வைத்துப்பார்த்தால் காரைகள் மேடுபள்ளங்கள் இல்லாமல் ரம்பம் வைத்து அறுக்கப்பட்டதைப்போல இருந்தது. பெரும் அகலத்திற்கு காரையை நோண்டி அதிக நேரம் எடுக்காமல் எறும்பு துளையிடுகிற அளவே கன்னம் போட்டுக் காரைகளை உதிர்த்தான். அவன் செய்கை நடந்த மூன்று இடங்களை மாயாண்டி போய்ப்பார்த்தான். ‘இவன் பெரும் திறமைசாலியாக இருக்கிறான். ஆனால் அவனது பதற்றம் களவை நிபுணத்துவத்திற்கு கொண்டுவர விடமால் இருக்கிறது’ என்று கணித்தான்.

அவன் விரைவில் அகப்பட ஒரு வழியிருக்கிறது என யோசித்து இனிமேல் நான் தனியாகத்தான் போகப்போகிறேன் என்று மாயாண்டி தெரிவித்தான். ‘தனிச்சு போகக்கூடாதுன்னு, பெரியாத்தா வாக்குப்பா’ என்று மற்றவர்கள் சொல்ல’ அதுதான் கருப்பு இருக்கான்ல! அவனோட சேந்துதான் போப்போறேன்’ என்று சொல்லி கொத்திலிருந்து மாயாண்டி பிரிந்துவிட்டான்.

சில மாதங்களுக்குப்பின் தேவிபட்டினத்தில் ஒரு துப்பாளியைப் பார்த்தபொழுது ‘உங்க ஊர்க்காரன் ஒருத்தன்தான் ஏற்கனவே கேட்டுட்டான்பா’ என்று மட்டும் சொல்லிவிட்டுப் போய்விட்டான். மாயாண்டி எதிர்பார்த்து வந்த துப்பு கிடைத்துவிட்டது. அதன்பின்

தேவிபட்டினம் ஊர் முழுவதையும் ஊரைச் சுற்றியுள்ள மரங்கள் முழுவதையும் அறிந்தான். ஆந்தைகள் தங்கும் மூன்று மரங்களைக் கொண்ட ஊர் அது என்று கணக்கிட்டு இரவில் ஆந்தைகள் வழியிலான ஒரு வரைபடத்தை உருவாக்கிக் கொண்டான். துப்பாளி துப்பு சொல்லுகிறவரை அந்த ஒருவன் காட்டுக்குள் படுத்துத் தொலைக்காமல் சதா அலைந்து கொண்டேயிருந்தான். மேற்கே காட்டுக்குள் ஆந்தைகளின் குரலைக் கேட்டுக்கேட்டு மாயாண்டிக்கு சிரிப்பு வந்துகொண்டே இருந்தது. தனியாளாகக் களவுக்கு வருகிற எவனுக்கும் இருக்கிற பதற்றம் இது என்று மாயாண்டிக்குத் தெரியும். அது மட்டுமல்ல, ‘இவ்வளவு எளவட்ட பையனா இருக்கானே’ என்ற ஆச்சரியமும் அவனைப் பற்றி வந்துகொண்டேயிருந்தது.

அமாவாசைக்கு முதல்நாள் நள்ளிரவுக்கு கொஞ்சம் முன்னால் ஆந்தைகளின் குரல்களின் வழியே மேலத்தெரு முக்கில் இருக்கும் பெரும் அரசமரத்திற்கு மாயாண்டி வந்து சேர்ந்தான். மூன்றாவது வீட்டின் அடிவாரக் கல் ஒன்றின் காரையை அவன் நோண்டிக்கொண்டிருந்தான். தெரு மூலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து வந்த மாயாண்டி அவனுக்குப் பின்னால் சில அடி தொலைவில் வந்து குத்த வைத்து உட்கார்ந்தான். பெரும் பொந்தொன்றில் இருள் அப்பிக் கிடப்பதைப்போல அவன் மூலையோடு மூலையாக ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருந்தான். ஆந்தை அரசமரத்திலிருந்து விடாமல் அலறிக்கொண்டிருந்தது. அவன் காரையை நோண்டுவதை நிறுத்திவிட்டு ஓசையைக் கணித்தபடி இருந்தான். எங்கும் பூமி மிதிபடவில்லை. காற்றுக்கு உதிர்ந்த அரசமர இலையொன்று இருவரையும் பார்த்தபடி இடையிலே கடந்தது. மரங்களின் மேல் மட்டும் அசைவுகள் இருந்தன. தன்னைப் பார்த்துதான் ஆந்தை கத்துகிறது என முடிவு செய்து வேகமாக காரையை நோண்டி முடித்து கல்லை நெஞ்சோடு தாங்கியபடி உருவிக் கீழே இறக்கினான். ஒருவனாக இருந்து நெஞ்சோடு வாங்குகிறபொழுது எதிர்திசை தான் கீழே ஊண்டும். ஆனால் அந்த திசையில் கல் மேடு பள்ளமாக இருக்க வாய்ப்பிருக்கும். அதனால் ஊண்டப்பட்ட கல் சாயவும் செய்யலாம். இவன் என்ன செய்யப் போகிறான் என யோசித்தபடி மாயாண்டி பார்த்துக்கொண்டிருந்தான். நெஞ்சோடு வாங்கி மண்டியிட்டு உட்கார்ந்து தொடைகளின் வழியே சாரத்திலிருந்து சிலையை இறக்குவதைப்போல மெல்ல இறக்கித் தரையிலே படுக்கவைத்தான். சாய்த்துவைக்கப்பட்டிருந்த கம்பை எடுத்து அதன் முனையில் சாக்கை தலைப்பாகை போலச் சுற்றினான். பின்னர் கன்னமிட்ட ஓட்டைக்குள் மொண்டிக்கம்பை உள்ளே விட்டான். இரண்டு மூன்று முறை சிறிய இடைவெளியுடன் அதைச் செய்தான். கன்னம் போடுகிற தாதனூர்க்காரர்களின் வழக்கமான செய்கை இது. அதைத்தான் அவனும் செய்தான். பின்னர் புற்றுக்குள் இறங்கி நாகம் போவதைப்போல உள்ளே போனான்.

பெரிய விசாலாமான அறை அது. நடுவில் நான்கு உருளை மரத்தூண்கள். ஒருபுறம் சாக்குமூடைகள் அடுக்கிக் கிடந்தன. இடதுபுறம் இருந்த அறைக்குள் சிறிய விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. திரியிலிருந்து சிறுத்துச் சிந்திய ஒளி வாசனையைப் போல கண்ணுக்குத் தெரியாமல் அந்த அறையின் இருளுக்குள் மிதந்தது. திருகிக் கிளைவிட்ட மான்கொம்புகள் சுவரின் மேல் இருந்தன. பூட்டிய ஜன்னல் திட்டின்மேல் நிறைய சாமான்கள். பெரிய மரப்பெட்டிகள் இரண்டு சனிமூலையில்

இருந்தன. சுவரில் பூசிய காரையில் இருந்த இளமஞ்சள் நிறம் அறை முழுவதும் பரந்திருந்தது. இருளில் தரையின் வலதுபுறம் வரிசையாக ஆட்கள் படுத்துக்கிடந்தனர். பெண்களும் அதற்கு எதிர்த்திசையிலே படுத்திருந்தனர். நடு மையத்தில் படுத்திருந்த ஒருவனின் குறட்டைச் சத்தம் அறைமுழுவதும் வியாபித்திருந்தது. உள்ளே வந்தவன் வீட்டின் முன்புறக் கதவின் தாழ்ப்பாளை ஓசையின்றித் திறந்துவைத்துவிட்டு மெல்ல நடந்து சனிமூலையில் இருந்த மரப்பெட்டியின் ஓரம் உட்கார்ந்தான். பின்னர் எதிர்க் குறட்டை ஒன்றை விட்டுப்பார்த்தான். குறட்டையின் சத்தத்தை வைத்து அவர்கள் தூக்கத்தின் ஆழத்தைப் புரிந்துகொண்டான். வரிசையாகப் படுத்திருப்பவர்களைக் கடந்துபோய்தான் பெட்டியிருக்கிற உள் அறைக்குள் போக முடியும். உள் இருட்டு பிடிபட்டவுடன் மெல்ல எழுந்தான். அடுக்கப்பட்ட சாக்கு மூடைகளின் மேலேயிருந்து பூனை ஒன்று இவனைப் பார்த்தபடி 'மிய்ய்யா...வ்' என்ற குரலின் வழியே கீழிறங்கியது. அதன் கண்களின் ஒளிதான் அதனுடைய சாபம். இருளின் பெருவழியில் நிரந்தரமாக அதைக் காட்டிக்கொடுத்தபடியே அதனுடைய கண்கள் இருக்கின்றன. ஆனால் அது தன்னுடைய சகல தந்திரங்களையும் பாதங்களில் வைத்திருக்கிறது. பாதடியின் வட்ட இலைகள் காற்றில் தடமற்றுப் பறந்து மறையும். அடுக்கப்பட்ட மூடைகளின் வழியே அது இறங்குவதைப் பார்த்தபடி இருந்த அவன் பின்னர் எழுந்து ஒவ்வொருவராகத் தாண்டி உள் அறையை நோக்கிப் போக ஆரம்பித்தான். வெயில் காலத்தின் புழுக்கம் இருந்ததால் சிலர் அசைந்துகொடுத்தபடியே படுத்துக்கிடந்தனர். வரிசையாகக் கிடந்த மூன்று பேரைத் தாண்டி இடப்புறம் கொஞ்சம் தள்ளி கால்களை விரித்துப் படுத்துக்கிடந்தவனைத் தாண்டுவதற்காக தூண் ஓரம் வந்து அவனது இரண்டு கால்களுக்கும் நடுவில் ஒரு காலை ஊன்றி பின்னத்திக் காலை தூக்கி முன் நகரும் பொழுது அவனது நெற்றியில் ஏதோ ஒன்று முட்டியது. சட்டென முட்டியதை ஆடவிடாமல் பிடித்தான். பிடியை விடாமல் தனது காலைப் பின் நகர்த்தி எடுத்துவைத்துவிட்டு அண்ணாந்து மேலே பார்த்தான்.

கழுத்து நிறைய நகைகள் அணிந்திருந்த ஒரு பெண் தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தாள். அடிப்பாதத்தில் மெல்லிய சூடு இருந்தது. இப்பொழுதுதான் செத்திருக்க வேண்டும் என நினைத்தபடி அப்படியே பின்நகர்ந்து வந்து மரப்பெட்டியின் ஓரம் உட்கார்ந்தான். குறட்டை ஒலி அறை முழுவதும் ஒரே சீராக மிதந்தபடி இருந்தது.

ஒரு மரணத்தின் கீழ் எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர். 'பொம்பள நாண்டுகிட்டு தொங்குறா, தாயோலி இவெங்கே தூங்கிகிட்டு கிடெக்காங்கெ' என நினைத்து ஒரு எத்துவிட வேண்டுமென அவனுக்குத் தோன்றியது. தொங்கிய உடல் மெல்லச் சுற்றி வீடு முழுவதையும் பார்ப்பதுபோல் இருந்தது. அந்த அறை வேறொன்றாக அவனுக்குத் தோன்றியது. எதையும் எடுக்காமல் சிறிது நேரத்திற்குப்பின் கன்ன வாசல் வழியே கால்களை நுழைத்து வெளியேறினான்.

வெளியில் வந்தவுடன் சுவர் ஓரத்தில் கீழே வைத்துவிட்டுப்போன மொண்டிக்கம்பை எடுக்கத் தேடினான். அந்தக் கம்பு அங்கே இல்லை. பெரும் ஆச்சரியத்தோடு அவன் கண்கள் தேடின. அரசமரத்திலிருந்த ஆந்தை குரலெழுப்பியவாறு மேற்கே பறந்துபோனது. ஆந்தையை

இப்போதுதான் அறிந்தான். தாதனூர்க்காரர்கள் வந்திருக்கலாம் என்பதைத் தவிர இந்த இருளுக்குள் வேறு எந்த உண்மையும் இருக்க வாய்ப்பே இல்லை.

**ம**றுநாள் மத்தியானத்தில் மொண்டிக்கம்பை தோளிலே வைத்தபடி மேற்கே காட்டுப்பக்கம் மாயாண்டி வந்தான். அவன் வருகையைக் காலையிலிருந்து எதிர்பார்த்த அவன் மகிழ மரத்தடியில் காத்திருந்தான். சடைவிழுந்த முடி தோள்வரை தொங்கிக்கொண்டிருந்தது. கன்னத்து எலும்புகள் ரெண்டும் துருத்தி நிற்க கன்னம் உள்வாங்கியிருந்தது. நெடுநெடுவென உயரமும் விரிந்த மார்பும் குறுக்குமறுக்குமான தழும்புகளும் கொண்டு பயமும் விகாரமும் பற்றிக்கொள்ளும் தன்னைப்போன்ற தோற்றம் கொண்ட ஒருவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த மாயாண்டி அவன் எதிரில் இருந்த சிறு பாறையின் மேலே போய் சாய்ந்து உட்கார்ந்து அவனைப் பார்த்தான்.

தனது ரகசியம் ஒன்று கண்டறியப்பட்டுவிட்டது என்று சோகமும் கவலையும் அவனது முகத்திலே இருந்தது. பலம் குன்றிப் போனவனைப்போல அவன் இருந்தான். இவனைத் தேடி இத்தனை மாதம் அலைய வேண்டியதாயிற்று என்று எண்ணியபடி இருந்த மாயாண்டி அவன் ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருப்பதைப் புரிந்துகொண்டவனாக மேலோட்டமாகப் பேச்சுக்கொடுத்தான்.

‘கன்னம் போட்டு உள்ள போயிட்டு பொருள எடுக்காம தாதனூர்க்காரென் வெளியேறி வரலாமா?’ என்று மாயாண்டி கேட்டான்.

‘தப்பான களவு ஊரு பேரத்தான கெடுக்கும்‘ என்றான் அவன்.

ஒருத்தி தூக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருந்தபோது பொருளை எடுப்பதற்காக அடித்துக்கொன்று அவளைத் தொங்கவிட்டு விட்டார்கள் என்று பேச்சு வரும். அப்புறம் துப்பு சொல்கிறவன் தாதனூரை நம்பமாட்டான். ஊருக்குத்தான் கெட்டபெயர் வரும் என்ற எண்ணத்தில் அவன் சொன்னான். அவனது பேச்சில் நம்பிக்கை கூடியபடி இருந்தது. மாயாண்டி வெளியிலிருந்துதான் பார்த்திருக்கிறான் என்பதை பேச்சின் மூலம் உறுதிசெய்து கொண்டபின் களவின் உள்முகம் தெரியாத ஒருவனிடம் பேசும்போது வரும் தாட்டியம் அவனிடம் வரத்துவங்கியது.

அவனைப் பேசவிட்டு ஆழம் பார்த்த மாயாண்டி கொஞ்சநேரம் கழித்துக் கேட்டான் ‘பூனைய ஏன்டா உசுப்புன?’

அவனுக்கு ‘திக்‘ கென்று இருந்தது. இவன் உள்ளே வந்து உட்கார்ந்து விட்டானா என்று அப்பொழுதுதான் யோசிக்க ஆரம்பித்தான். ‘எதிர்கொறட்டை விட்டு தூக்கத்தை ஆழம் பாக்குறது மேப்புல்லு மேயுறமாடு செய்யிற வேல’ என்று சொன்ன மாயாண்டி எதிர்க்குறட்டை மனிதர்களைத் தவிர மற்ற எல்லா உயிரினங்களையும் எப்படிக் கலைத்துவிடுகிறது என்பதை விளக்கிச் சொன்னான். பூனை தன்னை முறைத்தபடி ஏன் இறங்கிவந்தது என்பது அப்பொழுதுதான் அவனுக்குப் பிடிபட்டது.

தொடர்ச்சியாக அவன் செய்த களவில் இருந்த தவறுகளை எல்லாம் மாயாண்டி எடுத்துச் சொன்னான். ‘சித்திர மாசத்துல கட்டிலு கால் வெள்ளி அடிவானத்து தூரல இருந்து ஆள் உசரத்துக்காவது மேல தெரிஞ்ச பெறகு

தான்டா களவுக்குப் போகணும். நீ என்னடான்னா அதுக்குள்ள கல்ல நோண்டி உள்ள நொளஞ்சுட்ட. இன்னும் கொஞ்சம் முன்னாடி போயிருந்தா அவ உன்னய பாத்திருப்பா’ என்றான். மீண்டும் ஒருமுறை அவள் கால்கள் நெற்றியில் முட்டியதைப் போலிருந்தது.

அவன் தனக்கு முன்னால இருப்பவன் பெரும் வித்தைக்காரன் என்ற முடிவுக்கு வந்து, தனக்கான இடத்தில் நின்று பேச ஆரம்பித்தான. ‘தாதனூர்னு சொன்னாத்தான் துப்பாளி நம்பி பெரிய எடத்தகாட்டுறான். அதுனாலத்தான் அப்படி சொன்னெ’ என்றான். ‘ஒன்னோட ஊர் எது?’ என்று விசாரித்ததற்கு எல்லாம் மேற்கு நாடுதானப்பா, அப்பனும் ஆத்தாளும் சின்னப்புள்ளயில செத்துப் போயிட்டாங்கெ. அப்புறமா நா இப்படி ஊர் ஊரா அலஞ்சுகிட்டிருக்கெ’ என்றான். ‘மேற்கு நாட்டுல எந்த ஊரு, கொடிவரிசை என்ன?’ என்று கேட்டதற்கு ‘அதெல்லா யாருக்கப்பா தெரியும்? காவ பாக்க வந்த ஊர்ல ஊரே கொள்ளையில போயிருச்சு. தப்பி பெழச்சதுல நானும் ஒருத்தெ. அம்புட்டுத் தான் தெரியும்‘ என்றான்.

பூர்வீகம் குறித்த பெரிய எரிச்சலும் அலட்சியமும் அவனது வார்த்தைகளில் இருந்தது. ஆனால் மேற்கு நாட்டுக்காரன்தான் என்பது உறுதிப்பட்டது. நல்ல களவுக்காரன் மீது வரும் பாசம் அவன் மீது மாயாண்டிக்கு வந்தது. இந்த வயதில் தாதனூரையே தேடவிட்ட இவ்வளவு கெட்டிகாரனைத் தன்னுடன் அழைத்துச் செல்வதென்று மாயாண்டி முடிவு செய்தான். அவனும் அதற்குச் சம்மதித்தான். காட்டின் உள்ளே இருந்த தன்னுடைய சட்டிபுட்டிகளையெல்லாம் ஒரு சாக்கிலே போட்டுத் தூக்கினான். மாயாண்டியும் தன்னுடைய பொருட்களையெல்லாம் ஒரு சாக்கிலே போட்டுத் தூக்கிக்கொண்டான். மதிய வெயில் ஏறி அடித்தது. இருவரும் ஊரைக் கடந்து வெளியேறினர்.

பேசிக்கொண்டே போனபின் ஞாபகம் வந்தவனாக மாயாண்டி கேட்டான். ‘உனக்கு என்னப்பா பேரு?’

‘சின்னான்.’

ஊர் எல்லையிலிருந்த சுடுகாட்டின் வழியே அவர்கள் நடந்துகொண்டிருந்தனர். வெட்டியான் பிணத்தைத் எரிப்பதற்கான கட்டைகளைப் பரப்பிக்கொண்டிருந்தான். ‘ஆள் சின்ன ஆள்தானப்பா, கட்டாய ஒடுக்கி அடுக்கு’ என்று அவனிடம் சொல்லிவிட்டு அவர்கள் நடந்து கொண்டிருந்தனர்.

**சி**ன்னானைக் கூட்டிக்கொண்டு மாயாண்டி ஊர் வந்து சேர்ந்தான். தாதனூரைத் திருடி ஊர் ஊராகக் கொண்டு போனவனை நேரில் பார்த்த பின்தான் ஊர் பெருமூச்சு விட்டு அடங்கியது. சின்னானுக்கான வரவேற்பு சற்று வித்தயாசமானதாக இருந்தது. தங்கள் ஊரின் பெயரைத் திருடிச் சென்ற கோபமும் எரிச்சலும் பலருக்கும் அவன் மேல் இருந்தது. ‘என்னய ஓடிப்பிடிடா பாப்போம்‘ ‘விப்பு வவ்வால அடிச்சு எடுறா பாப்போம்‘ ‘கோபுர கத்தாழய தாண்டுடா பாப்போம்‘ என்று மீண்டும் மீண்டும் அவனைப் போட்டிக்கு இழுத்தனர். தாய் செத்துப்போனா குட்டி எந்த ஆட்டுக்கிட்டேயும் எத்துப்பட்டு பால் குடிக்கும். அது போலாகி விட்டது சின்னானின் நிலை. ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு எந்தப் போட்டிக்கும். எந்த நேரத்திலும் தயாரானவன் சின்னான் என்று ஊர்

தெரிந்துகொண்டது. அதன்பிறகு அவனுக்கு கொஞ்சம் இளைப்பாறுதல் கிடைத்தது.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக ஊரோடு கலந்தபடி இருந்தான். மாயாண்டி கொத்தில் இணைந்து களவுக்குப் போவதும் வருவதுமாகக் காலங்கள் ஓடின. அவன் களவின் மீது கொத்திலிருந்த எல்லோருக்கும் பெரும் நம்பிக்கை இருந்தது. அவன் தாதனூர்க்காரர்கள் அளவுக்கு இருளின் ரகசியங்களைத் தெரிந்தவனாக இருந்தான். இருள் வெளியில் அவன் போகும்பொழுதெல்லாம் 'உண்மையிலேயே இவன் தாதனூர்க்காரன் தானா?' என்ற சந்தேகம் கொத்தில் இருந்த சிலருக்கு ஏற்பட்டு மறையும். எவ்வளவு பெரிய களவையும் செய்ய உலகில் ஆள் இருக்கிறார்கள். ஆனால் நார் இருக்கிற மரத்தின் இலையைப் பார்த்து கூடு பின்னுகிற தூக்கணாங்குருவியின் வித்தை வாய்க்கப்பெறுவது களவின் உச்சம். பெரும் வித்தை தெரிந்த களவுக்காரன் ஐந்து மாடி வைத்துக்கூடு பின்னுவான். மாயாண்டி அப்படித்தான். சின்னான் அந்த வழிகளில் வேகமாக நடந்துவந்தான்.

சடச்சியின் வம்சாவழியில் வராதவனுக்கு தாதனூரில் இடமில்லை. எனவே அவன் கருப்பு கோவிலியே இருப்பதுவும் மழைக்காலத்தில் மலைப்புடவுகளுக்குள் தங்கிக்கொள்வதுமாக இருந்தான். மாயாண்டி மட்டும் இவனிடம் ஒரு ரகசியம் இருப்பதை உணர்ந்து அதைக் கண்டறியக் காத்துக்கொண்டிருந்தான். ஏதாவது துப்பு கிடைக்காதா என்று இவனது ஒவ்வொரு செய்கையின் வழியேயும் தேடியபடி இருந்தான். மாயாண்டி என்ற பெரும் களவாணி தனது நிழலைக்கூட மோப்பம் பிடித்துக் கண்டறிவான் என்பது சின்னானுக்குத் தெரியும். இறங்கி வந்த பூனை அவனுக்குப் பெரும் உபதேசத்தை செய்துவிட்டுப் போயிருந்தது. எனவே அவன் ஜாக்கிரதையோடுதான் நடந்துவந்தான்.

தேவிபட்டினத்தில் கிளம்பிய ஒரு வாரம் கழித்து ஒரு பின்னிரவில் அவர்கள் இருவரும் கருப்பு கோவில் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர். 'ஒரு தூக்கம் போட்டு கோழி கூப்பிட எந்திரிச்சு ஊருக்குள்ள போவோம்ப்பா' என மாயாண்டி சொன்னவுடன் ஆளுக்கொரு பக்கமாக மரத்தடியில் படுத்தார்கள். முதன் முதலாக அந்த இடத்திற்கு வருகிற வெளியாட்கள் யாரும் மண்டபத்தில் இருக்கிற கருப்பனைத்தான் கும்பிடுவார்கள். ஆனால் சின்னான் ஆலமரத்தின் பெரும் தூர் பக்கம் போய் சடச்சியைக் கும்பிட்டுவிட்டு பின்னர் வந்து கருப்பணை வணங்கினான். அவனது இந்தச் செயலை இருளுக்குள் சுருண்டு படுத்துக்கிடந்த மாயாண்டி பார்த்துவைத்தான். இவன் தாதனூர்க்காரன்தான் என்று அந்த நிமிடமே மாயாண்டி உறுதிசெய்துகொண்டான். ஆனால் யாருடைய வம்சாவளி, என்ன ஏது என்று எதுவும் தெரியவில்லை. அதிலிருந்து அவனை மிக நுட்பமாக மாயாண்டி கவனித்தே வந்தான். ஆனால் அதன் பிறகு அவனுடைய செய்கை எதிலும் தாதனூர்க்காரனுக்குரிய ஒரு சிறு அடையாளத்தைக்கூட பார்க்கமுடியாமல் இருந்தது. அவன் மறைத்து வைத்துள்ள உண்மையை எப்படியும் கன்னம் போட்டு எடுத்தே தீருவது என்ற முடிவோடு மாயாண்டி இருந்தான். அவன் நிழலைக்கூட சந்தேகித்தான். ஆனால் அவன் மீது பேரன்புகொண்டவனாக இருந்தான். மலைப்பொடவிலே தங்கியிருக்கிற தங்களுக்கு வேண்டப்பட்ட வெளியூர்க்காரனை தாதனூர் அன்போடு கவனித்து வந்தது.

*

**சி**ன்னான் மாயாண்டி கொத்தோடு நாடெங்கும் களவுக்குப் போய் வந்துகொண்டிருந்தான். அவன் மாயாண்டியிடமிருந்து தெரிந்துகொள்ள நிறைய இருந்தது. மாயாண்டிக்கும் அவனிடம் தெரிந்துகொள்ள முக்கியமான ஒன்று இருந்தது. பொருட்கள் கன்ன வாசல்களின் வழியே மச்சமின்றி உருண்டு தாதனூருக்கு வந்துசேர்ந்தபடி இருந்தன.

ஒருமுறை தாராபுரத்தில் பெருங்கோட்டை வீடு ஒன்றில் கன்னம் போட்டு இறங்கினர். வீட்டுக்காரன் சாமர்த்தியசாலியாக நல்ல பாதுகாப்புடன் இருந்தான். செய்கையில் நேர்ந்த சிறு கவனக்குறைவால் களவு குலைந்தது. வீட்டிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டு கத்த ஆரம்பித்தினர். மாயாண்டி சுதாரித்து 'இது மய்யமான வீடு, ஊரே சுத்திரும், உடனே போயிருவோம்' எனச் சொன்னவுடன் தலைவாசல் வழியே ஆறு பேரும் வெளியேறினர். சத்தம் கேட்டு இங்கும் அங்குமாக அரிவாள் கம்போடு ஜனங்கள் இறங்கிவர ஆரம்பித்தனர். நாய்களின் குரைப்பொலி ஊரையே உசுப்பியது. கிடைத்த பொருளைத் தூக்கிக்கொண்டு மாயாண்டி தெருமுக்கு திரும்பினான். 'கருப்பா...வடக்கே போடா' எனச் சொல்லியபடி தெற்கே போகும் தெரு வழியே அவன் ஓடினான். பெரும் சத்தம் கொடுத்து ஊர்க்காரர்கள் விரட்டியபடி தொடர்ந்தனர். மாயாண்டியோடு இரண்டு பேர் ஓடினர். மற்ற மூன்று பேரும் வடக்குத்தெரு வழியே வளைந்து ஓடினர். விரட்டிவந்தவர்களும் இரண்டாகப் பிரிந்தனர். ஆனால் பொருளைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறவனின் திசை வழியே அதிகமான கூட்டம் ஓடியது. மாயாண்டியின் கால்கள் சடுதியில் ஊரைக் கடந்து வெளியேறின. சின்னானும் சோங்குவும் குமணாண்டியும் வடக்குத் தெரு வழியே இருளைக் கிழித்தபடி ஓடிக்கொண்டிருந்தனர். விசாலாமான அந்தத் தெருவின் நேர் எதிரே தீப்பந்தத்தைப் பிடித்தபடி ஒரு கூட்டம் இவர்களை நோக்கி ஓடிவந்தது. அதைக் கவனித்தவுடன் சட்டென இடதுபுறமிருந்த குறுக்குத் தெருவிலே மூவரும் திரும்பினர். கால்கள் இருளைக் கீறிப் பாய்ந்து சென்றன. சிறுத்து இருந்த அந்தத் தெரு முடிவு பெறும் வெளி மூலையில் வட்டக்கிணறு ஒன்று இருந்திருக்கிறது. வந்த வேகத்தில் அதை சிறு சுவர் என நினைத்துத் தாண்ட, நடுக்கிணற்றிற்குள் முன்னத்திக் காலை இறக்கினான் குமணாண்டி. முன்னால் ஓடிய இரண்டுபேரும் குமணாண்டி கிணற்றுக்குள் விழுந்துவிட்டதை அடுத்த மூன்றாவது எட்டுக்குள் ஊகித்துவிட்டனர். நின்று தூக்குவதற்கான அவகாசம் இல்லை. பின்னால் பெருங்கூட்டம் விரட்டி வந்துகொண்டிருந்தது. 'வாடா... அப்புறமா தூக்கிக்கிருவோம்' என்று சொன்னபடி கொஞ்சம் வேகம் குறைந்த சின்னானின் கால்கள் மீண்டும் இரு மடங்கு வேகத்தோடு பாய்ந்து சென்றன.

ரெட்டிய கெடுத்த வெள்ளி கிழக்கே உச்சியில் ஏறி நின்றது. பொழுது சரியாக நடுநிசி. ஆந்தைகளின் அலறலைத் தவிர இருள் பரப்பில் வேறு ஓசைகள் எதுவும் இல்லை. ஊரின் வடகிழக்கே கண்மாய்க் கரை மேட்டில் சின்னானும் சோங்குவும் உட்கார்ந்தனர். ஓடிவந்த வேகத்தில் இளைப்பு அடங்க நெருநேரமானது. கீ மூச்சும் மே மூச்சும் மோதி நின்றன. பதற்றம் கூடியது. எப்படியாவது இரவுக்குள் குமணாண்டியைத் தூக்கிவிடவேண்டும். விடிந்து விட்டால் ஊர்க்காரர்கள் பார்த்துவிடுவார்கள். அதற்குப்பின் அடிபட்டுச் சாவதைத் தவிர வேறு

வழியில்லை. எது செய்தாலும் விடிவெள்ளி முளைக்கும் முன் செய்தால்தான் உண்டு. மாயாண்டியும் மற்ற இருவரும் எதிர்த்திசையில் போய்விட்டனர். இனி அதிகாலையிலோ அல்லது நாளை பகலிலோதான் பார்க்கமுடியும். மாயாண்டியும் இல்லையே என சோங்கு துடித்தபடி இருந்தான். சின்னான் பதற்றத்தைக் காட்டிக் கொள்ள வில்லை.

ஒரு யோசனை வந்தவுடன் சட்டென புறப்பட்டு பக்கத்து ஊருக்குள் இருவரும் நுழைந்தனர். ஊரின் ஓரத்தில் இருந்த வீட்டின் சுற்றுச் சுவரைத் தாண்டி சோங்கு உள்ளே குதித்தான். கொல்லைபுறக் கதவை மெல்லத் தூக்கித் தள்ளிவைத்தான். கட்டப்பட்டிருந்த மாடுகளுக்குள் குனிந்தபடி சோங்கு நுழையப்போனான். அவனது தோள்பட்டையை இழுத்த சின்னான் ‘வாலப் பிடிச்சுப்பாத்து கழட்டு’ என்றான். ‘சரி’ என்று தலையசைத்த சோங்கு அடிவாலை மெல்ல தொட்டபடி நடுமுதுகைத் தடவிக்கொடுத்து காடியில் முடிச்சிட்ட கயறை உருவினான்.

வாலின் அடித்தண்டு கனமாக இருந்தால் அது பெரும்பாலும் நல்ல மாடாக இருக்கும். ஆனால் வேகமாக நடக்காது. வால் கொடிபோல சிறத்து இருந்தால் படுவேகமாக நடக்கும். இப்போது தேவை மிக வேகமாகச் செல்லும் மாடுகள்தான். கொடிபோல் வால் உள்ள நான்கு மாடுகளும் சுற்றுச்சுவரைத் தாண்டி வெளியில் வந்தன. மாடுகள் நான்கும் ஊரின் கண்மாய்க்கரையைத் தாண்டி இறங்கியதும் கருவேல முட்களை ஒடித்து ஒவ்வொரு மாட்டுடைய வாலின் நடுத்தண்டிலும் சின்னான் குத்தினான். மாடு படுவேகத்தில் ஓடியது. வேகம் குறையும் பொழுதெல்லாம் முள்ளை மெல்லத் தட்டினார்கள். மாடுகள் பறந்து வருவதைப் போல வந்தன. தங்கியிருக்கிற இடத்திலிருந்த சாக்கு மூடை ஒன்றையும் கயிறுக்கட்டு ஒன்றையும் சின்னான் எடுத்துக்கொண்டான். தலைப்பாகையும் வேட்டி போன்ற ஒன்றையும் அவர்கள் இப்போது கட்டிக்கொண்டனர்.

மாட்டு ஏவாரிகள் போல இருந்த இருவரும் நான்கு மாடுகளையும் பிடித்துக்கொண்டு பிரதான பாதையின் வழியே தாராபுரத்துக்குள் நுழைந்தனர். பேச்சொலிகள் கேட்டுக்கொண்டிருந்தன. மந்தையிலே தீப்பந்தத்தை எரியவிட்டு ஒரு கூட்டம் உட்கார்ந்திருந்தது. ஊர் முழு விழிப்புடனும் இல்லை. முழு அமைதியுடனும் இல்லை. இடைப்பட்ட நிலையில் இருந்தது. சின்னான் நேராக அந்தத் தெருவுக்குப் போகாமல் மந்தைப்பக்கமாகப் போய் ‘நீங்க வெரட்டுன திருடங்கெ கம்மாயைத் தாண்டி தெக்குப் பக்கமாக ஓடிக்கிட்டு இருக்காங்க’ என்று சொல்லிவிட்டு ஊரை ஒரு சுற்றுச் சுற்றுவது போலப் போனான். சோங்கு நட்சத்திரங்களைப் பார்த்தபடி பொழுதின் பதற்றத்துடனே நடந்துகொண்டிருந்தான். மாட்டு ஏவாரிகள் இரண்டு பேர் போவதை விழித்திருந்த எல்லோரின் பார்வையிலும் பதிய வைத்தபின் அந்த குறுக்குச்சந்தின் முனையிலே வந்து மாட்டை நிறுத்தினர். பார்ப்பவர்கள் மாட்டுக்குத் தண்ணீ காட்டுறாங்க என நினைத்துக்கொள்வர். வட்டக்கிணற்றின் அருகில் போய் உள்ளே குனிந்து ‘கருப்பா...’ என சின்னான் குரல் கொடுத்தான். மறுகணமே ‘கருப்பா...’ என்ற எதிர்க் குரல் மேலேறி வந்தது. ஓரத்தில் இருந்த வாளிக் கயறை எடுத்து உள்ளே விட்டனர். மாடுகள் வளையமிட்டு நிற்பதைப்போல மறைத்து வட்டவடிவில் நிறுத்தப்பட்டிருந்தன. உள்ளே இறங்கிய சின்னான் வாளியை இழுத்து வெளியேற்றும் நேரத்தில் குமணாண்டியைத்

தூக்கிக்கொண்டு வெளியில் வந்தான். மேலெல்லாம் அடிபட்டு நொறுங்கிப்போயிருந்தது. நான்கு மாட்டின் கயறையும் சோங்குவிடம் கொடுத்து சின்னான் குமணாண்டியைத் தோளிலே தூக்கிய படி ஊரைவிட்டு வெளியேறினான். விடிவெள்ளி எழுந்து கரிச்சான் கத்த ஆரம்பித்தபொழுது ஊரின் கிழக்கேயிருந்த பெருங்காட்டை அவர்கள் கடந்திருந்தினர்.

*

குமணாண்டியைக் கொண்டுவந்து சேர்த்த சின்னானை ஊரே மெச்சிப்போனது. நடுச்சாமத்திற்கும் அதிகாலைக்கும் இடையில் போய் ஆளைமீட்டி வருவது சாதாரண விஷயமல்ல. அதுவும் ரெண்டு பேராகப் போய் அதைச் செய்துவிட்டு வந்ததென்பது பெருஞ்செயலாகக் கருதப்பட்டது.

அதன் பின் கொஞ்சநாள் தான் குமணாண்டி உயிரோடு இருந்தான். காயங்கள் ஆறுவதற்குள் செத்துப்போனான். ஆனால் கடைசிவரை அவன் சின்னானை மெச்சிப் பேசியபடியேதான் இருந்தான். சின்னானை தாதனூர் கொஞ்சம் கொஞ்சமாக உள்வாங்கியபடியே இருந்தது. களவில் மிகவும் தேர்ந்த எத்தனையோ பேர் அமணமலையில் வந்து தங்கி தாதனூர்க்காரர்களுடன் சேர்ந்து போய்த் திரும்புவது உண்டு. ஆனால் அவர்கள் யாருக்கும் தாதனூரில் இடமில்லை. முதன்முறையாக அது சின்னானுக்குத்தான் நடந்தது.

குமணாண்டியின் தங்கை செல்லாயி நத்தப்பட்டியில் வாக்கப்பட்டிருந்தாள். கூடப்பிறந்தவன் கிணற்றுக்குள் விழுந்த செய்தி கேட்டு ஊருக்கு வந்தவள் அங்கேயே தங்கி அவனுக்கு வைத்தியர் சொன்ன பக்குவத்தைப் பார்த்து வந்தாள். தூக்கி வந்து உயிரைக் காப்பாற்றிய சின்னானுக்கும் அவ்வப்போது மலைப்பொடவுகளில்போய் கஞ்சிகொடுத்துத் திரும்பினாள். ஊரில் பல பெண்களுக்கும் ஏற்பட்டதைப் போல செல்லாயிக்கும் சின்னானின் மீது பிரியம் ஏற்பட்டது. அதன்பின் கொஞ்ச நாளில் குமணாண்டி செத்ததும் புருஷன் ஊரான நத்தப்பட்டிக்கு போனவள் ஒரே மாதத்தில் துரும்பு கொடுத்து தீத்துவிட்டு வந்துவிட்டாள். ‘ஏங்கூடப்பெறந்தவன என்னத்துக்குடி தீத்துட்டு வந்த? எடுவட்டசிறுக்கி’ என்று அவளின் ஆத்தாள் எத்தனையோ முறை சண்டைபோட்டும் அவள் உண்மையைச் சொல்லவில்லை.

விடிந்ததிலிருந்து அடையும்வரை அமணமலையைப் பார்த்த படியே வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தாள். ஒரு வாரம் பத்து நாள் கழித்து கஞ்சி காய்ச்சி எடுத்துக்கொண்டு அமணமலையின் பொடவுகளை நோக்கி நடந்தாள்.

‘சரி, இனி என்ன செய்ய?’ என யோசித்த ஊர் அவன் அரைஞாண்கயிறை அறுத்து மந்தைத் தாலி கட்டவைத்தது. நத்தப்பட்டியிலிருந்து வந்த முதல் புருஷன் தாய்மாமன் மாலையைப் போட்டுவிட்டு அக்காவை முறைத்துப் பார்த்தபடி போனான்.

சின்னானும் செல்லாயியும் மலையடிவாரத்தில் வீடு போட்டுக்கொண்டனர். சின்னான் அங்கேயே குடும்ப வாழ்வைத் துவக்கினான். தாதனூர் தனக்கானவனாக அவனை ஏற்றுக்

கொண்டுவிட்டது. வருடங்கள் பல ஓடியபடி இருந்தன. மாயாண்டி மட்டும் ரகசியத்தைக் கண்டறிய முடியாமல் தவித்தபடியே காத்திருந்தான்.

*

# 38

**சி**ன்னான் பெண்சாதி செல்லாயிக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. மலையடிவாரத்து வீட்டுக்காரனின் குழந்தைகள் ஊர்க்குழந்தைகளை விட வீரியத்துடன்தான் வளரும். விடிந்ததும் பாறையின் மூஞ்சியிலே முழிப்பவனின் குழந்தைகளைப் பாறைகள்தான் வளர்க்கின்றன. மகன் காக்கையன் இந்த வயதிலேயே மலைக்குள் சத்தம் கேட்பதைப்போல கல்லெறிந்து கொண்டிருக்கிறான். ஊரின் பெண்ணடி வாரிசாக குழந்தைகள் இருவரும் வளர்ந்து வந்தார்கள். சின்னான் வந்து எட்டு வருடமாகி விட்டது.

மாயாண்டி கொத்து பல்கிப் பெருகியபடி இருந்தது. தூரந்தொலைவுக்கு களவுக்குப் போக சுத்துப்பட்டு கிராமத்திலிருந்து ஆட்கள் வந்து இணைந்தபடி இருந்தனர். மாயாண்டி ஒரு திசைக்கும், சின்னான் ஒரு திசைக்கும், மொக்கையன் ஒருதிசைக்குமாக பெருங்களவுக் கொத்துக்கள் பரவிப்போயின. அதில் மொக்கையன் கொத்தில் உறப்பனூர்க்காரர்கள் இருவரும், கரடிக்கல்லைச் சேர்ந்த ஒருவனும் இருந்தார்கள்.

அவர்கள்தான் காவரிக்கரைப் பக்கமிருக்கிற ஊர் ஒன்றில் இருந்து பெரும் பொருளைத் தூக்கிவந்து ஒட்டன்சத்திரம் செட்டியாரிடம் விற்றுவிட்டு வண்டி நிறையத் தானிய மூடைகளைக் கொண்டுவந்து ஊர் முழுவதும் இறக்கினர்.

ஊரே நல்லநாள் போல பெரும் கொண்டாட்டத்தில் இருந்தது. அமணமலையின் உச்சியில் இருந்த அரசமரத்தின் அடியில் பெரும் சாராய மொடா ஒன்று கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தது. ஆடுஉரிச்சான் பாறையின் அருகில் உரிக்கப்பட்ட ஆட்டுக் கறி பாறையில் சுட்டபடி இருந்தது. மலையே சம்மணம் போட்டு உட்கார்ந்து குடித்துக்கொண்டிருப்பதாகத் தோன்றியது. சுதி சேர்ந்த பெருங்குரல்கள் மலையடி ஆலமரத்திலிருந்த பறவைகளைக் கலைத்தன. சாராய வெறி உச்சத்தில் ஏறியபடி இருந்தது. களவின் வெற்றிகளை வீறாப்போடு

ஒருவன் மாற்றி ஒருவன் சொல்லிக்கொண்டிருந்தான். ‘இப்படித்தான் சின்னான் கொத்துல...’ என்று ஒருவன் ஆரம்பிக்க ‘அது என்னடா... சின்னான் கொத்து? தாதனூர்க்காரெ பேர்ல தான்டா கொத்த சொல்லணும். இவே பேர்ல ஏன்டா சொல்ற?’ என்று ஒருவன் கேட்க கலகம் ஆரம்பித்தது. வார்த்தைகள் பாறைகளை உருட்டிவிடும் வேகத்தில் வந்துகொண்டிருந்தன. நிலை கொண்டு பேச யாருமற்ற நிலையில் அரசமரம் தன்னந்தனியே நின்றுகொண்டிருந்தது. மலையுச்சி அரசமரத்திற்கு இருள் வெளியில் கிளம்பும் அந்தப் பெருங்குரல்கள் ஒன்றும் புதிதல்ல. கீழே அடிவாரக் கருப்பு கோவில் தாவாரத்திலே படுத்துக்கிடந்தவர்கள் ‘சாராயம் குடிச்சுட்டு கத்திக்கிட்டு கெடக்குறாங்கெ’ என்று சலிப்போடு புரிந்துகொண்டனர். மலையுச்சி அரசமரமும் தாங்க முடியாத அளவுக்கு வாய்க்கலகம் மீறிக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் போதை வெறியேறிய உச்சத்தில் இருந்த சின்னான் கத்தினான் ‘ஆமாண்டா... நானுந் தாதனூர்க்காரன்தான். சின்னிவீரன்பட்டியில வாக்கப்பட்ட ஒச்சாயி மகன்டா...’

அந்த வார்த்தை மலையையே தகர்த்ததுபோல் இருந்தது. அதுவரை பெருங்குரலெடுத்துக் கத்திக்கொண்டிருந்த பலரும் இந்த வார்த்தையைக் கேட்டபின் நிலைகுலைந்து போயினர். நம்பமுடியாத பேரிருள் எல்லோருக்குள்ளும் சூழ ஆரம்பித்தது. உலைமூடியில் சாராயத்தை வாங்கியவன் குடிக்க முடியாமல் அப்படியே சின்னானைப் பார்த்தபடி பாறையிலே உட்கார்ந்தான். நீண்ட அமைதிக்குப்பின் ‘டே... சின்னா, நெசந்தான் சொல்றயா?’ என்று மட்டும் ஒருவன் கேட்டான். சின்னான் இருந்த இடத்திலிருந்து பதிலேதும் வரவில்லே. அந்த வார்த்தையோடு உயிரும் வெளியில் வந்து விழுந்தது போல் ஆகிவிட்டது. அங்குமிங்கும் சிதறிக்கிடந்தவர்கள் பெரும் கஷ்டப்பட்டு பக்கத்தில் இருப்பவனிடம் மெல்ல பேச முயற்சித்தனர். அவனது கொத்தில் போய்க்கொண்டிருந்த மூன்று பேர் எழுந்துவந்து சின்னானுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தனர்.

**ஆ**னையூருக்கே மேற்கே கணவாயின் அடிவாரத்தில் இருக்கிறது சின்னிவீரன்பட்டி. கணவாயின் மறுபுறத்தின் அடிவாரத்தில் இருக்கறது மாத்தூர். இரண்டும் தொட்டப்பநாயக்கனூர் பாளையத்தின் எல்லையைக் காவல் காத்த கிராமங்கள். கணவாய்க்கு கிழக்கு எல்லையை சின்னிவீரன்பட்டியும் மேற்கு எல்லையை மாத்தூரும் காவல் காத்தன. பாளையப்பட்டுகளின் படைகள் கலைக்கப்பட்ட பின் கிழக்குப்பகுதி கிராமங்களில் பெரும்பாலானவற்றை சின்னிவீரன்பட்டிகாரர்களும், மேற்குப் பகுதி கிராமங்களில் பெரும்பாலானவற்றை மாத்தூர்காரர்களும் காவல் காத்துக்கொண்டனர். காவலில் ஏற்பட்ட ஒரு பிரச்சனை இரண்டு ஊருக்கும் இடையிலான கலகமாக மாறியது. அன்று பற்றிய கலகம் முடிந்தபாடில்லை. கணவாயின் இரண்டு பக்கமும் பாறைகள் உருளுவதைப்போல கொலையுண்ட உடல்கள் உருண்டுகொண்டே இருந்தன. வீறாப்பும் வெறியும் கொண்ட பாதையில் ஏறி ஏறிச் சறுக்கி விழுந்தபடி இருந்தன இரண்டு ஊர்களும். ஒரு கட்டத்தில் ஊர்கள் இரண்டும் சலிப்படைய ஆரம்பித்தன. ‘சரியப்பா... போனதெல்லாம் போகட்டும். ராசியாய்க்கிருவோம்‘ என்று பெருசுகள் பேச ஒருவழியாக சமாதானம் கைகூடியது. இரண்டு ஊர்க்காரர்களும் எதிர்எதிர் மந்தைக்குப் போய் பாக்குவெத்திலை கொடுத்து தண்ணீர் மாற்றி ராசியாகக்

கொண்டனர். பகை முடிவுக்கு வந்தது. கணவாயின் உச்சியிலிருந்த சொக்கான்பாறையில் வைத்து கெடா வெட்டி தலை மாற்றி எடுத்துச்சென்றனர்.

ஊர்கள் இரண்டும் ராசியான சில மாதங்களுக்குப்பின் ஒரு நள்ளிரவில் சின்னிவீரன்பட்டி மந்தைக்கு வந்த இளவட்டம் ஒருவன் சுருட்டி வைத்த சாக்கை தலைக்கு வைத்துப் படுக்கப் போனான். குறிப்பு தட்டி எழுந்த ஒரு பெரியவர் ‘என்னப்பா, இங்க வந்து படுக்குற, எந்த ஊரு?’ என்று கேட்க, ‘பக்கத்து ஊரப்பா... விடிஞ்சதும் எந்திருச்சு போறேன்.’ என்னென்டோ இருக்கு...’ என்று சொல்லிவிட்டுப் படுத்தான். அதிகாலையில் ஊரே எழுந்தபின்பும் அவன் எழுந்திருக்கவில்லை. ‘என்னடா இன்னும் தூங்கிக்கெடக்குறான்’ என்று அவனை எழுப்ப முயற்சித்தபொழுது தான் தெரிந்தது, அவன் செத்து விறைத்துக்கிடக்கிறான் என்று. ஊரே சுதாரிப்பானது.

அந்தப் பெருசுவிடம் கேட்டபோது ‘ரொம்ப நேரமா புங்க மரத்துல இருந்து ஆந்த அலறிக்கிட்டே இருந்துச்சு. எந்துருச்சு பாக்குறப்ப இவெ அப்பத்தான் வந்து ஒக்காந்தான். பக்கது ஊருன்னுதான் சொன்னா. ஆனா எந்த ஊருன்னு சொல்லல’ என்றார். பக்கத்து ஊர்க்காரர்கள் எல்லாம் பகலெல்லாம் வந்து பார்த்துவிட்டுப் போனபடி இருந்தனர்.

பொழுது சாயத்துவங்கிய நேரத்தில் கிழக்குப் பக்கமிருந்து வந்த ஒருவன் சாவடியில் கிடந்தவனைப் பாரத்தவுடன் சொன்னான் ‘இவெ மாத்தூர்க்காரனப்பா’ என்று. ஊருக்கே இடிவிழுந்தது போலிருந்தது. ‘இப்பொதான் ராசியாப் போயிருக்கோம். அதுக்குள்ளே இப்படியா...’ என்று புலம்பியபடி இருந்தனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மாத்தூர்க்காரர்களின் கூட்டம் மலையிலேயிருந்து இறங்கு ஊருக்குள் வந்தது. மந்தையில் கிடந்தவனைப் புரட்டிப் புரட்டி பார்த்தது. ‘ஏன்டா எங்க ஊர்க்காரன் கொன்னீங்க’ என்று பெரியவர் ஒருவர் கேட்டார். சின்னிவீரன்பட்டி துடித்துப்போனது. அவர்கள் சொன்ன எந்த விளக்கத்தையும் மாத்தூர்க்காரர்கள் நம்பத் தயாராக இல்லை. ‘நம்ப வச்சு கழுத்தருத்திட்டீங்களடா...’ என்ற குரல் மாத்தூரிடமிருந்து மேலோங்கி வந்தது. மறுபடியும் ஒரு கலகம் பிறக்கப்போகிற நிலை ஏற்பட்டது. பக்கத்து ஊர்க்காரர்களெல்லாம் வந்து பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்தனர். சின்னிவீரன்பட்டி சொன்ன எந்த விளக்கத்தையும் செத்து விறைத்துக்கிடந்தவன் உள்ளிட்ட மாத்தூர்க்காரர்கள் யாரும்காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. நேரம் ஆக ஆக மாத்தூர்க்காரர்களின் குரலில் கோபம் கொப்பளித்தபடி இருந்தது. கடைசியாக பஞ்சாயத்தார் சொன்ன தீர்ப்பை இரண்டு ஊர்க்காரர்களும் ஏற்றனர். சின்னிவீரன்பட்டி வேறு வழியே இல்லாமல் அதனை ஏற்றது. மாத்தூரும் சரி என்று சொல்லி வேறு வழியில்லாமல் ஏற்றது. செத்துப்போனவனின் வயதை ஒத்த ஒருவனை பலிக்கு சின்னிவீரன்பட்டி தந்துவிடவேண்டும். முப்பதாவது நாள் மலையுச்சியில் உள்ள சொக்கான் பாறையில் வைத்து மாத்தூர்க்காரர்கள் பலியெடுத்துக் கொள்ளலாம் என்று பஞ்சாயத்தில் முடிவான பின் செத்துப்போனவனைத் தூக்கிக்கொண்டு மாத்தூர்க்காரர்கள் புறப்பட்டனர்.

அவர்கள் போன கையோடு சின்னவீரன்பட்டி பஞ்சாயத்து கூடியது. யாரைப் பலி கொடுப்பது என்று பேசினர். மந்தைத் தெருப் பங்காளிகளில்

இரண்டு ஆண் பிள்ளைகளை வைத்திருப்பது ஒச்சாயிதான். எனவே ஒச்சாயின் மூத்த மகன் நல்லையாவை பலி கொடுப்பது என்று முடிவானது. அப்பொழுது இருந்து முப்பது நாளும் நல்லையாவுக்கு ஊர்கஞ்சிதான். ஒரு நேரத்திற்கு ஒரு வீடு என்று முப்பது நாளும் ஊரே கஞ்சி ஊத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் ஆசைஆசையாய் சமைத்துப் போட்டனர். வாய்க்கு ருசியாக வக்கணையாக எல்லாத்தையும் சமைச்சுப் போட்டனர். முப்பது நாளும் அவனைப் பார்த்தபொழுதெல்லாம் பெண்களுக்குக் கண்ணீர் முட்டிக்கொண்டு வரும். 'ஏ...நல்லய்யா...ராசா... ஊரு சாமீப்பா நீ, கவலப்படாதப்பா...' என்று கிழவிகள் அவனுக்கு நம்பிக்கையூட்டின. ஊர் முழுவதும் பெருகும் இரக்கம் ஒவ்வொரு நாளும் மூச்சுத்திணற வைத்துக்கொண்டிருந்தது.

'என்னவேணும்னாலும் கேளப்பா. கொண்டுவந்து தர்றோம்' என்று ஊரே அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தது. அவன் யாரிடமும் எதுவும் கேட்கவில்லை. கேட்க எதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால் அவனுக்குள் ஒரே ஒரு ஆசை இருந்தது மந்தையில் கிடந்தவன் எப்படிச் செத்தான் என்ற உண்மையை முப்பதாவது நாளுக்குள் தெரிந்துகொள்ள வேண்டும். 'ரொம்ப நேரமா புங்க மரத்துல ஆந்த அலறிக்கிட்டே இருந்துச்சு' என்று அந்தப் பெருசு சொன்னது மட்டும்தான் ஒரே தடயமாக இருந்தது. ஆனால் அவன் எதைப்பற்றியும் யாரிடமும் எதுவும் பேசவில்லை. சாப்பிடபோகும் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிற ஒவ்வொரு மனிதனின் முகத்தையும், வார்த்தைகளையும், உணர்வுகளையும் வைத்து அவன் தேடியபடியே இருந்தான். தினமும் இரவு சாவடியில் படுத்த உடன் அன்றைய தினம் தனக்குக் கஞ்சி ஊற்றிய வீடுகளில் பெண்கள் சிந்திய கண்ணீரைக் கைகளில் வைத்து முத்துமாலையைப் போல துளித்துளியாய் உருட்டிப்பார்த்தபடியே உண்மையைத் தேடிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் சாவடியில் செத்து விறைத்தவன் படுத்த இடத்திலேயேதான் படுத்துத் தூங்கினான்.

நாட்கள் ஓடின. ஊர் சிந்திய கண்ணீரின் அளவு தாங்க முடியாதபடி இருந்தது. அவன் ஏறக்குறைய மௌனமாகிவிட்டான். சிறுவர்களின் கூட்டம் அவனுக்குப் பின்னால் எப்பொழுதும் சுற்றிக்கொண்டேயிருந்தது. கடைசி மூன்று நாட்கள் மந்தைத் தெருப் பங்காளிகளின் சாப்பாடு. அதாவது அவனுடைய பங்காளிகளின் சாப்பாடு. அவனுக்கு வயிறுமுட்ட சாப்பாடு போடவேண்டும் என்று அவர்கள் விதவிதமாக ஆக்கி வைத்தனர். ஆனால் அவனுக்கு சாப்பிட என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. கணவாய் உச்சியில் படர்ந்து கிடந்த சொக்கான் பாறை இருகைகளையும் விரித்துத் தனக்கு கஞ்சி ஊத்து என்று கேட்பது போல் இருந்தது. இருபத்தொன்பதாம் நாள் காலைக் கஞ்சி பெரியப்பன் வீட்டில் முடிந்தது. மதியக் கஞ்சி மாமன் வீட்டில் முடிந்தது. இரவுக் கஞ்சி அவனுடைய வீட்டில். அதிகாலையில் மந்தையில் ஒருவன் செத்துக்கிடக்கிறான் என்ற செய்தி கேட்டு வீட்டிலிருந்து எழுந்து வந்தவன் அவன் பிறகு வீட்டிற்குள் போகவே இல்லை. அன்று இரவிலிருந்து ஊர்க்கஞ்சி ஆரம்பித்துவிட்டது. அதன் பிறகு இன்றுதான் வீட்டிற்குள் போனான். அவன் வீடு அவனுக்கு நிறையச் சொன்னது. ஏதோ ஒரு உண்மை அவன் வருவதறிந்து வீட்டுக்குள் மறைந்துகொள்ளப் பதுங்கியபடியே இருந்தது. ஆனால் பிறந்தது முதல் அவனை அறிந்து வைத்திருந்த வீடு பதுங்கும் உண்மையையும் சேர்த்தே அவனுக்குச் சொன்னது. நீண்ட நாட்களுக்குப்பின் வயிறு முட்டக் கஞ்சி

குடித்தான். இரவில் வந்து செத்து விறைத்தவன் படுத்த இடத்தில் படுத்தான். நேர் எதிர் மூலையில் அவனது வீட்டின் கீழக்கே இருந்த புங்க மரத்திலிருந்து ஆந்தைகள் எதுவும் அலறவில்லை. அவன் தெளிவடைந்தவன் போல அமைதி கொண்டு தூங்கினான். ஊர் பெரும் துக்கம் ஒன்றைத் தொண்டைக்குழியில் வைத்து விழுங்க முடியாமல் தவித்துக்கிடந்தது.

இரவின் தடயங்களை அழித்துக்கொண்டு மறுநாள் உதயமானது. கரிச்சானும் காகமும் குரல் கொடுத்து துக்கமான அந்த நாளைப் பார்க்கச் சொல்லி மனிதர்களை விடாமல் எழுப்பின. எதிர்கொள்ள முடியாத மனநிலையோடு ஒவ்வொருவரும் எழுந்து வெளியில் வந்தனர். சாவடியில் படித்திருந்தவர்கள் வேதனை மிக்க அந்த நாளை வேறு வழியில்லாமல் முழித்துப்பார்த்தனர். இடதுபுறம் நல்லையா படுத்துக் கிடந்த இடம் வெற்றிடமாக இருந்தது. ‘வெளியில் எங்காவது போயிருப்பான்’ என் நினைத்தபடி தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்தனர். ஆணும் பெண்ணும் மந்தையை நோக்கி வர ஆரம்பித்தனர். ‘வெளியில போனவே இன்னும் வல்லை’ எனச் சொல்லி மலையோரமாய் ஒருவன் பார்க்கப் போனான். அந்தப்பக்கம் இல்லையெனச் சொல்லி அவன் திரும்பிவந்தான். ‘சரி தோட்டந் தொரவு பக்கமா போயிருப் பானப்பா... போய்ப் பாருங்க’ எனச் சொல்லி அனுப்பி வைத்தனர். கொஞ்ச நேரத்தில் அவர்களும் திரும்பிவந்தனர். நல்லையா எங்கேயும் இல்லை. இந்த உண்மை ஊரைக்கொஞ்சம் கொஞ்சமாக உருமாற்றியது. பெரும் சோகத்தோடு எழுந்த ஊரைப் பயம் கவ்விப்பிடித்தது. ஊரே பதற ஆரம்பித்தது. எங்கே தேடியும் அவன் கிடைக்கவில்லை. முப்பது நாட்களாக அவன் மீது தளும்பியபடி இருந்த இரக்கம் அப்படியே கோபமாகவும் வெறியாகவும் மாறியது. ஏமாற்றப்பட்ட புலி போல் ஊர் உருமாறிச் சீறியது. மாத்தூரின் பெருங்கூட்டம் மறுபக்கமிருந்து மலையேறத் துவங்கிய நேரத்தில் சின்னிவீரன்பட்டி என்ன செய்தவென்று அறியாது திகைத்துக்கிடந்தது. நல்லையா ஊரின் மானத்தை பலியெடுத்துப் போய்விட்டான். மந்தைக் கல்லில் இரண்டாவது எழவு விழுந்து கிடந்தது.

சொக்கான் பாறைக்கு மாத்தூர் கூட்டம் முழுவதும் வந்த பிறகுதான் வேறு வழியில்லாமல் சின்னிவீரன்பட்டி மலையேற ஆரம்பித்தது. ஊரை மட்டும் விட்டு விட்டு எல்லோரும் மேலேறிப்போனார்கள். மைதானம் போல விரிந்து கிடந்த சொக்கான் பாறையில் முகத்தைத் தொங்கப்போட்டபடி சின்னிவீரன்பட்டிக்காரர்கள் வந்து நின்றார்கள். அவர்கள் நடந்ததைச் சொன்னபோது மாத்தூர்க்காரர்கள் எளக்காரமாய் சிரித்தபடி இருந்தனர். ‘பொழுதாகிக் கொண்டிருக்கிறது. பலிக்கு ஆளை ஒப்படை’ என்று மாத்தூர் பெரியவர் கேட்டார். நல்லையாவின் தம்பியை சின்னிவீரன்பட்டி கொடுத்தது. ‘இறந்துபோனது எளவட்டப் பய. அவனுக்கு உத்தியான எளவட்டத்த கொடுத்தாதான் ஏத்துக்குவோம்’ என்று மாத்தூர் சொன்னது. சொக்கான் பாறையின் கிழக்கு விளம்பில் பொழுது சாயும் வரை சின்னவீரன்பட்டி கூடிக் கூடிப் பேசியபடியே இருந்தது. கடைசியில் தெற்குத்தெரு ராசய்யாவை பலி கொடுப்பது என்று முடிவானது.

ரத்தம் திட்டுத்திட்டாக விழுந்தபொழுது ஊர் உயிரற்று மலையிலிருந்து சரிந்து வந்தது. ராசய்யாவின் இரண்டு மகன்களையும் கட்டியணைத்துக்

கதறியபடி பெண்கள் வந்துகொண்டிருந்தனர். மாத்தூர் கோபம் அடங்கி மேற்குச்சரிவில் இறங்கியது. சின்னிவீரன்பட்டி எதிர்பாராமல் தன்னைத்தானே பலி கொடுத்துக்கொண்ட வேதனையுடனும் அவமானத்துடனும் வந்தது. ராசய்யா பலி கொடுக்கப்பட்ட கணத்திலிருந்து ராசய்யாவின் இரண்டு மகன்களுக்கும் அவர்கள் தவறினால் ஊருக்கு நல்லையாவை பலியெடுப்பதற்கான உரிமை வந்துவிடுகிறது. மாத்தூர்க்காரனின் இளக்காரமான சிரிப்பு சின்னிவீரன்பட்டிக்கா ரர்களை ஒருநாள் இரவு கூட தூங்கவிடாமல் ஊர் ஊராக அலைய வைத்தது. எங்கு தேடியும் நல்லையா சிக்கவேயில்லை. பல ஆண்டுகளாக அலைந்து தவித்த ஊர் பொறுமை காத்து உட்கார்ந்த பொழுது அமணமலையின் சாராயப் பானையிலிருந்து பொங்கிவழிந்த உண்மை உறப்பனூர் வழியாக ஊர் வந்து சேர்ந்தது.

*

# 39

**வை**கை, கொட்டக்குடி ஆற்றங்கரைக்கு கண்டமனூரிலிருந்து பொம்மலு நாயக்கன் மந்தை வந்திருந்தது. முன்னைப் போல இல்லை, இப்போது தொட்டிகுடுப்புக்குக் கூட்டம் குறைந்துவிட்டது. மந்தைகளும் நாட்டில் அருகிப் போய்விட்டன. தூர தொலைவிலிருந்து யாரும் வருவதில்லை. ஊருக்குப் பக்கத்திலேயே கொண்டாடி விடுகிறார்கள். இப்போது ஆத்துக்குத் தெக்கே உள்ளவர்கள்தான் அதிகமும் இங்கே வருகிறார்கள்.

பொம்மலு போன வருஷம் மலையில் மாடு மேய்க்கும்போது பாம்பு கடித்துச் செத்துப்போனான். நாய்தான் ஊருக்கு வந்து ஆட்களைக் கூட்டிச் சென்றது. நரிகள் குதறிக் கொண்டிருக்கையில் போய்ப் பார்த்துத் தூக்கி வந்தார்கள். அவனது மூத்த சம்சாரம் வீரசின்னுவுக்கு இரண்டுபிள்ளைகள். அவ தங்கச்சி ரேணுகா சமைஞ்சி வளந்து நிக்கிற நிலயக்கண்டு சொக்கிப்போய், அவளை வெளியே கொடுக்க மனசில்லாமல் அவனே கட்டிக்கொண்டான். இரண்டு வருஷம் முன்னாடிதான் அந்தக் கல்யாணம் நடந்தது. பிள்ளை இல்லை. பொங்கல் வைக்க அக்காவும் தங்கச்சியும் பிள்ளைகள் கிழவிகளோடு சேர்ந்து வந்திருந்தனர்.

கொட்டக்குடி ஆற்றுக்குத் தெற்கே வருஷந்தோறும் இப்போதெல்லாம் ஒரு மாட்டுச் சந்தை நடக்கிறது. கிழக்குச் சீமையிலிருந்து சமுசாரிகளும் வியாபாரிகளும் வந்து மொய்ப்பார்கள். வெள்ளிக்கிழமை தோறும் பண்டங்கள் விற்கும் சந்தையும் தொடங்கிவிட்டது. போடி ஜமீன் கணக்கு முதலியார் வந்து சந்தையில் வாரக் காசு வசூலித்து விட்டுப் போவார்.

வடகரைப் பாளையம் இப்போது பெரியகுளம் ஜமீன் ஆகிவிட்டது. பக்கத்திலுள்ள லட்சுமிபட்டி கம்மவார் ஊர். மலையடிவார நிலங்களில் நல்ல விவசாயம் நடந்தது. பாகம் பிரிப்பதில் அண்ணன்களோடு ஏற்பட்ட தகராறில் விறைத்துக் கொண்டு வெளியேறிய சின்னாண்டு என்ற சின்னப்பெருமாள் நாயக்கர் மாட்டு வியாபாரி ஆனார். ஊரை விட்டு வந்து

தெற்கே அல்லிபட்டியில் குடியேறினார். அவர் மகன் ராமானுஜமும் ஆளானபிறகு அவரோடு சேர்ந்துகொண்டான். இப்போது ஊர் ஊராக அலைவது இவன் வேலை.

தொட்டிகுடுப்பில் வந்திருந்தவர்கள் மிக்கவாரும் ராமானு ஜத்துக்குத் தெரிந்தவர்கள் என்பதால் அன்று உற்சாகமாய்ச் சுற்றி வந்தான். அள்ளிக் கட்டிய கொண்டையும் முறுக்கு மீசையும் முகப்பருக்களும் அவன் கல்யாணத்துக்கு நிற்பதைக் காட்டின. காதில் கெம்புக் கடுக்கனும் நெற்றியில் கோபி நாமமும் வெற்றிலையில் சிவந்த வாயுமாக பயல் வல்லவேட்டுப் போட்டு வெள்ளையும் சொள்ளையுமாக நிற்கையில் ஏதோ ஜமீன் வீட்டுப் பிள்ளை என்றுதான் பார்க்கிறவர்கள் நினைப்பார்கள்.

ரேணுகாவுக்கு என்ன நினைப்பது என்று தெரியவில்லை; ஆனால் அவன் மீதிருந்து கண்களை மட்டும் விலக்க முடியவில்லை.

மற்ற வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு ராமானுஜம் கண்டமனூர் போய்ச் சேர்ந்ததுக்கு மாட்டு வியாபாரம் காரணமில்லை; அவளை மறுபடி ஒருமுறை பார்க்க வாய்க்குமா என்று ஏக்கம்தான்.

பொம்முலுக்குப் பிறகு மேய்க்க ஆளில்லை என்பதால் அவரது அண்ணன் மந்தையோடு சேர்த்துதான் மாடுகளை மலையில் விட்டிருந்தார்கள். வீட்டுக்கான பசுக்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதியை எல்லாம் விற்றுக் கழித்துவிட்டு நிலம் வாங்கும் யோசனையில் அந்த அவ்வா இருந்தது.

திண்ணையில் இருந்து அந்த அவ்வாவிடம் பேசிக்கொண்டிருந்தான். வேற்று ஆண்கள் வீட்டுக்குள் நுழையக் கூடாது.

வளையல்கள் சிணுங்க ஒரு கை அவனிடம் மோரை நீட்டியது. வாங்கியவாறே நிமிர்ந்து பார்க்கப் பயந்து அரைக்கண் பார்வை வீசினான். திரண்டு சிவந்த அவள் புஜத்தில் கரும்பச்சையாய் ஒரு கருடன் றெக்கை விரித்துக்கொண்டிருந்தது. வாய் வைத்துக் குடிக்காமல் அண்ணாந்து ஊற்றும் சாக்கில் தலை நிமிர்ந்தான். அவள்தான். அந்தமுகம் தான் அவனை இவ்வளவு தூரம் இழுத்து வந்தது.

எதிர்த் திண்ணையில் இருந்த அவ்வாவிடமிருந்து வெற்றிலை வாங்கிப் போட்டுக்கொண்டான். முக்கால்வாசி சாத்தியிருந்த கதவின் இடைவெளி வழியே பார்த்தபோது உள்ளே அவன் கண்ணில்படும் கோணத்தில் இருந்துகொண்டு அவள் எதையோ சுளகில் புடைப்பது தெரிந்தது.

நாலு மாடுகளைக் கொண்டுபோய் விற்றுவிட்டு வந்து பணம் கொடுத்துவிட்டு, மறுபடி நாலு மாடுகளைக் கொண்டுபோகிறேன் என்றபோது அவ்வா சம்மதித்தது.

கிளம்புமுன் சிறுகலயத்தை அவன் முன்னே நீட்டினாள். கம்மங் கஞ்சி. துவையலை அவள் விரல்களிலிருந்து அவன் வழித்து வாங்க வேண்டியதாயிற்று.

பின்னர் அந்த வீட்டுச் செவலை நாய்கள் இரண்டும் பழகிப் போயின. அவன் கொடுத்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடியும் வளையல்களும் அவளிடமிருந்தன.

ஒருநாள் அவன் திண்ணையில் இருந்தபோது மழை வந்தது. அந்த

அவ்வா கம்மங்காட்டில் களை எடுக்கப் போயிருந்தது. சாரல் அடிக்கும் என்று உள்ளே கூப்பிட்டாள். அடிக்கிற மழையில் யாரும் பார்க்கவோ, வீட்டிற்கு வரவோ வாய்ப்பில்லை என்பதால் துணிந்து உள்ளே போனான்.

அவன் மேலிருந்த மழைத்துளிகளை முந்தானையால் துடைத்தாள். அவன் தலையைத் துவட்டக் கையை உயர்த்தியபோது முந்தானை மேலும் விலகிக் காம்புகள் அவன் கண்களைத் தைத்தன. இறுக்கி அணைத்தான். ‘உன் அக்கா எங்கே?’

சமையல் கூடத்தைக் கண்ணால் காட்டினாள். புகைபடிந்த மர ஜன்னல் வழியாக அக்கா பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். தழுவிய கைகள் விலகவில்லை.

மழை வலுத்தது. மழைக்குள் யாரும் இங்கு வர முடியாது. அவசரமாக அவனை இழுத்துக்கொண்டு உள் அறைக்குப் போனாள்.

பிறகு அவள் அக்கா எதுவுமே சொல்லவில்லை என்றானதும் அவளுக்கு மேலும் தைரியம் வந்தது.

சுற்றிலும் நோட்டம் பார்த்து நேரம் தேர்ந்து வந்தான். தை பிறக்கும் முன்னே ஏழெட்டுமுறை வாசல் தாண்டி விட்டான். அக்கா பார்த்துக் கொண்டிருக்க அவளைத் தாண்டியே அவனை அழைத்துக்கொண்டு போனாள்.

தொட்டப்ப நாயக்கனூர் கல்யாணத்துக்கு அந்த அவ்வா கிளம்பிப் போன அன்று மதியத்துக்கு மேல் உள் அறையின் குலுக்கைக்குப் பின்னேதான் ஒளிந்திருந்தான்.

அன்றிரவு ராமானுஜம் கண்ணபிரானை மனசாரக் கும்பிட்டு வாழ்த்தினான். கொடுக்கிற கடவுள் கூரையைப் பிய்த்துக் கொண்டு மழையைக் கொட்டினார். ஒரு கை பத்தாமல் ரெண்டு கைகளாலும் ஏந்திக் குடித்தான். மழை விட்டபாடில்லை; மாறிமாறி அடிக்க பயல் வெள்ளத்தில் தத்தளித்தான்.

வெளியே குழந்தை அழுதபோது எழுமுடியாமலிருந்த அக்கா ‘நீ போய் பாப்பாவத் தூக்குடி’ என்றாள்.

*

# 40

**அன்று காலை தாதனூரெங்கும் செய்தி பரவியபடி இருந்தது.** காவலுக்குப் போனவர்கள் அதிகாலையில் ஊர் வந்து சேர்ந்தனர். களவுக்குப் போனவர்கள் பகல் முழுவதும் வந்துகொண்டேயிருந்தனர். வந்த ஒவ்வொருவரின் மீதும் இடி இறங்குவதைப்போல இந்தச் சேதி இறங்கிக்கொண்டேயிருந்தது. சின்னான் மலையிலிருந்து கீழிறங்கவில்லை. இருபத்தொன்பது நாள் அடிவாரத்திலே இருந்து மலையின் மீதிருந்த சொக்கான் பாறையைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் போல் இன்று மலையின் மீதிருந்து தாதனூரின் மந்தை வெளியையே பார்த்துக்கொண்டிருந்தான். ஊர் இதுவரை அனுபவித்திராத ஒரு வலியை அனுபவிக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. தாதனூர் வடிக்கும் கண்ணீரை முத்துமாலை யைப்போலக் கையில் வைத்து உருட்டிப்பார்த்தபடியே பகல் போய்க்கொண்டிருந்தது.

களவுக்குப் போய்விட்டு திரும்பி வந்ததும் சேதி கேட்டு ஆலமரத்தடியிலேயே உடைந்துபோய் உட்கார்ந்த மாயாண்டி பகல் முழுவதும் எழுந்திருக்கவே இல்லை. மழவாக்கட்டையில் - செவ செவன்னு சூரியன் மறையும் நேரம் - எழுந்து அமண மலையின் மீதேறிப் போனான். மலையின் வெளியெங்கும் சின்னானைத் தேடியபடி நடந்தான். தெற்கே அவன் நீண்டநாள் தங்கியிருந்த மலைப் புடவுக்குள் இருப்பது தெரிந்தது. மாயாண்டிக்கு உள்ளுக்குள் நடுக்கம் கொடுத்தது. மெல்லத் தயங்கியபடியே புடவுக்குள் போனான். தேவிபட்டினம் காட்டுக்குள் மகிழ மரத்தடியில் தனது ரகசியம் கண்டறியப்பட்டுவிட்ட சோர்வுடனும் கவலையுடனும் அமர்ந்திருந்த சின்னானைப் பல ஆண்டுகளுக்குப் பின்பு பார்த்தான். ஆனால் அன்று மாயாண்டிக்குள் இருந்த சந்தோஷம் எதுவும் இன்று இல்லை. தான் மட்டும் கண்டறிய நினைத்த ஒரு ரகசியம் இன்று ஊரெங்கும் சூறையாடப்பட்டுவிட்டதே என்ற கொதிப்புதான் அவனுக்குள் இருந்தது. அவனால் சின்னானிடம் எதுவும் பேசமுடியவில்லை. நீண்ட நேரம் புடவுக்குள் கனத்த மவுனமே நீடித்தது. ‘அவன் பெரும்

திறமைசாலியாக இருக்கிறான். ஆனால் அவனது பதற்றம் களவை நிபுணத்துவத்திற்கு வரவிடாமல் தடுக்கிறது' என்று அவனைப்பற்றி ஆரம்பத்தில் மாயாண்டி கணித்தது இன்றுவரை பொருந்துவதாக இருந்தது. கடைசியாக அவன் உசுப்பிவிட்ட பூனை புலியாக அவனையே விழுங்க வந்துகொண்டிருந்தது. இருண்ட வெளியில் வடவேங்கடமலை வரை நிலத்தின் வாசனையை வைத்தே அலைந்து திரிந்த இருவரும் மலைப் புடவுக்குள் இருளின் பிடியை விட்டு கீழே உதிர்ந்து கிடந்தனர்.

முப்பதாம் நாள் அதிகாலை சின்னிவீரன்பட்டிக்கு விடிந்ததைப் போலவே துக்கம் தாளாமல் தாதனூருக்கு விடிந்தது. நேரம் ஆக ஆக தாதனூர் திணறியபடி இருந்தது. மேற்கே கண்மாயின் மீதேறி சின்னிவீரன்பட்டி ஆட்கள் வந்துகொண்டிருந்தனர். நல்லையா ஓடிப்போன மறுநாள் இதே போல ஊரே திரண்டு தாதனூருக்கு வந்தது. 'ஆத்தா பொறந்த ஊருன்னு எப்ப வந்தாலும் அவன் பிடிச்சு ஒப்படப்போம்' என்று தாதனூர் வாக்குக் கொடுத்து அனுப்பிவைத்தது. பல ஆண்டுகள் தேடித்திரிந்த வெறியேறிய கால்கள் கண்மாய்க்கரையின் மீதேறி ஊர் மந்தைக்கு வந்தன. தாதனூரின் மந்தையில் இப்படி ஒரு இறுக்கம் இதுவரை இருந்ததில்லை. பலி விஷயத்தில் கள்ளநாட்டு வழக்கத்தை மீற தாதனூருக்கு உரிமை இல்லை. எதைக் கொண்டேனும் இதைத் தவிர்க்க முடியுமா என யோசிப்பதற்கே வழியில்லை. எதையாவது மாற்ற நினைத்தால் தாதனூரில் பிறந்து சின்னிவீரன்பட்டியில் வாக்கப்பட்டுள்ள பதினாறு பெண்களின் நிலை என்னவாகும் என்று தெரியும். தாதனூர் பெரும் துக்கம் கொண்டு வாயடைத்து நின்றது.

மந்தையில் இருந்து மகனை அனுப்பி வைத்தனர். காக்கையான் அப்பன் இருக்கும் இடத்தைத் தேடி மலைப்புடவுக்கு வந்தான். புடவுக்குள் சின்னானும் மாயாண்டியும் கிடந்தனர். காக்கையன் வந்ததும் அவனிடம் எதுவும் கேட்காமல் அவன் கையைப் பிடித்துக்கொண்டு சின்னான் புறப்பட்டான். சுதாரித்து எழுந்த மாயாண்டி அவன் பின்னால் நடந்தான். சின்னானிடம் கேட்கவேண்டிய ஒரு கேள்வி மாயாண்டிக்கு பாக்கி இருந்தது. 'நீ சாவுக்கு பயப்படுறவெ இல்ல, பின்ன எதுக்கு ஊரவுட்டு ஓடுன?' என்ற கேள்விதான் அது. அந்தக் கேள்வியை இரவு முழுவதும் மாயாண்டி கேட்டுப்பார்த்துவிட்டான். சின்னான் வாயைத் திறக்கவேயில்லை. மலைப்புடவை விட்டு கீழே வந்ததும் மாயாண்டி நின்றுகொண்டான். அவனால் ஊருக்குள் வரமுடியவில்லை. அவன் நின்றுவிட்டதை உணர்ந்த சின்னான் கடைசியாக அவனிடம் சொன்னான். 'யாருக்கும் சொல்லமாட்டேன்னு ஏ ஆத்தாளுக்கு வாக்கு கொடுத்துட்டேன். அதனாலதான் ஓங்கிட்ட சொல்ல முடியல' என்று சொல்லிவிட்டு மந்தையை நோக்கி நடந்தபொழுது மாயாண்டி அப்படியே நின்றபடி அவனைப் பார்த்துக்கொண்டிருந்தான். அன்று எவன் என்று தெரியாமல் தேடிக் கண்டுபிடிக்க, மாயாண்டி தனித்துக் களவுக்குப் போனதன் வலி தாளவில்லை.

மந்தைக்கல்லிலும் அதை ஒட்டி கிழக்கிலும் ஆண்கள் எல்லாம் நின்றுகொண்டிருந்தனர். அதற்கு எதிர்ப்பக்கமாக பெண்கள் எல்லாம் 'ஏ...ஆத்தே...அப்பே...' என பெருங்குரலெடுத்து கத்தி அலறிக்கொண்டிருந்தனர். எதிரில் ஐந்து வயதுப் பையன் காக்கையனுக்குப் பின்னே இரண்டடி தள்ளி சின்னான் நடந்துவந்தான். பல ஆண்டுகளாக

ஓடித்தவித்த கால்கள் தளர்ந்து போய் வந்தன. அவன் நேராக மந்தைக்கு முன்னால் இருக்கும் மைதானத்திற்கு வந்த சடச்சி பொட்டல் இருக்கும் தெற்கு வெளி பார்த்து மண்டியிட்டு அமர்ந்தான். ‘ஏ...ஆத்தே...’ எனப் பெண்கள் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறினர். அந்தக் கூடத்திற்குள் செல்லாயி எங்கேயிருக்கிறாள் எனத் தெரியவில்லை. ஆண்கள் எல்லாம் அப்படியே நின்றிருக்க சின்னிவீரன்பட்டி ராசய்யாவின் மகன் பெரும் வீச்சரிவாள் ஒன்றைக் கையில் ஏந்தியபடி மந்தை வெளியின் நடுமையத்திற்கு அவனை நோக்கி நடந்தான். சொக்கான் பாறையில் என்ன நடக்கிறது என்று பார்க்க அப்பனின் தோளிலே உட்கார்ந்து தலைமுடையை இறுகப் பிடித்தபடி மேலேறி வந்த அவன் என்ன நடக்கிறது என்று தெரியாத பெரும் குழப்பத்திற்கும் சத்தத்திற்கும் பின் கீழிறங்கி வந்தபொழுது அப்பனின் தலையற்ற முண்டத்தை தூக்கிக்கொண்டு ஊர் இறங்கி வந்தது. அன்று அவன் கை விரல்கள் தவித்துத் தேடியபடி இருந்தன. இன்று அந்த விரல்கள் பெரும் வீச்சரிவாளின் பிடியை இறுகப் பிடித்துக்கொண்டிருந்தன.

மண்டியிட்டபடி இருந்த நல்லையாவை தலையைக் குனியும்படி அவன் சொன்னான். சின்னான் கைகள் இரண்டையும் பின்னால் இறுகப் பிடித்து தலையை நிமிர்த்தி எதிரே இருந்த சடச்சி பொட்டலையே பார்த்துக்கொண்டிருந்தான். நரம்புகள் புடைத்தபடி இருந்தன. விரிந்த மார்பில் நெஞ்சுக்கூடு தூக்கிநின்றது. பிதுங்கிய கண்கள் வெறித்துப்பார்த்தன. தலையைக் குனியும்படி மீண்டும் அவன் சொன்னான். சடச்சி பொட்டலுக்கு முன்னால் ஆத்தா ஒச்சாயியோடு நின்றுகொண்டு மொச்சையை எடுத்து வீசியபடி இருந்தாள். மீண்டும் மீண்டும் தலையைக் குனியும்படி அவன் சொல்லிக்கொண்டேயிருந்தான். சடச்சி பொட்டலுக்கு எதிரே நின்று ஒச்சாயியின் கையைப் பிடித்தபடி மொச்சையைத் தூக்கி இவன் எறிந்துகொண்டிருந்தான். அவன் அரிவாளை எதிர்ப்புறமிருந்து சங்குக்குழியில் இறக்கினான். நறுச்செனத் தண்டெலும்பை வெட்டி தலையைப் பின்புறமாக உருட்டியது. ரத்தம் பீறிட்டு அவன் முகத்திலே தெறித்தது. குபுகுபுவெனப் பொங்கி உடலெங்கும் வழிந்து தாதனூருக்குள் இறங்கியது. சடைமுடியைப் பிடித்து தலையைத் தூக்கிக்கொண்டு தாதனூரின் எல்லையை அவர்கள் கடக்கும் வரை தலையற்ற முண்டம் கீழே விழவில்லை. பின்புறம் இருந்த கையில் விரல்கள் காற்றைத்துழாவியபடி இருந்தன. தாதனூர் ஏதாவது பிடி கொடுக்காதாவென அவன் தேடியபடி இருந்தான். அவர்கள் தாதனூரின் எல்லையைக் கடந்ததும் உடல் சடச்சி பொட்டலை பார்த்தபடி முன்புறமாகக் கீழே விழுந்தது.

*

# 41

**கண்டமனூரில் வண்ணாத்தி அவ்வாயைத் தனியே சந்தித்து சேதி** சொன்னாள். ‘சின்னப் பாப்பாவுக்கு நாள் தப்பிருச்சி.’

வீடு திரும்பும் முன்னே அவ்வா ஆளை ஊகித்து விட்டாள். ரேணுவிடம் சொன்னாள் ‘இத இத்தோட விட்டுரு. வெளிய தெரிஞ்சா உன்னைக் கொன்னே போடுவாங்க.’

அக்கா வந்து அவள் வயிற்றைத் தடவிப் பார்த்தாள். அக்கா மடியில் விழுந்து அவள் தேம்பி அழுதுகொண்டிருந்தாள். ‘சரி விடு. நாளைக்கு மருத்துவச்சியக் கூட்டி வாறேன்’ என்றது அவ்வா.

ராமானுஜம் அடுத்துமுறை வந்தபோது ‘இனி இந்த திசையில உன்னக் கண்டா வெட்டிப் போடுவேன்’ என்று விரட்டிவிட்டது.

குச்சி வைத்துக் கலைத்து, பிறகு அவள் உடல் தேறியதும் எல்லாம் நல்லபடியாய் முடிந்தது என்றுதான் அவ்வா நினைத்திருந்தது.

**ம**ருத்துவச்சியின் இளையமகள் போன மாசம்தான் ஆளானாள். வெளியூர் எல்லாம் தேடித்திரியும் கண்டமனூர் ஜமீன் சேதி கேள்விப்பட்டு ஆள் அனுப்பிப் பேசிப் பார்த்தார். ‘சின்னப்புள்ள. நறுங்கிப்போயிருக்கா. கொஞ்சம் வளரட்டும்‘ என்று அம்மாக்காரி தட்டிக் கழித்தாள். அவரா விடுகிறவர்? விடாது ஆள் வந்து பேசியது, நெருக்குவட்டில் சம்மதித்தாள். அப்போதைக்கு ஐந்து பவுன் கை மாறியது. பின்னால் கல்யாணச் செலவை ஏற்பதாக ஜமீன் ஒப்புக்கொண்டார்.

கிழக்கே உள்ள மாந்தோப்பில் நள்ளிரவில் ஒரு மரத்தில் சாய்ந்து அவள் உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் காவல் குடிசைக்குள் மகள் திமிறி மறுத்துக் கத்தும் கூக்குரல் கேட்டது. தாய் எழுந்து நிலை கொள்ளாமல் நின்று தவித்தாள். மகள் குடிசைக் கதவைத் தள்ளிக்கொண்டு அலங்கோலமாக வெளியே ஓடிவந்தாள். ஜமீன் பின்னாலேயே பாய்ந்து வந்து எட்டிப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்றான். தாய்க்காரி உள்ளே ஓடி அவனைப் பற்றி

இழுத்தாள். ‘சாமி... விடுங்க. பாவம் பச்சப்புள்ள...’

மகள் ‘அம்மா... அம்மா...’ என்று கத்தி அழுதாள். தாய் அவன் காலில் விழுந்தாள். உதைத்துத் தள்ளி ‘வெளிய போடீ...’ என்றவன் மேலும் அசிங்கமான இழிசொற்களால் தாயையும் மகளையும் வைதான்.

‘நீதான்டா ஈனச்சாதிப் பய. உன் ஊருப் பொம்பளைக எல்லாம் ஒழுங்கா? எத்தனை பேரு பத்தினினு குச்சி வெக்கிற எனக்குத் தெரியாதா?’

மகளை விட்டுவிட்டு இவள் கழுத்தைப் பிடித்து நெரித்தான் ‘சொல்லுடி...’

**ரே**ணுகா என்று தெரிந்ததும் அவன் ரத்தம் கொதித்தது. ஆசையிருந்தும் அங்கே படியேறாமல் விட்டிருந்தான். அந்த அவ்வா கடுசான ஆள். யாரென்று பார்க்காமல் வெட்ட வரும். எவன் என்று கண்டுபிடிக்கும் ஆர்வமும் அவன் மீது பொறாமையும் கோபமும் அவனுக்குள் தீயாய் எரிய, விடிந்தும் விடியுமுன்னே பஞ்சாயத்தைக் கூட்டிவிட்டான். சாதிக்கார ஆண்கள் எல்லோரும் மாட்டு வியாபாரிதான் என்று ஒருமுகமாக நம்பினார்கள். வேறு யாராகவும் இருக்க வாய்ப்பில்லை. அவன் கம்மவாரு என்ற தெரிந்ததும் ஜமீன் மேலும் துள்ளினான். அவனை ஏண்டா ஊருக்குள்ள விட்டீங்க என்று ஆண்கள் எல்லோரையும் திட்டித் தீர்த்தான்.

தீர்ப்பை அவன் வாயால் சொல்லத் தேவையில்லை. தானே அது குல வழக்கப்படி நடக்கும்.

பத்திருபது வண்டி கட்டிக்கொண்டு இளவட்டங்கள் எல்லாம் கத்தி கம்புகளோடு அல்லிபட்டிக்குப் போனார்கள். ராமானுஜம் பெரியப்பா மகள் சடங்குக்கு லட்சுமிபட்டி போயிருப்பது தெரிந்தது. சின்னாண்டு நாயக்கர் என்ன ஏது என்றுபுரியாமலே அடி வாங்கினார்.

சடங்கு வீட்டில் நல்ல கூட்டம் இருந்தது. இவர்கள் போனவுடனேயே ராமானுஜத்தைப் பிடித்து அவன் துண்டால் கையைக் கட்டி இழுத்தார்கள். களேபரமும் கூச்சலுமாய்க் கிடந்தது. உள்ளூர் இளவட்டங்கள் கம்புகளோடு வந்து தெருவில் நின்று மறித்தார்கள். போனவர்கள் ‘கண்டமனூர் பஞ்சாயத்துக்கு வந்து பேசுங்க’ என்று மட்டும் சொன்னார்கள். கொல்லவாருகள் வந்த வேகத்தைப் பார்த்து விஷயத்தை ஊகித்த ஒரு உள்ளூர் பெருசு, ராமானுஜத்தை நெருங்கிக் கேட்டது. ‘பொண்ணு சமாசாரமாடா?’ அவன் தலைகுனிந்து நின்றான். வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர்களை முன்னால் விட்டு பின்னாலேயே வண்டி கட்டிக்கொண்டு ஊர்ப் பெரியவர்கள் கிளம்பினார்கள்.

**ரே**ணு அவ்வாவின் சொந்தப் பேத்தி இல்லை. எர்ரஜக்க நாயக்கனூரில் இருந்து பேரனுக்கு வாக்கப்பட்டு வந்தவள்தான். ஆனால் அவள் மேல் பிரியம் உண்டு. எப்பாடு பட்டாவது அவளைக் காப்பாற்றி விடவேண்டும் என்று அவ்வா ஜமீன் அரண்மனையை நோக்கிப் போனது.

அடுத்தவன் வந்து தொட்டுவிட்டான் என்பதற்குத்தான் இந்த ஆட்டம் போடுகிறான்கள்! உள்ளுக்குள் ஆயிரம் நடக்கிறது. அதை எவனும் கேட்பதில்லை. இந்த ஊருக்கு வாக்கப்பட்டு வந்து ஐம்பதேழு வருஷமாகிவிட்டது. சமைஞ்ச மறு வருஷமே மூன்றாந் தாரமாயை வந்து

சேர்ந்தாள். ரெண்டாந் தாரம் செத்துப் போயிருந்தாள். வந்த புதுசில் ஒண்ணுந் தெரியாது. கொழுந்தன்கள் பாடாய்ப் படுத்தினான்கள். அப்புறம் விவரம் தெரிந்து தெளிவடைந்து விட்டாள். நல்லவேளையாக மூத்த மகராசி இவளுக்கு அனுசரணையாகவே இருந்தாள். பிறகெல்லாம் இவள் விருப்பப்படி மட்டுமே இணங்கத் தொடங்கினாள். பிள்ளைகள் பிறந்தன. வீட்டையே ஆட்டிப் படைத்தாள். அவரது தாயாதிகளில் ஒருவனான வீரமல்லு மேல் ஆசைப்பட்டாள். தயங்கவேயில்லை. வீட்டுக்குள்ளேயே அவனைக் கொண்டுவந்தாள். எவனும் எதுவும் பேசமுடியவில்லை. அப்புறம் மல்லுநாயக்கன் வேறுபக்கம் பாய்ந்தான். பிறகும் நாலுபேர் இவளுக்காக வீடேறி வந்திருக்கிறான்கள். பாவம் ரேணு! சின்னப் பெண்... கொப்பும் குலையுமாய்ப் பூத்து நிற்கிறாள். இந்த அழகுக்கு எப்படியெல்லாம் வாழவேண்டியவள்! அந்தக் காலத்தில் இந்த ஊரில் நாற்பது வயசுக்காரி பேரன் பேத்தி எடுத்தவளைத் தூக்கிக் கொன்றிருக்கிறான்கள். சுருளிபட்டி ஏவாரி எவனோ கவுன்டனோடு போனதுதான் அவள் செய்த தப்பு. ஊருக்குள்ளேயே ஆட்டம் போட்டிருந்தால் ஒன்றுமில்லை.

அவ்வாவைக் கண்டதும் ஜமீன் கொஞ்சம் பம்மினான். முதலில் அவனைத் திட்டித் தீர்த்தது. பிறகு ரேணுவின் தப்பை ருசுப்பிக்கச் சொல்லி ஒத்தக் காலில் நின்றது.

'இப்ப அந்தக் கம்மாண்டுப் பயலைக் கொண்டு வந்துருவாங்க. அவங்கிட்டயே கேப்போம்' என்று அவன் மேலேறியதும் அவ்வாவின் சுதி இறங்கியது. புலம்பிக் கொண்டு வீடு திரும்பியது.

**ரா**மானுஜத்தைக் கொண்டுவந்தவுடன் அவனை ஒளித்து வைத்தார்கள். லட்சுமிபட்டிக்காரர்களை எதிர்பார்த்து சபா மண்டபத்தில் கம்ப்ளியை விரித்து ஜமீன் அதில் உட்கார்ந்து கொண்டான். அவர்கள் வந்தார்கள். உட்காரக்கூட சொல்லவில்லை. நிற்க வைத்தே கேட்டான் 'எதுக்கு வந்தீங்க?'

அவர்கள் பணிந்து நின்றார்கள். எதுவும் பேசவில்லை. உள்ளூர்ப் பெரியவர் ஒருவர் வந்தவர்களை உட்காரச் சொன்னார். மோரைக் கொடுத்து வெற்றிலைத் தட்டை முன்னே வைத்தார்கள். கண்டமனூர்ப் பெருசுகள் சற்றுநேரம் சம்பிரதாயமாகப் பேசி இறுக்கத்தைக் குறைத்தனர்.

'மன்னிச்சு விடணும்' என்பதைத் தாண்டி அவர்கள் எதுவும் கேட்கவில்லை.

'கொல்லவாரப் பத்தி தெரிஞ்சுதான் பேசுறீங்களா?' என்றான் ஜமீன்.

விஷயத்தை ஆறப்போட விரும்பிய லட்சுமிபட்டிக்காரர்கள் 'பெரியகுளம் ஜமீன்தார் வந்துரட்டும். அப்புறம் பேசுவோம். அது வரைக்கும் தண்டனையை நிறுத்தி வைக்கணும்' என்று கேட்டுக்கொண்டார்கள்.

'காப்புகள்லாம் ஒண்ணு சேந்துக்கிட்டு வாறீங்களாடா? பலிஜனுக்குப் பாளையம் கொடுத்ததே தப்பு. போயி கவரைப் பொண்ணைப் பிடிக்க வேண்டியதுதானே? கம்பளப் பொண்ணுதான் வேணுமாக்கும்!' என்று ஜமீன் கத்தினான்.

அப்போதுதான் நல்லாண்டு நாயக்கருக்கு ஒரு தீர்வு பொறி தட்டியது. நாலு பக்கமும் பார்த்து நாட்டு நடப்பை அனுசரித்து யோசித்துப் பேசுகிறவர்

அல்ல அவர். யோசித்தும் என்ன ஆகப்போகிறது! லட்சுமிபட்டி பஜனை மடத்தில் படுத்துக் கிடக்கும்போது இளவட்டங்கள் இவரைக் கேலி செய்வார்கள். ‘பெரியகுளம் கடைவீதிப்பக்கம் போகமுடியலப்பா. நம்ம எல்லாரையும் நல்லாண்டு மாதிரியே நெனச்சு கவரைகள் கிண்டல் பண்றானுக’ என்பார்கள்.

உண்மையில் அது நல்ல யோசனைதான். அது யாருக்குத் தெரிகிறது? நல்லாண்டு சொன்னார் ‘அந்தப் பொண்ண வேணா நாங்க கூட்டிட்டுப் போறோம். நம்ம பயலுக்கு நாலு அடியப் போட்டு அனுப்பி விடுங்க.’

கெடுத்தாண்டா நல்லாண்டு என்று வந்தவர்கள் பயந்தபோதே, சடாரென்று கம்பளத்திலிருந்து எழுந்து ஜமீன் கோபாவேசனானான். ‘ஏன்டா, கலப்பை பிடிக்கிற பயகளுக்கு கொல்லவாரு பொண்ணுகேக்குதோ! உங்களை உக்கார வைச்சுப் பேசுன என்னைச் செருப்பால அடிக்கணும்’ என்றவன் தொடர்ந்து காப்பு பெண்களைப் பற்றிய தெலுங்குப் பழமொழிகளுக்குள் புகுந்தான். அதை அவன் தனது வசைச் சொற்களோடு சேர்த்துச் சொன்னபோது அர்த்தம் எதிர்மாறாகி ரசாபாசமாகிப் போனது. கண்டமனூர்க்காரர்கள் அவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனார்கள்.

மற்றவர்கள் லட்சுமிபட்டிக்காரர்களைச் சாப்பிடக் கூப்பிட்டார்கள். அவர்கள் மறுத்துக் கிளம்பியபோது, கை நனைத்து விட்டுத்தான் போகவேண்டும் என்று பிடிவாதமாக சமையல் கூடத்திற்குள் கொண்டு போனார்கள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது தூரத்திலிருந்து அலறல் சத்தம் கேட்டது போலிருந்தது. அது ஒரு பெண் குரல் என்பதை உணர்ந்துவிட்ட ஒன்றிரண்டு பேர் மேலும் சாப்பிட முடியாமல் சோற்றை அளைந்து கொண்டே அமர்ந்திருந்தனர்.

லட்சுமிபட்டி வண்டிகள் ஒருமணி நேரம் கழித்துக் கிளம்பின. ஊர்மந்தையில் ஒரு தீவனப் படப்பு எரிந்துகொண்டிருந்தது. சுற்றிலும் பத்துப்பேர் நின்றிருந்தார்கள். நல்லாண்டு நாயக்கர் ‘நாராயணா... நாராயணா...’ என்று வானை நோக்கிக் கை உயர்த்தி இறைஞ்சிய பின் படப்பைப் பார்த்துக் கும்பிட்டார். விஷயம் அவருக்கே விளங்கிவிட்டது.

சபை கலைந்தவுடனே உள்ளே போன ஜமீன் அந்தக் கம்மவாரு பையனைக் கொண்டுபோகச் சொல்லிவிட்டான். லட்சுமிபட்டி போகும் பாதையில் வைகையை நோக்கி கண்டமனூர் இளவட்டங்கள் வண்டிகளை விரட்டிப் போனார்கள். கண்ணைக் கட்டிருந்த ராமானுஜத்தை இறக்கி வைகை மணலில் நடத்திக் கொண்டுபோனார்கள். பங்குனி மாதத்தில் தண்ணீர் ஓரத்தில் மட்டும் ஓடியது.

ராமுப் பகடையிடம் அவனை ஒப்படைத்தார்கள். பகடாலுவாரு என்பது தமிழ்நாட்டில் மருவி பகடையாகி விட்டது. மற்றக் கொல்லவாருகள் எல்லாம் கருகமணி அணியும்போது இவர்களுக்கு மட்டும் செம்மணி. அந்தஸ்து மிக்க பகடாலு என்ற செம்மணி. ஆதி காலத்தில் தீர்ப்பு வழங்குவதும் தண்டிப்பதும் மூத்த குடியினரான இவர்கள்தான். குலதெய்வத்தையே கொன்று தின்றபிறகு தீர்ப்பு எப்படி வழங்குவது? ஆனால் தண்டிக்கும் கடமையை மட்டும் இவர்களிடமே விட்டு வைத்திருக்கிறார்கள்.

நீரில் மூச்சு முட்டி மரித்த ராமானுஜத்தின் உடல் லட்சுமிபட்டி போகும் பாதை மேல் கிடந்தது.

*

# 42

**ஒரு வாரத்தில் கும்பினிச் சிப்பாய்கள் பத்துப் பேர் குதிரைகளில் வந்து** கண்டமநாயக்கனூரில் இறங்கி, ஜமீனைத் தேடினார்கள். மாந்தோப்புக் குடிசையில் பகலிலேயே சரசத்தில் இருந்தவன் அப்படியே மலை ஏறி ஒளிந்துகொண்டான். இரண்டு சிப்பாய்கள் மட்டும் திரும்பிப்போக, எட்டுப் பேர் அங்கேயே தங்கியிருந்து குதிரைவாலிச் சோறும் கோழிக்கறியும் சாப்பிட்டு விட்டுத் தாம்பூலம் தரித்துத் தூங்கி எழுந்தார்கள். வேறு பாளையக்காரர்கள் யாரும் கண்டமனூர்க்காரனைப் பற்றிக் கவலைப்படவில்லை; அவனை யாருக்கும் பிடிக்காது.

மதுரை மாவட்டத்தில் கம்மவாருகள் மிகக் குறைவு. ஆங்காங்கே சிதறிக் கிடந்தார்கள். விஜயநகர, மதுரை அரசுகளின் வரலாற்றில் எந்தப் பங்கும் இல்லாததால் முந்தைய அரசிலும் முக்கியத்துவம் பெறவில்லை. ஏரும் கையுமாக அமைதியாக வாழ்ந்தார்கள். இந்தப் பிரச்சினையைக் கையாள முடியாமல் அப்படியே விட்டு விட்டார்கள்.

கண்டமனூர்க்காரனுக்குச் சாப்பாடு இன்னும் மலைக்கு மேலேதான் போய்க்கொண்டிருந்தது.

ஆனால் பெரியகுளம் ஜமீன்தார்தான் காட்டிக் கொடுத்து விட்டார் என்று செய்தி பரவியதும் பிரச்சனைக்கு வேறுமுகம் கிடைத்துவிட்டது. மேல மலை ஓரமெல்லாம் இதே பேச்சாகிவிட்டது. வதந்திகள் பரவின. தன் கௌரவத்தைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு பெரியகுளம் ஜமீன் தள்ளப்பட்டார்.

**தி**ருப்பரங்குன்றம் சந்நிதித் தெருவெல்லாம் கூண்டுவண்டிகளாக நின்றிருந்தன. கோவிலில் விசேஷம் ஏதுமில்லை. ஆயிர வைசிய மண்டபத்தில்தான் கூட்டம். முன்னாள் மேற்குப் பாளையக்காரர்கள் அனைவரும், தெலுங்குப் பிரமுகர்கள் எல்லோரும் அங்கு கூடியிருந்தனர். இம்மிடி நல்லபெருமாள் செட்டியார்தான் ஏற்பாடு செய்திருந்தார். இம்மிடி

தெலுங்கு சாகித்யத்தில் புலமை மிக்கவர். மதுரையின் பெரிய மனுஷன்.

இரவு விருந்துக்குப் பிறகு கூட்டம் கூடியது. தாம்பூலத் தட்டுகளும் எச்சில் பணிக்கங்களும் சுற்றிலும் இருந்தன.

திருவேங்கடநாதனைத் துதித்து இம்மிடி பாடினார். பிறகு தெலுங்கு ராமாயணத்திலிருந்து பட்டாபிஷேகப் பாடல்கள் இரண்டைப்பாடி முடித்ததும் கூட்டத்தைத் தொடங்கினார்,

உபசாரப் பேச்சுகள் முடிந்ததும், கம்பளத்தார்கள் எடுத்தவு டனேயே கண்டமனூர்க்காரனைக் கைவிட்டார்கள். அவனுக்காகப் பேச யாரும் தயாரில்லை; ஆனால் கொல்லவாரு - காப்பு முரண்பாடுகளை ஆதியிலிருந்து ஆரம்பித்தார்கள். பேச்சு வடுகநாட்டில் பழைய காலத்து சம்பவங்களையே சுற்றி வந்தது; அரவ நாட்டுக்குள் நுழையவில்லை. பக்கத்திலிருந்து பார்த்தவர்கள் போல் பேசினார்கள். இம்மிடிக்குப் பக்கத்திலிருந்த செட்டியார்கள் இருவருக்கு காப்பு என்றால் என்ன என்றே புரியவில்லை. அவரிடம் மெதுவாக விசாரித்தார்கள். அப்போதுதான் இம்மிடிக்கு தலைமுறைகளுக்கும் காலத்துக்கு மிடையே ஏற்பட்ட இடைவெளி உறைத்தது. உடனே கம்பளத்தார் களைப் பார்த்துக் கேட்டார் ‘என்னப்பா, எந்தக் காலத்துல இருக்குறீங்க? இப்ப வெள்ளக்காரன் ஆண்டுக்கிட்டிருக்காங்கறதாவது தெரியுதா? காப்புக பிரிஞ்சி போயி எவ்வளவு காலமாச்சு! ருத்ரம்மா காலம்... அது ஆச்சி அறுநூறு வருஷம்! அவங்களே மறந்து போயிட்டாங்க. நீங்க இன்னும் அதையே சொல்லிக் கிட்டிருக்கிறீங்க...’

போடி ராஜு நாயக்கர் மடக்கினார் ‘எங்க சில்லவாரு வல்லக் கவாரு மாதிரிதான்... அப்புறம் என்ன? கம்மவாருக்காக ஏத்துக்கிட்டு இப்ப ஏன் இவங்க வரணும்? இல்ல, பாளையங்க போயிட்டதால எங்க கை தாந்து போச்சின்னு நெனைக்கிறாங்களா?’

வெலமர் தலைவர் கோவிந்த நாயக்கர் சொன்னார் ‘இப்ப வேற வேற சாதிகளாகிப் போயிட்டோம். ரெட்டிமாருக்கும் எங்களுக்கும் கம்மவாருக்கும் எந்தத் தொடர்புமில்லை. நீங்க எங்களுக்கே தெரியாத கதையெல்லாம் இப்ப இழுத்து விடுறீங்க.’

இம்மிடி யோசித்தார். இந்தப் பேச்சுகள் எல்லாமே உண்மைதான். கொல்லவாரு குலங்கள் இணைந்து நிற்க காப்பு குலங்கள் விலகிச் செல்வதன் காரணத்தைப் பார்த்தால் விஷயம் பண்பாட்டுச் சிக்கல்களுக்குள் போகும் என்பதால் பேச்சை சுமுகமாக முடிக்கக் குறுக்கு வழி தேடினார். வடுக நாட்டில் காப்பு - கொல்லவாரு இளவரசிகள் கொள்வினை கொடுப்பினைகளில் குறுக்குமறுக்காகப் போயிருப்பதை சாகித்தியத்திலிருந்து ஏழெட்டு உதாரணங்கள் காட்டிச் சொன்னார். மதுரை ராணிகளில் ஏறத்தாழ எல்லோருமே காப்பு பலிஜர்களாக இருந்தது இப்போது அவரது பேச்சுக்கு சாதகமாகி வந்தது. ‘சரி, பழசில் என்ன மனவருத்தங்கள் இருந்தாலும் மறந்துவிட்டு இனி ஆகவேண்டிய கதையைப் பார்ப்போம்’ என்று முடித்தார்.

போடி ராஜுநாயக்கர் சொன்னார் ‘வெள்ளைக்காரனிடம் காட்டிக் கொடுத்தது தப்பு. எதுவாக இருந்தாலும் முதலில் எங்களைக் கூப்பிட்டுப் பேசியிருக்க வேண்டும். முதலில் இதை ஒப்புக் கொள்ளுங்கள்.’

திண்டுக்கல் விஜயநாராயண ரெட்டி, தான் கம்மவார்களைக் கூட்டிக்கொண்டு போய் கலெக்டரிடம் பேசியபின் பிராது எழுதிக்கொடுத்ததாகச் சொன்னார்.

‘செட்டியாரே...’ என்று கூப்பிட்ட ராஜு நாயக்கர் அவர் நிமிர்ந்து பார்த்ததும், சிரித்தார்.

ரெட்டிக்குக் கோபம் வந்தது. ‘நான் பொய்யா சொல்றேன்?’ என்றார்.

கம்மவாருகள் அவர் கூற்றை உறுதிப்படுத்தினார்கள். அப்போது ராஜு நாயக்கர் சொன்னார் ‘இப்ப நான் நம்புறேன். இதில சந்தேகப்படல. ஆனா... இதைத்தான் முதல்ல இருந்தே சொல்றேன். நீங்க கெட்டிக்காரங்கதான்...’

இம்மிடி சலிப்புற்றார். மேலும், பிரச்சனை ஆரம்பித்த பெண்விவகாரம் பற்றி இரு தரப்புமே தவறிக்கூட ஒரு சொல்லும் பேசாததை வியப்போடு கவனித்திருந்தார். விஷயத்தைப் பட்டென்று முடித்தார். ‘பெரியகுளத்துக்காரர் இந்த விஷயத்தில் தலையிடல. அது தெளிவாயிருச்சி. இனிமே இப்படிச் சிக்கல் ஏதும் வந்தா பேசித் தீர்க்காம நேரா மதுரைக்குப் போகக்கூடாது. காலம் மாறிப்போயிருச்சு. நேரம் பாக்க மணிக்கூடு செஞ்சு ஓடவிட்டுருக்கான் வெள்ளைக்காரன். பழைய பழக்க வழக்கங்களை மறந்துட்டு நாட்டு நடப்ப பாத்து அனுசரிச்சிப் போகணும். சரி, நாளைக்கு நடக்க வேண்டிய விஷயத்தைப் பாப்போம். கண்டமனூர்க்காரனை என்ன செய்யிறது?’

எர்ரஜக்க நாயக்கனூர்காரர் சொன்னார் ‘அவனப் பதி ஏன் கவலைப்படணும்? வெள்ளக்காரன் பிடிச்சிட்டுப் போய் என்னமும் செய்யட்டும்.’ ராஜு நாயக்கர் ஆமோதித்துத் தலையாட்டினார்.

திண்டுக்கல்காரர் சொன்னார் ‘கலெக்டரிடம் பேசி இதை இத்தோடு விட்டுவிடச் சொல்லலாம். அதற்குப் பணம் வேண்டும். முடிந்தவர்கள் எல்லாம் ஆளுக்குக் கொஞ்சமாகப் போட்டுக் கொடுக்கலாம்.’

‘அதற்குக் கண்டமனூர்காரன்தான் முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும்‘ என்று இம்மிடி கறாராகச் சொன்னார்.

கலெக்டர் மசியமாட்டான் என்று ராஜுநாயக்கர் ஐயப்பட்டார்.

இம்மிடி சிரித்துக்கொண்டே கேட்டார் ‘மகுடிக்கு ஆடாத பாம்பா?’

*

# 43

**மது**ரை கலெக்டர் ராபர் டெனில்சன் 1835 ஏப்ரலில் ஒரு சுவாரஸ்யமான பிரச்சனையைக் கையாண்டார். திண்டுக்கல் அருகே வாடிப்பட்டியில் ஒரு தகராறில் வடநாட்டு சாமியார் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஐந்து பேரை ஊர்க்காரர்கள் பிடித்துக் கட்டி வைத்திருப்பதாகத் தகவல் வந்தது. கேப்டன் ஆலன் ஸ்மித் தலைமையில் முப்பது சிப்பாய்கள் விரைந்து சென்றனர். மூன்றாம் நாள் ஸ்மித் திரும்பி வந்தார். சாமியார்களையும் கூடவே பத்துச் சக்கிலியர்களையும் பிடித்து வந்திருந்தார். சக்கிலியர் குடியிருப்பில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஒரு வண்டியில் வந்தன.

சாமியார்கள் எல்லோரும் வங்காளிகளாக இருந்தததால் அவர்களிடம் விசாரிப்பது பெரும்பாடாயிற்று. ஆனாலும் அதில் அரைகுறையாய் உருதும் தெலுங்கும் தெரிந்த ஒருவன் இருந்தான். பிறகுதான் என்ன நடந்தது என்று ஒரு புகைமூட்டமான சித்திரம் உருவானது.

அவர்கள் வாமாசார கௌல மார்க்கிகள். சக்தி வழிபாட்டா ளர்கள். காமரூப நகரிலுள்ள தாட்சாயணி பீடமே அவர்கள் தலைமையிடம். இந்த ஆண்டு சித்ரா பௌர்ணமியில் அவர்கள் முறைப்படி காஞ்சிபுரத்தின் ஒட்டியாண ஷேத்ரத்தில் வழிபட வேண்டும். அதுவே அவர்களின் யோனிபீடம். சக்தியின் அனைத்து லட்சணங்களும் பொருந்திய சௌந்தர்ய ரூபிணியான ஒரு கன்னிகையை தாராதேவியின் அம்சமாக ஆவாகித்து பௌர்ண மியன்று காஞ்சிபுரத்தில் பூஜை செய்யவேண்டும். அதற்குரிய ஒருத்தியைத்தான் கடந்த ஐந்தாறு மாதமாகத் தமிழ்நாட்டில் தேடித் திரிந்தார்கள். திண்டுக்கல்லில் இருந்து தாடிக்கொம்பு கோவிலுக்குப் போனபோதுதான் நாலைந்து பேரோடு மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருத்தியைக் கண்டார்கள். நெடுநாள் தேட்டம் முடிவுக்கு வந்தது.

மாடுகள் வீடு திரும்பும்வரை காத்திருந்தார்கள். அவள் ஊர்க்காலி மாடுகளைத் தொழுவங்களுக்குப் பத்திவிட்டுத் தன் குடிலுக்குத்

திரும்பினாள். அது சக்கிலியக் குடியாக இருக்கக் கண்டு சாமியார்கள் தமது வேலை சுலபமாகிவிடும் என்று கணக்கிட்டார்கள். அவள் தந்தை கொண்டலுசாமியிடம் பேசிப் பார்த்தார்கள். அவரது மூன்று பிள்ளைகளில் பதினேழு வயதான மல்லேஸ்வரிதான் மூத்தமகள். சக்திபூஜைக்காக அவளை விலைக்குத் தரவேண்டுமென்றும் எவ்வளவு பணம் கேட்டாலும் தருவதாகவும் சொன்னார்கள். அவர் மசியாமல் கோபப்பட்டபோது அடுத்த யோசனையைச் சொன்னார்கள். அவரும் காஞ்சிபுரம் வரை வரவேண்டும் என்றும் பூஜை முடிந்ததும் திரும்ப அழைத்துக்கொண்டு போகுமாறும் அதற்கும் பணம் தருவதாகவும் சொன்னார்கள். பயந்துபோன மல்லேஸ்வரியின் அம்மா மாவுரக்கா கத்திக் கூச்சல் போட்டாள். கூட்டம் கூடிவிட்டது. சாமியார்கள் அங்கிருந்து தப்பித்து வருவதே பெரும்பாடாகிப் போனது.

மறுநாள் ஒளிந்திருந்து நோட்டமிட்டார்கள். மாடுகள் மேய்ச்சலுக்குப் போயின. மற்றப் பிள்ளைகள் கம்போடு பின்னால் போனார்கள். ஆனால் மல்லேஸ்வரியைக் காணவில்லை. பௌர்ணமிக்கு இன்னும் ஒன்பது நாட்களே இருந்தன. வேறு வழியில்லை; ஆளைக் கடத்தி விடுவது என்று தீர்மானித்தார்கள். பத்து மடங்கு கூலி பேசி ஒரு வண்டிக்காரனை நத்தம்பட்டியில் இருந்து பிடித்தார்கள்.

மூன்றாம் நாள் நள்ளிரவுக்கு மேல் நான்கு பேர் மட்டும் கிளம்பினார்கள். வாடிப்பட்டி சக்கிலியக்குடியில் ஒற்றை நாய் மட்டும் இருந்தது. அது இரண்டே குரைப்போடு பாய்ந்து வந்து, கிடைத்த கறித்துண்டைத் தின்று மயங்கிவிழுந்தது. அவள் குடிசை ஐந்தாவதாக இருந்தது. ஓடைக்கரையிலிருந்து பின்பக்கமாகப் போய் உள்ளே நுழைந்துவிட்டனர். படுத்திருந்த ஐந்து பேருக்கும் மயக்குப் பொடி நனைத்த துணியை நாசியில் வைத்தனர். மூன்று நாழிகைக்கப்புறம் அவளை மட்டும்தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ஓடைக்கப்பால் நிறுத்தியிருந்த வண்டிக்கு வந்தார்கள். வடநாட்டுச் சாமிகள் இவ்வளவு கூலி தருகிறோம் என்று முதலில் சொன்னபோதே வண்டிக்காரர் முத்துக்கருப்ப சேர்வை சந்தேகப்பட்டார். ஏதாவது பொருட்களாக இருக்கும்; நமக்கென்ன என்று நினைத்துதான் பணத்தின் மீது கண்ணாய் அவர் வந்திருந்தார். அவன்கள் இப்போது ஒரு பொம்பளைப் பிள்ளையைத் தூக்கி வந்து வண்டியில் ஏற்ற முயல்வதைக் கண்டதும் ஊணுகம்பை உருவிவிட்டார். அடிதடி ஆகிவிட்டது. கூக்குரல் கேட்டு ஊர் எழுந்து, ஓடிவந்து கூடிவிட்டது. அடிபட்டதில் ஒரு சாமியார் செத்தே போனான். மற்றவர்களைப் பிடித்துக் கட்டிப் போட் டார்கள்.

கேப்டன் ஸ்மித் கலெக்டரைத் தனியாகச் சந்தித்தான். சாக்கில் சுற்றி வைத்திருந்த அந்த விநோதமான ஆயுதத்தைக் காட்டினான். முதல் பார்வையிலேயே டெனில்சன் அதை மதிப்பிட்டு விட்டார். ஸ்மித்தை அனுப்பிவிட்டு தனது கைப்படவே அதன் தூசியைத் தட்டிவிட்டு கழுவி எண்ணெயிட்டு மினுக்கினார். அதன் தங்கமடலில் இருந்த எழுத்துகள் சொல்லும் சேதியை அறிய ஆவல் ஏற்பட்டது. சாமியார்களைச் சிறையில் அடைத்துவிட்டு, அந்தச் சக்கிலியர்கள் தினமும் காலையில் தனது வீட்டுக்கு முன்னால் ஆஜராக வேண்டும் என்றார்.

அந்த எழுத்துக்களை வாசிக்க கவர்னர் மாளிகைக்கு இம்மிடி நல்ல பெருமாள் செட்டியார் அழைத்து வரப்பட்டார். டெனில்சன் தனது அறைக்கு அழைத்துப்போய் செட்டியாரிடம் அதைக் காட்டினார். சாளுவ

கட்டாரியைப் பற்றி தெலுங்குப் பிரபந்தங்கள் மூலம் அறிந்திருந்த செட்டியார் இன்றுதான் அதைப் பார்த்தார். மீண்டும் அதைத் தனது மேஜைக்குள் வைத்துப் பூட்டிய பிறகே கலெக்டர் துபாஷியை அழைத்தார். வெகுநேரம் ராயரைப் பற்றிய கதைகளை எல்லாம் செட்டியார் சொல்லக் கேட்டபின் விருந்துபசாரத்துடன் அவரை அனுப்பி வைத்தார்.

இந்தியாவில் பணியாற்றுவதற்காகக் கப்பலேறிய நன்னாளை டெனில்சன் நினைவுகூர்ந்தார்; கர்த்தருக்கு நன்றி கூறினார். இந்த விநோத நிலத்தின் வழிபாட்டுச் சடங்குகளை எண்ணி எண்ணி வியந்தார். சுருட்டைப் புகைத்தவாறு ஜன்னலோரமாக மரங்களைப் பார்த்தவாறே நடைபோட்டவர், கிடைத்த பரிசை இரட்டிப்பாக்கும் திட்டத்தை மனதில் வரைந்துகொண்டிருந்தார்.

**நா**ன்கு நாட்களுக்குப் பிறகு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட மல்லேஸ்வரி டெனில்சன் அறையில் இருந்தாள். அவள் அம்மாவும் துணைக்கு வந்த இரு பெண்களும் உடன் இருந்தனர். கேள்விகள் கேட்கும் பாவனையில் டெனில்சன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். துபாஷியே சலித்துப் போகும் அளவு விசாரணை நீண்டது.

டீ குடிப்பதற்காக எழுந்து போனவர் தனது மனைவி வானெஸாவிடம் இந்தக் கதையைச் சுருக்கமாகச் சொல்லி அவளை அழைத்தக் கொண்டு வந்தார். அவளைக் கண்ட வானெஸா அவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிப் போகும்வரை அறையை விட்டு அகலாமல் நாற்காலியிலேயே அமர்ந்திருந்தாள்.

அன்று மதியம் உணவு மேஜையில் அமர்ந்திருந்த டெனில்சன் மனைவியிடம் தயங்கித் தயங்கி அந்த யோசனையைத் தெரிவித்தார். ‘அந்தப் பெண்ணின் பெற்றோர்களை இந்த மாளிகையில் வேலைக்காரர்களாக வைத்துக் கொள்ளலாமா?’

‘வேண்டாம்’ என்ற வானெஸா சட்டென்று மேஜையில் இருந்து எழுந்துவிட்டாள். சில நொடிகள் செய்வதறியாது தயங்கிய டெனில்சன் எழுந்து வேகமாக அறையை விட்டு வெளியேறினார்.

வானெஸா தன் பிள்ளைகளின் மேற்படிப்பின்போது லண்டனுக்குத் தான்மட்டும் உடன் போவது என்று நினைத் திருந்தாள். டெனில்சனின் சொத்துகளின் மீதுதான் அவளது எதிர்காலக் கனவுகளும் இருந்தன. அவனை இன்னும் தீவிரமான கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும் என்று முடிவெடுத்தவள், ஜன்னலருகே போய் திரைச்சீலையைச் சற்றே விலக்கிப் பார்த்தாள். அந்தப் பெண் மரத்தடியில் தனது உறவினர்களோடு நின்று பேசிக்கொண்டிருந்தாள். அவளையே பார்த்தவாறிருந்த வானெஸா நினைத்துக்கொண்டாள், கவிஞர்களின் கற்பனை தறிகெட்டுப் பறப்பதில் ஏதும் மிகையில்லை.

**ஏ**மாற்றத்தைச் சிரமப்பட்டு விழுங்கிக்கொண்ட டெனில்சன் அடுத்த கட்டத்திற்குப்போய் விஷயத்தை சுமுகமாக முடித்து வைத்தார்.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது மட்டுமே குறிப்பேட்டில் ஏறியது. அதில் சாளுவ கட்டாரி இல்லை. வழக்கு ஏதும் பதியப் படவில்லை. மற்ற ஆயுதங்களின் மதிப்பு 7 ரூபாய் என்று பதியப்பட்டு அத்தொகை

சக்கிலியர்களுக்கு வழங்கப்பட்டது. தன் கையிலிருந்து 13 ரூபாய் சேர்த்துக் கொடுத்தார். அரண்மனைக் காவலுக்காக ராணி மங்கம்மா கொண்டலுசாமியின் முன்னோருக்கு அந்தக் கட்டாரியைக் கொடுத்தற்கான சாஸனம் எதுவும் அவரிடம் இல்லாததால் அரண்மனையில் இருந்து திருடப்பட்டதாகவே அது கருதப்படும் என்றார்; சாமியார் கொலையையும் சேர்த்து இரட்டை வழக்குப் போடலாம் என்றாலும் இந்த முறை மன்னித்து அவர்களை விடுவதாக எச்சரித்தார். கொண்டலுசாமியைத் தன் அறைக்கு அழைத்துப் போய் தனியே ஐம்பது ரூபாய் தந்தார். அவர்கள் எல்லோரும் விட்டால்போதும் என்று உடனடியாகக் கிளம்பிப் போனார்கள். சாமியார்களையும் விடுவித்த டெனில்சன் இப்போதே மெட்ராஸ் பிரஸிடென்ஸியை விட்டு அவர்கள் ஓடவேண்டும் என்று கூறி விரட்டிவிட்டார். நடந்த சம்பவம் தடம் தெரியாமல் மறைந்து போனது.

பணிமாற்றத்திற்கு விண்ணப்பித்த கலெக்டர் நான்கே மாதங்களில் கல்கத்தா போய்ச் சேர்ந்தார்.

*

# 44

**ம**துரைக்கோட்டையின் வடகிழக்கே வைகையின் வடக்குக் **கரையில்** பேரழகோடு வடிவமைக்கப்பட்ட மாளிகை அது. அதன் நீண்ட படிக்கட்டுகளின் மேலேறி உள்ளே நுழைபவனின் கண்கள் அதிசயித்து அலைபாய்ந்து மயங்கும். காலத்தின் வலிய கரங்கள் தடவித் தடவிக் மெருகேறிய தூண்கள்! மாளிகையின் மொத்த அழகும் மைய மண்டபத்தில் குவிந்திருந்தது. அதன் விதானக் கூரையில் வரையப்பட்ட ஓவியங்களில் வண்ணக் கலவையினாலான ராஜரீக உலகம் விரிந்து கிடந்தது. நுட்பமான சுதை வேலைப்பாடுகள் மனதை மயங்கின. உயர்ந்த விதானங்கள் மிதமான குளுமையூட்டின. ராணி மங்கம்மாவின் கனவு இந்த மண்டபத்தின் ஏதோ ஒரு மூலையில் இன்னும் உயிர் கொண்டிருக்கிறது. மைய மண்டபத்தைச் சுற்றி சிறியதும் பெரியதுமாக அறைகள். விரிந்து படர்ந்த அதன் மேல்மாடங்களில் வைகையின் ஈரக்காற்று சுழன்று வெளியேறிக் கொண்டிருந்தது. அழகும் மிடுக்கும் கொண்ட இந்த மாளிகையில்தான் மதுரையின் கலெக்டர் பிளாக்பர்ன் வசித்து வந்தான்.

அன்றைய கூட்டம் அந்த மைய மண்டபத்தில்தான் நடந்தது. செங்காவி நிற மீசையும், உயர்ந்த நெற்றியும் கூர்மையான முக அமைப்பையும் கொண்ட ஆங்கில அதிகாரி மாரெட் கலெக்டரின் வெற்று இருக்கைக்கு வலதுபுறமாக நாற்காலியில் அமர்ந்திருந்தார். மேஸ்திரி பெருமாள் முதலியும், ராமச்சந்திர ஐயரும் கலெக்டரின் மேஜைக்கு முன்னால் நாற்காலிகளில் இருந்தனர். கலெக்டர் என்ன சொல்வதற்காகத் தங்களை அழைத்திருக்கிறார் என்று தெரியாத குழப்பத்தில் பெருமாள் முதலியும் ராமச்சந்திர ஐயரும் இருந்தனர். ராமச்சந்திர ஐயர் எதையோ யோசித்து கூட்ட நாட்குறிப்பேட்டில் தேதியை 22.1.1844 என எழுதினார்.

அந்தக் கணத்தில் கலெக்டரின் பூட்சு சப்தம் மண்டபத்திற்குள்ளே நுழைந்தது. மூவரும் எழுந்து நின்ற பொழுது, அந்த உயரமான ரத்தச் சிவப்பேறிய மனிதன் கிழக்கிந்திய கம்பெனியின் மொத்த மிடுக்கையும் தனது தோளிலே அணிந்தவாறு வந்து அமர்ந்தான்.

‘நான் பலமுறை யோசித்துதான் இந்த முடிவெடுத்தேன். மதுரை நகரம் விரிவடைவதற்கு ஒரே வழி நகரைச் சுற்றி கட்டியெழுப் பப்பட்டுள்ள கற்கோட்டையை அகற்றுவது மட்டும்தான். இதனைச் செய்து முடிப்பதற்கான திட்டங்களை வகுக்கத்தான் உங்களை அழைத்துள்ளேன்’ என உடனே கடகடவென ஆங்கிலத்தில் சொல்லி முடித்தார் பிளாக்பெர்ன்.

எதிரிலிருந்தவர்கள் அதிர்ச்சியிலும் திகைப்பிலும் உறைந்து போயினர். கலெக்டர் என்ன சொன்னார் என மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தித்தான் மேஸ்திரி பெருமாள் முதலியால் அதனை நம்ப முடிந்தது. ஐயரின் அதிர்ந்த முகத்தில் இமைகள் ஆடவில்லை. பலமுறை யோசித்து இப்படி ஒரு முடிவெடுக்க முடியுமா!

நம்ப முடியாமல்தான் மாரெட்டும் இருந்திருக்க வேண்டும். யாரும் எதுவும் பேசவில்லை. அறை முழுவதும் மௌனம் வியாபித்திருந்தது. கலெக்டர் தனது ஆட்காட்டி விரலால் மேஜையின் விளிம்பைத் தட்டி மௌனத்தைக் கலைத்தார். விதானத்து ஜன்னலில் அமர்ந்திருந்த புறா ஒன்று சடசடத்து வெளியேறியது.

‘உங்கள் யோசனை என்ன என்பதைச் சொல்லுங்கள்.’

பதினைந்தடி அகலமும் இருபத்தி நாலு அடி உயரும் பல மைல் நீளமும் கொண்ட பலம் வாய்ந்த இரட்டை மதில் கற்கோட்டையை முழுவதுமாக அகற்றுவதென்பது சாத்தியமாகுமா என்ற சந்தேகத்தில் இருந்து மூவரும் விடுபடாமல் இருந்தனர்.

மாரெட் தன் பேச்சைத் துவக்கினார். ‘இவ்வளவு பெரிய பணியைச் செய்து முடிப்பதற்கான நிர்வாக அமைப்பு, அதற்கு ஆகின்ற செலவு போன்றவற்றைக் கணக்கிட்டால் இன்றைய நிலையில் இதை நம்மால் செய்யமுடியாது என்றே கருதுகிறேன்.’

‘இதை நமது நிர்வாகத்தின் மூலம் செய்வதென்பதும், அதற்கான மொத்தத் தொகையை நாமே செலவழிப்பதென்பதும் நம்மால் முற்றிலும் இயலாத காரியம். அது மட்டுமல்ல, நமது கவர்னர் அலுவலகம் நிச்சயமாக அதற்கு அனுமதியளிக்காது. எனவே வழியொன்றை நான் யோசித்துள்ளேன்’ என்றார் கலெக்டர்.

முகங்கள் வியப்போடு கலெக்டரின் கண்களைப் பார்த்துக்கொண்டிருந்தன. தனது யோசனையை அவர் வெளியிட ஆரம்பித்தார். ‘மதுரை நகரவாசிகள் சுமார் இருபத்தி ஐயாயிரம் பேரையும் இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களாக முன்வந்து அதனைச் செய்ய வைக்கவேண்டும். அதற்காக, யார் யார் எவ்வளவு தூரம் கோட்டை மதில்களை அகற்றி அகழிகளை மூடுகிறார்களோ, அந்த நிலம் முழுவதும் அவர்களுக்கே சொந்தம் என அறிவிக்கப் போகிறேன்.’

பிளாக்பர்னின் அறிவிப்பு கோட்டையைத் தகர்ப்பதற்கானதன்று. மதுரைவாசிகளில் மனங்களைத் தகர்ப்பதற்கானது. ஆசை எனும் ஆயுதம் கொண்டு மக்கள் தங்கள் கண்களையே குத்திக் கொள்ளுமாறு செய்யத் திட்டமிட்டார் கலெக்டர். அது அவருக்கு கை வந்த கலை. எனவே கச்சிதமாய் தனது ஆலோசனையை முன்வைத்தார்.

*

# 45

**ம**துரைக்கோட்டையின் உயிர் ஏற்கனவே பறிக்கப்பட்டு எழுபத்தி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. கான்சாகிபின் உயிர் பறிக்கப்பட்ட அன்று தான் அதுவும் நிகழ்ந்தது. பின்னர் நூலாம் படைகள் கோட்டை மதில்களில் படர ஆரம்பித்தன. காக்கப்படுவதிலிருந்து விலக்கப்படும் பொழுது கோட்டை வெறும் காட்சிப் பொருளாக மாறி விடுகின்றன. பேரழகியின் உரியப்பட்ட துகில் போல், காலத்தின் முன் அவமானம் படிந்து நிலைகுலைந்து கிடக்கின்றது. பீரங்கிக் குண்டுகள் துளைத்த இடங்களில் குளவிகளின் மண்கூடுகள் பிதுங்கி நிற்கின்றன. பறவை எச்சத்திலிருந்து முளைவிடும் தாவரங்கள் முன்னூறு ஆண்டு ரத்தப் பிசுக்கேறிய கோட்டைக்குள் தனது வேரை அனுப்பி அரச மேன்மையை ருசித்துப் பார்க்கின்றன. செத்துப்போன மலைப் பாம்பைப் போல மதுரையைச் சுற்றிக் கிடக்கிறது இந்த வீழ்த்தப்பட்ட கோட்டை.

மறுநாள் அதிகாலை தண்டோராக்களின் சப்தம் கோட்டையை அதிரச் செய்தது. மதுரையின் வீதிகள்தோறும் பிளாக்பர்னின் உத்தரவு பறையறிவிக்கப்பட்டது. நாற்புறமும் கோட்டையால் சூழப்பட்ட ஒரு நகரம் தனது அவயத்தை தானே பிய்த்து தின்ன வேண்டிய தீரா சாபத்தை எண்ணி மறுகி நின்றது. அதிர்ச்சியால் உறைந்துபோன நகரவாசிகள் சிறிது மௌனத்திற்குப் பிறகு மெல்ல பேசத் துவங்கினார்கள்.

‘இது சரியல்ல!... வஞ்சகம். துரோகம். நமக்கு அவமானத்தை உருவாக்க வந்த குள்ள நரியின் வேலை.’

‘இல்லை... இப்படி செய்வதுதான் நல்லது. அப்பொழுதுதான் நகரம் விஸ்தீரணமாகும். எனவே இதை நாம் வரவேற்கவேண்டும்.’

‘மார்பிலே குத்துபவன் நாணயமான எதிரி. ஆனால் நமது கோட்டையை நம்மைவிட்டே முதுகுப் பக்கமாகக் குத்த நினைக்கிற துரோகியின் அறிவிப்பு இது.’

‘இன்னிக்கி நகரத்தோட கோட்டைச் சுவரை இடிக்கச் சொல்ற கலெக்டர், நாளைக்கி மீனாட்சி அம்மனோட கோயில் கோட்டச் சுவரை இடிக்கச்சொல்லுவாரு.’

‘இன்னிக்கு இடிக்கிறவனுக்கு நிலம் சொந்தமன்னு சொல்றவரு, நாளைக்கி கோயில் கோட்டச் சுவரை இடிக்கறவனுக்கு நகை சொந்தமன்னு சொல்லமாட்டாருன்னு என்ன நிச்சயம்?’

‘அரண்மனை, கோயில், மண்டபம், தெப்பக்குளம்... இருக்கிற இடத்துல பாதிக்கு மேல இதுதான் இருக்கு. ஜனத்தொகை பெருகிக்கிட்டே இருக்கு. புதுசா வீடு, கடைகள் எல்லாம் வர வேண்டாமா? இதுக்கெல்லாம் இடைஞ்சலா இருக்குனுதான கலெக்டர் கோட்டையை இடிக்கச் சொல்றாரு. இதக்கூட ஒழுங்கா புரிஞ்சுக்க முடியாதா!’

கோபமும் ஆக்ரோஷமும் எரிச்சலுமாக விவாதங்கள் நடந்து கொண்டே இருந்தன. கோயில், மண்டபம், வீட்டுத் திண்ணை, மரத்தடி என எல்லா இடத்திலும் மக்கள் இதைப் பற்றியே பேசினர்.

பாளையக்காரர்கள் கட்டிய பாளையக் கோட்டைகளுக்கு முன்பு நேர்ந்த கதிதான் சுமார் நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் கழித்து சற்று வித்தியாசமான முறையில் மதுரைக்கும் நேர்ந்திருக்கிறது. கோட்டையின் மீதான கடைசிப் போர் கோட்டைக்குள் இருந்தே அறிவிக்கப்பட்டு விட்டது. எதிரிகள் மட்டுமே இதுவரை எடுத்த முடிவை, முதன்முறையாக ஆள்பவனாக இருந்துகொண்டு அவனே எடுத்துள்ளான். வைகை நதியின் ஈரக்காற்று காலங்காலமாய் தழுவிக்கிடந்ததொரு கற்கோட்டை, தனக்கு நேரப் போவதறியாமல் ஒவ்வொரு சூரிய உதயத்தையும் வழக்கம்போல் சந்தித்துக்கொண்டிருந்தது. நாற்புறமும் அழகிய கோட்டை வாயில்களின் விதானத்தை வௌவால்கள் பற்றித் தொங்கிக்கொண்டிருந்தன. கோட்டை ஆதரவற்று நின்றது. அதைத் பார்த்துப் பார்த்து மக்கள் வாஞ்சையோடு பேசிக்கொண்டே இருந்தனர்.

‘நாளைக்கே கோட்டை இடிப்பைத் துவக்கப் போகிறோம்‘ என்று சொன்னவர்களும் என்ன ஆனாலும் கோட்டை இடிப்பைத்தடுத்து நிறுத்துவோம்’ எனச் சொன்னவர்களும் சொல் அளவில் நின்றார்களே தவிர யாரும் எதையும் செய்யவில்லை. பேச்சு பேச்சாகவே பரவிக் கிடந்தது.

கலெக்டரின் அறிவிப்பு வெளியாகி நாட்கள் பல கடந்தன. அதிகாரி மாரெட்டும், மேஸ்திரி பெருமாள் முதலியும், ராமச்சந்திர ஐயரும், இன்னும் சிலரும் கலெக்டருடைய உத்தரவின் நோக்கங்களையும், நகரத்தை விரிவுபடுத்துவதற்கான தேவைக்ளையும் மக்கள் மத்தியில் விளக்கியபடி இருந்தனர். ஆனால் கோட்டையை இடிக்கிற பணியை யாரும் துவக்குவதாக இல்லை.

கோட்டை வெறும் கல்வரிசையை மட்டும் சுமந்துகொண்டு நிற்கவில்லை; நினைவுகளையும் சுமந்து நிற்கிறது. நினைவுகளின் கண்ணி அறுபடாததாகவே இருக்கிறது.

இருபத்தியோரு சாமிகள் கோட்டைச் சுவரையும் நான்கு சாமிகள் கோட்டை வாயிலையும் காத்தனர். வடக்குவாசலை செல்லத்தம்மனும், தெற்குவாசலை ஜடாமுனியும் கிழக்கு வாசலை வண்டியூர்

மாரியம்மாளும் மேற்குவாசலை கொத்தளத்து முனியும் காத்துநின்றனர். இது தவிர பெரியகருப்பன், சின்னக்கருப்பன், சந்தனக்கருப்பன், சங்கிலிக் கருப்பன், தேரடிக் கருப்பன், காலாங்கரை கருப்பன், நாச்சிமுத்துக் கருப்பன் ஆகிய ஏழு கருப்பன்களும் அக்கினிமாடன், தளவாய்மாடன், நல்லமாடன், அந்திமாடன், சந்திமாடன், ஆகாயமாடன், சுடலைமாடன் ஆகிய ஏழு மாடன்களும் ராக்காயி, பேச்சி, இருளாயி ஆகிய மூன்று சக்திகளும் மதுரைவீரன், லாடசன்னியாசி, சப்பாணி, சோணை ஆகிய நால்வருமாக மொத்தம் இருபத்தியோரு பேர் கோட்டையைக் காத்து வந்தார்கள். இவர்களின் நினைவும் சக்தியும்தான் கோட்டைக்காவலர்களுக்கு வீரத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வந்தது. கோட்டை மதில்மேல் சிந்தப்படும் ஒவ்வொரு துளி ரத்தமும் இவர்களுக்கான பலியே. கொத்தளத்து முனியின் விரிந்த சடைமுடி மேற்குக் கோட்டையின் ஒவ்வொரு கல்லிலும் சுருண்டு கிடந்தது. நாக்கை மடக்கி விழிகள் பிதுங்க பற்களைக் கரகரவெனக் கடித்துக்கொண்டிருந்த ஜடாமுனியின் புடைத்த நரம்புகள் தென்திசைக் கோட்டை மதில் முழுவதும் பரவிக்கிடந்தன. காக்கையைக் கலைக்க கருநாயை ஏவிவிட்டு, செடியைக் கலைக்க செந்நாயை ஏவிவிட்டு, மரத்தை கலைக்க மரநாயை ஏவிவிட்டு, கிழக்குப் பகுதிக் காட்டை கோட்டையின் அரணாய் காத்துவந்த ராக்காயிபோடும் சத்தம் கோட்டையின் இடுக்குகளில் எல்லாம் ஒளிந்து கிடந்தது. இடுகாட்டுப் பேச்சி, சிறுமுலைப்பேச்சி, குடகாட்டுப்பேச்சி, வனத்துப்பேச்சி என நாலு பிள்ளைகளையும் கோட்டையின் நான்கு மூலைக்கு நிறுத்தி இரவெல்லாம் திரிந்த பேச்சியாத்தாள் போடும் குலவைச் சத்தம் கோட்டை முழுவதும் சிறுபூச்சி வடிவம் கொண்டு பறந்து திரிகிறது. கருந்தேளையும் செந்தேளையும் வலதுகையில் அள்ளிவீசி கருநாகக்குட்டியையும், செந்நாகக்குட்டியையும் இடதுகையில் அள்ளவீசி கோட்டையின் சனி மூலையில் வானத்துக்கும் பூமிக்குமாய் எழுந்து நிற்கும் கோரப்பல்லழகி இருளாயியின் அகண்ட கால்கள்தான் வைகையை முட்டி நிற்கும் வடகிழக்கு கோட்டைச்சுவரெனக் கிடக்கிறது. கோட்டை மதில் நெடுக அதன் உச்சியில் சிறு சிறு வளைவுகளான அரண்கள் ஒவ்வொன்றும் வெறும் வளைவுகளல்ல; கீழ்மேல் திசை வளைவுகள் ஏழு கருப்பன்களின் கால் நகங்களாகவும் வடதென் திசை வளைவுகள் ஏழு மாடன்களின் கால் நகங்களாகவும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்தது. இந்த காவல் தெய்வங்கள்தான் மதுரையையும் மக்களையும் காத்துவருகின்றன. இவர்களை இடிக்க மதுரை மக்களுக்கு எங்கிருந்து வரும் தைரியம்?

கோட்டைச் சுவரை இடிக்கச் சொல்கிற பிளாக்பர்னின் அறிவிப்பு வீரபத்திரரையும், சடாமுனியையும் இடிக்கச் சொல்கிற அறிவிப்பாக மாறியது. அதே காவல் தெய்வங்கள்தான் மீனாட்சி சொக்கநாதரின் கோயிலையும் காத்து வருகின்றனர். பிரச்சனை கோட்டைமதிலிருந்து கோயில் சம்பந்தப்பட்டதாக மாறியது. அறிவிப்பு வெளியானபொழுது மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இப்பொழுது பிளாக்பர்னுக்கு ஏற்பட்டது. முற்றிலும் புதிய பிரச்சனையை கலெக்டர் நிர்வாகம் சந்திக்க நேர்ந்தது. சமாளித்து, திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்ற கலெக்டர் மாளிகையின் மைய மண்டபத்தில் தொடர்ந்து ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன.

இரண்டு நாட்களுக்குப்பின் புது மண்டபத்தில் நகரின் முக்கியஸ்தர்களுக்கான கூட்டம் கூட்டப்பட்டது. கலெக்டர் நிர்வாகத்தின்

சார்பில் கூட்டப்பட்ட இக் கூட்டத்திற்கு அதிகாரி மாரெட், மேஸ்திரி பெருமாள் முதலி, ராமச்சந்திர ஐயர் ஆகிய மூவரும் வந்திருந்தனர். கலெக்டரின் புதிய உத்தரவுகள் குறித்து அதிகாரி மாரெட் முதலிலே அறிவித்தார். அவர் ஆங்கிலத்தில் கூறியதைத் தமிழ்படுத்திப் பேசினார் மேஸ்திரி.

‘மதுரை நகரை விரிவுபடுத்துவதற்காகத்தான் கோட்டைச் சுவரை இடிக்க ஆலோசிக்கப்பட்டதே தவிர, மக்களின் மத உணர்வைப் புண்படுத்த அல்ல என்பதை முதலிலே நாங்கள் தெளிவுபடுத்தி விடுகிறோம். எனவே கும்பெனி அரசு எடுத்திருக்கிற இந்த நல்ல முயற்சிக்கு நீங்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். அதேபோன்று மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் அன்றாடம் நடைபெறும் திருப்பணிகளை சிறப்புற நிறைவேற்றவும் கோவில் நிர்வாகத்தை சீராக நடத்தவும் அரசின் சார்பில் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்படும். அது கோவில் திருப்பணிகளை முறைப்படுத்திச் சிறப்புற நடத்தும்‘ என்றார்.

அடுத்து ராமச்சந்திர ஐயர் பேசினார். ‘காவல் தெய்வங்களை இடம் மாற்றிக் கொள்ளலாம். அதற்கான பரிகார பூஜை நடத்தினால் போதும். யாதொரு தெய்வக் குத்தமும் வராது. பரிகார பூஜை நடத்துவது சம்பந்தமாக அந்தந்த கோயில் பூசாரிமார்களுடன் கலந்து பேசி பூஜை நடத்தப்படும் முறைகள் தீர்மானிக்கப்படும். பூஜை நடத்துவதற்கான செலவுத்தொகையும், புதிய இடத்தில் கோயில் கட்டுவதாக இருந்தால் அதற்கான இட ஏற்பாட்டையும் கலெக்டர் நிர்வாகவே ஏற்றுச்செய்து கொடுக்கும்.’

வந்திருந்ததில் பெரும்பாலானோர் அளித்த இசைவின் அடிப்படையில் அந்தக் கூட்டம் முடிவுபெற்றது.

ஆனால் கொத்தளத்து முனி விஷயத்தில் மட்டும் யாரும் இறங்கி வரவில்லை. ஏனென்றால் கொத்தளத்து முனியும், மொட்டைக் கோபுரத்து முனியும் இரட்டைப் பிறவிகள். இவர்கள் ஆடினால் மதுரை தாங்காது. மொட்டைக்கோபுரத்தில் ஒரு காலும் மேற்குக் கோட்டையில் ஒரு காலும் வைத்து இரண்டு முனிகளும் ஆடும் ஆட்டம்தான் மதுரையின் இரவுகளைப் பீடித்திருக்கிறது. எனவே கொத்தளத்து முனியை கை வைக்கக்கூடாது என்பதில் பெருமாள் முதலியும், ராமச்சந்திர ஐயருமே உறுதியாக இருந்தனர். கலெக்ட்ராலும் மாரெட்டாலும் தனது நிர்வாகத்தில் பணிபுரியும் இவர்கள் இருவரையுமே கூட சமாதானப்படுத்த முடியவில்லை. கடைசியில் கொத்தளத்து முனி இருக்கும் மேற்கு வாசல் காவல் மாடத்தை மட்டும் இடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

அடுத்து வந்த நாட்களில் இராமச்சந்திர ஐயரின் தலைமையிலான குழு பரிகார பூஜைக்கான ஏற்பாடுகளை மும்முரமாக செய்து வந்தது. தனித்தனியாக ஒவ்வொரு சாமிக்கும் பலி கொடுத்து பூஜை நடத்தப்பட்டது. ஆடு, மாடு, பன்றி, கோழி, சேவல் உள்பட பலியிடப்பட்ட உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருந்தது. அந்த பூஜையில் பங்கேற்று உணவருந்தியவர்களும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருந்தனர். இந்தச் சடங்குகளில் ஈடுபடுத்தப்பட்ட மக்களின் மனதில் கோட்டையின் உள்ளீடான சக்தி அகற்றப்பட்டதற்கான நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக விதைக்ககப்பட்டு விட்டது.

கடைசியாக நிறை அமாவாசையன்று செல்லத்தம்மன் கோவிலில் வைத்து இருபத்தியோரு காவல் தெய்வங்களுக்கும் இருபத்தியோரு எருமைக்கெடா வெட்டி பலி கொடுக்க ஏற்பாடாயிற்று. அன்றிரவு மதுரைவாசிகள் வீடுகளை இறுகத் தாழிட்டு பயத்தோடு பதுங்கிக் கிடந்தனர். தைரியசாலி ஆண்கள் மட்டுமே சாமிகளைப் பார்க்கத் தெருக்களில் கூடிநின்றனர்.

கோட்டைச்சுவரில் இருக்கும் தெய்வங்களை பலியேற்றுக்கொள்ள வெளியேறி வருமாறு மூலைக்கு மூலை கோடாங்கிகளும் சாமியாடிகளும் பூசாரிகளும் நின்று நரம்புபுடைக்கக் கத்தி ஆடிக்கொண்டிருந்தனர். உடுக்குச்சத்தமும் கொட்டுச்சத்தமும் மேளச்சத்தமும் இரவின் செவிப்பறையை அதிரச் செய்தன. மொட்டைக்கோபுரத்து முனி வானத்துக்கும் பூமிக்குமா ஆடுறான்டா என மக்கள் சுருண்டு படுத்தனர். சுருண்டு படுத்த ஒவ்வொருவரின் மண்டைக்குள்ளும் கொட்டுச் சத்தம் கேட்டபடி இருந்தது. வடக்கே இருந்து இருபத்தியோரு எருமைகெடாக்கள் முக்காரமிடும் சத்தம் வந்துகொண்டேயிருந்தது. நகரத்தின் நாடிநரம்புகள் எல்லாம் உள்நடுங்கிச் சுருண்டன. குழந்தைகளைத் தூங்க வைத்த பெண்கள் ஒருக்களித்த கதவுக்கும் ஜன்னலுக்கும் பின்னால் மிரண்ட கண்களோடு காத்திருந்தனர்.

சாமிகள் கோட்டைச் சுவரில் இருந்து பலியேற்க இறங்காமல் இரவெல்லாம் சோதித்தன. ஆனால் கோடாங்கிகளும் பூசாரிகளும் விடுவதாக இல்லை. வகை வகையாக வர்ணிப்பு செய்தனர். வாடைகாட்டிப் பார்த்தனர். துடியாக ஆடித்துருத்திய நாக்கோடு “எறங்குறயா...இல்லயா...” என உரிமையோடு கத்தினர்.

கொட்டுச்சத்தமும் எருமைக்கெடாவின் கத்தலும் சேர்ந்து இரவை உலுக்கிய ஒரு கணத்தில் கோட்டை சிதைந்து காற்று மேவிய ஒரு பகுதியிலிருந்து நல்லமாடன்தான் முதலில் இறங்கினான். கண்ணீரும் கம்பலையுமாக இறங்கிய அவன் கோட்டைச்சுவரை மூன்று முட்டு முட்டி அழுதபடி மதுரை வீதிகளின் வழியே வடக்குநோக்கி நடந்தான். கால்கள் எடுத்துவைக்க முடியாமல் தள்ளாடின. கண்ணீர் மாலை மாலையாகக் கொட்டியது. சாமியாடியின் மேனியில் பூசிய சந்தனம் நெருப்பாய்க் கொதித்தது. வேறுவழியில்லாமல் அவன் வடக்கு வாசல் செல்லத்தம்மன் கோவில் நோக்கிப் போனான்.

சிறிது நேரம் கழித்து மேல்திசைக் கோட்டையிலிருந்து சின்னக் கருப்பு இறங்கினான். கொட்டுச் சத்தத்திற்கு நடுவில் இறங்கிய வேகத்தில் வேல்கம்பை எடுத்து கோட்டையில் குத்தி இறக்கிவிட்டு வடக்கு நோக்கி ஓடினான். உடனிருந்தவர்களின் பிடிக்குள் அடங்காத ஓட்டமாக அது இருந்தது.

ஒவ்வொரு சாமியாய் கோட்டையிலிருந்து இறங்க ஆரம்பித்தன. கண்ணீர் கசிந்து இறங்குவதைப்போல கருங்கல் சுவரிலிருந்து சாமிகள் இறங்கின. இருள்பரப்பி நிற்கும் மதுரையின் வீதிகளில் ஆங்கார ஓசையும், உடுக்கைச் சத்தமும் கத்தலும் கதறலும் கேட்க ஆரம்பித்தது.

நள்ளிரவுக்குப்பின் லாட சன்னியாசியை இறக்கியபோது மதுரையே உண்டு இல்லை என்றானது. ஓங்காரக் கூச்சலுடன் இறங்கி அவன்

ஒவ்வொரு வீதியாய்ப் போனான். எருமைக்கெடாவின் ரத்தவாடை எல்லாத் திசையிலும் அவனுக்கு அடித்தது.

லாட சன்னியாசி இறங்கிய கொஞ்சநேரத்தில் கையில் சவுக்கோடு சோணை இறங்கினான். சாட்டையைக் காற்றில் கழற்றியபடி ஆவணி வீதியின் வழியே அவன் நடந்தான்.

எட்டுப் பேர் இழுத்துப்பிடிக்க சங்கிலிக்கருப்பன் இறங்கிய பொழுது கோட்டையே பிய்த்துக்கொண்டு வருவதுபோல் இருந்தது. அவன் இறங்கிய வேகத்தில் முதுகில் இருந்த கோட்டையை உலுக்கிவிட்டு, இருளில் சுருண்டு கிடந்த வீதிகளை வாரிச்சுருட்டியபடி போனான்.

பெரும் குலவைச்சத்தத்திற்கு இடையில் பேச்சியை இறக்கிக்கூட்டிப்போனார்கள். பேச்சி போன தெருவில் கையில் வேப்பங்குலையுடன் ஆடிய பெண்களின் கால் மிதியில் பூமி அதிர்ந்தது. குலவைஒலி எழுப்பியபடி ஆங்காரமாய்த் துடித்தனர். இடுகாட்டுப் பேச்சியும், குடகாட்டுப் பேச்சியும் தாழிட்ட கதவுகளை எல்லாம் எத்தித்தள்ளின. சிறுமுலைப்பேச்சியும், வனத்துப் பேச்சியும் முக்குக்கு முக்கு மண்ணைவாரி நகரெங்கும் எறிந்தன.

பின்னிரவில் வெகு நேரத்திற்குப் பின்தான் ஆகாயமாடன் இறங்கினான். அவன் இறங்கியவுடன் வானத்துக்கும் பூமிக்கும் குதித்த குதியில் மாசிவீதி பத்தடி பள்ளத்திற்குள் போய்விடும்போல் இருந்தது.

அக்கனிமாடனும் சந்தனக்கருப்பனும் தீச்சட்டியை ஏந்தியபடி வடக்குநோக்கி ஓடினர். அவர்கள் வரும் வேகத்தை எதிர்கொள்ள முடியாத இரவு உள் சந்துகளுக்குள் ஓடிச் சுருண்டு கொண்டது.

முண்டு கட்டி துண்டு உடுத்தி மூன்று மாடன்கள் இறங்கினர்.

பெரும் வீச்சரிவாளோடு கருப்பன்கள் இறங்கினர். இருளின் கூடப்பிறந்த தங்கை ராக்காயி - பத்தான செல்லி, பகுமானச் செல்லி, பாத்தா கண்கொள்ளா பயங்கிரி - கருநாயையும் செந்நா யையும் மதுரைத் தெருக்களின் மீது ஏவிக் கடித்துக் குதறவிட்டபடி வடக்குநோக்கிப் போனாள்.

ஒவ்வொரு சாமியாய் கோட்டையிலிருந்து இறங்கிவந்தபடியே இருந்தன. சாமிகள் அழுவதும் ஓடுவதும் ஆங்காரமாய்க் கத்துவதும் வீதிக்கு வீதி கேட்டது. எல்லாப் பக்கமும் குலையடித்து ஆடி வரும் பாதச் சலங்கைகள் இருளைக் கிழித்தன. சோணை சுண்டும் சாட்டையின் ஓசையும், காலிழுந்து நடக்கும் லாட சன்னியாசியின் சவுக்கு ஓசையும் பேச்சியை இழுத்துச் செல்லும் குலவை ஒலியும் நான்மாடக்கூடலை நடுங்குறச்செய்தது.

“கால நேரமாகுது... காட்டிடைச்சீ...

கருங்கல்ல விட்டு இறங்கி வாடீ...” எனக் கோடாங்கி கத்த கடைசியாகக் கோரப்பல்லழகி இருளாயி இறங்கினாள். “இருளாயி எறங்கிட்டாடா...” என்ற சத்தம் எட்டுத் திசையையும் அதிரச் செய்தது. செல்லத்தமன் கோவிலுக்கு வந்துசேர்ந்த சாமிகள் எல்லாம் சனி மூலையைத் திரும்பிப்பார்த்தன. இருளாயியின் ஆங்காரம் எப்படி இருக்குமோ என்ற அச்சம் மற்ற சாமியாடிகளுக்கும் பூசாரிகளுக்கும் உச்சத்தில் இருந்தது.

இருளாயியை இறக்கிய பத்துக் கொட்டுக்காரர்களும் பத்துக் கோடாங்கிகளும் மூச்சுவிடாமல் அடித்து அவளைத் திமிரவிடாமல் கொண்டுவர முழுசக்தியோடு இயங்கினர். இறங்கிய வேகத்தில் கொதிப்பானையில் வலது கையை விட்டு கருந்தேளையும் செந்தேளையும் அள்ளி ஆவணி வீதியில் வீசி எறிந்தாள். இடது கையை விட்டு கருநாகக் குட்டியையும், செந்நாகக் குட்டியையும் அள்ளி மாசிவீதியில் வீசி எறிந்தாள். உள் சந்துகளைக் கைக்கு ஐந்தாய்ப் பிடித்து மரத்தை உலுப்புவதைப் போல உலுப்பினாள். ஆலவாய் நகரம் அவள் மடக்கிக் கடித்த நாக்கிற்குள் சுருண்டு துடித்தது. வீசியெறிந்த கருநாகக் குட்டிகளுள் ஒன்று மீனாட்சி சொக்கநாதரின் பள்ளியறை ஊஞ்சலிலே போய் விழுந்தது. தண்டுவடம் சிலிர்த்து எழுந்தான் பாம்புப்பிடாரன். கருநாகக்குட்டிகளும் கருந்தேள் குட்டிகளும் நான்மாடக்கூடலுக்குள் ஊர்ந்து திரிந்தன. கோடாங்கிச் சத்தமும் கொட்டுச்சத்தமும் காதைக் கிழித்தன. பிடாரன் மருண்டு உள்நுழைந்துகொண்டான்.

கொட்டுக்காரர்களும் கோடாங்கிகளும் வளைத்து நின்று கொண்டு ஓசையின் வழியே இருளாயியை வடித்து இறக்கினர். மஞ்சத் தண்ணியைக் குடம் குடமாக ஊற்றினர். ஆத்தா...வெனக் கத்திக் குலையடித்து ஆடினர். விண்முட்ட நின்ற அவளின் ஆங்காரம் படிப்படியாய் இறங்கியது. நீண்ட நேரமாய் ஆடித்தீர்த்தாள். கருங்கெடாயும் செங்கெடாயும் வெட்டி ரத்தத்தை ஒழுக விட்டபடி கோடாங்கி முன் நகர அவள் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைக்கத் தொடங்கினாள். கோட்டையைவிட்டு விலகி வர வர அவள் வீரியம் குறைந்தது. ஆங்காரம் குறைந்தது. வடக்கு வாசலுக்கு எதிரே செல்லத்தம்மன் கோவிலுக்குள் நுழையும்போது சாமியாடி வந்தவள் தன் உடலிலே இருந்த சக்தியை மட்டுமே கொண்டு நுழைந்தாள்.

இரவின் கங்கு தீயும் முன் இருபத்தியொரு காவல்தெய்வங்களும் கோட்டையைவிட்டு இறங்கி பலியேற்க செல்லத்தம்மன் கோவிலுக்கு வந்துசேர்ந்தன. ஒவ்வொருவரும் வர வர அகழிக்கு அப்பால் வைகைக்கு வடக்கே வெட்டிய பெருங்குழியில் ஒவ்வொரு எருமையாய் வெட்டி பலி கொடுத்தனர். சாமியாடி வந்தவர்கள் அருவியெனக் கொட்டிய எருமையின் ரத்தத்தை அள்ளிப்பருகினர். கள்ளும் ஊறலும் கறிச்சோறும் பிசைந்து தின்றனர். உடுக்குச் சத்தமும் மேளச்சத்தமும் இறங்கிய சாமிகளின் ஆங்காரமும் அழுகையும் வடக்கு மூலையிலிருந்து நகரையே உலுக்கியது. ரத்தத்தில் பிசைந்த பலிச்சோறு இரவெல்லாம் வானத்தில் எறியப்பட்டது. கண்ணீரும் கம்பலையும், ஆத்திரமும் அழுகையுமாய் இறங்கிவந்த காவல் தெய்வங்களை எல்லாம் வடக்குவாசல் செல்லத்தம்மன் தனது எல்லைக்குள் ஏற்று தங்கிக்கொள்ள அனுமதித்தாள். அருகிலிருந்த கண்ணகி எதுவும் பேசாமல் அமைதி காத்தாள்.

பொழுது விடிந்தது. ரத்தம் மேவிய அந்தப் பகுதி முழுவதும் பெரும் போர் நடந்ததுபோல் இருந்தது. சாமியாடிகளும் பூசாரிகளும் கோடாங்கிகளும் அயர்ந்துபோய் எங்கும் சுருண்டு கிடந்தனர். வந்து சேர்ந்த சாமிகள் சிறு கல்லிலும் கைப்பிடி மண்ணிலும் செல்லத்தம்மனைச் சுற்றிலும் ஆங்காங்கே நிலைபெற்றன.

*

**அ**மாவாசை கழிந்த மூன்றாம் நாள் நள்ளிரவில் ஏழு வயது நிரம்பிய ஒரு பிராமணச் சிறுவன் கோட்டையின் கிழக்குப் பகுதியில் இருந்த காளிகோயிலில் நரபலி கொடுக்கப்பட்டான் என்றும், அவனது இரத்தம் கோட்டையின் நாற்புற வாசலின் நெற்றிப் பகுதியில் தெளிக்கப்பட்டு விட்டதாகவும் ஒரு செய்தி நகருக்குள் பரவியது. பட்டமார் தெருவிலிருந்தோ, ஆவணி மூலவிதியில் இருந்தோதான் இந்தச் செய்தி புறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக, அந்த பிராமணச் சிறுவனைப் பார்த்தவர்கள். கடைசியாக அவனது கதறலைக் கேட்டவர்கள், பக்கத்து கிராமமான கொடிமங்கலம் அக்கிரஹாரத்தில் ஒரு சிறுவனைக் காணாமல் மூன்று நாட்களாக தேடிக்கொண்டிருப்பதாகச் சொன்னவர்கள் என அனைவரும் இந்தச் செய்திக்கு உயிரூட்டினார்கள். கோட்டையின் கிழக்குப் பக்க காட்டுப் பகுதியில் வழக்கம்போல் வட்டமிட்டுத் திரிந்த காக் கைகள் கூட இந்தச் செய்திகளில் பங்கெடுத்தன. பலிகொடுக்கப்பட்ட சிறுவனின் கதறலும், கோடாரியைத் தூக்கும் முன் அவனது பிடரி நரம்பை உற்றுப் பார்த்த மலையாள மாந்திரீகவாதியின் பார்வையும் மதுரையின் இருளைப் பிடித்தது. பலி பீடத்தின் இரத்தவாடை நகரெங்கும் படிய ஆரம்பித்தது. காளியின் ஆங்காரம் தணிந்து விட்டதாக நகருக்குள் பேச்சுகள் அடிபடத் துவங்கின. கோட்டையை அகற்றும் மனோநிலைக்கு இந்தச் செய்தி மிகுந்த பலத்தை தந்தது. ஏழு வயதுச் சிறுவனின் இரத்தத்திற்குள் நாலரை மைல் நீளமுள்ள கோட்டை மூழ்க ஆரம்பித்தது. எல்லோர் மனதிலும் ஒரு பிராமணச் சிறுவன் உறுதியாக பலியிடப்பட்டு விட்டான். ராமச்சந்திர ஐயர் மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.

*

**பு**துமண்டபத்தில் பகலிலும் இரவிலும் பெருசுகள் உறங்கவேயில்லை. கோட்டையைப் பற்றியே எந்நேரமும் பேசிக் கொண்டிருந்தனர். இந்த அக்கிரமச் செயலை தடுத்து நிறுத்த தொடர்ந்து முயற்சித்தனர். பெரியவர்கள் மட்டுமல்ல, நடுத்தர வயதுக்காரர்களும் இளைஞர்களும் கூட இந்தக் கூட்டத்தில் இடம் பிடித்தனர். பயம் ஆட்கொண்டதால் பெண்கள் புலம்பித் தவித்தனர்.

அன்று புதுமண்டபத்தில் பெரும் கூட்டமிருந்தது. ஆளாளுக்கு ஒன்றைச் சொன்னார்கள். வழக்கம்போல் கொதிக்கப் பொய் பேசினார் வீரபத்திர பிள்ளை. ‘இப்படித்தான் தெக்க கட்டபொம்மு கோட்டைய இடிக்கிறதுக்கு வெள்ளக்காரென் போனப்ப உள்ளூர்காரங்ய யாரும் இடிக்க வர மாட்டம்னுட்டாங்ய. கூலியா என்ன கொடுத்தாலும் கோட்டைய நாங்க கைவைக்க மாட்டோம்னு சொல்லிட்டாங்ய. கடேசியில வடக்க திருச்சிக்கு அங்கிட்டு இருந்து ஆளுகள கூட்டிட்டு வந்து கோட்டைய இடிக்க வச்சான் வெள்ளகாரென். இடிச்சவங்ய கூலிய வாங்கிக்கிட்டு சிப்பாய்க பாதுகாப்போட ஊருக்குத் திருப்புனாங்ய. வழியில என்னாச்சு தெரியுமா? கரையக் கடக்கிறப்ப காவேரி வெள்ளம் எல்லோரையும் வாரிச் சுருட்டிக்கிட்டுப் போயிருச்சு. ஒருத்தென் கூட உசிரோடு ஊரு போயி சேரல. அது ஜக்கம்மா மட்டும் காவல் காத்த கோட்ட. ஆனா நம்ம மதுரக் கோட்ட இருபத்தோரு காவல் தெய்வங்கள் இருக்கிற கோட்ட அத மறந்து மாரெட்டு சொல்றான், மயிராண்டி சொல்றாண்டு கோட்டச் சுவரை

இடிக்கிறவன் எல்லாம் அரசத்துப் போவாங்ய' என்று எச்சரித்தார்.

'ராமநாத முதலி பீரங்கி மேடைய இடிக்க கூட்டிவந்த ஆள் ஒருத்தென் முதல் நாள் ராத்திரிலேயே செத்துப் போயிட்டான். இது மத்தவங்களுக்குத் தெரியக் கூடாதுன்னு வேறு காரணங் களையெல்லாம் சொல்லிப் பாத்தாங்க. ஆனா உண்மையான காரணத்த மறைக்க முடியாது. அந்தச் சாவு கோட்டையை இடிக்கிறவங்களுக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை மாதிரி. அதையும் மீறி இடிச்சா அடுத்தடுத்து என்ன வேணும்னாலும் நடக்கும். இது தெரியாம பெருமாள் முதலியும், ராமசந்திர ஐயரும் விளையாடுறாங்க...பாவம்!' என்று வருத்தப்பட்டார் வெங்கிடுசாமி நாயக்கர்.

'பரிகார பூஜ நடத்துறானாம் பரிகார பூஜ. இவனுக்கு பரிகாரம் செய்ய ஆளில்லாம போகப் போகுது' என்றார் கூட்டத்திலிருந்த ஒரு பெரியவர்.

மீனாட்சி சொக்கநாதர் கோயில் நிர்வாகத்தில் முன்பு முக்கியஸ் தராக இருந்த ஈஸ்வரமூர்த்தி ஐயர்தான் எல்லோரையும் சமாதானப்படுத்தி, பேச்சை நிறுத்தச் சொல்லி, அடுத்து என்ன செய்யவேண்டும் என்று யோசனை சொன்னார். அவர் இம்மிடி செட்டியாரின் நண்பர். இம்மிடி அமைதியாக நிதானமாக யோசித்து, புதுமண்டபத்திற்கு வழக்கம் போல் தான் போவதை நிறுத்திக்கொண்டு தனது நண்பரைக் களத்தில் இறக்கிவிட்டார். மதராஸ் சென்று மாட்சிமை தங்கிய கவர்னர் துரை அவர்களைப் பார்த்து மதுரை கலெக்டர் பிளாக்பர்னின் இந்த நடவடிக்கை மதுரை மக்களின் மனதில் தீராத வலியை ஏற்படுத்தியுள்ளது; கம்பெனி நிர்வாகத்திற்கு எதிராக மக்கள் வெறுப்படைந்துள்ளனர்; எனவே கலெக்டர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மகஜர் தயாரித்துக் கொடுத்துவிட்டு வரவேண்டும். இந்த ஏற்பாடுகளையெல்லாம் கவனிக்க ஐந்து நபர்களைப் பொறுப்பாக்கலாம் எனச்சொல்லி தன்னையும் சேர்த்து ஐந்து பேருடைய பெயரைக் கூறினார்.

புது மண்டபத்தில் கூடியிருந்த மற்றவர்கள் அதை ஆமோதித்தனர். அந்த ஐந்து பேரும் அடுத்து நடக்க வேண்டிய காரியங்களில் கவனம் செலுத்தினர்.

மதராஸ் போய் வர ரூ. 14.50க்கு வண்டி வாடகை பேசி இரண்டு கூண்டு வண்டிகள் அமர்த்தப்பட்டன. பல்லக்கை விட செலவும் குறைவு; பயண நாட்களும் குறைவு.

ஆறு பேர் கிளம்பி பன்னிரண்டாம் நாள் போய்ச் சேர்ந்தனர். கன்னிகா பரமேஸ்வரி விவாஹ மஹாலில் தங்கினர். மற்றவர்களை அங்கு விட்டு விட்டு இம்மிடி செட்டியார் நாலு நாட்களாக பட்டினமெங்கும் குதிரை வண்டி அமர்த்திக்கொண்டு அலைந்தார். ஐந்தாம் நாள் காலை ஜார்ஜ் கோட்டைக்கு எதிரே வண்டிகளை அவிழ்த்துப் போட்டுவிட்டுக் காத்திருந்திருந்தனர். சற்று நேரத்துக்குள்ளேயே ஏழெட்டு வில்வண்டிகளும் நாலைந்து சாரட்களும் வந்திறங்கின. மதராஸ் பிரமுகர்களாக இருக்கவேண்டும். இம்மிடியையும் உடன் வைத்துக்கொண்டு ஒருவர் வந்தவர் களையெல்லாம் வரவேற்றார். பிறகும் கோட்டைக்குள் போகவில்லை. அவர்கள் எல்லோரும் மர நிழலிலேயே நின்று ஒருவொருக்கொருவர் குசலம் விசாரித்துச் சிரித்துப்பேசிக் கொண்டிருந்தனர்.

பிறகு ஆடம்பர அலங்காரங்களோடு ஒரு கோச் வந்து நின்றது. ஜரிகைத் தலைப்பாகையும் வெள்ளைக்காரன் போல் கோட்டும் அணிந்திருந்த பெரியவர் ஒருவர் கைத்தடியை ஊன்றி இறங்கினார். கைத்தடியே கலை வேலைப்பாடுகளோடு இருந்தது. கோட்டைக்குள் நுழைந்தனர்.

இருபத்திரண்டு பேர் கவர்னர் ஜார்ஜ் ஹேயை சந்திக்க, செங்கம்பளம் விரிக்கப்பட்டிருந்த ஒரு விசாலமான அறையில் உள்ள மரநாற்காலிகளில் அமர்ந்து காத்திருந்தனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் கவர்னர் உள்ளே நுழைந்தார். புன்னகைத்தவாறு பெரியவரிடம் வந்து கை குலுக்கிவிட்டு எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்தார். பெரியவர் கையிலிருந்த மகஜரை நீட்டினார். வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு கவர்னர் தலை நிமிர்ந்தார். பெரியவர் இம்மிடியையே பேசச் சொன்னார். இம்மிடி பேசப் பேச துபாஷி மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான்.

*

# 46

**கோட்டை மதில் நெடுகிலும் குறிப்பிட்ட இடைவெளியில் காவல்** வீரர்கள் தங்கும் மாடங்கள் உடும்பின் முக அமைப்புப் போல அடிபெருத்து, நுனி சிறுத்து நின்றிருந்தன. ஆயுதம் வைக்கப்படும் அறைகள் வரிசையாக இருந்தன. வெளிப்புறம் இடைவெளிகளுடன் அமைக்கப்பட்ட வளைவுகளும், உள்புறம் சிறிய உயரமுள்ள சுவரும், வீரர்களும், குதிரைகளும் கீழே இருந்து ஏறி இறங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த அகன்ற படிக்கட்டுகளும் மாறி மாறிக் கட்டப்பட்டிருந்தன. கோட்டைச் சுவரின் நான்கு முனைகளிலும் நான்கு மிகப் பெரிய கோபுர மாடங்களும் இடையிடையில் அதைவிட சிறிய அளவிலான சதுர மாடங்களும் இருந்தன. கோட்டையின் கம்பீரத்திற்கு சூட்டப்பட்ட மகுடங்களைப் போல் காட்சியளித்தன இந்த மாடங்கள். கோட்டையின் நான்கு மூலைகளிலும் கட்டப்பட்டிருந்த இந்தக் கோபுர மாடங்களின் மேல் நின்று பார்ப்பவர்கள் வெவ்வேறு நிலக் காட்சிகளைக் காணமுடியும்.

மாடங்கள் அழகானவை மட்டுமல்ல, அவை அதிகாரத்தின் கண்கள். எல்லாத் திசைகளிலும் நிகழும் சம்பவங்களை உற்றுப்பார்க்கும் திறன் அதற்கு உண்டு. அது பார்க்கும் கண் மட்டுமல்ல; எல்லா இடங்களும் பார்க்கப்படுகின்றன என்பதை உணர்த்தும் கண். அதிகாரத்திற்கு கண்கள் மட்டுமல்ல, காதுகளும் உண்டு. கோட்டைச் சுவர் முழுமையும் அதிகாரத்தின் காதுகள்தான். வெறுத்தோ எதிர்த்தோ பேசப்படும் பேச்சுக்களை அது கேட்டுவிடும் என மக்கள் அஞ்சி நடுங்குவர். கோட்டைகளும் மாடங்களும், பார்க்கவும் கேட்கவும் பேசவும் பழக்கப் படுத்தப்பட்டவையே.

நான்கு முனையிலும் கட்டப்பட்டிருந்த மாடங்கள் மிக நுட்பமான அழகிய வேலைப்பாடுகளால் ஆனவை. அதன் மேல் விதானம் பதினெட்டு அடி விட்டங்களைக் கொண்டது. எட்டுத் தூண்களின் மேல் நிறுத்தப்பட்டிருந்த இந்த மாடத்தின் விளிம்புகளில் கதை வேலைப்பாடுகள் அழகுறச் செய்யப் பட்டிருந்தன. சுண்ணாம்புக் காரைகளால் பூசப்பட்டிருந்த

இந்த மேல்மாடத்தின் பின்னால் சூரியன் உதிப்பதையும், நிலவுமறைவதையும் காலங்காலமாய் கண்டு அனுபவித்தனர் மதுரை மக்கள். மதுராபுரித் தெய்வம் சூட்டிக்கொண்ட மலர்க் கொத்துக்களாக இந்த மாடங்கள் காட்சியளித்தன. கான்சாகிப்பின் காலத்தில்தான் இந்த மாடங்களின் இரண்டு பக்கங்களிலும் மேலும் இரண்டு சிறிய மேடைகள் அமைக்கப்பட்டு பன்னிரண்டு பவுண்டு பீரங்கிகள் நிறுத்தப்பட்டன.

இரவுக் காவலர்கள் காலங்காலமாய் பயன்படுத்தி வந்த தீவட்டியின் கரும்புகை மட்டுமே இன்று மாடத்தின் மேற்கூரையில் படிந்துகிடக்கிறது. சுண்ணாம்புக் காரைகளின் விளிம்புகள் அங்கும் இங்குமாக சிதைக்கப்பட்டுவிட்டன. பீரங்கி மேடைகள் பெயர்ந்து கிடைக்கின்றன. தென்மேற்கு கோபுரமாடம், மூன்று தூண்கள் மட்டுமே எஞ்சி நிற்க முழுவதும் சாய்ந்து கிடக்கிறது. கோட்டை காவல்படையின் கம்பீர அணிவகுப்புகள் காணாமல் போய் ஆண்டுகள் பல ஆகிவிட்டன. கோட்டையின் ஒவ்வொரு கல்லிலும் இருந்த ராஜபார்வை அகன்றுவிட்டது. தோல்வியுற்ற வீரர்களின் கண்களில் இருந்த பயம் சிதைந்த தூண்களின் இடுக்குகளுக்குள் செருகிக் கிடக்கிறது. இரவில் வந்து செல்லும் ஆந்தையின் கண்களுக்கே அவை தெரிகின்றன.

கலெக்டர் பிளாக்பர்ன் தற்காலிகப் பதவிநீக்கம் செய்யப்பட்ட தகவல் மதுரை வந்து சேர்ந்தது. அவர் மதராஸுக்குக் கிளம்பிப் போனார்.

**வீ**ழ்ச்சிக்குப்பின் எவ்வளவு காலம் நிலைத்திருந்தாலும் கோட்டை அதன் அர்த்தத்தை ஒரு சிறு கல்லில் கூட தக்கவைத்துக் கொள்வதில்லை. அது தனது அர்த்தத்தையும் அவசியத்தையும் ஒருபோதும் தான் தீர்மானிப்பதும் இல்லை. எதிரிகளால் நாற்புறமும் சூழப்பட்ட நிலையில் உட்பகுதியில் இருக்கும் பதற்றத்தையும், பயத்தையும் அது உணர்ந்ததுமில்லை. அவர்களின் பசியை அது அறியாது. முற்றுகையைக் கண்டு அது அஞ்சியதில்லை. வீழ்த்தப்பட்ட பின் சிதைந்துபோன நெடுங்கதவுகளின் வழியே வெட்டுண்ட தேகங்களை இழுத்துக்கொண்டு கரிய இரத்தம் வெளியேறும்போது அதைக் கண்டுகொண்டதுமில்லை. ஏதோ ஒரு மலைப்பகுதியில் இருந்து தன்னைச் செதில் செதிலாக வெட்டி எடுத்து வந்து இங்கே அடுக்கி வைத்தவர்களின் மீது அதற்குக் கோபம் இல்லை; ஆதரவு காட்டவும் தெரியாது. அது வெறும் கல்; அவ்வளவுதான்.

மனிதன்தான் அதன் மீது கனவு காணுகிறான். கட்டியெழுப் புகிறான். ஏதேதோ செய்து அதன் பின்னால் ஒளிந்து கொள்ளப்பார்க்கிறான். செதுக்கி வழிபடுகிறான். நம்பி வரம் பெற விழைகிறான். ஆனால் கல் வெறும் கல்லாகவே இருக்கிறது. பறவையின் எச்சத்தில் முளைவிடும் தாவரத்தின் வேர்கள் மட்டுமே அதை உணருகிற ஆற்றல் பெற்றவை. அதனால்தான் விதையிலிருந்து முளைவிடும் முதல் தருணத்திலேயே அது பாறையை வென்றுவிடுகிறது. பதினெட்டு பவுண்டு பீரங்கியின் வாயிலிருந்து பறந்து வந்து அடித்த கல்குண்டுகளைத் தாங்கி கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் கற்பாளங்களின் ஊடே இடி மின்னலைப்போல் இறங்குகிறது ஒரு சிறு வேர்.

இரண்டே மாதங்களில் பிளாக்பர்ன மதுரை திரும்பினார். தனது திட்டங்களை விளக்கி கவர்னரை நம்ப வைத்து, கோட்டையை இடிப்பதற்கான கவர்னரின் அனுமதியோடு வந்து சேர்ந்தார்.

*

# 47

**பிளாக்பர்ன் மஹாலில் இருக்கும் தன் அலுவலகத்துக்கு காலையில்** கிளம்பினார். வைகையைத் தனது சாரட் வண்டியில் கடந்து கொண்டிருக்கும்போதே கவனித்தார் - ஏழெட்டுப் பேர் தலையில் தண்ணீர்க் குடங்களை எடுத்துச் செல்ல மூன்று உறுமிகள் முழக்கி யவாறு முன்னே சென்றன. கடந்த மூன்று நாட்களாக இப்படிக் காட்சியைப் பாரத்துக் கொண்டுதானிருக்கிறார். கோட்டையில் உள்ள சாமிகளுக்கு ஏதாவது வழிபாடாக இருக்கும் என்று பொருட்படுத்தவில்லை. இன்று அது என்ன என்று பார்க்கும் ஆவல் ஏற்பட்டது. வடக்கு வாசலில் நுழையுமுன் சாரட்டை நிறுத்தச் சொன்னார். அகழிக்கு அப்பால் மூன்று மாட்டு வண்டிகள் நின்றுகொண்டிருந்தன.

உறுமிகள் கரையேறி வடக்கு வாசலுக்கு வந்தன. கோட்டைக்கு உள்ளே வந்து வடக்கு வாசல் செல்லியம்மன் கோவிலில் நுழைந்தனர். பிளாக்பர்ன் தொடர்ந்துபோய் வெளிவாசலில் நின்று பார்த்தார். உறுமியை இழுத்தவாறு அவன் பாட, எல்லோரும் வணங்கினர். பிறகு திரும்பி வந்து உள், வெளி மதில்களுக்கு இடையே உள்ள இடத்தில் நுழைத்தனர். பிளாக்பர்ன் அவர்களை நிறுத்தி யார் என்று கேட்டார். சொக்கம்பட்டி பாளையம் என்று பதில் வந்தது. வண்டிக்காரனிடம் துபாஷியை அழைத்து வா என்று சொல்லிவிட்டு, அவர்கள் பின்னே பிளாக்பர்ன் நடந்தார். அந்த இடம் புழக்கமின்றி எருக்கு, ஆவாரஞ் செடிகள் மண்டிய புதர்க்காடாகக் கிடந்தது. ஒவ்வொரு கொத்தளத்தின் கீழ் புறத்திலும் ஏராளமான நடுகற்கள் இருந்தன. அவர்கள் பத்தொன்பதாவது கொத்தளத்தின் கீழ் நின்றனர். அங்கு நாற்பதுக்கும் மேல் நடுகற்கள் இருந்தன. பெரிய கற்களில் வாளுடன் வீரனின் புடைப்புச் சிற்பம். குடத்து நீரை எல்லாக் கற்களுக்கும் பரவலாக ஊற்றி மாலைகளை அணிவித்தனர்.

வைகையில் நீர் எடுத்துக்கொண்டு இன்னொரு அணி உறுமி முழங்க கிழக்கே செல்வது தெரிந்தது. தொட்டியங்கோட்டைப் பாளையம் அது. கோட்டையை இடிக்கப்போகும் தகவல் தெரிந்தவுடன் முதன் முதலில்

போடிநாயக்கனூர், தேவாரம் பாளையங்கள்தான் மதுரை வந்து தமது மாலைக்கற்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றனர். தமது ஊருக்கு வெளியே ஓரிடத்தில் மீண்டும் நட்டு வைத்தனர்.

செய்தி கேள்விப்பட்டு ஒவ்வொரு பாளையமும் மதுரை வந்து மாலைக்கற்களை மீட்டுக்கொண்டு சென்றது.

சொக்கம்பட்டி கோடாங்கி நாயக்கர் தனது கோடாங்கியை முழங்கியபடி பாடி பூஜையைத் தொடங்கினார். அதற்குள் துவிபாஷி முத்துக்கிருஷ்ண செட்டி அங்கு வந்து சேர்ந்துவிட்டார்.

சடங்கில் அடுத்ததாக உறுமிக்காரர்கள் 'வ்வூ... வ்வூ... வ்வூ...' என்று இழுத்தார்கள். அதிலுள்ள முதியவர் இடதுகை வளைகோலால் உறுமியை இழுத்தபடி வலதுகைக் கோலைத் தூக்கியவாறு நடுகற்களைப் பார்த்துப் பாடத் தொடங்கினார். அது பாலமுகொண்ட வமிசத்தின் போர்கள் வெற்றிகளையும் தியாகங் களையும் பற்றிய பாடல். முத்தைய நாயக்கர் சுல்தான்களுக்கு எதிராகப் போரிட்டதையும் தேவகிரி கோட்டையில் மடிந்ததையும் முதல் பாடலாகக் கொண்டு ஆரம்பித்தது.

பிளாக்பர்ன் செட்டியின் முகத்தைப் பார்க்க தெலுங்குப் பாடலின் அர்த்தத்தை ஆங்கிலத்தில் அவர் சொன்னார். தேவகிரி என்ற பெயரைக் கேட்டதும் பிளாக்பர்ன் ஆச்சரியத்தில் உறைந்து போனார். எல்லாக் கலெக்டர்களைப் போலவே அவருக்கும் அதுவரை அறியப்பட்ட இந்திய வரலாற்றில் தீவிர ஈடுபாடு உண்டு. தேவகிரி என்றால்... 550 ஆண்டுகளுக்கு முன்!

தொடர்ந்து ஆனைகுந்தி, விஜயநகரம், மதுரைக்காக போர்களில் மடிந்த பாலமுகொண்ட வீரர்களின் வரலாற்றை குலப்பாடகன் வரிசையாகப் பாடினான். நேரம் கடந்து கொண்டிருந்தது. பொறுமையாக நின்று கேட்டிருந்தார் பிளாக்பர்ன். மூன்று மணி நேரத்தில் பாடல்கள் நூற்றுக்கணக்கான போர்களையும் ஆயிரக் கணக்கில் இழப்புகளையும் கடந்து வந்தன. முடிந்தவுடன் பிளாக்பர்ன் உறுமிக்காரரிடம் பேசினார். 'உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?'

'தெரியாது.'

'பிறகு எப்படி இவ்வளவு பாடல்களைச் சொல்கிறீர்கள்?'

அவர்கள் தாசரிகள். கொல்லவாருகளின் குலப்பாடகர்கள். அவர்கள் போருக்கும் கூடவே செல்வார்கள். போருக்கு முன் பாடவேண்டும். களத்தில் இறப்பவர்களை அடக்கம் செய்கையில் பாடவேண்டும். பாளையத் தலைவர் வமிசத்திற்கு மட்டுமல்ல; எல்லா வீடுகளுக்கும் தனித்தனியே பாடகர்கள் உண்டு. ஒரு பாளையத்தில் உள்ள படைவீரர்கள் அநேகமாக பத்து வீட்டுப் பெயர்களுக்குள் அடங்கிவிடுவர். அவர்கள் சந்ததியினர் எவ்வளவு கிளைகளாகப் பிரிந்தாலும் வீட்டுப் பெயர் ஒன்றேதான். அதுவே பாரம்பரியமாகத் தொடரும். உறுமிக்காரர்களின் தொழிலே களங்களிலும், மாலைக்கல் வழிபாட்டிலும், விழாச் சடங்குகளிலும் வீட்டுப் புகழ் பாடுவதுதான். பாடல்கள் உறும்மிக்காரர்களின் சந்ததிகள் வழியாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கும். வாரிசு அற்றநிலை வருமென்றால் உறவினர்களுக்குப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்து உரிமையைக்

கைமாற்றி விடுவார்கள்.

கடப்பாரையால் தோண்டி மாலைக் கற்களைப் பெயர்த்துக் கொண்டுபோய் வண்டியில் ஏற்றினார்கள். ஒவ்வொரு கல்லாக அவர்கள் தலையில் தூக்கிக்கொண்டு போகையில் களத்தில் வீழ்ந்த வீரர்களைத் தூக்கிப் போவதுபோல் தோன்ற பிளாக்பர்ன் கடும் மனச்சோர்வுக்கு உள்ளானார். அவர்களிடம் சொல்லிக் கொண்டு, எதுவுமே பேசாமல் சாரட்டில் ஏறிச் சென்றார். வெயில் அவர் தோலைச் சுட்டெரித்தது.

**ம**றுநாள் பிளாக்பர்ன் அலுவலகத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தபோது மஹாலுக்கு அருகே தெற்கு மதிலுக்கு அப்பால் இருந்து உறுமிச் சத்தம் கேட்டது.

அன்று மாலை கிழக்கு மதில் பக்கமிருந்து உறுமி ஒலித்தது.

இந்தியர்களுக்கு வரலாற்று உணர்வே இல்லை என்றுதான் பிளாக்பர்னுக்கு எண்ணம் இருந்தது. இங்கு முறையாக எதுவும் எழுதப்படவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பிரிட்டிஷ் அரசியல் மாற்றங்களை நேரம் நிமிஷம் துல்லியமாக ஆங்கிலேயர்கள் எழுதி வைத்திருப்பது பற்றிப் பெருமிதம் இருந்தது. இங்கே முகம்மதிய வரலாற்றாசிரியர்கள் உடன் இருந்து பார்த்துப் பதித்து வைத்ததைத் தவிர வேறில்லை. இந்நிலத்தின் மக்களிடம் அப்படி ஒரு வழக்கமே இல்லை. ஆனால் இதோ... நடமாடும் வரலாற்று நூலாக ஒருவன் வமிசாவளியாய் இயங்கி வருகிறான். இவர்களின் பண்பாடு வேறு. மரபும் சடங்குகளும் எனக்கு முற்றிலும் அந்நியமானவை. கிறிஸ்தவப் போதகர்கள் சொல்வதைப்போல இம்மக்களை அஞ்ஞானிகளாகப் பார்க்காமல், புரிந்துகொள்ள முயல்வதே சரி.

மாறிவிட்ட காலத்தில், இனி இதற்கான தேவைகள் இல்லாதபோது இந்த உறுமிக்காரர்கள் எவ்வளவு நாள் இந்தச் சேவையில் நீடிப்பார்கள்? எழுதி வைக்காத வரை பாடல்களுக்கு நிரந்தரத் தன்மையும் இல்லை. வீரகதைப்பாடல்கள் பெருமையை மட்டுமே பாடுகிறவை; காரண காரிய நிகழ்வுகளும் காலத் துல்லியமும் அவற்றில் இல்லை என்றும் அவருக்குப்பட்டது. ஆனால் ரத்த பந்தங்களால் கட்டப்பட்ட ஒரு அணியினரிடம் போர்க்களத்தில் இப்பாடல்கள் ஏற்றும் உணர்ச்சி வேகம் அளப்பரியதாயிருக்கும். இவர்களை முகம்மதியர்களும் பின்னர் ஐரோப்பியர்களும் வெல்ல முடிந்ததற்குப் பிரதான காரணமே தொழில்நுட்ப மேம்பாடுதான்.

தொடர்ந்து வந்த நாட்களிலெல்லாம் எந்நேரமும் உறுமி ஏதாவது திசையிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது. பாளையங்கள் தம் மாலைக் கற்களை மீட்டுச்செல்கின்றன.

ஒருநாள் கனவில் உறுமி ஒலிக்க, ரத்தத்தோடு ஒரு உடலைத் தூக்கிச் செல்லும் காட்சி தோன்றத் திடுக்கிட்டு விழித்து எழுந்துவிட்டார். பிறகு படுக்கைக்குப் போகவில்லை. இங்கிலாந்தில் Castleகள் அனைத்துமே நினைவுச் சின்னங்களாப் பாதுகாக்கப்படும் போது, நகர வளர்ச்சி என்ற பெயரில் தனது திட்டம் நியாயமானது தானா என்ற கேள்வி எழுந்தது. மதுரை மக்கள் கோட்டையை இடிப்பதற்குத் தடையை மதறாஸ் போய்பெற்று வந்த பிறகு இதில் எப்படியாவது வெற்றி பெற்றே

தீரவேண்டும் என்ற வெறிதான் அவருக்குள் எழுந்தது. பிறகு சாதகபாதகங்களைப் பற்றி யோசிக்கவே இல்லை. இப்போது ஏனோ நெஞ்சில் இது உறுத்திக்கொண்டேயிருக்கிறது.

மறுநாள் காலை அலுவலகம் சென்றதும் துபாஷி செட்டியாரிடம் இம்மிடியாரைப் பற்றி விசாரித்தார்.

‘இம்மிடி என்றால் **Blackburn, the great** என்பது போல் அர்த்தம்‘ என்றார் அவர்.

‘இல்லை, அவரது ஆளுமை பற்றிக் கேட்டேன்.’

‘குடும்பம் தங்க வணிகம் செய்கிறது. மதுரையின் தெலுங்குப் பிரமுகர் அவர்தான். கல்விமான். தமிழ், தெலுங்கில் புலமை மிக்கவர்.’

‘உடனே அவரை அழைத்துக்கொண்டு வா.’

சற்றுநேரம் கழித்துத் திரும்பிவந்த முத்துக்கிருஷ்ணன், அவர் வர மறுத்துவிட்டதாகத் தெரிவித்தார்.

‘அவர் மேல் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. அலுவல் நிமித்தமாகப் பேசுவதற்கல்ல. நட்பார்ந்த முறையில் சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளவே அவரிடம் பேச விரும்புகிறேன்’ என்று சொல்லி மறுபடியும் அனுப்பி வைத்தார்.

முத்துக்கிருஷ்ணன் மீண்டும் வந்து அவர் உங்களைப் பார்க்க விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

அதிகாரமிக்க ஒரு கலெக்டரின் வேண்டுகோளை நிராகரிக்கும் ஒரு குடிமகனது மனஉறுதி பிளாக்பர்னுக்கு ஆச்சரியமளித்தது.

‘என்ன செய்யலாம்? நானே சென்று சந்திக்கிறேன். எனக்கொன்றுமில்லை.’

‘அப்படியானால் மாலையில் புதுமண்டபத்தில் சந்திக்கலாம். மீனாட்சியை வணங்கிவிட்டு, தினமும் அங்கு உட்கார்ந்துதான் அவர் ஏடு படிப்பார்.’

அலுவலகத்திலிருந்து தாமதமாகக் கிளம்பி மாலை மயங்கிக்கொண்டிருக்கும்போது பிளாக்பர்னும் துபாஷியும் புது மண்டபத்தை அடைந்தனர். மேற்கு வாசலில் பூட்ஸைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தார்.

விஸ்வநாத ராஜாவின் சிலைக்குக் கீழே ஒரு கிழவர் சப்பணமிட்டு அமர்ந்து லாந்தர் வெளிச்சத்தில் ஏட்டைப் பார்த்து ராகம் போட்டு வாசித்துக்கொண்டிருந்தார். எண்பது வயதுக்கு அடுத்திருக்கும். சுற்றிலும் பத்திருபது முதியவர்கள் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். கிழவிகள் கூட இருந்தனர். அவர்கள் எல்லோரும் பிளாக்பர்னயே ஆச்சரியத்தோடு பார்த்தாவறிருந்தனர். இம்மிடி ஏட்டிலேயே முகம் கவிழ்ந்து வாசித்தவாறிருந்தார்.

ஒரு பாடலை முடித்துவிட்டு விளக்கம் சொல்லத் தலை நிமிர்ந்த இம்மிடி எல்லோரும் ஒரே பக்கமே பார்ப்பதைக் கண்டு முகம் திருப்பினார். நின்றிருந்த பிளாக்பர்ன் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கவும், இம்மிடி

பதிலுக்கு வணங்கினார். அவர் ஏட்டை மடக்கிவைத்துக் கட்டினார். முத்துக்கிருஷ்ணன் ‘வேறொன்றுமில்லை. உங்களை சும்மா பார்த்துவிட்டு போகலாம் என்று ஐயா வந்திருக்கிறார்’ என்றார்.

இம்மிடி முன்னே இருந்தவர்களைப் பார்த்து ‘நாளை தொடருவோம். நீங்கள் கிளம்புங்கள்’ என்றார்.

எல்லோரும் எழுந்தார்கள். கலைந்து செல்லுமுன் விஸ்வநாதருக்கு ஒரு கும்பிடு போட்டார்கள். இம்மிடியிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினார்கள். அதற்குள் தூணுக்கு அருகிலிருந்த பையன் வெற்றிலையை உரலில் போட்டு இடிக்கத் தொடங்கியிருந்தான்.

முத்துக்கிருஷ்ணன் அருகே வந்து சொன்னார் ‘ஐயா கோவிலுக்குள் போய் பேசலாம் என்று நினைக்கிறார்.’

வெற்றிலைத் தொக்கை வாங்கி வாயில் அதக்கிக்கொண்ட இம்மிடி சரி என்று தலையாட்டினார். கையை ஊன்றி எழுந்து விஸ்வநாதரின் காலைப் பிடித்துக்கொண்டு நிமிர்ந்து நின்றார். சிலையின் காலடியில் பெரிய வெங்கல தீபம். கழுத்தில் மாலை விஸ்வநாதரை வணங்கி விட்டுக் கிளம்பினார். உதவிக்கு இருந்த பையன் ஏடுகளைப் பையில் போட்டுக்கொண்டு உரலையும் கையில் எடுத்துக்கொண்டு பின்னே சென்றான். மண்டபப் படிகளில் ஏறி வடக்கே விலகிச்சென்று வெற்றிலைச் சாறைத் துப்பிவிட்டு கிழக்குக் கோபுரத்தை நோக்கி கீழ்ச்சித்திரை வீதியில் நடந்தார். சுந்தர பாண்டியன் கோபுரத்தின் புறாக்கள் அடைந்து ஒடுங்கியிருந்தன.

வீரவசந்த ராயர் மண்டபப் பிரகாரத்தில் நடந்து சென்றனர். விளக்குகளின் மஞ்சள் சுடர் ஒளியால் மங்கிய வெளிச்சம் பரவியிருந்தது. வடக்கே ஆயிரங்கால் மண்டபம் தனது முகப்புச் சிற்பங்களுடன் கம்பீரமாக நின்றது. கீழ ஆடி வீதியைக் கடந்து சுந்தரேஸ்வரர் இரண்டாம் பிரகாரத்தில் நுழைந்தனர். நேரே கம்பத்தடி மண்டபம் இருந்தது. நந்திக்குப் பின்னே சென்றவுடன் பிளாக்பர்ன் நின்று கைகளைக் கூப்பி வணங்கினார். இம்மிடி ஆச்சரியத்தோடு அதைக் கவனித்தார். பிளாக்பர்ன் ஏற்கனவே சிலமுறை இங்கு வந்திருப்பதால் பின்புறம் திரும்பி அகோர வீரபத்ரா சிலையைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டு நின்றார். ‘கிரேட்....’ என்று உதடுகள் முணுமுணுத்தன. இம்மிடி சைகை செய்து பிளாக்பர்னை அழைத்துக்கொண்டு மீனாட்சி கல்யாணச் சிலையைச் சுற்றி சந்நிதிக்கு முன்னே நின்று எதிரே தெரிந்த சுந்தேரேஸ்வரரை வணங்கச் சொன்னார். இதற்கு மேல் அந்நியர்கள் நுழைய முடியாது.

சுவாமி சந்நிதி இரண்டாம் பிரகாரத்தில் நடந்து முக்குருணி விநாயகருக்கு எதிரே தெற்கே திரும்பி அம்மன் கிளிக்கூண்டு மண்டபத்தில் நுழைந்து முதல் பிரகார வாயிலுக்கு எதிரே நின்றனர். பிளாக்பர்ன் மீனாட்சியை வணங்கினார். பொற்றாமரைக் குளத்தின் வடக்குப் பிரகாரத்தில் நடந்தனர். பிளாக்பர்ன் சுவரில் மங்கிப் போயிருந்த ஓவியங்களைப் பார்த்தவாறே வந்தார். குளத்தின் மூலைக்கு வந்தவுடன் இங்கே அமரலாம் என்றார்.

சில நிமிடங்கள் எதிரே நிலவொளியில் நிமிர்ந்து நிற்கும் தெற்குக் கோபுரத்தையே பார்த்துக்கொண்டிருந்தவர். பின்னர் இம்மிடியிடம்

கேட்டார் ‘என்மீது கோபமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.’

இம்மிடி மௌனமாக இருந்தார்.

‘நகரத்தின் விரிவாக்கமும் வசதியும் கருதித்தான் இதைச் செய்கிறேன். வேறு எந்த நோக்கமும் இல்லை. நம்புங்கள். உங்கள் பண்பாட்டின் மீது எந்த அவமரியாதையும் இல்லை. உங்கள் கோவில்கள் பற்றி எனக்கு பிரமிப்புதான் இருக்கிறது. மதராஸ் பிரஸிடென்ஸியில் 8292 கோவில்கள் முக்கியமானவை என்று கணக்கிட்டிருக்கிறோம். அவற்றை எப்படிப் பாதுகாக்கிறோம் என்று உங்களுக்கே தெரியும்.’

முத்துக்கிருஷ்ணன் தெலுங்கில் மொழிபெயர்த்து முடித்ததும் இம்மிடி கேட்டார் ‘அப்புறம் ஏன் மாலைச்சாமிகள் இருக்கும் கோட்டையை இடிக்க நினைக்கிறீர்கள்?’

‘உண்மையில் இப்படி நடுநற்கள் இருப்பதும் வழிபடப்படுவதும் எனக்கு இப்போதுதான் தெரியும். அந்த உறுமியின் குரல் விடாமல் என்னை விரட்டிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் உங்களைச் சந்திக்க விரும்பினேன்.’

‘நீங்கள் இடித்தாலும் நாங்கள் எங்கள் முன்னோர்களைக் கைவிட்டு விடமாட்டோம். வருடந்தோறும் இனியும் வழிபாடு தொடரும். இப்போது அந்தச் சாமிகள் சொந்த ஊருக்கே திரும்பிச் சென்றுவிட்டன. மதுரைக்காக உயிர்விட்ட அவர்களுக்கு இனி மதுரையில் இடமில்லை.’

‘அதற்காக வருந்துகிறேன். இந்த பாளையக்கார அமைப்பைப் பற்றி மேலும் மேலும் அறியுந்தோறும் ஆச்சரியமாயிருக்கிறது.’

‘மதுரைக் கோட்டையில் பாளையங்களுக்குக் கொத்தளமும், கீழேயே மாலைக் கற்களுக்கு இடமும் கொடுத்தது விஸ்வநாதர் ஏற்பாடுதான்.

வடுக நாட்டில் எங்கும் இப்படி இல்லையாம். இது பற்றிப் பலமுறை நினைத்து வியந்திருக்கிறேன். அவர்கள் சாமிகள் சூழ ஒவ்வொரு பாளையத்துக்கும் மதுரையில் ஒரு கோட்டை. கொத்தளத்தில் நிற்கும் வீரன், எதிரியை, அவனது சாமிகளைக் கடந்து மதிலில் ஏற விடுவானா?’

‘எப்படியும் இந்த வாரத்தில் எல்லா மாலைக்கற்களும் ஊர் திரும்பிவிடும். ஏற்கனவே மதுரைத் தமிழர்கள் கோட்டை மதிலில் தாம் வைத்து வணங்கிய சாமிகளை வடக்கு வாசல் செல்லியம்மன் கோவிலுக்கு மாற்றிவிட்டார்கள். இனி ஏதும் ஆட்சேபணை இல்லை அல்லவா?’

‘விஸ்வநாதர் கட்டிய கோட்டை என்பதால்தான் மனசு கேக்கவில்லை. வேறு ராஜாக்கள் கட்டியதாக இது இருந்தால் இவ்வளவு வருத்தபட்டிருக்க மாட்டேன். விஸ்வநாதரின் கதை கேட்டு வளர்ந்தவர்கள் நாங்கள். வடக்கேயிருந்து தாசரிகளும், படைராஜுக்களும், நாலுமணிக்காரர்களும் பாடிப் பரிசு வாங்கிச் செல்வதற்காக இங்கே வருவார்கள். பகல் நேரங்களில் பெரிய வீடுகளில் பாடுவார்கள். தெருவிலுள்ள பெண்கள் எல்லாம் அங்கு கூடியிருந்து கேட்பார்கள். புதுமண்டபத்தில் மாலையில் ஆரம்பித்து இரவெல்லாம் பாடுவார்கள். பாடுகிறவர் எப்போதும் விஸ்வநாதர் காலடியில்தான் அமர்ந்து பாடுவார். நாலுமணிக்காரர் சேகண்டியை அடித்துப் பாடும் குரல் கிழக்குக் கோபுரம் வரை கேட்கும். பெரும்பாலும்

‘கொட்டியம் வீர சரிதமு’ தான் பாடுவார்கள். பெயர்தான் ஒன்று. ஒவ்வொருவருவர் பாடலும் வேறாக இருக்கும். அபூர்வமாகத்தான் ‘பல்ல நாட்டு வீர கதை’யைப் பாடுவார்கள். பல்ல நாட்டுப் பாடல்களைக் கேட்டு பிறகு தெலுங்கு மகாகவி ஸ்ரீநாதர் அதைக் காவியமாக எழுதினார். பாரதம் போல் அரசு உரிமைப் போர் அது. கடந்த ஒரு வருடமாக ஸ்ரீநாதரின் ஹரிவிலாசமுவை முடித்துவிட்டு, இதைத்தான் இப்போது வாசிக்கிறேன். நீங்கள் வந்தபோது காப்பு தளபதி ஆரவல்லி அம்மாளின் போர்க்கள சாகசங்களை வாசித்துக்கொண்டிருந்தேன்...’

‘விஸ்வநாதரைப் பற்றிச் சொல்ல வந்தீர்கள்...’

‘ஆமாம். ஸ்ரீநாதரைப் போல கொட்டியம் கதைகளுக்கு ஒரு காவிய கர்த்தா வந்து வாய்க்கவில்லை. அதனால் எழுத்தில் வரவில்லை. ஆனாலும் என்ன? இன்னும் இந்த மண்ணெங்கும் பாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ராயர்களை மக்கள் மறந்துவிட்டார்கள். ஆனால் இப்போதும், இந்த இரவிலும் வடுகநாட்டின் நூற்றுக்கணக்கான மண்டபங்களில் விஸ்வநாதரின் புகழ்பாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒவ்வொரு பாடகனும் அவன் கற்பனையை ஏற்றிப் புதிது புதிதாகப் பாடுவான். விஸ்வநாதர் ரத்னகிரிக் கோட்டைக்குள் இறங்கும் காட்சி பற்றி எனக்கே முப்பது விதமான பாடல்கள் மனனமாகத் தெரியும். விஸ்வநாதனின் யானை வேங்கடன் எட்டுத்திக்கும் அதிரப் பிளிறியபடி கோட்டைக்கதவை உடைக்கிறது. துலுக்கர்களை மிதித்துத் துவம்சம் செய்து, துதிக்கையால் அறைந்து எறிந்தபடி அது போக உடலெல்லாம் ரத்தம் ஒழுகக்கையில் வேலுடன் கம்பீரமாக மேலே விஸ்வநாதன் அமர்ந்திருக்கிறான். வஜ்ராயுதம் ஏந்திய இந்திரனோடு மேகமண்டலத்திலிருந்து ஐராவதம் இறங்கியது போலிருந்ததாம்!’

‘ஆனால் மொத்தத்தில் தக்காண வரலாற்றில் முகம்மதியர்கள்தான் அதிக வெற்றிகளை அடைந்திருக்கிறார்கள்’ என்றார் பிளாக்பர்ன்.

இம்மிடி அவசரமாகத் தொடர்ந்தார் ‘இருக்கலாம். ஆனால் நாங்கள் அழிந்துவிடவில்லை. ஐநூறு வருஷமாக யுத்தத்தில் இருந்திருக்கிறோம். அவ்வளவு பலி கொடுத்த பின்னும் ஒவ்வொரு வீடும் தலைமுறை தோறும் சந்ததிகளைப் போர்க்களத்திற்கு அனுப்பிக் கொண்டேதான் இருந்தது. கடைசிவரை எங்களை அவர்களால் அடக்கி ஆள முடியவில்லை. பெண் தெய்வங்கள் தம் மக்களை ஏவிக்கொண்டேயிருந்தன. விடாது பழி தீர்த்துக் கொண்டேயிருந்தன. அதனால்தான் அந்த யுத்தம் ஓயவே இல்லை.’

இம்மிடி மேலும் இதுபற்றிப் பேச விரும்பாதவர் போல் மௌனமாக இருந்தார். பொற்றாமரைக் குளத்தின் நீரலைகளில் மஞ்சள் ஒளிப்பிம்பங்கள் ஆடியவாறிருந்தன.

பிளாக்பர்ன் கேட்டார் ‘மதிலை இடிப்பவர்களுக்கு அந்த இடம் சொந்தம் என்று அறிவித்ததும் எல்லோரும் உற்சாகமாகி வேலையைத் தொடங்கிவிட்டார்கள். நகரத்தின் செல்வந்தர்களான தெலுங்கு வைசியர் குலங்களில் இருந்து ஏன் ஒருவர் கூட முன்வரவில்லை?’

‘வரமாட்டார்கள். இது உணர்வுப்பூர்வமான விஷயம். போன வாரம் கூட வைகையில் நான் குளித்துக் கொண்டிருந்தபோது சாமக் கோடாங்கி

ஒருவன் வந்து என்னிடம் ஆவேசமாகச் சொல்லிவிட்டுப் போனான், கவலைப்படாதீர்கள், தொப்பிக்காரனால் இடிக்க முடியாது என்று. கோட்டை மதிலில் மை வைத்துவிட்டு வந்திருக்கிறானாம்.'

'அகழிக்கு அப்பால் உள்ள இடங்களை உங்கள் ஜனங்களுக்கு குறைந்தவிலையில் ஒதுக்கித் தர ஏற்பாடு செய்யட்டுமா?'

'எதுவும் வேண்டாம். இதுவெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. இனி செய்ய ஏதுமில்லை. எங்கள் காலம் எப்போதோ முடிந்துவிட்டது. பிழைப்பைப் பார்க்கவேண்டியதுதான்.'

'நான் கவர்னிடம் கொடுத்திருந்த மகஜரில் சாளுவ கட்டாரி என்ற பெரும் விலை மதிப்புள்ள ஒரு ஆயுதம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அது பற்றி உங்களுக்கு வேறெதுவும் தெரியுமா?'

'கேள்விப்பட்டதுதான். அந்த விசாரணைக்குப் பிறகு எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில்தான் டெனில்சன் பதவி இழந்து லண்டன் திரும்ப நேரிட்டதாம்.'

'அவர் மீது எனக்கு சந்தேகம் இருந்தால்தான் அதை மகஜரில் குறிப்பிட்டிருந்தேன். அதைக் கூடலழகர் கோவிலுக்குத் தர வேண்டும் என்ற எங்கள் வேண்டுகோள் என்னவாயிற்று?'

'தெரியாது. மீண்டும் ஒருமுறை கவர்னருக்கு எழுதிப் பாருங்கள்.'

'சரி. முயன்று பார்க்கிறேன். திரும்பக் கிடைக்கும் என்று நம்பிக்கையில்லை. கலைப் பொருட்களைச் சுருட்டிக் கொண்டு போவதில் நீங்கள் கில்லாடிகளாக இருக்கிறீர்கள். மதுரை மதன கோபாலசாமி கோவிலின் சித்திர மண்டபத்தையே பிரித்து அப்படியே நீங்கள் கப்பலில் தூக்கிக் கொண்டு போகவில்லையா!'

பிளாக்பர்ன் பேச்சை மாற்ற விரும்பி இம்மிடிக்கு உற்சாகமூட்டும் திசையில் திரும்பினார். 'அரசர் விஸ்வநாதனுக்கு மக்களிடையே இவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதில் ஆச்சரியமேதுமில்லை. கல்வெட்டுகளிலும் சாஸனங்களிலும் நான்கு தலைமுறை அரசர்கள் அவர்பெயரைத்தான் குறித்திருக்கிறார்கள். அவர் இறந்ததாக அவர்கள் கருதவில்லை. அவரே நேரில் கொடுத்த மாதிரிதான் சாஸனங்கள் சொல்கின்றன' என்றார்.

'அப்படியா! எனக்கு இப்போதுதான் இது தெரியும்' என்று சொன்ன இம்மிடி ஆவேசமாகித் தொடர்ந்தார் 'எங்கள் தாத்தா சொல்வார் - தருமர் சூதாடினார், ராமர் சீதையைக் காட்டுக்கு அனுப்பினார்; ஆனால் விஸ்வநாத மகாராஜா எந்தத் தப்புமே செய்ததில்லை என்பார். எங்கள் ஜனங்கள் கோவிலுக்குப் போனால் புதுமண்டபம் போய் விஸ்வநாதரைக் கும்பிடாமல் வருவதில்லை. கூடலழகர் கோவிலில் கிளம்பும் மார்கழி பஜனை கிருஷ்ணன் கோவிலுக்குப் போய்விட்டு வடக்கு வாசல் செல்லியம்மன் கோவிலுக்குப் போய்விட்டு விஸ்வநாதரிடம்தான் வந்து முடியும். அவர் கழுத்தில் மாலையை நாங்கள் வாடவிட்டதேயில்லை. வீடு வீடாகப் போய் மாற்றி மாற்றி சாற்றிக் கொண்டேயிருப்போம். மற்ற ராஜாக்களுக்கு விஜயதசமிக்கு மட்டும்தான் மாலை. அவர் காலடியில் நெய் விளக்கு அணையாது, எங்கள் பெண்கள் எண்ணெய் விட்டுக்கொண்டிருப்பார்கள். திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர் எல்லாம்

போய் விஸ்வநாதர் சிலைக்கு நான் வழிபாடு செய்திருக்கிறேன்...' என்று இம்மிடி தொடர்ந்து பேசிக்கொண்டேபோனார்.

அரைமணி நேரம் கழித்து பிளாக்பர்ன் கிளம்பலாம் என்றார். எழுந்து கிழக்கே நடந்தார்கள். மீனாட்சி நாயக்கர் மண்டபத்தைத் தாண்டி அஷ்டசக்தி கூடத்தைக் கடந்து கீழச் சித்திரை வீதிக்கு வந்தனர். விடைபெற முயன்ற இம்மிடியை அழைத்துக்கொண்டு பிளாக்பர்ன் கிழக்குக் கோபுர வாசலுக்கு வந்தார். மதிலை ஒட்டி இருந்த கருப்பசாமியையும் கிழக்குக் கோபுரத்தின் அடியில் இருந்த மதுரைவீரனையும் சுட்டிக்காட்டினார். கோட்டையை இடிக்கத் தொடங்கியதும், கருப்பசாமியை வழிபடும் மக்கள் தங்கள் சிலையைத் தூங்கிக்கொண்டு வந்து இங்கே வைத்துவிட்டனர். அதைக்கண்டு நகரத் தோட்டிகளான சக்கிலியரும் இரவோடிரவாக கிழக்குக் கோட்டை வாசலில் இருந்த மதுரைவீரனையும் தூக்கி வந்து இங்கே வைத்துவிட்டனர். இதுபற்றி கசமுசா என்று நகரத்தில் பேச்சு அடிபட்டது.

பிளாக்பர்ன் சொன்னார் 'மதுரைவீரன் சிலையை அகற்ற வேண்டும் என்று உயர் சாதிக்காரர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். இரண்டு சிலைகளையும் அகற்ற வேண்டுமென்று கோவில் பட்டர்களும் பிராமணர்களும் மனு கொடுத்திருக்கிறார்கள்.'

'சாமிகள்தானே! இருந்துவிட்டுப் போகட்டும்' என்றார் இம்மிடி. 'ஒரே குலத்தில் ஒரு பிரிவினர் ராஜாக்கள்! இன்னொரு பிரிவினர் தோட்டிகள்! வடுகர்களின் அத்தனை போர்களிலும் சக்கிலியர்கள் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். வெக்கிலியர் இந்த மண்ணெல்லாம் பிரமாண்டமான கோவில்களை எழுப்பினார்கள். இன்று சக்கிலியர் தமது சாமிக்கு நிற்க ஒரு பிடி மண் தேடுகிறார்கள்! நீங்கள் துப்புரவு வேலைக்கு நியமித்தபின் தோட்டிகளாகவும் ஆகிப்போனார்கள்! தெலுங்குக் குடிகளிடம் அவர்கள் ஏவலர் பணிதான் செய்தார்கள். தீட்டு எதுவும் இல்லை. வீட்டுக்குள்ளும் வருவார்கள். சமையலில் உதவி வேலைகளும் செய்வார்கள். கோமுட்டிகள் கல்யாணத்தை நிச்சயிக்கு முன் அவர்களுக்குப் பரிசுப் பொருட்களும் வெற்றிலையும் வைத்து, சம்மதமா சம்மதமா என்று மூன்று முறை கேட்போம். சரி என்று அவர்கள் மூன்று முறை சொல்வார்கள். பிறகுதான் நிச்சயதார்த்தம் நடக்கும். என் கல்யாணத்திலும் அப்படித்தான்; என் மகன்கள், பேரன்கள் கல்யாணத்திலும் அப்படித்தான். கொல்லவாருகளில் அவர்கள் மூத்தகுடியாக இருப்பதால்தான் அந்த மரியாதை இன்னும் உண்டு. பாவம் கொல்லவாருகள்! கொம்புகள் இருந்தும்கூட எந்த நுகத்தடியையும் அமைதியாகத் தாங்கிக் கொள்கிறார்கள். அவர்களது காளைகளைப் போல!

*

# 48

**நகரின் மிகப்பெரிய செல்வந்தரான ஆதிமூலஞ் செட்டியார் பலி** கொடுக்கப்பட்டதாக கருதப்படும் சிறுவனுக்கும் சேர்த்து பூஜை செய்து விட்டுத்தான் இடிக்க ஆரம்பித்ததாகச் சொன்னார்கள். அவர்தான் ஆப்ப நாட்டு மறவர் கிராமங்களில் இருந்து ஆட்களை தானியக் கூலிக்கு அழைத்து வந்து கோட்டை இடிப்பைத் துவக்கியவர். மேற்குப் பக்ககோட்டை மதிலின் மையப் பகுதியின் மீதேறி பணியாட்கள் வேலையைத் துவக்கினார்கள். கான்சாகிபுக்கு எதிரான போரில் கேப்டன் காம்ப்பெல்லின் பீரங்கித் தாக்குதலால் கடுமையாகச் சேதமடைந்திருந்து மேற்குக் கோட்டைதான். எனவே ஆதிமூலஞ் செட்டியார் கேப்டன் காம்ப்பெல்லை தனது கணக்கில் வரவு வைத்துக்கொண்டு மேற்குப் பக்கமாக இடிப்புப் பணியைத் துவக்கினார்.

கோட்டை மதிலின் மேற்பகுதியில் சுட்ட செங்கலால் கட்டப்பட்டிருந்த வளைவின் நடுவில் அமைக்கப்பட்ட துளையில் கம்பிகளை நுழைத்து மூன்று நான்கு பேர் மேல்நோக்கித் தூக்கியபொழுது, விரிசல் விட்டிருந்த அந்த அரண்கள் நாற்பதடி ஆழத்தில் பெரும் சத்தத்தோடு விழுந்து, அகழிக்குள் சரிந்தது. மேலே இருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான் இருபது வயது இளைஞனான ஆதிமூலஞ் செட்டியாரின் மகன் நல்லமுத்து செட்டி.

மேற்குக் கோட்டை நுழைவாயிலின் உத்தரத்தில் அமைக்கப் பட்டிருந்த மிகப்பெரிய இரும்புச் சட்டங்கள் மீதும், முற்றிய தேக்கு, கணைய மரத்திலான நெடுங்கதவுகள், அதற்கான இணைச்சட்டங்களின் மீதும் கருத்தாய் இருந்தது ஆதிமூலஞ் செட்டியின் துவக்க நிலைப்பணி. எனவேதான் மேற்குக் கோட்டை வாயிலின் வலது பக்கமிருந்த இடிபாடுகளிலிருந்து தனது பணியைத் துவக்கி கோட்டை வாயிலை நோக்கி பணிகளை நகர்த்திக்கொண்டிருந்தார்.

செட்டியாரைத் தொடர்ந்து அகற்றும் பணியில் ஈடுபட்டவர்

சுப்பிரமணிய ஐயர். மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் நாள் வழிபாட்டுச் சேவைக்காக இவரின் குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டிருந்த வடத்தக்குளம், சீத்தலை, கீழநெடுங்குளம் ஆகிய மானிய கிராமங்களில் இருந்து பறையர்களை இவர் வரவழைத்திருந்தார். தென்கிழக்குப் பகுதி கோட்டையை அடுத்து பெரும் வயல் வெளிகளும், மேய்ச்சல் நிலங்களும் நிறைந்தது. அங்கே சிறுசிறு கூரைகள் வேயப்பட்டு பணியாட்கள் தங்க வைக்கப்பட்டனர். கோட்டை மதிலின் மேல் பகுதிக்குப் போகும் படிக்கட்டுகள் பெரிய அளவு சேதமுற்று இருப்பதால் ஏணிகளும், குறுக்குச் சாரங்களும் அமைக்க தச்சாசாரிகளும் கிராமத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். முழுமையான தயாரிப்பு ஏற்பாடுகளோடு, சரியான பகுதியைத் தேர்வு செய்து பணியினைத் துவக்கினார். சுப்பிரமணிய ஐயர். கலெக்டர் நிர்வாகத்தின் மிக நம்பகமான இடத்திலிருந்த ராமச்சந்திர ஐயரின் சகோதரர் இவர்.

மேற்குக் கோட்டை வாயிலின் அருகில் இருந்த பீரங்கி மேடையின் மீது தனது பணியாட்களின் வேலையைத் துவக்கச் செய்தார் ராமநாத முதலி. பீரங்கி மேடை கோட்டைச் சுவரைவிட மிகக் கடுமையான பகுதி. முழுக்க முழுக்க கரும்பாறைகளை அடுக்கியே கட்டப்பட்டது. அந்தப் பாறைகளும் அளவில் மிகப் பெரியவை; அதுமட்டுமல்ல, கீழே அகழி இல்லாததால் தள்ளி விடப்பட்ட பாறைகளை வெகுதொலைவுக்கு அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. அப்படி இருக்க கோட்டை மதிலை விட்டு விட்டு பீரங்கி மேடையிலிருந்து ஏன் பணியைத் துவக்குகிறார் என்பது பலருக்கு விளங்காத புதிராக இருந்தது. ஆனால், விபரம் தெரியாத ஆள் செய்கிற வேலையாக யாரும் அதை நினைக்கவில்லை. காரணம் ராமநாத முதலியின் குடும்பப் பராம்பரியம். இவர்கள் நாயக்கர் ஆட்சிக் காலங்களில் ராயசம் பதவியின் கீழ் இருந்தவர்கள். தலைமை நிர்வாக அதிகாரிகளாக பல காலம் இருந்த பாரம்பரியம். இந்தப் பாரம்பரியத்தில் வந்த பெருமாள் முதலி கலெக்டர் பிளாக்பர்னால் நகர மேஸ்திரியாக நிர்வாகத்தின் முக்கிய இடத்தில் அமர்த்தப்பபட்டிருந்தவர். அப்படி இருக்க ராமநாத முதலி பீரங்கி மேடையிலிருந்து பணியைத் துவக்கியதற்கு ஏதேனும் காரணம் இருக்குமென விபரம் தெரிந்தவர்கள் கணிக்க ஆரம்பித்தனர். பீரங்கி மேடையிலிருந்த மிகப்பெரிய கற்பாறைகள் கூடப் பிடுங்கப்பட்டு கீழே விழுந்தன. ஆனால் ராமநாத முதலி வாயிலிருந்து ஒரு சிறு சொல் கூட வெளியே விழவில்லை. இது பலருக்கு சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்தியது. பீரங்கியின் அடிப்பகுதிக்காக அமைக்கப்பட்டிருந்த இரும்பாலான அடித்தளத்தை அகற்றுவதே முதல் கட்டப் பெரும் பணியாக இருந்தது. அந்த இரும்புப் பாலம் மிகபத்திரமாக மேடையிலிருந்து கீழே இறக்கப்பட்டது. வரிசையாக மரச்சாரங்கள் கட்டப்பட்டு, மணல் மூடைகள் அடுக்கப்பட்டு, மிக வலிமையான வடம் போட்டுக் கட்டி, வடத்தின் மறுமுனை பீரங்கி மேடையை ஒட்டி மேற்குப் பகுதிக் கோட்டையின் வெளிப்புறமிருந்து இழுத்துப் பிடிக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக இறக்க பகீரத முயற்சி எடுக்கப்பட்டது. வேடிக்கை பார்க்கும் கூட்டம் இங்கேதான் அதிகம். மற்ற பீரங்கி மேடைகளை அகற்றும் மனக்கணக்கோடு நின்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆற்றுக்கு வடகரையில் இருந்த கோரிப்பாளையம் முஸ்லிம்கள், ஆற்றின் தென்பகுதியில் இருந்த கோட்டை மதிலை அகற்றும் பணியில் முதலில் போதிய ஆர்வம் காட்டாமல் இருந்தனர். மற்றப் பகுதியில்

எல்லாம் இடிப்புப்பணி துவக்கப்பட்டு சில நாட்கள் ஆன பின்புதான் சம்சுதீன்பாய் பணியில் ஈடுபட முடிவெடுத்தார். வடகிழக்கு மூலையில் இருந்த வளைவுப் பகுதியை இடிப்பதற்காக அவர் தேர்வு செய்தார். வைகையாற்றை ஒட்டி மிக நெருக்கமாக இருந்த கோட்டைப் பகுதி இந்த வடகிழக்கு முனை வளைவுதான். ஆற்றைக் கடந்து எளிதில் அடையக் கூடிய பகுதியாக இது இருந்தது. கோரிப்பாளையம் முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக கோட்டை மதில் மீது ஏறினர்.

நகரின் பெருந்தனக்காரர்கள் இடிப்புப் பணியை ஆங்காங்கே தொடர்ந்தனர். ஒருவரைப் பார்த்து ஒருவர் கோட்டையைக் கைவைக்க ஆரம்பித்தனர். முதலில் ஒரு பாவச்செயல் போலவும், சிறுபயத்தையும் ஏற்படுத்திய இந்தப் பணி நாள் ஆக ஆக உற்சாகமுடையதாகவும், போட்டிகள் நிறைந்ததாகவும் மாறியது. வணிகர்கள், விவசாயிகள், சிறுதொழில் செய்வோர் என எல்லோரும் கோட்டையின் ஏதோ ஒரு பகுதியை உடைக்க எந்நேரமும் திட்டமிட்டுக்கொண்டே இருந்தனர்.

ஒன்றிரண்டு மாதங்களில் கோட்டையின் அனைத்துப் பக்கங்களிலும் இடிப்புப் பணிகள் நடைபெறத் துவங்கின. சிறிய சிறிய மனிதர்கள் இந்த நெடிய கோட்டையில் அங்கும் இங்குமாக ஆவேசப்பட்டுக் கொண்டிருந்தனர். பாறைகள் சரிந்து விழும் ஓசை நாளாக ஆக அதிகரித்தது. தாமரைக் கொடிகளும், முதலைகளும் ஆயுதங்களாக இருந்த அகழிகளை சுண்ணாம்புக் காரைகளும் கரும்பாறைகளும் நிரப்ப ஆரம்பித்தன. வஞ்சமில்லாமல் அனைவரின் ஆசைக்கும் கோட்டை இடம் தந்தது. இதற்குப் பின்பும் குறியிடப்படாத இடங்கள் கோட்டையில் நிறையவே இருந்தன.

கோட்டையின் மேல் பகுதியில் சுட்ட செங்கற்களாலும், சுண்ணாம்புக் காரைகளைக் கொண்டும் கட்டப்பட்டிருந்த ஆயுத அறைகள், காவல் வீரர்கள் தங்கும் மாடம், வெளிப்புற அலங்கங்கள், ஆகியவற்றை இடித்து அகற்றும் பணி முதல் கட்டத்தில் மும்முரமாக நடந்து வந்தது. ஆதிமூலஞ் செட்டியாருக்கு மட்டும் இந்தப் பணிகளையெல்லாம் ஏற்கனவே கேணல் காம்ப்பெல்லின் பீரங்கிகள் செய்து முடித்திருந்ததால் அவர் இரண்டாம் கட்டமாகக் கருங்கற்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

*

# 49

**கிழக்கே இரண்டு முனைகளிலும் இருந்த மாடங்கள் முற்றிலும்** சிதைந்து போய்விட்டன. தென்கிழக்கு மாடம் சாய்ந்த நிலையில் கிடக்கிறது. எட்டுத் தூண்களால் இன்னும் நின்று கொண்டிருப்பது வடகிழக்கு மாடம் மட்டும்தான். அதன் பக்கவாட்டில் வளர்ந்திருந்த அரசமரத்தின்வேர் மேல்பகுதியை ஊடுறுவியிருந்தது. வேர்களுக்கிடையில் சிக்குண்ட விதானக் கூரை வேர்களால் தாங்கிப் பிடிக்கப்பட்டு நின்றுகொண்டிருந்தது. மேற்கூரையின் வேர்களுக்கிடையே மாடப்புறாக்களின் குஞ்சுகள் குழறிக் கொண்டிருந்தன.

சுப்பிரமணிய ஐயரின் பணியாட்கள் இடிக்கத் துவங்கிய சிறிது நேரத்தில் அரசமரம் மாடத்தின் மேற்கூரையைப் பெயர்த்துகொண்டு கோட்டையின் மேல்சுவரின் வலதுபக்கம் விழுந்தது. பின் அதன் கிளைகள் வெட்டப்பட்டன. வேர்களுக்கு இடையில் இருந்த கட்டிடப்பகுதிகள் உடைத்துக் கீழே தள்ளப்பட்டன. கோட்டையின் மேலே முளைத்த அரசமரத்திற்கு இப்படி நேர்வது வியப்பில்லை. பணியாட்கள் பெரிதாக சிரமப்படாமல் மரத்தையும் மாடத்தையும் அப்புறப்படுத்தினர். மாடத்தை தாங்கி நின்ற தூண்களின் வடிவமைப்பின் மீது சுப்பிரமணிய ஐயருக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. எனவே அவை ஒவ்வொன்றாக பெயர்த்தெடுக்கப்பட்டு, வடம் கட்டிக் கீழே இறக்கப்பட்டன. ஆறு தூண்கள் இறக்கப்பட்ட நிலையில் இரண்டு தூண்கள் மீதமிருக்க அன்றைய பணிகள் முற்றுப்பெற்றன. வேலையாட்கள் மரச்சாரத்தின் வழியே கீழிறங்கிப் போய்க்கொண்டிருந்தனர்.

அதிகாலை கிளம்பி நெடுந்தொலைவு போன மாடப்புறாக்களுக்கு அன்றைக்குக் கிடைத்தது என்ன தானியங்களோ தெரியவில்லை. அந்தி முற்றிலும் முதிர்வதற்கு முன் நாகமலையின் வலது கோடியிலிருந்து அவை கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்தன. நீண்ட பயணத்தின் களைப்பாற வைகையில் இறங்கித் தண்ணீர் குடித்தன. சடசடவென மொத்தப் புறாக்களும் தண்ணீரின் மேற்பரப்பை சிறகுகளால் தட்டி நீர் தெறிக்க

மேலெழும்பி கிழக்காக வட்டமடித்து கோட்டை மாடத்தை நோக்கி வந்தன. அவற்றின் கூடுகளும், கூடு தாங்கி நின்ற மாடமும், அரசமரமும் அங்கில்லை. இறக்கைகள் மடக்கி இறங்கவேண்டிய இடத்தில் இறங்க முடியாமல் குழறியபடி படபடவென அடித்தவாறு வட்டமிட்டுக் கொண்டே இருந்தன. பல் தலைமுறைகளாக அவை வாழ்ந்த இடம் இன்று அடையாளமின்றி அழிக்கப்பட்டுவிட்டது. கூடுகளையும் முட்டைகளையும் குஞ்சுகளையும் இழந்த புறாக்கள் அங்குமிங்குமாக காற்றை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு அர்த்தஜாம பூஜைக்கான தயாரிப்பில் சுப்பிரமணிய ஐயர் இந்நேரம் பரபரப்பாக இருப்பார். ராஜாளிகள், காட்டுப்பூனைகள், பாம்புகள், வல்லூறுகள் ஆகியவற்றிலிருந்து இத்தனை நாட்கள் தாங்கள் காப்பாற்றி வந்த கூடுகளையும் முட்டைகளையும் அவற்றினும் கொடிய ஏதோ ஒன்றிடம் பறிகொடுத்துவிட்டோம் என்று எண்ணாமல் மாடப்புறாக்கள் புதிய இருப்பிடம் தேடிப் பறந்து போயிருக்காது. மிஞ்சி நின்ற இரண்டு தூண்களிடமும் அவை ஏதாவது சொல்லிச் சென்றிருக்கும். அல்லது அவைகளிடம் அந்தத் தூண்கள் ஏதாவது சொல்லிவிட்டிருக்கலாம்.

**நீ**ண்டு கிடந்த மணல்வெளியின் ஓரத்தில் சிறிதளவு தண்ணீர் மட்டுமே போய்க்கொண்டிருந்தது. வைகை தன்னைக் கொடிபோல குறிக்கிக்கொண்ட கோடையின் உச்சம் அது. நதியின் குறுக்கே தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பாலத்தை முக்கியமானவர்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேஸ்திரி பெருமாள் முதலியும், ராமச்சந்திர ஐயரும் காலையிலேயே கலெக்டரை சந்திக்க அவரது மாளிகைக்குச் சென்றிருந்தனர். நண்பகல் நேரத்தில் இருவரின் குதிரை வண்டிகளும் பாலத்தைக் கடந்து நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. கோட்டை இடிப்பை மதுரைவாசிகள் ஏற்றுக்கொள்ளாமல் இருந்த நிலையை முறித்து இடிப்புப்பணி துவங்கப்பட்டதற்கு இவர்கள் இருவரும்தான் சூத்திரதாரிகள். அந்த வகையில் கலெக்டரின் புகழாரம் இவர்கள் தோள்களின் மீது இருப்பதாக எந்நேரமும் உணர்ந்தார்கள். இடிப்புப்பணி துவங்கி நாட்கள் பல உருண்டோடி விட்டன. இன்னும் ஒன்றரை மாதத்திற்குள் மழைக்காலம் துவங்கிவிடும். விவசாய வேலைகள் ஆரம்பித்து விட்டால் இந்தப் பணி முழுவதுமாக நின்றுவிடும். எனவே வேலையை வேகப்படுத்த வேண்டும் என்று கலெக்டர் சொன்னதைப் பற்றியே இவர்களின் எண்ணமெல்லாம் இருந்தது. இன்னும் கோட்டை இடிப்பில் பங்கு பெறாமல் இருந்தவர்களைப் பார்த்துப் பேசி பணியைத் துவக்கவும், பணியில் ஈடிபட்டிருப்பவர்களை இன்னும் வேகப்படுத்தச் சொல்வது சம்பந்தமாகவும் யோசித்துக்கொண்டே வந்தனர். இருவரின் வண்டிகளும் வடக்குக் கோட்டை வாயிலருகே வந்தன.

கோட்டை வாசலின் ஓரம் சிறு கூட்டம் நின்றுகொண்டிருந்ததை மேஸ்திரி பெருமாள் முதலி வண்டிக்குள் இருந்தபடியே பார்த்தார். என்ன என்று அவருக்குப் புரியவில்லை. வண்டிக்காரனிடம் என்ன கூட்டம்?' எனக் கேட்டார்.

‘இடிக்கிற வேலைக்காக கிராமத்துல இருந்து வந்தவங்ய. கையிலயும் நெஞ்சுலயும் பச்ச குத்துறதுக்காக கூட்டமா இருக்காங்ய. குறத்தி ஒருத்தி வடக்க இருந்து ஆத்தக் கடந்து காலையில் வந்துக்கிருந்தத பாத்தேன். அவதான் இங்க உக்காந்து பச்ச குத்துறா போலய்யா’ என்றான்.

‘ஏன் இந்த வேகாத வெயில்ல போயி பச்சகுத்திக்கிறாங்க!’ என்றார் மேஸ்திரி.

‘வெயில் காலத்துல பச்ச குத்திகிட்டா தான்யா வீக்கம் குறைவா இருக்கும். மழக்காலத்துல குத்துனா வீக்கம் பெரிசா இருக்கும். சீக்கிரமா வத்தாது. இப்ப குத்திக்கிட்டா ராத்திரில வெளக்கெண்ணய தேச்சுக்கு வாங்ய. இல்லாட்டி ஆவாரந்தழைய அரச்சு பூசிக்கிவாங்ய. வேகமா வீக்கம் குறைஞ்சு புண்ணு ஆறிடும்‘ என்றான் வண்டியோட்டி.

அடுத்த வண்டியில் வந்த ராமச்சந்திர ஐயரும் கூட்டத்தை எட்டிப்பார்த்தவாக்கில் வந்துகொண்டிருந்தார். இருவரின் வண்டிகளையும் மதுரைவாசிகள் நன்கு அறிவார்கள். ஆனால் கூட்டமாய் இருந்த கிராமத்துக்காரர்கள் ஏதோ இரண்டு வண்டி போகிறது என்று சட்டை செய்யாமல் குறத்தி பச்சை குத்திக்கொண்டிருப்பதையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஒரு சுவடியில் கோட்டை, மீன், சூலம் போன்றவைகளை குறத்தி வரைந்து வைத்திருந்தாள். பச்சை குத்த உட்கார்ந்த இளைஞன் ஒருவன் ‘எனக்கு இந்த கோட்டை மாதிரி குத்து’ என சுவடியைக் காட்டாமல் பக்கத்தில் இருந்த கோட்டை மதிலைக் காட்டினான். மூங்கில் குழலுக்குள் வைத்திருந்த மூன்று நான்கு ஊசிகளை எடுத்து, பனம்பழச்சாறைப் பிழிந்து வைத்திருந்த கலவையைத் தொட்டு, கருத்துத் திரண்டிருந்த அந்த இளைஞனின் இடதுகை தோள் பட்டையின் கீழே குறத்தி வரைய ஆரம்பித்தாள். கைப்பழக்கத்திலும் லாகவத்திலும் இரத்தம் கசியக் கசிய கோட்டை உருவானது. மாடத்தை தாங்கி நிற்கும் கோட்டை வாயில் சித்திரமொன்றை வழிகிற இரத்தத்திற்குள்ளே வரைந்து முடித்தாள். இடிக்கப்படுகின்ற கோட்டையின் இரத்தம் இடிப்பவர்களின் கையிலே இருந்து கசிந்தது. அடுத்தடுத்து ஆட்கள் உட்கார, அவளுக்கு அன்று நல்ல தானிய வரவு. வெயில் ஏறியடிக்க அவள் தனது இருப்பிடத்தை இன்னும் கொஞ்சம் உள்ளே நகர்த்தி கோட்டை வாசலுக்குள் இருந்த நிழலின் ஓரத்தில் உட்கார்ந்து பச்சை குத்திக்கொண்டிருந்தாள்.

கோட்டை வாயிலில் இருவரின் வண்டியும் நுழைந்து நகருக்குள் பிரவேசித்தது. பெருமாள் மேஸ்திரி அவர்களைப் பற்றி ஏதோ முணுமுணுத்தார். வண்டியோட்டியின் காதில் அரைகுறையாக விழுந்தது.

நான்கு திசை பிரதான கோட்டை வாசல்கள் இனி இருக்காது. தெய்வப் படிமம் செதுக்கப்பட்டிருந்த இந்த நிலைக்கதவுகள் இனி அகற்றப்பட்டுவிடும். அடுத்த முறை வரும்பொழுது குறத்தி ஒதுங்க இந்த இடத்தில் நிழல் இருக்காது. வாசலே இல்லாமல் செய்யப் போகிறவர்கள். ஏன் வாசலில் இருக்கும் சிறு கூட்டத்தைக் கண்டு முகஞ்சுழிக்க வேண்டும் அடுக்கடுக்கான கேள்விகளும் சந்தேகங்களும் வண்டியோட்டியின் மனதில் எழுந்தன. திமிறிய குதிரையைச் சுண்டி இழுத்தவாறு வண்டியை நேரே மஹால் முன்னால் கொண்டுபோய் நிறுத்தினான்.

அரண்மனைக்கு வடக்கிலிருந்த ரங்கவிலாசம் மாளிகை மிகவும் சிதைந்த நிலையில் இருந்தது. அதைப் பழுது பார்த்துப் பராமரிப்பது சிரமம் என்று தோன்றியதால் அதை முற்றாக இடித்து அப்புறப்படுத்தி விட முடிவெடுத்தார் பிளாக்பர்ன். அரசு செலவிலேயே கூலி ஆட்களைக் கொண்டு அவை இடிக்கப்பட்டு காரைகள் வண்டிகளில் அள்ளி வந்து

கிழக்குப் பக்க அகழியில் கொட்டப்பட்டது. அதன் பிரமாண்டமான முகப்பில் இருந்த தூண்கள் மட்டும் அப்படியே விடப்பட்டன. பனை உயரத்தில் பெரும் அரசமரத் தடிமனில் இருந்த அந்தப் பத்துத் தூண்களும் செதுக்கிய வட்டக் கற்களால் ஆனவை. மேஸ்திரி அங்கு நடந்த வேலைகளைப் பார்வையிட்டுவிட்டு வீடு திரும்பினார்.

மதிய உணவை முடித்து கொஞ்சம் ஓய்வெடுத்தபின் மேஸ்திரி புறப்பட்டார். ராமாத முதலியைக் கண்டு பேசி பணியை வேகப் படுத்தச் சொல்ல வேண்டும். ராமநாதன் பீரங்கி மேடையை அகற்றும் இடத்தில் இருப்பதைக் கேள்விப்பட்டு வண்டியை அங்கே விடச் சொன்னார். மேல ஆவணி மூல வீதியின் வழியே வந்து வலதுபக்கம் திரும்பி நேராக மேற்குக் கோட்டை வாசலருகே வண்டி வந்து நின்றது. இந்நேரம் பீரங்கி மேடையின் முக்கால் பகுதி அகற்றப்பட்டிருக்கலாம் என்ற நம்பிக்கையோடு வந்திறங்கிய மேஸ்திரிக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. கோட்டைச் சுவரையொட்டி செவ்வக வடிவத்தில் கட்டப்பட்டு கம்பீரமாக நின்றுகொண்டிருந்த மேடை முற்றிலுமாக அகற்றப்பட்டிருந்தது. உடைத்தெடுக்கப்பட்ட பாறைகள் அங்குமிங்குமாகக் குவிந்து கிடந்தன. மர உருளைகளைக் கீழே கொடுத்து பெரிய பாறைகளை இழுத்து வெளியேற்றும் பணி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெருமாள் மேஸ்திரி ஆச்சரியத்தோடு நின்று பார்த்துக்கொண்டிருக்கையில் அதிகாரி மாரெட்டும் அங்கே வந்து சேர்ந்தார்.

கிழக்குப்பகுதி பீரங்கி மேடை சிறிது சேதமடைந்து மற்ற பீரங்கி மேடைகள் முழுமையாகவும் இருந்த நிலையில் மேற்குப் பகுதி பீரங்கி மேடைதான் முற்றிலுமாக அகற்றப்பட்ட முதல் மேடை.

‘இதுவரை பிடுங்கப்படாமல் இருந்த கான்சாகிப்பின் கடைவாய்ப் பல் ஒன்று இன்று பிடுங்கப்பட்டுவிட்டது’ என்று மேஸ்திரி பெருமாள் முதலியிடம் மகிழ்ச்சி பொங்கக் கூறினார் அதிகாரி மாரெட். ராமநாத முதலியை முதலில் மாரெட்டும் பின்பு பெருமாள் மேஸ்திரியும் கைகுலுக்கிப் பாராட்டினர்.

இந்த பலமான பீரங்கி மேடைகளை கோட்டைக்குள் கான்சாகிபுதான் கட்டினான். கும்பினிப் படையும், ஆர்க்காட்டுப் படையும் ஒரு சேரத் தாக்கியபோது ஒரு வருஷகாலம் தாக்குப்பிடித்த கான்சாகிபுக்கு முக்கியத் தோழனாக இந்த பீரங்கிகள்தான் இருந்தன. யுத்தகாலத்தில் அவன் அதிக நம்பிக்கையோடு நின்றுகொண்டிருந்த மேடையை இன்று தலைக்கு தலா ரெண்டு படி தானியம் கொடுத்து எளிதில் அகற்றினார் ராமநாதன் முதலி.

மாரெட்டும் பெருமாள் மேஸ்திரியும் முதலியிடம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பீரங்கி மேடையை அகற்றி கையோடு கோட்டைச்சுவரை அகற்றும் பணியிலும் இதே வேகத்தைக் காட்டும்படி கூறினார்கள். கலெக்டர் ஆறு மணிக்கு மாரெட்டை சந்திக்க வரச்சொல்லியிருந்ததால் அவர் புறப்பட்டார். நாளை காலை கிழக்குக் கோட்டையையும் அதனுடன் சேர்ந்துள்ள குதிரை மாடங்கள் போன்ற பகுதிகளும் இடிக்கப்படுவதை பார்வையிடச் செல்லலாம் என பெருமாள் மேஸ்திரியிடம் கூறிவிட்டுச் சென்றார் மாரெட். பீரங்கி மேடை அகற்றப்பட்ட இடத்தை காலார நடந்து கடந்த பெருமாள் மேஸ்திரி

இராமநாத முதலியைப் பார்த்து இளஞ்சிரிப்போடு விடைபெற்று வீட்டிற்குப் புறப்பட்டார்.

*

# 50

**இது சிற்பியின் நகரம். சிற்பாசிரியனின் கனவில் இருந்துதான்** இந்நகரின் கொடி படர ஆரம்பித்தது. மீனாட்சி சுந்தரேஸ்வரரின் கர்பக்கிரகம், அதைச் சுற்றி சுற்றுப் பிரகாரம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வெளிப்பிரகாரம், கோட்டை கோபுரம், அரண்மனை ஆஸ்தான மண்டபங்கள், திருக்குளங்கள், தர்ம சத்திரங்கள், இவைகளைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்ட வீதிகள், கற்கோட்டை, அதற்கு வெளியே முள்புதர், அடுத்து முதல் மதில், அப்புறம் அகழி என மொட்டைச் சுற்றி இதழ் இதழாய் விரிந்திருக்கும் தாமரை மலரைப்போல் வடிவமைக்கப்பட்டதுதான் இம் மதுரையம்பதி.

சிற்பிகளின் ஆதி மரபிலிருந்து வழிவழி வந்து உதயமானதொரு நகரம். மூர்த்தி நிர்மாணம், ஆலய நிர்மாணம், நகர் நிர்மாணம், ஸ்தல நிர்மாணமென ஆகிருதி அலங்காரம், விந்தை வேலைப்பாடுகளைக் கொண்டு சிற்ப சாஸ்திரங்களின் படி வடிவமைக்கப்பட்டது. சிற்பியின் கனவில் சூல் கொண்டதால் உளி தீட்டப்பட்ட நெருப்பின் குணம் நகருக்கு வாய்த்திருந்தது.

யுகங்களுக்கு முன் கடம்பவனத்தில் எரியூட்டப்பட்ட எண்ணிலடங்கா உயிரினங்களின் கதறல் பூமிக்கடியில் இருந்து கேட்ட வண்ணமே இருந்தது. அந்த கூக்குரல்கள் எதிரொலிக்காத ஒரு புதிய நகரத்தை உருவாக்க சிற்பிகள் உளி கொண்டு சதா முயற்சித்துக்கொண்டே இருந்தார்கள். எலும்புகள் புதைந்து கிடைக்கும் நிலத்தின் மேல் தெய்வப் படிமங்கள் செதுக்கப்பட்ட தூண்களை நட்டார்கள். சாம்பல் நிற மண்ணை மறைக்க கல் பதிந்த வீதிகளை உருவாக்கினார்கள். கோபுரங்களையும் கோட்டைகளையும் விண் முட்ட எழுப்பினார்கள். ஆலய விக்ரஹ கலசங்களையும், அரண்மனை ஆஸ்தான மண்டபங்களையும் உருவாக்கிய படியே இருந்தனர். சிற்பிகளின் வேகம் கண்டு நான்மாடக்கூடல் நடுங்கியபடியே இருந்தது. காலங்கள் உருண்டோடி வந்தன. ஒவ்வொரு கல்லுக்குள் இருந்தும் வடிவழகைக் கண்டெடுத்து

எரிந்த நகரை மீட்க எப்போதும் முயற்சித்துக் கொண்டே இருந்தனர். தலைமுறை தலைமுறையாய் சிற்பிகளின் கனவு உலகிலிருந்தே இந்நகருக்கான வெளிச்சமும் இருட்டும் எடுத்துவரப்படுகிறது.

அரண்மனைக்கு மேற்குப்புறமாக இருந்தது தலைமைச் சிற்பியின் கூடம். எந்நேரமும் நினைவில் கல் ஒன்றைச் சுமந்தபடியும், விரல்கள் பாறைகளை வருடியபடியும், உளியின் நாவு கல்லைத் தீண்டி வெளியைத் துழாவியபடியும் இருந்தன. சிவனின் சக்ராயுதத்தையும் இந்திரனின் வஜ்ராயுதத்தையும், பிரமாஸ்திரத்தையும், கால தண்டத்தையும் விட பலம் பொருந்தியது சிற்பியின் கரம் என சிற்ப ஐந்திர வேதத்தில் கூறியுள்ளபடி மதுரையம்பதியின் தலைமைச் சிற்பி காலங்கள் தோறும் சினத்துடனே இருந்தார். அது அவரின் சினமல்ல. உளி தீட்டப்பட்ட நெருப்பின் சினம். எரியூட்டப்பட்ட வனத்தின் சினம். கருகி வெடித்த பட்சிகளின் சினம். செதுக்கப்பட்ட பாறைகளின் சினம்.

அன்று அதிகாலை சூரியனின் ஒளி ரேகைகள் தலைமைச் சிற்பிமாளிகையின் சன்னல்களினூடே நுழைந்து செதுக்கி வைக்கப்பட்டிருந்த சிற்பங்களின் மேல் பழுக்கக் காய்ச்சிய கம்பி போல் குத்தி நின்றிருந்தது. எளிதில் கண்களுக்குத் தெரியாத தூசிகள் ஒளி ரேகைகளில் மிதந்து கடந்து கொண்டிருந்தன. நூற்றி இருபத்திநாலு உத்தம தசதால அளவில் ஈஸ்வரர் விக்ரஹம் செய்ய நடுத்தொடை, மேல்தொடை, இடுப்பு, மேல்வயிறு, கீழ்வயிறு, தொப்புள், மேல்மார்பு, கீழ்மார்பு, உள்ளங்களை நீளம், நடுவிரல் நீளம், கீழ்முகம், மேல்கழுத்து, நடுக்கழுத்து என அளவு குறிக்கப்பட்ட மாதிரிப் படிமம் வரையப்பட்டிருந்தது.

உத்தம தசதாலம் கொண்ட அளவுடன் மும்மூர்த்திகளையும், மத்திம தசதாலத்துடன் முத்தேவியரையும், கன்னிய தசதாலத்துடன் இந்திரன், சண்டேசுவரன், பைரவர் ஆகியோரின் விக்கிரகங்களும் செதுக்கப்பட்ட நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அந்த மாளிகையின் மாடத்தை பிரதானமாக தாங்கி நின்ற நடுத்தூண் கீழே சாய்ந்து கிடந்தது. சாய்ந்த தூணுக்கடியில் தலை நசுங்கிச் செத்துக்கிடந்தார் ராஜசிற்பி. கைகள் அகலத்திறந்த வாக்கில் முதுகுத்தண்டின் மேல் தூண் விழுந்து கிடந்தால், குப்புறக்கிடந்த நிலையில் உயிர் பிரிந்திருந்தது. இடது கையின் விரல்களுக்கிடையில் பிடி தளராமல் இருந்தது உளி. சிற்பியின் ரத்தம் சண்டேசுவரர் வரைபோய் தேங்கி நின்றது. விளைந்த பாறையில் செதுக்கப்பட்ட சிற்பத்திலிருக்கும் கருமை ரத்தத்திலும் இருந்தது. மும்மூர்த்திகளின் சிலைகளும் பார்த்துக்கொண்டே இருந்தன. தலை நசுங்கிச் செத்துப்போன சிற்பாசிரியரின் கண்கள் அதனினும் கோரமாய் பார்த்தபடியே இருந்தன உளிகளை.

மேல்மாடம் இடிக்கப்பட்டதால் தூண் விழுந்து சிற்பாசிரியன் செத்துப்போன செய்தி நகரெங்கும் காட்டுத் தீயாய் பரவியது. அபசுரமாகவும், அபாயம் நிகழப் போவதாகவும் புலம்பிக்கொண்டே மக்கள் ஓடிக்கொண்டிருந்தனர். செய்தி கேள்விப்பட்ட பெருமாள் முதலி தனது பாட்டனார் கணேச முதலியிடம் சொல்ல ஓடினார். அவர் குதிரைலாயத்தில் இருப்பதாகச் சொன்னார்கள்.

வடகிழக்குக் கோட்டையின் கீழ்ப்பகுதியில், குதிரை லாயமிருந்தது.

புதிதாக வாங்கப்பட்ட குதிரைகள், ஆகும் கூடுதல் செலவுகள் குறித்து அறிந்துவர கணேச முதலி அங்கே சென்றிருந்தார்.

இப்போது இருப்பதில் போருக்குத் தகுதியற்ற குதிரைகளை இழுக்கும் பணிக்கு உடனடியாக மாற்றிவிடும்படி கூறிய கணேச முதலி புதிதாக வாங்கப்பட்ட குதிரைகளையும் சேர்த்து, குதிரைப்படைத் தலைவனுக்கு திங்களொன்றுக்கு கருவூலத்திலிருந்து தரவேண்டிய மொத்தத்தொகை எவ்வளவு என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். குதிரைகளின் கனைப்பொலிகளுக்கு நடுவில் மேலே கோட்டைச் சுவர் இடிக்கப்படும் சத்தம் அவர் காதில் விழவில்லை.

சிற்பாசிரியனின் மரணச் செய்தியைச் சொல்ல ஓடோடி வந்த பெருமாள் முதலி குதிரை லாயத்திற்குள் நுழைந்து தனது பாட்டனாரைத் தேடினார். எதிர் வெயிலில் கண்கள் கூசின. தூரத்தில் கோட்டைச்சுவரின் கீழே அவரும் குதிரை லாயத் தலைவனும் நின்று பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த பெருமாள் முதலி அவர்களை நோக்கி நடந்துகொண்டே மேலே பார்வையைச் செலுத்தினார்.

சம்சுதீன்பாய் இருபதுக்கும் மேற்பட்ட கோரிப்பாளையம் முகம் மதியர்களை வைத்துக்கொண்டு கோட்டையின் மேல்புறத்தை இடித்துக்கொண்டிருந்தார். தூரத்திலிருந்து அதைப் பார்த்த பெருமாள் முதலி ராஜ்ஜியத்தின் மிக முக்கிய நபரான தனது பாட்டனார் கீழே இருப்பதைக் கூடப் பார்க்காமல் மேலே இவர்கள் இடித்துக் கொண்டிருக்கிறார்களே என பதறிப் போய் ‘இடிக்காதீர்கள் இடிக்காதீர்கள்’ எனக் கத்திக் கொண்டே பாட்டனாரை நோக்கி ஓடிவந்தார்.

‘இவன் ஏன் கத்திக் கொண்டு ஓடிவருகிறான்’ என கேலியாகச் சொல்லிக் கொண்டிருந்தார் ராயசம் முதலி.

தலைதெறிக்க பெருமாள் முதலி ஓடிவந்துகொண்டிருந்த பொழுது கோட்டை மதிலின் மேல் சுவரில் இருந்த பெரும் கல் ஒன்றை சும்சுதீன் பாயும் இன்னும் சிலரும் சேர்ந்து மிகச் சிரமப்பட்டு கீழே தள்ளிவிட்டார்கள். தூசி பறக்க அந்தப் பாறை பெரும் சத்தத்தோடு கீழே வந்து விழுந்தது. சிதறிய இரத்தம் ஓடிவந்த பெருமாள் முதலியின் முகத்திலே தெறித்தது.

‘தாத்தா...’ என அலறிக் கொண்டே எழுந்தார் மேஸ்திரி பெருமாள் முதலி. அந்தச் சத்தம் வீட்டையே உலுக்கியது. என்ன? என்ன? என்று எல்லோரும் எழுந்துவிட்டார்கள். விளக்குகள் ஏற்றப்பட்டு வெளிச்சம் வீட்டை நிரப்பியது. மரணபயம் பீடித்திருந்த பெருமாள் முதலியின் முகம் விளக்கின் வெளிச்சத்தில் கூசி நடுங்கியது. ‘என்னாச்சு! என்னாச்சு!’ என்று மனைவியும் தகப்பனும் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டேயிருந்தனர். அவர் வாய் திறக்கவில்லை. விழித்த கண்களில் இமைகள் ஆடாமல் இருந்தன. கொஞ்ச நேரத்திற்குப் பின் வலது கையால் முகத்தைத் துடைத்தார். சிதறித் தெறித்த இரத்தத் திட்டுகள் எதுவும் முகத்தில் இல்லை. ‘விளக்கை அமத்து’ என நடுக்கமான குரலில் சொன்னார்.

*

# 51

**வே**ளார்சேரியில் இருந்து அழைத்துவரப்பட்ட இரண்டு குயவர்களுக்கும் மேற்குப் பகுதியில் தனித்தனியாக இரண்டு குடிசைகள் போடப்பட்டிருந்தன. வயதும், அனுபவமும் கூடிய இந்த இருவரும் கோட்டை இடிப்பு முடியும் வரை இங்கேயே தங்குவதற்காக அழைத்துவரப்பட்டிருந்தனர். அவர்களின் குடிசைகளுக்கு அருகில் இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் தங்கள் பணிகளைத் துவங்கினர்.

பனையூரிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்த நாவிதர்களுக்கு சில வாரங்களுக்குப் பிறகுதான் கோட்டையின் கிழக்குப் பகுதி காட்டை ஒட்டி குடிசை போட்டுத் தரப்பட்டது. அங்கிருந்தபடியே அவர்களின் பணி நடைபெற்றது.

எலும்பு முறிவு, எலும்பு விலகல், சதைப்பிடிப்பு என பணியிடத்தில் நிகழும் விபத்துகளுக்கு மருத்துவம் செய்யவே குயவர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர். ஆலமரத்தின் கீழ் முறிந்த எலும்புக்காக கட்டுப்போடப்பட்டவர்கள் வரிசையாகக் கிடந்தனர். தீராப்புண்கள், கட்டிகள் மீது அசட்டையாக தனது கத்தியைப் பாவித்துக்கொண்டே இருந்தான் நாவிதன்.

கலெக்டரால் நகரின் மையப் பகுதியில் உருவாக்கப்பட்டிருந்த சிறிய மருத்துவமனையை நம்பிச் செல்ல அநேகமாக யாருமில்லை. எல்லோரும் நாட்டு வைத்தியத்தையே நாடினர். கை, கால்களில் அடிபட்டு, விரல் நசுங்கி, ரத்தம் கட்டி, தீரா வலியுடனான பெருங்கூட்டம் எப்போதும் குடிசைக்கு முன் நின்றுகொண்டே இருந்தது. ஆட்டு மூத்திரத்தை மருத்துவத்திற்கு இவர்கள் அதிகம் பயன்படுத்துவதால் கட்டுப்போடப்பட்டவர்கள் ஆட்டுப் புளுக்கைகளுக்கு நடுவில் புரண்டு கிடந்தார்கள். நாளாக ஆக ஆலமரத்தின் கீழ் முனகல் ஓசை பெருகியதால் பறவைகள் தங்களின் இருப்பிடங்களை மாற்றத் துவங்கின.

பாறைகள் அதிர்வதும், சப்தங்கள் எழுவதுமாக மதுரை

அதிர்ந்துகொண்டே இருந்தது. அகழி மேவியபடியே இருந்தது. மீனாட்சியின் கோபுரங்களில் தூசி படிந்த வண்ணம் இருந்தது. குயவன் மூங்கில் தப்பைகளைப் பிளந்தபடியே இருந்தான்.

ஒவ்வொரு அதிகாலையிலும் சூரியனின் ஒளி கோட்டை அகற்றப்பட்ட புதிய நிலத்தை ஆர்வத்தோடு பார்த்தது. சுண்ணாம்புக் காரைகள் அதிர்ந்தபடியே சரிந்தன.

முன்னூறாண்டு இரத்தப் பிசுக்கேறிய கோட்டையைப் பகலெல்லாம் கட்டி இழுத்துச் சிதைத்த ஆண்கள், இரவானதும் சாராயப் பானைகளில் தங்களின் உடலை அமிழ்த்தி வயல்வெளிகளில் காயப்போட்டார்கள். மறையும் கோட்டையை, தாசிகளின் கொங்கைகளுக்கு நடுவில் மகிழ்ச்சி பொங்கத் தேடிக்கிடந்தார்கள் பெருந்தனக்காரர்கள். காரைகளையும், சித்துக்கல்லையும் சுமந்து அகழியை நிரப்பிய பெண்கள் உடலெல்லாம் சுண்ணாம்புத் தூசியால் மங்கிய நிறத்தோடு, குடிசைகளுக்கு இரவில் திரும்பிக்கொண்டிருந்தனர். நாய்கள் எல்லோரையும் பார்த்துக் குரைத்தபடியே இருந்தன.

*

**ஆ**சையின் வாய்பிளந்து அகாலக் குழிக்குள் கிடந்தது நகரம். நாள் ஆக ஆக வெறி ஏறியதைப் போல மனிதர்கள் மாறினர். நிமிர்ந்து நிற்கும் கோட்டைக்குள் தங்களுக்கான இடம் மறைந்து கிடப்பதாகப் பலரும் நினைத்தனர். பகலும், இரவும் சுண்ணாம்புக் காரை சதா உதிர்ந்தபடி இருந்தது. காற்று அதன் துகள்களை நகரெங்கும் தூவிவிட்டது. வீடுகளின் மேற்கூரைகள் எங்கும் சுண்ணாம்புத் தூசு படிய ஆரம்பித்தது. காற்று தூசியைப் பொழுதெல்லாம் அள்ளித் தெளித்தது. சாவடிகளிலும், திண்ணைகளிலும் படுத்துறங்கும் மனிதர்கள் காலையில் எழுந்து போர்வையை உதறியபொழுது தெருவையே அடைத்து தூசி கிளம்பியது. கழுதைகள் மூக்கை விடைத்து காற்றை மறுதலித்தன. மாடுகளும், ஆடுகளும் தினந்தோறும் தும்மிக்கொண்டிருந்தன. தூசி மேகத்தைப் போல் நகரைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருட்டியது. பெண்களின் தலைமுடி முழுவதும் காரை பூத்துக் கிடந்தது. செங்காவிநிறத் தூசி அலையலையாய் வந்துகொண்டிருந்தது. எதுவும் தன்னியல்பில் இல்லை. எல்லாம் பாழ்பட்டு நின்றது. தண்ணீர் கிணற்றில் தூசிகள் படிந்த கோடு வட்டவட்டமாக இறங்கியபடி இருந்தது. தண்ணீர் பாதிக் கிணற்றில் இருக்கும் பொழுது துவங்கிய கோட்டை இடிப்பு, வாளி தரை தட்டும் காலம் வரை முடிவதாக இல்லை. தூர் வரை ஒவ்வொரு நாளும் படிந்த வட்டத்தை வளையல்கள் போல் உடலெங்கும் கொண்டிருந்தன கிணறுகள்.

**மா**தங்கள் பல உருண்டோடின. பல எதிர்ப்புகளுக்கும், சிரமத்திற்கும் இடையில் கோட்டைச் சுவரை இடிக்கும் பணி நடந்தேறியது. தெற்குப் பக்கம் தவிர பிற மூன்று பக்க கோட்டைச் சுவரும் அநேகமாக அகற்றப்பட்டுவிட்டது. நகர விஸ்தீரணத்திற்கு தெற்குப் பக்கம் போதிய முக்கியத்துவமற்று இருந்ததால் பெரும்பாலான மக்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. கலெக்டர் நிர்வாகமும், பிற மூன்று பகுதியை முழுமையாக அகற்றிய பின் தெற்குப் பகுதி கோட்டையை அகற்றும்

பணியில் கவனம் செலுத்த முடிவெடுத்துவிட்டது.

வடகிழக்கு முனையின் மேல் பகுதியில் மலைத் தேன்ராட்டுகள் நிறைய இருந்ததால் யாரும் கோட்டைச் சுவர் அருகே நெருங்கமுடியவில்லை. ஐம்பது முழ நீளத்திற்கு கோட்டையை மலைத் தேனீக்கள் மாதக் கணக்கில் காத்து வந்தன. அந்த இடத்தை விட்டு விட்டு, இரண்டு பக்கமும் அகற்றும் பணி துரிதமாக நடந்து முடிந்தது.

நெடுநாட்களுக்குப் பின் மேற்கு மலையிலிருந்து மலைக் குறவர்கள் அழைத்துவரப்பட்டனர். வைகைக் கரைச் சோலைகளில் பூத்திருந்த மகரந்தத்திற்காக கடைசி வரை தொற்றிக் கொண்டிருந்த மலைத் தேனீக்கள் ஒரு நண்பகலில் கரும்புகை மூட்டத்திற்கு இடையில் பெரும் இரைச்சலோடு வைகையின் குறுக்கே பறந்து அழகர்மலை நோக்கி வெளியேறின.

*

**ரா**ஜவீதியின் பிரதான கோட்டை வாயில், நிலவறைகள், இரகசிய வழிகள், வெடிமருந்துக் கிடங்குகள், மேல்மாடம், பீரங்கி மேடை, குதிரை லாயம் என எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அகற்றப்பட்டு விட்டன. மிக உறுதியோடு கலெக்டர் நிர்வாகத்தினர் இதனைச் செய்து முடித்தனர்.

மழைக்காலம் துவங்கியது. மேற்கு மலையிலிருந்து வந்த ஈரக்காற்று நகரத்து வீதிகளைத் தனது நாவுகளால் துழாவியது. சாரல் மழை மண்ணில் விழுந்து உருண்டது. கோபுரத்தில் படித்த தூசிகள் மெல்லக் கரையத் துவங்கின. புதுமண்டபத்தில் உட்கார்ந்து பெருசுகள் மாதக்கணக்கில் பேசிக்கொண்டே இருந்தார்கள். எல்லாம் போய்விட்டதெனப் புலம்பினார்கள். கோபமும், அவமானமும் இயலாமையுமாக வார்த்தைகள் கேட்டுக்கொண்டே இருந்தன. வைகையின் புதுவெள்ளம் மதுரை நகரத்து வீதிகளுக்குள் நுழையப்போகிறது என அஞ்சினர். வேலியை இழந்த நாற்றங்காலென நகரத்தைக் கண்டனர். தங்களது புராதானப் பெருமை அடியோடு துடைத்தெறியப்பட்டு விட்டதெனப் பொருமினர். பெருமாள் மேஸ்திரியின் வண்டி மண்டபம், சாவடி இருக்கும் தெருக்கள் பக்கம் வருவதேயில்லை. எந்த வீதியிலிருந்து பார்த்தாலும் பார்வை முட்டி நிற்கும் அந்த நெடிய கோட்டைச் சுவர் அகற்றப்பட்டுவிட்டது. காக்கைகள் கோட்டைச்சுவர் இருந்த எல்லா இடத்தையும் பறந்து கடக்கின்றன. ஊனத்தின் ஊமைவலி தாளமுடியாமல் குன்றியது நகரம்.

*

**இ**டிப்புப் பணிகளுக்காக கிராமத்திலிருந்து வந்தவர்கள் எல்லாம் தங்கள் வேலைகளை முடித்துக் கூலியைப் பெற்றுக்கொண்டு கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர். அநேகமாக யாரும் மிச்சமிருக்கவில்லை. சுப்பிரமணிய ஐயர் அழைத்துவந்த ஆட்கள்தான் கடைசியாகப் புறப்பட்டு போனார்கள். நோயாளிகள் முழுமையாகக் குணமடையும் வரை குயவர்கள் மட்டும் இருக்கவேண்டியிருந்தது. நெடுநாட்கள் வரை அந்த ஆலமரத்திற்கு பறவைகள் திரும்பவில்லை.

பிளாக்பர்ன் மிகச்சிறிய தொகையை மட்டுமே செலவழித்து மிகப்பெரிய பணியைச் செய்து முடித்தார். கலெக்டர் மாளிகையின் மேலே இருந்த

கிழக்கிழந்திய கம்பெனியின் கொடி கோட்டை அகற்றப்பட்டதைக் கண்டு சிலிர்ப்போடு பறந்தது. ஒரு மதுக்கோப்பையின் வழியே புதிய நகரத்தின் வீதிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார் பிளாக்பர்ன். ஒரு கல்கூட அவரால் எடுத்துப் போடப்படவில்லை. ஆனால், ஒரு சிறு கல்கூட இல்லாமல் செய்ய முடிந்தது அவரால்.

ஒரு மாலைப் பொழுதில், முழுக்கோட்டை மதிலும் அகற்றப்பட்டதைப் பார்வையிட்டுவிட்டு கலெக்டர் அலுவலகத்திற்கு திரும்பிக்கொண்டிருக்கையில் மேற்கே வெகுதூரத்தில் ஏதோ ஒரு கிராமத்திற்கு தனது பருத்த தோள் பட்டையின் மேல் வரையப்பட்ட மதுரைக் கோட்டையை இரத்த சாட்சியாய் எடுத்துச்சென்றிருந்தான் ஒருவன்.

*

**இ**டிக்கப்பட்ட கோட்டையின் பெருங்கற்களை வைகையின் குறுக்கே தரைப்பாலம் கட்டப் பயன்படுத்தலாம் என மாரெட் தெரிவித்த யோசனை பரிசீலனையில் இருந்ததால் வைகை ஆற்றின் தென்கரையில் கற்பாறைகள் குவியல் குவியலாகக் கிடந்தன. நகரின் உட்புறத்திலும், வெளியிலும் மண்டபங்கள் கட்டவும், சாவடிகள் அமைக்கவும் இந்தக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. புதிய மாளிகைகள் கட்டிய தனவந்தர்களுக்கு அழகிய வேலைப்பாடுடைய தூண்கள் பயன்பட்டன. தாசிகளின் வீட்டு மேல் மாடம் புதிய வனப்போடு காட்சியளித்தது.

மரங்கொண்டு கோட்டை அமைக்கக்கூடாது; உள்ளே நெருப்பு மறைந்திருக்கிறது எனக் கண்டறிந்தவன், எதைக் கொண்டு கோட்டை அமைத்தாலும் உள்ளே சூழ்ச்சி மறைந்திருப்பதைக் கண்டறிய மறந்தான்.

*

**கோ**ட்டைச்சுவர் அகழியை அழித்ததெனவும், அகழியின் தாமரைக் கொடிகள் கடைசியில் கோட்டைச் சுவரையும் சுருட்டி தனக்குள் இழுத்துக் கொண்டதெனவும் பெரியவர்கள் பேசிக்கொண்டனர். தவறி விழுந்த பசுக்கள் தாமரைக் கொடிக்குள் சிக்குண்டு முன்பு முதலைக்கு உணவானது போலத்தான் ஒவ்வொரு கல்லாய் விழுந்து கோட்டைச் சுவரும் இரையானது என்றனர்.

பாசி படர்ந்த அந்தத் தண்ணீருக்குள் கோட்டைச் சுவர் தலைகீழாய் பல காலம் தெரிந்தது. கருங்கற்களாய் கட்டப்பட்டிருந்தாலும், நெளிந்து எளிதில் ஆடி அசையும் ஒன்றாகத்தான் அதனைத் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தது. கோட்டையின் மேல் நின்றுகொண்டிருந்த வீரன் அகழியின் ஆழத்தில் தலைகீழாகவே நின்றுகொண்டிருந்தான். முதலைகளின் அகோரப் பசியை அவன் கேலி செய்ததுண்டு. நீண்ட வாய்பிளந்து கடிக்கையில் தண்ணீராய் மாறி, முதலையின் கால் நகங்களையும், கடைவாய்ப் பற்களையும் அவன் அர்த்தமற்றதாக்கிக் கொண்டே இருந்தான். அவனின் இந்த மாய வித்தைகளை இப்பொழுது முதலைகள் செய்துகொண்டிருக்கின்றன. தண்ணீரற்ற ஒரு தோற்றத்தைக் காட்டி உள்ளே இருந்துகொண்டு கோட்டையை விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

பனிக் காலத்தில் தாமரை இலைகள் வாடிச் சிதைந்து தண்ணீருக்குள் மூழ்குவது போல, ஒரு வெயில் காலத்தில் கோட்டை சிதைந்து அகழிக்குள் மூழ்கியது.

*

இடது முலையைத் திருகி எறிந்தாள். முலைக்காம்பில் இருந்து தீயின் நாக்குகள் பீறிட்டு எழுந்தன. அறுத்த முலையின் நாளங்கள் கனலாய்த் தகதகத்துக்கொண்டு மதுரை அதிர விழுந்தது. நாலா திசைகளையும் பெருநெருப்பு பற்றி இழுத்தது. நெருப்பின் உக்கிரம் வெளிகளைத் துழாவித் தின்றது.

இது ஆதியில் கடம்பவனத்தை அழித்த பொழுது வைக்கப்பட்ட நெருப்பின் மீதி. பெரும் வனம் சூழ்ந்த வைகையின் கரையில் பற்ற வைக்கப்பட்ட தீ நெடுநாள் எரிந்தது. வெப்பம் தாளாத பறவைகள் பறந்தவாறே இறந்து விழுந்தன. மிருகங்கள் கூட்டம் கூட்டமாகத் தீக்கிரையாயின. பாறைகளுக்கடியில் ஓடி ஒளிந்த உயிரினங்கள் மண்ணோடு கருகிப் போயின. வெடித்து விருவோடிக் கிடந்தன விளைந்த பாறைகள். வனம் முழுவதையும் எரித்த குலசேகர பாண்டியன் நெருப்பு முழுவதையும் அணைக்கத் தவறினான். ஒரு சுடர் அவனது செங்கோலுக்குள் பதுங்கி ஒளிந்துகொண்டது. ஆண்டுகள் பல உருண்டோடின. முன்பு அடர்ந்த வனம்போல இப்பொழுது செழித்த நகரம் உருவானது. கிளைகள் ஒன்றோடொன்று பின்னிக் கிடந்ததைப் போல இப்பொழுது தெருக்கள் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன.

அந்த ஒற்றைச் சுடர் மீண்டும் பற்றி எரியத் துவங்கியது. அறத்தின் வெப்பம் தாளாமல் வளைந்தது நெடுஞ்செழியனின் செங்கோல். கடம்பவனத்தை வாரி அணைத்துக்கொண்ட நெருப்பின் கங்குகள் இப்பொழுது ஒற்றை முலைக்குள் இருந்து வெடித்துச் சிதறின. மீண்டும் கூக்குரல்கள் விண்ணை முட்ட உயிர்கள் அனைத்தையும் தீயின் நாக்குகள் சுழற்றிச் சுழற்றி விழுங்கின. முன்பு மரங்கள் அதிர்ந்து விழுந்தது போலவே இப்பொழுது மாடங்கள். முன்பு அனைத்து அழிவையும் குலசேகர பாண்டியன் நின்று பார்த்தான். இப்பொழுதோ பற்றிய நெருப்பின் புகை மூட்டத்திற்கு இடையே நடந்து மேற்கு நோக்கி அவள் போய்விட்டாள். நாட்கணக்கில் எரிந்த பின் நெருப்பின் ஆங்காரம் தணிந்தது. நீண்ட காலத்திற்குப் பின் அப்பக்கம் சென்றவர்கள் ஒற்றைக் கங்கொன்று முலை வடிவத்தில் அப்படியே தகதகத்துக் கிடப்பதை பார்த்து மேற்கு நோக்கி சொல்லப் போனார்கள்.

அந்த ஒற்றை முலை இந்த மண்ணுக்குள்ளேயே கிடந்தது. ஞாபகங்களின் சுழற்சியால் மீண்டும் அது மேலே வரத்துவங்கியது. புரோகிதர்கள் புடைசூழ வேள்விக் குண்டத்தில் தீ எரிந்தது. மீண்டும் அதே தீ! கடம்பவனத்தை அழிக்க வைக்கப்பட்ட சிறு பொறி! செங்கோலுக்குள் ஒளிந்து காலங்களைக் கடந்து வந்த தழல். முலை வடிவக் கங்காய் பூமிக்கடியில் புதைத்திருந்த நெருப்பு. இப்பொழுது மீண்டும் யாக குண்டத்தின் வழியே, அதே நெருப்பு வடிவிலான ஒற்றை முலை. தடாதகையின் மூன்றாம் முலையாக மாறி வெளியே வந்தது. மலையத்துவஜ பாண்டியனும், காஞ்சனையும் குழந்தையை அள்ளி அரவணைத்தபொழுது மூன்றாம் முலை கண்டு அதிர்ந்தனர். அப்பொழுது

அசரீரி சொன்னது. ‘இவள் ஆணினும் சிறந்தவள். இவளுக்குரியவனை சந்திக்கும் கணத்தில் மூன்றாம் முலை மறையும்.’

தடாதகை வளர்ந்து கன்னியாகி பாண்டிய அரசியாக முடி சூடியபின் தீயின் நாக்குகளைப் போலத் திசையெட்டும் வெல்லப் புறப்பட்டாள். அவளின் போர்ப்புரவிகள் விண்ணை அதிரச்செய்தன. தேர்ச் சக்கரங்களுக்கடியில் ராஜ கிரீடங்கள் நசுங்கிச் சிதறின. மண்ணுலகும், விண்ணுலகும் வீழ்ந்தது. இந்திரனும், சிவகணங்களும் பயந்து ஓட, கயிலையும் காப்பற்ற நாதியற்றுச் சரணடைந்தது. உடல்கள் மலையெனக் குவிந்து கிடந்த யுத்த களத்தில் கடைசியாக புலித்தோல் அணிந்த பிடாரன் வந்தான். எதிரியாக சிவன் வந்தவுடன் நடுமுலை மறைந்தது. கடம்ப வனத்தின் ஆதி நெருப்பு உதிர்ந்தபின், தடாதகை வெறும் மனைவியாக மாறி அவனோடு போய்விட்டாள்.

கடம்பவனத்தின் நெருப்பைக் காத்து வரும் ஒற்றை முலைதான் பாண்டிய நாட்டு நினைவுப் படிமம். அந்த ஆதி ஞாபகத்தில் மையக்கோபுரம் முலைக் காம்பென நிற்க, ஒழுங்கற்ற வட்ட வடிவம் கொண்ட மார்புபோல கோட்டை மதில்கள் உன்னிததெழுந்த ஒற்றை முலையாய் வான் நோக்கி மதுரையை நிறுத்தியிருந்தது.

அந்த மூன்றாவது ஒற்றை முலையும் இப்பொழுது மறைந்து போனது. அதிகாரத்தின் கைகள் அவற்றை அறுத்தெறிந்துவிட்டன. தனது ஆதி நெருப்பை உதிரவிட்டு விட்ட மதுரை அகலமான வீதிகளையும், வீடுகளையும் கொண்டு, கிழக்கிந்திய கம்பெனி நிர்வாக அதிகாரியின் மேஜையின் மேல் விரிக்கப்பட்டிருந்த வரைபடத்தின் கோடுகளுக்குள் கச்சிதமாய் அடங்கிப்போனது.

*

# 52

**மார்ச் 31, 1847.**

இன்று மாலை என்னை வழியனுப்பி வைப்பதற்கான விழா. என்னுடைய செயல்களைப் பாராட்டி, என் நினைவாக என்றென்றும் இருக்கக்கூடிய விளக்குக் கம்பம் ஒன்றில் விளக்கேற்றி வைக்கும் நிகழ்ச்சியை விசுவாசமுள்ள மதுரை மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

நான் இத்தனை ஆண்டு காலம் கலெக்டராகப் பணியாற்றிய இம் மதுரை நகரை விட்டு விடைபெறுகிறேன். இந்நகரை மேம்படுத்தவும், நிர்வாக அமைப்புகளை ஒழுங்குபடுத்தவும் தொடர்ந்து பல முயற்சிகளை எடுத்து வந்தேன். அதில் பலவற்றைச் செய்து முடித்துள்ளேன். மிகக் குறுகிய வீதிகளையும், நெருக்கமான தெருக்களையும் கொண்டிருந்தது மதுரை. இந்நகரின் தெருக்கள் அனைத்தும் போக்குவரத்துக்கு மிகச் சிரமம் ஏற்படுத்துவதாக இருந்தன. எனவே அதை ஒழுங்குபடுத்தினேன். நகர் விரிவடையப் பெரும் தடையாக இருந்தன கோட்டை கொத்தளங்கள். முதலில் கோட்டைச் சுவர்களில் கூடுதலாக ஆறு வாசல்கள் அமைக்கும் அளவுக்கு இடித்தால் போதும் என்றுதான் திட்டமிட்டேன். பிறகுதான் முழுமையாக அகற்றிவிடும் முடிவுக்கு வந்து, அதைச் செயல்படுத்தினேன். அகழிகளை மூடி பயன்பாட்டுக்குரிய இடமாக மாற்றினேன். கோயிலைச் சுற்றி சதுர வடிவில் ஏற்கனவே இருந்த வீதிகளை முறையாக அகலப்படுத்தினேன். நான்காவது வீதி கோட்டைச் சுவர் இடிக்கப்பட்ட பகுதியிலும், ஐந்தாவது வீதி கோட்டைக்கு வெளி வீதியாகவும் இருக்குமாறு வடிவமைத்துள்ளேன்.

நான் கோட்டையை அகற்றச் சொன்னதால் சிலர் என் மீது கோபத்தில் உள்ளனர். நான் செய்துள்ளது இந்நகருக்கு எவ்வளவு நன்மை பயக்கும் காரியம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அறியாமையில் அவர்கள் இருக்கிறார்கள். இன்றில்லா விட்டாலும், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின் செய்தே ஆகவேண்டிய ஒரு செயலை முன்கூட்டியே நான் செய்து

முடித்துள்ளேன். இந்நகரின் தோளிலே அழுத்திக் கிடந்த ஒரு நிரந்தரமான சுமையை நான் அகற்றியுள்ளேன். நகரின் வளர்ச்சிக்கும் மக்களின் பயன்பாட்டிற்கும் மிகவும் நன்மை பயக்கின்ற செயல் இது. ஆனால், சிலர் இதைத் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். மாட்சிமை தங்கிய கவர்னரிடம் புகார்கள் அனுப்பினர். இவர்களின் செயலால் நான் சில மாதங்கள் பணியிழக்கவும் நேர்ந்தது. வேதனைமிக்க அந்த நாட்களைக் கடந்து, மேல் முறையீடு செய்து வெற்றியும் பெற்றேன்.

கண்மூடித்தனமாக மூடநம்பிக்கையை இம்மக்கள் கொண்டுள்ளனர். அவர்களுக்கு நன்மை தருகின்ற ஒன்றைச் செய்ய வேண்டுமென்றால் கூட மூடநம்பிக்கையின் வழியில்தான் முயற்சி செய்ய வேண்டியுள்ளது. ஒரு பிராமணச் சிறுவனை நரபலி கொடுத்தாகிவிட்டது; இனி கோட்டை இடிப்பைத் தொடங்கலாம் என்ற செய்தியைப் பரப்பினால்தான் மக்கள் இடிப்புப் பணியைத் துவக்குவார்கள்; அந்தக் காலத்தில் இருந்து அப்படியொரு மூடநம்பிக்கை இருக்கிறது என்று திரு. ராமச்சந்திர ஐயர் சொன்ன யோசனை எவ்வளவு சரியாகப் போய்விட்டது என்பதை நான் நடைமுறையில் பார்த்து பிரமித்துப் போனேன்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை இடிக்க திருச்சிக்கு அப்பால் இருந்து கூலிக்கு ஆட்கள் வரவழைக்கப்பட்டதாகவும் அவர்கள் கோட்டையை இடித்து திரும்பும் பொழுது காவிரி ஆற்று வெள்ளத்தில் ஒருவர் மிஞ்சாமல் அனைவரும் இழுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் ஒரு செய்தி கேள்விப்பட்டோம். அது உண்மைதானா என உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வந்தோம் என்றார் ஒரு நாள் ராமச்சந்திர ஐயர்.

திருச்சிக்கு அப்பாலிருந்து ஆட்கள் வரவழைக்கப்பட்டு கோட்டையை இடித்ததென்பது உண்மைதான். ஆனால், அவர்கள் திரும்பும்போது காவிரி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர் என்பது உண்மையல்ல; அது மக்கள் கற்பனை என்றேன்.

அதற்குப்பின் பல்வேறு நபர்களுக்கு நோயின் காரணமாக நிகழ்ந்த மரணங்களை கோட்டை இடிப்போடு தொடர்புபடுத்தியே அவர் பேசி வந்தார். இடையில் அவருக்கு உடல் நலம் குன்றியபொழுது இந்தப் பாவச்செயல் காரணமாக இருக்குமோ என அஞ்சுகிறேன் என்று திருமா.ரெட்டிடம் தெரிவித்துள்ளார். கோட்டையிடிப்பின் தொடக்கக் காலத்தில் எனது நிர்வாகத்திற்கு விசுவாசமாகப் பணியாற்றியவர் ராமச்சந்திர ஐயர். ஆனால், அவருக்கிருந்த பயமே அவரைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது. கோட்டையை அகற்றும் பணியை எதிர்த்தவர்கள் மக்களின் பயத்தையே மூலதனமாக மாற்றித் தொடர்ந்து பேசி வந்தனர். ராமச்சந்திர ஐயரின் உடல் நிலை அவர்களின் கருத்துக்கு வலுவூட்டியது. முறையான சிகிச்சை அளித்தால் அவரைக் குணப்படுத்த முடியும் என நினைத்த மாரெட், மருத்துவரை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச்சென்ற பொழுது அவரின் குடும்பத்தார் அவர்களை உள்ளே அனுமதிக்கவேயில்லை. கடைசியில் பயம் அவரை மரணத்தின் வாசலுக்குள் அனுப்பிவைத்தது.

அதேபோல், இடிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காயம், எலும்பு முறிவு ஏற்பட்டால் சிகிச்சை அளிக்க ஒரு சிறு மருத்துவமனையைத் துவக்கி ஒரு டாக்டரை நியமித்தேன். ஆனால், யாரும் அந்த

மருத்துவமனைக்கு வரவில்லை. வேதனையான விஷயம் என்னவென்றால், கிராமத்து மருத்துவன் தனது அனுபவத்தின் அடிப்படையில், முறிவு ஏற்பட்ட இடத்தில் மூங்கில் தப்பைகளை வைத்துக்கட்டி மாதக்கணக்கில் படுக்கப்போட்டு விடுகிறான். சீழ் வைத்து, சதை அழுகிய நிலையிலும் நம்பிக்கையோடு படுத்திருந்த பல்ரை நான் பார்த்தேன். சிலர் வேறு வழியே இல்லாமல் பல வாரங்களுக்குப் பிறகு கடைசியாக இந்த மருத்துவமனைக்கு வந்தனர். அதேபோல் இரண்டே கத்தியை மட்டும் வைத்துள்ள நாவின் எந்தக் கட்டியையும் நிதானிக்காமலே கீறிவிடுகிறான். அவனது முரட்டு சுபாவமே சிறு கட்டியைக் கூட பெரும் புண்ணாக்கி சில நேரம் நோயாளியை மரணத்திற்குக்கூட இட்டுச்சென்று விடுகிறது. இந்த நாட்டு வைத்தியர்களைத் தாண்டி நவீன மருத்துவமனையை நோக்கி வரும் அறிவை இந்நகரின் செல்வந்தர்கள் கூட இன்னும் பெறவில்லை.

இந்தப் பழமையான நகரின் வடிவமைப்பில் சில ஒழுங்குபடுத்தல் பணியை நான் செய்துள்ளேன். என்னுடைய இந்தப் பணிக்கு மிக முக்கிய பங்காற்றியவர் துணை நில ஆய்வாளர் திரு. மாரெட். கோட்டை இடிப்பிலும், புதிய வரைபடத்தைத் தயாரித்து அதை நிறைவேற்றியதிலும் அவரின் பங்கு சிறப்பானது. எனவே தான் கோட்டைக்கு உள்ளே உருவாக்கப்பட்டுள்ள 5636 அடி நீளமுள்ள நான்கு பெரிய வீதிகளுக்கும் மாரெட்டின் பெயரை வைத்துள்ளேன். அதேபோல மேஸ்திரி பெருமாள் முதலியின் பணியும் சிறப்பானது. எனவேதான் அவர் நினைவாக உள்ளே இருந்த நான்கு தெருக்களுக்கும் பெருமாள் மேஸ்திரி தெரு எனப் பெயரிட்டுள்ளேன். இவர்களைத் தவிர மற்ற சிலரும் என்னுடைய நிர்வாகத்திற்கு மிக விசுவாசமாக இருந்து திறமையாகப் பணியாற்றினர்.

அந்த நெடிய கற்கோட்டையை முற்றிலுமாக அகற்றிவிடவில்லை. கடந்த காலத்தின் நினைவுச் சின்னமாக இருக்கும் பொருட்டு மேற்குக்கோட்டை வாயிலின் அருகே ஒரு சிறிய பகுதியை அப்படியே விட்டுவைத்துள்ளேன். அது இந்நகரின் வரலாற்றின் மீது நான் கொண்டுள்ள மதிப்பின் அடையாளம்.

பல சிரமங்களுக்கும், தடைகளுக்கும் இடையில் இங்கு நீண்ட காலம் நான் கலெக்டராக பணியாற்றியுள்ளேன். என்னை இந்த நகரத்து மக்கள் எவ்வளவு காலம் நினைவில் வைத்திருப்பார்கள் எனத் தெரியாது. ஆனால், கோட்டை மதிலோடு எனது பெயர் சம்பந்தப்பட்டதால் அவ்வளவு எளிதில் மறக்க வாய்ப்பில்லை என நினைக்கிறேன். எனது பணியின் நினைவாக நகரின் முக்கிய சந்திப்பு ஒன்றில் உருவாக்கப்பட்டுள்ள இந்த விளக்குத்தூணில் சுடர்விடும் வெளிச்சத்தின் வழியே இந்நகரைப் பார்த்துக்கொண்டேயிருக்க நானும் ஆசைப்படுகிறேன்.

மதுரையை விட்டும், இந்தியாவை விட்டும் போகும் காலம் வந்து விட்டது. ஓய்வுக்கான மனநிலை என்னை துரிதப்படுத்துகிறது. மெட்ராஸ் சென்று கவர்னர் அலுவலக நடைமுறைகளையெல்லாம் முடித்தவுடன் இங்கிலாந்தை நோக்கி எனது கடற்பயணம் துவங்கும். இந்த நெடிய கடற்பயணத்தை நினைவின்வழி கழிக்க நிறைய அனுபவங்களைத் தந்து அனுப்புகிறது மதுரை.

**டை**ரியை எழுதிமுடித்த கலெக்டர் பிளாக்பர்ன் மாலை நிகழ்ச்சிக்குத்

தயாரானார். கலெக்டரின் வருகையையொட்டி கீழமாசி வீதி, மேலமாசி வீதி சந்திப்பில் சிறப்பான விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தென்னோலைக் குருத்துக்களால் கட்டப்பட்ட தோரணங்கள் அந்தப் பகுதி முழுவதையும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. கலெக்டரின் வண்டி வைகையின் தரைப் பாலத்தைக் கடந்து வெளிவீதியின் வழியே நகருக்குள் நுழையும் இடத்திலிருந்து வரவேற்றுச் செல்ல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. வாத்தியங்கள், கொடிகள், குடைகள் சகிதமாக பெரும் கூட்டமென மக்கள் நின்று கொண்டிருந்தனர். நாதஸ்வர மேளங்கள் முழங்கின. பெருமாள் மேஸ்திரி, ஆதிமூலஞ் செட்டி, சுப்பிரமணிய ஐயர், ராம்நாத முதலி என நகரின் முக்கியஸ்தர்கள் எல்லாம் வந்திருந்து கலெக்டரை வரவேற்று அழைத்துச் சென்றனர். நாட்டியமாடிய கரகங்கள் முன்னே செல்ல, மேள முழக்கங்களின் நடுவே கலெக்டரின் வண்டி வந்துகொண்டிருந்தது. மேற்கத்திய ஆடையில் மிடுக்குடன் அமர்ந்திருந்த பிளாக்பர்ன் கீழமாசி வீதியின் எல்லை வரை பார்வையைச் செலுத்தி, மெல்ல வலது பக்கம் திரும்பி கிழக்குக் கோபுரத்தை தலை உயர்த்திப் பார்த்த வண்ணம் வந்து கொண்டிருந்தார்.

கருநீலநிறக் கோட்டில் அரைவட்டத்தில் தங்கநிறத்தில் மின்னுகிற பொத்தான்கள் வரிசையாக இருந்தன. கழுத்தோடு இணைக்கிற இடத்தில் பூக்கள் போன்ற வடிவில் அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. செங்காவி நிற முடி உயர்ந்த நெற்றிக்கு மிக மேலிருந்து துவங்கி காதுகளுக்குக் கீழ்வரை நீண்டிருந்தது. அதே நிறத்திலிருந்த தாடி அளவோடு வெட்டப்பட்டிருந்தது. சிவப்பேறிய அந்த முகத்தில் கடுமையும், இறுக்கமும் எப்பொழுதும் போல் இருந்தது. கலெக்டரின் வாகனத்தை இழுத்து வந்த இரண்டு குதிரைகளும் மேளங்களின் சப்தங்களைக் கேட்டு மிரளாமல் ஒரே சீராக நடந்துவந்தன. சுப்பிரமணிய ஐயர் முன்னே வந்து கொண்டிருந்தார். அவர் கட்டியிருந்த பஞ்சகச்சம் கலெக்டரின் ஆடையைவிட பளிச்சென்றிருந்தது. கரகாட்டத்தைச் சுற்றி சிறுவர்கள் கூட்டம் மொய்த்துக்கொண்டு வந்தது. விளக்குக் கம்பம் நடப்பட்டிருந்த இடத்தருகே அனைவரும் வந்து சேர்ந்தனர்.

பொழுது மயங்கியதால் தீவட்டிகளும், வண்ண விளக்குகளும் அந்த இடத்தைப் பிரகாசிக்கச் செய்தன. சூட்டப்பட்ட மாலைகளைக் கழற்றாமல் நாற்காலியில் அமர்ந்திருந்தார் கலெக்டர். நாதஸ்வர இசை, கலெக்டரின் முகத்தை நேரில் பார்த்து மரியாதை செய்ய நினைத்தவர்கள் கூட்டத்திற்குள் முண்டியடித்து வந்துகொண் டேயிருந்தனர். மைதானம் போலிருந்த அந்த பெரிய வெளி நிரம்பி வழிந்தது. வரவேற்புக் கொடுக்க வந்த இரண்டு கோயில் யானைகளும் மேற்கு ஓரத்தில் நின்றன. முக்கியஸ்தர்களுக்கான நாற்காலிகளில் தனவந்தர்கள் அமர்ந்திருந்தனர். கோயில் பட்டர்களில் பலர் இந்நிகழ்ச்சியைப் புறக்கணித்தது வெளிப்படையாகத் தெரிந்தது. அது ஏனென்பதும் அனைவருக்கும் தெரியும். கூட்டத்தில் பலரும் பலவிதமாய் பேசிக் கொண்டார்கள்.

‘மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, ஒரு நிர்வாகக் குழுவை அமைத்ததுதான் இவர் செய்ததில் மிகச் சிறந்த பணி. இந்தப் பணிக்காக இவரை என்றென்றும் மதுரை மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்’ என்று பெருமை பாராட்டினர்.

‘தான் புதிதாக உருவாக்கிய வீதிகளுக்கு அதிகாரி மாரெட்டின்

பெயரையும் பெருமாள் மேஸ்திரியின் பெயரையும்தான் வைத்தாரே தவிர தனது பெயரை வைக்க விரும்பவில்லை. இந்த பெருந்தன்மை வேறு யாருக்கு வரும்' என சிலர் வியந்தனர்.

'இந்த பாரம்பரிய நகரைச் சுற்றி கம்பீரமாக நின்றுகொண்டிருந்த கோட்டைச் சுவர் முழுவதையும் அழித்து ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்ட இவன் ஒழிந்தால்தான் இந்நகரம் உருப்படும். இந்தச் சாபம் இவனை எங்கு போனாலும் விடாது' என சிலர் சபித்தனர்.

காற்று வீசியதால் தீவட்டிகள் பதற்றத்துடன் எரிந்தன. மாலை, மரியாதைகள் எல்லாம் முடிவுக்கு வந்தவுடன், ஆட்டமும், மேளமும் நின்றன. இங்கிலாந்திலிருந்து கப்பலில் கொண்டு வரப்பட்ட விளக்குக்கம்பமென அதன் கம்பீரத்தையும், அழகையும் வியந்து பேசிக்கொண்டிருந்த கூட்டத்தை கொஞ்சம் விலகச் சொல்லி மரச்சாரத்தின் படிக்கட்டுகளில் வழி மேலே ஏறினார் சுப்பிரமணிய ஐயர். கோயிலில் இருந்து கொண்டுவரப்பட்ட எண்ணெய்க் குடுவை அவரிடம் கொடுக்கப்பட்டது. நான்கு பக்க விளக்கிலும் எண்ணெய் ஊற்றி, திரி போட்டு, தயார் நிலையில் வைத்துவிட்டு கீழே இறங்கினார். அதன் பின் மேலே ஏறிய பிளாக்பர்ன் ஒவ்வொரு திரியாக சுடரை ஏற்றி வைத்தார். அனைவரும் ஆரவாரம் செய்தனர். மேளங்கள் முழங்கின. நெருப்பு அணைத்து விடாமல் இருக்க கண்ணாடிக் கூண்டு அந்த விளக்கின் மேல் பொருத்தப்பட்டது. இரும்பினால் வார்க்கப்பட்ட அழகிய வேலைப்பாடுகளால் ஆன இந்த விளக்குத்தூணின் மேல் சுடர் பிரகாசிக்க, வெளிச்சம் நான்கு திசையிலும் கசிந்து பரவியது. பிளாக்பர்ன் முகத்தில் மெல்லிய புன்னகை. விளக்குத்தூணின் கீழ் வைக்கப்பட்டிருந்த கல்வெட்டில் 'மதுரை மக்களின் நண்பன்' என பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தை அவர் கண்கள் நீண்டநேரம் பார்த்தவண்ணம் இருந்தன.

*

# 53

**பி**ளாக்பர்னுக்குப் பின் இரண்டு கலெக்டர்கள் வந்து **போய்விட்டனர்**. மதுரை நகரம் எதிர்பார்த்ததை விட வேகமாக விரிந்துகொண்டிருந்தது. வீடுகளும், கடைகளும், சந்தைகளுமாக வெளிவீதிகளில் கட்டிடங்கள் மிகப் பெரிய அளவில் உருவாகின. தினமும் எண்ணிலடங்கா வண்டிகளில் விளைபொருட்கள் நகரச் சந்தைக்கு வந்தவண்ணம் இருந்தன. பரபரப்பான பகுதியாக வெளிவீதிகள் மாறிக் கொண்டிருந்தன. கிராமத்திலிருந்து நகரத்திற்குக் கொண்டுவரப்படும் பொருட்களை கொள்முதல் செய்யும் கடைகள் நிறைய உருவாகின. வடக்கு வெளிவீதிக்கு வெளியே உருவான தெருக்கள் வைகை நதியின் படித்துறைகளை நோக்கி நீண்டு சென்றன. வடக்கிலும் புதிய குடியேற்றங்கள், அதை ஒட்டிக்கட்டிடங்கள் சிறுசிறு தெருக்கள் என வேகமாக உருவாயின. வண்டிச் சகடங்கள் உருளும் சத்தம் நகரத்து வீதிகள்தோறும் கேட்டுக்கொண்டேயிருந்தது. சந்தைக்கு வரும் வண்டி மாடுகளுக்கு கூளங்களை விற்பனை செய்பவர்கள் கூட அதிகமாயினர். சிம்மக்கல் பகுதியிலிருந்த கொல்லாசாரி லாடம் அடிக்க மாடுகளின் கால்களில் கயிறுகளைக் கட்டி சரித்துத் தள்ளியபடியே இருந்தான். வணிகர்களுக்கும், விவசாயிகளுக்கும் விலை திகையும் வரை மாடுகள் அசை போட்டவாறு நின்றும், படுத்தும் கிடந்தன.

**க**டந்த ஐந்தாறு ஆண்டுகளாக மேற்குக் கோட்டை இருந்த பகுதியில் ராமநாத முதலியும், அவரது வாரிசுதாரர்களும் கட்டி முடித்திருக்கிற மிகப்பெரிய பங்களா அனைவரையும் வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது. வைகையின் தென்புறம் சூளை அமைக்கும் பணி துவங்கிய சில நாட்களிலே சுப்பிரமணிய ஐயர் செத்துப் போனார். ஆனால், இன்று அவரது மகன்கள் இருவரும் கட்டி முடித்திருக்கிற மாளிகையை வியந்து பேசாத மதுரைவாசிகளே இல்லை. பள்ளி வாசல், கோயில்கள், சந்தை என வெளிவீதிகளில் இடைவெளியின்றிக் கட்டிடங்கள் முளைத்துவிட்டன. சுண்ணாம்புக் கற்கள் ஏற்றப்பட்ட வண்டிகள்

நாலாதிசையிலிருந்தும் நகருக்குள் வந்த வண்ணமிருந்தன.

*

கிராமத்திலிருந்து வந்த சிலர் சிம்மக்கல் பகுதியில் வீடு கட்டத் துவங்கும் பொழுது எதிர்ப்புக் கிளம்பியது. அவர்கள் கீழ் ஜாதிக்காரர்களெனவும் நகருக்குள் யார் யார் இருக்க வேண்டு மென்று காலங்காலமாய் இருக்கும் நடைமுறை மீறப்படக்கூடா தெனவும் சிலர் சொல்லிப் பார்த்தனர். ஆனால், அவர்களுக்குப் போதிய ஆதரவு இல்லாததால் அவர்களின் குரல் எடுபடவில்லை. ஆலமரத்தின் கிளைகள் படருவதைப் போல மதுரையின் வீதிகள் விரிந்து படர்ந்தன.

புதிய வீதிகளில், புதிய பிரச்சினைகளும் உருவாகின. ஏற்கனவே கோட்டைக்குள் இருந்த வீதிகளுக்கு பரம்பரை குடிக்காவலர்கள் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது புதிதாக உருவாகியுள்ள நான்கு மாரெட் வீதிகளுக்கும், நான்கு வெளி வீதிகளுக்கும், அதனையொட்டிய சிறு சிறு தெருக்களுக்கும் காவல் யார் என்பது நிச்சயிக்கப்படவில்லை. காரணம் புதிய பகுதிகளுக்கு காவலர்கள் யாரையும் நியமிக்கக்கூடாது என்பது கலெக்டரின் உத்தரவு. பழைய காவல் முறைகளை விஸ்தரிப்பதை அரசின் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் தங்களின் உடமைகளைக் காத்துக்கொள்ள முடியாமல் வெளி வீதி மக்கள் திண்டாடினர். களவுகள் தொடர்ந்து நடந்தன. இருட்டுக்குள் சேதன அசேதனப் பொருட்கள் எல்லாம் நழுவி மாயமாய் மறைந்தன. அவர்களின் சொத்துக்களைக் காப்பதற்கு எவ்வளவு முயற்சித்தும் களவுக்கு தப்பியது எதுவுமில்லை என்ற நிலை உருவாகியது. முற்றிலும் பாதுகாப்பற்ற நிலையிலேயே ஒவ்வொரு இரவையும் வெளிவீதி மக்கள் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் ஆதிமூலஞ் செட்டியும், மறைந்த சுப்பிரமணிய ஐயரின் மகன் ஹாலாஸ்யம் ஐயரும் இன்னும் சிலரும் சேர்ந்து கலெக்டரை சந்தித்து பிரச்சினையை எடுத்துச் சொல்லி மனு ஒன்றை அளித்தனர்.

கலெக்டரும் நகரசபைத் தலைவருமான வி.ஹச். லெவிஞ்ச் மனுவைப் படித்துவிட்டுக் கூறினார். ‘இது கும்பெனி அரசல்ல; மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியின் அரசு. உள்ளூர் காவல் முறைகளை அரசின் சட்டங்கள் அனுமதிக்கவில்லை. அது மட்டுமல்ல, இந்தக் காவல் முறையை ஒழிக்க அரசு சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்க புதிதாகக் காவலுக்கு ஆள் நியமக்கப்போவதாக நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. வேண்டுமென்றால் சிப்பாய்களின் காவலை வெளி வீதிகளுக்கு நீட்டித்து உத்தரவிடுகிறேன்.’

குடிக் காவலை ஒழிக்க புதிய அரசு திட்டமிட்டுக்கொண்டிருப் பதாக கலெக்டர் சொன்னதை நினைத்து ஐயருக்கு சிரிப்பு வந்தது. காவலை ஒழிப்பது நடைமுறையில் முடியாத காரியம். அப்படியிருக்க காவலை ஒழிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் கோட்டைச் சுவரை ஏன் அகற்றினார்கள் என்பது புதிராகவும், முரண்பாடுடையதாகவும் யாவருக்கும் தெரிந்தது. ஆதிமூலஞ் செட்டி போன்ற முக்கியஸ்தர்கள் கூட வெள்ளைக்காரனின் இந்த செயலை அறிவீனமானது என வெளிப்படையாகத் தெரிவித்தனர். கலெக்டரை சந்திக்கச் சென்ற இந்தக்

குழுவினரிடம் என்ன நடந்தது என்பதைக் கேட்டுத் தெரிந்துக்கொண்ட வெளிவீதி மக்கள் சோர்வுக்கு உள்ளாயினர். எந்தப் பாதுகாப்பு அரணுமற்று வயலும், காடும், நதியும் சூழ்ந்துள்ள பகுதிகளில் வீடுகளைக் கட்டியுள்ளவர்களுக்கு கள்ளன் காற்று போல் எளிதாக வந்து செல்வான் என்பது நன்றாகத் தெரியும். அவர்கள் செய்வதறியாமல் திகைத்துக் கிடந்தனர். இருள் வழக்கம் போல் ஒவ்வொரு நாளும் வந்துகொண்டிருந்தது.

இரவு நேரங்களில் ஆங்கிலச் சிப்பாய்கள் இரண்டொருவர் துப்பாக்கி சகிதமாக காவல்பணியில் ஈடுபட்டிருந்தனர். நெடிய வீதிகளில் அவர்கள் ஒருமுனையில் இருந்து மறுமுனைக்கு வருவதற்கு முன்பு களவாடிய பொருட்களை ஒருவன் தனது சொந்த ஊருக்கே எடுத்துச் சென்று விட முடியும். பாவம், அவர்கள் வெறுமென நடந்து கொண்டேயிருந்தார்கள். தானிய மூட்டைகள் தூக்கப்படுவதும், நகைகள் திருடப்படுவதும், மாடுகள் ஓட்டிச் செல்லப்படுவதுமாக தினமும் களவு போய்க் கொண்டேயிருந்தது. இருட்டின் வெளி கண்டு நகரின் புதிய பகுதி மக்கள் மிரண்டு கிடந்தனர். குடிகளின் நியாயமான கோரிக்கையை கலெக்டரால் புரிந்துகொள்ள முடியவில்லை. கூடுதலாக ஒரு சிப்பாயை காவலுக்குப் போட்டால் பிரச்சினை முடிந்துவிடுமென உண்மையாகவே அவர் நம்பினார்.

*

**சோ**ழவந்தானுக்குப் போய்விட்டு ஆதிமூலச் செட்டியார் திரும்பிக் கொண்டிருந்தார். வைகையாற்றின் வடகரையில் செழிப்பான தென்னை மரங்களுக்கிடையில் செட்டியாரின் குதிரை வண்டி வந்து கொண்டிருந்தது. வயது அறுபதைத் தாண்டும் நிலையிலும் செட்டியார் சதா அலைந்துகொண்டு வியாபாரத்தையும், விவசாயத்தையும் கவனிப்பதுமாக இருந்தார். மகன் நல்லமுத்து செட்டி இப்பொழுது விவரமான ஆளாக வளர்ந்துவிட்டான். வியாபாரப் பொறுப்புகளையெல்லாம் அவனே கவனிக்கிறான். விவசாய வேலைகளுக்கு மட்டும் ஆதிமூலஞ்செட்டியார் போய்வந்து கொண்டிருந்தார். அதுவே மகனுக்கு பிடிக்கவில்லை. ஓய்வெடுக்க வேண்டிய வயதில் ஏன் வீணாக அலைகிறீர்கள் என நல்லமுத்து செட்டி திட்டுவான். குதிரை வண்டியில் பயணம் போவது செட்டியாருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. அவர் போகும் வண்டி சிலோனில் வடிவமைக்கப்பட்டது. அவரின் தந்தை காலத்தில் அங்கிருந்து வாங்கி வரப்பட்டது. அந்த வண்டியில் போனால் மனதுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறதென அவர் சொல்வார். நேர்த்தியான குதிரை பூட்டப்பட்ட அந்த வண்டியில் எங்கு சென்றாலும் அவரும், கணக்குப் பிள்ளையும், பாதுகாப்பிற்கான ஒரு ஆளுமாக மூவரும் சேர்ந்துதான் செல்வார்கள்.

அன்று மாலை சோழவந்தானுக்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்த செட்டியார் கிழக்கு வெளி வீதியில் தான் புதிதாகக் கட்டியுள்ள 'மீன விலாஸ'த்துக்குப் போகும்படி வண்டிக்காரனிடம் சொன்னார். வைகையின் வடகரையில் இருந்து ஆற்றைக் கடந்து நேராக வெளிவீதியின் வழியாக வந்து புதிய மாளிகையின் வாசலில் வண்டி நின்றது. செட்டியார் இறங்கி உள்ளே சென்றார். சிறிது நேரத்தில் ஆவணி மூல வீதியில் உள்ள தனது வீட்டிற்குப் புறப்பட்டுவிடுவார் என நினைத்த வண்டிக்காரன் குதிரையை

அவிழ்த்துவிடாமல் வைத்திருந்தான். ‘காலையில்தான் போகணும், குதிரைக்கு தண்ணி காட்டி கட்டு’ என செட்டியாரின் குரல் வீட்டிற்குள் இருந்து வந்தது. செட்டியாரோடு வண்டியில் வந்த மற்ற இருவரும் விடைபெற்றுப் போய்விட்டனர்.

வீட்டின் வலது ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு, குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு வீட்டின் பின்புறமிருந்த கொட்டடியில் கட்டப்போனான். அங்கே ஏற்கனவே ஒரு கூண்டுவண்டி நின்று கொண்டிருந்தது. அது யார் வண்டியென யோசித்தவாறே குதிரை யைப் பிடித்துக்கொண்டு அந்த வண்டியை நோக்கி நடந்தான். ‘என்னப்பா இப்படி பாத்துக்கிட்டு வர்ற? வண்டி புதுசு. இப்பத்தான் வாங்கினோம், அதனாலதான் செட்டியாருக்கு காட்டிட்டுப் போகலாம்னு நானும், மகள் குஞ்சரமும் வந்திருக்கோம்‘ எனச் சொல்லிக்கொண்டே வண்டிக்குள் இருந்த ஒரு சிறு வெள்ளிப் பெட்டியை கையில் எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் அவள் போனாள்.

**ப**றவைகளின் கீச்சொலி மதுரையை எழுப்பியது. இருளின் திரையை மெல்ல விலக்கி எட்டிப் பார்த்தது அதிகாலை. நாய் இடையிடையே குரைத்ததால் சரியாகத் தூங்கமுடியவில்லை என்ற எரிச்சலோடு வண்டியோட்டி எழுந்து உட்கார்ந்தான். கைகளைத் தூக்கி முறுக்குவிட்டவாறு பார்த்தான். எதிரில், குதிரை சுட்டப்பட்ட இடத்தில் எதுவுமில்லை. அதிர்ந்துபோய் சட்டென எழுந்து அங்குமிங்கும் ஓடித்தேடினான். வலது ஓரம் நிறுத்தப்பட்டிருந்த வண்டியும் வீட்டில் இல்லையென்பதை குதிரையைத் தேடி இரண்டு முறை வீட்டைச் சுற்றிய பின்புதான் அவனால் கவனிக்க முடிந்தது. அவன் போட்ட கூச்சலால் தூக்கம் கலைந்த ஆதிமூலஞ் செட்டியார் மாடியிலிருந்து கீழே இறங்கிவந்தார். நடந்ததை அவரால் நம்பமுடியவில்லை. அதிர்ச்சியோடு வாசல் படியிலேயே உட்கார்ந்தார். சிறிது நேரத்தில் செய்தி பரவியது. ஆதிமூலஞ்செட்டியார் வீட்டில் களவென்றால் கேட்கக் கேட்க பலருக்கு இனிக்கும் செய்தியல்லவா! எனவே நகரெங்கும் வேகமாகப் பரவியது. அதிகாலையில் வெளியேறிப் போன இரண்டு தாசிகளும் விசாரிக்கப்பட்டனர். வெளிவீதிக்கு காவல் இருந்த சிப்பாய் ஒருவன் கடைசியில் வந்து சொன்னான். ‘அதிகாலையில் விடிவதற்கு சிறிது நேரத்திற்கு முன்புதான் உங்கள் குதிரை வண்டி வெளிவீதியில் வந்து கிழக்கே திரும்பிப் போனது. சட்டையில்லாத ஒருவன் வண்டியை ஓட்டிச்சென்றான். உள்ளே ஒரு ஆள் இருந்தான். நீங்கள்தான் அதிகாலையிலேயே புறப்பட்டு எங்கோ போகிறீர்கள் என நினைத்து விட்டேன்’ என்றான்.

வெட்க உணர்வால் ஒடிந்துபோய் வீட்டிற்கு வந்த செட்டியார், ஆவணி மூல வீதியின் காவல்காரன் கருத்தையனை அழைத்துப் பேசினார். தனது காவல் பகுதிக்கு வெளியே நிகழும் எந்தக் களவையும் தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு தனக் கில்லையென செட்டியாரிடம் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தான். நீண்ட காலம் தனது குடும்பத்தினர் பயன்படுத்திய, தனக்கு மிகவும் பிடித்தமான அந்த வண்டியை எப்படியாவது கண்டுபிடித்து விடவேண்டும் என விருப்பப்பட்ட செட்டியார் கருத்தையனிடம் கூலி பேசி வண்டியைப் பற்றி அறிந்துவரச் சொன்னார்.

இரண்டு நாட்களுக்குப் பின் கருத்தையன் தகவல் சொன்னான். கிழக்கேயொரு மறவர் கிராமத்தில் வண்டியை எடுத்துச் சென்றவனை பார்த்துப் பேசியதாகவும், குதிரையை சாயுபு ஒருவருக்கு நல்ல விலைக்கு விற்று விட்டதாகவும் வீட்டு விறகுக்காக வண்டியை அடித்து நொறுக்கி விறகுக் கட்டையாகக் குவித்து வைத்திருப்பதை அவன் காட்டியதாகவும் சொன்னவன் வண்டியின் அச்சாணி இரண்டை ஆதாரமாக எடுத்து வந்து செட்டியாரிடம் கொடுத்தான். நல்லமுத்து செட்டி அதனை வாங்கி உள்ளங்கையில் வைத்து புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

*

# 54

**மழைக்காலத்து இரவு, அதற்கேயுரிய குளிரையும். ஈரத்தையும்** போர்த்தியிருந்தது. அந்த பெரிய மாளிகையில் அங்கொன்றும். இங்கொன்றுமாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. மாளிகையின் பின்புறம் இருளின் பிடிக்குள் திரண்டு கிடந்தது. குதிரை லாயத்தில் மட்டும் இரண்டு விளக்குகள் எரிந்தன. சிப்பாய்கள் முன்புறம் காவலுக்கு இருப்பது விளக்கொளியில் தெரிந்தது.

சுற்றுச் சுவரின் மேல் ஏறி எல்லாவற்றையும் கணித்தவர்கள் மரக்கிளை ஒன்றைப் பிடித்தபடி உள்ளே இறங்கினர். செதுக்கப்பட்டிருந்த புல் தரையின் ஈரம் ஓசையற்று நடப்பவர்களுக்கு இன்னும் சௌகரியத்தைக் கொடுத்தது. இருள் மடிப்புகளைத் திரை விலக்குவதைப் போல விலக்கி பின்புறச்சுவர் அருகில் மாயாண்டியும், தெத்தனும், சடப்புலியும், சின்னக் கருப்புவும் வந்து நின்றார்கள். இந்தக் கொத்தின் நிலையாள் மாயாண்டிதான். களவை மந்திரம் போல நிகழ்த்தவல்லது மாயாண்டி கொத்து. எத்தனை ஆள் எவ்வளவு முழிப்புடன் இருந்தாலும் தூக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால் தூக்கித்தான் ஆவார்கள். களவுக்கு புத்திதான் முக்கியம் என்பதை முறுக்கேறிய இளமையிலேயே கண்டடைந்தவன் மாயாண்டி. அதனால்தான் உடல் நறுங்கி இருக்கும் சடப்புலியை அவன் முன்னத்தி ஆளாகப் பயன்படுத்துவான். தெத்தனின் மகாகெட்டிக்காரத்தனம் மாயாண்டிக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அவனைப் பின்னால்தான் அனுப்புவான். எவனை எங்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதில்தான் நிலையாளின் சமயோசிதம் இருக்கிறது. மாயாண்டி கொத்து பேரும் புகழும் அடைந்ததற்கு அந்த புத்திதான் காரணம். இருட்டில் அவன் பார்வை பூனையை விடக் கூர்மையானது. அதனால்தான் மற்ற யாரும் பார்ப்பதற்கு முன்பே, சுற்றுச் சுவரை விட்டு இறங்கும்போதே, குறியிடப்பட்ட கல்லைப் பார்த்து விட்டான். துப்பாளி அம்புக்குறி போட்டு வைத்துவிட்டுப்போகிற கோடு களவுக்கு வருகிறவர்களை விரல் மடக்கி இரவெல்லாம் அழைத்தபடி இருக்கும்.

அதன் அழைப்பை ஏற்றுதான் நால்வரும் வந்து நின்றனர்.

பெரிய வேம்பு அந்த இடம் முழுவதும் படர்ந்து நின்றது. கிளைகள் மாளிகையின் மேற்சுவரை உரசியபடி இருந்தன. மரத்தோடு ஒட்டியபடி இருந்த மாயாண்டி சமிக்ஞை கொடுத்ததும், தெத்தனும் சின்னக் கருப்புவும் கன்னம் போட ஆரம்பித்தனர். இரண்டு பக்கமும் கூர்மையுடன் இருந்த கன்னக் கோல்கள் சுண்ணாம்புக் காரையைக் கரகரவென அரித்துத்தள்ளின. அணில் மரப்பட்டையைக் கடித்து உதிர்ப்பதைப் போன்ற ஓசை கன்னக்கோலில் இருந்து வெளிவந்தபடி இருந்தது. வேம்பின் மேல் இருந்த ஆந்தை அந்தச் செயல் பிடிக்காமல் சப்தம் எழுப்பியபடி பறந்துபோனது. ஆந்தையின் குரலுக்கு அர்த்தம் தெரிந்தவர்கள் இந்தக் காரியத்தை செய்துகொண்டிருந்தவர்கள் மட்டும்தான். மரத்தோடு ஒட்டி நின்ற மாயாண்டி நிமிர்ந்து ஆந்தையைப் பார்த்தான். அது கிழக்காகப் பறந்து போனது. மேகங்கள் திரண்டு இருந்ததால் வெள்ளியைப் பார்த்துப் பொழுதறிய முடியவில்லை. உறுமிக் கொண்டிருந்த வானத்தில், தொலைவில் மின்னல் வெட்டி இடி இடித்தது. சிறு சமிக்ஞை கொடுத்தான் மாயாண்டி. ‘வேகமா கல்லை உருவு’ என்று அர்த்தம். மழை வருவதற்குள் கன்னம் போட்டு உள்ளே போக வேண்டும். நனைந்தபின் போவது சிரமம். மழைக்காற்று வேலையைத் துரிதமாக்கியது. சின்னக் கருப்பு நெஞ்சோடு தாங்கி கல்லை உருவிக் கீழே வைத்தான்.

தெத்தன் கொண்டுவந்த கம்பின் முனையில் தலைப்பாகைத் துணியை எடுத்துக்கட்டி ‘மொண்டிக்கம்பை’ கன்னம் போட்டு ஓட்டைக்குள்ளே விட்டான். சிறிது இடைவெளியில் இரண்டு முறை உள்ளே விட்டு எடுத்தான். அதன் பின் சடப்புலி உள்ளே போனான். வழக்கமாக கன்னம் போட்டுப் போகிறவன் உள்ளே போனவுடன் சத்தமில்லாமல் வீட்டின் முன்புறக் கதவைத் திறந்து விடுவான். வந்ததில் மற்றொருவன் கதவின் வழியே உள்ளே போவான். மீதமிருப்பவர்கள் கதவையொட்டி கம்போடு வெளியில் நின்று கொள்வார்கள். யாரும் வருகிறார்களா எனப் பார்ப்பதற்கும், உள்ளே களவு குலைந்து விட்டால், எடுத்த பொருளை வாங்கிக்கொண்டு முன்னால் ஓடுவதற்கும் தயாராக அவர்கள் நிற்பார்கள். ஆனால், இந்த மாளிகையில் அப்படிச் செய்யமுடியாது. முன்புற வாசல்கதவைத் திறப்பதற்கு முன் மாளிகைக்குள் பல கதவுகளைத் திறக்க வேண்டியிருக்கும். அதுமட்டுமல்ல, முன்புறம்தான் காவல் காக்கும் சிப்பாய்கள் நிறைய இருக்கின்றனர். அதையெல்லாம் யோசித்துத்தான் அவர்கள் வந்திருந்தனர்.

சடப்புலி உள்ளே போனதும் அறை முழுவதையும் பார்த்தான். அவனுக்கான ஒளியில் அறை இருந்தது. நிறையப் பெட்டிகள் சுவரோரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மெல்ல கதவின் பக்கம்போய் உள்பக்கமாக தாழ்பாளைப் போட்டு பூட்டினான். அவ்வளவு பெரிய தாழ்பாள் ஓசையின்றி அவன் சொல் கேட்டு நகர்ந்து காடிக்குள் சொருகியது. இனி பங்களாவிற்குள் யார் நினைத்தாலும் சடப்புலியை நெருங்க முடியாது. ஒவ்வொரு பெட்டியாகத் திறந்து உள்ளே இருப்பதைப் பார்த்தான். நிறையத் துணிமணிகள் இருந்தன.

இருளின் ஒளியில் துணிகள் மின்னின. அதைத் தவிர மற்றவற்றையும் தேடினான். வெளியில் இருந்து மாயாண்டியின் சமிக்ஞை வந்தது. தேர்வு செய்த பெட்டியை கன்னம் போட்ட துவாரம் நோக்கித் தள்ளினான்.

சத்தமில்லாமல் அது கன்னவாசலில் இருந்து வெளியேறி வந்தது. சடப்புலி கைகள் இரண்டையும் வெளியில் நீட்டி மேலும் கீழுமாக அசைத்தான். அதைப்பிடித்து இழுத்து அவனை வெளிக்கொண்டு வந்தான் தெத்தன். தூறல் விழ ஆரம்பித்தது. தெத்தன் பெட்டியைத் தூக்கித் தலையில் வைத்தான். மழையின் சத்தம் ஏகத்துக்கு கேட்க ஆரம்பித்தது, சாவகாசமாக நடந்து சுற்றுச் சுவரைத் தாண்டி நால்வரும் வெளியேறினர்.

**க**லெக்டரின் மாளிகை மறுநாள் காலை பரபரப்போடு எழுந்தது. நெடிய படிக்கட்டுகளில் அங்குமிங்குமாக காவலர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். சுற்றுச் சுவருக்கு வெளியே அடர்ந்து கிடந்த புதருக்குள் ஆளுக்கு ஒருபக்கமாகப் போய்த் தேடினர். கலெக்டர் லெவிஞ்சின் முகத்தில் ஆத்திரம் கொப்பளித்திருந்தது. கண்கள் சிவக்க கோபத்தால் சூடேறி படபடத்தவாறு திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். மாளிகையில் வேலைபார்த்த அனைவரும் அரண்டு போய் இருந்தனர். கன்னம் போடப்பட்ட இடத்தில் நின்று அந்த ஓட்டையை நெடுநேரம் பார்த்துக்கொண்டே இருந்தார். அவரிடம் கிட்ட நெருங்கிப் பேசி சமாதானப்படுத்த யாரும் முன்வரவில்லை. அவமானத்தால் நிலை குலைந்து போன லெவிஞ்ச் மாளிகையின் ஒவ்வொரு அறையாக அலைக்கழிக்கப்பட்டவாறே இருந்தார். மைய மண்டபத்தின் சோபாவில் கண்கலங்கிய நிலையில் உட்கார்ந்திருந்த அவரின் மனைவி நெடுநேரமாக எழுந்திருக்கவேயில்லை. லெவிஞ்ச் அவளிடம் கெஞ்சிப் பேசி சமாதானப்படுத்த முயற்சித்தார்.

விஷயம் வண்ணான் துறை வழியாக ஆற்றைக் கடந்து நகருக்குள் பரவியது. ‘கலெக்டரின் இரும்புப் பெட்டிகள் முழுவதும் நேற்றிரவு திருடப்பட்டு விட்டன. அதில் தனது பதக்கம், விலை உயர்ந்த நகைகள், ஆடைகளையெல்லாம் அவர் வைத்திருந்தாராம்‘ என முதலிலே ஒருவன் சொல்ல பின் நேரம் ஆக ஆக இரும்புப் பெட்டிக்குள் இருந்த பொருட்களின் பட்டியலை நீட்டியவாறே செய்தி பரவியது. வெளிவீதி மக்களுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. மாற்று ஆடையில்லாமல் கலெக்டர் முழித்துக்கொண்டிருப்பதாக மண்டபத்தில் உட்கார்ந்து கேலி பேசி மகிழ்ந்தார்கள். கன்னம் போட்டவனின் துணிச்சல் குறித்து பலரும் வியந்தனர். இரவு குடிக்காவலர்கள் வந்தால் இந்தச் செயலை செய்தவர்கள் யாரென விசாரித்து துப்பு தெரிந்துகொள்ள முடியுமென்று ஆவலோடு இரவை எதிர்பார்த்து சில செல்வந்தர்கள் இருந்தனர். ஆனால், காவக்காரர்களின் வாயில் இருந்து இச்செய்தியைத் தெரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

அன்று மாலை கலெக்டர் அனுப்பிய ஆள் நகரின் முக்கியஸ்தர்களை சந்தித்தான். ‘இனி வெளி வீதிகளில் இரவு காவலுக்கு சிப்பாய்கள் யாரும் வரமாட்டார்கள். கலெக்டரின் மாளிகை, வெடிமருந்துக் கிடங்கு போன்றவற்றிற்கான பாதுகாப்புப் பணியில் அவர்கள் அனைவரும் ஈடுபடுத்தபட்டுள்ளனர். எனவே, வெளிவீதிகளின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை நீங்களே செய்து கொள்ளுங்கள்’ எனச் சொல்லிவிட்டுச் சென்றான்.

செய்தி அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. வழக்கம் போல் காவலுக்கு வரும் ஒன்றிரண்டு சிப்பாய்கள் கூட அன்று வரப்போவதில்லை எனத்

தெரிந்த வெளி வீதி மக்கள் யாரும் அன்றிரவு தூங்கவில்லை. வீட்டுத் திண்ணைகளிலும், மரத்தடியிலும் விழிப்போடும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

‘அவனவனுக்கு வந்தால்தான் வலி தெரியும்‘ என்றான் ஒருவன்.

‘அவன் பொண்டாட்டி அழுதுதான் நமக்கு விமோசனம் பொறக்கணும்னு விதி இருந்திருக்கு’ என்றான் இன்னொருவன். இந்த முடிவை முன்பே எடுத்திருந்தால் எவ்வளவோ பொருள்களைக் களவில் இருந்து காப்பாற்றியிருக்க முடியும் என்ற ஆதங்கத்தோடு பேச்சு சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தது.

நள்ளிரவுக்குப்பின் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்த கருத்தையனிடம் ஆதிமூலஞ் செட்டியார் விசயத்தைக் கேட்டார். அந்த களவு பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று கருத்தையன் மறுத்து விட்டான். உனக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பேயில்லை என விடாமல் அழுத்திக்கேட்டார். செட்டியாருடன் இருக்கும் நெருக்கத்தின் காரணமாக தனக்குத் தெரிந்த செய்தியை சிறிது தயக்கத்தோடு சொன்னான் கருத்தையன். ‘அந்தக் காரியத்தை செய்தது தாதனூர்காரெங்கதான். அது கலெக்டர் வீடுன்றதுக்காக செய்யல. கலெக்டருன்னா யாருன்னு கூடதெரியாது. கன்னம் போட ஏத்த வீடுன்றதுக்காக செஞ்சிருக்காங்க’ என்று சொன்னவன். ‘வடக்கு நாட்டுக் கோட்ட செட்டிமார்க்கிட்ட பொருள செமிக்க கொண்டுபோயிட்டாங்க’ என்ற செய்தியையும் சேர்த்தே சொன்னான்.

**ம**றுநாள் காலையில் புதுமண்டபத்தில் நகரின் முக்கியஸ்தர்களின் கூட்டம் நடைபெற்றது. வெளிவீதிகளின் காவல் பொறுப்புக்களை யாருக்குக் கொடுப்பது என கலந்து பேசினார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவித்தனர். கடைசியில் குடும்பத்துக்கு மாதம் ஒரு அணா காவல் கூலி கொடுப்பது என்பது மட்டும் நிச்சயிக்கப்பட்டது. யார் யார் எந்தெந்தத் தெருக் காவல் என்பதை தாதனூர்க்காரர்கள் கலந்து பேசி நமக்கு வந்து தெரிவிக்கட்டும் என முடிவெடுக்கப்பட்டது. அமணமலை கருப்பு கோயில் ஆலமரத்தின் கீழ் எடுத்த முடிவை மறுநாள் புது மண்டபத்திற்கு வந்து ஊர் பெரியாம்பள ஆண்டி கூறினார். ‘மேற்கு வெளி வீதியையும், வடக்கு வெளி வீதியின் சிம்மக்கல் பகுதி வரையிலும் மாயாண்டி காவல் காத்துக் கொள்வது. கிழக்கு வெளி வீதி மசூதி கோயில் வரை சின்னக் கருப்பு காவல். வடக்கு வெளி வீதியின் உள்தெருக்கள் முழுவதும் ஆமையன் காவல். தெற்கு வெளி வீதியை சடப்புலி காவல் காத்துக் கொள்வது... என வரிசையாக காவல் பெயர்களையும், காவல் பகுதிகளையும் அவர் தெரிவித்தார்.

அன்றிலிருந்து வெளிவீதிகளைத் தாதனூர்க்காரர்கள் காவல் காக்கத் துவங்கினர். மாயாண்டி பகலில் கருப்புக் கோயிலிலும், இரவில் ராமாயணச் சாவடியிலும் உட்கார்ந்து கதை சொல்லத் துவங்கினார். வெளிவீதி மக்கள் நிம்மதியாகத் தூங்கினர். மாடுகள் கொட்டத்தில் கட்டப்பட்டவாறே அசைபோட்டுக் கொண்டிருந்தன. தெரு விளக்கில் எண்ணெய் தீர்ந்து விடுமோ என்ற கவலை யாருக்குமில்லை. ‘அடிச்சு எடுப்போம்‘ என நுழைந்து பார்க்கும் துணிகரக் களவுக்கு எதிரான முரட்டுக் காவல் ஒவ்வொரு இரவிலும் நிலைபெற்றது. சிப்பாய்கள் கலெக்டர்

மாளிகையிலும், வெடிமருந்துக் கிடங்கிலும் காவல் நின்றனர்.

*

பாகம் இரண்டு

# குடிமக்கள்

**மதுரைக் கோட்டையின் வரைபடம் (18-ம் நூற்றாண்டு)**


North

## மதுரை நகரின் வரைபடம் (19-ம் நூற்றாண்டு)


மதுரை
பழைய நகர மையப் பகுதி
பிரதான தெருக்கள் மட்டும் காட்டப்பட்டுள்ளன
0 மைல்கள் 1/4
0 கி.மீ. 1/4
தமிழ்நாடு
0 மைல்கள் 150
0 கி.மீ. 150
வடக்கு வெளி வீதி
தெற்கு சித்திரை வீதி
தெற்கு ஆவணி மூல வீதி
கூடல் அழகர் கோயில்
தெற்கு வெளி

# இருளெனும் கருநாகம்

# 55

## ராமஜெயம்

**மதுராபுரி தளத்துக்கு கர்த்தாராகிய திருமலை நாயக்கரவர்கள்** பெத்தபிள்ளை பின்னதேவனுக்கு எழுதிக்கொடுத்த பட்டயம். செய்யா வருஷம் பங்குனி மாதம் 21ஆம் தேதி சோமவாரத்தில் நாடு எட்டு வர்னிதத்துக்கும், கம்பளி அதிகாரமும், புடி செம்பும் பட்டயமும், மொதமையும், பாதக்கொறடும் காளாஞ்சி ஆக இவ்வளவும் திருமலை பின்னத்தேவனுக்குப் பட்டங்கட்டி வைத்து மேற்படியானுக்கு வருமானம் சாதியார் நாட்டில் வந்து கம்பளி போடுகிறபோது பாதகாணிக்கை பொன் வைத்து கண்டுகொள்கிறது. இரண்டாவது சுந்தத்தேவன், மூன்றாவது ஒச்சாத்தேவன், மேற்படி திருமலை பின்னத்தேவனுக்கு பெண்குழந்தை பிறந்தால் திருமலை பின்னியக்காள் என்று பெயர் வைத்து தங்கப்பதக்கமும் போட்டு வீரமடையான் செயிக்கும் கிழக்கு கணக்கன் மானியமாகவும், பாக்கு வெத்திலைச் சிலவுக்கு உச்சப்படி, தருமத்துப்பட்டி இரண்டு கிராமங்களும் விட்டுக்கொடுத்து பதினெட்டுப் பட்டி கோனார்கள் ஆடி, தீபாவளி, சங்கராந்திக்கு பொங்கிலிட, நாயக்கமார்கள் பால் கொடம், நெய்க்கொடம் கொண்டுவந்து கண்டுகொள்ளவும் இந்தப்படிக்கு இராஜமணி மகாராஜா ஸ்ரீ திருமலை நாயக்கர் அவர்கள் ஒப்பம், சாட்சி சிவகங்கை ராஜா, தொண்டைமான் புதுக்கோட்டை சிவத்தம்பி, பாப்பாபட்டி கொன்றிமாயத்தேவன். தாமிரப்பட்டயம் செய்தவன் மாணிக்கம் ஆசாரி மகன் சொக்கலிங்கம் ஆசாரி. இந்தப் பட்டயத்தை பின்னோர்கள் அடி அழிவு செய்தால் பிராமணனைக் கொன்ற தோஷத்திலும் அடைந்துபோவார்கள் ஆகவும், வேணும் சொக்கலிங்க மீனாஷி துணை. மூணுசாமி துணை.

திருமலை மன்னன் பின்னத்தேவனுக்கு செம்புப்பட்டயம் கொடுத்து, வெற்றிலைபாக்குச் செலவுக்கு இரண்டு கிராமங்களைக் கொடுத்து, கும்பிடுவதற்கு மதுரைக்காளி, குருவாச்சியம்மாள் என்கிற இரண்டு தெய்வங்களை வழங்கி வருடத்திற்கு 60 பொன் முடிப்பையும் கொடுத்து

அனுப்பினான். அவன் அவ்வாறு அனுப்பக் காரணமான கதையைத்தான் ஆண்டாயிக் கிழவி சொல்ல ஆரம்பித்தாள்.

அவள் ரத்த ஓட்டமெல்லாம் கதையாகத்தான் இருந்தது. அவள் மட்டுமல்ல, தாதனூரில் உள்ள எல்லோரையும் கதை நாளங்கள்தான் பாலூட்டி வளர்த்தன. கதையும் உயிரும் வேறல்ல. அதைப்பற்றித்தான் தாதனூரின் கதைகளெல்லாம் கூறுகிறது.

திருமலை மன்னன் மதுரையில் மாபெரும் அரண்மனையைக் கட்டியெழுப்பினான். பகைவர்கள் யாராலும் நெருங்க முடியாத கோட்டைக்குள் இருக்கும் பிரம்மாண்ட அரண்மனை என்ற வியப்பு நாட்டு மக்களிடையே பரவியது.

நாகமலையின் கரடுப்பக்கம் உடும்பொன்றைப் பிடித்துவந்த பெரியகழுவன்தான் முதலிலே அதைச் செயல்படுத்தினான். காரிருள் அப்பிக்கிடந்த நள்ளிரவில் உடும்பை வீசி எறிந்து அரண்மனைச் சுவர்மேல் ஏறினான். ஓசையை விழுங்கிய பாத அடிகள் அரண்மனையின் மாடங்களில் ஏறிச்சென்றன. விதானத்தில் கன்னமிட்டு இறங்கி ராஜமுத்திரைகள் இரண்டை எடுத்து ஊர் திரும்பினான்.

கோட்டையின் காவல் அரண் முழுவதையும் கவர்ந்து எடுத்துச்சென்றவனை மிகச்சாதாரணமாக அழைத்து வந்து அரசனுக்கு முன்னால் நிறுத்தினான் பின்னத்தேவன்.

களவின் அசாத்திய சாதுர்யத்தைக் கேட்டு வியந்த மன்னனின் செங்கோலில் இருந்து கட்டளைகள் பிறந்தன. ‘காவலை மீறி ராஜமுத்திரையை எடுத்த கழுவனுக்கு இந்த நிறைந்த சபையின் முன் மூன்று சவுக்கடி கொடு, இவ்வளவு பெரிய காவலை மீறி ராஜமுத்திரையை எடுத்த கழுவனுக்கு மாநகர் மதுரையின் காவல் உரிமையைக் கொடு. அழைத்துவந்த பின்னத்தேவனுக்கு கள்ளநாட்டில் நீதி பரிபாலனம் செய்யும் உரிமையைக் கொடு.’ காலங்களினூடாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது பேரரசின் அறிவிப்பு.

சவுக்கடியை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்ட கழுவன் மன்னனிடம் ஒரு விநோதக் கோரிக்கை வைத்தான். ‘சித்திரசபை விதானத்தில் நான் இறங்கிய கன்னவாசலை அடைக்காமல் அப்படியே விட்டுவிட வேண்டும்.’ சிரித்துவிட்ட திருமலை மன்னன் சம்மதித்தான்.

இது வெறும் கதையல்ல, இதுதான் ஊரின் உயிர். கதை அறுந்து போனால் ஊர் அறுந்துபோகும். ஊரும், கதையும் வேறல்ல, கதையும் உயிரும் வேறல்ல. ஆதலால், கதையே உயிரென்றானது. கதை மண்ணில் இருந்து முளைக்கிறது. மண்ணைப் பற்றியே பேசுகிறது. இந்த மண்ணின் தலைவிளைச்சல் கதைதான். மண்ணும், கதையும் பிரிக்கமுடியாத உருவாகக்கொண்ட கருவில் பிறந்தவர்கள்தான் தாதனூர்க்காரர்கள்.

ஆண்டாயிக் கிழவி ஆலமரத்தடியில் அமர்ந்து இரவெல்லாம் கதை சொன்னாள், விழுதுகள் கதை கேட்டுத் தூளியாடின. ஆணும், பெண்ணும் விடியும் வரை அமர்ந்து கதை கேட்டனர். எத்தனையோ முறை கேட்டகதைதான், தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டுவரும் கதைதான். ஆனாலும், ஒவ்வொரு முறை சொல்லும்பொழுதும் அது மெருகேறி உயிர் கொள்ளும். எழுதப்படாத வார்த்தைகளின் வழியே

நீந்திவரும் கதைகள் தன் இயல்போடு பாய்ந்துவரும். இரவின் பெருவெளியெல்லாம் கதைகளால் நிறைத்தவர்கள் கதை முடிந்து பொழுது விடிந்ததும் வல்லாங்கனுக்கு முடியிறக்கத் துவங்கினார்கள்.

*

**ம**துரையின் மேற்குக் கோபுரவாசலுக்கு நான்கு கல் மேற்கே, நாகமலைக்கு தெற்கே, குண்டாற்றிக்கு வடக்கே, தொட்டப்ப நாயக்கனூருக்கு கிழக்கே உள்ளதுதான் கள்ளநாடு. அது எட்டு நாடாகவும் எண்ணற்ற உபகிராமமாகவும் இருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் தாதனூர்.

ஊர் அமணமலையின் அடிவாரம் நடைதூரம் தள்ளிக்கிடக்கிறது. பதுங்கி நிற்கும் வேட்டை நாயைப் போல முன்பக்கம் பாறைகள் சரிந்து, குதிங்காலை பூமிக்குள் நுழைத்து, முகம் தூக்கி மூன்று மைல் தொலைவையும் ஒரே தாவில் தாவி மதுரைக்குள் நுழைந்துவிடுவது போலத் தயார் நிலையில் இருக்கிறது அமணமலை. செம்பாறைகள் பொறுமிநிற்கும் அந்தக் கல்மலையின் உச்சியில்தான் பேச்சிப்பள்ளம் உள்ளது. சமணர்கள் பாறைகளின் மர்மமுடிச்சுகளை அவிழ்த்த இடங்களில் இதுவும் ஒன்று. சுனை நீர் வற்றாமல் கசிந்து கொண்டிருக்கும் அந்தப் பள்ளத்தின் மேல்பகுதியில் பாறையில் பாகுபலி, பார்சுவநாதர், முக்குடைநாதர் என தீர்த்தங்கரர்களின் பல திருவுருவங்கள்! அவர்களே நீருக்குள் நிழலாகி மேல் நோக்கிப் பார்த்தவண்ணமும் இருப்பார்கள். அங்கு நிற்கும் அரசமரம் வெளியைத் துழாவி காற்றின் ஈரத்தை சுவாசித்த படி இருக்கும்.

மலையின் கீழ்தான் கருப்பு நிற்கிறான். அவன்தான் மலையையும் மக்களையும் காக்கிறவன். காவலுக்கும், களவுக்கும் துணை நிற்பவன். அவனைச் சுற்றி நிலமெல்லாம் பரந்துகிடக்கிறது ஆலமரம். அது மரமல்ல. ஊரின் மூதாய் சடச்சி. அவள்தான் ஊரை உருவாக்கியவள். அவள் மடியில் அமர்ந்துதான் அவள் பிள்ளைகள் இன்று இருநூறு குடும்பங்களாகப் பெருகி தாதனூரென நிலை கொண்டிருக்கின்றனர்.

அமணமலை முதல் மேற்கு நாடு முழுவதும் சிறிதும் பெரிதுமான எண்ணற்ற குன்றுகள் நிற்கின்றன. இந்த மலைக்குன்றுகள் பலவும் சமணப்பள்ளிகளாக இருந்தன; குகைகளும், சிற்பங்களும், கல்வெட்டுகளும், படுக்கைகளும் நிறைந்தவை. பல நூற்றாண்டுகளாக பாறைகளுக்குள் உறைந்து போயிருக்கும் தீர்த்தங்கரர்களின் புன்னகை வெயிலேறியும் குளுமை கொண்டும் உறைந்து கிடக்கிறது. சமணர்களின் தவத்தின் ஊடே நுழைந்து வீசும் காற்று குன்றுகளுக்கிடையே சுழன்று கொண்டேயிருக்கும்.

**போ**ன வாரம் திடியன் தாமரைக்குளத்தில் நடந்த நாட்டுக் கூட்டத்தில் மேகாட்டுக்கு காவலுக்குப் போக நாட்டுக்க ரெண்டு பேர், உபகிராமத்திற்கு இரண்டு பேரை அனுப்புவதென்று முடிவானது. அதன்படி தாதனூரின் கருத்தையன் மகன் வல்லாங்கனை காவலுக்கும், மொக்கையின் மகன் முத்தணனை நாட்டாண்மைக்கும் அனுப்ப ஒப்புக்கொண்டனர். அதன்படி வல்லாங்கனுக்கு முடியிறக்கத்தான் விடிய விடிய ஆண்டாயிக் கிழவி கதை சொன்னாள். கதை முடிந்து முடியிறக்கியதும் எல்லோரும் கஞ்சி

குடிப்பதற்குத் தயாராகினர். நடுச்சாமத்திற்குப் பிறகு புறப்படுவோம் எனச்சொல்லி பெரியாம்பிளைகளும் கஞ்சி குடிக்க உட்கார்ந்தனர்.

பகல் முடிந்து இரவு கூடியது. மதுரைக் காவலுக்குப் போனவர்கள் போக மீதியிருந்தவர்கள் ஆலமரத்தடியில் அங்குமிங்குமாகப் படுத்துக்கிடந்தனர். ‘ஓடி வந்து தாண்டுனா எட்டு நேக்கா தூரம் தாண்டுவான் கழுவே’ என்று ஆண்டாயிக் கிழவி சொன்னது வல்லாங்கனுக்கு ஞாபகம் வந்துகொண்டேயிருந்தது. பக்கத்தில் படுத்துக்கிடந்த பெரியாம்பிள ஒருவரை எழுப்பி ‘கழுவே, உடும்ப வீசி மேல ஏறினப்பெறகு உடும்ப எப்படி பிடுங்கி எடுத்தான்?’ என்று கேட்டான், அதற்கு பெரியாம்பிள ‘உடும்போட வெதற அமுக்கி அப்படியே மேம்பக்கமா இழுத்தா தோலுரிஞ்ச மாதிரி சுவத்திலிருந்து உரிஞ்சு வந்திரும்டா...’ என்றார்.

காவலுக்காக ஊரைவிட்டுப் போகப் போகிறவனின் இரவை உடும்பின் நீண்டு வளைந்த விரல் நகங்கள் இறுகப்பற்றித் தொங்கிக் கொண்டிருந்தன.

அதே நேரத்தில் ஊர் மந்தையில் முத்தணனைச் சுற்றி மூன்று நான்கு பெருசுகள் உட்கார்ந்து இரவெல்லாம் பேசிக்கொண்டிருந்தன. நாட்டாண்மைத் தொழிலுக்குப் போகப்போகிறவன் தொழிலைப் பற்றியும், வருமானத்தைப் பற்றியும் பெருசுகளிடம் விடாமல் கேட்டபடி இருந்தான். அவர்களும் அவனுக்கு விளக்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தனர்.

‘நம் இனத்தில் ஆண்கள், பெண்கள் ஜாதிபேதம், முறைபேதம் என அழிவு ஏற்படும்பொழுதும், பெண் அழிவு, கூட்டு வர்க்கத்தில் சம்பந்தம் செய்த அழிவு நடந்ததைக் கண்டால் பெரிய தேவர்களுக்கு விண்ணப்பம் மூலம் தெரியப்படுத்த வேண்டும். சொந்தத்தில் நடக்கக் கூடியதையும் நாட்டாண்மைக்காரனுக்கு தெரியப்படுத்தவேண்டும். வயிற்றில் கர்ப்பம் உண்டானால், கன்னி கழியாதவள் முறையுடனிருந்தால் யாரைச் சொல்கிறாளோ அவனைக் கூப்பிட்டு சபையில் விசாரித்து, சரீர சம்பந்தம் செய்தது உண்மைதானானென்று சபையில் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் அவனது அண்ணாக்கயிறை அறுத்து அவளுக்கு சரடு கட்டவேண்டும். மேற்படியானுக்கு அபராதம் விதித்து வசூல் செய்யவேண்டும். அப்படிப்பட்டவன் ஒப்புக்கொள்ளாமல் கட்டாயமாக சரடு கட்டும் பட்சத்தில் அபராதம் விதிக்கக்கூடாது. வயிற்றுப் பிள்ளையை மேற்படியானுக்கு பாத்தியப்படுத்திச் சொல்ல வேண்டும். மேற்படியான தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டால் மேற்படியான் சொத்தைக் கணக்கிட்டு நான்குக்கு இரண்டு அளவுப்படி அபராதம் விதித்து துரும்பு கொடுத்துத் தீர்க்க வேண்டும். பெண்ணானவள் தீர்த்துக்கொள்ளவேண்டும் என சொல்லும்பட்சத்தில் நாலில் ஒரு பாக அளவுப்படி பஞ்சாயத்தார்கள் சொல்லும் அபராதத்தைக் கட்டி துரும்பு கொடுத்து விலகிக்கொள்ள வேண்டும்.

‘நாட்டாண்மைகாரனுக்கு வருமானமென்பது கிராமத்துக் கூட்டத்தில் வழமையான வெத்திலைபாக்குப் போக முதலாவது வெத்திலை பாக்கு கொடுக்கவேண்டியது என்றும், ஆண் பிள்ளை கல்யாணம் செய்தால் எட்டணா கொடுக்கிறதென்றும் பெண்பிள்ளை கல்யாணம் செய்தால் நாலணா கொடுக்கிறதென்றும், பாக்கு வெத்திலை, முதல் மரியாதைகள் தாம்பாளத் தட்டில் வைத்துக்கொடுக்க வேண்டும். கிராமத்தில் ஆணாவது, பெண்ணாவது வீட்டில் கல்யாணம் கூடினால் பெண், மாப்பிள்ளை

இவர்களின் கொடிவரிசை விசாரிக்கவேண்டும்.

‘நாட்டுத்தேவரான பின்னத்தேவன் வகையறா கிராமத்துக்கு வந்தால் கஞ்சி ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு வரி வசூல் செய்து கணக்கோடு அனுப்பி வைக்கவேண்டும். பிராதுகளை மூணுசாமிக்கு பொதுவாக நிதானத்துடன் முடிவு செய்யவேண்டும். யாரொருவர் கட்டுக்கு மீறி அக்கிரமம் செய்கிறாரோ அவர்களை கர்த்தாக்களுடைய கம்பளி வாக்கும், நாடு மூணுசாமி வாக்கும் கேட்கும் எனச்சொல்லி முத்தணன் நாட்டாண்மை பார்க்க வேண்டிய பன்னிரண்டு ஊர் பெயர்களையும் பெருசுகள் சொல்லிக் கொடுத்தனர்.

பொழுது நள்ளிரவைக் கடந்தது. வல்லாங்கனையும், முத்தணனையும் அழைத்துக்கொண்டு பெரியாம்பிளைகள் ஒச்சவும், விருமனும் புறப்பட்டனர். பெரியாத்தா சடச்சி தன் பிள்ளைகள் இருவரையும் மேகாட்டுக்கு அனுப்பிவைத்தாள். அவர்கள் ஆலமரத்தடியைத் தாண்டி வெளியேறினர். ‘ஆனையூர் வண்டிப்பாதையில் நடப்பமாப்பா...?’ என்றான் வல்லாங்கன். ‘மலையடி காட்டுப் பாதையில் நடப்பெயா... குடியானவெ மாதிரி வண்டிப்பாதையில் நடக்கச் சொல்ற’ என்று சத்தம் போட்டபடி முன்னுக்கு நடந்து போனார் பெரியாம்பிள ஒச்சு.

*

# 56

**மதுரை மக்களைக் காலங்காலமாகக் காத்தருளுகின்ற மீனாட்சி** சொக்கநாதரின் இருப்பிடம் தாதனூர் விருமாண்டியின் காவல் எல்லைக்குள் இருக்கிறது. வெளி வீதியில் துவங்கி பொற்றாமரைக் குளத்தில் நீராடும் தேவியின் வைர அட்டில் வரை நகரமே இருளுக்குள் மூழ்கிக் கிடக்கும்பொழுது மூழ்கா பாதடி கொண்டவர்கள் இருளின் மேல் வெளி எங்கும் நடந்து திரிவார்கள். பாத்தி கட்டப்பட்ட நிலத்தில் ஏறிப்பாயும் நீரை வாஞ்சையோடு பார்த்துக்கொண்டிருக்கும் சம்சாரி போல ஒவ்வொரு நாளும் நகரத்தின் மேல் ஊறிப்பரவும் இருளைப் பார்த்திருக்கின்றனர். இருளுக்குள் மூழ்கிக்கிடக்கும் நகரம் கண்ணாடிப் பேழைக்குள் இருக்கும் காட்சிப் பொருளைப் போன்றது. இருளின் வழி பார்க்கப் பழகியவர்களுக்கு துல்லியம் பல மடங்கு வாய்க்கிறது. தாதனூர் தனது இரவை தலைமுறை தலைமுறையாக மதுரையின் வழியேதான் கழிக்கிறது. இரவெங்கும் நகரத்துள் அலைபவர்கள் அதன் மௌனத்தை சதாதோளில் தூக்கியபடியே அலைகின்றனர். பகலில் பார்க்கப்படும் நகரம் கலைக்கப்பட்ட கரையான் புற்றுப் போலத்தான். இரவில்தான் நகரம் வடிவம் கொள்கிறது. கரும்பளிக்குச் சிலையென அது மிதந்துகொண்டிருக்கிறது. ஒற்றைக்கண் ஒளி கொண்டு பார்க்க நினைக்கும் பரிதிக்கு ஒரு போதும் அதன் அழகு பிடிபடுவதேயில்லை. ஒளி மேலிருந்து கீழ் நோக்கித்தான் மண்ணுக்கு வருகிறது. இருள் மட்டும்தான் மண்ணில் இருந்து பரவிப் பெருகும் தாவரம். ஒளியின் கதிர்கள் அகலுகின்ற கணத்தில் அது மண்ணுக்குள் இருந்து முளைத்து வெளிவருகிறது. முளைவிட்டு வெளிவரும் அதன் கொடிகள் பேரழகோடு பற்றிப் படருகின்றன. அதன் பூக்களும், கனிகளும் வெளியெங்கும் அடர்கின்றன.

அவர்களுக்கு இரவும், பகலும் அர்தத்தின் தளத்தில் வேறு வேறானது. அந்தி சாய்கிற பொழுது முழிப்புத் தட்டி எழுகிறவர்கள் கூசுகிற கண்களைக் கசக்கியபடி இரவை நோக்கி நெருங்குகிறார்கள். ஆலமரத்து பறவைகளின் பேரிரைச்சலோடு இரவு அவிழ்கிறது. அவிழும் பொழுது

எல்லாவற்றுக்குள் இருந்தும் இருள் பிரிந்து வெளியை நிரப்புகிறது. இருளால் வெளி நிரம்பிக் கிடக்க அவர்கள் நகரத்தை நோக்கிப் புறப்படுகின்றனர். புறப்படுகிறவர்கள் இரவு துவங்கி நள்ளிரவு வரை புறப்பட்டுப் போனபடியே இருக்கின்றனர்.

தாதனூரின் ஆலமரத்தடியில் இருந்து கலையும் கூட்டம் இருகூறாகவே கலைகிறது. கிழக்குத் திசையில் நகரத்தை நோக்கி நகரும் பாதங்கள் நிதானம் தப்பாமல் இரவெல்லாம் நடந்து நான்மாடக் கூடலின் வீதிகளைச் சுற்றியபடி இருக்கின்றன. மற்றத் திசைகளில் நடக்கும் பாதங்கள் களவின் தன்மைக்கு ஏற்ப குணம் கொண்டு நடக்கின்றன. காவலும், களவும் தாதனூரின் ரெட்டைப் பிள்ளைகள், கஞ்சியை உறுதிப்படுத்த காவலும், காவலை உறுதிப்படுத்த களவும் என்று விதிசெய்துகொண்டார்கள். இரவின் விதிகளுக்கு இரவின் நியாயங்கள்தான் பொருந்தும். அது பகல் மனிதர்களின் நெறிகளுக்கு அப்பாற்பட்டது.

பெரும் குளமென மௌனம் மிதந்து கிடக்கும் இருள் வெளியில் சைகைகளும் சமிக்ஞைகளும்தான் ஊடறுத்துப் பாய்கின்றன. வார்த்தைகள் நீருக்குள் குமிழிபோல உருண்டு வெளியே பிதுங்கிவிடுகின்றன. பாதங்கள் குத்துக்காலில் நடக்கவும், முன்காலில் ஓடவும் பயனாகிறது. களவுக்கு குத்துக்காலும், காவலுக்கு முன்காலும். முழுப்பாதமென்பது இருள் வெளியில் முடவனின் உறுப்பு. ஆலமரத்தடியில் இருந்து நகரத்துக்குள் வரும்வரை சாவகாசமாக நடந்து வருகிற பெருசுகள் மட்டும் பாதத்தை பயன்படுத்துகின்றன. அவர்களின் காவல் கம்புகள் மண்ணில் ஊன்றி எழுகின்றன. இளவட்டங்களின் கால்கள் இருள் அறியா வேகத்தில் போகின்றன. மழைக்காலத்தில் மாடக்குளம் கண்மாயை வலப்புறமாகச் சுற்றி கபாலி மலை, பசுமலையின் பின்புற அடிவாரமாக நடந்து மேற்கு வெளிவீதியின் வழியே மதுரைக்குள் நுழைகின்றனர். கோடை காலமாக இருந்தால் கண்மாயை ஊடறுத்து வெளியேறுகின்றனர்.

ஆதியில் கடம்பவனத்தை அழித்து உருவாக்கிய நகரத்தில் இன்னும் அழியாத வனப்பேச்சியின் வாசனையை இருள் அடுக்குகளில் வழியே துழாவித் திரிகின்றனர். சடச்சியின் பிள்ளைகளுக்கு வனப் பேச்சியின் மைதானமே வாழ்க்கை என்றாகி விட்டது. பகல் மட்டும்தான் இருளற்ற இடம். ஆனால், இருள் ஒளியற்ற இடமல்ல. இந்த சூட்சமத்தை தெரிந்தவர்கள் பின்னப்பட்ட வலையில் சிறுபூச்சி வந்தமரும் அதிர்வை உடனடியாக உள்வாங்கும் சிலந்தியைப் போல பிரிக்கப்பட்ட காவல் தெருக்களின் சலனத்தைத் தன் நரம்புகளோடு பிணைத்துக்கொண்டு கண்டறிகிறார்கள். செல்லத்தம்மன் கோயில் செக்கடியும், ராமாயணச்சாவடியும், மைனா தெப்பக்குளத்து ஆலமரமும்தான் இரவுக் காவலர்கள் நகரத்துக்குள் தங்குமிடம். தங்களின் காவல் வீதிகளில் நள்ளிரவு வரை போய் வந்தவர்கள் ஓய்வு கொள்ளுமிடம் இதுதான். இதுபோக நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணை, மேங்காட்டுப் பொட்டல், ராவுத்தர் சாவடி என கால் நினைத்துப் போகிற இடங்கள் நிறைய உண்டு.

வடக்கு வாசல் செல்லத்தம்மன் கோயிலைச் சுற்றி எண்ணெய்ச் செக்குகள் ஆடும் ஓசைகள். எள் மூடைகளும், கருப்பட்டி மூடைகளும்

குவிந்து கிடந்தன. தும்பை எண்ணெயும், நல்லெண்ணையும் வீதிகளில் பிசுக்கேறி ஊறிக் கிடந்தது. எண்ணெய்ப் பிழிந்து அதன் அடியாழத்தில் நெருப்பு ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. திரவத்திற்குள் தான் நெருப்பின் உரம் இருக்கிறது. கண்ணகியின் சந்நிதியும் இருந்த அந்தச் சிறு கோயில் பிரகாரத்தை சுற்றிக் கிடந்த பெரிய வெளியில்தான் இரவுக் காவலர்கள் தங்கிச் செல்கின்றனர். ராமயணச் சாவடி திருமலை மன்னன் இடையர்களுக்காகக் கட்டிக் கொடுத்தது. அவன் காலத்தில்தான் தெற்கேயிருந்து கோனார்கள் அழைத்து வரப்பட்டு வடக்கு மாசி வீதியில் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்காக கட்டப்பட்டதுதான் ராமாயணச் சாவடி. கோனார்களுக்கும், கள்ளர்களுக்குமான உறவுமுறை அப்பொழுதுதான் தீர்மானமாயிற்று. அந்த உறவுமுறை தரும் உரிமையால் இரவெல்லாம் வம்பளக்கும் கதைகளுக்கு பஞ்சமிருக்காது. சீய்யான்மார்களுக்காக உருவாக்கப்பட்ட கிண்டல்கள் தூண்கள் தோறும் கிடைபோட்டு கிடக்கும்.

நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணை இரண்டிலும் மாறுபட்டது. எல்லாக் காவலர்களும் அங்கு தங்கிவிடுவதில்லை. விவரமான பெருசுகளுக்குத்தான் அங்கு இடம். காவலில் எல்லோரும் விவரமானவர்கள்தான். அவத்த பயலால சாமத்தோட குடித்தனம் நடத்த முடியாது. இது பார்ப்பவர்களுக்குத் தெரியாது. ஏதோ சிலர் தாம் விவரமானவர்கள் என்று நினைத்துக் கொள்வார்கள். நல்லமுத்து செட்டியாரும் அப்படித்தான். பரம்பரையாக நகரின் முதல்பெரும் வணிகக் குடும்பமது. வீட்டுத் திண்ணை இருபது முப்பது பேர் உட்காருவது போல விசாலமானது. நகரின் முக்கியப் பெருசுகள் பலரும் இரவு அங்கு கூடுகின்றனர். சில காவலர்காரர்களும் அங்கு தங்கிச் செல்கின்றனர்.

நடுச்சாமம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆடி மாதத்துக் காத்து ஆவணி வீதியின் வழியே அலை அலையாய் வீசிச் சென்றது. அது ஊளையிடும் ஓசை உள் சந்துகளின் வழியே இரவெல்லாம் கேட்டது. மண்ணை வாரித்தெளித்தபடி அது போனது. பேயாண்டி மேற்கு ஆவணி மூல வீதியில் இருந்து வந்து கிழக்கு முகமாகத் திரும்பினான். அவனை வேகமாக நடக்கச் சொல்லி பின்புறமிருந்தது அது தள்ளியது. காவக்கம்பை கையில் பிடித்தபடி காற்றை சட்டை செய்யாமல் அவன் நடந்து வந்து கொண்டிருந்தான். நாய்களின் குரைப்பொலி இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கேட்டது. எவ்வளவு வேகமாகக் காற்று வீசியும் கலையாத கும்மிருட்டு வீதி முழுவதும் நிரம்பி இருந்தது. மூலைக்கு ஒன்றாய் இருந்த விளக்குகளை வம்ச விரோதி என நினைத்து காற்று மோதிக்கொண்டிருந்தது. கிருஷ்ணன் கோயில் பெரிய தூணுக்கு மேல் கண்ணாடிக்குள் இருந்து கசிந்த ஒளிதான் வீதி முழுவதும் பார்வையில் படும்படி இருந்தது. அந்த விளக்கின் வெளிச்சம் பெரிய தூணுக்குக் கீழே இருக்கும் மண்ணைக் கூடத் தொடவில்லை. நீண்டு கிடக்கும் தூணின் நிழல்போல் அந்த வீதி முழுவதும் இருள் கிடந்தது. கோயிலின் வெளிப் பிரகாரத்தில் இருந்த பெரிய மணியின் நாக்கைப் பலமுள்ள மட்டும் காற்று ஆட்டிப்பார்த்தது. அது விளிம்பைத் தொடாதபடி ஆடிக்கொண்டிருந்தது. பேயாண்டி குறுகுச் சந்துகளை எதிரெதிர் திசைகளில் பார்த்தபடி ஓசையை கணித்து நடந்துகொண்டிருந்தான்.

நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணையில் இருந்து பேச்சு சத்தம்

ஏதும் கேட்கவில்லை. எல்லோரும் தூங்கப் போயிருப்பார்கள் என்று நினைத்தபடி நடந்து வந்தான். சந்துக்குள் படுத்துக் கிடந்த நாய் காலடிச் சத்தம் கேட்டு குரைத்துக்கொண்டு பெரியவீதிக்கு வந்தது. நார் இருக்கை ஒன்றில் சாய்ந்தபடி கண்மூடி இருந்த நல்லமுத்து செட்டியார் நாய் குரைக்கும் சத்தம் கேட்டதும் தூக்கம் கலைத்தார். திண்ணையின் மாடத்தில் சிறுத்து எரிந்துகொண்டிருந்த விளக்கு ஏற்றப்பட்டது. திண்ணை முழுவதும் நிரம்பிய வெளிச்சம் வீதிக்கும் பரவியது. இரண்டொரு பெருசுகள் திண்ணையிலே படுத்திருந்தனர். பேயாண்டி நாயை அமட்டியபடி படிகளில் ஏறி வலது புறத்திண்ணையின் ஓரமாக உட்கார்ந்தான்.

'வெள்ளக்காரன் வீதிய பெருசாக்குனாலும் ஆக்குனான், காத்து வந்து பா...ன்னு அள்ளிக்கிட்டுப் போகுது' என்று தூக்கம் கலையாமல் பேச்சைத் துவக்கிய செட்டியார் 'என்ன உன்னைய நேத்து காணோம்' என்று கேட்டார்.

'நேத்து ஏங் கூடப் பெறந்தவன மே காட்டுக்கு காவலுக்கு அனுப்புச்சு வச்சோம்' என்றான் பேயாண்டி.

'மேக காட்டுல எந்த ஊருக்கு?'

'கம்பத்துக்கு. எந்தம்பிய காவலுக்கும், தெக்குத் தெரு முத்தணனை நாட்டாம பாக்கவும் அனுப்புச்சு வச்சோம், சாமிய ஈமிய கும்பிட்டு ரவைக்கு கெளம்பிப் போனாங்கெ' என்றான்.

பேச்சு கொஞ்ச நேரம் காவல்பற்றி இருந்தது. பின்னர் நகரத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். ஆனால் நல்லமுத்து செட்டிக்கு தூக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. பேயாண்டியிடம் பேச வேண்டும் என்பதற்குத்தான் திண்ணையில் நார் இருக்கையைப் போட்டு உட்கார்ந்திருந்தார். ஆனால், பொழுது நடுநிசி ஆகிவிட்டதால் அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. 'சரி, நாளைக்குப் பேசுவோம்' என்று சொல்லி விட்டு எழுந்து வீட்டிற்குள் போனார். அவர் போனதும் பேயாண்டியும் திண்ணையை விட்டு எழுந்தான். இருளும் காற்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து திருகி அவனை இழுத்துச் சென்றன. நேராக ராமாயணச் சாவடியை நோக்கி நடந்தான்.

காவல் வீதிக்குப் போய் வருவது ஒரு கணக்கு. சித்திரை வீதியைச் சுற்றி வருகிறவனும், வெளி வீதியைச் சுற்றி வருகிறவனும் ஒரு பெரும் கணக்கின் வழியேதான் நடக்கின்றனர். சித்திரை வீதி துவங்கி வெளி வீதி வரை எவனும் தப்பித்து வெளியேறி விடாதபடி காவல் நடை தெருக்களில் பின்னியபடி செல்கிறது.

தனது காவல் எல்லையில் களவு நடந்துவிட்டால் அந்தக் காவல்காரன் நல்ல காவல்காரனாகக் கருதப்பட மாட்டான். எனவே களவைக் கண்டுபிடிக்கத் தீவிரமாக முயற்சி செய்வான். பொதுவாக இதுதான் நாட்டு வழக்கம். ஆனால், மதுரை நகர் காவலைப் பொறுத்தவரை எந்த வீதியில் களவு நடந்தாலும் தாதனூரே ஒன்று திரளும். தாதனூரின் காவலை மீறிக் களவு போவது அசாத்தியம். அந்த அசாத்தியத்தையும் அடுத்த ஜாமத்திற்குள் கண்டறிந்துவிடுவார்கள்.

களவைக் கண்டறிவது தாதனூரைப் பொறுத்தவரை பெரிய வேலையல்ல. கன்னமிடுதல், கொள்ளையடித்தல் போன்றவற்றை

செய்யப்பட்ட முறையை வைத்தும், பொருட்கள் எடுக்கப்பட்ட தன்மையை வைத்தும் யார் இதைச் செய்திருப்பார்கள் என்பதையும், எடுக்கப்பட்ட பொருளை செமிக்கக் கூடியவர்கள் யார் என்பதையும் அடுத்த ஜாமத்திற்குள் அறிந்து கைப்பற்றி விடுவார்கள்.

துப்பாளி இல்லாமல் வந்து போகிற களவுக்காரன் எவ்வளவு திறமையானவனாக இருந்தாலும் தானறியாமலே மச்சத்தை விட்டுச் செல்வான். பந்தல் கொடி அறுபடாமல் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்குபவனும், பிரித்த ஓடுகளை மறுபடியும் அடுக்கி வைத்துவிட்டு போகிறவனும் அவனது செயல்களின் வழியே அகப்பட்டுப் போவான்.

மறவர் சீமையில் இருந்து வருபவர்களின் செயலும், கீழ்நாட்டுக் கள்ளர்களின் செயலும், மேல்நாட்டுக் கள்ளர்களின் செயலும், தாதனூர்காரர்கள் அறிவார்கள். கருவறை அறியாத பிள்ளையின் வாசனையா? எடுக்கப்பட்ட பொருள் மீட்கப்படாமல் போவது மிக மிக அரிது. அப்படிப் போகுமேயானால் அது காவக்கூலி கொடுக்க மறுத்தவரின் வீட்டில் நிகழ்ந்த களவு என்று அர்த்தம்.

மதுரைக்கு வரும் வழியில் பயணிகளிடமும் பாதசாரிகளிடமும் கொள்ளையடித்தல், வியாபாரத்திற்கு வந்துசெல்லும் வண்டிகளை மறித்தல் என மதுரைக்கு வரும் பாதைகளில் கொள்ளையும் வழிப்பறியும் நடக்குமே தவிர, மதுரை குடிக்காவலில் களவு என்பது அறவே இல்லாமல் தாதனூர்க்காரர்கள் காத்து வந்தனர்.

*

# 57

**பாறைகளின் மீது பரவி ஓடும் பச்சை ஆறுபோல அந்த மலையத்** தொடர் கிழக்கில் துவங்கி மேற்கு விளிம்பு வரை போய் மறைந்தது. மலையடிவாரத்தில் கம்பம் எப்பொழுதும் வலைக்குள் தலை நுழைத்துக்கொண்ட ஜீவராசி போலத்தான் பாதுகாப்புக்கும், பாதுகாப்பின்மைக்கும் நடுவில் பாம்பு போல சுருண்டு படுத்துக் கிடக்கும். மலையின் கசிவுகளைக் குடித்தும், சமவெளி நோக்கி இறங்கி வரும் அதன் ரகசியங்களைக் கற்றுக்கொண்டும் இருக்கிறது. ஆனால், மலையின் ரகசியம் அறிதலுக்கு அப்பாற்பட்டது. நீண்டு கிடக்கும் அந்த நிலப்பகுதி தன்னைத் துண்டிக்கப்பட்ட நாக்காவே நினைத்துக் கிடக்கிறது. ஒரு போதும் அதன் மௌனம் கலைவதில்லை. காட்டு விலங்குகள் அதன் மௌனத்தை முகர மூக்குகள் விடைத்தபடி சதா சுவாசித்துக் கொண்டிருந்தன. வெக்கையையும், குளுமையையும் பருவங்கள் தோறும் அது தாங்கிக் கிடக்கிறது. காடு பூத்துக் குலுங்குவதையும், வெயில் தாவரங்களைச் சுட்டெரிப்பதையும் பாறைகள் சலனமின்றிப் பார்த்துக்கொண்டே கிடக்கின்றன. காலம் வழுக்கி ஓடிய தடங்களை வேர்கள் துழாவுகின்றன. மரங்களின் வேர்களுக் கிடையில் சிக்குண்டு கிடக்கும் கரும்பாறை போல் பிரமாண்டமான அமைதிக்குள் கிடக்கிறது அந்த மலைத்தொடர். அந்த மலையடிவாரத்து கிராமத்து மந்தையில் படுத்துக் கிடந்தனர் வல்லாங்கனும், விருமனும். விடிந்ததும் எழுந்து ஊர்ப் பெரியவர்களைப் பார்க்கப் போனார்கள். காலைப் பொழுதில் வயலுக்கும் தோட்டந் தொரவுகளுக்கும் போயிருந்த பெரியவர்கள் வெயில் ஏறிய பிறகுதான் சாவடிக்கு வந்த சேர்ந்தார்கள். ஊர்க் காவலுக்கு புதிய ஆள் மதுரைப் பக்கமிருந்து வந்திருந்த செய்தி முக்கியஸ்தர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

சாவடியின் உள்பீடத்தில் பட்டாபி ஐயரும், சொக்கலிங்கம் பிள்ளையும் உட்கார்ந்திருந்தனர். பக்கத்து திட்டிலும், அதைச் சுற்றிலும் குமாரக் கவுடரும், ஊர் முதன்மைக்காரக் கவுடர்களும் பெரியவர்களும்

அமர்ந்திருந்தனர். சாவடியின் முன் படிக்கட்டுகளில் வல்லாங்கனும் விருமனும் நின்றுகொண்டிருந்தனர்.

பெரியவர் சொக்கலிங்கம் பிள்ளைதான் பேச்சைத் துவக்கினார். இடையிடையே குமாரக் கவுடரும் பேசினார். ‘நமது கிராமம் தோன்றி பலநூறு வருஷமாகப்போகிறது. தோன்றிய நாளிலிருந்து ஆயக்குடி வேடர்கள் தான் ஊர்க்காவலென்று முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்துள்ளனர். அந்தப் படிக்கு அன்றிலிருந்து அவர்கள் நமக்கு நல்ல காவலைக் கொடுத்து வருகின்றனர். ஆனால், இப்பொழுது ஊர் பல்கிப் பெருகிவிட்டது. தோட்டந்தொரவுகள் நிறைய உருவாகிவிட்டன. விவசாய நிலங்களும், ஆடுமாடுகளும் அதிகமாகிவிட்டன. சுத்துப் பட்டியில் புதிய கிராமங்கள் தோன்றிவிட்டதால் யார் தமது கிராமத்துக்கு வந்து போகிறார்கள் என்றே தெரியவில்லை. எனவே, கிராமப் பெரியோர்களின் தீர்மானத்தின் படி, ஏற்கனவே உள்ள வேடனோடு சேர்த்து இப்பொழுது கீழ்நாட்டிலிருந்து வந்திருக்கிற வல்லாங்கனை காவலுக்கு நியமிக்கிறோம்.’

சாவடியின் மேற்குச் சுவர் ஓரமாக இருந்த பெட்டியை சாமி கும்பிட்டுத் திறந்து உள்ளே இருந்த ஓலைச் சுவடிகளை சொக்கலிங்கம் பிள்ளை எடுத்தார். படிக்கும் கட்டையை பெரியவரின் முன்னால் கொண்டுவந்து வைத்தார் ஒருவர். ஏட்டுக்கட்டை அதில் வைத்து மிகக் கவனமாக ஒவ்வொரு ஏடாகப் புரட்டிப்பார்த்தார் பெரியவர். அவர் ஏட்டை மிகக் கவனமாக கையாண்ட விதத்தை சாவடியிலிருந்த பெரியவர்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். இது ஊர் தோன்றிய வரலாற்றையும் ஊர் கட்டுமானத்தையும் கூறுகிற ஏடு என்று புதியவர்களுக்குப் பழையவர்கள் சொல்லிக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஏடாகப் பாரத்துப் பார்த்து முன்பக்கமாகக் கவிழ்ந்து வைத்துக்கொண்டிருந்த பெரியவர் ஒரு ஏட்டைப் பார்த்தவுடன் ‘க்....ம‘ என்று கனைத்துக் கொண்டார். கூட்டம் அமைதியானது. பெரியவர் ஏட்டை உற்றுப் பார்த்து படிக்கத் துவங்கினார்.

கம்பம் கிராமத்திலும் காவல் மகிமை
காவல் புஞ்சை செய் நஞ்சையில்
மாத்தாலொரு கட்டு ஒரு தளுக்கு

ஒரு குருணி முக்கைப் புஞ்சையில்த்
தாரொண்டனுக்கு ஒரு கட்டு ஒரு
குருணி நஞ்சை மேல்ப் புஞ்சைக்கு
மாத்தாள் நாலு மரக்கால்

நஞ்சையில்க் கொடிக்காலுக்கு மாத்தாள்
நில மொண்ணுக்கு மாசமொண்ணுக்கு
மூணு பணமும் நாளொன்றுக்கு வெத்திலை நூறும்

மஞ்சளுக்கு மாத்தால் நிலமொண்ணுக்குப்
பத்து பணம். வாளைக்கு மாத்தாள் நில
மொண்ணுக்கு ஏளு பணம் கரும்புக்கு
மாத்தாள் நிலமொண்ணுக்குப்

பத்தப் பணம் கருப்பட்டிப் பால் ஒரு

கொடம் ஒரு அஞ்சு வெல்லமும்
அன்னியில் காவல் வரி குடிக்கு ரண்டு
பணம் பள்ளுப் பரையில்க்

குடிக்கு ஒரு பணமும் தவசம்
குருணி இந்தப் படிக்கு ஆடித் தேதிக்கு
ஒரு கிடாய் ஒரு பணம்

நெய்யும் கார்த்திகைத் தேதிக்கு ஒரு
கிடாயும் ஒரு பணம் நெய்யும் சங்கி
ருந்திக்கு ஒரு பணம் நெய்யும்
ஒரு பணம் பழமும் ஒரு பணம் தேங்காயும்

இந்தப் படி தேதியும் கண்டு
கொண்டு ஆண்டுகொள்வது-

என்று ஏட்டை படித்துக் காட்டிய பெரியவர் மடித்துக் கட்டி வைத்தார். பெரியோர்கள் வாக்குப்படி இன்றுள்ள கணக்குக்கு ஏற்றாற்போல் மகிமை மரியாதைகள் செய்யப்படும் என்றும், கிராமத்தின் முதல் காவலான ஆயக்குடி வேடர்கள் வகையறாவுக்கு பெரிய காவல் மரியாதையும், இரண்டாம் காவலான வல்லாங்கன் வகையறாவுக்கு சின்னக் காவல் மரியாதையும் தரப்படும் என்றும் வழக்கப்படி உள்ள காவல் கூலிகளை இருவரும் சமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டுமென்றும், பெரிய காவலான விசுங்கன் ஊரின் தெற்குப் பக்கமாக வீடு போட்டிருப்பதால் வல்லாங்கன் ஊரின் வடக்குப் பக்கமாக வீடு போட்டுக்கொள்ள வேண்டுமென்றும் இருவருக்குமான பொது தொம்பரை கிராமத்தின் சார்பில் அமைத்துத் தரப்படுமென்றும், கிராம தெய்வ அருளுடனும், முன்னோர்கள் வாக்குப் படியும் நடந்து காரியமாற்ற வேண்டுமென்றும் சொல்லி முடித்தார் பெரியவர்.

*

**அ**ன்று மாலை தெற்குப் பக்கமிருந்த பனங்காட்டிற்குள் பெரிய காவல் விசுங்கனைப் பார்க்கப் போனார்கள் வல்லாங்கனும் விருமனும். நீண்டு கிடந்த காட்டாற்றின் மேல் பக்கமிருந்த பனங்காட்டின் மையப்பாறை ஒன்றின் மேல் குடிசை போட்டிருந்தான் அவன். பொழுது மங்கிய வேளையில் பனை ஓலைகளின் பலத்த சரசரப்புக்கு இடையே இருவரும் குடிசையை நோக்கிய ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். குடிசையைச் சுற்றிக் கிடந்த நாய்கள் ஆள் நடமாட்டத்தை அறிந்து குரைத்தன. விசுங்கன் சுதாரித்து, பாய்ந்து ஓடிய நாய்களை அமட்டி மடக்கினான். நாய்கள் அவன் குரலை மீறி நகராமல் அங்கேயே நின்று குரைத்தன. இருவரும் குடிசைக்கு அருகில் வந்து சாய்ந்து கிடந்த பனங்கட்டையின் மீது உட்கார்ந்தனர். புதுக்காவல் வந்திருப்பதை அறிந்துகொண்ட விசுங்கன் இருவரையும் வரவேற்று குடிக்கத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தான். முதல் நாள் வேட்டைக்குப் போனதில் சிக்கிய காட்டுப் பூனையைக் கொன்று தின்றதால் பூனையின் ரோமங்கள் அந்த இடம் முழுவதும் பரவி உதிர்ந்து கிடந்தன. வீட்டின் பனை ஓலைக்குள் புனுகைச் செருகி வைத்திருந்தான். அதன் வாசம் அந்த இடம் முழுவதும் பரவி இருந்தது. பனங்கட்டையின் மேல் உட்கார்ந்திருந்த வல்லாங்கன் நாற்றம் அடிப்பதை உணர்ந்து சுற்றிச்சுற்றிப்

பார்த்தவாக்கில் இருந்தான். விசுங்கன் கிராம நிலவரத்தைப் பற்றி பேச்சைத் துவக்கினான்.

காவல்காரன் வீட்டில் இத்தனை நாய்கள் ஏன் இருக்கிறது என்பது வல்லாங்கனுக்குப் புரியவில்லை. ‘எதுக்கு இத்தனை நாய்க’ என்று விசுங்கனிடம் கேட்டான். ‘மலைக்கு வேட்டைக்குப் போவேன்’ என்று சொன்ன விசுங்கன் ‘வெள்ளாம அருந்தலா கும்போது வேட்டைதான் சாப்பாட்டுக்கு வழி’ என்றான்.

பேச்சு மறுபடியும் காவல் பற்றி திரும்பியது. பக்கத்து ஊர்களில் இருந்து களவுக்கு வருபவர்களைப் பற்றியும், காவல் கூலி கொடுப்பதில் இழுத்தடிப்பவர்கள் யார் யார் என்பது பற்றியும் விசுங்கன் விலாவாரியாகச் சொல்லிக்கொண்டிருந்தான். அதன்பின் ஊரின் வலது பக்கம் விசுங்கனும் இடது பக்கம் வல்லாங்கனும் காவல் காப்பதென்று முடிவு செய்துகொண்டனர். காவல் கூலியைப் பொறுத்தவரை அறுவடைக் காலங்களில் வரும் கூலி முழுவதையும் கிராமத்தார் அமைத்துத் தரும் தொம்பரையில் போட்டு வைத்து கடைசி அறுவடை முடிந்தவுடன் பங்கிட்டுக் கொள்வதென்றும் பேசிக்கொண்டனர். கும்மிருட்டு பனங்காடு முழுவதும் சூழ்ந்தது. பேசி முடித்துவிட்டு வல்லாங்கனும் விருமனும் புறப்பட்டனர். ‘இனி மலைக்கு வேட்டைக்குப் போறப்ப நானும் வர்றேனப்போ...ய்’ என்று விசுங்கனிடம் சொல்லிவிட்டு நடந்தான் வல்லாங்கன்.

*

**ம**ண்வெட்டியையும், குத்துக் கம்பியையும் கொல்லாசாரியிடம் கைமாத்து வாங்கி வந்து ஊரின் வடக்குப் பக்கம் மேடான இடம் பார்த்து கற்றாழைகளை வெட்டி அகற்றிவிட்டு குடிசை போட ஆரம்பித்தனர் வல்லாங்கனும் விருமனும்.

இடுப்பளவு சுவர் வைத்து பனை ஓலை வேய பத்து நாள் ஆகிவிட்டது.

கூடலூர், பாளையம், கோம்பை, பூசாரிக்கவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, காமயக்கவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, ஊத்துக்காடு என சுற்றிருந்த ஊர்களுக்கெல்லாம் போய் கீழ்நாட்டுக் கள்ளர்கள் எந்தெந்த ஊரில் காவல் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு பேசி ‘ஜாதி நாட்டாண்மை நான்தான்’ என்பதைத் தெரியப்படுத்தி மீண்டும் கம்பத்துக்கு முத்தணன் ஒச்சுவுடன் வந்து சேர்ந்தபோது வல்லாங்கனின் குடிசை போட்டு முடிக்கப்பட்டிருந்தது.

அன்று இரவுக் கஞ்சியை குடித்துவிட்டு விருமனும் ஒச்சுவும் தாதனூருக்குப் புறப்பட்டனர். முத்தணன் இன்னும் ஒரு மாதம் கழித்து வந்து தனது பெண்சாதியை அழைத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டான். வல்லாங்கனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து வேகமாக கட்டிவைக்க வேண்டும் என்று இருவரும் பேசிக் கொண்டனர். தாதனூருக்குக் கிளம்பினார்கள்.

வெளியெங்கும் காரிருள் படிந்து கால்களை அழைத்தது. பாதங்கள் இருளெனும் நீர்வெளியில் மீன்களாய் நீந்தின. சாமத்திற்குள் மேகாட்டைக் கடந்து கணவாயில் கால் வைத்துவிடுவார்கள்.

*

# 58

**மா**யாண்டி ஆளு நெடுநெடுன்னு உசரம். ஒடம்பு முழுக்க எத்தன வெட்டுத்தழும்பு இருக்கும்னு எண்ண முடியாது. நெத்தியில கவட்டக்கம்பு மாதிரி விருஞ்சு எறங்கி மூக்க ஒட்டி ஒண்ணு சேர்ற தழும்பு இருக்கே அது ரொம்ப விசேஷமானது. மேல் தோலுல சுருக்கு விழுந்ததுக்கும் அதுக்கும் பூரான் ஏறி ஏறி எறங்குறது மாதிரி வந்து மூக்க விட்டு எறங்கி எட்டிப் பாக்கும். கீ உதட்டுல ஆரம்பிச்சு வலது காது வரைக்கும் ஒரு இழுவ. அத சதை மேவ முடியாம பெரும் பள்ளத்துல உக்காந்து எந்திரிக்கும். கீரிவாலு மாதிரி மீசமுடி. காதுத் தண்டுல கூட மயிரு வெறிச்சிக்கிட்டு நிக்கும். இன்னும் தென்னங்காயை கடிச்சே உரிக்கிற பலம் பல்லுக்கு இருக்கு. முன்னத்திப் பல்லு சில்லு போயி இருக்கிறனால. எதையும் கடிச்சு இழுக்க தோதுவா இருக்கும். அடிவயிறு மட்டும் கொஞ்சம் எறங்க ஆரம்பிச்சிருச்சு. மத்தபடி காலு கூட இன்னும் கவட்டபோடல. சேவலோட விரல் மாதிரி பாதத்து விரல் திசைக்கு ஒண்ணா விரிஞ்சிருக்கும். காலம் பூராம் களவுக்குப் போய் குத்துக் காலுலே நடந்தனால இப்படி. வயசு எழுபத தாண்டுனதால சத தொங்க ஆரம்பிச்சிருச்சு. ஆனாலும். இருக்கக் கட்டுன வைக்கப்பிரி போலத்தான் நாடி நரம்பெல்லாம் முறுக்கேறி நிக்கிது.

ராத்திரில ராமாயணச் சாவடியிலயும், பகல்ல மலையடிக் கருப்பு கோயில்லயும் கிழவனோட கதைதான் நிறஞ்சிருக்கும். கிழவன் நூறு வருஷத்துக் கதைய ஒண்ணுவிடாம சொல்லுவான். வெறுமென வாயால கத்திச் சொன்னா அது கதையாயிருமா.. கிழவனோட உடம்பு புராவும் கத சொல்லும், மூச்சுக் காத்து வழியா கத வெளியில வறப்ப நெஞ்செலும்பு விரிஞ்சு அமுங்கும். அகலமான உள்ளங்கையால சடார்னு தொடைய அடிக்க வார்த்தைய எடுத்து வெளியில போடுவான். உடம்போட ஒவ்வொரு தழும்புக்குள்ளேயும் எவ்வளவு கதையிருக்கு. பின்னாடி திரும்பி காலத்துக்குள்ள நடந்துபோயி, அடஞ்சு வச்ச படப்புல இருந்து வைக்கப் பிரிய உருவிட்டு வற்ற மாதிரி கட்டுக்கட்டா கதைகள பறிச்சிட்டு வருவான். வயசு தளந்தாலும் வீறாப்பு தோள்ல உக்காந்து கதைய முட்டித்

தூக்கி வெளியில எறியும்.

அன்னிக்கு போயாண்டிதான் கிழவனோட வாயக் கிண்டினான். ராமாயணச் சாவடியில நடுத்தூண்ல சாஞ்சு தோதா உக்காந்திருச்சு பெருசு. அதே தூணோட பின்புறத்திலே கும்புட்டு நின்னுக்கிட்டு இருந்தாரு திருமல நாயக்கரு. எதிர்ல இருந்த கருத்தாண்டி ‘சொல்லப்பா... சின்னவங்கெ கேக்குறாங்கல்ல’ என்று தூண்டிவிட்டார்.

‘அது ஒரு பேக்காலம்ப்பா...!’ என மாயாண்டி கதையைத் துவக்கினார். அன்று மட்டுமல்ல, எப்பொழுது அவர் கதையைத் துவக்கினாலும் முதல் வார்த்தை அதுதான். மீனாட்சி ராணி விசத்தக் குடிச்சு செத்ததில இருந்து, இந்த நூத்திமுப்பது வருஷமும் மதுரைக்கு பேக்காலந்தான். குடிகளுக்கே பேக்காலமென்றால் காவல் காக்குற சனங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

**‘அ**ப்பெல்லாம் தாதனூர் மந்தையில் இருக்கிற புளியமரத்துல இருந்து அடிக்கடி கொம்பூதுற சத்தம் கேட்கும். பெரும்பாலும் தெக்கே இருந்து திரும்புற படைகள்தான் தாதனூருக்கு வரும். சடச்சி பொட்டலுக்கு மேற்க பறம்பு மேல படை ஏறின உடன தாதனூருக்கு தெரிஞ்சிரும். கொம்பு சத்தம் ஊரை உசுப்பிடும். கொம்பு சத்தம் கேட்டுட்டா வேருல தீப்பிடிச்ச மாதிரி ஊரே உடனே பரபரப்பாயிரும். சனமெல்லாம், எடுக்க முடிஞ்ச தானிய தவசங்கள எடுத்துக்கிட்டு ஓடிப்போய் மலையில் ஏறிடுவாங்க. இரண்டு மூணு வீட்டுல மட்டும் தானியத்த வச்சு அங்க தீப்பந்தத்தையும் எரிய விட்டுட்டு ஓடிருவாங்க.

‘பட்டாணிப் படை, கும்பினிப் படை இது ரெண்டும்தான் மாறி மாறி வரும். ஊருக்குள்ள வந்த உடனே சனம் எல்லாம் மலையேறிவிட்டது தெரிஞ்சிரும். தீப்பந்தம் எரியிற வீட்டில் இருந்த தானியங்களை எடுத்துக்கிட்டு, இருக்கிற வீடுகளுக்கு தீவச்சுட்டுப் போயிருவாங்க. அத விட்டுட்டு மலையில ஏறி சனத்தைப் பிடிக்கணும்னு யாரும் நினைக்க மாட்டாங்க.

‘ராத்திரியில ஆந்தை தான் மனுசனுக்கு துணை. எவ்வளவு தூரத்தில ஆள் நடமாட்டம் கண்டாலும் உடனே ஆந்தை கத்திரும். புளியமரத்துத மேலே உட்கார்ந்திருக்கவனுக்கு இரண்டு மைல் தொலைவுல எந்த சத்தத்தையும் ராத்திரில துல்லியமா கேட்கமுடியும். படைபறம்பு ஏறதுக்குள்ள ஆந்தை சத்தத்தை கேட்டு தயாராயிடுவான் கொம்பூதி. படை பறம்பு மேல ஏறினதும் ஊதிருவான்.

‘இப்படி, ராத்திரி பகல்னு பாராம திடுதிடுப்புன்னு கொம்பு சத்தம் கேட்டதும், சனம் எல்லாம் பிள்ள குட்டிகளையும், தானியத்தையும் தூக்கிட்டு மலை மேல ஏறி ஓடுறதுதான் அப்போ வழக்கம். நடக்க மாட்டாத பெருசுகளை மட்டும் குதிருக்குள்ளேயோ வைக்கப் போருக்குள்ளேயோ ஒளிச்சு வைச்சிவிட்டுப் போவாங்க. வந்துபார்த்தா சில நேரங்கள்ல வதங்கிப்போன அந்த உடம்புக கூட வெட்டுப்பட்டுக் கிடக்கும்.

**ம**துரைக்கு அருகே இருந்ததுதான் தாதனூர் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டதற்கான காரணம். இதற்கு முன் எப்பொழுதாவது நிகழும் தாக்குதலை ஊருக்குள் இருந்தே சமாளித்தவர்கள், இந்தத் தொடர் தாக்குதலுக்குப்பின் மலையையே புகலிடமாக மாற்றினார்கள்.

தூரத்தில் படை வரக்கேட்டு பதட்டத்தோடு ஓடி மலையேறுவதைப் போலவே, படைபோன பிறகு மலையில் இருந்து இறங்கி ஊருக்குள் வருவதும் மிக ஆபத்தான காரியம். பகலில் வரும் படை போய்விட்டதா இல்லையா என்பதை மலையில் இருந்து துல்லியமாகப் பார்த்து விடலாம். ஆனால், இரவில் வரும் படை போய்விட்டதா இல்லையா என்பது பல நேரங்களில் குழப்பமாக இருக்கும். நம்பிக் கீழிறங்க முடியாது. தீப்பந்தத்தோடு போன குதிரைப் படை ஒரு எல்லை வரை போய், போக்கு காட்டிவிட்டு, பந்தத்தை அணைத்து மீண்டும் ஊருக்குள் வந்துவிடும். இப்படி பலமுறை நிகழ்ந்திருக்கிறது. எனவே முதலில் விவரமான சிலர் மட்டும் மலையில் இருந்து இறங்கி ஜாக்கிரதையாக ஊருக்குள் வருவார்கள். எல்லா வீட்டுக்குள்ளும் நுழைந்து பார்த்து, சடச்சி பொட்டல் பக்கமும் பறம்புப் பக்கமும் போய் பார்த்து, யாருமில்லை; படை முழுவதும் போய் விட்டது என்பதை உறுதிப்படுத்திய பிறகு கொம்பூதியை மரத்தில் ஏற்றுவார்கள். இரண்டு முறை வித்தியாசமான ஒலியோடு மீண்டும், மீண்டும் சத்தம் வந்த பிறகுதான், ஜனங்கள் மலையை விட்டு இறங்குவார்கள்.

மலையிலே வாரக்கணக்கில் இருந்த காலமும் உண்டு. எவ்வளவு அடைமழை பெய்தாலும், நனையாமல் இருக்க பெரிய குகைகள் மலையில் நிறைய உண்டு, கஞ்சிதான் பிரச்சினை, அதுவும் ஒரு கட்டம் வரைக்கும்தான். அப்புறம் கிடைக்கிற எல்லாமே உணவாகும்.

‘**தெ**க்குப் பக்கமா இருந்து வர்ற படையும், கிழக்க மதுரப் பக்கமா இருந்து வர்ற படையும், தெளிவா தெரியும். ஆனா, வடக்குப் பக்கமா இருந்து வர்ற படைக சில நேரம் அமணமலைக்குப் பின்பக்கமாக வந்து மலையடி கருப்புக்கோயில்ல திரும்பினப் பிறகுதான் ஊருக்குத் தெரியும். அப்புறம்தான் கொம்பு சத்தம் கேக்கும். திடீர்னு ஓடுற சனங்களுக்கு படைக எங்கிட்டு வருதுன்னு தெரியாம, மலையில ஏறுறதுக்காக படைவர்ற பக்கமே எதுத்து ஓடி மாட்டிக்கிடுவாங்க. அப்பொதான் அந்த கொடும நடக்கும். வெட்டி வீசுவாங்கெ. சனம் சின்னாபின்னமா ஓடிச் சிதறும். குதிரைக்காரன் கையில் சிக்கும் தலைமுடி. வெட்டப்பட்டு கைகால இழுத்துக்கிட்டே மலை உச்சிக்கு வந்து சுனைத் தண்ணிய குடிச்சி செத்துப் போவாங்க பல பேரு. வாயைத் திறந்தபடி கொம்பு போல கொம்பூதியின் தலையும் புளிய மரத்தில தொங்கும். தப்பிச்ச ஆளுக மட்டும் மலைக்கு வந்து சேருவாங்க. அடிக்கடி இப்படி நடக்காது. ஆம்பளெக எல்லாம் வெளியில போன சமயங்கள்ல வகைதொகை இல்லாம இப்படி நடக்கிறதும் உண்டு.

**ப**டைகள் தெற்கும் வடக்குமாகப் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்த காலம். வெள்ளாமைகள், நீர்நிலைகள், சேமிப்புகள் எல்லாம் அழிக்கப்பட்டு மக்கள் கொடும் பஞ்சத்திற்குள் தள்ளப்பட்டார்கள். பத்தாண்டு காலமாக முழு மகசூலை எந்த ஒரு கிராமமும் அறுவடை செய்யவில்லை. விலை மதிப்பற்ற பொருட்களைக் கைப்பற்றிய நிலைபோய் தங்களுக்குத் தேவையான உணவுதானியங்களைத் திரட்டுவதே படைகளுக்கு மிகக் கஷ்டமாகிவிட்டது.

படையோட்டத்தின் வெறிக்கூச்சலும் பதறியோடும் கூக்குரல்களும் காற்று வெளியில் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தன. குதிரையின்

காலடிக் குளம்புகளில் மனித விரைகள் நசுங்கிக் கிடந்தன. போர் வீரனின் வெறிகொண்ட கண்கள் எல்லா கிராமத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. வெட்டுப்பட்ட பின்பும் கூட தலை அதே போல்தான் கிடந்தது. மனிதத் தலைகளை விட குதிரையின் தலைகளையே ஓநாய்கள் விரும்பிக் கடித்துக் குதறின. கலங்கிய நீர் நிலைகளின் ஓரத்தில் கழுகுகள் குடல்களை உருவிக்கொண்டிருந்தது அதிர்ச்சியற்ற காட்சியாய் மாறிவிட்டது.

பெரும்பாலும் மேற்கு நோக்கி எந்தப் படையும் செல்லாததால் தாதனூர் அளவுக்கு மேற்கு நாட்டுக் கள்ளர்கள் பெரும் பாதிப்பைச் சந்திக்கவில்லை. ஆனால், கீழ்நாட்டு மேலூர் கள்ளர்கள் கடும் கஷ்டங்களை அனுபவித்தனர். வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரும் எல்லாப் படையெடுப்பும் மேலூரைக் கடந்தே வந்தது. அடர்ந்த காடான மேலூர் வட்டத்தில் அந்நியப் படைகள் நுழைந்து வெளியேறுவது அவ்வளவு எளிதல்ல. படைகள் மேலூர் கள்ள நாட்டை ஊடுருவி வெறியேறும் பொழுது ஒரு பெரும் யுத்தம் நிகழ்ந்ததற்குரிய விலை தரப்பட்டிருக்கும். சீராக அடுக்குகளாக முறைப்படுத்தப்பட்டது மேலூர் அம்பலகாரர்களின் காவல் முறை. முற்றிலும் அழியும் வரை அவர்களுக்கு அது தன்னம்பிக்கையைக் கொடுத்தது. முடிந்தவரை ஒளிந்திருந்து படைகளைத் தாக்கி நிலைகுலையச் செய்தது.

**அ**ந்த பேக்காலத்தைப் பற்றித்தான் மாயாண்டி கதையைத் துவக்கினார்.

‘அன்னிக்கு ராத்திரி மழை தூறிக்கிட்டு இருந்தப்பத்தான் புளியமரத்துல இருந்து கொம்புச் சத்தம் கேட்டுச்சு. மந்தைக்கு ஓடிவந்து பாக்கிறப்ப வழக்கம் போல நடக்கிறது அன்னிக்கி நடக்கல. மந்தையல எல்லோரும் கூடுனதும் கல்லு மேல ஏறி நின்னு ஊர் பெரியாம்பள ஏதோ சொன்னார். ஊருல இருந்த எழுபது எம்பது ஆம்பளைகளும் ஆயுதங்களோட கிளம்பிட்டாங்க. ஊர் காவலுக்கு பத்துப் பதினைஞ்சு ஆளுக மட்டும் இருந்தாங்க. கொம்பூதுறவெ திரும்ப மரத்து மேல ஏறிட்டான. பொம்பளெகளும், சின்னவெங்களும் வீட்டுக்கு வந்துட்டொம். வீட்டுக்கு வந்ததும் ஏ ஆத்தாகிட்ட கேட்டேன். ‘கொம்பூதன உடனே எல்லோரும் மலைக்கு ஓடாம பெரிய ஆளுக மட்டும் தனியா எங்க போறாங்க?’

‘மருதையில கலகம்டா. கோட்டக் காவக்காரன எல்லாம் வெள்ளக்காரெ பிடிக்கிறானாம். உன்னோட அப்பனெல்லாம் அங்க சண்டபோட்டுக்கிட்டு இருக்கு. அதுதான் மத்தவங்களும் போறாங்கெ...’

‘அடமழ பேஞ்சுகிட்டே இருந்துச்சு. போனவங்க இரண்டு மூணு நாளாகியும் வரல. என்ன ஆச்சுன்னு தகவல் தெரியாம ஊருக்குள்ள விதவிதமா பேச்சு புறப்பட்டு வந்துச்சு. கஞ்சிக்கு ரெம்ப தட்டுப்பாடா இருந்துச்சு. கொம்பூதிக ரெண்டு பேருக்கும் பிள்ளைகளுக்கும் கஞ்சி கொடுக்கவே ரெம்ப கஷ்டமாகப் போச்சு.

‘மூணு நாள் கழிஞ்சு துப்பு வந்தது. இருந்த பத்து ஆளுகளும் கிளம்புனாங்கெ. அவங்களோட சின்னவெங்க பத்துப் பேரும் புறப்பட்டோம். எடுப்பாளுக நாங்க... எங்க எதுக்குன்னு எதுவும் தெரியாது. மழபேஞ்சுக்கிட்டே இருந்துச்சு. நாகமல சரிவு வழியா துவரிமான்

பக்கமாபோயி வைகையாத்துல இறங்கினோம். பெரியாளுகளுக்கு இடுப்பளவு தண்ணியும், எங்களுக்கு கழுத்தளவு தண்ணியும் போச்சு. ஆத்துக்குள்ள நடுமையத்துல மேடா இருந்தனால சின்னவெங்க எல்லாம் மையத்துல நடந்தோம். மழத்தண்ணி பெரண்டு பெரண்டு வர வேகம் கூடிக்கிட்டே இருந்துச்சு. பொங்குற தண்ணிய அல கழிச்சி அடிச்சு அமத்திக்கிட்டே எங்க கூட வந்திச்சு. நாங்க நடக்கவும் நீந்தவுமா ரெம்ப வேகமா மதுரைக் கிட்ட வந்துட்டோம். தைக்கால் படித்துறைக்கு நேரா நட்டாத்துல நாங்க வந்த உடனே அடுத்த செய்ய வேண்டிய காரியத்த என்னோட பெரியப்பே சொல்லுச்சு. ஒரு குத்தீட்டிய தரையில குத்தி முதுகுல தாங்கினாப் புல தண்ணிய எதுக்கு நின்னு நான் கேட்டுக்கிட்டே இருந்தெ. அப்பத்தான் எங்களுக்குக்கெல்லாம் விசயமே புரிஞ்சிச்சு.

‘கோட்டக் காவல்ல இருந்த எல்லாத்தையும் வெள்ளைக்காரெ பிடிச்சு நாயடி பேயடியா அடிச்சு கையக் காலக் கட்டி ஆத்துக்கு நடுவுல இருந்த மண்டபத்துல அடச்சி வைச்சிருக்கானாம். அவன் அங்கதான் அடச்சு வச்சிருக்கான்னு கண்டுபிடிக்கவே இரண்டு நாளாச்சு. திருமல நாக்கரு காலத்துல ஆத்துக்கு நடுவுல கட்டுன மண்டபம் அது. தண்ணியோட வேகம் மண்டபத்துல மோதக் கூடாதுன்றதுக்காக கத்திமாதிரி மண்டபத்தோட மூலை தண்ணிய பிரிக்கும். ஆத்துப் போக்குல இருந்து தப்பிக்க பாதி திருப்பி கட்டியிருக்காங்கெ. மண்டபத்துல இருந்தவங்கள எப்படியாவது காப்பாத்தணும்னு பெரிய ஆளுக பத்துப் பேருக்கும் ஆயுதம் எடுத்துக் கொடுக்க தலா ஒரு சின்ன ஆளுன்னு பிரிச்சுட்டாங்க. மண்டபத்தோட நாலா பக்கமும் இருந்து அடிக்குறதுன்னு பேச்சு. கிழக்குப் பக்கமா இருந்து அடிக்குறது ரெம்ப கஷ்டம். ஏன்னா ஆத்துப்போக்கு அது. தண்ணிய எதுத்து நின்னுக்கிட்டு வேல செய்யணும். ஓங்குதாங்கான மூணு பேரு கிழக்குப் பக்கமா போனாங்கெ. சின்ன வெங்கள கிழக்க போக வேணாம்டாங்க. எங்க மூணு சின்னவெங்களையும் தண்ணியில முங்கிப் போயி மண்டபத்துக் கல்லாப் பிடிச்சு மேல ஏறி உள்ள எத்தன ஆளு இருக்காங்கேன்னு பாத்துச் சொல்லச் சொன்னாங்க. வருச நாட்டுத் தண்ணி எல்லாத்தையும் வாரிக்கிட்டுப் போயிரும்டா, நல்லா திடமா இருந்து காரியத்த செய்ங்கடான்னு சொன்ன பெரியப்பனோட சத்தம் தண்ணியோட கூடவே வந்துக்கிட்டு இருந்திச்சு. நானு, பம்பையெ, ஒச்சி மகெ கடைசியாளு நாங்க மூணு பேருந்தான் தண்ணிக்குள்ள முங்கி செடி செத்தையோட மெதந்து போயீ மண்டபத்தோட அடிக்கல்லப் பிடிச்சோம். எங்களுக்கு ஒரு ஆள் மட்டத்துக்கு மேல தான் மண்டபத்தோட தூண் இருந்திச்சு. அங்கதான் எல்லாரும் இருந்தாங்க. தூணுக்கு வெளிப்பக்கமா இருந்த தீவட்டியெல்லாம் மழ வலுத்ததால உள்பக்கமா திரும்பி எரிய விட்டிருந்தாங்கெ. தூண ஒட்டி காவலுக்கு நின்ன ஆளுகளும் இரண்டடி உள்ள தள்ளித்தான் நின்னுக்கிட்டு இருந்தாங்கெ.

தண்ணியோட வேகம் கூடிக்கிட்டே இருந்துச்சு. நாங்க துவரிமான்ல ஆத்துல எறங்கிறப்ப இருந்ததவிட இப்ப தண்ணி ரெம்ப கூடிருச்சு. தண்ணியிலே இருந்தனால கைவிரல்லாம் சப்பி நடுக்கம் கொடுக்குது. கல்லப் பிடிச்சுக்கிட்டே எங்கனால நிக்க முடியல. தண்ணி பெரண்டு பெரண்டு வந்து கல்லோட சேத்து எங்கள அப்புச்சு. உடம்பெல்லாம் ஆட்டம் குடுக்குது. கல்லப் பிடிச்சு என்ன மேல ஏறச்சொன்னான் பம்பையெ. குண்டிய தாங்கி மேலே தூக்கிவிட்டான். சோத்துக்கையை எக்கிப்பிடிச்சு மேல ஏறுனப்ப பிடி வழுகி சட்டுன்னு கீக்கல்லுல விழுந்தே. நாடியில

சரியான்ன வெட்டு. கொஞ்சநேரம் நின்னுட்டு திரும்ப மேக்கல்ல பிடிச்சு ஒரு எட்டு மேலே ஏறுனெ. பெரிய்ய பனமரம் மண்டபம் முனைக்கல்ல பட்டு அப்படியே எங்க பக்கமா இழுத்து வந்துச்சு. அவ்வளவுதான், பம்பையெ சட்டுன்னு தண்ணிக்குள்ள கல்லோரத்திலே முங்கிக்கிட்டான். நான் கல்லப் பிடிச்ச வாக்கில கால் ரெண்டையும் மேல தூக்கிட்டு தொத்திக்கிட்டேன். ஒச்சி மகெ பன ஓலையப் பிடிச்ச வாக்கில ஆத்தோட போயிட்டான். தண்ணி வேகம் கூடிக்கிட்டே இருந்துச்சு. நட்டாத்துக்குள்ள நின்னுக்கிட்டு இருந்தவெங்க தாக்குப்பிடிக்க முடியாம கஷ்டப்பட்டாங்கெ. என்னோட பெரியப்ப விட்ட கல்லு சுரீர்ன்னு வந்து முதுகுல விழுந்துச்சு.

வேமா பாத்துச் சொல்றா தாயோளின்னு அதுக்கு அர்த்தம். பம்பையெ தான் திரும்ப என்னோட காலப் பிடிச்சு தூக்கிவிட்டான். எட்டி பெரியதூணோட ஓரத்தப் பிடிச்செ. குருதக் காது மாதிரி தூணோட முனையில செதுக்கி இருந்தனால என்னோட பிடி நல்லா அமஞ்சிருச்சு, மழ அடிச்சு ஊத்துது. பாம்பு தலைய நீட்ற மாதிரி தூணு ஓரமா தலையத்தூக்கி நாடிய கொண்டுபோயி பட்டியக்கல்லுல உக்கார வெச்சே. வின்னுன்னு நாடி வலி உச்சந்தலையில ஏறுச்சு. கண்ண இறுக்கி மூடித்திறந்தெ. முதல்ல எனக்கு நிதானந்தெரியல. கொஞ்ச முழிச்சுப் பார்த்தெ. பொதிமூட்ட மாதிரி முப்பது பேர கழுத்துல வளையத்தப் போட்டு காலோட சேத்து இழுத்துக் கட்டியிருந்தாங்கெ. கை கால் கழுத்து எல்லாத்தையும் ஒரே சங்கிலி பின்னி இருந்துச்சு. முதுகுத்தோல் ரவரவைய்யா பிஞ்சிருந்துச்சு. பூரா ஒரே ரத்தம். சில பேருக்கு ஈட்டி குத்தி சத பிஞ்சிருந்துச்சு. உடம்ப பௌந்து பௌந்து போட்டிருந்தாங்கெ. பாதி சீவனோட தான் எல்லாரும் கிடந் தாங்கெ. மண்டபம் பூராம் ரத்தக் கவுச்சி.

மண்டபத்துக்கு நடுவுல நாற்காலி போட்டு ஒரு வெள்ளைக்காரெ உக்காந்திருந்தான். துப்பாக்கி தோள்ல சாஞ்சிருந்துச்சு, பெரிய்ய வீரனாட்டம் மனசுல நினைச்சுக்கிட்டு தலைய்ய நிமித்தி தெக்குப்பக்கமா ஆத்து வெள்ளத்தையே பாத்துக்கிட்டு இருந்தான். தண்ணிக்குள்ள நிக்கிற ஏ பெரியப்பன வுட்டா அவெ குர வளைய்ய நறுச்சுன்னு ஒரே கடில்ல கடிச்சு துப்பிரும். இவன்லா ஒரு ஆளுன்னு மனசுல நினைச்சுக்கிட்டு சுத்தி தூணுகிட்ட நின்னுகிட்டு இருக்கிறவங்கெ தலைய்ய எண்ணுனெ. எட்டுப் பேரு இருக்கும், சரி அப்படியே தலைய்ய இழுத்து கீழ இறங்கிறலாம்னு நெனச்சுகிட்டு இருக்கிறப்ப ஏ முன்னாடி கிடந்த ஆளு ஏதோ முனங்கிகிட்டே தலைய தூக்கப் பாக்குறான். தலைமுடி பூராம் ரத்தம் திட்டுத்திட்டா இருந்துச்சு. எடது கை தோள்பட்டை கவ தனிய தொங்கிக்கிட்டு இருக்குது; உள்ள இருந்த வெள்ள எலும்பு துருத்திக்கிட்டு தெரிஞ்சுச்சு. குனுஞ்ச வாக்குல தொங்கிக்கிட்டு இருந்த சடமுடிக்கு ஊடால, தூண ஒட்டித் தெரிஞ்ச என்னோட தலைய அவெ பாத்துட்டான். உடனே மெல்ல தலையத் தூக்கப் பாக்குறான். முடியல. கால மேல் தூக்கிக் கொடுத்து பின்னம் பக்கமா சாஞ்சு தலைய கஷ்டப்பட்டு நிமித்திப் பாத்தான். மேவாய் உதடு வெட்டி பல்லு உடஞ்சு மூஞ்சியெல்லாம் ரத்தமா இருந்தது. அந்த ஆளு நல்லா முழிச்சு உத்துப் பாத்தேன். அது என்னோட அப்பே!

கைப் பிடிய்ய விட்டு தண்ணிக்குள்ள விழுந்தெ. எட்டு பேரு டோய்ன்னு பம்பையெகிட்ட சொன்னேன். அவந்தான் பக்கவாட்டுல நீந்தி பெரியாளுக கிட்ட அதச் சொல்லப் போனான். நான் தண்ணி போன போக்குல

போய்க்கிட்டு இருந்தேன். ரெண்டு பெரட்டு பெரட்டி எடுத்துச்சு. ரெண்டாவது முங்கு முங்கி எந்திரிக்கிறப்ப கைக்கு கிடச்ச மரக்கொப்ப கரையொதுங்கிற வரைக்கும் விடல. அதுக்குப் பிறகு நான் ஊர் வந்து சேர ரெண்டு நா ஆயிருச்சு.

‘என்னப்பா... நாடியில இவ்வளவு ஆழமான வெட்டுத்தழம்பு’ என்று பேயாண்டி கேட்டதற்குத்தான் இவ்வளவு கதையும். அறுபது வருடமானாலும் வருச நாட்டுத் தண்ணி பாஞ்சு போன தடம் மறஞ்சுருமா! இந்த தழும்பு போல நூறு தழும்பு மாயாண்டிப் பெருசோட ஓடம்பு பூராவும் இருக்கு. ஒவ்வொரு தழும்புக்கும் ஒவ்வொரு கத இருக்கு. வலி வெளியேறுன தழும்புக்குள்ள கத மட்டுந்தான் மிச்சமிருக்கும்.

‘அப்புறம்... ஓ அப்பே என்னாச்சு?’ என்று மொக்கச்சாமி கேட்டான்.

“ரொம்ப நாளா தெரியல. கொன்னு தண்ணியில வீசியிருப்பாங்கென்னுதான் நெனச்சோம். அஞ்சாறு வருஷத்துக்குப் பின்னாடி ஒரு ஆளு சொன்னான். மருதக் கோட்டக் காவல் பதினைஞ்சு பேரையும் மருத ராசா மகனோட சேத்து கப்பல்ல தீவாந்தரமா நாடு கடத்திட்டாங்கேன்னு... அது ஒரு பேச் காலமப்பா... அதப் போயீ ஏங் கேக்குற!” என்று பெருமூச்சோடு சொல்லிவிட்டு தூணில் சாய்ந்த வாக்கில கண்களை மூடினார்.

*

# 59

**பனங்காடு முழுவதும் எதிரொலித்தது நாயின் குரைப்பொலி. பெரும்** சத்தம் விசுங்கனின் குடிசை இருந்த இடத்திலிருந்து வந்து கொண்டிருந்தது. நாய்கள் மாறி மாறிக் குரைத்துக்கொண்டிருந்தன. பனைமரத்தில் கூடுகட்டியிருந்த பறவைகள் சடசடத்துப் பறந்த வண்ணம் இருந்தன. அன்று காலை வேட்டைக்குப் போவதற்காக விசுங்கன் வரச்சொல்லி இருந்ததால் அவனது குடிசை நோக்கி வந்து கொண்டிருந்த வல்லாங்கனுக்கு நாய்களின் இந்த இடைவிடாத குரைப்பொலிக்கான காரணம் பிடிபடவில்லை. குரைப்பொலி அதிகரித்தது.

குத்த வைத்த நிலையில் தனது வலது கால் கவுட்டுக்குள் நாய் ஒன்றை அமுக்கி அதன் தலையைப் பிடித்தபடி விசுங்கன் இருந்தான். அவன் கவுட்டுக்குள் சிக்கிக்கொண்ட அந்த நாய் தன் பின்னங்கால்களால் அந்த இடம் முழுவதுமிருந்த மண்ணைப் பிறாண்டிப் பிறாண்டி வீசிக் கொண்டிருந்தது. விசுங்கனின் கால் தொடை அதன் முதுகில் போட்டு அமுக்கிக் கிடந்ததால் அதனால் விடுபடமுடியவில்லை. முடிந்த மட்டும் குரைத்தது. பின் ஈனக் குரலில் கத்திக்கொண்டிருந்தது. அரை வட்ட வடிவத்திற்கு அந்த இடத்திலிருந்து மண் பறிக்கப்பட்டு சுற்றிலும் வாசல் தெளித்தாற் போல் வீசப்பட்டிருந்தது. மற்ற நாய்கள் விசுங்கனைச் சுற்றிலும் நின்று மெல்லக் குரைத்தும் முனகியவாறும் இருந்தன.

விசுங்கனின் மனைவி குடிசைக்குள் இருந்து எதையோ எடுத்து வந்தாள். மற்ற நாய்களின் கண்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன. அவள் வந்தவுடன் விசுங்கன் நாயின் முதுகில் மேல் இருந்த தனது வலது காலை அமுக்கி அதன் வாயை இரண்டு கையாலும் மேலே பார்த்த வண்ணம் தூக்கிப் பிடித்துக்கொண்டான். மற்ற நாய்களின் முனகல் அதிகரித்தது. உர்... உர்... என்று முறைத்துக்கொண்டே அந்த இடத்தை சுற்றிச் சுற்றி வந்தன. கவுட்டுக்குள் இருந்த நாயின் வாயை விசுங்கன் அமுக்கிப் பிடித்துக்கொண்டதால் பெரும் குரைப்பொலி கப்பென்று நின்று போனது. அது தன் பின்னங்கால்களால் பலம் கொண்ட மட்டும் மண்ணை

அழுத்திக் கிழித்துக்கொண்டிருந்தது. பெரும் குரைப்பொலி நின்றவுடன் மற்ற நாய்களின் உறுமல் சத்தம் கொஞ்சம் அதிகமானது. விசுங்கனின் பார்வை மற்ற நாய்களின் மீது படும் பொழுது அந்தச் சத்தம் கொஞ்சம் குறையவும், பின் அதிகமாகவுமாக இருந்தது.

விசுங்கனின் கைகள் அந்த நாயின் மூக்கை உயர்த்தி மேல் நோக்கிப் பிடித்திருந்தன. அவன் மனைவி புளியமுத்து அளவுக்கு தன் கையில் வைத்திருந்ததைப் பிதுக்கி அதன் சாறு நாயின் மூக்குக்குள் இறங்குவது போல ஊதி விட்டாள். அது கசிந்து ஒரு துளி நாயின் மூக்குக்குள் விழுந்தது. அடுத்து நொடியே நாய் பலமடங்கு பலத்தோடு விசுங்கனின் தொடையைத் தூக்கியது, பலம் கொண்ட மட்டும் மூக்கை விடைத்து மூச்சுவிட்டது. பின்னங்கால்கள் வெறிகொண்டு தரையைப் பிறாண்டின. சமாளிக்க விசுங்கன் பெரும்பாடு பட்டான். அவன் கழுத்து நரம்புகள் விடைத்தன. கால்களை அமுக்கிக் கிடந்தான். அவள் மூச்சை இழுத்து ஊதினாள். இரண்டு மூன்று சொட்டுச் சாறு நாயின் நாசிக்குள் இறங்கியவுடன் தனது பிடியைக் கொஞ்சம் தளர்த்தினான் விசுங்கன். அவன் தொடையைத் தூக்கிவிட்டு விட்டு முன்னோக்கிப் பாய்ந்ததால் நாயின் பின்னங்கால் நகம் இடது பாதத்தின் மேல்தோலைக் கிழித்துவிட்டது. விசுங்கன் பாதத்தைப் பிடித்தபடி நாயின் வேகத்தைப் பார்த்துக்கொண்டே அப்படியே உட்கார்ந்தான்.

வெறி பிடித்ததுபோல் குடிசையை வேகவேகமாகச் சுற்றியது. அங்கும் இங்குமாக ஓடியது. மூக்கை மண்ணில் மாறி மாறித் தேய்த்துப் பின் மீண்டும் ஓடியது. குடிசைக்குப் பின்புறமாக ஓடி தரையில் மூக்கை மாறி மாறித் தேய்த்தது. இழுத்து இழுத்து மூச்சு விட்டுக்கொண்டு பனங்காட்டுக்குள் ஓடியது. குரைப்பொலி அதன் ஓட்டத்துக்கு கயிறு போட்டது போல் பின்னாலே போனது. கொஞ்ச நேரத்தில் மீண்டும் குடிசைக்கு முன்பாக வந்து கிளறிய மண்ணுக்குள் மூக்கைப் போட்டுத் தேய்த்தது. பலம் குன்றி குரைப்பொலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. மற்ற நாய்களும் அதைப் பார்த்துக்கொண்டே முனகல்களை நிறுத்தின.

சாய்ந்து கிடந்த பனைமரத்தின் மீது உட்கார்ந்து இதைப் பார்த்துக்கொண்டே இருந்தான் வல்லாங்கன். வேலை முடிந்தவுடன் எழுந்து வல்லாங்கனுக்கு அருகில் வந்து உட்கார்ந்தான் விசுங்கன். அவன் மனைவி சுரைக் குடுக்கையில் கொண்டுவந்த கூழை வாங்கி கடகடவென்று குடித்தான். அவள் தந்த இன்னொரு குடுக்கையையும் வல்லாங்கன் வாங்கிக் குடித்தான்.

‘உடும்போட ஈரலுக்குள்ள இருக்கிற பித்தை எடுத்து நாயோட நாசியில ஊதி விட்டுட்டா அந்த நாயிக்கு உடும்போட மோப்பம் பிடிபட்டுரும். புது நாயிக்கு இப்படித்தான் இரண்டு மூணு தடவை உடும்பு பித்த ஊதிவிட்டு மோப்பத்துக்கும், வேட்டைக்கும் பழக்குவோம்‘ என்றான் விசுங்கன். ‘இதுக கோம்பை நாயிக, வடக்கயிருந்து கம்பளத்தாருக கொண்டுவந்தது. ஆதியில நாங்க வேட்டைக்குப் போறப்ப நாய்களைக் கொண்டு போறதில்லையாம். கம்பளத்தாருக்கிட்ட இருந்து இதைப் பழகிட்டாங்களாம். எங்க தாத்தா காளப்ப நாயக்கர் காலத்துல வீட்டுல ஏழெட்டு நாய்க இருந்துச்சாம். அந்த வம்சம்தான் இதுக.’

*

**வி**சுங்கனும், வல்லாங்கனும் புறப்படுவதை அறிந்த நாய்கள் அவர்களின் முன்னே சென்றன. பனங்காட்டின் ஊடே கிழக்கு நோக்கி அவர்கள் நடந்தார்கள். முதல் நாள் பெய்த மழையின் ஈரம் எங்குமிருந்தது. தெற்கு மலையிலிருந்து வரும் பெருமாள் கோயில் ஓடையில் தண்ணீர் பொறுத்து வந்துகொண்டிருந்தது. திரும்பிய திசையெல்லாம் ஏர்கள் உழவடித்தன. மண் ஈரமானதும் நடவுக்குத் தயாராகிவிடுகிறது; வேட்டைக்கும் தயாராகி விடுகிறது. ஈரமண்ணில்தான் நாய் நன்றாக மோப்பவாடை பிடிக்கும். விதை முளை விடுவதைப் போல உயிரினங்களின் வாசம் தரையெங்கும் பரவியிருக்கிறது. வாடையை நோக்கி காற்றுபோல் நாசி செல்கிறது.

நடவு காலங்களில் காவலுக்கு பெரிய வேலையில்லை. எனவே, வேட்டைக்குப் போவது உணவுக்கு ஆகும் என்பதால் காவல்காரர்கள் இந்தக் காலங்களில் வேட்டைக்குக் கிளம்பி விடுகின்றனர்.

விசுங்கனின் வருகைக்காக மலையடிவாரத்தில் காத்திருந்தனர் நரியனும், காரியும். காரிதான் கம்பத்துக்கு கிழக்கே உருவாகியுள்ள புதிய கிராமத்திற்கு காவல். முதலில் வந்து வீடு போட்டவர்கள் கண்மாய் வெட்ட முடியாததால் ஊரை விட்டுப் போய்விட்டார்கள். அதன் பின் வந்தவர்கள் வெயிலிலும், மழையிலும் அயராது உழைத்து கண்மாயை வெட்டி ஊரை அமைத்துள்ளனர். அந்தப் புதிய கிராமம் தோன்றியதிலிருந்து காரிதான் காவல். விசுங்கனின் ஒன்றுவிட்ட தம்பி நரியன். மலையை நம்பிய வாழ்க்கை. வழக்கம் போல் விசுங்கனின் வருகைக்காக இவர்கள் இருவரும் காத்திருந்தனர். விசுங்கன் புதிய காவலான வல்லாங்கனையும் சேர்த்து அழைத்து வந்து அவர்கள் இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தான். நால்வரும் மலையேறத் துவங்கினர். வல்லாங்கனிடம் மட்டும்தான் நாய்களில்லை. மற்ற மூவருமாக எட்டு நாய்களோடு வந்திருந்தனர்.

மலையேறும் வரைதான் நாய்கள் மனிதனுக்குத் துணையான பிராணி. மலையேறிவிட்டால் நாய்களுக்குத் துணையானவன்தான் மனிதன். அதன் வேகத்துக்குப் பின்னே மனிதன் அலைந்தலைந்து காடுகளுக்குள் ஏறிச் செல்கிறான். எட்டு நாய்களும் புதருக்குள் இழுத்துச் செல்கின்றன. நால்வரும் நாய்களை முன்னே விட்டு வாலைப்போல் அதன் பின்னே ஓடிக்கொண்டிருந்தனர். விலங்குகளின் பாதங்களும் ரோமங்களும் மண்ணில் உரசியதால் தேங்கி நிற்கும் வாசனையை முகர அங்கு மிங்கும் அலைகின்றன நாய்கள். தேனீக்கள் மகரந்தங்களை முகர்ந்து திரிவதைப் போல வேட்டை நாய்கள் வாசனையை முகர்கின்றன. வேட்டை நாய் தன் கால்களின் வழி நடப்பதில்லை. மோப்பத்திற்குரிய பிராணியின் கால்களால் அது நடத்திச் செல்லப்படுகிறது. தனது வாசனையை கண்ணி போல வைத்து விடுகின்றன பிராணிகள். வேட்டை நாய் அந்தக் கண்ணியைத் தொடர்ந்துகொண்டே வந்து பிராணியை பிடித்து விடுகின்றது. பூக்களைப் போல ஜீவராசிகளும் தனது வாசனையின் வழியேதான் தன்னை இழக்கின்றன.

வலதுபுறம் சாய்வாக உச்சிமலையை நோக்கி அவர்கள் சென்றார்கள். நாய்கள் அங்குமிங்குமாக அலைந்து புதருக்குள்ளும்

முட்புதற்களுக்குள்ளும் நுழைந்து வெளியேறிப் போய்க் கொண்டிருந்தன. செடிகொடிகளை விலக்கியவாறு அவர்கள் நடந்து போனார்கள். மிகவும் கூர்மையானது விசுங்கனின் பெரிய பொட்டைநாயான சூரி தான். எனவே அதனைத் தொடர்ந்து வேகமாக விசுங்கன் முன்னே சென்று கொண்டிருந்தான். நரியனும் வல்லாங்கனும் மற்ற நாய்களைப் பின் தொடர்ந்தனர். வெயில் ஏறி அடித்தது. ஒரு இடத்தில் கொஞ்சம் நின்ற நரியன் கீழே குனிந்து புளுக்கைகளை எடுத்து உள்ளங்கையில் உருட்டிப் பார்த்தான். புளுக்கையின் கடைசியில் முனை கொடுத்து விழுந்திருக்கும் திசையை வைத்து இடது பக்கமுள்ள புதருக்குள் முயல்கள் இருப்பதை அறிந்தவன் முன்னால் தூரத்தில் போய்க்கொண்டிருந்த விசுங்கனுக்குச் சத்தம் கொடுத்தான். ‘பெரிய்ய வேட்டைக்குப் போறப்ப முயலுக்காக நிக்க வேணாம் வா’ என்று விசுங்கனிடமிருந்து பதில் வந்ததும். நரியன் நடந்தான். ‘புளுக்கைகள் பெருசு பெருசா இருக்கு. பூராவும் பொட்டமுயலுக’ என்று வல்லாங்கனிடம் சொல்லிக்கொண்டே புளுக்கைகளை கீழே வீசிவிட்டு நடந்தான்.

அடர்ந்த காட்டை நோக்கி வேட்டை சென்றுகொண்டிருந்தது. நாய்கள் அங்குமிங்குமாகப் புதர்களைக் கிளறிக்கொண்டே ஓடின. புதர்களைச் சுற்றிச்சுற்றி அவர்கள் நடந்து போனார்கள். நரியன் வல்லாங்கனுக்கு வேட்டையைப் பற்றி சொல்லிக்கொண்டே வந்தான். ‘நாய் சுத்தி ஓடி ஜீவாத்திய வளைக்கிறத வச்சே அது என்னதுன்னு தெரிஞ்சிடும்‘ என்றான். சூரி சூட்டாக ஓடி வளைத்தால் அது உடும்புதான். அதே போல என்னோட நாய் கீரி, வெறுகு வாடைய நல்லாப் பிடிக்கும். காரியோட நாய் அலுங்கு வாடய நல்லாப் பிடிக்கும். அந்த வால் வெட்டுப்பட்ட நாய்தான் நரியப் பிடிக்கும். நரியப் பிடிக்கிற நாய்க்கு நரிய விட தந்திரம் அதிகமா தெரியணும். அப்பத்தான் பிடிக்க முடியும். அதே போல உடும்பு மோப்பத்துக்குப் பழகுன நாய் எல்லா ஜீவாத்திகளையும் மோப்பம் பிடிச்சிரும்‘ என்றான்.

‘இலை கடிபட்டதை வச்சே என்ன ஜீவாத்தின்னு கண்டுபிடிச்சிடலாம். கிழங்கை நோண்டி எடுத்திருக்கிறதை வச்சு என்ன ஜீவாத்தின்னு கண்டு பிடிச்சிரலாம். தடத்தை வச்சு கண்டு பிடிச்சிரலாம். நாய் தடம் விரிஞ்சது போல் இருக்கும். நரித்தடம் குத்துனாப்ல இருக்கும். காட்டுப் பூனத்தடம் சிறுத்த தடம் மாதரியே இருக்கும். கீரித்தடம் பெருச்சாளி தடம் மாதிரி இருக்கும்‘ என்று ஒவ்வொரு பிராணியின் தடத்தைப் பற்றி நரியன் சொல்லிக்கொண்டு வரும்பொழுது விசுங்கன் கொடுத்த சமிக்ஞை அவனுக்குக் கேட்டது. உடனே பேச்சை நிறுத்தி விட்டான்.

மிக வேகமாக அங்குமிங்கும் ஓடிய சூரி பெரும் புதருக்குள் போனது. அதன் பின்னால் கீழே படுத்த வாக்கில் ஊர்ந்துகொண்டே புதருக்குள் போனான் விசுங்கன். காரி கீழ்பக்கம் கொஞ்ச தூரத்தில் நின்றான். அவன் நுழைந்த புதருக்கு கொஞ்சம் மேலேறி நரியனும் வல்லாங்கனும் நின்றனர். சூரி புதருக்குள் நீண்ட நேரமாக அலைந்தலைந்து அடுத்தடுத்த இடத்திற்கு மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. நரியன் வல்லாங்கனிடம் ‘உடும்பு’ என்றான். வல்லாங்கன் அனைத்தையும் கவனித்தவாக்கில் வந்து கொண்டிருந்தான். கீழே இருந்த காரி சற்று வேகமாக அடுத்த இடத்திற்கு ஓடிவந்து கொண்டிருந்தான். புதருக்குள் கரகரவென்று பெரும் சத்தம் கேட்டது. சூரி அங்குமிங்குமாகப் புதரை

அசைத்து வெளியில் ஓடி வந்தது. விசுங்கன் ‘ஒரே... ஜல்தியா ரண்டரா கிட்டப்பக்க’ என்று பலமாக சத்தம் கொடுத்தக்கொண்டே புதருக்குள் இருந்து வெளியில் வந்தான். மற்ற நாய்கள் கீழ்திசையில் இருந்து பாய்ந்து வந்தன. கண்ணிமைக்கும் நேரத்தில் மொத்த இடமும் அலைக்கழிக்கப்பட்டபொழுது அங்கிருந்த சிறு பாறைக்கு அடியில் அது ஓடி நுழைந்து கொண்டது. சூரி அது நுழைந்த ஓட்டைக்குள் மூக்கை நுழைத்து பின்னங்கால்களாலும் முன்னங்கால்களாலும் மாறி மாறித் தரையைப் பறித்தது. பாறையின் மேலேறி விரிசலுக்குள் முண்டுகிறது ஒரு நாய். எட்டு நாய்களும் பாறையைச் சூழ்ந்துகொண்டு பம்பரமாய் நிலை கொள்ளாமல் பிறாண்டவும் முகர்ந்து பார்க்கவும் குரைக்கவுமாக இருந்தன. சூரியை அமட்டி தலையைப் பிடித்துத் தள்ளிவிட்டு விசுங்கன் குனிந்து புதருக்குள் பார்த்தான். உள்ளே சற்று தூரத்தில் உடும்பின் வால் தெரிந்தது. நாய்கள் சுற்றிச் சுற்றி வந்து மூக்கை உள்ளே நுழைந்தன. காரி நாய்களின் தலைகளைத் தட்டித்தட்டி விலக்கி விட்டுக் கொண்டிருந்தான். ‘ஓட்டையைப் பெருசாக்கி வெளியில பிடிச்சு இழுத்திர முடியுமா?’ என்றான் வல்லாங்கன், ‘நாலு பேரும் சேந்து இழுத்தாலும் பாற தான் வருமே தவிர உடும்பு வராது’ என்றான் நரியன். ‘ஒருவேளை பின்னத்திக்கால் சரியா பிடிக்காம இருந்துசுன்னா, முன்னத்திக் கால் பிடியில மட்டும் இருந்துச்சுன்னா, நாலு பேரும் சேந்து பலமா இழுத்தா முன்னத்திக் காலோடு பத்து விரல் நகமும் ஒடுஞ்சு தொங்குனாப்புல வெளியல வரும். அந்த அளவு பலமா நாம இழுக்கணும். அப்பவும் பிடிய விடாது. பின்னத்திக் காலு பிடிச்சிருந்தா ஒண்ணும் செய்யமுடியாது’ என்றான். ‘அப்புறம் எப்படி பிடிக்கிறது?’ என்று வல்லாங்கன் கேட்டான். ‘பாத்துக்கிட்டே இரு’ என்று சொன்ன விசுங்கன் பக்கத்திலிருந்து ஒரு குச்சியை வெட்டினான். அதன் முனையைக் கூர்மையாகச் சீவினான். நாய்கள் பாறையைச் சுற்றி மாறி மாறி மண்ணைக் கிளறவும், மூக்கை நுழைக்கவுமாக இருந்தன. பாறைக்குப் பக்கத்தில் இவர்களைப் போக விடாமல் அவை தீவரமாக சுற்றிச் சுற்றி வந்தன.

விசுங்கன் அது நுழைந்த பொந்துக்குள் குச்சியை உள்ளே விட்டுக் குத்தினான். மற்ற மூவரும் மூன்று பக்கமும் தயாராயிருந்தனர். நாய்கள் விரிந்த கண்களோடு பாறையை படுவேகமாகப் பிறாண்ட ஆரம்பித்தன. விடைத்த நாசிக்கு மிக அருகில் வேட்டை இருந்தும் அது பிடிபடாத பொழுது வெறி உச்சத்தில் ஏறிவிடுகிறது; பாறையைக் கீறி எறிவதைப்போல காலைக் கொண்டு கிழிக்கின்றன. விசுங்கன் குச்சியால் உள்ளே குத்திக்கிளறினான் உடம்பின் ஆசனவாயில் குச்சியின் முனை குத்தும் பொழுது அது கூசிச் கூசி கொஞ்சம் கொஞ்சமாகப் பிடியை விடும், அப்பொழுது பிடித்து இழுத்தால் வெளியில் வந்துவிடும். அல்லது அதுவே எதிர்திசையில் வெளியேறிவிடும் என்று வல்லாங்கனுக்கு நரியன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே பாறையின் எதிர்ப்பக்கம் மூன்று நாய்கள் பாய்ந்து போய் தலையை உள்ளேவிட்டன. பெரும் சத்தத்தோடு எதிர்திசைக்குத் தாவினான் விசுங்கன். தனியாக உடும்பைக் கவ்வித் தூக்கி வெளியேற்றியது சூரி. பாறைக்குள் இருந்து உடும்பின் கழுத்தில் கடித்து சூரி எடுத்த வேகத்தில் சூரியன் வாயில் இருந்து உடும்பைப் பிடுங்கி எடுத்தான் விசுங்கன். கண்ணிமைக்கும் நேரத்தில் தலைக்கு மேல் இரண்டு கையையும் உயர்த்தி உடும்பை பிடித்திருந்தான் விசுங்கன். அவனைச் சுற்றி பயங்கரக் குரைப்புடன் நாய்கள் தவ்வின. மற்றவர்கள் அடித்து

அமட்டி நாய்களை விரட்டினார்கள். கொஞ்ச நேரத்திற்குப்பின் நாய்களின் வெறி அடங்கியவுடன் விசுங்கன் கையை இறக்கினான். அவனது ஒரு கை உடும்பின் கழுத்தையும் இன்னொரு கை வாலின் அடிப்பகுதியையும் பிடித்திருந்தது. மின்னல் வேகத்தில் மிகச்சரியாகப் பிடித்து எப்படித் தூக்கினான் என்று வல்லாங்கன் ஆச்சரியமாகப் பார்த்தான். வேட்டையின் முக்கியமான தருணமே நாய் ஜீவாத்தியைப் பிடித்தவுடன் நாயிடமிருந்து அதனைப் பறிப்பதுதான். அந்த நேரத்தில் நாய் தன்னுடைய உணவை இன்னொருவன் கவர்வதை அனுமதிப்பதே இல்லை. தன்னால் முடிந்த அளவு அதைத் தின்கிற வெறியோடுதான் முயற்சி செய்கிறது. அதுவும் உடும்புக்குப் பழக்கப்பட்ட நாய்களின் வீரியமே தனி. நாயின் வாயிலிருந்து உடும்பை பக்குவமாக எடுக்கவில்லையென்றால் எடுப்பவனின் கை, ஒன்று நாயின் வாயில் மாட்டிக்கொள்ளும், அல்லது உடும்பின் வாயில் மாட்டிக்கொள்ளும். கணப்பொழுதில் எடுத்து தலைக்குமேல் தூக்கிவிட்டால்தான் உடும்பு மனிதனுக்கு. இல்லையென்றால் நிமிட நேரத்திற்குள் எல்லாம் கடித்துக்குதறி நாய்க்கு ஒன்றாக பிய்த்தெடுத்து புதருக்குள் ஓடிவிடும். வேட்டைக்கு வந்தவன் வேர்த்து வடிய நின்று பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

நாய்களை அதட்டி அமட்டி தூரத்திற்கு விலங்கினான் காரி. கீழே கிடந்த சிறு குச்சியை எடுத்து உடும்பின் மூக்கில் சொருகி ஓட்டை போட்டான் விசுங்கன். அது தனது வட்டமான கண்களைச் சுழற்றிச் சுழற்றி குழந்தையைப் போல் பாவமாகப் பார்த்தது. இலந்தைக் கொடியொன்றை நரியன் அறுத்து வந்து கொடுத்தான். அதனை மூக்கின் துவாரத்திற்குள் விட்டு மேல்பக்கமாக முடிச்சுப்போட்டு இன்னொரு முனையை வாலை இழுத்து வைத்து முடிச்சிட்டான். வைக்கோல் பிரிபோல் வட்டவடிவமானது உடும்பு. அதன் இரண்டு விரைகளும் பிதுங்கியிருந்தன. சிறிய இலந்தைக் கொடிக்காலில் கட்டப்பட்ட அது வல்லாங்கனின் கைகளில் தொங்கிக்கொண்டே வந்தது. அதன் கால் நகங்கள் வெறும் குச்சிப்போல் நீண்டு வளைந்து காற்றைத் துழாவியபடி இருந்தன.

**ம**ரங்களின் வேர்களுக்கும், பாறைகளுக்கும் ஊடே சலசலத்து ஓடியது நீரோடை. மிதக்கும் பளிங்கு போல் பாறைகளையும் வேர்களையும் தழுவி நழுவி ஓடிய நீர் தெளிந்தும் குளிர்ந்தும் இருந்தது. ஓடையில் கைகால்களைக் கழுவி தண்ணீர் குடித்துவிட்டு உட்கார்ந்திருந்தனர். அவர்களைச் சுற்றி நாய்கள் நாக்கைத் தொங்கப்போட்ட நிலையில் இளைத்தபடி படுத்திருந்தன. நரியன் மட்டும் அந்த செங்குத்தான பாறைகளின் பிளவுகளுக்குள் போயிருந்தான். பொந்தந்தேன் கூடு பாறைகளுக்கிடையில் இருப்பதைக் கண்டு எடுத்து வருவதாகப் போனான்.

**செ**ங்குத்தான அந்தப் பாறைகளுக்கிடையில் மிகக்குறுகிய இடைவெளிதான் இருந்தது. நின்றபடி பக்கவாட்டில் அசைந்தசைந்து நரியன் உள்ளே போய்க்கொண்டிருந்தான். வெளிச்சமற்ற மிகக்குறுகிய அந்த இடத்தை நோக்கி வயிற்றை உள்ளிழுத்து, எக்கி, கைகளை தூரப்பிடித்து, நெளிந்துகொடுத்து அசைந்தவாக்கில் தேன்ராட்டுக்கு அருகில் போய்விட்டான். பொந்தந் தேன் ராடு அடுக்கடுக்காக மிக நீளத்திற்கு பாறையைப் பிடித்துப் படர்ந்திருந்தது. நரியன் இழுத்து மூச்சு வாங்கி தேன் ராட்டை நோக்கி ஊதினான். சிறு சிறு தேனீக்கள் மனிதக்

காற்றுப் பட்டவுடன் பறந்து அடுத்த ராட்டுக்குப் போயின. கொஞ்சம் முன்னால் நகர்ந்து மீண்டும் ஊதினான். தேனீக்கள் மீண்டும் பறந்தன. மீண்டும் ஊதினான். மீண்டும் அடுத்த ராட்டுக்குப் போயின. ஒரு குறிப்பிட்ட தூரம் தேனீக்களை விரட்டிவிட்டு ராட்டுகளை அப்படியே பிய்த்து, தலைக்கு மேல் தூக்கியவாறு பக்கவாட்டில் நடந்து மிகச் சிரமப்பட்டு பாறையின் இருள் பிளவுக்குள் இருந்து வெளியே வந்தான். அவன் தலைமுடி தோள்பட்டை எல்லாம் ஒழுகிய தேனும் தேனீக்களும் இருந்தன. ஓடையருகில் இருந்த பாறையில் கொண்டுவந்து வைத்தான். ஆளுக்கு ஒரு ராட்டாக பிய்த்து சவைத்து தேனை உறிஞ்சினர். கொஞ்சம் கிழங்குகளையும் சுட்டுச் சாப்பிட்டு கைகளைக் கழுவினர்.

பொழுது சாயத் துவங்கியது. நாய்கள் சேர்ந்து படுத்திருந்தன. அவர்களின் கையில் இரண்டு உடும்பும் ஒரு காட்டுப்பன்றியும் இருந்தன. வேட்டையை இத்தோடு முடித்து இறங்குவோம் என்றான் விசுங்கன். மற்றவர்களும் சரியென்ற உடன் கொஞ்சநேரத்தில் எழுந்து நடக்கத் துவங்கினார்கள். நாய்கள் மோப்பம் பிடித்துக்கொண்டே முன்னால் சென்றன.

சூரியின் வலதுதொடையில் பன்றியைப் பிடிக்கும் பொழுது ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. ஆனாலும், அது சளைக்காமல் முன்னால் போய்க்கொண்டிருந்தது. காட்டுப்பன்றியைப் பிடிக்கும்பொழுது எட்டு நாய்களும் சுற்றி நின்று ஆவேசமாகத் தாக்கியதைப்பற்றி வல்லாங்கன் பேசிக்கொண்டே வந்தான். காட்டுப்பன்றியைத் தோளில் தூக்கியவாறு காரி நடந்தான். நரியனின் கையில் உடும்புகள் இரண்டும் வட்டவடிவில் தொங்கிக்கொண்டு வந்தன. நாய்கள் மோப்பவாடைக்காக மிகத்தள்ளிப் போய்விடாமல் இருக்க விசுங்கன் சத்தம் கொடுத்துக்கொண்டே வேகமாக நடந்தான். பொழுது மறைவதற்கு முன்பான கடைசி வெளிச்சம் மஞ்சள் பொடி போல் காட்டின் மேல் பரவிக்கொண்டிருந்தது. நரியைப் போல் தந்திரம் செய்த ஒளி சிதறி காட்டுக்குள் பதுங்கிக்கொண்டது. காட்டின் கரும் பச்சையை விழுங்க இருள் தயாராகி வந்துகொண்டிருந்தது. பறவைகளின் குரலொலி இருளுக்குள் கரைந்து மறைந்தது. இருளடர்ந்து கும்மென்றிருந்த காட்டிற்குள் இருந்து அவர்கள் சரசரவென இறங்கிய வண்ணமிருந்தனர்.

அந்த இருள் வெளியில் அவர்கள் பாறைகளைக் கடந்து போனார்கள். கரும்பாறைகள் நெட்டுநெட்டாகப் படர்ந்து கிடந்தன. ஆங்காங்கே விரிசல் விட்டிருந்தன. இருள் மலையைக் கவ்விப்பிடித்திருந்தது. சருகுகளைக் கலைத்த வண்ணம் நாய்கள் மலையை விட்டு கீழே இறங்கின. தரைக்கு வந்தவுடன் காரியின் குடிசைக்கு முன்வைத்து நால்வரும் வேட்டையைப் பிரித்துக்கொண்டார்கள். நரியன் தன் பங்கை எடுத்துக்கொண்டு வடக்கு நோக்கிப் போனான். விசுங்கனும், வல்லாங்கனும் தங்கள் பங்குகளை எடுத்துக்கொண்டு கம்பம் நோக்கி நடந்தார்கள். தோட்டம் தொரவுகளை ஒரு சுற்று பார்த்துவிட்டு வீட்டுக்குப் போகலாம் என்று பேசிக்கொண்டனர். வல்லாங்கன் காட்டோடையைத் தாண்டி வயல் வரப்பு வழியே ஊருக்குள் நுழைந்தான். ஊரின் கிழக்கு முனையில் இருந்த வீரலிங்க கவுடரின் வீட்டில் அதிக மாடுகள் இருந்தன. காவலுக்கு நாய்களும் கிடந்தன. வல்லாங்கன் வீரலிங்க கவுடர் வீடு இருக்கும் தெருப்பக்கமாக வந்து மந்தையைக் கடந்து வடக்கு வீதிகளில் ஒரு சுற்று போய்விட்டு தனது

குடிசைக்கு வந்து சேர்ந்தான்.

*

# 60

**கருக்கு இருள் மெல்ல நிறம் மாறத் துவங்கிய அதிகாலையில்** பறவைகள் கண்விழித்து சிறகடிக்கத் துவங்கின. மதுரைக் காவலுக்குப் போனவர்கள் கிழக்குப் பக்கமாக ஊருக்குள் நுழைவதற்குச் சற்று முன்பாக மேங்காட்டுக்கு நாட்டாண்மைத் தொழிலுக்குப் போயிருந்த முத்தணன் தாதனூருக்குள் நுழைந்தான். சம்சாரத்தை அழைத்துப் போவதற்காக முத்தணன் வந்திருக்கிற செய்தி ஒருவர் மாற்றி ஒருவராக ஊரெங்கும் பரவியது. கருப்பு கோயிலில் படுத்துக்கிடந்த கருத்தையன் நன்றாக விடிந்த பிறகு ஊருக்குள் வந்ததால் அவருக்கு செய்தி நேரங் கழித்துத்தான் தெரிந்தது. அதன்பின் தனது இளைய மகனைப் பற்றி விசாரிப்பதற்காக முத்தணன் வீட்டிற்கு வந்தார். ஒச்சுவும் செய்தி கேட்டு அங்கு வந்திருந்தார். ஆனால், முத்தணன் காலையில் வந்தவுடன் திருமலை பின்னத் தேவரிடம் போய் நாட்டுநடப்புகள், பொல்லாப்புகள், காவல்பணிகள் பற்றி சொல்வதற்காகப் போய்விட்டான்; இனி சாயந்தரம்தான் வந்து சேருவான் என நினைத்த பெரியவர்கள் இருவரும் ‘அவெ வந்தா கருப்பு கோயிலுக்கு வரச்சொல்லு’ என்று அவன் சம்சாரத்திடம் சொல்லிவிட்டுப் போனார்கள்.

அன்றுபொழுது மங்கியபின்தான் முத்தணன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். கஞ்சியைக் குடித்துவிட்டு கருப்பு கோயிலை நோக்கிப் புறப்பட்டான். மலையடிவாரத்தில் சிள்வண்டுகளின் கீச்சொலிக்கு மத்தியில் இருளின் மடிப்புகளுக்கிடையே தாயங்களை உருட்டி விளையாடும் பெருசுகளோடு உட்கார்ந்து கதை பேசி மாதங்களாகிவிட்டது. நினைவுகளின் படியிறங்கி, அலைக்கழிந்த இரவுகளைச் சுமந்துவந்து பரப்பி வைத்து விடிய விடியக் கதை பேசினர். ஆந்தைகளைப் போல அவர்கள் இரவுதோறும் கடந்த காலத்திற்குள் பறந்து போனார்கள். மாங்காய்க் கீற்றுபோல உடம்பெல்லாம் வெட்டுப்பட்ட ரணத்தோடு திரும்பிவந்து மரத்தடியில் படுத்து உறங்கிப் போனார்கள். ஏக்கத்தோடு முத்தணன் மலையடி வாரத்துக்குப் போனான். ஆலமரத்து இருள் அவனை

வாரி அணைத்தது.

அடிவேரில் உட்கார்ந்து மரத்தில் சாய்ந்தபடி இருந்தார் மாயாண்டிப் பெருசு. மற்றவர்கள் அங்குமிங்குமாகப் படுத்துக் கொண்டும், உட்கார்ந்து கொண்டும் இருந்தார்கள். முத்தணன் வந்து சேர்ந்தவுடன் பேச்சு மேகாடு பற்றித் திரும்பியது. பெரும் வெளியும் நிறைய நிலமும், நல்ல மலையடிவாரமும் அதனையொட்டி விவசாயமும் நடப்பதாகவும், போனதில் இருந்து இரண்டு மாதமும் நல்ல மழையென்றும் முத்தணன் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'நம்மாளுக நாட்டாமக் கூலிய ஒழுங்கா கொடுக்குறாங்கெளாப்பா...' என்று கேட்டார் மாயாண்டி.

'ஒழுங்கா கொடுக்குறோம்னு சொல்லிருங்காங்கெ...' என்றான் முத்தணன்.

'கொடுக்காட்டின்னா அவங்கெ காவல்ல கைவச்சிரு' என்றான் இன்னொருவன்.

'நாட்டாமக்காரனே அப்படி செஞ்சா அப்புறம் ஞாயம் எப்படிடா இருக்கும்' என்று அமட்டினார் ஒச்சு.

கம்பம் ஊர், மேகாட்டிலுள்ள மற்ற கிராமங்கள், வல்லாங்கன் பகல் நேரத்தில் வேட்டைக்குப்போவது, தான் ஊர் ஊராகப் போய் காவல்காரர்களைப் பார்த்தது பற்றி எல்லாம் விலாவாரியாக விளக்கிக்கொண்டிருந்தான் முத்தணன். பொழுது நடுநிசியை நெருங்கிக்கொண்டிருந்தது. மாயாண்டியும் மற்றப் பெருசுகளும் மதுரைக் காவலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். சிலர் மட்டும் மரத்தடியிலேயே படுத்துக்கிடந்தார்கள். முத்தணன் எழுந்து வீட்டை நோக்கி நடந்தான். அவன் வருகையை எதிர்பார்த்திருந்த அவனது மனைவி அன்று வீட்டிற்குள் படுத்திருந்தாள்.

*

**கா**லையில் முத்தணனும் அவனது மனைவியும் குடித்தனத் திற்கான சாமான்களை ஒரு மூட்டையில் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். வழியில் பெரிய ஊர் ஏட்டை முத்தணனுக்குப் படித்துக் காட்டுவதற்காக ஒச்சு பின்னத்தூர் வரை உடன் போனார். மதியத்திற்குள் மூவரும் போய்ச் சேர்ந்தார்கள். ஊர்ப் பெரியவர்களைக் கண்டுபேசி விசயத்தை சொன்னார் ஒச்சு. மந்தை யிலிருந்த வேப்பமரத்தடியில் வைத்து நாட்டாண்மைக்காரனுக்கு ஏடுகளை முதலியார் படித்துக் காட்டினார். இந்த ஏடுகள்தான் தலைமுறை தத்துவமாக அவர்களுக்கு நீதிநூல். இதை யாரும் மீறக்கூடாது; மீற முடியாது.

முதல் மூன்று ஏடுகள் ஆண் பெண் உறவு, முறைபேதம், பிறன்மனையுடன் கூடுதல், இரண்டாம் சம்சாரம் போன்றவற்றைப் பற்றி இருந்தன. நாட்டு வழக்கில் இது முழுவதும் முத்தணனுக்குத் தெரியுமாதலால் பாதி கவனித்தும் கவனிக்காமலும் இருந்தான்.

பிற குற்றங்களைப் பற்றிய விளக்கங்கள் நான்காவது ஏட்டிலிருந்து கூறப்பட்டிருந்தது. எனவே, அதை கொஞ்சம் சத்தமாக வாசிக்கச் சொல்லி உன்னிப்பாகக் கேட்டான்.

‘ஆணுக்குப் பலி சேதமானால், 70 பொன். கொண்டை அறுத்துப்போட்டால் பலி அபராதம் 24 பொன். ஒரு கண் சேதமானால், பலி 35 பொன். மூக்கு ஒரு பக்கம் சேதமானால் பலி 12 பொன். அதில் நடுத்தண்டு ஒரு பக்கம் சேதமானால் பலி 35 பொன். முன் காதுக்கு பலி 30 பணம். நடுக்காது ஓவாயாய் போனால் பலி 12 பொன். பொன் கடுக்கன் போடுகிற காதுக்குப் பலி 6 பொன். மேல்காதும் அடிக்காதும் சேர்ந்து போனால் பலி 18 பொன். மூன்று அங்கோலமும் சேர்ந்து போனால் பலி 24 பொன். உதடுக்கு ஒரு பல் தெரிய ஓவாயாகப் போனால் பலி 12 பொன். ஒருபல் விழுந்து போனால் பலி 6 பொன். ஒரு பல் அசைவுக்குப் பலி 30 பணம். கால் எலும்பு தெரிவுக்கு பலி 12 பொன். கொண்டக்கை நெரிவுக்கு பலி 12 பொன். மணிக்கட்டு முன்கெண்டைக்கு பலி 6 பொன். விரல் வரிசைக்கு வராமல் போனால் பலி 30 பணம். நெரிவுகளுக்கு இதில் பாதி. நெகத்துக்கு பலி 5 பணம். காலுக்கு இந்த படித்தான். இதில் காலாவது கையாவது அங்கோல குறைச்சலாவது விழுந்து போனால் கால் மிதிக்கவும், கை பிடிக்கவும் இல்லாமல் போனால் பலி 35 பொன்.

பெண் கர்ப்பமாகி இருக்கிறவளை ஒருவனுடைய தொந்தரவினால் கெர்ப்பம் அவியப்பட்டுப்போனால் அதுக்குப் பலி 35 பொன். அந்த மனுசிக்கு வேறு காயச்செலவு கொடுக்கிறது. அவளும் அந்த தொந்தரவினால் இறந்து போனால் அவளுக்கு நேர் பெண்ணுக்கு உண்டான பலி கொடுக்கிறது.

எந்த இடத்தில் உடலில் காயம்பட்டால் அந்த இடத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு உடனே காயச் செலவு வாங்கிக் கொள்கிறது. காயத்துக்காக 6 மாத கெடு வைக்கிறது. அந்த காயக்காரர் கெடுவுக்குள் இறந்து போனால் இறந்தவர்களுடைய வகையறாப் பேர் இறந்த அன்றைக்கு மேற்படி கிராமத்தில் வைத்துக்கொண்டு பலிக்காரனுக்கு காயப்பட்ட இடத்தைக் கிழித்து பரிசோதனைக்குக் கொடுக்கிறது. அந்தக் காயத்தால் இறந்தான் என்று அந்த கிராமத்துக்காரர்களுக்குப் பட்டால் பலிகாரனை பலி கொடுக்கும்படி தீர்மானம் சொல்லவும்.

காலக்கேடு, மதிகேடு, விளையாட்டு, வேட்டைப்பலி, இதுகளில் பலி வந்தால் மேற்கண்ட பலிகளில் பாதி அல்லது அரைப்பலி.

முந்தின தாரம் இருக்க மறுதாரம் கலியாணம் செய்ய வேணுமானால் முந்தின தாரம் சம்மதத்தின் பேரில் மறுதாரம் கல்யாணம் செய்யவேணும். அந்தப்படி முந்தின தாரம் சம்மதம் இல்லாமல் மறுதாரம் கல்யாணம் செய்தால் முந்தினவள் செய்கிற மரியாதை குறைச்சலுக்கெல்லாம் பிந்தினவள் உள்படுவது. அல்லாமல் முந்தினவள் புருஷனை விட்டு அகலமாட்டாள்.

மூத்த குடியாள் மக்களுக்கு, இளைய குடியாள் மக்களுக்கு வகைவிபரம். இளைய குடியாள் மக்களைப் பார்த்து மூத்த குடியாள் மக்கள் தாழ்வான வார்த்தை பேசக்கூடாது.

இளைய தாரம் கல்யாணம் செய்யும் காலத்தில் மூத்த குடியாளுக்குப் பொறுப்பு 6 பொன். இளைய குடியாளுக்கு பொறுப்பு 30 பணம். இளைய குடியாள் மக்கள் வீட்டில் பெண் மகவிடத்தில் மூத்த குடியாள் மகன், பெண் கல்யாணம் செய்கிறது தவிர பெண் கொடுப்பதில்லை. அப்படியே பெண் கல்யாணம் செய்தாலும் அவனுக்குப் பிந்தி மூத்த தாரத்தின் மக்கள் பெண் கொடுக்கக்கூடாது. இளைய குடியாள் மக்களுக்கு நாட்டில் பெரிய

தேவத்தனமும், பெரிய பூசாரித்தனமும் இல்லை. அவன் வீட்டில் பெண் எடுக்கிறதைத் தவிர பெண் கொடுக்கக்கூடாது. இது தவிர மற்ற மற்ற சங்கதிக்கு எந்த வேலைக்கு எப்படி எப்படியோ அந்த வேலைக்குப் பார்த்துக்கொள்கிறது.

கீழ்நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் வரைவிபரம். கீழ்நாடும், மேல்நாடும் ஒருத்தி மக்களே தவிர இரண்டு தராத்து மக்கள் இல்லை. இதில் மூப்பு கீழ்நாடு. கீழ்நாடும், மேல்நாடும் ஒரு இடத்தில் கூடுவதாய் இருந்தால் சங்கதிக்காரனை இரண்டு தட்டில் வெத்திலை பாக்கு வாங்கி வரச்சொல்லி கீழ்நாட்டுக்கு ஒரு தட்டு எடுத்துக்கொள்கிறது. மேல் நாட்டுக்கு ஒரு தட்டு எடுத்துக்கொள்கிறது. இருவகைப் பேர்களும் ஒன்றுகொன்று அண்ணன் தம்பி முறை கொண்டாடனும் தவிர வேறுமுறை கொண்டாடக் கூடாது. இதில் ஒன்றுக்கொன்று பலிசேதம் ஆனால் சரிசரியாய் நடந்துகொள்ளவும்.

கோனார் வம்சத்திலும், தேவமார் வம்சத்திலும் பேரன் என்றும் சீய்யான் என்றும் முறை கொண்டாடிக் கொள்கிறது. ஒன்றுக்கொன்று சமிசியத்துக்கு பால் சத்தியமில்லாமல் வேறு சத்தியமில்லை. பலி சேதம் ஆனால் தைக்கு ஒரு பணத்துக்கு நெய்யும், ஆடிக்கு ஒரு பணத்துக் நெய்யும் பலி செய்வதன் பலிகாரன் வீட்டிற்கு கொண்டுபோவது. தேவமார்களில் சேதமானால் பலி செய்த கோங்கிமார் தைக்கு ஒரு கிடாயும், ஆடிக்கு ஒரு கிடாயும் கொடுக்கிறது.

பலிகாரனுக்கு இரு பேர்களில் அவன் அவன் ஆயுள் பரியந்தம் வரை கொடுத்து வருகிறது. இதுதான் விளக்கம் கோங்கிமார் வம்சத்துக்கும் தேவமார் வம்சத்துக்கும்.

மற்ற ஜாதிகளுக்கு அவன் அவன் இருக்கிற விரசுக்குத் தகுந்த பலியே தவிர மற்ற ஜாதிக்கு பலி தீர்மானம் நிகதி இல்லை. இந்த மட்டும்தான் பெரியோர்கள் சொல்லத் தெரியும். இதில் ஏதாகிலும் சொல்குறை இருந்தாகிலும் பெரியோர்கள் யோசித்து சேர்த்துக்கொள்கிறது.’

படிக்கப்பட்ட ஏடுகளை உன்னிப்பாக கவனித்தபடி இருந்தான் முத்தணன். அவற்றில் பலவும் அவன் அறிந்ததுதான் என்றாலும் முலைப்பிடிப்பணம் போன்றவை ஏட்டில் இல்லாதது வியப்பாக இருந்தது. பஞ்சாயத்தார்கள் சேர்த்துக் கொள்ளவேண்டியது நிறைய இருக்கிறது என அனுமானித்துக்கொண்டான். ஏடு படிக்கும் முதலிக்கும் எதுவும் சொல்லவில்லையே என யோசித்தவன் ‘விரசு’க்குத் தக்கதுதான் என முடிவு செய்துகொண்டான்.

*

# 61

**வா**னத்திலிருந்து சுருள் சுருளாக இறங்கிய இருள் கருநாகம் **போல** நதியையும், நகரையும் ஊர்ந்து கடந்தது. எதிர்ப்புக் காட்டாத இரை என கோபுரங்களை அவை எளிதில் விழுங்கின. வீதிகளின் வழியே நுழைந்து வாலைச் சுழற்றித் திக்கெட்டும் அடித்தது. ஒளிரேகைகள் மேற்கே அடிவானத்திற்கு அப்பால் சிதறி மறைந்தன. தனது உடம்பின் கதகதப்பிற்குள் நகரைச் சுருட்டிப் புதைத்தது. அதன் அரசாட்சியை ஏற்று விளக்குகள் பணிந்து எரியத் துவங்கின. அது மெல்ல வாலை அசைத்து விளக்கின் சுடரை நடுங்கச் செய்துகொண்டேயிருந்தது. வெல்லமுடியாப் பெரும் சக்தியென மண்ணில் அது நிலை பெற்றபின், நெடுநேரம் கழித்து இருளை நோக்கி நட்சத்திரங்களின் ஒலி கூரிய ஈட்டிகளாய் விரட்டி வந்தது. ஒளியின் வேகங்கண்டு பூமிக்குள் தலை புதைந்து மறைந்துகொண்டு வேடிக்கை காட்டியது இருள். அதனை வெற்றி கொள்ள நட்சத்திர ஒளியிடம் வேறெதுவும் இல்லை. தலையற்ற இருளை வெள்ளிகள் திகைத்தபடி பார்த்துக்கொண்டேயிருந்தன இரவு முழுவதும். ஆனால், இருள் வாலை அசைத்து சுடர்களை நடுங்கச் செய்தபடியே இருந்தது.

சரசரத்துக் கிடந்த மரங்கள் இருளின் மெல்லொலிகளை இலைகளுக்கடியில் சிறு நூலாம்படை போல் பின்னிப் பாதுகாத்தன. கிளைகளில் விரிந்தும் தெறித்தும் விழுதுகளில் வழிந்து காக்கைக் கூட்டின் சுள்ளிகளுக்குள் நுழைந்தும் இருள் நீரைப் போல் பரவியது. சகதிக்குள் மூழ்கும் ஆமையைப் போல இருளின் தண்மைக்குள் உயிரினங்களின் இமைகள் மூடிப்புதைந்தன.

நாய்களும், ஆந்தைகளும் இரவெல்லாம் ஒளியெழுப்பின. மனிதர்கள் இருளுக்குப் பயந்து உறக்கத்திற்குள் தப்பித்து ஒளிந்தனர். உறங்காத மனிதனைத் தேடி நான்மாடக்கூடலின் வீதிகளில் விழித்துக் கொண்டேயிருந்தது இருள். வெளியில் யாருமில்லை.

கோயில் நெடுங்கதவங்கள் தாழிடப்பட்டு விட்டன. வணிகர்கள் கடைகளை மூடி வீடுகளுக்குச் சென்று விட்டனர். நகரத்து வீதிகளில் பகலெல்லாம் அலைந்து திரிந்து கூவி விற்றவர்கள் தங்கள் கிராமத்துக்குத் திரும்பியிருந்தனர். அரசு, புளி, வேம்புகள் அடர்ந்து ஆவணிமூல வீதியின் தென்மேற்கு மூலையில் பெரும் தோப்பென இருந்தது மேங்காட்டுப் பொட்டல்.

வெளியிலிருந்து சரக்குகள் ஏற்றி வந்த மாட்டு வண்டிகள் நிறைபாரத்துடன் மேங்காட்டுப் பொட்டலில் நின்றன. மரத்தடியில் கட்டியிருந்த மாடுகள் அசைபோட்டவாறு நின்றிருந்தன. வண்டிகளுக்கடியில் வைக்கோல் பரப்பிப் படுத்துக்கிடந்தனர் வலவன்கள். புதுமண்டபத்திலும் தெப்பக்குளத்துப் படிக்கட்டுகளிலும் கேட்டுக்கொண்டிருந்த பெருசுகளின் பேச்சுக்குரல் இருளுக்குள் மூழ்கி மறைந்தது. பெரிய வீடுகளின் திண்ணைகள் ஆளரவமற்றுக் கிடந்தன. அடுப்பங்கரை கரும் புகையினூடே நுழைந்து இருளின் நரம்புகளின் மேல் ஓசையின்றி நடந்து திரிந்தன பூனைகள். தெரு விளக்கொளியைச் சுற்றிய பூச்சிகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறந்த வண்ணமே இருளின் மடியில் மடிந்து விழுந்தன.

நிலையில் நின்ற மீனாட்சி சொக்கநாதனின் தேர்ச் சிற்பங்களில் இருந்து கசிந்து பெருகி ஓடிய இருள் மாசி வீதியெங்கும் பரவிக்கிடந்தது. பிளாக்பர்னின் விளக்குத் தூணில் இருந்து கசிந்த ஒளி இருளின் பிடிக்குள் சிறுத்து ஒளிர்ந்தது. மாசி வீதியைச் சுற்றி இருந்த சின்னச் சின்னத் தெருக்கள் இருளுக்குள் சுருள் வாள்போல் செருகிக் கிடந்தன. நதியின் தென்கரையில் வெள்ளாவி அடுப்புக்குப் பக்கத்தில் பொதி சுமந்த கழுதைகள் கால் விறைத்துக் கிடந்தன. நதியின் ஈரக்காற்று இருளோடு குலவியது. இருளும் நதியும் புணர்ந்து சிலிசிலுத்துக்கொண்டன. சிம்மக்கல் செக்கடியில் நள்ளிரவு வரை எண்ணெய் வித்துக்களை அரைத்த மாடுகள் கொட்டத்தில் கால்மடக்கி படுத்துக்கிடந்தன. பச்சரிசிக்காரத் தெருவில் சாரை சாரையாக ஊர்ந்து கொண்டிருந்த எறும்புகள் இருள் அறியாமல் எங்கோ மறைந்தன. உரல்கள் இடிபடும் ஓசை சதா கேட்டுக்கொண்டிருந்த சுண்ணாம்புக்காரத் தெருவின் ஓரத்தில் வெள்ளை நிறத்தில் தேங்கிக்கிடந்த நீரின் விழிப்பை எவ்வளவு முயன்றும் இருளால் அணைக்க முடியவில்லை. சித்திரக்காரத் தெருவில் ஓவியம்போல இருள் நெளிந்து கிடந்தது. ஜவ்வாது மணம் நிரம்பிய தாசி வீட்டின் மஞ்சள் நிற வெளிச்சம் நேரம் ஆக ஆகக் கருமை படர்ந்தது. சொக்கநாதருக்கு பொட்டுக் கட்டப்பட்டவளுக்குப் பக்கத்தில் லாங் கிளாத் வேஷ்டிகள் அவிழ்ந்து கிடந்து அமைதி பெற்றன. தாசிகளின் தெருவில் குதிரைகள் பூட்டிய வண்டிகளின் மணி ஓசை அடங்க ஆரம்பித்தது. இருள் தனது இடுக்குகளுக்குள் காமம் வழிந்தோட வழி அமைத்துக்கொடுத்திருந்தது. அதன் கருமை மிளிரும் பளிங்குகளின் மேல் காமம் தன்னைத்தானே வேட்டையாடி வலியைச் சுவைத்துக்கொள்கிறது. வீட்டுக் கதவுகளுக்கு இடையில் இருந்து காமப் பெருமூச்சுகள் அலையலையாய் வெளியேறி இருளின் மேல் படர்ந்த வண்ணம் இருந்தன. காமம் குடித்து இருள் பித்தேறிக் கிடந்தது. வனாந்தரத்திலும் வெட்டவெளியிலும் சூழ்ந்திருந்த இருள் மட்டுமே நிதானம் கொண்டு தெளிந்திருந்தது. நகரத்து இருள் உணர்ச்சிகளின் சுழலுக்குள் சிக்குண்டு கலங்கியவாறே இருந்தது. வைகை நதியோரம் இருளெனும் கருநாகம் விழுங்கிய இரையாய் மூச்சற்றுக்

கிடந்தது மதுரை.

இருளின் மைந்தர்கள் இரவானதும் நகரத் துவங்கினார்கள். தாதனூர் மந்தையிலிருந்த புளியமரங்களுக்கு பறவைகள் வந்து அடையவும் அவர்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்து கலையத் துவங்கினார்கள். உலைமூடிகளில் கூழைக் குடித்துவிட்டு, வீட்டின் மூலையில் சாய்த்து வைத்திருந்த காவக்கம்புகளை எடுத்துகொண்டு இரவு துவங்கி நள்ளிரவு வரை ஆண்கள் புறப்பட்டுப் போனவாறே இருப்பார்கள். உலக்கைகள் தானியங்கள் இடிக்கும் சத்தம் ஊரின் ஏதோ ஒரு மூலையில் கேட்டவாறே இருக்கும். சந்துகளின் வழியே பாய்ந்தோடும் நாய்களின் குரைப்பொலி ஊரைச்சுற்றி வலம் வந்துகொண்டேயிருக்கும். கூரையின் மேல் அமர்ந்திருக்கும் சேவல் நிலைகொள்ளாமல் கூவிக்கொண்டே படபடத்து வேப்பமரத்துக் கொப்புகளில் தாவி அமரும். காற்றடிக்கும் கணத்தில் காய்ந்த பனை ஓலைகள் சரசரக்கும் இரைச்சல் நாய்களை உசுப்பிவிடும். ஒன்றைப் பார்த்து ஒன்றென சந்துசந்தாக ஊர் முழுவதும் ஓடி கடைசியில் பனைமரத்தடியில் வந்து நின்று அண்ணாந்து பார்த்து குரைத்து முடிக்க அரைச்சாமம் ஆகிவிடும். அமைதி கொள்ளாத தெருக்களில் இருள் அடங்கி ஒடுங்காமல் கலைந்தவாறே இருக்கும். இரவு முழுவதும் புளியமரத்தைக் கடந்து காலடிச்சத்தங்கள் சரசரத்து வெளியேறிக் கொண்டேயிருப்பதால் பறவைகள் அயர்ந்து தூங்குவதேயில்லை. மேற்குப் பரம்புப் புதருக்குள் இருந்து குப்பென்று ஊருக்குள் வரும் இருட்டு சிறிது நேரத்தில் கலைக்கப்பட்டு விடும். ஊருக்குள் இருந்த ஒற்றைத் தண்ணீர் கிணற்றில் மட்டும் இருள் அடர்ந்து கிடக்கும். அதற்குள்ளும் அகால நேரத்தில் தொப்பென விழும் வாளி மொத்த இருளையும் அதிரச்செய்து ஓசையின் வழியே கலைத்து விடும். அதன்பின் நீர் அலம்பியவாறே இரவு முழுவதும் இருளை நிலைகொள்ள விடாது. இருள் அடங்க தாதனூரில் இடமேயில்லை.

பெண்கள் வீட்டின் சிறுவிளக்கை ஏற்றியவுடன் ஆண்கள் தீச்சுடரின் கரும் புகை போல இருட்டுக்குள் ஊர்ந்து வெளியேறினர். பெண்கள் சிறிதுநேரத்தில் திரியை அணைத்துவிட்டு இரவெல்லாம் பசியடங்காமல் இருளைக் குடித்துக் கிடந்தனர். பெண்கள் விழித்துக்கொண்டேயிருக்கும் கிராமங்களில் இருள் சூல் கொள்வதேயில்லை. ஆண்களற்ற கிராமத்தை இரவு முழுவதும் உற்றுப்பார்த்த வண்ணம் இருள் விழித்திருக்கும். கோழிக்குஞ்சுகளைப் போல ஆந்தைகள் பெண்களுக்குப் பழகிப் போயின.

மந்தைக்கல்லில் படுத்துக்கிடக்கும் பெருசுகள் தூக்கம் கொள்ளாமல் எழுந்து நடக்கவும் உட்காரவும் படுக்கவுமாக இருப்பார்கள். இருட்டில் வாழ்ந்து பழகியவர்களின் கால் இருட்டானாதும் நடக்கத் தயாராகிவிடுகிறது. உடல் துவண்டு மரத்தடியில் கிடந்தாலும் கால்களென்னவோ காவல் எல்லை வரை மனத்திற்குள் நடந்தவாறே இருக்கும். மாசிவீதிகளைக் காத்து வந்தவனின் கால்கள் வடம்போக்கித் தெருவை மிதிக்காமல் ஊர்வந்து சேராது. காவிரிக்கரை வரை களவுக்குப்போனவன் சாவுக்காகக் காத்து, பட்டியக்கல்லில் படுத்துக்கிடந்தாலும் தொங்கிக்கொண்டிருக்கும் கால்கள் காற்றில் நடந்தவாறே காவிரிக் கரைவரை போகும்.

உறக்கத்தின் குகைகளைப் பாறைகளைக் கொண்டு அடைத்துவிட்ட

ஆண்கள் இருள் விழுங்கிக்கொண்ட மதுரையை நோக்கி நடந்தார்கள். காட்டுப்பாதைகள் இரவு முழுவதும் சரசரத்த வண்ணம் இருந்தன. பெரும் பாறைகளில் கல்லெறிபட்டு ஓசைகள் சிதறின. பக்கத்துப் புதர்களுக்குள் இருந்த உயிரினங்கள் சப்தம் கேட்டு ஊர்ந்து நகர்ந்தன. கையிலிருந்த கைத்தடியை ஊன்றியவாறே பெருசுகள் நடந்தன. இளவட்டங்களின் கைக்கம்புகள் மண்ணைத் தொடுவதில்லை. நகர் குடிக்காவலுக்கும் போகிறவர்கள் வருடம் முழுவதும் ஒரே சீராக நடந்து போனார்கள். கிராமத்து காவலுக்குப் போகிறவர்கள் அறுவடைக் காலங்களில் ஒரு வேகத்துடனும், பிற காலங்களில் ஒரு வேகத்துடனும் போனார்கள். களவுக்குப் போகிறவர்கள் எப்பொழுதும் எப்பிடிப் போகிறார்கள் என்பதை இருளும் அறியாது.

**க**பாலி மலையின் அடிவாரத்தில் இருந்த காட்டுப்பாதை இரவு முழுவதும் பாதங்கள் பட்டு அதிர்ந்தவண்ணம் இருந்தது. பேயாண்டி இரவுக் கஞ்சியை சூடாகக் குடித்துவிட்டு வேர்த்து அடங்குமுன் நகருக்குள் நுழைந்தான். அவனுக்கு முன்னால் நகருக்குள் இருந்தான் சடப்புலி. மாடக்குளம் பக்கம் வந்து காவக்காரன் பெரியகருப்பனோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு பின் கிளம்பி ஆவணி மூலவீதிகளுக்கு வந்தனர் சோங்குவும் பொன்னாண்டியும், மாசி வீதியில் ஜோடிபோட்டு நடந்துகொண்டிருந்தனர் ஆமையனும் கருத்தாண்டியும். வெள்ளாமைகளுக்கு நடுவில் வரப்புகளில் நடந்து வந்து மேற்கு வெளிவீதியின் வழியே நகருக்குள் நுழைந்தனர் கிழக்குத்திசைக் காவலர்கள் பத்துக்கும் அதிகமானோர். நள்ளிரவு நெருங்கிக்கொண்டிருந்த பொழுதுதான் பெருசுகள் ஒவ்வொரு வராகப் புறப்பட்டு நகருக்கு வந்து சேர்வார்கள். மாயாண்டியும் அவரோடு இரண்டு பெருசுகளும் நகரத்திற்குள் வந்தனர். காவல் வீதிகளுக்குப் பெருசுகள் போவதில்லை. நேராக ராமாயணச் சாவடிக்கோ, செல்லத்தம்மன் கோயில் செக்கடிக்கோ போவார்கள். காவலுக்குப் போன மற்றவர்கள் பெருசுகளின் காவல் வீதிகளின் வழியே ஒரு நடை போட்டுவிட்டு வருவார்கள்.

முன்னிரவில் மேற்குக் கோபுரத்திற்குக் கீழ் ஏற்றப்பட்டிருந்த விளக்கு சன்னமாய் எரிந்தது. வீடுகளைப் பூட்டிவிட்டு மனிதர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். பெரும் மௌனம் தெருவெங்கும் உறைந்து கிடந்தது. பழக்கப்பட்ட அந்த ராத்திரியில் வடக்கு ஆவணி மூலவீதியில் இருந்து மேல் ஆவணி மூல வீதியில் திரும்பி நடந்துவந்தான் பேயாண்டி. அடர்ந்த இருட்டுக்குள் வீடுகள் அப்பிக்கிடந்தன. காரை வீடுகளின் சுண்ணாம்புப் பூச்சு மட்டும் மெல்லக் கண்விழித்து இருளைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவன் இருளையோ வீடுகளையோ பார்க்காமல் ஓசைகளை கவனித்தபடியே நடந்துபோனான். ஓசைகளை இருள் அமுக்கிக்கிடந்தது. களத்தில் காயும் தானியங்களைக் கிளறுவதைப் போல இருளைக் கால்களால் கிளறிப் பார்த்துக்கொண்டே போனான். மண்ணில் பரவிய இருள் வேர் பிடிக்காமல் இருந்தது. தென்கடைசியில் இருந்த மேங்காட்டுப் பொட்டலுக்குள் வந்து முடிந்தது மேல ஆவணி மூல வீதி. அடர்ந்த மரங்களுக்குள் பறவைகளும் அயர்ந்து உறங்கின. மேங்காட்டுப் பொட்டலுக்குள் குடிகொண்டிருந்த கரும் இருட்டுக்குள்ளிருந்து மாடுகளின் மணிச்சந்தம் துல்லியமாய் கேட்டுக்கொண்டிருந்தது.

‘யாரப்பா... மாட்டுவண்டிகளை நிறுத்தியிருக்கிறதோ...ய்’ இருட்டின்

மௌனத்தைக் கலைத்து எதிரொலித்தது பேயாண்டியின் குரல். மரத்தின் மேல் இருக்கும் பறவைகள் சடசடக்கும் சத்தம் கேட்டது.

‘நாங்கதான்யா’ எனச் சொல்லிக்கொண்டே மரத்தடியில் படுத்திருந்த ஒரு பெரியவர் எழுந்திருக்க முற்பட்டார். வண்டிகளின் கீழே தொங்கிக்கொண்டிருந்த விளக்கின் திரி ஏற்றப்பட்டது. வண்டி ஆரக்கால் நிழல்கள் இருட்டுக்குள் நீண்டு விரிந்தன. அசை போட்டுக்கொண்டிருந்த மாட்டின் வாயிலிருந்து நூல்நூலாக ஒழுகிய எச்சில்நுரை விளக்கொளியில் அசைந்து ஆடி மண்ணைத் தொட்டது.

‘நாங்கதான்னா, யாரு?... எந்த வூரு?’

‘நாங்க மேற்க வருசநாட்டுப் பக்க இருந்து வர்றம்பா! கதிரேச செட்டியாரப் பாத்து பொருள வித்திட்டுப் போகாலம்னுட்டு எங்க பெரியவரு வந்திருக்காரு. வண்டி வந்து சேர இருட்டிப்போச்சு. அதுதான் வண்டிய காலையில கழட்டி மூடைகள் எறக்கிக்கிறலாம்ன்னு சொல்லிட்டு, செட்டியாரு வீட்டுக்கே அவரு படுக்கப் போயிட்டாரு. நாங்க மாட்ட அவுத்து கூளம் போட்டுகிட்டு இங்க படுத்துக் கெடக்கிறோம்.’ என்றார் பெரியவர்.

‘அதல்லா... சரி, காவப்பணம் தரவேணாம்மா? இத்தன மூடைய வண்டியில் ஏத்திக்கிட்டு வந்து நீங்க பாட்டுக்குத் தூங்கிக்கிட்டு இருக்கீங்க. ஏதாவது களவு போச்சுன்னா யாரு பொறுப்பாளி’ என்றான் பேயாண்டி.

‘சரிதாம்பா, காலையில பெரியவர் வரட்டும். கேட்டுட்டு காவப்பணத்த கொடுத்துர்றோம்.’

‘ராத்திரில மூடய தூக்கிட்டுப் போயிட்டாங்கென்னா, காலையில நீ காவப்பணம் கொடுத்து என்னவாகப் போகுது?’

அங்குமிங்குமாக வண்டிகளுக்கடியில் படுத்துக்கிடந்தவர்கள் எல்லாம் வந்து பெரியவரைச் சுற்றி நின்றுகொண்டனர். மாடுகளின் கழுத்து மணியோசை விட்டு விட்டு ஒலித்தது. மூடைகளைப் பாரவண்டி வடங்கள் இறுக்கியிருந்தன.

இதற்குப் பிறகும் காவல் பணம் கொடுக்கவில்லையென்றால் என்ன நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியும் எனவே. அந்தப் பெரியவர் ‘உங்க ஊர்ல என்ன கணக்கப்பா வச்சு வாங்குறீங்க’ என்று கேட்டார்.

‘எந்தக் கணக்குன்னாலும் சரித்தான் பெருசு. மாட்டுக்கணக்கு வச்சுக்கிட்டாலும் சரிதான், வண்டிக்கணக்கு வச்சுக்கிட்டாலும் சரிதான்’ என்றான் பேயாண்டி.

பன்னிரண்டு வண்டிக்கும் இவ்வளவு என்று கணக்குச் சொன்ன பெரியவர், கைப்பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்ததை எண்ணிப்பார்க்காமல் வாங்கி இடுப்பில் சுருட்டிவைத்துக் கொண்டான் பேயாண்டி.

‘பெருசு, வெத்தல இத்தல வச்சிருக்கியா’ என்று கேட்டு வாங்கி வெற்றிலைப் போட்டுக்கொண்டே கைக்கம்பை மரத்தில் சாத்தியவாறு மரத்தடியில் சற்று காலார உட்கார்ந்தான்.

‘பெருசு மூடையில என்ன இருக்கு?’

‘நாலு வண்டியில நெல்லு. மீதத்துல சோளமும் கம்பும் இருக்கு. இந்தக் குடும்பம்தான் எங்க ஊர்ல பெரிய சம்சாரிக. மகளுக்கு கல்யாணம் வச்சிருக்காரு. அதுதான் நகநட்ட வாங்கிட்டுப் போகலாம்ன்னு வந்திருக்காரு.’

வெற்றிலை போட்டவாறே சுற்றிச்சுற்றிப் பார்த்துக் கொண்டி ருந்தான் பேயாண்டி. விளக்கு ஆட்டத்தில் நீண்ட ஆரக்கால் நிழல்கள் அங்குமிங்குமாக அசைந்துகொண்டிருந்தன. இருளைப் பார்த்துப் பழகியவனின் பார்வை இருளுக்குள் நீந்திப்போனது. ‘என்னய்யா பெருசு, நீ சொன்ன கணக்கவிட ஒரு வண்டி கூடுதலா இருக்கிற மாதிரி தெரியுத’ என்றான்.

பெரியவருக்கு விக்கென்றிருந்தது. பய இளவட்டமா இருந்தாலும் படுவெவரமா இருகான்னு நெனைச்சுக்கிட்டே ‘அது தொணமாட்டு வண்டியப்பா. அதனாலதான் கணக்குல சேக்கல’ என்றார்.

‘தொண மாட்டு வண்டின்னா அவ்வளவு எளக்காரம்மா போச்சா, அந்த வண்டி மாட்ட எவனாவது ஓட்டிட்டுப் போயிட்டா என்ன பண்ணுவ’ என்று சொல்லிக்கொண்டே இடதுபக்கமாகத் திரும்பி வெற்றிலை எச்சிலைத்துப்பினான். ‘பெரியவரே, நாக்கு சுத்தமா இருக்கணும். இல்லாட்டி மாட்டோட கழுத்துமணி நாக்கு காட்டிக்கொடுத்திரும். அப்புறம் நீ மாட்டிக்குவ’ என்றான்.

இந்த அடர்ந்த இருட்டிலும் மணியோசையை வைத்து மாடுகளைக் கணக்கிட்டு விட்டானே என்று பெரியவர் ஆச்சரியத்தில் உறைந்து போனார்.

‘என்ன பெருசு, பேச்சவே காணோம்‘ என்று வெற்றிலையை மென்றுகொண்டே கேட்டான் பேயாண்டி.

‘மதுரக் காவல்ன்னா எவ்வளவு உஷாரா இருப்பாங்கன்னு சொல்லத்தான் கேள்வி. இன்னெக்கித்தான் பாக்குறேன்’ என்றார் பெரியவர்.

வெற்றிலையை மென்றவாறே எழுந்தான் பேயாண்டி ‘சரி பெருசு, நா வாறேன். பத்திரம்மா படுத்தெஞ்சிருச்சுப் போ’ எனச் சொல்லிக்கொண்டே சாத்தியிருந்த கம்பை எடுத்துக்கொண்டு நிறுத்தப்பட்டிருந்த வண்டியின் மீதிருந்த மூடையில் கைவைத்து ஒரு அமுக்கு அமுக்கினான். ‘நெல்லு மூட ஏத்துன வண்டிய நடுவுல நிறுத்தி வைங்கப்பா. இந்த வெவரங்கூடத் தெரியலயே’ என்று சொல்லிக்கொண்டே நடந்து மேங்காட்டுப் பொட்டலை விட்டு வெளியேறிப் போனான்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்கள் வண்டியை நடுமையமாக இழுத்துக் கொண்டுபோய் நிறுத்த முயற்சித்தார்கள்.

இருளும் ஒலியும் அத்தப்படியானவனைப் பார்த்த பெரியவர், அவன் போய் முக்குத்திரும்பி மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்தார். ‘இவ்வளவு வெவரமான ஆளுக காவல் இருந்தும் மதுரையில களவு நடக்குதுன்னா அவெ எவ்வளவு வெவரம்மா இருக்கணும்’ என்று யோசித்த பெரியவர் வண்டியை இழுத்தவர்களைப் பார்த்து ‘விடுங்கடா. வண்டி அங்கேய நிக்கட்டும்‘ என்றார். மற்றவர்களுக்கு ஏன் என்று புரியவில்லை.

விளக்கின் திரி இறக்கப்பட்டவுடன் நீண்டு பரவிய ஆரக்கால்கள் வண்டி

சக்கரத்திற்குள் சுருங்கிக்கொண்டன. தொணமாட்டின் கழுத்து மணிச்சத்தம் காதுகளில் கணீர் கணீரென்று கேட்டுக்கொண்டேயிருந்தது. பெரியவர் இரவு முழுவதும் இருளைப்பார்த்தபடியே இருந்தார். பேயாண்டி போய்விட்டான். ஆனால் மாட்டின் மணியோசைகள் பலருக்கு சமிக்ஞைகள் ஆகிக்கொண்டே இருப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. இருளின் பொய்த்தோற்றம் விலகியதாக உணர்ந்தார். இருளற்ற வெளியில் அனாமத்தாக மாடுகளும் வண்டிகளும் நிற்பதாக நினைத்து கண்களை மூடினார்,

**பெ**ருமாள் கோவில் தெப்பக்குளத்தின் வடக்குச் சுவரில் நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தான் கட்டையன். தெப்பக்குளத்தை சுற்றியிருந்த மரங்கள் காற்றுக்கு மெல்ல அசைந்து கொடுத்தன. தேய்பிறை நள்ளிரவாதலால் இருள் மண்ணிலும் தண்ணீரிலும் வேர்பிடித்து நின்றிருந்தது. கிணற்றுத் தண்ணீர் போல் இருண்டு அசைவற்றுக் கிடந்தது தெப்பக்குளத்து நீர். தவளைகளின் சத்தம் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. கம்பை கழுத்தின் மேல் வைத்து இரண்டு கைகளையும் அதன்மேல் சுருட்டி முறுக்கு விட்டுக்கொண்டே படிக்கட்டுகளில் இருந்து கட்டையன் எழுந்தான். தவளையொன்று குதித்ததும் நீரின் சத்தம் வெளியின் மௌனத்தைக் கலைத்தது. சிறு அலைகள் படிக்கட்டுகளில் வந்து மோதின. மரத்தின் மேல் இருந்த நாரையொன்று கத்திக்கொண்டே கொப்பை விட்டுப் பறந்து வலதுபக்கமிருந்த மாதா ஆலயத்தின் மேல்கூரையில் போய் உட்கார்ந்தது. இருட்டின் மௌனம் கலைக்கப்பட்டதைப் பார்த்தவாறே கட்டையன் நடந்துபோனான். மேலமாரெட் வீதி, மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி, மேலும் அங்குள்ள குறுக்குச் சந்துகள் முழுவதும் கட்டையனுடைய காவல். அங்கெல்லாம் ஒரு சுற்று போய்விட்டுத்தான் தெப்பக்குளத்தில் வந்து உட்கார்ந்திருந்தான். அதற்குப்பின் புறப்பட்டு மாயாண்டி பெருசோட காவல் வீதிகளுக்குப் போய்விட்டு ராமாயணச் சாவடிக்குப் போய்ச் சேருவான். இதுதான் அன்றாட வழிமுறை. அன்றும் அப்படித்தான் போனான்.

மேலப்பெருமாள் மேஸ்திரி வீதியை அவன் தாண்டும்பொழுது, மேற்கு வெளிவீதியில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. அவன் சத்தத்தை நிதானித்தாறே நடந்துபோனான். நாய்களின் குரைப்பு கொஞ்ச நேரத்திற்குள் அடங்கியவுடன் அவன் அந்த இடத்தை நடந்து கடந்தான். சுவர் ஓரத்தில் ஒரு கருப்புநாய் இளைத்தவாறே படுத்துக்கிடந்தது. இவன் கடந்தபின் எழுந்து குறுக்குச்சந்தில் ஓடியது. இப்பொழுதெல்லாம் வெளிவீதி கட்டுக்குள் கிடக்கிறது. ஆனால், முன்பு இப்படியில்லை.

மாயாண்டிப் பெருசை காவலுக்கு நிச்சயிக்கிறவரை வெளிவீதியிலும் குறுக்குச்சந்திலும் தொடர் களவு நடக்கும். அதில் பெருமளவு நடத்தியது மாயாண்டிப் பெருசுதான். ஆனால், மாயாண்டிப் பெருசோட காவல்ன்னு முடிவான பிறகும் களவுக்கான முயற்சிகள் குறையவில்லை. காரணம் முப்பது வருசத்துக்கும் அதிகாம சுத்தப்பட்டியில் நடந்த களவுகளிலெல்லாம் மாயாண்டியோட கைவரிசைதான் அதிகம். அந்த காவல்காரங்க எல்லாம் பழி தீர்க்க ஆரம்பிச்சாங்க. அது ஒருவிதமான தொழில் முறை சவால். அதை சந்தித்துத்தான் கடக்கணும், தாவிக்கடக்க முடியாது. துவக்க நாட்களில் வெளிவீதியின் நாய்கள் இரவெல்லாம்

குரைத்துக்கொண்டே கிடந்தன. வெளிவீதிகளில் படிந்திருந்த இருள் மர்மமான மனிதர்களை சந்தித்துக்கொண்டேயிருந்தது. இருளுக்குள் ஓசையின்றிப் பறக்கும் காக்கைகள் போல அவர்கள் இருளும் அறியாமல் பறந்து கடந்தனர். கொத்திக்கொண்டு போயினர். விரட்டிச்சென்றனர். இருள் அசைவற்றுப் படிந்திருந்தது. ஒரே ஏறியில் சுருண்டு விழுந்து செத்துப்போன நாய்கள் பல. அதைப் பார்த்த மற்ற நாய்கள் உள்சந்துகளின் வழியே ஓடி நகரின் மையப்பகுதிக்குள் ஒளிந்துகொண்டன. இரவு நேரங்களில் வெளிவீதியின் பக்கம் தலை காட்டுவதேயில்லை.

வெளிவீதியானது கட்டுக்கோப்பான காவலுக்கு உகந்த இடமல்ல. மேற்கு வெளிவீதிக்கு வெளியே அடர்ந்த தோப்புகள் நிறைந்திருந்தன. அதே போலத்தான் வடக்குவெளிவீதியும். வைகையின் ஓரமாதலால் மரங்களும் புதர்களும் செழித்துக்கிடந்தன. மாயாண்டிப் பெருசு காவல் காக்கத் துவங்கிய காலம் பெரும் சவாலாகத்தான் இருந்தது. தோப்புகளுக்கும் புதர்களுக்கும் உள்ளேயிருந்து பல பாதைகள் இருட்டின் வழியே வெளிவீதிக்குள் இறங்கின. மண்ணில் துழாவி நீர் உறிஞ்சும் வேரைப்போலவே இருளில் துழாவி பொருளை எடுத்துச் சென்றனர். இயற்கையாகவே ஒருவன் காவல் காக்கும்பொழுது வசப்படாத இருள் அவனே களவுக்குப் போகும்பொழுது எளிதில் கையடங்கும். மாயாண்டிக்கு இதுவே நிகழ்ந்தது. ஆனால், தலைகீழாக, மாயாண்டி பார்த்திராத களவு இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். களவாட வருகிறவனைத் தவிர புதியவர்கள் வெளிவீதியின் இருட்டுக்குள் ஓசைப்படாமல் அந்தப் பெரியவரைக் கடந்தனர். வடமேற்கு மூலையிலிருந்து பெரிய ஆலமரமொன்றில் நள்ளிரவு ஒரு கல்லெறி விடுவார் மாயாண்டி. விவரமான ஆளாக இருக்கும் ஒருவன் கேட்கின்ற குரல்களின் சத்தத்தைவைத்து என்னென்ன பறவைகள் என்று சொல்லிவிடமுடியும். ஆனால், மாயாண்டி மட்டும்தான் என்னென்ன பறவைகள் என்பதுடன் எத்தனை உருப்படி என்பதையும் சேர்த்தே சொல்வார். தினமும் அந்த இடத்தைக் கடக்கும் பொழுது அந்த சோதனையைச் செய்துபார்த்துவிட்டுத்தான் போவார். அன்றும் அப்படித்தான் நடந்தது. ஆனால், மரத்திற்குள் கொப்போடு கொப்பாக படுத்துக்கிடந்த அடக்கிவீரணன்தான் எத்தனை பறவைகள் என்பதை மட்டுமல்ல, யார் எறிந்தது என்பதையும் பார்த்துக்கொண்டே கிடந்தான்.

அடக்கிவீரணனின் பெயர் தெரியாதவர்கள் திருமங்கலம் பக்கம் யாருமில்லை. வில்லூர்க்காரன். திருமங்கலம் சிதம்பரைய்யரின் வீடுவாசல் தோட்டம், தொரவு என எல்லாவற்றையும் காவல் காத்தவன். திருமங்கலத்தின் மிகப்பெரிய செல்வந்தர் சிதம்பரையர். வில்லூர் அடக்கிவீரணன் காவல் இருக்கும்வரை சிதம்பரையர் வீட்டு வைக்கோல் கட்டைகூட யாரும் கைவைக்க முடியாது என எல்லோரும் தெரிந்து வைத்திருந்தபொழுது, ஒருநாள் அந்த அக்ரஹாரத்து வீட்டில் கன்னம்போட்டு யாரோ நகைப்பெட்டியை எடுத்துச் சென்றுவிட்டனர். செய்கைக்காரன் யாரென்பதை அவ்வளவு விரைவில் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அடக்கிவீரணனின் காவலில் களவு போன செய்தி பரவிய கொஞ்ச நாளில் பூசலப்புரத்துக்காரர்கள் சிதம்பரையரின் தோப்புகளுக்குள்ளும் நுழைந்துவிட்டனர். அடக்கிவீரணனின் பெயர்மொத்தமும் மதிப்பிழந்து போனது. சிதம்பரையர் அக்ரஹாரத்து வீட்டில் காவலையும் தாண்டி கன்னம் போட்டு செய்கை செய்யக்கூடிய

திறமை மாயாண்ட்டிக்குத்தான் உண்டு. எனவே, அவன்தான் செய்திருப்பான் என்று வில்லூர் பெரியவர்கள் தாதனூரில் வந்து பேசிப்பார்த்தனர். ஆனால், மாயாண்டி தான் செய்யவில்லை. என்று மொத்தமும் மறுத்து விட்டான். காரணம், எடுத்த பொருளை குண்டாற்றில் புதைத்துவைத்து விட்டு வந்தவன் மூன்று நாட்களுக்குப் பின் சென்று பார்த்தபொழுது தடம் மறைந்துவிட்டது. எங்கே புதைத்தோம் என்று தெரியாமல் தினமும் சாமத்துக்குச் சாமம் போய் தேடிப் பார்த்துக்கொண்டிருந்தான். இடம் வசப்படவில்லை.

பொதும்பு கோனார்களுக்காக விருதுபட்டிக்கு அப்பாலிருந்து மாடுகளை ஓட்டி வந்த மூன்று பேர் அந்த நள்ளிரவில் குண்டாற்றின் தென்கரையில் மாடுகளை நிறுத்திவிட்டு கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தபொழுது, ஆற்றின் வடகரையிலிருந்த ஒற்றைப் பனைமரத்துக்கடியில் ஒருவன் குழி தோண்டிக்கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். மங்கலான நிலவொளியில் அந்த உருவத்தின் அத்தனை செயலையும் இவர்களால் தூரத்திலிருந்து தெளிவாகப் பார்க்க முடிந்தது. விஷயத்தை எளிதில் ஊகிக்கவும் முடிந்தது.

அந்த காட்டாற்று மணல்வெளியில் நிலவு பால்போல் பரவிக்கிடந்தது. கரைகளில் நின்ற பனை ஓலைகள் சரசரத்துக் கொண்டிருந்தன. மாடுகள் ஆற்றின் கரையை ஒட்டி கிழக்கே திரும்பின. மாடுகளுக்கு நடுவில் ஒருவன் பெட்டியைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு நடந்தான். அவர்கள் திருமங்கலம் வழியாக மதுரைக்கு வருவதைத் தவிர்த்து, கிழக்கே பெருங்குடி வழியாக மதுரையைக் கடந்து பொதும்பை அடைந்தனர். அதற்கு மறுநாள் கள்ளந்திரியில் இருந்த தங்களின் வீடுகளுக்குப் போய்விட்டனர். வெகுநாள் கழித்துதான் அந்தத் துப்பு தெரிந்தது.

வயல்வெளியில் எலிப்பொந்தைப் போல் பனை மரங்களுக்கடியில் மாயாண்டி குழிகளைத் தோண்டிக் கொண்டேயிருந்தான். கன்னம் போட்டு எளிதில் எடுக்க குண்டாற்று மணல்வெளியொன்றும் சிதம்பரையர் வீட்டு கெட்டிச்சுவர் இல்லை என்பது மாயாண்டிக்கும் தெரியும். எனவே, அதற்குப்பின் பொருளைத் தேட குண்டாற்றிற்கு அவன் போகவில்லை.

ஆனால், காத்திருந்த அடக்கிவீரணன் அன்று வந்திருந்தான். தனது பொருளுக்கு ஈடான பொருளை எடுத்துச்செல்வது; மாயாண்டியின் காவலைக் குலைப்பது என்ற முடிவோடு நெடுநேரம் கொப்போடு கொப்பாகப் படுத்தே கிடந்தான்.

அதிகாலை கோழி கூப்பிட கொஞ்ச நேரம் இருக்கும்பொழுது திருப்பரங்குன்றத்தை அவன் கடந்து வில்லூரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். எதிரில் தட்டுப்பட்டவர்களிடம் தாதனூருக்கு துப்புச் சொல்லிவிட்டுச் சென்றான்.

மாயாண்டி தாதனூரில் இருந்து ஆட்களை அனுப்பி பேசிப்பார்த்தார். பொருளை அவனிடமிருந்து வாங்க முடியவில்லை. இரண்டு நாட்களுக்குப்பின் திண்டுக்கல் பக்கம் களவுக்குப்போய் ஒரு பெரும் பொருளைக் கொண்டுவந்து, வில்லூருக்குச் சென்று அடக்கிவீரணனிடம் கொடுத்துவிட்டு வெற்றிலை மாற்றிக்கொண்டு தனது காவல் பகுதியில் களவுபோன பொருளை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் துவக்ககாலத்தில் நடந்ததுண்டு. ஆனால், மாயாண்டி பொருளை இரண்டொரு நாளில் கண்டுபிடித்து மீட்டுவந்துவிடுவான்; எனவே, வெளிவீதி களவு எதுவானாலும் திரும்பி வந்துவிடும் என்று எல்லோருக்கும் தெரிந்துபோனதால் அதன்பின் மாயாண்டியின் காவல்பகுதியில் களவுக்கு வருவது முற்றிலும் இல்லாமல் போனது.

இப்பொழுதெல்லாம் மாயாண்டி காவல்வீதிகளில் பெரிதாக அலைவதில்லை. கருப்பு கோயிலில் இருந்து புறப்பட்டு ராமாயணச் சாவடிக்கு வருகிறவழியில் வெளிவீதி மண்ணை மிதிப்பதோடு சரி. பெருசுக்கு உடம்பும் பழைய மாதிரி இல்லை. ஆனால், பேர் மட்டும் இருள் முழுவதும் நிரம்பிக்கிடந்தது. எறும்புப்புற்றுக்குள் சேகரிக்கப்பட்ட தானியமணிகள் போல அவர் இருள் முழுவதும் களவின் ரகசியங்களைச் சேகரித்து வைத்திருந்தார்.

கட்டையன்தான் தினமும் அவனோட காவல்வீதியைப் பார்த்து விட்டு, வெளிவீதியில் ஒரு நடை போட்டுவிட்டு வருவான். அன்றும் அப்படித்தான். நாய்கள் இப்பொழுதெல்லாம் வெளிவீதிகளில் இரவு முழுவதும் சுதந்திரமாக சுற்றிப் பழகிவிட்டன. வெளிவீதிகளுக்கு வெளியே இருந்த புதர்களிலும், தோப்புகளிலும் பழைய அடர்த்தியில்லை. கிளைகளுக்கிடையில் சூரிய ஒளி விழுந்து பூமியைக் கருக்கி இருந்தது. இருள் கலங்கியவாறு கிடந்தது. வடக்குப்பக்கம் ஆற்றின் கரையை நெருக்கி குடியிருப்புகள் வந்துவிட்டன. இருளின் தொப்புள் கொடியினூடே கள்வன் நுழையும் பாதைகள் அறுபட்டுவிட்டதால் வெளிவீதி முற்றிலுமாகக் காவலுக்கு வசப்பட்டுவிட்டது. எனவேதான் நாயின் குரைப்பொலியைக் கேட்டவாறு நிதானமாக நடந்து போனான் கட்டையன். வடக்குத் திசையில் திரும்பி கடைசிவரை போய்விட்டு அவன் செல்லத்தம்மன் கோயிலுக்கோ, ராமாயணச் சாவடிக்கோ வந்துசேருவான்.

**மை**னாக்கள் ஏராளமாக வந்து அந்த மரத்தில் அடைந்திருந்தன. மஞ்சள் நிற மூக்கழகு புதிய சிம்பு போலக் கிளையெங்கும் முளை விட்டிருந்தது. கீழே இருந்த நீர்நிலையில் தண்ணீர் எப்பொழுதும் கிடக்கும். கிழக்கே காட்டுக்குள் மேய்ச்சலுக்குப் போய்விட்டு ஆடு மாடுகளை இங்கேதான் தண்ணி காட்டுவார்கள். சின்னக் குட்டையாதலால் நீர் கலங்கியவாறே இருந்தது. அதற்கு மைனாக்குளம் என்றே பெயரும் வந்துவிட்டது. கிழக்குப்பகுதி காவலர்கள் இங்கேதான் இரவு தங்கினர். பெரும் காடு மதுரையை முட்டிநின்ற திசை இது ஒன்றுதான். கிழக்கு வெளிவீதிக்கு அப்பால் இருக்கும் காட்டின் இருள் வனாந்தரத்தை விழுங்கி நிற்கும் பேரிருள். காட்டுமரங்களுக்கு ஊடே இருந்து நகருக்குள் லகுவாக நுழையலாம். ஒரு மரக்கொப்பிலிருந்து இன்னொரு கொப்பிற்குத் தாவுவதைப்போல காட்டின் ஆலமரமொன்றிலிருந்து கிழக்கு வெளிவீதியின் காரைவிட்டுக் கைப்பிடிச்சுவருக்குள் வந்து இறங்குவது எளிதானது. தடியான மரக்கிளைகள் இருளின் வழியே கசிந்து கெட்டிக்கட்டிடங்களில் வழிந்தது. ஓசையற்று நடந்து பழகிய கிழக்கத்திக் கள்ளர்கள் இடையில் தடையிருப்பதாக எப்பொழுதும் உணர்ந்ததில்லை. தாவரக்கொடிகளில் ஊர்ந்து செல்லும் எறும்பு போல அவர்கள் பாதம் அதிராமல் வெளியைக் கடந்தனர். காற்றடிக்கையில் அலைகள் கரைகளை முட்டித் திரும்புவதைப்போல இருளின் அசைவொன்றில் அவர்கள்

வீடுகளுக்குள் போய் செய்கை முடித்து காட்டுக்குள் திரும்பினர்.

நகரின் கிழக்குப்பகுதி இருள் மேவியபோதெல்லாம் அரண்டு கிடந்தது. இப்பொழுது நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது. ஆனாலும், எதுவும் எப்பொழுதும் நிகழலாம் என்பதற்கான வாய்ப்புகள் ஏராளம். ஒரு சுழல் போல வாரிச்சுருட்டத் தயாராகித்தான் வந்தது ஒவ்வொரு இரவும்.

மைனா குளத்து ஆலமரத்தின் கீழ் இரவுக்காவலர்கள் வந்து சேர நள்ளிரவுக்கு மேல் ஆகும். விளக்குத்தூணின் மங்கிய வெளிச்சத்தைக் கடந்து வலதுபுறமிருந்த மாதாகோயிலைப் பார்த்த வண்ணம் ஆலமரத்தை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தான் மொக்கச்சாமி. கிழக்கு வெளிவீதி முழுவதும் ஒரு சுற்று போய்விட்டுத்தான் வருகிறான். ஆலமரத்தின் கீழ் கழுவனும், தொரட்டி கருத்தாண்டியும் ஏற்கனவே வந்திருந்தனர். மொக்கச்சாமியும் வந்து சேர்ந்தான். இன்னும் கொஞ்சநேரத்தில் தெற்குப்பகுதியில காவலர்கள் உள்பட பதினைந்துக்கும் அதிகமானோர் இங்கே வந்து சேர்ந்துவிடுவார்கள்.

இந்த மரத்தடியில்தான் சின்னக்கருப்பு கொல்லப்பட்டான். கிழக்கு வெளிவீதிக்கு முதலில் சின்னக்கருப்புதான் காவல். ஒரு அதிகாலையில் சாயக்காரத் தெருவில் இருந்த வீட்டில் களவாடிய பொருள்களோடு மூன்று பேர் வெளியேறியதைப் பார்த்த சின்னக்கருப்பு அவர்களை விரட்டிவந்து ஆலமரத்தின் கீழ் ஒருவனை தூக்கிப் போட்டு அமுக்கினான். வெறிக் கூச்சலுடன் இருவரும் மண்ணில் கட்டி உருண்டனர். ஆலமரத்தின் அடியில் இருந்த பெரிய முண்டில் அவன் தலையை இழுத்து அடித்து மயக்கமடையச் செய்த சின்னக்கருப்பு எழுந்து திரும்புவதற்குள் சின்னக் குத்தீட்டியால் விலாவில் சொருகி மரத்தோடு சாய்த்தான் மற்றொருவன். மல்லாந்து கிடந்தவனின் விலாவில் வழிந்த ரத்தம் ஆலமரத்தின் வேர் ஒன்றின் ஓரமாகவே மண்ணில் ஊர்ந்து வந்தது. மயக்கமடைந்தவனையும் பொருளையும் தூக்கிக்கொண்டு அவர்கள் இருளுக்குள் மறைந்தபொழுது சின்னக்கருப்புவின் உயிரும் பிரிந்திருந்தது. மறுநாள் காலையில் தாதனூர் காவலர்களும் கிழக்குப்பகுதி மக்களும் கூடினர். களவுக்குப் போன இடத்தில் எத்தனையோ சம்பவங்கள் நடந்ததுண்டு. ஆனால் காவலில் இப்படி நடப்பது மிகவும் அரிது.

சின்னக்கருப்பு இறந்தபிறகு அந்த ஆலமரத்தின் பக்கம் யாருமே ஒதுங்குவதில்லை. பகலில் கூட ஆளவரமற்றுத்தான் அந்த மைனாக்குளத்து மரம் தனித்திருந்தது. கிழக்கே ராமநாதபுரம் வரை போகும் வண்டிப்பாதையின் ஓரத்தில்தான் அந்த ஆலமரம் இருந்தது. அதன் நிழலில் இப்பொழுது முன்பின் தெரியாதவர்கள் மட்டும்தான் ஒதுங்கினர். ஐராவதநல்லூர், கள்ளம்பல், நெடுங்குளம் பக்கம் விவசாயம் உள்ள மதுரையின் தனவந்தர்கள் சாயங்காலங்களில் இந்த மரத்தைக் கடந்து நகருக்குள் வர மிகவும் பயந்தனர். அந்தியில் மரத்தைக் கடக்கும் பொழுது கேட்கும் மைனாக்களின் சிலம்பலோசை அவர்களை நடுக்கமுறச் செய்தது. மங்கிய வெளிச்சத்தில் காற்றுக்கு ஆடும் மரக்கிளைகளை சின்னக்கருப்புவின் உருவமாக தூரத்திலிருந்தே பார்த்து பயந்தனர். நள்ளிரவுக்குப்பின் தெருத்தெருவாக சின்னக்கருப்பு நடந்து திரிவதாகப் பேசிக்கொண்டனர்.

துலுக்கர் பூக்காரச்சந்தில் பின்னிரவில் வந்த ஒருவன் வீட்டுக்கதவை

தட்டி காவக்கூலி கொடு என்று கேட்டதாகவும் கதவைத் திறந்த கிழவி ‘காவக்கூலி கேக்க இதுதான் நேரமாப்பா’ என்றதும் ‘இப்பொதான் நான் வர முடியும். விடியறதுக்குள்ள ஆலமரத்துக்குப் போகணும். மைனாவெல்லாம் பட்டினியாகெடக்கு. வேகமாகொடு கிழவி’ என்று சொன்னவுடன், ‘யாரப்பா... சின்னக்கருப்பா!’ என்று சொல்லி பயந்து விழுந்த கிழவி மூச்சுப்பேச்சில்லாமல் கிடந்து மூன்றாம் நாள் செத்துப்போனதாகவும் பல கதைகள் ஆலமரத்தை நோக்கி வந்தன. மேய்ப்பர்கள்கூட மூன்று நான்கு பேராக வந்து ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் காட்டிவிட்டுப்போனார்கள். காற்றில் அசையும் ஆலமரத்தின் விழுதுகளின் கீழ் உருவம் தெரிகிறது என்று உற்றுப்பார்த்தவர்களும் உண்டு. மைனாக்களின் கெச்சட்டம் அதிகமாகக் கேட்கும்பொழுது விதவிதமான காரணத்தை ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டனர். மாலை நேரங்களில் விளக்குத் தூணைச் சுற்றி தினமும் கூடும் பெருசுகள் ஆலமரத்தைப் பார்த்துப் பேசியபடியே இருந்தன. கொலையில் பிரிந்த உயிர் ஆறாது, அமைதிகொள்ளாது என அவர்களுக்குத் தெரியும். ‘சின்னக்கருப்புவின் விலா எலும்பில் மைனாக்களின் கால் நகமோ, மூக்கோ பட்டுவிட்டால் துடிதுடித்து எழுந்து மொத்த மரத்தையும் அசைத்துத் தள்ளுவதாக’ காற்றுக்கு ஆடும் மரத்தைப்பற்றி பேசிக் கலைந்தனர் ஒவ்வொரு இரவும்.

சின்னக்கருப்புவின் கொலைக்குப்பின் அவன் தம்பி மொக்கச்சாமி கீழவெளிவீதிகளை காவல் காக்கத் துவங்கினான். கிழக்கு, தெற்குப் பகுதிக் காவலர்கள் நள்ளிரவுக்குப்பின் இந்த ஆலமரத்தின் கீழ் அவ்வப்பொழுது தங்க ஆரம்பித்தனர். அது காவலுக்கு மிகச்சிறந்த இடமாகத் தெரிந்தது. கிழக்கே மறவ நாட்டிலிருந்து வருகிறவர்களை எல்லையிலேயே கண்காணிக்க ஏற்ற இடமாகவும் அது இருந்தது. ராமாயணச் சாவடி போலவோ, செல்லத்தம்மன் கோயில் செக்கடி போலவோ நள்ளிரவுக்குப்பின் தூங்கும் வேலை இங்கில்லை. காடுகளை உற்றுப்பார்த்தவாறு இவர்கள் முழித்துக்கிடந்தார்கள். அடர்ந்த இருட்டுக்குள் பறவைகளின் சத்தம் ஏதாவது கேட்கத் துவங்கினால், உற்றுப்பார்த்தபடி அந்த ஓசையின் திசையை நோக்கி விரைந்தனர்.

பறவைகள் உணர்ந்துவிடாதபடி நடக்கத் தெரிந்தவர்களுக்கு களவுசெய்வதில் கஷ்டமேதுமில்லை. ஆனால், பொருளை எடுத்தபின் தூக்கிச்செல்கையில் பறவைகள் அறியா வண்ணம் நடந்துபோக வாய்ப்பில்லையாதலால் விரட்டப்பட்ட பலர் பொருட்களை விட்டுவிட்டு ஓடினர். மைனாக்குளத்திலிருந்து வைகைக் கரை வரையுள்ள காட்டுப்பகுதியில் பட்சிகளின் குரல்கள் வழிகாட்ட இவர்கள் காவல் காத்துக்கிடந்தனர்.

கிழக்குப்பகுதி காவல் கெடுபிடி அதிகமானவுடன் தனிக்களவு குறைந்து கூட்டுக்களவு அதிகமானது. கீழ்நாட்டு மறவர்களுடன் மேலூர் கள்ளர்களும் சேர்ந்துகொண்டனர். தானிய மூட்டைகளைத் தலையில் தூக்கியவாறு வெறிபிடித்து ஓடி காட்டுக்குள் மறைந்தனர். அவர்களின் பசித்த வயிறு மதுரையின் ருசியை உணர்ந்து ஒவ்வொரு இரவும் கடித்துக் குதறியது. குடிக்காவலர்களின் குத்தீட்டிகள் இருட்டுக்குள் பாய்ந்து புதருக்குள் சொருகிக்கிடந்தன. எடுத்த பொருளை மாரியம்மன் தெப்பக்குளத்து மைய மண்டபத்திலோ, வண்டியூருக்கு அருகில் ஆற்றின்

நடுவில் உள்ள கல்மண்டபத்திலோ வைத்துப் பிரித்துக்கொண்டு வெவ்வேறு திசைகளில் உள்ள ஊர்களுக்குப் போய்ச்சேர்ந்தனர்.

ராமசாமி செட்டியார் வீட்டில் கொள்ளை நடந்த கொஞ்ச நேரத்தில் மைனாக் குளத்து ஆலமரத்தின் கீழ் பத்துக்கும் அதிகமான காவக்காரர்கள் இருந்ததால் பங்கு வைக்க தெப்பக்குளத்தின் மைய மண்டபத்தில் கூடுவர் என ஊகித்து, சிறிது நேரத்திற்குள் அங்கே ஓடிச் சென்றனர். நிலவொளியில் யாரும் பார்த்துவிடாதபடி நீரற்றுக்கிடந்த தெப்பக்குளத்தில் படுத்துக்கொண்டே ஊர்ந்துபோய் மைய மண்டபத்தில் ஏறிச் சுற்றி வளைத்தனர். இருளின் உள்ளங்கையில் பறவைகளின் வெருண்ட குரல்களுக்கிடையில் பயங்கர கத்தல்களுடன் மாறி மாறி வெட்டுகள் விழுந்தன. கீழே குதித்து நாலா திசையிலும் வெட்டுண்ட காயங்களுடன் அவர்கள் ஓடி மறைந்தனர். இருள் அவர்கள் அரவணைத்துக் காத்துக்கொண்டது. மைய மண்டபத்தில் நின்றவாறு, தெப்பக்குளத்தின் கரைச்சுவர் படிக்கட்டுகளிலும் வெளிச்சுவரிலும், அவர்கள் ஏறிப்போவதைப் பார்த்தபடி குடிக்காவலர்கள் நின்றுகொண்டிருந்தனர். இறங்கி அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டி ஓடினால் சேதாரம் அதிகமாகும். எனவே, கருத்தாண்டிக்கும் மாயிக்கும் விழுந்த வெட்டுக்காயத்தோடு பொருளை மீட்டுக்கொண்டு வந்துவிட்டனர்.

அதற்குப்பின் கிழக்குத்திசைக் காவலர்கள் இரவு தங்குவதற்கான இடமாக மைனா தெப்பக்குளத்து ஆலமரம் நிரந்தரமானது. அதைக் கள்ளர்களும் கண்டறிந்து கொண்டனர். ஆனால், பங்கு வைப்பதற்கான இடத்தை அவர்கள் மாற்றியபின் எங்கேயென இவர்களால் அறியமுடியவில்லை. ஆனால், முன்பு போல் ரத்த பலி கேட்டும் காவல் இப்பொழுது அதிகமாக இல்லை. கொஞ்சம் குறைந்திருக்கிறது. என்றாலும் குடிக்காவலர்களுக்கு சவாலான பகுதியாக கிழக்குப் பகுதியே இப்பொழுதும் இருக்கிறது. ஆண்டியும், தொரட்டி கருத்தாண்டியும் உட்கார்ந்து காலாறப் பேசிக்கொண்டிருந்தபொழுது, மொக்கச்சாமியும் அங்கு வந்து சேர்ந்து, ஆலமர வேர் ஒன்றில் கையை ஊன்றி உட்கார்ந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் மற்றவர்களும் வந்துவிடுவார்கள்.

‘இந்தப் பத்து வருசமாதான் நிர்வாகம் ஓரளவுக்கு நியாயமா நடக்குது. இல்லைன்னா இன்னேரம் இவங்ய அடிச்ச கொள்ளை அளவில்லாம போயிருக்கும்.’

‘அந்த ஆண்டவனுக்கே அடுக்காம தான் வெள்ளக்காரன விட்டு இந்த நல்ல காரியம் செய்ய வெச்சிருக்கான்.’

‘நிர்வாக கோஷ்டிக்கு மதுர ஆதீனத்தை தலைவராப் போட்டதும் ஒரு வழிக்குச் சரிதான். ஆனால் ஐஞ்சு பேர் கோஷ்டியில் கூடுதலா நாம இருந்தா முறையா இருக்கும்.’

பேச்சு மாறிமாறி கோயில் நிர்வாகம், பிராமணர்களால் நடத்தப்பட்ட கையாடல்கள், முறைகேடுகள், புதிதாக அரசு நிர்ணயித்துள்ள நிர்வாகக் குழு ஆகியவை பற்றியே இருந்தது. முத்தையா பிள்ளைதான் கார்சாரமாகப் பேசிக்கொண்டேயிருந்தார். ராஜரத்தினம் பிள்ளை ஊம் கொடுத்துக் கேட்டிக்கொண்டிருந்தார். மற்ற பெருசுகளெல்லாம் தூங்கிவிட்டன.

குதிரையின் மீதுமர்ந்த நாயக்க வீரனொருவன் வாளை உயர்த்தியபடியிருக்கும் சிலையின் காலிலே சாய்ந்தவாக்கில் உட்கார்ந்திருந்த முத்தையா பிள்ளை பட்டமார் தெரு பெரிய மனிதர்களின் வண்டவாளங்களை கொதித்துப்போய் சொல்லிக்கொண்டிருந்தார். மற்றவர்களெல்லாம் இரவு நேரத்தில் வழக்கமாகப் புதுமண்டபத்தில் கூடுகிற பெருசுகள்தான். பேசியவாறே படுத்துறங்கி விட்டு காலையில் எழுந்து வீடுகளுக்குப் போவார்கள். அன்று நள்ளிரவு வரை பேச்சு நீண்டது.

முத்தையா பிள்ளைக்கு வயது எழுபதைத் தாண்டும். கோயில் விஷயங்கள், அரசு நிர்வாக விஷயங்கள் போன்றவற்றை உள்ளங்கையில் வைத்திருப்பவர். பாதிரிமார்கள் கட்டிய பள்ளிக்கூடத்தில் தனது பேரனைத் துணிந்து சேர்த்தவர். நகரின் வசதியான குடும்பங்களில் அவருடையதும் ஒன்று. அன்று இரவு காத்து வாங்கிக்கொண்டே மெல்ல நடந்து புதுமண்டபத்திற்கு வந்தவர் அப்படியே பேசிக்கொண்டே இருந்துவிட்டார். கேட்டபடியே மற்ற பெருசுகள் தூங்கிவிட்டன. ராஜரத்தினம் பிள்ளை மட்டும் ‘எப்பொழுதும் வராத பெரியவர், இன்று வந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது எல்லோரும் தூங்கிவிட்டால் நல்லா இருக்காது’ என நினைத்து தூக்கத்தை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்தி ஊ...ம் கொடுத்துக்கொண்டிருந்தார். கிழக்குக் கோபுரத்தில் முட்டிய காற்று புதுமண்டபத்திற்குள் நுழைந்து இதமாக வருடி வெளியேறியது.

வடக்கு சித்திரை வீதியில் இருந்து திரும்பி புதுமண்டபத்தை நோக்கி விருமாண்டி வந்துகொண்டிருந்தான். கிழக்குக் கோபுரத்தின் கீழ் இரண்டு விளக்குகள் சிறுந்து எரிந்தன. விளக்கின் மெல்லிய ஒளி புதுமண்டபத்தின் முகப்புத்தூண்களின் மீது மஞ்சள் நிழலாய்ப் பரவியிருந்தது. இருளுக்குள் தலைநுழைத்துக்கொண்ட கோபுரத்தின் மேல் பகுதியை அண்ணாந்து பார்த்தவாக்கில் வந்த விருமாண்டி புதுமண்டபத்திற்குள் நுழைந்தான். பெரியவரின் பேச்சுச்சத்தம் சன்னமாய் அவன் காதில் கேட்டது. தூக்கத்தின் விளிம்பில் இருந்த ராஜரத்தினம் பிள்ளை சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கேட்டார் ‘யாரப்பா...காவலா?’

‘ஆமாய்யா... விருமாண்டிதான்.’

குத்தவைத்த நிலையில் உட்கார்ந்திருந்த, கீழேயுள்ள சிலையின் கால்களுக்கிடையில் கம்பைச் சாய்த்துவிட்டு, மண்டபத்தின் மீதேறி உட்கார்ந்தான்.

‘என்ன ஒரு சுத்து போயிட்டு வந்துட்டயா?’

‘ஆமா. இனி நடுசாமத்திற்குப் பிறகு ஒரு சுத்து போகணும்.’

‘குமாரம் பெரியஅய்யங்கார் வீட்டு களவு விசயம் என்னாச்சு? ஏதாவது துப்புகிப்பு கிடச்சுதா, இல்லாட்டி உங்களுக்குள்ள கை மாத்திக்கிட்டீங்களா?’ என்று தொடங்கினார் ராஜரத்தினம் பிள்ளை.

‘துப்புக் கிடைக்காம எப்படி இருக்கும். துப்பெல்லாம் கிடச்சிருச்சு. ஆனா அதுல வேறு ஒரு சிக்கல்...’

‘ம்...?’

‘எங்க ஆளுக களவுக்குப் போற வழி அது. அதுல அம்பலகாரர் காவல்ன்னா இந்த சிக்கல் இருக்கத்தான் செய்யும். களவுக்குப் போயிட்டு

எதுவும் கிடைக்காம திரும்பி வர்ற வழியில் இருக்கிற ஊர்ல ஏதாவது கை வைக்காம எப்படி வர்றது! அடுத்த் நாள் கஞ்சிக்கு அவெ என்ன பண்ணுவான். அம்பலகார்ர் காவல்தான், நமக்கு என்ன பிரச்சினை வரப்போகுதுனுட்டு இருட்டுக்குள்ள கையவிட்டு எதையாவது தூக்கிட்டு வரத்தான் செய்வாங்க.'

'அப்ப அன்னக்கி நடந்தது உங்க வேலதானா?'

'ஆமா. முத்தனம்பட்டியில் இருந்து தாதனூர் மாமெ வீட்டுக்கு விருந்தாடி வந்தவெங்கே, ராத்திரி வடக்க களவுக்கு சேந்து போயிருக்காங்கெ. நடுச்சாமத்துக்கு மேல் ஆன உடனே, நாங்க ஊருக்குப் புறப்படுறோம்னு சொல்லிட்டு, போன இடத்திலே இருந்து விருந்தாடி வந்த வங்கெ மட்டும் திரும்பிட்டாங்கெ. திரும்புற வழியில அய்யங்காரு வீட்டு நாயீ சும்மா இருந்து தொலையாம இவங்கள படுபத்து பத்திருக்கு. ரெண்டு ஏறி விட்டிருக்காங்கெ. நல்லா ஏறி வாங்குனப் பெறகும் பாஞ்சு வந்திருக்கு. பின்னத்தில் கால பிடிச்சு ஒரு கத்து சுத்தி மொட்டக்கெணத்துல வீசி எறிஞ்சிட்டு சுவரேறி குத்திச்சிட்டாங்கெ. ஆளுக்கு ஒண்ணா பொருள தூக்கிக்கிட்டு மேக்க வைகை ஆத்தோட நடந்து ஊருபோயி சேந்துட்டாங்கெ. அடுத்த நாள் காவக்கார அம்பலம் தாதனூருக்கு விசாரிக்க வந்தாரு. நாங்க யாரும் செய்யல. விருந்தாடி வந்தவங்கெ திரும்புற வேளயில ஏதாவது கை வச்சாலும் வச்சிருக்கலாம். வேணும்னா விசாரிப்போம்னு சொல்லி அனுப்புச்சுட்டோம்' என்றான்.

'போன வாரம் எங்க குமாரம் வயலுக்குப் போனப்ப பெரிய அய்யங்காரப் பாத்தேன். அப்பத்தான் விசயத்தைச் சொன்னாரு. அதான் உங்கிட்ட கேட்டாத் தெரியுமேன்னு கேட்டேன்' என்றார் பிள்ளை.

'இன்னும் ரெண்டு தடவ காவக்கார அம்பலம் தாதனூருக்கு அலைவாரு. அதுதான் மிச்சமாகும்' என்றான் விருமாண்டி.

விடாமல் பேசிக்கொண்டிருந்த முத்தையா பிள்ளை இவர்களின் பேச்சைக் கேட்டு சற்று நேரம்தான் மௌனமாக இருந்தார். அவர்பேச்சை நிறுத்தவேண்டும் என்பதற்காகவே ராஜரத்தினம் பிள்ளை குமாரம் களவைப் பற்றி இழுத்து கொக்கிபோட்டார்.

'சரிப்பா நேரமாச்சு. நா வீட்டுக்கு கிளம்புறேன்' எனச் சொல்லி கையை உயர்த்தி மெல்ல எழுந்து புதுமண்டபத்து படிக்கட்டுகளில் நிதானமாக இறங்கி நடந்தார் முத்தையா பிள்ளை. 'நாலு எட்டுலதான் இருக்கு வீடு. பாத்து பைய்ய அவரா போயிருவாரு' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார் ராஜரத்தினம் பிள்ளை.

கோயில் கோட்டைச்சுவரை ஒட்டியிருந்த மரக்கிளைகள் பலமாக அசைந்து ஆடின. காற்று நேராக கிழக்குக் கோபுர வாசல் கதவுகளின் மேல் மோதியதில் சிறு மணிகளின் சத்தம் சலசலத்துக் கேட்டது. புதுமண்டபத்திற்குள் அதே வேகத்தில் திரும்பி வீசியது காற்று. 'சரிப்பா... நான் அப்படியே தூங்குறேன்' எனச் சொல்லி துண்டைத் தலைக்கு அணவாக வைத்து 'அப்பனே சிவசிவா...' எனச்சொல்லிக் கொண்டே படுத்தார் ராஜரத்தினம்பிள்ளை.

புதுமண்டபத்தின் விதானத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் விருமாண்டி. சிறிது நேரத்திற்குப்பின் கிழக்கு ஆவணி

மூல வீதியில் யாரோ நடக்கிற சத்தம் கேட்டு, பின்பக்கம் திரும்பி உற்றுப்பார்த்தான். கையில் கம்பைப் பிடித்த வாக்கில் நடந்து போய்க்கொண்டிருந்த பேயாண்டியை, விருமாண்டியின் குரல் பிடித்து நிறுத்தியது.

‘மேங்காட்டுப் பொட்டல தாண்டுற வரைக்கும் காத்தே இல்ல. இங்கிட்டு வந்தா என்னா மாதிரி காத்தடிக்குது’ எனச் சொல்லிக் கொண்டே போயாண்டி நடந்தான். அவனோடு விருமாண்டியும் சேர்ந்துகொண்டான். இருவரும் ராமாயணச் சாவடி நோக்கிச் சென்றனர்.

**ரா**மாயணச் சாவடி இரவெல்லாம் குடிக்காவலர்கள் கிடை போட்டுக் கிடக்கும் இடம். மதுரையின் இருள் வடம் அங்குதான் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. குடிக்காவலர்களும், சீய்யான்மார்களும் ஆளுக்கு ஒரு பக்கமாக பிடித்து வடத்தை இரவெல்லாம் இழுக்கின்றனர். நான் மாடக்கூடலின் வீதிகளின் திரிகிற இருளின் கழுத்தில் வடம்போட்டு சாவடியின் தூண்களின் தாதனூர்க்காரர்கள் கட்டி வைத்திருந்தனர். உள்தெருக்களில் ‘இருளானது பிறந்த கன்றுக்குட்டிபோல கழுத்துக் கயிறு இல்லாமல் வாய்க்கூடு மட்டும் போட்டு விடப்படுகிறது. கறவைப் பசுக்கள் தொழுவத்தில் வரிசை வரிசையாகப் படுத்துக்கிடப்பதைப் போல, ராமாயணச் சாவடியில் கட்டப்பட்டு மதுரையின் வீதிகள் தோறும் இருள் படுத்துக்கிடந்தது. படுத்திருக்கும் இருளை பார்வையினால் மட்டும் நம்பிவிடமுடியாது. ஒரு சிறு வாய்ப்பு கிடைத்தால் கூட அவனை எளிதில் ஏமாற்றிவிடும். ஆனால், அவன் அந்த வாய்ப்பினைக் கொடுப்பதேயில்லை. அவனை இருளோ, இருளை அவனோ நம்பி ஏமாறுவதில்லை.

இரவெல்லாம் ராமாயணச் சாவடியில் உட்காரும் குடிக்காவலர்கள் இருளைப் பற்றித்தான் பேசுகிறார்கள். கோனா ர்கள் பசுக்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள். பேச்சுவாக்கில் இருவரும் கயிற்றை மாற்றிப்பிடித்துக்கொண்டு போய் வருகின்றனர். பசுக்கள் குடிக்காவலர்களிடமும், இருள் கோனார்களிடமும் மாட்டிக்கொள்கிறது. இருளைக் கறக்கத் தெரியாமலும், பசுக்களை மேய்க்கத் தெரியாமலும் இருவரும் மீண்டும் சாவடிக்கே கொண்டுவந்து விடுகின்றனர். அதற்குள் விடிந்துவிடும். மீண்டும் மறுநாள் இருள் கூடியபிறகு சீய்யான்மார்களும் தாதனூர்காரர்களும் வந்து சேருகிறார்கள். இப்படியே காலம் ஓடுகிறது.

அன்றும் அப்படித்தான். இருள்கூடி, உச்சிக்கு ஏறியபோது மாயாண்டியும் மற்ற பெருசுகளும் சாவடியை நோக்கி வந்தனர்.

‘என்னய்யா, சீய்யாங்கெல்லாம் இன்னும் தூங்கலயா’ எனக்கேட்டுக்கொண்டே மாயாண்டி படியேறினார்.

‘தூக்கம் வரல பெருசு. அதுதான் பேசிக்கிட்டே உக்காந்துட்டோம்‘ என்றார் அழகப்பக் கோனார்.

‘எங்க, பெரிய சீய்யானைக் காணோம்‘ என்று கிருஷ்ணக் கோனாரைக் கேட்டார் மாயாண்டி.

‘அந்தா அந்த ஓரத்துல படுத்துக்கெடக்கிறது அவருதான். மனுசெ அசதியா இருந்திருப்பாரு போல. வந்த உடன் படுத்துட்டாரு. நானும் ராமசாமிக் கோனாரும்தான் பேசிக்கிட்டே இருந்தோம். கொஞ்ச நேரத்திலே அவரும் போயிட்டாரு’ என்றார்.

அவர் வந்து நாலஞ்சு நாள் ஆகப்போகுது. தெக்க தின்னவேலிப் பக்கமா போயிருந்தாராம். அங்கிட்டு இந்த வருசம் நல்ல வெளச்சல் போலிருக்கு கூட ஒரு மாசம் அங்கே இருந்துட்டாரு. குடும்பத்தெல்லாம் கிடயிலே விட்டுவிட்டு இவரு மட்டும்தான் வந்திருக்காரு' என்றார் அழக்கப்பக் கோனார்.

'தெக்க களவுக்குப் போற எங்காளுக வெள்ளாம ஒண்ணும் சரியில்லேன்னும் சொல்றாங்கே. கெடக்கிப்போற உங்க ஆளுக வெளச்சல் நல்ல இருக்குன்னு சொல்றாங்கெ' என வியப்பு தெரிவித்தார் மாயாண்டி.

'நாளைக்கு ராமசாமிக் கோனாரப் பாத்து தெக்க எங்கிட்டு வெள்ளாம நல்லாயிருக்கின்னு கேட்டுக்கிருவோம்' என்றார் மாயாண்டியோடு இருந்த மற்றொரு பெருசு.

மாயாண்டியும் மற்ற பெருசுகளும் சாவடிக்கு வந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கட்டையன் வந்துவிட்டான். பேச்சு எதிலும் அவன் கலக்கவில்லை. நேராகத் தென்கிழக்கு மூலையில் கம்பை சாய்ந்து வைத்துவிட்டு, கிழக்குச் சுவரோரத்தில் படுக்கத் தயாராகி விட்டான். கொஞ்சநேரத்தில் சோங்குவும் பொன்னாண்டியும் வந்தார்கள்.

படிக்கட்டுகளில் ஏறும்போதே 'பெருசோ...ய்' என்ற குரலோடு தான் சாவடிக்குள் நுழைந்நான் சோங்கு. இரண்டாவது தூணுக்கு நேராக காலை நீட்டி உட்கார்ந்திருந்த முத்தையாக் கோனார் 'காலுல தட்டிப்போடாத. தாண்டிப் போ' என்றார். இருட்டில் முகத்தைக் கூடப் பார்க்காமல் 'காலுக்கு என்னாச்சு சீய்யான்' என்றபடி தூண் ஓரமாக உட்கார்ந்தான் சோங்கு. முத்தையா மாடு ஈன்ற கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார். பொன்னாண்டி மாயாண்டிப் பெருசுக்கு அருகில் உட்கார்ந்து அழகப்பக் கோனாரிடம் பேச்சைத் துவக்கினான். இரவு இவர்களின் கதையைப்போல நீண்டு போய்க்கொண்டேயிருந்தது.

கம்பை சடசடவென படிக்கட்டுகளில் தட்டிக்கொண்டே மேலேறிய சடப்புலி 'கருத்தாண்டி இங்க இருக்கானா, செல்லத்தம்மன் கோயிலுக்குப் போயிட்டானா' என்றான்.

'இங்க இல்லடா வெண்ண. அங்க போயி பாரு' என்று உள்ளே இருந்து குரல் வந்ததும் விருட்டென இறங்கி கிழக்குப் பக்கமாகப் போய் விட்டான். ஒரு விட்டிலைப்போல சட்டென வந்து பின் சட்டெனத் தாவி இருளுக்குள் மறைந்தான்.

பொழுது நள்ளிரவைக் கடந்தது. அழகப்பக் கோனார் பேச்சுக் கொடுத்துக்கொண்டே தூணில் சாய்ந்தவாறு தூங்கிப்போனார். மற்றவர்களெல்லாம் படுத்துவிட்டனர். தெற்கு பார்த்து கால் நீட்டி உட்கார்ந்திருந்த மாயாண்டிப் பெருக 'என்னாங்கடா எல்லாம் அதுக்குள்ள தூங்கிட்டீங்க' என்று விளக்கைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தார். நாய் குரைத்து அடங்கியது. படிக்கட்டுகளின் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

பேயாண்டியும், விருமாண்டியும் சாவடிக்குள் நுழைந்தனர். வலது ஓரத்திலிருந்து தூணில் கம்பைச் சாத்தி வைத்துவிட்டு பெருசுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தனர். இருவரும் வந்த சத்தத்தில் தூக்கம் கலைந்த அழகப்பக் கோனார். விளக்க அணச்சுட்டு தூங்க வேண்டியது தான் பெருசு...' என்றார்.

‘இருட்டுல எப்படி சீய்யான் தூங்குறது’ என்றான் மாயாண்டி.

‘தூங்கவா சொன்னாங்க, சும்மா படுக்க வேண்டியதுதான்’ என்று பேச்சைத் துவக்கிய விருமாண்டி ‘அந்த ராஜரத்தினம் பிள்ளை குமாரம்களவு பத்தி நோண்டுனாரு’ என்று ஆரம்பித்தான்.

‘போயி முத்தனம்பட்டிக் காரெங்கெ கிட்ட வாங்கிட்டுப் போங்கடான்னு சொல்ல வேண்டியதுதான். அம்பலக்காரெங்களுக்கு காவகொடுப்பாங்கெளாம். அப்புறம் நம்மகிட்ட வந்து துப்பு விசாரிப்பாங்கெளாம்‘ என்றார் கோபத்தோடு.

பேயாண்டி காவப்பணம் வசூலிப்பதை சொல்லத் துவங்கினான். ‘வருசநாட்டுக் காரெங்கெளாம், பதிமூணு வண்டியில மூடய ஏத்திக்கிட்டு வந்து மேங்காட்டுப் பொட்டல்ல படுத்துக் கெடக்காங்கெ. காவப்பணம் கொடுங்கடான்னு கேட்டா, விடியட்டும் எங்க பெரியவரக் கேட்டுட்டுக் கொடுக்குறோம்னு சொல்றாங்கெ. அப்பொறம் போடுறதப் போட்டபெறகு ஒழுங்கா கொடுத்தாங்கெ’ என்றான்.

‘இவெ யாருடா வெவெரங் கெட்டவனா இருக்கான். விடிஞ்சப் பெறகு கேட்டுட்டு கொடுக்குறோம்னு சொன்னாங்கெள, பேசாம சூத்தப் பொத்திக்கிட்டு வந்திருந்தைன்னா, இன்னேரத்துக்கு கெளம்பி ஒரு நாலு வண்டிய உருட்டிக்கிட்டுப் போயிருக்கலாம்டா, அத விட்டுப்புட்டு இந்தா, இம்புட்டுக் காவப்பணம் வாங்கிட்டு வந்தானாம் வெளக்கெண்ண’ என்றான் சோங்கு.

‘கரும்பு கட்டா இருந்தா இழுத்துக்கிட்டு வரணும், நக்கிட்டு வரக்கூடாது’ என்றார் படுத்துக்கிடந்த பெருசு.

‘இவனெ கம்பம் பக்கம் அனுப்பிட்டு சின்னவன இங்க வச்சிருந்திருக்கலாம்‘ என்றது இன்னொரு குரல்.

பேயாண்டி வம்பில் மாட்டிக்கொண்டதை உணர்ந்து பேச்சை நீட்டாமல் மெல்ல படுக்கத் தயாரானான். விளக்கு சிறுந்து எரிந்து கொண்டிருந்தது. தூண்களுக்கிடையில் அங்குமிங்குமாக எல்லோரும் படுத்துக்கிடந்தனர். மாயாண்டிப் பெருசு தூணில் சாய்ந்தவாறு கண்களை மூடினார். முத்தையாக் கோனாரின் முனகல் அவ்வப்போது கேட்டது. சாவடி முழுக்க அமைதியான கொஞ்ச நேரத்தில் கிழக்குப் பக்க சுவரோரத்தில் படுத்துக்கிடந்த கட்டையன் எழுந்து உட்கார்ந்தான். சுற்றிலும் படுத்துக்கிடப் பவர்களை ஒரு பார்வை பார்த்தான். கண்களைக் கசக்கி விட்டு எழுந்து சாவடியின் வடகிழக்கு மூலைக்குப் போனான் தன்னுடைய கம்பை எடுக்க. இருட்டுக்குள் ராவியபொழுது, சாத்திவைக்கப்பட்ட கம்புகளில் ஒன்று சரிந்து, குப்புறப் படுத்துகிடந்த சோங்குவின் பின் மண்டையில் விழுந்து தரையில் உருண்டது. தலையை தூக்கிப் பார்த்த சோங்கு ‘போய்த் தொலடா’ என்று சொல்லிக்கொண்டே கம்பைக் கீழே தள்ளிவிட்டுப் படுத்தான். கம்பை எடுத்துக்கொண்டு சாவடியை விட்டு கீழே இறங்கி கட்டையன் மேற்கு இருட்டுக்குள் நடந்து மறைந்தான். வெளிவீதி அவனை அழைத்துச்சென்றது.

கட்டையன் புறப்பட்டுப் போன சத்தத்தில் தூக்கம் கலைந்த கிருஷ்ணக் கோனார் எழுந்து தெற்குச் சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்தார். வெளியில் இருளுக்குள் மூழ்கிக்கிடந்த மாசிவீதியை உற்றுப்பார்த்தபடி

இருந்தார். நீண்ட நேரத்திற்குப் பின் எழுந்து விளக்கின் திரியை விரல்களால் நசுக்கி அணைத்தார். சாவடியைவிட்டு வெளியே வந்து மேற்கே அண்ணாந்து நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டே சிறுநீர் கழித்தார். பின் சாவடிப்பக்கம் திரும்பி 'மேற்க சாட்ட போட்டிருச்சு. எந்திரிங்கப்பா' என்று சொல்லிக்கொண்டே அவரது வீட்டை நோக்கி நடந்தார்.

தாதனூர்க்காரர்கள் எழுந்து இருளைப் பாயெனச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு அம்மணமலை ஆலமரத்தடி நோக்கி நடக்கத் துவங்கினார்கள். ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் கோயில் செக்கடி, மைனா தெப்பக்குளத்து ஆலமரமென எல்லா இடங்களில் இருந்தும் இருளின் காவலர்கள் கலைந்தனர். சாட்டக்கம்பு வெள்ளி விழுந்ததைப் பார்த்ததும் நடக்கத் துவங்கியவர்கள், கரையான் கரைய ஆரம்பிக்கும் பொழுது மாடக்குளத்தையோ பொன்மேனி உடைமரக்காட்டையோ தாண்டியிருப்பார்கள். கோழி கூப்பிடுவதற்கு முன்னாதவே தாதனூர் ஆலமரத்தடி வந்து சேர்ந்து விடுவார்கள்.

இருள் உதிரத் துவங்கும்போது ஆலமரத்தடி திசையெல்லாம் இருந்து தன் மைந்தர்களை அழைத்து அரவணைத்தபடி இருக்கும். கோழி கூப்பிடுவதைத் தொடர்ந்து ஆலமரத்திலிருக்கும் பறவைகள் முழுவதும் விழிக்க ஆரம்பிக்கும். காவலுக்குப் போனவர்கள், தூரந்தொலைவுக்கு களவுக்குப் போனவர்கள் என எல்லோரும் ஆலமரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கருப்பு கோவில் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த பெரியாம்பிளைகள், போன கொத்தெல்லாம் முறையாகத் திரும்பிவிட்டதா என கணக்குப் பார்த்தபடி இருந்தனர். அலுத்துச்சலித்து வந்தவர்கள் கக்கத்தில் மடித்துக் கொண்டுவந்த இருளை ஆலமர இடுக்குகளில் செருகிவைத்துவிட்டு மரத்தடியிலேயே படுத்துறங்கினர்.

சூரிய ஒளி மதுரையையும் இருளையும் பின்னிக்கிடந்த முடிச்சை அவிழ்ந்து மேற்கே தாதனூர் பக்கமாகத் தூக்கி வீசியது.

*

உ

# தாதுப் பஞ்சத்திற்கு முன்

# 62

**நீண்ட காலத்துக்குப் பின் அந்த அரண்மனைக்குள் மீண்டும்** அதிகாரம் குடியேறியது. பாழடைந்த அறைகள் தூய்மையாக் கப்பட்டன. புறாக்களும் வௌவால்களும் விரட்டப்பட்டன. இருண்ட அறைகள் ஒளியேற்றப்பட்டன. அதிகாரத்தின் குரல் அரண்மனைச் சாரளங்களின் வழியாக மதுரை முழுவதும் எதிரொலிக்கத் துவங்கியது.

இத்தாலியக் கட்டிடக் கலைஞனின் வரைபடத்தில் இஸ்லாமிய கலைக்கூறுகளும் ஐரோப்பிய கலையம்சமும் நிரம்பப் பெற்ற அழகுப்பொக்கிஷமாக தனது அரண்மனையை உருவாக்கியிருந்தார் திருமலை நாயக்கர். மிக கம்பீரமான நூற்றுக்கணக்கான தூண்கள், இரும்பும் மரமும் இல்லாத இந்த பிரம்மாண்டமான அரண்மனையின் குவிமாடங்கள் முழுவதையும் தாங்கிப் பிடித்தபடி இருந்தன. நுட்பமான சுதை வேலைப்பாடுகளும், சிற்பமும் ஓவியமுமாக அரண்மனை பேரழகை அடைகாத்தபடியே இருந்தது.

காட்சிகள் மாறத் துவங்கின. விஜயகரத்திலிருந்து வந்தவர்கள் கட்டிய அரண்மனையில் இருந்து, இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள் ஆளத் துவங்கினார்கள். நாயக்க அரசன் சிம்மாசனத்தில் அமர்ந்து கோலோட்சிய சொர்க்க விலாசத்தில் இப்பொழுது மதுரை கலெக்டர் அமர்ந்திருந்தார். அந்த அரண்மனை முழுவதும் கலெக்டர் அலுவலக சிப்பந்திகளின் நாற்காலிகள் நிரம்பிக்கிடந்தன. அபூர்வமான கலை வேலைப்பாடுகளுடன் கூடிய நாடகசாலையில் இப்பொழுது உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களும், முதன்மை சர்தார் அமீன் நீதிமன்றமும் இருந்தது. ஏற்கனவே, இருக்கும் கட்டிட அமைப்புகளுக்கு ஏற்றபடி தற்போதைய அலுவலக அமைப்பை பொறுத்திய பின், அரண்மனை மீண்டும் செயல்படத் துவங்கியது.

கலெக்டர் அலுவலகம், நீதிமன்றம், சிறைச்சாலைகள் ஆகியவற்றை உருவாக்கிய அவர்கள் காவல் நிலையம், வரிவசூல் ஆகியவற்றிற்காக

பிளாக்பர்னின் விளக்குத்தூண் அருகே புதிய கட்டிடமொன்றைக் கட்டினார்கள். பிரிட்டிஷ் அரசின் இந்தப் புதிய அமைப்புகள் மக்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகமாகத் துவங்கின. சிறைச்சாலைக்குள் சிலரை அனுப்புவதென்பது அந்த இடம் சிறைச்சாலைதான் என்பதைத் தெரியப்படுத்துவதற்கே தேவையா ஒன்றாக இருந்தது. ‘அந்தப்புரம் எப்படி சிறைச்சாலையாகும்?’ என்ற கேள்விக்கான பதில் முன்பு உள்ளே இருந்தவர்களுக்கும், இப்பொழுது உள்ளே வந்தவர்களுக்கும் மட்டும்தான் தெரிந்தது. ஆட்சியாளர்களின் செயல்பாடு அதிகரிக்க அதிகரிக்க சிறைச்சாலையின் பரப்பளவு குறுகிக் கொண்டே இருந்தது. அமைதியும் ஒழுங்கும் தங்களின் கைக்குள் இருக்க வேண்டுமென நினைத்தவர்கள் அதற்கான முறையில் சட்டத்தை உருவாக்கினார்கள். புதிய சட்டங்களின் அடிப்படையில் ஒழுங்கை நிலைநாட்ட நவீன போலீஸ் முறையை உருவாக்கி வலுப்படுத்த வேண்டும்; அதற்கு முன் நீதிமன்ற அமைப்புகள் பலம் பெற்றவையாக மாற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மதுரை மாவட்டத்தில் நான்கு இடங்களில் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. மதுரை நகரில் அரண் மனைக்குள் ஒன்றும், திண்டுக்கல்லிலும், மானாமதுரையிலும், பரமக்குடியிலும் அமைக்கப்பட்டன. மதுரை, திருமங்கலம், மேலூர் தாலுகாக்கள் மதுரை முன்சீப்பின் அதிகார எல்லைக்குள்ளும்; திண்டுக்கல், பெரியகுளம், பழனி தாலுகாக்கள் திண்டுக்கல் முன்சீப்பிற்குள்ளும்; சிவகெங்கை ஜமீன்தாரி மானாமதுரை முன்சீப்பிற்குள்ளும்; ராமநாதபுரம் ஜமீன்தாரி பரமக்குடி முன்சீப்பிற்குள்ளும் அடங்கும்.

முன்சீப் நீதிமன்றத்தின் நீதிபதியாக செயல்பட ஐரோப்பியர் களுக்கு ரூபாய் 200 சம்பளம். குமாஸ்தாக்களுக்கு ரூ10ல் இருந்து 15 வரை தரப்பட்டது. பியூன்களுக்கு ரூ 5. முன்சீப் நீதிமன்றத்தில் அனைவரும் ஆஜராகி வாதாட அனுமதிக் கப்பட்டனர்.

நீதிமன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்து சில ஆண்டுகளுக்குப் பின்தான் போலீஸ் அமைப்புகளை உருவாக்கும் பணிகளில் கவனம் செலுத்தப்பட்டன. மாவட்டத்திற்கு ஒரு ஆங்கிலேய அதிகாரி சூப்பிரண்டென்ட்டாக நியமிக்கப் பட்டார். அவருக்கு அடுத்த படியாக டிப்டி சூப்பிரண்டென்ட்டாக ஒரு ஆங்கிலேய அதிகாரி நியமிக்கப்பட்டார். இவர்களின் கீழ் சில போலீஸ் ஸ்டேசன்கள் செயல்பட்டன. அதில் ஒரு இன்ஸ்பெக்டரும், போலீஸ் ஏட்டுகளும் இருந்தனர்.

இந்த முறையில் மதுரையின் முதல் போலீஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஹெச். வில்சன் சூப்பிரண்டென்ட்டாக நியமக்கப்பட்டார். எல். ஆர். பிரெவ்ஸ் டெப்டி சூப்பிரண்டென்டாக நியமிக்கபட்டார். ஓம்பெர்ட் இன்ஸ்பெக்டராக இருந்தார். இவர்களின் கீழ் மதுரை நகரத்தில் உருவாக்கப்பட்ட முதல் போலீஸ் ஸ்டேசனில் கோபால் ஐயர், வீராச்சாமி நாயுடு, சேஷகிரி ராவ், கிருஷ்ணசாமி முதலி, விட்டல் ராவ், பெருமாள் நாயுடு, ராமா ராவ், சுப்பிரமணிய ஐயர், பரமசிவம் முதலி, சொக்கலிங்கம் பிள்ளை, ராமசாமி அய்யங்கார், சாமி ஐயர், மணி ஐயர் ஆகிய பதிமூன்று பேர் பணியில் சேர்க்கப்பட்டனர்.

நகரின் முதல் கச்சேரி (போலீஸ் ஸ்டேசன்) கீழமாசி வீதியில் பிளாக்பர்னின் விளக்குத் தூணுக்கு நூறு கெஜதூரம் வடக்கே தள்ளி கட்டி

முடிக்கப்பட்டது. ஒரு பகுதி போலீஸ் ஸ்டேசனுக்காகவும், ஒரு பகுதி கொத்தவால் சாவடிக்காகவும் அந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருந்தது. மதுரையில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கட்டிடம் இதுதான். அந்த ஐரோப்பிய பாணி கட்டிடத்தில் இருந்த கவர்ச்சி. செல்வந்தர்களை ஈர்த்தபடி இருந்தது. இரும்பு ராடர்களைப் போட்டு, நிறைய ஜன்னல்கள் வைத்து காற்றோட்டமான முறையில் கட்டப்பட்டிருந்த அந்தக் கட்டிடத்தை மக்கள் தினமும் வந்து பார்த்துவிட்டுப் போயினர். பசுமலையில் அமெரிக்க மிஷனரிமார்கள் கட்டியுள்ள பள்ளிக் கட்டிடத்தைப் போலவே வேலைப்பாடுகள் இருப்பதாகவும், ஆனால், அளவில் சிறியதாக இருக்கிறதென்றும் பேசிக்கொண்டார்கள்.

நகரத்திற்குள் வியாபாரத்திற்காகக் கொண்டுவரப்படும் எல்லாப் பொருட்களுக்கும் வரி வசூல் செய்வது, இதர வரிகளை வசூல் செய்வது, நகர நிர்வாகத்தை தினசரி கவனிப்பது, கலெக்டர் ஆபீஸ் பகுதிகளை கூட்டிப் பெருக்குவது, தெரு விளக்குகளை தினமும் எண்ணெய் ஊற்றி ஏற்றி வைப்பது, அதிகாலையில் போய் அணைப்பது என்று கொத்தவால் சாவடியில் வேலை மும்முரமாக நடைபெற்ற வண்ணம் இருந்தது. ஆனால், கச்சேரி போலீசுக்குத்தான் என்ன வேலை என்று யாருக்கும் தெரியவில்லை. வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லோரும் அவர்களைப் பார்த்து என்ன வேலை என்று கேட்டபடி இருந்தனர். அவர்களும் தங்களுக்கான வேலை என்ன என்பது இனிமேல்தான் முழுமையாகத் தெரியவரும் என்று கூறினர். அதன் பின் ஆளுக்கு ஒரு ஆலோசனையை சொல்லத் துவங்கினர். வித்தியாசமான ஒன்றாகவும், கேலிக்குரிய ஒன்றாகவும் இந்த வேலை இருக்கும் என்று அவர்கள் கருதினர். போலீசின் வேலை குறித்து தினசரி மக்கள் பேசியபடி இருந்தனர்.

‘வரி வாங்குறவங்களுக்கு பாதுகாப்புக்காக பாடி காப்பா போறதுதான் இவங்க வேலை.’

‘ஐயரும் நாய்க்கரும் பிள்ளமாரும் எப்படி பாடி காப்பு வேல செய்யமுடியும்? இவங்ய ஏன் செய்யுறோம்னு ஒத்துக்கிட்டாங்ய?’

‘யோசிக்காம பேசாதீங்கப்பா. எத்தன பெரிய்ய சம்சாரி குடும்பம் கோபால் ஐயரோடது. அவரு போயி பாடி காப்பு வேலைக்கு போவாரா? இதுல்ல வேறெ என்னமோ சூச்சி இருக்கப்பா.’

‘வேறெ என்னமோன்னா அது என்ன சொல்லு?’

‘அதுதான்ன தெரில. அவங்களைக் கேட்டாலும், ஒண்ணும் தெரிய்யலேன்னுதான் சொல்றாங்ய. ஆனா, இங்கிலீசு படிச்ச கோபால் ஐயரையும் வீராச்சாமி நாயுடுவையும்தான் பெரிய்ய அதிகாரியா போட்டிருக்கானாம். அப்படீன்னா விசயமான வேலயாத்தான் இருக்கும்.

இப்படி மக்கள் ஆளுக்கு ஒன்றாகப் பேசியபடி இருந்தனர்.

பஞ்சக்கச்சமும் அங்கவஸ்திரமும் அணிந்து தலையில் ஒரு தலைப்பாகை கட்டிக்கொண்டு தினமும் போலீசார் கச்சேரிக்கு வருவதும் போவதுமாக இருந்தனர்.ஒருநாள் அரண்மனையில் இருக்கும் தனது அலுவலகத்திற்கு வருமாறு எஸ்.பி.வில்சன் சொல்லியிருந்தால் போலீசார் அனைவரும் எஸ்.பி.யின் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். டி.எஸ்.பி.பிரெவ்ஸ் வடிவமைக்கப் பட்ட ஆடை ஒன்றை எடுத்துக்காட்டி

‘இது தான் நீங்கள் தினமும் போட்டு வரவேண்டிய யூனிபார்ம்’ என்றார். பாதிப் பேர் புரியாமல் முழித்தபடி இருந்தனர். மீதிப் பேர் அதை உற்றுப் பார்த்து அதிர்ச்சிக்கு உள்ளானவாறு உட்கார்ந்திருந்தனர். கோபால் ஐயர் திடுக்கிட்டார். அவர் பஞ்சகச்சம் தவிர வேறு எதையும் கட்டாதவர். இரண்டு ஓட்டைகள் போல் தைக்கப்பட்ட ஒரு ஆடையை முட்டிக்கு மேல் வரை கொண்டுவந்து இடுப்பில் கட்டிக்கொண்டு வர வேண்டுமென்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. பிரெவ்ஸ் யூனிபார்ம் என்றால் என்ன, அது ஏன் தேவை என்று விளக்கியபடி இருந்தார்.

மறுநாளில் இருந்து போலீசார் குடியிருந்த தெருக்கள் எல்லாம் களை கட்டத் துவங்கின. ஒருவர் மாற்றி ஒருவராக செய்தி வேகமாகப் பரவியது. போலீசாரை பார்க்க பலர் ஓடோடி வந்தனர். நாலாபுறமும் கீழும்மேலுமாகப் பார்க்கப்படும் விநோதப் பொருளாக அவர்கள் மாறியிருந்தனர். தெருக்களில் பார்க்க முடியாத சிறுவர்கள் கச்சேரிக்கு ஓடி வந்து பார்த்துவிட்டுச் சென்றனர்.

’நாய்க்கரு கால்கவுட்டு ரெண்டும் ஓட்ட போட்ட துணிக்குள்ள மாட்டிக்கிருச்சுடோய்...’ என்று சிறுவர்கள் சத்தம்போட்டு சொல்லிக்கொண்டே தெருத்தெருவாக ஓடினர். கோபால் ஐயர் சில நாட்கள் கச்சேரிக்கு வராமல் இருந்தார். மற்ற போலீசார் எல்லாம் யூனிபார்ம் போட்டு கச்சேரிக்கு வருகின்றனர் என்பதை உறுதிபடுத்திக்கொண்டு தான் கச்சேரிக்கு தானும் போவது என்ற முடிவுக்கு வந்தார்.

அன்று எழுகடல் அக்ரஹாரத்திலிருந்து கீழமாசி வீதி வரை அம்மன் வீதி உலாப் போலக் கூட்டம் இருந்தது. ஐயர் எதையும் சட்டை செய்யாமல் வீறாப்பாக நெஞ்சை நிமிர்த்தியபடி நடந்து வந்துகொண்டிருந்தார். மாசி வீதியில் திரும்பியவுடன் அரவது உறவினர் ஒருவர் ‘என்ன வோ...ய், எப்படி வோய் இதப் போட்டீரு? நீர் விட்டத்துல தொங்கிக்கிட்டு, ஆத்துக்காரிய ரெண்டு ஓட்டைக்குள்ளேயும் கால் ரெண்டையும் வுட்டு மாட்டுன்னு சொல்லி மாட்டுனீரோ’ என்று கேட்டார். பக்கத்திருந்த எல்லோருக்கும் சிரிப்பு அடக்க முடியாதபடி இருந்தது. திடுதிடுவென கச்சேரியை நோக்கி ஓட வேண்டும் போல் இருந்தது. ஆனால் அடக்கியபடி ஒவ்வொரு எட்டாக எடுத்து வைத்து நிதானமாக நடந்து கச்சேரிக்குள் வந்து சேர்ந்தார்.

‘பிறவிப் பெருங்கடல் நீந்துவது போல் நீந்தி வந்தீரோ சாமீ’ என்று குத்தலாகக் கேட்டார் ராமாராவ். ‘மூணு நாள் கழிச்சு நீந்தினா இப்படித்தான் தனியாக மாட்டிக்கிடுவீரு’ என்றார் வீராசாமி நாயுடு. எல்லோரும் சிரித்தனர். அவமானத்தையும் சோகத்தையும் மறைக்க தங்களுக்குள் வரவழைத்துக்கொண்ட வம்பான சிரிப்பு அது. இதற்கிடையில் வேளாச்சேரி மருதக் கோனார் எழுதிய ‘கச்சேரிக் கும்மி’ காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. புதுமண்டபம், சாவடி, தெப்பக்குளமென மக்கள் எங்கும் அதைப் பாடிக்கொண்டே இருந்தனர். கார்த்திகைக்கு முருகன் மீது பாடிக்கொண்டு போகும் வழிநடைக் கும்மி போல கச்சேரி கும்மி மக்களின் மனதில் இடம் பிடித்துவிட்டது. எல்லோரும் ரசித்து ரசித்துப் பாடினர். கச்சேரி போலீஸ் காத தூரம் ஓடினர்.

வேளாச்சேரி மருதக் கோனார் இயற்றிய கச்சேரி கும்மி:

வெள்ளக்காரெ கெடுத்த சட்டைய
வேடிக்காய நின்னும் பாருங்கடி

உள்ள காலுல பாதியக் காணோம்
ஒதச்சு நடக்கிறதப் பாருங்கடி

ஆட்டக்காரி ரவிக்க போல
அரக்கையிதான் இருக்குது.
ஓட்ட போட்ட ரெண்டு மரக்கா
காலுக்கு ஒண்ணா தொங்குது

ஓட்டைக்குள்ள கால விட்டு
ஓலமூடிக்குள்ள தலைய்ய விட்டு
வீட்ட விட்டுவெளிய வாறாரு
வீராச்சாமி நாயுடு

காத்துப் போக ஒரு ஓட்ட
மூத்திரம் போக ஒரு ஓட்ட
பாத்து பாத்து நடந்து வர்றாரு
பரமசிவ முதலியாரு

மணி ஐயர கேக்கப் போனா
மாசி வீதிக்கு ஓடுறாரு
அய்யங்கார கேக்கப் போனா
ஆவணி வீதிக்கு ஓடுறாரு

கிருஷ்ணசாமி முதலியாரோ
கிடுகிடுன்னு ஓடுறாரு.
விட்டல்ராவ் கேட்கப் போனா
விடுவிடுன்னு ஓடுறாரு.

முட்டி மோதி ஓடிப்போயி
கச்சேரிக்குள்ள ஒளியுறாங்க
முட்டிக்குக் கீழ் ஒண்ணுமில்ல
முழுச்சுக் கிட்டு நிக்குறாங்க.

வெடச்ச கழுத மூக்கு மாதிரி
பெரிய்ய ரெண்டு ஒட்டைக்குள்ள
நடக்கிற கால திணுச்சுக்கிட்டு
நண்டு போறதப பாருங்கடி

பட்டுப் போன சொரக்குடுக்கையில
பாதத்த ரெண்டையும் விட்டுக்கிட்டு
எட்டு வச்ச நடக்குறத
கிட்டநின்னு பாருங்கடி.

பஞ்சகச்சமும் அங்கவஸ்திரமும்
பறந்து போச்சு பாருங்கடி
பொச்ச மறைக்கத் துணியிருந்தா
போதுமான்னு கேளுங்கடி

வெள்ளக்காரன் சம்பளத்துக்கு
போட்டவேஷத்தப் பாருங்கடி
வேளாச்சேரி மருதக் கோனார்
பாட்டக் கொஞ்சம் கேளுங்கடி.

*

ஒருவழியாக போலீசாரின் ஆடை இதுதான் என்று ஆனது. எல்லோரும் நிலைமையைத் தெரிந்து ரசித்து சகஜநிலைக்குத் திரும்பியபடி இருந்தனர். ஏச்சுப்பேச்சுக்கள் தூவானம் போல நின்று அடங்கின. போலீசார் யூனிபார்ம் போட்டபடி கச்சேரிக்கும், கலெக்டர் அலுவலகத்திற்கும் வந்துபோய்க் கொண்டிருந்தனர். அணிவகுப்பு மரியாதை செய்வது, வழக்குகள் பதிவு செய்வது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது போன்ற வேலைகளுக்காகப் பயிற்சி கொடுக்கப்பட்டது. எஸ்.பி. வில்சனும், டி.எஸ்.பி. பிரெவ்ஸூம் அடிக்கடி தங்களது அலுவலகத்திற்கு வரச்சொல்லி போலீசுக்கான நடைமுறைப் பயிற்சியைச் சொல்லிக் கொடுத்தனர். இங்கிலாந்தில் இருக்கும் போலீஸ் முறை பற்றி அவர்களுக்கு முழுமையாக விளக்கிச் சொல்லப்பட்டது. போலீசார் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளைச் செய்யத் துவங்கினர். கச்சேரியின் சக்கரம் மெல்ல உருள ஆரம்பித்தது. முன்பின் பழக்கமில்லாத, புதியதொரு பாதையில் அது உருண்டு சென்றது. நீதிமன்றத்திற்கும் அதற்குமான கண்ணி கண்ணுக்குத் தெரியாத நிலையில் இருந்து கண்ணுக்குத் தெரியுமளவு பலமடையத் துவங்கியது. ஏட்டு கோபால் ஐயரின் மேஜையின் மீது பெரிய நோட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர் எப்போதும் வீதியை வெறித்துப் பார்த்தபடியே இருந்தார். அந்த வீதியில் போகிற எல்லோரும் கச்சேரிக்குள் உடுப்புப் போட்டு உட்கார்ந்திருக்கும் கோபால் ஐயரையும் மற்றவர்களையும் எட்டிப் பார்த்தபடி கடந்து போய்க்கொண்டிருந்தனர்.

ஒரு நாள் எஸ்.பி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டதன் பேரில் கச்சேரி போலீசார் அனைவரும் வந்திருந்தனர். அவர்களிடம் வாழை மட்டை போல ஒன்றைக் காட்டி ‘இனிமேல் இடுப்பில் யூனிபார்முக்கு மேல் இதைக் கட்டிக்கொள்ள வேண்டும்‘ என்றார் எஸ்.பி. பிரெவ்ஸ். இது என்ன புதிதாய் இருக்கிறது என்று கையில் வாங்கிப் பார்த்தபடி விளக்கம் கேட்டனர். இதன் பெயர் பெல்ட் என்று சொல்லி அதன் பயன்பாட்டினை விளக்கினார். மாட்டுத் தோலினால் செய்யப்படுகிறது என்பதையும் சேர்த்தே தெரிவித்தார். அவரது விளக்கம் சிலரைத் திகைப்புக்குள்ளாகியது. ஆனால் அக்ரஹாரத்திலிருந்து வந்திருக்கும் ஐந்து போலீசாருக்கும் தூக்கிவாரிப் போட்டது. வெள்ளைக்காரரின் போலீஸ் உடைக்குள் இருந்து புதிய புதிய பிரச்சனைகள் தங்களை நோக்கி வந்துகொண்டே இருக்கிறதே என நினைத்து கோபால் ஐயர் நொந்துகொண்டார். பின்னர் கொஞ்சம் நிதானமாக யோசித்து மற்ற நால்வரையும் இணைத்துக்கொண்டு ஆட்சேபணை மனு ஒன்றைத் தயாரித்து எஸ்.பி. வில்சனிடம் கொடுத்தார். எங்களின் சாஸ்திரப்படி நாங்கள் இதை அணிய முடியாது; எனவே அதை அணிவதில் இருந்த எங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமெனக் கேட்டிருந்தனர். பூட்ஸ் எதனால் ஆனது என்ற தெரியாததால் பிரச்சனை எழவில்லை. எஸ்.பி.யும் மனுதாரர்களின் விளக்கங்களை முழுமையாகக் கேட்டுக்கொண்டு, கலெக்டரிடம் கலந்து பேசிவிட்டு முடிவுசொல்கிறேன்

என்றார்.

இந்நிலையில் மற்ற போலீசெல்லாம் பெல்ட் அணிந்து கச்சேரிக்கு வரத்துவங்கினர். கோபால் ஐயரும் மற்ற நான்கு பேரும் பெல்ட் அணியாமல் அரைஞான் கயிற்றை இடுப்புக்குமேல் இறுக்கிக் கட்டியபடி வந்து சென்றனர். ஆனால், மற்ற நான்கு பேருக்கும் இல்லாத பிரச்சனை கோபால் ஐயருக்கு மட்டும் வந்தது. தலைமை ஏட்டு என்ற முறையில் அவர்தான் அடிக்கடி கலெக்டரையும் எஸ்.பி.யையும் சந்திக்க வேண்டியிருந்தது. சந்திக்கும் பொழுதும் விடைபெறும் பொழுதும் சல்யூட் அடிக்கவேண்டும். இன்னொரு ஏட்டான வீராச்சாமி நாயுடு, கலெக்டருக்கும் எஸ்.பி.க்கும் கச்சிதமாய் சல்யூட் அடித்து முடிப்பார். ஆனால், கோபால் ஐயரால் அப்படிச் செய்ய முடியவில்லை. காரணம் கோபால் ஐயர் சல்யூட் அடிக்கும் போது அரைஞான் கயிறு ஒத்துழைப்பதில்லை. அதற்கு கலெக்டரையோ எஸ்.பி.யையோ தெரியாததால் வலது கையை தூக்கி சல்யூட் அடிக்கும் போது கயிறு மேலேறிக் கொண்டு, டிரெவுசர் கீழிறங்கும், பக்கத்திலிருக்கும் வீராச்சாமி நாயுடு ‘சாமீ...’ என்று மெல்ல குரல் கொடுத்தவுடன் வேகவேகமாக சட்டையை உள்ளே விட்டு டிரவு சரை மேலே ஏற்றி அரைஞாண் கயிற்றை இறுக்கி சரி செய்வார்.

அது மட்டுமல்ல, அரைஞான் கயிற்றை வெளியில் எடுத்து ஆடைக்கு மேல் கட்டுவதால் உள்ளே கோவணம் கட்டுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டது. இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று யோசித்து, யோசித்து அவருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. கடைசியில் தாசி குஞ்சரம்தான் ஒருவழி கண்டுபிடித்து இரண்டாவது அரைஞாண் கயிற்றைக் கட்டிவிட்டாள். ‘என்ன இடுப்புல மத்த கடயிற மாதிரி இரண்டு கயிறு கட்டிருக்கேள்’ என்று அகத்தில் பாரியாள் கேட்டாள். கேள்விகள் வந்தபின் ஆற்றிலோ, பொன்மேனியில் இருக்கும் தனது தோப்பிலோ குளிப்பதை அடியோடு கைவிட்டார். இப்படி சல்யூட் அடிப்பதில் ஆரம்பித்த பிரச்சனை எங்கெங்கோ போய்க்கொண்டிருந்தது. ஆனால் ஐயரோ கால்கவுட்டுக்குள் முழுக் கவனமும் கொண்டவராகவே ஒவ்வொரு நாளும் சல்யூட் அடித்தார். பலமுறை எஸ்.பி. வில்சன் முகம் சுளிக்க வேண்டியிருந்தது. இதே நிலை நீடித்ததால் வீராச்சாமி நாயுடு இன்ஸ்பெக்டர் ஆனாலும் ஆகிவிடுவார் என்ற சந்தேகம் கோபால் ஐயருக்கு வர ஆரம்பித்தது. மற்ற சிலரும் அந்தக் கருத்தைத் தெரிவித்தனர். எனவே, வேறு வழியில்லாமல் பெல்ட் அணிவது என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் அவர் குடியிருந்த எழுகடல் அக்கிரஹாரம் அந்த முடிவு கண்டு கொதித்தெழுந்தது. இது சாஸ்திர விரோதமானது என்றும் ஐதீகத்திற்குப் புறம்பானது என்றும், அக்கிரஹாரமே தீட்டுப்பட்டு விடும் என்றும் ஆட்சேபணை அவர் மீது தொடுக்கப்பட்டது. பெண்கள் முகத்துக்கு நேராகப் பேச ஆரம்பித்தனர்.

‘நம்ம சாஸ்திரம் அனுஷ்டானமெல்லாம் தெரியாதவா கிட்டவேலைக்குப் போனா இப்படித்தான் ஆச்சாரம் தவறி பேசுவேள்.’

‘காலம் மாறிண்டே இருக்கு. நாம்ம வெறுமே சாஸ்திரத்த சொல்லிண்டே உட்கார்ந்திருக்க முடியாது பாருங்கோ. விவிலியத்த வசன நடையில் அச்சுப் பதிப்பிச்சிருக்கா. எவ்ளவு நன்னா இருக்கு! நாம்ம இன்னும் அக்கிரஹாரத்து திண்ணப் பள்ளிக்கூடத்த நம்பி குருத்தோலையை பிச்சுண்டு இருக்கோம்.’

‘பசுமலையில அவா நடத்துற ஸ்கூலுக்குப் போனா இங்கிலீசு வரும். சாஸ்திரத்த சொல்லிண்டே சாஸ்திரி கிட்டப் போனா சுள்ளிபொறுக்கி இடுப்பு வலிதான் வரும்.’

‘குலங் கெட்டாவளோட உக்காந்து படிக்கச் சொல்ற சாஸ்திரது வேஷிகள் அக்கிரஹாரத்துக்குள்ளே வந்துட்டாளே... சிவ சிவா...’

சாஸ்திரங்களை மீறி பெல்ட் கட்டினால் அக்கிரஹாரத்தில் இருந்தே விலக்க நேரிடும் என்ற அளவுக்கு பேச்சுகள் வளர்ந்தன. நிலமையைப் புரிந்துகொண்ட கோபால் ஐயர் தனது கருத்தில் இருந்து பின்வாங்கினார். ஒரு வழியாக அக்கிஹாரம் மீண்டும் அமைதியானது. ஆனால் அந்த அமைதி கொஞ்ச நாள்தான் நீடித்தது.

விராச்சாமி நாயுடு பெல்ட்டை இறுக்கமாக அணிந்துகொண்டு கச்சிதமாய் சல்யூட் அடிக்க அடிக்க ஐயரின் மௌனம் உருமாறிபடியே இருந்தது. அக்கிரஹாரத்திலும் கோபால் ஐயருக்கு ஆதரவான குரல்கள் கொஞ்சம் கொஞ்சமாக மேலேழும்பி வரத் துவங்கின. இங்கிலீஷ் படித்து, இங்கிலீஷ்காரனிடம் வேலை பார்க்கும் பிராமணக் குடும்பங்கள் எல்லாம் கோபால் ஐயர் பக்கம் நின்றன. அக்கிரஹாரத்தின் எல்லாத் திண்ணைகளிலும் எதிர்வாதம் செய்வதற்கு ஒருவராவது தயாராகினர். எழுகடல் பாறகடல் போல் ஆனது. அக்கிரஹாரம் அலையடிப்பில் தத்தளித்தது.

‘சாஸ்திரத்த மட்டும் பாத்துண்டு படிச்சுண்டு இருந்தா கோயிலுக்கு குருக்களாகத்தான் போலாம். கோர்ட்டுக்கு குமாஸ்தாவாக முடியாது. ரூபாய் கணக்குல நோட்ட எண்ணி வாங்க முடியாது. நைவேத்தியத்து வெண்ணெய் வச்சே இன்னும் காலந் தள்ளிண்டு இருந்தோம்னா அப்புறம் நாய்க்கமாரெல்லாம் இன்ஸ்பெக்டராகிடுவா. பிள்ளமாரெல்லாம் சப் ஜட்ஜ் ஆகிடுவா. நாம்ம குமாஸ்தாவிலே உக்காந்திருக்க வேண்டியதுதான்.’

‘முன்ன மாதிரி எல்லோரும் போய் கோர்ட்லே பேச முடியாதுண்டான் வெள்ளக்காரென். புதுசா பரிஷை கொண்டு வந்தருக்கான். அதை எழுதினாத்தான் கோர்ட்டுக்கு போக முடியும்னுட்டான். நாளுக்கு நாள் நிலம மாறிண்டே இருக்கு. நம்ம மட்டும் மாறாம இருந்தோம்னா நஷ்டம் லோகத்துக்கில்ல, நமக்குத்தான்.’

‘சாஸ்திரத்த லாப நஷ்ட கணக்கு வச்சுண்டு பேசுறவா கிட்ட நமக்கு என்ன பேச்சு?’

‘அதுதான்னே... ரூபாசம்பளத்துக்காக ஆச்சார அனுஷ்டானங்களை எல்லாம் விக்கிறவாளுக்கு அக்கிரஹாரத்துல என்ன வேல?’

பாற்கடல் கடையப்பட்டவாறே இருந்தது. ஒரே பிரியை இரண்டாகப் பிரித்து மாறி மாறி இழுத்தனர். கோபால் ஐயர் உள்ளிட்ட ஐந்து பேருக்கான பெல்ட்கள் கச்சேரிச் சுவரில் அமைதியாகத் தொங்கியபடி இருந்தன.

ஒரு நாள் அதிகாலை கோபால் ஐயர் கச்சேரிக்கு வந்தார். உள்ளே யாரும் தென்படவில்லை. சுவரில் தொங்கிக்கொண்டிருந்த பெல்ட்டுகளைப் பார்த்தார். சிறிது நேரம் யோசித்த அவர் அதில் ஒன்றை எடுத்து கண்களை இறுக்கி மூடியபடி இடுப்பிலே கட்டினார். உடல் முழுவதும் ஒரு நடுக்கம் கொடுத்தது. கொஞ்சநேரம் மூச்சிழுத்து விறைப்பாக நின்றுகொண்டிருந்த அவர் பின் மெல்ல கண்களைத் திறந்தார்.

கச்சேரிக்குள் வலது ஓரத்தில் அரை இருட்டில் உட்கார்ந்திருந்த வீராச்சாமி நாயுடு ‘என்ன சா...மீ, உங்க சாஸ்திரமெல்லாம் வெள்ளகாரனோட பன்னெண்டு ரூபா சம்பளத்துக்கு வளைஞ்சு கொடுத்திருச்சே’ என்றார்.

நாயுடுவின் குரல் கோபால் ஐயரை முட்டித் தூக்கி எறிந்தது. ரத்தமும் சதையுமாக எழுகடல் அக்கிரஹாரத்தில் போய் விழுந்தார். அக்கிரஹாரம் சபித்தது. அவமானத்தோடு வந்து வெள்ளக்காரன் தந்த அதிகாரத்திற்குள் ஒளிந்து கொண்டார். அதிகாரம் எல்லா அவமானங்களையும் வலியையும் தாங்கிக்கொள்கிற போதையைக் கொடுத்தது.

அடுத்தநாள் அக்கிரஹாரம் கொந்தளித்தபடி இருந்தது. சுப்புபட்டர்தான் அக்கிரஹாரத்தின் பெரிய மனிதர். கோபால் ஐயரோடும் அவரது குடும்பத்தோடும் எந்த உறவும் வைத்துக்கொள்ளக் கூடாதென அறிவித்தார். மறுத்து யாரும் பேசவில்லை. எனவே, ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட்டது. ஆனால், பொன்மேனி கிராமத்தில் பல காணிநிலமும், மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளமும் வாங்குகிற கோபால் ஐயரை அண்டினால் எது வேண்டுமானாலும் கிடைக்கும். சுப்புப் பட்டரை அண்டினால் என்ன கிடைக்கும்? என்ற எண்ணம் அக்கிரஹாரத்தில் பலருக்கும் இருந்தது.

மறுநாள் மாலை பெல்ட் அணிந்தபடி கோபால் ஐயர் வீட்டுக்கு வந்தார். ‘சாரப்பாம்ப இடுப்பிலே கட்டுன மாதிரி இதக் கட்டிண்டு வந்திருக்கேளே...’ என்று பதறிய மனைவியை சமாதானப்படுத்தவே பெரும்பாடானது. கழட்டிய பெல்டை வீட்டில் எங்கே வைப்பது என்ற சர்ச்சை அடுத்து வந்தது. வாசல்படி வராண்டாவின் ஓட்டு முகட்டில் சொருகிவைப்பதைத் தவிர ஐயருக்கு வேறு வழியில்லை. ‘பாத்துவோ...ய்! திரும்ப அந்த மருதக் கோனார் கும்மி பாடிறப் போறாரு...’ என்று நண்பர்கள் கேலி பேசி விட்டுப் போனார்கள்.

கொஞ்ச நாளிலேயே எஸ்.பி. வில்சனே பாராட்டும்படி சல்யூட் அடித்தார் கோபால் ஐயர். மாட்டுத் தோலால் ஆன பெல்ட் அவரைக் கச்சிதமாகப் பற்றிக்கொண்டது. அவரும் அதைவிட கச்சிதமாக அதனை பற்றிக்கொண்டார்.

**வீ**ராச்சாமி நாயுடு போலீசில் வந்து சேர்ந்த வழி சுவராஸ்யமானது. அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள பாலவநத்தம் ஊர்க்காரர். ராணி மீனாட்சி விஷம் குடித்துச் செத்து, மதுரை அரண்மனை முகம்மதியர்கள் கைக்குப் போகவும் அங்கு பணியாளர்களாக இருந்த பலிஜாவரு குடும்பங்கள் தப்பித்து வெள்ளிக்குறிச்சி, பெரியகுளம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஊர்களுக்கு ஓடிப்போயினர். ஐந்து தலைமுறைக்குப் பின் அக்குடும்பங்கள் ஒன்றிலிருந்து வந்த சொக்கப்ப நாயுடு ‘காவடிச் சாமியார்’ என்ற பேரோடு மதுரை வட்டாரத்தில் பிரபலமாக இருந்தார். வசதியானவர். நிலபுலன்கள் உண்டு. ஒருமுறை பழநிக்குக் காவடி எடுத்துப் போனவர் திரும்பி வந்ததும் காவடியை இறக்கவில்லை: காவி உடையைக் கழற்றவில்லை. மனைவி மக்களை வீட்டுவிட்டு மண்டபத்ததிலே இருந்து கொண்டார். சாப்பாடு வீட்டிலிருந்து போய்விடும். விவசாய மேற்பார்வையும் உண்டு. திருப்பரங்குன்றம், பழநி, திருச்செந்தூர் என்று வருஷாவருஷம் காவடி எடுத்துப்போவார். அவர் பின்னே பெருங்கூட்டம் கூடியது. சாமி அவரது கனவில் வந்து சொன்னதன்படி பாலவநத்தத்தில் பெருமாள் கோவிலுக்கு

எதிரே எழுபது அடி நீள அகலத்தில் தெப்பக்குளம் ஒன்று தோண்டினார். காவடியோடு வண்டி கட்டிப் போய் ஊர்ஊராக அதற்காக வசூலில் இறங்கினார். காவடிச் சாமியின் புகழ் பரவியது. தெப்பக்குளத்திற்கு கரைக்கற்களும் படிக்கற்களும் அமைத்து நாலே வருஷங்களில் அது தயாராகிவிட்டது. அதில் குளித்தால் புண்ணியம் என்று சேதி பரவ கூட்டம் கூடிக்கொண்டிருந்தது. ஊர் ஊராகச் சுற்றித் திரிவதில் சுகம் கண்டிருந்த சாமி இப்போது பருத்தி வியாபாரியாகவும் ஆகிவிட்டிருந்தார்.

மதுரைப் பக்கம் வண்டி போகும் போதெல்லாம் பசுமலையில் நிறுத்துவார் உள்ளே போய் அமெரிக்கன் மிஷனரி பிரசுரித்துக் கொண்டிருந்த United Church Herald ஐ ஒரு பிரதி வாங்குவார். அப்போது அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவை நெருங்கிய சமயம். அங்கிருந்து பருத்தி வரவு நின்று போய் இந்தியப் பருத்திக்கு ஏகக் கிராக்கி. அந்தப் பேப்பரில் பருத்தியின் நடப்பு விலை அச்சாகியிருக்கும். அதை வாங்கிப் பார்க்கவே உள்ளே நுழைவார். ரெவ. சாண்டலரோடும் அவருக்குப் பழக்கமிருந்தது.

மிஷனரிகள் அந்தக் காலத்தில் பாவப்பட்ட மக்களைத் தேவனின் ராஜ்ஜியத்திற்குள் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதோடு மக்களிடம் செல்வாக்குள்ள பிரமுகர்களையும் ஈர்ப்பதில் அதிக கவனம் கொண்டனர். பசுமலை மிஷனரி ஏற்கனவே இதேபோல் மேலூரிலிருந்து அப்பாவு என்ற கள்ளர் பிரமுகரை கிறிஸ்தவராக்கி இருந்தது. அவர் பெரிய அம்பலகாரர். அன்னதானமிடுவதில் அதிக நாட்டமுள்ளவர். விஷக்கடிக்கு மந்திரிப்பவராகவும் இருந்ததால் அந்த வட்டாரத்தில் பெரும் செல்வாக்குடன் இருந்தார். இப்போது அவர் கணிசமான மந்தைகளை தேவாலயத்துக்கு ஓட்டிக் கொண்டு வந்தார்.

காவடிச் சாமிக்கும் பாலவநத்தம் அய்யங்கார்களுக்கும் தகராறு. விஷயம் இதுதான். அபிஷேகத்திற்குக் கொடுத்த கரும்புச் சாறை சந்நிதிக்குள் ஒளிந்து அர்ச்சகர் குடிப்பதைக் காவடிச் சாமி பார்த்து விட்டார். அவரை அந்த வேலையிலிருந்து தூக்கவேண்டும் என்று காவடி சொல்ல, அக்ரஹாரம் மறுக்க, சிக்கல் பெரிதாகி நாடெல்லாம் அதுவே பாட்டாக இருந்தது. அதைப் பயன்படுத்தி அவரைத் தமது சபைக்கு இழுக்க கத்தோலிக்க மிஷன் முனைந்தது. சாமிக்கு உண்மையில் இதில் எதிலும் நாட்டமில்லை. அவரோ நல்ல செலவாளி. உல்லாசப் பேர்வழி.

பசுமலையில் உள்ள ஒரு கிறிஸ்தவப் பெண்ணை சாமி கல்யாணம் கட்டவேண்டிய நிலை வந்தது. அதனாலேயே தேவனை ஒப்புக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. பக்தர்களை தேவனிடம் கொண்டு வருவதில் சாமிக்கு ஆர்வமில்லை; பருத்தி ஏவாரத்திலேயே குறியாய் இருந்தார். பயணங்களுக்கு மிஷனிடம் பணம் கேட்டுத் தொந்தரவு செய்தார். மிஷன் சாமியைப் பொருட்படுத்தவில்லை. சாமி பழையபடி தன் போக்கில் திரிந்தார். பசுமலை வரும்போது மட்டும் கிறிஸ்தவனாக இருப்பார். சாமி செய்த ஒரு நல்ல காரியம் - ஊரிலுள்ள தனது உறவுக்காரப் பையன்களை எல்லாம் அழைத்து வந்து பசுமலைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார். அப்படித்தான் வந்து அங்கு சேர்ந்தான் வீராச்சாமி.

படிப்பை முடித்தவுடன் வாத்தியாராகப் போயிருக்கலாம். ஆனால் வீராச்சாமியின் அம்மா ருக்மணியம்மாள் மகன் கிறிஸ்தவனாகக் கூடாது

என்பதில் பிடிவாதமாக இருந்து விட்டாள். மதுரையில் மதுசூதன செட்டி கடையில் கணக்கராகச் சேர்ந்தான். ஒருநாள் வீதி வழியே போன தகராறு ஒன்றுக்குள் வீராச்சாமி தேவையில்லாமல் புகுந்து அடித்து நொறுக்கியதைக் கடையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த செட்டியார் அவனுக்கு வியாபாரம் சரிப்படாது என்று சொன்னார். போலீசுக்கு ஆள் எடுப்பதைக் கேள்விப்பட்டு, இங்கிலிஷ் தெரிந்த அவனை அங்கு அனுப்பிவைத்தார்.

*

**சி**ல வாரங்களுக்குப் பின் மெட்ராஸ் பிரசிடென்சியின் ராணுவ உயர் அதிகாரி ஜெனரல் ராபர்ட் வில்கின்சன் மதுரைக்கு வந்திருந்தார். அப்பொழுது புது மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த மியூசியத்தை அவர் பார்வையிடுவதாக ஏற்பாடாயிற்று. தென் தமிழகத்தில் கிடைத்த அரிய பொருட்களையெல்லாம் சேகரித்து ஒரு நல்ல மியூசியம் உருவாக்கவேண்டுமென ஆங்கில அதிகாரி நேப்பியர் தொடர்ந்து முயற்சித்தார். அதன் விளைவாக கடந்த ஆண்டு புதுமண்டபத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த மியூசியம். புதுமண்டபம் கோயில் சம்பந்தப்பட்ட இடம், அதை இதுபோன்ற காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்று முதலில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் காரணமாக அழகிய கலை வேலைப்பாடுகளைக் கொண்ட சிலைகள் இருக்கும் உள்புறப் பகுதிகளை மட்டும் உள்ளடக்கி தனது மியூசியத்தை நேப்பியர் உருவாக்கினார். வெளிப்புறப் பகுதிகளை மக்களின் பயன்பாட்டிற்காக விட்டு வைத்தார். இந்த மியூசியம் உருவாக்கப்பட்டபின் மதுரையைக் கடந்து செல்லும் எந்த ஐரோப்பியரும் இந்த மியூசியத்தைப் பார்க்காமல் போனதே கிடையாது. அந்த அளவு புகழ் பெற்றுவிட்டது. அமெரிக்கன் மிஷனரிமார்களால் பசுமலையில் நடத்தப்பட்டு வருகின்ற கலாசாலையும், புதுமண்டபத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மியூசியமும்தான் மதுரையின் மிக முக்கியமான இடங்களாக மாறியிருந்தன.

கொத்தவால் சாவடியின் பணியாளர்கள் கடந்த இரண்டு நாட்களாகப் பெரும் பரபரப்பாக இருந்தனர். ராணுவ ஜெனரல் மியூசியத்தை பார்வையிடுவதற்காக வருவதையொட்டி கிழக்குச் சித்திரை வீதி முழுவதையும் சுத்தப்படுத்தி அலங்கரிக்கும் பணிகளைச் செய்தனர். வீதியின் வடக்கு முனையிலிருந்து தென்னங்குருத்து தோரணங்கள் வரிசையாகக் கட்டப்பட்டன. இடையிடையே வாழைமரங்களும் அவற்றைச் சுற்றி மாவிலைகளும் கட்டப்பட்டன. கோயில் யானை அலங்காரத்துடன் நின்றது. நாதஸ்வர மேளதாளங்கள் முழங்கின. கோயில் பட்டர்களும் நகரின் முக்கியஸ்தர்கள் அனைவரும் சித்திரை வீதியின் முகப்பிலேயே காத்து நின்றனர். புது மண்டபத்தின் வாசலுக்கு முன் கோபால் ஐயரின் தலைமையில் கச்சேரி போலீசார் அணிவகுத்து இருந்தனர். காலை வெயில் பிரமுகர்கள் கட்டியிருந்த சரிகைத் தலைப்பாகைகளில் பட்டு எதிரொளித்துக் கொண்டிருந்தது. மேளதாளத்துடன் கீழச் சித்திரை வீதி விழாக்கோலம் பூண்டு நின்றது. கருஞ்சிவப்புக் குதிரைகளில் ஆங்கில சிப்பாய்கள் வரிசையாக வர அவர்களைத் தொடர்ந்து கோச்வண்டிகள் வந்தன. முதல் வண்டியில் ராணுவ ஜெனரலும் கலெக்டரும் இருந்தனர். அடுத்த இரண்டு வண்டிகளில்

எஸ்.பி. உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர். வண்டிகள் சித்திரை வீதியின் முகப்புக்கு வந்தவுடன் காத்து நின்ற கோயில் பட்டர்களும், நகரின் பெரிய மனிதர்களும் ஜெனரலுக்கும் கலெக்டருக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். வலது பக்கமிருந்த கோயில் கோபுரத்தை அண்ணாத்து பார்த்தபடி ஜெனரல் வந்துகொண்டிருந்தார். புதுமண்டபம் வந்தவுடன் சாரட் நின்றது. உள்ளே இருந்து கலெக்டரும், ஜெனரலும் கீழே இறங்கினர். எதிரில் கோபால் ஐயரின் தலைமையில் யூனிபார்ம் அணிந்து அணிவகுத்து நின்றுகொண்டிருந்த கச்சேரி போலீசார் ராணுவ ஜெனரலுக்கு சல்யூட் அடித்து வரவேற்றனர். இந்நகரத்தில் இந்தியர்களை வைத்து உருவாக்கியுள்ள முதல் போலீஸ் டீமை கலெக்டர் அறிமுகப்படுத்தினார். ஜெனரல் தலையசைத்தவாறு போலீசாரின் மரியாதையை ஏற்றுக்கொண்டு மியூசியத்திற்குள் நுழைந்தார். கூடியிருந்த கூட்டம் முழுவதும் இந்நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது. முன்வரிசையில் நின்றுகொண்டிருந்த சுப்பு பட்டர் உள்பட பலரும் கோபால் ஐயரை உற்றுப்பார்த்தவாறு இருந்தனர்.

பத்துக் கரங்களோடு ஆங்காரரூபிணியாய் நிற்கும் ருத்திரகாளியின் சிலை மியூசியத்திற்குள் நுழைந்ததும் வலதுபுற முதல் தூணிலே இருந்தது. ஜெனரல் ராபர்ட் மயில் தோகை போல விரிக்கப்பட்ட கரங்களோடு நிற்கும் காளியின் சிலையை வியந்து பார்த்தவாறு நின்றார். குமாஸ்தா சுவாமிநாத ஐயர் காளியின் சிலையைப் பற்றியும், புது மண்டபத்தைப் பற்றியும் ஆங்கிலத்தில் விளக்கிச் சொல்லத் துவங்கினார். ஜெனரல் ஆர்வத்துடன் ஒவ்வொன்றையும் நின்று நிதானமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ஜெனரலின் உதவியாளர் குமாஸ்தா சொல்வதைக் குறிப்பெடுத்த படி இருந்தார். நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் தாங்கள் நடத்திய போர்களுக்குப்பின் மிச்சமிருக்கும் அடையாளங்களை எடுத்துப் பாதுகாத்து வைப்பதன் மூலம் நினைவின் வழியே பெருமிதத்தைப் பருகியபடியே அந்தக் கூட்டம் புதுமண்டபத்திற்குள் சுற்றி வந்து கொண்டிருந்தது.

காலபைரவர் சிலைக்குக் கீழே இரும்பு பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை ஜெனரல் உற்றுப் பார்த்தபடி நின்றார். சுவாமி நாதய்யர் அந்த ஆயுதத்தைப் பற்றி விளக்கிச்சொல்ல ஆரம்பித்தார். ‘இதற்குப் பெயர் வளரி. இந்தப் பகுதியில் மிக முக்கியமாகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம். சிவகங்கை யுத்தத்திற்குப் பின் கொண்டுவரப்பட்ட ஆயுததடைச் சட்டத்தால் இது முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. மரத்தினாலும் எஃகினாலும் செய்யப்பட்ட வளரி இங்கே இருக்கிறது. தந்தத்தினாலும் வளரி செய்யப்படும் ஆனால், இது இங்கு இல்லை’ என்றார்.

‘யெஸ், ஐ. நோ. த வெபன் ஆஃப் கள்ளரீஸ்’ என்றார் ஜெனரல்.

‘இந்த ஆயுதத்தை பயன்படுத்தத் தெரிந்த யாராவது இருக்கிறார்களா?’ என்று கலெக்டர் கேட்டார்.

அதற்கு சுவாமிநாதையர் ‘இந்த ஆயுதத்தை பயன்படுத்தத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை இப்பொழுது மிகமிகக் குறைந்த விட்டது. அனேகமாக இல்லை என்றே சொல்லலாம். ஆனால், கடந்த காலங்களில் இந்த ஆயுதத்தை பயன்படுத்துவதில் வல்லவர்களாக விளங்கிய ஒருசிலர் இன்னும் உயிரோடு இருக்கின்றனர். தாதனூரைச் சேர்ந்த மாயாண்டி

என்பவர் இந்த மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் இருந்து வளரி எறிந்தால் மேற்கே நின்றுகொண்டிருக்கும் குதிரையின் தலை துண்டாகி விழும்’ என்றார்.

காலபைரவரின் விரிந்த இமைகளுக்கு இடையே கண்கள் பிதுங்கியிருந்தன. ஜெனரல் தலையைத் திருப்பி மேற்கே பார்த்தார். கோச்சில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் நின்றவாறு அசைபோட்டுக் கொண்டிருந்தன. வரலாற்றின் நினைவுகளைப் பருகத் துவங்கிவிட்டால் அதற்குள் பெருமிதம் மட்டும் கசிந்து வருவதில்லை; வலியும் அதிர்ச்சியும் கூட சேர்ந்தேதான் வருகிறது. ஜெனரலின் கால்கள் நகர்ந்து அடுத்த தூணருகே சென்றன. சுவாமிநாதையர் விளக்கியபடி இருந்தார். மேற்கே நின்றுகொண்டிருந்த குதிரை தலை அசைப்பதை அவ்வப்பொழுது திரும்பிப் பார்த்தபடி நடந்தார் ஜெனரல்.

‘கல்வியறிவே இல்லாத ஜனங்கள். பத்துக்கு மேல் எண்ணத்தெரிந்தவர்கள் ஊருக்கு சிலர்தான் இருக்கிறார்கள். காலத்தையோ நேரத்தையோ அளவிடத் தெரியாது. வான்வெளியைப் பற்றிய அறிவு எவருக்கும் இல்லை. ஆனால் அபூர்வமான கைவினைக் கலைஞர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒருசில கரடுமுரடான கருவிகளை வைத்துக்கொண்டு ஐரோப்பியக் கைவினைஞர்களே பொறாமைப்படும் அளவுக்குப் பணிசெய்கிறார்கள். மூன்று உளிகளையும் ஒரு மரச்சுத்தியையும் வைத்துக்கொண்டு இவ்வளவு அபூர்வமான கலைப்படைப்புகளை உருவாக்கமுடியும் என்பது ஆச்சரியம்தான்’ என்று கலெக்டரிடம் வியந்து பாராட்டியபடி ஜெனரல் மியூசியத்தை விட்டு வெளியேறி வந்தார்.

அணிவகுத்து நின்ற கச்சேரி போலீசார் மீண்டும் சல்யூட் அடித்தனர். தலைமை ஏட்டு கோபால் ஐயரிடம் கைகொடுத்து நன்றி சொல்லியவாறு ஜெனரல் சாரட்டிலே ஏறினார். அவரைத் தொடர்ந்து கலெக்டரும் ஏறி அமர்ந்தார். ஆங்கிலச் சிப்பாய்களின் குதிரைகள் முன்னே நடக்கத்துவங்கின. வண்டிச் சக்கரங்களின் புழுதியும், கூட்டத்தின் புழுதியும் மேலேறி வந்தது. வெயில் உச்சியில் அடித்தபடி இருந்தது. வண்டிகள் போனதைத் தொடர்ந்து மக்கள் கூட்டம் கலைந்து செல்லத் துவங்கியது. ராணுவ அதிகாரி கோபால் ஐயரிடம் பேசிவிட்டுச் சென்றதைக் கண்டு பலரும் வியப்போடு பேசியபடி சென்றனர். போலீசின் பணியையும், வெள்ளை அதிகாரிகளுடன் அதற்கு இருக்கும் நெருக்கத்தையும் மதுரை மக்கள் முதன்முறையாகப் பார்த்தனர். கோபால் ஐயர் இவ்வளவு முக்கியப்பதவியில் இருப்பது சுப்புப் பட்டர் உள்பட பலருக்கும் அன்றுதான் தெரியவந்தது.

*

**தே**ய்பிறையாதலால் முன்னிரவிலே இருள் சூழ்ந்திருந்தது. தெருமுக்கில் ஏற்றப்பட்டிருக்கும் விளக்கின் வெளிச்சம் அந்த சந்துக்குள்ளும் கொஞ்சம் பரவியிருந்தது. இரவுச் சாப்பாட்டை முடித்து விட்டு பெரிய மனிதர்கள் எல்லாம் ஒருவர்பின் ஒருவராக வந்தபடி இருந்தனர். நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணை வழக்கம் போல் அன்றும் களைகட்டத் துவங்கியது. மாடத்தில் ஏற்றப்பட்டிருந்த விளக்கின் வெளிச்சம் திண்ணை முழுவதும் பரவியிருந்தது. வெற்றிலை

போட்டவாறு பெருசுகளின் பேச்சுகள் துவங்கின. ராணுவ அதிகாரி வந்து போனதைப் பற்றித் தான் அன்றைய பேச்சு ஆரம்பமானது. அந்த அதிகாரியின் கம்பீரமான நடை, தோரணை, இடுப்பிலே இருந்த வாள், காலை வெயிலில் மினுமினுப்பேறிய குதிரைகளில் வெள்ளைச் சிப்பாய்களின் அணிவகுப்பு...எனப் பெரியவர் பரமசிவ முதலி ஒவ்வொன்றையும் வியந்து வியந்து பேசிக்கொண்டிருந்தார்.

பேச்சு கோபால் ஐயரைப்பற்றித் திரும்பியது. அவரிடம் கடைசியாக அந்த இராணுவ அதிகாரி என்ன சொல்லிவிட்டு போனாராம் என்று கேட்டார் ஒருவர்.

‘நீதான் எல்லாத்தையும் பத்திரமா பாத்துக்கணும்’ என்று சொல்லி விட்டுப் போனதாக பரமசிவ முதலி சொன்னார்.

‘குமாஸ்தா போல போலீசும் முக்கியமான உத்தியோகந்தான் போலிருக்கே’ என்றார் நல்லமுத்து செட்டி.

‘அது கௌவரமான உத்தியோகமில்லைன்னு சொன்னதெல்லாம் பொய்தான் போலிருக்கே’ என்றார் கேசுப்பிள்ளை.

‘என்ன ஆச்சு, அக்கிரஹாரத்துல இருந்து ஐயர் தள்ளிவச்ச விசயம்’ என்று நல்லமுத்து செட்டி கேட்க, ‘அட போங்கப்பா எழுகடல் அக்கிரஹாரத்துல கோபால் ஐயருக்குத்தான் ஆதரவு கூட, சொத்து பாகஸ்தம் பண்றது, நிலங்களை மாத்தி எழுதி வைக்கிறது. அதுல பிரச்சினையில்லாம பாத்துக்கிறதுக்கு எல்லாம் கோபால் ஐயரோட உதவி தேவைன்னு பெரிய மனுஷங்க எல்லாம் புரிஞ்சுக்கிட்டாங்க. அதனால அக்கிரஹாரத்துல முன்னவிட இப்ப மரியாத கூடத்தான். அதுவும் இன்னிக்கு காலையில வெள்ளக்காரன் வந்துட்டுப் போன பிறகு அவர்தான் அக்கிரஹாரத்துல ராஜா’ என்றார் பரமசிவ முதலி.

‘அப்ப ஐயருதான் வெள்ளகாரனுக்கு செல்லப் பிள்ளைன்ற!’

‘ஆமா அதுல என்ன சந்தேகம்?’

‘சும்மாவே பொன்மேனியில் பண்ற குசும்பு தாங்கல. இப்ப இதுவேற சேந்துக்கிருச்சு.’

பெருசுகளின் பேச்சுக்கு இடையே காவல்கார பேயாண்டி திண்ணையைக் கடந்து நடந்ததைப் பார்த்த நல்லமுத்து செட்டி ‘இந்தா காவக்காரன் வந்தாச்சப்பா’ என்றார்.

‘நா ஒரு சுத்து போயிட்டு வாரேன்’ என்று சொன்ன பேயாண்டியை மற்ற பெசுருகள் ‘உக்காந்து பேசிட்டு அப்புறமா போ. யாரு எத தூக்கிட்டுப் போகப் போறா?’ என்றனர்.

‘தெனமும் நாங்கெல்லாம் போனப்பெறகு செட்டியார்கிட்ட மட்டும் வந்து பேசிட்டு பேசிட்டு போனா போதுமா? எங்க கிட்ட பேசவேணாமா?’ என்று பெரியவர் பரமசிவ முதலி கேட்டவுடன் வேறு வழியில்லாமல் காவல் கம்பைப் படியோரத்தில் சாத்தி வைத்துவிட்டு திண்ணையில் ஏறி உட்கார்ந்தான் பேயாண்டி.

‘உங்க அப்பா கருத்தைய்யா மாதிரி காவல் இப்ப பாக்க முடியுமா? இப்பெல்லாம் காலம் எவ்வளவோ மாறிப் போச்சு.

கொலகொள்ளையெல்லாம் பக்குவமாயிருச்சு. நகரம் நிம்மதி யாயிருச்சு. ஆனா, அப்பெல்லாம் வெள்ளைக்காரென் கொள்ளைக் காரென்னு எல்லோருமா சேந்து நகரத்த சூறையாடுனானுக. நிம்மதியே இல்லாம செத்துத் செத்து பொழச்சது எத்தன வருஷம் தெரியுமா? அப்பெல்லாம் தாதனூரு காவல்காரங்களும் இல்லாட்டி இந்த நகரமேது? நாங்க ஏது? கோயிலுக்குள்ள மூக்குத்தியோடு நிக்கிற மீனாட்சி ஏது?' என்று பெருமூச்சு விட்டபடி கடந்த காலத்துக்குள் போய் வந்தார் பரமசிவ முதலி.

'இப்ப நாடு நகரமெல்லாம் அடங்கியிருச்சப்பா. அதுக்கு வெள்ளக்காரனத்தான் கோயில் கட்டி கும்பிடணும்' என்றார் பக்கத்தில் இருந்த பெரியவர். 'கருத்தைய்யே காலம் போயி, மாயாண்டி காலம் போயி, இப்ப உங்க காலம் வந்திருச்சு' என்று சொல்லிவிட்டு சட்டென ஞாபகம் வந்தவராய் 'மாயாண்டி எப்படி இருக்கிறான்?' என்று கேட்டார்.

'உடம்பு ரெம்ப தளந்திருச்சு. காவல், களவுன்னு எதுக்கும் போறதில்ல. கஞ்சிய குடிச்சிட்டு ஆலமரத்தடியிலே இருக்காரு. இப்ப அவருதான் ஊர் பெரியாம்பள' என்றார் பேயாண்டி.

'மகனுக எப்படி இருக்காங்கே?' என்று கேட்டார்.

'மூத்தவெ கொஞ்ச நாளைக்கு முன்னாடிதான் களவுக்குப் போயிட்டு வாறப்ப பாம்பு கடிச்சு செத்துப் போயிட்டான். இளையவெ ஒச்சுதான் வெளி வீதி காவ பாக்குறான். மகள ஆனையூருக்கு மேற்க கட்டிக் கொடுத்துருக்காரு.'

'உன்னோட மகன் எப்படி இருக்கான்? தோட்டந்தொரவு பக்க மெல்லாம் இப்ப ஆளவே காணாமே' என்றார் கேசுப் பிள்ளை.

'ஏமகெ பூச்சிதான் ஆத்து பாலத்து வேல முடியுறவெரைக்கும் அங்கேயே இருந்து காவ பாத்துக்கிட்டு இருக்கான்.'

பேச்சு மாயாண்டியைத் தொட்டு, பூச்சியைத் தொட்டு கடைசியில் ஆற்றுப் பாலத்து வேலையில் வந்து நின்றது.

மதுரைக்கு ரயில் வண்டிப்பாதை அமைக்கப்படுவதன் முக்கியப் பணியாக வைகைக்கு குறுக்கே பெரியபாலம் கட்டும் வேலை மூன்று மாதமாக நடந்து வருகிறது. நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகள் மண்ணும் கல்லும் ஏற்றி இறக்கியபடி இருக்கின்றன. வேலையாட்களின் பெருங்கூட்டம் ஆற்றின் குறுக்கே குவிந்து கிடக்கிறது. கொளுத்தும் வெயிலில் தொப்பிகளைக் கழட்டாமல் ஏதேதோ கருவிகளை வைத்துக்கொண்டு கோடு போடுவதும் அடையாளங் காட்டுவதமாக அங்கும் இங்கும் அலைந்தபடி வேலை பாரத்துக்கொண்டிருந்தனர் வெள்ளைக்கார இஞ்சினியர்கள். ஆற்றின் நடுவே பாலத்தின் அஸ்திவாரத்திற்காக கிணறு போல் பள்ளம் தோண்டப்படுவதை மதுரை மக்கள் ஆச்சரியத்தோடு பார்த்துச் சென்ற வண்ணம் இருந்தனர். கட்டப்பட வேண்டிய பாலத்திற்குப் பக்கத்தில் மண்மேடுகளைப் போட்டு உருவாக்கப்பட்டுள்ள தற்காலிகத் தண்டவாளத்தின் மீது உருட்டு வண்டிகளில் சாமான்களை ஏற்றி ஆற்றின் நடுவே கொண்டுவந்து இறக்கும் பணிநடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரிய பெரிய இரும்பு ராடர்களும், மரக்கட்டைகளும் ஆற்றின் குறுக்கே நெடுகக் கிடந்தன. கல்தச்சர்கள் பெரிய கற்களை சிறிதாக செவ்வக வடிவத்தில் உடைத்தும்

விளிம்புகளை அழகுறச் செதுக்கிக்கொண்டும் இருந்தனர். மாட்டு வண்டித் தடங்கள் குறுக்கும் நெடுக்குமாக ஆற்றின் மணல் முழுவதையும் வார்வாராகக் கிழித்து வைத்திருந்தன. வேலை துவங்கிய காலத்தில் வண்டிச்சக்கரங்கள் மணலுக்குள் புதையுண்டு மீள முடியாமல் திணறின. மாடுகள் வாயில் நுரை தள்ள வண்டியை இழுக்க வேண்டி இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படியல்ல, ஆற்றின் நடுவே தோண்டப்பட்டுள்ள குழிகளில் இருந்து மண்ணை எடுத்து வண்டிப்பாதை முழுவதும் பரப்பிவிட்டதால் சக்கரங்கள் எளிதில் உருண்டு செல்கின்றன. மாடுகள் மணலுக்குள் கால் புதைக்காமலே ஆற்றை விட்டு வெளியேறுகின்றன. ஆற்றின் இடது ஓரத்தில் நீர் குறுகி ஓடிக் கொண்டிருந்தது.

இரும்புச் சாமான்கள், மரங்கள், வேலையாட்களின் பொருட்கள் என அனைத்தும் கிடப்பதால் காவல் அவசியம் எனக் கருதி வேலை முடியும் வரை இரண்டு பேர் காவலுக்கு நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவன்தான் பேயாண்டியின் மகன் பூச்சி. இன்னொருவன் மொக்கராசு மகன் விருமன்.

ரயில் வரப்போவது பற்றிய நூற்றுக்கணக்கான கதைகள் நகரத்து செல்வந்தர்களின் வீட்டுத் திண்ணையில் துவங்கி கிராமத்து சாவடிகள் வரை உலவிக்கொண்டிருந்தன. வெள்ளைக்காரன் பிசாசைக் கட்டி மதுரைக்கு இழுத்துவரப் போவதை எண்ணி பலரும் பயந்திருந்தனர். ஆற்றைக் கடந்து அது மதுரைக்குள் நுழைவதற்குள் ஊரை காலி செய்து ஓடிவிட வேண்டும் என்று திட்டம் போட்டவர்களும் உண்டு. நிலக்கரியைத் தின்று புகையைக் கக்கிக்கொண்டு ஓடிவரும் அந்த மிருகத்தை மதுரையில் எப்படித் தடுத்து நிறுத்துவார்கள் என்பதை அறிய ஆச்சரியத்தோடு காத்திருந்தவர்களும் உண்டு. காத்து கருப்பு இருக்கும் ஒற்றை ஆலமரத்தின் பக்கம் இரவில் போகப் பயந்து கிடந்தார்கள். தண்டவாளத்தின் பக்கம் பகலிலும் போவதில்லை. கொளுத்தும் வெயிலில் கண்மாய்க் கரை உயரத்திற்கு மேல் தண்டவாளங்கள் நீண்டு கடந்ததைப் பார்த்துப் பார்த்து பயந்தனர். ஏன் இந்தச் சனியனை இவன் மதுரைக்கு இழுத்து வரப் போகிறான் என்பது விளங்காத ஒன்றாகவே இருந்தது.

‘நம்ம பதினெட்டாம்படி கருப்பு காலுல சங்கிலி போட்டுக் கட்டியிருக்க மாதிரி அதோட கால் சக்கரத்திலேயும் இரும்புக் கம்பியப் போட்டுக் கட்டியிருக்கானுகளாம். அந்தக் கம்பிகளைத் தான் இது வரைக்கும் இழுத்துட்டு வந்து பதுச்சு வைக்கிறாங்கெ. அது கம்பி இழுவையிலே பெருஞ் சத்தம் கொடுத்து பேக்கூச்சல் போட்டுக்கிட்டு வருமாம். தப்பித் தவறி கம்பி அந்துச்சு, அவ்வளவுதான். நாடு நகரமெல்லாம் நாசந்தான். நாம காத தூரத்துக்கு அங்கிட்டு ஓடி கள்ளிச் செடிக்குப் பின்னாடி மறஞ்சிக்கிறணும்.’

பசுமலை போர்டிங் ஸ்கூல் ஆசிரியர்களும், மாணவர்களும் மதுரைக்கு ரயில் வரும் நாளுக்காக ஆர்வத்தோடு காத்திருந்தனர்.

ஆர்வமோ பயமோ இன்றி வண்டி வரும் நாள் வரை பொருளைக் காத்துக்கிடந்தனர் பூச்சியும் விருமனும்.

*

**அ**ன்று வழக்கத்தைவிட தாமதமாகத்தான் கோபால் ஐயர் கச்சேரிக்கு

வந்தார். உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்ததும் ‘உங்களைப் பார்க்க காவக்காரன் பொன்னாண்டி வந்திருந்தான்’ என்றார் பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்திருந்த வீராச்சாமி நாயுடு.

என்ன விசயமென்று எதுவும் சொன்னானா? என்று கோபால் ஐயர் கேட்டார்,

‘தெரியல, ஏதோ காவக்கூலி சம்பந்தமா பேசணும்னு மட்டும் சொன்னான்’ என்றார் வீராச்சாமி நாயுடு.

காவக்கூலியை அவனுடைய மனைவி முன்பே வந்து வாங்கிப் போய்விட்டாள். பொன்மேனி விவசாயத்திற்கான காவக்கூலியை அறுவடையில்தான் தரவேண்டும். அதுவும்கூட பொன்மேனிக் காவக்காரன் தானே கேட்கணும். இவன் ஏன் கேட்டுவந்தான் என்று குழம்பிக்கொண்டிருந்த கோபால் ஐயர் சட்டென யோசித்தவராய் ‘நீங்க யாரும் காவக்கூலி கொடுக்காம இருக்கீங்களா?’ என்று உள்ளே இருந்த போலீசாரிடம் கேட்டார்.

வீராச்சாமி நாயுடுவின் வீடு மேலமாசிவீதியில் இருக்கிறது. அது கருத்தாண்டியின் காவல். சேஷகிகிரி ராவுடைய வீடு தெற்கு ஆவணி மூலவீதியில் இருக்கிறது; அது சோங்கு காவல். கிருஷ்ணசாமி முதலியாருடைய வீடு மேல ஆவணி மூலவீதியில் இருக்கிறது; அது பேயாண்டி காவல். பரமசிவ முதலியாருடைய வீடும் மேல மாசி வீதியில்தான் இருக்கிறது. அதுவும் கருத்தாண்டியின் காவல். சுப்பிரமணி ஐயருடைய வீடு கீழப்பட்டமார் தெருவில் இருக்கிறது; அது விருமாண்டி காவல், எல்லோரும் காவக்கூலி கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். கச்சேரிக்குள் இல்லாமல் வெளியில் போயிருந்த மற்ற போலீசாரும் காவக்கூலி கொடுக்காமல் இருக்க வாய்ப்பில்லை. அதேபோல அவர்களுடைய நிலங்கள் எல்லாம் இருப்பது பக்கத்து கிராமங்களில்.

இன்னும் அங்கு அறுவடை துவங்கவில்லை. அதற்குள் காவக்கூலி கொடுக்க வாய்ப்பில்லை. பின் ஏன் பொன்னாண்டி காவக்கூலி சம்பந்தமாகப் பேசவந்தான் என்று கோபால் ஐயர் யோசித்து யோசித்து குழம்பிக்கொண்டிருந்தார்.

நீண்ட நேரங்கழித்து பொன்னான்டி கச்சேரிக்குள் நுழைந்தான். கோபால் ஐயர் ‘என்ன விசயமா வந்த?’ என்றார்.

‘காவக்கூலிக்காகத்தான் வந்தேன் சாமீ’ என்றான்.

‘ஏன், வீட்டுக் காவக்கூலியத்தான் உன் பொஞ்சாதி வாங்கிட்டுப் போயிட்டாளே, மத்தவங்களெல்லாம் காவக்கூலி கொடுத்துட் டதாகச் சொல்றாங்க. அப்புறம் என்ன காவக்கூலி?’

‘நான் உங்க வீட்டு காவக்கூலிய கேட்கல சாமீ. புதுசா கட்டியிருக்கிற இந்த வீட்டுக்குத்தான் காவக்கூலிய கேட்டுவந்தேன்’ என்று கச்சேரிக்கான காவக்கூலியைக் கேட்டான்.

அப்பொழுதுதான் கோபால ஐயருக்கு விளங்கியது. ஆமாம். கச்சேரிக்கு காவக்கூலி கொடுக்கணுமே! யார் கொடுப்பது என யோசித்தார். நம்முடைய பணத்தில் இருந்து கொடுக்கிறதா அல்லது சர்க்காருடைய பணத்த கொடுக்கிறதா? என்று ஏட்டு வீராச்சாமி நாயுடுவிடம் கேட்டார்.

அதற்கு அவர் டிஎஸ்பியிடம் சொல்லிவிட்டு சர்க்கார் பணத்திலிருந்து காவக்கூலியை கொடுப்போம் என்றார்.

‘புது மண்டபத்துல அந்த பழைய சாமானெல்லாம் அடஞ்சு வச்சிருக்கத்துக்கு அந்த குமாஸ்தா தான் கொடுக்குறாரு. அதுபோல நீங்க கொடுக்கவேண்டியதுதான!’ என்றான் பொன்னாண்டி.

‘அப்படியா! சரி. நாங்களே போட்டுக் கொடுத்துட்டு, அப்புறமா அங்க வாங்கிக்கிறோம். நீ ஒரு ரெண்டு நாள் கழிச்சு வந்து வாங்கிட்டு போ’ என்று சொல்லி பொன்னாண்டியை அனுப்பினார்.

*

# 63

**தா**தனூர் மூன்று கூட்டம். பதினாறு வகையறாக்களைக் **கொண்டது.** இதில் கொடிக்கா வகையறா மட்டும் ஊரில் இல்லை. அது மட்டுமல்ல, ஊருக்கு அவர்கள் எப்பொழுதும் கட்டுப்பட்டதும் இல்லை. மற்றப் பன்னிரண்டு வகையறாக்களும் ஊருக்குக் கட்டுப் பட்டவர்கள். அவர்கள்தான் ஊராகவும் ஊர் பெரியாம் பிளையாகவும் இருக்கிறார்கள். மாயாண்டிதான் இப்பொழுது ஊர் பெரியாம்பிளை. மூன்றாவது தலைமுறையை பார்த்துக்கொண்டிருக்கிற மனிதர். வெள்ளைக்காரனால் நாடு நகரமெல்லாம் சீரழிந்ததையும், இப்பொழுது ஊரெங்கும் அமைதி நிலவுவதையும் முழுமையாகப் பார்த்து உணர்ந்தவர். ஊர் தோன்றிய காலம் முதல் உருவாகிய நடைமுறைகள், மரபுகள் எல்லாம் முறையாக நடப்பதை ஊர் பெரியாம்பிளைதான் பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் ஏதாவது பிழை ஏற்பட்டால் ‘நீயெல்லாம் என்னத்துக்குடா பெரியாம்பிளையா இருக்க’ என்று ஆணும் பெண்ணும் திட்டித் தீர்ப்பார்கள். மாயாண்டிப் பெரியாம்பிளையை பொறுத்தவரை ஊரின் மரபுகளைக் காப்பது உயிரைக் காப்பதைப் போல. அவர் ஊரின் இரண்டு அழிவுகளையும் பார்த்தவர். அவரது கதைகளில் எல்லாம் அழிவின் ஓலம்தான் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. வெள்ளைக்காரன் கடைசியாக ஆயுதங்களை ஒழிக்க சட்டம் கொண்டுவந்து ஊரையே அழிச்சான். அந்தக் கொடுமையான பேக்காலத்தின் கதைகளையும், குரங்கிருந்த வருடத்தில் எலி செத்து விழுந்து ஊரே அழிந்த பேக்காலத்தின் கதைகளையும் அவரளவுக்குச் சொல்ல ஆண்களில் ஆள் கிடையாது. தாதனூர் வளரிகள் முழுவதும் வெள்ளைக்காரனின் கண்களுக்குப் படமால் அமணலையின் இருள் குகைகளுக்குள்ளும், ஆலமரங்களின் பெரும் கவைகளுக்குள்ளும் ஒளித்து வைக்கப்பட்டுள்ளதின் தடயங்களாக அவரின் கதைகள் மட்டுமே இருக்கின்றன. ஊர் பிறந்த காலத்திலிருந்து கதை சொல்ல பெண்களில் பெருங்கொண்ட கிழவிகள் நிறைய இருக்கிறார்கள். ஆண்டாயிக் கிழவி ஒருத்தி பத்து மாயாண்டிக்குச் சமம். அவள் இறந்து காலங்களாகிவிட்டது. ஆனால் அவள் சொன்ன கதைகள் எதுவும் சாகவில்லை. கொண்டையை

இழுத்து முடிந்து இரவெல்லாம் பெண்கள் கதை சொல்லிக்கொண்டேதான் இருக்கின்றார்கள். தாதனூரின் மரம் செடி கொடியெல்லாம் இரவும் பகலும் கதை கேட்டுத்தான் வளருகிறது. குழந்தைகள் காற்றைப்போலக் கதையை சுவாசித்து வளருகின்றன.

பிறந்தது முதல் கல்லெறியத் துவங்கும் வயதுவரை கிழவிகளின் கதைகளைக் கேட்டு வளரும் ஆண் பிள்ளைகள் கல்லெறி ஆரம்பித்தவுடன் கருப்பு கோவில் ஆலமரத்தடியில் கதை கேட்க ஆரம்பிக்கின்றனர். ஆண்கள் சொல்லும் கதைகள் அவர்களுக்கு ஒப்புதலே இல்லை. அபூர்வமாக மாயாண்டி போல சில பெருசுகள்தான் கிழவிகளுக்கு ஓரளவாவது நெருங்கி கதை சொல்ல முடியும். தலைமுறை தலைமுறையாய் கதைகேட்டு வருகிறவனுக்கு கதை சொல்வது சாதாரண விஷயமல்ல. மாயாண்டிக்கு உடம்பெல்லாம் கதைதான். அவனளவுக்கு நீண்டகாலம் களவுக்குப் போனவர்கள் இப்போது ஊரில் இல்லை. ஒருவேளை சின்னான் உயிரோடு இருந்திருந்தால் மாயாண்டியை விட அதிகக் கதைகள் சொல்லியிருக்கமுடியும். ஆனால். அவன் எந்த உண்மையையும் சொல்லாமல் சாவை ஏற்றுக்கொண்டான். அவனுக்கும் சேர்த்து மாயாண்டிதான் கதைசொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் கதையைத் தெரிந்தவன் மாயாண்டி மட்டும்தான். ஆனாலும். மாயாண்டிக்கு முழுமையாகத் தெரியாத ஒரே கதை அவனு டையதுதான்.

மாயாண்டி மரபின் விளைச்சல். சரடு கட்டி வந்த புதுப்பெண் ணுடன் மாப்பிள்ளையைச் சேர்ந்து படுக்கவைப்பதில் துவங்கி, ஜல்லிக்கட்டில் குத்துமாட்டை அணைவது வரை அவரது யோசனையைக் கேட்டுத்தான் ஊர் வளருகிறது. பெண் பிள்ளைகளின் காது வளர்க்க குறவன் காதைக் கிழிக்கும்பொழுதும், பையன்களை கவரடப்பு செய்ய நாவிதன் தோலை அறுக்கும் பொழுதும் கிழவனைத்தான் நினைப்பார்கள். ஏதாவது எசகுபிசகு ஆகிவிட்டால் ஊருக்கே பதில் சொல்லிவிடலாம். ஆனால். இந்தக் கிழவனுக்குப் பதில் சொல்லித் தப்பமுடியாது.

பிள்ளை பிறந்தவுடன் கொம்பூதி வகையாறவுக்கு தலக்கட்டு வரிகொடுப்பதும் முதல்நாள் கன்னம் போடப்போகிறவன் பனமரத்தான் வகையறாவுக்கு காணிக்கை வரி கொடுப்பதும் ஊர் தோன்றிய காலம் முதல் இருந்துவரும் வழக்கம். ஊரில் யாராவது வாணம் தோண்டினாலோ, சுவர் வைத்தாலோ, விழுந்த சுவரை எடுத்து வைத்தாலோ ஒத்தப் பல்லன் வகையறாவுக்கு வரி கொடுக்கவேண்டும் என்பது அதன்பின் உருவானது. முன்னும் பின்னுமாக உருவான அனைத்தையும் பற்றி நடந்துபோகும் ஊரின் தலையாள் ஊர் பெரியாம்பளதான் எந்தப் பிசிறும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதற்கு அவரே பொறுப்பு.

**தா**தனூர்க்காரர்கள் யாராக இருந்தாலும் கையில் வைத்திருக்கிற கம்பு கருங்காலி மரக்கம்பாகத்தான் இருக்கும். கருங்காலி மரத்துக்குத்தான் வேறு எதற்கும் இல்லாத வலு இருக்கிறது. எவ்வளவு பெரிய ஆயுதத்தின் வெட்டையும் தாங்கும் பலமிருக்கிறது. கையில் வைத்திருக்கும் கருங்காலிக் கம்பிற்கு மூன்று பெயருண்டு. காவக்கம்பு, நிலையாள் கம்பு, மொண்டிக்கம்பு, காவல் பார்க்கப் போகிறவர்கள் கையில் வைத்திருப்பது காவக்கம்பு, கன்னம் அல்லாத பிற களவுக்கு போகும் போது கொத்தின்

நிலையாள் கையில் வைத்திருப்பது நிலையாள் கம்பு. கன்னம் போடப்போகிற கொத்தின் நிலையாள் கையில் வைத்திருப்பது மொண்டிக்கம்பு.

களவுக்குப் போய்த்திரிந்தவன் காவக்காரணமாக மாறினால் மொண்டிக்கம்பாகவும் நிலையாள் கம்பாகவும் இருந்த கம்பு காவக்கம்பாக மாறிவிடும். அவனே காவல் முழுவதும் பார்த்து வயோதிகத்துக்கு உயிரோடு இருந்தால் அவன் கையிலிருக்கிற கம்பு ஊண்டு கம்பாகிறது. 'ஏ ஊண்டு கம்பு பாக்காத களவையா நீங்க பாத்திருவீங்க...' என்று பெருசுகள் இளவட்டங்களைப் பார்த்து இளக்காரமாய் இன்றைக்கும் கேட்கின்றனர். ஊண்டுகம்புகள் ஒவ்வொன்றையும் சுற்றி ஓராயிரம் இரவுகள் கொடிபோல் படர்ந்து கிடக்கின்றன.

மாயாண்டியின் கையில் இருக்கிற கம்பு எல்லாமாக இருந்த கம்பு. அந்தக் கம்புக்கு எத்தனையோ கதைகள் உண்டு. மாயாண் டியின் கைநரம்புகள்தான் அந்தக் கம்புக்குள்ளும் ஓடிப் பரவியிருந்தது.

பெரியாம்பிள காவக்கம்பை ஊண்டியபடி அமண மலையின் பின்புறம் இருக்கிற பனைமரம் நோக்கி வந்துகொண்டிருந்தார். வெயில் ஏறி அடித்துக்கொண்டிருந்தது. ஒத்தையடிப்பாதையில் பைய நடந்து கொண்டிருந்தார். அவர் வருகைக்காக ஒரு கூட்டம் பனை மரத்தடியிலேயே நின்றுகொண்டிருந்தது. கன்னம் போடப்போகும் கொத்தில் அன்று முதன்முதலாகச் சேர்ந்து போக இருக்கிற கழுவன் காணிக்கை வரிசெலுத்தத் தயாராக இருந்தான். நல்லாண்டிதான் அந்த கொத்தின் நிலையாள். எனவே. கையில் மொண்டிக்கம்போடு நின்றுகொண்டிருந்தான். எல்லோரும் ஊர்ப் பெரியாம்பிளைக்காக எதிர்பார்த்திருந்தனர். கம்பை ஊண்டியபடி மெல்ல நடந்துவந்துகொண்டிருந்தார். ஊர் பெரியாம்பிள மாயாண்டி.

*

# 64

**மது**ரை நகரில் போலீஸ் ஸ்டேசன் அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆயின. இந்தக் காலத்தில் போலீஸ் டிபார்ட்மெண்டை பலப்படுத்தவும் விஸ்தரிக்கவுமான பல முயற்சிகளை அரசு எடுத்தது. மதுரையைத் தவிர சுமார் பத்தாயிரம் மக்கள் தொகையுள்ள நகரங்களான திண்டுக்கல், பழநி, பெரியகுளம் ஆகிய மூன்று ஊர்களிலும் போலீஸ் ஸ்டேசன்கள் அமைக்கப்பட்டன. இராமநாதபுரம், சிவகங்கையிலும் போலீஸ் ஸ்டேசன் உருவாக்கும் பணி நடைபெற்று வந்தது. பிற இடங்களில் போலீஸ் ஸ்டேசன் அமைக்கும் பணி தொடங்கினாலும் சுமார் ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கின்ற நகரமான மதுரையில் உருவாக்கப்பட்டுள்ள போலீஸ் ஸ்டேசனின் பணி மேம்பாடடைவதன் மூலம் மற்றப் பகுதிகளில் அது வெற்றி பெறும். எனவே, மதுரை நகரத்து போலீசின் வேலைகளைப் பலப்படுத்தவும், அதன் செயல்பாட்டை அதிகரிக்கவும் எஸ்.பி.வில்சன் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தார்.

மதுரை நகரத்தில் போலீஸார் எண்ணிக்கையை அறுபதாக உயர்த்தினார். அதை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து இரண்டு இன்ஸ்பெக்டர்களின் கீழ் மற்ற போலீசார் பணிபுரிவதைப் போல வடிவமைத்தார். கோபால் ஐயரும், வீராச்சாமி நாயுடுவும் தலைமை ஏட்டுகளாகப் பதவி உயர்வு பெற்றனர். குற்றங்களைக் கண்டறியும் திறனை வளர்ப்பதற்கான முறையில் அவர்களுக்குத் தொடர்ந்து பயற்சி அளிக்கப்பட்டு வந்தது. குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட பயிற்சிகளும் தரப்பட்டன.

புதிதாக திறன் அதிகப்படுத்தப்பட்ட கச்சேரி போலீசாரின் பணிகளை விரிவுபடுத்தும் வகையில் எஸ்.பி. வில்சன் திட்டங்களை உருவாக்கினார். மதுரை நகருக்கு வந்து சேரும் இரண்டு பிரதான சாலைகளில் நிகழும் தீவட்டிக்கொள்ளை, வழிப்பறிக் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவதில் கவனம் செலுத்தினார். அதற்காக இரவு நேரங்களில் இரண்டு குதிரைப்படைகளில் ரோந்து செல்லுமாறு கட்டளை பிறப்பித்தார்.

அதன்படி எல்.ஆர்.ப்ரேவ்ஸ் டி.எஸ்.பி தலைமையில் ஒரு குழு நத்தம் திண்டுக்கல் சாலையிலும் ஓம்பெர்ட் தலைமையிலான ஒரு குழு திருமங்கலம் விருதுபட்டி சாலையிலும் ரோந்து போகத் துவங்கின. ஏட்டு கோபால் ஐயர் தலைமையிலான குழு மதுரை இரயில்வே ஸ்டேசனின் இரவு நேரக்காவல் பணிகளை கவனித்தது. குதிரைப்படைக் குழுக்கள் ஆரம்பத்தில் அந்தந்தப் பாதைகளில் தினமும் இரவு ஐந்துமைல் தொலைவு வரை சென்று திரும்பிக்கொண்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய குதிரைப்படை இரவு நேர ரோந்து வரும் செய்தி பரவ ஆரம்பித்ததும் தீவட்டிக் கொள்ளையர்கள் சுதாரிக்க ஆரம்பித்தனர்.

குதிரைப்படை ரோந்து திட்டத்தை துவக்கி வைத்துவிட்டு எஸ்.பி.வில்சன் ராமநாதபுரத்திற்குப் புறப்பட்டார். அங்கு கட்டப் பட்டு வரும் போலீஸ் ஸ்டேசன், போலீஸ் தேர்வு ஆகியவற்றை கவனிப்பதற்கும், பாம்பனில் அமைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் கைதிகள் இறப்பின் அளவு மிக அதிகமாக இருக்கிறது என்று வந்த மகஜரின் பேரில் ஆய்வு செய்யவும் அவர் புறப்பட்டுப் போனார்.

போகிற வழியில் சிவகங்கை, மானாமதுரை ஆகிய இடங்களில் போலீஸ் பணிகளை ஆய்வு செய்துவிட்டு ராமநாதபுரத்திற்குப் போய்ச் சேருவதாகத் திட்டம். உண்மையில் இத்திட்டம் ஆறு மாதத்திற்கு முன்பே போடப்பட்டது. கடும்கோடை காலமாதலால் வெயிலின் கொடுமை தினம் தினம் அதிகரித்துக்கொண்டே வந்தது. உஷ்ணக் காற்று தொடர்ந்து வீசியது. வைகையில் தண்ணீர் ஆண்டு துவக்கத்திலியே நின்றுவிட்டது. வெயில் நிலத்தை பாளம் பாளமாய்ப் பிளந்து போட்டு வைத்திருந்தது. இந்தக் கொடுமையான வெயில் காலத்தில் நீண்ட பிரயாணம் வேண்டாம் என்று தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார். ஆனால், ஆறு மாதத்திற்கும் மேலாக பிரயாணத் திட்டத்தை தள்ளிப் போடமுடியாதால் வேறு வழியின்றி வைகையின் கரையில் காய்ந்த மரங்களின் வரிசையினூடே வில்சனின் வண்டிகள் ராமநாதபுரத்தை நோக்கிச் சென்றன.

*

**யு**வ வருஷம் (1875) கோடையின் உச்சத்தில் நகரம் கருகிக்கொண்டிருந்தது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மழை பொய்த்துப் போனதால் வறட்சியின் கோரப் பிடிக்குள் மதுரை சிக்கித் தவித்தது. ஆங்கிரச (1872) வருஷத்தில்தான் முழு வெள்ளாமையை அறுவடை செய்ய முடிந்தது. அதன்பின் கடந்த இரண்டு வருஷமாக நிலைமை மோசமாகவே இருந்தது. இந்த ஆண்டு வெள்ளாமையோ முற்றிலும் பாழ்பட்டுப்போனது. கிராமங்களில் மக்கள் குடிநீருக்கே கஷ்டப்பட்டனர். ஆடுமாடுகளைக் காப்பாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையை நாளுக்கு நாள் இழந்து வருகின்றனர். தொடர்ந்து வெள்ளாமை பொய்த்துப் போனதால் விளைபொருட்கள் எதுவும் நகரத்திற்கு வந்து சேரவில்லை. வியாபாரம் படுத்துவிட்டதால் பண்டங்களின் விலை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது.

மதுரையைச் சுற்றிய எந்த கிராமத்திலும் இரண்டாவது வருசமும் நெல் அறுவடை இல்லை. தினை, சாமை, வரகு, கம்பு, சோளம் போன்றவை சென்ற ஆண்டு கொஞ்சம் விளைந்ததையொட்டி நகருக்கு வந்து சேர்ந்தன. ஆனால், இந்த ஆண்டு அதுவுமில்லை. துவரை, மொச்சைப் பயறு, உளுந்து,

கொள்ளு, எள்ளு, கடலை விளையும் பகுதியில் இருந்துகூட இரண்டு ஆண்டுகளாக எதுவும் மகசூலாகி நகரத்துக்கு வரவில்லை. தோட்டக்கால்களில் வெற்றிலை, வாழை, கரும்பு, மஞ்சள், மிளகாய், கத்திரி, புகையிலை போன்றவையும் பத்தில் ஒரு பங்கு கூட விளையவில்லை. நகரத்தின் சந்தையை வறட்சியின் கோரப்பிடி இறுக்கத் துவங்கியது.

இந்தக் கடும் வறட்சியை சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் நகரில் இருந்த சில பெரும் வணிகர்களே. தொடர்ந்து வெள்ளாமை சரியில்லை என்றவுடன் தஞ்சாவூரில் இருந்து அரிசியைப் பெருவாரியாக வாங்கி இறக்கி இருப்பு வைத்துக்கொண்டனர். செல்வந்தர்கள் வீட்டுக் குதிர்கள் வற்றவும் பொருட்களின் விலையைப் படிப்படியாக ஏற்றிவிட்டனர்.

கடைசியில் வணிகர்கள் வைத்ததே விலை என்றானது. நகரில் பெரும் லாபத்தைச் சுருட்டியது நல்லமுத்து செட்டிதான். அவருக்கு அடுத்து அவரது சித்தப்பா துரைசாமி ரெட்டி மற்றும் இருபதுக்கு மேற்பட்ட வணிகர்கள். இவர்கள் வீடுகளில் எவ்வளவு தானியங்களை குவித்து வைத்திருந்தனர் என்பது யாருக்கும் தெரியாது. அந்த அளவு முன்பே வாங்கி வைத்து லாபத்தை மூட்டைகளாகக் கட்டி வைத்திருந்தனர். மதுரையையே சூறையாடிக் கொண்டிருந்த உஷ்ணக் காற்று வியாபாரிகளின் வீட்டுத் திண்ணைகளில் மட்டும் குளிர்ந்து வீசியது. எண்ணெய்ப் பிசுக்கேறிய அவர்களின் வீட்டுப் படிக்கட்டுகள் முன்னிலும் குளுமையாக இருந்தன. நிலக்கிழார்கள்கூட வணிகர்களை எதிர்பார்க்க வேண்டிய நிலை உருவானது. அவர்கள் நகரத்தின் மேலே அமர்ந்து கொண்டு சதா தராசுத் தட்டைத் தூக்கி நிறுத்தபடி இருந்தனர். நாட்கள் ஆக ஆக தட்டில் பற்றி நிற்க இடம் கிடைக்காதவர்கள் நழுவிக் கீழே விழுந்தனர். நகரமானது தராசு தட்டைப் பற்றி நிற்க முடிந்தவர்களுக்கு மட்டுமே என்றானது.

கடும் வறட்சியால் வெள்ளாமை பொய்த்துவிட்டது. இரண்டு ஆண்டுகளாக அறுவடை மிகவும் குறைந்து விட்டதால் காவல் கூலி சொல்லிக் கொள்ளும்படி வசூலாகவில்லை. கிராம காவல்காரர்கள் பாடு திண்டாடியது. ‘மகசூலே இல்லாத காலத்தில் தரவேண்டிய காவக்கூலிக்கு விவசாயி எங்கு போவான்’ என்ற பொது நியாயம் காவல்காரர்களை நிர்கதியான நிலைக்குத் தள்ளியது. வறண்ட கண்மாயும் பட்ட மரமும் தரிசுநிலமுமாக வைகைக்கரை கிராமங்கள் மாறின. தாதனூரிலிருந்து போன கிராமக் காவலர்கள் நகரக் குடிக்காவலர்களை அண்டிவரவேண்டிய நிலை ஏற்பட்டது. தாதனூரின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு உறவுக்காரனாவது வந்திருந்தான். வாக்கப்பட்டுப் போன பெண்கள் எல்லாம் பஞ்சம் கடந்த பின் வருவதாகச் சொல்லி தாய்வீட்டிற்குத் திரும்பி வந்தனர். கருப்பு கோயில் ஆலமரங்களின் கீழ் ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்தபடியே இருந்தது. அமணமலை உள்ளுக்குள் உஷ்ணத்தால் இளகியது. பெருசுகளின் பேச்சு பழைய பஞ்ச காலத்தைப் பற்றியே இருந்தது. அவர்கள் பஞ்சம் தங்களைச் சூழ ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தவாறே, கண்ணுக்கு எதிரே கொளுத்தும் வெயிலில் பொசுங்கும் நிலத்தை வெறித்துப் பார்த்தபடி பேசிக்கொண்டிருந்தனர்.

‘நாளை உன்னிடம் ஒரு முக்கியமான சங்கதி பேச வேண்டியிருக்கிறது.

எனவே பகலில் வீட்டுக்கு வா' என்று நேற்று இரவு நல்லமுத்து செட்டி சொல்லியிருந்ததால் பேயாண்டியும் கருத்தாண்டியும் சூரியன் அடிசாய கருப்பு கோயிலில் இருந்து புறப்பட்டார்கள். உஷ்ணக்காற்று அலை அலையாய் வந்துகொண்டிருந்தது. விரிவோடிக் கிடந்த மாடக்குளம் கண்மாய் வழியாக அவர்கள் மதுரையை நோக்கி நடந்தார்கள். வெறிச்சிட்டுக் கிடந்த வீதிகளின் சுவர் ஓரச் சிறுநிழலில் சுருண்டு கிடந்த நாய்களைப் பார்த்தபடி அவர்கள் நல்லமுத்து செட்டியாரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

வெயிலில் வந்தவர்களுக்கு நீராகாரம் கொடுத்த செட்டியார், வழக்கத்திற்கு மாறாக வீட்டின் உள் அறைக்குள் கூட்டிப் போனார். அங்கே அவர் சித்தப்பா துரைச்சாமி செட்டியும் இருந்தார். 'ஒரு முக்கிய வேலை சம்பந்தமா உங்கிட்ட பேசத்தான் வரச் சொன்னோம்.'

விஷயம் இதுதான். கடும் பஞ்ச காலமாக இருக்கிறது. வியாபாரத்திற்கான சரக்கு கையிருப்பு குறைந்துகொண்டே வருகிறது. எனவே வடக்கே காவிரிக்கரைப்பக்கம் போய் தானியங்களை வாங்கிவர முடிவுசெய்துள்ளோம். அதற்கு நீ ஒப்பந்தக் காவலாக இருந்து பொருட்களை கொண்டுவந்து சேர்க்க வேண்டும்.

கொஞ்சம் யோசித்த பேயாண்டி 'எத்தனை வண்டிக இருக்கும்?' என்று கேட்டான்.

'எப்படியும் இருபது வண்டிகளுக்கு மேல இருக்கும்' என்றார் செட்டியார்.

இந்தப் பஞ்ச காலத்தில் களவும் வழிப்பறியும் நாடெங்கும் அதிகமாகிவிட்டது. வண்டிகளைக் கொண்டுவந்து சேர்ப்பதென்பது கடினமான வேலைதான். அதுவும் ஒரு மாதப்பயணத் திட்டமாக இருக்குமே என்று பேயாண்டி யோசித்தவாறு இருந்தான்.

'என்னத்தப்பா யோசிக்கிற! எவ்வளவு காவக் கூலி வேணும்? எத்தன பேர் போறீங்க?' என்று கேட்டார் செட்டியார்.

'நான் போய் பெரியாம்பளகள கலந்துகிட்டு நாளைக்கு சொல்றேன்.'

'நாளைக்கு சொல்லு. ஆனா வார வெள்ளிக்கிழம காலயில வண்டிக கௌம்பணும்' என்றார் செட்டியார்.

சரி என்று சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டனர். பேயாண்டி மனத்திற்குள் கணக்குப் போட்டவாறே வந்தான். இந்த பஞ்சகாலத்தில் இவ்வளவு தூரத்திற்கு காத்து வருவதென்பது மிகக் கடினமான வேலையாக இருக்கும். உயிர்ப்பலி தரவேண்டி யிருக்கலாம். அதே நேரத்தில் ஊருக்குத் திரும்பி இருக்கும் கிராமக் காவல்காரர்கள் பலரை இந்த வேலைக்கு அனுப்ப முடியும். எப்படியும் முப்பது நாற்பது பேர் வரையிலும் அனுப்ப வேண்டியது இருக்கும் என்று யோசித்தவாறே வந்து கொண்டிருந்தான்.

ஊர் பெரியாம்பளயான மாயாண்டியிடம் கலந்து பேசி அன்று இரவே நல்லமுத்து செட்டியிடம் காவக்கூலி உள்ளிட்ட விபரத்தை பேயாண்டி தெரிவித்தான்.

வெள்ளிக்கிழமை அதிகாலை வடக்கு நோக்கி இருபத்திரண்டு வண்டிகளும் புறப்பட்டன. முப்பது காவல்காரர்கள் சென்றனர்.

அமணமலை கருப்பு கோயில் ஆலமரத்தடியில் இருந்த கூட்டம் கணிசமாகக் குறைந்தது. கிராமத்து பரவுக் காவலர்கள் பலர் ஒப்பந்தக் காவலர்களாக மாறி வண்டிகளோடு வடக்கே போய்க் கொண்டிருந்தனர். செட்டியாரின் கணக்குப்படி மிகக் குறைந்த செலவில் வாங்கப்பட்ட காவல் ஒப்பந்தமாகவே அது இருந்தது. பஞ்சம் எந்தச் சிறு கூலிக்காகவும் போய் மாய்வதற்கான மனிதர்களை உருவாக்கி விட்டிருந்தது.

*

**பு**திதாக உருவாக்கப்பட்ட காவல்துறை மறுசீரமைப்புச் சட்டங்கள் காவலர்களின் பணிகளை அதிகரித்திருப்போடு, ஏற்கனவே நடைமுறையில் இருக்கம் கிராமக் காவல், குடிக்காவல் முறையை ஒழித்துக்கட்டுவதற்கான இறுதி முயற்சியாக இருந்தது. அந்தப் புதிய சட்டத்தின் விளைவாக மதுரை போலீஸ் படை தங்களின் பணிகளை முன்னிலும் அதிகப்படுத்தியது. வரும் வழக்குகளைப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஒப்படைப்பது என்று மட்டும் இருந்த கச்சேரியின் பணிகள் இப்பொழுது முன்னேறியுள்ளன. அரசாங்கத்தின் சார்பில் நேரடியாக பிரச்சனைக்குரிய இடத்துக்குப் போகிறவர்களாக போலீஸ்காரர்கள் மாறிவிட்டனர். கொத்தவால் சாவடியின் வரிவிதிப்பு அதிகாரிக்கும், வரி செலுத்துவோருக்கும் இடையில் போலீஸ் ஒரு நிரந்தர ஆளாகியுள்ளது. ஒருசில குற்றங்களைத் தேடிப் போய் பதிவு செய்ய போலீசார் பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏட்டு வீராச்சாமி நாயுடுவின் தலைமையிலான போலீஸ் குழு நகரின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை கவனித்துக்கொண்டது. சேஷகிரிராவின் குழு நகரின் மேற்கு. தெற்குப் பகுதிகளைப் பார்த்துக்கொண்டது. தலைமை ஏட்டு கோபால் ஐயரின் தலைமையிலான குழு ரயில்வே ஸ்டேசன், நீதிமன்றப் பணிகள், கலெக்டர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை கவனித்துக் கொண்டது. இந்தக் குழுக்களில் இருந்த பல போலீஸார் துப்பாக்கி சுடும் பயிற்சியில் தேர்ச்சி பெற்று கலெக்டரின் பாராட்டைப் பெற்றனர். போலீசுக்கான அதிகாரம் நாளுக்கு நாள் அதிகமாகியது. அரசாங்கத்தின் முக்கிய அடையாளமாக கச்சேரி மாறியது. நகரச் செல்வந்தர்கள் பலரின்சொத்துப் பிரச்சனைகள் கச்சேரிக்கு வந்து சேர்ந்தன. கச்சேரி தனது அலுவல்களை அதிமாக்கிக்கொண்டே வந்தது.

ரயில்வே ஸ்டேசனை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கோபால் ஐயர்தான் அதிக பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. ரயில் நிலையத்தில் மலை போல் குவிக்கப்பட்டிருந்த இரும்புச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு செல்ல மக்கள் வந்த வண்ணம் இருந்தனர். போலீஸ் குழு அங்குமிங்குமாக ஓடவும் விரட்டவுமாக இருந்தனர். ரயிலைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல்லி உள்ளே நுழைந்து விடுகிறவர்கள் கையில் ஒரு சிறு இரும்புத் துண்டையாவது எடுக்காமல் அங்கிருந்து செல்வதில்லை. ஆரம்பத்தில் தினந்தோறும் பலரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்த நடவடிக்கை பலனைத் தரவில்லை. நேரடியாக எடுக்க விடாமல் தடுப்பது மட்டுமே ஓரளவாவது பலனைக் கொடுத்தது. இருந்தும் குவிக்கப்பட்டிருந்த இரும்புச் சாமான்களில் பாதிக்கு மேல் எடுத்துக்கொண்டு போய்விட்டனர். இதனால் போலீஸ் உயர் அதிகாரிகள் கோபால் ஐயர் மீது அதிருப்தி அடைந்தனர். இது தவிர

கோபால் ஐயர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட மகஜர் ஒன்று கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. ராமநாதபுரம் கேம்பிற்கு சென்றிருக்கும் எஸ்.பி. மதுரை வந்தவுடன் அவர் மீது நடவடிக்கை எடுப்பார் என்று சிலர் எதிர்பார்த்தனர்.

கச்சேரி, நீதிமன்றம் இந்த இரண்டு கட்டிடங்களில் இருந்தும் விரிந்த கண்ணிகள் ஒவ்வொரு மனிதனைச் சுற்றியும் கண்ணுக்குத் தெரியாத வலை ஒன்றைப் பின்னத் துவங்கியது. அவை வெறும் கட்டிங்களாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாக உருமாறித் தங்களுக்கு கீழ் நகரத்தின் செயல்பாடுகள் இருப்பதுபோல் தகவமைக்க ஆரம்பித்தன. துவக்க நாட்களில் மதுரைவாசிகளால் ஏளனத்தோடும், கண்டுகொள்ளப்படாமலும் இருந்த கச்சேரி கட்டிடத்திற்கு நாளுக்கு நாள் வலிமை கூடிக்கொண்டேயிருந்தது. கச்சேரியின் வாசலில் இருந்த அரசமரத்தைவிட கச்சேரியின் வேர் மொத்த நகரத்திற்கு அடியிலும் ஊடுருவிச் சென்று வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் நள்ளிரவில் டி.எஸ்.பி. ஓம்பெர்ட் தலைமையிலான குதிரைப்படையினர் திருமங்கலம் சாலையில் உள்ள தென்கால் கண்மாய் கரையில் கபாலி மலையடிவாரத்தில் வைத்து வழிப்பறிக் கொள்ளையர்கள் சிலரை மடக்கினர். கடும் மோதலுக்குப் பின் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவன் செத்துப்போனான். போலீஸ் ஒருவனுக்கு குரல்வளையில் ஈட்டி பாய்ந்ததில் அந்த இடத்திலேயே இறந்தான். கொள்ளையர்கள் இருவர் மட்டும் அகப்பட்டுக்கொண்டனர். மற்றவர்கள் தப்பிவிட்டனர். அகப்பட்ட இருவரைக் கைகால்களில் விலங்கிட்டு கச்சேரி வாசலில் இருந்த அரசமரத்தோடு சேர்த்துக் கட்டிவைத்தனர். நண்பகல்வரை, அடிபட்ட மயக்கத்தோடும், உடம்பெல்லாம் ரத்தக் காயத்தோடும் கட்டப்பட்டுக் கிடந்த அவர்களை நகரமக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

நண்பகலுக்குப் பின் அவர்கள் மாசிவீதியின் வழியே கைவிலங்குகளோடு இழுத்துச் செல்லப்பட்டனர். ஓர்பெர்ட்டின் குதிரை முன்னால் போய்க்கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இரண்டு ஆங்கிலச் சிப்பாய்களும், ஏட்டுகள் வீராச்சாமி நாயுடுவும், சேஷகிரி ராவும் குதிரையில் அமர்ந்தபடி சாட்டையால் இருவரையும் அடித்துக்கொண்டே வடக்கு ஆவணி மூலவீதியின் சிறைச்சாலையை நோக்கி இழுத்துச்சென்றனர். போலீசார் வீதி வழியே இரண்டு பேரைக் கைவிலங்கிட்டு முதுகுத்தோல் உரிய அடித்து இழுத்துச் செல்லும் காட்சியை மதுரை மக்கள் முதன் முறையாகப் பார்த்தனர். பார்த்துக்கொண்டிருந்த ஒவ்வொருவரின் கண்களுக்குள்ளும் பயம் படியத் துவங்கியது. வெள்ளைக்காரனின் மீதிருந்த பயத்தை போலீஸ்காரன் வரை இறக்கும் முயற்சியின் முதல் கட்டமாக இந்தச் சம்பவம் அமைந்தது.

மாசிவீதியில் இழுத்துச் செல்லப்பட்ட இருவரும் செம்பூர்க்காரர்கள் என்ற செய்தி அன்று மாலைதான் நகரத்தை எட்டியது. அடிபட்ட இருவரும் அடைந்ததைவிட அதிக வலியை அந்த செய்தி நகரத்திற்கு கொண்டுவந்து சேர்த்தது.

*

இரவு நெருங்கியது. பெரிசுகள் ஒவ்வொருவராக புதுமண்டபத்திற்கு வரத்துவங்கினர். வீடுகளுக்குள் வெக்கை தாங்காமல் மனிதர்கள் வெளியேறி நடந்தபடி இருந்தனர். மழையின்றி வறட்சியின் உச்சத்தில் தங்களின் வெள்ளாமையெல்லாம் அடியோடு நாசமானதைச் சொல்லிப் புலம்பியபடி புதுமண்டபத்தை நோக்கி வந்தனர். பஞ்சம் குறித்த பயத்தையும், இந்த நிலை முடிவுக்கு வராதா என்ற ஏக்கத்தையும் சந்திக்கிற ஒவ்வொருவரும் அடுத்தவரிடம் சொல்லி ஆறுதல் தேடினர். கூளங்கள் எங்குமில்லை. புல்பூண்டுகளும் அற்றுப்போயின. மாடுகன்றுகளைக் காப்பாற்ற முடியாத நிலை வரப்போவதை நினைத்து பலர் பதறிக்கிடந்தனர்.

செல்வந்தர் வீட்டு விசேஷங்கள் மிக எளிமையாக மாறிக்கொண்டிருந்தன. கோயில் விழாக்கள் கூட ஆடம்பரங்கள் இன்றி நடந்தேறின. தீவட்டிகள், விளக்குகளுக்கு ஊற்றும் எண்ணெய்க்கு தட்டுப்பாடானது. சிம்மக்கல் செக்கடிகளுக்கு எண்ணெய்வித்துக்கள் வந்துசேரவில்லை. செக்கு மாடுகளுக்குப் போதிய தீவனமும் கிடைக்கவில்லை. பல செக்கடிகள் சத்தமின்றி அமைதிகாத்தன. நகரத்தில் விளக்குகளின் வெளிச்சம் நாள் ஆக ஆக குறையத் துவங்கியது. அறைக்கு ஒரு விளக்கை ஏற்றிவைத் தவர்கள் மொத்த வீட்டிற்கும் ஒரே விளக்கை ஏற்றிவந்தனர். விளக்கு மாடங்கள் இருளுக்குள் புதைந்தன. நூலாம்படையின் வலைகள் கரும்புகை படிந்த விளக்கு மாடங்களைச் சிறைப்பிடித்தன. கோரிபாளையத்தில் நிறைய சன்னல்களை வைத்துக் கட்டியிருந்த இஸ்லாமியர்களின் வீடுகளில்தான் பகலில் வெளிச்சமும் இரவில் காற்றும் நடுவீடு வரை வந்தது. மைய அறையில் ஏற்றப்பட்ட விளக்கின் வெளிச்சம் பக்கத்து அறையிலும் மங்கலாய் விழுந்து பரவியது. சன்னலே இல்லாத வீடுகளில் பல அறைகள் இருண்டே கிடந்தன.

கிழக்குக் கோபுரத்தின் கீழ் ஏற்றப்பட்டிருந்த விளக்கின் வெளிச்சம் புதுமண்டபத்தின் முகப்புத் தூண்களின் ஊடே பரவிக் கிடந்தது. இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். அங்குமிங்குமாகப் படுத்துக்கொண்டும், தூணில் சாய்ந்தவாறு உட்கார்ந்தும் பேசியபடி இருந்தனர். பெரியவர் ராஜரத்தினம் பிள்ளையைச் சுற்றித்தான் வழக்கம்போல் பெரிய கூட்டம் உட்காரும். அவர் இன்னும் வந்து சேரவில்லை. மற்றவர்கள் ஆங்காங்கே பேசிக்கொண்டிருந்தனர். ‘மூணு தலைமுறையா பாக்காத பஞ்சம்ப்பா இது’ என்றார் ஒரு பெருசு. மதுரையைச் சுற்றியுள்ள பதினாறு கண்மாய்களும் பாளம் விட்டுக்கிடக்கின்றன. எங்கெங்கோ அலைந்துதிரிந்த நரிகள் எல்லாம் இப்பொழுது கண்மாயைத் தாண்டி ஊருக்குள் வரப்பார்க்கின்றன என்று பேச்சு போய்க்கொண்டிருந்தது.

‘ஏம்பா! அந்த மிருகத்த திண்டுக்கல் பக்கமா இருந்து விடமாவெரட்டிக்கிட்டு வர்றாங்ய. அதுவும் மூச்சுமூச்சுன்னு மூச்சு வாங்கிகிட்டே ஓடிவருது. அது குடிச்சா மாடக்குளம் கம்மா கொள்ளாது. இந்தப் பஞ்சத்துல எங்க போயி அதுக்கு தண்ணி கொடுக்குறாங்க, என்ன சமாச்சாரம்? கேட்டா ஒருத்தனும் ஒழுங்கா பதில் சொல்ல மாட்றீங்க?’ என்று படுத்துக்கிடந்த ஒரு பெருசு ரயில் வண்டியைப் பற்றி கேட்டார்.

கிழக்குப்பக்கத் தூணில் சாய்ந்தவாறு இருந்த நடுவயதுக்காரர் ‘ஏம்பா,

உனக்கு எத்தனை தடவதான் சொல்றது! அதுக்கு வடக்க காவிரி ஆத்துல தண்ணிய பிடிச்சு மூக்கு வழியா நெறய்ய ஊத்தி விட்றாங்ய. நம்ம நாட்டு ஒட்டகம் எப்படி தண்ணிய் உள்ள வச்சிருக்குமோ அதப்போல இது வெள்ளக்கார நாட்டு வண்டி. தண்ணியப் பூராம் உள்ள வச்சிக்கிட்டு கரிய்ய தின்னுக்கிட்டே எவ்வளவு தூரம் வேணும்னாலும் ஓடுமாம்பா!' என்றார்.

'அப்ப... நம்ம நாட்டு ஒட்டகம் மாதிரிதான் சொல்ற. அது... சரி, இது தலையிருக்கிற பக்கந்தான் குசு விடுதாமே ஏன்?' என்று கேட்டவர் 'இந்த வெள்ளகாரன் எத செஞ்சாலும் ஏட்டிக்கு போட்டிதான் செய்றான். அப்புறம் எப்படி மழதண்ணி பேயும், காடுகர வெளயும்!' என்று அவரே பதில் சொல்லிக்கொண்டார்.

பேச்சொலி எங்கும் கேட்டுக்கொண்டிருந்தது. ராஜரத்தினம் பிள்ளை வந்தார். முகத்தில் பதற்றம் தெரிந்தது. அவர் மட்டுமல்ல, பலரும் மன அளவில் பதற்றத்துடன்தான் அங்கு அமர்ந்திருந்தனர். ரத்தம் ஒழுக செம்பூர்க்காரர்கள் இருவரை இழுத்துச்சென்ற சம்பவம் அவர்களை ஏதோ செய்தபடி இருந்தது. செம்பூர்க் காரர்களின் வரலாறு நினைவில் இருந்தபடி அவர்களை வதைத்தது. நகரத்தின் பூர்வீக வேர்கள் ஒவ்வொரு மனிதன் மீதும் சுற்றிப் படர்ந்திருக்கின்றன. அந்த வேர்கள் வெட்டுப்பட்டபொழுது நின்று பார்த்தவர்களிடம் குற்ற உணர்வின் மூலம் அடங்காத வலியை ஏற்படுத்தியபடியே இருக்கிறது நகரம்.

'வெள்ளக்கார போலீஸ் வைக்கக்கூடாத இடத்துல கைய வச்சுட்டான்' என்றான் ஒருவன்.

'செம்பூர்க்காரன் பதிலுக்கு என்ன செய்வான்?' என்று மற்றொருவர் கேட்டார்.

'அடி பலமாத்தான் இருக்கும். அது மட்டும் நிச்சயம்' என்று ராஜரத்தினம்பிள்ளை கூறினார். அவர்களால் அதற்குமேல் பேசிக்கொள்ள முடியவில்லை. மௌனத்தின் வழியே தப்பித்துப் போயினர். சாட்டையடிகளை நினைவில் சுமந்தபடி தலைசாய்த்துப் படுத்தனர்.

*

**ம**துரைக்குத் தென்கிழக்கே இருபது மைல் தொலைவுக்கு அப்பால் பனைமரங்கள் சூழ்ந்த நிலப்பரப்பில் நரிகள் ஊளையிட்டுத் திரியும் நெடுங்காட்டுக்குள் செம்பூர் இருந்தது. ராமநாதபுரம் வரை செல்லும் மங்கம்மாள் சாலை செம்பூருக்கு மேற்கேதான் அமைந்திருந்தது. ராணிமங்கம்மாள் மதுரையிலிருந்து இராமநாதபுரம் வரை செல்ல முறையான சாலை அமைத்து, வழி நெடுக பல மண்டபங்களைக் கட்டி கிணறுகள் வெட்டி பாதசாரிகளுக்கும், வணிகர்களுக்கும் பல வசதிகளைச் செய்திருந்தாள். மதுரையிலிருந்து பரமக்குடி வரையிலான இந்தச் சாலையை காவல் காக்கும் பணியை செம்பூரான்களுக்குக் கொடுத்தாள். அதற்காக செம்பூர் கிராமத்திற்கு மானியம் வழங்கினாள். இந்தச் சாலையில் செல்லும் வணிகர்களிடமும் செல்வந்தர்களிடமும் காவல் பணம் வசூலிக்கும் உரிமையையும் அவர்களுக்குக் கொடுத்தாள்.

ராமநாதபுரம் செல்லும் வணிகன் ஒருவன் மதுரையின் தெற்குக் கோட்டை வாயிலைக் கடந்தவுடன் சில கல் தொலைவில் இருக்கும் பனையூரின் பெரிய கல்மண்டபத்தில் அரசாங்க அதிகாரியைப் பார்ப்பான்.

அந்த அதிகாரிதான் மங்கம்மாள் சாலையில் பொருட்களைக் கொண்டு செல்லும் வணிகர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் வரியை நிச்சயித்து வசூல் செய்பவன். அந்த இடத்தில் ஒரு செம்பூரான் இருப்பான். அங்கு துவங்கி பரமக்குடி வரை முக்கிய இடத்தில் எல்லாம் செம்பூர்க்காரர்கள் நின்றிருப்பார்கள். வழி நெடுக மங்கம்மாள் கட்டிவைத்த மண்டபங்களையும் கிணறுகளையும் அவர்கள் கண்போல் பாதுகாத்து வந்தனர்.

பனை சூழ்ந்த காட்டின் ரகசியங்களை செம்பூரான்களைப் போலவே அறிந்தவர்கள் காட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்தார்கள். அவர்கள் பனங்காட்டுக்குள் இருந்து பாம்புகளைப் போல ஊர்ந்து வந்து இரையைக் கவ்விக்கொண்டு போயினர். வழிப்போக்கர்களைப் போலவே மண்டப்பத்தில் தங்கி, நள்ளிரவான்வுடன் தங்கியிருந்தவர்களின் பொருட்களை எல்லாம் கொள்ளையிட்டுச் சென்றனர். இந்தக் கிழக்குச்சீமை கொள்ளையர்களிடமிருந்து சாலையைப் பாதுகாக்க செம்பூரான்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள். பலியானவர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்கள் சாலை நெடுகக் காட்சியளித்தன. தலைமுறைகள் சில உருண்டோடிய பின்தான் சாலை செம்பூரான்களின் காவலுக்குள் முழுமையாகக் கட்டுப்பட்டது. பனங்காடு அவர்களின் கைவசத்திற்குள் வந்தது. வலவன்களும் வழிப்போக்கர்களும் நிம்மதியாய் சாலை முழுவதையும் கடந்து சென்றனர்.

அதன்பின் ஓர் இரவில், கடல் வழியாக பாம்பனில் இறங்கி ராமநாதபுரம் வந்த விலைமதிப்பற்ற பெரும்பொட்களை ஏற்றிய வண்டிகள் மங்கம்மாள் சாலையின் வழியே மதுரைக்கு வந்துகொண்டிருக்கும் பொழுது, பின் இரவில் கொள்ளையர் கூட்டமொன்று திடீர் தாக்குதலை நடத்தியது. செம்பூர்க்காரர்களின் வேல்கம்புகள் கொள்ளையர்களைக் குத்திச் சாய்ந்தன. வண்டி இழுத்துவந்த மாடுகள் குடல் சரிந்து விழுந்தன. வண்டியோட்டிகள் வெட்டி வீழ்த்தப்பட்டனர். கடும் சண்டையில் பல செம்பூரான்கள் செத்துவீழ்ந்தனர். ஆனால் கொள்ளையர்கள் யாரும் உயிருடன் தப்பவில்லை. அடுத்த சில நாட்களில் செம்பூரான்கள் காவல்பணிகளில் மும்முரமாக இருந்த நள்ளிரவில் கொள்ளையர் கூட்டம் செம்பூருக்குள் புகுந்து கையில் சிக்கிய ஆண் பெண் அனைவரையும் வெட்டி வீசியது. செம்மண் நிலத்தில் இரத்தம் திட்டுத்திட்டாய் தேங்கியது. எல்லா வீடுகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆடு மாடுகளும் பெண்களும் வயோதிகர்களும் தீயில் கருகிச் செத்தனர். விடிந்து ஊர்திரும்பிய பிறகுதான் சாலைக் காவலர்களால் நடந்ததை அறியமுடிந்தது.

மிஞ்சியவர்கள், அழிக்கப்பட்ட ஊரில் ரத்தம் ஓடிய தெருக்களில் செம்மண்ணை அள்ளிக்கொண்டு பனங்காட்டிற்குள் போனார்கள்.

நரிகளும் வழி திணறி நிற்கும் இந்த பெரும் பனங்காட்டிற்குள் அவர்களின் புதிய ஊர் இருக்கும் இடத்தை அதன்பின் யாராலும் கண்டறிய முடியவில்லை. புதிய செம்பூர் மங்கம்மாள் சாலை நெடுக எங்கும் அமைந்திருக்கலாம் என்று வழிப்போக்கர்கள் கருதினார்கள். அதுவே அவர்களுக்கு நம்பிக்கையையும், வழிப்பறிக்காரர்களுக்கு அச்சத்தையும் ஏற்படுத்தியது.

பனை ஓலை உரசும் ஓசை எது, செம்பூரான்களின் சமிக்ஞை சத்தமெது என்பதைப் பிரித்தறிய முடியாத நிலை உருவானது. சாலை யெங்கும் நெடிய பனைமரங்கள் செம்பூரான்களைப் போலவே நின்றுகொண்டிருந்தன. கருத்த உருவங்கள் கையில் வேல்கம்புடன் சாலையை விட்டு சற்றுதள்ளி அரை இருட்டில் கண்ணில் பட்டும்படாமலும் நிழல்போல் மறைந்தபடி இருந்தன. நூற்றுக்கணக்கான பனைமரங்களின் பின்னே எண்ணிலடங்கா செம்பூரான்கள் இருப்பதாக வழிப்போக்கர்கள் நம்பினர். பாதையில் சகடச் சத்தத்தையும், காட்டுக்குள் நரியின் ஊளையும் கூகைகளின் குழறலையும் கணித்தபடி செம்பூரான்களின் கால்கள் நடந்துகொண்டிருந்தன. தொடர்ந்து வண்டி இழுத்துவரும் மாடுகள் செம்பூரான்களின் வாசத்தைப் பழகின. இரவில் மண்டபங்களில் தங்கிப்போகிறவர்கள் செம்பூரான்களின் பிள்ளைகளிடம் மயிர்க்கூச்செறியும் கதைகளைக் கேட்டுப் போயினர். உருவேறிய காவல் நிலைபெற்று விட்டதால் பனங்காட்டுக்குள் வளைந்து ஓடும் அழகிய நதியைப் போல சாலை காட்சியளித்தது.

மங்கம்மாள் காலத்துக்குப் பின்பும் சாலை சிறப்போடு காவல் காக்கப்பட்டது. அவள் பேரன் விஜயரங்கசொக்கநாத நாயக்கர் செம்பூருக்கு செப்பு சாசனம் ஒன்றை வழங்கினார். காவல் உரிமை தலைமுறைகளைக் கடந்து வந்துகொண்டிருந்தது. மங்கம்மாள் கட்டிவைத்தது மண்டபங்களுக்கு முதுமை ஏறியது. இரவில் பனைமரக் காடுகளிலிருந்து ஈட்டிபோல் செம்பூரான் வெளியேறி சாலையின் எதிர்திசைக்குள் போய் மறைந்தபடியே இருந்தான். செம்பூரான்களின் பிள்ளைகள் சொன்ன கதைகள் நகரத்து மாடங்களிலும் மண்டபத்து திண்டுகளிலும் மீண்டும் மீண்டும் உலவின. காலங்கள் உருண்டோடின. மதுரை நாயக்கப் பேரரசு வீழ்ந்தது.

தொடர் படையெடுப்புகள் மாறிமாறி நிகழ்ந்தன. எந்த நிலையான ஆட்சியும் இல்லாத அறுபதாண்டு காலம் பட்டாணியர், பரங்கியரின் சிறு பெரும் படைகள் மங்கம்மாள் சாலையில் போகவும் வரவுமாக இருந்தன. சுண்ணாம்புக் கல் பதித்த அழகிய சாலை சதா ரத்தம் குடித்துக்கொண்டேயிருந்தது. சரக்குவண்டிகளை விட பீரங்கி வண்டிகளே அதிகமாகக் கடந்துசென்றன.

முறையான காவல்வரி என்று எதுவும் வசூலிக்கமுடியவில்லை. வசூலித்தால் பொருட்களை கடைசிவரை பாதுகாப்பாகக் கொண்டு போய் சேர்க்க முடியவில்லை. தங்களின் கால்களுக்கடியில் நெளிந்தும் வளைந்தும் ஓடிக்கொண்டிருந்த அழகிய சாலை இப்பொழுது அப்படியில்லை; எந்நேரமும் ரத்தம் கசிந்தோடும் ஓடையைப் போலானது. தலைமுறை தலைமுறையாக இருந்த சாலையின் காவல் செம்பூரான்களின் கையைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக நழுவிப்போனது. காட்டாறுகள் சாலையை அறுத்துப்போடுவதைப் போல காவல் இப்பொழுது அங்குமிங்குமாக அறுபட்டுப்போனது. பாதி காவல்காரனாகவும், பாதி கொள்ளைக்காரனாகவும் செம்பூரான்கள் மாறினர்.

மங்கம்மாள் அமைத்த மற்றொரு முக்கியச் சாலையான தொண்டி துறைமுகம் வரை செல்லும் சாலையின் காவல் காளையார்கோவில் சண்டையோடு முற்றிலும் முடிந்தது. அதைப்போல இந்தச் சாலையின்

காவலை செம்பூரான்கள் விட்டுவிடவில்லை. அதற்குப்பின்பும் கூலியே இல்லாமல் பல ஆண்டுகளாகக் காத்துவந்தனர்.

மதுரையில் ஆங்கிலேய ஆட்சி நிலைபெற்றது. ராமநாதபுரமும் அதை நோக்கிச் செல்லும் சாலையும் வெள்ளையர்களுக்கு நிரந்தரத் தலைவலியாகவே இருந்தன. பல முயற்சிகள் செய்தும் மங்கம்மாள் சாலையைத் தங்களது கட்டுப்பாட்டிற்குள் அவர்களால் கொண்டுவரவே முடியவில்லை. நிம்மதியான எந்தவொரு பயணமும் இந்தப் பாதையில் சாத்தியமில்லை என்பதை மீண்டும் மீண்டும் அவர்கள் உணர்ந்தனர். ஒரு முழுப் படைப்பிரிவையும் அனுப்பி பனங்காடு முழுவதையும் தீயிட்டுக்கொளுத்தினர். ஆங்காங்கே காடு பற்றியெரித்தது. நெருப்பு அடங்கிய பொழுது செம்பூரும் அடங்கிப்போனது. ஒழிந்தான் செம்பூரான் என நினைத்த வெள்ளையர்களுக்கு வெகுவிரைவிலேயே பதில் கிடைத்தது. துப்பாக்கி ஏந்திய தனது குதிரை அணியொன்று முற்றிலுமாக நாசமாக்கப்பட்டதை அறிந்தபின்தான் அவர்களால் நிலைமையை முழுவதுமாக உணரமுடிந்தது. மங்கம்மாள் சாலையில் ராமநாதபுரம் நோக்கிய தங்களின் எந்தப் பயணமும் நிறைவுபெறாது என்பதை உணர்ந்தனர். சாலையின் இரண்டு பக்கங்களிலிருந்தும் பாதியெரிந்த பனை மரங்களைப் பிடுங்கிக்கொண்டுவந்து கூட்டமாகத் தாக்கினார்கள் என்று கதைகள் பரவின. வெள்ளை அதிகாரிகள் நாட்கணக்கில் தூக்கமின்றிக் கிடந்தனர். பல அதிகாரிகள் பல திட்டங்களைத் தீட்டியும் மங்கம்மாள் சாலையின் மர்மங்களை அறியமுடியவில்லை. கருகிய பனைமரங்களைப் பிளந்துகொண்டு செம்பூரான்கள் வெளிவந்து கொண்டேயிருந்தனர்.

பல ஆண்டுகளாக எவ்வளவோ முயற்சிகள் செய்தும் தோல்வியுற்ற வெள்ளையர்கள் கடைசியில் ஒரு புதிய முடிவொன் றை எடுத்தனர். அதில் வெற்றி பெற்றனர். ராமநாதபுரம் செல்ல மதுரையிலிருந்து பரமக்குடிக்கு வைகையாற்றின் ஓரமாக ஒரு புதியபாதை ஒன்றை அமைத்தனர். புதிய சாலையமைக்கப் பெருந்தொகையை ராணுவத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்தனர். மங்கம்மாள் சாலையை இழுத்து மூடினர். வணிகர்களோ, பாதசாரிகளோ அந்தப் பாதையைப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதித்தினர்.

நூற்றாண்டுகளாக வண்டித்தடங்கள் பதிந்துகிடந்த மங்கம்மாள் சாலையின் கல்லிடுக்குகளில் புற்கள் முளைவிட்டு வளர்ந்தன. குதிரைகளின் குளம்படிகளும் மாடுகளின் மணியோசையும் கேட்கவில்லை. ஆள் நடமாட்டம் கொஞ்சம் கொஞ்சமாக நின்று போனது. பனைகளினூடே வீசிய காற்று சாலையில் கிடந்த மண்ணை வாரித் தூற்றிவிட்டுப்போனது. மழைக்காலத்திற்குப்பின் சாலையில் செடிகொடிகள் படர ஆரம்பித்தன. மங்கம்மாள் கட்டிய மண்டபங்களில் நரிகள் படுத்துறங்கின. பறவைகளின் எச்சங்களில் முளைவிடும் வேர்கள் மண்டபங்களைக் கீறிப்பிளந்தன. கிணறுகள் தூர்ந்தன. சாலை கொஞ்சம் கொஞ்சமாக மறையத் துவங்கியது. ஆலமரங்கள் சாலையின் நடுவிலே விழுதூன்றின. புல்பூண்டுகளுக்குள்ளும் புதர்களுக்குள்ளும் எல்லாம் மறைந்தது. வண்டியோட்டிகளின் நினைவில் பதிந்துகிடக்கும் பழைய வழித்தடமானது மங்கம்மாள் சாலை.

ஆள்அரவமற்றுக் காடாகிய சாலையை மாதக்கணக்கில்

வெறித்துப்பார்த்துக்கொண்டேயிருந்த செம்பூரான்கள் எரிந்த பனங்காட்டினூடே மறைந்து வெளியேறினர். வடக்கிருந்தும் தெற்கிருந்தும் மதுரைக்கு வரும் இரண்டு பிரதான சாலைகளை வந்தடைந்தனர். சாலையின் இரண்டு பக்கங்களிலும் மரங்களுக்குப் பின்னால் கருநிழலை உடுத்திக்கொண்டு இரவும் பகலும் காத்திருந்தனர். பாரம் தாங்காமல் வண்டிகள் அசைந்துவரும்போது, மரங்களுக்குப் பின்னாலிருந்து ஈட்டிபோல் வெளியேறி வண்டியை மறித்து நின்றனர். இப்பொழுது முழுக்கொள்ளையர்களாக.

*

# 65

அமணமலையின் உச்சியில் இருந்த அரசமரம் வெயிலின் கொடுமையால் ஜீவனற்றே நின்றது. இலைகளின் சரசரப்பின் வழியே அது ஆற்றாமையை வெளிப்படுத்தியவாறு இருந்தது. பேச்சிப்பள்ளத்தின் சுனைவற்றிவிட்டது. மண்ணில் இருக்கும் குளங்களே நீர் இன்றிக் காய்ந்து கிடக்கையில் மலை உச்சியில் இருக்கும் சுனைகளைப் பற்றி கேட்கவே வேண்டாம். சுனையில் கிடந்த மணல் துகள்கள் சாரைப் பாம்பின் உடல்போல் மின்னிக்கொண்டிருந்தன. குளத்தின் மேல் பாறைகளில் செதுக்கப்பட்டிருந்த பாகுபலி, பார்சுவநாதர், முக்குடை நாதரென அனைத்துச் சிற்பங்களுக்கும் அரசமரம் போராடி நிழல் தந்துகொண்டிருந்தது. கானகத்தில் கடுந்தவம் புரியும் ஆதிநாதரின் மகனான பாகுபலியின் மீது காட்டுச் செடிகள் தொடை வரை படர்ந்திருக்கும் சிற்பத்தைப் போன்றே அரசமரத்து நிழல் பேச்சிப்பள்ளத்தில் செதுக்கப்பட்டிருந்த தீர்த்தங்கரர்கள் எல்லோரின் மீதும் கொடி போல் படர்ந்திருந்தது. பேச்சிப்பள்ளத்தின் மேற்பாறையில் சிதைந்த நிலையில் இருக்கும் சமணக்கோயிலுக்கு எப்பொழுதாவது சிலர் வந்து சாமி கும்பிட்டுச் செல்வதுண்டு.

பேச்சிப்பள்ளத்து அரசமர நிழலில் உட்கார்ந்திருக்கும் நான்கு பேரும், தூரத்தில் பாறையில் ஏறிவருகிற சட்டைபோட்ட மனிதனை சமணக் கோயிலுக்கு சாமி கும்பிட வருகிறவர் போலிருக்கிறது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தனர். இந்தப் பஞ்ச காலத்தில் ஒரு சட்டைக்காரன் ஒத்தையில் மலையில் ஏறி வருவது அவர்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. பிற்பகலாதலால் வெயில் கொஞ்சம் குறைந்திருந்தது. ஆனால் பாறையின் உஷ்ணம் கொஞ்சமும் குறையவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஏறி வந்த சட்டைக்காரர் அரசமர நிழலில் பெருமூச்சு விட்டபடி உட்கார்ந்தார். மரத்தின் அடியில் இருந்த நான்கு பேருக்கும் அப்பொழுதுதான் ஆள் அடையாளம் தெரிந்தது. வேளாச்சேரி சிவப்பிரகாச பிள்ளையை அறியாதவர்கள் இந்த வட்டாரத்திலே இருக்க மாட்டார்கள்.

வேளாச்சேரி கிராமத்தில் ஐயர்களுக்கு அடுத்தபடியாக பெரியசம்சாரி சிவப்பிரகாச பிள்ளைதான். அவர் இந்த வெயிலில் மலையேறி இங்கு வந்தது ஆச்சரியத்தையே தந்தது.

‘என்ன, பெரிய்ய சம்சாரீ இவ்வளவு தூரம் வந்திருக்கீக!’ என்று மொக்கயன் கேட்டான்.

பிள்ளைக்கு மேமூச்சும் கீமூச்சும் வாங்கியது. இளைத்தவாறு கொஞ்சம் பொறு என்று சைகையில் சாடை காட்டினார். நிதானத்துக்கு வர சிறிது நேரமானது. மேலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. படபடப்பெல்லாம் அடங்கிய பின் ‘உன்னைத் தேடி தானப்பா வந்தேன்’ என்றார்.

‘என்னத் தேடி என்ன இவ்வளவு தூரம்?’

‘பெரியவர் மாயாண்டிகிட்ட விசயத்த சொன்னேன். அவர் தான் உன் பேர சொன்னாரு. மேல அரசமரத்துல உக்காந்து கறி சுட்டுக்கிட்டு இருக்காங்கெ. போய்ப் பாருன்னு அனுப்புனாரு. அதுதான் வந்தேன்’ என்றார்.

உட்கார்ந்திருந்த நான்கு பேருக்கும் ஆச்சரியமாய் இருந்தது. பெரியாம்பள எப்படி மோப்பம் பிடித்தார் என்று தெரியவில்லை. பாறையின் மேல் காயப்போட்டிருந்த கறியில் ஒரு பங்குக்கு ஆபத்து வந்ததை அவர்கள் உணர்ந்தனர்.

மேற்குப் பகுதியில் அரசமரத்து மிளாருகள் பேச்சிப்பள்ளத்தின் சமணத் திருவுருங்களைத் தொட்டு உரசியபடி இருந்தன. தீர்தங்கரர்களின் புடைப்புச் சிற்பங்களுக்குப் பின்னால் அசோகமரத்தின் கிளைகள் சுருள் சுருளாக செதுக்கப் பட்டிருக்கின்றன. பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள கிளைகள் படர்ந்து உரசும் இலைகளுடன் பின்னப் பார்க்கின்றன. பழுப்பேறி உதிர்ந்து, காய்ந்து கிடக்கும் இலைகள் அசோக மரத்தின் கிளைகளில் இருந்து உதிர்ந்தது போலவே நிறத்திலும் தன்மையிலும் இருந்தன. தீர்த்தங்கரர்களுக்கு பின்னாலும் முன்னாலும் மரங்களில் இருந்து இலைகள் உதிர்ந்த வண்ணமிருந்தன. கீழே சருகுகள் சுருண்டு கிடப்பதைப் போலவே சுருள் சுருளாய் சிற்பத்தின் கீழே வட்டெழுத்துக்கள் இருந்தன. பாறையின் நரம்புகள் இலைகளிலும் மரத்தின் நரம்புகள் பாறைகளிலும் ஊடுருவிக் கிடந்தன. காலம் இலைகளாய் உதிர்ந்தபடி இருக்கிறது. சிலைகள் அனைத்துக்கும் மௌன சாட்சியாய் இருக்கின்றன.

பேச்சிப்பள்ளத்தின் சமண தீர்த்தங்கரர்களின் முக்குடைக்கு மேல் மடித்துக் கிடந்த பெரும் பாறையில் உரித்து வெட்டப்பட்ட ஆட்டுக்கறி காய்ந்தது. கொஞ்சம் உப்பும் மிளகாயும் சேர்த்துப் புரட்டி வெயிலேறிக்கிடக்கும் பாறைகளில் காயப்போட்டிருந்தனர். கறித் துண்டுகள் சூடேறியபடி இருந்தன. பாறையின் மேல் உட்கார்ந்திருந்த ஒருவன் அதைக் குச்சியால் கிளறி விட்டபடி இருந்தான். மற்ற மூன்று பேரும் மரத்தடியில் உட்கார்ந்திருந்தனர். பசியின் கிறக்கம் ஒருபுறம் இருந்தாலும் சாராயபோதையில் கறியின் மேல் வெறியேறிக் கிடந்தனர். நேற்று மதியத்திற்குப் பின் ஆகாரம் ஏதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இன்று காலை நாகமலைக்கு வடக்குப் பக்கமிருந்து மொக்கயன்தான் ஒரு குட்டியைத் தூக்கி வந்தான். மற்ற மூன்று பேரும் சேர்ந்து கொண்டனர். கருப்பு கோயிலில் இருக்கும் யார் கண்ணிலும் படாமல் நான்கு பேர் மட்டும் உரித்துத் தின்போம் என முடிவு செய்து,

மலையின் வடக்குப் பாறைகளின் வழியே ஏறி மேலே வந்திருந்தனர். அப்படியிருந்தும் மொக்கயன் மேலே இருக்கிறான் என்று ஒரு ஆளுக்கு வழிகாட்டி பெருசு அனுப்பியிருக்கிறார். என்பதை நினைத்து நான்கு பேருக்கும் விக்கென்றிருந்தது.

‘பெரியாம்பளைக்கு ஒரு பங்கு கொண்டு போகாட்டின்னா ரவைக்கு கலகந்தான்டா’ என்றான் ஒருவன். உடனே மொக்கயன் ‘மொதப் பங்கா பெருசுக்கு போயி கொடுத்துட்டு வந்திருவோம். இல்லாட்டி நம்மள கெழங்க எடுத்துத்துட்டுதான் விடுவாரு மனுசெ’ என்றான்.

பேச்சிப்பள்ளத்தின் மேற்பாறையில் காய்ந்துகொண்டிருந்த கறித்துண்டுகள் ஐந்து பங்காயின. பிள்ளையிடம் வந்த விசயத்தைக் கேட்டான் மொக்கயன்.

‘பசுமல வேதக்கோயில் சாமியார் ஒருத்தர கம்பத்துக்கு மேற்க மலமேல கொண்டுபோயி விட்டுட்டு வரணும். ஒரு நல்ல காவக்காரனா சொல்லுன்னு பெருசுகிட்ட கேட்டே. அவரு ஒன்னைய சொன்னாரு’ என்றார்.

‘எப்ப போகணும்?’

‘நாளக் காலைல கௌம்பணும். வேதக் கோயிலுக்கு வந்திரு’ எனச்சொல்லிவிட்டு பிள்ளை புறப்படத் தயாரானார்.

‘கொஞ்சம் வெயிலு எறங்கின பெறகு போங்க’ என்றான் மொக்கயன்.

சிவப்பிரகாச பிள்ளைக்கு எழுந்திருக்க மனமில்லை. அரசமர நிழலில் இருந்து விடுபட்டு கொதித்துக் கிடக்கும் பாறையில் கால்வைத்து இறங்கும் தெம்பு இல்லை. ஆனால் காய்கிற கறியும், சாராயவாடையும் அவரை விரட்டி அடித்தன.

பாறையில் இறங்கி மலையடி ஆலமரங்களைக் கடந்து அவர்போன கொஞ்ச நேரத்தில் பெரியாம்பளைக்கு தானாக வந்து சேர்ந்தது ஒரு பங்கு.

*

**ம**ரங்கள் செழித்து வளர்ந்திருந்த சிறு குன்றான பசுமலையின் தென்புற அடிவாரத்தில்தான் அமெரிக்கன் மிஷனரிமார்கள் பணியாற்றி வருகின்றனர். ஒரு தேவாலயமும், பள்ளிக்கூடம் ஒன்றும் கட்டியிருந்தனர். இது தவிர கூரைகள் வேயப்பட்ட சிறு சிறு வீடுகள் நிறைய இருந்தன. பள்ளிக்கூடம், டிரெயினிங் ஸ்கூல், இறையியல் கலாசாலை, போர்டிங் ஸ்கூல் போன்ற அனைத்தும் இங்கு இயங்கின. பல மாணவர்கள் அங்கு தங்கிப் படித்து வந்தனர். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க மிஷனரிமார்கள் மதுரையில் சமயப் பணியாற்றி வருவதால் இங்கு நிலவும் சாதிக் கொடுமைகள், பிராமணர்களின் ஆதிக்கம், கொடிய பஞ்சம், நோய்கள், மக்களின் அறியாமை போன்றவற்றைப் பற்றி அனுபவங்களைக் கற்றிருந்தனர். இங்கிலாந்து பேரரசி விக்டோரியா மகாராணியின் ராஜ்ஜியத்திற்குள் இருந்த மதுரைவாசிகளை ஏசுவின் இராஜ்யத்திற்குள் கொண்டு வரத் தொடர்ந்து முயற்சி செய்து வந்தனர். சில நேரம் அந்தப் பணி மகாராணியின் ராஜ்ஜிய நலன்களுக்கு முரண்பட்டதாகவும் பார்க்கப்பட்டது.

‘கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்தார். அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளும்‘ என்று மிஷனரிமார் வறுமைப்பட்ட ஏழைகளுக்காகப் பிரார்த்தித்த பொழுது விக்டோரியா மகாராணியின் கட்டளைகள் அவர்களையும் சேர்த்து ஆண்டு கொண்டிருந்தது. உருவத்தாலும், நிறத்தாலும் ஒன்றாயிருந்த அவர்கள் செயலால் வெவ்வேறானவர்களாகத்தான் இருந்தார்கள். அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட ராஜ்ஜியங்களும் வெவ்வேறானவையாகத்தான் இருந்தன. ஒருவருடைய ராஜ்ஜியம் இந்தியர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்தது என்றால் இன்னொருவரின் ராஜ்ஜியத்தில் ஏசுவின் இரத்தத்தால் பாவங்கள் கழுவப்பட்டுக் கொண்டிருந்தன. இங்கிலாந்து ஆட்சியாளர்களுக்கும், அமெரிக்க மிஷனரிமார்களுக்கும் இடையில் கண்ணுக்குத் தெரியாத ஒரு விரிசல் எப்பொழுதும் இருந்தது. தேவகுமாரனின் ஆசியாலும், அரசியாரின் கட்டளையாலும் விரிசல் பிளவாகிக் கொண்டிருந்தது.

சில கலெக்டர்கள் மிஷனரிமார்களின் பணிகளுக்கு உதவிகள் செய்தனர். சில கலெக்டர்கள் இது இடைஞ்சல் தருகிற ஒன்று என நினைத்தனர். ஆனால் இவைகளுக்கு அப்பால் மிஷனரிமார்களின் பணிகள் மக்களின் மனங்களில் வேர்விட்டுப் படர ஆரம்பித்திருந்தது. ராமநாதபுரம், மண்படம், திண்டுக்கல், சிவகங்கை, திருமங்கலம், கம்பம், பெரியகுளம் என மிஷனரிமார்கள் பல பள்ளிகளையும் தேவாலயங்களையும் உருவாக்கியிருந்தனர்.

அமெரிக்காவில் பிறந்து, அயல்நாட்டு மிஷன் குழுவில் பங்கெடுத்து ‘உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்’ என்ற ஜீவ வார்த்தையில் நம்பிக்கையுடன் மதுரைக்கு வந்து கொளுத்தும் வெயிலுக்கும் கொடிய நோய்க்கும் தப்பி ‘வாடையே! எழும்பு. தென்றலே! வா. கந்தப் பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு!’ என்ற கட்டளையுடன் தேவ ஊழியம் செய்து இறுதியில் பசுமலை கல்லறைத் தோட்டத்தில் ‘நீ பண்ண வேண்டிய பிராயணம் வெகுதூரம்‘ என்ற வாக்கின் வழியே அடக்கமாயினர்.

வகுப்பறைகளை தேவாலயங்களை நோக்கி வடிவமைத்தனர். உபாத்தியாயர் வீட்டுத் திண்ணைகளைவிட சகல விதத்திலும் சிறந்ததாக இருந்தது மிஷனரி உருவாக்கிய வகுப்பறைகள். கொடுத்த பென்சிலைக் கொண்டு காகிதத்தில் எழுதிய பொழுது எல்லா சாதிக்காரனுக்கும் எழுத்து வந்தது. திண்ணைப் பள்ளிக்கூடம் இருக்கும் தெருவுக்குள்ளேயே நுழைய முடியாவர்கள் கூட எளிதில் வார்த்தைகளுக்குள் நுழைந்தார்கள். மணலில் விரல் புதைத்து எழுத்தைக் கண்டறிந்தவர்களை விட வேகமாக பென்சிலின் வழியே காகிதத்தில் கண்டறிந்தனர். ஏசுவை நோக்கி புதிய மனிதர்களைக் கரையேற்றியபடி இருந்தது கல்வி.

எண்ணிக்கையில் அதிகமான மாணவர்களும், சில மாணவிகளும் தினமும் படிக்க பசுமலையின் அடிவாரக் கல்விச் சாலைக்கு வந்து கொண்டிருந்தனர். இவ்வளவு பெரிய மதுரையில் மக்களை காலத்தின் வேகத்திற்கு முன்னோக்கி அழைத்துச் செல்லும் ஒரே இடமாக பசுமலை மட்டுமே இருந்தது. எனவே அதற்கு எதிரிகள் நிறைய இருந்தனர். சனாதனிகளுக்கு பசுமலை பிசாசுகளின் கூடாரமாகவே இருந்தது. எந்த நேரமும் புறம்பேசுவதற்கான இலக்காகவும் இருந்தது. புதிய புதிய

ஸ்காலர்சிப்கள் வருவதும், மதம் மாறிய புதிய கிறிஸ்தவர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படுவதுமாக மிஷனரிமார்களின் பணிகள் விரிவடைந்து கொண்டே இருந்தன. கம்பம் தாண்டி திருவாங்கூர் சமஸ்தானத்தில் வடகிழக்கு எல்லையை ஒட்டிய பகுதியில் ஒரு புதிய சேசுசபையை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. சேசு சபையைச் சேர்ந்த பிரெஞ்சுக்காரரான பாதர் ஜேம்ஸ் அங்கே செல்லவிருக்கிறார். அவருடன் காவலுக்குப் போகத்தான் மொக்கயன் அழைக்கப் பட்டிருந்தான்.

கலாசாலையின் வாசல் முழுவதும் நிழல் பரப்பி இருந்த வேப்பமரத்தின் அடியில் நாற்காலி போட்டு நான்கைந்து பேர் அமர்ந்திருந்தனர். நடுவில் சிவப்பிரகாச பிள்ளை இருந்தார். பேச்சு சுவாரஸ்யத்தில் எல்லோரும் மூழ்கி இருந்தனர். மொக்கயன் கலாசாலைப் படிக்கட்டின் இடது ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். எதிரில் சற்று தொலைவில் இருந்த மரத்தடியில் வண்டி மாடுகள் இரண்டும் அசை போட்டுக்கொண்டிருந்தன. மாடுகளுக்கான வைக்கோலை வலவன் நன்றாக அமுக்கிக் கட்டிக்கொண்டிருந்தான்.

தேவாலயத்தின் பக்கமிருந்து பாதர் ஜேம்ஸ்சும், ரெவ். லாரன்சும் வந்தார்கள். நாற்காலியில் உட்கார்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று இருவரையும் வணங்கினார்கள். சிவப்பிரகாச பிள்ளை பாதர் ஜேம்ஸ்சுக்கு மொக்கயனை அறிமுகப்படுத்தி வைத்தார். கிழமாசிவீதி காவக்காரன் பொன்னாண்டியை லாரன்சுக்கு நன்காகத் தெரியும். அங்குள்ள தேவாலயத்திற்கான காவக்கூலியை வாங்க அவன் பலமுறை லாரன்சை சந்தித்துள்ளான். எனவே லாரன்ஸ் மொக்கயனிடம் பொன்னாண்டியைப் பற்றி விசாரித்தார். வண்டிக்காரன் மாட்டை வண்டியில் பூட்டித் தயார் நிலையில் அவர்களின் அருகில் கொண்டுவந்தான். ஜேம்ஸ்சின் இரண்டு பெரும் பெட்டிகளும் வண்டியில் ஏற்றப்பட்டன. அதன்பின் ஜேம்ஸ் அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு வண்டியில் ஏறி அமர்ந்தார். வண்டிச்சக்கரங்கள் அடிவாரப் பாதையை நோக்கி வேகமாக உருண்டன.

பாதை மாடுகளை அழைத்துச் சென்றது. செம்பூரான்கள் பிடிபட்ட கபாலிமலையின் அடிவாரத்தைக் கடந்து வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டியின் பின்புறம் மொக்கயன் கையில் கம்பைப் பிடித்தவாக்கில் நடந்துபோய்க்கொண்டிருந்தான். வண்டி திருமங்கலம், சிந்துப்பட்டி, போத்தம்பட்டி, ஆனையூரைக் கடந்து கணவாயின் மேல் ஏறியபொழுது இரவு நெருங்கி வந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வறண்ட பூமியின் அலங்கோலத்தைப் பார்த்தவாக்கில் ஜேம்ஸ் வந்துகொண்டிருந்தார். வண்டியின் பின்புறம் வெளியில் காலைத் தொங்கவிட்டப்படி உட்கார்ந்து வந்தான் மொக்கயன். ஒளியின் கடைசிக் கதிரும் விலகிவிட்ட பாதையின் வழியே கண்வாயில் ஏறிக்கொண்டிருந்தது வண்டி. எதிரில் எப்பொழுதாவது வரும் வண்டிகள் நான்கைந்தாக சேர்ந்தேதான் வந்தன. தனி வண்டியை பகல்பொழுதில் கூட அவர்கள் பார்க்கவில்லை. வண்டியோட்டிக்கு உள்ளுக்குள் பயம் கூடியபடி இருந்தது. நேரம் ஆக ஆக ஆயிரக்கணக்கான யானைகளைப் போல இருள் மலையின் மேல் இருந்து பொதிபொதியாய் இறங்கி வந்தது. பகலில் வாங்கிய உஷ்ணம் முழுவதையும் இரவானவுடன் மலை உமிழ ஆரம்பித்தது. காய்ந்த பாறைகள், காட்டு மரங்களுக்கு இடையில் இருந்து வெப்பம் நீருற்றுபோலக் கசிந்து பெருக்கெடுத்து வந்தது. வெப்பத்தை

சுவாசித்துக்கொண்டே பாரத்தை இழத்தபடி கணவாயின் கரடுமுரடான பாதையின் மேல் ஏறிக்கொண்டிருந்தன மாடுகள். வாயில் இருந்து நுரை தள்ளியபடி இருந்தது. மொத்தக் கணவாயிலும் இருந்த ஈரப்பசை இது மட்டும்தான்.

‘வண்டிய கொஞ்சம் நிறுத்திட்டு வேற வண்டிக வந்த பிறகு சேந்துபோவமே’ என்று கேட்டான் வண்டியோட்டி. ஜேம்சுக்கும் அதுதான் சரி என்றுபட்டது. ஆனால் மொக்கயனின் கவலையோ வேறு மாதிரி இருந்தது. ‘அடுத்த வண்டி வந்தால்...அதுக்கும் சேர்த்து நாம காவல் காக்க வேண்டி வந்தால் என்ன செய்வது...’ என யோசித்தவன். பின்னால் இருந்து சட்டென இறங்கி ‘வண்டிய விடப்பா வேகமா’ எனச் சொல்லியவாறு வண்டிக்கு முன்னால் வந்து விறுவிறுவென நடக்க ஆரம்பித்தான். கும்மென்றிருந்த கணவாய் இருட்டுக்குள், பழக்கப்பட்ட அடவிக்குள் போவதைப்போலத் துல்லியமாக அவன் கால்கள் போயின. அவனுக்குப் பின்னால் மாடுகள் வந்துகொண்டிருந்தன. ஜேம்ஸ் கண் இமைக்காமல் முன்னால் போகிற மொக்கயனையே பார்த்தவாறிருந்தார். தான் தண்ணீர் உற்றி வளர்த்த செடிகளுக்கு இடையில் வாஞ்சையோடு நடந்து போகும் தோட்டக்காரனைப் போல அவன் இருட்டுக்கு இடையில் நடந்து போய்க் கொண்டிருந்தான். இரண்டு பக்கமும் செழித்து நிற்கும் பயிர்போல் இருட்டு இருந்தது. வண்டியை இழுத்து வந்த மாடுகள் கூட அப்பக்கமோ, இப்பக்கமோ திரும்பி அந்தப் பயிரின் தோகைகளைத் தின்றுவிடவில்லை. அவ்வளவு கவனமாக அவன் மாட்டையும் வண்டியையும் நடத்திச் சென்றான். கொஞ்சம் இடைவெளி கூடினாலும் இருட்டுக்குள் மொக்கயன் மறைந்து விடுவான். அப்படியொரு சரியான இடைவெளியில் வண்டி சென்றது. நடந்து போகும் மொக்கயன் அளவுக்கு வண்டியோட்டிக்கும் வேர்த்துக் கொட்டியது. ‘வேண்டாம்பா. ஓரங்கட்டி நிறுத்துவோம்‘ என்று சொல்லவும் முடியாமல் ஓட்டவும் மனசில்லாமல் உள்ளுக்குள் நடுக்கத்துடனே அக்கம்பக்கம் திரும்பாமல் நேரே பார்த்துக்கொண்டிருந்தான்.

கணவாய் இறக்கத்தில் சக்கரங்கள் வேகமாக உருண்டன. சற்றுத்தொலைவில் எதிரே வண்டிகள் வரும் சத்தம் கேட்டது. எதிரில் வந்த காவக்காரனின் குரல் ஏறிவந்தது. மொக்கயன் பதில் குரல் கொடுத்தான். இறங்கும் வண்டியைப் பாதையில் இருந்து கொஞ்சம் ஒதுக்கி நிறுத்துவதற்காக வண்டியோட்டி மாட்டின் கயிறுகளை இழுத்துப்பிடித்தான். வண்டிச் சக்கரங்கள் மாடுகளைத் தள்ளிக்கொண்டு முன்னுக்குப் போக முயற்சித்தன. மாட்டின் கால்கள் விறைத்தபடி புழுதியைச் சரித்து மண்ணுக்குள் இறங்கின. கயிற்றின் இழுவையால் கொம்புகள் திமிலில் உரச விடைத்த மூக்குகள் அண்ணாந்தபடி மாடுகள் நிறைந்தன.

பாதையில் இருந்து கொஞ்சம் ஒதுங்கிக் கொடுத்தவுடன் ஏறும் வண்டிகள் அவர்களைக் கடந்தன. வரிசையாக மூன்று வண்டிகள் போயின. முன்னால் இரண்டு காவக்காரர்கள் கையில் கம்புடன் போய்க்கொண்டிருந்தனர். மொக்கயனும் அவர்களும் இருட்டுக்குள் ஏதோ பேசியவாறு எதிரெதிர் திசையில் விலகிப் போனதை வண்டிக்குள் இருந்த ஜேம்ஸ் உற்றுப் பார்த்தார். ஆனால் என்ன பேசினார்கள் என்று அவருக்குப் பிடிபடவில்லை. மொக்கயன் கையில் கம்பைப் பிடித்த வாக்கில் இருட்டை

இரு கூறாகப் பிளந்தபடி விறுவிறுவென போய்க்கொண்டிருந்தான். சக்கரங்கள் உருண்டோட வண்டிக்குப் பின்னால் பெரும் கனத்தோடு இருள் துரத்தி வந்துகொண்டிருந்தது. ஜேம்ஸ் ஏசுவை பிரார்த்தித்தபடியே வந்தார். அவருக்கு சங்கீதத்தின் வரிகள் ஞாபகம் வந்தன. 'உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்.'

*

முதல் நாள் இரவு ஆண்டிப்பட்டி சத்திரத்தில் தங்கியவர்கள் மறுநாள் இரவுக்குள் கம்பம் வந்து சேர்ந்தனர். அங்கிருந்த சிறிய தேவாலயத்தில் பிரார்த்தனை செய்த ஜேம்ஸ் அன்றிரவு அங்கேயே தங்கினார். மொக்கயன் கம்பம் காவக்காரன் வல்லாங்கனைப் பார்த்து விட்டு காலையில் வருவதாகச் சொல்லிப் போனான்.

ஊரின் வடக்குப் பக்கமிருந்த வல்லாங்கனின் வீட்டுக்கு மொக்கயன் போன பொழுது நன்றாக இருட்டி இருந்தது. வந்திருப்பவனை அடையாளம் தெரியாமல் வல்லாங்கனின் மனைவி முழித்தாள். 'ஏ... மதினி, நான்தேன் ராசு மகெ' என்றான். 'வா கொழுந்தா... வா... வா... என்ன இவ்வளவு தூரம்' என்றவனிடம் வந்த விசயத்தை சொன்னான் மொக்கயன்.

வல்லாங்கன் நேத்து சாமத்துக்கு மலைக்கு வேட்டைக்குப் போனவன் இன்னும் வரவில்லை என்றும் வெளியில் போயிருக்கும் இரண்டு மகன்களும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்கள் என்றும் சொன்னாள்.

'சம்சாரித்தனம் பூராம் போச்சப்பேய்...! காவ பூராம் அழிஞ்சு போச்சு. மலயில இருக்கிற ஜீவாத்திகள நம்பித்தான் பொழுச்சுக்கிட்டு இருக்கோம்...இங்கேயே மழ தண்ணி இல்லயே, ஊருல சனக்காடு என்னபாடு படுதோ... ஏ அப்பே... ய்!' என்று மொக்கயனிடம் மதினி புலம்ப ஆரம்பித்த கொஞ்ச நேரத்தில் வல்லாங்கனின் மூத்த மகன் ஆண்டிச்சாமியும் இளையவன் கொடிவைரனும் வந்து சேர்ந்தார்கள்.

மொக்கயனும் ஆண்டிச்சாமியும் ஒத்த வயதுக்காரர்கள். சிறு வயதில் மலையடி கருப்பு கோயிலில் கல்லெறிந்து விளையாடுவதில் இருவரும் கெட்டிக்காரர்கள். பேச்சு சிறு வயது பற்றித் திரும்பியது. மாயாண்டிப் பெருசுவை விசாரித்தான் ஆண்டிச்சாமி. அவர்தான் சிறுவர்களுக்கு கல்லெறிந்து பழக்கப்படுத்துவார். குறைந்தது இரண்டு ஆலமரங்களைத் தாண்டி கல் போகவில்லை என்றால் அவருக்கு வரும் கோபத்திற்கு அளவே இருக்காது. மூன்று ஆலமரத்தைக் கடந்து கல்லெறிபவனும், ஒரே எறியில் ரெண்டு பனங்காயையாவது உதுப்பவனும்தான் அன்றைய தினம் அவருக்கு செல்லப்பிள்ளைகள். மொக்கயனும் ஆண்டிச்சாமியும் பல நாள் மாயாண்டிப் பெருசுக்கு செல்லப்பிள்ளையாக இருந்துள்ளனர். சிறுவர்கள் கல்லெறியும் தூரத்திற்கு நடு வயதுக்காரர்கள் கம்பெறிவார்கள். எல்லாவற்றிக்கும் கைநேர்த்தி சொல்லிக் கொடுப்பவர் மாயாண்டிப்பெருசுதான். 'பெருசு இப்ப ரொம்ப தளத்து போச்சு. கருப்பு கோயில்லேதான் இருக்கு...' என்று ஆண்டிச்சாமியிடம் சொன்னான் மொக்கயன்.

ஊரில் உள்ள எல்லாருடைய சௌக்கியத்தையும் விசாரித்தார்கள். வந்த விருந்தாடிக்கு கஞ்சி ஊத்திக் கொடுத்தாள் வல்லாங்கனின் மனைவி. ஆண்டிச்சாமியும் அவனும் இரவு முழுவதும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நடுச்சாமத்திற்குப் பிறகு தூரத்தில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. ‘அப்பே வருது!’ என்றான் கொடிவைரன். சிறிது நேரத்தில் பெரும் முள்ளம்பன்றி ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தான் வல்லாங்கன். நாய்கள் இரண்டுக்கும் ரத்தக் காயங்கள். இரண்டு முள் செவலை நாயின் மீது குத்தியிருந்தது முற்றத்தில் விழுந்த விளக்கொளியில் தெரிந்தது. இரண்டு நாயும் சேர்ந்து முள்ளம்பன்றியின் பின்னங்கால்களைப் பிடித்து சப்பையை இரண்டாகக் கிழித்துவிட்டதால் மேலெல்லாம் ரத்தம் ஒழுக வல்லாங்கன் தூக்கி வந்திருந்தான். இரண்டு நாள் வேட்டையாதலால் ஆள் களைத்திருந்தான். வல்லாங்கனுக்கு இருந்த கஞ்சியை மொக்கயனுக்குக் கொடுத்துவிட்டதால் வல்லாங்கனுக்குக் கொடுக்க ஒன்றுமில்லை. கூழ் காய்ச்சிய சட்டியில் ஒட்டியிருந்த பக்கையெல்லாம் சொரண்டிப் போட்டு தண்ணீர் ஊற்றிக் கொண்டுவந்து கொடுத்தாள் அவன் மனைவி.

வந்த விசயத்தை மொக்கயனிடம் கேட்ட வல்லாங்கன் ‘மலைக்கு மேல அண கட்றாங்களாம். இங்க பஞ்சத்துல பொழக்க முடியாத சனமெல்லாம் மேலதான் வேலக்கிப் போறாங்கெ...இவங்கெ ரெண்டுல ஒருத்தன அங்க அனுப்பலாம்னு நெனச்சுக்கிட்டு இருக்க. நாளைக்கு நீ போறப்ப ஒன்னோட நானு வந்து அங்க நடக்கிற வேலய பாத்துட்டு வந்திர்றேன்’ என்றார்.

மறுநாள் காலை ஜேம்ஸ்சிடம் வல்லாங்கனைப் பற்றிச்சொன்னான் மொக்கயன். இருவரும் முன்னால் நடக்க வண்டி மேற்கு மலை நோக்கிப் புறப்பட்டது. காலைப் பொழுதின் உற்சாகத்தில் மாடுகளின் அடிவயிற்றை கால்பெருவிரல்களால் குத்தி கயிற்றைச் சுண்டினான் வண்டியோட்டி.

‘குத்துப்பட்ட நாயிக்கு மறக்காம பச்ச எலய பிழிஞ்சு விடுன்னு சம்சாரத்துகிட்ட சொல்லாம வந்துட்டனே’ன்னு புலம்பியடியே நடந்தான் வல்லாங்கன்.

*

**தே**க்கடியிலிருந்து பாதர் ஜேம்ஸ் எழுதிய கடிதம்.

கிறிஸ்துவில் மிகவும் பிரியமான சகோதரருக்கு.

ஜூன் மாதம் 5ம் தேதி நான் இவ்விடம் வந்தடைந்தேன். வந்ததில் இருந்து தொடர்ச்சியாக அடுத்தடுத்த வேலைகளில் கவனம் செலுத்த வேண்டியிருந்ததால் உங்களுக்கு கடிதம் எழுதுவதில் தாமதமாகிவிட்டது. நான் சிலோனில் இருந்து பசுமலையை வந்தடைந்த பின், அங்கு மிஷனரிமார்களின் பணிகளை கண்ணுற்று அளவற்ற மகிழ்ச்சிக்கு உள்ளானேன். மண்டபம் சபையில் ஏற்பட்ட சோர்வு என்னை விட்டு அகன்றது. எங்கோ பிறந்து எங்கெங்கோ வந்து ஊழியம் செய்கிற நமக்கு ஆண்டவராகிய கடவுள் அவருடைய உதவியையும் அருளையும் அளித்துக்கொண்டே இருக்கிறார். இல்லையென்றால் பசுமலையில் இவ்வளவு சிறப்பான பணிகள் நடக்க வாய்த்திருக்குமா?

குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளிப்பதிலும் புதியவர்களுக்கு கற்றுக் கொடுப்பதிலும் நீங்கள் காட்டி வருகின்ற ஆர்வமும் உழைப்பும் போற்றத்தக்கது ஆண்டவராகிய ஏசுவின் கிருபையால் பசுமலைத் தோட்டம் செழிப்புற்று இருக்கிறது. இவ்வளவு பெரிய வளாகத்தில் அத்தனை மாணவர்கள் கல்வி பயிலும் காட்சியை வேறெங்கே காணமுடியும். ‘புத்தியைக் கற்றுக் கொடுப்பவர்கள் ஆகாய மண்டலத்தில்

ஒளியைப் போலவும் அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாய் பிரகாசித்திருப்பார்கள்' (தானி. 12.13)

அந்நாளில் பசுமலையில் இந்தப் பள்ளியைத் துவக்க பல ஏக்கர் நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு அளித்த கலெக்டர் பிளாக்பர்னின் பரந்த உள்ளத்தை நான் நினைத்துப் பார்த்தபடியே இருக்கிறேன். அது மட்டுமல்ல, மதுரையில் நரபலியைத் தடை செய்தவரும் அவரே என்ற செய்தியும் எனக்குப் பெரும் வியப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தியது. அவரைப் போன்ற கலெக்டர்கள் மிக அபூர்வமாகவே வாய்க்கிறார்கள். விக்ரக ஆராதனையும் பேய் வணக்கமும் குடிகொண்டுள்ள இச்சனங்களிடம் மனிதத் தன்மையற்ற கொடிய பழக்க வழக்கங்கள் பல உண்டு. அதில் இருந்து இம் மக்களை மீட்க வேண்டிய கடமை தமக்கு இருப்பதாக ஊழியர்கள் யாரும் உணருவதேயில்லை. அநீதியிலும் குடியிலும் மூழ்கிக் கிடக்கும் இந்த இங்கிலீஷ்காரர்களுக்கு நடுவில் பிளாக்பர்ன் ஒரு நட்சித்திரத்தைப் போல என் நெஞ்சில் மின்னிக்கொண்டிருக்கிறார்.

புதிதாக நீங்கள் துவங்கவுள்ள அனாதை இல்லம் மிக அவசியமானது. அதனால் விளையும் பயன்கள் மிகப்பெரியவை என்று கருதுகிறேன். தேவ ஊழியத்தில் பிரவேசித்து நீங்கள் ஏற்றுகிற தீப ஒளிதான் இந்தப் பகுதியெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதனால் வரும் ஆபத்துக்களையும் நீங்கள் சந்திக்கத் தயாராயிருங்கள். ஆங்கிலேயர்கள் நியாயத்திற்கும் புறம்பான பக்கம்தான் நிற்பார்கள் என்பதனை மண்டபம் சபையின் பிரச்சனையிலும் நான் அறிந்தேன். எனவே தாவீதுபோல எப்போதும் தேவனின் துணையோடு நம் ஜீவ காலத்தை கழிப்போம்.

சபையில் உள்ள மிஷனரிமார் இந்த வெயில் காலத்தில் கொடைக்கானல் சென்று ஓய்வெடுத்துவிட்டு வரலாம் என்று பேசிக் கொண்டதை அங்கு நான் கேட்டேன். திருச்சபையை தம்முடைய சரீரமென்றும், தம்முடைய வீடு என்றும் கூறி அதற்காக கிறிஸ்து தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். அத்தகைய திருச்சபையின் பணிகளைத் தமது சரீர சுகங்களுக்கு உட்பட்டு நிறைவேற்றுபவன் நல்ல ஊழியக்காரனாக மாட்டான். அங்கிருந்து வரும்போது நான் வழிநெடுகப் பார்த்தேன். இரண்டு வருட வறட்சியால் மக்கள் கொடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். கள்ளி, கற்றாழை, கருவேல மரங்களைத் தவிர ஜீவித்திருக்கும் தாவரங்கள் எதுவுமில்லை. கிராமங்களை விட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறுகின்றனர். அவர்களின் தேகத்தை கண்ணுறுகிற யாருடைய கண்களில் இருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தபடி இருக்கும். இந்த பாவபட்ட ஜனங்களிடம் பணியாற்றுகிற ஒருவருக்கு கொடைக்கானலில் இருக்கும் குளுமை எப்படி ஞாபகம் வருகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஓநாய் வரும்போது ஆடுகளை விட்டு ஓடிப் போகிறவன், அதைப்பற்றிக் கவலைப்படாதவன். தான் தினந்தோறும் பெறும் கூலியின் மேல் மட்டும் கவனமாய் இருப்பவன் எப்படி நல்ல மேய்ப்பனாக இருக்க முடியும்? இன்னும் தன்னை முழுமையாகக் கர்த்தரிடம் ஒப்படைக்க வேண்டிய பலர் நம்முடன் இருந்து வருகிறார்கள் என்பது அளவற்ற வருத்தம் அளிக்கிறது. பகலிலே வெயிலுக்கும், இரவிலே குளிருக்கும் இரையாவதே நமது ஜீவியம்

என்பதை அவர்கள் முழுமையாக உணர்வார்களாக!

இங்கு வந்தவுடன் எனது பணிகளைத் துவக்கியுள்ளேன். அடர்ந்த காட்டுக்குள் அணைகட்டும் பணியின் ஆரம்ப வேலை நடைபெற்று வருகிறது. பல ஐரோப்பியர்கள் இங்கு உள்ளனர். எனது வருகையால் அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்தனர். குறிப்பாக மக்கள் தொடர்பு அதிகாரி ராபர்ட்டும் சில பொறியாளர்களும் என்னை வந்து சந்தித்தனர். இங்கு ஒரு தேவாலயம் கட்ட தாங்கள் எல்லா உதவிகளையும் செய்வதாகக் கூறியுள்ளனர். அணைகட்டும் பணி குறித்த பெரும் கனவோடு அவர்கள் உள்ளதை என்னால் அறிய முடிந்தது. அவர்களிடம் பசுமலையில் நடைபெற்றுவரும் அமெரிக்கன் சபையின் செயல்பாடுகளை விரிவாக எடுத்துக்கூறினேன். அடுத்த முறை மதுரைக்கு வரும்பொழுது பசுமலைக்கு கண்டிப்பாகச் சென்று பார்ப்பதாகக் கூறியுள்ளனர்.

கடைசியாக, நீங்கள் அனுப்பிய காவல்காரனைப் பற்றி குறிப்பாக எழுதவேண்டுமென்று நினைக்கிறேன். அவன் எனக்கு ஒரு புதிர்போலவே இருந்தான். அவன் என்னை விட்டுச் சென்று இருபது நாட்கள் ஆகிறது. ஆனால் அவனைப்பற்றி பலமுறை நினைத்திருக்கிறேன். நான் சிலோன் தீவில் பயணம் செய்தபொழுது சேசு சபையைச் சேர்ந்தவர்கள் காவல்காரர்களை நியமித்து தந்தனர். அவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களாகவே எப்பொழுதும் இருந்தனர். அது மட்டுமல்ல, எந்த நேரமும் உஷார் தன்மையுடன் இயல்பு நிலையற்றே இருந்தனர். அவர்களின் இருப்பே நமக்கு ஒருவித பதற்றத்தை உருவாக்கியபடியே இருக்கும். ஆனால் நீங்கள் அனுப்பிவைத்த நபர் அப்படியல்ல, அவனுக்கு இரவிலும் சிறு பதற்றம் கூட இல்லை. தான் காவல் புரிகிறோம் என்ற மனநிலையைக் கடந்தனவாக அவன் இருந்தான். ஒரு பறவை கூட்டிற்குப் போவதைப் போல இயல்பாக அவன் என்னை அழைத்து வந்தான். இருட்டைப் பற்றி நமக்கு இருக்கும் எல்லாக் கருத்துகளுக்கும் அப்பால் அவன் இருக்கிறான். வெளிச்சமும் இருட்டும் அவனது நடையை வேகப்படுத்தவுமில்லை, நிதானப்படுத்தவுமில்லை. அவன் அவனாக இருளிலும் ஒளியிலும் இயல்பாகப் போய்க்கொண்டிருந்தான்.

தேனி என்ற சந்தைக் கிராமத்தின் சாவடியில் நாங்கள் கொஞ்சம் இளைப்பாறிய பொழுது, கடந்துபோன இரண்டு வண்டிகளுக்கு முன்னால் ஒரு சிறுமிதான் காவல்காரனைப் போல நடந்து போனாள். நான் விசாரித்தற்கு, பக்கத்திலிருக்கும் ஒரு ஊரைச் சேர்ந்த சிறுமி அவள், இந்த வண்டிகளுக்கு அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் காவல் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் அவள் போய்க்கொண்டிருக்கிறாள். அதை மீறி அந்த வண்டியைக் கொள்ளையிடத் திருடர்கள் யாரும் துணியமாட்டார்கள் என்று தெரிவித்தனர். கடந்துவந்த இந்தப் பகுதி முழுவதுமிருக்கிற காவல் ஒழுங்கு என்னை வியக்க வைத்தது. கொள்ளையர்களும் காவலர்களும் ஏதோ ஒரு ஒழுங்கை அல்லது கட்டலையை மீறாமல் கடைப்பிடிக்கின்றனர். அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. கண்டிப்பாக அது அவர்களின் சமயம் சார்ந்த நம்பிக்கையாக இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

நாங்கள் வரும் வழியில் திருமங்கலம், சிந்துபட்டி என்ற இரண்டு சிறிய ஊரிலும் புறச்சமயப் பெருங்கோயில்கள் இருந்தன. நாங்கள் அதன் வழியே கடக்கும்பொழுது, வண்டியோட்டி வண்டியை நிறுத்தி கீழே இறங்கிப்போய்

வழிபட்டுவிட்டுத்தான் மீண்டும் வண்டியை ஓட்டினான். ஆனால் இந்தக் காவல்காரன் அந்த கோயில்களின் வழிபடவோ அதன் அருகில் போய் நிற்கவோ...ஏன், அந்தப் பக்கம் திரும்பவோ கூட இல்லை. அந்த சமயத்துடன் தன்னை இணைத்துள்ள ஒருவனைப் போல் அவனது எந்த நடவடிக்கையும் இல்லை. தனக்கு எந்த சம்பந்தமும் இல்லாத ஒன்றினைக் கடந்துபோவதைப் போலத்தான் அவன் போனான். அவனது இனத்தின் நம்பிக்கை வைதீக சமயத்திலிருந்து இவ்வளவு விலகி இருக்கிறது என்பதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் நமது பணிகளைத் திட்டமிட்டுக்கொள்ளவேண்டும். வாட்டம் பார்த்து தண்ணீர் இறைக்கும் தோட்டக்காரனைப் போல நமக்கு சமயோசிதத்தை தேவன் அருளியிருக்கிறார். நமக்கு அவரின் அருள் நிறைவாய் இருக்கிறது. கடவுளுக்கு பணிவிடை புரிவோம்.

கிறிஸ்துவில் பிரியமான உங்கள் சகோதாரன்,

ஜேம்ஸ்

1975 ஜுன் 24

*

# 66

**க**பாலி மலையின் அடிவார இருட்டுக்குள் அடர்ந்த மரங்களின் பின்னே இருந்து தாக்குதல் நடத்திய செம்பூரான்களைக் கண்டு அஞ்சாமல் மிகச் சாமர்த்தியமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து இருவரைப் பிடித்த ஓம்பெர்ட்டின் வீரத்தைப் பற்றி பிரிட்டிஷார் பலரும் பாராட்டிப் பேசினர். இந்நிகழ்ச்சிக்குப் பின் மதுரையின் போலீசுக்கு புதுத் தெம்பு வந்தது. அரண்மனையில் இருந்த கலெக்டர் அலுவலகம், நீதிமன்றக் கட்டிடம் ஆகியவற்றிற்கு அடுத்து மிக முக்கிய இடமாக கச்சேரி மாறியது. சிலருக்கு சில நேரம் அவைகளைவிட முக்கியமான இடமாக கச்சேரி இருந்தது. போலீஸ் கேலிக்கு உள்ளாகி, வெட்கப்பட்டு கச்சேரிக்கு வந்த காலமெல்லாம் மறைந்துவிட்டது. இப்பொழுது மிடுக்கேறிய நடையோடு போலீசார் கச்சேரிக்கு வந்து கொண்டிருக்கின்றனர். தலைமை ஏட்டுகள் கோபால் ஐயரும், வீராச்சாமி நாயுடுவும், சேஷகிரி ராவும் தங்களுடைய பணிகளை நிறைவேற்றுவதில் போட்டி போட்டுக்கொண்டு செயல்பட்டனர். தங்களுக்குக் கீழ் இருந்த போலீஸ்காரர்களை வேலை வாங்குவதிலும், அவர்களைத் திறம்படப் பயன்படுத்துவதிலும் மிகவும் தேர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில் புதிதாக வந்துள்ள கலெக்டர் வில்லியம் காரே அடுத்த வாரம் கூட்டவிருக்கும் கூட்டத்திற்கான தயாரிப்பு ஏற்பாடுகளுக்காக டி.எஸ்.பி. ப்ரெவ்ஸ் ஒரு மீட்டிங் ஏற்பாடு செய்திருந்தார். டி.எஸ்.பி. ஓம்பெர்ட்டும் அதில் பங்கேற்றிருந்தார். வழக்கமாக இது போன்ற கூட்டங்களை மாவட்ட எஸ்.பி. வில்சன் தான் ஏற்பாடு செய்வார். ஆனால் அவர் இப்பொழுது ராமநாதபுரம் கேம்பில் இருப்பதால் டி.எஸ்.பி.கள் கூட்ட ஏற்பாட்டினைச் செய்ய வேண்டியதாயிற்று. எஸ்.பி. பங்களாவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை ஏட்டுகள் மூன்று பேரும் கலந்துகொண்டனர்.

‘அடுத்த வாரம் நமது புதிய கலெக்டர் மாவட்ட நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டியுள்ளார். நீர்ப்பாசனம், குடிநீர்த் திட்டம்,

சாலைப் பராமரிப்பு, போலீசின் பணிகள், சட்டம் ஒழுங்கு உள்ளிட்டவைகளை ஆய்வு செய்யவிருக்கின்றார். அந்த மீட்டிங்கில் நாம் சமர்ப்பிக்கவேண்டிய அறிக்கையினைத் தயார் செய்யத்தான் இன்றைய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலெக்டர் மீட்டிங்கில் நாம் இரண்டு அறிக்கை வாசிக்க வேண்டியுள்ளது. ஒரு அறிக்கையானது நம்முடைய போலீஸ் ஸ்டேசன் உருவாக்கப்பட்டு இந்த மூன்றாண்டுகளில் அதன் செயல்பாடு, அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அது பதிவு செய்துள்ள வழக்குகள், இன்றைய நடைமுறையில் செய்யவேண்டிய மாற்றங்கள் ஆகியவை பற்றியது. இது சம்பந்தமான புள்ளிவிபரங்கள் முழுமையும் எடுத்து அறிக்கையினை தயாரித்துத் தரவேண்டியது ஏட்டு வீராச்சாமி நாயுடுவின் பொறுப்பாகும். இன்னொரு அறிக்கையானது இப்பொழுது இருக்கும் காவல் நடைமுறை பற்றியது. இன்றைய நமது மதுரை நகரில் தாதனூர்க்காரர்கள் எத்தனை பேர் காவல்பணியில் ஈடுபட்டுள்ளனர்; அவர்களது காவலில் நிகழ்ந்துள்ள திருட்டு பற்றிய விபரங்கள்; அந்தத் திருட்டை அவர்கள் கண்டறிந்து திரும்பக் கொடுத்தது சம்பந்தபட்ட விபரங்கள் ஆகியவை முழுமையாக எடுக்கப்படவேண்டும். இவை தவிர நகரை ஒட்டியுள்ள பொன்மேனி, மாடக்குளம், வண்டியூர், திருப்பரங்குன்றம் ஆகிய கிராமங்களில் நடைமுறையில் உள்ள காவல் பற்றிய விபரங்களும் எடுக்கப்படவேண்டும். அதனடிப்படையில் ஒரு முழுமையான அறிக்கையினைத் தயாரித்துத் தரவேண்டியது ஏட்டு கோபால் ஐயரின் பொறுப்பு. இந்த இருவரும் மேற்கண்ட பணிக்காகத் தேவைப்படும் போலீஸ்களை உதவிக்கு வைத்துக்கொண்டு ஐந்து தினங்களுக்குள் முடித்துத் தரவேண்டும். ஏட்டு சேஷகிரிராவ் வழக்கமாக நடைபெறும் கச்சேரிப் பணிகள் முழுவதையும் கவனித்துக்கொள்ள வேண்டும்’ என்று ப்ரெவ்ஸ் தெரிவித்தார்.

அவர் கருத்துகளைக் கேட்ட ஏட்டுகள் மூவரும் செய்து முடிப்பதாகக் கூறினர். ஆனால் தாங்கள் ஒத்துக்கொண்ட வேலையை ஐந்து நாட்களுக்குள் செய்துமுடிக்க முடியுமா என்ற சந்தேகம் கோபால் ஐயருக்கும், வீராச்சாமி நாயுடுவுக்கும் இருந்தது. ஆனால் இவனே பேசாமல் உட்கார்ந்திருக்கும் பொழுது தான் ஏதாவது சொன்னால் அது அவனுக்கு சாதகமாகிவிடுமோ என் நினைத்துக் கொண்டு இருவருமே எதுவும் பேசாமல் ஒத்துக்கொண்டு வெளியேறினர்.

தாதனூர்க்காரர்கள் காவல் காக்கும் தெருக்கள், அதில் ஏற்பட்டுள்ள களவு பற்றிய விபரங்களை இவ்வளவு துல்லியமாக ஏன் அறிக்கை கேட்கிறார்கள்? அடுத்த என்ன செய்யப்போகிறார்கள்? போன்ற சந்தேகங்களும் கேள்விகளும் மூவர் மனதிலும் உதித்தவாறுதான் இருந்தன. ஆனாலும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளுகிற தைரியத்தை மூவரும் இழந்திருந்தனர். கலெக்டர் கூட்டத்திற்குப் பின் வரப்போகும் ஆபத்தை அவர்களால் ஓரளவு ஊகிக்க முடிந்ததால் மௌனத்தைக் கலைக்காமலே வந்துகொண்டிருந்தனர்.

*

**ஊ**சியால் இறக்குவதைப்போல சூரியக்கதிர்கள் நகரின் மேல் இறங்கிக்கொண்டிருந்தன. மழையற்ற வெப்பம் தாங்காமல் நகரம் பொசுங்கியபடி இருந்தது. குருத்துகளைக் கருக்க ஆரம்பித்த கோடை,

இப்பொழுது ஆணிவேர் காய்ந்த பின்னும் தனது இரக்கமற்ற வெம்மையை முடித்துக்கொள்வதாக இல்லை. நகரின் புழுதி படிந்த தெருக்களில் அதன் தீராத ஆட்டம் நிகழ்ந்தபடியே இருந்தது. பகல் ஒவ்வொரு நாளும் நீண்டுகொண்டே போனது. அதற்கு மேல் பகலை நீட்ட முடியாத கனத்தில் சூரியக்கதிர்கள் அன்றைய நாளில் இருந்து இரவை வெட்டித் துண்டாக்கிவிட்டுப் போய்விடுகின்றன. வெட்டுப்பட்ட இரவு சூரியக்கதிர்களின் ஆடுகளத்தில் விழுந்து இரவு முழுவதும் பல்லியின் வாலைப்போல துடித்துக்கொண்டே கிடக்கிறது. தனது அவயங்கள் முழுவதிலும் சூரியக்கதிர்களின் எண்ணிலடங்கா ஈட்டிகளைத் தாங்கி அது நகரத்தின் மேல் குப்புற விழுந்து கிடக்கிறது. இரவின் வலி சொல்லி மாளாது. அது நடத்திக்கொண்டிருக்கும் மரணப்போராட்டம் அதன் அமைதியான உருவத்தைப் பார்ப்பவர்களால் அறிந்து கொள்ள முடியாதது. அது தனது ரகசியங்களை ஆண்டுகொள்ள சூரியனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டது. இனி இரவிடம் எதுவுமில்லை. பொருளற்ற பெயரைத்தவிர, சூரியனிடமோ எல்லாம் இருந்தது, இரவு உட்பட.

அந்திக்குப்பின் சூரியன் மறைந்தாலும் உஷ்ணம் மறைவதாக இல்லை. சூரியன் போட்டுவிட்டுப்போன முட்டைகளாக அவை நகரிலேயே கிடந்துவிடுகின்றன. மறுநாள் சூரியன் வந்தவுடன் நேற்றைய முட்டைகளைப் பொரித்து விடுகிறது. பொரித்த முட்டைகளுக்குள் இருந்துவரும் உஷ்ணக் குஞ்சுகள் நகரெங்கும் பறந்தபடியே இருக்கின்றன. இறக்கை முளைக்காத குஞ்சுகள் கட்டிடங்களுக்குள்ளேயே தங்கிவிடுகின்றன. ஒவ்வொரு நாளும் எண்ணற்ற உஷ்ணக் குஞ்சுகள் பிறந்தவாறும் பறந்தவாறும் இருக்கின்றன. சூரியன் தனது உஷ்ணக் குஞ்சுகளுக்கு பகலில் அணைத்து உணவூட்டுகிறது. இரவில் சுதந்திரமாக விளையாடச் சொல்லிக்கொடுத்துச் செல்கிறது. தாயற்று இருக்கும் பெரும் இருளில் குஞ்சுகள் தாயைவிட சக்திமிக்கதாய் இருக்கின்றன.

தேனீக்கள் மலர்களை நோக்கிப் போவதைப் போல அவை பகலில் நிழல்களை நோக்கிப் போகின்றன. நிழலை உறிஞ்சிக் குடிக்கின்றன. அதன் தீராத தாகம் நிழலுக்குள் யாரையும் ஒதுங்க விடுவதில்லை. வெயிலை விட நிழலில்தான் வெக்கை அதிகமாக இருப்பதாகச் சொல்லி மனிதர்கள் நிழலை விட்டு வெளியேறியபடி இருக்கின்றனர். வெயிலில் வெளியைப் போல நிழலும் நிராதரவாய்க் கிடக்கிறது.

சூரியன் மண்ணுக்குள் இருக்கும் ஈரத்தை உறிஞ்சிக் கொள்வதைப் போல, அதன் உஷ்ணக் குஞ்சுகள் மனிதர்களின் உடலுக்குள் இருக்கும் ஈரத்தை உறிஞ்சிக் கொள்வதற்காக சதா பறந்தபடியே இருக்கின்றன. ஈரமற்ற ஒன்றாக நகரம் மாறிக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் வதங்கி சருகுபோல் ஆகிக்கொண்டிருந்தனர். சூரியன் தனது எண்ணிலடங்கா உஷ்ணக்குஞ்சுகளை வளர்த்துவரும் பெரும்காடாக நகரம் இருந்தது.

*

**இ**ந்தக் கொளுத்தும் வெயிலிலும் குளுமையை அடைகாத்தபடி இருந்தது அரண்மனையின் சொர்க்க விலாசம். விண்ணில் வனையப்பட்டது போல் உயரத்திலிருந்து விதானம். கவிழ்ந்த தாமரை மலர் போன்ற மடல் ஓரங்களில் அழகிய சுதை வடிவங்கள். விசாலமான அந்தக் கொலு மண்டபம் முழுவதும் பிரிட்டிஷாரின் மிடுக்கை

பகட்டுவதாக இருந்தது. கலெக்டர் வில்லியம் காரே தலைமை இருக்கையில் வந்து அமர்ந்து, தனது தொப்பியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்தார். அவருக்கு எதிரில் அரைவட்ட வடிவத்தில் நாற்காலிகள் முழுவதிலும் அமர்ந்திருந்த வெள்ளை அதிகாரிகள் அவரது வருகைக்கு எழுந்து மரியாதை செய்துவிட்டு அமர்ந்தனர். சிறு சத்தம் எழுந்து அடங்கியது.

கச்சேரி போலீசார் அரண்மனைக்கு வெளியில் நின்றிருந்தனர். முக்கிய அதிகாரிகளின் கூட்டமாதலால் அரண்மனை வளாகம் முழுவதும் பரபரப்புடன் இருந்தது. புதிய கலெக்டர் எது ஒன்றிலும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கக்கூடியவரென்றும் திறமையானவர் என்றும் நிதானமான அணுகுமுறையைக் கொண்டவரென்றும் ஆளுக்கு ஒருவிதமாய் பேசிக்கொண்டிருந்தனர். அரண்மனையின் முகப்பில் அசைந்தாடிக் கொண்டிருந்தது யூனியன் ஜாக் கொடி.

முகம் முழுவதும் செந்நிறப் பழுப்பேறிய தாடியும், ஏறு நெற்றியும் இல்லிக் கண்களும், சற்றே பெருத்த உருவமும், நல்ல உயரமும் கொண்ட கலெக்டர் வில்லியம் காரே தனது மாவட்ட அதிகாரிகளின் முதல் கூட்டத்தை நடத்த ஆரம்பித்தார்.

இம்மாவட்டத்தின் மிகப்பெரும் திட்டமான பாம்பன் கடவு சம்பந்தப்பட்ட பணிகளின் விபர அறிக்கையினை கேப்டன் வில்லியம் பிரேசர் முதலில் முன்வைத்தார்.

‘பாம்பன் கடவு என்று அழைக்கப்படும் இந்தச் செயற்கை கால்வாயானது ராமநாதபுரம் நிலப்பகுதியை பாம்பன் தீவிலிருந்து பிரித்து பாக் ஜலசந்தியை வடக்கு தெற்காக மன்னார் வளைகுடாவில் இணைக்கிறது. இந்தக் கால்வாயை மேலும் அகலப்படுத்தி, ஆழப்படுத்தினால் சூயஸ் கால்வாயிலிருந்து மெட்ராசுக்கோ அல்லது கல்கத்தாவிற்கோ எளிதில் செல்லலாம். சிலோன் தீவினைச் சுற்றிச் செல்வதைக் காட்டிலும் அதிக பயனுடையதாகவும் எளிதாகவும் இருக்கும் என்ற நோக்கத்தில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வேலைகளை 1838ஆம் ஆண்டு சிறிய அளவில் துவக்கினோம். தொடர்ந்து 1854விலும் பின்பும் திட்டத்தின் படிப்படியான செயலாக்கம் நடைபெற்று வருகிறது.

இந்தக் கடவானது ஒரே சமமாக பத்தரை அடி ஆழப்படுத் தபட்டது. இவ்வாறு சமப்படுத்தப்பட்ட பின்பு சம அடித்தட்டுக் கொண்ட கப்பல்கள் சரக்குகளைக் குறைக்காமலும் தாமதமில்லாமலும் எளிதாகச் செல்ல முடிந்தது. 1822ல் 1 லட்சத்து 60 ஆயிரம் டன் பரிவர்த்தனை நடந்தது. அதுவே அடுத்தடுத்த பத்தாண்டுகளின் இரட்டிப்பாக உயர்ந்தபடி வந்துள்ளது. கொழும்புக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில் நடக்கும் போக்குவரத்து கட்டணச் செலவு டன்னிற்கு ஆறு ரூபாய் குறைந்தது. அது மொத்த வியாபாரச் செலவில் குறைந்தபட்சம் ஐந்து லட்சத்தினைக் குறைத்தது. இதன் விளைவாக சரக்கு வியாபாரம் அபரிமிதமாக முன்னேறியது.

இந்த வேலைகளைப் பெரிய அளவில் செய்வதற்குத் தடையாக இருந்தவை எல்லாம் கற்பனை என்று நிரூபணமாகிவிட்டது. இது சம்பந்தமாக திட்டத்தினை விரிவாக்கியதில் முக்கியப் பங்கினை வகித்த

லெப்டினட் கேணல் காட்டன் அளித்த அறிக்கையானது வாய்ப்புகளையும் பிரச்சனைகளையும் மிகத்தெளிவாகப் பகுப்பாய்வு செய்திருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தினை எதிர்த்து மூன்று முக்கிய ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டன.

1. கப்பல்கள் கொழும்புக்கு பக்கத்தில் நிறுத்தப்படுகின்ற முக்கியத்துவத்தை சிலோன் இழந்துவிடும்.

2. கப்பல்கள் இரவு நேரத்தில் இந்தக் கால்வாயை கடந்துசெல்ல இயலாது.

3. ஒரு கால்வாயானது குறைந்தபட்சம் அரை மைல் அகலத்திற்காவது இருக்கவேண்டும்.

மேற்கூறிய ஆட்சேபணைகளுக்கு கேணல் காட்டன் கீழ்வருமாறு பதிலளிக்கிறார்; ஏற்கனவே கப்பல்கள் காலி துறைமுகத்தில் நிற்பதை கைவிட்டுவிட்டு திரிகோணமலையில் தான் நிற்கின்றன. மேலும் காலிபகுதியில் இரவு நேரத்தில் நிற்க இயலாத கப்பல்கள் அதன் புறக் கடலில் நிற்க கட்டாயப்படுத்தப்படுகின்றன. தென்மேற்குப் பருவமழை காலத்தில் கொந்தளிப்பு மிக்கதாக அக்கடல் உள்ளது. அதனால் இந்த காலி கடல்பகுதியைக் காட்டிலும் அமைதியான திருகோணமலையில் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்பது சிறந்ததாகும். மேலும் கால்வாய் ஒன்றிற்கு அரை மைல் அகலம் இருக்க வேண்டுமென்பது பகுத்தறிவுக்கு மாறானது. பனாமா கால்வாயை அரை மைல் அகலத்திற்கு உருவாக்க வேண்டுமென்று சொன்னால் மனிதனால் என்ன செய்ய இயலும்? இப்பொழுது இந்தக் கால்வாயின் அகலம் 90 அடியாகும். இருந்தபோதிலும் நிறைய நீராவிக் கப்பல்கள் இதனூடே செல்கின்றன. இதில் முன்மொழியப்பட்டுள்ள அகலம் 100 அடியாகும். மற்றும் அணைக்கரைகளால் இந்தக் கால்வாய் முழுமையாக பலப்படுத்தப்படும். எனவே மேற்கூறிய ஆட்சேபணைகள் பொருட்படுத்தக்கூடியவையல்ல.

அதன்படி திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வந்தன. மெட்ராசுக்கு தனியாக கடல்வழி உருவாக்குகின்ற எண்ணம் கைவிடப்பட்டு, பாம்பன் கால்வாயைப் பன்னிரண்டு அடிவரை படிப்படியாக ஆழப்படுத்த அரசாங்கம் 1866ஆம் ஆண்டு இறுதியில் ஆணை பிறப்பித்தது. அதன்படி இந்த வழியானது அனைத்துக் கப்பல்களும் செல்லுவதற்கான முறையில் தயார்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல இந்தப் பணிகள் முழுமைக்குமான செலவு சுமார் 15 லட்சம் ரூபாய். இது தவிர அவற்றைப் பராமரிக்க அரசு கஜானாவில் இருந்து வருடத்திற்கு ரூபாய் 60 ஆயிரம் செலவிடவேண்டியிருக்கும். இருந்தபோதிலும் ஐரோப்பாவில் இருந்துவரும் கப்பல்கள் 36 மணிநேரம் விரைவாக அல்லது முன்பாக வந்துவிட இயலும் என்பதுடன் ஒப்பிடும்பொழுது இதற்கான செலவு ஒன்றும் பெரிதல்ல. ஆனால் அதற்கான செலவினை சுங்கக் கட்டணங்களை உயர்த்துவதன் மூலம் சரிசெய்து விடலாம். ஸ்டீம் கப்பல்களுக்கு டன்னுக்கு நாலணா வீதமும், தோணிகளுக்கு டன்னுக்கு ஒரு அணா வீதமும் கட்டணம் வசூலித்தால் வருடத்திற்கு ரூ. 70 ஆயிரம் கிடைக்கிறது. கப்பல்களுக்குக் கிடைக்கும் லாபத்தை ஒப்பிடும்பொழுது செலுத்தவேண்டிய தொகை மிகக்குறைவுதான். பெரிய ஸ்டீம் கப்பல்கள் இந்த வழியில் செல்வதால்

செலவு ரூ. 1000 குறைகிறது. ஆனால் அவர்கள் செலுத்தும் கட்டணமோ ரூ. 450 மட்டும்தான். எனவே அவர்கள் இந்த வழியைத்தான் வரவேற்கிறார்கள்.

இந்த சவால் நிறைந்த பணியை நமது பொறியாளர்கள் திறம்பட நிறைவேற்றியுள்ளனர். வருடத்தில் பெரும்பாலான நாட்களில் வேலைகள் தடைப்பட்டு நின்றன. நீராவியால் தூர்வாரும் கருவிகளை சில மாதங்கள் மட்டும்தான் பயன்படுத்த முடிந்தது. அதனை ஈடுகட்ட அபரிமிதமான மனித உழைப்பைப் பயன்படுத்த வேண்டிவந்தது. பெரும்பணியை நிறைவேற்ற ஏற்படும் சிரமங்கள் அனைத்தையும் நாம் எதிர்கொண்டு இப்பணியை வெற்றிகரமாக முடித்துள்ளோம்.

14 மைல் ஒளி வீசக்கூடிய கலங்கரை விளக்கமொன்றை 100 அடி உயரத்திற்கு பாம்பனில் அமைத்துள்ளோம். அந்த வழியில் செல்லும் கப்பல்களுக்கு உதவி செய்ய பைலட் நிலையம் ஒன்றும் அமைத்துள்ளோம். மொத்தத்தில் நிதி வருவாய் ரீதியிலும் அறிவியல் ரீதியிலும் மிகப்பெரிய வெற்றியை நாம் பெற்றுள்ளோம் என்று பாம்பன் கடவு பற்றிய அறிக்கையினை கேப்டன் வீ. பிரேசர் முன்வைத்தார்.

**பொ**துப்பணித்துறையின் கீழ் உள்ள சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் பற்றிய விபர அறிக்கையினை தலைமைப் பொறியாளர் என். ஜார்ஜ் முன்வைத்தார்.

‘இந்த மாவட்டத்தில் மொத்தம் 22 சாலைகள் உள்ளன. அதில் பெரும் பயன்பாட்டிற்குரிய சாலைகள் இரண்டு. ஒன்று திருச்சிராப்பள்ளியில் இருந்து மதுரை வழியாக திருநெல்வேலி வரை செல்வது. மற்றொன்று திண்டுக்கல்லிலிருந்து மதுரை வழியாக பாம்பன்வரை செல்வது. இந்த இரண்டு முக்கிய சாலைகளும் ஏற்கனவே இருந்த சுதேசி மன்னர்களால் அமைக்கப்பட்டதாகும். மற்றபடி இரண்டு சாலைகளும் ஏற்கனவே உள்ள வழித்தடத்தில்தான் உள்ளன.

திருச்சிராப்பள்ளியில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் சாலையில் மெட்டல் அமைக்கும் பணி முடிவடைந்துவிட்டது. இந்தச் சாலை மதுரை நகரின் வடக்குப்பக்கம் வைகை ஆற்றைக் கடந்து செல்கிறது. மழைக்காலங்களில் ஓடு பாலத்தைக் கடந்து செல்வது மிகவும் ஆபத்தானதாக உள்ளது. எனவே அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டாயம் தேவைப்படுகிறது. 25 ஆர்ச் உள்ள ஒரு பாலம் கட்ட ரூபாய் 48300 தேவைப்படுகிறது என்று கணிக்கப்பட்டுள்ளது. அதனைச் செய்ய அரசு உடன் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். ஏனென்றால் இந்தச் சாலைதான் வடக்கு திசையோடு நம்மை இணைக்கிறது.

இன்னொரு முக்கியமான சாலை திண்டுக்கல்லில் இருந்து பாம்பன் வரையிலான சாலை. இந்தச் சாலையில் வழிப்பறிக் கொள்ளையர்களின் தாக்குதல் சமாளிக்கவே முடியாத அளவு அதிகமாக இருந்ததால் மதுரையிலிருந்து மானாமதுரை வரையிலான புதிய வழித்தடத்தை நாம் அமைத்துள்ளோம். இந்தப் புதிய வழித்தடத்தைத் தொடர்ந்து பழுது பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதுவரை ரூபாய் 30ஆயிரத்திற்கு மேல் இந்தச் சாலைக்கு ஒதுக்கப்பட்டு செலவாகியுள்ளது. ஆனாலும் பாதி அளவுதான் போடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு முக்கிய சாலைகளைத் தவிர மற்ற எதுவும் குறிப்பிட்டுச்

சொல்லும் நிலையில் இல்லை. இந்த இரண்டு சாலைகளையும் செப்பனிட்டு, முழுமையாக மெட்டல் அமைக்கத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யவேண்டும்.

பசுமலையில் அமெரிக்கன் மிஷனரிமார்கள் கட்டியுள்ள போர்டிங் ஸ்கூல் கட்டிடம்தான் முதலாவது புதிய கட்டிடமாகும். இது தவிர புதிய கட்டிடங்கள் என்று தேவாலயங்களைத் தவிர வேறெதுவும் இல்லை. நீதிமன்றம், கலெக்டர் அலுவலகம் இரண்டிற்கும் சேர்த்து ஒரு புதிய கட்டிடம் கட்டுவது தேவையாகும் என்று கூறி இதற்கான திட்ட மதிப்பு விபரம் மற்றும் வைகையாற்றின் குறுக்கே கட்டப் படவேண்டிய பாலத்தின் திட்ட மதிப்பு விவரம் இரண்டையும் பின் இணைப்புகளாகப் படித்து முடித்தார் என். ஜார்ஜ்.

அடுத்து காவல்துறை சம்பந்தப்பட்ட அறிக்கையினை டி.எஸ்.பி. பிரெவ்ஸ் முன்வைத்தார். இம் மாவட்டத்தில் பிரிட்டிஷாரின் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்துவதன் பொருட்டு மதுரை, திண்டுக்கல், பழனி, பெரியகுளம், பரமக்குடி, ராமநாதபுரம் ஆகிய ஆறு இடங்களில் போலிஸ் ஸ்டேசன்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மதுரை நகரில் அமைக்கப்பட்டுள்ள போலிஸ் ஸ்டேசன்தான் ஒப்பீட்டளவில் பெரியது. அதிகமாக போலிஸ்காரர்கள் பணியாற்றுகின்றனர். இதுவரை 63 போலிஸார் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 10 பேர் புதியவர்கள். பத்து போலிஸார் துப்பாக்கி பிரயோகிப்பதில் தேர்ச்சி பெற்றுள்ளனர். நீதி மன்ற நடவடிக்கைகள் மற்றும் அரசு வரி விதிப்பு அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நடவடிக்கை எடுப்பது போன்றவற்றில் மதுரை போலிஸ்காரர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆனால் குற்றங்களைக் கண்டறியும் திறனிலும், அவற்றைத் தடுப்பதிலும் மிகவும் பலகீனமாக உள்ளனர். ஊழல் குற்றச் சாட்டிற்கும் சிலர் ஆளாகின்றனர். தீவட்டிக் கொள்ளையர்கள், வழிப்பறிக் கொள்ளையர்களைத் தடுப்பதற்கான இரவு நேரக் குதிரைப்படை ரோந்து நல்ல பலனைத் தந்துள்ளது. இது வழிப்பறிக் கொள்ளையை மிகவும் குறைத்துள்ளது.

மற்று நான்கு ஸ்டேசன்களில் உள்ள போலிஸாரின் பணிகளைப் பொறுத்தவரை இத்தகைய மதிப்பீடு எதையும் நான் தரமுடியாது. ஆங்கிலேய போலிஸ் நிர்வாக முறையை இப்பொழுதுதான் இவர்கள் கற்று வருகின்றனர். நீதிமன்ற நடவடிக்கையை கவனிக்க ஆரம்பித்துள்ளனர். அவ்வளவுதான்.

மதுரை நகரத்தின் காவல் முழுவதும் தாதனூர்க்காரர்களின் கையில் உள்ளது. காவல், திருட்டு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சனைகளையும் அவர்களே தீர்த்துக்கொள்கின்றனர். எனவே இது சம்பந்தபட்ட எந்தவொரு புகாரும் இதுவரை நம்முடைய போலிஸ் ஸ்டேசனுக்கு வரவில்லை. திருடு போன பொருட்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் ஆளே பொறுப்பு என்ற உத்திரவாதம் காவல்கூலியை முகம் சுளிக்காமல் கொடுக்க வைக்கிறது. அது மட்டுமல்ல, காவல் கூலியை கொடுக்காத இடத்தில் திருட்டு நடப்பதை எந்தவிதத்திலும் தடுக்க முடியாது. எனவே காவல் கூலி உத்திரவாதமாக அவர்களுக்கு வந்து சேர்கிறது. தாதனூர் காவலை மீறி நகரத்திற்குள்ளே வருகிற தைரியத்தை அநேகமாக சுற்றுவட்டாரத் திருடர்கள் இழந்துவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். அந்த அளவு அவர்களின் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே நகரத்தில் திருட்டு

என்பது பிரச்சனையாகவே இல்லை. மதுரைக்கு வரும் சாலைகளில் நடக்கும் வழிப்பறியும் கொள்ளையும்தான் மக்களுக்குப் பிரச்சனை.

மதுரை நகரத்தின் காவல் முழுவதும் தாதனூர்க்காரர்களின் கையில் உள்ளது மிகவும் ஆபத்தான நிலையுங் கூட. இந்நிலையில் மாற்றங்களைக் கொண்டுவருவது மிக்வும் அவசியம். கிராமக் காவல்காரர்கள் கிராமத்தைப் பற்றிய எல்லாத் தகவலையும் தெரிந்தவர்களாக இருப்பதால் அவர்களை தகுதி இழப்பு செய்ய வேண்டாம் என்று முந்தைய கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகம் கருதியது. அவர்களில் சிலரை கீழ் மட்டத் தலையாரியாக நியமித்தது. ஆனால் பிரிட்டிஷ் பேராசின் கீழ் நிர்வாகம் கொண்டுவரப்பட்டபின் அணுகுமுறை மாற்றப்பட்டுள்ளது. புதிய காவல்துறைச் சட்டங்கள் மற்றும் மறுசீரமைப்புச் சட்டங்கள் ஆகியவை கிராம காவல்முறை முழுவதையும் ஒழிக்கவேண்டுமென உறுதிப்படுத்துகிறது. அந்த வகையில் நமது மாவட்டத்தில் அதற்கான முயற்சியினை நாம் துவக்கவேண்டும். மதுரை நகரில் கடந்த சில ஆண்டுகளாக பணி அனுபவம் பெற்றுள்ள நமது போலிஸ் காரர்களின் வேலைத்திட்டம் மூலம் நாம் சில உறுதியான முடிவு களை எடுக்கவேண்டும். கிராம காவல்முறை சட்ட விரோதமானது. எனவே மக்கள் அதைப் பின்பற்றுவதைக் கைவிட்டு போலிஸ் ஸ்டேசனை நாடவேண்டுமென கலெக்டர் அறிவிக்கவேண்டும். இந்தக் காலத்தில் நிகழுகின்ற திருட்டைத் தடுக்க போலிசார் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்கள் போலிஸ் ஸ்டேசன் நோக்கி வரும் பழக்கம் உருவாவதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பின் சட்ட விரோதமாக்கப்பட்ட தொழிலைச் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஒருங்கே செய்தால் தாதனூர்க்காரர்களின் காவலில் இருந்து மதுரையை மீட்கலாம். அதற்கான விரிவான திட்டத்தை இக்கூட்டத்திற்குப் பின் அரசு அறிவிக்கும் என்று நம்புகிறேன்.

இது தவிர திருப்பரங்குன்றத்தில் 16 கிராமக் காவலர்களும், மாட்க்குளத்தில் 8 கிராமக் காவலர்களும் பொன்மேனியில் 6 கிராமக்காவலர்களும், வண்டியூரில் 6 கிராமக் காவலர்களும் உள்ளனர். இதில் திருப்பரங்குன்ற கிராமக் காவலர்களுக்கு கோயில் மானியம், மரியாதைகள் உண்டு. இவை தவிர நமது மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு என்பது நம் கையில் இல்லாமல் இருப்பது மேலூர் பகுதியில்தான். இன்று வரை நில அளவை முழுமையாக முடிக்க முடியாத பகுதியாக மேலூர் உள்ளது. அதேபோல் வரி வசூலையும் அங்கே பெரும்பாலான பகுதிகளில் நடத்த முடியவில்லை. நில அளவை, வரிவசூல், சட்டம் ஒழுங்கு என எந்தத் துறையானாலும் மேலூர் பகுதிக்குள் செயல்படமுடியாத நிலையே உள்ளது. இந்நிலையை மாற்ற நீண்டகாலப் பார்வையுடனான திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரை வடக்கு ஆவணி வீதியில் உள்ள சிறைச்சாலை, பாம்பனில் உள்ள சிறைச்சாலை இந்த இரண்டுதான் பெரிய சிறைச்சாலைகள். இவை தவிர சில உதிரிச் சிறைச்சாலைகள் மற்றும் லாக்அப்கள் உள்ளன. மதுரை சிறைச்சாலையிலும், பாம்பன் சிறைச்சாலையிலும் வேறு மாவட்டத்தைச் சார்ந்த கைதிகளும் அடைக்கப்பட்டுள்ளனர். பாம்பன் சிறைச்சாலையில் இறப்பு விகிதம் மிக

அதிகமாக இருக்கிறது. இது குறித்து நேரில் ஆய்வு செய்வதற்காக மாவட்ட எஸ்.பி.வில்சன் அங்கே சென்றுள்ளார். அவர் வந்தபின் தனது அறிக்கையினை கலெக்டருக்கு சமர்ப்பிப்பார்’ என்று கூறி தனது நீண்ட அறிக்கையினை டி.எஸ்.பி.பிரெவ்ஸ் முடித்தார்.

வருமானவரி சம்பந்தப்பட்ட அறிக்கையும், குடிநீர்த் திட்டம் சம்பந்தப்பட்ட அறிக்கையும் முன்வைக்கப்பட்டு அனைத்தின் மீதும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. கலெக்டர் வில்லியம் காரே கூர்ந்து கவனித்தபடியே இருந்தார். அவ்வப்பொழுது கண்ணாடி டம்பளரில் இருந்த தண்ணீரை எடுத்துக் குடிப்பதும், தனது செந்நிறப் பழுப்பேறிய தாடியை மெல்லத் தடவிக்கொள்வதும் மட்டுமே அவரது பிற செயல்களாக இருந்தன. அரண்மனையின் மாடத்திலிருந்த புறாக்களின் சிறகடிப்பு சிலமுறை அவரது தலையைத் திருப்பியது. மற்றபடி அறிக்கையை விட்டு அவரது கண்கள் அகலவில்லை.

கூட்டம் நண்பகலில் முடிவுக்கு வந்தது. கலெக்டர் முதலில் வெளியில் வந்தார். வரிசையில் நின்ற போலிசார் சல்யூட் அடித்து மரியாதை செய்தனர். ஏற்றுக்கொண்டவாறு அவர் சாரட்டில் ஏறி அமர்ந்தார். சுட்டெரிக்கும் வெயிலில் அரவது வண்டி பிளாக்பர்னின் விளக்குத் தூண் வழியாக கீழவெளி வீதிக்குத் திரும்பியது.

*

# 67

**க**லெக்டரின் ஆய்வுக்கூட்டம் முடிந்த பத்தாம் நாள் செவ்வாய்க் கிழமை அதிகாலையில் கீழச்சித்தரை வீதியின் வடக்கு முனையில் மங்கம்மா மாளிகைக்கு முன்னிருந்து தண்டோரா ஒலிக்க ஆரம்பித்தது. அந்த நிசப்தமான அதிகாலையில் கொஞ்சம் கொஞ்சமாக தண்டோரா சப்தத்தின் வேகம் அதிகமானது. கிழக்குக் கோபுரத்தில் இருந்த புறாக்கள் சடசடத்து கூட்டமாக வெளியேற ஆரம்பித்தன. புதுமண்டபத்திற்குள் தூக்கம் கலைந்தும் கலையாமலும் இருந்தவர்கள் வழக்கம்போல் ஏதோ ஒரு செய்தியைச் சொல்லப்போகிறார்கள் என்று தூணில் சாய்ந்தவாறு உட்கார்ந்து கேட்க ஆரம்பித்தனர். பேச்சொலிகள் குறைந்தன. தண்டோராக்காரன் கிழக்குக் கோபுரத்தின் கீழ் புதுமண்டபத்தைப் பார்த்த வாக்கில் நின்றுகொண்டு தனது அறிவிப்பை கத்திச்சொல்லத் தொடங்கினான்.

‘சாமியோ...வ்... கலெக்கட்டர் மகாதுரையின் சேதி. இதுநாள் வரை நகரத்துல காவக் காத்த தாதனூர்க்காரங்க வேலைய கச்சேரி எடுத்துக்கிட்டது. இனி காவல் வேல சட்டவிரோதம். ஆகவே மருதய இனிமே கச்சேரி போலீசு காவக் காப்பாங்க. அரசாங்க கசானாவில் இருந்து போலீசுக்கு சம்பளம் தருவதால காவக் கூலின்னு சனங்கள் யாருக்கும் எதுவும் கொடுக்கக்கூடாது. களவு போனா கச்சேரியில் வந்து பிராது கொடுக்கணும் சாமியோ...வ்’ என்று அறிவித்துவிட்டு தெற்குப் பக்கமாக தண்டோராவை அடித்துக்கொண்டே அவன் நடந்தான்.

வழக்கமாக சித்திரை வீதியில் நான்கு கோபுரத்தின் கீழ் நின்று அறிவித்துவிட்டு அதன் பின் ஆவணி மூலவீதி, மாசி வீதி, வெளி வீதி என எல்லா வீதிகளிலும் நான்கு திசையிலும் சுற்றி வந்து அறிவிப்பான். அதிகாலையில் கீழச்சித்திரை வீதியில் ஒலிக்கத் துவங்கும் தண்டோராவின் ஓசை மதுரை முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து வடக்கு வெளி வீதியின் வழியே வெளியேறி முற்றுப் பெறும். அன்று தெற்குச் சித்திரை வீதியில் வாசல் பெருக்கிக் கொண்டிருந்த பெண்கள் அவனது

அறிவிப்புக்காகக் காத்திருந்தனர். வறட்சி யாருடைய முகத்திலும் லட்சணத்தை விட்டு விலக்கவில்லை. எல்லோர் முகத்திலும் ஒருவித எரிச்சலும் கடுமையும் இருந்தது. சற்று முன் வரை பெருக்குமார்கள் மண்ணை இழுக்கும் ஓசையே தெரு முழுவதும் நிரம்பி இருந்தது. ஆனால் அவன் முக்கு திரும்பியுடன் பெரும் சப்தமென தண்டோராவின் ஓசை தெரு முழுவதையும் நிரப்பியது. தண்டோராவை அடித்தபடியே நடந்து வந்த அவன் தனக்கான இடத்திற்கு வந்தவுடன் தண்டோராவை சுழித்து ஒரு அடி அடித்து நிறுத்திவிட்டு அறிவிப்பை துவக்குகிறான். அதுவரை பலர் பொறுமையின்றி அவனைப் பின் தொடர்ந்து வருகின்றனர். உள் சந்துகளில் இருந்தவர்கள் பெரிய வீதிகளில் எட்டிப்பார்த்தபடி கேட்டுக்கொண்டிருந்தனர். சேதியை வால் போல் கட்டிக்கொண்டு தெருத்தெருவாக இழுத்து வரும் அவனைப் பார்க்க சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக ஓடிவருகின்றனர். அந்த வால் கண்டு திகைத்தபடி நாய்கள் விட்டு விட்டுக்குரைக்கின்றன.

நேரம் ஆக ஆக தண்டோரக்காரனைச் சுற்றி கூட்டம் அதிகமாக ஆரம்பித்தது. ஒவ்வொரு முறையும் அறிவிப்பை முடித்துவிட்டு மீண்டும் தண்டோராவை அடிக்க ஆரம்பிக்கும் அந்த முதல் அடியிலேயே, தெரு முழுவதும் இருக்கும் மௌனத்தை உடைத்தபடி புறப்படுகிறான். எல்லோரின் கவனிப்பிற்கும் நடுவில் நடந்து வரும் பெருமிதம் அவனுக்கு அளவற்ற சக்தியைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. தண்டோராவும் அவனும் மாறி மாறிப் பெருங்குரலெடுத்துக் கத்திக்கொண்டே வருகின்றனர். எட்டுக் கால் பூச்சி தன் எச்சில் கொண்டு பின்னும் வலைபோல, இவன் தனது வார்தைகளால் நகர் முழுவதும் ஒரு பெரும் வலையைப் பின்னுகிறான். இரவு மறைந்த பின் அறிவிக்கப்படும் இரவைப் பற்றிய இந்தச் செய்தியை பகல் நின்று கேட்க ஆரம்பித்தது. வெயில ஏற ஏற தண்டோராக்காரனின் வேகம் கூடியது. மண்டபங்கள், கோயில் திண்ணைகள், கடைகள், வீட்டு வாசல்கள் என எல்லா இடங்களிலும் தண்டோரா செய்தியே பேசுபொருளாக இருந்தது. அவன் உச்சரித்த வார்த்தைகளை மதுரைவாசிகள் மென்று துப்பினர்.

‘குதுர போலீசு துப்பாக்கி போலீசுன்னு எந்தெந்தப் படையோ வைச்சிருக்கிற வெள்ளக்காரன் இன்ன வரை வழிப்பறி கொள்ளையவும், தீவெட்டிக் கொள்ளயவும் நிப்பாட்ட முடியல. தினோம் எத்தனையோ வழிப்பறி நடக்குது. ஆனா இத்தனை வருசம் ஆகி ரெண்டு பேரைத்தான் புடிச்சிருக்கான். அவனா வந்து களவை நிறுத்தப் போறான்?’

தெற்கு ஆவணி மூலவீதியும், மேல ஆவணி மூலவீதியும் சந்திக்கும் முக்கில் புனித ஜார்ஜ் தேவாலயத்தின் வாசலருகில் நின்று தண்டோரா அடித்துக் கொண்டிருந்தான். தேவாலயத்திற்குள் இருந்தவர்களும், எதிரில் மேங்காட்டுப் பொட்டலுக்குள் அங்குமிங்குமாக மரத்தடியில் இருந்தவர்களும் எழுந்து அவனை நோக்கியே வந்தனர்.

‘ஒழுங்கா மருவாதியா காவல் நடக்கிறது இந்த கலைட்டருக்கு பிடிக்கல போலிருக்கு. அதான அப்படி புத்தி போகுது. ஐயரும் நாய்க்கரும் பிள்ளையும் காவ பாத்தா வௌங்குமா? அவங்ய களவு பிடிக்கப்போறாய்ங்கன்னு சொன்னா காக்கா குருவியாவது நம்புமா!... ஆனா இந்த கலைட்டரு நம்புறானெ! அதப் போயி என்னத்த சொல்ல!’

மேல மாசி வீதியின் தெற்கு கடைசியில் இருந்து அவன் வந்து கொண்டிருந்தான். தண்டோரா சத்தம் ஆட்களைக் கூட்டிக்கொண்டே வந்தது. காடெல்லாம் கட்டாந் தரிசாகிப் போனதால் மாடுகள் கொட்டத்தில் கட்டியே கிடந்தன. பண்ணைக்கு இருந்தவர்கள் சாணி அள்ளிகொட்டத்தை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் மட்டும் சாணிக்கையோடு வெளியில் வந்து எட்டிப் பார்த்தனர். கண்ணாடிக்காரத் தெருவுக்கும் காக்கா தோப்பு சந்துக்கும் நடுவில் நின்றுகொண்டு, அறிவிப்பைத் துவக்கினான்.

‘இருபது வருசத்துக்கு முன்ன வெளிவீதிகள்ல நடந்தது போல இப்ப மதுர பூராவும் நடக்கிறதுக்கு யாரோ ஒரு முட்டாப்பய யோசன சொல்லியிருக்கான். அது நம்பி இந்த கலெக்டரு நடக்கிறான்...மொட்டக் கோபுரத்தில கட்டியிருக்கிற முனி மாதிரிதான் களவு. கழட்டி விட்டுட்டா அப்புறம் மதுர தாங்காது...’

வடக்கு மாசி வீதி முழுவதும் இரண்டு இடத்தில் நின்று அறிவித்து விட்டு அப்படியே கிழக்குப் பக்கமாகத் திரும்பி கீழ வடம் போக்கித் தெரு, கீழ நாப்பாளைய சந்து, வடுக தட்டார சந்து என் வரிசையாகக் கடந்து அம்மன் சந்நிதி முக்கிற்கு வந்தான். உள்சந்துகளில் வாசல் தாண்டி வரவேண்டிய தேவை எதுவும் இப்பொழுது இல்லை. எந்த வாசலிலும் படிக்கட்டுக்களைத் தாண்டி கோலங்கள் வெளி வரவில்லை. எனவே நேராக நடந்து கடைவீதிக்கு வந்தான். கருத்த உடல் முழுவதும் வேர்வை உருகி ஓடிக்கொண்டிருந்தது. தெற்குப் பக்கமாக மீனாட்சியின் தேருக்கு அருகில் விழுந்து கிடந்த நிழலில் நின்றவாறு அறிவிக்கலானான்.

‘இந்த கலக்டரு என்னதான் நெனுச்சிருக்கான்... கச்சேரி போலீசெல்லாம் காவக்காரனாயிருவானா? அப்படியே ஆனாலும் போலிசு எப்படி ராத்திரில வேல பார்ப்பான்? அந்த ஆந்த கண்ணுக்கு பகல்ல ஏது வெளிச்சம்? காக்கா கண்ணுக்கு இருட்டுல ஏது வெளிச்சம்? வெள்ளக்காரனுக்கு இந்த பஞ்ச காலத்துல புத்தி பேதலிச்சு போச்சு.’

கட்டிடங்கள், மண்டபங்கள், கோயில்கள், வீதிகள், வீடுகள் என எல்லாவற்றின் இருப்போடும், பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட ஒரு செய்தியை எல்லாத் தெருக்களிலும் வீசி எறிந்துவிட்டு அவன் போய்க்கொண்டிருந்தான். சுவர்களில் மோதிச் செய்திகள் திரும்பின. இது பகலுக்கான செய்தி; இரவுக்கானதல்ல என்பது தெருக்களுக்குத் தெரியும். இரவின் செய்தி வேறு பாஷையில் சொல்லப்பட வேண்டியது. இரவை ஒளியின் வழியில் பார்க்க முடியாது. பயத்தின் வழியிலும் பார்க்க முடியாது. ஆனால் கச்சேரி போலிசாருக்கு இந்த இரண்டைத் தவிர மூன்றாவது வழி ஒன்று இருப்பதே தெரியாது. அதனால்தான் புது மண்டபம் துவங்கி பெருமாள் கோயில் தெப்பக்குளம் வரை எல்லா இடங்களிலும் இந்தச் செய்தி நகைப்பிற்குரிய ஒன்றாகவே கருதப்பட்டது. காவல்காரன் இல்லாமல் காவல் காக்கப் போகிறோம் என்று சொல்லுவதில் உள்ள பைத்தியக்காரத்தனத்தைப் பற்றி பேசிச் சிரிக்காதவர்கள் யாருமில்லை. இந்தக் கச்சேரி கட்டிடத்திற்குள் இருக்கும் போலீசார் இருளையும் களவையும் கட்டுப்படுத்த முடியுமென நம்ப மதுரைவாசிகள் ஏமாளிகளல்ல.

பல்லாங்குழியின் அடுத்தடுத்த பள்ளங்களில் காய்களைப் போடுவதைப் போல சொற்களை எடுத்து ஒவ்வொரு தெருவுக்குள்ளும் போட்டுவிட்டு

அவன் போய்விட்டான். தண்டோராக்காரன் வீசி எறிந்து விட்டுப்போன சொற்களை மதுரை உருட்டி விளையாடியபடி இருந்தது. காய்கள் உருண்டு உருண்டு வசைகளாக மாறின. உள்சந்துகளிலிருந்து புறப்பட்ட வசைகள் பெரிய வீதிகளில் பெருக்கெடுத்து மாசி வீதியின் வழியாக வந்து கச்சேரியை நோக்கிக் குவிந்தபடி இருந்தன.

போலீஸ்காரர்கள் அன்று மாலை வீடுகளில் இருந்து புறப்பட்டு கச்சேரிக்கு வருவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது. அவரவர்களின் வீடுகளில் இருந்தே துவங்கிய கேலிப் பேச்சு கச்சேரி வரைவிடுவதாக இல்லை. எல்லோரும் வெட்கப்பட்டு குறுகிப் போய்தான் கச்சேரிக்குள் நுழைந்தனர். கலெக்டர் இப்படியொரு முடிவெடுத்து அறிவிப்பார் என யாரும் எதிர்பார்க் கவில்லை. அது மட்டுமல்ல; இருளின் உலகில் போலீசுக்கு என்ன வேலை என்பது போலிசுக்கே புரியவுமில்லை. டி.எஸ்.பி.பிரெவ்ஸ் அன்று கலெக்டர் கூட்டிய கூட்டத்தில் போய் என்ன பேசித் தொலைத்தார்? நாம் தயாரித்துக் கொடுத்த அறிக்கையில் இப்படி எந்த யோசனையையும் சொல்லவில்லையே; பின் ஏன் இப்படி ஒரு விபரீத முடிவை கலெக்டர் எடுத்தார் என்று தலைமை ஏட்டுகள் மூவரும் குழம்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

‘கொடி காட்டி நிறுத்தவும், அனுப்பவும் ரயில் வண்டி போல அதிர்ந்துகொண்டு வருவதல்ல களவு. பூனையின் பாதத்தைப் போல ஓசையை விழுங்கிவிட்டுத்தான் அது வருகிறது. அதுவும் கூட வந்து விட்டுப் போன பிறகுதான் தெரிய வருகிறது. இதில் நீயும் நானும் யாருக்கு சாட்சியாகப் போகிறோம். இரவுக்கா! களவுக்கா! இரண்டையும் பற்றிப் புரிந்துக்கொள்ளாத கலெக்டர் வில்லியம் காரேவுக்கா...’ என்று வீராச்சாமியின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார் சேஷகிரிராவ். அவர் இருளை அறிந்தவர்; அறியமுடியாத இடத்தில் அது இருக்கிறது என்றும்.

*

இருளுக்குள் நுழைந்து களவு வரும். இருளென்னும் குளத்தில் மூழ்கி விடுபவனுக்கு ஓசை கிடையாது. இருளுக்குள் மூழ்கத்தெரிந்த ஒருவனை இருள் கைவிடுவதும் இல்லை. ஆயிரம் திரைச்சீலைகளைக் கொண்டு அவனது கால் தடத்தை மறைத்து அது பாதுகாக்கிறது. அவன் போகிற வழிகளிலெல்லாம் நீருற்றுப் போல இருள் பீறிட்டு மாற்றானுக்குத் தெரியாமல் வழிகளை அடைக்கிறது.

அது ஒரு மாயக் கண்ணாடி. அந்தி ஆனதும் எல்லாம் அதற்குள் போய் மறைந்து கொள்கிறது. அதிகாலை ஆனதும் எல்லாவற்றிற்குள்ளும் போய் அது மறைந்து கொள்கிறது. வெயிலில் இருளின் கருமை உருகி ஓடுகிறது. தாவரத்தின் பச்சையம், கோபுரத்தின் சிற்பம், கட்டிடத்தின் கூரை என எல்லாம் உருகி ஓடிய கருமையால் நிரம்பிக் கிடக்கிறது. உருகும் ஓசையும் பெருக்கெடுக்கும் ஓசையும் வெளியில் கேட்காதபடி இருள் தனது வித்தையை நடத்திக்கொண்டிருக்கிறது. அங்கே அமைதியின் வழியில்தான் ஓசைகள் வெளியாகின்றன கருமையின் வெளிச்சத்தின்தான் வண்ணங்கள் தெரிகின்றன. உடலுக்குள் ஓடும் ரத்த நாளங்களைப் போல மௌன நதி இருளெங்கும் ஓடிக்

கொண்டேயிருக்கிறது. விழிப்பு இல்லாத பெரும் உறக்கமென்றோ, இமை மூடாத பெரும் விழிப்பு என்றோ இது கருதப்படுகிறது. பெரும் பள்ளம் இருக்குமோ என அஞ்சி அடுத்த அடி எடுத்து வைக்காமல் சிலர் இருக்கிறார்கள். முட்கள் இருக்குமோ என நினைத்து நிற்கிறார்கள் சிலர். விஷப்பூச்சிகள் கிடக்குமோ எனக் கருதி காலெடுத்து வைக்காமல் இருக்கிறார்கள். இருளுக்குள் கள்வன் இருப்பானோ என நடுங்கி அப்படியே காத்திருக்கின்றனர். இருள் தனது வெளியெங்கும் பார்வையற்ற மனிதர்களே இருப்பது கண்டு அளவற்ற சோகத்துடன் இருக்கிறது. பேரழகு மிக்கதனது பூமியில் குருடர்கள் மட்டுமே வாழ நேர்ந்த சாபத்தை எண்ணி தன்னைத்தானே வதைத்துக்கொள்கிறது. அதன் சோகமே மௌனமாக உருவெடுத்து பிரமாண்டமாய் விரிந்து கிடக்கிறது. வழியாத கண்ணீர்த் துளியென அது நகரத்தின் மேல் ததும்பி நிற்கிறது.

அமைதியும் கருமையும் இரு சரடெனக் கொண்டு பின்னப்பட்ட நூற்றுக்கணக்கான ஏணிகள் இருளெங்கும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. கள்ளனும் காவலனும் அதன் வழியே ஏறி இறங்கியபடி இருக்கின்றனர். பூனைகளும் நாய்களும் கூட ஏறி இறங்கியபடிதான் இருக்கின்றன. ஆந்தைகள் மட்டுமே தனது கால் நகங்களைக் கொண்டு ஏணிகளை அங்கும் இங்குமாக ஆட்டிக்கொண்டிருக்கின்றன. இந்த ஏணியாட்டத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் பாம்பைப் போல சட்டையை உரித்துக் கொண்டு தெருக்களின் உயிர் வெளியேறி விடுகிறது. அவை ஒன்றோடோன்று பேசிக்கொண்டே ஊரைக் கடந்து பெரும் மரங்களில் ஏறி கிளைகளின் மேல் சுருண்டு படுத்துக் கொள்கின்றன. இரவில் தரையில் கிடப்பது தெருக்கள் உரித்துப் போட்ட சட்டைகள்தான். இரவின் தெருக்கள் குறுக்கும் நெடுக்குமான நூல்ஏணி போல மேலே தொங்கிக்கொண்டிருக்கின்றன. அதன் வழியே இராக்காலவாசிகள் போகவும் வரவுமாக இருக்கின்றனர்.

அன்றைக்கும் வழக்கம் போல் இரவு வந்தது. அதிகாலையில் தண்டோரக்காரன் செய்துவிட்டுப் போன அறிவிப்பு இரவு வரை சுற்றிச் சுற்றி வந்தது. பகலின் ஒளி மறைந்தாலும் உஷ்ணமும் வெப்பக்காற்றும் வீசியபடிதான் இருக்கின்றன. புறாக்கள் கோபுரங்களில் அடைந்துவிட்டன. மேங்காட்டுப் பொட்டலில் கீச்சொலிகள் நின்றுவிட்டன. நகரம் இருளுக்குள் மூழ்க ஆரம்பித்தது. மனிதர்கள் உறக்கத்தின் படிக்கட்டுகளில் இறங்கியபடி இருந்தனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக நாய்கள் குரைத்தன. இருளுக்குள் கச்சேரி சத்தமில்லாமல் உறங்கியது. ஒரு கொடியைப் போல இருள் மதுரையைச் சூழ்ந்து படர்ந்தது. கருநீல மேறிய அதன் இலைகள் நகரத்தை மூடிக்கொண்டன.

*

**மு**ன்னிரவு சூல்கொள்ள ஆரம்பிக்கிற பொழுது தாதனூர்க் காரர்கள் மதுரையை நோக்கி வரத்துவங்கினர். அலுங்கின் ஓடு போல செதில் செதிலாய் கிடந்த மாடக்குளம் கண்மாய் வழியாக அவர்கள் நடந்து வந்தார்கள். கருத்தாண்டியும் ஆமையனும் முன்னால் சென்றபடி இருந்தனர். கொஞ்சம் இடைவெளி விட்டு பேயாண்டி, பொன்னாண்டி, சோங்கு, விருமாண்டி ஆகிய நால்வரும் நடந்து வந்தனர். அவர்களுக்குப் பின்னால் பத்துக்கும் மேற்பட்டவர்கள் கூட்டமாக வந்துகொண்டிருந்தனர்.

‘வண்டி காவலுக்கு தஞ்சாவூர் பக்கம் போனவங்கெ எப்பப்பா வருவாங்கெ?’ என்று பின்னால் இருந்து ஒரு குரல் வந்தது. ‘வந்துருவாங்கெப்போ...வ்’ என்று பதிலளித்தான் பேயாண்டி. ‘வேறேதுவும் தாக்கல் வந்துச்சா!’ என்று ஒரு குரல் கேட்டது. ‘அந்த செட்டியாரு தாக்கல் ஒண்ணுமில்லேன்னு தான் சொல்றாரு’ என்றான் பேயாண்டி. கண்மாய்க் கரையின் மேடேறி சில காரை வீடுகளும், சிறு சிறு குடிசைகளுமாய் நிரம்பிக் கிடந்த மாடக்குளம் கிராமத்தை வழக்கம் போல் நாய்களின் குரைப்பொலிக்கு ஊடாகக் கடந்து அவர்கள் மதுரைக்குள் நுழைந்தனர்.

நகர நிர்வாகம் இப்பொழுதெல்லாம் எல்லாத் தெரு விளக்குகளிலும் எண்ணெய் ஊற்றி எரிப்பதில்லை. கடும் எண்ணெய்ப் பற்றாக்குறை காரணமாக முக்கியமான சந்திப்புகளில் இருக்கின்ற விளக்குகளை மட்டுமே ஏற்றி வைத்தது. அதிலும் முழு எண்ணெய் ஊற்றி விடியும் வரை எரிய விடுவதில்லை. நள்ளிரவிலேயே பாதி விளக்குகளின் திரிகள் கருகி விடுகின்றன. ஒன்றிரண்டுதான் நள்ளிரவைக் கடந்தும் எரிகின்றன. அதிகாலை வரை எந்த விளக்கும் எரிவதில்லை. அணைந்த விளக்கின் கம்பங்கள் கருகிய திரியைப்போலவே நிமிர்ந்து நிற்கின்றன. கரும்புகை ஏறிய அதன் கண்ணாடிக் கூண்டுகள் உள்ளுக்குள் இருள் எரிவதை பிரகாசமாய் காட்டிக்கொண்டிருந்தன. விளக்கு வெளிச்சத்தை அணிகலன் களாகக் சூடிக்கொண்டிருந்த கூடல் மாநகரின் வீதிகள் இருளுக்குள்ளும் வெறுமைக்குள்ளும் மூழ்கிக் கிடந்தன. தொடர்ந்த வறட்சியால் மாநகர் ஒளியிழந்து கிடந்தது. கோயில்களில் கொண்டாட்டங்களும் திருவிழாக்களும் குடிநீர்க் கிணறு போல வற்றிக் கொண்டிருந்தன. உற்சவர்கள் தூக்கி வரப்படும் சப்பரங்களில் மலரலங்காரங்கள் எதுவும் இல்லை. இரண்டொரு விளக்குகளே மொத்தக் கோயிலுக்கும் வெளிச்சம் என்று ஆனது. திருடர்களைப் போல பெரும்பாலும் தூண்களுக்குப் பின்னால் விளக்கொளிகள் மறைந்திருந்தன. நகர வீதிகள் தெப்பக்குளங்களைப் போலவே கும்மிருட்டில் கிடந்தன. நாய்களின் குரைப்பொலியும் மாடுகளின் மணியோசையும்தான் உயிரியக்கங்களின் சாட்சியாக இரவை வலம் வந்தன.

கருத்தாண்டியும் ஆமையனும் மேலமாசி வீதி நெடுகப் பேசியவாறே நடந்து வந்துகொண்டிருந்தனர். காக்கா தோப்புத் தெரு விரிவில் தான் ஏட்டு விராச்சாமி நாயுடுவின் வீடு இருந்தது. புழுக்கம் தாங்காமல் தூக்கமின்றி இருந்த அவர், திண்ணையில் அமர்ந்து தெருவையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். வானத்தில் மெலிந்திருந்த நிலவில் இருந்து ரகசியம் போல இருள் கசிந்துகொண்டிருந்தது. அரச இலையின் அடிப்பகுதியில் இருக்கும் சாம்பல் கலந்த வெண்மை தெரு முழுவதும் இருந்தது. தூரத்தில் கேட்ட பேச்சுக் குரலை வைத்தே வருவது யாரென்று அறிந்துகொண்டார் வீராச்சாமி நாயுடு.

‘வாப்பா கருத்தாண்டி....’ என்ற அவரது குரலைக் கேட்டவுடன் கருத்தாண்டியும் ஆமையனும் அவரைப் பார்த்துப் பேசியவாறு திண்ணையில் வந்து அமர்ந்தார்கள். கலெக்டர் எடுத்திருக்கும் முடிவு, இன்று தண்டோராக்காரன் செய்த அறிவிப்பு எல்லாம் இவர்களுக்கு தெரிந்திருக்குமா இல்லையா என்று கேள்விகள் வீராச்சாமி நாயுடுவின் மனத்திற்குள் ஓடிக்கொண்டேயிருந்தன. அவர்கள் வழக்கம் போலவே பேசினார்கள். வறட்சியைப்பற்றி, பயிர்கள் கருகிப் போனது பற்றி,

சம்சாரித்தனம் செத்து மடிவது பற்றி, விளைச்சலில் கூலியை நம்பி இருந்த காவல்காரர்கள் நிர்கதியாய் நிற்பது பற்றி, பல கிராமங்களில் இருந்து காவல்காரர்கள் வெளியேறிக் கொண்டிருப்பது பற்றி பேசிக்கொண்டே இருந்தனர். ஆனால் அவரால் எதையும் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. 'என்னப்பா...கிராமத்துப் பக்கமெல்லாம் நிலம எப்படி இருக்கு?' என்று முதலில் கேள்வி கேட்டதோடு சரி. கருத்தாண்டியும் ஆமையனும் சொன்ன எந்தப் பதிலையும் அவர்கேட்கவில்லை.

தண்டோரக்காரன் சென்றவுடன் கச்சேரியில் வந்து விழுந்த சொற்கள்தான் அவருக்கு ஞாபகம் வந்துகொண்டேயிருந்தது. 'புழுக்கம் ஜாஸ்தி. வேர்த்துக்கிட்டே இருக்கு...' என்று சொல்லி சமாளித்தபடியே இருந்தார். இருளின் ஏதோ ஒரு இடத்தில் இருந்து கருத்தாண்டி பேசிக்கொண்டிருந்தான். பேச்சுகள் உருவமற்று மறைவதைப் போல அவர் நினைவில் இருந்தும் மறைந்து கொண்டேயிருந்தது. இருளும் காவல்காரனும் திண்ணை முழுவதும், தெரு முழுவதும் அடைத்திருந்தனர். அவர்களின் மொத்தப் பிடிக்குள் எல்லாம் இருந்ததை அவர் உணர்ந்தவாறே இருந்தார். பேசிக் கொண்டேயிருந்த கருத்தாண்டி 'குடிக்கத் தண்ணீ இருக்கா?' என்று கேட்டான். 'அந்தா மூலயில பித்தள செம்புல இருக்கு' என்று நாயுடு பதில் சொன்னார். எட்டி செம்பை எடுத்து தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் செம்பை வைத்தான். கொஞ்ச நேரத்தில் வீராச்சாமி நாயுடுவும் எட்டி செம்பை எடுத்து ஒரு மடக்கு குடித்துவிட்டு வைத்தார். வைத்தகணக்கில் ஏதோ ஒரு வித்தியாசத்தை அவர் உணர்ந்தார். ஆனால் சட்டென அது பிடிபடவில்லை. அதையே யோசித்தபடி பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குப்பின் ஆமையன் தண்ணீர் குடிக்க எட்டி செம்பை எடுத்தபொழுது உன்னிப்பாய் கவனித்த வீராச்சாமி நாயுடுவுக்கு விசயம் பிடிபட்டுவிட்டது. பெரும் பட்டியக்கல் பதிக்கப்பட்ட இந்தத் திண்ணையின் ஓரத்தில் இருந்த பித்தளைச் செம்பை தண்ணீர் குடிக்க நாயுடு எடுத்தபொழுது, பட்டியக்கல்லில் இருந்த சிறுமண்துகள்கள், பித்தளைசெம்பின் அடிப்பகுதியை உரச 'சிர்...' என்ற சத்தத்துடன் செம்பு அவர் கைக்கு வந்தது. ஆனால் கருத்தாண்டியும் ஆமையனும் தண்ணீர் குடிக்கசெம்பை எட்டி எடுத்தபொழுது காற்றுக்குள் இருந்து செம்பை எடுப்பதைப் போல சிறு ஓசையுமின்றி எடுத்துத் தண்ணீர் குடித்துவிட்டு, அதே இடத்தில் செம்பை வைத்தனர். இருளுக்கும் பொருளுக்கும் நடுவில் ஓசையின்றி இருக்கும் உலகில் அவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

தண்ணீர் குடித்த கையோடு திண்ணையை விட்டு இறங்கி, போய் வருவதாகச்சொல்லி, அவர்கள் புறப்பட்டனர். 'உன் சம்சாரத்த காலையில வந்து காவக்கூலியை வாங்கிட்டுப் போகச் சொல்லு' என்று சொல்லியவாறு வீராச்சாமி நாயுடுவும் திண்ணையில் இருந்து எழுந்து வீட்டுக்குள் போகத் தயாரானார். மூலையில் இருந்து பித்தளைச் செம்பை ஓசையின்றி எடுக்க மனத்திற்குள் நினைத்துக்கொண்டு அதன் மேல்வளையத்தை மட்டும் பிடித்து 'லவக்'கென்று தூக்கினார். உள்ளே இருந்த தண்ணீர் அலம்பவும், கீழே சிறுதுகள்கள் உரசவும், சத்தம் திண்ணை முழுவதும் நிரம்பியது. திரும்பிப் பார்த்தான் கருத்தாண்டி. பெரும் சத்தத்தோடு கதவைத் திறந்து உள்ளே போய் இழுத்து மூடினார்.

நிலவின் ஒளியேறிக் கிடந்ததால் நடுச்சாமத்திற்குப் பின் இருள் கலக்கம் கொடுத்திருந்தது. காவலுக்குப் போனவர்கள் ராமாயணச் சாவடியை நோக்கி வந்தபடி இருந்தனர். கருத்தாண்டிதான் முதலிலே வந்தான். நேரம் ஆக ஆக ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள். கோனார் கூட்டம் சாவடியில் படுத்துக் கிடந்தது. காவல்காரர்களும் வந்து ஆங்காங்கே தலை சாய்த்தனர். வெளிவீதி காவல் பார்க்கிற மாயாண்டிப் பெருசுவின் மகன் ஒச்சு வெகு நேரங்கழித்து வந்தான். அதன் பிறகு வந்தான் பொன்னாண்டி.

‘இனிமே கச்சேரி போலிசே காவ காக்கணும், நாம காவ காக்கக் கூடாதுன்னு வெள்ளக்காரத் தொர சொல்லிட்டானாம். எங்களுக்கும் அதுக்கும் சம்பந்தமில்ல. அவரே முடிவெடுத்து, அவரே தண்டோரா போடச் சொல்லிட்டாரு’ என்று கோபால் ஐயர் சொன்னதாக பொன்னாண்டி பேயாண்டியிடம் சொன்னான். அதை ஒரு செய்தியாக காதில் வாங்க யாரும் தயாராக இல்லை. பகல் முழுவதையும் பரபரப்பாக்கிய அந்தச் செய்தி இரவில் ஒரு விசயமாகவே யாருக்கும் படவில்லை. காவக்காரர்கள் வந்துகொண்டும் போய்கொண்டும் இருந்தார்கள். வழக்கமான இரவைப் போலவே அந்த இரவும் முடியும் முன்பு சாவடியை விட்டு தாதனூரை நோக்கி அவர்கள் புறப்பட்டனர். கோழி தனது குஞ்சுகளை அழைத்துச் செல்வதைப் போல ஒவ்வொரு தெருக்களிலும் இருந்த காவல்காரனை அழைத்துக்கொண்டு இரவு வெளியேறியது.

*

**மா**ட்டுப்பஞ்சம் உச்சத்திற்கு வந்து ஆடுமாடுகள் எல்லாம் பெரும் எண்ணிக்கையில் செத்து மடிந்த பின்புதான் மனிதப் பஞ்சம் உச்சநிலையைத் தொட ஆரம்பிக்கிறது. இப்பொழுது ஆடுமாடுகள் தீவனமின்றிச் செத்து மடிந்துகொண்டிருக்கின்றன. தாமரைக்குழி கிழங்குகள் கூட தோண்டி எடுக்கப்பட்டுவிட்ட பூமியில் அவைகளுக்கு மிஞ்ச எதுவுமில்லை. விவசாயிகள் அழக் கண்ணீரின்றி உழவுமாடுகள் சாவதைப்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆடுமாடுகள் சாகாத நாட்களே இல்லை. கழுதைகள் எப்படி ஒழிந்தன என்று தெரியவில்லை. பஞ்சம் புதிய புதிய நோய்களை விளையவைத்தது. இரண்டாவது ஆண்டும் எந்த வெள்ளாமையும் இல்லை என்ற நிலை உருவானபின் கிராமத்திலிருந்து வெளியேறுவதைத் தவிர காவக்காரனுக்கு வேறு வழியில்லை. விளைச்சலில் பங்குதான் அவனது முழு வருமானமும். அது முற்றாக நின்றபின், அவன் வாழ அதற்கு எதிரானதாக சமூகம் நினைக்கிற தொழிலுக்கு மாறுகிறான். காவலும் களவும் மிக நெருக்கமான இணைகோடுகள். எந்த நேரத்திலும் ஒன்றை இன்னொன்றாக மாற்றமுடியும். தான் காவல் காத்த கிராமத்திலே எந்த காவல்காரனும் களவில் ஈடுபடமாட்டான். எனவே காவல்காரனாய் பிழைக்க வழியின்றிப் போனால் அவன் முதலிலேயே செய்வது தான் காவல் காத்த கிராமத்திலிருந்து வெளியேறுவதைதான். கிராமக் காவலர்கள் தங்கள் கிராமங்களைவிட்டு வெளியேறியபடி இருந்தனர். காவல்காரன் வெளியேறினால் அடுத்து என்ன நடக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் கடுமையான வறட்சியால் தோட்டந் தொரவுகளில் பாதுகாக்க எதுவுமில்லை என்று ஆனது. வீடுகளில் உள்ளதைப் பாதுகாக்க உள்ளவர்களே போதும் என்பதால் காவல்காரர்கள்

வெளியேறுவதைப் பற்றி பல கிராமங்களில் ஏன் என்று கேட்க யாரும் தயாராகவில்லை. ஜமீன்களும், பெரிய மிட்டாக்களும் இருந்த கிராமங்களில் மட்டுமே காவல்காரர்களுக்கும் கூலி ஏற்பாடு செய்யப்பட்டு தங்கவைக்கப்பட்டனர். ஆனால், அந்த மாதிரியான கிராமங்கள் மிகச் சொற்பமே.

கணவாய் தாண்டி மேல்நாட்டுக்குப் போன காவல்காரர்கள் எல்லாம் கிழக்குச்சீமைக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்; இங்குள்ள கிராமங்களை காவல் காத்தவர்களும் தான். வறட்சி நாளுக்கு நாள் அதிகமாக பாதசாரிகள் மீதான கொள்ளையர்களின் தாக்குதல்களும் அதிகரித்தது. புதிய கொள்ளையர்கள் ஒவ்வொரு நாளும் கிளம்பியபடி இருந்தனர். பிழைக்க வேறு வழியே இல்லை என்ற நிலை ஏற்பட்டபின், அனைத்து வழிகளும் பிழைப்பதற்கான வழிகளாக மாறிவிடுகின்றது. வழியெங்கும் வேறு வழியற்றவர்கள் காத்திருந்தனர். சூறையாடல்களும் அபகரிப்புகளும் தாக்குதல்களும் அதற்கே உரிய நியதிப்படி நடந்தன.

நகர குடிக்காவல்களைத் தவிர, கிராமக் காவலர்களில் கணிசமானவர்கள் வழிப்பறிக்கு மாறினர். குழுவாகச் சேர்ந்து கொள்ளையடிக்கச் சென்றனர். ஜமீன் பங்களாக்களிலும், நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் வீடுகளிலும், மடங்களின் சேமிப்புக் கிடங்குகளிலும் கொள்ளைகள் குறைவின்றி நடந்தன. தனித்த வண்டியில் போவது பகலிலும் இல்லாமல் போனது. பெரும் கூட்டமாகத்தான் வண்டிகளின் சக்கரங்கள் உருண்டன. வண்டிகளுக்கு முன்னும் பின்னும் ஆயுதங்களோடு மக்கள் இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருந்தனர்.

வழிப்பறிக் கொள்ளையர்களையும், தீவட்டிக் கொள்ளையர் களையும் பிடிக்க அமைக்கப்பட்ட குதிரைப்படையால் நிலைமையைச் சிறிதும் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. ப்ரெவ்ஸ் தலைமையிலான குதிரைப்படை சில நாட்கள் நத்தம் வரையிலும்கூட போய் திரும்பி வந்தது. ஓம்பெர்ட் தலைமையிலான குதிரைப்படை திருமங்கலத்தைத் தாண்டியும் சென்று திரும்பியது. ஆனால் அவர்கள் வந்து சேருவதற்கு சிறிது முன்பும், கடந்துசென்ற கொஞ்சநேரத்திலும் கொள்ளைகள் நடந்துகொண்டே இருந்தன. அவர்கள் யாரைக் கடந்து செல்கின்றனர் பாதசாரிகளையா, கொள்ளையர்களையா என்கிற வித்தியாசம் தெரியாத அளவு இரு சாராரும் கூட்டம் கூட்டமாக நடந்தும் வண்டிகளிலும் போய்க் கொண்டிருந்தனர். குதிரைப்படை பாதையின் ஓரத்தில் இறங்கி இருட்டின் முதல் படி வரை விரட்டிப்போய் திரும்பி பாதையில் வந்து ஏறிக்கொண்டது. கொள்ளையர்களோ வெளியெங்கும் ஓடி மறைந்தனர். சிலர் துப்பாக்கி குண்டடி பட்டு செத்து விழுந்தனர். எந்து மரணமும் எதையும் நிறுத்திவிடவில்லை. செத்தவனைக் கடந்து வண்டிச்சக்கரங்கள் உருண்டபடி இருந்தன. அவர்களைத் தொடர்ந்து கொள்ளையர்களும் போய்க்கொண்டு தானிருந்தனர். வாழ்கிறவனும் பொருட்படுத்தாத, சாகிறவனும் பொருட்படுத்தாத ஒன்றாக மரணம் மாறிவிட்டது. அது தனது வலுவையும், தான் ஏற்படுத்தும் வலியையும் இழந்து, மதிப்பற்ற ஒன்றாக சாலையெங்கும் புலம்பியபடி அலைந்தது. ஒரு அசாதாரணமான நிலை உருவாகி நாளுக்கு நாள் விபரீதமாகிக் கொண்டிருந்தது.

குதிரைப்படை முழுக்கவனத்துடன் செயல்பட்டு கொள்ளையர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கலெக்டர் மீண்டும்

வலியுறுத்தினார். டி.எஸ்.பி.கள் இருவரும் கலெக்டரின் உத்தரவை ஏற்றுக்கொண்டு முன்னிலும் தீவிரமாகச் செயல்பட்டனர்.

அன்று இரவு ஓம்பெர்ட் தலைமையிலான குதிரைப்படை வழக்கத்தைவிட அதிக் தூரமாகப் போய்க்கொண்டிருந்தது. எட்டுக் குதிரைகளில் துப்பாக்கி ஏந்திய போலீஸார் பின்னால் வர ஓம்பெர்ட் குதிரையை விரட்டிச் சென்றுகொண்டிருந்தார். பௌர்ணமியை ஒட்டிய நாளாதலால் நிலவின் வெளிச்சம் பிரகாசமாய் இருந்தது. பாதையெங்கும் பட்டமரங்களின் நிழல் குச்சிகுச்சியாய் மண்ணில் விழுந்து கிடந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்களில் இருந்த் பறவைகள் குதிரைகளின் குளம்படிகேட்டு சடசடத்துப் பறந்து மீண்டும் மரங்களில் வந்து அமர்ந்தன. காய்ந்து வறண்டு புல் பூண்டின்றிக் கிடந்த நெடிய பாதையை வண்டிச் சக்கரங்கள் இரு கூறாய்ப் பிளந்து வைத்திருந்தன. இடையில் இருந்த மண்மேட்டில் குதிரைகள் ஓடிக்கொண்டிருந்தன. கூத்தியார்குண்டு கண்மாய்க்குள் பத்துக்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்த்த ஓம்பெர்ட் கரையிலேயே குதிரையை நிறுத்தியவாறு விசாரித்து வரச்சொன்னார். ஒரு போலீஸ்காரன் போய் விசாரித்து வந்து சொன்ன பின்னால் குதிரைகள் அவ்விடம் விட்டுக் கிளம்பின. இடையில் சிறுசிறு கூட்டமாய் வந்தவர்கள். சாலையோர மரங்களின் கீழ் படுத்துக்கிடந்தவர்கள் என அனைவரையும் விசாரித்து அறிந்தபடி அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். செவரக்கோட்டை வரை வந்த குதிரைப்படை அங்கிருந்த பெருந்தனக்காரரின் கொட்டத்தில் நின்றது. குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டிவிட்டு கொஞ்சம் ஓய்வெடுத்தனர். ஆனால் ஓம்பெர்ட் மட்டும் நிதானமின்றி பரபரப்புடனே இருந்தார். சிடுசிடுத்த மூஞ்சியுடன் கண்ணில் வெறி தெறிக்க கத்திப் பேசிக்கொண்டிருந்தார். சிவப்பேறிய அவரின் முகத்தைப் பார்த்துப் பேசவே போலீசார் பயந்தனர்.

பொழுது நள்ளிரவைக் கடந்து வெகுநேரமாகிவிட்டது. ஓம்பெர்ட் எப்போது புறப்படச் சொல்வார் என அனைவரும் காத்திருந்தனர். அவரோ மனத்திற்குள் கணக்குப் போட்டபடி இருந்தார். நள்ளிரவுக்குப் பின்னேதான் குண்டாற்றின் மணல்வெளியில் இருந்தும் மறவன்குளம் கண்மாயில் இருந்தும் கொள்ளையர்கள் வெளியேறி வருவதாக அவர் சேகரித்து வைத்திருந்த தகவல்தான் புறப்படும் நேரத்தை தாமதப்படுத்தியது. குறிப்பிட்ட நேரம் வந்ததும் குதிரையைத் தயார் செய்யும்படி உத்தரவிட்டார்.

ஒன்பது குதிரைகளும் செவரக்கோட்டையிலிருந்து புறப்பட்டன. பாதையின் இரண்டு பக்கமும் மரங்கள் அரிதாக இருந்ததால் குதிரையில் இருந்தபடியே கண்முட்டும் எல்லைவரை தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஓம்பெர்ட் இரண்டு பக்கமும் திரும்பிப்பார்த்தபடியே வந்தார். குண்டாற்றின் அருகே வந்தவுடன் குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மெல்ல நடந்துவரச் செய்தார். ஆற்றின் நடுவில் மணலில் கால் புதைந்து குதிரைகள் நின்றன. கிழக்கேயும் மேற்கேயும் பார்த்தபடி இருந்தார். அந்தக் காட்டாறு அவர்களின் காலடியிலிருந்து கிழக்கே வெகுதூரம் போய் எங்கோ மறைந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித உருவங்கள் எதுவும் தெரியவில்லை. நிலவொளி எல்லாவற்றையும் துல்லியமாகக் காட்டியது. நின்று பார்த்தபடியே இருந்த ஓம்பெர்ட் ஏமாற்றத்துடன்

குதிரையின் கடிவாளத்தைச் சுண்டி நகர்த்தினார்.

சிறிதுநேரத்தில் அவர்கள் திருமங்கலத்தைக் கடந்தனர். மறவன்குளம் கண்மாய்க்கரையின் மேல் குதிரைகள் அணிவகுத்து நின்றன. யாரு மற்ற பரப்பையே நிலவொளி காட்டியது. கண்மாயின் மடை ஓரத்தில் நின்ற ஓம்பெர்ட் தோளில் கிடந்த துப்பாக்கியை எடுத்து, கொஞ்சநேரம் கைகளில் குறி பார்ப்பதற்குத் தோதுவாகப் பிடித்துக் கொண்டிருந்தார். குண்டாற்றில் சிக்காத கொள்ளையர்கள் மறவன்குளத்தில் சிக்கப்போகிறார்கள் என்ற உணர்வுடன் போலீசார் துப்பாக்கியைத் தோளில் இருந்து எடுத்து தயாராகிக்கொண்டிருந்தனர். கருவேலமரங்களுக்கு நடுவில் கையில் அரிவாளுடன் குதிரையின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். கண்மாய்க்கரை அய்யனார். அவரைத் தவிர கண்மாய்க்கு உள்ளேயும் வெளியேயும் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. தூரத்திலிருந்த ஆலமரத்தின் கீழ் மனித உருவங்கள் ஏதாவது தெரிகிறதா என்பதை உற்றுப்பார்த்தபடி இருந்த ஓம்பெர்ட் சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார். நேரமும் தூரமும் அதிகமாக இருந்ததால் குதிரைகள் களைப்படைந்தன. இருந்தும் அவர்கள் மதுரையை நோக்கி வேகமாக விரைந்தனர்.

கூத்தியார்குண்டு கண்மாய்க்கரையின் மேல் குதிரைகள் வந்து கொண்டிருந்தன. நிலா வெளிச்சத்தில் திருப்பரங்குன்ற மலைப்பாறை கண்விழித்திருந்தது. மலையின் மேலிருந்த மரங்களின் கொப்புகள் இலைகளற்று இருப்பதை இங்கிருந்தே பார்க்கமுடிந்தது. தென்கால் கண்மாய் கரையின் வழியே இடதுபக்ககமாகத் திரும்பி குதிரைகள் ஓடின. அங்கு துவங்கி கபாலிம்மலை அடிவாரம், பசுமலை அடிவாரமென இரண்டு மைல் தொலைவுக்கு நெடுக மரங்கள் இருந்தன. இந்த இடத்தில்தான் ஓம்பெர்டின் தலைமையிலான குதிரைப்படை செம்பூரான்களைப் பிடித்தது. எனவே அந்த இடத்தைக் கடக்கும்போதெல்லாம் ஓம்பெர்ட் மனதில் பெருமிதத்துடன் குதிரையை விரட்டிக் கடந்துசெல்வார். அன்றும் அப்படியே குதிரையின் ஓட்டம் விரைவாகியது.

கண்மாய்க்கரை முடிவுற்று கபாலிமலையின் அடிவாரம் துவங்குகிற இடத்தில் மிகப்பெரிய மரமொன்று பட்டுப்போய், கிளை மட்டுமே வெள்ரென வெளுத்து நின்றுகொண்டிருந்தது. பட்டமரத்தைக் கடந்து வலது பக்கம் திரும்புவதற்காகக் குதிரைகள் விரைந்து ஓடிக்கொண்டிருந்தன. மரத்தின் இரண்டு கொப்புகளுக்கு இடையில் ஒரு மனித உருவம் இருப்பதைப் போல ஓம்பெர்ட்டின் கண்ணுக்குத் தெரிந்தது. மரத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்த குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து வேகத்தை குறைக்க அவர் முயற்சித்த கணத்தில், அந்த உருவம் அசைவதை உணர்ந்தார். குதிரையின் வேகத்தால் மரத்திற்கு மிக அருகில் வந்து சேர்ந்தார். மின்னல் வேகத்தில் வந்த வேல்கம்பு நெஞ்சுக்கூட்டுக்குள் இறங்கி ஆளைப் பின்புறமாகத் தலைக்குப்புறச் சாய்த்தது. பெரும் சப்தத்தோடு இரண்டு பக்க இருட்டுக்குள் இருந்தும் ஈட்டிகள் பாய்ந்தன. கனைப்பொலிகளுக்கு இடையில் குடல் சரிந்த குதிரைகள் புரண்டன. துப்பாக்கி போலிசார் சிதறி திசைக்கு ஒருவராய் தப்பி ஓடினர். சுற்றிலும் இருந்த மொட்டை மரங்களில் இருந்து பறவைகள் சடசடத்து வெளியேறின. ஓடமுடியாமல் காலில் வெட்டுப்பட்டுக் கீழே கிடந்த இரண்டு போலிசாரின் கதறல்கள் திருப்பரங்குன்றம் மலையில் பட்டு

எதிரொலித்தன.

*

**ம**றுநாள் காலையில் மதுரையைக் குத்தி எழுப்பியது செம்பூரான்கள் எரிந்த ஈட்டி, செய்தி காட்டுத்தீயாய் நகரெங்கும் பரவியது. பல ஆண்டுகளுக்கு முன் செத்துப்போனவளாகக் கருதப்பட்டவள் திடீரென தலைவிரிகோலமாய் வீட்டு வாசலிலே வந்து நிற்பதைப்போல இது இருந்தது. தொலைந்ததற்காக துக்கப்பட்டவர்களும் வந்து நிற்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றவர்களுமாக மதுரைவாசிகள் இருந்தனர்.

ஓம்பெர்ட்டின் ரத்தத்தின் வழியே செம்பூரின் கண்ணீர் மதுரையின் வீதிகளுக்குள் வந்துகொண்டிருந்தது. மங்கம்மா சாலையை மடியிலே கிடத்தி செம்பூரான்கள் கதறிக் கதறி அழுத சத்தம் பல ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் நேற்று இரவு கேட்டதாக வண்டியோட்டிகள் சொன்னார்கள்.

கச்சேரி பெரும் பரபரப்புடன் இருந்தது. வெள்ளைக்கார போலிஸ் படை தென்கால்கண்மாய் நோக்கி அதிகாலையிலேயே போய்விட்டது. மதியம்வரை ஓம்பெர்ட்டின் உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கபாலிமலையின் பின்புறச் சரிவில் இருந்த பாறை இடுக்குக்குள் ஓம்பெர்ட்டின் உடல் துண்டாக்கப்பட்டுக் கிடந்ததை உச்சிப்பொழுதில் தான் கண்டுபிடித்தனர். அன்று மாலை ஆற்றின் வடக்கே ஐரோப்பிய இடுகாட்டில் சவஅடக்கம் நடைபெற்றது. மற்ற இரண்டு பேரின் உடல்களும் கீழஆவணி மூல வீதிக்கும், தெற்கு வெளிவீதிக்குமாய் கொண்டுபோய் சேர்க்கப்பட்டன. வெட்டுக்காயங்களுடன் வேதனையில் துடித்தபடி மற்ற போலிசார் இருந்தனர். கச்சேரி கட்டிடம் அரண்டுபோய்க் கிடந்தது.

ராமநாதபுரம் கேம்ப்பிற்குப் போயிருந்த எஸ்.பி.வில்சனை உடனே திரும்பச்சொல்லி ஆளனுப்பி கலெக்டர் உத்தரவிட்டார்.

*

# 68

**அமண மலையின் பின்புறச் சரிவில் இருக்கும் அடர்காட்டுக்கு** நடுவே ஒத்தையடிப் பாதையில் மாயாண்டிப் பெருசு நடந்துபோனார். கால் கவட்டை போட்டுவிட்டதால் வேகம் கூடி வரவில்லை. பக்கவாட்டில் சாய்ந்து சாய்ந்துதான் நடை இருந்தது. ஊண்டு கம்பைக் குத்தி மண்ணுக்குள் இறக்குவதைப்போல வலது கையால் அமுக்கி உடலை நகர்த்தினார். காவியேறி வெளுத்த தலையில் பாதி முடி கழிந்து மீதி முடி குடுமியிடப்பட்டு பின்புறப் பொடனியில் தொங்கி உருண்டு கொண்டிருந்தது. இடுப்பிலே கிழிந்த முரட்டுத்துணி, மேலெல்லாம் சுருக்கு விழுந்து வற்றிய உடல். கைக்கம்பை முன்ஊன்றி நகர்ந்தார். உள்ளுக்குள் இங்கிட்டுத் தள்ளவும், அங்கிட்டுத் தள்ளவுமாக இருந்தது. ‘தாயோலி... நீ தள்ளுடி பாப்போம்...’ என்று மனத்துக்குள் நினைத்தவாறே நடந்தார்.

பச்சையின்றிப் பாழ்பட்டு நின்றது மலையடிவாரம். ஒன்றிரண்டு பறவைகள் ஆள் நடமாட்டத்தை உணர்ந்து குரலெழுப்பின. பாதையில் கிடந்த ஓணான்கள் பனைமரத்தின் மீதேறி எட்டிப்பார்த்தபடி நின்றன. கஞ்சிப் பொழுது இப்போதுதான் கடந்தது. ஆனால் அதற்குள் வெயில் ஏறி அடித்தது. பெரியாம்பிள தேன்கல் பாறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அமணமலையில் இருக்கிற எத்தனையோ பாறைகளில் ஒன்று தேன்கல் பாறை. மனிதர்கள் எளிதில் ஏறமுடியாதபடி செங்குத்தாக பாறைகள் நின்றுகொண்டிருந்தன. நடந்துவந்த பெரியாம்பிள பாதையோரம் இருந்த காம்பனையில் சாய்ந்தபடி அண்ணாந்து பாறையைப் பார்த்தார். விண்ணை முட்டி நிற்பதைப்போல செம்பாறைகள் நின்றுகொண்டிருந்தன. அண்ணாந்து பார்த்தவருக்கு துல்லியம் பிடிபடவில்லை. கொஞ்சதூரம் தள்ளிப்போய் இன்னொரு பனையிலே சாய்ந்து கொண்டு அண்ணாந்து பார்த்தார். கீழே பார்த்தபடி மலைப் பொடவுக்குள் கழுகுகள் நின்றுகொண்டிருந்தன. பாறை இடுக்குகளை உற்றுப்பார்த்து எதையோ தேடினார். பாறை இடுக்கு முழுவதும் மலைத் தேனீக்களின் தேன்ராடுகள் வரிசையாகத் தொங்கிக்கொண்டிருந்தன.

இந்தத் தேனீக்கள் நான்கு மாத காலம்தான் அமணமலையில் இருக்கும். காற்றடிகாலம் ஆரம்பிக்கும் முன் இங்கிருந்து புறப்பட்டு திருப்பரங்குன்றம் மலைக்குப் போய்விடும். நான்கு மாதம் கழித்து அங்கிருந்து அழகர் மலைக்குப் போகும். மழைக்காலம் முழுவதும் அங்கிருந்துவிட்டு மீண்டும் மழை பெய்து விதைப்பு ஆரம்பிக்கவும் அமணமலைக்கு வந்துவிடும். தலைமுறை தலைமுறையாக இந்தத் தேனீக்கள் இப்படித்தான் சுற்றிவந்தபடி இருக்கின்றன. மூன்று மலையின் அடிவாரத்திலும் பூக்கும் பூக்களை வைத்து அது காலத்தை பகிர்ந்து வைத்திருந்தது. இந்தத் தேனீக்களைப் பற்றி எத்தனையோ கதைகள் தாதனூரில் இருக்கிறது. கிழவிகளுக்கு அலுத்துச் சலித்தால் தேன்கல் பாறைகளின் கதைகளைச் சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். மாயாண்டிக் கிழவனுக்கும் பலகதைகள் தெரியும். சிறுவயதில் தேன்கல் பாறைகளின் இடுக்குகளின் வழியே உச்சிக்கு ஏறியவர்களில் மாயாண்டியும் ஒருவர். கீ பூமிக்குப் போகும் பெரும் குகைப்பாதையை மறைத்துத்தான் ராடுகளை கட்டியிருக்கிறதா என பார்க்க தாதனூர்க்காரர்கள் பலரும் முயற்சி செய்துள்ளனர். ஆனால் அந்த முயற்சிகள் எல்லாம் தேனீக்கள் மலையை விட்டுப்போனபிறகுதான் நடைபெறும். வரிசையாகத் தொங்கும் ராடுகள் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி அப்புறப்படுத்தியபடி குகை இருட்டுக்குள், ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் போகமுடியாமல் பலரும் திரும்பியுள்ளனர். ஆனால் திரும்பியவர்கள் எல்லாம் ஊருக்குள் வந்து ஒவ்வொரு கதையைச் சொல்கின்றனர். இப்படியாக தேன்கல் பாறையைப்பற்றி எத்தனையோ கதைகள் ஊருக்குள் சேர்ந்துவிட்டன.

மாயாண்டி அண்ணாந்து பாறையை உற்றுப்பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார். தேனீக்கள் ராடை சுற்றிப் பறந்துகொண்டிருப்பது துல்லியமாகத் தெரிந்தது. இன்னும் மலையை விட்டு அது போகவில்லை என்பது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. நீண்ட நேரம் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தார். சிறு பிராயத்தில் உச்சிக்குப் போன செங்குத்துப்பாறையை மனம் ஆச்சரியத்தோடு நின்று பார்த்தது. இன்னும் சில நாட்களில் இங்கிருந்து பறந்து போய்விடும். தேனீக்கள் மீண்டும் தேன்கல் பாறைக்கு வரும்போது நாம் உயிரோடு இருப்போமா என்ற எண்ணம் அவருக்குத்தோன்றியது. கண்கள் பாறைகளின் இடுக்குகளை விட்டு அகலவில்லை. மனம் எங்கெங்கோ போய் அலைந்தது.

யாரோ தன்னைக் கூப்பிடும் சத்தம் கேட்டு நினைவு கலைந்து பாதையின் பக்கம் திரும்பினார். தூரத்தில் சத்தம் கொடுத்தபடி பேயாண்டியும் சோங்குவும் வந்துகொண்டிருந்தனர்.

‘பெரியாம்பிளய எங்கயெல்லாம் தேடறது...’ என்று சலிப்போடு பேயாண்டி முன்நடந்து வந்தான்.

‘இங்கன நின்னுகிட்டு என்னாப்பா பண்ற, திரும்பவும் பாறையில ஏறலாம்னு நெனப்பா...?’ என்றான் சோங்கு.

‘ஏலேய் வெண்ணய்களா, அவ்வளவு அவரசமா இங்கிட்டு என்னாத்துக்குடா தேடி வந்தீங்க...’ என்றார் பெரியாம்பிள.

‘யப்பா...கொடிக்கா வகையறா பூரா ஆணும் பெண்ணுமா வந்திருக்காங்கெ. கருப்பு கோயில்ல பெரும் கலகமா கெடக்கு. வந்து என்னான்னு கேளு!’ என்றான் பேயாண்டி.

‘மொத்தமா வந்துட்டாங்கெளா...?’ என்றார் பெரியாம்பிள.

‘ஆமாம்பா... கலகம் பண்றதுக்காகவே பொம்பளப்புள்ளைகள பூரா கூட்டி வந்திருக்காங்கெ. அவளுகளும் கொண்டைகள இழுத்து முடிஞ்சிட்டு வந்து நிக்கிறாளுக’ என்றான் பேயாண்டி.

‘இன்னிக்கு குடி கெட்டுச்சு, வீடு விட்டுச்சு...’ என்று முனங்கியவாறு பெரியாம்பிள நடந்தார். பேயாண்டியும் சோங்குவும் ஒன்றாக நடந்தார்கள். கொஞ்சதூரம் நடந்தபின் ‘ஏன்டா... அந்த மண்டையன் வந்திருக்கானா?’ என்று கேட்டார் பெரியாம்பிள.

‘ஆமாம்பா... அந்தக் கூட்டத்துல பெரியாம்பிள அவருதான, அவரு இல்லாம வருவாங்கெளா’ என்றான் சோங்கு.

‘மருதையில களவாங்கணும்னா மாடக்குளத்துலயே மண்டிபோட்டிருவான். அம்புட்டு சுதாரிப்பு இருக்கானாம்... மடக்கூதி, அவன வெச்சு என்னத்த பேசி என்னத்த தெகைய்ய...’என்று சலிப்போடு இழுத்தார் பெரியாம்பிள.

‘எப்பா... காலம் பூராம் அவங்களோட கலகம் பண்ணியாச்சு. இந்த வாட்டியாவது நெட்டையோ, குட்டையோ பேசி தெகய்ய வைபப்பா...’ என்றான் பேயாண்டி.

‘டேய்... மருத கோட்டைய இடிச்சு வெளிவீதிக்கு புதுக்காவ போடுறப்பவே இவெங்களுக்கு ரெண்டு தெரு ஒதுக்கி குடுங்கடான்னு நா சொன்னெ. அன்னிக்கு இருந்த பெரிய மனுசங்க எவனும் கேக்கல. இல்லாட்டி அன்னிக்கே தெகஞ்சிருக்கும்‘ என்றார் பெரியாம்பிள.

‘சரீ... இன்னிக்கு தெகய்ய வெக்க பாரு’ என்று சொல்லியபடி பெரியாம்பிளயைக் கூட்டி வந்தார்கள்.

*

**கா**லையிலிருந்து இரவு வரை வெற்றிலை போட்டுக்கொண்டேயிருப்பது மங்கம்மாளின் சுபாவம். திருமணத்திற்கு முன்பிருந்தே அவளுக்கு அந்தப் பழக்கம் இருந்தது. திருமணத்திற்குப் பின் மதுரைவெற்றிலையின் சுவை மிகவும் பிடித்துப்போனது.

அவள் காலத்தில் மதுரையைத் தலைநகராக்கி திருச்சியை விட்டுவிட்டு இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள். அவளைக் கொல்ல பல சதிகள் நடந்தன. வஞ்சகர்களின் கடைசி முயற்சி வெற்றிலைத் தோட்டத்தின் வழியே நுழைந்தது. வெற்றிலை பறிப்பவன் வழக்கம்போல் அதிகாலை தோட்டத்திற்குள் நுழைந்தான். சூரியன் எழுந்து ஒளியைத் தூவிக்கொண்டிருந்த நேரத்தில் அவன் பாதங்கள் கொடிக்கால் பாத்திகளுக்குள் நுழைந்தன. கீரைத்தண்டின் மீதேறிப் படர்ந்திருக்கும் வெற்றிலைக் கொடியின் தளிர்கள் இளம் பச்சை நிறத்தில் இருப்பதற்குப் பதிலாக கருமை ஏறி இருந்தன. தளிர்கள் கூட முற்றிய இலை போல இருக்கிறதே என யோசித்தபடி காம்பைக் கிள்ளி ஒவ்வொரு இலையாய் எடுத்துக்கொண்டிருந்தான். கால்கள் முன்நகர்ந்து போனபடி இருந்தன. இலைகளின் மீது நிகழ்ந்துள்ள மாற்றங்கள் மனத்துக்குள் உறுத்தியபடி இருந்தது. உற்றுப்பார்த்து ஒவ்வொரு இலைக்காம்பாய் பறித்தான். கீரைத்தண்டின் மேலேறி வந்த எறும்புகள் இலையின் மீது சுருண்டு

செத்துக்கிடந்தன. காற்றே வீசாத அந்த அதிகாலைப்பொழுதில் உள்ளங்கையில் சுருண்டு கிடக்கும் எறும்புகளைத் தள்ளிவிட முடியாமல் இலைகள் சுமந்து தள்ளாடியபடி இருந்தன. சந்தேகம் அதிகரிக்க ஆரம்பித்ததும் இரண்டு இலைகளை கிள்ளித் தின்று பார்த்தான்.

வெற்றிலை பறிக்கப்போனவன் நீண்ட நேரமாக வரவில்லை என காத்திருந்தவர்கள் தேடிப்போனார்கள். இரண்டு பாத்திகளுக்கு நடுவில் எறும்புபோல சுருண்டு கிடந்தான். வாயில் நுரைதள்ளி இருந்தது. செய்தி அரண்மனைக்கு எட்டியது.

*

**கோ**ட்டைக்கு வெளியே கிழக்குப்புறமாக இருந்த நந்தவனம் அழிக்கப்பட்டது. வைகையில் இருந்து பிரிந்து நகரைத் தென்புறமாகச் சுற்றிவரும் கிருதுமால் கால்வாய்க் கரையில் புதிதாக கொடிக்கால் நந்தவனம் அமைக்கப்பட்டது. அதனோரம் கல்மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. மேற்கு மலைத் தொடரில் இருந்து மலை ஜாதிப் பெண்கள் மூவரை அழைத்துவந்து அங்கே குடியேற்றினர். தாதனூரில் இருந்து இரண்டு காவல்காரர்கள் அழைத்துவரப்பட்டனர். கொடிக்கால் நந்தவனத்தை தாதனூர்க்காரர்கள் காவல் காத்தனர். தினமும் வெற்றிலை பறிக்கப்பட்டது. மூன்று பெண்களும் அதை மடித்துத் தின்று பார்த்தனர். அவர்களின் சம்மதத்திற்குப் பின்னேதான் அரண்மனை ஊழியர்கள் கல்மண்டபத்தில் வைத்துக் கழுவி வெற்றிலையை தினமும் இரண்டு கட்டாக அரண்மனைக்கு எடுத்துச்சென்றனர்.

வெற்றிலையில் ஏற்படும் சிறு மாறுபாட்டையும் மலை ஜாதிப்பெண்களின் நாக்கு எளிதில் கண்டுபிடித்துவிடும். மங்கம்மாளைக் கொல்ல அதன்பிறகும் கொடிக்காலில் விஷம் உரமாகியது. ஆனால் மடித்துத் தின்றுபார்த்த அவர்கள் மீண்டும் நந்தவனத்தை அழித்து மறுபடியும் புதிதாகப் பயிரிட்டார்கள். விஷமேறிய அவர்களின் நாக்கு நாள்பட நாள்பட கருமையேறியது. உள்ளங்கையைப் போல தடித்துப்பெருத்தது. மங்கம்மாள் ஆட்சி நடத்திய மீதி ஆண்டுகளில் அவர்களின் நாக்கிலே பயிரிடப்பட்ட கொடியிலிருந்துதான் வெற்றிலை பறித்துச்செல்லப்பட்டது. மேற்கு மலை உச்சியிருந்த கமுகு மரத்திலிருந்து வாரத்திற்கு இரண்டு குலைக் காய்கள் அரண்மனைக்கு வந்தன. காய்கள் பழுத்தபின் பக்குவமாய் தோல்நீக்கி அதன் கொட்டைகளை எடுத்துபாக்குகளை தயார் செய்தனர். பொன்னேரிச் சுண்ணாம்பை கொடிக்கால் பட்டி வெற்றிலையின் பின் நரம்புகளுக்கிடையில் அளவாய் தடவி பாக்குடன் மடித்து கொடுத்தபடி இருந்தனர் சேடிகள். வெற்றிலையை மென்றபடியே இருந்தாள் மங்கம்மாள்.

மேற்கு மலையிலிருந்து அழைத்தவரப்பட்ட மூன்று பெண்களும் நாளடைவில் காவக்காரர்களின் வீட்டோடு கலந்தனர். கொடிக்கால் பட்டி காவக்காரர்களுக்கும் தடித்த நாக்கோடு குழந்தைகள் பிறக்க ஆரபித்தனர். மங்கம்மாள் காலத்துக்கு பின்பும் அரண்மனைக்கு கொடிக்கால் பட்டியோடு இருந்த உறவு நீடித்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக அது பட்டுப்போக ஆரம்பித்தது.

தாதனூரிலிருந்து கொடிக்கால்பட்டி நந்தவனத்திற்குக் காவலுக்குப்

போன இரண்டு குடும்பத்திற்கும் அரண்மனையில் இருந்து கூலி தரப்பட்டதால் அவர்கள் கோட்டைக் காவலுக்கோ, நகர்க் காவலுக்கோ வரவில்லை. ஊரின் அன்றாடச் செயல்பாட்டிலிருந்து கொடிக்கா கூட்டம் தனியாகப் பிரிந்திருந்தது. வேறு பெண்களுக்குப் பிறந்ததால் கள்ளநாடு அவர்களை புளுக்க கள்ளர் என்று சொன்னது. தலைமுறைகள் பல ஓடின. முன்பு அரண்மனைக்குள் இருந்ததால் நகர் காவலுக்கு வராமலும் காவக்கூலி கேட்காமலும் இருந்தவர்களுக்கு இப்போது பஞ்சத்தில் பெரும் கஷ்டமானது. எந்தக் கூலியும் இல்லாமல் நிர்கதியாய் அவர்கள் நின்றனர். எண்ணி முப்பத்தைந்து வீடுகளிருக்கும் கொடிக்காபட்டியின் காவக்கூலியை வைத்து எதுவும் செய்யமுடியவில்லை. எனவே கோட்டை இடிக்கப்பட்டு வெளிவீதிகளுக்கு புதுக்காவல் போடப்பட்டவுடன் எங்களுக்குக் காவல் வீதியை ஒதுக்கித்தரவேண்டுமென்று கொடிக்கா வகையறா கலகம் செய்துபார்த்தது. ஆனால் ஊர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்பின் வம்பு ஏதுமில்லாமல் இருந்தது. இப்பொழுது கடும்பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் கொடுக்காபட்டி காவக்காரர்களுக்கு வாழவே வழியில்லாமல் ஆனது. எனவே இப்பொழுது மீண்டும் ஊரிடம் நியாயம் கேட்டு வந்துள்ளனர்.

**மா**யாண்டிப் பெருசு வரும்பொழுது ஆலமரத்தடி நிரம்பியிருந்தது. அவ்வளவு நேரம் பெரும் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்தினார்கள். பெரியாம்பிளை எல்லாத்தையும் பார்த்தபடி வந்து கருப்பு கோவில் தாவாரத்தின் படிக்கட்டிலே உட்கார்ந்தார். படிக்கட்டின் இடப்பக்கம் கொடிக்கா வகையறா பெண்கள் எல்லாம் உட்கார்ந்திருந்தனர். தாட்டியமான கிழவிகள் இரண்டு மூன்று பேர் அதிலிருந்தனர். புருஷன் செத்தபின் பிறந்த ஊரான கொடிக்காபட்டிக்கே வந்து விட்ட செல்லாயிக்கிழவியும் அதில் ஒருத்தி. அவளுக்கு தடித்த கருநாக்கு இருப்பதாக சிறுபிள்ளைகள் எல்லாம் ஊரிலே பேசிக்கொள்வார்கள். அவள்தான் கொடிக்கா வகையறாவில் உயிரோடு இருப்பவர்களில் மூத்தவள். ஏறக்குறைய மாயாண்டிக்கு சமவயதுக்காரி. மண்டையன் வந்திருக்கானா என்று கேட்டறிந்த மாயாண்டி இவள் வருவாள் என எதிர்பார்க்கவில்லை. இவள் வந்து முன்னால் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் மாயாண்டிக்கு உள்ளுக்குள் ‘விக்‘கென்றிருந்தது. அவள் காது தண்டட்டி இரண்டும் தோள்பட்டையில் தட்டி முன்னால் வந்து ஆடிக்கொண்டிருந்தது. எதிர்ப்புறமிருந்த ஆலமரத்தடியில் மண்டையனும் மற்றவர்களும் உட்கார்ந்திருந்தனர். தாதனூரின் மற்ற வகையறா கூட்டமெல்லாம் சுற்றியிருந்தனர். ஊர் பெரியாம்பிளைக்காக காத்திருந்தவர்கள் அவர் வந்து உட்கார்ந்ததும் பேச்சைத் துவக்கினர்.

‘யப்பா... நாங்களும் சடச்சி மக்கதான். இனியும் எங்கனால பொறுக்கமுடியாது. மருதக் காவல்ல எங்களுக்குன்னு நாலு தெரு பகுந்துவுடு’ என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார் மண்டையன் பெரியாம்பிள.

‘ராசா வீட்டு கூலி கெடைக்கிதுன்னு தொம்பர வச்சு பொழிச்சீங்களடா... அன்னிக்கு நாங்க என்ன கேட்டா வந்தோம். இன்னிக்கு நீங்க என்னாத்துக்குடா வர்றீங்க...’ என்றார் தாவாரத்தில் உட்கார்ந்திருந்த கருப்பணன் பெரியாம்பள.

‘காய் இருக்கிற காளைக்கு தானப்பா சிமிழ் இருக்கும். அன்னிக்கு எங்ககிட்ட காய் இருந்துச்சு. சிமிலோட சுத்துனோம். இப்ப காயடிச்சுவுட்டுப்புட்டாங்கெ. நாலு தெரு பகுந்து வுடுன்னு ஊருகிட்ட கேட்டுவந்துருக்கோம்‘ என்று பக்குவமாகவும் நக்கலாகவும் சொன்னார் கொடிக்கா வகையறாவைச் சேர்ந்த விருமாண்டி.

‘அப்ப...எங்களுக்கு அன்னிக்கி காய் இல்ல, உங்களுக்கு மட்டும் தான் இருந்துச்சுன்னு சொல்ல வர்றீயா!’ என்றான் கெடாயன் வகையறாவைச் சேர்ந்த முத்தணன்.

‘உங்களுக்கு காய் இருந்துச்சுன்னா எதுக்கு எங்கள கூட்டிப்போயி உக்கார வெச்சாங்கெ, உங்களத்தான்றா உக்கார வச்சிருப்பாங்கெ’ என்றான் கொடிக்கா வகையறாவைச் சேர்ந்த இளவட்டம்.

இனியும் பேச்சை நீட்டக்கூடாது. உடனடியாகத் தலையிடணும் என்ற மாயாண்டிப் பெருசு நினைத்துக்கொண்டிருக்கும் போதே ஆளாளுக்குப் பேச ஆரம்பித்துவிட்டனர். வார்த்தைகள் இருநூறு வருஷமாக நடந்தவை எல்லாவற்றையும் ஈவு இரக்கமில்லாமல் கிழித்துத் தள்ளின. ஒருவரை மாற்றி ஒருவர் குற்றம் சாட்டி நையாண்டி செய்து நாற வைத்தனர். யாராலும் தலையிட்டு நிறுத்தமுடியவில்லை. பேச்சுக்கள் ஆலமரத்தை உலுக்கிப் பறவைகளை விரட்டின.

ஒரு கட்டத்தில் ‘ஆம்பளைய ஆசப்பட்ட தேவடியாளும் கெட்டா... பொம்பளய ஆசப்பட்ட காவக்காரனும் கெட்டான்டா...’ என்று தாதனூரைச் சேர்ந்த யாரோ ஒருவர் சொன்னவுடன் அந்த இடமே தீப்பிடித்து போல் ஆகிவிட்டது.

அவ்வளவு நேரம் பேசாம்ல பார்த்துக்கொண்டிருந்த செல்லாயி இந்த வார்த்தையைக் கேட்டவுடன் கொதித்து எழுந்தாள். எல்லோரையும் உண்டு இல்லை என்றாக்கினாள். யாராலும் எதையும் பேசமுடியவில்லை. ஊருக்குள் இருந்து கிழவிகள் யாரும் வராததால் செல்லாயியைக் கட்டுப்படுத்த வழியே இல்லை. அவள் எல்லோரையும் வகுந்து எடுத்துக்கொண்டிருந்தாள். பேச்சு காது கொடுத்துக் கேட்க முடியாதபடி இருந்தது. மாயாண்டிப் பெருசு உள்ளுக்குள் பயந்தபடி மெல்லத் தலையிட்டார். ‘சரீம்மா... பேசிக்கெல்லாம் பொறு’ என்றார். அவ்வளவுதான். நான்கு கால் பாய்ச்சலில் அவரை நோக்கிப் பாய்ந்தாள். ‘ஏலேய்...நீ பேசாதறா, சின்னான முன்னக்கூட்டியே விசாருச்சு காப்பாத்த தெறமில்லாத பொண்டுகசட்டிப் பயநீ...நீயெல்லாம் ஊர் பெரியாம்பிள...’என்றாள்.

மாயாண்டி அரண்டு போனார். வார்த்தைகள் உடலை வெட்டி எறிந்தன. கிழவனுக்கு வேர்க்க ஆரம்பித்துவிட்டது. மற்ற யாரும் வாய் திறக்கவில்லை. பெரியாம்பிளக்கே இந்தப் போடு என்றால் நாமெல்லாம் எம்மாத்திரம் என்று ஒடுங்கிப்போனார்கள். ஆலமரத்தடி கிழவியின் குரல்கண்டு நடுங்கியது.

‘மருத திடலாயி... மாமதுர தோப்பாயி... எருது பசுவானாலும் இந்த எடுபட்ட பய ஊருல வந்து காவக் கேட்க கூடாதுன்னு தான்டா நாங்க இருந்தோம். ஆனா இப்ப நாடு நகரமெல்லாம் பஞ்சத்துல அவுஞ்சு போகுது. ஏ பிள்ள குட்டிக எல்லாம் தெனமும் சாக, நீங்க மட்டும் மரக்கால்ல கூலி

வாங்கி மகுந்துகிட்டு இருப்பீங்களோ...’ என்று சொல்லி நீட்டியவள் மாயாண்டியைப் பார்த்து ‘இப்ப சொல்றெகேட்டுக்கோ... வர்ற அமாவசைக்குள்ள காவ புடிச்சு வுடலைன்னா என்ன நடக்கும்னு தெரியாது’ என்று எச்சரித்துவிட்டு உட்கார்ந்த இடத்திலிருந்து கையை ஊன்றி எழுந்தாள். சத்தம்போட்டுக் கத்திக்கொண்டிருந்த பெண்கள் எல்லாம் அவளோடு சேர்ந்து எழுந்தனர்.

*

**அ**வள் பேசும்பொழுது காற்றில் ஆடித்தீர்த்த தண்டட்டிகள் அதன் பின் மாயாண்டிப் பெருசுவை நிம்மதியாக இருக்கவிடவில்லை. அவரும் என்னன்னமோ யோசனை செய்து பார்த்தார். எதுவும் பிடிபடவில்லை. மதுரைக் காவலில் எந்தத் தெருவையும் விட்டுத் தர ஊரில் யாருக்கும் சம்மதமில்லை. இப்பொழுதாவது பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென மாயாண்டி உறுதியாக இருந்தார். ஊருக்கும் அது நியாயமென்று பட்டது. ஆனால் கொடிக்கா வகையறாவைச் சேர்ந்தவர்கள் வந்து பேசிய பேச்சு பலரையும் உசுப்பேற்றி விட்டிருந்தது. ‘அவங்கெளும் சடச்சிக்கு பொறந்தவங்கெ தான்டா...புலிக்குப் பெறந்தது நகம் இல்லாம போகுமா?’ என மாயாண்டி பல பேச்சுகளையும் தட்டிமடக்கினார். திரும்பவும் செல்லாயிக் கிழவி ஆலமரத்தடிக்கு வர்ற மாதிரி வச்சுக்கிறக்கூடாது என பெரியாம்பிளைகள் பலரும் நினைத்தனர். ஆனால் தீர்வுதான் அகப்படவில்லை.

இரண்டு நாள் கழித்து மண்டையன் பெரியாம்பிளைய கருப்பு கோவிலுக்கு வரச்சொன்னார்கள். அவரும் நான்கைந்து பேரோடு வந்தார். மதுரை வீதிகளில் காவக் கொடுக்கமுடியாது. பக்கத்து கிராமங்களில் எதையாவது விட்டுத்தரலாம் என்று தாதனூர் தரப்பில் சொல்லப்பட்டது. ஆனால் கொடிக்கா வகையறா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதை விட்டால் வேறு வழி எதுவும் இல்லை என ஊர் உறுதியாகச் சொன்னது. இப்போது வாங்காவிட்டால் பிறகு எப்போதும் வாங்கமுடியாது என்று கொடிக்காலும் உறுதியாக இருந்தது. ‘சரி, ரெண்டு நாகழிச்சு பேசுவோம்‘ என்று கெடு வைத்து கலைந்து போனார்கள். மீண்டும் இரண்டு நாள் கழித்து கூடினார்கள். பேச்சு அந்த இடத்திலிருந்து துவங்கி அந்த இடத்திலேயே நின்றது. எதுவும் திகைவது போல் இல்லை. மீண்டும் இன்னொரு கெடு நிச்சயித்துவிட்டுக் கலைந்தார்கள்.

கடும் வறட்சியால் கொடிக்கா வகையறா மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. காவக்கூலி என்று எதுவும் வாங்க முடியாமல் இருந்தவர்களுக்கு ஏதாவது ஒன்றிரண்டு பெரிய கிராமத்தையாவது வாங்கி தப்பிப்பிழைப்போம் என்ற எண்ணம் உருவாக ஆரம்பித்தது. நிச்சயத்த கெடு அன்று மீண்டும் கூடினார்கள்.

‘சரியப்பா... நாங்க கிராமக் காவல ஏத்துக்குறோம். ஆனா நாங்க சொல்ற கிராமந்தான் எங்களுக்கு வேணும்‘ என்றார் மண்டையன்.

கொடிக்கா கூட்டம் நகரத்து காவலைக் கேட்காமல் விட்டது எல்லோருக்கும் பெரும் நிம்மதியாக இருந்தது. ஆனால் ‘அவங்கெ கேட்குற கிராமத்த கொடுக்கணும்ற‌த எப்படி ஏத்துக்கிறது’ என்று சிலர் இழுத்தனர். ஆனால் ஊர் பெரியாம்பிள மாயாண்டி ‘எந்த கிராமம்னாலும்

காவகொடுப்போமப்பா...' என்று ஒரு போடு போட்டார். எல்லோரும் வாயடைத்துப் போனார்கள். 'என்ன பெரியாம்பிள இப்படி ஒரு வாக்குவுட்டுப்புட்டாரு' என்று சிலர் யோசித்துக்கொண்டிருந்தனர். 'எந்த ஊரகேக்கப் போறாங்கெளோ...' என்று எதிர்பார்த்திருந்தனர். கொஞ்ச நேர இடைவெளிக்குப்பின் மண்டையன் பெரியாம்பிள சொன்னார் 'எங்களுக்கு நெடுங்குளத்த கொடுங்கப்பா...'

தாதனூர் அதிர்ந்து போயிற்று. நெடுங்குளம் மதுரைக்கு பக்கத்திலிருக்கும் முதல் பெருங்கிராமம். மாடக்குளத்தைவிட வெள்ளாமையும் விளைச்சலும் அதிகம். சம்சாரித்தனம் நிறைந்த ஊர். பெரிய அக்ரஹாரமும் வற்றாத குளமும் திருநீலகண்டன் கோவிலும் இருக்கிறது. நாலுஜோடி காவக்காரக் குடும்பங்கள் ஊரை நம்பிப் பிழைக்கலாம், அந்த அளவு காவக்கூலி கிடைக்கும். கொடிக்கா வகையறா கேட்டது என்னவோ சரிதான். ஆனால் தாதனூருக்குத்தான் பிரச்சனை. நெடுங்குளம் மதுரைக்கு வடக்கே இருக்கிறது. அது கீழ் நாட்டுக் கள்ளர்களின் காவல். இப்போது போய் அந்தக் காவலை குலைப்பதென்றால் அது சாதாரணமாக நடக்காது. உயிர்ப்பலி வரை போகும். அப்படி பலி கொடுத்து காவலைப் பிடித்தாலும் கீழ்நாட்டுக்காரர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். காவலை மீட்க தொடர்ந்து கலகமும் களவும் செய்தபடி இருப்பார்கள். இதற்கெல்லாம் தயாராக இருந்தால்தான் நெடுங்குளத்தைப் பற்றியோசிக்கவேண்டும். ஆனால் தாதனூருக்கு அதைச் செய்து தருவதைத் தவிர வேறு வழியில்லை. பெரியாம்பிள கொடுத்த வாக்கு ஊரைக்கிட்டிபோட்டதைப் போல அமுக்கிவிட்டது. 'சரியப்பா, ஆகவேண்டியத பாப்போம்' என்று சொல்லி மண்டையன் பெரியாம்பிளையையும் மற்றவர்களையும் அனுப்பி வைத்தார்கள்.

மூன்று நாள் கழித்து நெடுங்குளம் கிராமப் பெரியவர்களை தாதனூரைச் சேர்ந்த மூன்று பேர் போய் பார்த்துப் பேசினர். 'இருக்கிற காவலை உலப்பிட்டு உங்களுக்கு எப்படி காவ கொடுக்க முடியும்' என்று பதில் சொல்லி கிராமத்தார் அனுப்பிவிட்டனர். வந்தவர்கள் அடுத்த கட்டத்தில் செய்யவேண்டிய வேலைக்குத் தயாரானார்கள். நெடுங்குளம் காவக்காரனும் தாதனூர் என்ன செய்யும் என்று யோசித்து தனது ஊரிலிருந்து ஆட்களைக் கூட்டிவந்து இரவுதோறும் தயாராக இருந்தான்.

ஜீவாத்திகளை பிடிக்க வேட்டைக்குப் போவதைப் போலத்தான் காவல் பிடிப்பதும். ஊரே அன்று புறப்பட்டது. காடுகன்னி விளைந்திருந்தால் இருப்பதைப் பூரா கசக்கி அறுத்துக்கொண்டும் வரலாம். ஆனால் வறட்சியால் எந்த வெள்ளாமையும் இல்லை. ஊரெல்லாம் காய்ந்து சருகாய்க் கிடக்கிறது. விரிவு விட்டு கிடக்கும் நெடுங்குளத்து வயக்காட்டுக்குள் கால்மிதித்து நடப்பதே கஷ்டமான காரியம். 'சரி, என்ன செய்யலாம்' என்று யோசித்த தாதனூர் நெடுங்குளத்திலிருக்கும் ஆடுமாடுகளை எல்லாம் ஓட்டிவருவது என்று முடிவெடுத்தது.

அன்று மூன்றில் ஒரு பங்கு பேர்தான் மதுரைக் காவலுக்குப் போனார்கள். மற்ற எல்லோரும் புதுக்காவல் பிடிக்கத் தயாரானர்கள். அன்று களவுக்குப் போகிற கொத்துகள் எதுவும் போகவில்லை. எல்லோரும் ஆலமரத்தடியில் குவிந்துகிடந்தார்கள். ஊர் நல்லநாள் போல களைகட்டியிருந்தது. சிறுவர்கள் எல்லாம் வரக்கூடாதென்று

ஆலமரத்தடியிலிருந்து சத்தம் போட்டு ஊருக்குள் விரட்டிவிட்டனர். இருள் இறுக்கம் கொண்டு கிடந்தது. நிலவின் ஒளி கசிந்துகூட இறங்காமல் இருந்தது. வெளி அவர்களை அழைக்க நேரம் பார்த்துக்கொண்டிருந்தது. ஆந்தைகளின் குரல்கள் இருள்பரப்பில் மணிகளைப் போல உருண்டோடின. அவர்களும் பொழுதைக் கணித்தபடி காத்திருந்தனர்.

பொழுது நடுக்கூரு சாமத்தை நெருங்கியது. ஆலமரத்தை விட்டு வெளியில் வந்து அண்ணாந்து கூட்டு மணி வெள்ளியைப் பார்த்த சோங்கு 'புறப்பட்டால் போய்ச் சேர சரியா இருக்குமப்பா' என்றான். கருப்பு கோவில் அடிவாரத்துக் கூட்டம் கலைந்து எழுந்தது. ஊர் பெரியாம்பிள மாயாண்டியும் எழுந்து கம்பை ஊண்டி நடக்க ஆரம்பித்ததைப்பார்த்த மற்றவர்கள் நீ எதுக்கப்பா...பெரியமனுசெ வந்துக்கிட்டு, நாங்க போயிட்டு வர்றோம்' எனச் சொல்லி இருக்க வைக்க முயற்சித்தனர். ஆனால் மாயாண்டி இருக்கவில்லை. 'ஊர் சமாச்சாரத்துக்கு நா வராம எப்படியப்பா...' எனச் சொல்லிப் புறப்பட்டார். பெருங்கூட்டமும் 'போயிட்டு வாறோம்டா கருப்பு' என்று கோவிலைப் பார்த்துச்சொன்னபடி ஆலமரத்தை விட்டு நகர்ந்தது.

வழக்கமாகக் களவுக்குப் போகிற கொத்துகளின் நிலையாள் கள்தான் இதையும் வழிநடத்திப் போவார்கள். ஊரே சேர்ந்து களவுக்குப் போவதால் ஐந்தாறு நிலையாள் இருந்தாலும் ஒரு பெரிய நிலையாள்தான் வழிநடத்துவார். மாயாண்டிப் பெருசு வருகிறபொழுது அவரைத்தவிர வேறுயாரையும் பெரிய நிலையாளாக யோசிக்க முடியாது. ஊன்று கம்பை ஊன்றியபடி பெரிய நிலையாள் கடைசியாக வந்தார். அவரோடு கருப்பணன் பெரியாம்பிளையும் முத்தணன் பெரியாம்பிளையும் நடந்துவந்தார்கள். கூட்டம் முழுவதும் முன்னால் போய்க்கொண்டிருந்தது. வானம் நிறைய வெள்ளிகள் பூத்துக் குலுங்கின. பெரியாம்பிள போக்குக்காட்டி மறையும் வெள்ளிகளை அண்ணாந்து பார்த்தபடி வந்துகொண்டிருந்தார். இப்படி களவுக்கு வெளியே வந்து எத்தனையோ காலம் ஆகிவிட்டது. இருளின் முதுகுத்தண்டின் மீது குத்துக்கால் ஊண்டி நடக்குமாறு ஊண்டுகம்பு மீண்டும் அழைத்துச்சென்றது. எதிரில் நாகமலையின் அடிவாரம் சரளை மேவிக் கிடந்தது. முன்னால் போன எல்லோரும் ஆளுக்கு பத்துக் கல்லை எடுத்து இடுப்பிலே வைத்து துண்டைக் கட்டிக்கொண்டனர். பெரியாம்பிளைகள் மூவரின் துண்டும் தலைமாட்டை விட்டு இறங்கவில்லை. கற்களை இடுப்புக்கு ஏற்றியவுடன் களவுக்கான முழு தயாரிப்பும் முடிந்துவிடுகிறது. இனி செய்கை மட்டும்தான் பாக்கி.

கொஞ்சம் கொஞ்சமாகச் கூட்டத்தில் பேச்சொலி குறைந்தது. வைகையில் இறங்குபொழுது நடை சத்தம் மட்டும்தான் கேட்டது. எல்லோரும் கருப்பன் ஆனார்கள். இனி எது பேசுவதானாலும் கருப்பனின் பெயரில்தான் பேச்சு நடக்கும். கருப்பன்களின் கூட்டம் கரையைக் கடந்து காட்டுப்பாதைகளை எல்லாம் அலசி எடுத்தபடி வடகிழக்கே போனது. இரவிலும் மணலின் சூடு குறையவில்லை. காற்றிலேறி வெக்கை அலைஅலையாய் வந்துகொண்டிருந்தது.

களவில் எத்தனையோ வழிவகை உண்டு. ஆனால் காவல் பிடிப்பதற்கான களவு வித்தியாசமான ஒன்று. அது குடிகளின் மீதான களவாக நினைத்து நடத்தப்படுவதில்லை. காவக்காரனின் மீதான

களவாகத்தான் நடத்தப்படுகிறது. ஊரிலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் காவக்காரன் தான் சொந்தக்காரன் என நினைத்துத்தான் செய்யப்படுகிறது. காவல் பிடிப்பது என்பது சாதாரணமாகவும் அசாதாரணமாகவும் நடக்கிற ஒன்று. ஆனால் காவக்காரன் இருக்கிற கிராமத்தில் காவலை அழித்துவிட்டு புதிதாகப் பிடிப்பதென்பது அசாதாரணமான விளைவுகளையே ஏற்படுத்தும். தாதனூர் எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் வந்திருந்தது. ஆனாலும் களவின் நியாயங்களை அது ஒருபோதும் மீறாது.

மீறா நியாயங்களைத் தோளில் சுமந்தபடி களவுபடை திரட்டிநெடுங்குளத்தின் தென்கரையிலே வந்து நின்றது. ரெட்டிய கெடுத்தவெள்ளி ஏறி மின்னியது. பொழுது நடுச்சாமத்தை முன்னத்திக் கால்களால் கடந்துகொண்டிருந்தது. நெடுங்குளத்தின் தூக்கம் நீர் வற்றிப்போன கிணற்றின் ஆழத்துக்கு இருந்தது. வயல்வெளிகள் எல்லாம் காய்ந்து விரிவோடிக் கிடந்தன. நாய்களின் குரைப்பொலி ஊருக்குள் கேட்டது. பாழ்பட்டுப்போன வெளி போல சுற்றுப்புறங்கள் கிடந்தன.

தெற்குப்பக்கமாக ஓடையைக் கடந்து மேட்டில் ஏறியவுடன் நாலுகொத்தாகப் பிரிந்து ஊருக்குள் போவதென்றும் சடையாண்டி கொத்துமட்டும் காவக்காரனின் வீட்டைச் சுற்றி நின்று கொள்வதென்றும், பெரியாம்பிளைகள் எல்லாம் களத்து மேட்டில் நின்றுகொள்வதென்றும் முடிவாகியது. வயல் வரப்புகளைக் கடந்து அந்தக் கூட்டம் நடந்து போய்க்கொண்டிருந்தது.

கடந்த ஒரு வாரமாக இதை எதிர்பார்த்திருந்தான் நெடுங்குளத்து காவக்காரன். தாதனூர் வந்து காவல் கேட்டுக் கொடுக்கவில்லை யென்றால் அடுத்து என்ன நடக்கும் என்று அவனுக்குத் தெரியும். எனவே குரங்குத் தோப்பிலிருந்து தினமும் ராவுக்கு ஐம்பது ஐம்பது பேராக கூட்டிக்கொண்டுவந்து வைத்திருந்தான். குரங்குத்தோப்பு தனது காவலை விட்டு விடக்கூடாது என்ற முடிவோடு வரிந்து கட்டிக்கொண்டு வந்திருந்தது. எந்த ஊராக இருந்தாலும் நெடுங்குளத்துக் காவலை அவ்வளவு சீக்கிரமாக யாரும் விட்டுவிட மாட்டார்கள். ஊர் குப்பைகளில் முளைக்கும் காய்கறிகளைப் பிடிங்கித் தின்றாலே பத்து நாளைக்குத் தின்னலாம். அவ்வளவு செழிப்பான ஊரின் காவலை யார்தான் விட்டுத்தருவார்கள்?

தென்புற ஓடையைக் கடந்துதான் ஊருக்குள் நுழையவேண்டும். வயல்வெளிகளில் வந்தவர்கள் ஓடைக்கு அருகே வரும்வரை குரங்குத்தோப்புக்காரர்கள் காத்திருந்தார்கள். கல்லெறியும் தூரத்திற்குள் வந்து விட்டார்கள் எனத் தெரிந்ததும் ஓடைக்குள் இருந்து பெரும் சத்தத்தோடு கற்கள் பறந்துவந்தன. தாதனூர்க்காரர்கள் மடமடவென கீழே உட்கார்ந்தார்கள். ‘ஓடைக்குள்ளிலிருந்து எரியுறாங்கப்போய்...’ என்ற குரல் வந்ததும் இரண்டு பக்கம் இருந்தும் கற்கள் சீறிப்பாய ஆரம்பித்தன. தாதனூர்க்காரர்களை கல்லெறியில் மிஞ்ச ஆள் கிடையாது. ஆனால் குரங்குத்தோப்புக்காரர்கள் ஒடைக்குள் இருந்ததால் தாதனூரின் எறிசரியாகப் பிடிக்கவில்லை. ஆனால் ஓடைக்குள் இருந்து எறிந்தவர்களின் கற்கள் தாதனூர்க்காரர்களை உண்டு இல்லை என்றாக்கின. வயல்வெளி எங்கும் சிதறி நின்று ஓடையை நோக்கி கற்களை எறிந்து தள்ளினர். சத்தம் கேட்டு ஊர் விழித்துக்கொண்டது.

பெரும் கூட்டம் திரள ஆரம்பித்தது. இடுப்பில் கட்டியிருந்த கற்கள் குறையத் துவங்கின. மாயாண்டிப் பெருசு எல்லோரையும் விட்டு தள்ளி மிகப்பின்னால் நின்று நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

நிலைமை சரியாக இல்லை என்பது தெரிய ஆரம்பித்தது. பின் வாங்கிப் போனால் அப்புறம் என்றைக்கும் நெடுங்குளத்து காவலைப் பிடிக்க முடியாது. தாதனூர்க்காரன் வெரட்டு பெத்து போய்விட்டான் என்று செய்தி ஊரின் மானமரியாதையை எல்லாம் அழித்துவிடும். என்ன செய்யலாம் என்று யோசித்தபடி பெரியாம்பிள நின்றுகொண்டிருந்தார். வயக்காட்டில் நின்று எறிந்தவர்களின் கற்கள் தீரத் துவங்கின. ஓடைக்குள் இருந்தவர்கள் மேலேறி வர ஆரம்பித்தினர். ஊர் கூடியதும் ஓடைப்பக்கமாக இருந்துவரும் கற்களின் எண்ணிக்கையும் கூடியது. இருள் எங்கும் பெரும் சத்தம் திசைகளில் எகிறியது. ஆளாளுக்கு கம்பும் கடப்பாரையும் தூக்க ஆரம்பித்தனர். ‘கருப்பு...கௌம்புவோம்ப்பா...’ என்று பதறிய படி கருப்பண்ன் பெரியாம்பிள மாயாண்டியிடம் வந்து சொன்னான்.

‘கொஞ்சம் பொறு கருப்பா...’ என்று சொன்ன மாயாண்டி முன்னால் நின்று கல்லெறிந்துகொண்டிருந்த சடையாண்டியைக் கூப்பிட்டு புதுவேலை ஒன்றைச் சொல்லியனுப்பினார்.

சடையாண்டி குனிந்துகொண்டே கிழக்கே தலைதெறிக்க ஓடினான். அரைவட்டமாக ஊரைச் சுற்றி நேர் எதிர்த் திசைக்குப்போனான். பெரும் சத்தத்தோடு தென்திசையில் கலகம் நடப்பது வடக்கு எல்லை வரை கேட்டது. கொஞ்சம் நின்று இளைப்பாறிவிட்டு வாய்க்கால் வழியே குனிந்து கொண்டே ஊருக்குள் ஓடி நுழைந்தான். அநேகமாக தெருக்களில் ஆண்கள் யாருமில்லை. எல்லோரும் தெற்கே கலகம் நடக்கும் இடத்திற்குப்போயிருந்தனர். போனவன் எதிரில் இருந்த வீட்டின் கதவை தட்டப்போனான். கதவு திறந்தே இருந்தது. ரெண்டு கிழவிகள் இருளுக்குள் நின்றுகொண்டு ‘இப்படி கலகமாயி போச்சே...’ என்று பேசிக்கொண்டிருந்தனர். கிழவிகளைப் பார்த்தவன் ‘அய்யோ...அம்மா...யாத்தே...’ என்று கத்திக்கொண்டு கிழவிகளிடம் போனான். இருட்டுக்குள் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய கிழவிகள் ‘என்னப்பா, என்ன ஆச்சு’ என்று கேட்டனர். ‘யாத்தா... மாடு வாங்க போயிக்கிட்டு இருந்தே ஆத்தா...கர மேலே போகையில் சின்னப்பெய காலல ஏதோ கடுச்சு புடிச்சிருச்சு ஆத்தா, என்ன பூச்சி கடிச்சிச்சின்னு இருட்டுல ஒண்ணுந்தெரியுல, வெளக்கு இருந்தா கொடு ஆத்தா போயி பாக்கணும்‘ என்று கதறினான். ‘அய்யோ...அப்படியாகிப் போச்சாப்பா!’ என்று இரக்கப்பட்ட கிழவி வீட்டுக்குள் ஓடிப்போய் சிறு விளக்கு ஒன்றை எடுத்துவந்து அவன் கையிலே கொடுத்து ‘காத்துக்கு அணஞ்சுறாம்ம பாத்து கொண்டு போப்பா...’என்று சொல்லி அனுப்பினாள்.

தாதனூர்க்காரர்களிடம் கற்கள் ஏதுவுமில்லை. எல்லாம் தீர்ந்துவிட்டதால் கரம்பைக்கட்டிகளை எடுத்து எறிய ஆரம்பித்தனர். ஓடைக்குள் இருந்தவர்கள் முன்நகர்ந்து வந்தபடியே இருந்தனர். ‘கருப்பா கிளம்புவோம்ப்பா...’ என்று மீண்டும் சொன்னான் கருப்பணன். பெரியாம்பிள மாயாண்டி கொஞ்ச நேரம் தாக்காட்டுங்கடா...’ என்றார். சரி என்று சொல்லி பெரும் சத்தத்தைக் கொடுத்து எறிவதுவும் மிரட்டுவதுமாக இருந்தனர். கலகம் உச்சத்தில் நடந்துகொண்டிருந்த பொழுது ஊரின் வடகிழக்கு முனையில் இருளைக் கிழித்தபடி தீயின் நாக்குகள் வளைந்து

நெளிந்து பாம்பைப் போல மேலேறிக்கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்தில் வடமேற்கு முனையிலிருந்தும் தீ எரிந்தது. காய்ந்த சருகாய்க் கிடந்த ஊரில் தீ பட்டவுடன் நாலா திசைகளிலும் பற்றிப் பரவியது.

‘ஊருக்குள்ள தீ புடிச்சிருச்சு யப்போய்...’ என்று கத்திக்கொண்டு ஊரே ஓடையை விட்டு ஊருக்குள் ஓடியது. கலகத்தைப்போலப் பல மடங்கு சத்தத்தை தீயின் நாக்குகள் கூவியபடி எரிந்தன. பிள்ளைகுட்டிகளைக் காப்பாற்ற ஆளாளுக்கு தலைதெறிக்க ஓடினர். ஓடைக்கரை முழுவதும் வெற்றிடமானது.

கல்லெறிந்து ஓய்ந்த தாதனூர்க்காரர்கள் நெடுங்குளத்து திருநீலகண்டனின் உச்சிக்கு மேல் படர்ந்து எரியும் வெளிச்சத்தைத் திரும்பிப் பார்த்தபடி அங்கிருந்து புறப்பட்டனர்.

மறுநாளில் ஆலமரம் களை கட்டியது. போய்வந்த எல்லோரும் கதை பேசத் துவங்கினர். கொடிக்கா வகையறாவின் மண்டையன் பெரியாம்பிள அவ்வப்போது வந்து நிலைமையைக் கேட்டுவிட்டுப் போனார்.

ஆலமரத்தடிக் கூட்டம் எதிர்பார்த்திருந்த தகவல் ஒரு வாரம் கழித்து அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

*

# 69

**காற்றடிக் காலம் துவங்கியது. வெயில் உலர்த்திப்போட்டிருந்த** மண்ணில் மிச்சமிருப்பதை உறிஞ்சி எடுத்துச் செல்ல காற்று வந்தது. செடிகொடிகள் சுருண்டு மடிந்துவிட்டன. கள்ளிச்செடியும் கற்றாழையும்தான் தாங்கிநின்றன. நிற்பதை முட்டித்தள்ளிய படி காற்று வேகமாக் வீசியது; சில நாட்களிலேயே, அது மண்ணில் நிலைகொண்டிருந்த பலவற்றையும் மாற்றிப்போட்டது. இரவும் பகலும் நரி ஊளையிட்டுச் செல்வதைப் போல அது வீசிக்கொண்டேயிருந்தது. ஒரே திசையில் கட்டுக்கடங்காத வேகத்தில் வீசும், பின் சுழன்று அடிக்கும்; கொஞ்சம் வேகம் குறைந்தது போல் தெரியும். ஆனால் ஏமாற்றும். மரமேறி வரும் வேடனைப் பார்த்து கூட்டில் உள்ள பறவைகள் கத்துவதைப் போலக் காற்றின் வேகத்தைக் கண்டு மரங்கள் சத்தமெழுப்பின. உச்சந் தலையைப் பிடித்து உலுக்குவதைப்போல காற்று மரங்களை உலுக்கியபடி இருந்தது. காற்றின் கரங்கள் சிக்கியதை எல்லாம் பிடுங்கி எறிந்தன.

இலந்தை முட்களுக்குள் தூக்கணாங்குருவியின் கூடுகள் சிக்கிக் கிடந்தன. பறவைக் கூடுகள் வெளியெங்கும் சிதறின. வீடுகளின் மேற்கூரைகள் பிடுங்கப்பட்டு குட்டிச்சுவர்களாய் நின்றன. கிணறுகளின் அடியாழத்தில் பாறைகளே எஞ்சின. ஈன்ற மாட்டுக்கும் பால் வற்றியது. காற்றின் தாகம் தீரவில்லை.

அம்மியை நகர்த்திவிடுமோ என்று அஞ்சவைத்தது. கண்மாய் மடைக்கற்களை, கிணற்றுமேட்டில் கமலைகளை ஆட்டிப்பார்த்தது. ஆலமரக் கொப்புகளை முருங்கைக் கிளைகளைப்போல் ஒடித்துப்போட்டது. கண்ணில் படாமல் வீசியது. கண்மண் தெரியாமல் வீசியது.

கபாலி மலையின் செங்கரிசல் மண்ணை எடுத்து வெளிவீதி வரை வீசி எறிந்தது. பொதியும் உவரும் கலந்த மண் காற்றில் அலையலையாய் வந்தபடி இருந்தது. வைகையில் வீசும் காற்று மணல்படுகைகளின்

துகள்களை ஓவியம் போல தனக்குத்தானே வரைந்தபடி எடுத்துச்சென்றது. நாகமலையின் அடிவாரத்தில் கிடந்த சுக்கானையும், சரளையையும் அதனால் தூக்கமுடியவில்லை. ஆனால் அதைக் கடந்து கிடந்த செவல்மண்ணை தோலை உரித்து எடுப்பது போல எடுத்து ஊருக்குள் எறிந்துவிட்டுப் போனது. பூமி காய்ந்து, மரம் செடிகள் எல்லாம் தடுக்க வலுவிழந்து இலைதழையற்று நிற்கிறபொழுது ஆங்காரங்கொண்டு வீசியபடி இருந்தது காற்று.

வறட்சியால் பொசுங்கிப் போயிருந்த கிராமங்களைக் காற்று அடியோடு துடைத்தெறிய முயற்சித்தது. வெப்பம் மனிதனை வாடல் இலைப்போலச் சுருட்டிப்போட்டது. பாறை, நிலம், வீடு, சுவர் எல்லாம் உஷ்ணத்தால் தகித்துக்கிடந்தது. மேற்கே இருந்து உஷ்ணக்காற்று அலையலையாய் வந்த வண்ணமிருந்தது. மனிதர்கள் வீடுகளைத் தாழிட்டு உள்ளேயே சுருண்டு கிடந்தனர். கதவைத் திறந்தால் எரிகற்களை வீசுவதைப்போல காற்று வந்து முகத்தில் அறைந்தது. நிலம் பாளம் பாளமாய் வெடிப்பு விழுந்து பிளந்துகிடந்தது. பாறையைப் போல வெப்பம் கொண்டு மண் கிடந்தது. பாறை நெருப்பைப்போலக் கொதித்தது. மண்ணிலும் பாறையிலும் காலூன்ற முடியாத பறவைகள் பறந்தவாக்கில் மயங்கி விழுந்து செத்தன. செத்துவிழுந்த பறவைகளை மொய்ப்பதற்கு எறும்புகளோ ஈக்களோ இல்லை.

*

**ந**டுமத்தியானத்தில் வடக்கு ஆவணி மூலவீதியில் உள்ள நல்லமுத்து செட்டியாரின் வீட்டு முன்பு சரக்கு மூடைகள் ஏற்றிய மாட்டுவண்டிகள் வந்து நின்றன. தஞ்சாவூருக்கு முதல் தடவை போய்வந்த பிறகு மறுபடியும் போய் இன்று திரும்பியுள்ளன. செட்டியார் அப்பொழுது வீட்டில் இல்லை. செய்தி கேள்விப்பட்டு சின்னக்கடை வீதியில் இருந்து மகிழ்ச்சி பொங்க வந்தார். அவரது சித்தப்பா துரைச்சாமி செட்டியாருக்கும் தகவல் போனது. சிறிதுநேரத்தில் அவரும் வந்து சேர்ந்தார். உச்சிவெயிலில் பூரித்த முகத்தோடு வண்டிகளைச் சுற்றிச் சுற்றி வந்தனர். இருவரும். ‘காத்தெடுக்க ஆரம்பிச்சுடுச்சு. வண்டிக வந்துசேர இன்னும் நாளாகுமோன்னு நெனச்சோம். பரவாயில்ல, அதுக்குள்ள வந்து சேந்துட்டீங்க!’ என்று வண்டிக்காரர்களைப் பாராட்டியபடி பக்கத்துச் சந்தில் இருந்த வீட்டில் பொருட்களையெல்லாம் இறக்கச் சொன்னார் நல்லமுத்து செட்டியார். உள்சந்துவீட்டுத் திண்ணையில் பலகையை எடுத்துப்போட்டு இறக்கப்படும் பொருட்களையெல்லாம் குறித்துக்கொள்ளத் தயாரானார் துரைச்சாமி செட்டியார்.

காற்று வடக்கு ஆவணி மூல வீதியில் பலம் கொண்ட மட்டும் வீசியது. நிறுத்தப்பட்டிருக்கும் வண்டியை மாட்டோடு சேர்த்து மல்லாக்கத் தூக்கிவிடும் வேகத்தோடு வீசியது. மூடைகளைத் தூக்கிக் கொண்டு எதிர்க் காற்றிலே நடந்து உள்சந்துகளில் திரும்பியபடி இருந்தனர் மூடை தூக்கிகள். செட்டியார் மறுபடியும் நிறைய வண்டிகளில் மூடைகளைக் கொண்டுவந்து இறக்கிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி நகரில் பரவ ஆரம்பித்தது. இரவு வரை மூடைகள் இறக்கப்பட்டன. வண்டியிலிருந்து இறக்கும்போது சிந்திய தானியங்களைக் கூட்டிப் பெருக்கி எடுத்துச்செல்ல ஒரு கூட்டம் தயார்நிலையில் நின்று கொண்டிருந்தது. செட்டியார்

குடும்பம் பட்டியக்கல் பதித்த உள்சந்தில் சிந்தியதை அள்ள யாரையும் அனுமதிக்கவில்லை. ஆவணி மூல வீதியில் சிந்தி மண்ணோடு மண்ணாகக் கிடந்தவற்றைத்தான் அள்ளிச்செல்ல அனுமதித்தனர்.

நள்ளிரவுக்குப்பின் பேயாண்டியும் மற்ற இரண்டு பெருசுகளும் வந்தனர். தேக்குமரக் கதவுகளால் பூட்டப்பட்ட வீட்டிற்குள் சரக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வெளித்திண்ணையில் நல்லமுத்து செட்டியாரும் துரைசாமி செட்டியாரும் அவர்களது கணக்குப்பிள்ளையும் உட்கார்ந்திருந்தனர். மஞ்சள் அங்கவஸ்திரமும் சந்தனப்பொட்டும் சிரித்த முகமுமாக நாற்காலியில் சாய்ந்திருந்தார் நல்லமுத்து செட்டியார். கண்கள் பூரிப்பில் மிதந்தன. சரக்கு பற்றிய கணக்குகளையே பார்த்துக் கொண்டிருந்த அவர்கள் பேயாண்டி வந்தவுடன் காவக்கூலி பற்றி பேசத்துவங்கினர். இந்த முறை போனதில் மூன்று பேர் பலியாகியுள்ளனர். இரண்டு வண்டிகளும் அதில் இருந்த பொருட்களும் சூறையாடப்பட்டிருந்தன. அந்த வண்டி யோட்டிகளுக்கும் மற்ற சிலருக்கும் வெட்டுக்காயங்கள் கடுமையாக இருந்தன. இரண்டு நாட்களுக்கு முன்பு வரை வண்டிகள் பத்திரமாகத்தான் வந்தன. நேற்று முன் தின இரவு நத்தம் மலைப்பள்ளத்தாக்கு பகுதியில்தான் தாக்குதல் நடந்துள்ளது. காற்றுபலமாக வீசியதால் வண்டிகளை ஓட்டிக்கொண்டு திட்டமிட்டபடி கீழிறங்க முடியவில்லை. மாடுகள் இழுக்க முடியாமல் திணறியதால் மலைப்பகுதியிலேயே இரவு தங்க வேண்டிவந்தது. திடீரென ஒரு கொள்ளைக்கூட்டம் தாக்கியது. தகுந்த பாதுகாப்போடு வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கணித்து தாக்குதல் நிகழ்த்தப்பட்டதால் காவல்காரர்களுக்கு இழப்புகள் கடுமையாக இருந்தது. தாக்குதல் நடந்த இடம் மலைப்பகுதியாதலால் சரக்குமூட்டைகள் எளிதில் இருட்டுக்குள் மறைந்து போயின. வெட்டுப்பட்டு விழுந்த ஐந்து பேரில் மூவர் காவக்காரர்கள் என்பது விடிந்தபிறகுதான் தெரிந்தது. மற்றவர்கள் காயங்களுடன் திரும்பியிருந்தனர். இந்தக் கடும் வறட்சிக் காலத்தில் சிறிய பொருள் இழப்புடனும் மூன்று பலியுடனும் மட்டும் இவ்வளவு சரக்குகளை கொண்டுவந்து சேர்த்ததென்பது பெரிய வெற்றியாகவே கருதப்பட்டது.

இறந்த மூன்று பேரின் குடும்பத்திற்கு பொன்மேனிக்குப் பக்கத்தில் நிலம் விடுவதாகவும் ஒரு வருடத்திற்குத் தேவையான உணவு தானியங்களைத் தருவதாகவும் செட்டியார் சொன்னதைப் பேயாண்டியும் மற்ற இருவரும் ஏற்றுக்கொண்டனர். மற்றவர்களுக்கெல்லாம் பேசப்பட்ட கூலியின் அடிப்படையிலான பொருட்களை நாளைக்கு தாதனூருக்கு வண்டியில் அனுப்பிவைப்பதாகவும் செட்டியார் சொன்னார். கணக்குப்பிள்ளை கணக்குகளைச் சொல்ல துரைச்சாமி செட்டியார் எண்ணிக்கையை சரிபார்த்தபடி இருந்தார். வீட்டிற்குள் சரக்குகள் குவிந்துகிடப்பதன் வாசனையை வெளித்திண்ணையில் கூட முகரமுடியவில்லை. அவ்வளவு கச்சிதமாகக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. பேயாண்டியும் மற்ற இருவரும் போய்வருவதாகச் சொல்லிப் புறப்பட்டனர். தீவட்டியை ஏந்திப் பிடித்து மண்ணை சொளகில் சலித்தபடி அந்தத் தெரு முழுவதும் பெண்கள் உட்கார்ந்திருந்தனர். இரவு முழுவதும் காற்று தூசியை அள்ளி வீசிக்கொண்டேயிருந்தது.

**ம**றுநாள் பொழுது சாயும் நேரத்தில் கருப்பு கோயிலுக்கு செட்டியார்

அனுப்பிவைத்த மாட்டுவண்டிகள் இரண்டும் வந்துசேர்ந்தன. கம்பு, சோளம், சாமை, குருதவாலி, வெல்லக்கட்டி என்று சரக்கு மூடைகளில் இருந்தன. வண்டிக்காவலுக்குப் போனவர்கள் மூடைகளை ஆலமரத்தடியில் இருந்து தூக்கி மந்தைக்குக் கொண்டு வந்தனர். இறந்துபோன மூன்று பேரின் குடும்பத்திற்கான மூடைகளை முதலியே பிரித்து அவர்களின் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ந்தனர். அதன்பின் காவலுக்குப்போன மற்றவர்கள் தலைவாரியாக தங்கள் பங்கினைப் பிரித்து எடுத்துக்கொண்டார்கள்.

கருப்பு கோயிலுக்கு வண்டி நிறையப் பொருட்கள் வருவதாக இருந்தால் அது நடுச்சாமத்தில்தான் இழுத்துவரப்படும். அல்லது மசமசன்னு விடியிறத்துக்கு முன்னாடி கோழி கூப்பிட வண்டிகள் வந்துசேரும். அப்படி வந்து சேருகிற வண்டிகள் பொருட்கள் இறக்கப்பட்டபின் திரும்பிப் போகாது. வீட்டு விறகுக்காக நொறுக்கி எடுக்கப்பட்டுவிடும். ஆனால் அன்று பகல்பொழுதில் சரக்குகளுடன் இரண்டு வண்டிகள் வந்ததென்பதும் சரக்குகள் எல்லாம் இறக்கப்பட்டபின் அந்த வண்டிகள் திரும்பிப்போவதென்பதும் அதிசயம் போல் நடந்தது. வண்டித்தடமே பதியாத பாதையைக் கொண்ட இந்த ஊருக்கு முதலாவதாக வந்துசெல்லும் வண்டியே நம்முடையது தானோ என்று எண்ணிக்கொண்டே வண்டியோட்டிகள் வெளியேறினர். போனமுறை மூடைகள் கழுதைகளில் வந்திறங்கின.

ஊர் நல்லநாளைப் போல களை கட்டத் துவங்கியது. மூடைகளை வீட்டிற்குத் தூக்கிப்போவதும், அங்கே வைத்துப்பிரிப்பதும் தானியங்களைச் சிந்தாமல் சிதறாமல் குதிருக்குள் போடுவதுமாக இருந்தனர். சிறுவர்கள் உற்சாகத்துடன் ஓடியாடிக்கொண்டிருந்தனர். இந்த வறட்சியான காலத்தில் இப்படி மொத்தமாக தானியங்களைப் பார்க்க இன்னும் எத்தனை காலம் ஆகுமோ என்ற ஏக்கம் சந்தோஷத்திற்கு ஊடேயே குமிழ் விட்டுக்கொண்டிருந்தது. பெண்கள் விளக்கை ஏற்றிவைத்து தானியங்களை உலைமூடிகளை வைத்து அள்ளி குதிருக்குள் போட்டு நிரம்பிக்கொண்டிருந்தனர். வெட்டுக்காயம் பட்டவர்கள் சாராயம் குடித்துக்கிடந்ததால் செட்டியார் அனுப்பிவைத்த எண்ணெய்யைக் காலையில் குடித்துக் கொள்ளலாம் என்று சட்டியில் ஊற்றித் தனியாக எடுத்துவைத்தனர்.

ஊர்மந்தையிலும், கருப்பு கோயில் ஆலமரத்தடியிலும் இரவு முழுவதும் காவலுக்குப் போய்வந்த கதையை ஆண்கள் பேசிக்கொண்டேயிருந்தனர். காலையில் கிடைக்கப்போகும் சாமச்சோறும் குதிரைவாலிச் சோறும் அவர்களை தயார்ப்படுத்தியிருந்தது. பெண்கள் தலைமுடியை அள்ளிச் சுருட்டிக்கொண்டு இரவு முழுவதும் வேலை செய்தபடி இருந்தனர். குதிரைவாலி தானியத்தைக் குத்தி உமி நீக்கவேண்டும். காயப்போட்டு குத்தினால் வேகமாகத் தொலி கழறும். ஆனால் இப்பொழுது அதற்கெல்லாம் நேரங் கிடையாது. காலையில் கஞ்சி காய்ச்சியாகணும். எனவே இரண்டு இரண்டு பெண்களாகப் பொது உரலில் குத்த ஆரம்பித்தனர்.

ஊருக்குள் இரண்டு இரும்புக் குந்தானியும், ஏழெட்டுப் பெரிய உரலும், பத்துக்கும் மேற்பட்ட சின்ன உரலும் கிடந்தன. அவை எல்லாவற்றையும் மந்தையோரமும் கொம்பூதிபுளியமரத்தின் கீழும், தெற்குக்கடைசி

வீட்டோரமுமாக மூன்று இடங்களில் போட்டு விடிய்ய விடிய்ய குத்தினர்.

குமரிப்பெண்கள் வேகவேகமாகக் குத்திக் களைத்துப் போயினர். நடுவயதுப் பெண்கள் நிதானமாக நீண்ட நேரம் குத்திக்கொண்டே அவர்களை சாடை பேசி வம்புக்கிழுத்தனர். கிழவிகள் கீழே கால் நீட்டி உட்கார்ந்து பொடச்சு பொடச்சு உரலுக்குள் போட்டப்படி நின்று குத்திய எல்லோரையும் உண்டு இல்லை என்று ஆக்கிக்கொண்டிருந்தனர். மந்தையோரமாக உரல்களைப் போட்டுக் குத்திய கூட்டத்தில் பெரிய மனுஷி ஒச்சாயிக் கிழவிதான். அவள்தான் உலக்கையின் கைமாறுகிற வேகத்தில் வார்த்தையை மாற்றிப்போட்டு சபையை நடத்திக்கொண்டிருந்தாள்.

‘ஏ... கொமரிகளா, தெறங் கெட்டவள்களா! வெரசா குத்துங்கடி, நீங்கல்லாம் எப்படி புருசெ வீட்டுல போயி இருக்குப் போறீங்களோ...அவங்கெ என்னைக்கு உங்கள வெரட்டப் போறாங்களோ!’

‘அவங்கெளுக்குத்தாண்டி நாங்க பயந்துகிட்டு இருக்கோம். ஏ...கெழவி அவங்கெ எங்கள அடுச்சு வெரட்டுறாங்களா, இல்லாட்டி நாங்க அவங்கெள அடிச்சு வெரட்டப்போறமான்னு பாரு நீயி.’

‘குத்துங்கடீ, ஏ... சக்களத்தியா! இப்படி வெட்டியா பேசிக்கிட்டேயிருந்தா எப்பிடீ...குத்தங்கடி வெரசா.’

‘நாங்கள்ளாம் சடச்சி பேத்தியாளுக, ஒன்ன மாதிரி வாக்கப்பட்டு வந்தவளுக இல்லை!’

‘மட்டப் பிள்ளைகளெ... இப்படி சட்ட பண்ணிக்கிட்டு திரியாதீக, நீங்கல்லாம் எங்க போயி...எப்படி சீரளுஞ்சு வரப் போறீங்களோ...பாக்கத்தானே போறேன். ஏ...ஒழுவாடீ மகளே, அவள விட்டு குத்த விடுங்கடீ, சரடு கட்டிட்டு வந்த புதுப் பொண்ணு குத்தட்டும். நீ எதுக்கு குத்துறவ!’

‘எதுக்கு... புதுப்பொண்ணுக்கு மட்டும் நாலு கையி இருக்காக்கும், ஏ...க்கெழவி உன்னப்போல எத்தனை கெழவிய பாத்தவ நானு, பேசாம பொடச்சுப் போடுவியா, இந்த நீட்டு நீட்டுற...’

‘ஏ...மொட்ட புருசெ மகளெ...ஒரு சொலவம் சொல்றெ கேளு, வெறுங்குட்ட உடயக்கா, கொடிய கட்டி திருழா பாத்தாளாம். அந்தகொடி அந்து எங்கிட்டு போச்சுன்னு தெரியலடீ...’

‘நான் சொலவம் சொல்றேன், நீ கேளு. சாணிச் சட்டியும் சருவ சட்டியும் ஒண்ணாம். சாட பேசுற கெழவி வாயில மண்ணாம்.’

‘ஏன்டி ஆத்தா இம்புட்டு வெடுக்கின்றவ?’ என்றாள் விருமாயி.

‘கொறவெ வச்சு காது வளக்காத ஊருக்காரிக்கே இம்புட்டு வெரசா?’ என்றாள் பக்கத்து உரலில் நின்று குத்திக்கொண்டிருந்த பேச்சி.

அவ்வளவுதான், உரலடி வாதங்கள் சூடுபிடித்தன.

‘நெல்லு சோத்துக்கு வெஞ்சனங் கேக்குற ஊருக்காரீடி நானு...அதமறந்துறாத!’

‘தெரியும்...தெரியும்...வண்ணான் பொறத்துல சீலையைப் போட்டு

கொக்கு பொறத்துல அலையுறவளுக தான?' என்றாள் கிழவி.

'எங்க ஊரு வண்ணானப் பத்தி பேசாத, சீமையில் இல்லாத துணியக்கூட ஆகாச நெறத்துக்கு வெளுத்துக்கொடுக்குறதுல இந்த சுத்துப்பட்டில அவன மிஞ்சு ஆள் கெடையாது' என்றாள்.

'ஆமாம்மா...உங்க ஊரு வண்ணானையும் தெரியும், வண்ணாத்தியையும் தெரியும்...விடிய்...ய வெளக்கமாத்த எடுத்துக்கிட்டு மந்தைக்கு வருவாளம்ல்ல, எவன்டா... ராத்தீரி ஏங் கழுதக்கிட்ட வந்தது சொல்லுங்கடான்னு' என்றாள்.

பேச்சு வெள்ளாவிப் பானையிடம் வந்து நின்றது. துறைக்குப் போய்க்கட்டினாலும் விடாத கழுதை ஏறிகளைப் பற்றி ஆளாளுக்குச் சொல்ல ஆரம்பித்தினர். 'என்ன மருந்தோ... மாந்தரமோ...இப்படி அலையுறாங்கெ எடுவட்ட பயலுக' என்றாள் கிழவி.

'கக்குவானுக்கு கழுதப்பால் நல்லதுன்னு நம்மகிட்ட சொன்னாங்கெ. இவங்கெ கிட்டமட்டும் வேற ஒண்ணு நல்லதுன்னு சொல்லிபுட்டாங்கெ போல' என்றனர். மந்தையில் வைத்து அபராதம் கட்டிய கிழவன்களைப் பற்றியும், கழுதையிடம் உதைவாங்கி மாதக்கணக்கில் வீங்கிக்கிடந்த இளவட்டங்களைப் பற்றியும் விடிய விடியப் பேசினர்.

'அது போன பாதையில கா வாசி தூரம் போனதுக்கு இம்புட்டு அபராதமா?' என்று வில்லங்கமாய் கேட்ட செட்டியபட்டி கிழவனைப்பற்றி ஒச்சாயி கிழவி சொன்னபோது உரல் குலுங்கிச் சிரித்தது.

கழுதைகளின் கதையை விலாவாரியாகப் பேசி முடிவுக்கு வந்தனர். ஆனாலும் குத்திப் புடைக்க வேண்டிய தானியங்களின் அளவு குறைவது போல் இல்லை. பேச்சு அடுத்த கொப்பிற்கு தாவவேண்டி இருந்தது. 'வேறென்ன?' என்று இழுத்தாள் கிழவி.

'தெக்குத்தெரு மூக்கி கதைய்ய கேளு, கெழவி வெளக்கமா சொல்லுவா' என்று பக்கத்திலிருந்த குமரிகளைத் தூண்டிவிட்டாள் பேச்சி.

குமரிகள் ஒச்சாயிக் கிழவியை மூக்கியின் கதையைச் சொல்லுமாறு நச்சரிக்க ஆரம்பித்தனர். 'இவளுக யாருடீ...எப்ப போன கதைய்ய இப்ப வந்து கேக்குறாளுக...வுடுங்கடீ வேற பேச்சு பேசுவோம்' என்றாள்.

யாரும் விடுவது போல் இல்லை. ஒரு கட்டத்தில் குத்துவதை நிறுத்தினர். 'இப்ப நீ சொல்லல ஒரே போடா போட்டுட்டு போயிடுவோம்' என்று மிரட்ட ஆரம்பித்தனர்.

'சொல்றேன்டி யா...த்தா, சொல்றேன்' என இழுத்து கதையைத் துவக்கினாள்.

'அப்ப நானு முதலக்குளத்துல வாக்கப்பட்டிருந்தேன். புருஷன சாகக் கொடுக்கல்ல. ஊர் மெச்ச வாழ்ந்தோம். அப்பத்தான் சொராக்கா பட்டியில பொறந்த மூக்கி முதலக்குளத்துக்கு வாக்கப்பட்டு வந்தா. ஊரே கூடி நல்லநா கணக்கா விருந்து வச்சு, சரடு கட்டி முடிச்சோம். முடிச்சா...ரெண்டு நாளாச்சு...மூணு நாளாச்சு...நாலு நாளாச்சு ஒண்ணும் கசங்காம மசங்காம இருந்தா. என்னடீன்னு கூட்டி போயி விசாரிச்சா 'அவெ ஒரு மாதிரியா வர்றான்...மொரட்டுத்தனமா புடிக்கிறான். இந்த பொழப்பே வேணாமாத்தான்னு அழுதா' ஏ!கிறுக்குச் சிறுக்கி, என்னடீ என்ன

சமாச்சாரமுன்னு வெளக்கமா கேட்டாதான் விஷயம் புரியுது. கூட இருந்தவ பூரா புருஷெகாரன பத்தி என்னனென்னமோ சொல்லி வச்சுபுட்டாளுக. ‘அவென் கழுத கணக்கான்றுக்கா ஒருத்தி’ ‘அவச்ச நெல்ல குத்தறவன்டி அவெ’ ன்றுக்கா எதுத்த வீட்டுக்காரி. இப்பபடி ஆளாளுக்கு சொல்லி அவள அரட்டிப்புட்டாளுக. அவெ புருஷங்காரெ வீட்டுக்குள்ள வந்தா போதும் பிடுங்கி அடிச்சு வெளியில ஓடிவந்துர்றா. அப்புறம் அவள தேத்தி ஒண்ணுமில்லடீ தைரியமா இருன்னு சொல்லிப்புட்டு அந்த எடுவட்ட பயல கூப்ட்டு ‘ஏலேய்...மொட்டுக்கட்டபயலே, நீ என்ன தீத்தவளயா சரடு கட்டி கூட்டிவந்த? இது உழுகாத வயக்காடுடா, எடுத்த எடுப்பிலே அமுக்கி உழுகணும்னு நெனச்சீன்னா கலப்பையும் சேதப்பட்டு போகும், மண்ணும் பெறளாது. பதம் போயிரும். மே ஓட்டா ஓட்டி, அப்புறம் கலப்பய எடுத்துக்கட்டி, மேழிய அமுக்கி பிடிக்காம மெல்ல பிடிச்சுக்கிட்டு அது நோக்கத்துக்கு மாட்டபோக வுடு, போறப்பா அதுவா கிழிச்சுக்கிட்டு போகும். ரெண்டு ஓட்டு மூணு ஓட்டுல தன்னால புழுதி கெளம்பிரும். அப்புறமா ஒ நோக்கத்துக்கு கலப்பய வுட்டுக்கட்டி, மேழிய அமுக்கி பிடிச்சு, நீ எப்படி தட்டி ஓட்டுனாலும் சரி, வெள்ளாம புடிக்கும். அத வுட்டுட்டு எடுத்த எடுப்பிலோ நாஅமுக்கித்தான் உழுவே, கலப்பய வுட்டுக்கட்டிதா உழுவேன்னு சொன்னைன்னா...கேனப்பயலே எதுக்கும் ஆகாம போயிடும்டான்னு’ சொன்னெ.

அப்புறமா இவள கூப்புட்டு ‘ஏ...சிறுக்கி மகளே, பொம்பளயா பொறுந்துட்டோம். இவென் இல்லாட்டி இன்னொருத்தனுக்கு வாக்கப்பட்டுத்தா ஆகணும். சட்டியில பணியாரத்த ஊத்திட்டா சிலுக்கனியவிட்டு பொறட்டிதான் ஆகணும். காயப்பட்டு போகும்னு நெனச்சா என்னைக்குத்தான் பணியாரத்த எடுக்குறது. புள்ளத்தாச்சி ஆகணும்படி...இல்லாட்டி மலடின்னு பேராகிப் போகும். பொம்பளைக்கு இதெல்லாம் இருக்கப்பட்டதுதாண்டி. ஒழுங்கா இருந்து பொழச்சுக்கோன்னு’ சொல்லி அவள சரிக்கட்டி குடும்பம் நடத்த வச்சோம். அப்புறமா ஒன்னுமன்னா சேந்துச்சு. அவனால முடிஞ்சதெல்லாம் செஞ்சுருக்காண்டி. சரி நல்லாபொழக்குதுன்னு நெனச்சிருக்கிருந்தோம்.

ஏ...யாத்தே, ஒத்த புள்ள பெத்து முடிக்கல. அதுக்குள்ள பஞ்சாயத்த கூட்டிட்டா ‘என்னடீ என்னாச்சுன்னு’ நா போயி விசாரித்தேன். ‘அதெல்லாம் பஞ்சாயத்துல பேசிக்கிருவோம்‘ அப்டீன்னுட்டா. அவெனப் போயி கேட்டேன் ‘ஆத்தா அதக் கேக்காத ஆத்தா...வெளியில சொன்னா வெக்கக்கேடு’ அப்படீன்ட்டா. சரி வுடுன்னு சொல்லி பஞ்சாயத்துல போயி ஒக்காந்துட்டோம்.

‘என்னம்மா... என்ன விஷயம்‘ அப்படீன்னு பஞ்சாயத்துக்காரங்க கேட்டாங்க. தீத்து வுடுப்பா. இனி ஒட்டாதுன்னுட்டா.’ தீக்குறதுக்கு காரணத்த சொல்லும்மான்னு கேட்டாங்க. ‘அதெல்லாம் என்னாத்துக்கு? புடிக்குல தீத்து வுடு’ அப்படீன்னா, ‘என்ன காரணமுன்னு பஞ்சாயத்துல சொல்லித்தாம்மா ஆகணும், காரணத்த சொல்லு’ன்னு வுடாம கேட்டாங்கெ.

கடைசியில சொன்னா. ‘சேவ மிதிக்குதுப்பா!’

பஞ்சாயத்து காரங்கெளுக்கு ஒண்ணும் புரியல. சேவ மிதிக்துன்னா என்னம்மா அர்த்தம்னு கேட்டாங்கெ. ‘இது தெரியாம நீங்க என்னடா

பஞ்சாயத்து பண்றீங்க, வெக்கங் கெட்டவங்கெளா... சொரைக்காம்பட்டி பஞ்சாயத்துக்கு வாங்கடா' அப்படீன்னு சொல்லி அவெ பொறந்த ஊருக்குப் போயிட்டா.

அப்புறம் நாங்கெல்லாம் சொரைக்காம்பட்டி பஞ்சாயத்துக்கு போனோம். அங்க அவெங்க விசாரிச்சாங்கெ, இங்க மாதிரியே சேவமிதிக்குதுப்பான்னு சொன்னா. அவ்வளவுதான், இனி ஒண்ணும் செய்யமுடியாது தீத்து வுடுன்னுடாங்கெ. சரியப்பா தீத்துக்குறோம். அவசொன்னத்துக்கு என்னப்பா அர்த்தம்னு கேட்டோம். 'இது தெரியாதா ஒங்களுக்கு? சேவ மாதிரி ஏறனதும் எறங்கிறான்னாம்'னு சொன்னாங்கெ. அட தட்டுக்கெட்ட சிறுக்கி! ஆழம் பத்தாதுன்னு அழுதுக்கிட்டு கெடந்தவ ஒத்த வருஷத்துல நீளம் பத்தாதுன்னு தீத்துட்டு போயிட்டாளேன்னு பொழம்பிக்கே...குச்சியெடுத்து ஒடச்சு முறி கொடுத்துட்டு வந்து சேந்தோம்' என்றாள் கெழவி.

கதை கேட்டபடி குமரிகள் குத்தும் உலக்கை உரலைப் பிளந்து உள்ளிறங்கிக் கொண்டிருந்தது. கலகலப்பின் ஊடே பேச்சின் சுவாரஸ்யம் உச்சத்திற்குப் போனது. கெட்டிகாரப் பொம்ப ளைகளைப் பற்றியும், தெரங்கெட்ட ஆம்பிளைகளைப்பற்றியும் மாறி மாறிப் பேசினார்கள். 'ஓம் புருஷெ பெரிய கெட்டிக் காரனாம்லடீ' என்று விருமாயியை பார்த்து பேச்சிகேட்டாள். 'அவெங் கெடக்கான் தூமச்சீல...எடங் கண்டுபிடிக்கவெ எட்டு நாளாச்சு'ன்னு பதில் சொன்னாள். சிரிப்பின் அதிர்வொலி உரலை முட்டி நகர்த்தியது. 'பொம்பளய மிஞ்சுன ஆம்பிள இருக்கானாடி?' என்று கிழவி கேட்டபொழுது கூட்டம் பெருமிதத்தோடு எவனும் இல்லை என்ற முடிவுக்குப் போனது.

**ஊ**ரின் தெற்கு கடைசி வீட்டோரம் உரலைப் போட்டுக் குத்தி புடைத்துக்கொண்டிருந்த கூட்டமும் கலகலப்புக்கு பஞ்சமில்லாமல் தானிருந்தது. வெட்டவெளியில் இருந்து பகலின் சூட்டை வாங்கி வைத்துக்கொண்ட காற்று வெக்கை குறையாமல் இரவெல்லாம் வீசியது. உரலுக்குப் பக்கத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்து பெரிய்ய கெழவி சொன்னாள் 'மாடக்குளம் கண்மாயிக்கு மேற்க மொச்சப்பயறு, கானப்பயறு, கல்லுப்பயறு, வெடிமுத்து பயறு எல்லாம் வெள்ளாம செஞ்சது நிறுத்திப்புட்டு ரெண்டு வருஷமா வேற வெள்ளாம செஞ்சாங்கெ, சிட்டுக் குருவிக்கு பொச்சு வெடிச்ச மாதிரி மாருல பூராம் பருத்தி வெடிச்சி கெடந்துச்சு, போன வருசம் அதுவும் வெடிக்கல, மாரு மட்டுந்தான் மிச்சம். இந்த வருஷம் செடியே வளரல... என்னெண்டு காடுகார வெளஞ்சு சனக்காடு பொழைக்கப் போதோ...' என்று இழுத்தாள்.

'ஏ...கெழவி, கை வலிக்காம குத்த நாலு சொலவட சொல்லுன்னா, நீ என்னமோ... வெளாச்சேரி ஐயருக்கு வாக்கப்பட்ட மாதிரி வெள்ளாமைக்காக சலுச்சுகிற...' என்றாள் ஒரு குமரி.

'தெனமும் மேலு குளிக்கிற மேனாமினுக்கிகளுக்காக நா எதுக்குடி வருத்தப்படுறே? மாடு கன்டெல்லாம் சாகப்போகுதேன்னு தான் சங்கடப்படுறேன்' என்றாள்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது சருவத்தில் தானியங்களோடு பேயம்மாள் வந்து கொண்டிருந்தாள். அவள் வந்தால் சொலவடைகளின் ஆடுபுலியாட்டம் ஆரம்பமாகிவிடும். கிழவிகளுக்கு இளைக்காமல்

சொலவம் சொல்லும் கெட்டிக்காரி அவள். வயித்துப்பிள்ளக்காரியாக இருந்ததால் அவள் வந்ததும் 'நீ ஓரத்துல உக்காந்து பொடச்சு மட்டும் போடு...' என்று சொல்லி உட்கார வைத்தனர். பெருமூச்சோடு 'மல்லப்புரம் கல்லுப்பட்டி மாதரக்கோட்ட... அங்க இருந்து இங்க வந்த சீப்பட்டக்கோட்ட..., என்றாள்.

'அடுப்பு நக்கி, துடுப்பு நக்கி...அடுப்பாங்கர சாம்ப நக்கி...எந்த ஊரப் பாத்து, என்ன பேச்சு பேசுற?' என்றாள் பெரிய்ய கிழவி.

'என்னடீ ஆத்தா இம்புட்டு வெரசா வர்ரா கெழவி!' என்றாள் பேயம்மாள்.

'எல்லோரும் படுத்துத்தான் பிள்ள பெறுவாளுக, நீ என்னாடீ, தொட்டாலே பெத்தருவ போலிருக்கு?' என்று வருஷந்தவறாமல் பிள்ள பெத்துக்கொண்டிருந்த பேயம்மாளை பார்த்துக்கேட்டாள் ஒச்சாயி.

அதற்கு பேயம்மாள்,

பெத்த பெத்த பூசணிக்கா...
　　பேரு பெத்த பூசணிக்கா...
என்னா கஞ்சிக்கு வாக்கப்பட்ட, நான்
　　நெல்லுக்கஞ்சிக்கு வாக்கப்பட்டேன்
நெல்லு சவுட குத்தி எடுக்க
　　முத்தொலக்க வேணும்
முத்தொலக்கையை தேடி எடுக்க
　　வீட்டுக்குள்ள போனேன்
உள்ள இருந்த எடுவட்ட பய
　　ஒலக்கையோட எந்திருச்சான்
ராவெல்லாம் பகலாச்சு
　　பகலெல்லாம் பொடவாச்சு
ஊருக்குள்ள வீடிருந்தும்
　　வீட்டச்சுத்தி ஆளிருந்தும்
ஒரலுஇடி வாங்குற சத்தம்
　　ஊருக்கு கேக்கலையே...
பெத்தபிள்ள கத்துற சத்தம்
　　ஒலக்கைக்கு கேக்கலையே...

பேயம்மாள் கொட்டிய வார்த்தைகள் எல்லாப் பக்கமும் சிரிப்புகளைச் சிதறவிட்டு சொலவடைகளைக் கிளறிவிட்டது. கால்நீட்டி உட்கார்ந்து புடைத்துப் போட்டுக்கொண்டிருந்த கிழவிகள் பேயம்மாளோடு கதை போடத் தயாராயினர்.

பெண்களின் சிரிப்பும் கேலியும் சாடைப்பேச்சுமாக இரவு ஓடிக்கொண்டிருந்தது. குத்தி முடிக்கப்பட்ட குருதவாலியை உரலுக்குள் இருந்து அள்ளி எடுத்துப் புடைத்து அரிசியைச் சிந்தாமல் சிதறாமல் முத்துகளைப் போல சட்டியில் போட்டனர்.

வெளிச்சத்திற்காக உரலுக்குப் பக்கத்தில் ஏற்றப்பட்ட விளக்குகள் காற்றில் அணைந்துவிடாமல் இருக்க, சின்னஞ் சிறுசுகள் கற்களை எடுத்து

வந்து அடுக்கி அணைப்புக் கொடுத்துப் பாதுகாத்தனர். நாய்கள் காற்றை விரட்டி விரட்டிக் குரைத்துக்கொண்டே இருந்தன. காற்று திரியில் இருந்த நெருப்பைக் கிள்ளி எடுத்துப் போனது. இரவு முழுவதும் காற்றோடு போராடிய சிறுசுகள் அதிகாலையில் அடுப்பெரிக்க கங்குவாங்கிவந்து கொடுத்து விட்டுத்தான் தூங்கினர்.

கருப்பு கோயில் ஆலமரத்தடியில் படுத்துக்கிடந்த ஆண்களின் பேச்சு இரவு முழுவதும் சாப்பாட்டைப் பற்றியே நீண்டது. குருதவாலிச் சோத்துக்கு மீன் குழம்பு சாப்பிட்டா எவ்வளவு நல்லா இருக்கும் என்றான் தெற்கு ஓரத்தில் படுத்துக்கிடந்த ஆங்கன். ‘குடிக்க தண்ணியில்லாம சனக்காடு செத்துக்கிட்டு கெடக்கு, இப்ப போயி எந்த குளத்துலடா மீனப்பிடிப்ப?’ என்றார் ஒரு நடுவயதுக்காரர்.

‘பேச்சுக்கு சொன்னேனப்பா...மீன நல்லா மஞ்சட்டியில போட்டு உரசி எடுத்து, பட்ட வந்தலு, புளியங்காய் தட்டிப்போட்டு, அஞ்சாறு உப்ப அள்ளிப்போட்டு, கொத்திக்க எறக்கி, குருதவாலி சோத்த உருட்டிக்கிட்டு அடிச்சா... தாயோளி... அதுதான்டா அமுர்தம்’ என்றார் ஆங்கன்.

விழுதொன்றில் சாய்ந்தபடி பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்த ஒரு பெருசு ‘உருட்டிக்கிட்டு சாப்பிறதெல்லாம் சாப்பாடா? சாப்பாடுன்னா எப்படி சாப்படணும்னு தெரியுமா! நம்ம அமண மலையளவு சேர்த்த குவிச்சுக்கிறனும். கூத்தியார்குண்டு கம்மா அளவு கறிக்கொழம்பு இருக்கணும். அதுக்கும் இதுக்கும் பொருத்தவிட்டு, நடுவ்வுல வாய்க்காவெட்டி கொண்டுவரணும். காவாலி மல இருக்கு பாரு. அது மம்பட்டியா இருக்கணும். சும்மா சுண்ணாம்ப கொழச்சு சாந்த அடஞ்ச மாதிரி வயித்துக்குள்ள அள்ளி எறியணும்டா... அத வுட்டுட்டு உருண்டயா உருட்டி சாப்பிறதெ பேசவந்துட்டாங்கெ...’ என்றார்.

பேச்சு முழுவதும் சாப்பாடு பற்றியே இருந்தது. நல்ல நாளில் வேற என்னத்தெ பேச? ‘மாமெ மச்சாங்கெல்லாம் காலையில சாப்பிட வந்திருங்கப்பா’ என்று வண்டிக் காவலுக்குப் போனவர்கள் சாயந்தரத்தில் இருந்து எல்லாரையும் கூப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

‘எங்கள கூப்புறது இருக்கட்டுமப்பா, மாயாண்டிப் பெருசு போய்கூப்பிடுங்கடா மொதல்ல!’ என்றார் மொக்கராசு.

‘அவர கூப்பிடாமலாம்பா!’ என்று சொல்லி மாயாண்டியைக் கூப்பிடப் போனார்கள்.

ராத்திரி முழுதும் மாயாண்டிப் பெருசை ஆட்கள் மாறி மாறி கூப்பிட்டுக்கொண்டே இருந்தனர். ‘விடியட்டும்டா மாப்பிள்ளைகளா!’ என்று பதில் சொல்லியபடியே இருந்தார்.

காற்றின் வேகத்தில் இரவு அடித்துச் செல்லப்பட்டது. மெல்லிய ஒளி ரேகைகள் வானில் பரவி விரியத் துவங்கின. பறவைக் குரல்கள் இருளின் கடைசிப் படிக்கட்டுகளில் விழுந்து சிதறித்தெறித்தன. குருதவாலியின் ஒன்பதாவது உமி கழட்டப்பட்டதுபோல, இரவு தனது கடைசி நாழிகையைக் கழற்றிவிட்டது. மதுரைக் காவலுக்குப் போனவர்கள் ஒருவர் இருவராக தாதனூரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். இரவு முழுவதும் குத்திய உலக்கைகள் மூலையிலே சாய்ந்துவிட்டன. அடுப்பில் திணிக்கப்பட்ட மாருகள் படபடவென பற்றியெரியத் துவங்கின.

சாமச்சோறும், குருதவாலிச் சோறும் ஊர் முழுவதும் மணக்க ஆரம்பித்தது.

*

**ம**துரைக் குடிக்காவக்காரர்களையும், செட்டியாருக்கு வண்டிக் காவலுக்குப் போய்விட்டு வந்தவர்களையும் தவிர, தாதனூரில் வேறு ஆண்களே இல்லை. கிராமக் காவலுக்குப் போய்த் திரும்பியவர்களும் சரி, சொந்தம்சுருத்து என வந்தவர்களும் சரி எல்லோரும் களவுக்கு ஆளுக்கு ஒரு திசையில் போய்விட்டனர். உயிர் வாழ்வதே பெரும் சவாலாக இருந்தது. நல்லவேளை வெள்ளக்காரன் ரயில் வண்டி கொண்டு வந்தது. களவுக்காக, வடக்கே வெகு தொலைவுக்குப் போய் மீண்டும் ஊருக்குத் திரும்ப ரயில் வசதியாக இருந்தது. நடந்தே போவதென்றால் போய்ச் சேரவே மாதக்கணக்கில் ஆகும். பெரும்பொருளை அமுக்கிவிட்டால் அதை ஊருக்கு கொண்டுவந்து சேர்ப்பது சாமான்ய வேலையல்ல. அதுவும் இந்தப் பஞ்சகாலத்தில் அதற்கே உயிர்ப்பலி கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் இப்போது அப்படியல்ல, ரயில் இருக்கிறது. ‘அஞ்சாறு நாள் ஓட்டத்திலே எட்டப் போயிரலாம். அந்தப் பக்கம் பத்து நாளோ ஒரு மாசமோ இருந்து வேலையெல்லாம் முடிச்சுட்டு அப்புறம் திரும்பவும் ரயில் ஏறி மதுரைக்கு வரவேண்டியதுதான். ‘வெள்ளைக்காரர்கள், காசுக்காரர்கள்தான் ரயிலைப் பயன்படுத்தினர். அதுவும் அவ்வப்போதுதான். அவர்களைத் தவிர மதுரையில் ரயிலில் அதிகம் போனவர்கள் தாதனூரில் இருந்தார்கள்.

தங்களின் ஓட்டத்திற்கு ஈடான ஒன்றாக ரயிலும் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்ட அவர்கள் இரும்புப் பட்டையில் உருண்டோடும் அந்த கரும்புகைப் பிசாசைக் களவின் வாகனமாக மாற்றினர். இருட்டுக்கும் கருப்புக்கும் இடையே தங்களுக்கான இடத்தை ரயில் பெட்டிகளின் வழியேயும் அவர்கள் கண்டடைந்தனர். ரயில் பற்றிய பயம் ஊரெங்கும் பரவிக்கிடக்க, பயமற்ற களவு ரயிலேறிச் சென்றது. கரும்புகையைக் கக்கியபடி வந்துநின்ற வண்டிகளில் இருந்து இறங்கி, புகையினூடே நுழைந்து எங்கோ மறைகிற அவர்கள் சில நாட்களோ வாரங்களோகழிய மீண்டும் புகையினூடே நின்றுகொண்டிருக்கும் வண்டியில் வந்து ஏறுகின்றனர். கன்னமிடப்பட்ட வீட்டுச் சுவரின் தூசி மூன்றாம் வகுப்பு பெட்டியில் எந்நேரமும் படிந்து கிடந்தது. பெரும்சத்தத்தோடு ரயில் மதுரை வந்து சேரும்போதெல்லாம், சத்தமில்லாமல் அவர்கள் தாதனூர் வந்து திரும்புகின்றனர். மீண்டும் மணியடித்து, பச்சைக்கொடி காட்டும்பொழுது தண்டவாளம் அதிர வைகைப் பாலத்தைக் கடந்து மதுரையை விட்டு வடக்கே போவது ரயில் மட்டுமல்ல!

*

**க**லெக்டரின் உத்தரவின் பேரில் அன்றைய கூட்டத்திற்கு வரவேண்டியவர்கள் ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தனர். காலைநேர வெயில்பட்டு மின்னியபடி சாரட்வண்டிகள் வந்து நின்றன. அரண்மனையின் மையமண்டபத்தில் கலெக்டரின் அறையில்தான் கூட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வளவு அதிகாரிகள் எதற்காகக் கூடுகிறார்கள்? என்ன முடிவெடுக்கப்போகிறார்கள்? என்ற

யோசனையுடனும், இம்முறை கூட்டத்திற்குப் பின் என்ன பூதம் கிளம்பப் போகிறதோ என்ற பயத்துடனும்தான் தலைமை ஏட்டுக்கள் இருவரும் இருந்தனர். முகப்பு வாசலில் நின்றுகொண்டு வருகிறவர்களை சல்யூட் அடித்து வரவேற்ற அவர்கள் ஒருவித பயத்துடனே இருந்தனர். கோபால் ஐயருக்கு உதறல் எடுத்தது. தன்மீது கொடுக்கப்பட்டுள்ள புகாரின் அடிப்படையில் இந்தக் கூட்டத்தில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமோ என்ற சந்தேகம் அவருக்கு. பொதுவாக நகரக் குடிக்காவலை அரசு சட்டவிரோதம் என்ற அறிவித்த பின்னரும் பழைய நிலையில் துளியும் மாற்றமில்லை என்பதும், டி.எஸ்.பி. ஓம்பெர்ட் கொலை செய்யப்பட்டதும் இன்றைய கூட்டத்திற்கான காரணமாக இருக்கும் என அவர்கள் ஊகித்தனர். ஆனாலும் ஊகம் எவ்வளவு தூரம் சரியாக இருக்குமோ என்று புலம்பியபடி இருந்தனர். நகராட்சி சேர்மன், நிர்வாக அதிகாரி, நீதிபதிகள், காவல்துறை எஸ்.பி.வில்சன் ஆகியோர் வந்துசேர்ந்தனர். கலெக்டர் வில்லியம் காரே வந்தவுடன் கூட்டம் துவங்கியது.

மாவட்டத்தின் நீர்பாசன ஏற்பாடுகள், கடும் வறட்சியால் உருவாகியுள்ள சூழ்நிலை, மக்களின் இடப்பெயர்வு, புதிய புதிய நோய்கள் பரவி வருவது என் விவாதத்திற்கான குறிப்புகள் இருந்தன.

நீர்ப்பாசன துணைப்பொறியாளர் ஏ. மார்கெம் நீர்ப்பாசனப் பணிகள் சம்பந்தப்பட்ட அறிக்கையினை முன்வைத்தனர்.

‘இம் மாவட்டத்தில் இப்பொழுது உள்ள நீர்ப்பாசன வசதிகள் அனைத்தும் ஏற்கனவே ஆட்சிசெய்த சுதேசி மன்னர்களால் உருவாக்கப்பட்டவையே. பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பின் புதிய அமைப்புகள் ஏதும் உருவாக்கப்படவில்லை. ஒருசில பழுதுபார்ப்புப் பணிகளை மட்டுமே செய்துள்ளோம்.

இம்மாவட்டத்தின் நீர்த்தேவையானது வைகை நதியை மட்டுமே முழுமையாக நம்பி இருக்கிறது. ஆனால் வைகையில் மழைக்காலங்களில் கூட விவசாயத்திற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு நீர் வருவதில்லை. வைகையின் குறுக்கே சிறிய பெரிய தடுப்பணைகள் எதுவும் கட்டப்படாத நிலையே உள்ளது. வைகை நதியில் இருந்து முதன்மையாக நீர்பெறும் கண்மாய்கள் மாடக்குளம் கண்மாய், தென்கால் கண்மாய், பார்ப்பன்குளம் கண்மாய், வண்டியூர் கண்மாய், வடகரை மற்றும் தென்கரை கண்மாய்கள் ஆகும். இவை அனைத்தும் மதுரை தாலுகாவிற்குள்தான் இருக்கின்றன. மற்றவை மானாவாரிக் கண்மாய்களே.

நமது மாவட்டத்தில் தாலுகாக்களின் அடிப்படையில் எத்தனை கண்மாய்கள் உள்ளன? அவற்றினால் பாசனத்திற்கு எவ்வளவு நீர் அளிக்கப்படுகிறது, இந்தப் பகுதிகளில் விழும் சராசரி மழையளவு என்ன என்ற புள்ளி விவரங்களை இந்த அறிக்கையின் இறுதிப்பகுதியில் இணைத்துள்ளேன். இம்மாவட்ட விவசாயமானது வைகை நதியை மட்டுமே நம்பியுள்ளது. ஆனால் வைகையை இப்பொழுது உள்ளதைவிட அதிக நீர்வரத்து உள்ள நதியாக மாற்றினால்தான் இப்பகுதி விவசாயத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்று முடிவு செய்து திருவாங்கூர் நாட்டில் ஓடும் பெரியாறு நீரை வைகை நதிக்கு திருப்பிவிடுகின்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் மூன்று வற்றாத நதிகள் ஓடி மேற்கு கடலில் வீணாகக் கலக்கின்றன. வைகை உருவாகும் மலைப்பகுதிகளுக்கு சற்று உயரத்தில் ஓடும் இந்த நதிகளின் குறுக்கே தடுப்புகளை உருவாக்கி அல்லது அணைகளைக் கட்டி கிழக்குப்பக்கம் அதாவது கூடலூர் வழியாகத் திசை திருப்பி சுருளி நதியுடன் சேர்த்துவிட்டால் அது வைகையில் வந்து கலந்துவிடும். பின்னர் மேற்குக் கடலில் பயனற்றுக் கலக்கும் தண்ணீர் இம்மாவட்டத்தின் உயிர்நாடியாக மாறும். இவ்வகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இரண்டு நூற்றாண்டாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. 1798ல் ராமநாதபுரம் சமஸ்தான வல்லுநர் முத்து இருளப்ப பிள்ளை பெரியாற்றுத் தண்ணீரை கம்பம் பள்ளத்தாக்கிற்குக் திருப்பி விடுவதற்காக ஆய்வு செய்துள்ளதை நாம் அறிகிறோம். அதன் பின்னர் பிரிட்டிஷ் அரசு சில முயற்சிகள் எடுத்துள்ளது. ஆனால் முக்கியமாக 1807ல் மதுரைக் கலெக்டர் பெரீஸ் வைகை நதிநீரைப் பெருக்க திருவாங்கூர் மலைப்பகுதியில் ஏதாவது செய்ய இயலுமா எனக் கண்டறிய அவரே அடர்ந்த காடுகளுக்குள் பல நாட்கள் சென்று ஆய்வு செய்துள்ளார். ஆனால் கடுமையான காய்ச்சல் கண்டதால் மாவட்டப் பொறியாளர் கேப்டன் கால்டுவெல்லிடம் இந்தப் பணியை ஒப்படைத்துவிட்டு வந்துவிட்டார். ஆனால் கேப்டனோ அவசரஅவசரமாகப் பார்வையிட்டு திரும்பிவந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாது என அறிக்கை கொடுத்துவிட்டார். அதன்பின் 1837 வரை எதுவும் செய்யப்படவில்லை. அதன்பின்னர் கர்னல் பேபர் துவக்கிய முயற்சிகளும் கைவிடப்பட்டன. பின்னர் 1861ல் பெரியாறு திட்டம் என்று அறியப்படும் இத்திட்டத்தை கேப்டன் ரீவ்ஸ் கவனத்திற்கு கொண்டுவந்தார். அவர் அளித்த பரிந்துரைகள் சரியானதா என்பதை மதிப்பீடு செய்ய மாவட்ட நிர்வாகப் பொறியாளர் கேப்டன் பேனே அந்தப் பகுதிக்கு சில வாரங்கள் அனுப்பப்பட்டார். அதன்பின் கேப்டன் பேனேயும் கேப்டன் ரீவ்ஸ்சும் கலந்தாய்வு நடத்தி சில பொதுமுடிவுகளுக்கு வந்து கீழ்க்கண்ட ஆலோசனைகளை அரசுக்கு அனுப்பினர்.

இதில் முன்மொழியப்பட்டுள்ள வேலைகள் இரண்டு வகைகளில் பரிசீலிக்கப்படுகின்றன. பெரியாற்று பள்ளத்தாக்கில் நீரின் போக்கினைத் தடுத்து பிரம்மாண்டமான அணை கட்டப்படவேண்டும். அப்பொழுது மிகப்பரந்த அளவில் ஏரி உருவாகும். அதிலிருந்து குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் நிரம்புகின்ற தண்ணீர் வெளியேறிச் செல்ல அனுமதிக்கப்படும். வெளியேற்றப்படும் தண்ணீர் சுருளி ஆற்றிற்குத் திறந்துவிடப்படும். தண்ணீரின் அளவு ஒரு மணி நேரத்திற்கு 7லட்சத்து 50 ஆயிரம் க்யூபிக் யார்ட்ஸ்க்கு மேல் இருக்கக்கூடாது. நீர்ப் பிடிப்புப் பகுதியில் வருடத்திற்கு 79 அங்குலத்திற்குக் குறையாமல் மழை இருக்கும். இந்தத் திட்டத்தினால் ஏற்கனவே விவசாயத்திற்கு உள்ள நிலங்களுக்கு மேலாக 1லட்சத்து 49ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விளைவிக்க வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 17,49,000 செலவு பிடிக்கும். பழுதுபார்த்தல் மற்றும் மேலாண்மைச் செலவிற்கு வருடத்திற்கு ரூ. 50 ஆயிரம் ஆகும். இத்திட்டத்தினால் அதிகமாகும் நில வருமானத்தினால் கிடைக்கும் நிகர லாபம் வருடத்திற்கு ரூ. 5,00,000 ஆக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட திட்ட நகல் சம்பந்தமாக மேலும் தெளிவும் விளக்கமும் அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டதால் கேப்டன் ஸ்மித் கேப்டன் பென்னி குக் இருவரிடமும் இப்பணி மீண்டும்

ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அதிலிருந்து கொஞ்சம் மாறுபட்ட திட்ட மதிப்பீடு மற்றும் செயல்முறை சம்பந்தமாக கேப்டன் பென்னி குக் அளித்த திட்டத்தினை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி கேப்டன் பென்னி குக் தனது பணியினைத் துவக்கி நடத்தி வருகிறார். அடர்ந்த காட்டுப்பகுதியில் கொடிய விலங்குகளுக்கு நடுவில் பிரமாண்டமான தடுப்பு அணை கட்டுகிற மிகச் சவால் மிகுந்த வேளையில் பென்னிகுக் தலைமையிலான பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அணை கட்டுவதற்குத் தேவையான பூர்வாங்கத் தயாரிப்புப் பணிகள் இப்பொழுதுதான் துவங்கி நடந்துவருகின்றது'

தனது நீண்ட அறிக்கையினை புள்ளிவிபர இணைப்புடன் முடித்திருந்தார்.

அடுத்ததாக காவல் துறை சம்பந்தப்பட்ட குறிப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. காவல் துறை சம்பந்தமாக அரசு எடுத்த இரண்டு முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ள பின்னணியில்தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. ஓம்பெர்ட் கொலை செய்யப்பட்டவுடன் துப்பாக்கி போலிசாரின் குதிரை ரோந்துப்படை நிறுத்தப்பட்டுவிட்டது. துப்பாக்கி போலிசார் இரவில் வருவதில்லை என்ற செய்தி பரவியதைத் தொடர்ந்து தீவட்டிக் கொள்ளையர்களின் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. அதேபோல் ஓம்பெர்ட் கொலைக்குக் காரணமான செம்பூரான்கள் யாரையும் இதுவரை கைது செய்யமுடியவில்லை. அவர்களின் குடியிருப்புப் பகுதி எது என்பது பற்றியோ, அவர்களின் நடமாட்டம் பற்றியோ, எந்த உண்மையான செய்தியையும் போலிஸ் டிபார்ட்மென்ட்டால் சேகரிக்க முடியவில்லை. பழைய ஆவணங்களின் அடிப்படையில் செம்பூரான்களின் எண்ணிக்கையை மட்டும் தோராயமாக அனுமானிக்க முடிகிறது. மற்றபடி அவர்களைப் பற்றிய தடயங்கள் எதுவும் போலிசாரின் கையில் இல்லை. அதே போல் நகரக் குடிக்காவல் சட்ட விரோதமானது என அரசு அறிவித்தும் பழைய நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. குடிக்காவலர்கள் வழக்கம்போல் தங்கள் பணிகளை ஆற்றுகின்றனர். அவர்களுக்கான காவக்கூலியை மக்கள் எப்பொழுதும் போல் கொடுத்துவருகின்றனர். அரசின் முடிவு காகிதத்தில் மட்டுமே இருந்தது. இந்தப் பின்னணியில் புதிய நடவடிக்கைகளைப் பற்றி அவர்கள் ஆலோசித்தனர். ஏற்கனவே இருக்கும் குடிக்காவல் முறையை ஒழிப்பதில் முதல்நிலை வெற்றியையாவது நாம் பெறவேண்டும் என்பதில் கலெக்டரும் எஸ்.பி.யும் உறுதியாக இருந்தனர். அதற்கான முறையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளைப் பற்றிய ஆலோசனைகள் கேட்கப்பட்டன.

'நடைமுறையில் இருக்கும் குடிக்காவல் முறையின் பலம் திருடுபோன பொருட்களுக்கு அந்தக் காவல்காரன்தான் பொறுப்பு, அவன்தான் அதைத் திரும்ப ஒப்படைக்கவேண்டுமென்பது. ஆனால் நமது போலீஸ் முறையில் திருடுபோன பொருள் சம்பந்தமாக புகார் மனு எழுதி வாங்கி, அதன்பின் அது சம்பந்தமாக வழக்கு நடத்தி, கோர்ட் போதிய ஆதாரம் இருக்கிறது எனக் கருதினால் ஒரு குற்றவாளிக்கு தண்டனை கொடுக்கிறது. இந்த நடைமுறை பெரும் பலகீனமான ஒன்று என நமது போலீஸ் துறையைச் சேர்ந்தவர்களே கருதுகிறார்கள். அது மட்டுமல்ல, வக்கீல், கோர்ட் என்ற ஐரோப்பியப் பழக்கம் எதையும் மக்களுக்குப் புரியவைக்க முடியவில்லை.

இந்த நடைமுறைகளைப் புரிந்துகொண்ட நகரின் ஒருசில செல்வந்தர்கள் கூட திருடு போன பொருட்களுக்கான உத்தரவாதம் இந்த போலீஸ் முறையில் இல்லாத போது, இதைவிடச் சிறந்த முறையான குடிக்காவல் முறையே இருக்கலாமே என்று கருதுகின்றனர். இந்தக் கருத்துகள் எல்லாம்தான் நமது புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிறிய முன்னேற்றம் கூட ஏற்படாததற்குக் காரணம்' என்று டி.எஸ்.பி. பிரெவ்ஸ் தெரிவித்தார்.

தொடர்ந்து மற்றவர்கள் தங்களின் கருத்துகளைத் தெரிவித்தனர் காவலும் களவும் எவ்வளவு நெருங்கிய உறவுடன் இருக்கிறது என்பதையும் ரத்த பந்தமுள்ள சகோதரர்களான இருவரும் இருட்டை எப்படி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ள முயற்சி செய்யாமல் வெறுமனே சட்டரீதியான நடவடிக்கையில் மட்டும் அவசரம் காட்டுகிற ஐரோப்பிய அதிகாரிகளாகவே அவர்கள் இருந்தனர். அவர்கள் முன்வைத்த ஆலோசனைகளும் அந்தத் தன்மையிலே இருந்தன. கச்சேரி போலிசுக்கு யூனிபார்ம் மாட்டிவிட்டதைப் போல நகரக் காவல்மீது போலிஸ் முறையை எளிதில் பொருத்திவிடலாம் என்று கருதினர்.

நகர் முழுவதற்குமான காவலை நாம் கையிலெடுப்பது என்பது முற்றிலும் இயலாத காரியம். எனவே சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி ஆகிய மூன்று பெரும் வீதிகளை உள்ளடக்கிய பகுதியின் காவலை முதல் கட்டமாக நாம் எடுக்கலாம். இந்தப் பகுதியில் குடிக்காவல் தடைசெய்யப்பட்டிருக்கிறது என்று மக்களுக்கு மீண்டும் தெரிவிக்கலாம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் மக்களே முன்வந்து காவல்காரர்களுக்குத் தரவேண்டிய காவல்கூலியை நிறுத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம். எனவே இந்தப் பகுதியில் குடியிருக்கும் செல்வந்தர்கள், முக்கியமானவர்கள், நமது நிர்வாகத்தில் பணிபுரிபவர்கள் ஆகியோர்களிடம் பேசி அவர்கள் காவக்கூலி தருவதை நிறுத்தச்செய்யலாம். அவ்வாறு அவர்கள் நிறுத்திவிட்ட செய்தி பரவுமேயானால் மற்றவர்களுக்கும் நம்பிக்கை பிறக்கும். காவல்கூலி முறையிலிருந்து அவர்களும் விடுபட நினைப்பார்கள். எனவே நாம் இந்தப் பணியை அங்கிருந்துதான் துவக்கவேண்டுமென்று நகரின் சேர்மன் கே. மங்க்னால் கருத்துத் தெரிவித்தார்.

நீண்ட விவாதத்திற்குப்பின் இறுதியில் சித்திரை வீதி, ஆவணிமூல வீதி, மாசி வீதி ஆகிய மூன்று வீதிகளுக்கு உட்பட்ட பகுதியில் குடியிருக்கும் முக்கியஸ்தர்களை போலிஸ் அதிகாரிகள் நேரில் அழைத்துப்பேசி காவல்கூலி கொடுப்பதை நிறுத்தச்சொல்வது என்று முடிவு செய்யப்பட்டது. அந்தப்பகுதியில் டி.எஸ்.பிக்களின் தலைமையில் இரவு நேரரோந்து செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து அடுத்த குறிப்புகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

முன்வாசலில் நின்றுகொண்டிருந்த தலைமை ஏட்டுகள் மூவரும் உள்ளே கூட்டத்தில் என்ன முடிவெடுத்தார்களோ என்ற பயத்துடன் இருந்தனர். கூட்டம் விரைவில் முடிவதாக இல்லை. பிற்பகல்வரை நீடித்தது.

மறுநாள் எஸ்.பி. வில்சன் தனது அலுவலகத்தில் போலிஸ் டிபார்ட்மென்டின் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். டி.எஸ்.பியாக இருந்த

ஒம்பெர்ட் கொலை செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பொறுப்புக்கு புதிதாக பிரெவ்ஸ், ஷாங்க் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவகளும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். தலைமை ஏட்டுகளும் வரவழைக்கப்பட்டிருந்தனர். எஸ்.பி.வில்சன் நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைக் கூறினார். அதனடிப்படையில் செய்யவேண்டிய பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. மாசி வீதிக்கு உட்பட்ட மூன்று பிரதான வீதிகளிலும் உள்சந்துகளிலும் வசிக்கும் முக்கியஸ்தர்களின் பெயர்ப்பட்டியல் இறுதி செய்யப்பட்டது. அதில் குறிப்பிட்ட சில நபர்களை எஸ்.பி.யே நேரில் அழைத்துப் பேசுவதென்றும் மற்றவர்களை டி.எஸ்.பிகள் இருவரும் அழைத்துப் பேசுவதென்றும் அதற்கான நாள் நேர அட்டவணை இறுதி செய்யப்பட்டது.

அன்று மாலை துவங்கி இரண்டு நாட்களாக அந்தப் பணி நடைபெற்றது. ஆட்சியாளர்களின் இந்த முடிவு பலருக்குப் புரியவில்லை. ‘இதற்கான தேவை என்ன’ என்ற கேள்வியைக் கேட்டவாறே அவர்கள் எஸ்.பி. பங்களாவை விட்டு வெளியேறிப் போயினர். யாருக்கும் இந்த முடிவில் உடன்பாடில்லை. குறிப்பிட்ட நேரம் வரை மறுத்துச் சொல்லிவிட்டு கடைசியில் ஏற்றுக்கொண்டதைப் போல மௌனம் காத்து வெளியேறினர். ‘அரசின் ஆணையை கடைப்பிடிப்பதில் முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் நீங்கள்’ என்ற தன்மையில் ஆலோசனையாகத் துவங்கிய இந்தச் சந்திப்புகள் பின்னர் அடுத்த கட்டத்திற்கு மாறியது. ஒருசில பெருந்தனக்காரர்கள், செல்வந்தர்களின் சட்டரீதியான பலகீனங்களை சுட்டிக்காட்டி, காவல் கூலி விசயத்தில் அரசின் முடிவை நீங்கள் ஏற்கவில்லையென்றால் வேறு விசயங்களில் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்று நேரடியாகவும் மறைமுகமாகவும் கூறப்பட்டது. பட்டியலில் இருந்த அனைவரையும் அழைத்து எஸ்.பி.வில்சனும், டி.எஸ்.பிகள் இருவரும் இருந்து பேசி முடித்தனர். காவல்கூலி ஒழிப்பு நடவடிக்கையின் முதல் கட்டமாக தாங்கள் மேற்கொண்டுள்ள இந்தப் பணி வெற்றிகரமாக அமையும் என்ற நம்பிக்கையை கலெக்டருக்கு எஸ்.பி. தெரிவித்தார.

*

**எஸ்**.பி. அழைத்துப் பேசிய முதல் நாள் இரவு விசயம் எதுவும் வெளியில் வரவில்லை. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் கசியத்துவங்கியது. புதுமண்டபம், தெப்பக்குளம் என ஒருவர் இருவராக குசுகுசுவென பேசிக்கொண்டிருந்தனர். தன்னை எஸ்.பி. கூப்பிட்டுச் சொல்லி அனுப்பினார் என்ற செய்தி வெளியில் தெரியக்கூடாது என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால் எஸ்.பி. அழைப்பின் பேரில் போய்வந்தது யார் யார் என்பதை எல்லோரும் அறிந்தேதான் வைத்திருந்தனர். புதுமண்டபத்தில் வெங்கிடாசலபதி முதலியார்தான் முதலில் மனம் நொந்து வெளியில் பேசினார். ‘இந்தப் பாழுங் காலத்துல போய் இப்படி ஒரு முடிவெடுத்து அத நம்மள கூப்பிட்டு செய்யச் சொல்றாங்களே! மதுர அழியிறத பாக்கணும்னு முடிவெடுத்துட்டான் போலிருக்கு. அத நம்மள விட்டு ஆழம் பாக்குறான்.’

குறிப்பிட்டவர்கள் மட்டும் கலந்து கொள்ளுகிற பேச்சாக அது இருந்தது. நான்கைந்து பேராகக் கூடிப்பேசுவது, வேறு ஆள் வந்தால் பேச்சை

மாற்றிக்கொள்வதுமாக இருந்தது. ஆங்கிலக் கல்வி கற்று அரசு உத்தியோகத்தில் இருக்கும் சிலர் வெள்ளைக் காரனின் இந்தச் சட்ட ஒழுங்கு நடவடிக்கை தூரத்துப் பார்வையில் சரியானதுதான் என்று கருதினர். ஆனால் இருளையும் களவையும் பற்றித் தெரிந்தவர்கள், கச்சேரி போலீசைப் பற்றியும் அறிந்தவர்கள் இந்த விசயத்தில் அரசு நிர்வாகம் காட்டுகிற அவசரம் தாக்குப்பிடிக்க முடியாத எதிர்விளைவுகளைத்தான் உருவாக்கும் என்றும் உறுதியாக நினைத்தனர்.

பொதுஇடத்தில் நடைபெற்ற பேச்சுகள் வறட்சி பற்றியோ அல்லது காவல் பற்றியோதான் இருந்தது. மாறி மாறித் தங்களுக்கு உள்ளாகவே பேசிக்கொண்டிருந்தனர். காவக்காரர்கள் யாரிடமும் இதுபற்றி யாரும் பேசவில்லை. எனவே முதல் வாரம் முழுவதும் காவக்காரர்கள் யாருக்கும் இது பற்றிய விசயம் தெரியவில்லை. வழக்கம்போல் இரவு அவரவர் தெருவுக்கு காவலுக்குப் போய்விட்டு விடிந்ததும் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணையில் இரவானவுடன் கூடுகிற கூட்டம் ஒரு வாரமாகக் கூடவில்லை. செட்டியாரும் திண்ணையில் உட்காருவதில்லை. குறிப்பிட்ட நேரத்திற்குப்பின் கதவை மூடிவிட்டு உள்ளே போய்விடுகிறார். பேயாண்டி காவல் தெருக்களுக்குள் போகும்பொழுது, நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணையில் இரவில் ஆட்கள் யாரும் இருப்பதில்லை என்பதை கவனித்தபடியேதான் போய்க்கொண்டிருந்தான். ஆனால் அதைத் தாண்டி ஏன் என்று அவன் யோசிக்கவில்லை.

அன்று நள்ளிரவுக்கு மேல் ராமாயணச் சாவடிக்கு வந்த விருமாண்டி ‘காசுக்காரங்க எல்லாம் காவக்கூலி கொடுக்கக் கூடாதுன்னு வெள்ளக்காரென் உத்தரவு போட்டிருக்கானாம். அத இவங்களும் ஆகட்டும்னு கேட்டுட்டு வந்திருக்காங்களாம்’ என்று புதுமண்டபத்தில் சிவராஜபிள்ளை ரகசியமாகச் சொன்னதாகச் சொன்னான். மற்றவர்களுக்கு விசயம் புதிதாக இருந்தது. ஆனால் ஏதோ ஒரு பிரச்சனையை உணரத் துவங்கினர். முன்னாடி தண்டோரா போட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது இருந்த அசட்டை இப்பொழுது இல்லை. பேயாண்டி, சோங்கு, கருத்தாண்டி, ஆமையன் என எல்லோரும் இருந்தனர். தூணுக்குப் பின்னால் எரிந்த சிறுவிளக்குத்தான் சாவடி முழுவதற்கும் வெளிச்சம் தந்துகொண்டிருந்தது. மறைவில் இருந்த விளக்கை காற்று எட்டி அணைக்க முயற்சித்தது.

அப்பொழுது பொன்னாண்டி சாவடிப் படிக்கட்டேறி மேலே வந்தான். ‘என்னப்பா இருட்டுக்குள்ள பேச்சரவம் இல்லாம உக்காந்திருக்கீங்க!’ என்று கேட்டவாறு கம்பை மூலையில் சாத்திவிட்டு சோங்குவின் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். விருமாண்டி விசயத்தைச் சொன்னான்.

‘அதானப்பா... நாலஞ்சு நாளைக்கு முன்னாடி அந்த கோபாலய்யரு ஏங்கிட்ட உன் பொஞ்சாதிய மத்தவங்களுக்குத் தெரியாம பொறவாசப் பக்கமா வந்து காவக்கூலிய வாங்கிட்டுப் போகச் சொல்லு, தெருப்பக்கமா வந்து கேக்க வேணாம்னு சொன்னாரு. ஏன் இந்த ஆளு இப்படி சொல்றான்னு அப்ப வெளங்கல. இதுதானா விசயம்!’ என்றான்.

பொன்னாண்டி சிவராஜபிள்ளை சொன்ன செய்தி உண்மை யானது தான் என்று நம்புவதற்கான சூழல் ஏற்பட்டது. ஆனாலும், மாசிவீதிக்குள்

காவக்கூலி கொடுக்க முடியாதுன்னு சொல்ல ஆளா இருக்கு? என்ற எண்ணம் விசயத்தை பெரிதாகப் பேசவோ யோசிக்கவோ விடாமல் செய்தது. மூலையில் சாத்தப்பட்டிருந்த கம்புகளைப் போல அப்பேச்சும் சத்தமின்றிச் சாய்ந்துவைக் கப்பட்டது, இருள் பொழியும் மதுரையின் வீதிகளைக் காற்று இரவெல்லாம் உழுதபடி இருந்தது.

*

**மா**சிவீதிக்குள் குடியிருக்கும் எல்லோரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய அந்தச் செய்தி காட்டுத் தீயைப்போலப் பரவியது. வடக்கு ஆவணி மூலவீதியில் துவங்கி சுழற்காற்றுப் போல நகரெங்கும் சுற்றிச் சுற்றி வந்தது. இரவானவுடன் புதுமண்டபத்திலோ சாவடியிலோ தெப்பக்குளத்திலோ வந்து உட்காரும் பெருசுகள் மூலம் பேசிப் பரவுகிற வரை கூட அந்தச் செய்தி காத்திருக்கவில்லை. அது இரவைவிட வேகமாக எல்லோரையும் சென்றடைந்தது. அது பரவும் சேதியல்ல; பற்றியெரியும் சேதி. எல்லோரையும் படபடக்க வைத்துவிட்டுப் போய்க்கொண்டேயிருந்தது. வீடுகளுக்குள் இருந்தபடி பெண்கள் பேசினர். திண்ணைகள் தோறும் பேசப் பட்டது. அக்ரஹாரத்தில் ஆச்சரியத்தோடு அது விவாதிக்கப்பட்டது. வெளியில் போய்விட்டு வீட்டுக்கு வந்தவர்கள் வேகவேகமாக பேச்சில் பங்கெடுத்தபடி இருந்தனர். ‘இப்படி ஒரு முட்டாத்தனமான முடிவை அந்த மனுசன் எப்படி எடுத்தான்’ என்ற அதிர்ச்சியில் கச்சேரி போலீசார் உறைந்துபோயிருந்தனர். அன்று இரவே எஸ்.பி.க்கு கச்சேரி போலிஸார் செய்தியைத் தெரிவித்தனர். எஸ்.பி.வில்சனோ உற்சாகம் பொங்க கலெக்டருடனும் டி.எஸ்.பி,களுடனும் அதைப் பகிர்ந்துகொண்டார். கேள்விப்பட்ட சிலர் புதுமண்டபத்தில் உட்கார்ந்து பேசி மகிழ்ந்தனர். அடுத்து நடக்கப்போவது அவர்களுக்கு சந்தோஷம் தரும் எனக் கருதினர்.

செட்டியாரின் பக்கத்து வீட்டிலிருந்த ராஜநாராயணனால் கூட அதை நம்ப முடியவில்லை. ‘இப்படி, சொன்னது உண்மைதானா’ என்று அவரிடமே கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின்தான் நம்பினார். அது மட்டும் அல்ல ‘பைத்தியக்காரன் தான் இப்படியொரு முடிவெடுப்பான்’ என்று மூஞ்சிக்கு நேராக சத்தம் போட்டுவிட்டு வந்துவிட்டார். வடக்கு ஆவணி மூலவீதி முழுவதும் ஒருவித பயம் பரவி அது நல்லமுத்து செட்டியாரின் மீதான கோபமாகவும் எரிச்சலாகவும் மாறியது. வசைச்சொற்கள் வந்து காதில் விழுந்தபடி இருந்தன. அவர் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார். ‘இந்த வறட்சியான காலத்தில் பொருட்களைப் பதுக்கி வைத்து விற்பதற்கு எதிராக சட்டப்படியான நடவடிக்கையை நாங்கள் எடுக்க நேரிடும்’ என்று வெள்ளக்காரன் கூப்பிட்டு எச்சரித்து அனுப்பி இருக்கிறான். அப்படி இருக்கும் பொழுது அவர் வேறு என்ன செய்ய முடியும்? என்று அவர்கள் கேட்டனர். ஆனால் இந்தக் கேள்வி மிக நெருக்கமானவர்களிடம் மட்டுமே சொல்லப்படும் சமாதானமாக இருந்தது.

‘வீட்டுக்கு காவக்கூலி கொடுக்கக் கூடாதுன்னு வெள்ளகார அதிகாரிக சொல்றாங்ய. அதனால வீட்டுக்கு காவக் கூலியை இனிமே தரமாட்டேன். தோட்டத்துக்கான காவக்கூலியையும் கடைக்கான கூலியையும் வழக்கம்போல அங்கேயே வாங்கிட்டுப் போ’ என்று காவக்கூலி கேட்க

வந்து பேயாண்டியின் மனைவியிடம் நல்லமுத்து செட்டியார் சொல்லி அனுப்பிய செய்தி தான் அது.

ஆனால் எல்லோரையும் விட நான்கு நாட்களுக்கு முன்னதாவே அவர் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருந்தார் என்பது மிக நெருக்கமானவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.

**கா**லமாற்றத்தின் புதிய அனுபவங்களை நகரம் பெற்றுக்கொண்டு வருகிறது. ஒரு பக்கம் வறட்சியால் உலர்ந்து போயிருக்கும் இக்கோயில் மாநகரம் எரிகற்களால் வீசப்படும் பொழுதுகளைப் பகல் எனச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் காலங்காலமாய் இருந்து வந்த காவல் ஏற்பாட்டினை நிராகரிக்கும் முதல் குரல் வடக்கு ஆவணி மூல வீதியில் இருந்து எதிரொலித்ததைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அதிகாரம் நகர்த்தும் காய்களின் ஊடே காலம் தனது பழைய நினைவுகளைப் பலியிட்டபடியே உடன் ஓடிவருகிறது.

தலைமுறை தலைமுறையாய் வண்டிச் சக்கரங்கள் உருண்டோடிக் கொண்டிருந்த மங்கம்மாள் சாலை இழுத்து மூடப்பட்டதைப் போல பேயாண்டியின் மனைவிக்குப் பதில் சொல்லிட்டு கதவை இழுத்துமூடும் பொழுது நெடுங்காலம் இருந்து வந்த காவல் முறையை ஒழிப்பதற்கான முதல் முயற்சியை அதிகாரம் செய்துள்ளது. ஆனால் மூடப்பட்ட மங்கம்மாள் சாலை இன்று வரை தனக்கான விலையைக் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அது நினைவின் வழியே அழியாத்தடமாக மதுரைக்குள் கிடக்கிறது. மெட்டல் பரப்பி புதிய சாலையை போடமுடிந்த வெள்ளையர் களால் பழைய சாலையை மதுரையிடமிருந்து துண்டிக்க முடிய வில்லை. மதுரைவாசிகளின் மனங்களில் இருக்கும் செம்பூரான் களைக் குற்றவாளிகளாக்க முடியவில்லை. அழிக்கமுடியாத மங்கம்மாளின் சாலை அவர்களின் அதிகாரத்தை உறுத்திக் கொண்டேயிருக்கிறது. அழிந்து போன மங்கம்மாளின் சாலை செம்பூரான்களை இயக்கிக்கொண்டே இருக்கிறது. வெள்ளையர்கள் வெற்றி பெறுகிற பொழுதெல்லாம் தோல்வியும் அடைகிறார்கள். அழிவை மட்டுமே வெற்றியின் அடையாளமாக கருதுபவர்கள் தங்களது தோல்விகளை அழிக்க முடியாமல் விட்டு விட்டுச் செல்கிறார்கள். புதிய வெற்றிகளைப் பெறுவதற்காக வெறிகொண்டு மீண்டும் அழிக்கிறார்கள். இம்மாநகரின் வேர்கள் முழுவதையும் தோண்டி அழிக்க வேண்டிய தேவை வெள்ளையர் களுக்கு இருக்கிறது. அதனால்தான் ஒவ்வொன்றாக வெட்டிக்கொண்டே வருகிறார்கள். வேர்களே இல்லாத நகரங்களைத் தான் தங்களது நகரமாக அவர்களால் உணர முடிகிறது. அதன் நடுவில் ஆணி வேர் பாய்ச்சி உறிஞ்சிக்கொள்ள எளிதாக இருக்குமெனக் கருதுகிறார்கள். இந்த நகரத்தை தனது நிர்வாகத்தின் உள்ளங்கையில் தாங்கள் நினைப்பதுபோல் பொருத்த வேண்டுமென்றால் இதன் அடிப்பிடிமானங்கள் முழுவதும் அறுக்கபடவேண்டும். இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தாம் உருவாக்கிய வரைபடத்தின் உள்ளங்கையில் மதுரையின் நில அமைப்பை பொருத்தியதைப் போல இப்பொழுது தமது நிர்வாகத்தின் உள்ளங்கையில் மதுரையின் சமூக இயக்கத்தை பொருத்த நினைத்தார்கள்.

மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கும் இப்புராதன நகரத்தின் வேர்கள்

எங்கெங்கோ ஓடிமறைந்துள்ளன. இன்றுள்ள இந்நகரம் எழுப்பப்படும் முன்பே எரிக்கப்பட்டது. எரிக்கப்படுவதற்கு முன்பே சிறப்பாக எழுப்பப்பட்டிருந்தது. இதன் வேர் நெருப்புக்கும் சாம்பலுக்கும் இடையில் ஊடுருவிக் கிடக்கிறது. அழிவைச் சுற்றிச் சுற்றியே பின்னிக் கிடக்கிறது. ஆனாலும் அழியாமல் இருக்கிறது.

*

அடுத்த இரண்டு நாட்கள் இரவைக் கடக்க மதுரை பெரும்பா டுபட்டது. என்ன நடக்குமோ என்ற ஊகங்கள் அவர்களின் கற்பனைக்குத் தக்கபடி அமைந்தன. இரவு முழுவதும் பலர் பேசியே கழித்தனர். டி.எஸ்.பி. பிரெவ்ஸ் தலைமையிலான போலீஸ்படை இரவு நேரங்களில் நகருக்குள் ரோந்து வருவதாகப் பலரும் பேசினர். காவல்காரர்கள் வழக்கம்போல் இரண்டு இரவும் தங்கள் பணிகளைச் செய்தனர். காவல் தெருக்களில் கைக்கம்புகளால் இரவைத் தட்டியெழுப்பி நடந்துகொண்டிருந்தனர். ராமாயணச் சாவடியிலும் செல்லத்தம்மன் கோயில் செக்கடியிலும் இருந்துவிட்டு தாதனூர் திரும்பினர். அவர்களிடம் நல்லமுத்து செட்டியார் சம்பந்தமாக பேசிய யாருக்கும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. காவக்காரர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. பேயாண்டி வழக்கம்போல் நல்லமுத்து செட்டியாரின் வீட்டைக் கடந்துதான் இரண்டு நாள் இரவிலும் போய்க்கொண்டிருந்தான். காவக்காரர்களிடமிருந்து எந்த சமிக்ஞையோ, கோபமான பதிலோ நகரவாசிகள் யாருக்கும் கிடைக்கவில்லை. ‘ஒருவேளை கருத்ததையன் காலத்திலிருந்து தாதனூர்க்காரர்களுக்கு மிக நெருக்கமாக செட்டியாரின் குடும்பம் இருந்ததால் எதிர் நடவடிக்கைக்குத் தயக்கம் இருக்கிறதோ!’ என்ற சந்தேகம் ஒருசிலருக்கு உருவானது. ஆனாலும் அது அபத்தமான சந்தேகம் என்று அவர்களே பேசிக்கொண்டனர். மூன்று இரவும் இரண்டு பகலும் சென்றுவிட்டன. எஸ்.பி.யும் கலெக்டரும் மிக நல்ல அறிகுறியை உணர்ந்தனர்.

நான்காம் நாள் இரவு வந்தது. வழக்கம்போல் நேரம் ஆகஆக புதுமண்டபமும் தெப்பக்குளமும் பேச்சொலிகள் நின்று இருளுக்குள் மூழ்கின. குடிக்காவலர்கள் தங்களின் காவல் வீதிகளுக்குப் போய்விட்டு தங்குமிடம் நோக்கி வந்துகொண் டிருந்தனர். ராமாயணச் சாவடிக்கு வரவேண்டிய எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டனர். பேச்சொலிகள் குறைந்து மறைந்தன. தலைப்பாக் கோனார் மட்டும் தூக்கம் வராமல் வெகுநேரம் வரை விருமாண்டியுடன் பேசியபடி இருந்தார். பின்னர் சாவடிக்குள் இருந்து வெளியில் வந்து படிக்கட்டின் ஓரமாகப் படுத்துக்கொண்டார். பொழுது நள்ளிரவைக் கடந்து வெகு நேரமாகிவிட்டது. தலைப்பாக் கோனார் ஆழ்ந்த தூக்கத்திற்குள் போகமுடியாமல் புரண்டு படுத்தபடியே இருந்தார். காற்று ஒரு நதியைப்போல வடக்குமாசி வீதியில் ஓடிக்கொண்டேயிருந்தது. சரக்குகள் ஏற்றப்பட்ட மாட்டு வண்டி ஒன்று சாவடியைக் கடந்து காற்றுக்கு எதிர்த்திசையில் போனது. சத்தம் கேட்டுக் கண்விழித்துப் பார்த்த கோனார் ஏதோ நினைத்தவாக்கில் படிக்கட்டில் தலைசாய்த்து மீண்டும் தூங்கினார். வண்டிச் சக்கரங்கள் உருளும் சத்தம் விட்டுவிட்டு கேட்டுக்கொண்டேயிருந்தது. நீண்ட நேரமாக சத்தம் கேட்பதும் நிற்பதுமாக இருந்தது. பின் தூக்கம் கலைந்து எழுந்த அவர் சாவடியைக் கடந்து

போய்க்கொண்டிருந்த வண்டியைப் பார்த்தார். சரக்குகள் ஏற்றியபடி சென்ற வண்டியின் பின்னால் மிகவும் வயதான ஒருவன் கைக்கம்பை ஏந்தியபடி சென்றுகொண்டிருந்தான். ஒரு சாயலுக்குப் மாயாண்டிப் பெருசு போலத் தெரிகிறதே என யோசித்தவாறு படியில் இருந்து எழுந்த அவர் உள்ளே படுக்கப்போனார். சாவடியின் கிழக்குத் தூண்களுக்கு இடதுபக்கமிருக்கும் இடம் முழுவதும் வெற்றிடமாக இருந்தது. வழக்கமாக காவக்காரர்கள் படுத்துறங்கும் இந்த இடத்தில் இப்பொழுது யாருமில்லை. தன்னுடன் பேசியபடியே படுத்துறங்கிய விருமாண்டியையும் காணவில்லை. எங்கோ எழுந்து போய்விட்டார்கள் போலிருக்கிறது என்று நினைத்தபடி தலைப்பாக்கோனார் நிம்மதியாகப் படுத்துறங்கினார். வண்டிச்சத்தம் அதன்பின் அவரைத் தொந்தரவு செய்யவில்லை.

இரண்டு வண்டிகள் சூறையாடல், மூன்று உயிர் பலி என்று முன்பு போல எந்த இழப்பும் இல்லாமல் தஞ்சாவூர் பக்கமிருந்து கொண்டுவரப்பட்ட மூடைகளில் விற்றது போக மீதி அனைத்தும் நாகமலையின் பின்புற அடிவாரத்தின்பக்கம் பத்திரமாக கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன.

செம்பிக்கிணற்று சந்தில் வசிக்கும் சுப்பா நாயுடு அதிகாலை எழுந்து வீட்டைவிட்டு வெளியில் வந்தபொழுது நல்லமுத்து செட்டியாரின் வீட்டுக்கதவு திறந்து கிடந்தது. அதிர்ந்து போன அவர்செய்தியைக் காற்றைக் கிழித்தவாக்கில் தூக்கி வீசினார். நல்லமுத்து செட்டியார் குடும்பம் பதறி அடித்துக்கொண்டு ஓடிவந்து பார்த்தது. அவர்கள் வருவதற்கு முன்பே பலரும் உள்ளே வந்து பார்த்துக்கொண்டிருந்தனர். செட்டியார் மனைவி கீழே விழுந்து புரண்டு அழுதாள். மற்றவர்கள் அந்தம்மாளைப் பிடித்துத் தேற்ற முயன்றனர். செட்டியார் நிலைகுலைந்து நின்றிருந்தார். நகரின் முக்கியஸ்தர்கள் பலரும் செய்தி கேள்விப்பட்டு வந்தனர். திண்ணையின் ஓரத்தில் உயிரற்ற பொருள்போல் செட்டியார் சாய்ந்தார்.

பலரும் வீட்டை விட்டு எழுந்து வாசலுக்கு வருவதற்குள் செய்தி வீட்டிற்குள் போய்ச் சேர்ந்தது. சித்தரை வீதி, ஆவணி வீதி, மாசி வீதியென மூன்று வீதிகளும் இந்த அதிகாலையில் மக்களின் பேச்சொலிகளால் நிரம்பின. ஆளாளுக்கு ஒன்றைப் பேசியபடியே இருந்தனர். சிந்திய தானியங்களைக்கூட எடுக்க விடாதவர்களுக்கு இப்பொழுது அந்த அறையில் சிந்திய தானியங்கள் மட்டுமே மிஞ்சியிருக்கிறது என்றனர். இந்த வறட்சிக் காலத்தில் இந்த இழப்பைக் கணக்குப்பார்த்தால் செட்டியார் குடும்பம் இதைச் சரிக்கட்ட முடியாது என்றனர். இத்தனை மூடை தானியங்களை வைத்திருக்கிற ஒருவருக்கு நேருகிற இழப்பில் எல்லோரும் சந்தோஷிப்பதற்கு இடமிருக்கிறது. தனது பங்கை சரியாகப் பிரித்துக் கொடுக்கவில்லை என்ற வருத்தத்தில் இருந்த அவரது சித்தப்பா துரைசாமி செட்டியார் உள்பட.

மாவட்ட எஸ்.பி. வில்சனால் நம்பவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் விசாரணை நடத்திக் கொண்டேயிருந்தார். நள்ளிரவுக்குப்பின் இத்தனை மூடைகளையும் வண்டிகள் ஏற்றி, விடியும் முன் எப்படி நகரை விட்டு வெளியேற முடியும் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. ‘அவரால் புரிந்துகொள்ள முடிந்திருந்தால் மூன்று படி தானியத்தை தரமறுத்து இத்தனை மூடை தானியங்களை இழப்பதற்கு வழிகாட்டியிருப்பாரா?’ என்று பலரும் நினைத்தனர். காவக்கூலி

விசயத்தில் வில்சன் நல்லமுத்து செட்டியாரை எச்சரித்ததைப் போல பல மடங்கு பலமான எச்சரிக்கையை காவல்காரர்கள் நல்லமுத்து செட்டியார் மூலம் மதுரைக்கு விடுத்துள்ளனர்.

எஸ்.பி.வில்சன் சொல்படி தலைமை ஏட்டு கோபால் ஐயர் நல்லமுத்து செட்டியாரின் வீட்டிற்குப்போய், அவருக்கு ஆறுதலாக நாலுவார்த்தை பேசிவிட்டு, கொஞ்சநேரம் கழித்து கச்சேரிக்கு வருமாறு அழைத்தார். 'நீங்கள் கச்சேரிக்கு வந்து புகார் மனு கொடுக்கவேண்டுமென எஸ்.பி. சொன்னார்' என்றார். நல்லமுத்து செட்டியாருக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவேதுமில்லை. அப்படியொரு பெரும் கத்தலோடு கோபால் ஐயரின் கையைப் பிடித்து வீட்டுத் திண்ணைவரை தரதரவென இழுத்துவந்தார். 'உங்க பேச்சைக் கேட்டு நடுத்தெருவுல நிக்கிறேன்'என்று சத்தம்போட்டுக் கத்தி கோபால் ஐயரை விரட்டினார். சுற்றியிருந்த பெரியமனிதர்கள் யாரும் எதுவும் பேசவில்லை. கோபால் ஐயர் தலையைத் தொங்கப்போட்டவாக்கில் வெளியேறிப் போனார்.

செட்டியார் ஆத்திரத்தையும் கோபத்தையும் தணித்துக்கொண்டு நிதானத்துக்கு வர நெடுநேரமானது. அதன்பின் தாதனூருக்கு ஆள் அனுப்புவதற்குப் பொருத்தமானவரைப் பற்றி யோசிக்கலானார்.

இரவு வந்தது. காவக்காரர்களும் வந்து சேர்ந்தனர். அவர்களிடம் பேச்சுக் கொடுக்க பலரும் தயாராக இருந்தனர். ஆனால் யாரும் அவர்களிடம் எந்த ஒரு வார்த்தையையும் வாங்கிவிட முடியவில்லை. எதுவும் நடக்காததைப் போலவே அவர்கள் தங்களின் காவல் வீதிகளின் வழியே நடந்து போய்க்கொண்டிருந்தனர். பேயாண்டி வழக்கம்போல் நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணையைக் கடந்துபோனான். திண்ணையில் ஒரு பெரும் கூட்டமே உட்கார்ந்திருந்தது. கடந்த ஒரு வாரமாக யாருமே உட்காராததைப் பற்றி யோசிக்காமல் கடந்து போனதைப் போலவே, இன்று பெரும் கூட்டம் செட்டியாரைச் சுற்றி இருப்பதைப் பற்றியும் யோசிக்காமல் போய்க்கொண்டிருந்தான். கைக்கம்பால் படிக்கல்லைத் தட்டியபடி தெருமுக்கு திரும்பினான்.

ராமாயணச் சாவடி களை கட்டியிருந்தது. காவக்காரர்கள் ஒவ்வொருவரின் வருகையையும் எதிர்பார்த்து கோனார்கள் காத்துக்கிடந்தனர். சோங்குதான் முதலில் வந்தான். 'ஏ...சீயான், எனக்கு எதுவும் தெரியாது, என்னயக் கேட்டு தொந்தரவு பண்ணாதீங்க!' என்று சொல்லியவாறு கிழக்குப்பக்கத் தூணின் ஓரத்தில் போய் சாய்ந்துகொண்டான். பின் ஒவ்வொருவராக வந்தனர். சீயான்மார்கள் நடந்ததைக் கேட்காமல் விடமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்ட காவக்காரர்கள் முடிந்தவரை பொழுதை நகட்டினர். நள்ளிரவு தாண்டி நெடுநேரமாகியும் சாவடியில் இருந்த எல்லோரும் காவக்காரர்களைப் போலவே தூங்காமல் இருந்தனர். தலைப்பாக் கோனாரும், விருமாண்டியும் படிக்கட்டின் வலது ஓரத்தில் தனியாக உட்கார்ந்து பேசிக்கொண்டி ருந்தனர்.

'மூணு நாளா என்னப்பா பண்ணிக்கிட்டு இருந்தீங்க?' என்று தலைப்பா கேட்டார்.

'இந்த பஞ்ச காலத்துல எட்டு வண்டிமாடுக ஒண்ணா கெடைக்குறதுக்கு கஷ்டமாயிருச்சு சீயான்!' என்றான் விருமாண்டி.

*

# 70

**வெயிலின் உக்கிரம் பூமியை மீனின் உடல்போல செதில் செதிலாய்** ஆக்கிவைத்திருந்தது. ஒவ்வொரு பகலிலும் மண் தன்னை சூரிய ஒளிக்கு பலியிட்டபடி இருந்தது. ஒரு சூனியக்காரியின் ஏவுதலைப் போல எங்கோ தொலைவில் இருந்து உஷ்ணக்காற்று வந்துகொண்டேயிருந்தது. கிணற்றுக்குள் கூடு கட்டிய பறவைகள் கூட உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் செத்துவிழுந்தன. மின்னல் வெட்டிய மரங்களைப்போல கிராமங்கள் எல்லாம் பொசுங்கிக் கிடந்தன. மொட்டைச்சுவர்களும், தூர்ந்தகிணறும், எண்ணெய்ப பிசுக்கற்ற விளக்குக் கம்பமும் ஊர் இருந்த தடயத்தை உணர்த்தியபடி இருந்தன.

கொஞ்சம் பெரிய கிராமத்தில் காரைக் கட்டிடத்து மனிதர்கள் அந்த பூமியை இறுக்கப் பிடித்தபடி வாழ்ந்துவந்தனர். வீறாப்பு சொந்த மண்ணிலே பலரின் வாழ்வை முடித்து வைத்தது. தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்த ஊரை விட்டு தொப்புள் கொடியை அறுத்து வெளியேறுவதென்பது சகிக்கமுடியாத துயரம். மரணத்தையும் கடந்த துயரத்தின் போதுதான் மனிதர்கள் இதுபோன்ற முடிவுகளை எடுக்கின்றனர். காதுவழியாக வந்து சேர்ந்த தகவல்களை நோக்கி அவர்கள் புறப்படுகிறார்கள். கண் தெரியாத கிழவி ஊர்ந்து போவதைப் போலத்தான் மனிதக் கூட்டம் நிலைகுலைந்து நடக்கிறது.

கம்பம் கிராமத்தை விட்டும் பலர் வெளியேறியபடி இருந்தனர். ஒருவர் பின் ஒருவராக ஒருவரோடு சேர்ந்து மற்றொருவராக ஒரு கூட்டம் தயாரானபின் அது வெளியேறும். அப்பொழுது வீறாப்பு பேசியவர்களும் மிஞ்சிய நம்பிக்கையோடு இருப்பவர்களும் அடுத்து வரும் நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக அதனை இழப்பார்கள். அப்புறம் ஒருவர்பின் ஒருவராக மற்றொரு கூட்டம் தயாராகும். இப்படியாக நான்கு கூட்டம் கம்பத்தை விட்டு வெளியேறிவிட்டது. பல கூட்டங்கள் கம்பம் வழியே சென்றன. கிழக்கு திசை நோக்கியும் பலர் போய்க்கொண்டிருக்கின்றனர். மேற்கே மலையை நோக்கியும் பலர் போகின்றனர். ஒவ்வொரு திசையில்

போகிறவர்களும் நம்பிக்கையையும், அவநம்பிக்கையையும் சமமாகச் சுமந்துகொண்டு செல்கின்றனர். நிற்க முடியாமல் அவர்கள் சென்றுகொண்டே இருக்கின்றனர். பூமியின் உஷ்ணம் பாதத்தின் வழியே ஈட்டிபோல் அவர்களுக்குள் ஏறிக்கொண்டிருக்கிறது. கடந்துபோன ஒவ்வொரு நாட்களும் அவர்களை விடாமல் துரத்தியபடி இருக்கிறது.

வல்லாங்கன் குடும்பம் இனியும் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இருந்தது. இங்கிருந்தே சமாளிக்க முடியும் என்ற நிலை கடந்து வெகுநாளாகிவிட்டது. எங்காவது வெளியேறிப் போய் வயிற்றை நிரப்புவதைத் தவிர வேறு வழியில்லை. மலைக்கு மேலே போய் அணைக்கட்டு கட்டுகிற இடத்தில் அந்த சாமியாரைப் பார்த்து வேலைக்குச் சேர அவன் முடிவெடுத்தான். தனது இரண்டு மகன்களையும் இங்கேயே இருக்கும் படி சொன்ன அவன் பஞ்சகாலம் முடிவுக்கு வராமல் நீண்டுகொண்டே போனால் மூத்தவன் பஞ்சம் பிழைக்க வடக்கே போகும்படியும், இளையவன் கம்பத்திலேயே இருந்து சமாளிக்கும்படியும் சொன்னான். பஞ்ச காலத்திற்குப்பின் காவலைத் தொடர ஒருவனையாவது இங்கே இருக்க வைக்க வேண்டுமென்பதற்காக கொடிவைரனை இருக்கச்சொன்னான். ‘எங்கயிருந்தாலும் பஞ்சம் கடந்த மொத மாசிக்கு கம்பம் வந்திரணும்’ எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

இத்தனை ஆண்டு காலம் காவல் பார்த்துவந்த கம்பத்தை விட்டு வல்லாங்கன் மேற்கு நோக்கி நடந்தான். முன்னோர்கள் எழுதிவைத்த ஏடுகள் ஊர் சாவடியில் இருந்த இரும்புப் பெட்டியில் பத்திரமாக இருந்தன. காவல் மகமை, மரியாதைகள் பற்றிய வார்த்தைகள் அந்த பெட்டிக்குள் உறங்கிக்கொண்டிருந்தன. ‘வாக்கு தவறுகிறவர்களை கிராம தெய்வம் கேட்கும்’ என்று சொன்னவர்கள் தங்களின் வீடுகளுக்குள் பத்திரமாக இருந்தனர். அவர்கள் பஞ்சத்தை தாக்குப்பிடிக்க கூடிய சக்தி படைத்தவர்கள். நைந்து சிதைந்து கிடந்தது காவக்காரர்களுக்கான தொம்பரை. ஒரு காலத்தில் இந்தத் தொம்பரையில் தானியங்களைக் கொண்டுவந்து கொட்டிய சம்சாரிகள் பலர் இன்று ஊரைவிட்டு வெளியேறிக் கண்காணாத திசை நோக்கிப் போய்விட்டனர். மலையடிவாரப் பனங்காட்டுக்குள் இருந்து நரிகள் கூட்டம் கூட்டமாக ஊளையிட்டபடி ஊருக்குள் வந்து சென்றன. மந்தையில் நின்றிருந்த பட்டமரங்களை வாலால் அடித்தபடி அவை போய்க் கொண்டிருந்தன. இரவு முழுவதும் நரியின் ஊளைச்சத்தத்தை ஊர் குடித்துக்கிடந்தது.

நாலா திசையிலும் ஊரைவிட்டு வெளியேறிப் போகிற யாரும் பின்னாலே திரும்பி ஊரைப் பார்க்கவில்லை. துக்கமும் அவலமும் அவர்களின் குரல்வளையைக் கவ்வி இழுத்துக்கொண்டு சென்றது. மேற்கே வெகுதூரத்திற்கு அப்பால் போன வல்லாங்கன் ஒரு பெரிய மேட்டேறியபின் ஊரைத் திரும்பிப் பார்த்தான். ஒரு பேயுருபோல ஏதோ ஒன்று உட்கார்ந்திருந்தது.

*

**அ**னாதி காலந்தொட்டு மனித நடமாட்டமே இல்லாத அந்த மலையுச்சி காட்டுப்பகுதியில் நதியைக் குறுக்காகப் பிளந்து தடுப்பு அணை கட்டுவதற்கான ஆரம்பப்பணிகள் துவங்கியிருந்தன. காற்று கூட உள்நுழைய முடியாதபடி பசுமையால் மூடி அது தனது யௌவனத்தைக்

காத்துக்கிடந்தது. அதற்குள் மனிதர்கள் ஊடுருவிப் போனார்கள். உயர்ந்த மரங்களையும் செடிகொடிகளையும் வெட்டியழித்தபடி அவர்கள் உள்ளே நுழைந்தனர். பொறியாளர் களால் குறியிடப்பட்ட அந்த இடத்தில் நதியின் இரண்டு பக்கமிருந்த மலைப்பாறைகளை உடைத்து எடுக்கும் பணி துவங்கியிருந்தது.

தடுப்பு அணை கட்டப்படுவதற்கு வலதுபுறம் இருந்த ஒரு சிறிய சமவெளிப் பகுதியில் மரங்களெல்லாம் வெட்டிச் சாய்த்து செடிகொடிகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. அங்குதான் கூடாரங்கள் போடப்பட்டிருந்தன. கூரைகள் வேயப்பட்ட சிறு குடில்கள் கட்டப்பட்டிருந்தன. விலங்குகளுக்கான பட்டியுடன் ஒரு சிறு கிராமம் போல இருந்தது. சுற்றிலும் அடர்ந்த காடு. தேன்கூட்டிற்குள் குச்சியைச் சொருகி உள்ளே தேன் இருப்பதைக் கண்டறிவதைப் போல, அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் நதியின் ரகசியமொன்றைக் கண்டறிந்து சொன்னவர்கள் இந்த வனமைந்தர்களான பளியர்களே. அவர்கள்தான் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ராமநாதபுரம் முத்து இருளப்ப பிள்ளைக்கு இந்த இடத்தைக் காட்டினார்கள். வைகையின் ஊற்று வறண்டு கிடந்த ஒரு கோடைகாலத்தில் இந்த மலையில் இருந்து தண்ணீர் பெற எதுவும் செய்யமுடியாதா? என்று அவர் இறைஞ்சிக்கேட்டபொழுது, வருசநாட்டுப் பளியர்கள்தான் உச்சிமலையில் தண்ணீர் ஓடும் இந்த இடத்தைக் காட்டினார்கள். தெற்குச் சீமையின் தாகம் தணிக்க அவர் பல யோசனைகள் செய்து திட்டம் போட்டார். காலம் நதியில் உருளும் கூழாங்கல்லாய் உருண்டு ஓடியது. எதுவும் நடந்தேறவில்லை. இன்றுவரை, இப்பொழுதும் நடந்திருப்பதெல்லாம் டென்ட் போடும் வேலை மட்டும்தான்.

அணைக்கான வேலைகள் துவங்கிவிட்டன. யானைகளுக்கான ஒரு முகாமும் இருந்தது. யானைப்பாகன்களும் அங்கேயே தங்கினர். கோவேறு கழுதைகள், குதிரைகளும் இருந்தன. இவ்விலங்குகளைப் பராமரிப்பவர்கள், பாறை வேலை, கட்டுமான வேலைகளுக்குக் கொண்டுவரப்பட்டவர்கள், இவர்களுடன் சேர்ந்து ஐந்து பளியர்களின் குடும்பம் என எல்லாம் அங்கேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர். காட்டுவிலங்குகளின் தாக்குதலில் இருந்து காத்துக்கொள்ள துப்பாக்கிக் காவல்காரர்கள் இரவும் பகலும் காவலிருந்தனர். வெள்ளை அதிகாரிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள் குழு என எல்லோரும் வேலை நடைபெறும் இடத்திலிருந்து வெகு தொலைவுக்கு அப்பால் பாதுகாப்பான பகுதியில் தங்கியிருந்தனர்.

கோவேறு கழுதைகள், குதிரைகள், எருதுகள், யானைகள் போன்ற விலங்குகளின் பயன்பாடு பெரிய அளவில் இருந்தது. அணைக்கட்டுக்கு தேவையான தளவாடச் சாமான்களையெல்லாம் இவ்விடம் கொண்டு வந்து சேர்க்கிற வேலைகளை கோவேறு கழுதைகளும் எருதுகளுமே செய்தன. எனவே அதிகமாக இவையே இருந்தன. வெட்டிய மரங்களை அப்புறப்படுத்த யானைகள் உதவின. குதிரைகள் வெள்ளை அதிகாரிகளின் வாகனங்கள்.

ஏழு யானைகள் இருந்தன. அதன் தலைமைப் பொறுப்பாளராக சசிதரன் நாயர். காடுகளைப் பற்றியும், யானைகளைப் பற்றியும் தேர்ந்த ஞானமுள்ளவர். திருவிதாங்கூர் வனப்பகுதிகளின் ஜாதகங்களை கணித்த பூர்வீகக் குடும்பங்களில் ஒன்று இவருடையது. யானைகள் பலவற்றை

வைத்துப் பராமரித்த அனுபவம் பல தலைமுறையாக அவர்களுக்கு வாய்த்திருந்தது. கணுக்கால் கனமாகவும், பாதம் நல்ல வடிவத்துடனும் இருக்கும் யானைகளே சேற்றிலும் நன்றாக வேலை செய்யும் என்பதைக் கணித்து, அப்படியான யானைகளாகக் கொண்டுவந்து முகாமில் நிறுத்தி யிருந்தார். யானைகளையும் பாகன்களையும் தனது உடலைப் போல் அவர் காத்துவந்தார். யானைகளுக்கு சேணங்கள் சரியாக உட்காராமல் உராய்வதால் ஏற்படும் புண்களையும், மூங்கில் கணுக்கலால் ஏற்படும் காயங்களையும் பாகன்கள் கண்டறியும் முன் சசிதரன் கண்டு சொல்வார். வேலையிடங்களில், பாறைகளுக்கு இடையில் குறுகிய வழியில் கூடபெரும் மரக்கட்டைகளை அது லாகவமாக தூக்கிவரும்.

இரும்புச் சாமான்கள், கயிறுகள், வெடிமருந்து டப்பாக்கள், கூடாரப் பொருட்கள், சாராய பீப்பாய்கள் என எல்லாவற்றையும் கோவேறு கழுதைகளும், எருதுகளும் சுமந்து வந்தபடியே இருந்தன. ஒரு நாளைக்கு ஒரு நடை கொண்டுவந்து சேர்ப்பதே கடினமாக இருந்தது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர். தடுப்பு அணைகட்ட வேண்டிய இடத்தில் பாறைகளை உடைத்து எடுக்கும் பணிமும்முரமாக நடைபெற்று வந்தது. இரண்டு பக்க மலைச்சரிவிலும் பெரும்பாறைகளை வெட்டியெடுக்க வேண்டியிருந்தது. பகலில் பாறைகளைப் பெயர்க்க வைக்கப்படும் வெடிச்சத்தம் காடெங்கும் எதிரொலித்தபடி இருந்தது. வெள்ளை அதிகாரிகள் காலையில் புறப்பட்டு வருவதும் மாலையில் போவதுமாக இருந்தனர். கீழேயிருந்து உணவுப்பொருட்கள் குறைந்த அளவே கொண்டுவந்து சேமிக்கப்பட்டிருந்தன. காட்டுக் கிழங்குகள் தான் முக்கிய உணவு. பளியர் பெண்கள் தேன் உள்ளிட்ட மலைபடு பொருட்களை தினமும் கொண்டுவந்து பண்டமாற்று செய்துகொண்டனர்.

மாலை வரை வேலையின் கலகலப்பு நீடிக்கும். பின் நேரம் ஆகஆக காட்டின் அடர்ந்த பிடிக்குள் அந்த இடம் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கும். காட்டுக்குள் படிந்து கிடந்த வெடிச்சத்தம் மௌனமாக மாறிப்பெரும் குரலெடுத்து செவிப்பறை கிழிய கத்தும். சாராயத்தை மூச்சு முட்டக் குடித்து போதையில் மூழ்கியபடி தப்பித்து ஓட மனிதர்கள் முயற்சிப்பார்கள். இருள் மழை நீரைப்போல நாலா திசையில் இருந்தும் சரசரவென இறங்கிவந்து அந்த இடத்தையே மூழ்கடித்துவிடும். இரவில் ஒரே நேரத்தில் காட்டு யானைகளின் பிளிறலால் ஏற்படும் பயங்கரமான ஓசை அந்த இடத்தையே நடுநடுங்கச் செய்யும். என்னவென்று அறியாமல் எல்லோரும் அரண்டுபோய் அங்குமிங்குமாக ஓடுகிறபொழுது, ‘இந்த வெப்ப காலத்துல யானை குட்டிபோடும். புலிகுட்டிய அடிச்சிரக்கூடாதுன்னு மத்த யானையெல்லாம் சேர்ந்து இப்படிக் கத்தும்’ என்று பளியனின் மனைவி மற்றவர்களுக்குச் சொல்லிச்செல்வாள். ஒவ்வொரு இரவும் காடு தனது விஸ்வரூபத்தை காட்டியபடி இருந்தது. அதன் உள்ளே மாட்டிக்கொண்ட பஞ்சம் பிழைக்கப் போனகூட்டம், பஞ்சத்தை விட கொடிய மலைக்காய்ச்சலுக்கு பலியாகிக் கொண்டிருந்தது.

கோடையின் உச்சத்தில் ஆறு நூலாய் ஓடியது. மலையின் மேல் ஆங்காங்கே ஒழுகிய சிற்றருவிகள் வறண்டு கருந்தடங்களாயின. தடாகங்களும் காய்ந்துபோயின. பாசி படர்ந்திருந்த பாறைகள் மிருகங்கள் கால்பதிக்க முடியாதவாறு சுட்டன. எல்லா விலங்குகளும் தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு இறங்கி வர ஆரம்பித்தன. கழுதைகளும் குதிரைகளும்

மனிதக்கூட்டமும் இருக்கும் வாசனை தண்ணீரோடு கலந்தே இருந்தது. தங்களுக்கான இரையின் வாசனையை நீரின் வழியே முகர்ந்த மிருகங்களும் தண்ணீர் குடித்தபின் திரும்பிச் செல்ல வேண்டிய தேவையின்றிப் போனது.

*

**வ**ல்லாங்கன் பாதர் ஜேம்சை வந்து பார்த்து, அவர் மூலம் அதிகாரிகளிடம் அறிமுகமாகி வேலை நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். இதற்கு முன்னால் பலமுறை விசுங்கனுடனும், நரியனுடனும் வேட்டைக்கு வரும்பொழுது இந்தத் திசை நோக்கி இடிந்த குறும்பா பகவதி கோவில் தாண்டி மலையேறி அவன் வந்திருக்கிறான். ஆனால் இந்த இடத்திற்கு அவன் வந்ததில்லை. இவ்வளவு உயரமான மலையின் மீது காட்டின் இறுகிய பிடிக்குள் தங்கியிருந்து வேலை செய்கிறவர்களை இன்று வந்து பார்த்தவுடன் அவனுக்கு வியப்பாக இருந்தது. ‘தாயோளி... இத்தன பேரு வந்திருக்காங்களாடா...’ என்று நினைத்துச் சிரித்தபடி வேலை நடக்கும் இடத்திற்குள் இறங்கினான்.

அங்கேயே வேலை பார்த்து அவர்களுடனே தங்கினான். வெள்ளைக்காரன் பீப்பா பீப்பாவாகக் கொண்டுவந்து இனமாக கொடுக்கும் சாராயம்தான் அனைவரையும் போல அவனையும் துடிப்புடன் வைத்திருந்தது. காடு பற்றிய அவனது அசட்டை மேற்பார்வையாளர் ராபர்ட்டுக்கு மிகவும் பிடித்துப்போனது. அவர் வல்லாங்கனைத் தனது அருகிலேயே வைத்துக்கொண்டார். காட்டுக்குள் போகும்பொழுது துப்பாக்கி இல்லாமல் இருப்பதை அவன் பலவீனமாகவோ பயமாகவோ உணராமல் இருப்பதை அவர் வியந்தார்.

பாறைகளைத் தகர்க்கும் வெடியோசை கேட்டபடி இருந்தது. வேலைகள் மும்முரமாக நடைபெற்றன. வெள்ளைக்கார இஞ்ஜினியர்கள் தொப்பிகளுடனும் பூட்ஸ்களுடனும் ஆங்காங்கே பாறைகளின் மீதேறி அளவெடுத்துக் குறித்தபடி இருந்தனர். டென்டுக்குள் விரித்து வைக்கப்பட்டிருந்த வரைபடங்களைப் பார்த்தவாக்கில் சிலர் உட்கார்ந்திருந்தனர். அடர்த்த புதருக்குள் இருந்து குதிரைகளை உற்றுப்பார்த்தபடி சிறுத்தைகள் இருந்தன. இரவு ஆனவுடன் காட்டு விலங்குகளை விரட்ட முக்குக்கு முக்கு தீப்பந்தம் ஏற்றப்பட்டது. குதிரைகளின் ருசியை சிறுத்தைகளும் புலிகளும் மறந்துவிடவில்லை. சில நேரம் குதிரைகளுக்கு மாற்றாக மனிதர்கள் அகப்பட்டனர். பதிவு செய்யும் அதிகாரியின் அட்டவணையில்தான் கோடுகள் மாறி மரணம் பதிவானது.

**கா**ட்டுக்குள் போன பளியனின் மனைவி ஒருநாள் அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தாள். காட்டுக்குள் மதம் பிடித்த ஒரு யானையைக் கண்டதாகவும் அதன் தந்தங்களில் சுருள் சுருளாக வளையங்கள் இருப்பதாகவும் சொன்னாள். அவள் பயந்து ஓடி வந்தது மதம் பிடித்த யானையைப் பார்த்து அல்ல, அதன் தந்தத்திலிருந்த வளையங்களைப் பார்த்துத்தான் என்பது பளியர்களைத் தவிர வேறு யாருக்கும் புரியவில்லை. தங்களது பூர்வீகக் கதைகளில் வருகிற வனராஜாவின் வாகனம் தந்தங்களில் சுருள் சுருளான வளையங்களைக்

கொண்ட யானை; அதற்கு மதம் பிடித்தால் காடு தாங்காது; ஏதோ மிகப்பெரிய அழிவு நடக்கப்போகிறது என்று பளியர்கள் சொன்னார்கள். காட்டுக்குள் பளியர்களே பயப்படும் விசயமாக அது இருந்தது. இதைக் கேள்விப்பட்டு அந்தப் பெண்ணிடம் நேரில் பேசிப்பார்த்த பலரும் பயத்தால் நடுங்கியபடி இருந்தனர். பளியனின் மனைவிக்கு காய்ச்சல் கண்டது. மூலிகைகளை அரைத்து மருந்து கொடுத்தனர். இரண்டு நாளாக கடுங் காய்ச்சலிலே படுத்துக்கிடந்தாள். உடம்பு தூக்கிப்போட, பிதற்றல் அதிகமாக இருந்தது. அவள் நினைவுகளுக்குள்ளே குதிரைகளின் காலடிச்சத்தம் கேட்டது. வானுயர்ந்த மரங்கள் வெட்டிச்சாய்க்கப்பட்டன. வன தேவதையின் அழகிய பாதங்கள் பித்த வெடிப்பு போல வார்வாராகப் பிளந்து கிடந்தன. யாரோ ஒரு முதிய பளியனை அந்த யானை தும்பிக்கையால் சுருட்டித் தேக்கு மரமொன்றில் மாறி மாறி அடித்தது. தலை சிதறி எலும்புகள் நொறுங்கிச் சக்கையாகத் தொங்கும்வரை அது விடவில்லை. இரவு முழுவதும் அது அடித்துக்கொண்டே இருந்தது. ‘நீ ஏன்டா அவனுக்கு இந்த எடத்தக் காட்டுன...’ என்று புலம்பியபடி இருந்த அவள் உயிர் அதிகாலையில் பிரிந்தது.

பளியனின் மனைவி இறந்தது பலரையும் நடுக்கமுற வைத்தது. பகலிலும் இரவிலும் இதையே பேசிக்கொண்டிருந்தனர். ‘அவள் உண்மையிலேயே மதம் கொண்ட யானையைத்தான் பார்த்தாளா’ என்று ராபர்ட் பளியர்களிடம் கேட்டார். பளியர்களோ பெரும் மௌனத்திற்குள் இருந்தனர். காடு பலி வாங்கத் துவங்கிவிட்டதாகக் கருதினர்.

மற்றவர்கள் வழக்கம்போல் வேலைகளைப் பார்த்தனர். ஆனால் யானை முகாமில் இருந்த சசிதரன் இந்தச் செய்தி கேள்விப்பட்டபின் இரண்டு நாட்களாக முகாமைவிட்டு வெளியே வரவில்லை. யாருடனும் சகஜமாக பேசவில்லை. தந்தத்தில் சுருள் இருக்கும் யானையைப் பற்றிக் கேள்விப்பட்ட கணக்கற்ற கதைகளே அவர் நினைவு முழுவதிலும் இருந்தது. தலைமுறை தலைமுறையாக இந்த யானை நினைவுக்குள் வசித்தபடி இருக்கிறது. நேரில் பார்த்த பளியனின் மனைவி செத்துப்போனதென்பது அபசகுணமாக இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் அவர் பித்துப்பிடித்தது போல் இருந்தார்.

ஒரு வாரத்திற்குப் பின் காட்டுக்குள் போய்த் திரும்பிய பளியர்கள் யானைகள் கொல்லப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துவந்து சொன்னார்கள். உடனே ராபர்ட் உள்ளிட்ட ஆங்கில அதிகாரிகள் யானை ஒன்றின் மீதேறி பளியர்களை அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்குப் போனார்கள். அங்கே இரண்டு பெண் யானைகள் செத்துக்கிடந்தன. மதம் கொண்டே ஒரு யானைதான் இவற்றைத் தந்தங்களால் குத்திக் கிழித்துப் போட்டிருக்கிறது.

அதன்பிறகு பணியிடத்தில் துப்பாக்கி காவல் உஷார் படுத்தப்பட்டது. வேலையாட்கள் பயங்கொண்டிருந்தனர். எல்லா மரத்திற்குப் பின்பும் காதுகளை ஆட்டியபடி தந்தங்களில் சுருள் கொண்ட அந்த யானை நிற்பது போல் இருந்தது. நாளுக்கு நாள் வேலைத்தளத்தில் நிலைமை மோசமானபடி இருந்தது. அந்த யானையைச் சுட்டுவீழ்த்துவதென்பது எல்லோருடைய பாதுகாப்பிற்கும் மிக அவசியம் என்றானது. அதைச்சுடுகின்ற காவலாளிக்கு அதிகாரிகள் பரிசுத்தொகை கொடுப்பதாக அறிவித்தனர். பயம் காடு முழுவதும் நிரம்பிக்கிடக்கிறபோது பரிசுத்தொகை யாருக்கும் ஆவலைத் தூண்டவில்லை. பாறைகளில்

வேட்டு வைக்கும் போது எங்கிருந்தாவது மிரண்டு இந்தப் பக்கம் ஓடிவந்துவிடுமோ என அஞ்சியபடி அவர்கள் வெடிவைத்தனர். யானை மந்தைகள் அமைதியாக வந்து தண்ணீர் குடித்துவிட்டுப் போயின. ஆனால் கண்ணுக்குத் தெரியாத ஒற்றை யானை காட்டையே ஆண்டுகொண்டிருந்தது. வேங்கை மரங்களைத் தூரோடு பிடுங்கி எறிந்தவாறு ஓடிவருகிற அதைக் கற்பனையில் கண்டு நடுங்கியபடி இருந்தனர். காவலாளிகளும் அதிகாரிகளும் துப்பாக்கிள் அனைத்திலும் தோட்டாக்களைப் போட்டு தயார் நிலையில் வைத்திருந்தனர். வனராஜாவின் கோபங்கண்டு அஞ்சிய பளியர்கள் தனிஞ்சுக் காட்டில் இருக்கும் தங்களது இஷ்ட தெய்வத்திற்கு பன்றியொன்றை வேட்டையாடிப் பலி கொடுத்துவிட்டு வருவதாகச் சொல்லிச்சென்றனர்.

பாறையை உடைத்து எடுக்கும் பணி உற்சாகமின்றி நடந்துகொண்டிருந்தது. ராபர்ட்டும் மற்ற சிலரும் வேலையாட்களை தைரியமாக இருக்கும்படி சொன்னார்கள்.

குடிசைகள் இருந்த இடத்திற்கு ராபர்ட்டும் வல்லாங்கனும் மற்றொரு காவலாளியும் வந்துகொண்டிருந்தனர். திடீரென தூரத்தில் இருந்த யானை முகாமில் முரசு ஒலிக்கும் சத்தம் கேட்டது. ராபர்ட்டும் மற்ற இருவரும் நிலைமையை ஊகித்து துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தபடி வேகமாக ஓடினர். முகாமிற்கும் குடிசைகளுக்கும் மத்தியில் மலையின் மேலே இருந்து செடிகொடிகளைப் பிடுங்கி எறிந்தபடி அது சரசரவென வந்துகொண்டிருந்தது. முகாமில் இருந்தவர்கள் மதயானைதான் வருகிறது என்பதை உணர்ந்து அதை விரட்ட பயங்கரமான சத்தத்துடன் தப்படித்து ஒலிஎழுப்பினர். அது உள்ளே நுழைந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம். ஆனால் அது தன் போக்கிற்கு வந்துகொண்டிருந்தது. ராபர்ட்டும் மற்றவர்களும் குடியிருப்பைத் தாண்டி ஓடி வந்தனர். சற்றும் எதிர்பாராமல் பாறையின் வெடியோசை அவர்களுக்குப் பின்புறமிருந்து கேட்டு காடு முழுவதும் எதிரொலித்தது. காட்டுக்குள் இருந்து வெளிவந்த வேகத்தில் வெடியோசை கேட்ட பக்கம் திரும்பியது. தூரத்தில் மூன்று பேர் ஓடிவருவதைப் பார்த்தவுடன் வெறி கொண்டு அவர்களைத் தாக்க ஓடிவந்தது. தும்பிக்கையைச் சுருட்டி வாயில் வைத்தபடி வந்த அதன் ஓட்டம் அந்த இடத்தையே அதிரச் செய்தது. தனக்கான இலக்கு தன்னை நோக்கி ஓடிவருவதைக் கண்ட ராபர்ட் கொஞ்சம் நிதானித்து, ஒரு சிறிய பாறைத் தடுப்புக்கு பின்னால் நின்றவாறு, துப்பாக்கியால் குறிபார்த்தபடி இருந்தார். உக்கிரமாக அது ஓடிவருவது கண்டு குலை நடுங்க நின்றுகொண்டிருந்தான் காவலாளி. இரண்டாவது துப்பாக்கியை ராபர்ட்டுக்கு கொடுக்க தயார்நிலையில் நின்றுகொண்டு, உற்றுப் பார்த்தபடி இருந்தான் வல்லாங்கன். புழுதியைக் கிளப்பியபடி அது அவர்களை நோக்கி ஓடிவந்தது. குழாயைத் தூக்கிப்பிடித்து குறிபார்த்தபடி இருந்த ராபர்ட் குறிப்பிட்ட இடைவெளிக்குள் அது வந்து விட்டதைக் கணித்து அதன் மத்தகத்தை நோக்கி சுட்டார். ஐந்து கெஜதூரம் அது முன்னால் வந்து விழுந்தது. வலது தந்தம் முக்கால் அடிக்கு மேல் மண்ணுக்குள் சொருகியது. சற்று நேரம் ஆடியது அதன்தலை. மண்ணில் சாய்ந்தபடி உயிர்விட்டது.

சில நொடிகளுக்குப் பின்தான் ராபர்ட்டுக்கு உயிர் வந்தது. குறி தப்பியிருந்தாலோ சரியான இடத்தில் குண்டு பாயாமல் போயிருந்தாலோ

நிச்சயம் அடுத்த துப்பாக்கியை வாங்கிச் சுடுவதற்கான அவகாசம் இருந்திருக்காது. வேட்டையில் நீண்ட அனுபவம் உள்ள தன்னையே, ஆக்ரோஷத்துடன் அது ஓடிவந்தவிதம், இதுவரை இல்லாத அளவு கைநடுங்கச் செய்து விட்டது என்பதை உணர்ந்தபடி அப்படியே நின்றுகொண்டிருந்தார். வீழ்ந்த பின்பும் அதன் வேகம் அவர் கண்ணுக்குள்ளே இருந்தது. சத்தங்கேட்டு பணியிடத்திலிருந்து ஆட்கள் தலைதெறிக்க ஓடிவந்தனர். குடிசைகளில் இருந்தும், யானை முகாமிலிருந்தும் சில நிமிடங்களில் எல்லோரும் வந்து குவிந்தனர். மொத்தக் கூட்டமும் அங்கு வந்து சேர்ந்தது. எல்லோரும் அந்தக் கரிய பெரிய உருவத்தை அதிர்ச்சியுடன் உற்றுப்பார்த்தனர். ஒரு பெரும்பயம் வீழ்த்தப்பட்ட சந்தோஷம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் வந்தது. தந்தத்தில் இருந்த சுருள் சுருளான வளையங்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எங்கள் வாழ்நாளில் இதுபோன்ற ஒன்றை நாங்கள் பார்த்ததேயில்லை என்று பாகன்கள் கூறினர். ஆங்கில அதிகாரிகள் ராபர்ட்டுக்கு கைகொடுத்து வாழ்த்து தெரிவித்தபடி இருந்தனர். சத்தமும் கூச்சலும் அந்த இடத்தையே நிரப்பிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப்பின் ராபர்ட் தத்தங்களை வெட்டியெடுக்கச் சொன்னார். ‘நாட்டுக்குத் திரும்பும்போது நான் கொண்டுசெல்லும் மிகச்சிறந்த நினைவுப் பொருள் இதுவாகத்தானிருக்கும்’ என்று சக அதிகாரிகளிடையே தெரிவித்தார். தந்தங்கள் வெட்டியெடுக் கப்படுவதை பெரும் விருந்துபோல அந்த கூட்டம் கொண்டாடிக் கொண்டிருந்தது. சசிதரன் எங்கே போனார் என்பதை கவனிக்க ஆள்இல்லை.

*

**தே**க்கடியில் இருந்து பாதர் ஜேம்ஸ் எழுதிய கடிதம்;

கிறிஸ்துவின் பிரியமான சகோதரருக்கு.

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் நம்முடன் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தாங்கள் ஜுலை 28ம் தேதி அனுப்பிய கடிதம் கிடைக்கப்பெற்றேன். பசுமலையில் நடைபெற்று வரும் அமெரிக்கன் மிஷனிரிமார்களின் பணிகள் தேவ ஊழியம் செய்யும் எல்லோரையும் உற்சாகப்படுத்தக் கூடியவை. உங்களது புதிய திட்டங்கள் மிகச்சிறப்பாக ஆண்டவன் கிருபையால் கைகூடும். வறட்சி நிலையைப் பற்றி நீங்கள் எழுதியுள்ள விபரங்கள் நெஞ்சை உருக்குகின்றன. இங்கிருந்தே அதன் கடுமையை என்னால் உணரமுடிகிறது. இது சமயம் நம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். ‘கர்த்தர் தாமே உங்களை ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவராக.’

இங்கு ஒரு சிறிய தேவாலயம் கட்டும் பணி முடிவுற்றுள்ளது. அது சந்தோஷத்தை அளித்தாலும் இரண்டு விசயங்கள் என் மனதை மிகவும் பாதித்துள்ளன. தொடர்ந்து பிரார்த்தனை செய்து என்னை நான் தேற்றிவருகிறேன். அவை குறித்து உங்களிடம் பகிர்ந்து கொள்வதற்காகவே இக்கடிதம் எழுதுகிறேன்.

முதல் விசயம், அணை கட்டப்படும் இடத்தில் நிகழும் அளவற்ற மரணம் பெரும் அதிர்ச்சி தருகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும்

இருபத்தியோரு பேர் இறந்துள்ளனர். சராசரியாக ஒன்றரை நாளுக்கு ஒருவர் சாகிறார். எந்தப் பாதுகாப்பும் இன்றி மிக மலிவாக மனித உயிர்கள் பலியாகின்றன. தினமும் பஞ்சம் பிழைக்க மக்கள் கூட்டம் இங்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனால் புதிதாக வேலைக்கு ஆள் சேர்ப்பதில்லை என்று சொல்லி இவர்கள் திருப்பி அனுப்புகின்றனர். அவர்கள் சோகத்தோடு வேறு இடம் நோக்கிப் போகிறார்கள். அவர்கள் செல்லுவது ஆறுதல் அளிக்கிறது. வேறு எங்கு போனாலும் அதை விட நன்றாக அவர்கள் பிழைத்திருக்க வாய்ப்பிருப்பதாகவே கருதுகிறேன்.

இந்நிலையில் கடந்த வாரம் நடந்துள்ள அதிகாரிகள் கூட்டத்தில் அணை கட்டும் திட்டத்தை கைவிட முடிவெடுத்துள்ளதாக அறிகிறேன். இந்த முடிவு இங்கு நிகழ்கிற மரணத்தை விடக் கொடுமையானது. இத்திட்டம் கைவிடப்பட்டால் மதுரை, ராமநாதபுர மக்களுக்கான ஆதார நீருக்கு எங்குதான் செல்வார்கள்? ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பஞ்சம் வீதம் எண்ணிலடங்காத மக்கள் செத்து மடிவதைத் தவிர வேறு வழியில்லை. இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட இங்கு யார் இருக்கிறார்கள்? இன்னும் சில வாரங்களுக்குப் பின் வரவிருக்கிற மழைக்காலமும் அதன் பின் பரவப் போகும் மலேரியா, நிமோனியா காய்ச்சலையும் கண்டுதான் இவர்கள் பயந்து போய் இருக்கிறார்கள். அதனால்தான் மழைக்காலம் துவங்கும் முன்பே அணைக்கட்டுத் திட்டம் சாத்தியமற்றது என்ற முடிவுக்கு வந்து, டென்ட்டுகளை காலி செய்யத் திட்டமிட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒருசில அதிகாரிகளும் உண்டு. ஆனால் மெட்ராசிலோ மதுரையிலோ உள்ள சொகுசான வாழ்வுக்கு எதிராக, இந்த வனாந்தரத்திற்குள் இருந்து போராட அவர்களுக்கு யாரும் ஆதரவளிக்கவில்லை. சீப் இன்சினீயர் கடந்த வாரம் நடந்த விருந்தோடு அனைத்தையும் முடித்து வைத்துவிட்டுப் போய் விட்டார். முறைப்படி ஆவணங்களில் திட்டம் கைவிடப் பட்டதற்கான காரணங்கள் பதிவு செய்து அனுப்பப்பட்டு விட்டது. கொடிய பஞ்சங்களும், கணக்கற்ற மரணங்களும் இந்த மண்ணை விட்டு அவ்வளவு எளிதில் அகலப்போவதில்லை.

இரண்டாவது வசியம், கடந்த வாரம் இறந்து போன எனது நண்பர் சவுரிராயன் பற்றியது. அவர் திருவாங்கூர் பகுதியைச் சேர்ந்தவர். மூன்று தலைமுறையான கிறிஸ்துவத்தில் இருப்பவர். அணைக்கட்டு வேலைக்கான பணிகளுக்காக அங்கிருந்து வரவழைக்கப்பட்டார். இங்கே நான் வந்த பிறகு தேவாலயம் கட்டும் பணிக்கு பெரும் உதவியாக இருந்தார். கடந்த வாரம் திடீரென உடல் நலமின்றி இருந்த அவர் மரணத்தைத் தழுவினார். கிறிஸ்துவ முறைப்படி இங்கே இருக்கும் இடுகாட்டில் அடக்கம் செய்ய வேண்டுமென நாம் முயற்சி செய்தபொழுது, இல்லை, இது ஐரோப்பியர்களை மட்டுமே புதைப்பதற்கான இடம், இங்கே அவரைப் புதைக்ககூடாது; இந்தியர்களின் இடுகாட்டில் போய் அவரைப்புதைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். ஒரு கிறிஸ்துவனை கிறிஸ்துவ இடுகாட்டில் புதைப்பதைக் கூட அனுமதிக்க முடியாத அளவு இனப்பாகுபாடு இவர்களது கண்களைக் கட்டியிருக்கிறது. நான் என்ன செய்ய? ‘கர்த்தாவே ஏன் தூரமாய் நிற்கிறீர்?’ என்று மனம் மீண்டும் மீண்டும் சங்கீதத்தின் வரிகளை உச்சரித்துக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவில் பிரியமான உங்கள் சகோதரன்

ஜேம்ஸ்

1875 செப்டம்பர் 3

*

# 71

**இந்தக் காலைப் பொழுதில் கலெக்டர் பங்களாவுக்குத் தன்னை ஏன்** வரச் சொன்னார்கள் என்பது தெரியாத குழப்பத்தில் போய்க் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் வீராச்சாமி நாயுடு. காலை நேரத்திலேயே வெயில் ஏறி அடித்தது. வைகையைக் கடந்து கலெக்டர் பங்களாவை அடைந்தார். அங்கே போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். குதிரைப்படை போலீசார் முழுவதும் அங்கே இருந்தனர். அதிகாரிகளின் குதிரைகளைப் பிடித்தவாக்கில் கச்சேரி போலீசார் அங்குமிங்குமாக நின்றுகொண்டிருந்தனர். எஸ்.பி.வில்சன், டி.எஸ்.பி.கள். ப்ரெவ்ஸ், பி.ஷாங்க், இன்ஸ்பெக்டர்கள் கோபால் ஐயர், சேஷகிரிராவ் ஆகிய எல்லோரும் உள்ளே இருப்பதாக கச்சேரி போலீஸ் ஒருவன் சொன்னான். வீராச்சாமி நாயுடுவுக்கு பதற்றம் அதிகரித்தது. அதிகாலையிலேயே அவருடைய வீட்டிற்குத் தகவல் சொல்லப்பட்டது. ஆனால், அதற்கு முன்னதாகவே அவர் எழுந்து வெளியில் போய்விட்டு காலம் தாழ்த்தி வந்து சேர்ந்தார். அதன் பின் தகவல் அறிந்து மிகத் தாமதமாகவே கலெக்டர் பங்களாவுக்குள் நுழைந்தார். எல்லோருக்கும் சல்யூட் அடித்துவிட்டு சுவரோரத்தில் நின்றிருந்த சேஷகிரி ராவுடன் சேர்ந்து நின்றுகொண்டார். கலெக்டர் வில்லியம் காரேவை இவ்வளவு கடுகடுப்புடன் இதற்கு முன் பார்த்ததேயில்லை. கலெக்டருக்கு பக்கத்து நாற்காலியில் அமர்ந்திருந்த எஸ்.பி. வில்சனின் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்கவே முடியவில்லை. கண்கள் இரத்தச் சிவப்பேறியிருந்தன. வீராச்சாமி நாயுடு என்ன நடந்தது என்பதை ஊகிக்க முடியாத பதற்றத்தில் நின்றுகொண்டிருந்தார். எஸ்.பி. வில்சன் இன்ஸ் பெக்டர்கள் மூன்று பேரையும் நோக்கி ஆள்காட்டி விரலால் சைகை காட்டினார். அவர்கள் மூவரும் அறையை விட்டு வெளியே வந்தனர்.

வீராச்சாமி நாயுடு சேஷகிரிராவிடம் என்ன நடந்தது என்று கேட்கும் முன் அவரே சொல்லத் துவங்கினார். ‘நேற்று இரவு கலெக்டர் பங்களாவில் பெரும் கொள்ளை நடந்திருக்கிறது. நகைகள், துணிமணிகளெல்லாம்

பெருமளவு களவாடப்பட்டுள்ளது. வடக்குச் சுவரில் கன்னம் போட்டு பொருட்களை தூக்கிவிட்டனர்' என்றார். வீராச்சாமி நாயுடுவுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. 'நான் அப்பவே தாதனூர்காரங்களை காவலுக்கு போடுவோம்னு சொன்னேன், இந்த எஸ்.பி. தான் கேட்கமாட்டேன்டாரு' என்றார். பதறிப்போன சேஷகிரிராவ் 'வாயமூடு, என்ன பேசிக்கிட்டு இருக்க' என்று சத்தம் போட்டார். 'இந்தக் களவே தாதனூர்க்காரங்க வேலயா இருக்கும்னு அவங்ய நெனைக்கிறாங்கய' என்றார்.

'அவங்க பாட்டுக்கு மதுரக் காவல பாத்துக்கிட்டு இருக்காங்க. நல்ல முத்து செட்டியார் பிரச்சினை கூட இப்பத் தீந்து போச்சு. காவக்கூலியும், களவுக்கான கூலியும் அவர் கொடுத்த பெறகு சரக்கையெல்லாம் திரும்பு கொடுத்துட்டாங்க. பத்துப் பதினைஞ்சு நாளா எல்லா நல்லா இருக்கு. அப்படி இருக்கப்ப அவங்க எதுக்கு இதச் செய்யணும்' என்றார் வீராச்சாமி நாயுடு.

'இதத்தான் எஸ்.பி. கிட்ட நானும் சொன்னேன். ஆனா, இந்த ஐயருதான் காவக்கூலி கொடுக்கக் கூடாதுன்னு நாம திரும்பத் திரும்ப சொல்றனால தாதனூர்க்காரங்கதான் இது செய்திருப் பாங்கன்னு அடுச்சு சொல்றாரு, அவங்யளும் நம்பிட்டாங்ய' என்றார் ராவ்.

'ஐயரு தேவையில்லாத பிரச்சினையில கொண்டு போயி எஸ்.பி.யையும் கச்சேரியையும் மாட்டிவிடப் பாக்குறாரு' என்றார் வீராச்சாமி நாயுடு. அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது அறைக்குள் இருந்த அதிகாரிகள் வெளியில் வந்தார்கள்.

அங்குமிங்குமாக நின்று குசுகுசுவென பேசிக்கொண்டிருந்த போலீஸ்காரர்கள் எல்லாம் வந்து அணிவகுத்து நின்றனர். துப்பாக்கி தாங்கி குதிரை போலீஸ்படை தயாரானது. அதில் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே இருந்தனர்.

அணிவகுத்து நின்றவர்களுக்கு புறப்படுவதற்கான ஆணையிட்ட எஸ்.பி. தனது குதிரையில் ஏறி முன் வரிசைக்கு வந்தார். இன்ஸ்பெக்டர்கள் மூவரும் குதிரையில் ஏறி அவரைத் தொடர்ந்து வந்தனர். கச்சேரி போலீஸ் நாற்பது பேர் ஓட்டமும் நடையுமாகக் குதிரைகளுக்குப் பின்னால் வந்தனர்.

மதுரை நகருக்குள்போகாமல் தாதனூர் போகுமாறு எஸ்.பி. ஆணையிட்டதால் வைகையின் வடகரையிலே வந்து ஆற்று மணலில் இறங்கினர். கொளுத்தும் வெயிலில் மூச்சு வாங்கியபடி மணலுக்குள் ஓடிவந்தனர் கச்சேரி போலிசார். குதிரைகள் கம்பீரமாக நடந்து கொண்டிருந்தன. ஆற்றின் தென்கரையில் ஏறிய போலீஸ்படை மாடக்குளம் கிராமத்தைக் கடந்து பசுமலை, கபாலி மலையின் பின்புற அடிவாரத்தின் வழியே கண்மாய்க்குள் இறங்கி ஐயர் சொன்ன வழியில் சென்றது. கிராமங்களினூடே பெரும் போலீஸ்படை போய்க்கொண்டிருக்கும் பொழுது வியந்து பார்க்க மக்கள் கூட்டம் எதுவுமில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். பெரும் பாலான மக்கள் ஊரைக் காலி செய்திருந்தனர். ஊர் வறட்சியால் முற்றிலும் களையிழந்து, அரவமற்றுக் கிடந்தது. பஞ்சம் கொடூரமான மிருகத்தைப் போலக் கிராமங்களைக்

கடித்துக் குதறிப் போட்டிருந்தது. குற்றுயுரும் குலையுருமாக அவை கிடந்தன. பெரும் சத்தம் கேட்டால் கூட்டம் கூட்டமாக மரங்களில் இருந்து பறக்கும் பறவைகள் எல்லாம் எங்கே ஒழிந்தன என்று தெரியவில்லை. விரட்டிக் குரைக்க நாய்களற்றுப் போயின கிராமங்கள்.

வெப்பம் காற்றில் அலையலையாய் மிதந்து வந்து, மாடக்குளம் கண்மாய் கரையில் போய்க்கொண்டிருந்த போலீஸ் படையின் மீது வீசியபடி இருந்தது. குதிரைகள் நாசியில் எரிச்சல் தாங்காமல் மூக்கை விடைத்தபடி கனைப்பொலியோடு நடந்து சென்றன. பின்னால் ஓடிவந்து கொண்டிருந்த கச்சேரி போலீசாருக்கு ஜீவன் வற்றிப் போனது. கண்மாய்க்கரையில் இருந்த அய்யனார் கோயிலில் சிறிது நேரம் ஓய்வெடுக்க எஸ்.பி. உத்தரவு கொடுத்தார். எல்லோரும் சோர்ந்து விழுந்தனர். பக்கத்திலிருந்து கிணறுகள் எல்லாம் தூர்ந்து கிடந்தன. கரையிலிருந்த பெரிய பெரிய மரங்களைத் தவிர மற்ற எல்லாச் செடி கொடிகளும் காய்ந்து சருகாய் நின்றன. நிழலின் ஊடே மூச்சுக் காற்றை பருகிக்கொண்டிருந்த அவர்கள், பட்ட மரங்களில் ஓணான்கள் தலைதூக்கிப் பார்க்க மீண்டும் எழுந்து நடந்தனர். கபாலிமலையின் பின்புற அடிவாரத்தை நிமிர்ந்து பார்த்தபடி கடந்து போனார் எஸ்.பி. பாறைகளில் இருந்து வெப்பம் உருகி ஓடியது. ஓம்பெர்ட்டின் உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்தை அவர்கள் கடந்தனர். செம்பூரான்களின் நினைவு வெயிலை விடக் கொடூரமாக ஆங்கிலேயர்களைத் தாக்கியது. அவர்கள் மௌனமாக அந்த இடத்தைக் கடந்து போய்க்கொண்டி ருந்தனர். குதிரைகளின் நடையை வேகப்படுத்தி விரைவாக கபாலி மலையைக் கடந்து சென்ற அவர்களால், செம்பூரான்கள் பற்றிய நினைவுகளைக் கடந்து செல்ல முடியவில்லை.

இன்ஸ்பெக்டர்கள் மூவருக்கும் நேரம் ஆக ஆக பயம் கூடிக்கொண்டிருந்தது. எந்த வகையிலும் இது அறிவார்ந்த செயலாக அவர்களுக்குப் படவில்லை. ஐயர் மட்டும் எந்த கலக்கத்தையும் காட்டிக்கொள்ளாதது போல வந்துகொண்டிருந்தார். ஆனால், உள்ளுக்குள் கூடுதல் நடுக்கம் அவருக்கு இருந்தது.

தாதனூர் என்பது நிலத்தின் மீது கட்டப்பட்ட வீடுகளை கொண்ட கிராமமல்ல, இது இரவினூடே சமையும் கிராமம். அதைத் தேடி பகலிலே வருபவன் முட்டாள். இரவிலே அதைத்தேட முடியும் என நினைப்பவன் அதை விட முட்டாள். அது இரவில் மதுரைக்குள் இருக்கிறது. பகலில் மதுரைக்குள்ளும் இருப்பதில்லை. இருளுக்குள் மட்டும் அது இயங்குகிறது. இரவின் தொப்புள் கொடியின் வழியே தனக்கான சக்தியை அது பெற்றுக்கொள்கிறது. பகலில் எந்த சக்தியுமற்று, ஐந்தாறு தெருக்களில் மண் சுவர்களில் சோளத்தட்டையையும், வைக்கோலையும் வைத்து மேய்ந்த கூரைகளை உடைய வீடுகளைக் காட்டி இதுதான் தாதனூர் என்றால் யார் நம்புவார்கள்

சடச்சி பொட்டலை ஊடறுத்துப் போக முடியாது என்பதால் சில மைல் தூரம் சுற்றி ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர். பெரிய ஆலமரம் துவங்கி மலையின் தெற்குப் பக்கம் முழுவதும் ஆட்கள் நிரந்து படுத்துக்கிடந்தனர். வில்சனின் உத்தரவின் பேரில் கருப்பு கோயிலை நோக்கி போலீஸ்படை வரத் துவங்கியது. ஐயருக்கு சந்தேகமும் குழப்பமும் கூடியது. வில்சன் அமணமலையைப் பார்த்தவாக்கில் வந்து கொண்டிருந்ததார். இவ்வளவு பெரிய மலையைச் சுற்றி வளைத்து போலீசை நிறுத்துவதற்கு

வாய்ப்பில்லை. எனவே ஆட்கள் இருக்கும் இடத்தை மட்டும் வளைக்கலாம் என நினைத்து ஐயரிடம் கேட்டார். ஐயர் மலையை அங்குமிங்குமாகப் பார்த்தபடி என்ன பதில் சொல்ல, என்று யோசித்தவாறு வந்துகொண்டிருந்தார். எதிரில் ஒரு சாதுவான பிராணி போல அமணமலை படுத்துக் கிடந்தது. வெயில் மலையில் விழுந்து நாலாதிசைக்கும் சிதறித் தெறித்தபடி இருந்தது. உஷ்ணத்தால் மின்னும் பாறைகளைப் பார்க்கமுடியாத அளவு கண் கூசியது. முகத்தைத் துடைத்தவாறே மலைமுழுவதும் அங்குமிங்குமாகப் பார்த்துக்கொண்டே வந்தார் வில்சன். மலையுச்சி அரசமரம் காற்றுக்கு தலையாட்டியபடி அவரை அழைத்தது.

முன்னால் போன குதிரைப்படை போலீசார் கருப்பு கோயிலைச் சுற்றி நின்றனர். வில்சனின் குதிரை கோயிலின் அருகில் வந்தது. அந்த சின்னஞ்சிறு கோயில் தாழ்வாரத்தில் மூன்று பேர் மட்டுமே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். அதிர்ச்சியடைந்த ஐயர் அங்குமிங்குமாகப் பார்த்தபடி இருந்தார். தூரத்தில் ஆலமரத்தடியில் நிறையப் பேர் படுத்திருப்பது தெரிந்தது. வில்சன் அதை நோக்கி சைகையை காட்டினார். போலீஸ்படை அதைச் சுற்றி வளைத்தது. கச்சேரி போலீசாரின் காலடிச் சத்தத்திலும், குதிரைகளின் கனைப்பிலும் பலரும் தூக்கம் கலைந்து எழுந்தனர். ஆலமரக் கூட்டங்களுக்குள் மிகப்பெரும் வெளி நிழலில் மூழ்கிக் கிடந்தது. வில்சனும் மற்றவர்களும் குதிரையில் அமர்ந்தவாறு அந்த இடத்திற்குள் வந்து நின்றனர். காலையில் கலெக்டர் பங்களாவில் துவங்கி இதுவரை எங்கும் உணராத குளுமையை அவர்களுக்கு ஆலமரநிழல் தந்தது. காலையில் இருந்து நடந்தும் ஓடியும் வந்த களைப்பில் ‘அப்பாடா...’ என்று வந்து நின்றனர். அடுத்த கணமே குதிரையில் இருந்த வில்சன் பெருங் குரலெடுத்துக் கத்தினார். போலீசார் படபடப்புடன் வட்டமிட்டு நின்றனர். ஆலமரத்தடியில் படுத்துக்கிடந்தவர்கள் அந்த வட்டத்திற்குள் வந்தனர். டி.எஸ்.பி.கள் இருவரும் கோபத்தோடு ஓங்கிக் கத்திக்கொண்டு, குதிரையுடன் அங்குமிங்குமாக அலம்பிக்கொண்டிருந்தனர்.

‘ஏன் கச்சேரிக்காரங்க இவ்வளவு பேரு இங்க வந்திருக்காங்கெ. தூங்குறவங்க கிட்டவந்து குதிரையில நின்னுக்கிட்டு இருக்காங்கெ... என்னப்பா சமாச்சாரம்’ எனக் கேட்டவாறு அவர்கள் மரத்தடியில் இருந்து எழுந்து உட்காரவும், திண்டில் சாயவும், விழுதைப் பிடித்து எழுந்து கொட்டாவி விட்டபடி கேட்கவும் பேசவுமாக இருந்தனர்.

வில்சன், ஐயரிடம் ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார். உடன் ஐயர்பேச ஆரம்பித்தார். ‘இங்கே வந்திருக்கிற அதிகாரிதான் இந்த மாவட்டத்திற்கு பெரிய போலீஸ் அதிகாரி. அவரே இங்கே நேரா வந்திருக்கிறாருன்னா விசயம் எவ்வளவு முக்கியமானது, ஆபத் தானதுன்னு புருஞ்சுக்கிட்டு உண்மைய சொல்லணும்’ என்றார்.

‘விசயத்த சொல்லப்பா மொதல்ல’ என்றான் பட்டியக்கல்லின் மேல் நின்றுகொண்டிருந்த கருத்தாண்டி.

‘நேத்து ராத்திரி கலெக்டர் பங்களாவுல கன்னம் போட்டு உள்ள இருந்த பொருளையெல்லாம் எடுத்தது யாரு?’

‘அந்த பங்களா எங்கடா இருக்கு?’ என்றான் கருத்தாண்டி.

‘ஆத்துக்கு வடக்க தனிய்யா இருக்குல்லடா... ராசா காலத்து கட்டடம், அதுதாண்டா!’ என்றது ஒரு குரல்.

‘அந்த பங்களாவ நாங்களா காவ பாக்குறோம். எங்ககிட்ட எதுக்கு கேட்டு வந்திருக்கிறீகெ?’ என்றான் கருத்தாண்டி.

துணுக்குற்ற ஐயர் ‘இல்ல... நீங்கதான் கன்னம் போட்டு எடுத்திருக்கிறீகன்னு சொல்லிதான் பெரிய போலீஸ் அதிகாரி உங்ககிட்ட விசாரிக்க வந்திருக்காரு’ என்றார்.

ஐயரின் இந்த வார்த்தைக்குப்பிறகு சூழல் மாறத்துவங்கியது. ‘நாங்க எதுக்குடா அங்க போய் களவாடணும்’ என்று எதிர்க்குரல் சூடேறி வந்தது. டி.எஸ்.பி. பிரெவ்ஸ்சின் குரல் அதைவிட வேகமாக ஒலித்தது.

‘நாங்க பொண்டுகசட்டி இல்லடா. எடுத்தா எடுத்தோம்னு சொல்லுவோம், இல்லேன்னா இல்லேன்னு சொல்லுவோம். நீ சொல்ற எடத்துல நாங்க யாரும் எதையும் எடுக்கல, மொதல்ல எடத்த காலி பண்ணுங்கடா...’ என்று கத்தினான் பேயாண்டி.

துப்பாக்கி ஏந்திய போலீசார் தங்களைச் சுற்றி வளைத்து நிற்கிறார்கள் என்ற எண்ணம் எதுவும் அவர்கள் யாருக்கும் இல்லை என்பது அவர்களின் அத்தனை செயல்களிலும் தெரிந்தது.

விழுதொன்றில் சாய்ந்தவாக்கில் நின்றுகொண்டிருந்த பொன்னாண்டி சொன்னான். ‘இனிமேலாச்சும் அந்த பங்களாவுக்காக எங்களுக்கு காவக்கூலி கொடுங்க. நாங்க காவ பாக்குறோம். அது வுட்டுட்டு கன்னம் போட்டாங்கேண்டு இப்படி வெயில்ல நாயா பேயா அலையாதேங்க’ என்றான்.

வில்சன் ஐயரைப் பார்த்து ‘என்ன’ என்று கேட்க, ஐயர் பொன்னாண்டி சொன்னதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொன்னார். வெறி உச்சந்தலைக்கு ஏறியதைப்போல துப்பாக்கியை மேலே தூக்கி சுட்டார் வில்சன். பெரும் சப்தத்தோடு துப்பாக்கி வெடித்தது. ஆலமர இலைகள் சில மேலேயிருந்து உதிர்ந்தன. அந்த இடம் உருமாற ஆரம்பித்தது. அதுவரை எளிதில் சாதாரணமாய் நின்றிருந்தவர்கள் வேறு எதுவொன்றாகவோ மாறத் தயாராகிக் கொண்டிருந்தனர். நிலைமை கடுமையாகப்போவதை வெள்ளையரைத் தவிர கச்சேரி போலீசார் எல்லோரும் உணர்ந்தனர். துப்பாக்கி சத்தம் கேட்டு, மலை அடிவாரம் எங்கும் படுத்துக்கிடந்தவர்கள் மலையுச்சி அரசமரத்தின் கீழ் பேச்சிப்பள்ளத்தில் கிடந்தவர்கள் என எல்லாம் சாரை சாரையாக இறங்கிவரத் துவங்கினர். கொஞ்ச நேரத்தில் போலீஸ் வளையும் ஒரு பெரும் வளையத்தின் சுற்றுக்குள்ளே இருந்தது. நிலைமை விபரீதமாகிக்கொண்டிருப்பதை உணர்ந்த நாயுடுவும் ராவும் எஸ்.பி.யிடம் எடுத்துச்சொல்லுமாறு ஐயரை சைகையால் வலியுறுத்தியபடி இருந்தனர். ஐயருக்கு பயம் கூடியது. எதிரில் இருப்பவர்கள் உருமாறத் துவங்கிவிட்டனர் என்பதை அவர்களது செயல்களைப் பார்த்தாலே எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஐயர் எஸ்.பி.யிடம் மெதுவாக சொல்லத் துவங்கினார்.

ஆலமரத்தின் வேரில் உட்கார்ந்து சாய்ந்தபடி இருந்த மாயாண்டிப் பெருசு ‘டோ...ய்’ என சத்தம் போட்டு மெல்ல எழுந்து எஸ்.பி.யை நோக்கி நடந்துவர முயற்சி செய்தார்.

‘பெருசு நீ பேசாம இரு, நாங்க பாத்துக்கிறோம்‘ என்றது ஒரு குரல்.

‘என்னடா நீங்க பாத்துகிறங்கெ? சடச்சிய சுட்டாண்டா...பாத்து கிட்டுதான சும்மா இருக்கேங்க. இந்த ஆலமரத்துக்குள்ள தான்டா கெடக்கு வளரி பூராம். எடுத்துக்கிட்டு எறிஞ்சா இன்னேரம் இவெங்க தல கொளத்துக்குள்ள உருண்டு ஓடியிருக்க வேணாமா’ என்றார்.

அரண்டுபோன மற்ற ஏட்டையாக்கள் குதிரையை விட்டு சடசடவென கீழே இறங்கினர். எஸ்.பி.க்கு என்ன நடக்கிறது என்று புரியவேயில்லை. சுற்றிலும் ஆலமரங்கள், எது விழுது, எது அடிமரம் எனத் தெரியாத அளவு பரவிக்கிடந்தது. மரங்களின் உடலுக்குள் வளரிகள் மறைந்து கிடந்தன. காலத்தை செரித்து வளர்ந்திருந்த மரங்கள்தனது மிகப்பெரிய கிளைகளால் அவர்களை இறுக்கிப் பிடிக்கத் தயாராவது போல் இருந்தது. குதிரைப்படையையும் சேர்த்து மொத்தம் அறுபத்தி இரண்டு போலீசார் மட்டுமே இருந்தனர். போலீஸ் வட்டம் உள்புறமும் வெளிப்புறமும் சூழப்பட்டிருந்தது. துப்பாக்கிதான் அந்த இடத்தில் சக்தியான ஆயுதம் என்று சொல்லவிடமுடியாது. பொறிக்குள் மாட்டிக்கொண்டதைப் போல உணர்ந்தனர். எப்படியாவது சமாளித்து வெளியேற வேண்டும் என்று தவியாய் தவித்தனர்.

மாயாண்டிப் பெருசு அவர்களை நோக்கி நடந்துவந்தார். வயோதிகம் அவரைத் தடுமாற வைத்தது. நேராக ஐயரிடம் வந்து ‘டோ...ய்...நானு, இந்த சடப்புலி எல்லாந் சேர்ந்துதான் அந்த பங்களாவுல கன்னம் போட்டு பொருள எடுத்தோம். ஆனால் இருபது வருஷதுக்கு மேல ஆச்சு. இப்ப வந்து நேத்து எடுத்தயான்னு கேட்டா என்ன அர்த்தம். மருவாதயா எடத்த காலி பண்ணிட்டுப் போங்கடா’ என்றார்.

ஐயர் மிகப் பணிவான குரலில் எஸ்.பி.க்கு அதை அப்படியே மொழிபெயர்த்தார். பின்னர் எஸ்.பி. சொன்னதை அப்படியே தமிழில் சொன்னால் யாரும் அந்த இடத்தை விட்டுப் போக முடியாது என யூகித்த ஐயர் ‘பெரிய அதிகாரி உங்ககிட்ட ஏதோ விசாரிக்கணுமாம். நீங்க, சடப்புலி இன்னும் நாலஞ்சு பேரு வாங்க. கச்சேரில வச்சு விசாருச்சுட்டு, அங்கே நல்ல நெல்லுச்சோறு சாப்பிட்டு அப்புறமா கிளம்பி வந்திருங்க’ என்றார்.

‘நாங்க எதுக்குடா அங்க வரணும்‘ என்றார் பெருசு.

‘யோவ் பெருசு, நெல்லுச்சோறு போடுறோம்கிறாங்கெ, எங்க கூப்புட்டாலும் போவயா! ஏன் எதுக்குன்னு கேட்டுக்கிருக்கெ!’ என்றது ஒரு குரல்.

சூழலின் இறுக்கம் கொஞ்சம் தளர்ந்தது. இதனைப் பயன்படுத்தி ராவும் நாயுடுவும் பேசத்துவங்கினர். எதிரில் இருப்பவர்களிடம் எஸ்.பி. வாக்குறுதிகள் கொடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஏட்டுகள் பணிந்து பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த வில்சனின் முகத்தில் கோபம் கொந்தளித்தபடி இருந்தது. அவர்கள் வலிந்து பேசிக்கொண்டிருந்தனர். சோங்கு தூரத்தில் கையை நீட்டி ஏதோ சத்தமாகச் சொன்னதை வில்சன் கவனித்தார். ‘அவன் என்ன சொல்கிறான்?’ என்று ஐயரிடம் கேட்டார். முதலில் அதை மொழிபெயர்க்கத் தயங்கிய ஐயர் பின்னர் கூறினார் ‘தூரத்தில் தெரிகிற ஒற்றைப் பனமரத்தைக் காட்டி அதன் நடுப்பகுதியில் மரங்கொத்தி போட்டிருக்கும் ஓட்டையின் மீது இங்கிருந்து என்னால்

குறிதவறாமல் எறிய முடியும். உன்னால் குறி தவறாமல் சுடமுடியுமா? என்று கேட்கிறான் என்றார். இந்தப் போட்டிக்கு விலையாக சோங்கு சொன்னதை ஐயர் புத்திசாலித்தனமாக மொழிபெயர்க்கவில்லை. வில்சன் தூரத்தில் தெரிந்த பனைமரத்தைப் பார்த்தார். உடலெங்கும் கல்லெறி வாங்கிய தழும்புகளோடு அந்த ஒற்றைப் பனை நின்றுகொண்டிருந்தது. அதன் நடுப்பகுதியில் இருக்கும் ஓட்டையை உற்றுத் தேடிப்பார்க்கும் பொறுமை அவருக்கு இல்லை. இங்கே இருந்து அந்த மரத்துக்குக் குழி வைக்கிற போட்டிக்குத் தன்னை அழைத்து அவனது அசாத்திய துணிச்சல் அவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. பனைமரத்தைப் பார்த்த அவர் சட்டென திரும்பி அவனைப் பார்த்தார். சோங்கு பதிலை எதிர்பார்த்து வில்சனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். வில்சன் அவனைப்பார்க்காதது போல ஐயர் பக்கம் திரும்பி ஆங்கிலத்தில் ஏதோ பேசத் துவங்கினார்.

பேச்சு சமாதானமாகப் போனது. மாயாண்டிப் பெருசுவையும் சடப்புலியையும் தவிர வேறு ஆறு பேரையும் அழைத்துக்கொண்டு அவர்கள் மதுரையை நோக்கித் திரும்பினர்.

*

**வி**சாரணை என்ற பெயரில் கூட்டிவரப்பட்ட எட்டுப் பேரின் மீதும் வழக்குப்பதிவு செய்து அன்று மாலையே சிறைக்குள் அடைத்துவிட்டனர். தாதனூர்க்காரர்கள் சிறைக்குள் அடைக்கப்பட்ட செய்தி நகரின் முக்கியஸ்தர்களுக்கெல்லாம் அன்றே தெரிந்துவிட்டது. ஆனால், யாரும் வெளியில் சொல்லவில்லை. அதிர்ச்சியும், அச்சமும் அவர்களை ஊமையாக்கி வைத்திருந்தது. இரவு வழக்கம்போல் குடிக்காவலர்கள் வந்தனர். காவல் வீதிகளுக்குப் போய்விட்டு, சாவடியிலும் செக்கடியிலும் தங்கியிருந்து, அதிகாலை கிளம்பித் தாதனூர் போய்விட்டனர். காலையில் விசயம் நகரெங்கும் பரவியது. கொதிக்கும் எண்ணெயைக் காலில் ஊற்றியதைப் போல பலரும் துடித்தபடி இருந்தனர். கச்சேரி போலீசாரின் முட்டாள்தனத்தை பரிகசிக்காதவர்கள் யாருமில்லை. ‘தாதனூர்க்காரர்களைப் போய் கைது செய்வாங்களா!... முன்ன பின்ன யோசிக்கற புத்தி எதுவும் இவங்கயளுக்கு இல்லையா!’ என்று மக்கள் பேசியபடி இருந்தனர். கச்சேரிக்குள் கடும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. கோபால் ஐயரை ராவும், நாயுடுவும் திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தனர். ‘உன் மீதான புகார்களில் இருந்து தப்பித்து நீ நல்ல பேர் எடுக்க வேண்டும் என்பதற்காக தேவையில்லாத பிரச்சினையில் எல்லோரையும் மாட்டிவிட்டாய்’ என்று இருவரும் சாடினர். ஐயர் ஏதேதோ சமாளித்துப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். ‘அன்று டி.எஸ்.பி. ஓம்பெர்ட்டுடன் போனதுப்பாக்கி போலீசார் பிணமாக வந்ததைப் போல, நேற்று நாமும் எஸ்.பி.யுடன் சேர்ந்து பிணமாகத்தான் வந்திருப்போம். நல்லவேளை தப்பித்தோம்‘ என்றார் நாயுடு. முக்கியஸ்தர்கள் அவ்வப்போது கச்சேரிக்கு வந்து நடந்தவற்றைக் கேட்டு, போலீசாரை இளக்காரமாகப் பேசிவிட்டுப் போனபடி இருந்தனர்.

நகரின் ஒவ்வொரு வீட்டுக் காவலோடும் சம்பந்தப்பட்ட செய்தியாதலால் எல்லா இடங்களிலும் இந்தச் செய்தியே பேசப்பட்டது. போலீசார் தங்களின் செயலுக்காகக் கூனிக்குறுகிப் போய்க் கிடந்தனர்.

பழிச்சொற்கள் அவர்களை உலுக்கி எடுத்தபடி இருந்தன.

‘இப்படித்தான் ரெண்டு செம்பூரானுகளை பிடிச்சி வச்சி மூணு பேரை பலி கொடுத்தாங்ய. வெள்ளைக்காரனுக்கு அப்பவும் புத்திவரலை. இப்பொ தாதனூர்க்காரங்யளைப் போய் பிடிச்சிருக்காங்ய. எத்தனை தலை விழப் போகுதோ...தெரியல்லையே!’

கச்சேரி போலீசார் பயத்தால் பீடிக்கப்பட்டுக் கிடந்தனர். எல்லோரையும் விட ஐயரே கூடுதல் பயத்துடன் இருந்தார். அவரது துணிச்சலே அவரது பயத்திற்கு காரணமாக அமைந்தது. தனது செயலை நியாயப்படுத்த அவர் தேடி வைத்திருந்த ஒவ்வொரு காரணமும் அவருக்கு எதிராக மாறியது. அவர் வறட்டு வீறாப்புடன் பயத்தை மறைக்க முயற்சித்தார். இதற்கிடையில் எஸ்.பி.வில்சன் கச்சேரிக்கு வருவதாகத் தகவல் வந்தது. போலீசார் எல்லோரும் வரவேற்கத் தயாராக இருந்தனர். சிறிது நேரத்தில் சாரட் வண்டியில் வந்திறங்கிய வில்சன் வரவேற்பை ஏற்றுக்கொண்டு உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தார். வழக்கத்தைவிட பெரும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தார். நகரில் திருட்டுக் குற்றத்திற்கான முதல் வழக்கைப்பதிவு செய்த சந்தோஷத்தில் அவர் இருப்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

காவலும் களவும் தலைகீழாகப் புரண்டபடியே வந்துகொண்டிருக்கிறது. நீதிமன்றங்களும் சிறைச்சாலைகளும் அதிகாரத்தின் கற்களைக் கொண்டே கட்டப்படுகின்றன. தாங்கள் உருவாக்குகின்ற நியாயங்களின் அடிப்படையிலேயே குற்றங்களையும் அவர்கள் உருவாக்குகின்றனர். குற்றங்களை உருவாக்கும் நியாயங்கள் பின்னால் குற்றங்களாக உணரப்படுவதும், அன்றைய நியாயங்களால் குற்றங்களாக்கப்பட்ட குற்றங்கள் பின்னால் நியாயங்களாக உணரப்படுவதும் அதிகாரத்தின் பார்வையைப் பொறுத்தே தீர்மானமாகிறது. குற்றம், சிறை, நீதி, தண்டனை என எல்லாவற்றிலும் ஓடுவது அதிகாரத்தின் ரத்தமே. ஒரு காலத்தில் மங்கம்மாள் சாலையைப் பாதுகாத்த காவலாளிகள், புதிய காவலாளிகள் வந்தபின் குற்றவாளிகளாக்கப்பட்டதைப் போல, நகரைக் காத்துவருகின்ற காவலாளிகளைக் குற்றவாளிகளாக்குகின்ற பணியைப் புதிதாகக் காவலுக்கு வரத் தயாராகின்றவர்கள் மேற்கொள்கின்றனர். எது களவு என்பதை அதிகாரமே தீர்மானிக்கிறது. வில்சன் அதிகாரத்தின் வடிவமாக அமர்ந்து கொண்டு சொன்னார். ‘குற்றவாளிகளைப் பிடித்துவந்து தண்டித்திருக்கிறோம். உங்கள் அனைவரையும் நேரில் வந்து பாராட்டவே வந்தேன். சந்தோஷமாக இன்று மாலை அதைக் கொண்டாடுங்கள்’ என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால், மாலைக்குப் பிறகு இரவு வரவிருப்பதை நினைத்து பயத்தால் உறைந்துபோயிருந்தனர் கச்சேரி போலீஸார்.

இரவு வந்தது. பலரும் எதிர்பார்த்திருந்த இரவு அது. தாதனூர்க்காரர்கள் ஏதோ செய்யப்போகிறார்கள் என்று நகரமே எதிர்பார்த்திருந்தது. நேரம் ஆக ஆக ஐயருக்கு ஜுரம் கண்டதுபோல் ஆனது. நாயுடுவும் ராவும் ஒடுங்கிப் போய் வீட்டிற்குள் கிடந்தனர். பஞ்சாரத்திற்குள் கோழிகளை அடைப்பதைப் போல இருள் நகரத்து வீதிகளைத் தன்க்குள் அடக்கியது. புதுமண்டபத்திலும், மேங்காட்டுப் பொட்டலிலும், வீட்டுத்திண்ணையிலுமாக மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வந்து பேசியபடியும், எதிர்பார்த்தபடியும் இருந்தனர். காவக்காரர்கள்

வரவேண்டிய நேரம் கடந்துவிட்டது. யாரும் வரவில்லை. இன்னும் கொஞ்சநேரத்தில் வந்துவிடுவார்கள் என்று பலரும் நினைத்துக் கொண்டிருந்தனர். நேரம் ஆகிக்கொண்டேயிருந்தது. நடுநிசி கடந்தது. இருளுக்குள் இருந்து ஒரு உண்மை கசிந்து வெளியில் வந்து கிடந்தது. மதுரைவாசிகள் கொஞ்சம் கொஞ்சமாக அதைப் பார்க்க ஆரம்பித்தனர். காவக்காரர்கள் யாரும் அன்று மதுரைக்கு வரவில்லை. இந்த உண்மையை அறிந்துகொண்டவர்களுக்கு உடல் நடுக்கம் கொடுக்க ஆரம்பித்தது. மொத்த மதுரையும் காவக்காரர்கள் இல்லாமல் அனாதையாய்க் கிடப்பதை நினைத்து பலர்மிரள ஆரம்பித்தனர். பாதுகாப்பற்று இருக்கிறோம் என்பதை உணருகிற கணத்தில் பயம் பீடித்தது. திறந்து கிடக்கும் வீடுகளைப்போல வீதிகள் கிடந்தன. எது நடந்தாலும் கேட்க யாருமில்லை என்ற நிராதரவில் இருந்தது நான்மாடக்கூடல்.

இருள் வழக்கமான தனது ரகசிய விளையாட்டுக்களை ஆடியபடியே இருந்தது. தூரத்தில் ஒருவன் ஓடி மறைவதைப்போலத் தெரிந்தான். வித்தியாசமான குரலொலிகள் அங்குமிங்குமாகக் கேட்டன. பெருங்கூட்டமொன்று உள்ளே நுழைய இருப்பதா ஒரு செய்தி காட்டுத்தீயைப் போலப் பரவியது. இருள் தனது விளை யாட்டுகளால் மதுரை வாசிகளைத் திணறடித்துக் கொண்டிருந்தது. கச்சேரி போலீசார் எஸ்.பி. பங்களாவுக்கு ஓடினர். வெகுநேரம் கழித்து தீவட்டிகள் ஏந்தியபடி குதிரைப்படை போலீசார் வந்துசேர்ந்தனர். தீவட்டி ஏந்திய போலீசாரால் யாருக்கு என்ன பயன்? தாக்கவோ திருடவோ வருகிறவனுக்கு மட்டும்தான் பயன். இருளுக்குள் இருக்கும் ஒருவனால் வெளிச்சத்தைக் கொண்டு வருகிறவனை எளிதில் நிராகரிக்க முடியும். வெளிச்சத்தைக் கொண்டுவருகிறவன் இருளின் கரைகளில்தான் போய்க் கொண்டிருப்பான். ஒருபோதும் அவனால் இருளுக்குள் போக முடியாது. இருளை விட்டு வெளியில் போகிற ஒருவனால் இருளுக்குள் இருப்பவர்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை. குதிரைப்படைப் போலீஸ்ஸார் வீதிகளில் போவதைப் பார்த்த மதுரைவாசிகள் இன்னும் அதிகமான பயத்திற்கு ஆளாயினர். காவக்காரர்களே இல்லாத முதல் இரவை மதுரை சந்தித்தது. ஒரு பயங்கரம் நிகழப்போவதற்கான ஏற்பாடே அது. அந்தப் பயங்கர நிகழ்வு தாதனூர்க்காரர்களால் நிகழ்த்தப் படலாம். அல்லது கொடும்பஞ்சத்தால் உண்ண உணவின்றி மதுரைக்கு வரும் பாதைகள் எங்கும் பிதுங்கிய விழிகளோடு அமர்ந்திருப்பவர்களின் மூலம் நடக்கலாம். எதுவாக இருந்தாலும் மதுரை ரத்தக்களறி ஆவதற்குத் தயாராகிவிட்டதற்கான அறிகுறியே அன்றைய இரவு.

*

இரவை விட கனமாக மறுநாள் பகல் கழிந்தது. தாதனூரில் இருந்து வந்த எல்லாத் தகவலும் அதிர்ச்சியளித்தபடியே இருந்தன. கோனார்களைத் தூது அனுப்பிய முயற்சி தோல்வியடைந்தது. ‘குற்றத்தை ஒத்துக்கொண்டவனைச் சிறையில் அடைக்காமல் என்னசெய்யச் சொல்கிறாய்?’ என்ற வில்சனின் குரலுக்கும் ‘இரவு கூட்டிப்போனவர்களை முதலில் கொண்டுவந்து ஒப்படை’ என்ற தாதனூர்க்காரர்களின் குரலுக்கும் நடுவில் மதுரை முழித்துக் கொண்டிருந்தது. அடுத்து என்ன நடக்குமென்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. ஆனால் தாதனூர் தயாராகிவிட்டது என்பதை மட்டும் எல்லோராலும் ஊகிக்க முடிந்தது.

மதுரை இரவை நெருங்கிக்கொண்டிருந்தது. சூரியன் வெளிச்சதைச் சுருட்டி எடுத்துச் சென்றபின் இரவை விரித்து வைத்து தாதனூர்க்காரன் விளையாடப்போகிறான் என்று அஞ்சியபடி இருந்தனர். கோபால் ஐயர் எல்லாக் கதவுகளையும் இறுக்கப் பூட்டி வீட்டிற்குள் முடங்கினார். இருள் அவரை வசக்கிக்கொண்டிருந்தது. வில்சன் ஒரு பக்கமும் தாதனூர்க்காரர்கள் ஒரு பக்கமும் பாதையை அடைத்து வைத்திருந்தனர். இரண்டு பக்கமும் வெளியேற முடியாமல் மூச்சுத் திணறிக்கொண்டிருந்தது ஐயருக்கு.

வைகையின் வடக்கே இருந்த ஐரோப்பியக் குடியிருப்புகளில் உற்சாகம் கரைபுரண்டோடியது. எஸ்.பி. வில்சனின் பங்களா மாடியில் இருந்த பெரிய அறையில் எல்லா ஆங்கிலேயர்களும் மது அருந்திவிட்டு பெண்களுடன் நடனமாடிக் கொண்டிருந்தனர். இசையும், மதுவும் அறைமுழுவதும் பொங்கி வழிந்தது. போதையேறிய உடல்களைச் சுமந்தபடி கால்கள் நிதானம் தவறாமல் நடனமாடிக்கொண்டிருந்தன. தேக்குமரம் பளிங்கு போல் இழைக்கப்பட்டு பதிக்கப்பட்டிருந்த அந்த அறையில் காலணிகளின் நடனச்சத்தம் இசைக்கு ஏற்ப எதிரொலித்துக் கொண்டிருந்தது. பெண்கள் பட்டுப்போன்ற மென்மையான கவுன்களை உடுத்தியிருந்தனர். விளக்கொளியின் வெளிச்சத்தில் நடனமாடிய அந்த வெளிறிய பதுமைகள் இசையை போதைக்குள் சுழலவிட்டுக் கொண்டிருந்தனர். கவுன்கள் காற்றை அடைத்து வட்டமிட்டபடி சுற்றிவந்துகொண்டிருந்தன. செம்பழுப்பு நிற மீசையுடன் கடுகடுப்பேறிய வெள்ளை முகங்களில் இருந்து மகிழ்ச்சியை நீரூற்றுப்போல கசியவிட்டுக் கொண்டிருந்தது போதை. கால்கள் தள்ளாட ஆரம்பித்தன. நடனமாடி ஓய்ந்து நாற்காலியில் அமர்ந்தவர்கள் குரலெடுத்துக் கத்தினர். சிரிப்பொலிகள் பீங்கான் குவளைகளில் பட்டுச்சிதறின. கீழே சமையலறையில் இறைச்சியும் மற்ற உணவுகளும் தயாரித்து, சாப்பாட்டு அறைக்கு கொண்டுவரப்பட்டு எடுத்து உணவு மேஜையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. வில்சனின் பங்களா முழுவதும் விளக்கொளியால் நிரம்பி இருந்தது. அதற்கு அடுத்தடுத்து இருந்தன டி.எஸ்.பி.கள் பிரெவ்ஸ் மற்றும் ஷாங்கின் பங்களாக்கள். அதற்கு அடுத்து இருந்தது மாஜிஸ்திரேட் ப்ரூஸ்புட்டின் மாளிகை. இங்கெல்லாம் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது தெரியாமல்தான் விருந்தில் இவர்கள் மூழ்கிக்கிடந்தனர்.

எல்லா மாளிகைக்குள்ளும் நுழைந்து வேலையை முடித்த அந்தப்பெருங்கூட்டம் கடைசியாக வில்சனின் மாளிகைச் சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே குதித்தது. அப்போதுதான் தாங்கள் சந்திக்க இருக்கிற ஆபத்தை ஆங்கிலேயர்கள் உணரத்து வங்கினர். சுற்றுச் சுவரைத் தாண்டி உள்ளே குதித்தவர்களும் அந்த ஆபத்தை அந்த கணத்தில்தான் முழுமையாக உணர்ந்தனர்.

வைகைக்குத் தெற்கே முழு மதுரையும் அமைதியிலும் பயத்திலும் மூழ்க்கிடந்தது. சித்திரை வீதியில் துவங்கி வெளிவீதி வரை எல்லாத் தெருக்களும் அடுத்து என்ன நடக்குமோ என்ற விழிப்போடு இருந்தன. ராமாயணச் சாவடியின் கிழக்குத் தூண்களின் இடதுபக்கம் முழுவதும் வெற்றிடமாகவே இருந்தது. பஞ்சகாலத்தில் ஓய்ந்து போன செக்கடியில் இரவில் கேட்கும் பேச்சுக்குரலும் இல்லாமல் போனது. செல்லத்தம்மன் கோயிலில் கண்ணகியின் கருஞ்சிற்பம் இருளை முறைத்தபடியே

இருந்தது. மைனா தெப்பக் குளத்து ஆலமரத்தின் கீழ் இருள் தன்னந்தனியாக அடைந்திருந்தது. நல்லமுத்து செட்டியாரின் வீட்டுத் திண்ணையில் கூடியவர்கள் கலையவேயில்லை. புதுமண்டபத்தில் யாருக்கும் உறக்கம் கொள்ளவில்லை. என்ன நடக்குமோ என்ற பயத்தில் வீதிகளை வெறித்தபடி மீனாட்சியின் கோபுரங்கள் நின்றுகொண்டிருந்தன.

நடுநிசியைக் கடந்த பொழுதில் திடீரென பெருங்கூக்குரல்கள் கேட்டன. அலறல் சத்தம் எங்கிருந்து வருகிறதெனத் தெரியாமல் மக்கள் அங்குமிங்குமாக ஓடினர். ஆளுக்கொரு திசையைக் காட்டினர். பயம் இருளுக்குள் அவர்களை மோதவிட்டு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தது. வீட்டுக் கதவுகளைப் பலர் இழுத்துச் சாத்தினர். அலறல் சத்தம் இருளைக் கிழித்துக்கொண்டு பெருக்கெடுத்து ஓடிவந்தது. சத்தத்தினூடே பற்றிப்படர்ந்த தீ கோபுர உயரத்திற்கு எழுந்தது. எல்லோரும் வந்துசேர வேண்டிய இடத்தை நெருப்பு மதுரைக்குச் சொன்னது. பெரும் கூச்சலோடு மக்கள் கூட்டம் கீழமாசிவீதியை நோக்கி ஓடியது. உள் சந்துகளில் விழுந்தடித்துப் பலர் ஓடிவந்தனர். கச்சேரியும் கொத்தவால் சாவடியும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தன. கொத்தவால் சாவடியின் உள்ளேயிருந்த பொருட்கள் எல்லாம் முதலிலேயே கொள்ளைபோய்விட்டன. காவலுக்கு இருந்த கச்சேரி போலீசார் துப்பாக்கியைப் போட்டுவிட்டு தலைதெறிக்க ஓடினர். மூன்று பேர் வெட்டுங்காயங்களோடு தப்பித்துப் போய் உள்சந்துகளில் மயங்கி விழுந்தனர்.

நெருப்பு முறுக்கேறி எரிந்துகொண்டிருந்தது. வெளிச்சம் மதுரை முழுக்க இருட்டை விரட்டியடித்தது. நெருப்பின் கரங்கள் கீழ மாசிவீதியெங்கும் பற்றிப்படர்ந்தன. மக்கள் அலறியபடித்தபடி கையில் சிக்கிய பொருட்களுடன் வெளியில் ஓடித் தப்பிக்க முயன்றனர். நெருப்பை அணைக்க செய்வதறியாது அலறினர். நெருப்பு பெரும் சத்தத்தோடு எரிந்துகொண்டிருந்தது. நெருப்பை அணைக்கத் தண்ணீரில்லை. காரை வீடுகளில் முன்னால் வேயப்பட்ட கூரைகளின் வழியே பற்றியபடி வந்தது நெருப்பு. சாயக்காரத் தெருவரை பரவி வந்த நெருப்பின் வேகத்தை யாரும் கட்டுப்படுத்த முடியவில்லை. அடுத்த தெருக்களில் பரவாமல் இருக்க கூரைகள் எல்லாவற்றையும் மக்கள் பிடுங்கி எறிந்தனர். பிளாக்பர்னின் விளக்குதூணில் இருந்து சாயக்காரத் தெருவரை நெருப்பு நின்று எரிந்துகொண்டிருந்தது.

‘பேயாண்டி.... போதுமப்பா!’

‘சோங்கு... விடுங்கடா, டே....’

‘மதுர தாங்காதுறா... இதோட விடுங்கடா....’

என்ற காவக்காரர்களைப் பார்த்து மக்கள் அலறியடித்தபடி கேட்டுக்கொண்டிருந்தனர். நெருப்பில் மூங்கில்கள் வெடித்துப் பொறிபறந்தது. காவக்காரர்கள் கூட்டமாக வடக்குநோக்கி நகரத் துவங்கினர். நெருப்பை அணைக்க அங்குமிங்குமாக ஓடியவர்கள் காவக்காரர்கள் அடுத்து எங்கே போகிறார்கள் என்பதையும் பார்த்துகொண்டிருந்தனர்.

கொத்தவால் சாவடியில் கைப்பற்றப்பட்ட பொருட்களைத் தூக்கிக்

கொண்டு ஒரு கூட்டம் தாதனூர் திரும்பியது. மற்றவர்கள் எல்லாம் ஆத்துக்கு வடக்கே உள்ள வெள்ளைக்காரர்களின் பங்களாக்களை நோக்கிப்போனார்கள். மதுரை பெருங்குரலெடுத்துக் கதறிக்கொண்டிருந்தது. நெருப்பு அடுத்த தெருக்களைத் தாவிப்பற்றி சுழன்று சுழன்று எரிந்தது. மதுரைவாசிகள் உச்சகட்ட பயத்தோடு நெருப்போடு போராடிக்கொண்டிருந்தனர். பொன்னாண்டியின் காவல் வீதியில் பற்றிய நெருப்பு உயரத்தில் கோபுரத்தைத் தொட்டது. அதை பற்றவைக்கும் உரிமை பொன்னாண்டிக்கே உரியது என்பதால் அவனே பற்றவைத்தான். அலறல் சத்தத்தால் நடுங்கிக்கொண்டிருக்கும் மாசி வீதியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அவர்கள் வைகையில் இறங்கினார்கள். ஆற்றின் மணல்வெளியைப் பாதி கடந்தபொழுது, எதிரில் கோரிப்பாளையம் முஸ்லிம்களின் கூட்டமொன்று தலைதெறிக்க ஓடிவருவதைப் பார்த்து நிறுத்திவிசாரித்தனர்.

கீழ்நாட்டு கொள்ளையர்களின் கூட்டமொன்று வெள்ளைக் காரனின் பங்களாக்களை எல்லாம் சூறையாடிவிட்டது. பெரும் துப்பாக்கிச் சண்டை. பலர்செத்துவிழுந்துள்ளனர். வெள்ளைக்கார அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டிருக்கலாம். அடுத்த நகரத்திற்குள் புகுந்தாலும் புகுந்து விடுவார்கள். அதுதான் சொல்ல ஓடிவந்தோம் என்றனர். தாதனூர்க்காரர்கள் வடகரையிலேறி கோரிப்பாளைத்தை யொட்டி நின்றுகொண்டனர். கொள்ளையர்கள் யாரும் மதுரைக்குள் புகுந்துவிடாதபடி எச்சரிக்கையுடன் இருந்தனர். எதிரில் வடகிழக்கே சற்றுத்தொலைவில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. எரிவது பெரும் பங்களாவாகத்தான் இருக்கவேண்டும்; இல்லை என்றால் இவ்வளவு உயரத்திற்கு நெருப்பு வராது. கச்சேரி நன்றாகப் பற்றி எரிந்தபோது கூட இவ்வளவு உயரத்திற்கு நெருப்பு வரவில்லையே என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். விடியும் வரை கொள்ளைக் கூட்டம் எதுவும் மதுரைக்குள் நுழைந்துவிடாத படி பாதுகாத்தனர். ஆற்றின் இரண்டு பக்கமிருந்து எழுந்த புகையை இரவு முழுவதும் இருள் குடித்தவாறிருந்தது.

*

**சூ**றையாடப்பட்ட ஆங்கிலேய மாளிகைகள் வேதனைகளில் துடித்தன. டி.எஸ்.பி. ஷாங்கின் இளம் மனைவி எமிலியை என்ன சொல்லித் தேற்ற என்று தெரியாமல் அவரது நண்பர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவரையும் சேர்த்து இறந்துபோன வெள்ளையர் ஆறு பேர். எஸ்.பி. வில்சன் மிகக் கடுமையான காயங்களோடு மருத்துவமனையில் இருக்கிறார். மாஜிஸ்திரேட் ப்ரூஸ்புட் மட்டுமே அதிர்ஷ்டவசமாக எந்தக் காயங்களுமின்றி உயிர் தப்பித்தார். இன்னொரு டி.எஸ்.பி. பிரெவ்ஸின் வலது கரம் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது. இறந்தவர்களில் ஒரு பெண்ணும் அடங்கும். எல்லோருடைய நல்லடக்கமும் அன்று மாலை நடந்தது. இடுகாட்டில் கல்லறைகள் வேகவேகமாகப் பெருகி வருகின்றன. ஓம்பெர்ட்டின் கொடூர மரணத்தில் இருந்து மீள்வதற்குள் அடுத்த பெரும் அடியை மதுரை ஆங்கிலேயர்கள் சந்தித்துள்ளனர். கலெக்டர் வில்லியம் காரே மருத்துவமனைக்குச் சென்று எஸ்.பி. வில்சனைப் பார்த்தபின், இருந்த நம்பிக்கையையும் இழந்துவிட்டார். அன்று மாலை தனது பங்களாவுக்குத் திரும்பிய கலெக்டர் மாஜிஸ்திரேட் பங்களாவை

மையப்படுத்தியும், தனது பங்களாவை மையப்படுத்தியும் துப்பாக்கி போலீஸ் படை எந்நேரமும் தயார் நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டார். இரவு அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது.

மதுரைவாசிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தாதனூர்க் காரர்கள் காவலுக்கு வரச் சம்மதித்தை அடுத்து இரண்டு நாள் கொந்தளிப்பு முடிவுக்கு வந்தது. மிக விரைவில் கலெக்டரிடம் பேசி சிறையில் இருக்கும் எட்டுப் பேரையும் மீட்டுத் தருவது எங்களது பொறுப்பு என்று நகரின் முக்கியஸ்தர்களும், ஏட்டுகள் ராவும் நாயுடுவும் மலையடி கருப்பு கோயிலுக்குப்போய் தாதனூர்க் காரர்களுக்கு உறுதியளித்தபின் அவர்கள் வருவதாக ஒத்துக் கொண்டனர். கீழ்நாட்டுக்காரர்கள் நேற்று வடகரையில் நிகழ்த்திய கொள்ளையும் அவர்கள் வருவதாக ஒத்துக்கொள்வதற்கு முக்கியக் காரணம்.

இரவானவுடன் வீதிகளில் காவக்காரர்கள் நுழைந்தனர். இரண்டு தினங்களுக்கு முன் தொலைந்து போன தனது மைந்தர்களை அழைத்துக்கொண்டு இருள் வீதி வீதியாகச் சுற்றியலைந்தது. பாதி எரிந்தபடி கச்சேரி வாசலில் நின்றிருந்த வேம்பு பொன்னாண்டியை முறைத்துப் பார்த்தது. கீழ மாசிவீதியில் நடந்து போய்க்கொண்டிருந்த போது நேற்று எரிந்த நெருப்பு அவன் நினைவிலேயே இல்லை. பழைய இருளின் வழியே அவன் காவல் வீதிகளில் நடந்துபோனான். ராமாயணச் சாவடியின் கிழக்கு மூலையில் கைக்கம்புகள் சாய்ந்து மதுரையை அமைதிப்படுத்தின. அன்றிரவு நகரவாசிகள் நிம்மதியாகத் தூங்கினர். தாதனூர்க்காரர்கள் காவலுக்கு வந்துவிட்ட செய்தி காற்றில் கலந்து வெளியெங்கும் பரவியது. அன்று மதுரைக்குள் நுழையும் முயற்சியும் இருந்த கள்ளர்கள் பலரும் அதனைக் கைவிட்டனர்.

மறுநாள் காலை கலெக்டர் பங்களாவில் மீட்டிங் நடந்தது. அதிகாரிகள் அனைவரும் கலந்துகொண்டனர். டி.எஸ்.பி.பிரெவ்ஸ் வலது கரத்தில் பெரும் கட்டு ஒன்றுடன் வந்து அமர்ந்திருந்தார். காயம்பட்ட வேறு சிலரும் கட்டுப்போட்டிருந்திருந்தனர். மாஜிஸ் திரேட் ப்ரூஸ்புட் கலெக்டருக்கு பக்கத்தில் இருந்தார். கலெக்டர் உள்பட யாருடைய முகத்திலும் தாக்குதலின் அதிர்ச்சி மறையவில்லை. இன்ஸ்பெக்டர்கள் இருவரும் வந்து சேர்ந்தனர். ஐயர் மூன்று நாட்களாகப் படுத்தபடுக்கையாகக் கிடக்கிறார்; அவரால் மீட்டிங்கிற்கு வரமுடியாது என்ற தகவலை ஏட்டு ராவ் தெரிவித்தார்.

கலெக்டர் பங்களாவில் கன்னம் போட்டு நடந்த களவு. அதைத் தொடர்ந்து தாதனூர்க்காரர்கள் எட்டுப்பேரை கைது செய்து சிறையில் அடைத்தது. அதன் விளைவாக நேற்று முன்தினம் போலீஸ் கச்சேரியையும் கொத்தவால் சாவடியையும் அவர்கள் தீக்கிரையாக்கியது. அதே நேரத்தில் ஐரோப்பிய குடியிருப்புகளின் மீது கீழ்நாட்டுத் திருடர்கள் நிகழ்த்தியுள்ள மிகப்பெரிய கொள்ளை, டி.எஸ்.பி. உள்பட ஆறு பேரின் மரணம் என்று கடந்த ஒரு வாரமாக கலெக்டர் வில்லியம் காரேவின் நிர்வாகம் அடி மேல் அடிவாங்கி அரண்டு போய் இருக்கிறது. அடுத்து என்ன செய்யலாம் என்று அவர்கள் யோசித்தனர். விவாதங்களும் கருத்துகளும் மாறி மாறி வந்தன.

இவ்வளவு பிரச்சனைக்கும் அடிப்படையான, கலெக்டர் பங்களாவில்

நடந்த திருட்டை தாதனூர்க்காரர்கள்தான் செய்தார்கள் என்ற முடிவுக்கு எப்படிப் போனீர்கள்' என்று மீண்டும் மீண்டும் மாஜிஸ்திரேட் கேட்டுக்கொண்டேயிருந்தார்.

'விசாரணைக்காகத்தான் தாதனூர் போனோம். அங்கே அந்த குறிப்பிட்ட நபர் ஏற்கனவே நான் கலெக்டர் பங்களாவில் இருபது வருசத்துக்கு முன்னே திருடினேன் என்று வாக்குமூலம் கொடுத்தான். எனவே அழைத்து வந்து வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்தோம். இதனை எப்படித் தவறென்று சொல்லமுடியும்' என்றார். டி.எஸ்.பி. பிரேவ்ஸ்.

'தாதனூர்க்காரர்கள் இல்லாத மதுரையைப் பாதுகாக்க நம்மிடம் என்ன ஏற்பாடு இருக்கிறது என்பதைப் பரிசீலிக்காமலே எஸ்.பி.வில்சன் முடிவுகளை எடுத்து செயல்படுத்தியிருக்கிறார் என்றே நினைக்கிறேன். தாதனூர்க்காரர்கள் காவலுக்கு வரவில்லை என்ற செய்தி வெளியானவுடன் போலீசார் நகரக் காவலில் ஈடுபட்டுள்ளனர் என நினைத்தே கீழ்நாட்டுக் கொள்ளையர்கள் நமது பங்களாக்களின் மேல் தாக்குதல் நடத்தியுள்ளனர். உண்மையில் போலீசார் நகரக் காவலில் இருந்திருந்தால் நமது நிலைமை இன்னும் மோசமாயிருந்திருக்கும். அதே நேரத்தில் தாதனூர்க்காரர்கள் காவலுக்கு வரவில்லை என்ற செய்தி வெளியானவுடன் பிற கொள்ளையர்கள் மதுரைக்குள் வர எப்படித் தயாரானார்கள் என்ற தகவல்கள் நமக்கு வந்துகொண்டே யிருக்கிறது. திண்டுக்கல், சிவகங்கை போலீசார் தரும் தகவல்கள் நம்பவே முடியாதபடி உள்ளன. அவை முழுவதும் உண்மையாக இருக்கும் என்று எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. ஆனாலும் நம்மிடம் இருக்கும் போலீஸ்படையை கொண்டு தினமும் ஒரு சண்டையை நாம் நடத்திக்கொண்டிருக்க முடியாது.

'அது மட்டுமல்ல, கச்சேரியைத் தீக்கிரையாக்கியவர்களே, வைகையின் வடகரையில் நின்றுகொண்டு நம்மைத் தாக்கிய கொள்ளையர்கள் நகருக்குள் நுழைந்துவிடாமல் பாதுகாத்துள்ளனர் என்பதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும். காவல்துறையின் புதிய சட்டங்களின் அடிப்படையில் உள்ளூர் காவல் அமைப்புகளை முற்றிலும் அழிப்பது என்ற நிலையெடுத்து முரட்டுத்தனமாக நாம் செயல்பட்டால் நாம் சந்திக்க வேண்டிய விளைவுகள் நம் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்' என்றார் உயர் அதிகாரி ஒருவர்.

தலையிலும் இடது கையிலும் காயத்திற்குக் கட்டுப்போட்டிருந்த இளம் ஆங்கிலேய போலீஸ் அதற்கு நேர்எதிராகப் பேசினான். 'நாம் எடுத்துவைத்த அடியில் இருந்து பின்வாங்கக்கூடாது, அப்படிப் பின்வாங்கினால் நகரின் காவலில் இருந்து தாதனூர்க்காரர்களை ஒருபோதும் அகற்ற இயலாது' என்றும் குறிப்பிட்டான்.

'சட்டம் ஒழுங்கை மதுரை நகரத்திலேயே நிர்வகிக்க முடியாதவர்களாகிய நாம் மேலூரில் என்று தீர்மானிக்கப்போகிறோம்' என்ற கேள்வியை எழுப்பினான். 'எனவே போலீஸ் ஸ்டேசன் தீ வைக்கப்பட்ட வழக்கில் தாதனூரின் முக்கியஸ்தர்களை கைதுசெய்ய வேண்டும். காவல் கூலி கொடுக்கக்கூடாதென மக்கள் மத்தியில் தொடர்ந்து வலியுறுத்தவேண்டும். நகரத்தில் உள்ள வீடுகளில் கூரைகள் வேயக்கூடாது. ஏற்கனவே வேயப்பட்ட கூரைகளை உடனடியாக

அகற்றிவிட கலெக்டர் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.’

அதன்பின் பேசிய நகரத்தின் நிர்வாக அதிகாரி ஜோனிக், ‘உள்ளூர் போலீஸார் ஐரோப்பிய போலீஸ் முறையைப் புரிந்து கொள்ளச் செய்ய, நாம் எடுத்துக்கொண்ட முயற்சி அளவுக்கு, உள்ளூர் காவல்முறையைப் புரிந்துகொள்ள ஐரோப்பிய அதிகாரிகளான நாம் முயற்சிகள் எடுக்கவில்லை. இந்தக் காவல் அமைப்பு, திருட்டுடன் ரத்த உறவு கொண்ட ஓர் அமைப்பு. அதே நேரத்தில் திருட்டை முழுவதும் கட்டுப்படுத்தி வைத்திருக்கிற அமைப்பு. இதனைக் குலைப்பது அல்லது அழிப்பது என்று நாம் எடுக்கும் முடிவானது சிறுபிள்ளைத்தனமாக முடியும். இன்றைய நிலையில் அப்படிச் செய்வதற்கான எந்த வலுவும் நமக்கு இல்லை. எனவேதான் நாம் எடுத்த இரண்டு முயற்சிகளும் நமக்கு படுமோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. நமது நிர்வாகத்தின் மீதான பொதுக் கருத்தையும் அது சேதப்படுத்தி விட்டது’ என்று கூறினார்.

கருத்துகளைக் கேட்டபடி கலெக்டர் அமர்ந்திருந்தார். ஆழ்ந்த சிந்தனையுடன் அவர் இருப்பது தெரிந்தது. அவர் என்ன சொல்லப்போகிறார் என்று எல்லோரும் எதிர்பார்த்தபடி இருந்தனர். பெரும் கவலையுடன் நடந்த இக்கூட்டம் எப்படி முடிவடையப்போகிறது என்று யோசித்தபடி இருந்தனர். இடைவெளியைப் பெரும் மௌனம் நிரப்பிக் கொண்டிருந்தது. பின்னர் கலெக்டர் பேசத் துவங்கினார். அப்பொழுது ஆங்கிலேயன் ஒருவன் அவசரமாக அறைக்குள் நுழைந்தான். எல்லோர் கவனமும் அவனை நோக்கித் திரும்பியது. அவன் நேராக கலெக்டருக்கு அருகில் சென்று ஆர்க்காட்டு கலெக்டரிடமிருந்து தந்தி ஒன்று வந்துள்ளதாகச் சொல்லி அவரிடம் கொடுத்தான். கலெக்டர் தந்தியை வாங்கிப்பார்த்தார்.

‘1875 செப்டம்பர் 24ம் தேதி எங்கள் மாவட்ட போலீஸ் கேப்மாறிக் குறவர்களின் கொள்ளைக் கூட்டமொன்றைப் பிடித்துள்ளது. அந்தக் கூட்டம் புகைவண்டியைப் பயன்படுத்தி வெகுதொலைவிற்குப் போய் கொள்ளையடித்து வரும் பழக்கமுடையது. அவர்களைச் சிறையில் அடைத்து விசாரித்ததில் போன வாரம் மதுரையில் கொள்ளையடித்ததாகச் சொன்னார்கள். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள், நகைகள், வில்லைகளைப் பார்த்தால் இது நிச்சயமாக ஒரு ஐரோப்பியரின் வீட்டில் நடந்துள்ள கொள்ளை என்றே நான் கருதுகிறேன். உடனடித் தகவலுக்காக உங்களுக்கு தந்தி கொடுத்துள்ளேன். பொருட்களின் முழு விபரத்தையும் நாளை அனுப்பி வைக்கிறேன்.’

தந்தியைப் படித்த கலெக்டரால் எதுவும் பேசமுடியவில்லை. நீண்ட மௌனத்திற்குப்பின் மீட்டிங் முடிந்ததாக அறிவித்தார். பலருக்கும் வியப்பாக இருந்தது. ‘கவர்னர் அலுவலகத்தில் இருந்து வந்துள்ள தந்தியாக இருக்குமோ’ என்று பேசிக்கொண்டார்கள். மேஜிஸ்திரேட்டை மட்டும் தனது தனி அறைக்கு அவர் அழைத்துச்சென்றார்.

*

# 72

**அமண மலை வெயிலின் உஷ்ணத்தில் இளகிக்கொண்டிருந்தது**. கருவுற்ற பெண்நரிகள் உஷ்ணம் தாங்காமல் சதா ஊளையிட்டபடி பின்புற மலைப் புடவுகளை விட்டு வெளியேறி தந்தரைக்கு ஓடின. பாறைகள் உள்ளுக்குள் இளகுகிற சத்தம் கேட்ட பறவைகள் இப்பொழுதெல்லாம் மலைப் பொந்துகளில் அடைவதேயில்லை. ராஜாளிக்கு மட்டும் பாறை இளகுகிற இடம் நன்றாக தெரியுமாதலால் பறந்து வந்து முட்டி அந்த இடத்தில் துவாரமிட்டு தனக்கான இருப்பிடத்தை அமைத்துக் கொள்கிறது என்ற நம்பிக்கை காலங்காலமாக இருக்கிறது. அவை மட்டும் மலைப்பாறைகளின் மேல் அடைவதாக நம்பினார்கள். பாறைகள் யாரையும் நெருங்கவிடவில்லை. நாகம் சீறுவதைப் போல இரவானால் உஷ்ணத்தை கக்கிய பாறைகளின் மேல் விலங்குகளோ, பறவைகளோ தங்கப் பயந்தன. மலையடிவாரக் கருப்பு கோயில் ஆலமரங்களின் நிழல்தான் பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என எல்லோருக்குமான ஒரே புகலிடம். பஞ்சம் மலையை விட்டு இறங்கி ஆலமரத்தைச் சூழ்ந்து நின்றது. பஞ்சத்தால் சூழப்பட்ட மனிதர்கள் ஆலமரத்தடியில் அமர்ந்து ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தனர்.

தாதனூர் ஒரு வாரமாக தெளிச்சியாக இருந்தது. கொத்தவால் சாவடியில் அடித்த கொள்ளையில் பாதியை மறுநாள் தேடிவந்த கச்சேரி போலீசாரிடம் கொடுத்து அனுப்பினர். மீதிப்பாதி முழுவதுமாக ரொக்கம். மதுரை சந்தையில் எதையும் வாங்கலாம் என்ற நிலையில், உணவு தானியங்களை வாங்கி வீடுகளுக்கு சமமாகப் பகிர்ந்தளித்தனர். ஒரு வாரத்துக்கு ஊரே நல்ல கஞ்சி குடித்தது. கருப்பு கோயில் ஆலமரத்தடி களைகட்டியிருந்தது.

‘நாரை ஒழிச்சு செங்காடைகிட்ட விட்ட மாதிரி, தெருத்தெருவாப்போயி வரி வாங்கி நம்மகிட்ட விட்டுட்டாங்களே இந்த கச்சேரி போலீசு...’ என்றான் கருத்தாண்டி.

‘முழுசா எடுத்த பெறவு நெருப்பு வைடான்னு, இந்த பொன்னாண்டி ஈச புடிக்கிறதுக்கு முன்னாடி புத்த கலைக்கிறது மாதிரி பாதி எடுக்கிறதுக்குள்ள நெருப்பு வச்சுப்புட்டான்’ என்றான் சோங்கு.

‘எரிய்யிற வீட்டுல எடுக்கிறதாண்டா மிச்சம்‘ என்றான் பொன்னாண்டி.

‘வெளயிறவனுக்கு வெளையாம போனா வெளக்கமாத்தக் கொண்டே அடிக்கணும். அதமாதிரி எடுக்க வேண்டியத எடுக்காம விட்டு வந்தவங்கெள எதக் கொண்டி அடிக்கிறது’ என்றான் கட்டயன்.

‘பூராத்தையும் எடுத்துகிட்டு வந்து இவெ வீட்டுல அடஞ்சு வெச்சிருங்கடா, இவரு பெரிய்ய... துவரிமான் ஐயரு! தெனமும் காலாட்டிக்கிட்டே திங்கட்டும்’ என்றார் அரைத் தூக்கத்திலிருந்த ஒரு பெருசு. பேச்சு சொலவடையாய் போய்க்கொண்டிருந்தது.

‘அவங்கெ சொன்ன பங்களாவுல யாருதான்டா கன்னம் போட்டது. ஏதாவது துப்பு தெருஞ்சுச்சா!’ என்று கேட்டான் பேயாண்டி. ‘வடக்கே இருக்கிற குறவங்கெ வந்து எடுத்துக்கிட்டு போயிருக்காங்கெப்பா...’ என்றான் விட்டிராசு. ‘எத வச்சு சொல்ற?’ என்று பேயாண்டி திரும்பக்கேட்டான். ‘களவு போன அன்னக்கி கோழி கூப்பிட, ஆத்துக்கு வடக்க இருக்கிற பெருமாள் கோயிலுக்கு முன்னாடி சாமி கும்பிட்டுக்கிட்டு இருந்திருக்காங்கெ. வண்டியூர் காவக்காரெ, அது தான் நம்ம பேச்சியோட பெரிய மாமே பாத்திருக்காரு. என்னப்பா இந்நேரத்துக்குன்னு கேட்டவுடனே, நாங்க வடக்க இருந்து குறி சொல்ல வந்தோம் சாமீ. நேரத்துக்கு ரயில் வண்டிக்கு போகணும் அதுதான் சாமிய கும்பிட்டு கெளம்புறோம்னு சொல்லியிருக்காங்கெ. நாங்க வடக்க நெல்லூர், குண்டூர் பக்கம் களவுக்கு போறப்பெல்லாம் பல தடவ பாத்திருக்கோம். அவெங்க தொழில முடிச்சுவுடனே ஊருல பெருமாள் கோயில் இருந்தா அங்க சாமிய்ய கும்பிட்டு கெளம்பிருவாங்கெ, இல்லாட்டி திருப்பதி மலையிருக்கிற தெசய பாத்து சாமி கும்பிட்டு கெளம்பிருவாங்கெ’ என்றான்.

‘அங்க இருந்து இங்க வந்து கன்னம் போட்டுப் போனா, அவங்கெளும் கெட்டிக்காரெங்க தாண்டா’ என்றான் பேயாண்டி.

‘செய்க செஞ்சப் பெறகு இப்படி மச்சம் வச்சுட்டுப் போறவெ கெட்டிக்காரனாக்கும்’ என்றான் கட்டயன். பேச்சு மாறி மாறிப் போய்க்கொண்டிருந்தது. இன்னேரம் மாயாண்டிப் பெருசு இருந்திருந்தால் பேச்சியோட பெரிய்ய மாமே கருப்பு கோயில் பக்கம் தல காட்ட முடியாது. ‘எட்டுப் பொட்டலமா கட்டித் தூக்கிட்டுப் போன கொறவங்ககிட்ட இருந்து எதையும் எடுக்காம பொச கெட்டுப் போயி இங்கு எதுக்குடா வந்தன்னு’ கேட்டிருப்பாரு. ‘கைக்குருவிய பிடிக்கிறதவெதான்டா வேட்டக்காரென். ஊர் குருவியத் தான் எவனும் பிடிப்பான்ல...அசலூர் களவாணிகிட்ட களவாணத் தெரியாதவெ என்னடா காவப் பாக்கப்போற...’ன்னு சொல்லி சொணமன இல்லாம பேசியிருப்பாரு. பெருசு இல்லாதது பேச்சு இல்லாமல் போனதுபோல் ஆனது. அடிமரம் இல்லாத ஆலமரத்தின் கீழ் இருப்பதைப் போலத் தங்கள் இருப்பை உணர்ந்தபடி அவர்கள் இருந்தனர்.

மூன்று வாரங்கள் கழித்து ஒரு நாள் சூரியன் அடிசாய ஆரம்பித்து சிறிது நேரத்திற்குப்பின் தூரத்தில் ஆரேழு பேர் வருவதுபோல் இருந்தது.

மரத்தடியில் படித்திருந்தவர்கள் அவர்களைப் பார்த்தபடி இருந்தனர்.

‘இன்னேரத்துக்கு எங்கிட்டு இருந்து வர்றாங்கெ, களவுக்கு என்னும் போயிட்டு வர்றாங்களோ?’

‘களவுக்கு போனவெங்க மாதிரி தெரியலயே, கைய்ய வீசிக்கிட்டுல வர்றாங்கெ!’

‘களவுக்கு போயிட்டு ஒண்ணும் எடுக்காம கைய்ய வீசிக்கிட்டு வர்ற அந்த மாப்பிள்ளைக யாரு?’

‘தூரத்துல மூஞ்சி சரிய்யாத் தெரியல, கிட்ட வரட்டும் பாப்போம்.’

‘முன்னத்துல வர்றது சடப்புலி மாதிரி தெரியுதே...ஆனா கையிகாலெல்லாம் ஒண்ணும் ஒச்சமில்லாம வர்றான்!’

ஆளாளுக்குப் பேசிக்கொண்டிருந்தபோது சடப்புலியும் மற்ற ஆறு பேரும் ஆலமரத்தடி நிழலுக்கு வந்து சேர்ந்தனர்.

சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் வருவது சடப்புலிதான் என்பதை உறுதிப்படுத்தியதால் ஆச்சரியத்தில் இருந்து மீளவில்லை. அங்குமிங்குமாகப் படுத்திருந்தவர்கள் எல்லோரும் அவர்களை வந்து சுற்றிக்கொண்டனர்.

‘என்னடா கையி காலெல்லாம் ஒச்சமாகாம அப்படியே வந்திருக்க’ என்று கேட்டான் ஒச்சு.

‘ஏன்டா அப்படி கேக்கிற?’ என்றான் சடப்புலி.

‘இல்லடா...செறப்பிடுச்சு கூட்டிப் போனா உள்ள வச்சு அடுச்சு உதச்சு கையி காலு எல்லாத்தையும் ஒச்சமாக்கிட்டுத்தான் அனுப்புவாங்கேன்னு எங்ககிட்ட சொன்னாங்களே!’

‘எவன்டா சொன்னான், பொசகெட்ட பய, அங்கதான்டாநேர நேரத்துக்கு கஞ்சி ஊத்துறாங்கெ, அதுவும் அவ்வளவு நல்லா இருக்கு. எந்த ராசாடா இந்த பஞ்ச காலத்துல ஒரு நாளைக்கு இத்தன தடவ கஞ்சி ஊத்துவான்? இந்தா இவன கேளு, கஞ்சிய குடிக்க, படுத்த தூங்க, கஞ்சிய குடிக்க, படுத்து தூங்க... இதுதாண்டா சோலி, நாங்க பாட்டுக்கு சொகமாகெடந்தோம்’ என்றான் சடப்புலி.

எல்லோருக்கும் ஆச்சரியமாகவும் குழப்பமாகவும் இருந்தது. ‘செறப்பிடிக்கப் பட்டவெங்க சுகமா இருந்தோம்னு சொல்றாங்கெ. நம்புற படியா இல்லையே. நம்மள கேன கிறுக்குன்னு நெனச்சுக்கிட்டு பேசுறாங்களான்னு தெரியலயே!’ என்று யோசித்தபடி இருந்தனர்.

‘அது சரி!... நீங்க ஏன்டா போயி கச்சேரிக்கு நெருப்பு வச்சீங்க?’ என்று கேட்டான் சடப்புலியோடு வந்து விருமன்.

‘உங்கள் எல்லாத்தையும் செறப் பிடிச்சுப் போயிட்டாங்களேன்னு தான் கொளுத்துனோம்’ என்றான் கட்டையன்.

‘கூட்டிப் போயி கஞ்சி ஊத்துனவங்கெ கச்சேரிக்கே நெருப்பு வச்சிருக்கேங்களாட...’ என்று இழுத்தான் விருமன்.

‘....டேய், நீங்க சொல்றதெல்லாம் நெசமாடா? உக்காரவச்சு உக்கார வச்சு கஞ்சி ஊத்துனாங்கெளாடா?’ என்று மீண்டும் மீண்டும் கேட்டான்

கட்டையன்.

‘ஆள் தெளிச்சியா வந்திருக்கிறத பாத்தாலே தெரியலயடா? இந்தப் பன்னிப் பயலுக எப்படி தின்னுட்டு வந்திருக்காங்கண்டு...’ என்றது வயிற்றெரிச்சலோடு ஒரு குரல்.

‘நெல்லுக் கஞ்சி ஊத்தி அனுப்பி வைக்கிறோம்னு தான்டா அந்த ஐயரு சொன்னாரு. நாமளும் போகாம போயிட்டாமேடா!’ என்றான் விட்டிராசு.

‘சரி...பெரிய்யாம்பளய எங்கடா?’ என்று கேட்டான் பேயாண்டி.

‘பெரியாம்பளெயவும், செம்பூராங்கெ ரெண்டு பேத்தையும் இங்கிருந்து போனதுக்கு மறுநாளே தனியாகூட்டிக்கிட்டுப் போயிட்டாங்கெ. கேட்டா வேற எடத்துல வச்சிருக்கோம்னு சொன்னாங்கெ’ என்றான் சடப்புலி.

‘வேறெடம்னா... மருதயிலயா? இல்லாட்டி வேற ஊருலயா?’

‘மருதயில இல்ல. வேற ஏதோ ஒரு ஊருல வச்சிருக்காங்கே போலிருக்கு. சரி...கடேசி காலத்துலயாவது பெரியாம்பள உக்காந்து கஞ்சி குடிச்சிட்டு வரட்டும், விடுங்கடா...’ என்றான் சடப்புலி.

மற்றவர்களுக்கெல்லாம் ஊர் பெரிய்யாம்பளய அப்படி விட்டுவிடக்கூடாது என்று தோன்றியது. ஆனாலும் இந்த பஞ்ச காலத்தில் கஞ்சி கிடைக்கிற எடத்த விட சொகம் வேறென்ன? என்ற எண்ணம் அந்தப் பேச்சை வளரவிடாமல் செய்தது.

*

**கா**ய்ச்சலில் படுத்த படுக்கையாய்க் கிடந்த கோபால் ஐயரை வாதநோய் தாக்கியது. எஸ்.பி. வில்சனின் மரணச்செய்தியோடு சேர்ந்து அது வந்தது. சாஸ்திரம் கெட்டவனுக்கு இதுதான் நடக்கும் என்று எழுகடல் அக்ரஹாரத்தில் பலரும் பேசிக்கொண்டனர். படுக்கையிலே மலஜலம் போனது. வீட்டின் பின்புறம் கடைசியாக இருந்த ஒரு அறையிலே அவர் கிடத்தப்பட்டார். முதலில் ஆட்கள் வந்து பார்த்து விசாரித்துப் போய்க்கொண்டிருந்தனர். அதுவும் சிறிது நாளில் நின்றது. எடுத்துப்போடும் வேலைக்காக அமர்த்தப்பட்ட ஒருவன் அந்த அறைக்கு வெளியே எந்நேரமும் இருந்தான். உள்ளே இருந்து கூப்பிடுவதுபோல் சத்தம் கேட்டால் போவான். மற்றபடி வெளியேதான். வாதநோயைக் குணமாக்கக் கூடியதென வைத்தியர் சொன்ன மரப்பலகையில் கட்டில் அமைத்து அதில் அவரைப் படுக்க வைத்திருந்தனர். பனையோலைப் பாயில் படுத்தால் வாதம் நீங்கும் என்று பார்க்க வந்த சிலர் சொன்னால் அந்த கட்டிலின் மேல் பனையோலைப் பாயை விரித்து அதன் மேல் அவரைப் படுக்கவைத்தனர். அவரது துணிமணிகளக் முழுவதும் அந்த அறைக்கு போய்விட்டது. தனி அறையில் அவரது நாட்கள் நகர்ந்தன. பார்வைக்கு நேரே சுவரில் கொக்கி மாட்டி போலீஸ் யூனிபார்மை தொங்கவிடச் சொல்லியிருந்தார்.

ஒரு எஸ்.பி.யும் இரண்டு டி.எஸ்.பி.க்களும் இருந்து பணியாற்றிய மதுரையில் இப்பொழுது எஸ்.பி. வில்சன் மற்றும் டி.எஸ்.பி. ஷாங்கின் மரணம் அரசு நிர்வாகத்தை நிலைகுலைய வைத்தது. டி.எஸ்.பி. எல்.ஆர். பிரெவ்ஸ் மொத்தப் பொறுப்பையும் ஏற்றுச் செயல்பட்டார். கச்சேரி போலீசார் கலெக்டரின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று தெரியாத குழப்பத்தில் இருந்தனர். மதுரையை உலுக்கிய இந்த இரண்டு

சம்பவத்திற்குப் பிறகு கலெக்டர் எந்த உத்தரவையும் இன்றுவரை பிறப்பிக்கவில்லை. எனவே தங்கள் பணி எந்தத் தன்மையில் இருக்கவேண்டும் என்பது பற்றிக் கூட அவர்கள் தெளிவற்று இருந்தனர். டி.எஸ்.பி. பிரெவ்ஸ் கலெக்டரின் உத்தரவுக்காகக் காத்திருப்பதாகவும் அதுவரை கச்சேரியை மையப்படுத்திய பணிகளை மட்டும் செய்யுமாறும் வழிகாட்டினார்.

கலெக்டர் அலுவலகம் நீண்ட மௌனத்தில் இருந்தது. ஆற்றுக்கு வடக்கே குடியிருந்த ஐரோப்பியர்கள் தங்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுந்தாக்குதலில் இருந்து மனஅளவில் மீளமுடியாதவர்களாய் இருந்தனர். அதிகாரம், துப்பாக்கி, தோட்டா, பெரும் பங்களா என அனைத்தும் இருந்தும் ஏற்பட்டுள்ள இழப்பு அவர்களை அவமானத்தில் ஆழ்த்தியபடி இருந்தது. ஓம்பெர்ட்டின் உடல் துண்டு துண்டாக்கப்பட்ட கபாலி மலையின் பின்புற அடிவாரம் போல எஸ்.பி.யின் பங்களாவும் ரத்தக்கரை உறைந்த பாறையாய் இருந்தது. மதுரையில் நீண்ட காலத்திற்குப்பின் ஆங்கிலேயர்கள் கொடுத்த பெரும் விலை இந்த சம்பவம் தான். அதிகாரித்தின் உச்சியில் இருந்த அவர்களின் நிம்மதியான வாழ்வை அது குலைத்தது.

கலெக்டர் வில்லியம் காரே நீண்ட நாட்கள் எடுத்துக்கொண்டார். அதிகாரிகள் அனைவருடனும் ஆலோசனை நடத்தினார். தான் எடுக்கப்போகும் முடிவின் முக்கியத்துவத்தை மிக நன்றாக அவர் உணர்ந்திருந்தார். எனவே காலதாமதத்தை அவர் கணக்கில் கொள்ளவில்லை. மதுரை மாவட்டம் முழுமையான அளவு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் கூட்டம் எண்ணிலடங்காத அளவு இடம்பெயர்ந்து வருகின்றனர். உணவுப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு எந்த வகையிலும் நிவர்த்தி செய்ய முடியாததாக உள்ளது. மரணவிகிதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மருத்துவர்கள் குழு தரும் அறிக்கை அடுத்து பரவப்போகும் நோய்களின் அபாயம் பற்றி எச்சரிக்கிறது. ஏற்படப்போகும் பேரிழப்புகள் கலகமாகவோ, அரசு நிர்வாகத்திற்கு எதிரான ஆபத்தான சூழ்நிலையையோ உருவாக்கிவிடக்கூடாது. நமது முழுப்பணியும் அந்தத் தன்மையில்தான் இருக்கவேண்டுமே அல்லாமல் பழைய காவல் முறையை ஒழிப்பது, அதன் மூலம் வரும் சவாலை சந்திப்பதெல்லாம் இந்தக் காலத்தில் செய்ய வேண்டிய வேலையல்ல. கொள்ளையும் கொலையும் பன்மடங்கு அதிகமாகியுள்ள சூழலைப் பஞ்சம் ஏற்படுத்தி இருக்கும்பொழுது, இருக்கும் காவல் அமைப்பை ஒழிக்க முயற்சி செய்வது புத்திசாலித்தனமான நடவடிக்கையாகாது. எனவே காவல்துறையின் புதிய சட்டங்களின் அமலாக்கத்தை நாம் தற்காலிகமாகக் கைவிடலாம். பழைய காவல் அமைப்பு முறை மீதான நேரடித் தாக்குதல் எதுவும் இப்பொழுது தேவையில்லை. ஆனால், நமது போலீஸ் முறையைப் பலப்படுத்தும் காரியங்களைத் தொடர்ந்து கவனிப்போம். பஞ்சத்தின் கொடுமை அரசுக்கு எதிரான கலகங்களாக மாறியுள்ள அனுபவம் பல நாடுகளில் இருந்து நமக்குக் கிடைத்துள்ளது. அத்தகைய அனுபவம் மதுரையில் ஏற்பட்டுவிடாதபடி நமது பணிகளை அமைத்துக்கொள்வோம் என்ற முடிவுக்கு கலெக்டர் வந்தார்.

இந்த முடிவுக்கான ஒப்புதலை கவர்னர் அலுவலகத்திலிருந்து

பெறமுடியாது என்று அவருக்குத் தெரியும். எனவே சட்டப்படியான நடவடிக்கைகள் சட்டத்திலே இருந்தன. மதுரை நிர்வாகத்தின் நடவடிக்கைகள் கலெக்டர் சொன்னபடி இருந்தன.

*

ஐப்பசி பிறந்தது. வெயிலின் உக்கிரத்திலிருந்து விடுபட்ட மனிதர்களின் மனதில் நம்பிக்கை துளிர்க்க ஆரம்பித்தது. இரண்டு ஆண்டுகளாக ஏமாற்றிய மழை இந்த ஆண்டு நம்மைக் கைவிடாது என்று நம்பினர். வெயிலின் கொடுமை முடிவுக்கு வந்து மழையால் பூமி குளிரும், பட்டமரம் தழைக்கும், பாங்கிணறு ஊற்றெடுக்கும், குளக்கரையில் நண்டு நந்தை பல்கிப்பெருகும் என ஒருவருக்கொருவர் ஆசைகளைப் பரிமாறிக்கொண்டனர். காய்ந்து இறுகிய மண்கட்டிகள் சகதியாக இளகும் நாட்களுக்காகக் காத்திருந்தனர். நாள்ஏர் பூட்ட நாள் பார்த்தபடி இருந்தனர். உஷ்ணத்தால் சூறையாடப்பட்ட மண்ணில் நின்றவாறு நெற்றியில் கைவைத்து கருத்த மேகங்களின் வரவை அண்ணாந்து பார்த்தவாறு இருந்தனர். வானம் நீலமாய் வெறித்துக் கிடந்தது. ஐப்பசி பிறந்தாலும் மழைக்காலத்தின் முதல்நாள் பிறக்காமலே போய்க்கொண்டிருந்தது. வானத்தைப் பார்த்துப் பார்த்து நாட்கள் கழிந்தன. எறும்புகள் முட்டை எடுத்துப் போகிறதா, தேரை கத்துகிறதாவென மக்கள் வசாரித்தபடி திரிந்தனர். எப்பொழுதாவது வரும் மேகக்கூட்டம் பஞ்சம் பிழைக்கச் செல்பவர்களைப் போலவே நின்று பேசக்கூட பொறுமையின்றிப் போய்க்கொண்டேயிருந்தது.

ஒருநாள் மாலையில் மெல்லிய குளிர்காற்று மேற்கில் இருந்து வீசியது. எரிச்சல் தாங்காது கிடந்த மனித உடல்களை அது தொட்டுத் தழுவியபடி சென்றது. மனிதர்கள் வீடுகளை விட்டு வெட்டவெளிக்கு ஓடிவந்தனர். வீசும் காற்றினூடே மீனைப் போல நீந்திச் செல்ல முயற்சித்தனர். அருவியில் குளிப்பதைப் போல உடல் முழுவதையும் காற்றடிக்கும் திசை நோக்கி திருப்பித் திருப்பி காண்பித்தபடி இருந்தனர். அந்தக் காற்று மொத்த நகரத்தையும் தழுவிச் சென்றது. அணில்கள் வாலைத்தூக்கியபடி கிளைக்கு கிளை தாவிக்குதித்தன. தேரைச் சத்தம் மட்டைகளுக்குள் இருந்து கேட்க ஆரம்பித்தது. மேற்கே எங்கோ மழை பெய்யத்துவங்கிவிட்டது என்ற உற்சாகம், காற்றடித்த திசை எல்லாம் காட்டுப்பூக்களைப்போல மனிதர்களின்முகத்தைப் பூக்கவைத்தபடி சென்றது. நம்பிக்கைகள் வலுப்பெறத் துவங்கின. குளிர்காற்றைத் தொடர்ந்து தூறல் விழும், பின்பு சேலை நனைகிற மழை இறங்கும், பின் புழுதியடங்கப் பெய்யும், பின் மோடு நனைய்ய ஒரு கொட்டுக் கொட்டும். கால்பதம், அரைப்பதம், முக்கால்பதமென மண்ணை மழை பதப்படுத்தும். தொழி உழும் ஏருக்குப்பின் பூமியின் மார்பில் இருந்து பயிர்கள் முளைவிடும்; செழிக்கும். பின் வெள்ளம் திரளுவது போல் கார்த்திகையில் அடைமொழி கொட்டோ கொட்டென்று கொட்டும். கண்மாய், குளங்களில் நீர் அலையடிக்கும். வைகையின் கரைகளில் நாரைகள் கூட்டம் கூட்டமாய் வந்திறங்கும். மடைகளில் துள்ளிக் குதிக்கும் மீன்களைப் பிடித்துத் தீராது. பேய் மழையின் வேகம் தாங்காது கரைகள் உடைப்பெடுக்கும். ஊரோடு நீரும் நீரோடு ஊரும் மல்லுக்கட்டி நிற்கும். கூடை மண்வெட்டிகளோடு எல்லோரும் கரையை நோக்கி ஓட வேண்டியிருக்கும். அப்பொழுது வேலைக்கு வராமல் வீட்டிலே கிடப்பவன் சிவனே ஆனாலும், பிரம்படியில்

இருந்து தப்பமுடியாது. கனவும் நம்பிக்கையும் மனிதர்களை சந்தோஷமடையச் செய்தது.

இந்த நம்பிக்கைகள் எல்லாம் இத்தனை நாள் பஞ்சத்தைத் தாக்குப்பிடித்து ஊரில் இருப்பவர்களுக்குத்தான். ஊரை விட்டு வெளியேறிப் போய்க்கொண்டிருக்கிற கூட்டம் எந்த நம்பிக்கையையும் எடுத்துச் செல்லவில்லை. எல்லாவற்றையும் ஊரிலோ அல்லது நடு வழியிலோ புதைத்துவிட்டுத்தான் போனது. இன்று உயிரோடிருப்பதே நம்பமுடியாத கனவுபோல் இருந்தது. எவ்வளவு மோசமான பாதையில் நடக்க நேரிட்டாலும் ஒவ்வொரு நாளும் நேற்று வந்த பாதை நல்ல பாதையாகத்தான் இருந்தது. ஏதாவது கிழங்கு கிடைக்காதா என பள்ளங்களையும் மேடுகளையும் பார்த்துத் திரிந்த அவர்கள் ஒருபோதும் அண்ணாந்து மேகத்தைப் பார்க்கவில்லை. மழை கொட்டினாலும் நீர்த்துளிகள் தானியங்களாக மாறுகிற வரை உயிரைத் தக்கவைக்க எதுவும் இல்லாத அவர்கள் மந்தைகளைப்போல் இரை தேடிப் போய்க்கொண்டிருந்தனர்.

வாசல்வரை வந்த கார்காலம் நிலைப்படியைத் தாண்டி நடுவீட்டிற்குள் வந்துவிடும் என்ற கனவெல்லாம் இருப்பவர் களுக்குத்தான். இல்லாதவர்கள் எந்தக் கனவுமின்றி வெறி பிடித்து அலைந்தனர். மரணத்தைத் தோளிலே சுமந்தபடி அவர்கள் போய்க்கொண்டே இருந்தனர். எந்த ஒரு கணத்திலும் அது அவர்களை குதறிப்போட்டுவிட்டுப்போய்விடும். ஆனால், அதைப் பற்றிய கவலையெல்லாம் அவர்களுக்கு இல்லை. எதைச் செய்தாவது உயிர் பிழைப்பதே விதி என்றானது. கடைசியாக முத்துப்பட்டியில் நடந்து சம்பவம் மதுரையை ஒரு உலுக்கு உலுக்கியது.

நாற்பது ஐம்பது பேர் சில நாய்களுடன் பகலில் ஊர் முழுவதும் சுற்றிப்பார்த்து வெளியேற்றியுள்ளனர். யார் நீங்கள்? என்ன விசயம்? என்று விசாரித்தற்கு ராமநாதபுரத்தை சேர்ந்தவர்கள், வேட்டைக்காகப் போய்க்கொண்டிருக்கிறோம் என்றார்கள். ஆனால், அன்று நள்ளிரவுக்குப்பின் உள்ளே நுழைந்து மொத்த ஊரையும் கொள்ளையடித்து விட்டார்கள்.

பிள்ளைமார்கள், முதலியார்களின் காரை வீடுகளின் உழக்கு தானியம் கூட மிச்சமில்லை. வீடுதோறும் வெட்டுப்பட்ட உடல்கள் கிடந்தன. இப்படி ஊரையே சேர்த்து மொத்தமாகக் கொள்ளையடித்துப் போவதென்பது சமீப ஆண்டுகளாக இல்லாதது. இந்தச் செய்தி ஊர் ஊராகப் பரவியது. பஞ்சம் பிழைக்க எந்தக் கூட்டம் ஊரைக் கடந்து போனாலும் அந்தக் கூட்டம் கொள்ளைக் கூட்டமாகவே ஊர்க்காரர்களுக்குத் தெரிந்தது. எனவே, அவர்கள் யாரும் ஊருக்குள் நுழையாதபடி தடுக்கப்பட்டனர். பத்தில் ஒரு ஊரில்தான் இது நடந்தது. மற்ற ஒன்பது ஊர்களும் ஏற்கனவே நடந்துபோய்க்கொண்டிருந்தன. மனிதர்கள் எல்லோரும் கொள்ளையடிக்கப்பட்டவர்களாகக் காட்சியளித்தனர். கொள்ளையடிப்பவர்களைப் போலவும் தெரிந்தனர். ஒரு வேளை உணவை ஒருவன் சாப்பிடுவதற்கு ஒரே வழிதான் இருந்தது. அது வழிப்பறி என்றும், திருட்டும் என்றும், கொள்ளை என்றும் விதவிதமான சொற்களால் அழைக்கப்படும் வழியாக இருந்தது.

*

# 73

**முகாமில் இருந்த யானைகளை வேலை முடிந்தவுடன் இரவு** நேரத்தில் தீவனத்திற்காகக் காட்டுக்குள் விடுவார்கள். அதிகாலை யில் பாகன் தடம் பார்த்துப் போய் யானையைக் கூட்டிவருவான். பகலில் அவை செய்கிற இந்த கடினமான வேலைக்கான தீனியை இரவு முழுவதும் அலைந்து திரிந்து தின்று முடித்தால்தான் முடியும். அடுத்த நாள் வேலையும் சுணக்கமில்லாமல் நடக்கும். முகாமில் கட்டிப்போட்டு தீனிகொடுத்து கட்டுப்படியாகாது. தீனி குறைந்தால் வேலையும் அதற்கு ஏற்ப சோர்வடையும். எனவே. வேலை முடிந்தபின் காட்டுக்குள் விட்டுவிடுவார்கள்.

சாராயத்தைக் குடிப்பதில் யாரும் எந்த வரம்பும் வைத்துக்கொள்ள வில்லை. வெள்ளைக்காரன் சாராயத்தைத்தான் இலவசமாக வழங்கியிருந்தான். நள்ளிரவு வரை சத்தமும் சலம்பலும் நீடித்தன. நதி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. காட்டின் மௌனத்தைக் குலைக்காமல் மரங்கள் மெல்ல அசைந்து காற்றை அனுப்பி வைத்தன. புதருக்குள் இருந்து பார்க்கும் விலங்கின் கண்ணைப்போல மேகத்திற்குள் இருந்து மறைந்து மறைந்து பார்த்துக்கொண்டிருந்தது நிலா. மங்கிய வெளிச்சத்தில் காடெல்லாம் சாம்பல் தூவப்பட்ட தைப்போல இருந்தது.

இரவின் திரைகள் மறைந்து மண் சூரிய வாசனையை முகரத் துவங்கிய அதிகாலையில் பாகன்கள் தடம் பார்த்துப் புறப்பட்டனர். ஒவ்வொரு யானையும் ஒவ்வொரு திசைக்குப் போயிருந்தது. மேற்கே போன யானைதான் நீரை ஒட்டியே போயிருந்தது. பாகன் தடம் பார்த்துபடியே நடந்துபோனான். கொஞ்சம் மேடேறி தடம் மீண்டும் முகாம் நோக்கித் திரும்பி இருந்தது. வெயில் பட ஆரம்பித்ததும் அவன் தடத்தின் வழியே முகாம் இருக்கும் திசைநோக்கி வந்தான்.

ஒரு இடத்தில் சாணம் குவியலாகக் கிடந்தது. காலால் அதைக் கிளறினான். மூங்கிலை அது நன்றாகத் தின்றிருக்கிறது. கொஞ்ச தூரம்

வந்தவுடன் புதர் நசுங்கி இழுபட்ட கோலம் அவனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒரு இரை இழுபட்டிருக்கிறது என்பதை உணர்ந்த அவன் இழுபட்ட அந்த வழியே சில அடிகள் எடுத்துவைத்தான். அங்கே பாறையின் பிளவுக்குள் சதைகள் நார் நாராகக் கிழிபட்டு, நெஞ்செலும்புகள் தனித்தனியாக நீண்டு, இரத்தம் தோய்ந்து கிடந்த அந்த உடலைப் பார்க்க நேர்ந்தது.

மூச்சிரைக்க ஓடிவந்து பணியிடத்தில் விசயத்தைச் சொன்னான். எல்லோரும் அலறி அடித்தபடி ஓடினர். முகாமின் மேற்குத் திசைக் காவலாளியைத்தான் புலி அடித்து இழுத்துவந்து போட்டிருந்தது. இரவில் நன்றாகக் குடித்தவர்களில் அவனும் ஒருவன். உடல் முழுவதும் குதறப்பட்டு அடையாளம் தெரியாத அளவு கிடந்தான். அவனது குடும்பம் என்று அங்கு யாருமில்லை. தேவாரத்தில் இருந்து வந்தவன் என்று சொன்னார்கள். நேரம் ஆனபின் வெள்ளை அதிகாரிகளும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அன்று பெரிய அதிகாரிகள் பார்வையிட வருவதாகவும், வேலைகளை உற்சாகமாகச் செய்யுமாறும் ராபர்ட் சொல்லிக் கொண்டிருந்தார். யானைகளில் வந்து நிறைய ஐரோப்பியர்கள் இறங்கினர். பகல் முழுவதும் காடெங்கும் சுற்றிப்பார்த்தபடி இருந்தனர். வேலைகளை முழுக்கப் பார்வையிட்டனர். மதியத்தில் எல்லா அதிகாரிகளும் புறப்பட்டனர். ஒரு மீட்டிங் இருப்பதாகவும் நாளை வந்து காவலாளி ஒருவரை நியமிப்பதாகவும் ராபர்ட் சொல்லிச் சென்றார். தேக்கடியில் இருந்த தலைமைப் பொறியாளர் பங்களாவில்தான் கூட்டம். மெட்ராசில் இருந்தும், மதுரையில் இருந்தும் பெரிய அதிகாரிகள் எல்லாம் வந்திருப்பதால் வழக்கத்தைவிட அந்த இடம் கூடுதல் பரபரப்புடன் இருந்தது. இரவு ஏழுமணி சுமாருக்கு மீட்டிங் முடிந்தவுடன் விருந்து துவங்கியது. இசையும் நடனமுமாக அந்த விருந்து முடிவுற்றபின் ராபர்ட் குதிரையிலேறி தனது பங்களாவுக்கு வந்தார். நுழைவுப் பகுதியில் இருக்கும் முதல் மரவீடு அவருடையது. வந்து இறங்கியவுடன் அவரது வேலைக்காரன் குதிரையை வாங்கி பட்டியில் போய் கட்டப்போனான். படிக்கட்டில் ஏறியபடி தெற்கே காட்டைத் திரும்பிப் பார்த்தார். வெகுதூரத்தில் ஒரு புள்ளியைப் போல தீப்பந்தங்கள் தெரிந்தன. அப்படியே படிக்கட்டில் நின்றபடி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். நேரம் ஆக ஆக தீப்பந்தங்கள் நிறையத் தெரிய ஆரம்பித்தன. வரிசையாக அவை வந்தன. காட்டின் ஒரு மொட்டையான பாறைப்பகுதியில் தெரிந்த தீப்பந்தங்கள் மீண்டும் மரங்களுக்குள் மறைய ஆரம்பித்தன. பணியிடத்தில் ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. மக்கள் அங்கிருந்துதான் வருகின்றனர் என்பதை ராபர்ட் உணர்ந்தார். வேலையாட்களை அழைத்து விளக்குகளையெல்லாம் நன்றாக ஏற்றிவைக்கும்படி சொன்னார்.

சிறிது நேரத்தில் அந்தக்கூட்டம் ராபர்ட் வீட்டுக்கருகில் வந்தது. தீப்பந்தங்களில் வெளிச்சமும் குரல்களும் அந்தப் பகுதி முழுவதும் நிரம்பியது. கூட்டம் பங்களாவின் சுற்றுச்சுவரைக் கடந்து உள்ளே வந்தது. அவர்கள் தூக்கி வந்த மூன்று கயிற்றுக்கட்டிலையும் படிக்கட்டுகளின் முன்னால் இறக்கினர். முதல் கட்டில் ரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டு ஒருவன் கிடந்தான். இரண்டாவது கட்டிலில் கொல்லப்பட்ட சிறுத்தை ஒன்று கிடந்தது. மூன்றாவது கட்டிலில்

இருந்தவன் உயிர்போகக் கத்தியபடி இருந்தான். அவனது நெற்றியில் இருந்து பிடரிவரை பாளமாகத் தலைக்குமேல் இருந்த தோல் கிழிந்திருந்தது. வலி தாளாமல் துடித்துக்கொண்டு கிடந்தான். ‘இது யார்? என்ன நடந்தது?’ என்று ராபர்ட் கேட்டார். முதல் கட்டிலில் கிடப்பது வல்லாங்கன் என்று சொன்னார்கள். நடந்த சம்பவத்தை கூறினார்கள். ராபர்ட்டால் துளியும் நம்பமுடியவில்லை. உண்மையில் அவர் சம்பவத்தை கேள்விட்டபின்தான் அதிர்ச்சிக்கு உள்ளானார். வல்லாங்கனின் உடலில் உயிர் இருப்பதை அறிந்த அவர் உடனடியாக மருந்துவரிடம் தூக்கிவருமாறு சொல்லிவிட்டு முன்னால் புறப்பட்டார். மருத்துவமனைக்கு அவர்கள் வல்லாங் கனைக் கொண்டுவந்து சேர்த்தனர். இரவில் நெடுநேரம் வரை மருத்துவர்கள் அவனுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் போராடினர். உயிரைக் காப்பாற்ற சிறிய வாய்ப்பு இருப்பதாகவும் கூறினர்.

அடுத்தநாள் பகலில் செய்தியைக் கேள்விப்பட்ட பல ஆங்கில அதிகாரிகள் வல்லாங்கனை வந்து பார்த்தனர். ராபர்ட்டின் அக்கறையால் தொடர்ந்து கவனமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட பெருமாள் தலையில் பெரும் கட்டுப்போட்டபின் அனுப்பி வைக்கப்பட்டார். இன்னொரு நபர் சாராயத்தை மூச்சு முட்டக்குடித்துவிட்டு பணியிடத்திலேயே படுத்துவிட்டார். வல்லாங்கனைத் தூக்கி வந்தவர்கள் சொன்ன கதைகள்தான் இங்கு மாறி மாறி உலவின. பணியிடத்திலும், நடந்ததைச் சொல்லிச் சொல்லி ஒவ்வொருவரும் புளகாங்கிதப் பட்டனர். நாள்கள் ஆக ஆக வல்லாங்கனின் உடல்நிலையின் முன்னேற்றம் ஏற்பட்டது. வெட்டுப்பட்ட கைவிரல்கள், கால் விரல்களெல்லாம் திசைக்கு ஒன்றாய்த் திரும்பி இருந்தது. அதையெல்லாம் இதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். உடல்காயங்கள் மேலோட்டமாக ஆறத்துவங்கின. வல்லாங்கன் முழு நினைவுடன் பேச முயன்றான். நடந்த சம்பவத்தை அவனிடம் முழுமையாகக் கேட்டுப் பதிவு செய்யவேண்டும் என்று பெரிய அதிகாரிகள் சொல்லியுள்ளதால் அவனிடம் நடந்ததைப் பற்றி விளக்கமாக ராபர்ட் கேட்டார். உடனிருந்த ஒருவர் அதை அப்படியே எழுதிக்கொண்டார். மருத்துவர் ஒருவரும் இருந்தார். அவருக்கு தமிழ் தெரியாததால் ராபர்ட் அவ்வப்பொழுது அவருக்கு ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டிருந்தார்.

‘அன்னிக்கி சாயந்தரம் பொழுது மங்கலா இருந்துச்சு. வேல நடக்கிற எடத்துல இருந்து எல்லாப் பயலும் குடிசைக்கு வந்துட்டாங்கெ. நா மட்டும் கிழக்காம போயிட்டு பாறைய தாண்டி வந்தேன். பாறைய வெட்டி எடுத்த மொனயில ஒரு பொதரு இருந்துச்சு. இந்தப் பெருமாளும் சோணையும் எட்டத்துல நின்னு அந்தப் பொதரவே பாத்துக்கிட்டு இருந்தாங்க. என்னாங்கடான்னு கேட்டேன். இந்த பெருமாளு இருந்துகிட்டு, இந்தப் பொதருக்குள்ள கோளையாடோ மானோ இருக்கிற மாதிரி தெருஞ்சுதுன்னு சொன்னான். அப்புறமென்ன அடிக்க வேண்டியதுதானேன்னு சொன்னேன். இந்தச் சோணைதான் புலிகிலியா இருக்கப் போகுதுன்னு பயமுறுத்திட்டான். அதான் யோசிச்சுட்டு நிக்கிறோம்னான். சரி, கல்லெடுத்துக் கொடுங்கடா நான் எறிஞ்சு வெளியேத்துறேன். வெளியில வந்த உடனே இந்த வேல்கம்பால குத்திருங்கடான்னு சொல்லி நான் எறிய ஆரம்பிச்சேன். சின்ன வயசில

இருந்து கல்லெறிஞ்வெ நானு. நூறு அடி தென்ன மரத்துல கூட எறுஞ்சுதான் நெத்த உதுப்பேன். என்னோட எறி அப்பிடி.

ரெண்டு பேரும் ரெண்டு பக்கமிருந்து கல்ல எடுத்து கொடுத்துக் கிட்டே இருந்தாங்கெ. நானும் விர்ரு...விர்ருன்னு எறிஞ்சுக்கிட்டே இருந்தேன். ஏகப்பட்ட கல்லு எறிஞ்சிப்பேன். அப்ப இந்த பெருமாளு, இவ்வளவு எறி வாங்கினா புலியா இருந்தாலும் மசங்கிப் போயிருக்கும்டா; இன்னும் போயி நெருக்கி நின்று எறிடான்னான். அப்படிச் சொன்னவுடனே எனக்குத் தெம்பு வந்திருச்சு. இவ்வளவு எறி வாங்கினப் பெறகும் மேல வராம. தவ்வாம, ஓடாம, கீழே கெடக்கே... அப்ப இதுக்கு சொன மாறிப் போச்சு. இன்னி நெருக்கித்தான் நிண்டு எரியணும்னு சொல்லி, நெருக்கிப் போயி நிக்கிறேன். அப்ப இந்த ரெண்டு பேரும் நெருக்கி வந்து கல்லெடுத்துக் கொடுத்துக்கிட்டே இருக்காங்கெ. நான் நல்லா. ஒரு கால முன்னுக்கு வச்சு, ஒரு கால பின்னுக்கு வச்சு பலங்கொண்ட மட்டும் எறியிறேன். ஒரு கல்லு அதோட ரெண்டு காதுக்கும் நடுவுல உச்சி மண்டையில பிடிச்சிருச்சு. அந்தக் கல்லு விழுந்ததுதான் அந்தக் கடுவனுக்கு அசந்து ஒருவிதமா வலி கொடுத்திருக்கு. மொதல்ல எறிஞ்ச எறியல்லாம் ஒத்தடம் கொடுத்த மாதிரிதான் இருந்திருக்கு, அசரல்ல. இந்த எறிபட்டவுடனே அப்படியே கீழ படுத்தகெடந்த வாக்கில அலாக்கா மேல பாஞ்சிருச்சு. நான் முன்னுக்கு வச்ச கால எடுக்க முடியல. அதுக்குள்ள வந்து என் முன்னத்திக் காலு தொடைய பிடிச்சிருச்சு. பிடுச்ச பிடியில, நாயி முசலப் பிடிச்சு அடிக்கும் பாரு, அப்...படி அடிக்குது, அடிச்சு கீழ போட்டுக்கிட்டு அப்படியே துருவுது, கரகரன்னு துருவது. சிங்கப் பல் ரெண்டும் எந்தொடைக்குள்ள ஓடிப்போச்சு. இனி இது ஆள மீளவிடாது, அய்யா... சாமீன்னா...விடப்போகுதான்னு நெனச்சவாக்குல கீழ விழுந்தேன். விழுந்த வொடனே தொடய பிடிச்சிருந்த அதோட மேச்சிலுவாயில் ஒரு கையும், கீச்சிலுவாயில ஒரு கையும் பிடுச்சேன். அப்ப, அரவீசு கல்லு, நல்ல உருட்டு கருங்கல்லு நான் பிடிக்கிறப்ப அதோட வாயிக்கு கீழே கெடக்கு, அந்த கல்ல வாய்ப்பிடிய விடாம மொலிய வச்சே தள்ளிக்கிட்டே வந்து, அதோட வாய்க்குள்ள, கடவாய்க்குள்ள நெருச்சு சிக்கவச்சுட்டேன். அதோட வாயி மாட்டு வாயி மாதிரி அவ்வளவு அகலமா இருந்துச்சு. கல்லுப் போயி நல்லா கடவாப்பல்லு கிட்ட சிக்கிருச்சு. கல்லு வகையா சிக்கனவுடனே, நொப்பனோளி... அதால அழுத்திக் கடிக்க முடியல, தொடயில இருந்த கடிய விட்டிருச்சு... ஆனாநான் விடாம அமிக்கிட்டேன். வாப் பிடிய விடல. கழுத்த ஒரு கையால் அணச்சுப்பிடிச்சு அப்படியே கீழ கெடக்குறேன். பின்னாடி இருந்தவெ எவனும் நட்டமா நிக்கல, அப்படியே கீழ விழுந்து கெடந்தாங்கெ. ஒரு பொம்பளப்பிள்ள கத்துன கத்துல பத்துப் பதினைஞ்சு பேரு ஓடிவந்து அவங்கெளும் எட்டத்துலே நின்னுக்கிட்டாங்கெ. அது எல்லா விரல்லயும் இருந்த நகத்தவச்சு என்ன சல்லிசல்லியாக்கிருச்சு. நகம் பாத்தாதான் இம்பூட்டூண்டா இருக்கு. விருஞ்சா ஒவ்வொன்னும் ஒரு கத்திமாதிரி நீளுது. உடம்பு பூராத்தையும் வாருவாரா இழுக்குது. ரெம்ப நேரமா அப்படியே பிடிச்சு பிடி விடாம கெடந்தேன். எவனும் கிட்ட வரல, அப்ப நானு, ‘டேய்....பாவிப்பயலுகா புலிய கொன்னுட்டேன் தூக்க வாங்கடான்னு!’ ஒரு சத்தம் கொடுத்தேன். அப்பதான் ரெண்டு பேரு, டேய் ஆளு உசுரா தாண்டா இருக்கான்னு சொல்லி வேல் கம்பத் தூக்கிட்டு வந்து, வந்ததே சரிண்டு, இந்த லக்குல... விலாவுல குத்தானங்கெ. அந்த வேல் கம்புகத்திகிட்ட சரிய்ய்யா உடஞ்சு போச்சு. அப்படியே போட்டுட்டு

அவங்கெ ஓடிப்போயிட்டாங்கெ. இன்னொரு பய ஓடிவந்து ஈட்டியால குத்துனான். கல்லுல குத்துனாப்புல மொன வளைஞ்சுபோச்சு. அப்படியே போட்டு அவனும் ஓடிப்போயிவிட்டான். அப்பத்தான் அந்தப் பொம்பளப்புள்ள மூங்கிப் பிடி போட்ட அந்த பெரிய்ய சம்மட்டிய தூக்கிட்டு வந்து 'அண்ணே, ஒங் கைய்ய மட்டும் கொஞ்சம் வெலகிக்கோன்னு' சொல்லி மண்டையில ஒரு அடி அடிச்சிச்சு. அடிச்சவுடனே வாயில பிடிச்சிருந்த என் கைய்ய புலியோட மேப்பல்லு வந்த ஒரு நச்சு நச்சுச்சு 'அம்மா...என்னோட கையி போச்சு மாண்டே'னு கத்தவும் அப்படியே போட்டுட்டு அந்தப் பிள்ளயும் ஓடிப்போச்சு.

அதுக்குப் பெறகுதான் அந்த வருச நாட்டு எளவட்ட பய அங்ககெடந்த பதினோரடி கம்பிய தூக்கிக்கிட்டு வந்து, டோ...ய், ஆளுங்கெல்லாம் ஓடியாங்கடான்னு சொல்லி நேரா வந்து புலியோட வயித்துல ஊண்டுனான். ஆளுக எல்லாம் கம்பிய பிடிச்சு ஆளு மேல ஆளா தொங்குங்கடான்னு சொன்னான். எல்லாரும் வந்து கம்பியப் பிடிச்சு தொங்கி, ஆளு மேல ஆளு போட்டு அமுக்குனாங்கெ. கம்பி புலி வயித்துக்குள்ள ஓடி மண்ணுக்குள்ள எறங்கிருச்சு. ரத்தம் கீழ தண்ணியா சாயிது. அப்ப உயிரு போற நேரத்துல வாலால ஒரு அடி அடுச்சுச்சு, அப்ப சரிய்யா பின்னாடி இருந்திருக்கிறான் பெருமாளு, பொடனிக்கும் நெத்திக்கும் எடயில வெள்ளரிப்பழம் விருஞ்சது போல அடுச்சு விருச்சு போடுச்சு. அப்புறம் எல்லாத்தயும் தூக்கி கட்டில்ல போட்டு இங்க கொண்டு வந்தாங்கெ' என்றான் வல்லாங்கன்.

தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டது. ராபர்ட்கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் காட்டுக்குள் எப்பொழுதும் போய் வேட்டையாட அனுமதிக்கும் நிரந்தர அனுமதி முத்திரையை வல்லாங்கனுக்கு வழங்க வன இலாகாவின் மேலதிகாரி சம்மதித்தார். ஏற்கனவே இந்தப் பள்ளத்தாக்குப் பகுதி முழுவதிலும் இரண்டே இரண்டு இந்தியர்களுக்குத்தான் இந்த முத்திரை வழங்கப்பட்டிருந்தது. இரண்டு பெரிய கொம்புகளையுடைய காட்டெருமைத் தலையின் வரைபடமொன்று இடது கை தோள்பட்டையில் முத்திரையாக பொறிக்கப்படும். அதுதான் காட்டைப் பயன்படுத்திக்கொள்ள அரசு தரும் நிரந்தர அனுமதிக்கான அடையாளம்.

*

# 74

**ஐப்பசி மாதத்தின் கடைசி வாரத்தில் ஒரு நாள் மாலையில் நகரத்திற்கு** மேலே கருமேகங்கள் சூழ ஆரம்பித்தன. மேகத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்கியவர்களின் நம்பிக்கைகளைத் தொடர்ச்சியாக அது பொய்யாக்கிச் சென்றதால் பெரிதாக அதைப் பார்த்து யாரும் ஆசைப்படவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்த இடம் வெற்று வானமாகக் காட்சியளிக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே, ஆங்காங்கே மேகத்தை வெறித்துப் பார்த்த மனிதர்கள் இப்பொழுது வீடுகளுக்குள் போய்விட்டனர். எங்கெங்கோ இருந்த மேகங்களையெல்லாம் காற்று கொண்டுவந்து சேர்த்தபடி இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மேகக்கூட்டம் கனத்தது. கருமையேறிய வானம் உருமாறியபடி இருந்தது. இவ்வளவு நேரம் மேகக்கூட்டம் கலையாமல் இருப்பது மனிதர்களுக்கு சிறு சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒரு வேளை மழை வந்து விடுமோ! ஆனால் அதைத்தாண்டி அவர்களால் கற்பனை செய்ய முடியவில்லை. சூரியனின் பொன்னிற ஒளி உள்ளிழுக்கப்பட்டு சாம்பல் நிறம் பரவியது. வானம் ஏதோ ஒன்றுக்குத் தயாராவது நன்றாகத் தெரிந்தது. காற்றின் வேகம் குறைய ஆரம்பித்தது. நன்றாகச் சூழ்ந்திருந்த மேகக்கூட்டம் உருத்திரண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கசியத்துவங்கியது. சிறுசிறு தூறல்கள் மண்ணை நோக்கி வந்தன. புராதன யாழ் ஒன்றை மீட்டத் துவங்குவது போல் அது இருந்தது. மனிதர்கள் வீட்டிற்குள் இருந்தபடியே வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் சடசடவென மழை இறங்கியது. நெருப்பில் தண்ணீர் தெளிப்பதைப் போல மண்ணில் பட்டவுடன் வெடிப்புற்று நீர் பொசுங்கியது. மழைச்சத்தம் மனிதர்களை கொஞ்சம் கொஞ்சமாக வீட்டிற்குள் இருந்து வெளியில் இழுத்தது. மண்ணிலிருந்து தூசியும், புழுதியும் மேலெழும்பின. மண்வாசனை நீர்த்துளிகளைப் பிடித்தபடி மேலேறி வந்தது. மழை ஈட்டிகளாய் மண்ணுக்குள் இறங்கியது. உண்மையிலேயே மழை பெய்கிறது என்பதை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் துவங்கினர். சடசடவெனக் கொட்டிய மழை சிறிது நேரத்திற்குப் பின் நின்றது. ஆனால்,

மேகங்கள் கலைந்து செல்லவில்லை. காற்றும் வீசவில்லை. வீடுகளில் இருந்து வெளியில் வந்தவர்கள் நம்பிக்கையோடு அண்ணாந்து வானத்தைப் பார்த்தனர். பெரியமேகக் கூட்டமொன்று மதுரையின் தலைக்கு மேல் விழுவதைப் போலத் தொங்கிக்கொண்டிருந்தது.

அன்று இரவு இரண்டு முறை மழை பெய்தது. இரண்டாவது முறை பெய்யும் பொழுதுதான் காரை வீடுகளின் மேலேயிருந்து நீர் திரண்டு கொட்ட ஆரம்பித்தது. ஆனால், தெருக்களில் நீர் புரளவில்லை. அவ்வளவு மழையும் விழுகிற புள்ளியிலேயே பூமிக்குள் போய்க் கொண்டிருந்தது. இரவு முழுவதும் மக்கள் விழித்திருந்தனர். சட்டி பானைகளைத் தண்ணீர் பிடிக்க தெருக்களில் வைத்திருந்தனர். இரவில் பெய்த இரண்டு மழையையும் அவர்கள் திண்ணையில் இருந்து பார்த்தபடி இருந்தனர். மூன்றாவது மழையின் போது பானைகள் நிரம்பின. மீனாட்சியின் கோபுரங்களில் இருந்து வழிந்த நீர் சித்திரை வீதிகளில் சிறிது நேரம் ஓடி மறைந்தது. காற்று குளிர வீசியபடி இருந்தது. அந்த இரவு வசந்தத்தின் கதவு திறந்ததுபோல் இருந்தது. புதிய முகங்களோடு மனிதர்கள் அதிகாலை எழுந்து ஒருவருக்கொருவர் சந்தோஷத்தை பரிமாறிக் கொண்டனர். எல்லா இடங்களையும் ஓடோடிப் போய்ப் பார்த்தனர். மயங்கிக் கிடந்தவனின் முகத்தில் தண்ணீர் தெளித்ததைப் போல நகரம் விழிப்புற்று எழுந்தது. மண்ணில் தூசியும் புழுதியும் அடங்கியிருந்தது. இலைகள் கழுவப்பட்டிருந்தன. தெரு முழுவதும் மண் தனது வண்ணங்களைத் தனக்குத் தானே கலக்கி ஊற்றிக் கொண்டதுபோல் இருந்தது. நீரோடிய தடங்கள் தூரிகை கொண்டு வரைந்தாற்போல் வளைந்து நெளிந்து கிடந்தன. மழை பெய்ததையும் நீர் பரவி ஓடியதையும் கண்டு அவர்கள் முகமலர்ந்து பேசிக்கொண்டனர். இனி மழை நம்மைக் கைவிடாது என்ற முடிவுக்கு வந்தனர். வழக்கம் போல் சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். ஆனால், அவர்களின் மனமெல்லாம் நேற்று இரவு பெய்த மழையின் இதமான காற்றை அனுபவித்தபடி இருந்தது. இனி தினமும் பெய்யப் போகும் மழையைப் பற்றி அவர்கள் கனவு கண்டனர்.

அன்று மாலையும் மேகங்கள் கூடின. காற்று மெல்ல வீசியது. நேரம் ஆக ஆக மேகங்களில் கருமையேறியது. மக்கள் எல்லோரும் வீடுகளை விட்டு வீதிக்கு வந்தனர். இஷ்டதெய்வங்கள் எல்லாம் உயிர் பெற்றன. உருத்திரண்ட மேகம் மெல்லக் கசிய ஆரம்பித்தது. காற்றில் சிறுசிறு தூறல்கள் நீந்திவந்தன. தூரத்தில் இடியோசை கேட்டது. கொட்டப்போகும் மழையை எதிர்பார்த்திருந்தனர். திடீரென எங்கிருந்தோ வந்த பெருங்காற்று மொத்த மேகங்களையும் வாரி எடுத்துக்கொண்டு போனது. சிறுசிறு தூறல்களோடு வானம் வெறுமையானது. ஆனால், இரவு மீண்டும் மழை வரும் என்று மக்கள் நம்பிக்கையோடு காத்திருந்தனர். தூறிச் சென்ற சிறு துளிகள் அவர்களின் நம்பிக்கைக்கு உயிர் கொடுத்துச் சென்றிருந்தன. விடிய விடிய அவர்கள் காத்திருந்தனர். வானத்தின் இருளை விரட்டியபடி சூரிய ஒளி வந்தது. அதன்பின் வெக்கை மிகுந்த பகலும் வந்துகொண்டிருந்தது.

மறுநாள் மாலையில் துவக்கத்திலிருந்தே வானம் உறுமிக்கொண்டிருந்தது. கருத்த மேகங்கள் கூடியபடி இருந்தன. தென்கிழக்கு மூலையில் இறங்கிய இடியொன்று மதுரையை அதிரச்

செய்தது. தொடர்ந்து சடசடவென பெரும் பெரும் மழைத்துளிகள் விண்ணில் இருந்து இறங்கின. வீட்டுக் கூரைகளை நூற்றுக்கணக்கான விரல்களைக் கொண்டு தட்டுவதைப் போல மழை கொட்ட ஆரம்பித்தது. துவக்கத்தில் வீசிய காற்று இந்தப் பேய்மழையின் வருகையைக் கண்டே அரண்டு போய் நின்றுவிட்டது. காற்று நின்றுவிட்ட வெளியில் வானம் கிழிந்து கொட்டுவதைப் போல மழை கொட்டித் தீர்த்தது. மின்னல் ஒளி கண்ணைப் பறித்தது. மின்னல் வாள் கொண்டு வானைக் கீறியது. இறுகிய வானம் இடியும் மின்னுலுமாக உதிர்ந்துவிழுந்து கொண்டேயிருந்தது. மழையின் வேகம் நேரம் ஆக ஆக அதிகரித்தது. நகரெங்கும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. கொட்டும் மழை மிச்சம் வைக்காமல் கொட்டித் தீர்த்தது. காணாத அதிசயம் போலத் பெய்த பேய் மழை நான்மாடக் கூடல் மூச்சடைக்கும் மட்டும் பெய்த பின்தான் நின்றது. நீண்ட நேரம் தூறல்கள் விழுந்தபடி இருந்தன.

நள்ளிரவுக்குப் பின் நிலவொளி பிரகாசித்தது. வானம் இதுவரை இல்லாத ஒரு நீலநிறத்தில் கனிந்து மலர்ந்திருந்தது. கோபுரத்தின் சிற்பங்கள் ஈரம் உலர உலரப் புதிய வனப்போடு வெளிற ஆரம்பித்தன. மேகங்கள் உதிர்ந்த அன்றைய வானம் புதிய அழகோடு பொன்மஞ்சள் மயக்கத்தில் மூழ்கி மோன நிலையில் காட்சியளித்தது. ஆயிரங்கால் மண்டபத்தின் தூண்களைச் சுற்றி விளையாடித் திரியும் குழந்தைகளைப் போல மழைநீர் மதுரையின் வீதிகளைச் சுற்றிச் சுற்றி விளையாடியது. பள்ளங்களை நோக்கி வழிந்தோடும் மழைநீரின் சத்தம் நகரெங்கும் கேட்டது. மாபெரும் இசைக் கச்சேரி ஒன்றின் தாள லயத்தில் மதுரை மூழ்கிக் கிடந்தது. குளிர்ந்த காற்று இரவெல்லாம் வீசியவாறு இருந்தது. பல மாதங்களுக்குப் பின் நிலவும் வானமும் மதுரையின் வீதிகளில் விழுந்து கிடந்தன.

நேற்றைய மழை தந்த பேரானந்தத்தில் இருந்து விடுபட முடியாமல் திளைத்துக் கொண்டிருந்த மதுரை மக்கள் தொடர்ந்து மழைப் பொழிவு இருக்குமென எதிர்பார்த்தனர். ஆனால், அடுத்தடுத்த நாள் திரண்ட மேகங்கள் மலடிகளாய்ச் சென்றன. அதை ஒன்றும் பெரிய ஏமாற்றமாக அவர்கள் கருதவில்லை. இன்று இல்லாவிட்டால் நாளை வாரி வழங்கிவிட்டுப் போகிறது. என்று எண்ணியபடியிருந்தனர். பிறகும் மேகங்கள் திரளாமலே தனித்தனியாக வானத்தில் நீந்தியபடி மறைந்துபோயின. நல்ல மழை பெய்த அந்த இரவுக்குப்பின் சிறு தூறல்கள் கூட மண்ணில் விழவில்லை.

நான்காம் நாள் விபரீதத்தை எல்லோரும் உணரத்துவங்கினர். அந்த மழை மண்ணுக்குள் இருந்த பெரும் உஷ்ணத்தை கிளப்பிவிட்டுப் போயிருந்தது. அடுத்தடுத்து மழை பெய்திருந்தால் உஷ்ணம் தணிந்திருக்கும். ஆனால், ஒரு நாள் மழையோடு நின்றுவிட்டதால் கிளறி விடப்பட்ட உஷ்ணம் கட்டுக்கடங்காதவாறு வெளியேறியது. தீக்காற்று போல எங்கும் காய்ச்சல் பரவியது. மழையால் ஏற்பட்ட சந்தோஷத்தை நெருப்பு வைத்துப் பொசுக்கியதைப்போல் இது இருந்தது. கொதிக்கும் உடல்கள் வீடுதோறும் கிடந்தன.

ஆனாலும், இந்தக் காய்ச்சல் மரணம் வரைமனிதனைக் கொண்டுபோகாது என நினைத்தனர். ஆனால், தொடர்ந்த நாட்களில் காய்ச்சல் பலரை மரணக்குழிக்கு அனுப்பியது.

அழுகுரலின் ஓசை எங்கும் கேட்டது. அது குடும்பம் குடும்பமாக மக்களை விழுங்கியது. புதுவிதமான காய்ச்சலாக இது இருந்தது. ஒருவரை முதல் நாள் அது தாக்கும். அன்று முழுவதும் அவரது உடல் நெருப்பாய்க் கொதிக்கும். அடுத்த நாள் வலிப்பு வரும். மீண்டும் மீண்டும் வந்துகொண்டேயிருக்கும். மூன்றாம் நாள் மரணம். அவரை ஒட்டிய ஆட்களின்மீது அதிவிரைவில் பரவும். ஒருவருக்கு அந்தக் காய்ச்சல் கண்டுள்ளது என்று தெரிவதற்குள் அந்தக் குடும்பம் முழுவதும் பரவிவிடும். அதனுடைய அசாத்திய வேகம் கணக்கிலடங்காதவாறு மக்களைத் தினமும் கொன்று குவித்தது.

காய்ச்சல் கண்டு செத்தவர்களை கண்டிப்பாக எரிக்க வேண்டும் என கலெக்டர் உத்தரவு பிறப்பித்தார். நகரத்தில் மட்டுமே இது அமலானது. அதுவும் பிணங்களை எடுத்து எரிக்கும் பணிகளை நகராட்சி நிர்வாகமே செய்ததால்தான் அது நடந்தது. தத்தனேரி சுடுகாட்டில் எரியும் நெருப்பின் கனல் குறையவேயில்லை. கரும்புகை வானத்தை நோக்கிப் போய்க்கொண்டேயிருந்தது. கிராமங்களில் எல்லாம் மக்கள் கும்பல் கும்பலாகச் செத்து மடிந்தனர்.

இந்த புதுவகைக் காய்ச்சல் எப்படி, எங்கிருந்து பரவியது என்று மருத்துவக்குழு ஆய்வு செய்து கலெக்டருக்கு அறிக்கை கொடுத்திருந்தது. அந்தக் காய்ச்சலில் பாதிக்கப்படாமல் இருக்க மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளுக்குத் தேவையான வசதிகள் ஐரோப்பியர்களுக்கும், இங்குள்ள செல்வந்தர்களுக்கும் மட்டும்தான் இருந்தது. பழனி மலை அடிவாரத்தில் இருந்து பக்தர்கள் கொண்டுவந்து சேர்த்துள்ளனர் என்று மருத்துவக்குழு சொல்லும் இந்த புதுவகை நோய்க் கிருமிகள் பற்றி எதுவும் தெரியாத மக்கள் ஈசல்கள் மடிந்து உதிர்வதைப் போல நாள்தோறும் உதிர்ந்து கொண்டிருந்தனர்.

பஞ்ச காலத்தில் பெய்யும் ஒற்றை மழை எவ்வளவு கொடூரமானது என்பதை சொல்லி முடியாது.

*

**அ**ந்த மழைக்குப் பின் நோய்கள் புதிது புதிதாக வந்தன. காய்ச்சல் பரவியபடியே இருந்தது. காலராவும், பெரிய அம்மையும் கிராமங்களைச் சூறையாடின. நோயோடு போராட எந்தச் சக்தியுமற்று மனிதர்கள் சரணடைந்தனர். அது மனிதர்களை அறுவடை செய்து அம்பாரம் அம்பாரமாகக் குவிந்தபடி இருந்தது. மரணம்! அதுக்கு பிரிவின் துயர் தெரியாது. அன்பின் வலி தெரியாது. காதலின் மயக்கம் தெரியாது. தன்னைத் தவிர அதற்கு வேறெதுவும் தெரியாது. ஓநாய் இரையைக் கவ்வுவதைப் போல மனிதர்களின் குரல்வளையைக் கல்வி இழுத்துக்கொண்டு செல்கிறது. மறுகணமே வெளியில் வந்து எட்டிப் பார்க்கிறது. மீண்டும் மனிதர்களைக் கல்விக்கொண்டு உள்ளே செல்கிறது. அதற்கு சலிப்பு என்பதேயில்லை. ஈனக்குரலில் முனகியவாறு மனிதர்கள் இழுபட்டுப் போய்க்கொண்டேயிருந்தனர். அவர்கள் செய்வதற்கு வேறெதுவும் இல்லை.

தலைமுறை தலைமுறையாக இருந்த தாய் கிராமத்தில் ஒற்றை எலிசெத்து விழுந்தவுடன் ஊரைவிட்டு தலைதெறிக்க ஓடினர்.

ஓடிவருகிறவன் இதற்காகத்தான் ஓடிவருகிறான் என்ற செய்தி தெரிந்தால் அடுத்தவன் அவனைவிட பல மைல் தள்ளி ஓடுகிறான். எட்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்த பிளேக் என்ற கொள்ளை நோயை மக்கள் யாரும் மறந்து விடவில்லை. அதன் கிருமிகளை விட பலமடங்கு வீரியத்துடன் அது நினைவில் இருந்தது. மக்கள் அதை ஒருக்காலமும் மறக்க முடியாது. மீண்டும் அந்தக் கிருமிகள் இந்தப் பஞ்ச காலத்திலே உயிர் பெற்றுவிட்டன. முதலில் வைகைக் கரைக்கும் நாகமலைக்கும் இடையிலிருக்கும் வேடமங்கலம் என்ற ஊரில்தான் அது தனது பயணத்தைத் துவக்கியது என்று அரசு சொல்கிறது. அங்கு மக்களின் மரண விகிதம் ஒவ்வொரு நாளும் அதிகரித்தபடி இருந்தது. காய்ச்சல் கண்டு நிகழ்ந்த மரணம் போல அது இல்லை. நோயாளிகள் உணர்வற்ற நிலையெய்தி, அக்குளில் நெறிகட்டி, பிதற்றல் தாங்க முடியாது, மரண வலியால் துடிதுடித்து, நாடித்துடிப்பு ஒரே சீராகக் குறைந்து உயிர் பிரிந்தது.

கொள்ளை நோயாக இருக்குமோ என்று சந்தேகப்பட்ட மருத்துவக் குழு அங்கு சென்ற பின் நோயை உறுதிப்படுத்தினர். ஏற்கனவே பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் உடனடியாக அந்த ஊரை முற்றுகையிட்டது. ஊரில் இருந்து யாரும் வெளியேறக் கூடாது என்று தமுக்கடிக்கப்பட்டது. ஊரைச்சுற்றி துப்பாக்கி போலீசார் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். நாகமலைக்கு மேலே கண்காணிப்பு கோபுரமொன்று கட்டப்பட்டு மொத்த ஊரின் அசைவும் இருபத்தி நாலு மணி நேரமும் கண்காணிக்கப்பட்டவாறு இருந்தது. உள்ளுக்குள் ஒவ்வொருவராக மரணவலியால் துடித்து அடங்கி உயிர் விட்டபடி இருந்தனர். உயிர் பிழைக்க தப்பி ஓட நினைப்பவர்கள் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாயினர். எனவே, வேறு வழியின்று ஒவ்வொருவராக நோய்க்கு தங்களைப் பலி கொடுத்தனர். ‘ஆத்தா கண் தொறந்துட்டா. இனி நம்மள நோய் அண்டாது’ என்று சொல்லித் திரிந்த பூசாரியின் மரணம் ஒரு அதிகாலையில் நிகழ்ந்தது. அதற்குப் பின் இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் ஊர் இழந்தது.

நோய் உச்சக் கட்டதை அடைந்தது. இதே நிலையில் மரணங்கள் நிகழ்ந்தால் ஊர் முழுவதும் அழிய ஓரிரு வாரங்களே போதுமென்று ஆனது. எல்லோருக்கும் மரணம் உறுதியாக்கப்பட்டது. தப்பி ஓடநினைத்தவர்கள் நிலைமையறிந்து அதைக் கைவிட்டதனால் கூடுதலாக சில நாட்கள் வாழ்ந்தனர். நம்பிக்கைகள் எதுவும் இல்லாமல் ஊரையே மரணம் விழுங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பைத்தியநிலையை அடைந்தனர். பிணங்களோடு நாட்கணக்கில் பேசிக்கொண் டிருந்தனர். கொடூரமாக ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டனர். நோய் பைத்தியக்காரர்களுக்கு மன்னிப்பு வழங்குவதில்லை. அதன் சூறையாட்டத்தில் எல்லா உயிரியக்கமும் அழிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் எஞ்சியுள்ளவர்களைச் சுட்டு வீழ்த்தி மொத்த ஊரையும் தீயிட்டுக் கொளுத்துமாறு மேலிடம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்து ஊர் முழுவதும் நெருப்புக்கு இரையாக்கப்பட்டது. நெருப்பு எரிந்து அடங்கியதைக் காவலர்கள் உறுதிப்படுத்தினர். இரண்டாம் குலசேகர பாண்டியன் கட்டிக் கொடுத்திருந்த ஒற்றைக் கோயிலும் இடிந்து நொறுங்கியதோடு ஊர் சமாதி ஆனது. உடைந்து விழுந்த சிலையின் வழியே தனக்கான தடயத்தை வைத்துவிட்டு மறைந்தே போனது.

ஒன்றரை மாத காலம் காவலுக்குப் போடப்பட்ட துப்பாக்கி போலீசார் நால்வர் அதன் பின் மதுரைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. வெவ்வேறு பகுதிகளுக்கு அவர்கள் அனுப்பப்பட்டதாகத் தெரியவந்தது. ஆனால், உண்மையில் அவர்களும் அழிக்கப்பட்டனர். ‘அரசு இம்முறை மிகுந்த எச்சரிக்கையோடு நோய் தாக்கிய பகுதிகளைக் கையாண்டது’ என்று கலெக்டர் மேலிடத்துக்குத் தெரிவித்தார். ஆனால், நோய் தனது பயணத்தை மேற்கொள்ள எத்தனையோ வழிகள் இருந்தன.

*

# 75

**வை**கையில் தண்ணீர் காணாமலே கார்த்திகை கடந்தது. **மழைக்காக** ஏங்கியவர்கள் இப்பொழுது மழையை நினைத்து அஞ்சியபடி இருந்தனர். ஒற்றை மழையால் நாடு நகரமெல்லாம் காய்ச்சலும், காமாலையும் கண்டதால் மழையானது மரணத்தின் விரல்கள் போல் ஆனது. எலி செத்தால் குலை நடுங்கி ஊரைவிட்டு ஓடுவதைப் போல, இப்பொழுது தவளைச் சத்தம் கேட்டாலும் மரண பயத்தால் மக்கள் பதறியடித்து ஓடினர். இந்த மழைக்காலம் கோடை காலத்தை விட அதிகமான பலி எடுத்துக்கொண்டது. மழையின் தாகம் வெயிலை விட உக்கிரமாக இருந்தது. மழைக் குப்பின் பரவிய நோய்கள் இன்னும் கட்டுக்குள் அடங்கவில்லை. கொள்ளை நோயும் காய்ச்சலும், காமாலையும் திசைக்கு ஒன்றாய்ப் பரவி வந்தன. நிலமெல்லாம் நோய்க் கிருமிகளின் விளைச்சல் பூமியாக மாறியது.

கோடாங்கியாலும், குலசாமியாலும் ஆகப் போவது ஒன்றுமில்லை எனத் தெளிவாகத் தெரிந்தது. ஆனாலும் தப்பி ஓடி எப்படியாவது உயிர் பிழைத்து விடலாம் என்று சிறு நம்பிக்கைக்கு அவை உயிர் கொடுத்தன. கண்களுக்கு முன்னால் எல்லாம் வல்ல சக்தியோடு கொள்ளை நோய் மட்டுமே இருந்தது. மனிதர்களை வாரி வாரித் தின்றும் அதன் ஆங்காரம் அடங்கவில்லை. நடக்கவோ, ஓடவோ அதனை எதிர்த்துச் சண்டையிடவோ எந்தத் திராணியுமற்ற மக்கள் அதற்கு முன் பணிந்து அதன் குணங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொண்டனர். அதன் ருசி அறிந்து செயல்பட ஆரம்பித்தனர். மரணம் உறுதியெனத் தெரிந்த பின் சிலர் இயல்பாக அதனை நோக்கிப் போக ஆரம்பித்தனர். சிலர் வேதனை பொறுக்கமுடியாமல் தூக்கிட்டுத் தொங்கினர். அன்புக்குரியவர்களை இந்த நரக வேதனையில் இருந்து காப்பாற்ற எளிய முறையில் கொலை செய்தனர். குழந்தைகள் பாழுங்கிணறுகளில் தூக்கி வீசப்பட்டன. நஞ்சு நோயை முந்தியது. மனநிலை பிறழ்ந்து ஊரே பித்துப் பிடித்துக்கிடந்தது. ஒவ்வொரு உடலுக்கும் நோய்க்கிருமிகள் எடுத்துக்கொள்ளும் காலம் நாள்

ஆக ஆகக் குறைந்துகொண்டே வந்தது. உடல்கள் பஞ்சத்தாலும் நோயாலும் எப்பொழுதோ செத்துப்போன உயிர்களைத் தூக்கிச் சுமந்தபடி இருந்தன.

*

**ஆ**த்தாளின் முத்து விழுந்த கிராமங்கள் ஆத்தாளிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. அவளின் கோபம் மனித உடல்களுக்குள் நெருப்புக் கங்குகளைக் கொட்டிவைத்திருந்தது. நோயின் வல்லமைக்குத் தக்கபடி அவளின் சக்தி அதிகமாகிக் கொண்டேயிருந்தது. அவளிருக்கும் திசையை நோக்கி வணங்கினர். நாளும் பொழுதுமாக அவளுக்கு நேர்ந்து கொண்டனர். வேப்ப இலைகளைக் கொத்துகொத்தாகப் பறித்து வீடுகள் தோறும் சொருகி வைத்தனர். விதவையை வீட்டுக்குக் கூப்பிட்டு சாப்பாடு போட்டு திரும்பிப் பார்க்காமல் போகும்படி சொன்னார்கள். ஆத்தாளின்மனம் குளிராதா என்று ஏங்கிய படி இருந்தனர். சின்னம்மை, பெரியம்மையென வைசூரியின் ஆட்டம் வகைவைக்க முடியவில்லை. வெப்ப பூமியில் உடலில் இருந்து விளைந்த நீர்க்கொப்புளங்கள் உடலை உறிஞ்சி மண்ணுக்குள் கொண்டு போன படி இருந்தன. ஊர் ஊராக அழிந்தன. வேப்பிலைகளைப் பரப்பிப் போட்டு நீர் ஒழுகும் உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. ஆத்தாளின் உக்கிரம் தணிந்து, வெப்பு குறைந்து மனிதர்கள் தழும்புகளோடு உயிர் பெறுவார்கள் என்று நம்பினர்.

முத்து இறங்கிவிட்டதென தண்ணீர் ஊற்றிய பின் மறுமுள் விழுந்து ஊரையே விழுங்கியது. பேச்சொழிந்து போன கிராமங்கள் எல்லாம் பெரியம்மை வந்துவிட்டுப் போன வடுக்களாக இருந்தன. அம்மை வந்த கிராமங்களைப் பார்த்து மற்றவர்கள் காத தூரம் விலகி ஓடினர். ஆத்தாளின் கோபம் தணிவதாக இல்லை. முத்துக்களை நாலாதிசையிலும் வாரி வாரி இறைத்தபடியே அவள் இருந்தாள். வேப்பமரத்தை பிடுங்கி ஊருக்கே நீவிக் கொடுத்த விதவைகள் உடலெங்கும் எரிச்சல் தாங்காமல் ஊரை விட்டு வெளியேறினர். வெளியேறிய விதவைகள் சொல்லிப் போன செய்திகளைப் பெரும் பெரும் கொப்புளங்களோடு இருந்த அவளால் கேட்க முடியவில்லை. காற்றெங்கும் கிருமிகள் உலவின. ஊரைக் கடந்து போகிறவர்களைப் பற்றிக்கொள்ள அவை தயார் நிலையில் இருந்தன. ஆனால் வருகிறவர்களை எல்லாம் ஏதோ ஒன்று பற்றிக்கொண்டு வந்தது. நோய்க் கிருமிகளின் வெற்றியும் ஏமாற்றமும்தான் மண்ணின் மீதான நிகழ்வாக இருந்தன.

கொள்ளை நோயால் வாயாலும் வயிற்றாலும் நீர் போக உடலில் நீர்ச்சத்தேயில்லாமல் ஆக்கி உயிரை அலுப்பில்லாமல் பறித்தது. அம்மையோ உடலெங்கும் கொப்புளங்களைக் கிளப்பி நீர் கசியக் கசிய உயிரைப் பறித்தது. மனிதர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்ற வழியேதுமின்றித் தவித்தனர். எலியின் மரணம் ஊரின் மரணமென்றானது. கொப்புகள் அற்ற வேப்பமரம் மனிதர்கள் அழிந்த கிராமங்களை அடையாளப்படுத்தியது. சொல்லி மாளாத வேதனையைச் சுமந்தபடி கிடந்தது பாழும் பூமி.

*

**மே**ற்கே நாட்டாண்மைத் தொழிலுக்குப் போன முத்தணன் தன் மனைவியோடு தாதனூருக்குத் திரும்புவதென்று முடிவெடுத்தான். தாதனூருக்குப் போய்விட்டால் எப்படியாவது உயிர் பிழைத்து விடலாம். கஞ்சியில்லாமல் சாகிற நிலைமை கண்டிப்பாக வராது என்று தெரியும். எனவே தன் மகன் மச்சக்காளையை அங்கேயே இருக்க வைத்துவிட்டு மனைவியோடு புறப்பட்டான். முன்புபோல இருந்தால் இரண்டாம் சாமத்திற்குள் தாதனூர் போய்விடலாம். ஆனால் இப்பொழுது ஐந்து நாள் ஆனாலும் போய்ச்சேர முடியுமா என்று தெரியவில்லை. பஞ்சம் அவர்களைப் பிழிந்து வைத்திருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த அவர்கள் சடைவிழுந்த தலைமுடியைத் தூக்கிச் சுமப்பதே பெரும் பாடாக இருந்தது. தாதனூர் வரை உயிரைக் கொண்டுவந்து சேர்க்க எந்த உணவு தானியங்களும் கையில் இல்லை. ஆலம் பழத்தையும், பனைமரக் குருத்தையும் நம்பி வந்து சேருவதைத் தவிர வேறு வழியில்லை.

கிழக்கு நோக்கிப்போன ஜனக் கூட்டத்தோடு சேர்ந்து அவர்கள் நடந்தனர். சிறுசிறு கிராமங்களில் இருந்து மனிதர்கள் முற்றிலுமாக வெளியேறிவிட்டனர். நகரங்களில் செல்வந்தர்கள் தாக்குப் பிடித்தபடி இருந்தனர். உணவு தானியங்களின் கடும் விலையேற்றம் அவர்களையும் சோளச்சோறுக்கும் கேப்பைக்கூழுக்கும் கொண்டுவந்து சேர்ந்தது. அவர்கள் அண்டிப் பிழைத்து பஞ்சத்தைத் தாங்கிவிட முடியும் என்று நம்பிய சிலர் ஊரைவிட்டு வெளியேறாமல் தாக்குப்பிடித்து இருந்தனர்.

போகிற கூட்டம் எந்த ஊருக்குள்ளும் நுழையாமல் விலகியே போய்க்கொண்டிருந்தது. முன்பெல்லாம் ஊருக்குள் நுழையவிட்டால் கொள்ளையடித்து விடுவார்களோ எனப் பயந்து ஊர்க்காரர்கள் யாரையும் நுழைய அனுமதிக்கவில்லை. ஆனால் இப்பொழுதெல்லாம் எந்த ஊருக்குள் எந்த நோய் பரவிக் கிடக்கிறதோ என்று பயந்து யாரும் ஊருக்குள் நுழையாமல் தூரத்தில் தள்ளிப் போய்விடுகின்றனர். நிலைமை மாறிய படியே இருந்தது. மாடு கன்றுகளை, வீடுவாசல்களையெல்லாம் விற்றவர்கள் வேறு வழியின்றிப் பிள்ளைகளை விற்கத் துவங்கினர். பிள்ளைவிற்றுப்பெற்ற தானியங்களை ஆக்கித் தின்பதற்குள் வழிப்பறிக்கூட்டம் பறித்துச்சென்றது. முதல் வழிப்பறியின் போது சிறிது தானியங்களைப் பெற்றுவர்கள் இரண்டாம் வழிப்பறியின் பொழுது இரத்தக் காயங்களைப் பெற்றனர். கண்கள் பசியின் வெறியேறிக் கிடந்தன. கைகால்களால் ஏதாவது செய்துவிடக்கூடிய திராணியிருந்தவர்கள் மட்டுமே எதையாவது செய்து உயிர் பிழைத்தபடி இருந்தனர். மற்றபடி நடக்க மட்டுமே முடிந்தவர்கள் அவரவர்களின் தெம்பிற்கு ஏற்ற தூரம் வரை நடந்து போய் விழுந்து செத்தனர்.

ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலும் சம்சாரித்தனமும், காவலும் முற்றிலும் அழிந்துவிட்டது. முத்தணன் ஊர்ஊராகப் பார்த்தபடியே வந்து கொண்டிருந்தான். இந்த கிராமத்துக் காவல்காரன் என்ன ஆனான்? இவன் எங்கே போனான்? என்று யோசித்தவாறே நடந்து வந்துகொண்டிருந்தான். அவனுக்கு இருக்கும் தெம்பில் பாதி கூட அவன் மனைவிக்கு இல்லை. அவளால் பத்து எட்டு கூட சேர்ந்தாற்போல் நடக்க முடியவில்லை. இரண்டு மரங்களுக்கு இடையில் எத்தனை முறை உட்காருவாள் என்று தெரியாது. முத்தணன் கைத்தாங்கலாகப் பிடித்தபடியே இவளை அழைத்து வந்துகொண்டிருந்தான். இந்தக் காவல் முறைகள் எல்லாம்

முன்னோர்களால் எத்தனை நூறு வருஷங்களுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது. வழிவழி வந்து வாரிசுகளாலும், மரபுகளாலும், கெட்டிப்படுத்தப்பட்டது! ஆனால் இன்று அவை அத்தனையும் அழிந்துவிட்டன. காவல்காரர்கள் யாரும் தாங்கள் காவல் பார்த்த கிராமத்தில் இல்லை. எங்கேயோ வழிப்பறியும் திருட்டும் செய்துகொண்டிருந்தார்கள். பசியெனும் நெருப்பு எல்லா இரவுகளிலும் அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. எங்காவது போய்ப் பிழைத்து விடலாம் என்று நம்பிப் போய்க்கொண்டிருந்த மனிதர்களை இவர்கள் சூறையாடினார்கள். வழியெங்கும் சூறை. கதறல்களும் கழுத்தறுப் புகளும் மரத்துக்கு மரம் நிகழ்ந்தது. பெருங்கூட்டத்தில் பிடிபட்ட வழிப்பறிக்காரனை அடித்துக்கொன்று கை வேறு கால் வேறாகப் பிய்த்துப் போட்டுவிட்டு கூட்டம் போய்க் கொண்டேயிருந்தது. கழுத்தை அறுத்துக்கொன்றாலும் எதுவும் கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றம் இரக்கத்தை வரவைப்பதற்குப் பதில் வெறியைத்தான் கூட்டியபடி இருந்தது. எவருக்கும் கிடைக்காத தானியங்கள் எங்கேதான் இருக்கின்றன என்று யாருக்கும் தெரியவில்லை.

நான்காம் நாள் மாலையில் முத்தணனும் அவனது மனைவியும் கணவாயை வந்தடைந்தனர். அவர்களோடு நடந்தவர்கள் எல்லாம் நேற்று முன்தினமே கணவாயைக் கடந்துவிட்டனர். முத்தணனின் மனைவியால் நடக்கமுடியவில்லை. எனவே அன்று இரவு உசிலம்பட்டிக் கணவாயின் மேற்கு அடிவாரத்திலேயே தங்குவது என்று முடிவெடுத்தான். தலைச்சுமையை இறக்கிப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டான். இருவரும் மரத்தடியில் சாய்ந்தனர். மாலை வெளிச்சம் முற்றிலும் மறைந்து இரவு பெருகி வந்துகொண்டிருந்தது. தாகத்தால் நாக்கு வறண்டு உள்ளிழுத்துக் கிடந்தது. பசி உச்சத்தை அடைந்ததால் தேகம் மரத்துவிட்டது. ஆறுதலோ நம்பிக்கையோ சொல்ல இருவரிடமும் எந்த வார்த்தைகளும் இல்லை. எப்படியாவது தாதனூர் போய்விட்டால் பிழைத்துவிடலாம் என்ற நம்பிக்கை மட்டுமே இருவரின் நினைவிலும் இருந்தது. அந்த நினைவின் சக்தியால்தான் அவர்களின் உயிரியக்கம் நடந்துகொண்டிருந்தது. முத்தணனின் கையில் இருந்த கம்பு மட்டுமே அடையாளச் சின்னமாக மரத்தின் மேல் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தது. அவர்கள் இருவரும் கீழே படுத்துக் கிடந்தனர்.

பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்பு தன்னை மேற்கு நாட்டுக்கு நாட்டாண்மைத் தொழிலுக்கு அனுப்பிவைக்கும் பொழுது பெரியாம்பளைகள் ஒச்சுவும் விருமனும் இந்தக் கணவாயைக் கடந்து கூட்டிப்போனது முத்தணனுக்கு ஞாபகம் வந்தது. அப்பொழுதிருந்தது எத்தனையோ முறை மேற்கும் கிழக்குமாக இவன் இந்தக் கணவாயைக் கடந்துள்ளான். அப்பொழுதெல்லாம் இந்தக் கணவாய் ஒரு பொருட்டாகவே இருந்ததில்லை. பாதத்துக்கு அடியில் கிடக்கும் சிறுகல்லைப் போலத்தான் அது கிடந்தது. ஆனால் இன்று அதன் பிரமாண்டம் பார்க்கவே பயமாக இருக்கிறது. எப்படிக் கடந்து செல்வது என்று மரத்தில் சாய்ந்தபடியே யோசித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வல்லாங்கனின் ஞாபகம் வந்தது. அவனது குடும்பம் திசைக்கு ஒன்றாய் சிதறிப் போனது. மேற்கே அணைக்கட்டு வேலைக்குப்போன வல்லாங்கனுக்கு அவன் போய் பத்து நாளில் அவனது மனைவி இறந்து போன செய்தி இப்பொழுது வரை தெரியாது. அந்த எழவுக்கு சொந்தமெனப்

போயிருந்தது முத்தணன் மட்டும்தான். முத்தணனும் வல்லாங்கனின் இளையமகன் கொடிவைரனும் சேர்ந்து அடக்கத்தை முடித்தனர். அதன் பிறகுதான் முத்தணன் சொந்த ஊருக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியேயில்லை என்ற முடிவுக்கு வந்து, மனைவியை அழைத்துக்கொண்டு தாதனூர் நோக்கி நடக்கத் துவங்கினான். கணவாய் அவனை மறித்தபடி படுத்துக்கிடந்தது. முடிந்தால் தாண்டிக்கொள் என்று முறுக்கிக்கொண்டு நின்றது. அவன் இருளையே முழித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் சற்றுத் தள்ளி மரத்தின் வேர் ஒன்றில் தலை வைத்துப் படுத்துக்கிடந்தாள். அசதியும், சோர்வும் அவனை மரத்தோடு மூச்சடைக்க அமுக்கிவிட்டது.

நிலவின் ஒளியால் பாறைகள் கண் விழித்தபடி இருந்தன. பொழுது நள்ளிரவைக் கடந்தது. பட்டமரக் கிளைகள் மலையின் விலா எலும்பு போல அங்குமிங்குமாக வெடித்து நீண்டு கிடந்தன. மலையெங்கும் பனி இறங்கியது. இருவர் உடலும் நடுங்கியபடி கிடந்தது.

அவர்கள் படுத்துக் கிடந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள புதருக்குள் இருந்து அவை இருவரையும் பார்த்தபடி இருந்தன. முதலில் ஒன்று மட்டும் புதருக்குள் இருந்து வெளியில் வந்தது. சருகுகளில் மிதித்தபடி அவளை நோக்கி வந்துகொண்டிருந்தது. குளிரில் நடுக்கும் தாளாமல் கண் விழித்தபடி இருந்த அவள், அது வருவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். கண்கள் திறந்திருப்பதைப் பார்த்ததும் அது கொஞ்சம் நின்றது. பின் மீண்டும் அவளை நோக்கி நடந்தது. அவற்றின் கண்களில் இருந்து கசிந்த மஞ்சள் ஒளியை அவள் பார்த்தபடி இருந்தாள். இன்னும் கொஞ்சம் நேரத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிந்த அவள் பெருங்குரலெடுத்துக் கத்த முனைந்தாள், சத்தமே வரவில்லை. அவளின் வாயில் இருந்து சிறு ஓசை மட்டுமே வெளியில் வந்தது. கைக்கு மிக அருகில் கிடக்கும் கருங்கல்லை எடுத்து அதன் நெற்றிப்பொட்டை நோக்கி எறியவோ மரத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் கம்பை எடுத்து அதன் விலா எலும்போடு சேர்த்து ஒரு போடு போடவோ அவள் முயற்சித்தாள். அவளால் கையை உயர்த்தி காற்றைத் தடவுவதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியவில்லை. புதருக்குள் இருந்த மற்றவை வெளிவந்தன. மரத்தில் சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்த தன் புருஷனை எப்படியாவது நகர்ந்து போய் எழுப்பிவிட நினைத்து பாதத்தை அழுத்தி மிதித்து உடலைப் பின்பக்கம் தள்ள முயற்சித்தாள். கால் உதறுவதைப் பார்த்தபடி வந்த அது நேராக இடது காலைக் கவ்வியது. அதன் பற்கள் எலும்போடு சேர்த்து சதையைக் கவ்வின. இரத்தம் எதுவும் பீறிட்டு வெளிவரவில்லை. இடது கால் இழுபட்டபடி இருந்தது. அவள் தன்னை நோக்கி வருகிற மற்றவைகளைப் பார்த்தபடி இருந்தாள். அவள் பார்வை மிகத் துல்லியமாக இருந்தது. சிலை போலக் கண்கள் சலனமின்றி இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. அதன் ரோமங்கள் கழிந்திருந்தன; பஞ்சம் அவற்றையும் படாத பாடு படுத்தியிருந்தது. ஒன்று வயிற்றின் ஓரத்தைக் கவ்வியது. இன்னொன்று மூஞ்சிக்கு நேராக மூக்கை விடைத்தபடி வந்தது. மிக அருகில் அவள் அவற்றின் கண்களைப் பார்த்தாள். காடு முழுக்க அதில் தெரிந்தது. பஞ்ச காலத்தின் கொடுந்துக்கம் பெரும் மஞ்சள்நதி போல் ஓடிவந்து இவள் கண்களுக்குள் இறங்கியது. விடைத்த அதன் மூக்கில் இருந்து வெப்பக் காற்று வெளிவந்தபடி இருந்தது. அது அவளின் முகத்திற்கு மேல் முகர்ந்து பார்த்தபடி கீழே இறங்கியது.

கழுத்து அதன் வாய்க்கு அடக்கமாக இருந்தது. குரல்வளையோடு சேர்த்துக் கவ்வியது. இடது கால் இழுபட்டு முன்னால் நகர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மொத்த உடலையும் புதரை நோக்கி இழுத்துக்கொண்டு போயின. அவள் பார்த்தபடி இழுபட்டுக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் இருந்த உயிர் புதருக்குள் நுழையும்வரை சிறுகச் சிறுக அணைந்தபடி இருந்தது.

*

கங்காணியின் விரித்து வைத்திருந்த வலையில் தாங்களே முன்வந்து கழுத்தை மாட்டிக்கொண்ட கூட்டத்தின் நீளம் மாவட்டத்தின் எல்லை வரை இருந்து, இலங்கையின் காப்பித் தோட்டங்கள் பற்றிய கங்காணிகளின் வார்த்தைகளே உயிர் வாழ்வதற்காகக் காட்டப்பட்ட ஒரே வழி. தோணிச் செலவை மட்டும் கங்காணிகள் ஏற்றனர். மற்றபடி உயிரோடு வந்து சேர வேண்டியது அவரவர்களின் பொறுப்பு. மலைக்கத்தாழைக் குருத்துகளையும் கீரைகளையும் தின்றபடி தென்கோடித்தீவிற்கு மனிதக்கூட்டம் சாரை சாரையாகப் போய்க்கொண்டிருந்தது. வழியிலேயே வாந்தி பேதியாக நடக்கமுடியாமல் கீழே விழுந்து பலர் செத்தனர். ராமநாதபுரத்தின் பனங்காடுகளைத் தாண்டிச் செல்லும் முன் ஈச்சங் குழைகளைப் போலக் கொத்துக் கொத்தாக மனிதர்கள் மடிந்தனர். ஆங்காங்கே மண்ணை மேலோட்டமாகக் கிளறிப் புதைந்துவிட்டு மற்றவர்கள் போய்க்கொண்டிருந்தனர். பட்ட மரத்திலிருந்து பழுப்பேறிய இலைகள் உதிர்வதைப் போல அந்த மரணங்கள் நிகழ்ந்தபடி இருந்தன.

தாயைப் புதைத்த மகனும், மகனைப் புதைத்த தந்தையும், எல்லோரையும் புதைத்த மருமகளும் நின்று வடிக்க சொட்டுக் கண்ணீரும் நேரமும் இன்றி கூட்டத்தைப் பிடிக்கத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தனர். பாறைகளை நகர்த்துவதைப் போல இருந்தது பாதங்களை நகர்த்தி வைப்பது. வேறு வழியேயின்றி கலங்கிய குட்டையில் கிடந்த தண்ணீரைக் குடிக்கும் பொழுது மரணம் அவர்களைக் குடித்தது. பெரும் படையெடுப்பு போல அந்த இடப்பெயர்வு நடந்தது. படையெடுப்பின் இறுதியில் நிகழும் பேரழிவு இடப்பெயர்வில் துவக்கத்திலேயே நிகழ்ந்து விடுகிறது. மரணத்திற்குப் பின் உடலில் இருந்து கசியும் இரத்தத்தைப் போன்றது அது. சொந்த மண்ணைவிட்டு தானே வெளியேற வேண்டிய அவலத்தின் உச்சத்தில் இருக்கும் மனிதக் கூட்டம் சாபங்களால் நெய்யப்பட்ட ஆடைகளை உடுத்தியபடி நடுங்கிக் கிடக்கிறது. அப்பொழுது நாக்கு நனையும் அளவு தண்ணீரோ ஒரு பிடி சோறோ இருப்பதாகச் சொல்லுகிற எவனும் தேவதூதுவனைப் போலவே காட்சியளிக்கிறான். அந்த தேவதூதனே கண்ணீர் வற்றிப்போன அந்த மனிதர்களுக்குள் இருந்து தனக்கான கமிசன் தொகையைக் கவர்ந்து கொள்கிறான்.

இலங்கையின் காப்பித் தோட்ட வெள்ளை முதலாளிகள் பஞ்சத்தைப் பார்த்து வாய்பிளந்து காத்துக் கிடந்தனர். தானே முன்வந்து தன்னை விற்கும் அடிமைகளைக் கண்டு அவர்களின் நாக்குகள் ருசியேறிக் கிடந்தன. தன் விலையைக் கூவக்கூடத் திராணியற்ற அடிமைகள் விலையெனக் கொடுக்கும் நாணயங்களை வாங்கி வைத்துக்

கொள்ளக்கூட உடையோ, பொருளோ அற்று இருந்தனர். பல்லாயிரம் மனிதர்கள் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னர் நோக்கிப் பிதுக்கித் தள்ளப்பட்டனர். மனிதர்களின் பசியை விட அகோரமாக இருந்தது சமுத்திரத்தின் பசி. அடர்ந்தமௌனம் கொண்ட ஆழ்கடலில் மனித உடல்கள் மழையென விழுந்து கொண்டிருந்தன. கடல் தனக்குள் உயிரற்ற எதையும் வைத்துக் கொள்வதில்லை. எனவே அது கரைக்கு அனுப்பியபடியே இருந்தது. செங்காற்று வீசிய மண்ணில் பிறந்து வளர்ந்த உடல்கள், உப்பங்காற்று வீசும் கடற்கரையில் அழுகி ஒதுங்கியபடி இருந்தன. வல்லத்தில் ஏறும் யாரும் கவிழ்ந்த வல்லங்களின் கதைகளைக் கேட்டு அஞ்சவில்லை. அச்சமும் பயமும் இரக்கமற்ற மனிதக்கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு தோணிகளில் ஏறியபடியே இருந்தன. நெரிசல் தாங்காமல், கூட்டத்தால் திணறிய வல்லப்பயணம் அபூர்வமாகவே மறு கரையில் முடிந்தது. மற்ற வல்லங்கள் மறுகரையை அடைய வில்லை என்று சொல்ல யாரும் மிஞ்சவில்லை.

தனுஷ்கோடியில் இருந்த கூட்ட நெரிசலில் மிதிபட்டு, மூச்சடைத்துச் செத்தவர்கள், வல்லம் கவிழ்ந்து கடலில் மூழ்கிச் செத்தவர்கள், கரையில் சேர்ந்தபின் கஞ்சிக்கு அடித்துக்கொண்டு செத்தவர்கள் எல்லோரும் போக மிஞ்சியவர்களின் கூட்டத்தைக் கண்டே இலங்கை அரசாங்கம் பதறியது. கடல் தாண்டும் முன் பாதிக் கூட்டம் அழிந்தது. மலைத் தோட்டங்களுக்கு போய்ச் சேருவதற்குள் மிஞ்சியதில் பாதி அழிந்தது. மூன்றில் ஒருவனுக்குத்தான் மலைத் தோட்டங்களில் கடும் உழைப்பில் அழியக்கொடுத்து வைத்திருந்தது. அந்த பஞ்சப் பராரிகளின் கூட்டம் தலை மன்னாரிலிருந்து கண்டிக்கு ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின் மலைத் தோட்டங்களை நோக்கி இரவுபகலாக நடந்து சென்றனர். பசுமையேறிய அந்த மலைகளின் உச்சியில் மனிதர்களின் கபாலங்கள் காப்பிக் கொட்டைகளாக உருமாறியபடி இருந்தன.

*

**ப**னிக் காலம் துவங்கியபின் நிலைமை மேலும் மோசமானது. முன்னிரவிலும் அதிகாலையிலும் பனிப்பொழிவு மிகக் கடுமையாக இருந்தது. நள்ளிரவில் வெளியேறும் வெப்பம் பனியால் சுருண்டு கிடப்பவர்களுக்குள் காய்ச்சலை எளிதாகக் கொண்டுபோய்ச் சேர்த்தது. பஞ்சம் பிழைக்கப்போய்க்கொண்டிருந்த கூட்டத்தை இந்தக் காய்ச்சல் மிகக் கடுமையாகத் தாக்கியது. உயிர்ச்சத்தின்றி நடந்து கொண்டிருந்தவர்கள் காய்ச்சல் கண்ட இரண்டாம் நாள் வலிப்பு வந்து விழுந்தனர். மூன்றாம் நாள் கலங்கிய குட்டையின் நீரைக் குடிக்காமலே, ஈச்சங் குருத்தைத் திங்காமலே உயிரைத் துறந்தனர். மார்கழியிலும் தையிலும் வறப்பனி கொட்டித் தீர்த்தது. ஒருபேயாட்டத்தின் ஆடுகளமென வெண்மை சூழ்ந்த பனிப்படலம் இருந்தது. ஒவ்வொரு அதிகாலையிலும் மண்ணில் கிடந்த பனித்துளிகள் எஞ்சிய உயிர்களை எடுத்துக்கொண்டு சூரியனைக் கண்டு மறைந்தன. வெயிலை விட மழை மோசமானதைப் போல, இப்பொழுது பகலை விட இரவு மோசமானது. வெயிலோ மழையோ பகலோ இரவோ எதுவும் மனிதனுக்கானதாக இல்லை. எல்லாம் மரணத்தின் வெவ்வேறு முகங்களாக இருந்தன. அவை உயிர்களை விதவிதமாகக் காவு வாங்கின. வெயிலின் உஷ்ணத்தால் சுருண்டு செத்தவர்கள் இப்பொழுது பனியால் விறைத்துச் செத்தார்கள்.

கொள்ளை நோய் கண்டு அமைதியாகப் பிரிந்த உயிர், இப்பொழுது வலிப்பு கண்டு கைகால்களை மாறி மாறி இழுத்து உதறியபடி பிரிந்தது. மரணம் பருவகாலங்களைத் தனது கொலைக்கருவிகளாக மாற்றி வைத்திருந்தது. மழையும் வெயிலும் பனியும் தனது எல்லா நற்பண்புகளையும் இழந்து மரணத்தின் ஏவல் நாய்களாக மாறின. மண்ணின் மீதிருந்த மனித வாடையை முகர்ந்தபடி இந்த ஏவல் நாய்கள் அலைந்து திரிந்தன.

*

**ஊ**ர் ஊராக சாமிகள் அனாதையாகக் கிடந்தன. ஊர் தோன்றிய காலந்தொட்டு ஊரைக் காத்து வந்த சாமிகள்; கண்மாயையும், களத்துமேட்டையும் காத்த சாமிகள்; கன்னிப் பெண்களையும், மாடு கன்றுகளையும் காத்த சாமிகள் என எல்லாத் தெய்வங்களும் இப்பொழுது அனாதைகளாகி விட்டன. சிறு கோயில்கள், நடுகல், குத்துக்கல், நின்றமரம், நட்ட சூலம் என எங்கெல்லாம் சாமிகளை மக்கள் வழிபட்டனரோ, அங்கெல்லாம் அவை அனாதையாக நின்றன. ஊர் முற்றிலும் அழிந்துவிட்டது. குழந்தைகளின் விளையாட்டு, குமரிப் பெண்களின் காதல், இளவட்டங்களின் வீறாப்பு, பிள்ளத்தாச்சிகளின் பூரிப்பு, கிழவிகளின் ஆதிக்கம்...கிராமம் தோன்றிய நாள் முதல் பெருசுகளால் சொல்லப்பட்டு வந்துகொண்டேயிருந்த கதைகள் என எல்லாம் அழிந்து விட்டன.

முற்றிலும் அழிந்து கிடந்த கிராமங்களில் சாமிகள் பொறுக்க முடியாமல் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. தனது மக்கள் யாரும் மிஞ்சியிருக்கவில்லை. பாழுங் கிணறும் பற்றியெரிந்த வீடும் உடைந்த கலப்பையும் உருக்குலைந்த தொம்பரையும் பேசிய பஞ்சத்தின் கதையை சாமிகளால் காது கொடுத்துக் கேட்க முடியமவில்லை. அழிந்த கிராமங்களை மடியிலே கிடத்திக் கதறிய சாமிகள் வடித்த கண்ணீர் கடல் கொள்ளாது. துடித்த சாமிகள் சிந்திய கண்ணீர் சீமை கொள்ளாது. அழுது மயங்கி ஆத்திரம் தாளாது விரித்த சடையுடன் மந்தையிலே திரிந்தன துடியான பெண் தெய்வங்கள்.

தன் மக்களைக் காக்கமுடியாத தெய்வங்களுக்கு மக்கள் கொடுத்துச் சென்ற தண்டனையிது. ஒவ்வொரு அழிவையும் பார்த்து அணு அணுவாகத் துடிக்கும்படி அவர்கள் அதை விட்டுச் சென்றனர். கடைசி அழிவு நிகழ்ந்த பின்பும் நினைவுகளால் அவை வதைபட்டுக் கதறித் துடித்தபடி கிடந்தன. தெய்வங்களின் துயர் சொல்லிமாளாது. மனித உணர்வுக்கு உள்ளேதான் அதன் உயிர் குடி கொண்டிருந்தது. அதைத் தெய்வமென்று சொன்ன சாட்சிகளெல்லாம் அழிந்து போன பூமியில் அவை மீண்டும் வெறும் கால்வாய், மரமாய் மாறின. மனிதர்கள் விட்டுச் சென்ற சாபங்களாக தெய்வங்கள் காட்சியளித்தன.

*

**ந**கரத்திற்குள் நிலைமை மேலும் மேலும் மோசமாகிக் கொண்டிருந்தது. குடிநீர் கிணற்றின் நீண்டவரிசை இரவு பகலாகக் குறையவே இல்லை. கிணற்றின் மேல் நீர் இறைப்பதற்காக கட்டப்பட்டிருந்த உருளைகள் சதா உருண்டுகொண்டே இருந்தன. தச்சாசாரி புதிய உருளைகளைச் செய்தபடி இருந்தான். எல்லாக் குடிநீர்

கிணற்றிலிருந்தும் உருளைச் சத்தங்கள் இரவுபகலாகப் பெருக்கெடுத்தபடி இருந்தன. மதுரையே ஒரு பெரும் கிணற்றுக்குள் இருப்பது போல் இருந்தது. மார்கழி தையில் கூட பானை முங்கத் தண்ணீரற்றுக் கிணறுகள் கிடந்தன. கண்ணீர் அளவே ஊற்றுக்கண்ணில் இருந்து நீர் கசிந்தது. வாளி முங்குமளவு நீர் ஊறியுள்ளதாவென எட்டிஎட்டிப் பார்த்து பெரும் பொறுமைக்குப் பின்தான் பெண்கள் நீரை இறைத்தனர். கிணற்றுச் சுவர் பூசணி மடிப்புப் போல பெண்களின் அடிவயிறு முழுவதும் நிரந்தரத் தடமாகப் பதிந்து விட்டது.

குடிநீரைக் காய்ச்சித்தான் குடிக்கவேண்டும் என்று நகராட்சி நிர்வாகம் தொடர்ந்து செய்து வந்த பிரச்சாரத்திற்கு சிறிது பலன் இருந்தது. முதல் மழைக்குப் பின் காய்ச்சலும் காமாலையும் கண்டு பெரும் ஜனக்கூட்டம் மடிந்த பிறகுதான் மதுரைவாசிகள் கொஞ்சப் பேருக்கு குடிநீரை அடுப்பில் ஏற்றும் முன்னெச்சரிக்கை வந்தது. இன்னும் பலர் ஜலத்தை நெருப்பால் சுடக்கூடாது என வீம்பாக இருந்தனர். தேய்ந்த மரஉருளைகளை வைத்து குழந்தைகள் விளையாடித் திரிகிற தெருக்களில் சிலரின் வீம்புகள் மட்டும் தேயாமல் இருந்தன.

பழைய நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் மாற்றிக் கொள்ள முடியாத நகரமாக மதுரை இருந்தது. பாவ புண்ணியங்கள் இந்நகரின் மேல் மெழுகு போல் உறைந்திருந்தது. பஞ்சாங்கக் கட்டங்களின் சிலந்தி வலைக்குள் இந்நகரம் பின்னப்பட்டுக் கிடந்தது. பழமையெனும் மாயக் கரத்தின் பிடிக்குள் மனிதர்களின் நம்பிக்கைகள் சிக்கிக் கிடந்தன. வாழ்க்கை தனது இரக்கமற்ற தாக்குதலை அவர்களின் மேல் நடத்தியபடியே இருந்தது. இயற்கை தனது சூறையாடலின் களமாக மதுரையைத் தேர்ந்தெடுத்திருந்தது. ஒவ்வொரு நாளும் பழுக்கக் காய்ச்சிய கம்பிகளைக் கொண்டு இந்நகரத்தின் மேனியை வார்வாராக இழுத்தது. இவ்வள வையும்தாக்குப் பிடித்தபடி ஆடி வீதியில் உருண்டோ, மாசி வீதியைச் சுற்றி வந்தோ, பட்சி சொல்லுவதைக் கேட்டோ தப்பித்துவிடமுடியுமெனப் பெருங்கூட்டம் நம்பிக்கொண்டிருந்தது. அவர்களால் ஒரு போதும் தண்ணீர் பானையைத் தூக்கி அடுப்பில் வைக்கவே முடியவில்லை. வென்றுவிட முடியும் என்று நம்பித்தான் அவர்கள் வீழ்ந்தபடி இருந்தனர்.

இந்தக் கடும் பஞ்சத்தில் கூட எந்த வரியையும் அரசு ரத்து செய்யவில்லை. பர்மாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்கள் மதுரைக்கு வந்து சேர்ந்தன. ஆனால் அதன் விலை பஞ்சத்தை விடக் கொடுமையாக இருந்தது. ரயில் நிலையம் வழியாக மதுரைக்குள் வருகிற உணவு தானிய மூட்டைகள் அடுத்து எங்கே போகின்றன என்று யாருக்கும் தெரியவில்லை. கடும் உணவுப் பற்றாக்குறை காரணமாக பலநாள் பட்டினி கிடந்தவர்கள் சுண்ணாம்புக் காரைகள் உதிர்வதைப் போல வீதிகளில் உதிர்ந்துகொண்டிருந்தனர். பாறையைப் போல இரக்கமற்று இருந்த நகர நிர்வாகம் பிணங்களை எண்ணிக் கணக்கிட்டுப் பதிவு செய்து கொள்வதில் மட்டுமே கவனத்துடன் செயலாற்றியது. நாள்தோறும் தத்தனேரியில் பிணங்கள் குவிந்தபடி இருந்தன.

கடைத்தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. பல கடைகளின் கதவுகள் நிரந்தரமாகப் பூட்டப்பட்டு விட்டன. பூட்டிய கடைகளுக்குள்

காலங்காலமாய் வணிகர்களின் பிருஷ்டம் இருந்து தேய்ந்த கல்லாப் பெட்டிப்பலகை அசைந்து கொடுத்து பெருமூச்சு விட்டபடி இருந்தது. திறந்திருக்கும் கடைகளில் கருப்பட்டிக் கொட்டானின் கீழோ, எண்ணெய்ச் சட்டியின் கீழோ கூட ஈரப்பிசுக்கு தென்படவில்லை. எந்தக் கதவிடுக்குகளுக்குள்ளும் எறும்புகள் ஊர்ந்து செல்லவில்லை. வண்டித் தடமற்ற வணிக வீதி இந்நகரம் அனுபவிக்கும் கொடிய சாபத்தின் அடையாளமாக இருந்தது. மதுரையின் நாளங்காடிகளைக் காலந்தோறும் காத்து வந்த பூதங்கள் தங்களின் நாக்குகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு வெளியேறின.

*

**மா**சி வீதியின் குறுக்குத் தெரு ஒன்றில் பஞ்சம் பிழைக்கப் போனவர்கள் போக மீதி இருந்தவர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகச் செத்துக்கொண்டே வந்தனர். ஒரு நாள் அந்திப் பொழுதில் அந்த கடைசிக் கிழவி செத்தபொழுது, அந்தத் தெருவே மரணக்குகை போல் ஆனது. இரவு முழுவதும் அந்தத் தெருவுக்குள் யாரும் போகவில்லை. பயம் தெருவிலிருந்து கசிந்து பரவியபடி இருந்தது. ஆனால் தெருவெங்கும் ஒரே கொண்டாட்டம். அவளது கடைசி வரவுக்காகக் காத்திருந்தவர்கள் எல்லோரும் தெருவுக்கு மீண்டும் வந்தனர். இரவு முழுவதும் ஓயாத தறிச்சத்தம் கேட்டபடி இருந்தது. ஊடுபாவு இங்குமங்குமாக ஓடிக்கொண்டேயிருந்தது. அவளின் உள்ளங்கையைக் கீறியபொழுது உள்ளே இருந்த நூல் வெளியில் வந்தது. அதனை எல்லோரும் மாறி மாறி இழுத்தபடியே இருந்தனர். நூல் வந்து கொண்டேயிருந்தது. அவளது உடல் முழுவதும் நரம்புகளுக்குப் பதில் நூலே இருந்தது. அவள் பிறந்தது முதல் நூலிலேயே வளர்ந்திருக்கிறாள்.

தாவர வண்ணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சாய நீரே அவள் உடலில் ரத்தமென ஓடியது. தறிச் சத்தத்தின் வழியே அவள் வயதைக் கடந்து வந்திருக்கிறாள். நாகரீகம் தனது செல்லப் பிள்ளைகளான அவளின் முன்னோர்களையே நெசவு செய்யப் பணித்தது. வடக்கிலிருந்து அவர்களை அழைத்து வந்து இங்கே குடியேற்றினான் திருமலை மன்னன், பட்டுத்துகில் ஏற்றுமதிக்காக. அன்றிலிருந்து அவர்கள் நெய்தபடியே இருந்தனர். தறியின் ஓட்டம் நிற்கவே இல்லை. பாவு ஊடாடிய படியேயிருந்தது. ஒரு கட்டத்தில் தறி அடித்துக்கொண்டிருந்தவர்கள் தறிக்குள் போனபடி இருந்தனர். அவர்களின் கைகளில் இருந்த எல்லா நரம்புகளும் இழை இழையாய் மாறிப் பின்னியபடி இருந்தன. அவர்கள் தங்களையே நெசவு செய்தனர். தங்களுக்குத் தாங்களே சாயம் போட்டுக் கொண்டனர். தாங்களே ஆடையாயினர். தூங்கப் போகும்பொழுது தறியின் கட்டைகளை எல்லாம் உள்ளிழுத்துக்கொண்டு கைகால்களை நீட்டியபடி தூங்கினர். அவர்களே தறியாய் மாறிப் பல தலைமுறைகளை கடந்து வந்தனர். போதாத காலமாகத் தொடர்ந்து இரண்டாண்டுகள் மழை பொய்த்ததையடுத்து பருத்திக்கு தட்டுப்பாடு வந்தது. எங்கு தேடியும் பருத்தி கிடைக்கவில்லை. கரிசல் மண் பூமியெல்லாம் பலமாதங்களாகப் பாளம் விட்டுக்கிடந்தது. தறியின் சத்தம் குறைய ஆரம்பித்தது. நாள் ஆக ஆக ஒவ்வொரு தறியாய் நின்றது. மூச்சு நின்ற தறிகளுக்கு அடியில் அவர்கள் பிணங்களாய்க் கிடந்தனர். மரணவேளையில் அவர்கள் கைகால்களை நீட்டி மனிதனைப் போலவே செத்தார்கள். அவர்களின் உடல்

எரிய எரிய தறிகள் கரிக்கட் டைகளாயின. அந்த வீட்டில் கடைசியாக இந்தக் கிழவி மட்டுமே மிச்சமிருந்தாள்.

அவளும் நேற்று மாலை இறந்து போனாள். அதிகாலைச் சூரியன் நகரத்தின் மீதேறி வந்தான். அந்த மரணக்குகைக்குள் இரவெல்லாம் யாரும் போகாத செய்தி நகரெங்கும் பரவியிருந்தது. நகர சபை சிப்பந்திகள் தங்களின் வண்டியுடன் தெருவுக்குள் போய் அந்த முட்டுச்சந்தின் கடைசி வீட்டிற்குள் நுழைந்தனர். அந்தக் கிழவி தனியாகச் செத்துக்கிடந்தாள். துண்டுத் துணி கூட அவளின் மேலே இல்லை. வதங்கிய பஞ்சுபோல் கிடந்த அந்த உடலைத் தூக்கி வண்டியில் போட்டனர். மாடுகள் நடக்கத் துவங்கின. சாயக்காரத் தெருவில் இருந்து கடைசிப் பிணமும் வெளியேறியது.

*

**பு**ளியம்பழத்தை உதிரிப்பதைப்போல நகரத்தின் எல்லாத் தெருக்களில் இருந்தும் பிணத்தை உதிர்த்தது பஞ்சம். மாசி வீதிக்கு மீனாட்சி சொக்கநாதரின் தேர்த்தடம் மட்டும் சொந்தமல்ல, நாள் தோறும் பிணம் இழுத்துச் செல்லும் வண்டித் தடங்களே சொந்தமென்றானது. மாதங்களின் பெயர் சூட்டிக்கொண்ட தெருக்கள் தோறும் பிணங்கள் நகர்ந்தபடி இருந்தன. இந்த நகர்வு தொடர் சங்கிலி போல் இருந்ததால் ஒரு நிலைக்குப்பின் தெருக்கள் நகர பிணம் நிலைகொண்டு விட்டது. நிலை கொண்ட பிணத்தை நகர்த்த முடியாமல் திணறிக் கிடந்தது நகரம்.

ஓய்வின்றிப் பிணத்தை எரித்தபடி இருந்தார்கள் வெட்டியான்கள். புதிய தோட்டிகள் பலரை பிணங்களை எரிப்பதற்காக நகர நிர்வாகம் பணியில் அமர்த்தியிருந்தது. தத்தனேரியில் இருந்து மேலெழும்பிய கரும்புகை மதுரையைச் சுற்றித் தேங்கியபடி இருந்தது. மனிதர்களின் எரிந்த உடல்கள் மதுரையை விட்டு நீங்காமல் மிதந்துகொண்டேயிருந்தன. மாட்டுக் கண்ணில் இருக்கும் உருண்டு திரண்டு கருவிழி போல அவை வானத்தில் இருந்து மதுரையைப் பார்த்தபடி இருந்தன. முன்னர்பெரும் வனமும் மாநகரும் எரிந்த புகையால் நிரம்பிய மதுரையின் வானம். காலங்களைக்கடந்து இப்பொழுது மனிதர்கள் மட்டுமே எரிந்த புகையால் நிரம்பி இருக்கிறது. நீண்ட கழுத்துகளுடைய கழுகுகள் புகை மூட்டத்தினூடே பறந்தபடி இருக்கின்றன. எங்கோ ஊர்ப்புற ங்களைத் தேடி வாடை பிடித்துச் செல்கின்றன.

கொஞ்சம் கொஞ்சமாக இந்நிலை வந்து சேர்ந்துள்ளது. சவக்களை தரித்து நின்ற மதுரையம்பதியில் மனிதர்கள் நம்பவோ துக்கப்படவோ போராடவோ எதுவும் இல்லாமல் போனது. பிணங்களை வாரிப்போட்டபடி நாட்கள் போய்க்கொண்டிருந்தன. மிக நெருங்கி நிற்கும் தனக்கான நாளைக் கண்டுகொள்வதில் மனிதர்களுக்கு சிரமமேதும் இல்லை. அந்த நாட்கள் தீர்ந்து போன நாளில் அவர்கள் வந்து நின்றனர். கைவசம் நாட்கள் இல்லாதவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு காலத்திற்கு அப்பால் விடப்பட்டனர்.

*

**இ**யல்பு வாழ்க்கை கருகி உதிர்ந்து போன மதுரையின் இயல்பை மீறிக் காவலைக் கெட்டிப்படுத்த வேண்டிய தேவையிருந்தது. மிஞ்சியதைக்

கைப்பற்ற நாலா திசைகளும் தயாராக இருந்தன. காவக்காரர்கள் பகலிலும் காவல் தெருவுக்கு வரவேண்டுமென செல்வந்தர்கள் சொன்னார்கள். அதற்கான காரணம் வெளிப்படையாக இருந்தது. இரவைப்போல பகலும் அதிகப் பாதைகளை உருவாக்கி வைத்திருந்தது. கூடுதல் காவக்கூலி கொடுக்க அவர்கள் ஒத்துக்கொண்ட பின் காவக்காரர்கள் பகலிலும் காவல் தெருவுக்கு வர சம்மதித்தனர். தெருவில் இருந்த பலரும் காவக்கூலியைப் பஞ்சம் கடந்தபின்தான் தர முடியும் என்பதைத் தெரிவித்து விட்டனர். காவக்காரர்களுக்கு அதை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை. செல்வந்தர்களிடம் கூடுதல் கூலி வாங்குவதன் மூலம் ஓரளவு சமாளித்தனர்.

குடிக்கக் கஞ்சியின்றிச் சாகிற நிலமை தாதனூருக்கு இன்னும் வரவில்லை. ஆனால் நோய் மனிதர்களை அள்ளிப் போட்டுக்கொண்டு போனது. இந்தக் கொடிய காலத்தில் மிச்சமிருக்கும் காவலைப் பாதுகாக்க ஏற்பட்டுள்ள இழப்பு பஞ்சத்தின் சராசரியைவிட அதிகமாக இருந்தது. கருப்பு கோயில் ஆலமரத்தின் நிழலுக்குள் மனிதக் கூட்டம் சுருங்கிக் கொண்டேவந்தது. பேச்சு மேலும் மேலும் சோகம் மிகுந்ததாக மாறியது. இழப்புகள் மிகுந்த பாதையில் அவர்கள் தனித்துவிடப் பட்டனர். ஆனால் தலைமுறை தலைமுறையாய் இருந்து வரும் மதுரைக் காவலை எப்படியும் கட்டிக் காத்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் இவர்களை நிலைதடுமாறாமல் செய்தது. அந்த வைராக்கியமே இதுவரை சந்தித்திராத இழப்புகளையும் சந்திக்க வைத்தது.

ரயில் ஏறி எங்கெங்கோ களவுக்குப் போனவர்கள் எல்லாம் இப்பொழுது ஏமாற்றத்துடன் திரும்பி விட்டனர். பஞ்சம் கண்காணாத தூரம் வரை பூமியைப் பொசுக்கி வைத்திருந்தது. எதுவரை போனாலும் பஞ்சத்தைத் தாண்ட முடியவில்லை. எனவே ரயில் ஏறி வடக்கே பொத்தாம் பொதுவாக களவுக்குப்போவதெல்லாம் கைவிடப்பட்டது. குறிப்பிட்ட ஜமீனை நோக்கி, மாளிகையை நோக்கி, அவர்கள் புறப்பட்டனர். பஞ்சம் மனிதர்களின் பாதையை மாற்றி மாற்றிப் போட்டது. இலக்குகளைத் துல்லியமாகத் தீர்மானிக்க வைத்தது. எந்த ஒரு இலக்கின் மீதும் மரணத்தின் அடையாள அட்டை நிரந்தரமாகத் தொங்கவிடப் பட்டிருந்தது. மரணத்தின் பாதையிலேயே அவர்கள் நிரந்தரமாக நடக்கலாயினர். ஒரு காலத்தில் காவல்காரனுக்கு மிக தூரத்தில் இருக்கும் மரணம், களவுக்குப் போகிறவனுக்கு நெருக்கமாக இருக்கும். ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட வித்தியாசங்கள் எதுவுமில்லை. களவு, காவல் இரண்டும் மரணத்திற்கு நடுவில் செல்லும் பாதையாக மாறிவிட்டது. கருப்பு கோயில் ஆலமரத்தடியில் இருந்து வெளியேறிப் போகும் எந்தப் பாதையும் மரணப் பாதையாகத்தான் இருந்தது. மரணம் நிரந்தரமானபின் பாதைகளில் சவால்கள் மட்டுமே காத்திருக்கின்றன. அந்தச் சவால்களை சந்திக்க வைராக்கியத்துடன் அவர்கள் தினமும் போய்க் கொண்டேயிருந்தனர்.

*

# 76

**பசுமலையிலிருந்து ரெவ். லாரன்ஸ் எழுதிய கடிதம்**:

கிறிஸ்துவின் மிகவும் பிரியமான சகோதரருக்கு,

அந்நிய தேசத்தில் இருக்கிறோம் என்று எண்ணாது, இந்த பூமியும், அதில் உள்ள யாவும் ஆண்டவருக்கே சொந்தம் என நினைத்து, கிறிஸ்துவின் திருநாமத்தை நம்பிக்கையுடன் உச்சரித்து, நல்லதிலிருந்து சிறந்ததை நோக்கிச் செல்ல நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு உங்களின் கடிதம் சீலத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது.

'அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்.' (லூக் 19:47)

கண்ணீரோடு பிரசங்கித்தவர்களில் இயேசுதான் முதல்வர். அவரின் பிள்ளைகளாகிய நாங்கள் அனுதினமும் கண்ணீரோடு பிரசங்கித்துக்கொண்டிருக்கிறோம். மதுரையையும், இங்குள்ள மக்களையும் பார்த்து நெஞ்சம் கலங்கி சிந்தப்படும் கண்ணீருக்கு அளவேதுமில்லை. ஒரு கல்லின் மீது மற்றொரு கல் இல்லாமல் போவது போல இந்நகரின் வாழ்வு அழிந்து கொண்டிருக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மடிகின்றனர். வயிறு இறுகி, கால்கள் உதறி, நோய் தின்று காற்றில் தூசிபோல மனிதர்கள் மேல் மரணம் பாவிப் போகிறது. கிடைக்க உணவேதுமின்றி மக்கள் நாலாதிசையிலும் அலைக் கழிந்து கிடக்கிறார்கள். சாத்தானின் பூமிபோல இக்கொடும் நகரம் காட்சியளிக்கிறது.

கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, நமது ஜனத்தை நிந்தையிலிருந்து காக்குமாறு அனுதினமும் துதித்துக் கொண்டிருக்கிறோம். துயரப்படுகிறவர்கள் ஆறுதலடைவார்கள் என்று சொல்லி நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பி கண்ணீர் துடைத்ததைப் போல அவர் எம்மக்களை எழுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இங்கு நடப்பதைக் கண்ணால் காணவே சகிக்கவில்லை. கொடிய பஞ்சமும், ஜாதி துவேஷமும் அளவின்றி நிறைந்துள்ளது. நேற்று திருப்பரங்குன்றம் அருகில் நான் கண்ட காட்சி என்னை இரவு முழுக்கத் தூக்கமிழக்கச் செய்தது. ஒருவேளை சோற்றுக்குகூட வழியில்லாது மரணத்தின் பிடியில் இருந்த ஒரு பெருங்கூட்டம் அங்குள்ள மண்டபமொன்றில் அன்னதானமிடுகிற செய்தி கேட்டுக் குவிந்துள்ளது. அவர்களை வரிசையாக நிற்குமாறு செய்து சிறிய கரண்டி அளவு தானம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு தாய் தனது இரு பிள்ளைகளையும் இரண்டு கையில் பிடித்துக்கொண்டு நெடுநேரம் வரிசையில் வந்தாள். வெயிலின் கொடுமையில் மயங்கிவிட்டாள். ஆனாலும் நம்பிக்கையோடு, தனது குழந்தைகளுக்கு எப்படியாவது உணவை வாங்கித் தந்துவிட வேண்டுமேன்ற வைராக்கியத்துடன் வரிசையில் நின்று முன்னகர்ந்தாள். தானம் செய்யும் திண்ணையருகே போய் கையிலிருந்த சட்டியை நீட்டிய பொழுது அவளது கை உடைவதைப் போல கட்டையைக் கொண்டு அடித்திருக்கிறார்கள். ‘பறச்சிக்கு என்னடி கஞ்சி’ என்று சொல்லி அங்கிருந்தவர்கள் எல்லோரும் அடித்திருக்கிறார்கள். தனது இரண்டு குழந்தையையும் இழுத்துக்கொண்டு உயிர் பிழைக்க ஓடிய அவளை விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். பெருங்குரலெடுத்து கத்தித் துடித்தபடி ஓடிவந்த அவள் கண்மாய் மேட்டில் கிடந்ததை, தற்செயலாக அவ்வழியில் போன நான் பார்த்தேன். கையெல்லாம் இரத்தம் வழிந்தபடி இருந்தது. இரண்டு பிள்ளைகளும் பக்கத்தில் உட்கார்ந்து அழுதபடியே பாதி மயக்கத்தில் இருந்தனர். நான், வண்டியோட்டியுடன் சேர்ந்து அவளைத் தூக்க முயற்சித்தபொழுது அவள் ஒத்துழைக்கவில்லை. தனது இரு குழந்தைகளையும் எப்படியாவது காப்பாற்றுமாறு சொல்லியபடியே சிறிது நேரத்தில் உயிர் விட்டாள்.

அவளை அங்கேயே புதைத்துவிட்டு, ஏழு வயதுச் சிறுவனையும், நான்கு வயதுச் சிறுமியையும் தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு உடன் திரும்பினேன். ஒவ்வொரு நாளும் என் கண்களுக்கு மிக அருகில் மரணம் நிகழ்ந்தபடியே இருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட அனாதை இல்லத்தில் இப்பொழுது இருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை 137. இவர்கள் அனைவரும் இந்தப் பஞ்சத்தால் தாய் தந்தையர்களை இழந்து அனாதையா னவர்கள். தினமும் யாராவது வந்து அனாதைக் குழந்தைகளை நமது தேவாலயத்தில் விட்டு விட்டுச் செல்கின்றனர்.

அன்பின் கயிறு மகா நீளமானது. மகா பலமானது. காந்தம் ஊசியை இழுப்பதைப் போல இயேசுவின் அன்புக் கயிறு குழந்தைகளை இழுத்து வந்து சேர்க்கிறது. குழந்தைகள் இயேசுவின் கிருபையில் ஆகாரம் கொடுத்து உயிரூட்டி வளர்க்கப்படுகிறார்கள். வெகு சீக்கரம் அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்கப்படும்.

கல்விப் பணியில் ஜாதி துவேஷம் ஒவ்வொரு நாளும் குறுக்கிடுகிறது. பனையோலையை நம்பிக் கிடக்கும் பழமைவாதிகள் நம் கல்விச் சாலையின் எழுத்தறிவிக்கும் முறையின் மீது புதிய புதிய பிரச்சனைகளை கிளப்பிவிட்டபடி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த ராயப்பன் என்ற உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுப்பதை ஏற்கமுடியாது என்று மேல்ஜாதி மாணவர்களின் பெற்றோர்கள் வந்து பிரச்சனை செய்கிறார்கள். கிறிஸ்துவில் ஜாதி கிடையாது. கிறிஸ்துவில்

இணைந்த ஒருவன் ஜாதி பேதங்களைக் கடந்தவன் என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் ஜாதி துவேஷத்தின் பால் சமரசம் செய்துகொள்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம். கல்வித் தொண்டில் ஜாதிப் பிசாசு நுழைவதை அனுமதிக்க மாட்டோம்.

பெண் குழந்தைகளுக்கான கல்வி நாம் எதிர்பார்த்ததை விட நல்ல பலனைக் கொடுக்கிறது. இடையிடையில் அவர்களின் பெற்றோர்கள் குழந்தைகளை ஆடுமாடு மேய்க்க அனுப்பி விடுகிறார்கள். அவர்களை மீண்டும் பார்த்துப் பேசி அழைத்து வர வேண்டியிருக்கிறது. இதனால் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை ஏறி இறங்கியபடி இருந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாக பள்ளிக்கூடம் வரும் பெண் பிள்ளைகளுக்கு மாதம் ஒரு துட்டுப் பணமும், வாரம் ஒரு ரொட்டித் துண்டும் தருவதால் இப்பொழுது பெரும் எண்ணிக்கையில் விழுக்காடு விழுவதில்லை.

இப்பொழுது நமது சேவையைப் பன்மடங்கு அதிகரிக்க வேண்டியிருக்கிறது. தேவ ஊழியம் செய்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கிற காலமாக இது உள்ளது. விரைவில் ‘பொது சமையல்’ துவக்கப்படவேண்டுமென நான் நினைக்கிறேன். பசிக் கொடுமையால் செத்து மடிகின்ற எண்ணற்றவர்கள் நமது திருச்சபையின் வாசலில் வந்து நின்றபடி இருக்கின்றனர். தேவனின் கிருபை அவர்களின் பால் விழ சித்தமான தருணமிது. இந்த நேரத்தில் காலதாமதமின்றி ‘அன்பு இல்லத்தின்’ தேவை இன்னும் பலமடங்கு அதிகரித்துள்ளது. ஊர்கள் தோறும் தாய் தந்தைகளை இழந்த அனாதைக் குழந்தைகள் நம்மை நோக்கிக் கைகளை நீட்டிக்காத்துக்கிடக்கின்றனர். நாம் அவர்களை யேசுவின் பால் கொண்டுவந்து சேர்க்க வேண்டும்.

இந்தச் செயல்களை எல்லாம் நாம் நினைத்த வேகத்திற்கு செய்ய முடியாததற்கு காரணம் பணம் மட்டுமே. நாம் ஞானஸ்நானம் தரவேண்டிய எண்ணற்றவர்களுக்கு தரமுடியாத நிலையை தமது வசதியின்மைதான் உருவாக்கியுள்ளது. எனவே உடனடியாக அமெரிக்கன் மிஷனுக்கு பெரும் பொருளாதார உதவித் தேவைப்படுகிறது. நமது சபையினருக்கும் அமெரிக்காவில் உள்ள கிறிஸ்துவின் பிற அன்பர்களுக்கும் தெரியப்படுத்தி இக்கட்டில் உதவும் நிதியை எவ்வளவு விரைவாக அனுப்பமுடியுமோ, அவ்வளவு விரைவாக அனுப்பச் சொல்லியிருக்கிறோம். நமது மருத்துவமனைக்கு அதிகமான மருந்துகள் தேவைப்படுகிறது.

புதிய ஆலயம் கட்டுவதற்கும், ஆலயத்திற்கான மணிகள் வாங்குவதற்கும், கண்ணாடி ஜன்னல்கள் வாங்குவதற்கும் நிதி திரட்டித் தருவது இப்பொழுது முக்கியமல்ல. கணக்கற்ற மக்கள் கர்த்தரை அறிந்துகொள்ளச் செய்வதுதான் மகா முக்கியமான காரியம். இப்பெருங்கூட்டத்தை கிறிஸ்துவின் கரையில் கொண்டுவந்து சேர்க்கவேண்டிய அவரின் கட்டளையை ஏற்று நடப்போம்.

கிறிஸ்துவில் மிகவும் பிரியமான உங்கள் சகோதரன்

லாரன்ஸ்

1876 பிப்ரவரி 2

*

**தே**க்கடியிலிருந்து பாதர் ஜேம்ஸ் எழுதிய கடிதம்:

கிறிஸ்துவின் பிரியமான சகோதரருக்கு,

‘கனி கொடுக்கிற கொடி எதுவோ, இது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதை சுத்தம் செய்கிறார்.’ (யோ 15:2)

ஒருபோதும் கொடி தண்ணீர் இன்றி வாடுவதையோ களைகளால் மூடப்படுவதையோ அவர் அனுமதிக்க மாட்டார். அவரின் கிருபையால் கனிகள் காய்த்துக் குலுங்கும்.

பசுமலையில் உள்ள மிஷனரிமாரின் கல்விப் பணியும் அதன் பால் உள்ள அக்கறையும் எனக்கு எப்பொழுதும் ஈர்ப்பு மிக்கதாக உள்ளது. பெண் கல்வி என்பது நமது மிஷனரிமார்களின் எண்ணத்தில் இருந்து வளர்ந்த அழகிய செடி. இந்தச் செடிக்கு முறையான தண்ணீர்விட்டு, கவனமாக வளர்த்தெடுத்து, பெரும் மரமாக்க வேண்டியது நமது கடமை. அந்த மரம் கொடுக்கப்போகும் கனிகளின் பலன் அளவிட முடியாது. அது மகிமை நிறைந்த காலத்தை உருவாக்கக் கூடியது. நமது கல்விப் பணியில் ஜாதி துவேஷத்தின் சாயல் கூட படரவிடக்கூடாது. அது கிறிஸ்துவத்தின் அடிப்படைக்கு அவமானத்தைச் சேர்ப்பது. ஆனால் இங்கு பல கிறிஸ்தவ சபையினர் ஜாதியை அனுசரித்தே போய்க்கொண்டிருப்பது கொடுமையாக இருக்கிறது. திருவிதாங்கூர் மிஷனரிமார் ஜாதியின் பால் கொண்டுள்ள அணுகுமுறை கிறிஸ்துவின் கொள்கையின் பாற்பட்டது என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? தஞ்சாவூர் சபையினரின் செயல்களைக் கண்டு ஒரு கிறிஸ்தவனால் மனம் வருந்தாமல் எப்படி இருக்க முடியும்? பலி பெறும்பொழுது தனித்தனி இருக்கைகள் இருப்பதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்? 1850ஆம் வருஷம் 82 பாதிரிமார்கள் சென்னையில் மாநாடு கூடி ஜாதி பாராட்டும் ஒழுக்கத்தை சபைகளினின்று ஒழிக்கும்படி ஒரு விதியை ஏற்படுத்தினர். ஆனால் அவை இன்னும் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை.

அமெரிக்கன் மிஷனரி இவ்விசயத்தில் உறுதியாக இருந்து செயல்படவேண்டும். ஜாதி எனும் விஷவிதை விழுந்தால் அது கொடியாய்ப் படர்ந்து அந்த இடத்தையே நஞ்சாக்கும். அந்நிலம் பாழும் நிலமாகும். அந்த விஷச் செடியை முளையிலேயே பிடுங்கி எறிந்து விடவேண்டும். இரண்டு விரல்களால் பிடுங்கி எறிந்து விடக்கூடிய காலத்தில் பிடுங்காமல் விட்டுவிட்டால் பின்னர் பிடுங்க இரண்டு விரல்கள் போதுமா? இரண்டு கைகள் போதுமா? எத்தனை கோடாரிகள் தேவையோ? பாவத்தை துவக்கத்திலேயே பிடுங்காவிட்டால் அதன் முடிவு மரணமாகும். எனவே ஜாதி துவேஷத்திற்கு எதிராக உறுதியுடன் இருங்கள்.

பஞ்சத்தின் கொடுமை எவ்வளவு அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உங்கள் கடிதத்தின் மூலம் முழுமையாக அறியமுடிகிறது. இங்கேயும் அதன் பாதிப்புகளை உணர்ந்தபடியே இருக்கிறேன். கம்பம் பகுதியிலிருந்து பஞ்சம் பிழைக்க வருகின்ற கூட்டம் ஒவ்வொரு நாளும் கணக்கின்றி வந்தபடி இருக்கிறது. அணை கட்டும் பணி கைவிடப்பட்டதால் வேலைக்கு ஆள் எடுக்க இங்கு யாருமில்லை. ஏற்கனவே இங்கு வேலை செய்தவர்களில் பெரும்பான்மையோரை மரணம் விழுங்கிவிட்டது. சிறுத்தையோடு சண்டையிட்டு ஜெயித்தவன்

கூட மாதம் ஒன்று கடப்பதற்குள் மலேரியா காய்ச்சலில் உயிரை விட்டான். இந்தக் கொடுமையான செய்திகள் எதுவும் இவர்களுக்குப் போய்ச்சேருவதில்லை. எப்படியாவது வேலை கிடைக்காதா என்ற ஏக்கம் மரணத்தை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ள விடுவதில்லை. இந்தப் பெருங்கூட்டத்தைக் கண்ட திருவிதாங்கூர் சமஸ்தான அதிகாரிகள் தங்களின் எல்லைக்குள் அனுமதிக்காமல் திருப்பி விரட்டியபடி இருக்கின்றனர். பரட்டைத்தலையோடு உயிர்ச்சத்தின்றி மலையேறி வருகின்ற இந்தக்கூட்டம் திருப்பி அனுப்பப்படுவதென்பது பார்க்கவே சகிக்க முடியாதது.

சமவெளிப் பகுதியில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தின் பாதிப்புகளை இங்கிருந்தே என்னால் நன்கு உணரமுடிகிறது. நான் ஏற்கனவே வேறு சில உதவி நிதிகள் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளேன். அவை ஏறக்குறைய ஒரு மாத காலத்திற்குள் உங்களுக்கு வந்து சேரும். அது தவிர இக்கட்டில் உதவும் நிதி கிடைக்கவும் எழுதியுள்ளேன்.

கிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமான உங்கள் சகோதரன்

ஜேம்ஸ்,<br>
1876 மார்ச் 8

*

**ம**துரையின் கொடும் பஞ்சமும், நெடுந்துன்பமும் நீங்கி எல்லா ஜீவனுக்கும் நல்ல அனுகூலம் ஏற்படுமாறு மழை பெய்ய புராண பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்வதென்று நகரின் முக்கியஸ்தர்கள் எல்லாம் புதுமண்டபத்திலே கூடி முடிவெடுத்தார்கள். மீனாட்சியும் சுந்தரேசக் கடவுளும் எழுந்தருளிய திருக்கோயிலின் ஆடி வீதியில் அமர்ந்து திருவிளையாடல் புராணம் படித்தால் மும்மாரி பெய்யும் என்ற மரபு வழிப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக செய்யப்பட்டது. திருவிடைமருதூரைச் சேர்ந்த நீலகண்ட ஐயர் பிரசங்கத்திற்காக அழைக்கப்பட்டார். அவர் கல்லாடத்தில் வழக்காடும் பெரும் புலவர். நாடறிந்த வித்துவான். ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்ற மாணவர். அவரும் ஒத்துக்கொண்டு, நல்லபடியாக வந்து சேர்ந்தார். மனைவி, மூன்று குழந்தைகளுடன் வந்து சேர்ந்த அவரை தளவாய் அக்ரஹாரத்தில் உள்ள ஒரு வீட்டில் தங்க வைத்தனர். புராணம் ஒரு நல்ல நாளில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயிரங்கால் மண்டபத்தின் மேற்குப் பகுதியில் பிரசங்கம் துவங்கியது. முதல் நாள் பெரும் விஷேசம் போல் ஜனங்கள் திரண்டிருந்தனர். கொடி மங்கலம், துவரிமான், நெடுங்குளம் போன்ற பக்கத்து கிராமத்து அக்ரஹாரத்தில் இருந்த பெரிய மனிதர்களும் வந்திருந்தனர். பஞ்சகச்சமும் அங்கவஸ்திரமும் சரிகை இழைக்கப்பட்ட தலைப்பாகையுமாக ஆயிரங்கால் மண்டபம் களை கட்டியிருந்தது. வடக்கு சித்திரை வீதி முழுக்க வண்டிகள் நின்றன. கோயிலில் இவ்வளவு பெரிய கூட்டம் கண்டு மாதங்கள் பல ஆகிவிட்டன.

மெலிந்த தேகம், அதன் நடுவே முப்புரிநூல், முழங்கால் வரை நீண்ட கைகள், அகன்ற நெற்றியில் நிறைந்த திருநீறு, சாந்தமேறிய முகம், பின்புறத்தில் சிறிய குடுமி. இடுப்பிலே தூயவெள்ளை ஆடையுடன் இருந்த நீலகண்ட ஐயர், காவிரி போல் கவிபாடுவதில் வல்லமையுடைய பெரும்

புலவர். அம்மன் சந்நிதிக்கும் சுவாமி சந்நிதிக்கும் சென்று வழிபட்டுவிட்டு, ஆயிரங்கால் மண்டபத்தின் நடுவே இருந்த திண்டின் மேல் ஏறி அமர்ந்தார்.

சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர

முக்தி யானமுதலைத் துதி செயக்

சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ

சித்தி யானை தன் செய்ய பொற் பாதமே

என்ற காப்புச் செய்யுளுடன் திருவிளையாடற் புராணத்தின் மதுரைக் காண்டத்தைத் துவக்கினார்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் பிரசங்கம் நிகழ்ந்தது. பிரசங்கத்தில் கரைகண்ட நீலகண்ட ஐயர் புராணங்களிலும், இலக்கியங்களிலும் இருந்த பாடல்களைப் பாடிக்காட்டினார். சமஸ்கிருத புலமையுள்ளவர் ஆதலால் தமிழ்ப் பாடல்களும் சமஸ்கிருத ஸ்லோகங்களும் மடைதிறந்து விழுந்த வண்ணம் இருந்தன. பதத்துக்குப் பதம் விளக்கம் சொல்லி, வியாக்கியானம் செய்யும் கெட்டிக்காரர் என்று கேட்போர் தினமும் பாராட்டினர். மூர்த்தி விசேடம் முடித்து, பதிகம் பாடி, படலம் துவங்கும் வரை சிறுகச்சிறுகக் குறைந்த கூட்டம், பின்னர் மிகக்குறைவாகவே தினமும் கூடியது. பஞ்சம் ஏற்படுத்திய மனநிலை மனிதர்களை வீட்டை விட்டு வெளியே வரவிடமால் செய்துகொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக வந்து சேர்கிற தகவல்கள் மிகவும் சோர்வூட்டுவதாகவும், நம்பிக்கை இழக்க வைப்பதாகவும் இருந்தது. ஒவ்வொரு மனிதரும் தினமும் ஏதாவதொரு மரணச்செய்தியை கடந்துதான் பிரசங்க மண்டபத்துக்கு வரவேண்டியிருக்கிறது.

பிரசங்கம் துவங்கி ஒரு மாதமாகி விட்டது. நிலைமையில் மாற்றமேதுமில்லை. வானம் கனிவு கொள்ள வாய்ப்பேதும் தென்படவில்லை. நிலைமை மேலும் மேலும் மோசமாகியபடியே இருந்தது. பிரசங்கியின் வீட்டிற்கு தினமும் காலையில் அரிசி, காய்கறிகள் முதலான உணவுப் பொருட்கள் கொடுப்பதில் திடீர் சிரமங்கள் ஏற்பட்டன. தருவதாக ஒத்துக்கொண்டு தினமும் தந்துகொண்டிருந்த சிலர் ஒரு மாதத்திற்குப் பின் தொடர்ந்து தருவது கஷ்டம் என்று தெரிவித்தனர். பிரசங்கி ஐந்துபேருடன் வந்தால் சிரமம் வரத்தானே செய்யும் என்ற கருத்து வெளிப்படையாக வரத் துவங்கியது. நீலகண்ட ஐயர் விஸ்தாரமாக பல புராணங்களில் இருந்து உவமைகளை எடுத்துச் சொல்லி விளக்கிக் கொண்டு வருவதைப் பார்த்தால் புராணம் முடிய இன்னும் பல மாதங்கள் ஆகும் எனத் தெரிந்தது. எனவே ஏற்பாடு செய்தவர்கள் கலந்து பேசி மீனாட்சியின் திருக்கல்யாணத்துடன் பிரசங்கத்தை முடித்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அதை நீலகண்ட ஐயரிடம் தெரிவித்தவுடன் அவரும் நிலைமையைப் புரிந்து ஏற்றுக்கொண்டார். இன்னும் பத்து தினத்தில் புது வருஷம் பிறக்கிறது. அன்று திருக்கல்யாணத்துடன் நிறைவு செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

திருநகரங் கண்ட படலத்தையும், தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரப் படலத்தையும் வேகவேகமாக விளக்கியபடி இருந்தார் நீலகண்ட ஐயர். எந்நேரமும் உள்ளே வரத் தயாராக இருந்த சமஸ்கிருத

ஸ்லோகங்களை அழைக்காமல் காக்க வைத்தபடியே ஒவ்வொரு நாள் பிரசங்கத்தையும் முடித்தார். அவரின் குரல் ஆயரங்கால் மண்டபத்திற்குள் சுருங்கியபடியே இருந்தது. ‘மதுரையம்பதியே நிறுத்தச் சொல்லிவிட்டபின் அடுத்து எங்கு போய் பிரசங்கித்து ஜீவனைக் காப்பாற்ற?’ என்ற துக்கம் அவரது தொண்டையைப் பிடித்தபடி இருந்தது. மீனாட்சி திருக்கல்யாணத்துக்கு அடுத்து, குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலத்திலிருக்கும் தீராப்பசி அவரின் சிந்தனை முழுவதும் பற்றியிருந்தது. மீனாட்சி திருமணத்தை முடித்து மதுரையை விட்டுப் புறப்பட்டாள். அவருக்கான அடுத்த படலம் அதுதான்.

அடுக்க நின்ற குண்டோதர னகட்டிடை வடவை

மடுக்க வுன்னினா னது வந்து வயிற்றெரி பசியாய்த்

தொடுக்க வாலமுன் டாங்குடல் சோர்ந்து வேர்த் தாவி

ஒடுக்க முற்றைய பசியனா லுயங்கினே னென்றான்.

என்ற வரி அவரது தொண்டையில் சிக்கி வெளியேறவும் வழியில்லாமல் உள்ளே செல்லவும் முடியாமல், தவித்தபடி இருந்தது. ‘சிவனே’ என்று கத்திக்கொண்டு ஓட வேண்டுமென்று தோன்றியது. ஆனால் வாய் திருமணப் படலத்தின் பாடல்களை உச்சரித்துக் கொண்டிருந்தது. தடாதகையின் மூன்றாவது கொங்கை மறைந்தது. சந்தோஷமும் அலங்காரமும் நிறைந்த சூழல் வர்ணனை. நீலகண்ட ஐயரின் கண்களில் கண்ணீர் ததும்பி வழிந்தது.

ஏற்பட்டாளர்கள் பிரசங்கிக்கு கொடுத்தனுப்ப வேண்டிய சன்மானத்தை வசூலித்துக் கொண்டிருந்தனர். சாதாரணக் காலங்களில் பிரசங்க நிறைவு என்பது. பெரும் பந்தலிட்டு, மாவிலைத் தோரணங்கள் கட்டி, வாழைகளோடு, தென்னங்கீற்றால் அலங்கரித்து பெருந்திருவிழா போல் கொண்டாடப்படும். ஆனால் இந்தப் பஞ்ச காலத்தில் அதற்கெல்லாம் எங்கே போக? எனவே புது வருஷத்தன்று காலையில் நடக்கும் விஷேசபூஜை முடிந்தவுடன் பிரசங்கிக்கான சன்மானத்தை கொடுத்தனுப்புவது என்று யோசித்து, அதற்கான வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். சன்மானம் நினைத்த அளவுக்கு வந்த சேரவில்லை. எனவே முதல் நாள் வரை அந்த வேலையில் ஏற்பாட்டாளர்கள் ஈடுபட்டிருந்தனர். கைத்தலம் பற்றுவதற்கு முந்திய பாடலோடு முடித்தார் நீலகண்ட ஐயர்.

*

இருள் நிறைந்த வானம் நீலத்தைத் தொடர்ந்து சிவப்பேற ஆரம்பித்தது. கோபுரங்களில் இருந்த புறாக்கள் சிறகடித்து வெளியேறின. பறவைகளின் சத்தம் அங்குமிங்குமாகக் கேட்டபடி இருந்தது. புது வருஷத்தில் மனிதர்கள் உற்சாகம் மிகுந்த முகங்களுடன் கோயிலை நோக்கி வரத்துவங்கினர். எல்லாத் தடைகளையும் விலக்கி வெற்றி தரும் ஆற்றல் படைத்த விக்னேசுவரரை வணங்கிய பூசகர்கள் பள்ளியறைக்குச் சென்று அம்மனையும் சுவாமியையும் துயிலெழுப்ப பாடல்களைப் பாடினர். மேளதாளங்களின் ஒலியால் பிரகாரங்கள் நிறைந்திருந்தன. மக்கள் கோயிலுக்குள் வரத் துவங்கினர். மீனாட்சியின் திருக்கோலத்தின் முன்பும், சுந்தரேசுவரரின் கருவறைக்கு முன்பும், பஞ்சத்தின் அடங்காத

வேதனையைச்சொல்லி மனமுருக வேண்டிக்கொண்டு நின்றனர். கருவறைக்குள் இருந்து பொங்கிவந்த மலர்களின் வாசனை அவர்களுக்கு புதுவருஷத்தின் நம்பிக்கை மிகுந்த கதவுகளைத் திறந்துவிட்டது. தீபாராதனைகள் நடைபெற்றன. தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டபாலை எடுத்து பூசகர்கள் பக்தர்களுக்கு சிறுகச் சிறுக கொடுத்தனர். உணர்ச்சி ததும்ப வாங்கி அருந்தியது பக்தர்கள் கூட்டம். திருவனந்தல், காலசாந்தி, திரிகால சாந்தியென பூசைகள் வரிசையாக நடைபெற்றபடி இருந்தன.

இரண்டு சந்நிதிக்கும் போய் வணங்கிவிட்டு பொற்றாமரைக் குளத்தின் இடது ஓரத்தில் வந்து அமர்ந்தார் நீலகண்ட ஐயர். அவரைச் சுற்றி அனைவரும் வந்து அமர்ந்தனர். சிறிது நேரத்தில் பிரசங்கத்தை துவக்கி ‘தனித்த மெய்யறி வானந்த மாம் பர தத்துவமாய் நின்றான்’ எனச்சொல்லி திருமணப் படலத்தை முடித்தார். ‘சிவசிவா...சிவசிவா...’ என்று மந்திரங்கள் முழங்க எல்லோரும் இறைவனை வணங்கிவிட்டு நீலகண்ட ஐயருக்கான மரியாதைகளைச் செய்தனர். அவருக்குப் பணமாகவும், பொருளாகவும், ஆடைகளாகவும் சன்மானம் வழங்கப்பட்டது. ஆனாலும் குறைவாகவே இது இருந்தது. எந்தச் சலனமுமற்ற அவரது முகம் நீரற்ற பொற்றாமரைக் குளத்தையே பார்த்துக்கொண்டிருந்தது.

பொற்றாமரைக் குளத்தின் வலது புறம் அமர்ந்திருந்த பஞ்சாங்க ஜோதிடரின் முன் மக்கள் கூட்டம் சென்று அமர ஆரம்பித்தது. புது வருஷத்தின் பலன்களையும், லாபங்களையும் அவர் விளக்கினார். கேட்டுக் கொண்டிருந்தவர்களின் முகங்களில் நம்பிக்கை ஒளி வீசியபடி இருந்தது.

பொற்றாமரைக் குளத்திற்கு நேர் எதிரே கிழக்குத் திசையில் இருந்து புதிதாய்ப் பிறந்துள்ள தாது வருஷத்தின் முதல் நாள் சூரியன் நெருப்புக் கோளமாய் மேலெழும்பி வந்தான்.

*

# ஊ
# மெஜூரா சிட்டி

# 77

**தாது கழிந்து மூன்று வருடமாகிவிட்டது. ஆனால். அது ஏற்படுத்திச்** சென்ற துயரத்தின் வலி இன்னும் நூறு வருடமானாலும் இந்த மண்ணை விட்டு மறையாது. தப்பிப் பிழைத்தவர்கள் அபூர்வ பொக்கிஷங்களாக இருந்தார்கள். அவர்கள் மீண்டும் வாழ்வை முதல் புள்ளியிலிருந்து துவக்க வேண்டியிருந்தது. நிலமும் நீரும் மரமும் மலையும் பயங்கர மரணங்களை நிகழ்த்திய சாட்சியங்களாக இருந்து அச்சுறுத்திக் கொண்டேயிருந்தன. தாது வருஷத்தை நினைவிலிருந்து அழிக்கமுடியாமல் துடித்தபடியே அவர்கள் இருந்தனர். கடந்த இரண்டு ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் நல்ல மழை இருந்தது. ஆறு குளம் பெருக்கெடுத்து நீர்நிலைகள் எல்லாம் நிரம்பின. பூமியெங்கும் பச்சைப் பசேலென்றானது. ஆனாலும் மனிதர்களால் புதுவாழ்வு நோக்கிப் போகமுடியவில்லை. இந்த மண்ணில்தான் இவ்வளவு மரணங்களும் நிகழ்ந்தன. இந்த ஈரப்பசை இல்லாமல்தான் சொந்தம் சுருத்தெல்லாம் கூட்டம் கூட்டமாகச் செத்து மடிந்தது. ஆனால் எதுவும் நடக்காதுபோல மண்ணின் மீது செடிகொடிகளெல்லாம் மீண்டும் தழைத்துக்கிடக்கின்றன. கண்மாய் குளங்களில் நிரம்பிய தண்ணீரில் மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. நினைவுகளால் ரத்தம் உறிஞ்சப்பட்டுக்கிடக்கும் மனிதர்கள் இயற்கையின் அழைப்பை ஏற்று பாதத்தை தூக்கி முன் நகர்த்தமுடியாமல் தவித்துக் கிடந்தனர். காலம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைக் கரைத்தது. மீண்டும் ஏரைப் பூட்டி உழச் சொன்னது வயிறு. மிஞ்சியவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கிராமம் ஆனார்கள். ஒரு பாத்தியில் ஒரு செடி மட்டும் தழைவதைப்போல ஏழெட்டு கிராமங்கள் சூழ்ந்திருந்த நிலப்பரப்பு ஒற்றை கிராமமென உயிர்ப்புற்றது. கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் இன்னொரு கிராமம் உயிர் பெற்ற வாசனை காற்றிலே வந்தது. இப்படியாக உயிர்பெற்ற கிராமங்களையெல்லாம் வண்டித்தடங்கள் இணைத்தன; நகரத்துக்கு கொண்டுவந்து சேர்ந்தன.

நகரம் புதிதாய் பிறப்பெடுத்திருந்தது. தனது அடர்த்தியை பாதிக்கு மேல்

இழந்திருந்தது. மீண்டும் கொட்டத்திலிருந்து அவிழ்க்கப்பட்ட மாடுகள் நகரத்தை விட்டு வெளியேறி மேய்ச்சல் நிலங்களை நோக்கி நடந்தன. மணியோசை நகரத் தெருக்களைக் கடந்தது. புதிய சாரட் வண்டிகளும் கூட்டு வண்டிகளும் தெரிய ஆரம்பித்தன. கிராமத்து விளைச்சல் கடைவீதியில் வந்து இறங்க ஆரம்பித்தது. குறவனும் குறத்தியும் பகலெல்லாம் உட்கார்ந்து நொச்சிப் பிரம்பால் கூடை முடைந்தனர். பறவைகள் மரத்துக்கு மரம் அடைய ஆரம்பிதன. காலையும், மாலையும் பறவைகளின் கீச்சுக் குரலால் வெளி நிரம்பிக்கிடந்தது. செக்கடி உரலில் வித்துகள் நசுங்கி எண்ணெய் கசிந்தது. கோயில்களில் திருவிழாக்கள் துவங்கின. கொல்லன் லாடமடிக்க கால்களில் கயிறுகளை இறுக்கக்கட்டி காளையைச் சரித்தான். நகரம் புத்தெழுச்சியுடன் விழிப்படைந்தது.

மீண்டும் வாழ்க்கை துவங்கியது. ஆனால், பழைய வாழ்க்கையை என்ன செய்வதென்று தெரியவில்லை. அது உடன் வந்துகொண்டேயிருந்தது. நினைவுகளின் நாக்கு சதா ரத்தத்தை உறிஞ்சியபடியே இருந்தது. எதை எதையோ மறக்கவேண்டியிருக்கிறது. மிஞ்சிய ஒருவன் மொத்த ஊரையும் மறப்பதற்காகப் போராடுகிறான். ஆனால், மொத்த ஊரும் மிஞ்சிய ஒருவனை நோக்கி வந்துகொண்டேயிருக்கிறது. ஒவ்வொருவனும் இப்படி ஓராயிரம் நினைவுகளுக்கு எதிராக நாட்களைக் கடக்கிறான். மீண்டும் வீட்டுப் பரணில் தாவிக் குதித்தோடும் எலியைக்கண்டு அதிர்ச்சியில் கைகாலெல்லாம் உறைந்துபோய் மனிதர்கள் உட்கார்ந்து விடுகிறார்கள். எலிகள் துள்ளிக்குதித்துப் போய்விடுகின்றன. வேப்பமரம் புதிதாய்த் தழைக்கிறது. ஆனால், மனிதர்கள் பழைய வாழ்வைப் பட்டையை உரிப்பதைப் போல உரிக்க முடியாமல் சுமந்து திரிந்தார்கள். இவ்வளவு இடைவெளிக்குப்பிறகும் சிலர் பைத்தியமானார்கள். இவ்வளவு நாள் மனதில் அடக்கி வைத்திருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்து நரம்பு விடைக்கக் கத்தி எதிரில் பட்டவைமீதெல்லாம் முட்டிக்கொண்டு ஓடினார்கள். புதிதாகப் பைத்தியங்கள் உருவாக ஆரம்பித்தன. ஆனால், மடமடவென அவர்களின் எண்ணிக்கை அதிகமாகியது. பயமும் பித்தும் மனிதர்களைச் சுற்றியபடியே இருந்தன.

*

**கா**லம் புரண்டு வசந்தத்தின் வாசலில் வந்து நின்றது. குளிர் காற்று நகரத்தின் மேனியைப் பொழுதெல்லாம் தழுவிச்சென்றது. சிட்டுக்கருவியின் குரல்கள் உதிரும் பூக்களைப்போல மரமெங்குமிருந்து உதிர்ந்தபடி இருந்தன. செம்மணிக் கண்களோடு கருங்குயில்கள் குரல்களின் வழியே பறந்தன. மைனாக்களின் கீச்சொலியால் தெருக்கள் நிரம்பின. ஒவ்வொரு அதிகாலையிலும் காக்கைகள் கரைந்து நகரை எழுப்பின. மாலையில் தென்மேற்கில் இருந்து வீசிவந்த ஈரக்காற்று, பறந்தபடியே நின்றுகொண்டு தேனெடுக்கும் சிட்டுக்களின் நீள அலகுகளைச் செல்லமாய் தட்டிச் சென்றது. சூழலின் லயத்தில் மோகம் தழைத்தது. புதிய அழகோடு ஆணும், பெண்ணும் மீண்டு வந்தனர். மறந்த நிலப்பரப்புக்குள் மீண்டும் காற்று கிழியும் வேகத்தோடு மனிதர்கள் நுழைந்தனர். கூடலின் சிணுங்கல்கள் தாழிடப்பட்ட கதவைத் தாண்டி வந்தன. கருவறை மீண்டும் சூல்கொண்டது.

புதிய உயிர் கருக்கொண்டதும் கொண்டாட்டங்கள் தொடங்கின. பெண் உதடுகள் பூரித்தன. கைவளைகள் குலுங்கின. மஞ்சள் பூசி நிறைமதியன்ன முகத்துடன் அலுங்காமல் குலுங்காமல் நடக்க ஆரம்பித்தனர். மாதங்கள் கடந்து பத்தைத் தொட்டதும் கருமை துலங்கும் முடியோடு குழந்தைகள் உலகைக் கண்டன. பிறந்த உயிர் அபூர்வமாகப் புன்னகைத்தது. கைகால்களை ஆட்டியபடி கண்களைத் திறந்து மனிதர்களைப் பார்த்தது. புது உயிர்..புது மனிதன் ஊரிலே தோன்ற ஆரம்பித்தான். கடந்த காலம் பற்றி எதுவும் தெரியாத புது உயிர் வளர ஆரம்பித்தது. குழந்தையைக் குடும்பம் குடும்பமாக வந்து பார்த்துப்போயினர். பிறப்பைக் கொண்டாட ஆசை தீரக் குடித்தனர். ஏறிய போதையிலும் குழந்தையின் அபூர்வ சிரிப்பை ரசித்து மீண்டும் குடித்தனர்.

பிரசவ வலி தாங்காமல் மயங்கிக்கிடந்த தாய் தெளிச்சி கொண்டு எல்லோரையும் விலக்கித் தன் குழந்தையை எட்டிப் பார்த்தாள். அந்தப் புது உயிர் முழுக்க அவளின் கடந்த காலமாக இருந்தது. குழந்தையின் கை, கால், முகம், கண்கள் என எல்லாம் மூதாதயரை நினைவூட்டியது. அய்யோ...வெனக் கத்தி, பால் திரண்ட மார்பை இரண்டு கைகளாலும் மாறி மாறி அடித்துக் கொண்டு காலத்தைப் பார்த்து கதறி அழுதாள். எண்ணிலடங்கா மரணங்களை அவ்வளவு எளிதில் மறந்துவிடக் கூடிய பலம் மனிதர்களுக்கு இல்லை. எல்லாவற்றிலும் மரணங்களைக் கடந்து வந்தவர்கள், எல்லாவற்றையும் மரணத்தைக் கடந்துதான் செல்ல வேண்டியிருந்தது. பாலைநிலத்தின் வெம்மைவெளியைப்போல மரணம் மேவிக்கிடந்தது. அவர்கள் எங்கு போனாலும் எவ்வளவு தூரம் பார்த்தாலும் சாவின் நிழலைத் தாண்ட முடியவில்லை. குழந்தையின் சிரிப்பைப் பார்த்து தாய் வெடித்து அழுதாள். உறைந்துபோன கல்லாய் இருந்த அவளின் மார்பிலிருந்து அது பால் குடித்துவிட்டு மீண்டும் சிரித்தது.

*

**தா**து வருடத்தைத் தொடர்ந்து இரண்டாண்டுகள் நல்ல மழைபெய்து பூமியின் வெக்கையைத் தணித்தது. மூன்றாம் ஆண்டான பிரமாதி (1880) ஆண்டில்தான் வாழ்க்கை மீண்டும் மண்ணில் வேர்பிடிக்கத் துவங்கியது. பூமி விளையத் தயாரானது. இழைத்துக் கொடுத்த கலப்பைகள் மண்ணை உழுது தீர்த்தன. வரப்புகள் மிதிபட்டு நெளிந்தன. புதுக்கடையாணிகளுடன் வண்டிகள் உருண்டன. குயவனின் சக்கரம் சுழல ஆரம்பித்தது.

நகரின் இயக்கம் மெல்ல மெல்ல வேகமாகியபடி இருந்தது. மனிதர்கள் புதுவாழ்வுக்குள் தங்களை உந்தித் தள்ளியபடி இருந்தனர். தெருக்களில் பெண்களின் பேச்சொலி அதிகரித்தது. அவர்கள் ஒவ்வொரு நாளும் கடந்த காலத்தைப் பற்றிப் பேசக்கூடாது என் நினைத்துத்தான் பேச்சை ஆரம்பிக்கின்றனர். ஆனால், துவங்குகிற இடத்தை மட்டும்தான் அவர்களால் தீர்மானிக்கமுடிகிறது. பெண்கள், ஆண்கள், வயோதிகர்கள் என எல்லோரும் அப்படித்தான். வீட்டுத்திண்ணையும் மண்டபமும் கோவில் குளங்களும் புதை மேடுகளைப் போலவே இருந்தன. மனிதர்கள் அங்கு அமர்ந்தவுடன் அவர்களையும் அறியாமலேயே புதைகுழிக்குள் இழுபட்டுப் போய்விடுகின்றனர். மீண்டும் மீண்டும் பேசிப்பேசியே வலியை ஆற்றினர். கொஞ்சம் கொஞ்சமாக விடுபட முயற்சித்தனர். பெரும் இருள்குகையில் இருந்து தப்பி வந்தாலும் கண்களிலிருந்து இன்னும் அந்த

இருள் மறையவில்லை. அவர்கள் தொடர்ந்து முயற்சித்தபடியே இருந்தனர். இனி அந்தக் கொடும் அவலத்தைப் பற்றி யாரும் பேசக்கூடாதென புதுமண்டபத்தில் கூடிய பெருசுகள் முடிவெடுத்தனர். அன்றைய இரவு அயர்ந்து தூங்கும் வரைதான் அந்த முடிவு நின்றது. மீண்டும் மறுநாள் வழக்கமான நாளாகவே துவங்கியது.

எல்லாவற்றையும் மறந்துவிட எவ்வளவோ முயற்சித்தாலும் இரண்டு பேரைப் பற்றி பேசாத மனிதர்கள் யாரும் இல்லை, எல்லோரும் அந்த இரண்டு பேரைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டேயிருந்தனர். எத்தனையோ தெய்வங்களை அழித்த தாது வருடத்தின் விதையிலிருந்து முளைத்த புதிய தெய்வங்களாக அவர்கள் மாறினர். இன்னும் எத்தனை வருடங்கள் ஆனாலும் தாது வருடத்தை விட்டுப் பிரிக்கமுடியாத பெயர்களாக அந்த இரண்டு பெண்களின் பெயரும் அமைந்துவிட்டது.

ஒருத்தியின் பெயர் நல்லதங்காள்.

இன்னொருத்தி குஞ்சரத்தம்மாள்.

*

**கு**ஞ்சரம் தாசி குலத்துப் பெண்மணி. பத்தாண்டுகளுக்கு முன்புவரை நகரில் கொடிகட்டிப்பறந்த தாசி. பெரும் செல்லவச் செழிப்போடு இருந்தவள். மதுரை நகரம் மட்டுமல்லாமல் வேறு நகரத்திலிருந்த செல்வந்தர்களெல்லாம் குஞ்சரத்தின் அழகில் மயங்கிக் கிடந்தனர். வாழ்க்கையில் குஞ்சரத்தை ஒரு நாளாவது பார்த்துவிட வேண்டுமென வண்டி கட்டி வந்த மைனர்கள் பலர் உண்டு. பெருக்கெடுத்து ஓடும் இசை எனும் ஜீவநதியின் படித்துறையிலே அவளது வீடு இருந்தது. மந்திரப்பொடிகளை அரைத்துப் பூசப்பட்ட கட்டிடம் அது. சர விளக்கும் கொத்து விளக்கும் வீட்டை வண்ணமயமாக்கி வைத்திருந்தன. காமத்தின் பாதங்கள் அவள் சொல்லும் ஜதிக்கு ஏற்ப ஆடிக்களைத்து அடங்கும். அவள் காமத்தையும் கலையையும் ஆண்டு முடித்தவள். அவள் அளவிற்குப் பொருள் சேர்த்த தாசி யாருமில்லை.

வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ள சந்தில் இருந்த இரண்டு பெரும் வீடுகளும் அவளுடையவைதான். எந்நேரமும் மிருதங்கத்தின் தாளமும் சலங்கையின் ஒலியும் கேட்டபடி இருந்த அந்தப் பெரிய வீட்டிலிருந்துதான் அவள் தாது வருடம் துவங்கிய இரண்டாவது வாரத்தில் அந்த முடிவினை எடுத்தாள். கொடும் பஞ்சத்தில் மக்கள் கஞ்சிக்கு வழியின்றி, கணக்கின்றிச் சாவதைப் பார்த்து, வேதனையால் துடித்து தினமும் கஞ்சி காய்ச்சி ஊற்றத் துவங்கினாள். பெரும் வட்டையில் காய்ச்சிய கஞ்சியை விசாலமான தனது வீட்டுத் திண்ணையில் வைத்து அவள் ஊற்றும் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. வடக்கு ஆவணி வீதியை நோக்கி மக்கள் சாரை சாரையாய் வர ஆரம்பித்தனர். ‘தாயீ...தெய்வந் தாயீ... நீயி’ எனச் சொல்லி மக்கள் அந்தக் கஞ்சியை வாங்கிக் குடிக்கமுட்டி மோதிக்கொண்டு ஓடிவந்தனர். ‘இவளுக்கு எதுக்கு இந்த வேல! சேத்த சொத்தையெல்லாம் தெருவுல விட்டுட்டு போகப்போறா’ என்று பெருந்தனக்காரர்கள் பேசிக்கொண்டனர். அவளின் செய்கை அவர்களை கூசச்செய்தது. ஆனால் அதை வெளிக்காட்டாமல் அவள் மீது பச்சாதாபப்படுவது போலத் திட்டித் தீர்த்தனர். கஞ்சி ஊத்தும்

செய்தி கேட்டு மக்கள் வந்துகொண்டேயிருந்தனர். அந்தக் கூட்டத்தை கண்கொண்டு பாரக்க முடியவில்லை. பரட்டைத் தலையும் எலும்பும் தோலுமாக துணியென்று சொல்லமுடியாத ஒன்று இடுப்பிலே சுற்றியிருக்க குழந்தைகளைத் தூக்கியபடி வரிசைவரிசையாக வந்துகொண்டிருந்தனர். ஒரு வட்டையில் துவங்கியது மூன்று வட்டையானது. அதற்கு மேல் அதிகப்படுத்த முடியவில்லை. தினமும் ஒருவேளைக் கஞ்சி ஊற்றப்பட்டது. அந்தக் கஞ்சியை வாங்க காலையிலிருந்தே கால் கடுக்க நின்றனர். அகப்பைச் சத்தம் வரிசையில் நிற்கும் பாதங்களை முன்நகர்த்தியபடியே இருந்தது. ஏற்கனவே நகரத்தை விட்டுப் போன கூட்டம் போக எப்படியாவது தாக்குப்பிடித்து பஞ்சத்தை கடந்துவிடலாம் என்ற விடாப்பிடியான வைராக்கியத்துடன் இருந்தவர்கள் குஞ்சரத்தைப் பற்றிக்கொண்டனர். உயிரைத் தக்க வைத்து பஞ்சத்தைத் தாங்க அவர்களுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாக வடக்கு ஆவணி மூல வீதியில் நின்ற வரிசை இருந்தது. சம்சாரித்தனம் செய்தவர்கள், உழவாரப் பணி செய்தவர்கள், தெருக்களில் கூவி விற்றவர்கள் என எல்லோரும் வந்து நின்றபடி இருந்தனர். தேவையின் பயங்கரம் நினைத்துக்கூட பார்க்கமுடியாதபடி இருந்தது. ஆனாலும் அவள் அடுப்பிலே விறகுகளைத் தள்ளி தன்னம்பிக்கையோடு எரித்துக்கொண்டிருந்தாள்.

குஞ்சரத்தின் இந்தத் துணிவுமிக்க செயல் நகரில் உள்ள பெரும் செல்வந்தர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் மறைமுகமான நெருக்கடியைத் தந்தது. அவர்களும் எப்பொழுதாவது ஒருநாள் கோயிலில் வைத்து சிறுதானங்களைச் செய்தனர். தாது வருடத்தின் ஆறாவது வாரத்தில்தான் கலெக்டர் கஞ்சித்தொட்டியைத் திறக்க முன்வந்தார். ஒருவகையில் குஞ்சரத்தின் செயல் அவரை அந்த முடிவை நோக்கி விரைந்து தள்ளியது. நகரில் மூன்று இடங்களில் அரசு கஞ்சித் தொட்டியைத் திறந்தது. ஆனால், தினமும் மதிய வேளையில் நிச்சயிக்கப்பட்ட அளவே கஞ்சி காய்ச்சி ஊற்றப்பட்டது. நகரின் மொத்தப் பசிக்கு குஞ்சரத்தின் அடுப்பே கதி என இருந்த நிலைமை கொஞ்சம் மாறியது. அரசாங்க கஞ்சித்தொட்டி வடக்காவணி வீதியில் நின்ற நெடும் வரிசையைப் பகுதி பிரித்துக்கொண்டது.

கலெக்டர் சூழலைப் பயன்படுத்தத் திட்டமிட்டார். கஞ்சித்தொட்டியை முன்வைத்து நகரில் எட்டு இடங்களில் குடிநீர் கிணறு தோண்டத்திட்டமிட்டு பணிகளைத் துவங்கினார். மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை புகைவண்டிப்பாதை அமைக்கத் திட்டமிட்டப்பட்டது. உயிரைத் தக்கவைப்பதற்கான கஞ்சியை மட்டுமே ஊற்றி பெருங்கூட்டத்தை இந்தப் பணியில் இறக்கினர். பல நூறு மைல் தூரம் தண்டவாளம் அமைக்கும் பணியில் பஞ்சப்பராரியான மக்கள் கூட்டம் கூட்டமாக மண்ணைச் சுமந்துகொண்டிருந்தனர். கால் துட்டுப் பணத்திற்கு இரவு பகலாகப் பணியாற்றினர். வெள்ளை அதிகாரிகள் எந்நேரமும் வேலையைத் தீவிரப்படுத்தியபடி இருந்தனர். கணக்கிட முடியாத அளவு மனிதர்கள் பாறையை வெட்டவும் மண்ணைத் தோண்டவுமாகப் பாதை அமைத்துக்கொண்டிருந்தனர். காய்ச்சி வடிக்கும் கொப்பரைகளே கணக்கிடப்பட்டது. அதனடிப் படையிலேயே மனிதர்களின் எண்ணிக்கை குறித்துக்கொள் ளப்பட்டது.

எந்தச் சிறு கைமாறும் எதிர்பார்க்காமல் குஞ்சரத்தின் அடுப்பு

எரிந்துகொண்டேயிருந்தது. நாள் ஆக ஆக அடுப்பின் நெருப்பு சிறுத்தது. ஆனாலும், தாது வருடம் முழுவதும் அணையாமல் எரிந்தது.

பதிமூன்று மாத காலம் எரிந்த அடுப்பு எல்லாவற்றையும் எரித்தது. அவள் தனது வாழ்க்கை முழுவதும் சேமித்த சொத்துகளை உலையிலே போட்டாள். தங்கக் கல் பதித்த நகைகள், வெள்ளி நகைகள், முத்துகள், முத்துச்சரம், காசுமாலை, மோதிரம், ஒட்டியாணம், மேகலை, சதங்கை, ஆபரணக்கொலுசு, தோடு, ஜிமிக்க, மூக்குத்தி என எல்லாம் கஞ்சியாய் மாறி தட்டேந்தி நின்ற நீண்ட வரிசைக்குப் பசிப்பிணி தீர்த்தது. மிகச்சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய அணிகலன்கள் பிராமணர் வீடுகளுக்கும் வெள்ளாளர் வீடுகளுக்கும் கைமாறின. சரவிளக்கும், கொத்து விளக்கும் ரங்கூன் பல்லக்கும் நடுப்பட்டி ஜமீன் மாளிகையை அலங்கரித்தது. வண்ணங்கள் பூசப்பட்ட அந்த அபூர்வ கண்ணாடிக்குத்தான் எவ்வளவு கிராக்கி! கடைசியில் அது கோட்டையூர் மிராசுக்கு போனது.

தொடர்ந்து அடுப்பு எரிந்துகொண்டேயிருந்தது. வீடு முழுவதும் புகையடித்து இருந்தது. வண்ணங்களால் நிரம்பிய வீட்டுச் சுவர்களெல்லாம் கரி படிந்திருந்தது. குஞ்சரத்திற்கு முன்பை விட வீடு இப்பொழுது மிகவும் பிடித்திருந்தது. அவளுக்கு அதை விற்க மனமேயில்லை. இவ்வளவு பெரிய வீடு நகரத்தில் எத்தனை இருக்கிறது என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். பல ஆண்டுகாலம் வாத்தியங்களின் இசை எதிரொலித்த நிலைக் கதவுகளைக் கொண்டது. ‘தத்தைதையும் தத்தாம் கிடதக’ ‘தாம் தித்தாம் தை தத்தை’ என அடவுகளின் சொற்கட்டுகள் பரணில் இருந்து இறங்கிவந்து அடுப்பின் நெருப்பிற்குள் ஏறின. மேளத்தின் தோல் அதிர்வதைப் போல நெருப்பு அதிர்ந்துகொண்டேயிருந்தது.

‘இன்னும் கொஞ்சநாள் ஊத்தக்கூடாதா தாயீ...’ என்ற குரல் இரண்டாவது வீட்டையும் விற்க வைத்தது. பின்னால் இருந்த சிறு ஓட்டு வீட்டுக்குப் போனாள் குஞ்சரம்.

தாது கழிந்து இரண்டாவது மாதத்தில் அடுப்பு அணைந்தது. அவள் ஓட்டு வீட்டிற்குள் படுத்த படுக்கையானாள். யாரைப் பற்றிப் பேச யாரிடமும் எதுவும் இல்லாத கொடும் பஞ்சத்தில்கூட குஞ்சரத்தைப் பற்றி ஊரெல்லாம் பேசினார்கள். அவள் முகம் மலர்ந்திருந்தது. தாய்மையின் பூரிப்போடு அவள் படுத்துக்கிடந்தாள். உணவேதும் செல்லவில்லை. நாட்கள் நகர்ந்தன. அரை மயக்கத்தில் இருந்த அவளுக்கு ஞாபகங்கள் அறுந்து அறுந்து வந்துகொண்டிருந்தன. தனது சிறு பிராயத்தில் சதிர்கற்றுக்கொள்ள முதன்முதலில் நட்டுவனார் வீட்டுக்குப் போனது ஞாபகம் வந்தது. அவருக்கு முன்னால் தரையில் நெல்லை உலர்த்தி அதன் மேல் நின்றுகொண்டு பாடத்தை கற்றுக்கொள்ளத் துவங்கிய முதல் நாளின் நினைவு பசுமையாக இருந்தது. படுக்கையிலே படுத்துக் கிடந்தவள் தள்ளாடி எழுந்துபோய் அந்தச் சிறுமியைத் தள்ளிவிட்டுவிட்டு கீழே பரப்பி வைத்திருந்த நெல்லையெல்லாம் அள்ளிக்கொண்டுவந்து அரிசியாக்கி அடுப்பிலே இருந்த உலையிலே போட்டாள்.

அதிகாலையிலேயே செய்தி நகரெல்லாம் பரவியது. தங்கள் வீட்டில் நடந்த இன்னொரு சாவாகத்தான் நகரவாசிகள் பலரும் கருதினர். மக்கள் சாரைசாரையாக வந்தனர். சின்ன ஓட்டு வீட்டிலிருந்து குஞ்சரத்தை

வெளியில் தூக்கியபோது வடக்கு ஆவணி வீதி கொள்ளமுடியாத அளவு கூட்டம் நின்றது. 'கோயில் திருவிழாக்களைத் தவிர மதுரையில் மனிதர்களுக்குக் கூடிய மிகப்பெரியக் கூட்டம் இதுதான்' என்று கலெக்டர் தனது குறிப்பிலே எழுதிவைத்தார்.

நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் அவளின் ரத்தமென நினைத்து நினைவுகளின் வழியே கட்டிப்புரண்டு கதறியழுதனர். அவள் நாதியற்றவர்களின் பெரும் தெய்வமானாள். எண்ணிலடங்கா மனிதக்கூட்டம் அந்தத் தெய்வத்தை நாள்தோறும் வணங்கிச் செல்ல வடக்கு ஆவணி மூலவீதியில் உள்ள உள்சந்துக்கு அலையலையாய் வந்துகொண்டிருந்தது. அவளுக்கு எதைப் படையலிட்டு வணங்குவது எனத் தெரியாமல் தவித்தபொழுது 'ஏன் ராஜம்மாவைப் போல சலங்கையைப் படையலிட்டு வணங்கக்கூடாது?' என்று அவர்களே கேள்வியெழுப்பி பதிலும் தேடிக்கொண்டனர்.

*

**ம**ன்னன் திருமலையின் மனதைக் கொள்ளை கொண்ட தாசியின் பெயர் ராஜம்மாள். மதுரைக்கு தென்மேற்கே சின்னஞ்சிறு ஊரில் இருந்த அவளின் வீட்டுக்கு முன்னேதான் மன்னனின் தேர்ச்சக்கரங்கள் அடிக்கடி நின்றன. மாபெரும் அரண்மனையில் இல்லாத குளுமையை அவளின் மாடத்திலேயே அவன் கண்டான். ஆடலும் பாடலும் நிரம்பிய அவவீட்டு மாடத்தில் கள் வெறியேறிய கண்களுடன் மன்னனின் பொழுதுகள் கழிந்தபடி இருந்தன. காமம் அரசனை உருக்கி அவளின் பூரித்த முலைகளுக்கு இடையில் முத்துகளைப்போல உருட்டி விளையாடியது. அவளை அரண்மனைக்கு அழைத்துவந்து தனி மாளிகையொன்றில் குடியமர்த்தி எந்நேரமும் தன்னருகே வைத்துக்கொள்ள வேண்டுமென விரும்பினான். அவளோ அதை ஏற்கவில்லை. தன் மக்களை விட்டு வரமாட்டேன் என மறுத்தாள். மன்னன் மன்றாடினான். அவளுக்கோ ஊரைவிட்டு நகர்ந்தால் உயிர் போய்விடும்போல் இருந்தது. இந்த பெருமேட்டுப் புறத்தில் பிறந்து வளர்ந்த அவளை இந்த மரங்களும் செடிகொடிகளும்தான் வளர்த்தன. இயற்கையின் தாளலயத்தில் அடவுகளை ஆடிப்பழகிய அவள் தனது மக்களை விட்டு வர மனமின்றி இருந்தாள் என்பதல்ல முதன்மைக் காரணம். முதன்முதலில் தனது மேனியை ஒரு திரவத்தைப்போல உருக்கிக்குடித்த அந்த இசைவாணனைத் தனது கண்களுக்கு அருகிலேயே பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற தீராத ஆசையை மனதின் அடியாழத்தில் புதைத்துவைத் திருந்தாள். அவளால் ஊரைவிட்டு வெளியேறுவதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

மன்னன் மன்றாடுவதைக் கேள்வியுற்ற தோழிகள் எல்லாம் அவளை சமாதானப்படுத்தியபடி இருந்தனர். எப்படியாவது இணங்க வைக்க வேண்டுமெனப் பெருமுயற்சி செய்தனர். அவள் மசிவதாக இல்லை. நாட்கள் செல்லச் செல்ல மன்னனின் அதிகாரம் பேச ஆரம்பித்துவிடும் எனப் பயந்த செவிலிகள் சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என எடுத்துக் கூறினர். எல்லாவற்றையும் விலக்கி, அலங்காரங்கள் எதுவுமில்லாமல் விரிந்த கூந்தலோடு உள் அறையிலே தனித்திருந்தாள். நாட்கள் நகர்ந்தன. அஞ்சனமில்லாக் கண்கள் அறியாமலர் ஒன்றின் மடல்

என்றாயின. ஒரு அதிகாலையில் அவள் எழுந்து வீட்டை விட்டு வெளியில் வந்தாள். ஊர் முழுவதையும் கால்பட நடந்து சுற்றினாள். மெல்லிய ஒளிரேகைகள், கருநீல வானத்தை அவிழ்த்துக்கொண்டிருந்தன. சின்னஞ்சிறு குடில்களால் நிரம்பி இருந்தது ஊர். அதைத் தாண்டி ஒற்றை ஆலமரத்தின் கீழ் இருந்த பழங்கால வீடொன்றைப் பார்த்தபடி நின்றாள். இசைவாணனின் நினைவு வந்தது. இந்தக் குடில்களுக்குள் எங்கேயோ இருக்கிறது அவனது குடில். சூரியன் மெல்ல வெளியேறத்துவங்கினான். கண்ணுக்குத் தெரிகிற தூரம் வரை பொட்டல்காடாய் கிடந்தது நிலம். அந்தப் பெரும் பொட்டல் நிலத்தை பார்த்துக்கொண்டேயிருந்தவள் நீண்ட நேரம் அங்கேயே இருந்தாள். மக்கள் குடில்களில் இருந்து வெளியேறி கிழக்கே இருந்த பரங்குன்றத்து மலை அடிவாரம் நோக்கி வயல்வேலைகளுக்குப் போய்க்கொண்டிருந்தனர். வீட்டிலிருந்து தோழிப்பெண்கள் தேடி ஓடோடி வந்தனர். இவள் இளம் புன்னகையோடு தோழிகளின் பதற்றத்தை அலட்சியம் செய்தபடி அவர்களோடு சேர்ந்து நடந்தாள்.

அன்று பிற்பொழுதில் மன்னன் வருவதாகச் செய்தி வந்தது. மாளிகை மன்னனை வரவேற்கத் தயாரானது. ஆனால் அவள் அதைவிட வேகமாகத் தயாராகிக் கொண்டிருந்தாள். மணமூட்டிய நீரில் மூழ்கி எழுந்தாள். வதங்கிய தேகம் மலர்ந்துகொண்டிருந்தது. வாசனையையும் வண்ணத்தையும் பூசினாள். இசைக்கரு வியைப்போல அவள் நரம்பு ஒவ்வொன்றும் முறுக்கேறிக் கொண்டிருந்தது. கச்சையை இறுக்கக் கட்டி அணிகலன்களைச் சூட ஆரம்பித்தாள். ராக்கொடியில் துவங்கி பாதச்சதங்கை வரை சூட்டி முடித்தாள். நகைகளை அணியும் பொழுதும், கழற்றும்பொழுதும் ஆசை ஆசையாய் அதனைச் செய்கிற அவளது விரல்கள் பற்றிச் செல்பவனை மந்திரநிலமொன்றுக்கு அழைத்துச் செல்ல வல்லவை.

நறுமணப் புகைகளை விலக்கியபடி மன்னன் உள்ளே வந்தான். கோபத்தையும் மறுப்பையும் விலக்கிவிட்ட அவளை வெற்றி கொள்ள இனி மன்னனிடம் எதுவுமில்லை. சூளை நெருப்பின் அனல் தாங்காமல் நெளிந்து உருகும் பச்சை மண்பாண்டங்க ளைப்போல தேகம் உருகியது. உச்சத்தில் அவனை அப்படியே நிறுத்திவிட்டு அவள் மூக்கை மலர்த்திக்கண்களால் பேச ஆரம்பித்தாள். அவனால் முடியவில்லை. சிணுங்கல்களின் முத்துகளை உருளவிட்டபடி மோனத்தின் படிக்கட்டுகளில் ஏறி அவனை உச்சத்திற்கு இழுத்துக்கொண்டேயிருந்தாள். அவன் துடித்து மன்றாடியபடி அவள் கழுத்தில் தலைசாய்த்துப் படுத்தான். அவள் வந்து சேர்வதற்குள் அவன் அயர்வின் ஆழத்திற்கே போய்விட்டான். அவள் களைப்பின்றி இறங்கிவந்தாள். வனத்திற்குப் போய் மலர் பறித்து வரும் பூரிப்போடு தென்றலைப்போல் வந்தாள். என்றும் அவளை வென்றுவிட முடியாத ஆட்டத்தில் அன்றும் அவளே வென்றாள்.

விலகாத அந்த மாயத்திரைக்குள் இருந்தே பேச்சு துவங்கியது. ‘உங்கள் அழைப்பை ஏற்றுவருவேன்’ என அவள் ஒத்துக்கொண்ட பொழுது மன்னன் திகைத்துப்போய் மீண்டும் செய்வதறியாது தடுமாறினான். ‘பரிசாக நான் என்ன செய்யவேண்டும்‘ என்று கேட்டான். அவள் எதிர் பார்த்திருந்த இடத்தில் வந்து நின்ற மன்னனை மோகத்தால் நீராட்டினாள். அவன் சிலை போல் சமைந்து திளைத்தவாறிருந்தான். அவனுக்கும் சேர்த்து அவளே

சுவாசித்தாள். அவன் மூர்ச்சையானவனைப் போல் அவளுக்குள் புதைந்து கிடந்தான். ‘எனது ஊருக்கு வைகையின் நீரைக்கால்வெட்டிக் கொண்டுவந்து தரவேண்டும்‘ என்று அவள் கேட்டபொழுது அவனிடம் மறுத்துச்சொல்ல எதுவுமில்லை.

வைகையின் தென்கரையிலிருந்து வரும் பிரதானக் கால்வாயை பிரித்து ஒரு உபகால்வாய் வெட்டும் பணி துவங்கியது. இரவுபகலாக மண்ணை வெட்டி இரண்டு பக்கமும் கரை அமைத்தனர். அரண்மனை சிப்பந்திகள் வேலையைத் தொடர்ந்து கண்காணித்து தீவிரப்படுத்தினர்.

அவள் படிக்கட்டுகளின் உச்சியில் மிளிரும் வதனத்தோடு நின்றுகொண்டு மன்னனை அழைத்தபடி இருந்தாள். வெற்றிகொள்ள முடியாத விளையாட்டில் மன்னன் பூரிப்பின் நிழலில் நின்றவாறு தோல்வியை ஏற்றுக்கொண்டேயிருந்தான். மாதங்கள் பல ஓடின. ஊரின் கீழக்கே பெரும் கண்மாயை வெட்டிக் கரையை உயர்த்தினர். மன்னனின் வேகத்திற்கு ஈடுகொடுத்து பணிகள் நடைபெற்றன. கால்வாய் ஒரு பாம்பு போல மெல்ல ஊர்ந்து அவள் இருக்கும் ஊரின் காலடியிலே வந்துநின்றது.

மேற்கு மலைச்சாரலில் காற்றெடுத்த பின் வைகையின் நீர் புது வாய்க்காலில் ஊறி முன்னகர்ந்து வந்தது. அவள் தனது தோழிகள் சகிதமாக இருப்பிடத்தைக் காலி செய்தாள். தனது நினைவுகளை யெல்லாம் கழற்றிப்போட்டாள். இசைவாணனை என்ன செய்வதென்று தெரியவில்லை. கெஞ்சி மன்றாடினாள். இசையாய் வெளியெங்கும் விரிந்திருந்த அவன் உணர்வு அவளிடம் இரக்கம் காட்டவே இல்லை. அவன் வாத்தியம் கொண்டு திக்குகள் அதிர வெறியோடு வாசித்துக்கொண்டிருந்தான். நிலை கொள்ளாது மயங்கி நினைவின் ஓரத்தில் விழுந்த அவளைத் தூக்கி பட்டுப் பீதாம்பரத்தால் ஆன ஆசனத்தில் அமர்த்தினர். ரதத்தின் சக்கரங்கள் உருண்டன. கலங்கிய அவளின் கண்களைப்போல சிவந்த நீர் திரண்டு செத்தையும் சேறுமாக ஊரின் கண்மாய்க்குள் நுழைந்தது. அரண்மனையின் அருகே இன்னுமொரு மாளிகையொன்றில் அடி எடுத்துவைத்து அவள் நுழைந்தாள்.

ஊரே திரண்டு நின்று தண்ணீரை இரண்டு கைகளாலும் அள்ளி ராஜம்மாவை வணங்கியது. நீர் அவர்களின் பாதத்தைத் தழுவிக் குளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அதன்பின் ராஜம்மாவை யாரும் பார்க்கவில்லை. அவளும் ஊர்ப்பக்கம் வந்தாக யாருக்கும் தெரியவில்லை. அந்த ஊரின் புன்செய்யெல்லாம் நன்செய் ஆயின. குருவிநத்தம் என்ற ஊர் பெயர் மறைந்து கூத்தியார்குண்டு என்றானது. ஆக்கியது பக்கத்து ஊர்க்காரர்கள். அக்ரஹாரம் இல்லாத கிராமம் ஒன்றிற்கு வைகையின் நீர் முதன்முதலாகப் பாய்ந்தோடியது. பிராமணர்களால் அதை ஏற்க முடியவில்லை. தங்களின் பார்ப்பான் குளத்தைவிட கூத்தியார்குண்டு கண்மாய் பெரிதாக இருப்பதையும் அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கடும் எதிர்ப்பைக் காட்டினர். அரண்மனையின் ரசாயமும் பிரதானியும் வந்து பேசிப்பார்த்தனர் சமாதானம் ஏற்படவில்லை. கூத்தியார்குண்டு கண்மாய்க்கு வைகையின் நீர் போவதை ஏற்க முடியாது என உறுதியாகக் கூறினர். சாஸ்திரங்கள் திருப்பரங்குன்றத்தை சுற்றிவளைத்து நின்று நீர் வெளியேறவிடமால் தடுத்தன. அவளின் உலக ஞானம் அவர்களை எளிதாக மடக்கியது. நாள் ஒன்று மூன்று பொழுதாகப் பகுக்கப்பட்டது. அதில் இரண்டு பொழுது நீர் பார்ப்பான் குளத்திற்கும் ஒரு

பொழுது நீர் மற்ற ஏழு கண்மாய்களுக்கும் என்று முடிவானது. வழக்கத்தைவிட தங்கள் கண்மாய்க்கு கூடுதல் நீர் கிடைத்ததால் பார்ப்பனர்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டனர். பிரச்சனை முடிவுக்கு வந்தது. ஆனால் பார்ப்பான் குளத்தின் மறுகால் தண்ணீர் கூத்தியார் குண்டு கண்மாயை வந்தடைவதைப் போல் நிலத்தின் வாகு இருந்ததை அவர்களால் குளம் நிறைந்த பிறகே கண்டறிய முடிந்தது. குளம் நிறைந்தாலும் இரண்டு பொழுது நீர் பார்ப்பான் குளத்திற்கு போய்க்கொண்டேயிருக்க வேண்டும் என்ற அரண்மனையின் உத்தரவை யாரால் மீற முடியும்? மறுகாலில் வழிந்தோடும் நீரின் சத்தம் வெல்லப் படமுடியாதவளின் சலங்கைச் சத்தம் போல கேட்டுக்கொண்டே இருந்தது.

சொந்த நிலத்தில் வெள்ளாமை கண்ட மக்கள் தங்களின் முதல் விளைச்சலில் சலங்கை எடுத்துவந்து அவள் இருந்த வீட்டில் வைத்து வணங்க ஆரம்பித்தனர். காலங்கள் உருண்டோடின. ஊர் பல தலைமுறைகளைப் பாரத்தபடி வந்தது. ஒவ்வொரு ஆண்டும் அறுப்பு முடிந்தவுடன் மக்கள் சலங்கை எடுத்து வந்து அவள் வீடு இருந்த மண்மேட்டிலே வைத்து வணங்கிவிட்டுப் போகின்றனர்.

சரியாக இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த விருட்சத்தில் இன்னொரு கிளை தழைய ஆரம்பித்திருக்கிறது. குஞ்சரத்தம்மாளுக்கு எதைப் படைத்து வணங்குவது என்று யோசித்த மக்கள் ராஜம்மாவைப் போலவே சலங்கையைப் படைத்து வணங்கத் துவங்கினர்.

*

# 78

**ம துரையின் புதிய கலெக்டர் மார்ட்டின் ராட்லர் பசுமலையில் இருந்த** அமெரிக்கன் மிஷனின் பொறுப்பாளர் ரெவ். லாரன்சை தன்னை சந்திக்க வரும்படி அழைத்திருந்ததை அடுத்து அவர் கலெக்டரை சந்திக்க அன்று வந்திருந்தார். ஆங்கில அதிகாரிகள் சிலருடன் பேசிக்கொண்டிருந்த கலெக்டர் சிறிது நேரம் கழித்து லாரன்சை தனது அறைக்குள்ளே அழைத்தார். முதன்முறையாகச் சந்திக்கும் இருவரும் மரியாதை நிமித்தமான வார்த்தைகளை எல்லாம் பேசிமுடித்தனர். மதுரையைப் பற்றி மிஷனின் அனுபவங்களையெல்லாம் கலெக்டர் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அதன் பின் கலெக்டர் ‘நான் உங்களை வரச்சொன்னது முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றி உங்களிடம் கேட்பதற்காக’ என்றார். லாரன்ஸின் புருவங்கள் நெரிந்தன. அப்படியென்றால் இவ்வளவு நேரம் நாம் பேசியதைப்பற்றி இவர் என்ன நினைக்கிறார் என்று யோசித்தவாறு ‘என்ன விஷயம் சொல்லுங்கள்’ என்றார். ‘சேசு சபையில் பணியாற்றிய உங்கள் நண்பர் பாதர் ஜேம்ஸைப் பற்றிய விபரங்களும் தகவல்களும் எங்களுக்குத் தேவை’ என்றார்.

‘திடீரென என்னை அழைத்து பாதர் ஜேம்ஸைப்பற்றி ஏன் விசாரிக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ளலாமா?’

‘நிச்சயமாக. அதற்கு முன் அவரைப்பற்றிய தகவல்களை எனக்குக் கூறுங்கள்.’ அவரின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த ரெவ். லாரன்ஸ் கைகளால் சிலுவைக் குறியிட்டபடி ஜேம்ஸைப் பற்றி கூறத் துவங்கினார்.

அவர் பிரான்ஸில் மிகவும் வசதியான குடும்பம் ஒன்றில் பிறந்தவர். சார்போன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பிரிவில் பட்டம்பெற்றவர். அயல்நாட்டிற்கு மிஷனரியாகச் சென்று இறைப் பணியாற்ற வேண்டும் என்பது அவரது லட்சியம். சேசு சபையிலே இணைந்து 1871ம் ஆண்டு சிலோனுக்கு வந்தார். 1874ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டு யாழ்ப்பாண உதவியாளர்களுடன் தனுஷ்கோடியில் வந்திறங்கினார். அங்கிருந்து

மதுரை வரும் வழியில் மண்டபத்தில் இருந்த எங்களது சபையில் இரண்டு மாத காலம் தங்கினார். அப்போது அங்கு ராசைய்யா என்ற கிறித்துவர் ஏதோ காரணத்திற்காக கைது செய்யப்பட்டு பாம்பன் சிறையிலே அடைக்கப்பட்டார். அவ்வாறு அடைக்கப்பட்டவர் ஜாமீன் பெற்று வெளிவரும் முன்பே இறந்துவிட்டதாக சிறை நிர்வாகம் கூறியது. அதை பாதர் ஜேம்ஸால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மதுரைக்கு வந்ததும் அது சம்பந்தமாக கலெக்டர், மாவட்ட சூப்பிரண்டென்ட்டை சந்தித்து விஷயத்தைச் சொன்னார். கவர்னருக்கும் மனு ஒன்றை எழுதினார். அதன்பின் மூன்று மாதம் பசுமலையில் இருந்த பின் தேக்கடிக்குச் சென்றார். அங்கே ஒன்றரை வருடம் பணியாற்றிய அவர் 1878ம் ஆண்டு மார்ச் மாதம் மீண்டும் பசுமலைக்கு திரும்பிவந்தார். 1878 நவம்பரில் பசுமலையை விட்டுச் சென்றார். அவர் சேசு சபையைச் சேர்ந்தவராக இருந்தும் பஞ்ச காலத்தில் அமெரிக்கன் மிஷனுக்கு அதிக நிதியும் மருந்தும் கிடைக்க ஜேம்ஸ் எடுத்துக்கொண்டே முயற்சி ஈடு இணையற்றது' என்றார் லாரன்ஸ்.

'சரி, ஏன் இவைகளையெல்லாம் விசாரிக்கிறீர்கள்?' என்று மீண்டும் கேட்டார்,

'கவர்னர் அலுவலகத்தில் இருந்து அவரைப் பற்றிய விபரங்களை கேட்டனர். அதற்காகத்தான் விசாரித்தேன்' என்றார்.

பதில் லாரன்ஸை திருப்திப்படுத்தவில்லை. 'கவர்னர் அலுவலகம் ஏன் அவரைப் பற்றிக் கேட்க வேண்டும்?' என்றார். கொஞ்சநேரம் எடுத்துக்கொண்ட கலெக்டர் விரிவாகவே விஷயத்தைக் கூறினார்.

'பாதர் ஜேம்ஸை பொறுத்தவரை ஒரு நல்ல செய்தியும் ஒரு கெட்ட செய்தியும் இணைந்தே வந்திருக்கிறது' என்று பீடிகையோடு துவக்கினார். லாரன்ஸின் முகக்குறிப்பு பீடிகையின்று விஷயத்திற்கு வருமாறு கோரியது.

'சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் பாதர் ஜேம்ஸ் மெட்ராஸ் பிரசிடென்சியின் கவர்னர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தின் இரண்டாம் பகுதியை, அந்த சமயத்தில் சென்னை வந்திருந்த பஞ்சகமிஷன் பார்வையிட்டு தனது அறிக்கையில் இணைத்துள்ளது. இப்பொழுது பஞ்ச கமிஷன் அறிக்கை வைசிராயிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அதில் மதுரை மாவட்டத்தை கொடும் பஞ்சத்திலிருந்து மீட்க ஒரே வழியான பெரியாறு ப்ராஜெக்ட்டை நடைமுறைப்படுத்துவது என்றும் அதற்கான திட்ட அனுமதியை வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். எனவே பெரியாறு ப்ராஜெக்ட் மீண்டும் தொடங்கப்பட இருப்பதில் ஜேம்ஸின் கடிதம் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவருடைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பல கருத்துகள் கண்டிக்கத்தக்கவை என அரசு கருதுகிறது. அது மட்டுமல்ல, இந்தியாவில் சேசுசபையில் பணியாற்ற அனுமதி கேட்கும்பொழுது ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாகவும் அது உள்ளதாக அரசு கருதுகிறது. எனவே அவரைப் பற்றிய விவரங்களை சேகரித்து அனுப்புமாறு கவர்னர் அலுவலகம் எனக்கு உத்தரவிட்டுள்ளது.'

ரெவ். லாரன்ஸ்சுக்கு எல்லாம் அதிர்ச்சியாக இருந்தது. இதனால் மிஷன்

நிர்வாகத்திற்கு ஏதும் இடையூறு ஏற்படுமோ என்று யோசித்தவாறே அமர்ந்திருந்தார். 'அதன்பின் ஜேம்ஸ் எங்கே போனார்? என்ன செய்துகொண்டிருக்கிறார் என்ற விபரங்கள் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?' என்று கலெக்டர் கேட்டார்.

'அந்த விபரங்கள் எதுவும் எங்களுக்குத் தெரியாது. அல்ஜீரியாவுக்குப் போகப்போவதாகத் தெரிவித்தார். ஆனால் இப்பொழுது எங்கே இருக்கிறார் எனத் தெரியவில்லை. பத்திரிகைத் துறையில் அதிகம் ஈடுபாடு உள்ளவர். எனவே அந்தத் துறையின் வழியே அவர்தனது எதிர் காலத்தை யோசித்து இருக்கலாம்' என்றார்.

'கனடாவின் கியுபெக்கில் இருக்கிறார். சரி. திரு. ஜேம்ஸை பற்றி இனி ஏதாவது தகவல் கிடைக்குமேயானால் எங்களுக்கு தெரிவியுங்கள்' என்று சொல்லி லாரன்ஸை கலெக்டர் அனுப்பி வைத்தார்.

மீண்டும் பசுமலையை வந்தடையும்வரை இயேசுவை ஜெபித்துக் கொண்டே வந்தார். ஆனால் அவரது மனம் நிலை கொள்ளவில்லை. பிறருக்கு கடிதம் எழுதும் பொழுது அரசு நிர்வாகத்தை வெளிப்படையாகக் குறைகூறி எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று நானே அவரிடம் பலமுறை கூறியுள்ளேன். அப்படியிருந்தும் கவர்னருக்கே நேரடியாகக் கடிதத்தை ஏன் எழுதினார்? என்று மனத்திற்குள் எண்ணங்கள் கொந்தளித்தபடி இருந்தன. இதனால் பசுமலையில் நடைபெற்றுவரும் மிஷனரி பணிகளுக்கு ஏதாவது இடையூறு வருமோ! அமெரிக்கன் போர்டு தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ! என்று எண்ணங்கள் ஓடியபடியே இருந்தன.

பசுமலை வளாகத்தில் எவ்வளவோ பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதிய கிறிஸ்தவர்களுக்கான குடியிருப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது. அச்சகம் ஆரம்பிக்கப்பட்டபின் கல்வித்துறையின் செயல்பாடு விரிவடைந்துள்ளது. குறிப்பாக தாது வருடத்திற்குப்பின் சபையின் பலம் பல மடங்கு பெருகியுள்ளது. பல்வேறு புதிய திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன.

பொழுது மங்கத் துவங்கியது. அடர்ந்த மரங்களில் அடைவதற் காகப் பறவைகள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தன. பறவைகளின் சத்தம் மலையை நிரப்பியது. கடிதத்தில் அப்படி என்னதான் எழுதித் தொலைத்தார் என்று யோசித்தவாறே இருந்தார்.

*

இரண்டு மாதங்களுக்குப்பின் திரு. ஜேம்ஸ் பாட்ரிக் கவர்னருக்கு எழுதிய கடிதத்தின் நகலை கலெக்டர் ரெவ். லாரன்ஸிடம் காட்டினார்.

3, ஏப்ரல் 1879

பெறுநர்:

திரு. ரிச்சர்ட் கிரீன்வேலி,

மேதகு கவர்னர்,

மெட்ராஸ் பிரிசிடென்சி,

சார்,

நான் சமயப் பணியாற்றிய மதுரை மாவட்டத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், நான் கண்ட உண்மைகளையும் உங்களுக்குத் தெரியப்படுத்தவே இக்கடிதம் எழுதுகிறேன்.

இது சேசு சபை வாழ்க்கையை விட்டு நான் விலகி மீண்டும் கனடாவுக்கு வந்தபின் எழுகிற கடிதம். எனவே மிஷனரிகளின் ஒப்பந்தவிதிகளை மீறிய குற்றச்சாட்டுக்கு நான் ஆளாக மாட்டேன் என நம்புகிறேன்.

விக்டோரியா பேரரசியின் ஆட்சியின் கீழ் நடக்கும் இந்தக் கொடும் பிழைகள் போக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் பொருட்டே இதனை எழுதுகிறேன்.

‘பரிசேயராகிய நீங்கள் போஜன பான பாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்கள். உங்கள் உள்ளமோ கொள்ளையாலும், பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது’ (லூக்கா 11:39) என்பதைச் சுட்டிக்காட்டாத பாவத்தைச் சுமக்க நான் தயாராக இல்லை.

நான் திருவிதாங்கூரில் பணியாற்றுவதற்காக சிலோனிலிருந்து தனுஷ்கோடிக்கு வந்திறங்கி மதுரைக்கு வரும் வழியில் மண்டபத்தில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள சபையிலே சில வாரங்கள் தங்கிச் செல்லலாம் என முடிவெடுத்து தங்கினேன். நான் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் அந்தச் சபையின் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு செயலாற்றிக்கொண்டிருந்த ராசையன் என்ற கிறிஸ்தவரை ஆங்கில சிப்பாய்கள் கைது செய்து அழைத்துச்சென்றுள்ளனர். அங்கிருந்த பாதர் அலோசியஸ் ‘என்ன காரணத்தினால் கைதுசெய்யப்பட்டார் என்ற விவரம் எதுவும் தெரியவில்லை’ என்றார். உடனே நானும் அவரும் ராசையன் அடைக்கப்பட்டிருந்த பாம்பன் சிறைச்சாலையின் அதிகாரியைப் போய் சந்தித்தோம். ராசையன் என்ன தவறு செய்தார்? அவர் மீது யார் புகார் கொடுத்துள்ளனர்? என்ற எங்களுடைய எந்தக் கேள்விக்கும் அவரிடம் திருப்தியான பதிலில்லை. அதன்பின் பரமக்குடியிலிருக்கும் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை அணுகி ராசையனுக்கு ஜாமீன் பெற்று பாம்பன் சிறை அதிகாரியைப் போய்ச் சந்தித்தோம். ஆனால் அதற்குள் ராசையன் இறந்துவிட்டதாக அவர் தெரிவித்தார். 21 வயது இளைஞர் திடீரென சிறைச்சாலைக்குள் எப்படி இறந்தார் எனக்கேட்டதற்கு மேல்விபரங்கள் எதையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். அதன்பின் நாங்கள் விசாரித்ததில் மிக அதிகமான கைதிகள் சிறைச்சாலைக்குள் மரணமடைகிறார்கள் என்று தெரியவந்தது. அதனடிப்படையில் அன்றைய மாவட்ட கலெக்டரிடமும், சூப்பிரண்டென்டிடமும் மனு கொடுத்து விசாரிக்கச் சொன்னோம். அவர்களும் விசாரித்துச் சொல்வதாகச் சொன்னார்கள். ஆனால் எந்த நியாயமான பதிலும் அவர்களிடமிருந்து வரவில்லை. பிரிட்டிஷாருக்கு கத்தோலிக்க உயிர்கள் பொருட்டில்லாமல் போயிருக்கலாம்.

இதற்கிடையில் கனடாவிற்கு புறப்படும்முன் மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் போய் விசாரித்துவிட்டுத்தான் தூத்துக்குடி துறைமுகத்தில் வந்து கப்பல் ஏறினேன். அங்கே எனக்குக் கிடைத்த தகவல்கள் பெரும் அதிர்ச்சியூட்டின.

பாம்பன் கடவுப் பணிகளை நிறைவேற்றுவதற்காகவே மதுரை யை விடப் பெரிய சிறைச்சாலை பாம்பனில் அமைக்கப்பட்டது. அதில்

மதுரைசிறைச்சாலையைவிட அதிகக் கைதிகள் அடைக்கப்பட்டனர். பிறமாவட்ட கைதிகளும் பாம்பன் சிறைக்கே அனுப்பிவிக்கைப்பட்டனர். நீதிமன்றம் இருக்கும் பரமக்குடியிலோ போலீஸ் ஸ்டேசன் இருக்கும் ராமநாதபுரத்திலோ சிறைச்சாலை அமைக்காமல் பாம்பனில் அமைக்கப்பட்டதென்பது கைதிகளை இப்பணியில் ஈடுபடுத்துவதற்காக மட்டுமே என்பதை அறிந்தேன்.

கடலுக்கடியில் கால்வாய் தோண்டவும் கால்வாயின் இரண்டு கரையிலும் பாதுகாப்பான அரண் அமைக்கவுமான பிரம்மாண்டமான பணியைச் செய்து முடிக்க நீராவி தூர் வாரும் கருவிகளை மட்டுமே முழுமையாக நம்பமுடியாத நிலையில் எண்ணிலடங்காத கைதிகள் கடலுக்குள்ளே இறக்கிவிடப் பட்டுள்ளனர். கடலில் வீசும் உப்பங்காற்றாலும் கடல் கொந்தளிப்புகளாலும் தூர் வாரும் கருவிகள் வருடத்தின் சில மாதங்களே பயன்படுகின்றன. மற்ற காலங்களில் அதனை மிக முக்கியப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொண்டு மீதம் அனைத்தையும் கைதிகளைக்கொண்டே முடித்துள்ளனர்.

இதில் குறிப்பாக கடற்கரைப் பகுதியில் வசிக்கும் அனுபவமும் திறமையும் உள்ள கடற்பணியாளர்களின் கட்டாயக் குற்றவாளிகளாக்கப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கின்றனர். எங்கள் ராசையன் செய்த தவறு தண்ணீருக்குள் முக்குளிக்கும் திறமையுடையவர் என்பதுதான். ராசையனைப் போன்றே பலரும் கைது செய்யப்பட்டு கட்டாயக் குற்றவாளிகளாகக் கடவுப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்தச் சிறைச்சாலையில் அதுவரை அடைக்கப்பட்டவர்களில் அறுபது சதவிகிதமான பேர் மரணமடைந்துள்ளனர். ராசையன் இறந்த அந்த ஒரு வாரத்தில் மட்டும் நாற்பத்து ஆறு பேர் இறந்துள்ளனர். அந்த வாரத்தில் ஏற்பட்ட கடல் சீற்றத்தாலும் ராட்சத அலைகளாலும் அவர்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர்.

கொடுங்குற்றம் செய்த கைதிகளையோ அல்லது தண்டனைக் கைதிகளையோ இதுபோன்ற பணிகளில் ஈடுபடுத்தலாம். ஆனால் விசாரணைக் கைதிகளை ஈடுபடுத்துவதென்பதும் இந்தப் பணிகளுக்காகவே கடற்கரையோர மீனவர்களை கட்டாயக் கைது செய்வதென்பதும் எப்படி சரி? அதுவும், தான் ஒரு கிறிஸ்தவன் என தெரியப்படுத்திய பிறகும் ராசையன் கைது செய்யப்பட்டிருக்கிறார். கடலை அறிந்தவன் கர்த்தரைஅறிந்தவனாக இருந்தாலும் உங்களுக்குக் கவலையில்லை.

‘பச்சை மரங்களுக்கே இவைகளைச் செய்தால் பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டீங்கள்?’

**தா**து வருட பஞ்ச காலம் முழுவதும் மதுரை மாவட்டத்தில் இருந்தவன் என்ற முறையில் என் அனுபவங்களைச் சொல்லாமல் இருக்க முடியாது.

தாது வருடம் முடிந்தபிறகு 1878ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் நாள் மதுரையின் கலெக்டர் வில்லியம் காரேவைச் சந்தித்தேன். அவர் பஞ்சத்தால் மாவட்ட மக்கள்தொகை இருபது சதவீதம் குறைந்துள்ளதாகத்

தெரிவித்தார். அது சரியான கணக்கு அல்ல என்று நான் அவரிடம் தெரிவித்தேன். மதுரை மாவட்டத்தின் நாற்பது சதவீத கிராமங்கள் முற்றிலும் மறைந்துவிட்டன. இருக்கும் கிராமங்களிலும் பாதி மக்கள் கூட இல்லை. அப்படியிருக்க இருபது சதமான மக்கள்தான் குறைந்துள்ளனர் என்பது முழுமையான விபரம் அல்ல, அது மட்டுமல்ல 1876 நவம்பர் 1ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை மட்டும் சிலோனுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை பத்தாயிரம் என்று சிலோனில் உள்ள நண்பர்கள் எனக்குத் தெரிவித்தனர். இது தவிர பர்மாவுக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் போனவர்கள் மற்றும் உள்ளூரிலேயே செத்துமடிந்தவர்கள் என கணக்கிடமுடியாத அழிவு நடந்துமுடிந்துள்ளது.

ஆனால் நடந்துள்ள இந்தப் பேரழிவுக்கு இயற்கையை மட்டுமே நீங்கள் காரணமாகச் சொல்வதை என்னால் ஏற்கமுடியவில்லை. பத்தாண்டுகளுக்கு ஒரு பஞ்சத்தை சந்தித்து அழிந்துகொண்டிருக்கிற மதுரை மாவட்டத்தின் நீர்வளத்தை அதிகப்படுத்த நீங்கள் எதையும் செய்யவில்லை. அதையெல்லாம் செய்யவேண்டுமென்ற எந்த எண்ணமும் உங்களுக்கு இருந்ததில்லை. சுமார் நூறாண்டு காலம் நீங்கள் ஆட்சி நடத்தியதில் அந்த மாவட்டத்திற்கு புதிதாக கிடைத்தது இரண்டு சிறைச்சாலைகளும் ஆறு போலீஸ் ஸ்டேசன்களும்தான்.

குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளாக பாம்பன் கடவுக்கு நீங்கள் செலவு செய்த தொகையின் ஒரு பகுதியை மேற்கு மலையில் செலவு செய்திருப்பீர்களேயானால் இந்நேரம் முல்லைப்பெரியாற்று நீர் மதுரை மாவட்டத்தை வளப்படுத்தியிருக்கும். தாது வருடத்தில் நிகழ்ந்த லட்சக்கணக்கான மரணங்கள் நிச்சயம் நிகழ்ந்திருக்காது. தாது வருடத்தில் கோடையின் உச்சத்தில் கூட பெரியாற்று நீரில் மீன்கள் துள்ளித்திரிந்ததைப் பார்த்தக் கண்ணீர் சிந்தியவன் நான். அதனால்தான் உறுதிபடக்கூறுகிறேன். இந்தக் கொடும்பஞ்சத்திற்கு இயற்கையை மட்டுமே காரணம் சொல்லி நீங்கள் தப்பிக்க நினைப்பது நியாயம் ஆகாது.

வருடத்திற்கு 79 அங்குலம் மழை பெய்யும் காட்டிற்குள் எப்படிப்பணியாற்ற முடியுமென அறுபது வருடமாக மாறி மாறி ஆய்வு செய்து கொண்டேயிருக்கிற நீங்கள், பல அடி ஆழமுள்ள கடலுக்குள் இவ்வளவு கடினமான பாம்பன் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எந்தத் தயக்கமும் காட்டவேயில்லை. பெரியாற்று அணைத் திட்டம் நடைமுறையானால் அரசுக்கு வரி வருமானம் மூலம் வருடத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் வரை கிடைக்கும். இது அவ்வளவு லாபம் சேர்க்கும் திட்டம்தான். ஆனால் அதிக லாபத்தை மிக வேகமாக ஈட்ட வேண்டுமென்பதே உங்கள்நோக்கம். இப்படியொரு லாபநோக்கம் கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்திடமிருந்ததைப் புரிந்துகொள்ளமுடிந்தது. ஆனால் அதில் எந்த மாற்றமும் இல்லாமல்தான் விக்டோரியா பேரரசியாரின் நிர்வாகமும் இருக்கிறது.

ஐரோப்பியக் கப்பல்களுக்கு முப்பத்தாறு மணி நேரத்தை மிச்சப்படுத்துவதில் உங்களுக்கு இருந்த கவனத்தின் சிறு பகுதிகூட லட்சக்கணக்கான மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவதில் இல்லை. சென்ற நூற்றாண்டில் யூசப்கானும் நாதாம்கானும் கேப்டன் ரூம்ளேயும் மதுரை மாவட்டத்தில் எண்ணிலடங்கா மக்களைக் கொன்று குவித்தனர். அதைவிடப் பலமடங்கு மரணங்கள் வில்லியம் காரேயின் நிர்வாகத்தின்

கீழ்நடந்துள்ளது.

உங்களது ஸ்டீம் கப்பல்களும் பாய்மரத் தோணிகளும் பாம்பன் கால்வாய் எங்கும் மிதக்கும் எண்ணிலடங்காப் பிணங்களை விலக்கிக் கொண்டுதான் மிதந்து செல்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? நாகரீகத்தின் உச்சத்தில் இருப்பதாக மார் தட்டும் ஆங்கிலேயப் பேரரசு தனது வாணிபத்தை இப்படித்தான் விரிவாக்க விரும்புகிறதா? பிரிட்டிஷ் அரச மகுடத்தின் ஒளி மிக்க மணி என்று வர்ணிக்கப்படும் அந்த நாடுதான் வரலாற்றில் ஈடு காண முடியாத துன்பத்தைச் சுமந்து நிற்கிறது. நான் பார்த்த சமவெளிப்பகுதி முழுவதும் விவசாயிகளின் எலும்புகளை எறும்புகள் கூட்டம் கூட்டமாக இழுத்துச்சென்றன. எங்கும் நிறைந்திருந்த அவலத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அந்த தாது வருடத்து நாட்களை மறக்க எனது முழு வாழ்க்கையும் போதாது.

ஒரு மாவட்டத்தின் மையப்பகுதியில் ஒன்றரை லட்சம் ஏக்கர் புதிய நிலப்பரப்பில் விவசாயம் சாகுபடியாவதை விடத் தென்கிழக்கு கடற்கரையின் வாணிபம் துரிதமாவதையே நீங்கள் விரும்புகிறீர்கள். உங்கள் விருப்பம் நீதியின் புதைமேட்டில் வெள்ளிக் காசை விளைய வைப்பதை ஒத்ததே.

‘நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைகளுக்கும் நீங்கலாகி விடுவிப்பார்.’

நம்பிக்கையுடன்,
ஜே. ஜேம்ஸ் பாட்ரிக்

*

# 79

**மாயாண்டிப் பெருசு கைது செய்யப்பட்டு ஐந்து வருடமா கிவிட்டது.** அவர் என்ன ஆனார்? எங்கே கொண்டு செல்லப் பட்டார்? எந்தத் தகவலும் ஊருக்குத் தெரியாமலே போய்விட்டது. அவருடைய அப்பனுக்கும் இப்படித்தான் நேர்ந்தது. ஆனால் ஆறேழு ஆண்டுகளுக்குப் பிறகாவது, கோட்டைக்காவல் பதினைந்து பேரையும் தீவாந்தரமா அனுப்பிட்டாங்க என்ற செய்தி கிடைத்தது. ஆனால் மாயாண்டிக்கு அதுவும் இல்லை. கோட்டைக்கும் வெளிவீதிக்கும் இருக்கும் நெருக்கம், இரண்டையும் காவல் காத்தவர்களின் மரணத்திலும் இருந்தது. மாயாண்டியின் கடைசிக்காலம் கண்காணாத இடத்திலே நடந்து முடிந்துவிட்டது. ‘கடைசிக்காலத்திலாவது உக்காந்து கஞ்சி குடிக்கட்டும். பின்னால பாத்துக்குவோம்’ என்று நினைத்தவர்களை பின்னால் நினைத்துப்பார்க்க காலம் விட்டுவைக்கவில்லை. பஞ்ச காலத்தில் நோய் ஊரையே சூறையாடியது. கருப்பு கோயில் ஆலமரத்தடிக் கூட்டத்தை நோய் வாரித் தின்றது. ஒவ்வொரு உயிரும் தன்னைக் காப்பாற்றிக் கரையேறவே வழியின்றித் தவித்தபொழுது, மாயாண்டியை வெளிக்கொண்டுவர அவர்கள் எங்கே போய் என்ன செய்வார்கள்? காலம் மாயாண்டியையும் கடந்த காலமாக்கியது. கடந்த காலத்தையெல்லாம் சேகரித்துவைத்திருந்த அந்தப் பெருங்கிழவனை இழந்துவிட்ட காலமொன்று வந்துசேர்ந்தது.

மாயாண்டியைப் பற்றிப் பேசாத, நினைக்காத நாளொன்றில்லை. மாயாண்டிதான் ஊரிலே மூத்த கிழவன். தாதனூரின் ஆதி விதையைக் கருக்கொண்டு பழுத்த பழம். தொண்ணூறு வயதைக் கடந்த ஊரின் பொக்கிஷம். பட்டாணிப் படை வந்த காலத்தில் துவங்கி நேற்று வரை ஊரிலே அழிந்தவர்கள் எல்லோரையும் பற்றி அவனளவிற்குத் தெரிந்த ஆண்கள் யாருமில்லை.

ஊர் அழிவின் வழியே நகர்ந்து வந்திருக்கிறது. மலையடிக் கருப்பனில் துவங்குகிறது அதன் வரலாறு. மண்ணின் ரகசியத்தைச் சொல்லி வம்சாவளியை மீட்டுத்தர தன்னையே அழித்துக் கொண்டவனில் துவங்கி

மாறி மாறி அழிந்தவர்களின் வழியே அது வருகிறது. பலி கொடுத்தவர்களும், பலி எடுத்துவர்களும்தான் ஊரின் நினைவில் நின்றுகொண்டிருக்கிறார்கள். ஊர் எவனையாவது ஒருவனை அழைத்து பெரியாம்பிளை ஆக்கி அவனது முதுகிலே தொற்றிக்கொள்கிறது. அதன்பின் அவன் ஊரைத் தூக்கிக்கொண்டே அலைகிறான். மாயாண்டி அப்படி ஊரைத் தூக்கிக்கொண்டே அலைந்தவன். இப்போது மாயாண்டியின் நினைவைத் தூக்கிக்கொண்டு ஊர் அலைகிறது. ஊர் என்பது வெறும் கல்லும்மண்ணும் மட்டுமல்ல.

வேறு எந்த ஊரிலும் இது போன்று மண் அமையாது. இந்த மண்கட்டியை எடுத்துக்கொண்டு எறிந்தால் கல்லெறியை விட வலுவாகப் பிடிக்கும். வேறெந்த ஊரிலேயும் இது போன்று கல் இருக்காது. கூழாங்கல் மாதிரி உருண்டு கைப்பிடிக்குத் தோதுவாக இருக்கும். எடுத்துக்கொண்டு எறிந்தால் காத்தைக் கிழிக்கும். கல்லும் மண்ணும் ஊருதான். இந்த மண்ணுக்கு ஊரை வரவைத்ததே வேறு இடத்திலிருந்த மண்தான். அந்த மண்ணில் நிலை கொள்ள முடியாத ஊர் இந்த மண்ணிலே வந்து வேர் பிடித்தது. இங்கிருக்கும் மனிதர்கள் எல்லாம் அந்த மண்ணுக்குப் பிறந்தவர்கள்தான்.

**இ**ந்த மண்ணில் சட்டி செய்தால் அடுப்பில் நெருப்பை எரித்துமாளாது. ஏனென்றால் இந்த மண் நெருப்பால் சுட முடியாத மண். இதிலுள்ள தாது நெருப்பு முழுவதையும் உள்வாங்கியபடி இருக்கும். அதனைத் தாண்டி சட்டிக்கு நெருப்பு பரவாது. எனவே இங்கு யாரும் தங்காமல் போனபடியே இருந்தனர். ஆனால் தனியாளாக வந்த சடச்சிதான் இங்கே தங்கி, தலைமுடியை வைக்கோல் பிரிபோல் திரித்து, சட்டி முழுவதையும் இறுக்கமாகச் சுற்றி அடுப்பிலே வைத்து சட்டியை நெருப்பு தொடவிடாமல் அனலிலேயே காயவைத்து, மொச்சப்பயறை அவித்து இறக்கியிருக்கிறாள்.

பேய்மழை கொட்டிக்கொண்டிருந்த அந்த இரவில் தனியாளாக இருந்து சட்டி சுடாத மண்ணில் அவித்து மொச்சையைத் தின்றவளுக்கு, கர்ப்பத்தில் மூன்று கரு தரித்திருக்கிறது. ஒரு கரு அனலுக்கு, ஒரு கரு தாதுக்கு, ஒரு கரு மண்ணுக்கு என்று உயிர் திரண்டிருக்கிறது. சடச்சி தனியாளாய் இருந்து உயிர் வளர்த்து, கர்ப்பம் காத்து, வெட்டவெளியில் மல்லாக்கப்படுத்து, புழுதிக்காற்றில் உடலைப் புரட்டி மாதங்களைத் தள்ளிவந்தி ருக்கிறாள். பத்தாம் மாதம் ஒரு உச்சிப்பொழுதில் கனத்தப்பெருத்த வயிறைத் தூக்கிக்கொண்டு மலைமேல் ஏறிய அவள் விப்புவெளவால்கள் அடையும் பாறை இடுக்கின் மேலே அமர்ந்து குழவிக்கல்லை உருவி எடுப்பதைப்போல மூன்று பிள்ளைகளையும் வெளியே எடுத்துப் போட்டிருக்கிறாள். மேலும்கீழுமாக மூச்சு வாங்கியது. புதைந்த கண்களுக்கு உயிர் வந்தது. கையூன்றி எழுந்த அவள் எதிரில் விரிந்து கிடந்த செம்மண் பரப்பைப் பார்த்து ஆங்காரமாய் நரம்பு புடைக்கக் கத்தினாள். அடிவயிற்றிலேயிருந்து திரண்டுவந்த அவளது குரல் மலை முழுவதும் எதிரொலித்தது. இடுக்குகளில் அடைந்து கிடந்த வெளவால்கள் சடசடத்து வெளியேறின. மார்பிலேயிருந்து கசிந்து வெளியேறிய பால் வழிந்து தொடையிலே இறங்கியது. குனிந்து பார்த்த அவள் பாறை இடுக்கில் வழிந்தோடிய பனிக்குடநீரைக் கண்டு மீண்டும் ஆங்காரம் கொண்டு கத்தினாள். வலி குறைந்து வெறி அடங்கும் வரை கத்தித் தீர்த்தாள். பின்னர் மூன்று பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு சமவெளிக்கு

வந்தவள் மொச்சைச் செடிகளைப் பிடுங்கிவந்து பரப்பி அதற்கே மேலே படுக்கப்போட்டாள். மொச்சைக்கட்டுக்கு ஊடே உருண்டு புரண்டு பிள்ளைகள் வளர்ந்தன. ஆனையூர் பக்கமிருந்து தாய்வழிக் கிழவி ஒருத்தி உதவிக்கென உடன் வந்து தங்கினாள். மூன்று பிள்ளைகளை வளர்த்த அவளுக்கு மூன்று வாரிசுகளும் தங்கின.

வம்சா வழி குழந்தை குட்டிகளெனப் பல்கிப் பெருகியது. மூவருக்கும் மூன்று குணம் வாய்த்தது. தாதுக் கூட்டத்துக்கு வெள்ளாமை செழிக்காது; ஆனால் மனிதர்கள் இரும்புபோல் திடகாத்திரமான உடலோடு இருப்பார்கள். பச்ச மண் கூட்டத்துக்கு வீட்டில் பெண்டுபிள்ளைகள் செழிப்பாய் இருக்கும்; ஆனால் சொனமொன குறைவா மந்தனு இருப்பார்கள். அனல் கூட்டத்தின் வீட்டில் ஆட்கள் துடியாய் இருப்பார்கள்; ஆனால் மழைக்காலத்தில் எழவு விழுந்தபடியே இருக்கும். இது வம்சாவழி உருவான காலத்திலிருந்து வரும் வாக்கு. அதன்படி எல்லாம் நடந்துவந்தது.

கிழவி சடச்சிதான் ஊரின் ஆதி மனுஷி. அவள் தன் மகன்கள் மூவரிடமும் ஊரின் ரகசியத்தை சொல்லிவைத்தாள். இந்த மண்ணை நெருப்பால் சுடக்கூடாது. அப்படிச் சுட்டால் நம் வம்சாவழி அழிந்து விடும். எனவே ஊரின் புறத்தே வேற்றுமண் கொண்டு சட்டி செய்து அடுப்பிலே வைக்கவேண்டும் என்றாள். அதன்படி ஊர் உருவான காலத்திலே குறவன், நாவிதன், வண்ணான், கள்ளன் என நால்வரும் ஊரிலே இருந்தன. ஆனால் குயவன் மட்டும் ஊரை விட்டு புறத்தே தள்ளிகாட்டுக்குள் ஒத்த வீட்டிலே தங்கி சட்டி செய்து கொடுத்துக்கொண்டிருந்தான்.

காலங்கள் உருண்டோடின. சடச்சி மருமகள்களிடம் சொல் லாமல் மகன்களிடம் மட்டும் சொல்லிப்போன கதை இடையிலே அறுந்தது. வாக்கப்பட்டு வந்த பெண்கள் தாங்கள் பிறந்த ஊரின் கதைகளைச் சொல்லத் துவங்கினர். சடச்சியை அறிந்த அவள்களுக்கு சடச்சி சொன்னகதை தெரியாமல் போனது. ஒத்த வீட்டுக் குயவன் சட்டி செய்து கொடுத்துக்கொண்டேயிருந்தான்.

ஒரு கார்காலத்தில் வாரக்கணக்கில் பெருமழை கொட்டியது. யாரும் வெளியேற முடியவில்லை. தண்ணீர் வெள்ளக்காடாய்ப் போய்க்கொண்டேயிருந்தது. மக்கள் ஊரைவிட்டு மலைப் பொந்துகளில் ஓடியடைந்தனர். பல நாள் பெய்த அடைமழை நின்றபின்தான் ஊருக்கு வந்தனர். கொட்டித் தீர்த்த அந்தப் பேய்மழையின் வெள்ளநீர் குயவன் வீடிருந்த பக்கமெல்லாம் ஊரின் மண்ணை இழுத்துவந்து பரப்பிவிட்டுப்போனது. மழை நின்று மண் உலர்ந்தபின் அந்தப் புது மண்ணை எடுத்து குயவன் சட்டி செய்தான். சுட்ட தங்கம் போல பொன்னிறத்தில் சட்டிகள் வந்தன. குயவனின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தபடியே இருந்தது. வாழ்நாளில் செய்யாத சட்டி, சுழலும் சக்கரத்திற்கு நடுவில் பொன்னிற மொட்டுக்களைப் போல பூத்து வந்தது. அவன் தனது கையையும் மண்ணையும் வியந்து பார்த்தபடியே வேலைகளையெல்லாம் வேகவேகமாகச் செய்துமுடித்தான். மழையடங்கிய கொஞ்ச நாளில் புதுவருஷம் பிறந்த அன்று குயவன் கொடுத்த புதுச் சட்டியை பெண்கள் அடுப்பில் வைத்து நெருப்பை மூட்டினர். நெருப்பு கொழுந்துவிட்டெரிந்தது. மரத்தடியில் மந்தையிலும் கட்டிலிலும் படுத்துக்கிடந்த ஆண்களெல்லாம் துடிதுடிக்க ஆரம்பித்தனர்.

நெருப்பின் சுடரைத் தாது உள்வாங்கிய போது வம்சாவளிகளின் உடல்கள் தாங்கமுடியாமல் துடித்தன. மனிதர்கள் மண்ணிலே புரண்டனர். அனல் கூட்டத்துக்கு வயிறு முழுவதும் நெருப்பை கட்டியதைப்போல் சுட்டுப் பொசுக்கியது. பச்ச மண்கூட்டத்துக்கு வயிற்றாலும், வாயாலும் போனது. தாதுக் கூட்டத்துக்கு உள்ளுக்குள் எல்லாமே உருகி ஓடியது. வெளியிலிருந்து வாக்கப்பட்டு வந்த பெண்கள் எல்லோருக்கும் பூர்வீக கதை தெரியாததால், ஆம்பளைகளைப் பார்த்து அய்யோ அம்மாவெனக் கதறினார்களேயொழிய யாரும் நெருப்பை அணைக்கவில்லை. நெருப்பு எரிந்தபடியே இருந்தது. ஆண்கள் எல்லோரும் துடியாய்த்துடித்து செத்துமடிந்தனர். ஒருவன் கூட மிஞ்சவில்லை. மொத்த ஊரும் ஆண்களற்று நின்றது. எல்லாம் முடிந்தபின், எரியும் அடிப்பிலிருந்த குளிர்ந்த சட்டியை முடமான கிழவி ஒருத்தி மட்டும் பார்த்து வைத்துக்கொண்டாள்.

செத்துப்போனவர்களை மண்ணுக்குள் போட்டு புதைத்து வாரக்கணக்கிலே அழுதுகொண்டிருந்த பெண்கள் எல்லோரும் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அவரவர் தாய்வீட்டிற்குப் புறப்பட்டனர். சடச்சியை நினைத்து தெம்புபிடித்து எழுந்த கிழவிகள் எல்லாம் ஒன்றுகூடி வயித்துப்புள்ளைக்காரின் பதினேழு பேரை மட்டும் அழைத்துக்கொண்டு ஆளரவமின்றி இருந்த அமண மலையடிவாரக் காட்டுப்பகுதியில் வந்து தங்கினர். மாதங்கள் சென்றன. குயவனின் சக்கரம் ஒன்றை ஆழப் புதைத்து அதன் மீது மண் சுவர் எழுப்பி மேலே கிடுகுகளைப் போட்டு மூடினர். அந்த இடத்தில் வைத்து ஒவ்வொருத்திக்காய் பிரசவம் பார்த்தனர். குழந்தை பிறந்தவுடன் கிழவி ஊரின் கதையைக் காதிலே சொன்னாள். குழந்தை கதை கேட்டுத் துடித்து வீச்சென்று கத்தியது. அதன் பின் குழந்தைக்குப் பால் கொடுத்தனர். பிறந்தவுடன் நான்கு குழந்தைகள் இறந்தன. மீதம் ஏழு ஆண்களும் ஆறு பெண்களும் பிறந்தனர். ஊர் மீண்டும் தழைக்க ஆரம்பித்தது. ஆணும் பெண்ணும் ஊரின் கதையோடு தான் வளர ஆரம்பித்தனர். அவர்கள் வளர வளரக் கதையும் வளர்ந்தது. அவர்கள் பிள்ளை குட்டி பேரன் பேத்தி எடுத்துக் கதையை வளர்த்தபடி இருந்தனர். கதையும் பிள்ளை குட்டி பேரன் பேத்தி எடுத்து அவர்களை வளர்த்தபடி இருந்தது.

மழைக்காலத்தில் வயித்துப்புள்ளக்காரியின் வயிற்றிலேயிருந்து கதை கேட்டுக்கொண்டே பிறந்ததுதான் தாதனூர். ஊரின் மூல விதையாக முடமான கிழவியின் நாக்கிலேயிருந்து உருண்டு வந்த ஒற்றைச் சொல் இருந்தது. அந்தச்சொல், எல்லோரும் செத்தபின் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்து மண்ணில் பூர்வீகத்தை நினைவுபடுத்தி நெருப்பை அணைக்கச்சொல்லி உயிரை விட்ட தாதுக் கூட்டத்தின் கடைசி ஆளின் பெயராக இருந்தது. அந்தச் சொல்தான் தாதனூரின் விதை. அந்தச்சொல்தான் தாதனூரின் வேர். தாதனூர்க்காரர்கள் எல்லோரும் அந்தச் சொல்லை சொல்லியபடியேதான் வளர்ந்துவருகின்றனர். அது காலத்தைக் கடந்து வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சொல்தான் ‘கருப்பு.’

*

**ஆ**ண்கள் அழிந்த ஊரிலிருந்து கிழவிகள் வயித்துப் புள்ளைக்காரிகளை அழைத்துக்கொண்டு வெளியேறும்போது சடச்சியின் ஞாபகமாய் கைப்பிடி

மண்ணும், மொச்சைச் செடியொன்றையும் கொண்டுவந்தனர். கைப்பிடி மண்ணை மலையடிவாரத்தில் வைத்து வழிபட்டனர். நாட்கள் நகர்ந்தன. முதல் குழந்தை பிறந்த அன்று, பிறந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு சடச்சியை வணங்க வந்தபொழுது பிடி மண் வைக்கப்பட்டிருந்த மண் மேட்டிலேயிருந்து ஒரு ஆலஞ் செடி முளைவிட்டிருந்தது. கிழவிகளுக்கு சந்தோஷத்தில் கண்ணீர் பெருக்கெடுத்தது. ‘வம்சாவளி தழச்சிருச்சுடி...’ எனச் சொல்லி ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்து செடிக்கு ஊற்றினர். அப்பொழுதுதான் முளைவிட்டிருந்த அந்தச் செடி தண்ணீர் குடித்து கொஞ்சம் கொஞ்சமாகத் தழைத்தது. குழந்தைகள் பிறந்தபடி இருந்தன. செடி மரமானது. பெண்கள் தண்ணீரை ஊற்றிய படியே இருந்தனர். மரம் விழுதிறக்கத் துவங்கியது. காலங்கள் அழைத்துச் சென்றபடி இருக்க புதிய கிழவிகள் வந்து கதை சொன்னார்கள். தென்கால் கண்மாய் நண்டு நத்தைகள் போல் குழந்தைகள் பல்கிப் பெருகின. மரம் பெருந்தோப்பென மாறி வெளியெங்கும் விழுதிறக்கி நின்றது. ஆதிக் கிழவி சடச்சி மீண்டும் தன் மக்களையெல்லாம் மடியிலே கிடத்து வெளியெங்கும் நிழல் பரப்பி அமர்ந்திருந்தாள்.

ஊருக்கு சரடு கட்டி வந்த புதுப்பொண்ணுக்கு மொச்சைப்பயிறு அவித்தே முதலில் கொடுத்தார்கள். குழந்தை பிறந்தால் மொச்சக்கட்டிலே முதலில் போட்டார்கள். மொச்சைச் செடியே இல்லாத பஞ்சகாலமாக இருந்தால், மொச்சைச் செடியின் காய்ந்துபோன மாரிலே குழந்தையைப் போடுவார்கள். ஊர் புளியமரத்திலே எந்நேரமும் ஊதுகொம்பும் மொச்சமாருக் கட்டு ஒன்றும் தொங்கியபடியே இருக்கும். மொச்சை அவர்களின் அடிஉரமாக இருந்தது. சடச்சிக்கு மொச்சையைப் படையலிட்டே வணங்கினர். சடச்சியின் வழி தோன்றிய பேரன் கருப்பு மரத்தையும் ஊரையும் காத்தபடி இரண்டுக்கும் நடுவில் மலையடிவாரத்தில் துடியோடு நின்றுகொண்டிருக்கிறான். அவனுக்கு மொச்சை மட்டும் போதாது. உள்ளுக்குள் எரியும் தாகத்தை அடக்க அவனுக்கு பலி கொடுத்து மாளாது.

பழைய ஊர் அழிந்த இடத்தை யாரும் மிதிக்க மாட்டார்கள். மரங்கள் அடர்ந்து வளர்ந்து செடிகொடிகளெல்லாம் பின்னிப் புதர்மண்டிக் கிடக்கும். அங்கிருந்து விறகோ கட்டையோ செத்தையோ மாரோ எடுக்கமாட்டார்கள். ஆட்கள் நுழையவே முடியாத பெரும் புதரா அது கிடந்தது. அதன் வடக்கோரத்தில் குறவன், வண்ணான், நாவிதன் மூவரும் தங்கிவிட்டனர்.

பிறந்த ஏழு ஆண் குழந்தைகளின் நான்கு கல்யாணமாகும் முன்பே அடிபட்டுப்போனது. மூன்றுதான் மிஞ்சியது. சடையன், கழுவன், நரியன் மூவரின் கூட்டங்களும் மீண்டும் விருத்தியாயின. பெரியாத்தா சடச்சி மக்கள பாத்துக்கிட்டா. கருப்பன் நோய் நொடி அண்டவிடாமல் காத்து வந்தான். மண்ணின் ஆதி குணத்தோடு தாதுரம் ஏறியபடி அவர்கள் இருந்தார்கள். பூர்வீக மண்ணை மிதிக்காமல், எரிக்காமல் காத்தபடி வடகண்டத்தில் போய் தானியங்களைக் கொண்டுவந்து குடும்பம் நடத்தினர். வடகண்டமோ தென்கண்டமோ எங்கு போனாலும் மூன்று கூட்டங்களிலும் ஒவ்வொருவர் சேர்ந்து ஒரு கொத்தாகப் போகவேண்டுமென்பது கிழவிகளின் வாக்கு. மூவரின் பெயரிலும் கொத்துக்கள் கூடின. அதில் கழுவன் கொத்துதான் திருமலை மன்னனின் அரண்மனையில் கன்னம் போட்டு இறங்கி, நகையெடுத்து வந்தது.

அதன்பின் தாதனூருக்கு மதுரைக் காவல் உரிமை வந்தது. காவல் உரிமை பெற்றுத்தந்த கழுவனின் எட்டாவது தலைமுறை வாரிசுதான் மாயாண்டி.

புதிய வாரிசு பிறந்தாலோ, அல்லது அதற்கு மொட்டை எடுத்தாலோ கருப்பனைக் கும்பிட்டு, சடச்சியின் நிழலிலே அமர்ந்து கதை சொல்வார்கள் கிழவிகள். புதிதாகக் காவல் பிடித்துப் போகும்போதும் மொட்டையடித்து கதை சொல்வார்கள். கதை கழுவனில் துவங்கி மொக்கையன், மொண்டி, பேயன், கருப்பணன், கழுவன், தாதன், மாயாண்டி என எட்டாவது தலைமுறையில் வந்து இப்பொழுது நிற்கிறது.

கதைதான். இந்தக் கதை அறந்துபோனால் ஊர் அறுந்துபோகும். ஊரும் கதையும் வேறல்ல, கதையும் உயிரும் வேறல்ல. கதை மறந்த பொழுது உயிர்களெல்லாம் அழிந்ததால் கதையே உயிரென்றானது. கதை மண்ணிலிருந்து துவங்குகிறது. மண்ணைப்பற்றியே பேசுகிறது. இந்த மண்ணின் தலை விளைச்சல் கதைதான். மண்ணும் கதையும் பிரிக்க முடியாத உருவாகக்கொண்ட கருவில் பிறந்தவர்கள்தான் தாதனூர்க்காரர்கள்.

*

**‘நா**லு விதி வௌவால்கள் இருக்கிற மலை இது. கருவ வௌவால், மொசக்காது வௌவால், மஞ்சள் வௌவால், விப்பு வௌவால். இதுல கருவ வௌவாலும் மொசக்காது வௌவாலும் எல்லா இடத்திலேயும் இருப்பதுதான். மற்ற இரண்டும்தான் விசேஷமானது. மஞ்சள் வௌவால் என்பது மஞ்சள் அரைச்சுத் தடவுன மாதிரி பொடியா இருக்கும். விப்பு வௌவாலுன்றது குகைகுள்ளே நிக்காது. ரெண்டு கல்லு வெடிப்பு விட்டு நிக்கணும்; அதுக்குள்ள போயிதான் அடையும். ரொம்ப விஷயமான ஆளு போனாதான் அதை அடிக்க முடியும். ஊரு இளவட்டங்கள் மாயாண்டி நாலாக பகுந்துதான் எப்போதும் வைத்திருப்பார். ‘இப்பத்தான்டா கருவ வவ்வால் அடிக்கிற வயசுக்கு வந்திருக்கிறான்’ எனத் துவங்கி, ‘மொசக்காது வவ்வால அடிக்கிறவங்கெதான் ஊருல பெருங்கூட்டமா இருக்காங்கெ’ எனச் சொல்லி, ‘மஞ்ச வவ்வால அந்த அர வெளிச்சத்திலயும் உத்துப்பாத்து அடிக்கிற கெட்டிக்காரன்டா இவன்’ எனப் பாராட்டி, ‘விப்பு வவ்வால அடிக்கத் தெரங்கெட்டவங்க எல்லாம் எதுக்குடா களவுக்கு போறீங்க?’ எனத் திட்டி முடிப்பார்.

சிறுவர்களுக்கு ஐந்து விதமான பயிற்சிகள் முக்கியம் ஓடுறது, தாண்டுறது, எறியிறது, தூக்குறது, சாப்பிடுறது. இது ஐந்தையும் கத்துகிட்டே வளரணும். வளந்துகிட்டே கத்துக்கிறணும். மாயாண்டிதான் சொல்லி தர பெரிய ஆம்பிள. தெனமும் பசங்களுக்கு ஓடுறதுக்கு பந்தயம் வைப்பார். சின்னவங்க துவங்கி பெரியவங்க வரையிலும் அவரு வைக்கிற பந்தயத்துல ஓடுவாங்க. ஒரு எல்ல வெச்சிருவாரு. அந்த எல்லைக்குள் செம்மறியாட்ட வெரட்டிப் பிடிக்கணும். ஆளு தவுச்சப்போயி விழுந்தாலும் விழுவானே தவிர செம்மறிக் குட்டி புடிபடாது. எந்தந்தண்டி கில்லாடியானாலும் செம்மறிகிட்ட செல்லாது.

ஓடிப்போய் சப்பாத்திக் கள்ளிய தாண்டச் சொல்றதுல ஆரம்பிக்கிற விளையாட்டு கோபுர கத்தாழைய தாண்டச் சொல்றதுல போயி முடியும். கோபுர கத்தாழைய தாண்டுறப்ப தப்பித்தவறி கால்தட்டி கீழ விழுந்தா

அவ்வளவுதான். உடம்பு பூரா நாறு நாறா கிழிஞ்சிரும். அத தாண்டுறதுக்கு முன்னாடி தாண்ட முடியும்னு முழு நம்பிக்கை இருக்கிறவந்தான் தாண்டுவான். ஓடுறப்ப திடீர்னு பயம் வந்து கிட்டத்துல வந்து சட்னுமுட்டி கத்தாழையில் கிழிபட்டு திரும்புறவங்கெதான் நெறய. 'கோபுரக்கத்தாழய்ய தாண்ட முடியாத வெளக் கெண்ணய்களுக்கெல்லாம் என்னடா வீறாப்பு வேண்டிக்கிடக்கு' எனப் பெரிசுவிடம் வசவு வாங்குவதற்கென்றே பெரிய கூட்டம் எப்போதும் இருக்கும்.

கல்லெறிஞ்சு பழகுறது ரொம்ப முக்கியமான விசயம். சின்னஞ் சிறுசுலேர்ந்து கல்ல் எறிஞ்சு எறிஞ்சு ஊரே பழகும். ராத்திரி பகல்னு வித்தாயசமில்ல. எப்பனாலும் சரி. கல்ல எடுக்க, எறிய்ய, கல்ல எடுக்க எறிய்யன்னுதான் எல்லாரும் இருப்பாங்கெ. உள்ளங்கையும் வெரலும் கல் பிடிக்கு காய்ச்சிருக்கும். கல்லு போற சத்தம் எறியிறவனுக்கு கேக்கணும். அவ்வளவு வேகமா எறியணும். சின்னப்பிள்ளயில இருந்து ஏழெட்டு வருசமா கல்லெறிஞ்சு பழகுனவெ ஊர் எறிக்கு தயாராவான். ஊர் எறி வருசத்துக்கு ஒரு தடவ ரெண்டு தடவ நடக்கும். ஊர் பெரியாம்பளதான் அத நடத்தணும். பத்துப் பன்னெண்டு வருசமா மாயாண்டி தான் அத நடத்திட்டு வர்றாரு.

மொத எறி கருப்பு கோயிலை நின்று தூரத்துல இருக்கிற ஒத்தப்பனமரத்து கிடுகுல எறியணும். அத எறிஞ்சுட்டா ரெண்டாவது எறிமரத்துல எறியணும். அதையும் எறிஞ்சுட்டா மூணாவது எறி மரத்துக்கு நடுவூல, மரங்கொத்தி போட்ட ஓட்டய சுத்தி எரியணும். இது எறியோட குறிக்கான போட்டி. அத எறிஞ்சு முடிச்சவங்கெ கடைசி போட்டிக்கு தயாராவாங்கெ. அதுதான் முக்கியம். ரொம்ப ஆபத்தானது. ஆலமரக்கூட்டத்தோட தெக்குப்பக்கமாக இருந்து எறியணும். கல்லு வடக்குப் பக்கமா மரத்த தாண்டி விழுகணும். அப்படியில்லாம மரத்துக்குள்ளயோ, மரத்தோட ஒரு கொப்புலயோ, ஒத்த எலயிலேயோ பட்டா கூட போதும், ஊரே பதறிடும். அது மரமல்ல, ஆதிக்கெழவி சடச்சி. 'சடச்சிய எறிஞ்சுட்டாண்டோய்'னு பெருசு கத்திட்டா அவ்வளவுதான். எறிஞ்சவனுக்கு ஊர் அடி விழுகும். ஊர் அடி வாங்குனவெ எந்திருக்க கொறஞ்சது பத்து நாளாகும். அப்புறம் ஊரே கோழியடிச்சு கொடுத்து, எண்ணய குடிக்கவெச்சு ஆள தேத்தணும்.

அடுத்த போட்டி தூக்குறது. மத்த ஊரெல்லாம் கல்லத் தூக்கிப் போட்டுத்தான் பழகுவாங்க. தாதனூர் அப்படியில்ல. ஆடாம அசையமா கிடக்குற கல்லத் தூக்குறது கெட்டிக்காரத்தனமில்ல, ஆடி அசஞ்சு துள்ளுறத பிடி வுடாம நெளிச்சுக் குடுத்து வீறாப்பா பிடிச்சு தூக்கிட்டு பத்தெட்டாவது ஓடணும். அதுதான் கெட்டிக்காரத்தனம். அது ஆட்டுக்குட்டிய தூக்குறதுல ஆரம்பிக்கும். கடைசியா எரும கன்னுக்குட்டிய தூக்குறதுல போயி முடியும். எரும கன்னுக்குட்டிய தூக்குறது லேசப்பட்ட காரிய மில்ல. நல்ல கனங் கனக்கும். காலப்போட்டு உதச்சு தள்ளும். நாலு பக்கமும் பிடி நழுவும். கனமும் சமப்படாது. அதையும் தாண்டி அத தூக்கிக்கிட்டு ஓடுறவனத்தான் கெட்டிக்காரன்னு ஊரு ஏத்துக்கிரும்.

கடைசிப் போட்டி நல்லா சாப்பிடறது. குறஞ்சது மூணு கும்பா குடிக்கணும். கால் தூக்கி விரட்டுற சின்னக் கிடாய உரிச்ச ஒத்தையில தின்னு முடிக்கணும். எந்த நேரம்னு கிடையாது. எப்ப கஞ்சி கெடைக்குதோ

அப்பல்லாம் குடிக்கணும். தாதனூருக்கு பொண்ணு கேட்டு வர்ற மாப்பிள்ளைகள பேச்சு தொடங்கு முன்னாடி சாப்பிட விடுவாங்கெ. அவெ சாப்பிடுற சாப்பாடுதான் அளவு. 'நாலு கும்பா கஞ்சிய குடிக்க முடியல. இதெல்லாம் நம்ம பிள்ளய வச்சு எப்படி பொழைக்கப் போகுது, வெரட்டி விடுங்கடா ஆள'ன்னு பெருசு சொல்லிட்டா அவ்வளவுதான்.

கடேசியா வளரி எறியப் பழக்குவாங்கெ. அது ஊரு கிட்ட நடக்காது. நாகமலைப் பொட்டலுக்குப் போவாங்கெ. பழகுறவெ தோள் செப்பை கழண்டு போகும். தப்பு பண்ணுனா அடி விழுகும். மூணுமாசம் எறிஞ்ச பழகுனா தான். எதிர்வெயில்ல தூரப் பாறைமேல் வெச்சிருக்கிற பனக்காய் தண்டி கல்ல துண்டாத் தூக்க முடியும். மாயாண்டி எளவட்டமா இருந்த காலத்தோட சரி, வளரி எரியுறது நின்னுபோச்சு, ஊரோ கையில இருந்த வளரி நழுவி மரப்பொந்துல அடஞ்சு இரண்டு தலைமுறைக்கு மேல ஆயிருச்சு.

எல்லாத்துலயும் வெளஞ்சிட்டான்னு பெரியாம்புள சொல்லிட்டா அவன் 'கொத்துல' சேர்ந்திருவான். அதுக்குப் பெறவு களவுக்கு தெசையெட்டும் போனபடி இருப்பான். கொத்துல வர்ற எல்லாரும் புதுசாவர்ற ஆளுக்கு சொல்லிக் குடுத்துக்கிட்டே இருப்பாங்கெ. அத கத்துக்குற இடத்துல எங்க தப்பு நடந்தாலும் அவனும் அவெங் கொத்தும்தான் பொறுப்பு.'

தவறுக்கான விளைவு மரணத்தில் துவங்கி மரணமற்ற கொடும் வேதனையைக் காலமெல்லாம் நினைவூட்டும் ஒச்சமாகக் கூட இருக்கலாம். எனவே சொல்லிக்கொடுப்பது என்பதும், பயிற்சி கொடுப்பது என்பதும் பிசகு நடந்திராத மயிரிழையிலேதான் நடந்து வருகிறது.

களவுக்குபோய் சுத்துப்பட்டியெல்லாம் பேரெடுத்து, பேர் பெற்ற திருடர்களின் தொழில்முறை சவால்களையெல்லாம் சந்தித்து மேடேறி, இருளின் ரகசியங்களையெல்லாம் பருகிய ஒருவனைத்தான் ஊர் அடுத்த படியாக காவலுக்கு அனுப்புகிறது. வெளியெல்லாம் கைநீட்டி இருளின் நரம்புகளைத் துழாவிப் பிடித்து, அதன் ரத்த ஓட்டத்தை கணிக்கத் தெரிந்த ஒருவனின் கையில்தான் ஊர் பெரியாம்பள காவக் கம்பை தூக்கிக் கொடுத்து அனுப்பிவைக்கிறார்.

காவல் கெட்டிக்காரத்தனத்துக்கான கடைசிக் களம், நல்ல காவக்காரன்னு பேரெடுக்க பல வருஷமாகும். ஆனா ஒரு இடத்துல ஓட்ட விழுந்தாலும் தண்ணி பூரா ஒழுகிடுற மாதிரி ஒரு ராத்திரி கோட்ட விட்டாலும் பேர் பூரா போயிரும். கெட்டிக்கார காவக்காரனா இருந்து, முடிச்சு உயிரோடு வெளியேறுறது சாதாரண விஷயமல்ல.

இவ்வளவையும் கடந்து வந்த ஒருவனுக்கு அதன் பிறகும் உடலும் உயிரும் மிஞ்சியிருக்குமேயானால் அவன்தான் ஊர் பெரியாம்பள ஆகிறான். ஊரின் முதிர்ந்த நெத்து அவன்தான். அவனுக்குள் ஊர் சொன்ன எத்தனையோ வமிசக் கதைகள் கிடக்கின்றன. அவன் ஊருக்குச் சொல்ல வேண்டிய எத்தனையோ கதைகளும் கிடக்கின்றன. அவை இரண்டும் சேர்ந்து கல்லெறியத் துவங்கும் ஒரு சிறுவனுக்குள் இறங்க ஆரம்பிக்கிறது. இப்படித்தான் கதையும் ஊரும் உயிரும் சுற்றியபடி இருக்கிறது.

கிழவனுக்கே இவ்வளவென்றால் கிழவிக்கு இன்னும் எவ்வளவோ!

அவள் கருப்பாதை திறக்கும்போதே கதை சொல்லத் துவங்கிவிடுகிறாள். கதைகளின் விஷயத்தில் அவள் ஆண்களை நம்புவதே இல்லை. அவர்களால் கதை அறுந்துபோனதை அவள் மறப்பதற்கில்லை. எனவே எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லிக்கொண்டேயிருக்கிறாள். அவள் கதை தனி.

**மா**யாண்டி மனிதர்களின் மனங்களைக் கதையால் வளர்ந்தெடுத்தவன். ஊரின் கதை தெரியாதவனுக்கு ஊர் புத்தி வராது. ஊர் புத்தி வராதவனுக்கு மனித புத்தி வளராது. இந்த மலையும் மலையடிக் கருப்பும் அதைச் சுற்றிய ஆலமரங்களும் மலையடிவார சிறு ஊரும் என்ன என்று தெரியவேண்டுமென்றால் தலைமுறை தலைமுறையாக இருக்கும் கதைகளைப் புரிந்துகொண்டால் மட்டுமே முடியும். சில மனிதர்கள் பதராகப் போய்விடுகின்றனர். சிலர் சில தானியங்களையாவது தந்து விட்டு போகின்றனர். சிலர் கொத்துக்கொத்தாக விளைந்து நிற்கின்றனர். மாயாண்டி ஊர்க் களத்தில் அம்பாரம் அம்பாரமாகத் தானியங்களைக் குவித்தவன்.

‘டே...கருப்பா!’ எனச் சொல்லித்தான் மாயாண்டியின் பொழுது துவங்கும். ‘தூங்கப் போறேண்டா...கருப்பா!’ எனச் சொல்லித்தான் மாயாண்டியின் பொழுது முடியும். அவன் கருப்பனைச்சொல்லிக் கொண்டே இருந்தான். அவன் மட்டுமல்ல, ஊரே கருப்பனைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கும். மலையடிக் கருப்பு இல்லாமல் ஊரேது?

மாயாண்டிதான் ஊரின் தலைப்பிள்ளை. மாட்டுக்குப் போடுவது போல சூடு போடப்பட்டது அப்பனைப்போல் தீவாந்திரமாக அனுப்பப்பட்டானா, அல்லது பாம்பன் சிறையில் அடைக்கப்பட்டு கடலில் ஒதுங்கிய பிணங்களில் ஒன்றாகக் கிடந்தானா? எதுவும் ஊருக்குத் தெரியவில்லை. எப்படியோ, அவனது கடைசி நொடியிலும் ‘டே...கருப்பா’ எனச் சொல்லாமல் அவனது உயிர் போயிருக்காது.

ஊரில் கடைசியாக மறைந்த பெரிய கருப்பு மாயாண்டிதான்.

*

# 80

**தாது வருடத்திற்குப்பின் காவக்கம்புகள் பலவும் கைமாறியிருந்தன.** தாதனூர் அடுத்த தலைமுறையை மதுரைக் காவலுக்கு அனுப்பி வைத்தது. இப்பொழுது வடக்காவணி வீதியைப் பேயாண்டியின் மகன் பூச்சி காவல் காக்கிறான். கீழஆவணி வீதி பொன்னாண்டியின் மகன் மண்டையன் காவல். தெற்காவணி வீதி சோங்குவின் மகன் பேயன் காவல். மேலமாசி வீதி கருத்தாண்டியின் பேரன் ஆங்கன் காவல். இப்படியாக அடுத்த தலை முறை காவல் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஒருசிலர்தான் வயதானவர்களாக இருந்தார்கள். மற்றபடி இளவட்டங்களால் காவல் வீதிகள் நிறைந்தன. காவக்காரர்களின் எண்ணிக்கை குறைந்ததால் முன்னைவிட அதிகத் தெருக்களை காவல் காக்க வேண்டிய தேவை உருவானது.

ராமாயணச் சாவடியும் செல்லத்தம்மன் கோவில் செக்கடியும் மைனா தெப்பக்குளம் மீண்டும் களைகட்டத் துவங்கியது. இளவட்டங்களின் முறுக்கேறிய காவல் மதுரையின் இரவுகளை நீர் கசிய விடாத மடையைப் போல அடைத்து வைத்தது.

பஞ்ச காலத்தில் காவக்காரர்கள் பெருந்துயரத்தைச் சந்தித்து மேடேறியிருந்தனர். எல்லோரையும் போல நோய் இவர்களையும் ஈவிரக்கமின்றி அழித்தது. அதுவரை கைதேர்ந்த திருடர்களையும் கொள்ளையர்களையும் சமாளித்து கட்டுப்படுத்திப் பழகியிருந்த இவர்கள் முதன்முறையாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டத்தின் திடீர் தாக்குதல்களையும், பட்டப்பகலில் நடந்த நேரடிக் கொள்ளைகளையும் சந்தித்தனர். எல்லோரின் கைகளும் ஈவிரக்கமின்றித் தானியங்களை மறைத்துவைத்திருப்பவனின் வீடுகளை நோக்கி ஆயுதகளோடு நீண்டது. இதுவரை சந்தித்திராத வகையில் சம்பவங்கள் நடந்தேறின. நிகழ்ந்துவரும் புதிய மாற்றங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் காவக்காரர்கள் பெரும் தாக்குதல்களுக்குள் சிக்கி மாண்டனர்.

யாருக்காக யாரிடமிருந்து காவல் என்பதில் ஏற்பட்ட புதிய சிக்கல்களைத் தாதனூரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கொள்ளை லாபம் அடிக்க கடந்த பல ஆண்டுகளாக நல்ல அனுபவம் பெற்ற வணிகர்கள் எண்ணிலடங்கா மூட்டை தானியங்களை பதுக்கி வைத்தனர். அதன் விளைவாக இதுவரை இல்லாத அளவிலான பெரும் மக்கள் கூட்டம் நிர்கதியான நிலையில் உயிரைக் காப்பாற்ற தானியக்கிடங்களுகளின் மீதும், வணிகர்களின் சேமிப்பு நிலைகளின் மீதும் பெரும் கூட்டுத்தாக்குதல்களை நிகழ்த்தினர். ஆனால் காவக்காரர்களோ அதே அளவான தானியக்கூலிக்காக அந்தக் கட்டிடத்தை வழக்கம்போல் காவல் காத்தனர். திரண்டுவந்த மக்கள் கூட்டம் இவர்களின் மேல் கொலைவெறித் தாக்குதலை நடத்தி, மூடைகளைக் கைப்பற்றி வெளியேறியபடி இருந்தது.

முன்பு போல ஒன்றிரண்டு என்ற சிறிய எண்ணிக்கையில், கைதேர்ந்த திருடர்களினால் இரவில் ஏற்படும் அபாயத்திலிருந்து பொருட்களைக் காப்பது என்பது இப்போது அரிதாகிவிட்டது. பெரும் எண்ணிக்கையிலான கூட்டத்தின் திடீர் தாக்குதலே இப்பொழுது சமாளிக்கவேண்டிய பிரச்சனை என்றானது. நிலைமையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை தாதனூர்காரர்களால் உடனடியாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. தினமும் இழப்புகளைச் சந்தித்தபடி இருந்தனர்.

ரயில் நிலையக் கொள்ளைக்குப் பின்புதான் அவர்கள் புதிய முறையில் யோசிக்கத் துவங்கினர். பர்மாவிலிருந்து மதுரை ரயில் நிலையத்திற்கு வந்திறங்கிய உணவு தானிய மூடைகள் தினமும் மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டு கிட்டங்கிக்கு கொண்டுசெல்லப்பட்டன. வந்திறங்கிய மூடைகள் அனைத்தையும் கிட்டங்கிக்கு கொண்டுசெல்ல பத்து தினங்களுக்கு மேலாகும் என்பதால் ரயில் நிலையத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள மூடைகளைக் காவல் காக்க கச்சேரிப் போலீசார் பத்து நாளைக்கு ஒரு தானிய மூடை என தாதனூர்க்காரர்களிடம் கூலி பேசி ஐந்து பேரை இரவும் பகலுமாகக் காவல் காக்க வைத்தனர். அவர்களுடன் துப்பாக்கி போலீசும் காவல்பணியில் ஈடுபட்டிருந்தனர். நான்காம் நாள் மத்தியானத்தில் சுமார் 200 பேர் கொண்ட ஒரு பெருங்கும்பல் ரயில் நிலையத்திற்குள் புகுந்து மூடைகளைத் தூக்கியது. காவல் புரிந்தவர்களைக் கடுமையாகத் தாக்கியது. துப்பாக்கிச் சூடும் நடந்தது. காவல்காரர்களும் தூக்க வந்தவர்களுமாகச் சேர்ந்து இருபது இருபத்தைந்து பேர் இறந்திருப்பார்கள். ஆனால் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததில் பெரும்பகுதியான தானிய மூடைகள் பறிபோயின.

அந்தக் கொள்கையில் ஈடுபட்ட கிராமக் காவலர்கள் ஐந்து பேர் ஆளுக்கு ஒரு மூடையுடன் அன்றிரவு கருப்பு கோவில் ஆலமரத்தடிக்கு வந்தனர். அப்பொழுதுதான் அந்தத் தாக்குதலில் தாதனூர் காவல்காரர்கள் மூவர் இறந்த விஷயம் தெரியும். இவர்கள் ஏன் ரயில் நிலையக் காவலுக்குப் போனார்கள் என்பதில் வாக்குவாதம் துவங்கியது. ஒரு மூடை தானியக் கூலிக்காக மூன்று பேர் பலியான நிலையையும், ஐந்துபேர் ஆளுக்கு ஒரு மூடை தானியத்துடன் வந்திருக்கிற நிலையையும் அவர்கள் புரிந்துகொள்ளத் துவங்கினர். அதன்பின் புதிய தானியக் கிடங்குகளுக்கான காவல் எதையும் ஏற்பதில்லை என்றும் நகரத்திற்குள் உள்ள பழைய வீடுகளின் சேமிப்பு நிலையங்களைக் குறிவைத்து பெருங்கூட்டம் ஏதாவது

முன்னேறி வந்தால் உயிரைப் பணயம் வைத்துப் பாதுகாக்க வேண்டியதில்லை என்றும் முடிவுக்கு வந்தனர். இந்த முடிவு எடுக்கப்படும்பொழுது நகரின் கணிசமான காவல்காரர்களை தாதனூர் இழந்திருந்தது.

மாறிவரும் சூழ்நிலைக்கேற்றாற்போல் தன்னை மாற்றிக்கொண்டதினால் இழப்பு அந்த மட்டோடு நின்றது. தாதனூர்க்காரர்களின் புதிய முறையிலான தந்திரத்தை தங்களது தொழிலின் ஊடே கையாண்டனர். பெரும் பங்களாக்களுக்குள் மூடைகள் அடுக்கிவைக்கப்பட்டதை உணர்வார்களேயானால், அதை நோக்கி வரும் மக்கள் கூட்டத்தோடு, சிறு சேதாரமும் இன்றி அதிக அளவைக் கைப்பற்றுபவர்களாக அவர்கள் மாறினர். பகலையும் இரவையும் பற்றி அவர்களை விட நன்கறிந்தவர்களை தாது வருஷப் பஞ்சம் உருவாக்கி வைத்திருந்தது. அவர்களின் உக்கிரமேறிய தாக்குதலின்பொழுது தன்னைக் காத்துக்கொள்ள காவல் காரர்கள் கற்றுக்கொண்டார்கள். அது மட்டுமல்ல, அந்தக் கூட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முடிவு செய்தபின் அவர்களது தேவைக்கான பொருட்களை அவர்களால் எளிதில் கைப்பற்ற முடிந்தது.

*

**தா**து முடிந்த மூன்றாண்டுகளில் நல்ல மழை பெய்தது. தொடர்ந்த அடுத்த மூன்று ஆண்டுகளில் அதுவரை இல்லாத அளவிற்கு பூமிவிளைச்சல் கண்டது. மண்ணின் குளுமை மனிதர்களின் மேல் ஏறிப்பரவியது. மீண்டும் தங்கள் தொழிலுக்கு மனிதர்கள் திரும்பினர். கிராமத்திற்கு எல்லாம் தேவைப்பட்டது. ஒன்பது சேவைச் சாதிகளும் வந்து குடியமர்ந்த இடம் பெரிய ஊரானது. இதில் ஒன்றிரண்டு குறைந்த சிறிய கிராமங்களும் உருவாகின. கண்மாய் நிறைந்துள்ளதை இறங்கிப்பார்த்து, நீர் வரும் அளவையும், நீர் வெளியேறும் அளவையும் கணித்து புதிய தமுக்கை எடுத்து, நீர்கட்டி அடிக்கும் சத்தம் கிராமந்தோறும் கேட்டபடி இருந்தது. கண்மாய்க் கரைகளிலிருந்து நாரைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்தன. கொல்லாசாரியின் உலைக்களன் இரும்பை நீட்டியபடி இருந்தது. விளைச்சல் அம்பாரம் அம்பாரமாகக் குவிந்தது. சூடடித்தவன் வைக்கோல் பரப்பின் உச்சியிலிருந்து இறங்கும்பொழுது களத்துமேட்டுக்கு வந்து வள்ளுவன் பாடத் துவங்கினான். உமியும் மண்ணும் போட்டுப் பிசைந்து குயவன் செய்த குலுக்கை வீடுகள்தோறும் போனது. சுடாத மண் குயவனிடமிருந்து வெளியேறுவது என்பது நிறைந்த வெள்ளாமைக்கு நடக்கும் பிரசவம் போன்றது.

எங்கிருந்தோ ஒரு வாணிபச்செட்டி குடுவையில் எண்ணெய் கொண்டு கிராமத்திற்குள் வந்தான். நல்லெண்ணெயும் விளக்கெண்ணையும் வாங்கிக் குடித்து உடலைத் தேற்றினர். உருளையையும் கமலையையும் செய்துதந்த தச்சாசாரி கோயிலுக்கு அகப்பை செய்யத் துவங்கினான். ஊருக்குத் துவைத்த ஏகாலி சாமிக்கு மாத்து கொடுக்க துணி எடுத்தத் துவைக்க ஆரம்பித்தான். குயவன் சூளைக்கரையிலிருந்து சாம்பலைக் கொண்டுவந்து பூசாரியிடம் கொடுத்துவிட்டுப் போனான். திருவிழாக்கள் துவங்கின. சாராயம் காய்ச்சி வடிக்க பானைகள் போதாமல் மொடாக்களைப் பயன்படுத்தினர். குலசாமிகளின் தாகத்தை

மண்மொடக்கள் தீர்த்துவைத்தன. எல்லோரும் ஒவ்வொன்று கொடுத்து கிராம தெய்வத்தை வழிபட்டனர். வண்ணான் சுற்றித்தந்த பந்தத்தில் நெருப்பு பற்றியெரிந்தது. தீப்பந்த வெளிச்சத்தில் கிடாய்களின் தலைகள் ரத்தத்தை வீசித்தெளித்தபடி மண்ணில் உருண்டன. உப்பங்கறி கொதித்தது. தலை, கால், தோல், பின்னங்கால் சப்பை, முன்னங்கால் சப்பை என ஒவ்வொன்றை எடுத்துக்கொண்டு எல்லோரும் போயினர். துடியான தெய்வம் மண்ணில் சிந்திய ஆட்டு ரத்தத்தைப் பருகிக் கோபம் தணிந்து வயிறு நிறையத் தின்று முடித்து தன் பிள்ளைகளைப் பார்த்துச் சிரித்தது.

உறவுகள் வலுப்பெற்றன. அடுத்த ஊரிலிருந்து பெண்ணெடுக்க அந்த ஊர் வண்ணாத்தியிடம் போய் விசாரித்துத் திரும்பினர். நாவிதனைப் பார்த்து மாப்பிள்ளையைப் பற்றி விசாரிக்கச் சென்றனர். மதுரைக்குப் போய் பட்டுநூல்காரர்களிடம் புதுச்சேலை வாங்கிவந்தனர். மழுவையில் கத்தியைத் தீட்டி நாவிதன் முகச்சவரம் செய்துவிட்டான். இளவட்டம் புதுப்பெண்ணுக்கு சரடு கட்டினான். கல்யாணச் சாப்பாடு பந்திக்கு வந்தது. வேதாந்தம் பேசிய வித்தர்களைப் பார்த்து,

சொர்க்கலோகம் உங்களுக்கு

சோத்துப்பானை எங்களுக்கு

கைலாசம் உங்களுக்கு

கஞ்சிப்பானை எங்களுக்கு

பூலோகம் உங்களுக்கு

பூசணிக்காய் எங்களுக்கு

என்று கேலி செய்து பாடல்கள் பாடினர். சாவடிகள் பாடல்களால் களைகட்டின. ‘கழுதைக்கு வாக்கப்பட்டா விடுவானாடி’ என்று பெண்கள் சலித்துக்கொள்வதும் ‘விடிய விடிய வெரட்டி ஆண் கழுதையா போச்சேடா’ என ஆண்கள் சலித்துக்கொள்வதுமாக ஊர் உசுப்பேறியது. பெரிசுகளின் ஏச்சும்பேச்சும் மழையெனப் பொழிந்த புழுதி மண்ணை செங்காத்து வெளியெல்லாம் வீசிவிட்டுச் சென்றது.

சம்மணமிட்டு உட்கார்ந்து கதைகள் பேசத் துவங்கின ஊர்கள். பசியும் வெறியும் அடங்கியது. ‘எம் பேரன் என்ன ஒங்கள மாதிரி சாவடியில கெடக்கிறவன்னு நெனச்சியா? அவெ தாசி வீட்டுல படுத்துக்கிடக்கிறவன்டா’ என்று பெரிய சம்சாரி வீட்டுக் கிழவிகள் பெருமை பேசின. வெறி அடங்கிய மனிதர்கள் அமைதிக்காக ஆசைப்பட்டார்கள். அவரவர்களின் விளைச்சலையும் சேமிப்பையும் பாதுகாக்கப் புதிய காவல்காரர்களைத் தேடினர். அவன் காவக்கம்போடு நள்ளிரவில் வந்து காடுகரை முழுமையும் சுற்றி கண்மாய்க்கரையின் ஆலமரத்தூரில் சாய்ந்து உட்காரத் துவங்கியதும் கிராமம் அமைதி பெற்று உறங்கியது.

தன்னை மீண்டும் குலைத்துக்கொள்ள முடியாத பெரும் பின்னல்களின் வழியே தனக்கான அமைதியை கிராமம் அடைந்தது. அந்தப்பெரும் அமைதி எல்லா முரண்களின் புகைச்சல்களையும் உள்ளிழுத்து விழுங்கும் ஆற்றல் கொண்டது. கிராமத்தின் அமைதியை உறுதிப்படுத்தியபின் நகரம் மீண்டும் தனது முழுவீச்சுடன் இயங்க ஆரம்பித்தது.

*

**கி**ராமத்திலும் நகரத்திலும் மீண்டும் காவல் முழுமையாக நிலைகொண்டது. தாதுவுக்கு முன்னும் பின்னுமாக ஏழாண்டுகள் சீர்குலைந்திருந்த காவல் உறவுகள் இப்பொழுது முழுமையாக நிலைபெற்றுள்ளன. கிராமக் காவல்காரர்கள் தங்கள் கூலியை அறுவடைக் காலங்களில் களங்களில் பெற்றுக்கொண்டனர். நகரக் குடிக்காவல்காரர்களுக்கு முறையான காவல்கூலி கிடைத்தது. அவர்கள் இரவுதோறும் நகரத்தின் வீதிகளைச் சுற்றிவந்தபடி இருந்தனர். சொந்தக் காவல் எல்லைகளைத் தாண்டி களவுப் பருந்து காற்றும் அறியாத வேகத்தில் போனபடி இருந்தது.

அடுத்த பத்தாண்டுகளில் பெரும்பஞ்சம் ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் முல்லைப்பெரியாற்றில் தடுப்பணை கட்டும் பணி கடும் இன்னல்களுக்கு மத்தியில் நடந்தேறி வந்தது. மாவட்டத்தின்மேற்குப்பகுதி மக்கள் ஆண்டுக்கணக்கில் அணை கட்டும் பணியில் ஈடுபட்டனர். மலையும் காடும் வசத்திற்கு வர மறுத்தது. தனது நியதியைக் குலைப்பவர்கள் மீது உக்கிரமான எதிர்ப்பைக் காட்டியபடி இருந்தது. டென்ட்டுகளுக்குள் குவிந்துகிடந்த மனிதர்களை அது முடிந்தமட்டும் பழி வாங்கியது. மனிதர்கள் பாறையின் நரம்புகளுக்குள் துளையிட்டுப் பிளந்து உள்ளே போனபடி இருந்தனர். அந்தப் பெரும் மலைத்தொடரை விழுங்கி நீர் மேலே வரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை உயர்ந்து வரும் அணையின் தடுப்புச்சுவர் சொல்ல ஆரம்பித்தது.

தாது வருச வேதனைகளை மறந்து முழுவேகத்தில் இயங்கிய சமூகத்தில் புதிய புதிய மாற்றங்கள் நிகழ்ந்தபடி இருந்தன. ஆனாலும் குடிக்காவல் அமைப்பின் மீது அரசு எவ்விதமான குறுக்கீடும் செய்யவில்லை. அதற்குப் பதில் நவீன போலிஸ் அமைப்பை விரிவாக்கியபடி இருந்தது. மதுரை மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரங்கள் அனைத்திலும் கச்சேரி உருவாக்கப்பட்டுவிட்டது. மதுரை நகரத்துக்குள் இரண்டாவது கச்சேரியும் வந்துவிட்டது. போலிசாரின் எண்ணிக்கை வெகுவாக உயர்த்தப்பட்டது. குற்றங்களைக் கண்டறிகிற திறனை போலிசார் வளர்த்துள்ளனர். முறையான நில அளவை முடிந்து வரியையும் கிஸ்தியையும் வசூல் செய்வதில் வருவாய்த்துறை துல்லியத் தன்மையைப் பெற்றுள்ளது. ஆட்சியாளர்கள் நிர்வாக அமைப்பை முறைப்படுத்தவும் நிதி வருமானத்தைப் பெருக்கவும் முழுமையாக கவனம் செலுத்தினர்.

நவீன கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை நகரத்திற்குள் கணிசமாக உயர்ந்திருந்தது. ஆங்கிலத்தைப் பிடித்து மேலலேறிக் கொண்டிருந்த பிராமணர்களும் வெள்ளாளர்களும் மேஜிஸ்திரேட் நாற்காலியை எட்டிப்பிடிக்க முயற்சி செய்துகொண்டிருந்தனர். ஐரோப்பிய அதிகாரிகளின் வீடுகளில் பணிபுரிந்த பறையர்கள் மட்டுமே குடித்துக்கொண்டிருந்த காபி நேராக அக்கிரஹாரத்து அடுப்படியில் வந்து குடியேறியது. காபிகுடித்து வீட்டியிலிருந்து புறப்படப் பழகியவர்கள் மேட்டுக்குடி பார்ட்டியிலிருந்து ஒயினைக் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து படுக்கவும் பழகிக்கொண்டனர். சுருட்டுப்புகை மேட்டிமையின் அடையாளமானது. டிரவுசரும் ஸ்லாக்கும் அணிய ஆரம்பித்தனர். நவீன மோஸ்தர்களால் உந்தித்தள்ளப்பட்ட

அவர்கள் தங்களின் கோட் பட்டனின் பெருமைக்குக் கீழேதான் நகரத்தை வைத்திருந்தனர். கோபுர நிழலில் கட்டெறும்பைப்போல மொய்த்துக்கிடக்கும் பிச்சைக்காரர்களைப் பார்த்து சுளித்த முகத்தைத் திருப்பிக்கொண்டு சாரட் வண்டியிலே போனார்கள்.

இப்பொழுது அவர்கள் கலெக்டரின் பங்களாவுக்குள் செல்ல வைகையின் மணலில் வண்டியை ஓட்டிச்செல்ல வேண்டியதில்லை. பிரம்மாண்டமான மேம்பாலம் ஒன்று வைகைக்கு மேலே கட்டப்பட்டு விட்டது. ஆல்பிரட் விக்டரால் கட்டி முடிக்கப்பட்ட மேம்பாலம் நகரத்தை வடதிசையின் பிரதானசாலையோடு நிரந்தரமாக இணைத்தது. இனி வைகையில் வெள்ளப்பெருக்கு வந்தாலும் நகரம் துண்டிக்கப்படாது. எப்போது எட்ட முடியும் நகரமாக மதுரையை மாற்றிய ஐரோப்பியர்கள் மதுரையிலிருந்து வெட்டப்படவேண்டியவை இன்னும் இருப்பதாகக் கருதினர். அதனைச் செய்துமுடிக்க தங்களைத் தயார்படுத்தியபடி இருந்தனர். கோர்ட் நடவடிக்கைகள் நகர மக்களுக்குப் பழக்கமாயின. கச்சேரி நடவடிக்கைகளும் விரிவடைந்தன.

கூடல் மாநகராகவும், மீனாட்சி பட்டணமாகவும் அறியப்பட்ட இம்மதுரையம்பதி ‘மெஜூரா சிட்டி’யானது. மெஜூரா சிட்டியின் சேர்மனாக டபிள்யூ. மார்ட்டின் என்ற ஆங்கிலயேரைத் தொடர்ந்து 1892ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம்நாள் என். சிவானந்தையர் பொறுப்பேற்றார்.

*

**மே**லமாசி வீதியிலிருந்து பார்த்தால் பார்வைக்கு கம்பீரமாகத் தெரியும் கட்டிடம்தான் சிவானந்தையரின் வீடு, உறுதியான உத்திரங்கள் கலைவேலைப்பாடுடனான தூண்கள், செந்தேக்கை இழைத்துச் செய்யப்பட்ட வரவேற்பறை நாற்காலிகள், ஆசனங்கள், பழைய வீட்டின் வடிவத்தையும் வரவேற்பறை உள்ளிட்ட நவீன வடிவத்தையும் கலந்து கட்டப்பட்ட கட்டிடம் அது. இந்த வீதியின் கடைசியில் ரயில்வே காண்ட்டிராக்டரான சோமசுந்தர முதலியார் இது போன்றதொரு வீட்டைக் கட்டினார். அதற்கடுத்து அதைவிடக் கொஞ்சம் பெரிதாகக் கட்டப்பட்டது சிவானந்தையரின் வீடுதான். பெரிய வீட்டு சிவானந்தையர் இப்பொழுது சேர்மன் சிவானந்தையராக மாறினார். அந்த அக்ரஹாரமே சிவானந்தையர் அக்ரஹாரம் என அறியப்பட்டது. புதிய அக்ரஹாரம் முழுவதும் அரசு உத்தியோகஸ்தர்கள் நிறைந்திருந்தனர். தினமும் காலையில் வண்டிகளில் ஏறி கலெக்டர் அலுவலகத்திற்கும், கோர்ட்டுக்கும், கச்சேரிக்கும் போனபடி இருந்தனர். எல்லோர் வீட்டு வாசலிலிருந்தும் குதிரை வண்டிகளும் மாட்டு வண்டிகளும் புறப்பட்டுப்போயின. அக்ரஹாரம் பழைமையை இழக்காமலே புதிய வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியபடி இருந்தது. இளைஞர்கள் குடுமியை வெட்டாமலே பூட்ஸ் மாட்டப் பழகியிருந்தனர். வாசல்படிவரை சாஸ்திரங்களைப் பிசகாமல் கடைப்பிடிக்கும் அக்ரஹாரம் தனது ஆண்களை அதைத் தாண்டி அனுப்பும்பொழுது, அதனைத் தாண்டிச் செல்லவும் அனுமதித்தது. அக்ரஹாரத்து சாஸ்திர சிங்கங்கள் கலெக்டர் ஆபீஸில் ரூல்ஸ் புலிகளாக மாறினர். முன்பு சிங்கங்களுக்கு இரையான பாமரர்களே இப்பொழுது பங்கா புல்லர் என்றும் டவாலி சேவகன் என்றும் புதிய பெயர் தாங்கி புலிகளுக்கு இரையாயினர்.

இருபதாண்டுகளுக்கும் மேலாக வக்கீல் தொழில் பார்த்துவந்தவர் சிவானந்தையர். இந்நகரின் பெயர் பெற்ற வக்கீல்களிலே முதன்மையானவராகக் கருதப்படுபவர். பெரும் பணக்காரர்களும், ஜமீன்களும் மிட்டாக்களும் அவரை நம்பித்தான் வழக்குகளை நடத்தினர். திருவாங்கூர் திவானுக்கு எதிராக பெரியகுளத்தைச் சேர்ந்த ராவ்பகதூர் திம்மப்ப நாயுடு தொடுத்த வழக்கில் அவருக்காக வழக்கு நடத்தி சிவானந்தையர் வெற்றி பெற்றபின் அவரது பேரும் பீசும் உச்சத்துக்குப் போனது. சிவானந்தையர் ஆஜராகும் வழக்கில் அவரே வெற்றி பெறுவார். அங்கு நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் வேலையில்லை என்றானது. கோச்வண்டியில் வந்திறங்கி கோர்ட் வளாகத்திற்குள் நடந்துபோகும் அவரது மிடுக்கேறிய உருவம் சந்தர்ப்ப சாட்சியங்களின் சத்ருவாக விளங்கியது.

ஐம்பது வயதைத் தொடப்போகும் அவர் தனது இரண்டாவது திருமணத்தைப் போன ஆண்டில்தான் நடத்தினார். நகரமே மெச்சும் அளவிற்குப் பன்னிரண்டு நாள் அந்தத் திருமண விருந்துகள் நடந்தன. இறந்துபோன முதல் மனைவியின் மகன் மகேஸ்வரன் சென்னையில் காலேஜில் படித்துவருகிறான். அவனுக்கு லீவு இல்லாததால் பன்னிரண்டாம் நாளோடு விருந்து முடிவுக்கு வந்தது.

நெடுங்குளத்திலிருந்து தங்களது வயல்வெளிகளைப் பார்க்க அப்பாவுடன் போகும்பொழுதெல்லாம் சோமநாத சாஸ்திரிகள் வீட்டிற்குப் போகாமல் மகேஸ்வரன் வந்தது கிடையாது. சாஸ்திரி தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஞானவான். அங்கேயே திண்ணைப்பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தி வருபவர். வீடே ஞானத்தின் லட்சணம் பொருந்தியிருக்கும். அவரது தேகமும், உடுத்தியிருக்கும் ஆடையும், நைந்துபோய் உதிரும் வீட்டு முன்புறக் கூரையும் அவரது வறுமையை அடையாளப்படுத்தும். ஆனால் அவரது புலமையும் லட்சணம் பொருந்திய அவரது மகள் தெய்வானையின் அறிவும் அங்கிருந்த செல்வத்தை அடையாளப்படுத்தும். தனது பால்யம் முதலே தெய்வானையை நன்கறிந்தவன் மகேஸ்வரன். அவனைவிட வயதில் மூத்த தெய்வானையோடு விளையாடுவதில் அவனுக்கு அவ்வளவு பிரியம். நகர்ப்புறத்தில் இல்லாத புதுப்புது விளையாட்டு களையெல்லாம் அவள் சொல்லித்தருவாள். அவன் அதிசயித்து ஒவ்வொரு விளையாட்டாய் தெரிந்து கொள்வான். அவனது ஸ்கூலில் உள்ள பையன்களை விட இந்த திண்ணைப்பள்ளிக்கூடத்தில் இருந்த பைன்களுக்கு அதிக விளையாட்டுகள் தெரிந்திருந்தது. அதனாலேயே அவனுக்குத் திண்ணைப்பள்ளிக்கூடமும் தெய்வானையும் பிடித்துப்போனது. தனது தந்தையாரும் மகேஸ்வரனின் தந்தையாரும் பேசிவிட்டு வருவதற்குள் கொல்லைப்புறத்திலிருக்கும் துவரை இலையையும் அவரை இலையையும் பறித்துவந்து புளியங்கொட்டைகளைப் பொறுக்கிவந்து, மண்ணில் பெரிய கட்டங்களைப் போட்டு புது விளையாட்டு ஒன்றைச் சொல்லித்தருவாள். ஒவ்வொரு முறையும் அங்கிருந்து புறப்படும்போது இவள் எவ்வளவு விளையாட்டுகளை தெரிந்துவைத்திருக்கிறாள் என்று அதிசயித்துத் திரும்புவான்.

இன்று மெட்ராசுக்கு புறப்படும் முன் உள்ளறையிலே தனது சிற்றன்னையாக உட்கார்ந்திருந்த தெய்வானையிடம் போய்

சொல்லிவிட்டுத்தான் அவன் புறப்பட்டுப்போனான். போதிய வெளிச்சமற்றிருக்கும் உள்ளறைகள் முகங்களை அடுத்தவர் அறிந்துகொள்ளும் வாய்ப்புகளைக் கொடுப்பதில்லை.

தெய்வானை வந்த அதிர்ஷ்டம் சிவானந்தையரை சேர்மனாக் கியது என்று வீட்டில் பலரும் பேசினர். சேர்மன் சிவானந்தையருக்கு முன்பைவிட இப்பொழுது அதிகவேலையிலிருந்து. புராதனப் பெருமை கொண்ட இந்நகரின் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் நடத்தவேண்டுமென்றும் பல ஆண்டுகளாகச் முடங்கியிருக்கும் நகருக்கான குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றும் விருப்பப்பட்டார். அதற்காக நகரின் வரி வருமானத்தைப் பெருக்கவும் நகரின் செல்வந்தர்கள் பலரையும் சந்தித்துப் பேசி பொதுநிதி ஒன்றைத் திரட்டி குடிநீர்த் திட்டத்திற்கு வழங்கவும் ஆலோசித்துக்கொண்டிருந்தார். ஆனால் இந்த ஆலோசனைகள், திட்டங்களை விட, அவரது உள்மனதில் பல ஆண்டுகளாக ஒரு திட்டமிருந்தது. அதனை நிறைவேற்ற இதுதான் தக்க தருணம் என முடிவுசெய்து பணியைத் துவக்கினார். அந்த வேலைக்கு உதவியாக இருக்குமென நினைத்து நெடுங்குளத்தைச் சார்ந்த சோமநாத சாஸ்திரிகளை தனது அக்ரஹாரத்திற்கு கொண்டுவந்து குடிவைத்துக்கொண்டார். இந்த அக்ரஹாரத்திற்கு வந்தபின் தெய்வானைக்கு உயிர் வந்தது. பென்சிலும் பேப்பரும் இருந்த இந்தப் புதிய வீட்டில் மீண்டும் அவள் புதிய முறையில் எழுத ஆரம்பித்தாள்.

தந்தைக்கு திருமணம் முடிந்தபின் இந்த ஒன்றரை ஆண்டில் ஒரு முறைகூட மகேஸ்வரன் வீட்டிற்கு வரவில்லை. காலேஜ் லீவு இல்லையென்றும், படிக்கவேண்டியது நிறைய இருக்கிறது என்றும் அவன் அனுப்பும் கடிதங்கள் மட்டுமே மெட்டராசிலிருந்து வந்துகொண்டிருந்தன. சிவானந்தையர் படித்துவிட்டு சொருகி வைத்த கடிதங்களை எப்பொழுதாவது தெய்வானையும் படிக்க நேர்ந்தது. அவளுக்கு மிகவும் பரிச்சயமான அந்தக் கையெழுத்துக்களை பல ஆண்டுகளுக்குப்பின் அவளது கண்கள் படித்தன. எழுத்துக்களின் அழகு அவளை ஈர்த்தது. அவளும் அதே போல் எழுதிப்பழக ஆரம்பித்தாள். இடையிடையே வரும் ஆங்கிலச் சொற்களுக்கான அர்த்தம் புரியாமல் திணறினாள். மகேஸ்வரன் எழுதியதைப் படிப்பதற்காக ஆங்கிலத்திற்குள் நுழைய மனம் தயாராகிக் கொண்டிருந்தது.

*

**ந**கரத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் உருவாக்கிய பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதிகரித்தபடியே இருந்தன. மதமாற்றம் அதிகரிக்க பள்ளிக்கூடங்களே முக்கியக் காரணங்களாக இருந்தன என்று கருதியவர்கள் அதற்கு மாற்றாக எதையாவது செய்யவேண்டுமெனப் பல ஆண்டுகளாகச் சிந்தித்து வந்தனர். ஆனால் என்ன செய்வதென்றுதான் தெரியவில்லை.

சேர்மன் சிவானந்தையர் அத்தகைய எண்ணங்களைக் கொண்டிருந்தவர்களில் முக்கியமானவர். மரபுவழிப்பட்ட சனாதானக் கல்விமுறையை முற்றிலும் துண்டிக்க நினைக்கும் கிறிஸ்தவர்களின் சதியே இந்தக் கல்விமுறை என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. இந்தக் கருத்தை விதைத்தவர் யாழ்ப்பாணம் ஆறுமுகம் நாவலர். அவர் மதுரை

ஆதீனத்திற்கு வந்து நிகழ்த்திய தொடர் பிரசங்கங்கள் மரபான ஒழுக்கநெறிகளின் மீதும், ஆச்சாரங்களின் மீதும், சைவத்தின் பெருமைகள் மீதும் இருந்த மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தியது. அதே நேரத்தில் சாஸ்திர விரோதிகள் மீதும், கிறிஸ்துவ சமயத்தார் மீதுமான வெறுப்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. அவர் உருவாக்கிய கருத்தைத் தாங்கிப் பிடித்த குழுவின் முக்கியமானவராக சிவானந்தையர் இருந்தார். ஆனால் என்ன செய்வதென்றுதான் பிடிபடாமல் இருந்தது. சைவப் பாடசாலைகளை நிறுவ ஆறுமுக நாவலர் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து அத்தகைய முயற்சிகளில் ஐயர் உள்ளிட்ட சிலர் ஈடுபட்டனர். ஆனால் அந்த முயற்சி கைகூடாமலே இருந்தது.

நாட்கள் ஓடின. இந்நிலையில் மதுரை மாவட்டத்திற்குப் புதிய ஜட்ஜாக ராபர்ட் ஆன்டர்சன் பொறுப்பேற்றார். ஏற்கனவே திருச்சிராப்பள்ளியில் பணியாற்றிய அவர் தமிழ் கற்றுக்கொள்ள முயன்று சிறிது தேறினார். பணி மாறுதலாகி மதுரை வந்தபின் தொடர்ந்து தமிழ் கற்க விருப்பமுடன் இருந்தார். நகரத்தின் லீடிங் லாயர் சிவானந்தையர் புதிய ஜட்ஜை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தபொழுது 'தமிழ் கற்றக்கொடுக்க பொருத்தமான ஒருவர் கிடைப்பாரா?' என்று கேட்டார். அதற்கு சிவானந்தையர் தானே ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார். உடன் நெடுங்குளத்திலிருந்து சோமநாத சாஸ்திரிகளை சில மாதங்கள் இங்கேயே தங்கி ஜட்ஜுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார். சாஸ்திரிகளின் கற்பிக்கும் முறை ஜட்ஜூக்கு மிகவும் உகந்ததாக இருந்தது. கோர்ட்டில் சிவானந்தையரைப் பார்த்து, பொருத்தமானவரை அனுப்பியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்தக் காலத்தில் தந்தையைப் பார்ப்பதற்காக நெடுங்குளத் திலிருந்து தெய்வானையும் அவரது தாயாரும் சிவானந்தையர் வீட்டிற்கு வந்து சில காலம் தங்கியிருந்து விட்டுப் போவது வழக்கம். அப்பொழுதெல்லாம் தெய்வானைக்கு மகேஸ்வரனின் செயல்கள் ஆச்சரியமளிக்கும். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மடக்கு எழுத்தாணியும், வாரி எழுத்தாணியும் மட்டுமே வைத்து எழுதிப் பழகிய தெய்வானை, பென்சில் கொண்டு மகேஸ்வரன் எழுதும் முறையை குத்தவைத்து ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டேயிருப்பாள். 'உனக்கு இலக்கம், எண்சுவடி, பிரபாவச் சுவடியெல்லாம் தெரியுமா?' என்று அவள் கேட்டபோது அவனுக்கு எதுவும் புரியவில்லை. 'லிட்ரேச்சரும், சயின்ஸ்சும்தான் எங்களுக்கு முக்கியமா சொல்லிக்கொடுப்பா' என்று அவன் பதில் சொன்னபோது அவளுக்கு எதுவும் புரியவில்லை. 'சரியா படிக்காத புள்ளயாண்டங்கள் எங்க அப்பா மாதிரி மணல தெள்ளிப்போட்டு நிமிண்டுவாளா?' என்று அவள் கேட்பாள். 'இல்ல சரியா படிக்காதவாள டிக்டேசன் கொடுத்து பல தடவ செய்யச் சொல்லுவா' என்று அவன் பதில் சொல்லுவான். மணலில் எழுதி எழுத்துப் பழகியவளுக்கும் பேப்பரில் எழுதிப் பழகியவனுக்கும் இடையில் ஆச்சரியங்கள் கரையேறியபடி இருந்தன. கடைசியாக அவள் சமஸ்கிருத ஸ்லோகங்களைச் சொல்லி அவனை வீழ்த்துவாள். அவனோ ஷேக்ஸ்பியரின் வசனத்தைச் சொல்லி அவளை வீழ்த்துவான். பிள்ளைகளின் விளையாட்டுகளை முற்றத்தில் உட்கார்ந்து தாயார்கள் ரசித்தனர்.

விடுமுறை நாட்களில் மகேஸ்வரன் அக்ரஹாரத்திலிருந்த தனது

நண்பர்களையெல்லாம் அழைத்து வீட்டுக்கு முன்னிறுத்துவான். படிக்கட்டுகளின் மீது நின்று தெய்வானை விளையாட்டுகளைச் சொல்லித்தரத் துவங்குவாள். ராணியின் மிடுக்கோடு இருக்கும் அவளின் சைகைகளை அக்ரஹாரத்தின் பையன்களும் பிள்ளைகளும் பணிந்து கேட்டனர். காலை நேரத்து இளவெயிலுக்கு ஏற்ப ஒரு விளையாட்டு, மதியம் வெயிலில் அங்குமிங்குமாக ஓடி மறைந்துகொள்வது போன்ற விளையாட்டு, மாலையில் தெரு முழுவதையும் நிரப்பி விளையாடும் விளையாட்டு, இரவில் வீட்டுத்திண்ணையிலே பெரும் வட்டமாக உட்கார்ந்து ஆடும் விளையாட்டு எனப் பொழுதிற்கேற்ப அவள் ஆட்டங்களைச் சொல்லித்தந்தாள். ‘உனக்கு மண்ணு வேணுமா, கல்லு வேணுமா?’ எனக் கேட்டு அவள் சைகை காண்பித்தபின் யாராவது உத்தி மாறினால் அடுத்த கணமே அவள் கண்டறிந்து ஆட்டையை விட்டு வெளியேற்றுவாள். இவ்வளவு பெரிய கூட்டத்தில் தன்னை எப்படிக் கண்டுபிடித்தாள் என்பது அவர்களுக்குப் புரியாமலே இருந்தது. கண்களைப் பொத்திய பொழுது விரல் இடுக்குகளின் வழியே பார்த்துவிடலாம் என நினைத்து உட்கார்ந்த பையன்களுக்கு அவள் பொத்திய கையை எடுத்த பிறகும் கண்ணில் இருள் கட்டி நிற்பதை உணர்ந்து திகைத்தனர்.

‘இவ பொம்பனாட்டியா இல்லாட்டி பிள்ளையாண்டனான்னு பாத்துரணும்டா’ன்னு திட்டம் போடும் பையன்களோடும் ‘அவ எங்க ஆத்துக்கு விருந்தாடி வந்தவடா’ன்னு சொல்லி மகேஸ்வரன் சண்டைக்குப் போவான். ‘அப்படீன்னா நீ பார்த்து சொல்லேண்டா’ என்று அவர்கள் சண்டைக்கு வந்தார்கள். ‘நேக்குத் தெரியும். அவா பொம்மனாட்டிதான்’னு ஒருநாள் அழுதவாறே மகேஸ்வரன் சொன்னபிறகுதான் பிரச்சனை முடிவுக்கு வந்தது. தோட்டந் தொரவுகளில் தாவிக்குதித்துத் திரிந்தவளின் வலிமைமிக்க கெண்டைக்கால்கள் அக்ரஹாரத்து பிள்ளைகள் அசந்து போகும் தூரம் தாவியது. ‘நம்ம ஊரு ஸ்கூலவிட பெரிய ஸ்கூலு அவளோட ஊர்ல இருக்காப்பா?’ என்று பையன்கள் அவர்கள் தோப்பனார்களிடம் போய் கேட்டனர். திண்ணைப்பள்ளிக்கூடத்து சட்டாம்பிள்ளையைப்போல அக்ரஹாரத்து பையன்களிடம் அவள் இருந்தாள்.

அவள் தனது தாயாரோடு ஊருக்கு புறப்பட்டுப் போய்விட்டால் அக்ரஹாரமே களையிழந்துவிடும். வீடுகள் தோறும் கலகலவென ஓடிவரும் சிறுவர்களின் விளையாட்டுச்சத்தம் கப்பென நின்றது போலிருக்கும். அவ்வளவு பேரையும் இணைத்து விளையாட்டை ஒருங்கிணைக்க ஆளின்றித் தவிக்கும் சிறுவர்கள் ‘அந்தக்கா இனி எப்ப வருவா?’ என்று கேட்டுக் கேட்டு சலிப்படைந்து சிறு சிறு குழுவாக மாறி தங்கள் வீட்டு வாசலிலும், பட்டியக்கல்லிலும் விளையாடுவார்கள். அக்ரஹாரத்தில் ஆறேழு வட்டமாக அவர்கள் மாறிவிடுவர். முதல் வட்டத்துப் பிள்ளைகள் கடைசியில் உள்ள வீட்டின் திண்ணைகளையோ கொல்லைப்புறத்தையோ மறந்துபோய்விடுவார்கள் மீண்டும் அவள் வந்தபின் எல்லாத்திண்ணைகளும் எல்லோருக்கும் அறிமுகமாகும். மூன்றாம்முறை வந்துவிட்டுப் போன அவள் அதன்பிறகு வரவேயில்லை. ‘அவ பெரிய மனுஷி ஆயிட்டா. இனி வரமாட்டா’ என்று மகேஸ்வரனின் அம்மா தெரிவித்தபின் பிள்ளைகளின் தெருகுறுகிக்கொண்டே வர ஆரம்பித்தது.

*

ஜட்ஜுக்கு சொல்லிக்கொடுக்கப்போன சோமநாத சாஸ்திரிகள் ஒருநாள் பரப்பரப்புடன் வீடு திரும்பினார். என்ன பிரச்சனை என வீட்டிலிருந்தவர்கள் கேட்டதற்கு அவர் எதுவும் சொல்லவில்லை. தண்டலை கிராமத்து தோப்புக்கு போயிருந்த சிவானந்தையர் வந்தபின்தான் அவர்விஷயத்தைச் சொன்னார். 'ஜட்ஜ ராபர்ட் ஆண்டர்சன் துரை திருச்சிராப்பள்ளியிலிருந்தபோது அவரது வீட்டில் பட்லராக வேலைபார்த்த சுப்பன் என்ற பறையன் மிகுந்த நம்பிக்கைக்குரியவனாக இருந்ததாகவும் அதனால் அவனது மகனை அவரே தனது சொந்தச் செலவில் ஸ்கூலில் சேர்த்துப் படிக்கவைத்ததாகவும் அவர் திருச்சியிலிருந்து மதுரை வந்தபின் பட்லரும் அவருடன் சேர்ந்து வந்துவிட்டதாகவும், இப்போது மதுரையில் நமது மகேஸ்வரன் படிக்கும் ஸ்கூலில் அவனோட வகுப்பில்தான் அவனும் படிப்பதாகவும் அவர் சொன்னபோது சிவானந்தையர் நிலைகுலைந்து போனார். இப்படியொரு அதிர்ச்சியை அவர் எதிர் பார்க்கவில்லை.

காலையில் நகரின் முக்கியஸ்தர்களையெல்லாம் அழைத்து விசயத்தைச் சொன்னார். உடனடியாக மகஜர் தயாரிக்கப்பட்டு பள்ளி நிர்வாகத்திற்கும் கலெக்டருக்கும் கொடுக்கப்பட்டது. அந்தப் பையனை சாதி இந்துக்களின் பிள்ளைகள் படிக்கும் வகுப்பறையில் சேர்ந்து உட்கார வைத்து மிகப்பெரிய குற்றம்; அதற்காகப் பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; அவனை உடனடியாக பள்ளியைவிட்டு நிறுத்தவேண்டும்; அல்லது அவனுக்கு தனி வகுப்பறையில் பாடங்களை நடத்தவேண்டும் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. கலெக்டரை பள்ளி நிர்வாகத்தின் சார்பில் பாஸ்டர் டெரிக் சந்தித்து விளக்கமளித்து விட்டுச் சென்றார். ஒரு வாரம் வரை இப்பிரச்சனை முடிவுக்கு வருவதாக இல்லை. அதுவரை அந்த வகுப்பறையிலிருந்த சாதி இந்துக்கள் வீட்டுப்பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்குப் போகாமல் நிறுத்தப்பட்டனர். கடைசியில் வகுப்பறையில் மற்ற மாணவர் களுடன் இல்லாமல் அந்த ஒரு மாணவனுக்கு மட்டும் தனி பெஞ்ச் போட்டு உட்காரவைக்க பள்ளி நிர்வாகம் சம்மதித்தது. இதற்குமேல் இப்பிரச்சனையில் ஒன்றும் செய்யமுடியாதென்றும் இதில் உங்களுக்கு ஆட்சேபனை இருந்தால் உங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலிருந்து விலக்கிக்கொள்ளுமாறும் கலெக்டர் கூறிவிட்டார்.

அதன்பின் வேறு வழியில்லாமல் பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டனர். ஆனால் அந்த வகுப்பிலிருந்த அக்ரஹாரத்தைச் சேர்ந்த பிராமண மாணவர்கள் மகேஸ்வரனையும் சேர்த்து மூன்று பேர். இவர்கள் மூவரும் தினமும் ஸ்கூல் விட்டவுடன் கொல்லைப்புறத்தின் வழியே வந்து தலைக்குக் குளித்துவிட்டுத்தான் வீட்டுக்குள் வர அனுமதிக்கப் பட்டனர். நாள் தவறாமல் இது நடந்தேறியது. கார்த்திகை மாதத்தில் கடுங்காய்ச்சல் வந்து ஜன்னி கண்டு அதில் ஒரு மாணவன் இறந்துபோனான். அப்படியும் மற்ற இரு மாணவர்களும் காலையும் மாலையும் குளிக்க வேண்டியதாயிற்று. 'சாஸ்திரங்கெட்டவா ஏதாவது தப்பு பண்ணியிருப்பா. அதுதான் இப்படி ஆயிடுத்து...' என்று சிவானந்தையர் உள்ளிட்டவர்கள் பேசினார்கள். அந்தாண்டு படிப்பு முடிந்ததும் மகேஸ்வரனை அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து விலக்கி

லூத்தரன் மிஷன் சார்பில் நடத்தப்பட்டு வந்த பள்ளிக்கூடம் ஒன்றில் கொண்டுபோய்ச் சேர்த்தார். கீழ்ச் சாதிக்காரர்கள் அந்த வகுப்பில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்தான் சேர்த்தார். ஆனால் கிறிஸ்தவ மாணவர்கள் இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் இல்லாத பள்ளிக்கூடம் எதுவும் மதுரையில் இல்லாததால் வேறு வழியின்றி மகேஸ்வரனை அதில் சேர்த்தார். அதிலிருந்து ஸ்கூல் படிப்பு முடிக்கும்வரை அவன் அங்கேயே படித்தான். பிறகுதான் அவனை மெட்ராஸில் கொண்டுபோய் பிரஸிடென்ஸி காலேஜில் சேர்த்தார்.

கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு மாற்றாக மதுரையிலுள்ள சாதி இந்துக்களெல்லாம் சேர்ந்து ஒரு கலாசாலை ஆரம்பிக்கவேண்டும் என்பதே சிவானந்தையரின் மனதில் நீண்ட நாளாகக் கனன்று கொண்டிருந்த ஆசை. இப்பொழுது சிவானந்தையர் சேர்மன் ஆகிவிட்டார். நகரின் வளர்ச்சிக்கு எத்தனையோ திட்டங்களை நடைமுறைப்படுத்த அவர் எண்ணியிருந்தார். ஆனால் அத்தனையையும் விட முதன்மையானதாக இருந்தது சாஸ்திர கலாசாலை தொடங்கும் திட்டம்.

அதற்காக நகரின் முக்கியஸ்தர்களின் கூட்டத்தை மீனாட்சி சொக்கநாதர் கோயிலின் மகாமண்டபத்தில் அவர் கூட்டியிருந்தார். சிவானந்தையர் சேர்மன் ஆனபின் நடக்கும் முதல் கூட்டமாதலால் அதற்கே உரிய உற்சாகத்துடனும் படோடாபத்துடனும் நடைபெற்றது. கூட்டத்தில் சாஸ்திர கலாசாலை ஒன்றினைத் துவக்கும் திட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அதற்கான மொத்தச்செலவு தொகையும் ஒவ்வொருவரின் பங்களிப்பும் கூட்டத்தில் விவாதித்து முடிவாக்கப்பட்டது. இந்தப் பணிகளை உடனே துவக்கும் பொருட்டு பதினைந்து பேர் கொண்ட கமிட்டி ஒன்று தேர்வு செய்யப்பட்டது. அதில் அக்ராசனராக சேர்மன் என். சிவானந்தையரும், காரியதரிசியாக தெப்பம்பட்டி மிராசு முத்துச்சாமி பிள்ளையும் பொக்கிஷதாரராக முன்சீப் வீரராகவ முதலியாரும் தேர்வு செய்யப்பட்டனர். கலாசாலை கமிட்டி பத்து நாளுக்கொரு முறை கூடுவதென்று முடிவு செய்யப்பட்டது. நகரை ஒட்டிய மேற்குப் பகுதியில் கலாசாலைக்குப் பொருத்தமான நிலம் இருப்பது கண்டறியப்பட்டு அதனை வாங்கும் பணி உடனடியாகத் துவங்கியது.

*

# 81

**தா**துவின் பேரழிவில் இருந்து மீண்ட தாதனூர் அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொன்றாகச் சரி செய்துவந்து மேடேறியது. ஊரில் பாதியை பேதி வந்து கொள்ளை கொண்டுபோனது. ஆனாலும் எஞ்சியவர்கள் சமாளித்து எழுந்தனர். ஊர் மறுபடியும் தெம்பு பெற்றது. கருப்பு கோயில் ஆலமரத்தடி களைகட்டியது. காவலும், களவும் இருட்டில் சுற்றும் கம்பு விளையாட்டுக்காரனின் விரல்களைப்போல சுற்றித் தீர்த்தன. எல்லாவற்றையும் சரி செய்ய முடிந்த ஊரால் சரி செய்ய முடியாததாக குறவர்களின் பிரச்சனை இருந்தது. பழைய ஊரில் குறவர்களின் குடும்பங்கள் மூன்று இருந்தன. ஊர் தோன்றிய காலந்தொட்டு இருந்துவந்த வம்சாவழி. ஆனால், தாதுவில் வந்த பேதியால் மூன்று குடும்பமும் அடியோடு அழிந்துபோயின. ஒருவர் கூட மிஞ்சவில்லை. தாதனூர் குறவனே இல்லாத ஊராக மாறியது. சரி, எங்கிருந்தாவது ஒரு குடும்பத்தைக் கொண்டு வந்து குடியேற்றிவிட வேண்டும் என்று தாது முடிந்து மூன்று ஆண்டுகளுக்குப்பின் யோசித்த ஊர் அதன் பின் கடந்த சில ஆண்டுகளாகத் தேடியபடிதான் இருக்கிறது. வந்து தங்குவதைப்போல ஒரு குடும்பமும் அமையவில்லை. ஊர் பெரியாம்பிளைகளும் எங்கெங்கோ போய் அலைந்து திரும்பிவிட்டனர். எந்த வழியும் பிறக்கவில்லை.

குறவனே இல்லாத ஊரில் உருவான பெரும்பிரச்சனை பெண்கிள்ளைகளின் காது வளர்ப்பு. பெண்ணுக்கு அழகு காது. பொடனிவரை காது வளர்த்து தண்டட்டியை காற்றில் நீந்தவிட்டு நடக்கும் அழகிகள்தான் கள்ளநாட்டைக் கட்டி ஆள்கின்றனர். வளர்ந்த காதுகளின் வகை வைக்க முடியாத அழகை மெச்சி பாடிவைத்துள்ள பாட்டு ஊர் ஊருக்கு அம்பாரம் அம்பாரமாகக் குவிந்துகிடக்கிறது. தொங்கும் காதின் பெருந்துவாரம் என்பது உள்ளே நுழைந்த ஆண் வெளிவர முடியாத கன்ன வாசல் என இருக்கிறது. அடைபடாத கன்னவாசல் கொண்டு காற்றை அளந்தபடி அவள் வாழ்வெல்லாம் அலைந்து திரிகிறாள். அவள் பெரிய மனுஷியாகி சரடு கட்டிப்போனவன் செத்துப்போனாளோ, அல்லது துருப்பு

கொடுத்துவிட்டு மீண்டும் தாய்வீட்டிற்கே வந்துவிட்டாலோ, மறுமணம் செய்துகொண்டு அவனும் வேண்டாம் என வந்துவிட்டாலோ, மீண்டும் சரடு கட்டிக்கொண்டாலோ, பெத்தபிள்ளைகள் எதுவும் தங்காமல் செத்துப்போய் நாதியற்று நின்றாலோ, அவள் வாழ்வில் எது நடந்தாலும் அதுவெல்லாம் சண்டை என்று வந்துவிட்டால் சாடைப்பேச்சாகவும் வசவாகவும் வரும். ஆனால், பேச்சுக்குப் பேச்சாக மடித்த நாக்கிலிருந்து சொற்களை வீசியெறிவாள். அவளால் தாங்க முடியாமல் உக்கிப்போகும் பேச்சொன்று இருக்கிறது. 'போடி...காதறுத்த மூழி' என்பதுதான் அது. அறுந்த காதோடு அலையும் அவலம் எவளுக்கும் வரக்கூடாது என ஒவ்வொருத்தியும் நினைப்பாள். ஒருபோதும் ஒட்டவைக்க முடியாத காதோடு இருப்பவளின் மனத்தில் ஏற்படும் ஊனம் மரணம் வரை சரிசெய்ய முடியாது.

'எங்க ஊர் கொறவன் அம்புட்டு அம்சமா காது வளத்து தருவாண்டி' என்ற பிறந்த ஊரின் பெருமையை சாகும்வரை பேசிக்கொண்டிருப்பார்கள். அவ்வளவு முக்கியமான குறவன் இல்லாமல் ஊர் இருந்தது. தாதுக்குப் பின் இப்பொழுது வரை ஆத்தாக்காரிகள் தங்களின் தாய்வீட்டுக்குக் கூட்டிப்போய்தான் பெண் பிள்ளைகளுக்குக் காதுவளர்த்து கூட்டிவருகிறார்கள். இன்னும் எத்தனை காலம்தான் அடுத்த ஊருக்கு அலைவது என கோபப்பட்ட கிழவிகள் பெரியாம்பிளைகளைப் பார்த்து 'தெறங் கெட்டவங்களா! வர்ற அமாவாசைக்குள்ள கொறவன கூட்டிவர்றல ஒருத்தனுக்கும் கஞ்சி கெடையாதுறா?' எனச் சொல்லி வாமடையை அடைந்தனர். பெரியாம்பிளைகளின் பாடு பெருந்திண்டாட் டமானது. எங்காவது அலைந்து ஒரு குறவனையாவது கூட்டிவர வேண்டுமென்று ஆளுக்கு ஒரு பக்கமாகப் போயினர்.

சடையன் பெரியாம்பிளதான் பழனி பக்கமா இருந்து செங்கன் என்ற குறவனைக் கூட்டி வந்தார். களவில் எடுத்த பொருளைக் கொடுக்க காசுக்கார செட்டியார் வீட்டுக்குப்போனபொழுது அந்த வீட்டருகே அவன் இருந்ததாகவும் அழைத்தவுடன் வந்துவிட்டதாகவும் அவர் சொன்னார். குள்ளமான உருவத்தில் மேலெல்லாம் பச்சை குத்தி காதிலே கடுக்கன் அணிந்திருந்த செங்கன் கைக்குழந்தையோடு மனைவியை அழைத்துக்கொண்டு ஆலமரத்தடிக்கு வந்தான். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு குறவன் ஒருவன் ஊருக்கு வந்தது எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தந்தது. ஆனால் அந்த சந்தோஷம் முழுமையானதாக இல்லை. வந்தவன் ஊர் முழுவதையும் சுற்றிப்பார்த்துவிட்டு, பழைய ஊரையும் போய்ப் பார்த்துவிட்டு இங்கு நிரந்தரமாகத் தங்கமுடியாது என்று மறுத்துவிட்டான், 'ஏன்?' என்று கேட்டதற்கு எந்தக் காரணத்தையும் அவன் சொல்லவில்லை. 'தங்குறோம்னு ஏத்துக்கிட்டுதான்டா வந்த' என்று சடையன் கேட்டதற்கு 'அப்ப ஏத்துகிட்டேன். இப்ப முடியாது' என்று தீர்க்கமாகச் சொல்லிவிட்டான். வந்துவிட்டதனால் இப்பொழுது இருக்கும் பிள்ளைகளுக்குக் காது வளர்த்துக்கொடுத்துவிட்டுப் போவதாகச் சொன்னான். வேறு வழியில்லாம்ல ஊர் ஏற்றுக்கொண்டது. ஆள் ஒன்றுக்கு மாதத்திற்கு நான்கு மரக்கா தானியம் என்று கூலி பேசப்பட்டது. ஊருக்குள் தங்காமல் அமணமலையின் தென்புறம் இருக்கும் புடவுகளில் தங்கிக்கொள்வதாகச் சொல்லி அங்கே போய்விட்டான்.

முதல்நாள் காலையில் காது குத்துவதற்கான ஏற்பாடுகளுடன் செங்கன்

மனைவியோடு ஊருக்கு வந்தான். அவன் இடுப்பளவு துவங்கி தோள்பட்டைவரை வளர்ந்திருந்த பதினாறு பெண் பிள்ளைகள் காது குத்திக்கொள்ளத் தயாராக இருந்தனர். தாயும் பிள்ளையுமாக ஊரே கூடி இருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு தாதனூர் மந்தையில் வந்து குறவன் உட்கார்ந்தது கிழவிகளுக் கெல்லாம் பெரும் சந்தோஷம். தனது ஆதிக்குடியொருவன் மீண்டும் வந்துள்ள மகிழ்ச்சி அவர்கள் எல்லோர் முகத்திலும் இருந்தது. 'மொதல்ல கஞ்சியக் குடியப்பா' எனச் சொல்லி வந்தவனுக்கு கஞ்சி ஊற்றிக்கொடுத்தனர். செங்கனும் அவனது மனைவியும் வயிறாறக் கஞ்சி குடித்து முடித்தபின் மந்தைக்கல்லில் சம்மணம் போட்டு உட்கார்ந்த செங்கன் ஒவ்வொரு பிள்ளையாக முன்னால் உட்கார வைத்தான். இதில் சிறு பிள்ளைகளாக இருந்த பத்துப் பேருக்குத்தான் குத்தி வளர்க்கமுடியும். நன்றாக வளர்ந்துவிட்ட மீதம் ஆறு பேருக்கும் எடுத்துத்தான் வளர்க்கவேண்டும் என இரண்டாகப் பிரித்தான். முதலில் குத்தி வளர்க்க முடிவு செய்த பிள்ளைகளுக்கான வேலையைத் துவக்கினான். அவர்களை மட்டும் முன்னால் வந்து கால் மடக்கி உட்கார வைத்துக்கொண்டான். அவன் தனது வலது மார்பில் மீனையும் இடது மார்பில் படமெடுத்து நிற்கும் பாம்பையும் பச்சை குத்தியிருந்தான். முன்னால் உட்கார்ந்து காதைக் கொடுத்துவிட்டு எதிர் மார்பில் இருக்கும் பச்சையைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது பிள்ளைகளின் பிஞ்சுக்காதைத் தண்ணீரால் தடவி இலையின் நுனியை இழுப்பதைப்போல மெல்ல இழுத்து கையில் வைத்திருந்த சிறு ஊசியால் குத்தித் துவாரமிட்டு உடைத்துவைத்திருந்த பொடிக்குச்சியை துவாரத்திற்குள் சொருகி வைத்தான். குத்துகிற பொழுதுமட்டும் 'ஆ... அம்மா...' என்று கத்துகிற பிள்ளைகள் அந்த வலியை அத்தோடு விட்டு விட்டு சந்தோஷமாக எழுந்தன. 'அம்புட்டுத்தான்டீ...ராசாத்தி...வாடீ' என்று எழுகிறபிள்ளைகளைக் கிழவிகளும் அம்மாக்காரிகளும் அணைத்துக்கொண்டனர். இப்படியாகப் பத்துப் பேருக்கும் குத்தி முடித்தபின் பெரியபிள்ளைகள் ஆறு பேருக்கான வேலைகளைத் துவக்கினான். காந்தக்கத்தி எனச் சொல்லக்கூடிய கூர்மையான முனையை உடைய பொடிக்கத்தியால் தொங்கும் காதைச் சுருள் வடிவத்தில் வளைத்து வெட்டி நடுமையம் வரை போனான். கத்தியைவிடக் கூர்மையாக அவனது பார்வை இருந்தது. எங்கே, வலி பொறுக்காமல் பிள்ளைகள் அசைந்து கொடுத்துகாதை ஒச்சமாகிவிடுவார்களோ என்ற பயத்தில் ஆத்தாக்காரிகள் அவனது கத்தியை விட்டு கண்களை அகற்றவேயில்லை. வலி தெரியாமல் ரத்தம் ஊறி வர கத்தி சுருண்டபடி நடுமையம் போய் நின்றது. சுருள் பூச்சிவிரிவதைப்போல் வெட்டப்பட்ட சதை காதில் இருந்து கழன்று நீண்டு தொங்கியது. கோழி ரத்தம், துணிக்கருக்கு, எண்ணெயைக் கொண்டு தயாரித்து வைத்திருந்த் மருந்தை துணியால் நனைத்து தொங்கும் சதையைச் சுற்றிக் கட்டினான். பெரும்பிள்ளைகளாக இருந்ததால் வலியைத் தாங்கியபடி உட்கார்ந்திருந்தனர். கொஞ்சம் புண் ஆறியவுடன் தொங்கும் காதைத் தூக்கி மேலே ஒட்டவைத்து கட்டுப்போட்டுவிடலாம் என்றான். ஆறு பிள்ளைகளின் காதுகளிலும் காந்தக்கத்தி உள்சுருண்டு போய் சதையை மண்புழுபோலத் தொங்கவிட்டது. கூட்டம் இமை கொட்டாமல் அவன் செய்வதையே பார்த்துக்கொண்டிருந்தது. அவன் நுணுக்கமும், கைவேலைப்பாடும் சரிதானா என்பதைக் கிழவிகள்

உற்றுக்கவனித்தபடியே இருந்தனர். காதைக் கிழித்து தொங்கவிட்டு ஒட்ட வைத்து வளர்ப்பதை சாதாரண வேலைக்காரனால் செய்துவிடமுடியாது. செங்கனுக்கு வயசுக்கு மீறிய நுணுக்கம் இருப்பதாகக் கிழவிகள் மெச்சிக் கொண்டனர்.

அன்றைய வேலையை முடிக்க உச்சிப்பொழுதானது. ஊரே சந்தோஷத்தில் திளைத்தது. மந்தையில் இருந்து பெருங்கூட்டத்தை விட்டு செங்கனும் அவனது மனைவியும் எழுந்தனர். தெருவிற்குள் போக வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால், இப்பொழுது போனால் வித்தியாசமாகத் தெரியும் என்று நினைத்தபடி கொம்பூதி மரத்தை நோக்கி நடந்துவந்தான். ஊரிலிருந்த நாய்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவன் வந்ததிலிருந்து குரைத்துக்கொண்டேயிருந்தன. முதுகுச் சேலையில் பிள்ளையைக் கட்டித் தொங்கவிட்டிருந்தவளைப் பார்த்து விடாமல் குரைத்தன. அவனது பார்வையும் முழியும் நாய்களை ஏதோ செய்துவிட்டது. எனவே, யார் என்ன அமட்டினாலும் நாய்கள் விடுவதாக இல்லை. அவன் ஏதோ திட்டியபடி கொம்பூதி புளியமரத்தைத் தாண்டி ஒத்தையடிப் பாதையின் வழியே மலைப்பொட்டவை நோக்கி நடந்தான்.

கிழவிகள் காதுகுத்திக்கொண்ட பிள்ளைகளிடம் ‘அடியே…மொச்சப் பயறி கடிக்கக்கூடாது…தட்டாம் பயறு கிடக்கக்கூடாது…அரிக்குதுன்னு சொறியக்கூடாது… சொறிஞ்சா காது குலைஞ்சு போகும், வடிவு வராது’ என்று பொழுதெல்லாம் பக்குவம் சொல்லிக்கொண்டிருந்தனர்.

**மூ**ன்று நாட்களுக்குப்பின் மீண்டும் செங்கன் ஊருக்குள் வந்தான். மந்தைக்கல்லில் வந்து உட்கார்ந்ததும் பெண்கள் அனைவரும் கூடினர். காது குத்திக்கொண்ட பிள்ளைகளை எல்லாம் ஆத்தாக்காரிகள் அழைத்து வந்தனர். ஒவ்வொரு பிள்ளையாக முன்னால் உட்கார வைத்து காதைப்பிடித்துப் பார்த்து, ஏற்கனவே இருக்கும் குச்சியை உருவிவிட்டு அதே அளவு குச்சியை மீண்டும் சொருகினான். பழைய குச்சியை உருவும்போது பக்கைப் பிய்த்துக்கொண்டு வந்தது. வலி தாங்காமல் சிறு பிள்ளைகள் கத்தின. ‘அம்புட்டுத்தான்டீ…ஆத்தா…அம்புட்டுத்தான்டீ…’ என்று கிழவிகள் கைகளைத் தடவிக்கொடுப்பதைப் போல அமுக்கிக்கொண்டனர். ‘சொடுக்‘ ‘சொடுக்‘ கென புதுக்குச்சியை உள்ளே நுழைத்தான். ‘மெல்லக் குத்துறா…சின்னஞ்சிறுசுக வலி பொறுக்காம கத்துதுகள்ல’ என்று ஆத்தாக்காரிகள் சடைத்துக்கொண்டார்கள். ‘மெல்லக் குத்துனா வலி இத விட அதிகமா இருக்கும்’ என்று செங்கன் சொன்னபின் சமாதானம் ஆயினர். அறுத்த காதுக்காரிகளின் தொங்கு சதையில் துணியை மட்டும் மாற்றிக் கட்டிவிட்டான். புண் ஆறட்டும் எனச்சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அவன் கொண்டுவந்திருந்த சட்டியில் அவன் சம்சாரத்திற்கும் சேர்த்து கஞ்சி ஊற்றி அனுப்பினர்.

அடுத்த நான்கு நாட்கள் கழித்து செங்கன் மீண்டும் ஊருக்குள் வந்தான். இந்த முறை கொம்பூதி புளியமரத்தின் பக்கம் வராமல் நல்ல தண்ணீர் கிணற்றுப்பக்கமாக வந்தான். அவன் வந்துவிட்டால் நாய்கள் எல்லாம் எங்கு கிடந்தாலும் பாய்ச்சல் வேகத்தில் வந்துவிடுகின்றன. அதுவும் உயரமான கருவட்ட நாய் தான் மற்ற எல்லா நாய்களையும் விட மூர்க்கமாக எந்நேரமும் குரைத்தபடியே இருந்தது. நாய் குரைப்பதை வைத்தே செங்கன் வந்துவிட்டான் என ஊருக்கே தெரிந்துவிடும்.

ஆலமரத்தடியில் உட்கார்ந்திருப் பவர்களும் ‘சரி, செங்கன் போயிருப்பான்’ என்று ஊகித்துக் கொண்டனர். வந்தவன் தண்ணீர் கிணற்றைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான். வட்டக் கிணற்றின் நடுமையமாக குறுக்குவெட்டில் ரெண்டு பட்டியக்கல் போடப்பட்டிருந்தது. தண்ணீர் இறைப்பவர்கள் அந்தக் கல்லின் மேல் நின்றுகொண்டு கீழே குனிந்து இறைக்க வேண்டும். இது தவிர மூன்று பட்டியக்கல்லுகள் கிணற்றை விட்டுத்தள்ளி ஓரமாகக் கிடந்தன. அது எதற்கு? என்று பார்த்துக்கொண்டு நின்றான். ஏதாவது அவசரத்திற்கு கிணற்றை மூடி வைப்பதற்கானதாக இருக்கும் என்று அவனே நினைத்துக்கொண்டான். ஊரின் ஒவ்வொரு விஷயத்தில் பாதுகாப்பிற்கான ஒன்றிருப்பதை அவன் கவனித்தவாறே இருந்தான். அவனுக்கு முதல் பார்வையிலேயே ஊர் பிடிபட்டுப்போனது. அதனால்தான் தங்கமாட்டேன் என்று சொன்னான். ஆனாலும் அடுத்தடுத்து ஊடுருவிப் பார்க்க முயற்சித்தவாறே இருந்தான்.

சம்சாரிகள் ஊரில் குடியிருக்கப் போகும் கள்ளன் என நினைத்து, சடையன் பெரியாம்பள அழைத்தபோது வந்தவன், சம்சாரிகளே இல்லாமல் கள்ளர்கள் மட்டுமே குடியிருக்கும் ஊர் என்பதை அறிந்ததும் தங்க முடியாது என மறுத்துவிட்டான். முடிவுக்கு விளக்கம் கேட்ட குறத்தியிடம் ‘மரத்து உச்சியில ஊதுகொம்பத் தொங்க விட்டிருக்கிறவெங்க ஊருல நமக்கென்ன வேல?’ என்று கூறினான்.

சக போட்டியாளனை வெல்லும் வாய்ப்பென அவன் கருதியதால் மட்டுமே சற்றே தயங்கி காது வளர்த்துக்கொடுக்கச் சம்மதித்தான்.

நாய்களின் தொடர் குரைப்பொலிகளுக்கு நடுவில் மந்தைக்கு வந்து சேர்ந்தான். தாயும் பிள்ளையுமாக எல்லோரும் கூடினர். மறு குச்சியை உருவிவிட்டு அதைவிடத் தடிமனான குச்சியை உள்ளே சொருகினான். முதல்முறை குச்சியை மாற்றியபோது இருந்த வலி இப்பொழுது இல்லை. ஆனாலும் ஆறாத புண்ணை உரசி நுழையும்போது வலி இருக்கத்தான் செய்தது. பிள்ளைகள் வலியை சமாளிக்கப் பழகினர். குத்தி முடித்தவனுக்கு சட்டியில் கஞ்சியைக் கொண்டுவந்து ஊற்றினர். கஞ்சியை வாங்கிக்கொண்டே அவன் கேட்டான். ‘எப்படித்தான் ஊருக்குள்ள படுக்குறீக, நரி ராத்திரி பூரா ஊளையிடுதே’ என்றான். அதற்கு செவத்தம்மா கிழவி ‘ஆமாம்டா... என்னைக்கு இல்லாத திருநாளாநேத்து ராத்திரி பூரா எ வீட்டுக்கு பின்னாடி ஊளையிட்டுகிட்டே இருந்துச்சு’ என்றாள். மற்ற சிலரும் ஊரோட கிழக்கு வீட்டோரமா ஊளையிட்டுச்சு, மேற்கு வீட்டோரமா ஊளையிட்டுச்சு என மாறி மாறிச் சொன்னார்கள். ‘பொடவுக்குள்ள எங்கள தூங்கவிட மாட்டேங்குது’ என்று சொன்னவன் கஞ்சியை வாங்கிக்கொண்டு புறப்பட்டான். அவன் பின்னால் நாய்கள் விடாமல் குரைத்துக்கொண்டே போயின. கருவட்டையின் தொல்லை தாங்கமுடியவில்லை. ‘நரி ஊருல நாய்க்கு என்னடி மணியம்‘ என்று முனங்கியவாறு கல்லால் எறிவதைப்போல குனிந்து விரட்டியபடி போனான்.

போனவன் நான்கு நாட்களுக்குப்பின் மீண்டும் வந்தான். ஆனால், இம்முறை தென்மேற்கு திசையிலிருந்து ஊருக்குள் நுழைந்தான். நாய்களின் குரைப்பொலியின் ஊடே தெருவில் வரிசையாக வீடுகளைப்பார்த்தவாறு வந்து மந்தையிலே அமர்ந்தான். மந்தையில் உட்கார்ந்திருந்த பெரியாம்பிளைகள் கருவட்டையை கல்லால் எறிந்து

அமட்டினர். மற்ற நாய்கள் எல்லாம் குரைப்பதை நிறுத்தி விலகிக்கொண்டன. ஆனால், கருவட்டை குரைத்தபடியே இருந்தது. கூட்டம் வந்து கூடியது. இம்முறை சிறிய சோளத்தட்டையைக் கொண்டுவந்திருந்தான். இலுப்ப எண்ணெயையும், புங்க எண்ணெயையும் சின்னச் சின்ன செரட்டையில் வைத்திருந்தான். பிள்ளைகளின் காதுகளிலே இருந்த குச்சியை உருவினான். இரண்டு காதிலும் புண் பொருமி இருந்தது. எண்ணெயால் காதின் நாக்கை மெல்லத் தடவிக் கொடுத்தான். பிள்ளைகளுக்குச் சுகமாக இருந்தது. கொண்டு வந்திருந்த சோளத்தட்டையின் மேல் ஈக்கியை உரித்துவிட்டு கெட்டியான பஞ்சைப்போல உள்ளேயிருக்கிற தக்கையை மட்டும் எடுத்து ஓட்டைக்குள் வைத்து அமுக்கினான். எண்ணெயில் நழுவி தக்கை உள்ளே போய் உட்கார்ந்தது. அடுத்தடுத்து தக்கையை வைத்து முடித்தவன் அறுத்த காதுக்காரிகளின் கட்டைக் கழற்றி மேல் காதின் தோலை மெல்ல அறுத்துவிட்டு அதோடு சேர்த்து வைத்து காது முழுவதற்குமான கட்டைப் போட்டான். வேலையைச் செய்துகொண்டே கிழவிகளிடம் பேச்சு கொடுத்தான். ‘நேத்து ராத்திரி நரி வந்து நடுத்தெருவுல ஊளையிட்டுச்சுப்பா...’ என்று ஒருத்தி மட்டும் சொன்னாள். ‘வந்த மாதிரியே சத்தம்கேட்கலியே’ என்று மற்றவர்கள் சொல்லிவிட்டனர். கஞ்சியை வாங்கிக்கொண்டு கிளம்பினான். கருவட்டையின் தொல்லை மலைபொடவுக்குப் போதுவரை தாங்கமுடியாததாக இருந்தது.

ஆலமரத்தடி பெரியாம்பிளைகள் ‘கொறவன கொண்டுவந்து விட்ட பொறகுதான்டா கிழவிக நம்மள சண்ட புடிக்காம இருக்காளுக’ என்று பேசி நிம்மதியாயினர். ‘மத்த பொழுதெல்லாம் என்ன பண்றான்’ என்று பம்பையன் கேட்டதற்கு, ‘அங்கிட்டு தானப்ப...மலைக்கு பின்னாடி கண்ணி வச்சு காட கவுதாரிய புடிச்சுக்கிட்டு திரியுறா’ என்றும், ‘பக்கத்து ஊரப்பக்கமா போயிட்டு வர்றானப்பா’ என்றும் சொன்னார்கள். ‘நம்ம சுழியன்தான் அவர் பின்னாடியே திரியுறான்’ என்றார் சடையன் பெரியாம்பிள. ‘ஆமாம்பா...சுதாரிப்பு முக்கியம்’ என்றார் வீரணன் பெரியாம்பிள. சுழியன் சின்ன வயதுக்காரன்தான். இப்பொழுதுதான் கல்லெறிந்துகொண்டிருக்கிறான். அவனும் கருவட்டையும்தான் செங்கனை விடாமல் துரத்தியபடியே இருந்தனர்.

ஒரு வாரம் கழித்து சடச்சி பொட்டல் பக்கமிருந்து ஊருக்குள் செங்கன் வந்தான். தெருவின் ரேகைகள் அவன் பார்வைகளின் வழியே நெளிந்து ஓடின. அவனது முழி உருண்டு திரும்புகையில் ஊரின் மடிப்புகள் நெளிந்து அவனுள் இறங்கின. உரலும் திருகையும் போனமுறை வந்ததுபோல் இல்லாமல் வெவ்வேறு வீடுகளில் மாற்றப்பட்டுக்கிடந்தன. அனைத்தையும் கவனித்தவாறு மந்தையில் வந்து உட்கார்ந்தான். பிள்ளைகளின் காதிலே இருந்த தக்கையை எடுத்தான். ஊசி முனை அளவு இருந்த துவாரம் குண்டுமணி அளவானதாக மாறியிருந்தது. அதற்கேற்றாற்போல் புண்ணின் வட்டமும் பெரிதானது. கொண்டுவந்த எண்ணெயைத் தடவிவிட்டு போனமுறை வைத்ததைப் போல இரண்டு மடங்கு பெரிய தக்கையை வைத்து பெருவிரலால் அமுக்கித் தள்ளினான். வலி ‘விண்ணென்று’ ஏறியது. சிறு கத்தல்களோடு பிள்ளைகள் சமாளித்துக்கொண்டனர். அறுத்த காதுக்காரிகளுக்கும் அதேபோலத் தக்கையை வைத்தான். அது வாங்கிக்கொண்டு நின்றது. கஞ்சியை வாங்கியவன் கருவட்டையின் விடாத குரைப்பின் ஊடே நடந்து

போடவுக்குள் போனான்.

மீண்டும் அவன் வர ஒரு வாரமானது. பெரிய தக்கையாக வைத்திருந்தால் நாள் செல்லும் எனச் சொல்லிவிட்டுத்தான் சென்றிருந்தான்.

இதற்கிடையில் இந்தாண்டு கவரடைப்பு செய்ய நாவிதன் நிச்சயித்த காலம் வந்துவிட்டது. ‘ஏழு பேரு கவரடப்பு செய்யுற பக்குவத்துல இருக்காங்கப்பா...’ என பெரியாம்பிளைகள் முடிவு செய்தனர். ஊரின் பின்புறம் கரட்டுப்பக்கம் இருக்கும் கவரடப்பு கிணற்றின் ஓரமாக மழுவும் கத்தியுமாக நாவிதன் வந்து உட்கார்ந்தான். மழுவையில் கத்தியை வேண்டிய மட்டும் தீட்டி முனைப்படுத்திக்கொண்டான். பெரியாம்பிளைகள் கவரடப்பு செய்ய வேண்டிய பையன்களையெல்லாம் கூட்டி வந்தனர். கிணற்றைச் சுற்றிப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. மண்டையனின் கடைசிப் பையன் கருப்பனைத்தான் முதலில் கொண்டுவந்து நிறுத்தினர். நாவிதன் அவனது குஞ்சின் முன்னத்தித் தோலை மட்டும் பிடித்து கோழி கொத்தி இழுப்பதைப்போல இழுத்தான். கருப்பனை மேலே பார்க்கச்சொல்லி பிடித்துக்கொண்டார்கள். இழுபட்ட தோலைக் கத்தியின் முனைகொண்டு சுருக்கென அறுத்தான். ‘ஆத்தா...’வென அவன் கத்திய பொழுது ரத்தம் ஊறி வந்தது. பின்னால் பிடித்துக்கொண்டிருந்தவன் அப்படியே அவனைத் தூக்கிக்கொண்டு கிணற்றுக்குள் குதித்தான். இப்படி ஒவ்வொருவனின் முனைத்தோலும் சுண்டுவிரல் தண்டி வட்டத்தில் அறந்து விழுந்தபடி இருந்தது. உள்ளே தூக்கிப்போடப்பட்ட பையன்கள் வெளியேறாமல் திட்டுக்களைப்பிடித்துக்கொண்டு உள்ளேயே கிடந்தனர். ரத்தம் மெல்ல கசிந்து நீருக்குள் செம்மண்புழு போல ஊர்ந்துபோனது. கதை நீளும் காலத்துக்கும் மிக முந்தி எங்கோ, எப்படியோ வந்து கலந்து விட்டு ரத்தம் இது. வைகையின் வடகரையில் இருந்த வந்த கிழவிகள் பழக்கத்தை தொடர்ந்தார்களே தவிர கதை எதையும் சொல்லாமலே போய்விட்டனர்.

நீண்ட நேரம் கழித்து மேலேறி வந்த பையன்களைக் கூப்பிட்ட நாவிதன் தோல் அறுபட்ட இடத்தில் துணியைச் சுற்றிவிட்டான். சுற்றிய துணியோடு வலியைத் தொங்கவிட்டபடி அவர்கள் வாரக்கணக்கில் இருந்தனர். ‘தொடையில தட்டாம நடங்கடா...அப்பத்தான் புண்ணுவேகமா ஆறும்’ என்று பெரியாம்பிளைகள் சொல்ல ‘நடந்தா தட்டுதுல்லடா வெண்ணய்களா’ என்று பையன்கள் கோபப்பட வேறு வழியில்லாமல் அலைவதை நிறுத்திவிட்டு மந்தையிலே உட்கார்ந்தனர்.

செங்கன் ஒரு வாரம் கழித்து மீண்டும் மந்தைக்கு வந்தான். கவரடப்பு செய்து துணியைச் சுற்றிக்கொண்டு ஏழு பையன்கள் மந்தையிலே உட்கார்ந்திருந்தனர். எந்நேரமும் தன்னை உற்றுப்பார்த்த வாக்கிலே பின்னாலே வருகிற சுழியனும் துணி சுற்றித் தொங்கவிட்டபடி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். பிள்ளைகளும் கிழவிகளுமாக மந்தை முழுவதும் நிறைந்தனர். ஒவ்வொரு பிள்ளையாக உட்கார வைத்து காதின் நாக்கை இழுத்துப்பார்த்தான். காது முழுவதும் செம்புண் பூத்துக்கிடந்தது. தக்கையை எடுத்துவிட்டு பூன வெதர்தண்டி பழைய துணியைச் சுருட்டிக் காதுக்குள் நுழைத்தான். தோல் கிழிவதைப்போல வட்டம் விரிந்து கொடுத்தது. எண்ணெயைத் தடவியபடி அடுத்தடுத்த பிள்ளைகளை உட்காரவைத்தான் காதை அறுத்து ஒட்டவைத்த பிள்ளைகளுக்குப்

போதுமான வளர்ச்சி கொடுக்கவில்லை எனச்சொல்லி தக்கையை எடுக்காமல் அடுத்த வாரம் துணி வைத்துக்கொள்ளலாம் என விட்டுவிட்டான். வேலையை முடித்ததும் கஞ்சியை வாங்கிக்கொண்டு புறப்பட்டான். அவன் மந்தையை விட்டு இறங்கிச் சிறிது தூரம் போவது வரை நாய்கள் குரைத்தன. அப்புறம் நின்றுவிட்டன. கொஞ்ச நேரம் கழித்துத்தான் சுழியன் கவனித்தான். கருவட்டையைக் காணவில்லை. குரைக்கிற நாய்களுக்கு நடுவில் அது இல்லை. வேறெங்காவது போயிருக்குமோ என யோசித்தபடி இருந்தான். ஊர் முழுவதுமோ அல்லது மலைப்பக்கமோ போய்த் தேடுகிற நிலையில் அவன் இல்லை. வீட்டில் கஞ்சியைக் குடிக்க, மந்தையில் வந்து ஆட்டாமல் உட்கார என்றுதான் நாட்கள் போய்க் கொண்டி ருந்தன.

தொடர்ச்சியாக அவன் கவனித்துவந்தான். கருவட்டை கண்ணிலே படவில்லை. மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறை என செங்கன் வந்து காதிலே வைத்துள்ள துணி உருண்டையை எடுத்து ஒன்றிரண்டு சுற்று கூடுதலாகத் துணியைச் சுற்றி வட்டத்தைப் பெரிதாக்கி உள்ளே திணித்து விட்டுப் போனபடி இருந்தான். அவன் இடதுமார்பில் இருக்கும் பாம்பின் நீண்ட நாக்கைப் பார்த்தபடி முன்னால் உட்காரும் பிள்ளைகள் தங்கள் காதுகளின் நாக்கு வளருவதை உணர்ந்தவாறே இருந்தனர். உருண்டையில் துணியைச் சுற்றிய பையன்களும், உருண்டையாய்த் துணியை சுற்றிய பிள்ளைகளும் எந்நேரமும் மந்தையிலே உட்கார்ந்து கிழவன் கிழவிகளின் வாயைப் பார்த்தபடி இருந்தனர்.

இரண்டு வாரங்கள் ஓடின. பெண் பிள்ளைகளின் காதில் வைத்திருந்த துணி உருண்டையை எடுக்கிறபொழுது குருவித் தலையளவு ஓட்டை விழுந்திருந்தது. 'சரி, இனி குணுக்கு போட்டுவிட வேண்டியது தான்' என்று முடிவு செய்த செங்கன் பெரியாம்பிளைகளிடம் குணுக்கு வாங்கித்தரச் சொன்னான். சடையன் பெரியாம்பிளதான் தேனி சந்தைக்குப்போய் பதினாறு ஈயக்குணுக்குளை வாங்கிவந்தார். குணுக்குகள் வந்தவுடன் துணிப்பந்தை எடுத்துவிட்டு நாக்குகளை எண்ணெய் போட்டுத்தடவி ஈயக்குணுக்கின் மேலே இருக்கிற கம்பிகைக் கொக்கிபோல காதிலே மாட்டித் தொங்கவிட்டான். ஈயக்குணுக்குள் காதிலே தொங்கியவுடன் பிள்ளைகளுக்கு வந்த சந்தோஷம் அளவிட முடியாததாக இருந்தது. காது ஆடி குணுக்கு கன்னத்தில் வந்து முட்டுகிற சுகத்தை தலையை ஆட்டி ஆட்டி அனுபவித்தனர். புண் ஆறாமல் துணி சுற்றி உட்கார்ந்திருக்கும் ஒன்றிரண்டு பையன்கள் தங்களுக்கு முன்னால் வந்து ஆட்டி ஆட்டிக் காட்டும் பிள்ளைகளை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர்.

ஈயக்குணுக்கு எந்நேரமும் காதைப் பிடித்து இழுத்தபடி இருந்தது. செங்கன் அவ்வப்போது வந்து இலுப்பை எண்ணெயையும், புங்க எண்ணெயையும் மாறி மாறித் தேய்த்துவிட்டபடி இருந்தான். வருகிற பொழுதெல்லாம் ஊளையிடும் நரியின் கதையைப் பேசாமல் அவன் போவதில்லை. பிள்ளைகளின் காதுகள் வேர் விட்டு வளரும் அழகை கிழவிகள் எந்நேரமும் பார்த்து ரசித்தினர். சின்னக் குணுக்கு பெரிய குணுக்காகி ஈயக்குணுக்கு வெங்கலக் குணுக்காக மாறியது. புண் ஆறிய பையன்கள் ஓடிப்பிடித்து விளையாட பிள்ளைகளைக் கூப்பிட்டபடி இருந்தனர். 'ஓடாதீங்கடி, குணுக்கு காத அத்துப்புடும்' என்று கிழவிகள் சொல்லி வைத்ததால் பிள்ளைகளால் ஓட முடியவில்லை. ஆனால்,

பையன்கள் வம்பிழுக்காமல் விடுவதாக இல்லை. தினமும் ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் இடையில் வம்புகள் வளர்ந்து களை கட்டியபடி இருந்தன.

அடுத்த சில வாரங்களில் குணுக்கு காதை இழுத்துக்கொண்டு கீழிறங்கியது. சிலருக்குப் போதுமான வளர்ச்சி இல்லை. சிலருக்கு தண்டு மிகச்சிறுத்துப்போனது. 'கோணிப்போச்சடி...' வெறச்சுகிருச்சுடி...' என்ற பேச்சு வராத அளவு செங்கன் வேலை செய்திருந்தான். இனி தண்டட்டி, கொப்பு, லோலாக்கு, எடத்தட்டு, ஒனப்பத்தட்டு, எதிர்தட்டு, குறுக்குத்தட்டு, முடிச்சு, சவடி என வரிசையாகக் குத்திப்போட வேண்டியதுதான். முதலில் தண்டட்டியை மாட்டிவிடலாம் எனச் சொல்லி தயார் செய்து வரும்படி செங்கன் கேட்டான். பெரியாம்பிளைகள் கூடக்கோயில் சந்தைக்குப்போய் மூடைக்கணக்கில் தானியங்களைக் கொடுத்துவிட்டு பதினாறு தண்டட்டிகள் வாங்கிவந்தனர். 'பெரிய சம்சாரிக போலப்பா. இவ்வளவு தண்டட்டிக வாங்கிட்டுப் போறாங்க' என்று சந்தையில் பார்த்தவர்கள் நினைத்துக்கொண்டனர்.

ஆலமரத்தடிக் கூட்டம் முழுவதும் மந்தைக்கு வந்துவிட்டது. தாதனூர் மந்தை களை கட்டி நின்றது. செங்கன் வந்து ஒவ்வொரு தண்டட்டியாக எடுத்து கையிலே உருட்டிப்பார்த்து பிள்ளைகளுக்கு மாட்டிவிட்டான். பிள்ளைகளுக்கும், ஆத்தாக்காரிகளுக்கும், கிழவிகளுக்கும் இருந்த சந்தோஷத்தை வகைசொல்ல முடியாது. மந்தைக்கல் அடிவாரத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. 'புண்ணு மேவாம, பூப்போல எறக்கிட்டானப்பா காதெ...நல்ல ஆளத்தானப்பா கூட்டிவந்த' என்று சடையன் பெரியாம்பிளையைக் கிழவிகள் மெச்சினர். பதினோரு பிள்ளைகளுக்குத் தண்டட்டியை மாட்டிவிட்டவன் ஐந்து பேருக்கு மட்டும் 'காது இன்னும் இழுவை கொடுக்கவேண்டும்' எனச் சொல்லி தண்டட்டியைப் போடாமல் மடியிலே வைத்துக்கொண்டான். சந்தோஷத்தில் ஊரே திளைத்து நின்றது. செங்கனுக்கும் அவனது மனைவிக்கும் சுடுகஞ்சியை ஊற்றிச் சாப்பிட வைத்தனர். தலா நாலு மரக்காவீதம் இரண்டு மூடை தானியங்களைக் கொடுத்தனர். ஆளுக்கொரு மூடையாகத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு மூன்று நாளுக்குப் பிறகு வந்து ஐந்து பேருக்கு தண்டட்டி மாட்டிவிடுவதாகச் சொல்லிவிட்டுப் போனான். வாங்கி வந்ததிலேயே மிக நேர்த்தியான ஐந்து தண்டட்டிகள் அவன் மடியிலே சுருண்டிருந்தன.

புதுத் தண்டட்டிகாரிகள் இரவெல்லாம் பக்கவாட்டில் படுத்துறங்க முடியாமல் குப்புறப் படுக்கவும் மல்லாக்கப் படுக்க வுமாக இருந்தனர். தண்டட்டிகள் காதுகளின் விரல்களைப்போல் கழுத்தைத் தொட்டு தடவியபடியே இருந்தன. கூச்சப்பட்ட பிள்ளைகள் அவ்வப்பொழுது கழுத்தைச் சுளுக்கிக்கொண்டன. முதல்நாள் இரவு தூங்காமலே கழிந்தது. இரண்டாம் நாள் இரவுதான் தூக்கம் வந்தது.

மூன்றாம் நாள் இரவு கழிந்து வழக்கம்போல் விடிந்தது. மந்தையில் படுத்திருந்த ஒன்றிரண்டு பெரியாம்பிளைகள் கோழி கூப்பிட எழுந்து உட்கார்ந்தனர். ஊர் மெல்ல விழித்தது. கொம்பூதி புளியமரத்திலிருந்த மூன்று சேவல்கள் விடாமல் கூவின. காவலுக்குக் களவுக்கும் போனவர்கள் ஆலமரத்தடிக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். அங்கிருந்து ஓரிருவராக ஊருக்குள் வர ஆரம்பித்தனர். மந்தையில் படுத்திருந்த பெரியாம்பிளைகள் ஏதோ வித்தியாசமாக உணர்ந்தனர். ஆனால், என்ன

வென்று பிடிபடாமல் இருந்தது. ஆலமரத்தடிக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக ஊருக்குள் வந்து சேர்ந்தது. கஞ்சிப் பொழுது கடந்தது. ஆணும் பெண்ணும் காலைக் கஞ்சியைக் குடித்துவிட்டு மந்தையை நோக்கி வர ஆரம்பித்தனர். அப்போது சுழியன் சடச்சி பொட்டல் பக்கமிருந்து கத்திக்கொண்டே ஊருக்குள் வந்தான். 'நா அன்னையிலிருந்தே சொல்றே, எந்த வெண்ணய்களாவது கேட்டிங்கெளாடா... இப்ப பூராத்தியும் நொட்டிப்புட்டு போயிட்டான்' என்று கத்தியபடியே மந்தைக்கு வந்தான்.

மந்தையிலிருந்தவர்கள் அவனை அமட்டி 'விஷயத்த சொல்றாமொதல்ல?' என்றனர்.

'ஊருல இருந்த நாயப் பூரா காணோம். அவெந்தான் என்னமோ பண்ணிபுட்டான். அன்னக்கே கருவட்டையை இவெந்தா என்னமோ பண்ணிபுட்டான்னு நாசொன்னேன்லடா. எவனானது கேட்டீங்கெளா?' என்றான்.

அப்பொழுதுதான் மந்தையிலிருந்தவர்களுக்கு விஷயம் பிடிபட்டது. தெருக்களில் நாய்கள் எதுவும் தென்படவில்லை. எங்கும் நாய்க்குரைப்பொலி கேட்கவில்லை. நான்கைந்து பேர் செங்கன் தங்கியிருந்த பொடவுக்குப் போய் பார்த்துவிட்டு வந்தனர். ஆளில்லை, போய்விட்டான் என்று தெரிந்தது. அந்த பொடவைச் சுத்தி புதுமண் பெரண்டு கெடந்தது. பக்கத்து கிராமங்களிலிருந்து திருடிக்கொண்டுவந்து புதைத்து வைத்துவிட்டு போகும்பொழுது எடுத்துப் போயிருக்கவேண்டும் என ஊகித்தனர். நம்ம ஊரையே திருட்டு வேலைக்கு ஒருவன் பயன்படுத்தியிருக்கிறான் என்பது அவர்களுக்கு நம்பமுடியாத ஆச்சரியமாக இருந்தது.

'சுதாரிப்பா இருக்கணும்டான்னு மொதல்லயே சொன்னேனடா...' என்றார் வீரணன் பெரியாம்பிள.

யாரும் எந்தப் பதிலும் சொல்லமுடியாமல் இருந்தனர். உச்சிப்பொழுதைக் கடந்தபொழுது விருமாயிக் கிழவி கத்திக்கொண்டுவந்தாள். 'என்னஙகடீ... உலக்கையில் இருந்த பூணக் காணோம்...'

ஊர் பரபரப்பானது. பெண்கள் உலக்கைகளை ராவிப்போயினர். வெண்கலப் பூண் போட்ட உலக்கைகள் எட்டு இருந்தன. அந்த எட்டிலும் இப்பொழுது பூண் இல்லை. ஊரே தொண்டைக்குழி வற்றிப்போய் நின்றது. இவ்வளவு பேர் கூட்டமாக நிற்கும் தாதனூர் மந்தையில் இப்படி அமைதி என்றைக்கும் இருந்ததில்லை. ஊர் தோன்றிய காலமிருந்து நடக்காத ஒன்று இப்பொழுது நடந்துவிட்டது. அவமானத்தால் அனைவரும் இறுகிப்போய் நின்றனர்.

ஊரின் காதை அறுத்து கொம்பூதிப் புளியமரத்தில் தொங்கவிட்டுப் போனதைப் போல போயிருந்தான். களவின் வலியை ஊர் முதன்முறையாக உணர்ந்தது.

உச்சிப்பொழுது கடந்த கொஞ்ச நேரத்தில் கருப்பு நாய் ஒன்று மெல்ல நடந்து ஊருக்குள் வந்தது. பையன்கள் பார்த்துச் சொன்னார்கள். பெரியாம்பிளைகள் நாயைப் பிடித்து வந்து காதை திருகிப்பார்த்தனர். சொணையில்லாமல் ஈனக்குரலில் கத்தியவாறு அப்படியே

படுத்துக்கொண்டது. ‘கஞ்சாவ கலந்து கொடுத்திருக் கானப்பா… பூரா விழுந்துபோச்சுக’ என்றார் பெரியாம்பிள. அன்றைக்கு பகல் முழுக்க கரட்டுப்பக்கமும் மலைப்பக்கமும் இருந்து ஒவ்வொரு நாயாய் ஊருக்குள் வந்தபடி இருந்தது.

ஈயக் குணுக்கு போட்டிருந்த ஐந்து பிள்ளைகள் தெரு முக்கிலும், மரத்தோரத்திலும் சாய்ந்தபடி மலைப்பொடவையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

பேசித் தீர்க்கமுடியாத துக்கம் ஒன்று தாதனூர்க்காரர்கள் எல்லோரிடமும் இருந்தது. வேறு வழியில்லாமல் பேசிப்பார்த்தனர். ‘தெனமும் அவன் தானப்பா நரி மாதிரி ஊளையிட்டு தூக்கத்த நோட்டம் பாத்திருக்கான்’ என்றனர். ‘இவெ நாட்டுக் கொறவனில்லப்பா… கள்ளக் கொறவனப்பா’ என்றார். இன்னும் என்னென்னமோ பேசினர். ஆனால், என்ன பேசி என்ன? மச்சமின்றி அவன் போனது போனதுதான்.

*

# 82

**கா**லை வெயில் ஏறி வந்த கொஞ்ச நேரத்தில் **தாதனூர் மந்தையில்** பஞ்சாயத்து கூடியது. ஊர் பெரியாம்பிள வீரணன்தான் நடுவில் உட்கார்ந்திருந்தார். மந்தை முழுவதும் கிழவன் கிழவிகளும் நிறைந்து இருந்தனர். பூச்சிக்கும் அவன் மனைவி பின்னியக்காளுக்குமான பிரச்சினை. ஏற்கனவே இரண்டு முறை பஞ்சாய்த்து கூடி கெடு வைத்து கலைந்தது. பின்னியக்காள் வயித்துப் பிள்ளைக்காரியாக இருந்ததால் பிள்ளைத்தாச்சிக்கு அனுசரணையா பிரசவம் ஆன மூணாம் நாள் கூடுவோம்னு போன பஞ்சாய்த்து கெடு வைத்திருந்தது. பின்னியக்காள் பிள்ளை பெற்ற மூன்றாம் நாள்தான் செங்கன் தண்டட்டிகளை எடுத்துகொண்டுபோனது. எனவே அதன்பின் பத்து நாள் கழித்து உச்சப்பட்டியிலிருந்து அவளுடைய ஆத்தா அப்பனெல்லாம் வந்து சேர்ந்தபின் இன்று காலை மீண்டும் பஞ்சாயத்து கூடியது. ஊரே மரத்தடியில் வந்து குவிந்து கிடந்தது. பஞ்சாயத்தார்கள் முதலில் பூச்சியைப் பார்த்து ‘நீ என்னப்பா சொல்ற?’ என்று கேட்டனர்.

‘இனி வெச்சு பொழைக்க முடியாதுப்பா’ என்றான் பூச்சி.

‘நீ என்னம்மா சொல்ற?’ என்று பின்னியக்காளைக் கேட்டனர்.

‘இந்த மொட்டுக் கெட்ட பயலோட ஒத்த நாள் இருக்க முடியாது. தீத்து வுட்டுட்டு அடுத்த பேச்சு பேசு’ என்றாள்.

பக்கத்திலிருந்த பூச்சியோட ஆத்தா ‘ஏன்டீ... எடுவட்ட சிறுக்கி, செத்த இருந்துதா பொழச்சா என்ன?’ என்றாள்.

‘நல்லா அழகு மகன் பெத்தவ, பேச வந்துட்டா பேச்சு...கோரக்கெழங்கு தண்டி வச்சிருக்கிறவனுக்கு பொம்பள கேக்குதாக்கும் பொம்பள’ என்றாள். அதோடு அவன் ஆத்தா வாய் திறக்கவில்லை. ஆனால் இவள் விடுவதாக இல்லை. தன்னுடைய ஆத்தாக்காரியை பார்த்து ‘கைத்தண்டி ஆம்பிளய கட்டி வச்ச மகராசி பொத்திக்கிட்டு நிக்குற, பேசவேண்டியதுதான் பேச்சு’

என்றாள். அவ்வளவுதான், அவள் பேச ஆரம்பித்ததும் பஞ்சாயத்து களைகட்டி காதைக் கிழித்தது.

பஞ்சாயத்தார்கள் சத்தம் போட்டுப் பார்த்தனர். ஆனால், அதையெல்லாம் சட்டை செய்ய அங்கு யாருமில்லை. அவர்களாக முடிந்த மட்டும் கத்தி ஓய்ந்தபின் ‘ஏலேய்...பஞ்சாயத்துக்காரங்கெளா, என்ன ஏதுன்னு கேக்காம எனக்கென்னன்னு உக்காந்திருக்கீங்க’ என்றனர்.

‘பேசுவீங்கடி... ஏ பேச மாட்டீங்க’ என சலித்துக்கொண்டு மீண்டும் பேச்சைத் துவக்கினர். ‘சரி, இப்ப பிள்ளய என்ன செய் யுறது?’ என்று கேட்டனர்.

‘நா என்ன வாக்கப்பட்டு வர்றப்பவே பிள்ளையோடவா வந்தேன். அவென் பிள்ளைய அவென தூக்கிக்கிறச் சொல்லு’ என்றாள் பின்னியக்காள்.

‘அப்ப நீ புள்ளய கொடுத்துட்டு கொண்டுவந்த சட்டிமுட்டிய எடுத்துக்கிட்டு கெளம்பு’ என்று சொல்லி மந்தையை விட்டு இறங்கிய வீரண்ன் பெரியாம்பிள கீழ கிடந்த வேப்பங்குச்சியை எடுத்து இரண்டாக முறித்து ஆளுக்கொன்றாகக் கொடுத்தார். முறி வாங்கிக்கொண்ட பின்னியக்காள் வாக்கப்பட்டு வரும்பொழுது கொண்டுவந்த சட்டி முட்டிகளை எல்லாம் எடுத்துக் கட்டிக் கொண்டாள். வீட்டிலிருந்து சொளவை எடுத்துவந்து அதில் பிள்ளையைப் படுக்கப்போட்டு மந்தையில் வைத்து பூச்சியிடம் சொளவைக் கொடுத்தாள். கண்களை இறுக்க மூடி வலதுகாலை உதைத்து குழந்தை வீச்சென கத்தியபடி அப்பன் கைக்குபோனது.

‘அடி ஆத்தீ... பச்ச மண்ணு கத்துதே’ன்னு சொளவில் இருந்த பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பூச்சியின் ஆத்தாள் பிள்ளைக்கு பால்கொடுக்க தெற்குக் கடைசிவீட்டுக்கு ஓடினாள். அவளோடு சேர்ந்து நாலைந்து பொம்பிளைகளும் ஓடினர். ‘வத்துப் பால இப்பத்தான் பிள்ள குடிச்சு முடிச்சான்’ என்று கடைசி வீட்டு ராக்காயி சொன்னவுடன் வேறு எங்கு போகலாம் என யோசித்து, பிரசவம் பார்த்தவளுடைய தங்கச்சி ராசாத்திக்கு போன மாசம்தான் பிள்ள பெறந்தது ஞாபகம் வர எல்லோரும் பழைய ஊரை நோக்கி ஓடினர்.

உச்சப்பட்டிக்காரர்கள் பின்னியக்காளை கூட்டிக்கொண்டு தாதனூர் மந்தையை விட்டு வெளியேறினர். ‘ஒடனே பால மாத்திரணும்டீ... இல்லாட்டி வலி பொறுக்க முடியாது’ என்றாள் ஒருத்தி. இன்னொருத்தி ‘பேக்கா காய கல்லுல போட்டு ஒரிசி தடவிக்கோ, அப்பத்தான் பால் ஊறாது’ என்று வைத்தியம் சொன்னாள். ‘எந்நேரமும் ஈர்த்துணிய நனச்சுமேல போட்டுக்கே இருடீ, இல்லாட்டி கட்டி விழுந்துபோகும்‘ என்றாள் ஆத்தாக்காரி.

*

**அ**மணமலையின் அடிவாரக் கருப்பு கோயில் ஆலமரத்தடி நிழலில் லம்பாடி மாடுகள் பூட்டிய பெட்டிவண்டி வந்து நின்றிருந்தது. வண்டிக்காரன் மாடுகளை அவிழ்த்து ஆலமர வேரில் கட்டிவைத்து விட்டு அதனருகில் உட்கார்ந்திருந்தான். ஆலமரத்தடியில் அங்குமிங்குமாக ஆட்கள் படுத்திருந்தனர். ஊருக்குள்ளிருந்து அப்பொழுதுதான் வந்த பூச்சி

‘என்னப்பா செட்டியார் வந்திருக்காரா?’ என்று வண்டியோட்டியிடம் கேட்டவாறு மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்தான். ‘ஆமா. மேல சாமி கும்பிடப்போனவரு இன்னும் எறங்கல’ என்றான். ‘ஆளுகொள்ள நாளா இங்கிட்டு வரலயேப்பா’ எனக்கேட்டான் பூச்சி. ‘விருத்தாச்சலத்துல வக்கீலா இருக்குறாருல்ல மூத்த மகெ...அவரு வீட்டுக்குப் போயிட்டு போன வாரந்தான் வந்தாரு’ என்றான், அசை போட்டு நின்ற மாட்டைப் பார்த்தவாறு. ‘என்னப்பா மாடு ரெண்டும் புதுசா தெரியுது?’ ‘ஆமா இது லம்பாடி மாடுக. பெட்டிவண்டிக்கு ஏத்த ஜாதி மாடு இதுதான்னு கொள்ள வெல கொடுத்து செட்டியாரு வாங்கி வந்திருக்காரு. லம்பாடி மாடுக பூட்டுன வண்டிக மருதயில அஞ்சாறு தானிருக்கு’ என்றான்.

பாறையின் உச்சியிலிருந்து செட்டியார் இறங்கி வருவது தெரிந்தது. மல் வேட்டியில் பஞ்சகச்சம் கட்டி, மகமல் சட்டைபோட்டு, ஜரிகை போட்ட துப்பட்டா போர்த்தி, காதுலே கடுக்கனும், கை விரல்களிலே மோதிரமும் அணிந்தபடி, வாட்டசாட்டமாக, வளர்ந்து சிவந்த உருவம் வெயிலில் வேர்த்துக்கொட்டியபடி இறங்கி வந்தது. நேமிநாத செட்டியாராக இருந்ததால்தான் இத்தனை அணிகலன்களுடன், பெட்டிவண்டி மாடுகளுடனும் தாதனூருக்குத் தனியாக வந்து வண்டியை நிறுத்தி விட்டு, மேலே போய் சாமி கும்பிட்டுத் திரும்ப முடிகிறது. இல்லையென்றால் இப்படி வருவதை நினைத்துப் பார்க்கக்கூட இந்த நகரத்தில் ஆள் இல்லை.

நேமிநாத செட்டியாரை தாதனூர்க்காரர்களுக்கு பல ஆண்டுகளாகத் தெரியும். ஆனாலும் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் அதிக நெருக்கம். தாதனூர்க்காரர்களுக்கு ரொம்பவும் ஆதரவாக இருக்கும் மதுரை செல்வந்தர் நேமிநாத செட்டியார்தான். அவர்களும் செட்டியாரை முழுமையாக நம்பினர். இரண்டு வருஷத்திற்கு முன் களவுக்குப் போய்விட்டு வரும்பொழுது விழுப்புரம் ரயில்வே ஸ்டேசனில் வைத்து ஆறு பேரை போலீசார் பிடித்துவிட்டனர். ஏழாவதாக பின்தங்கி வந்த ஒருவன் மட்டும் போலீசில் மாட்டாமல் ஊர் வந்து சேர்ந்துவிட்டான். அவன் சொல்லித்தான் ஊருக்கு விசயம் தெரிந்தது. பிடிபட்டவர்களை போலீசுகாரன் எங்கே கொண்டு போயிருப்பான்? எவ்வளவு காலம் தண்டனை? என்று அவர்களுக்கு எதுவும் தெரியாது. அது பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள அவர்கள் முனைந்ததில்லை. அப்பொழுது அமணமலைக்கு சாமி கும்பிட குடும்பத்துடன் வந்திருந்த நேமிநாத செட்டியார் ‘இது விசயமாக நான் விசாரித்து உங்களுக்குச் சொல்லுகிறேன்’ என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

மூத்தவன் குணசீலன் மூலமாக விசயத்தை தெரிந்துகொண்டு தாக்கல் சொன்னார். ஆறு பேரும் திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஓராண்டு சிறைத்தண்டனை முடிந்தபின் திரும்புவார்கள் என்றார். அன்று துவங்கியது நம்பகமான உறவு. அதன்பின் இது போன்று களவுக்குப் போகிறவர்கள் எங்காவது போலீசிடம் மாட்டிக் கொண்டால் அது சம்பந்தமாகத் தெரிந்துகொள்ள தாதனூர்க் காரர்களுக்கு நேமிநாதன் உதவுவார். அவர்களுக்கு மனசளவில் நெருக்கமானவராக செட்டியார் மாறினார்.

மலைக்கு மேலே இருக்கும் பேச்சிப்பள்ளத்திலும் அதற்கு மேல் இடிபட்டுள்ள கோயிலிலும் இருக்கும் சமண தீர்த்தங்கரர்களை வணங்க நகரத்தில் உள்ள சமண மதத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வப்பொழுது

வருவதுண்டு. அதில் நேமிநாத செட்டியார் முக்கியமானவராக இருந்தார். பெரிய ஓலைச்சுவடிகளைக் கொண்டுவந்து அங்கே வைத்துப்படித்து விட்டுப் போவார். ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கும் பெருசுகளிடம் சமண தீர்த்தங்கரர்களின் கதைகளை அவ்வப்பொழுது கூறுவார். ‘கெடா கோழிகூட இல்லாமல் என்ன சாமி?’ என்று பெருசுகள் கேட்கும். ‘இனி இவர்களிடம் இது சம்பந்தமாக வாய்திறக்கக்கூடாது’ என்று முடிவுக்கு வருவார். அடுத்தமுறை வரும்பொழுது, அவர் சமணத்தைப்பற்றி எதுவும் பேசமாட்டார். ஆனால், ஆலமரத்தடிப் பெருசுகள் அவரை விடாது. மிகவும் நொந்துபோன அவர் இனி பெரியவர்களிடம் நகரத்து விசயங்களைப் பற்றி மட்டுமே பேசுவதென்று முடிவெடுத்தார். மலையில் திரியும் தாதனூர் சிறுவர்கள் ஒன்றிருவரை அழைத்து சமண சாமிகளைப் பற்றிச் சொல்லுவதோடு சரி, மற்றவர்களிடம் அது பற்றிப்பேசுவதில்லை.

இன்றும் மலையைவிட்டு இறங்கி வந்தவுடன் மலையிலிருந்து எடுத்து வந்த கைக்கடிகாரத்தைக் காட்டி ‘கடியாரத்த ஏனப்பா பார்ஸ்வ நாதர் காலடியிலே வச்சீங்க?’ என்று கேட்டார். ‘திருச்சி பக்கம் களவுக்குப்போனவங்கெ கொண்டு வந்தாங்கெ. என்ன ஏதுன்னு தெரியல. கண்ணாடிக் கூட்டுக்குள்ள எழுத்தா இருந்துச்சி. நமக்கு ஆகாதுன்னு உங்கசாமி, படிச்சவருகிட்ட கொண்டுபோய் வச்சிட்டோம்‘ என்று பதில் வந்தது. பிறகு நகரத்து விஷயங்களையே பேசினார். புதிய நகராட்சி நிர்வாகம் சம்பந்தமாகவும், சேர்மன் சிவானந்தையர் பற்றியதாகவும் அந்தப் பேச்சு இருந்தது.

*

**வ**டக்கு ஆவணி மூல வீதியில் சிவானந்தையரின் புதிய வீட்டில் கூட்டம். பங்கெடுக்க வேண்டியவர்கள் கோச் வண்டியிலும், பெட்டி வண்டியிலுமாக வந்து இறங்கிக்கொண்டிருந்தனர். நகரில் உள்ள செல்வந்தர்களின் வண்டிகள் எல்லாம் வந்து அந்த வீட்டின் வாசலில் நின்றிருந்தன. காலம் கடந்தாலும் மெருகேற்றப்பட்ட கலை வேலைப்பாடுகளுடன் கூடிய உள் அறைகளை ரசித்துக் கொண்டிருக்கலாம் போல் இருந்தது. வந்தவர்கள் எல்லாம் மைய அறையில் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். கூட்டம் துவங்கு வதற்கு முன் அனைவருக்கும் காபி பானம் கொடுக்கப்பட்டது. சிலர் அதனை வேண்டாமென்று சொல்லித் தவிர்த்துவிட்டனர். சேர்மனின் புதிய நடவடிக்கையை அனைவரும் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தனர். நகரின் சொத்து வரி செலுத்தும் செல்வந்தர்களுக்கெல்லாம் பேப்பரில் அச்சடித்து அறிக்கை ஒன்றினை அவர் கொடுத்திருந்தார்.

‘உமா மகேஸ்வரன் துணை. நகர பரிபாலனத்துக்கு ஜனங்கள் செய்யவேண்டியது. வைகை ஆற்றுக்கும் தெப்பக்குளங்களுக்கும் பக்கத்தில் மலஜலம் கழிப்பது பெரும்பாவம். இதனால், சீதபேதி, காலரா போன்ற வியாதிகள் பரவுகின்றது. எனவே அங்கே யாரும் மலஜலம் கழிக்காமல் இருக்கும் பஷத்தில் நகரக்ஷேமத்திற்கு நல்லது. அதேபோல் வீட்டின் கொல்லைப்புறத்தில் விஸர் ஜலம் தேங்கி நிற்காமல் போக்க வேண்டும். இல்லையென்றால் அதில் விளையாடும் பாலர்களுக்கு வியாதி பரவும். அது தொத்து நோயாகவும் மாறும்.

நகரில் உள்ள குடிநீர்க் கிணறுகளின் மேட்டில் யாரும் கைகால் கழுவக்

கூடாது. வஸ்திரம் தோய்க்கக்கூடாது. சட்டிகளை வைத்து ஜலம் மொள்ளக்கூடாது. இவை எல்லாம் நகரத்தின் ஷேமத்திற்கும் மனுஷாளின் சௌக்கியத்திற்குமானது. வீட்டில் உள்ள புஷ்பச் செடிகளுக்குள் சர்ப்பங்கள் நுழைந்து விடாமல் காப்பதைப்போல நகர ஷேமத்திற்கு பங்கம் ஏற்படலாம் நாம் பாதுக்க வேண்டும்.

நகரவாஸிகளுக்கு சுத்த ஜலம் கிடைக்க புதிய ஏற்பாடு சர்க்காரால் செய்யப்பட்டுள்ளது. அந்தக் காரியம் பூர்த்தியாக எல்லாரும் தன்னுடைய சாமர்த்தியத்தாலும் ஐவேஜியிலுமிருந்தும் ஒரு பங்கு முன்வந்து உதவவேண்டும். பொதுகாரியம் என்பது, கோடி புண்ணியம் சேர்ப்பது. எனவே நகர காரியங்கள் நல்லவிதமாய் நடக்க தாங்கள் மனப்பூர்வம் உதவவேண்டுகிறேன். திருச்சிற்றம்பலம்.

சிவனடியான்<br>
சேர்மன். என். சிவானந்தையர்

புதுமையான முறையில் பேப்பரில் அச்சிட்டு எல்லோருக்கும் கொடுப்பதென்பதை கமிட்டியார் மனமுவந்து பாராட்டிப் பேசினர். சேர்மன் சிவானந்தையரின் முதல் நடவடிக்கையே நகரில் உள்ள செல்வந்தர்களெல்லாம் மெச்சும்படியாக இருந்தது. மதுரையில் கிறிஸ்துவ மிஷனரிமார்களிடம் இரண்டு அச்சகம் இருக்கிறது. ஆனால் அவர்களிடம் இந்தப் பணியை செய்யக்கூடாதென்று முடிவெடுத்து தனது மகன் மகேஸ்வரன் மூலம் மெட்ராஸிலுள்ள இந்து தியாலஜிகல் அச்சு எந்திர சாலையில் இந்தத் துண்டறிக்கையை அச்சிட்டுக் கொண்டு வந்திருந்தார். கிறிஸ்தவ பாதிரிமார்கள் அவ்வப்போது வெளியிடும் துண்டுப்பிரசுரத்தை மட்டும் பார்த்திருந்த நகரவாசிகள் முதன்முறையாக நகரத்தின் விஷயம் தாங்கிய துண்டறிக்கையினைப் படித்தார்கள்.

சேர்மன் மீதான புகழாரங்களுடன் கூட்டம் துவங்கியது. கலாசாலைக்கான பொதுநிதி எதிர்ப்பார்த்ததைவிட வேகமாகத் திரள்வதாக பொக்கிஷதாரர் முன்சீப் வீரராகவ முதலி தெரிவித்தார். கலாசாலை கட்டுவதற்கான இடம் தேர்வானதும் அந்த இடம் முழுமையையும் தனது சொந்தச் செலவில் வாங்கித்தருவதாக காரியதரிசி முத்துச்சாமிப் பிள்ளை தெரிவித்தார். இடப்பதிவிற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அரசாங்க உதவியில்லாமல் கல்வி நிறுவனத்தை நடத்தமுடியாது. ஆகவேதான் அரசாங்க உதவியைப் பெறுவதற்காக சட்டவிதிமுறைகளைத் தெரிந்துகொள்ளவும் அதற்கு ஏற்பாடு செய்யும் திருச்சியில் கல்வி இலாகாவில் பணிபுரியும் கற்பக நாதன் என்பவரை சேர்மன் சிவானந்தைய்யர் வரவழைத்திருந்தார். அவர் ஆலோசனை கமிட்டியாரிடம் கலாசாலைக்கான விஷயத்தில் துரைத்தனத்தாரின் விதிமுறைகளையும் உதவிகளையும் பற்றி எடுத்துக்கூறினார். ‘கலாசாலை வைத்து ஸ்ரீமான் ஆவது இவ்வுலகில் அசாத்தியமான விஷயம். அதற்காகச் செய்யப்படும் மூலதனமும் அதனால் உண்டாகும் வருமானமும் மிகவும் தாழ்ந்தது என்றே சொல்ல வேண்டும். எனவே கலாசாலை வைப்பதில் நஷ்டம் இருக்கக்கூடா தென்று துரைத்தனத்தார் ஒவ்வொரு கலாசாலைக்கும் உதவி அளித்து வருகின்றனர். அதன்படி உபாத்தியாயர்களுக்கு சம்பளம் அளிக்கவும், பயின்று வருகிறவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கவும், பாடசாலைகளுக்கு கட்டிடங்கள், மாணாக்கர்களுக்கு விடுதிகள், போஜனசாலைகளுக்கு கட்டிடங்கள்,

ரஸாயன பதார்த்தங்கள், தையல் முதலிய தொழிற்பாடங்களுக்கு வேண்டிய கருவிகள் ஆகியவைகளை வாங்கவும் வினோத சாலை, சிற்ப சாலை, ரஸாயன சாலை முதலிய கல்விச்சாலைகளுக்கு நன்கொடை செய்பவர்களுக்கு ஊக்கமளிக்கவும் துரைத்தனத்தார் பொருளுதவி செய்கிறார்கள். ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் இருபத்திரண்டு ரூபாயும் குறிப்பிட்ட தினங்களுக்கு மேல் கலாசாலைக்கு வரும் மாணாக்கர்களுக்கு தலைக்கு எட்டணா வீதம் வருடத்திற்கு ஒருமுறை வெகுமதியும் அளிக்கப்படுகிறது.

இவ்வுதவி பெறும் கலாசாலைகள் அனுசரிக்க வேண்டிய விதிகள் சில உண்டு. கலாசாலைகள் அந்த விதிகளைப் பின்பற்றி தங்களது கடமையைச் செய்கின்றனவா என்பதை அவ்வப்போது கண்காணிக்க இன்ஸ்பெக்டரையும், சூபர்வைசரையும் நியமித்துள்ளனர். அவர்கள் கலாசாலையை திடீரெனப் போய்ப் பார்த்து அவற்றின் வரவுசெலவுக் கணக்குகளையும், பிள்ளைகளின் நாமாவளி புத்தகங்களையும் பரிசோதனை செய்கின்றனர். ஒரு கலாசாலையின் சரித்திரத்தில் இவ்விதம் பரிசோதனை நடக்கும் நாட்களே முக்கியமான நாட்களாகும்.

நம்முடைய திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மாணாக்களை கைதிகளைப் போல நடத்தி பிரம்பால் அடக்கி வாய்ப்பாடு, கீழ்க்கணக்கு, மேல்க்கணக்கு முதலியவற்றை மட்டும் சொல்லித்தருகிறார்கள். ஆனால், புதிய கலாசாலைகளில் இத் தேசத்திற்குரிய கணக்கு வழக்குகள், கொள்ளல் கொடுத்தல் முதலிய விஷயங்களைப்பற்றியும் சுகாதாரம், பிராகிருதி சாஸ்திரம் ஆகியவற்றைப் பற்றியும், சித்திரங்கள், விளையாட்டுகள், பொருட்பாடம், அப்பியாஸபாடம், களிமண் உருவங்கள் செய்தல் போன்றவற்றையும் சொல்லித் தருகின்றனர்.’ என்று துரைத்தனத்தாரின் விதிமுறைகளையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பற்றி கமிட்டியாருக்கு கற்பகநாதன் விரிவாக எடுத்துக்கூறினார்.

அதன்பின் மேற்குறிப்பிட்ட சட்டவிதிமுறை ஏற்பாடுகளை கவனிக்க அன்றைய கூட்டத்தில் ஒரு கமிட்டி போடப்பட்டது. கட்டிடம் கட்டுவதற்கான விரிவான ஆலோசனைகளும் நடந்தன. கட்டிட காண்ட்ராக்டரை நிச்சயித்தபின் பஞ்சாங்க ஜோசியரைப் பார்த்து நல்ல பொழுதில் வேலையைத் துவக்கலாம் என்று முடிவானது. பல காலம் பேசப்பட்டு செயல்வடிவம் பெறாமலே இருந்த இந்து கலாசாலையைத் துவக்கும் பணி இப்பொழுது முழுவேகத்துடன் நடந்தது. கூட்டம் மிகுந்த அக்கறையுடனும் உற்சாகத்துடனும் நடந்தது.

கலாசாலை விஷயம் பேசி முடிக்கப்பட்டபின் கமிட்டி மெம்பர் நல்லப்ப செட்டி ஒரு முக்கிய விஷயத்தை விவாதத்திற்குக் கொண்டு வந்தார். அது விஷயமாக இங்கு பேசுவது பொருத்தமாக இருக்குமா என்ற தயக்கம் சிலருக்கு இருந்ததும், ஆனால் சேர்மன் சிவானந்தையர் அதில் காட்டிய ஆர்வம் மற்றவர்களையும் அதன்பேரில் கருத்துச் சொல்ல வைத்தது.

விஷயம் காவக்கூலி பற்றியது. ஒரு காலத்தில் மிகக்குறைவாக இருந்தது. பஞ்ச காலத்தில் அது பல மடங்கு உயர்ந்தது. ஆனால், பஞ்சம் முடிந்தபின்னும் அது குறையவே இல்லை. மேலும் மேலும் கூடியபடியே இருக்கிறது. வீடு, கடை, கிட்டங்கி என இவைகளுக்கெல்லாம் சேர்த்துக் கொடுக்கப்படும் காவக்கூலியை கணக்கிட்டால் அது பெரிய அளவுக்கு

இருக்கிறது. எனவே இதனை முறைப்படுத்த வேண்டும் என்றார் நல்லப்ப செட்டி.

‘ஒரு காலத்தில் காலே அரைக்கால் படியாக இருந்த கூலியை பஞ்ச காலத்தில் நாமதான் கூட்டுனோம். ஆனா இப்ப நாம நினைச்சாலும் குறைக்கமுடியலை’ என்றார் துளசிராம் நாயுடு.

‘அரசாங்க வரியைக்கூட அங்கிட்டு இங்கிட்டுன்னு குறைச்சு கட்டிப்புடுறோம். ஆனா காவக்காரங்களுக்கு குறைக்க முடியலிலே’ என்று ஆதங்கப்பட்டார் ஹனுமந்த ராவ்.

‘இப்ப முன்னவிட அதிகமான தெருக்களதான் ஒவ்வொருத்தனும் காவ காக்குறாங்க. அப்படியிருக்க காவக்கூலிய கொறச்சா ஒண்ணும் அவாளுக்கு நட்டமில்லையே’ என்றார் சீதாராம அய்யங்கார்.

காவக்கூலி விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன்தான் தலையிடவேண்டும் என்பதில் எல்லோரும் அனுபவப்பட்டவர்களே. அது மட்டுமல்ல, இன்றுவரை மதுரைக்கு சிறப்பான காவலை தாதனூர்க்காரர்கள் தந்துகொண்டிருப்பதால்தான் நகரம் நிம்மிதியாக இருக்கிறது. இந்த நிம்மதிக்கு எந்த பங்கமும் ஏற்பட்டுவிடாமல் அதே நேரத்தில் காவக்கூலியை குறைப்பதற்கான ஒரு யுக்தியைப் பற்றி யோசித்த அவர்கள் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தனர். பிரதான வீதிகளுக்கு இவ்வளவு, நடுத்தரமான தெருக்களுக்கு இவ்வளவு, குறுக்குச் சந்துகளுக்கு இவ்வளவு என்று காவக்கூலியை நிச்சயித்துவிடுவது, அதைத் தெருக்காரர்களே பங்கிட்டுக் கொடுப்பது என்று முடிவானது.

இந்த முடிவினை தாதனூர்க்காரர்களை அழைத்துப்பேசி அவர்களை ஏற்கச்செய்யும் பொறுப்பு சேர்மன் மற்றும் காரியதரிசியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கமிட்டியிலிருந்த ஒருசிலர் மனதுக்குள் இந்த முடிவை ரசித்தனர். சேர்மன் சிவானந்தையர் பொறிக்குள் கொண்டுபோய் தானே தலையை விடுவதை அவர்களால் உணரமுடிந்தது.

*

‘**எ**ள மத்தியானத்துல போவம்டா’ என்று ஊர் பெரியாம்பள சொன்னதினால் மற்ற மூவரும் கருப்பு கோயில் தாவாரத்திலே உட்கார்ந்திருந்தனர். பெருசு மலைப்பக்கமா இருந்து வந்தவுடனே அவருடன் சேர்ந்து மதுரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள். பெரியாம்பள, பூச்சி, பேயன் ஆகிய மூவரிடமும் காவக்கம்பு இருந்தது. கட்டையனிடம் தான் காவக்கம்பு இல்லை. ‘உங்களோட வர்றேனப்பா...’ என்று நேத்து பேசிக்கொண்டிருந்தபோது கட்டையன் சொன்னதால் அவனையும் சேர்த்து கூட்டிப்போனார்கள். ‘அந்த அய்யரு என்னா...த்துக்குடா வரச்சொன்னான்?’ என்று பெரியாம்பள கேட்டதற்கு நேற்று சொன்னதப்போலவே தெரியாது’ என்றுதான் பூச்சி இன்றும் சொன்னான்.

மாடக்குளம் கண்மாயின் இடப்பக்கமாகச் சுற்றி அவர்கள் நகரத்தை நோக்கி நடந்தனர். வயல்வேலைகள் எங்கும் நடந்துகொண்டிருந்தன. இந்த ஆண்டு பருவமழை சரியான காலத்தில் பெய்துவிட்டது. ஊண்டுகம்பால்

நிலத்தின் ஈரத்தைக் குத்திப் பார்த்தபடி பெரியாம்பள போய்க்கொண்டிருந்தார். பக்கத்து ஊர் மந்தையில் ஆட்கள் நிறைய உட்கார்ந்திருந்தனர். ‘காவக்காரெ வீரண பெரியாம்பள வர்றான்டா’ என்று வயதான ஒருவர் பார்த்த உடனே சொல்லிவிட்டார். வீரணபெரியாம்பளயோட பெயரை எல்லோரும் கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால், ஆளைப் பார்த்தவர்கள் அபூர்வம்தான். அதுவும் பார்த்தவுடன் கண்டுபிடிக்கும் அளவுக்கு உருவத்தை தெரிந்துவைத்திருந்தது ஆச்சரியமானதுதான். ‘என்னப்பா... ஆடி முடியப்போது. இன்னும் வெதக்காமபோட்டிருக்கீங்க, வேகமா... வேப்பங்காயி உதிர்ரதுக்குள்ள வெதச்சு முடிங்க’ என்று சொன்னபடியே அவர் நடந்துகொண்டிருந்தார்.

நகரம் அவரைக் கைநீட்டி அழைப்பது போலிருந்தது. அவர் நகரத்துக்குள் வந்து பல ஆண்டுகளாகிவிட்டன. காவல் விட்டதிலிருந்து அவர் நகரத்துக்குள் வரவில்லை. வாலோட்டமாக நீண்டிருந்த அந்தக் கால்கள் நகரத்தை நோக்கிப் போயின. ‘பெரியாம்பள ரொம்ப எளக்காரம நடக்குறாரப்பா!’ என்றான் கட்டையன், ‘காலம் பூரா ஓடியாச்சு, இப்பவாச்சும் நடந்து பாம்போமண்டுதான்’ என்றான் பூச்சி. ‘வெரட்டி ஓடுறவனுக்கு பின்னத்திகால் ஊண்டக்கூடாது, அப்பதான் வேகமா ஓடிப் பிடிப்பான். வெரட்டுபெத்து ஓடுறவனுக்கு முன்னத்திக் காலும் ஊண்டக்கூடாது. அப்பத்தான் ஓடித் தப்புவான். காலம் பூரா இப்பிடியே ஓடியாச்சு. முழுப்பாதமும் அமுங்க மதுரைக்கு நடந்து போறது ஒரு ஆசதாண்டா’ என்றார் பெரியாம்பள.

ரயில் தண்டவாளங்களைக் கடந்து வடக்கு வெளிவீதியின் வழியே அவர்கள் நகரத்திற்குள் நுழைந்தனர். அவர் கண்கள் அங்குமிங்குமாக ஓடியபடியே இருந்தன. நகரம் எவ்வளவோ மாறியிருந்தது. அவர் காலத்திய மதுரை இல்லை இது.

கடந்து பத்தாண்டுகளில் நகரம் பெரும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. பர்மாவிலிருந்து வந்திறங்கிய குருணை அரிசியை வாங்கித் தின்ற காரை வீட்டுக்காரர்கள் இப்பொழுது தங்கச்சம்பாவையும், நீலச்சம்பாவையும் மரசல் மரசலாய் குவித்துவைத்துள்ளனர். வீடுகள்தோறும் பெட்டி வண்டிகளும், கோச் வண்டிகளும் நின்றன. பாங்கு வந்தபின் வர்த்தகம் விரிவடைந்திருக்கிறது. கல்விமான்கள் அதிகரித்துள்ளனர். காரைக்கட்டிடங்கள் பல புதிதுபுதிதாக முளைத்துள்ளன. எத்தனையோ கடைகள்! வீதியெங்கும் தலைச்சுமை வியாபாரம்... ஒரு புதிய மதுரையைப் பார்த்தபடி பெரியாம்பள வந்துகொண்டிருந்தார்.

‘அப்பெல்லாம் தாசி தெருவுலதான் ரவுக்க போட்ட பொம்பளகெள பாக்கமுடியும், இப்ப எல்லாத் தெருவுலயும் பொம்பள ரவுக்கபோட்டிருக்கா!’ என்றார்.

‘இம்புட்டூண்டு எடத்துக்கு எம்புட்டு கிடுக போட்டு ஏ மேஞ்சிருக்காங்கெ, பொருத்தி வச்சா பத்து நாளைக்கு எரியுமேடா...!’

‘எல்லா திண்ணயிலயும் நடக்க மாட்டாத கெழவங்கெ படுத்து கெடக்காங்கெளே, ஊருக்குள்ள சாவு நின்னு போச்சோ...’ என்று அவராகப் பேசியபடியே நடந்துவந்தார். மேலக்கோபுர வீதி முக்குக்கு வந்தவுடன் நின்று அண்ணாந்து வானத்தை இடப்பக்கமும் வலப்பக்கமுமாக திரும்பிப்பார்த்தார். ‘என்ன பெருசு இங்க நின்னு மானத்த பாக்குற?’

என்றான் பேயன். ‘ஏலே பேராண்டி, நா காவ பாக்குறப்ப இங்க நின்னுபாத்தேன்னா மொத சாமத்துக்கு குதிரவெள்ளி இந்தப்பக்கம் தெரியும், நடு சாமத்துக்கு தேங்காக்கண் வெள்ளி இங்கிட்டு தெரியும், கடைசி சாமத்துக்கு தார்கம்பு வெள்ளி கீவானத்துல தெரியும், ஆனா இப்ப அண்ணாந்து பாத்தா உச்சி வானத்த தவிர சுத்திலும் கட்டிவெச்சு வீட்டுல விட்டடந்தான்டா தெரியுது’ என்றார்.

இடதுபக்கமாகத் திரும்பி வடக்கு ஆவணி வீதியை நோக்கி அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். பெட்டி வண்டிகள் பல எதிரும் புதிருமாகக் கடந்தன. ஒன்றிரண்டு கோச் வண்டிகளும் போயின. பாரமேற்றிய வண்டிகளின் சக்கரங்கள் மண் பதிய உருண்டன. கடைக்காரர்களின் சத்தமும் தலைச்சுமை வியாபாரிகளின் சத்தமுமாக ஆவணி வீதி நிரம்பியிருந்தது. பொதிமூடைகளை முதுகில் கட்டியபடி ஏழெட்டுக் கழுதைகளை மொத்தமாக ஓட்டி வந்தான் ஒருவன். அழகிய குட்டியொன்று பொதியற்று நடைபயின்று அவன் பின்னால் போனது. மணியோசையோடு குதிரை பூட்டிய ஆங்கிலேய அதிகாரிகளின் கோச்சுகள் பின்னத்திக்கால்கள் கட்டப்பட்ட கழுதைகள் விலகிக் கொடுக்கும் வரை நின்று போக வேண்டியதாயிற்று. வித்தியாசமான ஆடை உடுத்திய மனிதர்களைப் பார்த்தபடி ‘நெறைய்ய மாறிப்போச்சேடா...!’ என்றார் பெரியாம்பள.

‘உழவு மாடே இல்லாம வண்டிமாடா போச்சப்பா’ என்றான் பேயன்.

‘மாடு உரச கல்லு இல்லாமதாம்பா வீடு வெச்சுருக்காங்கெ’ என்றான் பூச்சி.

‘ஏம்பா, ஓட்டப் பிரிச்சு இறங்கிறவெங்களுக்கு இனி மருதக்குள்ள வேலையே இல்ல. கன்னம் போடுறவனுக்குத்தான் வேல போலிருக்கு’ என்றான் கட்டையன்.

‘காவக்காரங்கள தவிர மத்தவங்கள் மருதக்குள்ள கூட்டிப்போகக் கூடாதப்பா, அவெங்களுக்கு ஆச வந்துபோகும்...’ என்று நேற்று பெரியாம்பள சொன்னபோது, பூச்சிதான் ‘இல்ல கட்டையன் வரட்டும்’ என்று சொன்னான். ஆனால் பெரியாம்பள சொன்னது இப்ப சரியாத்தான் இருக்கு என நினைத்துக்கொண்ட பூச்சி கட்டையனை சத்தம்போட்டு அமட்டியபடி வந்துகொண்டிருந்தான்.

சிவானந்தையர் வரச்சொன்ன வீட்டின் அருகே வந்து சேர்ந்தனர். மூன்று வில்வண்டிகள் வீட்டின் முன் நின்று கொண்டிருந்தன. வண்டிக்காரன் ஒருவன் ‘ஒங்களுக்காகத்தேன் எல்லாரும் காத்திருக்காங்க’ என்றான்.

நால்வரும் வீட்டுக்குள் போனார்கள். உள்ளே சேர்மன் சிவானந்தையரும், காரியதாசி முத்துச்சாமிப்பிள்ளையும், முன்சீப் வீரராகவ முதலியும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தனர். நால்வரையும் உட்காரச் சொன்னார்கள். அவர்கள் எதிர்ப்புறம் சுவரை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த திட்டிலே உட்கார்ந்தனர். ‘இப்ப ஊர் பெரியாம்பள யாரு?’ என்று சிவானந்தையர் கூர்ந்து கவனித்தபோதுதான் அது வீரணன் என்று அவருக்குப் பிடிபட்டது. அந்தக் கணமே உள்ளுக்குள் சிறு பயம் எழுந்து அடங்கியது. நினைவுகளின் சுழற்காற்றில் தூக்கிவீசப்பட்டவரைப் போல் ஆனார். ‘வீரணந்தான் இப்ப ஊர் பெரியாம்பளயா?’ என்று அவர்

கேட்டபொழுது அவரது மனம், வேலை நாம் நினைப்பதுபோல் அமையாது என்று முடிவுக்குப் போய்விட்டது. வீரணனை சிவானந்தையரால் ஒருநாளும் மறக்கமுடியாது. ஆறாத வலி அவருள் இன்னமும் இருக்கிறது. ஆனால், அதைக் காட்டிக்கொள்ளாமல் ‘என்னப்பா வீரணா, சௌக்கியமெல்லாம் எப்படி?’ என்று கேட்டார். ‘எப்பயும் போலய்யா’ என்றார் பெரியாம்பள.

நான்கு பேரும் திட்டின்மேல் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். மூவரின் தோளிலும் காவக்கம்புகள் சாய்ந்திருந்தன. கருங்காலிக்கம் போட வலு என்னான்னு தெரிந்தவர்களுக்குத்தான் காவக்கம் போட மகிமை தெரியும். கம்பைத் தோளில் சாய்த்தபடி அவர்கள் எதிரில் இருப்பவர்களைப் பார்த்துப் பேசிக்கொண்ருந்தனர். கட்டையனின் கண்கள் மட்டும் வீட்டின் ஒவ்வொரு அறையையும் அளந்துகொண்டிருந்தன. ஜன்னலின் வழியே சுவரின் அகலத்தைப் பார்த்தான். லாடக்கட்டைகளின் இடைவெளியைக் கணித்தாள். நிலைகளிலுள்ள தாழ்ப்பாள் கொண்டிகளை எண்ணினான். கதவுகளுக்கு குறுக்குப்பட்டை இருக்கிறதா எனப்பார்த்து வைத்துக்கொண்டான். வாலோடியாய் இருந்த வீட்டுக்கொல்லைப் புறத்து மறுமுறை வரை நீளத்தை மதிப்பிட்டான். நடு அறைகளில் இருந்த இரண்டு நிலைக்கதவுகளையும் பார்த்தான். ‘இந்த ரெண்டு கதவுகளையும் இடதுபக்கமா வெச்சிருந்தாலாவது களவுக்கு வர்றவெ கணுச்சு வர கஷ்டமா இருக்கும். அத வுட்டுட்டு இப்படி சல்லுசா வர்ற மாதிரியே வீட்டக் கட்டியிருக்காங்கெ’ என்று மனதுக்குள் சலித்துக்கொண்டான்.

‘விஷயத்த பேசுவோம்ப்பா...’ என்று சிவானந்தையர் பேச்சைத் துவங்கினார். ‘காவக்கூலி விஷயமாத்தான் பேசலாம்னு வரச்சொன்னோம். இப்ப வீடுகளுக்கு ஏத்த இறக்கமா கூலி இருக்கு. அத ஒழுங்கு பண்ணி தெருவோட நீளத்தப் பொறுத்து ஒவ்வொரு தெருவுக்கும் இவ்வளவு கூலின்னு முடிவு பண்ணிட்டா, அது தெருக்காரங்க பூரா நெறந்து கொடுத்துருவாங்க. அப்புறம் கூடுதல் கொறச்சல்னு பொல்லாப்பு வராது. ஒரு முறையாயிரும். அதப் பத்தித்தான் பேசலாம்னு நினைச்சோம்’ என்றார்.

வந்திருந்தவர்களுக்கு அப்பொழுதுதான் தங்களை வரச் சொன்னதற்கான காரணம் புரிந்தது. ‘உங்க காவக்கூலிய பத்தி பேசுங்க, நீங்க எதுக்கு ஊர்க்கூலிய பத்தி பேசணும்?’ என்றான் பூச்சி.

உடனே முத்துச்சாமி பிள்ளை ‘இவருதான் இப்ப சிட்டியோட சேர்மன். அதனாலதான் இவரு ஊருக்காகப் பேசுறாரு’ என்றார்.

வளைந்து கொடுத்திருந்த காவக்கம்பை இறுக்கப்பிடித்து ஒரு நகட்டு நகட்டியபடி, ‘எப்பா...காவக்கூலி வாங்குறது எங்க வேல. அதப்பத்தி நீங்க எதுக்கு பேசணும்?’ என்றார் பெரியாம்பள.

‘முறைப்படுத்திக்கிலாம்னுதான் பேசுறோம்’ என்றார் சிவானந்தையர்.

‘எல்லாம் மொறையாத்தாம்பா இருக்கு. அது வுட்டு எங்க வேலைய நீங்க பாக்குறது, உங்க வேலையை நாங்க பாக்குறதுதான் தப்பு, மொற அழிஞ்சு போகும். அப்புறம் ஊர் அழிஞ்சு போகும்’ என்றார் பெரியாம்பள.

பதில் சிவானந்தையருக்கு சுர்ரென்றிருந்தது. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ‘பெரிய சம்சாரிக, வியாபாரிகளுக்கெல்லாம் ரெண்டு

வீடு, கட கண்ணிகளெல்லாம் இருக்கு. அது எல்லாத்துக்கும் காவக்கூலி தனித்தனியா கொடுக்குறனால அதையெல்லாம் ஒழுங்கு படுத்திக்கிறலாம்னு நினைச்சோம். தெருன்னு இருந்தா அது எல்லாத்துக்கும் ஒரே நியாயமாயிரும். கூடக்கொறச்சல் இருக்காது. அதுக்கத்தான் இந்த யோசனை' என்றார் மூன்சீப் வீரராகவ முதலி.

'எல்லாருக்கும் எப்படிப்பா ஒரே நாயமாகும்? பத்து வீட்டுக்காரனுக்கு ஒத்த வீட்டு நியாயம் கிடைக்காது. கார வீட்டுக்காரனுக்கு குச்சு வீட்டு நியாயம் கிடைக்காதப்பா' என்று சொல்லிவிட்டு 'வேறெதாவது இருக்கா பேச...' என்று கேட்டவாறு காவக்கம்ப ஊண்டி எழுந்தார் பெரியாம்பள.

மூன்று பேருடைய முகத்திலும் ஈயாடவில்லை. பெரியாம்பிளயின் பதிலும் செயலும் சிவானந்தையருக்கு மூஞ்சியில் அறைந்தது போலிருந்தது. பல ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் வீரணனால் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார். தாம் வகிக்கும் இவ்வளவு பெரிய பொறுப்பைக்கூட மதித்து அவர்கள் பேசவில்லையென்பது அவருக்கு எரிச்சலையும் கோபத்தையும் கூட்டியது.

'வீரண பழைய வீரணனாத்தானிருக்கான். வயசு கூடினாலும் பக்குவம் ஏறல' என்றார் முத்துச்சாமி பிள்ளை.

'இந்த விஷயத்துக்குள்ள தலையிடாம இருந்திருந்தாலாவது நமக்கு மரியாதையா இருந்திருக்கும்' என்றார் முதலியார்.

உச்சி வெயிலில் அவர்கள் ஆவணி வீதியில் நடந்துபோனார்கள். 'அறிஞ்ச பாப்பான் குடியக் கெடுப்பான்டா' என்றார் பெரியாம்பள. 'ஆமாம்பா...' என்றான் பூச்சி. 'பழைக் கட்டிடம்னாலும் நல்ல கெட்டி கட்டடமப்பா...எறும்பு இன்னும் வாசப்படி பக்கந்தாம்பா வருது' என்றான் கட்டையன். 'கட்டடம் கெட்டிக் கட்டடம்தான். ஆனா நிலக்கதவுல விரிசல் விட்டிருக்குடா' என்றார் பெரியாம்பள. இவ்வளவு நேரம் எல்லாத்தையும் பார்த்த நம்மால அத பாக்கமுடியாம போச்சே என்று யோசித்தவாறு பெரியாம்பள... பெரியாம்பளதான் என மனதுக்குள் நினைத்தபடி நடந்தான் கட்டையன்.

*

**பெ**ரியாம்பிள வீரணனும் பூச்சியும் அமணமலையின் மேற்குப்புற அடிவாரப் பொடவுக்குள் உட்கார்ந்து சேர்மன் சிவானந்தைய்யர் சொன்னது சம்பந்தமாக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். 'ஏதோ ஒண்ணு செய்ய அவன் திட்டம் போட்டிருக்காம்பா' என்று வீரணன் பெரியாம்பிள அழுத்தந்திருத்தமாகச் சொன்னார். 'என்னதான் செய்யுறான்னு பாப்போம்' என்று பேச்சு முடிந்தது. இருவரும் பொடவை விட்டு எழுந்து வெளியே வந்தனர். உச்சிப்பொழுதில் கொளுத்தும் வெயிலில் ஊரை நோக்கி நடந்தனர். வெளியெங்கும் நின்றுகொண்டிருந்த பனைமரங்களின் நிழல் மட்டும் கருத்துச் சிறத்த கரிக் கட்டைகளைப்போல அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுந்து கிடந்தது. தாட்டியமாக இருந்த வீரணன் பெரியாம்பிளையின் உடல் இப்போது எவ்வளவோ நறுங்கி விட்டது. ஆள் மிகவும் தளர்ந்து போனார். ஊண்டுகம்பைத் தூக்கி ஊண்டி அதன் அழுத்தத்திலேயே காலை நகர்த்தி வந்தார். உடன் வந்த பூச்சி அவர் வேகத்திற்கு அனுசரணை யாகப் பேச்சுக்கொடுத்தபடி நடந்து வந்தான்.

தூரத்தில் மேற்கு நோக்கிப் போகும் ஒத்தையடிப் பாதையில் ஒரு கிழவி வெயிலில் வதங்கியபடி நடந்துபோய்க்கொண்டிருந்தாள். முதுமையின் சுருக்கம் ஏறிக்கிடந்த உடல் தளர்ந்தபடி நகர்ந்துபோனது. சேலையின் முனையில் பொட்டலம் கட்டித் தலையில் வைத்தவாறு நடந்துபோனவளைப் பார்த்த வீரணன் பெரியாம்பிள தனது நடையை நிறுத்தி தூரத்தில் போய்க்கொண்டிருந்த அவளையே உற்றுப்பார்த்தார்.

‘என்ன பெருசு நின்னுட்ட?’ என்றான் பூச்சி.

‘ஒண்ணுமில்லடா...’ என்று சொன்னவர் வலது கையை நெத்திக்கு அண்டக்கொடுப்பதைப் போல் கண்களுக்கு மேல் வைத்து பார்த்தார். வெயிலின் கூச்சங்களுக்கு நடுவில் உருவத்தை அவரின் பார்வை அலசியது. ‘டேய்...அவ நட மாதிரி தெரியுதுறா’ என்றார்.

‘அவென்னா... யாரு? வங் கெழடிய படிச்சுக்கிட்டு நடையப் பாருன்றவெ’ என்றான் பூச்சி.

‘ஏலேய்... ஒங்கிட்ட சொல்லியிருக்கேன்ல்லடா, தேங்கில் பட்டிக்காரி... ஒய்யம்மா, அவ மாதிரி தெரியுறாடா!’ என்றார்.

தூரத்தில் குனிந்து கால்மொலியைப் பிடித்தவாரு நடந்து போய்க்கொண்டிருந்தவள் பேச்சுச் சத்தத்தைக் கேட்டவுடன் நின்று இதேபோல நெத்தியில் கையை அண்ட வைத்து உற்றுப்பார்த்துவிட்டு ‘யாரு... வீரணனாடா...’ என்றாள்.

‘அடியாத்தீ... ஒய்யம்மாதான்டா’ என்று சொன்னவர் எங்கிருந்தோ வந்த வேகத்தை பிடித்து விருட்விருட்டென்று நடந்து கிழவியை நோக்கிப் போனார்.

‘இந்த வெரசா போறவெ, மெல்லப் போப்பா. விழுந்துறாத, வயசான காலத்துல’ என்று சொல்லியபடி உடன் ஓடிவந்தான் பூச்சி.

மொலியைப் பிடித்தபடி மேற்குநோக்கி நடந்த கிழவி சத்தம் கேட்டவுடன் பொட்டலத்தையும் விட்டு விட்டு நாலே எட்டில் கிழவனின் நிழலை மிதித்து நின்றவள் ‘ஏய்... ஆத்தே... வீரணா! உன்னய் நானு பாக்காம சாகத் தெரிஞ்சேனே!’ என்று சொல்லியபடி நெஞ்சிலே இரு கையாலும் மாறி மாறி அடித்துக்கொண்டு கத்தினாள்.

வீரணன் பெரியாம்பிளைக்கு அவள்தான் என்றவுடன் சிரிப்புத்தாங்க முடியவில்லை. ‘நா என்ன நெனச்சனோ அதையே நீயும் நெனச்சுருக்கையாலா’ என்று சொல்லியபடி ‘இன்னிக்காச்சும் கருப்பெ நம்மளபாக்க வாச்சானே’ என்று சொல்லிக்கொண்டு பலமாகச் சிரித்து ‘இனி நாம செத்தாலும் செல்லும்லா’ என்றார்.

‘ஏலே வீரணா... அந்த உச்சுவீட்டான் கல்ல அண்ணாந்து பாக்கிறப்பெல்லாம் ஓ நெனப்புதான்டா, இனி செத்தாலும் ஒப்பும்டா’ என்றாள் கிழவி.

‘ஏ கெழடுகளா, இனிமே சந்திச்சு என்னடா பண்ணப்போறீங்க? இம்புட்டு அக்கறையா விசாரிச்சுக்கிட்டு, ஒப்பும் ஒப்பாதுன்னு பேசிக்கிட்டிருக்கீங்க’ என்றான் பூச்சி.

‘நா ஏழு கல்யாணம் பண்ணுனவெ. ஆனா அவளுக யாரப் பாத்தாலும்

அந்த நெனப்பு வரலைலா... ஓ மேலதான் நெனப்பு பூரா' என்றார் கிழவன். 'என்னையும் கல்யாணம் பண்ணியிருந்தா மறந்திருப்படா...விட்டுட்டு போனநாலதான்டா பெரியாம்பிள நெனச்சுருக்க' என்றாள் கிழவி.

'அதுவும் நெசந்தான். கரப்பொண்ணு, மொறப் பையன்னு ஒன்னய பூசலப்புரம்காரனுக்கு கட்டிவெச்சதுல இருந்து மறக்கமுடியலைலா... அதுக்குப்பெறகு மலையில் உருண்டபாறை மாதிரிதான்லா உருண்டே... எந்த திட்டையும் புடுச்சு நிக்க முடியல' என்றார். 'போன வருஷம் உன்னய பாக்கணும்டே தேங்கில்பட்டிக்கு வந்தேன்லா, நீ வீட்ல இல்ல. காட்டுப்பக்கம் முள்ளு பெறக்கப் போயிட்டதா சொன்னாங்கெ. ஊர்மந்தையில் உக்காந்திருந்தேன். பொழுது சாஞ்சிருச்சு, சரி... சாகாம இருக்கையில்லா, அது போதும்னு வந்துட்டேன்லா' என்றார் பெரியாம்பிள.

'ஏன்டா வீரணா, அம்புட்டு தொல என்னய தேடி வந்தயா! நீ ஒரு கெட்டியக்காரன்தான்டா' என்று மெச்சிப்பேசியவள் சட்டென 'இருந்துருக்கணும்ல' என்றாள்.

'அதுக்கு மேல இருந்து என்னலா ஆகப்போகுது' என்றார் பெரியாம்பிள.

'ஏ...இருந்து மத்த சோலியெல்லாம் பாத்துட்டு வரவேண்டியது தான! கெழட்டுச் சிறுக்கிக கொளுத்துற வெயில்ல குதியாட்டம் போட்டுப் பேசிக்கிருக்காளுக, வாங்கலா அங்கிட்டு போயி நெழல்ல நின்னாவது பேசுவோம்' என்றான் பூச்சி.

'இது யாருடா இவெ?' என்று கேட்டாள் கிழவி.

'இவெ பேயாண்டி மகன்லா' என்றான் கிழவன்.

'ஏலே... யாத்தே, பேயாண்டி மகனா! உங்க அப்பே நேத்து இந்நேரத்து பய, அவன்லாம் எங்களுக்கு தூது' என்றாள்.

'இக்கூ...ரொம்பத் தேவலா இது' என்றான் பூச்சி.

'நல்லா இருக்கியாடா வீரணா, பேரம் பேத்தி எத்தன, மருமக எப்படி வெச்சுக்குறா?' என்று கேட்டாள்.

'பேரப்பிள்ளைக ஆறேழு இருக்கு' என்றான் கிழவன்.

'ஒன்னய பத்தி விசாரிச்சேன்டா. மூத்த மருமக சரியில்லையாம்ல, ஓம் பிடிக்கு எப்பவும் வச்சுக்கிறணும்டா. ஓம் பொண்டாட்டி இருக்கா ஒன்னய பாத்துக்கிருவா. ரெண்டாவது மக செத்துப்போனாலாம்ல?' என்று கேட்டாள்.

'இதெல்லா ஒனக்கு யாருலா சொன்னது?'

'என்டா தாதனூர்க்காரங்கெள பாக்குறப்போ ஒன்னய விசாரிக்காம யார விசாரிக்கப்போறே' என்றாள் கிழவி.

'நா எப்படியும் இருந்துக்கிறேன்லா. ஒனக்கு மகதானாம்ல கஞ்சி ஊத்துறா?' ஏங் கணக்காவே மகனும் சரியில்லையாம்ல, கடைசியாளுக்கு பிள்ள இல்லையாம்ல!' என்றாள் கிழவன்.

'ஒனக்கு யாருடா சொன்னது இதெல்லாம்' என்றாள் கிழவி.

'நீ என்ன விசாரிச்சிருக்கப்ப, நா ஒன்னய விசாரிச்சுருப்பேன்ல' என்றான் கிழவன்.

எதிர்பாராத கணத்தில் சட்டென விழுந்த காலத்தின் சிறு துளைக்குள் நுழைந்து உள்ளே போய் முதுமையை மறைத்துவைத்துவிட்டு சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் தூக்கிச்சுமந்தபடி வெளியில் வந்து பேச்சான பேச்சையெல்லாம் பேசினர். வெயில் பொசுக்கும் பூமியில் நின்றபடி கிழவனும் கிழவியும் வாய் அளாவுவதைப் பார்த்து ரசித்துக்கேலி செய்தபடி பூச்சி நின்றுகொண்டிருந்தான். அவன் மனதில் சட்டென தீத்துவிட்டுப்போன உச்சபட்டிக்காரியின் ஞாபகம் வந்தது. மறுகணமே தானும் அதற்குப் பொறுப்புதானே என நினைத்துக்கொண்டான். மனம் வாடி, மீண்டும் இவர்கள் இருவரையும் பார்த்து மலர்ந்தது.

தலையில் கட்டிவைத்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து உள்ளேயிருந்த சீரணி பலகாரத்தை எடுத்தவள் ‘இந்தாடா வீரணா சாப்புடுறா’ என்று கொடுத்தாள்.

‘எங்கலா திங்கப்போறே. பல்லில்லாம!’ என்றார் பெரியாம்பிள.

‘டேய்...பிச்சு அதக்கிக்கோடா’ என்றாள் கிழவி.

கிழவியின் பேச்சைத் தட்டமுடியாமல் சீரணியை வாங்கி பொக்கவாயில் வைத்து உள்ளே அதக்கிக்கொண்டார்.

‘ஏலா ஒனக்கு கொடுக்க ஏங்கிட்ட ஒண்ணுமில்லையேலா’ என்றான் கிழவன்.

‘இல்லாட்டி என்னடா, ஒன்னைய பாத்ததே போதும், நாளு அமைஞ்சிச்சுடா, இதுக்கு மேல என்னடா வேணும்’ என்றவள் சிறிது நேரம் கழித்து ‘டே வீரணா, நீ நடமாட்டத்தோட இருக்க, எனக்கு நடமாட்டம் ரொம்ப கொறஞ்சு போச்சு. முடிஞ்சா எப்பாவாச்சும் எங்க ஊரப்பக்கமா வாடா’ என்றாள்.

‘வர்றேன்லா’ என்றார் பெரியாம்பிள மிக வெரசாக.

‘இன்னி என்னாத்துக்குடா... வந்து? நெனப்பு போதும்டா...’ என்று ஏக்கத்தோடு சொல்லி நடக்கத் தயாரானாள். இருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தது. சுருங்கி வதங்கிய கைகளைக் கொண்டு கண்ணீரைத் துடைத்தபடி நின்றுகொண்டேயிருந்தனர். கிழவனின் கைகள் ஆட ஆரம்பித்ததைப் பார்த்த பூச்சி ‘ஏலே போறேன்னு சொல்லிட்டு எம்புட்டு நேரமாடா நிப்பீங்க? கண்ணத்தொடச்சிட்டு கெளம்புங்கலா’ என்றான்.

ஆனால் இருவரும் நகருவது போல் இல்லை. ‘போதும்டா பெரியாம்பிள...கெழடு கெட்டைகளே இப்படி இருந்தா இளந்தாரிக என்னாட பண்றது?’ என்றான் பூச்சி.

‘ஏலே... இருடா. நீங்களும் ஒண்ணு நாங்களும் ஒண்ணாடா? என்னலா... ஒய்யம்மா?’ என்றான் மீண்டும் கிழவன்.

‘அந்தக் காலத்த பேசி என்னடா செய்யுறது வீரணா! நம்ம கதைய சொன்னா யாரும் கேப்பாங்களா, இந்தக் காலம் ஏத்துக்கிருமா? நம்மபட்ட கஷ்டமென்ன, நாம பொளச்ச பொளப்பென்ன, இவெங்க கணக்காவா... அந்தப் பேச்சு எதுக்குடா, வுடுறா வீரணா’ என்று சொல்லிவிட்டு அழுது கண்ணைத் துடைத்தபடியே கிழவி எட்டுவைத்து நடந்தாள்.

வீரணன் பெரியாம்பிளையும் நடந்தார். பூமியை அந்த இடத்திலிருந்து இரண்டாக பிளந்து எதிர் எதிர் திசையில் இழுத்துக்கொண்டு போவதைப்போல இருவரும் உன்னி நகர்ந்தனர். கொஞ்ச தூரம் நடந்தபின் பெரியாம்பிள நின்று பின்னால் திரும்பி அவளைப் பார்த்தார்.

‘ஏலேய் பெரியாம்பிள... இப்ப என்ன நடந்துபோச்சுன்னு இப்படி ஏங்கிகிட்டு திரியுறவெ’ என்றான் பூச்சி.

‘இல்லடா பூச்சி, விழுந்து போவாடா! கண்ணு தெரியாம தள்ளாடிப் போறா’ என்றான் பெரியாம்பிள.

‘வீரணா, நா பாத்துபோயிருவேன். நீ பாட்டுக்குப்போ...’ என்று சத்தம் போட்டு பதில் சொன்னாள் தூரத்தில் போன கிழவி.

பொசுக்கும் புழுதிக்கு நடுவிலிருந்து கிளம்பி வந்த ஆச்சரியமும் சந்தோஷமும் வடிய, ஏக்கம் மனதைக் கசக்கிப் பிழிய வீரணன் பெரியாம்பிள நடந்துவந்து கொண்டிருந்தார். பூச்சி அவரைத் தேற்றுவதுபோல் பேசிக்கொண்டு வந்தான். ‘சாகுறதுக்குள்ள உச்சிவிட்டான் கல்லுக்கு ஒரு தடவ போயிட்டு வரணும்டா பூச்சி’ என்றார் கிழவன்.

நாகமலையின் உச்சியில் இளவட்ட முறுக்கேறியவர்கள் மட்டும் போய்த்திரும்பும் இடம் அது. ‘நீ கூட வந்தேன்னா கைத்தாங்கலா போயிட்டு வந்திரலாம்டா’ என்றார்.

‘சரியப்பா, ஒரு நா போயிட்டு வந்துருவோம்‘ என்றவன் கொஞ்சம் யோசித்து ‘கெழவி ஊருக்கில்லப்பா வரச்சொல்லியிருக்கா’ என்று கேட்டான்.

கொஞ்சநேரம் மௌனமாக வந்துகொண்டிருந்த பெரியாம்பிள ‘ஊருக்குப்போனா இவெதான்டா இருப்பா, இவளத்தான் இங்கேயே பாத்துட்டோமுல. உச்சுவிட்டான் கல்லுக்குப் போனா ஏ பழைய ஒய்யம்மா இருப்பாடா’ என்றான்.

‘நோத்தாழோக்க... பொழப்ப கெடுத்தய்யா நீயி! நடையையும் மறக்காம, நட்டுவச்ச எடத்தையும் மறக்காமலா இருக்க? வாடி வா. வாசல்ல ஒங் கெழவி உக்காந்திருப்பா...’ என்று சொல்லியபடி கூட்டிவந்தான். பூச்சி வைய்ய வைய்ய கிழவனுக்கு மூஞ்சியெல்லாம் சிரிப்புப்பொங்கி வந்தது. ‘நோழி மகனே உனக்கு எதுக்குடா பொறாம’ என்று பூச்சியை மடக்கிப் பேசியபடி வந்தார்.

புங்கமர நிழல் மேவிக்கிடந்த வீட்டு வாசலில் குத்தவைத்து உட்கார்ந்திருந்தாள் கிழவி. குப்புறக் கிடந்த உரலின் மீது அடைந்துகிடந்த கோழி கிழவன் வருவது கண்டு எழுந்து மெல்ல இறங்கியது. இது அவனுடைய இடம் என்று அதற்குத் தெரியும். கிழவனின் ஊன்டுகம்பு உரலை நோக்கி அவனை அழைத்து வந்தது. நிழலுக்குள் வந்ததும் பூச்சி மிக ஆவலோடு துவக்கிவைத்தான்.

‘ஏலா... கெழவி, உம் புருஷெ பழைய தொடுப்பு... தேங்கில் பட்டிக்காரிய பாத்துட்டான்ல’ என்றான்.

‘இந்த பொட்டப்பய ஒரு பொண்டாட்டிய பாத்தவனா, ஏழு பொண்டாட்டிய பாத்தவெ. ஏழு மாமியாகிட்ட சீப் பட்டவெ, இவெம்பேச்ச

பேசிக்கிட்டு வர்றயாக்கும், நீ ஒரு ஆம்பிள’ என்றாள்.

‘இவ ஒரு சிறுக்கி! மூணு எடத்துல வாக்கப்பட்டு நாலாவதா எங்கிட்ட வந்தவ, இவ கிட்ட போயி அவள பத்தி பேசுறியேடா நீ ஒரு ஆளு’ என்று பூச்சியைத் திட்டிய கிழவன் கிழவியைப் பார்த்து அடியேய், அவ கன்னம் போட்டு அன்னிக்கு எடுத்த தங்கம்லா... ஓங் கணக்கா வெளக்காத பானைன்னா நெனச்ச?’ என்றார்.

‘ஏ பெரியாம்பிள! மூணு எடத்துல வாக்கப்பட்டவன்ற, அவ எப்படி வெளக்காத பானையா இருப்பா, வெளக்கி தேஞ்ச பானைன்னு சொல்லப்பா’ என்றான் பூச்சி.

‘இவெ யாருடா எடுவட்ட பய, என்னத்த எடுத்துக் குடுக்குறாம் பாரு’ என்று கிழவி கத்தினாள்.

‘அப்படிச் சொல்லுறா பூச்சி. தூரு போன சிறுக்கிடா இவ’ என்றான் கிழவன்.

கேலியும் கிண்டலுமாக பேச்சு உருண்டுபோனது. பூச்சி சாதுர்யமாகப் பேசி வார்த்தைகள் அணைந்துவிடாமல் இரண்டு பக்கமும் திரிபோட்டுவிட்டபடி இருந்தான். சத்தம் கேட்டு ஆட்கள் சேர ஆரம்பித்தனர்.

‘ஏன்டா ஏய் பூச்சி, என்னன்னு பேசுனாக?’ என்று கேட்டாள் கிழவி.

பெரியாம்பிள உரலின் ஓரம் கீழே கிடந்த கோழி இறகை எடுத்து காதுக்குள் நுழைத்துத் திருகியபடி ‘இவ பாரு எத கேட்டுக்கிருக்கானு. ஏலா...நீ ஒம் பழைய புருஷங்கள பாத்தா என்னலா பேசுவ? அதத்தான்லா நாங்க பேசுனோம்‘ என்றார்.

‘ஆமா நா என்ன ஒன்னயமாதிரி கெடக்கிறதெ எல்லாம் எடுத்து உள்ள விட்டுகிட்டு திரிஞ்சவளா? எடுவட்ட பய, வருசம் பூரா ராவிகிட்டு திரிஞ்சவெ நீயி. எம் புருஷங்கெ என்ன ஒம்மாதிரி ஆளாக்கும்! எங்கிட்டும் போயி எதையும் தூக்கிட்டு வருவாங்கேளேடா. ஓங் கணக்கா காவக்கூலி வாங்குறேன்னு ஒலக்கைல வாங்கி ஒக்காந்துகிட்டி திங்கிறவங்கென்னு நெனச்சியா, நீயெல்லாம் ஒரு ஆளுன்னு ஏ புருஷங்களோட சமதையாக்கும்...முச்சந்தியில் செல்லாம கெடந்தவனே, ஒனக்கு வாக்கப்பட்டு வந்தா அதப் பேசுறா. நீ என்னாத்துக்குடா பழைய புருஷங்கள் பத்தி பேசுற’ என்று கட்டி ஏறினாள்.

கிழவன் சிரித்துக்கொண்டே ‘நீயும் மூணு எடத்துல வாக்கப்பட்டவதான, என்னமோ மொத மொதல்ல ஏங்கிட்ட வந்தவ மாதிரி பேசுற?’ என்றான்.

‘ஏலே மூணு எடத்துல தானடா வாக்கப்பட்டேன். நீ ஏழ தீத்துட்டு எட்டாவதா வந்தவந்தான்றா. வந்த மூணா நாளே கொக்குன வந்த கோழி மாதிரி மூலையில் குன்னிக்கிட்டவெ, ஒனக்கெல்லாம் ஆம்பிள வீறாப்பு வேணுமாக்கும்‘ என்றாள் கிழவி.

கோபப்படாத கிழவன் இறக்கை வலதுகைக்கு மாற்றி வலக்காதுக்குள்ளே விட்டுத் திருகிக்கொண்டே சொன்னார் ‘ஏன்டா பூச்சி, வண்டு ஓட்டய நெனச்சுப் போனவெ, நண்டு சொளவ பாத்தா விழுந்து போகமாட்டானா? நண்டு சொளவ நெனச்சு போனவெ, மடத்தாய பாத்தா விழுந்துபோக மாட்டானா’ என்றார். சிரிப்பு ஏகத்துக்கும் பரவி ஓடியது.

‘அடியாத்தே! எளந்தாரியா இருக்குறப்ப ஏழு ஊரு ஜெவிச்சு எல்லக்கல்லு நாட்டுன வீரரு, பல்லுப் போன பெறவு பத்து ஊரு போச்சேன்னு துடிக்குறாராக்கும்... போடா போக்கத்த பயலே, ஏழு பொம்பள ஏந்தீத்தான்னு வந்தப் பெறகுதான்றா எனக்கு தெரிஞ்சுச்சு’ என்றாள் அவள்.

கூடிய கூட்டம் வீரணன் பெரியாம்பிள வீட்டு வாசலை மந்தை யாக்கியது. பூச்சி நடுமந்தையில் உட்கார்ந்து திரியைத் தூண்டிவிட்ட படி இருந்தான். உச்சிவெயிலில் வார்த்தையில் நெருப்பேறி புங்க மர நிழல் முழுவதும் பிரகாசமாக எரிந்தது. நேரம் ஆக ஆக கிழவியின் பேச்சுக்குப் பின் ஒவ்வொரு பொம்பிளையாய் சேர்ந்து கொள்ள ஆரம்பித்தனர். கிழவனின் பேச்சுக்குப் பின் ஒவ்வொரு ஆம்பிளயாய் சேர ஆரம்பித்தனர். வார்த்தையின் வடம் பிடித்து ஆணும், பெண்ணும் இரு கூறாக நின்று இழுத்தனர். சொல்லும் சொலவடையும் பெண்ணிற்குக் கட்டுப்பட்டது. ஆண்கள் என்னென்னமோ செய்தும் அவர்களின் அருகில் கூட நெருங்க முடியவில்லை. ஆடி வந்து முட்டிய தந்தட்டிகளில் ஆணின் வார்த்தைகள் சிதறித் தெறித்தன. குப்புறக் கிடந்த உரலுக்கடியில் ஆண்களின் வார்த்தைகளை போட்டு அமுக்கினர் கிழவிகள்.

‘சின்னக் கல்ல எடுத்து குண்டு தொடச்சா பீ நம்ம கையில் தாண்டி ஒட்டும். தூக்கி எறிங்கடீ’ என்று பெரிய கிழவி சொன்னதும் வார்த்தையின் வடத்தால் கட்டி ஆண்களைத் தூக்கி எறிந்தனர்.

*

**அ**ப்பொழுது சிவானந்தையர் நல்ல இளவட்டம். வக்கீல் தொழில் ஆரம்பித்திருந்த நேரம். சைவத்தின் பால் தீராத பற்றும் காதலும் கொண்டிருந்தார். திருவாடுதுறை ஆதினத்தில் ஆறுமுக நாவலர் வந்து தங்கி சைவ சித்தாந்த சாஸ்திரங்களை மனமுருக விளக்கி பிரசங்கிக்கிறார் எனக் கேள்விப்பட்டு, இங்கிருந்து வண்டி கட்டி திருவாவடுதுறைக்குப் போய் பிரசங்கத்தைக் கேட்டுத் திரும்பியவர். அதன்பின் மதுரை ஆதீனத்திற்கு நாவலர் விஜயம் செய்தபோது தனது சொந்தச் செலவில் நகரமே வியக்கும்படி மிகச்சிறப்பாக வரவேற்புகளைச் செய்தார். நாவலர் கூறிசென்ற சைவ வித்தியாசாலையை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருந்த நேரம்.

தாதுவுக்கு அடுத்த ஆண்டான ஈஸ்வர ஆண்டு நடந்துகொண்டிருந்தது. மதுரை மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்திற்கு நாட்டுக்கோட்டை செட்டிமார் குடும்பம் ஒன்று கும்பாபிஷேகம் செய்ய முன்வந்தனர். கொடும்பஞ்சம் தாக்கி மனிதர்கள் இன்னும் மேடேற முடியாமல் திணறிக்கொண்டிருந்தபோது ஆலயத்தில் கோலாகலமாக கும்பாபிஷேக ஏற்பாடுகள் நடந்தேறிவந்தன. நாடெங்குமிருந்த சைவமடாதிபதிகள் எல்லோரும் அழைக்கப்பட்டிருந்தனர். எல்லா மடாதிபதிகளும் தங்களது முழுப் பரிவார்த்துடன் மதுரையை நோக்கி யாத்திரை மேற்கொண்டிருந்தனர். எங்குமிருந்த ஜமீன்தார்களும் மிட்டாதாரர்களும், மிராசுதாரர்களும் தங்களது எடுபிடிகளுடன் மதுரைக்கு வரத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

சிவானந்தையர் கும்பாபிஷேகத்திற்கு வருகை தருகின்ற மகாசன்னிதானம் நீலகண்ட தேசிகரை ஊர் எல்லையில் நின்று வரவேற்று

தனது சொந்தச் செலவில் மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு அருகே உள்ள மண்டபத்தில் தங்கவைத்தார். அவரது பரிவாரங்கள் முழுவதும் தங்குவதற்கும் பிரபுக்களும் வித்வான்களும் அவருடன் அமர்ந்து பேசிக் களிக்கவும் ஒரு வார காலம் அனைவரும் இருந்துசெல்வதற்கான கூடாரங்களும், பிற ஏற்பாடுகளும் விரிவாகச் செய்திருந்தார். அந்தப் பகுதி முழுவதும் தென்னோலைகள் வேய்ந்து பெரும் அலங்காரங்கள் செய்யப்பட்டன. நீலகண்ட தேசிகரின் மனம் குளிரும் வண்ணம் எல்லாம் இருக்கவேண்டுமென ஐயர் பெருமுயற்சி எடுத்தார். சன்னிதானம் வந்து தங்குவதையொட்டி மெட்ராஸில் இருந்த ஸ்மால்கேஸ் ஜட்ஜ் சர். லோகநாதையர் போன்ற பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லாம் அவரை சந்திக்க உள்ளதையறிந்து இதுபோன்ற பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்க இது நல்ல சந்தர்ப்பம் என உணர்ந்த சிவானந்தையர் பொன்மேனி கிராமத்திலும் தண்டலை கிராமத்திலும் உள்ள தனது தோட்டத்தில் வேலை செய்யும் எல்லோரையும் வரவழைத்து வாரக்கணக்கில் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்.

கும்பாபிஷேகத்திற்கான நாட்கள் நெருங்க ஆரம்பித்தன. கோயிலில் வேலைப்பாடுகள் மிகவேகமாக நடந்தேறின. மடாதிபதிகள் ஜமீன்தார்களின் வருகைக்கு முன் அவர்களின் ஜாகைக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் வண்டிகளில் வந்துசேர்ந்தன. பெரும் திருவிழாவிற்குரிய உற்சாகம் கோவிலிருந்து முளைத்து கொஞ்சம் கொஞ்சமாக மதுரைக்குள் பரவிக் கொண்டிருந்தது. சாதாரண மக்கள் தாதுவைக் கடந்து வெளியேறி வந்துகொண்டிருந்த நேரம்; இந்தப் பெரும் திருவிழாவை வாய்பிளந்து பார்த்துக்கொண்டிருந்தனர்.

சரக்கு மூட்டைகள் ஏற்றப்பட்ட வண்டிகள் வரிசை வரிசையாக மதுரை நோக்கிச் செல்வதைப் பாதைகள் இரவெல்லாம் கண்டுகொண்டிருந்தன. பாதைகளின் குரலைக் கேட்டுப் பழகியவர்கள் பாதைகளை ஒட்டியே மதுரை நோக்கி வர ஆரம்பித்தனர். பாதைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் அவர்களை அழைத்துவந்தபடியே இருந்தன. அப்படி வந்ததில் சிலர் தாதனூரில் வந்து தங்கினர். அவர்களெல்லாம் தாதனூரின் பெண்ணடி வாரிசுதாரர்கள். பெரும் கூடாரங்களை நோக்கியும், பயணிகள் தங்கியுள்ள மண்டபங்களை நோக்கியும் அவர்கள் தாயாரானபடி இருந்தனர். மதுரையின் குடிக்காவலுக்கு சேதம் வராமல் செய்கை இருக்கவேண்டும் என்பதில் கவனமாய் இருந்தனர்.

சிவானந்தையர் மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு அருகில் உள்ள மண்டபத்தை அலங்கரிக்கவும் புதுப்பந்தலுக்கு கூரை வேயவுவமான பணிகளை வேகவேகமாகச் செய்துவந்தார். சிவானந்தையரின் வளர்ப்புத்தந்தை நாகு அய்யர் உயிரோடிருந்தார். அவர் மகனை அழைத்து, ‘இவ்வளவு பெரிய ஏற்பாடுகளை செய்கிறாயே, அதற்கு காவலுக்கு ஆள்போடவேண்டாமோ’ என்று கேட்டிருக்கிறார். அதன்பின் சிவானந்தையர் யோசித்து கீழவெளி வீதியின் காவல்காரர் வீரணனை அழைத்து காவல் பார்க்கச் சொல்லிப் பேசினார். இந்தப் பஞ்ச காலத்தில் இவ்வளவு பெரிய கூடாரங்களுக்கெல்லாம் காவல் காக்க முடியாது என வீரணன் மறந்துவிட்டான். ஆனால், அதையும் மீறி சிவானந்தையர் வலியுறுத்திய பொழுது, காவக்கூலி எத்தனை மூடை என்பதை வீரணன் தெரிவித்தான். அதைக் கேட்ட சிவானந்தையர் அதிர்ச்சியாகிப் போனார்.

அதுவரை அவர் காவக்கூலியை படிக்கணக்கிலும் மரக்கால் கணக்கிலும்தான் கொடுத்துள்ளார். ஆனால், வீரணன் மூடைக் கணக்கில் கேட்டதை அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. வீரணனிடம் கூலியைக் குறைக்கச் சொல்லி மிகக்கடுமையாக அவர் கூறினார். ஆனால் வீரணன் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில் 'யோசித்துச் சொல்கிறேன்' எனச் சொல்லி வீரணனை அனுப்பிவைத்தார் சிவானந்தைய்யர்.

கோவில் கும்பாபிஷேகம் நெருங்கியது. கோபுரங்களின் கீழ் தேக்கும் சவுக்கும், மூங்கிலும் சாரக்கயிறுகளும் குவிக்கப்பட்டுக் கிடந்தன. கோபுரத்தின் உச்சியை நோக்கி சாரங்களைக் கட்டி மேலெழுப்பிச் சென்றுகொண்டிருந்தனர் பணியாளர்கள். மரச்சாரங்கள் கோபுரங்களைச் சிறைப்படுத்தி ஒவ்வொரு நாளும் உயர்ந்துகொண்டிருந்தன. புறாக்கள் கலைந்து கோபுரங்களை வட்டமடித்தபடி இருந்தன. கோவில் நெடுஞ்சுவர்களில் செங்காவி அரைத்துப் பூசும் பணி நடந்தபடியே இருந்தது. பல்வேறு ஊர்களிலிருந்தும் சிவாச்சாரியார்கள் மதுரையை நோக்கி வந்துகொண்டேயிருந்தனர்.

யாக சாலையில் ஒன்பது குண்டங்களும் தயாராகிக் கொண்டிருந்தன. பசுந்தர்ப்பைகள், ஆல், அரசு, புரசு முதலிய சமித்துகளும் நெய், பால், பழம் முதலியவைகளும் வந்திறங்கிக்கொண்டிருந்தன. விறகுகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டன. கோவிலின் ஆடிவீதியிலும் உள் மண்டபங்களிலும் கும்பாபிஷேகத்திற்கான பொருட்கள் நிரம்பியிருந்தன. நகரவாசிகள் எல்லோரும் பணிகளில் உற்சாகமாக ஈடுபட்டனர். தூரம் தொலைவுகளில் இருந்த உறவினர்கள் எல்லாம் வண்டி பூட்டி வந்திறங்கினர். மதுரை களைக்கட்டியது.

கூட்டு வண்டிகளும் பெட்டி வண்டிகளும் வந்து வீதி நெடுக நின்றிருந்தன. தலைகளால் வீதிகள் நிறைந்தன. இரைச்சல் கூடியது. வேடிக்கைகளும் விநோதங்களும் மிகுந்தன. தாசிகளுடன் ஜமீன் வண்டிகள் வந்து மதுரைக்குள் நுழைந்தன. சடைமுடிகளுடன் சாமியார்களும், பிச்சைக்காரர்களும் மர நிழல்களில் குவிந்தனர். குடுகுடுப்பைக்காரன், குறி சொல்பவன், பாம்பாட்டி, பூம்பூம் மாட்டுக்காரன் என ஒவ்வொரு வரும் தன்னைச் சுற்றி கூட்டத்தைக் கூட்டினர். நகரம் வினோதங்களின் களமாக மாறிக்கொண்டிருந்தது. பஞ்சத்தில் மறைந்திருந்த செல்வம் மீண்டும் தனது முழுரூபத்தை காட்டியபடி மதுரை வீதிகளில் வலம் வந்தது. பஞ்சத்தை தாக்குப்பிடித்து மீளமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த கால்கள் இருளின் வழியே மதுரைக்குள் நுழைந்திருந்தன. இரண்டு எதிரெதிர் துருவங்களின் ஆடுகளமாக நான்மாடக்கூடலின் வீதிகள் மாறியிருந்தன.

அங்குமிங்குமாகக் களவு போகிற சேதி மதுரைக்குள் பரவியது. வரும் வழிகளில் பார வண்டிகள் நடந்த திருட்டுகளைப் பற்றி வண்டியோட்டிகள் பயந்தகுரலில் நகருக்குள் வந்து சொன்னார்கள். புதிய கூடாரங்களில் நிகழும் கொள்ளைகள் எதைக்கொண்டும் தடுக்க முடியாதவையாக இருந்தன. மதுரைக்குடிகளைத் தவிர மற்ற எல்லோரின் இருப்பிடங்களிலும் களவு நிகழ்ந்தபடியே இருந்தது. கும்பாபிஷேகத்திற்கு பத்து நாளுக்கு முன்பு தெற்காவணி மூல வீதியில் உள்ள இடையர் மண்டபம் ஒன்றில் தங்கியிருந்த நெல்லைச் சீமையைச் சேர்ந்த ஜமீன் ஒருத்தர் கூட்டி வந்த தாசியின் பொக்கிஷப் பெட்டி களவாடப்பட்டு

விட்டது. அதன் மதிப்பு பலநூறு இருக்கும். அதுவரை உணவு தானிய மூடைகளை மட்டுமே பறிகொடுத்துக் கொண்டிருந்தவர்கள் முதன் முறையாக விலை மதிக்க முடியாத பொருளைப் பறிகொடுத்தனர். இந்தச்செய்தி எல்லோருக்கும் பரவியது. அவரவர் தங்கள் பொருட்களை மிக ஜாக்கிரதையாக பாதுகாத்தபடி இருந்தனர்.

யோசித்துச் சொல்வதாக சொன்ன சிவானந்தையர் அதன்பின் வீரணனிடம் எதுவும் சொல்லவில்லை. இடையில் ஒருநாள் இரவு மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு அருகில் நடக்கும் வேலைகளைப் பார்வையிட்டுவிட்டு இரவு நேரத்தில் திரும்பிக்கொண்டிருந்த பொழுது கீழவெளி வீதியில் வீரணனை சிவானந்தையர் பார்க்க நேர்ந்தது 'இன்னும் இரண்டு நாட்களுக்குள் உனக்கு முடிவு சொல்லிவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு சிவானந்தையர் போய்விட்டார்.

மதுரை திணறுகிற அளவுக்கு மனிதர்கள் வந்து இறங்கிக் கொண்டிருந்தனர். வந்துசேரும் ஒவ்வொரு ரயிலிலும் தொற்றிக்கொண்டு வந்தனர். சுற்றுப்புற கிராமங்களில் இருந்தவர்கள் தலைச்சுமை வியாபாரத்திற்காக மதுரைக்குள் சாரை சாரையாக வந்தனர். பஞ்சத்தின் கொடுந்தழும்பு மறையாத மனிதர்களும் செல்வத்தில் திளைத்த மனிதர்களும் மதுரையின் வீதிகளில் நிறைந்த கிடந்தனர். புதுச்சீலையும் பூவுமாக பெண்கள் கோவிலுக்குள் போனபடி இருந்தனர். வைரக்கடுக்கனும் தங்கமோதிரமும் பட்டு அங்கவஸ்திரமுமாக பெரிய மனிதர்கள் பெட்டி வண்டிகளில் வந்து இறங்கி கோபுரங்களின் உள் படிக்கட்டுகளைத் தாண்டிப் போயினர்.

குரங்காட்டிகள் முக்குக்கு முக்கு நின்றிருந்தனர். உடலிலே நெருப்பைப் பொருத்தி வித்தை காட்டுபவனும், கத்திகளைக் கொண்டு பந்துகளை எறிந்து வித்தை காட்டுபவனும், வளையங்களுக்குள் உடலை நுழைத்து வித்தை காட்டுபவனும், இரு முனைகளிலும் தீப்பந்தம் எரியும் கழிகளோடு சுற்றும் ஆட்டக்காரனும், வெள்ளியிலான நீண்ட சங்கிலியை விழுங்குபவனும், படுத்திருப்பவனின் கழுத்தில் வெள்ளரிக்காயை வைத்து வாளால் வெட்டுபவனும், கைமுட்டியால் தேங்காயை உடைப்பவனும் மாசிவீதியிலும் வெளிவீதியிலும் வித்தை காட்டினர். முன்பெல்லாம் திருவிழாக்களுக்கு எத்தனையோ வித்தைக்காரர்கள் வருவார்கள். மாதங்களுக்கு முன்பே வந்துவிடுவார்கள். அவர்களை எல்லாம் இப்போது காணோம். வந்திருப்பது பத்தில் ஒரு பங்குதான். பஞ்சம் அவர்களையும் வாரித் தின்றுவிட்டது என்று ஏக்கத்தோடு மக்கள் பேசிக்கொண்டனர்.

பொழுது இறங்கத் துவங்கியவுடன் தெருவின் மூலையில் அமர்ந்து நான்கைந்து வீரகுடி வேளாளப் பெண்கள் பாடல்களைப் பாடத்துவங்குவார்கள். ஒரு பெண் ஒரு அடியைப் பாடுவாள் அதன் பின் மற்ற எல்லோரும் சேர்ந்து அந்த அடியை மறுபடியும் பின்பாட்டாகப் பாடுவார்கள். இப்படியாக ஐந்தாறு நிமிஷம் அந்தப் பாடல் போகும். ஜனங்கள் பெருங்கூட்டமாக உட்கார்ந்து அந்தக் கதைப்பாடல்களைக் கேட்பார்கள். பாடல்கள் பாடி முடிந்தவுடன் பாடிய பெண்கள் ஆளுக்கொரு கூடையை எடுத்துக்கொண்டு அந்தத் தெரு முழுக்க வீடுவீடாகப் போவார்கள். பெண்கள் எல்லாம் வீடுகளிலிருந்து தானியங்களைத் தானமிடுவார்கள். இப்பொழுதும் விழா களைகட்டத் துவங்கியவுடன் அவர்கள் மதுரை வீதிகளுக்கு வந்துசேர்ந்தனர். முன்பெல்லாம் அல்லி

அரசாணி மாலையும் கோவலன் கதையும்தான் மக்கள் விரும்பிக்கேட்கும் கதைப்பாடலாக இருந்தது. ஆனால் இந்த விழாவில் இதுவரை இல்லாத பாடல்களை அந்தப் பெண்கள் பாடினர். ஏட்டில் எழுதப்படாத வரிகளை ராகத்தின் வழியே இழுத்து அவர்கள்பாடி முடிக்கும்போது, தெருவே கண்ணீரில் மிதந்து தத்தளித்துக் கொண்டிருக்கும். பெண்கள் துக்கம் தாளாமல் வாய்பொத்திக்கொண்டு வீட்டிற்குள் ஓடினர். கால் நீட்டி உட்கார்ந்து கதைகேட்ட கிழவிகள் அங்கேயே உட்கார்ந்து இரவெல்லாம் அழுதனர்.

அவர்கள் நல்லதங்காளின் கதையையும், குஞ்சரத்தம்மாளின் கதையையும் பாடினர். மதுரையே நடுங்குவது போலிருந்தது. பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவர்களைச் சுற்றி உட்கார்ந்தனர். பாடல் கேட்டு முடிக்கும் முன் அவர்கள் சேலை நனைய கண்ணீர் வடித்திருந்தனர். பெரும் சோகத்தையும் துன்பத்தையும் பாட்டுக்காரிகள் மண்ணுக்குள் இருந்து கிளறிவிட்டபடி இருந்தனர். அடி மண்ணைப் புரட்டிப்போடுவது போல விழாக்கோலம் பூண்ட மதுரையைத் தலைக் குப்புறக் கவிழ்த்தனர். மீண்டும் புதைகுழிகளுக்குள்ளிலிருந்து மரணப்பெருமூச்சுகள் எழுந்து வந்தன. ஓடிஒளிந்த பெண்களின் கூந்தலை பாட்டுக்காரிகளின் குரல்கள் இழுத்துவந்து உட்கார வைத்தன.

நல்லதங்காள் எருக்கு முளைத்த பாங்கிணற்றில் வீசிய பச்சிளங்குழந்தைகள் மதுரையின் தெருக்கள்தோறும் புரண்டு அழுதன. ‘வேண்டாந் தாயீ...’ என்று கேட்டுக்கொண்டிருந்த பெண்கள் நெஞ்சு வெடிக்கக்கத்தினர். ஓடிப்போன கடைசிப் பையனை அவள் விரட்டிப்பிடித்த பொழுது நாடிநரம்பெல்லாம் துடித்தது. நல்லதங்காள் தலைகுப்புற விழுந்தவுடன் தாங்கமுடியாமல் கூட்டத்திற்குள் இருந்து எழுந்து வீட்டிற்குள் ஓடினர். நல்லதங்காளின் கதைப்பாடல் முடியும்போது பாடிய பெண்கள் ஒவ்வொரு நாளும் மயக்கமடைந்தனர். அவர்கள் இழுத்துப்பாடும் ராகம் அவலத்தின் எல்லையில் கொண்டு போய் நகரத்தைத் தள்ளியது.

குஞ்சரத்தம்மாளின் கதைப்பாடல் பாடப்படும் தெருக்கள் வேறுமாதிரியாக இருந்தன. குஞ்சரத்தின் தாய்மையை மக்கள் பால்போல் பருகினர். அவள் எரித்த அடுப்பின் நெருப்பு நகரத்திற்குள் அணையாத கங்காக அப்படியே இருந்தது. அவள் ஊற்றிய கஞ்சி எத்தனையோ பேரின் ரத்தத்தில் கலந்திருந்தது. பாடி முடிந்தவுடன் பாட்டுக்காரிகளின் முன்னால் இருந்த தீபத்திற்கு எண்ணெய் ஊற்றி குஞ்சரத்தம்மாளை வணங்கி, மடி நிறைய தானியங்களைக் கொண்டுவந்து கொட்டிவிட்டுப்போயினர். அந்தப் பாடலின் ராகம் அவலத்தைக் கொண்டுவந்து சேர்க்கவில்லை, பாடப்படும் தெருக்களில் உள்ள ஒன்றிரண்டு பெரிய வீடுகளில் குற்ற உணர்வையும் அவமானத்தையும் கொண்டுபோய்ச் சேர்த்தபடி இருந்தது. கும்பாபிஷேகத்திற்கான நாட்கள் நெருங்க நெருங்க குஞ்சரத்தம்மாளின் கதைப்பாடலையே பாடுமாறு மக்கள் கேட்டனர்.

சோகமும் உற்சாகமும் பயமும் கூடிய மதுரை! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அது மாறியபடியே இருந்தது. பாட்டுக்காரிகள் பாடிச்சென்ற தெரு பச்சைக்குழந்தைகளுக்குக் கூட பால்குடுக்க மறந்த துக்கமடைத்துக் கிடந்தது. மடாதிபதிகள் வந்திறங்கியுள்ள தெருக்களில்

வில் வண்டிகள், விதவிதமான பொருட்கள், அலங்கார வஸ்திரங்கள், என்றும் பார்த்திராத பெரும் செல்வந்தர்கள் என வந்திருந்தவர்களைப் பார்த்து அதிசயித்து வாய்பிளந்து கிடந்தது. பார வண்டிகளைத் தலைகீழாகக் கவிழ்ந்து கணக்கற்ற மூடைகளை தூக்கிச்சென்ற கொள்ளைபற்றிய செய்தி எல்லாத் தெருக்களிலும் பயத்தைத் தூவியபடி சென்றது. கோயிலின் அலங்காரமும், மலர் வாசனைகளும், வாசனைத் திரவியங்களும் நகரத்தையே மயக்கியன. சந்தனமும், உருத்திராட்ச கொட்டைகளும் நகரத்தை பக்திக்குள் மூழ்கடித்தபடி இருந்தது. மதுரை விசித்திரங்களின் பூமியாகக் கிடந்தது. துல்லியமாக பொன்னைக் காய்ச்சி வடிக்கும் தட்டார்களும், மிகத்துல்லியமாக அதனைப் பறித்து எடுக்கும் கள்வர்களும் மதுரையைச் சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தனர். மதுரை கானகத்தின் நடுவிலிருக்கும் தடாகத்தைப் போல் இருந்தது. மான் மரைகள் என்று ஜீவராசிகள் தாகம் தீர்க்க இறங்கியிருந்தன. பளிங்காய் மின்னும் பல கண்கள் எங்கிருந்தென அறியமுடியாதபடி ஒளிந்து காத்திருந்தன.

அங்குமிங்குமாகக் களவுகள் நிகழ்ந்தபடி இருந்தன. ஒரு கட்டத்திற்கு பின் எங்கே எவ்வளவு களவு போனது என்பது கூட வெளித்தெரியாமல் போய்விட்டது. கும்பாபிஷேகத்திற்கான பணிகள் மிகத்தீவரமாக நடைபெற்றுவந்தன. ஜனக்காடு செழித்துக்கிடக்க மதுரையின் தெருக்கள் மண்ணில் வெயில் படாமல் கிடந்தது. மகா சன்னிதானம் நீலகண்ட தேசிகர் தனது படைபரிவாரங்களுடன் சிவானந்தையர் ஏற்பாடு செய்துவைத்திருந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடன் வந்த வண்டிகளையும் இறங்கிய பொருட்களையும் பார்த்து மதுரையே பிரமித்துப்போனது. பெரும் ராஜதர்பாராக அது இருந்தது. தேசிகர் தனது திருமடத்திலே இருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி யாத்திரை போகிறார். வழியில் கும்பாபிஷேகத்திற்கு வருகை தந்திருக்கிறார். அவர் தனது முழு யாத்திரையையும் முடித்து மீண்டும் திருமடம் சென்று சேர நான்கு மாதங்கள் என்று பிரயாணத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. அதற்கேற்றாற்போல வண்டி வண்டியாகப் பொருட்கள் உடன் வந்தன. தேசிகர் வந்துவிட்ட செய்தியறிந்து மதுரை வந்துள்ள சைவர்கள் அவரை தரிசித்து மகிழ்ந்தனர். சிவானந்தையர் செய்து வைத்த ஏற்பாட்டினைக் கண்டு நீலகண்ட தேசிகர் நிறைந்த சபையில் அவரை வாழ்த்தினார். தனது வாழ்வின் பெரும்பேறாக ஐயர் அதனைக் கருதினார்.

கும்பாபிஷேகத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்தான் தேசிகர் வந்து சேர்ந்தார். அவருடன் வந்துள்ள பரிவாரங்களுள் காவல் பணியாளர்களையும் பார்த்தபின் சிவானந்தையருக்கு தெம்பு வந்துவிட்டது. இதுவரை தனது மண்டபத்தில் எந்தப் பொருளும் களவு போகவில்லை. அப்படியிருக்க வந்துள்ள இவ்வளவு பெரிய பரிவாரங்கள், காவல் பணியாளர்களை வைத்து சமாளித்துவிடலாம்; புதிதாகக் காவலுக்கு ஆள்நியமிக்கவேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார். அந்த முடிவை கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள் இரவு வீரணனிடம் தெரிவித்தார். வீரணனும் சரி என்று கேட்டுக்கொண்டு போய்விட்டான்.

பெருமை மிகுந்த ஸ்ரீமீனாட்சி சொக்கநாதர் திருக்கோயிலின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் அன்று அதிகாலை நடந்தேறியன. தர்ப்பை, மாவிலை கொண்டு மந்திரங்களைச் சொல்லி பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியை கும்பத்தில் ஆவாகனம் செய்தபின்

திருமந்திரங்களைச் சொல்லி மங்கள முழக்கங்களுடன் அந்த கும்பத்தை யாகசாலையில் எழுந்தருளச் செய்தனர்.

கள்ள நாட்டு கிராமங்களிலிருந்து கேட்டு வாங்கிவரப்பட்ட எட்டு மாட்டு வண்டிகளுடன் சுமார் இருபத்தைந்து பேர் சகிதமாக, வைக்கோல் வியாபாரிகளைப் போல, முதல் இரண்டு வண்டிகளில் மட்டும் கொஞ்சம் வைக்கோலை ஏற்றிக்கொண்டு சென்றனர். மாரியம்மன் தெப்பக்குளத்திற்குப் பக்கத்தில் மிகச்சிறப்பான பந்தல் வேலைப்பாடுகளும், அலங்காரங்களும் நிரம்பிய அந்த மண்டபத்திற்கு அருகில் வந்து வண்டிகளை நிறுத்தினர். ஏற்கனவே தெப்பக்குளத்தைச் சுற்றிலும் முப்பது பேர் வழிப்போக்கர்களைப் போல அங்குமிங்குமாக நின்று கொண்டிருந்தனர்.

மதுரையெங்கும் மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது. நான்கு கோபுரங்களையும் பார்த்தபடி சித்திரை வீதியிலும் மாசி வீதியிலும் குறுக்கு வீதிகளிலும் மக்கள் அலைமோதிக்கொண்டிருந்தனர். கோயிலுக்குள் இருக்கும் ஆடிவீதியிலிருந்து கும்பாபிஷேகத்தை தரிசிக்க மடாதிபதிகள், ஜமீன்கள், மிராசுகள், முக்கிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களே அனுமதிக்கப்பட்டனர். கோபுரங்களின் மேலே சிவாச்சாரியர்கள் காவி நிற வஸ்திரம் உடுத்தி கைகளில் அபிஷேகப் பொருட்களுமாக வேதகோஷங்க ளுடன் நின்றிருந்தனர்.

மதுரையைச் சுற்றி எங்கும் கள்ளர் கூட்டம் நிரம்பி வழிந்தது. வெளிவீதிக்கு வெளியே தனித்தனி ஜாகைகள், கூடாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றில் தங்கியிருந்த செல்வந்தர்களின் இருப்பிடத்தின் மீது அவர்கள் திட்டமிட்டு உள்ளே நுழைந்தபடி இருந்தனர். சில உதிரிக் கள்வர்கள் தங்கள் ஊரின் வண்ணார்களிடம் நல்ல வேட்டி துண்டை வாங்கிக் கட்டிக்கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்துவிட்டனர். தாதனூர்க்காரர்கள் மிகக்குறிப்பிட்ட இடங்களை மட்டும் திசைக்கு ஒன்றாகத் தேர்வு செய்து, சமமாகப் பிரிந்து அந்த இருப்பிடங்களை நோக்கி வந்திருந்தனர்.

சிவபெருமானின் அட்ட மூர்த்தி வடிவமான யாகசாலையில் ஒன்பது குண்டங்களின் ஒன்பது அக்கினி வளர்க்கப்பெற்ற கிரியைகள் நடைபெற்றுவந்தன. நல்ல காரியங்களில் இடையூறு செய்யும் அரக்கர்களை விரட்டி அவர்கள் திரும்ப வராமல் காத்தற் பொருட்டு எட்டுத் திக்கிலும் வைரவர்களையும் நடுவில் லஷ்மியையும் பூஜிக்கும் ‘ரஷோக்னம்‘ நடைபெற்று முடிந்தது.

நிறுத்தப்பட்டிருந்த காவல் பணியாளர்கள் எத்தனை பேர், அவர்களில் மண்டபத்திற்குள் நிற்பவர்கள் எத்தனை, மண்டபத்திற்கு வெளியில் வண்டிகளை ஓட்டி நிற்பவர்கள் எத்தனை பேர் என்பதைக் கணித்து ஆயுதம் வைத்துள்ள வண்டி எது, மண்டபத்திற்குள் இருக்கும் ஆயுதங்கள் எவை என்பதை உணர்ந்து, ஆயுதங்கள் உள்ள வண்டியை மட்டும் மெல்லத் தள்ளிக்கொண்டு வந்து தெப்பக்குளத்திற்குள் தலைகுப்புறத் தள்ளி விட்டு அதே கணத்தில் மண்டபத்திற்குள் ஆயுத சகிதமாக இருபதுக்கும் மேற்பட்டவர்கள் உள்ளே நுழைந்தனர். வண்டிகளை ஒட்டி அங்குமிங்குமாக இருந்தவர்களும் அதே நேரத்தில் அடிபட்டனர்.

யாகசாலையின் ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்த்து

குண்டங்களைச் சுற்றி பசுந்தர்ப்பைகளை பரப்பி, ஆல், அரசு முதலிய சமித்துகளை குண்டத்திலிட்டு அக்கினி மூட்டி மந்திரங்களை ஓதி, மந்திரம், கிரியை, பாவனை மூன்றினாலும் வளர்க்கப்படும் அக்னியிலிருந்து எழும் புகையினூடே வேத கோஷமும், சிவ ஆகம ஒலியும், தமிழ் மறை ஓசையும் எங்கும் வியாபித்திருக்க மெய்யன்பர்களின் 'சிவ சிவா' என்ற குரல் விண்ணை நிரப்ப இறைவனது அருட்சக்தியை கும்பத்தில் பிரகாசிக்கச் செய்து, அந்த தெய்வீக சக்தி பொருந்திய கும்பங்களைக் கோபுரங்களுக்கு மேல் கொண்டு சென்று கும்பத்திலுள்ள நீரினால் சிகரங்களிலும், பிம்பத்திலும் அபிஷேகம் செய்வித்தனர்.

கிழக்கே மண்டபத்திற்குள் இருந்தவர்கள் அடிபட்ட காயங்களுடன் ரத்தம் ஒழுக ஒழுக உயிர் பிழைக்கத் தப்பியோடினர். காவல்பணியில் இருந்தவர்கள் வைகையாற்றின் எல்லைவரை விரட்டப்பட்டனர் ஆயுதங்களை இழந்த அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள எடுத்த ஓட்டத்தின் வேகம் காகமும் அறியாதது. தெப்பக்குளத்தின் மேல் திசை முழுக்க வெறிச்சோடியது. பயங்கர சத்தங்கள் எங்கும் எதிரொலித்து அடங்கின. ஓடியவர்கள் எங்கும்போய் யாரையும் கூட்டிவர முடியாது. மகாகும்பாபிஷேகம் நடந்தேறிக்கொண்டிருந்தது. வானத்தில் பருந்துகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. வானத்தில் மட்டுமே இரை தேடும் பருந்துகள் வட்டமிடுவதாக நினைத்து பெருங்கூட்டம் கோபுரத்தையே பார்த்துக்கொண்டிருந்தது. நீலகண்ட தேசிகரும் அவரது பரிவாரத்து கனவான்களும் அவருக்கென்றே ஆடிவீதியில் அமைக்கப்பட்டிருந்த மிகசௌகரியமான மேடையில் அமர்ந்து கும்பாபிஷேகத்தை தரிசித்துக்கொண்டிருந்தனர்.

தெப்பக்குளத்தின் வடக்கு மூலையிலிருந்த பெரிய மண்டபத்தின் மேல் ஏறி நின்றபடி ஊர் பெரியாம்பிளை மொத்தச் செயலையும் பார்த்து வழிநடத்திக்கொண்டிருந்தார். விரட்டியடிக்கப்பட்டவர்கள் கூட்டங்களுக்குள் போய்க் கலந்தனர். மண்டபங்களில் இருந்த சரக்கு மூடைகளும் விதவிதமான வடிவத்தில் இருந்த செம்புப்பானைகளும் மற்றப்பொருட்களும் வண்டியில் ஏற்றப்பட்டன. இவை தவிர ஏற்கனவே சரக்குகள் ஏற்றப்பட்ட நிலையில் இருந்த வண்டிகளை அந்தக் காளைகளைப் பூட்டி அப்படியே ஓட்டிச்சென்றனர். பதினாலு மாட்டு வண்டிகளில் பொருட்களுடன் நாலு வெறும் வண்டிகளையும் ஓட்டிக்கொண்டு அவர்கள் அனுப்பானடி வழியாகத் திருப்பரங்குன்றத்துப் பாதையிலே திரும்பினர்.

மடாதிபதிகளும் பெருங்கனவான்களும் தங்கியிருந்த எல்லா மண்டபங்களிலும் கள்வரின் பாதங்கள் மிதிபட்டுச் சென்றன.

கும்பாபிஷேகத்தன்று மதியம்தான் சிவானந்தையருக்கும் தேசிகருக்கும் விஷயம் எட்டியது. மடத்தின் சிப்பந்திகள் எல்லோரும் கோயிலில் இருந்து ஓடோடி வந்தனர். மண்டபம் எல்லாம் அலங்கோலப் பட்டுக் கிடந்தது. சமைத்த பொருட்கள் எங்கும் கொட்டிக்கிடந்தன. சமையல்காரர்கள் கைகளிலும் கால்களிலும் காயத்தோடு மீண்டும் வந்து சேர்ந்தனர். சரக்குகள் இருந்த வண்டிகள் முழுவதும் போய்விட்டன. என்ன செய்வதென்று யாருக்கும் எதுவும் புரியவில்லை. செய்தி கேள்விப்பட்டு கனவான்கள் எல்லாம் பதறியடித்து வந்து நடந்ததை

விசாரித்துக்கொண்டிருந்தனர். நான்கு மாதப் பயணத் திட்டத்திற்கான பொருட்கள் அனைத்தும் கொள்ளை போய்விட்டன. பேர் பெற்ற மடத்தின் மகா சன்னிதானம் மாற்றிக்கொள்ள வஸ்திரம் இன்றி கல்மண்டபத்தின் தூணில் சாய்ந்தபடி வீற்றிருந்தார். காவல் பணியாளர்கள் சிலருக்கு வெட்டுக் காயங்கள். பிற மடாதிபதிகள் வந்து தேசிகரை நேரில் சந்தித்து பேசிச்சென்றனர். 'விவரம் போதாத ஐயரின் ஏற்பாட்டை நம்பி நீங்கள் ஏன் ஊரை விட்டு இவ்வளவு தள்ளி இங்கே தங்கினீர்கள்?' என்று அவர்கள் தேசிகரைப் பார்த்துக் கேட்டபடி இருந்தனர்.

சன்னிதானத்தின் யாத்திரை தொடருமா? அவரது அடுத்த பயணம் எங்கிருக்கும் என்று மடத்தின் ஊழியர்கள் யோசித்தபடி இருந்தனர். மறுநாள் அதிகாலையில் தனது திட்டத்தை முக்கியஸ்தர்களிடம் மட்டும் அவர் தெரிவித்தார். மகா சன்னிதானத்துடன் ஒரு சிலர் ரயில் மூலம் புறப்பட்டு நெல்லைச் சீமையில் உள்ள ஈசான மடத்திற்கு போய்ச் சேருவது; மற்றவர்கள் வண்டிகளுடன் வருவது; வரும் பிரயாணத்திற்கான பொருளை மதுரையில் சேகரித்துக்கொள்வது என்று முடிவானது. அது வரை ரயில் ஏறாத, ரயில் பிரயாணத்தை சாஸ்திரப்படி ஏற்றுக்கொள்ளாத மகா சன்னிதானம் பண்டாரத்தைப் போல மதுரை ரயில் நிலையம் நோக்கி நடந்தார். பெருங்கூட்டம் அவர் பின்னால் நடந்து சென்றது. கரும்புகை படிந்த ரயில் பெட்டிக்குள் ஏறி அவர் மறைந்ததைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் ரயில் நிலையத்தின் ஏதோ ஒரு மூலையில் நின்று அங்கவஸ்திரத்தால் வாயை மூடியபடி கதறிக் கண்ணீர் வடித்தார் சிவானந்தையர்.

அன்றோடு மடத்துடன் இருந்த அவரது தொடர்பு முற்றிலும் முறிந்தது. உலகத்தில் தான் மிகவும் மதித்துப்போற்றுகிற ஒரு மகானுக்கு தன்னால் ஏற்பட்ட இந்த அவமானத்தை நினைத்துத் துடித்து உழன்று கொண்டிருந்தார். என்ன செய்தும் அதை அவரால் மறக்கமுடியவில்லை. அதன்பின் வீரணனை அவர் சந்திக்கும்பொழுதெல்லாம் நெருப்பிலிட்ட புழுவாய் அவர் உள்ளம் துடிக்கும். ஆனால், அடக்கியபடி அவர் போய் விடுவார். தாதனூர்க்காரர்கள் எல்லாம் இப்பொழுது காவி நிறத்துணியை இடுப்பிலோ தலையிலோ கட்டியபடிதான் இரவுக்காவலுக்கு வருகின்றனர் என்பதை அவர் அறிய நேர்ந்தபோது சாபத்தின் உச்சத்தில் உழல்வதைப்போல வேதனையை அனுபவித்தார்.

அதன்பின் பத்துப்பதினைந்து ஆண்டுகள் வீரணன் கீழவெளி வீதியைக் காவல் காத்தான். அப்புறம் அவனது மகன் காவலுக்கு வந்தான். இந்த நீண்ட கால வெளியில் அவன் செத்திருக்கக்கூடும் என்று தான் சிவானந்தையர் நினைத்திருந்தார். ஆனால், ஊர் பெரியாம்பிளையாக வீரணன் வந்து உட்கார்ந்ததும் ஐயர் துடித்துப்போனார். இரவு முழுவதும் தனது இதயத்தில் பட்டிருந்த வடுவை நினைவுகளால் கிளறிப்புண்ணாக்கியபடியே இருந்தார்.

*

# 83

**இரண்டாண்டுகளாக நடைபெற்றுவரும் கலாசாலைக்கான கட்டிடப்** பணிகள் நிறைவு பெறும் நிலைக்கு வந்துள்ளது. தச்சாசாரிகள் நிலைக்கதவுகளையும் ஜன்னல் கதவுகளையும் செய்துகொண்டிருந்தனர். சுருள் சுருளாக மரச் சீவல்கள் காற்றில் பறந்தபடி இருந்தன. வரும் ஆண்டில் இருந்த கலாசாலை செயல்படத் துவங்கும். நகரத்தின் மேற்கு எல்லையில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களால் கட்டப்பட்ட முதல் பள்ளிக்கட்டிடம் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தது. சிவானந்தையர் உள்ளிட்ட பலரின் கனவு நனவானது. படிக்கப் போகும் மாணவர்களுக்கு இந்து மதக் கோட்பாடுகளையும் சாஸ்திரப் பெருமைகளையும் அறிமுகப்படுத்த தக்க ஏற்பாட்டினை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். சோமநாத சாஸ்திரிகள் இறந்துபோனது சிவானந்தையருக்குப் பெரும் இழப்புதான். அவர் இருந்தால் இதற்கான வேலைகள் முழுவதையும் அவரிடம் ஒப்படைத்துவிடலாம் என்று ஐயர் நினைத்தருந்தார். ஆனால், அவரின் திடீர் மரணத்தால் இந்தப் பணிக்கு பொருத்தமானவரை நியமிப்பதில் சிரமம் ஏற்பட்டது. தான் நினைத்ததைப் போன்று கிறிஸ்தவ கல்வி நிலையங்களுக்குள் நுழையாமல், திண்ணைப் பள்ளிக் கூடத்திலே படித்துவளர்ந்த பிராமண தமிழாசிரியரைத் தேடிப்பிடிக்க சிவானந்தையர் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டார்.

இந்தக் காலத்தில் நகரத்தின் நிர்வாகப் பணிகளும் மேம்பாடு அடைந்தன. நகர சபைக்கு வரவேண்டிய வருமானங்களான தொழில் வரி, வருச வரும்படியில் நூற்றுக்கு ஏழரைக்கு மேற்படாத நிலவரியும் வீட்டு வரியும், வருச வரும்படியில் நூற்றுக்கு நாலுக்கு மேற்படாமல் வீடுகளுக்கும் நிலங்களுக்கும் தண்ணீர் தீர்வை, பலவகை வண்டிகள், பல்லக்குகள், மாடு, குதிரை முதலியவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை தரவேண்டிய வரி, அயல் இடங்களிலிருந்து பட்டணத்திற்குள் வரும் வண்டிகளுக்கு வாங்கும் சுங்கம், சந்தை கூடும் காலங்களிலும், உற்சவங்களிலும்,

வண்டிப்பேட்டைகளையும், சாமான் விற்கும் இடங்களையும், நகரப் பொது இடங்களையும் உபயோகப்ப டுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறு தீர்வைகள் ஆகியவற்றின் மூலம் கிடைத்த வரும்படியானது அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரி வருவாயைப் பல மடங்கு உயர்த்தியிருந்தது. அதனால் கலெக்டருக்கு சேர்மன் சிவானந்தையர் மீதான மதிப்பு கூடியது. போர்டு மெம்பர்கள் மீதும் எவ்விதமான புகார்களும் குற்றச்சாட்டுகளும் எழவில்லை. நகரின் வணிகம் மேம்பாடு அடைய பிற நகரங்களோடு மதுரையை இணைக்கும் சாலைகளைச் செப்பனட வேண்டுமென்று சிவானந்தையர் முயற்சி எடுத்துவந்தார்.

இந்தக் காலத்தில்தான் போலீஸ் டிபார்ட்மென்டில் துப்பறியும் இலாகா துவக்கப்பட்டது. இது குடிக்காவல் உள்ளிட்ட பல விஷயங்களை கவனிக்க ஆரம்பித்தது. ஏற்கனவே செயல்பட்டுவரும் இரண்டு கச்சேரிகளில் போலீஸார் எண்ணிக்கை கூடியிருந்தது.

புதிய ரக துணிகளின் வரவால் மதுரையின் கைத்தறி நெசவாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். அவர்களால் சந்தையில் போட்டி போட முடியவில்லை. நெசவாளர் பகுதிகளில் தறிச் சத்தம் குறைந்துகொண்டேயிருந்தது. மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றிப் பன்னெடுங் காலமாக இருந்த துணிக்கடைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பூட்டப்பட்டன. புதிய ஜவுளிக்கடைகள் தோன்றின. கீழச்சித்திரை வீதியில் ராவுத்தர் ஒருவர் திறந்த ஜவளிக்கடையில் நவீன ரகதுணிகள் மலைபோல் குவிக்கப்பட்டிருந்தன. அதன் மினுக்கும் அழகு காண்போரின் கண்களை ஈர்த்தது. அந்த ஜவுளிக் கடையைப் பார்க்கவே மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து போயினர். சாயக்காரத் தெருவில் இருந்து கூட வந்து பார்த்துவிட்டுப் போயினர். அம்பாரம் அம்பாரமாய் மதுரைக்கு பருத்தியை ஏற்றிவந்த மாட்டுவண்டித் தடம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்தது. தண்டவாளத்தில் வந்துநிற்கும் ரயிலிலே இருந்து பேல் கணக்கில் துணி மூடைகள் இறங்கின.

இரண்டு வெள்ளையர்கள் மிக பிரம்மாண்டமான காட்டன் மில் ஒன்றை மதுரையின் ரயில் நிலையத்துக்கு அருகில் கட்டிக்கொண்டிருந்த போதுதான் நெசவாளர்களின் பெருங்கூட்டம் ரயில் நிலையத்திலே இரவு பகலாகக் காத்துக்கிடந்தது. சிங்கப்பூர், மலேசியாவிற்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் அவர்களை அழைத்துச்செல்லும் கங்காணிகள் தாது வருடத்தைப்போல நடக்க வைத்தே கூட்டிச்செல்லவில்லை. மூன்றாம் வகுப்பு டிக்கெட்டுகளை அவர்களுக்காக வாங்கி வைத்திருந்தனர். முத்து ராஜ் பிள்ளை மெட்ராசில் உள்ளதைப்போல பெரிய ‘கிளாத் சென்டர்’ ஒன்றை மேலச்சித்திரை வீதியில் திறந்தார். உடனேயே அதன் வியாபாரம் உச்சத்திற்குப் போனது. ராவுத்தரும் பிள்ளையும் ஏன் துணி விற்க வந்தார்கள் என்று புரியாத குழப்பத்திலேயே நெசவாளிகள் ரயிலேறிப் போய்க்கொண்டிருந்தனர்.

அழிவும் வளர்ச்சியுமாய் நகரம் உருமாறியபடி இருந்தது. துண்டிக்கமுடியாத தவிப்பும் பெற வேண்டிய ஏக்கமும் நகரவாசிகளின் குணமாக இருந்தது. போட்டியின் சறுக்கு விளையாட்டில் ஒருவருக்கொருவர் முண்டியடித்துக்கொண்டு விரைந்தனர். ஆயிரக்கணக்கான மாட்டுவண்டிகளின் சக்கரங்களை ஒரு ரயில் தனக்குள் பூட்டிவைத்திருந்தது. எண்ணிலடங்காத நாடி வைத்தியர்களின்

விரல்களை ஒரு ஸ்டெதஸ்கோப் பதுக்கி வைத்திருந்தது. மதுரை மாவட்டத்தின் ஆயிரமாயிரம் நெசவாளர்களின் தறிகளை எரித்து தனது நீராவிச் சக்கரங்களைச் சுழற்றுவதற்காக ஹார்வி மில் தயாராகிக்கொண்டிருந்தது.

அதிகாரத்தில் ஐரோப்பியனாகவும், அந்தஸ்தில் பிராமணனாகவும் ஆக விரும்புகிற ஒரு திருவுரு எல்லோரது மனதிலும் அடைய விரும்புகிற இலக்காக இருந்தது. பணம் சம்பாதித்து முன்னுக்கு வந்தவர்கள் முன்பைவிட வேகத்துடனும் வெறியுடனும் ஓடினர். கண்களுக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தது உருமாற்றம். அது அவ்வப்போது வலியை விலையாகக் கேட்டபடி இருந்தது.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வந்த ரயில் இப்பொழுது வாரத்திற்கு ஒருமுறை வந்து நின்றது. ரயிலின் ஓசை அடங்குமுன் ‘மெயில்வான்’னில் இருந்து தபால் பையை வாங்கித் தோளிலே போட்டபடி சலங்கை கட்டிய தடியுடன் சப்தம் செய்துகொண்டு ரயிலைவிடவேகமாக ஓடினான் தபால் சேவகன். பேன்ட்டும் சர்ட்டும் போட்ட மனிதர்கள் ரயில் நிலையக் கடிகாரத்தைப் பார்த்துக் காத்திருக்கப் பழகினர். பெரும் காத்திருப்பைக் கிழித்தபடி வந்துநிற்கும் ரயிலிலிருந்து புதிய மனிதர்கள் இறங்கி நகரத்திற்குள் போயினர். ரயில் வந்து முட்டி முட்டி பழைய நகரத்தின் வழமையான முட்டை ஓட்டை உடைத்த படி இருந்த்து. அதற்குள்ளிலிருந்து புதிய நகரமொன்று வெளியேறியது.

மகேஸ்வரன் வந்து இறங்கியபொழுது மதுரையின் ரயில் நிலையத்தைப் பார்த்து பிரமித்தான். மூன்று ஆண்டுகளுக்குள் நகரம் எவ்வளவோ மாறிவிட்டது என்பதை அங்கேயே அவனால் அறிய முடிந்தது. வரவேற்க வந்த பெட்டிவண்டியில் ஏறி வீடு நோக்கி வரும் பொழுது, வீடு மாறாமல் அப்படியே இருக்கும் என அவனுக்குத் தெரியும். வீட்டிற்குள் தெய்வானை இருப்பாள் என்ற நம்பிக்கையும் பயமும் அவனை உள்ளுக்குள் நடுங்கவைத்தது. மூன்றரை ஆண்டுகள் எதற்காக வராமல் இருந்தானோ அந்தக் காரணங்கள் இப்பொழுதும் அப்படியே இருந்தன. ஆனால் கல்லூரிப் படிப்பு முடிந்துவிட்டதாலும், தந்தையின் நிர்பந்தத்தாலும் வரவேண்டியதாகிவிட்டது.

*

**ந**கரம் இன்னொரு பிரச்சினையை சந்திக்க வேண்டியிருந்தது. தெற்கு வெளிவீதியை ஒட்டிய பகுதியில் நாடார்கள் வண்டிப்பேட்டை கட்டத்துவங்கினர். நகரின் வணிகத்தை தங்கள் கைகளுக்குள் வைத்திருந்தவர்களுக்கு வண்டிப்பேட்டை பெரும் சாவலாக எழுந்தது. பத்தாண்டுகளுக்கு முன் கீழவெளி வீதியின் ஓரத்தில் குடியேறியிருந்த பதினைந்து நாடார் குடும்பங்கள் தங்கள் குடியிருப்புக்காக ஒரு சிறு பேட்டையைக் கட்டினர். அன்று அது பிரச்சினைக்குரிய ஒன்றாக யாராலும் பார்க்கப்படவில்லை. ஆனால், நாடார்கள் வியாபாரத்தில் வேகமாக வளர்ந்து வந்தனர். கருப்பட்டி, பனைப்பொருட்களை கொண்டுவந்து விற்றுக்கொண்டிருந்த இவர்கள், காலம் செல்லச்செல்ல கமுதி, சாத்தூர், சிவகாசி பகுதியில் கிடைக்கும் பொருட்களை எல்லாம் மதுரையில் கொண்டுவந்து விற்கவும் மதுரையில் மலிவாகக் கிடைக்கும் பொருட்களை பாளையம் பட்டி, அருப்புக்கோட்டை, கமுதியில் போய்

விற்கவுமாக இருந்தனர். நகரில் நாடார் கடைகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. ஏராளமான குடும்பங்கள் மதுரைக்கு வந்து குடியேறின. தெற்கேயிருந்தது மதுரை வரும் நாடார்களின் வண்டிகள் ஒரு கட்டத்தில் நூற்றுக்கும் மேலாயின. விருதுபட்டி, சிவகாசி வழியாக செங்கோட்டை வரை வண்டிகள் போய்த்திரும்பின.

கருப்பட்டி, பனைப்பொருட்கள், கருவாடு, பருத்தி விதை, உப்பு, துணிவகைகள், புகையிலை, நெல், மூங்கில் கூடைகள், பழவகைகள் என பல வகையான பொருட்களை எந்தெந்த ஊரில் எதுஎது குறைந்த விலையில் கிடைக்கிறதோ அவற்றை வாங்கி அடுத்த நகரத்தில் கொண்டுபோய் விற்பனை செய்தனர். திருவாங்கூர் வரை பெரும் சங்கிலி போல் நாடார்களின் மாட்டுவண்டிகள் நூற்றுக்கணக்கில் போவதும் வருவதுமாக இருந்தன. இடைவிடாது உருண்ட வண்டிச் சக்கரங்கள் தேரிக்காட்டிலே இருந்த மக்கள் கூட்டத்தை விருதுபட்டி முதலாய ஐந்து குடியேற்ற ஊர்களின் வணிகத்தோடு இரண்டறக் கலக்கவைத்தது.

பெருநகரமான மதுரையில் புதிதாக வந்த நாடார்கள் தங்களின் வணிகத்தை விஸ்தரித்தனர். அவர்கள் கடைகளில்தான் விதவிதமான பொருட்கள் கிடைத்தன. மாசி வீதியிலும் வெளிவீதியிலும் நாடார்கள் கடைகள் அதிகமாயின.

இந்நிலையில்தான் தெற்குவெளிவீதியில் மிக விஸ்தாரமான வண்டிப்பேட்டையை நாடார்கள் கட்டத்துவங்கினர். இந்தப் பேட்டைக்குள் எவ்வளவு பொருட்களை வேண்டுமானாலும் சேமித்து வைக்கலாம். இரவு நேரங்களில் நூற்றக்கும் மேற்பட்ட வண்டிகளைத் தங்க வைக்கலாம். இது கட்டி முடிக்கப்பட்டால் நகரின் வணிகத்தைத் தீர்மானிக்கும் இடமாக அது மாறும். எனவே இந்தப் பேட்டை கட்டப்படாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் சிலர் இறங்கினர். ஏற்கனவே பிராமணர்களின் பகையைப் போதுமான அளவு நாடார்கள் சம்பாதித்து இருந்ததால் அதைத் தங்களுக்குச் சாதமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டனர். அவர்களின் இந்த எண்ணத்திற்கு ஏற்ற நபராக சேர்மன் சிவானந்தையர் இருந்தார்.

பத்தாண்டுகளுக்கு முன் மூப்பநாடார் மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நுழைந்ததையொட்டிய பிரச்சினையில் தொடரப்பட்ட வழக்கில் கோயில் பூசகர்களின் சார்பில் ஆஜராகி வழக்காடியவர் சிவானந்தையர். அவரின் வாதங்களை அப்படியே ஏற்றுக்கொண்ட நீதிபதி அதையே தனது தீர்ப்பாக்கினார். அதன் பின் மேல் கோர்ட்டுகள் அத்தனையும் மதுரை கோர்ட் தீர்ப்பினையே உறுதிப்படுத்தின. சாஸ்திரங்களை நிலை நிறுத்துவதற்கான வழக்கு எதற்கும் பீஸ் வாங்குவதில்லை என்பதைக் கொள்கையாக வைத்திருந்த சிவானந்தையர் ஆச்சார அனுஷ்டானங்களைக் குலைப்பவர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்தார். நாடார்களின் வியாபார வளர்ச்சி காரணமாக அவர்களின் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றத்தை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விருதுபட்டியில் நாடார்கள் துவங்கிய பள்ளிக்கூடத்திற்கு சைவபானு ஷத்திரியகலாசாலை என்று பெயரிடப்பட்டது அவருக்குப் பெரும் ஆத்திரத்தை மூட்டியது. இது தவிர நாடார்களின் பழைய பேட்டையிலுள்ள கிண்ணறிலிருந்து தண்ணீர் இறைத்துச்செல்லும் அவர்கள் வீட்டுப்பெண்கள் குடத்தைத் தலையில் தூக்கிச் செல்லாமல், மேல் ஜாதிப் பெண்களைப்போல் இடுப்பிலே தூக்கிச் செல்வது பற்றியும்

பலர் அவரிடம் முறையிட்டிருந்தனர். இந்த விவகாரத்தை என்ன செய்யலாம் என்று அவர் யோசித்துக்கொண்டிருந்தபோதுதான் இந்தப் பிரச்சினையும் வந்து சேர்ந்தது.

*

**வ**ழக்கம்போல சேர்மன் சிவானந்தையர் தலைமையில் அன்றைய கமிட்டி கூடியது. புதிய பள்ளிக்கூடத்திற்கு 'இந்து கலாசாலை' என்று பெயர் வைக்க முடிவானது. கலாசாலை பற்றிய விஷயம் பேசப்பட்டபின், நல்லப்ப செட்டியார் நாடார்களின் பேட்டை பிரச்சினையைக் கொண்டுவந்தார். கிருஷ்ணமாச்சாரி நாடார்களின் சாஸ்திர மீறல்கள் பற்றிக் கூறினார். அநேகமாக கமிட்டி உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். எந்த மாதிரியான நடவடிக்கையில் இறங்குவது என்பது பற்றி ஒன்றிரண்டு நாளில் யோசித்து பின் முடிவெடுக்கலாம் என்றார் சிவானந்தையர். அவரே அப்படிச் சொன்னபின் மாற்றுச் சொல்ல அங்கு யாருமில்லை.

ஏனென்றால் சாஸ்திர விரோத விஷயங்களைத் தடுத்து நிறுத்துவதிலும், தேவைப்பட்டால் தடம் தெரியாமல் அழிப்பதிலும் அவரளவிறகுத் தீவிரமானவர்கள் யாருமில்லை. அவரது தந்தை சுப்பு பட்டர் காலத்திலிருந்தே அந்தக் குடும்பம் அப்படி ஒரு பெயரை சம்பாதித்து வைத்திருந்தது. அக்ரஹாரத்தில் எல்லோரும் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவர் நடத்தும் ஸ்கூலுக்கு அனுப்பியபொழுது சுப்பு பட்டர் மட்டும் தனது மகன் சிவானந்தனை திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைத்தார். அக்ரஹாரத்தில் எந்த சாஸ்திர மீறலையும் அனுமதிக்காதவர். அதன் காரணமாகவே மதிப்பு மிக்க மனிதராக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அவரின் திடீர் மரணத்திற்குப் பின் சிவானந்தையரை வளர்த்த அவரது சித்தப்பா நாகு ஐயர் தான் திண்ணைப்பள்ளிக்கூடத்திலிருந்து மாற்றி பசுமலை ஸ்கூலுக்கு அனுப்பி வைத்தார். அங்கே படித்து முடித்துப் பின்னர் வழக்கறிஞர் தொழிலுக்கு வந்த சிவானந்தையர் தனது தந்தை சுப்பு பட்டரின் வழியிலிருந்து துளியும் பிசகாமல் செயல்பட்டார். அவர் நகரின் முன்னணி வழக்கறிஞராக வருவதற்கே இந்த தீவிர சாஸ்திர பின்னணி ஒரு காரணமாக இருந்தது.

பெரியகுளம் ராவ்பகதூர் திம்மப்ப நாயுடுவின் வழக்கில் வெற்றிபெற்ற பொழுதே அவரது பெயரும் புகழும் ஓங்கியது. ஆனால், மூப்ப நாடாருக்கு எதிரான வழக்கில் அவர் பெற்ற வெற்றிதான் மிக அந்தஸ்து மிக்க ஒரு இடத்தை அவருக்கு ஏற்படுத்தியது. அது முடிந்து கொஞ்சகாலத்திற்குப் பின் கோவில் கட்டும் பிரச்சினை அவர் கவனத்திற்கு வந்தது. நகரின் கிழக்குப்பகுதியில் இருந்த சிலர் நல்லதங்காளுக்கு சிலை அடித்து வைத்து வணங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். ஒரு சிறு கோயிலும் எழுப்பினர். ஏறக்குறைய அதே காலத்தில் நகரின் வடமேற்குப்பகுதியில் குஞ்சரத்தம்மாளுக்கு சிலை அடித்து வைத்து வணங்குவதற்கான ஏற்பாடுகளும் நடந்துவந்தன.

குஞ்சரத்தம்மாளின் நினைவு நகரிலுள்ள பெரிய மனிதர்களின் தொண்டையில் சிக்கிய முள்ளாய் இருந்தது. இந்நிலையில் சிலை எடுப்பது என்பது குஞ்சரத்திற்கு ஒரு நிரந்தரத் தன்மையை ஏற்படுத்தி

விடும். அது பெரிய மனிதர்களால் ஜீரணிக்கமுடியாத ஒன்று. எனவே சிவானந்தையரின் தலைமையில் அவர்கள் களத்திலே இறங்கினர். தாசிகுலத்தில் பிறந்த ஒருத்திக்கு சிலை எடுப்பதை சாஸ்திரம் ஏற்காது என்றனர். குஞ்சரம் சொக்கநாதருக்கு பொட்டுக் கட்டப்பட்டவள்; சொக்கர் பட்டணத்தில் அவருக்கு பொட்டுக் கட்டப்பட்டதாசிக்கு சிலை வைத்தால் நகரத்திற்கே அழிவு வந்துசேரும். தீராத பாவம் இம் மதுரையம்பதியைப் பீடிக்கும். எனவே, இம்முயற்சியை ஏற்கமுடியாது என்றனர். சிற்ப ஆசாரிகளுக்கு மறைமுகமாகப் பணத்தைக்கொடுத்து, சிலை அடித்துத் தரமுடியாது என்று சொல்ல வைத்தனர். அம் முயற்சியில் இறங்கிய ஒருவரின் வீட்டில் நிகழ்ந்த மரணம் எல்லோரையும் அம் முயற்சியில் இருந்து பின்வாங்க வைத்தது.

அத்துடன் நிற்காமல் அடுத்த கட்டத்துக்கும் அவர்களே போனார்கள். கதைப்பாடலைப் பாடுவதற்காக நகரத்துக்கு வரும் பெண்களின் நாக்குகளிலிருந்து குஞ்சரத்தின் கதையை உருவியெடுத்தனர். கூடுதல் தானியத்தைக் கொடுத்து குஞ்சரத்தின் பாடல்களைப் பாடக்கூடாது என்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவளின் பாடலைப் பாடாமலே அவர்கள் அதிகமான தானியத்தைப் பெற்றுத் திரும்பினர். சில ஆண்டுகளுக்குப்பின் மடியில் தானியம் கனக்கத் திரும்பிய அவர்களின் நினைவுகளிலிருந்து பாடல் மறையத் துவங்கியது. குஞ்சரம் கடைசியாக மறையும் பொழுதும் தானியத்தை அள்ளி வழங்கிவிட்டுத்தான் போனாள்.

இவை எல்லாவற்றிலும் வக்கீல் சிவானந்தையரின் மூளையே முக்கியப் பங்காற்றியது. இவ்வளவு அனுபவங்களைப் பெற்று அவரே நாடார் பேட்டை விஷயத்தில் ஒன்றிரண்டு நாள் பொறுத்திருந்து முடிவுக்கு வருவோம் என்று சொன்னபோது மற்றவர்கள் யாரும் எதுவும் சொல்ல முடியவில்லை. நல்லப்ப செட்டியார்தான் மிக வேகமாக இருந்தார். ஆனால், அவருக்கு அதை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை.

*

**ஒ**ரு வாரம் கழித்து ஒரு நாள் மாலையில் தெற்கு வெளிவீதியின் காவக்காரன் பம்பையனுக்கு வடக்கு ஆவணி வீதியின் காவக்காரன் பூச்சியும் பொன்மேனியில் இருக்கும் சேர்மன் சிவானந்தையரின் தோப்புக்கு வந்தனர். இரண்டாம் கச்சேரியின் இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளையும் சிவானந்தையரும் அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். ஐயர் தங்களை ஏன் வரச்சொல்லியிருக்கிறார் என்ற பலத்தயோசனையுடன் தான் அவர்கள் இருவரும் வந்தனர். ஏற்கனவே இப்படி வரச்சொல்லி, வந்துவிட்டு போன அனுபவம் பூச்சிக்கு இருந்தது. அதையெல்லாம் வைத்து யோசித்தபடிதான் வந்துகொண்டிருந்தனர்.

ஒளியின் கீற்றுகள் எதுவும் தென்னோலைகளை ஊடுருவிக் கீழே வரமுடியாத அளவு அடர்ந்த தென்னந்தோப்பின் நடுவில் நாற்காலி போட்டு இருவரும் உட்கார்ந்திருந்தனர். கால் அமுங்கும் ஈரப்பதத்தோடு மண் இருந்தது. சாய்வு நாற்காலியின் கால்கள் பேச்சு ஆரம்பிக்கும் வரை கொஞ்சம்தான் மண்ணுக்குள் புதைந்திருந்தது. தோப்பின் வெளியே கூட்டுவண்டிகள் இரண்டும் நின்றிருந்தன. தோட்டவேலையாட்கள் வண்டிக்காரர்களிடம் பேசியவாறு நின்றுகொண்டிருந்தனர். நாற்காலியில் உட்கார்ந்தபடியே எட்டிப்பார்த்த இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை

அவர்கள் இருவரும் வருவதை சேர்மனிடம் சொன்னார்.

சிவானந்தையர் முன்புபோல இல்லை. அனுபவமும் பக்குவமும் ஏறியிருக்கிறது. அதுவும் காவக்காரர்களின் விஷயத்தில் இன்னும் அதிகம் ஜாக்கிரதை உணர்வு தேவை என்பது அவர் பலமுறை உணர்ந்திருக்கிறார். ஆனால், அதையும் மீறி கோபத்தையும் எரிச்சலையும் அவர்முகம் காட்டியபடிதான் இருந்தது. அவர்கள் வந்தவுடன் சேர்மன் சிவானந்தையர் நேரடியாக விஷயத்தைக் கூறினார். 'தெற்கு வெளிவீதியில் நாடார்கள் காட்டுகிற பேட்டைக்கு தாதனூர்க்காரர்கள் காவல் ஏற்கக்கூடாது' என்றார்.

அதற்கும் பம்பையன் 'காவ ஏத்துக்கிட்டு பாதிக் கூலி வாங்கிட்டோமே' என்றான்.

'அதனால என்ன, இனி பாக்கமுடியாதுன்னு சொல்லுங்க' என்றார் சேர்மன்.

'அது எப்படி? காவ பாக்குறதுதான எங்க வேலை. அத செய்யாம எப்படி இருக்குறது' என்று சொன்னவன் ராஜரத்தினம் பிள்ளையையும் முறைத்தபடி பார்த்து 'நகரத்தை ஒட்டி இருக்குற எடத்தை நாங்க காவபாக்கலைன்னா, அந்த எடுத்துல களவு போறது மட்டுமல்ல. நாளைக்கு களவாணிக மருதைக்குள்ள நுழையவும் தோதா போயிரும்' என்பதையும் கூறினான்.

'நகரத்துக்குள்ள உங்க காவலை மீறி யாரும் உள்ளே நுழைய முடியாது. அந்தப் பேட்டைக்கு மட்டும் நீங்க காவ கொடுக்காம இருக்கணும்' என்றார் ராஜரத்தினம் பிள்ளை.

ஏற்கனவே சிவானந்தையர் பற்றி காவக்காரர்களுக்கு இருந்த கருத்து அவர் சொல்லுவதை ஊன்றி நின்று மறுக்க வைத்தது. பேச்சின் ஒரு கட்டத்தில். 'எங்க பேச்ச கேக்கலைன்னா உங்க பாடு கஷ்டந்தான்' என்று சிவானந்தையர் வெளிப்படையாகவே தெரிவித்தார். இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை அந்த அதிரடியை எதிர்பார்க்கவில்லை. ஏன் சேர்மன் இவ்வளவு கோபமாக வார்த்தைகளை விடுகிறார் என்று யோசித்தவாறு தனது பேச்சை சுருக்கிக்கொண்டார். சிவானந்தையரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு பம்மையனும் பூச்சியும் எழுந்து நடந்தபொழுது தென்னோலைகளின் வழியே ஒளிக்கீற்றுகள் நிலமெங்கும் இறங்கியபடி இருந்தன. சிவானந்தையர் உட்கார்ந்திருந்த நாற்காலியின் கால்கள் அரையடிக்கு மண்ணுக்குள் புதைந்திருந்தன. மனக்கட்டுப்பாட்டையும் மீறி அவரது உடல் துடித்தபடி இருந்தது. பண்டாரத்தைப் போல மகா சன்னிதானம் போனபொழுது ஏற்பட்ட அவமானம் உடல் முழுவதும் அப்படியே தேங்கி நின்றதுபோல் இருந்தது. தான் என்ன வார்த்தையைப் பயன்படுத்துகிறோம் என்பதை உணராதவராகவே அவர் பேசினார். அந்த வார்த்தைகள் அப்படியே ஆலமரத்தடிக்கு வந்துசேர்ந்தன.

இதுபோன்ற விஷயங்களில் சிவானந்தையர் தலையிடுவது அவரது மகன் மகேஸ்வரனுக்கு பிடிக்கவில்லை. சேர்மன் பதவியில் இருந்து கொண்டு நகரத்தில் நிறையப் பணிகளைச் செய்யலாம். ஆனால், அதையெல்லாம் விட்டுவிட்டு பழைய சாஸ்திரங்களை பிடித்துக்கொண்டு அலைவதுபோல் இருக்கிறது உங்கள் போக்கு என்று தந்தையிடம் தெரிவித்தான். நவீன கல்வியும், மெட்ராஸ் நகரத்தின் ஐந்தாண்டு கால

வாழ்க்கையும் மகேஸ்வரனை உருமாற்றி வைத்திருந்தது. தான் நினைத்ததைப்போலத் தனது பையன் இல்லை என்று அவன் வந்த சிலநாட்களிலேயே சிவானந்தையர் தெரிந்துகொண்டார்.

வந்து ஒரு வாரமோ பத்து நாளோ இருந்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்தில்தான் மகேஸ்வரன் வந்தான். ஆனால், சாஸ்திரியாரின் மரணத்திற்குப் பின் உள்ளறையிலேயே ஒடுங்கிப்போன தெய்வானையைப் பார்த்தபின் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளிடம் சில வார்த்தைகள் ஆறுதலாகச் சொல்லிவிட்டுத் தப்பிவிடலாம் என நினைத்து வந்தவன்தான் அவன். ஆனால், அவள் கோலம் அவனை நிலைகுலைய வைத்தது. அவள் கனவுகளையும் ஆசைகளையும் நூறு முறையேனும் தனது காதுகளால் கேட்டு வளர்ந்தவன்தான் மகேஸ்வரன்.தானும் அதே போன்ற கனவுகளை வளர்க்க வேண்டுமென்று முயற்சித்திருக்கிறான். அப்படி உருவாகி வளர்ந்த ஆசையொன்றினைத்தான், ஐந்தாண்டு காலம் மெட்ராஸிலே தங்கிப்படித்து நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறான். ஆனால் அவள் ஆசைகளைப் பற்றி அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதையெல்லாம் புதைத்த மேட்டில்தான் சிவானந்தையர் கட்டில் போட்டுப் படுத்திருந்தார். அவருக்கு நகரத்தில் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. சாஸ்திரப் பெருமைகளைத் தூக்கிச் சுமக்கிற அவரை என்ன நினைத்து அவள் சுமந்து கொண்டிருக்கிறாள் என அவருக்குப் புரியவில்லை.

அவளது தாய் இறந்தபொழுதே அவளது நம்பிக்கைகள் எல்லாம் இருண்டுவிட்டன. கைப்பொருளற்று இருந்த தந்தை அவளை சிவானந்தையருக்குத் தாரை வார்த்தபோது அவளது கனவுகள் கருகின. அதற்குப் பின்பும் வாழ்வதற்கான சில விஷயங்கள் இருக்கின்றன என அவள் நினைத்தாள். ஆனால், நாட்கள் ஆக ஆக அப்படி எதுவும் இல்லையென்பது தெளிவாகிவிட்டது. அவள் உள் ஒடுங்கி அமைதியானாள். தந்தையை இழந்த துக்கத்தில் இருப்பதாக மற்றவர்கள் பேசிக்கொண்டனர். ஆனால், அவள் தன்னையே இழந்த துக்கத்திலிருந்து மீள முடியாதவளாக இருந்தாள்.

மகேஸ்வரன் அவளிடம் கொஞ்சம் கொஞ்சமாகப் பேச ஆரம்பித்தான். பாலியத்தின் பேருலகம் அவர்கள் இருவருக்குள்ளும் இருந்தது. சிறிது சிறிதாக அதை நோக்கி அவளை அழைத்துவர முயற்சித்தான். அவளோ எதை நோக்கியும் நகரத் தயாராக இல்லை. நுகத்தடி அழுத்திக்கன்றிப்போன மாட்டின் கழுத்துபோல அவளது மனம் இருந்தது. அவளை சவாலாக ஏற்று மகேஸ்வரன் செயல்பட ஆரம்பித்தான். பல நாட்களுக்குப் பின் சத்தம் கேட்கும் அளவு ஒரு சிரிப்பொலி அந்த அறைக்குள் இருந்து கேட்டது.

தெருவையே நிறைத்துப் பெரும் கட்டங்களைப் போட்டு அவரை இலையையும் துவரை இலையையும் அதற்குள் வைத்து பாலியத்தில் ஆடிய கட்டங்களில் இன்று கனவுகளை வைத்து வாலிபனாய் நின்று வெளியிலிருந்து இரண்டு கைகளையும் அசைத்து அவளை வரச்சொன்னான். அழகிய கண்களோடு சிலையாய் எதிர்ப்புறத்தில் அவள் நின்றுகொண்டிருந்தாள். கட்டங்களின் மந்திரவாசனை அவளது நாசியில் ஏறியபடி இருந்தது. அவளது வலது கைப்பெருவிரல் பாவாடையைத் தூக்கி

மெல்ல இடுப்பில் செருகியது.

*

# 84

**நா**டார் பேட்டையில் வரவு-செலவு கணக்குப் பார்க்க பூவலிங்கம் பிள்ளை என்கிற கணக்கர் ஒருவரை விருதுபட்டியிலிருந்து கூட்டி வந்து வேலைக்கு வைத்திருந்தனர். பேட்டைக்கு வருகின்ற வண்டிகள், வந்திறங்கும் பொருட்கள் போன்றவற்றைக் கணக்கிட்டுக்கொள்வதும், வருகின்ற ஒவ்வொரு வண்டியும் மகமைக்குத் தரவேண்டிய தொகையை வசூல் செய்து முறையாகக் கணக்கெழுதி பத்து தினங்களுக்கு ஒருமுறை நடக்கும் மகமைக் கூட்டத்தில் ஒப்படைக்க வேண்டியதும் அவரது வேலை. பெரிய அளவிற்கான தொகையினைத் தெளிவாகக் கணக்குப்பார்த்து எழுதிப் பராமரிக்க அனுபவம் உள்ளவர்கள் தங்களுக்குள் யாரும் இல்லாததால் பேட்டைக்குள் பிள்ளையை உட்கார வைத்தார்கள். நாடார்களின் வியாபாரம் எவ்வளவு வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதையும், பொதுவில் உள்ள மகமை நிதி எவ்வளவு உள்ளதென்பதையும் நகரில் உள்ள முக்கியஸ்தர்கள் பூவலிங்கம் பிள்ளை மூலமே அவ்வப்போது அறிந்துவந்தனர்.

இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை, சேர்மன் சிவானந்தையர் வழிகாட்டுதலில் மிகத் தெளிவானதொரு திட்டம் தயாரானது. திருப்புவனம் பகுதியிலிருந்த ஒரு கூட்டத்தாரிடம் நல்ல கூலிக்கு ஒப்பந்தம் போட்டனர். மதுரை நாடார்கள் தங்களின் பொருளாதாரத்தில் மீளமுடியாததைப் போன்றதொரு சேதத்தை ஏற்படுத்தத் திட்டம் தயாரானது. அதனடிப்படையில் மிக அதிகமான வண்டிகள் என்றைக்கு வந்து பேட்டையில் தங்க வைக்கப்படுகிறதோ அன்று தாக்குதலை நடத்துவது, கொண்டுவரப்பட்ட பொருட்களை முடிந்தளவு கொள்ளையடிப்பது, மீதியை நெருப்பை வைத்து எரித்துவிடுவது என்று முடிவானது. அதிகமான வண்டிகள் வருவதற்கு முதல் நாளோ அல்லது அன்று காலையோ தகவல் தெரிவிக்கப்படும் என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தனர்.

திருவிழாக்காலம் வர இருந்தது. மக்கள் விழாவை எதிர்பார்த்து

வேலைகளைச் செய்ய ஆரம்பித்தனர். நகரின் முக்கியஸ்தர்கள் பிள்ளையின் தகவலை எதிர்பார்த்திருந்தனர். இரண்டாவது பேட்டைகட்ட ஆரம்பித்தபொழுது இருந்த கடுங்கோபம் இப்பொழுது ஏன் இல்லை, இவ்வளவு அமைதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? என்று சந்தேகப்பட ஆரம்பித்த நேமிநாத செட்டி கொஞ்சம் கொஞ்சமாக விஷயங்களைச் சேகரித்தார். திருப்புவனம் கொரண்டிக்காலனிடம் சேர்மனும் இன்ஸ்பெக்டரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த தகவல் அவருக்கு கிடைத்தது. ஆனால் என்ன பேசினார்கள் என்று கண்டுபிடிக்கமுடியவில்லை. கடைசியில் சிவானந்தையரின் வண்டிக்காரன் மாரியப்பனுக்கு இரண்டுநாள் வயிறு முட்ட சாராயம் குடிக்க காசு கொடுத்துத் தான் விஷயத்தை கறந்தார்.

நேமிநாத செட்டியார் மூலம் செய்தி கருப்பு கோயில் ஆலமரத்தடிக்கு வந்தசேர்ந்தது. எதிர் நடவடிக்கைக்கான உத்திகள் தயாராயின. நேமிநாத செட்டியார் நாடார்களில் முக்கியமான வர்களை வரச்சொல்லிப் பேசினார். தாதனூர்க்காரர்களின் திட்டத்தின்படி காரியமாற்ற அவர்கள் தீவிரமாக இருந்தனர்.

சுமார் ஐம்பது வண்டிகள் முழுமையான சரக்குபாரத்துடன் இன்றிரவு பேட்டைக்கு வந்து சேரும் என்ற தகவல் பூவலிங்கம் பிள்ளையின் மூலம் திருப்புவனம் பக்கம் போய்ச் சேர்ந்தது. சிவானந்தையரும் பிள்ளையும் முக்கியஸ்தர்களும் அன்றைய இரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

தாதனூர்க்காரர்கள் அன்று மதியத்திற்கெல்லாம் திருமங்கலம் போய்விட்டனர். விருதுபட்டியிலிருந்து வண்டிகள் சரக்குகளுடன் திருமங்கலம் பேட்டைக்குள் உச்சிப்பொழுதில் நுழைந்தன. பேட்டையின் கதவுகளைப் பூட்டிவிட்டு வண்டியில் இருந்த சரக்குகள் முழுவதையும் இறக்கினர். வண்டியில் சரக்குகள் இருப்பது போன்ற தோற்றத்திற்காக சாக்குமூடைகளையும் வைக்கோல் கட்டுகளையும் பெரிய பெரிய கூடைகளையும் போட்டுப் பொத்தி வைத்தனர். ஒவ்வொரு வண்டியிலும் ஒரு தாதனூர்க்காரன் ஏறி உட்கார்ந்தான். விஷயத்தைப் புரிந்துகொண்ட சில வண்டிக்காரர்கள் பயந்துகொண்டு நாங்கள் வரமுடியாது என்று மறுத்தபொழுது அவர்களை இறக்கிவிட்டு நாடார்களே வண்டிகளை ஓட்டத் தயாராயினர். நாடார் இளவட்டங்கள் நாலுபேர் ஆயுதங்களுடன் கிளம்பினர். வண்டிகள் புறப்படுமுன் நல்ல மழை இறங்கியது; மாலை வரை கொட்டித் தீர்த்தது. ஏறக்குறைய முகம் தெரியாத இருட்டில்தான் வண்டிகள் புறப்பட்டன.

அடர்ந்த இருள் நிலைகொண்டு வெகுநேரம் ஆனபின் வண்டிகள் மதுரைப் பேட்டைக்குள் நுழைந்தன. வண்டிகள் வந்துவிட்ட செய்தி உரியவர்களுக்குப் போய்ச்சேர்ந்தது. எல்லா வண்டிகளும் பேட்டைக்குள் நுழைந்தவுடன் பேட்டைக் கதவுகள் சாத்தப்பட்டன. மழையால் நகரம் குளிரெடுத்துக் கிடந்தது. வீதிகளில் எல்லாம் தண்ணீர் தேங்கி நின்றது. மெல்லிய குளிர்காற்று வீசி உடலை நடுக்கமுறச் செய்தது. பொழுது நள்ளிரவைத் தொட்டது. நிறைந்தகுளம் போல் நகரம் அமைதியில் மிதந்தது. பேட்டைக்குள் இருந்து மட்டும் மாடுகளின் கழுத்து மணியோசை காற்றில் மிதந்தபடி இருந்தது. தெருவிளக்கின் வெளிச்சம் மண்ணில் தேங்கியிருந்த நீரில் வண்ணங்களைக் கலக்கி வைத்திருந்தது. காற்று அசைவற்று நின்றது. இலைகளின் நுனியில் நீர்த்துளிகள் தொங்கியபடி

தயங்கின. தவளைகளின் சத்தம் இருளின் திசையெல்லாம் பந்துபோல் உருண்டு வந்துகொண்டிருந்தது.

இருளில் நடப்பது வேறு, இருளுக்குள் நடப்பது வேறு. இருளில் நடந்தால் அதே இருளில் நடந்துவருகின்ற மற்றவர்களால் பார்க்க முடியும். ஆனால், இருளுக்குள் நடப்பதென்பது இருளில் நடந்து வருபவர்களும் அறியமுடியாதபடி நடப்பது. தாதனூர்க்காரர்கள் அன்று இருளுக்குள் நடந்துகொண்டிருந்தனர். மதுரையில் இருளுக்குள் எத்தனை மடிப்புகள் இருக்கும் என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்கள் மடிப்பின் இடைவெளியில் நடந்து தங்குமிடம் நோக்கிப் போயினர். ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் கோயில் செக்கடி, மைனா தெப்பக்குளம் என எல்லா இடத்திற்கும் காவலக்காரர்கள் வந்து சேர்ந்துவிட்டனர் என்ற தகவல் போனபடி இருந்தது. தகவலைப் பெற்றவர்கள் அதனை மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டு நள்ளிரவுக்குப்பின் வைகைக்குள் இருந்து தென்பகுதியில் ஏறி இடையர் காட்டுப்பகுதியின் வழியே மதுரையின் தெற்குவெளிவீதிக்குள் நுழைந்தனர்.

கும்மிருட்டு சூழ்ந்திருந்தது. முதலில் இருவரை நோட்டம் பாத்துவரச் சொல்லி அனுப்பினர். பார்த்து வந்தவர்கள் பேட்டையின் கதவுகள் தாழிடப்படாமல் வெறுமனே சாத்தப்பட்டுள்ளதாகவும் உள்ளே மாட்டுவண்டிகள் சரக்குகளுடன் கட்டைகள் முட்டுக்கொடுத்த படி நின்றுகொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். கையில் ஆயுதத்துடன் இருந்த அவர்கள் ஓசைப்படாமல் பேட்டையின் வாயிருகே வந்து ஒரு கதவை மட்டும் ஆள் நுழையுமளவு திறந்து ஒவ்வொருவராக உள்ளே போயினர்.

போனவர்கள் எல்லாம் அப்படியே கதவை ஒட்டிய சுவர் ஓரமாக வரிசையாக நின்றனர். சிறு ஓசை கூட இல்லாமல் சுவர் ஓரமாகவே எறும்புகள் ஊர்வதைப்போல அவர்கள் வந்து நின்றவுடன் கதவின் இடதுபக்க ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மாட்டுவண்டிகள் இருந்து ‘பதினாறு பேரு வந்திருக்காங்கப்போ...ய்’ என்று ஒரு குரல் இருளைக் கிழித்து எறிந்தது.

அந்தக் கணத்திலேயே பேட்டையின் சனி மூலையிலிருந்து ‘இதுக்கு என்ன வெண்ணெய்க்குடா இத்தன பேர கூட்டி வந்தீங்க?’ என்றது ஒரு குரல்.

வந்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்து அங்குமிங்குமாகக் கண் களால் நோட்டமிட்டனர். உருவ அசைவுகள் எதுவும் தெரியவில்லை. வண்டிகள் எங்கும் ஆட்கள் இருப்பதற்கான அறிகுறிகள் தெரிந்தது. எத்தனை பேர் எங்கெங்கு இருக்கிறார்கள் என்பதை ஊகிக்க முடியாமல் திணறியபடி இருந்தனர். ‘உள்ள எறங்கிருவமாப்பா...’ என்றான் ஒருவன். ‘பொறுடா...மடக்கூதி’ என்றான் இன்னொருவன். பேட்டை முழுவதும் நிறுத்தப்பட்டிருந்த வண்டிகளின் கீழ் மாடுகள் அசைபோட்டபடி கழுத்தை ஆட்டி ஓசை எழுப்பிக்கொண்டேயிருந்தன. மணியோசை நிறைந்த அந்த இருள் மந்தைக்கு நடுவில் ஒரு நெருப்புப் பந்தம் ஏற்றப்பட்டது. முரட்டுச் சாக்குகளை உடலின் மேல் போர்த்தியபடி கையில் கருங்காலிக்கம்பைப் பிடித்துக்கொண்டிருந்த ஒரு மனிதன் வண்டிக்கட்டையின் மேலேறி

நின்றான். சடை முடி தோள் வரை தொங்கிக் கொண்டிருந்தது. ‘ஏலே கொரன்டிக்காலா, தெப்பக்குளத்துல வச்சு ஓங்கெண்டங்கால் நரம்ப அத்தது பத்தாதுன்னு வந்துருக்கயா...’

குரலை வைத்து ‘வீரண பெரியாம்பிளடா...’ என்றான் சுவரின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன். கதவின் ஒரத்தில் இருந்தவர்கள் மெல்ல வெளியேறத் தயாராகினர். கதவு அதே அளவு திறந்தே இருந்தது.

*

**அ**ன்றிரவு முழுவதும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த முக்கியஸ்தர்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. பெரும் கொள்ளை நடந்ததைப் போலவோ, தீயிட்டுக் கொளுத்தப்பட்டதைப் போலவோ அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை. விடிய விடிய எதிர்பார்த்தபடியே இருந்தனர். பின்னிருளிலும் ஒரு மழை இறங்கி அடங்கியிருந்தது. அதிகாலையில் வழக்கம்போல் வண்டியோட்டி குதிரையைப் பூட்டியபடி சிவானந்தையரின் வீட்டிற்கு முன் வந்து நின்று கொண்டிருந்தான். முகமறியா அந்தக் காலை வெளிச்சத்தில் புறப்பட்டு பொன்மேனியில் இருக்கும் தனது தோப்பிற்குப் போய் காலை வேலைகளையெல்லாம் முடித்தபின் வீட்டிற்கு வருவது சிவானந்தையரின் வழக்கம். ஆனால், அன்று வண்டியை நேராக இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை வீட்டிற்குப் போகச்சொன்னார். வண்டி அங்கே போய் நின்றபோது துளசிராம் நாயுடு இன்ஸ்பெக்டருடன் பேசியபடி நின்றுகொண்டிருந்தார். எந்தத் தகவலும் தங்களுக்கு வரவில்லை என்று இருவரும் சொன்னார்கள். காலையில் ஒருவனை அனுப்பி பேட்டையைப் பார்த்து வரச்சொன்னதாகவும் பேட்டைக் கதவுகள் வழக்கம் போல் பூட்டப்பட்டிருப்பதாகவும் அவன் சொன்னபின் பெருங்குழப்பத்திற்கு ஆளாயினர். நீண்ட நேரமாக அவர்கள் மூவரும் தெருவில் நின்றே பேசிக்கொண்டிருந்தனர்.

பொழுது நன்றாக விடிய ஆரம்பித்தது. நல்லப்ப செட்டியார் நான்கைந்து பேருடன் பரபரப்பாக வந்துகொண்டிருந்தது. அவர் வரும் வேகத்தை வைத்தே ஏதோ பிரச்சினை என்பதை அவர்களால் உணரமுடிந்தது. அவர் வந்து விஷயத்தைச் சொன்னவுடன் அவர்கள் வண்டியில் ஏறி வேகமாக சின்னக்கடை வீதிக்குப் போனார்கள். அங்கே நல்லப்பசெட்டியாரின் கடை முன்னே பத்து இருபது பேர் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். அவர்களை யெல்லாம் விலக்கி சிவானந்தையர் முதல் ஆளாய்ப் போய்ப் பார்த்தார். மற்றவர்களும் வந்து துண்டை வைத்து மூக்கைப் பொத்தியபடி பார்த்தனர். கருவேல மரக்கட் டையைப்போல கருத்து விறைத்த மனிதக்கால் ஒன்று வெட்டித் துண்டாகப் போடப்பட்டிருந்தது. அது யாருடைய கால் என்பதை புரிந்துகொள்வதில் அவர்களுக்குச் சிரமம் ஏதுமில்லை.

நன்றாகப் பொழுது விடிந்தவுடன் பேட்டையின் கதவுகள் திறக்கப்பட்டன. வண்டிகள் எல்லாம் பாரங்கள் ஏதும் ஏற்றாமல் வெறும் வண்டிகளாகத் திருமங்கலத்தை நோக்கிப் போக ஆரம்பித்தன. முதல் கச்சேரியின் போலீஸார் சின்னக்கடை வீதிக்கு வந்து பார்த்து வழக்கு ஒன்றைப் பதிவுசெய்துகொண்டனர். வெட்டுப்பட்டகால், பேச்சினூடே மதுரையை சுற்றி வந்து கொண்டிருந்தது. நகரில் யாருடைய காலும்

வெட்டுப்படவில்லை என்பது தெரிந்தது. அப்படியென்றால் வெட்டுப்பட்டது யாருடைய கால் என மக்கள் பரபரப்பாகப் பேசியபடி இருந்தனர். ஒற்றைக்காலின் கதையை மக்கள் ஆளுக்கொன்றாய் பேசினர். நல்லப்ப செட்டியாரின் கடைக்கு முன்னால் அது கிடந்ததுதான் முக்கியச் செய்தியாக இருந்தது. நல்லப்ப செட்டியாருடன் இப்பொழுது மூன்றாவது கால் ஒன்று ஒட்டிக்கொண்டது. 'இதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. இது ஏன் இங்கே கிடக்கிறது என்று தெரியவில்லை' என அவர் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், வெட்டப்பட்ட கால் தனக்கான உடலின் கதை சரியாக பொருந்தும் வரை நகருக்குள் உலவிக்கொண்டேயிருந்தது. நல்லப்ப செட்டியார் உடலின் சுதை தேடி அலைந்தபடி இருந்தார். ஆனால், அவர் சொன்ன எல்லாக் கதையிலும் ஒட்டாமல் கால் துருத்திக்கொண்டேயிருந்தது. நடு மத்தியானத்திற்கு பின் நாடார் பேட்டையிலிருந்து கசிந்து வந்த கதை ஒன்றில்தான் வெட்டப்பட்ட கால் கச்சிதமாய் பொருந்தியது. அது மட்டுமல்ல, அது ஏன் நல்லப்ப செட்டியாரின் கடைக்கு முன்னால் கிடந்தது என்பதும் விளங்கியது.

பொருந்திய கதை தனது காலைக் கவ்வி இழுத்துக்கொண்டு போனது. நகரவாசிகள் யாரும் எதுவும் சொல்லவில்லை. அதனுடைய காலினை அது இழுத்துக்கொண்டு போவதைப் பற்றி யார் என்ன சொல்லப்போகிறார்கள்? கதை ஒற்றைக்காலில் நடந்து வெட்டுப்படாத காலைத் தேடி விருதுபட்டிக்குப் போய்க் கொண்டிருந்தது. அது வெட்டுப்படாத கால் என எப்படி முடிவு செய்வதென்றும் தெரியவில்லை.

நகரில் உள்ள சிலர் திமிர் எடுத்து தேவையில்லாத வேலையில் இறங்கியிருப்பதை மக்கள் பலரும் பேச ஆரம்பித்தனர். நல்லப்ப செட்டியார் தனக்கு எதிராக யாரோ சதி செய்வதாக ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்திருந்தார். முதல் கச்சேரியின் போலீசார் காலின் கதையைத் தெரிந்துகொண்டபின் குறிப்பு ஒன்றை எழுதி கலெக்டருக்கு அனுப்பினார்.

திருவிழாக் காலத்துக்கான சரக்குகள் எல்லாம் அறுபது மாட்டு வண்டிகளில் அன்று மாலையில் பேட்டைக்குள் வந்து இறங்கின. அதற்கு முன் காலையிலிருந்தே நாடார் பெண்கள் கிணற்றில் தண்ணீர் எடுத்து வந்து பேட்டைக்குள் இரண்டு பக்கமும் இருந்த திண்ணையைத் தண்ணீர் ஊற்றி அலசிவிட்டனர். பலரும் பார்க்கும் வண்ணம் இடுப்பு கன்றிப் போகும் அளவு மாறி மாறி பெரிய குடங்களில் தண்ணீர் தூக்கி வந்து திண்ணை முழுவதும் தேய்த்துக்கழுவினர்.

*

**அ**ன்று முன்னிரவிலும் மழை பெய்து ஓய்ந்திருந்தது. காவக்காரர்களில் சிலர் காவல் வீதிகளுக்குப் போய்விட்டு வேகமாக ராமாயணச் சாவடிக்கு வந்து சேர்ந்தனர். இருட்டில் நகரம் மூழ்கிக் கிடந்தது. ஒச்சு, பூச்சி, பம்மையன், ஆங்கன் உள்ளிட்ட ஆறு பேர் மீண்டும் வீதிகளுக்குள் இறங்கினர். நீண்டு கிடந்த மேலமாசி வீதியில் மூன்று தெருவிளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. பனிக்கட்டி உருகுவதைப்போல அந்த விளக்கின் கூண்டுக்குள்ளியிருந்து மஞ்சள் நிற ஒளி உருகி வழிந்துகொண்டிருந்தது. தளவாய் சந்து முக்கில் ஒக்கிடாமல் கிடந்த உடைந்து சிறு தேரைச் சுற்றி இருள் தேனீக்களைப் போல

மொய்த்துக்கிடந்தது. நாய்கள் இங்கும் அங்குமிங்குமாக குரைப்பதும், தவளைச் சத்தம் கேட்பதுமாக இருந்தது. ஓசையை விழுங்கிய அவர்களது பாதங்கள் மாசிவீதியின் வழியாக சிவானந்தையர் அக்ரஹாரத்தின் கொல்லைப்புறத் தெருவிற்குள் நுழைந்தன. ஆங்கன்தான் மேலமாசி வீதியின் காவல். சிவானந்தையர் வீட்டை முன்புறமிருந்தும் கொல்லைப்புறமிருந்தும் பலமுறை பார்த்து கண்களால் அளந்து வைத்திருப்பவன். எனவே, அவன் பூச்சியின் தோள்பட்டையின் மீது ஏறி வெளிப்புறச் சுவரைப் பற்றியபடி நின்றான். கைகளால் சுவரின் மேல்புறத்தைப் பிடிக்கமுடியவில்லை. உடன் வந்த இருவரும் அவனது பாதங்களை இன்னும் உயரே தூக்கிக் கொடுத்தனர். எவ்வி சுவரின் விளிம்பைப் பிடித்தவன் பல்லி போல் ஒட்டியவாறு மேலே ஏறினான். சுவரின் மேல் ஊர்ந்துபோய் உள்ளுக்குள் இருந்த மரமொன்றின் கிளையைப் பிடித்து இறங்கினான்.

நிலைமையைப் பார்த்துவந்து கொல்லைப்புறக் கதவைத் திறக்கலாம் என யோசித்து அவன் சுவர் ஓரமாகவே நடந்துவந்து திண்ணையில் ஏறினான். கதவின் மேல் கையை வைத்து குழந்தைக்கு நீவி விடுவதைப்போல விரல்களால் மெல்ல இழுத்தான். கதவும் ஓசையை உள்ளிழுத்தபடி விலகி இடங்கொடுத்தது. கதவு தாழிடப்படாமல் இருந்தது பெரும் ஆச்சரியம். ஆனாலும் அந்தக் குறுகிய இடைவெளியில் நின்ற கோலத்தில் உடலைப் பக்குவமாய் உள்ளே திணித்து அப்படியே சுவர் ஓரமாகவே நகர்ந்தான். தட்டுமுட்டுச் சாமான்கள் அடுக்கப்பட்டிருந்த அலமாரியின் ஓரத்தில் வந்து நின்றான். அது அடுப்படி என்று வாசனையால் அறிந்தான். உள் அறையின் விளக்கு மாடத்தில் சிறு விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. இருள் கலந்த மஞ்சள் நிறம் அறை முழுவதும் நிரம்பி இருந்தது. எதிரில் இருந்த ஜன்னலின் வழியே விசாலமான அறையைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

நிழலாய் இரு உருவங்கள் தெரிந்தன. உள் அறையில் இருந்து தழுவியபடி கதவின் ஓரமாகவே அடுப்பங்கரைக்கு இருவரும் வந்து சேர்ந்தனர். உணர்ச்சிகள் மோன ஒலியாகித் துடிக்கத் துடிக்க அறுபட்டு விழுந்துகொண்டேயிருந்தன. தேகங்கள் ஒன்றுக்குள் ஒன்று இறுகியபடி இருந்தன. அவனின் அடர்ந்த தலை முடிக்குள் விரலைச்சொருகி இறுக்கி அணைத்தபடி இருந்த அவளின் தவிப்பு அலையலையாய் அறை முழுவதும் நிரம்பியது. தவிப்பின் அனலில் உருகிய சாறை ஒருவர் மாற்றி ஒருவர் பருகிக்கொண்டிருந்தனர். சிறு மஞ்சள் வெளிச்சத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த வெளிர் தேகங்கள் தரையிலே சரிந்தன. தொட்டுவிடும் தூரத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த காட்சியால் உறைந்து போயிருந்த ஆங்கனின் காலடியில் அவர்கள் இப்போது படுத்திருந்தனர். பறவை சிறகை விரிப்பதைப் போல அவள் கால்கள் படர்ந்தன.

கலவிக்கு சாட்சியாக களவு குத்துக்காலிட்டு நின்றது. ஆங்கனின் முதுகு சுவரை உரசியபடி மேலே நிமிர்ந்தது. கால் பெருவிரல்கள் மட்டும் தரையில் ஊன்றி நின்றன. அம்பு குத்தி நிற்பதைப்போல உடலை இரண்டு பெரு விரல்களாலும் குத்தி நிறுத்தியிருந்தான். அவளின் வலதுகால் ஆங்கனின் காலினை அவ்வப்போது அசைந்து தொட்டபடி இருந்தது. களவின் போது இவ்வளவு பதற்றத்தை அவன் உணர்ந்ததே இல்லை. உடல் இரும்புக் கம்பியைப் போல இறுகி நிமிர்ந்தது. கீழ் இருந்து பார்க்கும் போது

கண்களின் வெள்ளை காட்டிக்கொடுத்துவிடும் என யோசித்து இமைகளை இறுக்கமூடி ஒரு கோட்டளவு இடைவெளியில் மட்டும் பார்த்துகொண்டிருந்தான். ஆனால், இமைகளை அவனது மனம் விரித்தபடி இருந்தது.

கால்கள் பின்னிக்கொண்டிருந்தன. தவிப்பின் ஓசையால் அறை நிரம்பியது. அவள் திமிறித் தள்ளுவதும், இழுத்து அணைப்பதுமாக இருந்தாள். அவளது மூக்குத்தியில் சிக்கிய அவனது தலைமுடியை ஒற்றைக்கையால் எடுத்து அவள் அவனது தலைமுழுவதையும் நீவியபடி அப்படியே தனக்குள் புதைத்துக்கொண்டாள்.

ஆங்கனுக்கு பெருமாயியின் ஞாபகம் வந்தது. நினைவு ஒரு கணம் சுழற்றி அடித்தபொழுது பெருவிரல் தளர்ந்து பாதங்கள் இறங்கின. சட்டென சுதாரித்து மீண்டும் விறைத்தான். ‘களவுக்கு வந்திருக்கிறப்ப மனச விடக்கூடாதுரா கருப்பா...’ என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டான். மனதைத் திடப்படுத்தியவாறு இறுக மூடிய இமைகளை நூலளவு திறந்தான்.

பூணூல் அற்ற தேகம் மேலே இருந்தது. அவள் கூந்தல் அவனது முகம் முழுவதும் மூடி விரிந்து சரிந்திருந்தது.

இதுதான் பொருத்தமான நேரம் என நினைத்து ஆங்கன் சுவரை ஒட்டியவாறு பெருவிரல்களைக் கொஞ்சம் நகரத்தினான். வியர்த்துக்கொட்டியதால் முதுகுத்தோல் சுவரோடு ஒட்டிக்கொண்டு நகரவிடாமல் செய்தது. சத்தமின்றி சுவரில் இருந்து முதுகை உரித்துக்கொண்டு சுவரோமாக நகர்ந்தான். அலையடிப்பின் லயத்தில் உடல்கள் இயங்கிக்கொண்டிருந்தன. கதவு இடுக்கின் வழியே நகர்ந்து ஆங்கன் வெளியேறினான். தாழ்பாள் ஓசையின்றி அவனை அனுப்பி வைத்தது. பெரும் இருள் கொல்லைப்புறம் முழுவதும் பரவிக்கிடந்தது. கால்கள் தட்டிவிடக்கூடாது என்ற உணர்வுடனே அவன் மரத்தடி வரை விரல்களை ஊன்றிக் குத்துக்காலிலே நடந்துவந்தான். மரத்தின் மேலிருந்த இரு கொப்புகளையும் எட்டிப்பிடித்து மரத்தையே பிளந்து பூமிக்குள் அமுக்குவதை போன்றதொரு வேகத்தோடு எவ்வி மேலேறினான்.

போனவன் இவ்வளவு நேரமாக எந்த சைகையும் கொடுக்காமல், கதவையும் திறந்துவிடாமல் என்னதான் செய்துகொண்டிருக்கிறான் என்ற யோசனையில் வெளியிலிருந்த ஐந்து பேரும் நின்றுகொண்டிருக்கையில் ஆங்கன் சுவரைப் பிடித்தவாக்கில் கீழே தவ்வினான். ‘என்னடா இவ்வளவு பொழுதாயி வெறுங் கையோட வர்றான்’ என்றார் ஒச்சு.

‘வாங்கப்பா...பேசாம’ என்று சொல்லியவாறு எழுந்து ஆங்கன் முன்னே நடந்தான்.

‘என்னடா ஆச்சு’ என்று கேட்டவாறு மற்றவர்களும் நடக்க ஆரம்பித்தனர்.

உள்ளே என்ன நடந்தது என்பதை விசாரிப்பதற்காக ஆங்கனின் தோள்பட்டையில் கையைப் போட்டு இழுத்த பூச்சி ‘என்னடா...உடம்பெல்லாம் இப்படி வேர்த்திருக்கு’ என்றான். ஆங்கன் ஒன்றும் பேசாமல் முன்னே நடந்தான்.

‘என்னாட பண்ணுன்ன உள்ள போயி, பொம்பளையோட படுத்து

எந்திரிச்சு வர்ற மாதிரி இப்படி வேர்த்து வந்திருக்க' என்றார் பூச்சி.

'இல்லப்பா...படுத்துக்கெடந்தத பாத்துட்டு வந்தேன்' என்றான் ஆங்கன்.

'அதுக்கு எதுக்குடா ஒனக்கு வேர்க்குது?' என்றார் பெரியவர் ஒச்சு.

'எளவட்ட பயலப் போயி இப்படி கேட்டுக்கிட்டு இருந்தா...போங்கப்பா முன்னாடி' என்று வயதில் மூத்த ஒச்சுவையும், பூச்சியையும் முன்னால் அனுப்பினான் பம்பையன்.

ஆங்கனும் பம்பையனும் மற்ற இருவரும் பேசியவாறு பின்னால் வந்துகொண்டிருந்தனர். 'ஏ காலுக்கு கீழ தானப்பா ரெண்டு பேரும் படுத்துக்கெடந்தாங்கெ' என்று ஆங்கன் சொன்னவுடன் நடந்ததைப் பற்றி விசாரிப்பதில் மற்றவர்களுக்கு ஆர்வம் எழுந்தது. எதிர்ச் சுவரில் நின்று கொண்டிருந்தபொழுது அவனது முத்தத்தின் மையம் அவளது இதழ்களிலே குவிந்து கிடந்ததைப் பற்றி யோசித்தவாறு புரியாத குழப்பத்திலே வந்துகொண்டிருந்த ஆங்கன் 'அவ வாயப் புடிச்சு கவ்விக்கிட்டே கிடந்தானப்பா, அதுதான் என்னான்னு புரியல' என்று சொல்லிக்கொண்டிருந்தான். அவர்கள் மாசிவீதியைக் கடக்கும்வரை பின்தங்கியவாறு பேசியபடி சென்றனர்.

வடக்கு ஆவணி வீதியில் திரும்பியவுடன் முன்னால் சென்று கொண்டிருந்த ஒச்சு 'பேராண்டி என்னதானப்பா...சொல்றான்' என்றார் சத்தமாக.

அதற்கு பம்மையன் 'ஆளு...வெள்ளத் தோல்ல கெறங்கிட்டானப்பா....' என்றான்.

அதற்கு ஒச்சி 'ஏலே...ஆங்கா! வீடு வெள்ளயா இருந்தாலும் அடுப்படி கருப்பாத்தாண்டா இருக்கும்' என்றார்.

பின்னால் வந்த எல்லோரும் இருள் அதிருமளவு வாய்விட்டுச் சிரித்தனர். ஆங்கன் அடுப்படியில் நடந்ததையே நினைத்துக்கொண்டிருந்ததால் அவனால் அடுப்படியைத் தாண்டி வேறு எதையும் யோசிக்க முடியவில்லை. ஏன், இவர்கள் இப்படிச் சிரிக்கிறாரகள் என்று நினைத்தபடி வந்துகொண்டிருந்தான்.

'போன வேலய முடிக்காம வந்திருக்குறோம், காலையில் பெரியாம்பிள நம்மள கொல்லத்தான்டா போறான்' என்று புலம்பியவாறே ராமாயணச் சாவடிக்கு வந்து சேர்ந்தனர்.

வெள்ளி முளைத்த அதிகாலையில் வழக்கம்போல் அவர்கள் புறப்பட்டு தாதனூரை நோக்கிப் போனார்கள்.

*

**மு**தல்நாள் நிறைவேற்ற முடியாத திட்டத்தை இரண்டாம் நாள் நிறைவேற்றினர். ஆனால், இடத்தை மாற்றி இருந்தனர். தண்டலை கிராமத்தில் இருந்த சிவானந்தையர் தோப்பிலே அது நிகழ்ந்தது. பதினோரு மாடுகள் களவாடப்பட்டன. நான்கு வைக்கோல் போர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பொன்மேனி கிராமம் தாதனூர்க்காரர்களின் காவல் என்பதால் அங்கிருந்த சிவானந்தையர் தோப்பிற்குள் நுழையாமல் தண்டலையில் இருந்த தோப்பிற்குள் நுழைந்தனர். விஷயம்

சிவானந்தையரை எட்டியபோது ஆள் அதிர்ச்சியில் உறைந்துபோனார். செய்தி நகரெங்கும் பரவியது. நாடார்கள் பேட்டை விசயத்தில் சேர்மன் தேவையில்லாமல் மூக்கை நீட்டியதால் தாதனூர்க்காரர்களின் பதிலடி என்று விசயம் தெரிந்த எல்லோரும் பேசிக்கொண்டனர்.

சிவானந்தையருக்கு இது கௌரவப் பிரச்சினையாக மாறியது. தன்னுடைய பொறுப்புக்கும் மரியாதைக்கும் நிகழ்ந்த அவமானமாக அவர் கருதினார். ஜீரணிக்க முடியாமல் துடித்தார். ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவரை ஆட்டிப்படைத்தது. கும்பாபிஷேகத்தின் போது நடந்த சம்பவத்தைப் போல அப்படியே விட்டுவிட்டுப்போக அவர் தயாராக இல்லை.

நன்கு யோசித்து எடுத்த முடிவின் அடிப்படையில் கச்சேரி போலீஸிடம் புகார் கொடுக்கப்பட்டது. தாதனூர்க்காரர்கள் மீது வழக்கு பதிவானது. பூச்சி, பம்பையன் ஆகிய இரண்டு நகர்க் காவலர்கள் உள்ளிட்ட பன்னிரண்டு பேரின் பெயர்கள் அதில் இருந்தன. சேர்மனின் இந்த நடவடிக்கை நகரில் உள்ள பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தாதனூர்க்காரர்களின் மீது இவ்வளவு தைரியமாக வழக்கு போடத்துணிந்த சிவானந்தையர் இனி என்னென்ன இழக்கப்போகிறார் என்பதை வேடிக்கை பார்க்க சிலர் ஆவலாக இருந்தனர்.

வழக்கை நடந்த தாதனூருக்காக நேமிநாத செட்டியார் தயாராகிக் கொண்டிருந்தார். சேர்மனுக்கு எதிராக நகரிலுள்ள வழக்கறிஞர்கள் வழக்காட முன்வராத நிலையில் விருத்தாச் சலத்திலுள்ள தன் மகனை அழைத்து வந்தாவது வழக்காடுவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால், அதற்கெல்லாம் எந்த அவசியமும் இல்லாமல் போனது. அடுத்தடுத்த நாட்களில் சிவானந்தையரின் சொத்துக்களின் மீது நடந்த தாக்குதல்களும், எதிர்பாராதவிதமாக இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை வீட்டில் நடந்த கொள்ளையும் அவர்களை நிலைகுலைய வைத்தது. வழக்கை விடாமல் நடத்துவது என்று முடிவெடுத்தால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தாங்க முடியாத அளவிற்கு இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

உறுதியாகச் சாட்சி சொல்வதாகச் சொன்ன மேலூர் பகுதியைச் சேர்ந்த தண்டலை கிராம காவல்காரன் அதன்பின், ‘தாதனூர் காரங்களுக்கு எதிராக சாட்சி சொல்வதாக நான் எப்போது சொன்னேன்?’ என்று அவர்களைப் பார்த்து திரும்பக் கேட்டான். நிலைமையை முழுமையாகப் புரிந்துகொண்ட சிவானந்தையர் வேறு வழியின்றி வழக்கைக் கைவிட்டார்.

நகரின் மேற்குப்பகுதியில் இந்து கலாசாலை கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. குழந்தைகள் படிக்க நாள்தோறும் போய்க்கொண்டிருந்தனர். இந்த உயரிய கலாசாலையை உருவாக்கிய பெரிய மனிதர் தேவையற்ற ஒன்றுக்குள் தலையைக் கொடுத்ததால் இப்பொழுது தலைதாழ்த்திப் பின்வாங்க வேண்டியநிலை ஏற்பட்டதாகப் பேச்சு பரவிது. ராஜரத்தினம் பிள்ளை தனது வீட்டில் நடந்த கொள்ளை பற்றி புகார் எதுவும் பதிவு செய்யவில்லை. அவர் சிவானந்தையரிடம் இருந்து பாடம் கற்றுக்கொண்டார். ஆனால் ஐயர்தான் யாரிடமும் பாடம் கற்றுக்கொள்ளாமல் தேவையற்ற இழப்புகளை உண்டாக்கிக் கொண்டார் என்று அக்ரஹாரம் குற்றம் சாட்டியது.

நாடார் பேட்டையின் சுற்றுச்சுவர் உயர்ந்து கொண்டிருந்தது. பலராலும் அதைப் பொறுத்தக் கொள்ளமுடியவில்லை. ஆனாலும் அது மேலெழும்பிக் கொண்டுதானிருந்தது.

*

# 85

**அ**மெரிக்கன் மிஷனரியின் பொறுப்பாளர்கள் மாவட்ட **நிர்வாகத்துடன்** எந்த ஒரு முரண்பாடும் உருவாகாத வண்ணம் மிக கவனமாக இருந்து செயல்பட்டு வந்தனர். இந்தக் காலங்களில் மிஷனரிகளின் கலாசாலை பன்மடங்கு விருத்தி அடைந்திருந்தது. டிரேடு ஸ்கூல் துவக்கப்பட்டிருந்தது. தச்சு வேலை, கொல்லர் வேலை, விசிறி, பாய் முடைதல், செங்கல் அறுத்தல், ஓடு செய்தல் போன்ற பல்வேறு பணிகள் மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மிக நேர்த்தியான முறையில் சொல்லித் தரப்பட்டன. புதிய புதிய விளையாட்டு வகைகள் அறிமுகமாகி இருந்தன. ஓவியம் முதலிய கலைகளுக்குத் தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டது. கவர்மென்டாரின் அங்கீகாரம் பெற்ற மருத்துவரைக் கொண்ட மருத்துவமனை ஒன்று அங்கேயே செயல்படத் துவங்கியது. நான்கு நர்சுகள் பணியாற்றினர். கல்வியிலும், தொழிலிலும் பெண்களைப் பயிற்றுவிக்க சகல முயற்சிகளும் அங்கு நடைபெற்றன. சீருடை அணிந்த மிடுக்கோடு மில்டனையும், ஷேக்ஸ்பியரையும் உச்சரித்துத் திரிந்த பெண்பிள்ளைகள் அந்த வளாகம் எங்கும் நிறைந்திருந்தனர்.

ரெவ். லாரன்சுக்கு பின் இரண்டு பேர் பொறுப்பு வகித்து மறைந்துவிட்டனர். இப்பொழுது ரெவ். மார்ஸ்டென். கலாசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்திருந்தது. முன்பு போலவே மேல்சாதிக்காரர்களின் தலையீடும், குறுக்கீடும் இருந்து கொண்டேதான் இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் ஆரோக்கிய மேரி என்ற பெண் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் நடத்தும் உபாத்தியாயினியாக பணியாற்றி வந்தாள். அவள் தாழ்த்தப்பட்ட குலத்திலே பிறந்தவள் என்பதைக் கண்டறிந்து அவள் ஜாக்கெட் அணிந்து வகுப்பறைக்கு வந்து பாடம் நடத்தக் கூடாதென எதிர்ப்பு கிளம்பியது. நகரத்தில் இருந்த பெரிய மனிதர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையில் தலையிட்டனர். கலெக்டர் முன் பிரச்சினை கொண்டுவரப்பட்டது. ‘தாழ்த்தப்பட்ட குலத்திலேயே

பிறந்த ஒருத்தி பாடம் நடத்துவதையே நாங்கள் ஏற்கமாட்டோம். அதுவும் அவள் ஜாக்கெட் வேறு அணிந்து வருகிறாள்' என்று அவர்கள் வாதாடிப் பார்த்தார்கள். ஆரோக்கிய மேரி என்கிற கிறிஸ்தவப் பெண் ஜாக்கெட் அணிந்து பாடம் நடத்துவதை எதிர்க்க யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்று முடிவானது.

ஆனால், அதன்பின்னும் அவள் மனரீதியிலான பாதிப்புக்கு உள்ளாகும் துன்பங்கள் தொடர்ந்தபடிதான் இருந்தன. மிகுந்த தைரியத்துடன் அனைத்து அவமதிப்புகளையும் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஜாக்கெட் அணிந்த பெருமிதத்தோடு அவள் வகுப்பறைக்குச் சென்று பாடம் நடத்திக்கொண்டிருந்தாள்.

பசுமலையின் வளாகத்திலேயே சிறு பிராயத்திலிருந்து வளர்ந்த டேவிட் சாம்ராஜ் என்ற போதகருக்கும், மேரிக்கும் இடையில் அரும்பிய காதல் திருமண கட்டத்தை அடைந்தது. டேவிட் சாம்ராஜின் தந்தை சாத்தங்குடிக்காரர். தாய் தாதனூரில் பிறந்தவள். மதுரைக்குத் தெற்கே உள்ள ஆலங்குளம் கிராமத்தை காவல் காத்து வந்தார்கள். தாது வருடத்திற்கு முன் வந்த பெரும் கொள்ளை நோய் தாய் தந்தை இருவரையும் விழுங்கியது. சின்னஞ் சிறுவனான பொன்னாங்கன் மிஷனரிகளால் ஏற்கப்பட்டு அனாதை இல்லத்தில் டேவிட் சாம்ராஜாக வளர்ந்தான். சாத்தங்குடிக்கு போய் தனது உறவினர்களைப்பற்றி விசாரித்து வருவான். எப்பொழுதாவது ஓரிருவர் வந்து அவனது உறவினர் என்று சொல்லி விசாரித்துச் செல்வதும் உண்டு.

டேவிட் சாம்ராஜ் பசுமலை பள்ளியிலே படித்து வேதசாஸ்திர கல்லூரியில் முதல் பரிசு பெற்றுத் தேறினான். அவனது ஊழியத்தையும், பணியையும் கவனித்து வந்த மார்ஸ்டென் அவனைப் போதகராக ஆசீர்வாதம் பண்ணிவைத்தார். காவக்கார குடும்பத்திலே பிறந்து கிறிஸ்தவத்தை தழுவிப் போதகரான முதல் மனிதராக டேவிட் சாம்ராஜ் இருந்தார். அவரைத் தாதனூர் உள்ளிட்ட மேற்கு நாட்டு கள்ளர் கிராமங்களில் இறைப் பணியாற்றுமாறு மார்ஸ்டென் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் அவருக்கும் மேரிக்கும் இடையில் காதல் மலர்ந்தது; இறைத்தொண்டாற்றி வந்த இருவரும் தங்கள் வாழ்வை அதன் பொருட்டே அமைத்துக்கொள்ள திருமணம் செய்ய முடிவெடுத்தனர். தாது வருடத்தில் பெற்றோர்களை இழந்து அனாதை இல்லத்தில் வளர்ந்த இருவருக்கும் பசுமலை தேவாலயத்திலேயே எளிமையாகத் திருமணம் நடைபெற்றது.

*

**பெ**ரியாறு புராஜெக்ட் முடியும் தறுவாயில் இருந்தது. அடுத்த ஆண்டிற்குள் தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற நிலையில் எந்தெந்தப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் அளிப்பது என்பதைப் பற்றி மாவட்ட நிர்வாகம் கடந்த இரண்டாண்டுகளாகப் பல்வேறு ஆய்வுகளைச் செய்து முடிவெடுத்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தது. பல ஆயிரம் வேலி நிலங்கள் பாசனப்பகுதியாக மாறப்போகிறது. மானாவாரி விவசாயிகளாக இருந்த பெரும் மக்கள் கூட்டம் பாசன விவசாயிகளாய் ஆகப்போகின்றனர். சொரட்டைப் பாம்பும், மண்ணுளிப் பாம்பும் ஊர்ந்து திரிந்த கரட்டு மண்ணில் இனி நண்டு நத்தைகள் பெருகும். கம்பு, சோளம், கேழ்வரகு என

பரிந்து நிற்கும் பயிரைக் கொத்தித் தின்னவரும் மைனாக்களுக்கும் குருவிகளுக்கும் இனி வேலையில்லை. கொக்குகளும் நாரைகளும் கூட்டம் கூட்டமாய் வந்து இறங்கும். வயல் செழித்து நெல்மணிகள் குவியும். மண்ணும் மனிதர்களும் மாறப்போகின்றனர். நூற்றுக்கணக்கான கிராமங்களில் வளம் பெருகும்.

எந்த நூற்றுக்கணக்கான கிராமங்கள்? என்ற கேள்விக்கு மாவட்ட நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேயர் அல்லாத ஒவ்வொருவரிடமும் ஒரு பட்டியல் இருந்தது. அதனை உள்ளே நுழைத்து விடப் போதுமான காரணங்களும் அவர்களின் கையில் இருந்தது. அவர்கள் அந்த வேலையைப் படு மும்முரமாக செய்துகொண்டிருந்தனர். கலெக்டர் வின்ஸ்லோவும், பி.டபிள்யூ.டி. இன்ஜீனியர் ஹென்றி விச்சும் மிகவும் கவனுத்துடன் அந்தப் பட்டியலைத் தயார் செய்துகொண்டிருந்தனர். ஹென்றி விச்சும் அவரது உதவியாளரும் மாதக்கணக்கிலே வைகையின் வடபகுதி முழுவதும் சுற்றி அலைந்து ஆய்வு செய்தனர். அவர்களது குதிரைகள் பயணப்பட்ட பாதை முழுவதும் ஒரு ஓடை அளவு பள்ளம் விழுந்தது. ஹென்றி விச்சின் குதிரை தனது வாலிலே பெரும் கால்வாய் ஒன்றைக் கட்டி இழுத்துக்கொண்டு வருவதை செல்வந்தர்களும் அரசு உத்தியோகஸ்தர்களும் முதலிலே கண்டுகொண்டனர். கண்ணுக்குத் தெரியாத அந்த நீரை தமது நிலத்திலே இறக்க அவர்கள் பெரும் முயற்சி எடுத்தனர். அகஸ்தியன் கமண்டலத்தில் காவிரியை அடைத்துவைத்திருந்தாக புராணம் படித்திருந்த அவர்களுக்கு ஹென்றி விச்சின் குதிரை வாலின் அடர்ந்த முடியில் கட்டிண்டு கிடந்த முல்லைப் பெரியாற்று நீரை எப்படி இறக்குவது எனவும் தெரிந்திருந்தது. ஓடிக் களைத்த குதிரை இளைப்பாற எள்ளும், கொள்ளும் கொடுத்து குதிரையைத் தடவிக் கொடுத்து அதன் அன்பைப்பெற முயற்சித்தனர். நூற்றுக்கணக்கான கிராமங்கள் ஹென்றி விச் கையில் வைத்திருந்த பட்டியலில் ஏறிக்கொண்டேயிருந்தன. ஊருக்குத் தண்ணீர் வந்து விட்டால் எல்லா ஜனத்திற்கும் உயிர் வந்துவிடும்; அதன்பின் தங்களை யாரும் மதிக்கமாட்டார்கள் என நினைத்த சில பெரிய மனிதர்கள் ஊருக்கு தண்ணீர் வராமல் பார்த்துக்கொண்டார்கள். தண்ணீர் வேண்டாமென்று ஊர் முடிவாக்கி கலெக்டருக்கு எழுதிக் கொடுத் தனர். எங்கள் கண்மாயில் வருடம் முழுவதும் ஊற்றெடுத்துக் கிடக்கிறது. அதை வைத்தே விவசாயம் செய்யமுடியவில்லை. இதுபோக கூடுதலாக எந்தத் தண்ணீயும் எங்களுக்குத் தேவையில்லை என்று தெறிவித்தனர். வேறு சிலரோ தங்களது நிலங்கள் எங்கெல்லாம் கிடக்கிறதோ அங்கெல்லாம் தண்ணீர் கொண்டுவர முயற்சி செய்தனர். அது வரப்போகும் பாதையை அறிந்தவுடன் பல வேலி நிலங்களை அற்ப விலைக்கு வாங்கிப்போட்டனர். ‘இந்தக் காட்ட வாங்கி என்ன செய்யப் போறான்’ என்று அவர்களுக்காக அனுதாபப் பட்டுக்கொண்டே எளிய மக்கள் நிலங்களை விற்றுவிட்டனர்.

நிலத்தை சூழ்ச்சிகள் விழுங்கிக்கொண்டிருந்தன. சேர்மன் சிவானந்தையர் தண்டலை உள்ளிட்ட தனது நிலங்கள் இருக்கும் கிராமங்களுக்கு தண்ணீர் வருவதை உறுதிப்படுத்திக் கொண்டார். நிர்வாகத்திலிருந்த இந்தியர்கள் பலரும் தங்களது நிலத்திற்குத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்வதில் முனைந்தனர்.

இந்தியர்களைவிட எல்லாவிதத்திலும், தந்திரம் மிக்கவர்களாகவே

ஆங்கிலேயர்கள் இருந்தனர். அவர்கள்தான் முதலில் பெரியாற்று நீரை வைகையின் தென்பகுதிக்கு கொண்டுசெல்வதா, அல்லது வடபகுதிக்கு கொண்டு செல்வதா என்பதைத் தீர்மானித்தார்கள். தென்பகுதிக்கு ஒரு சொட்டு நீர் கூட போய்விடாமல் முழுக்க வடபகுதிக்குக் கொண்டு செல்ல தீர்மானித்தனர். இதுநாள்வரை அரசாங்க சட்டதிட்டத்துக்குக் கட்டுப்படாமல் முறையாக வரி கட்டாமல், நிர்வாகத்திற்கு எந்த ஒத்துழைப்பும் தராமல் இருந்த மேலூரை நோக்கி பெரியாற்று நீரைக்கொண்டுசெல்ல முடிவெடுத்தனர். அடர்ந்த காடாய்க் கிடந்த மேலூர் பகுதியில் இருந்து மனிதர்கள் ஒவ்வொருவராய் வெளியேறி வந்தனர். நாங்கள் அரசாங்கத்திற்கு கட்டுப்படுவோம், முறையாக வரி கட்டுவோம், திருட்டு உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவோரை நாங்களே பிடித்து உங்களிடம் தருவோம் என்று தீர்மானம் நிறைவேற்றித் தருகின்ற கிராமங்கள் பாசனப்பகுதியில் சேர்க்கப்பட்டன. ஒன்றைப் பார்த்து ஒன்றாக கிராமக்கூட்டங்கள் கூடின. சில கிராமங்கள் வீம்பாக விறைத்துக்கொண்டு நின்றன. பல கிராமங்கள் இறங்கி வந்தன. அவ்வாறு தீர்மானம் போடப்பட்ட கிராமங்களை நோக்கி, ஹென்றி விச்சும் அவரது சக அதிகாரிகளும் வந்து நில வாகுவினை அறிந்து வாய்க்கால் வெட்டுவதற்கான வரைப்படங்களைக் குறித்துக்கொண்டனர்.

கொழும்பு, ரங்கூனுக்கு வேலைக்குப் போன மக்கள் எல்லோரும் ஊருக்குத் திரும்பி வர ஏற்பாடு செய்யவேண்டும்; சாணத்தை வயலுக்கு உரமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்; எருவாட்டி தட்டி எரிக்கக் கூடாது என்பது உள்ளிட்ட முடிவுகள் மேலூர் கிராமக் கூட்டங்களில் எடுக்கப்பட்டன. பல ஆண்டுகளாக ஐரோப்பிய நிர்வாகத்திற்கு எதிராகக் கனன்றுகொண்டிருந்த வெறுப்பைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முடியுமென்று கலெக்டர் வின்ஸ்லோவும் இன்ஜீனியர் ஹென்றி விச்சும் கணித்தது சரியாக நிறைவேறிக்கொண்டிருந்தது.

விவசாயத்திற்கான முழுப்பகுதியும் தீர்மானிக்கப்பட்டபின் வாய்க்கால்கள் வெட்டும் பணி மும்முரமாக நடைபெற்றது. வடகரை மக்கள் முழுவதும் அதில் ஈடுபட்டனர். கூலிக்காக மட்டும் நடைபெற்ற வேலையாக அது இல்லை. மெயின் சேனலிலிருந்து கிராமத்து கண்மாய்க்கு வரும் துணை வாய்க்காலினை ஒரு ஊர் ஒரே இரவில் வெட்டிக்கொண்டு போனதெல்லாம் நடந்தேறியது. உணர்வும் ஆசையும் கூலியும் கலந்த வேலையாக அது நடந்தது. பெரும் பெரும் வாய்க்கால்களை மக்கள் இரவு பகலாகத் தோண்டிச்சென்றனர். அவநம்பிக்கைக் குரல்கள் கிராமத்துச் சாவடிகளில் ஒலிக்கத்தான் செய்தன. ஆனால், அதையும் தாண்டி வாய்க்கால்கள் கண்மாய்களை வந்தடைந்தன.

வாய்க்கால் நிலத்தை மட்டும் அகழ்ந்து வரவில்லை; அது வெள்ளைக்காரன் நோக்கத்தின் மீதுதான் ஏறி வந்தது. ஆனாலும் அது வந்தது. நோக்கத்திற்கு அப்பாற்பட்ட கிராமங்களுக்கும் அது வந்தது. பெரும்பகுதி வாய்க்கால்கள் வெட்டப்பட்டுவிட்டன. இன்னும் சில மாதங்களில் வேலைகள் பூர்த்தியாகிவிடும். பூமியை வார்வாராகப் பிளந்துபோட்டது போல ஊர் ஊருக்கு வாய்க்கால்கள் கிடந்தன. நம்பவே முடியாமல் அதன் மேட்டிலே உட்கார்ந்து சிலர் வெறித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தனர்.

*

**ச**டச்சியின் நிழலில் தங்கி வளர்ந்த தாதனூர்க்காரர்கள் திசையெட்டும் சென்று திரும்பியவாறு இருந்தனர். காவலும், களவும் முறுக்கேறிக் கிடந்தது. காவக் கட்டுப்பாட்டில் இருந்த குடிகள் நிம்மதியாய் இருந்தன. மற்ற இடங்களில் எல்லாம் களவின் கால்கள் காற்றைக் கிழித்துக் கொண்டிருந்தன.

படித்தவர்கள் கணிசமாக அதிகரித்த காலமாக அது இருந்தது. அவர்களில் சிலருக்கு நவீன போலீஸ் முறையின் மீதான நம்பிக்கை அதிகரித்திருந்தது. காவக்கூலி கொடுப்பதை நிறுத்தினால் என்ன என்று யோசித்து நிறுத்தினர். அங்கு களவு நடப்பதைத் தடுக்கும் வல்லமை ஏதும் போலீசுக்கு உருவாகிவிடவில்லை. எனவே, குறிவைத்து களவுகள் நிகழ்ந்தன. அதன்பின் சம்பந்தப்பட்டவர் ‘தப்பு செய்துவிட்டேன், எனது பொருளை எப்படியாவது மீட்டுத்தாருங்கள்’ என முறையிடுவதைத் தொடர்ந்து துப்புக்கூலிமுறை அறிமுகமாகத் தொடங்கியது. படித்தவர்களுக்கு போலீஸ் மீதான நம்பிக்கை உருவாகின்ற இடத்திலெல்லாம் துப்புக்கூலி முறையும் சேர்ந்து உருவானது. காவலுக்கும், களவுக்கும் நடுவில் துப்பு சொல்லும் மூன்றாம் நபர் உள்ளே நுழைய ஆரம்பித்தான். அவன் அளவு கொடுத்தவனிடம் பலித்தமட்டும பேசி துப்புக்கூலியைப் பெற்று களவு போன பொருளைக் கொண்டுவந்து திருப்பிக் கொடுத்தான். இந்த மூன்றாம் நபர் பக்கத்து ஊர் காவக்காரனாகவோ அல்லது அதே தெருவில் களவுக்கு வந்துபோனவனாகவோ இருந்தான். காவக்காரர்களை ஏமாற்ற நினைக்கிற பொழுதெல்லாம் காவக்காரர்கள் அவர்களை ஏமாற்றினர்.

களவாணியிடம் இல்லாத ஒரு நியாயம் துப்பு சொல்பவனிடம் இருப்பதாக மக்கள் கருதினர். எனவே அவர் பகலிலே வந்து திண்ணையிலே அமர்ந்து விலை பேசிச் சென்றார். பகலுக்கும், இரவுக்கும் இடையில் வீட்டில் உள்ள வித்தியாசத்தை கூர்ந்து கவனிக்க அவன் தயாராகவில்லை. பகலில் மட்டும் முன்வாசலின் வழியே வரவேண்டியிருந்தது. காவல் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிகழும் இத்தகைய களவில் பொருளை அபகரிக்கும் நோக்கம் இல்லாமல் இருந்தது. கூலி பெறுவதே நோக்கமாக இருந்தது. அன்றைய களவுக்கான உழைப்புக்கும் சேர்த்து கூலி பேசப்பட்டது. களவு கொடுத்தவனுக்குள் நிகழும் பயமும், கவலையும் அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனையாகக் கருதப்பட்டது. இரண்டு மூன்று நாள் இடைவெளியில் துப்பு சொல்கிறவன் போய் திண்ணையிலே உட்கார்ந்து அவனுக்கு நீதியை வழங்கிவிட்டுப் போகிறான்.

நவீன போலீஸ் முறையின் மீது உருவான நம்பிக்கை துப்புக்கூலியை உருவாக்க ஆரம்பித்தது. அதைத் தாண்டி அது ஒன்றும் செய்துவிடவில்லை. காவக்கூலி கொடுக்க மறுத்து அதை விடப் பலமடங்கு துப்புக்கூலி கொடுக்கிற பைத்தியக்காரத்தனத்தைப் பார்த்து தெருவே சிரித்தது, போலீஸ்காரன் உட்பட தாதனூரிலிருந்து களவுக்குப் போகிறவர்கள் வெளியெங்கும் போய்வந்துகொண்டுதான் இருந்தார்கள். ஆனால், முன்பு போல எல்லோரும் சரியாக வந்து சேர்ந்துவிடவில்லை. அங்குமிங்குமாக ஒரு சிலர் போலீசால் கைது செய்யப்பட்டனர். ஏதோ ஒரு

நீதிமன்றத்தின் கூண்டிலே ஏறி நின்று எங்கேயோ ஒரு சிறைச்சாலையில் ஆறு மாதமோ, ஒரு வருடமோ, இரண்டு வருடமோ இருந்து உடலை நன்றாகத் தேற்றிக்கொண்டு ஊர் திரும்பினர். ‘திருடி வந்த பொருள வச்சு பொளைக்கிறதவிட நல்ல பொளப்பு செயிலுக்குள்ள இருக்கப்பா...’ என்று பேசிக்கொண்டனர்.

மதுரையின் மேற்குப்பகுதியில் புதிதாக உருவாகியிருந்த ரயில்வே குடவுனில் கொள்ளையடித்த பொழுது மூன்று பேர் கையும் களவுமாகப் பிடிபட்டனர். இரண்டு வெள்ளையர் உட்பட அங்கிருந்த பதினாறு போலீசாரின் சாதுர்யமான செயல்பாட்டால் அந்த மூன்று பேரும் பிடிபட்டனர். இரண்டாம் கச்சேரியின் இன்ஸ்பெக்டர் ராஜரத்தினம் பிள்ளை மூவரின் மீதும் வழக்குப் பதிவுசெய்து சிறைக்குள் தள்ளினார். மதுரை போலீசாரும் இப்படி ஒன்றும் இரண்டுமாக திருட்டுக் குற்றவாளிகளைக் கைது செய்து சிறைக்குள் தள்ள ஆரம்பித்தனர்.

சிறைக்குள் தள்ளப்பட்டதில் இரண்டு பேர் தாதனூர்க்காரர்கள், ஒருவர் உரப்பனூரைச் சேர்ந்தவர். வழக்கம்போல் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் தண்டனை கிடைக்குமென நினைத்து குற்றத்தை மறுத்து வழக்காடவில்லை. ஆனால், வழக்கு முடிந்து நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின் நேமிநாத செட்டியார் அரக்கப்பரக்க கருப்பு கோவில் ஆலமரத்தடிக்கு வந்துசேர்ந்தார். மூவருக்கும் தீவாந்தர தண்டனை கொடுக்கப்பட்டதை அவர் தெரிவித்தார். அதற்கு காரணம் ரயில்வே கோடவுனில் அதுவரை அதிகாரிகள் திருடியதால் ஏற்பட்ட இழப்பு முழுவதையும் இவர்கள் தலையில் ஏற்றி மூவரும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளனர் என்று தெரிவித்தார். ‘சரி விடப்பா...ரெண்டு பேரும் போயி நல்லா இருந்துட்டு வர்றாங்கெ’ என்று ஊர் பெரியாம்பிள சொன்னபோது நேமிநாத செட்டியாருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இது இயல்பாக நடந்ததல்ல. சிவானந்தையரும் ராஜரத்தினம் பிள்ளையும் சேர்ந்து செய்த சதியென்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆனால், அதை இவர்களுக்கு எப்படிப் புரியவைப்பது என்று தெரியவில்லை.

*

# 86

**ஐரோப்பாவில் ஏற்பட்டுவந்த நவீன மாற்றங்கள் பலவும் பலவாறு** இங்கே பிரதிபலித்துக்கொண்டிருந்தன. அங்கிருந்து வந்து இறங்கியபடி இருந்த புதிய ஐசிஎஸ் அதிகாரிகள் மாறுபட்ட கோணங்களில் பிரச்சினைகளைப் பார்க்கவும், உருவாக்கவும் செய்தனர். இந்த நாட்டைக் கட்டியாள இன்னும் கூடுதல் ஞானத்துடன்தான் வந்துள்ளதாக ஒவ்வொருவனும் நினைத்தான். வாங்கும் சம்பளத்தில் பாதியைச் செலவழித்தாலே மிகவும் பகட்டான வாழ்வை இங்கு வாழ முடியும்; மிஞ்சியதை உரிய வட்டியோடு சேமித்து வைத்து நாற்பது வயதில் வாழ்வின் முழுத்தெம்பும் இருக்கையிலே பல்லாயிரம் பவுன்டுகள் சேகரித்த செல்வத்தோடு இங்கிலாந்து திரும்பலாம் என்ற ஆசையோடுதான் அவர்கள் இங்கு வந்து இறங்கினர்.

பகுத்தறிவுக்கும், நவீன யுகத்துக்கும் பொருந்திவராத அழுக்கடைந்த, மடமையேறிய ஒன்றாகத்தான் இந்திய சமூகத்தைப் பார்த்தனர். இங்கிருந்தவர்களைத் தனது நிர்வாகம் கைக்கொள்வதற்குத் தக்க வகையில் பிரித்துக் கணக்கிட்டனர். நாகரீகம்அற்ற மிக்க கீழ்மையானவர்கள் என்று பட்டியல் ஒன்றைத் தயார் செய்தனர். அரசின் ஒழுங்குபடுத்தப்பட்ட நியாயத்திற்குள் வந்து அடைபடாத எல்லோரும் அதில் சேர்க்கப்பட்டனர். அவர்களைப் பிறவிக் குற்றவாளிக்களாக்கினர். குற்றம் என்பது இங்கே பரம்பரை பரம்பரையாக ரத்தத்துடன் கலந்து வந்து கொண்டிருக்கிறது என்று கருதிய புதிய ஐசிஎஸ்கள் ‘குற்றப் பரம்பரை’ என்ற ஒரு பட்டியலையே தயாரித்தனர். அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் தனது கருத்தை சமூகத்தின் ஆழ்மனம் வரை நிலைநிறுத்த இரக்கமற்ற செயல்கள் அனைத்தையும் செய்தனர். இருப்பது போதாதென்று, பிறப்பின் அடிப்படையிலான மற்றொரு ஒடுக்குமுறையை அவர்கள் தங்கள் பங்குக்கு இந்த மண்ணிற்கு வழங்கினர்.

அத்தகைய குற்றச் சமூகத்தினரைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அதன் பொருட்டுச் செய்யவேண்டிய

சட்டத் திருத்தங்கள் அல்லது புதிய சட்டங்களைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்குமாறு மாவட்டத்தின் முக்கிய அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன் அடிப்படையில் மதுரை மாவட்டத்தின் மாஜிஸ்திரேட் மற்றும் எஸ்.பி. அனுப்பிய கடிதங்கள் வருமாறு:

மதுரை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி கவர்ன்மென்ட் சீஃப் செகரடரிக்கு எழுதியது:

**எண்** 726/9.11.1895

எண் 1753 நீதித்துறை 22.8.1895 தேதியிட்ட அரசாணை தொடர்பாக நான் கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

2. வெகு விரைவில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் திருத்தப்படும்போது வழக்கமான குற்றவாளிகளைத் தண்டிக்கும் சிறப்புச்சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிகிறேன். தென்மாவட்டங்களில் குற்றப்பரம்பரையினர் தொடர்பாக விஷேச சட்டங்கள் எதுவும் தேவையில்லை. தற்சமயம் உள்ள சட்டங்களில் ஷரத்துக்களையே திறமையாக பிரயோகித்தால் போதுமென்று கருதுகிறேன்.

3. குற்றப்பரம்பரையினரைப் பொறுத்தவரையில் எனது அனுபவத்தில் அவர்களது குணாதிசயங்களிலோ பழக்கவழக்கங்களிலோ பெரிதாக ஒன்றும் வித்தியாசமில்லை. பொதுவாக மதுரை நகரத்தின் வடக்கிலும், மேற்குப்பகுதியிலும், ராம்நாட் ஜமீனிலும், சிவகங்கை ஜமீனிலும் இவ்வகை மக்கள் உள்ளனர். இவர்கள் பசியினால்தான் குற்றம் செய்கிறார்கள் என்ற விஷயத்தை என்னால் ஏற்கமுடியவில்லை. ஏனென்றால் இவர்கள் திருடவேண்டுமென்ற ஆசை/உந்துதல் வரும்போது பிறர் பொருளைத் திருடுகிறார்கள். ஒரு திட்டமிட்ட கொள்ளையில் ஒரு தனிநபரின் பங்கு மிகவும் குறைவானது. கிடைக்கும் பங்கு பக்கத்து சாராயக் கடையில் குடிப்பதற்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கும். பொதுவாக இவர்கள் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். விவசாயத்தில் நல்ல ஓய்வு நேரம் கிடைக்கிறது. அந்த நேரத்தில் இந்தப் பரம்பரைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்தச்செயல்கள் தன்னிச்சையானவை. இவர்களது ரத்தத்திலே கலந்து பாரம்பரியமானதாகவும் உள்ளது. இது மாதிரி குற்றச் செயல்களில் தனது சாகசத்தை நிரூபிக்காத இளைஞனை அவனது முறைப்பெண் மாப்பிள்ளையாக ஏற்கமாட்டாள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

4. காவல்கூலி, துப்புக்கூலி என்ற பெயரில் மிரட்டிப் பணம் பறிக்கும் வழக்கம் உள்ளது. இந்தப் பழக்கங்களை ஒழிப்பது கடினமல்ல. குற்றங்கள், அவற்றைத் துப்பு துலக்குவது ஆகியவற்றில் உள்ள சிரமங்களை போலீசார் சற்று அதிகமாகக் கூறுகின்றனர். குற்றங்கள் நிகழ்ந்தால் அதைக் கண்டுபிடிக்க மேலதிகாரிகள் துப்பறியும் போலீசாரை நாடுகின்றனர். அவர்களும் தகவல் தருகின்றனர். ஆனால், துப்பறியும் பிரிவிலுள்ள போலீசார் யாரிடமிருந்து தகவல் பெறுகிறார் என்பதை அறிவது கடினம். தகவல்கள் உபயோகமாக இருக்கும்போது பெரும் பரவலான அதிகாரிகள் இதைப் பற்றி துருவிக் கேட்கமாட்டார்கள். துப்பறியும் போலீசாரும் தமக்குத் தகவல் தருபவர்களைப் பற்றி வெளியில் கூறமாட்டார்கள். ஆனால், மதுரை, திருநெல்வேலிப் பகுதியில் இத்தகவல்கள்

குடிக்காவல்காரர்கள் மூலம்தான் வருகின்றன என்பதில் ஐயமில்லை. இதைப்போல அவர்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருந்தாலும் அவர்களது தகவல்கள் பயனளிப்பதால் இது தொடர்கிறது.

ஆடு மாடுகளைப் பறிகொடுத்தவர்கள் புகார் கொடுத்தால் அவற்றை மீட்கவே முடியாமல் போய்விடும் என்ற பயத்தில் புகார் அளிப்பதில்லை என்பது மோசமான உண்மை. இந்த நீதிமன்றத்திற்கு வந்த கால்நடைத் திருட்டு வழக்குகள் பலவற்றில் போலீசார் துப்பு துலக்கவோ குற்றவாளிகளைப் பிடிக்கவோ எதுவுமே செய்யவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். இந்தக் கோர்ட்டிலிருந்து உயர்நீதி மன்றத்திற்குச் சென்ற ஒரு கொள்ளை வழக்கின் மேல்முறையீட்டில் நீதிபதிகள் ‘மதுரை மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக சட்டமே இல்லையா’ என்று குறிப்பிட்டதென்பது இங்கு போலீசின் அணுகுமுறைக்கு சரியான உதாரணம். உறுதியான நடவடிக்கை தேவை என்பதை இது காட்டுகிறது.

5. இத்தகைய சட்ட ஒழுங்குச் சீர்குலைவைச் சரி செய்வதற்கான முக்கியமான நடவடிக்கை போலீஸ் மற்றும் சார்பு நீதித்துறையைப் பலப்படுத்துவதுதான். அதை உடனடியாகச் செய்ய முடியாது என்பதால் தற்சமயம் கைவசம் உள்ளவற்றைச் சிறந்தவகையில் பயன்படுத்தவேண்டும். அதற்கு முன் போலீஸ் அமைப்பைப்பற்றி நம் முன்னோர்கள் முடிவு செய்திருந்த விஷயங்களை நினைவுகூர்வது நல்லது. ‘போலீஸ் துறையின் அமைப்பில் கிராம போலீசாரே முக்கியத்துவம் வகிப்பர். பரம்பரை கிராம காவக்காரன் இந்த அமைப்பினுள் கொண்டுவரப்பட்டு கவனமாக கண்காணிக்கப்படுவான். பொது அமைதி, குற்றங்களைக் கண்டுபிடித்தல், மற்ற சட்டப்பூர்வமான விஷயங்களை நடத்துதல், அமலாக்குதல் ஆகியவற்றிற்கு அவனே பொறுப்பு.’

போலீஸ் இத்தகைய வேலையைச் செய்யும் என்று எண்ணித்தான் போலீசாரின் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டது. ஆனால், கடந்த பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மாற்றத்தால் கிராம காவல்காரன் முற்றிலும் நம் போலீஸ் அமைப்பிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டான். ஆனால் பாரம்பரியமான அவனது இடத்தைக் கையகப்படுத்துமளவுக்கு நாம் போலிஸ்துறையை பலப்படுத்த முடியவில்லை. எனவே இப்பொழுது குற்றத்தைத் தடுக்க நாம் எடுக்கும் நடவடிக்கை யாவும் அவனுக்கு எதிரானதாக உள்ளது.

6. இத்தகைய குற்றத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவர்கள் வசிக்கும் கிராமங்களில் திடீர் திடீரென அவ்வப்பொழுது நடுநிசியில் சோதனைகள் நடத்தப்படவேண்டும். ஒரு இன்ஸ்பெக்டருக்கும் குறையாத அந்தஸ்துள்ள அதிகாரியைக் கொண்டு அதனை நடத்த வேண்டும். மறைமுகமாக அவர்களிடம் கல்வியைப் பரப்ப வேண்டும். ராம்நாட், சிவகங்கை பகுதிகளில் சாலை, ரயில் போக்குவரத்தை விரிவாக்க வேண்டும். வரப்போகும் பெரியாற்று நீரை மதுரை மாவட்டத்தில் வைகையின் தென்பகுதி கிராமங்களுக்கு அளித்து நிலங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக வேலை வாய்ப்பினை உருவாக்கவேண்டும். இதுபோன்ற செயல்களின் மூலம் குற்றப் பரம்பரையினரை அமைதியான, சட்டத்தை மதிக்கும் விவசாயிகளாக மாற்ற முடியும். அதற்காகும் கால அளவு நீண்டதாக இருக்கும். ஆனாலும் நல்ல பலன் கிடைக்கும் என்று

நான் கருதுகிறேன்.

ஜெ.எப். டுமெர்க்
மாவட்ட செஷன்ஸ் நீதிபதி

*

**ம**துரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்ட் அரசு தலைமைக் காரியதரிசிக்கு எழுதியது.

எண். 1204/24.10.1895

தென் தமிழகத்தின் குற்றப் பரம்பரையினர் பற்றிய ஜி.ஓ. எண். 1753 (நீதி) 22.8.1895 தொடர்பாக எனது பதிலை அளிப்பதில் மகிழ்வடைகிறேன். இதுபற்றி தாமதமாகப் பதிலளிப்பதற்கு எனது வருத்தத்தையும் முதலில் தெரியப்படுத்துகிறேன். அரசு கேட்ட புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் கணிசமான தாமதம் ஏற்பட்டது.

மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம் தாலுகாக்களிலும், ராம்நாட், சிவகங்கை ஜமீன்களிலும் இவ்வகை ஜாதியினர் உள்ளனர். இம் மாவட்டத்தில் 1892, 1893, 1894 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுள்ள குற்றங்கள், அவற்றில் இவர்களின் பங்கினைத் தெளிவாகத் தெரிவிக்கும் புள்ளிவிவரங்களைப் பின்இணைப்பாகத் தந்துள்ளேன்.

இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர மூன்றுவிதமான ஆலோசனைகளைத் தெரிவிக்க விழைகிறேன்.

முதலாவதாக, போலிசின் எண்ணிக்கையை அதிகரிப்பது, போலீஸ் படையை விஸ்தரிப்பது. இதில் இப்போதுள்ள நிலையில் பெரும் மாற்றம் கொண்டுவராமல் நம்மால் அடுத்த கட்டத்திற்கு நகரமுடியாது.

இரண்டாவது, குற்றவாளிகளின் கிராமத்திற்கு தலையாரிகளை நியமிப்பது. அவன் சந்தேகப்படும் நபர்களின் நடமாட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அறிக்கை தரவேண்டும். அங்குள்ளவர்கள் பற்றிய பதிவேடு வைத்துக்கொண்டு அதில் தொடர்ந்து பதிவு செய்யவேண்டும்.

மூன்றாவது, இவர்களின் பழக்கவழக்கங்களை சீர்திருத்துவற்கான நடவடிக்கை. கல்வியைப் பரப்புவது, விவசாயிகளாக ஆக்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது.

இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க இன்னொரு விஷயம், மதுரை நகரம், பக்கத்தில் சில மைல் தொலைவில் இருக்கும் தாதனூர் என்ற கிராமத்தின் காவலுக்குக் கட்டுப்பட்டுள்ளது என்பது. இந்நகரின் திருட்டு, கொள்ளை சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் அவர்கள்தான் தீர்த்துவைக்கின்றனர்.

இங்கு வசிக்கும் வசதியான உயர்குடி மக்களும், மாஜிஸ்ட்ரேட்டுகள் உட்பட சொல்லப்போனால் இம்மாவட்டத்தில் சில ஐரோப்பியர்களும் கூட காவல்கூலி தருவதிலிருந்து தப் பவில்லை. மேலும் நான் சொல்ல வெட்கப்படுகிறேன். மதுரையில் நான் பணிக்குச் சேர்ந்த பொழுது ஒருநாள் ஒருவன் வந்து காவக்கூலி கேட்டான். தராவிட்டால் வீட்டிலுள்ள அனைத்தும் களவு போய்விடும் என்றான். நான் அவன் கேட்ட அளவுக்கு

தரவில்லை. குறைத்துத்தான் கொடுத்தேன். இதுவரை எனக்கு பிரச்சினையில்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ஐரோப்பிய குடியிருப்பில் நடந்த பெரும் கொள்ளைக்குப்பிறகு முறையான காவக்கூலியை ஐரோப்பியர்கள் பலரும் கொடுப்பதாக நான் அறிகிறேன்.

எனவே காவல்முறையை முற்றிலும் ஒழிக்க நமது போலீஸ் அமைப்பினை ஸ்திரப்படுத்தி, பலப்படுத்துவதற்கான பணிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதும், தண்டனைச் சட்டங்கள் கடுமையாக்குவதும் அவசியம் என நான் கருதுகிறேன்.

ஜான் சல்லேவன்
போலீஸ் சூப்பிரண்டெண்ட், மதுரை.

*

# 87

**மேற்கே காவலுக்கும், நாட்டாமைக்கும் போனவர்கள் இப்பொழுது** செழித்திருந்தனர். கடந்த பத்துப் பதினைந்து வருடமாக நடந்துவருகின்ற பெரியாறு அணை கட்டும் பணி இப்பகுதி மக்களில் கணிசமானவர்களுக்கு வேலை கொடுத்திருந்தது. அடிவாரத்தில் இருந்துதான் அனைத்துப் பொருட்களும் போகவேண்டியிருந்தது. எருமை, மட்டக் குதிரை, கழுதை என விலங்குகளின் மூலம் போக்குவரத்து இடைவிடாமல் நடந்தது. மேற்கு மலையின் உச்சியை நோக்கி எண்ணற்ற பாதைகள் உருவாகியிருந்தன. லோகன் துரை இந்தப் பகுதி முழுவதும் மக்களால் பெரிதும் அறியப்பட்ட மனிதனாக இருந்தார். அவர்தான் மக்களைக் கூட்டம் கூட்டமாக வேலைக்கு அழைத்துச் சென்றவர். மலை உச்சியில் கட்டப்பட்டு வந்த அணைக்கும், கீழிருந்த மக்கள் கூட்டத்திற்கும் இடையில் லோகன் துரையின் குதிரை பல நூறு முறை போய்வந்தபடி இருந்தது. மக்களுக்கு லோகன் துரை தெய்வம் போல் தோன்றினார். அவர் கை நீட்டி அழைக்கும் மனிதர்களுக்கெல்லாம் கஞ்சி கிடைத்தது. அவர் கருணை கிடைத்தால் வாழ்ந்துவிடலாம் என ஊரே நம்பியது. அவர் மலையில் இருந்து இறங்கிவரும் தகவல் வந்தாலே எல்லோரும் பரபரப்பாகி விடுகின்றனர்.

தனது வழியை மறிக்கும் மனிதர்களை நதி பலம் கொண்ட மட்டும் வதம் செய்து பார்த்தது. வாரி எடுத்துக்கொண்டு போனது. நதியின் ஆவேசம் மிக்க வேகம் ஒருமுறை கால்வாசி வேலை முடிந்திருந்த அணையை அடியோடு பிடுங்கி எடுத்தது. அது உருட்டி எடுத்துவந்த பிணங்கள் கரையெங்கும் ஒதுங்கிக் கிடந்தன. ஆனால், கடைசியில் அது அடைபட்டு நின்றது. அதனை மறித்து நிறுத்தும் போரில் பல ஆண்டுகளாக உழைத்து உயிர்விட்ட எண்ணிலடங்கா மனிதர்களின் புதைமேடுகளையெல்லாம் மூழ்கடித்துத் தேங்கிய நீர் மட்டம் உயர்ந்து வந்தது. வனத்தின் பெரும்பரப்பில் இருந்த உயிரினங்கள் உயர்ந்துவரும் நீர் கண்டு மேலேறின. அடர்ந்து கிடந்த மரங்களை நீர் குடித்து விழுங்கியது.

அந்த வனமெங்கும் பிரம்மாண்டமான பரப்பளவில் நீர் பெருக்கெடுத்து மேலேறி வருவது கண்டு காட்டு விலங்குகள் அங்குமிங்கும் ஓடி சப்தம் எழுப்பியபடி இருந்தன. பறவைகள் மாதக்கணக்கில் கததிக்கொண்டிருந்தன. நீரின் பிரம்மாண்டமான மேலெழுதல் காட்டின் சமநிலையைக் குலைத்தது. ஓடும் தண்ணீர் நிலைகொண்டு பெரும் குளம்போல் ஆனது. கூழாங்கற்கள் அடியாழத்துக்குப் போயின. பாறைத்திட்டின் மேல் நடந்து நதியைக் கடந்து பழகிய விலங்குகள் பெருக்கெடுத்த நீர் நிலையைப் பார்த்து கடக்கமுடியாமல் இரு கூறாகப் பிரிந்தன. நின்றவிட்ட நதியின் குணத்தை காடு ஏற்கவில்லை. அது கட்டுண்டு மேலேறி வருவதை ஜீவராசிகள் வெறுப்போடு பார்த்து மலையேறி விலகிச்சென்றன. நதியைப் புதைத்து நீரால் கட்டிய பெரும் சமாதியென அது கிடந்தது.

அணையின் மேற்பரப்பில் நின்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை உயர்ந்துவரும் நீரைப் பார்த்தபடி இடதுகையால் தனது தொப்பியை எடுத்து, ஏறிச்சிவந்து கிடந்த வழுக்கையை வலதுகையால் தடவியவாறு பெருமூச்சு விட்டார் சீப் இஞ்ஜினியர் பென்னி குக்.

முடிக்கப்பட்ட அணையிலிருந்து இன்னும் சில மாதங்களில் தண்ணீர் இறங்கிவரத் தயாரானது. கீழே இருந்த சமவெளி எங்கும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. வனத்தை நீர் விழுங்கி மேலேறியதைப் போல கீழே நீர் இறங்கி வரும் பாதையெங்கும் செல்வந்தர்கள் நிலத்தை விழுங்கிக்கொண்டிருந்தனர். சின்னச்சின்ன ஜமீன்களும், திவான்களும் ராவ் பகதூர்களும் புதிய உத்தியோகஸ்தர்களும் வருடத்திற்கு சில மாதமே தண்ணீர் வரும் சுருளியாற்றின் கரையில் பல வேலிநிலத்தை வளைத்துப்போட்டனர். முதலில் வரைபடத்தின் வழியே வந்த நீரைச் செல்வந்தர்கள் எல்லாம் எப்படிப் பயன்படுத்துவது என்று பங்குபோட்டு முடித்தனர். வரைபடத்தின் அடிப்படையில் புதிய நிலப்பகிர்வும், பதிவும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதுவெல்லாம் முடிந்தபின் தான் நீர் இறங்கிவரும். நீர் இறங்கிவருவதற்குள் இதுவெல்லாம் முடிந்துவிடும்.

மலையடிவாரத்தில் இருக்கும் பெரிய கிராமமான கம்பத்தில் தான் இறங்கிவரும் நீரின் தலைமடை அமைந்தது. கம்பம் இனி இரு போகம் விளைகிற ஊராக மாறப்போவதாகப் பலரும் பேசிக்கொண்டனர். ஊரே சந்தோஷப்பட்டுக் கிடந்தது. புதியவர்கள் யாரும் வந்து ஊருக்குள் நிலம் வாங்கக்கூடாதென்று பெரிய சம்சாரிகள் முடிவு செய்தனர். அவர்கள் வாங்குவதற்கே நிலம் இல்லாமல் ஊர் கிடந்தது. தோண்டப்பட்டு வந்த புதிய வாய்க்கால் ஊரைச் சுற்றி பெருமாள் கோயில் ஓடையோடு இணைந்தது. ஊரின் நாலாபக்கமும் இனி நீர் குளிர்ந்து பாய் வயல்கள் செழிக்கும். கூரையைப் பொத்துக்கொண்டு கொடுக்கிற தெய்வம் போல லோகன் துரை இருந்தார். அவர் கடைசியாக வந்துவிட்டுப் போகும் போது அணை திறக்கப்படப்போகும் மாதத்தை அறிவித்து விட்டுச் சென்றார். நுங்கும் நுரையுமாகக் கலங்கிய நீர் செவலேறி அவரது நிறத்திலேயே வந்து சேர்ந்தது.

கம்பத்துக்கு மேற்கே தேவாரம், போடி பகுதிகளில் உள்ள பெரியசம்சாரிகள் எல்லாம் தங்கள் ஊரைவிட்டு விட்டு சுருளியாற்றின் பக்கம் வந்து நிலம் வாங்கிப்போடுவதை அறிந்த காவக்காரர்கள் அதன் காரணத்தையும் விரைவில் அறிந்தனர். அதனால் செழிப்பான விவசாயம்

நடக்கப்போகும் ஆற்றின் கரையோர கிராமங்களின் காவலை மறு பங்கீடு செய்யவேண்டும், நான்கைந்து கிராமங்களுக்கெல்லாம் ஒரு காவக்காரன் இனி தேவையில்லை. அவற்றையெல்லாம் பகிர வேண்டும் என முடிவு செய்து இனத்தான் காவல் காக்கும் கிராமங்களில் காவலை உலைக்க இனத்தான்களே களவில் இறங்கினர். ஆற்றின் மேற்கு ஊர்களில் இருந்த கிராமக் காவலர்கள் ஆற்றோர கிராமங்களுக்குள் தினமும் நுழைந்தனர். வரபோகும் நீர் இரவின் அமைதியைக் குலைத்தது. நிலை கொண்டிருந்த காவல் பெரியாற்று நீரின் அலையடிப்பில் தளும்பியது.

கம்பத்தை இப்போது வல்லாங்கனின் இளையமகன் கொடிவைரன் காவல் காத்து வந்தான். பஞ்ச காலத்தில் அணைக்கட்டு வேலைக்காக மலைக்கு மேலே போன வல்லாங்கன் அதன் பின் ஊர் திரும்பவில்லை. வடக்கே திண்டுக்கல் பக்கமாக பஞ்சம் பிழைக்கப் போன மூத்தவன் ஆண்டிச்சாமியும் என்ன ஆனான் என்று தெரியவில்லை. தாதுவின் அகோரப் பசிக்கு இரையான எண்ணற்றவர்களில் இவர்களும் அடங்குவர். இத்தனை ஆண்டுகளாக பிரச்சினை இல்லாமல் காவல் போய்க்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது நமது வகையறா திருடர்களே வந்து காவலை உலைக்க ஊருக்குள் இறங்கியுள்ளதென்பது அவனுக்குப் பெரும் வருத்தத்தைக் கொடுத்தது.

திருமலை பெரிய தேவருக்கு இது சம்பந்தமாக பிராது அனுப்ப நாட்டாமை மச்சக்காளையை எதிர்பார்த்திருந்தான். முத்தணனுக்குப்பின் நாட்டாண்மை தொழிலை அவன் மகன் மச்சக்காளை பார்த்து வந்தான். ஐந்தாறு மாதத்திற்கு ஒருமுறை வரும் பிராதை எல்லாம் சேர்த்துக்கொண்டு அவன் திருமலை பெரிய தேவரைப் பார்க்கப் போவது வழக்கம். அதன்படியே கொடிவைரன் சொன்ன பிராதையும் எழுதிக்கொண்டு பெரிய தேவரைப் பார்க்கும்போது கொடுத்துவிடுவதாக மச்சாக்காளை தெரிவித்தான்.

*

**அ**து பாளையக்காரர்களின் மாளிகை போல கோட்டைக்குள்ளே இல்லை. ஆனால், சாதாரண சம்சாரியின் வீடு போலவும் இல்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பலத்துடன் இருந்தது.

திருமலை பெரிய தேவரை மேற்குநாட்டு கள்ளர்களின் தலைவன் என்று திருமலை மன்னன் அங்கீகரித்து வைத்திருந்தான். அவருக்கு திருமலை என்ற பட்டத்தை வழங்கி, கும்பிடுவதற்கு சாமியும், குழந்தை பிறந்தால் சூடிக்கொள்ள பெயரும் கொடுத்து வருடத்திற்கு அறுபது வராகனும் அரண்மனையிலிருந்து கொடுத்துவந்தான்.திருமலை பெரியதேவருக்கு அம்மக்களிடம் வரிவசூல் செய்யும் உரிமையேதும் இல்லை. ஆனால், மேற்குநாட்டு கள்ளர்களிடம் நீதி பரிபாலனம் செய்யும் உரிமை அவருக்குத்தான். நாடு மற்றும் உபகிராமங்கள் நாட்டுத் தலைவர்களின் கையில் இருந்தது. அதைத் தாண்டி பிரச்சினை மேலெழும்பொழுது இவரிடம் வந்தது. நாட்டு எல்லைகளைத் தாண்டி வெளியில் இருப்பவர்களின் பிராதுகள் நேரடியாக இவரிடம் கொண்டு வரப்பட்டன. நாட்டுச் சேவகர்கள் எங்குமிருந்து பிராதுகளைக் கொண்டுவந்து சேர்ந்தனர். திருமலை மன்னன் காலத்திலிருந்து இப்பொழுதுவரை இந்த நீதிபரிபாலனம் எந்தப் பிரச்சினையுமின்றி

நடைபெற்றுவருகிறது.

திருமலை பெரியதேவருக்கு ஆதி தொட்டு வரி வசூல் செய்யும் உரிமை இல்லாததால் பாளையப்பட்டுக்களுக்கு ஏற்பட்ட அழிவு அவருக்கு ஏற்படவில்லை. சொத்துக்கள் குவியாத அவரின் இருப்பிடத்தில் கோட்டைகள் உருவாகவில்லை. கோட்டை இல்லாத ஒரு இடத்தில் அதிகாரம் ஒன்று இருப்பதைப் பற்றி எதுவும் கும்பெனியின் படைத்தளபதிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

உதிரும் பனித்துகள்களின் நகரங்களில் இருந்து வந்தவர்கள், உதிர்ந்து போன கோட்டைகளுடன் எல்லாம் முடிந்துவிட்டதென எண்ணினர். கீழை நாடுகளின் அரண் கற்கோட்டைகளால் மட்டும் ஆனதல்ல; அது வாக்குகளாலும், நினைவுகளாலும், இனக் குழுக்களின் ரத்தபந்தங்களாலும் இறுக்கக் கட்டப்பட்டிருந்தது.

கற்கோட்டைகள் எல்லாம் தகர்த்தப்பட்டுவிட்டதால் அதிகாரங் கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் நினைத்து ஏமாந்தனர். அதனால்தான் அவர்களை கைப்பற்றி ஆட்சி நடத்திய கோட்டைக்குள் கூட காவல்முறை தனது அதிகாரத்தை செலுத்திக்கொண்டிருந்தது. நூறு ஆண்டுகள் ஆனபின்பு கூட மதுரை நிர்வாகம் யானையைத் தடவும் குருடனைப் போலத்தான் இந்த மண்ணின் இரவுகளைத் தடவிக்கொண்டிருந்தது. பகலில் வரும் ஒற்றை மனிதனிடம் மக்கள் தமது காவல் கூலியைக் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

இந்தப் பெரும் நிலப்பரப்பு முழுவதும் தங்களது மரபுப்படி இயங்கி வருபவர்களைப்பற்றி அவர்களால் அறிந்துகொள்ளக்கூட முடியவில்லை. அது அவர்களின் தர்க்க அறிவுக்கு அப்பால் இருந்தது. இழிவடைந்த இந்த மண் ஆளப்படமட்டுமே ஆன ஒன்றுதானே தவிர இதனிடம் அறிந்துகொள்ள ஒன்றுமில்லை என்ற அவர்களின் அகம்பாவமே அதற்குக்காரணமாக இருந்தது.

தங்களது சட்டதிட்ட நீதி பரிபாலன முறைதான் உலகிலேயே சிறந்தது என ஆங்கிலேயர் எண்ணினர். தங்களிடம் பிரச்சினை எதுவும் செய்யாத வெள்ளைக்காரனிடம் தனக்கு பிரச்சினை எதுவுமில்லை என்றுதான் இவர்களும் நினைத்தனர். அதனால்தான் எங்குமிருந்து நாட்டுச் சேவகர்கள் கொண்டுவருகிற பிராதுகளைப் படித்து அவற்றைத் தீர்த்துவைத்து தங்களின் முன்னோர்கள் உருவாக்கிய நீதி பரிபாலனத்தை மட்டும் தொடர்ந்தபடி இருந்தனர்.

காவலுக்குள் தலையிடாத வெள்ளைக்காரனைப்பற்றி தெரிந்துகொள்ளவோ அறிந்துகொள்ளவோ முடியாதவர் களாகத்தான் காவக்காரர்களும் இருந்தனர்.

**அ**டர்ந்து கிடந்த புளியமரங்களுக்கு இடையில் இருந்த பழங் காலத்து காரை வீடு அது. விசாலாமான திண்ணையுடன் வீட்டின் தாழ்வாரம் இருந்தது. பழமை ஏறி பூச்சுக்கள் உதிர்ந்துகொண்டிருந்தன. தின்ணையில் ஊன்றி நின்ற மரத்தூணில் சாய்ந்தபடி நாட்டுச் சேவகன் மச்சக்காளை உட்கார்ந்திருந்தான். கருமனா செம்மனா காளங்கன்றுகள் புளிய மரத்தடியில் கட்டப்பட்டிருந்தன. செவலைக் கெடேரி ரெண்டு மட்டும் கொட்டத்தில் நின்றது. வீட்டின் இடதுபுறச் சுவரோரம் ஊன்றப்பட்டிருந்த

முளைக்குச்சியில் காரிக் கெடெரி ரெண்டு கட்டப்பட்டிருந்தன. பிராது பார்க்க மேற்கு சீமைக் கிராமங்களுக்கெல்லாம் போய்வரும் கூட்டு வண்டி கொட்டத்துக்குள் நிறுத்தப்பட்டிருந்தது.

திருமலை மன்னன் கொடுத்த பிடிசெம்பு, செம்பிரம்பு, பாதக்குறடு, ராஜகம்பளி, செப்புப் பட்டயம் எல்லாம் பெட்டிக்குள் வீட்டின் உள்ளறையில் இருந்தன. அந்தப் பெரிய பெட்டிக்குப் பக்கத்தில் இருந்த சாமிப்பெட்டிக்குள் குருவாச்சியம்மாள் இருந்தாள். ஆனால் மதுரைக்காளியோ வெளியிலிருந்த பெரும் வனத்துக்குள்ளே பிடித்து வைக்கப்பட்டிருந்தாள். அந்த இடமே அழிந்துபோன ஒன்றின் குறியீடாகவும், அழிக்க முடியாத ஒன்றின் எச்சமாகவும் இருந்தது. ராஜகம்பளியை விரித்து அதன் மீது அமர்ந்து தீர்ப்பு சொல்லும் உரிமை திருமலை பெரியதேவருக்கு மட்டுமே. ஆனால், கம்பளியை விரித்து அமரும் பழக்கம் இப்பொழுது இல்லை. பெரும் மடிப்பாக மடித்து பெட்டிக்குள் வைக்கப்பட்ட ராஜகம்பளி இப்பொழுது வணங்க மட்டுமே பயன்படுகிறது. பிடிசெம்பும், செம்பிரம்பும் பஞ்சாயத்துக்கு போகும்போது வண்டியில் எடுத்துவைத்துக்கொண்டு செல்லும் பழக்கமுள்ளது. குருவாச்சியம்மாள்தான் வீட்டோடு இருக்கிறாள். மதுரைக்காளி வனத்துக்குள் எப்போதாவது போய் வணங்கப்படும் தெய்வமாக இருக்கிறாள். நாயக்கர் கொடுத்த குருவாச்சி ரத்தம் கேட்கமாட்டாள். எனவே கருப்பனுக்கு பலி கொடுத்து வணங்கிய நாட்களில் பெட்டி இருக்கும் அறைக்குள் பெரிய தேவர் போகமாட்டார். கருப்பனின் கோட்டைக்குள் குருவாச்சியம்மாளைக் கொண்டுவந்து வைத்தது மன்னனின் ராஜதந்திரங்களுள் ஒன்று. ராஜாக்கள் அழிந்தாலும் அவர்கள் உருவாக்கி வைத்துவிட்டுப்போகும் தந்திரங்கள் அழியாமல் இயங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. கருப்பனை அண்டும் பொழுது குருவாச்சியம்மாள் பக்கம் வராமலும், குருவாச்சியம்மாளை அண்டும் பொழுது கருப்பனின் பக்கம் போகாமலும் இரு மனிதனாக்கப்பட்டார் பெரியதேவர். கருப்பனின் ஆளுமையைச் சரிபாதியாகப் பிரித்து தான் கொடுத்த தெய்வத்தின் ஆளுகைக்குள் கொண்டுவந்தான் மன்னன். மன்னனே மறைந்தாலும் தெய்வங்கள் மறையாது. அதன் கட்டுப்பாட்டுக்குள் இருந்து மனிதர்கள் ஒருபோதும் வெளியேற முடியாது. காலங்கள் ஓடின. இப்பொழுது கருப்பன் வெளியிலும் குருவாச்சியம்மாள் உள்ளேயும் இருந்தனர்.

மேற்குச் சீமையிலிருந்து அதிகாலை தாதனூர் வந்து சேர்ந்த மச்சக்காளை பொழுது ஏறவும் அங்கிருந்து புறப்பட்டு பெரிய தேவர் வீட்டுக்கு வந்தான். மெல்லிய காற்றில் புளியம்பூக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. தாவாரத்தில் கட்டியிருந்த கூட்டிற்கு குருவிகள் இரண்டும் பறந்து வந்து மச்சக்காளையைக் கடந்து உள்ளே போயின. பெரிய தேவர்காலைக் கஞ்சியைக் குடித்து, குருவாச்சியம்மாளைக் கும்பிட்டுவிட்டு வெளியில் வந்து திண்ணையில் உட்கார்ந்தார். விரிந்து படர்ந்த மார்பு, நெடுநெடுவென உயரமும் தோள்பட்டை வரை சடை முடியும், காதிலே கடுக்கனும், வாட்டசாட்டமான வடிவமும் கொண்ட அவரை வணங்கி விட்டு பிராதுகளை ஒவ்வொன்றாக எடுத்து நீட்டினான் மச்சக்காளை.

கைலாசநாத முதலியார் வாங்கி வாசித்தார். பன்னிரண்டு தலைமுறையாக இவர் குடும்பம் இந்த ஊரில் வாழ்கிறது. அவர்களுக்கு

திருமலை மன்னன் கொடுத்த நிலமானியங்களை உண்டு. உற்றார் உறவினர் சோழவந்தானில்.

**மூ**ணுசாமி துணை.

கம்பளி அதிகாரம் பொருந்திய திருமலை பெரியதேவர் சமூகத்திற்கு கீழுர் கிராமத்திலிருக்கும் மூணு பங்காளிகள் எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

கீழுர் கிராமத்திலிருக்கும் மூணு பங்காளி காவக்காரர்களும் மிகுந்த வணக்கமாய் எழுதிக்கொண்டது என்னவென்றால், இதற்கு முன் காலத்தில் நம்முடைய பெண்கள் கழுத்தில் அணிகிறது குதிரைக் கண்ணிதான். மூக்கில் ஒருபுறம் மூக்குவாளி போடுவார்கள். இப்பொழுது நாகரீகம் உண்டானதினால் மேற்கண்டவைகளை விட்டுவிட்டார்கள். இப்பொழுது கழுத்தில் புதிதாய் அட்டியலும், தொங்கு சரடும், பலமணி தாயத்தும் போடுகிறார்கள். கையில் வளையல் போடுகிறார்கள். முன்கையில் காப்பு போடுகிறார்கள். ஆண்கள் முன்காலத்தில் வாழைக்கடுக்கன், தேட்டுக்கடுக்கன் இதுகளைத்தான் போடுவார்கள். புதிதாய் நாகரீகம் உண்டானதின் பேரில் வாழைக்கடுக்கன் போடுவதை விட்டு கல்லு பதித்த பதிப்பு தெறிப்பு கடுக்கன் போடுகிறார்கள். இதுதான் நாகரீகத்துக்குள்ள அந்தஸ்து. இதுகள் இப்படி இருக்க இரண்டு காரியங்கள் மட்டும் முன்காலத்தில் நடந்தது போல் நடந்துவருகிறது. அது யாதென்றால் இப்பொழுது நம் ஜாதியார் கல்யாணம் முடித்தால் மாப்பிள்ளையை மணவறையில் உட்காரவைத்து மீசையை சிரைப்பது ஞாயம். அப்படி மீசையை சிரைத்து குதிரை மேல் மாப்பிள்ளையை உக்காரச் செய்து பெண் இருக்கும் ஊருக்குத் தாலி கட்டப்போனால் அந்த ஊரில் இருக்கும் ஜனங்கள் மாப்பிள்ளை முகத்தைப் பார்த்து இவன் ஐம்பது வயசுள்ள கிழவனாய் இருக்கிறான். இவனுக்காகவா இந்த சிறு பெண்ணை தாலி கட்டி குடுக்குறது என்று கேலி பேசுகிறார்கள். இந்த சேதியை பெண் கேட்டால் இந்த மாப்பிள்ளையோடு நான் போகமாட்டேன் என்று சொல்கிறாள். அது எதனால் என்றால் பதினாறு வயசுள்ளவனாக இருந்தாலும் மீசையை சிரைத்தால் ஐம்பது வயசு உள்ளவன் போல் தெரிகிறது. இதனால்தான் பெண் மாட்டேன் என்கிறாள். எனவே, மீசையை சிரைப்பதையும், பெண் பின்னால் அழுதுகொண்டே வருவதையும் தாங்கள் தடுத்துநிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கீறல் - சின்னு

கீறல் - கருப்பணன்

கீறல் - வீரணன்

*

**ஜா**திய பெரியதனம் பெரிய தேவர் அவர்களுக்கு கம்பம் காவக்காரர்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த விவரமாவது.

கம்பம் கிராமத்தின் காவக்காரன் கொடிவைரனின் தகப்பன் வல்லாங்கன் காலம் முதல் அவன் தலைமையில் வேட்டையாடி வருகிறோம். வல்லாங்கனுக்குப்பின் கொடிவைரன் வேட்டைத் தலைவனாக இருந்துவருகிறான். வேட்டையாடி வரும் சீவாத்திகளை

வல்லாங்கன் வீட்டிற்கு முன் வழக்கப்படி கொண்டுவந்து பாகம் பகுந்து கொள்வது. பாக விபரமாவது. ஷெ கொடிவைரனுடன் ராத்திரி வேட்டைக்குப்போய் இறந்துபோன மாயனுக்கு ஒரு பாகம். ஷெ கொடிவைரன் தாமும் மற்றவர்களும் பாகப்படியாக பகுந்துகொள்வதும், வேட்டையில் இறந்து போன நாயிக்கு ஒரு வருசத்துக்கு பாகமும், பங்குப்பிரகாரம் பாவித்துக் கொள்வதென்றும், வேட்டைநாய் கொண்டுபோனால் ஆள் போகாவிட்டால் ஷெ நாய்களுக்கு பாகம் இல்லை என்றும், பகல் வேட்டைக்கு போகிறவர்கள் வல்லாங்கன் வீட்டில் கொண்டுவந்து ஷெ சாமிக்கு ஒரு பாகமும் மற்றவர்கள் வழக்கப்படி பாகமும் பகுந்துகொள்வதென்றும் வல்லாங்கனின் மகன் கொடிவைரன் முன்வழக்கப்படி வேட்டைத் தலைவனாக இருந்து அனுபவித்து வருகிறது என்றும், இதில் அழுச்சாட்டம் செய்கிறவர்களுக்கு முறையான அபராதம் விதிக்கவேண்டும் என்றும், வேட்டைத் தலைவன் அழுச்சாட்டம் செய்தால் ஒரு பங்கு அதிகமான அபராதமும் விதிக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கூடி முடிவுசெய்துள்ளோம். நீங்கள் அறிய எழுதிக்கொடுக்கிறோம்.

*

**தி**ருமலை பெரியதேவர் சமூகத்திற்கு கிடாயூர் கரைக்காரர்கள் எழுதிக்கொண்டது.

நமது வழக்கப்படி புருசனை சாகக் கொடுத்தவள் கெர்ப்பம் உண்டானாள் யாரால் கெர்ப்பம் உண்டானது என்பதனை நம்மள் ஜாதி நாட்டாண்மை, சேவுகன், குடிகளும் பொதுமந்தையில் பைசல் செய்து அபராதம் ஏற்படுத்தி அவனை கூட்டத்தில் அர்ணாகயிற்றை அறுத்து சரடு கட்டச்சொல்வது வழக்கம். அப்படியிருக்க எங்களூர் பெரிய காவக்காரன் வீட்டில் அவனது மச்சினன் இறந்துபோனதால் அவன் பெண்சாதி செவனம்மாளை தங்க வைத்திருந்தான். செவனம்மாளுக்கு நான்கு மாத கர்ப்பம் உண்டாகிவிட்டது. அதை வெளியில் சொல்லாமல் மறைத்து அதற்கு காரணமான அவனது தம்பியை வீட்டிலே வைத்து சரடுகட்டி வைத்துவிட்டான். நமது வழக்கம் தவறி ஊருக்கு சொல்லாமல் மந்தையில் வைத்து சரடு கட்டாமல், யாருக்கும் தெரியாமல் வீட்டிலே வைத்து சரடு கட்ட வைத்ததால் அவனுக்கு ஊர் அபராதம் போட்டிருக்கிறோம். அதை உங்களுக்கு சொல்கிறோம்.

கீறல்...............

கீறல்..........

*

**மூ**ணுசாமி துணை.

கம்பளி அதிகாரம் பொருந்திய ஜாதி பெரிய தனம் ஒன்பதாவது பட்டக்காரரான திருமலை அவர்கள் சமூகத்திற்கு கம்பம் கிராமத்திலிருக்கும் வல்லாங்கன் மகன் கொடிவைரன் எழுதிக்கொண்டது.

கம்பம் கிராமத்தை முன்னோர்கள் எட்டு நாடுகளுக்கும் பொதுவாக காவல் சம்பாத்தியம் செய்து வந்தார்கள். பல ஆண்டுகளுக்கு முன் நாட்டுவிதமான ஒப்பந்தம் தவறியதால் பெரிய தேவர் கம்பத்துக்கு வந்து அநேக ஒழுக்கங்களையும் நாட்டு விதமான தீர்மானங்களையும்

ஏற்படுத்துவிட்டுப் போனார். அது முதல் சில காலம் செவ்வனவாய் இருந்தது. பின்னர் தாது வருஷப் பஞ்சம் வந்ததில் குடியானவர்கள் காவல் கொடுக்காமலும் நாங்கள் காவல் காக்காமலும் பொதுவாய் இருந்துவிட்டோம். பின்னர் குடியானவர்கள் எட்டு நாட்டுப் பெரியவர்களையும் வருவித்து காவல் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்பொழுது சில பேர் சொந்தப்பகுதியில் காவல் காத்து வந்தார்கள். நானும் சில தெருக்களை சொந்தப்படுத்தி காவல் காத்தேன். 1890ம் வருஷத்தில் நீங்கள் ஜாதி பஞ்சாயத்துகளை பார்வையிட்டு வந்த காலத்தில் இவ்விடம் வந்தபொழுது எங்களது வகையறா பெரியோர்கள் தங்களிடம் பிராது சொன்ன அடிப்படையில் எங்களை விசாரித்து எங்கள் ஒவ்வொருவருக்கும் அபராதம் போட்டு எங்களை ஒப்பந்தக் காவலாய் காக்கவேண்டும் என்று சொல்லி ஒரு பத்திரம் எழுதிவிட்டுப் போனீர்கள். அது முதல் சில காலம் தங்கள் தீர்மானம் தவறாமல் எட்டு நாட்டு காவல் என்று யாதொரு திருடர்களும் பிரவேசிக்காமல் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது நம்ம ஜாதி திருடர்கள் தங்கள் தீர்மானம் தவறியும் எட்டு நாட்டு ஆட்சியினை தவறியும் காவல் உலைக்க வேண்டுமென்று சொத்து வகையறாக்களையும் மாடுகன்றுகளையும் திருடுகிறார்கள். இதனால் குடிகளுக்கு வருத்தம் உண்டாகி நீங்கள் எழுதிக் கொடுத்த பத்திரப்படி எங்களிடம் சொத்துக்களை வசூல் செய்கிறார்கள். நமது ஜாதி ஒப்பந்தத்திற்கு பங்கம் எற்பட்டால் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை வாய்க் குத்தத்திற்கு இன்னதென்றும், கலகத்திற்கு இன்னதென்றும், இனத்தான் வீட்டில் திருடினால் இன்னதென்றும், இனத்தான் காவலில் திருடினால் இன்னதென்றும், கொலை நடந்தால் இன்னதென்றும் பரிகாரம் நம் நாட்டில் நடந்து வருகிறது. நமது பழக்கங்களை சிலர் மீறுகின்றனர். இதனால் எங்களுக்கு வருத்தம் உண்டாகி திருடர்களைப் பிடித்து வெள்ளைக்கார சர்க்கார் மூலம் ஒப்பித்தால் நம்மாள் ஜாதி பலிக்குற்றம் வருமென்றும் நமது நாட்டு ஒப்பந்தம் தவறும் என்றும் பயந்திருக்கிறோம்.

உள்ளூர் காவக்காரர்கள் அனுமதியில்லாமல் களவு போகவில்லை என்று பெரிய குடித்தனக்காரர்களும், கணக்கர்களும் உறுதியாகச் சொல்கின்றனர். நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்க மறுக்கின்றனர். குடித்தனக்காரர்களுக்கு சரியான காவல் கொடுக்கமுடியாமல் போவது என்ன ஞாயம். எனவே, தாங்கள் இந்த பிராதைப் பார்த்து எங்களுக்கு இன்னபடி நடக்கவேண்டுமென்று உத்தரவு கிடைக்க எதிர்பார்க்கிறோம்.

கொடிவைரன்

கீறல்....

22.11.1895

**க**டைசிக்கடிதத்தை படித்து முடித்துவிட்டு முதலியார் நிமிர்ந்து பார்த்தார். திருமலை பெரிய தேவர் சுவரில் சாய்ந்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தார். அவரது முகத்திலே பெரும் கலக்கம் இருந்தது. இரண்டு கை விரல்களும் ஒன்றோடொன்று இறுகப்பற்றியபடி இருந்தன. கண்கள் இரண்டும் விட்டத்தைக் குத்தி நின்றுகொண்டிருந்தன. மனதுக்குள் பெரும் கொந்தளிப்பு.

காவலை அழிக்க தனது இனத்தானே துணிந்திருப்பது பெரும் மோசம் நிகழப்போவதற்கான துவக்கமாக அவருக்குப் பட்டது. ஆனால், இதுவெல்லாம் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருவதின் தொடர்ச்சிதான். இந்த கவர்மெண்ட்டார் காவல் முறையை அழிக்கத் துணிவு கொண்டுள்ளனர். அதனால் அங்குமிங்குமாக பிரச்சினைகள் உருவாகிறது. காவல் கொடுக்க மறுப்பதால் துப்புக்கூலி முறை உருவாகி உள்ளது. இது தற்காலிகப் பலனைக் கொடுத்தாலும் துப்புக்கூலி என்பதே காவல் கூலியின் அழிவைத் துவக்கிவைப்பதுதான் என்பது அவருக்குபட்டது. இந்த கவர்மெண்ட்டார் பெரிய சம்சாரிகளையும், புதிய உத்தியோகஸ்தர்களையும் காவலுக்கு எதிராக உசுப்பிவிட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனால் திண்டுக்கல் பக்கமுள்ள கிராமங்களில் உருவாகிய பிரச்சினைகள் எல்லாம் அவருக்கு வந்து சேர்ந்துள்ளன. அவை எல்லாவற்றையும் இணைத்து ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி அவர்யோசித்துக் கொண்டிருந்தார். முகம் மேலும் கலக்கமடைந்தபடி இருந்தது. கைவிரல்கள் பின்னின. தாழ்வாரத்தின் மேலே இருந்த கூட்டிலிருந்து குருவிகள் இரண்டும் கீச்சொலியை எழுப்பியபடி பறந்து வெளியேறின.

திருமலை மன்னர் காலத்திலே உருவான காவல் கட்டுப்பாடுகள் எல்லாம் தன்னுடைய காலத்தோடு உலைந்து தகர்ந்துவிடுமோ என்ற கவலை அவரை விழுங்கிக்கொண்டிருந்தது. புடிசெம்பும் செம்பிரம்பும் பிடித்துப்பழகிய விரல்கள் கவலையால் நடுங்கியபடியே இருந்தன.

கொடிவைரன் அனுப்பிய பிராது அவரை மௌனத்தில் உறைய வைத்திருந்தது. நினைவு கடந்த காலங்களுக்குள் போய்க் கொண்டிருந்தது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் கொடிவைரன் தகப்பன் வல்லாங்கனை காவலுக்கும், மச்சக்காளையின் தகப்பன் முத்தணனை நாட்டாண்மைத் தொழிலுக்கும் அனுப்ப திடியன் தாமரைக்குளத்தில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையிலேயே முடிவெடுத்ததில் துவங்கி இன்று முத்தணின் மகன் மச்சக்காளை கொண்டுவந்திருக்கிற கொடுவைரனின் பிராது வரை நிகழ்ச்சிகள் சங்கிலித்தொடராய் அவருக்குள் ஓடிக்கொண்டிருந்தன.

திண்ணையின் ஓரத்தில் இரவெல்லாம் வெளிச்சம் ஏற்றிய விளக்கின் கரிய திரியை சேவல் ஒன்று கொத்தி உதறியது. மச்சக்காளை எழுந்து சேவலை விரட்ட முற்பட்டான்.

*

எ

# பென்னிங்டன் ரோடு

# 88

**வை**கைக்கு வடக்கே உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களுக்குப் பெரியாற்று நீர் வந்து சேர்ந்தது. காட்டு வெள்ளாமை கிடந்த பெரும் நிலப்பகுதி எங்கும் நீர் மேவிப் பரவியது.

கொல்லாசாரிக்கும் தச்சாசாரிக்கும் ஏகக் கிராக்கி. உழவு மாடுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு. எருக்கங் குலை, கொளுஞ்சி, ஆவாரம் குலை, நாதாரிக்குலை என வெளியெங்கும் கிடக்கும் இலை தழைகள் எதுவும் இப்பொழுது இல்லை. நெல்லு நாத்து எங்குமே கிடைக்கவில்லை. சேறும் சகதியுமாக மனிதர்கள் இங்குமங்குமாக அலைந்து கொண்டிருந்தனர். கண்மாய்கள் தோறும் பெரியாற்று நீர் மேவிக்கிடந்தது. புது மண்ணில் புரண்டு உருண்ட புதுப்புனல் மனிதர்களைப் பிசைந்து எடுத்தது. மேவும் நீரைக் கட்டிப்போட்டு, முறைப்படுத்தி பயன்படுத்தத் தெரியாமல் ஆட்கள் தட்டுத்தடுமாறியபடி இருந்தனர்.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான ஊர்களுக்குத் தண்ணீர் வந்தால் சம்சாரி என்ன செய்வான்? உழவு மாடுகளும், உழுபடைக் கருவிகளும், வயல் வேலைக்கான நுட்பமும் கிராமச்சாவடிகளில் தாயக்கட்டைகளுக்குள்ளிருந்து ஊற்றுபோலப் பொங்கியா வந்துவிடும்?

நம்முடைய நிலத்திலும் நெல் விளைய வைக்க முடியுமென்பதையும், நாமும் இனி அரிசிச் சோறு தின்னமுடியும் என்பதையும் அவன் நம்பவே சில வருடங்கள் ஆனது. ஆனால், கண்மாய் நிறைய நீர் வந்து கிடக்கிறது. எந்த மழையும் பெய்யாமல் வாய்க்காலில் நுங்கும் நுரையுமாக நீர் வந்துகொண்டேயிருக்கிறது. கொழு அடிக்கவும் கலப்பை மூட்டவும் கொல்லாசாரிக்கு நாற்பது கைகள் தேவைப்பட்டன. மாடுகளும் மாட்டு வண்டிகளும் அதிகரிக்க அதிகரிக்க கிராமம் அழகாகிக் கொண்டேயிருந்தது. மாட்டு வியாபாரிகள் ஊர் ஊருக்கு வந்த வண்ணம் இருந்தனர்.

‘இது மயிலை நிறமா கொம்படியா இருக்கு.’

‘இது கண்ணாபுரம் மாடு. இது நாட்டுக் காளை. தொழி வேலைக்கு இதுகள போல எதுவும் வராது.’

‘இது வடகாட்டு மாடு. நல்லா வளத்தியா பதினைஞ்சு பிடி, பதினாறு பிடி இருக்கும்.’

‘இது பூரணிக்காளை. இது லம்பாடி. ஒட்டகம் மாதிரி இருக்கு பாரு.’

‘கருப்புல மயில கலந்துருக்கிற கண்ணாபுரம் காளை. இது சம்சாரிக்கு ஏத்தது.’

‘இது காரி மர கொம்படி. இது மாதிரி சம்சாரியோட பழக்க வழக்கத்துக்கு வேற எதுவும் வராது.’

மாடுகளைப் பற்றியும் மாட்டின் வகைகளைப் பற்றியும், சுழிகளைப் பற்றியும், மச்சங்களைப் பற்றியும் மாட்டு வியாபாரிகள் சொல்வதை ஊர் வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தது. மாட்டுச் சந்தைகள் பெரும் திருவிழாக்களைப் போல நடந்தன. சந்தையின் மூலைக்கு மூலை லாடமடிக்கிற ஆசாரி பெரும் வித்தைக்காரனைப் போல மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். சுருக்கக் கயிறு ஒன்றை இடுப்பிலே போட்டு மிகலாகவமாய் மாட்டை மண்ணில் சாய்க்கும் அவன், வெவ்வேறு வகையான லாடங்களைத் தான் கொண்டு வந்துள்ள தோல் பையை விரித்துப்பரப்பி வைத்திருந்தான். வெட்டுக் கால் மாட்டுக்கு இரும்பை வளைத்து மொனையிலே கொடுக்கத் தெரிந்த நுட்பமான லாடக்காரனைத் தேடி அலைந்த மக்கள் அவனைத் தங்களின் ஊருக்குக் கூட்டிப்போய் வைத்துக் கொண்டனர்.

புதிய நீர்கட்டிகள் ஊர் ஊருக்குத் தேவைப்பட்டனர். ராமநாதபுரம் சிவகெங்கைப் பகுதிகளில் மானாவாரி கண்மாய்களைப் பார்த்துக்கொண்டிருந்த நீர்கட்டிகள் பலரும் அரிசிச் சோற்றுக்கு ஆசைப்பட்டு வந்து சேர்ந்தனர். கிராமத்துக்குப் பொதுவான நீர்கட்டியும், தண்டலும் ஆசாரியும் இதுவரை பெரிதாகத் தேவைப்படாமல் இருந்தனர். ஆனால், இதுவெல்லாம் இப்பொழுது கிராமத்தின் உயிர்நாடியான பணியாக மாறியது. அரைச்சம்பா, காச்சம்பா, சிறுமுடியும், தில்லை, வெளச்சம்பா என்று ஏழு மாதப் பயிர்கள் நிலமெங்கும் விளைந்து வந்தன.

கிராமங்கள் பொது நியாயங்களை உருவாக்க ஆரம்பித்தன. எல்லோருக்கும் அறுப்புக் காலத்தில் கூலி காணிக்கு இத்தனை கட்டுக்கதிர் என்றும், சூட்டடி காணிக்கு இத்தனை மரக்கால் என்றும் முடிவானது. மூன்று படி பிடிக்கிற ஊர் பொது மரக்கா அடித்து சாவடிகள் தோறும் ஆறு நான்கு என வைக்கப்பட்டன. எல்லா சம்சாரிக்கும் நீர் கட்டிதான் அளக்கணும். ஊர் மரக்காலில்தான் அளக்கணும் என ஊர் விதி செய்துகொண்டது.

தீடீரென ஒரே நாளில் நன்செய் விவசாயத்திற்கு மாறியவர்களுக்கு ஓராயிரம் பிரச்சினைகள் வந்துகொண்டேதான் இருந்தன. அறுப்புக்காலம் வரை தண்ணீர் வருமா என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருந்தது. ஆனால், விடைதான் யாரிடமும் இல்லை. வந்த தண்ணீரைப் பார்த்து வாய்பிளந்தபடியே வேலைகள் நடந்தன. வேலைகளிலும் நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் உருவாகின. உழுது போய்க்கொண்டிருக்கும்போதே எடக்குப் பண்ணி நேக்காலைத் திருக்கி

நின்றுகொள்கிற மாட்டை அடித்தால் நாளைய வேலையும் கெட்டுப்போய்விடுமே என்று பயந்து என்ன செய்வதென்றே தெரியாமல் வரப்பு மேட்டிலே சம்சாரிகள் உட்கார்ந்திருந்தனர். உழுவதில் துவங்கி அறுப்பு முடியும் வரை எல்லாமே சவாலாகத்தான் இருந்தது. அறுப்பு முடியாமல் யாரும் அசலூருக்குப் போகக்கூடாதென ஊர் ஊருக்கு சாட்டப்பட்டது. முதல் அறுப்பில் கருதுக் கட்டைத் தூக்கி வரப்பிலே நடந்துவர ஊர் படாதபாடு பட்டது. உடலெங்கும் மண்ணும் வயல் எங்கும் சிரிப்புமாக கட்டுகளத்து மேட்டிற்கு வந்துசேர்ந்தது. சூட்டடி மாட்டிற்குப் புது லாடம் அடித்து பிணையல் விட்டனர். காற்றில் சண்டு பறக்க நெல் அம்பாரம் அம்பாரமாய் குவிந்தது.

நீர்கட்டி கூலி மரக்காலால் அளந்தபடியே இருந்தான். இரவு பகலாகக் களத்து மேட்டில் மக்கள் கூட்டம் கூட்டமாய் வேலைபார்த்தனர். இரவில் காண்டாவிளக்கின் வெளிச்சத்தில் குவிந்துகிடக்கும் நட்சத்திரங்களைப் போல நெல்மணிகள் சிரித்துக்கொண்டிருந்தன. அந்தியிலும் அதிகாலையிலும் மரங்களை விட்டு இறங்கிவரும் அணில்கள் நெல்மணிகளை எடுத்துக்கொண்டு சர்வசாதாரணமாக மேலேறும். நீர்க்கட்டி கை வலிக்க வலிக்க அளந்து கொண்டேயிருந்தான். எல்லோர் வீட்டிற்கும் நெல் போனது. ஒரு பேரதிசயம் திடீரென நிகழ்ந்தது போல அது நிகழ்ந்தது. சொரட்டைப் பாம்பு போல காற்றைக் குடித்து வாழ்ந்து கொண்டிருந்த செங்காட்டு மக்கள் வயிறார அரிசிச்சோறு சாப்பிடுகிறவர்களாக மாறினர். அரிசிச் சோற்றுக்கு வெஞ்சனம் வைத்து சாப்பிடுகிற பணக்காரர்கள் இப்பொழுது கிராமங்களிலும் உருவாக ஆரம்பித்தனர்.

புதுமண்ணில் பிடித்து வளர்ந்த பயிரின் வீரியம் விளைச்சலில் தெரிந்தது. முதல் இரண்டு மூன்று வெள்ளாமைகளில் பெரும் பாடு பட்டுப்போன மக்கள் அப்புறம் தங்கள் தேவைகளை முன்கூட்டியே உணர்ந்து தயாராகினர். ஒவ்வொரு ஆண்டும் சாகுபடியாகும் நிலப்பகுதியின் அளவு கூடிக்கொண்டேயிருந்தது. முள்ளுப்புதர்களை வெட்டுவது ஏகத்துக்கும் நடந்தது. வரும் நீரின் மீதான ஆசை அடர்ந்த காடுகளை வாரிச்சுருட்டியது. மரத்தை வெட்டி மொட்டு தோண்டுகிற வேலைகளில் எந்நேரமும் மக்கள் ஈடுபட்டிருந்தனர். மொட்டு தோண்டிய பெரும் பள்ளத்தை நிரப்ப கரட்டு மேட்டை வெட்டி மண்ணைக் கொண்டுவந்து கொட்டினர். தண்ணீர் எந்த மேட்டிற்கும் மேவிப்பரவத் தயாராகத்தான் இருந்தது.

*

**பெ**ரியாற்று நீர் மதுரையின் நிலப்பரப்பை உருமாற்றியது. கள்ளியும் கற்றாழையும் விளைந்து கிடந்த கரட்டுப்பூமியை அது விழுங்கியது. பெரும் காடு விளைநிலமானது. காட்டுப்பூச்சிகளும் நரிகளும் நீர் கண்டு விலகி ஓடின. பரவிப் பெருகும் நீர் பார்த்து எங்கெங்கிருந்தோ வேறு பறவைகளும், பூச்சிகளும் வந்து சேர்ந்தன. கொக்குகள் கூட்டம் கூட்டமாக பகலிலும், இரவிலும் இறகு மடக்கி இறங்கிக் கொண்டேயிருந்தன. நரி ஊளையிட்டுப் போகும் சத்தத்தையே கேட்டுக்கொண்டிருந்த ஊர் இரவு முழுவதும் தவளைகளின் விதவிதமான அரற்றலைக் கேட்டபடி இருந்தது. சிறு சிறு வாய்க்கால்கள் தோறும் முத்துமாலைகளை

உருட்டுவதைப்போல நீர் உருண்டு கொண்டேயிருந்தது. எங்கும் பெருக்கெடுத்த நீரிலிருந்து குளிர் மேலெழும்பி ஊரை நடுக்கமுறச் செய்தது. நிரம்பிய கண்மாயின் மடைகளில் குடியிருப்பதைப் போல ஊர் முழுவதும் ஈர நைப்பு அடித்திருந்தது. மார்கழி தையில் அதுவரை சந்தித்திராத குளிரை கிராமங்கள் சந்தித்தன. மனிதர்கள் சாக்குகளை இழுத்துப்போர்த்தி ஒடுங்கிப் படுத்தனர். நாய்கள் குரைப்பொலியற்று மூலையிலே பதுங்கின. பந்தலில் கொடி படர்வதைப் போல செம்மண்சுவர்களில் ஈரம் ஏறிப்பரவியது.

புதிய படகைத் தண்ணீரில் இறக்குவதைப்போல கிராமங்கள் ஒவ்வொன்றாய் பெரியாற்று நீரில் இறங்கின. நீரோடு வாழப்பழகுதல் எளிதன்று. நீர் அவர்களுக்குள் இறங்கிப் பாய்ந்து கசிந்தபடி இருந்தது. நீரின் குணம் படியப்படிய மனிதனுக்குள் விளைச்சல் ஆரம்பித்தது. சம்சாரித்தனத்தின் உயிரே நிலத்தில் பயிர் விளையும்பொழுது மனத்துக்குள்ளும் அது விளைவதுதான்; நிலத்தில் பயிர் வாடும்போது மனதுக்குள் உயிர்வாடுவதுதான். நிலத்தின் கண்ணாடியாக மனித உடல் மாறிவிடுகிறது. நிலம் போர்த்திய பேருடலுடன் அலையும் மனிதர்கள் பயிர்களின் வேர்களை நரம்புகளெனத் தங்களுக்குள் ஊடுருவ விட்டுவிடுகின்றனர். பச்சைப் பயிர் வளர்ந்து, பரிய ஆரம்பித்து, பால்பிடித்து, முத்துமுத்தாக விளைந்து வயலிலே சாய்ந்து படுத்துறங்கும் காலத்திற்குள் விதவிதமான மன உணர்வுகளால் உருமாறியபடியே இருக்கின்றனர். பாய்ச்சிய நீரில் விளையும் பயிர் நிலத்தில் மட்டும் விளைவதில்லை. வேளாண்மை எங்கு நடக்கிறது என்பது ஒரு மர்ம விளையாட்டாகவே இருக்கிறது. இயற்கையின் பேரதிசயங்களுக்குள் கால் நனைத்து சம்சாரி வயல்வெளியெங்கும் நடந்து திரிகிறான்.

பெரியாற்று நீர் தேங்கிக் கிடந்த கிராமங்கள் அரசின் கட்டமைப்புக்குள் கச்சிதமாய் பொருந்த இளகிக்கொடுத்தன. கனன்று எரிந்த நெருப்பை, அரபிக்கடலில் கலக்க வேண்டிய தண்ணீர் வந்து அணைத்தது. சம்சாரித்தனம் கொடிபோல் படர்ந்து கிடக்கும் கிராமங்களில் இனி அவர்களைக் கையாள்வது அரசாங்கத்திற்கு மிக எளிது. நீரும் பயிரும் அவனை வேண்டிய மட்டும் வளைத்து உள்ளிழுத்துக்கொண்டன. அவனது ஓட்டம் தடுக்கப்பட்டுவிட்டது. அவனது பாதங்கள் நிலை கொண்டுவிட்டன. அவன் பயிர் எனும் உயிர் வளர்வதை அணுஅணுவாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். வீட்டுக்கொல்லையில் விளைந்து கிடக்கும் கத்திரியின் நீல நிறப்பூவைத் தனது குழந்தைகளுக்குக் காட்டி மகிழ்கிறான். பச்சைப் பயிரின் மகத்துவம் உணர்ந்த அவன் இனி வெட்டரிவாளையும், வேல்கம்பையும் தூக்கிக்கொண்டு ஓட மாட்டான். கொம்பேறி மூக்கனைப்போல மரத்துக்கும் மரம் தாவி மண்ணில் கால்பாவாமல் வாழ்ந்த வாழ்க்கை முடிந்துவிட்டது. அவன் வேய்ந்த வைக்கோல் போரின் ஓரத்தில் முட்டையிடும் கோழி கேவித் திரிகிறது. அவன் கவனங்களை எங்கும் அலையவிட்டபடி இருந்தான். அவனுடைய நேரம் மிகக்குறுக்கி விட்டது. நடுநிசிக்கும் விடிவெள்ளிக்கும் இடையில் அவன் தூக்கம் ஒடுங்கிப்போனது. அவன் விழிப்புகொள்ள போதிய பொழுதற்றுதான் ஒவ்வொரு நாளும் வந்தது. அந்த நாளைப் போலத்தான் ஒவ்வொரு மாதமும் கடந்தது. அந்த மாதம்தான் காலம் முழுவதும் உருண்டது.

சம்சாரித்தனம் மிகுந்திருந்த மேலூரில் அரசாங்கம் போலீஸ் ஸ்டேசன்

ஒன்றைத் துவக்கியது. அத்தோடு எல்லாம் முடிவுக்கு வந்தது. பெருமூச்சு விட்டு அடங்கியது அரசு இயந்திரம். ரும்ளேயும் நாதாம்கானும் மருதநாயகமும் கொன்றுகுவித்த உடல்களிலிருந்து சிந்திய ரத்தம் நிலத்தின் அடியாழம் வரை தேங்கிக்கிடந்தது. அந்த ரத்தக்கறையைப் பெரியாற்று நீர் வேண்டியமட்டும் உள்ளே போய் கழுவித் தீர்த்தது.

கொப்பளிக்கும் குரோதத்தில் கொலைகள் விளைந்து கிடந்த பூமியில் ஆட்டுப்புளுக்கைக்கும், மாட்டுச் சாணத்திற்கும் மக்கள் இரவு பகலாக அலைந்து திரிகின்றனர். தீராத ரத்தத்தைக் குடித்த நிலம் இப்போது தானியங்களை வாரிக்கொடுக்கத் துவங்கியது. காட்சிகள் எல்லாம் உருமாறி விட்டன. யாரும் எதிர்பாராத பெரும்மாற்றம் நிகழ்ந்துள்ளது. பச்சைப்பசேலெனப் பெரும் நிலப்பரப்பு கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்து கிடக்கிறது. கன்னி நிலம் வெடித்து பயிர் செழித்து பசுமைக் காடென வைகை வடகரை பூமி வடிவுகொண்டுள்ளது.

*

**மே**லூர் பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் அரசு நிர்வாகத்திற்கு பெரும் நம்பிக்கையைக் கொடுத்தது. நூற்றாண்டாக இருந்து வந்த சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைப் பொதுப்பணித்துறையின் மூலம் தீர்த்துவிட்டதாக மதுரை கலெக்டர் கவர்னர் அலுவலகத்திற்குத் தெரிவித்தார். எதிர்கொள்ள முடியாத பெரும் சவாலென இருந்த ஒன்று தானே இற்றுவிழுந்தவுடன் மாவட்ட நிர்வாகத்தின் முழு கவனமும் மதுரை நகர் நோக்கித் திரும்பியது. தாதனூர்க்காரர்களின் காவலிலிருந்து மதுரையை மீட்க முழுமையான திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணியில் மாவட்ட எஸ்.பி. பிராஸ்ஸின், இளம் டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் இருவரும் ஈடுபட்டனர். சுமார் ஐம்பது ஆண்டுகளாகத் தாதனூர் காவலை ஒழிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் முழுமையையும் ஆய்வு செய்த அவர்கள் இம்முறை வெற்றி பெற்றே திருவது என்ற முடிவுடன் பணியைத் துவக்கினர்.

பழைய காவல் முறைக்கு எதிரான பொதுக்கருத்து படித்த மக்கள் மத்தியில் மேலெழுந்து வந்துகொண்டிருந்தது. அதை ஊதிப் பெரிதாக்க அரசு தொடர்ந்து கவனம் செலுத்தியது. போலீஸ் டிபார்ட்மெண்ட்டை பலப்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. பத்தாண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட துப்பறியும் இலாகாவின் செயல்பாடு முன்னேற்றம் கண்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குத் திறமை வாய்ந்த இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர்.

இன்ஸ்பெக்டர் பிச்சுவையர், சேதுப்பிள்ளை இருவரின் செயல்பாடுகளும் திறமை மிக்கதாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பிச்சுவையர் தனது அறிவுக்கூர்மை மிக்க செயல்பாடுகளால் மேலதிகாரிகளிடம் மிக நல்ல பெயரைச் சம்பாதித்துள்ளார். இதுவரை ஆங்கிலேயர்கள் மட்டுமே வகித்துவரும் டி.எஸ்.பி. நிலைக்கு வெகுவிரைவில் பிச்சுவையர் பதவி உயர்வு செய்யப்படுவார் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். குடிக்காவல் பிரச்சினையைக் கவனிக்க அவருக்குத் தனிப்பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரையும் துப்பறியும் இலாகா எஸ்.ஐ. ஆறுமுகத்தா பிள்ளையையும் சரியாகப் பயன்படுத்தினால் நமக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று எஸ்.பி.

பிராஸ்ஸின் முழு நம்பிக்கையுடன் இருந்தார்.

இந்த நம்பிக்கைக்குரிய அம்சங்கள் எல்லாம் இணைத்து புதியதிட்டமொன்று வகுக்கப்பட்டது. அந்தப் புதிய திட்டத்திற்கு மதுரையில் காவல் பணியில் ஈடுபடுகின்ற தாதனூர்க்காரர்கள் எத்தனை பேர் என்ற எண்ணிக்கை துல்லியமாகத் தேவைப்பட்டது. அப்படி ஒரு விவரம் எதுவும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் இல்லை. எல்லாம் குத்து மதிப்பாகத்தான் இருந்தது. எனவே, முதலில் தாதனூர் காவல்காரர்களை எண்ணிக் கணக்கிடும் பணியைத் துவங்குவதென்று முடிவானது.

போலிஸ் நேரடியாகப் போய் கணக்கிடும் பணியில் ஈடுபடவேண்டாம், துப்பறியும் இலாகா மூலம் அதனைச் செய்யலாம் என்று டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் கருதினார். அந்த அடிப்படையில் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவர்களைக் களத்திலே இறக்கினார். பத்து நாட்களுக்குள் கணக்கெடுப்பை முடித்ததுத்தருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இருபது நாளாகியும் கணக்கெடுப்பு முடியவில்லை. துப்பறியும் போலீசார் இரவும், பகலும் அதற்காக அலைந்துகொண்டேதான் இருந்தனர். ஆறுமுகத்தா பிள்ளைதான் தெருத்தெருவாக மக்களிடம் விசாரித்து முதலிலே ஒரு பட்டியல் தயார் செய்தார். ஆனால், அதில் நாலு கழுவன்களும், எட்டுக் கருப்பன்களும், மூன்று பேயாண்டிகளும் இருந்தனர். இவர்கள் எல்லாம் தனித்தனி நபர்களா அல்லது ஒரே நபரா என்பதை எப்படி உறுதிப்படுத்துவது என்று தெரியவில்லை. இரவில் காவல் தெருக்களில் போய் ஒவ்வொரு கருப்பனாகத் தனித்தனியாக முகம் பார்த்துத்தான் அந்த உண்மையைக் கண்டறிய முடியும். ஆனால், நடுநிசியில் கருப்பன்களின் முகம் பார்த்து குறித்துக் கொள்ளுகிற அளவுக்கு உண்மைக்குப் பலம் கிடையாது. எனவே, கணக்கிடுவது எப்படி என்ற பெருங்குழப்பம் வந்தது. அதே போன்று மற்ற போலீசாரும் கொடுத்த எண்ணிக்கையை வைத்துப்பார்த்தால் அரசு நினைத்ததைவிட மூன்று மடங்கு அதிக எண்ணிக்கையில் தாதனூர் வாசிகள் இருப்பதாகத் தெரிகிறது. இந்த முறையில் உண்மையைக் கண்டறிய முடியாது எனக் கருதிய டி.எஸ்.பி. நகர்க் காவலர்கள் இரவு தங்குகிற இடங்களிலிருந்து ஒரு கணக்கெடுப்பை நடத்துங்கள் என உத்தரவிட்டார்.

அதன்படி ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் கோயில் செக்கடி, மைனா தெப்பக்குளம், இரவுக் காவலர்கள் சற்று நேரம் தங்கிச்செல்லும் இடங்கள் என எல்லாவற்றையும் சேர்த்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால், மீண்டும் குழப்பமே மிஞ்சியது. ஒரே நபர் இரண்டு முறை சாவடிக்கு வந்துவிட்டுப் போகிறார். மூன்று இடங்களுக்கு ஒரே இரவில் ஒரு காவக்காரன் வந்துவிட்டுப் போவதும் உண்டு. வந்தவரே வந்திருக்கிறாரா அல்லது புது நபர் வந்திருக்கிறாரா என்பதை அறிய எந்தத் தனிக்குறிப்பையும் தோற்றத்தில் உள்வாங்க முடியவில்லை. குட்டையான ஆளோ, பருத்து வயிறு சரிந்த ஆளோ யாரும் இல்லை. விரிந்த மார்பும், வீச்சுக் கைகளும், முடிச்சிடப்பட்ட சடையும் சுருள் முடியுமாகத்தான் காவக்கம்போடு எல்லோரும் வந்துவிட்டுப் போகிறார்கள். இதில் வந்தவன் யார், வந்துவிட்டுப் போனவன் யார் என எப்படிக் கணக்கிடுவது? தண்ணீருக்குள் வைத்து மீனைக் கணக்கிடுவதைப் போலத்தான் இரவுக்குள் காவக்காரனைக் கணக்கிடுவதும். எனவே, இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு துப்பறியும் போலீசார் தெரிவித்தனர்.

அதன்பின் போலீஸ் மூலம் நேரடியாக ஊருக்கே போய் கணக்கிடலாம் என டி.எஸ்.பி. யோசித்தார். ஆனால் குறைந்த எண்ணிக்கையில் போலீசை அனுப்பினால் போகிற தைரியமோ போய் கணக்கெடுக்கிற தைரியமோ போலீசுக்கு வராது. அதிக எண்ணிக்கையில் போலீஸ் படை ஒன்றை அனுப்பினால் அங்கே கணக்கெடுப்பு நடக்காது. எனவே, போலீசை அனுப்புவது பற்றி யோசிக்கவே முடியாது. தாதனூரை எப்படிக் கணக்கிடுவது என்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. எப்படியும் துல்லியமான கணக்கெடுப்பு இல்லாமல் திட்டமிட முடியாது என்று எஸ்.பி. உறுதியாக இருந்தார். கடந்த காலத்தில் செம்பூரான்களின் இருப்பிடமும் எண்ணிக்கையும் தெரியாததால் மதுரை மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் கொடுத்த விலையை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. இன்றைக்கும் செம்பூரும் செம்பூரான்களும் எங்கே என்ற விபரம் எதுவும் அரசிடம் இல்லை. ஒரு பயங்கரம் அழிந்துவிட்டதா, அல்லது மறைந்துள்ளதா என்பது தெரியாத நடுக்கம் உள்ளுக்குள் இருந்துகொண்டேதான் இருக்கிறது. ஓம்பெர்ட்டின் சமாதியில் இருக்கும் வாசகங்களைப் பொறுப் பேற்கும் எல்லா அதிகாரிகளும் நன்கு படித்துக்கொள்கின்றனர். செம்பூர் எனும் தரைவழிப்பாதை இன்னும் மன அளவில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆங்கிலேயர்கள் எவ்வளவு முயன்றும் தங்களுக்குள் இருந்து அதனை அழித்தொழிக்க முடியவில்லை. அவர்களே அழிக்க முடியாத பாதையை செம்பூர்க்காரர்கள் மறந்துவிடவா போகிறார்கள்? காலம் எவ்வளவு விரைந்து ஓடியும் நினைவுகளைக் கடந்து செல்ல முடியாமல் தவித்துக்கிடக்கிறது. ஸ்டீபன்சன் கடந்த கால நினைவுகளை எல்லாம் பருகி முடித்த பயத்துடனும் தெளிவுடனும் இருந்தான். என்ன முயன்றும் தாதனூர் காவல்காரர்களைக் கணக்கிட்டே தீருவது என்று உறுதியுடன் இருந்தான்.

உறுதி பல்வேறு வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தபடி இருந்தது. ஆனால், எல்லா வழிகளும் இரவு வரை தெளிவாகத் தெரிந்தன. இரவுக்குள்ளும் வழி இருப்பதை இவர்களால் பார்க்கமுடியவில்லை. அந்த வழியின் மேலேதான் காவக்காரர்கள் வந்துபோய்க் கொண்டிருந்தனர்.

எதுவும் பிடிபடாமல் இருந்த ஸ்டீபன்சனுக்கு எதைப் பிடித்தாவது விவரங்களை வெளிக்கொணர வேண்டும் என்ற உறுதி இருந்தது. அந்த உறுதி புதிய உத்தி ஒன்றை அவனுக்குச் சொன்னது. தாதனூர் உள்ளிட்ட மேற்கு நாட்டு கள்ளர்களிடம் பணியாற்றிய அனுபவம் உள்ள கிறிஸ்தவ மிஷனரிமார்களைப் பயன்படுத்தினால் கணக்கெடுப்பை நிச்சயம் செய்யமுடியும். கணக்கெடுப்பு செய்ய இது ஒன்றுதான் வழி என்று அவனுக்குப் பட்டது. இந்தப் புதிய யோசனையை கலெக்டரிடமும் எஸ்.பி.யிடமும் அவன் தெரிவித்தான். நிறைவேற்ற முடிகிற நம்பிக்கையுடன் இந்த யோசனையை இருவரும் பற்றிக்கொண்டனர். வெகுவிரைவில் மிஷனரிமார்களை அழைத்துப் பேசி கலெக்டர் ஒப்புதலைப் பெற்றார். இந்தக் கணக்கெடுப்பு விவரங்கள் கிடைக்க இன்னும் ஓரிரு மாதம் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், அது ஒன்றும் பெரிய காலமல்ல என்று மூவரும் முடிவு செய்தனர்.

*

# 89

**தா**தனூரில் **'நல்லநாள் கும்புடணும்'** என்ற **பேச்சு எப்பொழுதெல்லாம்** வருமென்று சொல்ல முடியாது. நினைத்தபோதெல்லாம் வரும். 'சும்மாவே இருந்தா எப்படியப்பா...ஒரு நள்ள நாளாச்சும் கும்புடவேணாமா!' என்று துவங்கி எதுக்கு வேண்டுமானாலும் இந்தப் பேச்சு வரும். நல்ல மழை பெய்து நாடு நகரமெல்லாம் செழித்தாலும் இந்தப் பேச்சு வரும், மழையே இல்லாமல் காடு கரையெல்லாம் காய்ந்து சருகானாலும் இந்தப் பேச்சு வரும். ஜல்லிக்கட்டுக்குப் போயி அணையாத காளைய அணைஞ்சு வந்தாலும் இந்தப் பேச்சு வரும். 'ராஜ களவு' ஏதாவது நடத்தி வந்தாலும் இந்தப் பேச்சு வரும். அப்படி வரும் போதெல்லாம் யாராவது எதையாவது சொல்லி மடக்கிவிடுவார்கள். அத்தோடு பேச்சு முடிந்துவிடும். அப்புறம் கொஞ்சகாலம் வரை ஆலமரத்தடி அமைதியாக இருக்கும். அப்புறம் மீண்டும் பேச்சு எழும். இப்படியாக பேச்சு உருண்டு உருண்டு வந்தாலும் எப்பவாவது ஒரு முறை 'சரியப்பா...நல்லநாள கும்பிட வேண்டியதுதான்' என்ற சொல்மேலோங்கி வந்து முடிவாகும். அப்படி ஆவதற்கு பிரத்யேக காரணம் எதுவும் இருக்காது. அது தாதனூர்க்காரர்களின் மனநிலையோடு சம்பந்தப்பட்ட முடிவு. அதை ஏன் என்று கேள்வி கேட்டுப் புரிந்து கொள்ளமுடியாது. அது சபை கூடி எடுத்த முடிவாகவும் இருக்காது எப்படியோ அது முடிவாகி எல்லோரும் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். குறைந்தது ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த முடிவு கைகூடும். இந்த ஆண்டில் அப்படித்தான் 'நல்லநாள்' வந்தது.

தாதனூர் நல்லநாளுக்குத் தயாராகிவிட்டது என்றால் காவலும் களவும் களைகட்டிவிட்டது என்று அர்த்தம். சுத்துப்பட்டி எங்கும் தாதனூரில் நல்லநாள் கும்பிடப்போகும் செய்தி காட்டுத்தீயாய்ப் பரவும். அவரவர்கள் எதையாவது ஒன்றைக் கொடுத்து அனுப்பியபடி இருப்பார்கள். நகரத்துக் காவலிலிருந்து கருப்பட்டி மூடை முதல் தானிய மூடைவரை எல்லாம் வந்து சேரும். எல்லாம் வந்தாலும் நல்ல நாளுக்கு முதல்நாள் மதுரைக்

கோனார்களின் கிடா ஊருக்கு வந்து சேரவேண்டும். ‘சீயான் வீட்டுக்கெடாய் இன்னும் வரலப்பா...’ எனச் சொல்லி ஊரே காத்திருப்பார்கள். கோனார்கள் அனுப்பும் அந்தக் கெடாய் ஊரையே கூட்டிவரும். முன்னூறு வருடமாக அவர்கள் கிடாய்களை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். திருநெல்வேலிப் பக்கமிருந்த கோனார்களைத் திருமலை நாயக்கர் கூட்டிவந்து மதுரையைச் சுற்றிய கிராமங்களில் குடியமர்த்தி, கள்ளர்களுக்குக் காவல் காக்கும் உரிமையைக் கொடுத்ததிலிருந்து கிடா வந்துகொண்டேயிருக்கிறது. அதுவும் சும்மா வருவதில்லை. பெரும் பூஜையொன்றை நடத்தியபடியே அங்கிருந்து புறப்படுகிறது. எட்டாம் நாள் இரவு கேசவன், சடகோபன் நம் கண்ணன் குதிரை நம்பிரான் மேல் ஏறி திருவீதி உலா முடித்து திரும்புகையில் அனுமக்கொடி, கருடக்கொடி, முத்துக்குடை, பவளக்குடை, பூச்சக்கர வாளக்குடை, அன்னப்பதக்கம் முதலான திருவாபரணங் களைப் பறித்துச் சென்ற கள்ளனான திருமங்கை மன்னனுக்குச் செய்யும் காணிக்கையாகவே பூஜிக்கப்பட்டு இந்தக் கிடாய் அனுப்பப்படுகிறது. திருமங்கை மன்னன் வழிநடத்தி மலையடிக் கருப்புவிடம் கொண்டுவந்து கிடாயைச் சேர்க்கிறான். கழுத்து நிறைய சலங்கை அணிந்துவரும் சீயான் வீட்டு கருங்கிடாயை மாடக்குளம் கண்மாயில் வழிமறித்து தாதனூர்க்காரர்கள் வாங்குவார்கள்.

அந்த ஒரு கெடா மட்டும்தான் வாங்கிவரும் கெடா. மற்ற கெடாய்களை எல்லாம் தூக்கித்தான் வரவேண்டும். சீயான் வீட்டு கெடாயைக் கருப்புகோவிலில் கட்டிவிட்டு அவர்கள் புறப்பட்டுப்போவார்கள். இரவு முழுவதும் அந்தக் கெடாய் போடுகின்ற புளுக்கை அளவிற்கு அதிகாலையில் ஆடுகள் வந்து சேரும். இது வழக்கம். ஆனால் அதைவிட அதிகமாகத்தான் ஆடுகள் நிற்கும். மூன்று நாட்களுக்கும் கறி விருந்து தான்.

நல்ல நாளில் கருப்பு கோவிலில் விளக்குப்போடுவதற்கான எண்ணெய் ‘வடக்கு வா செல்லி’தான் தர வேண்டும். வடக்கிருந் துதான் எல்லாப் படையெடுப்பும் மதுரை நோக்கி வந்ததாம். எனவே வடக்கு வாசல்தான் மிக முக்கியமான வாசலாகக் கருதப்பட்டது. அந்த வாசலைத் தான் துடியான செல்லத்தம்மன் காத்துவந்தாள்.

ஒளியின் அரசி மீனாட்சிக்கு சுந்தரேஸ்வரனுடன் திருமணம் நடந்தது. அன்றோடு அவள் அடைபட்டாள். கர்ப்பக்கிரஹம், அதைச் சுற்றி சதுர வடிவில் பிரகாரங்கள், அதையடுத்து பெரும் சதுரம் கொண்ட வீதிகள், அதனைத் தாண்டி கோட்டைச்சுவர் என அவளைச் சுற்றி அறையப்பட்ட சட்டங்களாகத்தான் நகர் வடிவமைக்கப்பட்டது. எண்ணி லடங்கா வெற்றிகளைக் குவித்த மீனாட்சிக்கு சிவன் என்ற ஆண் கட்டிய சிறைச்சாலையே இம் மதுரையம்பதி.

ஆனால் அதே சிவனுக்கு இருளின் அரசி செல்லத்தம்மனோடு அமாவாசை நள்ளிரவில் திருமணம் நடக்கிறது. அவனுக்குள் இருக்கிற அகங்காரம் கொண்ட ஆணை அன்றிரவே புரிந்து கொண்ட அவள் அடுத்தகணமே அவன் உறவை முறித்துக்கொண்டு வெளியேறுகிறாள். ஒளியின் அரசி மீனாட்சியுடன் தாம்பத்தியத்தில் மூழ்கி அவன் களிக்கிற ஒவ்வொரு இரவையும் இவள்தான் வடக்குவாசலில் நின்று காத்துவருகிறாளாம்.

வடக்கு வாசலைக் காத்துவரும் இந்தச் செல்லத்தம்மன் மதுரையைக் காவல் காக்கும் தாதனூர் கருப்பனுக்கு எண்ணெய் கொடுத்து விடுவது காலகாலத்து வழக்கம். அந்த வழக்கப்படி அவள் எண்ணெய் கொடுப்பாள். எண்ணெய் கொண்டுவர மூன்று பெரும்பானையும் தலையிலே வைத்துத் தூக்கிவர பிரியும் வாணிப செட்டிகள் தரவேண்டும். அந்தப் பானைகளை அன்றிரவு நகரின் வடக்குத்திசைக் காவலர்கள் தூக்கி வந்து கருப்பு கோவிலிலே சேர்க்கவேண்டும்.

சீயான் வீட்டுக் கெடாயும், செல்லத்தம்மன் கோவில் எண்ணெயும் வந்த பிறகு விடியும் பொழுது நல்லநாளாக விடியும்.

நல்லநாளில் கருப்பு கோவில் வளாகத்தில் பழைய ஊர்க்காரர்கள் தான் எல்லாவற்றையும் செய்யவேண்டும். புதிய ஊர்க்காரர்களுக்கு எந்த வேலையும் இல்லை. சட்டியை அனலிலே இட்டு ஆண்கள் எல்லாம் துடிதுடிக்க இறந்தபொழுது கிழவிகள் கூடி வயிற்றுப்புள்ளக்காரிகள் மட்டும் கூட்டிவந்து புதிதாகத் தங்கிய இடம்தான் இப்போதுள்ள தாதனூர். ஆனால் பழைய ஊரின் தெற்குக் கடைசியில் இருந்த குறவனும் வண்ணானும் நாவிதனும் அங்கேயே இருந்துவிட்டனர். புது ஊருக்கு வரவில்லை. பெரும் புதரென மண்டிக்கிடக்கும் சடச்சி பொட்டலுக்குத் தெற்கே அவர்கள் மூவரும் இருக்கின்றனர். தொழில் சார்ந்து புது ஊரோடு அவர்களுக்கு இருக்கும் ஒரே உறவு களவுக்கு கூட்டப்போவது மட்டும்தான். மற்றபடி அவர்களின் வேலை முழுவதும் மதுரை நகரத்தோடு இணைந்துவிட்டது. ஆனால் நல்லநாள் என்றால் அவர்கள்தான் எல்லாமே. பழைய ஊர்க்காரர்களின் மீது புதிய ஊர்க்காரர்களுக்கு எப்பொழுதும் மரியாதை உண்டு. ‘சடச்சி கால் மாட்டுல இருக்கவெங்களுக்கு சண்டியர்த்தனம் கூடத்தாண்டா இருக்கும்’ என்பார்கள். பழைய ஊருக்குத் தென்மேற்கே மிகத்தள்ளி குயவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள்தான் நல்லநாளில் வந்து பூசை கட்டணும், பூசாரித்தொழில் பார்க்கணும். பயறு அவிக்க மொடாவும் சூளைக்கரையிலிருந்து சாம்பலும் கொண்டுவரணும். கருப்பனுக்கு உடுத்தவும் மாத்தவும் வண்ணான் உடை கொண்டுவரணும், பந்தம் கட்டவும் ஏற்பாடு செய்யணும். நாவிதன் பந்தம் பிடிக்கணும். குறவன் ஓலப்பெட்டி, மொறம், கூடை என நல்லநாளுக்குத் தேவையானதை எல்லாம் கொண்டுவந்து தரணும். காவக்காரர்கள் குடியானவர்கள் கொடுக்கும் பொருட்களை எல்லாம் கொண்டுவரணும். இது தவிர வேறு எது எது தேவையோ அதையெல்லாம் களவுக்குப் போகிறவர்கள் கொண்டுவரணும்.

வழக்கங்களின் வாசல் திறந்து நல்லநாள் விடியும். விடியும் பொழுது ஊர் மூன்று ஊராகப் பெருத்து நிற்கும். தாதனூரின் பெண்வழி வாரிசுகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் புள்ளைகுட்டிகளோடு வந்து சேர்ந்துவிடுவார்கள். தாதனூரின் நல்லநாள் என்றால் அது சாதாரணமல்ல. கள்ளநாட்டிலே தாதனூரில் மட்டும்தான் அரிசிக்கஞ்சி குடிக்க முடியும். வேறு எங்கும் அதற்கான வாய்ப்பே இல்லை. வைகைப் பாசனம் இருக்கும் எட்டுப்பெரிய கண்மாய்களும் மதுரை நகரத்தைச் சுற்றியே இருக்கிறது. அந்தப் பாசனப்பகுதி கிராமங்கள் முழுவதும் தாதனூர்காரர்கள்தான் காவல். இவைகளைத்தவிர மதுரை மாவட்டம் முழுவதும் காட்டுவிவசாயம்தான். இப்போதுதான் மதுரைக்கு வடக்கே மேலூருக்குத் தண்ணீர் வந்திருக்கிறது. மற்றபடி மானாவாரி

கண்மாய்களில் எங்காவது ஓரிரு இடங்களில் நெல் விளைந்தால் உண்டு. அதுவும் ஏழு மாதமும் தண்ணீர் கிடைத்து, விளைய வைத்து, அறுத்து முடிப்பது அபூர்வம். அங்கெல்லாம் காவல் காக்கிற காவல்கார்ர்கள் நெல்லுக்கஞ்சிக்கு எங்கே போவார்கள்? எப்பொழுதாவது களவிலே நெல்மூடைகள் அகப்பட்டால் உண்டு. அது மிக அபூர்வம். எனவே மேற்குநாட்டு கள்ளர்களின் வாழ்வில் அரிசிக் கஞ்சி காணாத அதிசயங்களில் ஒன்று. ஆனால் தாதனூர் மட்டும் விதிவிலக்கு. குடியானவர்களின் ஊரில் நடக்கும் விசேஷம் போலத்தான் தாதனூரில் நல்லநாள் நடக்கும். ‘அரிசிச் சோத்துக்கு வெஞ்சனம் கேட்கிற சவடால் காரிக இவளுகதான்டி’ என்று வாக்கப்பட்டு போன ஊரிலிருந்து வந்த கிழவிகளின் வசவுகள் நீளும்.

நல்லநாளில் முதல் நாள் சடச்சிக்கு, இரண்டாம் நாள் கருப்பனுக்கு, மூன்றாம் நாள் பட்டசாமிகளுக்கு, இது வழக்கம். முதல் நாள் காலையிலே பெரும் பரபரப்புக்கு ஆளாகித்தான் ஊர் மீளும். முள்ளு தேடுவதிலிருந்து ஊரின் வேலை ஆரம்பிக்கும். முதல்நாள் அதிகாலை மாடக்குளம் கண்மாயில் கரம்பையை எடுத்துத் தலைக்கு தேய்த்துக் குளித்த ஆணும் பெண்ணும் சிக்கெடுக்கவும் காயவைக்கவும் அலைகிற அலைச்சலிலிருந்து எல்லாமும் ஆரம்பிக்கும். முள்ளம் பன்றியின் முள் எல்லோர் வீட்டிலும் இருக்காது. ‘முள்ளக் காணமடி ஆத்தா... எங்க போச்சுன்னு தெரியலையே’ என பெண்கள் விசாரிப்பதும் ‘தாயோலி... இந்த தலகாயமாட்டிங்குதேடா’ என ஆண்கள் அலைவதுமாக தெருவும் ஊரும்களை கட்டும். ஈர முடியைக் காய வைக்க ஊர் படாதபடு படும். அவ்வளவு பொறுமை ஊருக்கு இல்லை. விட்டால் ஊரே தலைமுடியை அத்து எறிந்துவிடும். அவ்வளவு கோபத்தோடு தான் தலைமயிர்கள் உலரும். மயிர் காயும் அவ்வளவு நேரமும் என்ன செய்வதென்பது ஆண்களின் பெரும் பிரச்சனை. ‘நீ பெரிய கெட்டியக்காரனா, நின்ன இடத்துல நின்னு தல காய வைடா பாப்போம்’ என போட்டி துவங்கி ‘பன மரம் மாதிரி நின்னு காய வக்கிறது அவத்தப்பய செய்யுற வேல. கெட்டியக் காரன்னா ஓடி காய வய்யி பாப்போம்’ என போட்டி நீண்டு நல்லநாள் முறைப்படி துவங்கும்.

அப்பொழுது ஊரில் இருந்து பெருகும் பேரொலி மூன்று நாளும் வெளியைக் கலக்கியபடி இருக்கும். மரத்தில் சகதியால் கோடுபோட்டு அதைக் குறிவைத்து எரியும் போட்டி திரும்பிய திசையெல்லாம் நடக்கும். அரிவாள் கொண்டு வெட்டியெறிவதைப் போல கல்லெறி வாங்கி மரப்பட்டைகள் தெறித்துச் சிதறியபடி இருக்கும். ஆடுகளை விரட்டிப்பிடிப்பதும், கோபுரக் கத்தாழைகளை ஓடித்தாண்டுவதுமாக ஊர் களை கட்டி நிற்கும். பொழுதெல்லாம் விரட்டப்பட்டுத் தவித்துப்போன ஆடுகள் அடுத்த நாள் வெட்டுப்படும்பொழுது கத்தக் குரலற்று சரிந்து விழும். வற்றும் சாராயப் பானைக்கும் பொங்கியெழும் உலையரிசிக்கும் இடையில் ஆண்கள் மல்லுக்கட்டி கரையேறியபடி இருப்பார்கள். அமண மலை கல்லெறி வாங்கிக் கதறுவதைப்போல அணையாத அடுப்பின் நெருப்பு கதறிக்கொண்டேயிருக்கும். தீராத போட்டி மூன்று நாளும் நடைபெறும். மல்லப்புரம் பயில்வானைத் தூக்கிப்போடுவது, விராதனூர் அழகு சேர்வையின் அடங்காத காளையை அடக்குவது, கோட்டையூர் பெரிய செட்டியாரின் வீட்டிலே கன்னம் போட்டு பெட்டியைத் தூக்குவது என சவால்களின் நடுவே அலட்சியத்துடனும் ஆங்காரத்துடனும்

முறைப்பெண்கள் காத்துக்கொண்டு நிற்பார்கள். முன்பின் திட்டமிடப்படாத பெரும் சவால்கள் புற்றீசல்களைப் போல முளைத்து ஒவ்வொருவரையும் கவ்விப்பிடிக்கும். நல்லநாளில் இருந்து நீளும் கரங்கள் வெளியையும் காலத்தையும் கடந்து செல்லும். ஓடும் நீரின் பெரும் சுழி போலக் காலத்தின் சுழி இந்த மூன்று நாட்களும். இங்கு இழுத்துவிடப்படும் மனிதர்கள் எங்கோ போய் எழுந்திருக்கிறார்கள். அல்லது மரணிக்கிறார்கள். மிக நீண்ட வேர்களையும் விழுதுகளையும் கொண்டதாக அந்த நாட்கள் இருக்கின்றன.

முதல் நாள் மாலை சூரியன் மறைந்து பறவைகள் அடையத்துவங்கும் நேரத்தில் ஆலமரத்தடியில் குயவன் கொண்டுவந்த பெரும் மொடாவில் மொச்சை அவித்து, அதை அப்படியே தூக்கிக்கொண்டு ஊரே சடச்சி பொட்டலுக்கு வரும். கரும் இருட்டு பரப்பி வைத்த பெருவெளியில் நின்று ஊர் பெரியாம்பிளை மொச்சையை எடுத்து பொட்டலுக்குள் திசையெங்கும் வீசியெறிவார். சிட்டுக்குருவிகளும், பறந்து வெளியேற முடியாத பெரும் புதரெனப் பின்னிக்கிடக்கும் பொட்டலுக்குள் அவித்த மொச்சைப் பயறுகள் சிதறிவிழும். சடச்சிக்குக் கொடுத்தபின் ஊர் மக்கள் எல்லாம் ஆளுக்கு ஒரு கையாக மொச்சையை எடுத்துத் தின்பார்கள். அதன்பின் பெரும்கிழவி ஒருத்தி குயவன் செய்துதந்த புதிய சட்டி ஒன்றில் அங்கு கிடக்கும் தாதூரம் ஏறிய மண்ணை அள்ளிப்போட்டு அப்படியே கையில் ஏந்துவாள். நெருப்புக்கங்குகளை சட்டியில் போட்டு வெறுங்கையால் பிடித்திருப்பதைப்போல அவள் கைகள் இரண்டும் சூடு தாங்காமல் துடிக்கும். அந்தக் கணத்தில் கொம்பூதிகள் கொம்புகளைத் தூக்கி ஊதத் துவங்குவார்கள். கொம்பின் ஓசை அடிவயிற்றிலிருந்து பிறீட்டு வெளிவரும். கொம்பூதிக் கூட்டத்தின் பதிமூன்று பேரும் ஆளுக்கொரு கொம்பு எடுத்து திசைக்கொருவராய் திரும்பி நின்று ஊதுவார்கள். காடு அலறும். கொம்பின் ஓசை வெளியை நடுக்குறச் செய்யும். மரங்களில் அடைந்திருந்த பறவைகள் கலைந்து இரவில் நிலைகொள்ள முடியாமல் அலைந்து தவிக்கும். அமணமலையில் பட்ட அந்தப் பேரோசை அலை அலையாய்த் திரும்பி வரும். வளைந்து வாய் பெருத்த கொம்பிலிருந்து ஓசை வெளிவரும் கணத்தில் தாதனூர்க்காரர்களின் உருமாற்றம் நிகழ ஆரம்பிக்கிறது. ஊர் புளியமரத்தின் உச்சியிலிருந்து கொம்பு ஊதினால் மறுகணமே ஊர் திரளும். அடுத்த கொஞ்ச நேரத்தில் உருளும் தலைகளும், சரியும் குடல்களும் கணக்கிடமுடியாதவை. வெளியெங்கும் மனித ரத்தம் பீறிட்டுத் தெறிக்க காற்று கிழிபடும் கதறல்களோடு அது முடிவுக்குவரும். திக்குகள் எட்டையும் உற்றுக்கவனித்தபடி இருக்கும் கொம்பூதி, படையின் முனை தெரிந்தவுடன் ஊரை எழுப்பினால்தான் ஊருக்கு தப்பி ஓட போதிய அவகாசம் கிடைக்கும். கொம்பூதியின் சிறு கவனக்குறைவு ஊரின் மொத்த அழிவுக்கும் இட்டுச்செல்லும். ஊதுகொம்பிலிருந்து வருவது பெரும்படையொன்றின் காலடி ஓசையாகத்தான் மக்கள் நினைவுகளில் இருக்கிறது.

கொம்பின் ஓசை கேட்டவுடன் நூற்றாண்டுகளாகத் தினவு கொண்ட உடல்கள் துடிக்கும். இரண்டு கைகளிலும் வளரியை வைத்துக்கொண்டு மாறி மாறி வெட்டியபடி பெரும்படை ஒன்றை எதிர்கொள்வதைப் போல ஆங்கார ஓசையோடு ஊரே புறப்படும். வெறி கொம்புக்குள்ளிலிருந்து பீறிட்டு வெளிவந்தபடியே இருக்கும். பெரும் இருளில் ஏந்திப் பிடித்த பந்தங்களின் நெருப்பிலிருந்து எரிந்த கங்குகள் சுருள்சுருளாய்

விழுவதைப்போல மனித உடல்கள் நெருப்புக்கங்காய் கொதித்து ஆடி ஆடி வந்துகொண்டிருக்கும். எல்லோருக்கும் முன்னால் சட்டியேந்திய கிழவி சென்று கொண்டிருப்பாள். அவள்தான் அழிந்த ஊரின் ரகசியம் அறிந்து வயித்துப்பிள்ளைக்காரிகளை புது ஊருக்கு அனுப்பிவைத்தவள். அவளின் நினைவோடு தாது எடுத்து ஆடி வரும் கிழவி முடமானவளைப் போலவே ஒரு காலைப் பக்கவாட்டில் இழுத்தும் மறுகாலை தூக்கி வைக்கமுடியாமல் நகட்டியபடி, அடக்கமுடியாக் கண்ணீரை சாரைசாரையாகக் கொட்டி, பெண்டு பிள்ளைகளை எல்லாம் சாவுக்கு கொடுத்துட்டேனே என துக்கம் தாளாமல் கொதிக்கும் தாது மண்ணைக் கையில் பிடித்து ஆடி வருவாள். தாங்கமுடியா பெரும் சோகத்தை அவள் பாடால் கட்டி இழுத்துவரும்.

சூழ்ந்துள்ள பேரிருளுக்கு நடுவில் ஒற்றையடிப்பாதையைப் பிளந்தபடி பெரும் கூட்டம் வளரி எடுத்து ஆடி வரும். பந்தம் ஏந்தியவன் வெளிச்சத்தைத் தூவியபடி வருவான். பந்தம் ஊரின் குருதியின் வழியே எரிந்துகொண்டிருக்கும். கொம்பின் ஓசை காலகாலமாய் ஊரில் படிந்துகிடக்கும் அலறல்களை எல்லாம் மேலெழுப்பிக் கொண்டுவரும். முடமான கிழவி சட்டியெடுத்து ஆடிச்செல்ல ஊர் இழுபட்டு அவள் பின்னே வரும். கிழவிகளின் தண்டட்டி இருளை மொய்க்கவிடாமல் விரட்டிவிட, ஆந்தைகள் மரங்களிலிருந்தும், நரிகள் தூரத்துக் கரைகளில் இருந்தும் குரல் கொடுத்து ஊரை அழைத்துச் செல்லும். செம்புரவிகள் ஓடி மறைந்த தடமும், பட்டாணிப் படையும், கும்பெனிப் படையும் மாறி மாறிப் பதித்த தடமும் அவர்களை முன்னிழுத்துச் செல்ல, இருட்டிலிருந்து சலங்கை அணிந்து காவக்கம்பினை தூக்கிப்பிடித்தபடி முன்னோர்கள் வந்தகொண்டிருப்பார்கள். வளரி தனது பெருந்தாகம் தணிக்க காற்றில் சுழற்றச்சொல்லி மன்றாடும். கைகள் வளரிகளைப் பிடித்து இழுத்து நிறுத்த, இழுவை தாங்க முடியாதபொழுது ஒன்றோடொன்று வெட்டி மட்டுப்படும். ஓசைகள் கணீர் கணீர் என காடெங்கும் எதிரொலிக்கும். புரிந்து கொள்ளமுடியாத, உதிரம் ஏறித் திருகிய மொழியை உதிர்த்து, முடமான கால்கொண்டு பூமியை நகட்டி ஊரின் வழியெல்லாம் புதுச்சட்டியில் ஏந்தியபடி கிழவி நடப்பாள்.

சாவின் ஓலம் உப்போடையில் வழி மறித்து ஓட, முடமான கிழவி காலிழுத்து ஓடையைக் கடக்க, வெட்டுப்பட்டுச் சரிந்த தலைகளின் சடைமுடிகள் கால் விரலில் சிக்கி இழுபட, நகரமாட்டாமல் நின்றுபோன கிழவி ‘கருப்பா...’ எனக் கதற கொம்பூதியின் புளியமரத்திலிருந்து உதிர்ந்த புளியம் பூவெல்லாம் வரி கொண்ட புலியாக உருமாற, ஏந்திய தீப்பந்தத்தின் பெருவெளிச்சம் பரவிக்கிடக்கும் பாதையின் வழியே வளரி கொண்டு ஆடிவரும் கூட்டம் மலையடிக்கருப்பனிடம் வந்து சேரும்.

பெண்கள் எல்லாம் ஆலமர விழுதைக் கட்டி அழ, ஆண்கள் வெறிகொண்ட மட்டும் ஆடி கருப்பனின் இடதுபுறமிருக்கும் கல் மண்டபத்திற்குள் வளரியை எறிந்துவிட்டு அடங்குவர். முடமான பெருங்கிழவி எடுத்துவந்த சட்டியைக் குளத்து நீரிலே கொட்ட, நாக்குகள் துடித்துக்குலவை ஒலி எழுப்ப, சட்டியில் இருந்த தாதுரம் ஏறிய மண் தண்ணீருக்குள் கொதிப்படங்கி மூழ்கும். ஆடிக்களைத்து ஆத்திரம் அடங்கித் தவித்து உட்காரும் தன் பிள்ளைகளை மடியிலே கிடத்தி பெரியாத்தா சடச்சி பெருமூச்சு விடுவாள்.

விப்பு வெளவால்கள் அடையும் பெரும் பாறைப் பிளவின் கீழே ஜனித்த தனது வம்சாவளி ஆழமாக வேரூன்றி அடர்ந்த மரமெனத் தழைத்து நிற்க பெரும் உவகை கொண்டு சடச்சியின் மனம் குளிரும்.

இரண்டாம் நாள் கருப்பனுக்கானது. வெட்டுப்படும் கருங்கெடாயின் துடிப்பின் ஊடே பீறிடும் ரத்தத்திலிருந்து சிவப்பேறி சூரியன் எழவிடிகிறது அன்றைய நாள். முதல் நாளின் அழுகையும் அவலமும் எங்கே போனது என்று யாருக்கும் தெரியாது. பெரும் விருந்துக்குத் தயாராகிக் கருப்பனை நோக்கி மக்கள் குவிந்து கிடப்பர்.

சீய்யான் வீட்டுக் கருங்கெடாய் கருப்பனைப் பார்த்தபடி நிற்கும். கருங்கெடாய்க்கு சில அடி தள்ளி மண்டியிட்டபடி ஒருவன் உட்கார்ந்திருப்பான். அவனது கைகள் இரண்டும் பின்புறம் கட்டப்பட்டதைப்போல பின்னிக்கிடக்கும். அவன் தலையை மேலே உயர்த்திக் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்துக்கொண்டிருப்பான். பின்புறம் பின்னிக்கிடக்கும் அவன் கைவிரல்கள் பத்தும் காற்றைத் துழாவிப்பிசையும். அவனது உடல் தலையைத் துண்டித்தாற்போலத் துடிக்கும். கூடியிருக்கும் பெண்கள் எல்லாம் அவனைப் பார்த்து பெரும் இரக்கம் கொண்டு 'ஏய்...ஆத்தேய்....' என அலறியபடி இருப்பர். கருங்கெடாயை மேலிருந்து வெட்டக்கூடாது. கீழிருந்து மேல்நோக்கிதான் வெட்டவேண்டும். கொம்பில் அடிபடாமல் துல்லியமாக வெட்டு விழ ரத்தம் பீறிட்டு கருப்பனுக்கு முன் மண்ணை வணங்கும். வெட்டுத்தலையைப் பெருங்கிழவி எடுத்து காலை இழுத்து நடந்துபோய் மண்டியிட்டுத் துடித்துக்கொண்டிருப்பவனின் பின்புறமாகப் பின்னப்பட்ட கைகளில் கொண்டுபோய் வைப்பாள். அவன் ரத்தம் தோய்ந்த கருங்கெடாயின் தலையை ஏந்திப் பெருங்குரலெடுத்துக் கத்துவான். மண்டியிட்ட அவன் அன்று முழுக்க எழுந்திருப்பதே இல்லை. ஊர்க்கெடாயின் தலையை அவனுக்குக் கொடுத்தபின் மற்ற கெடாய்கள் வெட்டப்படும். பெண்ணடிவாரிசுகள் வெட்டும் கெடாய்களின் தலை அனைத்தையும் முதுகுப்புறமாகப் பின்னப் பட்டு கிடக்கும் அவனது கைகளிலே போய் வைக்கவேண்டும்.

அன்று முழுக்க சாராயமும் கறிச்சோறும்தான். பெரும் விருந்து நடக்கும் நாளது. அக்கம்பத்திலும் மாடக்குளத்திலும் இருந்து கொண்டு வரப்பட்ட வாழை இலைகள் ஆலமரத்தடியில் மண் காணாமல் விரித்து மறைக்கப்படும். அரிசிச் சோற்றுக்கு நடுவில் கொழுத்த ஆடுகள் ஒவ்வொன்றாய் மூழ்கி மறையும். கொப்பரையிலிருந்து வாரிக்கொட்டும் அகப்பைக்கு அன்றைய நாள் முழுவதும் ஓய்விருக்காது. அது போட்டிக்கும் விருந்துக்கும் இடையில் நடக்கும் பேரியக்கம். காய்ந்து வறண்டு போன மண் பேய் மழையை வாங்குவதைப்போல அவை நள்ளிரவு வரை விழுங்கப்படும். கருப்பன் பசியடங்காதவன். வெறியடங்காவதன். அடங்காத பேரிருளின் கூந்தலைப் பிடித்து இரு கைகளுக்குள்ளும் சுருட்டி வைத்திருப்பவன். அவனுக்கு நேர்ந்து கொண்டவர்கள் புதிய வளரியை நேர்த்திக்கடனாக அன்றைக்குச் சாத்துவர். வளரிகள் விதவிதமாக கருப்பனின் காலடியில் வைக்கப்பட்டு மறுநாள் பக்கத்துகல் மண்டபத்துக்குப் போகும். ஆத்திரமடங்காத கருப்பனின் துடி அமணமலையெங்கும் ஆடி அதிரும். பேரிருளை ஒளி எனக் கொண்ட கருப்பனின் கண்களை எதிர்கொள்ள முடியாமல் சூரிய ஒளி

ஆண்டுக்கணக்காக ஆலமர இலைகளுக்குள் ஊடுருவி கீழிறங்கி வருவதே இல்லை. நிழலின் இருட்டைப் பகலென்றும், கருப்பின் நிழலை இரவென்றும் கொண்ட மண் மீது நிற்கும் கருப்பன் தனது வம்சாவளி அளித்தகொடையின் ரத்தவாடை காற்றெங்கும் அடிக்க மனம் குளிர்வான்.

மூன்றாம் நாள் பட்ட சாமிகளுக்கானது. படையெடுப்பில் அடிபட்டு இறந்தவர்கள், ஊரின் மானம் காக்க இறந்தவர்கள், ஜல்லிக் கட்டிலே இறந்தவர்கள், வெட்டுக் காயத்தோடு வந்து ஊருக்கு வரப்போகும் ஆபத்தைச் சொல்லிச் செத்துப்போனவர்கள், தலை வெட்டுப்பட்ட கொம்பூதிகள், கொலைக்களத்தில் பலியானவர்கள், பலிக்காக கொலை செய்யப்பட்டவர்கள் என முன்னோர்களைப் பட்டசாமியென வணங்கும் நாள் அது. சடையன் கூட்டம், கழுவன் கூட்டம், நரியன் கூட்டம் என ஒவ்வொரு கூட்டத்திற்கும் நாலைந்து வகையறாக்கள். ஒவ்வொரு வகையாறக்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பட்ட சாமிகள். அந்தந்த வகையறாக்கள் தனித்தனியாகப் பிரிந்து அவரவர்களின் இடங்களில் போய் தளுகை போட்டு, பள்ளயம் பிரித்து, பயறு அவித்து வைத்து, சாராயம் வைத்து தனது முன்னோர்களை வழிபடுவர். பனைமரத்தான் வகையறா மலையின் மேற்குச்சரிவில் இருக்கும் ஒற்றைப்பனையின் அருகில் போய் வணங்கும். ஊரின் கிழக்கு எல்லையில் இருக்கும் கண்மாய்க் கரையின் கடைசிப் புளியமரத்தில் போய் ஒச்சுவின் கூட்டம் வணங்கும். கிழக்கு எல்லைக்கும் மேற்கு எல்லைக்கும் நடுவில் குறி வைக்கப்பட்ட இடங்களில் எல்லாம் அந்தந்த வகையறாவின் பெண்டுபிள்ளைகள் எல்லாம் போய் வழிபடும். அன்றைய பகலும் இரவும் வீரனுக்கு அவனது நினைவுகளைப் படைத்து வணங்கும் பெருவிழா அது.

மூன்றாம் நாள் நள்ளிரவு பட்டசாமிக்கு பள்ளயம் பிரித்து, பயறு அவித்து, அவித்த பயறைத் தின்று முடித்து, வயிறு முட்ட சாராயம் குடித்து, இருளெங்கும் திசை பார்த்துக் கதறும் பெண்களின் ஒப்பாரி அழுகையோடு நல்லநாள் முடிவுக்கு வரும்.

*

இப்பொழுது கும்பிடப்பட்ட நல்லநாளுக்கு முதல்நாளே டேவிட் சாம்ராஜ் கருப்பு கோவிலுக்கு வந்துவிட்டார். நல்லநாள் முடிந்து மறுநாள்தான் அங்கிருந்து டேவிட் சாம்ராஜ் புறப்பட்டார். ‘யாரு...நம்ம கழுவாயி மகனா...ஏய் ஆத்தே!...எம்புதட்டுத் தண்டி ஆளாயிட்டா’ என பெண்கள் எல்லாம் விசாரித்து அடங்க ‘ஏலேய் பொன்னாங்கா’ எனப் பெயர் சொல்லி அழைக்கும்பொழுது உயிர்நடுங்கி சுத்தும்முத்தும் பார்த்து வேறுவழியில்லாமல் ‘என்னாத்தா’ என்று கேட்டு அருகிலே போய் உட்கார்ந்து ஊரின் கதைகளை எல்லாம் விசாரித்துக் குறித்தபடி இருந்தான். ஐந்து நாளும் ஊரிலுள்ள எல்லோரிடமும் உட்கார்ந்து கதை முழுவதும் கேட்டுக் குறித்துக்கொண்டான். அவனுக்கு எல்லாமே புது உலகமாக இருந்தது. இதுதான் தனது பழைய உலகமா என நினைத்தபொழுது அந்த கிறிஸ்துவ மனத்துக்குள் இருந்து அசூயையும் அதற்கு அடியாழத்தில் ஏதோ ஒரு இனம்புரியாத பாசமும் பொங்கிவந்தது. தனது ஆத்தா இருந்திருந்தா இந்நேரம் அவள் இங்கே கெடாக் கறி காய்ச்சிக்கொண்டிருப்பாளே என்றும் கூட்டத்தில் தானும் வளரி கொண்டு ஆடித்தானே வந்திருப்போம் என்றும் நினைத்து, நினைவுகளைப் பின்னிழுத்து கற்பனையை அடக்குவான்.

உடுத்தியிருந்த ஆடை அவனை அந்நியனாகக் காட்டியது. ஆனால் செத்துப்போன கழுவாயி மகனை பல ஆண்டுகளுக்குப்பிறகு பார்க்கும் பலரும் பெருக்கெடுத்த ஆசையின் வழியே அவனை அணைத்துக்கொண்டனர். ஊர் பெரியாம்பிள ஒச்சு மொடாவிலுள்ள மொச்சையை சடச்சி பொட்டலில் அள்ளித் தெளித்ததிலிருந்து கடைசி நாள் பட்ட சாமிகளுக்கு பள்ளயம் பிரிப்பது வரை எல்லாவற்றையும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குறித்தபடியே இருந்தான்.

ஆவி வணக்கமும் பேய் வணக்கமும் குடி கொண்ட இந்தக் குருட்டு ஜனக்காட்டுக்குள்ளே நிற்கிறோமே என்ற அருவருப்பு அவன் மீது புழுக்களைப்போல ஏறிக்கொண்டிருந்தது. ஆனாலும் ஆணும் பெண்ணும் அவனை ஆரத்தழுவிச் சிந்திய கண்ணீரில் இருந்த பேரன்பு அவன் வாழ்வில் இதுவரை காணாத ஒன்றாக இருந்தது. முதன்முதலாகப் பார்க்கிற ஒருவர் மீது இவ்வளவு பாசத்தைப்பொழிய முடியுமா என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. உண்மையில் மந்தையில் தொலைந்த ஆட்டுக்குட்டி நான்தானோ என நினைத்து அதை மறுதலிக்க முடியாமல் மனம் தள்ளாடியது. கருப்பு கோவில் ஆலமரத்தடியில் பேரிரைச்சல் கொஞ்சம் கொஞ்சமாக அவனைப் பற்றி இழுத்தது. இரண்டு நாள் அடைந்த ஆச்சரியத்தின் உச்சமாக மூன்றாம் நாள் விழா இருந்தது. பட்ட சாமிகளின் கதைகளெல்லாம் அவன் உள்ளத்தைக் கவ்விப்பிடித்தன. எல்லோரும் சிலுவையில் அறையபட்ட வர்களைப்போலவே காட்சியளித்தனர். எல்லோருக்கும் பின்னாலும் ஒரு கதை இருந்தது. அந்தக் கதை துன்பப்பட்டவர்களின் கதையாக இருந்தது. தலை சாய்க்க இடமில்லாத மனுஷகுமாரர்கள் பட்ட வேதனையைச் சொல்லும் கதையாக இருந்தது. தன் மக்களுக்கு வெளிச்சம் கொடுக்கத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்கின் கதையாக இருந்தது. நடுப்பகல் வரை அதிகதிகமாய் ஒளிர்கிற சூரியப் பிரகாசம் போல் இருந்தது.

இந்தக் கதைகளெல்லாம் ஏற்கனவே படித்து உணர்ந்த கதைகளைப் போலத்தான் இருந்தன. ஆனால் கதை மாந்தர்கள் மட்டும்தான் புதியவர்களாக, ஒருவழியில் பழையவர்களாக இருந்தனர்.

அவனது அறிவு உண்மைகளை எதிர்கொள்ள முடியாமல் திணறியது. அவன் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் அனைத்தையும் அறிந்துகொள்வதிலும் குறித்துக்கொள்விதிலும் மட்டுமே கவனம் செலுத்தினான். இந்த வேகத்தில் கல்லெறியக்கூடிய வித்தை தனது விரல்களுக்குள்ளும் இருக்கிறதா என உற்றுப்பார்த்தான். விரல்களின் ரேகைகளுக்குள் புதைந்துகிடக்கும் அந்த வித்தைகள் வெளிவர ஆரம்பித்தால் டேவிட் சாம்ராஜ் மறைந்து பொன்னாங்கன் எழுந்துவிடுவான் என்று அவனுக்குத் தெரியும். எனவே சட்டென விரல்களை மூடிநோட்டை எடுத்து எழுத ஆரம்பிப்பான். அவன் நோட்டை எடுத்து எழுதுவதை ஆச்சரியமாக சுற்றி நின்ற பலரும் பார்த்துக்கொண்டேயிருந்தனர். ஆனால் சூழப்பட்ட அதிசயங்களுக்கு நடுவில் அவன் எதை எழுதுவது எனத் தெரியாதவனாக இருந்தான். ஐந்து நாளும் அனைத்தையும் குறித்தபடியே இருந்த அவனது கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் சொல்ல எல்லோரும் தயாராகவே இருந்தனர். ‘வாடா...ஏ அயிதமகனே’ என முதல்நாளில் அறிமுகமான ஆங்கன் ‘ஓ...ஆத்தாளும் ஏ அப்பனும் கூடப்பொறந்த வங்கடா. ஒனக்கு

எல்லாத்தையும் நா சொல்றே' என ஐந்து நாளும் அவனுக்குப் பலவற்றை விளக்கிச்சொன்னபடி இருந்தான். ஒத்த வயதுள்ள இருவருக்கும் இடையில் வேகமாகத் தோழமை பற்றிப்பரவியது.

ஆங்கனின் பல செயல்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனாலும் முடிந்த அளவு முயற்சி செய்தான். ஊரின் வம்சாவளி விவரங்களை எல்லாம் அவன் அறிந்து குறித்துக்கொண்டான். இந்த நல்ல நாளில் ஒரு விஷயம் மட்டும் அவனால் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. 'ரெண்டாம் நாள் கெடா வெட்டும்பொழுது, ஒருவன் காலையிலிருந்து மாலை வரை மண்டியிட்டு, பின்னால் கையைக் கட்டிக் கொண்டு துடித்தபடியே அமர்ந்திருந்தது ஏன்?' என்று அவன் கேட்டபொழுது 'ஏ அப்பே...அந்த கொடுமைய நல்ல நாளுல ஏம்ப்பே கேட்குற' என்று பெருகும் கண்ணீரோடுதான் எல்லோரிடமிருந்தும் பதில் வந்தது. யாரும் விளக்கம் சொல்லத் தயாராக இல்லை. அதற்கு மேல் யாரிடமும் இந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்ப கேட்க முடியவில்லை. 'அவெ மூக்கனப்பா, பெண்ணடி வாரிசு, சின்னக்கடவீதிய காவ பாக்குறான்' என்று மட்டும் ஆங்கன் சொன்னான். பெண்ணடி வாரிசுக்கு ஊரில் இவ்வளவு பெரிய மரியாதையும், நகரத்துக் காவலும் எப்படிக் கிடைத்தது என்ற கேள்விகளும் எழுந்தபடி இருந்தன. இன்னொரு முறை வந்து பல விஷயங்களை தெரிந்துகொள்வோம் என்ற முடிவோடு டேவிட் சாம்ராஜ் தாதனூரிலிருந்து புறப்பட்டான். நம்ம பைய்யன் ஒருத்தெ இப்படி இருக்கானே!' என்ற ஆச்சரியமும் 'இப்படி ஆயிட்டானே' என்ற கவலையும் எல்லோர் மனதிலும் இருந்தது. 'அப்பப்ப ஊருக்கு வந்துட்டு போப்பா ராசா...' எனத் ததும்பிய கண்களோடு பெண்கள் எல்லாம் விடைகொடுத்து அனுப்பினர். ஆங்கன் பசுமலை வரை வந்து அவனை விட்டுவிட்டுச் சென்றான்.

*

**பெ**ரும் புகை மூட்டத்திற்குள் புதைந்து கிடந்த தனது சிறு பிராயத்து நினைவுகளைக் கிளறிவிட்டபடியே இருந்தார் டேவிட் சாம்ராஜ். தாதனூருக்குப் போய்வந்ததிலிருந்து அவருக்குள் ஏதோ நடந்துகொண்டிருந்தது. மனம் அமைதிகொள்ள முடியாமல் தவித்தது. 'தாதனூரைச் சேர்ந்த கழுவன் கூட்டத்தின் பனைமரத்தான் வகையறாவின் பெண்ணடி வாரிசு நான்' என்ற உண்மையை அவர் கண்டறிந்தது என்பது ஒரு பெரிய உலகம் திறந்து கொண்டதுபோல் இருந்தது. அவரின் கால்கள் நிலை கொள்ளமுடியாமல் தவித்தப் படியே இருந்தன. தனது தாய்கழுவாயியின் கையைப் பிடித்துக் கொண்டு போய் சடச்சி பொட்டலுக்கு எதிரே நின்று மொச்சையை வாங்கித் தின்பது ஒரு கனவுபோல வந்துகொண்டேயிருந்தது. கனவின் ஊடே அவலத்தின் பெருங்கரையில் அனாதையாய் நின்ற தனக்கு ரொட்டித்துண்டுகளைத் தின்னக்கொடுத்து அன்போடு பேசி அழைத்துவந்த ரெவ்ரன்ட்டின் முகமும் வந்துசென்றது. இரவு முழுவதும் வீட்டின் முற்றத்திலே நின்று இருளை உற்றுப்பார்த்தபடியே இருந்தார். இருள் அவருக்கு புதுப்புது அர்த்தங்களைக் கொடுக்க தயாராகிக்கொண்டிருந்தது. தனது பெரும் பரப்பில் அது அமைத்துவைத்திருக்கும் சாலைகள் மங்கலாகத் தெரிவதுபோல் இருந்தது. 'நான் உலகத்துக்கு ஒளியாய் இருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்'

என்ற யோவானின் வசனம் அவரை மறுகரைக்கு அடித்துவந்தது. போதகரின் வெண்ணிற உடைக்கும் மலையடிக் கருப்பனின் அடர் கருப்புக்கும் இடையில் அவர் மனம் ஊஞ்சலென ஆடிக்கொண்டேயிருந்தது. இரண்டு எல்லைகளிலிருந்தும் எதிர் எதிர் திசைக்கு வேகமாக ஊஞ்சல் ஆடியது.

வேதசாஸ்திர கல்லூரியில் முதலிடம் பெற்றுத் தேறிய தனக்கு தன்னுடைய பூர்வீகத்தின் துளி கூடத் தெரியாமல் போய்விட்டதே என்ற துக்கம் உருக்கொண்டது. வெட்டுக் கெடாய்களை உரித்துக் கொண்டிருந்த இடத்தில் அதன் ஈரலை எடுத்து மிகவும் பிரியத்துடன் ஆங்கன் கொடுத்த பொழுது, பதறிப்போய் ‘இப்படியே பச்சயாவா....!’ என்று கேட்க, ‘ஆமா, அப்பத்தான் நல்லாயிருக்கும்’ எனச் சொல்லி ஆங்கன் தின்றது ஞாபகம் வந்தது. அவர்களின் அன்பை எட்டிப்பெற முடியாத இடத்தில் நான் நிற்கிறேன். ஆனால் எது பள்ளம் எது மேடு என்பதில்தான் மனதுக்குள் தடுமாற்றம் ஏற்படுகிறது என்று மேரியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

எடுத்துவைத்த குறிப்புகளிலிருந்து மனம் விலகி நிற்க கொஞ்சம் கால அவகாசம் தேவைப்பட்டது. அதற்குப்பின் ரெவ். மார்ஸ்டென் கேட்டுக்கொண்டபடி நிர்வாகக் காரணத்துக்காகத் தாதனூரைப் பற்றிய விவர அறிக்கை ஒன்றினை எழுதும் பணியைத் துவக்கினார்.

‘பெரியாத்தா சடச்சி வழி மக்கள் தாதனூர்க்காரர்கள்’ என எழுத ஆரம்பித்து பின்னர் அந்த வரியை அடித்துவிட்டு சடச்சி என்ற பெண்ணின் வாரிசுதாரர்கள்தான் தாதனூர்க்காரர்கள் என்ற ஈவு இரக்கமற்ற மொழியிலே எழுதினார். ஊரின் வம்சாவழிகளை முழுவதும் எழுதிய பின் கீழ்க்கண்டவாறு ஒரு வரைபடத்தை தயாரித்தார்.

சடச்சி

| அனல் | தாது | பச்சைமண் |
|---|---|---|

கருப்பு

| சடையன் கூட்டம் | கழுவன் கூட்டம் | நரியன் கூட்டம் |
|---|---|---|
| கெடாயன் வகையறா | மூக்குப்பறி வகையறா | வரிப்புலி வகையறா |
| கொம்பூதி வகையறா | ஒத்தப்பல்லன் வகையறா | கட்டக்கையன் வகையறா |
| குருத வகையறா | காவேரி வகையறா | வல்லம் வகையறா |
| கூனாண்டி வகையறா | மொசக்காதன் வகையறா | ஊர் எரிஞ்சான் வகையறா |
| மொட்டக்கெடா வகையறா | பனமரத்தான் வகையறா<br>கோனமுத்தன் வகையறா | கொடிக்கா வகையறா |

ஒவ்வொரு கூட்டமும் எட்டு முதல் பத்துத் தலைமுறை வாரிசுகளைக் கொண்டுள்ளது. யார் யார் எந்தக் கூட்டம் எந்த வகையறா எத்தனையாவது வாரிசு எனத் தெளிவாக ஊரிலுள்ள ஆண் பெண் அத்தனை பேருக்கும்

தெரிந்துள்ளது. பரம்பரை வரைபடம் எல்லோருக்கும் துல்லியமாகத் தெரிந்திருக்கிறது.

ஊரின் நல்லநாளில் ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு பணியைச் செய்கிறது. சடையன் கூட்டத்தைச் சேர்ந்த பெரியகிழவிதான் புதுமொடாவில் மொச்சை அவிக்கணும். கழுவன் கூட்டம்தான் பெட்டி தூக்கணும். நரியன் கூட்டம் தான் ஊர்க்கெடாயை வெட்டணும். பழைய ஊரைச் சேர்ந்த வண்ணான், குயவன், நாவிதன், குறவன் ஆகியோர்தான் கோவில்பணிகளில் ஈடுபடணும்.

ஊர் பெரியாம்பிள என ஒருவர் எப்போதும் இருப்பார். அவரைத் தேர்வு செய்ய வம்சாவளி முறை எதுவும் கிடையாது. வயது, அனுபவத்தின் அடிப்படையில் அந்தத் தேர்வு நடக்கிறது என நினைக்கிறேன். அதற்கு மேல் உள் விபரங்களை என்னால் அறிந்துகொள்ளமுடியவில்லை.

தாதனூருக்கு இந்தந்த ஊருடன் சம்பந்த வழி இருக்கிறது என்ற பட்டியல் ஒன்றை இணைத்த டேவிட் சாம்ராஜ் நரியன் கூட்டம் கொடிக்கா வகையறாகவுக்கு மட்டும் நகர் காவல் இல்லை. கொடிக்காபட்டி கிராமத்தைக் காவல் காத்து வருகின்றனர். நகர் காவல் இல்லாத ஒரே வகையறா இவர்கள் மட்டும்தான். அதேபோல சடையன் கூட்டம் கூனாண்டி வகையறாவைச்சேர்ந்த பெண்ணடி வாரிசான மூக்கனுக்கு ஊர் கெடாயின் தலையைக் கொடுத்து மரியாதை செய்கின்றனர். அது மட்டுமல்ல, அவருக்கு நகர் காவலும் அளித்துள்ளனர். அந்த ஒரு பெண்ணடி வாரிசுக்கு மட்டும்தான் நகர் காவல் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணத்தை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. அதைத் தெரிந்துகொண்ட பின்பே அறிக்கை தயார் செய்யலாம் என்று இருந்தேன். அந்த விபரத்துக்காக தாமதப்படுத்த வேண்டாதென்று ரெவ். மார்ஸ்டென் தெரிவித்ததால் இந்த அறிக்கையை உடனே தயார் செய்து அனுப்புகிறேன். அதற்கான காரணத்தை அறியவரும் பட்சத்தில் அதனைத் தங்களுக்கு தெரிவிக்கிறேன்.

மறுநாளே ரெவ். மார்ஸ்டென் டேவிட் சாம்ராஜை உடன் அழைத்துக் கொண்டு கலெக்டர் பென்னிங்டனை சந்தித்து அறிக்கையைக் கொடுத்தார். கலெக்டர் நம்பமுடியாத ஆச்சரியத் துடன் மேலும் கீழுமாக அறிக்கையை இரண்டுமுறை வாசித்தார். இந்த விபரங்களைத் தெரிந்துகொள்ளத்தான் இத்தனை ஆண்டு காலம் ஆகியிருக்கிறது என்று மனதுக்குள் நினைத்தபடி இருந்தார். செம்பூர் போலவே ஆகிவிடுமோ என்று மனதின் ஓரத்தில் இருந்த பயம் அகன்றது. எவ்வளவு முயற்சித்தும் அறிய முடியாத ஒன்றை ஒரு சிறு கவரில் போட்டு கொடுத்துவிட்டு எதிரில் அமர்ந்திருக்கும் டேவிட் சாம்ராஜை கலெக்டர் மீண்டும் மீண்டும் பாராட்டியபடியே இருந்தார். மிஷனரிகளின் பணிகளை வானளாவப் புகழ்ந்தார். இந்தக் குறிப்புக்கு எதற்காக கலெக்டர் இவ்வளவு பாராட்டுகிறார் என டேவிட் சாம்ராஜுக்கு புரியவில்லை. ஆனால் அவர் சேகரித்த குறிப்புகளின் முக்கியத்துவத்தை மார்ஸ்டென் நன்கு உணர்ந்திருந்தார். அவருக்கு கலெக்டரிடம் பேச நிறைய விஷயங்கள் இருந்தன. டேவிட் சாம்ராஜை அறைக்கு வெளியே இருக்குமாறு சொல்லிவிட்டு நீண்ட நேரம் கழித்துத்தான் அவர் அறையை விட்டு வெளியே வந்தார்.

*

# 90

**பி**றமலைக் கள்ளர்களைப் பற்றிச் சேகரித்துத் தொகுக்கப்பட்ட **குறிப்பு** கலெக்டர் பென்னிங்டன் மேஜைமேல் இருந்தது. அதன் இறுதிப் பகுதி இப்படி முடிந்தது:

‘இவர்களது பூர்வீகத்தைப் பற்றி வரலாற்று ரீதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆனால் தமிழ்ப் புலவர்கள் இலக்கியக் குறிப்புகளின் அடிப்படையில் சில கருதுகோள்களைக் கூறுகின்றனர். தென்கர்நாடகத்திலிருந்து வந்து கி.பி. 2 முதல் 5 ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டை ஆண்ட களப்பிரர்களின் போர்வீரர் பிரிவொன்றாக இவர்கள் இருக்ககூடும். சமணர்களாகிய களப்பிரர்கள் வீழ்ந்தபோது சைவம் மேலோங்கியது. களப்பிரர்களின் வேளாண்குடியினர் பின்னர் சைவத்தைத் தழுவிக் கார்காத்த வேளாளர் ஆயினர்.

படைவீரர்களான இவர்கள் தொழில் அற்று நத்தம் மற்றும் அதற்கு வடக்கிருந்த பிறமலைகளில் ஒதுங்கி வாழ நேர்ந்தது. பின்னர் பிற சமூகத்தினர் இவர்களுக்குச் சூட்டிய பெயரான கள்ளர் என்பதே காலத்தில் நிலைத்துவிட்டது. பிற குடியினரைப் போல சடங்கு சம்பிரதாயங்கள் இவர்களிடையே முறைப்படுத் தப்படாமல் உள்ளன. சமணத்திலிருந்து துண்டிக்கப்பட்ட இவர்கள் மூதாதை வழிபாட்டோடு நின்றுவிட்டனர். முத்தரையர் குறுநில மன்னர்கள் பிறமலைகளில் ஆதிக்கம் பெற்றபோது 14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அங்கிருந்து வெளியேறி மதுரைக்கு மேற்கே குடியேறி விட்டனர். மேலூர்க் கள்ளர்களுக்கும். இவர் களுக்கும் சம்பந்த உறவு இப்போது இல்லை எனினும் ஆதிகாலத்தில் ஏதேனும் தொடர்பு இருந்திருக்கலாம். மறவர்களிலிருந்து பிரிந்து போன கள்ளர் என்ற சிறுபிரிவுக்கும் இவர்களுக்கும் ஏதொரு சம்பந்தமுமில்லை. 1850 ஆண்டுக் கணக்கெடுப்பின்படி மதுரை மாவட்டத்தில் மொத்தக் கள்ளர் ஜனத்தொகை 1,23,244. இதில் மேலூர்க் கள்ளர்கள், புதுக்கோட்டைக் கள்ளர்கள், மறவநாட்டுக் கள்ளர்களைக் கழித்துவிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 40000பேர் பிறமலைக் கள்ளர்களாக இருக்கலாம்.’

 என்ற தாதனூரின் ஆண்கள் எண்ணிக்கை ஒரு சிறு சந்தோஷத்தையும், பிரச்சினையைக் கையாண்டுவிட முடியும் என்ற நம்பிக்கையையும் கொடுத்தது. கலெக்டர் பென்னிங்டனுடன் எஸ்.பி. பிராஸ்ஸினும், டி.எஸ்.பி. ஸ்டீபன்சனும் அமர்ந்து விவாதித்துக்கொண்டிருந்தனர். கலெக்டருக்கு முன்னால் இருந்த மேஜையின் மீது மதுரை நகரத்தின் வரைபடம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அந்த வரைபடம் ஒருசில இடங்களில் வட்டம் அம்புக்குறிகளோடு இருந்தது. எஸ்.பி. நகரத்துக் குடிக்காவலின் முழுத்தன்மையையும் விவரித்தபடி இருந்தார். பென்னிங்டன் மதுரையின் கலெக்டராகப் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. அவர் பொறுப்பேற்றதில் இருந்து அவரது முழுக்கவனமும் பெரியாற்றுப் பாசனப்பகுதி சார்ந்தாக இருந்தது. அரசின் வரி வருவாயைப் பல மடங்கு உயர்த்துவதில் இயல்பான ஈர்ப்புடன் பணிகள் நடைபெற்றுவந்தன. பொதுப்பணித் துறையினருடன் பெரும்பாலான நேரத்தை அவர் செலவிட வேண்டியிருந்தது. இப்பொழுது அவரது கவனம் மதுரை நகர் நோக்கித் திரும்பியுள்ளது. நகரத்தின் வருமானத்தைப் பெருக்க, சட்ட ஒழுங்கு முழுமையும் தன் கைக்குள் வைத்திருக்க முழுக்கவனம் செலுத்தினார். கடந்த நான்கு ஆண்டுகள் மதுரை மாவட்டத்தில் பணியாற்றிவருகிற எஸ்.பி. பிராஸ்ஸின் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக போலீஸ் டிபார்ட்மெண்ட்டின் முழு அனுபவத்தையும் தொகுத்து கலெக்டருக்கு விளக்கிக் கொண்டிருந்தார். மதுரை நகரத்தையும் தாதனூரையும் ஒரே நேரத்தில் தங்களின் காவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி கலெக்டர் கோரினார்.

கலெக்டரின் இந்தக் கோரிக்கை எதிர்பாராததாக இருந்தது. சிறிது மௌனத்திற்குப் பின் பதில் சொன்ன எஸ்.பி. ‘அப்படியொரு திட்டத்தை தயார்படுத்தி நடைமுறைப்படுத்துவது இப்பொழுது சாத்தியமில்லை. முதலில் நகரத்து காவலைக் கையிலெடுப்பதில் ஆரம்ப வெற்றியை ஈட்ட வேண்டும். அதன்பின் தாதனூரை நோக்கி நாம் நகரலாம்’ என்றார்.

‘தாதனூரை கட்டுப்படுத்தாமல் எப்படி நகர்க்காவலை நீங்கள் ஏற்கமுடியுமென்று நம்புகிறீர்கள்?’ என்று கலெக்டர் கேட்டார்.

‘நம்மிடம் போலீஸ் ஸ்டேசனிலும், ரிசர்வ் படையிலும் இருக்கும் போலீசார்களின் எண்ணிக்கை தாதனூர் காவல்காரர்களை விட பல மடங்கு அதிகம்தான். ஆனால், எண்ணிக்கையை மட்டுமே வைத்து மதிப்பிட முடியாது. பரம்பரை குணத்தையும் சூழலையும் வெல்லுவது எளித்தல்ல. அது மட்டுமல்ல. நகர்க்காவலை முழுமையாக நாம் கையிலெடுப்பதென்பது தாதனூர்க்காரர்கள் காவலில் ஈடுபடாமல் தடுப்பது மட்டுமல்ல, எல்லாத் திசையிலிருந்தும் வரும் களவினைத் தடுப்பதும் ஆகும். தாதனூர்க்காரர்களின் காவலை முடிவுக்குக் கொண்டுவர நாம் பெரும் போராட்டத்தை நடத்தவேண்டிவரும். ஆனால் அவர்களின் காவல் முடிவு பெறுமாயின் அதைவிடப் பல மடங்கு பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டியதிருக்கும். பொது அமைதி பெரும் அழிவுக்குப் பின்தான் மீளும்’ என்றார் எஸ்.பி.

விவாதம் நீண்ட நேரம் நடைபெற்றபடி இருந்தது. ஒரு கட்டடத்தில் கலெக்டர் பென்னிங்டனுக்கு சோர்வு அதிகரித்து கோபம் மேலிட்டது. எஸ்.பி. மிகுந்த நிதானத்துடனான திட்டமிடுதலின் கவனம்

செலுத்துபவராக இருந்தார். நிர்வாகத்தின் சகல பகுதியும் இணைக்கப்பட்ட ஒரு திட்டமிடலை நோக்கி அவரின் விவாதம் இருந்தது. இளம் டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் அவ்வப்பொழுது மட்டுமே கருத்தினை தெரிவித்தபடி இருந்தார். கலெக்டர் பென்னிங்டன் தனக்கு முன்னால் விரித்து வைக்கப்பட்டிருந்த மாநகரத்தின் வரைபடத்தையே நீண்டநேரம் பார்த்துக்கொண்டிருந்தார். பிரிட்டிஷாரால் பல ஆண்டுகளுக்கு முன்பே அது வரையப்பட்டிருந்தாலும் இன்னும் முழுமையாகத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வராத வரைபடமாகவே இருந்ததென்பது அவருக்குப் பெரும் எரிச்சலைத் தந்தது.

*

**ம**துரை ரகசியங்களின் பூமி. அநேக ரகசியங்களை அடிக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட நகரமிது. பன்னிரண்டு கோபுரங்கள் மையத்தில் அழுத்தி நிற்க, மிதந்து கொண்டு நிற்கும் திட்டுபோல மண்ணின் மீதிருக்கிறது. இதன் மிதவைக்கு ஒரு தாத்பரியம் உண்டு. திரிபங்க பச்சை நிற சிலை இந்த மிதவையின் மையத் தண்டிலே இருக்கிறது. பிறந்த அன்று அதன் தோளிலே அமர்ந்த கிளி சிலையின் பச்சையத்தை உடலெங்கும் உறிஞ்சியபடி முப்பதாம் நாள் வெளியெங்கும் பறந்தது. கிளி சுற்றிய பரப்பையே எல்லையாகக்கொண்டு நகர் நிர்மாணம் செய்யப்பட்டது.

பச்சை நிறச் சிலையைச் சுற்றி சதுர வடிவத்தில் பிரஹாரங்கள் அமைக்கப்பட்டன. அடுத்து கோட்டை மதில்கள் காத்து நின்றன. கோயில் கோட்டைக்கு வெளிப்புறம் சித்திரை வீதி, ஆவணி வீதி, மாசி வீதி என மூன்று பெரும் வீதிகள் விரிவடையும் பெரும் சதுரமென நிலைநிறுத்தப்பட்டன. ‘திரிபங்கா’ என்ற மூன்று வளையுடைய சிலையைச் சுற்றி முப்பெரும் வீதிகள் கொண்ட நகர் நிர்மாணிக்கப்பட்டது.

நகரை உருவாக்கிய மகா கலைஞன் பெரும் கணிதம் ஒன்றின் அடிப்படையிலேயே இந்நகரத்தை அமைத்துள்ளான். நகரத்திற்கான தண்ணீர் தேவைக்கு வைகையிலிருந்து செல்லும் உள் வாய்க்கால்கள் மேல் மட்டத்தில் மூன்றும் அடிமட்டத்தில் மூன்றும் உள்ளன. நகரத்து மக்கள் பயன்படுத்தி வெளியேற்றும் தண்ணீர் அகழியில் வந்து விழமுப்பத்தியாறு தூம்புகள் இருந்தன. இவைகளெல்லாம் பெரும் கண்கொன்றின் அவிழ்க்கப்படாத முடிச்சுகள். கணித மேதை ஒருவன், இம்முடிச்சுகளை அவிழ்ப்பானேயானால் நகரத்து மக்களின் எண்ணிக்கையையும், மூடப்பட்ட கோட்டைக்குள் அவர்கள் தாக்குப்பிடிக்க முடிகிற காலத்தையும் கணக்கிடமுடியும். ஒரு பெரும் கணிதத்தின் கூட்டல் கழித்தலே இம்மநாகர்.

மீனாட்சி சொக்கநாதரின் தேர் ஆவணி வீதியில் சுற்றிவரும் பொழுது சதுர வடிவத்தில் இருக்கிற வீதியின் மூலை வரை தேர் வந்து திரும்ப ஏற்ற வகையில், வடத்தை மட்டும் நேரே இழுத்துக் கொண்டு செல்ல வடம்போக்கித் தெருக்கள் நான்கு மூலையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நகரை உருவாக்கிய கலைஞனின் மேதமையே வடம்போக்கித் தெருக்கள். அதே போன்று, உற்சவங்களின் பொழுதோ, தெய்வவீதி உலாக்களின் பொழுதோ ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் விக்ரஹங்களை மட்டும் உடனடியாக கோயிலுக்குள் கொண்டு செல்வதற்கு ஏற்ப இரண்டு ஆட்கள் போகும் அளவு கொண்ட,

வெளிப்பார்வைக்கு சட்டென தெரியாத குறுக்குச் சந்துகள் நான்கு திசையிலும் உள்ளன. அதன் பெயர் நாராசம்.

மதுரை வீதிகளின் ரகசியம் வடம்போக்கித் தெருக்களிலும், நாராசத்திலும் உள்ளது. இந்த வீதிகளை உருவி எடுத்துவிட்டால் நகரம் இடுக்கில் மாட்டிக்கொள்ளும். முனையில் திரும்பமுடியாமல் முட்டிநிற்கும் தேரில் உள்ள விக்ரஹங்களை யாருக்கும் தெரியாமல் தூக்கிக் கொண்டு கோயிலுக்குள் செல்லமுடியாது.

கோபுரத்தின் அடிக்கல் ஒன்றை உருவினால் கொஞ்சம் கொஞ்சமாக நிலைகுலைந்து மொத்த கோபுரமும் இறங்குவதைப்போல நகரம் மூச்சுவிட முடியாத அளவு இடிபாடுகளுக்குள் போய் சிக்கி நிற்கும். வீதிகளை வரைந்தவனின் ஆற்றலில்தான் இந்நகரம் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக தாக்குப்பிடித்து நிற்கிறது. இதன் சதுரவடிவம் நாற்புறமும் விரிய ஏற்ற முறையில் உள்ளது. நகரம் எவ்வளவு விரிந்து பரந்தாலும் அதன் மையமாக மீனாட்சியின் மூக்குத்தி ஒளி மின்னிக்கொண்டிருக்கிறது. மூக்குத்தியில்தான் அவள் உயிர் வாழ்கிறாள். தினந்தோறும் கருவறையிலிருந்து பள்ளியறைக்கும் பின் பள்ளியறையிலிருந்து கருவறைக்கும் மூக்குத்தியின் வடிவில்தான் போய்வருகிறாள். அவள் ஒளியின் அரசி. அதனால்தான் ஒளி பார்த்து இதழ் விரிக்கும் தாமரை மொட்டைப்போல நகரம் அமைக்கப்பட்டது. குவிந்த தாமரை இதழ்களின் மையத்தண்டின் மீது அவள் நிற்கிறாள். அவளைச் சுற்றி கணிதத்தின் பெரும் பின்னல்கள் கிடக்கின்றன. சமணர்களின் தடாகத்தில் புதைந்துகிடந்த கணித ஞானத்தின் வாய்ப்பாடுகளை உருவியெடுத்தவர்கள் பொற்றாமரைக் குளத்தில் மஞ்சள் நீராட்டி நகரெங்கும் தூவிவிட்டனர். பன்னிரண்டு திருவிழாக்களுக்கு பன்னிரண்டு கோபுரங்களையும், அறுபத்தி நான்கு திருவிளை யாடல்களுக்கு அறுபத்தி நான்கு குறுக்குத் தெருக்களையும் அமைத்தனர். வடம்போக்கித் தெருவின் நீளம் வடத்தின் நீளத்தையும், வடத்தின் நீளம் தேரின் கனபரிமானத்தையும் தீர்மானித்தது. விக்ரஹங்களின் கணக்கு சப்பரங்களையும், சப்பரங்களின் கனபரிமானக் கணக்கு பாதந்தாங்கிகளையும் தீர்மானித்தது.

ஒன்றினை ஒன்று மடித்துக் கட்டப்பட்ட பெரும் மடிப்புகளின் சதுரமாகக் கிடந்தது நான்மாடக் கூடல்.

*

**ப**ல நூறு ஆண்டுகளாக ஐரோப்பியர்களின் நாக்கு வரைபடத்தைப் பார்த்துத்தான் பேசிவருகிறது. கழுகு ஒன்று வானில் வட்டமிட்டுப் பார்ப்பதைப்போல முழு வரைபடைத்தையும் மேஜையில் விரித்து வைத்து உயரத்திலிருந்து பார்ப்பதுதான் அவர்களது பிரதான பார்வை. தனது பார்வையின் அளவுக்குள் முழு நகரையும் கொண்டுவருதென்பது தனது ஆளுகையின் எல்லைக்குள் கொண்டுவருவதற்கான முதல்படி. விரிக்கப்பட்ட வரைபடத்தின் கோடுகளுக்குள் நுழைந்து நுழைந்து நூற்றாண்டுகளாக பயணப்பட்டவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அந்தக் கோடுகளின் வழியாகத்தான் தேம்ஸ் நதியின் துறையிலிருந்து வைகையின் வடகரை வரை வந்துள்ளனர். பல்லாயிரம் காத தூரம் கொண்ட வரைபடத்தின் கோடுகளை கயிறுபோலச் சுருட்டி கண்களுக்குள்

புதைத்து வைத்துள்ள மாலுமிகளும் படைத்தளபதிகளுமே இவர்களின் வரைபடத்தை உருவாக்கியுள்ளனர். பெரும் நகரங்களை வரைபடமாக்குவதும் ஆக்கப்பட்ட வரைபடத்தைத் தங்களது நகரமாக்குவதும்தான் இவர்களது தொழில். இருள் தங்கள் சாம்ராஜ்ஜியத்தை முழுமையாகக் கவ்வமுடியாது என்பதில்தான் இவர்களது ஆணவம்.

பல ஆயிரம் ஆண்டு வரலாறு கொண்ட மதுரை நகரின் நவீன வரைபடம் ஒரு பிரெஞ்சு இஞ்சினியரால் உருவாக்கப்பட்டது. அதன் துல்லியமே அவன் வீழ்ச்சிக்கும் காரணமானது. பின் அந்த வரைபடம் கிழக்கிந்தியக் கம்பெனி படைத்தளபதியின் மேஜையின் மேல் இருந்தது. பல் லெப்டினன்ட்களும், கேப்டன்களும் வீழ்ந்த நகரத்தின் வரைபடத்தை அலட்சியத்துடன் பார்த்துவிட்டுச் சென்றனர். நெடுங்காலத்திற்குப் பின் நின்று உற்றுப்பார்த்த ஆங்கிலேயன் ஒருவன் இன்னும் முழுமையாக வீழ்த்த வேண்டியிருக்கிறது என்று முடிவுசெய்தான்.

அவன் பெயர் பிளாக்பர்ன். தனது நில ஆய்வாளர் மாரெட்டிடம் புதிய வரைபடம் ஒன்றை உருவாக்க உத்தரவிட்டான். அவனும் மேஸ்திரி ஒருவனைத் துணைக்கு வைத்துக்கொண்டு பணியைத் துவக்கினான். பழைய நகரம் கோட்டை எனும் பாதுகாப்பு அரணை அச்சாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. அதன் கட்டிடங்களுக்கும், பிரதான வீதிகளுக்கும், குறுக்குத் தெருக்களுக்கும் அதுவே அடிப்படையாக இருந்தது. ஆனால் மாரெட் உருவாக்கிய புதிய வரைபடம் இந்நகரின் குவிந்த தன்மையை முழுமையாக உடைத்தது. இதன் இறுக்கத்தைச் சிதைத்தது. இதன் மைய அச்சை தனக்கான முறையில் மாற்றியது. வடதிசையின் பிரதான சாலையை நகரின் மையப்பகுதிவரை கொண்டுவந்து கொக்கியைப்போல இணைத்தது. பீரங்கி வண்டிகளின் சக்கரங்கள் தாராளமாக முன்நகர்ந்து செல்வதற்கான வகையில் அந்த இணைப்பு இருந்தது. எந்த ஒரு படைப்பிரிவும் நகரின் முக்கிய வீதிகள் முழுவதற்கும் செல்வதைப்போல பழைய சாலைகளை விரிவுபடுத்தி புதிய சாலைகளை அமைத்து, ஏற்கனவே பூமியில் நிலை கொண்டிருந்த ஒரு நகரத்தை முழுமையாக வட திசை நோக்கித் திரும்பியது. மேலோட்டமாகப் பார்த்தால் சாலையை திருத்தியமைக்கும் பணியைப்போல இது தெரியும். ஆனால் சாலை அமைப்பதற்காக பிளாக்பர்னும், மாரெட்டும் இங்கு வரவில்லை.

தாமரை மொட்டைப்போல உள்முகம் பார்த்துக் குவிந்திருந்த மதுரையை பிளாக்பர்னும், மாரெட்டும் சேர்ந்து வெளிப்பக்கமாக விரித்துவைத்தனர். நாராசம் தலைகீழாகத் திருப்பப்பட்டது. விரிக்கப்பட்ட நகரத்திற்குள்ளிலிருந்து எதையும் வெளியே இழுத்துவருவதற்கு ஏற்ப மெட்டல்சாலைகள் அமைக்கப்பட்டன. எடுத்துச்செல்லும் பொருட்களின் அளவே நாராசத்தின் அகலத்தை தீர்மானித்தது. விக்ரஹங்களை எடுத்துச்செல்ல நான்கு அடி அகலம் போதும். ஆனால் பிளாக்பர்னின் திட்டப்படி தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் நூறு அடி அகலம் தேவைப்பட்டது. பிளந்து போடப்பட்ட பெரும் வீதிகளைக் கொண்ட வரைபடத்தை அவர்களிருவரும் வரைந்து வைத்துவிட்டு போயினர்.

அதன்பின் பல ஆண்டுகளாக ஆளப்பட்டு வரும் ஒரு நகரத்தின் வரைபடத்தை எண்ணற்ற கவர்னர்களும், கலெக்டர்களும் அலட்சியத்துடன் பார்த்துவிட்டுப் போனபடி இருந்தனர். ஆனால் இன்னும்

அடக்கப்பட வேண்டியவை இருக்கின்றன என்பதனை அறிந்த மூவரும் மேஜையில் விரிக்கப்பட்டிருந்த வரைபடத்தை பல மணிநேரம் உற்றுப்பார்த்துப் பேசியபடி இருந்தனர். கலெக்டர் பென்னிங்டனின் கோபத்தைக் கண்டுகொள்ளாது எஸ்.பி. பிராஸ்ஸின் மிகுந்த நிதானத்துடன் திட்டத்தை விளக்கியபடி இருந்தார். வரைபடத்தில் போலீஸ் ஸ்டேசன் இருக்கும் இரண்டு இடங்களிலும் சதுரக் கட்டங்கள். தாதனூர்க்காவல்காரர்கள் இரவில் தங்குவதாக ஆறு இடங்களை அவர்கள் கண்டறிந்து அந்த இடங்களையெல்லாம் வட்டமிட்டிருந்தனர். இவை தவிர தாதனூர்க்காரர்கள் நகரத்திற்குள் நுழையும் மேற்குப் பகுதியில், ரயில்வே ஸ்டேசன் பின்புறமாக ஒரு போலீஸ் அவுட் போஸ்ட் போடுவதற்கான இடமும் குறிப்பிடப்பட்டிருந்தது. அகலமான வீதிகளை மையப்படுத்திய பிளாக்பர்னின் வரைபடத்தின் மீது எஸ்.பி. பிராஸ்ஸின் தன்னுடைய திட்டமிடலை அமைத்திருந்தார். வரைபடத்தின் மீது வரையப்பட்ட இன்னொரு வரைபடமாக அது இருந்தது. புதிய வரைபடத்தின் படியான திட்டத்துக்கு கலெக்டர் பென்னிங்டன் சில ஆலோசனைகளின் பேரில் இறுதியாக ஒப்புதல் தந்தார்.

*

**வ**ரைப்படங்களை அவர்கள் அறிவார்கள். பரப்பப்படுகின்ற இடமும் அவை பார்க்கப்படுகின்ற இடமும்தான் முக்கியமானவை. இடுப்பளவு மேஜையில் பரப்பப்பட்டு நின்றுகொண்டு பார்ப்பது போல் வரையப்படுவது ஒன்று. இருளுக்குள் விரித்து வைக்கப்பட்டு பெருவெளியில் இருந்து பார்ப்பது ஒன்று. இருளின் வரைபடம் இரவெங்கும் விரிந்துள்ளது. ஒளியின் அரசி மீனாட்சியின் பட்டணத்தில் பகலின் நாழிகை கொண்டு அளக்கப்பட்ட பொழுதின் வழியே நிர்மாணம் செய்யப்பட்ட நகரத்தின் வரைபடமே பின்னால் ஐரோப்பியர்களால் திருத்தியும் மாற்றியும் வரையப்பட்டுள்ளது. ஆனால் இருளின் அரசி செல்லத்தம்மனின் தூதுவர்களான தாதனூர்க்காரர்கள் நிர்மாணித்துள்ள இரவு நகரின் வரைபடம் இதுவரை பிறர் பார்த்தறியாதது. களவுக்கும் காவலுக்கும் மட்டும் பயன்படும் வரைபடம் அது. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வீதிகளுக்கு அங்கு இடமில்லை. எல்லாத் திட்டமிடலுக்கும் மேல் தலைகீழ் திசைவழியினைக் கொண்ட திட்டம் தான் இரவின் வரைபடமாக இருக்கிறது. அங்கு எல்லாப் பாதையும் நாராசம்தான். ஒருவன் மட்டுமே போகும் நாராசம். அதுவும் பட்டியக்கல் பதித்தது அல்ல. மண்ணின் மீதும், சுவரின் மீதும், நாட்டு ஓடுகளின் மீதும், தென்னோலைகளிம் மீதும், மரக்கொப்புகளின் மீதும் செல்லுகின்ற நாராசம்.

ஒரு ஆரஞ்சப் பழத்தை வெளிப்பார்வைக்கு தெரியாத அதன் நரம்புகள் கீழும்மேலுமாக நூற்றுக்கணக்கில் பின்னியிருப்பதைப் போல இருளின் பெரும் பலமென மதுரையை நாராசங்கள் பின்னிக்கிடந்தன. பின்னிய நரம்புகளைக் கள்வர்கள் மாற்றி மாற்றிப் போட்டபடி இருந்தனர். மதுரையின் வீதிகளை எல்லாம் குறுக்கிட்டு பாளம் பாளமாகப் பிளந்துவைத்துள்ளனர். பிளக்கப் பட்ட வீதிகள் எல்லாம் வீடுகளின் மேலே அமைக்கப்பட்டுள்ளன.

ஓசைகளை விழுங்கிய பாதங்களைக் கொண்ட பூனைகளும் கள்வர்களும் காவல்காரர்களும் அதன் வழியே போய்வந்தபடி இருந்தனர்.

இரண்டு போலிஸ் ஸ்டேசனும் ஒரு அவுட் போஸ்ட்டும் அமைத்து கண்காணிக்கப்படவிருக்கும் பாதைக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. இவர்களின் பாதை முன்பின் திட்டமிடப்படாதது. இவர்களின் பாதங்கள் மட்டுமே அறிந்தது அது.

*

# 91

**‘என்ன பொளப்பு பொளைக்கிறோம்’ என்ற சலித்தபடி கொம்பூதி** புளியமரத்தடிக்கு வந்து உட்கார்ந்தாள் மூக்காயிக் கிழவி.

அங்கு கிடந்த உரலில் மூணு பேர் தானியங்களைக் குத்திக் கொண்டிருந்தனர். வீரம்மாக் கிழவி கால்நீட்டி உட்கார்ந்து கதையளந்து கொண்டிருந்தாள். கஞ்சிப்பொழுது கடந்தவுடன் ஒருவர் இருவராக உரலடிக்கு வந்தபடி இருந்தனர். வயசுப்பெண்கள் சுள்ளி பொறுக்கப் புறப்பட்டுப் போயினர்.

கருப்பணன் பெரியாம்பள ஏதோ நினைப்பில் புளியமரத்தைக் கடந்து கம்மா மேட்டிலே ஏறிக்கொண்டிருந்தார். ‘என்ன கொழுந்தனாரே, கொம்பு அதுபாட்டுக்கு ஆடிக்கிருக்கு’ என்றாள் மூக்காயிக் கிழவி.

சட்டென சுதாரித்த பெரியாம்பள தார்பாய்ச்சி கட்டியிருந்த இடுப்பு வேஷ்டியை தொட்டுப் பார்த்து சரி செய்தார்.

‘மரத்துக்கு மேல் இருக்கிற கொம்ப சொன்னா, எதத் தொட்டுப் பாக்குறான் பாரு. கெழட்டுப் பய...வயசு போனாலும் நெனப்புப் போகுதா?’ என்றாள் மூக்காயி.

‘நோத்தாலோக்க...’ என்று குனிந்து கரம்பையை எடுத்து எறியப்போன பெரியாம்பிளையை, உரலடியில் இருந்த மற்றவர்கள் எல்லாம் சிரித்துக்கொண்டே சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

உரலடியில் கூட்டம் கூடினால் அந்த இடத்தை ஆண்கள் தனி யாகக் கடந்து போவது எளிதல்ல. அதிலும் குறிப்பாக பெரியாம்பிளைகள் பயந்து பயந்துதான் நடக்க வேண்டும்.

சில நேரம் புதுசாக சரடுகட்டி வந்தவள்களும், புள்ளத்தாச்சிகளும் மாட்டிக் கொள்வார்கள்.

தூரத்தில் வந்துகொண்டிருந்த வயித்துப் பிள்ளைக்காரி

சின்னாத்தாளைப் பார்த்து மூக்காயி துவக்கினாள். ‘சரடுகட்டி வந்த புதுசுல புருசெ வீட்டுக்குள்ள வந்தாலே நோக்கால தூக்கிட்டு வர்றான்டீனு புடுங்கி அடிச்சுக்கிட்டு வந்தவ இப்பப் பாரு வருஷந் தவறாம வயித்ததூக்கிக்கிட்டு இருக்கா’ என்றாள்.

‘துப்பு கெட்ட கெழவி! ஏம் பேச்ச பேசாட்டீ வொனக்கு தூக்கம் வராதே’ எனத் திட்டியபடி அவள் சலித்துக்கொண்டாள்.

‘அடியே ஒனக்கு இன்னோன்னு சொல்றே கேளு, ஒன்னோட ஆடு சரியில்லாம செனைக்கு கத்துது. மொறையடிக்கிறப்பவே செனைக்கு போட்டுரு. அப்புறம் நிக்காது’ என்று சரடு கட்டும் வயதில் இருக்கிற அவள் மகளைப்பற்றி குறிப்பாய் உணர்த்தினாள் கிழவி.

‘ஓ யோசனைய நிறத்து. ஓங் கதையச் சொல்லு மொதல்ல’ என குமரிகள் பிடித்துக்கொண்டார்கள்.

‘ஏய்...ஏங் கதைய்ய என்னாடீ சொல்லச் சொல்றீங்க?’ என்று சலித்துக்கொண்டாள்.

பொடச்சு போட்டுக்கொண்டிருந்த ஆத்தாக்காரிகள் ‘நீ பெறந்தகத...வளர்ந்த கத...வாக்கப்பட்ட கத...தீத்து வுட்ட கத...எல்லாக் கதையுஞ் சொல்லு, அதத்தான் கேக்குறாளுக’ என்றனர்.

‘உரலு நகராம இருக்க அடிக்கல்லு, கை வலிக்காம இருக்க கதசொல்லு’ என்றாள் ஒருத்தி.

‘யப்பே...ய் நா சின்னாளபட்டியில பொறந்தேன், சிலுக்குவார் பட்டியில் வாக்கப்பட்டேன், கண்ணூர்காரனுக்கு துரும்பு கொடுத்து, தாதனூர்க்காரங்கிட்ட வந்து சேந்துகிட்டே, அம்புட்டுதான் ஏங் கத’ என்றாள்.

‘ஏ...ய் கெழவி, இப்பிடிச் சொன்னா எப்படி? வெளக்காமச் சொல்லு’ என்று சண்டைக்குப் போனார்கள்.

‘சொல்றேன்டீ ஆத்தா...சொல்றே. சின்னாளபட்டி ராசாவுக்கு சிங்காரமா வாக்கப்பட்ட ஏ ஆத்தா பெத்து போட்டது அஞ்சு. காச்சல்ல ஒண்ணு போச்சு, களவுல ஒண்ணு போச்சு, மிஞ்சுனது மூணு. அக்கா ஒண்ணு, தம்பி ஒண்ணு, நடுவலு நானுன்னு அனுரசணையா இருந்து வந்தோம். அக்காள தாதனூரு மொண்டிக்கிழவனுக்கு கட்டிக்கொடுத்த ஏ அப்பே ரெண்டு வருஷம் கழிச்சு என்னய்ய சிலுக்குவார்பட்டியில ஒன்னத்துக்கும் ஆகாதவனுக்கு கட்டிக் கொடுத்தான். ஒரு மாசமாச்சு, ரெண்டு மாசமாச்சு. அவனாலயும் ஒண்ணும் செய்யமுடியல, அவனவெச்சும் ஒண்ணும் செய்ய முடியல. ‘நா எப்படி வந்தனோ அப்படியே இருக்கேன்னு’ அவெ அப்பெ ஆத்தா கிட்ட சொல்லிப்பாத்தேன். அவெங்களுக்கு புரியிற மாதிரி இல்ல. அப்புறமென்ன ஓட்டமும் இல்லாம நடையும் இல்லாம நக்கலச்ச பொழப்பா போச்சே நம்ம பொழப்புன்னு பஞ்சாயத்த கூட்டி ‘வெள்ளாடு செவத்துல உரசுன மாதிரி வெத்து உரசா உறசுறானப்பே...ய்’ன்னு சொன்னேன். அனுசரிச்சு வாழ முடியுமா பாராத்தான்னு பஞ்சாயத்துகாரங்கெ கேட்டாங்கெ. ‘எப்பா...வாழ முடியாதுப்பா. கயிறு குட்ட, கெணறு ஆழம். இவனால தண்ணி எடுக்க முடியாதப்பா, தீத்து வுடுங்க’ன்னு சொல்லி துரும்பு வாங்கிட்டி வந்தேன்.

அதுக்குப் பெறகு கொஞ்சநாள் கழிச்சு கண்ணூருக்கு வாக்கப்பட்டுப் போனேன். அவெ மகா கெட்டியக்காரன். ரவைக்கு போயிரெண்டு ஆட்ட தூக்கிட்டு வந்துருவான். பகல்ல போயி ரெண்டு ஆட்டதூக்கிட்டு வந்துருவான். அசந்தா கெடயவே மொத்தமா ஓட்டிட்டு வந்து வீட்டுல விட்டுட்டு கட்டுலு மேல ரெட்டனங்காலு போட்டு படுத்துக்கிருவான். அம்புட்டு கெட்டியக்காரன். தோதான புருஷெ வாச்சுக்கிட்டானேன்னு மகுந்து போயி இருக்கையிலதான், மூணாவது பேறு காலத்துல அக்கா செத்துப்போனா. ரெண்டு புள்ளய வுட்டுட்டு போயிட்டாளே ஆத்தேன்னு குய்யோ மொறையோன்னு கத்தி அலமோதுனோம். என்ன செய்ய, அந்த மகராசிய மண்ணு திண்ணு போடுச்சு. சின்னது நன்னதுகளா ரெண்டு பிள்ளைக! அட்டஞ் சவலைக ரெண்டையும் விட்டுட்டு அந்த அழகுத்தாயீ போயிட்டா... இனி என்ன செய்ய? அக்கா புள்ளய அனாதையா போட்டுப்புட்டு ஆடு கெடக்கிது, கோழி கெடக்கிதுன்னு அந்த ஆம்பிளயோட இருக்க முடியுமா? பஞ்சாயத்து வெச்சு தீத்துப்புட்டு இந்த பாழாப்போன மொண்டிக்கிழவனுக்கு வந்து வாக்கப்பட்டேன். அக்கா பெத்தது ரெண்டு, அதுக்கு பெறகு நா பெத்தது மூணுன்னு திரும்பவும் ஏங் குடும்பம் அஞ்சாகிப் போச்சு. ஒண்ணு இடையில அடிபட்டாலும் நாலுக்கும் சரடு கட்டி புள்ள குட்டி ஆகிப்போச்சுடீ...'

கிழவியின் வார்த்தைகள் நின்று இடைவெளி அதிகமானது. 'ணங்கு....ணங்கு' என்று இடிபட்டவாறு உரலின் காதுகள் கிழவியின் வார்த்தைகளை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தன. சற்று இடைவெளிக்குப்பின் தொடர்ந்தாள்.

'கட்டிக்கொடுத்து பேரம் பேத்தியாகிப் போச்சு...இன்னனும் பொழுது சாஞ்சா தலைய சொரண்டிக்கே...வர்றாண்டி அந்தக் கெழவெ' என்றாள். எல்லோரும் வயிறு வலிக்கச் சிரித்தனர். 'அதுதான் பெரியாம்பிள தெனமும் வெரட்டு பெத்து ஆலமரத்தடிக்கு ஓடுறாரா...' என்றனர்.

எல்லோரும் சிரித்து அடங்கி முடித்தபின் கொஞ்ச நேரங்கழித்து கிழவி சொன்னாள் 'எத்தன தெடவ படுத்து, எத்தன பிள்ள பெத்தா என்னாடீ, ஆட்ட தோளுல தூக்கிக்கிட்டு வந்து ஆசெ ஆசையா... எழுப்புற கண்ணூர்க்காரனோட மூஞ்சி கண்ணுக்குள்ள பச்ச குத்துன மாதிரி கலையாம இருக்கடி' என்றாள்.

'அடி யாத்தே...! பொழப்பு கெட்டுச்சு, இன்னும் அந்த நெனப்புல தான் நீ திரியுறயா? ஏ...ங் கெழவன தீத்துட்டு அவனோட போயி வாக்கப்பட்டுக்க வேண்டியதுதான்?' என்று கிண்டல்களில் புரண்டு வந்து வார்த்தைகள் விழுந்தன.

'இவெ யாருடீ எடுவட்ட சிறுக்கி, அதுக்கு தெறமில்லாமலா நா இருக்கேன்னு நெனச்ச! அவெ செத்து இருவது வருஷமாகிப் போச்சு. அதுக்க என்ன செய்ய? அக்கா செத்து பாதிய அழிச்சா, அவெ செத்து மீதிய அழிச்சான். அம்புட்டுதான் எம் பொழப்பு' என்றாள். சந்தோஷமாய் துவங்கிய கதை கடைசியில் புளியமரத்தை ஆட விடாமல் நிறுத்தியது.

வருவதாகச் சொன்ன ஆங்கனை இன்னும் காணவில்லையே என்று மந்தைக்கல்லிலே நீண்டநேரம் உட்கார்ந்திருந்த டேவிட் சாம்ராஜ் தூரத்தில் கொம்பூதி புளியமரத்தின் கீழ் நான்கைந்து கிழவிகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து 'சரி, அங்கு போகலாம்' எனப்

புறப்பட்டார்.

மந்தையை நோக்கி நடந்து வந்த பெரியாம்பள ‘தனியாப் போயி மாட்டிக்காத மகனே! நொங்க எடுத்துப்புடுவாளுக!’ என்று எச்சரித்தபடி கடந்தார்.

சாம்ராஜுக்கு ஒன்றும் புரியவில்லை. நேராக புளியமர அடியில் போய் உட்கார்ந்தார். கிழவிகள் எல்லாம் ‘வா ராசா....வா. வா. இந்த வேகாத வெயில்ல ஏ இப்படி அலையுற!’ என்று அன்போடு அழைத்து உட்கார வைத்தனர். வீரம்மாக் கிழவியின் ஓரம் சம்மணம் போட்டு உட்கார்ந்தார்.

‘குத்துற நிறுத்துடி....புள்ள கண்ணுல தெருச்சிறப் போகுது’ என்ற சின்னாத்தாளை அமட்டினாள் மூக்காயி.

‘தொறக்குச்சிய என்னத்துக்கு ராசா கழுத்துல மாட்டி வச்சிருக்க?’ என்று வீரம்மாக் கெழவி கேட்டாள். வலது கையால் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த சிலுவையைத் தொட்டுப் பார்த்தபடி புன்முறுவலோடு சாம்ராஜ் கேள்விகளைக் கடந்தார்.

உரலடியில் கிடந்த கேப்பையைக் கையில் அள்ளி தூசியை ஊதி வாயில் போட்டபடி கேட்டார். ‘எனக்கு ஒரு கத சொல்லுணுமே ஆத்தா?’

கிழவிகளின் முகம் பூத்து வந்தது ‘என்ன கத வேணும்’ என்று வீராயி கேட்டதற்கு சாம்ராஜ் சொன்ன பதில் அதே வேகத்தில் பேச்சை தொடர விடாமல் அப்படியே நிறுத்தியது.

ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரிந்த கதைதான். ஆனால் இது வரை யாரும் வாய்விட்டுச் சொல்லாத கதை. சின்னானின் கதையை சொல்ல பெரும் வைராக்கியம் வேணும். வேறு வழியே இல்லாமல் ‘கழுவாயி மகெ கேட்டுக்கே...இருக்கானே’ என்று இரக்கப்பட்டு வீரம்மாக்கிழவி கதை சொல்லத் துவங்கினாள்.

எத்தனை நூறு கதைகளையும் அள்ளிக் கொட்டுகிறவள் இந்தக் கதைக்கு ஏன் இவ்வளவு தடுமாறுகிறாள் என சாம்ராஜ் யோசித்தபடியே உட்கார்ந்திருந்தார். சின்னிவீரன்பட்டி என்ற வார்த்தையை அவளால் உச்சரிக்கவே முடியவில்லை. நாக்கை அறுத்துப் போடுவதைப் போல அந்த ஊரின் பெயரைச் சட்டெனச் சொல்லி நாக்கை உள்ளிழுத்தாள். கதை துவங்கியது. அவனுடைய களவின் சாதுர்யத்தை விளக்கினாள். தாதனூர்க்காரர்கள் தெறங்கெட்டுப் போய் ஊரெல்லாம் அவனைத் தேடி அலைந்ததைப் பற்றிச் சொன்னாள். பெரிய கிழவியின் வாக்கை மீறி மாயாண்டி தனுச்சுக் களவுக்குப் போகத் துவங்கிய பொழுது கதைசொன்ன வீரம்மாளின் குரல் குன்ன ஆரம்பித்தது. சுள்ளி பொறுக்கப்போகும் குமரிப் பெண்கள் அவன் தங்கி இருந்த பொடவை நோட்டம் பார்க்காமல் வந்த நாளெதுவுமில்லை என்று சொல்லிச் சென்றாள்.

சாம்ராஜின் மனச்சித்திரத்தில் சாகச வீரனொருவன் உருவானபடி இருந்தான்.

அதற்குப்பின் சொல்ல முடியாமல் சொல்லி வந்தாள். அமணமலை உச்சியில் சாராயப் பானையின் வழியே உண்மை கொட்டிச் சிதறிய பொழுது அவள் குரல் கண்ணீரின் வழியே வெடித்து வந்தது.

‘இருபது வருஷத்துக்குப் பின்னாடி வந்தவெங்க புள்ளகுட்டிகள

பாத்துட்டாது வுட்டுட்டு போயிருக்க வேணாமாப்பா? அவெங்களுக்கு பலிகாணி வேனும்னாலும் கொடுக்குறோம்னு சொன்னோம்லப்பா...? எதக் கேட்டாலும் கொடுக்குறோம்ன்னு சொன்னோம்லப்பா?' என்று சொல்லியபடி தலையில் அடித்து அடித்து அவனிடம் முறையிட்டுக் கதறினாள்.

டேவிட்டுகு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவனது உடல் நடுக்கம் கொள்ள ஆரம்பித்தது. சுற்றியிருந்த பெண்கள் அழுதபடி வீரம்மாவைத் தேற்றப் பெருமுயற்சி எடுத்தனர். அங்கு வந்த ஆங்கன் டேவிட் ராம்ராஜை கூட்டத்தில் இருந்து மெல்ல வெளியே அழைத்து வந்தான்.

கொஞ்ச நேரத்தில் உரலடியில் கூடிய பெருங்கூட்டத்தின் ஒப்பாரி அலையலையாய் பரவியது.

*

**த**ன்னிடம் வந்த பிள்ளையைக் காப்பாற்ற முடியாமல் தன் மண்ணிலே வைத்து பலியெடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டியதாகி விட்டதே என்று தவித்துக்கிடந்தது ஊர். அதனபின் அவனுடைய வாரிசுகளுக்கு மரியாதை கொடுத்து தன்னைத் தேற்றிக்கொண்டது. நல்ல நாளில் வெட்டப்படும் ஊர்கெடாயின் தலை சின்னானின் வாரிசுக்கு என்று முடிவானது. மதுரை நகரத்தின் சின்னக்கடை வீதி காவலும் அவர்களுக்கென்றே முடிவானது. அதன்படி சின்னானின் மகன் காக்கையனும் அவனுக்கு அடுத்து அவன் மகன் மூக்கனும் காவல் பார்க்கின்றனர். சின்னானின் தலை வெட்டப்பட்ட இடத்தில் ஐந்து அடி கல் ஒன்று நடப்பட்டது. சின்னானின் வாரிசுகள் நல்லநாளின் மூன்றாம் நாளான பட்டசாமிகள் கும்பிடும் நாளன்று அந்த இடத்தில்தான் சின்னானுக்கு வேண்டியதைப் படையலிட்டுக் கும்பிடுகின்றனர்.

ஊரில் வேறு யாரிடமும் இல்லாத மௌனமும் அமைதியும் சின்னானின் வாரிசுகளுக்கு இப்பொழுதும் உண்டு. மலையடி வாரத்து வீடு இப்பொழுது மூன்று நான்காக மாறியுள்ளது.

சின்னான் பலியெடுக்கப்பட்டபின் இந்த இரண்டு தலைமுறையாக சின்னிவீரன்பட்டிக்கு தாதனூரிலிருந்து யாரும் வாக்கப்படவில்லை. ஊரே அமைதியாக எடுத்த முடிவு போல அது ஆனது.

ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு நடந்துள்ள சம்பவம் இது. ஆனால் ஊர் இன்னும் வேதனையை அனுபவித்துக் கொண்டேதான் இருக்கிறது. அது நினைவுகளின் வழியே தனக்கான வரலாற்றைப் புதுப்பித்தும். அதற்கான கோபத்தை தலைமுறை தலைமுறைக்கு கைமாற்றிய படி வருகிறது.

டேவிட் சாம்ராஜ் மந்தை வெளியில் ஊன்றப்பட்டிருந்த கல்லைப்பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார். கல்லின் மேல்மட்டம் சின்னான் கன்னம் போட்டு எடுப்பதைப்போல மேடுபள்ளம் இல்லாமல் சமமாக இருந்தது. கல்லுக்கு முன்னால் மண்டியிட்டு அமர்ந்தார். கை தானாக சிலுவைக் குறி போட்டபடி இருந்தது. மனம் கல்லின் அடிவாரத்தைத் தொட்டு வணங்கியது. இப்படித் தாதனூரைச் சுற்றி எத்தனையோ கற்கள் ஊன்றப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ பலி

காணிகள் இருக்கின்றன. இவை அனைத்தும்தான் இம்மக்களின் வரலாற்று. அவையனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டது அவருக்கு.

பெண்ணடி வாரிசுக்கு மதுரை சின்னக்கடை வீதியின் காவல் உரிமை எப்படிக் கிடைத்தது என்று எழுதி கலெக்டருக்கு அனுப்பவேண்டுமென்றோ, மார்ஸ்டெனிடம் தெரிவிக்க வேண்டுமென்றோ அவருக்குத் தோன்றவில்லை. இதுவெல்லாம் அவர்கள் சம்பந்தப்பட்டதல்ல, என் சம்பந்தப்பட்டது என்ற நிலைக்கு அவர் வந்துவிட்டார்.

அவர் தாதனூருக்குள் இறங்க ஆரம்பித்து இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே மூழ்கிக்கொண்டிருக்கிறார் என்பதை மேரி உணர்ந்தாள். அவர் தன்னுடைய எண்ணங்கள் முழுவதையும் மேரியிடம் தெரிவித்தபடி இருந்தார். ஆனால் அவளோ கலெக்டர் பிளாக்பர்ன் மதுரையில் பலியைத் தடை செய்ததையும் அதைப் பாராட்டி மிஷனரிகளால் எழுதப்பட்ட கடிதத்தையும் நினைவுகூர்ந்தாள். மிஷனின் ஆண்டுமலரில் பிரசுரிக்கப்பட்டிருந்த ரெவ். லாரன்சின் கடிதத்தை எடுத்துக் காண்பித்தாள். ‘இவையெல்லாம் காட்டுமிராண்டித்தனமான பழக்கவழக்கங்கள்’ என்று புறந்தள்ளுகிற நிலையிலிருந்து அவர் வெகுதூரம் வந்து விட்டார்.

*

# 92

**சா**யந்தரம் பேய ஆரம்பித்த மழை இரவாகியும் விடுவதாக **இல்லை.** கொட்டித் தீர்த்தது. நகரக்காவலுக்கு போகிறவர்கள் மழை நிற்கட்டும் எனக் காத்திருந்தனர். நீண்ட நேரம் கழித்து மழையின் வேகம் குறைந்தவுடன் ஆலமரத்தடியிலிருந்து புறப்பட்டுப் போக ஆரம்பித்தனர். அந்த நேரத்தில் ஊருக்குள் செவத்தம்மாக்கிழவி கங்கு கேட்டு வீடு வீடாகப் போய்க் கொண்டிருந்தாள். வயித்துப்புள்ளைக்காரியாக இருந்த மருமகள் விருமாயிக்கு இடுப்பு வலி வர ஆரம்பித்திருந்தது. ‘விடியறதுக்குள்ள புள்ளய பெத்து எடுத்துருவா’ என்று சொன்ன நாவிதப்பெண் ‘வலி அதிகமாகட்டும், நடுச்சாமத்துக்குப் பெறகு எண்ணெயும் வைக்கோலும் கொண்டுகிட்டு வர்றேன்’ எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அவள் வருவதற்குள் வெந்நீரும் கஞ்சியும் காய்ச்சி வைத்துவிட வேண்டும் என் யோசித்தவள் மூலையிலே சாய்த்து வைக்கப்பட்டிருந்த சோளத்தட்டையை எடுத்து அடுப்பிலே சொருகினாள். ‘கொஞ்சம் பொறுத்துக்கோடியாத்தா. கங்கு வாங்கிட்டு வர்றேன்’ எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். ஏற்கனவே பெறத்த ரெண்டும் தங்கல; இதுவாவது தங்கட்டும் என சடச்சியை நினைத்துக்கொண்டே வீட்டை விட்டு வெளியே வந்தாள். மழை தூறிக்கொண்டிருந்தது. ‘இந்நேரத்துக்கு எவ கங்கு வெச்சிருக்காளோ தெரியலயே’ என நினைத்தபடி ஒவ்வொரு வீடாய் உள்ளே நுழைந்து வெளியே வந்தாள். வீடுகள் எல்லாம் ஈரப்பத்தைகளாய் கிடந்தன. நான்கு வீடுகளைத் தாண்டிவிட்டாள். யார் வீட்டிலும் கங்கு இல்லை. எல்லோரும் துவர மாரும், கத்திரி மாரும், வெண்டி மாரும், கேப்பைத் தாளுமா வச்சு எருச்சா கங்கு எப்படி விழுகும். சாம்பலாகத்தான் கொட்டிப்போகும் என நினைத்தபடி வேலம்மாள் வீட்டிற்குள் நுழைந்தாள். அவ எள்ளுச் சக்கை போட்டு எரித்திருந்தாள். அவள் அடுப்பில் சாம்பல்கூட மிஞ்சவில்லை. ‘என்ன பொளப்பு பொளைக்குறோம்...’ எனப் புலம்பியபடி வீட்டை விட்டு வெளியேறத் தயாரானாள். மழை தடுத்தது. கொஞ்ச நேரத்தில் காத்து கிளம்பியது. காற்றும் மழையும் சேர்ந்து ஊரையே நகட்டியது. செவத்தம்மாவால்

வேலம்மாள் வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. சரி கொஞ்சம் பொறுப்போம் எனப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். மழை வலுத்துக் கொண்டு தான் போனதே தவிர குறையவில்லை. இந்நேரம் விருமாயி எப்படி இருப்பாளோ என நினைத்தவள் பக்கத்து வீட்டுக்காரியக்கூட துணைக்கு வைக்காம வந்துட்டோமே, இந்த மழையில் அவ கத்துனாக்கூட கேக்காதே என நினைத்தபடி இருந்தாள். ‘ஏண்டி அந்த ஒத்தவீட்டு பேச்சிகங்கு வெச்சிருப்பாளா?’ என்று வேலம்மாளிடம் கேட்டாள்.

‘சாணி தட்ட உமி கொடுக்காத சக்களத்தி, அவ பேச்ச ஏங்கிட்ட பேசாத’ என்றாள் கோபமாக. அவளைப்பற்றி செவத்தம்மாவுக்கும் தெரியும். ஆனால் இப்போது அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

தாதனூர்ப் பெண்களுக்கு விலைமதிப்பற்ற பொருள் கங்குதான். கட்டையும் வெறகும் வச்சு எரிச்சாதான் கங்கு விழுகும். ஆனால் அதற்கான வாய்ப்பு மிகக்குறைவுதான். மாரும், தட்டையும், தாளும்தான் ஏகத்துக்கும் எல்லா வீட்டிலும் எரிகிறது. கங்கைப் பெத்துப்போட்டுப் போகிற நெருப்பு தாதனூர் அடுப்பில் அபூர்வமாகத்தான் ஏறுகிறது. கட்டையும் வெறகும் வேண்டுமென்றால் நாகமலைக்குத்தான் போகவேண்டும். நல்ல குமரிக இருக்கிற வீடுகளில்தான் பொழுது பூராம் நாகமலைக்குப் போயி வெறகு எடுத்துக்கிட்டு வருவாங்க. மற்ற வீடுகளில் வெறகு கிடைக்க வாய்ப்பில்லை. ஊர் எல்லையை ஒட்டி அல்லது பக்கத்து ஊர்களில் ஒன்றிரண்டு கருவேலமரங்கள் இருக்கும். அதை வைத்திருப்பவன் கமலக்காலுக்கும், கணை செய்யறதுக்கும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டிருப்பான். மூணு நாலு மரம் வெச்சிருந்தா அவன்தான் பெரிய சம்சாரி. யாரும் மரத்துக்கிட்ட நெருங்க முடியாது. சடச்சி பொட்டலில் ஒரு சுள்ளிகூட எடுக்கக்கூடாது. வேறு எதுவும் செய்ய முடியாத பெண்கள் ஒரு வண்டிய இழுத்துக்கிட்டு வர்ர தெறம் இருக்காடா...’ என்றுதான் ஆம்பிளைகளோடு சண்டைக்குப் போவார்கள். அடைமழைக் காலத்தில் மாட்டுவண்டிகள் இழுத்துகிட்டு வருவதைத் தவிர ஊருக்கு வேறுவழியில்லை. அப்படி வண்டிகள் வந்து உடைபட்டால்தான் வாரக்கணக்கில் கங்கிற்குப் பஞ்சம் இருக்காது.

வெறகு இல்லாமல் கங்கு கிடைக்க இன்னொரு வழி எருவாட்டி அதுவும் சாதாரண விஷயமல்ல. ஊரில் கோழி சேவல், நாய்கள்தான் இருக்கிறதே தவிர மாடுகள் இல்லை. மாடு வளர்க்கிற பக்குவமும் பொறுமையும் தாதனூருக்கு இன்னும் வாய்க்கவில்லை. எனவே ‘ஊர்க்காலிமாடு’ கூட்டம் கூட்டமாக மலைப்பக்கமோ, ஊர்ப்பக்கமோ போனால் ஊரே திரண்டு கூடையைத் தூக்கிக்கொண்டு அதன் பின்னால் போகும். பொழுது முட்ட பின்னால் போய் சாணியைப் பொறுக்கிவிட்டு பின் ஊர் திரும்புவார்கள். கூடை நிறைய சாணியை எடுத்துவிட்டால் அவள்தான் கெட்டிக்காரி. அடுத்து சாணி தட்ட உமி வேண்டும். சாமை உமி, துவரைத் தூசி, எள்ளுச்சண்டு என பக்கத்து ஊர்க் களங்களில் எதுவெல்லாம் கிடைக்கிறதோ அதையெல்லாம் வைத்துத் தட்டுவார்கள். எதுவும் கிடைக்கவில்லையென்றால் கடைசியாக வீட்டில் தலைக்கு வைக்கக் கட்டிவைத்திருக்கும் தலகாணிகளிலிருந்து கேப்பைச் சண்டுவை எடுத்துத் தட்டுவார்கள்.

எருவாட்டியைத் தட்டியபின்தான் பிரச்சனையே ஆரம்பிக்கும். அதைப் பாதுகாப்பது ஒன்றும் அவ்வளவு சாதாரண விஷயமல்ல. தாதனூரில்

வீட்டுக்கு வீடு தேவையான ஒரு பொருள் ஒரு வீட்டின் ஓரமே காய்ந்து கொண்டிருந்தால் அந்த வீடே முழித்து அதைப் பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் அது தட்டியவள் வீட்டிற்கு வரும். களவாணிகளுக்குப் பயந்து சரியாகக் காயாத எருவைப் பேத்துகிட்டு வந்து வீட்டில் வைத்தால் வண்டு வந்துவிடும். அப்புறம் யாரும் தூங்க முடியாது. ராத்திரி முழுவதும் வண்டுகள் ஊர்ந்துகொண்டேயிருக்கும். காதுக்குள் போய்விடும். காதில் தக்கையை வைத்து அடைத்துக்கொண்டுதான் படுக்கவேண்டும். ஒரு மாநகரத்தையே எல்லை வகுத்து காவல் காத்து வருகின்ற ஊர் கடைசிவரை தனது ஊரில் தட்டப்படும் எருவாட்டிக்கு காவல் பிரிக்க முடியவில்லை. அந்த அபூர்வப் பொருள் ஒவ்வொரு இரவும் சவாலைச் சந்தித்து மீடேறுகிறவனின் வீட்டை நோக்கிப்போய்க் கொண்டேயிருந்தது.

இதன் காரணமாகவே பெண்களிடம் கலகமும் காதறுப்பும் நடந்து கொண்டேயிருந்தது. கலகம் என்று வந்துவிட்டால் காதைத்தான் முதலில் பிடிப்பார்கள். நல்லாக் காது வளந்தவள் கலகத்தில் எட்ட நின்றுதான் சண்டைபோடுவாள். பக்கத்தில் வரமாட்டாள். காய்ந்த எருவுக எத்தனையோ காதுகளை அத்துத் தொங்கவிட்டது.

செவத்தம்மாக் கிழவி மழை எப்பொழுது நிற்கும் எனப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். கொஞ்சம் குறைந்தவுடன் பேச்சி வீட்டுக்குப் போனாள். உள்ளே நுழைந்தவள் அடுப்பைத்தான் முதலிலே பார்த்தாள். ஒரு பொன் முட்டையைச் சாம்பல் கொண்டு போர்த்தி அடுப்பு அடைகாத்துக் கொண்டிருந்தது. புள்ளைத்தாச்சி வலி கொண்டிருப்பதை செவத்தம்மா சொன்னவுடன் வழக்கத்திற்கு மாறாக ‘கங்கப் பூரா அள்ளிட்டு போயிறாத. கொஞ்சமா அள்ளிட்டு போ’ என மனமின்றி வரங் கொடுத்தாள் பேச்சி. செவத்தம்மா அகலத்திறந்த கண்களோடு அடுப்பை நோக்கிப் போனாள்.

**அ**திகாலையில் நகர்க்காவலுக்கு போனவர்கள் ஆலமரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர். இரவெல்லாம் மழை பெய்ததால் எங்கும் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. பூமியால் நீரைக் குடித்து முடிக்கமுடியவில்லை. ஆலமரத்தடி எங்கும் நீர் விரவிக்கிடந்தது. தாவாரத்திலிருந்து பெரியாம்பிள்ளைகள் கீழே இறங்காமல் அங்கேயே உட்கார்ந்திருந்தனர். சாக்கை எடுத்துப் போர்த்திக் கொண்டு மேற்குத் தூணில் சாய்ந்தபடி கெடாயன் பெரியாம்பிளை உட்கார்ந்திருந்தார். கழுவனும் மூக்கனும் ஆலமரத்தடிக்குள் நுழைந்தனர்.

‘எங்கடா மொக்கச்சாமி?’ என சத்தம்போட்டுக் கேட்டார் ஒச்சுப் பெரியாம்பிள.

‘பின்னால வர்றாங்கப்பா’ என்றான் கழுவன். கொஞ்ச நேரத்தில் மொக்கச்சாமியும் ஆங்கனும் வந்து சேர்ந்தனர்.

‘ஏலேய்...ராத்திரி பூரா ஓம் பொண்டாட்டி கத்திக்கிட்டே இருந்தா. விடிவெள்ளி வர்ற நேரத்துலதான் பிரசவம் ஆயிருக்கும்னு நெனைக்கிறேன். அப்பதான் கத்தல் நின்னுச்சு. ஆம்பளப் பிள்ள போலப்பா. ஒத்தப் படையில குலவ போடுறாளுக. போய் பாத்துட்டுவா’ என்றார் பெரிசு. பெண்பிள்ளை என்றால் ரெட்டைப் படையில் குலவை. இரண்டு இடத்தில் வாழப்போகிறவள் இல்லையா!

மொக்கச்சாமி சந்தோஷத்தோடு ஊரை நோக்கி நடந்தான். ஆங்கனும் உடன்போனான்.

கொஞ்சதூரம் போன ஆங்கன் 'நான் போயி அயித்த மகங்கிட்ட சொல்லிட்டு வர்றே. அவெ கொம்பூதிக்கு தலக்கட்டு வரி குடுக்குறத பாக்கணும்னு சொன்னான். கஞ்சிப் பொழுதுக்கு பெறகு வாப்பான்னு சொல்லிட்டு வந்துர்றேன்' எனச் சொல்லி டேவிட் சாம்ராஜைப் பார்க்க பசுமலையை நோக்கி நடந்தான். அயித்த மகனுக்கு ஊரில் உள்ள எல்லா வழக்கங்களையும் கூட்டி வந்து காட்டுவதையும் சம்பந்த வழி ஊருக்கெல்லாம் கூட்டிப்போவதையும் மிக ஈடுபாட்டோடு ஆங்கன் செய்து வந்தான். 'இதுல எல்லாம் என்ன இருக்கு! இதப்போயி தெரிஞ்சுகிர்றதுக்கு இம்புட்டு ஆசப்படுறான்' என்பதுதான் ஆங்கனுக்குப் புரியாமல் இருந்தது. ஆனால் அவன் மீது இருந்த பாசத்தால் அவன் எதையெல்லாம் பார்க்கவேண்டும். கேட்கவேண்டுமென நினைக்கிறானோ அங்கெல்லாம் கூட்டிப்போனான்.

கஞ்சிப்பொழுது கடந்தது. பரப்பி வைக்கப்பட்டிருந்த வைக்கோலில் படுத்துக்கிடந்த பிள்ளையை வாரி எடுத்தாள் செவத்தம்மா. விருமாயி மெதுவாக கையை ஊன்றி எழுந்தாள். உடனிருந்த பெண்கள் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டனர். வீட்டை விட்டு தாயும் பிள்ளையும் வெளியே வந்தனர். கால்களை நகட்டி மெல்ல நடந்தாள் விருமாயி. பெண்களின் கூட்டம் முன்னே நடந்தது. 'பாலாட்டங் குலையையும் காயையும் அரச்சுக் குடி...அப்பத்தான் பால் நல்லா ஊறும்' என்று கிழவிகள் பெத்தவளுக்குப் பக்குவம் சொல்லிக்கொண்டு வந்தனர். மொக்கச்சாமியும் மற்ற ஆண்களும் பேச்சைக் கேட்டபடியே பின்னால் நடந்துவந்தனர்.

ஆங்கன் டேவிட் சாம்ராஜை கூட்டிக்கொண்டு கொம்பூதி புளியமரத்தின் கீழ் தயாராக நின்றுகொண்டிருந்தான். கொம்பூதி வகையறா முழுவதும் அங்கே இருந்தது. வெயில் ஏறி அடித்தது. ஆனாலும் உறைக்கவில்லை. மழைநீர் எங்கும் தேங்கியிருக்க பூமி குளிர்ந்து கிடந்தது. ஈரநைப்பில் புளியும் வேம்பும் கருப்பேறி நின்றன. ஊருக்குள்ளிருந்து வந்தவர்கள் நல்ல தண்ணீர் கிணற்றுக்குப் போய் ஒரு குடம் தண்ணீர் எடுத்துக்கொண்டு மரத்தை நோக்கி வந்தனர்.

அவர்கள் வந்ததும் கொண்டுவந்த தண்ணீரை வைத்து மரத்தின் தூரை மொக்கச்சாமி கழுவினான். கருஞ்சந்தனமும் பொட்டும் மரத்துக்கு வைத்தனர். பின்னர் கொம்பூதி வகையறாவைச் சேர்ந்த சுழியன் மரத்தின் மீது ஏறிப்போய் உச்சியில் கட்டித் தொங்கவிடப் பட்ட கொம்பைக் கழட்டி எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். கொம்பு கீழே வரும் பொழுது சுற்றியிருந்த பெண்கள் எல்லாம் குலவை போட்டனர். கொம்பை நன்றாகத் துடைத்து எண்ணெய் வைத்துத் தேய்த்தனர். மொச்சமாரைப் பரப்பி அதன்மீது விரிக்கப்பட்டிருந்த சாக்கின்மீது கொம்பை வைத்தனர். கொம்புக்கு பக்கத்தில் பச்சப்பிள்ளையைப் படுக்கப்போட்டனர். கீழே போட்டவுடன் குழந்தை வீச்சென கத்தியது. ஓசை கொம்பின் துவாரத்திற்குள் நுழைந்து அகண்ட வாயின் வழியே வெளியேறியது. குரலின் வழியே பிள்ளையின் வாசனையைக் கொம்பு முகர்ந்துகொண்டது. இனி அந்த உயிரையும் சேர்த்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கொம்புக்கும் கொம்பூதி வகையறாவுக்கும் உண்டு. விரித்து வைக்கப்பட்டிருந்த வாழை இலையில் வெற்றிலை, தேங்காய்,

தானியங்கள் என புதிய தலக்கட்டுக்கான வரி இருந்தது. கொம்பூதி வகையறாக்கள் மிகுந்த சந்தோஷத்தோடு தலக்கட்டு வரியை ஏற்றுக்கொண்டனர். கொம்பு புது உயிரின் வாசனையை பிடித்துக்கொண்டு மீண்டும் மரத்திற்கு மேல் ஏறியது. பெண்கள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வீடு திரும்பினார்கள். ஆண்கள் எல்லாம் ஆலமரத்தடி நோக்கி நடந்தனர்.

*

**ஆ**லமரத்தடி உச்சிப்பொழுதில் களை கட்டியிருந்தது. தாவரத்தில் பெருசுகளுடன் சேர்ந்து டேவிட் சாம்ராஜ் உட்கார்ந்திருந்தார். மற்றவர்கள் எல்லாம் மரத்தடி எங்கும் உட்கார்ந்திருந்தனர். கொம்பூதியின் தலக்கட்டு வரி சம்பந்தமாகத்தான் சாம்ராஜ் கேள்விகளைக் கேட்டபடி இருந்தார். நீண்ட நேரம் கழித்து கேள்விகள் திரும்பின. 'இதுவரைக்கும் நீ எந்தெந்த ஊருக்கு போன? என்னெத்த தெரிஞ்சுகிட்ட சொல்லு' என்று பெருசுகள் அவரை மடக்கினர்.

வாய்விட்டுச் சிரித்த சாம்ராஜ் 'நா என்னத்தப்பாதெரிஞ்சுகிட்டே! எங்கூட்டத்த தெரிஞ்சுகிட்டேன்' என்றார்.

'ஏய்...இப்படிச் சொல்லி தப்பிக்கக்கூடாது. எந்தெந்த ஊருக்குப் போன. எங்களப்பத்தி எவெ எவெ என்னென்ன சொன்னான்னு வெரவமாச் சொல்லு' என்று இழுத்துப் பிடித்தான் கழுவன்.

சாம்ராஜ் தனக்கு சுவாரஸ்யமாகப்பட்ட விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார். ஆனால் அது அவர்களுக்கு சுவாரஸ்ய மானதாக இல்லை. 'இதே தெரிஞ்சுகிர்றதுக்காகத்தான் ஊர் ஊரா சுத்துறா னாக்கும்?' என்று மனத்துக்குள் நினைத்தவாறு சலித்துக்கொண்டனர்.

'வாக்கப்பட்டுப் போற எல்லாப் பிள்ளைகளும் தாதனூரோட பெருமையத்தான் விதவிதமா பேசிக்கிட்டு இருக்காங்க. ஆனா நா சந்திச்சு ரெண்டு பேரு மட்டுந்தா வித்தியாசமா சொன்னாங்க' என்றார்.

'அது எவளுகடா?' என்று கேட்டார் பெரியாம்பிள.

'பேரச் சொல்லமாட்டேன். ஊர மட்டும்தான் சொல்லுவேன்' என்றார் சாம்ராஜ்.

'ரெண்டும் ஒண்ணுதான். எதச் சொன்னாலும் ஆள கண்டுபிடிச்சு புடலாம். அதுக்கு விஷயத்த மட்டும்தான் சொல்லுவேன்னாவது சொல்லு' என்று எடுத்துக்கொடுத்தான் ஆங்கன்.

'ஆமாம்மா...விஷயத்தை மட்டும்தான் சொல்லுவேன்' என்றார் சாம்ராஜ்.

'விஷயத்தை சொல்லு, அத எவ சொல்லியிருப்பா... அவளுக்கு இங்கிருந்து எந்தக் கெழவி சொல்லிவிட்டிருப்பான்னு நாங்க சொல்றோம்' என்றார் கெடாயன் பெரியாம்பிள.

'கணவாயிக்கு கீழே இருக்கிற ஒரு ஊர்ல. காவக்கார வீட்டு பொம்பிளைக்கிட்ட பேசிக்கிட்டிருந்தப்ப நாங்க ரெண்டு பேரும் தாதனூர்க்காரிகன்னு சொல்லி ஊரோட பெருமைய விலாவாரியா சொன்னாங்க. அப்ப அங்கிட்டிருந்து வந்த பொம்பள 'இவ்வளவு

கெட்டிக்கார தாதனூர் கிட்ட காவ வாங்குன கெட்டிக்காரி நாங்க'ன்னு சொல்லிவிட்டு போயிட்டா. எனக்கு திக்குனு ஆயிருச்சு...' என்று விஷயத்தை சொல்லிக்கொண்டிருக்கும்போதே பெரியாம்பிளைகளின் வார்த்தைகள் ஊடே பாய்ந்தன.

'அவ கொடிக்கா வகையறா காரியா இருப்பாளப்பா...'

'அவளுக கெடக்காளுக புளுக்க சிறிக்கிக. அவளுக பேச்ச போயி பேசிக்கிட்டு...'

'அன்னக்கே காவ கொடுக்க வேணாம்னா, இந்த மாயாண்டிக் கெழவே பெரிய நியாயம் பேசி கொடுத்துட்டு போயிட்டான். இப்ப ஊர் பூரா நம்மள எளக்காரமா பேசிச்கிட்டு திரியுறாளுக.'

'பெரியாம்பிள...சொல்லாயிக் கெழவிகிட்ட விழுந்து போனானப்பா. அந்ததண்டி ஆம்பிளய பொண்டுகப் பலேன்னு கேட்டா எப்படியப்பா தாங்குவான். ஆளு அதுக்குப்பெறகு அர உயிராயிட்டாரு.'

'இவளுக சொல்றதுக்கெல்லா ரோசப்பட்டா வாழ முடியுமாப்பா... மொட்டுக் கெட்ட சிறிக்கிக. ராத்திரி போனா களவுக்கு போகாம இங்கு எதுக்குடா வந்தேன்னு வெரட்டுறா. பகல்ல போனா ஆளும் பேருமா இருக்குறப்பா என்ன மசுத்துக்குடா வந்தேன்னு வெரட்டுறா. என்னதான் நெனைச்சுருக்காளுக? உச்சி மலையில இருக்குற குத்துக்கல்லோட குடும்பம் நடத்த முடியுமா?'

பெரியாம்பிளைகளுக்கும், இளவட்டங்களுக்கும் சிரிப்பு தாள முடியவில்லை. 'ஒரு வார்த்த சொன்னதுக்கு இம்புட்டா?' என்று வாயடைத்துப் போனார் சாம்ராஜ். இதுக்கே இப்படியென்றால் அடுத்துச்சொல்லப்போகிற விஷயத்தால் இந்த இடம் என்னவாகும் என்று மனதுக்குள் நினைத்துப்பார்த்து ரசித்தபடி உட்கார்ந்திருந்தார்.

'என்னப்பா, நாங்க பாட்டுக்கு பேசிக்கிட்டு இருக்குறோம். நீ பாட்டுக்கு மரத்த பாத்துக்கிட்டு உட்கார்ந்திருக்க! இன்னொருத்தி என்னமோ சொன்னான்னு சொன்னியே அதச் சொல்லு' என்றார் பெரியாம்பிள.

'எதுக்குப்பா. அது வேணா' என்றார் சாம்ராஜ்.

'சொல்லப்பா...இதுல என்ன இருக்கு. என்னதான் இவளுக சொல்றாளுகன்னு நாங்களும் தெரிஞ்சுக்கிறோம். சும்மா சொல்லு' என்றனர்.

பேச்சு நின்று மவுனம் பரவியது. என்னத்துக்கு இம்புட்டு கிராக்கி பண்ணுறான் என்று பெரியாம்பிளைகள் நினைத்துக் கொண்டிருந்த பொழுது தொண்டையை மெல்ல ஒரு செருமல் செருமி விட்டு 'அது யாரய்யா செங்கன்?' என்று கேட்டார்.

அவ்வளவுதான். அந்த இடமே தீப்பிடித்தது போல் ஆனது. ஒருவரை ஒருவர் திகைப்போடு பார்த்துத் துடித்து எழுந்தனர். 'அந்த வெண்ணயாண்டியை பத்தி உனக்கு எப்படி தெரியும்?' என்று வந்தது முதல் குரல்.

'ஆங்கன் சொன்னானா?' என்றது அடுத்த குரல். அவ்வளவுதான் எல்லோரும் நாலுகால் பாய்ச்சலில் ஆங்கன் மீது பாய்ந்தனர். அவனை

உண்டு இல்லை என ஆக்கினார். ‘நாசொல்லல. நாசொல்லல...’ என்று எத்தனையோ முறை ஆங்கன் சொல்லிப் பார்த்தான். அதையெல்லாம் காது கொடுத்துக் கேட்கிற நிலையில் யாருமில்லை.

‘நீ சொல்லாம யாருடா சொல்லியிருப்பா?’ என்பது பொது நியாயமாக இருந்தது. நியாயம் ஒத்த வயதுக்காரர்களை விட்டு அடி கொடுக்க ஆரம்பித்தது. ஆலமரத்தடி எங்கும் கிடந்த இளவட்டங்கள் ‘ஊர அசிங்கப்படுத்துறயா நீ?’ என்று ஆளாளுக்கு கை நீட்ட ஆரம்பித்தனர்.

‘யப்பா...நா சொல்லலப்பா. பொன்னாங்கனுக்கு தெரியும்னு கூட எனக்கு தெரியாதுப்பா’ என்று என்னென்னமோ சொல்லிப்பார்த்தான். ஆனால் எதுவும் எடுபடவில்லை. ஒரு கட்டத்தில், ‘ஆமான்டா நான்தான்டா சொன்னேன். இப்ப என்னடா செய்யணுன்றீங்க’ என்று நிமிர்ந்துகொண்டான்.

இதுவரை நடப்பதையெல்லாம் ரசித்துக்கொண்டிருந்த டேவிட் சாம்ராஜ் அப்பொழுதுதான் தலையிட்டார் ‘யப்பா, இத ஆங்கன் எனக்கு சொல்லல’ என்றார்.

‘இந்த வெண்ணய இப்பச் சொல்லு. இவ்வளவு நேரம் என்ன பண்ணுன?’ என்று கோபப்பட்டான் ஆங்கன்.

‘ஆங்கன் சொல்லாம உனக்கு எப்படித் தெரியும்?’ என்று வேகமாகக் குறுக்கிட்டான் கழுவன்.

‘யப்பா...மேற்க ஒரு கிராமத்துல நம்ம ஊரு பொம்பள ஆளுக கிட்ட உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தேன். ரொம்ப நேரம் ஊர் சமாச்சார மெல்லாம் பேசி முடிச்சு எந்திரிச்சப்ப, ஒரு பொம்பள பக்கத்துல இருந்த இன்னொரு பொம்பளகிட்ட சொன்னா... ‘எனக்கு காது வளத்தவே சாதாரண ஆள் இல்லடீ. தாதனூர்லேயே வந்து களவாண்டுட்டு போனவெ. அவ்வளவு பெரிய கெட்டிக்காரங்கிட்ட காது வளத்துட்டு வந்தவ நானு’ அப்படீன்னா...’

‘கெடுத்தாடா குடிய!’ என்றது மரத்தடியில் இருந்த ஒரு குரல்.

‘அது யாரும்மா தாதனூர்ல வந்து களவாண்டுட்டு போனது?’ன்னு நா கேட்டேன். ‘அதப்போயி ஊருல விசாரிச்சுக்கோ’ என்று சொல்லிட்டுப் போயிட்டா. அதுக்குப்பெறகு நாலஞ்சு பேர்கிட்ட கேட்டேன். ஒருத்தரம் சொல்லல. ஒரு ஆத்தா மட்டும்தான் சொன்னா. ‘அந்த கெட்டியக்காரன பத்தி நான் சொல்றேனப்பா ராசா...உட்காரு’ன்னு...

‘அந்தக் கெழட்டுச் சிறுக்கி வேலம்மாதா சொல்லியிருப்பா!’

‘கழுவாயிதாம்பா சொல்லியிருப்பா, அவதா நம்மள கொல்லுறதுக்குன்னே பெறந்தவளாச்சே.’

‘ஊருல எவளக் கேட்டாலும் சொல்லியிருப்பாளுக...அதுதா பொன்னாங்கெ கேட்ட எதையும் சொல்ல எடுவட்ட சிறிக்கிக தயாராத்தான் இருக்காளுக.’

ஆளாளுக்கு விழுந்தடித்துக் கொண்டு பேசினார்கள். டேவிட் சாம்ராஜ் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லச்சொல்ல இவர்கள் எப்படி பாய்ந்து விழுகிறார்கள் என்பதை ரசித்துக்கொண்டே பேசினார்.

‘சரி. என்னதா சொன்னாளுகன்னு சொல்லு’ என்று மொக்கச்சாமி

கேட்டான்.

‘அதுதா செங்கன சடைய பெரியாம்பிள கூட்டி வந்தது. அவெ மலப்புடவுல தங்கிகிட்டு, ஊர் மந்தையில வந்து உட்கார்ந்து பதினாறு புள்ளைகளுக்கு காது வளத்து கொடுத்தது. போறப்ப எட்டு வெண்கல பூணுகளையும், அஞ்சு தண்டட்டியையும் அடிச்சிக்கிட்டு போனதுன்னு எல்லாத்தையும் சொன்னாங்க’ என்றார்.

கொஞ்ச நேரம் யாதும் எதுவும் பேசவில்லை. அமைதி நிலவியது.

‘ஊர்ப் பத்தி எல்லாத்தையும் தெரிஞ்சுகிட்டானே’ என்ற எண்ணம் பலரின் மனதிலும் ஓடியது.

‘இதத்தான் சொன்னாளுகளா...இல்ல இன்னும் சொன்னா ளுகளா?’ என்றார் ஒருபெருசு.

‘சொன்னாங்க...சொன்னாங்க’ என்று எளக்காரமாக இழுத்தார் டேவிட் சாம்ராஜ்.

திரும்பவும் குப்பென்று தீப்பிடித்தது போல் ஆனது. ‘வேற என்ன சொன்னாளுக?’ என்ற கேள்வி எங்கும் இருந்து வந்தது. தாவாரத்திலிருந்து ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்த ஒவ்வொருவருடைய முகபாவனையையும் பார்த்துப் பார்த்து ரசித்தபடி பேசினார் டேவிட் சாம்ராஜ்.

‘அந்த கெட்டிக்காரெ உட்கார்ந்து காது வளத்துக் கொடுத்த மந்தையில, இனி நீங்க உக்காந்து களவுபத்தி வீறாப்பா பேசினீங்க காத அறுத்துப்புடுவோம் அறுத்துன்னு சொல்லிட்டோம். அதுக்கு பெறகு. ஊர் மந்தையில் உட்கார்ந்து களவுக்குப் போனது வந்தது பத்தி வாய்தெறக்க மாட்டாங்கெ. எல்லாம் ஆலமரத்தோட சரி. இங்க வந்தா ஊர் சமாச்சாரத்த மட்டும்தான் பேசுவாங்கெ...’ டேவிட் சாம்ராஜ் வார்த்தையை முடிப்பதற்குள் எதிர்வார்த்தைகள் தெறித்து விழுந்தன.

‘னோத்தாலோக்க...னொம்மாலோக்க. இவளுகள வெட்டாம விடக்கூடாதுடா. நம்பள எல்லாம் என்னான்னு நெனைச்சுக்கிட்டுப் பேசுறாளுக’ என ஆளாளுக்குக் குதித்தனர்.

‘பூராத்தையும் துரும்பு கொடுத்து தீத்து அனுப்பிச்சு பொடணுமப்பா...’ கோபத்தில் வார்த்தைகள் உருண்டு விழுந்தன.

‘புருஷ இருக்குறவள தீத்து அனுப்பலாம் புருஷன சாகக் கொடுத்தவள எப்படி தீப்ப?’ ஆத்திரம் குறைந்து புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது.

‘ஊருல முக்காவாசி கெழவிக அவளுதான்றா. அவளுக நெனைச்சா நம்பள பூரா மூச்சு புடிச்சுக் கொன்றுவாளுக’ பெருசுகளின் குரலிலே பயம் தெரிந்தது.

‘இப்பவே போனா போகுதுன்னு விட்டு வெச்சுருக்காளுக. இப்படிப் பேசுனம்னு கேட்டாளுக அவ்வளவுதா...’

‘சரி...சரி...போய் தொலையுறாளுக விடு. வேற ஆளுகிட்டயா சொன்னாளுக. நம்ம புள்ள கிட்டதான் சொல்லயிருக்காளுக.’

பேச்சு கூடி, பெருங்குரலெடுத்து, பின்னர் அதுவே இறங்கி சமாதானமாக

சுத்தி வந்து மீண்டும் தன்னருகே நிற்பதை ஒவ்வொரு முறையும் பார்த்து அனுபவித்தார் டேவிட் சாம்ராஜ்.

ஆத்திரத்தின் உச்சியில் இருந்த பேச்சு ஒவ்வொரு படியாய் இறங்கிவந்தது. வேண்டிய மட்டும் திட்டிய பின்பு கிழவிகளோடு பிரச்சனை வேண்டாம் என்ற முடிவுக்குப் போனது. பின்னர் வேறு என்ன செய்ய? என்று யோசித்து செங்கனை நோக்கிப்போனது. செங்கனை நோக்கிப் பாதை தாங்கள் தோற்ற பாதை என்பதை விட களவின் அசாத்திய பாதை என்ற வியப்புடன்தான் போனது. களவின் வெளியில் வித்தைக்காரன் தான் அதிசயிக்கப்படுகிறான். அதுவும் சாதாரண ஆளைவிட வித்தை தெரிந்தவன்தான் வெற்றிபெற்றவனை பல மடங்கு ரசிக்கிறான். இப்பொழுதுதான் டேவிட் சாம்ராஜ் உண்மையில் மிரண்டார். இவ்வளவு நேரம் ஆத்திரமும் கோபமுமாகப் பேசிக்கொண்டிருந்த மனிதர்கள் வேறு ஒன்றாக மாறிப் பேச ஆரம்பித்தனர். வந்த பாதையை விட்டு சட்டெனத் திரும்பி எதிர்த் திசையில் அவர்கள் நடக்க ஆரம்பித்தபொழுது, அந்த நடையில் இருந்த வேகமும் துள்ளலும் சாம்ராஜுக்குப் புரியவில்லை. அவ்வளவு சீக்கிரம் இவர்களின் மன ஓட்டத்தை அறியமுடியாது என்பதை ஒப்புக்கொண்டு கீழிறங்கி வந்து தன்னடக்கத்தோடு ஒவ்வொன்றையும் கவனிக்க ஆரம்பித்தார்.

செங்கனைப் பற்றி, அவன் இருந்த நாட்களில் ஊருக்குள் ஊளையிட்டு திரிந்த நரியைப்பற்றி, பூப்போல அவன் இறக்கிக்கொடுத்த காதுகளைப்பற்றி, அவன்மீது சொக்கிப்போய்த் திரிந்த பொம்பளைகளைப் பற்றி, அன்றிலிருந்து செங்கன் பொடவாகவே மாறிப்போன மலைப்பொடவைப் பற்றி கதைகதையாய்ச் சொன்னார்கள். அவன் கலந்து கொடுத்த கஞ்சா மயக்கம் தீராமல்தான் அந்தக் கதைகள் முழுவதும் இருந்தன. திகைப்பில் திக்குமுக்காடிப்போன டேவிட் சாம்ராஜின் முகபாவனையை யாரும் உற்றுப் பார்க்கவில்லை. அவர்கள் கதைகளின் வழியே செங்கனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தனர். அதன்பின் இளவட்டங்களில் சிலர் இடதுமார்பில் படமெடுத்து நிற்கும் பாம்பை பச்சை குத்திக்கொண்டதென்பது சொல்லாமல் சொன்ன செய்தியாக இருந்தது. அந்த இடமே டேவிட் சாம்ராஜுக்கு வேறொன்றாகத் தெரிந்தது. ‘செங்கன்வந்து களவாண்டுட்டு போகலப்பா... களவுதான் செங்கன் வேஷத்தல வந்துட்டுப் போச்சு’ என்று கெடாயன் பெரியாம்பிள சொன்னார்.

‘நாங்க ஊர் ஊராக களவ மேயவிட்டு கூட்டித் திரிஞ்சோம். ஆனா கண்ணுக்குட்டியவே பாக்காத எங்க ஊரு கொட்டத்துல வந்து அவெ ஒரு கன்னுக்குட்டியை கட்டிவெச்சுட்டு போனானப்பா’ என்று பேச்சு போய்க்கொண்டிருந்தபொழுது உண்மையில் டேவிட் சாம்ராஜால் அதனை கவனித்து பின்தொடர முடியவில்லை.

‘செங்கன உடுப்பா...அதவிடப் பெரிய களவு ஒண்ணு அந்தக் காலத்துல ஊருக்குள்ள நடந்ததா கெழவிக சொல்லுவாளுக!’ என்று வயதில் மிக மூத்த மொண்டிப் பெரியாம்பிள சொன்னார்.

‘ஆமாமா...’ என்று ஒருசில பெருசுகள் தலையாட்டின.

டேவிட் சாம்ராஜ் போல, இளவட்டங்கள் சிலருக்கும் புதிதாக இருந்தது இந்தக் கதை.

தாவாரத்தில் படுத்துக் கிடந்த பெரியாம்பள சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்தார். சாம்ராஜ் பெரும் பொக்கிஷம் ஒன்றைப் பார்ப்பதைப் போல அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். ‘திருமல நாக்கரே வந்து நம்மூரு பொம்பளகிட்ட அருவாள களவாண்டுட்டு போனாராம்பா’ என்றார்.

*

# 93

**சேர்மன் தில்லைவனம் பிள்ளை கலெக்டர் சொன்ன பணிகளை** யெல்லாம் செய்து முடித்தார். ஆனால் அதன் பலன் என்ன என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தே இருந்தது. தாதனூர்க் காரர்களின் காவல் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சிவானந்தையர் காலத்திலிருந்து தலையீடு செய்த அனுபவம் நகரசபைக்கு உண்டு. அப்பொழுதெல்லாம் என்ன நடந்தது என்பதை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. பெரும் சிம்மசொப்பனமாக இருந்த சிவானந்தையராலேயே ஒன்றும் செய்துவிடமுடியவில்லை. அவ்வளவு பெரிய வழக்கறிஞர் தன்னுடைய வழக்கையே நடத்தமுடியாமல் வாபஸ் வாங்க வேண்டிய நிலைமை உருவானது. சிவானந்தையருக்குப் பின் பொறுப்பேற்ற சேர்மன் சுப்பாராவ் காவல்காரர்கள் விஷயத்தில் எந்தத் தலையீடும் செய்யாமல் தனது பதவிக்காலம் முழுவதும் மிகக் கவனமாகச் செயல்பட்டார். சுப்பாராவுக்குப்பின் பொறுப்பேற்ற தில்லைவனம் பிள்ளை சிவானந்தையரைப்போல வேகமாகவும் இல்லை, சுப்பாராவைப் போல கண்டுகொள்ளாமலும் இல்லை. கலெக்டர் கூப்பிட்டு செய்யச் சொன்ன வேலைகளைச் செய்தார். இயல்பில் குடிக்காவல் முறை ஒழிக்கப்படவேண்டுமென்ற திடமான எண்ணம் அவருக்கு இருந்தது. ஆனால் அதை வெளிகாட்டாமல் இருந்தார். இப்பொழுதும் அரசின் உத்தரவுப்படிதான் அவரது செயல்பாடு வேகமடைவதாக வெளித்தோற்றம் இருந்தது.

மீண்டும் ஒருமுறை தமுக்கடித்து அரசு எடுக்கப்போகும் உறுதியான நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது. தமுக்கடிப்பவன் குடிக்காவலை ஒழிக்க அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகளைத் தெருத்தெருவாக அறிவித்தபடி வந்தான். பனி பெய்து முடித்த ஒரு காலையில் தமுக்கடிப்பவனின் சொற்களில் நகரம் மிதந்துகொண்டிருந்தது.

ஒரு வார காலத்திற்குள் ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் செக்கடி,

மைனா தெப்பக்குளத்து ஆலமரமென எல்லா இடங் களிலும் ‘இனி இரவுக் காவலுக்கு நீங்கள் நகருக்குள் வரக்கூடாது. சட்ட விரோதமான குடிக்காவலில் ஈடுபட்டால் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்‘ என்று அதிகாரிகள் சொன்ன தகவல்கள் தாதனூர்க்காரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன.

கடந்த பல ஆண்டுகளாகச் சொல்லப்படுகிற ஒரு விஷயம் மீண்டும் இன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தாண்டி அதில் என்ன இருக்கிறது என்ற நினைப்போடுதான் அவர்கள் தங்கள் பணிகளை வழக்கம் போல் செய்துகொண்டிருந்தனர்.

ஆனாலும் ராமாயணச் சாவடியின் கலகலப்பு குறைந்தது. சீயான் மார்களின் முகத்தில் கவலையின் ரேகைகள் ஓட ஆரம்பித்தன. தமுக்கடித்தவனின் குரலில் இருந்த செய்தி மிகத்தீர்க்கமானதாக இருந்தது. சேர்மன் தில்லைவனம் பிள்ளை தங்களைக் கண்டு பேசியதும், நிர்வாகத்தின் சார்பில் சாவடியின் தூண்களில் ஒட்டப்பட்டுள்ள நோட்டீசும் இதுவரை இல்லாத ஒன்றாக இருந்தது. நிலைமை மோசமடையப்போவதற்கான அறிகுறிகளை உணர்ந்தனர்.

ஆள் அரவமற்ற செல்லத்தம்மன் செக்கடியிலும், மைனா தெப்பக் குளத்து ஆலமர அடியிலும் கவலை அடைய யாருமில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருள் வெளியில் பார்ப்பவர்களின் முகங்கள் ஏதோ ஒரு செய்தியைச் சொன்னவாறு இருந்தன.

தாதனூர்க்காரர்கள் எப்பொழுதும் போல் காவல் வீதிகளுக்குப் போய்வந்தபடி இருந்தனர். நோட்டீஸ் ஒட்டப்பட்ட தூண்களுக்குக் கீழ் நிம்மதியாக உட்கார்ந்து கதை பேசி எழுந்து சென்றனர். பல ஆண்டுகளாக அரசு எடுத்துவரும் முயற்சியும் கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவரும் தீவிர ஏற்பாடுகளும் மதுரையில் பலருக்கும் விஷயத்தை உணர்த்தியபடி இருந்தது. ஆனால் தாதனூர்க்காரர்களுக்குள் எதுவும் சென்றுசேரவில்லை. அவர்களின் காவக்கம்புகள் பனி பெய்யும் மதுரையின் இரவுகளுக்குள் மீனைப்போல் நீந்தி வெளியேறியபடி இருந்தன.

*

**தெ**ற்குமாசி வீதியில் பிளாக்பர்னின் விளக்குத்தூணுக்கு சற்று தூரத்தில் இருந்து சேர்மன் தில்லைவனம் பிள்ளையின் வீடு. கலாசாலை கமிட்டியின் முன்னாள் காரியதரிசியாக இருந்த தெப்பம்பட்டி மிராசு முத்துச்சாமி பிள்ளையின் மகன்தான் தில்லைவனம் பிள்ளை. செல்வச் செழிப்பு மிக்க குடும்பம். அறிவும் செல்வத்திற்கே உரிய அகம்பாவமும் நிறைந்த மனிதர். இறந்துபோன சிவானந்தையர் மீது பெரும் மதிப்பு தில்லைவனம் பிள்ளைக்கு இருந்தது. ஐரோப்பியர்களே வகித்து வந்த ஒரு பதவியில் அவர்களை விட சிறப்பாகச் செயல்பட முடியும் என்று காட்டிய முதல் மனிதர் அவரே. அதன் காரணமாகவே சிவானந்தய்யரைத் தனது குருவாக மனதில் நினைத்துச் செயல்படுபவர் தில்லைவனம் பிள்ளை. தீவிர சைவப்பற்றும் அதற்கு ஒரு காரணம்.

தனது குரு விரும்பியதைத் தான் செய்துகாட்ட வேண்டும் என்ற எண்ணம் தில்லைவனம் பிள்ளைக்கு நிறைய இருந்தது. அதுதான் நகரின்

குடிநீர்த்திட்டத்தை நிறைவேற்ற அவரைப் பெருமுயற்சி எடுக்க வைத்தது. இப்போது குடிக்காவல் ஒழிப்பு நடவடிக்கையிலும் தீவிரமான ஈடுபாட்டினைக் காட்ட வைக்கிறது.

அன்று மாலை அவர் வீட்டின் மொட்டைமாடியில் முனிசிபாலிட்டி மெம்பர்களான சீத்தாராமய்யங்கார், குருசாமி செட்டியார், கிருஷ்ண பிள்ளை, நடேச அய்யர் ஆகியோரும் போஸ்ட் மாஸ்டர் சேது முதலியாரும் கூடியிருந்தனர். வழக்கமாக இந்த ஆறுபேர் கூட்டணிதான் நகரின் முக்கிய விஷயங்களை எல்லாம் தீர்மானிக்கிறது என்பது விவரம் தெரிந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

இன்று காலை சிறைச்சாலைக்குப் போய் அம்மையப்பக் கோனாரைப் பார்த்துவந்தது சம்பந்தமாகப் பேசத்தான் அவர்கள் கூடினர். சிறைச்சாலைக்குப் போய்வந்தது தில்லைவனம் பிள்ளைக்கு புதிய நம்பிக்கையை கொடுத்திருந்தது. சிறையிலிருந்த அம்மையப்பக்கோனாரின் உருவத்தைப் பார்த்ததில் இருந்து அவருக்கு ஆச்சர்யம் அகலவில்லை. இவ்வளவு பெரிய செயலைச் செய்த மனிதர் இவர்தானா என்பதை நம்பவே முடியாமல்தான் இருந்தது. அவரது பேச்சும் அதில் இருந்த துணிவும் சேர்மனை வெகுவாக கவர்ந்தது. தன்னுடன் சகாக்கள் எல்லோரும் வந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்; ஆனால் நடேசய்யர் மட்டும்தான் வந்திருந்தார். இது சம்பந்தமாக பேசத்தான் மற்றவர்களையும் வரச்சொல்லியிருந்தார்.

வீட்டின் மொட்டைமாடியில் அரைவட்டத்தில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நடுவில் ஆங்கிலேயரின் பாணியில் ஒரு மரடீப்பாய் வைக்கப்பட்டிருந்தது. அதன்மீது மதுரையிலிருந்து வெளிவரும் பாண்டியன் கிரானிகல், திண்டுக்கல்லில் இருந்து வரும் தென்னிந்திய மித்திரன் மாத இதழ்கள் கிடந்தன. அதில் ஒரு செம்பில் தண்ணீரும் நான்கு வெள்ளி டம்ளரும் கொண்டுவந்து வைத்துவிட்டுப்போனான் வேலைக்காரன். வெண்கலச் செம்பிற்குள் நீர் வளைய வளையமாக அதிர்ந்துகொண்டிருந்தது. வெள்ளி டம்ளரின் வெளிப்புறம் ஒரு கொடிபடர்ந்து அதன் முனையில் பூ மலர்வதுபோல் சித்திரம் பொறிக்கப்பட்டிருந்தது. வெள்ளிக்கொடி பார்க்கவே அழகாக இருந்தது. கையில் எடுத்து உருட்டிப்பார்த்தபடி இருந்தார் சேது முதலி.

மீனாட்சி சொக்கநாதர் கோவிலின் தெற்கு கோபுரத்தின் உச்சியில் இடதுபுறத்தில் இருந்த பூதம் மொட்டைமாடியில் உட்கார்ந்திருந்த ஆறுபேரையும் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தது. மைனா தெப்பக்குளத்து ஆலமரத்தின் கிளைகள் சரசரக்கும் ஓசையைச் சுமந்தபடி மாலைநேரத்து காற்று வந்து வீசியது. வீசிய காற்றை அனுபவித்தபடி பெரியவர் சீத்தாராமய்யங்கார் ‘மெட்ராசில் இருப்பதைப் போல ஓய்வு நேரங்களில் ஜனங்கள் சந்தோஷமாக உலாவுவதற்குரிய சிங்காரத்தோட்டங்கள் ஒன்று கூட இல்லை’ என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ‘ஏன் முனிசிபாலிட்டி சார்பாக நாம் அதை அமைக்க முயற்சிக்கக் கூடாது’ என்று பேச்சைத் துவக்கினார் கிருஷ்ணபிள்ளை. எல்லோருக்கும் பிடித்த நல்லயோசனையாக அது இருந்தது. எனவே அது குறித்து நீண்ட நேரம் பேசினர். தோட்டம் அமைக்க இடம் கண்டுபிடிப்பதே கஷ்டமான காரியம் என்று பேச ஆரம்பித்தபின்னர்தான் தெரிந்தது. கடைசியில் மேங்காட்டுப் பொட்டலில் சிங்காரத்தோட்டம் அமைக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

மரங்கள் அடர்ந்து பெரும் தோப்பெனக் கிடக்கும் அந்த இடத்தைத் தவிர இவ்வளவு விஸ்தாரமான இடம் நான்கு வெளிவீதிக்குள்ளும் எங்கேயும் இல்லை. வெளி வீதிக்கு வெளியே சிங்காரத்தோட்டம் அமைப்பது செல்வந்தர்கள் போய் வர சிரமம் தரும். எனவே மேங்காட்டு பொட்டலின் மரங்களை அகற்றுவதுதான் ஒரே வழி என்றானது.

இந்தப் புதிய திட்டத்திற்கான செலவு தொகையை இந்த ஆண்டு பட்ஜெட்டில் இனி சேர்க்கமுடியாது. அடுத்த ஆண்டுதான் இதைச் செய்யமுடியும் என்றார் சேர்மன். ‘இந்த ஆண்டு அமைக்க வேண்டும். அதற்கு வழி என்ன கண்டுபிடியுங்கள்’ என்றார் போஸ்ட் மாஸ்டர் சேது முதலி.

ஆளுக்கொரு யோசனையைத் தெரிவித்தனர். ஆனால் எதுவும் பொருத்தமானதாக இல்லை. கடைசியில் நடேச அய்யர் சொன்ன யோசனைதான் சிறப்பானதாக இருந்தது. வரும் சித்திரைத் திருவிழாவிற்கு பந்தல், கொட்டகை முதலியன போடுபவர்கள் ஒரு சதுர கெஜத்திற்கு தினம் காலணா அனுமதித் தீர்வை அல்லது லைசென்ஸ் தீர்வை கட்டவேண்டும் என்பதுதான் அது. இதனை அறிவிக்கும்பொழுது மக்களிடம் சிறு முணுமுணுப்பு இருக்கும். ஆனால் தெய்வ உற்சவங்களின் பொழுது இதைச் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆகையால் செய்துதான் ஆவார்கள். நகரசபைக்கும் ஒரே மாதத்தில் வசூலாகிற பெரும்தொகையாக இது இருக்கும். எனவே இந்த முடிவே சரியானது என்ற முடிவுக்கு போனார்கள்.

சிங்காரத்தோட்டத்திற்கு இடமும் செலவுக்கான யோசனையும் பிறந்த பிறகு பேச்சு அடுத்த கட்டத்திற்குத் தாவிப்போனது. ‘எவ்வளவு முக்கியமான புண்ணியஸ்தலம் நம்ம மீனாட்சி பட்டணம். லோகத்துல இருக்கிற எல்லோரும் புண்ணிய யாத்திரை செஞ்சு நம்ம மதுரைக்கு வந்துண்டே இருக்கா. அவா தங்க சத்திரமும் சாவடியும் தான் இருக்கு. ஏன் முனிசிபாலிட்டி சார்பாக யாத்திரீகர்கள் ஹவுஸ் கட்டக்கூடாது. வருமானத்துக்கும் வருமானமும் ஆச்சு. புண்ணியத்திற்கு புண்ணியமும் ஆச்சு’ என்றார் நடேச அய்யர்.

‘செய்யவேண்டிய காரியந்தான். ஆனால் அதிக பணம் செலவாகும். அதற்கு ஈடான வருமானம் கிடைக்கவில்லை என்றால் கவர்மெண்டார் ஒப்புதல் தரமாட்டார்கள்’ என்றார் தில்லைவனம் பிள்ளை.

‘சந்தேகம் வேண்டாம். நம்ம நாட்டில் ஸ்தல யாத்திரை செய்யிறவங்களும் தீர்த்த யாத்திரை செய்றவங்களும் தான் இரயில்வே பிரயாணிகள்ல பெரும் பங்கு. நம்மை விட கவர்மெண்டாருக்கு இது நன்றாகவே தெரியும். அதனால நிச்சயமா ஒப்புதல் தருவாங்க’ என்றார் சேது முதலி.

‘அப்படீன்னா அடுத்த வருஷம் முனிசிபல் பட்ஜெட்ல யாத்திரீகர்கள் ஹவுஸ்க்கான பிளான சேர்த்துடலாமே’ என்றார் சீத்தாராமய்யங்கார். ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் அதனை அமைக்கலாம், அதுதான் யாத்திரீகர்களுக்கு வசதியாக இருக்கும் என்று இடம் குறித்து ஆலோசனை சொன்னார் சேது முதலி.

‘பல்லக்கும் மாட்டு வண்டியும் போய் தீர்த்த யாத்திரை செய்யுறவாகூட

ரயில் பிரயாணம்னு ஆயிட்டா’ என்று சலித்துக்கொண்டார் நடேசய்யர்.

‘என்ன செய்ய, பல்லக்கில் இங்கேயிருந்து திருச்சிராப்பள்ளிக்கு போக ஆகுற செலவுல ரயில்ல காசிக்கு போய்வர டிக்கெட் வாங்கிடலாம்’ என்றார் சேது முதலி.

பேச்சு ரயிலுக்கும் சாஸ்திரத்துக்கும் நடுவில் யாத்திரைக்குள் புகுந்து போனது. ஒவ்வொருவரும் தங்களது முன்னோர்கள் செய்தயாத்திரையைப் பற்றி பேச ஆரம்பித்தனர். 1008 திவ்ய தேசங்களுக்கு போய் வருவதற்கென்றே தனது தோப்பனார் வைத்திருந்த பல்லக்கை அவர் மறைந்தபின் பத்திரமாக வைத்து பூஜித்து வருவதாக சீத்தாராமய்யங்கார் சொன்னார். கடந்த பத்து இருபது வருடங்களாகவே பல்லக்குத் தூக்கிகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டனர். அகன்று கன்றிப்போன தோள்பட்டை களையும், நீண்ட பாதங்களையும் கொண்ட அந்த நெடிய மனிதர்கள் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை என்ற வருத்தம் பேச்சின் ஊடே மேலெழுந்து வந்தது.

‘யாத்திரை போற புண்ணியம் பிராயணம் போனா கிடைக்குமா? யாத்திரை போக மனசு ஒருமுகப்படணும். முடிவுல தீர்க்கம் வேணும். சஞ்சலத்துக்கோ சபலத்துக்கோ எடங் கிடையாது. யாத்திரை போறவாளுக்கு மட்டும் புண்ணியமில்ல. போறவாளுக்கு ஜலம் கொடுக்குறவாளுக்குக்கூட புண்ணியம் கிடைக்கும். அதனாலதான் மங்கம்மா ரஸ்தாபூரா கிணறு வெட்டி குடிக்க ஜலம் உண்டாக்குனா. மனுஷாளுக்கு மட்டும் மில்ல. ஆடு மாடுகளுக்கும் சேத்தே புண்ணியம் செஞ்சா’ என்றார் நடேச அய்யர்.

மங்கம்மாள் கட்டி வைத்த மண்டபங்களைப் பற்றி பேச ஆரம்பித்தனர். அவள் வெட்டிய குளங்கள், கிணறுகளிலிருந்து காலத்தின் ஊடே கசிந்த ஊற்று இன்றுவரை பெருகிக்கொண்டேதான் இருக்கிறது. மக்கள் பாண்டியநாட்டு பெருநிலப்பரப்பு முழுவதும் தாகத்தின் இடத்தில் மங்கம்மாளை நிரப்பி வைத்திருக்கின்றனர். கடைசியில் முனிசிபாலிட்டி சார்பில் கட்டப்போகும் யாத்திரீகர்கள் ஹவுசுக்கு ‘மங்கம்மாள் சத்திரம்’ என பெயர் வைக்கலாம் என்ற யோசனை பிறந்தது.

பழைய வாழ்க்கைக்கும் அதைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டுக் கொண்டிருக்கும் புதிய வாழ்க்கைக்கும் இடையில் திக்குமுக்காடும் மனிதர்களாக இவர்கள் இருந்தனர். இவர்களின் உரையாடல்கள் பெருமைமிகுந்த பழமை குறித்து சோகத்தையும், முன்னே இழுத்துச் செல்லும் நவீன வாழ்க்கையின் மீதேறி சவாரி செய்யவேண்டும் என்ற வெறியையும் கொண்டிருந்தது. அவர்கள் மதுரையைப் பற்றித்தான் பேசினார்கள். ஆனால் இம் மாநகரைப் பற்றிய எந்த வார்த்தைக்கும் பல நூறு ஆண்டு கால வேர் இருக்கிறது. வேரை வெளியே தெரியாமல் மறைத்துக்கொண்டு அதன் உடலுக்கு ‘சீமை வஸ்திரங்களை’ போர்த்தி அலங்கரித்துப் பார்க்க அவர்கள் ஆசைகொண்டு விவாதித்தனர்.

பல்லக்குத் தூக்கிகள் எங்கு மறைந்தார்களோ என நினைத்து கவலைப்பட அவர்களுக்கு ஒரு கணம் கூட நேரம் வாய்க்கவில்லை. அதற்குள் காலம் அவர்களை இழுத்துக்கொண்டுபோனது. அவர்கள் சோகப்படவும் பதற்றப்படவும் எத்தனையோ விஷயங்களை நவீன வாழ்க்கை கொண்டுவந்து கொட்டிக் கொண்டிருந்தது,

‘பழைய மாதிரி வெள்ளி நாணயத்தையும், செம்பு நாணயத்தையும் அழிச்சு நகையோ, பாத்திரங்களோ செய்யக்கூடாது. செஞ்சா நஷ்டந்தான்னு முக்கியமானவா கிட்ட எல்லா சொல்லுங்கோ’ என்றார் தண்ணீர் குடிக்க வெள்ளி டம்ளரை கையில் எடுத்த சீத்தாராமய்யங்கார். அரசாங்கம் ஒரு பவுன் பதினைந்து ரூபாய் பெறுமானம் என்று விளம்பரம் செய்ததிலிருந்து அளவைகள் மற்றும் பொருட்கள் கொடுக்கல் வாங்கலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. செம்பு, வெள்ளி, நிக்கல் போன்ற உலோகத்தால் சிறு நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அணாவைக் குறிப்பதற்கு நட்சத்திரம் போன்ற நூதன நாணயங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இதெல்லாம் செல்வந்தர்கள் சம்பந்தப்பட்ட விஷயமாகத்தான் இருக்கிறது. இதனால் ஏற்படும் லாப நஷ்டங்களை மற்றவர்கள் அறியும் முன்பே இவர்கள் அறிந்து அனுபவித்துக் கொள்கின்றனர்.

‘பவுனையே நாட்டுடைய அளவு நாணயமாக்குனது நல்ல விஷயம். இதுனால எல்லா இடங்களிலேயும் விலை சமப்படும்‘ என்றார் சீத்தாராமய்யங்கார்.

‘இதனால் சமப்பட இங்கு என்ன இருக்கு. ஏற்கனவே ரயில் வந்ததும் வந்துச்சு. எல்லா விலையும் ஒண்ணு போல ஆயிடுச்சே’ என்று ஆதங்கமா, துக்கமா என்பதை கண்டறியமுடியாத ஒரு தொனியில் சொன்னார் குருசாமி செட்டியார்.

‘அதுனால எல்லாருக்கும் நல்லதுதான?’ என்றார் கிருஷ்ண பிள்ளை.

செட்டியாரிடமிருந்து பதில் வரவில்லை. செட்டியாரின் மௌனத்திற்கான காரணம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஆனால் யாரும் எதிர்பாராமல் சேது முதலியாரிடமிருந்துதான் கோபமான பதில் வந்தது. ‘வாரத்துக்கு ஒரு தடவ வந்தது பத்தாதுன்னு இப்ப மெட்ராஸ் மெயிலு நாலு நாளைக்கு ஒரு தடவன்னு வர ஆரம்பிச்சுருச்சு. அது உங்களுக்கு வேணா நல்ல ஆதாயமா இருக்கலாம். ஆனா எனக்குத்தான் ரோதனையா போச்சு’ என்றார் போஸ்டர்மாஸ்டர் முதலி.

‘ஏனப்பா அப்படிச் சொல்ற?’ என்று கேட்டார் நடேசய்யர்.

‘ஆமா. வாரத்திற்கு ஒரு தடவை பண்ணிக்கிட்டிருந்த டெலி வெரிய இப்ப நாலு நாளைக்கு ஒரு தடவ பண்ணவேண்டியிருக்கு. ரெண்டு குமாஸ்தாவையும், ரெண்டு தபால்காரனையும், ஒரு மூடை தூக்கியையும் வெச்சுக்கிட்டு எவ்வளவு வேலைய நான் செய்ய? வாரத்திற்கு ஒருக்க ரயில் வர்றப்பவே சிவகங்கைகாரனும், ராம்நாட் காரனும் கடைசிநேரத்தில வந்துதான் பைய கொடுப்பாங்க. அதுக்குப்பெறகு அவசர அவசரமா அரக்கு முத்திரையைக் குத்தி அனுப்புவோம். அதுலயும் இந்த சிவகங் கையில் ஸ்கூல் டீச்சர்தான் போஸ்ட் மாஸ்டரா இருக்குறாரு. அவர் ஸ்கூல் வேலைய முடிச்சுட்டுத்தான் இந்த வேலையைச் செய்யணும். அவர் முதல் பண்டல கட்டுறதுக்குள்ள மெட்ராஸ் மெயில் வந்து முட்டிக்கிட்டு நிக்குது. என்ன செய்ய....?’ என்றார்.

‘ஏன், கூட ரெண்டு பேத்த அப்பாயின்ட் பண்ணச்சொல்லி மேலிடத்திறகு எழுதவேண்டியது தான?’ என்றார் நடேசய்யர்.

‘அதெல்லாம் பல தடவ எழுதியாச்சு’ என்றார் சேது முதலி.

‘அப்புறம் என்ன, வருமானம் பத்தலையா?’ என்று கேட்டார் சீத்தாராமயங்கார்.

‘வருமானம் எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஒரு ரூபாய் எடைவரைக்கும் அரை அணா ஸ்டாம்பும், பத்து ரூபாய் எடை வரைக்கும் ஒரு அணா ஸ்டாம்பும் ஒட்டுனா போதும்னு சொன்னபிறகு ஆளாளுக்கு எழுதித் தள்ளுறாங்க. எங்கனாலதான் தூக்கிச் சுமக்க முடியல. ராத்திரி தூங்கினாக்கூட சலாங்சலாங்குன்னு சலங்கை கட்டுன தடியோட மூட்டைக்காரன் வீட்டுக்குள்ள ஓடி வர்றமாதிரியே இருக்கு. சலங்க சத்தத்திற்கும் ரயில் சத்தத்திற்கும் பயந்த பொழப்பாகிப்போச்சு எம் பொழுப்பு’ என்றார்.

‘என்னப்பா இவ்வளவு சலிச்சுக்குற?’ என்று கேட்டார் நடேசய்யர்.

‘ஆமா, எடைக்கு தக்குனதா இல்லாம முன்ன மாதிரி தூரத்துக்கு தக்குனதாக ஸ்டாம்பை கொண்டு வந்தாத்தான் இவெங்க அனுப்புறத குறைப்பாங்கெ. அதுலயும் மெட்ராசிலிருந்து வர்ற பத்திரிக்கையையும் புஸ்தகத்தையும் ஒருநா கழிச்சு கொடுத்தா போதும். உங்க அக்ரஹாரத்துல அதுக்குனே பொறந்த ஆளிருக்கு. அடுத்த நாளே கம்ப்ளையின்ட் எழுதிப் போட்டுறான். தபால் அதிகாரி மேலே கம்பளையின்ட் செய்யுற லெட்டருக்கு ஸ்டாம்ப் ஒட்ட வேணாம்னு அரசாங்க உத்தரவு. உங்க அக்ரஹாரத்துக்கு லட்டு சாப்பிட்ட மாதிரி. அடுத்த நிமிஷமே எழுதிப்போட்டுறான். பேசாம போஸ்ட் பாக்ஸ் கிழவி செஞ்ச மாதிரி நானும் செஞ்சிட்டு போகப்போறேன்’ என்றார் கோபமாக.

அவர் கோபமாகச் சொன்னாலும் போஸ்ட் பாக்ஸ் கிழவியை சொல்லிச் சொன்னதால் எல்லோருக்கும் சிரிப்புத்தான் வந்தது.

பிளாக்பர்னின் விளக்குத்தூணிற்குப் பக்கத்தில் கச்சேரியை ஒட்டி முதன்முதலாக போஸ்ட் பாக்ஸ் கொண்டுவந்து வைத்தபோது சிங்காரஜ முதலியார் தெருவிற்குள்ளிருந்த குருவம்மா கிழவி வந்து பார்த்தா. விளக்குத்தூணுமாதிரியே வட்டமா ஆள் உசரத்துக்கு தூணை கொண்டு வந்து வெச்சுருக்காங்களே எதுக்கு என யோசித்தவள் ‘தெருவுக்குள்ள வெளிச்சம் வர்றதுக்காக தெரு முனையில் குட்டி வெளக்க கொண்டுவந்து நட்டு வச்சிருக்கான் மகராசன்’ என நினைத்துக்கொண்டு போய்விட்டாள். ரெண்டு, மூணு நாளாக பார்த்துக்கொண்டேயிருந்தவள் ‘வெச்சு இத்தன நாளாச்சு இன்னும் ஏ பொருத்தாம வச்சுருக்காங்கே?’ என நினைத்தவள் ஒருநாள் இரவு வீட்டிலிருந்து கிழயாஞ்சட்டியில் விளக்கைப் பொருத்திக் கொண்டுவந்து போஸ்ட் பாக்சிற்குள் கையை விட்டாள். ‘கை போற அளவுக்கு கச்சிதமா ஓட்டை செஞ்சிருக்கான பாரு’ என நினைத்துக்கொண்டே திரியைத் தேடினாள். உள்ளே எதுவும் அகப்படவில்லை. சரி கீழே இருக்கும் போல என நினைத்து கிழியாஞ்சட்டியை உள்ளே போட்டாள். வெளிச்சம் எதுவும் வரவில்லை. நீண்ட நேரம் கழித்து புகை மட்டுமே வந்தது. ‘திரி பிடிக்காம போச்சே’ என நினைத்தவள் வீட்டிலிருந்து இரண்டு மூன்று முறை கிழியாஞ்சட்டியைப் பொருத்தி எடுத்து வந்தாள். திரி கடைசிவரை பிடிக்கவேயில்லை.

மறுநாள் உச்சிப்பொழுதில் தபால்காரன் வந்து பெட்டியின் கீழ்க்கதவைத் திறப்பதை பார்த்துக்கொண்டிருந்தவள் தெருவுக்குள்ளிருந்து வேக வேகமாக வந்து ‘ஏன்டா கம்பத்த நட்டா போதுமா? எண்ணை

ஊத்திட்டு போணும்னு அறிவு இல்ல' என்று சண்டைக்குப் போனாள்.

குத்தவைத்து உட்கார்ந்தபடி எரிந்துபோன தபால்களின் சாம்பலை அள்ளியவன் மிகக் கோபமாக 'அறிவுகெட்ட கெழவி! இது வெளக்கு கம்பமில்லை, தபால் பெட்டி' என்று கத்தினான். 'பெட்டியா...எந்த ஊருலடா பெட்டி வட்டமா ஆளொசரத்துக்கு செஞ்சாங்க. அறிவுகெட்டவனே. என்னை என்ன கேனச்சின்னு நெனச்சியா... பட்டப் பகல்ல கம்புல சலங்கைய கட்டிக்கிட்டு தெருத் தெருவா ஓடுற கிறுக்குப் பயகிட்ட போயி நான் கேட்டே பாரு, ஏம் புத்திய என்னான்னு சொல்ல' என்று திட்டியவாறு தெருவுக்குள் போய்விட்டாள். யாரும் தபால் எழுதாமலே இந்தச் செய்தி நகரில் உள்ள எல்லார் வீட்டிற்கும் போய்ச் சேர்ந்தது. அன்றிலிருந்து அந்தத் தெரு போஸ்ட் பாக்ஸ் கிழவித் தெருவாகிவிட்டது. சிங்கராஜ முதலித் தெரு என்ற பெயரும் பெட்டியில் எரிந்த தபாலோடு சேர்ந்து எரிந்துபோனது.

சேது முதலியார் போஸ்ட் பாக்ஸ் கிழவி மாதிரி செய்யப்போறேன் என்று சொன்னதும் எல்லோருக்கும் வந்த சிரிப்பு அடங்க வெகுநேரமானது. கிழவி இறந்த பிறகும் அவளது பிள்ளைகள் ஆடி அமாவாசைக்கு அந்த போஸ்ட் பாக்ஸ்க்கு முன்னால் விளக்கு போட்டுவிட்டுப் போவது சிரிக்க முடியாத விஷயமாக அதனை மாற்றியது. கிழவியின் நினைவுத் தூணாக அந்த போஸ்ட் பாக்ஸ் மாறிப்போனது. நீண்டநேரம் பேச்சு நகரில் ஏற்பட்ட நவீன மாற்றங்களைத் தலைகீழாகப் புரிந்துகொண்ட நபர்களைப் பற்றியதாக இருந்தது. ஆனால் பேசியவர்கள் யாரும் தங்கள் வீட்டு முன்னோர்கள் செய்த எதைப்பற்றியும் பேசவில்லை.

மணி ஏழரைக்கு மேல் ஆகிவிட்டது. தெற்குகோபுரத்தின் உச்சி பூதம் இருளுக்குள் மூழ்கிப்போனது. அம்மையப்பக் கோனாரை சிறையில் போய் சந்தித்து வந்ததைப்பற்றி பேசுவதற்குத்தான் அவர்கள் கூடினர். ஆனால் பேச்சின் சுவாரஸ்யம் எங்கெங்கோ இழுத்துக்கொண்டு போய்விட்டது. சீதாராமய்யங்காரால் இனியும் வீட்டுக்குப் போகாமல் இருக்க முடியாது. அந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி பேசினால் நீண்ட நேரம் எடுக்கும். எனவே நாளை பேசிக்கொள்ளலாம் என்று சொல்லிப் புறப்பட்டார். அவர் புறப்பட்டதும் மற்றவர்களும் கலைந்தனர்.

*

**ஒ**ன்றரை ஆண்டுகளுக்கு முன்பு வேடசந்தூர் தாலுகாவில் உள்ள உசிலம்பட்டியில் கள்ளர் காவலுக்கு எதிரான கலகம் அம்மையப்பக் கோனாரால் துவக்கப்பட்டது. சிறு அளவில் துவங்கிய கலவரம் நாள் ஆக ஆக ஒவ்வொரு கிராமமாகப் பற்றிப் பரவியது. எல்லா ஊர்களிலும் கொம்பூதி கிராமக் கூட்டத்தைக் கூட்டினர். கள்ளர் காவலை நிராகரிப்பது. யாரும் அவர்களுக்குக் கூலி கொடுக்கக்கூடாது. அவர்களோடு கொடுக்கல் வாங்கல் இருந்தால் ஒரு வாரத்தில் முடித்துக்கொள்ளவேண்டும் என்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு ஊர் மந்தையில் வைக்கப்பட்டிருந்த கலப்பையில் எல்லோரும் சத்தியம் செய்தனர். நாட்கள் செல்லச் செல்ல அடுத்தடுத்த ஊர்களுக்குக் கலவரம் பரவியது. அங்கு கூடிய கூட்டத்தில் வண்ணான் அவர்களுக்கு துணி துவைக்கவோ, நாவிதன் சவரம் செய்யவோ போகக்கூடாது. ஊரின் நல்ல தண்ணீர் கிணற்றில் அவர்கள் வந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்று ஊர் விலக்கம் செய்யும் முடிவும்

சேர்ந்து எடுக்கப்பட்டது. காவக்கூலி கொடுக்கமாட்டோம் என்று சொன்னபொழுது இருந்த தன்மை ஊர் விலக்கம் செய்யப்பட்டபொழுது வேறு மாதிரியாக உருவெடுத்தது. கள்ளர்களின் எதிர்ப்பைப் பயன்படுத்தி மொத் தமாக அவர்களை விரட்டியடிக்கிற வேலைகள் ஆரம்பமாயின. அதற்குப்பிறகு நடந்த ஊர்க்கூட்டங்களில் அவர்கள் விரட்டவும், தங்களது கிராமத்தை தாங்களே காவல் காக்கவும், வழக்கு நடத்தவும், பொதுப் பண்டு தேவையெனச் சொல்லி எல்லோரிடமும் பண்டு பணம் வசூலிக்கப்பட்டது. பண்டு வசூலிக்கப்பட்ட இடமெல்லாம் கலவரமும், கலவரம் நடந்த இடமெல்லாம் பண்டும் வசூலிக்கப்பட்டதால் இந்தக் கலவரமே 'பண்டுக் கலவரம்' என்றானது. வேடசந்தூர் தாலுகாவில் துவங்கிய கலவரம் திண்டுக்கல் தாலுகா, பெரியகுளம், நிலக்கோட்டை, பழநி தாலுகாக்களின் வழியாகப் பரவிப்போனது. 'கோனார் வீட்டுப்பிள்ளைய காவக்காரென் கூட்டிட்டு போயிட்டானாம். அதனால கலகம் ஆகிப்போச்சு' என்றுதான் முதலில் மக்கள் பேசினர். ஆனால் நாள் ஆக ஆக கலவரம் விஸ்வரூபம் எடுத்தது. ஒவ்வொரு நாளும் மக்கள் கூட்டம் கூட்டமாக கிராமமந்தைக்கு வந்து கலப்பையில் சத்தியம் செய்து பண்டுத்தொகை கொடுத்தபடி இருந்தனர். அரசாங்கத்தின் கீழ் மட்ட அதிகாரிகள் அனைவரும் இதற்கு ஆதரவாக இருந்தனர். பரவிச் செல்லும் இந்தப் பெருங்கலவரத்தைப் பற்றிய எந்தக் குறிப்பையும் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவில்லை. செய்தியைக் கேள்விப்பட்ட எல்லா மேலதிகாரிகளும் அதிகாரப்பூர்வமாக கீழே இருந்து எந்த ரிப்போர்ட்டும் வராததால் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. சட்டப்படி தடை செய்யப்பட்ட கிராமக் காவலை ஒழித்து சட்டத்தை நிலைநிறுத்துவதற்கான பணியை மக்கள் செய்கின்றனர். அவர்கள் செய்து முடித்தவுடன் சட்டத்தை நீங்கள் கையில் எடுத்தது தவறு என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கலாம் என்ற முடிவோடு அதிகாரிகள் இருந்தனர்.

கலவரத்திற்கு அம்மையப்பக் கோனாரும், சவுடமுத்துக் கவுண்டரும் தலைமை தாங்கினர். ஊர்க்கூட்டம் நடக்கும் எல்லா கிராமங்களுக்கும் அவர்களின் தூதுவர்கள் போனபடி இருந்தனர். ஏறக்குறைய திண்டுக்கல் சமவெளிப்பகுதி முழுவதும் கள்ளர் காவல் ஒழிக்கப்பட்டது. பாளையப்பட்டுக்கள் உருவாக்கப்பட்ட போது ஏற்படுத்தப்பட்ட உறவு என்ற அடிப்படையில் கன்னிவாடி பாளையத்திற்கு உட்பட்ட பகுதி மட்டும் அதில் தாக்குப்பிடித்து நின்றது. மற்றபடி எல்லா இடங்களில் இருந்தும் கள்ளர்கள் விரட்டப்பட்டனர். அவர்களின் குடும்பங்கள் எல்லாம் உடைமைகளை இழந்து வைகையைக் கடந்து கள்ள நாட்டிற்குத் திரும்பியிருந்தன.

இவ்வளவும் நடந்த பின்னர்தான் அரசாங்கம் களத்திலே இறங்கியது. எல்லா கிராமத்திலும் கீழ்க்கண்டவாறு நோட்டீஸ் ஒட்டி விளம்பரம் செய்யப்பட்டது.

**நோட்டீசு**

சப்கலெக்டர் டிவிஷன் இலாகாவில் கள்ளர்களின் விரோதிகளால் சமீபத்திலுண்டான கொடுங் கலகங்களை முன்னிட்டு பின்வருமாறு எச்சரிப்பு செய்ய வேண்டுவது தகுதியென்று டிஸ்திரிகட்டு மேஜிஸ்திரேட்டாரவர்கள் எண்ணுகிறார்கள்.

2. சர்க்கார் மனிதனல்லாதவனெவனும் (கி.பி.கோர்ட் 59வது செக்ஷன்)

ஜாமீன் வாங்கக்கூடாததும் வாரண்டில்லாமல் பிடிக்கக் கூடியதுமான குற்றத்தை ஒருவன் செய்வதை தான் நேரில் கண்டாலொழிய அவனை பிடிக்கக்கூடாது. ஆகையால் பகிரங்கமாய் தெரிந்த குற்றவாளியை அல்லது அனுமானியை பிடிக்கும்பொருட்டு கொம்பூதி கிறாமத்தார்கள் கூடுவது சட்டவிரோதம். இனி இப்படிச் செய்தால் இந்தியன் பினல்கோட் படிகடுமையாய் அமுல் நடத்தப்படும். யாராவது குற்றங்கள் செய்யப்பட்டால் கிராமத்தார்கள் போலீஸ்தாருக்கு தெரியப் படுத்தவேண்டுமே தவிர தாங்களே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நடத்தவேண்டிய நடவடிக்கைகளை நடத்தக்கூடாது.

3. இந்த எச்சரிக்கையை அசட்டை செய்தாலாவது சமீபத்தில் நடந்த பிரகாரம் சட்டவிரோதமான செய்கைகளை மறுபடியும் செய்தலாவது கலகமுண்டாகிற இடங்களை 1861ஷத்திய 5வது ஆக்ட்டு 15வது பிரிவின்படி விளம்பரத்தால் பிரிசித்தப்படுத்தி அவ்விடத்தில் தெண்டனையார்த்தமாக ஒரு போலிஸ் சேனையை ஜெனங்களுடைய செலவில் இருந்தும்படி டிஸ்திரிகட்டு மேஜிஸ்திரேட்டார் கவர்ண்மெண்டாரை கேட்கவேண்டியது அவசியமாக நேரிடும்.

ஜே.டுவிக்
டிஸ்திரிகட்டு மேஜிஸ்திரேட்டு

## விளம்பரம்

இந்த ஜில்லாவில் சில தாலுக்காவில் காவல் ஏற்பாட்டை நிறுத்துவதற்காக இப்போது ஒரு கலகம் நடந்துகொண்டிருப்பதாலும் இந்த ஏற்பாட்டில் சேர்ந்த சில கிராமங்களில் கள்ளர் காவல்கா ரர்களை காவல் வேலையிலிருந்து தள்ளுபடி செய்து அவர்களுக்கு காவல் பணம் கொடுக்க மறுதளிப்பதோடு திருப்தியடையாமல் கள்ளர்குடிகள் எல்லாரையும் ஒருமிக்க கிராமத்தார்களோடு புழங்க ஒட்டாமல் கட்டு செய்து சங்கடப்படுத்தி அவர்களுடைய கிராமங்களிலிருந்து துரத்த முயல்வதாலும், கள்ளர்களுக்கும் அவர்களுடைய எதிரிகளான சகலமான ஜனங்களுக்கும் தெரிவதற்காக அடியில் கண்ட விளம்பரம் பிரசுரம் செய்யலாயிற்று.

1. கிறாமத்தார்கள் கள்ளர் காவல்காரர்களை காவல் வேலையி லிருந்து நிறுத்தி அவர்களுக்குக் காவல் பணம் கொடாமலிருப்பதற்கு முற்றிலும் பாத்தியமுடையவர்கள்தான். ஆனால் அவர்களுக்கு கள்ளர்களை சங்கடப் படுத்தி துரத்தி வெளியே போகும்படி செய்ய பாத்தியமில்லை. கள்ளர்களுக்கு பயம் அல்லது பலாத்காரம் உண்டாக்கக்கூடிய எந்த செய்கை செய்தாலும் அச்செய்கையை உடனே கண்டிப்பாய் அடக்கப்படுமென்று இதனால் கிராமத்தார்களை எச்சரிக்கலாயிற்று.

2. அன்றியும் கள்ளர்களால் செய்யப்பட்ட அப்பேற்பட்ட குற்றங்களும் அவ்விதமாகவே நடத்தப்படும். இரு கட்சிகளும் சுத்தமாய் பாரபட்சமின்றி நடத்தப்படுவார்கள். சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் விறோதமாக செய்யப்பட்ட எல்லா குற்றங்களும் யாரால் செய்யப்பட்ட போதிலும் அக்குற்றங்களுக்கு சட்டத்திலுள்ள முழு தண்டனை விதிக்கப்படும்.

3. இந்த நடவடிக்கையை கவனித்து வருவதற்கும் இரு கட்சிக்காரர்களுக்கும் சமமாக நியாயம் கிடைக்கும் பொருட்டும் ஒரு

ஸ்பெசல் போலிசு உத்தியோகஸ்தர் அனுப்பப்பட்டிருக்கிறார்.

4. சங்கங்கள் கூடுவதை தடுக்கிறதில்லை. ஆனால் சங்கத்தில் சம்பந்தப்பட்டவர்களும் முக்கியமான சங்கத் தலைவர்களும் சங்கங்களில் தீர்மானிக்கப்படுகிற எல்லாவித சட்டவிரோதமான தீர்மானங்களுக்கும் சங்கங்களினால் விலையக்கூடிய எல்லாச் சட்டவிறோதமான செய்கைகளுக்கும் ஜவாப்தாரியாக்கப் படுவார்களென்று அவர்களை கண்டிப்பாய் எச்சரிக்கபடுகிறது. கிராம நத்தத்துக் குள்ளாகவாவது அல்லது அடுத்த போலிசு ஸ்டேஷனுக்கு அறிவிக்காமலாவது சங்கங்கள் கூடக்கூடாது. இந்த உத்திரவுகள் இரு கட்சிக்காரர்களால் கூடப்படும் சங்கங்களுக்கும் சமமாகப் பொருத்ததுதான்.

5. பொதுவான ரஸ்தாக்களிலும் பொதுவான வீதிகளிலும் பாதைகளிலும் படித்துறைகளிலும் இறங்குமிடங்களிலும் ஜனங்கள் சேருகிற மற்றெல்லா இடங்களிலும் ஒழுங்கைப் பாதுகாப்பதும், கூட்டங்கள் சேரும்போதும் ஊர்கோலங்கள் செல்லும்போதும் பொதுவான ரஸ்தாக்களிலும் பொதுவான வீதிகளிலுமாவது, பொது ஜனங்கள் தேவாராதனை செய்யும்போது தேவராதனை செய்யும் இடங்களுக்குச் சமீபத்திலாவது தடங்கள் நேரிடாதபடி தடுப்பதும், எப்படிப்பட்ட விஷயத்திலேனும் யாதொரு ரஸ்தா வீதி பாதை படித்துறை அல்லது இறங்குமிடத்தில் அதிக ஜனநெருக் கமாயிருக்கும் போதாவது இடஞ்சல் உண்டாக்கக்கூடியதாயிருக்கும் போதாவது தடங்கல் நேரிடாதபடி செய்து ஒழுங்காய் வைத்திருப்பதும் போலீசாருடைய கடமையாகும்.

6. எவனாவது அடுத்த முந்திய பிரிவுகளின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை எதிர்த்தாலும் அவைகளின்படி நடவாவிட்டாலும், வாத்தியம் வாசிப்பதைக் குறித்தாயினும் கூட்டங்கள் கூடுவதையும் ஊர்கோலங்கள் போவதையும் குறித்தாயினும் போலீஸ் டிஸ்ட்ரிக்ட்ஸுபரின்டெண்டென்ட் அல்லது உதவி டிஸ்ட்ரிக்ட் ஸுபரின்டெண்டென்ட் பிறப்பித்த யாதொரு லைஸென்சின் திட்டங்களை மீறி நடந்தாலும் அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன் மேல் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபாரத்திற்குள்ளாவான்.

ஜே. டுவிக்
டிஸ்திரிகட்டு மேஜிஸ்திரேட்டு

*

**க**வர்மெண்டார் நோட்டீஸ் ஒட்டி விளம்பரம் செய்த எந்த கிராமத்திலும் காவல்காரர்கள் யாரும் இல்லை. அவர்கள் எல்லாம் எப்பொழுதோ விரட்டப்பட்டுவிட்டனர். அதெல்லாம் நடந்தபிறகுதான் அரசாங்கத்தின் நடவடிக்கையும் நடந்தது.

நடந்துள்ள கலவரம் குறித்து திண்டுக்கல் சப் மாஜிஸ்திரேட் சடகோப அய்யங்காரை அறிக்கை தரும்படி டிஸ்டிரிக் மேஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அதன்படி சடகோப அய்யங்கார் தயாரித்த அறிக்கையின் விவரம் பின்வருமாறு:

‘திருச்சி பக்கமுள்ள குறவர்கள் கணவாயின் இடப்புறமுள்ள கிராமங்களில் ஆடு மாடுகளைத் திருடிக்கொண்டு கணவாயைத் தாண்டிப்

போய்விடுவது நீண்டகாலமாக இருந்து வரும் செயல். ஓராண்டுக்கு முன்கோம்பை கிராமத்தில் மாடுகள் களவுபோனவுடன் அங்கிருந்தவர்கள் கொம்பூதி, மக்களை திரட்டி கணவாயை போய் மறித்தனர். திருட வந்தவர்கள் கணவாயில் மறித்து நிற்கும் கூட்டத்தைக் கண்டு உயிர் பிழைத்தால் போதுமென ஆடுமாடுகளை விட்டு விட்டு ஓடிவிட்டனர். அப்பொழுது முதல் கொம்பூதி, ஊரைக் கூட்டும் பழக்கம் பரவலானது. அதன்பின் நாகையன் கோட்டை முஸ்லிம்களும் இந்த முறையைப் பின்பற்றினர். அதற்குப்பின் உசிலம்பட்டியில் அம்மையப்பக் கோனார் கொம்மை எடுத்து ஊத ஆரம்பித்ததும் களவுக்கு எதிரான கொம்புச்சத்தம் காவலுக்கு எதிரான சத்தமாக மாறியது. இதனால் வெடித்த கலகமானது அடிப்படையில் கள்ளர் காவலை விவசாயிகள் விரும்பதாததன் பொருட்டே நடந்தது. அவர்கள் காவல் கூலி பெறும் முறை மிரட்டலாகவும் கொள்ளையாகவும் மாறிவரும் நிலையின் வெளிப்பாடே இது. இந்தக் கலவரத்தால் ஏறக்குறைய இருநூறு கிராமங்களில் காவலை கள்ளர்கள் இழந்துள்ளனர். பனிரெண்டு கிராமங்களின் காவலை குறவர்களும் ஐந்து கிராமங்களில் காவலை வலையர்களும் இழந்துள்ளனர். காவல்காரர்களுடைய உடைமைக்கு பெருமளவு சேதமாகி உள்ளது. இரண்டு இடங்களில் நடந்த கொலைகள்தான் வழக்காக பதிவுசெய்யப்பட்டுள்ளன. மற்றபடி எவ்வளவு கொலைகள் கொள்ளைகள் நடந்தது என்பது பற்றிய தெளிவான விவரங்கள் இல்லை. இந்தக் கலவரத்திற்கு கிராமத்தார்கள் சார்பாக அம்மையப்ப கோனாரும் சவுட முத்துக் கவுண்டரும் தலைமை தாங்கினார்கள். கள்ளர்களிடையே தொரட்டி மாயாண்டியும் மாயத்தேவனும் தலைமை தாங்கினார்கள். இதில் மாயத்தேவன் கலவரத்தில் இறந்துபோனான். தொரட்டி மாயாண்டி கலவரத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக நிலக்கோடை சரக போலிசால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சித்தோட்டு கலவரத்தில் நாற்பத்து ஒன்றாவது குற்றவாளியாக அம்மையப்ப கோனாரின் மீதும் முத்தாங்குளம் கலவரத்தில் இருபத்து மூன்றாவது குற்றவாளியாக சவுடமுத்துக் கவுண்டரின் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.’

*

**மூ**ன்று மாத காலம் நடந்த வழக்கின் இறுதியில் அம்மையப்பக் கோனாருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைத்தது. அவர் மதுரை சிறையில் கொண்டுவந்து அடைக்கப்பட்டார். மேல் முறையீடு செய்ய மெட்ராஸ் ஹைகோர்ட்டுக்கு ஒரு பெருங்கூட்டமே திரண்டு போனது.

காவக்காரர்களுக்கு எதிரான பெருங்கலகத்திற்குத் தலைமை தாங்கிய அம்மையப்பக் கோனாரைப் பார்க்க வடக்கு மாசி வீதியில் உள்ள கோனார்கள் யாரும் போகவில்லை. ஆனால் சேர்மன் தில்லை வனம் பிள்ளை உள்ளிட்ட நகரின் முக்கியஸ்தர்கள் போய்ப் பார்த்துவந்தனர். காவக்காரர்களுக்கு எதிரான வெற்றியின் குறியீடாக அம்மையப்பக் கோனாரின் பெயர் மாறியிருந்தது. அவரைப்பற்றி சிலாகித்துப் பேசுவது மதுரை செல்வந்தர்களுக்கு கௌரவமான விஷயமானது. ராமாயணச் சாவடிக்கும் தாதனூருக்கும் உள்ள உறவில் விரிசல் அடையச் செய்ய அம்மையப்பக் கோனார் என்ற ஆயுதத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என யோசிக்கலாயினர். தன்னால் ஆனமட்டும் கொம்பை எடுத்து சேர்மன்

தில்லைவனம் பிள்ளை ஊதத் துவங்கினார்.

*

# 94

**போ**லிஸ் ஐ.ஜி.பேனர்மேன் மதுரையில் முகாமிட்டார். சிவகாசி கொள்ளை, திண்டுக்கல் பகுதியில் நடந்த பண்டுக்கலவரம் இரண்டும் அரசுக்கு பெரும் படிப்பினைகளைக் கற்றுத்தந்துள்ளது. குறிப்பாக ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தடைசெய்யப்பட்ட குடிக்காவல் முறை இன்னும் எவ்வளவு சக்தி வாய்ந்த ஒன்றாக இருக்கிறது என்பதையும் அரசின் கையை மீறி நடந்துள்ள இந்த இரண்டு கலவரத்திலும் காவக்காரர்கள் வகித்த பங்கினையும் அரசு கூர்மையாக கவனித்தது. அதன்பின் சென்னை மாகாணம் முழுவதும் போலிஸ் டிபார்ட்மெண்ட்டில் பெரும் மாறுதல்கள் செய்யப்பட்டன. குற்றம், கொள்ளைகளைத் தடுக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதில் கணிசமான வெற்றிகளும் கிடைத்தன. ஆனால் தென் தமிழகத்தில் குறிப்பாக மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் குற்றம், கொள்ளைகள் குறைந்திருந்தாலும் குடிக்காவல் முறை எந்த அசைவுமின்றி அப்படியே இருக்கிறது. அதை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கையே இப்பொழுது அரசின் முன்நிற்கும் முதன்மைப் பணி. எனவே ஐ.ஜி. பேனர்மேன் மதுரையில் முகாமிட்டு குடிக்காவல் முறை குறித்து ஆய்வு செய்தார். குறிப்பாக மதுரை நகர்க்காவலில் இருந்து தாதனூர்க்காரர்களைத் துண்டிக்க வேண்டும்; அதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என உத்தரவிட்டார்.

அந்த அடிப்படையில் கலெக்டர் பென்னிங்டன்னுடன் எஸ்.பி.பிராஸ்ஸின், டிஎஸ்.பி.ஸ்டீபன்சன் ஆகியோர் தாங்கள் வகுத்துள்ள திட்டத்தின் விவரங்களை ஐ.ஜிக்கு எடுத்துக் கூறினார்கள். அடுத்த ஓராண்டிற்குள் குடிக்காவல்முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நகரமாக மதுரை இருக்கும் என உறுதிமொழி தந்தனர்.

போலிஸ் ஐ.ஜி. திட்டங்களை முழுமையாக ஆய்வு செய்தார். பெல்லாரி, ஆர்க்காடு மாவட்டங்கள் எப்படி போலிஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன என்ற அனுபவத்தைக் கூறி அதனடிப்படையில் சில ஆலோசனைகளை வழங்கினார். கடுமையான ஒடுக்குமுறைக்கான முழு

அனுமதியும் மாவட்ட நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டது. ஐ.ஜி.யின் வழிகாட்டுதல் மதுரை போலிசாருக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. அவர் வருகைக்குப்பின் வேலைகள் தீவிரமடைய ஆரம்பித்தன.

*

**பொ**ன்மேனி கிராமத்தின் உடைமரக்காட்டு ஓடையைக் கடந்து பெரும் போலிஸ் படை மேற்கு நோக்கிப்போனது. இவ்வளவு துப்பாக்கி போலிசார் குதிரையில் ஏறிப் போவதை ஊரே திரண்டு அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்தது. எஸ்.பி.பிராஸ்ஸின் தலைமையில் ரிசர்வ்போலிஸ் படை முழுவதும் அணிவகுத்துச் சென்றது. அவர்களுடன் கச்சேரி போலிசார் இருபது பேர் சென்றனர். நாகமலை அடிவாரம் வரை வண்டிப்பாதையிலே போனவர்கள் அதன்பின் தெற்கே பாதைகளற்ற காட்டில் இறங்கினர். கொஞ்ச தூரம் போக ஆரம்பித்தன. குதிரைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வர ஆரம்பித்தன. தூரத்தில் அமணமலை தெரிந்தது. பெரும் மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியின் வழியே அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். நிலப்பரப்பினைப் பற்றியும் பக்கத்து கிராமங்களைப் பற்றியும் எஸ்.பி.க்கு இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளை விளக்கிச்சொன்னபடி வந்துகொண்டிருந்தார். அடர்ந்த மரங்களைக் கடந்து பெரும் பொட்டல் வந்தது. காட்டு வெள்ளாமை நடந்துகொண்டிருந்த நிலப்பகுதியைத் தாண்டினால் ஆலமரக் கூட்டத்தை அடையாலம். எட்டத்தில் ஆலமரங்களைப் பார்த்தபடியே எஸ்.பி.யின் குதிரை முன்னால் சென்றது.

ஆடுமாடு மேய்த்தவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தனர். குதிரைகள் கனைப்பொலி எழுப்பியவாறு நடந்தன. மலை அடிவாரத்தை வளைத்து அணைத்தபடி இருந்த ஆலமரக்கூட்டத்தின் அருகில் அந்தப் பெரும் போலிஸ்படை வந்து சேர்ந்தது. முன்னமே கொடுக்கப்பட்ட உத்தரவின் படி ஆலமரப் பரப்பு முழுவதையும் சுற்றி வளைத்து போலிசார் நின்றனர். நிழலிலே அங்குமிங்குமாகக் கிடந்தவர்கள் எல்லாம் சுதாரித்து எழுந்தனர். மலைப் புடவுகளுக்குள் இருந்தவர்கள் குதிரை போலிசாரின் உருவங்களைப் பார்த்து கீழே இறங்கிவந்தனர். எஸ்.பி.பிராஸ்ஸின் போலிஸ் வளையத்தைக் கடந்து ஆலமர நிழலுக்குள் வராமல் வளையத்திற்கு வெளியே வெகு தொலைவில் குதிரையில் இருந்தபடியே தென்பகுதியைப் பார்த்து நின்றுகொண்டிருந்தார். அவருக்கு எதிரில் ஒற்றையடிப் பாதை இருந்தது. ஆள்விலகிச் செல்ல முடியாத அளவு புதர் மண்டிக் கிடந்தது. தாதனூர் எங்கே என்று கேட்டப்போது இந்த ஒற்றையடிப்பாதையின் வழியேதான் போகவேண்டும் என்று இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளை கூறினார். அங்கே ஊர் இருப்பதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. பாதையின் இறுக்கமே யாரையும் அச்சுறுத்துவதாக இருந்தது. நீண்ட நேரம் பாதையின் வழியே தென்திசையைப் பார்த்துக் கொண்டேயிருந்த எஸ்.பி. பின்னர் குதிரையைத் திருப்பி ஆலமரக்கூட்டத்திற்குள் நுழைந்தார். கருத்துத் திரண்ட நூற்றுக்கும் அதிகமான உருவங்கள் அந்த நிழல் முழுவதும் ஆங்காங்கே இருந்தன. அவர்கண்கள் அந்தப் பகுதி முழுவதையும் சுற்றி நோட்டமிட்டபடி இருந்தன. பேச்சும் கூச்சலும் நிரம்பியதாக ஆலமரத்தடி இருந்தது. கொஞ்ச நேரத்தில் எஸ்.பி. உத்தரவிட்டவுடன் இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் பேச ஆரம்பித்தார். ‘இனிமே நீங்க யாரும் மதுரைக்கு

குடிக்காவலுக்கு வரக்கூடாது. கடைசியா இதைச் சொல்லி எச்சரித்துவிட்டுப் போகத்தான் எஸ்.பி. இங்க வந்திருக்காரு' என்று மிகச் சத்தமாகக் கூறினார்.

'என்ன வெண்ணய்க்குடா எங்கள வரக்கூடாதுன்னு சொல்றீங்க' என்று பிச்சுவையர் முடித்தவுடன் இடைவெளியின்றிப் பெரும் குரலொன்று மேலேறி வந்தது.

'அரசாங்கம் சட்டம் போட்டிருக்கு. குடிக்காவல் சட்ட விரோதம். சட்டவிரோதமான காரியத்தைச் செஞ்சா அரசாங்கம் தண்டிக்கும்' என்றார் பிச்சுவையர்.

நடுமையத்திலிருந்த ஊர் பெரியாம்பிள ஒச்சு 'வெலகுங்கடா...' என்று சொல்லியபடி முன்னுக்கு வந்தார். 'எங்களுக்கு திருமல நாக்கரு கொடுத்த காவடா...அது என்னடா நீங்க வரக்கூடாதுன்னு சொல்றது?' என்று கேட்டார்.

'நாய்க்கரு போயி பல காலம் ஆயிருச்சு, இப்ப வெள்ளக்கார அரசாங்கம் நடக்குது. இப்ப இருக்குற சட்டப்படிதான் நீங்க நடக்கணும்' என்று விளக்கம் கொடுத்தார் பிச்சுவையர்.

'வெள்ளக்காரெ எங்களயா ஆளுறான்! தலமுற தலமுறயா நாங்க தான் மருத காவ பாத்துட்டு வர்றோம். அத வெள்ளக்காரெ சொன் னாலும் விடமாட்டோம். எந்த வெண்ணயாண்டி சொன்னாலும் விடமாட்டோம்' என்றவர் 'இதுக்கு மேல பேசுனீங்கன்னா வெரட்டு பெத்து போவீங்கடா' என்றார்.

எஸ்.பி.யிடம் பிச்சுவையர் பேசினார். கடைசியாக மிக சத்தம் போட்டு 'இன்னிக்கு ராத்திரி இருந்து தாதனூர்க்காரங்க யாரும் நகரத்துக்குள்ள காவலுக்கு வரக்கூடாது. அப்படி யாராவது வந்தீங்கன்னா தண்டிப்போம்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டனர்.

குதிரைகள் மீண்டும் அணிவகுத்து வந்த பாதையிலே திரும்பின. நாகமலையின் அடிவாரம் வரை பாதைகளற்ற வெளியிலே நடந்து வந்தவர்கள் மீண்டும் வண்டிப்பாதையில் ஏறி மதுரையை நோக்கி விரைந்தனர்.

*

**க**ருப்பு கோவில் ஆலமரத்தடிக்கு எஸ்.பி. நேரடியாகப் போய் தாதனூர்க்காரர்களை எச்சரித்துவந்த செய்தி நகரிலுள்ள முக்கியஸ்தர்களுக்கெல்லாம் பரவியது. பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த நல்ல விஷயம் இப்பொழுது நடக்கப்போகிறது என்ற உணர்வு முக்கியஸ்தர்கள் பலருக்கும் இருந்தது. தாதனூர்க்காரர்களை நேரடியாகப் போய் எச்சரித்து வந்து எஸ்.பி. அடுத்து எடுக்கப்போகும் துணிச்சலான நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சி பொங்க அவர்கள் விவாதித்துக்கொண்டிருந்தனர். இந்த கலாசாலை அமைப்பதற்காக உருவாக்கப்பட்ட குழு, அதன்பின்பும் ஒருவகையான ஒற்றுமையுடன் இன்றைக்கு வரை இருந்து வருகிறது. அதன் தலைவராக இருந்த அன்றைய நகரசபை சேர்மன் சிவானந்தையர் நகர அபிவிருத்திக்காக பல பணிகளைத் தீவிரமாக செய்துவந்தார். ஆனால் நெஞ்சுவலி காரணமாகத்

திடீரென அவரை மரணம் கவ்விக்கொண்டு சென்றது. அதன்பின் அவரது குடும்பம் சென்னையிலே குடியேறிவிட்டது. அவரது மரணத்தின் பின்னணியில் பல கதைகள் நகருக்குள் உலவின. அவரது இளம் மனைவியைப்பற்றி அக்ரஹாரத்தில் பெண்கள் குசுகுசுவென பேசியபடி இருந்தனர். மகேஸ்வரனின் நடவடிக்கைகளின் மீது அவருக்குப் பெரும் எரிச்சல் வந்தது. காவக்காரர்களின் விடாப்பிடியான செயல்பாடும் அவர்களோடு மோதி கடைசிவரை அவரால் வெற்றிபெற முடியாமல் போனதும்தான் நெஞ்சுவலிக்குக் காரணம் என்று பேசப்பட்டது. பூட்டப்பட்டே கிடக்கிற அவரது இரண்டு பெரிய வீடுகளைப் பார்க்கிற யாருக்கும் பச்சாதாபம் தானாக வரும். கும்பாபிஷேகத்தில் நேர்ந்த துக்கத்தைக்கூட தாக்குப்பிடித்த வாழமுடிந்த அவரால் தண்டலை கிராமத்தில் நிகழ்ந்த களவுக்காக தாக்கல் செய்த தன்னுடைய வழக்கைத் தானே வாபஸ் வாங்க நேர்ந்துவிட்டபிறகு, அவரின் பெரும் செல்வாக்கின் அடியில் பரவியிருந்த தன்மானம் அவரை சுருட்டி விழுங்கியது. காவக்காரர்களால் நிகழ்ந்த பெரும் மரணமென இதனை செல்வந்தர்கள் கருதினர். ஆனால் உடனடியாக எந்தப் பதில் நடவடிக்கையும் எடுக்கிற நிலையில் யாருமில்லை. சற்று அமைதியாக இருந்தனர். காலம் உருண்டு அவர்களது விருப்பத்திற்கு அருகில் வந்து நின்றது.

இப்பொழுது கைகூடியிருக்கிற நல்ல சூழலைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்று அனைவரும் கருதினர். சேர்மனின் முயற்சி நகரின் செல்வந்தர்கள் பலரை ஒன்று திரட்டியபடி இருந்தது. முதல்பெரும் செல்வந்தர் எனக் கருதப்படுகிற சீதாராம அய்யங்காரின் குடும்பமும், குருசாமிச் செட்டியார் குடும்பமும் இம்முயற்சிக்கு பின்னே இருந்தன. தங்கள் அதிகாரத்துக்கு கீழ் நிலையில் காவக்காரர்கள் இல்லை என்ற அதிருப்தி பலரையும் ஒன்றிணைத்தபடி இருந்தது. நகரத்தின் மேல்தட்டு அனேகமாக முழுவதும் குடிக்காவலுக்கு எதிராக மாறிய சூழல் ஏற்பட்டது.

பல ஆண்டுகளாகத் தொடர் அவமானங்களையே சந்தித்துவந்த கச்சேரி இப்பொழுது முழுத்தெம்புடன் உள்ளது. போலிஸ்காரர்கள் யாரும் பழைய போலிஸ்காரர்களாக இல்லை. அவர்கள் மிகப்புதியவர்களாக ஆக்கப்பட்டிருந்தனர். முன்பு முர்ஷிதாபாத்தில் மட்டும் இருந்த காவல் தொழில் கல்விச்சாலை (Police Training Schools) இப்போது பகல்பூர், வேலூர் ஆகிய இரு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது. மதுரை போலிசார் அனைவரும் வேலூர் கல்விச்சாலையில் தங்கி செய்ய வேண்டிய வேலைகள் குறித்து முறையாகப் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுக்குத் தரப்பட்டு வரும் பயிற்சி பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. துப்பறியும் இலாகாவினர் தருகிற செய்திகள் உற்சாகத்தை அளிப்பதாக இருந்தன. திண்டுக்கல் பகுதி முழுவதும் நிகழ்ந்துள்ள பண்டுக் கலவரத்தால் கிராமக் காவல்காரர்கள் முழுவதும் விரட்டியடிக் கப்பட்டுள்ளனர். விவசாயிகள் பண்டு சேர்ந்து அவர்களை விரட்டியுள்ளனர். பல நூறு கிராமங்களில் நடந்துள்ள இந்த நிகழ்வு மேற்கு நாட்டு கள்ளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காவலை இழந்தவர்கள் மீண்டும் தங்களின் சொந்த கிராமங்களில் குடியேறியபடி உள்ளனர். மாறிவரும் புதிய காலச்சூழல் அவர்களுக்குப் புரிய ஆரம்பித்துள்ளது. இது தாதனூர்க்காரர்களின் உள்ளத்திலும் பெரும் கலக்கத்தை மூட்டியுள்ளது என்றும், சிறையில் உள்ள அம்மையப்பக்கோனாரின் மூலம் வடக்குமாசிவீதி கோனார்களிடம் பேசி

நிர்வாகத்திற்கு ஆதரவை உருவாக்கவும் முயற்சி நடந்து வருவதாகவும் துப்பறியும் இலாகாவினர் அறிக்கை தந்தனர். நகர போலிசார் அனைத்து வகையிலும் தங்களைத் தயார்படுத்தியபடி இருந்தனர். குறிப்பாக இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் தாதனூர் காவலை ஒழிக்க போலிசை நன்கு தயார்படுத்தியிருந்தார்.

தாதனூர் நல்லநாளுக்கு எண்ணெய் கொண்டுசெல்ல மூன்று பானைகளும் பிரிமனையும் கொடுக்கும் வடக்குமாசிவீதி செட்டியாரின் குடும்பத்தினரைப் பார்த்து குருசாமி செட்டியார் பேசினார். அவரோடு இன்ஸ்பெக்டர் பிச்சுவையரும் சேர்மன் தில்லைவனம் பிள்ளையும் போயிருந்தனர். பிரிமனையின் நார்களை தனித்தனியாக பிரிக்கத் தீவிர முயற்சிகள் நடந்தன. காவலுக்கு எதிரான பெருந்திட்டம் வெளிப்படையாக நடந்தேறியது.

வெள்ளையரும் செல்வந்தரும் கச்சேரி போலிசும் ஒரு முகப்பட்டு விட்டனர். இந்தச் செய்தி நகரத்து மக்கள் பலருக்கும் தெரிந்திருந்தது. வெள்ளைக்கார நிர்வாகமும் கச்சேரி போலிசும் இதுவரை இருந்ததைப் போல இனி இருக்காது எனத் தெருவிலே பேச ஆரம்பித்தனர். ராமாயணச் சாவடியில் பகலிலும் இருள் சூழ ஆரம்பித்தது. பண்டுக் கலவரம் பற்றிய பேச்சு சாவடியில் வந்து வௌவாலைப் போல அடையத்துவங்கியது. சீயான்மார்களின் முகங்கள் வத்துப்பால் மடுவைப்போல சுருங்க ஆரம்பித்தன.

*

**ப**னிப்பொழிவு அதிகமிருந்த மார்கழி மாதத்து இரவு அது. வழக்கமான இரவைப் போலத்தான் அது இருந்தது. தேய்பிறையில் கடைசி நாளாதலால் நட்சத்திரங்கள் ஏகத்துக்குப் பூத்திருந்தன. ரெட்டியகெடுத்த வெள்ளி ஏறி மின்னிக்கொண்டிருந்தது. அது விடிவெள்ளியைப் போலவே பெருத்திருக்கும். அது வரும்போது தலைக்கோழி கூவும். விவரம் தெரியாத ஆள்கள் விடிவெள்ளி முளைச்சிருச்சு, கோழி கூவிடுச்சு என நினைத்துப் புறப்பட்டு விடுவார்கள்.

அப்படித்தான் நகரத்தில் வியாபாரம் செய்துவந்த செல்வாக்குமிக்க ரெட்டி ஒருவர் இந்த வெள்ளியைப் பார்த்து விடிவெள்ளி என நினைத்து சரக்குகளை ஏற்றிய வண்டிகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். வண்டிகள் போகப்போக பாதையெங்கும் இருள் அடர்த்திக்கொண்டு நின்றது. இந்த நடுராத்திரியில் இவ்வளவு பொருட்களோடு துணிந்து வருகிற ரெட்டியைக் கள்வர்கள் வளைத்துக்கொண்டு கொள்ளையடித்துச் சென்றனர். ரெட்டியின் சரக்குகள் கொள்ளைபோன செய்தி நகரெங்கும் பரவியது. இது நடந்து எத்தனை காலமானது என்று தெரியாது. ஆனால் அன்றிலிருந்து அந்த வெள்ளி ரெட்டியைக் கெடுத்த வெள்ளியானது. கிழக்குத் திசையில் பெருத்து மினுக்கிக்கொண்டு மேலேறும் வெள்ளியைப் பார்த்தவுடன் ‘ரெட்டிய கெடுத்த வெள்ளியா, விடிவெள்ளியான்னு நல்லா பாத்துச் சொல்லுடா’ என்று மக்கள் பயம் கலந்த எச்சரிக்கையுடன் இன்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ரெட்டிய கெடுத்த வெள்ளி உச்சிக்கு ஏறியது. ஏகத்துக்கு ஆந்தையும் கூகையும் இரவை ஆதிக்கம் செய்தபடி இருந்தன. இனி ரெட்டிய கெடுத்த

வெள்ளிக்கும், விடிவெள்ளிக்கும் இடையில் அவைகளின் அலறல்தான் இருள் முழுவதும் நிரம்பியிருக்கும்; இருள் சரியா சரிய குழறல் குறைய ஆரம்பிக்கும். கரிச்சான் சத்தம் கேட்கத் துவங்கும். கரிச்சான் கரைய ஆரம்பித்ததும் அக்காக்குருவி கத்தத் துவங்கும். அப்பொழுது விடிவெள்ளி முளைத்து மேலேறி வரும். வாத்துக்கள் கேறி முட்ட வச்ச அடையும். ஏகத்துக்கு சேவல்கள் கூவும், பல பிராணிகளும் கத்தும், கடைசியாக ஒளியின் சிறு துளி சிதறி விழுந்தவுடன் காகங்கள் கரைய ஆரம்பிக்கும்.

விடிவெள்ளிக்கு சற்று முன்பு சாட்டைக்கம்பு வெள்ளியைப் பார்த்து காவக்காரர்கள் நகரத்திலிருந்து புறப்பட்டு விடுவார்கள். அவர்கள் பொன்மேனியைக் கடக்கிறபொழுது விடிவெள்ளி முளைத்திருக்கும். பெரும் உடைமரங்கள் நிறைந்த பொன்மேனி அய்யனார் கோவில் காட்டுப்பகுதியிலிருந்து கரிச்சானும் அக்காகுருவியும் கத்தியவாறிருக்கும். கோழிகூவ அவர்கள் ஆலமரத்தடிக்கு வந்து சேருவார்கள். அவர்கள் வந்தபின்தான் காக்கைகள் கரைய ஆரம்பிக்கும்.

இரவின் முடிச்சு உருவத் தொடங்குகிற கணத்தில் அவர்கள் மதுரையிலிருந்து விலகத் துவங்கி விடுகின்றனர். அன்றும் அப்படித்தான். ராமாயணச் சாவடியிலிருந்து சாட்டைக் கம்பு வெள்ளியைப் பார்த்து நகரத்திலிருந்து வெளியேறினர். ஒச்சுவின் மகன் கழுவன் வடக்குவெளி வீதியைக் கடைசியாக ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு சாவடிக்குப் போகாமல் நேராக ஆலமரத்தடி நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் ராமாயணச் சாவடியில் தங்கியிருந்த காவக்காரக் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. மாடக்குளம் கண்மாய்க்கரையின் வழியாக கபாலி மலையின் அடிவாரத்தில் கீழ்த்திசைக் காவலர்கள் வந்துகொண்டிருந்தனர். முக்கால் கண்மாய் நிறைந்திருந்த மாடக்குளத்தின் கீழ்ப்பகுதி முழுவதும் பயிர்கள் செழித்து நின்றன. மடையில் நீரோடும் சத்தம் கேட்டபடி இருக்க அவர்கள் ஆலமரத்தடி நோக்கி நடந்து கொண்டிருந்தனர். ஒளிச்சிதறல்கள் பனிபோல் பொழிய ஆரம்பித்தன. இருள் உதிர்ந்து மறைந்துகொண்டிருந்தது. மீனாட்சியின் கோபுரத்திலிருந்து புறாக்கள் கலைந்து சிறகடித்துப் பறந்தன. பறவைகளின் ஒலிகளே அந்த அதிகாலையில் வெளியெங்கும் நிரம்பியிருந்தன.

ஆலமரத்தடிக்கு காவக்காரர்கள் வந்துசேர்ந்தபடி இருந்தனர். பனிகடுமையாக இருந்ததால் கருப்பு கோவில் தாவாரத்தில் சாக்குகளைப் பொத்திப் படுத்துக்கிடந்த ஊர் பெரியாம்பிள ஒச்சு எழுந்து உட்கார்ந்தபடி காவக்காரர்களிடம் பேச்சுக் கொடுத்தார். வந்தவர்களில் சிலர் மலைப் புடவுகளில் படுக்கப்போயினர். சிலர் அப்படியே ஊருக்குள் போய்க்கொண்டிருந்தனர். பெரியாம்பிள ஒச்சு மிக கவனமானவராக அன்று தென்பட்டார். வெள்ளைக்கார போலீஸ் வந்து காவலுக்கு வரக்கூடாது என்று தைரியமாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறது. எனவே ஏதாவது அசம்பாவிதம் நடந்திருக்கிறதா என கவனித்தார். வழக்கம் போல் எல்லோரும் வந்துகொண்டிருந்தனர். ஆந்தைக்கும் கூகைக்கும் குரல் அடங்கிப் போய்விட்டது. காக்கைகளும் குருவிகளும் விழித்துப்பறக்கத் துவங்கிவிட்டன. களவுக்கு தூரத்தொலைவுக்கு போயிருந்தவர்கள் நன்றாக விடிந்தபிறகு வந்துகொண்டிருந்தனர்.

மதுரையில் வீதிகளை இரவெல்லாம் காவல் காத்துக்கிடந்த தனது மைந்தர்களை ஆலமரத்து நிழல் தனக்குள் அணைத்து படுக்கவைத்துக்

கொண்டது. பெரியாம்பிள ஒச்சு கழுவனோடு பேசியபடியே எழுந்து ஊரை நோக்கி நடந்து போனார். ஒத்தையடிப் பாதையின் வழியே ஊர்மந்தைக்கு வந்த அவர் உட்கார்ந்த கொஞ்ச நேரத்தில் ஊருக்குள் இருந்தது ஒரு உண்மை புறப்பட்டு வெளிவரத் துவங்கியது. தெற்கு ஆவணி வீதி காவக்காரன் பேயனைத் தேடி அலைந்த அவனது மனைவி ‘எழவெடுத்தவெ, ஆத்தா வீட்டுக்குப் போகணும். விடியமுன்ன வாடான்னா வீட்டுக்கும் வரல, மரத்தடியிலயும் காணோம். எங்க போயி தொலஞ்சானோ...’ என சத்தம் போட்டபடி மந்தையைக் கடந்து போய்க்கொண்டிருந்தாள். பெரியாம்பிளைக்கு ஏதோ பிடிபட்டது போலிருந்தது. கழுவனைவிட்டு கொம்பூதி வகையறாவைச் சேர்ந்த சுழியனைக் கூட்டிவரச் சொன்னார். சுழியன் வந்ததும், புளியமரத்திலே ஏறினான்.

மரத்தின் மீது கட்டித் தொங்கிக்கொண்டிருந்த கொம்பை எடுத்து ஊதினான். பல காலம் கழித்து கொம்பின் ஓசை கேட்டது. ஆலமரத்தடியில் படுத்திருந்தவர்கள். மலைப்புடவுக்குள் இருந்தவர்கள், ஊருக்கு வெளியே காட்டுப்பக்கம் இருந்தவர்கள் என எல்லோரும் மந்தைக்கு வந்து சேர்ந்தனர். பேயன் வரவில்லை. மொக்கசாமியில்லை, கூனாண்டி இல்லை. கருத்தையனைக் காணோம். இப்படியே தலைக்கட்டை எண்ணியதில் பதினாறு பேர் ஊருக்குத் திரும்பவில்லை. தெற்கு வெளி வீதியில் ராவுத்தர் சாவடியில் படுத்திருந்து எழுந்துவரும் கூட்டம் அது. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த யாரும் மந்தைக்கு வந்து சேரவில்லை.

கொம்பூதி மரத்தைவிட்டு இறங்காமல் மரத்தின் மேலேயே நின்றான். மரம் சிலிர்த்தபடி நின்றுக்கொண்டிருந்தது. ஊர் உருத்திரள ஆரம்பித்தது. பெரியாம்பிள ஒச்சு நிதானம் பிடிபட்டவராக மந்தைக் கல்லில் நின்றிருந்தார்.

*

**ந**கரம் அதிகாலையிலேயே பெரும் பரபரப்புக்கொண்டிருந்தது. வெள்ளைக்கார போலிசின் துணிவை செல்வந்தர்கள் பலரும் பாராட்டிய படி இருந்தனர். ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் கோவில் செக்கடியிலே இருக்கிற காவக்காரர்கள் வடக்கு வெளிவீதியின் வழியே மேற்கு நோக்கி தாதனூருக்குப் போய்விடுவார்கள். மைனா தெப்பக்குளத்தின் கீழ் தங்கும் காவலர்கள் தெற்குவெளிவீதி வழியாக மேற்குநோக்கி தாதனூருக்குப் போவார்கள். அப்படிப் போகிறபொழுது யாருடைய கண்களுக்கும் சட்டென்று படாதவாறு உள்சந்துக்குள் இருக்கிறது ராவுத்தர் சாவடி. பொறிவைத்துப் பிடித்ததை போல அங்கே வைத்து பதினாறு காவக்காரர்களை டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் தலைமையிலான போலிஸ் படை பிடித்துள்ளது. பெரிய சேதாரம் எதுவுமில்லாமல் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். முறுக்கேறிய உடல்கள் திமிறிக் குதித்தபடியிருக்க இழுத்துச்செல்லப்பட்டனர். அவர்களின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. வரிசையாக அனைவரையும் ஒரு பெரும் சங்கிலி இணைத்தது. முன்னால் குதிரையில் ஏறி ஸ்டீபன்சன் போய்க்கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து குதிரைப்படை போலிசார் சிலரும் கச்சேரி போலிசாரும் அவர்களை இழுத்துக்கொண்டு சென்றனர்.

செம்பூரான்கள் இழுத்துச் செல்லப்பட்டபின் மதுரையின் வீதிகளில் மக்கள் பெரும் பயத்தோடு பார்த்த காட்சியாக இது அமைந்தது. போலிசின் விஸ்வரூபம் பலருக்கும் விளங்கியது. நகரத்தின் காவக்காரர்களை இழுத்துச்செல்லும் காட்சியை நகரமே வேடிக்கை பார்த்தது. பூச்சியின் காவல் வீதியான மேல ஆவணி வீதியின் வழியேதான் அவர்கள் இழுத்துச்செல்லப்பட்டனர். நகரத்தின் காவலிலிருந்து தாதனூரைத் துண்டிக்கும் துணிகர முயற்சியின் பெரும் துவக்கமாக இது அமைந்தது. நன்றாகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாதலால் பதினாறு பேர் கைது செய்யப்படுவது சாத்தியமானது. காவக்காரர்களைக் கைதுசெய்ய ராவுத்தர் சாவடியைத் தேர்வு செய்தது என்பதும் ரயில்வே ஸ்டேசனுக்குப் பின்புறம் அமைக்கப்பட்ட அவுட்போஸ்ட் மூலம் பிற காவக்காரர்கள் எல்லாம் நகரத்தைக் கடந்து போய்விட்டனர் என்பதை உறுதிப்படுத்திய பிறகே கைது செய்யப்பட்டவர்களை வீதியின் வழியே இழுத்துவந்ததென்பதும் இந்த் கைது நடவடிக்கை சுமுகமாக முடிந்தத்ற்கு முக்கியக் காரணங்கள்.

கைது செய்யப்பட்ட அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். வடக்கு ஆவணி வீதி சிறைச்சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. காலையிலிருந்து நகரவாசிகள் பலரையும் பயம் தொற்றிக்கொண்டது. ராவுத்தர் சாவடி வழியே ஓட்டை போட்டு நகரத்து காவலை வெளியில் இழுக்கிற முயற்சியை போலிசார் செய்துள்ளனர். இதில் அவர்கள் வெற்றி பெறுவார்களா அல்லது போலிசாரை ஓட்டையில் வைத்து அடைத்துச் செம்மிவிட்டு தாதனூர்க்காரர்கள் வெளியேறுவார்களா என்பது பெரும்விவாதமாக இருந்துவந்தது.

காவக்காரர்களை கை வைத்ததால் அடுத்து நகரத்திற்கு என்ன ஆபத்து வரப்போகிறதோ என்ற பயம் அவர்களைப் பிடித்து ஆட்டியது. நடு மத்தியானத்தைக் கடந்த பொழுது மாலையை நோக்கிச் சரிந்தது. செல்வந்தர்கள் பலருக்குள்ளும் சிறு நடுக்கம் எழுந்து அடங்கியபடி இருந்தது.

‘தாதனூரின் எதிர் நடவடிக்கை என்னவாக இருக்குமோ’ என்று நகரவாசிகள் பலரும் நினைத்துக்கொண்டிருக்கையில் என்னவாக இருந்தாலும் எதிர்கொள்ள போலிஸ் தயாராக இருந்தது. மாலை நேரத்தில் காவக்காரர்கள் ரெண்டு பேர் வந்து வக்கீல் குணசீலனைப் பார்த்து விட்டுப் போயினர் என்ற தகவல் போலிசுக்கு கிடைத்தது. அதையடுத்து அவர் கச்சேரிக்கு வரவழைக்கப்பட்டார். அவரது தந்தை நேமிநாதன் காலத்திலிருந்து தாதனூரோடு அவரது குடும்பத்திற்கு இருந்த உறவு எல்லோருக்கும் தெரிந்ததே. அதனால்தான் அவரது வீட்டை ஆறுமுகத்தாபிள்ளை தொடர்ந்து கண்காணித்துவந்தார். கச்சேரிக்கு வந்த அவர் டி.எஸ்.பி.ஸ்டீ பன்சனிடம் ‘வந்தது தாதனூர்க்காரர்கள்தான். எதற்காகப் பிடித்தார்கள் என்று கேட்டார்கள். விஷயத்தைச் சொன்னேன். அவர்களை வெளியில் எடுக்க வழக்கை நடத்துவது பற்றி யோசித்துவிட்டுச் சொல்கிறோம் என்று போய்விட்டார்கள்’ என்றார். அவரை விசாரித்து அனுப்பி வைத்த ஸ்டீபன்சன் தாதனூர்க்காரர்கள் வழக்கை நடத்துவது பற்றி யோசிப்பது நல்ல அறிகுறி. நமது சட்டதிட்டங்களுக்குள் அவர்கள் தீர்வைத் தேட முயலுவதை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களுக்கான தீர்வு இதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது ஒருவகையில் நமது வலைக்குள்ளேயே

இருக்க வைப்பதாகும். அவர்கள் விரும்புகிற தீர்ப்பு இதில் கிடைக்காது என்று அவர்கள் புரிந்துகொள்வதற்கு ஆகும் காலத்திற்குள், அவர்களின் நிலை மேலும் மேலும் பலவீனமடையும். நமது நிலை மிகுந்த பலமடையும். அதன்பின் அவர்கள் புரிந்துகொண்டாலும் பலவீனமான நிலையில் இருந்து பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே அவர்களுக்காக வழக்கை நடத்த நாம் வக்கீல் குணசீலனை மறைமுகமாக ஊக்கப்படுத்த வேண்டும் என்றார். ஸ்டீபன்சனின் யோசனையை இன்ஸ்பெக்டர்கள் பிச்சுவையரும், சேதுப்பிள்ளையும் பெரும்வியப்போடு உள்வாங்கினர்.

நகரம் இரவை நெருங்கிக்கொண்டிருந்தது. அவுட்போஸ்ட் போலிசார் மிகுந்த விழிப்போடு இருளைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர். நகருக்குள் பெருநடுக்கம் இருந்ததை யாவரும் உணர்ந்தேயிருந்தனர். தாதனூர்க்காரர்கள் ஏழு பேரை கைது செய்து சிறையில் அடைத்த பொழுது கச்சேரியில் இருந்து பற்றியெரிந்த தீயின் உயரம் கிழக்குக் கோபுரத்தை மீறியது. அந்த நெருப்பு இன்னும் நகரத்தின் நினைவில் அப்படியே இருந்தது. வெடித்துச்சிதறிய தீக்கங்குகள் பலரின் நினைவுகளில் அணையாமல் இருந்தன. அன்று தீக்கிரையான கச்சேரி அதற்கான கணக்கை நேர் செய்ய இன்று தயாராக இருக்கிறது. மதுரையின் இரவுகள் பலவற்றைப் பற்றிய குறிப்புகளை இப்பொழுது அது சேகரித்து வைத்துள்ளது.

இருளின் பிடிக்குள் சுருண்டு கிடந்த மதுரையை நோக்கி தாதனூர்க்காரர்கள் வர ஆரம்பித்தனர். வழக்கம்போல் தனித்தனியாகவோ, நான்கைந்து பேராகவோ அன்று வரவில்லை. ஐம்பதுக்கும் மேற்பட்ட காவக்காரர்களின் பெருங்கூட்டமொன்று முதலிலே மதுரைக்குள் நுழைந்தது. அதேபோல் குறிப்பிட்ட கால இடைவெளியில் அடுத்தடுத்து இரண்டு கூட்டமாக உள்ளே நுழைந்தனர். ஒவ்வொரு காவக்காரனிடமும் ஒரு வித்தியாசம் இருந்தது. அவர்கள் காவல் பார்ப்பதுபோல் மட்டும் வரவில்லை. வேறு ஒன்றுக்கும் தயாராகி வந்திருந்தனர். எல்லோரும் இடுப்பைச் சுற்றி கற்களை வைத்து துண்டைக் கட்டியிருந்தனர். காவக்கம்பின் முனையிலே சொருகுவதற்கான குத்தீட்டியும் இருந்தது. இடுப்பு நிறைய்ய கற்களைக் கட்டிக்கொண்டிருக்கும் காவக்கரக்கூட்டம் எவ்வளவு பெரும் கூட்டத்தையும் அடித்துவிரட்டும் சக்தி கொண்டது. அவர்கள் தனித்தனியாக காவல்வீதிகளுக்குப் போயினர். ஆனால் நள்ளிரவுக்குப் பின் மொத்தமாக மூன்று இடங்களில் மட்டும் கூடினர். ராவுத்தர் சாவடி, மறவர் சாவடி, கொத்தளம் முக்கு, மேங்காட்டுப் பொட்டலென உதிரியாகத் தங்கும் இடங்களை யெல்லாம் கைவிட்டனர். இயல்பாக நடந்துபோன காவல்வீதிகளில் இன்று பெரும் முறைப்புடன் அவர்கள் நடந்து போயினர். எந்த நேரமும் தாக்கு தலைச் சந்திக்கத் தயாராய் இருக்கிறோம் என்பதைப் பறை சாற்றியபடி இருந்தது அவர்களின் நடவடிக்கை. கைது செய்யப்பட்டவர்களின் காவல்வீதிகளைப் பக்கத்து வீதியின் காவக்காரர்கள் சேர்த்துப்பார்த்தனர். கீழமாசி வீதி காவக்காரன் மண்டையன் கச்சேரியை முறைத்துப் பார்த்தபடி போய்க் கொண்டிருந்தான். கச்சேரியில் பெரும் போலிஸ் கூட்டம் நின்று அவனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

குளிரால் நடுங்கிய இரவு கழியும்பொழுது தாதனூர்க்காரர்கள் மூன்று

கூட்டமாக நகரை விட்டு வெளியேறி மேற்கு நோக்கிப் போயினர். அன்றைய இரவில் எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை. காவக்காரர்கள் யாரையும் கைது செய்யும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. காவக்காரர்களின் கோபத்தையும் மனோநிலையையும் மதிப்பீடு செய்வதற்காக அந்த இரவை ஸ்டீபன்சன் பயன்படுத்தினார். அவர்கள் பெருங்கோபம் கொண்டிருந்தனர். எந்த சிறு நடவடிக்கையும் கடும் விளைவுகளை உருவாக்கும் என்பது தெளிவாகத் தெரிந்தது. போலிசார் உள்ளுக்குள் பயத்துடன்தான் இன்றைய இரவைக் கடந்தனர் என்பதைப் பலமுறை ஸ்டீபன்சன் உணர்ந்தார். ஆனால் அவரைப் பொறுத்தவரை முக்கிய விசயமாக இருந்தது தாதனூர்க்காரர்கள் எந்த எதிர் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் நகருக்கு வந்துவிட்டுத் திரும்பினர் என்பதுதான்.

*

**தொ**டர்ந்து ஒரு வாரமாக இதுதான் நடந்தது. பெருங்கோபங் கொண்ட கூட்டமென காவக்காரர்கள் மதுரைக்குள் வந்துபோய்க்கொண்டிருந்தனர். ராமாயணச் சாவடியின் இரவுகள் இறுக்கமானதாக மாறின. காவக்கம்புகள் எதுவும் மூலையிலே சாத்தப்படவில்லை. கணநேரத்திற்குள் சாவடியின் தூண்களுக்குப் பின்னால் நின்றுகொண்டு தாக்கத் தயாரானபடிதான் அவர்கள் இருந்தனர். பேச்சுக் கொடுக்கும் சீயான்மார்களிடம் அடுத்த கேள்வி கேட்காத அளவு பதில் வந்து விழுந்தது. வீதிகளை முட்டி நகர்த்துவதைப் போல விடைத்த நெஞ்சோடு அவர்கள் இருளைக் கிழித்து நடந்துகொண்டிருந்தனர். அவர்களின் மனநிலைக்குள் மதுரை எதிர்நிலைக்கு மாறியபடி இருந்தது.

எஸ்.பி. பிராஸ்ஸினும், டி.எஸ்.பி. ஸ்டீபன்சனும் நிலைமையை உன்னிப்பாக கவனித்தபடி இருந்தனர். காவக்காரர்களின் மீதான இன்னொரு கைது நடவடிக்கை என்பது இழப்புகள் நிகழாமல் முடியாது. எனவே கொஞ்சம் தள்ளிப் போட்டனர். ஒவ்வொரு நாளும் அவர்களின் நடவடிக்கைகள் பற்றிய செய்தியைச் சேகரித்தபடி இருந்தனர். இப்பொழுது ராமாயணச் சாவடியில் இருந்தும் தாதனூர்க்காரர்களோடு பேச்சுக் கொடுக்க அவர்களுக்கு ஆள் சிக்கியது. வேடசந்தூரில் பிடித்து எரிந்த தீயின் பொறி வடக்கு மாசி வீதியில் வைக்கப்பட்ட திரியில் வந்துபற்றியது. மதுரையின் இரவு முழுவதும் காதுகளை வைத்து அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனாலும் அவர்களுக்கும் புரியாத சைகைகள் நிறையவே இருந்தன.

கைது செய்யப்பட்டவர்களுக்காக வழக்கை நடத்த இதுவரை குணசீலன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருக்கு தாதனூர்க்காரர்களிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. அது ஒன்று தான் சந்தேகத்தை உருவாக்கியபடி இருந்தது. அந்த சந்தேகம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் வரப்போகும் தாக்குதலைச் சந்திக்க நிர்வாகம் தயாராகத்தான் இருந்தது. ஆனால் அதிகாரிகளைப் பெரும் களைப்படைய வைத்த செய்தி - இந்த ஒரு வார காலத்தில் காவக்கூலி கொடுக்கமாட்டோம் என்று நகரத்தில் ஒரு நபர் கூட தாதனூர்க்காரர்களிடம் சொல்லவில்லை என்பதுதான்.

*

# 95

**அன்றைக்கு புலிப்பட்டி ஜல்லிக்கட்டு. மேற்கு நாட்டில் மிகப்பெரியது** புலிப்பட்டி ஜல்லிக்கட்டுதான். எல்லாத் திசையில் இருந்தும் பேர்பெற்ற காளைகள் எல்லாம் வரும். காயும் சிமிலும் பெருத்த காளைகள் புலிப்பட்டியின் பெரும்பாறைகளை முட்டித்தூக்கி எறிந்துவிட்டுப்போகும். ஜல்லிக்கட்டு முடிந்தால் புழுதி அடங்க ஒரு வாரமாகும். ஜல்லிக்கட்டுதான் வீரனையும் காளையையும் அடையாளப்படுத்தும் பெருவிழா. அது மட்டுமல்ல, ஊர் ஊருக்கு அடித்துப்பார்க்கும் இடமும் ஜல்லிக்கட்டுதான். ‘புலிப்பட்டி ஜல்லிக்கட்டுக்கு வாடா. அடிச்சுப் பாத்துக்கிருவோம்’ என்று வருடம் முழுவதும் விடப்பட்ட சவால்களை எல்லாம் பைசல் பண்ணும் இடமும் அதுதான்.

புலிப்பட்டி ஜல்லிக்கட்டில் கள்ள நாடு முழுவதும் குவிந்திருக்கும். வழக்கம்போல் தாதனூர் பொழுது பரிய வரிந்துகட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டது. போன ஜல்லிக்கட்டில் பிடிபாட விராதனூர் அழகுசேர்வையின் காளையை இந்த முறை அணைஞ்சே தீர்வது என்ற முடிவோடு சடச்சி மக்கள் புறப்பட்டு வந்தனர். ஊரே திரண்டு கஞ்சிப்பொழுதில் புலிப்பட்டிக்கு வந்து சேர்ந்தது. சாமிய கும்பிட்டு முடித்தவுடன் திட்டி வாசலிலிருந்து முனியாண்டியின் காளை தவ்விக்குதித்து ஓடியது. அதை யாரும் அணையக்கூடாது. திரண்டிருக்கும் பெருங்கூட்டத்தை அலட்சியத்துடன் பார்த்தபடி அது போகும். ஒரு சிறு மிரட்சி இருந்தாலும் வெறித்து ஓடவோ, நின்று குத்துவோ செய்யாமல் உரிய மரியாதையோடு ஊர்க்காளை போகும். அதற்குப்பின் பொழுதுசாயும் வரை திட்டி வாசலிலிருந்து தவ்வி வெளியேறும் காளைகளுக்கும் வாசலைப் பிளந்து உள்ளே நுழையும் வீரர்களுக்கும் இடையில் புலிப்பட்டி நெளிந்துகொண்டு கிடக்கும். திமிலைச் சரித்து காளையை வீழ்த்துவதும், குடல் சரிந்து வீரர்கள் வீழ்வதும் கேட்பாரின்றி நடந்தபடி இருக்கும். பொழுது சாய்ந்து காளைகளைக் கழற்றிவிடுவது நின்றாலும் ஊர்களுக்கு இடையில் நடக்கும் கலகம் நிற்காது. சில நேரம் நள்ளிரவு வரை கல்லெறி

நடக்கும். இரண்டு ஊர்க்காரர்களும் அவர்களாக எறிந்து, தவித்து, களைத்துப்போய் கலகத்தை நிறுத்தினால் உண்டு. இல்லையென்றால் நிறுத்தச்செல்லுவதற்கான நாதியேதும் இல்லை. கலகம் இரவில் கொஞ்சம் கொஞ்சமாக முடிவுக்கு வரும். ரத்தக்காயங்களோடும் ஒச்சங்களோடும் பிரிந்து போகிறவர்கள் அடுத்த ஊரில் நடக்கப்போகும் ஜல்லிக்கட்டு வரை காத்திருப்பார்கள். மீண்டும் வேறு ஊரில் திட்டி வாசல் திறக்க பழைய பகை பைசலுக்கு வரும். பெரும் கலகத்துக்கு இடையில் குதித்து இறங்கும் காளைகள் பாயும் பாதைகளில் இருபக்கத்தில் இருப்பவர்களையும் குத்தித் தூக்கிப் போட்டபடி போகும்.

அன்றைய புலிப்பட்டி ஜல்லிக்கட்டில் தாதனூர் பைசல் பண்ணவேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. அதற்கான தயாரிப்போடு ஊர்புறப்பட்டு வந்து சேர்ந்தது. புலிப்பட்டிக்கு தாதனூர் வந்து சேர்ந்த நேரத்தில் டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் பெரும் படையொன்றைத் திரட்டியபடி அமணமலை அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தார். மரத்தடியில் வயதான ஏழெட்டுப் பேர்தான் இருந்தனர். மற்றபடி ஊரே புறப்பட்டு ஜல்லிக்கட்டுக்குப் போய்விட்டது.

தாதனூரோடு பைசல் செய்ய வேண்டிய விஷயங்களில் ஒன்றை முடிப்பது என்ற தயாரிப்போடுதான் ஸ்டீபன்சன் படை திரட்டி வந்திருந்தார். தாதனூருக்கு சாலை அமைப்பது என்று முடிவுக்குப்பின் பெரும் திட்டமிடலும் நீண்ட காலத் தயாரிப்பும் இருந்தது. ஊரின் அடர்ந்த மௌனத்தை அவிழ்க்க வேண்டும். எந்த நேரமும் போலீஸ் படை ஊருக்குள் வந்துசேர் வசதி வேண்டும். அதற்கான அடிப்படையே இந்தச் சாலை. எந்தப் பக்கம் வழியாகச் சாலையை அமைக்கலாம் எனயோசித்தபோது மதுரையிலிருந்து தெற்கே செல்லும் பிரதான சாலையில் பசுமலையிலிருந்து பிரிந்து கபாலி மலையை ஒட்டிய பகுதியின் வழியாக சடச்சி பொட்டலைக் கடந்து தாதனூரை அடைவது என்று ஒரு வழியும், மதுரையிலிருந்து மேற்கு நோக்கிப் போகும் வண்டிப்பாதையில் நாக மலையின் அடிவாரத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்தி அமணமலை ஆலமரங்களைச் சுற்றி தாதனூரை அடைவது என்று ஒரு வழியும் ஆலோசிக்கப்பட்டது. அதில் முதல்வழி மிகவும் அபாயகரமானது மட்டுமல்ல, அமைக்கப்படும் சாலை மீண்டும் தாதனூர்க்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் போகவும் வாய்ப்பிருக்கிறது. எனவே இரண்டாவது வழி தேர்வு செய்யப்பட்டது.

வழி தேர்வு செய்யப்பட்டபின் சவால் மிகுந்த அந்தப் பணியை நிறைவேற்றுவது குறித்து தெளிவான முன்தயாரிப்புகள் செய்யப்பட்டன. வரைபட மாதிரிகள் தயாரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களைப் பணியில் இறக்குவது, அதுவும் தாதனூர்க்காரர்கள் பெரும்பாலும் ஊரில் இல்லாத நேரத்தில் வேலையைத் துவக்குவது என யோசிக்கப்பட்டது. அந்த யோசனையின்படிதான் வெற்றுப் பரப்பாக இருக்கிற ஆலமரக் கூட்டத்துக்குமுன் ஸ்டீபன்சன் பெரும் படையோடு வந்து அலட்சியப் பார்வையுடன் நின்றுகொண்டிருக்கிறார்.

வேலையாட்கள் இரு குழுவாகப் பிரிக்கப்பட்டனர். ஒரு பிரிவு ஆலமரத்தின் தென்பக்கமிருந்து ஊரை நோக்கியும், இன்னொரு பிரவு நாகமலையின் வண்டிப்பாதையில் இருந்து ஆலமரத்தை நோக்கியும் வேலையைத் துவக்கினர். இருபதடி அகலத்திற்கு மரம் செடி

கொடிகளையெல்லாம் வெட்டி அப்புறப்படுத்தும் பணி துவங்கியது. புலிப்பட்டி ஜல்லிக்கட்டில் காளைகள் மண்ணைக்குத்தி எரியத் துவங்கிய பொழுது குத்துக்கம்பிகள் தாதனூரின் ஒற்றையடிப்பாதையின் இருபக்கமும் இறங்க ஆரம்பித்தன. துப்பாக்கி போலிசும் கச்சேரி போலிசும் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர். ஆலமரத்தடியில் இருந்தவர்கள் என்ன ஏது என கேட்பதற்குள் வேலை துவங்கியது. இருந்த பெருசுகள் பெரும் சத்தம் போட்டு கலகம் செய்தனர். செய்தி ஊருக்கு எட்டியது. ஊரே திரண்டு புலிப்பட்டிக்குப் போய்விட்டதால் மிஞ்சியவர்கள் மிகச் சிலராகத்தான் இருந்தனர். கொம்பூதி கூட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் யாரும் ஊரிலே இல்லை. எனவே காமாயி வேகவேகமாக புளியமரத்தின் மீதேறி கொம்பை எடுத்து ஊதினாள். மூச்சை முழுசாக உள்ளிழுத்து பெருத்த வயிறை இறுக்கி காற்றைப் பிதுக்கித் தள்ளினாள்; கொம்பின் ஓசை அமணமலை முழுவதும் பீச்சியடித்தது. மலையின் மீதும், அடிவாரப் பொந்துகளுக்குள்ளும் படுத்துக்கிடந்த பெருசுகள் எல்லாம் ஆலமரத்தை நோக்கி வந்தனர். ஊரிலிருந்தவர்கள் மரத்தடிக்கு ஓடிவந்தனர். பெண்கள் போலிஸ் படை ஊருக்குள் வந்தால் சந்திப்பதற்கு சேலையை தார்பாய்ச்சியென வரிந்துகட்டி தயாராகிக் கொண்டிருந்தனர். ஆலமரத்தடியில் இருபது பேருக்கு மேல் கூட்டம் சேர்ந்தது. ஆனாலும் அதில் ஐந்தோ ஆறோ பேர்தான் இளவட்டங்கள். மற்றவர்கள் எல்லோரும் பெருசுகள்தான்.

இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளையின் தலைமையில் கச்சேரி போலிசாரின் கூட்டமொன்று ஆலமரத்தடியில் ஊர்க்காரர்களோடு பேசிக்கொண்டிருந்தது. சாலை வேலைக்கு வந்த பெருங்கூட்டம் மரம் செடிகொடிகளை வெட்டி அப்புறப்படுத்தியபடி இருந்தது. துப்பாக்கி போலிசார் இரண்டுக்கும் நடுவில் எதற்கும் தயார்நிலையில் நின்று கொண்டிருந்தனர். முன்பே திட்டமிடப் பட்டபடி அவர்வர்கள் தனித்தனியாகப் பிரிந்து பணியாற்றியபடி இருந்தனர். தாதனூர்க்காரர்களுக்கு என்ன நடக்கிறது என்பது பிடிபடவில்லை. போலிஸ் மீதிருந்த பெருங்கோபம் மட்டுமே அவர்களை இயக்கியது. ‘மரத்தடிக்கு வந்து வசமா மாட்டியிருக்காங்கெ, இந்த நேரம் பாத்து ஊரெல்லாம் ஜல்லிக்கட்டுன்னு போயிருச்சே...’ என்று புலம்பினார் பெரியவர் கெடாயன்.

‘நீங்க எதுக்குடா இத்தன பேரு வந்து செடிசெத்தைகளை வெட்டுறீங்க?’ என்று கத்தினார்.

‘ஒங்க ஊருக்கு பாத போடுறதுக்குத்தான் பெரியவரே’ என்றார் இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளை.

‘எங்க ஊருக்கு எதுக்குடா நீங்க பாத போடணும்?’

‘அரசாங்க அதிகாரிக எல்லாம் வரணும், போகணும். குதிர வண்டி மாட்டு வண்டிக எல்லாம் வர்ற மாதிரி பாதை இருந்தா உங்களுக்குத்தான் நல்லது.’

‘தொப்பிக்கார மசுரு எங்க ஊருக்கு எதுக்குடா வரணும்? ஒல மூடிய கவுத்தி தலையில் வச்சுக்கிட்டு நீங்க வண்டியில வர்றதுக்கு எங்களோட செடிசெத்தைகள் எல்லாம் எதுக்குடா வெட்டுறீங்க?’

‘.... .... ....’

‘ஒழுங்கா திரும்பி போங்க. இல்லாட்டி ஆள வெட்டி எறிஞ்சிருவோம்.’

‘... ... ...’

‘இங்க பேசிக்கே இருக்குறப்ப அங்க வெட்டிக்கே இருக்காங்கெப்போ...ய்’

‘... ... ...’

‘டே...நிறுத்துங்கடா...வெட்டாதீங்கடா...’ என்று பெரும் சத்தத்தோடு வெட்டுகிற வேலை செய்தவர்களை நோக்கி ஆலமரத்தடியில் இருந்த கூட்டம் பாய்ந்தது.

நின்று பேசிக்கொண்டிருந்த கச்சேரி போலீஸ்சார் அவர்களை அந்தப் பக்கம் போகவிடாமல் வளைத்தனர். திட்டி வாசலிலிருந்து குதித்து வெளியேறும் காளைகளைப் போல அவர்களை மல்லாக்கத் தூக்கியெறிந்துவிட்டு அவர்கள் பாய்ந்தனர். போன வேகத்தில் அடியில் இறங்கினர். குத்தீட்டிகள் பல பெண்களிடமிருந்து பெருசுகளின் கைக்கு மாறின. இவைகளெல்லாம் சடசடவென கணப்பொழுதில் நடந்தது. நிலைமை மோசமாகப் போகிறது எனத் தெரிந்தவுடன் ரிசர்வ் போலீஸ் களத்திலே இறங்கி அவர்களைக் கட்டுப்படுத்தவும் கைது செய்யவும் முயற்சித்தனர். ஆனால் அதுவெல்லாம் எந்தப் பலனையும் அளிக்கவில்லை. ரிசர்வ் போலிசார் மூன்று நான்கு பேர் சேர்ந்து ஒருவனைச் சமாளிக்க முடியவில்லை. குறுக்கெலும்பு உடைவதைப்போல அடிவிழுந்து போலிசார் சாய்ந்தனர். மூன்று பேரை நின்றபடி தலைக்கு மேலே தூக்கியெறிந்தார் கெடாயன் பெருசு. பெரும் மரத்தூணைப்போல் இரண்டு கால்களையும் அகற்றி ஊன்றி முன்னும்பின்னுமாக அடித்து ஆட்களை சாய்த்துக்கொண்டிருந்தார். வேலைக்கு வந்த பலர் பெண்டுகள் கொடுத்த அடி பொறுக்காமல் ஓடத்துவங்கினர். நிலைமையைப் பார்த்துக்கொண்டிருந்த டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் சைகை காட்டியதும் துப்பாக்கி ஒன்று வானை நோக்கி குண்டைக் கக்கியது. பெரும் சத்தம் மலை முழுவதும் எதிரொலித்தது.

‘இப்போ பாதை போட சம்மதிக்கலைன்னா துப்பாக்கியால சுடுவோம்’ என்று பெரும் சத்தம் போட்டு சேதுப்பிள்ளை கூறினார்.

துப்பாக்கி ஓசைக்கும், சேதுப்பிள்ளை குரலுக்கும் பின் ஒரு சிறு அதிர்ச்சியும் அமைதியும் நிலவியது. அடுத்த கணம் ‘தாயோலி....ஒங்குழாயி என்ன காணும்னு பாத்திருவோம்டா...’ என்று கத்தியவாறு பெரியவர் கடாயன் எறிந்த கல் துப்பாக்கியைத் தூக்கி வானத்தில் சுட்ட வெள்ளைக்கார போலிசின் நெற்றியைப் பிளந்தது. அவன் ரத்த வெள்ளத்திலே குதிரையிலிருந்து மல்லாந்து கீழே விழுந்தான்.

வெள்ளைப் போலிஸ் விழுந்த சில நொடிகளில் துப்பாக்கி குண்டு உடலைப் பொத்துக்கொண்டு போக கெடாயன் கீழே சரிந்தார். மற்ற ஆட்கள் அங்குமிங்குமாகப் புதர்களுக்குள்ளும் பாறைகளுக்குப் பின்புறமும் ஓடி மறைந்தனர். பக்கத்தில் இருக்கும்போது பலம் குன்றியதுபோல் இருந்தவர்களுக்கு கல்லெறியத் தேவையான தூரம் கிடைத்தவுடன் இரு மடங்கு பலம் வந்தது. கல்லெறி அதன் சக்தியை காட்டத்துவங்கியது. எல்லாத் திசையிலிருந்தும் குண்டுகளைப்போலக் கற்கள் வந்துகொண்டிருந்தன. போலிசுக்கு சுடுவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்ட

பின்பும் இலக்குகளைக் குறிவைக்க முடியாமல் தடுமாறினர். கல்லெறி வாங்கி ரத்தம் கொட்ட கச்சேரி போலிசார் சிலர் ஆலமரத்தடியில் ஒதுங்கினர். சடார் சடாரென ஏறி வாங்கிய குதிரைகள் மீரண்டும் பெரும் கனைப் பொலியோடு முன்னத்திக் காலை மேலே தூக்கி போலிசாரை விழுத்தாட்டி ஓடத்துவங்கின. நிலைமையை அறிந்த டி.எஸ்.பி. தாதனூரின் சக்தியைக் கண்டு சற்றே நிலைகுலைந்தார். மிகச்சிறு எண்ணிக்கையுடன் இருந்த இந்தக் கிழக்கூட்டமே மொத்த போலிஸ் படையையும் உலுக்கி எடுத்தது. கற்கள் ஈட்டிபோல வந்துகொண்டிருக்கும் மேற்குத் திசையின் பெரும்பாறை ஒன்றைச் சுற்றி வளைக்க குதிரைப்படைக்கு உத்தரவிட்டார். ஆலமரத்தைத் தாண்டிப் பின்புறமாக வந்த குதிரைப்படை போலிசார் பாறையைச் சுற்றி வளைத்தனர். நீண்ட நேரம் குண்டுகள் பின்புறத்துப் புதரைச் சல்லடையாகத் துளைத்தன. பாறை இடுக்குகளிலிருந்து கற்கள் மின்னல் வேகத்திலே வந்துகொண்டிருந்தன. துப்பாக்கி குண்டுகள் இடுக்குகளுக்குள்ளும் பாய்ந்தன. பத்துப் பேர் ரத்தக்காயங்களோடு பிடிபட்டனர். இருவர் புதருக்குள்ளேயே பிணமாயினர். புதருக்குள் பிடிபட்டவர்களையும் சேர்த்து மொத்தம் பதினாலு பேரையும் ஆலமரத்தடியில் பின்புறம் கையைக் கட்டி கட்டைகளாலும் பூட்ஸ்களாலும் அடித்து நசுக்கினர். மேலெல்லாம் ரத்தம் ஒழுக, குற்றுயிரும் குலை உயிருமான அவர்களை இழுத்துக்கொண்டு போகச்சொல்லி டி.எஸ்.பி. உத்தரவிட்டவுடன் குதிரைப்படை போலீசார் சிலரும், கச்சேரி போலிசாரும் சேர்ந்து அவர்களை இழுத்துச்சென்றனர்.

நாகமலையின் அடிவாரத்திலிருந்து பாதை அமைத்துவரும் இன்னொரு குழுவை அப்படியே இங்கே வரச்சொல்லி மொத்தமாக எல்லோரையும் சேர்த்து ஆலமரத்தடியிலிருந்து தாதனூர் வரையிலான பணியில் ஈடுபடுத்தினர். தாதனூர்காரர்கள் ஊர் திரும்புவதற்குள் இந்தப் பணி முடிவுடைய வேண்டுமென டி.எஸ்.பி. வேலையை வேகப்படுத்தியவாறு இருந்தார்.

போர் நடந்த இடம்போல அது இருந்தது. அப்படித்தான் போர் நடக்கும்போல இருக்கிறது. காளைகள் எங்கும் விரட்டிக் குத்தியபடியும், விரட்டுபெத்து ஓடியபடியும் இருந்தன. எங்கும் பெரும் கூச்சல், திட்டிவாசலை விட்டுத் தவ்வியதும் சட்டெனத் திரும்பி திட்டியோரப் பனைமரத்திலே வைத்து வீரர்களைக் குத்திச் சாய்த்தது. வீரர்கள் காளைகளை அடக்கி மண்டியிடவைத்து சாணி தள்ளிய பின்னரே விட்டனர். விராதனூர் அழகு சேர்வையின் காளைக்காகத் திட்டி வாசலை ஒட்டியபடி தாதனூர் இளவட்டங்கள் காத்துக்கொண்டிருந்தனர். எங்கும் புழுதியைப் பரப்பியபடி காளை ஓடிக்கொண்டிருந்தது. ஒத்தையில் மாட்டிக்கொண்டவர்களை வெகுதூரம் விரட்டிச்சென்றது. குத்துப்பட்ட இடத்திலே புழுதி மண்ணை அள்ளி அடைத்தபடி அவனைத் தூக்கிக் கொண்டு மக்கள் ஓடினர். அந்தப் பெரும்பகுதி முழுவதும் நிமிர்ந்தவாலோடு காளைகள் துள்ளி விழுந்து பூமியை அதிரவைத்தபடி இருந்தன. தகவல் சொல்ல ஓடி வந்த தாதனூர்க்காரர்களால் ஊரை ஒன்று திரட்ட முடியவில்லை. ஜல்லிக்கட்டு உச்சநிலையிலே இருந்தது. வெளியெங்கும் பெரும் கூச்சல் வானைத் தொட்டது. திமிலுக்கும் கொம்புக்கும் இடையில் வீரர்களின் உடல்கள் உருண்டுகொண்டிருந்தன. என்ன குதித்தும் குத்தியும் உடலோடு அப்பிக்கொண்ட வீரனை ஒன்றும் செய்யமுடியாமல் தவித்துப்போய் முன்கால் மடங்கி கீழே விழுந்தது

விராதனூர் அழகுசேர்வையின் காளை. தாதனூர் இளவட்டங்கள் துள்ளிக் குதித்தனர்.

வெள்ளைக்காரன் சாலை ஊர் மந்தையைத் தொட்டு நின்றது.

உச்சிப்பொழுது. வெயில் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. உடலெல்லாம் செதில்செதிலாகப் பிளந்து இரத்தம் வடிந்தபடி கட்டி இழுத்துவரப்பட்டவர்கள் வெயிலின் உக்கிரத்தில் மயக்கம் தாளாமல் விராட்டிபத்து மந்தையருகே இருந்த நிழலிலே சற்று நின்று 'தண்ணி...தண்ணீ...' என்று தவித்தனர். தாதனூர்க்காரர்களை வெள்ளைக்காரன் அடித்துக் கட்டி இழுத்துவந்து கொண்டிருக்கும் செய்தி ஊரெல்லாம் பரவியது. ஆணும் பெண்ணும் தண்ணீர் கொடுக்க பெரும்பானைகளைத் தூக்கிக்கொண்டு வந்தனர். ஆனால் வெள்ளைக்கார போலீஸ் தண்ணீர் கொடுக்க யாரையும் அனுமதிக்கவில்லை. 'தண்ணி கொடுத்தால் கைது செய்வோம்' என்று இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் கூறினார். 'அய்யோ...அப்பா...' என பச்சாதாபப்பட்டபடி ஊரே நின்று வேடிக்கை பார்த்தது. சடச்சியின் மக்கள் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்லப்பட்டனர்.

செய்தி எங்கும் பரவியபடி இருந்தது. நகரத்துக்குள் பேச்சு எட்டியது. ஏற்கனவே ராவுத்தர் சாவடியில் வைத்து பதினாறு காவக்காரர்களை கைது செய்து சிறையில் வைத்துள்ள போலீஸ் இப்பொழுது தாதனூருக்கே போய் பதினாலு பேரை அடித்து இழுத்து வந்து சிறைக்குள் அடைந்துள்ளது. காவக்காரர்கள் விஷயத்தில் அரசு கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கிவிட்டது என்பது நகர மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. தாதனூரின் எதிர் நடவடிக்கைகள் குறித்த அச்சம் பெரும் பீதியைக் கிளம்பியது. அடுத்த இரண்டு நாட்களும் பயம் உச்சத்தில் இருந்தது. இரண்டு போலிசார் இறந்துபோனதாகவும் தாதனூர்க்காரர்கள் எத்தனைபேர் இறந்தனர் என்ற கணக்குத் தெரியாதென்றும் மக்கள் பேசிக்கொண்டனர். கல்லெறி வாங்கிக் கடும் காயம்பட்ட போலிசாருக்கு மிஷன் ஹாஸ்பிடலில் வைத்து சிகிச்சை யளிக்கப்பட்டது. கெடாயன் நெத்திப் பொட்டில் எறிந்து வீழ்த்திய வெள்ளை போலிசும் கச்சேரி போலிஸ் ஒருவரும் சிகிச்சை பலன்இன்றி அடுத்தடுத்த நாளில் இறந்தனர். ஆனால் போலிசுக்கு இந்த மரணங்களை விட பெரும் பயத்தை ஏற்படுத்தியது வீராயின் செயல்தான்.

கைது செய்யப்படவர்கள் விராட்டிபத்தைக் கடந்து இழுத்தச் செல்லப்பட்டபொழுது செய்தி கேள்விப்பட்ட வீராயி தலையில் பானையைத் தூக்கிக்கொண்டு குறுக்குப்பாதையில் ஓடியிருக்கிறாள். அவள் விராட்டிபத்து காவக்காரனின் மனைவி. அவளுடைய புருஷனும், மகனும் புலிப்பட்டி ஜல்லிக்கட்டிற்குப் போய்விட்டனர். அவள் மட்டும் பனைமட்டையை விறகுக்காக வெட்டிக் கொண்டிருந்தாள். செய்தி ஊருக்குள் வந்தவுடன் வீட்டுக்கு ஓடி தண்ணீர்ப் பானையைத் தூக்கிக்கொண்டு குறுக்குவழியாக கண்மாய்க்குள் இறங்கி பொன்மேனி உடைமரக்காட்டு ஓடையிலே போய் மறித்திருக்கிறாள். போன வேகத்தில் 'அய்யோ...அப்பே...ஆத்தே.. இப்படி அடிச்சு இழுத்துட்டு போறாங்களே, இந்தக் கொடுமையா...' எனக் கதறியபடி நேராக அவர்களிடம் போய் தண்ணீரைக் கொடுக்க முயற்சித்தாள். போலிஸ் தண்ணீர் கொடுக்கூடாதென சொல்லச் சொல்ல ஆங்காரம் எடுத்து 'ஏ மாமா

மச்சாங்களுக்கு நீங்க என்னாட தண்ணீ கொடுக்ககூடாதுன்னு சொல்றது’ என்று நரம்பு புடைக்கக் கத்தியபடி, கண்களில் கோபம் கொப்பளிக்க போலிஸை முட்டி விலக்கிக்கொண்டு உள்ளே போனாள்.

‘டேய்...அந்தப் புள்ளைய வுடுங்கடா...’ என்றும் ‘ஆத்தா...நீ போ ஆத்தா...ஒத்தையில வந்து இவங்கெளோட கலகம் பண்ணாத’ என்றும் இழுத்துவரப்பட்டவர்கள் கத்தியபடி இருந்தனர். ஒத்தப் பொம்பளயா வந்து மறிச்சுக்கிட்டு பிரச்சன பண்றாளே என்ற கோபத்தோடு வெள்ளைக்கார போலிசு ஒருவன் குதிரையில் இருந்தபடியே அவள் பக்கமாக வந்து தலையிலிருந்த தண்ணிப்பானையை ஒரே எத்தில் எத்தி உடைத்தான். பானை நொறுங்கி அவள் மேலெல்லாம் தண்ணீர் கொட்டியது. உயிர் ஒழுகிப்போனதைப்போல அப்படியே அதிர்ந்து நின்றவள் ‘டே...ய்’ எனக் கத்தியபடி அவன் காலைப் பிடித்து ஒரே இழுப்பாக இழுத்துக் கீழே போட்டாள். கத்திய சத்தத்திலே குதிரை அரண்டு விலகியது. கீழே விழுந்தவனின் மீது கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்து இடுப்பில் இருந்த பனங்கருக்கால் இரண்டு பக்கமும் பிடித்து தலையையும் வாலையும் பிடித்து மீனை உரசுவது போல நறநறவென சங்குக்குழியை அறுத்தாள். விழுந்த சத்தம் கேட்டு சுதாரித்து மற்றவர்கள் அவளை நெருங்குவதற்குள் சங்குக் குழியிலிருந்து பீறிட்ட ரத்தம் அவள் முக்கத்திலே சீறிச் சிதறியது. அடுத்த கணமே துப்பாக்கிக் கட்டையால் அடித்து நொறுக்கப்பட்டாள். இழுத்துவரப்பட்டவர்களின் பெரும் கத்தல்களுக்கு இடையில் போலிஸ் கூட்டம் அவளை அடித்து பானெட்டால் குத்தி மண்ணோடு மண்ணாக்கியது. உடைமரக்காட்டு ஓடையிலே இரண்டு உயிரும் போனது.

இழுத்துவரப்பட்டவர்களைச் சிறைக்குள் தள்ளியபின்பும் உடைமரக்காட்டு ஓடைக்கரை மேலே பானையைத் தூக்கிக்கொண்டு பூமி அதிர ஓடி வந்து அவள் மறித்ததும் கணநேரத்திற்குள் சங்குக்குழியை அறுத்து எறிந்ததும் போலிசாரை நடுநடுங்க வைத்தபடி இருந்தது. விராட்டிபத்து காவக்காரன் பொஞ்சாதி வீராயி ரிசர்வ் போலிஸ் சார்ஜண்ட ஸ்பெல்டிங்கை கொன்ற செய்தி நகரத்திலிருந்து கிராமம் கிராமமாகப் பரவியது.

*

**நெ**ஞ்சுக்கூட்டை வகுந்ததைப்போல காட்டைப் பிளந்து பாதை போட்டிருந்தனர். ஆலமரத்தடியிலிருந்து ஊர் மந்தை வரை இருபதடி அகலத்திற்கு மரம் செடி கொடிகளையெல்லாம் வெட்டி அப்புறம் படுத்தியிருந்தனர். ஆலமரத்தடியில் தாதனூர் அவமானத்தால் குறுகிப்போய் உட்கார்ந்திருந்தது. ஊர் பெரியாம்பிள ஒச்சு உள்ளுக்குள் நொறுங்கிப் போயிருந்தார். கெடாயன் உள்ளிட்ட கொல்லப்பட்ட யாருடைய உடலும் கிடைக்கவில்லை. அனைத்தையும் போலிஸ் மாட்டுவண்டியிலே போட்டுக்கொண்டு போய்விட்டது. ஆனால் கலகத்தில் பங்கெடுத்தவர்கள் சொன்ன செய்திப்படி இரண்டு பக்கமும் மூணு மூணு கொலை விழுந்திருக்கிறது என்று தெரிந்தது. வீராயியையும் சேர்த்தால் தாதனூர் பக்கம் நாலு கொலை விழுந்திருக்கிறது. இது தவிர குண்டடிபட்டு கையோ காலோ பிய்த்துக்கொண்டு போக அந்த இடத்தை இறுகக் கட்டியபடி தப்பிக்க நினைத்து மலைமேல் ஓடி ஆறேழு பேர் அங்குமிங்குமாக மயங்கி விழுந்து கிடந்தனர். அவர்கள் எல்லோரையும்

தூக்கிக்கொண்டுபோய் நாகமலை அடிவார கிராமமான பழஞ்சிக்கரையில் வைத்து வைத்தியம் பார்த்தனர். அவர்களில் இரண்டு பேர் இறந்துபோனார்கள். மற்ற எல்லோரையும் பிழைக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஆங்கனின் தம்பி மாயி மயக்கம் ஏற்பட்டு பெரும் பாறையில் உருண்டு கீழே விழுந்ததால் தலையில் கடுமையான காயம் பட்டுவிட்டது. கைகால்கள் எல்லாம் நன்றாக இருந்தாலும் அவனுக்கு புத்தி பேதலித்தது போல் இருந்தது. வைத்தியர் நம்பிக்கையோடு மூலிகைகளை அரைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். இந்தக் கணக்கையெல்லாம் நேர் செய்துவிடலாம். ஆனால் சில கணக்குகளை நேர் செய்யமுடியாமலே போய்விடுமோ என்ற கவலை தாதனூருக்கு வர ஆரம்பித்தது.

ஊர் வரை போடப்பட்டிருந்த பாதையை அவர்கள் உற்றுப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தனர். கெடாயன் பெரியாம் பிளையையே கொல்லுகிற அளவுக்கு துப்பாக்கி குண்டு சக்தி இருப்பது பற்றி அவர்கள் யோசிக்க ஆரம்பித்தனர். ஆலமரத்தடி பெரும் வேதனையையும் மௌனத்தையும் அடைகாத்துக் கிடந்தது. அழகு சேர்வையின் காளையை அடக்கிய சந்தோஷம் ஊர் வந்து சேரவில்லை; அதற்குள் தாதனூரின் சிமிலை வெட்டியதைப் போல ஒரு சம்பவம் ஊரிலேயே நடந்துவிட்டது. ஜல்லிக்கட்டிலே குத்துப்பட்டவர்களுக்கு வழக்கம்போல் காயம் ஆறும்வரை ஊர்க்கஞ்சி ஊற்றப்படும். ஆனால் இந்த முறை அப்படி எதுவும் நடக்கவில்லை. ஊரே குத்துப்பட்டுக் கிடந்தது.

அடுத்த இரண்டு நாள் சாலை அமைக்கயாரும் வரவில்லை. மூன்றாம் நாள் நாகமலையின் வண்டிப்பாதையிலிருந்து ஆலமரத்தடி வரையிலான பணிகளை முடிக்க போலிஸ் படையுடன் வேலையாட்களின் கூட்டம் வந்திருந்தது. தாதனூர்க்காரர்கள் முழுவதும் பெருங்கோபத்தை அடக்கியபடி ஆலமரத்தடியில் இருந்தனர். போன முறை வந்ததைவிட அதிகமாகக் குதிரைப்படை போலிசும் கச்சேரி போலிசும் வந்திருந்தனர். போடப்படுகிற இந்தச் சாலை நேர்கோடாக வராமல் வளைந்து வளைந்து வருவதைப்போல அமைக்கப்பட்டது. போலீஸ் ஊருக்கு வருவது என்பது தூரத்திலேயே தெரிந்து விடக்கூடாது என்பதற்காக அப்படி அமைக்கப்பட்டது. அமணமலை அடிவாரத்தில் பெரும்பரப்பெனக் கிடந்த ஆலமரக்கூட்டங்களுக்குள்தான் சாலை வருவதைப் போல போலிஸ் டிபார்ட்மெண்ட் முதலிலே வரைபடம் தயாரித்திருந்தது. ஆனால் டேவில் சாம்ராஜின் குறிப்பின்படி இந்த ஆலமரங்கள் தான் தாதனூர் உயிரென மதிக்கும் தாய்தெய்வம். எனவே இதற்கு நடுவிலோ அல்லது இதனை ஒட்டியோ சாலை அமைப்பது மூலம் மரத்துக்கு ஏதாவது சேதாரம் நேர்ந்தால் அது பெரும் விளைவுகளை ஏற்படுத்திவிடும். எனவே ஆலமரத்தைச் சுற்றிச் செல்வதைப்போல சாலையின் வரைபடத்தை கலெக்டர் பென்னிங்டன் மாற்றினார். அதன்படி சாலை நாகமலை அடிவாரத்தில் தெற்கே பிரிந்து வளைந்து வளைந்து வந்துகொண்டிருந்தது. அமணமலையின் தென்பகுதியில் இருந்த ஒத்தைப் பனையை தொட்டுத் திரும்பியது.

*

**கொ**ம்பூதிக் கூட்டம் ஒரு வாரமாகப் புளியமரத்தை விட்டு இறங்கவே

இல்லை. ஆள் மாற்றி ஆள் எந்நேரமும் மேலே இருந்தனர். ஊரின் கழுத்திலே சுருக்குப்போட்டு இழுப்பதைப்போல அந்தச் சாலை இருந்தது. எந்நேரமும் ஒரு பெரும்படை வந்துகொண்டேயிருப்பதைப் போன்ற தோற்றத்தை அது தந்தது. ஊர் இரவும் பகலும் விழிப்போடு பாதையை முறைத்துப் பார்த்தபடியே இருந்தது. செடிகொடிகளையெல்லாம் வெட்டி அப்புறப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் இருபதுக்கும் மேற்பட்ட மாட்டுவண்டிகளில் கல் உடைத்துக்கொண்டு வந்து சல்லிகளைப் போட்டு பரப்பினர். குளத்திலே தண்ணீர் எடுத்து வந்து ஊற்றி உருளைவடிவப் பெருங்கல்லொன்றை வைத்து உருட்டி எடுத்தனர். வாரக்கணக்கிலே வேலைகள் நடைபெற்றன. தினமும் காலையில் போலிஸ் படையுடன் வேலையாட்கள் வருவதும் மாலையில் திரும்பிச் செல்வதுமாக இருந்தனர். பழஞ்சிக்கரை வைத்தியரின் மூலிகைகள் குண்டடிபட்டவர்களின் காயங்களை ஆற்றியபடி இருந்தது. மாயிக்கு நினைவு பிடிபடவில்லை. புத்தி பேதலித்தவனாகவே ஆகிவிட்டான். வைத்தியரும் இனி மூலிகை மருந்துகளால் ஒன்றும் செய்யமுடியாது; கருப்பன்தான் காப்பாற்றவேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். குண்டடி பட்டவர்கள் ஆலமரத்தடியிலே வந்து உட்கார்ந்து சாலை போடுவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தனர். வெறி உச்சத்தலைக்கு ஏறியபடி இருந்தது. உடைந்த சல்லிக்கற்களை உருளைகள் உருட்டி அமுக்கியபடியே இருந்தன.

சாலையொன்று ஊர் மந்தையைப் பிடித்து எட்டிப்பார்த்தபடியே இருந்ததால் ஊர் பயங்கொள்ள ஆரம்பித்தது. கொம்பூதிகள் எந்நேரமும் புளியமரத்திலே இருந்தனர். தாதனூர் புதிய ஒற்றையடிப்பாதை ஒன்றை அமைத்துக்கொண்டது. வெள்ளைக்காரன் போட்ட சாலையை யாரும் மிதிக்கவில்லை. முறைத்துப் பார்த்தபடியே ஒற்றையடிப்பாதையில் போகவும் வரவுமாக இருந்தனர்.

காயங்கள் ஆறியபின் எழுந்து நடக்க ஆரம்பித்த மாயி நேராக சாலைக்குத்தான் போனான். ஊர்க்காரர்கள் அவனைப் பிடித்து நிறுத்தினர். ‘கிறுக்குப் பிடிச்சா எப்படியும் போவயாடா, ஒழுங்கா ஊர் பாதையில நடடா’ என்று சிலர் அமட்டியபடி அடிவைத்தனர். அதெல்லாம் அவனுக்குப்புரியவில்லை. ‘சரி, வுட்டுத் தொலங்கடா, அவெ போக்குல போகட்டும்; என்று விட்டுவிட்டனர். அவன் ஊர் மந்தையிலிருந்து சாலையை நோக்கிப் போனான். மந்தைக்கல்லில் உட்கார்ந்திருந்த எல்லோரும் பார்த்தபடி இருந்தனர். ‘டேய்...கிறுக்குப்பலே மாயி...வேணாம்டா. அது பெரியாம்பிள கெடாயனை பலியெடுத்த பாதடா...’ என்று அவனது ஆத்தாள் கத்தினாள். தாதனூரின் முதல் ஆளாக சாலையிலே காலடி எடுத்துவைத்து நடந்தான். ஊரே கண்ணீரும் கோபமுமாய் ‘அடேய்...மாயீ...’ எனக் கதறியது. அவனது கால்கள் பின்னிப்பின்னி நடப்பதுபோல் தெரிந்தது. ஒவ்வொரு அடியும் எடுத்துவைக்கும் பொழுது மண்ணைத் தள்ளி சல்லியை ஏத்திவிட்டபடியேதான் அவன் நடந்தான்.

மதுரை மாவட்டத்தில் கிராமமொன்றுக்கு போடப்பட்ட முதல் மெட்டல் சாலை இதுதான். தாங்கள் கேட்டவுடன் உரிய நிதி ஒதுக்கி சாலை அமைத்துக்கொடுத்த கலெக்டரின் பெயரில் ‘பென்னிங்டன் ரோடு’ என்று இதற்குப் பெயர் வைக்கலாம் என எஸ்.பி. பிராஸ்ஸின் கலெக்டருக்கு

கடிதம் எழுதினார். ரோடு போடும் பணி முழுவதுமாக முடிவடைந்தது. வீராயியின் அலறலைச் சுமந்தபடி தாதனூர் பார்த்துக்கொண்டே இருந்தது. வேலைக்கு வந்தவர்கள் சாலை முடிந்தவுடன் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டனர். சாலை ஆள் அரவமற்று அப்படியே கிடந்தது. மாயி மட்டும் இரவும் பகலும் சாலையைக் கால்களால் கிளறியபடி நடந்துகொண்டேயிருந்தான். மாலை நேரங்களில் ஊர்ப் பனையின் நிழல் சாலையை வெட்டுவதைப்போல் குறுக்கே விழுந்து கிடந்தது. வண்டிச்சக்கரங்களின் தடம் எதுவும் ஏறாமல் சாலை வாரக்கணக்கில் கிடந்தது.

'தாதனூருக்கு ரோடு போட்டாச்சு. இனி வெள்ளக்காரன் ஊருமென்னியைப் பிடிச்சு ஆட்டிருவான்' என்று நகரில் பலரும் பேசிக்கொண்டனர். ராமாயணச் சாவடியில் இரவெல்லாம் சீயான்மார்கள் துக்கம் விசாரித்துக்கிடந்தனர். தாதனூர்க் காரர்க ளிடமிருந்து பெரும் மௌனமே பதிலாக வந்துகொண்டிருந்தது. அமைக்கப்பட்ட சாலையை அவர்களால் ஒன்றும் செய்யமுடிய வில்லை. ஆனால் சாலை அமைக்க வரிந்து கட்டிக்கொண்டு நின்றவனைச் செய்ய முடிந்தது. அவன் அதிக நாள் தப்பிக்க முடியவில்லை. நினைத்த இடத்தில் நினைத்துப் போனவர்களின் கைகளில் எல்லாம் சிக்காமல் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராதவர்களின் கைகளில் சிக்கினான்.

வண்டியோட்டி ஓடி வந்து கச்சேரியில் சொன்னபொழுது போலிசார் நடுங்கிப்போனார்கள். யாரும் அதை நம்பவில்லை. வண்டியூர் கண்மாயின் மடையோரத்தில் அவரது உடல் ஒடுங்கிக் கிடந்தது. டி.எஸ்.பி. ஸ்டீபன்சன் நேரடியாக வந்து பார்த்தார். வயிறு குத்தி இருகூறாகக் கிழிக்கப்பட்டிருந்தது. குடல்கள் கோரைப்புல் தூரைப்போல தண்ணீருக்குள் கொத்துக் கொத்தாக மிதந்துகொண்டிருந்தன. இரண்டு பெண்கள்தான் இதனைச் செய்தனர் என்று வண்டியோட்டி சொன்னதை ஸ்டீபன்சன் நம்பவேயில்லை. தனது ஆபீசுக்கு கூட்டிப்போய் விசாரித்துப் பார்த்தார். அரண்டு போன அவனது வாயிலேயிருந்து உண்மைகள் கொட்டியபடியே இருந்தன.

இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளைக்கே இதுதான் கதி என்றால் நாமெல்லாம் என்னவாகப் போகிறோம் என்ற பயம் கச்சேரியில் பரவத்துவங்கியது. புல்லுக்கட்டு தூக்கிக்கொண்டு கண்மாய்க்குள் இறங்கிப்போன இரண்டு பெண்கள் குளித்துக்கொண்டிருந்த சேதுப் பிள்ளையின் வயிற்றைக் குத்திக் கிழித்து மிதக்கவிட்டுப் போய்விட்டார்கள் என்று வண்டியோட்டி சொன்ன உண்மையை யாரிடமும் சொல்லவேண்டாம் என டி.எஸ்.பி. கூறினார். அதற்குப்பதில் அவர் சொன்னதைப் போல ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி வாங்கப்பட்டது.

*

# 96

**ம**றுநாள் பெரும் போலிஸ் படையொன்று நாகமலையின் வண்டிப் பாதையிலிருந்து பென்னிங்டன் ரோட்டிலே திரும்பியது. புழுதி ஏகத்துக்கும் ஏறி வருவதைப் பார்த்த கொம்பூதி கொம்பை எடுத்து ஊதத்துவங்கினான். புளிய மரம் சிலிர்த்துத் தனது கரங்களால் எல்லாப் பக்கமிருந்தும் சடச்சியின் மக்களை அழைத்தபடி இருந்தது. படை வந்து சேர்வதற்குள் ஊரே திரண்டு மந்தைக்கு வந்து நின்றது. படை மந்தையோடு திரும்பினால் ஒரு நிலையும் மந்தையைத் தாண்டி ஊருக்குள் நுழைவதாக இருந்தால் ஒரு நிலையும் எடுக்க முடிவானது. தாதனூரின் நுழைவதாக இருந்தால் ஒரு நிலையும் எடுக்க முடிவானது. தாதனூரின் ஆணும் பெண்ணுமாக எல்லோரும் தயாரானர்கள். ரத்தம் புரளும் தனது தெருக்களைப் பார்க்க ஊர் உசுப்பேறி நின்றது. சிறுவர்களை எல்லாம் புளியமரத்துக்கு பின்னால் இருந்த கண்மாய்க் கரை மேட்டுக்கு போகச் சொல்லிவிட்டனர். ஊர்ப் பனைக்குப் பக்கத்தில் மாயி சல்லிக்கல்லை காலால் கிளறியபடி நடந்துகொண்டிருந்தான். சடை சடையாய் முடி தோளுக்குக் கீழே தொங்கியது. உடலெல்லாம் செம்மண் புழுதி படிந்து திட்டுத் திட்டாக இருந்தது. சிறு துணியொன்றால் கோவணம் கட்டியிருந்தான். பார்க்கவே விகாரமாக இருந்த அந்த உருவத்தைப் பார்த்து ரோட்டை விட்டு கீழே இறங்கும்படி முன்னால் நடந்து வந்துகொண்டிருந்த கச்சேரி போலிசார் சொன் னார்கள். அவனோ போலிசாரை பார்த்தவுடன் நறநறவென பல்லைக் கடித்துக்கொண்டு வேகவேகமாக வெளக்கு மாரைக்கொண்டு பெருக்குவதைப்போல இரண்டு கால்களாலும் சல்லிக்கற்களைப் புரட்டித் தள்ளினான். கச்சேரி போலிசார் அவனை விலக்கியபடி முன்னால் நடந்துபோனார்கள். அவர்களைத் தொடர்ந்து குதிரைப்படை போலிசார் வந்தனர். அவர்கள் பெரும்பாலும் வெள்ளையர்களாகவே இருந்தனர். அவர்களுக்கடுத்து இரு கருஞ்சிவப்பு நிற சாரட் வண்டிகள் வந்தன. அதற்குப் பின்னும் குதிரைப்படை போலிசார் வந்தனர். மிகப்பெரிய அணிவகுப்பை நடத்தியபடி போலிஸ் படை ஊருக்குள் நுழைந்தது.

மந்தை வந்த போலிசார் அணிவகுத்து நின்றனர். இடது பக்கமாக கச்சேரி போலிசும், வலதுபக்கமாக குதிரைப்படை போலிசும் நின்றனர். நீளமான குத்தீட்டிகளைக் கொண்ட துப்பாக்கிகளைக் கையோடு ஒட்டி தோளிலே சாய்த்தபடி பிடித்துக்கொண்டிருந்தனர். கருஞ்சிவப்பு நிற சாரட் வண்டிகள் போலிசாரின் இருபக்க அணிவகுப்புக்கு நடுவிலே வந்து நின்றன. உள்ளே இருந்து எஸ்.பி. பிராஸ்ஸின்னும் டி.எஸ்.பி. ஸ்டீபன்சனும் இறங்கினர். அவர்கள் இறங்கியவுடன் போலிசார் பெரும் சத்தம் எழுப்புவதுபோல் ஒருங்கிணைந்து கால்களைத் தூக்கி அடித்து சல்யூட் செய்தனர்.

ஊர் கோபத்தின் விளிம்பிலே நின்றுகொண்டிருந்தது. மந்தைக்கல்லை ஒட்டி ஆண்களின் பெருங்கூட்டமும் வலதுபக்க இரண்டு தெருக்களிலும் பெண்களின் கூட்டமும் நின்றுகொண்டிருந்தது. ஒரே ஒருவன் கல்லெறிந்து துவக்கினால் போதும், மொத்தமும் இறங்குவதற்குத் தயாரான நிலையில் இருந்தது. சாரட்டை விட்டு இறங்கிய எஸ்.பி. ஊர் முழுவதையும் பார்வையால் அளந்தார். இடதுபுறமாக அமணமலையைப் பார்த்தவாறு பின்புறம் திரும்பினார். அவருக்கு நேராகப் பின்னால் புளியமரத்தின் உச்சியில் கையில் பெரிய கொம்போடு ஒருவன் நின்றுகொண்டிருந்தான். போலிசின் படையையும் பலத்தையும் காட்டுவதற்காகவே நடத்தப்பட்ட அணிவகுப்பு போல அது இருந்தது. எஸ்.பி., டி.எஸ்.பி. இருவரும் மந்தையை நோக்கி அடியெடுத்து வைத்தனர். மந்தைக்கல்லிலே இருந்தவர்களுக்கு ரத்தம் கொப்பளித்து தலைக்கு ஏறிக்கொண்டிருந்தது. முப்பதுக்கும் அதிகமானவர்களைச் சிறைப் பிடித்துச் சென்றவர்கள் தங்களின் கல்லெறியும் எல்லைக்குள் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து நிலைகொள்ளாது தவித்துக்கொண்டிருந்தனர். ஊர் பெரியாம்பிள ஒச்சு முன்னால் நின்றுகொண்டிருந்தார். அவரை நோக்கி கையை நீட்டி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் பிச்சு வையர். நீட்டிய அவரது விரல் நடுக்கத்தை வெளிப்படுத்தாதவாறு இருக்க முயற்சி செய்தார். வண்டியூர் கண்மாயின் மடையோரத்தில் நிற்கிற உணர்விலேதான் அவர் நின்றிருந்தார். குப்புறமிதக்கும் பிணத்தை திருப்பிப் பார்த்தால் ஒருவேளை தனது உடலாக இருக்குமோ என்ற பயமும் நடுக்கமும் அவரை விழுங்கிக் கொண்டிருந்தது. மந்தைக்கல்லின் மையத்திலே நின்றுகொண்டிருந்த ஊர் பெரியாம்பிளையை நோக்கி டி.எஸ்.பியும் பிச்சுவையரும் வந்து கொண்டிருந்தனர். ஊர் விறைப்பு கொண்டபடி இருந்தது. கொம்பூதி கொம்பைத் தூக்கி வாயருகே கொண்டுபோகத் தயாரானான். சிறுவர்கள் கள்ளிச்செடிகளுக்குப் பின்னால் இருந்து உற்றுப்பார்த்தபடி இருந்தனர். பெண்கள் குலவை போட எத்தனித்தபடி காத்திருந்தனர். குலவைச் சத்தமா, கொம்புச்சத்தமா அல்லது கல்லெறியும் சத்தமா எது முதலிலே கேட்கப்போகிறது எனத் தெரியாத நிலை இருந்தது. உச்சி வெயிலில் அணிவகுத்திருந்த போலிசார் சீருடையில் விறைத்தபடி நின்றுகொண்டிருந்தனர். எஸ்.பி.பிராஸ்ஸின் மந்தையின் நடுவிலே ஊன்றப்பட்டிருந்த ஒற்றைக்கல்லின் மேல் இடதுகையை வைத்தபடி நின்றார். அது கல் இல்லை; சின்னானின் கழுத்து. அவன் மேல் எஸ்.பி. கையை வைத்தவுடன் சின்னானின் ரத்தம் எல்லோருக்குள்ளிருந்தும் குபு குபுவெனப் பொங்கியபடி இருந்தது. ஏதோயோசித்தவாறு கையை எடுத்து பின்புறம் திரும்பி புளியமரத்தைப் பார்த்தார். கொம்பூதி தயார் நிலையில்

இருப்பதைப் பார்த்த எஸ்.பி. நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் வானத்தை நோக்கி குத்தீட்டியை நீட்டியபடி தயார் நிலையில் இருப்பதையும் கவனித்தவராக மந்தைக்கல்லை நோக்கித் திரும்பினார்.

டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் அவர்களுடன் துப்பாக்கி போலிசார் ஆறு பேர் மந்தைக்கல் அருகே சென்றனர். டி.எஸ்.பி. சொல்லச் சொன்னதும் பிச்சுவையர் பேசினார். ‘இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளய கொலை செஞ்சவங்களை நாளைக்குள்ள கொண்டுவந்து கச்சேரியில் ஒப்படைக்கணும். இனி நீங்க காவலுக்கு நகரத்திற்குள்ள காலடி வச்சா ஒங்களை சுட்டுப் பிடிப்போம்’ என்று சொல்லிவிட்டு அவர்கள் திரும்பினர். ஊர் பெரியாம்பிள ஒச்சு ஒரு சிறு சைகை கூடகாட்டமல் இருந்ததால் அவர்கள் திரும்புவது சாத்தியமானது. மொத்தப் படையும் பின்பக்கமாகத் திரும்பி மந்தையை விட்டு வெளியேறியது. கொம்பூதி கொம்பைக் கீழே தணித்தான். கள்ளிச்செடிக்கு பின்னால் இருந்த சிறுவர்கள் குதிரை போவதைப் பார்த்தபடி மந்தைக்கு இறங்கிவந்தனர். இளவட்டங்களின் கூட்டமொன்று காட்டுவழியாக ஓடி அமணமலையிலே ஏறியது. ஊர்ப் பனையின் பின்புறமிருந்த பாறையின் மறைவிலே நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். போலீஸ்படை அதேபோல அணிவகுத்துப் போய் நாகமலையின் வண்டிப்பாதையில் திரும்பியது.

*

**‘சு**ட்டுப் பிடிப்போம்‘ என்ற சவாலை சந்திக்க தாதனூர் தயாரானது. என்ன ஆனாலும் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று முடிவெடுத்தனர். ஏதாவது சேதாரம் நேர்ந்தால் கச்சேரியை மொத்தமாக அழிப்பதற்கான ஏற்பாடுகளுடன் அவர்கள் புறப்பட்டனர். இரவு அவர்களை நகரத்தை நோக்கி அழைத்தபடி இருந்தது. வழக்கமான பாதைகளில் போனாலும் இதுவரை இல்லாத கோபத்தோடு மிதி விழுந்தது. கண்மாய்க்கரை வண்டிப்பாதைகள் தாதனூரின் வேகங் கண்டு பயந்துகிடந்தன. ஊர் திரண்டு நகருக்குள் போனது. அவுட் போஸ்ட் போலிசார் நகருக்குள் நுழைபவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டபடி இருந்தனர். வழக்கம்போல் மூன்று குழுவும் மொத்தமாக உள்ளே போனது. மூன்றாவது குழு போனவுடன் எண்ணிக்கையைக் குறித்துக்கொண்ட போலிஸ் ஒருவன் குதிரையில் ஏறி மேலதிகாரிக்குத் தகவல் சொல்லப்புறப்பட்டான். அவன் புறப்பட்டுப் போகத் தயாராக இருந்த நிலையில் இன்னொரு போலிஸ் ‘கொஞ்சம் பொறு’ என்று அவனை நிறுத்தினான். அவுட்போஸ்ட்டில் இருந்த பன்னிரண்டு போலிசாரும் மேற்கே பொன்மேனியின் காட்டுப்பக்கம் உற்றுப்பார்த்தபடி இருந்தனர். தீப்பந்தங்கள் எதுவுமில்லை. ஆனால் மனிதக்கூட்டமொன்று வருவதை அவர்களால் உணரமுடிந்தது. கொஞ்ச நேரத்திற்குப் பின் முதலிலே போனதைப்போல இன்னொரு மூன்று குழு மதுரைக்குள் நுழைந்தது. ஆட்களை எண்ணமுடியவில்லை. பயம் போலிசாரை கவ்விப்பிடிக்க ஆரம்பித்தது. வழக்கம்போல் காவலுக்கு வருவதை விட இரண்டு மடங்கு பேர் நகருக்குள் நுழைந்தனர் என்ற செய்தியைச் சொல்ல குதிரையை விரட்டிக்கொண்டு ஒருவன் ஓடினான். அவன் போய் கொஞ்ச நேரத்தில் இன்னொரு கூட்டம் வந்துகொண்டிருந்தது. அவுட்போஸ்ட் போலிசார் அதிர்ச்சியில் உறைந்துகொண்டிருந்தனர். கூட்டம் அருகே வரவர அவர்களுக்கு நடுக்கம் கொடுக்க ஆரம்பித்தது. மூன்று தீப்பந்தத்தை

வைத்துக்கொண்டு ஊரைவிட்டு வெளியே உட்கார்ந்திருக்கிற தங்களுக்கு எந்த நாதியுமில்லை என்று அவர்களுக்குத் தெரியும். கையிலுள்ள பன்னிரண்டு துப்பாக்கிக்கும் என்ன ஆயுள் என்பதையும் அவர்கள் அறிந்தே இருந்தனர். அதனால் பயம் அதிகரித்தது. மூன்றாவது கூட்டம் முழுவதும் பெண்களின் கூட்டமாக இருந்தது. தலைமயிரும் தண்டட்டியும் காற்றிலே ஆட பொன்மேனியின் உடைமரக்காட்டு ஓடையிலிருந்து படைதிரட்டி வீராயி புறப்பட்டு வந்திருப்பதைப்போல அவர்கள் வந்திருந்தனர். அவர்கள் நகருக்குள் நுழையாமல் ரயில்வே ஸ்டேசனுக்குப் பின்புறமிருந்த இருட்டடியிலே உட்கார்ந்து கொண்டனர். நடுங்கிப்போன போலிசார் அவுட்போஸ்ட்டை காலி செய்துவிட்டு நகரத்திற்குள் நுழைந்தனர்.

இதுவரை காவக்காரர்களை மட்டுமே நகருக்குள் அனுப்பிவைத்த தாதனூர் இப்போது களவுக்குப் போகிறவர்களையும் நகருக்குள் அனுப்பி வைத்தது. தனது காவல் உரிமையை நிலைநாட்டுவதற்கான கடைசிப்போருக்கு அன்று படை திரட்டி வந்திருந்தது. பெரியாம்பிள மாயாண்டி இல்லை, சின்னான் இல்லை, வீரணன் பெரியாம்பிள இல்லை, கெடாயன் இல்லை. மகா தைரியசாலிகளும் கெட்டிக்காரர்களும் இல்லாமல் போனார்களே என்ற ஏக்கமும் கோபமும் ஒவ்வொருக்குள்ளும் கொப்பளித்தபடி இருந்தது.

நகரத்து வீதிகளை உண்டு இல்லையெனப் பார்த்துவிடும் முடிவோடு இருளை உலுப்பி எடுத்துப் போய்க்கொண்டிருந்தனர். காவக்கம்புகளின் அசைவில் நான்மாடக்கூடலின் காற்றும் நடுங்கியது. களவுக்குப் போகும் நூற்றுக்கணக்கான கைகள் நகரத்தின் பெருங்கட்டிடங்களைத் தொட்டுத் தடவியபடி இருந்தன. களவு வெறியேறிய கண்கள் இருளுக்குள் புதைந்து கிடந்த நகரத்துப் பெருவீதிகளைச் சுருட்டி உள்ளுக்குள் இழுத்துக்கொண்டிருந்தன. பெரும் கொள்ளைக்கும் மாபெரும் தாக்குதலுக்கும் இடையில் கத்தி முனையின் மேல் நகரத்தின் இரவு நடந்துகொண்டிருந்தது.

நடுச்சாமத்தில் பெண்களின் குலவை ஒலி மேற்கிலிருந்து பெருக்கெடுத்து வந்தது. வீராயியின் நாக்கு இருளின் அடுக்குளை சடசடவென மதுரையின் மீது அடித்து உதறிப்போட்டது. செல்வந்தர்கள் எவ்வளவு இறுக்கமாக அடைக்கமுடியுமோ அவ்வளவு இறுக்கமாகக் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துக்கொண்டனர். ஆனாலும் களவின் காலடி ஓசை அவர்களின் காதுகளுக்குக் கேட்டபடியேதான் இருந்தது.

வகுக்கப்பட்ட திட்டத்தை அன்று நிறைவேற்ற வேண்டாமென கலெக்டரிடம் எஸ்.பி. பிராஸ்லின் ஒப்புதல் பெற்றுத் திரும்பினான். தலைக்கோழி கூவியது. ரெட்டிய கொடுத்த வெள்ளி பிரகாசமாய் மின்னியபடி இருந்தது.

*

**அ**டுத்த மூன்று நாட்களுக்கு அதே நிலை நீடித்தது. காவக்கம்புகள் தரையிலே ஊன்றாமல் இருளிலே நீந்தியபடியே வந்துகொண்டிருந்தன. ராமாயணச் சாவடி, செல்லத்தம்மன் கோவில் செக்கடி, மைனா தெப்பக்குளத்து ஆலரமரத்தடி என மூலைக்கு முலை குவித்து

வைக்கப்பட்டிருந்த கற்களின் அளவு ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டேயிருந்தது. முதல் இரண்டு நாட்களும் போலிஸ் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததும், தாதனூரே திரண்டுவந்தது என்பதும் நகரெங்குமான பேச்சாக இருந்தது. போலிஸ் பின்வாங்கி விட்டதைப் பற்றியே பலரும் விவாதித்தனர். பேச்சு தாதனூரின் காதுக்கும் எட்டியது. ஆனாலும் நிலைமையைக் குறைத்து மதிப்பிட காவக்காரர்கள் தயாராக இல்லை. மூன்றாம் நாள்களவுக்குப் போகிற எல்லோரையும் கூட்டிக்கொண்டு நகருக்குள் வந்தனர். இரண்டு மடங்கு அதிகமாக்கப்பட்ட அவுட்போஸ்ட் போலிசார் ஆறு குழுக்களையும் கவனித்தபடி இருந்தனர். ஆனால் அதன்பின் வரவேண்டிய பெண்களின் கூட்டம் வரவில்லை. நீண்டநேரம் இருந்து பார்த்துவிட்டு தகவலைச் சொல்ல ஒரு போலிஸ் புறப்பட்டுப் போனான்.

ஊர் பெரியாம்பிள ஒச்சு, தான் காவல் பார்த்த வெளிவீதியில் இரண்டு நாள் இரவும் அலைந்துகொண்டேயிருந்தார். இன்றுதான் வந்து ராமாயணச் சாவடியில் உட்கார்ந்தார். பழைய சீயான்மார் களையெல்லாம் குசலம் விசாரித்தார். தாது முடிந்து மதுரைக்காவல் நிலைபெறுவதற்குள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் ஒச்சுவின் உடம்பெங்கும் பெருவடுக்களாக உறங்கிக்கொண்டிருந்தன. தழும்புகளின் வழியே வளர்ந்து போகும் பனைமரம் போலத்தான் அவரது வாழ்க்கையும். தகப்பன் மாயாண்டியைப் போல அவரிடமும் சொல்ல ஓராயிரம் கதைகள் உண்டு. எல்லாவற்றையும் மனதிற்குள் அசை போட்டபடியே சாவடியில் வந்து உட்கார்ந்தார். அவரைச் சுற்றி காவலுக்கும் களவுக்குமான இளவட்டங்கள் எல்லாம் உட்கார்ந்தும், நின்றுகொண்டிருந்துமிருந்தனர். பெரியவர் தானப்பக் கோனார் ஒச்சுவிடம் வாஞ்சையோடு பேசிக்கொண்டி ருந்தார். அவர்கள் காலத்து நினைவுகள் சாவடியின் படிக்கட்டிலே உருண்டு ஓடிக்கொண்டிருந்தன. ‘வீரண பெரியாம்பிள போல ஒரு வைராக்கியமான ஆள் இனி கெடப்பானப்பா!’ என்று தானப்பக்கோனார் கேட்டுக்கொண்டிருந்தார். ‘கும்பாபிஷேகத்தப்ப நடந்த செய்கை எல்லாம் என்ன மாதிரி...மகாகெட்டிக்காரம்ல. அதுக்கு முன்னயும் பின்னயும் அப்படியொரு கொள்ள மருதயில நடக்கல’ என்றார்.

‘நேத்தோ முந்தானேத்தோ நடந்திருக்கும்.’

‘காவக்காரனே அடிக்க நெனச்ச ஊர் எப்படியப்பா தாங்கும்’ என்றார் தானப்பக் கோனார்.

செக்கடியில் இருந்து ஐந்து பேர் வந்ததும் மைனா தெப்பக்குளத்து ஆலமரத்தடிக்கு ஐந்து பேர் புறப்பட்டுப் போனார்கள். இவர்கள் அங்குபோனதும், அங்கிருந்த ஐந்து பேர் செக்கடிக்குப் புறப்பட்டு வருவார்கள். சரியான கால அளவில் இந்தச் சுழற்சி நடந்துகொண்டேயிருந்தது. பெரியாம்பிள பேசியபடியே பொழுதைக் கணித்துக்கொண்டிருந்தார். உள் சந்துகளின் வழியே குறுக்குவெட்டுப் பாதையில் ஒரு கூட்டம் போய்வந்துகொண்டிருந்தது. உச்சிப்பொழுதேறி இருள் சரிய ஆரம்பித்தது. சாட்டைக் கம்பு வெள்ளி நன்றாகத் தெரிந்தபடி இருந்தது. சாவடியில் இருந்து காவக்காரக் கூட்டம் கலைய ஆரம்பித்தது. இரண்டிரண்டு கூட்டமாக ஆறு கூட்டமும் நகரத்தைவிட்டு வெளியேறியனர். கரிச்சான் கரையும் பொழுது உடைமரக்காட்டு ஓடையைக் கடந்துவிட்டனர். வழக்கத்தைவிட கொஞ்சம் முன்னதாகவே

இன்று ஆலமரத்தடிக்கு வந்துசேர்ந்தனர்.

*

**கை,** கால், வாய் மூன்றும் கட்டப்பட்ட நிலையில் அவனைக் குதிரையின் மீது போட்டுக்கொண்டு யார் கண்ணிலும் படாமல் ஆறுபோலிசாரும் நகரை விட்டு வெளிப்புறமாகச் சுற்றி மாடக்குளம் கண்மாயைக் கடந்து பெரும் மேடு ஒன்றிலே வந்து நின்றனர். கட்டப்பட்டவனைக் குதிரையில் இருந்து இறங்கி நிறுத்தினர். நேராக அவனைப் பார்த்தபடி பத்தடி தள்ளி நின்றுகொண்டு ஒரு போலிஸ் அவனது மார்பை நோக்கி துப்பாக்கியால் குறி பார்த்தான். அவன் கால்களைப் பின்புறமாகத் திருப்பி ஊரைப்பார்த்து நின்றான். ஊர் பெரும் அமைதியுடன் இருந்தது. ஆலமரத்தில் இருந்து கரிச்சானும் அக்காக்குருவியும் கத்தும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. நரம்புகள் விடைத்தபடி பிதுங்கியிருந்தன. சின்னானைப் போலவே வெறித்த பார்வையுடன் சடச்சிபொட்டலை அவன் கண்கள்தேடின. துப்பாக்கி விசையை போலிஸ் அழுத்தினான்.

அமணமலை முழுவதும் ஓசை எதிரொலித்தது. ஆலமரத்துப் பறவைகள் சத்தம் கேட்டுக் கலைந்தன. ஊர் தீப்படித்தைப்போலத் துடித்து எழுந்தது. கொம்பூதி கொம்பை எடுத்து ஊதினான். எல்லோரும் மந்தைக்கு ஓடிவந்தனர். கோழி கூப்பிடும் நேரத்திலே கேட்ட குண்டுச்சத்தம் நிலைமையை அறியமுடியாமல் தடுமாற வைத்தது. இருள் மெல்ல அவிழத் துவங்கியிருந்தாலும் கொம்பூதிக்கு காட்சிபிடிபடவில்லை. நகரத்தை விட்டு மிகத்தள்ளி ஊருக்கு அருகாமையில் சத்தம் கேட்ட பகுதியை உற்றுப்பார்த்தபடியே இருந்தான். யாரும் எந்தக் கூட்டமும் இருப்பதைப் போலவோ வருவதைப் போலவே தெரியவில்லை. ஊர் தயாராக இருந்தது. காக்கைகள் கரைந்து வானில் நீலம் பூக்க ஆரம்பித்தவுடன் எல்லோரும் சத்தம் கேட்ட கிழக்கு திசை நோக்கிப்புறப்பட்டனர். தகுந்த ஆயுதங்களோடு அவர்கள் ஓடிச்சென்றனர். அந்த வெளியெங்கும் தேடித்திரிந்த அவர்களால் எதையும் கண்டறிய முடியவில்லை. மாடக்குளம் கண்மாய்க்கரையில் இருந்த பெண் ஒருத்தி ‘பெருமேட்டுப்பக்கம் தான்யா சத்தம் கேட்டுச்சு’ என்று குறிப்பு சொன்னாள். எல்லோரும் திரும்பி கண்மாய்க்குள் நடந்து அங்கே சென்றனர். பெரிய வேம்பு நின்றுகொண்டிருந்தது. அதற்குக் கீழ் படர்ந்து கிடந்த பாறை வடக்கு தெற்காக நாலு வெடிப்பு விட்டு மடித்துவைக்கப் பட்டதைப் போலக்கிடந்தது. வேப்பமரத்தை நோக்கி அவர்கள் வேகமாக வந்தனர். மரத்தின் மீது காக்கைகள் விடாமல் கரைந்து கொண்டேயிருந்தன. அறிகுறிகள் அவர்களுக்கு விஷயத்தை உணர்த்தின. தூரத்திலே ஏதோ தென்பட ஆரம்பித்தது. அவர்கள் அருகில் வந்தனர். பின்புறம் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒருவன் குப்புற விழுந்து கிடந்தான். ரத்தம் பாறைகளின் வெடிப்புகளில் வழிந்து உறைந்திருந்தது. பெரிய கட்டெறும்புகள் உறைந்த ரத்தத்தின் அருகே மொய்த்தபடி இருந்தன. கருஞ்சிவப்பு நிறத்தில் தேங்கிக்கிடந்த ரத்தத்தின் மீது மஞ்சள் நிற வேப்பம்பூக்கள் பாதி மூழ்கியபடி உதிர்ந்துகிடந்தன. எல்லோரும் வந்து பாறையில் ஏறினர். கோபமும் சோகமும் உருத்திரள ஆரம்பித்தது. கருத்துத் திரண்ட பெருந்தேகம், இடுப்பிலே ஒரு சிறு துணி, தலைமுடி விரிந்து காற்றிலே அசைந்தபடி இருந்தது. யாரென்று சட்டென பிடிபடவில்லை. ‘தூக்கிப்பாருங்கடா’ என்று பின்னாலிருந்த கிழவி ஒருத்தி

கத்தினாள். பெரியாம்பிள ஒச்சு மண்டியிட்டு உட்கார்ந்து அவன் தோள்கள் இரண்டையும் பிடித்து மேலே தூக்கித் தனது மார்போடு சாய்த்துப் பிடித்தார். நெஞ்சுக்கூடு முழுவதும் பொத்துக்கொண்டு போயிருந்தது. தோள்பட்டையில் மட்டுமே சதை இருந்தது. ரத்தத்தில் நனைந்து திரள் திரளாகச் சுருண்டு கிடந்த முடியை முகத்திலே இருந்து விலக்கினார்.

‘நம்ம மூக்கன்டா...’ பாறை வெடிப்பதைப்போல குரல் வெடித்து வந்தது. நெஞ்சோடு சாய்த்தபடி பெரியாம்பிள ஒச்சு அப்படியே உட்கார்ந்தார்.

*

**அ**ன்றைய பகல் முழுவதும் போலீஸார் உஷார் படுத்தப்பட்ட நிலையிலே இருந்தனர். எஸ்.பி. பிராஸ்ஸின் இரண்டு முறை கலெக்டரை அவரது மாளிகையில் வைத்து சந்தித்துவிட்டு வந்தார். டி.எஸ்.பி. ஸ்டீபன்சனின் குதிரை கச்சேரிக்கும் எஸ்.பி.பங்களாவுக்கும் இடையே போய்வந்தபடியே இருந்தது. ஆங்கிலேயர்களின் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த ரிசர்வ் போலிசார் போக மீதமிருந்த அனைவரும் நகருக்குள் அனுப்பப்பட்டனர். குதிரைப்படை போலிசாரும் ரிசர்வ் போலிசாரும் இதுவரை இல்லாத அளவு பகலிலே அங்குமிங்குமாகத் தென்பட்டபடி இருந்தனர். ஏதோ பிரச்சனை நடந்திருக்கிறது, அல்லது நடக்கப்போகிறது என நகரவாசிகள் ஊகித்து அறிந்தனர். ஒருவரை ஒருவர் விசாரித்தபடி இருந்தனர். கச்சேரி போலிசாரிடமிருந்து விஷயம் மெல்லக் கசிந்தது. வெடிப்புற்ற பாறையில் ரத்தம் ஊறிப் பரவியதைப் போல அது பரவியது. ரத்தம் சிந்தப்பட்டதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியானவர்கள் வரப்போகும் இரவைக் கண்டு நடுங்க ஆரம்பித்தனர். பகல் நான்மாடக்கூடலை விட்டு விலகியபடி இருந்தது. அதிகமான தீப்பந்தங்களைக் கட்டி கச்சேரி போலிசார் தயார் நிலையில் வைத்திருந்தனர்.

அவுட்போஸ்ட்டில் இரண்டு மடங்கு அதிகமான குதிரைப்படை போலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர். இரவுக்குள் நகரம் மூழ்கியபடி இருந்தது. பேச்சொலிகள் குறைந்தன. வீதிகளின் மூலைகள் எல்லாம் விளக்குகள் எரிந்தன. சரக்குகளை ஏற்றி வந்த மாட்டுவண்டிகள் அன்று அவசர அவசரமாக நகரத்தை விட்டு வெளியேறின. பகலிலேயே செய்தி பரவியதால் மதியத்திற்குப் பின்பே இரவுக்கான தயாரிப்புகளில் முக்கியஸ்தர்கள் பலரும் ஈடுபடத் துவங்கினர். கிராமங்களில் விவசாயத்தைப் பார்த்துவருவதாகச் சொல்லி மாலையிலே போன பலர் இரவு நகருக்குத் திரும்பாமல் அங்கேயே தங்கினர். சேர்மன் தில்லைவனம் பிள்ளையின் நிலைமை பெரும்பாடாக இருந்தது. அவரால் நகரத்தைவிட்டு வெளியேற முடியவில்லை. வீட்டுக்குள் இருக்கவும் முடியவில்லை. அவரது வீடு சின்னக்கடை வீதியின் எதிர்முனையிலே இருக்கிறது. அது மூக்கனின் காவல் வீதி. அன்றிரவு அந்த வீட்டில் இருப்பது பற்றி அவரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் கடைசியில் தனது நண்பனும் தாதனூருக்கு எதிரான செயல்பாட்டின் சூத்திரதாரியுமான இன்ஸ்பெக்டர் பிச்சுவையரின் வீட்டிலே போய் தங்கினார்.

திருநெல்வேலியிலிருந்து வந்த ‘மெட்ராஸ் மெயில்’ பெரும் விசில் சத்தம் ஒன்றைக் கொடுத்தது. சக்கரங்கள் மெல்ல சுழலத் துவங்கின.

புகையை முட்டித்தள்ளியபடி பெரும் சத்தம் எழுப்பி நகர்ந்தது. சதுரம் சதுரமாய் தெரிந்த மஞ்சள் நிற விளக்கொளி இழுபட்டு இழுபட்டு வடக்கு நோக்கிப் போனபடி இருந்தது. வழக்கத்தைவிட இரு மடங்குபேர் மதுரை ஸ்டேஷனில் அன்று ரயிலேறினர். சோழவந்தான், வாழப்பட்டி, திண்டுக்கல் என பக்கத்து ஊருக்கு பலரும் அவசர அவசரமாய் ரயிலேறிப் போயினர். வண்டி வைகையின் பாலத்தை கடக்கிற சத்தம் நகர் முழுவதும் அதிர்ந்து அடங்கியது. நகரை விட்டு வெளியேறுவதற்கான கடைசி வாய்ப்பும் கடந்தது. இருள் பெரும் அமைதியைக் கொண்டு நகரத்தை அழுத்திக்கிடந்தது. ஸ்டேசன் மாஸ்டர் பாதுகாப்புடன் தனது வண்டியிலே ஏறி குவார்ட்டர்ஸுக்கு திரும்பினார். இனி அடுத்த ரயில் நாளை பகல் 11.30 மணிக்குத்தான். அதுக்குள் மதுரை என்ன பாடு படப்போகிறதோ என்ற பயத்துடன் வீட்டுக்குள் நுழைந்தார். குவார்ட்டர்ஸ் சுற்றுச்சுவருக்கு அடுத்து இருந்தது அவுட்போஸ்ட். வழக்கத்தைவிட பலமடங்கு போலிசார் அங்கே இருந்தனர். இரவு உருத்திரண்டு சூல் கொள்ள ஆரம்பிக்கிற நேரத்தில் வழக்கம் போல் தாதனூர்க்காரர்கள் வர ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு குழுவாக மூன்று குழுவும் உள்ளே போனது. அதனையடுத்து கொஞ்ச நேரத்தில் அடுத்த மூன்று குழுவை எதிர்பார்த்து போலிசார் உன்னிப்பாக கவனித்தபடி இருந்தனர். நேரம் கடந்து கொண்டிருந்தது. மேற்குத்திசையில் பரவியிருந்த இருள் எந்த சமிக்ஞையும் கொடுக்கவில்லை. காவக்காரர்கள் மட்டுமே மூன்று குழுவாக உள்ளே சென்றுள்ளனர். வேறு யாரும் வரவில்லை. நள்ளிரவு வரை காத்திருந்து பார்த்தபின் இந்தச் செய்தியை மேலதிகாரியிடம் சொல்ல அவுட்போஸ்ட் போலிஸ் ஒருவன் புறப்பட்டுப் போனான். போலிஸ் அதிகாரிகளுக்கு விஷயம் பிடிபடவில்லை. இதுவரை வந்ததில் பாதிப் பேர்தான் இன்றைக்கு நகருக்குள் வந்துள்ளனர். அப்படியென்றால் தாதனூர் என்ன செய்யப்போகிறது என்று யோசித்தபடி இருந்தனர். இருள் மர்மம் நிறைந்ததாக மாறியது. பரவிக்கிடக்கும் பேரிருளுக்குள் நடுவே சிறுத்துக்கிடந்த நகரமாக மதுரை இருந்தது. வெளியெங்கும் இருள் அமைத்துள்ள பாதைகளைக் கட்டுப்படுத்த போலிசிடம் என்ன இருக்கிறது? குத்தீட்டியை கொண்ட துப்பாக்கியைத் தூக்கியபடி பரபரப்பின் ஆடைகளை அணிந்து அவர்கள் நடந்து திரிந்தனர்.

காவக்காரர்களோ வழக்கம்போல் காவல்வீதிக்குப் போனார்கள். சின்னக்கடை வீதிக்கு நேற்று இறந்த மூக்கனின் பதினான்கு வயது மகன் நல்லாண்டி வந்திருந்தான். காவக்காரர்கள் அற்ற வீதிகள் எதுவும் இல்லை. எல்லா வீதிகளிலும் அலைந்து திரிந்த சடச்சியின் மக்கள் சாட்டக்கம்பு வெள்ளி விழுந்ததும் புறப்பட்டுப் போயினர். கிடைபோட்டுக்கிடந்த இருள் அவர்களின் பாதடி விலகியதும் கலைய ஆரம்பித்தது.

*

ஒரு வாரம் அப்படியே கடந்தது. தாதனூரின் மௌனத்தையோ தந்திரத்தையோ புரிந்துகொள்ள முடியாமல் போலிஸ் திணறியது. ராமாயணச் சாவடியின் வழியே விஷயத்தை உருவியெடுக்க எஸ்.ஐ.ஆறுமுகத்தாபிள்ளை எவ்வளவோ முயற்சித்தார். அது எதுவும் நடக்கவில்லை. வழக்கம்போல் காவக்காரர்கள் மட்டும் வந்துசெல்லும் நகரமாக மதுரை மீண்டும் மாறியது. அவுட்போஸ்ட் போலிசார்

மேலதிகாரிகளுக்கு குறிப்பிட்டுச் சொல்ல விஷயமற்றதாக இரவுகள் இருந்தன.

பதினோராம் நாள் நள்ளிரவுக்குப்பின் எல்லாம் சரியாகக் கைகூடியது. கலெக்டர் பங்களாவுக்கு அடுத்த மூன்றாவது கட்டிடத்தின் வெளிச்சுவரை ஓசைப்படாமல் கடந்து உள்ளே சென்றனர். மாடியில் இரண்டு அறைகளிலும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. மரங்கள் சூழ்ந்த அந்த பங்களா கும்மிருட்டுக்குள் இருந்தது. முன்புறத்து வாசலில் துப்பாக்கி போலிசார் காவலுக்கு இருந்தனர். பங்களாவின் பின்புறம் சுற்றுச்சுவரை ஒட்டிய புங்கமரம் ஒன்றில் ஏறி மேல்மாடியில் வந்து இறங்கினர். மாடிக்குப் போடப்பட்ட படிக்கட்டுப்போலவே மரத்தின் அமைப்பு இருந்தது. பறவைகளின் குரலின்றி மரம் அமைதி காத்தது. திட்டமிட்டு வந்ததைப் போலவே நடுமையத்து கல்லை உருவியெடுக்க கூனனும் பேயனும் வேலையைத் துவக்கினர். கல்லை வெகுவிரைவில் உருவி எடுத்தனர். உள்ளே போன கூனன் வெளிப்புறம் வரும் வாசல் கதவைத் திறந்துவிட்டான். ஒருவர் பின் ஒருவராக ஆறு பேரும் உள்ளே நுழைந்தனர். விசாலமான பெரிய அறையை ஒட்டி இரண்டு சிறு அறைகள் இருந்தன. இரு அறையில் விளக்கின் வெளிச்சத்தை நன்றாகக் குறைத்துவிட்டு குழந்தையைக் கட்டிப்பிடித்தபடி வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி படுத்திருந்தாள். விளக்கின் வெளிச்சத்தில் இரண்டாம் அறை மிதந்துகொண்டிருந்தது. எதிர்பார்த்து வந்தவன் அந்த அறையில் தான் இருக்கிறான் என நினைத்த ஆங்கன் கண்ணாடிக் கதவின் வழியே எட்டிப்பார்த்தான். எதிர் எதிர் நாற்காலியில் அமர்ந்து இரண்டு வெள்ளையர்கள் பேசிக்கொண்டிருந்தனர். ஆங்கன் தலையை மெல்லப் பின்னால் இழுத்தான். இறங்கிய கிருதா, நறுக்கிய மீசை, ஏறிய நெற்றி, வெளிறிய முகம். இதில் நாம் தூக்கவேண்டியது யாரை? என்ற குழப்பம் வந்தது. பேயனுடன் சைகையில் பேசிய ஆங்கன் இருவரையும் தூக்கலாமா என்று கேட்டான். அந்த நேரத்தில் படிக்கட்டுகளின் வழியே பீங்கான் குவளை, இரண்டு டம்ளர்களை பெரிய தட்டு ஒன்றில் வைத்துக் கையில் பிடித்தபடி அதிகாரிகளுக்கு டீ கொடுக்க மேலேறிவந்தான் பட்லர். சட்டென எதிர்பாராத விதமாகக் கதவைத் திறந்து அறைக்குள் நுழைந்தான். ஆறேழு பேர் ஆயுதங்களோடு அரையிருட்டில் அந்தஅறை முழுவதும் நின்றுகொண்டிருந்தனர். வந்தவனையும் இருந்தவர்களையுமாக எல்லோரையும் பெரும் அதிர்ச்சி கவ்விப் பிடித்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு அந்த அறையையே சூறையாடியது. பெரும் அடிதடியோடு களவைக் குலைத்துவிட்டு தப்பித்து வெளியேறினர். பொத்துனாப்புல தூக்கி வருவது என்ற முடிவு நிறைவேறாததால் முடிந்த அளவு அடித்து நொறுக்கிவிட்டு தாவிக் குதித்தனர். கண்டிப்பாக மூன்று பேரில் ஒருவனாவது சாவான் என்ற நிம்மதியோடு தான் திரும்பிவரும் அவர்களின் ஓட்டம் இருந்தது.

ஆனால் பம்பையன் கொத்துக்கு எல்லாம் சரியாகக் கைக்கூடியது. வீட்டு மொட்டைமாடியில் சாய்வு நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்தவரை ஒரு அடி அடித்து மயங்க வைத்து குண்டுகட்டாகத் தூக்கி வந்தனர்.

*

**வி**டிவெள்ளி முளைக்கிற நேரம் புளியமரத்திலிருந்து கேட்ட

கொம்புச்சத்தம் ஊரையே உசுப்பியது. எல்லோரும் திரண்டு ஆலமரத்தடிக்கு வந்தனர். கரிச்சான் கத்தியபடி இருந்தது. ஆள் போய் தகவல் சொன்னதால் நகரத்திலிருந்த காவக்காரர்கள் வழக்கத்தைவிட முன்னதாகவே புறப்பட்டு வந்தனர். ஊரே திரண்டு ஆலமரத்தை ஒட்டிய பாறையில் ஏறித் தயாராக இருந்தது. திட்டமிட்டதில் ஒருவனைத்தான் தூக்கிவர முடிந்தது என்ற கோபம் செயலை இன்னும் வேகப்படுத்தியது. பெரியாம்பிள ஒச்சு கல்லொன்றை எறிந்து ஊர் எறியைத் துவக்கி வைத்தார். இளவட்டத்தில் கூட இவ்வளவு வேகமான ஒரு எறியை அவர் எறிந்திருக்க மாட்டார். முதல் எறியிலேயே பனை அசைந்தது. தொடர்ந்து ஊரே கல்லெடுத்து எறிய ஆரம்பித்தது. கற்கள் காற்றைக் கிழித்தபடி பாய்ந்தன. ஒவ்வொரு கல்லும் உயிரை வாங்குவதைப் போன்ற வேகத்தோடு போயின. பாறை முழுவதுமிருந்து தாதனூர்க்காரர்கள் வெறியெடுத்த வேகத்தில் மாறி மாறி எறிந்தனர். ஒரு கல் கூட குறி தவறவில்லை. சிந்திய மூக்கனின் ரத்தத்திற்கு இது பதிலாக இருந்தது. எவ்வளவு எறிந்தாலும் ஆத்திரம் அடங்கவில்லை. ‘தள்ளுங்கடா டேய்...’ என தண்டட்டி கிழவிகள் வந்து காற்றைக் கிழித்தவாறு கல்லை எறிந்தனர். ஆணும் பெண்ணும் மாறி மாறி எறிந்து தள்ளினர். காவக்காரர்களில் வேறு யாரைச் சுட்டுக் கொன்றிருந்தாலும் ஊர் இவ்வளவு ஆத்திரப்பட்டிருக்காது. சின்னானின் மரணத்தையே இன்னும் ஜீரணிக்க முடியாமல் இருக்கும் ஊர் அவன் பேரன் மூக்கனின் மரணத்தை எப்படி உள்வாங்கும்? ஒவ்வொருவனும் வீசும் கல்லின் எறி பொறுக்க மாட்டாமல் இருள் விலகி ஓடியது. பொன்மேனி பழஞ்சிக்கரை என சுத்துப்பட்டுக் கிராமத்துக்கெல்லாம் சத்தம் கேட்டபடி இருந்தது. வழக்கமாக எப்பொழுதாவது நடக்கும் ஊர் எறி பகலில்தான் நடக்கும். ஆனால் இருள் அழியாத அதிகாலையில் ஊரே கூடி எறிகிற சத்தம் எங்கும் கேட்டபடி இருந்தது. அந்தப் பகுதி முழுவதும் பறவைகள் நிலை கொள்ளமுடியாமல் கத்திக் குரலெழுப்பி வானில் வட்டமிட்டன. பொத்துக்கொண்டு போன மூக்கனின் நெஞ்சுக்கூடு போலவே எதுவும் இல்லாமல் அந்த உடல் முழுக்கவும் ஆனது. ஆனாலும் கல்லெறியின் வேகம் குறையவில்லை. வெளிச்சம் கூடக்கூட வேகம் கூடியபடி இருந்தது. சூரிய ஒளியில் உருவம் தெரிய ஆரம்பித்ததும் ஆத்திரம் கட்டுக்கடங்காதபடி ஆனது. உடல் முழுவதும் சக்கை சக்கையாக நசுங்கிப் பிளந்து கட்டப்பட்ட கயிறுகளுக்குள் நழுவி மரத்தின் கீழே வந்து விழுந்தது. ஆனாலும் அடங்காத கோபத்தில் ஊரே கத்திக் குரலெழுப்பி எறிந்தபடி இருந்தது. மரத்தின் நடு மையத்திற்கு வைக்கப்பட்ட குறி இப்பொழுது தூருக்கு வைக்கப்பட்டது. அடித்தூர் அசைவதைப்போல எறி விழுந்தது. ‘தூர்ல எறியாதீங்கடா. பன பட்டுப்போகும்’ எனச் சொல்லக்கூட யாரும் தயாராக இல்லை.

*

**கா**லை 10 மணி சுமாருக்கு போலிஸ் படை வண்டிப் பாதையிலிருந்து பென்னிங்டன் ரோட்டிற்குத் திரும்பியது. மதுரையிலிருந்த மொத்த போலிசும் அணிவகுத்து வந்திருந்தனர். எஸ்.பி. பிராஸ்ஸின் சாரட்டில் வராமல் குதிரையேறி வந்திருந்தார். கண்ணில் படுபவனை எல்லாம் சுட்டுத்தள்ள வேண்டும் என்ற ஆத்திரத்துடன் வெள்ளைக்கார போலிஸ் படை முன்னுக்கு வந்துகொண்டிருந்தது. படை ஆலமரத்தைத்

தாண்டியதும் வழக்கமாகக்கேட்கும் கொம்புச்சத்தம் எதுவும் கேட்கவில்லை. பெரும் அமைதியுடன் அந்தப் பகுதி இருந்தது. ஆலமரத்தடியில் ஆட்கள் யாருமில்லை. தாவாரத்திற்குள் கருப்பன் தனியாக நின்றுகொண்டிருந்தான். குதிரைகள் ஊரை நோக்கி முன்னேறின. இப்பொழுதுவரை கொம்புச்சத்தம் இல்லை. மர்மத்தின் பாதை ஒன்றில் போகும் பயம் கச்சேரி போலிசாரை கவ்விப்பிடிக்க ஆரம்பித்தது. ஆனாலும் துப்பாக்கி ரவைகள் தீரும் மட்டும் சுட கொடுக்கப்பட்ட உத்தரவு அவர்களின் முதுகெலும்பை விடைத்தபடி நடக்கவைத்திருந்தது. ஊர் மந்தையை அடைந்ததும் நிலைமை புரிய ஆரம்பித்தது. குதிரைப்படை போலிசார் தெருக்களைச் சுற்றி வந்தனர். ஊரில் பெண்டு பிள்ளைகள் யாருமில்லை. ஊரே வெறிச்செனக் கிடந்தது. எஸ்.பி. அண்ணாந்து புளியமரத்தைப் பார்த்தார். உச்சிக்கொப்பில் ஊதுகொம்பொன்று காற்றில் அசைந்தபடி தொங்கிக்கொண்டிருந்தது. மொத்த போலிஸ் படையும் மந்தையிலேயே தயார் நிலையில் நீண்ட நேரம் நின்றது. எதிர் எதிர் மூலைகளில் போய் தீ வைத்தனர். தீ மெல்ல காற்றில் பற்றிப்பரவியது. ஊர் முழுவதும் பற்றியெறிந்தது. தீயின் நாக்குகள் கரும்புகையை வெளியெங்கும் கக்கின. போலிஸ் படை மந்தையை விட்டு திரும்பியது. எதிரில் விரிந்து பரந்த அமணமலை. ஊரே அதன்மீது தானிருக்கும். ஆனால் மலை முழுவதையும் சுற்றி வளைத்து மேட்டேறுவது சாத்தியமற்ற ஒன்று. மலையை முறைத்துப்பார்த்தபடி பிராஸ்ஸின் வந்துகொண்டிருந்தார். ஆலமரத்தைத் தாண்டி வளைவில் படைதிரும்பியது. ஒற்றைப் பனை தன்னந்தனியாக சாலையோரத்தில் நின்று கொண்டிருந்தது. செதில் செதிலாகப் பிளந்திருந்த பனை ஈக்கிகளில் ரத்துக்கறை ஏறியிருந்தது. ஊர் ஏறியின் தழும்புகள் உடலெங்கும் இருந்தன. வழக்கம்போல் போலிஸ்படை பனையைக் கடந்து வெளியேறியது. மூக்கனின் கைகளைப் பின்புறமாகக் கட்டியிருந்த கயிறு ஒன்று பனைக்குப் பின்புறமாக சுருண்டுகிடக்கும் பாம்பைப்போலக் கீழே கிடந்ததை யாரும் கவனிக்கவில்லை.

பனையைத் தாண்டியபின் அவர்களின் எதிரில் சிக்கியது கால்களால் சரளையைக் கிளறியபடி வந்துகொண்டிருந்த மாயி மட்டும்தான்.

*

# 97

**இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. ஆத்திரத்தின் உச்சியில் இருந்த** போலிஸ் நிர்வாகம் மூன்று வியூகங்களை வகுத்துவைத்திருந்தது. ராமாயணச் சாவடி அன்றைய இலக்காக இருந்தது. சாவடியில் கோனார்கள் யாரும் வந்து படுக்கக்கூடாது என் இருள் சூழ ஆரம்பிக்கும் பொழுது தெரிவிக்கப்பட்டது. ‘எங்க சாவடியில எங்கள ஏன் படுக்கக்கூடாதுன்னு சொல்றீங்க?’ என்று வாதம் புரிந்த கடைசியில் வேறு வழியில்லாமல் வெள்ளைக்கார அதிகாரிகள் சொல்வதை ஏற்று வெளியேறினர். சீயான் வீட்டு சாவடியில் பொறிவைத்து காவக்காரர்களைப் பிடிப்பதற்கு ஆறுமுகத்தா பிள்ளை மிக ரகசியமாகப் பல வேலைகளைச் செய்துவைத்தார். வழக்கம்போல் ஒரு சிறு விளக்கை மட்டும் ஏற்றிவைத்துவிட்டு சீய்யான்மார்கள் அகன்றனர். வடக்கு மாசி வீதி இருள் இறங்கி வெறிச்சோடிக் கிடந்தது. நாயக்கரின் சிலை தன்னந்தனியாக சாவடிக்குள் நின்றுகொண்டிருந்து. நிலவின் ஒளி இரவெங்கும் கசிந்து இறங்கியது. சாவடியின் பட்டியக்கல்லில் ரத்தம் புரளப்போகும் அறிகுறிகளை எல்லோரும் உணர்ந்தனர். கால காலமாக இருந்து வந்த உறவு இன்று பலியிடப்படவிருக்கிறது. பால் சத்தியத்தில் உருவாக்கப்பட்ட உறவின் ரத்தம் சாவடியில் விழக்கூடாதெனக் கத்திக்கூப்பாடு போட்ட தானப்பக் கோனாரை அவரது மகன் வீட்டுக்குள் போட்டுப் பூட்டிவைத்தான். பல பெரியவர்கள் வெள்ளைக்கார போலிஸ் சொல்லைக் கேட்டு சாவடியை விட்டு வெளியேறி வந்ததைப் பொறுக்கமுடியாமல் உள்ளக் குமுறுலோடு இருந்தனர். ஆனால் இரண்டாம் தலைமுறை மனிதர்களுக்கு போலிசுடன் இணங்கிப்போவதைத் தவிர வேறுவழியில்லை. நேரம் ஆக ஆக என்ன நடக்குமோ என்ற பயத்தில் வடக்கு மாசி வீதி மூழ்கியபடி இருந்தது.

தானப்பக் கோனார் இருப்புக் கொள்ளாமல் கத்திக்கொண்டு கதவை உதைத்தப்படியே இருந்தார். கால் வலியெடுக்க ஆரம்பித்தது. தொண்டைக்குழி வறண்டு உள் இழுத்தது. இருள் சூழ்ந்த அந்த அறை

சாவடியைப்போல விசாலமானதாகிக் கொண்டிருந்தது. பெரியவர் மாயாண்டி உட்கார்ந்து கதைகள் பல பேசிய சாவடியின் வடக்குத் தூண் தன்னந்தனியாக நின்றது. கோட்டைக் காவலருக்கும் வெள்ளைக்காரனுக்கும் நடந்த சண்டையைப் பற்றி தெரிந்த கடைசி மனிதர் அவர்தான். வீரணனும் ஒச்சவும் கெடாயனும் சாவடியின் தூணை நின்றபடியே நகர்த்திவிடக்கூடிய வல்லமை படைத்தவர்கள். அந்த தைரியசாலிகளை எல்லாம் இரவில் அடைகாத்து வைத்திருந்தது இந்தச் சாவடி. கலுங்கிலே வழிந்தோடும் நீரைப்போல இரவெல்லாம் சலசலவென சத்தம் கேட்டபடியே இருக்கும். வடதிசைக் காவலர்களின் காவக்கம்புகள் சாவடியின் மூலையிலே கொஞ்ச நேரமாவது சாய்ந்து அமைதி பெற்றுத்தான் போகும். நான்மாடக்கூடலின் இரவுகளை ஆட்சி புரியும் மண்டபம் இந்த ராமாயணச் சாவடிதான். ஆனால் இன்று அது வெறிச்சோடிக் கிடக்கிறது. நிலவின் ஒளியில் மர இலைகளின் நிழல் சிறு சிறு திட்டாக கண்ணீரைப்போலத் தேங்கிக் கிடந்தது. மேற்கே இருந்து வீசிய பெருங்காற்றொன்று தூசியோடு சருகுகளை அள்ளி சாவடிக்குள் எறிந்துவிட்டு வெளியேறியது. பொழுது நடுநிசியைக் கடந்தது.

மாசி வீதியின் இறுக்கத்தைக் குலைப்பதைப் போல பெரும் ஓட்டமாக வன்னியக் கோனார் சந்திலேயிருந்து வந்த ஐந்து பேரும் சாவடிக்குள் நுழைந்தனர். ஆள் அரவமற்றுக் கிடந்த சாவடி பாதடி பட்டுபெருமூச்சு விட்டது. சிறுத்து எரிந்த விளக்கின் முன் கொண்டுவந்த மூடைகளை வைத்தான் ஒருவன். ஆயுதங்களைத் தூண்களின் மேலே சாய்த்துவைத்தான். இன்னொருவன். மற்றொருவன் தூக்கி வந்த மூடையின் முடிச்சை அவிழ்க்க முயற்சி செய்துகொண்டிருந்தான். நெடு நெடுவென வளர்ந்திருந்த ஒருவன் திருமலை நாயக்கரின் இடது தோள்பட்டையின் மேல் சாய்ந்தபடி நின்று பார்த்துக்கொண்டிருந்தான். முடிச்சை அவிழ்க்கும்போது மண்டபத்தின் எதிர்ப்புறமிருந்த சந்தில் ஏதோ ஒரு சிறு ஓசை கேட்டு எல்லோரும் சுதாரித்தனர். ஒருவன் மட்டும் எழுந்து வாசல்படிக்கு வந்து எதிர் சந்தை உற்றுப்பார்த்தான். இருளின் மடிப்புகள் பிடிபடாமல் இருந்தது. சிறுசிறு சத்தங்கள் எழுந்து அடங்கின. சுதாரித்தபடி அவன் உள்ளே சென்றான். கழற்றிய மூடையை மீண்டும் இறுகக் கட்டி தோளிலே தூக்கினர். சாய்த்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். முன்னால் சென்றவன் சாவடியின் படிக்கட்டைத் தாண்டி வீதியில் கால் பதித்தபொழுது மாசிவீதி நடுங்குவது போல துப்பாக்கி குண்டுச்சத்தம் கேட்டது. அவன் இடுப்பிலே குண்டுபாய்ந்து ரத்த வெள்ளத்திலே கீழே விழுந்தான். மற்ற நான்கு பேரும் கண்ணிமைக்கும் நேரத்தில் சாவடிக்குள் ஓடி மறைய முயற்சித்தனர். அடுத்தடுத்த குண்டுகள் சாவடிக்குள் சீறிப்பாய்ந்தபடி இருந்தன. பெரும் ஓசையில் நகரமே நடுங்கியது. ஓசை கண்டு நடுங்காமல் விளக்கின் சுடர் எரிந்தபடி இருந்தது. சற்று நேரத்தில் ஊர்ந்து வந்த ரத்தம் சாவடி முழுக்கப் பரவியது. தன் பாதம் முழுக்கச் சூழ்ந்திருந்த ரத்தத்தைப் பார்த்து தலை தாழ்த்தி இரு கையெடுத்துக் கும்பிட்டபடி நின்றான் திருமலை மன்னன்.

மாசி வீதி முழுக்க மக்கள் அரண்டுபோய் இருந்தனர். அதன் பின்னர் நீண்ட நேரம் சத்தம் கேட்கவில்லை. ஒருவர் இருவராக வீடுகளைத் திறந்து வெளியே வந்தனர். தீவட்டிகளைக் கொளுத்திய போலிசார் மண்டபத்தைச் சூழ்ந்து நின்றனர். உள்ளேயிருந்த எல்லோரும் இறந்ததை உறுதிப்படுத்தினர். கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் கூடியபடி இருந்தது.

போலிசார் யாரையும் சாவடிக்குள் அனுமதிக்கவில்லை. ஏற்றப்பட்ட தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் இறந்து கிடப்பவனின் முகம் தெரிகிறதா என் மக்கள் எட்டிப் பார்த்தபடி இருந்தனர். துப்பாக்கி குண்டுச்சத்தம் கேட்டு வெகுண்டு எழுந்த தானப்பக் கோனார் தனது வலுவெல்லாம் சேர்த்து கதவை எத்தி உடைத்து வெளியேறினார். 'ஐயோ...' எனப் பெரும் புலம்பல் புலம்பியபடி கம்பை ஊன்றி வேகவேகமாக சாவடியை நோக்கி வந்தார். கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தபடி இருந்தது. சாவடியின் படிக்கட்டுகள் வெளியில் தெரியாதபடி சுற்றி எல்லோரும் நின்றுகொண்டிருந்தனர். சாவடியின் மேலே பசு ஒன்றின் மேல் சாய்ந்தபடி புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு சிரித்தபடி இருந்தான் கிருஷ்ணன். அவனைப்போலவே வலதுகால் பின்புறமாகப் பின்னி படிக்கட்டில் தலைகீழாகக் கிடந்தான் ஒருவன். படிக்கட்டுகளில் வழிந்து இறங்கிய ரத்தத்தை மாசி வீதியின் புழுதி மண் குடித்தபடி கிடந்தது.

கூட்டத்தைத் தள்ளிவிட்டுவிட்டு தானப்பக் கோனார் உள்ளே நுழைந்தார். போலிசார் அவரைத் தடுக்க முயற்சித்தபோது 'அவரை விடு' என ஆறுமுகத்தா பிள்ளை சொன்னார். அதன் பின் போலிசார் அவரைத் தடுக்கவில்லை. படிக்கட்டில் பாதி உடலும் மண்ணிலே பாதி உடலுமாக தலைகீழாகக் கிடந்தவனின் முகத்தை உற்றுப்பார்த்தார். அவர் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தபடி இருந்தது. முகம் தெளிவாகத் தெரியவில்லை. யாரென் இவரால் அடையாளம் காட்ட முடியும் என்றுதான் ஆறுமுகத்தா பிள்ளை இவரை உள்ளே விட்டார். தீப்பந்தத்தோடு ஒரு போலீஸ் பக்கத்திலே வந்து நின்று வெளிச்சம் கொடுத்தான். கால் மடக்கி உட்கார்ந்து புழுதி மண்ணுக்குள் மூக்கு புதைந்து கிடந்த முகத்தை தூக்கிப்பார்த்தார். ரத்தம் பிசுபிசுவென ஊறி ஏறியது. கைகால் எல்லாம் நடுக்கம் கொடுத்தது. சாவடிக்குள் நுழைந்தார். எட்டுத் தூண்களுக்கும் இடையிலும் ரத்தம் பரவிக்கிடந்தது. குண்டடி பட்டு மன்னனின் கை உடைந்து கீழே கிடந்தது. எங்கும் ரத்தம். ரத்தத்தை மிதிக்காமல் உடலருகில் போக முயற்சித்தார். ஆனால் அதற்கு வழியில்லை. ரத்தத்தைக் காலால் மிதிக்கிறபொழுது உயிர் போய்விடும் போலிருந்தது. பாதி மயக்கத்தில் நிலை தடுமாறி ஒவ்வொருவரின் முகமாகத் தூக்கிப்பார்த்தார். 'ஐயோ...பாவிகளா கொன்னுட்டீங்களடா...' எனக் கதறியபடி தூணிலே சாய்ந்தார்.

'எந்த தாழ்ப்பாளையும் பூட்டையும் வாயால ஊதியே திறக்கிற தாளுதுவான் கீழ கிடக்குறான். எந்த நிழலுக்குள்ளும் ஒதுங்கி மறைகிற நிழலுள் ஒடுங்குவான் வடக்குப்பக்கமா கிடக்குறான். தண்ணி மேலே நடந்து தப்பிக்கிற மூழ்கா பாதடி கொண்டவன் கிழக்கு மூலையில கிடக்குறான். எந்த வழக்கிலும் தோல்வியே காணாத தோலாவழக்கன் கீப்படியில கெடக்கான்டா...' எனக் கத்திக் கதறியபடி தலையிலே அடித்துக் கொண்டு அழுதார்.

'அப்ப இது யாரு?' என மேற்குத் தூணுக்குப் பக்கத்திலே கிடந்தவனை விரல் நீட்டி போலிஸ் ஒருவன் கேட்டான். ரத்தம் சூழ்ந்த இருள் குகைக்குள் இருந்து அவரின் கடைசிக்குரல் வெளிவந்தது. 'அவன் தான்டா ஆயிரத்தெட்டு வைணவர்களுக்கு அமுதளிக்க இந்த மகாகெட்டிக்காரங்கள் எல்லாம் கூட்டிவந்த குமுதவல்லியோட காதலன்' என்று சொல்லியபடி மூச்சடைத்து மயங்கினார்.

கூட்டம் கத்தியபடி போலிசை விலக்கிக்கொண்டு உள்ளே வரமுயற்சித்தது. ‘திருமங்கை மன்னன் வாயில் குண்டடிபட்டு செத்தான்’ எனக் குறிப்பெழுதிய உடன் போலிஸ் விலகிக்கொண்டது. மக்கள் முண்டியடித்தபடி சாவடிக்குள் நுழைந்தனர்.

*

**அ**ன்றிரவு முழுவதும் போலிசுக்கு பெரும் ஏமாற்றமே மிஞ்சியது. எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை. அளிக்கக் கோன் சந்து, துட்டுக்கடை கோனார்சந்து, சப்பாணி கோவில் சந்து, தாளமுத்துப் பிள்ளை சந்து என ராமாயணச் சாவடியைச் சுற்றியுள்ள உள் சந்துகளில் எல்லாம் விடிய விடிய உட்கார்ந்திருந்த போலிசார் வெறுமனே திரும்பவேண்டியதாயிற்று. அமைக்கப்பட்ட பெரும் கண்ணியிலிருந்து தாதனூர் லாகவமாக தப்பித்தது. காவக்காரர்கள் யாரும் இரவில் நகருக்குள் வரவில்லை. அவுட்போஸ்ட் போலிசார் இரவு முழுவதும் விழித்தபடி பொன்மேனியின் உடைமரக் காட்டை உற்றுப்பார்த்தவாக்கிலே இருந்தனர். காவக்கம்போடு காட்டைக் கிழித்து வெளிவரும் காவக்காரர்களின் உருவம் எதுவும் தென்படவில்லை. நள்ளிரவுக்குப்பின் மேலதிகாரிக்கு தகவல் தெரிவித்தனர். வேறு வழிகளில் நகருக்குள் நுழையலாம். அல்லது பின்னிரவிலே நுழையலாம் என போலிசார் விடிய விடிய எதிர்பார்த்திருந்தனர். தாதனூரிலிருந்து யாராவது உள்ளே வரமாட்டார்களா என ஆத்திரம் கொப்பளித்தபடி இருந்தார். எஸ்.பி. பிராஸ்ஸின். ஆனால் யாரும் உள்ளே வரவில்லை. நட்சத்திரங்கள் நகரத்துக்கு பொழுதைச் சொல்லியபடி இரவைத் தள்ளிக்கொண்டிருந்தன. சாட்டைக்கம்பு வெள்ளி வழக்கம்போல் மேற்கிலே தெரிந்த கொஞ்ச நேரத்தில் விடிவெள்ளி முளைக்க ஆரம்பித்தது. கரிச்சான் கத்தவும், கோழி கூவவும், காக்கைகள் கரையவுமாக பொழுது விடிந்தது. விடிவதற்கு கொஞ்சம் முன்னால் உள்சந்துகளில் இருந்த போலிசார் வெளியேறிப் போயினர். நான்கு கோபுரங்களிலிருந்தும் புறாக்கள் சிறகடித்து இருளின் மிச்சசொச்சங்களை கலைத்தன.

காலை பத்து மணிக்கு கலெக்டர் பென்னிங்டன், எஸ்,பி. பிராஸ்ஸின், மாஜிஸ்திரேட் ஏ.எச். அர்னால்டு ஆகிய மூவரும் கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை நடத்தினர். அவர்களுக்கு அதிர்ச்சியும் புதிரும் நிறையவே இருந்தது. இன்ஸ்பெக்டர் பிச்சுவையரை பனையிலே கட்டிவைத்து ஊரே கல்லால் எறிந்து கொன்ற செய்தியை நேற்றுமாலையே போலிஸ் அறிந்துவிட்டது. ஸ்டீபன்சனும் அவருடன் பேசிக்கொண்டிருந்த சப் மாஜிஸ்திரேட் ஹென்றி வுட்டும் மிகக்கடுமையாகக் காயம்பட்டுள்ளனர். பலத்த பாதுகாப்புடைய ஐரோப்பிய குடியிருப்புகளுக்குள் நுழைந்து நிகழ்த்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் அரசு நிர்வாகத்தை நிலைகுலைய வைத்துள்ளது. மதுரை ஆங்கிலேயர்கள் முழுவதும் வெறியோடு உள்ளனர்.

‘கடந்த ஒரு ஆண்டில் தாதனூர்க்காரர்கள் சிலரை சுட்டுக் கொன்றிருக்கிறோம். முப்பதுக்கும் அதிகமான காவக்காரர்களை சிறைப்பிடித்திருக்கிறோம். ஆனால் அப்பொழுதெல்லாம் எதிர்த் தாக்குதல் எதையும் பெரிய அளவு நிகழ்த்தாத தாதனூர் ஒரே ஒரு காவக்காரனைச் சுட்டதற்கு இவ்வளவு கொடூரமான தாக்குதலை நடத்தியிருப்பது ஏன்?

ஊரின் பெண்வாரிசு காவக்காரன் அவன்தான். எனவே அவனை சுட்டுக்கொன்றால் ஊரை அச்சுறுத்தப் பொருத்தமாக இருக்கும். எதிர்தாக்குதல் எதுவும் பெரிதாக வராது என யோசித்துதான் அவனைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால் அதுதான் பெரும்பிரச்சனையாகி இருக்கிறது. அப்படியென்றால் நாம் தேர்வு செய்ததில் ஏதோ தவறு நடந்திருக்கிறது' என்றார் எஸ்.பி. பிராஸ்ஸின். ஆழ்ந்த யோசனையில் இருந்த கலெக்டர் சற்று நேரத்திற்குப்பின் எஸ்.பி.யின் கருத்தை ஆமோதித்தார். 'போதகர் டேவிட் சாம்ராஜ் கொடுத்த குறிப்பின் அடிப்படையில் தான் இந்த தேர்வு நடந்தது. ஆனால் குறிப்பே பெண்வாரிசு சம்பந்தமாக போதிய விவரங்களற்று இருக்கிறது. பின்னால் அதனை இணைத்துத் தருவதாகச் சொன்ன அவர் இன்றுவரை தரவில்லை' என்றார்.

அவரின் கருத்து எஸ்.பி.யை மிகவும் யோசிக்க வைத்தது. நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதில் ஏதோ ஒரு இடத்தில் பிழை நிகழ்ந்திருப்பதை உள்ளுக்குள் உணர்ந்தவாறு இருந்தார். அதைப் பெரிதாகக் காட்டிக்கொள்ளாமல் பேச்சைத் தொடர்ந்தார். 'அது மட்டுமல்ல, நகர்காவல் விஷயத்தில் எதையும் சந்திப்பது என்ற முடிவோடுதான் தாதனூர் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் நேற்று அவர்கள் வரும்பொழுது இதுவரை இல்லாத அளவுக்கான தாக்குதல் திட்டமொன்றைத் தயாரித்து வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் யாரும் நகருக்குள் பிரவேசிக்கவில்லை. துப்பறியும் இலாகா பொன்மேனி கிராமத்திலிருந்து இன்று காலை சேகரித்துக் கொடுத்திருக்கிற செய்திப்படி அவர்கள் வழக்கம்போல் ஆலமரத்தடியிலிருந்து காவலுக்குப் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் உடைமரக்காட்டுக்கு வந்தபின் நீண்டநேரம் அங்கேயே இருந்திருக்கிறார்கள். பின்னர் நள்ளிரவு ஒரு மணி சுமாருக்கு திரும்பிய போயிருக்கிறார்கள். அப்படியென்றால் போலிசின் திட்டம் அவர்களுக்கு மிக வேகமாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது எனத் தெரிகிறது. ராமாயணச் சாவடியில் யாரும் தங்கவேண்டாம் என்று கச்சேரி போலிசார் ஒன்பது மணிக்குமேல்தான் சொல்லியுள்ளனர். சுமார் பத்து பணிக்குள் அவர்களுக்குத் தகவல் தெரிந்து உடைமரக்காட்டிலேயே தங்கியிருந்து விட்டு திரும்பியுள்ளனர். இவ்வளவு வேகமாகச் செய்தி போவதற்கான பின்னணியை நாம் கண்டறிய வேண்டியிருக்கிறது' என்றார்.

தொடர்ந்து நண்பகல் வரை விவாதித்தபடி இருந்தனர். எஸ்.பி. பிராஸ்ஸின் ஐ.ஜி அலுவலகத்திற்கு விளக்கக் கடிதமொன்றை எழுதினார். கலெக்டரும் மாகாண கவர்னருக்கு நிலைமையை விளக்கி விரிவான குறிப்பொன்றை அனுப்பினார். வியூகங்கள் மாற்றப்பட்டன. வெள்ளைக்கார அதிகாரிகளைத் தவிர வேறு யாருக்கும் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் கடைசி நிமிடம் வரை தெரியாமல் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டது. அடுத்தடுத்த இரவுகளில் அதே ஆத்திரத்துடனான எதிர்பார்ப்போடு காத்திருந்தன போலிசின் கண்கள்.

*

**தா**தனூர் வேறு வழியேயின்றி இந்த முடிவு எடுத்தது. தாது வருடப்பஞ்சத்தின்பொழுது பெரும் சேதாரத்திற்குப்பின் தனது உத்தியை மாற்றிக்கொண்ட ஊர் இப்பொழுது இந்தச் சேதாரத்தோடு தனது உத்தியை மாற்ற முடிவு செய்தது. இதைத் தவிர வேறு எந்த முடிவெடுத்தாலும்

இழப்பு அதிகமாகிக் கொண்டேதான் இருக்கும். ஏற்கனவே நகரக்காவக்காரர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் குறைந்து விட்டனர். எனவே இனி இரவுக் காவலுக்காக நகருக்குள் போக வேண்டியதில்லை என்று முடிவுசெய்யப்பட்டது. அதற்குப் பதில் நகரத்தை விட்டு வெளியில் மூன்று இடங்களில் மொத்தம் மொத்தமாக இருந்துகொண்டு திருடர்களையும் கொள்ளையர்களையும் நகரத்திற்குள் நுழையவிடாமல் பார்த்துக்கொள்வது என்று யோசித்தது.

தாதனூர் இளவட்டங்கள் பலருக்கு இதில் உடன்பாடு இல்லை. என்ன ஆனாலும் மோதிப்பார்ப்பது என்ற முடிவுதான் அவர்களுக்கு. திருமலை நாயக்கர் கொடுத்த காவல் உரிமையை நாம் யாருக்காகவும் விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற குரல் ஆலமரத்தடியில் ஓங்கி ஒலித்தபடியே இருந்தது. காவல் உரிமையை இழந்தால் கள்ளநாடே நம்மைப்பார்த்துச் சிரிக்கும். சொந்தக் காவல் உரிமையைப் பாதுகாக்க முடியாதவர்களுக்கு வேறு காவல் கிடைப்பது கடினம் என்று பலரும் சொல்லிப்பார்த்தனர். ஆனால் களவில் தகுந்த நேரத்தில் பின்வாங்குதல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் காவலிலும் பின்வாங்குதல். தகுந்த நேரத்தில் பின்வாங்கவில்லை என்றால் ஊரே அழியும். கோட்டைக் காவலிலிருந்து தாதனூர் தகுந்த நேரத்தில் பின்வாங்கியதால்தான் மிஞ்சிய இந்த ஊராவது தப்பித்தது. இல்லையென்றால் வெள்ளைக்காரன் மொத்த ஊரையும் அழிச்சிருப்பான் என்று சொல்லி ஊரின் பழைய பெரியாம்பிளையும் தனது அப்பனுமான மாயாண்டி சொன்ன கதைகளையெல்லாம் சொன்னார் ஒச்சு. கள்ளநாடு முழுக்க களவில் கற்றுத் தேர்ந்ததுதான். வண்டிமாடு போல களவுக்குப் போகிறவன் முன்னுக்கு மட்டுமே போகமுடியாது; கமலை மாடுகளைப்போல முன்னுக்குப்போன அதே வேகத்தில் பின்னுக்கு வரவும் தெரியணும். அவன்தான் களவுக்கு லாயக்கு. மாட்டிக்காம தப்பிச்சு வெளியேறுவான். இந்த அனுபவம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் பெரும் காவலில் பின்னுக்கு வந்த அனுபவம் கள்ள நாட்டில் வேறு எந்த ஊருக்கும் கிடையாது. ஏற்கனவே தாதனூருக்கு மட்டும்தான் உண்டு. அதே போன்ற முடிவையே இப்பொழுது எடுக்கிறோம். இதுதான் கெட்டிக்காரத்தனம் என்று ஊர் பெரியாம்பிள ஒச்சு இளவட்டங்களை சமாதானப்படுத்தினார்.

‘மருத காவல யாருக்கும் விட்டுக்கொடுக்குற பேச்சே இல்ல. நகரத்த விட்டு வெளியில மூணு எடத்துல நிலைக்காவலா நின்னு காவபாக்கப்போறோம். வழக்கம் போல பகல்ல மருதைக்குள்ள போயி காவக்கூலிய வாங்குவோம். நம்மள மீறி காவலுக்கோ களவுக்கோ எவெநொழையுறான்னு பாத்துருவோம்’ என்று ஊர் பெரியாம்பிள சொன்ன பிறகுதான் ஓரளவு சமாதானமாயினர்.

இரவு நெருங்க நெருங்க துக்கம் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. நகரத்து காவக்காரர்களின் கால்கள் உடைமரக்காட்டையோ மாடக்குளத்தையோ கடந்து வெளிவீதிக்குள் நுழையத்தான் ஒவ்வொரு நாளும் போய்க்கொண்டிருந்தன. கால்களை மடக்கி நகரத்துக்கு மிகத்தள்ளி இருளிலே நிலைகொள்ள வைக்க பெரும்பாடு பட வேண்டியதாயிற்று. புது இடத்தில் மொளைக்குச்சி ஊண்டிக் கட்டப்பட்ட மாடு அமைதி கொள்ளாமல் தவிப்பது போல இரண்டு இடங்களிலும் காவக்காரக் கூட்டம் அடங்காமல் பொறுமியபடியே இருந்தது.

தெப்பக்குளத்து மைனாக்கள் இரவெல்லாம் கத்தின. செல்லத்தம் மன் கோவில் செக்கடியில் அசை போட்டபடி படுத்திருக்கும் மாடுகள் நீல விழியால் இருள் முழுவதும் தேடியபடியே இருந்தன. எந்நேரம் கத்தினாலும் தீவனத்தை அருகே தள்ளிவிடுகிற காவக்கம்புகளின் வாடை அடிக்காமல் விடைத்த நாசியோடு இரவெல்லாம் படுத்திருந்தன. ராமாயணச் சாவடியோ காயடிக்கப்பட்டது போலானது. தானப்பக் கோனாரின் கடைசிக் கத்தலுக்குப்பின் நசுங்கி, ரத்தம் உறைந்து, வலியிலும் துக்கத்திலும் மூழ்கிப்போனது.

காவக்காரர்களின் காலடி கேட்காத இரவுகளின் பூனைகள் நிலைகொள்ள முடியாமல் தவித்தன. இரவு சமநிலையற்று இருந்தது. விளக்குக் கம்பங்களில் தட்டிச்செல்லும் காவக்கம்புகளின் ஓசை கேட்காமல் நகரத்துத் தெருக்கள் சூனியமாயின. மக்கள் எல்லாத் திசைகளில் இருந்தும் இரவை நோக்கிப் புலம்பினர். உலைந்துபோன காவலில் என்னவெல்லாம் நடக்குமென்ற அனுபவம் அனைவருக்கும் இருந்தது. அந்த அனுபவங்கள் இரவுதோறும் அவர்களின் வீட்டுக்கதவைத் தட்டி 'காவக்காரன் எங்கே?' என்று கேட்டுப்போனது. கச்சேரி போலிசால் காவல் காத்துவிட முடியும் என்ற நம்பிக்கைகொண்ட சிலரால் அதனை எடுத்துச்சொல்லி நம்பவைக்க முடியவில்லை. அதற்குள் ஒவ்வொரு நாளும் இரவு வந்துவிடுகிறது. இரவில் காவக்காரனைத்தவிர வேறுயாருக்கும் எந்த வேலையும் இல்லை என்று சொல்லி மக்கள் அனுப்பிவிடுகின்றனர். தனது ஆதி வாக்கு ஒன்றைப் பலியிட்டுக்கிடக்கும் மதுரையின் இரவுகளை ஒவ்வொரு நாளும் விடிவெள்ளி வந்து முடித்துவைத்தபடி இருந்தது. ஆனாலும் மறுநாள் விடாமல் இரவு வந்து கொண்டேயிருந்தது.

*

ஒவ்வொரு நாளும் இரவை உற்றுப்பார்த்தபடி இருந்த போலீஸார் ஒரு வாரத்திற்குப்பின் நம்பமுடியாத ஆச்சரியத்திற்கு ஆளாயினர். தாதனூர்க்காரர்கள் இனி இரவுக் காவலுக்கு நகருக்குள் வருவதில்லை என எடுத்த முடிவு கசிந்து பரவியது. நகரத்து மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். நடுநிசியில் வைத்து நகரின் அமைதியைப் பலியிட்ட பலிபீடம் போல கச்சேரியைப் பார்த்தனர். 'இனி என்னென்ன நடக்கப்போகிறதோ?' என்ற புலம்பல் எல்லா வீட்டுத் திண்ணைகளிலும் சுழியிட்டுப் போயிக்கொண்டிருந்தது. பெரும் உற்சாகம் அடைந்தவர்கள் முன்பு போல வெளிக்காட்டாமல் மறைத்துக்கொள்ளவில்லை. சோகமும் சந்தோஷமும் உருளைகளைப்போல எல்லா வீதிகளிலும் உருண்டு கொண்டிருந்தது. அவுட் போஸ்ட் போலிசாருக்கு உடைமரக் காடு எந்த அதிர்ச்சியும் அளிக்காத இருள் ஓவியமாக ஆனது. துப்பாக்கி போலிசாரின் கண்காணிப்பில் இருந்த ராமாயணச் சாவடியும், செக்கடியும், மைனா தெப்பக்குளமும் நாள் ஆக ஆக வெறும் இடங்களாக மாறின. அந்த இடங்களுக்குத் தினமும் இரவில் இருள் வந்து போனது. ஆனால் முன்புபோல இருளையே குடித்துக்கிடந்த மனிதர்கள் யாரும் வரவில்லை.

ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பின்பே எஸ்.பி. பிராஸ்ஸினால் முழுமையாக நம்பமுடிந்தது. அதுவரை அது ஒரு உத்தியாக இருக்குமோ என்ற சந்தேகத்துடன்தான் இருந்தார். எஸ்.ஐ.ஆறுமுகத்தா பிள்ளை

மூன்று முறை ரிப்போர்ட் கொடுத்தும் எஸ்.பி.யால் முழுமையாக நம்பமுடியவில்லை. ஒருமாதம் கழித்துத்தான் அந்த உண்மையை அவரது மனம் ஏற்றுக்கொண்டது. அதன்பின் வெற்றிக்களிப்பைச் சுவைக்க ஆரம்பித்தார். நகரத்தில் போலிஸ் நிர்வாகம் துவக்கப்பட்டு ஐம்பதாண்டுகளாக ஒழிக்கப்பட முடியாமல் இருந்த குடிக்காவல் முறை கடந்த ஒரு வருடமாக எடுக்கப்பட்ட மிகச்சாதுர்யமான நடவடிக்கைகளால்தான் ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த ஓராண்டில் சில போலிஸ் அதிகாரிகளை இழக்க வேண்டியதாகிவிட்டது. ஆனால் அந்தத் துயரம் நம்மை வதைத்துக் கொண்டிருந்தாலும் நாம் நினைத்ததைவிட பெரும் வெற்றிகிடைத்துள்ளது எனக் கூறி பெரும் விருந்தொன்றை ஏற்பாடு செய்தார். அந்த விருந்தில் பங்கெடுத்த கலெக்டர் போலிஸ் நிர்வாகத்தின் செயலை வானளவு புகழ்ந்தார். துப்பறியும் இலாகா எஸ்.ஐ.ஆறுமுகத்தா பிள்ளையை பிராஸ்ஸின் வெகுவாகப் பாராட்டினார். அவர்மட்டும்தான் எஸ்.பி.கொடுத்த விருந்தில் கலந்துகொண்ட ஐரோப்பியர் அல்லாத ஒரே நபர்.

கலெக்டர் விருந்துக்குப்பின் ஒரு வாரம் கழித்து போலிசுக்கு புதிதாக ஆளெடுக்கப்பட்டது. நகரத்தில் இருந்த இரண்டு கச்சேரிகள் போல வைகையின் தென்பகுதி கிராமங்களை எல்லாம் மையப்படுத்தி ஒரு கச்சேரியும் வடபகுதி கிராமங்களையெல்லாம் மையப்படுத்தி ஒரு கச்சேரியும் துவக்க முடிவு செய்யப்பட்டு பணிகள் துவங்கின. இது நாள்வரை நகரத்திற்குள் செயல்பட்டு வந்த சிறைச்சாலை நகரத்தை ஒட்டிய மேற்குப்பகுதியில் பெரும் நிலப்பரப்பில் மூன்று மடங்கு அதிகமான கைதிகளை அடைக்கும் வசதிகளுடன் கட்டும் பணி துவங்கியது. கைதிகளை கொண்டே அதற்கான பணிகளை முடிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. கச்சேரி போலிசார் கொஞ்சம் கொஞ்சமாக நகரின்மேல் மிதித்து நடக்கத் துவங்கினர்.

*

ஏ

# ரயில் களவு

# 98

**ஓராண்டாகக் கட்டப்பட்டுவரும் சிறைச்சாலைப் பணிகள் இன்னும்** முடிவதாக இல்லை. வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தன. மதுரையின் மேற்கே இரண்டு வெள்ளையர்கள் சேர்ந்து நடத்திவருகிற பிரமாண்டமான காட்டன் மில்லைத் தாண்டி பெரும் வெளியில் சிறைச்சாலை கட்டப்பட்டிருந்தது. சிறைச்சாலையின் சுற்றுச்சுவர் பதினைந்து முழ உயரத்திற்கு மேல் இருந்தது. மதுரையின் கோட்டை இடிக்கப்பட்டு சுமார் அறுபது ஆண்டுகள் ஆகப்போகிறது. அந்தக் கோட்டைச் சுவரின் நினைவைச் சுமந்துகொண்டிருந்த மனிதர்களின் கடைசித் தலைமுறை அதே அளவு எழுந்து வரும் புதிய கோட்டைச் சுவரை வாய் பிளந்து பார்த்துக்கொண்டிருந்தது. சுற்றுச்சுவர் பெரும்பரப்பில் எழுந்த வண்ணம் இருந்தது. உள்ளே பல அறைகளைக் கொண்ட கட்டிடங்கள் தனித்தனியாக ஐந்து இடங்களில் கட்டபட்டன. நூற்றுக்கணக்கானவர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். சுண்ணாம்புக்கற்களும் மணலும் செங்கற்களும் ஏற்றிய மாட்டு வண்டிகள் சாரை சாரையாக வந்தன. துவக்கத்தில் வெள்ளைக்காரன் இன்னொரு காட்டன் மில் ஒன்றைக் கட்டுவதாகத்தான் மக்கள் நினைத்தனர். ஆனால் நாள் ஆக ஆக அரசு உத்தியோகஸ்தர்களிடமிருந்து அந்த ரகசியம் கசிந்து கீழிறங்கி வந்தது. ‘இவ்வளவு பெரிய சிறைச்சாலையா...?’ என அதிர்ச்சியுற்றுக் கேட்டவர்களிடம் சிறை தனது முதல் படிமத்தை இறக்கிவைத்தது. சிறைக்கட்டிடங்கள் உயருகின்ற அதே வேகத்தில் அது சார்ந்த பயமும் மனித மனங்களுக்குள் கட்டியெழுப்பப்பட்டபடி இருந்தது. எல்லோரும் பார்க்கும்படி கட்டப்பட்டுவரும் சிறைச்சாலையானது எல்லோருக் குள்ளும் கட்டப்பட்டது. சிறைச்சாலைக்குத் தேவையான தடித்த இரும்புக்கம்பிகள் ரயில் நிலையத்தில் வந்து இறங்கி, மாட்டு வண்டிகளில் அதைக் கட்டி எடுத்துச்சென்ற காட்சியை நகரமே கவனித்தது. வந்து நிற்கும் ஒவ்வொரு ரயிலில் இருந்தும் இரும்புக்கம்பிகள் இறக்கப்பட்டுக்கொண்டே இருப்பதாகச் செய்திகள் பரவின. கச்சேரி

போலிஸ் கூடாரமிட்டு கட்டுமானப் பொருட்களைப் பாதுகாத்தனர். காலில் சங்கிலியிடப்பட்ட கைதிகள் இரும்புக் கம்பிகளையும் மரக்கட்டைகளையும் தூக்கியபடியே அலைந்தனர். வெள்ளைக்கார இஞ்ஜினியர்கள் இன்னும் ஆறு மாதத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற பணிகளைத் துரிதப்படுத்தினர்.

*

இரண்டு வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்ட காட்டன் மில் தனது உற்பத்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தபடி இருந்தது. தனது இயக்கத்திற்குத் தேவையான மனிதர்களை வெளியெங்கும் இருந்து அது அழைத்தது. மானாவாரி நிலங்களில் பொசுங்கிக் கிடந்த மனிதர்கள் எல்லாம் குடும்பம் குடும்பமாக வந்து மில் கேட்டிலே வாரக்கணக்கில் காத்துக்கிடந்தனர். நலிந்துபோன நெசுவுத்தொழிலில் இருந்து வெளியேறிய மிச்சொச்சங்கள் எல்லாம் கேட் வாசலில் வந்துகால் கடுக்கநின்றன. வெள்ளைக்காரனின் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டால் துட்டுக் கணக்கில் கூலி வாங்கி பொன்னும் நகையும் சேர்த்துக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பிவிடலாம் என்ற கனவு பஞ்சம் தாக்கிய பகுதிகளில் எல்லாம் காற்றைப்போலப் பரவியிருந்தது. எங்கிருந்தெல்லாமோ மக்கள் வந்துகொண்டிருந்தனர். பஞ்சப் பராரிகளாய் வந்து சேர்ந்த கூட்டம் மில்லுக்கு எதிர்ப்புறமிருந்த வைகையின் கரையிலே சிறு சிறு கூரை வேய்ந்து குடியேறியது. குடிசைகளின் எண்ணிக்கை பல நூறைத் தொட்டது. எளிய மக்களின் பொன்னகரம் உருவானது. அந்தக் குடிசைகூட கட்ட வழியற்றவர்கள் வைகை ஆற்றின் மணல்வெளி எங்கும் படுத்துக் கிடந்தனர். பகல் முழுவதும் மில்லுக்குள் உறிஞ்சி எடுக்கப்பட்டவர்கள் மீதமிருக்கும் திராணி கொண்டு நதியின் மணல்திட்டுகளின் மேல் படுத்து நாணல் கொண்டு மறைந்தபடி குடும்பம் நடத்தி வாழ்ந்தனர்.

நீராவியால் இயக்கப்படும் பிரம்மாண்டமான மூன்று பெரும் சக்கரங்களில் சுழற்சியால் காட்டன் மில் இயங்கிக்கொண்டிருந்தது. மீனாட்சி சொக்கநாதர் தேரின் அளவு உயரமும், அகலமும் கொண்ட அந்த இரும்புச் சக்கரங்கள் ஒவ்வொன்றையும் ரயிலின் மூலம் தனித்தனியாகக் கொண்டுவந்து இணைத்துப் பொருத்தி பெரும் தாங்கு தூண்களுக்கு மேல் தூக்கி நிறுத்தியபொழுது நகரமே வியந்து பார்த்தது. நீராவி முட்டி நகர்த்தி சக்கரங்களைச் சுழற்ற ஆரம்பித்தது. ஆயிரக்கணக்கான ஆணும் பெண்ணும் சக்கரத்தின் வேகத்திற்கு ஓட ஆரம்பித்தனர். நாற்று நடவும் களையெடுக்கவும் மெல்ல எட்டுவைத்துப் பழகிய கால்கள் சக்கரவேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இடறிக் கீழே விழுந்தபடி இருந்தன. வாய்க்கால் வரப்புகளுக்கு இடையில் வாழ்ந்த காலம் முடிந்து எந்திரங்களின் பேரிரைச்சலுக்கு நடுவே வாழப் பழகினர். மயங்கி விழுபவனுக்கு நீராகாரம் மோந்து கொடுத்து எழுப்பிவிட்ட வாழ்வின் ஈரம் முடிந்து விட்டது. மணியடித்தால்தான் நமக்கான மனிதனாக நாம் மாற முடியும் என்ற தெளிவு பிறந்தது.

நீரினைச் சுட வைப்பதற்காக மிகப்பெரும் அடுப்புகள் மில்லின் கிழக்குப் பக்கம் வரிசையாகக் கட்டபட்டிருந்தன. ரயில் பெட்டிகளில் வந்து

இறங்கிய கரித்துண்டுகள் நீராவியை முட்டித் தள்ள சுழலும் சக்கரங்கள் எல்லாக் கட்டிடங்களுக் குள்ளிலிருந்தும் இயந்திரங்களைச் சுழற்றின. இயந்திரங்களின் பேரிரைச்சலுக்கு நடுவே ஒவ்வொரு பன்னிரண்டு மணி நேரத்திற்கும் ஒருமுறை பெரும் மனிதக்கூட்டம் மில்கோட்டை விட்டு வெளியே வருவதும், உள்ளே நுழைவதுமாக இருந்தது. நகரம் மில் இருக்கும் திசை பார்த்து உடைந்து பரவியது. சுழலும் சக்கரங்களின் வெப்பத்தைக் குறைக்க ஊற்றப்படும் தண்ணீர் ஆவி பறக்கும் சூட்டோடு மில்லிலிருந்து வெளியேறி நிரந்தரமான சிற்றோடை போல வைகையாற்றில் வந்து கலந்தது. ஓடும் சுடுதண்ணீர் வாய்க்கால் மதுரையையும் பொன்னகரத்தையும் இரண்டாகப் பிரித்தது. தலைமுறை தலைமுறையாய் நெய்த தறியை இழந்தவர்கள் மதுரையின் சாயக்காரத் தெருவிலிருந்து வெளியேறி பொன்னகரத்தின் சுடுதண்ணீர் வாய்க்கால் தெருவிலே வந்து குடியேறினர்.

கொடும் அவலத்திற்கும், புதுவாழ்வு குறித்த நம்பிக்கைக்கும் இடையில் நெருஞ்சிமுள் பரப்பில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். காலம் குதறிப்போட்ட ஒரு குரூர பூமியில் தங்களது கடந்த காலங்களை நினைவுக்கு வராத பெரும் புதைகுழியில் மூடிவிட்டு ஒவ்வொரு நாளும் அதைக் கடந்து போய்க்கொண்டிருந்தனர். வெள்ளைக்காரன் கொடுத்த கூலித் துட்டுக்கு வாழ வேண்டியநிலை. தங்கும் வீட்டிலிருந்து வாங்கும் பொருள்வரை எல்லாவற்றிற்கும் துட்டு கொடுக்கவேண்டியிருந்தது. துட்டின் வழியே வாழப் பழக வேண்டியிருந்தது. துட்டுக்கு வாழும் கூலி வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக மண்ணில் நிலைகொள்ள ஆரம்பித்தது. கும்பாக்களில் தின்றபொழுது விரிந்து பிசைந்த விரல்களால் தூக்குச்சட்டிக்குள் விரல் சுருக்கி கோழி போல கொத்தி எடுக்க பழகினர். விரல்கள் அறுந்த நூலைத் தேடி சதா அலைந்தபடி இருந்தன.

கிழக்கே சுடுதண்ணீர் வாய்க்காலும் மேற்கே பிரம்மாண்டமாய் மேலெழுந்து கொண்டிருந்த சிறைச்சாலைச் சுவரும் பொன்னகரத்தின் எல்லையாக இருந்தன. தெற்கு எல்லையாக காட்டன் மில்லும் வடக்கே வைகை நதியும் இருந்தன. நாற் சதுரத்தின் இடையில் இன்னொரு நகரம் உருவானது. ஆனால் அதற்கு மதுரையைப் போன்று பெருமைமிகு வரலாறோ அவிழ்க் கமுடியா சாபமோ இல்லை. பெரும் கடம்பவனத்தை அழித்து குலசேகரபாண்டியன் உருவாக்கியதைப்போல அல்லாமல், காட்டுச்செடிகள் மண்டிக்கிடந்த இடத்தில் இரண்டு வெள் ளையர்கள் கட்டிய காட்டன் மில் காரணமாக மக்களே உருவாக்கிக் கொண்ட நகரமாக அது இருந்தது.

எங்கெங்கு இருந்தெல்லாமோ வந்து அங்கே குடியேறினர். கிராமத்தில் அவர்களுக்கும் சேர்த்து வேலைபார்த்த சேவைச் சாதிகள் எதுவும் அங்கு இல்லை. கிராமத்தில் எல்லோருக்கும் அடிமைச் சேவகம் செய்தவர்களும் இப்பொழுது துட்டுக்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களாயினர். தங்களின் துணிகளைத் தாங்களே துவைத்துக் கொண்டனர். சுள்ளி பொறுக்கி அடுப்பெரித்தனர். இளவட்டக் கல்லும் மந்தைக்கல்லும் இல்லாத இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக தெருக்கள் உருவாகின. வானத்தை அண்ணாந்து பார்த்துக் கடந்து போகும் மேகம் தரும் நம்பிக்கையையும் ஏமாற்றத்தையும் கணித்திட மனம் தயாராக இல்லை. வாரக் கடைசி நாளில் வாங்கும் கூலியைக் கணக்கிட் டபடியே கால்கள்

ஓடின. பேரிரைச்சலில் இருந்து தப்பித்து ஓடி எலிப்பொந்துக்குள் நுழைந்துகொள்வதைப்போல மில்லில் இருந்து வந்து வீட்டுக்குள் நுழைந்தனர். வாழ்வின் நெருக்கடி எதற்குள்ளும் வாழப் பழக்கியது. நோய்நொடிகளையும் தேவைகளையும் அவர்களே சமாளித்தனர். ஆனால் அவர்களால் சமாளிக்க முடியாதபடி இருந்தது பிரசவம் மட்டும் தான். பெருகி நிற்கும் பொன்னகரம் பிரசவம் பார்க்க நாவிதப் பெண்கள் இல்லாமல் பெரும் இன்னல் பட்டது. தன்னாலானபடி விளக்கெண்ணை தேய்த்து நீவி எடுத்த அடி இடுப்பிலே இருந்து மரணங்களே வெளிவந்தன. எண்ணற்ற பிரசவங்கள் மரணத்தில் முடிந்தன. வலி ஏற்பட்டவுடன் மாட்டு வண்டியிலே தூக்கிப் போட்டுக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரை கிராமங்களுக்குக் கொண்டுபோயினர். ஆற்றின் வழியிலேயே மரணங்கள் சம்பவித்தன. சுரக்காத மார்போடு முதல் பிரவசத்திலேயே முடியும் வாழ்வே பெண்களின் விதியானது. மூன்றாவதாகவும் நான்காவதாகவும் பெண்ணை மணந்தனர் ஆண்கள். நகரத்தில் துட்டுக்கூலிக்கு வேலை பார்க்கும் சொந்தக்காரனுக்கு பெண் கொடுக்க யாருக்கும் சலிப்பில்லை. கடைசிப் பெண்ணின் வழியே வாழ்வு தொடர்ந்தது. நாவிதப் பெண் இல்லாத துணிச்சலில் வயித்துப்பிள்ளைக்காரிகளை வாரித் திங்கும் பிசாசுகள் பொன்னகரம் எங்கும் குடியிருந்தன. வைகையின் மணல்வெளி எங்கும் ‘என்னோட மூத்த சம்சாரம் இங்கதான் செத்தா’ ‘என்னோட ரெண்டாவது சம்சாரம் இங்காதன் செத்தா’ என்று நடுகல் நடப்படாத நினைவுகளைத் தூக்கிச்சுமக்கும் மனிதர்கள் வலியை உணரமுடியாத மனநிலையுடன் ஷிப்டுகளை நோக்கி ஒவ்வொரு நாளும் ஓடிக்கொண்டிருந்தனர்.

*

**ரா**மாயணச் சாவடியிலும், செல்லத்தம்மன் கோவில் செக்கடியிலும், மைனா தெப்பக்குளத்திலும் காவக்காரர்கள் வந்து தங்கி ஓராண்டுக்கு மேல் ஆகப்போகிறது. பாழடைந்த இருள்கூடு கட்டியிருக்கும் இடமாகத்தான் அவை எல்லாம் இப்பொழுது இருக்கின்றன. படுத்துத் தூங்கும் மடம்போல ராமாயணச் சாவடி மாறிவிட்டது. இரவின் புரவிகளை இழுத்துப்பிடித்து ஓட்டிச்சென்ற அதிரதர்கள் தங்கியிருந்த இடம் தனது உயிர்துடிப்பை இழந்துவிட்டது. துண்டிக்கப்பட்ட நிலத்தில் சீய்யான்மார்கள் தனித்து விடப்பட்டனர். தானப்பக்கோனாரின் கனவோடு எல்லாம் கலைந்துவிட்டது. தாளுதுவானும், நிழலுள் ஒடுங்கபவனும், மூழ்கா பாதடி கொண்டவனும், தோலாவழக்கனும் மகா கெட்டிக் காரர்களும் இராக் காவலுக்கு நகரத்துக்குள் வருவதேயில்லை. அவர்கள் எல்லாம் நகரை விட்டு வெளியில் அமர்ந்து இரவைக் கயிறெனக் கட்டி மாறி மாறி இழுத்து வித்தை காட்டிக் கொண்டிருக்கின்றனர். இரவு அவர்களுக்கானதாக இருக்கும்வரை இரவின் நகரமும் அவர்களுக்கானதாகத்தான் இருக்கிறது.

எழு நூறு ஆண்டுகளுக்கு முன் மாலிக் காபூர் பெரும் படையொன்றைத் திரட்டிவந்தபொழுது ஆலவாய் அண்ணலின் கோட்டை எதிர்த்து நிற்கமுடியாமல் வீழ்ந்தது. வீழ்ந்த நகரம் சூறையாடப்பட்டு தீர்ந்தது. கடைசியில் கோயிலின் மீனாட்சியைத் தூக்கிக்கொண்டு மக்கள் தப்பி ஓடினர். ஓடும்பொழுது கோவிலுக்குள் இருந்த கிளியை விரட்டி விடவும் முடியாமல் பிடித்துச்செல்லவும் முடியாமல் அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர்.

அறுபது ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் மூல விக்ரஹம் கோவிலுக்கு வந்தது. ஆனால் அந்த அறுபது ஆண்டுகளும் மூடப்பட்ட கோவிலின் பிரகாரங்கள் கிளிகளால் நிறைந்திருந்தன. பச்சை நிற இறகுகளைக் கொத்தி உதிர்த்தவண்ணம் கோவில் முழுவதையும் பெரும் வனத்தின் அடிவாரமாக அவை ஆக்கிவைத்திருந்தது. கிளிகள் மிழற்றும் ஓசை பொற்றாமரைக் குளமெங்கும் நிரம்பிக் கிடந்தது. பச்சை நிறச் சிலைஓராயிரம் கிளிகளாக மாறி பிரகாரமெங்கும் பறந்தபடி இருந்தது. மூடப்பட்ட நெடுங்கதவுகள் தேவியின் சிரிப்பைக் கேட்டபடியே இருந்தன.

அறுபது ஆண்டுகளுக்குப் பின் கோவில் நெடுங்கதவம் திறந்தது. தேவியின் பச்சை நிற திரிபங்க சிலை இடதுகாலை வளைத்தபடி நின்றது. பூஜைகள் துவங்கப்பட்டபொழுது, தேவியின் மூல சக்தி கருவறையில் இல்லை, கிளிக்கூண்டு மண்டபத்தில்தான் இருக்கிறதென்று சாஸ்திரிகள் சிலர் சொன்னார்கள். கிளி அகலாத கோயிலுக்குள் இருந்து சக்தி அகலவேயில்லை. மாலிக் காபூர் வெறும் நகைகளைத்தான் கொள்ளையிட்டுச் சென்றான். மக்கள் வெறும் சிலையைத்தான் தூக்கிக்கொண்டு ஓடினர். ஆனால் தேவியின் திருமுகமும் சிரிப்பொலியும் கோயில் பிரகாரத்தை விட்டு அகலவேயில்லை. கல்மரம் செழித்துக் கிடக்கும் இக்கடம் பவனத்தில் தனது பிள்ளைப் பிராயத்து நினைவுகளோடு அறுபதாண்டு காலமும் கிளிக்கூண்டு மண்டபத்திலேதான் அவள் இருந்தாள். எனவே தேவியின் மூலசக்தி அங்குதான் இருக்கிறதென்று அன்று முதல் இன்றுவரை சாஸ்திரிகள் சிலர் சொல்லிவருகின்றனர்.

ஒளியின் அரசி மீனாட்சியும், இருளின் அரசி செல்லத்தம்மனும் ஆளும் இப்புராதன நகருக்கு ஆதியில் இருந்து வாய்க்கப்பெற்றது மூக்கழகு கொண்ட கிளியும், சப்பை முக ஆந்தையும்தான். இந்த பறவைகள்தான் ஆலவாய் மண்ணை ஆண்டு திரிவன. அறுபதாண்டு காலம் தேவியின் மூல விக்ரஹமே அகன்றாலும் அகலாத கிளி ஒளியரசியின் மரபைக் காத்ததைப்போல தாதனூர் காவக்காரர்கள் வராத இரவுகளை ஆந்தைகள் காத்துக்கிடந்தன. இரவின் மைந்தர்கள் வராததால் வெறும் பரப்பாகி விடாமல் இருக்க ஆந்தைகள் குரலெழுப்பியபடி கிடந்தன. காவக்கம்புகளை மண்ணில் ஊன்றிச் செல்வதைப்போல ஒவ்வொரு மரக்கொப்பிலும் அதிர்ந்தபடி அமர்ந்து சென்றன. கூடல் மாநகரின் இருள் எப்பொழுதும் போல் நூற்றுக்கணக்கான கண்களால் பார்க்கப்பட்டுக் கொண்டேயிருந்தது. இரவின் மகாசக்தி எதுவும் நகரை விட்டு அகலவில்லை. ஆனால் அகன்றுவிட்டதென நினைத்த பழைய சாஸ்திரிகளைப் போலத்தான் சீயான்மார்களும் தாதனூர்க்காரர்கள் வராத சாவடியில் பெரும் துக்கங்கொண்டு இரவைக் கழித்தபடி இருந்தனர்.

*

**ந**கரம் எல்லா வகையிலும் மாற்றங்களைச் சந்தித்தபடி இருந்தது. மேற்குப்பகுதி வேகமாக விரிவடைந்தது. கிழக்கே ஒரே ஒரு பெரிய பள்ளிக்கூடம் உருவானது. இந்து கலாசாலைக்கு அடுத்தபடியாக கிறிஸ்தவ மிஷனரிகள் அல்லாதவர்கள் கட்டிய பள்ளி. பள்ளிக்கூடம் போகும் மாணவர்களின் எண்ணிக்கை பெரிய அளவு அதிகரித்திருந்தது. திண்ணைப் பள்ளிக்கூடம் கண்ணுக்கு முன்னால் மறைந்தது. பள்ளி எனும் நாற்றங்காலில் முளைத்த பயிர்கள் உத்தியோகங்கள் எங்கும்

செழித்திருந்தன. ஸ்மால் கோர்ட் ஜட்ஜ் ஆக இருந்த மதுரைவாசிகள் டிஸ்ட்ரிக்ட் கோர்ட் ஜட்ஜாக உயர்ந்தனர். அதிகாரத்தின் படிக்கட்டுகளில் ஏறுவதற்கு ஒருவருக்கொருவர் முண்டியடித்துத் தள்ளிவிட்டபடி ஏறினர். போலிஸ் டிபார்ட்மெண்ட்டில்தான் இன்ஸ்பெக்டருக்கு மேல் முன்னேற முடியவில்லை. ஒருவேளை பிச்சுவையர் இருந்திருந்தால் டி.எஸ்.பி. ஆகி இருப்பார். அவரின் மரணத்தோடு அது முடிந்தபோனது. மற்ற எல்லா இலாக்காகளிலும் அடுத்தடுத்த படிக்கு முன்னேறியபடி இருந்தனர். நாளிதழ்களின் கட்டுகள் மதுரை ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்கியபடி இருந்தன. இப்பொழுது போஸ்ட் ஆபீஸில் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகரிக்கப் பட்டுவிட்டது.

நகரம் மாற்றங்களைச் சந்தித்தபடியே இருந்தாலும் வைகையின் வடகரை மட்டும் எப்பொழுதும் போல் அப்படியே இருந்தது. கலெக்டரின் வீடான மங்கம்மாள் அரண்மனையும் அதனைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஐரோப்பியர்களின் குடியிருப்பும்தான் வடகரை மதுரை. பங்களாக்களின் ஒழுங்கும், சாலைகளின் நேர்த்தியும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் கொண்ட வடகரை, மதுரை ஐரோப்பியர்களின் ஒரே குடியிருப்புப் பகுதியாக நூறாண்டுகளுக்கும் மேலாக இருந்துவருகிறது. செல்வச் செழிப்பு மிக்க இந்தப் பகுதி பங்களாக்கள் விளைந்து கிடக்கும் மாந்தோப்புபோல் இருந்தது. இங்குமங்குமாக கூட்டுவண்டிகளும், சாரட் வண்டிகளும் போகவும் வரவுமாக இருந்தன. மிடுக்கும், அதிகார் தோரணையும் தெருக்களின் இருபுறமும் ஆளுயரத்திற்கு நின்றது. மேற்கு மூலையில் நீண்ட சுற்றுச்சுவர்களுக்கு உள்ளே இருக்கிற ஐரோப்பிய இடுகாடு பல நூறு கதைகளைக் கொண்டதாக இருந்தது. மதுரையை நிலை கொண்டு ஆளத் துவங்கியபின் இறந்த வெள்ளையர்களின் உடல்கள் ஒன்றுவிடாமல் கல்லறைத் தோட்டத்திற்குள் வைக்கப்பட்டிருந்தன. பிளேக்கும் காலராவும் பல கல்லறைகளுக்கு செங்கல் செய்து கொடுத்திருந்தன. அவ்வளவு இல்லாவிட்டாலும் சிறிய அளவிலான செங்கற்களை செம்பூரும் தாதனூரும் கொடுத்திருந்தன.

*

# 99

**ஓராண்டுக்கு முன் பொறுக்கமுடியாத வேதனையோடு தாதனூர்** எடுத்த முடிவு மதுரையின் இருள் பரப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. ஊர் பனையில் கட்டிவைத்து எறிந்துகொன்ற பின்பும் அதன் ஆத்திரம் அடங்கவில்லை. பாறையின் மீது திட்டுத் திட்டாக உறைந்திருந்த ரத்தத்திற்குள் வேப்பம் பூக்கள் மூழ்கிக் கிடந்ததைப்போல மூக்கனின் ரத்தத்திற்குள் ஊரே மூழ்கிப்போயிருந்தது. சின்னானின் பதற்றமும் தந்திரமும் வெறியும் மிக்க கால்களாக தாதனூரின் எல்லாக் கால்களும் மாறியிருந்தன. தாழாத தலையை எதிர்த்திசையிலிருந்து வெட்டி எறிந்ததைப்போல இப்பொழுது மதுரையின் இரவுகளிலிருந்து தாதனூர் வெட்டி எறியப்பட்டுள்ளது. ஆனால் கொப்பளித்துத் தெறிக்கும் தாதனூரின் ரத்தம் மதுரையை நடுக்கமுறச் செய்தது.

*

**க**ருப்பனுக்கு முன் கருகி உதிரும் இரவின் சாம்பலைப் பூசியபடி தாதனூர்க்காரர்கள் வெளியேறுகின்றனர். இப்பொழுது அவர்களுக்கு மதுரையின் வட கண்டம் முழுவதும் திறந்துவிடப்பட்டு விட்டது. பெரியாற்றின் நீர் பாய்ந்தோடி விளையவைத்த நூற்றுக்கணக்கான கிராமங்களின் இரவுகள் இப்பொழுது அவர்களின் பாதடிக்கு வணங்கி நின்றன. தண்ணீர் வந்த ஏழாவது ஆண்டு முழுமையாக விளைந்து நின்ற வெள்ளாமை தாதனூர்க்காரர்களின் இரவுகளுக்குத் தீனி போட்டது. பேரணையில் திறக்கப்பட்டு பெரு மதகில் ஓடிவந்த நீரெல்லாம் கசக்கப்படும் நெல் மணியாக மாறி அமணமலையின் ஆலமரத்தடியில் வந்து குவிந்தது. நூற்றுக்கணக்கான கிராமங்கள் நன்செய் விவசாயத்திற்கு முழுமையாகப் பழகியபின்தான் தாதனூரின் நண்டுசிண்டுகள் வரை எல்லோரும் கருது கசக்கப் பழகினர். அதுவரை மதுரையைச் சுற்றியுள்ள எட்டுக் கண்மாயில் மட்டுமே நெல் விளையும். அந்த எட்டும் தாதனூர்க்காரர்களின் காவல். பெருங்காவல் இருந்தாலும் தண்ணீர்

பற்றாக் குறையின் காரணமாக மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் முழுமையாக அறுவடையாகும். காவக்காரர்களுக்கு ஓரிரு மரக்கால் தான் கூலி வந்து சேரும். அந்தக் கூலி நெல்லையும் கம்பு சோளத்துக்கோ, குருதவாலி சாமைக்கோ பண்டமாற்றி விற்று மூடைக்கணக்கிலே தானியங்களைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். கொக்கு நடந்து கடக்கும் அளவு கொண்ட எட்டுக் கண்மாயை வைத்துத்தான் மதுரையின் விவசாய ஜீவனம் நடந்தது. ஆனால் இன்றோ சமுத்திரத்தில் போடப்பட்ட ஓட்டைபோல தண்ணீர் பீறிட்டு வந்துகொண்டேயிருக்கிறது. ஏழு மாதமும் பெருக்கெடுத்து நீர் வர நிலமெல்லாம் பயிர் செழித்தது. செழித்து நிற்கும் கதிரை அறுத்து முடிப்பதற்கு முன் கசக்கி எடுக்க மாசி பங்குனி மாதங்கள் முழுவதும் தாதனூர் மூடைதூக்கியபடியே இருந்தது.

*

**பெ**ரியாற்று நீர் பாயத் துவங்கிய நூற்றுக்கணக்கான கிராமங்களும் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது அனுபவங்களைப் பெற்றபடியே இருந்தன. முதல் நான்கு ஆண்டுகளும் பெரும் சவால்மிக்க ஆண்டுகளாகத்தான் இருந்தன. நாற்றங்காலே ஒழுங்குக்கு வசப்படவில்லை. ஊரே பெரும் சிரமப்பட்டது. கூட்டு மனம் கொஞ்சம் கொஞ்சமாக வாய்க்கப்பெற்றது. வலசை வலசையாகப் பறவைகள் வந்து இறங்குவதைப்போல ஒரு பெரும் இணக்கம் எல்லோருக்கும் தேவைப்பட்டது. இணங்கிய வாழ்வுக்குள் இருந்து சம்சாரித்தனம் செழிப்புற ஆரம்பித்தது. வெளியில் போன சொந்தம் சுருத்தெல்லாம் ஊருக்கு வந்து சேர்ந்தன. தண்ணீர் வந்த ஐந்து ஆறாவது ஆண்டுகளில் முழுமையான அளவு விவசாயம் நடந்து அறுவடை முடிந்தது. இப்பொழுதுதான் புதுத் தண்ணியின் தந்திரம் பிடிபட்டுள்ளது. ஆனால் ஏழாவது ஆண்டில் புதுப்பிரச்சனையை கிராமங்கள் சந்திக்க நேர்ந்தன. செழிப்பாகப் பயிர் பரிந்து நிற்கும் வயல்கள் மறுநாள் காலையில் நெல்மணிகளே இல்லாமல் வெறும் வைக்கோல்களாக மிதிபட்டுக் கிடந்தன. ஏழு மாத காலமும் குடும்பமே இரவு பகலாக உழைத்து விளைய வைத்த பயிர் இரவோடு இரவாகக் கசக்கப்பட்டு மூடை மூடையாக வெளி யேறியது. ஊரிலே எந்த வயலில் நல்ல விளைச்சல் இருக்கிறதோ அந்த வயல்கள் எல்லாம் கசக்கப்பட்டன. மானாவாரிக் காடாய்க் கிடந்த ஊர்கள் நன்செய் விவசாயத்திற்கு மாறியபொழுது ஊர் ஊருக்கு கடந்த ஆறு வருடமாக நல்ல ஆசாரிகளையும், தண்டல்களையும், நீர்கட்டிகளையும் தேடிப் பிடித்துவைத்துக் கொண்டனர். ஆனால் இதுவரை அவ்வளவு முக்கியமாக உணரப்படாத காவக்காரன் இப்பொழுது எல்லோருக்கும் தேவைப்பட்டான். வருடம் முழுவதும் உழைத்து விளையவைத்த பயிரைப் பாதுகாக்க நல்ல காவக்காரனைத் தேடி பல ஊரைச் சேர்ந்தவர்களும் தாதனூரின் ஆலமரத்தடிக்கு வண்டி கட்டி வந்தபடியே இருந்தனர்.

ஊர் பெரியாம்பிள ஒச்சு அவ்வளவு எளிதில் யாருக்கும் வாக்கு கொடுத்துவிடுவதில்லை. ‘போயிட்டு பத்து நாள் கழிச்சு வாப்பா, பேசிச்சொல்றோம்’ என்று சொல்லி அனுப்பியபடி இருந்தார். எல்லா ஊருக்கும் காவல் தரவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. எனவே பெரிய கிராமங்களாகப் பார்த்து மட்டுமே காவலை ஏற்றுக்கொண்டனர். வாய்ப்பாக இருக்கிற பெரிய கிராமம் ஏதேனும் காவக்கேட்டு வராமல் இருக்குமேயானால் ஒரே இரவில் பாதி வயலைக் கசக்க ஏற்பாடாகும்.

மறுநாள் வண்டிகளைக் கட்டிக்கொண்டு அந்த கிராமத்தார் ஆலமரத்தடியில் வந்து காத்துக்கிடப்பார்கள். காவலை ஏற்றுக்கொள்வதாக பெரியாம்பிள சொல்லும் கிராமத்திற்கு, கருப்பு கோவிலில் முடி இறக்கிவிட்டு மறுநாளே தாதனூர்க்காரன் ஒருவன் குடியேறுவான். அதன்பின் ஒரு நெல்மணி கூட கசக்கப்பட்டு வெளியேறாது. காவக்காரன் அறுவடை காலம் முழுவதும் வயல் வரப்புகளிலே அலைந்து திரிந்தான். தாதனூர் காவலை ஏற்றுக்கொண்ட கிராமத்தின் பெயர்கள் உடனடியாக இருளெங்கும் பரவின. அதற்குப்பின் ஒரு பொட்டு களவு இல்லையெனச் சொல்லி, ஊர் ஊருக்கு வண்டி கட்டி ஆலமரத்தடி நோக்கி வரத்துவங்கினர். நெல்லு கசக்க வரும் தாதனூர் அல்லாத மற்றவர்கள் கசக்கிச் செல்ல எண்ணற்ற கிராமங்கள் இருந்தன. எனவே தாதனூர் காவல் பார்க்கும் கிராமங்களின் பக்கம் தலைவைத்துப் படுக்கக்கூட அவர்கள் தயாராக இல்லை. ஒற்றைக் காவக்காரன் குடியேறியதும் கிராமத்தின் மொத்த இருளும் அவனுக்குக் கட்டுப்பட்டது. பெரிய கிராமங்களின் வரப்புமேடுகளில் கையில் கருங்காலிக் கம்போடு தாதனூர் காவக்காரன் நடந்துபோவதை நிலவு உற்றுப்பார்த்தபடி இருந்தது. கலங்காத நீருக்குள் விழிப்புற்றிருக்கும் நிலவைப் போலவே காவக்காரனின் கண்களும் இருந்தன.

*

**க**லெக்டர் பென்னிங்டனின் நிர்வாகம் ஓராண்டாகக் கிடைத்த அனுபவம் கண்டு செய்வதறியாது திகைத்து நின்றது. இந்த ஆண்டு முழுவதும் தாதனூர்க்காரர்கள் யாரும் காவலுக்காக ஒரு இரவு கூட நகருக்குள் நுழையவில்லை. ஆனால் முறையான காவல் கூலி அவர்களுக்குப் போய்க்கொண்டிருந்தது. காவக்கூலி தர மறுத்தவர்களின் வீட்டில் களவு போவதை போலிசால் தடுக்கமுடியவில்லை. களவு போனவர்கள் காவக்கூலியை விட பல மடங்கு துப்புக்கூலி கொடுத்து பொருளை அவர்களாகவே மீட்டுக்கொள்கின்றனர். ஐந்து சதமான களவு கூட போலிஸ் ஸ்டேசனில் புகார் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட புகார் எதிலும் உரியவர்களைக் கைதுசெய்து சட்டப்பூர்வமான சாட்சியங்களோடு கூண்டிலேற்றி தண்டனை பெற்றுத் தர போலிசால் முடியவில்லை. எனவே வெறும் காவக்கூலி இப்போது காவக்கூலி, துப்புக்கூலி என்ற இரு வடிவில் காவல் தெருக்களுக்கு வராத காவக்காரர்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அவர்கள் காவல் தெருக்களுக்கு வராதவர்களாக இருக்கலாம். ஆனால் நகரை முறையாக வெளிப்புறமிருந்து காவல் காத்து வந்துள்ளனர். இந்த ஓராண்டில் வேறு எந்தத் திருடர்கள் குழுவும் நகருக்குள் நுழையவில்லை. கூலி தராததால் நகருக்குள் நிகழ்ந்த தாதனூர் களவுகள் அனைத்தும் துப்புக்கூலி பெற்றுக்கொண்டு முறையாக முடிக்கப்பட்டுள்ளன. தாதனூரின் இருள் வளையங்கள் நகரின் மீது ராக்கால கோட்டை கட்டி விடிவெள்ளி முளைக்கும் வரை ஒவ்வொரு நாளும் காத்துவந்தது.

நகரின் குடிக் காவல்முறையை ஒழிக்கமுடியாதது மட்டுமல்ல, பெரியாற்று பாசனப்பகுதியின் பெரும் கிராமங்களில் எல்லாம் தாதனூரின் காவல் ஏற்பட்டது. நீர் வந்து பாய்ந்த ஆறாம் ஆண்டில் அரசு எதிர்ப்பார்த்ததைவிட வரி வருவாய் அதிகமானது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் எறிவதைப்போல பெரியாற்று நீர் மேலூர் பகுதியின் சட்ட

ஒழுங்குப் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவந்தது மட்டுமின்றி பெரும் வருவாயையும் அரசுக்கு ஈட்டித்தந்தது. அவற்றுடன் சேர்ந்து புதிய சவால்களும் முளைவிட்டு வந்தன. தாதனூர்க்காரர்களை நகருக்குள் வராமல் வெளியில் நிறுத்தியது என்பது, அவர்களும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதற்கு வசதி செய்துகொடுத்தது போல் ஆனது. நகரின் குடிக்காவல் கூலி வந்துகொண்டிருக்கிற அதே நேரத்தில் பெரியாற்றுப் பாசனத்தின் பெரும் கிராமங்கள் பல தாதனூரின் கதவைத் தட்டி காவல் தருமாறு கேட்டு நின்றன. அறுவடையாகக் களத்துமேட்டில் குவிந்துகிடக்கும் நெல்லிலிருந்து அரசுக்கு கிஸ்தி தருவதற்கு முன் காவக்காரர்களுக்குக் கூலி தரப்படுவதாக கிராம அதிகாரிகள் எழுதியுள்ள குறிப்புகளைப் பார்த்து பென்னிங்டன் நிலைகுலைந்து போனார். இந்த ஓராண்டில் மட்டும் முப்பத்திரண்டு பெரும்கிராமங்களின் காவலைத் தாதனூர் ஏற்றுள்ளதாக அவருக்கு தெரியவந்துள்ளது. ஆனாலும் மதுரைக் காவலில் சிறு பிசகு கூட நேராமல் அவர்கள் காத்துநின்றனர்.

நிலைமை மேலும் சிக்கலானதாக மாறியுள்ளது. சட்டவிரோதமான கும்பலிடமிருந்து நகரத்து காவலை மீட்டு எடுக்கும் முயற்சியானது, முன்னேற்றத்தையும் சறுக்கல்களையும் மாறி மாறிச் சந்தித்தபடி இருந்தது. இரவில் மதுரையின் வீதிகளில் வந்த காவக்காரனை பெரும் விலை கொடுத்துத் தடுக்க வேண்டியிருந்தது. ஆனால் பகலில் காவக்கூலி வாங்க வருபவர்களிடம் இரவில் காவக்காரன் வராததைப் பற்றிய பிரக்ஞையேயின்றி மக்கள் நடந்துகொள்கின்றனர். பிரச்சனை காவக்காரனிடம் இல்லை. அவனைப் பற்றிய மக்களின் கருத்தும் நம்பிக்கையும்தான் என்று நினைத்த பென்னிங்டன் அதைத் தகர்ப்பது பற்றி யோசிக்க ஆரம்பித்தார். கால அவகாசம் தேவைப்பட்டது. அதைத் தவிர வேறுவழி இல்லாததால் அந்த வழியை அனுமதித்தபடி இருந்தது அரசு நிர்வாகம்.

கலைக்கப்பட்ட கூட்டிலிருந்து மலைத் தேனீக்களைப் போல தாதனூர்க்காரர்கள் நகர் கூட்டுக்குகள் இருந்து கலைக்கப்பட்டுவிட்டனர். ஆத்திரமிக்க தேனீக்கள் சுற்றுவட்டாரம் முழுவதும் கூடு கட்டிவிட்டன.

கலெக்டர் பென்னிங்டன் மிக நிதானமாக கூடு கட்டப் பட்டிருக்கும் அந்த மரக்கிளைகளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

*

# 100

**அமாவாசையை நோக்கி உருளும் நிலவுக்கு அடியில் நிறைந்த குளம்** போல் ததும்பி வழிந்துகொண்டிருந்தது இருள். முன்பு சிறுகச் சிறுக வெளியேறி நகர்க் காவலுக்கு போய்க் கொண்டிருந்தவர்கள் மொத்த மொத்தமாகப் புறப்பட்டு மூன்று பட்டறையாகப் போகின்றனர். கை தேர்ந்த மூத்த பட்டறை கன்னம் போடப்போகிறது. அது ஒன்று அல்லது இரண்டு கொத்தாகப் போகிறது. அதற்கடுத்த பட்டறை ரயில் களவுக்குப் போகிறது. அது ஒரு கொத்தாகப் போகிறது. கடைசிப் பட்டறை நெல் கசக்கப் போகிறது. அதுஇரண்டு அல்லது மூன்று கொத்தாகப் போகிறது. இது தவிர நகரத்துக் காவலை கீக்காவல், மேக்காவல் என இரண்டாகப் பிரித்து இரண்டு கொத்து பார்த்துக் கொண்டிருக்கிறது. காவல் பார்ப்பதும், காவக் கூலி கொடுக்காத வீட்டுக்கு களவுக்குப் போகவேண்டியதும் அந்த கொத்துக்களோட வேலைதான். மாசி பங்குனி முடிந்துவிட்டால் கருது கசக்குவது நின்றுவிடும். அப்புறம் கன்னம் போடவும், ரயில் களவுக்கும், பிற களவுக்குமாகப் பட்டறை பிரிந்துவிடும். கொக்கு உழப்பிய நாற்றாங்கால்போல குலைக்கப்பட்டுவிட்ட நகர்க் காவலால், காவக்காரர்கள் எங்கெங்கோ போய்த் திரும்பவேண்டியதிருந்தது.

கன்னம் போட ரயில் ஏறி வட திசை போன பம்பையன் கொத்து ஒரு வாரமாகியும் இன்னும் ஊர் திரும்பவில்லை. துப்பாளி சொருகிவைக்கும் வேப்பிலை முடிக்காகவோ, தடவப்பட்டிருக்கும் சுண்ணாம்புக் குறிக்காகவோ ஏதோ ஒரு காட்டுப்பகுதியில் அவர்கள் இருளைக் குடித்தபடி காத்துக் கிடக்கின்றனர். இரண்டாம் கொத்தான கருப்பணன் கொத்தும் இன்று கரகரன்னு மசங்குற நெரத்தில் ஆலமரத்தடியிலிருந்து கிளம்பி ரயிலடிக்குப் போனது. கன்னம் போடப்போகும் எந்தக் கொத்திலும் ஐந்து பேருக்கு மேல் போவதில்லை. அதில் ஓரிருவர் தாதனூர் அல்லாத வேறு ஊர்க்காரர்களாகவும் இருந்தனர். கள்ள நாட்டில் களவில் சிறந்த யாரும் தாதனூர் கொத்தோடு ஒருமுறையாவது கன்னம் போடப் போய்வருவது என்பது மரபாக வந்துகொண்டிருப்பது. எலி வால் அளவு

கொண்ட கன்னக்கோல்கள் இருளையே சதுரவடிவில் உருவி எடுத்துவிடும் சக்தி வாய்ந்தவை. கன்னக்கோல்களை இடுப்பிலே சொருகியபடி அவர்கள் உருவப்பட்ட இருளின் நாற்சதுரப் படிக்கட்டுகளின் மேலேறிப் போகின்றனர்.

கருப்பணன் கொத்து புறப்பட்டுப்போன கொஞ்ச நேரத்தில் வீரணன் கொத்து புறப்பட்டது. இது ரயில் களவுக்குப் போகும் கொத்து. எனவே தெற்குப்பக்கமாக திருப்பரங்குன்றத்தை நோக்கி அவர்கள் நடந்தனர். கன்னம் போடப்போகிறவர்களும், ரயில் களவுக்குப் போகிறவர்களும், ரயிலின் நேரத்தைக் கணக்கிட்டே புறப்படுகின்றனர். ரயில் களவில் ஈடுபடுகிறவர்கள் மதுரையின் வடதிசை போகும் ரயிலைத் தொடுவதில்லை. தெற்கே போகும் ரயில்தான் குறி. தொழில் ரீதியாகவும், நில அமைப்பு ரீதியாகவும் அதுதான் பொருத்தமாக இருக்கும். மிகத் தேர்ந்தவர்கள் கன்னம் போடவும், அதற்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் ரயில் களவிலும் ஈடுபட்டனர். ரயில் களவில் தினந்தோறும் வேலையில்லை. வாரத்திற்கு ஒருநாள் அல்லது பத்து நாளைக்கு ஒரு முறை தான் வேலையிருக்கும். ஆனால் வசமாக அமைந்தால் ஊருக்கே ஒரு மாதத்திற்குத் தேவையானதைத் தூக்கி வரலாம். இன்று சரக்கு ரயில் ஒன்று வரும் தகவல் கிடைத்ததை அடுத்து வீரணன் கொத்து இரவுக் கஞ்சி குடித்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஆலமரத்தடியிலிருந்து புறப்பட்டது. ஊர் பெரியாம்பிள ஒச்சு கருப்பு கோவில் தாவாரத் திலே உட்கார்ந்திருந்தார். ‘கருப்பா... போயிட்டு வர்றோமப்பா...’ எனக் குரல் கொடுத்த வாக்கில் வலது கோடி ஆலமரத்திலிருந்து அவர்கள் புறப்பட்டனர். அமண மலை அடிவாரத்திலிருந்து தென்திசையில் களவுக்குப்போகும் ஒரே கொத்து இதுதான். ‘தெக்க போறவங்கெ தெளிச்சியா போங்கடா...’ என்று குரல் கொடுத்தார் பெரியாம்பிள ஒச்சு. பன்னிரண்டு பேர் கொண்ட அந்தக் கொத்து தென்திசையிலிருந்து நகர்ந்து இருளுக்குள் மறைந்தது.

ஆலமரத்தடி முழுவதும் சுறுசுறுப்பாக இருந்தது. பேச்சுச் சத்தத்தால் இருள் நிரம்பியிருந்தது. பொழுது மயங்கப் புறப்பட்டுப் போன கருப்பணன் கொத்தையும் அதன் பிறகு போன வீரணன் கொத்தையும் தவிர மற்ற எல்லோரும் ஆலமரத்தடியில்தான் இருந்தனர். அவரவர்களுக்கான நேரத்திற்காகக் காத்துக்கிடந்தனர். எங்கும் வெளியேறிப் போகாத பெருசுகள் இளவட்டங்களை வம்புக்கிழுப்பதும் சீண்டிவிடுவதுமாக இருந்தனர். மரத்தில் அடைந்திருந்த பறவைகள் அவ்வப்பொழுது குரலெழுப்பியபடி இருந்தன. கடந்த இரண்டு மாதமாகக் கொட்டித்தீர்த்த பனி இப்பொழுது எவ்வளவோ குறைந்துவிட்டது. ஆனாலும் ஆலமர இலைகள் குளிரில் நடுங்கியபடி இரவுக்குள் நீந்திக் கொண்டிருந்தன. வெறும் உடம்போடு குளிரில் நடுக்க இருட்டுக்குள் போகும் கருந்திரள் கூட்டம் ஆலமரத்தடியில் தயாரானபடி இருந்தது. ஊர்ப் பெரியாம்பிள ஒச்சுவுக்குத்தான் இந்தப் பனிக்காலம் பெரும் சோதனையாக அமைந்துவிட்டது. ‘பெரியாம்பிள, தாவாரத்த விட்டு வெளிய வரக்கூடாதப்பா’ என்று எல்லோரும் சத்தம் போட்டதால், கருப்பு கோவில் தாவரத்திலே உட்கார்ந்து வெளியேறிப் போகும் ஒவ்வொரு கொத்தையும் உற்றுப் பார்த்து கவனித்துக் கொண்டிருந்தார் ஒச்சு. இரவு ஏறிக்கொண்டிருந்தது. நகரத்தின் கீக்காவல் பார்க்கிற கூட்டமொன்று மரத்தடியின் மையத்தில் இருந்து புறப்பட்டு கிழக்கு நோக்கிப் போனது.

அவர்கள் போய் நீண்ட நேரம் கழித்துத்தான் மேக்காவல் பார்க்கிற கூட்டம் புறப்பட்டது. மேக்காவல் பார்க்கிறவர்கள் பொன்மேனியின் உடைமரக்காட்டு ஓடையில் மையம் கொண்டிருப்பதால் காலங் கழித்துப் புறப்பட்டனர். ஆனால் கீக்காவல் பார்க்கிறவர்கள் மதுரையைத் தாண்டி கிழக்கே போக வேண்டியிருந்ததால் முன்னதாகவே புறப்பட்டனர். காவலுக்கு போகிற ஒவ்வொரு கூட்டத்திலும் இருபது, இருபது பேர் போனார்கள். ஆனால் முன்பு போல எல்லோர் கையிலும் காவக்கம்பு இல்லை. குறிப்பிட்ட சிலர் மட்டும்தான் கருங்காலிக் கம்பை வைத்திருந்தனர். மற்றவர்கள் எல்லாம் கன்னக்கோல் உள்ளிட்ட களவுக்கான கைக்கருவிகளிலிருந்து தாக்குவதற்கான ஆயுதங்கள் வரை சகலத்தையும் வைத்திருந்தனர். கடந்த காலங்களில் காவலுக்குப் போன நிதானம் எதுவும் இப்பொழுது அவர்களிடம் இல்லை. ஒவ்வொரு இரவும் முறுக்கேறிய வேகத்துடன்தான் அவர்கள் நகரை நோக்கிப் போகின்றனர். நம்மை வரவிடாத நகரத்தை இன்று விளையாடித் தீர்த்துவிடுவது என்ற வேகத்தில்தான் ஆலமரத்தடியில் இருந்து புறப்படுகின்றனர். நகரத்தின் அருகில் சென்றவுடன் தலைமுறை தலைமுறையாகக் காத்துக்கிடந்த தெருக்கள், மார்பை வருடும் குழந்தைகளின் கைகளைப்போல அவர்களின் நினைவுகளுக்குள் துழாவி வருட ஆரம்பிக்கிறது. தெருக்களின் மந்திரவாசனை பட்டு மயங்கிப்போகும் அவர்கள் களவுக்குரிய ஆயுதங்களை எல்லாம் வைத்திருந்தாலும் காவக்காரனின் மனநிலையுடன் சுற்றிச் சுற்றி வருகின்றனர். காவக்கூலி கொடுக்காத பெருந்தனக்காரர்களின் வீடுகளை நோக்கி இரவு விலகி அவர்களுக்கு வழி விடுகிறது. அந்தப் பாதையில் மட்டும் களவுக்கு வந்தவர்களைக் காவக்காரர்கள் அனுப்பிவைக்கின்றனர். மற்ற எல்லாப் பாதைகளிலும் அடைத்துநிற்கும் இரவின் வாயிற்காவலர்களைப்போல அவர்கள் நின்றுகொண்டிருக்கின்றனர்.

நகரத்துக் கீக்காவலும், மேக்காவலும் போனபிறகு ஆலமரத்தடிக் கூட்டம் பாதிக்குமேல் குறைந்துவிட்டது. பேச்சொலி அங்கும் இங்குமாக மரத்தடியில் மட்டும் கேட்டது. நடு மையத்திலிருந்த பெருங்கூட்டம் போனபிறகு, இருள் இறங்கி வெளியை அடைத்தது. மனித வெக்கை அகன்றதும் பனி ஊன்றி இறங்க ஆரம்பித்தது. சுற்றியும் கேட்டுக்கொண்டிருந்த பூச்சிகளின் இரைச்சல்கள் முற்றிலுமாக நின்றன. பனியின் ஈரப்பிசுக்கோடு கும்மிருட்டு நிலைகொண்ட நேரத்தில் ஆந்தை ஒன்றை குரலெடுத்துக் கத்தி மலை நோக்கிப் பறந்தது. களவுக்கான ஜாமத்தின் கதவு திறக்கும் ஓசை அது. இனி ஆந்தையும் கூகையுமே இரவின் வெளியை ஆட்சிசெய்யும்.

கருது கசக்கப்போகும் கூகையன் கொத்தும், முத்தணன் கொத்தும் மொத்தமாகப் புறப்பட்டது. முப்பதுக்கும் அதிகமான பேர் இருப்பார்கள். எல்லோரும் சாக்கு ஒன்றை இடுப்பிலும், இன்னொரு சாக்கை தலையிலும் கட்டியிருந்தனர். வடக்குநோக்கிப் புறப்பட்டு அவர்கள் போனார்கள். அவர்கள் போனவுடன் ஆலமரத்தடியைப் பெரும் அமைதி சூழ்ந்தது. தனித்த குரல்கள் மட்டுமே அங்குமிங்குமாக ஒலித்துக்கொண்டிருந்தன. பெருசுகள் ஒவ்வொருவராக எழுந்து தாவாரத்தின் அடியில் படுக்க வந்துகொண்டிருந்தனர். சிலர் மரத்தடி விழுதுகளிலே சாய்ந்து படுத்திருந்தனர். ஓசையற்று இருந்த அந்தப் பெருவெளியின் வலது புறமிருந்து நான்கைந்து பேர் கத்திப் பேசியபடி ஊர்ப்பனையைக் கடந்து

ஆலமரத்தடி நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஊர் பெரியாம்பிள ஒச்சு, வலப்புறம் திரும்பி உற்றுப்பார்த்தார். ‘முத்தணன் கொத்துல போறவெங்கெ, என்ன சோலியா இங்கிட்டு போயிட்டு வர்றாங்கெ’ என்று யோசித்தபடி அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர்கள் நேராகத் தாழ்வாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

கூகையனின் கடைசி மகன் கட்டையன் பெரும் சத்தம் போட்டபடி வந்துகொண்டிருந்தான். உடனிருந்த நான்கு பேரும் அவனை அமட்டினர். தாவாரத்தில் இருந்த பெரியாம்பிளயும் மற்றவர்களும் ‘என்னப்பா, என்ன சமாச்சாரம்?’ எனக் கேட்டனர். ‘மத்தவனெல்லாம் பேசாத, நான் பேசிக்கிறேன்’ எனச் சொல்லி, இருப்பதிலே மிகச்சிறியவனான கட்டையன் ஊர் பெரியாம் பிளையிடம் பிராதை முறையிட்டான்.

‘நல்லப்பனோட மருதைக்கு வர்றேன்னு சொன்னா, அவெ என்னடான்னா முதல்ல களவுக்குப் போடா வெண்ணன்னு எத்திட்டு போறான். சரிண்டு, போன வாரம் வீரணெ சித்தப்பெங்கிட்ட, ரயில் களவுக்கு கூட்டிப்போன்னு அழுதா, மொதல்ல நெல்லு கசக்கப் போடா. அதுக்குள்ள ஏங்கிட்ட வந்துட்டன்னு அந்த ஆளு வைய்யிறான். நேத்து என்னடான்னா, ஏ அப்பங்கிட்ட நெல்லு கசக்க ஒங்கூட வர்றேன்னதுக்கு, மொதல்ல ஆட்டவெரட்டு, கத்தாழைய்ய தாண்டு, அதுக்குள்ள நெல்லு கசக்க வர்ற வெளக்கெண்ணன்னு சொல்லி அடிக்க வர்றான். நா எத்தன தடவ தான் கத்தாழைய தாண்டுறது, நூறு தடவை தாண்டிட்டேன். என்னைய இன்னிக்கு கூட்டிப் போகல, எழவு விழுகுண்டா...’ என பெரும் சத்தம்போட்டு கத்தினான்.

‘அவெந்தான் தெனமும் கலகம் பண்றான்ல. இழுத்துட்டுப்போயி தொலைய வேண்டியதுதான்றா’ என்றார் தாவாரத்தில் படுத்துக்கிடந்த விருமாண்டிப் பெருசு.

‘இவெங்களுக்கு நல்லாச் சொல்லு தூக்கம் வர்றவெ காவலுக்குப் போகக்கூடாது. தும்மல் வர்றவெ களவுக்குப் போகக்கூடாது, மத்த எல்லாரும் போகலாம்னு கெழவி சொல்லிருக்கா’ என்று கத்தினான் கட்டையன்.

வழக்கமாக ரயில் களவுக்குப் போகிற சுழியன் ‘என்னன்டோ...வருது’ன்னு போகாம ஆலமரத்தடியிலே படுத்துக்கிடந்தான். சத்தங்கேட்டு எழுந்து அவன் கட்டையனையும் மற்றவர்களையும் அழைத்தபடி, கருது கசக்க சாக்குகளை ஏற்பாடு செய்துகொண்டு ஆலமரத்தடியை விட்டுப் புறப்பட்டான். ஊர் பெரியாம்பிள ஒச்சு தாவாரத்தில் உட்கார்ந்தபடியே போகிறவர்களை உற்றுக் கவனித்தார். கடைசியில் எட்டுப்பேராகச் சேர்ந்து போனார்கள். சுழியனைப் பற்றி பெரியாம்பிளைக்கு நன்றாகத் தெரியுமாதலால் எதுவும் சொல்லாமல் பேசாமல் இருந்தார்.

ஆலமரத்தடி ஏறக்குறைய முழு அமைதி பெற்றது. வெற்றிடத்தில் இருந்த பழங்கதைகளை அசை போட்டவாறு படுக்கத் தயாராயினர். தாழ்வாரத்தில் இடங்கொள்ளாத அளவு எல்லோரும் அங்கு வந்துவிட்டனர். மரத்தடியில் ஒருசிலர் மட்டும் சாக்கைப் பொத்தி படுத்துக்கிடந்தனர். பெரியாம்பிள ஒச்சு இருள் வெளியைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தார். கடைசியாக கட்டையனின் முகத்திலே இருந்த

சந்தோஷம் நீண்டநேரம் அவர் மனக்கண்ணை விட்டு அகலாமல் இருந்தது. கொத்துலபோகும் முதல் நாளே கலகம் பண்ணிக்கொண்டு போகிறானே என்று மனத்திற்குள் ரசித்துக்கொண்டிருந்தார். குளிர் அதிகரிக்க ஆரம்பித்தது. ரெண்டு மூன்று பேர் விடாமல் இருமிக்கொண்டிருந்தனர். தலமாட்டில் வைத்திருந்த பெரிய சாக்கு ஒன்றை எடுத்து மேலே பொத்திக் கொண்டார். 'என்ன... பெரியாம்பிளைக்கு அதுக்குள்ள கூதடிக்க ஆரம்பிச்சுருச்சா?' என்றார் விருமாண்டிப் பெருசு. 'என்னப்பா செய்யிறது, வயசாயிருச்சுல்ல. நேத்து பொறந்தவெ சவால் விட்டுகிட்டு களவுக்கு போறா. நாம ஒடுங்கிக்கிட்டு உக்காந்திருக் கோம்ல' என்றார்.

'அந்த கூகையன் வெளக்கெண்ண, வர்றோம்ன்றவன கூட்டிப்போவானா, வுட்டுட்டு வுட்டுட்டு போனா, அப்புற அவெ கத்தமாட்டானா? கெடையில கெடக்குற காளை அதா தவ்வித்தான் ஏறும். பிடுச்சுவுடுன்னு நின்னுகிட்டா இருக்கும்' என்றார் சற்று கோபமாக.

இருளில் நாகமலையின் அடிவாரப் பாறைகள் கண்விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. செவலைச் சரளைக்கற்கள் எங்கும் சிதறிக்கிடந்தன. பெரும் பேச்சொலியோடு மொத்தமாக வந்து அவர்கள் எல்லோரும் ஆளாளுக்கு ஐந்தாறு கற்களை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டனர். களவுக்குப் போகிறவர்களுக்கு மிகப்பெரிய ஆயுதம் கற்கள்தான். எவ்வளவு பெரிய கூட்டம் திரண்டு வந்தாலும் எறிகிற கற்களுக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாமல் சிதறி ஓடிவிடுவார்கள். அரிவாள், கத்தி, குத்தீட்டி எல்லாம் கிட்டத்தில் இருந்தால்தான் பலம். ஆனால் கற்கள் மட்டும்தான் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் ஆட்களை வீழ்த்தும். ஒரே எறியில் ஒரு கொத்து தென்னங்குலையை சரிப்பவன் எல்லாம் கூட்டத்தோடு கூட்டமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறான். கல்லெறியில் யாரும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அந்த நம்பிக்கையில்தான் எந்த ஆயுதங்களையும் எடுக்காமல் களவுக்குப் போகின்றனர். களவு குலைந்து கல்லெறிய நேர்ந்தால் ஒரு போதும் தலைக்கு குறிவைக்க மாட்டார்கள். நெஞ்சுக்குத்தான் குறிவைப்பார்கள். அடித்து ஆளை வீழ்த்திட்டு வந்துவிடவேண்டும். தலைக்கு குறி வைத்தால் மண்டை சிதறி ஆள் செத்துப்போவான். களவில் ஆளைக் கொல்லக்கூடாது. 'அவெ பொருள எடுத்துட்டு அவன கொல்லறது பாவம்டா' என்று பெரியாம்பிளைக சொல்றது எல்லோரையும் கட்டுப்படுத்தியிருக்கும். தப்பித்தவறி தலையில் விழுந்தால் விழுந்தது தான். கருது கசக்கப் போகிறவர்கள் கருதைக் கசக்கி மீண்டும் நாகமலையின் அடிவாரம் வந்துதான் இடுப்பிலே இருக்கும் கல்லைக் கீழே போடவேண்டும். கல் போய்விட்டால் பலம் போனமாதிரி. அதற்குப் பின் வெறும் ஆட்கள்தான். எனவே இடுப்பிலே இருக்கும் கல் மீண்டும் நாகமலையின் அடிவாரத்துக்கு வந்துதான் கீழே இறங்கும்.

எல்லோரும் கற்களை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டு வைகையாற்றிலே இறங்கி எதிர்க்கரையிலே மேலேறினர். எதிர்க்கரையிலே மேலேறுகிறபொழுது அவர்கள் எல்லோருக்குமான பெயர்களும், பேச்சொலிகளும் உதிர்ந்துவிடுகின்றன. கருப்பனாக மாறி உருத்திரண்ட உருவங்கள்தான் மறுகரை ஏறுகிறது. பரவை கிராமத்தை கடந்தவுடன் கூகையன் கொத்து வலப்புறமாகப் பிரிந்தது. முத்தணன் கொத்து இடப்புறமாகப் பிரிந்தது. கண்மாய்க் கரைப் பாதைகளின் வழியே

கிராமங்களைத் தாண்டி அவர்களின் கால்கள் போய்க்கொண்டிருந்தன. எந்த அடர் இருட்டுக்கு நடுவிலும் நிலையாளின் பாதங்கள் பாதையறிந்து போகும்.

ரெட்டிய கெடுத்த வெள்ளி மேலெழுந்து வந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலைக்கோழி கூவியது. கொட்டும் பனி கிராமங்களை இறுகச் சுருட்டி வைத்திருந்தது. கருது கசக்கப் போகிறவர்களுக்கு ரெட்டிய கெடுத்த வெள்ளி குறிப்பிட்ட தொலைவு மேலெழுந்து வந்து விட்டால் போதும். நேரத்திற்கான அடையாளம் மட்டும்தான் அவர்களுக்குத் தேவை. திசை ஒரு பிரச்சனையே அல்ல. ஆனால் கன்னம் போடப்போகிறவர்களுக்கோ அல்லது தூரந்தொலைவுக்குக் களவுக்கு போகிறவர்களுக்கோ நேரத்திற்கான அடையாளமும், அதைவிட முக்கியமாக திசைக்கான அடையாளமும் தேவை. எல்லா அடையாளங்களும் வானத்திலே இருக்கின்றன. ஒளி மங்கிய நிலவைக் கவ்வி விழுங்கியபடி முகம் மலர்ந்திருக்கும் கருநீல வானத்தில் அள்ளித் தெளித்த வெள்ளிகள் அனைத்து அடையாளங்களையும் மனிதர்களுக்கு உணர்த்திய படிதான் இருக்கின்றன. கன்னம் போடப்போன பம்பையன் கொத்தைச் சேர்ந்தவர்கள் ரெட்டிய கெடுத்த வெள்ளியை மட்டும் பார்க்கவில்லை. அதனைவிட உன்னிப்பாக கட்டில்கால் வெள்ளியைப் பார்த்து வைத்துக்கொண்டனர். கட்டில்கால் வெள்ளி வடக்கே இருந்தால் கால் சரியாக இருக்காது. கொஞ்சம் சாய்ந்து இருக்கும். தெற்கே இருந்தால் சரியாக இருக்கும். சித்திரையிலிருந்து மாதா மாதம் மேல்நோக்கி நகர்ந்துகொண்டே யிருக்கும். பங்குனி மாதத்தில் மேற்கே மறையும் தூரத்தில் இருக்கும். இப்பொழுது மேற்கே கொஞ்சம் மேலேறி இருக்கிறது. ஊர் இருக்கும் திசையையும், ஊரிலிருந்து தாம் வெளியேற வேண்டிய திசையையும் உறுதிப்படுத்திக் கொண்டபின் பம்பையன் கொத்து கன்னம் போட இருளுக்குள் மூழ்கிக்கிடந்த ஊருக்குள் இறங்கியது.

உச்சியைத் தாண்டிய இந்த இறங்கு ஜாமம்தான் களவுக்கான சரியான நேரம். அசந்த இருள் பார்த்து மொட்டு மலர ஆரம்பிக்கும். பம்பையன் கொத்து துப்பாளி இலை சொருகி வைத்துள்ள உள் தெரு ஒன்றுக்குள் நுழைந்தது.

நகரத்தின் மேக்காவலும் கீக்காவலும் பார்க்கிறவர்கள் தங்களின் இடங்களில் நிலைகொண்டு நின்றனர். இருளைப் போர்த்திக் கொண்டு நகருக்குள் யாரும் நுழைக்கிறார்களா என கண்கொத்திப் பாம்பாக உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். காவக்கூலி கொடுக்கமாட்டேன் என்று தைரியமாகச் சொன்ன வெள்ளியம்பலத் தெருவைச் சேர்ந்த கலெக்டர் ஆபிஸ் சிரேஸ்தேதாரர் சௌந்தர்லால் வீட்டுக்குப்போன இரண்டு பேரும் பின்புறக் கததவை ஓசைப்படாமல் திறந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் வரவேண்டிய சரக்கு ரயிலுக்காக கூத்தியார்குண்டு கண்மாயை ஒட்டிய பரம்பு மேட்டில் வீரணன் கொத்து தயாராக இருந்தது. இரண்டு பேர் மட்டும் முன்னால் நின்றுகொண்டிருந்தனர். மற்றவர்கள் எல்லாம் ஒரு பர்லாங் தூரத்திற்கு ஒருவர் வீதம் தள்ளித்தள்ளி நின்றனர். திருப்பரங்குன்றத்து மலையின் உச்சந்தலையில் பொட்டுவைத்திருப்பதைப்போல ரெட்டிய கெடுத்த வெள்ளி மின்னிக்கொண்டிருந்தது. ரயில் வரும் நேரம்

நெருங்கிவிட்டதென்ற உணர்வோடு அவர்கள் தண்ட வாளத்தின் திசை பார்த்து இருளை ஊடுருவி மஞ்சள் நிறப்புள்ளியை தேடிக்கொண்டிருந்தனர்.

கூகையன் கொத்தும், முத்தணன் கொத்தும் வெவ்வேறு கிராமங்களில் கசக்கப்போகும் தங்களின் வயல் தேடி கரைகளை விட்டு இறங்கினர். சுழியன் கொத்து நேரங் கழித்துப் புறப்பட்டதால் மிகத்தள்ளிப் போய்ச் சேரமுடியவில்லை. ரெட்டிய் கெடுத்த வெள்ளி மேலேறி மின்னியதைப் பார்த்த சுழியன் ‘பொழுதுல கசக்கணும்... இனியும் தள்ளிப் போக வேணாம்’ எனச் சொல்லி எதிரில் கைநீட்டி அழைத்தபடி இருந்த விளைந்த கதிர் வயலுக்குள் இறங்கினர்.

ஆலமரத்தடி எந்தச் சத்தமும் இன்றி அமைதி பெற்றது. காற்றிற்கு விழுதுகள் மெல்ல ஆடிக்கொண்டிருந்தன. தாவாரத்தில் பெரிசுகளை எல்லாம் பனி முடக்கி இருளுக்குள் அமுக்கிவைத்தது. பெரியாம்பிள ஒச்சு வடக்குப்பக்கமாகப் பார்த்தபடி தூணில் சாய்ந்தவாக்கில் கண்மூடி இருந்தார்.

**கூ**கையன் கொத்து கருங்காலப்பட்டியின் வயல்வெளிக்குள் இறங்கியது. கண்ணுக்கெட்டும் தூரம் வரை நிலவு சிந்தும் இளகிய ஒளியில் மஞ்சள் நிறக்கதிர்கள் நிமிர்ந்தும் சாய்ந்தும் இருந்தன. வயல்களின் வடமேற்கு மூலையில் ஊர் சுருண்டு கிடந்தது. வாய்க்கால் வழியாகவே அவர்கள் நடந்து நடுமையம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். கையில் கருங்காலிக்கம்பு ஒன்றைப் பிடித்தவாக்கில் நிலையாள் முன்னால் போய்க்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வரிசையாகப் பதினாறு பேர் போனார்கள். வரப்புமேட்டில் அவ்வளவு வேகமாகக் கால்கள் நடந்து கடந்து கொண்டிருந்தன. எந்தப் பேச்சொலியும் அற்று சமிக்ஞைகளும், சின்னச்சின்ன குறியீட்டு ஓசைகளும்தான் வந்தன. விளைந்த கதிர் ஆட்களின் இடுப்பளவுக்கு மேல் நின்று கொண்டிருந்தது. வாய்க்காலுக்குள் இறங்கி நடந்தால் உருவமே தெரியாது. அந்த உயரத்திற்குப் பயிர் விளைந்து நின்றது. கொஞ்ச தூரம் வரப்பிலே நடந்தவர்கள் சாய்ந்த கதிர்கள் அதிகம் இருக்கும் வயல்வெளிக்குள் போகும்போது வாய்க்காலுக்குள் இறங்கினர். கண்ணிமைக்கும் வேகத்தில் முன்கால்கள் நகர்ந்துகொண்டிருந்தன. முன்னால் போய்க்கொண்டிருந்த நிலையாள் ‘சட்’டென விரலைச் சுண்டினான். எல்லோரும் அப்படி அப்படியே நின்றனர். மூக்கை இழுத்து முகர்ந்தான். பனி கொட்டும் அந்த நள்ளிரவில் மெல்லிய காற்று கதிர்களை எல்லாம் அசைத்துப் போய்க்கொண்டிருந்தது. மீண்டும் மூக்கை இழுத்து முகர்ந்தான். கருவாடு மாதிரியான வாடையை நாசி உறுதி செய்தது. ‘எப்பா... கூலப் பாம்பு கெடக்கு, அந்த வரப்புல ஏறுங்கப்பா’ என்றான். நிலையாளின் பின்னால் இருந்தவர்கள் வலதுபக்கமாகத் திரும்பி பக்கத்து வரப்பிலே ஏறினர். கூலப் பாம்பு பொந்துக்குள்ளிலிருந்து வாலை மட்டும் நீட்டி ஆட்டிக்கிட்டே இருக்கும். வால் நுனியிலே இருந்து கருவாடு மாதிரி வாடை அடிக்கும். அந்த வாடையை முகர்ந்த எலி அதனருகில் போனவுடனே வாலாலே குத்தி எலியைப் பிடித்துவிடும்.

நிலையாள் மீண்டும் வரப்பிலே ஏறி வேகமாக முன்னுக்குப் போனான். சிறிது நேரத்திலே கசக்க வேண்டிய வயலருகில் வந்து சேர்ந்தனர்.

மிகப்பெரிய குண்டு அது. கதிர் முழுவதும் ஊரை நோக்கி வணங்கிப் படுத்துக்கிடந்தது. நிலையாள் ஒரு மூலையிலே நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். வெகுதூரத்திலே இருந்தது ஊர். இடப்புற கண்மாய்க்கரையில் வரிசையாக மரங்கள் இருந்தன. சுற்றிப்பார்த்தபின் தான் ஒருவன் போதும் என முடிவு செய்து 'ச்சூ...ச்சூ...' என ஒலி எழுப்பினான். அந்தக் குண்டு முழுவதும் பதினாறு பேரும் உள்ளே இறங்கினர். வடக்கு ஓரமாக இருந்தவன் பயிர்த் தாளைக் காலால் மிதித்து விலக்கி அமுக்கினான். பயிர் விலகிக்கொடுத்த இடத்திலே உட்கார்ந்து மடியில் கட்டப்பட்டிருந்த சாக்கைத் தனக்கு முன்னால் விரித்தான். சாக்கின் ஒரு முனை இடுப்பிலே கட்டப்பட்டிருந்தது. மறுமுனை பயிர்களுக்கு மேல் படுத்திருந்தது. வலப்பக்கமாகச் சாய்ந்துகிடந்த கதிர்களை இரண்டு கைகளாலும் அள்ளி, அதன் முனையை அப்படியே ஈரத்துணியைப் பிழிவதைப்போல ஒரு திருகு திருகினான். பொதுபொதுவென சாக்கிலே நெல்மணிகள் உதிர்ந்தன. நல்ல அனுபவசாலி. ஐந்து ஆறு கசக்கிலே ஒரு படி கசக்கிவிடுவான். கதிரில் ஒத்த நெல் மிஞ்சாது மூன்று நான்கு மரக்கா கசக்கியவுடன் அப்படியே தூக்கிவந்து கரையிலே இருக்கும் சாக்கிலே கொட்டிவிட்டு, மீண்டும் விட்ட இடத்திலே போய் இடுப்புச்சாக்கை விரிப்பான். வயலெங்கும் சரசரவென சத்தம் கேட்கும். ஆனால் ஆள் தலை எதுவும் தெரியாது. நிலையாள் சின்ன சமிக்ஞை கொடுத்தாலும் அப்படியே உள்ளே படுத்துவிடுவார்கள், யாராலும் உள்ளே பதுங்கிய மனித உடல்களைக் கண்டுபிடிக்க முடியாது. நிலையாள் அந்த வயலை நாலாபக்கமும் சுத்தி சுத்தி வந்துகொண்டேயிருந்தான். 'ச்சூ...ச்சூ...' என்ற ஓசை கசக்குகிறவர்களை வேகப்படுத்தியது. தூரத்தில் ஊர் உறங்கிக்கொண்டிருந்தது.

ஊர்க்கரையில் இருந்த மரமொன்றிலிருந்து கத்தியபடி வந்த ஆந்தை பின்புறமிருந்த கண்மாயை நோக்கிப் பறந்துபோனது. படுத்துக் கிடந்த பயிரை வார் வாராக வகுந்து எடுத்த அவர்கள் எதிர்க்கரையிலே ஏறினர். எல்லாமூடைகளும் நிறைந்தன. தூக்கித்தலையிலே வைத்தவுடன் கால்கள் வேகங்கொண்டன. நிலையாள் கொஞ்சம் நேரம் முன்னாலும் ஊரைக் கடக்கிற இடங்களில் பக்கமாக ஒதுங்கி நின்று கடைசியாகவும் ஓடிவந்தான். கசக்கிய வேகமும் கரையேறிய வேகமும் கணக்கிட முடியாததாக இருந்தது. கருங்காலப்பட்டியைக் கடந்து அடுத்த ஊருக்கு வந்துவிட்டால் கால்கள் கொஞ்சம் வேகந் தணிக்கும். ஆனாலும் சுதாரிப்பு குறையாது. எந்த ஊருக்குள்ளேயும் போகாமல் காட்டுப்பாதைகளின் வழியே நிலையாள் அழைத்துவந்தான். பாதி தூரம் வந்தவுடன் 'மொதல்ல உன்னோட நெல்லப் புடி, இதுக்கு மேல உனக்காக தூக்கிட்டு வரமுடியாது' என்று ஓடிவந்ததில் ஒருவன் சொன்னவுடன் இளைப்பாறியபடி மூடையைக் கீழே இறக்கினர். அவரவர்களுக்கான பங்கை அள்ளிப்போட்டனர். நிலையாள் தனது தலையில் கட்டியிருந்த சாக்கை எடுத்து ஒவ்வொருவனிடமும் நெல்லை வாங்கினான். முடிச்சிட முடியாத அளவிற்கு மூடை நிறைந்தது. இறுகக் கட்டித் தலையிலே தூக்கிக்கொண்டான். சற்று சாவகாசமான வேகத்தோடு நடக்க ஆரம்பித்தனர். நீண்டநேரம் கிராமங்களை ஓரமாகக் கடந்து வைகையாற்றில் இறங்கியபொழுது விடிவெள்ளி முளைத்து அவர்களை எட்டிப்பார்த்தது.

**மு**த்தணன் கொத்து அழகியநல்லூரின் தென்கரையிலே இறங்கியது.

ஊர் பரந்து கிடந்தது. அதுதான் தாய் கிராமம். நல்ல சம்சாரித்தனம். பெரியாற்று நீர் பாயும் பெரிய கண்மாய்களிலே ஒன்று அழகியநல்லூர் கண்மாய். நாலு மடையிலும் இந்த ஊர் வயல்களுக்கு மட்டுமே நீர் பாய்கிறது. ஊரின் நடுவில் இருந்த கிருஷ்ணன் கோவில் இந்த வட்டாரத்திலே பிரசித்தி பெற்றது. சாரட் வண்டிகள் பல வைத்திருக்கும் பெரிய சம்சாரிகள் நிறைந்த ஊர். தாதனூருக்கு காவல் கேட்டு வராத பெரிய கிராமங்களிலே இதுவும் ஒன்று. இதைத் தாண்டித்தான் நிலையாள் முத்தணன்போக எண்ணினான். ஆனாலும் விளைந்து சாய்ந்துகிடந்த கருதுகள் அவனைக் கை நீட்டி அழைத்தபடி இருந்தன. ‘இவங்கெ என்ன காவக்கேட்டு வராம இருக்குறது... அம்புட்டு பெரிய ஆளா’ என நினைத்தபடி மூன்றாம் மடையை ஒட்டி வயலுக்குள் இறங்கினான். சரசரவென கால்கள் வயலுக்குள் நுழைந்தன. கசக்கவேண்டிய குண்டை அடைந்ததும் அதன் நாற்புறங்களையும் நிலையாளின் கண்கள் நோட்டமிட்டப்படி இருந்தன. இரண்டு முனையும் சிக்கலானதாக இருந்தது. ‘அந்த விலாவுல ஒருத்தெ நில்றா’ என்று சொன்னான். எதிர்முனையில் நிலையாளைப் போல இன்னொருவன் ஏறி நின்றுகொண்டான். இவன் இருக்கும் முனைகளத்து மேட்டுக்குப் பக்கமாக இருந்தது. எதிர்முனை கண்மாய்க்கரைக்கு நேராக இருந்தது. எனவே இரண்டு பக்கமும் சுதாரிப்பாக பார்க்கவேண்டும் என்பதால் இன்னொரு நிலையாளை நிற்கச் சொன்னான். மற்றவர்கள் எல்லாம் கசக்க ஆரம்பித்தனர். நிலையாள் இரண்டு பேரும் வரப்புகளைச் சுற்றி நடந்தபடி இருந்தனர். தவளைக் குரல்கள் விக்கி விக்கி வந்துகொண்டிருந்தன. வரப்புமேட்டிலே இருந்தவை தண்ணீருக்குள் குதித்தன. நிலையாள் ஊரைப் பார்த்தபடியே நின்றிருந்தான். ஊர் அமைதியாக இருந்தது. எந்த சின்ன அசைவோ சத்தமோ ஊரிலே இல்லை. இவ்வளவு பெரிய ஊர் பெரும் அமைதியோடு இருக்கிறதே என முத்தணன் உள்ளுக்குள் நினைத்துக்கொண்டே இருந்தான். ஏதோ ஒரு வித்தியாசம் இருந்தது. ஆனால் என்னவென்று தெரியாமல் வரப்பிலே நடந்தவாறு வேகமாகக் கசக்க சமிக்ஞை கொடுத்தபடி இருந்தான்.

திருப்புவனம் பக்கத்தில் இருக்கும் கிராமம் ஒன்றிலிருந்து நேற்று கருது கசக்க அழகியநல்லூரின் வயலுக்குள் இறங்கியுள்ளனர். எப்படியோ களவு குலைந்துவிட்டது. ஊரே முழித்துக்கொண்டு அவர்களை விரட்டியது. பிடிபடாமல் எல்லோரும் தப்பிவிட்டனர். நாளை வந்தாலும் வருவார்கள் என ஊர் தயாரிப்போடு இருந்தது.

முத்தணன் விலாவிலே ஒரு நிலையாளை நிறுத்தி மிகுந்த எச்சரிக்கையோடு தான் கசக்கவிட்டுக்கொண்டிருந்தான். நேரம் ஆகிக்கொண்டிருந்தது. எதிரில் இருந்த கண்மாய்க்கரையில் ஒரு மரத்திற்கும் இன்னொரு மரத்திற்கும் இடையில் ஏதோ உருவம் சட்டென ஓடி மறைந்தது. முத்தணனின் கண் கவனித்தது. ஆனாலும் நிற்காமல் வரப்பின் மறுமுனைவரை நடந்து திரும்புப்பொழுது இன்னொரு உருவம் அதேபோல கடந்து மறைந்தது. சாதாரணமாக கசக்குகிறவர்களைப் பார்த்துவிட்டால் ‘ஓ...ய்’ யென்று சத்தம் போட்டு ஊரையே திரட்டி விரட்டுவதுதான் வழக்கம். ஆனால் இது அப்படியல்ல. ஒவ்வொருவனாக மறைந்து மறைந்து வருகிறான் என்றால் ஏதோ தயாரிப்போடு நடக்கிறது என்று அவன் ஊகித்தான். என்ன முடிவெடுக்கலாம் என யோசித்தபடி மற்ற திசைகளை உன்னிப்பாக கவனித்தான். களத்து மேட்டுக்கு ஒட்டிய வயலுக்குள் இருந்து தவளையைப் போல் தவ்வி ஒருவன் வயலுக்குள்

பதுங்கினான். ஏறக்குறைய எல்லாத் திசையிலும் ஆட்கள் இருப்பதை உறுதிசெய்துகொண்டான். கண்மாய்க்கரையின் மேல் தெரிந்த உருவங்கள் அடுத்தடுத்த மரங்களைத்தாண்டி தாங்கள் இருக்கும் வயலுக்கு நேராகக் கரையில் இருக்கும் மரத்துக்கு வந்துவிட்டது தெரிந்தது. எதிர்முனையில் இருந்த நிலையாள் அப்பொழுதுதான் எதையோ ஊகித்து சமிக்ஞை கொடுத்தான். கசக்குகிறவர்கள் சுதாரிப் பானார்கள். முத்தணன் எந்தப் பக்கம் போனால் தப்பிக்கலாம் என சுற்றிச் சுற்றிப் பார்த்தபடியே இருந்தான். இது தாய் கிராமம். பத்து கிராமமும் உடனே திரளும். எனவே எதிரில் ஊர் இருக்கும் திசையில் ஊரை ஒட்டி கிழக்குப்பக்கமாக உடைத்து வெளியேறி விட்டால் எந்தப் பிரச்சனையும் இல்லை. பின்புறமோ, மற்ற எந்தப்புறமோ போனாலும் பிற கிராமங்களின் மூலம் சுற்றி விடுவார்கள். ஆபத்தில் மாட்டிக்கொள்வோம் என யூகித்தவாறு 'கருப்பா... எந்திருச்சு கல்லெடுத்துக்கோடா...' எனச் சொல்லியவாறு வயலுக்குள் இருந்து பாய்ந்து வெளியேறினான்.

கண்மாய்க்கரையிலே இருந்தவர்கள் பெரும் சத்தம் கொடுத்து அரிவாள், கம்புகளைத் தூக்கிக்கொண்டு வயலுக்குள் இறங்கினர். களத்து மேட்டிலே இருந்தவர்கள் அதேபோல சத்தம் கொடுத்தபடி கருது கசக்கும் வயல்களை நோக்கி ஓடினர். பெருங்குரல்கள் காற்றைக் கிழித்து வயல்வெளி எங்கும் எதிரொலித்தன. கிருஷ்ணன் கோவிலின் மணி பேரோசையாய் எங்கும் ஒலித்தது. சுத்துப் பட்டியெல்லாம் விழித்துக் கொண்டது. எங்கும் கத்தி கபடாக்களை எடுத்துக்கொள்ளச் சொல்லும் பெரும் சத்தம் கேட்டபடி இருந்தது. ஆனால் யாரும் எதிர்பாராத விதமாகக் கருது கசக்கியவர்கள் மின்னல் வேகத்தில் ஊரை நோக்கி ஓடினர். 'என்னடா ஊரப்பக்கம் வர்றாங்க' என்று யோசிப்பதற்குள் ஊர்க்கரையில் மறித்த இரண்டு பேரையும் போன வேகத்தில் முட்டித்தூக்கிப்போட்டான் முத்தணன். ஊரே திரண்டு கண்மாய்க் கரை வழியாகத் தெற்கு நோக்கி வயல்வெளிக்கு வந்துகொண்டிருந்த பொழுது ஊரின் கிழக்குத்தெருவின் வழியாக வடதிசை நோக்கி அவர்கள் ஓடினர். ஊரெல்லாம் வயக்காட்டில் குவிந்துகிடந்தபோது ஒரு கல் கூட எறியாமல் முத்தணன் கூட்டம் அழகியநல்லூரை ஊடறுத்து வடக்கு முகமாக வெளியேறியது.

பெரும் குரல் கொடுத்து ஆயுதங்களோடு ஓடிவந்த ஆட்கள் பாதி கசக்கப்பட்ட வயலைச் சுற்றி பரிதாபமாக நின்று பார்த்தனர். மணியோசை கேட்டுக்கொண்டேஇருந்தது. சுத்துப்பட்டு ஊரெல்லாம் இருளுக்குள் இருந்து சத்தம் கொடுத்தப்படி வந்தன. வடக்கே போய்விட்ட முத்தணன் கொத்து அடுத்த யோசனையில் இருந்தது. அழகியநல்லூரையும் அதனுடைய பத்து கிராமங்களையும் கடக்காமல் தென்பகுதிக்கு போகவேண்டுமென்றால் யானைமலை வரை சுற்றித்தான் போகவேண்டும். நான்கு மடங்கு அதிகமான தூரம். ஆனால் அதைத் தவிர வேறு வழியில்லை என யோசித்து இரு மடங்கு வேகத்தோடு அவர்கள் ஓட ஆரம்பித்தனர். எல்லோர் தோளிலும் இருந்த சாக்கு பாதி மட்டுமே நிரம்பியிருந்தது. கால்கள் பல மடங்கு வேகத்தோடு ஓடிக்கொண்டிருந்தன. களவு எப்படி உலைந்தது என முத்தணன் யோசித்தபடியே ஓடி வந்து கொண்டிருந்தான். தலைகீழான பாதையின் வழியே அவர்களின் ஓட்டம் இருந்தது. நாய்களின் குரைப்பு ஊர் ஊருக்குக் கேட்டது. இவ்வளவு தயாரிப்போடு இருந்தவர்கள் எப்படியும் இடையில் வந்து மறிப்பார்கள் என்ற எண்ணம் சுதாரிப்போடும் வேகத்தோடும் ஓடச்செய்தது. முத்தணன்

விழிப்போடு முன்னால் ஓடிக்கொண்டிருந் தான்.

நிறைய சாரட் வண்டிகளும், மாட்டு வண்டிகளும் இருக்கும் ஊர். எனவே ஆட்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு நமக்கு முன்னே போய் வைகையாற்றின் கரையிலே வைத்து மடக்க வாய்ப்பிருக்கிறது என யோசித்தபடி முத்தணன் ஓடினான். யானைமலையின் அடிவாரம் வரை ஒரு பெரும் சுத்து சுத்தி அவர்கள் வந்துகொண்டிருந்தனர். பொழுது போய்க்கொண்டிருந்தது. எல்லா கிராமங்களும் குளிரில் நடுங்கி உறங்கிக்கொண்டிருந்தன. இந்த ஆண்டு நல்ல மழை பெய்ததால் மாசியிலே கூட கண்மாய் நிறைந்து தண்ணீர் நின்றுகொண்டிருந்தது. கண்மாய்கரையிலும், மரங்காடுகளுக்குள்ளும் விழுந்து வந்துகொண்டிருந்தனர். நல்ல விளைச்சல் இருக்கிற பகுதி எது, அடுத்த மாதம் கசக்க ஏற்ற பகுதி எது என்று பனி போர்த்திய வயல்வெளிகளைப் பார்த்தபடி வந்தனர். ‘கொஞ்சம் நில்லப்பா...’ என ஆண்டி குரல் கொடுத்தவுடன் எல்லோரும் மரத்தடியிலே நின்றனர். கூகை ஒன்று மரத்தின் மேலிருந்து குரல் எழுப்பிப் பறந்தது. எல்லோருக்கும் மேமூச்சும் கீமூச்சும் வாங்கியது. இளைப்பாறித் தவிப்பாறினர். முத்தணன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். கசக்கிய நெல்மணிகள் வயலெங்கும் சிந்திக்கிடந்ததைப் போல வெள்ளிகள் உதிர்ந்து கிடந்தன. ‘யப்பா... கூட்டு மணி வெள்ளி மேக்காம ஏறிருச்சு, இன்னும் கொஞ்சம் நேரத்துல விடிவெள்ளி முளைச்சுரும். அதுக்குள்ள ஆத்த கடந்துரணுமப்பா’ என்றான் முத்தணன். கொஞ்சம் இளைப்பாறியவுடன் எல்லோரும் புறப்பட்டனர். சாக்கு மூடைகள் தவளையைப் போல இருளுக்குள் தவ்வியபடி வந்தன. குதிங்கால் மண்ணில் படாத வேகத்தில் அவர்களின் ஓட்டம் இருந்தது. நீண்டதூரத்தை அவர்கள் சுற்றுவேண்டியிருந்ததால் எல்லாக் கால்களும் வெறிகொண்டு ஓடின.

கருக்கட்டான் கிராமத்தின் கிழக்கு எல்லையை அடைந்து, மாசிவீதி கணபதி பிள்ளையின் தென்னந்தோப்புக்கு அருகில் வந்தனர். தென்னந்தோப்பைக் கடந்துவிட்டால் கண்மாய்க் கரை. கரை முடிகிற இடத்தில் திண்டுக்கல்லுக்கு போகும் மெட்டல் ரஸ்தா. அதைத் தாண்டிவிட்டால் அப்படியே ஆற்றில் இறங்கிவிடலாம். எனவே நெருங்கிவந்துவிட்டோம் என்ற உணர்வோடு இனி நம்மை மறித்தால் இந்த தென்னந்தோப்பில்தான் மறிக்கமுடியும் எனக் கணித்து நிலையாள் முத்தணன் தோப்பை உற்றுப்பார்த்தான். வந்தவர்கள் தோப்பை வளைத்து நின்றனர். முத்தணன் சமிக்ஞை கொடுத்ததும் கற்கள் தோப்பைக் கிழித்தபடி மாறிமாறிப் பறந்தன. மொத்தத் தோப்பும் கணநேரத்திற்குள் உலுப்பி எடுக்கப்பட்டது. மரங்களில் பட்டு கற்கள் தெறித்தன. தென்னங்குலைகள் அங்குமிங்குமாகச் சிதறி விழுந்தன. கீச் கீச்சென பறவைகளின் ஒலி அந்தப் பகுதியெங்கும் எதிரொலித்தது. அணில்கள் முடிந்தமட்டும் பலங்கொண்டு குரலெழுப்பி மரக்கொப்புகளின் மேல் இங்குமங்குமாக ஓடின. தோப்பிற்குள் இருந்த எல்லாம் கலைக்கப்பட்டுவிட்டது. தோப்பை உண்டு இல்லையென ஆக்கியபின்தான் கல்லெறி நின்றது. எந்த ஒரு மனிதனும் இந்த எறிக்கு தாக்குப்பிடித்து உள்ளே நிற்கமுடியாது. இடுப்பில் கற்கள் தீர்ந்ததோடு கல்லெறி நின்றது. எல்லோரும் தோப்பை உற்றுப்பார்த்தனர். உள்ளே யாருமில்லை. அங்குமிங்குமாக நெற்றுக்காய்கள் விழுந்தபடி இருந்தன. ஆட்கள் யாரும் இல்லாததை உறுதிப்படுத்தியபின் தென்னந்தோப்புக்குள் இறங்கினர். இனி

அவர்கள் வந்து மறிக்கமுடியாது எனத் தெரிந்ததும் கால்களின் வேகம் குறைந்தது. பேச்சு கூடியது. ‘எப்பா... நிலையாளுக ரெண்டு பேரும் நெல்ல வாங்கிக்கோ... இதுக்கும் மேலயும் உங்களுக்காக தூக்கி சொமக்க முடியாது’ என்றான் ஆண்டி. ‘ஆத்துக்குள் எறங் கினப்பிறகு வாங்கிக்கிறோம்பா’ என்றான் முத்தணன். எல்லோரும் பேசியபடி கண்மாய்க்கரையின் மேடேறினர். நீண்ட கரை அது. கரையின் வலது புறம் முக்கால் கண்மாய்க்கு நீர் இருந்தது. இடதுபுறம் பங்குனியில் கசக்க ஏதுவான பயிர்கள் விளைந்து நின்றன. கரை நெடுக விட்டு விட்டு ஆலமரங்கள் நின்றன. முத்தணனும் ஆண்டியும் பேசியபடி முன்னால் போய்க்கொண்டிருந் தனர். அவர்களுக்குப் பின்னால் கொஞ்சம் தள்ளி நாலைந்து பேராக கூட்டமாகப் பேசிக்கொண்டு வந்தனர்.

கரை நெடுக இடதுபக்க வயலில் பயிர்களுக்குள் விட்டு விட்டு ஆட்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களைக் கடந்து பேசிக் கொண்டே முத்தணன் கொத்து நடந்துபோனது. பாதிக்கு கரைக்கு வந்தவுடன் ‘கருப்பா... வயலுக்குள்ள ஆளு இருக்கிறமாதிரி தெரியுது’ என்றான் முத்தணன். நின்று பார்த்த ஆண்டி ‘அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா...’ என்று சொன்னவுடன் மீண்டும் நடந்தனர். இந்தப் பேச்சு எதுவும் காதில் விழாதபடி பின்னால் வந்தவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு வந்தனர். முக்கால் கரையைக் கடந்தபின் கடைசி மடை இருக்குமிடத்தில் கரையை மறித்து ஆட்கள் உட்கார்ந்திருந்தனர். ‘என்னடா ஆள் மறிச்சு ஒக்காந் திருக்கான்’ என்றான் முத்தணன். உற்றுப்பார்த்த ஆண்டி ‘நீர்கட்டிக ஒக்காந்து இருப்பாங்கெப்பா’ என்றான். அடுத்த ரெண்டு எட்டு எடுத்து வைத்தபின் ‘இல்லடா... இது வேற மாதிரி இருக்கு’ எனச்சொல்லி முத்தணன் கீழே உட்கார்ந்து பார்த்தான். இருளில் கீழே உட்கார்ந்து பார்த்தால் ஒரு பர்லாங்கு தூரத்திற்கு கூட துல்லியமாகப் பார்க்கமுடியும். முத்தணன் உட்கார்ந்து கழுத்தை நீட்டி உற்றுப்பார்த்தான். இரண்டிரண்டு கால்களுக்கு நடுவில் ஒவ்வொரு கம்பு ஊண்டப்பட்டிருந்தது. ‘நொட்டிபுட்டாங்கெடா... பூரா கம்புக்காரங்கெடா...’ என்றான். அவன் குரல் கேட்ட கணத்தில் கம்புக்காரர்கள் கம்போடு சத்தம் கொடுத்தபடி அவர்களை நோக்கி ஓடிவந்தனர். வயலெங்கும் மறைந்திருந்தவர்கள் பெரும் கத்தலோடு கரையின் மேலே ஏறினர். கரை முழுவதும் ஆட்கள் வளைத்துக்கொண்டு மேலேறினர். முதல் ஆள் முதல் கடைசி ஆள்வரை யாரிடமும் எந்த ஆயுதமும் இல்லை. முத்தணன் மட்டும்தான் கருங்காலிக் கம்பைக் கையில் வைத்திருந்தான். இருந்த கற்களைக் கொண்டு தோப்பை எறிந்து கலக்கியபின் இனி எவன் வரப்போகிறான் என சாவகாசமாக கற்களை எடுத்துக் கட்டாமல் நடந்துவந்திருந்தனர்.

சுதாரிப்பதற்குள் கரையிலே ஏறிய கம்புக்காரர்களின் அடி ஏகத்துக்கு விழுந்தது. நிலையாள் முத்தணன் மட்டும் சட்டென யூகித்து ‘கருப்பா... முன்னுக்கு வந்துருடா’ என கத்தி அனைவருக்கு மான குறிப்பைச் சொல்லிவிட்டு, எதிர்த்து வந்துகொண்டிருந்த மூன்று பேரையும் அடித்துத் தூக்கினான். மாறி மாறி அடி விழுந்தது. ஒருவன் சரிந்தவுடன் மற்றொருவனைத் தள்ளிவிட்டு விட்டு முத்தணன் முன்னுக்கு ஓடினான். அவனைத் தொடர்ந்து அடிவாங்கியபடி ஆட்களைத் தூக்கிவிட்டு விட்டு நான்கைந்து பேர் ஓடிவந்துவிட்டனர். மற்றவர்களால் வரமுடியவில்லை. கரையை விட்டு இறங்கியவுடன் ‘கல்லெடுங்கடா’ என்றான் முத்தணன். ஒரு கல்கூட அங்கு இல்லை. கரம்பைதான் அங்கு இருந்தது.

பனிக்காலத்துக் கரம்பை எறியும்பொழுதே காற்றில் பொதுபொதுவென உதிர்ந்து விழுந்தது. திண்டுக்கல் ரஸ்தாவை ஒட்டிய புளியமரத்தின் கீழ் இரண்டு மாட்டுவண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. ‘கொஞ்சம் பொறுப்பா...’ எனச் சொல்லி கோயிந்து தனது தம்பியைக் கூட்டிக்கொண்டு வண்டியருகே ஓடினான். போன வேகத்தில் இருவரும் மாட்டு வண்டியிலிருந்த மொளக்குச்சியை படார் படாரென புடுங்கி அதே வேகத்தில் வந்து திண்டுக்கல் மெட்டல் ரஸ்தாவைக் குத்தினர். முதலில் கற்கள் பெயர்ந்து வருவது கடினமாக இருந்தது. இரண்டு கல் வந்தவுடன் அப்புறம் சடசடவென கற்கள் வர ஆரம்பித்தன. முத்தணனும் பூச்சியும் சின்னமாயாண்டியும் கற்களை வாங்கினர். கற்கள் கையில் கிடைத்தவுடன் முழுபலமும் கையேறியது. ‘கருப்பா... கல் வருதுடா...’ எனக் கத்தினான் முத்தணன். அந்தச் சத்தம் கொடுத்தபின் ஒரு சின்ன இடைவெளி விட்டு கற்கள் பறக்க ஆரம்பித்தன. கரைநெடுக இருளை வெட்டிச் சென்றது போல கற்கள் பறந்துகொண்டிருந்தன. ஒவ்வொருவனாக மறுகரைக்கும் வந்து கல்லை வாங்கி எறிய ஆரம்பித்தனர். கோயிந்தும் அவன் தம்பியும் வேண்டியமட்டும் கற்களை பெயர்த்து எடுத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்தனர். கற்களை வாங்கியவர்கள் நடுமடை வரை முன்னுக்குச் சென்று ஆட்களை விரட்டி எறிந்தனர். கம்புக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்கினர். நல்ல விளையாட்டுத் தெரிந்தவன் கூட எறியிலிருந்து தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஆலமர மறைவின் வழியே விலகி அவர்கள் பின்வாங்கினர்.

கொத்திலிருந்த எல்லோரும் கரையில் இருந்த புளியமரத்தடிக்கு வந்துசேர்ந்தனர். ‘தலக்கட்ட எண்ணுங்கடா’ என்றான் முத்தணன். ‘ஒருத்தெ கொறையுதப்பா’ என்றது ஒரு குரல். யாரப்பா அது?’ எனக்கேட்டுக்கொண்டிருந்தபொழுதே ‘யப்பா... ஆண்டி விழுந்து போனானப்பா...’ என்றான் முத்தணன்.

நாலைந்து பேர் கரையிலே ஓடினர். கடைசி மடையின் சரிவில் ஆண்டி கிடந்தான். தொடையில் சரியான அரிவாள் வெட்டு விழுந்திருந்தது. மேலே இரண்டு மூன்று இடங்களில் கொத்து விழுந்திருக்கிறது. ஆள் உயிரோடு இருந்தான். அவனை அப்படியே தூக்கிக்கொண்டு வந்தனர். ரஸ்தாவைக் கடந்து ஆற்றுக்குள் இறங்கினர். வலதுபுற நாணல்களை மட்டும் தழுவியபடி வைகை ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் மையத்து மணல்வெளியில் வந்து உட்கார்ந்தனர். அடி வாங்காதவர்கள் யாருமில்லை. எல்லோருக்கும் அடி விழுந்திருந்தது. நான்கைந்து பேருக்கு மண்டை உடைந்திருந்தது. பெரிய காயம் ஆண்டிக்குத்தான். கரையை மறித்து வந்தவர்களை முத்தணன் முட்டித் தூக்கிய பொழுது வெட்டு பின்னால் வந்த ஆண்டிக்கு விழுந்துவிட்டது. ‘கருப்பா...’ என ஆண்டி கத்திய குரல் முத்தணன் காதிலே விழுந்தது. ஆனால் அவனால் அந்தக் கணத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. கரையை விட்டு இறங்கி கல் வாய்த்தபின்தான் தாக்குதலைத் தொடுக்க முடிந்தது. தொடையிலிருந்த ரத்தம் வீணாகாமல் சாக்கைப் போட்டு இறுக்கக் கட்டினர். அடிபட்டவர்கள் அப்படி அப்படியே மணலில் உட் கார்ந்து தவிப்பாறினர். பனி பிசைந்த மணல் வெளியில் அரை மயக்கத்தில் உடலைக் கிடத்தினர். சின்ன மாயாண்டி எல்லோருடைய சாக்கில் இருந்தும் நிலையாளுக்கான நெல்லை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான். கிழக்கே இருந்து விடிவெள்ளி இவர்களைப் பார்த்துச் சிரித்தபடி மேலேறி வந்தது.

**சூ**ழியன் கொத்து மங்கலப்பட்டியின் கீழ்புறம் இருந்த வயல்களுக்குள் இறங்கியது. மங்கலப்பட்டி நடுத்தரமான ஊர். பெரிய சம்சாரிகள் ரெண்டு மூணு பேர்தான் இருக்கின்றனர். மற்றவர்களுக்கெல்லாம் சம்சாரித்தனம் மிக்க குறைவுதான். சேவச் சண்டைக்கு சுத்துப்பட்டி எல்லாம் பெயர் பெற்ற கிராமம். ஒரு காலத்தில் கல் ஆசாரிகள் நிறைய இருந்தனர். இப்பொழுது ஒரு குடும்பம் மட்டும்தான் மிஞ்சியிருக்கிறது. பாதி வயல்கள் ஆசாரி மானியமாகத்தான் இருந்தன. அதையெல்லாம் பெரியாற்றுத் தண்ணீர் வரப்போவதை அறிந்த பெரியவீட்டுக்காரர் ஒருவர் வளைத்துப் போட்டுவிட்டார். மிக நுட்பமான கலை வேலைப் பாடுகளுடன் கூடிய சிலைகளோடு சிவன் கோயில் ஒன்று ஊரின் இடது மூலையில் இருக்கிறது. சண்டைச் சேவல்கள் வீட்டுக்கு வீடு இருந்தன. ரெட்டிய கெடுத்த வெள்ளி உச்சியில் வந்தபொழுது மூன்று நான்கு தலைக்கோழிகள் கூவின. வேறு எந்த ஊரிலும் இத்தனை சேவல்கள் கூவாது. நேரமாகிவிட்டதால் இனியும் தள்ளிப்போக வேண்டாமென்று சூழியன் மங்கலப்பட்டியின் வயலுக்குள் இறங்கினான். உடன் வருபவர்களில் நான்கு பேர் புதியவர்கள். அதுவும் கட்டையன் இன்றைக்குத்தான் முதன்முதலில் வருகிறான். ரொம்பப் புது ஆட்களை அழைத்து வந்திருக்கிறோம் என்ற உணர்வுடன்தான் சூழியன் நடுத்தரமான ஊரின் வயல்வெளியில் இறங்கினான். ‘இன்னிக்கு வந்தவெ நடுமய்யமா வாடா’ எனப்புறப்படும்பொழுதே சொல்லி விட்டதால் கட்டையன் நடு மையமாகவே நடந்து வந்துகொண்டிருந்தான். முன்னால் போகிறவர்கள் வரப்புகளில் வேகமாக நடந்து கொண்டிருந்தனர். கட்டையனுக்கு வேகம் கூடினால் வரப்புகளில் கால் வழுக்கி கீழே இறங்குகிறது. ஆனாலும் நெருக்கி எட்டுவைத்துப் போய்க்கொண்டிருந்தான். இடுப்பில் கட்டப்பட்டிருந்த சாக்கை அவ்வப்பொழுது தொட்டுப்பார்த்துக்கொண்டான். ‘நடடா வேகமா...’ என்றான் பின்னால் வந்துகொண்டிருந்தவன்.

‘கால் வளுக்குதப்பா’ என்றான் கட்டையன்

‘கரைய காட்டி கால எடுத்துறணும்டா’ என்றான் அவன்.

முன்னால் போகிறவனின் கால்களை உற்றுப்பார்த்தவாக்கில் நடந்தான். கால்பட்டு வரப்பு நெளிவதற்குள் காலற்ற இடமாக அது மாறிவிடுகிறது. அடுத்த கணத்தில் தனது காலை வைத்தவுடன் கரை நெளிந்து கால் உள்ளுக்குள் அமுங்குகிறது. அல்லது பக்கத்தில் வழுக்கி வாய்க்காலுக்குள் இறங்குகிறது. ‘நடந்தே இனிமேதான் பழகணும் போலிருக்கே’ என்று யோசித்தவனாக சத்தமில்லாமல் நடந்தான்.

சூழியன் வயலைத் தேர்வு செய்து மூலையிலே நின்றான். கீழ் மேலாக ஏழு பேரும், தாளை மிதித்து நகட்டிக்கொண்டு வயலுக்குள் இறங்கினர். கட்டையன் நடுமையாக இறங்கினான். சாக்கின் எதிர் முனையைக் கதிர்களின் மேல் பரப்பிவிட்டு வலது பக்கமாக கை நிறைய வாரி கருதை அள்ளினான். முதல் திருகைத் திருகி உதிர்த்தான். சாக்கிலே நெல்மணிகள் உதிர்ந்து விழுந்தன. எவ்வளவு உதிர்ந்திருக்கின்றன என சாக்கைப் பார்த்தபடி மனதுக்குள் சந்தோஷத்துடன் இடது பக்கமாக இருந்த கருதுகளை எட்டி வாரி அள்ளினான். அதே போலத் திருகும்போது பாதிக்கதிர் கையிடுக்கில் நழுவி விலகிப்போனது. மீதிப்பாதிதான் பிடிக்கு அகப்பட்டது. அதை முடிந்தமட்டும் திருகி முடித்தான். குனிந்து சாக்கைப்

பார்த்து பரவாயில்லை என மனதுக்குள் நினைத்தபடி கொஞ்சம் முன்னால் சாக்கை இழுத்து நகர்த்தி, மீண்டும் வலது பக்கமிருக்கும் கதிர்களைக் கை நிறைய அள்ளினான். சொட்டென்று முதுகுத்தண்டில் நிலையாளுடைய கருங்காலிக்கம்பு வந்து விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பினான். ‘வெண்ணெ...அங்க பாரு’ என்றான் நிலையாள். இரண்டு பக்கமும் இருந்தவர்கள் கால் பங்கு வயலைத் தாண்டி கசக்கிப் போய்க் கொண்டிருந்தனர். ‘இப்படி கசக்குனா ஏங் கூலிக்கே கசக்கிகிறமாட்ட...’ என்று சொல்லியபடி கரையிலே நடந்து எதிர்முனைக்குப் போனான்.

கொஞ்ச நேரத்தில் பின்புறம் தள்ளியிருந்த வாழைத்தோப்புக்குள் இருந்து கையில் கம்போடு ஒருவன் வெளியேறி வந்தான். அவனைப் பார்த்ததும் சட்டென கரையை ஒட்டி உட்கார்ந்த நிலையாள் ‘ச்சூ...ச்சூ...’ என குரல் எழுப்பியபடி கைக்கம்பால் கசக்குகிறவனைத் தட்டினான். அவன் உடனே அதே போல ஓசையெழுப்பி கசக்கிய நெல்லைக் கையில் அள்ளி அடுத்த நிரையில் கசக்கிக் கொண்டிருந்தவன் மீது எறிந்தான். அப்படி அப்படியே வரிசையாக வந்து கடைசி ஆளைத் தாண்டி நெல்மணிகள் கீழே விழுந்தன. மண்டியிட்டிருந்த இடத்திலேயே எல்லோரும் படுத்தனர். நிலையாள் மட்டும் பக்கத்து வயலுக்குள் உட்கார்ந்தபடி அவன் எங்கே போகிறான் என எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். கம்பளியைப் போர்த்திக்கொண்டு, தலைப்பாகை கட்டி, கம்பொன்றைக் கையில் பிடித்தபடி வந்த அவன் பக்கத்து வயல்வரை வந்து, நேராக ஊரை நோக்கிப் போனான். எல்லோரும் அப்படி அப்படியே படுத்துக்கிடந்தனர். நிலையாள் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் வயல் பக்கம் திரும்பாமல் போனது போல்தான் இருந்தது. ஆனால் அவன் பார்த்திருப்பானா பார்த்திருக்க மாட்டானா என்ற சந்தேகம் நிலையாளின் மனதுக்குள் ஊடாடியபடி இருந்தது. போனவனோ ஊரின் கரையேறும் வரை ஒரு முறை கூட திரும்பிப் பார்க்காமல்தான் போனான். ‘சரி, பார்க்கவில்லை...’ என முடிவு செய்த நிலையாள் மீண்டும் சமிக்ஞை எழுப்பினான். கசகசவென வயலெங்கும் ஒலி எழும்பி வந்தது. சுழியன் வேகவேகமாக வரப்பைச் சுற்றிக் கொண்டிருந்தான். கட்டையனுக்குப் பக்கத்து நெரையில் கசக்குகிறவன் குறிப்பிட்ட தூரத்திற்குப் போனபின் ‘இவன் என்னிக்கு கசக்கி வர்றது’ என யோசித்து அவன் பக்கமிருந்த கதிர்களை எட்டி இரு கையாலும் அள்ளிக் கசக்கியபடி போனான். அப்பொழுது நிலையாள் தூக்கிப்போட்ட கல்லொன்று அவனது முதுகில் வந்து விழுந்தது. ‘களவாணித்தனம் பண்ணாதரா...வெண்ண, ஓ நெரையில மட்டும் கசக்கு’ என்று சொல்லியபடி வரப்பிலே நடந்துகொண்டிருந்தான்.

நிலையாள் இரண்டு சுற்று சுற்றியிருப்பான், அதுக்குள் ஊரிலே தண்டோரா சத்தம் கேட்டது. ‘கருப்பா... கௌம்புங்கடா’ எனச் சொல்லியபடி நிலையாள் சுதாரித்தான். வந்த பக்கமாகப் போனால் பக்கத்து ஊரின் நடு மையமாக வெளியேற வேண்டியிருக்கும். புது ஆட்களை வைத்துக்கொண்டு சோதித்துப் பார்க்கக்கூடாது என நினைத்து எதிரில் இருந்த கண்மாய்க்கரையை நோக்கிப் பாய்ந்து ஓடினான். அவனைத் தொடர்ந்து ஏழு பேரும் ஓடினர். ஊர்க்காரர்கள் வலது கோடியில் கண்மாய்க்கரையிலே ஏறி வந்தனர். வேகவேகமாக கரையிலே ஏறி இடப்புறமாக போய் வெளியேறி விடலாம் என நினைத்தான் சுழியன். ஆனால் கரையிலே ஏறி நாலு எட்டு ஓடியபிறகுதான் தெரிந்தது இடது மூலையிலிருந்த களத்து மேட்டிலேயிருந்து நாலைந்து பேர் தண்டோரா

சத்தம் கேட்டு எழுந்து கரையின் மேல் நின்றுகொண்டிருந்தனர். நிலையாள் அப்படியே நின்றுவிட்டான். சட்டென உட்கார்ந்து பார்த்தான். கரையின் இரண்டு மூலைகளிலும் ஆட்கள் இருந்தனர். எதிரில் இருந்த வயல்களில் அங்குமிங்குமாக ஆட்கள் கம்போடு வருவது தெரிந்தது. கொத்துக்கு பழகியவர்களாக இருந்தால் வயலுக்குள் இறங்கி சிதறி வருகிறவர்களை அடித்துத் தூக்கிப்போட்டுவிட்டு ஓடிவிடலாம். ஆனால் பாதிக்குமேல் புது ஆள். யாராவது ஓரிருவன் அடிபட்டுப் போவான். என்ன செய்யாலாமென யோசித்தான். அவனுக்கு இருந்த ஒரே வழி கண்மாய்க்குள் இறங்குவதுதான். மூன்று ஊருக்கு தண்ணி கொடுக்குற கண்மாய் அது. நிறைந்த கடல்போல் கிடந்தது. 'மூட்டைகளமடைய ஒட்டி அமுக்குங்கடா' எனச் சொன்னான். அடுத்த நிமிடமே தண்ணீருக்குள் அமுக்கினார்கள். சத்தம் போடாமல், கால் உதறாமல் உள் நீச்சலிலேயே எல்லோரும் தண்ணீருக்குள் வேக வேகமாக நீந்தினார்கள். கரையில் கத்தி, கம்புகளோடு ஓடி வந்தவர்கள் நடுமடையின் அருகே வந்தபொழுது அங்கு யாருமில்லை. 'இங்கிட்டு தானப்பா வந்தாங்க...' 'எங்கிட்டு போனாங்க?' இன்னயோட இவங்க கதைய முடிச்சுறணும்' என ஆளாளுக்கு சத்தம் போட்டுத் தேடியபடி இருந்தனர். ரெண்டு பனை தூரத்திற்குத் தண்ணீருக்குள் போனவர்கள் கரையில் என்ன நடக்கிறது என்பதைத் துல்லியமாக பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தனர். நீண்ட நேரத்திற்கு நீந்தியபடியே இருக்கமுடியாது. அடுத்த கரைக்கு நீந்திப்போகவும் முடியாது. அவ்வளவு பெரிய கண்மாய். என்ன செய்யலாம் என சுற்றிச்சுற்றிப் பார்த்தான் சுழியன். வலது பக்கம் சற்று தூரத்தில் நிறைய மரங்கள் இருந்தன. 'ச்...சூ....ச்....சூ...' எனமெல்லிய ஒலி எழுப்பியபடி முன்னால் நீந்திப்போனான். மற்றவர்கள் தண்ணீரை அலம்பாமல் பாம்பு போல நீந்தி அவன் பின்னால் போனார்கள். மரத்தைப் பார்த்ததும் புது ஆட்களுக்கெல்லாம் கொஞ்சம் தெம்பு வந்தது. எவ்வளவு நேரம் நீந்திக்கொண்டேயிருக்க முடியும்? எனவே வேகவேகமாக எல்லோரும் மரத்தை நோக்கிப் போனார்கள். கருவேலமரம் தண்ணீருக்கு சற்று உயரமாக ஏழெட்டுக் கிளைகள் பரப்பிப் படர்ந்திருந்தது. போன வேகத்தில் ஆளாளுக்கு ஒவ்வொரு கிளையைப் பிடித்தனர். அவ்வளவுதான், பறவைகளின் கூட்டம் சடசடவென மரத்திலிருந்து குரல் எழுப்பி வெளியேறியது. பறவைகள் கலைந்தவுடன் சுழியனுக்கு உயிர் போனதுபோல் ஆனது. எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்தனர். கொக்குகளின் கூட்டமொன்று அந்த வட்டாரம் முழுக்கப் பறந்தது. 'கீச் கீச் கீச்' என எங்கும் ஒரே சத்தம். அதனுடைய குடலைக் குத்திக்கிழிப்பதைப் போல கத்தித் தொலைத்தது. தண்ணீருக்குள் நின்றவர்களுக்கு நடுங்க ஆரம்பித்தது. எல்லோரும் கொப்பை சட்டென விட்டு விலகி நின்றனர்.

'என்னடா...பறவ கலையுது' என்றான் கரையிலிருந்த ஒருவன். 'நம்மள பாத்துதாம்ப்பா கலையுது' என்றான் இன்னொருவன். அவர்கள் பேசுவது எல்லாம் துல்லியமாகக் கேட்டது. பறவைகள் கலைந்ததை அவர்கள் அதற்குமேல் கவனப்படுத்திக் கொள்ளவில்லை. கரையிலே இருந்த ஆலமரங்களின் மீதேறித் தேடுவதும், வயல்களிலே கருதுக்குள் படுத்துக்கிடக்கிறார்களா என கிண்டிக் கிண்டி தேடுவதிலும்தான் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். 'இன்னைக்கு வெட்டி எறிஞ்சுபோடணும்டா...' எனச் சொல்லியபடி ஒரு கூட்டம் கரையிலே இங்கும் அங்குமாக நடந்தபடி இருந்தது.

பறவைகள் கலைந்ததை அவர்கள் பெரிதாக கவனத்தில் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திய பின்தான் சுழியனுக்கு உயிர்வந்தது. ‘அப்பாடா... இனி தப்பிவிடலாம்‘ என நினைத்தான். எல்லோரும் தண்ணீருக்குள் நீந்தியபடியே மிதந்து கொண்டிருந்தனர். இளவட்டங்கள் அசந்துபோனார்கள். சுழியன் முதலில் கட்டையனிடம் நீந்தி வந்து அவனது கையைப் பிடித்து இழுத்துபடி கொப்பைப் பிடிக்காமல் அடிமரத்தை கட்டிப்பிடித்து நிற்கவைத்தான். மற்ற இரண்டு பேருக்கும் சைகை காட்டினான். அவர்களும் அதே போல அடிமரத்தைக் கட்டிப்பிடித்தபடி இருந்தனர். மற்ற ஐந்து பேரும் சமாளித்து நீந்திக்கொண்டிருந்தனர்.

கரையிலே இருந்த யாரும் போகவில்லை, அப்படி அப்படியே உட்கார்ந்தனர். வயல்வெளி எங்கும் தேடியபடி சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். பொழுது போய்க்கொண்டிருந்தது. தண்ணீருக்குள் நிற்கமுடியாமல் தத்தளித்தப்படி மாறி மாறி அடிமரத்தைப் பிடித்து இளைப்பாறிக்கொண்டிருந்தனர். பறவைகள் ஒன்றிரண்டு மரத்திற்குத் திரும்பின. ஆனாலும் அடையாமல் கொப்புக்கு கொப்பு தவ்வுவதும், குரல் எழுப்பி ஒரு சுற்றுச் சுற்றி வந்து அமர்வதுமாக இருந்தன. பொழுது போகப்போக பயம் கூடியபடி இருந்தது. சுழியன் வானத்தைப் பார்த்தான். மணிக்கூண்டு வெள்ளி எங்கிருக்கிறதெனத் தெரியவில்லை. கருவேலமரத்தின் கொப்புக்கள் அடர்ந்து பின்னியிருந்தன. கிளைகளுக்கு இடையில் பறவை இறக்கைகளின் சாம்பல் நிற வெண்மைதான் தெரிந்தது. விடிவெளி முளைப்பதற்குள் வெளியேறினால் உண்டு. வெளிச்சம் வந்துவிட்டால் அவ்வளவுதான். எட்டுப் பேரும் அடிப்பட்டுச் சாவதைத் தவிர வேறு வழியில்லை என யோசித்தபடியே சுழியன் நீந்திக்கொண்டிருந்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் கொப்பைப் பிடித்து கிளை ஆடாமல் தொங்கிப்பிடிக்க ஆரம்பித்தனர். எல்லோரும் நேரம் ஆக ஆக நடுக்கம் கொடுத்தது.

கரையிலே இருந்தவர்கள் கலைய ஆரம்பித்தனர். இடப்புறமிருந்து வந்தவர்கள் களத்து மேட்டுக்கு மீண்டும் போயினர். வயல்வெளியில் தேடிக் களைத்தவர்கள் அப்படி அப்படியே வெளியேறினர். ‘கொட்டுற பனியில எவ்வளவு நேரந்தான் நிக்கிறது’ எனச் சொல்லி கரையில் இருந்ததில் பாதிக்கும் அதிகமானவர்கள் ஊருக்குள் திரும்பினர். பத்துப்பதினைந்து பேர் மட்டும் கரைகளில் இங்கும் அங்குமாக உட்கார்ந்திருந்தனர். இதுதான் சரியான நேரமென யோசித்து ‘சுழியா போவோம்டா....’ என்றான் சின்னையன். ‘கொஞ்சம் பொறு’ என்றான் சுழியன். பொழுது போய்க் கொண்டிருந்தது.

‘எங்கு தேடியும் கிடைக்கவில்லை’ என களைத்துப்போய் இருந்ததில் பாதி நடையைக் கட்டியது. அப்புறம் கொஞ்சம் நேரங் கழித்து இன்னும் ரெண்டு பேர் எழுந்து வயலுக்குள் நடந்தனர். நாலு பேர் மட்டும் இரண்டாம் மடையை ஒட்டி கையில் ஈட்டிக்கம்போடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

இனி தாமதிக்கக்கூடாது என யோசித்த நிலையாள் சமிக்ஞை கொடுத்தான். கொப்பு அசையாமல் கையை மெல்ல எடுத்து மரத்தை விட்டு அகன்றனர். ஒரு பறவைக் கூடக் கலையவில்லை. சத்தமே இல்லாமல் நீந்தி வந்தனர். சுழியன் கூட்டுமணி வெள்ளியைப் பார்த்தான்.

அநேகமாகக் கண்மாயைத் தாண்டுவதற்குள் விடிவெள்ளி மேலெழும்பும் எனக் கணித்தான். எல்லோரும் மடைக்கு அருகில் வந்து மூழ்கி உள்ளே கிடந்த சாக்கை எடுத்துக் கரையில் வைத்தனர். சாக்கில் இருந்து நீர் பிரிந்து வெளியேறியது. நிலையாள் கரையின் மீது ஏறி நின்று சுற்றிலும் பார்த்தான். அடுத்த மடையின் கரையிலே அந்த இரண்டு பேர் மட்டும் உட்கார்ந்திருந்தனர். வயல்வெளியில் மிக தூரத்தில் இரண்டு பேர் நடந்துகொண்டிருந்தனர். இளவட்டங்களில் ஈர உடலுக்குள் குளிர் இறங்கி நடுங்க ஆரம்பித்தது. கட்டையனுக்கு கடகடவென பல் அடித்தது. இடுப்பிலே இருந்த கல்லை எடுத்து இறுக்கப் பிடித்தான். உடலெங்கும் இருக்கும் நரம்புகளை அது சுண்டி இழுத்தது. தண்ணீர் வழிய சாக்கைத் தூக்கித் தோளில் போட்டபடி கரையோரத்திலே வரிசையாக நடந்துபோனார்கள். ‘இனி என்ன இருக்கிறது?’ என்ற எளக்காரம் நடையிலே தெரிந்தது.

கரையின் இடதுபக்கமாக நடந்து போகிறவர்களை இரண்டாம் மடையிலே இருந்த இரண்டு பேரும் நீண்ட நேரம் கழித்துத்தான் பார்த்தனர். உருவங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஒருவன் ‘எங்கிருந்துடா எந்திரிச்சு போறாங்க?’ என்றான். இன்னொருவன் பதிலே பேசாமல் அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்தான். கருத்துத் திரண்ட உருவங்கள் இருளின் கரையிலே நடந்து வெளியேறின.

**ரெ**ட்டிய கெடுத்த வெள்ளி மின்னி வந்துகொண்டிருந்தபோது நகரத்தின் கீக் காவல் பார்க்கிற ஆங்கன் கூட்டம் வைகையாற்றைத் தொட்டுத் திரும்பிக்கொண்டிருந்தது. அவர்கள் தெற்கு வாசலைத் தாண்டி மசூதி கோவில் வரை வந்து திரும்பினர். அந்தப் பக்கம் நகரம் வளர்ச்சியேதும் காணவில்லை. குறிப்பிட்டுச் சொல்லும்படி பெரிய தெருக்கள் ஏதும் உருவாகவில்லை. நாடார்களின் இரண்டு வண்டிப்பேட்டைகள் தான் முக்கியமான இடங்களாக இருந்தன. இரவில் தாதனூர்க்காரர்கள் நகரத்திற்குள் போவதில்லை என்ற செய்தி பரவிய ஆரம்ப நாட்களில் கமுதி, அபிராமம் பக்கமிருந்து கூட்டம் கூட்டமாகக் களவுக்கு வர ஆரம்பித்தனர். தாதனூருக்கே காவல் இல்லாத நிலையில் மருதய காவ காக்க யார் இருக்கா? என்ற நினைப்பில் வண்டி கட்டி வந்தனர். அந்த நிலையில் பேட்டைக்கு முழுக்காவலும் கொடுத்து, வெளி வீதியெங்கும் கண்ணுங் கருத்துமாக காவல் காக்க தாதனூர் பெரும் பாடு பட்டது. இன்னும் நாங்கள்தான் மதுரையை காவ பாக்குறோம் என்பதை அவர்களுக்கு ஒவ்வொரு இரவும் புரியவைத்து அனுப்பவேண்டியிருந்தது. நம்பிக்கை வராதவர்கள் மறுநாள் பகல்வரை தங்கியிருந்து வீடுகளில் போய் காவக்கூலி வாங்குவதைப் பார்த்தபின்னரே புறப்பட்டுப் போயினர். நல்லவேளையாக பெரியாற்றுத் தண்ணீர் வந்ததினால் மேலூர் பக்கமிருந்து யாரும் மதுரைக்குள் நுழையவில்லை. இல்லை யென்றால் பெருங்கூட்டத்தால் மதுரை சூறையாடப்பட்டிருக்கும். தாதனூரின் உள்காவல் மதுரையில் குலைந்த செய்தி சுற்று வட்டாரமெங்கும் பரவிய அதே நேரத்தில் வெளிக்காவலை தாதனூர் நிலை நிறுத்திக்கொண்டது என்ற செய்தியும் பரவியது.

ஆரம்பத்தில் பிறரது ஒன்றிரண்டு கொள்ளை முயற்சிகள் முறியடிக்கப்பட்டபின் காவல் முழுமையாக நிலை நின்றது. கிழக்குப்பக்கமாக வைகையாறு துவங்கி மசூதி வரை ஆங்கன் கூட்டம்

தினமும் காத்துக்கிடந்தது. நகரின் கிழக்கு, தெற்குப்பக்கத்து காவக்காரர்கள்தான் ஆங்கன் கூட்டத்ததிலே இருந்தனர். உள் தெருக்களைக் காவல் பார்த்தவர்களில் கணிசமாக பேர் புதிதாக வந்த கிராமக் காவலை ஏற்றுப் போய்விட்டனர். பெரிய வீதிகளைக் காவல் காத்து வந்தவர்கள்தான் ஆங்கன் கூட்டத்திலே இப்பொழுது இருக்கின்றனர். முன்பு மைனா தெப்பக்குளத்து ஆலமரத்தடியில் தங்கியதுபோல இப்பொழுது யானைப் பள்ளத்தில் வந்து தங்கினர். பேர்தான் பள்ளம். ஆனால் பெரும் மேடாகவும் அடர்ந்த தோப்பாகவும் அந்த இடம் இருந்தது. மதுரை சிவன் கோவிலில் செத்துப்போகும் யானைகளை கால காலமாகப் புதைக்கும் இடம் இதுதான். மாவுத்தனுக்கு செவி சாய்க்காத யானைகளின் கடைசி அமர்தல் இங்குதான். கோவில்களில் பல ஆண்டுகளுக்கு ஒரு யானை தான் சாகும். முன்பெல்லாம் அரண்மனை யானைகளையும் இங்குதான் புதைத்ததாக கதைகள் உண்டு. இந்தப் பெருந்தோப்பு முழுவதும் எளியமக்கள் யாரும் மிதித்து நடக்கூடாத பகுதி. கோவிலில் மானியம் வைத்துள்ள முத்தங்குடி வேளாளர் குடும்பங்கள் வருடத்திற்கு ஒருமுறை வந்து விளக்குப் போட்டுவிட்டு போகின்றனர். இந்தப் பகுதி முழுவதும் ஆலமரங்களும், புளியும், வேம்பும் நிறைந்துகிடந்தன. நல்ல கரம்பை மண். மரங்கள் செழித்துக் கிளைகள் பின்னிக்கிடந்தன. ஒளி இறங்கிவர முடியாததால் தரையில் புல்பூண்டுகள் எதுவுமில்லை. யானையின் கருந்தோலைக்கொண்டு நெய்யப்பட்ட பெரும் கம்பளி போலத்தான் அந்த நிலப்பரப்பு முழுவதும் இருந்தது.

உற்சவங்களில் சிவனும் தேவியும் எழுந்தருளிய யானைகளின் புதைமேடு மீதுதான் ஆங்கனும் மொக்கையனும் பம்பையனும் இரவெல்லாம் உட்கார்ந்திருந்தனர். தும்பிக்கை ஆடுவதைப்போல ஆலமரவிழுதுகள் ஆடிக்கொண்டேயிருந்தன. கிழக்கும் தெற்குமாக வந்துசேரும் கவட்டைக்கம்பின் பிடிபோன்ற இட்த்தில் வகையான திசைபார்த்துத்தான் யானைப்பள்ளம் இருந்தது.

ஆங்கன் கொத்தில் பாதிப் பேர் தோப்பிற்குள் உட்கார்ந்திருக்க மீதிப்பேர் கிழக்கு முனைவரை போய்த் திரும்பினர். வந்தவர்கள் மரங்களின் வேர்களை அனுசரித்து உட்கார்ந்தனர். காவக்கம்புகளை ஆலமரவிழுதில் தோதாக சாய்ந்தனர்.

‘ஏம்ப்பா...இன்னிக்கு யார் போறா?’ என்றான் ஆங்கன்.

‘நானும் மொக்கையனும் போறோம்‘ என்றான் பம்பையன்

சரி, போயிட்டு வேகமா வந்து சேருங்கப்பா என்று சொல்லியபடி ஆங்கனும் மற்ற ஐந்து பேரும் தெற்கே புறப்பட்டனர். எங்கு போவது, என்ன செய்வது என்பதெல்லாம் ஆற்றங்கரைக்கு போய்த் திரும்பும் போதே பேசி முடிவாகிவிட்டது. வெள்ளியம்பலத் தெருவில் இருக்கிற சௌந்தர்லால் வீடு மிகப்பெரிய காரை வீடு. நல்ல செல்வச் செழிப்பு. ஐராவதநல்லூரிலே விவசாயம். கலெக்டர் ஆபீஸ் உத்தியோகம். வீட்டிலே எதை வேண்டுமானாலும் எடுக்கலாம். எல்லாம் இருக்கிறது. அவன் துடிப்பதைப் போல எடுக்கவேண்டும் என யோசித்து, அவனது தாயாரும் அவனதும் குடும்பமும் செல்வச் செழிப்புக்கு காரணமான லெட்சுமி என்று தினமும் வணங்குகிற மயில நிறப் பசுவை கழட்டுவது என்று முடிவானது. மயில நிறத்தில் வலது கால் தண்டில் கருப்பு மச்சமும், ஏர்பூரான் சுழியும்

இருப்பது வீட்டு ராசிக்கும், பெயர் ராசிக்கும் அவ்வளவு பொருத்தம். வீட்டிற்குக் குலதெய்வம் போல் அது இருந்துவருகிறது. பல தலைமுறையாக எவ்வளவோ மாடுகள் இருந்தாலும் இந்த ராசிக்கு இப்படியொரு லெட்சுமி அமையவில்லை என்று வீடே வணங்கிக்கொண்டிருந்த லெட்சுமியைப் பார்க்க யானைப் பள்ளத்திலிருந்து பம்பையனும் மொக்கையும் புறப்பட்டுவந்தனர்.

நகரம் குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது. விசாலமான வீதிகளில் குதிரை வண்டிகளில் மாட்டுவண்டிகளும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தன. குளிருக்கு நாய்கள் கூட திண்ணைகளில் ஒடுங்கிப் படுத்துக்கிடந்தன. வெள்ளியம்பல வீதியில் திரும்புகிற இருவரையும் தெற்குக் கோபுரம் எட்டிப்பார்த்தபடி இருந்தது. விழித்துக்கொண்டிருந்த உச்சி பூதம் தெருவுக்குள் நுழைந்த இருவரையும் கண் கொட்டாமல் நோக்கியது. பின்புறமிருந்த வெளிச் சுற்றுச்சுவரை ஏறிக்குதித்து உள்ளே போய் கதவைத் திறந்தான் மொக்கை. பம்பையன் உள்ளே நுழைந்தான். வலது பக்கம் போடப்பட்டிருந்த கொட்டத்தில் ஆடுமாடுகளும் நான்கு கன்றுக்குட்டிகளும் இருந்தன. ஒரு மாட்டைத் தவிர மற்ற எல்லா மாடுகளும் படுத்தபடி அசைப்போட்டுக்கொண்டிருந்தன. சுற்றுச்சுவரின் ஓரத்தில் மூன்று பேரிய குழிதாழிகள் இருந்தன. விளக்குமாடத்தில் சிறு சட்டியில் விளக்கெண்ணை ஊற்றிவைக்கப் பட்டிருந்ததால் சுவர் முழுவதும் எண்ணெய் ஒழுகிக் கோடுகோடாக இருந்தது. இடது பக்கம் இருந்த கொட்டத்தில் ஒரு மாடும் ஒரு கெடாரியும் நின்றுகொண்டிருந்தன. பார்த்தவுடனே தெரிந்தது. கழட்டவேண்டிய மாடு இது என்று. பம்பையன் மெதுவாக முதுகைத் தடவியபடி உள்ளே போனான். படுத்து அசை போட்டுக்கொண்டிருந்தது அது. புது ஆள் வாடை பார்த்து எழுந்தது. இடுப்பிலே வைத்திருந்த கைப்பிடி அளவு களிமண்ணை அதனுடைய கழுத்திலே தொங்கிக்கொண்டிருந்த மணிக்குள் வைத்து அடைத்தான். மணி மௌனமானது. எழுந்தவுடன் வாலைத் தூக்கி கோமியம் விட்டது. முதுகை மெல்லத் தடவினான். நடு முதுக் கோட்டின் மேலே பூரான் போன்ற சுழி ஏறிப்போனது. முதுகைத் தடவியபடி வாலைக் கீழே போட்டதும் கயிற்றை உருவினான். அது அவனுக்குப் பின்னால் வர ஆரம்பித்தது. வெளியேறியதும் பின்புறக் கதவைச் சாத்தும்போது கொட்டத்தில் இருந்த ஒரு மாடு மட்டும் கத்தியது.

அவர்கள் பேசியபடி மாட்டை ஓட்டிச்சென்றனர். கோபுரத்தின் உச்சி பூதத்து கண் இன்னும் கூர்மையாக உற்றுப்பார்த்தபடி இருந்தது. பனி படிந்த தெருப்புழுதியைக் கிளறியபடி அவர்கள் பேசிக்கொண்டே ஓட்டிச்சென்றனர். களவுக்கு போகிறபொழுது இருக்கும் வேகமும் பதற்றமுமின்றி சாதாரணமாக அவர்கள் நடந்தனர். தனது குடிக்காவலில் களவுக்குப் போவதென்பது மொறப்பொண்ணை உரிமையோடு தூக்கிக்கொண்டு வருவதைப் போலத்தான். யார் வந்து என்ன கேட்கமுடியும்? தேவையில்லாமல் மணி ஆட்டிக்கிட்டே வரவேண்டாம் என்றுதான், கைப்பிடி களிமண். இல்லையென்றால் அதுவுமில்லை.

ஆங்கன் கூட்டம் யானைப்பள்ளத்திலிருந்து புறப்பட்டபொழுது மயிலையை மாடக்குளம் கண்மாயைத் தாண்டி ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். வழக்கம்போல வேடமங்கலத்ததிலிருக்கும் இடிந்த கோபுரத்தின் கீழ் கட்டிவைத்துவிட்டு திரும்புவார்கள். அப்பொழுது

அநேகமாக உச்சிப்பொழுது ஆகிவிடும்.

**மே**க்காவல் பார்க்கிற கழுவன் கூட்டம் உடைமரக்காட்டு அய்யனார் கோவில் தாவாரத்தில் மையம் கொண்டு நகரத்தின் மேற்கு எல்லையைக் காவல் காத்து வந்தது. முன்பு வீதி வீதியாக அலைந்த கால்கள் இப்பொழுது நகரத்தின் வாசனை விலகாத எல்லையில் ஒற்றையடிப் பாதையின் வழியே விரைந்தனர். வைகையின் கரை தொட்டு பெருமாள் கோவிலின் முக்குவரை பாதை வந்து திரும்பிக் கொண்டிருந்தது. ரெட்டிய கெடுத்த வெள்ளி மேலெழும்போது ஒரு எல்லை போய்த் திரும்பும் அவர்கள், இறங்கு ஜாமத்தில் ஒரு எல்லைபோய்த் திரும்புவார்கள். முன்பெல்லாம் தாதனூரிலிருந்து புறப்பட்டு உடைமரக் காட்டைத் தாண்டிவிட்டால் மதுரையின் எந்த அசைவையும் ஓசையின் வழியே துல்லியமாக அறியலாம். சப்தங்களை ஒடுக்கும் சாட்டைக்கயிறுடன்தான் இரவு மதுரைக்குள் வருகிறது. அதன் வரவு கண்டு சத்தங் காட்டாமல் கோவில் நெடுங்கதவுகள் இழுத்துத் தாழிடப்படுகின்றன. புறாக்களின் சிறகடிப்பு அதற்கு முன்பே ஓய்ந்துவிடுகிறது. திருகிச் சுழற்றும் சாட்டை கண்டு பட்சிகளெல்லாம் சிறகு ஒன்றித் தூங்கிவிடுகின்றன. ஒன்றிரண்டு என மெட்டல் ரஸ்தாவில் உருண்டு நகருக்குள் வந்துசேரும் மாட்டுவண்டியின் சக்கரங்கள் சகதிக்குள் பதிந்து நிற்பதைப்போல இரவுக்குள் சிக்கி ஓரங்கட்டி நின்றுவிடுகின்றன. நகரின் மீது நிசப்தத்தைப் போர்த்தித் தூங்க வைக்க இரவு அதிக நேரம் எடுத்துக்கொள்வதில்லை.

இரவெல்லாம் நிசப்தம் போர்த்தித் தூங்கும் மதுரையை ஓசையின் வழியே காவல் காத்து வந்தனர் தாதனூர்க்காரர்கள். குளம்படியும் பாதடியும் பகலிலே தடத்தையும், இரவிலே ஓசையையும் பதிக்கிறது. பகலிலே ஓசையற்று வடிவம் கொள்ளும் தடம், இரவிலே வடிவமற்று ஓசை கொள்கிறது. காற்றில் பதியும் தடத்தைக் காதில் கேட்டு அறிவதில் தாதனூர்க்காரர்கள் மகா கெட்டிக்காரர்கள். இரவு நிசப்தம் கொண்டு நெய்துகொடுத்த திரைச்சீலையை வைத்துத்தான் இவர்கள் நுட்பமான ஒலி விளையாட்டை காலகாலமாய் விளையாடி வருகின்றனர்.

ஆனால் இன்று நகரின் புராதன அமைதி காவு கொடுக்கப்பட்டு விட்டது. நிசப்தத்தின் ரத்தம் ஒழுகும் பலி பீடம் ரயில்வே ஸ்டேஷனில்தான் முதலில் அமைக்கப்பட்டது. அங்கிருந்துதான் ஓசைகளையெல்லாம் விழுங்கிய பேரோசை இரவு முழுவதும் வெடித்துக் கிளம்பியது. எந்த நேரம் என்று நேரங்காலம் தெரியாமல் திடீர் திடீரென பேய்க்கூச்சல் போட்டுக்கொண்டு ரயில் போவதும் வருவதுமாக இருந்தது. மதுரையின் இரவு அமைதியைச் சுருட்டிக்கொண்டு காத தூரம் ஓடியது. வைகையின் மீது கட்டப் பட்ட பாலத்தை இரவு நேரங்களில் ரயில் கடக்கும்பொழுதெல்லாம் மதுரையே தடதடவென ஆடித்தான் அடங்கும். நாடி நரம்புகளில் எல்லாம் அதிர்வலைகள் ஏறி இறங்கும். இரவின் எல்லை வரை வாள் கொண்டு வெட்டும் மிக நீண்ட விசில் சத்தம் கொடுத்துத்தான் அது மதுரையை விட்டு நகரும்.

அதன் பின் ஸ்டேஷனை ஒட்டிக் கட்டப்பட்ட காட்டன் மில்லின் ராட்சத சத்தம் மொத்த இரவையும் உலுக்கி எடுத்தது. மதுரை இதுவரை கேட்டிராத பெரும் சத்தத்தை இரவெல்லாம் கேட்டபடியே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. நீராவி கொண்டு இயங்கும் மூன்று பெரும் சக்கரங்களும் சதா

சுற்றி எண்ணற்ற இயந்திரங்களை இயக்கியபடியே இருந்தன. சுடுதண்ணீர் வாய்க்காலில் ஆவி பறக்க நீர் வெளியேறிக் கொண்டேயிருப்பதைப் போல காற்றெல்லாம் சத்தம் எழுப்பி பஞ்சுத்தூசி பறந்தபடியே இருந்தது. எண்ணிலடங்காத் தொழிலாளர்கள் போகவும் வரவுமாக இருக்கும் கேட்டுக்கடை பகுதியும், பொன்னகரமும் சத்தத்தின் பெருங்காடெனக் கிடந்தது. ஆழ்ந்து தூங்கும் கூடல் மாநகரை ஒட்டித் தூங்கா நகரமொன்று உருவாகி வந்தது.

ஒரு காலத்தில் நிசப்தம் போர்த்தித் தூங்கிய மதுரையின் இரவுகளை ஓசையின் வழியே குறிப்பறிந்து காவல் காத்துவந்த தாதனூர்க்காரர்கள் இப்பொழுது பெரும் சத்தத்திற்கு செவிப்பறையைப் பலி கொடுத்து நின்றனர். கண்களால் மட்டுமே இரவை அறியவேண்டும் நிலை ஏற்பட்டது. பார்வைக்கு அப்பால் இயங்கிக்கொண்டிருக்கும் இரவு இவர்களை விட்டு விலக ஆரம்பித்தது. அதுவும் குறிப்பாக மேக்காவல் பார்க்கிற கழுவன் கூட்டம் ரயில்வே ஸ்டேஷன் சத்தத்தையும், காட்டன் மில் சத்தத்தையும் முழுமையாகச் சகிக்க வேண்டியிருந்தது. அவர்களது எல்லையில்தான் இரண்டும் இருந்ததால் ஒலியின் நுட்பத்தை இழந்து துடித்தனர். பொன்மேனியை ஒட்டி பத்து மாட்டுவண்டியை மொத்தமாய் ஓட்டிப்போனாலும் அதன் சத்தத்தை அவர்களால் உணரமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

முன்பு வைகையின் வடகரையில் கழுதை கத்தும் சத்தம் உடை மரக்காடுவரை கேட்கும். நீண்டு இழுத்து கடைசியில் ‘பூர்ர்ர்ர்...’ என அமத்துவது வரை கழுத்தையைக் காட்டுக்குள் இருந்தே அறியமுடியும். ஆனால் இன்று ரெட்டிய கெடுத்த வெள்ளி மேலெழும்பொழுது பொன்மேனியில் கூவும் தலைக்கோழி சத்தத்தைக்கூட கேட்க முடியவில்லை.

பகலில் நிழலும் இரவில் ஒலியும் யாராலும் விட்டுவிட்டு வரமுடியாத துணை. துணைதான் தொடுக்கி நின்று காட்டிக்கொடுக்கவும் செய்யும். துணையைக் கையாளத் தெரியாதவன் களவுக்கும் காவலுக்கும் தகுதியற்றவன். இரவெல்லாம் காத்திருந்து யானை பிளிறும் நேரம் பார்த்து எடுத்த சிலையோடு கோவில் சுவரைத் தாண்டிக் குதித்தால் சத்தத்திற்குள் சத்தம் அடங்கும். பஞ்சலோக விக்ரஹத்தை பிளிறல் கொண்டு போர்த்தித் தூக்கிச் செல்லலாம். பெரும் ஓசைக்குள் சிறு ஓசையை அடக்குவது ஒன்றுதான் இரவில் ஓசையை மறைக்கும் ஒரே வழி. அடிக்கும் காற்றில் சடசடவென எங்கும் ஒலியெழுப்பும் மரக்கொப்புகளின் ஓசைக்குள் எத்தனையோ குத்துக்கால்கள் ஓடுகளை மிதித்து, வீடுகளைத் தாண்டிப் போய்விடுகின்றன. காவலும் களவும் ஓசையின் பெருங்கணக்கிற்கும் சிறுகணக்கிற்கும் இடையில் நடக்கும் வித்தைதான்.

ஆனால் இன்று அந்த வித்தை மேக்காவல் பார்க்கிறவர்களின் கைக்கெட்டும் தூரத்தை விட்டுப் போய்விட்டது. காட்டன் மில்லில் ஷிப்ட் முடியும்பொழுது பேய்ச்சத்தம் போடும் சங்கொலி இரவில் எல்லாசத்தத்தையும் விழுங்கிவிட்டது. பொழுது உணர்த்துகிற சிறு சிறு ஓசைகள் எல்லாம் மறைந்து ‘ஷிப்டு முடியும்பொழுது’ என்றொரு பொழுதை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தியுள்ளது. இரவின் இருப்பு தாறுமாறாகக் குலைந்துவிட்டது. ஊகித்து அறியமுடியாத பெரும் மாற்றங்களை எல்லாம் தாக்குப் பிடித்தபடி அவர்கள் மதுரையின்

இரவுகளைத் தங்களின் கைகளில் வைத்தி ருக்கப் போராடினர். ஆனாலும் அவர்களின் கைகளுக்கு அப்பாற் பட்ட ஒரு மதுரை, அவர்களுக்கு மிக அருகிலேயே உருவாகி வந்தது.

சாட்டைக்கம்பு வெள்ளி மேற்கே விழும்பொழுது ராமாயணச் சாவடியிலிருந்து புறப்படுவது போல இப்பொழுது அய்யனார் கோவில் தாவாரத்திலிருந்து புறப்படுகின்றனர். கரிச்சான் கத்த ஆரம்பிப்பதற்குள் ஆலமரத்தடிக்கு வந்துசேர்ந்து விடுகின்றனர்.

*

இருளின் நிறம் உருமாறிக்கொண்டிருந்த வாசனை பரவுகிற நேரத்தில் விடிவெள்ளி பளிச்சிட்டு மின்னியது. தெற்குக் கடைசி மரத்திலிருந்து கரிச்சான் குரல் எழுப்பியது. முதல் சத்தத்திலேயே பெரியாம்பிள ஒச்சு முழிப்பு தட்டி எழுந்தார். அவருக்கு முன்ன தாகவே இரண்டு மூன்று பெரிசுகள் எழுந்து உட்கார்ந்திருந்தனர். தாவாரத்தின் தூண் ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்தபடி நீர் பெருகி நிற்கும் தனது வயலைப் பார்க்கும் சம்சாரிபோல இருள் பரப்பெங்கும் பார்வையைச் செலுத்தினார். தொடர்ந்து கரிச்சான் ஒலியும், அக்காக் குருவியின் குரலும் மரத்திலிருந்து கேட்டபடி இருந்தது. தூரத்தில் கிழக்கேயிலிருந்து ஒரு கொத்து ஆலமரத்தை நோக்கி வரும் சத்தம் கேட்டது. ‘எந்த கொத்தப்பா... வருது?’ என்று கேட்டார் உட்கார்ந்திருந்த ஒரு பெருசு. ‘என்ன... மேக்காவ பாக்குறவெங்களாகத் தான் இருக்கும்’ என்றார் பெரியாம்பிள ஒச்சு. சிறிது நேரத்தில் கழுவன் கூட்டம் ஆலமரத்தடிக்குள் நுழைந்தது. மரத்தடியின் அமைதி அவர்களின் வருகையறிந்து வெளியேறியது. வந்தவர்களில் சிலர் நேரடியாக ஊருக்குள் போயினர் கழுவனும் மற்ற சிலரும் தாவாரத்துக்கு பெரியாம்பிளையோடு பேசிக்கொண்டிருந்தனர். பறவைகளின் சத்தம் மரமெங்குமிருந்து கேட்க ஆரம்பித்தது. வடதிசையிலிருந்து நிறைந்த சாக்குமூடைகளைத் தூக்கியபடி வீடு களை நோக்கி அவர்கள் போக ஆரம்பித்தனர். கூகையனும் இன்னும் மூன்று நான்கு பேரும் மரத்தடியிலே வந்து அமர்ந்தனர். அவர்கள் வந்த கொஞ்ச நேரத்தில் கீக் காவல் பார்க்கிற ஆங்கன் கொத்து வந்து சேர்ந்தது. ஊர் பெரியாம்பிள ‘என்னப்பா சங்கதி எதுவும் உண்டா?’என்று கேட்டார். ‘பம்பையனும் மொக்கையும் மயில ஒன்ன கழட்டிட்டு போயிருக்காங்கெப்போய்...’ என்றான் ஆங்கன்.

ஊர்ப்பக்கமிருந்து கோழி கூவும் சத்தம் கேட்டது. இருளும் பனியும் வேகவேகமாக விலக ஆரம்பித்தன. பறவைகள் கொப்பு விட்டு கொப்பு தவ்வி உட்கார்ந்து ஏகத்துக்குக் குரல் கொடுத்தபடி இருந்தன. இடது பக்க கடைசி ஆலமரத்துக்குள் முத்தணன் கூட்டம் நுழைந்தது. நுழைந்த விதமும், ஆட்கள் அங்குமிங்குமாக உட்கார்ந்த விதமும் தாவாரத்தில் இருந்தவர்களுக்கு விஷயத்தை உணர்த்தியது. ‘என்னப்பா ஆச்சு’ என்றார் பெரியாம்பிள. ‘இந்தா வர்றோமப்போய்’ என்று சொன்னபடி நிலையாள் முத்தணன் அவரை நோக்கி வந்தான். அவனுக்குப் பின்னால் ஆண்டியைக் கைத்தாங்கலாகத் தூக்கி வந்தனர். தாவாரத்தில் இருந்தவர்கள் இடம் விட்டு விலக ஆண்டியை தாவாரத்தின் மேல் உட்கார வைத்தனர். கட்டப்பட்ட சாக்கு முழுவதும் ரத்தம் ஏறி கெட்டிப்பட்டு நின்றது. காயத்தைப் பார்த்த பெரியாம்பிள ‘பழஞ்சிக்கரை பண்டுதம் பிள்ளை கிட்ட

தூக்கிட்டு போங்கடா மொதல்ல’ என்று விரட்டினார். மண்டை உடைந்த ஐந்தாறு பேர் தாவாரத்தின் பக்கமே வரவில்லை. ஆலமரத்தின் பின்புறமாக ஆங்காங்கே உட்கார்ந்து கொண்டனர். ‘விடிய வந்து கெழவங்கிட்ட வையி வேற வாங்கணுமாக்கும்’ என்று பேசியபடி மரத்தின் மறைவிலே உட்கார்ந்துகொண்டனர். ‘என்ன ஆச்சு?’ என்று பெரியாம்பிள கேட்பதற்கு முத்தணன் நடந்தது முழு வதையும் விளக்கிச் சொன்னான். ‘கோயிந்தனும், அவெ தம்பியும் இல்லாட்டி தப்பிச்சு வந்திருக்க முடியாதப்பா’ என்றான். ‘பழைய ஊர்க்காரெங்களோட கெட்டியக்காரத்தனம் வேறு எவனுக்குடா வரும்’ என்று பெரியாம்பிள மெச்சிப் பேசினார். அதே நேரத்தில் ‘கல் இல்லாம கரையில நொட்டுறதுக்காடா வந்தீங்க’ என்று நிலை யாளான முத்தணனைத் திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார். பழைய ஊர் வண்ணான் தான் கோவிந்தன். பொழுதாகிவிட்டது என்று சொல்லி அவன் புறப்பட்டான். ‘இருப்பா... பொழுது பரிஞ்சதும் போவ’ என்று ஏதோ பேச நினைத்து அவனை இருக்கச்சொன்னார் ஒச்சு. ‘இல்லப்பா அன்னக்குழி சந்து பெரிய செட்டியாரு அசலூரு போகணுமாம், விடியறதுக்குள்ள வெள்ளைய கொண்டு வந்து கொடுக்கச் சொல்லியிருக்காரு’ என்று சொல்லி புறப்பட்டான். ‘சரி... ரவைக்கு வா, பேசிக்கிருவோம்’ எனச்சொல்லி அனுப்பிவைத்தார் ஒச்சு.

வெளிச்சம் ஊற்றுப் போலத் திசையெங்கும் இருந்து கசிந்து வெளியேறி வந்தது. பனிக்காலத்து இளங்காற்று பறவைகளின் கீச்சொலிகளை எங்கும் தூக்கிக்கொண்டு அலைந்தது. தெக்கபோன கூட்டம் ஆலமரத்தடியில் நுழைந்தது. ‘என்னடா வெறுங் கைய்ய வீசிக்கிட்டு வர்றீங்க’ என்று கேட்டார் பெரியாம்பிள. ‘விடிய விடிய ரயிலு வரலப்பா’ என்று தூரத்தில் ஆலமரத்தடியிலே உட்கார்ந்தபடி நொந்துபோய்ச் சொன்னான் வீரணன். காக்கைகளின் கரைச்சல் எல்லாப் பறவைகளின் ஒலியையும் அமுக்கி மேலெழுந்து வந்தது. உதிர்ந்து போன இருளின் வாசனை மட்டும் வீசும் இளங்காற்றுக்குள் இருந்தது.

‘என்னப்பா... இன்னும் சுழியன் கொத்த காணோம்’ என்று ஏக்கம் கலந்த குரலில் கேட்டார் பெரியாம்பிள. ‘வந்துருவாங்கெப்பா’ என்றார் விருமாண்டிப் பெரிசு. நேரமாகிக்கொண்டே இருந்தது. வந்தவர்கள் எல்லாம் ஆலமரத்தடியில் உட்காருவதும் ஊருக்குள் போவதுமாக இருந்தனர். தூரத்தில் ஊர்ப் பனையின் பக்கமிருந்து ஒரு சிறு கொத்து நடந்து வருவது தெரிந்தது. ‘அந்தா வர்றாங்கெப்பா’ என்றார் விருமாண்டிப் பெருசு.

அவர்கள் ஆலமரத்தடிக்குள் வரும்பொழுது மரமெங்கும் பறவைகளின் சத்தம் ஏகத்துக்கு கேட்டது. கட்டையன் அண்ணாந்து மரத்தைப் பார்த்தான். ‘தாயோலி... இன்னிக்கு நம்மள கொல்லத் தெரிஞ்சுச்சுடா’ என்றான் சுழியன். பறவையிடம் சிக்கி ஆடிய உயிரின் அதிர்வு அவர்கள் எல்லோரிடமும் மிச்சம் இருந்தது. விடிந்த பொழுதைக் கொண்டாடியபடி பறவைகள் கத்தித் தீர்த்தன. அவர்கள் வந்த வேகத்தில் ஆலமரத்தடியிலிருந்து கிளம்பினர். ரெண்டு மரக்கால் நெல் இருக்கும் ஈரச்சாக்கை தோளின் மேல் தூக்கிப்போட்டபடி தாவாரத்து பெரிசுகளை பார்க்காததுபோல மிகத்தள்ளி நடந்தான் கட்டையன். பெரியாம்பிள ஒச்சு தூரத்தில் விலகிப்போகும் அவனது தோளில் தொங்கிக் கொண்டிருந்த

சாக்கையே பார்த்துக்கொண்டிருந்தார். களவில் அன்று பிறந்த குழந்தையொன்று உள்ளே கிடப்பது போலிருந்தது. குழந்தையைத் தொட்டில் கட்டி ஆட்டுவதைப்போலத் தோளில் கிடந்த சாக்கு ஆடியபடி இருந்தது. பிரசவத்தின் வலியும் சந்தோஷமும் அவன் நடையிலே தெரிந்தது. வெற்று ஆரவாரமும் ஆர்வமும் மிக்க தனது பழைய முகத்தை மறைத்தபடி அவன் ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

நேரம் கடந்தது. மரத்தடியில் பேச்சு வற்றி வெளிச்சம் கூடியது. பெருசுகள் எல்லாம் தாவாரத்தை விட்டு இறங்கி ஊரை நோக்கிப் போக ஆரம்பித்தனர்.

*

# 101

**அப்பனோட போகக் கனாக் கண்டா வெளியில சொல்ல முடியுமாடி**' என்றாள் காத்தாயி.

'அடி ஆத்தீ... அப்படி ஆயிப் போச்சா கத!' என்றாள் பேயம்மாள். நடையின் வேகத்தில் வார்த்தைகள் சிதறி ஓடின.

'என்னஙகடீ... விடிய்ய இப்படி பேசிட்டுப் போறீங்க' என்றபடி மந்தைக்கல்லில் இருந்து எழுந்து உட்கார்ந்தார் பெருசு மொக்கச்சாமி. அவர் சொன்னதைக் காதில் வாங்காமல் அவர்கள் ரெண்டு பேரும் கத்திப்பேசியபடி கிழக்குப்பக்கமாக நடந்து போய்க்கொண்டிருந்தனர்.

'நின்னு என்னான்னு கேட்டு போறாளுகளா... ஒக்காலோலி... ஙோத்தாலோக்க... இவளுகளுக்கெல்லா எவ்வளவு மப்பு கூடிப்போச்சு' என்றார்.

மொக்கச்சாமிக்கு மந்தைக்கல் பெரியாம்பிளை என்றே பெயர். எந்நேரமும் மந்தைக்கல்லிலே படுத்துக்கிடப்பார். மற்றப் பெருசுகள் எல்லாம் ஆலமரத்தடியிலேயும் மலையடிவாரத்திலேயும் இருப்பார்கள். ஆனால் இவர் மந்தைக்கல்லை விட்டு எங்கேயும் போகமாட்டார். இந்தக் கல்லுல உட்கார்ந்து பகலெல்லாம் போற வர்ற பொம்பளகளையெல்லாம் வம்பு இழுக்குறதுதான் வேலை. அதுவும் புதுசா வாக்கப்பட்டு வந்தவளுகள கிண்டிக் கிழங்கெடுத்துடுவாரு. 'மந்தக்கல்லுல அந்த எழுவெடுத்தவெ ஒக்காந்திருப்பான். சுத்திப் போங்கடி' என்று சரடு கட்டி வந்த புதுப்பெண்களிடம் வீட்டில் சொல்லிவிடுவார்கள்.

மூணு நாலு கிழவிக இருக்காளுக. அவளுகளுக்குத்தான் கொஞ்சம் மட்டுப்படுவார். அதுவும் அந்த கழுவாயி இருக்காளே, அவளக் கண்டா போதும், மனுஷன் பொட்டிப்பாம்பா ஆயிடுவான். அவ முக்கு திரும்புனா போதும், மந்தைக்கல்ல விட்டு எந்திருச்சு எவ்வளவு வேகத்துல போவார்னு சொல்ல முடியாது. 'இந்த கெழவிக்கு மட்டும் ஏம்

பெரியாம்பிள இப்படி பயப்புடுற?' என்று இளவட்டங்கள் எல்லாம் கேட்பார்கள். 'அவள பத்தி உங்களுக்குத் தெரியாதுடா. பேசாம இருங்க' என்று மட்டும் சொல்லுவார். விஷயத்தைச் சொல்லமாட்டார்.

ஆங்கனும் செத்துப்போன மூக்கனும் ஒருமுறை கிழவனைத் தனியாக மலையடிவாரம் பக்கம் கூட்டிப்போய் 'சொல்லாம உன்னய விடமாட்டோம்னு' சொல்லி கிட்டிபோட்ட மாதிரி நெருக்கின பிறகுதான் கிழவன் சொன்னான். 'அவ சாமானியப் பட்டவ இல்லடா... புருஷன வெதர அமுக்கி கொன்னவடா. அவகிட்ட கவனமா இல்லாட்டி அம்புட்டுதான்' என்றார். சொல்லும்பொழுது கிழவனின் முகத்தில் இருந்த பயத்தை உற்றுப்பார்த்தபடி இருந்த ஆங்கனும் மூக்கனும் வாய்வெடித்துச் சிரித்தனர். 'ஏன்டா சிரிக்கிறீங்க... சின்னப் பசெங்கென்றுது செரியா இருக்கேடா' என்றார். அவர்களுக்குச் சிரிப்பு அடங்கவில்லை. 'இளவட்டக்கல்ல தூக்கி போடுறத பாத்து அவள மெச்சாதீங்கடா, வுட்டா... கொழவிக் கல்ல உருவி வெளியில போட்டுட்டு போவாடா... அப்படிப்பட்டவ அவ' என்றார். அவர்களுக்குச் சிரிப்பு நிற்கவேயில்லை. 'அதுதான் எப்பவும் லங்கோட்ட இறுக்கியே கட்டி வச்சிருக்கியா பெருசு' என்றான் ஆங்கன். மந்தைக்கு வரும்வரை சிரித்துக்கொண்டேதான் வந்தனர். 'வேறு யாருகிட்டயும் சொல்லக்கூடாதப்பா...' என்று மீண்டும் மீண்டும் பெரியாம்பிள கேட்டுக்கொண்டேதான் வந்தார் 'யாருக்கும் சொல்லலப்பா...வுடு' என்று இருவரும் சொன்னபிறகுதான் நிம்மதியானார்.

மந்தைக்கல்லில் தினமும் அவரது பராக்கிரமச் செயல்கள்தான் நடந்துகொண்டேயிருக்கும். ஊர் பெரியாம்பிள ஒச்சு. விருமாண்டிப்பெருசு இன்னும் யாரெல்லாம் வந்து உட்கார்ந்தாலும் கட்டுப்படமாட்டார். ஆங்கன் வந்தா மட்டும் கொஞ்சம் அடங்குவார். ஏன்னா அவனுக்கு விஷயம் தெரியும்றனால. தினசரி மத்த பொம்பளைகளோட கலகம்தான்.

இன்னிக்கும் காலையிலே ஆரம்பிச்சுட்டாரு. நடந்துபோன ரெண்டு பெண்களும் 'பெரியாம்பளோய்... போயிட்டு வந்து வச்சுக்குறோம் உன்னய' என்று சொன்னபடி போய்க் கொண்டிருந் தனர். 'இனி மேலு என்னய வச்சு என்னடி பண்ணப்போறீங்க' என்றார். 'பழைய நெனப்புல, பல்லுபோன நாயீ எலும்ப மோந்து பாக்குதுடீ...!' என்றாள் ஒருத்தி. 'னோத்தாலோக்க...இப்படியா பேசிக்கிட்டுப் போறீங்க, பல்லு போனாலும் ஈர வச்சே மென்னு இழுக்குறனா... இல்லையான்னு வந்து பாருங்கடீ' என்றார் அவர்.

'விடிய ஆரம்பிச்சுட்டானப்பா' என்று சொல்லியபடி ஊர்ப் பெரியாம்பிள ஒச்சுவும் விருமாண்டிப் பெருசுவும் நடந்துவந்து மந்தையிலே உட்கார்ந்தனர். 'வாரத்துக்கு ஒருத்தியாவது ஒலமூடிய வச்சு சாத்துறா... அப்படியும் புத்தி வர்லயே உனக்கு' என்றார் பெரியாம்பிள ஒச்சு.

'நீயெல்லாம் ஊர் பெரியாம்பிள, உனக்கெல்லாம் ஊருக்குள்ள என்னா நடக்குதுன்னா தெரியுமா? ராத்தி பூரா ஆலமரத்துலயே படுத்துக்கிடக்கெ. இவளுகெ என்னடான்னா குதியாட்டம் போடுறாளுக. திடீர்னு ஒருத்தி மந்தைக்கு வந்து, அந்தா கழுவாயி வர்றான்னு சொல்லிட்டு ஓடிர்ரா. அதுக்குப் பெறகு தூக்கமே வரமாட்டேங்குது. விடிய விடிய என்ன தூங்க விடுறாளுக இல்ல. இவளுகளுக்கு ஏத்துக்கிட்டு நீயேல்லாம் பேச வந்துட்ட' என்றார்.

‘சரியப்பா, நீதான் என்னத்துக்கு கழுவாயிய கண்டு அப்படி பயப்புடுற’ என்றார் விருமாண்டிப் பெருசு.

‘வந்துட்டான்டா... வங்காருத்தேவன்! இனி தாலிய அறுத்துட்டுத் தான்டா விடுவான்’ என்று தலையிலே கைவைத்தார். கிழக்குத் தெருவிலிருந்து ஆங்கன் மந்தைக்கு வந்துகொண்டிருந்தான். ‘ஏலே ஆங்கா, வடக்க ரயிலேறி தூரமா களவுக்குக் கூட்டிப்போயி இவெங்கரெண்டு பேத்தையும் வுட்டுட்டு வாடான்னு எத்தன தடவடா உனக்கு சொல்றது’ என்றார் மந்தைக்கல் பெரியாம்பிள.

‘பெரியாம்பிளக ரெண்டும் வரமாட்டிங்குதுகளப்பா... நா என்ன செய்ய’ என்றான் ஆங்கன்.

‘ஏலேய்... நீ ஊர் பெரியாம்பிளைன்னா இவனோட சேந்து ஒரு நாளைக்காவது களவுக்கு போடா... ஆம்பள’ என்றார் மந்தைக்கல் பெரியாம்பிள.

ஆங்கன் பெரிசுகளிடையே நடக்கும் கலகத்தை சிரித்தபடியே ரசித்துக்கொண்டிருந்தான். மந்தைக்கல் பெரியாம்பிளை மிக வேகமாக அவனிடம் பிராது சொல்லிக்கொண்டிருந்தார். விருமாண்டிப் பெரிசு அவருடைய தோளைத் தொட்டு ‘அங்க யாரு வர்றதுன்னு பாரப்பா...’ என்றார்.

‘எந்த வெண்ண வந்தா எனக்கென்னடா... நீங்க ரெண்டுபேரும் இன்னிக்கு ரவைக்கு இவனோட களவுக்கு போகணும்டா...’ என்றார்.

‘அங்க யாரு வர்றதுன்னு பாத்துட்டுத்தான் பேசே’ என்றார் மீண்டும் விருமாண்டி.

மந்தைக்கல் பெரியாம்பிள இடப்பக்கமாகத் திரும்பினார். பெரிய ஓலைப்பெட்டி ஒன்றைத் தலையிலே வைத்தபடி புளியமரப் பக்கமிருந்து கழுவாயி மந்தையை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

‘ஙோத்தாலோக்க... எழவு விழுந்துச்சுடா...’ என்று துடித்தபடி மந்தையை விட்டு எழுந்தார். ‘இருப்பா... எங்கிட்டு களவுக்கு போகணும்னு சொல்லிட்டு போ...’ என்று கையைப் பிடித்தார் விருமாண்டி. ‘விடுறா... ஙோழி மகனே, விடுறா கைய்ய’ என்று உதறிய வேகத்தில் மந்தையைவிட்டு வெளிக்கிளம்பினார்.

கழுவாயி மந்தையைத் தாண்டி உள் தெருவுக்குள் போனாள். ‘இவளக் கண்டு ஏனப்பா இப்படி பயப்புடுறான்’ என்றார் விருமாண்டி.

‘விஷயமில்லாம பயப்படுவானா’ என்றார் ஒச்சு.

‘சரி... அவ விஷயத்த வுடு. நம்ம விஷயம் என்ன ஆச்சு?’ என்று ஊர் பெரியாம்பிள கேட்டார்.

‘இப்பத்தானப்பா போகப்போறேன், போயி வெவரமா கேட்டுவர்றேன்’ என்று சொல்லிவிட்டு ஆங்கன் புறப்பட்டான்.

*

**க**டந்த ஒரு சில வருடங்களாக தாதனூர்க்காரர்களின் மீது போடப்படும் பல வழக்குகளில் மதுரை நீதிமன்றம் கடும் தண்டனைகளை

வழங்கிவந்தது. கடும் தண்டனை என்று சமூகம் நினைக்கும் தண்டனையாக அது இருந்தது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் ராவுத்தர் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட பதினாறு காவக்காரர்களுக்கும் ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவர்கள் விடுதலையாகி வந்தனர். அதற்குப்பின் சிலர் களவுக்குப் போய்வரும் இடத்தில் கைதாவதும், தண்டனை பெறுவதும் நடந்துவந்தது. ஆனால் இதுவரை தாதனூர்க்காரர்கள் எந்த வக்கீலும் வைத்துக் கொள்ளவில்லை.

தாதனூருக்கு ரோடு போட்ட அன்று நடைபெற்ற மோதலில் கைது செய்யப்பட்ட பதினான்கு பேரின் மீதும் கடுமையான பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. வெள்ளைக்காரப் போலீஸ் ஸ்பெல்டிங் கொலை செய்யப்பட்டதற்கு பதினாலு பேரும் காரணமெனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கில் போதகர் டேவிட் சாம்ராஜின் ஆலோசனையின் பேரில் வக்கீல் குணசீலன் ஆஜராகி வாதாடினார். மொக்கையன், வீராயி உள்ளிட்டவர்களின் மரணங்களுக்கான காரணங்களை நீதிமன்றத்திலே எடுத்துவைத்தார். போலீஸ் அதிகாரியின் கண்மூடித்தனமான நடவடிக்கையே மோதலுக்கு இட்டுச்சென்றுள்ளது. அது மட்டுமல்ல, ஒரு பெண் என்றும் பாராமல் துப்பாக்கிக் கட்டையால் அடித்தே கொண்றிருக்கிறார்கள் என்று வாதாடினார். இறுதியாக நான்கு பேருக்கு ஆயுள் தண்டனையும் மற்றவர்களுக்கு இரண்டு ஆண்டு முதல் ஆறு ஆண்டுகள் வரையிலான தண்டனையும் வழங்கப்பட்டது.

இந்தக் காலங்களில் தாதனூர்க்காரர்கள் மட்டுமல்லாமல் அவர்களோடு நெருக்கமான உறவோடு இருப்பவர்களையும் கூட போலீஸ் கண்காணித்து வந்தது. அவர்களில் சிலர் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டனர். பழைய ஊரில் உள்ள கோவிந்தன் தாதனூர் பெரியாம்பிளைக்கு மிகவும் நம்பிக்கையான ஆளாக இருக்கிறான் என்று தெரிந்து அவனது நடவடிக்கையைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். திடீரென ஒருநாள் கச்சேரி போலீசார் அவனது வீட்டிற்கு வந்து ‘உன் மீது பிராது வந்திருக்கிறது’ எனக் கூட்டிப்போய் விசாரித்து சிறையில் அடைத்தனர். போனவன் இரண்டு நாட்களாக வரவில்லை எனப் பதறிய அவனது மனைவி ஊர்ப்பெரியாம்பிளையிடம் வந்து சொன்னாள். அதன் பின் ஆங்கன் மூலம் வக்கீல் குணசீலனை அணுகி கோவிந்தனை ஜாமீனில் எடுத்தனர்.

பட்டமார் தெருவில் உள்ள விஸ்வேஸ்வர அய்யர் தான் துவைக்கப்போட்ட துணிகளை இவன் கட்டி உபயோகித்துள்ளான்; எனவே ஒப்பிக்கப்பட்ட சொத்தை அநியாயமாய் அபகரித்துப் பயன்படுத்திய குற்றத்திற்காக கோவிந்தன் மீது வழக்கு தொடுத்திருந்தார்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. விஸ்வேஸ்வர அய்யருக்காக நகரின் லீடிங் லாயரும் அவரின் மைத்துனருமான சுந்தரம் அய்யர் ஆஜராகி வாதாடினார். ‘எவனாவது தன் வசத்திலாகினும் அதிகாரத்திலாகினும், எவ்விதமாகவாவது ஒப்பிக்கப்பட்ட சொத்தை அயோக்கியமாய் தன்னுடைய சொந்தத்துக்கு உபயோகித்துக்கொண்டாலும் அதை வேறொன்றாக மாற்றி உபயோகித்துக்கொண்டாலும் அந்த விஷயத்தில் இன்னவிதமாய் காரியங்களை நடத்தவேண்டும் என்று சட்டத்தில் சொல்லியிருக்கிற கிரமத்தையாவது, வெளிப்படையாகவாகிலும்,

குறிப்பாகவாகிலும் அந்த விஷயத்தில் அவன் செய்திருக்கிற யாதொரு நியாயமான உடன்படிக்கையின் கிரமத்தையாவது மீறி அந்தச் சொத்தை அயோக்கியமாய் உபயோகப்படுத்தினாலும், செலவு செய்தாலும், வேண்டும் என்று வேறே எவனையாவது அப்படி செய்யவொட்டினாலும் அப்படிப்பட்டவன் ஒப்பிக்கப்பட்ட சொத்தை அநியாயமாய் அபகரித்தவனாகிறான் என்று இபிகோ 1860 ஷத்து 45ஆக்ட் பிரிவு 405கூறுகிறது.

இதன்படி ஒரு கான்ஸ்டபிள் கச்சேரியில் இருந்து போலீஸ் சேவகர்களின் சம்பளம் என்று அவன் கையில் கொடுக்கப்பட்ட பணங்களை சொந்த பிரயோஜனத்திற்கு உபயோகித்தததால் (3, வீக்லி, ரிப்போர்ட் 44) தண்டிக்கப்பட்டிருக்கிறான்.

அதே போல தன்னிடத்தில் நகை செய்வதற்குக் கொடுத்த பொன்னை தட்டான் கொஞ்சம் எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக செம்பு கலந்திருக்கிறான். சுத்தமான தங்கத்தால் நகை செய்ய முடியாது. அதனால்தான் இப்படிச் செய்தேன் என்று அவன் சொன்ன காரணத்தை ஏற்காமல் கோர்ட்டார் அவனைத் தண்டித்துள்ளனர் (4, பம்பாய் ஹைகோர்ட், ரிப்போர்ட் 16). இதே குற்றத்தைச் செய்த பழைய தாதனூரைச் சேர்ந்த கோவிந்தனுக்கு இச்சட்டப்படி அதிகபட்ச தண்டனையாக மூன்று வருட சிறைத்தண்டனை வழங்கவேண்டும்' என வாதிட்டார்.

அதன்பின் வாதிட்ட வக்கீல் குணசீலன் 'அநியாயமாய் அபகரிப்பது' என்பதற்கு மெட்ராஸ் ஹைகோர்ட் கொடுத்த மூன்றுவித விளக்கங்களைப் பற்றி (6, மதராஸ் ஹைகோர்ட், அப்பெண்டிக்ஸ் 28ன்படி) நீண்டநேரம் விளக்கி அதன்படி இந்தக் குற்றச்சாட்டு வாதிக்குத் பொருந்தாது என்று கூறினார். அது மட்டுமல்ல, துவைக்கப்போட்ட துணியை வண்ணான் கோவிந்தன் இரண்டு நாள் உடுத்தியது அபகரித்த குற்றமெனக் கருதினால் கோவில் தர்மகர்த்தாக்கள் கோவிலுக்குச் சொந்தமான ஆபரணங்களைத் தங்களின் வீடுகளிலோ, மடங்களிலோ வைத்துள்ளனர். அங்கே அவர்கள் இல்லத்துப் பெண்கள் நகைகளை அணிந்துகொண்டு கண்ணாடி முன் நின்று அழகுபார்ப்பதும் குற்றமாகும். அநேகமாக இக்குற்றத்தைச் செய்யாத தர்மகர்த்தாக்கள் இந்நகரில் யாருமில்லை. எனவே கோவிந்தன் மீதான தீர்ப்பே இந்நகரின் மிகப்பெரிய மனிதர்களுக்கும், அரசின் உயரிய பட்டங்களான 'சர்', 'ராவ்பகதூர்', 'திவான்பகதூர்' பட்டங்களை வாங்கியவர்களுக்கும் பொருந்துகிற தீர்ப்பாக அமையும்.

இறுதியில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி 'வண்ணானுக்குப் போட்ட துணியை வண்ணான் இரண்டு தினங்கள் கட்டி உபயோகிப்பதனால் உண்டாகும் நஷ்டமானது, நஷ்டமென்று சொல்லக்கூடாது. ஆகவே பழைய தாதனூரைச் சேர்ந்த வண்ணான் கோவிந்தன் குற்றவாளி அல்ல' என்று தீர்ப்பு வழங்கினார்.

விஸ்வேஸ்வர அய்யர் போட்ட வழக்கு வண்ணான் வைத்த வெள்ளாவியில் வேகாமல் போனது பற்றி பட்டமார் தெரு முதல் பிள்ளைமார் தெரு வரை எல்லோருக்கும் பெரும் வருத்தம் உண்டானது. லீடிங் லாயர் சுந்தரம் அய்யரின் வாதத்தை வண்ணானின் வக்கீல் குணசீலன் துவைத்துக் காயப்போட்டு கழுதை மேல் ஏற்றி தெருத்தெருவாக நடக்கவிட்டானே என்று ஊரெங்கும் பேசினர். இந்த

தீர்ப்புக்குப் பின் செல்வந்தர்களுக்குத் துவைக்கும் வண்ணான்களுக்கு எல்லாம் வெளிப்படையான தைரியம் வந்தது. முன்பு துவைக்க வந்த துணியைக் கட்டிக்கொண்டு அசலூருக்கு மறைந்து மறைந்து போனவர்கள் இப்பொழுது கோர்ட்டார் கூறுப்படி கட்டுகிறேன் என்று போகிற கிராமங்களில் தெனாவட்டாக சொல்லிக்கொண்டனர். வண்ணானுக்குப் போட்டு வாங்குகிற எல்லாத் துணியும், வண்ணான் போட்டுக்கொடுக்கிற துணியாகப் பார்க்கப்பட்டது. பழைய தாதனூரில் உள்ள வண்ணார்களைப் பற்றி கேட்கவே வேண்டாம். தாதனூர் சரடு கட்ட புறப்பட்டுப்போனால் பெரியாம்பிளைகள் எல்லோருக்கும் இடுப்பில் கட்டவும், தலைப்பாகை கட்டவும் வழவழப்பான வஸ்திரங்கள்தான். ஊரே நல்ல துணி உடுத்தி சரடு கட்டப் போகிறது.

இதற்கிடையில் ஒருநாள் களவுக்குப் போய் வந்தபொழுது சோங்கனும், பொன்னாண்டியும், தெத்துக் கூனனும் போலீஸால் கைதுசெய்யப்பட்டனர். சரி, சிறையில் இருந்துவிட்டு வரட்டும் என்று ஊர் இருந்துவிட்டது. வழக்கிற்கு வக்கீல் வைக்கவில்லை. தற்செயலாக நீதிமன்றத்தில் இந்த கேஸ் பற்றிய விவரங்களைச் சேகரித்த வக்கீல் குணசீலன் பதறியடித்து பசுமலைக்கு ஓடிவந்து போதகர் டேவிட் சாம்ராஜைப் பார்த்துள்ளார். அதன்பிறகுதான் விஷயம் தெரியவந்தது. இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் கொலை செய்யப்பட்ட வழக்கு இவர்கள் மூவரின் மீதும் தொடுக்கப் பட்டிருந்தது. குணசீலனை வக்கீலாக நியமித்து வழக்கை நடத்துவதென முடிவு செய்தார். குணசீலனும் தன்னால் முடிந்த அளவு சிரத்தை எடுத்து வழக்கை நடத்தினார். விரைவில் வழக்கின் தீர்ப்பு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக டேவிட் சாம்ராஜை பார்த்து விவரம் கேட்டு வரத்தான் ஆங்கன் கிளம்பிப் போனான்.

*

**உ**ச்சிப்பொழுதுவரை ஆங்கன் வரவில்லை. அவன் வரவை எதிர்பார்த்து ஆலமரத்தடியில் ஊர் பெரியாம்பிள ஒச்சும், விருமாண்டியும் இன்னும் பலரும் உட்கார்ந்திருந்தனர். வெயில் சுள்ளென்று அடித்துக் கொண்டிருந்தது. ‘என்னப்பா, இந்த வருஷ கோட ஆரம்பமே சுள்ளுன்னு இருக்கு’ என்றார் விருமாண்டிப் பெருசு.

‘அப்புறமென்ன, மாசியில உப்பங்காத்தும், ஆலங்காத்துமா வீசும்? இல்ல செம்பூத்து கத்துமா?’ என்றார் ஊர் பெரியாம்பிள.

‘இல்லப்பா, பனி குறையிறதுக்குள்ள வெயில் இவ்வளவு ஏறி அடிக்க ஆரம்பிச்சுருச்சே அதுதான் சென்னென்’ என்றார்.

‘போன வருசம் நல்ல பேஞ்சுச்சுல, அப்ப இந்த வருசம் போட்டுத்தான பாக்கும்’ என்றார் ஊர்ப் பெரியாம்பிள.

ஆலமரத்தின் பின்பக்கமாகப் பேச்சைக் கேட்டபடி படுத்திருந்த சுழியன் பக்கத்திலிருந்த சின்ராசுவிடம் சொன்னான். ‘அங்க கேளு.... பெரிய காணிக்காரெங்க ரெண்டு பேரு பேசிக்கிறத’ என்றான்.

‘ஏலே... எளக்காரமா போச்சுடா உங்களுக்கு’ என்றார் விருமாண்டி.

‘அப்பறமென்னப்பா, வருஷமெல்லாம் மழை பெஞ்சாலும் நமக்கா வெளையப்போகுது? இங்க பாரு, நாடெல்லாம் கொளம் நெறஞ்சு கெடக்கு,

அந்த மங்களப்பட்டி கம்மா, தாயோலி... கடல் மாதிரி கெடக்கு. ஆனா நம்ம ஊரு கம்மாயப் பாரு! நாய் நக்கி குடிக்க வழியக் காணோம்' என்றான்.

'ஒக்காந்து பிள்ள பெக்க விடாம வெரட்டுன மழைய்ய, வெளக்கமாத்த கொண்டே அடிச்சு வெரட்டியிருக்காடா பெரியாத்தா சடச்சி. அதுதான் நம்ம கல்லு மலையில மழை பெய்யிறதும் இல்ல, நம்ம கம்மாயில தண்ணி நிக்குறதும் இல்ல' என்றான் சின்ராசு.

'சடச்சி... எதையும் அடிச்சுப் பத்துவாடா... இந்தத் தண்டி காட்டுக்குள்ள ஒத்தையில வந்து புள்ள பெத்துருக்கான்னா அவ எந்தத் தண்டி மனுஷியா இந்திருப்பான்னு பாரு' என்றான் மொக்கையன்.

பேச்சு சடச்சியைப் பற்றிப் போனது. இளங்காற்றில் ஆலமரத்தின் மெல்லிய விழுதுகள் ஆடின. உதிர்ந்து கிடந்த இலைகள் காற்றில் பறந்தன. மரத்தடியில் இருந்தவர்களின் மீது மோதித் தடவியபடி சொன்றது காற்று. நீண்டநேரம் உட்கார்ந்தே இருப்பவள் கொஞ்சம் அசைந்து கொடுத்து உட்காருவதைப்போல மரமும் முழுக்க ஒரு சிறு அசைப்பு கொடுத்து அடங்கியது.

வெயிலில் வேகவேகமாக நடந்து வியர்த்துப்போய் ஆலமரத்தடி நிழக்குள் நுழைந்தார் மந்தைக்கல் பெரியாம்பிளை. 'என்னடா எடம் மாறி வந்திருக்கான்?' என்றார் விருமாண்டிப் பெருசு.

'கழுவாயி பின்னாடி வெரட்டி வர்றாளான்னு பாருங்கடா' என்றான் சுழியன்.

வியர்த்து விறுவிறுக்க வந்த பெரியாம்பிள 'யப்பா... பெரியவீட்டு பூதலிங்கம் பிள்ளையோட மகன் ரெண்டு மூணு பேரோட வந்து மந்தையில நிக்கிறாரு, உன்னய பாக்கணுமாம்' என்றார் ஊர் பெரியாம்பிள ஒச்சுவிடம்.

அவர் எதுக்கு நம்ம ஊர் மந்தைக்கு வந்து நிக்கணும் என்று யோசித்தவாறு ஓச்சுவும் உடன் நான்கைந்து பேரும் மந்தைக்குப் புறப்பட்டனர்.

தூரத்தில் வரும்பொழுதே மகமல் சட்டையும் வெள்ளைத் துண்டும் அணிந்தபடி உயரமான மனிதர் ஒருவர் நின்றுகொண்டிருப் பதைப் பார்த்தனர். அவரைச் சுற்றி இரண்டு மூன்று பேர் நின்றனர். பின்புறக் கரட்டின் வழியாக அவர்கள் நடந்து மந்தைக்கு வந்துள்ளனர். இவ்வளவு பெரிய மனிதர் மந்தைக்கு நடந்து வரும் அளவிற்கு அவ்வளவு முக்கியமான விஷயம் என்னவாக இருக்கும் என்று யோசித்தப்படி ஊர் பெரியாம்பிளையும் மற்றவர்களும் மந்தைக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வரவும் ஊர் பெரியாம்பிளையைப் பார்த்து வணக்கம் செய்தபடி 'ஐயா, நான் நடுப்பட்டி பூதலிங்கம் பிள்ளையோட மகன் சபாபதி பிள்ளை. தாசில்தார்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இப்படி ஒரு வணக்கத்தையும் அறிமுகத்தையும் யாரும் எதிர்பார்க்கவில்லை. பெரியாம்பிள ஒச்சு திகைத்து நின்றார். நடுப்பட்டி பிள்ளையை ஒச்சு உட்பட பழைய ஆட்கள் எல்லோரும் அறிவார்கள். தாதனூரைச் சுற்றியிருக்கிற மூன்று ஊர்களும் மீனாட்சியம்மன் கோயிலின் மானிய ஊர்கள்தான். அந்த மானியங்கள் எல்லாம் பிள்ளை

குடும்பத்துக்குத்தான் சொந்தம். பாரம்பரியமான பெயரும் புகழும் பெற்ற குடும்பம். அந்தக் குடும்பத்து மனிதர் வந்து தாதனூர் பெரியாம்பிளையைப் பார்த்து கையெடுத்து வணங்கியதென்பது எல்லோரையும் ஆச்சரியப் படுத்தியது. அவருடன் வந்தவர்களும் ஊர்க்காரர்களுக்கு வணக்கம் செய்தனர்.

‘பெரிய மனுஷங்கெல்லாம் இவ்வளவு தூரம் வந்துருக்கீங்க, என்ன விஷயமா?’ என்றார் பெரியாம்பிள.

‘ஒண்ணுமில்லப்பா, இங்கிட்டு கவர்மெண்ட் கட்டிடம் ஒண்ணு கட்டுறதுக்காக உங்ககிட்ட கேட்டுப் போலாம்னு வந்திருக்கோம்’ என்றார் சபாபதி பிள்ளை.

இவ்வளவு பெரிய சொத்துக்கார மனுஷன் நம்மகிட்ட வந்து கேக்குகிறானே என்று பெரியாம்பிள திகைத்துப் போய் நின்றார்.

‘எங்க ஊருல எதுக்கப்பா வந்து கட்டடம் கட்டுணும்?’ என்று கேட்டார் விருமாண்டி.

‘எதுக்குன்னு தெரியலப்பா... எல்லா கிராமத்துலேயும் ஒவ்வொரு கட்டிடம் கட்டணும்னு துரை அய்யா சொன்னாங்க. அதுதான் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தோம். இதோ... இவருதான் கட்டிடத்த கட்டப்போற காண்டிராக்ட்காரரு. பேரு சென்னாரெட்டி பழங்காநத்தத்துல இருக்காரு’ என்று அவரை அறிமுகப்படுத்தினார். அவரும் மிகப் பணிவாக மீண்டும் ஒருமுறை அவர்களை வணங்கினார்.

‘ஊர் பெரியவங்கெல்லாம் காண்டிராக்டகாரருக்கு ஒத்துழைப்பு கொடுக்கணும்பா’ என்று பணிவான குரலில் கேட்டுக் கொண்டார்.

‘என்னத்துக்கு இங்க வந்து கட்டிடம் கட்டணும்றாங்கெ’ என்று யோசித்தப்படி கூட்டம் நின்று கொண்டிருந்தது.

சபாபதி பிள்ளையின் உதவியாளர் முனியப்பன் மந்தையை விட்டுத் தள்ளி கட்டிடத்திற்கான இட அமைப்புகளைக் குறித்துக் கொண்டு அடையாளத்திற்கான கற்களை வைத்தார். பின்னர் அவர்கள் புறப்படத் தயாராயினர். ‘அடுத்த வெள்ளிக்கிழமை நல்ல நாளு, அன்னக்கி வந்து வேலைய ஆரம்பிச்சுடுங்க’ என்றார் சபாபதி பிள்ளை. ‘சரிங்க ஆரம்பிச்சிருறோம்’ என்றார் காண்டி ராக்டர் சென்னாரெட்டி. எல்லோரும் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

‘அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்து, பிரச்சினையில்லாமல் கட்டடிடம் கட்ட உதவுணும்ய்யா’ என்று மீண்டும் ஒருமுறை ஊர் பெரியாம்பளையிடமும், மற்றவர்களிடமும் சொல்லிவிட்டு சபாபதி பிள்ளையும் உடன் வந்தவர்களும் புறப்பட்டனர்.

ஊர்க்காரர்கள் எதுவும் பேசமால் நின்று கொண்டேயிருந்தனர்.

*

**மு**தலில் ஒத்துக்கொள்ள முடியாது என்று ரெட்டி மறுத்தார். ஆனால் இதனை ஒத்துக்கொள்ளவில்லை என்றால் ரயில்வேயின் இரண்டு பெரிய காண்ட்ராக்டும் ரத்து செய்யப்படும் என்ற நிலையில் வேறு வழியே இல்லாமல் இதனை ஏற்றுக்கொண்டார். சபாபதிபிள்ளையோடு

ஊருக்குப்போய் அளந்து முடிந்து அவர்களிடம் சம்மதம் வாங்கி வந்ததென்பது பெருமூச்சு விட்டதைப்போல் இருந்தது. வேலையை வரும் வெள்ளிக்கிழமை துவக்க வேண்டும். அதற்கு முன்பாக வேலைக்குத் தேவையான சமான்களை எல்லாம் கொண்டுபோய் இறக்க ஏற்பாடு செய்தார். கட்டப்பட்டுவரும் புது ஜெயிலின் பிரம்மாண்டமான வெளிப் புறச்சுற்றுச்சுவர் இவருடைய காண்ட்ராக்ட்தான். உள்ளே தனித்தனியாக நான்கு பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கான காண்ட்ராக்டை இவரது தம்பி எடுத்திருந்தார்.

இவரது குடும்பம் காண்டிராக்ட் தொழிலில் பெயர் பெற்றது. வெள்ளைக்கார அதிகாரிகளிடம் நல்ல நட்புறவு வைத்துக் கொண்டு அரசுப் பணி பலவற்றை இவர்கள்தான் செய்து வருகின்றனர். அதனால் தாதனூரில் கட்டிடம் கட்டும் வேலையை பி.டபிள்யூ.டி.யின் தலைமை இன்ஜினியர் இவர் மீது சுமத்தி யிருந்தார். வேறு வழியே இல்லாமல் சென்னாரெட்டி அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. புது ஜெயிலின் வெளிச்சுவர் கட்டும் பணி அநேகமாக முடிந்துவிட்டது. பூசு வேலைகள்தான் பாக்கியிருந்தன. அதுவும் சின்னப்பகுதிதான். எனவே அந்தப் பணியில் மிச்சம் கிடந்த உடகல், செங்கல், சுண்ணாம்பு, கம்பி போன்றவற்றை வண்டிகளில் ஏற்றி தாதனூரில் கொண்டுபோய் இறக்க முடிவு செய்தார். ஐந்து வண்டிகள், நான்கு நடை போனால் போதும், ஒரே நாளில் முடித்துவிடலாம் எனக் கணக்கிட்டு புதன்கிழமையன்று வண்டிகளில் பொருளைக் கொண்டுபோக ஏற்பாடு செய்தார்.

புதன்கிழமை காலை பத்து மணிக்கு ஐந்து மாட்டுவண்டிகளும் பொருளை ஏற்றிக்கொண்டு பென்னிங்டன் ரோடு வழியாக தாதனூருக்குப் போயின. பென்னிங்டன் ரோட்டில் போலீசாரின் வண்டிச் சக்கரங்கள் பதிந்ததற்குப் பிறகு இப்பொழுதுதான் வேறு வண்டித்தடம் பதிக்கிறது. ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தவர்கள் கல்லும், மணலும் ஏற்றிக்கொண்டு போகிற வண்டிகளைப் பார்த்தபடி பேசாமல் இருந்தனர். கடமுடவெனப் புதிய மெட்டல் சாலையில் வண்டிச்சக்கரங்கள் உருண்டு மந்தைக்கு வந்து நின்றன. ஊர் தோன்றிய காலமிருந்து சம்பந்தமில்லாத மாட்டுவண்டிகள் மந்தைக்கு வந்து நிற்பது இன்றுதான் நடந்தது. மாடுகளின் மூத்திரம் மண்ணில் குத்திப் பொங்கியது. வண்டியில் இருந்த பொருட்கள் எல்லாம் இறக்கப்பட்டன. கருங்கல் கட்டிடம் ஒன்று முதன் முறையாகத் தாதனூரில் எழும்பப் போவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. தாதனூர்க்காரர்கள் நாடு நகரமெல்லாம் போய் கன்னம் போட்டு உருவிய கற்களைக்கொண்டு ஒரு பெரும் அரண்மனையே கட்டலாம். ஆனால் செம்மண் சுவர் மட்டுமே எழும்பி நிற்கும் ஊரில் கருங்கற்கள் வந்து குவிய ஆரம்பித்தது எல்லோரையும் என்னமோ செய்தது. தாங்கள் உருவிப்போட்ட கற்கள் எல்லாம் பழி தீர்க்க நம்மூருக்கே வந்துள்ளதோ என்று சிலர் நினைத்தனர்.

அதன்பின் ஒருவித மௌனம் நிலவியது. அன்று காலை போதகர் டேவிட் சாம்ராஜைப் பார்த்து வருவதாகப் போன ஆங்கன் அன்று மாலைதான் திரும்பினான். ஆனால் பகலில் சம்பவங்கள் எல்லாம் நடந்திருந்தன. ‘கட்டிடம்தான, கட்டிட்டுப் போங்கடா’ என்று ஊர் பெரியாம்பள சொல்லிவிட்டார். ஆனாலும் ‘அது என்ன கட்டிடம்? அதுக்குள்ள வேறு எதுவும் வில்லங்கம் இருக்குமா? என்று கேட்டுவர

மறுநாள் கலையில் மீண்டும் ஆங்கனை அனுப்பி வைத்தனர். ஆனால் முதல் நாள் இரவே டேவிட் சாம்ராஜ் நாகர்கோவிலுக்குப் புறப்பட்டு போய்விட்டார். இனி அவர் வந்து சேர மூன்று நான்கு வாரம் ஆகும் என்ற செய்தியோடு ஆங்கன் திரும்பினான். ‘கட்டிடத்தை கட்டச் சொன்னது சரிதானா என்ற குழப்பம் எல்லோருக்குள்ளும் இருந்தது. ஆனாலும் கட்டிடத்தை வைத்து என்ன செய்தவிடமுடியும்? என்ற எண்ணமும், கட்டிடத்துக்குள் என்னத்த கொண்டுவந்து வைக்கிறான்னு பார்ப்போம் என்ற எதிர்பார்ப்பும் அவர்களிடம் மேலோங்கியிருந்தது. கலந்து பேச டேவிட் சாம்ராஜ் இல்லாததால் நாலு நடையும் வண்டிகள் வந்துபோவது சாத்தியமானது.

தாதனூர் தனது மந்தையிலே கவர்மெண்ட் கட்டிடம் ஒன்றைக் கட்ட அனுமதித்ததும், இத்தனை வண்டிச்சாமான்களைக் கொண்டுபோய் இறக்கச் சம்மதித்ததும் அரசுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. இவர்களின் முரட்டுத்தனம் எப்படி எல்லை கடந்து இருக்கிறதோ அதேபோல அறியாமையும் எல்லை கடந்தே இருக்கிறது என்று துரைமார்கள் தங்களுக்குள் பேசிச் சிரித்தனர். கண்மூடித்தனமான துணிச்சலோடு சென்னாரெட்டி இருப்பதாகவும் அவர்கள் கருதினர்.

தலை கொடுத்துவிட்டோம், கவனமாக அதை வெளியில் எடுக்க வேண்டும் என்று ரெட்டி மிக எச்சரிக்கையாக இருந்தார். வேலைகளை எல்லாம் சரியாகத் திட்டமிட்டு மிகக் குறுகிய காலத்தில் அவற்றை முடித்து வெளியேற முடிவு செய்திருந்தார். வெள்ளிக்கிழமை அதிகாலை கூடலழகர் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு இருபதுக்கு மேற்பட்ட வேலையாட்களையும், வேலைக்கான பொருட்களையும் மூன்று வண்டிகளில் ஏற்றிக்கொண்டு தாதனூருக்குப் புறப்பட்டார். நாகமலை அடிவாரமிருந்து பென்னிங்டன் ரோட்டிலே வண்டி திரும்பியது. வெயில் ஏறி அடித்தது. தூரத்தில் அங்குமிங்குமாக மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் தாதனூர் ரோட்டில் மாட்டுவண்டி போவதை அதிசயம் போலப் பார்த்துக்கொண்டிருந்தனர். சென்னாரெட்டிக்கு மேலெல்லாம் வியர்த்தபடி இருந்தது. போகிறவழியில் ஆலமரத்தடியில் வண்டியை நிறுத்தி மரநிழலைவிட்டு இரண்டடி தள்ளி செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு ஏற்கனவே சொல்லிக் கொடுத்திருந்தபடி, பணிவாக உள்ளே நடந்துபோய் தேங்காய், பழம் வைத்து கருப்பனைக் கும்பிட்டுவிட்டுப் போனார். மரத்தடியில் இருந்த எல்லோரும் அதைப் பார்த்தபடி இருந்தனர்.

மந்தைக்கு வந்து வண்டிகள் நின்றன. வேலையாட்கள் சாமான்களையெல்லாம் இறக்கி வைத்துக் கொண்டிருந்தனர். மந்தைக்கல் பெரியாம்பிளையும் மூன்று நான்கு பேரும் மந்தையில் உட்கார்ந்திருந்தனர். பெண்களும் சிறுவர்களும் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்க மந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். மண்ணின் மீது கயிற்றை இழுத்தப்பிடித்து வேப்பங்குச்சி ஒன்றால் கிழித்து கோட்டைப் போட்ட பின் வாணம் தோண்டும் வேலையைத் துவக்கப்போனார்கள். அப்போது மந்தையிலிருந்து ஒரு பெரியவர் சத்தம் போட்டார்.

‘என்னாங்கடா வேலய ஆரம்பிக்கப்போறீங்க, போயீ வரிய்ய கட்டுங்கடா மொதல்ல’ என்றார்.

சென்னாரெட்டிக்கும் மற்ற வேலையாட்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

‘பெரியவர் என்ன சொல்றீங்க’ என்று கேட்டப்படி சென்னாரெட்டி மந்தையை நோக்கி வந்தார்.

‘போயீ, ஒத்தப்பல்லன் கூட்டத்துக்கு வரிய கொடுத்துட்டு வேலய ஆரம்பிங்கடா’ என்றார்.

சென்னாரெட்டிக்கு இன்னும் புரியவில்லை. கவர்மெண்ட் கட்டிடத்திற்கு வேறு யாருக்கு வரி கட்டணும்? இது என்ன புதுசா இருக்கு என மனத்திற்கள் குழம்பியபடி ‘ஐயா, என்னன்னு கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க’ என்றார்.

‘யப்பா... ஊருல யாரும் புதுசா வானந் தோண்டுனாலும், செவரு வச்சாலும், விழுந்த செவர எடுத்து வச்சாலும் ஒத்தப்பல்லன் கூட்டத்துக்கு வரி கொடுத்துட்டுத்தான் ஆரம்பிக்கணும். இது ஊர் வழக்கம்’ என்றார்.

சென்னாரெட்டிக்கு இது எதிர்பாரத புதுப்பிரச்சனையாக இருந்தது. அரசாங்கக் கட்டிடத்திற்கு வேறு ஆளுக்கு வரி கொடுத்தால் அவ்வளவுதான். துரைமார்கள் தனது தொழிலுக்கே உலை வைத்துவிடுவார்கள். என்ன செய்யலாம் என யோசித்து ‘சரியங்கய்யா நாளைக்கு துரைமார்கள கேட்டுட்டு வந்து நான் தந்துர்றேன், இன்னிக்கு வேல நடக்கட்டும்’ என்றார்.

‘வரி கட்டாம வேலைய ஆரம்பிக்கணும்னு நெனச்சாலே, இந்த எடத்தவிட்டு போக மாட்டீங்களேப்பா’ என்றார்.

ரெட்டிக்கு வேறு என்ன செய்வதென்று தெரியவில்லை. பேசுவதற்கான வார்த்தைகளை இதற்குமேல வளர்த்துக்கொண்டு போவது சரியல்ல என்று மட்டும் பட்டது. நீண்ட நேரம் காத்திருந்து விட்டு பின்னர் வண்டியைக் கட்டச் சொல்லிப் புறப்பட்டார்.

இரண்டு நாள் கழித்து சபாபதி பிள்ளையின் உதவியாளர் முனியப்பன் மூலம் ஒத்தப்பல்லன் கூட்டத்திற்கு காணிக்கை வரி வந்து சேர்ந்தது. வெளியில் சொல்லவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர். மறுநாள் சென்னாரெட்டி வந்து வேலையைத் துவக்கினார்.

*

# 102

**ஒரு மாதத்துக்கு முன் நிச்சயிக்கப்பட்ட, மாயாண்டியின் கடைசிப்** பேரன் ராசுவின் கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. ஊரே சரடு கட்டும் விழாவுக்குத் தயாரானது. ஆணும் பெண்ணும் வாக்கப்பட்டு வர இருக்கிற புதுப்பெண்ணைப்பற்றி பேசிக்கொண்டிருந்தனர். அன்றைய களவு கல்யாண ஏற்பாட்டிற்கான களவு. இரண்டு கொத்து நெல்லு கசக்கப்போனது. ஒரு கொத்து வாழையிலை, வெற்றிலை, கொடிக்கா கம்பு எனத் தேவையான மற்றவைகளை எடுத்துவரப் போனது. ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்த பெருசுகள், ‘கல்யாணக்களவுல காயமில்லாமத் திரும்பணும்மடா’ என்று சொல்லி அனுப்பினர். வழக்கத்தைவிட பெரும் ஊற்சாகத்தோடு கொத்துகள் புறப்பட்டுப்போயின. ராசு எப்பொழுதும் போல முத்தணன் கொத்திலே போனான். நிலையாள் முத்தணன் அன்றைக்கு அவனை நடுமையமகவே நடந்துவரச்சொன்னாள். கசக்கி முடித்து பத்திரமாக கூட்டி வந்து கல்யாணத்துக்கு ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதை உணர்ந்தே நிலையாள் கூட்டிச்சென்றான்.

சரடு கட்டி ஊருக்குக் கூட்டிவரும் புதுப்பொண்ணுக்கு தண்ணீக் கிணறு காட்டும்பொழுது நீர் இறைக்க புதுக்கயிறு கொடுக்க வேண்டிய பொறுப்பு பெரியாம்பிளைகளுக்கு உண்டு. அதனால் கடந்த ஒருவாரமாகக் கயிறு தயாரிக்கும் வேலையில் பெருசுகள் எல்லாம் ஈடுபட்டிருந்தன. போன வாரமே புளிச்ச கீரை பெரும் கொடியாக எங்கு கிடக்கிறது எனத் தேடிப்போனார்கள். புளிச்ச கீரைக்கொடி அவ்வளவு சாதாரணமாகக் கிடைப்பதில்லை. அது பயிர்க்காவலான கொடி. காய்கறிச் செடிகளில் பரவும் புழு பூச்சிகளை இழுத்துக்கொள்ளும் சக்தி அதற்கு உண்டு. எனவே செடிகளைச் சுற்றி வேலியாக அதனைப் போட்டு வைத்திருப்பார்கள். அதற்கு நல்ல மருத்துவ குணம் இருப்பதால் பண்டுவதாரப் பிள்ளைகள் தோட்டந் தொரவுகளில் அதனை நட்டு வைத்திருப்பார்கள். சம்சாரிகளோ மருத்துவர்களோ புளிச்ச நார்க் கொடியை அறுத்துக்கொண்டு போக

அவ்வளவு சீக்கிரம் அனுமதிப்பதில்லை. விளைந்த புளிச்ச நாரைத் தேடி அலைந்த பெருசுகள் ஒருவழியாக விழுஞ்சேரிக் கண்மாயின் பூசணி வட்டத்திலே கிடந்ததைக் கண்டுபிடித்தனர். கண்மாயின் கரைக்கு முன்னால் இருப்பது மடையடி. அதற்கு அடுத்து வேப்பங் கொண்டான். அதற்கடுத்து பூசணி வட்டம். அதனைத் தாண்டிய நிலப்பகுதி கருவேலடியாகவும் அதற்கு மேலே நீர்ப்பிடியாகவும் இருக்கிறது. இதில் கருவேலடியிலும் நீர்ப்பிடியிலும் விளைந்து கிடந்தால் அதனை எடுத்துச்செல்வது கஷ்டமான காரியமல்ல. ஆனால் பூசணி வட்டம் நன்றாக விவசாயம் நடக்கிற இடம். அங்கேதான் புளிச்ச நார் சாரை சாரையாக விளைந்து வேலிபோல் கிடந்தது. தாதனூர் பெரியாம்பிளைகள் நான்கைந்து பேர் மொத்தமாக வந்து கேட்டபொழுது அந்தச் சம்சாரியால் மறுத்துச்சொல்ல முடியவில்லை. எதைக்கொண்டு அறுத்தாலும் அறுபடாத புளிச்சநார்த்தான் கமலக்கயிறு, வால் கயிறு, ஏர் பூட்டும் கயிறு, மாட்டுக்குத் தும்பு, கட்டில் கயிறு என அனைத்துக்கும் பயன்படுவது. உயிராக இருக்கும் பொழுதும், பட்டுப்போன பிறகும் புளிச்சநார் போல் சம்சாரிக்குப் பயன்படும் கொடி வேறெதுவும் இல்லை. எனவே அதை வெட்டி எடுத்துப்போக எந்த சம்சாரியும் அனுமதிக்கமாட்டான். ஆனால் இப்போது அவனுக்கு வேறுவழி தெரியவில்லை.

‘பசப்பு விழுந்து வெளுத்துப் போன கொடியா பாத்து அறுத்துப் போங்கப்பா’ என்று மனசே இல்லாமல் சென்னான். வந்த பெரியாம்பிளைகள் அவன் வருத்தத்தில் இருந்த நியாயத்தைப் புரிந்தபடியே வெளுத்துப்போன கொடியாகப் பார்த்து வெட்டி தரதரவென இழுத்துக்கொண்டே ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர்.

அதன்பின் சாவடியில் உட்கார்ந்து அதனுடைய கொப்பிலே முளைத்துக்கிடக்கும் காய்களை எல்லாம் வெட்டி உதிர்க்கிற வேலையைச் செய்தார்கள். சொணைத் தன்மையுடைய அதனுடைய காய்கள் மேலுகாலெல்லாம் குத்திக் கிழித்தப்படி இருந்தன. ஆனாலும் பெரியாம்பிளைகள் விடாமல் அந்த வேலையைச் செய்து முடித்தனர். காய்களை எல்லாம் நீக்கிய நாரை மலையடிச் சுனை நீரிலே கொண்டுபோய் போட்டு அமுக்கி கற்களைத் தூக்கி வைத்தனர். ஒரு வாரமாக ஊறிய நார் சடை சடையாகப் பிரிந்து கிடந்தது. அதை எடுத்துப் பாறையிலே காயப்போட்டனர். இரண்டு நாட்களாக அது காய்ந்தபடி கிடந்தது. கொத்துக்களை எல்லாம் அனுப்பியபின் பெரியாம்பிளைகள் தாவாரத்தில் இருந்து எழுந்துபோய் பறையில் கிடக்கும் நார்கள் காய்ந்துவிட்டதா எனப் பார்க்கச் சென்றனர். காய்ந்துவிட்டால் இரவிலே சிக்கெடுத்துப் பிரித்துவிடும் வேலையைச் செய்யலாம் என நினைத்துப்போனார்கள். போதுமான அளவு காய்ந்துதான் இருந்தது. ஆனாலும் ஏதோ நினைத்தபடி ‘நாளைக்கு ஒரு பகல் இருக்குல்லப்பா அதுல செஞ்சிக்குவோம்’ என்று சொல்லித் திரும்பிவிட்டனர்.

**ப**கலிலே வெயில் ஏறி அடித்தது. களவுக்குப் போன கொத்துகள் எல்லாம் ஆலமரத்தடிக்குத் திரும்பின. நகர்க்காவலுக்கு போன ரெண்டு கொத்தும் ஊர் வந்து சேர்ந்தது. விருந்துச் சாப்பாட்டுக்கு தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் கொத்துகள் கொண்டுவந்து சேர்த்தன. ஊர் அடுத்த கட்ட வேலைக்குத் தயாரானது. குமரிப்பெண்களின் கூட்டமொன்று நாகமலைக்கு வெறகு வெட்டிவரக் கிளம்பியது. ‘விருவிட்ட கட்டையா,

கிளுவ மரக் கம்பா பாத்து வெட்டி வாங்கடி, அப்பத்தான் பிடிச்சு எரியும்' என்று கிழவிகள் சொல்லி அனுப்பினர். காலைக் கஞ்சி குடித்துவிட்டு குமரிகள் கிளம்பிப் போனபின் மற்றப் பெண்கள் நெல்லுக் குத்தவும், பயறு திரிக்கவும் துவங்கினர். மந்தையில் இருந்த வேப்பமரத்தின் கீழும், கொம்பூதி புளியமரங்களின் கீழும் உரல்களை எல்லாம் கொண்டுவந்து போட்டு பொழுது முழுவதும் குத்தினர். மரக்கொப்புகள் கேட்காத கதைகளையெல்லாம் கேட்டன. கல்யாணத்துக்கு நெல்லு குத்தும் உரலுக்குத்தான் அப்படியொரு வாய் இருக்கிறது. அது ஒவ்வொரு குத்துக்கும் ஒரு கதையைச் சொல்லுகிறது. குத்துக்காரிகளின் கை மாறுகிறபொழுது தெல்லாம் கதை மாறுகிறது. நின்று குத்துகிறவர்களைவிட உட்கார்ந்து பொடச்சுப்போடுகிற கிழவிகளிடமிருந்துதான் கதை நொங்கும் நுரையுமாக வெளியேறுகிறது. உரல், இறங்கும் உலக்கைக்கு ஒரு கதையும், உயரும் உலக்கைக்கு ஒரு கதையுமாக அன்று முழுவதும் கதை சொல்லி, கதை கேட்டப்படியே இருந்தது. தெறமான பெண்கள் கையை மாத்தி உலக்கையால் ஊன்றிக் குத்தி எடுக்கும்போழுது உரல்கள் அதிர்ந்து கதையை உமிழ்கின்றன. 'கோட்டையூர்காரி குதுரவாலப் பிடிச்சுக்கிட்டு வந்து சேந்துரப்போறா... வெரசா குத்துங்கடி' என்ற கருப்பாயிக் கிழவி வேலையை வேகப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆண்களில் சிலர் கொண்டு வந்த கொடிக்கா கம்பை மாப்பிள்ளைக்காரனின் வீட்டுக்கு முன்னால் ஊன்றி தென்னை மட்டைகளை அதன் மேலே போட்டு நிழல் மேவிக் கொண்டிருந்தனர். இளவட்டங்களின் கொத்து செக்கானூரணி சாயுபு குதிரைக்கு சொல்லிவைக்கப் புறப்பட்டுப் போனது. புது மாப்பிளை ராசுவை மீசையைச் சிரைத்து தயார் செய்ய ஒரு கூட்டம் கிளம்பியது. சிறுவர்களுக்கு ஏகக்கொண்டாட்டமாக இருந்தது. குத்து அரிசியை அள்ளித் தின்பதும், தென்னங்கீற்றை கிழித்துத் தொங்குவதுமாக சதா ஓடி உருண்டு கொண்டிருந்தனர். கல்யாணப் பரபரப்பில் ஊரின் வேலைகள் நடந்து கொண்டிருந்த பொழுது சென்னாரெட்டி சத்தங்காட்டாமல் ஆளுயரத்திற்கு சுவரைக்கட்டி எழுப்பிக் கொண்டிருந்தார்.

பெரியாம்பிளைகள் கருப்புகோயில் தாவாரத்திலே உட்கார்ந்து பகலெல்லாம் புளுச்ச நாரை சிக்கெடுத்தப்படி இருந்தனர். 'தாயோலி... இந்த கெழவிக இதச் செய்யலாம்லப்பா? நம்மள செய்யச் சொல்லி காலம் பூராம் கொல்லுறாளுக' என்று மந்தைக்கல் பெரியாம்பிள புலம்பியடி இருந்தார். புளுச்ச நாரைச் சிக்கெடுத்து தனித்தனியாகப் பிரித்து முடிப்பதற்குள் பெடனி ரெண்டும் வலி எடுத்துப் போகும் அன்னிக்கு சாயந்திரம்தான் வேலை முடிந்தது. புதுக்கயிறு கொண்டு அரைஞாண் கயிறை மாற்றுகிறவர்கள் எல்லாம் மாற்றிக்கொண்டார்கள். களவுக்குப் போகிறவர்கள் பொடி நாராகப் பார்த்துக் கட்டிக்கொண்டார்கள். புதுப் பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய தண்ணிக்கயிறு தயாரானவுடன் பெரியாம்பிளைகள் அதை எடுத்துக் கொண்டு ஊருக்குள் வந்தனர். பகலெல்லாம் குத்தி முடித்த களைப்பில் பெண்கள் அசந்துபோய் இருந்தனர். புளியமரத்து உரலைச் சுற்றி குத்திப் புடைத்து முடிந்த கூட்டம் அப்படியோ உட்கார்ந்திருந்தது. நாகமலைக்கு வெறகு கொண்டுவரப்போன கொமரிக்கள இன்னும் காணோமே எனப் பார்த்தபடி இருந்தனர். பெரியாம்பிளைகள் கயிறைத் தயார் செய்துவிட்ட கித்தாப்பில் நடந்து வந்தனர்.

‘ஒத்த புளுச்சநார பொழுது சாயிற வெறைக்கும் மயிரப் பொளக்கற மாதிரி பொளந்து எடுத்துகிட்டு வர்றாங்கெ பாரு...தெறங்க கெட்ட வெங்க’ என்றாள் கழுவாயி.

வார்த்தைகளை காதில் வாங்காததைப்போல எட்டி நடந்தார் ஊர் பெரியாம்பிள ஒச்சு. பின்னால் வந்துகொண்டிருந்த விருமாண்டிப் பெருசு சும்மா வந்து தொலைக்காமல் ‘என்னங்கடீ...எல்லாத்தையும் குத்தி முடிச்சுட்டீங்களா... இல்ல இன்னும் மிச்ச வச்சிருக்கீங்களா’ என்று விசாரிப்பதைப்போல வாயைக் கொடுத்தார்.

‘இன்னும் பத்து மரக்கா மிச்சமிருக்கு மச்சான். குத்திக் கொடுத்துட்டுப் போறது... நீங்கதான் பூணு போட்ட உலக்க வச்சிரக்கே ஆளாச்சே...’ என்றாள் வேலம்மாக் கிழவி. சிரிப்பு வெடித்து வந்தது. விருமாண்டிப் பெருசு மந்தைக்குப் போகும் வரை திரும்பியே பார்க்கவில்லை. ‘வாயை கொடுத்து சூத்த புண்ணாக்காட்டி உனக்கு தூக்கம் வராதுடா...’ என்று முனங்கியவாயறு ஒச்சு முன்னால் போய்க்கொண்டிருந்தார்.

**பொ**ழுது நடுச்சாமத்தைத் தாண்டியது. ரெட்டிய கெடுத்த வெள்ளி ஏறி மின்னியது. கருநீல வானத்தில் திரள் திரளாக மேகங்கள் தங்கி நின்றன. ‘போய்ச் சேர சரியா இருக்குமப்பா....’ என பெரியாம்பிளை சொன்னதும் ஊர் புறப்பட்டது. ஆணும் பெண்ணும் குட்டியும் குருமானுமாக எல்லோரும் கிளம்பினர். செக்கானூரணி சாயபு கொண்டு வந்திருந்த குதிரையிலேற்றி ராசுவை உட்காரவைத்தனர். குதிரையில் ஏறியவுடன் புதுமாப்பிளைக்கும் ஊருக்கும் ஒரு சிரிப்பு வரும். பெண்களின் குலவைச் சத்தத்திற்குள் அந்த சிரிப்பு அமுங்கி மறையும். கருப்பும் வெள்ளையும் கலந்தோடிக் கிடக்கும் குதிரையைப் பிடித்தப்படி சாயுபு முன்னாள் நடந்தார். குதிரை அவனைச் சுமந்து கொண்டு போனது.

அறுநூறு ஆண்டுகளுக்கு முன் வைகையின் வடகரையில் இப்படித்தான் மாப்பிளையைக் குதிரையில் ஏற்றிக் கூட்டி வந்தார்கள். சடங்குகள் அவ்வளவு சுலபமாக மறைந்துவிடுவதில்லை காலத்தையும் காரணகாரியத்தையும் கடந்து தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன.

நகர் காவலுக்குப் போன பகுதிப் பேரும், தூரந்தொலைவுக்குக் கன்னம் போடப் போனவர்களையும் தவிர மற்ற எல்லோரும் கோட்டையூரை நோக்கி நடந்தனர். நடக்க மாட்டாத கிழவன் கிழவிகள் ஊரைப் பார்த்துக்கொண்டனர். வீட்டுக்கு வீடு தூங்கிக் கிடக்கும் சின்னதுகளை பிள்ளைத்தாச்சிகாரிகளும், வயித்துப் பிள்ளைக்காரிகளும் பார்த்துக் கொண்டனர்.

நிலா பூத்துக்கிடக்கும் இரவின் வெளியில் சிரிப்பும் சிங்காரமுமாக ஊர் நடந்து போனது. ஊர இப்படி நள்ளிரவில் கிளம்பிப்போவதாக இருந்தால் அது ஜல்லிக்கட்டுக்காக இருக்கும் அல்லது சரடு கட்டுவதற்காக இருக்கும். இரண்டுக்கும் விடியும் முன் போய் சேரவேண்டும். ஜல்லிக்கட்டுக்கான பயணத்தில் மொத்தக் கூட்டத்திற்கும் சாரதி போல கதைகளைக்கொண்டு கட்டி உசுப்பேற்றி வழி நடத்திப்போவது கிழவன்களின் வேலை. சரடு கட்டுவதற்கான பயணத்தில் ஊரையே வழி நடத்திக்கொண்டு போவது கிழவிகளின் வேலை புது மனுசியைக் கூட்டிவந்து தனது குலத்துக்கு வலு சேர்க்க கிழவிகள் காலகாலமாய் முன்னுக்குப்

போய்க்கொண்டேயிருக்கின்றனர். அன்றும் அப்படித்தான் பெருங்கொண்ட கிழவிகள் வழிநடத்திப் போயினர். கழுவாயி, வேலம்மாள், ஒச்சாயி, மாயக்காள், வனப்பேச்சி என கிழவிகளின் பெரும்படையே போனது. பெரியாம்பிளைகள் சத்தங்காட்டாமல் பின்னுக்கு நடந்து வந்தனர். இளவட்ட ஆணும் பெண்ணும் கலகலப்போடு இருளை அளாவி நடந்தனர்.

விடிவதற்கு கொஞ்சம் முன் கோட்டையூரின் எல்லையைத் தொட்டனர். ஊர்ப் பெரியவர்களும் பெண் வீட்டுக்காரர்களும் எதுத்து வந்து அழைத்துப்போயினர். இருள் கசங்கி உதிர்ந்தது. 'மாப்பிள்ள வீட்டுக்காரங்க வந்துட்டாங்கப்போய்.....' எனத் தெருவுக்குத் தெரு சத்தம் போட்டு மக்கள் எழுந்து வந்தனர். பறவைகள் மரத்துக்கு மரம் சத்தம் கொடுத்து ஊரை உசுப்பின. கிழக்கே வானம் வெளுத்து ஏறியது. குதிரை நடுத்தெருவின் வழியே நடந்து மந்தையில் வந்து நின்றது. புதுமாப்பிளை குதிரையை விட்டு இறங்கினான்.

ஆணும் பெண்ணும் தடபுடலென ஆடி ஓடி வேலைகளைச் செய்தனர். மந்தைக்கு கிழக்குப்பக்கமிருக்கும் வெளியில் மூன்று கல் அடுப்புகளில் சோறு ஆகிக்கொண்டிருந்தது. ஆடுகளை உரித்துக் தள்ளினர். கெடாக்கறி வெந்துகொண்டிருந்தது. ஒரு கூட்டம் ஆட்டுத்தலையையும் காலையும் நெருப்பிலே வாட்டிக் கொண்டிருந்தது. 'சரி... சரி... ஆகட்டும்... ஆகட்டும்' என்பது போல தாதனூர் வந்து மந்தையிலே உட்கார்ந்தது.

புதுப்பெண் குளித்து முடித்து தயாராக்கிகொண்டிருந்தாள். பெண் வீட்டுக்கு முன் தட்டி கட்டிக் கிடுகு போட்டிருந்தனர். வாழை மரமும் நட்டு வைத்திருந்தனர். வாழை மரம் நட்டு வைத்திருந்ததால் அது பெரிய கல்யாணம் என்று அர்த்தம். அதற்கு ஏற்றாற்போல் பெரும் வட்டைகளில் சாப்பாடு தயாராகிக் கொண்டிருந்தது.

வந்த கூட்டம் மந்தையில் வந்து அமர்ந்தது. தாதனூர் மந்தையைவிட கேட்டையூர் மந்தை அளவில் பெரியது. மூன்று அரசமரங்கள் பெரும் தோப்பு போல அடைத்துக் கிடந்தன. கீழே வரிசையாக சுத்துக்குசுத்து பலகைக் கல் போட்டிருந்தனர். எவ்வளவு பெரிய கூட்டமும் அடைத்து உட்காருமளவு பெரிய மந்தையது. மந்தை முழுக்க ஆட்கள் நிரம்பி வழிந்தனர். கோட்டையூர் பெரியாம்பிளைகள் தாதனூர் பெரியாம்பிளைகளை நலம் விசாரித்தபடி இருந்தனர். பொழுது ஏறி வந்தது. அடுத்த வேலை சாப்பாடுதான். எனவே சாப்பாடு தயாராகிற வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. கல்யாண வீட்டில் அதிக நேரம் காத்திருப்பது தேவையற்ற வம்புவழக்கைத்தான் உருவாக்கும். ஆனால் வேறு வழியில்லை. மந்தையில் நல விசாரிப்புகள் முடிந்து பேச்சுகள் திசைக்கு ஒன்றாய் இழுத்துப் போனது. 'குருவி மிஞ்சி வீட்டு சம்பந்தத்த சாதாரணமா நெனக்கா தீங்கப்பா...' என்றார் கோட்டையூரைச் சேர்ந்த சுக்குப் பெரியாம்பிள.

'யாரப்பா சாதாரணமாக நெனச்சா... எல்லாம் விசேஷமான சம்பந்தம்தான்' என்று எச்சரிக்கையோடு பேசினார் ஒச்சு பெரியாம்பிள'

'குருவி மிஞ்சி வகையறான்னா பேரு பெத்த வம்சமப்பா' என்றார் சுக்குவுக்க பக்கத்தில் உட்கார்ந்திருந்த இன்னொரு பெரியாம்பிள.

'சரியப்பா... இப்ப என்ன அதுக்கு?' என்றார் விருமாண்டிப் பெருசு.

ஏகத்துக்கும் பேச்சுச் சத்தமும், பறவைகளின் கீச்சொலியும் மந்தை முழுவதும் நிரம்பி வழிந்தது. வெளிச்சம் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை இருளை விரட்டி முடித்தது.

‘என்னப்பா... அப்படி சாதாரணமாக செல்லிப்புட்ட’ என்றார் சுக்குப் பெரியாம்பிளை. பெரியாம்பிளைகளின் பேச்சுக்கு நடுவில் உள்ளே புகுந்த முத்தணன் ‘அதென்னப்பா... குருவி மிஞ்சி வகையறா’ என்று கேட்டான்.

‘அப்படிக் கேளுடா பேராண்டி, கெட்டியாக்காரன்டா நீ’ என்று சொன்ன சுக்குப் பெரியாம்பிள குருவி மிஞ்சியின் கதையை சொல்லத் துவங்கினார்.

‘யப்பா.... நீங்க சரடு கட்டி கூட்டிப்போக வந்திருக்குறீகளே, காத்தாயீ... அவளோட முப்பாட்டன்தான் குருவி மிஞ்சி. அவனோட நெசப் பேரு என்னன்னு யாருக்கும் தெரியாது. குருவி மிஞ்சின்னுதான் ஊருக்குத் தெரியும். அந்தக் காலத்துல மகா கெட்டியக்காரங்கெல்லாம் இந்த ஊருல இருந்திருக்காங்கெ. எந்தத் தண்டி ஆளையும் கல்லக் கொண்டு எறிஞ்சே சாச்சிருக்காங்கே. அதுல இந்த காத்தாயீ பாட்டன் இருக்கானே அவெ ரொம்ப பெரிய ஆளு. பறக்குற குருவிய ஒரே கல்லுல எறிஞ்சுருவான். அவ்வளவு வேகமாக கல்லெறியிறவன். குருவியைவிட வேகமாக கல்லெறியிறனாலதான் அவனுக்குக் குருவி மிஞ்சின்னு பேர் வந்துச்சு. இன்னக்கி வரைக்கம் அவெ அளவு கல்லெறிய ஊருல ஒருத்தன் கெடையாது. அப்பேர்ப்பட்ட வம்சத்துல பொண்ணெடுக்க வந்திருக்கீக’ என்று பெருமையோடு கதையைச் சொல்லி முடித்தார்.

தாதனூர் பெரியாம்பிளைகள் கதையைக்கேட்டதும் எந்தப் பதிலும் சொல்லாமல் பேசமால்தான் இருந்தனர். ஆனால் முத்தணனால்தான் தாங்க முடிவில்லை. அவன் சுக்குப் பெரியாம் பிளையைப் பார்த்து ‘யப்பா, நீ பொண்ணோட பாட்டனாரு கதைய்ய செல்லிபுட்ட. நான் மாப்பிளைக்காரனோடு தம்பிக்காரன் கதைய்ய சொல்றே, கேளு’ என்று சொல்லிவிட்டு ‘ஏலேய்... ஏய் சின்னக்கருப்பா எனக் கத்திக் கூப்பிட்டான். இடது மூலையில் ஒரு கூட்டத்தோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அவன் ‘இந்தா வர்றனப்... போய்’ எனச் சொல்லியபடி எழுந்து அவர்களை நோக்கி வந்தான். தாதனூர் பெரியாம்பிளைகள் ‘முத்தணெ கலகத்த இழுக்கப் போறான்டா...’ என்று மனுதுக்குள் நினைத்தப்படி உட்கார்ந்திருந்தனர். சின்னக்கருப்பன் பக்கத்தில் வந்து நின்றான். ‘இவெதான் மாப்பிள்ளகாரனோட தம்பி’ என்றான்.

‘அப்படிய்யா... இப்ப என்ன அதுக்கு?’ என்றார் சுக்குப் பெரியாம்பிள.

‘இவெ உருளிய எறிஞ்சு கொன்னுருக்கானப்பா...’ என்றான்.

சுக்குப் பெரியாம்பிளைக்கு சரியா காதில் விழவில்லை ‘எதெ எறிஞ்சிருக்கான்?’ என்று திரும்ப கேட்டார்.

‘உருளியப்பா... உருளி... அதுதான் ராசாளின்றாங்கெல்ல, அத எறிஞ்சு கொன்றுக்கான்’ என்றான்.

பெரியாம்பிள அப்படியே இமை மூடாமல் உத்துப்பார்த்தப்படி இருந்தார்.

‘எங்க ஊரு அமணமலையோட உச்சியில உருளிக இருக்கப்பா... க்சீக்சீச்சு கீச்சுன்னு சத்தம் போட்டபடி மேல இருந்து படுவேகத்துல வரும். அதோட சத்தத்தக் கேட்டுட்டாப் போதும் மேஞ்சுகிட்டு இருக்கிற பறவைக

எல்லாம் அப்படியே மல்லாக்கப்படுத்துகிரும். மயிலோட தலையெல்லாம் ஒரே வெட்டா துண்டா... வெட்டிட்டுப் போயிடும். அப்படி வந்து ஏர்றப்ப இவெ எறிஞ்சு சாச்சுட்டானப்பா... பெரிய்ய... உருளி மிஞ்சி' என்றான் முத்தணன்.

கோட்டையூர் பெரியாம்பிளைகள் அப்படியே பேயறைந்ததைப் போல் உட்கார்ந்திருந்தனர். அடுத்து எதையும் உண்டாக்கக்கூடிய பெரும் மௌனம் அந்த இடத்தில் நிலவியது. பெரியாம்பிள ஒச்ச சட்டென 'யப்பா, கஞ்சி தயாராயிருச்சு. எந்திருங்கப்பா.. எந்திரிங்கப்பா' எனச் சொல்லி சபையைக் கலைத்தார். மந்தையில் இருந்த பெருங்கூட்டம் கஞ்சிக்காக எழுந்தது. கஞ்சி வந்தால் கல்யாணம் வந்த மாதிரி எல்லாம் பரபரப்பாகி அடுத்த கட்ட வேலைக்குப் போயினர். சுக்குப் பெரியாம்பள மட்டும் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

**சா**ப்பிட்டில்தான் மாப்பிளைக்காரனை நிறுத்திப்பார்க்கிற எடைத்தட்டு இருக்கிறது. பெண்வீட்டுக்கு முன்னால் பந்திபோட்டு பரிமாறப்பட்டது. மாப்பிளைக்காரனும் அவனோட சேர்ந்த பத்துப் பனிரெண்டு இளவட்டங்களும் முதல் பந்தியிலே உட்கார்ந்தனர். பொண்ணின் பெரியப்பன் நல்லுச்சாமிதான் பரிமாறினர். முதலில் மாப்பிளைக்காரனுக்கு இலை நிறைய்ய சோத்தைக் கொட்டி ரெண்டு அகப்பை கறியை அள்ளி வைத்தார். பசி உச்சத்தில் இருந்ததால் ராசு சோற்றை அள்ளி எறியத் துவங்கினான். மற்றவர்களும் படுவேகத்தில் சாப்பிடத் துவங்கினர். ராசுவின் இலைதான் முதலில் காலியானது. 'மாப்பிள்ள சூட்டாதானப்பா சாப்பிடுறான்' என நினைத்துக்குக் கொண்டே நல்லுச்சாமி மறுசோறைக் கொட்டி ரெண்டு அகப்பை கறியை வைத்தார். அதேவேகத்தோடு ராசு மறு சோற்றுக்குள் நுழைந்தான். வாய்க்கும் இலைக்கும் வகை வைக்க முடியாத வேகத்தில் கை போய் வந்தது. மறுசோறு முடிந்து மூன்றாவது முறையாக சோறு வாங்கும் பொழுதுதான் மற்றவர்கள் மறுசோறு வாங்கினர். மற்றவர்கள் அதை முடிப்பதற்கு முன் ராசு மூன்றாவது வாங்கியதைத் தின்று முடித்தான். ராசுவின் வேகத்திற்கு அவன் பசி மட்டும் காரணமல்ல, ஊரின் பசியும் காரணம். மாப்பிள்ளைக் காரனுடன் சாப்பிட உட்காருகிறவர்கள் அவனைவிட ஒரு கை பின்னுக்குத்தான் சாப்பிட வேண்டும் என்பது தாதனூர் பழக்கம். அதனால்தான் அவர்கள் அவனைப் போகவிட்டுப் பின்னால் வந்தார்கள். சில நேரம் மாப்பிள்ளைக்காரன் பொறுமையைச் சோதித்தால் 'போடா மயிரேன்னு' சொல்லி அள்ளி எறிந்து விடுவார்கள். அப்புறம் மாப்பிள்ளைக்காரனுடைய மானம்தான் போகும். எனவே அவன் படுவேகமாகச் சாப்பிடுவான். இன்னும் அப்படித்தான் ராசுவுக்காக மற்ற எல்லோரும் பல்லைக் கடித்துக் கொண்டு சாப்பிட்டார்கள். ஊரே முதல் பந்தியை பார்த்துக் கொண்டிருந்தது. நல்லுச்சாமியின் முகத்தில் சந்தோஷம் இருந்தது. 'இவெ நம்ம பிள்ளைய வச்சு காப்பாத்திருவாண்டா' என்று கோட்டையூர் பெரியாம்பிளைகள் பேசிக்கொண்டனர். முதல் பந்தி எழுந்ததும் அடுத்தடுத்து வந்த உட்கார ஆரம்பித்தனர். எல்லோரும் சாப்பிட்டு முடிக்க சூரியன் மேலேறி வந்து சேர்ந்தான்.

நன்றாகச் சாப்பிட்டு முடித்த பின் சரடு கட்டும் வேலைக்கான ஆயத்தங்கள் துவங்கின. விருமாண்டி கோயில் திண்ணையில் வந்து சரடுகட்ட ஏற்பாடு நடந்தது. திண்ணைக்கு முன்பிருந்த நிழலில் ஆணும்

பெண்ணும் வந்து உட்கார்ந்தனர். கோட்டையூர் கிழவிகள் ஒவ்வொருத்தியாய் வந்து கால்நீட்டி உட்கார்ந்தார்கள். அருக்காயிக் கிழவிதான் முன்னுக்கு வந்து உட்கார்ந்தார். உட்கார்ந்த வேகத்தில் ‘இப்படி சம்சாரித்தனம் இல்லாத ஊருக்கு சரடு கட்டி அனுப்புறானே... இது ஒப்புமா...? அடுக்குமா....?’ என்று இழுத்தாள்.

‘அடி ஆத்தீ... ஏங்க்கா இப்படிச் சொல்ற, சம்சாரித்தனம் இல்லாட்டி என்ன? உழுகாம வெதைதக்காம அறுக்காம நெல்லு வந்து சேர்றவித்தக்கார பூமிக்குத்தான போரா ஓம் பேத்தியா...அதுக்கு ஏன் சலிச்சுக்குற?’ என்றாள் பக்கத்தில் உட்கார்ந்தவள்.

இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மாயக்கா

‘மானுத்துக்கு வாக்கப்பட்டா மயிலக்கீர

குன்னத்தூருக்கு வாக்கப்பட்டா கும்முட்டிகீர

கோட்டையூருக்கு வாக்கப்பட்டா குப்பக்கீர

புலிப்பட்டிக்கு வாக்கப்பட்டா புளுச்சகீர

கீரையில் கஞ்சி குடிச்சு கீழாம போகாம

அரிசி கஞ்சி குடிச்சு அரசாள வேணும்னா

தாதனூருக்கு வாக்கப்பட்டு தாலிகட்டிப் போயேன்டி

அமணமலைக்கு வாக்கப்பட ஆசப்பட்டு போயேண்டீ’ன்னு

சும்மாவாக சொன்னாங்கெ. எங்க ஊரு உலமுட்டி பாத்த நெல்லுக் கஞ்சிய, கள்ள நாட்டுல எந்த ஊரு குளுமையாவது பாத்திருக்குமா, வெறுங்கட்ட சிறுக்கிக பேசு வந்துட்டாளுக’ என்றாள் படுகோபமாக.

அந்த நேரத்தில் மாப்பிளையை அழைத்து வந்து விருமாண்டி கோயில் திண்ணையில் உட்கார வைத்தனர். சிறுவர்கள் எல்லாம் மாப்பிள்ளையைச் சுற்றி உட்காரவும் நிக்கவுமாக வேடிக்கை பார்த்தப்படியே இருந்தனர். அருக்காயிக் கிழவி மாப்பிள்ளைக் காரனை பார்த்தவுடன் ‘மீசைய செரச்சு கூட்டு வந்திருக்கீகளா, இல்லாட்டி மீச மொளைக்காதவனை கூட்டி வந்துட்டீங்களாடீ’ என்றாள்.

‘கட்டி கொடுத்து அனுப்பி விடுறயில ஒம் பேத்தியா, அவ கிட்ட ரெண்ட நா கழிச்சு வந்து கேளு மொளச்சதையும் மொளக்காததையும் வெளக்கமா செல்லுவா’ என்றாள் மாயக்கா.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த இரண்டு கிழவிகள் ‘எம்புட்டு அம்முசமா கொண்டபோட்டுருக்கான். அவனப் போயி இப்படி சொல்ற’ என்றனர்.

பேச்சுச் சத்தம் நிறைந்து இருந்த அந்த அவையில் பெண்ணைக் கூட்டிவந்து திண்ணையிலே உட்காரவைத்தனர். அவளின் ஓரமாக பொந்துவழிப்பெண்-துணைப்பெண்-வந்து நின்றாள். பெண்ணை உற்றுப்பார்த்து பேசும் பேச்சு கூடியது. ‘லட்சணமா காது வளத்துருக்காடீ’ என்று வர்ணித்துச் சொன்னாள் வேலம்மாக் கிழவி. ‘கொப்பும் லோலாக்கும் எட்டிப்பாக்க தண்டட்டி பெடனி தட்டி நிக்குதுடீ’ என்றாள் மயாக்கா. காட்டுப்பூக்களை கொண்டு சுற்றிச் சுற்றிக் கட்டுப்பட்ட இரண்டு மாலைகளைஎடுத்து வந்து ஆளுக்கு ஒன்றாகப் போடப் போயினர்.

‘செத்தப் பொறுங்கப்பா... இன்னும் அங்கம்மா கிழவி வரல, அவ வந்ததும் ஆரம்பிப்போம்’ என்றார் பெரியாம்பிள ஒச்சு. ‘நீ தான் ஊர் பெரியாம்பிள இருக்கையில அப்புறம் யாரு வறணும்ற?’ என்றனர் கோட்டையூர்க்காரர்கள். ‘யப்பா... மாப்பிள்ளைகாரனோட அத்தக்காரி, மாயாண்டி பெரியாம்பிளையோட மக அவ வராம சரடு கட்டுனா அறுத்துப்போடுவா அறுத்து’ என்றார் ஒச்சு. ஒச்சுவின் வார்த்தையில் இருந்த வேகமும் பதற்றமும் அனைவருக்கும் விசயத்தை உணர்த்தியது. அதன்பின் யாரும் எதுவும் பேசவில்லை.

சிறிது நேரத்தில் பேத்தி பின்னியக்காளைக் கூட்டிக்கொண்டு அங்கம்மாக் கிழவி வந்த சேர்ந்தாள். அதன்பின் வேலைகள் தடபுடலாயின. பெரியாம்பிளை எடுத்துக்கொடுத்த சரடை அவன் பெண் கழுத்திலே கட்ட அக்காக்காரிகள் முடிச்சுப்போட்டனர். விசில் சத்தமும், குலவைச்சத்தமும் காதைக் கிழித்தது. கோட்டையூர் குருவி மிஞ்சி வகையாறாவைச் சேர்ந்த தவசியின் மகள் காத்தாயியின் கழுத்தில் தாதனூர் கழுவன் கூட்டத்தைச் சேர்ந்த மாயாண்டிப் பெரியாம்பிளையின் பேரன் ராசு சரடு கட்டி கல்யாணம் செய்துகொண்டான்.

**க**ல்யாணம் முடிந்து கஞ்சிப்பொழுது கடந்ததும் போட்டிகள் ஆரம்பமாயின. அப்பொதுதான் ஊர் களைகட்டத் துவங்கியது. இளவட்ட ஆணும் பெண்ணும் மந்தை¬யிலே குவிந்து கிடந்தனர். தாதனூர்க்காரன் எத்தனை பேர் போட்டிக்குப் போனாலும் ஒருவன் கூடத் தோற்க மாட்டான் என்று கோட்டையூர்காரனுக்குத் தெரியும். அதேபோல் கோட்டையூர்க்காரன்களையும் ஏதோ ‘தொசட்டை’ என்று நினைத்துவிடக்கூடாதென்பது தாதனூர்க்காரர் களுக்கும் தெரியும். மந்தைக்கல்லில் இரண்டு ஊர் பெரியாம்பிளை களும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். வயிறு பொறுக்கச் சாப்பிட்டு முடித்த திருப்தியில் வேலைகள் துவங்கின. பெருசுகள் ‘ஆய்... ஓய்ய்’ என்று சத்தம் போட்டு அலப்பிக்கொண்டிந்தனர். முன்னத்திப் பட்டியக்கல்லில் உட்கார்ந்திருந்த பெருசுகளில் சுக்குப் பெரியாம்பிளை இல்லை. கோட்டையூர் பெரியாம்பிளைகளில் முக்கியமாணவர் அவர்தான். முன்னத்திப் பட்டியக்கல்லில் இல்லையென்பதை கவனித்தவர்கள் வேறு பட்டியக்கல்லில் உட்கார்ந்திருப்பார் என நினைத்துக் கொண்டனர். போட்டி ஆரம்பமானது. எல்லோரும் மந்தையைச் சுற்றி வட்டமாக நின்றிருந்தனர். அரசு மர நிழல் பாதியும், வெயில் பாதியுமாக வட்டத்தைப் பிரித்திருந்தது. எளவட்டக்கல் வெயிலடிக்கிற இடத்தில்தான் கிடந்தது. முதலில் மாப்பிள்ளைக்காரன்தான் இளவட்டக்கல்லைத் தூக்கிப்போட வேண்டும். கூட்டத்தின் பெரும் சத்தத்திற்கு நடுவே ராசு எளவட்டக்கல்லை நோக்கி நடந்தான். வெள்ளை நிறக்கோடுகளை வரிவரியாகக்கொண்ட உருண்டைக்கல் அவனைப் பார்த்தபடி கிடந்தது. ராசு கல்லுக்கு அருகில் வந்து காலை அகட்டி வைத்துக்கொண்டு குனிந்து இரண்டு கைவிரல்களையும் விரித்தபடி கல்லுக்கு அடியில் சொருகினான். விரல்களுக்கு இடையில் எருமைக்கன்றுகள் துள்ளிக்குதித்து காலை உதறின. கெடாரிக் கன்றுகள் எத்தித் தள்ளின. கசக்கிய மூடை பிடிபடாமல் நழுவியது. விரலின் நரம்புகள் முறுக்கேறி மண்ணை நகட்டி உள் நுழைந்தன. மூச்சை இழுத்து விசுக்கென்று எழுந்தான். நெஞ்சோடு ஒட்டிக்கொண்டு எழுந்து வந்த கல் பொடனியில் ஏறி பின்புறமாகச்

சரிந்தது. கூட்டத்தின் கத்தல்களுக்கு நடுவில் மந்தையில் இருந்த பட்டியக்கல்லில் வந்து அமர்ந்தான். அதன்பின் தாதனூர்க் காரர்களும், கோட்டையூர்க்காரர்களும் ஒருவர் மாறி ஒருவராக கல்லைத் தூக்கிப் போட்டபடி இருந்தனர். முறைப்பெண்களின் முறைப்புகளும் கேலிகளும் எளவட்டக்கல்லை சும்மா விடுவதாக இல்லை. அது பொழுதெல்லாம் பொடனியில் சரிந்து விழுந்தபடியே இருந்தது. முதலில் விளையாட்டுக்காக ஆரம்பிக்கிற போட்டிகள் நேரம் ஆக ஆக இரண்டு ஊர்களின் மானப் பிரச்சினையாக மாறிவிடுகிறது. எவனாவது ஒருவன் தூக்கிப்போட முடியவில்லை யென்றால் அவனுடைய ஊர் துக்கப்பட்டு தலைகுனிவதும் தூக்கியவனின் ஊர் முறுக்கேறிய கித்தாப்புடன் அவர்களை எளக்காரமாகப் பார்ப்பதுமாக போட்டியின் குணங்கள் மாறுகின்றன. ஒரு உச்சக்கட்டத்தை நோக்கிப்போகும் பொழுது ஊர் பெரியாம்பிளைகள் தலையிட்டு போட்டியை நிறுத்துகின்றனர். அப்படித்தான் ஒருவழியாக கல்லைத் தூக்கிப்போடும் போட்டி முடிவுக்குக வந்தது. எல்லோரும் பெருமூச்சுவிட்டு இளைப்பாற வந்தனர்.

வெயில் ஏற ஏற ஊறல் பானைகளை நோக்கி ஆண்கள் சரிந்துவிழுந்தபடி இருந்தனர். சாராய ஊறல் ஒரே தொழு மாடுகளென கோட்டையூர்காரனையும், தாதனூர்க்காரனையும் மாற்றியது. பொழுதெல்லாம் உரசி, கால்களை மிதித்து, கொம்புகளால் முட்டிக்கொண்டாலும் கழுநீர்த் தண்ணிக்குள் மூக்கு முங்க தலையைவிட்டு ஒன்றாகக் குடித்து முடித்தனர். அதன் பின் ஊரே கலகலத்துப்போவது போலச் செயல்கள் நடந்தன. குடித்தவர்கள் எல்லாம் ஒரு பக்கமும், குடித்துக் கொள்வோம் என இருந்தவர்கள் எல்லாம் ஒரு பக்கமுமாகப் பிரிந்தனர்.

உச்சிப்பொழுதைக் கடந்து சூரியன் அடி சாய ஆரம்பித்ததும் ஊர் அடுத்த போட்டிக்குத் தயாரானது. வெரட்டிப்பிடிப்பது ஒன்றும் சாதாரண வேலையல்ல. வயிற்றுக்கும், கைக்குமாக சவால்கள் முடிந்ததும் கால்கள் தயாராயின. ஊர்ப் பெரியாம் பிளைகள் எல்லை வைத்து திரும்பினர். கோயில் வேப்பமரத்தடியும் கண்மாய்க்கரையின் கிழக்கு மூலையில் இருக்கிற ஒத்தைப் பனையையும் எல்லைகளாகத் தீர்மானித்தனர். அங்கொரு கூட்டமும் இங்கொரு கூட்டமுமாக ஊர் இரண்டாகப் பிரிந்து நின்றது. உச்சிப்பொழுதில் வெயிலின் உக்கிரம் புழுதி மண்ணைப் பொசுக்கிக்கொண்டிருந்தது. ஒத்தைப்பனை எங்கேயோ தள்ளிநின்று கொண்டு கோயில் வேம்பையே பார்த்துக் கொண்டிருந்தது. முதலில் மாப்பிளைக்காரன் ஓட வேண்டும். அவனை கோட்டையூர்க்காரன் ஒருவன் விரட்ட வேண்டும். பனைமர எல்லைக்குள் அவனைத் தொட்டு விட்டால் தோல்வியை ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். துவக்கம் அப்படித்தான் இருக்க வேண்டும். கல்லைத் தூக்கிப்போடுவதில் ஏற்பட்ட முறைப்புகளும் சாவல்களும் ‘இந்தவாட்டி இவனெ எப்படியாவது தொட்டுப் புடணும்டா...’ என்று கேட்டையூரை ஊசுப்பேற்றிவிட்டது. ஊரிலே நல்ல ஓட்டக்காரனாகப் கொண்டு வந்து மாப்பிள்ளையை விரட்ட நிறுத்தியது கோட்டையூர். ராசு கோயில் வேம்பின் அடிவாரம் வந்து நின்றான். அவன் முகத்தில் இருந்த கலக்கத்தை தாதனூர் பெரியாம்பிளைகள் பார்த்தபடி இருந்தனர். முத்தணனால் விஷயத்தை கணிக்க முடிந்தது. ராசு ஆட்டை விரட்டி ஓடியே பழகியவன் முன்னால் ஓடுகிறவனை விரட்டச்சொன்னால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் அவன் விரட்டிப் பிடித்துவிடுவான்.

ஆனால் யாருமில்லாமல் அவனை ஓடச்சொல்லி வேறு ஒருவன் அவனை விரட்டுவதாக இருந்தால் அவனுக்கு வேகம் கைகூடாது. எளிதில் பிடிப்பட்டுப் போவான். தாதனூரில் முன்னால் ஓடுவதில் கெட்டிக்காரர்களும், விரட்டி ஓடுவதில் கெட்டிக்காரர்களுமாக இளவட்டங்கள் இரண்டு கூறாகவே இருக்கின்றனர். அதில் ராசு விரட்டி ஓடுவதில்தான் கெட்டிக்காரன். 'ஊருக்கு சங்கடம் வந்துருமோ...' என்ற கலக்கம் அவன் முகத்திலே தெரிந்தது. முத்தணன் நிலைமையை அறிந்து சுதாரித்தான். 'யப்பா... அவெ பத்து ஆளுனாலும் வெரட்டித் தெடுவான். அவனப்போயி ஒத்த ஆளவிட்டு வெரட்டப் பாக்குறீங்களே. நீங்க வேணா பத்து ஆளுக ஓடிக்கங்க. பத்து பேத்தையும் அவெ தொடலைன்னா என்னான்று கேட்டுக்கொங்கோ' என்று போட்டியின் விதியை மாற்ற தந்திரமாக சவால்விட்டான் முத்தணன். சவால் கேட்டையூரை உசுப்பேற்றியது. 'ஏன் சொல்லுகிறான்?' என்று யோசிக்க ரோஷம் இடம் கொடுக்கவில்லை. 'பத்து பேத்த இவெ பிடிச்சருவானான்னு பாத்துருவோம்டா...' என்று சொல்லி வரிந்துகட்டிக் கொண்டு கோட்டையூர்க்காரர்கள் களமிறங்கினர். செம்மறியின் நான்கு கால் ஓட்டத்தை வெரட்டிப் பழகியவன் இரண்டு கால் மனிதர்களை பாதி எலையைத் தாண்டும் முன்பே தொட்டு வெளியேற்றினான். ஆறு, ஏழு, எட்டு என்று கோட்டையூர்க்காரர்கள் தொடப்பட்டவாறு இருந்தனர். ராசுவும் ஓடித் தவித்துப் போயிருந்தான். ஆனாலும் வெற்றியின் சுவை அவனுக்கு தெம்பைக் கொடுத்தபடி இருந்தது. ஒன்பதாவது பத்தாவதுமாக ஓடுவதற்கு மிக நல்ல ஓட்டக்காரர்களை கோட்டையூர்க்காரர்கள் நிறுத்தியிருந்தனர். ஒன்பதாவதாக ஓடுவதற்கு நின்றவன் ஏற்கனவே ராசு வெரட்டி ஓடுவதை உன்னிப்பாக கவனித்தவாறே இருந்தான். அவனுக்கு ஏதோ பிடிபட்டதுபோல் இருந்தது. ராசு மிகவும் தவித்துப்போயிருப்பதும் தெரிந்தது. இதற்கு மேல் போட்டியை நீட்டுவது சரியில்லை என யோசித்த தாதனூர் பெருசுகள் ஆட்டையைக் குலைக்க முடிவு செய்தனர். 'னோழி மகெங்களா... மாப்பிளகாரன எத்தன தடவடா ஓடவுடுவீங்க, நிறுத்துங்கடா வெண்ணெய்களா' என்று குரலை உயர்த்தி சத்தம்போட்டு எழுந்தார் விருமாண்டிப் பெருசு. 'ஏ பெரியாம்பிள, ஆட்டையக் கொலைக்காதே... இன்னும் ரெண்டு ஓட்டந்தான் இருக்கு. பொத்திக்கிட்டு இரு' என்று கோட்டையூர்க் காரர்கள் சத்தம் போட்டனர். பதிலுக்குப் பதில் வார்த்தைகள் முட்டிக்கொண்டு மேலேறி வந்தன. போதையின் பிதற்றல் பெரும் கூச்சலென வெளியேறியது. 'ஆத்தாடீ கலகமாகப் போகுதடி வெரசா வாங்கடீ' என சத்தம் போட்டுக்கொண்டு கிழவிகள் கோயிலை நோக்கி ஓடினர். கோயில் அடிவாரக் கூட்டம் பெரும் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த பனைமரத்தடி வாரக் கூட்டம் 'ஏதோ சண்டையாகிப் போச்சப்பா...' எனச் சொல்லி அங்கிருந்து புறப்பட்டு கோயிலை நோக்கி வந்தனர். ஒன்பதாவதாக ஓடத் தயாராக இருந்தவன் வாய்ச்சண்டைக்குள் மாட்டாமல் ஓடுவதற்குத் தயாரானபடியே நின்று கொண்டிருந்தான். ஓடித் தவித்த ராசுவை தாதனூர் தந்திரமாகக் காப்பாற்றிக்கொண்டது. வாய் கலகம் கூடி பொழுதுசாயத்தான் அமுங்கியது.

வாய் வார்த்தைகள் வகை வைக்க முடியாமல் ஓடிக் களைத்து கோட்டையூர் மந்தைக்கல்லுக்கு அடியில் வந்து சுருண்டு படுத்தன. இரவு கூடிவர ஆரம்பித்தது. கல்யாண வீடு ராச்சாப்பாடுக்கு தாயரானது.

வந்தவர்கள் எல்லாம் இரண்டாம் கஞ்சியைக் குடித்து முடித்தனர். பெண்ணை அழைத்துக்கொண்டு புறப்படுவதற்கான நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. குருவி மிஞ்சி வகையறாவின் குலசாமியைக் கும்பிட ஊரைவிட்டு வெளியே கண்மாயைத் தாண்டிப்போனார்கள். ஆளும் பேருமாக சாமியைக் கும்பிட்டு வீட்டுக்குத் திரும்பினர். முதல் சாமத்தில் கூட்டம் புறப்படத் தயாரானது. செக்கானூரணி ராவுத்தர் மீண்டும் குதிரையைக் கொண்டு வந்து மந்தைக்கல்லின் அருகில் நிறுத்தினார். ராசு இடதுபக்கம் தொங்கிக்கொண்டிருந்த தோல் கயிற்றை மிதித்து உன்னி மேலேறி உட்கார்ந்தான்.

‘யப்பா... இவ தீத்து கட்டுனுவ இல்ல, புதுப்பெண்ணு, உழவுல வசங்காதது, நீதான் வசக்கி ஓட்டணும்’ என்று நடந்துவர முடியாத கோட்டையூர் பெரியாம்பிளைகள் ராசுவுக்கு அறிவுரை சொன்னார்கள். அவனும் குதிரையில் உட்கார்ந்தபடி தலையாட்டி அதனைக் கேட்டுக்கொண்டான். ராவுத்தர் முன் நகர்ந்தார். குதிரையைத் தொடர்ந்து முந்தானை சீரோடு காத்தாயி நடக்க ஆரம்பித்தாள் அருக்காயிக் கிழவி வீட்டு வாசலில் நின்று ‘ஒந் தொரக்குச்சி ஒன்னோட தான்டீ இருக்கணும், வேற பூட்டுல சேர வுட்டுறாத, சுதாரிப்பா இரு’ என அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தாள். கோட்டையூர் குமரிகளும், கிழவிகளும் சூழ காத்தாயி நடக்க ஆரம்பித்தாள்.

முத்தணன் சுக்குப் பெரியாம்பிளையிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என நினைத்து தேடிப்பார்த்தான். கடைசி வரை அவர் கண்ணில் படவேயில்லை. மந்தையில் இருந்த மற்ற பெயாம் பிளைகளிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வரும்பொழுது வந்ததைவிட இரண்டு மடங்கு கூட்டம் உப்பிப்பெருகி கோட்டையூரைவிட்டு வெளியேறியது.

நிலா ஒளியில் பளபளப்பு ஏறி இருந்தது. நாகமலை அடிவாரக் காட்டுப்பாதையின் வழியே அவர்கள் கிழக்கு நோக்கி நடந்து வந்தனர். பொந்துவழிப் பெண் காத்தாயியின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தாள். கம்பம் உலக்கையில் ஆரம்பித்து கருவேலமரத்து துடுப்புவரை சீர் வரிசைப் பொருட்களைக் கையில் பிடித்தபடி பெண்கள் ஏக்கத்துக் பேச்சுகளை வீசிக்கொண்டு நடந்து வந்தனர். கடமான் கொம்ப உலக்கை யாக்கி, தேக்கு எலைய சொளவாக்கி, தெள்ளுன தெனமாவெ கொண்டுகிட்டு வர்றாண்டி எங்க வீட்டு பொண்ணு’ என்று கோட்டையூர் கிழவிகள் வழியெல்லாம் பெருமை பேசினர். நடை கூடக்கூட வார்த்தைகளில் கலகலப்பு ஏறியது. சொலவமும் பாட்டுமாக வார்த்தைகளின் பெரும் சபை படை நடத்தி வந்தது. நடையின் வேகத்துக்கு தக்க திட்டுத்திட்டாக அவர்கள் நடந்து வந்தனர். பேச்சுகளும் அதைப் போலத்தான் திட்டுத்திட்டாக இருந்தது.

பொந்துவழிப் பெண்ணைப் பின்னால் இருந்து இடுப்பைக் கிள்ளிய நாத்தனாக்காரி ‘என்னாங்கடீ பிஞ்சு மாங்காய வச்சுகிட்டு இந்த அலப்பு அலப்புறீக’ என்றாள். அதற்கு அவள் ‘உங்க கொறவக்குஞ்சு எந்தத் தண்டீன்னு நாளைக்கு இன்னேரம் தெருஞ்சு போகும்ல’ என்று பதில் சொன்னாள். பதிலின் வேகம் அடுத்த கேள்வியை உசுப்பேற்றியது. தாதனூர்க்காரி அடுத்த வார்த்தையத் தூக்கிப் போட்டாள். கோட்டையூர்க்காரி அந்த வார்த்தையை மிக எளிதாக தள்ளிவிட்டு விட்டு பதில் வார்த்தை போட்டாள். இப்படியாக வார்த்தைகள் மாறி மாறி தூக்கிப்

போட்டப்படி சிரிப்புக்கு மட்டும் இடம் கொடுத்து அந்த கூட்டம் முன்னால் நடந்து போனது.

அடுத்து கொஞ்ச தூர இடைªளியில் கிழவிகள் வந்து கொண்டிருந்தனர். தீட்டி மெருகேற்றிய வார்த்தைகளைப் பாதையெங்கும் உதிர்ந்தபடி அவர்கள் வந்து கொண்டிருந்தனர். ‘ஒரு மூட்ட கேப்பனாலும் குத்தி முடிக்காம உக்கார மாட்டாடீ எங்க காத்தாயீ’ என்றாள் கோட்டையூர் கிழவி. ‘எங்க ராசும் அப்பிடித்தான்’ என்று சின்ன வார்த்தையில் பதில் சொன்னாள் தாதனூர் கிழவி. நக்கலும் கிண்டலும் நாகமலை முழுவதும் பட்டுத் திரும்பியபடி இருந்தன. வாழ்வில் சகலத்துக்குமான நியாய அநியாயங்களைச் சொல்லும் சொலவடைகளை வழியெங்கும் நட்டபடி கிழவிகள் நடந்தனர்.

அதற்கு அடுத்து பெரியாம்பிளைகள் வந்து கொண்டிருந்தனர். சுக்குப் பெரியாம்பிளை வராத கவலை கோட்டையூர் பெரியாம்பிளைகள் எல்லோரிடமும் இருந்தது. ‘கெழட்டுப்பய எங்கே போனான்னு சொல்லாமப் போயிட்டானப்பா’ என்று புலம்பியபடி வந்தனர். ‘ராசு முன்னத்தி ஓட்டத்துல தெறங்கெட்டவனா இருக்கானப்பா...’ என்று கவலையோடு சொன்னான் விருமாண்டிப் பெரியாம்பிள. ‘அதெல்லா கோட்டையூர்காரி சமாளிச்சுருவாப்பா’ என்றார் மந்தைக்கல் பெரியாம்பிள. வார்த்தைகள் குறும்பின் உச்சத்திலிருந்து வெளியேறி வந்தன. ‘இம்புட்டு கெழவிக என்ன வேகத்துல நடந்த போறாளுக பாரு, என்னென்னத்த சொல்லிக்கொடுத்துட்டு போறாளுகளோ...? என்ற கவலை வேறு அவர்களுக்கு இருந்தது.

நடுச்சாமம் கடந்த பொழுதில் நிலவின் பால் ஒளியைக் குடித்தபடி சாயபுவின் குதிரை தாதனூர் மந்தைக்கு வந்து சேர்ந்தது. சென்னாரெட்டியால் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடம் தொண்டையில் சிக்கிய உருண்டையைப் போல மந்தையோரம் உறுத்திக் கொண்டிருந்தது. களைப்புடன் வந்தவர்களிடம் கவலை கைகோர்த்தது. பேசிக்கொள்ள முடியாத மௌனத்தோடு கூட்டம் விரிந்து பிரிந்தது. ஊருக்குள் படுக்கிறவர்கள் வழக்கம்போல் படுக்கப் போயினர். ஆண்களின் பெருங்கூட்டம் ஆல்மரத்தடிக்குப் போனது. களைப்பேறியிருந்த ராசு எல்லோருக்கும் முன்னதாக ஆலமரத்தடிக்குப் போய்ச் சேர்ந்தான். நாளை காலைக்கான சமையல் வேலைக்கு சிலர் தயாரானபடி இருந்தனர்.

புதுப்பெண்ணோடு தாதனூருக்குப் பொழுது விடிந்தது. விருந்துக்குச் சமைக்கும் பெரும் அடுப்பின் சூடு விடிவதற்கு முன் ஊரை உசுப்பியது. கோட்டையூருக்குக் வராத வயித்துப்பிளைக் காரிகளும், பிள்ளைத் தாச்சிகளும், நடக்கமாட்டாத கிழவன் கிழவிகளும் ராசுவின் வீட்டிற்குப் போய் புதுப்பெண்ணைப் பார்த்து வாய் அளாவி விட்டு வந்தனர். கோட்டையூர்காரர்கள் தாதனூரின் சாப்பாட்டுக்குத் தங்களைத் தயார் படுத்தியபடி இருந்தனர். உரிபட்ட கெடாய்களின் தோல்கள் குவித்து கிடந்ததைப் பார்த்த பின்தான் அவர்களின் வாய்ப்பேச்சு கொஞ்சம் குறைந்தது. ஆனாலும் கித்தாப்பை விடாமல் ‘இம்புட்டூண்டு மந்தைய்ய வச்சுக்கிட்டு என்னாத்துக்குடா இந்தந்தண்டி பேரு’ என்று வம்பிழுத்தபடிதான் இருந்தனர். அலமரத்தடிக் கூட்டம் மொத்த மொத்தமாகக் கிளம்பி ஊருக்குள் வந்து சேர்ந்தது. ஊர் அடுத்த வேலையை நோக்கி ஆர்வமாக நகர்ந்து போனது. சூரியன் பறவைகளின் கீச்சொலியை

இணுங்கிப் போட்டபடி மேலேறிவந்தான்.

சாப்பாட்டை வடித்துக்கொட்டி இறக்கி வைக்கும் ஏற்பாட்டை ஊரே பார்த்துக்கொண்டிருந்தது. சிறுவர்கள் நாய்களை விரட்டி விரட்டி எறிந்து கொண்டிருந்தனர். வடித்த சோற்றை பனை ஓலைப் பாயிலே கொட்டித் துணியால் மூடினர். அடுத்த உலை தயாராகிக் கொண்டிருந்தது. இரண்டு பெரியாம்பிளைகள் சமையலுக்குப் பொறுப்பாக இருந்தனர். கூகையன், கட்டையன், சின்ன மயாண்டி என எல்லோரும் அங்குதான் நின்றுகொண்டி ருந்தனர். ‘வடிச்சுக் கொட்டுங்கடா. இன்னைக்கு பாத்துருவோம் ஒரு கைய’ என்ற முடிவோடு கோட்டையூர்க்காரர்கள் மந்தையிலே உட்கார்ந்திருந்தனர். ‘இவெங்க குடிச்ச ரெண்டு நேரக் கஞ்சியையும் நாம ஒரு நேரத்துல எடுத்தாகணும்டா...’ என்று பொண்ணு வீட்டு எளந்தாரிகள் தயாரிப்போடு இருந்தனர். சாப்பாட்டுக்கு முன் செய்ய வேண்டிய வேலைக்கான ஊர் தயாரானது.

நேரத்தின் குறிப்பறிந்து எல்லோரும் வந்து சேர்ந்தனர். மந்தையிலும் கொம்பூதி புளியமரத்திலும் கீழும் கூட்டம் எக்கி நின்றது. புதுப்பெண்ணுக்கு தண்ணிக்கிணறு காட்டும் நிகழ்ச்சிக்காக எல்லோரும் காத்திருந்தனர். தண்ணிக்கிணறு என்பது ஊரின் உயிர். புதுப்பெண்ணுக்கு ஊரில் முதன்முதல் காட்டப்பட வேண்டிய இடம் அதுதான். அதன் பிறகுதான் மற்ற எல்லாம். ஊர் தோன்றிய காலத்தில் தோண்டப்பட்ட கிணறு. அன்றிலிருந்து இன்று வரை ஊரே அந்தத் தண்ணியைக் குடித்துத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஊருக்கு வாக்கப்பட்டு வரும் பொண்ணுக்கு தண்ணிக்கிணறைக் காட்டுவதென்பது ஊரைக் காட்டுவதுபோல. தண்ணிக்கிணற்றை காட்ட பொண்ணைக் கூட்டிவரும் நேரம் நெருங்கிவிட்டதால் கூட்டம் முழுவதும் ஆவலோடு பாத்துக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்து புறப்பட்டு மந்தையை நோக்கி அவர்கள் வர ஆரம்பித்தனர். புதுப்பெண் இரண்டு கையிலும் இரண்டு குடத்தை வைத்திருந்தாள். அவளுடன் பொந்துவழிப் பெண்ணும் நாத்தனாக்காரிகளும் இன்னும் ரெண்டு மூணு பெண்களும் இருந்தனர். ஒருத்தி மட்டும் கையில் கடால் ஒன்றை வைத்திருந்தாள். மாயக்காள் கிழவி மட்டும் அவர்களோடு சேர்ந்து நடந்து வந்தாள். அவள் கையில் பெரியாம்பிளைகள் ஒரு வாரமாக அலைந்து திரிந்து தயாரித்துக் கொடுத்த புளிச்சநார்க் கயிறு இருந்தது. மாலையைப் போல வட்டமாகச் சுற்றிப்பிடித்தபடி புதுக் கயிற்றைக் கொண்டு அவள் நடந்தாள். நடந்துபோகிற அந்த ஏழு பேரையும் ஊரே பார்த்துக் கொண்டிருந்தது. மந்தைக்கு வந்து இடதுபுறமாகத் திரும்பிக் கிணற்றை நோக்கி அவர்கள் போனார்கள். ஏழு பேர் போனாலும் எல்லோர் கண்ணும் புதுப் பெண்ணின் மேல்தான் இருந்தது. தண்ணிக்கிணறுக்கு போகும் போழுது ஒருவிதமாகவும் வரும் பொழுது ஒருவிதமாகவும் ஊர் எதிர்பார்க்கும் என்று காத்தாயிக்குத் தெரியும். அவள் இரண்டுக்குமான மனத்தயாரிப்புடன் நடந்து கொண்டிருந்தாள்.

கிணற்றடியில் வந்து ஏழு பேரும் நின்றனர். வட்டவடிவக் கிணற்றின் குறுக்கு வெட்டாக இரண்டு பட்டியக்கற்கள் போடப்பட்டிருந்தன. காலெடுத்து வைத்து பட்டியக்கல்லின் மேல் நடந்து நடுக்கிணற்றில் வந்து நின்றாள். காலை நேரச் சூரியனின் ஒளி கால்வாசி கிணற்றுக்குள்தான் விழுந்து கிடந்தது. அதற்குக் கீழ் இருளும் நீரும் பிரிகிற இடம் சட்டெனத்

தெரியவில்லை. குனிந்தபடி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். நாத்தனாக்காரி மடித்து வைத்திருந்த வெற்றிலையை அவளிடம் கை நீட்டிக் கொடுத்தாள். எட்டி வாங்கிய காத்தாயி வெற்றிலையோடு சேர்த்து இரு கையெடுத்துக் கும்பிட்டு,

அமணமலைக்கு ஒரு பிள்ளையப் பெறுவேன்...

யானமலைக்கு ஒரு பிள்ளையப் பெறுவேன்....

நாகமலைக்கு ஒரு பிள்ளையப் பெறுவேன்....

சிக்கந்தர்மலைக்கு ஒரு பிள்ளையப் பெறுவேன்...

இந்த வெத்தல மாதிரி அழுகாம வம்சத்தப் பாதுகாப்பேன்....

நீ ஏத்துக்கோ... இனிநான் உனக்கு செந்தக்காரீ ..

எனச் சொல்லிக் கும்பிட்டப்படி கையிலிருந்த வெற்றிலையைக் கிணற்றுக்குள் போட்டாள். ஆறு பேரின் குலவைச் சத்தமும் ஊரின் சத்தமும் ஒன்று கூடி மேலேறியது. வெற்றிலை காற்றில் மிதந்தபடி குறுக்கும் நெடுக்குமாக வெட்டி வெட்டி கீழிறங்கிப்போய் நீரிலே விழுந்தது. தண்ணீர் அசைந்து விழித்துக்கொண்டது. வந்து நிற்கும் தனது புது மகளைப் பார்த்தது. அவள் உச்சிக்கிணற்றில் நின்று நீரை வணங்கினாள். நீருக்குள் ஆடி இறங்கியது அவள் உருவம். அவளின் கைப்பிடி வாசத்தோடு வந்து விழுந்த வெற்றிலையை நீர் இரு கைகளாலும் வாங்கிக்கொண்டது.

மாயக்காக் கிழவி புதுக்கயிற்றை எட்டிக் கொடுக்க நாத்தனார்காரி கிழவியிடமிருந்த புதுக்கயிற்றை வாங்கி கடவாலை அதன் ஒரு முனையில் முடிச்சிட்டு காத்தாயிடம் கொடுத்தாள். அவள் கை நீட்டி வாங்கினாள். அடுத்த நடக்கப் போவதுதான் தன்னை ஊரே மதிப்பிடப்போகும் செயல் என அவளுக்குத் தெரியும். கோட்டையூருக்கு வாக்கப்பட்டு வந்த புதுப்பெண்கள் தண்ணி எடுக்கும் போது எப்படியெல்லாம் பேசப்பட்டார்கள் என்பது அவள் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. ‘தெறங்கெட்ட சிறுக்கி...’ ‘சத்துக் கெட்ட சிறுக்கி...’ ‘துப்புக்கெட்ட சிறுக்கி...’ என எத்தனையோ வார்த்தைகள் அவளின் நினைவுக்குள் சுழன்றபடி இருந்தது. ஊரே அவளைப் பார்த்துக்கொண்டிருந்தது. காத்தாயி கயிற்றின் மறுமுனையை மட்டும் பிடித்தபடி மொத்தக் கடாலையும் உள்ளே போட்டாள். கடாலின் அடிப்பகுதி தண்ணீரின் மேல் விழுந்து தெறிகும் சத்தம் மந்தைக்குக் கேட்டது. உதிரிக்கயிற்றை இழுத்துச் சரிப்படுத்தியபடி காலை மட்டும் கொஞ்சம் அகட்டிக் கொண்டாள். வலது கையால் கால் முட்டிக்குக் கீழே கயிற்றைப் பிடித்து விசுக்கென சுண்டி தலைக்கு மேல் உச்சிக்குக் கொண்டு போனாள். அதே வேகத்தில் இடதுகை கால் முட்டிக்குக் கீழே கயிற்றைப்பிடித்தபடி தலைக்கு மேல் உச்சிக்கு வந்தது. சர்ரு...சர்ருவென நான்காவது சுண்டில் கடால் கைக்கு வந்தது. தண்ணீரைக் குடத்தில் ஊற்றிய கணத்தில் மீண்டும் கிணற்றுக்குள் இருந்து கடாலின் அடிப்பகுதி பட்டு தண்ணீர் தெறிக்கு சப்தம் மந்தைக்கு கேட்டது.

‘தாயோளி...சுண்டி இழுத்துட்டாடா...’ என்றான் முத்தணன்.

‘கெட்டிக்காரிடா...’ என்றார் பெரியாம்பிள ஒச்சு.

‘விசுக்கு விசுக்குன்னு சுண்டி எரியுறாடா... ஆத்... தீ’ என்றாள்

வேலம்மாக் கிழவி.

‘பாவம்டா... ராசு செத்தான்டா....’ என்றாள் மந்தைக்கல் பெரியாம்பிள.

பேச்சும் சிரிப்பும் மந்தை முழுவதும் உருண்டு கொம்பூதிப் புளிய மரத்தில் போய் ஏறியது. மீண்டும் அங்கிருந்து மந்தைக்கு உருண்டு வந்தது. காத்தாயி தாதனூர்க்காரியானாள்.

*

**வ**யிறு பொறுக்க சாப்பிட்டபின் கோட்டையூர்க்காரர்கள் புறப்பட்டுப்போனார்கள். உச்சிப் பொழுதுக்குப்பின் காத்தாயியை கூட்டிக்கொண்டு ராசு கருப்பு கோயிலுக்கு வந்தான். சாப்பிட்டு முடித்த களைப்பில் ஆலமரத்தடியெங்கும் ஆட்கள் படுத்திருந்தனர். இருவரும் வருவதை பார்த்துக் கொண்டிருந்த பெரியாம்பிள ஒச்சு தாவாரத்தில் இருந்து எழுந்து வந்தார். ‘பெரியாத்தாள கும்பிட்டு வாம்மா மொதல்ல’ என்று காத்தாயியிடம் சொன்னார். தாவாரத்தை ஒட்டிக் கீழே இருந்த மண் சட்டியை எடுத்துக் கொண்டு போய் சுனையிலிருந்த நீரை எடுத்து வந்து ஆலமரத்து இளம் விழுதொன்றுக்கு ஊற்றிவிட்டு மண்ணைத் தொட்டு வணங்கிக்கொண்டாள். பின்னர் இருவரும் கருப்பணை வணங்கினர். பெரியாம்பிள ஒச்சு கருப்பனின் காலடியில் இருந்த மையை எடுத்து இருவருக்கும் பூசிவிட்டார். இருவரும் கிளம்பி அமணமலையின் வடபுறமிருக்கும் ஒத்தையடிப்பாதையின் வழியே பட்டசாமியைக் கும்பிடப்போனார்கள். மலையைக் கடந்து பின்புறம் வரை நீண்டதூரம் நடக்க வேண்டியிருந்தது. ராசுவின் பட்டசாமி சுண்டுகாலான். அந்தத் துடியானவனைப் பார்க்க இருவரும் நடந்து போயினர். கிளைகள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று முறுக்கித் திமிறியபடி பெரும் மரம் ஒன்று அங்கே நின்று கொண்டிருந்தது. இருவரும் வெற்றிலை பாக்கு மட்டும் கொண்டு வந்து மரத்தடியில் வைத்து வணங்கினர். சுண்டு காலானுக்கு அது போதாதுதான். வெயிலில் வேர்த்து வடிய வந்து நிற்கும் பிள்ளைகளை வேறு என்னதான் செய்ய என நினைத்து காற்றால் அடித்து அனுப்பி வைத்தான்.

சுண்டு காலானை வணங்கிய இருவரும் ஒற்றையடிப்பாதையில் திரும்பி நடக்க ஆரம்பித்தனர். சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமியைப் பொசுக்குவதைப் போல இறங்கிக்கொண்டிருந்தன. மலையடிவார மர நிழல் அவர்களை வசீகரமாக இழுத்தது. செங்கன் பொடவுக்குள் இருக்கும் குளுமை இருவரின் நாசிகளுக்குள்ளும் ஏறியது. இருவரும் நிழலில் ஒதுங்கிப் பாறை இடுக்களின் அரை இருட்டுக்குள் சென்றனர்.

களவின் வேகமும் பதற்றமும் காற்றெங்கும் அலைமோதியது. பாறை முழுவதும் அவளின் சிரிப்பு தெறித்து விழுந்தது. அவன் கூச்சத்தின் மறுகரையில் ஏறி நின்று கொண்டான். சமிக்ஞைகளும் ஓசைகளும் அவள் விரல் நுனியில் இருந்து விரிந்தபடி இருந்தன. அவன் மார்பில் குத்தி வைத்திருந்த பச்சையில், படமெடுத்த நின்ற பாம்பு மெல்ல இறங்கி, விம்மி எழுந்த அவளின் மார்பின் மீது ஊர்ந்து ஏறியது. காற்று முதுகுத் தண்டில் ஏறிப்பரவும் வியர்வையைத் துடைக்க முடியாமல் திணறியது.

*

# 103

**செடிகொடிகளின் மேல் பனித்துளி நிற்காமல் காற்றில் மட்டும் குளிர்** நிற்கும் காலம். பூமியெங்கும் குளிரை முட்டி வைகறை முளைவிட்டு வந்தது. ஆலமரத்தடி அதற்கேயுரிய காலடிச் சத்தங்களோடு அதிகாலையைக் கடந்தது. மதுரைக் காவலுக்குப் போன ரெண்டு கொத்தும் களவுக்குப் போன கொத்துக்களும் ஒவ்வொன்றாக வந்து சேர்ந்தன. நகரத்தின் குதிரை வண்டிக்காரர்களுக்கு விற்பதற்காக புல்லை அறுத்து, இரவெல்லாம் தண்ணீருக்குள் போட்டு, அதிகாலையில் கட்டித் தூக்கிக்கொண்டு மேலெல்லாம் நீர் வழிய பளிஞ்சரைப் பெண்கள் நான்கைந்து பேர் ஊர்ப் பனையை ஒட்டி மதுரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். கஞ்சிப்பொழுது கடந்தது. ஊருக்குள் போன ஆண்கள் வீடுகளில் கஞ்சியைக் குடித்துவிட்டு ஒவ்வெருவராக ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர்.

மாடக்குளம் பக்கம் போய்வந்த பெரியாம்பிள ஆலமரத்தடிக்கு வராமல் அமணமலையின் பின்புறம் நோக்கி நேராக போய்க் கொண்டிருந்தார். அவர் வருகைக்குகாக ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தவர்கள் பெரியாம்பிள நேராக போவதைப் பார்த்து சத்தம் போட்டுக் கூப்பிட்டனர்.

கடைசிப்பூக்கள் எல்லாப் பருவத்திலும் பூத்து உதிர்வதைப்போல இந்தப் பருவத்திலும் பூத்து உதிரக் காத்திருந்தன. தேனீக்கள் மலையை விட்டுப் போகும் காலமிது. தேன்கல் பாறையைப் பார்த்து விட்டுவருவோம் என நினைத்துத்தான் அவர் போய்க் கொண்டிருந்தார்.

ஊர் மந்தையோரம் கட்டப்பட்ட கட்டிடம் எதற்கு எனறு இன்று வரை தெரியவில்லை. வேலையை முடித்துவிட்டு போனவர்கள் ஒரு வாரம் பத்து நாளாகியும் யாரும் வரவில்லை. சபாபதிபிள்ளையிடம் ‘கட்டிக்கோ...’ என்று சொன்ன அந்தக் கணம் மனதைப் போட்டு அறுத்துக் கொண்டேயிருந்தது. ஏதோ தவறு நடந்துவிட்டதென்று உள்ளுணர்வு அவரைப் படாதபாடு படுத்தியது. அதனால்தான் யாரிடமும் எதுவும்

சொல்லாமல் இங்கேயும் அங்கேயுமாக அலைந்து கொண்டேயிருந்தார்.

மாடக்குளம் பக்கமாகக் போனவர் சரி, தேன்கல் பாறைக்குப் போவோமென்று வேகாத வெயிலில் வங்காச்சியாய் நடந்து கொண்டிருந்தார். மலையின் பின்புறமாகப் போவதற்கு வெள்ளைக்காரன் போட்ட சாலையைக் கடக்க வேண்டியிருந்தது. மனதை இறுக்கிக் கொண்டு சாலையின் மீது கால்பதித்து நடக்கும் பொழுது இடது பாக்கமாகத் திரும்பிப் பார்த்தார். சாலை நேராகப் போய் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தின் வாசலை முட்டி மந்தைக்குத் திரும்புவது போல் இருந்தது. கட்டிடம் சாலையோடு இணைந்ததென்று புரிந்த அந்தக் கணம் ஆளைத் தூக்கி வாரிப்போட்டது. உள்ளுக்குள் ஏற்பட்ட நடுக்கம் நிலைதடுமாறச் செய்தது, அப்படியே வந்த வழியே திரும்பினார்.

இவரை நோக்கி தூரத்தில் வந்து கொண்டிருந்த வீரணன், ‘பெரியாம்பளய எங்கெல்லாந் தேடுறது, விடிய்ய இங்கிட்டு என்ன பண்ற?’ என்றார்.

‘ஒண்ணுமில்லப்பா, தேங்கல் பாற பக்கமா போணும்னு தோணுச்சு, அவெ போட்ட பாதய மிதிக்க வேணாம்னு திரும்பிட்டேன்’ என்றார்.

‘சரியப்பா... சோங்க மகெ பேயன் உன்னப் பாக்குறதுக்கான கருப்பு கோயில்ல வந்து உட்கார்ந்திருக்கான்’ என்றான்.

‘விடிய்ய... என்னதுக்குடா அவெ இங்க வந்தான்?’ என்று உள்ளுக்குள் இந்த கவலையை வெளிக்காட்டாமல் பேச்சுக் கொடுத்தார்.

‘தெரியலப்பா, வர்ற வழியுல சொன்னாங்கெ... அப்படியே உன்னய கூப்பிட இங்கிட்டு வந்துட்டே’ என்றான் வீரணன்.

இருவரும் பேசியபடி ஆலமரத்தை நோக்கி நடந்தனர். பேயன் நீண்ட நேரம் கருப்பு கோயில் தாவாரத்துலேயே உட்கார்ந்திருந்தான். அவன்முகத்திலே கவலை இழையோடியிருந்தது. முத்தணனும் ஆண்டியும் இன்னும் இரண்டு மூணு பேரும் அவனைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். எல்லோரும் பெரியாம்பிளைக்காக காத்திருந்தனர்.

தெற்கு மூல ஆவணி வீதியைக் காவல் பார்த்த பேயனையும், மேலும் பதினைந்து காவக்காரர்களையும் ராவுத்தர் சாவடியில் வைத்து வெள்ளைக்கார போலீஸ் கைது செய்து ஓராண்டாக சிறைக்குள் அடைத்தது. சிறைத்தண்டனை முடிந்து பதினாறு பேரும் வெளியே வந்தபொழுது நகர்க்காவலில் பெரும்மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. ஊர்க்காவலுக்குப் போகாமல் வெளியிலிருந்தே காவ காக்க வேண்டிய நிலை இருந்தது. சோங்குவும் மற்றவர்களும் பாதிநாள் வெளிக்காவலுக்குப் போவதும் மீதி நாள் களவுக்குப் போவதுமாக இருந்தனர். இந்நிலையில் தான் பெரியாற்று நீர் பாயும் பெரிய கிராமங்களில் ஒன்றான தனிச்சம்பட்டி தாதனூரிடம் காவ கேட்டு வந்தது. எவ்வளவு பெரிய பஞ்சம் வந்தாலும் காவக்காரனால் தாக்குப் பிடிக்க முடியும். அந்த அளவுக்குப் பெரிய ஊர். எனவே காவ கொடுப்பதாகத் தாதனூர் ஒத்துக்கொண்டது. பேயனும் கருப்பு கோவிலில் முடி இறக்கிவிட்டு தனிச்சம்பட்டிக் போய் குடிசை போட்டு உட்கார்ந்தான். மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. அவ்வப்பொழுது களவுக்கு தனிச்சம்பட்டியைக் கடந்து போகும் தாதனூர் கொத்தோடு சேர்ந்து போவதும் வருவதுமாக இருந்தவன் நேற்று இரவு முத்தணன் கொத்தோடு

சேர்ந்து களவுக்குப் போயிருக்கிறான். களவு முடிந்து முக்கால் மூட்டையைத் தூக்கிய படி வீடு வந்த பேயனை கம்மாக்கரையில் ஓடி வந்து மறித்த நீர்கட்டி 'நம்ம வயல்ல கசக்கிட்டுப் போயிட்டாங்கெப்பா...' என்றான். பதறியபடி ஓடிய பேயன் வயலெங்கும் சுற்றிப்பார்த்தான். நான்கு குண்டுகளை இரவு முழுவதும் கசக்கியிருக்கிறார்கள். இருபது பேருக்குக்கு குறையாமல் வந்திருக்கணும் என்று கணக்கிட்டு ஆழ்ந்த யோசனையில் இருந்தவன் 'சரி...நா ஊரு வரைக்கும் போயிட்டு திரும்புறேன்' என்று நீர்கட்டியிடம் சொல்லிவிட்டு வந்து கருப்பு கோவில் தாவாரத்திலே உட்கார்ந்திருக்கிறான்.

பெரியாம்பிளை வந்ததும் நடந்ததையெல்லாம் சொன்னான். அடுத்து என்னென்ன வார்த்தைகள் வரப்போகின்றன என்று அவனுக்குத் தெரியும். அதையெல்லாம் எதிர்பார்த்துதான் அவன் வந்தான். காவக்கரன் ஒருவன் தனது எல்லையில் களவு நிகழ்ந்துவிட்டது எனச் சொல்ல ஊருக்கு வரும்பொழுது அவமானப்பட்டு, உயிர் செத்துப்போய்தான் வரவேண்டும். ஊரே காறித்துப்பும். சின்னது நன்னியெல்லாம் வையும். வேறு ஒருவனிடமிருந்து காவலை எடுக்கும்போது நடக்கும் மோதலும் அதனைத் தொடர்ந்து கொஞ்சகாலம் நடக்கும் களவும்தான் மன்னிக்கப்படவேண்டியது. மற்றபடி சாதாரண காலங்களில் களவு நடந்து அதை அவனே கண்டுபிடிக்க முடியாமல் ஊரை நாடி வந்தால் ஊர்ப் பனையில் கட்டி வைத்து எறிவதைப்போல வார்த்தைகளால் ஊரே எறியும். அன்றும் அதுதான் நடந்தது. ஆலமரத்தடியில் உக்கிப்போய் உட்கார்ந்திருந்தான் பேயன்.

'கருது பரிஞ்சு நிக்குற காலத்துல என்ன கூதிக்குடா நீ களவுக்குப் போற? தனிச்சம்பட்டிய சுத்தி எந்த ஊர்லயும் நம்ம காவ கிடையாதுல்ல. அப்படீன்னா நீ எம்புட்டு சுதாரிப்பா இருக்கணும்?' என்றார் பெரியாம்பிள.

விருமாண்டிப் பெருசு வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். 'ஏலே...ய், நீங்க கசக்கப்போன எடத்துக்கும் தனிச்சம்பட்டிக்கும் என்னடா தூரம், கசக்குன ஒரு பொழுதுக்கள் ஊரு வந்து சேந்திருக்கலாம்டா... கோழி கூவுற வரைக்கும் என்னடா பண்ணுனீங்க? தொண்ணுறு பாப்பான்சேர்ந்து ஒம்போது தேங்காய விடிய விடிய சொமந்தமாதிரி நீங்க சொமந்துகிட்டு திரிஞ்சீங்களா?' என்றார்.

எல்லோரும் திட்டித் தீர்த்தபிறகு குறிப்புக்கான விசாரிப்பு துவங்கியது. பேயன் சொன்னான் 'கசக்குன வயல் முழுக்க கதிர்லபாதி நெல்லு ஓட்டியிருந்துச்சு, நெல்லு சிந்திக்கிடந்துச்சுப்பா, புது ஆளுதான் வந்து கசக்கியிருக்காங்கெ' என்றான்.

'தாள எந்தப் பக்கமாக மிதிச்சு உள்ள எறங்கியிருக்காங்கெ?' என்று பெரியாம்பிள கேட்டார்.

'கிழக்கு பக்கமாப்பா.'

'மிதியடி ஏதாச்சு தெரிஞ்சுச்சா?'

'தெக்குப்பக்கமா போயிருக்காங்கெப்பா.'

அவர் மனதுக்குக்குள் கணக்குப் போட்டப்படி இருந்தார். விருமாண்டிப் பெருசு 'எல்லாம் கெடாயூர்க்காரங்களாத்தான் இருக்கும்' என்றார். பெரியம்பிள இன்னும் ரெண்டு ஊரைச் சொன்னார். மூணு ஊருக்கும் ஆள்

அனுப்புவோம் என ஆலமரத்தடி முடிவுக்கு வந்தது.

‘சரி... ரவைக்கு நெல்லோட வர்றோம். நீர் ஊர் போயிச் சேரு’ என்ற வார்த்தைக்காக காத்துக்கொண்டேயிருந்த பேயன் பெரியாம்பிள சொன்னதும் ‘ஆள விடுங்கடா சாமீ’ என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு அடுத்த கணம் இடத்தைக் காலி செய்தான்.

*

**த**னிச்சம்பட்டி களத்து மேட்டில் ஊர் முக்கியஸ்தர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். பேயன் வந்து சேர மதியத்துக்கு மேல் ஆகிவிட்டதால் காலையில் நடக்க வேண்டிய சம்பிராதாயங்கள் எல்லாம் அவன் வந்த பிறகே நடக்க வேண்டும். களத்தை ஒட்டிய பிள்ளையார் கோயில் கல் மண்டபத்தில் ஊர்ப் பெரிய மனிதர்கள் நான்கு ஐந்து பேர் உட்கார்ந்திருந்தனர். ‘தாதனூர்க்காரங்களெ போட்டும் களவாப் போச்சேப்பா...’ என்று ஏக்கத்தோடு பேசிக்கொண்டிருந்தனர். ஐம்பதுபேருக்கும் அதிகமாக ஆட்கள் கூடியிருந்தனர். களத்து மேட்டை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்த மாட்டுவண்டிகளில் சாய்ந்தும் உட்கார்ந்தும் பேசிக்கொண்டி ருந்தனர். ‘ஊரின் முதல் அறுப்பு இப்படி ஆயிப்போச்சே’ என்ற கவலை எல்லோருக்கும் இருந்தது. காவக் கம்போடு பேயன் களத்து மேட்டுக்கு வந்துசேர்ந்தான். வழக்கமான கலகலப்பு அவனிடம் அன்று இல்லை. அவன் வந்ததும் ‘என்னப்பா, வேலய ஆரம்பிச்சுருவோமா...’ என்று ஊர்ப்பெரியவர் கேட்டார். பேயன் சரியென்று சொன்னதும் பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு நீர்கட்டி கருது கசக்கப்பட்ட வயலை நோக்கி வரப்புகளுக்குள் நடந்து போனான். அவன் பின்னால் நான்கைந்து பெண்கள் பேனார்கள். அவர்களைத் தொடர்ந்து ஊர்க்காரர்கள் நான்கைந்து பேர் போனார்கள்.

கசக்கப்பட்ட நான்கு குண்டுகளிலிருந்த நெற்கதிர்களை நீர்கட்டி அறுக்கச் சொன்னான். வந்திருந்த பெண்கள் கருதை அறுக்கத் துவங்கினர். நீர்கட்டியும் ஊர்க்காரர்களும் வரப்பிலே நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். பொழுது போய்க் கொண்டிருந்தது. நான்கு குண்டையும் அறுத்து முடித்தவுடன் ஒரே அளவு கட்டுகளாக இறுக்கக் கட்டி நீர்கட்டி தூக்கிவிட்டான். பெண்கள் கருதுக்கட்டுகளை கொண்டு வந்து களத்து மேட்டிலே போட்டனர். எல்லாக் கட்டுகளையும் களத்து மேட்டிற்கு கொண்டு வர ஆறேழு நடை போக வேண்டியிருந்தது. பொழுது நன்றாக இறங்கிவிட்டது. அந்தியின் ஒளிப் பூச்சிகள் எங்கும் பறந்து கொண்டிருந்தன. பறைவகள் குரல் எழுப்பியபடி மரங்களில் அடையத் தயாராகிக் கொண்டிருந்தன.

‘காவக்காரன கூட்டிப் போயி ஒரு கட்டு அறுத்துட்டு வாப்பா’ என்று ஊர்ப்பெரியவர் ஒருவர் சொன்னதும், நீர்கட்டியும் காவக்காரனும் வரப்புக்குள் இறங்கினர். அவர்களோடு சேர்ந்து நான்கைந்து பேரும் இறங்கினர். நீர்க்கட்டி அதே சம்சாரியின் கசக்கப்படாத வயலுக்குள் இறங்கி நெற்கதிர்களை அறுத்து ஒரு கட்டு கட்டினான். ஆனால் முன்பு செய்ததைப்போல இறுக்கமாக அமுக்கிக் கட்டாமல் ‘பொத்துனாப்புல’ கட்டினான். ‘ரெண்டும் ஒரே அளவு கட்டுதான்’ என்று பார்வைக்குத் தெரியவது போல கட்டி அந்தக் கட்டை அவனே தலையில் தூக்கி வந்தான்.

களத்துமேட்டுக்கு நீர்கட்டி வந்து கருதுக்கட்டை இறக்கியதும் பிள்ளையார் கோயில் கல் மண்டபத்தில் உட்கார்ந்திருந்த பெரியவர்கள் எல்லாம் இறங்கி கருதுக்கட்டுக்கு அருகில் வந்தனர்.

மண்ணுக்குள் இருக்கும் ஈரப்பதம் போல முற்றிலும் உலராத ஒளித் திட்டுக்கள் மேற்குவானத்தில் இருந்தன. எல்லோரும் சுற்றி வட்டமாக நின்றுக்கொண்டிருந்தனர். கோயிலுக்குள் காண்டா விளக்கொன்று பொருத்தி தயாராக வைக்கப்பட்டிருந்தது. கசக்காத நெற்கதிர்களைக் கொண்ட கட்டுக்குப் பக்கத்தில் கசக்கிய கட்டொன்றை தூக்கி வந்து நீர்கட்டி வைத்தான். இரண்டையும் தனித்தனியாக அடித்து கதிர்களை உதிர்த்தான். கசக்காத கதிர்களில் ஐந்து மரக்கால் நெல் இருந்தது. கசக்கிய கதிர்களில் ஒன்றரை மரக்கால் நெல் இருந்தது. அதை வைத்து ஒரு கட்டுக்கு மூணரை மரக்கால் என்றால் கசக்கிய கட்டுகள் அத்தனைக்கும் சேர்த்து மொத்தம் எத்தனை மரக்கால் என்று ஊர்க்கணக்கன் அளவு சொன்னான்.

‘கிராமம் சொன்னா சரித்தானப்பா’ என்று காவக்கார பேயன் ஏற்றுக்கொண்டு ‘இன்னிக்கு ரவைக்குள்ள நெல்லு வந்துருமப்பா...’ என்று அந்த சம்சாரிக்குச் சொன்னான்.

பெரிய மனிதர்கள் எழுந்து வீடுகளுக்குப் புறப்பட்டனர். பேயன் களத்து மேட்டிலேயே இருந்தான். அந்த நிலத்திற்குரிய சம்சாரியும் மற்றும் சிலரும் அங்கேய காத்திருந்தனர். காவக்காரனை விட்டு தள்ளி நீர்கட்டி தனியாக உட்கார்ந்திருந்தான். இருள் கவ்விப்பிடிக்க ஆரம்பித்தது. கோயிலுக்குள் எரிந்து கொண்டிருந்த காண்டா விளக்கின் வெளிச்சம் களத்து மேட்டுப் பாறையில் விளைந்த கதிர்களைக் கொண்டு அடிப்பதைப்போல மஞ்சள் நிற ஒளியை அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தது. கூட்டத்திலிருந்த ஒருவர் வீடு வரைக்கும் போய் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார். தனியாக உட்காந்திருந்த நீர்கட்டியின் காதிலே போய் ‘மஞ்சப்பூசுற வீட்டுக்கும், தல சுத்தாத வீட்டுக்கும் இம்புட்டு விசுவாசம் கூடாதுடா’ என்று மற்றவர்களுக்குக் கேட்காதபடி மெல்லச் சொல்லிவிட்டுப் போனான்.

‘வம்ப இழுத்துவிடாம நீ பாட்டுக்கு போப்பா சாமீ’ என்று முனங்கினான் நீர்கட்டி.

மஞ்சப் பூசுகிற பெண்கள் இருக்கிற வீடு பத்து வீடுகள் தானிருக்கும். ஆனால் அந்த வீடுகளுக்குத்தான் முக்கால்வாசி நிலங்கள் சொந்தமானது. எனவே நீர்கட்டி அந்த பெருந்தனக் காரர்களின் வீடுகளுக்கு பெரும் விசுவாசத்துடன்தான் இருப்பான். அதேபோல் தலை சுத்ததாத பெண்கள் இருப்பது காவக்காரர்களின் வீடுகளின்தான். மற்ற எல்லா வீடுகளிலும் பெண்களைப் பேயோ பிசாசோ முனியோ பிடித்து தலை சுத்தி ஆட்டிக்கொண்டிருக்கும். ஊர் ஊருக்கு கோடாங்கியைக் கூட்டி வருவதும், பேய் விரட்டுவதுமே வேலையாக இருக்கும். தலையை விரித்துப் போட்டு ஆடிக்கொண்டிருக்கும் பேயை கோடங்கி மூணு நாளாக விரட்டுவான். ஊரிலுள்ள பெண்கள் எல்லாம் சோறு தண்ணி ஆக்காமல் பேய் விரட்டுவதையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருப் பார்கள். ஆனால் காவக்காரர்கள் வீட்டில் பிறந்த பெண் ஒருபோதும் தலைசுத்தமாட்டாள். எனவே தலை சுத்தா வீடென்று காவக்காரன் வீடுகளுக்கு பெயர் உண்டு. நீர்கட்டி மஞ்சள் பூசுற வீட்டுக்கு எவ்வளவு விசுவாசத்தோடு இருப்பானோ

அவ்வளவு விசுவாசத்தோடு தலை சுத்தாத வீட்டுக்கும் இருப்பான். காரணம், கிராமத்தின் இரவுகளை காவக்காரனும் நீர்கட்டியும் சமமாகப் பகிர்ந்து பங்கிட்டு கொள்கிறவர்கள். விளையாத நெல்மணிகளான நீரை அளந்து, சேகரித்துப் பாதுகாப்பவன் நீர்கட்டி. விளைந்து நிற்கும் நீர்த்துளிகளான நெல்மணிகளைக் காத்து களத்து மேட்டுக்கு வரச்செய்பவன் காவக்காரன். இருள் அப்பிக்கிடக்கும் கண்மாய் மடையின் மேல் விழித்தே இருக்கும் நீர்கட்டியின் கண்களை நோக்கி அயிரை மீன்கள் துள்ளிக்குதித்தபடியே இருக்கின்றன. கண்மாய்க்கும் வயலுக்கும் நடுவில் இரவுதோறும் நீந்திக் கொண்டேயிருக்கிறது காவக்காரனின் கைக்கம்பு. ஊர்மரக்கால் களத்துமேட்டில் உரசும் சத்தமும், காவக்கம்புகள் வரப்புமேட்டில் குத்தும் ஓசையும்தான் சம்சாரித்தனத்தின் அணிகலன்கள். காவக்காரனும் நீர்கட்டியும் ஒருவனை ஒருவன் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். நீர்க்கட்டிக்குக் கூலி கொடுப்பதில் பிரச்சினை வந்தால் காவக்காரன்தான் தலையிட்டு அதைத் தீர்த்து வைப்பான். அதேபோல காவக்காரனுக்குப் பிரச்சினை வந்தால் அவனுக்கு சாதகமாகத்தான் நீர்கட்டி வேலையைச் செய்வான்.

**பொ**ழுது நள்ளிரவைத் தாண்டியது. களத்துமேட்டிலேயே எல்லோரும் உட்கார்ந்திருந்தனர். தாங்கும் அளவிலான நடுக்கத்தில் பனி பெய்து கொண்டிருந்தது. வெள்ளிகள் ஏகத்துக்குப் பூத்துக் கிடந்தன. இன்னும் இரண்டொரு தினங்களில் நிலா விழுந்துவிடும். பிறகு பத்து நாளைக்கு களவுக்கு வேலையில்லை என யோசித்தபடி பேயன் உட்கார்ந்திருந்தான். ஊரின் சனி மூலையில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. சரி, களத்துமேட்டுக்குத்தான் ஆள் வருகிறார்கள் என்று எல்லோரும் புரிந்துகொண்டு எதிர்ப்பார்ப் போடு உட்கார்ந்திருந்தனர். கருப்பனும் பூச்சியும் ஊர்பாதையில் ஏறி களத்து மேட்டுக்கு வந்தனர். அவர்கள் துப்பு கண்டுபிடித்துவிட்டு வருகிறார்கள் என பேயன் புரிந்துகொண்டான். மற்றவர்கள் ‘என்ன வெறுங்கைய வீசிக்கிட்டு வர்றாங்க?’ என யோசித்தப்படியே இருந்தனர். கருப்பணன் நேராக வந்து பேயனிடம் ‘யாரப்பா சம்சாரி?’ என்று கேட்டான். பேயன் நிலத்துக்காரரைக் காட்டியவுடன் துண்டை இறுக்கி மடியில் கட்டியிருந்த நெல்லை எடுத்து அவரிடம் கொடுத்தான். ‘ஐயா, களவுல தப்பு நடந்து போச்சுன்னு கசக்குனவங்கெ சொல்லி கொடுத்த உங்க வயக்காட்டு நெல்லுய்யா... இனி தப்பு நடக்காது’ என்றான். நிலத்துக்காரர் இரு கையாலும் நெல்லை வாங்கி அப்படியே பிள்ளையார் கோயில் முன்பு கொண்டுபோய் வைத்தார். தனது நெல்மணிகள் மீண்டும் களத்து மேட்டுக்கு வந்தது அவருக்கு நம்பமுடியாததாக இருந்தது ‘இன்னும் கொஞ்ச நேரத்துல எங்காளுக ஒங்களுக்கு கொடுக்க வேண்டிய நெல்ல கொண்டு வந்திருவாங்கெ, ஒண்ணும் கவலப்படாதீங்க’ என்று சொல்லியபடி பேயனைக் கூட்டிக் கொண்டு களத்தின் தெற்கு ஓரத்தில் மூவரும் தனியாகப் போய் உட்கார்ந்தனர்.

யார் கசக்கிப்போனது என்பதைத் தெரிந்து கொள்ள கோபம் கலந்த வேகத்தோடு இருந்தான் பேயன். குத்துக்கால் ஊண்டி உட்கார்ந்த கருப்பணன் ‘எல்லாம் நடுப்பட்டிகாரங்கெதான் வந்து கசக்கியிருக்காங்கெ’ என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் ‘பக்கத்துல செங்குந்தம்னு காவக்காரெயாரும் இருக்கானா?’ என்று கேட்டான் பூச்சி. ‘ஆமாம் பக்கத்து

ஊரு சித்தூரு காவக்காரெ’ என்றான் பேயன். ‘அவெ காவல்ல கசக்க வந்தவகெ தடம் மாறிப் போயி நம்ம காவல்ல கசக்கிட்டாங்கெ’ என்றான் பூச்சி. பேயனுக்கு அப்பொழுதான் கொஞ்சம் நிம்மதியானது. இனி தப்பு நடக்காதுன்னு மடிநெல்லு கொடுத்துவிட்டுதுனால கோபத்தையும் வார்த்தை களையும் அடக்கிச் சுருக்கினான். கொஞ்சம் நேரம் கழித்து ‘செங்குந்தத்தோட அவங்கெளுக்கு என்ன பிரச்சன?’ என்று கேட்டான். ‘அவனும் நடுப்பட்டிகாரெதான்டா... தனிச்சு காவ ஏத்துக்கக் கூடாதுன்னு ஊர் கட்டுப்பாடாம். இவெ ஊருக்குத் தெரியாம காவ ஏத்துபாக்குறானாம். அதுதான் கோவத்துல கசக்க வந்துருக்காங்கெ’ என்றான் கருப்பணன்.

போன வருடம் சிவங்கையில் பெரிய பங்காள வீடொன்றில் கொள்ளை நடந்தது. அந்தக் கொள்ளை வழக்கின் முதல் குற்றவாளியாக செங்குந்தம் சேர்க்கப்பட்டிருந்தான். மொத்தம் எட்டுப் பேரின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வழக்கு மானாமதுரை கோர்ட்டில் நடந்து வந்தது. சப் மாஜிஸ்டிரெட் விஸ்வநாதயர் முன்னிலையில் சாட்சிகள் ஒவ்வொன்றாய் சறுக்கி விழுந்து கொண்டிருந்தன. ஒருநாள் மதியச் சாப்பாட்டு வேளையில் தனதுஅறைக்கு செங்குந்தத்தை மட்டும் தனியாக அழைத்து என்ன நடந்தது என்று விசாரிக்க, செங்குந்தம் நடந்ததை முழுக்க அவரிடம் ஒன்றுவிடாமல் சொன்னான். விஸ்வநாதையர் இப்படி ஒரு மதி நுட்பமான கொள்ளையை இதுவரை கேள்விப்பட்டதே இல்லை. மனிதர் ஆடிப்போனார். இப்படியெல்லாம் நடக்குமா என்று அவரால் நம்பமுடியவில்லை. ஒன்றிரண்டு நாட்களில் சாட்சிகளின் மீதான விசாரணைகள் எல்லாம் முடிந்தபிறகு வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார். தீர்ப்பளித்த பின் செங்குந்த்த்தைத் தன்னை வந்து பார்க்கும்படி டவாலி மூலம் சொல்லிட்டார். மறுநாள் செங்குந்தம் அவரை வீட்டிலே போய் சந்தித்தான்.

விசுவநாதையருக்கு சொந்தமான பல காணி நிலம் சித்தூரில் இருக்கிறது. அவர் சப் மாஜிஸ்திரேட் ஆன பின் அடிக்கடி ஊருக்குப்போய் கவனித்துக் கொள்ள முடியவில்லை. சரியான காவக்காரன் ஒருவனைப் போட்டால் பாதி பிரச்சனை தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்து இருந்தவருக்கு செங்குந்தம் பொருத்தமான வனாகப் பட்டான். விஸ்வநாதையர் சொன்ன பொழுது அவனால் மறுக்கமுடியவில்லை. ஏற்றுக்கொண்டான். உள்ளே போடாமல் வெளியே விட்டவரல்லவா! ஆனால் நடுப்பட்டிக்காரன் காவல் ஏற்பதை ஊர் மந்தைதான் முடிவு செய்யும் என்றொரு வழக்கம் அங்கு இருந்து வந்தது. செங்குந்தம் வழக்கத்தை மீறி அவனாகக் காவலை ஏற்றுக்கொண்டு சித்தூருக்கு வந்துவிட்டான். கொஞ்ச நாள் இவன் எங்கேயிருக்கிறான் என்று ஊருக்குத் தெரியாமல் இருந்தது. இப்பொழுதான் தெரியவந்திருக்கிறது. ஊர் முடிவை மீறியவனின் காவலை குலைக்க வேண்டுமென வந்தவர்கள்தான் தப்பிப் போய் தெரியாமல் பக்கத்து வயலான தனிச்சம்பட்டிக்குள்ளே இறங்கிவிட்டனர்.

அவர்கள் இறங்கியதற்காக, இவர்கள் எல்லோரும் விடிய விடியக் காத்திருந்தனர். கல் மண்டபத்தில் சாய்ந்தபடி இருந்த ஊர்க்காரர்கள் பலரும் தூங்கிவிட்டனர். பேயனும் கருப்பனும் பூச்சியும் தெற்கு மூலையில் உட்கார்ந்து பேசியபடியே இருந்தனர். ‘விடிவெள்ளி மொளக்கப்போகுது, என்னடா இன்னும் காணோம்’ என்று எரிச்சல்

பட்டுக்கொண்டிருந்தான் கருப்பணன். தூரத்தில் கண்மாய்க் கரைமேட்டில் தலையில் மூடைகளைச் சுமந்தபடி மனிதர்கள் வரிசையாக வருவது தெரிந்தது. ‘ஏய்… வந்துட்டாங்கெப் போய்…’ என்றான் பூச்சி. எல்லோரும் சுதாரித்து எழுந்து தயாராயினர். முத்தணன் கொத்துதான் தனிச்சம்பட்டி களத்துமேட்டுக்கு வந்து நின்றது. நேற்று மாலை ஊர்க்கணக்கன் சொன்ன அளவு நெல்லை பேயன் வாங்கி களத்து மேட்டிலே இறக்கி வைத்தான். முதல் களவு ஊரின் முதல் அறுவடையானது.

*

# 104

**நா**கமலையின் வடபுறச்சரிவில் முன்பு வேடமங்கலம் இருந்த இடத்தில் பாழடைந்த கருங்கல் கோபுரம் ஒன்று இருக்கிறது. சுற்றிலும் செடிகொடிகளால் சூழப்பட்டு எளிதில் ஆட்கள் யாரும் உள்ளே நுழையமுடியாத பகுதி அது. உள்ளே போக ஒரு பாதை இருக்கிறது என்பதும், பாதையின் வழியே போனால் நடுமையத்தில் கருங்கல் கோபுரம் ஒன்று இருக்கிறதென்பதும் பழக்கப்பட்ட ஆட்களுக்கு மட்டுதான் தெரியும். வைகையின் தென்கரையில் துவங்குகிற அடர்காட்டுப்பகுதி நாகமலையின் உச்சி வரை படர்ந்து கிடந்தது. அதன் மையத்தில் செடி கொடிகளால் சூழப்பட்டுக் கிடந்தது இந்தக் கற்கோபுரம்.

இப்பொழுது தாதனூர்க்காரர்கள்தான் தங்களது வீட்டைப்போல இந்தக் கோபுரத்தைப் புழக்கத்தில் வைத்துள்ளனர். நாள் தவறாமல் தாதனூரைச் சேர்ந்த யாராவது ஒருவன் அங்கேயே படுத்துகிடக்கிறான். கருங்கல் கோபுரத்தின் வெளிப்பகுதி புதரென மண்டிக்கிடந்தாலும் உள்பகுதி வீட்டின் உள்அறை போல சுத்தமாக இருந்தது. ஒரே ஒரு தீப்பந்தத்தை மட்டும் ஏற்றிவைத்துக்கொண்டால் போதும், யாராலும் கண்டறியப்படாத மிகப்பொருத்தமான இடமாக அது இருக்கும். ஒரே நேரத்தில் ஐந்தாறு மாடுகளைக்கூட கட்டி வைக்கலாம். அந்த அளவிற்கு விசாலமான இடமாக அது இருந்தது. கோபுரத்தில் சொருகப்பட்டிருந்த படிக்கற்கள் ஆட்கள் உட்கார்ந்து கொள்ள வசதியாக இருந்தன. கோபுரத்தின் அடிக்கற்களை நகற்றி நாகமொன்று இறங்குவதைப்போல மரங்களின் வேர்கள் இறங்கு கின்றன. மாடுகளைக் கட்டிவைப்பதற்காகவே செய்யப்பட்ட ஏற்பாடாக அது இருந்தது.

நகரத்தில் காவக்கூலி தர மறுக்கிறவர்களின் வீடுகளிலிருந்து அவிழ்த்து வரப்பட்ட மாடுகள் இதில்தான் கட்டிவைக்கப்படும். அந்த மாடுகள் ஐந்தாறு நாட்கள் இங்கேய இருக்கும். முறையாகத் துப்புக்கூலி வசூலிக்கப்பட்டபின் கழற்றிக்கொண்டு போய் உரியவர்களின் வீடுகளிலே விடப்படும். சில மாடுகள் இங்கேயே நிற்க வேண்டிய நிலை வந்துவிடும்.

அது காவக்கூலி தர மறுப்பதையும் தாண்டி அடுத்தகட்ட செயலில் ஈடுபடுகிற ஒருவனுக்குத் தரப்படுகிற தண்டனையாக இருக்கும். அந்த மாட்டின் உரிமையாளருக்கு யார் மூலமும் துப்பு சொல்லிவிட மாட்டர்கள். அது கழட்டி வரப்பட்டால் அதன்பின் வீடு திரும்பாது. அப்படி கழட்டி வரப்படுகிற மாடுகள் சாதாரண மாடுகளாக இருக்காது. நல்ல ஜாதி மாடுகளாகத்தான் இருக்கும். மாட்டை விரட்டி வரவேண்டும் என்பதற்காக வால்தண்டில் முள் ஒன்றைக் குத்தி வைப்பார்கள். மாட்டின் வேகம் குறைகிறபோது அந்த முள்ளை மெல்லத் தட்டினால் போதும், மாடு படுவேகத்தில் ஓடும். இப்படி ஒரு வழக்கம் வடகண்டத்தில் மாடு பிடிப்பவர்களிடம் இருக்கிறது. ஆனால் தாதனூர்க்காரர்கள் யாரும் அப்படிச் செய்யமாட்டார்கள். சீயான்மார்களுடனான பால் சத்தியத்தின் காரணமாக அப்படியொரு பழக்கம் தாதனூர்க்காரர் களிடம் இல்லை. பெரும்பாலும் மொந்தையாக, தடியாக வால் இருக்கும் மாட்டை அவுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட மாடுகள் மந்துன்னு மெதுவாகத்தான் நடக்கும். கழட்டப் போகும் போது பசுவென்றால் அது சினைக்கு கத்துதா என்று மட்டும் பார்ப்பார்கள். சினைக்கு கத்துகிற மாடு அந்த ரெண்டு மூணு நாளைக்கு யார் போய் கழட்டினாலும் மேலே தாவும். என்ன வித்தை காட்டினாலும் அதுகிட்ட வேலை ஆகாது. உள்ள போறவன் தொழுவத்திலேயோ, வைக்கப்பேருக்கு பக்கத்திலேயே உட்கார்ந்து மாட்டுடைய பின்பக்கத்தைத்தான் முதலிலே பார்ப்பான். அதனுடைய அரையிலிருந்து திரவம் வழிந்து கொண்டிருந்தால் அது சினைக்குத் தயாராகி இருக்கிறது என்று அர்த்தம் அதைத் தவிர மற்ற மாடுகளைக் கழட்டுவார்கள். இல்லை அதத்தான் கழட்டுணும்னா, அன்னிக்கு திரும்ப வந்துவிட்டு ரெண்டு மூணு நாள் கழிச்சி போவாங்க. வீட்டுக்காரன் சினைக்கு போட்டு வச்சிருப்பான். இவங்க போயி கழட்டுனா உடனே அது பாட்டுக்கு பொத்துனாப்புல வந்துகிட்டே இருக்கும். அதேபோல காளை மாடுன்னா கால் காணை இருக்கிற காளையைக் கழட்டக்கூடாது. அது நிக்கிற நிலையிலிருந்தே கால்குளம்பு புண்ணாகி புழு வச்சிருச்சின்னு தெரிஞ்சுக்கலாம். அத இழுத்து நடக்க முடியாது. நகரத்துக்குள் கழட்டும் மாடுகளை விடிவதற்குள் நாகமலைக்கு கொண்டு வந்துவிடுவார்கள். மாட்டைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டால் யாராவது ஒருவன் அங்கேயேதான் இருப்பான். அதுக்கு தீவனம் போடவும், தண்ணி காட்டவும் ஒரு ஆள் அவசியம். ரெண்டு நாளோ மூணு நாளோ மாடு திரும்பவும் வரை ஆள் இருப்பான்.

துப்புக்கூலிக்காக இல்லாமல் திருடுவதை நோக்கமாகக் கொண்டு கழட்டிவரப்படும் மாடுகள் இங்கேயே வாரக் கணக்கில் கட்டப் பட்டிருக்கும். இரண்டு மூன்று மாடுகள் சேரும் வரை வைத்திருப்பார்கள். சில நேரம் 'ரொம்ப நாளாகிப் போச்சு' எனச் சொல்லி விற்றுவிடுவார்கள். ஆரம்பத்தில் மாட்டின் மதிப்பு தெரியாமல் மிகக்குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு வருடமாக பெரியாற்றுப் பாசனப் பகுதி மாட்டுச்சந்தை காவலுக்கு சூரியும், விருமாண்டியும் போனபிறகு நிலைமை மாறிவிட்டது. தகவல் கிடைத்தவுடன் நல்ல ஏவாரியாகப் பார்த்து அவர்களே கூட்டி வந்துவிடுகின்றனர். ஏவாரியை வைகை ஆற்றின் தென்கரையிலே நிறுத்திவிட்டு மாட்டைக் கழட்டிக் கொண்டுவந்து காட்டுவார்கள். முன்புபோல சுழியையோ மச்சத்தையோ வாலையோ பல்லையோ அல்லது வேறு எதையோ ஒன்றை ஒச்சமெனச் சொல்லி விலையை குறைக்கின்ற வேலை எல்லாம் இப்பொது நடக்காது.

ஏவாரியைப் போல கெட்டிக்காரனாக சந்தைக் காவக்காரனும் இருக்கிறான்.

‘கீ காட்டு மாடு குட்டையா இருக்கு, வெல கொறையுமப்பா’ என்று ஏவாரி சொன்னால், ‘கொம்பு ரெண்டும் முன்ன கவுந்து கிடக்குல. நாட்டு மாட்டுக்கு அதவிட என்ன வேணும்?’ என்பான் காவக்காரன்.

‘வயித்துல மச்சம் கிடக்கு, நல்லதில்லையே’ என்றால் ‘வால்ல சுழி இருக்கு. அதவிட என்ன வேணும்’ என்பான் காவக்காரன்.

‘காரி மர கொம்படி வீட்டுக்கு ஆகாதப்பா’ என்றால், ‘குத்துப்பை மடுவப்பா, கொடுத்துவச்சாலும் கிடைக்காது’ என்பான்.

பல்ல வச்சு ஈத்தைக் கண்டுபிடிப்பான் ஏவாரி. காம்ப வச்சு கண்டுபிடிப்பான் கறவைக்காரன். அரையைப் பார்த்து கண்டுபிடிப்பான் கிடைக்காரன். நடையை வச்சு கண்டுபிடிப்பான் காவக்காரன்.

மாட்டின் நுட்பங்கள் தாதனூருக்குப் பிடிப்பட்டபின் கழட்டி வரும்பொழுதோ, விற்கும்பொழுதே பிழை ஏற்படாமல் பார்த்துக் கொண்டார்கள். கச்சேரியின் மீது நம்பிக்கை கொள்கின்ற வீட்டின் கொட்டத்து காடியில் இருந்து கயிறுகள் உருவப்பட்டவாறே இருந்தன.

*

**நி**லா விழுந்துவிட்டதால் கடந்த பத்து நாட்களாக நெல்லுக் கசக்க எந்தக் கொத்தும் போகவில்லை. இன்றுதான் வானம் இருளின் குளத்திற்குள் கொஞ்சம் மூழ்கியிருந்தது. இனி ஒவ்வொரு நாளும் இருள்கூடி வர வர களவுக்குப் போகிறவன் தனக்கான ஒளியைப் பெற்றவனாக இருப்பான். இன்று மீண்டும் போவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தனர். நகர்க் காவலுக்கு போகிற கீக்காவல், மேக்காவல் கூட்டம் போனபின் கொஞ்ச நேரம் கழித்து முத்தணன் கொத்து புறப்பட்டுப்போனது. கூகையன் கொத்தில் இருந்த எல்லோரும் தயாராக இருந்தனர். கூகையனை மட்டும் காணவில்லை. ஊருக்குள் போய்விட்டு வருவதாகச் சொல்லிப் போனவன் இவ்வளவு பொழுதாகியும் இன்னும் வரவில்லை. எல்லோரும் அவனுக்காகக் காத்திருந்தனர். ஊருக்குள் போனவன் உப்பும் வத்தலும் கேட்டு வீடு வீடாக அலைந்தான். சிறுவர்கள் இன்னும் உறங்காமல் விளையாடிக்கொண்டிருந்தனர். நிலவின் மங்கிய வெளிச்சத்தில ‘உசாரு வச்சு’ விளையாட ஆள் குறைவாக இருந்தது. கொஞ்சம் பெரிய பிள்ளைகள் எல்லாம் ‘பூச்சிக்கல்லு’ விளையாண்டார்கள். இருள் அடர்ந்து கிடந்ததால் ‘உப்பு வச்சு’ விளையாட யாரும் தயாராக இல்லை. விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளைக் கடந்து போன கூகையன் நேராக கிழக்கு மூலையில் இருக்கும் தன்னுடைய வீட்டிற்குப் போனான். நடைவேகம் கூடியதாக இருந்தது. மற்ற கொத்துக்கள் எல்லாம் இந்நேரம் புறப்பட்டிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். வடக்கே வெகு தொலைவிற்கு போக வேண்டியிருப்பதால் இந்நேரம் புறப்பட்டால்தான் நடுச்சாமத்திற்கு போய்ச்சேர முடியும். கருது கசக்கி விடிவதற்குள் ஊர் வந்து சேர வசதியாக இருக்கும். புறப்படும் நேரத்தைத் தவறவிட்டுக்கொண்டிருக்கிற பதற்றம் நடையிலே இருந்தது. வாசலில் படுத்துக் கிடந்த நாயை எத்தித் தள்ளிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

மாடக்குழியில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அடுப்புக்குள் எரிந்து அணைந்தும் அணையாமலும் இருந்த சோளத்தட்டையும், துவரமாரும்

புகையை கக்கிக்கொண்டிருந்தன. சுடராய் எழ முடியாமல் நெருப்பு தகதகத்தப்படியே இருந்தது. சித்தடுப்பின் அருகே குத்தவைத்து உட்கார்ந்து ரெண்டு பாதத்தாலும் அழுத்திப் பிடித்து, தலைப்பலகையால் மண்சட்டியை முட்டுக்கொடுத்தபடியே களி கிண்டிக் கொண்டிருந்தாள் அவன் மனைவி காமாயி. அவளுக்கு வேர்த்து தண்ணியாக ஓடிக்கொண்டிருந்தது. சூடு தணியும் முன் கிண்டனும். கொஞ்சம் அழுத்தி அமுக்கினால் முட்டி உடைந்துவிடும். பாதங்கள் பக்குவமாய் முட்டியை அமுக்க கைகள் லாகவமாக பூவரசந்துடுப்பை இயக்க கொண்டிருந்தன.

அவர அவரசமாக உள்ளே வந்தவன் வந்த வேகத்தில் ‘உப்பு வத்தல் ஏதாச்சு வச்சுருக்கியா?’ என்று கேட்டான்.

‘ராவிப் பாரு, வந்த உடனே ஏங்கிட்ட கேக்குறவெ’ என்றாள். பதிலின் வேகத்தில் அடுத்த வார்த்தை பேசாமல் மூலையில் இருந்த குளுமைக்குள் கையைவிட்டுத் தேட ஆரம்பித்தான். ஒன்றும் கிடைப்பது போல் இல்லை. மீண்டும் அவளிடம் கேட்டால் வார்த்தை சூடேறி வரும் என்று அவனுக்குத் தெரியும். எனவே கேட்கவும் முடியாமல் என்ன செய்யவென்று தெரியாமல் முனங்கியவாறே சட்டிமுட்டிகளை உருட்டினான்.

‘பகல்ல பூரா பொடவுக்கு வா...பொடவுக்கு வான்னு பாடா படுத்தி எடுத்தியே, ஒத்த வேல பாக்கவிட்டியா என்னய? பூரா சிறுக்கிகளும் களிய கிண்டி முடிச்சிட்டு படுக்கப் போயிட்டாளுக. சாயந்தரம் வந்து கூழ்பானைய சுரண்ட நத்த ஓடு தேடியே தவிச்சுப் போயிட்டேன். அதுக்கு பெறகு கங்கு வாங்கி வந்து அடுப்பெரிச்சு முடிக்க இந்தா... ராத்திரியாகிப் போச்சு. பெத்துப் போட்டதுகளுக்கு இன்னும் கஞ்சி கொடுக்கல’ என்று முட்டிக்குள் சுழலும் பூவரசத் துடுப்பு போல வார்த்தைகளைச் சுழற்றினாள்.

‘அவ்வளவு வேல இருக்குறவ என்னாத்துக்குலா வந்த? வேல கெடக்குன்னு சொல்லியிருந்தா வுட்டுட்டு போயிருப்பன்ல’ என்றான் கூகையன்.

‘இக்கூ...க்...ஓ அப்பனே இன்னும் இழுத்துக்கிட்டு திரியுறான். நீ தான் வுட்டுட்டு போறவனாக்கும்! போடா எடுவட்ட பயலே, பேச வந்துட்டான் பேச்சு’ என்றாள்.

‘இப்ப என்னா பண்ணனும்ன்றவ?’ என்றான் கொஞ்சம் சத்தமாக.

‘என்னடா ரோசக்காரா, சத்தங் கூடுது? நா போயி எவ கிட்ட யாவது உப்பு வத்தல் வாங்கிட்டு வந்து தர்றேன். நீ உக்காந்து களிய கிண்டு பாப்போம்’ என்றாள்.

கூகையன் சுதாரித்தன். களி கிண்ட சாமர்த்தியம் வேண்டும். மெல்லக் கிண்டினால் உருண்டை விழுந்துபோகும், தின்ன முடியாது. வேகமாகக் கிண்டினால் முட்டி உடைஞ்சு போகும். உருண்டையும் விழுகாம, முட்டியும் உடையாம கிண்டி முடிக்க பக்குவம் வேணும். அது சாதாரண காரியமில்ல. எனவே இந்த ஆபத்தான போட்டிக்குத் தன்னை இழுக்கிறவளிடமிருந்து தப்பிக் ‘நோழி மகளே... உப்பு இல்லாம, வத்தல் இல்லாம என்ன பொழப்பு பொழைக்குற’ என்று ஓங்கிச்சத்தம் போட்டப்படி வீட்டை விட்டு வெளியேறினான். அவளின் பதில் வார்த்தை காதில் விழாத வேகத்தில் அவன் நடை இருந்தது. ஆனால் அந்த நடையைவிட வேகமாக அவளின் வார்த்தை வந்து விழுந்தது. தெருமுக்கு வரை அது அவனைத்

துரத்தியபடி வந்தது. 'இனி நீ என்னமும் வஞ்சுக்கோ...' என நினைத்தபடி அடுத்த தெருவுக்குள் திரும்பி வேலம்மாக் கிழவியின் வீட்டுக்குள் போனான்.

நீண்ட நேரம் கழித்து வந்தவன் 'உப்பு வத்தலும் கேட்டா எவகிட்டயும் இல்ல. இவளுகயெல்லாம் என்ன பொழப்பு பொளக்கிறாளுக...' என்று சத்தம் போட்டபடியே வந்தான். அவன் வர ஏன் நேரமானது என்பது எல்லோருக்கும் புரிந்ததால் அவ்வளவு நேரம் அவனை திட்டிக் கொண்டிருந்த யாரும் எதுவும் பேசாமல் புறப்பட்டனர். களவுக்குப் போகிறபொழுது உப்பு, மிளகு, வத்தல், வெங்காயம் இதில் ஏதாவது இரண்டை நிலையாள் கொஞ்சமாவது இடுப்பிலே வைத்திருக்க வேண்டும். போகிற வழியில் யாருக்காவது சுருக்கென்று ஏதாவது கடித்துவிட்டால் உடனே அவனுக்கு உப்பையும் வத்தலையும் கொடுத்து வாயிலே போடச் செல்லுவார்கள். ஐயோ உரைக்குதுன்னு சொன்னா அது விஷமில்லாத சாதரண பாம்புன்னு அர்த்தம். 'உரப்பே இல்லப்பா...' என்று சொன்னால். சரியான விஷப்பாம்புன்னு அர்த்தம். உடனே கடிச்ச இடத்த கட்டி, ஆள தூக்கி பழஞ்சிக்கரை வைத்தியர்கிட்ட கொண்டு வருவாங்க. வர்ற வழிலே பாதி தூரத்துல நிறுத்தி அவெ மூத்திரைத்த பிடிச்சு அவன குடிக்க வெப்பாங்கெ. வெவரமான பெருசு யாராவது கொத்துல இருந்தா அங்கேயே ஏதாவது ஒரு மருந்துச்செடியைப் பிடுங்கி தின்னவெச்சு காப்பாத்திரும். உப்பும் வத்தலும்தான் எல்லாத்துக்கும் முக்கியம். அது இல்லாம நிலையாள் போகக்கூடாது. கூகையான் வீடு வீடாகத் தேடி அலைந்து அதை வாங்கி வந்தான்.

வழக்கத்தைவிட நேரங் கழித்துத்தான் அவர்கள் புறப்பட்டனர். நாகமலை அடிவாரத்தில் கல்லெடுத்துக் கட்டிக்கொண்டு வைகையில் இறங்கினர். புரட்டாசி பிறந்து மூன்று நாளாகிறது. இந்த மாத்தோடு அறுப்பு முழுவதும் முடிந்துவிடும். அதற்குப்பின் நெல்லு கசக்க அடுத்த வெள்ளாமைக்குத்தான் போகமுடியும். 'ஆளும் பேருமா கொண்டு வந்து சேக்கணுமப்பா....' என்று அறுத்துக்கிடக்கிற கதிரை களத்து மேட்டுக்கு கொண்டு வந்து சேர்க்க சம்சாரி ஏக்கம் கலந்த குரலில் பேசுவதைப்போல அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். ஆற்றைக் கடந்து மெட்டல் ரோட்டிலே கொஞ்சு தூரம் போய் புளியந்தோப்பை ஒட்டி மேடேறுவோம் என மனதுக்குள் கணக்குப் போட்டபடி நிலையாள் கூட்டிக்கொண்டு போனான். பரவை கிராமத்தைக் கடந்து ரெண்டு பர்லாங் தூரத்தைத் தாண்டியவுடன் மாட்டுவண்டி யொன்று ரோட்டின் ஓரத்தில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தது. மாடுகள் ரெண்டையும் அவத்து பக்கத்தில் இருந்த மரத்திலே கட்டி வைத்திருந்தனர். வண்டியை ஒட்டி காண்டாவிளக்கை ஏற்றிவைத்து ஏழெட்டுப்பேர் நின்றுகொண்டிருந்தனர். தூரத்திலேயே வண்டியைப் பார்த்தவர்கள் 'என்னடா கூட்டமா ஆள் இருக்காங்கெ' என்ற சுதாரிப்போடு வண்டியை நெருங்கினார்கள். வண்டியைச் சுற்றி நின்றிருந்தவர்களும் ஒரு கூட்டம் தங்களை நோக்கி வருகிற தென்ற பயத்தோடு இருந்தனர். அருகில் போனதும் 'என்னப்பா நிக்கிறீங்க?' என கூகையன் விசாரித்தான். 'அச்சு முறிஞ்சிருச்சு. அதுதான் என்ன செய்யிறதுன்னு தெரியாம நின்னுகிட்டு இருக்கோம்' என வண்டிக்காரன் உள்ளுக்குள் நடுங்கியபடி சொன்னான். அவனுக்கு மேலெல்லாம் வேர்த்தது. மற்றவர்கள் யாரும் வாய் திறக்கவில்லை. வந்திருப்பவர்களின் தோற்றம் யார் என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. 'என்னத்துக்காக...

எங்க போறீங்க?' என்றான் கூகையன். கூட்டத்திலிருந்த ஒருவன் பயந்த குரலில் 'நாங்கெல்லாம் தட்டார்களய்யா, தில்லைவனம் பிள்ளை வீட்டுல விஷேசம். நக செய்யிறதுக்காக ஒரு மாசம் தங்கியிருந்து வேல பாக்கப் போறோம்' என்று சொன்னான்.

'எந்த தில்லைவனம் பிள்ளை?' என்று படுவேகத்துடனும் ஆர்வத்துடனும் கேட்டான் கூகையன்.

'மாசி வீதி தில்லையவனம் பிள்ளைதாங்க. அவுக அம்மா வீட்டுல தெப்பம்பட்டியில வச்சு நக செய்யிறதுக்காக வரச் சொல்லியிருக்காரு' என்றான்.

வழியை மறித்து வந்து துப்பை ஆர்வத்தோடு வாங்கிவைத்துக் கொண்டு புறப்பட்டனர்.

தில்லைவனம் பிள்ளைக்காக தாதனூர் நீண்ட நாட்களாகக் காத்திருக்கிறது. அவர் மதுரையின் சேர்மனாக இருந்தபோது, ஒரு பக்கம் ரகசியமாக காவக்கூலிய கொடுத்துவிட்டு, இன்னொரு பக்கம் காவலை ஒழிக்க சகல வேலையையும் பார்த்தவர். என்னைக்காவது சிக்கட்டும் எனக் காத்திருந்த ஊருக்கு நல்ல செய்தியோடு கூகையன் கொத்து அதிகாலையில் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தது.

*

**தெ**ப்பம்பட்டி கீழ்நாட்டுக்கார்களின் காவல். உள்ளே நுழைவது தேவையில்லாத பிரச்சினைதான். ஆனாலும் விடக்கூடாது என்று ஊர் முடிவுக்கு வந்தது. துப்புக் கிடைத்ததிலிருந்து பொருளை எடுத்துவிட்ட சந்தோஷத்தில் எல்லோரும் இருந்தனர். துப்பை இரண்டு நாட்களாக சாராயப் பானையில் ஊறப்போட்டு சிரட்டாங்குச்சியால் மோந்து மோந்து குடித்தனர். மூன்றாவது நாள்தான் என்ன செய்யலாம் என்று யோசித்தனர். ஊரையும் வீட்டையும் பெட்டியையும் பார்த்துவர தெப்பம்பட்டிக்கு ஒருவனை அனுப்புவது என்று முடிவானது. சுழியன்தான் பொருத்தமான ஆள் என ஊர் பெரியாம்பிள சொன்னார். அன்று பகலிலே பழைய ஊருக்குப் போய் சங்கனைப் பார்த்து தேவையான பொருட்களை எல்லாம் வாங்கிப் பொட்டலம் கட்டி வைத்துக் கொண்டான் சுழியன்.

மறுநாள் அதிகாலை களவுக்குப் போன எந்தக் கொத்தும் ஆலமரத்தடிக்குள் நுழைவதற்குள் வெளியேறினான். கஞ்சிப்பொழுதுக்கு யானைமலையின் அடிவாரததுக்குப் போய்விட்டான். பூவரசம் மரம் ஒன்றின் அடியில் வைத்து பொட்டலத்தைக் கழட்டி வேலையைத் துவக்கினான். முதலில் மெலிந்திருந்த தனது அரைஞாண் கயிற்றை அத்துவிட்டு தடியான கயிறை இடுப்பிலே கட்டினான். களவுக்கு போகிற யாரும் பிடித்தால் சட்டென அறுந்துபோவதைப்போல சிறுத்த கயிறைத் தான் கட்ட வேண்டும். ஆனால் இன்று போகிற வேலைக்கு தடித்த கயிறு தேவை. அதன்மேல் கோவணத்தை இறுக்கக் கட்டி, சிவப்பும் வெள்ளையும் பச்சையும் கலந்த ஒருவகையான ஒட்டுப் போட்ட துணியை எடுத்து தார்ப்பாச்சி ஒன்றையும் கட்டிக் கொண்டான். ரெண்டு கடுக்கன்களை காதிலே மாட்டினான். பாசிமணியும், குண்டுமணியும், சோளிமணியும் கோர்த்திருந்த ரெண்டு மாலையை எடுத்து கழுத்திலே போட்டுக்கொண்டான். செப்புக்காப்பை இரண்டு கையிலும்

மாட்டிக்கொண்டான். செந்தூரத்தை எடுத்து பெரிய பொட்டொன்று வைத்துக் கொண்டான். கக்கத்தில் ஒரு சிறு கோலை சொருகிக்கொண்டவன் கெண்டையிட்ட முடியை அவிழ்த்துவிட்டான். அவிழ்ந்த முடி சடை சடையாய் தோள்வரை தொங்கிக்கொண்டிருந்தது. பக்கத்தில இருந்த பாறை ஒன்றின் மேல் ஏறி தெப்பம்பட்டியைப் பார்த்தன். சுற்றிலும் வயல்வெளிகளில் நெற்கதிர்கள் சாய்ந்து கிடந்தன. எங்கும் அறுப்பு வேலை நடந்து கொண்டிருந்தது. கருதுக்கட்டை தலையில் சுமந்து ஆணும் பெண்ணும் ஓடிக் கொண்டிருந்தனர். வயல்வெளியும் களத்துமேடும் பரபரப்பாக இருந்தது.

சப்பைக்காலைப் போல ரெண்டுகால்களையும் சாய்த்துச் சாய்த்து ஊரை நோக்கிய வண்டிப்பாதையில் நடந்தான். வார்த்தைகளை எந்த மாதிரி இழுத்துப்பேச வேண்டும் என்று மனதுக்குள் பயிற்சி எடுத்தவாறு முன் நகர்ந்தான். களத்து மேட்டிலே பேசிக்கொள்ளும் சத்தம் துல்லியமாகக் கேட்டவாறு இருந்தது. ஊரைச் சுற்றி ஒரு மலைப்பாம்பு போல பெரியாற்று வாய்க்கால் வளைந்துபோனது. வாய்க்காலின் கரை நெடுக நடப்பட்ட மரங்கள் ஆளுயரத்துக்கு வளர்ந்திருந்தன. வெள்ளைக் காரன் அந்தந்த கிராமத்தையே மரங்களுக்குப் பொறுப்பாக்கி இருந்ததால் ஆடுமாடு மேய்ந்துவிடாமலும், ஆட்கள் யாரும் ஒடித்துவிடாமலும் கண்ணும் கருத்துமாக கிராமம் மரங்களைப் பார்த்துக் கொண்டது. இல்லையென்றால் அபராதத்தை கிராமம் கட்ட வேண்டியதாகிவிடும். மரங்கள் வரிசையாக நின்றிருந்தது என்பது ஊரைச் சுற்றி வேலி போட்டது போல் இருந்தது.

வாய்க்காலுக்கு மேலிருந்த கருங்கல் பாலத்தின் மீது உட்கார்ந்து சுற்றும் முற்றும் பார்த்தான். வாய்க்காலில் தண்ணீர் ஓடவில்லை. ஆனால் ஈரப்பதம் இருந்தது. ரெண்டு கரைகளிலும் படர்ந்து பச்சைப்பசேலென செடிகள் இருந்தன. மாட்டுவண்டி ஒன்று பாலத்தைக் கடந்து வயல் பக்கமாகப் போனது. வண்டியின் மேல் கஞ்சிச்சட்டியை ஆடவிடாமல் பிடித்துக் கொண்டிருந்த சிறுவன் பாலத்தின் மீது உட்கார்ந்திருந்த விகாரமான ஆளைப் பார்த்தவாறே போய்க்கொண்டிருந்தான். வண்டிச்சக்கரங்கள் பாலத்தின் மீது கிடந்த பட்டியக்கல்லில் கடமுடவென உருண்டு போயின. கொஞ்ச நேரம் கழித்து பாலத்தைவிட்டு எழுந்து ஊருக்குள் நடந்தான். ஊரை முழுச்சுற்றாக வெளிப்புறம் சுற்றிவந்தான். ஆண் பெண் எல்லோரும் களத்திலும் வயலிலும் கிடந்தனர். அறுப்பு அம்பாரம் அம்பாரமாகக் குவிந்து கிடந்தது. ரெண்டு மூன்று நாய்கள் இவனைப் பார்த்தும் குரைத்துக்கொண்டு விரட்டி வந்தன. ‘ச்சூ’ என குனிந்து கல்லெடுப்பதைப் போன்று சாடை காட்டி விரட்டினான். பிணையலுக்கு நாலு மாட்டைப் பிடித்துவந்த பையன் இவனை மேலும் கீழுமாக வெறித்துப் பார்த்தபடி வயலுக்குள் இறங்கினான். முழு வீச்சோடு வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அனைத்தையும் பார்த்தவாறு நடுத்தெருவின் வழியே ஊருக்குள் நுழைந்தான்.

கூரைவீடுகளும் ஓட்டுவீடுகளும் நிறைந்திருந்தன. நேராக மந்தைக்குப் போனான். மந்தை முழுவதும் வைக்கோலைக் காயப்போட்டு வைத்திருந்தனர். சாவடியில் நான்கைந்து பெருசுகள் இருந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தபடி வந்தவன் திரும்பி வலது பக்கத் தெருவைப் பார்த்தான். அந்தத் தெரு முழுக்க காரை வீடுகள் தானிருந்தன. தெருவின் மையத்தில் இரண்டு மாடி உயரத்தில் பெரிய

விஸ்தாரத்தோடு இருந்த வீடொன்று இவனைப்பார்த்ததும் உண்மையைச் சொல்ல ஆரம்பித்தது. வீட்டைப் பார்த்தவாறே சாவடியை ஒட்டி நடந்தான். படியோரத்தில் படுத்துகிடந்தசெவலை நாயொன்று இவனைக் கண்டதும் எழுந்து குரைக்க ஆரம்பித்தது. சாவடியில் இருந்தவர்கள் நாயை அதட்டி விரட்டினர். அது போவதாக இல்லை. ‘போறயா என்ன?’ என்று உட்கார்ந்திருந்த பெரியவர் கைக்கம்பை எடுத்து ஓங்கினார். அதன் பின்னர் கொஞ்சம் நகர்ந்தது. நாய் நகர்ந்ததும் இவனைப் பார்த்து ‘என்னப்பா சமாச்சாரம்? என்ன இங்க வந்திருக்க?’ என்று கேட்டார்.

‘சாமீ... ராக்கோடாங்கி சாமீ... ஊருக்குள்ள வெறிநாய் ஏதாச்சம் கெடாக்கான்னு பாத்துட்டு போக வந்தோம் சாமீ..!’ என்றான்.

‘எங்க ஊர்ல வெறிநாய் ஏதும் இல்லப்பா’ என்றார் பெரியவர்.

அடுத்து அவர் பேச்சுக் கொடுக்காதபடி ‘சரி... சாமீ’ என்று சொல்லியவாறு பெரிய தெருவுக்கு எதிரில் இருந்த தெருவுக்குள் நுழைந்தான். வேகவேகமாக அந்தத் தெருவின் வழியேபோய் முக்குத்திரும்பி ஒரு சுற்றுச் சுற்றி பெரிய தெருவுக்கள் நுழைந்தான். மீண்டும் அதே நாய் தெருவுக்குள்ளிலிருந்து குரைத்தபடி ஓடிவந்தது. கைகள் வேகமாகக் குனிந்து கல்லை எடுக்கப் போயின. ஆனால் கட்டுப்படுத்தியவாறு கம்புக்கூட்டிலிருந்த கோலை எடுத்து நீட்டி ‘ச்சூ...ச்சூ...’ என்று சொல்லிக்கொண்டே நடந்தான். அது விடாமல் குரைத்துக்கொண்டேயிருந்தது. அதன் குரைப்பொலி மேலும் சில நாய்களை வரவழைத்தது. கால்களின் வேகம் குறைந்தது. நிதானமாக எட்டு வைத்தான். முக்கிலிருந்த பலசரக்குக் கடையை ஒட்டி கூட்டு வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. வண்டிக்குள் வெள்ளைத் தலைப்பாகையும் நெடுங்சட்டையும் மினுக்கும் வஸ்திரமும் அணிந்த படாடோபமான மனிதர் ஒருவர் உட்கார்ந்திருந்தர். அவர் பின்புறமாக எதையோ பார்த்துக்கொண்டிருந்ததால் முகம் தெரியவில்லை. ஒரு வேலை தில்லைவனம் பிள்ளையாக இருக்குமோ என நினைத்தபடி வண்டியையே பார்த்துக் கொண்டிருந்தான். சக்கரத்தில் கொடிபோல் வரையப்பட்டிருந்த வண்ணப்பூச்சு வித்தியாசமாக தெரிந்தது. கடையில் வெற்றிலையும் கொட்டப் பாக்கும் வாங்கிக்கொண்டிருந்த வண்டிக்காரன் இவனைப் பார்த்ததும் ‘என்ன இங்க நின்னு பாத்துக்கிருக்க, என்ன வேணும்?’ என்று அதட்டி விசாரித்தான்.

‘சாமீ... ராக்கோடாங்கி சாமீ... ஊருக்குள்ள கோயில் மாடு ஏதாச்சும் கெடக்கான்னு பாத்துட்டு போக வந்தோம் சாமீ...’ என்றான்.

‘கோயில் மாட்டையெல்லாம் அழகர் மலையிலே போயி விட்டுருவோம், இங்க ஒண்ணுமில்ல போப் போ...’ என்று விரட்டினான்.

தெருவுக்குள் எட்டு வைத்து வீட்டை நோக்கி நடந்தான். வீட்டின் முன்புறம் இரண்டு விசாலமான திண்ணை வைத்து நடுவில் படி இறங்கி தெருவுக்கு வருகிறது. குறுக்கும் நெடுக்குமான கம்பிகளைக்கொண்ட தேக்குச்சட்டங்கள் திண்ணையைச் சுற்றிஅடைந்திருந்தன. திண்னைக்கு மேலிருக்கும் ஜன்னலின் வழியே உள்ளேயிருப்பது தெரியவில்லை. கொல்லைப்புறத்தில் காலியிடத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் இருந்தது. ரெண்டு வேம்புகள் நின்று கொண்டிருந்தன. நடுவில் இருந்த அறையின் ஜன்னல்தான் தெருவோரமாக இருந்தது. எனவே அதற்கு எதிர்ப்புறம்

கிடந்த குப்பை மேட்டின் மேல் ஏறினான். கல்யாணத்துக்குத் தேவைப்படும் விறகுகளை அதற்குள் வெட்டிக்கொண்டுவந்து போட்டிருந்தனர். விறகுகளின் மேல் ஏறி உட்கார்ந்து எதிரில் தெரிந்த ஜன்னலின் வழியே பார்த்தான். உள்ளே முற்றத்திலும் அதைச் சுற்றிய வராண் டாவிலும் ஆட்களாக இருந்தனர். விறகுக்கட்டு ஒன்றின் மேலேறிக் குத்தவைத்து உட்கார்ந்தான் எல்லாம் நன்றாகத் தெரிந்தது.

முற்றத்தின் நடுவில் உலை போட்டு பெரிய தட்டார்களும், உதவிக்கு இருந்த பையன்களும் லொட்டு லொட்டு என்று தட்டியபடியே இருந்தனர். தண்ணீர் வைக்கப்பட்டிருந்த செப்புப்பாத்திரங்கள் ஒவ்வொருவருக்கும் பக்கத்தில் இருந்தன. சின்னச் சுத்தியை வைத்துக்கொண்டு தடவிக் கொடுப்பதைப்போலத் தட்டிக்கொண்டிருந்தனர். வராண்டாவில் இருந்தவர்கள் தங்கத்தை உலையிலிட்டு சதா ஊதி ஊதி இவர்களிடம் கொடுத்துக் கொண்டி ருந்தனர். முற்றம் முழுக்க விறுவிறுப்பாக வேலை நடந்தது. தீப்பொறிகள் அவ்வப்போது மேலேறிக் காற்றில் கரைந்து கொண்டிருந்தன.

சுழியன் ஜன்னலை கூர்ந்து பார்ப்பதும் தெருவில் யாராவது வருகிறார்களா என்று இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் திரும்பிப் பார்ப்பதுமாக இருந்தான். வேலைகள் நடந்து கொண்டிருந்தன. சம்மணமிட்டபடி உட்கார்ந்திருந்த வயிறு பெருத்த ஒருவன்தான் கைக்கு அடக்கமான ஒரு சிறு பெட்டிக்குள் இருந்து தங்கத்தை எடுத்துக் கொடுப்பதும், வாங்கி வைப்பதுமாக இருந்தான். இவன் எந்த அறைக்கள் போய் இந்தப் பெட்டியை வைப்பான் என்பது தான் தெரிந்து கொள்ளவேண்டியது. அதற்காக சுழியன் காத்துக்கொண்டேயிருந்தான். மீண்டும் செவலை நாய் இடது பக்கமிருந்து வந்தது. ‘குரைத்து காரியத்தை கெடுக்கப்போகிறதே’ என நினைத்து விறகுக்கட்டைகளின் ஊடே அப்படியே படுத்து மறைந்து கொண்டான். அது நேராக எதிர்மு¬யை நோக்கி ஓடியது. மீண்டும் எழுந்து ஜன்னலை கூர்ந்து கவனித்தான். சாப்பாட்டுப் பொழுது வந்ததால் தட்டார்கள் வேலையை முடித்தனர். வயிறு பெருத்த நபர் கையை ஊன்றிப் பெரும்பிரயத்தனம்செய்து எழுந்தார். மெல்ல நடந்து வலது மூலையில் இருந்த அறைக்குள் நுழைந்தார். சுழியன் அதைத் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தபொழுது முற்றத்தில் இருந்த ஒருவன் ஒண்ணுக்கு இருப்பதற்காக வீட்டைவிட்டு வெளியே வந்து குப்பை மேட்டின் மேலே ஏறினான். குனிந்து எதையோ யோசித்தபடி நடந்து வந்தவன் சுழியனுக்கு இரண்டடி முன்னால் வரை வந்து அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றான். நின்றவனைப் பார்த்து வலிந்து சிரித்தான் சுழியன். முன் பல் ரெண்டும் முனையில் உடைந்திருந்ததால் மாட்டு லாடம் போல் வளைந்து நீண்டன. விகாரமான அந்த மனிதனைப்பார்த்ததும் அதிர்ச்சியோடு, எதுவும் பேசாமல் வந்தவன் அப்படியே கீழே இறங்கினான். சுழியன் சட்டென ஜன்னலைப் பார்த்தான். அறைக்குள் போனவர் வெளியில் வந்து கதவைச் சாத்தினார். அவர் கையில் நகை வைத்திருந்த சிறுபெட்டி இல்லை. வந்தவேலை முடிந்தது. வந்தவன் சிறு வேலையை முடிக்காமலேயே இவனைத் திரும்பித் திரும்பி பார்த்தபடி போய்க்கொண்டிருந்தான். அவன் போகட்டும் என்று எழுந்து குப்பையை விட்டு இறங்கித் தெருவிலே நடந்தான். வலது கோடியில் இவனைத் தேடியபடி நின்று கொண்டிருந்த செவலை நாய் தனது தெருவின் நடுவில் அவன் நடந்து போவதைப் பார்த்தும் குரைத்துக்

கொண்டு பாய்ச்சல் வேகத்தில் ஓடிவந்தது.

*

**க**ருப்பணன் கொத்து புறப்பட்டது. அந்த கொத்தில் வழக்கமாக ஐந்து பேர் போவர்கள். இன்று சுழியனையும் சேர்த்து ஆறு பேராகப் போனார்கள். தில்லைவனம் பிள்ளையை ஏதாவது செய்தாக வேண்டும் என்று காத்திருந்த ஊரின் கோபத்துக்கு வடிகாலாக இருந்தது அவர்களின் நடை. இதனால் அந்தக் கல்யாணமே நின்றால் கூட பரவாயில்லை என்ற முடிவோடு ஊர் பெரியாம்பிள இருந்தார். ஆலமரக்கிளைகள் அசைந்து கொடுத்து தனது மைந்தர்களை அனுப்பி வைத்தது. தெப்பம்பட்டி கீநாட்டுக்காவல் என்பதால் பொருளை எடுப்பதைவிட முக்கியம் எந்தத் தடயமுமின்றி வெளியேறுவதுதான். அதற்குரிய மதி நுட்பத்தோடு கருப்பணன் முன்னே போய்க்கொண்டிருந்தான். அந்தத் தெருவுக்குரிய செவலை நாய் ஊருக்கு வெளியிலே அகப்பட்டால் நன்றாக இருக்கும் என்று யோசித்தப்படி வந்து கொண்டிருந்தான். நகர் காவலுக்குப் போகிறவர்கள் புறப்படும் முன்பே புறப்பட்டதால் விரைவிலேயே யானை மலை அடிவாரத்துக்கு வந்துசேர்ந்தனர். அதே பூவரச மரத்தடியிலே வந்து உட்கார்ந்தனர். நிலவு பச்சிளம் பல்லைப்போல் சிறுத்துத் தெரிந்தது. வெண்ணிற மேகக் கூட்டமொன்று தென்மூலையில் மிதந்து சென்றது. நட்சத் திரங்கள் ஏகத்துக்கு மின்னிக்கொண்டிருந்தன. கருப்பணன் வானத் தைப் பார்த்தான். ரெட்டிய கெடுத்த வெள்ளிக்காகக் காத்திருந்தனர். வந்து ஒரு பொழுதானது. பக்கத்து கிராமம் ஒன்றில் தலைக்கோழி கூவும் சத்தம் கேட்டது. அவர்கள் புறப்படத் தயாரனார்கள். ஊருக்குப்போகும் வண்டிப்பாதையில் போனால் எங்கிருந்தாவது காவக்காரன் பார்த்துவிடுவான். அவன் கண்ணில் படாமல் போக யானைமலையின் பின்புறமிருக்கிற கள்ளிக்காட்டு வழி போகலாம் என்றான் சுழியன். அது கொடிக் கள்ளியும், ரணகள்ளியும், சதுரக்கள்ளியும் நிறைந்தகாடு. ஊரே விரட்டிவந்தாலும் அதற்குள் பத்து எட்டு உள்ளே போனால் போதும், ஒருவனும் உள்ளே வரமுடி யாது. ஆனால் உள்ளுக்குள் போனவன் ரத்தம் சொட்டச் சொட்டத் தான் வெளியேறி வரமுடியும். அப்படி ஒரு கொலைபாதகக் காடு.

காட்டுக்குள்ளே போகாமல் அதையொட்டியே போய் ஊருக்குள் நுழைந்துவிடலாம் என முடிவு செய்து போனார்கள். பகலெல்லாம் அறுவடை மும்முரமாக நடந்து கொண்டிருந்ததால் ஊரே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. கள்ளிச்செடிகளை ஒட்டி ஒளிந்து உட்கார்ந்து போய் ஒரு வழியாக ஊருக்குள் நுழைந்தனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக லாந்தர் விளக்குகள் தெரிந்தன. களத்துப்பக்கம் பந்தம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. உலர்ந்து கிடந்த ஊர் நெல்லின் வாசனையைப் போர்த்திக்கிடந்தது. சுழியன் பதுங்கியபடி பெரிய தெருவை நோக்கி முன்னகர்ந்து போனான். அவன் கண்கள் செவலை நாய்க்காக அலசியபடி இருந்தன. பெரிய தெருவின் முக்கு வீட்டுச்சுவரை ஒட்டி ஆறு பேரும் பதுங்கி நின்றனர். தெருவின் மையத்தில் குப்பை மேட்டருகே அது படுத்துக்கிடந்தது. கருப்பணன் எறிவதற்கான இடத்தைத் தேர்வு செய்தான். ஒருவேளை நாய் சத்தம் கொடுத்தாலும் ஆட்களுக்குக் கேட்டுவிடக்கூடாது. அப்படியொரு இடத்தைத் தேர்வு செய்தனர். முக்கிலிருந்து பத்து எட்டு தெருவுக்குள் போய் சுவரோரமாக நின்று

கொண்டிருந்த கருப்பணன் சுழியனுக்கு சைகை காண்பித்தான். சுழியன் நாயின் பார்வைக்கு படுவதைப்போல 'ச்சூ...ச்சூ... என்று கூப்பிட்டான். ஓசை கேட்டதும் சட்டென தலையை தூக்கிப்பார்த்த கண நேரத்துக்குள் நான்கு கால் பாய்ச்சலில் ஓடிவந்தது. சுழியன் அதை எதிர்நோக்கித் தயாராக இருந்தான். கணித்திருந்த எல்லைக்குள் வந்தபொழுது கருப்பணன் எறிந்த கல் காதேடு சேர்த்து தாடையைப் பிய்த்தது. வந்த வேகத்தில் 'வீ...ச்...' என்ற சத்தத்தோடு அரை வட்டத்தில் சுற்றி விழுந்தது. ஒருவேளை கருப்பணனைத் தாண்டிவிட்டால் நேராக மேல தவ்வவிட்டு வாங்கி, நெஞ்சுக்கூட்டுக்குள் கத்தியை இறக்க சுழியன் தயாராக இருந்தான். ஆனால் இதற்கெல்லாம் அடுத்தவனுக்குக் வாய்ப்புக் கொடுத்தால் அவன் எப்படி கன்னம் போடுகிற கூட்டத்துக்கு நிலையாளாக இருக்க முடியும்? எறி வசமாகப் பிடித்துவிட்டது நாயின் சத்தத்திலிருந்தே தெரிந்தது. வலி தாங்காமல் குரைக்கும் சத்தத்திற்கும், உயிர்பிரியும் சத்தத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. கல்லை எறிந்தவுடன் கருப்பணன் நின்றுகூடப் பார்க்காமல் சுவரை ஒட்டி வேகமாக முன்நகர்ந்து போனானன். சுழியன் முன்னே வந்து நாயை இழுத்து ஓரத்தில் இருந்த சாக்கடைக்குள் போட்டுவிட்டு அங்கே வழிந்துகிடந்த ரத்தத்தை மறைக்க மண்ணைக் காலால் கிளறி மூடிவிட்டு சுவரோரமாக வந்தான்.

எல்லோரும் குப்பை மேட்டின் மேலே வந்து உட்கார்ந்தனர். எதிரில் ஒரு ஜன்னல் மட்டும் காற்றோட்டத்திற்காகத் திறந்திருந்தது. சுழியன் குறிப்பால் உணர்த்தினான். நிலையாளின் கண் அறைக்குள் இருந்த இருட்டை உறிஞ்சி எடுத்துக்கொண்டது. எல்லோரும் சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே இறங்கினர். தெருவில் யாராவது வருகிறார்களா என்பதைப் பார்க்க ஒருவனை மட்டும் கொல்லைப்புறத்தில் இருந்த வேப்பமரத்தின் மேல்கொப்பிலே உட்காரவைத்தான் நிலையாள். சின்ராசுவை மேலே போகச் சொன்னான். மரத்தின் கொப்புகளின் வழியே மேலே ஏறிப்போய்க்கொண்டிருந்தவன் பாதி கொப்பு ஏறியதும் அப்படியே நின்றான். பிடித்துப் போகிற கொப்பின் உச்சியில் காக்கையின் கூடொன்று இருந்தது. காக்கை குஞ்சு பொரிக்க மட்டுமே கூடு கட்டும். நிச்சயம் அதில் முட்டையோ குஞ்சோ இருக்கும். ஆளைப் பார்த்துவிட்டால் அவ்வளவுதான், கத்தி எல்லா காக்காய்களையும் ஒன்று சேர்த்துவிடும். அப்புறம் வெரட்டு பெத்து ஓடவேண்டியது தான் என யோசித்தபடி கொப்பிலே உட்கார்ந்து அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவன் ஏன் ஏறாமல் உட்கார்ந் திருக்கிறான் எனப் புரிந்துகொண்ட நிலையாள் இறங்கிவரச் சொல்லி சைகை காண்பித்தான். அவன் இறங்கி வந்ததும் வீட்டின்மறுபுறம் இருந்த மரத்தின் மீது ஏற முடிவானது. ஆனால் அந்த மரத்திலிருந்து மாடியில் இறங்கவதற்கான உச்சிக்கொப்பு போதிய பலம் இல்லாததுபோல் தெரிந்தது. நிலையாள் சின்ராசுவை நிறுத்திவிட்டு மொக்கையனை மேலே ஏறச் சொல்லி சைகை காண்பித்தான். மொக்கை கைக்கம்பை சின்ராசுவிடம் கொடுத்துவிட்டு மேலே ஏறினான். மரப்பட்டைகளில் இருக்கும் செதில்கள் உதிராமல் உடல் மரத்தோடு மரமாக ஒன்றிப் போய்க்கொண்டிருந்தது. மாடியில் இறங்க சரியான அளவு உச்சிக்கொப்பு வளைந்து கொடுத்தது. வில்லை வளைப்பதைப்போல வளைந்து மாடியில் இறங்கி உட்கார்ந்தான்.

மாடி முழுவதும் நெல் காயப்போட்டிருந்தனர். மிதிப்பட்டு சத்தம் கேட்காமல் இருக்க குத்துக்கால் ஊண்டி நடந்து எதிர் முனைக்குப்

போனான். அங்கிருந்து எட்டி முற்றத்தைப் பார்த்தான். நடுமையத்தில் தட்டார்களின் சாமான்கள் பரப்பிக்கிடந்தன. எட்டு வரிசைக்கு நாட்டு ஓடுகள் வேயப்பட்டிருந்தது. சித்து ஓடுகள் வேய்ந்திருந்தால் கொஞ்சம் வேலை கூட. நாட்டு ஓடு வேய்ந்ததால் விரல்களால் கவ்விப்பிடித்து இறங்க வசதியாய் இருந்தது. ஓடுகளின் மேல் காலூன்றி இறங்கியவன் கீழ்முனையில் இருக்கும் இரண்டு ஓடுகளைப் பக்குவமாய்கழட்டி எடுத்து மேல்வரிசை ஓடுகளின் மேல் வைத்தான். புற்றுக்குள்ளிலிருந்து பாம்பு வெளிவருவதைப்போல கருத்த கைமரம் அவனின் பிடியை எதிர்பார்த்தும் தலையை நீட்டியது. கைமரத்தைப் பிடித்து உள்ளே கவுந்தவன் தொங்கியபடி கால் ஊன்றுவதற்கான இடத்தைக் கணித்து இறங்கினான். இறங்கியவுடன் பக்கத்தில் இருந்த மரத்தூணோடு ஒட்டியபடி நின்று வீடு முழுவதையும் பார்த்தான். முற்றத்தின் தாவாரம் முழுவதும் தட்டார்கள் படுத்திருந்தனர். மாடக்குழிக்கு மட்டுமே வெளிச்சம் கொடுக்கும் அளவு விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. உள்வீட்டுக்குள் போகும் கதவு தாழிடப்படாமல் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. தொப்பையைக் காத்து வாங்கவிடுவதைப்போல ஒருவன் வேட்டி முழுக்க இடுப்பிலே சுருண்டிருக்க பிருஷ்டத்தை காத்துவாங்கவிட்டு குப்புறப்படுத்துக் கிடந்தான். பித்தளைப் பாத்திரங்கள் இங்குமங்குமாகச் சிதறிக் கிடந்தன. எல்லாவற்றையும் பார்த்தபடி வெளிக்கதவை நோக்கி நடந்து வந்தான். தட்டார்கள் திருகாணியைச் சத்தமின்றி கழற்றுவதைப்போல தாழ்ப்பாளை ஓசையின்றி நகற்றினான்.

நிலையாள், சின்ராசுவையும் இன்னொருவனையும் கதவையொட்டி வெளியே நிறுத்தினான். உள்ளே இரண்டு தூண்களின் அருகே கைக்கம்போடு நிலையாளும் சுழியனும் நின்று கொண்டனர். மொக்கை தேடிவந்த அறைக்குள் போனான். அவன் இடுப்பில் தொறக்குச்சியாகப் பயன்படும் பலவிதமான கம்பிகள் இருந்தன. எல்லோரும் சுதாரிப்பாக ஆங்காங்கே நின்று கொண்டிருந்தனர். அறையில் தூக்கம் நிரம்பி வழிந்தது. குறட்டைகள் ஒன்றிரண்டு உயர்ந்து அமுங்கின. எவ்வளவு மதிப்பிருந்து என்ன, வாசனையே இல்லாத ஒரு தொழிலைச் செய்கிறவனின் நாசி எதையும் கண்டறியாது. அடுப்புக்கரி வாசம் மட்டும் முற்றம் முழுவதும் நிரம்பியிருந்தது. உள்ளே போனவனுக்கான நேரம் கூடுதலாகிக் கொண்டிருந்தது. இடது ஓரத்தில் படுத்துகிடந்த ஒருவன் உருண்டு புரண்டு கொண்டிருந்தான். அநேகமாக அவன் எந்திரிக்க வாய்ப்புண்டு என யோசித்த நிலையாள் வெளியில் இருந்தவனை அழைத்து விரலை நீட்டினான். வந்தவன் கைக்கம்போடு அவன் தலைமாட்டிலே குத்த வைத்து உட்கார்ந்து கொண்டான். சிறுபெட்டியைக் கையில் எடுத்தப்படி மொக்கை அந்த அறைக்குள்ளிருந்து வெளியே வந்தான்.

புருண்டு கொண்டிருந்தவன் முழிப்பு தட்டி மெல்ல கண்களைத் திறந்தான். எதிரிலிருந்த தூண் ஓரமாகக் கைக்கம்புகளோடு ஆட்கள் நின்று கொண்டிருந்தனர். தலைமாட்டிலிருந்தவனைப் பார்க்காமலேயே அப்படியே கண்களை இறுக மூடிக்கொண்டான். நாலுபேரும் ஒவ்வொருவராக அறையை விட்டு வெளியேறினர்.

மரக்கொப்பின் மேலே உட்கார்ந்தவன் வெகுநேரமாகத் தெருவை அங்குமிங்குமாகப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அப்போது எங்கிருந்தோ பறந்துவந்த ஆந்தையொன்று அவனுக்கு கீழே திண்ணை ஓரம் நீண்டு

கிடந்த கொப்பிலே வந்து அமர்ந்தது. பொருளை எடுத்துக் கொண்டு ஐந்து பேரும் கொல்லைப்புறத்திலிருந்து சுவர் ஓரமாக மரத்தை நோக்கி வந்தனர். அவர்களைப்பார்த்த ஆந்தை சட்டென குரலெழுப்பிப் பறந்தது.

திண்ணையிலே படுத்துக்கிடந்த பெரியவர் முழிப்பு தட்டி எழுந்து 'விளக்க ஏத்துப்பா' என்றார் பக்கத்துக் கட்டிலில் படுத்துக்கிடந்த ஒருவன் மாடத்திலே எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை ஏற்றினான். வெளிச்சம் திண்ணை முழுவதும் பரவியது.

அவர்களுக்கு சில எட்டு பின்னால் சுவர் ஓரமாக ஐந்து பேரும் குத்தவைத்து உட்கார்ந்திருந்தனர்.

'வலதுபக்கமா கத்துது...நல்ல சகுனமான்னு தெரியலையே...' என்றார் பெரியவர். விளக்கை ஏற்றியவன் கண்களைக் கசக்கியவாறு வீட்டிற்குள் போய் பஞ்சபட்சியைப் புரட்டிப் பார்த்துவிட்டு வந்து 'நல்ல சகுனம்தான்யா' என்றான். 'அப்ப சரி, விளக்க எறக்கிட்டுபடு' என்றார்.

கொஞ்ச நேரம் பொறுத்திருந்தவர்கள் பின்னர் மரத்தின் மீது ஏறி சுற்றுச்சுவரைத் தாண்டித் தெருவிலே இறங்கினர். சுவர் ஓரமாக சரசரவென வெளியேறி வந்தனர். தெருவைத் தாண்டி வலப்புறமாகத் திரும்பி ஊரை ஒட்டி வேயப்பட்டிருந்த வைக்கோல் போருக்குள் நுழைந்தனர். ஊருக்கு மையத்தில் இரண்டு மூன்று நாய்கள் குரைத்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. வைக்கோல் போரை விட்டு வெளியேறும் பாதையை நிலையாள் எட்டிப் பார்த்தான். தூரத்தில் கல்பாலத்தின் மேல் ஒரு ஆள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அது காவல்காரனாகதான் இருக்கும். எனவே கொஞ்சம் பொறுப்போம் என யோசித்து அங்கேயே உட்கார்ந்தனர். நீண்ட நேரம் கல்பாலத்திலேயே உட்கார்ந்திருந்த காவக்காரன் வயல்களின் அக்கரைக்குப் போகலாமென பாதையை விட்டு இறங்கி வரப்புகளின் வழியே நடந்தான்.

அவன் இறங்கிப் போன கொஞ்ச நேரத்தில் வைக்கோல் போரை ஒட்டிக் குனிந்தவாறே நடந்து பெரியாற்று கால்வாய்க்குள் இறங்கினர். பாதங்கள் ஈர மண்ணுக்குள் பதிந்தன. குத்துக்கால் ஊண்டி நடந்தால் தடம் அதிகமாக இறங்குதே என கால் பாவி நடக்க முயற்சித்தனர். கையடக்கமாக இருந்த சிறுபெட்டியை வாங்கி இடுப்போடு சேர்த்துக் கட்டினான் நிலையாள்.

'கருப்பா... ஆந்த ஏங் கத்துதுன்னு கூட தெரியாம இருக்காங்கெளே, இவங்கெல்லாம் என்ன படிச்சவங்கெ...' எனக் கேட்டான் சின்ராசு. யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. ஆனால் கால்களின் வேகம் கூடியபடி இருந்தது. சாட்டைக்கம்பு வெள்ளி விழும் முன்பு கருப்பணின் கொத்து ஆலமரத்தடிக்கு வந்துவிட்டது.

**பொ**ழுது முற்றாக விடியவும் தெப்பம்பட்டி கலகத்துப் போனது. எல்லோரும் பெரிய சம்சாரி வீட்டுக்கு ஓடினர். ஊரே மந்தைத் தெருவில் கூடி நின்றது. 'கல்யாணத்துக்கு வாங்குன பொன்னெல்லாம் போச்சே' எனப் பெண்கள் அழும் ஓசை விடிகாலையிலேயே வீட்டுக்குள் இருந்து வெளிவந்தது. உள் அறையில் படுத்துகிடந்த தில்லைவனம் பிள்ளை 'தான் வீட்டில் இருக்கும்பொழுதே இப்படி நடந்துவிட்டதே' என்று திண்ணையில் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தார். பெரிய சம்சாரிகள் எல்லாம் வந்து அவரைத் தேற்றிக்கொண்டிருந்தனர். நீண்டநேரம் கழித்து

வில்வண்டியைக் கட்டச்சொன்னார்.

அன்று முழுவதும் கச்சேரி போலீஸார் தெப்பம்பட்டியில்தான் கிடந்தனர். டி.எஸ்.பி. டர்னர் நேரடியாக வந்து விசாரித்தார். அவருக்கு முதலில் காவக்காரனின் மீதுதான் சந்தேகமிருந்தது. ஆனால் அவனது கிராமத்திலிருக்கும் சொந்தம் பந்தம் முழுவதும் பெரியாற்று தண்ணீர் வந்தபின் சம்சாரித்தனத்தில் இறங்கி விட்டதால் இவன் செய்திருக்க வாய்ப்பில்லை என்ற முடிவுக்குப் போயினர். நீண்டநேரம் கழித்துத்தான் தட்டார்களில் ஒருவன் சொன்னான் 'மாட்டு லாடம் மாதிரி முன்னுக்கு நீண்டிருந்த பல்லுக்காரன்தான் இந்த தூண்கிட்ட நின்னுகிட்டு இருந்தான். அதே மாதிரி பல் இருந்த ராக்கோடாங்கி ஒருத்தன் நேத்து பகல்ல குப்பமேட்டுல உட்கார்ந்திருந்தான்' என்றான்.

அதன்பின் 'ஆமாம், மந்தைக்கிட்ட வந்தான்' 'வைக்கப் போருக்கிட்ட நின்னுகிட்டு இருந்தான்' 'அவம் பாத்தான்' 'நா பாத்தேன்' என்று ஆளாளுக்குச் சொல்ல ஆரம்பித்தனர்.

இந்த மாவட்டத்துலேயே கடந்த சில ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய கொள்ளை இதுதான். சுமார் நூற்றி ஐம்பது பவுன் திருடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் விசாரித்த டி.எஸ்.பி. தெப்பம்பட்டியிலிருந்து புறப்பட்டு நகரில் உள்ள தனது அலுவலகத்திற்கு வந்தார். இந்த மாவட்டம் முழுவதும் சுற்றித்திரிகிற ராக்கோடாங்கிகளையும், குறி சொல்லும் குறவர்களையும் பார்த்த இடத்திலேயே கைதுசெய்து விசாரிக்குமாறு எல்லா கச்சேரிக்கும் உத்தரவு அனுப்பினார்.

செய்தியைக் கேள்விப்பட்டு துக்கம் விசாரிக்க தெப்பம்பட்டியை நோக்கி ஆட்கள் போய்க்கொண்டேயிருந்தனர். கல்யாணக் கூட்டத்திற்கு மேல் கூடிவிட்டது. பெரிய தெருவில் நிற்க இடமில்லை.

சாக்கடையில் செத்துக்கிடந்த நாயை கிராமத்து தோட்டி இழுத்து வந்து, ஊருக்கு வெளியே இருந்த கள்ளிக்காட்டுக்குள் வீசிவிட்டுப் போனான்.

**அ**ன்றைய பகலின் உச்சிப்பொழுதில் சாராய மொடா அமணமலை அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தது. இரவு வரை பாறைகளில் சிந்தி வழிந்தோடியபடி இருந்தது. சின்ராசு நல்ல போதையில் 'னோத்தாலோக்க... ஙோம்மாலோக்க...' என சத்தம் போட்டு ஆலமரத்திலிருந்த ஆந்தைகளை விரட்டி விரட்டிக் கல்லால் எறிந்துகொண்டிருந்தான். 'ஏலே...ஆந்தைய என்னாத்துக்குடா எறியுற' என்று யாராவது கேட்டால் உனக்கு தெரியாது. பேசாம இரு. குடி கெடுக்குற கூதிமகளுகளுக்கு இங்கென்ன வேல... ஓடுங்கடி' என்று கத்தியபடி எறிந்து கொண்டேயிருந்தான். சாராயம் வந்தவுடன் சத்தமில்லாமல் போய் ஆடுகளைத் தூக்கிவந்து விட்டார்கள். குடியும் கறியுமாகப் பொழுது உருண்டது. அன்றிரவு களவுக்குப்போகிற எந்தக் கொத்தும் போகவில்லை. நகர்க் காவலுக்கு போகவேண்டிய ரெண்டு கொத்து மட்டும் பாதிப்பாதிப் பேரோடு போனது.

கீக்காவல் பார்க்கும் ஆங்கன் கொத்து நேராக யானைப் பள்ளத்திலே போய் உட்கார்ந்து வழக்கமாக ஆற்றங்கரை வரை போய்விட்டுத்தான் வந்து உட்காருவார்கள். ஆனால் இன்று எல்லோரும் சாராயம் குடித்திருந்ததால் 'போதும்டா உக்காரு' என்று ஆங்கன் சொன்னதும்

இருந்து விட்டனர். பேசவும் உளறவுமாக பலர் தூங்கிப்போயினர். திடீரென்று விருமன் எழுந்தான். 'ஒக்காளவோலி அந்த தட்டாரச்சந்து ஐய்யே வீட்டுல இன்னிக்கு மாட்ட கழட்டணும்டா...எந்திரிங்கடா' என்றான். 'டேய், இன்னிக்கு வேணா, நாளைக்கு போவோம்' என்றான் அரைப்போதையில் இருந்த ஆங்கன். 'வெண்ணெ...மூணு மாசமா காவக்கூலி கொடுக்கமாட்டறான். அவெ வீட்ல கழட்டக் கூடாதுங்கிறியா நீயி?' என்று ஆங்கனை ஒரு எத்து எத்தினான். 'வாடா நாம போவம்டா' என பம்பையன் எழுந்து விருமனைப் பிடித்து இழுத்தான். இருவரும் நகரத்தை நோக்கி நடந்தனர்.

அடர்ந்த இருட்டுக்குள் இருந்து இரண்டு குடிகாரர்கள் மாசி வீதியை நோக்கி வந்தனர். நேராகக் கிழக்கு மாசி வீதியின் உள்சந்தான வடுக தட்டாரச் சந்திலிருந்த சப்ரிஜிஸ்தார் வீட்டுக் கொல்லைப்புறக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தனர். 'வயிறு முட்ட தின்னுட்டு நிக்கிறதாபாரு. இவள கழட்டுறா' என்றான் பம்மையன். விருமன் உள்ளே போய் கயிறைக் கழட்டி மாட்டை இழுத்துவந்தான். வந்த வழியாகவே கிழக்குப் பக்கமாக நகரத்தை விட்டு வெளியேறி ஊரைச் சுற்றி நாகமலைக்குக்கொண்டுபோயினர்.

'ஒாத்தாலோக்கக... நாம சாராயம் குடிச்சிருக்கோம்னு தெரிஞ்சுகிட்டு நடக்க மாட்றா பாரு' எனச் சொல்லி இழுக்கவும் அடிக்கவுமாக ஓட்டிக்கொண்டு போனார்கள். மறுநாள் பகலுக்குத் தான் கருங்கல் கோபுரத்திற்கு வந்துசேர்ந்தனர். கோபுரத்திற்கு வெளியே எப்போழுதும் வைக்கப்பட்டிருக்கும் சோளத் தட்டைகளை ரெண்டு பேரும் மாறி மாறி அள்ளிக்கொண்டுபோய் உள்ளே போட்டுவிட்டு 'கெடடி...தாயோலி' என்று திட்டிவிட்டு ஊரை நோக்கிப் புறப்பட்டனர்.

பொழுது சாய வீட்டுக்கு வந்தவர்கள் வயிறு முட்டக் கஞ்சியைக் குடித்துவிட்டு ஆலமரத்தடியிலே போய்ப் படுத்தனர். மறுநாள் வெயில் மூஞ்சியில் அடிப்பது வரை தூங்கினர். பெரியாம்பிள ஒருவர் எத்துவிட்டதால் பம்பையன் முதலில் எழுந்தான். பின்னர் விருமனை எழுப்பினான். 'ரவைக்கு கோபுரத்துல படுத்துக்கெடக்காம, இங்கயா படுத்துக்கிடந்த?' என்று கேட்டான். 'போவம்டா பொறு. எவெ அங்க வந்து கழட்டிட்டு போகப்போறான்' என்று சொல்லிக்கொண்டே எழுந்த விருமன் வீட்டுக்குப்போய் கஞ்சியைக் குடித்துவிட்டு நாகமலைக்குக் கிளம்பிப்போனான்.

மலையில் ஏறி தூரத்தில் வருகிறபோதே கற்கோபுரத்திற்குள் இருந்து மாடு கத்துவது கேட்டது. தீவனத்திற்காகக் கத்தும் என நினைத்துக்கொண்டு வேகமாக எட்டு வைத்தான். ஆனால் மாடு விடாமல் கத்தியது. விருமனுக்கு சந்தேகம் வர ஆரம்பித்தது. 'ஏதோ நடந்திருக்கிறது' என யோசித்தபடி வேகவேகமாக வந்து கோபுரத்திற்குள் பார்த்தான். மாடு கோபுரத்தின் கீழே இந்தச் சுவருக்கும் அந்தச் சுவருக்குமாக அலைக்கழித்து கொண்டிருந்தது. நீரும் ரத்தமும் அந்த இடம் முழுக்க வழிந்து கிடந்தது. ஈத்துக்கொடி தொங்கிக்கொண்டிருந்தது. மாடு விடாமல் கத்தியபடி இங்கும் அங்குமாக நடந்தது. விருமன் நுழைந்ததும் அந்த இடத்தைப் பார்த்து அதிர்ச்சியானான். ஏதோ தப்பு நடந்துவிட்டது என்று யோசித்தவன் மாடு ஈன்றிருக்கிறது என்பதை கொஞ்சம் நேரம் கழித்துத்தான் ஊகித்தான். கன்றைத் தேடினான். கோபுரத்திற்குள் கன்று இல்லை. அதிர்ந்த கண்களை

அகல விரித்தபடி மீண்டும் அந்த இடம் முழுக்கத் தேடினான். கன்று இல்லை. கோபுரத்தை ஒட்டி வெளியில் தேடினான். கன்றைக் காணவில்லை. பாவமான குரலில் ‘என் கன்று எங்கே?’ என்று கேட்பதைப்போல அது கத்திக்கொண்டேயிருந்தது. அதன் சத்தம் கேட்கக் கேட்க விருமனுக்கு என்னவோ போலானது. இங்கும் அங்குமாக ஓடினான். புதருக்குள் எல்லாம் முண்டி நுழைந்து போனான். எங்கும் கன்றுக்குட்டியைக் காணவில்லை. உச்சிப்பொழுதைத் தாண்டி அடிசாய ஆரம்பித்தது. மாடு பாவப்பபட்ட குரலில் கத்திக்கொண்டேயிருந்தது. சரி, இனியும் தாமதிக்கக்கூடாது என நினைத்து ஓட்டமும் நடையுமாக ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தான். விஷயத்தைச் சொன்னதும் ஆணும் பெண்ணுமாகப் புறப்பட்டு நாகமலையில் ஏறி இறங்கினர். உச்சி வெயிலில் வேர்க்க விறுவிறுக்க ஊரே ஓடிவந்து சேர்ந்தது. அந்தப் பகுதி முழுமையும் சல்லடை போட்டு அலசினர். ஆளாளுக்கு பொந்துக்குள்ளும் புதருக்குள்ளும் தேடினர். ஈன்ற மாடு கத்துகிற ஓசை எல்லோரையும் உலுக்கி எடுத்தது. ‘எடுவட்டபய, மாட்ட வுட்டுட்டு அங்க என்ன மயித்துக்குடா படுத்துக் கெடந்தெ’ என்று விருமனை வசவு தெளித்தனர். ‘அய்யோ...பால்முட்டி நின்னுவலி பொறுக்காம கத்துதே, பாதகத்தி மகனே! எவளோட படுக்கடா அங்க வந்த?’ என்று கிழவிகள் கத்தினர். புல்லூத்து பக்கமாகச் சிலர் தேடிப் போயினர். புதர்களைக் கிண்டு விலக்கி உள்ளே நுழைந்து பார்த் தனர். மாட்ட தொலைச்சவெ ஒருத்தனாத்தான் தேடியிருப்பான். ஆனா இப்படி கன்னுக்குட்டிய தொலைச்சுட்டு ஊரே தேடுறோமேடா, வெளிய சொன்னா வெட்கக்கேடு’ என்றார் விருமாண்டிப் பெருசு. பொழுது போய்க்கொண்டிருந்தது. வந்ததில் ரெண்டு கிழவிகள் உடனே மலையைவிட்டு இறங்கி ஈன்ற மாட்டுக்கு தீவினம் கொண்டுவரப் போய்விட்டனர். விலங்குகள் ஏதாவது அடித்திருக்கலாம் என்ற எண்ணம் நேரம் ஆக ஆக அதிகரிக்க ஆரம்பித்தது. மாட்டை தண்ணிக்கி கூட்டிப் போகலாம் என நினைத்தாலும் யாராலும் கிட்டப்போக முடியவில்லை. எவரையும் அண்டவிடாமல் கத்தி அலைமோதியது. ‘மாட்ட புடிங்கடான்னா, என்னாத்துக்குடா கன்னுக்குட்டியோட புடிச்சுட்டு வந்தீங்க?’ என்றார் மந்தைக்கல் பெரியாம்பிள. ‘அது ஈனப்போகுதுன்னு எவனுக்கப்பா தெரியும்’ என்றான் பம்பையன்.

‘செனைக்கு தவ்வுற மாட்டத்தான் புடிக்கக்கூடாதுன்னு நம்ம வழக்கம். ஆனா ஈனப் போற மாட்ட எப்படியப்பா கண்டுபுடிக்குறது’ என்றான் மொக்கை. இது ஒரு புதுப்பிரச்சனையாக இருந்தது. எல்லோரும் யோசித்தபடி கவலையோடு தேடிக்கொண்டிருந்தனர். விருமாண்டிப் பெருசுக்கு சீயான்மார்களின் ஞாபகம் வந்தது. ‘ராமாயணச் சாவடியில் காலம்பூராம் உக்காந்து இதக்கூட கேட்டு தெருஞ்சுகிலயேப்பா’ என்று வருத்தத்தோடு சொன்னார். ‘யப்பா...ஈனப்போறமாட்ட பொச்ச பாத்தா தெரியாதா, போதையில போகாதீங்கடான்னாலும் கேக்காம போயி இப்படி கழட்டிட்டு வந்திருக்காங்கெ’ என்றான் ஆங்கன். ‘ஏ வெண்ண, நிதானத்தோடதா வெண்ண கழட்டுனோம். அது அப்ப நல்லத்தான் இருந்துச்சு’ என்றான் விருமன. பேச்சு பேச்சாகத்தான் இருந்தது. ஒன்றும் அகப்படவில்லை. பொழுது இறங்க ஆரம்பித்து விட்டது. மாடு குரல் வற்றி உயிரில்லாமல் ஈனக்குரலில் கத்தியது.

கீழே போன கிழவிகள் பழஞ்சிக்கரையில் போய் கேட்டு, ஊறவைத்த கம்பையும், சோளத்தையும் பானையிலே வைத்துக் கொண்டு வந்தார்கள்.

அகல வாய் திறந்திருந்த அந்த மண்சட்டியை அப்படியை மாட்டின் தலைமாட்டிலே வைத்தவுடன் வேகவேகமாக அது தின்றது. பசி தீர்ப்பதை கிழவிகள் பக்கத்தில் நின்றபடி பார்த்துக்கொண்டேயிருந்தனர். பறவைகளின் சத்தம் ஏகத்திற்குக் கேட்டுக்கொண்டிருந்தது. முத்தணன் ஏதோ ஒரு மூலையிலிருந்து கத்தினான். இரண்டு பாறை இடுக்கில் மூன்று முழப் பள்ளத்திலே கிடந்தது கன்று. அப்படியே தூக்கித் தோள்பட்டையிலே போட்டுக்கொண்டு வெறியேறியவனைப் போல ஓடி வந்தான். சத்தம் கேட்டு எல்லோரும் அங்குமிங்குமாகப் புதருக்குள்ளிலிருந்து கோபுரத்தை நோக்கி ஓடிவந்தனர். பானையின் அடியில் கிடந்த சோளத்தை அதன் நாக்குகள் துழாவிய பொழுது கன்றுக்குட்டி மடுவை வந்து முட்டியது. முத்தணன் அதன் வாயைத் திறந்து காம்பை உள்ளே நுழைத்தான். நிற்கக்கூடிய சத்தில்லாமல் இருந்த கன்று கொஞ்சம் கொஞ்சமாகப் பாலைக் குடித்து தெம்பேற்றியது. கிழவிகளின் கண்களில் கண்ணீர் திரண்டு வழிந்தது. எல்லோரும் முண்டியடித்து கோபுரத்திற்குள் எட்டிப் பார்த்தபடி இருந்தனர். உள்ளே நிக்க இடமில்லை. கன்றுக்குட்டியின் தோளிலே இரண்டு மூன்று இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டதைத்தவிர வேறு எதுவும் பெரிதாக அடிபடவில்லை. பசு ஆசையோடு நாக்கைப்போட்டு நக்கியது. அந்தக் கற்கோபுரம் இதுவரை இல்லாத ஒன்றாக மாறியது. வேடமங்கலத்தை விட்டு ஒருவனையும் வெளியேறவிடாமல்... ஒவ்வொருவனாய்ச் செத்துவிழுந்து, மொத்த ஊரும் அதனடியில் புதைந்து... பெரும் மரணத்தின் மீது சரிந்திருந்த அந்த கற்கோபுரத் திற்குள் இருந்து புதிய உயிர் ஒன்று ஜனித்திருக்கிறது. வாஞ்சையோடு தாய் கன்றைப் பார்ப்பதும், காயம்பட்ட கன்று வாலை விடைத்துத் துள்ளிக்குதிப்பதுமாக அந்த இடம் புதிய ஒன்றாக மாறியது.

விருமன், பம்பையன், முத்தணன் ஆகிய மூவரையும் அங்கேயே இருக்கவைத்துவிட்டு மற்றவர்கள் எல்லோரும் மலை இறங்கினர். மதியமிருந்து ஊரே தேடி அலைந்து கால்கள் தவித்துப்போனாலும் இறங்கி வரும்போது சந்தோஷம் எல்லோருக்குள்ளும் இருந்தது. தனது காவலில் களவுபோன ஒரு பொருளை மீட்டிக் கொண்டுவரும் போது அது கடமையாகத்தான் தோன்றும். அதைத் தாண்டி சந்தோஷத்தையோ துக்கத்தையோ மனம் அனுபவித்ததில்லை. ஆனால் இன்று அப்படியல்ல; எல்லோருக்குள்ளும் மகிழ்ச்சி இருந்தது. பிறந்தவுடன் தொலைந்த உயிரைத் தாயோடு கொண்டு சேர்த்தபோது அனுபவித்த உணர்வை அவர்கள் அசைபோட்டவாறே நடந்துவந்தனர்.

மதுரை மக்களின் நம்பிக்கை உலகில் பசுவுக்கு மிக முக்கிய இடமிருக்கிறது. காவக்காரனின் மீதான நம்பிக்கையை அவர்கள் மாற்றுகிறபொழுதெல்லாம் அவன், அவர்களது நம்பிக்கையை கைவைக்கிறான். ‘வீட்டு லெட்சுமிய ஓட்டிக்கிட்டுக் போயிட்டாங்களே...’ என்று கதறுகிற குரலைக் கேட்காமல் கற்கோபுரத்திற்குள் தீவனத்தைத் தின்றுகொண்டு நாள் கணக்கில் நின்று கொண்டிருந்தன பசுக்கள். ஆனால் இந்தப் பசுதான் வீட்டுக்காரனை அலைய விட்டதைவிட கழட்டி வந்தவர்களை அதிகம் அலைய விட்டது.

‘துப்புக்கூலிய வாங்கிட்டு மாட்ட மட்டும் ஓட்டி விடுறதா? இல்ல கன்னுக்குட்டியையும் சேர்ந்து ஓட்டி விடுறதா?’ என்று கேட்டான் மொக்கையன். இதுவும் புதுப்பிரச்சனைதான். புடிச்சுட்டு வந்ததுக்கு மட்டும்

கூலிய வாங்காம, பேறுகாலம் பாத்ததுக்கும் சேர்த்து வாங்குனா போச்சு' என்றாள் உடன் வந்துகொண்டிருந்த கிழவி.

‘ஏலே ஆங்கா, ஈத்துக் கொடிய ஓலப்பெட்டியில சுத்தி இன்னிக்கு சாமத்துல அவெ கொட்டத்துல போட்டு வாங்க, மாடு ஈண்டத தெரிஞ்சுகிறட்டும்' என்றார் விருமாண்டிப் பெருசு.

*

# 105

**போ**தகர் டேவிட் சாம்ராஜ் நாகர்கோவிலிருந்து மீண்டும் **பசுமலைக்கு** வந்தபொழுது தாதனூரில் அரசாங்க கட்டிடமொன்று கட்டி முடிக்கப்பட்டிருந்தது. விஷயத்தைக் கேள்விப்பட்ட அவர் அதிர்ச்சி அடைந்தார். முதன்முறையாக ஆங்கனிடம் தனது கோபத்தைக் காட்டினார். ஆங்கனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தலையைத் தொங்கப்போட்டபடியே நின்றுகொண்டிருந்தான். பொருளைக் கொண்டுவந்து வைக்கத்தானே கட்டிடம் கட்றான். வெக்கட்டும், நமக்கு நல்லதுதானேனு இருந்துட்டோம் என ஆங்கன் சொன்னதற்கு அவெ பொருள் உள்ள வைக்க கட்டிடம் கட்டல, உங்கள உள்ள வைக்கத்தான் கட்டியிருக்கிறான். என்று டேவிட் சாம்ராஜ் சொன்னபிறகுதான் நிலைமையின் விபரீதம் புரிய ஆரம்பித்தது. எதுவும் தெரியாம இருந்துட்டோமே என்று தங்களைத் தாங்களே நொந்து கொண்டார்கள். கட்டிடம் பூராத்தையும் பிச்சு எறிஞ்சிருவோமா? என்று ஆலோசனை கேட்டார்கள். அவசரப்பட்டு எதையும் செய்ய வேண்டாம். கொஞ்சம் பொறுத்திருந்து முடிவு செய்வோம் என்று கூறி வந்தவர்களை அனுப்பி வைத்தார்.

ஆங்கன் வந்து சொன்ன பிறகு ஊருக்குள் விஷயம் பரவ ஆரம்பித்தது. உக்கிரமேறிய கோபத்தில் கத்துவதும், ஆளாளுக்கு திட்டித் தீர்ப்பதுமாக இருந்தனர். ஒன்றரை ஆள் உயரத்திற்கான கருங்கல் சுவர் நான்கு பக்கமும் கட்டப்பட்டு முன்னால் இரும்புக்கதவு போடப்பட்டிருந்தது. நடுவில் ஓடு வேயப்பட்ட ஒரு சிறிய அறை இருந்தது. கதவின் வழியே உள்ளே எட்டிப்பார்த்து ‘கொண்டித்தொழு மாதிரியே நம்ம ஊர்ல ஒண்ண கட்டி வச்சுப்புட்டானேப்பா’ என்று பெரிசுகள் நொந்துபோய் பேசிக்கொண்டிருந்தனர். ஊர் அவமானப்பட்டுக் கிடந்தது. ஊர் பெரியாம்பிள ஒச்சு யாரிடமும் சரியாகப் பேசாமல் பெரும் இறுக்கத்துடன் இருந்தார். அடுத்து என்ன செய்யலாம் என்பது குறித்து யாரிடமும் தெளிவான யோசனை எதுவும் இல்லை. கட்டிட்டுப் போனவன கை

வெட்டாம விடக்கூடாதுடா' என்ற குரல் மேலோங்கி வந்தது. 'எதசெஞ்சாலும் அய்த்த மகெங்கிட்ட கேட்டுட்டு செய்வோம்' என்றான் ஆங்கன். 'கேட்டுச் சொல்லு' என்று எல்லோரும் காத்திருந்தனர்.

இதற்கிடையில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட் லாம்பர்ட் ஆண்ட்ரூ இன்ஸ்பெக்டர் பிச்சுவையர் கொலைவழக்கின் தீர்ப்பினைச் செவ்வாய்க்கிழமை மதியம் வெளியிட்டார். அதில் சோங்கனுக்கும் தெத்துக்கூனனுக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. பொன்னாண்டிக்கு மட்டும் ஆயுள் தண்டனை. அன்றிரவு செய்தி ஊருக்கு கிடைத்தது. மெட்ராஸ் ஹைகோர்ட்டில் மேல் முறையீடு செய்துகொள்ள பத்து நாள் அவகாசம் தரப்பட்டிருந்தது. ஆனால், அதனால் பலன் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்று வக்கீல் தெரிவித்திருந்தார்.

ஊருக்கு அடி மேல் அடி விழுந்து கொண்டிருந்தது. இளவட்டங்கள் மோதிப்பார்த்துவிடும் முடிவோடு இருந்தனர். ஆனால் ஊர் பெரியாம்பிள ஒச்சு தங்களின் வாழ்க்கை சரிவதைக் கண்முன்னே பார்த்துக்கொண்டிருந்தார். பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாத ஆளாகிவிட்டோமே என்ற துக்கம் அவரது நெஞ்சை அடைத்துக்கிடந்தது.

இரவு கருப்பு கோவில் தாவாரத்தில் எல்லோரும் உட்கார்ந் திருந்தனர். மாசி ஆரம்பத்திலிருந்து உதிர ஆரம்பித்த ஆல இலைகள் இப்பொழுது ஏறக்குறைய முழுவதுமாக உதிரிந்துவிட்டன. மரம் முழுக்க குச்சிக்குச்சியாக நீண்டு கிடந்தது. ஏறக்குறைய ஊரும் அதே போல ஆகிவிட்டது. சருகுகள் காலத்தின் சாட்சியங்களாக உதிர்ந்து மண்ணோடு மண்ணாகிக்கொண்டிருந்தன. 'நம்மள செற வக்க, நம்ம கண்ணு முன்னாடியே ரோட்ட போட்டு நம்ம கண்ணு முன்னாடியே வண்டிய கொண்டுவந்து சாமான்கள் எறக்கி, நம்ம கண்ணு முன்னாடியே கட்டடத்தையும் கட்டிப்புட்டானப்பா...' என்ற உண்மை எந்த சக்தியும் அற்றவர்களாக உள்ளுக்குள் அவர்களை உணரவைத்தபடி இருந்தது. நீண்ட நேரமாகியும் பெரியாம்பிள பேசவே இல்லை.

நிலவு ஒழிந்த ஒரு நிறை இருளில் கொண்டாட்டத்தோடு கிளம்பும் கூட்டம் இன்று பெரும் துக்கத்தோடு வெளியேறாமல் ஆலமரத்தடியிலேயே இருந்தது. நீண்ட நேரம் கழித்து பெரியாம்பிள சொன்னார். 'யப்பா... தெத்துக்கூனன சாகவிடக் கூடாதப்பா. ஊருக்கு உருமா கட்டு வாங்கிக் கொடுத்த வம்சம். வாரிசு இல்லாமப் போகக்கூடாது' என்றார்.

எல்லோருக்கும் சரி என்று பட்டது. 'ஆனா வழி?' மீண்டும் போதகரை நாடவேண்டியிருந்தது.

'எந்த வாய்ப்பும் இல்லை' என்று கண்களில் நீர் ததும்ப அவர் சொல்லியனுப்பினார்.

*

**வி**ட்டிப் பெரியாம்பிளன்னு ஒரு பெரியாம்பிள இருந்தார். கெடாயன் பெரியாம்பிளையோட பாட்டன். கோட்டைக் காவக்காரனை எல்லாம் வெள்ளக்காரன் நாடு கடத்தின பிறகு மதுரைக்குள்ள தாதனூர் காவலை உறுதிப்படுத்திய தலைமுறையைச் சேர்ந்தவர். வயசானதுனால

மருதைக்குள்ள காவலுக்குப் போறதில்ல. ஆலமரத்தடியிலேயே உட்கார்ந்து காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது வடதிசையில் கன்னி வாடியை எல்லையாக வைத்து களவுக்குப்போன ஒரு இளவட்டக் கொத்து கன்னிவாடி வரைக்கும் போவதும் களவை உலைத்து விட்டு வருவதும், பின் மீண்டும் போவதும் வருவதுமாக இருந்தனர்.

‘இவெங்கென்ன தெனமும் போயிட்டு போயிட்டு சும்மா வர்றாங்கெ’ என்று யோசித்த பெரியாம்பிள ‘யப்பா... இன்னிக்கு நானும் வர்றேனப்பா’ என்று சொல்லி இளவட்டக் கொத்தோடு புறப்பட்டு விட்டார்.

கொத்து கன்னிவாடியில் எல்லை வைத்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. பக்கத்து ஊரான சோலைமடைக்கு போகணும். எல்லோருமே தயக்கத்தோடு ‘என்னப்பா... போகணுமாப்பா’ என்று சொல்லித் தயங்கி இன்றைக்கும் குலைத்துவிட முடிவு செய்தனர்.

‘யப்பா... வேணாம்மப்பா. திரும்புவோமப்பா.’

‘டேய்... என்னடா இவ்வளவு தூரம் வந்துட்டு திரும்புவோம்னு சொல்றீங்க?’

‘இல்லப்பா... சகுனம் சரியில்லப்பா.’

‘என்னடா சகுனம் சரியில்ல. கள்ள நாட்டுக்கு வாச்சது ரெண்டு சகுனம்தான்டா. நல்ல பாம்பு குறுக்க வந்தா நல்ல சகுனம், மொட்டபாப்பான் எதிரில் வந்தா கெட்ட சகுனம். இப்ப நீங்க எந்த சகுனத்தடா பாத்தீங்க’ என்றார் விட்டிப்பெரியாம்பிள.

இல்லப்பா...அந்த சோலைமடக்காரெ பெரிய குஸ்தி பயில் வானாம். இந்த கன்னிவாடி ஜமீன் எல்லைக்குள்ள யாரும் அவன எதுத்து நின்னு பேசிட்டு போக மாட்டாங்கெளா. தோப்புக்குள்ள தனியா வீட்டகட்டி அவெ மட்டும் ஒத்தையில் குடியிருக்கிறான். அவ்வளவு பெரிய சொத்துக்காரன். ஆனா ஒரு ஆள கூட காவலுக்கு வெச்சுக்கிரல. அப்படீன்னா எவ்வளவு பெரிய கெட்டியக்காரன்னு பாத்துக்கோ. அது தானப்பா சொல்றோம். இந்நேரத்துக்கு மேல எதுக்கு கெட்டபய கிட்டப் போயிட்டு...வாப்பா திரும்புவோம்.’

‘டேய்... இன்னி நீங்க போங்க. நான் செத்தாலும் சரி, பொழச்சாலும் சரி அவன ஒரு பார்வை பாக்காம வரமாட்டேன்’ என்று சொல்லி பெரியாம்பிள புறப்பட்டார்.

‘சரீடா... எவ்வள சொல்லியும் கெழவே கேட்கமாட்டான். அவன் என்னண்டும் போகட்டும். ரெண்டு பேரும் போயி வீட்ட மட்டும் காட்டிட்டு வாங்கடா’ என்று சொல்லி பெரியாம்பிளையோடு இரண்டு ஆளை நிலையாள் அனுப்பிவைத்தான்.

ரெண்டு பேர் முன்னுக்குப் போக கிழவன் பின்னால் போய்க் கொண்டிருந்தான். ‘சாவுக்கு போற பெரியாம்பிள எப்படி சலிக்காம வருதுன்னு பாரு’ என்று ரெண்டு பேரும் பேசிக்கொண்டே முன்னால் போனார்கள். கருத்த ஆட்டு ரோமத்தை போர்த்திக் கிடப்பதைப்போல சோலைமடை இருள்போர்த்திக் கிடந்தது. ஊரை விட்டு வெளியில் தோப்புக்குள் இருந்தது அவன் வீடு. வீட்டுக்கு அருகில் போனதும்

‘பெரியாம்பிள, இதுதா வீடு. இனி வோஞ் சோலிய பாத்துட்டு நீ போய்க்கோ. எங்க சோலிய பாத்துட்டு நாங்க போறோம் என்று சொல்லி இருவரும் புறப்பட்டனர்.

‘ஏலேய்... இருங்கடா’ என்று சொல்லி இருவரையும் நிறுத்திய பெரியாம்பிள அடர் இருளின் உள்ளங்கைக்குள் இருந்த அந்த வீடு முழுவதையும் நன்றாகச் சுற்றிப் பார்த்தார். செம்மண் சுற்றுச்சுவர் இருளிலும் கண்விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. நல்ல காரை வீடு. நாலு பக்கமும் அகலமாக இடம்விட்டு நடுமையத்திலே வீடு இருந்தது. தேக்கு மரச் சட்டத்தினால் ஆன முன் கதவு. எல்லாத்தையும் பெரியாம்பிள உற்றுப்பார்த்தார். சுற்றுச்சுவரை ஒட்டி ஏறித் தவ்வ வசதியாக ஒரு மரம் கூட இல்லை.

‘டேய்... ஆளு ரொம்ப வெவரமானவண்டா. சுத்தீலும் தோப்பா இருக்கு. ஆனா செவத்த ஒட்டி ஒரு மரத்த கூட காணோம். நீங்க என்னய தூக்கிவிட்டு நா இவ்வளவு உயரமான செவத்துல இருந்து தவ்வுனா, தவ்வுனவுடனே கண்டுபிடிச்சு புடுவான்’ என்றார்.

‘அதுனாலதான் சொல்றோம் பெருசு. இப்படியே கௌம்பு. ஊருக்குப் போவோம்’ என்றனர் இருவரும்.

‘இவெங்க யாருடா... கௌம்புறதுலே இருக்காங்கெ! சொல்றத முழுசா கேளுங்கடா’ என்றவர் ‘நீங்க ரெண்டு பேரும் செவத்த கன்னம் போட்டு குடுத்துட்டுப் போங்கடா’ என்றார்.

வேறு வழியில்லாமல் இரண்டு பேரும் வீட்டு சுற்றுச்சுவரின் பின்புற மூலையில் உட்கார்ந்து கன்னம் போட ஆரம்பித்தனர். செம்மண் சுவரில் கன்னம் போடுவதைப்போல கஷ்டமான வேலை களவில் எதுவும் இல்லை. கருங்கல் கட்டிடம் என்றால் கன்னம் போடுவது அவ்வளவு சுலபம். பொத்துனாப்புல பூப்பறிச்ச மாதிரி கல்லை உருவி வெளியில வைக்கலாம். செங்கல் காரைக்கட்டிடம் கொஞ்சம் பரவாயில்லை. கஷ்டப்பட்டாலும் அலுப்பு தட்டாது. ‘தாயோலி... இந்த செம்மண் சுவர் இருக்கே மூணு தெசையிலும் நங்கு நங்குன்னு குத்துன்னா, போனப் போகுதுன்னு எரக்கப்பட்டு தேங்கா செரட்ட அளவு ஒரு பக்கு விழுகும். முழு ஓட்டையும் போடுறதுக்குள்ள ரெண்டு பேரும் தவுச்சு கெறங்கிடணும். ‘நொந்துபோய் கையை மாற்றி மாற்றி குத்திக்கொண்டிருந்தனர்.’

பின்னால் கொஞ்ச தூரத்தில் இருந்த மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்து வெற்றிலை போட்டவாறு ‘வேகமா நோண்டுங்கடா வெண்ணைகளா, இப்படி குத்துனீங்கன்னா நா என்னைக்கு போய்ட்டு வர்றது’ என்றார் பெரியாம்பிள.

‘கெழவனுக்கு என்னா மப்பு பார்ரா... உள்ள போனாதும் புடிச்சு வக்கப்போறானோ கட்டி வைக்க போறோனோ! ஆள் சொல்லிவிட்டா... நாங்கதான் வரணும். அப்ப பேசிக்கிறோம் உன்னய’ என்று சொல்லிய படி வேகவேகமாகக் குத்தினர்.

வீட்டுக்காரன் அவ்வளவு நேரம் குஸ்தி விளையாண்டுவிட்டு அப்பொழுதான் வந்து வீட்டுக்குள் படுக்காமல் காற்றோட்டமாக வெளியில் கட்டில் போட்டுப் படுத்திருந்தான். மூலையிலே ஏதோ சத்தம் கேட்பது

போல் உணர்ந்து எழுந்துவந்து சுவர் ஓரமாய் நிற்க, வெளியில் நடப்பதெல்லாம் துல்லியமாகக் கேட்டது.

‘பெரியாம்பிள, கன்னம் போட்டாச்சு. இனி நீ போ. தப்பி வந்தா பாப்போம்’ என்று சொல்லிவிட்டு ரெண்டு பேரும் புறப்பட்டனர்.

பெரியாம்பிள ஓட்டைக்குள் நுழைந்து சுற்று வெளிக்கு வந்தார். ஆள் அரவம் ஏதுமற்ற விஸ்தாரமான வெளி பரவிக்கிடந்தது. பேருக்கு ஒரு நாய் கூட இல்லை. சுற்றுச்சுவர் ஓரமாக நடந்து வீட்டின் முன்புறமாக வந்தார். கயிற்றுக்கட்டில் ஒன்று சுவர் ஓரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. கீழே கட்டில் காலுக்குப் பக்கத்தில் வெண்கலச் செம்பு ஒன்று இருந்தது. குனிந்து செம்பை எடுத்தார். தண்ணீர் பாதி செம்பு இருக்கிறது என்று கவனித்தபடி மீதித் தண்ணீரை குடித்து முடித்தார். ‘பாதி தண்ணிய மிச்சம் வெச்சுட்டு என்னத்துக்கு உள்ள போயி படுத்தான்’ என்று யோசித்தவாறு சுவரோரமாகக் குத்தவைத்து உட்கார்ந்தார்.

வீட்டை அவரும், அவரை வீடும் முறைத்துப்பார்த்துக்கொண்டே இருந்தன. நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தவர்கள் பேச்சை முறித்து எழுவது போல் சுவர் ஓரமாக உட்கார்ந்திருந்தவர் சட்டென எழுந்தார். ‘சரி... கதவ தெறந்துதான் பாப்போமே’ என்று முடிவு செய்து படியேறி வந்து கதவை இரண்டு கையிலும் பிடித்து, மெல்லத் தூக்கி ஆட்டி நிதானம் பிடித்தார். இடுப்பிலே தொங்கிக்கொண்டிருந்த ஒரு சிறு கம்பியை எடுத்து சாவித் துவாரத்துக்குள்ளே விட்டார்.

வீட்டுச் சுவரின் இடதுபக்கமாக மறைந்து நின்று இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தவன் மெல்ல நடந்து அவர் பின்னால் வந்து ‘கெழட்டுப் பய ஒத்தையில் வந்து நம்ம வீட்டுக் கதவுக்குள்ள கம்பிய விடுறானேடா’ என்ற கோபத்துடனும் எளக்காரத்துடனும் சப்தமே போடாமல், ஆட்டைப் பிடித்து சரசரவென சுத்தி தூக்கியெறிவதைப் போல இவனைத் தூக்கி எறிய வேண்டும் என்ற முடிவோடு, துவாரத்தை உற்றுப்பார்த்து நோண்டிக் கொண்டிருந் தவரைப் பின்புறமாக வந்து இரண்டு கைகளுக்குள் கையைவிட்டு நெஞ்சுக்கூட்டோடு சேர்த்து உடும்புபோல ஒரு பிடி பிடித்தான். ‘கெழவ நெஞ்செலும்பு நொறுங்கி இங்கேயே சாகணும்’ என்ற முடிவோடு அந்தப் பிடி இருந்தது.

‘பிடிச்சுட்டானே...’ என்று யோசித்த கிழவன் வலது காலை மட்டும் கீழ்ப்படிக்கு இறக்கி மார்போடு சேர்த்து ஒரு உலுப்பு உலுப்பித் திமிறினான். நெஞ்சுக்கூட்டைப் பிடித்தவன் பக்கவாட்டு தூணிலே போய் முட்டி விழுந்தான்.

என்ன நடந்ததென்றே தெரியாமல் அசுரவேகத்தில் மீண்டும் பாய்ந்து கழுத்தோடு சேர்த்து ரெண்டு கையையும் கிட்டி போலப் போட்டு நிறுத்தினான். கிழவன் விசும்பிப் பார்த்தான். முடியவில்லை. ‘மலையே... கருப்பா... என்னடா சோதிக்கிற...’ என்று நினைத்தபடி பிடனியில் முழு பலத்தையும் கொடுத்து ஒரு தூக்கு தூக்கிவிட்டான். அவன் ஓட்டு கைப்பிடிக்கட்டையில் போய் முட்டி கீழே விழுந்தான்.

விழுந்தவன் பின்னர் அவர் கிட்டயே போகாமல் விலகியே நின்று கொண்டான்.

மூன்றாவது முறையாக அவன் வருவானா என்று பார்த்த பெரியாம்பிள

கிட்ட வரவில்லை என்று தெரிந்தவுடன், படியை விட்டு இறங்க ஆரம்பித்தார்.

விலகி நின்றவன் ‘பெருசு... நீ எந்த ஊரு?’ என்று கேட்டான்.

‘ஏன்டா... உனக்கும் எனக்கும் வில்லங்கமாகப் போச்சு. ஒஞ் சொத்த நா எடுக்கல, உடுத்துன வேட்டியோடதான் போறேன். இன்னி என்னத்துக்கு நான் ஊரு பேரெல்லாம் சொல்லணும்?’

‘இல்லப்பா... நீ களவாண்டு கூடப்போ... வீட்டக் கூடத் தூக்கிப் போ... இவ்வளவு கெட்டியான உடம்பு இந்த வயசுல வச்சுருக்கியே, உன்னைய ராசபோகமா வாழவைக்க வேண்டிய வயசுல திருட வந்திருக்க, நானு... இந்த சுத்தளவுக்கு என்னோட எதுத்து நின்னு பேசிட்டு எவனும் போகமாட்டான். அவ்வளவு கெட்டிக்காரன். ஆனா என்னைய முதுகுலையும் ஒட்ட வுடமாட்டேன்ட. முன்னுக்கும் வரவுட மாட்டேன்ட். ஓங்கிட்ட அம்புட்டு பெலம் இந்த வயசுல இருக்குன்னு சொன்னா... நான் வேற கெட்ட எண்ணத்தோட ஒன்னய பேசல... நீ ஒம்பேர ஊர சொல்லிட்டுப் போப்பா...’

‘பேரு ஊரெல்லாம் சொல்ல மாட்டேன். களவாணிப் பயலுக்கு அதெல்லாம் என்ன... நான் என்ன ஓ வீட்ட சுத்திப் பாக்கவா வந்தேன்... திருட வந்தேன். பேரையெல்லாம் சொல்லமாட்டேன்...’ என்று சொல்லிவிட்டு படியை விட்டு இறங்கி நாலு எட்டு நடந்தார்.

பின்னாலே வந்த வீட்டுக்காரன் மீண்டும், ‘பெருசு... நான் கெட்ட நோக்கத்தோட கேக்கல, உன்னோட பேரு, ஊர மட்டும் சொல்லு. நான் அதுக்கான வழி முறைய செய்யணும்’ என்றான்.

ரெண்டு எட்டு யோசித்தவாறே நடந்து, ‘விட்டி பெரியாம்பிள யப்பா... தாதனூரு’ என்றார்.

’தாதனூரா... அங்கிட்டு தெக்க இருக்கே...’

’தெக்க இருக்கோ... கிழக்க இருக்கோ... தாதனூரு, விட்டி பெரியாம்பிள’ என்று சொல்லியபடி நடந்தார்.

‘பெருசு... நான் வந்து ஒன்னைய பாக்கணும் பெருசு. எங்க வந்து பாக்க? ஊருக்கே வரவா... இல்ல வேற எடஞ் சொல்றயா?’ என்று கேட்டான்.

‘அடுத்த வாரம் திருப்பரங்குன்றம் தேர் இழுப்பாங்கெல்ல... அன்னிக்கு வந்து பாரு. மலைக்குப் பின்னாடி பனங்காட்டுல மூணு பூம்பனை ஒண்ணா இருக்கும். அதுக்கு கீழே உக்காந்திருக்கெ... மூஞ்சி தெரியுதுல... வந்து பாரு’ என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

மறு வாரம் புதன்கிழமை திருப்பரங்குன்றத்து பங்குனித் தேர். சுத்துப்பட்டி கிராமங்களில் இருந்ததெல்லாம் விடிய விடிய மக்கள் வந்து குவிந்துகொண்டிருந்தனர். இரவெல்லாம் வழிநடைச் சிந்தைப் பாடியபடி வந்தனர். வண்டிச்சக்கரங்கள் உருண்டு மலையடிவாரம் நோக்கி வந்துகொண்டேயிருந்தன. மலையைச் சுற்றி வயல் வரப்புகளில் ஆயிரக்கணக்கான மாட்டுவண்டிகள் வந்து நின்றன. பெரிய ஓலைப்பெட்டியில் சோறோ கூழோ களியோ எடுத்துக் கொண்டு மாடுகளுக்கான வைக்கோல் கட்டுகளையும் கட்டிக் கொண்டு வந்தனர். அறுவடை முடிந்த நிலங்களிலும் புதர்களை யொட்டியும் வண்டிகள்

நின்றன. வசதி படைத்தவர்கள், சமையலுக்கான பாத்திரங்களுடன் பொருட்களையும் வாங்கிவந்து பெண்களையும் வேலைக்காரர்களையும் சமையல் செய்யச் சொல்லிவிட்டு தேர் இழுக்கப் புறப்பட்டனர்.

பெரியரத வீதி எங்கும் மனிதத் தலைகள். நாய்கள் கொண்டாட்டத்தில் ஓடுவதும் குரைப்பதுமாக அலைந்து கொண்டிருந்தன. தேர் இழுத்து வருபவர்களின் தாகம் தீர்க்க ஆங்காங்கே நீர்ப்பந்தல் வைக்கிற தர்மகர்த்தாக்கள் தங்களின் தண்ணீர்ப் பந்தலுக்கு வந்து ஏற்பாடுகளைப் பார்த்துவிட்டு தேரை நோக்கிப் போயினர். பெரிய அண்டாக்களில் கொண்டுவந்து தண்ணீரை இறக்கினர். தண்ணீர் பந்தல் வைக்க வசதியில்லாதவர்கள் மலையைச் சுற்றியிருக்கிற கிணறுகளில் ஏதாவது ஒன்றில் அன்றைக்கு முழுக்க தண்ணீர் இறைத்து வருகிறவர்களின் தாகம் தீர்ப்பதாக நேர்ந்துகொண்டார்கள். சமையல் செய்து சாப்பிடுகிறவர்கள் முதல் இலையில் சாமியாருக்குப் போட்டுவிட்டு பின்புதான் சாப்பிட வேண்டும் என்பதற்காக வண்டிக்கு ஒருவர் சாமியார்களைத் தேடி அலைந்தனர். சாமியார்களுக்கு ஏகக் கிராக்கி. கடும் பற்றாக்குறையும் கூட. இப்படி ஒரே நாளில் ஊரே வந்து அரிசிச்சோறு ஆக்கிப் போட்டால் எப்படித்தான் தின்று தொலைப்பது என்பது அவர்களின் பிரச்சனையாக இருந்தது. தேர் ஏதாவது எசகுபிசகாக பள்ளத்தில் இறங்கிவிட்டால் பின்னர் நிலை வந்து சேர மூன்று நான்கு நாட்களாகும். அப்படியானால் நான்கு நாள் நெல்லுச்சோறு சாப்பிடலாம். முருகன் அதற்கு ஒருவகை செய்தால் நல்லது என்று முருகனைக் கும்பிட்டபடி ஒவ்வொரு வண்டிக்காரரின் இலையிலும் உட்கார்ந்து ஒரு கையோ இரண்டு கையோ சாப்பிட்டுவிட்டு அடுத்த வண்டிக்குப் போனார்கள். பிள்ளைகள் தேர்பார்க்கும் கொண்டாட்டத்தில் இரவு முழுவதும் முழித்திருந்துவிட்டு அதிகாலையில் வயல்வெளிகளில் படுத்துத் தூங்கிவிட்டன.

தடி மானியத்துக்கு உரிமைப்பட்ட ஆசாரிகள் தடிகளைச் செய்து இரண்டு மூன்று மாட்டுவண்டிகளில் ஏற்றித் தேருக்குப் பின்புறமாக தயார்நிலையில் வைத்திருந்தனர். வலது சக்கரத்துக்கு தடி போடும் உரிமைகொண்ட கீழத்தெருவைச் சேர்ந்தவர்களும், இடது சக்கரத்துக்கு தடி போடும் கோட்டைத் தெருவைச் சேர்ந்தவர்களும் சக்கரத்தைப் பின்புறமாகக் குத்தி நெம்பிவிட ஏதுவாக இருந்த ஊண்டு தடியின் மேல் ஏறி அமுக்கி நகட்டத் தயாராக இருந்தனர். முன்புறமிருந்து சமிக்ஞை வந்ததும் பெரும் ஓசை மேலெழுந்து வந்தது. ஊண்டுதடியின் மேல் தயாராக நின்றவர்கள் தவ்வி அமுக்கினர். ஆயிரக்கணக்கான கைகள் வடத்தைப்பிடித்து இழுத்தன. தேங்காய்களை நசுக்கியபடி சக்கரங்கள் உருளத் துவங்கின.

தேர் புறப்படும் பொழுது அருகில் இருந்த வடத்தைப் பிடித்து இழுத்த சோலைமடை மிராசு தேர் நகர்ந்ததும், கூட்டத்தை விட்டு வெளியேறி வந்து தனது வில்வண்டியிலேறிப் பின்புறமாக மலையைச் சுற்றிப் பனங்காட்டருகில் வந்தார். அவர் வண்டிக்குப் பின்னால் இரண்டு பேர் கம்பைப் பிடித்தபடி உடன் ஓடி வந்தனர். பனங்காட்டருகில் ஏற்கனவே இரண்டு வண்டிகளில் அரிசி, பருப்பு, இலைக்கட்டு எல்லாம் கொண்டு வந்தவர்கள் இவரது வருகைக்காகக் காத்திருந்தனர். இவர் வந்ததும் பனங்காட்டுக்குள் இருக்கும் பெரியாம்பிளையைக் கூட்டிவரச்சொல்லி ஆள் அனுப்பினார். நான்கு நான்கு பேராக ஆளுக்கு ஒரு திசையில் தேடி

பனங்காட்டுக்குள் போனார்கள். மலையடிவாரத்திலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பனங்காடு செழித்துக்கிடந்தது. எங்கும் காம்பனைகள் கொத்துக் கொத்தாய் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக மாலையைப் முறுக்கித் தொங்கவிட்டபடி பூம்பனைகள் இருந்தன. எல்லோரும் பனையை அலசித் தேடியபடி இருந்தனர். மலையை ஒட்டிய ஒரு மூலையில் மூன்று பூம்பனைகள் மொத்தமாக ஒரேயிடத்தில் இருந்தன. அதன் கீழே பெரியாம்பிளையும் உடன் ஏழெட்டுப் பேரும் உட்கார்ந் திருந்தனர்.

தேடி வந்தவர்கள் மரத்தடியில் இருந்தவர்களிடம் வந்து 'யப்பா...இதுல யாரு விட்டிப் பெரியாம்பிள.' என்று கேட்டனர். 'நான் தானப்பா...' என்றார் பெரியாம்பிள 'எங்க மிராசு வந்துருக்காரு. ஒங்கள கூட்டிவரச் சொன்னாரு' என்றனர். உடனே பெரியாம்பிள 'வாங்கடா போவோம்' என்று உடன் வந்த இளவட்டங்களைக் கூப்பிட்டார். 'ஏ பெரியாம்பிள! திட்டம் போட்டே எங்கள அடி பெற கூப்பிடுறயா? போடா ஒக்காளவோலி, அனாதைப் பொணமா கெடக்கப்போறோம். நீயே போயி அனுபவிச்சிட்டு வா... நாங்க இந்த அடி பெர்றதுக்கு லாயக்கில்லப்பா' என்று சொல்லியவுடன் பெரியாம்பிள மட்டும் புறப்பட்டுப்போனார். அவர் போனதும் 'மாட்டுனானா கெழவெ. மரியாத செய்யப்போறான்னு சொல்லிப் போறான். இவனைத்தான் காணோம்னு இருக்கானாக்கும் அவெ. இங்கெய பத்துப் பன்னெண்டு பேரு வந்துட்டாங்கெ. அங்க அவெ எத்தன பேரோட நிக்கிறானோ, கட்டித்தூக்கிட்டுப் போகப்போறான். கொஞ்ச நேரத்துல சத்தம் கேட்கும், கேட்டா போவோம்டா... உக்காருங்க' என்று சொல்லி இருந்துவிட்டனர்.

வண்டிகளை ஒட்டித் திண்டின்மேல் உட்கார்ந்திருந்த மிராசுவும் அவரது சம்சாரமும் பெரியாம்பிள வந்ததும், எழுந்து நின்று வரவேற்றனர்.

'யப்பா... இதுல ஒனக்கு ஒப்புன கெடாய சொல்லு' என்று எதிரில் கட்டிக்கிடந்த ஐந்து கிடாய்களைப் பார்த்து கையைக் காட்டினார் மிராசு. கிடாய்களைப் பார்த்த பெருசு 'அது உரிங்கப்பா... நல்லா இருக்கும்' என்று சுட்டிக்காட்டிச் சொன்னார். வேலைக்காரர்கள் அந்தக் கிடாயை உரிப்பதற்காக அவிழ்த்துக்கொண்டு போனார்கள். 'யப்பா... தேரு இங்கிட்டு வந்து சேர மதியமாயிரும். அதுக்குள்ள குளிச்சு, சாப்பிட்டு முடிச்சு தயாராயிரணும்ப்பா' என்று சொல்லியபடி பனங்காட்டுக்குள் இருந்த குளத்தில் குளிப்பதற்கு பெரியாம்பிளையக் கூட்டிக்கொண்டு மிராசு வந்தார். குளத்து நீரை ஒட்டிய கல்லில் குளிப்பதற்குத் தயாராக ரெண்டு பேரும் உட்கார்ந்தனர். ஒரு படி எண்ணெய்யைக் கொண்டுவந்த வேலைக்காரன் ஒருவன் 'பெரியாம்பிள, தேக்கிறதுக்கு எண்ணெ கொண்டுவந்திருக்கேன். கைய்ய நீட்டு'ன்னு சொன்னான். 'குடுப்பா...நீயொரு ஆளு...' என்று சொல்லி எண்ணெயப் படியை வாங்கிய பெரியாம்பள கடகடவென அரைப்படி எண்ணெயைக் குடித்தார். மீதி எண்ணெயைக் குடுமியை அவுத்துவிட்டு தலைக்கும் மேலுக்குமாகத் தேய்த்தார்.

பார்த்துக்கொண்டேயிருந்த மிராசு... 'என்ன பெருசு, செய்யிறது பூராம் ஏட்டிக்கு பூட்டியா, கோளாறா செய்ற? இப்படி எண்ணெய் குடிச்சா வயித்தால ஓடும்ல?' என்று கேட்டார்.

அதற்கு பெரியாம்பிள, 'ஒரு படி ரெண்டு படி இருந்தா அப்படி. இது

வெறும் அரப்படி... ஒரு மூலையில போயி சொருகி நின்னுக்கிரும்ப்பா... அலசாது' என்றார்.

மிராசு அதன்பிறகு பேச்சுக் கொடுக்காமல் குளிக்கிற வேலையப் பார்த்தார். பெரியாம்பிள அவராக கரம்பையை எடுத்துத் தலைக்கும் மேலுக்குமாகத் தேய்த்து எண்ணெயெல்லாம் போக்கிவிட்டு எழுந்தார். மிராசுக்கு நான்கு பேர் சுற்றி நின்று அந்த வேலையைச் செய்தனர். இவரது முன்னோர்கள் பெனுகொண்டாவில் மல்ல கஜட்டிகளாக இருந்தவர்கள். கன்னிவாடிப் பாளையம் தனது அமரக்காரர்களுக்கு பயிற்சி அளிக்க மூன்று குடும்பங்களைக் கூட்டி வந்து இங்கே குடியேற்றியது.

குளித்து முடித்துவிட்டு வண்டிக்கு வரும்போது சாப்பாடு ஆகித்தயாராக இருந்தது. ரெண்டு பேரும் உட்கார்ந்தனர். முழு வாலை இலை. மிராசு சம்சாரம் ஆளுக்கு நாலு அகப்பை கறியை எடுத்து முதலிலே வைத்தாள். கொஞ்ச நேரத்தில் பெரியாம்பிள இலையில் இருந்ததைச் சாப்பிட்டு முடித்து அடுத்த நாலு அகப்பை வாங்கினார். மிராசு பேசிக்கொண்டே சாப்பிட்டபடி நாலு அகப்பையை முடிக்கிறபொழுது பெரியாம்பிள பன்னிரண்டாவது அகப்பைக்குப் போய்விட்டார். அடிச்சுப்பிடிச்சு மிராசு திக்கித் திணறி பன்னிரண்டுக்கு வருவதற்குள் பெரியாம்பிள இருபதைத் தாண்டிப்போய்விட்டார்.

பெரியாம்பிள சாப்பிடுவதை மிரண்டுபோய் பார்த்துக் கொண்டிருந்தார் மிராசு.

நேரம் உச்சிப்பொழுது. பனங்காட்டுக்குள்ளே இருந்தவர்கள் 'என்னடா இன்னும் சத்தத்தையே காணோம், பெருசையும் காணோம்' என்று நினைத்து எழுந்து வெளியில் வந்தார்கள்.

பெருங்கூட்டம் தேரை இழுத்துக்கொண்டு வந்தது. ஜனக்காடு நெருக்கித் தள்ள தேர் நகரமுடியாமல் நகர்ந்து வந்தது. பெரியாம்பிளய ஆளைக்காணோம் என்று ஆளுக்கு ஒரு பக்கமாகத் தேடிப்போனார்கள். ரொம்ப நேரமாகத் தேடி ஒருவன் மட்டும் ஆளைப் பார்த்துவிட்டான்.

சாப்பிட்டு முடித்து வெற்றிலை போட்டபடி பெருசு உட்கார்ந் திருந்தார். தேர் கிட்ட வர்றதுக்கு 'முன்னாடி, மிராசு ஒரு கொத்து வேட்டியை எடுத்து 'கட்டுப்பா...' என்று சொல்லி கொடுத்தார். அதில் மூணு வேட்டி இருந்தது. ஒரு வேட்டி இடுப்பில் கட்ட, இன்னொன்று உருமால் கட்ட, இன்னொன்று மல்லுபோட. பெரிய சீமான்கெதான் மூணு வேட்டி உடுத்துவார்கள். பெரியாம்பிளைக்கு அந்த மாதிரி மூணு கொத்து ஒன்பது வேட்டி எடுத்துவந்து முதல் உருமால மிராசு சம்சாரம் எடுத்துக்கொடுக்க மிராசு அதை வாங்கி 'யாப்பா பெரியாம்பிள... வீரனுக்குத்தாம்பா வீரனோட அருமை தெரியும். நானும் எந்தலைமுறையும், ஒனக்கும் ஓந்தலமுறைக்கும் இந்த தேரு சுத்துற காலம் வரைக்கும் உருமா கட்டிமரியாத செய்வோம்ப்பா...' என்று சொல்லி உருமாலைக் கட்டிவிட்டான். தேர் பனங்காட்டுக்கு நேராக வந்து நின்றுகொண்டிருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை பனங்காட்டுக்கு நேராக தேர் வந்துநிற்கும்பொழுது விட்டிப்பெரியாம்பிளையின் வாரிசுக்கு குஸ்தி மிராசுவின் வாரிசு உருமால் கட்டி மரியாதை செய்து வருகிறார்கள்.

வைதீக கோயில் ஒன்றின் பெருவிழாவில் தாதனூர்க்காரர்களுக்குக்

கொடுக்கப்படுகிற ஒரே மரியாதையாக இது இருக்கிறது.

கடந்த பன்னிரண்டு வருடமாக அந்த மரியாதையை வாங்கி வந்த தெத்துக்கூனனுக்கு மதுரை கோர்ட் தூக்கு அறிவித்துவிட்டது. மல்லுப்போடும் கழுத்தில் சுருக்குப்போட வேண்டிய கயிறுக்காக அவனது எடையை ஜெயில் அதிகாரிகள் தினமும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வாரிசின்றி நிற்கப்போகிற மரியாதைக்காக ஊர் துடிதுடித்துக் கிடந்தது.

*

**ந**கரத்து காவக்கூலிய நம்பியே காலங்காலமாய் வாழ்ந்து வந்த ஊர் இப்பொழுது ஏறக்குறைய அதை இழந்த நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. கீழ்க்காவலும் மேக்காவலும் பார்க்கிற இரண்டு கொத்துக்கு மட்டுமேயான கூலியைக்கூட முழுமையாக வசூல் செய்யமுடியவில்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காவல் உறவுகள் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுப் போய்க்கொண்டே யிருக்கிறது. கண்ணுக்கு முன்பாகத் தோன்றி நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் விஸ்தீரணமாகிய பொன்னகரம் யாருக்கும் காவக்கூலி கொடுப்பதில்லை. அங்கே கச்சேரி போலிசே முழுமையாக சட்டம் ஒழுங்கைக் காத்துவருகின்றனர். அது நகரத்துக்கு பெரும்நம்பிக்கையைக் கொடுத்தது. மிச்சம் இருக்கும் குடிக்காவல் உறவுகளை வேகவேகமாக அறுபடச் செய்தது. சராசரியாக எல்லா வீடுகளிலும் காவக்கூலி வாங்குவது முற்றிலும் ஒழிந்துவிட்டது. பெரிய வீடுகளில் மட்டும் காவக்கூலி கேட்பது, அவர்கள் தர மறுத்தால் பொருட்களை எடுத்துக்கொண்டு போய் துப்புக்கூலி வசூல் செய்வது என்ற நிலைக்கு வந்துவிட்டது. காவக்காரன் வசூலிக்கும் கூலியில் சரிபாதிக்கு மேல் துப்புக்கூலி பிடித்துவிட்டது.

மதுரை எங்கள் காவலின் கீழ்தான் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே தினமும் காவலுக்குப் போகிற மனநிலைக்கு தாதனூர்க்காரர்கள் வந்துவிட்டார்கள்.

காவக்கூலியைத் துப்புக்கூலியாக உருமாற்றி, காவக்காரனை கொள்ளைக்காரனுக்குரிய இடத்தில் கொண்டுவந்து நிறுத்துவதில் வெள்ளைக்கார போலிஸ் சாதுர்யமாக செயல்பட்டு வெற்றிபெற்று வந்தது. கலெக்டர் பென்னிங்டன் வகுத்துத் தந்த திட்டத்தை நகரத்து நிர்வாகமும் டி.எஸ்.பி.டர்னரும் மிகக்கச்சிதமாக அமல் படுத்தினார்கள்.

வரப்போகிற ஆபத்தை போதகர் டேவிட் சாம்ராஜ் நன்கு புரிந்து வைத்திருந்தார். ஆனாலும் அவரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. யாருக்கும் தெரியாமல், தாதனூர்க்காரர்களிடமும் சொல் லாமல் தனது சொந்தப் பணத்தைக்கொடுத்து பிச்சுவையர் கொலை வழக்கை மெட்ராஸ் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ய வக்கீல் குணசீலனை அனுப்பி வைத்தார். தனது தந்தையின் காலம் முதல் தாதனூரின் மேல் மிகுந்த பாசம் கொண்டவரான வக்கீல் குணசீலன் தன்னால் ஆன அனைத்தும் செய்து பார்த்தார். ஆனால் மெட்ராஸ் ஹைகோர்ட், கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை உறுதிப்படுத்தியது.

‘வரும் புதன்கிழமை காலை’ என்று தேதி நிச்சயித்து ஜெயில் அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். தகவல் தெரிந்த நாள் முதல் ஊரே கேதவீடு போல இருந்தது. முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்ட ஒரு

மரணத்தை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் ஊர் வலியின் உச்சத்தை அனுபவித்துக்கொண்டிருந்தது. என்ன செய்தாலும் காப்பாற்ற முடியாது என்பதை ஒத்துக்கொள்ளவும் முடியாமல், எதுவும் செய்யவும் முடியாமல் அவர்கள் ஆலமரத்தடியில் துடிதுடித்துக் கிடந்தனர்.

‘யப்பா... உருமா கட்ட விட்ராதீங்கப்பான்னு’ விட்டிப் பெரியாம்பிள கனவுல வந்து சொல்லிக்கொண்டே இருப்பதாக தாவாரத்தில் படுத்துக்கிடந்த விருமாண்டிப் பெருசு சொன்னார். எல்லோரும் ஆலமரத்தடியிலே கிடந்தார்கள். மூன்று நான்கு நாட்களாக யாரும் களவுக்குப் போகவில்லை. மரம் இலைகளை உதிர்த்துக்கொண்டே இருந்தது.

நாளை காலை தூக்கு. ஊரில் உள்ள ஆண் பெண் எல்லோரும் மந்தையைச் சுற்றிலும் ஆலமரத்தடியிலும் குவிந்துகிடந்தனர். நிகழப்போகும் மரணத்துக்காக சம்பந்த வழி ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் வந்தபடி இருந்தனர்.

இரவு பெரும் கொடுமையான ஒன்றைப்போல நகர்ந்து கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் எல்லா இடங்களிலிருந்தும் பொழுதை உணர்த்திக்கொண்டிருந்தன. ஆனால் அதைப் பார்க்கவோ கணிக்கவோ மனம் தயாராக இல்லை. சோங்கனின் மனைவி சடச்சி பொட்டல் பக்கம் போய் நின்று தலையிலும் மார்பிலும் மாறி மாறி அடித்து அழுது கொண்டிருந்தாள். பத்துப்பதினைந்து பெண்கள் அவள் அருகில் நின்று தேற்றிக்கொண்டிருந்தனர். மந்தையில் இருந்த பெண்கள் ஒப்பாரி வைக்கும் ஓசை ஆலமரத்தடியில் கேட்டபடி இருந்தது. ரெட்டிய கெடுத்த வெள்ளி மேலெழுந்து வந்தது. தலைக்கோழி கூவியது. என்னதான் காவல் காத்தாலும் ரெண்டு உயிர் களவு போகப்போகிறதே என்ற துக்கம் எல்லோருக்குள்ளும் உருவானது. இருளைச் சரித்து விளையாடும் விளையாட்டை முதன்முறையாக ஊரே துன்பம் எனப் பார்த்துக்கொண்டிருந்தது.

தாதனூர்க்காரர்கள் இரண்டு பேர் தூக்கில் போடப்படுவதை ஒட்டி ஜெயிலைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இரவு முழுவதும் கச்சேரி போலிசாரும் ரிசர்வ் போலீஸாரும் புது ஜெயில் ரோடு முழுவதும் தயார் நிலையில் நின்றுகொண்டிருந்தனர். அவுட்போஸ்ட்டிலும் போலிஸ் குவிக்கப்பட்டிருந்தது. பொன்மேனியின் உடைமரக்காட்டு அய்யனார்கோவில் தாவாரத்திலிருந்து யானைப் பள்ளம் வரை எல்லா இடங்களிலும் தாதனூர்க்காரர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவின் நேரம் கழிந்து கொண்டேயிருந்தது. போலிஸ் மிகுந்த விழிப்போடு இருந்தனர். டி.எஸ்.பி. டர்னர் இரவில் மூன்று முறை ஜெயிலுக்கு வந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனார். என்னதான் நகர்க்காவலை போலிஸ் கையில் எடுத்திருந்தாலும் இரவு அவர்களுக்கு அடங்கிய ஒன்றோ, அவர்களால் அறியப்படுகிற ஒன்றோ அல்ல. அது இன்னும் தாதனூர்க்காரர்களுக்கானதுதான். அதனால்தான் இவ்வளவு உயரமான சுற்றுச்சுவரைக் கட்டிய பின்னும் சுவரைச் சுற்றி துப்பாக்கி போலிசார் இவ்வளவு பேர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இரவு நகர நகர தாதனூர் தாங்கிக்கொள்ள முடியாத துக்கத்தையும்,

நகரத்துபோலிசார் தணிக்கமுடியாத பதற்றத்தையும் அனுபவித்தபடி இருந்தனர்.

பொழுது புலர ஆரம்பித்தது. மணி அதிகாலை ஐந்தைத் தாண்டியது. அங்குமிங்குமாகப் பறவைகளின் சத்தம் கேட்க ஆரம்பித்தது. போலிஸ் பரபரப்பானது. மற்ற வெளியெங்கும் நிறுத்தப்பட்டிருந்த போலிசார் புதுஜெயில் ரோட்டுக்கு வரவைக்கப்பட்டனர். ஐரோப்பிய குடியிருப்புகளின் பாதுகாப்புக்கு ஒருசில போலிசார் மட்டுமே இருந்தனர். மற்ற எல்லோரும் டி.எஸ்.பி.யோடு சேர்ந்து அணிவகுத்து ஜெயில் வாசலுக்கு வந்து நின்றனர். இரண்டு மூன்று ஆங்கிலேய அதிகாரிகள் ஜெயிலுக்குள் போனார்கள்.

தூக்கிலிடப்பட்ட உடல்களை வாங்க ஊரே திரண்டுவரும். அப்பொழுது கண்டிப்பாக பெரும் கலகம் வரும் என்பதால் போலிஸ் முழு தயாரிப்போடு இருந்தது. மதுரையின் வணிக வீதிகளி லிருந்து சரக்கு ஏற்றிக்கொண்டு அதிகாலை வெளியேறிச் செல்லும் வண்டிகளோ வந்துசேர வேண்டிய வண்டிகளோ எதுவும் வரவில்லை. செய்தி எல்லாப்பக்கமும் பரவியிருந்தது. காட்டன் மில்லிருந்து நைட் ஷிப்ட் முடியும் சங்கொலி அலறித் தீர்த்தது. மொதுமொதுவென தொழிலாளிகள் வெளியேறி வந்தனர். புது ஜெயில் ரோட்டுப்பக்கம் வரவேண்டாமென போலிசார் தடுப்பு வைத்திருந்தனர். ஆனால் அந்தப்பக்கம் வருவதைப் பற்றி நினைத்துப்பார்க்கக்கூட அங்கு ஆள் இல்லை.

பொழுது நன்றாக விடிந்தது. தாதனூரை எதிர்பார்த்தபடி போலிசார் இருந்தனர். புது ஜெயில் ரோடு முழுக்க பெரும் பரபரப்பும் அமைதியும் நிரம்பியிருந்தது. என்ன நடக்குமோ என எதிர்பார்த்து நகரம் காத்திருந்தது. நேரம் பயத்தைக் கூட்டியது. இன்னும் சிறிது நேரத்திற்குள் பெரும் கூட்டம் உள்ளே நுழையலாம் எனப் பொன்மேனி அவுட்போஸ்ட்டிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. டி.எஸ்.பி.டர்னர் எதையும் வெளிக்காட்டாமல் சமாளிக்க முயன்றுகொண்டிருந்தார். மேலெல்லாம் வியர்த்துக்கொட்டியது. மணி பத்தைத் தாண்டியது. இன்னும் யாரும் வரவில்லை. என்ன காரணமென்று புரியவில்லை. காக்கவைத்து தாக்கத்திட்டமேதும் இருக்குமோ என்று சிலர் நினைத்தனர்.

போலிசாரால் நிலைமையை ஊகிக்க முடியவில்லை. எப்படியோ...ஒரு பெரும் கலகம் நடக்கப்போகிறது, அது எப்படி எங்கு ஆரம்பமாகப் போகிறது என்று தெரியாத குழப்பம் எல்லோருக்குள்ளும் இருந்தது. வெயில் உக்கிரமாக அடித்தது. பொன்மேனியின் உடைமரக்காட்டு ஒற்றையடிப் பாதையின் வழியாக இரண்டு பேர் ஆளுக்கு ஒரு கயித்துக்கட்டிலை தலையில் வைத்துத் தூக்கியபடி வந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஆறு பேர் நடந்து வந்தனர். அவுட்போஸ்ட்டில் இருந்து ஜெயில் வாசலில் இருந்த டி.எஸ்.பி.டர்னருக்கு தகவல் வந்தது. ‘எதிர்பார்த்ததுதான் என்பதைப்போல காட்டிக்கொள்ள அவர் முயற்சித்தார்.

சிறிது நேரத்தில் அவர்கள் ஜெயில் வாசல் அருகில் வந்தனர். குவிக்கப்பட்ட போலிசார் அவர்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். இரண்டு பேரை மட்டும் உள்ளே அழைத்து ரேகை வாங்கிக்கொண்டு தூக்கிலிடப்பட்ட உடல்களை ஜெயிலர் கொடுத்தார். உடல்களை வாங்கி இரண்டு கட்டிலில் போட்டுக்கொண்டு வந்தவர்கள் புறப்பட்டனர்.

பொன்மேனியின் உடைமரக் காட்டுக்குள் போகும்வரை போலிசார்

அவர்களைப் பின்தொடர்ந்தனர். ‘தூக்கிலிடப்பட்ட உடல்களைத் தாதனூர் எந்தப் பிரச்சனையுமின்றி வாங்கிக்கொண்டு சென்றது’ என்ற செய்தி கலெக்டர் பென்னிங்டனுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர் தனது மகிழ்ச்சியை சக அதிகாரிகளோடு பகிர்ந்துகொண்டார்.

புதுஜெயிலின் முதல் தூக்கு தாதனூர்க்காரர்களின் தூக்கு என்பதும், இப்படி இரண்டு பேர் தூக்கில் போடப்பட இருக்கிறார்கள் என்ற செய்தி நகர் முழுவதும், மாவட்டத்தின் பல பகுதிக்கும் பரவியதென்பதும் இயல்பாக நடந்த ஒன்றல்ல என்பதை போதகர் டேவிட் சாம்ராஜ் மட்டும் நன்கு புரிந்திருந்தார்.

*

# 106

**தூக்கிலிடப்பட்ட இருவரின் உடல்களையும் மாடக்குளம் கண்மாயில்** எதிர்த்து வந்து வாங்கிச் சென்ற ஊர் அதன்பின் துக்கத்திலிருந்து மீள வழி தெரியாமல் கிடந்தது. இரண்டு நாட்களாக ஊரின் எந்த அடுப்பிலும் உலை வைக்கவில்லை. மூணாம் நாளில்தான் குழந்தைகளின் அழுகையைத் தாளமாட்டால் அங்கொன்றும் இங்கொன்றுமாக அடுப்பெரிக்க ஆரம்பித்தனர். ஆனால் அன்றுதான் குஸ்தி மிராசுவின் வாரிசுதாரார்கள் செய்தி கேள்விப்பட்டு தாதனூருக்கு வந்தார்கள். தெத்துக்கூனன் புதைக்கப்பட்ட இடத்தில் தலைமாட்டில் ஒரு வேட்டியும் மார்புப்பகுதியில் மல்லுவேட்டியும் இடுப்பிலே ஒரு வேட்டியுமாக போட்டு இறுதிமரியாதை செய்தார்கள். அவர்கள் வந்தவுடன் ஊரே திரண்டு இடுகாட்டில் வந்து நின்றது. வந்தவர்கள் மரியாதை செய்வதற்காக வில்வண்டியிலிருந்து வேட்டியை எடுக்கும்பொழுது விம்ம ஆரம்பித்த பெண்களின் அழுகைச்சத்தம் நேரம் ஆக ஆக அமணமலையே உருகி ஓடுவதைப்போல எழுந்தது. ‘மூத்தவன் பாம்பு கடிக்கக் கொடுத்திட்டேன், இளையவன் தூக்குக் கயித்துக்கு கொடுத்திட்டேனே...பெரியாம்பிள பேர் சொல்ல இனி நான் என்ன செய்வே...?’ என்று தெத்துக்கூனனின் ஆத்தாள் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அழுது புரண்டாள். மற்றவர்கள் அந்தக் கிழவியைத் தேற்ற முயற்சித்தனர்.

மூன்று நாட்கள் கழித்து துக்கத்திற்குள் இருந்து எழுந்து வந்த ஊர் மீண்டும் துயரத்தின் அடியாழத்திற்கு போனது. பத்துக் கொலை நிகழ்ந்திருந்தாலும் ஊர் இவ்வளவு வேதனைப் பட்டிருக்காது. அடுத்து என்ன செய்வது எனத் தெரியாதலால் வேதனையின் அளவு கூடிக்கொண்டேயிருந்தது. ஒரு வாரம் கழித்து ஊர் பெரியாம்பிள ஒச்சு ‘யப்பா... எந்த மரியாதையும் மூணு தலமுறய தாண்டாதுப்பா, இதுவே அதிகந்தான்’ என்று சொல்லி ஊரைத் தேற்றினார். எதைப் பிடித்தாவது மேலேற முடியுமா? என்று ஏங்கிக் கிடந்த ஊருக்கு இந்த வார்த்தை

பெரும்பிடியைக் கொடுத்தது. ஆலமரத்தடியில் பேச்சு கூடியது. வார்த்தைகளில்தான் துக்கத்தை உடைத்துச்செல்லும் வழி இருக்கிறது. ‘ஒத்தையில வாங்கிட்டு வந்த மருவாத ஒத்தையிலதான்டா போகும், அதையே நெனச்சிட்டு உக்காந்திருக்க முடியுமா?’ என்றார் விருமாண்டிப் பெருசு. ‘கெழட்டுப் பய பூம்பனையில உக்காரலாமாப்பா...காம்பனையில உக்காந்தாதான தலமுற தலமுறைக்கு பன வந்துக்கிட்டே இருக்கும். பூம்பனை நாலு தலமுறக்கு தாங்குனதே பெரிய விஷயம்தான்’ என்றார் மந்தைக்கல் பெரியாம்பிள. உருமால் கட்டு மரியாதையை வாங்கியதற்கு எப்படி விட்டிப் பெரியாம்பிள காரணமோ அதே போல, நின்று போனதற்கும் அவரே காரணம் என்ற முடிவுக்குப் போனது ஆலமரத்தடி. இந்த முடிவுக்கு அது வந்தால்தான் துக்கத்திலிருந்து விடுபட முடியும்.

வார்த்தைகளின் வழியே நிகழ்வைத் தலைகீழாக்கினார்கள் ஆண்கள். எவ்வளவு வேகமாகத் தப்பிக்க முடியுமோ அவ்வளவு வேகமாகத் தப்பித்து வெளியேறினர். ஆனால் பெண்கள் அப்படியல்ல, வார்த்தை என்னும் பெருங்கயிற்றைப் பிடித்தபடி உள்ளுக்குள் இறங்கிக்கொண்டேயிருந்தனர். ‘பெரியாம்பிளய அன்னைக்கே ஒத்தையில விட்ட ஊரு இன்னைக்கும் ஒத்தையில விட்டிருச்சே’ என்றாள் தெத்துக்கூனனின் ஆத்தாள். தேரு பாத்து கட்டுன உருமா இப்படி ஊரு பாக்க போயிருச்சே என்று ஒப்பாரி பாடினாள் இன்னொருகிழவி. ‘கன்னத்த போட்டுக்கொடுத்து கெழவே சாகட்டும்ன்னு வுட்டுட்டு வந்தவங்கெ தான இவங்கெ. இந்த பொசகெட்ட பயலுக ஊருக்கு எவ்வளவு நாளைக்கு மரியாத வேணுமாம்!...போதும் போதும், வீரனோட வந்தது வீரனோடவே போகட்டும்’ என்றாள் கழுவாயி.

ஆணும் பெண்ணும் வார்த்தைகளின் வழியே வேதனைகளை இறக்கியபடியே இருந்தனர். பெண்களின் வார்த்தைகள் வன்மத்தோடு வந்தன. ஊருக்கு எதிராகவும், ஆலமரத்தடிக்கு எதிராகவும் அது மாறி மாறித் திரும்பியபடி இருந்தது. ஆண்களின் வார்த்தைகள் அதே போல கச்சேரி போலீசுக்கு எதிராகத் திரும்பியிருக்கவேண்டும். ஆனால் அது கிழவனுக்கு எதிராகவே திரும்பிவிட்டது. ஆண்களின் இந்த விசித்திர மனநிலையை, கோழைத்தனத்தை காலங்காலமாய் கிழவிகள் அறிந்தே வைத்திருந்தனர். அதனால்தான் அவர்கள் எப்பொழுதும் ஆண்களை நம்புவதே இல்லை. அவர்கள் மதிக்கும் ஒரே ஆண் ‘கருப்பன்’ மட்டும்தான். ஊரின் ஆதி ரகசியத்தை அவன் மட்டுமே முடமான கிழவியிடம் வந்து மறக்காமல் சொல்லிவிட்டுச் செத்தான். மற்ற எந்த ஆண்கள் மீதும் அவர்களுக்கு மரியாதை இல்லை. பெரியாத்தா சடச்சிக்கு பெறந்த ரெண்டு வாரிசுகள தடம் தெரியாம அழிய விட்டவங்கெ ரத்தம் தான்றா ஒங்க உடம்புல ஓடுது’ என்று இன்றைக்கும் சிறுவர்களைத் திட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஊரில் உள்ள எந்தக் கிழவனையும் கிழவிகள் மதிப்பதேயில்லை. சட்டி தூக்கியாடும் பெருங்கிழவியைக் கண்டு ஊரே இன்றைக்கும் பயந்து கிடக்கிறது. ஆனால் ஊர் பெரியாம்பிளையைக் கண்டு அப்படியாரும் பயப்படுவதில்லை. அவர் ஊர் பெரியாம்பிள, அவ்வளவுதான்.

*

**நி**லா விழுந்துவிட்டதால் கடந்த பத்து நாட்களாகக் கருது கசக்கப்போகாமல் இருந்த ஊர் அதன்பின் தூக்கு அறிவிக்கப்பட்டு

விட்டதால், இன்றுவரை வைகைக் கரையைத் தாண்டி வெளியேறிப் போவதைப் பற்றி நினைத்தே பார்க்கவில்லை. பேச்சுகள் கூடி மனம் வெளியேறி வந்தபோது கரையில் இரண்டு கல்யாணங்கள் அவர்களுக்காகக் காத்திருந்தன. முன்பே நிச்சயிக்கப்பட்ட இரண்டு கல்யாணத்திற்கும் நான்கு நாட்கள்தான் மீதமிருந்தது. தாதனூரில் கல்யாணம் என்றால் சொந்தம் சுருத்தெல்லாம் பிள்ளைகுட்டிகளோடு வந்து சேரும். 'நாலு நாளு நல்ல கஞ்சி குடிச்சுட்டு வருவோம்டா...' எனச் சொல்லி எங்கிருந்தெல்லாமோ வந்துசேருவார்கள். ஊரின் நிலைமை வெளியில் யாருக்கும் தெரியாது. கிராமக் காவக்காரர்களின் மீது கச்சேரி போலீஸார் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் அவர்கள் தங்களின் தொழிலை வழக்கம் போல் பார்த்துவந்தனர். நகர்க் காவலை கையில் வைத்திருந்ததால் தாதனூரை மட்டும் இலக்காகக் கொண்டு போலிஸ் செயல்பட்டது. அதனால் தாதனூர் சந்தித்துக்கொண்டிருக்கிற பிரச்சனைகளை எதுவும் பெரிதாக வெளியில் தெரியாமல் இருந்தது. வழக்கம்போல தாதனூர் கல்யாணத்திற்கு ஆட்கள் வரத் தயாராகிக்கொண்டிருந்தனர்.

ஆனால் இருபது நாட்களுக்கு மேலாகக் கருது கசக்க யாரும் போகாததால் வருகிற எல்லோருக்கும் அரிசிக் கஞ்சி ஊத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. இருப்பின் அளவு மிகக்குறைவாகவே இருந்தது. இரண்டு நாட்களுக்குக் கூட பத்தாது என்பது பார்த்தவுடன் தெரிந்தது. பங்குனி முடிந்துவிட்டதால் அறுப்பு எல்லாமே முடிந்திருக்கும். இங்கொன்றும் அங்கொன்றுமாக மிக அபூர்வமாகத்தான் அறுக்கப்படாத வயல்கள் இருக்கும். நிலவு வந்துவிட்டதால் இன்று ஒரு நாள் வேண்டுமானால் போகலாம். இரவு தனது இயல்பை இழந்து வெள்ளை பூத்துக்கிடக்கிறது. எனவே இந்த ஒரு நாளைப் பயன்படுத்தி எங்கிருந்தாலும் கசக்கிக்கொண்டு வருவது எனமுடிவானது. பகல் பொழுதிலேயே அறுக்காத வயல் எங்கிருக்கிறது எனப் பார்த்துவர மொக்கயனை ஊர் அனுப்பி வைத்தது.

மொக்கயன் கஞ்சிப்பொழுதுக்குப் பின் புறப்பட்டுப்போனான். வடகரையில் ஒவ்வொரு கிராமமாய் நடந்து கடந்தான். எல்லா ஊர்களிலும் அறுவடை முழு முற்றாக முடிந்திருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அறுக்கப்படாத வயல்கள் எதுவும் தென்படவில்லை. பெரியாற்றுப் பாசனத்தின் கடைமடைப் பக்கமாகப் போகலாம் என முடிவு செய்து கிழக்கே திரும்பி நடந்தான். குருவியேந்தல், சாணார்குண்டு, திருச்சுனை எனப் பெரிய ஊர்கள் எல்லாம் அறுப்பு முடிந்த களைப்பு மாறாமல் கிடந்தன. உச்சிப்பொழுது தாண்டியது. பத்துக் குண்டு அறுக்காமல் கிடக்காதா என்ற ஏக்கத்தோடு தேடிப் போய்க்கொண்டேயிருந்தான். எந்த கிராமத்தின் உள்ளேயும் போகாமல் வயல்வெளி வழியாகவே நடந்து கடந்தான். யாராவது கேட்டால் பதில் சொல்வதற்காக வலது கையில் மாட்டின் கயிறு ஒன்றைச் சுற்றி வைத்துக்கொண்டான். அழகாச்சேரி வயல்வெளியில் நடந்துகொண்டிருந்தபோது தூரத்தில் கதிர்விளைந்து சாய்ந்துகிடந்தது தெரிந்தது. கால்களின் வேகம் கூடியது. குளக்கரையில் வந்திறங்கும் கொக்கு போல வரப்பு மேட்டிலே வந்து நின்றான். இரண்டு குண்டுகளில் விளைந்த பயிர் சாய்ந்து கிடந்தது. 'ரெண்டு குண்ட மட்டும் கசக்கிட்டுப்போனா எந்த மூலைக்கு காணும்' என யோசித்தபடி

நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அந்தப் பக்கமாக வந்த பெரியவர் ‘என்னப்பா...இங்க நின்னு பாத்துக்கிருக்க? என்ன விஷயம்?’ எனக் கேட்டார். ‘ஒண்ணுமில்ல பெருசு. கட்டிப்போட்டிருந்த ஜல்லிக்கட்டு மாடு அத்துக்கிட்டு வந்திருச்சு. அதான்... இந்தப் பக்கம் வந்துச்சான்னு தேடிக்கிட்டு திரியுறேன்’ என்றான் மொக்கை.

‘மயில நிற மாடாப்பா?’ என்று திரும்பக்கேட்டார் பெரியவர்.

‘இல்ல பெருசு, காரி மர’ என்று சொல்லியபடி கரைமீது நடந்து சாய்ந்து கிடந்த நெற்கதிர்களை விட்டு வெளியேறினான்.

அடுத்த இருந்த வேளாளசத்திரத்தின் வயல்களுக்குள் கால்கள் போயின. கருதுக்கட்டு தூக்கியவர்களின் கால்களால் வரப்புகள் நசுங்கிக் கிடந்தன. எங்கும் அறுபடாத வயல்கள் இல்லை. ‘ஆள் புதுசா இருக்கு, என்னத்த தேடி இங்கிட்டு திரியுற? என்று எதிரில் தென்படுபவர்கள் கேட்டார்கள். பழையபடி தொலைந்துபோன ஜல்லிக்கட்டு மாட்டைப்பற்றிச் சொன்னான். ‘செவலக் காளையா?’ என்று கேட்டார்கள். ‘பால் மயிலப்பா’ என்று சொல்லிவிட்டுப் போனான்.

கடைமடையின் கடைசி ஊருக்கு வந்துசேர்ந்தான். தூரத்திலேயே வயல்காடுகளில் ஆளும் பேருமாக இருப்பது தெரிந்தது. ‘குறிஞ்சிப்பட்டிதான் இன்னிக்கு நமக்கு அமயப்போகுது’ என மனதுக்குள் நினைத்தபடி வேகவேகமாக நடந்தான். ஊரே அறுப்புப்பணியில் ஈடுபட்டிருந்தது. எங்கும் கருதுக்கட்டைத் தூக்கியபடி ஆணும் பெண்ணும் களத்துமேட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தனர். ஊரின் கடைசிநாள் அறுப்பு களை கட்டியிருந்தது. இன்னும் கொஞ்சம் நேரத்தில் பொழுது சாய்வதற்குள் அறுப்பை முடிக்கவேண்டும் என்ற வேகத்தோடு வேலைகள் நடந்தன. ‘நாம வர்றதுக்குள்ள அறுத்திரணும்னு முடிவெடுத்து அறுத்துக்கிட்டு இருக்காங்கெளோ...! என நினைத்தபடி மலைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டான். நீண்ட நேரம் நின்றுகொண்டிருப்பவனை அறுப்பு வேலை செய்துகொண்டிருந்தவர்கள் விசாரிக்க ஆரம்பித்தனர். தொலைந்த மாட்டைப்பற்றி ஏன் சொல்ல வேண்டும் எனத் தோன்றியது. வேண்டா வெறுப்பாகச் சொன்னான். நிறத்தைப்பற்றி விசாரித்தனர். ‘ஊர் மர’, ‘கருப்பு மர’, ‘காரி’ என்று தோன்றுகிற நிறத்தையெல்லாம் சொல்லிவிட்டு வயல்வெளியை விட்டு வெளியேறினான்.

**இ**ரவு கூடி நீண்ட நேரம் வரை மொக்கை வந்து சேரவில்லை. ஆலமரத்தடிக் கூட்டம் எங்கும் வெளியேறாமல் துப்புக்காகக் காத்துக்கொண்டேயிருந்தது. இதற்கிடையில் சரக்கு ரயில் ஒன்று வருகிற தகவலை பகல் பொழுதிலேயே சேகரித்து வைத்திருந்தது. மொக்கயன் வந்துவிட்டால் எந்தெந்த வேலைக்கு எந்தெந்த கொத்து போகலாம் என முடிவுசெய்து விடலாம். ஆனால் அவன் வருவது தாமதமாகிக் கொண்டிருந்தது. சாவின் துக்கத்திலிருந்து மீளாத மனநிலையோடு ஆலமரத்தடியில் அவர்கள் கிடந்தனர். நீண்ட நேரம் கழித்து மொக்கயன் வந்தான்.

‘இத்துனூண்டு, இத்துனூண்டு குண்டுகளா கசக்கி என்னக்கி விடிய?’ என்ற எரிச்சலோடு மொக்கயனோடு ஏழெட்டுப் பேர் சாக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். மீதமிருந்த பெருங் கூட்டம்

ரெட்டியகெடுத்த வெள்ளி வந்தபிறகு புறப்பட்டு ரயில் களவுக்குப் போனது. விருமாண்டிப் பெருசும் ஆலமரத்தடியிலிருந்து எழுந்து கூட்டத்தோடு புறப்பட்டார். 'நீ ஏம்பபா போற... இரு' என்று ஊர் பெரியாம்பிள ஒச்சு சொன்னார். 'இங்க இருந்தா மனசுக்கு என்னன்டோ... இருக்கு, களவுக்காச்சும் போயிட்டு வர்றேனப்பா' என்று சொல்லி கொத்தோடு சேர்ந்து நடந்தார். அந்தக் கொத்தின் நிலையாள் பூச்சி பெரியாம்பிளையை அணைத்து கூட்டிப்போனான்.

நள்ளிரவுக்குப்பின் சரக்கு ரயில் வருவதாகத் தகவல் வந்தது. அது தூத்துக்குடி நோக்கிப்போகிற ரயில். எனவே கூத்தியார் குண்டு கண்மாய்க்கு மேல் கடக்கம் பரம்பிலே ரயில் போகும்போதே ஏறிவிடுவதுதான் வழக்கம். இந்தப் பெரும்பரப்பு நல்ல மேடான பகுதி. எவ்வளவு வேகமாக் வரும் ரயில் என்றாலும் இந்த மேட்டைக் கடக்கும்போது இழுத்துத் தவித்து வேகம் குறைந்துவிடும். அதைப்பயன்படுத்தி ரயிலின் மேல் ஏறவும் இறங்கவுமான வேலைகள் நடக்கும். 'அன்றும் அதுபோல்தான் பரம்பு மேட்டிலேறி பூச்சி, பேயாண்டி, விருமாண்டி மூவரும் நின்றுகொண்டனர். அவர்களைத் தாண்டி நூறு கெஜத்திற்கு ஒருவர் வீதம் வரிசையாக ரயில் தண்டவாளத்தை ஒட்டியே திருமங்கலம் வரை ஆட்கள் நின்றனர். திருமங்கலம் ஸ்டேஷனில் நுழைவதற்கு முன்னால் இருந்த கைகாட்டி மரத்தின் கீழ் இரண்டு பேர் நின்றுகொண்டனர்.

இருள் குவிந்து கிடந்தது. கரிய வானத்தில் வெண்மேகத் திட்டுகள் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்தன. நிலவு பூக்க ஆரம்பித்திருந்தது. தூரத்தில் இருந்துகூட மனித உருவங்களை அடையாளங் காட்ட அது போதுமானதாவே இருந்தது.

பரம்பு மேட்டிலே இருந்த மஞ்சள் நிறப் பாறைகளின் மேல் மூவரும் அமர்ந்திருந்தனர். தண்டவாளம் நீண்டு கிடந்த வடதிசையிலிருந்து சத்தம் கொஞ்சம் கொஞ்சமாக மிதந்து வர ஆரம்பித்தது. மூவரும் பாறையைவிட்டு இறங்கி தண்டவாளத்தின் ஓரம் தயார் நிலையில் நின்றனர். மஞ்சள் ஒளியைக் கக்கியபடி பெரும் சத்தம் கொடுத்து அது வந்துகொண்டிருந்தது. தண்டவாளம் எங்கும் கிடந்த வெள்ளைக் கற்கள் சத்தம் கேட்டு கண்விழித்துப் பார்ப்பதைப் போலப் பார்த்துக்கொண்டிருந்தன. சத்தம் அதிகரிக்க அதிகரிக்க அதன் வேகம் குறைந்தபடி இருந்தது. அது அவர்களை நோக்கி வருவதற்கே தயங்கித் தயங்கி வந்தது. 'வாடீ... மாப்பிள வா... என்று சொல்லியபடி மூவரும் தயார் நிலையில் இருந்தனர். பரம்பின் உச்சியை இன்ஜின் கடந்ததும் கொஞ்சதூரம் வேகம் கொடுத்து ஓடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெட்டியாய் பிடித்து மேலேறினர். பெட்டியிலிருந்த மூடைகள் தார்ப்பாய் போட்டு மூடப்பட்டிருந்தன. மூவரையும் ஏற்றிக்கொண்டபின் வண்டியின் வேகம் கூட ஆரம்பித்தது. மேலேறியவர்கள் பெட்டிகளுக்குள் இருந்த மூடைகளை தார்ப்பாய் கயிறை அறுத்துவிட்டு தூக்கித் தள்ளிவிட ஆரம்பித்தனர். பரம்பின் மீது மூச்சு வாங்க ஏறியபின் அது எடுக்கிற வேகம் அளவு கடந்தபடி இருக்கும். அதற்குள் எவ்வளவு மூடைகளைத் தூக்கித் தள்ளிவிட முடியுமோ, அவ்வளவு மூடைகளைத் தள்ளிவிட்டனர். பத்துப்பதினைந்து நிமிடத்திற்குள் வண்டி திருமங்கலம் ஸ்டேஷன் அருகில் வந்தது.

கைகாட்டி மரத்தின் கீழ் நின்றுகொண்டிருந்த பம்பையன் வண்டி வரப்போவதற்கு முன்பே மேலேறி கைகாட்டியைக் கீழே இறங்குவிடாமல் துண்டைப்போட்டு மேல்நோக்கி இழுத்துக்கட்டி வைத்துவிட்டான். வண்டி வரப்போவது அறிந்த பாயிண்ட் மேன் பாயிண்ட் அடிக்க முயலும்போது கைகாட்டி இறங்கவில்லை. படுவேகத்தில் சத்தம்போட்டபடி வந்துகொண்டிருந்த வண்டி சிக்னல் கிடைக்கவில்லையே என்று வேகத்தைக் குறைத்தது. பாயிண்ட் மேன் மீண்டும் மீண்டும் பாயிண்ட் அடித்துப் பார்த்தான். கைகாட்டி இறங்கவில்லை. வேகத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து ஒரு புள்ளியில் எரிந்துகொண்டிருக்கும் சிவப்பு நிற வெளிச்சத்தைப் பார்த்துப்பயந்து வண்டி நின்றது. வண்டி நின்றவுடன் கைகாட்டியின் மேல் இறுக்கக் கட்டியிருந்த கட்டை உருவிவிட்டான் பம்பையன். கடைசியாக பாயிண்ட் மேன் பாயிண்ட்டை அடித்ததும், கைகாட்டி இறங்கியது. அதற்கு முன்பே மூவரும்கீழே குதித்து வண்டிக்குப் பின்னால் எதிர்த்திசையில் நடந்துபோய்க்கொண்டிருந்தனர். பெரும் கூவலுடன் வண்டி மீண்டும் வேகம் எடுக்க ஆரம்பித்தது. பெட்டிகள் கொஞ்சம் கொஞ்சமாக இழுபட்டு வேகம் கூடி மறைந்தன. கைகாட்டியை விட்டு பம்பையன் இறங்கினான். வண்டி வடக்கே இருந்து தெற்கே வந்தால் பரம்பில் ஏறி திருமங்கலம் கைகாட்டியில் இறங்குபவர்கள், தெற்கே இருந்து வடக்கே வந்தால் கைகாட்டியை இழுத்துக்கட்டி திருமங்கலத்தில் ஏறுபவர்கள் பரம்பிலே வந்து இறங்குவார்கள்.

வரிசையாக தள்ளிவிடப்பட்ட மூடைகளையெல்லாம் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்தவர்கள் தூக்கித் தலையிலே வைத்து நடக்க ஆரம்பித்தார்கள். பொதுவாக இன்று நிறைய மூடைகளைத் தள்ள முடிந்தது. சில நாட்களில் வண்டியின் வேகம் அதிகமாக இருக்கும். அப்பொழுது நினைத்ததைவிட பாதி மூடைகளைத்தான் தள்ளிவிட முடியும். இன்றைய கவலையெல்லாம் மூடைகளுக்குள் அரிசியே இருக்கவேண்டும் என்பதுதான். தண்டவாளங்களின் நடுக்கட்டைகளை மிதித்தபடி தூக்கிய மூடைகளோடு ஆட்கள் வந்துகொண்டிருந்தனர். அறுத்த கருதுக்கட்டை களத்துமேட்டுக்குத் தூக்கி வரும் வேகத்தோடு அந்த ஓட்ட நடை இருந்தது. இடையில் இருந்த கல்பாலத்தின் மீது உட்கார்ந்திருந்த விருமாண்டிப் பெருசு எல்லோரும் மூடை தூக்கிவருவதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு பின் எழுந்து கடைசியாக நடந்தார். தண்டவாளத்தின் நடுக்கட்டையிலே காலைப்பொருத்தி நடப்பது சிரமமாக இருந்தது. சரி, சரளையை விட்டு கீழே நடக்கலாம் என காலை எடுத்து மண்பாதையை நோக்கி நகர்த்தினார். இருட்டிலே தலைப்பாகை போல உருண்ட வடிவில் ஒன்று கிடந்தது. மூடை தூக்கிச்செல்லும் ஒருவனுடைய தலைப்பாதான் கீழே கிடக்கிறது. என நினைத்தபடி காலால் அதைத் தள்ளினார். மறுகணம் கட்டை விரலைக் கவ்விப்பிடித்து கால் முழுவதும் சுற்றியது. ‘ஏலே…ய்’ என்று கத்தியபடி சரளையிி லேயே அப்படியே உட்கார்ந்தார். முன்னால் போய்க்கொண்டிருந் தவன் சத்தம் கேட்டு மூடையைப் போட்டுவிட்டு ஓடிவந்தான். வந்த வேகத்தில் இடுப்பிலே இருந்த சிறுகத்தியை எடுத்து அதைத் தலையோடு அறுத்து புதர்ப்பக்கமாகத் தூக்கி வீசினான். ‘கழுதவிரியனப்பா…’ என்றான். ‘வெரல அறுடா…வெண்ண’ என்று அடிக்குரலிலே இருந்து கத்தினார். மூன்று நான்கு பேர் ஓடி வந்தனர். கால்கள் இரண்டையும் ஆளுக்கு ஒருவர் பிடித்துக்கொள்ள பெருவிரலை அறுத்துத் தூக்கி எறிந்தான். ரத்தம்

கொட்டியது. துண்டை வைத்து இறுக்கக்கட்டி, பெரியாம்பிளையை நடக்கவிடாமல் தூக்கிக்கொண்டனர். இரண்டு மூடையை நாளை வந்து தூக்கிக்கொள்ள ஏதுவாகப் பெருவிரலை வீசியெறிந்த புதருக்குள்ளேயே அமுக்கிவைத்துவிட்டு வந்தனர்.

இரண்டு கல்யாணத்துக்கும் தேவையான மூடைகள் முழுவதும் ஊர் வந்து சேர்ந்தன. விருமாண்டிப் பெரியாம்பிள மட்டும் கல்யாணம் வரை பழஞ்சிக்கரை வைத்தியரின் தோப்பிலே படுக்கவேண்டியதாயிற்று. தெத்துக்கூனனை சாகக் கொடுத்த துக்கம் மறைய, அடுப்புகளில் விறகுகள் பற்றியெறிந்து உலை கொதிக்க ஆரம்பித்தது.

*

## 107

**எண். 342. மதுரை மாவட்ட மாஜிட்டிரேட்டிடமிருந்து அரசு** தலைமைச் செயலருக்கு.

நீதித்துறை அரசாணை எண் 1753ன்படி கோரப்பட்ட அறிக்கையை இங்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

2. மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் தாலுகா மற்றும் ராம்நாட், சிவகெங்கை ஜமீன்களிலும் குற்றப்பரம்பரை சாதியினர் இருக்கின்றனர். இங்கு நடக்கும் சாதாரணக் குற்றங்களுக்கெல்லாம் இவர்கள்தான் காரணம். காவல் மற்றும் துப்புக்கூலி முறை என்ற இரு சிறப்புக் குற்றங்களும் இவர்கள் செய்கின்றனர்.

3. இணை மாஜிஸ்ட்டிரேட் தவிர மற்ற அனைத்துக் கோட்ட அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகள் வந்துள்ளன. இம்மக்களின் குற்றச் செயலுக்கு வறுமை மட்டுமே காரணம் அல்ல என்பதுதான் பொதுவான முடிவு. மற்ற சமூகத்தினரைப்போல விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். பல இடங்களிலும் மற்றவர்களைப் போல சட்டத்திற்குப் பணிந்து வாழ்கின்றனர். தலைமை உதவியாளரின் கோட்டம் போன்ற சில இடங்களில் முன்பு போல் அவர்கள் அச்சுறுத்தும் சமூகமாக இல்லை. காவல் முறை முழுவீச்சில் நடைபெறுகிறது. அங்குமிங்குமாக சில பிரச்சனைகள் எழத்தான் செய்கிறது. ஆனாலும் அது பரவலாக்கப்படுகிறது. துப்புக்கூலி முறையும் எங்கும் இருக்கிறது. சாதாரணக் குற்றங்களைப் பொறுத்தவரையில் சிறப்புச் சட்டங்கள் தேவையில்லை. ஆனால் காவல், துப்புக்கூலி முறைகளைப் பொறுத்தவரை சிறப்புச்சட்டங்கள் பலனளிப்பதில்லை.

4. இந்தக் குற்றங்களைச் சமாளிக்க போலிசும், நீதித்துறையும் திறனற்றவையாக இருக்கின்றன. இது சரியில்லை என்றாலும் என்ன செய்ய வேண்டும் என்பது முக்கியம். இந்த காவல்முறை பழங்காலத்திலிருந்து இருக்கிறது. துப்புக்கூலி தருமாறு மிரட்டுகிறார்கள்.

இதைக் கண்டுபிடிப்பதும் கடினம். மக்களைப் பின் விளைவுகளில் இருந்து காப்பது குறித்து உறுதிமொழி தராதவரை நாம் துப்புக்கூலி தருவதை நிறுத்துமாறு அவர்களிடம் கூற முடியாது.

5. துப்புக்கூலி முறை ஆழமாக வேரூன்றி உள்ளது. விவசாயி தன் கால்நடை திரும்பக் கிடைக்க வேண்டும் என்பதில்தான் அக்கறையாக இருக்கிறானேயன்றி குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளவில்லை. எனவே அவர்கள் குற்றவாளிகளைச் சந்தித்து பிரச்சனையைத் தீர்த்துக்கொள்கிறார்கள். திருடப்பட்ட கால்நடைகளை விற்பதை சிரமமாக்கவும், அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பதை எளிதாக்கவும் கால்நடை கடவுச்சீட்டு முறையைக் கொண்டுவந்தாலும் இக்கொடுமையை முழுமையாகத் தீர்க்க முடியாது. ஏனென்றால் திருடர்களின் நோக்கம் கால்நடையை விற்பதல்ல, துப்புக்கூலி பெறுவதே. உண்மையில் அது காவல்கூலியை மறுத்த விஷயத்தில் இருந்துதான் ஆரம்பமாகிறது. மீண்டும் அவர் துப்புக்கூலி கொடுத்து பொருளை மீட்டு காவக்கூலி கொடுக்கச் சம்மதிப்பதோடு பிரச்சனை முடிகிறது.

6. துப்புக்கூலி பிரச்சனையைத் தீர்க்க சரியான வழி இடைத்தரகர்களின் மீது தாக்குதல் தொடுப்பதுதான். காவல்கூலியைப் பொறுத்தவரை அதற்கான விசேஷ சட்டத்தின் துணையோடு அதை உடனடியாக இல்லாதாக்கிவிடலாம். உதாரணமாக மதுரை நகரம் ஐந்து மைல் தள்ளி உள்ள தாதனூர்க்காரர்களுக்கு ஒழுங்காக காவல்கூலி கொடுத்துவருகிறது. குற்றப்பரம்பரைச் சட்டம் போன்ற ஒரு சட்டத்தின் மூலம் தாதனூர்க்காரர்கள் அனைவரையும் பதிவு செய்து அவர்களது நடமாட்டத்தை தொடர்ச்சியாக கண்காணித்து வந்தால் காவல்கூலி தரமாட்டோம் என்று கூற மதுரை நகர மக்களுக்கு தைரியம் வரலாம். ஆனால் அதே நேரத்தில் மதுரை நகரம் மற்றக் கள்ளர்களின் இரையாக மாறக்கூடும். நிலைமை மிக மோசமாகும். எனவே இந்தப் பிரச்சனையை சமாளிக்க அதிகமான போலிஸ் படையும், தென்மாவட்டங்கள் முழுமைக்குமான கவனமாகத் தயாரிக்கப்பட்ட திட்டமும் தேவை.

7. பொதுவாக இவ்வகை மக்களை ஒடுக்க இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் செய்ததைப் போன்று இப்பொழுது செய்யமுடியா தென்பது வெளிப்படை. இத்தனை ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் ஒரு திருட்டுக்கூட்டம் இவ்வளவு பெரிய பகுதியெங்கும் எந்தச் சிரமமும் இல்லாமல் சுதந்திரமாக அலைந்து திரிவதும், தங்களுக்கென்று காவல் நிலைகளை முறைப்படுத்தி வைத்திருப்பதும் அவமானகரமானதாகும். இதனை மாற்ற கடும் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தேவை. கீழ்க்கண்டவிதமாக ஏதேனும் செய்யலாம். காவல்காரர்கள்தான் இந்த பிரச்சனையின் பின்னணியில் இருப்பவர்கள். எனவே காவல்காரர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவேண்டும். காவல்காரர்களை எல்லாம் முதலில் பதிவு செய்யவேண்டும். கடவுச்சீட்டு இல்லாமல் தங்கள் கிராமத்தை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது. இடைத்தரகர்கள் என்று சந்தேகப்படும் யாரையும் பதிவு செய்ய கோட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டும். இதனால் காவல், துப்புக்கூலி முறைகளின் மேல் கடும் தாக்குதலை நிகழ்த்த முடியுமென்று கருதுகிறேன். எதிர்காலத்தில் மேலும் கடும் நடவடிக்கைகள் எடுக்க இது வழிகோலும்.

மார்ட்டின் வின்ஸ்லோ
டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்டிரேட்.

*

**கே**ம்ப்/கன்னிவாடி

அனுப்புநர்:

ஜி.இ. பாட்ரீஸ்,

மதுரை மாவட்ட போலீஸ் சூப்ரின்டன்டெண்ட்

பெறுநர்: போலீஸ் ஐ.ஜி.

உங்கள் அலுவலக குறிப்பு எண் 1263 தொடர்பாக நான் விடுப்பில் இருந்தபொழுது எழுதிய அறிக்கையில் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபடும் குற்றப்பரம்பரையினரைத் தண்டிப்பது குறித்து சில சட்டத்திருத்தங்களை நான் கூறியிருந்தேன்.

இந்திய தண்டனைச்சட்டம் 392, 395ன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் புரிந்தவர்களை ஆங்கில சமூக பாணியில், ஐரோப்பாவைப் போல, பொது இடத்தில் வைத்து கடுமையான கசையடி கொடுப்பது, காயடிப்பது, மேலும் அவர்கள் ஒவ்வொருவரையும் நீண்டகால தனிமைச்சிறையில் அடைப்பது இதுபோன்ற தண்டனை முறைகளை நாம் கடைப்பிடித்தால்தான் கொள்ளை மற்றும் அதன் சார்பான குற்றங்களை இந்த தேசத்தில் ஓரளவேனும் கட்டுப்படுத்தமுடியுமென நான் உறுதியாக நம்புகிறேன். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பெல்ஜியம் போன்ற தேசங்களில் இந்த தனிமைச்சிறைவாச தண்டனையின் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. நீண்டகால சிறைத்தண்டனை அளிப்பதைக் காட்டிலும், ஐம்பது கசையடி கொடுப்பது, இரண்டு வருட தனிமைச்சிறையில் அடைப்பது போன்ற தண்டனைகள் குற்றப் பரம்பரையினர் மத்தியில் கடும்பயத்தை ஏற்படுத்தும்.

குற்றப் பரம்பரையினருக்கு நீண்டகால சிறைவாசம், தற்காலிக அசௌகரியங்களைத்தான் தருகிறது. சிறையில் நல்ல உணவு, நல்ல தங்குமிடம், சிறை வாழ்வின் சலிப்பைப் போக்க போதுமான அளவு உடலுழைப்பு என வாழ்வதில் அவர்களுக்குச் சிரமமேதுமில்லை. எனவே இரண்டாண்டு தனிமைச் சிறையுடன் ஐம்பது கசையடி தந்தால் நல்ல பலன்கிடைக்கும். சில நாட்களுக்குமுன் போர்ட் பிளேயரிலிருந்து தீவாந்திர தண்டனை முடிந்து திரும்பி வந்த ஒருவனைச் சந்தித்தபொழுது அங்கு தோட்டக்காரனாக வேலை பார்த்ததில் எந்தவித சிரமும் படவில்லையென்றான்.

பழைய குற்றவாளிகளைக் கண்காணிப்பது எளிதாக இருக்க கடவுச்சீட்டு முறை பற்றி நான் பரிந்துரைத்திருந்தேன். அதன்படி குற்றவாளி விடுதலையானபின் கிராம அதிகாரியிடமிருந்தோ, போலீஸ் ஸ்டேஷன் இருந்தால் நிலைய அதிகாரியிடமிருந்தோ கடவுச்சீட்டை பெற்றால் மட்டுமே தன் கிராமத்தைவிட்டு வெளியேற வேண்டும்.

இக்கடவுச்சீட்டில், சீட்டுக்காரர் எங்கே போகிறார், எதற்காக? போகும் வரும் வழி எது? போன்ற விவரங்கள் இருக்கவேண்டும்.

கிராமத்தலைவர்கள், போலிஸ் அதிகாரிகளால் இது கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். கடவுச்சீட்டில் குறிப்பிடப் பட்டுள்ள எல்லையைத் தாண்டி அவர் சென்றால் கைது செய்து வழக்கு தொடரவேண்டும்.

கவனமற்ற கீழ்நிலை அதிகாரிகளால் இத்திட்டம் தவறாகப் பிரயோகிக்கப்படும் என்றும் நான் எச்சரிக்கை செய்திருந்தேன். நேர்மையற்ற கிராம மாஜிஸ்ட்டிரேட்டுகள், கடவுச்சீட்டுக்கு ஒருவர் விண்ணப்பிக்கும்பொழுது ஒவ்வொரு முறையும் அவரை மிரட்டி பணம் பறிக்காத வகையில் இதன் சட்டதிட்டங்கள் அமையவேண்டும்.

இம்மாவட்டத்தில் நிலவும் காவல்முறையைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். மேலூர் கள்ளர்கள் தங்களின் நிலைகளை திண்டுக்கல் சமவெளி வரை விஸ்தரித்து இருந்தனர். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்ககாலத்தில் கள்ளர்கள் அரசாங்கத்திற்கு மிகவும் தொல்லைகள் கொடுத்த போதிலும் சமீப காலங்களில் பெரியாற்று நீர் வந்தபின் அவர்களிடம் நல்ல மாற்றம் நிகழ்ந்துள்ளது.

தாதனூர்க்காரர்களின் காவல் முறை என்பது அரசின் குடிகளை ஒருசில போக்கிரிகள் இம்சைப்படுத்துவதுதான் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்கு இதிலுள்ள ஆதாயத்தைப் பார்க்கையில் வெற்றிகரமாகவே இதைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பது தெரிகிறது. மாஜிஸ்ட்டிரேட்டுகள், ஜூரிகள், சாட்சிகளை மிரட்டி வைத்து தங்கள் காரியத்தைச் சாதித்துவிடுகிறார்கள்.

மதுரை நகரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் தனிநபர் பாதுகாப்பிற்கும், அவர்களது உடைமைக்கும் இவர்களது கொள்ளைச் செயல் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

1893ம் ஆண்டு முதல் 1906ம் ஆண்டு வரை புறந்தள்ளக்கூடிய குற்றங்கள், பிணைவிடாக் குற்றங்கள் மற்றும் பாதுகாப்பு குற்றங்களின்படி தண்டிக்கப்பட்ட நபர்களின் முழுமையான விபரங்களைக் கடந்த டிசம்பர் மாதமே தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். இப்பொழுது நான் சுற்றுப்பயணத்தில் இருப்பதால் எந்த ஆவணமும் கைவசம் இல்லை. என்னிடம் இன்னொரு முறை அறிக்கை கோரப்படும் என எதிர்பார்க்கவும் இல்லை.

ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தாதனூர் கள்ளர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, தகுந்த இடங்களில் குடியேற்ற குற்றப் பரம்பரைச் சட்டம் மிக அவசியம். எனவே இந்த கொள்ளைக்கூட்டத்தைக் ‘குற்றப் பரம்பரை’ என அறிவிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜி.இ. பாட்ரீஸ்.
மாவட்ட போலீஸ் சூப்பிரண்டன்டென்ட்.

*

**ம**துரை மாவட்ட மாஜிஸ்ட்டிரேட் மற்றும் போலீஸ் சூப்பிரண்டென்ட் இருவரின் அறிக்கையும் பெறப்பட்டு பதினைந்து தினங்கள் கழித்து தாதனூர் கள்ளர்களின் மீது குற்றப் பரம்பரைச் சட்டம் அமல்படுத்துவதாக செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டியரில் பிரசுரிக்கப்பட்டது.

ஐ
**C T ACT**

# 108

**பட்டாணிப் படை வந்த காலத்திலும், கும்பினிப் படை வந்த** காலத்திலும் நிகழ்ந்திராத பேரழிவு இந்த ஓராண்டுகளில் நிகழ்ந்துள்ளது. சடச்சி மக்களின் ரத்தம் தேங்கிய குளமெனத் தாதனூர் கிடந்தது. மந்தையின் நடுவில், சின்னான் வெட்டப்பட்ட இடத்தில் ஊண்டப்பட்டிருந்த குத்துக்கல்லில் ஊர் பெரியாம்பிளையைக் கட்டிவைத்து ஒரு ராத்திரி முழுக்க சவுக்கால் அடித்தான் போலீஸ் சார்ஜென்ட். அதன் பின்தான் மந்தையோரம் கட்டப்பட்டிருந்த அவுட்போஸ்ட் கட்டிடத்துக்குள் தாதனூர்க்காரர்கள் காலடி எடுத்துவைத்தனர். இது நிகழப் பல மாதங்கள் ஆனது. ஆனால் அதற்குள் என்னென்னமோ ஆகிவிட்டது. அவுட்போஸ்ட் கட்டிடத்திற்குள் வைத்து நான்கு போலீஸ்காரர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். அதன்பின் மீண்டும் போலீஸாரால் ஊரே தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. எல்லா வீடுகளும் எரிந்து நாசமாயின. அகப்பட்ட பத்துப் பேர் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். நிகழ்ந்த கொலைகள் எல்லாம் போலீஸ் நிர்வாகம் அடுத்தடுத்த நடவடிக் கைகளை எடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தன.

தாசில்தார் சபாபதிபிள்ளையின் மரணம்தான் வெள்ளையர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரைத் தலை வேறு, கால் வேறாக வெட்டி அவரது கூட்டுவண்டிக்குள்ளேயே போட்டு குதிரையோடு இழுத்துக் கொண்டுபோய் அதிகாலையில் நகருக்குள் விட்டுவிட்டு வந்துவிட்டனர். புலராத அந்தப் பொழுதில் யாருமற்ற மதுரையின் வீதிகளுக்குள் குதிரை மெல்ல எட்டுவைத்து வண்டியை இழுத்துக்கொண்டு போனது. வாசல் தெளிக்க வந்த பெண்கள் குதிரை வண்டி மட்டும் தனியாகப் போய்க்கொண்டிருக்கிறது என நினைத்தனர். பின்னர் நேரம் ஆக ஆக வெளிச்சம் கூடியது. வண்டிக்குள் வெட்டப்பட்ட உடல் ஒன்று கிடப்பதைப்பார்க்க ஆரம்பித்தனர். மேற்குக் கோபுர வீதியில் போயிக்கொண்டிருந்த வண்டிக்குப் பின்னால் கூட்டம் கூடியது.

மீனாட்சியம்மன் கோவில் மானியத்தில் வளர்ந்த தேகத்தை கோபுரவாசலுக்குக் கொண்டு வந்து குதிரைகள் சேர்த்தன. செய்தி கேள்விப்பட்டு ஓடிவந்த போலீஸார் வண்டியை கச்சேரிக்கு இழுத்துக்கொண்டு போயினர். வேறு யாராவது வெட்டப்பட்டிருந்தால் யார் எனக் கண்டறிவதே சிரமமாக இருந்திருக்கும். ஆனால் தாதனூர் அவுட்போஸ்ட் கட்டிடத்தை கட்ட ஏற்பாடு செய்தவர் சபாபதி பிள்ளை என்பதால் உடனே கண்டறிய முடிந்தது. அதன்பின் போலிஸ் படை தாதனூரை நோக்கிச் சென்றபோது நடந்த சிறுகலகத்தைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மூன்று பேர் அந்த இடத்திலேயே செத்தனர். ஒருவன் மட்டும் இரண்டு தினங்களுக்குப் பின் செத்தான். இப்படியாக மாறி மாறிக் கொலைகள் விழுந்தபடி இருந்தன. குண்டடிபட்டுச் செத்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் போக மீதமிருப்பவர்களைச் சிறுகச்சிறுக அவுட்போஸ்ட்டிற்குள் கொண்டுவந்து தள்ளியது வாழ்க்கை. எல்லோருக்கும் எண்கள் இடப்பட்டு, அங்க அடையாளங்களும், ரேகையும் எடுக்கப்பட்டு கணக்கெடுப்பு முடிந்தவுடன் அவுட்போஸ்ட் ‘ஆஜர் முகாம்’ என மாற்றப்பட்டது.

ஆஜர் முகாமில் ஆஜர் பார்க்க துப்பாக்கி போலிசார் ஒவ்வொரு இரவும் இரண்டு முறை மூன்று முறை என்று வருவார்கள். வரும் பொழுதெல்லாம் தாதனூரில் உள்ள ஆண்களையெல்லாம் ஆஜர்படுத்த வேண்டும். யாராவது ஆஜர் பார்க்கும்போது இல்லை யென்றால் மறுநாளே சிறையில் அடைத்து உரிய தண்டனை தரப்படும். இப்பொழுது ஊரில் இருப்பது ‘குற்றவாளிகள்’ மட்டும் தான். ‘மோசமான குற்றவாளிகள்’ என்று பட்டியிலிடப் பட்டவர்களும், ‘வருங்காலக் குற்றவாளிகள்’ என்று கணக்கெடுக்கப் படவர்ளும் இப்பொழுது ஊரில் இல்லை. இவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று எந்த விவரமும் ஊருக்குத் தெரியாது. ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையிலான சிறுவர்களை எல்லாம் ஊரை விட்டு வெளியேற்றியபோது, மிஷனரிமார்களின் பள்ளிக்கூடம் ஒன்றிற்குக் கொண்டு செல்லப்படுவதாகச் சொல்லப் பட்டது. ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் எங்கிருக்கிறது என்ற விவரம் எதுவும் ஊருக்குச் சொல்லப்படவில்லை. தங்களின் குழந்தைகளைத் தாய்மார்கள் யாரும் ஓராண்டாகப் பாரக்கவில்லை. இடையில் ஒரு குழந்தை மட்டும் காய்ச்சல் கண்டு இறந்து போனதாகச் சொல்லப்பட்டு உடல் ஊருக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பிறகு மற்றக் குழந்தைகள் உயிரோடிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஊர் நம்பியது.

மோசமான குற்றவாளிகள் எனப் பட்டியலிடப்பட்டவர்கள் ஊரைவிட்டு மிக ரகசியமாகக் கொண்டுசொல்லப்பட்டனர். அவுட்போஸ்ட்டில் பதிவுகள் எல்லாம் முடிந்தபின் சில நாட்கள் கழித்து டி.எஸ்.பி. டர்னர் தலைமையில் போலிஸ் படையொன்று ஊருக்குள் வந்தது. ஊர் பெரியாம்பிள ஒச்சு, மொக்கச்சாமி, கருத்தையன், வீரணன், சின்னமாயாண்டி, ராசு, சித்தான் என ஏழு பேரின் பட்டியலை போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் வாசித்தார். அந்த ஏழு பேரும் குடும்பத்தோடு வருமாறு அழைக்கப்பட்டனர். சிறிது நேரத்தில் ஏழு பேரின் குடும்பமும் ஆஜர் முகாமுக்குள் வந்து நின்றது. எண்ணிப் பெயர் பதிவு செய்யப்பட்டபின் அனைவரும் போலிஸ் படை சூழ ஊரைவிட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். பென்னிங்டன் ரோடு போடப்பட்டபின் தாதனூர்க்காரர்கள் ஆணும் பெண்ணுமாக இருபத்தி நான்கு பேர்

மொத்தமாக ரோட்டிலே முதன்முறையாக நடந்து போனார்கள். ஊர் பெரியாம்பிள ஒச்சு உயிரற்று நடந்து போய்க்கொண்டிருந்தார். ரோட்டின் இருபுற மறைவிலும் நின்றுகொண்டு கெடாயன் பெரியாம்பிளை மாறி மாறி கல்லெறிந்து கொண்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. முதல் எறியிலேயே நெற்றி பிளக்க கீழே சாய்வது போல ஒச்சவுக்கு இருந்தது.

போலீஸ் படையால் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டபின், அதன் பிறகு இன்றுவரை ஐந்து முறை அதே போல குடும்பம் குடும்பமாக ஆட்களை அழைத்துச்சென்றுள்ளது போலிஸ். ஆனால் அப்படி அழைத்துச்செல்லப்பட்டவர்கள் ‘மோசமான குற்றவாளிகள்’ என்று மட்டும் சொல்லப்பட்டது. அவர்கள் எங்கு எவ்வாறு வைக்கப்பட்டுள்ளனர் என்ற எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை.

ஊரில் இப்பொழுது இருப்பது மூன்றில் ஒரு பங்கு ஆண்கள் மட்டுமே. மீதம் இரு பங்கு ஆண்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதற்கும், இருக்கிறார்களா என்பதற்கும் எந்தத் தடயமும் இன்றி ஊர் தவித்துக்கிடக்கிறது.

*

‘**இ**து ஒரு பேக்காலம்ப்பா...’ இந்த வார்த்தை மீண்டும் தாதனூர் முழுவதும் நிரம்பியிருந்தது. ஊரே அழிந்து மடியும் பேக்காலம் மூன்று நான்கு தலைமுறைக்கு ஒருமுறை வரும் என்பது ஊரின் நம்பிக்கை. கொட்டித் தீர்த்த பேய்மழையில் புது மண் எடுத்து, குயவன் செய்த சட்டியை அடிப்பிலே வைத்து, ஊரே செத்து மடிந்தபொழுது இந்த பேக்காலம் துவங்கியது. அன்றிலிருந்து இது சுழன்று சுழன்று வந்துகொண்டேயிருக்கிறது. கோட்டைக்காவல் அழிக்கப்பட்ட பொழுது கும்பெனி படையின் நரவேட்டையால் பாதி ஊர் அழிந்தது. அதன்பின் மிச்சசொச்சம் இருந்தவர்களால் மீண்டும் தழைத்து வந்தது ஊர். பின்னர் மூன்று தலைமுறை உருண்டோடி தாதனூர் பல்கிப் பெருகி நிற்கையில் குரங்கிருந்த வருஷத்தில் எலி செத்து விழுந்து ஊரே கொள்ளை நோயில் போனது. அந்தப் பேரழிவிறக்குப்பின் ஊர் தழைத்து மூன்று தலைமுறையாகிறது. இப்பொழுது மீண்டும் ஊர் அழிவின் விளம்பிலே நின்றுகொண்டிருக்கிறது.

பேக்காலத்தை பற்றிய கதைகள் தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் ஒவ்வொரு முறையும் அதுவரை சொல்லப்படாத கதைகளைத்தான் பேக்காலம் சொல்லிக்கொடுத்துப் போகிறது. இதுவரை பேக்காலத்தில் அழிந்தவர்களெல்லாம் ஊரிலேதான் அழிந்தார்கள். ஆனால் இந்த முறை அவர்களின் அழிவைப்பற்றி எந்தத் தகவலும் ஊருக்குத் தெரியவில்லை.

ஒரு வருடமாக தினமும் ஒரு தாக்குதலை தாதனூர் நடத்திக்கொண்டிருந்தது. பென்னிங்டன் ரோட்டின் வழியே போலிஸ்படை இரவும் பகலும் ஊரை நோக்கி வந்துகொண்டே யிருந்தது. எந்த நேரம் படை வந்து எவனைப் பிடித்துக்கொண்டு போகும் எனத் தெரியாது. சட்டம் அறிவிக்கப்பட்டபின் முதன்முறையாக ஊரிலுள்ள ஆண்கள் எல்லாம் ரேகை கொடுக்க வேண்டும் என்று அறிவிப்புக் கொடுக்க போலிஸ் படை ஒன்று ஊர்மந்தையில் வந்து உட்கார்ந்தபொழுது ஊரிலே ஆண் பெண்

யாருமில்லை. எல்லோரும் மலைக்கு மேல் ஏறிவிட்டார்கள். அன்று மதியம் வரை இருந்து பார்த்த போலிஸ்படை பின்னர் புறப்பட்டுப் போய்விட்டது. அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து டி.எஸ்.பி. டர்னர் தலைமையில் மீண்டும் போலிஸ் படை ஊருக்கு வந்தது. ஆலமரத்தடி வெறிச்சோடிக் கிடந்தது. கருப்பன் மட்டும் தன்னந்தனியாக நின்றுகொண்டிருந்தான். கொஞ்சநேரம் ஆலமரத்தடியில் நின்று இளைப்பாறியவர்கள் மீண்டும் ஊரை நோக்கி வந்தனர். ஊரில் மக்கள் யாருமில்லை. டி.எஸ்.பி.டர்னரும் ரிசர்வ போலிஸ் சார்ஜென்ட் நிக்கெல்லசும் குதிரையை விட்டு இறங்கி மந்தையில் உட்காரலாம் எனவந்தபொழுது மந்தை முழுவதும் ஈக்கள் மொய்த்துக்கிடந்தன. என்ன என்று யோசித்தபடி அருகில் வந்தபொழுதுதான் தெரிந்தது - போலிஸ்காரர்கள் யாரும் உட்காரக்கூடாது என்பதற்காக மந்தைக்கல் முழுவதும் வெற்றிலை எச்சிலைத் துப்பிவைத்திருந்தனர். அருகில் வந்து பார்த்ததும் அருவருப்பால் துடித்தது டர்னரின் முகம். ஆத்திரம் பொங்கக் கத்தியபடி வந்து மீண்டும் குதிரையின் மீது ஏறினான். கடைசி எச்சரிக்கை செய்துவிட்டு போலிஸ் படை புறப்பட்டது.

போலிஸ்காரர்கள் போன பிறகு மலையில் இருந்தவர்கள் இறங்கிவந்தனர். எதிர்த்திட்டத்தை வகுத்துக்கொள்வதில் பெரும் குழப்பம் இருந்தது. ஆனாலும் ஏதாவது செய்யவேண்டும் என்று தயாராகிக்கொண்டிருந்தனர். மறுநாள் அதிகாலை கோழி கூப்பிடுகிற நேரத்தில் ஆலமரத்தடியிலிருந்து பயங்கர சத்தம் கேட்டது. ஊரிலே இருந்தவர்கள் சுதாரித்து எழுந்தனர். அதிகாலையில் ஆலமரத்தடிக்குள் நுழைந்த போலிஸ்படை தனது வலுமிகுந்த தாக்குதலைத் தொடுத்தது. பெரும் கலகமும் துப்பாக்கிச் சூடும் நடந்து முடிந்தன. தப்பித்த பலரும் மலைமேல் ஏறிவிட்டனர். குண்டடிபட்டுச் செத்துப்போன இருவரைத்தவிர பிடிபட்ட பன்னிரண்டு பேரையும் கழுத்தில் கொண்டிக்கட்டையை மாட்டி ஊரிலே இருந்த அவுட் போஸ்ட்டுக்குள் கொண்டுவந்து அடைத்தான் டி.எஸ்.பி.டர்னர்.

கொண்டிக்கட்டை மாட்டப்பட்டவர்கள் மூன்று நாட்கள் அவுட்போஸ்ட்டுக்குள்ளேயே கிடந்தனர். போலிஸ் படை முழுவதும் அதைச் சுற்றி நின்றுகொண்டிருந்தது. உள்ளே கிடந்த யாருக்கும் தண்ணீர் கொடுக்கக்கூட அனுமதிக்கப்படவில்லை. பெண்களும் குழந்தைகளும் அவுட்போஸ்ட்டின் கதவுகளின் வழியே உள்ளே எட்டிப்பார்த்து கதறித்துடித்தனர். மெலெல்லாம் ரத்தம் உறைந்து கிடக்க கழுத்தில் கட்டை மாட்டப்பட்டவாறு அரை மயக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து பெண்கள் ஆத்திரத்தோடு கத்தி போலிஸ்காரர்களோடு மோதினர். அந்தக் கதறல்களிலிருந்துதான் இந்தப் பேக்காலம் துவங்கியது.

*

**பே**க்காலம், வெள்ளையர்களையும் விட்டுவைக்கவில்லை. போலிசார்களும், அரசு உத்தியோகஸ்தர்களும் கொடூரமான தாக்குதல்களை எதிர்பாராதபடியெல்லாம் சந்திக்க வேண்டி யிருந்தது. பன்னிரண்டு பேரைக் கழுத்தில் கொண்டிக்கட்டையை மாட்டி அவுட்போஸ்ட்டுக்குள் அடைத்த போலிசார் முழு போலிஸ் படையையும் தாதனூர் மந்தையிலே நிறுத்தினர். மலையிலே ஏறிய ஆண்கள் எல்லாம்

அதன்பின் கருப்புகோவில் ஆலமரத்துக்கோ, ஊருக்கோ திரும்பவில்லை. ஆனால் போலிஸ்படை மந்தையைவிட்டு வெளியேறுவதாக இல்லை. அடைபட்டு கொண்டிக்கட்டையோடு கிடப்பவர்கள் உயிர்போகக் கத்திக்கொண்டிருந்தனர். 'எப்படியும் ஊருக்குள் வந்துதானே ஆகவேண்டும். எத்தனை நாள் ஓடித்திரிகிறார்கள் பார்ப்போம்' என்ற முடிவோடு போலிஸ் இருந்தது. நாற்பது பேர் கொண்ட போலிஸ்படை கையில் துப்பாக்கியோடு எந்நேரமும் அவுட்போஸ்ட்டை சுற்றியே இருந்தது. இரண்டு நாட்களும் நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை.

மூன்றாம்நாள் மதியத்திற்குப்பின் இறங்குவெயில் நேரத்தில் பெண்கள் எல்லாம் தண்ணீர் இறைப்பதற்காக நல்ல தண்ணீர் கிணற்றை நோக்கிப்போயினர். மந்தையில் அவுட்போஸ்ட்டுக்கு முன்னர் அணிவகுத்து நின்ற போலிஸ் படையைப் பார்த்து முறைத்தபடி அவர்கள் நடந்தனர். ஒவ்வொவரு வீட்டிலிருந்தும் பெண்கள் பானையும் கயிறுமாகக் கிணற்றடி நோக்கி வந்துகொண்டேயிருந்தனர். கொஞ்ச நேரத்தில் பெண்களின் பெருங்கூட்டம் கிணற்றடிக்கு வந்துசேர்ந்தது. இதுவரை இல்லாதவாறு இவ்வளவு பெண்கள் மொத்தமாக ஏன் வந்து நிற்கின்றனர் என்பது போலிசுக்கு விளங்காமல் இருந்தது. பெண்கள் மௌனத்தை கயிரெனக் கட்டி நீர் இறைத்துக் கொண்டிருந்தனர். பெருங்கூட்டம் வளைத்து நிற்க உள்ளுக்குள் என்ன நடக்கிறது என்பது போலிசுக்கு தெரியாமல் இருந்தது. ஆனால் தண்ணீர் இறைப்பது மட்டும் அங்கு நடக்கவில்லை. வேறு ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை ஊகிக்க முடிந்தது. நீண்டநேரம் கழித்து அந்தக்கூட்டம் கலைந்துபோனது. 'எடகாலி வர்றாடா...' என்று அவர்களைப்பார்த்து குமுறியபடி பேச்சியாத்தாக் கிழவி போய்க்கொண்டிருந்தாள்.

நீரோடும் கயிறோடும் போனவர்கள் எல்லாம் போக கிணற்றடி மட்டும் தனியாக இருந்தது. முதலில் எந்த வித்தியாசத்தையும் போலிசால் உணரமுடியவில்லை. கொஞ்சநேரம் கழித்து இரண்டு போலிஸ் என்னதான் நடந்தது. என்று பார்த்துவருவதற்காக கிணற்றடிக்கு வந்தபோதுதான் விசயம் விளங்கியது. கிணற்றடி ஓரமாக கீழே கிடந்த மூன்று பட்டியக்கல்லையும் தூக்கி கிணற்றை மூடிவைத்துவிட்டுப் போயிருந்தனர். பல காலத்திற்குப்பிறகு கிணற்றின் வாயை ஊர் மூடி வைத்தது. இது நிகழ்வது அடுத்து வரப்போகும் பெரும் அசம்பாவிதத்திற்கான முன்நடவடிக்கை. பெரும் படைகள் எதுவும் ஊருக்குள் வர வாய்ப்பிருப்பதாகக் கருதினால் கிணற்றின் வாயை மூடிவிட்டுக் கிளம்பி மலைக்கு மேல் ஏறிவிடும். இது காலகாலத்துப் பழக்கம். கிணற்றின் வாயை மூடியபின் ஊர் பேச்சற்ற கிராமமாக கிடக்கும். அதன்பின் மீண்டும் வந்து கிணற்றின் மூடியைத் திறந்த பிறகுதான் ஊருக்குள் பேச்சொலி கேட்கும். ஊரின் நாக்கு கிணற்றுக்குள்தான் கிடந்தது. அதை அடைத்துவிட்டு பெண்கள் போனபொழுது பேச்சிழந்து போயினர். ஊருக்குள்ள இருந்துக்கிட்டே ஊர் கெணத்த மூடிட்டோமே என்ற துக்கம் எல்லாப் பெண்களிடமும் இருந்தது. ஆனால் இதைத்தவிர வேறுவழியில்லை.

பார்த்துவந்த இரண்டு போலிசும் நாம் தண்ணீர் எடுக்கக்கூடாது என்பதற்காக கிணற்றை மூடிவைத்துவிட்டுப் போயுள்ளனர் என்று தலைமை சார்ஜென்ட்டிடம் சொன்னார்கள். வெள்ளைக்கார சார்ஜென்டின்

முகத்தில் கோபம் கொப்பளித்தபடி இருந்தது. ஆனாலும் பொழுது சாய்ந்துவிட்டதால் இன்றைக்கு எதுவும் செய்யவேண்டாம். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று பேசாமல் இருந்துவிட்டனர். நேரம் ஆகிக்கொண்டிருந்தது. சூரியன் விழுந்து பின் ஒளி மட்டும் பூமியின் மீது தேங்கிநின்றது. பறவைகள் அடைவதற்காக மரத்துக்கு வந்து கத்தியபடி இருந்தன.

ஒளி மங்கியது. பெண்கள் எல்லாம் வீடுகளுக்குள் போய்விட்டனர். தெருக்களில் யாருமில்லை. ஊர் மௌனமும் வெறுமையும் கொண்டு கிடந்தது. அந்த நேரத்தில் மலையிலிருந்து ஏழெட்டுப் பேர் இறங்கி ஊரை நோக்கி நடந்துவந்தனர். போலீசின் பார்வைக்கு தூரத்தில் வரும் உருவங்கள் தெரிய ஆரம்பித்தன. ‘சரி வரட்டும்’ என்று போலிசார் தயாராக இருந்தனர். வந்தவர்கள் கொம்பூதிப் புளியமரத்தின் கீழே வந்து நின்றுகொண்டனர். அவுட்போஸ்ட்டின் முன் அணிவகுத்து நின்ற போலிசார் ‘ஏன் வராமல் அங்கேயே நின்றுகொண்டனர்’ என யோசித்தபடி இருந்தனர். ஒளியின் கடைசி மிச்சத்தை இருள் வேகவேகமாகக் குடித்துக்கொண்டிருந்தது. நின்றவர்கள் போலீஸ் அணிவகுப்பையே பார்த்துக் கொண்டி ருந்தனர். வந்தவர்களின் உருவத்தையும் தன்மையையும் வைத்துப் பார்க்கும்பொழுது தாக்குதலுகாக வந்தவர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திவிட்டு அலட்சியத்தோடு அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான் தலைமை சார்ஜென்ட்.

அந்த நேரத்தில் இடதுபுறமிருந்து தெருக்களின் வெளிமுனையில் இருந்து தெருவுக்கு ரெண்டு காளைகள் வீதம் ஆறு காளைகள் உருவிவிடப்பட்டன. சுண்ணாம்பு கலந்த பச்சிலைகளைத் திங்கக் கொடுத்து வெறியேற்றப்பட்டிருந்த காளைகள் பின்புறம் ஊசியால் குத்தி கயிற்றை உருவிய கணத்தில் திட்டிவாசலைப் பிளந்துகொண்டு தாவுவதைப்போல் தவ்விக்கொண்டு ஓடிவந்தன. புளியமரத்தின டியில் நின்றுகொண்டிருந்தவர்களையே பார்த்துக்கொண்டிருந்த போலிசார் இடதுபுறமாகத் தெருக்களில் ஏதோ சத்தம் கேட்பதுபோல் இருக்கிறதே என்று சுதாரித்து திரும்புவதற்குள் கொடிவாலைத் தூக்கிக்கொண்டு தெருவதிர ஓடிவந்த கொறவக்காளை அணிவகுப்பின் நடுமையத்தில் தாவி இறங்கியது. சிதறித் தெறித்த போலிஸ்படை மந்தை முழுவதும் ஓடியது. குதித்துவந்த ஆறு காளைகளும் அகப்பட்டவர்களை யெல்லாம் முட்டித் தூக்கியது. வீரணக்காளை வகைதொகையில்லாமல் குத்தி எறிந்தது. பெரும் கத்தலும் சத்தமுமாக மந்தை கதி கலங்கியது. ‘கொடி பிசுறாம குத்துறா’ என்றார் புளியமரத்தை ஒட்டி நின்றுகொண்டிருந்த பெரியாம்பிள. மற்றவர்கள் காளைகள் மந்தையை விட்டு வெளியேறிவிடாமல் இருக்க வளைந்து நின்றபடி இருந்தனர். வெளியேற வழியில்லாத காளைகள் மீண்டும் மீண்டும் மந்தைக்குள் சுற்றியபடி இருப்பவர்களை எல்லாம் முட்டித் தூக்கிக்கொண்டிருந்தன. நல்ல தண்ணீர் கிணறு மூடப்பட்டு விட்டதால் காளைகள் உள்ளே விழுந்துவிடும் என்ற பயம் யாருக்கும் இல்லை. துப்பாக்கி முனையில் இருந்த கத்தியால் காளைகளை போலிசார் குத்தித் தள்ளினர். இரண்டு காளைகள் குடல் சரிந்து விழுந்தன. ஆனால் காளைகள் குத்தித் தள்ளியதால் பாதிப் பேருக்கு குடல் சரிந்தது. போலிசார் சுட்டத்தில் சக போலீஸ் ஒருவனும் மேற்கே கிணற்றடியில் நின்று காளையை மடக்கிக்கொண்டிருந்த தாதனூர்க்காரன் ஒருவனும் செத்து விழுந்தனர். காளைகள் எதுவும் மாட்டவில்லை.

ஆனால் துப்பாக்கிச் சத்தத்தில் வெறித்து நாலாபக்கமும் பிடுங்கி அடித்துக் கொண்டு ஓடின.

*

**கா**ளைகள் எல்லாம் மந்தையைவிட்டு ஓடியபின்பும் முழு இருளும், தாங்கமுடியாத வேதனையும் கூக்குரலும் மந்தை முழுவதும் நிரம்பி இருந்தது. ஆறு காளைகள் முழு போலிஸ் படையையும் குத்திக் கிழித்த செய்தி ஆட்சியாளர்களை நடுநடுங்கச் செய்தது. அரையிருட்டில் காளை எங்கிருந்து வருகிறது என சக போலிஸ் கணிக்கமுடியாததால் இழப்பு பல மடங்கு ஆகிவிட்டது. வெள்ளை சார்ஜென்ட்கள் ஏழு பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தாதனூரிடமிருந்து இவ்வளவு பெரிய தாக்குதலை இதுவரை போலிஸ் சந்தித்ததில்லை. அதற்கான விலையை அடுத்த சில நாட்களில் ஊர் கொடுக்கவேண்டியிருந்தது. கண்ணில் படுக்கிறவர்களை எல்லாம் சுட்டுத்தள்ளும்படியான உத்தரவுகளுடன் டி.எஸ்.பி.யும் இன்ஸ்பெக்டரும் அலைந்தனர். இரண்டு தினங்களுக்குப்பின் வந்த போலிஸ் படை சடச்சி பொட்டல் முழுவதையும் தீயிட்டுக் கொளுத்தியது. குருவிகள் கூடப் பறந்து கடக்கமுடியாத அளவு அடர்ந்து கிடந்த சடச்சி பொட்டலின் நடுவேதான் ஆறு சல்லிக்கட்டு காளைகளைக் கொண்டுவந்து அன்று பகல் முழுவதும் கட்டிவைத்திருந்தனர். ஆலமரத்தடியையும், மலையையும் மலையடிவார வெளிகளையும் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த போலிஸ் சடச்சி பொட்டலின் பக்கம் கவனம் செலுத்தாமல் விட்டுவிட்டது. இவ்வளவு அடர்த்தியான இடத்தை விட்டு வைத்தது எவ்வளவு அறிவீனம் என யோசித்த போலிஸ் மூன்றாம் நாள் வந்து தீ வைத்தது. நெருப்பு பனை உயரத்திற்குப் பற்றி எரிந்தது. மலையுச்சியில் இருந்த ஊர், விண்முட்ட எரியும் சடச்சி பொட்டலைப்பார்த்து கதறித் துடித்தது. புதுமண்ணில் சட்டி செய்து ஊரே அழிந்த இடம் நெருப்புக் கோளமாய் மேலெழுந்து வந்தது. முடமான கிழவி எரியும் தேகத்தோடு தீயின் நடுவே எழுந்து நின்றாள். தாதனூரால் உள்வாங்க முடியாத நெருப்பின் அனல் மலையையே உருக்கியது. தனிமை சூழ இருள் மண்டிக்கிடந்தான் கருப்பன்.

சடச்சி பொட்டலுக்குத் தீ வைத்த போலிஸ்படை அதே வேகத்தில் கள்ள நாட்டு கிராமங்களுக்குள் இறங்கியது. சல்லிக்கட்டுக் காளை வளர்க்கும் குடும்பங்கள் முழுவதையும் சார்ஜென்டுகளின் லத்திகள் நொறுக்கி எடுத்தன. அடிபொறுக்க மாட்டாத பலர் காளைகளின் கழுத்துக்கயிற்றை உருவிவிட்டனர். கட்டுத்தறி கட்டாமல் மூக்கு குத்தாமல் பெண் பிள்ளைகள் வளர்த்த காளைகள் பல வீடுகளை விட்டு வெளியேறாமல் நின்றன. வீடுகளில் இருந்த கழற்றிவிடப்பட்ட காளைகள் ஊர் ஊருக்கு மண்ணைக் குத்தி வீசியெறிந்தபடி போய்க்கொண்டிருந்தன. தாதனூருக்கு காளைகள் கொடுத்த ஊர் எது என்று சொல்லும் வரை வேட்டை தொடரும் என்று போலிஸ் அறிவித்தது. தாதனூரோடு நெருக்கமான உறவும், சம்பந்த வழியும் கொண்ட நல்லூர், பூசலம்பட்டி, வீரனூர் ஆகிய மூன்று கிர்ராமங்களையும் போலிஸ் படை உண்டு இல்லையென ஆக்கியது. காளைகள் கொடுத்தனுப்பியது யார் என்பதைக் கடைசிவரை கண்டறிய முடியவில்லை.

போலிஸ் போன கிராமங்களில் இருந்தெல்லாம் செய்தியைக்

கேள்விப்பட்டு மக்கள் அமணமலைக்கு வந்து என்ன ஆனாலும் ‘ரேகபிடிக்க வுட்ராதீங்கடா...’ என்று தாதனூர்க்காரர்களிடம் சொல்லிவிட்டுப் போயினர். போலிஸ் நினைத்தற்கு மாறான விளைவுகளே நடந்தன.

தாதனூர் மந்தையில் வந்து குத்தி ஓடிய இரண்டு காளைகளை மறுநாள் காலை பொன்மேனி கிராமத்தார் பிடித்துக் கட்டி வைத்திருந்தனர். செய்தி கேள்விப்பட்ட போலிசார் அவற்றைப் பிடித்துச்சென்றனர். மீதம் இரண்டு காளைகள் எங்கு போனதென்று தெரியவில்லை. ஆனால் பிடிபட்ட இரண்டு காளைகளைக் கொண்டுவந்து திருமங்கலம் கோர்ட்வளாகத்தில் கட்டிவைத்தனர். ஊர் ஊருக்கு விசாரணை என்ற பெயரில் அடித்து நொறுக்கினாலும் உண்மை தெரியவில்லை. சரி, காளை வளர்ப்பவனைப் பிடித்து அடித்தால் உண்மை வராது என்பதை உணர்ந்த போலிசார் நல்ல பிடிகாரன் எங்கு இருக்கிறான் என்பதைத் தலையாரிகள் மூலம் அறிந்து அவனைக் கூட்டிவரச்சொல்லி வேண்டியதெல்லாம் கொடுத்து விசாரித்தனர். சோழவந்தானைச் சேர்ந்த பிடிகாரன் ஒருவன் வலதுபுறமிருந்த காளையை பார்த்தவுடன் சொன்னான் ‘இது நல்லூர் பொம்பளப்புள்ள வளக்கிற காளை’ என்றான்.

மறுநாள் காலை குதிரைப்படையோடு டிப்டி தாசில்தார் சுந்தர மூர்த்தி பிள்ளையின் கீழ் அரசு உத்தியோகஸ்தர்களின் பெருங் கூட்டம் நல்லூருக்குப் புறப்பட்டுப் போனது. ஊரே திரண்டு மந்தையில் நின்றது. ‘அந்த பொம்பளப்புள்ள எங்கடா...?’ என்று முன்னால் நின்றுகொண்டிருந்த ஊர் பெரியாம்பிளைகளைப் பார்த்து டிப்டி தாசில்தார் சுந்தரமூர்த்தி பிள்ளை கேட்டார்.

‘அவ ஊருல இல்ல’ என்று பதில் வந்தது.

‘ஊருல இல்லைனா எங்க போனா?’

‘தெரியாது’

‘அப்போ ஆத்தா எங்கே?’

‘செத்து எட்டு வருசமாச்சு.’

‘அப்ப யாரு அவள வளக்குறது.’

‘கெழவிதான் வளக்குறா.’

‘கெழவி எங்கே?’

கூட்டம் அமைதியாக இருந்தது.

‘கெழவி எங்கன்னு சொல்றீங்களா... இல்லை ஊரையே அடிச்சு இழுத்துட்டுப் போகவா?’ என்று கத்தினார் குதிரைப்படை போலிஸ் இன்ஸ்பெக்டர் லோத்தம்.

‘கெழவி அவள கூட்டிக்கிட்டு போயிட்டா.’

‘எங்க போனா?’

‘தெரியாது.’

‘அவ பெறந்தது எந்த ஊரு?’

‘தாதனூரு’

‘பேரு?’

‘அங்கம்மா’

‘பேத்தி பேரு?’

‘பின்னியக்கா.’

எல்லாத்தையும் விசாரித்த டிப்டி தாசில்தார் சுந்தரமூர்த்தி பிள்ளை ‘வர்ற புதன்கிழமை சாயந்தரத்துக்குள்ள திருமங்கலம் ஸ்டேசன்ல வந்துரெண்டு பேரும் ஆஜராகணும், இல்லாட்டின்னா நிக்கிற காளையையும் கொன்னு தோலுக்கு ஏலம் போட்டுருவோம்’ என்று சொன்னார்.

கூட்டம் பெரும் முறைப்போடு, அவரையே பார்த்துக் கொண்டிருந்தது. போலிஸ் படையுடன் உத்தியோகஸ்தர்களின் கூட்டம் ஊரை விட்டுப்புறப்பட்டது.

குதிரைப்படையின் இன்ஸ்பெக்டர் லோத்தம் ஊரிலிருந்து பத்துப்பேரையாவது அடித்து இழுத்துக்கொண்டு போக வேண்டும் என்று சொன்னார். ஆனால் டி.எஸ்.பி. ஒத்துக்கொள்ளாததால் கோபத்தோடு அங்கிருந்து புறப்பட்டார்.

பேத்தியாளோடு காளைகளைக்கொண்டுவந்து தாதனூரில் விட்டுவிட்டு கிழவி அன்றிரவே கிளம்பி உச்சப்பட்டிக்குப் போய்விட்டாள். பேத்தி பின்னியக்காள் மறுநாள் பகல் முழுவதும் சடச்சி பொட்டலுக்குள் வைத்து காளைகளுக்கு தீவனம் கொடுத்து தயார்படுத்தினாள். அவளுக்கு மட்டுமே கட்டுப்படும் மூன்று காளைகளும் அவளின் சைகைகளுக்காகக் காத்திருந்தன. பொழுதுசாய அவள் தனது காளைகளை தெரு அதிர அனுப்பி வைத்தாள். எல்லோரையும் குத்தி கிழித்துத் தள்ளிய குரவக் காளையும், வீரணக்காளையும் குடல் சரிந்து செத்துக்கிடந்ததை மறுநாள் காலையில் மந்தையில் வந்து பார்த்தவள் அதன்பின் பேச்சு மூச்சற்றவளானாள். அன்னந்தண்ணி உண்ணாமல் அமணமலைப் பொடவுக்குள் ஒடுங்கிக் கிடந்தவள் ஐந்தாம் நாள் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

*

**‘அ**வுட் போஸ்ட்’ ஆஜர் முகாமாக மாறுவதற்கு ஆன இந்த ஓராண்டு காலமும் தாதனூர் அனுபவித்த துயரத்திற்கு அளவேதும் இல்லை. ஊர்கட்டுப்பாட்டின்படி ஒத்தப்பல்லன் கூட்டத்திற்கு வரி கொடுத்துத் துவக்கப்பட்ட கட்டிடம் இப்படி ஊரையே அழித்தொழிக்கும் இடமாக மாறும் என யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. சிரிக்கச் சிரிக்கப் பேசி ஆக வைத்து சபாபதி பிள்ளையைக் கண்டம்துண்டமாக வெட்டிப்போட்ட பின்பும் ஊரின் ஆத்திரம் அடங்கவில்லை. ‘உள்ளே கொண்டுவந்து எதை வைக்கிறான் பார்ப்போம்’ என்று நினைத்து அனுமதித்த கட்டிடத்திற்குள் இப்பொழுது ஊரே அகப்பட்டுக் கிடக்கிறது. போதகர் டேவிட் சாம்ராஜ் அவ்வளவு கோபப்பட்டதற்கான காரணம் இப்பொழுதுதான் புரிந்தது. ஆனால் அது புரிகிற பொழுது எல்லாம் கையை மீறிப்போய்விட்டது. எந்நேரமும் கழுத்தில் கொண்டிக்கட்டை போட்டவர்கள் பரிதாபமாக முனகிய சத்தம் கட்டிடத்திற்குள்

இருந்துகேட்டுக்கொண்டே இருந்தது. புதிதாக கைது செய்யப்பட்டவர்கள் நாள் முழுவதும் முதுகில் மண்மூடையைச் சுமந்து ஆடுமாடுகளைப் போல குனிந்தபடியே நிறுத்தபட்டிருந்தனர். வெள்ளைக்கார துப்பாக்கி போலிஸ் இரவு பகலாக அவுட்போஸ்டிலே தங்கியிருந்தது.

இந்தக் காலம் முழுவதும் நிகழ்ந்த கொலைகளில் பலவற்றைப் பெண்கள் செய்தனர். அதிகாலையில் அவுட்போஸ்ட்டில் இருந்த தலைமைக்காவலர் கண்மாய்க்கரை பக்கமாக காலைக்கடனை முடிப்பதற்காக வந்தபொழுது, தண்ணீருக்குள் கால் கழுவி விட்டு வெளியே வந்த கழுவாயி, அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரே அடியாக அடித்து கீழே வீழ்த்தி மேலேறி உட்கார்ந்து மூஞ்சியை சகதிக்குள் திணித்து வலுவெல்லாம் சேர்த்து அமுக்கினாள். கைகால்கள் எல்லாம் துடிப்பை நிறுத்தியதும் அப்படியே போட்டுவிட்டு எழுந்து கரையோரமாகவே நடந்து ஊருக்குள் போய்விட்டாள். அன்றிரவுதான் ஊர்பெரியாம்பிளையைக் குத்துக்கல்லில் கட்டிவைத்து விடிய விடிய சவுக்கால் அடித்தது. அதன் பின்பு பெண்கள் தனியாக அகப்பட்ட பல போலிசாரை உண்டு இல்லையென்று ஆக்கினர். பெண்களிடம் அகப்பட்ட போலிசார் யாரும் உயிருடன் திரும்பாததால் இவற்றையெல்லாம் பெண்கள் செய்கிறார்கள் என்று போலிசால் நினைக்கமுடியவில்லை. சம்பவம் நடந்த பொழுதெல்லாம் போலிசார் ஆண்களை உண்டு இல்லையென ஆக்கிக்கொண்டிருந்தனர்.

பல கொண்டிக்கட்டைகளை செய்து அவுட்போஸ்ட்டில் தயாராக வைத்திருந்த போலிசார் புதிய கழுத்துகளைத் தேடிப்பிடிக்க ஆர்வத்தோடு இருந்தனர். பெண்களிடமும் குழந்தை களிடமும் மானக்கோடாகப் பேசி, மறைந்து திரிகிற ஆண்களை மந்தையை நோக்கி வரவைக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் ராத்திரியில் ரயில்வே ஸ்டேசனுக்கு பக்கத்திலிருந்த அவுட்போஸ்ட்டுக்கு முன்னால் பெரும் புதருக்குள் போய் உட்கார்ந்து கொண்டாள் கழுவாயி. அவுட்போஸ்ட் முன்புபோல பரபரப்புடன் இல்லை. நகர் காவலுக்கு வருகிறவர்களைக் கண்காணித்து மேலதிகாரிகளிடம் உடனுக்குடன் போய்ச்சொல்ல வேண்டிய தேவை எதுவும் இப்பொழுது கிடையாது. எனவே அமைதியாக இருந்தது. மூன்று போலிசார் உள்ளே உட்கார்ந்தபடி தூங்கிக்கொண்டிருந்தனர். இரண்டுபேர் வெளியில் காவலுக்கு துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தனர். இரண்டு பக்கமும் இரும்புக் கம்பங்களின் மேல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இருள் வெளியெங்குமிருந்து வெளிச்சத்தின் குரல் வளையை இறுக்கிக்கொண்டிருந்தது. எதிரில் இருந்த புதர்களுக்குள் வெகு நேரமாக குத்தவைத்து உட்கார்ந்திருந்த கழுவாயி என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். நீண்ட நேரத்திற்க்குப்பின் நின்றுகொண்டிருந்ததில் ஒருவன் அவுட்போஸ்ட் பின்புறம் இருந்த இருட்டுக்குள் போனான். இதுதான் சமயம் என முடிவெடுத்த கழுவாயி புதருக்குள் இருந்து இருளைப்போர்த்தியபடி வெளியே வந்தாள். மேற்கு திசையில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த வெள்ளைச் சிப்பாயின் பின்தலையில் இரும்பைக் கொண்டு அடித்ததைப்போல அடி விழுந்தது. அப்படியே மல்லாக்க விழுந்தவனின் கழுத்தை பன்னரிவாளால் மூன்றே இழுவையில் அறுத்து எடுத்தாள். முடியை இறுக்கிப்பிடித்தபடி

உடைமரக்காட்டுக்குள் நடந்தாள். பீறிட்டு ரத்தம் தெறித்தபடி இருந்தது.

அரை நிலா வானத்திலிருந்து எட்டிப்பார்த்தபடி இருந்தது. பொன்மேனியின் உடைமரக் காட்டின் வழியே வந்தவள் மாடக்குளம் கண்மாய்க் கரையிலே ஏறினாள். அவள் பாதடியின் அதிர்வில் கரை நெடுகக் கரம்பை மண் சரிந்தது. நெடுக இருந்த ஆலமரங்களில் அடைந்து கிடந்த பறவைகள் எல்லாம் விழித்தன. வீச்சுக்கு வீச்சு ரத்தத்துளிகள் கரையின் சரிவில் விழுந்து உருண்டன. தலைமுடியை இறுகப்பிடித்தபடி கைவீசி வந்த அவளின் வேகத்தைக் கண்டு இருள் நடுங்கியது. நண்டு நத்தைகள் வலைகளுக்குள் ஓடின. ஆந்தைகள் இருப்புக் கொள்ளாமல் வெளியெங்கும் கத்தியபடி பறந்தன. மலையடிக்கருப்பும், சமயக்கருப்பும், ஒண்டிக்கருப்பும் ஆங்காரத்தோடு அறுபட்ட தலையை ஏந்தி வருபவளைக் கண்டு அஞ்சி நடுங்கி பனைமரங்களின் பின்னே ஓடி ஒளிந்தன. வெட்டிய தலையோடு கண்மாய்க் கரையில் இருள் அதிர நடந்துவருபவளை எதிர்கொண்டு பார்க்க எவரும் இல்லை.

கிழக்குப்பக்கமாக ஊருக்குள் நுழைந்தவள் மந்தையிலிருந்து அவுட்போஸ்ட் கட்டிடத்திற்குள் தலையை வீசி எறிந்தாள். நடு மையத்தில் சொத்தென விழுந்து உருண்ட தலை மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கொண்டிக் கட்டைகளை இரவெல்லாம் பார்த்தபடியே கிடந்தது. கழுத்தற்று வந்து விழுந்த தலையை கொண்டிக்கட்டைகளும் இரவெல்லாம் அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டேயிருந்தன.

வெளியில் காவலுக்கு இருந்த போலிஸ்காரர்கள் அதிகாலையில் தான் உள்ளே வந்து பார்த்தனர். அறுபட்டுக் கிடந்த தலையைத் தூக்கிக் கொண்டு நகரத்தை நோக்கி ஓடினர். வெள்ளை நிறத்தோல் ரத்தமற்று வதங்கிக் கருத்திருந்தது.

வடகரையில் இருந்த ஐரோப்பிய இடுகாட்டில் சவ அடக்கம் நடந்தது. முண்டமற்றுக் கிடந்த தலை மீண்டும் ஒருமுறை அகப்பட்ட தாதனூர்க்காரனையெல்லாம் அழித்து ஒழிக்கும் வாய்ப்பைக் கொடுத்தது. ரயில்வே ஸ்டேஷன் அவுட்போஸ்ட்டில் தூரத்தில் இருந்த புதர்ப்பக்கமாக சிறுநீர் கழிக்கப் போன போலிஸ் ஒருவன், ஒரே அடியில் போலிசை அடித்து வீழ்த்தி தலையை அறுத்துகொண்டு போனது ஒரு பெண் என்ற உண்மையை மேலதிகாரியிடம் போய்ச் சொன்னான். அந்தச் செய்தி வெள்ளைக்கார போலிசுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. சில ஆண்டுகளுக்கு முன் இன்ஸ்பெக்டர் சேதுப்பிள்ளையை வண்டியூர் கண்மாயில் வைத்துக் குத்திக் கொன்றது பெண்கள்தான் என்றும், அந்த வண்டியோட்டி டி.எஸ்.பி.ஸ்டீபன்சனிடம் வந்தசொன்னபோது தான் உடனிருந்த தாகவும் சொன்னான், அப்பொழுது ஏட்டாக இருந்து இப்பொழுது தலைமைக்காவலராக மாறியிருக்கிற சின்னச்சாமி முதலி.

அவுட்போஸ்ட்டில் கொலையைப் பார்த்தவன் சொன்ன அடையாளத்தை வைத்து ஊரில் இருந்த பெண்கள் எல்லோரையும் போலிஸ் கவனிக்க ஆரம்பித்தது. அன்று இரவு கழுவாயி வீட்டில் படுத்துக்கிடந்தாள். மறுநாள் காலையில் எழுந்து கண்மாய் பக்கமாகப் போனவள் அதன்பின் வீடு திரும்பவில்லை. பக்கத்து வீட்டுக்காரியிடம் சொல்லாமல் அவள் தூரந்தொலைவுக்குப் போகமாட்டாள். ஆனால் நாட்கள் ஒவ்வொன்றாகப் போனபோதும் அவள் வரவில்லை. பெண்கள்

எல்லாம் அவளை எங்கெல்லாமோ தேடிப்பார்த்தனர். அவள் வாக்கப்பட்ட மூன்று ஊருக்கும் போய்த்திரும்பினர். எங்கும் அவள் இல்லை. குமரிப்பெண்கள் மிகுந்த கவலையோடு கழுவாயிக்காகக் காத்திருந்தனர். மந்தையில் கிடக்கும் இளவட்டக் கல்லை இரண்டு மூன்று முறை தூக்கிப் போடுபவள் அவள்தான். 'பொசகெட்ட ஆம்பிளைக ஆட்டையும் கண்ணுக்குட்டியையும் தான் தூக்குவாங்கெ. என்னோட வயசு ஆம்பிளைய வந்து கல்ல மூணு தடவ தூக்கிப்போடச்சொல்லு பாப்போம்' என்று மந்தையில் நின்று சவால்விட்டுக் கூப்பிடுவாள். எங்கே தன்னை நேருக்கு நேராக கல்லைத் தூக்கச்சொல்லி கூப்பிட்டுவிடுவாளோ என்று ரோசப்பட்டுத்தான் மந்தைக்கல் பெரியாம்பிளை இவளைப் பார்த்தபோதெல்லாம் ஓடி ஒளித்தார். இரவெல்லாம் நெல்லுக் குத்தியபடி கழுவாயி சொன்ன கதைகளைக் கேட்டு வளர்ந்த குமரிப்பெண்கள் கழுவாயிக்காக காத்துக்கொண்டே யிருந்தனர்.

*

**'ணங்கு**...ணங்கு...' என்று வெட்டு விழுந்தது. மூன்று ஆள் சேர்ந்து கட்டிப்பிடிக்கும் அளவு கொண்ட பெரியதூரை அவ்வளவு சாதாரணமாக வெட்டிவிடமுடியாது. ஆளுக்கொரு பக்கமாக நின்று மாறி மாறி வெட்டினர். கோடாரிகள் மரப்பட்டைகளுக்குள் பாய்ந்து இறங்கியபடி இருந்தன. கொம்பூதிப் புளியமரத்தை வெட்டினால் என்னவாகும் என்று தெரியும். எனவே துப்பாக்கி போலிசார் மந்தை முழுதும் நிரம்பியிருந்தனர். பெண்களும் குழந்தைகளும் கண்மாய்ப் பக்கமாக வந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கண் முன்னால் மரத்தில் வெட்டு விழுந்துகொண்டேயிருந்தது. இது ஊர் தோன்றிய காலத்தில் தோன்றிய மரம். காவல் மாடம்போல தாதனூருக்கு அந்த மரம் இருந்தது. இந்த மரத்தின் உச்சிக்கொப்பில் ஏறிநின்று பார்த்தால் அதன் பார்வை எல்லை ஊரையே வெளியேற்றி மலைக்குமேல் கொண்டுசெல்வதற்கான கால அவகாசத்தைக் கொடுப்பதாக இருக்கும்.

கொம்பூதிகள் தலைமுறை தலைமுறையாக இதன் கொப்புகளின் மேல் உட்கார்ந்திருந்தனர். அவர்களின் பாதத்தின் பெருவிரல்கள் மரப்பட்டைகளைக் கவ்விப் பழகியே வளர்ந்தன. கொம்பூதி வகையறாவில் வாக்கப்பட்டு வரும் பெண்ணுக்கு இந்த மரப்பட்டைச்சாறு தான் முதலில் கொடுக்கப்படும். அந்த திரவம்தான் கர்ப்பத்தில் சூல் கொள்கிறது. மரத்தின் வேர்கள் நரம்புகள் எனப் படர்கின்றன. இரவும் பகலும் வெளியெங்கும் பார்த்துப் பழகிய பார்வை கண்களென உயிர்கொள்கிறது. கொம்பூதிகளின் தலையை மட்டும் மரத்தின் மேல் தொங்கவிட்டு விட்டு கடந்துபோன படைகள் எத்தனையோ உண்டு. சொட்டுச் சொட்டாக வழிந்த ரத்தத்தை மரப்பட்டைகள் தான் குடித்துத் தீர்த்தன. மரப்பட்டைகளின் ரத்தம் கொம்பூதிகளுக்குள்ளும் கொம்பூதிகளின் ரத்தம் மரப்பட்டைகளுக்குள்ளும் ஊறிக்கிடந்தது.

செதில் செதிலாகப் பட்டைகளை கோடாரிகள் வெட்டிய பொழுது கொம்பூதிப் பெண்கள் துடித்துக் கதறியபடி கண்மாய் வெளியிலே உருண்டனர். உருளும் பெண்களைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தது ரிசர்வ் போலீஸ் படை.

ஆண்கள் யாரும் இறங்கிவரவில்லை. மலைக்குமேல் இருந்தபடி

பார்த்துக்கொண்டேயிருந்தனர். இப்பொழுதெல்லாம் அவர்கள் துப்பாக்கியைத் தெரிந்து வைத்துள்ளனர். ‘ஏங் கல்ல விட வேகமான்னு பாத்திருவோம்’ என கெடாயன் எறிந்தபொழுது பத்து முழ தூரம் கொண்ட இடைவெளி இப்பொழுது காத தூரமாகிவிட்டது. துப்பாக்கி குண்டுகளுக்கு கொடுக்கப்பட்ட பலி கொஞ்சம் கொஞ்சமாக அதன் சக்தியை அவர்களுக்கு உணர்த்தியது. துப்பாக்கி போலிசின் அணிவகுப்பின் ஊடே வெட்டப்படும் மரத்தைப் பார்த்தபடியே அன்றைய நாள் முழுவதும் மலை உச்சியில் அவர்கள் தவித்தனர்.

பாதித் தூரை வெட்டியதோடு அன்றைய நாள் முடிந்தது. பொழுது மங்கிய நேரத்தில் கோடாரிகளைத் தூக்கிக்கொண்டு ரிசர்வ் போலீஸ் படை பென்னிங்டன் ரோட்டிலே நடந்து வெளியேறியது. இரவு மலையிலிருந்து இறங்கிவந்தவர்கள் மரத்தின் மேல் தொங்கிக்கொண்டிருந்த கொம்பைக் கழட்டி எடுத்தனர். கொம்பு மரத்தைவிட்டு கீழே வந்தது. ஊரே மந்தையில் நின்று அழுதது. கொம்பை எண்ணெய்விட்டுத் துடைத்து, சடச்சி பொட்டலில் வைத்துக்கும்பிட்டனர். பின்னர் கொம்பூதி கொம்பை எடுத்து நரம்பு புடைக்க ஊதினான். இதுவரை கேட்டிராத ஓசை அதிலிருந்து பீறிட்டு வெளிவந்தது. இருள் நடுங்கி ஊரை அசைத்தது. ஆணும் பெண்ணும் அலறித் தீர்த்தனர். கொம்பை ஊதியபடியே அவன் ஊரைவிட்டு நடந்தான். எல்லோரும் அவன் பின் நடந்தார்கள். மரம் தன்னிலிருந்து பிரிந்துபோன கொம்பின் ஓசையைக் கேட்டு அசைவற்று நின்றது. ஓசையின் வழியே பெருக்கெடுத்த சோகம் இருளை நிரப்பியது. மரப்பட்டைகளில் பிடித்து ஏறிய அவனுடைய பாதங்கள் பாறைகளை மிதித்து மலைமேல் ஏறின. உச்சிக்குப்போனதும் சுற்றுவெளி இன்னும் அகலமாகத் தெரிந்தது. ஆனால் ஊர் தூரமானது.

*

**பா**ம்பு கடித்தபின் பல மாதங்களாக தொடர்ந்து வைத்தியம் பார்த்துவந்த விருமாண்டிப் பெருசுக்கு உயிர் தப்பியது. ஆனால் பாம்பு கடித்த பெருவிரலிருந்து வலதுகால் கொஞ்சம் கொஞ்சமாக அழுக ஆரம்பித்தது. மந்தைக்கும் வீட்டுக்குமாக மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தவர் பின்னர் வீட்டிற்கு முன்னர் கிடந்த கயிற்றுக்கட்டிலில் படுத்தபடுக்கையானார். இடுப்புக்கு கீழ் வலதுகால் அசைவற்றுக் கிடந்தது. மந்தைக்கல் பெரியாம்பிளைதான் தினமும் வந்து விருமாண்டியோடு பேசிச் செல்வார். ஊரில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் அவுட் போஸ்ட் கட்டிடத்திற்கு தினமும் கச்சேரி போலிசார் வந்துவிட்டுப் போவதும் அவருக்குத் தெரிய வந்தது.

நாளை காலை துரை ஐயா வரும்பொழுது எல்லோரும் ரேகை கொடுக்க வேண்டும் என்று தண்டோரா போட்டு அறிவித்தவுடன் இரவோடு இரவாக ஆண்கள் எல்லாம் மலையேறிவிட்டனர். காலையில் வெள்ளைக்கார போலிஸ் படை ஊருக்குள் வந்தபொழுது ஒரு ஆண்கூட ஊருக்குள் இல்லை. விருமாண்டிப் பெருசுவின் கயிற்றுக்கட்டில் வீட்டுக்குள் போடப்பட்டிருந்தது. அவரால் எழுந்து போகமுடியாததால் வீட்டுக்குள்ளே கிடந்தார். தெருத்தெருவாகச் சுற்றி வந்து தேடியபடி இருந்த போலீசார் வீட்டிற்குள் அரை இருட்டில் கிடந்த கிழவனைப் பார்க்காமல் போய்விட்டனர்.

போலிசார் போன பின் வீட்டுப்பெண்களைக் கூப்பிட்டு ‘அடியே, என்னால நாண்டுகிட்டு தொங்க எந்திரிச்சு நின்னு கயிறு போடமுடியாது. அதுனால கழுத்த அறுத்து கொல்லுங்கடீ...’ என்று கேட்டார். ‘அடி ஆத்தீ... என்ன மனுசா இப்படிச் சொல்ற’ என்ற பெண்கள் தலையில் அடித்து அழுதபடி வீட்டை விட்டு வெளியேறினர். தெருவில் கேட்கும் பேச்சுச் சத்தத்தை வைத்து ஒவ்வொருத்தியாய் பெயர் சொல்லிக்கூப்பிட்ட பெரியாம்பிளை ‘என்னக் கழுத்த அறுத்து கொல்லுங்கடீ...என்னக் கழுத்த அறுத்து கொல்லுங்கடீ...’ என்று ராத்திரி முழுவதும் கேட்டுக் கொண்டே யிருந்தார். எல்லோரும் அவருக்காக இரக்கப்பட்டு அழுதனர்.

மறுநாள் காலையில் தெருப்பக்கமாக ஓடித்திரிகிற சிறுவர்களைக் கூப்பிட்டு சொல்லிப் பார்த்தார். யாரும் கேட்பதுபோல் இல்லை. ஊரே பதற்றத்தோடு இருந்தது. அங்குமிங்குமாகப் பெண்கள் குசுகுசுவெனப் பேசிக்கொண்டிருந்தனர். இடுப்பில் தேவையானவற்றை எல்லாம் எடுத்துக்கட்டி தயாராகியபடி இருந்தனர். மீண்டும் போலிஸ் படை ஊருக்குள் வந்தது. நகரத்தில் இருந்து கூட்டிவரப்பட்ட தண்டோரக்காரன் மீண்டும் அறிவித்தான். இன்றும் ஊருக்குள் ஆண்கள் யாரும் இல்லையென்பதைத் தெருவெங்கும் சுற்றிவந்த பின் போலிசார் உறுதிப்படுத்தினர். நடு மத்தியானம் கழித்து ஓடித்திருந்த சிறுவன் ஒருவனின் மூலம் செய்தியை அறிந்துகொண்ட போலீஸ் ஐந்து பேராக மொத்தமாக வந்து கட்டிலோடு தூக்கி அவுட் போஸ்ட்டில் கொண்டுவந்து இறக்கினர். அசைவற்று அழுகிக்கிடக்கும் காலைத் தவிர உடல் முழுவதும் திமிறித் தவித்தபடி இருந்தது. ஆனால் கட்டிலோடு அமுக்கிக்கொண்டிருந்த ரிசர்வ் போலிசாரின் கைகளை மீறி அவரால் எழுந்து உட்காரக்கூட முடியவில்லை. நம்பர் 1. பெயர் விருமாண்டி த.பெ. மொக்கை, வயது 70. அடையாளம்... ரத்த உறவு... என எல்லாம் கேட்டுப் பதிந்துகொண்டார் பதிவு அதிகாரி. கயிற்றுக்கட்டிலில் மூங்கில் கம்பை இறுக்கப்பிடித்திருந்த அவரது இடதுகையைப் பிய்த்து எடுத்த போலிசார் அப்படியே இழுத்துக்கொண்டு வந்து பதிவு அதிகாரியின் மேஜையின் மேல் நீட்டினர். அவர் நீட்டப்பட்டதில் பெருவிரலை மட்டும் தனது இரண்டு விரல்களால் பிடித்து கருப்புக் கறையைத் தடவி பதிவேட்டில் கட்டையை உருட்டுவதைப்போல ஒரு உருட்டு உருட்டித் தூக்கிவிட்டார். மீண்டும் கட்டிலோடு கொண்டுவந்து வீட்டிற்கு வெளியே போட்டுவிட்டுப் போயினர்.

‘தாயோலி, கழுத்தறுத்து கொல்லுங்கன்னா கேட்டீங்களாடீ, இப்படி ரேக பிடிக்க வுட்டுட்டீங்களேடீ...’ என்று பகலெல்லாம் உயிர்வற்றக் கதறியபடியே இருந்தார். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபொழுது பெரியாம்பிள சுவரோரம் கிடந்த சிலுக்காணியை எடுத்து தொண்டைக்குழியில் குத்திக்கொண்டு செத்துக்கிடந்தார்.

நம்பர் 228. பெயர் கழுவன். த.பெ. மாயாண்டி, வயது 19, அடையாளம்... ரத்த உறவு... என எழுதி ரேகையை வாங்கியபொழுது பதிவு முடிந்தது. ஓர் ஆண்டாகச் செயல்பட்டபோலிஸ் அவுட்போஸ்ட் ஆஜர் முகாமாக மாற்றப்பட்டது. முழு நோட்டிலும் ரேகையை எடுத்தபடி வெள்ளைக்காரப் போலிஸ் அவுட்போஸ்ட்டை விட்டுப் புறப்பட்டுப்போனது. சிலுக்காணியை எடுத்து தொண்டைக்குழியில் குத்திக்கொண்டு மந்தைவெளியில் ஊர் செத்துக்கிடந்தது.

*

# 109

**ஆலமரத்துக்கு எங்கிருந்துதான் இவ்வளவு பறவைகள் வந்து** சேர்ந்தனவோ தெரியவில்லை. அவ்வளவு பறவைகள் மரமெங்கும் நிறைந்து கிடந்தன. ஆலம்பழங்கள் பழுக்கத் துவங்கிய காலங்களில் வழக்கமாக கிளிகள்தான் அதிகமாக வரும். ஆனால் இந்தாண்டு கிளி, மைனா, குயில், காடை என எல்லாம் கூட்டம் கூட்டமாக வந்திறங்கியபடி இருந்தன. பகலெல்லாம் பறவைகளின் குரல் அந்த வெளி முழுவதும் ஒலித்தபடி இருந்தது. சிறு பறவைகளை அணில்கள் விரட்டுவதும் பெரிய பறவைகள் அணிலை விரட்டுவதுமாக மரக்கொப்புகள் முழுக்க பரபரப்புடனே இருந்தன.

இலைகள் எல்லாம் முற்றிலும் உதிர்ந்து கொப்புகள் வார் வாராக நின்ற இலையுதிர் வேளையில் துவங்கிய பேக்காலம் பழங்கள் குலுங்கும் இந்தப் பருவத்தில் உச்சத்தை அடைந்தது. பச்சைக்கிளிகளின் கீச்சத்தம் ஆலமரத்தடி முழுவதும் நிரம்பியிருக்கிற இந்த நேரத்தில்தான் கொண்டிக்கட்டையின் வலி தாங்காத முனகல் ஓசை அவுட்போஸ்ட்டில் இருந்து பெருகி வந்தபடியே இருந்தது. ஆல்மரங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் பழங்களை உதிர்த்துத் தீர்ந்தபொழுது வேதனையால் துடித்தபடி கிடந்தது ஊர்.

ஆலமரத்தடி ஊரைப் போலவே உருக்குலைந்து கிடந்தது. தனது பரப்பு முழுவதும் காவலுக்கும் களவுக்கும் விடிய விடிய ஆட்களை அனுப்பி வைத்தபடி இருந்த இடம் இன்று பெரும் மௌனத்தால் சூழப்பட்டுக்கிடக்கிறது. இரவு கருக்கொள்ள ஆரம்பிக்கும் நேரத்தில் துவங்கி அதிகாலையில் காக்கைகள் கரையும் நேரம் வரை ஒவ்வொரு கொத்தும் எங்கே போகிறது, என்ன கொண்டுவருகிறது, காவலுக்குப் போனவர்கள் பத்திரமாக வந்தார்களா, செய்தி ஏதேனும் உண்டா, தூரந்தொலைவுக்கு களவுக்குப் போனவன் சொல்லிச் சென்ற இடமும், கழிந்துபோன நாட்களும் சமப்பட்டுப்போனதா என்று தினமும் கருப்பு கோவில் தாவாரத்தில் உட்கார்ந்து விடிய விடிய அலசி ஆராய்ந்து

கொண்டிருந்த பெருசுகளின் கூட்டம் எதுவும் இப்பொழுது அங்கு இல்லை. ஊர் பெரியாம்பிளையையும், மந்தைக்கல் பெரியாம்பிளையையும் இன்னும் பலரையும் வெள்ளைக்காரன் எங்கே கொண்டு போனான் என்ற விவரம் எதுவும் ஊருக்குத் தெரியவில்லை. மிச்சமிருக்கும் பெரிசுகள் யாரும் ஆலமரத்தடியில் படுப்பதில்லை. ஆஜர் பார்க்க போலிஸ்காரன் வந்து விசில் சத்தம் கொடுத்தவுடன் ஆலமரத்தடியிலிருந்து லொங்கு லொங்கொன்று ஆஜர் முகாமுக்கு ஓடவேண்டியிருக்கிறது. அதுவும் ஒரே இரவில் இரண்டு மூன்று முறை ஆஜர் பார்க்கவருகிறான். சில நேரம் ஆஜர் பார்த்து முடிப்பதற்குள் பெரிசுகளால் வந்து சேரமுடியவில்லை. மறுநாள் படுக்கைக்கு நகரத்திற்குள் இருக்கும் கச்சேரிக்குப் போகவேண்டியிருக்கிறது. இதனால் பெருசுகள் யாரும் இப்பொழுது ஆலமரத்தடியில் படுப்பதில்லை. ஆஜர் கொடுப்பதற்கு வசதியாக ஊர் மந்தையிலே படுத்துக்கொள்கின்றனர்.

இளவட்டங்களில் கூட்டம்தான் இரவில் ஆலமரத்தடியில் படுத்துக்கிடந்தது. ஆஜர் பார்க்க விசில் சத்தம் கேட்டதும் பாதையின் வழியே ஊர் விழுந்தடித்து ஓடிவருவதும் பின் மெல்ல நடந்து ஆலமரத்தடிக்குத் திரும்புவதுமாக இரவு முழுவதும் நடந்துகொண்டேயிருந்தனர். ஆலமரத்தடி தனது கலகலப்பு மிக்க பேச்சொலிகளை இழந்துவிட்டது. இளவட்டங்கள் மட்டும் அங்குமிங்குமாக வந்து படுத்துக்கிடப்பதும் வேதனை தோய்ந்த குரலில் தங்களுக்குள் பேசிக்கொள்வதுமாக இருந்தனர்.

ஒவ்வொரு இரவும் நட்சத்திரங்கள் பொழுதையும் திசையையும் சொல்லி வெளியெங்கும் அழைத்தபடி இருக்கின்றன. இரவில் பெருங்குரல் கேட்டு நடந்து பழகிய வாழ்க்கை இப்பொழுது முட்டுச்சந்தில் வந்து நிற்கிறது. வழித்துணையாக வந்துபோன ஆந்தையின் குரல் இப்பொழுது அனாதையாக இருள் குகைக்குள் எங்கேயோ ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆஜர் முகாமிற்குள் இருந்து கேட்கும் விசில் சத்தம் சொடுக்கி வீசும் சாட்டையைப்போல எங்கு கிடந்தாலும் அடித்து இழுக்கிறது. இரவை மூன்றாகவும் நான்காவும் பகுந்து போட்டு வைத்திருக்கிறான் வெள்ளைக்கார போலிஸ். அதில் ஒன்றுக்கு ஆஜராகத் தவறினாலும் மறுநாள் ஊர் மந்தையில் வைத்து வராதவன் உடலைப் பாகம் பாகமாகப் பகுந்துபோட்டு கணக்கை முடிக்கிறான்.

மேலெல்லாம் விளார் கம்புகளால் அடிபட்டுப் பிளந்துபோய் கிடக்க, வாய்த்தாடைக்கும் தோள் பட்டைக்கும் இடையில் பெரும்பாறை என கொண்டிக்கட்டை அழுத்தி வலி பொறுக்க முடியாமல் துடித்தபடி ஆஜர் முகாமில் கிடக்கிற ஒருவனை இரவில் வெள்ளிகளிலிருந்து சிந்திப் பெருகும் ஒளியே மீண்டும் உயிர்பெற வைக்கிறது. தனது மூதாதையர்கள் கண்டுசொன்ன இரவின் பேரதிசயங்கள் ஒவ்வொன்றாய் முடிச்சவிழுந்து அவன் மேல் படர்கிறது. வேதனையால் துடித்துக்கிடக்கும் எவனும் இரவைக் கடக்கும்பொழுது புத்தெழுச்சியோடு பகலைச் சந்திக்கிறான். இவ்வளவுக்குப் பிறகும் இரவு நம்பிக்கை யூட்டுவதாகத்தான் இருக்கிறது. பகல் அவநம்பிக்கையின் பெருவெளியாக இருந்தது.

*

**இ**ப்பொழுது ஊரில் உள்ள நடுத்தரமான ஆண்களில் வயதிலும்

அனுபவத்திலும் மூத்தவர்கள் ஆங்கனும் கழுவனும்தான். இவர்களின் மீது எந்த ஒரு வழக்கும் கச்சேரியில் இல்லாததாலும், காவல்துறையின் குறிப்புகள் எதிலும் இவர்களின் பெயர்கள் இடம் பெறாததாலும் இவர்கள் இருவரும் மோசமான குற்றவாளிகளின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இவர்களோடு சேர்ந்து கொத்து நிலையாளாகப் போன கூகையன், முத்தணன், சுழியன், பம்பையன், கருப்பணன் என எல்லாம் மோசமான குற்றவாளிகள் எனப் பட்டியலிடப்பட்டு ஊரை வீட்டு எங்கோ கொண்டுசெல்லப்பட்டு விட்டனர். அவர்களைத் தவிர ஊரிலுள்ள சாதாரணக் குற்றவாளிகளுக்கு ஆங்கனும் கழுவனும்தான் நிலையாளாக இருக்கின்றனர். ஊரின் மொத்தத் துன்பமும் இவர்களின் தோளின் மீதுதான் விழுந்துகிடக்கிறது.

ஆங்கனும் கழுவனும் ஒவ்வொரு பகலிலும் திட்டம் போட்டனர். அவர்களின் திட்டமெல்லாம் இந்தப் பஞ்சத்தை தாக்குப்பிடித்து உயிர்வாழ கஞ்சிக்கு என்ன செய்வது என்பதைப் பற்றித்தான். கடந்தாண்டு முழுவதும் போதுமான மழை இல்லை. வைகைப் பாசன விவசாயம் முழுவதும் பொய்த்துப்போனது. சம்சாரிகள் பெரும் கஷ்டத்தை சந்தித்துக் கொண்டிருந்தனர். தாதனூரின் துயரத்தோடு சம்சாரிகளின் கஷ்டமும் சேர்ந்துகொண்டது. வெடிப்புற்றுக் கிடக்கும் நாற்றங்காலில் விரியன் பாம்புகள் ஊர்ந்துகொண்டிருந்தன. ‘விதி முடிந்தவனைத்தான் விரியன் பார்க்கும்’ என்ற சொலவடை எங்கும் கேட்டது. நகரின் குடிக்காவலை வாங்க வழியில்லை. கடவுச்சீட்டு இல்லாமல் ஊரைத் தாண்டி கால் எடுத்து வைக்க முடியவில்லை. எந்த ஒரு இரவும் நகர்க் காவலுக்குப் போகமுடியாதபடி ஆகிவிட்டது. மூன்று முறை ஆஜர் பார்க்க வருகிறார்கள். இடைவெளியில் எங்கும் யாரும் போய்த்திரும்பாதபடி கவனமாக கணித்து வந்துசெல்கின்றனர். காவலுக்கோ களவுக்கோ ஊரில் இருக்கிற யாரும் போய்த்திரும்ப முடியாத நிலை உருவாகிவிட்டது.

வற்றிப்போன கூழ்ப்பானையைக் கையில் ஏந்தி ஊர் கதறியது. உணவுக்கான எந்த வழியும் தென்படவில்லை. துணிந்து இரண்டு மூன்று பேர் களவுக்குப்போய் மூடைகளைத் தூக்கிவந்து சேர்த்தால் ஊருக்கே இரண்டொரு நாளுக்குக் கஞ்சி கிடைக்கிறது. ஆனால் தூக்கி வந்தவர்களில் ஒருவனது உயிரும் மிஞ்சிப்பிழைக்க வாய்ப்பற்றுப்போகிறது. ஊர் மந்தையில் எல்லோரையும் வட்டமாக உட்காரவைத்து உயிர்போகும் வரை போலிஸ் சார்ஜென்ட்டுகள் தடிகளால் அடித்து நொறுக்குகின்றனர். லாந்தர் விளக்கின் வெளிச்சத்தில் எலும்புகள் முறிந்து சதையைக் கிழித்து வெளித்தெரிக்கின்றன. ஊரே கதறுகிறது. குடித்த கஞ்சியெல்லாம் அவன் ரத்தமென நினைத்து வயிற்றைப் புரட்டி வாந்தியெடுக்கிறது. ஊருக்கு வேறு வழியே இல்லையென்றானது. கிராம காவல் பார்க்கிற தாதனூர்க்காரர்கள் முடிந்த மட்டும் தானியங்களைக் கொடுத்தனுப்பியபடி இருக்கின்றனர். உணவுக்கான ஒரே வழியாக அது மட்டும்தான் இருக்கிறது. அதுவும் இந்த வறட்சியால் பாதிக்குப்பாதி குறைந்துவிட்டது. மயிலக்கீரை, சுண்ணாம்புக்கீரை, குமுட்டிக்கீரையை வெளியெங்கும் அலைந்து திரிந்து பெண்கள் பிடுங்கி வந்தனர். இச்சிக்காயையும் ஆலங்காயையும் அவித்துத் தின்றனர். மரங்களின் கீழ் உதிர்ந்து கிடக்கும் பழங்களைப் பொறுக்கித் தின்றனர். கள்ளநாட்டுக்கே அரிசிக் கஞ்சி ஊற்றிய தாதனூர் கூழ்ப்பானையில் ஒட்டியிருக்கும் பக்கிற்கு அடித்துக்கொண்டு கிடந்தது. ஒருநேரக் கஞ்சிக்கு வழியின்றி ஆட்கள் வதங்கிச் சுருண்டனர்.

தொண்டைக்கும் நெஞ்சுக்கூட்டிற்கும் இழுத்துக்கொண்டிருந்த உயிர் கண்ணுக்கு முன்னால் பிரிவதைப் பார்த்துக் குடும்பமே கதறியது. ‘தாது வருஷ பஞ்சத்துல கூட பட்டினிச் சாவு இல்லையே, இப்ப நடக்குதே...’ என்று அழுது துடிக்கிற குரல் ஒவ்வொரு நாளும் கேட்டபடி இருக்கிறது.

*

இருந்த வழிகள் எல்லாம் அடைபட்டாலும் புதிய வழிகளை உருவாக்க தாதனூர் சதா முயற்சி செய்துகொண்டிருந்தது. மதுரைக் காவலும், ரயில் களவும், கன்னம்போட தூரந் தொலைவுக்குப் போவதும் முழுவதுமாக நின்றுவிட்டது. மீண்டும் எப்படியாவது பிழைக்க வேண்டிய கட்டாயத்தில் ஊர் விழி பிதுங்கி நின்றது. ஆஜர் பார்க்கும் போலிஸ்காரனின் ஒரு விசிலுக்கும், இன்னொரு விசிலுக்கும் இடையில் இருக்கும் நேரத்தை தோராயமாகக் கணக்கிட்டு அந்த நேரத்தில் தடம் இல்லாமல் செய்யக்கூடிய களவைப்பற்றி யோசித்தனர். கருது கசக்குவதுதான் மச்சமில்லாத களவில் சிறந்தது. ஆனால் இந்தாண்டு போதிய தண்ணீர் இல்லாததால் வைகை பாசனப் பயிர் எல்லாம் காய்ந்துபோனது. பெரியாற்றுப் பாசனத்தின் ஒரு பகுதி மட்டும்தான் விளைந்துள்ளது. ஆனால் கிடைக்கும் சிறிய பொழுதிற்குள் அந்தப் பகுதிக்குள் போய் கருது கசக்கிவிட்டுத் திரும்பி வரமுடியாது. கசக்கி வந்து சேர முடிகிற எல்லைக்குள் பயிர் விளையாமல் சருகாகிக் கிடக்கிறது. எனவே கருது கசக்குவது இந்தாண்டுக்குக் கைகூடாது. வேறு என்ன வழி என்று யோசித்தபோது திருமங்கலம் சாலையிலும், நாகமலைச் சாலையிலும் வண்டிகளில் மூடை தூக்குவதும், கிடைகளில் போய் ஆடு தூக்குவதும்தான் விசில் சத்தங்களுக்கு இடையில் செய்ய முடிகிற மச்சமில்லாத களவாக இருந்தது. எனவே அதை நோக்கி தாதனூர்க்காரர்களின் கால்கள் புறப்பட்டன.

ஆஜர் பார்க்க வந்தவனின் குதிரைகள் ஆலமரத்தடியைக் கடந்ததும், ஆஜர் கொடுத்தவனின் கால்கள் இருள் அறியாத வேகத்தில் காடதிர ஓடின. மூலைக்கு ஒரு கொத்தாக நான்கு கொத்துகள் பிரிந்துபோகின்றன. குறிப்பிட்ட நேரத்திற்குள் வண்டிகள் வந்தால் மூடையுடனும் வண்டிகள் வரவில்லையென்றால் வெறுங்கையுடனும் அதேவேகத்தில் காடதிர ஓடி மந்தை வந்து சேர்ந்துகொண்டனர். நாகமலை, திருமங்கலம் சாலைகளில் மாட்டு வண்டிக் கொள்ளை அதிகரித்துள்ளதாக போலிசுக்கு தகவல் வந்தபடி இருந்தது. ஆனால் இது தாதனூர்க்காரர்களின் வேலையாக இருக்க வாய்ப்பில்லை என்று போலீஸ் நம்பியது. ஒவ்வொரு ஆஜருக்கும் ஒரு தலை கூட குறையவில்லை. ஊரின் பணிவு போலீசுக்கு சந்தேகப்படும் வாய்ப்பைக் கொடுக்கவில்லை. எனவே இது வேறு திருடர்களின் வேலையாக இருக்கும் என்று போலீஸார் கருதினர்.

சில மாதங்களுக்குப் பிறகு ஆனையூர் வண்டிப்பேட்டை காவல்காரன் தாதனூருக்கு வந்தான். ‘நாகமல பாதையில எந்த வண்டின்னாலும் மூடைய தூக்கிறாங்கப்பா, யாரு என்னான்னு விசாரிச்சு சொல்லுங்க...’ என்று சொல்லிவிட்டுப் போனான். ஊரும் விசாரித்துச் சொல்வதாகச் சொல்லி அவனை அனுப்பி வைத்தது.

இதே காலங்களில் இளம்பட்டறைகள் கிடைக்குப்போய் ஆடுகளைத் தூக்கிக்கொண்டு ஆலமரத்தடிக்குத் திரும்பினர். கிடைக்காரன் கண்டறிய

முடியாதபடி ஆடுகளைத் தூக்கும் நுட்பமான களவுக்காரர்கள் இளம்பட்டறைகளில் நிறைய இருந்தனர். எனவே தினமும் உருப்படிகள் வந்து சேர்ந்தபடி இருந்தன. கிடைத் திருட்டில் மச்சம் பார்க்க முடியாததாலும், கிடைக்காரன் கச்சேரிக்குப் போக நாதியில்லாததாலும் இப்படி ஒரு திருட்டு பற்றி போலிசுக்கு எந்தத் தகவலும் தெரியவில்லை.

கிராமக்காவல் பார்த்துக்கொண்டிருக்கும் தாதனூர்க்காரர்கள் எல்லாம் தங்களால் முடிந்தளவு தானியங்களைக் கொடுத்தனுப் பியபடி இருந்தனர். அவற்றோடு வண்டி மூடைகளும், கிடை ஆடுகளும் சேர்ந்து கொண்டதால் தாதனூருக்கு உயிர் பிழைத்து விடலாம் என்ற நம்பிக்கை வந்தது. ஆனாலும் ஒவ்வொரு இரவிலும் மரணத்தின் விளிம்பில்தான் ஊரின் ஓட்டம் இருந்தது. ஆஜர் பார்க்க வந்தவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக திடீர் திடீரென நேரத்தை மாற்றி வந்தபடி இருந்தனர். அப்பொழுதெல்லாம் சிலரால் ஆஜர் கொடுக்க முடியாமல் போனது.

‘மல மேல படுத்துக்கிடந்தேன். விசில் சத்தம் கேக்கல சாமீ...’

‘கம்மாக்குள்ள கெடந்தேன். சத்தம் கேட்கல ஐய்யா...’

‘கெணத்து மேட்டுல ஒத்தையில கெடந்து அசந்து தூங்கிட்டேன். வர முடியாம போச்சுய்யா...’ என ஆளுக்கொரு காரணத்தைச் சொன்னார்கள். நகரத்துக்குள் களவு நடக்காத நாளாக அது இருக்கும் பட்சத்தில் பத்து இருபது நாள் என்று கச்சேரியில் படுக்கச் சொல்லும் சாதாரண தண்டனையோடு தப்பினர். ஒருசில நாளில் சிலர் மாட்டிக்கொண்டனர். நகரத்திற்குள்ளும், நெடுஞ்சாலை ஓரத்து வீடுகளிலும் எவனாவது கன்னம் போட்டிருந்தாலோ அல்லது ஓட்டைப் பிரித்து இறங்கியிருந்தாலோ அன்றைய தினம் ஆஜராகாதவன் அந்த வழக்கில் உள்ளே போனான். நாட்டுக்கே களவு சொல்லிக் கொடுத்த தாதனூர் இப்பொழுது நாட்டில் நடக்கும் களவுகளுக்கெல்லாம் பொறுப்பேற்றுப் போய்க் கொண்டிருந்தது. ஒற்றை ஆடு தூக்கிவந்தவன் பத்துப்பவுன் நகையைக் கொள்ளையடித்த வழக்கில் ஆறு ஆண்டு தண்டனை அனுபவித்தான்.

*

**பு**திய உத்திகளைக் கண்டறிந்து மீளும் வரை தாதனூரின் உயிரைக் காப்பாற்றியது கிராமக் காவல்காரர்கள்தான். அவர்கள்தான் காவலில் கிடைத்த கூலியையும், அக்கம்பக்கத்தில் களவுக்குப் போயும் தானியங்களை ஊருக்குக் கொண்டுவந்து கொடுத்தபடி இருந்தனர். சட்டம் அமல்படுத்தப்பட்ட துவக்க நாட்களில் போதகர் டேவிட் சாம்ராஜ் ஆங்கனிடம் கண்டிப்பாகச் சொல்லி அனுப்பியதால்தான் ஊர் தப்பிக்க வழி கிடைத்தது. இல்லையென்றால் நிலைமை என்னவாயிருக்கும் என்று யோசித்தே பார்க்கமுடியாது. எல்லோரையும் ரேகை பிடிக்கும் முன் எவ்வளவு அதிகமான ஊரில் காவல் பிடிக்க முடியுமோ அவ்வளவு ஊரிலும் காவல் பிடித்து அங்கேயே போய்க் குடியேறும்படி அவர் மிகக்கண்டிப்பாகச் சொன்னார். ரேகை கொடுக்காதவர்களை கைது செய்வதற்காக வெள்ளைக்காரன் இரவு பகலாக அவுட்போஸ்ட் கட்டிடத்திலே உட்கார்ந்திருந்த அந்தக் காலத்தில்தான் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட ஊர்களில் தாதனூர் காவல் பிடித்தது. கருப்பு கோவிலில் முடி இறக்கிவிட்டு புதுப்புது ஊர்களுக்குக் காவக்காரனாக அவர்கள் போய்

குடியேறியபடி இருந்தனர். முன்பு பெரிய ஊர்களின் காவலை மட்டும் ஏற்றுக்கொண்டவர்கள் இப்பொழுது எந்த அளவுகோலையும் வைத்துக்கொள்ளாமல் கேட்டுவருகின்ற எல்லா ஊரின் காவலையும் ஏற்றுக்கொண்டனர். போலிஸ்காரன் ஊருக்குள் நுழையவிடாமல் காத்துக்கிடந்த பொழுதுதான் புதிய ஊர்களில் எல்லாம் கருது கசக்கி மறுநாள் காவலை ஏற்றபடி இருந்தனர். நகர் காவலுக்கும், களவுக்கும் போனவர்கள் புதிய கிராமங்களின் காவக்காரர்களாக குடும்பத்தோடு போய்க் குடியேறியபடி இருந்தனர். இரவெல்லாம் ஆலமரத்தடியில் உட்கார்ந்து கிழவிகள் கழுவன் கதையைப் பாடியபடி இருந்தனர். கதை கண்ணீரின் மொழியில் பாடப்பட்டது. கழுவன் தூக்கி வீசிய உடும்பு பிடி வழுக்கி அவனைத் தலைகுப்புறத் தள்ளியது. கிழவிகள் அழுத கண்ணீர் ஆலமரத்தடி முழுவதும் ஆறாக ஓடியது.

தனிச்சம்பட்டியைக் காவல் காத்து வந்த பேயன்தான் வராந்தோறும் மற்ற கிராமக் காவல்காரர்களிடம் இருந்து பொருட்களை வாங்கி வந்து ஊரில் சேர்த்தான். அவனும் அவனது மனைவியும் திசைக்கு ஒரு பக்கமாக நாள்தோறும் போய்வந்தபடி இருந்தனர். முன்பு ஊர் பெரியாம்பிள ஒச்சு ‘பாசக்கார பிள்ளடா...’ என்று மெச்சிப் பேசுவது பேயனின் மனைவியைத்தான். தனிச்சம்பட்டியைக் கடந்து களவுக்குப் போகிற கொத்து, போகும்பொழுதோ வரும்பொழுதோ பேயனின் வீட்டில் உட்காரமல் வரமாட்டார்கள். அப்படி நள்ளிரவில் வருகிற மாமன் மச்சான்களுக்கு கூழோ கஞ்சியோ ஏதோ ஒன்றை ஊற்றாமல் அனுப்பமாட்டாள். அந்தப் பக்கம் களவுக்குப் போகிறவர்கள் போகிறபொழுதெ சொல்லி விட்டுப்போவார்கள். பின்னிரவில் தவித்துப்போய் வருகிறவர்களுக்கு ஆளுக்கு ஒரு கும்பா கூழைக் கலக்கித் தயாராக வைத்திருப்பாள். இப்படிப் பலநாள் நடப்பதைப் பார்த்த தனிச்சம்பட்டிக்காரர்கள் ‘எங்கெங்கயோ களவாண்டு வர்ற களவாணிப் பயலுக எல்லாம் ராத்திரிக்கு ராத்தி நம்ம ஊருக்கு வந்து ஒங்க வீட்ல தங்கிட்டுப் போறாங்களாம். தேவையில்லாம ஊருக்குதான் கெட்ட பேரு வருது. இனிமே அப்படியாரும் வரக்கூடாது’ என்று காவக்காரனைக் கூப்பிட்டுக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டனர். அதன்பின் அந்தப்பக்கமாக களவுக்குப் போகும் பொழுது ஒருவன் மட்டும் போய் வீட்டிலே சொல்லிவிட்டு வருவான். களவு முடிந்து பின்னிரவிலே திரும்பிவரும்பொழுது தனிச்சம்பட்டியின் வலதுகோடியில் இருக்கிற தாழம்புதரின் அடியில் பெரும் பானை ஒன்றில் கூழ் காய்ச்சி வைக்கப்பட்டிருக்கும். வந்தவர்கள் ஆளுக்குக் கொஞ்சமாய் கூழைக் குடித்துவிட்டு, கசக்கி வந்த நெல்லில் ஒரு பெரிய முடி கட்டி அங்கே போட்டுவிட்டுப் போவார்கள். மற்றப் பக்கமெல்லாம் களவுக்குப் போனவர்கள் சாக்குநிறைந்து ஆலமரத்தடிக்கு திரும்புவார்கள். ஆனால் தனிச்சம்பட்டி பக்கம் களவுக்குப் போனவர்கள் சாக்கு மட்டுமல்ல, வயிறு நிறைந்தும் ஆலமரத்தடிக்கு திரும்புவார்கள் என்றானது.

இன்றைக்கும் அதே போல்தான். பேயனும் அவன் மனைவியும் தாதனூர்க்காரகள் காவல் பார்க்கிற எல்லா கிராமத்திற்கும் சலிக்காமல் நடந்தபடியே இருக்கின்றனர். நெடுங்குளத்தைக் காவல் காக்கும் கொடிக்கா வகையறா கூட தாதனூருக்கு முடிந்த மட்டும் உதவியது. அங்கு அங்கு கூட்டுச் சேர்ந்து சிறு களவுக்கும் போனார்கள். ஊர்தோன்றிய காலம் முதல் பஞ்ச காலத்திலும் அழிவு காலத்திலும் கிராம காவக்காரர்கள்

எல்லோரையும் ஊர்தான் காப்பாற்றி வந்தது. ஆனால் இப்பொழுது முதன்முறையாக ஊரை அழிவிலிருந்து கிராமக் காவக்காரர்கள் காப்பாற்றி வருகின்றனர். கிராமத்து தொம்பரைகளில் குவிந்த நெல்மணிகள் தாதனூரின் வயிற்றுப்பசியை சிறுகச் சிறுகப் போக்கின. களத்துமேட்டில் காவல் கூலியாய் கிடைக்கும் செய்யிக்கு ரெண்டு கட்டு நெல்லுக் கருதும், முக்குருணி நெல்லும், அறுபது மரக்காவுக்கு ஒருகை எனப் போடும் உரக்கையும் சிறுகச்சிறுக ஊர்வந்து சேர்ந்தன.

இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஊருக்குள் கொண்டுவரும் வேலையை பேயனின் மனைவியும் இன்னும் இரண்டு மூன்று பெண்களும்தான் செய்தனர். ஆண்கள் யாரும் தாதனூருக்குள் வந்துபோக முடியவில்லை. அப்படி வந்தால் அவுட்போஸ்ட் போலிஸ்காரன் கேட்கும் நூறு கேள்விகளில் ஒன்றிலாவது மாட்டிக்கொண்டு அவனும் அவனைத் தேடி வந்த குடும்பத்தில் ஒருவனும் உள்ளே போகவேண்டியதுதான்.

*

**போ**தகர் இல்லையென்றால் ஊர் இன்னும் என்னென்னமோ கொடுமைகளை எல்லாம் அனுபவிக்க வேண்டி இருந்திருக்கும். ‘கழுவாயி பெத்த புள்ளதாண்டி நமக்கெல்லாம் தெய்வம்’ என்று ஊர் வாயாரப் புகழ்ந்து வணங்கியது. அவர் ஊருக்காக செய்ததில் பாதி விஷயங்கள் கூட ஊருக்குத் தெரியாது. அவ்வப்பொழுது தேவையானதை மட்டும் ஆங்கனிடம் சொல்லி அனுப்புவார். அதுதான் நாள் ஆக ஆக மந்திரச்சொல் போல ஊரைக் கட்டுப் படுத்தியது. போதகரிடம் ஒரு வார்த்தை கேட்காமல் எடுத்த முடிவுக்காக ஊர் படாத அவஸ்தைகளையெல்லாம் பட்டுக் கொண்டிருக்கிறது. ஊரின் வலியையும் வேதனையையும் உணருகிற ஒரே மனிதனாக அவர் மட்டுமே இருந்தார். ஆறுதலான அவரின் வார்த்தைகள் ஊருக்கு அளவு கடந்த நம்பிக்கையைக் கொடுத்தது. அவரை விட்டால் ஊருக்கு வேறு நாதியில்லை. எனவே ஒவ்வொரு விஷயத்திற்கும் அவரை அணுகியது. சட்டம் அமல் படுத்தப்பட்டபின் தன்னை அடிக்கடி சந்திக்க வருவதைக் குறைத்துக்கொள்ளும்படி கூறினார். ஊரில் உள்ள அனைவரின் ரேகையையும் போலீஸ்காரன் பதிவுசெய்தபின் ஊருக்கு அவர் சொல்லவேண்டிய விஷயங்கள் மிகக்குறைவாகத்தான் இருந்தன. தனது கண் முன்னால் தனது தாயாரின் ஊர் படும்வேதனையைப் பார்க்கமுடியாமல் துடித்தார். பெரும் மௌனம் ஒவ்வொரு நாளும் அவரை விழுங்கியபடி இருந்தது. மனைவி மேரியுடனோ மகன் ஜோசப்புடனோ கூட அவரது பேச்சு குறைந்துவிட்டது. அவரது செயல்களுக்கு அர்த்தம் புரியாமல் குடும்பம் தவித்தது. ஏதாவது சொல்லி வழிகாட்ட மாட்டாரா என்று தாதனூர் ஏங்கித்தவித்தது.

போதகருக்கு அடுத்தபடியாக ஊர் நம்பியிருந்த இன்னொரு மனிதர் வக்கீல் குணசீலன். தாதனூருக்காக எத்தனையோ வழக்குகளை நடத்தியவர். அவர் தந்தை காலத்திலிருந்து இரண்டு தலைமுறையாக ஊர் நம்பியிருந்த குடும்பம். இப்பொழுது அவரிடமும் ஊருக்கு வேலையில்லை. ரேகைச் சட்டத்தில் ஜாமீன் எடுக்கவோ, வழக்காடவோ வாய்ப்பில்லை என அவர் தெரிவித்தபின் கடந்த ஒரு வருடமாக ஊரிலிருந்து யாரும் அவரிடம் போகவில்லை. டேவிட் சாம்ராஜ் சொன்னதால் தெத்துக்கூனனுக்காக மெட்ராஸ் ஹை கோர்ட்டில் அப்பீல்

செய்து திரும்பியதுதான் குணசீலன் நடத்திய கடைசி வழக்கு. அது கூட ஊருக்குத் தெரியாது. சொல்லவேண்டாம் என போதகர் சொன்னதால் வக்கீல் சொல்லவில்லை. அதன்பின் ஊர் சொல்லிமாளாத் துயரங்களை அனுபவித்தது. அந்தக் கொடிய காலத்தில் அவரை நினைத்துப்பார்க்க ஒன்றுமில்லை என்றானது.

ஒருநாள் பகல்பொழுதில் மலையுச்சியில் சிதைந்துகிடந்த சமணக்கோவிலின் மேல் உட்கார்ந்து ஐந்தாறு பேர் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு சிறுவயதில் நேமிநாத செட்டியார் சொன்ன சமணக் கதைகளைப் பற்றித் திரும்பியது. ‘அந்தப் பெரிய மனுஷன் நம்மக் கூப்பிட்டு ஆசை ஆசையாய் சொன்ன கதைகளை எல்லாம் நாம் என்னமாய் கேலிசெய்தோம்’ என்று ஆங்கன் ஆதங்கத்தோடு சொன்னான். ‘அந்த ஆள் சொன்னது போல மலையுச்சி கழுமரத்தில் கிழிப்பட்டுத் தொங்கிய உடல் போலத்தான் இன்று நம் ஊர் கிடக்கிறது’ என்றான் பூச்சி. நேமிநாத செட்டியாரை நன்றியோடு நினைத்துப்பார்த்துப் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு அவரது மகன் குணசீலனைப்பற்றித் திரும்பியது.

மறுநாள் காலையில் ஆங்கன், கழுவன், பூச்சி மூவரும் புறப்பட்டு வடக்காவணி மூலவீதியில் இருந்த குணசீலனின் வீட்டிற்குப் போனார்கள். மதுரையைக் கண்கொண்டு பார்க்கமுடியாத வெறுப்பு அவர்கள் மூவருக்குள்ளும் ஏறியிருந்தது. நகரம் விழிப்படைவதற்குள் வேக வேகமாக நடந்துபோய் அவர் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்த குணசீலன் ஆச்சரியத்தோடு பார்த்தபடி நின்றார். கணநேரத் தயக்கத்திற்குப்பின்தான் அவர்களை உள்ளே கூப்பிட்டார். மூவரும் வீட்டிற்குள் வந்து உட்கார்ந்தனர். ஊரின் நிலைமை முழுவதும் அவருக்கு நன்றாகத் தெரிந்ததால் ‘எதை விசாரிப்பது?’ என்ற குழப்பத்தில் அவர் இருந்தார். ‘புதிதாக ஏதாவது வழக்கைக் கொண்டுவந்திருக்கலாம். அதை ஏற்று நடத்தலாம்’ என்று உள் மனம் சொல்லியபடி இருந்தது. யாரும் பேச்சைத் துவக்காமலே இருந்தனர். அவரின் கண்கள் அனுதாபத்தை அள்ளிக்கொட்டியபடி இருந்தது. ஆனால் அவர்கள் மூவரின் கண்களுக்குள்ளும் ஒரு சிறு சந்தோஷம் ஊறி வந்தது.

‘ஒண்ணுமில்ல, பாத்துட்டு போகலாம்னு வந்தோம், இத வாங்கிக் கங்க மாடக்குளம் செட்டியார் கடையில ஊருக்கு கம்பு கேப்பைய கொஞ்சங் கொஞ்சமா கொடுக்கச் சொல்லி ஏற்பாடு பண்ணுங்க’ எனச் சொல்லி மடித்துக் கட்டப்பட்ட சாக்குப்பை ஒன்றைக் கொடுத்துவிட்டு எழுந்தனர். வாசற்படியை விட்டு இறங்கும் வரைதான் நிதானம் இருந்தது. வீதியில் கால் வைத்தவுடன் வெறுப்பின் உச்சத்தில் அவர்களது பாதங்கள் மதுரையை விட்டு அகன்று வெளியேறின.

மலையுச்சி சமணக் கோவிலில் தென்மூலையில் புதைக்கப்பட்டிருந்த, தெப்பம்பட்டி தில்லைவனம் பிள்ளை வீட்டில் எடுக்கப்பட்டபெட்டி திறந்துகூடப் பார்க்கப்படாமல் அப்படியே கொண்டுபோய் அவரிடம் சேர்க்கப்பட்டது.

*

# 110

**பொழுது நடுநிசியானது. ரெட்டிய கெடுத்த வெள்ளி ஏறி மின்னிக்** கொண்டிருந்தது. ஆந்தைகளின் அலறல் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் தலைக்கோலி கூவும். இரவின் இறுகிய பிடிக்குள் இருந்த மந்தையில் போலிஸ் சார்ஜென்ட் ஆறு பேர் குதிரைகளில் வந்து இறங்கினர். அவுட் போஸ்ட்டுக்குள் இருந்த லாந்தர் விளக்கை எடுத்து ஒளியேற்றி மந்தைக்கு நடுவில் இருந்த குத்துக்கல்லின் மேல் கொண்டுவந்து வைத்தனர். விளக்கின் ஒளி மந்தை முழுவதும் மங்கிப்பரவியது. விசில் சத்தம் இருளைக் கிழித்து சுற்றுப்பரப்பு முழுவதும் எதிரொலித்தது. மந்தையில் படுத்துக்கிடந்த பெரியாம்பிளைகள் ‘வந்துட்டாங்கடா...வெளக்கெண்ணய்க...’ என்று முனங்கியபடி எழுந்து விளக்கொளியை நோக்கி வந்தனர். ஆலமரத்தடியில் இருந்தும், கண்மாய்க்குள் இருந்தும், மலையுச்சியிலிருந்து பழைய ஊர் பக்கமிருந்தும் விசில் சத்தம் கேட்டவுடன் கால்கள் எரிச்சலும் கோபமும் கொண்டு ஓடிவந்தபடி இருந்தன. சின்னான் நடுகல்லில் இருந்து ஊரின் இரத்தம் மஞ்சள் ஏறிய நிறத்தோடு மந்தை முழுவதும் தேங்கிநின்றது. ஓடி வந்தவர்கள் ஒளி வட்டத்திற்குள் வந்து வரிசையாக நின்றபடி இருந்தனர். வெகுதூரத்தில் இருந்து ஓடிவந்தவர்களுக்கு மேமூச்சும் கீமூச்சும் வாங்கியது. கடைசி நம்பரைச் சொல்லி முடிப்பதற்குள் வந்தால்தான் உண்டு. முடித்துவிட்டால் அவ்வளவுதான். அவன் முன்னால் எத்தனை முறை கும்பிட்டு விழுந்தாலும் ஏற்கமாட்டாள். ஒரு வாரமோ பத்து நாளோ இருபது நாளோ கச்சேரியில் படுக்கச் சொல்லிவிட்டுப் போயிவிடுவான். அதன்பின் பொழுதானால் கச்சேரிக்குப்போய் படித்துவிட்டு விடிந்தபிறகு எழுந்துவரவேண்டும். ஆடு தூக்கவோ வண்டிக்கோ எங்கும் போகமுடியாது. அந்தப் பத்து இருபது நாளும் குடும்பம் கஞ்சிக்கு வழியின்றிப் பரிதவித்துக்கிடக்கும். எனவே விசில் சத்தம் கேட்டதும் ஆட்கள் வரும் வேகத்தை வகை சொல்ல முடியாது.

போலிஸ் சார்ஜென்ட் குதிரையில் இருந்து இறங்கி, எதிரில் வரிசையாக நிற்பவர்களில் அவனுக்குத் தோணுகிறவனை கை நீட்டிக் கூப்பிட்டான். கூப்பிட்டவனுக்கு ஏன் கூப்பிட்டான் என்பது தெரியும். எனவே அவன் வரிசையில் இருந்து முன் நகர்ந்து வந்து விளக்கொளிக்குப் பக்கத்தில் குனிந்து கைகள் இரண்டாலும் கால் தண்டைப் பிடித்தபடி இருந்தான். அவன் முதுகின்மேல் கொண்டுவந்த நோட்டை வைத்து விரித்தான் சார்ஜென்ட். பழுப்புநிறத் தாள்களில் வரிசையாக எழுதப்பட்டிருந்தன பெயர்கள். சார்ஜென்ட் உரத்த குரலில் படிக்கத் துவங்கினான்.

‘நம்பர் 68, கழுவன்’

‘ஆஜோர்’

‘நம்பர் 43, பேயாண்டி’

‘ஆசர்’

‘நம்பர் 137, மொக்கை’

‘ஆஜரோ...ய்’

‘நம்பர் 91, ஆண்டி’

‘ஆசோ...ர்’

‘நம்பர் 210, கட்டையன்’

‘ஆசூ...ர்’

‘நம்பர் 184, சின்னையன்’

‘ஆசரு’

‘நம்பர் 33, ஆங்கன்’

‘ஆ...சூர்’

‘நவம்பர் 71, விருமன்’

‘ஆ...சூர்’

கையை வைத்து அமுக்குவதும் தட்டுவதும் நோட்டுமேல் அழுத்துவதுமாக ஏதேதோ செய்து எல்லாப் பெயர்களையும் படித்துமுடித்தான் சார்ஜென்ட். அதுவரை குனிந்தவன் குனிந்தபடியே இருந்தான். ஆஜர் பார்த்து முடித்தவுடன் குதிரைகள் பென்னிங்டன் ரோட்டிலே புறப்பட்டன. விளக்கு அணைக்கப்பட்டு ஆஜர் முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டது. வயதானவர்கள் மந்தையை நோக்கி நடந்தனர். மற்றவர்களின் கால்கள் மின்னல் வேகத்திலே புறப்பட்டன. அடுத்த ஆஜருக்குள் நாளைய கஞ்சிக்கு ஏற்பாடு செய்து திரும்பவேண்டும்.

கழுவனின் கொத்து நாகமலைக் கணவாய் பக்கமாக ஓடியது. மதுரையில் இருந்து மேற்கே போகும் வண்டிப்பாதையும், திண்டுக்கல்லில் இருந்து விருதுபட்டிற்கு போகும் வண்டிப்பாதையும் அந்த இடத்தில் சந்தித்து ஊடறுகின்றன. அங்கே போனால் ஒரு பொழுதுக்குள் எப்படியும் வண்டிகளைப் பார்த்துவிடலாம். எனவே நம்பகமான இடமாக அது இருந்தது. ஆண்டி கொத்து பழைய ஊர் கரட்டுப்பக்கமாக இறங்கி கூத்தியார்குண்டு கண்மாய்க்கரைக்கு ஓடியது. மதுரையில் இருந்து

தெற்கே போகும் பிரதான வண்டிப்பாதை இதுதான் என்பதால் ஒரு பொழுதுக்குள் வண்டிகளைப் பார்த்துவிட முடியும்.

எதுவானாலும் அடுத்த விசில் சத்தத்திற்குள் ஊர் வந்துசேர வேண்டும். காதுகளைத் தீட்டிவைத்து பாதை நெடுக இருபுறமும் ஓடினர். வண்டிச்சக்கரங்களின் ஓசை கேட்டதும் தூண்டிலைப்போல் இருள் அவர்கள் பாதையைவிட்டு உள்ளே இழுத்துக்கொண்டது. அவசரமானவனும் துணிந்தவனும் மட்டுமே நள்ளிரவுக்குப் பின்பும் வண்டிகளை ஓட்டிவருவான். எளிதில் வண்டிகளை அணுகிவிட முடியாது. அதன்போக்கில் கால் பர்லாங்கு தூரமாவது போயாக வேண்டும். மாடுகளும் சரக்கும் வண்டிக்காரனும் எப்படி? என்று கணித்த பின்புதான் இருளைவிட்டு வெளிவரமுடியும்.

மற்றவர்களைப்போல வண்டிக்காரனையும் உடன் வந்தவர்களையும் அடித்துப் போட்டுவிட்டு மூடைகளைத் தூக்கிப்போகும் முறை தாதனூர்க்காரர்களிடம் இல்லை. அவர்கள் நன்கு கணித்து கடைசி வண்டியை நெருங்குவார்கள். ஒருவன் பின்புறக் கட்டையைப் பிடித்து அமுக்கிக்கொண்டு நடந்து வருவான். உடன்வந்தவர்கள் கயிறை அறுத்து ஒவ்வொரு மூட்டையாக வண்டியை விட்டுத் தூக்குவார்கள். மூடைகளைத் தூக்கத் தூக்க பாரம் முன்னால் அமுக்கிவிடாமல் பின்புறக் கட்டையைப் பிடித்துத் தொங்கியபடி இருப்பான். ஆளுக்கு ஒரு மூட்டையெனத் தூக்கியபின்பு தொங்கிக்கொண்டிருந்தவன் கட்டையை விட்டு கையை எடுப்பான். வண்டி முன்புறமாக ஒரு அமுக்கு அமுக்கும். ‘மூடைய தூக்கிட்டாங்கடா...’ என்று அதன் பிறகுதான் வண்டிக்காரனால் உணரமுடியும். ஆனால் அதற்குள் மூடைகள் இருளுக்குள் மறைந்து எங்கே போய்ச் சேர்ந்துவிடும்.

கழுவன் கொத்து ஆளுக்கு ஒரு மூடையோடு ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தது. ஆண்டி கொத்தோ குறிப்பிட்ட நேரம் வரை வண்டிகள் ஏதும் வராததால் வெறும் கையோடு ஊர் திரும்பியது.

கொண்டுவந்த மூடைகளில் இரண்டு மூடை பருப்பு இருந்தது. ஒரு மூடை கருப்பட்டி. ஒரு மூடையில் மட்டும்தான் சோளம் இருந்தது. பருப்பையும், கருப்பட்டியையும் வைத்து என்ன செய்வது? எல்லாம் வீண்தான். நாளை பகலில் மாடக்குளம் செட்டியாரிடம் போய்க்கொடுத்து மாத்து வாங்கிவரவேண்டும். அவர் அடிமாட்டு விலைக்கு வாங்கி, போனால் போகுது என்று எதையாவது கொடுத்தனுப்புவார். இந்தக் காலத்தில் அவரை விட்டால் நம்பித்தொலைக்க வேறு யாரும் இல்லை. எனவே வரும் சரக்கெல்லாம் அவருக்குத்தான் போகிறது. ‘ஒருநா வெச்சிக்கிருவோம் அவன...’ என்று அவர் மீது ஊர் கண் வைத்தபடி இருக்கிறது.

**இ**ளம்பட்டறைகள் ஆளுக்கு ஒரு திசையில் கிடைகளை நோக்கிப் பாய்ந்து ஓடின. கூனாண்டி கொத்தில் நாலு பேரும், மொக்கை கொத்தில் நாலு பேருமாக ஓடினர். கட்டையன் மட்டும் தன்னந்தனியாகத்தான் கிடை நோக்கிப் போவான். ‘தனியாளர் களவுக்கு போகக்கூடாதப்பா...கெழவி வாக்கு...’ என்று மற்றவர்கள் சொன்னால் ‘வாக்கப் பாத்துத்தான் ஊர வகுந்துபோட்டு வச்சிருக்காங்கெ... போங்கடா வேலையப் பாத்துக்கிட்டு’ என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான். ஆடு தூக்குவதில்

கட்டையனுடைய சாமர்த்தியம் இதுவரை வேறு யாருக்கும் வாய்க்கவில்லை. நான்கு ஆட்கள் போய் தலைக்கு ஒரு ஆட்டைத் தூக்கி வருவார்கள். சில நேரம் ஒன்றும் கிடைக்காமல் கையை வீசிக்கொண்டும் வருவார்கள். ஆனால் கட்டையன் அப்படியல்ல. ஒருநாள் கூட ஆடு தூக்காமல் மரத்தடிக்குத் திரும்பியதில்லை. ஒத்தையாளாக நான்கு ஆட்டைக்கூட தூக்கிவருவான். வலது தோள்பட்டையில் இரண்டு ஆட்டுடைய முன்னத்திக் கால்களையும், இடது தோள்பட்டையில் ரெண்டு ஆட்டுடைய முன்னத்திக்கால்களையும் போட்டு இழுத்துப் பிடித்துக்கொண்டு அவன் வரும் வேகத்திற்கு யாராலும் மறித்து நின்று வாங்கமுடியாது.

இரண்டு மாதத்திற்கு முன்பு ஊரே பட்டினியால் செத்துக்கொண்டிருந்தபோது, ஒரு களவு கூட உருப்படியாக வாய்க்கவில்லை. போனவர்கள் எல்லாம் வெறுங்கையோடு விசில் சத்தத்திற்கு ஓடிவந்துகொண்டிருந்தனர். மூன்று நான்கு நாட்களாக கட்டையன் காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையாய் கிடந்தான். ‘ஒத்தையில களவுக்கு போகாதடா...கெழவி ஏத்துக்கமாட்டான்னு சொன்னா கோக்குறானா. விலாவுல வெடிச்சவன்...’ என்று ஆளாளுக்குத் திட்டிக்கொண்டிருந்தனர். அன்றைக்கு காய்ச்சல் கொஞ்சம் சரியானதால் முன்னிரவில் முதல் ஆஜர் பார்த்தவுடன் தனியாளாகப் புறப்பட்டான். ‘ஏலே...ரவைக்கு நடு ஆசூர் பாத்தப்பெறவு போடா...இப்ப போயி சிக்கிக்காத...’ என்று சொல்லிப்பார்த்தனர். ஆனால் கேட்காமல் போய்விட்டான். போனவன் நீண்ட நேரமாக வரவில்லை. இரண்டாவது ஆஜர் பார்க்க சார்ஜென்ட் வந்து விசில் சத்தம் கொடுத்தபொழுது எங்கிருந்தோ இருட்டைக் கிழித்துக் கொண்டு வந்து ஆஜர் கொடுத்தான்.

கட்டையன் போனால் வெறுங்கையோடு திரும்பமாட்டான் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அவன் சும்மா வந்தது ஏமாற்றத்தைத் தந்தது. ஆனாலும் ஆஜருக்கு வந்துவிட்டதால் நிம்மதியானார்கள். ஆஜர் பார்த்துவிட்டு சார்ஜென்ட் போனவுடன் ‘ஏங் கூட ரெண்டு பேரு வாங்கப்பா...’ என்று சொல்லி பூச்சியையும் தெத்தனையும் கூப்பிட்டுக் கொண்டான். ‘சரி புத்தி வந்திருச்சு போல்ருக்கு’ என்று மற்றவர்கள் நினைத்தனர். மூன்று பேரும் படுவேகமாக வடக்கே ஓடினர். வைகை ஆற்றைக் கடந்ததும் கொஞ்சதூரத்தில் ஒரு கிடை கிடந்தது. கிடைக்காரர்கள் ரெண்டு பேர் மட்டும்தான் இருந்தனர். ஒருவன் கரையின்மேல் தூங்கிக் கொண்டிருந்தான். இன்னொருவன் அரைத்தூக்கத்தில் கிடையைச் சுற்றி நடந்துக் கொண்டிருந்தான். வந்த வேகத்தில் மூன்று பேரும் சுற்றிக் கொண்டிருந்தவனை வளைத்து நின்றனர். முன்னால் நின்ற தெத்தனின் மீது முட்டி தூக்கம் களைந்தவன் ‘அய்யோ... அம்மா...’ என்று கத்த ஆரம்பிக்கும் முன் பூச்சி அவன் கழுத்தைப் பிடித்தான். ‘கத்தாம வந்து உக்காரு’ என்று சொல்லி அவன் இடுப்பில் இருந்த ஆயுதத்தை வாங்கிக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தவனின் தலைமாட்டில் வந்து அவனை உட்கார வைத்தனர். தெத்தன் அவர்களுக்குப் பின்னால் கம்போடு நின்றுகொண்டான். இடது மூலையில் இருந்த ஒத்தை ஆட்டைபத்திக் கொண்டு ஓட்டினான் கட்டையன். மந்தை முழுக்க அந்த ஆட்டுக்குப்பின்னால் கத்திக் கொண்டே நடக்க ஆரம்பித்தது. மொத்தமாக ஆடு கத்தியவுடன் படுத்துக்கிடந்தவன் முழிப்பு தட்டி ‘எடது மூலைக்கு மாத்தி அமத்து’ என்று சொல்லியபடி

திரும்பிப் படுத்தான். கிடையின் அளவைப் பொறுத்து வயக்காட்டுக்குள் இரண்டு முறையோ, மூன்று முறையோ மாத்தி அமர்த்துவார்கள். அப்படி அது நடக்கிறது என அவன் நினைத்திருப்பான். கிடை நகர்ந்து வயக்காட்டைத் தாண்டிப் போவதைப் பார்த்தபடி இருந்தான் தலைமாட்டில் உட்கார்ந்திருந்தவன்.

பாதிக் கிடையை பத்தும் நோக்கோடுதான் கட்டையன் வந்தது. ஆனால் மொத்தக்கிடையும் அவன் ஓட்டிச் சென்ற ஆட்டுக்குப்பின்னால் வந்து கொண்டிருந்தது. ‘ஏலேய்... பாவம்டா...’ என்று சொல்லி பூச்சியை விட்டு மடக்கச் சொன்னான். பூச்சி கிடைக்காரனிடமிருந்து பறித்துக் கொண்ட கம்பை வைத்து பாதி கிடையை அடித்து மடக்கினான். ஆனால் அது எதுவும் நிற்பதுபோல் இல்லை. பின்னால் ஓடிவந்து கொண்டேயிருந்தது. ஒரு கட்டத்தில் கட்டையன் படுவேகமாக முன்னேறி ஆட்டை விரட்டிச் சென்றான். அதற்கு பின்னால் கிடை முழுக்க வரிசையாக வந்து கொண்டே இருந்தது. பூச்சி ஓடவும் அடிக்கவும், ஓடவும் அடிக்கவுமாக அடித்து அடித்து மடக்கினான். எதுவும் திரும்புவது போல இல்லை. நீண்ட நேரங்கழித்து தெத்தன் குறுக்கே விழுந்து வைகைக் கரையில் வந்து சேர்ந்தான். ஆடுகள் வரிசையாக வந்துக்கொண்டு இருந்தன. அதிலும் ஒரு மணி போட்ட கெடா எத்தன முற அடிச்சு மடக்குனாலும் ‘சொடக்கா... சொடக்கான்னு’ வந்துக் கொண்டேதான் இருந்தது. ‘தாயோலி இன்னைக்கு நம்பள பூராம் மாட்டிவுடத்தான் போகுது’ என்று சொல்லி பூச்சியும் தெத்தனும், வைகைக் கரையில் வைத்து மாறி மாறி அடித்து மடக்கினர். அதன் பிறகுதான் பின்னால் வந்த பாதி நின்றது.

ஒட்டிப்போன ஆடுகளை அமணமலை மேலே விட்டுவிட்டு மூன்றாவது ஆஜருக்கு வந்து சேர்ந்தான் கட்டையன். அவனுக்கு முன்னால் மந்தைக்கு வந்து பூச்சியும் தெத்தனும் நின்றுக் கொண்டிருந்தனர்.

வயித்துப்பாட்டுக்கு வழியில்லாமல் திணறிக் கொண்டிருந்த ஊருக்கு கட்டையன் பத்திக்கொண்டு வந்த உருப்படிகள் ஒரு வாரத்திற்குப் போதும். அதன்பிறகு கட்டையன் தனியாளாய் களவுக்கு போவது பற்றி யாரும் எதுவும் சொல்வதில்லை. இன்றைக்கும் அப்படித்தான் கட்டையன் தனியாளாய் தென்பக்கமாக போனான். கூனாண்டி கொத்தும், மொக்கை கொத்தும் வடபக்கமாகப் போனது.

எவ்வளவு வேகமாக ஓடமுடியுமோ, அவ்வளவு வேகமாக ஓடி மொக்கை கொத்து ஒரு ஆட்டுத் தொழுவத்தில் போய் நின்றது. கூனாண்டிக் கொத்து ஒரு கிடையில் போய் நின்றது. கட்டையன் போய் ஒரு பள்ளிவாசலின் பின்நின்றான். வாசலில் கட்டில் போட்டு மறித்துப் படுத்துக் கிடந்தான் ஒருவன். மொக்கை கட்டிலுக்கடியில் படுத்து ஊர்ந்து கொண்டே தொழுவுக்குள் போனான். பக்குவமான ஆள் போனால்தான் ஆடு பேசாமல் இருக்கும். இல்லையென்றால் ஆடுகள் எல்லாம் கத்தி எழுந்துவிடும். மொக்கை ஆட்டோடு ஆடாக உள்ளே கிடந்தான். படுத்துக்கிடக்கும் ஆட்டைத் தூக்கமாட்டார்கள். ‘சத்துகெட்ட பய ஆடுதான்டா படுத்துக் கெடக்கும்’ எனச் சொல்லி நிற்கிற ஆட்டை நோக்கி மொக்கை போனான். செம்மறி கத்தாது. வெள்ளாடு கத்தும். செம்மறியாகப் பார்த்து உள்ளே இருந்தபடி தூக்கிக் கொடுத்தான். வெளியே இருந்தவர்கள் ஒவ்வொன்றாய் வாங்கினார்கள். கட்டில்போட்டு படுத்துக் கிடந்தவனின் தூக்கம் கெடுக்காமல் ஆடுகளை ஆலமரத்தடிக்குக் கொண்டுவந்து

சேர்த்தது மொக்கை கொத்து.

கூனாண்டி கொத்து கிடை நோக்கிப் போனது. கிடைக்காரர்கள் ஆறு பேர் இரண்டிரண்டு பேராக மூன்று முழிப்பிலே விடிய வைப்பதாக பேசிப் படுத்திருந்தனர். சுற்றிலும் வெள்ளாமை இருந்ததால் ஆடுகள் வெள்ளாமையில் இறங்கி விடக்கூடாது என்பதற்காக கிடைக்காரர்கள் மிகுந்த சுதாரிப்போடு இருந்தனர். கூனாண்டி கொத்து வெள்ளாமைக்குள் மறைந்து உட்கார்ந்திருந்தது. கிடைக்காரன்கள் ரெண்டு பேரும் சுதாரிப்பாக சுற்றி வந்துக் கொண்டிருந்தனர். ஒருவன் போய் இன்னொருவன் வருகிற அந்த இடைப்பட்ட நேரத்திற்குள் கிடைக்குள் இருக்கிற ஆட்டைத் தூக்கி வரவேண்டும். அதுவும் ஓரத்தில் முழுவதும் வெள்ளாடுகளாகப் படுத்துக்கிடந்தன. நேரம் ஆகிக் கொண்டேயிருந்தது. இனியும் தாமதிக்க முடியாது என யோசித்து படுத்தபடி சரசரவென உள்ளே நுழைந்தான் கூனாண்டி. வேத்து ஆளைப் பார்த்ததும் கிடை ஆடு க்கூ...க்கூ... என தும்மும் அந்தச் சத்தம் கிடைக்காரனை சுதாரிக்கச் செய்யும்முன் போனவுடன் தும்மிய வெள்ளாட்டின் சங்கை இரண்டு விரல்களால் விசுக்கென்று சொடக்குப் போட்டது போல் திருகினான். தொண்டை நெரிபட்டு அத்தோடு அதன்சத்தம் நின்றது. சரியாக நெரிபடவில்லையென்றால் ஆச்சு... ஆச்சு... என்று கத்திக்கொண்டே கிடக்கும். சிலநேரம் அப்படி ஆவதும் உண்டு. ஆனால் கூனாண்டி கண்ணிமைக்கும் நேரத்திற்குள் தொண்டையை நெரித்து ஆட்டைத் தூக்கிக் கொண்டு வெள்ளாமைக்குள் வந்துவிட்டான். மூன்றுமுறை அதேபோல போய் மூன்று ஆட்டைத் தூக்கினான். நான்காவது முறை தூக்கும்பொழுது கிடைக்காரன் பார்த்து சத்தம் போட்டுவிட்டான். தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் கையில் இருந்த ஆயுதத்தை எடுத்துக் கொண்டு விரட்ட ஆரம்பித்தனர். வெள்ளாமைக்குள் இருந்து கற்கள் சர்...சர்..ரென வந்து விழுந்து கிடையைக் கலக்கியது. எழுந்தவர்கள் எல்லாம் கிடையோடு கிடையாக உள்ளுக்குள் குனிந்து உட்கார்ந்து கொண்டனர். கூனாண்டி கொத்து மூன்று வெள்ளாட்டோடு மட்டும் திரும்பியது.

தனியாளாகப் போன கட்டையன் நேராக விழுஞ்சேரி பள்ளிவாசலுக்குப் போனான். நோன்புக்காக ஏகப்பட்ட கெடாய்கள் அல்லா கோயிலுக்குள் நின்று கொண்டிருந்தன. கோயிலுக்குள் ஒரு விளக்கும் வெளியில் ஒரு விளக்கும் எரிந்துக் கொண்டிருந்தது. வெளித்திண்ணயில் நான்கைந்து பேர் படுத்துக்கிடந்தனர். சுற்றுவேலியைத் தாண்டி உள்ளே குதித்தவன் கிடைகளுக்கு நடுவிலே ஆடெனப் போய் உட்கார்ந்து கொண்டான். தனது இனத்தைச் சேர்ந்த ஒரு உயிர் வந்து உட்கார்ந்திருப்பதைப் போலத்தான் அவை நின்று கொண்டிருந்தன. அதற்கென்றே வைத்துள்ள பெரிய சாக்கை நடுவில் விரித்தான்.

நடுத்தரமாகப் பிடித்து சங்கை நெரித்து தலையையும் காலையும் சேர்த்துக்கட்டி சாக்கின் நடுவிலே போட்டான். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கத்தியபடி நெளிந்து அசைந்தது. அதையெல்லாம் பார்க்க அங்கு யாரும் இருப்பதுபோல் தெரியவில்லை. சாக்குமூடையை பெரும் கட்டாகக்கட்டி வேலியைத்தாண்டி வெளியில் தூக்கிப் போட்டான். அவற்றின் குரல்களை பறித்த விரல்களை ஊன்றி வேலியை விட்டு வெளியில் தாண்டினான். சாக்குமூடையைத் தூக்கி தலையில் வைத்தபடி

பள்ளிவாசலுக்கு முன்னால் இருந்த தெருவழியாக நடந்தான். வெளித்திண்ணையில் படுத்துக்கிடந்த ஒருவன் தற்செயலாக எழுந்து உட்கார்ந்தான். எதிரில் பெரும் மூட்டையோடு ஒருவன் நடந்துவருவதை பார்த்து 'என்னப்பா... என்னத்த கொண்டுபோற? என்று கேட்டான்.

'திருப்பரங்குன்றம் பொய்கையில தாமர எல பிடிங்கிட்டு போறனப்பா...' என்று சொல்லியபடி நடந்தான். அதற்கு ஏற்றாற் போல மூட்டைக்குள் இருந்த ஆடுகள் பெய்த மூத்திரம் தலை முழுக்க, மேலெல்லாம் வழிந்தபடி இருந்தது. கொட்டிய நீரில் இருந்துதான் அவன் கற்பனைக்குள் தாமரை இலை படர்ந்தது.

*

**சா**ட்டைக்கம்பு வெள்ளி விழுவதற்குக் கொஞ்சம் முன்பாக ஆறுபேரும் பென்னிங்டன் ரோட்டின் வழியாக குதிரையில் வந்து இறங்கினர். ஏற்றப்பட்ட லாந்தர் விளக்கு மீண்டும் மந்தையில் இருந்து குத்துக்கல்லின் மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது. விசில் சத்தம் இருளைக் கலைத்தது.

பறவைகளின் ஓசை அங்குமிங்குமாகக் கேட்க ஆரம்பித்தது. திசைக்கு ஒன்றாய் ஓடிய எல்லோரும் அலுத்துச்சலித்து வந்து சேர்ந்தனர். தூக்கி வந்த மூடையில் மூணு மூடை பிரயோஜனமில்லையே என்ற எரிச்சலோடு கழுவன் கொத்து வந்து நின்றது. 'பூராம் லொங்கோட்டமாகப் போச்சே' என்று புலம்பினார்கள் ஆண்டி கொத்திலே போனவர்கள். கோமியமும் புழுக்கையும் நாத்தமெடுக்க ஆடு தூக்கப் போனவர்கள் எல்லாம் வந்து நின்றபடி இருந்தனர். நடு ஆசருக்கு கலைந்த எல்லோரும் கடைசி ஆசருக்கு வந்து சேர்ந்துவிட்ட சந்தோஷம் பெரியவர்களுக்கு இருந்தது. ஆஜர் பார்க்கத் துவங்கினான் சார்ஜென்ட்.

........................

'ஆஜோ...ர்'

.....................

'ஆசே....ர்'

....................

'ஆசர்'

....................

'ஆசூ...ர்'

....................

'ஆசரு'

...................

'ஆ....சுர்'

...................

'ஆஜரோ...ய்'

.....................

‘ஆசுரோ...ய்’

மந்தையில் இருந்து இருள் நோக்கிக்குரல் வந்துக் கொண்டு இருந்தது. சரியாக சங்கு நெரிபடாத ஆட்டின் தும்மல் போல அது அறுபட்டு அறுபட்டுக் கேட்டுக் கொண்டேயிருந்தது.

*

# 111

**மே**கத்தைத் தொட்டபடி பிரமாண்டமான மலைத்தொடர்கள் வெளியெங்கும் நீண்டும் கிடந்தன. பெருமரங்களின் பசுமை செழித்து உச்சியிலிருந்து கொட்டி கண்ணுக்கு எட்டும் தூரம் வரை பரவிக்கிடந்தது. சுழிகொண்டு நிற்கும் சூறாவளி போல எல்லாத் திசையிலும் அடர்ந்த காடு மலையைச் சுருட்டி மேலெழும்பிக் கொண்டிருந்தது.

காட்டின் உள்ளங்கைக்குள் கொண்டுவந்து அவர்கள் இறங்கிவிடப்பட்டிருந்தனர். பதிமூன்று ஆண்கள், பத்துப் பெண்கள், பதினோரு சிறுவர்கள் என மொத்தம் முப்பத்து நான்கு பேர். அதில் ஊர் பெரியாம்பிள ஒச்சுவும் வேறு இருவரும் தனியாள்களாக இருந்தனர். மற்ற ஆண்கள் மனைவி குழந்தைகளுடன் கொண்டு வரப்பட்டிருந்தனர். காட்டுக்கு மத்தியில் ஒரு சிறிய பகுதி சமப்படுத்தப்பட்டு அவற்றில் மூன்று வரிசையாக எட்டு எட்டு அறைகள் கட்டப்பட்டு கூரை வேயப்பட்டிருந்தன. முக்கோண வடிவத்தில் வரிசைகள் அமைக்கப்பட்டிருந்தது. இது தவிர தனியாக கூரை வேயப்பட்ட அறை ஒன்று மேற்கு மூலையில் இருந்தது. வீடுகளைச் சுற்றி கொஞ்ச இடைவெளி விட்டு வேலி அமைக்கப்பட்டிருந்தது. வேலிக்கும் வீட்டிற்கும் நடுவில் பெரும் மரச்சட்டங்களைக் கொண்டு முப்பது அடி உயரத்திற்கு கட்டப்பட்டிருந்த காவற் கோபுரம் ஒன்றிருந்தது. ஜி. ஸ்டுவர்ட் கூப்பர் என்ற இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீஸ் படை அந்தக் கட்டாயக் குடியேற்ற முகாமின் பாதுகாப்புப் பணியை ஏற்றிருந்தது. ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரண்டு தலைமைக் காவலர்கள், பத்து ஏட்டுகள் என பதினான்கு பேர் கொண்ட படையாக அது இருந்தது. இது தவிர போதகர் ஒருவரும் அங்கே இருந்தார். மேற்கு மூலையில் கட்டப்பட்டு கூரைவேயப்பட்ட அறைதான் சர்ச். வரிசையில் இருந்த கடைசி அறை பள்ளிக்கூடம்.

கொண்டுவரப்பட்ட எல்லோருக்கும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி, நிலத்தைச் சமமாக்கும் பணி தரப்பட்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம்

வரை மரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. மலையின் உச்சிவரை மரங்கள் சிலிர்த்து நின்றன. கொடுக்கப்பட்ட கோடாலிகளைக் கொண்டு நாளெல்லாம் மரத்தை வெட்டி அப்புறப்படுத்த அவர்களுக்கு உத்தரவிடப் பட்டிருந்தது. விழுந்த கொப்புகளை இழுத்துப்போடுவதும், செடிகொடிகளை வெட்டி அப்புறப்படுத்துவதும் பெண்களின் வேலை.

ஓய்வின்றி உழைப்பை வாங்குவது அந்த முகாமின் நோக்கமாக இருந்தது. காலையில் இருந்து மாலை வரை எல்லோரும் காட்டிற்குள்ளே போராடிக்கொண்டிருந்தனர். ரேசன் முறையில் வழங்கப்பட்ட பொருட்களை மதியத்திற்குப் பின் வந்து பெண்கள் சமைத்து வைத்தனர். 'காவயிறு, அர வயிறுக்குக் கூட காணல' எனச் சொல்லி முறையிடவோ கேட்டுப்பெறவோ வாய்ப்பில்லாத தால் இருப்பதைப் பங்கிட்டுக் குடித்தனர்.

பெருங்காடு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை வெட்டி எடுத்துக் கொண்டிருந்தது. கோடாலியைப் பிடித்துப் பழகவே பல நாளானது. இரண்டு வாரங்களுக்குப்பின் ஒவ்வொருவரும் வெட்டி அப்புறப்படுத்த வேண்டிய மரங்களின் அளவை கண்காணிப்பாளன் நிச்சயித்தான். பெரியாம்பள ஒச்சுவும் மற்ற இரண்டு பேரும் மிகவும் வயதானவர்களாக இருந்ததால் ஈடு கொடுத்து வேலை செய்யமுடியவில்லை. ஆனால் அவர்களுக்கும் எல்லோரையும் போலவே வேலைப் பளு நிச்சயிக்கப்பட்டிருந்தது. வேறு வழியில்லாமல் பெரியாம்பிளைகள் மூவருடைய வேலையையும் மற்றவர்கள் பகிர்ந்துகொண்டு செய்தனர். பெரும் புதரை வெட்டி விலக்கி உள்ளே போய் அடிமரத்தை அடைவதும், தூரை நாள் கணக்கில் வெட்டி வீழ்த்துவதும், வீழ்ந்த மரங்களின் கொப்புகளை அறுத்து அப்புறப்படுத்துவதுமாக வேலைகள் நடந்தபடி இருந்தன.

கடும் உடலுழைப்பால் ஏற்படும் களைப்பும் போதிய ஆகாரமின்மையும் வெளி உலகத் தொடர்பற்று பெருங்காட்டுக்குள் புதைந்து கிடப்பதுமாக எல்லாம் சேர்ந்து அவர்களைப் பரிதவிப்பின் ஆழத்திற்குக் கொண்டுபோனது. நாட்கள் ஆக ஆக ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாதபடி ஆகிக்கொண் டிருந்தனர். பேசிக்கொள்கிற வார்த்தைகள் மிகவும் குறைந்தன. சிறு குழந்தைகள் மட்டுமே ஓரளவுக்கு இயல்போடு இருந்தன. பெரியவர்கள் மரங்களாக மாறி ஒவ்வொரு நாளும் வெட்டுப்பட்டு வீழ்ந்தபடியே இருந்தனர்.

**சோ**கம் சொல்லிமுடியாதபடி அதிகரித்துக்கொண்டே இருந்தாலும், அவர்களுக்குத் தாங்க முடியாத வேதனையைத் தந்தது இரவும் பகலும் மாற்றிப் போடப்பட்டதுதான். மூதாதையர்களின் காலங்களிலிருந்து இருள் எனும் பெரும்பரப்பில் ஓடியபடியே இருந்த கால்கள்! இருளைக் குடித்து இருளைத் தின்று இருளால் வளர்ந்த உடல்கள்! பொழுது மங்கியதும் சாத்தப்பட்ட வீட்டுக்குள் அவை கிடத்தியே வைக்கப்பட்டிருந்தன. பல மாதமாகத் தூங்கிக்கிடந்தவன் திடுதிப்பென விழிப்பதைப்போல ஒவ்வொரு பகல் கடந்தவுடன் இரவைப் பார்த்து அதிர்ந்து விழித்தனர். இருளின் பேரழைப்பு இரவுகள் தோறும் அவர்களின் இதயத்தைக் கிளறிவிட்டபடியே இருந்தது. இருளில்தான் அவன் பிறந்தான், வளர்ந்தான், வாழ்ந்தான். அவனது ஆதி ரகசியங்கள் எல்லாம் இருளுக்குள் வரையப்பட்ட கருநிற ஓவியங்கள். இருளின் பேரழகும் ஒலியின் துல்லியமும் அவனது நுண்ணறிவை மீட்டியபடியே இருக்கிறது. அவன்

தாயாதிகள் ஓடிய பாதடி ஓசை இருள் எங்கும் இருந்து எழுந்துவந்தபடியே இருக்கிறது. மூன்று பிள்ளைகளையும் வெளியில் எடுத்துப்போட்டு, கண்கள் புதைந்து, மூச்சுவாங்கி ஆங்காரமாய் நரம்பு புடைக்கக் கத்திய சடச்சியின் குரல் இருளுக்குள் திட்டுத்திட்டாகத் தேங்கி நிற்கிறது. காவக்கம்புகளை ஊன்றி நடக்கும் மூதாதையரின் ஓசை கேட்டபடியே இருக்கிறது. காவல் இருளின் மேல் போடப்பட்டுள்ள நாற்றங்கால்கள். ராத்திரியின் சம்சாரிகளுக்கு இரவைத் தவிர நாற்றுப் பாவ வேறுஇடம் ஏது? வேரும் கொடியும் பற்றிப் படர்ந்த இருள் தாவரங்கள், கரும்பாறைக்கு மேல் பகலின் ஒளியில் கருகிப்போகும்படி கிடத்தப்பட்டன.

ஒவ்வொரு நாள் பகலிலும் உழைத்துச் சலித்தாலும் படுத்துத் தூங்க இரவில் வசதியில்லை. இருளின் முகம் கருக்க ஆரம்பித்ததும் மனம் விழித்துக்கொள்கிறது. காற்றும் வானமும் கைநீட்டி அழைக்கின்றன. முளைக்கும் வெள்ளிகளின் கால் சலங்கை அவனது செவியில் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. கன்னக்கோல்கள் உதிர்க்கும் தூசிகளைப்போல இரவெங்கும் இருந்து சருகுகள் உதிர்ந்தபடியே இருக்கின்றன. இரவு அவனுக்குள் இருக்கிறது. பகல் அவனுக்கு வெளியில் இருக்கிறது. அவனுக்கு வெளியே கிடக்கும் வெளியில் அவனை நடக்க அனுமதிப்பதும். அவனுக்கு உள்ளே கிடக்கும் வெளிக்குள் அவனை பூட்டிவைப்பது மாகக் காலம் நகர்கிறது. அவன் இரவில் வாழ அனுமதிக்கப்படாமல், பகலில் வாழ முடியாமல் துடித்தபடி கிடக்கிறான்.

அந்த இடம் வெளி உலகிலிருந்து முற்றிலும் துண்டிக்கப் பட்டிருந்தது. சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலையும் காடுகளுமே தெரிந்தன. தாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதை அவர்களால் அறிந்துகொள்ளவே முடியவில்லை. பழநி மலையாக இருக்குமென்றும், தென்காசி மலையாக இருக்குமென்றும் பேசிக்கொண்டனர். ஆனால் எதையும் அடையாளப்படுத்தி உறுதிசெய்ய முடியவில்லை. காட்டின் வடிவில் மலையின் பிரம்மாண்டத்தை வைத்து எந்தக் குறிப்பையும் உணரமுடியவில்லை. முகாமுக்கு வெளியே மனிதர்கள் எந்தப் பகுதியில் வசிக்கிறார்கள் என்றும் அறிந்துகொள்ள முடியவில்லை.

கூப்பர் தலைமையிலான போலீஸ்படை முகாமை மிக கவனமாக கண்காணித்து வந்தது. வெளியில் இருந்து ஒரு செய்தியை அவர்கள் அறிந்துகொண்டால் கூட போதும், அதன்பிறகு நிலைமையே வேறு மாதிரியாக ஆகிவிடும். எனவே வெளியுலகிற்கு எந்தத் தொடர்பும் ஏற்பட்டுவிடாதபடி மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு செயல்பட்டனர். இருபத்தி நான்கு மணி நேரமும் போலீஸ் காவல் விழிப்போடு இருந்தது. தப்பிக்கவோ வெளியேறவோ இதுவரை யாரும் முயற்சிக்கவில்லை. அப்படி முயற்சித்தால் என்ன நடக்கும் என்பதை முதல் நாளே கூப்பர் தெளிவாகச் சொல்லிவிட்டார். ஊர் மந்தையில் விளார் கம்பு ஒடிய அடிபட்டு ரத்தம் வழிய வலி பொறுக்கமுடியாமல் உயிர்விட்டவர்கள் போக உயிரை விடாமல் தாங்கிக்கொண்டவர்கள்தான் இங்கு வந்து சேர்ந்துள்ளனர். வெள்ளைக்கார போலீஸ் எதுவெல்லாம் செய்யுமென்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே அவர்கள் அவ்வப்போது அண்ணாந்து காவற்கோபுரத்தைப் பார்ப்பதோடு சரி.

முகாமை ஒட்டி மேல்புறம் ஒரு சிறு கரடு இருந்தது. அது மட்டும் தான்

முயற்சி செய்து மேலேறி உச்சியை அடையக்கூடிய இடம். மற்ற மூன்று பக்கமும் மலைத்தொடரின் உயரம் மேகத்தைத் தொட்டுக்கிடந்தது. ஒருவேளை இந்தக் கரட்டின் உச்சியில் நின்று பார்த்தால் பின்புறம் என்ன இருக்கிறது என்பதையும், ஊர்கள் ஏதேனும் தட்டுப்படுகிறதா என்பதையும் பார்க்கலாம் என்று சிலருக்கு எண்ணங்கள் தோன்றும். ஆனால் கரட்டுப்பக்கம்தான் காவற்கோபுரங்கள் இருந்தன. வேலியைத் தாண்ட முயற்சித்தாலே எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள் என்பது தெரியும்.

கரட்டை ஒட்டி முகாமின் மேல்புறமாக வளைந்துபோகிறது ஒரு ஓடை. மலைத்தொடரின் மேலே உருவாகிக் கீழ் நோக்கிப் போகிறது. முகாமுக்குத் தேவையான தண்ணீர் முழுவதும் அந்த ஓடையிலிருந்துதான் எடுக்கப்படுகிறது. அந்த ஓடையின் வழியே சில பர்லாங்கு தூரம் வரை போனால் கூட ஊரைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று சிலர் யோசனை தெரிவித்தனர். ஆனால் அவை எல்லாம் யோசனை அளவில் தான் இருந்தன. வீரண்ணும் ராசுவும் சித்தனும்தான் இப்படிப் பேசிக்கொள்கின்றனர். ‘இவர்கள் பேசி முடிவுக்கு வரட்டும், பார்ப்போம்‘ என்பதுபோல் மற்றவர்கள் இருந்தனர்.

முகாம் பகலிலும் இரவிலும் பெரும் மௌனம் கொண்டிருந்தது. மரங்களை வெட்டி வீழ்த்தும் பணி இடைவிடாது நடந்தது. பூட்டிய வீட்டுக்குள் இருந்து யாரும் இரவில் வெளியில் வரக்கூடாது என்ற உத்தரவு இதுவரை மீறப்படவில்லை. வந்து மூன்று வாரங்கள் கழித்து வயித்துப் பிள்ளைக்காரி ஒருத்திக்கு சாயந்தரமாக வலி எடுக்க ஆரம்பித்தது. அவள் இரவெல்லாம் வலி தாங்கமுடியாமல் துடித்தாள். அதிகாலையில் குழந்தை பிறந்தது. அந்த ஒரு இரவு மட்டும் உத்தரவு தளர்த்தப்பட்டது. பிறக்கும்பொழுதே உத்தரவை உடைத்துக்கொண்டு பிறந்திருப்பதாகச் சொல்லி எல்லோரும் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சினர். முகாமின் எண்ணிக்கை முப்பத்தி ஐந்தானது.

*

**மு**காமில் இருந்தவர்கள் மூன்று பேரைக் கூர்ந்து கவனித்தப்படியே இருந்தனர். ஒருவன் கூப்பர். அவன் கண்ணுக்கு எந்த நல்லதும் தெரியாது. சவுக்கால் அடிக்க என்ன வாய்ப்புக் கிடைக்கும் என்று ஒவ்வொரு நாளும் தேடியபடியே இருக்கிறான். போலீஸ்காரர்கள் எல்லோரும் அவனைக் கண்டாலே நடுங்குகிறார்கள். ஒருநாள் காவற் கோபுரத்தின் மேல் பணியிலிருந்த ஒருவன் அசந்து தூங்கினான் என்பதற்காக அனைவர் முன்னிலையிலும் அவனைத் தண்டித்தான். எல்லோரையும் நிற்க வைத்து நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்பதைக் காட்டுவதற்கான முதல் வாய்ப்பாக அதைப் பயன்படுத்தினான். அவனுக்காக சிலர் தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் அவனைக் கூர்ந்து கவனித்தபடியே இருந்தனர்.

மற்றொருவர் போதகர் மைக்கேல். இன்னொருவர் ஆசிரியர் சத்தியநாதன். இவர்கள் இருவர்தான் முகாம் வாசலில் பேசக்கூடிய எல்லைக்குள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் கூப்பரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவர்கள்தான். ஆனால் கொஞ்சம் தாராளமாகப் பேசினர். ஆசிரியர் சத்தியநாதன் காலை நேரங்களில் மட்டும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். மற்ற நேரங்களில் பிற

போலீஸ்காரர்களைப் போல ஒதுக்கப்பட்ட டியூட்டியை செய்கிறார். ஆசிரியராக இருக்கும் பொழுதும் போலீஸ் உடையில்தான் இருக்கிறார். ஏழு சிறுவர்கள் இவர் வகுப்பறையில் வந்து உட்காருகின்றனர். மற்ற நான்கு பேர் சிறிய குழந்தைகள் ஆதலால் அவர்களை வகுப்பறைக்கு அழைப்பதில்லை.

மூன்றாம் நபர் போதகர் மைக்கேல். தினமும் மாலை முகாம் வாசிகள் அனைவரையும் அழைத்து தேவாலயத்தில் வைத்து இவர்களுக்காக பிரார்த்தனை நடத்துவார். தேவனின் மகிமைகளை ஒவ்வொரு நாளும் விளக்கிச் சொல்லுவார். தினமும் மாலை வழிபாடு நடத்தி பிரசங்கம் செய்வார். அவர் பேசும் வார்த்தைகள் எதுவும் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் கழுவாயியின் மகன் பொன்னாங்கன் போல உடையணிந்து இருந்ததால் அவர் மீது ஒருவித மதிப்பு எல்லோருக்குள்ளும் இருந்தது. ஆனால் அவரும் கூப்பரின் கட்டளையை ஏற்றுத்தான் நடக்கிறார் என்பது எரிச்சலைத் தந்தது.

அது மட்டுமல்ல, வாரத்திற்கு நான்கு நாட்கள் முகாமில் இருக்கும் இவர் மற்ற மூன்று நாட்கள் முகாமை விட்டு வெளியில் சென்றுவிடுகிறார். எங்கே போகிறார். என்ன செய்யப்போகிறார் என்ற எந்த விபரமும் தெரியவில்லை. முகாமை விட்டு வெளியில் போய் உள்ளே வருகிற ஒரே நபராக இவர் இருப்பதால் இவர் முக்கியமானவராகத் தெரிய ஆரம்பித்தார். இவருக்கு வண்டி யோட்டிக்கொண்டு போவதும் வருவதும் ஒரு போலீஸ்காரன்தான். அவனிடம் போய் எங்கே போய் வருகிறீர்கள்? பக்கத்தில் ஊர்கள் ஏதேனும் உண்டா எனக் கேட்க முடியாது. ஆனால் இவரிடம் பேச்சுவாக்கில் எதையாவது கேட்கமுடியும் என்று நம்பி பேசிப்பார்த்தனர். எந்த விஷயமும் அவரிடமிருந்து வரவில்லை.

தினமும் அவரது தேவாலய பிரசங்கங்களைக் கூர்ந்து கேட்க ஆரம்பித்தனர். இவரிடம் நற்பெயர் எடுத்து உண்மையைக் கண்டறிய சிலர் முயற்சித்தனர். சிலர் கொட்டுகிற வார்த்தைகளின் வழியாக எதையாவது பிடித்துவிட முடியுமா என்று கவனமாகக் கேட்க ஆரம்பித்தனர். தேவனின் வார்த்தைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

*

**க**ட்டாய குடியேற்ற முகாம் அமைக்கப்பட்டிருந்த இடம் கம்பத்திலிருந்து தென்கிழக்கே 20 மைல் தொலைவிலும் கூடலூரிலிருந்து கிழக்கே 12 மைல் தொலைவிலும் இருந்தது. அங்கே ஒரு முகாம் அமைக்கப்பட்ட செய்தியோ, தாதனூரைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்டோர் கொண்டுவரப்பட்டுள்ள செய்தியோ எதுவும் வெளியில் தெரியாது. போதகர் மைக்கேல் மட்டும் வாரத்திற்கு மூன்று நாட்கள் மற்ற கிராமங்களில் மதப் பிரச்சாரம் செய்வதும் கம்பத்தில் உள்ள தேவாலயத்தில் வழிபாடு நடத்துவதும், மீதி நாட்கள் கரட்டுக்கு அந்தப் பக்கம் போவதுமாக இருந்தார். வெள்ளைக்காரன் அங்கே ஏதோ செய்கிறான் என்று மட்டும் தெரியும். ஆனால் என்ன செய்கிறான் என்று தெரியாது. அது மட்டுமல்ல, பாரஸ்ட்டுக்குள் நுழைவதற்கான அனுமதி மிகக் கடுமையாக்கப்பட்டு விட்டதால் அடிவார கிராம மக்கள் யாரும் கடந்த ஐந்து வருடமாக மலையேறி உள்காடுகளுக்குள் போவதில்லை. பெரியாற்றுத் தண்ணீர் வந்தபிறகு அதற்கான தேவையும் இல்லாமல்

போய்விட்டது.

பெரியாற்றுத் தண்ணீர் வந்தபொழுது குலைந்த காவல் கட்டுமானங்கள் மீண்டும் மறுபங்கீடு செய்யப்பட்டுவிட்டது. ஒன்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைக் காத்துவந்த காவலர்கள் அவைகளை இழந்தனர். ஒரு கிராமத்திலேயே ஒரு காவக்காரனுக்குப் போதுமான கூலி கிடைத்தது. அதுவும் முழுவதும் நெல்லாக வந்தது. இப்பொழுது கம்பத்தை கொடிவைரனின் மகன் கருத்தையன் காவல் காக்கிறான். அவன் காவல் காக்கும் கிராமத்திலிருந்து 20 மைல் தொலைவில்தான் அவன் பெரிய பாட்டன் ஒச்சுவும் அவனது ரத்த பந்தங்களும் முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

வல்லாங்கனும் நரியனும் காரியும் சதா அலைந்து திரிந்து கண்டறிந்த காட்டின் ரகசியங்கள் எதுவும் அவர்களின் வம்சாவழிகளுக்கு வந்துசேரவில்லை. அதே காட்டில் வல்லாங்கனின் ரத்தபந்தங்கள் திசை தெரியாமல் தவித்துக்கிடக்கின்றன. காடு ஒவ்வொரு நாளும் உறுமிக்கொண்டே இருக்கிறது. அடர்ந்த காட்டின் நடுவே அவர்கள் குச்சிகளையும் கொப்புகளையும் வெட்டியபடி நாட்களை நகர்த்தி வந்தனர்.

ஒற்றைக் கரடு முழுவெளியையும் அடைத்து முகாமை மறைத்து வைத்திருந்தது. அந்த கரடு மட்டும் இல்லையென்றால் திறந்தவெளி போல் ஆகியிருக்கும். அவ்வப்பொழுது பெரியகுளத்திலிருந்து வரும் வெள்ளை அதிகாரிகள் கரட்டைக் கடந்து அந்தப் பக்கம் போவதும் வருவதுமாக இருந்தனர். வெள்ளைக்கார அதிகாரிகளுக்கும் போலீசுக்கும் அங்கே என்ன வேலை என்பதைப் பற்றி யாரும் பெரிதாக யோசிக்கவில்லை. கிராமக் காவக்காரர்களும் அவ்வப்பொழுது போய்வருபவர்களைப் பார்த்தபடிதான் இருந்தனர்.

கம்பத்தைச் சுற்றிவளைத்துப்போய் பெரியாற்று சேனலோடு கலந்துவிடுகிற பெருமாள் கோவில் ஓடை மேலே மலையில் உற்பத்தியாகி முகாமைக் கடந்துதான் ஊருக்கு வருகிறது. காவக்காரர்கள் அல்லது ஊர்க்காரர்கள் யாராவது ஓடையின் வழியே மேல்நோக்கி நடந்தாலோ, முகாமில் இருப்பவர்கள் யாராவது ஓடையின் வழியே கீழ்நோக்கி நடந்தாலோ இரண்டு பொழுதுக்குள் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளலாம். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

*

# 112

**உக்கிரமான வெயிலில் பாறைகள் தகித்துக்கொண்டிருந்தன. காய்ந்த** செத்தை குப்பைகளை எல்லாம் அள்ளிக்கொண்டு வந்து அந்தப் பாறையின் மீது போட்டு நெருப்பு வைத்தனர். மடமடமடவென தீ ஆளுயரத்திற்கு எரிந்துகொண்டிருந்தது. பாறை சூடேறிக் கொப்பளிக்க ஆரம்பித்தது. நெருப்பின் வேகத்திற்கு ஈடுகொடுத்து தொங்கவிடப்பட்ட ஆட்டை உரித்துக்கொண்டிருந்தனர். சின்னையன்தான் ஆட்டை உரிப்பதில் தேர்ந்தவன். அவன்தான் ஆடுரிச்சான் பாறையில் வைத்து ஆட்டை உரித்துக்கொண்டிருந்தான். சமணர்களின் மிக நல்ல குகைத்தலம் அது. பெரும்பாறை ஒன்று பக்கத்தில் இருக்கும் சிறு பாறையின் மேல் அரைச்சாய்வில் விழுந்து கிடக்கும். இடையில் இருக்கிற வெளி மலையெங்கும் வீசும் காற்றை சுவாசித்தபடி இருக்கும். காற்று எந்தப்போக்கில் போனாலும் இந்த இடுக்கைக் கடந்துதான் வெளியேறும். உட்கார்ந்திருக்கும் பாறையின் மேல் விழுந்துகிடக்கும் பாறை, அமுக்கிக்கிடக்கும் முனைப்பகுதி ஆட்டின் பின்னத்திக்கால்களைக் கட்டித் தொங்கவிட ஏற்றதாக இருந்ததால் அது ஆடுரிச்சான் பாறையாக மாறியது. மழைத் தண்ணீர் வழிந்து உள்ளே வந்துவிடாமல் இருக்க சமணர்களின் பாறையின் விளிம்பு முழுவதும் வெட்டி கோடு போல் மடிப்பு ஏற்படுத்தி இருந்ததால் இன்னும் கூடுதலாக வசதியாக இருந்தது. சின்னையன் வேகவேகமாக ஆட்டை உரித்தான். ஆறு பேர் சுற்றிலும் நின்றிருந்தனர். பாறையில் பொருத்தி வைக்கப்பட்ட செத்தையை விட அதிகமான நெருப்பை பசி ஏற்படுத்தியது. கட்டையன் நேற்று காலை குடித்த கஞ்சியோடு சரி, முழு நாளும் எதுவும் குடிக்கவில்லை. ஏறக்குறைய எல்லோரும் அதேபோல்தான் கிடந்தனர். இரவு முழுவதும் லொங்கோட்டமாக ஓடித் தவித்துக்கிடந்தனர். கிடைத்த கிடாய்களை ஊருக்குள் கொடுத்துவிட்டு மட்டக்கிடாய் ஒன்றை யாருக்கும் தெரியாமல் நிறுத்திவைத்துவிட்டனர். அதைத் தான் சின்னையன் உரித்துக்கொண்டிருந்தான். உரிக்கும்போதே ஆளுக்கொன்றாய் நெஞ்செலும்பை ஒடித்துத் தின்றனர். கட்டையனும் ஆண்டியும்

ஈரக்குலையைப் பிய்த்துக் கொண்டனர். நெருப்புக்குப் போகும் முன்பே பாதிக் கறி பச்சையாகவே தின்று தீர்க்கப்பட்டது. மீதிக்கறியை வெட்டிக்கூறு போட்டான் சின்னையன். நெருப்பு ஆளுயரத்திற்கு எரிந்து அமுங்கியது. இரண்டு அகலமான கட்டைகளை வைத்து நெருப்பு எரிந்த செத்தையை பாறையை விட்டு அப்புறப்படுத்தி, வெட்டப்பட்ட கறித்துண்டுகளை பாறையின் மீது பரப்பி வீசினர். கொதிக்கும் பாறையின் மீது பச்சைக்கறி விழுந்ததும் பட்பட்டென்று வெடித்தது. பேயாண்டியும் விருமனும் குச்சியால் கிளறிவிட்டபடி இருந்தனர். மற்றவர்கள் எல்லாம் பொறுமையோடு பாறையைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. பசி கண்ணைக் கட்டி மயக்கத்தை ஏற்படுத்தியது. கிண்டுனது போதும் எடுங்கடா வெண்ணய்களா... என்று சொல்லி பாறையில் கிடந்த நாலு துண்டைக் குச்சியால் கிளறிக் கையில் எடுத்தான் பூச்சி. கறி உள்ளங்கையை சுட்டது. ப்பூ...ப்ப்...என்று ஊதியபடியே ஆடுரிச்சான் பாறைக்குள் போய் உட்கார்ந்தான். ஆளாளுக்குத் துண்டங்களை எடுத்துக்கொண்டு ஊதியபடியே உள்ளுக்குள் வந்து உட்கார்ந்தனர். கொளுத்தும் வெயில் அறியாத ஒரு குளுமை அங்கிருந்தது. அதைவிட முக்கியமான ஒன்று கையில் சுட்டபடி பாதிவெந்தும் வேகாமலும் இருந்த கறித்துண்டுக்குள் இருந்தது. கொதிக்கும் சூட்டோடு பாதி வெந்த கறியைத் தின்று தீர்த்தனர். முதலில் சுட்ட கறி முழுவதும் தின்று தீர்த்த பிறகுதான் நிதானம் வந்தது. இன்னும் கொஞ்சம் வேகட்டும்ப்பா...விடுங்க என்றான் ஆங்கன். ஆமாம்ப்பா...என்று சொல்லி பாறையின் மீது கிடந்த துண்டுகளைக் கிளறிவிட்டபடி இருந்தான் விருமன்.

உரிக்கும்போதே பச்சைக்கறியாகப் பாதியும், அரைப்பச்சைக்கறி யாகப் பாதியும் தின்றபின் ஒரு சிறு தெளிச்சி வந்தது. ‘நாலு உப்பெ போட்டு பெரட்டி சூடு பண்ணப்பா...’என்றான் ஆங்கன். குகைக்குள் உட்கார்ந்து சுட்டுக்கொண்டிருக்கும் பாறையைப் பார்த்து பேச ஆரம்பித்தனர். வெந்தும் வேகாமலும் இருந்த கறித்துண்டுகள் எல்லோர் கையிலும் இருந்தன. சரியான கிடாய்டா...என்று தூக்கி வந்த கட்டையனைப் பாராட்டினான் ஆங்கன். ஊருக்குள்ள வெரட்டி விட்டுருந்தா பல குடும்பம் சாப்புட்டுருக்கும். ஆனா நம்ம இப்ப ஏழு பேரா சாப்பிடுறோம் என்றான் பேயாண்டி. ‘வந்துட்டான்டா...வரிச்சியூரா! நீ நேத்து தூக்குனத போயி நாளக்கு தூக்கி வா, ஊரே சாப்பிடட்டும்’ என்றான் கட்டையன். பாதிப்பேர் பாறை அதிர்வதைப் போல் வாய்விட்டுச் சிரித்தனர். பாதிப் பேருக்கு என்னவென்றே தெரியவில்லை. ‘சொல்லிட்டு சிரிங்கடா...வெண்ணய்களா’ என்றான் ஆங்கன். ‘இருங்கப்பா சொல்றெ’ என்று கட்டையன் சொல்ல ஆரம்பித்தான்.

நேற்று கழுவன் கொத்து ஐந்து பேரோடு கட்டையனும் சேர்ந்து நடு ஆஜர் பார்த்தவுடன் புறப்பட்டனர். முதல் இரண்டு நாள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கழுவன் சொன்ன குறிப்பு இருந்ததால் கட்டையன் தனி ஆளாகப் போகாமல் கொத்தோடு சேர்ந்து அந்தக் குறிப்பை நோக்கி நேற்றுப் போனார்கள். நல்ல ஓட்டம். வீட்டின் பின்புறம் சுற்றிலும் செம்மண் சுவர் வைக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒரு பக்கம் மாடுகளும், இன்னொரு பக்கம் ஆடுகளும் நின்றுகொண்டிருந்தன. கழுவனும் பூச்சியும் ஆண்டியும் வெளியில் நின்றுகொண்டனர். கட்டையனும் பேயாண்டியும் விருமனும் உள்ளே போனார்கள். போன வேகத்தில் சங்கை ஒதுக்கி

ஆளுக்கு மூன்று ஆடுகளாகக் கட்டையனும் விருமனும் தூக்கி வெளியில் கொடுத்துவிட்டு இன்னொரு ஆட்டைத் தோளில் தூக்கியபடி வெளியேறி வந்தனர். ஆனால் முதலில் ஒரு ஆட்டைத் தூக்கிக்கொடுத்த பேயாண்டி அடுத்த ஆடு எதையும் தூக்கித்தரவில்லை. மற்றவர்களெல்லாம் தலா மூன்றைக் கொடுத்துவிட்டு தோளில் ஒன்றையும் தூக்கிக்கொண்டு வெளியேறி வந்துவிட்டனர். என்னடா இன்னும் காணோம் என்று கழுவன் சமிக்ஞை கொடுத்தான். ‘வர்றேனப்பா...’என்று மெல்லச் சொன்னான் பேயாண்டி. ஆனால் வருவது போல் இல்லை. ‘பொறுப்பா....பாத்துட்டு வர்றேன்’ என்று சொல்லி கட்டையன் உள்ளே போனான். ‘பெரிய உருப்படியப்பா, எசகொடுத்து தூக்கமுடியல’ என்று சொல்லியபடி தூக்கப் பெரு முயற்சி செய்துகொண்டிருந்தான் பேயாண்டி. ‘தள்ளப்பா...’என்று அவனை விலக்கி விட்டு கட்டையன் பார்த்தான். கரு நிறத்தில் நல்ல கெடார் எருமைக் கன்றுக்குட்டியொன்று நின்று கொண்டிருந்தது. ‘ஆட்ட தூக்குடான்னா கன்னுக்குட்டிய தூக்கிகிட்டு திரியுற வெண்ண...வாடா...’என்று சொல்லி பேயாண்டியை சத்தம் போட்டு கூட்டிவந்தான்.

நடந்ததைக் கட்டையன் சொன்னதும் சிரிப்பு பாறையில் கிடந்த பச்சைக்கறி போல் வெடித்தது. தலையைத் தொங்கப் போட்டபடி இருந்த பேயாண்டி ‘டேய், ஒங்க வவுசி தெரியாதா...ஒ அப்பே என்ன பண்ணுனான்னு தெரியுமா?’ என்று அந்தக் கதையை எடுத்துவிட்டான்.

‘கட்டையனோட அப்பன் கூகையன் அப்ப இளவட்டம். கல்லெறிஞ்சு பழகுற வயசு. அப்ப வீரணன் கொத்து கருது கசக்க கிளம்பியிருக்காங்கெ. அப்ப கூகையின் போயி என்னையும் கூட்டிப்போங்கப்பான்னு கேட்டிருக்கான். டேய்...கருது கசக்குறப்ப கலகமாயி போயிருச்சுன்னா நின்னு எரியணும்டா...உன்னால முடியாது வேணாம்ன்னு சொல்லியிருக்காங்கெ. இல்லப்பா, நான் நல்லா நின்னு எரிவெனப்பான்னு இவெ சொல்லியிருக்கான். சரி வுடுடா வரட்டும்னு கூட்டிப்போயிட்டாங்கெ. போயீ, பாதி தூரம் கசக்கி முடிக்கிறத்துக்குள்ள களவு ஒலைஞ்சு போச்சு. ஊரே தெரண்டு வந்துடாங்கெ. வந்தா நம்மாளு பூராம் மாறி மாறி கல்லெறியிறான். அவெங்களும் அங்கிட்டிருந்துவுடாம எறிஞ்சிருக்காங்கெ. ஒரு கட்டத்துல சரி. இனி பின்னேறி கிளம்பிருவோம்ன்னு முடிவு செஞ்சு அப்படியே எறிஞ்ச வாக்கிலே பின்னுக்கு வந்து திரும்பிட்டாங்கெ. ஒரு எல்லையில் வந்து தலைய எண்ணிப்பாத்தா ஒரு ஆளு கொறையுது. யாருடான்னு பாத்தா புது ஆளு கூகையன். சரி ஆளு விழுந்து போனான் போல்ருக்குன்னு சொல்லி திரும்பவும் எல்லாரும் கசக்குன எடத்துக்குப் போயிருக்காங்கெ. போனா நின்னு எரியத்தானு சொன்னாங்கென்னு சொல்லிட்டு இவெம் பாட்டுக்கு ஒத்தையில் நின்னு எறிஞ்சுகிட்டிருக்கானப்பா... விடிய வீடிய. அப்பொறமா போயி ஆள மடக்கி ‘ஏலே மடப்பயலே, களவுங்கிறது வீரத்தனம் இல்லடா, கெட்டியக்காரத்தனம்டா’ அப்படீன்னு சொல்லி கூட்டி வந்திருக்காங்கெ. அப்படி நின்னு எறிஞ்சவே வீட்டுக்காரெ என்னய பேசவந்துட்டான்டா’ என்றான் பேயாண்டி.

சபை களை கட்டியது. நன்றாக வறுபட்ட கறி அடுத்த சுற்றுக்கு வந்தது. வெயில் கூடக்கூட ஆடுரிச்சான் பாறையில் குளுமை கூடியது. ‘இவெ குடும்பத்த வுடுடா...இவெ பாட்டெ கத தெரியுமா ஒனக்கு’ என்று

சின்னையன் ஆண்டியோட பாட்டனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

பேச்சு ஆண்டியோட பாட்டனில் துவங்கி ஆங்கனின் பாட்டனுக்கு போனது. இவெ பாட்டன் கதைதாண்டா ஊர்லயே பெரிய கதை என்ற பீடிகையோடு பாறையில் கறியைச் சுட்டுக்கொண்டிருந்த விருமன் ஆடுரிச்சான் பாறையில் வந்து சொல்ல ஆரம்பித்தான்.

அது ஒரு பஞ்ச காலம். ஊர் வதங்கிப்போயிருந்தது. சுத்துப்பட்டியிலிருந்து உறவுக்காரர்கள் எல்லாம் தாதனூருக்கு வந்திருந்தனர். மதுரை காவலுக்குப் போனவர்கள் போக மற்றவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாகக் களவுக்குப் போனார்கள். எதையாவது கொண்டுவந்தால்தான் கஞ்சி குடிக்க முடியும் என்ற நிலை. ஆங்கனுடைய பாட்டன் புத்துக்கால் வீரணன் அன்றைக்கு இரவு ஆலமரத்தடியில் மிஞ்சியிருந்த நான்கு பேரை அழைத்துக்கொண்டு களவுக்குப் புறப்பட்டுப் போனார். கிழவனை நம்பி எப்படிப் புறப்பட்டுப் போக என்று யோசித்த வெளியூரிலிருந்து வந்த நால்வரும் வேறு வழியில்லாமல் புறப்பட்டனர். கால்நிலா வெளிச்சம் கொடுத்தும் கொடுக்காமலும் இருந்தது. ஆற்றைக் கடந்து வடக்குப்பக்கமாக அவர்கள் நடந்தார்கள். பொழுது நடுநிசியைத் தாண்டிப்போனது. ரெட்டிய கெடுத்த வெள்ளி ஏறி மின்னியது. ‘எங்கிட்டப்பா கூட்டிப் போற’ என்றனர். உடன் வந்தவர்கள் ‘வாங்கப்பா...பேசாம, தெசை தெரியாமலா போவாங்கெ’ என்று சொல்லியபடி நடந்தார். மற்ற நால்வரும் உடன் நடந்தனர். மதுரையை நோக்கி வரும் ஒற்றையடிப் பாதையொன்றின் ஓரமாக உட்கார்ந்தனர். ஏதாவது வண்டி வருகிறதா என்று இரண்டு பக்கமும் பார்த்தபடி இருந்தனர். வண்டிகள் எதையும் காணோம். பொழுது போய்க்கொண்டிருந்தது. நீண்ட நேரம் கழித்து மாட்டுவண்டி வரும் ஓசை கேட்டது. ‘சுதாரிங்கப்பா...’என்றார் புத்துக்கால் வீரணன். எல்லோரும் மரங்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டனர். வருவது ஒற்றை மாட்டு வண்டியாக இருந்தது. வண்டிக்காரனைத் தவிர இன்னொருவன் மட்டும் இருந்தான். அவன் கையில் பெரிய கொடிபோல ஒன்றைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்தான். வண்டியில் தொம்பரை போல சாக்குத் துணியால் மூடப்பட்ட பெரிய மூடை ஒன்று இருந்தது. மாடுகள் இவர்களின் எல்லைக்குள் வந்ததும் இரண்டு பக்க இருளுக்குள் இருந்து வெளியேறி வந்தவர்கள் சடார் சடார் என கம்புகளால் அடிக்க ஆரம்பித்தனர். புத்துக்கால் வீரணன் வண்டியை மறித்தபடி நடுரோட்டில் நின்றுகொண்டார். அடி பொறுக்கமாட்டாமல் கீழே விழுந்த வண்டிக்காரன் ‘அய்யா...ஆஞ்சிநேயரய்யா...’என்று எதையோ சொல்ல வந்தான். ஆனால் அடுத்தடுத்த வார்த்தைகளுக்கு இடம் கொடுக்காமல் கம்புகள் பேசின. வண்டியின் மேல் உட்கார்ந்திருந்தவன் ‘அழகர்கோவில்...கிருஷ்ணன் கோவில்...’என்று எதையோ சொல்ல வந்தான். அடியின் வலி பொறுக்கமுடியாமல் அவனால் எதையும் முழுமையாகப் பேச முடியவில்லை. வண்டியை விட்டு தவ்வி தப்பித்தால் போதும் என ஓட ஆரம்பித்தனர்.

கோவில் சம்பந்தப்பட்ட விஷயம் உள்ளே இருக்கிறது என்பது மட்டும் தெரிந்தது. நல்ல களவுதான் என்று புத்துக்கால் வீரணன் முடிவு செய்தார். ‘சரி, மூடைய தூக்குங்கடா பாப்போம்’ என்றார். ஆளுக்கு ஒரு பக்கமாகப் பிடித்து தூக்க முயற்சித்தனர். உள்ளே நெலுநெலுவென்று விலகியபடி இருந்தது. ‘யப்பா...இது வேற மாதிரி இருக்கப்பா...தூக்க முடியல’ என்றனர்.

‘போங்கடா பொச கெட்ட பயலுகளா, நாலு பேரு சேந்து ஒத்த மூட்டய தூக்க முடியல. நீங்கெல்லாம் தாதனூருக்கு விருந்தாடி வந்துட்டீங்கன்னு வெளியில சொல்லாதீங்க’ என்று திட்டி விட்டு ‘சரி சரி, வண்டியோட ஓட்டுங்க’ என்றார். வண்டியைப் பாதையிலிருந்து இறக்கி குறுக்கே காட்டுப்பகுதியில் ஓட்டினர்.

பொழுது விடிந்தது. மதுரைக் காவலுக்குப் போனவர்களும், களவுக்குப் போனவர்களுமாக எல்லோரும் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர். ஆனால் புத்துக்கால் வீரணன் கொத்து மட்டும் வரவில்லை. ‘எங்க போனானோ, பூராம் அசலூர்ல விருந்தாடி வந்து புது ஆளுகளயா கூட்டிப்போயிருக்கான். என்னாச்சுன்னு தெரியலையே’ என்று யோசித்தபடி இருந்தனர். வெயில் ஏறி அடிக்க ஆரம்பித்தது. நீண்ட நேரங் கழித்து வண்டி ஒன்று காட்டுப்பாதையின் வழியே ஆலமரத்தை நோக்கி வந்தது. ‘என்னான்னு பாருங்கடா...’என்றார் பெரியாம்பிள. ‘ஏலேய் நம்ம புத்துக்கால் வீரணன் வண்டியோட இழுத்துட்டு வந்துட்டாண்டா...கெட்டியக்காரந்தான்டா’ என்று பாராட்டினர். வண்டி கரை மேல் ஏறி ஆலமரத்துக்குள் மையமாக வந்து நின்றது. அலுத்துச் சலித்தபடி வண்டியில் இருந்து இறங்கி விழுதொன்றில் சாய்ந்தபடி வந்து நின்றார் புத்துக்கால் வீரணன். வண்டியைச் சுற்றிக் கூட்டம் கூடியது. நல்ல களவு போலத்தான் தெரியுது என்று பேசிக்கொண்டனர் உடன் வந்த நாலு பேரும். மூடையைக் கீழே இறக்கினர். எளக்காரமான பார்வையை எல்லோரையும் நோக்கி வீசியபடி ‘சரி...சரி...பேசிக்கே இருக்காம, மூடைய கழட்டி வேலையபாருங்கப்பா’ என்றார் புத்துக்கால் வீரணன்.

சிறு கத்தியை வைத்து சாக்குத் துணியை இரண்டாக கிழித்தான் ஒருவன். அவன் துணியைக் கிழித்து விலக்கிய கணத்தில் உள்ளுக்குள் இருந்த குரங்குகள் வீச்சு வீச்சென்று கத்தியபடி குதித்து வெளியேறின. ‘ஏலே குரங்கடா...’என்று சத்தம் போட்டபடி அங்கிருந்தவர்கள் கம்புகளைத் தூக்கிவருவதற்குள் மூலைக்கொன்றாய் கொப்புகளில் ஏறி நின்று தவ்விக் குதிப்பதும், வீச்சு வீச்சென்று கத்துவதும், உர்ர்ர்...ரென முறைத்துப் பார்ப்பதுமான இருந்தன. கண நேரத்திற்குள் அந்த இடமே ரணகளப் பட்டுப்போனது. ஆலமரங்கள் அதற்கென்றே அமைந்தது போல் இருந்தன. தவ்விக்குதித்து ஆசை தீரக் கத்தி விளையாடின. கீழே நின்றுகொண்டிருந்தவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதுவரை சந்தித்திராத ஒன்றாக அது இருந்தது. ஒரு பெரியாம்பிள கம்பை ஊண்டியபடி நடக்க முடியாமல் நடந்து புத்துக்கால் வீரணனிடம் வந்து பொடனியை சேர்த்து ஒரு போடு போட்டார். ‘எங்கிட்டோ திரிஞ்சதை எல்லா கொண்டுவந்து ஏன்டா இங்க விட்ட?’ என்றார். ‘நா என்னத் தப்பா கண்டே’ என்றார் புத்துக்கால் வீரணன். உடன் போன ஒருவன் சொன்னான் ‘இல்லப்பா அந்த வண்டியில இருந்தவன் சொன்னான். ஆஞ்சநேயரப்பா...அழகர்கோவில்ல இருந்து கிருஷ்ணன் கோவிலுக்கு கொண்டு போறேன்னு. ஆனா இவருதான் அடிச்சு தூக்குங்கடான்னாரு, தூக்கிட்டு வந்துட்டோம்’ என்றான்.

குரங்குகள் மரம் முழுவதும் விளையாடித் திரிந்தன. அதற்குப்பின் புத்துக்கால் வீரணன் குரங்காண்டி வீரனாகிவிட்டார். குரங்குகளுக்கு ஆலம் பழங்கள் வரப்பிரசாதமாக அமைந்தது. அந்த மட்டோடு அனுபவித்துக்கொண்டு பேசாமல் இருந்தால் இருந்திருக்கலாம். ஆனால்

அது குரங்காச்சே...சும்மாவா இருக்கும்? களவுக்கும் காவலுக்கும் போய் வந்தவர்கள் தினமும் காலையில் வந்து அப்பாடா என்று ஆலமரத்தடியில் உட்கார்ந்தால், அவர்கள் கொண்டுவந்ததை அடுத்த கணமே தூக்கிக்கொண்டு மரத்தின் மேல் ஏறி விடுகிறது. பிரச்சனை ஒவ்வொரு நாளும் உருவாக ஆரம்பித்தது. ஊரே குரங்காண்டி வீரனைத் திட்டித் தீர்த்தது. பஞ்ச காலம் தலைவிரித்தாடியபொழுது கொண்டுவந்த சிறு பொருளைப் பங்கிட்டுக் கொள்வதற்குள் அதை எடுத்து உதறிக் கடித்துத் துப்பின. வேறு வழியில்லாமல் ஊர் எறி எறிவதென்று முடிவு செய்து, ஊரே ஏறிந்து விரட்டினர். ஒவ்வொரு எறிக்கும் ஒவ்வொன்று சுருண்டு விழுந்து செத்தது. தப்பியவை எல்லாம் மிரண்டு ஓடின. வைகையின் அக்கரை வரை விரட்டிப்போய் விட்டு வந்தனர்.

அந்தப் பஞ்சகாலத்தில்தான் எலி செத்து ஊரில் பாதி அழிந்தது. குரங்குகள் இருந்தது என்னவோ சில மாதங்கள்தான். ஆனால் ‘குரங்கிருந்த வருஷம்’ தாதனூருக்கு ஆறாத வடுவை ஏற்படுத்திய வருஷமாகிவிட்டது. அதற்குப்பின் நீண்டநாள் கழித்ததுதான் குரங்காண்டி வீரணன் செத்தார். ஆனால் சாகும்வரை அவரது பெயரை விட்டு குரங்கு போகவில்லை. சரி, செத்தால் போய்விடும் என நினைத்துத்தான் செத்தார். செத்தபின்பும் போகவில்லை. குரங்காண்டி வம்சம் என்று ஊர் இன்னும் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறது. குரங்கை விட்டு அவரது வம்சாவளி பிரியவே இல்லை. கோவில் கொடியோடு மாட்டு வண்டியை விட்டு இறங்கி ஓடியவன் விட்டு விட்டுப் போன குரங்கை அதன் பிறகு எங்கு போய் எப்படி விட என்று தெரியாமல் ஒரு வம்சாவளி இருக்கிறது. களவில் கொண்டு வந்ததை மீண்டும் இழப்பது சடச்சி மக்களால் முடியாது என்பதற்கு குரங்கும் சாட்சியாகத்தான் இருக்கிறது.

விருமன் கதையைச் சொல்லி முடித்ததும் ஆடுரிச்சான் பாறை குலுங்கிச் சிரித்தது. குரங்காண்டி வீரணன் கதை ஊரில் இருக்கும் எல்லோருக்கும் தெரிந்த கதைதான். ஆனாலும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவர் சொல்லும்பொழுதும் மெருகேற்றி மெருகேற்றிச் சொல்வது வாடிக்கையாகிவிட்டது.

பாறையில் வறுபட்ட கறிகளை எல்லாம் மதியம் வரை தின்று தீர்த்தனர். நீண்டநாள் கழித்து களவு பற்றிக் கதைகள் பேசிச் சிரித்தனர். துயரம் உருவாக்கிய பெரும் வலி நினைவின் வழியே சிரிப்பாக மாறி பாறையெங்கும் உருண்டு ஓடியது. அந்தக் கிடாயை ஏழு பேராகத் தின்று தீர்த்தனர். உரித்துக்கொடுத்த சின்னையன் தலை மட்டும் தனக்கு வேண்டுமென கேட்டான். ‘அதெல்லாம் முடியாது, பங்குன்னா பங்குதான்’ என்று சொல்லி நன்றாக வாட்டி சமணரின் குகைத் தலத்திற்குள் இருந்த சிறுமேட்டில் வைத்து பொதுத்தலை ஆக்கினர்.

சிறிது நேரங்கழிந்து ‘களவு எல்லாம் இப்படி கதையாகிப் போச்சேப்பா...’என்றான் ஆங்கன்.

ஆடுரிச்சான் கல் சரிந்து அப்படியே எல்லோரையும் போட்டு அமுக்குவதைப் போல அந்த வார்த்தை அமுக்கியது.

*

# 113

**து**யரத்தின் வழித்தடத்தில் ஊர் உருண்டு போனது. ஒவ்வொரு நாளும் செத்துப்பிழைத்தது. காவலும் களவும் முற்றிலும் அழிபட்ட நிலையில் நின்ற ஊருக்கு தப்பிப்பிழைக்க நாதியேதுமில்லை. பகலில் ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்தவர்கள் வருடமெல்லாம் காய்ந்துகிடக்கும் கண்மாயை வைத்துக்கொண்டு எதைச் செய்யவும் வக்கற்றவர்களாக இருந்தனர். எங்கும் வெளியேற முடியாதபடி ஊரைச் சுற்றி கடவுச்சீட்டு பெரும் வேலியை அடைத்து வைத்திருந்தது. வயிற்றுப்பசியும் வற்றாத கண்ணீரும், தாதனூர்ப் பெண்கள் கடைசியாகப் பெத்துப்போட்ட ரெட்டை பிள்ளைகளைப்போல ஊரெல்லாம் சுற்றித் திரிந்தன. கொண்டுபோகப்பட்ட சிறுவர்களும், இழுத்துச்செல்லப்பட்ட பெரியவர்களும் என்ன ஆனார்கள் என்று தெரியாத துக்கம் தாதனூரின் தொண்டையை அடைத்துக் கிடந்தது. மீளாத துயரை ஊர் அனுபவித்துக் கொண்டிருந்தபொழுதுதான் அந்தக் கொடுஞ்செய்தி இடியென வந்து விழுந்தது.

கழுவாயி பெத்தமகன் பொன்னாங்கன் இறந்துபோன செய்திகேட்டு ஊரே பதறியடித்துக்கொண்டு ஓடியது. ஒரு ஈ எறும்பு கூட ஊரிலே இல்லை. எல்லோரும் விழுந்தடித்து பசுமலைக்கு ஓடினர். கடவுச்சீட்டு வாங்காமல் ஆண்கள் யாரும் வெளியேறக்கூடாது என்ற விதியை ஊரே தூக்கியெறிந்தது. எல்லோரையும் எத்தனை நாள் வேண்டுமானாலும் சிறைக்குள் வைத்து என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்ற முடிவோடுதான் ஊரின் செயல் இருந்தது.

அதிகாலையில் இறந்துபோன போதகரின் உடல் பெட்டியில் வைக்கப்பட்டு முன் அறையின் மையமாகக் கிடத்தப்பட்டிருந்தது. ஆணும் பெண்ணும் மௌனத்தோடு சுற்றிலும் உட்கார்ந்திருந்தனர். மேரியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வந்துகொண்டிருந்தது. பதினைந்து வயது மகன் ஜோசப் தந்தையின் முகத்தையே உற்றுப்பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பெட்டிக்குள் இருந்த முகம்

இறந்துபோனதற்கான அடையாளமே இன்றி இருந்தது. ‘அப்பா...அப்பா...’ என்று மெல்லக் கூப்பிட்டபடியே அவன் உட்கார்ந்திருந்தான்.

நீண்ட நேரங்கழித்து பசுமலையே அலறுவதைப்போல சத்தம் கேட்டது. எல்லோரும் வீட்டை விட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தனர். பஞ்சப் பராரிகளாய் இருந்த அந்தப் பெருங்கூட்டம் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறியபடி வீடு நோக்கி வந்தது. பசுமலைவளாகத்திற்குள் இவ்வளவு பெரிய கூட்டத்தை இதற்கு முன் யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். இவர்கள் ஏன் அழுதுகொண்டு இங்கு வரவேண்டும் என்று பலர் யோசித்தபடி இருந்தனர். ‘ஏ...ராசா...போயிட்டியேப்பா...’எனக் கதறியபடி வந்த பெண்கள் வீட்டைப் பிளந்துகொண்டு உள்ளே போயினர். துக்கமும் ஆத்திரமும் கட்டுடைத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. தேங்கிக்கிடந்த மௌனம் எங்கு சிதறித் தெறித்ததென்று தெரியவில்லை. பெட்டிக்கு உள்ளிருந்த உடலைத் தூக்கி எடுத்து மடியில் வைத்து கட்டிப்பிடித்துக் கதறியழுதனர். யாராலும் எதுவும் சொல்லவோ செய்யவோ முடியவில்லை. தனது உயிர் போனது போலத் தாதனூர் துடித்தது. மலையே கரைந்து ஓடுவதைப்போல பெண்கள் கதறிக் கதறி அழுதனர். ‘போயீட்டியே... போயீட்டியே...ஏ...ராசா...போயீட்டியே...இனி எங்கள் சீந்த நாதி இருக்கா. ஏ...ராசா...’ என மாய்ந்து மாய்ந்து கத்தினர். ஒருத்தரை விலக்கி ஒருத்தர் போய் மடியிலே தூக்கிவைத்துக்கொண்டு கதறினர். கதறலின் உக்கிரம் அங்கு இருந்த மனிதர்கள் எல்லோரையும் கண்ணீரைக் கொட்ட வைத்தது; முதலில் அருவருப்பாக உணர்ந்தவர்கள் நேரம் ஆக ஆக உடைந்து அழுதனர். மதமும் சம்பிரதாயமும் கண்ணீருக்குள் மூழ்கிப் புதைந்தன. முகத்தோடு முகமாக இறுகப்பிடித்து அழுத பெண்களிடமிருந்து அவர் முகத்தைப் பிரித்து எடுப்பது முடியாத காரியமாக இருந்தது. அவர்கள் வருவது வரை தாரைதாரையாக அழுதுகொண்டிருந்தத மேரி இந்தக் கதறலைக் கேட்டபின் உறைந்துபோய் நின்றாள். மாறி மாறி மடிமேல் கிடத்தி அழுது துடித்த பெண்களின் பேரன்பு அவளை அதிர்ச்சியடையச் செய்தது. அவள் கதறலின் பேரலையால் தூக்கி வீசப்பட்டிருந்தாள். ஆண்கள் எல்லோரும் வீட்டுக்குள் எட்டி எட்டிப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தனர். திடீர் திடீரென வெளியில் ஆண்கள் தலையில் அடித்துக்கொண்டு அழும் சத்தம் கேட்டது. உள்ளேயிருந்த மேரியால் வெளியில் என்ன நடக்கிறதென்றே புரிந்துகொள்ள முடியவில்லை. அவளால் உள்ளே நடப்பதையே புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆங்கனின் குரலை மட்டும் அவ்வப்பொழுது அவளால் உணர முடிந்தது. நேரம் ஆக ஆக அழுகையும் துக்கமும் பெருக்கெடுத்தபடி இருந்தது. பசுமலையின் வளாகத்தில் இருந்த யாராலும் அங்கு நடப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்களை சமாதானப்படுத்தி விலக்கி ஒதுங்க வைக்கும் தைரியம் அங்கு யாருக்கும் இல்லை. இந்தத் துயர் மிகுந்த ஒப்பாரிகளுக்கு இடையில் பாடப்பட்ட கல்லறைப் பாடல்கள் சூறாவளியில் மறைந்தொழிந்த சுடர்போல் ஆனது. கட்டற்ற பேரன்பு கண்ணீரைக் கொட்டிக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

கழுவன் கூட்டத்தின் பனைமரத்தான் வகையறாவின் பெண்வழி வாரிசான பொன்னாங்கனைத் தாதனூருக்குத் தூக்கிப்போக அவர்கள் முடிவெடுத்தபோது சபை நிர்வாகம் நடுங்கிப்போனது. அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பெரிய மனிதர்கள் எல்லாம் பேசிப்

பார்த்தனர். ‘எங்க பிள்ளய எங்கிட்ட கொடுத்திருங்க சாமீ...’ என்று சொல்லிக் கதறினர். பிரச்சனையை எப்படிக் கையாள்வது என்றே தெரியவில்லை. கடைசியில் ஆங்கனைக் கூப்பிட்டு மேரியின் மூலம் சொல்ல வைத்தனர். ‘தங்கச்சீ...நீ சொன்ன பெறகு நாங்க என்னம்மா செய்யப்போறோம்’ என்று சொல்லி கடைசி ஆசையையும் தாதனூர் காவு கொடுத்தது.

நீண்ட நேரம் கழித்து உடலைப் பெட்டிக்குள் வைத்து வீட்டை விட்டு வெளியே தூக்கும்பொழுது கூடியிருந்த பெண்கள் எல்லாம் மேரியைக் கட்டிப்பிடித்து கதறி அழுதனர். அவள் சிலையென அப்படியே நின்றிருந்தாள். அவர்கள் சிந்திய கண்ணீரின் சூடு அவள் உயிர்வரை சுட்டது.

அதுவரை அவள் உணர்ந்திராத ஒரு டேவிட்டை அன்று அவள் உணர்ந்தாள். பெட்டியை மூடிக் குழியிலே இறக்கியிருந்தனர். மண்ணில் இருந்து வந்தவன் மண்ணுக்குள் போவதாகச் சொல்லி மண்ணை அள்ளிப்போட்டனர். மேரி அவன் பிறந்த மண்ணை நினைவின் வழியே அள்ளிக்கொண்டு வீடு திரும்பினாள்.

இழப்பின் ஆழத்திலிருந்து விடுபட வீடு பெரும் முயற்சி செய்து கொண்டிருந்தது. நாட்கள் நகர முடியாமல் தேங்கி நின்றதிலிருந்து கொஞ்சம் இலகுவாயின. பத்து நாள் கடந்தது. அவ்வப்பொழுது திடீர் திடீரெனத் தேம்பி அழும் ஜோசப்பை சமாதானப்படுத்தியபடி இருந்த மேரி அழுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. கடைசி நாளன்று அவள் பார்த்த டேவிட்டின் உலகம் அவளை உறையவைத்திருந்தது. அந்த அலறின் சத்தம் அவள் காதுகளிலிருந்து அகலவில்லை. மீள முடியாத பேரிழப்பை அவள் உணர்ந்தபடி இருந்தாள். டேவிட் மீதான வாஞ்சை நினைவின் வழியே பெருகி ஓடியது. திடீரென ஞாபகம் வந்தவளாய் எழுந்துபோய் அவரது டைரியைத் தேட முயற்சித்தாள். அவரது அறையில் புத்தகங்களுக்கு அடியில் அது இருந்தது. வேகமாக எடுத்துப்புரட்ட ஆரம்பித்தாள். முன்பு போல பக்கத்துக்குப் பக்கமெல்லாம் அதில் எழுதியிருக்க வில்லை. மாதத்திற்கு ஒன்றோ இரண்டோ தாள்களில்தான் எழுதியிருந்தது. ஒவ்வொரு பக்கமாய் புரட்டிப் படிக்க ஆரம்பித்தாள். அவரது எழுத்துக்களை கண்கள் நடுங்கியபடி வாசித்தன.

**ஜனவரி 21**

ஒரேப் மலை அருகிலுள்ள பாலைவனத்தில் எரிந்து கொண்டிருக்கிற, ஆனால் கருகிப்போகாத முட்புதருக்குள்ளிலிருந்து மோஷேவுக்கு காட்சியளித்தாரே கடவுள், எரியும் ஜுவாலைகளுக்கு நடுவில் வளைந்தாடும் தளிர்களின் வழியே குரல்கள் வெளிவந்ததே ‘நான் உன் முன்னோர்களின் கடவுள். அபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபுவின் கடவுள்’ என்று... அதே போல்தான் நினைவுகளின் வழியே எரிந்துகொண்டிருக்கும் பனைமரத்திலிருந்து என் தாய்வழி உறவுகள் தங்களின் கடவுளைத் தரிசிக்கின்றனர். திசையெல்லாம் கிளை பரப்பி நிற்கும் ஆல மரத்திற்கு உள்ளிருந்து தாதனூர்க் காரர்கள் எல்லோரும் தங்களது இறைவனை தரிசிக்கின்றனர். ‘கடவுளின் பெயரென்ன?’ என்று மோஷே கேட்டதற்கு ‘எதுவாக இருக்கிறேனோ அதுவே நான்’ என்று கடவுள் கூறினார். பனைமரத்தானையும் ஆலமரத்தடியையும் அவர்கள்

வணங்குவதற்கு நம்மிலிருந்தே நாம் அர்த்தம் கொள்ளமுடியும். ஆனால் இதனை மேரியிடம் எத்தனை முறை சொன்னாலும் அவளால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

வற்றாத அன்பும் கருணையுமே கடவுளை நினைவுபடுத்துபவை. அது வடிவமற்றது. உருவமற்றது, வடிவத்தையும் உருவத்தையும் கழித்துவிட்டால் அவர்கள் காட்டும் அன்பையும் கருணையையும் அள்ளிப் பருக முடியாது.

என் அன்பு மனையாளே, ஞானம் கூப்பிடுகிறதில்லையோ? புத்தி சத்தமிடுகிறதில்லையோ?

**பிப்ரவரி 3**

எத்தனையோ வருடங்களுப்பின் இன்று ஐசக்கைப் பார்த்தேன். அவனைப் பார்த்ததிலிருந்து மாணவப் பருவ நினைவுகள்தான் வந்துகொண்டே இருக்கின்றன. இப்பொழுதும் அதே சேட்டைகள் இருக்கிறதா! என்று கேட்டதற்கு, அதெல்லாம் நினைவில் இருக்கிறதா? என்று கேட்டான். அவன் கேள்வியே அவனிடம் ஏற்பட்ட மாற்றங்களை உணர்த்துவதாக இருந்தது. எவ்வளவோ விஷயங்களை இந்தச் சந்திப்பு கிளறிவிட்டது. பள்ளி வளாகத்தில் அப்போதிருந்த சூழலை இப்பொழுதுள்ள சூழலோடு ஒப்பிட்டே பார்க்க முடியாது. எல்லோருடனும் சேர்ந்து அவன் உட்காரவே கூடாது என்று சில பெற்றோர்கள் வந்து கலகம் செய்ததால் அவனும் இன்னும் ஒருசில மாணவர்களும் சிரமங்களை சந்திக்கவேண்டியதாயிற்று. மேரி அனுபவித்த அனைத்துப் பிரச்சனைகளையும் அவனும் அனுபவித்தான். ஆனால் கிறஸ் தவமும் கல்வியும் அவனை இன்று இந்த நிலைக்கு முன்னேற்றியுள்ளது.

அரசு தலைமைச் செயலருக்கு அவன் அதிகாரியாக இவ்வளவு முக்கியப் பிரிவில் இருப்பான் என்று யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. நல்லவேளையாக கர்த்தர் அவனை மீண்டும் என் கண்களுக்குக் காட்டினார். திருமண வீட்டின் சத்தங்களுக்கு நடுவில் அவனிடம் தாதனூரின் விஷயங்கள் முழுவதையும் தெரிவித்துள்ளேன். அங்கு நடக்கும் கொடுமைகளைப்பற்றிச் சொன்னபோது அவனால் நம்பமுடியவில்லை. முக்கியமானவர்களை எல்லாம் கைகால்களில் விலங்கிட்டு கூட்டம் கூட்டமாக ஐந்து முறை வெளியேற்றிக் கொண்டுபோய் உள்ளனர். அவர்கள் எல்லாம் எங்கு கொண்டுபோகப்பட்டனர் என்பது இதுவரை தெரியவில்லை என்றேன்.

‘உன்னால் எதையாவது தெரிந்து சொல்லமுடியுமா?’ என்று கேட்டதற்கு ஒரு சிறு வாய்ப்பு இருக்கிறது. தெரிந்தால் உடனடியாக கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு பிடி கிடைத்திருக்கிறது. நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.

**பிப்ரவரி 11**

இன்று அரசிடமிருந்து மிஷனுக்கு ஒரு கடிதம் வந்தது. ரெவ். சாட்விக் என்னை அழைத்து கடிதத்தை காண்பித்தார். அதில் குற்றப்பரம்பரையினரைச் சீர்திருத்துவதற்கு முக்கியமான விஷயம் கல்வி. எனவே பள்ளி செல்லும் வயதுள்ள அத்தனை குழந்தைகளையும்

பெற்றோரிடமிருந்து பிரித்து அவர்களுக்கென்று தனியான பள்ளி ஒன்று நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதனை உங்கள் மிஷன் சார்பில் நடத்த முடியுமா? என்று கேட்டு எழுதியிருந்தனர். ஆனால் அதிலே ஒரு குறிப்பு 'அந்தப் பள்ளியில் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர் நடைமுறையில் போலீஸ் சூப்பிரண்டன்டென்ட் நியமிப்பவராகவே இருப்பார்' என்று இருந்தது.

கல்வியும் அதன் மூலம் சீர்திருத்தமும்தான் நோக்கம் என்றிருந்தால் அங்கு போலீசுக்கு என்ன வேலை? எனவே இந்த விதியை ஏற்கமுடியாது. ஆசிரியர் மிஷனால்தான் நியமிக்கப்படுவார். மிஷன்தான் பள்ளியை நடத்தும். அரசு அதிகாரிகள் அவ்வப்பொழுது வந்து கண்காணித்துக் கொள்ளலாம். அந்தத் தன்மையில் நாங்கள் அந்தப் பள்ளியை நடத்தத் தயாராக இருக்கிறோம் என பதில் கடிதம் அனுப்பலாம் என நான் தெரிவித்தேன். சாட்விக்கும் அதே கருத்துடன்தான் இருந்தார் என்பது பின்னர் தெரிந்தது. உடனடியாகப் பதில் கடிதத்தை தயார் செய்தார். பசுமலையின் மேற்கே உள்ள மிகப்பெரிய வளாகத்தை அந்தப் பள்ளிக்குப் பயன்படுத்த நாங்கள் தயாராக உள்ளோம் என்றும் எழுதியுள்ளார்.

பதில் எப்படி வருமென்று ஊகிக்கமுடியவில்லை. தாதனூரின் குழந்தைச்செல்வங்கள் இந்த வளாகத்திலேயே வளர கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**பிப்ரவரி 27**

இன்று காலை ஆங்கனும் கழுவனும் வந்து என்னைச் சந்தித்தனர். அவர்களின் முகத்தைப் பார்த்துப் பேசக்கூட தகுதியற்றவனாக என்னை நான் உணருகிறேன். குற்ற உணர்வு என்னைக் கொல்கிறது. இன்றோடு எல்லோருடைய ரேகையையும் வெள்ளைக்காரன் எடுத்துவிட்டான் என்ற வார்த்தையை அவன் சொன்னபோது என் உடலெல்லாம் நடுங்கியது. –எங்களை என்னதான் செய்ய நினைக்கிறார்கள்?– என்று அவன் கேட்டபொழுது என்ன பதில் சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. உண்மையில் நான் தான் தண்டிக்கப்படவேண்டியவன். நியாயத்தின் தராசில் ஏறி நிற்கத் தகுதியற்றவன். எல்லா சித்திரவதைகளையும் அனுபவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என் செயல்களால் வெட்கித் தலை குனிகிறேன். தாதனூரில் இவ்வளவு பேர் ரத்தம் சிந்துவதற்கு மூலகாரணமாக நான் இருந்திருக்கிறேன். நான்தான் முதன்முதலில் தாதனூரின் முழு எண்ணிக்கையையும் பலத்தையும் பிரிட்டிஷாருக்கு தெரிவித்தேன். கர்த்தரின் பெயரால் கருப்பனைக் காட்டிக் கொடுத்தேன்.

என் குறிப்பின் அடிப்படையிலேயே அவர்கள் மூக்கனைத் தேர்வு செய்து சுட்டுக்கொன்றார்கள். அப்பொழுதே, வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு புறப்பட்டுப்போய் நாண்டுகொண்டு செத்துப்போன யூதாசைப் போல நானும் செத்திருக்க வேண்டும். என் கோழைத்தனம் அந்த மக்களுக்கு எதையாவது கைமாறு செய்துவிடலாம் என்ற நப்பாசையின் வழியே என்னை சமாதானப்படுத்தியது.

'ஒரு மனிதனை சாகும்படி அடித்தவன் நிச்சயம் கொலை செய்யப்படக் கடவன்' என்ற வார்த்தையின் வழியே நான் என் செயல்களுக்கான நியாயத்தைப் பெற்றுள்ளேன். ஆனால் என்ன செய்தும் என் வலி மலையின் மேல் இருக்கும் பட்டணம் போல மறையாமல் இருக்கிறது.

**மார்ச் 19**

நண்பன் ஐசக்கின் கடிதம் இன்று கிடைத்தது. நான் எதிர்பார்த்ததை விட கூடுதல் அதிர்ச்சியைத்தான் அந்தக் கடிதம் ஏற்படுத்தியது. தாதனூர்க்காரர்களுக்காக அரசின் பலிசீலனையில் உள்ள திட்டங்களை அவர் கூறியுள்ளார்.

1. மதுரை மில் திட்டம் (கம்பெனி டைரக்டர்கள் இதனை ஏற்கவில்லை. ஆதலால் கைவிடப்படுகிறது)

2. கண்ணன் தேவன் டீ எஸ்டேட்.

3. பழநி மலை காலனியாக்கம்.

4. சிலோன் தொழிலாளர் கமிஷன் (சிலோன் எஸ்டேட்டுகளுக்கு).

5. ராணுவத்தில் சேர்ப்பது.

6. அஸ்ஸாமுக்கு ஆள் எடுத்தல்.

இந்தத் திட்டங்களில் போடியிலிருந்து 18 மைல் தொலைவில் உள்ள கண்ணன் தேவன் டீ எஸ்டேட் பணிகளுக்கு அனுப்ப அதிக வாய்ப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் என்கிறான் ஐசக்.

உண்மையில் மதுரை மில் திட்டம் சிறந்த ஒன்றாக இருக்கும். ஏற்கனவே அங்கு கிறித்தவ திருச்சபை ஒன்று நிறையப் பணியாற்றி வருகிறது. பொன்னகரத்தில் பிரசவத்திற்கான மருத்துவமனை உள்ளிட்ட பலவற்றைச் செய்து செல்வாக்கு பெற்றுள்ளது. அவர்களின் பொறுப்பில் குடும்பங்களை அமர்த்தி மதுரை மில்லில் பணியை உறுதிப்படுத்தினால் அது தாதனூருக்கு மிக நல்ல திட்டமாக அமையும். டைரக்டர்கள் ஏற்கவில்லை என்று சொல்லும் காரணம் உண்மையா என்று தெரியவில்லை. போலீஸ் நிர்வாகத்தின் பதில் டைரக்டர்களின் பதிலாக மாறியிருக்க வாய்ப்பிருக்கிறது. அழித்தொழிக்க நினைப்பவர்கள் சீர்திருத்தத்தின் பெயரால் அதனைச் செய்கிறார்கள்.

**மார்ச் 23**

குற்றப் பரம்பரையினரின் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம் நடத்தும் வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லையென்று ரெவ். சாட்விக் இன்று தெரிவித்தார். தாதனூருக்கு மிக அருகாமையில் பசுமலை இருப்பதால் இம்முடிவுக்கு வரவேண்டியதாயிற்று என்று அரசு தெரிவித்துள்ளது. உண்மையான காரணம் அதுவல்ல. போலீஸ் சூப்பிரண்டன்டென்ட் நியமிப்பவராக பள்ளி ஆசிரியர் இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனாலேயே எங்களிடமிருந்து இந்த வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு சேர்த்து இன்னொரு கடிதமும் வந்துள்ளது. கூடலூருக்கு அருகில் கள்ளர்களுக்கான சீர்திருத்த முகாம் ஒன்று அமைக்கப்பட உள்ளதாகவும் அந்த முகாமுக்கு ஒரு மிஷனரி தேவை என்றும் அவர் நடைமுறையில் போலீஸ் சூப்பிரண்டன்டென்ட் நியமித்தவராக இருப்பார் என்றும், முகாமின் சுற்றுவட்டாரத்தில் அவரது பணிக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் மதப்பிரச்சாரத்தில் ஈடுபட அரசுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் கோடை காலத்தில் கொடைக்கானலில் ஆறு வார ஓய்வு அவருக்கு அனுமதிக்கப்படும்

என்றும், அந்த அடிப்படையில் ஒருவரைத் தாங்கள் தரமுடியுமா என்று கேட்டிருந்தனர்.

இதற்கு அனுப்பவேண்டிய தேவையில்லை என்ற எனது கருத்தைத் தெரிவித்து வந்துவிட்டேன். மிஷன் நிர்வாகம் என்ன முடிவெடுக்கப்போகிறதென்று தெரியவில்லை.

**ஏப்ரல் 10**

ஐசக்கிடமிருந்து இன்று வந்துள்ள கடிதம் மேலும் பல விபரங்களை தெரிவிக்கிறது. கள்ளர்கள் வீரமானவர்கள் என்ற காரணத்துக்காக ராணுவத்திற்கு எடுப்பது என்ற யோசனை, அவர்கள் ஒழுங்கிற்கு கட்டுப்பட்டவர்களா? என்ற சந்தேகம் ஏற்பட்டு ராணுவத்தில் சோதனை முயற்சி செய்ய இயலாது என்ற முடிவுக்கு வந்து கைவிடப்பட்டுள்ளது. அதே போல அஸ்ஸாமுக்கு ஆள் எடுத்தால் என்பது, அஸ்ஸாம் தொழிலாளர் சட்டம் மதுரை மாவட்டத்திற்குப் பொருந்தாது என்பதால் அது கைவிடப்படுவதாகத் தெரிகிறது.

எனவே சிலோன், கண்ணன் தேவன் டீ எஸ்டேட், பழநி மலை காலனியாக்கம் ஆகியவற்றிற்குதான் தாதனூரிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும்.

விரைவில் ஐசக்கிடமிருந்து உறுதியான தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

**மே 20**

எதிர்பார்த்துக் காத்திருந்த தகவலோடு இன்று ஐசக்கின் கடிதம் வந்தது. மேற்கு மலையடிவாரத்தில் கூடலூரிலிருந்து சில மைல் தள்ளி பாரஸ்ட்டுக்கு சொந்தமான 1700 ஏக்கர் பெறப்பட்டு அங்கு கட்டாயக் குடியேற்ற முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் ஆண், பெண், குழந்தைகள் என எல்லாம் சேர்த்து 34 பேர் என்றும், 14 பேர் கொண்ட போலீஸ் படை ஒன்று இன்ஸ்பெக்டர் ஜி.எஸ். கூப்பர் தலைமையில் முகாமை நிர்வகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மற்றக் குழுக்களைப் பற்றி தகவல் ஒன்றும் தெரியவில்லை. என்று கூறியிருக்கிறார்.

இந்த முகாமுக்காகத்தான் மிஷனரி ஒருவரைக் கேட்டு அரசிடம் இருந்து கடிதம் வந்தது என்று இப்பொழுதுதான் தெரிகிறது. சாட்விக் என்ன பதில் எழுதினார் என்று தெரிந்துகொள்ள அவரை சந்திக்கச் சென்றேன். ஆனால் அவரோ வெளியூர் சென்றுவிட்டார். முடிவு தெரிந்து கொள்ள இன்னும் சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டியதிருக்கிறது.

**மே 27**

தகப்பனால் சாபமிடப்பட்ட கானானைப்போல அடிமைகளுக்கு அடிமையாய் இருக்கிறார்கள் என் சகோதரர்கள்.

அடிக்கடி வந்து பார்க்கவேண்டாமென்று ஆங்கனிடம் சொல்லி அனுப்பினாலும் நினைவுகளின் வழியே வேதனையைச் சுமந்தபடி இருக்கிறேன்.

நான் சொல்வதற்கும் செய்வதற்கும் இனி என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனாலும் இன்னும் அவர்கள் என்னை மட்டுமே

நம்பியிருக்கிறார்கள்.

எதையாவது செய்யவேண்டும். கலப்பையின் மேல் கையை வைத்துவிட்டு பின்னிட்டுப் பார்க்கக்கூடாது.

**ஜூன் 1**

இப்படியொரு அபத்தமான முடிவை ரெவ். சாட்விக் எப்படி எடுத்தார் என்று தெரியவில்லை. கூடலூர் முகாமுக்கு ஒரு மிஷனரியை அனுப்பித்தருவதாகக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாம். இது என்ன அநியாயம்? ஜெபவீட்டை கள்ளர் குகையாக்கியதைப் போல இவர்கள் கிறிஸ்தவத்தை அடக்குமுறையின் கைவாளாக்க நினைக்கிறார்கள்.

கிறிஸ்தவம் உப்பு போல. உணவில் கூடவோ குறையவோ கூடாது. அளவோடு ஊட்டினால் இரத்தத்தோடு கலக்கும். அப்படியொரு சீர்த்திருத்தத்திற்கு கிறிஸ்துவத்தை பயன்படுத்துவதை நான் ஏற்கிறேன். ஆனால் இவர்கள் சித்ரவதைக்குப் பக்கவாத்தியமாக கிறிஸ்தவத்தை மாற்றுகிறார்கள். இதன் மூலம் மனிதர்களின் இதயத்தை ஒருபோதும் வெல்ல முடியாது. அவர்களது தேவைக்கும் நாம் சொல்லப்போகும் வாக்கியங்களுக்கும் இடையில் காத தூரம் இடைவெளி உள்ளது. போதகரின் மேலங்கிக்கும், போலீஸாரின் காக்கி நிற உடைக்கும் உள்ள வித்தியாசம் காண்பவரின் கண்களுக்குத் தெரியாமல் போவது மட்டும்தான் இதனால் நடக்கும்.

இருதயத்திற்கு கேட்பதுபோல பேசுவதை விட்டுவிட்டு காதைப்பார்த்து பேசுவது போதகரின் வேலையல்ல.

**ஜூன் 23**

கட்டாயக் குடியேற்ற முகாமில் உள்ள ஒவ்வொருவருக்கும் தினக்கூலியும், ரேசனில் பொருட்களும் தரப்படுவதாகவும் ஓராண்டுக்குப் பின் சில ஏக்கர் நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கி கொடுப்பதன் மூலம் முழுமையான விவசாயிகளாக அவர்கள் மாற்ற முடியும் என்றும் அந்த அடிப்படையிலேயே இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஐசக் கூறுகிறான்.

இவனால் முழு உண்மையைக் கண்டறிய முடியவில்லை என்று கருதுகிறேன். தாதனூரிலிருந்து ஒரு குழு மட்டும்தான் அங்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அந்த சிலருக்காகவா 1700 ஏக்கர்? நிச்சயமாக இல்லை. ஒரு பெருந்திட்டம் ஒன்று இத்தோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல, இவர்களை விவசாயிகளாக ஆக்கவேண்டுமென்றால் தாதனூரின் விவசாயப் பிரச்சனையை அல்லவா தீர்க்க வேண்டும். பத்து வருடத்திற்கு ஒருமுறை கூட நிரம்பாத அந்தக் கண்மாய்க்கு பாசனக் கால்வாயை கொண்டு செல்லத் திட்டமிட்டிருக்க வேண்டும். மேலூர் கள்ளர்கள் தண்ணீர் வந்தவுடன் விவசாயத்தோடு கலந்ததைப் போல தாதனூரும் கலந்திருக்கும்மல்லவா! உண்மையில் தாதனூர் குறித்து இவர்களுக்குள் இருக்கும் எரிச்சல் அவர்களை மதுரையை அண்ட விடாத தூரத்திற்கு அப்பால் கொண்டுபோகச் செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இத்திட்டத்திற்குப் பின்னால் வேறு ஒரு பெருந்திட்டம் உண்டு என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆனால் இதை ஐசக்கிற்கு

எப்படிப் புரிய வைப்பதென்று தெரியவில்லை.

**செப்டம்பர் 3**

மதுரை மாவட்ட சுகாதார அதிகாரி சிவில் சர்ஜன் மாணிக்க ராஜை நேற்று சந்திக்க நேர்ந்தது. நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் போன வாரம் கூடலூர் பகுதிக்குப் போய்வந்ததாகத் தெரிவித்தார். அவரிடம் கேட்க நிறைய விஷயங்கள் இருப்பதாக முடிவு செய்து ஒவ்வொன்றாகக் கேட்க ஆரம்பித்தேன். மேற்கு மலையில் சென்ற மாதமே பருவமழை துவங்கிவிட்டதால் நிலைமை எதிர்பார்த்ததைவிட வேகமாக மோசமாகிவிட்டது. மலேரியாவின் பரவல் மிக அதிகமாக உள்ளது. சமீபத்தில் கூடலூர் யூனியனில் இறந்த 97 பேரில் 92 பேர் காய்ச்சல் கண்டு இறந்துள்ளனர். அதனால் அங்கு மலேரியா தடுப்பு நடவடிக்கை பெரிய அளவுக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றார். என்ன மாதிரியான நடவடிக்கைகள் என்று கேட்டேன். ‘கிணறு களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். நீருற்றுகளின் அருகே உள்ள புதர்களை அப்புறப்படுத்த வேண்டும். குளங்களைச் சுற்றியுள்ள செடி கொடிகளையெல்லாம் அகற்ற வேண்டும். மக்கள் வசிக்கும் பகுதியை விட்டு ஒரு மைல் தள்ளித்தான் வயல்கள் இருக்கவேண்டும். மழைநீரைத் தேங்கவிடாமல் பெரியாற்றுக்குத் திருப்பவேண்டும். காடுகளை அழிப்பது மிக முக்கியமானதொரு மலேரியா எதிர்ப்பு நடவடிக்கை. அடர்ந்த காடுகளில் கொசுக்கள் அதிகமாக தங்குகின்றன. மேலும் காடுகளில் ஆங்காங்கு தேங்கும் நீரில் கொசுக்கள் அதிகமாகத் உற்பத்தியாகின்றன. எனவே காடுகளை ஒழிப்பது மிகவும் அவசியம். வசதியுள்ளோருக்கு கொசுவலை, பாதிக்கபட்டோருக்கு மலேரியாவுக்கான மருந்து’ என வரிசையாக அவர் குறிப்பிட்டார்.

எனது சந்தேகம் அனேகமாக உறுதியாகி விட்டது. கூடலூருக்கு அடுத்து இருக்கிற மலைத்தொடரின் கீழ்ப்பகுதியில் உள்ள சமவெளிக்காடுகளை அழிப்பதற்காகத்தான் பாரஸ்ட்டிடமிருந்து 1700 ஏக்கர் பெறப்பட்டிருக்க வேண்டும். குற்றவாளிகள் என தீர்மானிக்கப்படுகிற எல்லோரையும் மலைத்தோட்டத் தொழிலாளர்களாக மாற்றுவதாகச் சொல்லி அங்கு அனுப்புகிற பெருந்திட்டம் ஒன்று இருக்க வேண்டும். ஒரே கல்லில் இரண்டு கனிகளை அடிப்பதைப்போல மலேரியா ஒழிப்பு நடவடிக்கையையும், குற்றவாளிகள் ஒழிப்பு நவடிக்கையையும் இணைத்து திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.

நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது.

**செப்டம்பர் 10**

ஐசக்கின் கடிதம் இன்று கிடைத்தது. கூடலூர் முகாமை மருத்துவக் காரணங்களுக்காக காலி செய்ய வேண்டுமென்று மதுரை மாவட்ட கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அங்கே மீதுமுள்ள போலீஸார்கள் வெளியேறி விட்டதாகவும் தெரிவித்துள்ளார். முகாமில் இருந்தவர்களின் நிலைமையைப் பற்றி குறிப்புகள் இல்லை. அதிலிருந்து அவர்கள் என்னவாகி இருப்பார்கள் என்று யூகித்துக் கொள்ளலாம்.

**செப்டம்பர் 12**

என் கர்த்தாவே, நான் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன். என் நாட்கள் புகையைப் போல் அழிந்து மறைகிறது. என்

எலும்புகள் கொள்ளிக்கட்டைகளைப் போல எரிகிறது. வனாந்தர நாரைக்கு ஒப்பானேன். சாம்பலை அப்பமாகப் புசித்து என் பானங்களைக் கண்ணீரோடு கலக்கிறேன். என் இருதயம் புல்லைப்போல வெட்டுண்டு உலர்ந்துபோய் கிடக்கிறது. நான் என்ன செய்ய?

செப்டம்பர் 14க்குப்பின் ஒரு மாதமாக எதுவும் எழுதவில்லை. ஒவ்வொரு பக்கமாகத் திருப்பியபடி கடைசிப் பக்கம் வரை புரட்டிக்கொண்டு வந்தாள். அதுவரை சத்தம் இல்லாமல் வழிந்தோடிக்கொண்டிருந்த கண்ணீர் அதன்பின் வீடு நடுங்குவதுபோல் வெடித்த குரலோடு வெளிவந்தது.

தாதனூர்க்காரர்கள் யாரோ துக்கம் கேட்டுவந்து அழுகிறார்கள் என பக்கத்து வீட்டுக்காரர்கள் நினைத்திருப்பார்கள்.

*

# 114

**டேவிட் சாம்ராஜின் மரணத்தோடு ஊரின் குரல்வளை அறுபட்டுப்** போனது. அதன்பின் நகர்ந்த நாட்கள் அதுவாக நகர்ந்துபோயின. ‘யார் வீட்டில் எழவு நின்னா என்ன? உழவு நின்னா என்ன?’ என்ற மனோநிலையோடுதான் ஊர் இருந்தது. மாதங்கள் மூன்று போனாலும் துயரத்திலிருந்து மீள வழி தெரியவில்லை. வாழ்வு எல்லாப் பகுதியிலும் கழுத்தை நெரிப்பதாக இருந்தது. நடக்கும் பாதை எல்லாம் நெருஞ்சி முட்கள் கால்களைக் குத்திக் குதறின. மேலெல்லாம் ரணமாகி விசில் சத்தத்திற்கு இடையில் வாழ முயற்சித்து வாழ முடியாமல் வீழ்ந்தபடி இருந்தது. சோளக்கருதைப் பிடுங்கி அந்நேரமே வேகவைத்துத் தின்றனர். வாழைக்குலையைப் பிடுங்கி வந்து அவித்துத் தின்றனர். இதற்கெல்லாம் பகல் பயன்பட ஆரம்பித்தது. ஆரம்பக் கட்டத்தை விட்டு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் பலம் பகலுக்குக் கிடையாது. இது இரவின் மனநிலையில் கொஞ்சம் உயிர் வாழ்ந்து அணைந்து விடுகிறது.

போலிஸ் சார்ஜன்ட்டுகளின் குதிரைச்சத்தம் இரவெல்லாம் ஊரை ஓட வைத்தபடி இருந்தது. ஓடும் கால்கள் நாட்கள் ஆக ஆக களவின் நிதானத்தை இழக்க ஆரம்பித்தன. மூர்க்கம் அதிகரித்தது. காவலுக்கும் களவுக்குமான நியாயங்களை வாழ்க்கை பிடுங்கி எறிந்தது. குற்றுயிரும் குலையுயிருமாக எல்லாம் மாறியது. ஊர் தனக்கான இரவையும் பகலையும் இழந்தது. ‘பரம்பரை குணத்தையும், சூழலையும்’ வென்றே தீருவது என்ற பிரிட்டிஷாரின் முடிவு அவர்களுக்கு வெற்றியைத் தந்த வண்ணம் இருந்தது.

முன்பு போல இரவு ஆஜர் பார்க்க வரும் போலிசார் மிகுந்த தயாரிப்புடனும், முஸ்தீபுடனும் வருவதில்லை. சர்வசாதாரணமாக வந்து ஆஜர் பார்த்து, தண்டனை வழங்கிவிட்டுப் போயினர். ஆஜர் முகாமுக்கு எல்லாம் அடிபணிந்து நின்றது; ஊரின் புதைமேட்டின் மேல் கட்டப்பட்டதுபோல் அது காட்சியளித்தது.

*

நடு ஆஜர் முடிந்தவுடன் எல்லாத் திசைகளிலும் ஆட்கள் ஓடினர். மழைக்காலம் துவங்கிவிட்டதால் சேறும் சகதியுமாக இருந்தது. சற்று நேரத்திற்கு முன்பு பெய்த மழையால் தண்ணீர் எங்கும் தேங்கிக் கிடந்தது. நாகமலைக் கணவாயை நோக்கி ஓடும் கொத்தோடு சேர்ந்து ஆங்கனும் அங்கு ஓடினான். முன்பெல்லாம் எதுவொன்றானாலும் போதகருடன் கலந்து பேச ஆங்கன் வேண்டுமாதலால் ஆஜர்களுக்கு இடையில் நடக்கும் களவுக்கு ஆங்கன் போகவேண்டாமென்று ஊர் முடிவு செய்திருந்தது. ஆனால் இப்போது அதற்கு அவசியமே இல்லாமல் ஆகிவிட்டது. ஓடித் தவித்தவர்கள் கணவாயில் வந்து நின்றனர். மழை குளிரப்பெய்திருந்ததால் வண்டிகள் எதுவும் வரவில்லை. பாதைகள் ஊடறுக்கும் முக்கில் இருளை ஊடறுத்து சக்கரங்கள் வருவதற்கான அறிகுறியே தெரியவில்லை. சரி, இன்னும் கொஞ்சம் நேரம் பார்ப்போம்... பார்ப்போம் என்று வழக்கத்தைவிட நீண்டநேரம் காத்திருந்தார்கள். வேறு வழியேயில்லாமல் எழுந்து ஊரை நோக்கி ஓட ஆரம்பித்தனர். ‘ஏய்ரொம்ப நேரமாயிப் போச்சப்பா’ என்றான் முன்னால் போன விருமன். கால்களின் வேகம் இருமடங்காகியது. தண்ணீரும் சக்தியும் இருள் எங்கும் தெறிக்க ஓடிவந்தனர். இளவட்டங்களுடன் ஈடு கொடுத்து ஓடி வந்த ஆங்கன் இளைத்து மூச்சு வாங்கிப் பின்னுக்குப் போனான். கொஞ்ச தூரம் ஓடியபின் அதனைக் கவனித்த கழுவன் நின்று ஆங்கனின் அருகில் வந்தான். ‘நெஞ்சு வலிக்குதப்பா...’ என்று நெஞ்சைப் பிடித்தபடி குத்த வைத்து உட்கார்ந்தான். மேலெல்லாம் வியர்த்துக்கொட்டியது. மேமூச்சும் கீமூச்சும் வாங்கியது. சிறிதுநேரம் கழித்து ஆங்கனின் கையைக் கழுவன் தோள்பட்டையின் மீது போட்டுக்கொண்டு ஒரு பக்கமாகத் தாங்கிக்கொடுத்து ஓட்டமும் நடையுமாகக் கூட்டி வந்தான். ஆங்கன் பல்லைக் கடித்தபடி எப்படியாவது ஊர் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற வீறாப்போடு வந்து கொண்டிருந்தான். நேரம் ஆக ஆக கால்களை நகட்டமுடியாதபடி ஆனது. ஓட்டம் நின்று சிறு நடையானது. கழுவன் தோள்பட்டையால் தூக்கிக்கொடுத்து, தூக்கிக்கொடுத்து கூட்டி வந்தான். பெரும் சிரமப்பட்டு ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தனர். விசில் சத்தம் மலையில் பட்டு எதிரொலித்தது, ‘டேய்... நீ போடா...’ என்றான் ஆங்கன். ‘உன்னய விட்டுட்டு எப்பிடிடா போக’ என்றான் கழுவன். ‘நீயாவது போ...’ என்று மூச்சை இழுத்துக்கத்தினான் ஆங்கன். வேறு வழியின்றி அவனை விட்டுவிட்டு கழுவன் ஓடினான். ஆஜர்பார்த்து முடிப்பதற்குள் போய்சேர்ந்துவிட வேண்டும் என்ற வெறியோடு கால்கள் ஓடின.

சடச்சியின் மடியில் சாய்ந்தபடி ஆங்கன் கண்விழித்துப் பார்த்தான். ஆலமரம் இளங்காற்றால் அவனை தழுவிக்கொடுத்தது. இலைகளின் மேல் இருந்த நீர்த்துளிகள் அவன் உடலெங்கும் சிதறி விழுந்தன. எதிரில் கருப்பன்தனியாளாக நின்றுகொண்டிருந்தான். இவ்வளவு பெரிய ஆலமரத்தடியில் காக்கை, குருவி சத்தம்கூட கேட்கவில்லை. வெளியெல்லாம் சோகம் ததும்பிப்போய் நின்றது. விழுதுக்கு விழுது சாய்ந்து உட்கார்ந்து பொழுதறிந்து போகும் கொத்துக்கள் எதுவும் அங்கு இல்லை. துக்கம் தொண்டையை அடைத்தபடி இருந்த ஆங்கனுக்கு கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. இமையைத் திறக்க புருவத்தை நெரித்து மேலேற்ற முயற்சித்தான், முடியவில்லை. எதிரே அமணமலை

அவனையே பார்த்தபடி இருந்தது. பெருமேட்டு வேம்பின் அடியில் செத்துக்கிடந்த மூக்கனின் ஞாபகம் வந்தது. ஞாபகங்கள் அறுந்து அறுந்து எதை எதையோ கிளறின. சிறுபிராயம் கொப்பளித்து வந்தது. வெயிலில் வியர்த்துவடிய நேமிநாத செட்டி சொன்ன கதைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன. மீண்டும் அவர் வந்து 'இந்த மலையில்தான்டா கழுவேத்துனான்' என்று பதறிப்போய் கத்தினார். திடுக்கிட்ட ஆங்கன் கண்விழித்துப் பார்த்தான். மலை உச்சியில் கழுமரம் நடப்பட்டிருந்தது. ஆனால் அது வெட்டப்பட்ட பெருவிரல் வடிவத்தில் இருந்தது. அமணமலைப் பாறை வரிகளைப் போல ரேகைகொண்ட பெருவிரல். ரேகையில் கருப்பேறுகிறது. முனை ஆசனவாயைத் துளைத்து வெளியேறுவதற்குப் பதில் நகத்தின் கூர்மை கத்தியைப்போல உடலை இரண்டு துண்டாக்கிப் போட்டது. கழுமரத்தை சுற்றி வெள்ளைப் போலிஸ் நின்றுகொண்டிருந்தது. வதங்கிப்போன ஊர் பெரியாம்பிள ஒச்சுவைத்தான் முதலில் தூக்கினர். எத்தனை முறை கைகளையும் கால்களையும் கட்டினாலும் அறுத்து எறிந்தார். கட்டுகள் எதுவும் நிற்கவில்லை. கடைசியில் அவருடைய ரேகைக்குள் இருந்த நரம்பையே உருவி எடுத்து அந்த நார் கொண்டு கட்டித் தூக்கிப்போனார்கள். அவரின் உடலைத்தான் கழுமரம் முதலில் பிளந்து இரண்டாகப் போட்டது. அதன்பிறகு விருமாண்டிப் பெருசைத் தூக்கினார்கள். 'கழுத்தறுத்து கொல்லுங்கடா... கழுமரத்துல ஏத்தாதீங்கடா... கழுத்தறுத்து கொல்லுங்கடா' என்று கத்தியபடியே அவர் போனார். கெடாயன் பெரியாம்பிள யாரையும் தொடவே விடவில்லை. அவராகப் போய் மேலேறி உட்கார்ந்தார். 'திருமல நாக்கருகொடுத்த காவடா...' என்ற வார்த்தையோடு நாக்கு அறுபட்டு விழுந்தது. கழுவாயிலைத் தூக்க முடியாமல் தூக்கிவந்தனர். தூக்கி வரும் பொழுதே அவள் சார்ஜென்ட்டின் சங்கைக் கடித்துத் துப்பினாள். போலிசார் நாய் அடிப்பதைப் போல அடித்து இழுத்துவந்தனர். அரைமயக்கத்தில் இருந்தாலும் அவளை அவ்வளவு சீக்கிரமாக மேலேற்ற முடிய வில்லை. பத்து போலிசார் சேர்ந்து தூக்கிப்போய் கழுமரத்திலே உட்கார வைத்தனர். உடல் இரு கூறாகப் பிளந்து இறங்கியது. வடக்கும் தெக்குமாக முலைகள் சரிந்து ரத்தம் ஆறாக ஓடியது. 'ஆத்தா... ஆத்தா...' என கத்தியபடி இருந்தான் ஆங்கன். ஆலமரத்தடி முழுவதையும் நிரப்பிய ரத்தம் மதுரையை நோக்கி ஆறென ஓடியது. கருத்து ஓடிய ரத்த ஆற்றில் பிடிசெம்பும் செம்பிரம்பும் பட்டயமும் பாதக்கொறடும் காளாஞ்சியும் மிதந்துபோயின. ரத்த ஆற்றின் இரு கரையிலும் மதுரைக்காளியும் குருவாச்சியம்மாளும் தலைவிரிக்கோலமாய் 'அய்யோ... போகுதே!... போகுதே' வென கத்தியபடி ஓடிவந்தனர். மந்தையில் இருந்து கேட்ட குரல்கள் மலையில் பட்டு சன்னமாய் எதிரொலித்தபடி இருந்தன.

... ... ...

நவம்பர் 63

... ... ...

நவம்பர் 114

... ... ...

நவம்பர் 231

... ... ...

நவம்பர் 18

... ... ...

நவம்பர் 165

... ... ...

நவம்பர் 97

... ... ...

நவம்பர் 142

... ... ...

*

ஓ
பட்டசாமி

# 115

**ஆண்டுகள் உருண்டன. தாதனூர் கட்டுப்பட்டு நின்றது. மதுரைக்** காவல் முற்றிலும் அறுபட்டது. சடச்சியின் மக்களைச் சக்கையாகப் பிழிந்து காயப்போட்ட போலிஸ் அடுத்த ஊரை நோக்கி நகர ஆரம்பித்தது. நல்லூர், பூசலப்பட்டி, வீரனூர் ஆகிய மூன்று கிராமங்களிலும் மீதும் குற்றப்பரம்பரையினர் சட்டம் அமலாவதாக அடுத்தடுத்து அரசாணை வெளியானது. காவலுக்கும் களவுக்கும் தாதனூருக்கு அடுத்தபடியாகப் பேர் பெற்ற கிராமமான இவை மூன்றின் மீதும் போலிசின் இரும்புக் கரங்கள் பாய்ந்தன. ஆனால் சட்ட அமலாக்கம் போலிசார் நினைத்ததைப் போல அவ்வளவு சாதாரணமாக இல்லை. முதலில் நல்லூர் கிராமத்தில் பதிவை முடித்துவிட்டு அடுத்து பூசலப்பட்டி, வீரனூருக்குப் போகலாம் என முடிவெடுத்திருந்தனர். அந்த அடிப்படையில் நல்லூரில் தண்டோரா போடப்பட்டது. அதிகாரிகள் வரும் நாளில் வயது வந்த ஆண்கள் எல்லாம் மந்தைக்கு வந்து பதிந்துகொள்ள வேண்டும் என்று நோட்டீஸ் ஒட்டப்பட்டது. ‘நாங்கள் விவசாயம் செய்பவர்கள், காவல் காப்பவர்கள். எங்களை நீங்கள் பதியக்கூடாது’ என்று திருமங்கலம் வக்கீலைப் பிடித்து மனுசெய்து பார்த்தனர். அதனால் எல்லாம் ஆவது ஒன்றுமில்லை என்று தெரிந்துவிட்டது. தெற்கே வில்லிபுத்தூர் வரை காவல் பிடித்திருக்கிற நல்லூர் முடிந்தமட்டும் முட்டிப்பார்ப்பது என்ற முடிவுக்குப்போனது. போலீஸ் வரும் பொழுதெல்லாம் ஆண்கள் யாரும் ஊருக்குள் இருப்பதில்லை. காட்டுப்பக்கமும், கணவாய் பக்கமும் ஓடி மறைந்து கொண்டனர். இன்ஸ்பெக்டர் லோத்தம் தலைமையில் மூன்று முறை வந்த குதிரைப்படை வெறுங்கையோடு திரும்ப வேண்டியதாகி விட்டது. மூன்றாவது முறையாக வந்தபொழுது மந்தைக்கல்லில் ஏறி நின்ற லோத்தம் வெள்ளிக்கிழமை வரை கெடு விதித்து விட்டுப்போனார். நல்லூர் கெடு வைக்கப்பட்ட மூன்று நாளுக்கும் திட்டம் போட்டது. ஆனால் முதல் இரண்டு நாட்கள் எதுவும் கைகூடிவரவில்லை. மூன்றாம் நாள்தான் திட்டத்தைச் செயல்படுத்த முடிந்தது.

திருமங்கலத்தில் இருக்கும் அரசுக் கட்டிடங்கள் அனைத்தும் திருநெல்வேலி செல்லும் ரஸ்தாவின்மேல் வரிசையாக இருந்தன. தாசில்தார் அலுவலகம், அதனை அடுத்து மாஜிஸ்திரேட் கோர்ட், அதனையடுத்து லாக்கப் ஜெயில், அடுத்து அதிகாரிகளின் வீடுகள் என இருந்தன. இதில் தாசில்தார் அலுவலகத்திற்குப் பின்னால் இருந்த இடம் நாற்புறமும் சுற்றுச்சுவரோடு இருந்தது. சுவரின் வலதுபுறத்தில் மட்டும் ஓடுகள் வேய்ந்து இறக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குள் அதிகாரிகள் பயன்படுத்தும் வண்டிகள் நிறுத்தப் பட்டிருந்தன. மற்ற மூன்று புறமும் குச்சிகள் ஊன்றி குதிரைகள் கட்டிப்போடப்பட்டிருந்தன. குதிரைப்போலிஸ் படை நிரந்தரமாகத் தங்குவதற்கு நகரத்தில் உள்ள ஐரோப்பியர்களின் குடியிருப்புக்கு பக்கத்தில்தான் கட்டிடம் கட்டப்பட்டிருந்தது. ஆனால் பதிவுப் பணிக்காக திருமங்கலம் தாலுகாவிற்கு வந்துள்ள லோத்தம் தலைமையிலான குதிரைப்படை இந்த கட்டிடத்திற்குள்தான் குதிரைகளை நிறுத்தவேண்டியிருந்தது.

இரவு ஒன்பது மணி சுமாருக்கு தண்ணீர் காட்டி புல் அள்ளிப்போட்ட வேலைக்காரன் கொஞ்சம் நேரங்கழித்து மரக்கதவை தாழிட்டுவிட்டுப் படுக்கப்போனான். வேலைகள் கூடிப்போனதில் உடல் அலுப்பு ஆறக் குடித்துவிட்டு வந்திருந்தவன் படுத்ததும் கட்டை போலத் தூங்கிவிட்டான்.

அரசுக் கட்டிடங்கள் இருக்கும் பகுதி அதற்கே உரிய அமைதியை கொண்டிருந்தது. பொழுது நள்ளிரவைக் கடந்தது. பெரிய பஞ்சாரத்தோடு கட்டிடத்தின் பின்புறமாக வந்த இருவர் சுற்றுச்சுவரை ஒட்டி நின்றுகொண்டு பஞ்சாரத்தின் மூடியைத் தூக்கி உள்ளே கையை விட்டு ஒவ்வொன்றாகப் பிடித்து, சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே விழுவதைப் போல் தூக்கி வீசினர். ‘க்கொக்கொக்...’ ‘க்கொக்கொக்...’ என்ற சின்னச் சின்ன கத்தல்களோடு வீசப்பட்டவை போய் உள்ளே விழுந்தன. வேகவேகமாக வேலைகளை முடித்தவர் கள் பஞ்சாரத்தை தூக்கிக்கொண்டு வந்தவழியே திரும்பினர்.

**ப**றவைகளின் கீச்சுக் குரல்கள் அந்த வெளி முழுவதையும் நிரப்பியது. பொழுது புலர்ந்தது. சூரியக்கதிர்கள் எங்கும் வெளிச்சத்தை மேயவிட்டபடி இருந்தன. அதிகாரிகளின் நாட்கள் வழக்கமான பரபரப்போடு விடிந்தன. குதிரைக்குத் தண்ணி காட்டுபவன் முறுக்குவிட்டு எழுந்து எதிரில் நின்றுகொண்டிருந்த பூவரசமரத்தின் அடியில் உட்கார்ந்து சிறுநீர் கழித்துவிட்டு குதிரைகளைப் பார்ப்பதற்காகப் போனான்.

மரக்கட்டைக் கதவை இரும்புச் சங்கிலி கொண்டு இரண்டு சுற்றுச்சுற்றி முனையில் தொங்கவிடப் பட்டிருந்த பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தவனுக்கு அந்த கணத்தில் எதுவும் பிடிபடவில்லை. ஐந்தாறு குதிரைகள் கால் விறைத்துக்கிடந்தன. ஒன்றிரண்டு அரை மயக்கத்தில் கண்கள் விழித்தும் விழிக்காமலும் வாயில் நுரை தள்ளியபடி இருந்தன. குதிரைகளின் மேலும், பக்கத்திலும், எதிர்புறம் நிறுத்தப்பட்டிருந்த வண்டிகளின் மேலும் நிறைய சேவல்கள் நின்றுகொண்டிருந்தன. றெக்கைகள் எல்லாம் உதிர்ந்து விறைத்தபடி நின்றுகொண்டிருந்த சேவல்கள் ஆள் உள்ளே நுழைவதைப் பார்த்ததும் ‘கொக்கொக் கொக்கொக்’ என்று கத்த ஆரம்பித்தன. குதிரைகள் கனைக்கவோ எழுந்து நிற்கவோ இல்லை. ஆனால் மேலெல்லாம் கத்தியைக்கொண்டு கீறியதைப்போலக்

கிழிபட்டுக்கிடந்தன. உள்ளே நுழைந்தவனுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. குதிரைகளின் அருகில் ஓடிப்போய் பார்த்தான். கீழே சில செத்து விறைத்துக்கிடந்தன. விழுந்த குதிரைகள் பல கால்களை உதைத்துக் கொண்டிருந்தன. பதறிப்போய் ஒவ்வொன்றாக காதைப்பிடித்து உலுப்பினான். எதுவும் எழுந்திருக்க வில்லை. அவன் ஓடுவதற்கேற்ப சேவல்கள் அங்குமிங்குமாக நகர்ந்தபடி இருந்தன. சேவல்களின் விரல்கள் முழுவதிலும் சிறு சிறு கத்தி கட்டப்பட்டிருந்தது. தூக்கி வீசப்பட்டவை அனைத்தும் சண்டைச் சேவல்கள். அவைகளின் கால்களில் கட்டப்பட்டிருந்த கத்தியில் பச்சனாவி விஷம் தடவப்பட்டிருந்தது. சுற்றுச்சுவருக்கு பின்னால் இருந்து றெக்கைகளை மட்டும் பிடித்துத் தூக்கி எறியப்பட்ட சேவல்கள் உள்ளுக்குள் நின்று கொண்டிருந்த குதிரைகளின் மேல் வந்து விழுந்தன. ரோமங்கள் வெட்டப்பட்டு பளபளப்பாக இருக்கும் குதிரையின் முதுகின் மேல் விழுந்த சேவல்கள் கால் நழுவி கீழிறங்குகையில் விரல்களில் இருந்த கத்திகள் தோலைக் கிழித்தன. றெக்கைகளை அடித்து மீண்டும் முதுகின் மேல் ஏறி நின்றன. குதிரைகள் உடலை உலுப்பி சேவலைத் தள்ளின. வழுக்கிய அவை பக்கத்துக் குதிரைகளின் மேல் தாவி உட்கார்ந்தன. பிராண்டியபடி காடியிலே விழுந்தன. குதிரைகள் எத்தித்தள்ள சேவல்கள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொத்தி விலகி அங்குமிங்குமாகத் தாவி அலைக்கழிந்தபடி இருந்தன. பத்துக்கும் மேற்பட்ட சேவல்களின் விரல்கள் முழுவதும் கட்டப்பட்டிருந்த கத்திகள் நின்றுகொண்டிருந்த குதிரைகளின் உடலுக்குள் பச்சநாவி விஷத்தை வேண்டிய மட்டும் இறக்கிவிட்டிருந்தன.

பணியாளர்களின் அலறலில் திருமங்கலம் உத்தியோகஸ்தர்கள் வசித்த கட்டிடம் அதிர்ந்து விழித்தது.

*

**மூ**ன்று நாட்களுக்குப்பிறகு ஒரு அதிகாலையில் முழு போலிஸ் படையும் நல்லூருக்குள் நுழைந்தது. கோழி கூப்பிட ஊருக்குள் நுழைந்த படை கையில் சிக்கியவர்களை எல்லாம் அடித்து இழுத்துக்கொண்டு வந்து மந்தையில் போட்டது. தாதனூருக்கு ஜல்லிகட்டுக் காளை அனுப்பியதிலிருந்து போலிஸ் கையில் சிக்காமல் இருந்த தாதனூர் அங்கம்மாக்கிழவி இன்று சிக்கினாள். தலைமுடியைப் பிடித்து தரதரவென்று இழுத்துவந்து மந்தையிலே போட்டு ஆளாளுக்கு மிதித்தனர். கிழவி சுருண்டு துடித்தாள்.

‘டேய்... பெரியாத்தாள ஏண்டா மிதிக்கிறெங்க விடுங்கடா...’ என்று அடிப்பட்டுக் கிடந்தவர்கள் கிழவியைக் காப்பாற்ற முயற்சித்தனர். ஆனால் அடியின் வேகம் அவர்களுக்கும் சேர்ந்து அதிகமானது. கிழவியை விட்டுவிடச் சொன்னவனையெல்லாம் அடித்து நொறுக்கினர். ஊர் ரணகளப்பட்டது. எல்லா வீடுகளுக் குள்ளும் நுழைந்து உள்ளே இருந்தவர்களை அடித்து தலைமுடியைப் பிடித்துத் தரதரவென இழுத்துக்கொண்டு வந்தனர். குதிரைப்படை போலிசும், கச்சேரி போலிசும் ஊரை மிதித்து நகட்டினர்.

அரை மயக்கத்தில் இருந்த கிழவி கையை ஊன்றி எழுந்து எதிரில் நின்றுகொண்டிருந்த போலிசை நோக்கி கும்பிடுவதைப்போல கையைக்கொண்டு போனாள். சரி, என்னதான் செய்கிறாள் பார்ப்போம் என

நின்றுகொண்டிருந்த அந்த வெள்ளைக்காரன் மீது சற்றும் எதிர்பாராதபடி பாய்ந்து குரவளையைக் கடித்துத் துப்பினாள். மூஞ்சியெல்லாம் ரத்தம் தெறித்தது. போலிஸ்காரனின் அலறலில் லத்திகள் கிழவிகள் உடலை நொறுக்கித் தள்ளின. நல்லூர் மந்தையில் குப்புறவிழுந்தபடி கிழவியின் உயிர் பிரிந்தது.

‘பெரியாத்தாள அடுச்சே கொன்னுடாங்கெளடா...’ என்ற சத்தம் கரட்டுப்பக்கமும் கணவாப்பக்கமும் மறைந்திருந்தவர்களை எல்லாம் ஊரை நோக்கி இழுத்தது. வெட்டவரிவாளும் வேல்கம்பும் வேண்டிய மட்டும் பாய்ந்தன. சரளைக்கற்களின் எறி பொறுக்க மாட்டாமல் கதறிய போலிசுக்கு சூட்டிங் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

அதிகாலையில் துவங்கி மதியம்வரை துப்பாக்கி சுடும் சத்தம் நல்லூரில் கேட்டுக்கொண்டே இருந்தது. திசைகள் அதிர்ந்தன. போலிஸ் படை அறுபது ரவுண்ட் சுட்டுத் தீர்த்தது.

அறுபத்து நாலு பேர் குற்றுயிரும் குலையுயிருமாக ரத்தம் ஒழுக கைவிலங்கோடு திருமங்கலம் கோர்ட்டுக்கு இழுத்துக் கொண்டுவரப்பட்டனர். செத்துப்போனதாகக் கருதப்பட்ட பதினாறு பேரின் உடல்கள் தெருவெங்குமிருந்து இழுத்துக் கொண்டுவந்து மந்தையிலே போடப்பட்டது.

மாலை 4 மணி சுமாருக்கு இரண்டு மாட்டுவண்டிகளைக் கொண்டு வந்து உடல்களையெல்லாம் தூக்கி வண்டியிலே போட்டனர். ஒன்றின் மேல் ஒன்றாக உடல்கள் கிடத்தப்பட்டன. கிழவியைத் தூக்கி இரண்டாம் வண்டியின் மீது எறிந்தனர். வண்டிகள் புறப்பட்டன. அடிக்கட்டைகளின் வழியே ரத்தம் ஒழுக ஒழுகப் பதினாறு உடல்களைச் சுமந்துகொண்டு சக்கரங்கள் உருண்டன.

மாலை ஆறு மணிக்கு மலையடி காட்டு ஓடை ஒன்றின் ஓரத்தில் இரண்டு பெருங்குழிகளை வெட்டி மொத்தமாக எல்லா உடல்களையும் போட்டுப் புதைத்துவிட்டுப்போயினர்.

*

**மா**யாண்டிப் பெரியாம்பிளையோட மகள் அங்கம்மாக் கிழவி செத்துப்போன தகவல் மறுநாள்தான் தாதனூருக்கு எட்டியது.

எழவு சொல்லி வந்தவனைக் கட்டிப்பிடித்து ஊரே கதறியது. தாதனூருக்காக பேத்தியாளைக் கொடுத்து, அவள் வளர்த்த காளைகளைக் கொடுத்து இப்பொழுது தன்னையும் கொடுத்து முடித்திருக்கிறாள் கிழவி. அவளுடைய அப்பன் மாயாண்டியைப் போலவும் அவனுடைய அப்பனைப்போலவும் ஊருக்கான மரணமாகத்தான் இதுவும் இருந்தது.

கிழவியின் மரணச் செய்தியை உள்ளங்கையில் வாங்கிய ஊர் கதறித்துடித்தது. ஊரின் மூத்த மகள் முகத்தைப் பார்க்கும் முன்பே புதைக்கப்பட்டுவிட்டாள் என்ற செய்தி மரணத்தைவிடக் கொடூரமாக இருந்தது. கொடூரங்களைச் சந்திப்பதே வாழ்வாகிப் போன ஊர் இதையும் ஏற்றுக்கொண்டு எழவு கேட்கப் புறப்பட்டது.

ஆண்கள் யாருக்கும் ராதாரிச் சீட்டு கொடுக்கமுடியாது என்று அவுட்போஸ்ட் போலிசார் சொல்லிவிட்டனர். பொன்னாங்களின்

மரணத்திற்கு ராதாரிச் சீட்டு வாங்காமல் போய்வந்ததால் பட்ட துன்பமும், பெற்ற தண்டனையும் இன்றைக்கு வரை முடிவதாக இல்லை. எனவே ஊரின் எல்லையைத் தாண்டும் மனநிலையில் ஆண்கள் யாருமில்லை.

பெண்கள்தான் புறப்பட்டுப் போனார்கள். நல்லூர் போகும்வழி யெல்லாம் ஊர் ஊருக்கு ஒப்பாரியின் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. குண்டடியோடு தப்பித்துவந்த மனிதர்கள் அடுத்தடுத்து பக்கத்து ஊர்களில் செத்துவிழுந்தபடியே இருந்தனர். சாவு மந்தைதோறும் தலைவிரித்துக் கிடந்தது. மரணத்தின் பெரும் ஓலம் புழுதிக்காடெங்கும் வீசிச்சென்றது. ஒப்பு வைத்த கிழவிகள் மூச்சிழுக்க முடியாமல் மயங்கி விழுந்தனர்.

உயிரற்று நடந்துபோன தாதனூரின் கூட்டம் நல்லூருக்குள் நுழைந்ததும் நாடி நரம்பெல்லாம் துடித்தது. ‘எங்க வீட்டுப் புள்ளய எழவுக்கு கொடுத்துட்டீங்களேடா...’ என்று தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அவர்கள் நுழையும்பொழுது ஊருக்குள் யாருமில்லை. ரத்தம் ஒழுக ஒழுக இழுத்துச் செல்லப்பட்ட அறுபத்தி நான்கு பேர் என்ன ஆனார்கள் என்று பார்க்க ஊரே புறப்பட்டு திருமங்கலம் போய்விட்டது. வெற்றுப்பரப்பாக கிடந்த ஊர் வந்தவர்களை அப்படியே அதிர்ச்சியில் உறைய வைத்தது. எங்கு திரும்பினாலும் ரத்தக்கறையும், சிதைந்த செம்மண் சுவரும். வீதியெங்கும் உடைந்து நொறுங்கிய சட்டிமுட்டிகளுமாகக் கிடந்தன. தெருவெங்கும் ரத்தம் ஓடித் திட்டுத்திட்டாக உறைந்து கிடைந்தது. கால் மிதிக்க முடியாமல் மண்ணிலே விழுந்து ‘ஆத்தா...’ வெனப் புரண்டு அழுதனர். ரெண்டு கைகளாலும் மண்ணை அள்ளி மூஞ்சியிலே அப்பிக்கொண்டு துடித்தனர். இறந்துபோன ஒரு பெரும் உடல்போல ஊர் கிடந்தது. ஆளுக்கொரு புறமாக உடலின் மேல் முட்டி உருண்டு அழுதனர்.

பொழுதுசாயும் வரை கதறித்துடித்தவர்கள் இறந்த உடலை விட்டுப் பிரிந்து உயிரற்று நடந்து நள்ளிரவில் தாதனூருக்கு வந்து சேர்ந்தனர்.

*

**ம**றுநாள் காலை கருப்புக்கோவில் தாவாரத்தில் படுத்து எழுந்த கழுவன் பெரியாம்பிள சொன்னார் ‘செத்துப்போன மகள தோளுல தூக்கிப்போட்டுக்கிட்டு மாயாண்டிப் பெரியாம்பிள நேத்து ராத்திரி முழுக்க ஊர் எல்லையில் வந்து நின்னுக்கிட்டு இருந்தாரப்பா...’

கனவுதான். ஆனால் கனவுக்குள் இருக்கும் உண்மையை ஊர் அலசிப்பார்த்தது. ஆலமரத்தடியில் உட்கார்ந்து பகலெல்லாம் பேசினர். கிழவிகளிடம் போய் யோசனை கேட்டு வந்தனர்.

ஒரு வாரம் கழித்து ஊர் மந்தையின் வலதுபுறம் தண்ணீர்க் கிணற்றுக்கு மேற்கே நின்று கொண்டிருந்த ஒற்றை வேம்பின் அடிவாரத்தில் மண் பீடம் அமைக்கப்பட்டு அதன் நடுவே இரண்டு பெரிய குத்துக்கல்லும், இரண்டு சிறிய குத்துக்கல்லும் ஊண்டப் பட்டது.

ஆஜர் பார்க்க வந்த போலீசார் மரத்தின் அடிவாரதில் பீடம் அமைத்து வழிபடப்பட்டிருந்ததை பார்த்து ‘இதென்ன புதுசா இருக்கு?’ என்று கேட்டனர்.

யாரிடமிருந்தும் பதில் வரவில்லை.

சிறிது மவுனத்திற்குப்பின் ‘பட்ட சாமீ...’ என்று சொன்னார்கள்.

ஆஜர் முடிந்தபின் போலீசார் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

கிழவி அங்கம்மாளும் அவளின் பேத்தியாள் பின்னியக்காளும் பெருங்கல்லாக நின்றிருந்தனர். மந்தையில் போலிசின் துப்பாக்கிக் கத்தியால் குத்தப்பட்டு செத்த கொறவக்காளையும், வீரணக்காளையும் சிறு கல்லென நின்றிருந்தன. மாயாண்டிப் பெரியாம்பிள கிளை பரப்பி வேம்பென நின்றுகொண்டிருந்தார்.

உயிர் உறைந்துவிடாமல் மீண்டும் கதைகளின் வழியே கல்லுக்குள் சுழல ஆரம்பித்தது.

*





MADURA CITY
RIVER VAIGAI
TO MADRAS
TO DINDIGUL
ARAPPALAYAM
ARAPPALAYAM WATER WORKS
DISTRICT JAIL
RAILWAY COLONY
TRAVELLERS BUNGALOW
TO BODI
MADURA COLLEGE
SELLUR
AMERICAN COLLEGE
COLLECTOR'S OFFICE
RACE COURSE ROAD
TO ANAMALAI
TO ALAGAR KOIL 12 MILES
PALACE
TO RAMNAD


மேலச் சித்திரை வீதி
மேற்குக் கோபுரம்
மேல ஆடி வீதி
கிழ ஆடி வீதி
பதினாறு கால் மண்டபம்
ஆயிரம் கால் மண்டபம்
74
75
76
73
77
கிழக்குக் கோபுரம்
அஷ்த சக்தி மண்டபம்
80
79
கீழச் சித்திரை வீதி
புது மண்டபம்
தெற்குச் சித்திரைவீதி

## முதல் பதிப்பிற்கான ஆசிரியர் குறிப்பு

**பாட்டிதான் கதைகளின் ஊற்றுக்கண்ணைத் திறந்துவிட்டவள்.** அவள் சொன்ன கதைகளைப் பொழுதெல்லாம் கேட்டுத் திரிந்த பால்யம்தான் வாழ்வில் மகிழ்ச்சியான பருவம் என்று தோன்றுகிறது. அதை உன்னதமாக்குவதற்காகவே நினைவு மறைந்தும் மறையாத ஓர் அபூர்வப் பெருவெளியில் வைத்து அழகு பார்க்கிறது காலம்.

இப்போது யோசித்துப் பார்க்கிறேன். அவை வெறும் கதைகள் அல்ல, கதையும் வரலாறும் கிளைபிரியா முதுமொழியில் சொல்லப் பட்டவை.

அம்மொழியில் முளைத்து என் போக்கில் வளர முயன்ற ஆசைதான் இது.

கள்ள நாட்டின் வேர்கள் எல்லாம் பாளையப்பட்டுகளின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தே இம்மண்ணில் இறங்கியுள்ளன.

மாடுகளை வணங்கி மேய்த்துத் திரிந்த கூட்டமும், அணைந்து அடக்கி வீரவிளையாட்டாக்கிய கூட்டமும் பண்பாட்டில் எதிரெதிர் முனைகளில் நின்றாலும், ஒரே நிலத்தில் வாழ நேர்ந்தபோது, முரண்களைச் சமன் செய்தே வந்திருக்கின்றன.

‘ஜல்லிக்கட்டு’ தமிழரின் பண்பாட்டுக்கூறாகப் பாரம்பரியமாக இன்றும் தொடர்கிறது. இடையில் வந்த ‘தொட்டி குடுப்பு’ தொடர் வாரற்று காலத்தில் தொலைந்து போனது.

பாளையப்பட்டுகள் முழுவதும் நான் அலைந்து திரிந்தபொழுது மனதில் எஞ்சியது அவலத்தின் பெருஞ்சித்திரம் மட்டுமே.

தூசி படிந்து துருவேறிய போர்வாளை சாமி அறைக்குள் இருந்து தூக்கிவந்து ‘உங்களுக்காகத்தான் வெளியில எடுத்துக் காட்டுறோம்’ எனச் சொல்லிக் கொடுத்தவர்களின் கண்களில் பெருமிதத்தின் ஒளி அணைந்திருந்தது.

பாளைய வீடுகளின் உள் இடுக்குகளில் ஓலைக்கூரைக்குள் ஒடுங்கிக்

கிடக்கும் ஜக்கம்மாள்... பாளையத்தின் கோட்டை வாசலில் உள்ள மசூதியில் தொழுகை நடத்தும் முஸ்லீம்கள்... அதே தெருவில் கவரடப்பு எனும் சுன்னத் சடங்கைச் செய்யும் கள்ளர்கள்... என காலம் எத்தனையோ பெருவெள்ளத்துடன் இந்தத் தெருவை ஓடிக் கடந்து சென்றுவிட்டது. உருண்டோடிய கூழாங்கற்களில் படிந்துள்ள கதைகள் ஓராயிரம்.

**லா**டக் கட்டைகளுக்கு இடையில் சித்துகல் வரிவோடிக் கிடந்த வீட்டின் அலமாரியில் கட்டுக்கட்டாய் இருந்த பேப்பர்களை எல்லாம் அள்ளிப் போட்டுத் தேடினோம். பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகளை அனுப்பாத கள்ளநாட்டு அப்பன்களை போலிஸ் ஸ்டேசன் படுக்கையில் வைக்கச் சொல்லி உபாத்தியாயினி இன்ஸ்பெக்டருக்கு எழுதிய ரிப்போர்ட் ஒன்று கிடைத்தது. 10.10.1920 என்று தேதியிடப்பட்டிருந்த அந்த மக்கிய தாளின் வழியேதான் என் பயணம் துவங்கியது. ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன.

கீழக்குயில்குடி பற்றி வரலாற்று ஆய்வு நூல் ஒன்று எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததால் அதன் சாயலில் ஒரு கிராமத்தை உருவாக்க நினைத்தேன். அமணமலையின் தென்மேற்கே இடத்தைத் தேர்வு செய்த மறுகணமே கள்ளநாடு முழுவதும் நான் பார்த்த, கேட்ட கதை மாந்தர்கள் அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர். மரம் வெட்டி, மொட்டு தோண்டி, நிலவாகை சமப்படுத்தி, வீடு போட்டு ஓலை வேய்ந்து முடிந்ததும், பெரியாம்பளைகள் மந்தையிலே வந்து உட்கார்ந்து கதை சொல்லத் துவங்கினர். கதை களைகட்டியது.

எல்லாம் மக்களின் கதைகளே, அவர்கள்தான் அதன் நாயகர்கள். கதைகளோடுதான் காலமெல்லாம் அலைகின்றனர். ‘அதாவது வெங்கடேசா...’ என்று சொல்ல ஆரம்பித்து காலநேரங்களைக் கடந்து சொல்லிக் கொண்டேயிருந்தனர். சாவடித் திண்ணையில், மந்தையில் கிணற்றடியில், ஆலமரத்தடியில் என எங்கும் அமர்ந்து அவர்கள் சொன்ன கதைகள் வெறும் கதைகள் அல்ல. அவைதான் அவர்களின் வாழ்வு, வரலாறு, அடையாளம் எல்லாமும்.

மிஷனரிகளின் ஆவணங்கள், அரசின் ஆவணக் காப்பகங்களில் உள்ள தரவுகள், எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் கிடைக்கும் தகவல்கள், ஊர்கள்தோறும் மக்களின் நினைவுகளில் கொட்டிக் கிடக்கும் செய்திகள் என எல்லாவற்றையும் தேடி அலைந்தேன். எல்லாத் தரவுகளுக்கும் ஆவணங்களுக்கும் ஊடே உண்மையைப் பற்றி நடக்கவே இதில் முயற்சித்தேன். அது வாழ்வின் வழித்தடத்திற்கு கொண்டு வந்து விட்டது. பாதையை வந்தடைந்த பின் நம்மை அழைத்துச் செல்வது நம் கால்கள் மட்டுமல்ல.

இதன் முதல் பாகத்தில் வரும் அனைத்து மாந்தர்களும், நிகழ்வுகளும் உண்மையே. கன்னிவாடிப் பாளையம் மூக்குப்பறி மைசூர் போருக்கு 16000 வராகன் கொடுத்தது என்பதுமுதல் ருஸ்தம் கானுக்கு காதுவலி என்பதுவரை உண்மையான வரலாற்றுத் தரவுகளால் ஆனது அது. சந்திரஹாசமும், சாளுவகட்டாரியும் உண்மையே எனினும் நிகழ்ச்சிகளைப் பின்னிச் செல்லும் சரடாக அவை பயணிக்கும் பாதையை மட்டுமே புனைவாக உருவாக்கியுள்ளேன்.

முகம்மதிய, தெலுங்கு கதாபாத்திரங்கள் அன்றைய காலத்தின் குரலாகப் பேசுகின்றன என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வது கடினமல்ல என்று நம்புகிறேன்.

19ஆம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து மதராஸ் வர மாட்டு வண்டிப் பயணத்திற்கான செலவுத் தொகை என்ன? என்பதில் தொடங்கி, கள்ள நாட்டில் நடைமுறையில் இருந்த, குற்றங்களுக்கான தண்டனைச் சட்டம் என்ன? என்பது வரை... கங்காதேவியின் ‘மதுரா விஜயத்தில்’ உள்ள பாண்டியனுடைய வாளின் பெயர் என்ன? என்பதிலிருந்து களவின் போது தும்மல் வராமல் இருக்க கைமருந்து என்ன? என்பது வரை... அத்தனையையும் சேகரிக்க, உறுதிப்படுத்த நட்பும் தோழமையும் கொண்ட பெரும்வட்டம் என்னைச் சுற்றி செயல்பட்டது. எனக்குத் துணையாக, ஆதரவாக பல நேரங்களில் என்னிலும் வேகமாகச் செயல்பட்ட அவர்கள் அத்தனை பேரையும் இந்த நேரத்தில் நினைவால் வணங்குகிறேன்.

நாவல் எழுதத் துவங்கியதில் இருந்து இன்றுவரை எனக்கு உதவியாக இருக்கும் மனைவி கமலாவிற்கும், மதினி மீனாவிற்கும் தங்கைகள் கலைமதி, ஈஸ்வரி, கோகிலாவிற்கும், அம்மா, அப்பா, அண்ணன், சதீஸ் மற்றும் குழந்தைகள் சாருமதி, தமிழினி, யாழினி, நிகிதா, நித்தின் ஆகிய அனைவருக்கும் என் அன்பும் பிரியமும்.

*

சு. வெங்கடேசன்

8, டிசம்பர்: 2008

# இரண்டாம் பதிப்பிற்கான ஆசிரியர் குறிப்பு

**‘இப்படித் துவங்கியது எனலாம்’ என்று எதையாவது ஒரு புள்ளியைச்** சொல்லிவிடலாம் என நினைத்தால் எதுவும் நினைவில் சரியாகப் பொருந்த மறுக்கிறது. எந்தப் புள்ளியில் இந்நாவலை எழுதத் துவங்கினேன் என்று மீண்டும் மீண்டும் யோசித்தால் கடைசியாகக் கண்டடைகிற பதில் முதன்முதலில் ஒரு நல்ல நாவலைப் படித்த பொழுதில் இருந்துதான். நல்ல நாவல்கள் நமக்குள் இருக்கும் நாவல்களை நினைவூட்டியபடியே நம்மைக் கடந்து செல்கின்றன. கடந்து செல்லும் நாவல்களை நாம் கடக்கமுடியாது என்பது எதிர்ப்படும் வாழ்வுக்கு முகம் கொடுக்கிற பொழுதெல்லாம் நமக்குத் தோன்றுகிறது.

எழுத வேண்டிய நாவல்களையும் எழுத முடியாமல் போன நாவல்களையும்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வழியைத் தவறவிட்ட பயணி, வழியைக் கண்டுபிடிக்கும் வரையிலான பயணம், பயணத்தின் தூரத்தில் சேராதது. ஆனால் பயணத்திலேயே அதிசுவாராஸ்யம் நிறைந்த பகுதி அதுதான். உண்மையில் பயணம் என்பது தவறவிட்ட வழியின் வழியே நிகழ்ந்ததுதான். கண்டடைந்த பொழுதில் இறக்கி வைக்க அப்பயணத்தில் எவ்வளவோ இருக்கிறது. எழுத்தும் அப்படித்தான்.

ஒரு நாவலை எழுதத் துவங்கும் புள்ளி ஆர்வத்தை மட்டுமே மையமாகக் கொண்டது. துவக்கப்புள்ளியைக் கடந்து உள்நுழையும் பொழுது நாம் சந்திக்கும் போதாமைகள் எண்ணற்றவை. நமது மொழி அறிவின் போதாமையில் துவங்கி நமது மொழியின் போதாமை வரை, நமது வரலாற்று அறிவின் போதாமையிலிருந்து நமது வரலாற்றுத் தரவுகளின் போதாமை வரை, நம்மைச் சுற்றியிருக்கும் போதாமைகளால் கவலைப்பட்டு நமது போதாமை கண்டு வெட்கப்படும் போது நாவலின் பிரமாண்ட சக்தியை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

ஒரு நாவலை எழுத நாம் என்னவாகவெல்லாம் ஆக வேண்டி யிருக்கிறது. அதுவாகவெல்லாம் ஆகும் பொழுதுதான் நமது மனதின்

வீரியமிக்க பகுதியை நம்மால் கண்டுணர முடிகிறது.

எழுதப்போகும் வெள்ளைத்தாள் முழுவதும், நூறு இளங்குஞ்சுகள் வாய் திறந்து காத்துக்கிடக்க கொடுத்து மாளமுடியாது தவிக்கும் தாய்ப் பறவையாக நாம் நம்மை உணர்வோம்.

எல்லாம் நம் குஞ்சுகளாயிற்றே, கத்தவிட்டுக் காத்திருக்க முடியாதே, இளங்குஞ்சுகளுக்கு இருக்கும் பசி அளவிடமுடியாதது. விரியப்போகும் றெக்கைகளும், நீண்டு முளைக்கும் விரல்களும் பசியென வயிற்றுக்குள் சுருண்டு கிடக்கும். கொடுக்கும் உணவு கண்ணுக்கு முன்னால் கால்களாக முளைக்கும். நாம் பார்க்கப் பார்க்கப் பிறக்கும் அழகு.

எழுதப் போகும் ஒவ்வொரு வரியும், எழுதிய வரியின் ஓடுடைத்து வெளிவந்தபடி இருக்க சுவாரஸ்யமும் ஆச்சரியமும் கலந்த பேருலகாக எழுத்து விரிந்து போகும் சுமார் பத்து ஆண்டுகள் இப்படித்தான் காவல்கோட்டத்தின் பெரும் பரப்பில் என் உலகு விரிந்து கிடந்தது.

சாளுவ கட்டாரியையும், சந்திரஹாசத்தையும் தோளில் தூக்கிப் போட்டபடியே நடந்த நாட்கள், இடுப்பில் கன்னக் கோலையும், கையில் மொண்டிக்கம்பையும் பிடித்து அலைந்த காலம், என்னவாக வாழ்கிறோம் என்பது புகைமூட்டமாக மட்டுமே நினைவிருக்க மனம் பிறழ்ந்து பித்தாகித் திரிந்ததாக நினைவு.

பத்து வருடம் நிகழ்ந்த கனவு கலைந்த பொழுது நிகழ்காலம் முகத்தில் அறைகிறது. கனவிருந்த இடத்தின் வெறுமையைப் பயங்கரமாக உணர முடிகிறது. வேறு ஒன்றை நாமோ, நம்மை வேறு ஒன்றோ கவ்வித்திரியாமல் உயிர்வாழ முடியாது.

மடையை அடைத்தபின்னும் நீர் கசிந்துகொண்டே இருப்பதைப் போல களவைப்பற்றியும் காவலைப் பற்றியும் எத்தனையோ தகவல்கள் வந்தபடியே இருந்தன. களவுக்கு வந்து மாட்டிக் கொண்டவனின் கடவாப்பல்லைப் பிடுங்கி கதவில் அடித்து வைத்துப் பெருமை பேசும் மரபும், விலை உயர்ந்த பொருள் இருக்கும் பெட்டியினைத் தூக்கிக்கொண்டு ஓடினால் ஓடுபவன் வீட்டு வாசலைத் தாண்டும்முன் மயக்கமுற்று கீழே விழச் செய்யும் அளவு விஷமேறிய, ஆனால் கண்ணுக்குத் தெரியாத பொருளான உப்பு தடவிய புலியின் மீசை மயிரைப் பெட்டியின் இடுக்குகளில் சொருக்கி வைப்பதும் ஆன பல தகவல்கள் ஆச்சரியத்தின் வழியே படியிறங்கி வந்துகொண்டே இருந்தன. எழுதத் தவறியதை உணர்த்துவதாகத்தான் ஒவ்வொரு நாளும் கழிந்தது.

இப்பொழுதும் இந்நாவலைப் பற்றி எழுதாமல் நாவலுக்கு முன்னுரை எழுதவேண்டும் என்பதுதான் என் எண்ணம். காவல் கோட்டம் உருவான கதை பெரிது. அதில் எழுதப்பட்ட வரலாறு இது வரை எழுதப்படாத வரலாறு. அவற்றைப் பற்றி எல்லாம் எழுத எவ்வளவோ இருக்கிறது. ஆனால் அவை எல்லாம் நாவலைப் பற்றியதாகத்தான் மீண்டும் மாறும்.

எனது நாவலைப் பற்றி நானே எழுதுவது பலகீனத்திலிருந்து தோன்றும் எண்ணமே. அதைச் செய்ய நான் தயாராக இல்லை.

*

**‘மா**னுடவியல் ஆய்வுக்குப் பெரும்பொருளும் உதவியும் கிடைக்கும்

காலம் வரும்பொழுது உலகில் தொன்முதுமக்கள் யாரும் இருக்கமாட்டார்கள்.’ - எட்கர் தர்ஸ்டன் தனது வாழ்க்கை முழுவதும் செலவிட்டு உருவாக்கிய வார்த்தை இது.

நான் எனது நாவலுக்கான ஆய்வினைத் துவக்கியபொழுது பதிவு செய்துகொள்ள என்னிடம் ரிக்கார்டர் எதுவும் இல்லை. சுமார் நான்கு ஆண்டுகள் அப்படித்தான் கழிந்தது. வீட்டுக்கு வந்து நினைவில் உள்ளதைக் குறித்தால் போதும், அதுகூடத் தேவையில்லை. எழுதும் பொழுது எழுத்துக்குத் தேவையானதை நினைவுக்குள் இருந்து அதுவே எடுத்துக்கொள்ளும். பின் ஏன் குறித்து வைக்க வேண்டும்? என்று விதவிதமான நியாயங்கள் கைநிறைய இருந்தன.

இன்று தேவையில்லை என்று தோன்றுவது நாளை அதிமுக்கியமானதாகத் தோன்றுகிறது. இன்று முக்கியம் என்று தோன்றுவது நாளை மறுநாள் மடத்தனம் என்று தோன்றுகிறது. இதுதான் இயங்கிக் கொண்டிருக்கும் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்வது. அப்படியென்றால் எழுதி வைக்காமல், குறிப்பு எடுக்காமல் நான் உதாசினபடுத்தியவற்றை நினைத்தால் எனது இழப்பின் பாரம் தாங்கமுடியாததாக இருக்கிறது.

குற்றப் பழங்குடியினர் சட்டம் பற்றிய நினைவுகள், வலிகள், கதைகளை ஊர்ஊராகக் கேட்டுத் திரிந்தேன். நான் சந்திக்க நினைத்த, சந்தித்த பல மனிதர்கள் வயோதிகத்தின் காரணமாக சில வாரங்களுக்கு முன்பும், பின்புமாக இறந்தபடியே இருந்தனர். இரண்டாவது முறையாக அவரிடம் பேட்டி எடுக்கப் போகும் பொழுது வெள்ளையடிக்கப்பட்ட வீட்டுச் சுவரோ அல்லது பிரிக்கப்படாமல் இருக்கும் வாசலில் மேய்ந்த கொட்டகையோ தூரத்தில் இருந்தே செய்தியைச் சொல்லும். போகும் வழி நெடுக மரணம் சகபயணியாக உடன் வந்துகொண்டே இருந்தது.

‘ஒரு வாரம் முன்னால் வந்து இருக்கக் கூடாதா... இதுவெல்லாம் தெரிஞ்ச மனுசென் இப்பதான் செத்தாரு’ என்ற குரல் கேட்காத கிராமமே இல்லை எனலாம். நெற்றுகள் எல்லாம் உதிர்ந்தபின் வெறும் மார்கள் மட்டும் நீட்டிக் கிடக்கும் வயல்காட்டில் ஒன்றிரண்டு நெற்றாவது கிடைக்காதா என்று பொழுதெல்லாம் அலைந்து, மேலெல்லாம் கிழிபட்டுத் திரும்பியவன் நான்.

அது பரவாயில்லை என்று தோன்றுகிறது. இப்பொழுது தேடினால் அந்த வயல்காட்டை கண்டடையவே காலம் பல ஆகும். தொலைக்காட்சியின் அலைவரிசைகள் கிராமத்து சாவடிகளை தனது கட்டுக்குள் கொண்டுவந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தாயக்கட்டங்களைப் போல சாவடிப்பட்டியக் கல்லின் மேலே விரிந்து கிடந்த கதைகள் இப்பொழுது தூண்களின் இடுக்குகளுக்குள் ஒளிய ஆரம்பித்திருக்கின்றன. அவ்வளவு சீக்கிரம் மறைந்துவிடாதவைதான்; ஆனால் எளிதில் கண்டடைய முடியாத இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன.

தொன்மங்களின் வாயிலாகவும், வழிபாடுகளின் வாயிலாகவும், குலக்கதைகளின் வாயிலாகவும் மக்கள் தங்களின் கதைகளை வரலாறுகளை மடித்து மடித்து வைத்திருக்கின்றனர்.

நரம்பு சுருண்ட வெற்றிலையில் வைத்து மடித்து எனது பாட்டி

கொடுத்ததை கடைவாயில் வைத்து நருச்சென மென்ற பொழுது ஊறிப் பரவிய சாறு இன்றுவரை பெருகியபடியே இருக்கிறது. ஒற்றை பாட்டியின் கை மடிப்பிலிருந்தே ஓராயிரம் கதைகள் என்றால் ஊரெல்லாம் நாடெல்லாம் கதைகளின் பெருவெளியாய் நம் நிலம் கிடக்கிறது.

பாட்டி களத்துமேட்டில் கால் நீட்டி உட்காந்து ‘தண்ணிபாய்ச்ச வராம எங்கடா போனெ’ என்று கத்தியபடியே இருக்கிறாள்.

நமக்குத்தான் வெட்டிச் சோலிகள் வண்டி வண்டியாய் கிடக்கிறதே.

*

**ம**னம் ஆசையின் பொருட்டும், அகங்காரத்தின் பொருட்டும் வீழும் பொழுதெல்லாம் அன்பினாலும் கருணையினாலும் அதனை எழச் செய்யும் சக்தி சிலருக்கு வாய்த்திருக்கிறது. அவர்களை நண்பர்களாக வாய்க்கப் பெறுவதே பேறு. நண்பர்கள் த.உதயச்சந்திரன்-ஹேமலதா, சுந்தர்ராஜன்-தீபா, சிவராமன்-சுஜாதா, புவனேஸ்வரன்-அகஸ்டின் மேரி ஆகியோருக்கு நன்றி சொல்வது பொருத்தமன்று. வெ.சுந்தரம், மணிமாறன், வெண்ணிலா ஆகியோருக்கு என் வணக்கங்கள்.

மருத்துவர் கு.சிவராமன், திருப்பூர் சந்தானம், வெங்கட் மூவருக்கும், தமுஎகச தோழர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

என் குடும்பத்தார் அனைவருக்கும் என் அன்பும் பிரியமும்.

எங்கள் குடும்பத்தின் புதிய வரவு அபிஷேக்கிற்கு என் முத்தங்கள்.

சு. வெங்கடேசன்
சனவரி 24-2010



## சு.வெங்கடேசன்

**ம**துரையைச் சேர்ந்தவர். மனைவி: கமலா, குழந்தைகள்: யாழினி, தமிழினி. நான்கு கவிதை நூல்களும், இரண்டு ஆய்வு நூல்களும், ஆறு சிறு நூல்களும் எழுதியுள்ளார். காவல் கோட்டம் இவரது முதல் நாவல்.

இந்த நாவல், 2011-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதைப் பெற்றது. முதல் நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் எழுத்தாளர்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் - கலைஞர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கிறார்.



விகடன்
பிரசுரம்

Printed Books

# காவல் கோட்டம்

சு.வெங்கடேசன்

KAAVAL KOTTAM

₹ 520

(1st Edition)

ISBN 978-81-8476-548-9

9788184765489